JL
Rm 211, M97
M97.5-6
161290

# ஞானபோதி

சம்புடம் V. } 1901௵ ஆகஸ்டு௴ 20௳

## OUR FIFTH YEAR.

## நமது ஐந்தாம் ஆண்

இளம் பிள்ளைகளை வளர்ப்பது மிக்க
முணர்ந்ததே. பத்திரிகைகளை வளர்ப்பதும்
வாலைப்பருவத்தில் நோய் நொடிகள் அதிகம்
தேகதிடமில்லை, கைகால்களிற் பலம் குறை
வும் உலாவவும் குழந்தைக்குச் சக்தியிருப்
பிறந்து சில வருஷங்கள் வரையிற் ப
கஷ்ட நிஷ்டூரங்களுக் குள்ளாகி, அநே து
தப்பிப், பிறந்தவுடன் மாயாது, சிறிது சிறி ன்மை
தம் கால்களை யுறுதிப்படுத்திக் கொள் வேண்டியத்
யமையாததாகின்றது. குழந்தை க்ஷேமம வளருவதற்
தந்தையருடைய ஆதரிப்பே யன்றி வனே ருடைய பொறு
யும் தயையும் நல்லெண்ணமுங்கூட வேண்டியிருத்தல் போல
பத்திரிகைகள் நிலைப்படுவதற்கும் பலருடைய நன்கு மதிப்பு
சகாயமும் பொறுமையும் வேண்டியிருக்கின்றன. பெற்றோர்
தவிர மற்றோர் குழந்தையை அபிமானத்துடன் ஆதரிக்கவேண்
டின், அக்குழந்தையினிடத்து நற்குணங்கள் சிலவேனும் இயற்கை
யில் அமைந்திருத்தல் வேண்டும். அங்ஙனமே, பத்திரிகையின்
விஷயத்திலும். அது வளர்ந்தோங்கின் தேசத்திற்குச் சிறப்பு
மையேனும் நன்மை விளைக்குங்குறி அதனிடத்திருந்தா லன்றி
தேசாபிமானிகள் யாரும் அதனைப் பாதுகாவாரன்றே?

ளாயும் பயிர் முளையிலே" என்பதற் கிணங்க, இந்த
ளிப் பத்திரிகையானது மிகுந்த நல்லெண்ணத்
ங்கிய .. லின், முதலிலிருந்தே நற்குறிகள் பல
ந்திருந்தன. பொருட் செலவைப் பெரிதாய்க்
தையாவார் அதனை மிக்க ஆதரவோடுங் காத்து
பிரயாசையைப் பெரிதாய்ப் பாவித்தலின்றிப்
ஷயதானம் செய்து அதனைச் சிறப்பித்து வங்
னம் மூன்று வருஷங்கள் நடக்க, உத்தியோகா
நுசரித்து அதன் தந்தையார் வேற்றூருக்குப்
ந்த காலத்து, அபிமானிகளிற் சிலர் அதற்குத்
ங்கூறித் தமக்குள் ஒரு சபை ஏற்படுத்திக்
மிகுந்த ஊக்கத்துடன் நடாத்தி, நான்காம்
ழைப்பின் பயனாகச் சந்தாதாரர்களின் தொ
டுத்திப் பலரும் வியக்கத்தக்கவண்ணம் அவ்
செய்தார்கள். இவ்வாறு சிறப்பித்த அந்தச்
ஷயதானஞ் செய்துதவிய பல வித்துவான்க
ண்பர்களும் துணைவர்களுமாகிய அனைவருக்
நடமைப்பட்டிருக்கின்றோம்.

ச சஞ்சை முதல் நமது ஞானபோதினிக்கு ஐந்தாம்
தொடங்கு றது. அதிகக் கஷ்டமான காலமாகிய
ருஷங்களு கடந்தன. 'இந்த இளம் பருவத்திலேயே
ரிகை உலக ல் நற்பெயர் வாய்ந்து நன்கு மதிக்கப்பட்
றது ; ஜனங்களுக்கு உபயோகமான விஷயங்களைப் பிர
வருகின்றது' என்பதைக் கவனித்து நமது சென்னைச
லாசாலை யதிகாரிகள் இதன்கட் பிரசுரிக்கப்பட்ட விஷயங்
சிலவற்றைப் பள்ளிக்கூடங்கட்குப் பாட புத்தகமாக ஏற்
யிருக்கின்றனர். இனி இப்பத்திரிகை சோராது நிலைத்து
லும் பலருக்கும் பயன்படு மென்பதற்குற்ற பல குறி
மக்குத் தோற்றுகின்றன. இவற்றில் முதன்மையானது,
பதிப்பிப்பவர்களாகிய தாம்ஸன் கம்பெனியார் நமக்கு நல்
காட்டி இதனைத் தம் பத்திரிகையென அபிமானித்து
வமென்று மேற்கொண்டனர். இஃதன்றிப் பத்திராதி

290
Rm 211



பர் ஒருவருக்கு இருவராய்க் கலந்துழைக்கப் புகுந்தனர். இது வரையில் இதற்கு விஷயங்கள் எழுதிவந்த கனவான்க ளனைவரும் தமது ஊக்க மொழிகளால் எம்மை யுற்சாகப் படுத்துகின்றனர். புதிதாய்ப் பல வித்துவான்கள் விவித விஷயங்களைப்பற்றி இபபத்திரிகைக்கு எழுதுவேமெனத் தாமே ஒப்புக்கொண்டிருக்கின்றனர். மேற்சொல்லிய அம்சங்க ளனைத்தும் பொருந்தியதனாற் சந்தாதாரர்களும் தம்மா லியன்ற மட்டுந் தத்தம் நண்பர்களுக்கு இப்பத்திரிகையைக் காட்டி அவர்களு மிதனை ஆதரிக்குமாறு செய்வாரென்று நம்புகின்றோம். பத்திரிகையிற் பிரசுரமாகும் விஷயங்களைக குறித்து ஈங்கு விசேஷமாய் எழுதவேண்டிய அவசரமில்லை. ஆயினும், இரண்டொரு விஷயங்களை மாத்திரம் குறித்தல் தவறாகாது. நமது ஞானபோதினிப் பத்திரிகையிற் பாஷாபிவிருத்தியை நாடிய கட்டுரைகள் மாத்திரமே யன்றி, நமது தேசக்ஷேமத்தைக் கருதிய பல வித்தியா விஷயங்களும், நீதிபோதனைகளும், மனப்பயிற்சி, உடற்பயிற்சி, ஞானபிவிருத்தி, மன்பதைச் சீர்திருத்த விஷயங்கள், பௌதிக சாஸ்திரவாராய்ச்சி, கைத்தொழிற்பயிற்சி, தேகாரோக்கியம், வியாபாரம், விவசாயம் முதலிய பல விஷயங்களைப் பற்றிய வியாசங்களும், குறிப்புக்களும் அப்போதைக்கப்போது வரையப்படும். இங்ஙனம் யாம் மேற்கொண்ட இப்பெரு முயற்சியை யிடையூறின்றி இனிது நிறைவேற்றுவதற்கான உதவியை இப்பத்திரிகையை வாசிப்பவர்களின் வாயிலான் எமக்கு அளித்தருளுமாறு எல்லாம் வல்ல முழுமுதற் கடவுளை மனமொழி மெய்களிற் றொழுகின்றனம்.

பத்திராதிபர்.

---

## TAYUMANAVAR—A CRITICISM.
## தாயுமானுர் தத்துவ விசாரம்.

(415 - ஆம் பக்கத் தொடர்ச்சி)

இவ் உலகை முய்வான் அவதரித்தருளிய ஸ்ரீதாயுமானாரது திருச்சரிதத்தை யொருவாறு சென்ற வருடச்சஞ்சிகையொன்றிற் சுருக்கியுரைத்தேம்; அடிகளாரது திருப்பாக்களே போல அவரது சரிதமுங்கேட்பார்க்கு விழுமியது

பயக்கு மாகலின், அதனை யறிய வவாவும் மெய்யன்பினர்க்குத் தோன்றுஞ் சந்தேக மொன்றனையும் நீக்க வெண்ணிப் பின்னருஞ் சில பேசுவான் புக்கேம். என்னை ?

விசயரகுநாத சொக்கலிங்க நாயகன் "கந்துக மதக்கரியை வசமா நடத்தலாம்" என்ற திருப்பாசுரத்தின் உண்மையைக் கடைப்பிடிக்கவோ அன்றி யவரது திருவருளுண்மையை மற்றையோர்க்கு நன்கு விளக்கவோ ஓர் நாள் அடிகளார் திருச்சந்நிதானஞ் சென்று, "பரமகுருவே ! தேவரீர் "கந்துகமதக் கரியை வசமா நடத்தலாம்" என்பதாதியாகக் கூறியருளிய வருஞ்செய்கைகளைச் செய்து காட்டியருள்க" வென்று பிரார்த்தித்தானென்றும், அதற்குப் பெருமானார், "ஆம் திருவருள் கூட்டும்" என, அரசன் அவையிற்றை யெல்லாம் முறையே செய்வித்து, 'கரிநடத்தல், கட்செவியாட்டல், கரடிபுலிகளின் வாய்கட்டல், சிங்கமுதுகினிவரல், பஞ்சலோகங்களை வேதித்தல், வேறொருவர் காணாமல் உலாவல் என்பன மந்திர பலத்தானும் மருந்து முறையானும் ஆகலாம். கனலின் மேலிருத்தல் காண்பேம்' என்று நெருப்பு மூட்டுவித்தனன் என்றும், சுவாமிகள் அவ்வக்கினித் திரட்குண் மூழ்கி யிருந்தமையாற் சிறிது உடற்குறை யடைந்தார் என்றும், அதுவே காரணமாகத் திரிசிரபுரத்தினின்று இராமநாதபுரஞ்சென்று உயிர்நீத்தார் என்றும் புறச்சமயிகள் பொறாமையானும் அறியாமையானும் பேசிவிட்ட கதையுமொன்று கேட்டிருப்பார்கள். அக்கதை திரிவுகதையே. அவ்வுண்மைகூறுதும்.

பெருமானார் யோக பாதங்களை யநுட்டித்து முற்றிச் சிவஞானமுங் கைகூடப் பெற்ற மேனிலையராகலானும், அவற்றுள் யோகத்தில் ஞானமாவது பிருதிவியைத் தியானித்து வச்சிரகாயம் பெறுதலும், நீரைத் தியானித்து வாயுபவனங்களை யொடுக்கி நீரிலேநடத்தல் நிற்றல் கிடத்தல் செய்தலும், நெருப்பைத்தியானித்துக் கபாலத்தை வெடிக்கச் செய்தல், சரீரத்தை வெந்தபுரிபோ லாக்கல், நெருப்பின்மே னிற்றல் இருத்தல் கிடத்தல் செய்தலும், காற்றைத் தியானித்துத் தங்காயத்தோடு ஆகாயத்திலே பறத்தல் பரகாயப் பிரவேசஞ் செய்தலும், ஆகாயத்தைத் தியானித்துச் சரீரம் உயிர் முதலியவற்றை அணுவாக்கியும் மகத்தாக்கியும், * சூனியமாக்கியும், இலகிமா, கரிமா முதலிய சித்திகளைப் பெறுதலும், புருவமத்தியிலே கண்ணொளி மின்னொளி விந்துவொளி என்பவற்றைத் தியானித் தொடுக்கலும், ஒடுங்

* சூனியமாவது விளங்காமைப் பொருட்டு. அதனை "யாவையுஞ் சூனியம்" என்னுஞ் சிவஞான போதச் சூத்திரத்திலும், "முனைத்திடாதசத்துச் சத்தின் முன்னிருள்" என்னுஞ் சிவஞான சித்தியார்த் திருவிருத்தத்திலும் காண்க. அன்றியுஞ் சூனியமென்பது உள்ளது மன்று, இல்லது மன்று, இரண்மொவது மன்று, வேறுமன் றெனப்படும் பாழாம் எனவுங் கூறுப.



குங்கால் † தசநாதங்களைக் கேட்டலுமாம் என்று ஓர்வழி யுண்மை நூல்கள் கூறியாங்கு, யோகஞானராகிய இவர்க்கு அவையிற்றை யியற்றலெளிய வாகலானும், அன்றித் திருவருட் செல்வராகிய இவரும் திக்குத் திகந்தங்களி லோடியாடி வருதலும், சக்கிரதரனென நிற்றலும், இந்திர சந்திர பிரம விண்டாதியர் பதங்களைப் பந்தாக வெடுத்து விளையாடலும், அண்ட பகிரண்டங்களை யெல்லாம் ஓர் கடுகினுழைத்து, ஆங்கே அட்டமலைகளையுங் காட்டுதலும், பஞ்ச தருக்களும் இரு நிதிகளும் பூமியில் வந்து இருபாரிசத்தும் நின்று ஏவல்யற்றவும், பிச்சையாளரைக் கிரீடபதி யாக்கலும் ஓட்டினை ஆயிரத்தெட்டு மாற்றுத் தங்கமாக்கலும் யோக தண்டத்திலே யுலகை நிறுத்தலும், பூதங்களிலய மாகுங்காற் பரவெளியிற்பதிதலும், ஊழித்தீ ஊழிப்பிரளயம், ஊழிக்காற்றிவை தோன்றினும் தாரணையினாற் கெடாது நிற்றலும் செய்யவல்லுநர் அவ்வற்பமாய நெருப்பின்றிறத்தாற் றந்திரம் பிழைப்பார் கொல் ?

"தந்தையாய் தமர்தார மகவென்னு மிவையெலாஞ்
சந்தையிற் கூட்ட மிதிலோ
சந்தேக மில்லைமணி மாடமா ளிகைமேடை
சதுரங்க சேனை யுடனே
வந்ததோர் வாழ்வுமோ ரிந்த்ரசா லக்கோலம்" எனவும்,

"புத்தமிர்த போகமுங் கற்பகநீ ழலிற்
பொலிவுற விருக்கு மியல்பும்
பொன்னுலகி லயிரா வதத்தேறு வரிசையும்
பூமண்ட லாதிக்கமும்
மத்தவெறி யினர்வேண்டு மாலென்று தள்ளவும்"

எனவும் மலர்ந்து காட்டி, இம்மையிற் பெரிய அரசர் வாழ்வையும், மறுமையின் இந்திர போகத்தையும் வெறுத்ததன்றிப், பிரமபதம் விண்டு பதம் என்னுமிவையிற்றையும் உவர்த்து, சொல்லுமிடத்துப் பிருதிவி முதனாதமீறவாய உலகங்களை யெல்லாம் விடுத்து,

தாயுந் தந்தையு மெனக்குற வாவதுஞ் சாற்றி
னாயு நீயுநின் னருளுநின் னடியரு மன்றோ
பேய னேன்றிரு வடியிணைத் தாமரை பிடித்தே
னாய னேயெனை யாளுடை முக்கணு யகனே

என்று, தற்பரசிவத்தைத் தந்தையாகவும் சிவசிற் சத்தியைத் தாயாகவும், திருவருளையுஞ் சிவனடியாரையு முறவாகவும், திருவடிப் பேறுகிய ஆத்

† தசநாதங்களிவையென்பதை "ஆயவக் காலை நாதமொன் றுண்டா மக்கொரு பக்கலை முறையே மேயவின் கிண்கிணியே சிலம்புநன் மணியே மிளிர்தரு சங்கமே யாழே-சாய்வுற தாளம் வேய்ங்குழல் பேரி தழங்கும த்தளமுகி லென்பர்" எனவருகுஞ் சூதசங்கிதைச் செய்யுளான் ...

துவித முத்தியையே பேருகவுங் கொண்டு நின்றார். சின்னாட் பல்பணிச் சிற்றறிவினராய், இருவினை வயத்தா னிறந்து பிறந்துழலு மனிதரை யோர் பொருட்டாக மதிப்பார்கொல், துதிப்பார்சொல், அவர் புகழ், பெருமை யாகிய சிறுமைகளை வேண்டிக் கையற்றிரங்கு நிலையராவார்கொல்? அது "பொய்ம்மையாளரைப் பாடாதே யெந்தை புகலூர் பாடுமின் புலவீர்காள்" "நமக்கு மதுவழியே நாம் போமளவு, மெமக்கென்னென் றிட்டுண்டிரும்" என்னும் ஆத்த மொழிகளை யறியா ரணிவதோரணிகலமே. ஆதலின் இவர் பொய்ப்பொருள் காட்டிப் பொய்ப்புகழை விரும்பும் போதரன்மையின் அவையிற்றிற் குடம்படார் என்க. உடம்படினும் வாதனை யெய்தாரென்ப தொருதலையே. உண்மையாதெனிற் கூறுதும்.

விசயரகுநாத சொக்கலிங்க நாயகர் தேகவியோக மானபின்னர், அவர் மனையாளான ஸ்ரீமதி **சொக்கநாயக மீனாட்சிதேவி** என்பாள், தான் கோடற்குறிய * தாபத நிலையை யொரீஇ, அரசியற்றுவான் புகுந்தாள். சுவாமிகளுடைய பேரழகைக் கண்டு மோகித்துத் தன்னைக் கூடவேண்டுமென்று இரந்து கையறங் கொண்ட பழிநோக்கி, அவட்கு நல்லறிவுச்சுடர் கொளுத்திய பெருமான் அவணிருத்த றகவன்றென்றகன்று, சேதுசென்று, மீண்டில்லற முற்றித், துறவுபுக்கு, உத்தரகோச மங்கைக்கும் பொதியைக்குஞ் சமீபமாயுள்ள இடமே தமக்கு முத்தித் தானமென்றுணர்ந்து, அவை குலவப் பெறும் இராமநாதபுரஞ் சென்று ஆங்கே **இலக்குமிபுரத்திலே**யுள்ள மானுடர் சரிக்காக்காட்டகத்தே சிவயோக நிட்டை கூடியிருந்தார். அருளையர் முதலாய சீடர்களும் அவருடன் றொடர்ந்து நீங்காது ஒருங்கினுறைந்தனர். அதுகாலை மகாகனம் பொருந்திய இராமநாதபுரவேந்தரேறாகிய **ஸ்ரீமான் இரணியகர்ப்பயாசி ரவிகுல முத்துவிசய ரகுநாதசேதுபதி** அவர்கள் வேட்டமாடிப் பரிவாரத்தார் பின்வர, தாம் பரியை மிக்க வேகமாக நடாத்தி முன்வந்தார். நல்வினை வயத்தானே தாம் போம் வழி தப்பி அவ்வழி வந்தாரென்ப. புதுவழியாகலின் விரைவாகப் பரிதூண்டிச் செல்லாநிற்புழி, எவ்வகைத் தடைகளிருப்பினும் அவையிற்றை யெல்லாங் கடந்து செல்லும் மாப்புரவி சுவாமிகளிருந்த தானஞ் சமீபிக்கவும் ஆண்டுத் திடீரெனத் தடைபட்டு நின்றது. அச்சமும் **பூபாலனார்** அதிசயமுங் கொண்டு நாற்பாங்கரும் நோக்குங்கால் ஓர் புறத்தில் தக்ஷிணாமூர்த்தியே திருவருளுருக் கொளீஇ யமர்ந்தன்னவோர் அழகிய கோலமிலகுவது கண்

* "காதலனிழந்த தாபத நிலையும்" என்று ஆசிரியர் தொல்காப்பியனார் கூறியாங்கு கணவனிறந்தபின் மனைவிகொள்ளும் கைம்மை நோன்பு கூறுவது. கைம்மை நோன்பாவது மயிரைக் குறைத்து, வளையல் முதலாகிய கலன்களி யாவுங்கழீஇ, நெல்லில்லாமே புல்லரிசி கொண்டு, நறியநெய் தீண்டாமே நீர்ச்சோற்றுத் திரளுடனே எள்ளரைத்த விழுதுகூட்டி, புளிசேர்த்து வேவித்த வேளையிலையுடனுண்டு, பருக்கைக்கற்கள் பரப்பப்பட்ட படுக்கைக்கண் பாயுமில்லாமற் படுத்துத் தலைவனை யன்றி வேறொன்றுன்னாத நீர்மை விளக்கக்கூறுவதாம்.



டனர். உடனே குதிரையினின்று மிழிந்து தண்டாகாரமாக வீழ்ந்து எழுந்து சிரமேற் கைகுவியப் போற்றி நிற்பாராயினர். அரசரது புண்ணிய மேலீட்டானோ பெருமானார் யோகநிட்டையில் விளங்குந் துரியநிலையை விடுத்துச் சாக்கிரநிலையிற் கூடிக் கண்டிறந்து அரசற்கு விபூதி யளித்தனர். அது கண்டு **அருளையர்** ஆங்குப்போந்து சுவாமிகளது திருவுளக் குறிப்பானே யவரது நிலைமைகளை வகுத்துணர்த்தினர். அரசனவை கேட்டு மிக்க அன்பும் உவகையுமுற்று, "அடியேன் தேவரீருக்குக் குற்றேவல் புரிய அவாவினன்" என வேண்ட, வேண்டிய வேண்டியாங்கீயும் தடங்கருணைப்பெருங்கடலாகிய அடிகளாரும் "அங்ஙனே யாக"வென்றருளினர். அரசர் நாடோறும் அரண்மனையினின்றும் போந்து தரிசித்துப் பால்பழ முதலிய வுதவி யுபசரித்து வந்தார். வேந்தர்க்கு அன்றுமுதல் எண்ணியவெல்லா மெளிதிற் கிடைத்தன. **பெருமானார்** * **யோகாசன** மொன்பானுட் சிறந்த பதுமாசன மிட்டுச் † **சந்நியாசிகட்குரிய** பிராணாயாம முஞற்றித் தாரணைதியானத்தொடு சமாதி கூடிய காலத்து மூன்று நான்கு தினங்கள்காறுந் திரையடங்கிய கடல்போலவும், அசைவற்ற தீபம்போலவும் இருப்பதுமுண்டு. இங்ஙன நிகழுநாளிலே சேதுபதி மன்னவரிடத்து **மங்களேசுரக்குருக்கள்** என்பார் ஒருவர் இருந்தார். அவர் கமனசித்தி பெற்றவர். அரசன் எவ்விடத்திற் கனுப்பினும் ஒருகணத்திற் சென்று ஒரு கணத்தின் மீள்கின்றவர். * **தாமத குணசித்திகளாகிய** ஆகருடணம், அதிரிசியம், அஞ்சனம், வசியம், இரசவாதம், வயத்தம்பம், தம்பனம், மோகனம் என்னும் எட்டினிலும் கைவந்தவர். இவை காரணமாக அரசற்கு அவரிடத்தில் மிக்க பிரியமுண்டு. அந்தப் பெருமதிப்பும் பிரியமும் பெருமானாது தரிசனங் கண்ட நாட்டொடங்கி யரசற்கு அபரபக்கச் சந்திரன்போலாயின. சுவாமிகள் மீதோ பேரன்பு பூருவமதியம்போல வளராநின்றது, அதுகண்ட **மங்களேசுரக் குருக்கள்** பொறாமைகொண்டு, உள்ளம் நொந்து.

* யோக ஆசனங்கள் ஒன்பது ஆவன-சுவத்திகம், கோமுகம், பதுமம், வீரம், சிங்கம், பத்திரம், முத்தம், மயூரம், சுகாசனம் என்பவாம்.

† சந்நியாசிகட்கு உரிய பிராணாயாமம் ஆவது-இடை நாடியாற் பதினாறு மாத்திரை யளவு வெளியிலுள்ள சுத்த வாயுவை உள்ளே யிழுத்து நிறைத்து, சமட்டிப் பிரணவங்களுள் அகாரத்தைத் தியானித்து, அங்ஙன நிறைத்ததனை உகாரதியானத்தோடு அறுபத்து நான்கு மாத்திரை கும்பித்து, அதனை மகாரதியானத்துடன் பிங்கலை நாடி வழியே முப்பத்திரண்டு மாத்திரை யளவு வெளிவிட்டு, பின்னர்ப் பிங்கலை நாடியாற் பூரித்துக் கும்பித்து, இடைநாடியால் இரேசிக்க வேண்டும். மாத்திரை முற்கூறப்பட்ட அவையேயாம். பூரிக்கு மிடத்து மகார மூர்த்தி யாகிய சிவனையும், கும்பிக்கு மிடத்து உகார மூர்த்தி யாகிய விண்டுவையும், இரேசிக்குங் கால் அகார மூர்த்தி யாகிய பிரமனையுந் தியானித்தன்முறையாம். இது போல் நாளொன்றுக்குப் பதினாறு தரஞ் செய்தல் விதி. பிராணாயாமம் - பிராண = பிராணவாயுவை, ஆயாமம் = தடுத்தல்.

* தாமத குணசித்திகளாகிய இவை முறையே, தூரத்திலுள்ள பொருள்களைச் சமீபத்தில் வருவிப்பது, காணும் பொருள்களைக் காணாமலிருக்கச்செய்வது, காணாதவற்றைப் பிரத்தியக்கமாய்க் காட்டுவது, பகைவரைத் தன்வயப்படுத்துவது, இழிந்த லோகங்களை மாற்றுயர்ந்த லோகங்களாக்குவது, பாலரை விருத்தராகவும் விருத்தரைப் பாலராகவுஞ் செய்வது, கட்டுப்படாதவற்றைக் கட்டுக்குட்படுத்துவது, தன்னை யாவரும் மோகிக்கச் செய்வது என்க.

அடிகளார்மீது அரசற்கு வெறுப்புண்டாகுமாறு பற்பல மந்திர தந்திரச் செய்கைகளைச் செய்தனர். செய்துமென்? அவற்றா னொருசிறிதும் பயன் விளையாமே அரசன் றன்மாட்டு வெறுப்புடையனாதல் கண்டு காலம் பார்த்திருந்தார். தாயுமானார் என்னினைந்தோ ஓர் நாள் தாம் வழக்கமாகக்கொண்ட பதுமாசன விருக்கையை விட்டுச் சுகாசனங் கொண்டு, சயனத்திருந்தபடியே நிட்டைகூடினர். அரசர் வழக்கம்போற் றரிசிக்கவந்தார். ஐந்துநாள்காறும் எழுந்திராமை கண்டு வருந்திச் சென்றார். அங்ஙனமே யதன்பின் ஐந்துநாளுமாகப் பத்துநாள்காறும் இருந்தபடியே அசைவின்றிப் படுத்திருக்கக்கண்டு கவற்சியெய்தி, அரசன் தன் கோயில் சென்று யோசிக்கும் "அந்தோ! பத்துத்தினங்காறும் பரமநாதனார் பாவியேனது பால்பழங் கொண்டிலர், படுக்கைவிட்டெழுந்திலர், பதுமாசனம் பரித்திலர், பரமநிட்டை பண்ணிலர், அத்துவித சாயுச்சியப் பேறடையுங் காலஞ் சமீபித்ததென்று சின்னாண்முற்றெரித்தனர்மன், சீடர்களுஞ் செறியக் காணேம், என்செய்வது!" என்று காவலற்குக் கவலை பெரிதாயிற்று. மங்களேசுரக் குருக்கள் மகிழ்வுடன்வந்து புறம்வேர்க்கக் கூறும். "அரசே! சுவாமிகள் பரமபதமடைந்தனர். பதுமாசனத்தைக்கொண்டு யோகநிட்டைகூடுவார் இதுகாறும் எழுந்திருக்காதும், நிட்டை கூடாதும் படுத்திருப்பதெற்றிற்கு? யோகஞானநுபவமுடையார் இங்ஙனஞ் சயனத்திலோர்தினமாதல் படுத்துறங்கார். அருளையர் முதலாய சீடர்களும் தங்கட்கு உரைத்த புழுகுகளுக்கு மாறாக அவரிறந்து பட்டமையால் அஞ்சி நுமக்கு மறிவிக்கா தோடினார்கள். ஆகலின் அவ்வுடலத்தை யெடுத்துத் தகனஞ்செய்ய உத்தரவிட வேண்டுமென்று கூற, சேதுபதி மன்னவரும் அம்மொழிகளை யுண்மையா நம்பி யங்ஙனஞ் செய்ய விதித்தனர் என்ப. குருக்கள் உள்ளே யானந்தந் தூங்க, அவ்விடத்தேயே விறகடுக்கிப் பெருமானாரது திருமேனியைப் பன்னிரண்டாநாட் பகல் பன்னிரண்டு மணியளவில் வைத்து நெருப்பு மூட்டிவிட்டார். பெருமானார் அற்றைப் பகலும் இரவும் நெருப்பிலேயே கிடந்தருளினர். அஃது உத்தரகோச மங்கையிற் றிருவிழாத் தரிசிப்பான் சென்று பதினொருநாளளவும் ஆண்டேயிருந்த அருளையர் முதலிய சீடவர்க்கத்தவர்களுள், அருளையர் அற்றைக் காலையஃதை யுணர்ந்து அளவிலாத் துயர்கொண்டு ஓடோடியும்வந்து நெருப்பை யவித்துத் திருமேனியை முன்போல் வைத்துத் துன்புற்று 'இதனைச் செய்தோரும் அவர் வமிசங்களும் புத்திர சந்தானமில்லா திருக்கக் கடவர்' எனச் சாபஞ் சொற்றார். உடனே சுவாமிகள் விழித்தெழுந்தார் போலெழுந்து, பராபரக்கண்ணி, பைங்கிளிக்கண்ணி, எந்நாட்கண்ணி, காண்பேனோவென்கண்ணி, ஆகாதோவென்கண்ணி, இல்லையோவென்கண்ணி, வேண்டாவோவென்கண்ணி, நல்லறிவேயென்கண்ணி, பலவகைக்கண்ணி, நின்றநிலை, என்னுமிவை பாடி முடித்தருளினர். அரசர் இவற்றையெல்லாங் கேட்டுச் சொல்லொணாத் துன்பங்கொண்டு சுவாமிகள் மலரடியில் வீழ்ந்து



நின்றார். ஒன்றுந் தோன்றாது நின்ற அரசர் "மங்களேசுரனை யின்னே கொல்லுவல்!" என்று சீற்ற முற்றெழுந்தாராகப், பெருமானவரை யமைத்து "ஒன்றுஞ்செய்யற்க. எல்லாஞ் சிவன் செயலே. மங்களேசுரனை முன்போல் விரும்புதி. அருளையனால் இடப்பட்ட சாபம் பின்னர் யோகி யொருவரால் நின் வமிசத்துக்கு நீங்கும்" என்றருளினர். பெருமான் குருக்கள்மீது வைத்த இரக்கத்தைச் சுட்டியன்றோ அருளையர் தாம் அருளிய அகவற்கண்,

"களவுவஞ் சனைகள்செய் கருமிக டமக்குந்
தெளிவுவந் துறவருள் செய்திடுந் திறத்தோன்" என்று தெரித்தனர்.

அடிகளார் பின்னர் ஆனந்தக் களிப்பும் அகவலும் வண்ணமும் பாடி அகண்டாகார நித்த வியாபக சச்சிதானந்தப் பிழம்பாகிய சிவத்தோடிரண்டறக் கலப்பான் சமாதியிலிறங்கினர். சேதுபதி மன்னவர் ஆலயஞ் சமைத்துஞ் சமாதிகூடிய நாளைச் சிலைக்கண் வரைந்து நாட்டிப் பூசை முதலியவு நடந்துவர ஏற்பாடு செய்தனர். அருளையரிட்ட சாபத்தால் மங்களேசுரக் குருக்கள் சந்ததி யடியற்றொழிந்தது. சேதுபதி மன்னவர்க்கும் பின்சந்ததியின்றி அவ்வரசாட்சிக்குத் தத்த புத்திரர்களே உரியராய் ஆண்டுவந்தார், இங்ஙனம் ஆண்டு பலகழிந்தனான்று, விசயரகுநாதசிவஞானத்தேவரது அரசாட்சிக்காலத்திலே மகாசிவயோகியொருவர் ஆண்டுற்றுத் தாஞ்செய்யும் யாகத்திற்குத் துணைநிற்பான் மன்னரைவேண்ட, அவரும் அரசியும் அங்ஙனமிருந்து முற்றுவித்தாராக, யோகியார் யாக அவிர்ப்பலியினிருபிடி யெடுத்து அரசர்க்கும் அரசிக்கும்கொடுத்துப் புத்திரசந்தானந் தடைப்பட்ட காரணத்தையு முரைத்து, இனிமேற் சந்ததி யுண்டாவதாக வென்றகன்றனர். அவர்க்குத் தான் மகாகனம் பொருந்திய **ஸ்ரீ பொன்னுசாமித் தேவரவர்களும்**, ஸ்ரீமான் **முத்துவிசய ரகுநாத ராமலிங்கத் தேவரவர்களும்** உதித்தார் என்ப. இவ்விருவர்களையும் அறியா உலகம் இல்லை. இவ்விருவருள் இராமலிங்கத்தேவ பூபாலனாரிடத்துத் தவப்புதல்வராகக் கல்வி கேள்விகளின் முதிர்ந்து, குடிப்பிறப்புடுத்து, பனுவல் சூடி, விழுப்பேரொழுக்கம் பூண்டு, உலகெங்கும் புகழ்பரப்பி, சிவஞானச் செல்வராய், பாண்டியரே போற் செந்தமிழ்ச் செல்வியைச் சீராட்டி வளர்த்து அரசாளாநின்ற கனம் பொருந்திய **முத்து விசய ரகுநாத ரவிகுலதிலக இரணியகர்ப்பயாசி பாஸ்கரசாமி சேதுபதி மன்னவர்** தோன்றி நிலவுகின்றனர். தாயுமானாரது சமாதி இற்றைக்குச் சுமார் ஆறு வருடங்களுக்கு முன் பிரித்துப்பார்க்க நேர்ந்த காலத்து, அனேக பெரியோர்கள் போய்த்தரிசித்து அவரது திருமேனி யெப்போதும் இருக்கும் விகாரமடையா திருப்பக் கண்டவாறுணிலை யுண்மை யறிந்தனர் பலர். அவர் சமாதியடைந்த காலம் கி. பி. 1746ஆம் என்று சிலாசாசனத்தாற் றெரியவருகின்றது.

சென்ற மாதத்துச் சஞ்சிகையினும், இதன்கணும் உரைத்த சரித நுட்பத்தை யறிந்த பெரியோர், அவருண்மை நிலையைக் கொள்ளுமிடத்து எல்லா மதத்தையும் விரும்பும் பொது நிலையரன்றிச் சைவசித்தாந்தத்தைத் தத்துவமாகக் கொண்டவரல்லர் என்று உன்னவு மாட்டார். * ஏகான்ம வாதக் கொள்கையை யுடையார் என்று வழங்கவும் வாரார். ஆகலாற் சமயாதீதமாகிய வைதிக சைவசுத்தாத்துவிதத்தையே முடிந்த நிலையாகக் கொண்டவரென்பது தானேபோதரும். அஃது அவரது திருப்பாடல்களைக் கொண்டாய்ந்து சித்தாந்தப்படுத்த லுசிதமா மாகலின் எடுத்து விசாரிப்பாம்.

யாழ்ப்பாணம் - நா. கதிரைவேற் பிள்ளை.

---

## A LETTER.

## ஒரு நிருபம்.

பத்திராதிபரவர்கட்கு

ஐயா,

தற்காலம் பாமரரஞ்சிதமாகவே வெளிவரும் தமிழ்ப்பத்திரிகைகள் எண்ணிறந்தன. தமது ஞானபோதினி யொன்றே அவ்வாறின்றிச் செய்யுளின் தீஞ்சுவை கண்டவர்களாகிய பண்டிதர்க்கும் அச்செய்யுட்சுவைபருகும் அவாவினர்க்கும் ரஞ்சிதமாக வெளிவந்துலவுகின்ற தென்பதுண்மை. இதன் உண்மையையும் உயர்வையும் உற்றுணராது சென்ற ஜூன்மீ 8உ திங்கட்கிழமை வெளியான சுதேசமித்திரனின் தலையங்கத்தைச்சார்ந்த 3-ஆவது பத்தியில் "ஞானபோதினி" எனும் தலைப்பெயரால் வரையப்பட்டிருக்கும் விஷயங்கள் நிருபமெழுதுவோர்க்கு விருத்தத்தை விளைக்கக்கூடியதென்றே நம்பத்தகும். எனினும் நமக்கும் இஞ்ஞானபோதினியின் நிர்வாக அங்கத்தினர்க்கும் அத்தகைய கொள்கை ஒரு காலத்து முளதாகாதென்னும் துணிபையே மேற்கொண்டு யானியற்றிய குறைவிண்ணப்பம் எனும் செய்யுள் ரூபத்தையும் ஞானபோதினியிற் பிரசுரிக்குமாறு வரைந்துள்ளேன்.

இங்ஙனம்

அசலாம்பிகையம்மாள்.

---

* ஏகான்ம வாதமாவது மாயாவாதம், பாற்கரியவாதம், கிரீடாப்பிரமவாதம், சத்தப்பிரமவாதம் என நான்கு வகைப்படும். இங்ஙனம் வேறு வகைப்பட்ட ஏகான்ம வாதநூலைச் செய்தவர் வியாசமுனிவர். இவற்றுள் மாயாவாதக் கொள்கையாகிய விவர்த்தவாதம் அசுரகுருவினாற் சூரபன்மனென்னும் அசுரனுக்கு உபாசமாக உபதேசிக்கப்பட்டது. எவைபோலெனின் இந்திர புரோகிதனால் இந்திரற்கு உலகாயதமும், கண்ணனாற் பார்த்தனுக்குச் சாங்கியமதமும் (இதையும்) போதிக்கப்பட்டாற்போலென்க. இவற்றின் விரிவு பின்னர்க் கூறுவாம்.



## AN APPEAL TO SARASVATI.

## குறைவிண்ணப்பம்.

### Introductory Note.—முகவுரை.

பெண்கள் கல்வி கற்பது அடாதெனவும், அதனால் ஆடவர் கீர்த்தி யழிந்துபடுமெனவும் தக்கோர் முன்னிலையிற் சாற்றவுந் தகாத வின்னுமெண்ணிறந்த பற்பல துர்ப்பலநியாயவாதங்களைத் துணைக்கொண்டு வம்புரையாடும் வாதினரொருவரை யெதிர்ப்பட்டு விடையளிக்க நேர்ந்த தருணத்து அவ்வினாக்கள் பலவற்றுட்,

"பெண்பாலாரை யநுபவித்தற்குரியோர் ஆண்பாலாரே யாதலின் கல்வியாகிய பெண்பாலையும் ஆண்பாலாரே யநுபவித்தற்குரியராவர். அவ்வாறின்றிப் பெண்பாலாரைப் பெண்பாலார் அநுபவித்தல் சாலாததுபோலக் கல்வியாகிய பெண்பாலைப் பெண்பாலார் பொருந்துதல் செல்லாதாம்" எனும் வினாவொன்றற்கு அவர் விரும்பியபடியே விடை யளிக்கவேண்டிப் "பெண்பாலாரை யநுபவித்தற்குரிமை யாண்பாலார்க்கேயென்பது சரதம். அவ்வாறே கல்வியாகிய பெண்பாலையும் அநுபவித்தற்குரிமையுடையார் அவ்வாடவரே யெனின், ஆண்பாலார்க்கே கல்விப் பிராப்தியும் அதன்வழிப் புலமை யின்பமும் நல்லுணர்வும், நிகழ்தல்வேண்டுமன்றிப், பெண்பாலார் பெண்பாலாரைக் கூடுதலும் அதனாலெய்தும் இன்பவுணர்ச்சியும் உலகிலில்லாதவாறுபோலப் பெண்பாலார் கல்வி பயில்வாராயின் அக்கல்வி பிராப்தியாகாமையும் அதன்வழி இன்பமும் நல்லுணர்வும் சித்தியாமலு மவலமாயொழிதல்வேண்டுமன்றே! அன்றியும் பெண்பாலாரைப் பெண்பாலார் விரும்பாதவாறே கல்வியாகிய பெண்பாலிடத்தும் அவ்வினத்தினராகிய பெண்பாலார்க்கு விருப்பம் நிகழாதிருத்தலே நியதமாகவேண்டுமன்றே! அவ்வாறின்மையை யாவருங் கண்கூடாகக்காண்பர் ஆதலின் உமது வினா உமக்கெவ்வாறு ஆதரவு செய்யுமென நம்பினீர்? அந்தோ!" எனக்கூறலும், அன்னார் சற்றுத்தெளிந்து தமது வாதம் வாதமாகவே பறக்கத்தக்கதென்பதை யெண்ணிப்பாராமலேயே மோசம்போன துண்மையெனவொப்பி வருந்தியபொழுது, அவர் நிலைமைக்கு வருந்திக் கல்வித்தெய்வமாகிய கலைமகள்பால் எனக்குள்ளெழுந்த வெண்ணங்களை விண்ணப்பித்தனன். அக்குறைவிண்ணப்பம் அடியில் வருமாறு:—

### நேரிசையாசிரியப்பா.

பொன்னம் பங்கயப் பூம்பொகுட் டுறையு
முன்னவன் வேத முழக்குசெந் நாவின்
வீற்றிருந் தருளும் வித்தக மயிலே!
வெள்ளிவெண் கோட்டு விரிதரு முண்டகக்

கள்ளவிழ் வள்ளவாய்க் காமர்பூந் தவிசிற்
பொலிதருங் கற்பகப் பூநிலா விளக்கே!
எழுமையு நல்வினை யீட்டிய நல்லோர்
பழுதிலா வுள்ளப் பசும்பொற் றளியுள்
ளினிதினின் றுலவு மெழிலோ திமமே!
செஞ்சிலம் பரற்றுநின் சீறடித் துணைக்கட்
சஞ்சல வடிவினேன் சாற்றுவிண் ணப்ப
நெஞ்சுவந் தேற்றரு ணின்றிருச் செவியு
ளணைத்தல களிக்கு மந்தணர்க் கினிய
மனைத்துணை வாழ்க்கை மாண்பினை யாதலிற்
பற்பல சீவப் பகுதிகட் கெல்லா
முற்படு மெய்த்தாய் முறைமையி னீயே
யென்பது சரத மாகநீ யீன்ற
வன்பார் மக்களு ளாண்பா லாரும்
பெண்பான் மக்களும் பேதமொன் றின்றி
நின்னருள் பெறுத னியதமா யிடவு
மிந்நெறி வாழ்க்கை யிகந்தா டவரிற்
சிற்சில ராற்றுச் சிந்தைய ராகிப்
பொற்சிலம் பரற்றும் பூங்கொடி மின்னு
ரொள்ளி॥ கல்விக் குரியவ ரலரெனக்
கள்ளவிழ் கூந்தற் காரிகை யார்தமைப்
பேதைமை யென்னும் பெருங்குழி வீழ்த்தித்
தம்மரு நெறிக்குத் தாமே முள்ளிட்
டிம்மைப் பயனை யிழக்குந ராக
மற்றுஞ் சிற்சிலர் மாண்புகழ் விருப்பாற்
செற்றமில் சிந்தைச் சீரியர் குழுவிற்
பொருந்தின ரொப்பப் புறத்தி னொழுகி
யகத்திற் குன்றியை நிகர்த்தன ராகி
யிருமனக் கவர்ச்சியு ளிடர்ப்பட் டிருப்ப
வேனைய பல்லோர் ரூனமில் கொள்கை
தாங்கின ராகித் தாழா வூக்க
மாங்கில மன்ன ராளுகைப் பயனுற்
கொண்டொரு மனதாய்ப் பண்டைப் புனித
விந்தியத் தாயி னிரும்புகழ்ப் படாத்தை
யெண்டிசைப் புறத்து மிலக விரிக்கு
மாவலாற் பல்வகை யரிதின் முயன்று
முண்மை யூக்கமு மொற்றுமை யுணர்ச்சியு



ஜி. யூ. போப்பையரவர்கள்.

மொருமனப் போக்கு மருவித் துணைசெய்
நல்லோர் சிலரே யாதலி னல்லார்
சொல்லார் கல்வித் துறையிற் பயிலு
நாகரி கத்தை நண்ணின ரெனினுஞ்
சாகர நிகரெனச் சாற்று மனையற
மோம்புதற் குரிய வுயர்குணம் வாய்ப்பப்
பெற்றிலர். இன்னும பெற்றிலர். அந்தோ !
நூலிடை யாய்ந்த நுண்ணுணர் வென்னுஞ்
சீலத் திறவுகோல் சித்தத் திலதேற்
றத்தங் கடமையுஞ் சார்விதி விலக்கு
முத்தமக் குணமு மொழுக்கமு முணர்வும்
பெய்திடு நீதிநூற் பெட்டகந் திறந்து
கைவரக் கொண்டு களிகூ ராற்ற
லெப்பா லார்க்கு மியலா தாதலி
னொருவா தில்லற முஞற்றுதற் குரிய
விருபா லாரும் பெருநூற் பயிற்சி
பெற்றுச் செழித்தலே பிழையா வறமெனன்
மாறுகோட் பட்டு மயங்கும் பிறரு
மொத்த மனத்தி னுளங்கொண் டோராய்ச்
சித்தந் திருந்திச் செம்மையிற் றழைத்துச்
சிற்றிடை யாருஞ் சிறுமையிற் றீர்ந்து
தேயஞ் செழித்துச் சீர்பெறு மாறு
நின்வரி மழைமதர் நீல வாட்கட்
டிருவருள் சிறிது தாக்கி
யுரிமையி னளித்தி யுன்னருங் கடனே.

அசலாம்பிகை யம்மாள்.

---

## ON DR. POPE'S TIRUVACHAKAM.

## போப்பையர் திருவாசகச்சிறப்பு.

### நிலைமண்டில வாசிரியப்பா.

வாழிய முத்தொழில் வன்மை வாய்ந்துமாண்
பாழி படைத்தவோ ரடிகள்சே வடிகளே !
போப்பைய ரென்பெயர் புனைந்து செந்தமிழ்
காப்பதற் குறித்த கருணைமே தக்கீர் !
தென்மொழிக் கிலக்கணம் பன்முறை திருந்த
முன்மொழிந் துள்ளீர் ! முயற்சி பெரிதன்

றொருநூ லுரைபார்த் தின்னொரு நூலென்
றிருநூ லாக்கினி ரிதுபோ லென்றால்,
என்புந் தசையு மிசைந்துருப் பெறுமா
றன்பு மருளு முருவா மருந்தவன்
மாணிக்க வாசக மருவுழி யன்னோன்
மாணிக்க வாசக வரன்றிரு வாசக
மாங்கிலத் துரைசெய் தச்செயற் றிட்டோ
ரீங்கிலை யெனுஞ்சொல் லீங்கிலை யாம்படி
தமிழினுங் கவிக்கெலந் தக்கவா றுரைசெய்
தமிழ்தினு மேம்படுத் தருளினீர். ஐயா !
திருவருட் செல்வஞ் சிறந்துளீர் நீயிரே !
குருவருட் பெருங்கடற் குளித்துளீர் போலும் !
முதியோர் வாயின் ஞானமென் றொருமொழி
புதிதோ வழங்குமிப் புவனியில்? ஆரியீர் !
முதுமை வயதினோ கல்வியி னோமொழி
வதுதா னெஃதென வழக்கிடுங் காலைக்,
கற்றோ ரெல்லாங் கல்வியி னென்பார்,
மற்றோ ரெல்லாம் வயதினு மென்பார்.
இருமையு மொருவர்க் கெய்தினை யுறவு
வருவதற் கிலை; நும் மாட்டு மரீஇயன
விரண்டு மென்றா லெவன்சொலற் கிருந்தது !
திரண்ட செந்தமிழ்க் கல்வி சிறந்துளீர் !
கற்றதாற் பயனென் கடவுண்மா ணடிக்கன்
புற்றில ராயி னென்றுரைத் தனரே.
ஐந்திலக் கணமு மைந்திலக் கியமு
மைந்துறப் பயின்றென் பயிலாது மாழ்ந்தேன் !
கருணைக் கரும்பிற் கனிந்தெழு மிரதப்
பொருணயந் தளித்தீர் ! புவிக்கெலாம் நல்லீர் !
கண்டுளே னுமதுளக் கனிவு மினிமையும் ;
கொண்டுளே னன்பிற் பெருங்கொண் டாட்டம்.
செந்தமிழ் பயிலா தாங்கிலஞ் சிறந்த
மைந்தரு மாங்கிலம் பயிலா மாந்தரும்
வாழ்த்துவ தொன்றோ மற்றிரு மொழியினுங்
காழ்த்துளோர் நுமக்கென் கடன்படா ரையா!
ஆழிசூ ழுலக மனைத்துறும் பெரும்புகழ்
வாழிய வாழிய வாழிய மன்னே.

கே. ஜி. சேஷையர்.



# AN ADAPTATION OF GRAY'S ODE ON THE DISTANT PROSPECT OF ETON COLLEGE.

## செவ்வந்திமா நகரக் கல்லூரிப் பாட்டு.

### Introductory Note.—முகவுரை.

ஆங்கிலமொழியில் வல்ல **கிரே** என்னு நல்லிசைப்புலவர், **ஓரேஸ் உவால்போல்** என்னும் முதன் மந்திரி புதல்வரொடு கேண்மை கொண்டு மற்றவரோடு ஐரோப்பாக்கண்டத்தின் தென்பகுதியில் யாத்திரை போனபோது இடையில் அவர்க்குந் தமக்கும் மனவேறுபாடு நிகழ, அவரைப் பிரிந்துபோந்து இங்கிலாந்து தேசத்திலுள்ள தமது நாட்டிற் சென்றிருத்தலும், யாத்திரை முடித்துத் திரும்பத் தந்நாடடைந்த ஓரேஸ்உவால்போல் என்பவர் கிரே என்னும் புலவரொடு தம்மிடை நிகழ்ந்த அவ்வேறுபாடு தமது தகுதியிலொழுக்கத்தான் உண்டாயினதென்றும் இனி யதனை மறந்து தம்மொடு பெயர்த்துங் கேண்மைகொண்டொழுகல் வேண்டுமென்றும் கிரே என்னும் புலவரை யிரந்துகொண்டு ஒரு கடிதம் விடுப்ப, அதற்கு இசைந்துஅவர் **உவின்ஸர்** என்னும் மலைக்கோட்டையிலிருந்த தந்நண்பரைக் காண்டற்பொருட்டுச் சென்றபோது தம்மெதிரே விளங்கித் தோன்றிய **ஈட்டன்** என்னுந் தாங் கல்விபயின்ற கல்விக்கழகத்தையும் அதனை யடுத்துயர்ந்த உவின்சர் மலையையும் அதனடிவாரத்தோடும் **தேம்ஸ்** நதியையுங் கண்டு புனைந்துபாடியது இப்பாட்டென்ப. கிரே என்னும் புலவர் தந் நண்பர் உவால்போல் என்பவரோடு ஒருங்கு கல்வி பயின்ற கழகம் ஈட்டன் கலாசாலையாம். இக்கலாசாலை இங்கிலாந்து தேசத்திற் செங்கோலோச்சிய **என்றி** என்னும் புகழ்மன்னரால் கி-பி ௲௪௪௰-ஆம் ஆண்டு அமைக்கப்பட்டது. உவின்சர் என்பது ஒரு சிறு குன்று; அதன் குவட்டிலியற்றப்பட்டுள்ள கோட்டையானது இங்கிலாந்து தேசத்து அரசர் இனிது வாசஞ் செய்வதற்கு ஏற்ற உறையுளாகப் பயன்படுவது.

இனி இவ்வரியபாட்டைக் கிடந்தவாறே யெடுத்துக்கொண்டு மொழிபெயர்ப்பின் பூகோளசாத்திரப் பயிற்சி தேறாத செந்தமிழ் மொழியில் வல்ல எம்பெருமூதமக்கள் இப்பாட்டின்கட் காணப்படும் ஊர்ப்பெயர் இடப்பெயர் யாற்றின்பெயர் மலைப்பெயர் முதலாயினவற்றுள் ஒன்றுதானுமறிய மாட்டாமையின் மனவெழுச்சி குன்றி யதனைப் பயிலாது போகவேவாராதலானும், பிறபாடைச்சொற்கள் தன்னகத்து விரவிவருதலாற் றன்னழகிழந்து சுவை வேறுபட்டுக் காட்டுஞ் செந்தமிழ் மொழியில் அச்சொற்களை மாட்டிவிட்டு வழங்கல் வடுச்சொற் சேதுவாமாகலானும், சிங்களமுதலிய பிறபாடைச்சொற்களெல்லாங் கலந்து வழங்குந் தமிழ்மொழியை யவற்

றுபடாது வழங்குந் தூய்மையுடைத்தென்ற லோவாதாமென்பார்க்குச் சிங்களமுதலிய பிறபாடைமாக்கள் தம்மொடு கலந்து பழகுங்கால் அவர் சொற்களை எடுத்துக்கொண்டு தமது தமிழ்வழக்குக் கேற்குமா றெல்லாந் திரித்து உரை நிகழ்த்துந் தமிழ் மூதுமக்கள் செந்தமிழியல் வழக்குப்பற்றி வரும் அத்திறம்போலாது எமக்கு வேண்டியவாறெல்லாம் பிறபாடைச்சொற்களைத் தமிழ் மொழியிற் புகுத்தி வழக்கியல் வேறுபடுத்தல் உலகநெறியொடு மாறுபடுமாதலானும் இப்பாட்டின் ஒழுகலாற்றிற் கியையத் **திரிசிரபுரம்** என்று வழங்குஞ் செவ்வந்திமாநகர்க் கலாசாலையைப் புனைந்து பாடியதாக இதனைத்தமிழில் மொழிபெயர்த்திட்டாம். என்னை? முதனூலிலுள்ள **ஈட்டன்** கலாசாலைக்கேற்ப **ஸெண்ட்ஜோஸப்** கலாசாலை **எஸ். பி. ஜி.** கலாசாலையும், **உவின்சர்** என்னுங் குன்றிற்கு ஏற்பத் **தாயுமானவர்மலை**யும், உவின்ஸர் அடிவாரத்தோடும் **தேம்ஸ்** நதிக்கேற்பத் தாயுமானவர் மலையடிவாரத்திலோடுங் **காவிரியாறும்** இந்நகரிடைக் காணப்படுதலான் என்பது. அற்றேல், ஈட்டன் கலாசாலையைப் போலவே யிந்நகரிடைக் கல்விக்கழகங்களும் ஆங்கில மொழிப்பெயர்பெற்று நிலாவுதலின் அப்பெயர்களை யிப்பாட்டின்கட் புகுத்தி நடவல் வழுவாம்பிறவெனின், நன்றுசொன்னாய், அங்ஙனமாட்டிவிடினன்றே வழுவாம், முதனூலில் **ஈட்டன்** கலாசாலைப் பாட்டென்று தலைக்குறியீடு தந்ததன்றி அப்பெயர் பாட்டின்கட்டந்து வழங்கப்படாதவாறுபோலக் கல்விக்கழகமென்றன் மாத்திரைக்கன்றி அப்பெயர்களிதனுட்டந்து வழங்கப்படாவென்பது காண்க.

இனிக்கிரே என்னும் புலவர் முதிர்ந்த செய்யுட்புலமைமாட்சி கைவரப்பெற்று உலகியற் பொருணெறி முழுதுணர்ந்து பெருநலஞ்சுவைப்பச் செய்யுளிடைச் சொனுவி இனிது மிழற்றுமாறும், கழகத்திடைக் கல்விபயிலுஞ் சிறுகுறுமாக்க ளியல்புணர்ந்து கூறுமாறும், பின் அச்சிறார் தமக்கு வருந் துன்பங்களை யெல்லாந் தொகுத்து இரக்கந்தோன்றக் கிளக்குமாறும் பிறவும் பெரிதும் நன்கு மதிக்கப்படுவனவாம். அவற்றுள், முதல் ஐந்து செய்யுட்களில் தம்மெதிரே அழகொளிர நிவந்து சேணோக்கும் கல்லூரியின் கொடுமுடியினையுங் கோபுரத்தினையும் விளித்து நீவிர் இளமரக்காவின் வளமுறு நிழலையும் குழுமரக்காட்டின் நறுமலர்ப் பரப்பையுஞ் செழும் புன்னிலத்தின் கொழும்பொழி தலையும் ஊடுருவிச் செல்லுங் "காவிரியாற்றினையும் அதனை யடுத்துயர்ந்த நிலப்பரப்பையுங் காண்பீரென்றும், தமது பிள்ளைமைப் பருவத்தே திரிந்தாடுவதற் கிடமாயிருந்த குன்றுகள் மரநிழல்கள் வயல்களாகிய இவற்றைவிளித்து நும்மிடத்தினின்று மெல்லிதின் வீசுந் தென்றற்காற்று எமதிளைப்பைநீக்கி எம்முயிருறு துயர்நீங்க ஆறுதல் சொல்வதுபோலவும் கழிந்த எமது இளமைப் பருவத்தையும் மகிழ்ச்சியையுந் தருவதாகிய ஓரிளவேனிற் பருவத்தைப் பெயர்த்தும் வருவிப்பது போலவு



முலாவுமென்றுங் கூறுமாறு காண்க; பின் இரண்டு செய்யுட்களிற் காவிரியாற்றை விளித்து 'அன்னாய்! புல்வளர்ந்த நின் பசியகரையிடத்தின் முன் விளையாட்டயர்ந்த சிறுவர்களுள் நின் திரையைத் தமது திண்டோளாற் கிழித்து நீந்தினாரெவர்?' என்றும், 'நாகணவாய்ப்புட்களைக் கண்ணியாற் பிடித்துக் கூட்டிற் சிறைப்படுத்தி மகிழ்ந்தாரெவர்?' என்றும், 'இருப்புவளையங்களைக் கோலாற்புடைத்து ஓட்டிப் பின் ஓடினாரெவர்?' என்றும் ''பந்தாடினாரெவர்?' என்றும் வினவுதல் காண்க; பின்னிரண்டு செய்யுட்களிற் கல்விக்கழகத்திற் பயிலுஞ்சிறாரிற் சிலர் தாம் புறம்போய் விளையாடுங்காலத்தை நினைந்து கொண்டு முறுமுறுவென்று பாடஞ்சொல்லுதலும், அங்ஙனங் கழகத்தினுள்ளிருந்து பயிலுதற்கு அமையாது துணிந்தவேறு சிலர் திரும்பித்திரும்பிப் பார்த்துக்கொண்டே ஓடுதலுங் கூறப்பட்டது காண்க; பின் மூன்று செய்யுட்களில் அச்சிறார் பலவற்றை யடைதற்கு விரும்புதலும், விரும்பிய பொருளெய்தியதும் அதன்கண் அத்துணை விருப்பஞ்செய்யாமையும், ஒரு கணத்திற் றோன்றிய இடரை அவர் மறு கணத்தின் மறத்தலும், அவரது கட்டிளமை யெழிலும், செய்தொழின் முயற்சியும், நுண்ணிய அறிவும், களிப்பும், கவலையின்மையும், நாளை வரு துன்பங்களை நினையாமையும் பிறவுங் கூறப்படுதல் காண்க; பின் இரண்டு செய்யுட்களில் அச்சிறார் தம் விதி நினையாமலிங்ஙன மகிழ்ந்து விளையாட இடர்களெல்லாம் அவரை யுணவு கொள்ளுதற்குப் படை குழுமிநிற்குமாறும், அந்நிலையை யறிந்து 'காவிரி யென்னு நங்காய்! நீயேனும் அச்சிறார் தமக்குச் சொல்லாயோ?' என்றுரைக்குமாறுங் காண்க; பின் எழு செய்யுட்களில் அவரை வருத்துந் துன்பங்களின் தொழிற்கூறுபாட்டை விரித்துக்கூறுதல் காண்க; பின் இறுதியிற் கிடந்தசெய்யுளில் 'அச்சிறார் தமக்கு இப்போது நுகரு மின்பங்களெல்லாம் விரைந்து கழியத் துன்பங்கள் கடுகிவருதல் ஒருதலையாகலான் அவர் நாளை வருமிடரை நினைந்து இன்றுதுய்க்கு மின்பத்தினையும் இழத்தல் வேண்டா' என்றும் 'அறியாமையே யின்பம் பயக்குமெனின் அறிவுகொண்டு பிதற்றுதல் மடமையாம்' என்றும் உறுதிமொழிந்து முடித்தவாறு காண்க.

இங்ஙன மிப்புலவ ரமைத்தியற்றிய சொற்பொருணயங்களு நுட்பங்களுங் கற்றார்க்கெல்லாங் கழிபேரின்பம் பயக்கு நீரவாகலின், அவை தம்மைத் தமிழ்ச்செய்யுளால் மொழிபெயர்த்துத் தமிழ்வழக்குக்கேற்பச் சில பொருள் கூட்டியும் வேறு சில கழித்தும் மற்றுஞ் சிலதிரித்தும் முதனூற் பொருளொருமை கெடாது இயன்றவளவு தமிழ்ச் செய்யுட்களைச் சுவைப்படுத்தியும் எழுதினாம். இன்னும் இவற்றின்கட் சொற்பொருணயங்களைத் திருத்திப் பொலிவு செய்யவல்ல அருமைகள் இதனை நோக்கும் அறிவுடையோரறிவாராயின் அவற்றை எமக்கு அன்புகூர்ந்து தெரிவித்துக் கடமைப்படுத்துவாராக.

"மக்களாதலே துக்கவேதுவாம்".—உறுதிமொழி.

மாண்கலைதந் தலைவர்செயு நன்றிதனை மதித்தவர்தங்
காண்பினிய தூநிழல்சேர்ந் தினிதிருப்பக் கரும்புறழ
ஊண்சுவைக்குங் காவிரிபாய் சூழலெலா மொளியுறுத்திச்
சேண்பொலியுங் கொடுமுடிகாள் பண்டுபொலி சிகரிகாள். (௧)

இளங்காவின் கொழுநிழலு மிறும்புதரு நறுமலரும்
வளங்கெழுபுன் னிலப்பொழியும் வடிந்தோடும் வெள்ளியெனத்
துளும்புபுனற் காவிரிதான் சுழன்றுசெலத் திகழ்மலையின்
விளம்புறுதற் கீழ்விளங்கு வெளியெலாங் காண்பீரால். (௨)

இலங்கவலை யாமாகி யினைதலறி யேமாகிப்
புலம்பெருகாப் பிள்ளைமையிற் புகுந்துதிரிந் தியாமாடு
நலம்பெருகு குன்றுகாள் விழைவுதரு நன்னிழல்காள்
பலன்றிரியப் பெருங்காதல் கொளுவியநற் பழனங்காள். (௩)

மெல்லிதினும் மிடனின்று வீசுகா லெமக்குநிலை
யில்லின்பந் தந்துதம திருஞ்சிறையை மகிழ்சிறப்ப
வொல்லெனநன் கெழுப்புதொறு முயங்குமுயிர்க் குறுதிமொழி
யல்லலறப் புகன்றெம்மை யாற்றுவிப்ப தெனத்தோன்ற. (௪)

ஒருங்குபொதுண் மலரவிழ வுயர்மணமுஞ் செழுந்தாது
நெருங்கியளைந் தெழுந்தினிது நெடுவிசும்பிற் சிதர்தோறும்
பெருங்களியு மிளம்போதும் பெருக்குமோ ரிளவேனி
றருங்குறிய தெனத்தயங்குந் தன்மையெலாங் காண்டுமால். (௫)

(௧) என்றி என்னு மன்னர் ஈட்டன் கல்லூரியமைத்துக் கல்வி வளம்படுத்தி நிறுத்தலின் அந் நன்றியறிந்து அவர்தந்த அந்நீழலி லிருந்துகொண்டு கலைகளெல்லாம் அவரை வழுத்தும் என்று முதனூலிற் கூறப்பட்டதற்கிணங்கச் செவ்வந்திக் கல்லூரிகளிலும் அவ்வாறு கலைகள் தந்தலைவர் செய்ந்நன்றியை மதித்து இனிதிருக்குமெனப்பட்டது. சூழல்—இடைவெளிகொண்டு சுற்றிலும் மரமடர்ந்த சோலை, Glade. கொடுமுடி-Spire. சிகரி-Tower.

(௨) இறும்பு-குறுமரக்காடு. பொழி-புற்பற்றை, Turf. உலையில் உருக்கியடித்த வெள்ளிபோல நீர்துளும்பி யோடுங் காவிரி யென்க. கொடுமுடிகளுஞ் சிகரிகளும் மலையினுந் தாழ்ந்த உயரமுடையனவாதலால் அம்மலைக் குவட்டின்கீழ் விளங்கு நிலப்பரப்பெல்லாங் காண்பவெனப்பட்டது.

(௩) 'கவலையிலமாகி' என்க. இனைதல்-வருந்தல், புலம்பெருகாப்பிள்ளைமை-அறிவு நிரம்பாத பிள்ளைப்பருவம். விழைவு-விருப்பம். பலன்றிரிய-பலனின்றி, தம்மோடுடன் பயின்ற உவெஸ்டு என்னும் அரிய நண்பர் இறந்துபட்டமையின் கிரே என்புலவர்க்கு இவை பயனிலவாகக் காணப்பட்டன. கொளுவிய-உண்டாக்கிய. பழனம்-வயல், சிறார்விளையாடு மிடனெனினுமமையும், Field.

(௪) கால்-காற்று. உயங்கும்-இளைத்த, வாடிய. அல்லல்-துன்பம்.

(௫) இச்செய்யுண் முதலடி யிரண்டும் முதனூலிலில்லனவாயினும், செய்யுளும் பொருளும் நிரம்பல் வேண்டிப் படைத்து எழுதப்பட்டன. பொதுளல்-நிறைதல். தாது-மகரந்தம். களி-மகிழ்வு.



காவிரியென் றுரையுன்னாய் களியயருஞ் சிறுவர்குழாம்
பூவிரிபைங் கரைமருங்கு பொருந்திவிளை யாடியவா
றேவிலரா யின்பநெறி யுறுதலெலாங் காண்கையினாற்
றுவுகொழுந் தோளினெவர் தயங்குதிரை யிடைபோழ்வார். (௬)

இசைமிழற்றும் பூவைதமை யிரும்பொறியிற் சிறைப்படுத்து
நசையுடைய ரெவரிருப்பு நவில்வளையந் துரந்துசெலும்
வசையுடைய சோம்பலுள முடையரெவர் வரிப்பந்து
விசையுடனன் கெழுந்தோட விடுகுநர்மற் றெவருரையாய். (௭)

அருந்தொழிலிற் புகுந்தனரா யவர்சிலவர் புறந்திரியத்
திருந்துபொழு தினிதாக்குஞ் சிந்தனைசால் காலைகளி
லிருந்துதம முறுமுறுக்கு மிரும்பணியி லீடுபடப்
பொருந்துமுள மிலர்வேறு துணிவுடைய புன்சிறார், (௮)

வரம்புடைய தமதுகுறு நிலவாட்சி மனவெறுப்பப்
பரம்புபுற நிலமுழுதும் பார்த்துமென வோடுதொறுஞ்
சிரந்திரும்பிப் புறநோக்கச் சிவணுவளி யுளர்தோறும்
புரம்பரவு குரல்கேட்பப் பொருந்துவெருக் களிகொள்வார். (௯)

களியளைந்த நம்புநசை கருதுமா றுரங்கொளினு
மெளிதடைந்த பொழுதவர்தாம் விரும்பவிலா வியல்பினார்
துளிவிழியி லுகுதலுமே தோன்றாம லதுமறப்பார்
தெளியிளமை யொளிவிளங்குந் திறமுடைய தன்மையார். (௧௦)

(௬) முதனூலாசிரியர் தேம்ஸ் நதியைத் தந்தையென வழைப்பராயினுஞ் செந்தமிழ் வழக்குக்கேற்பப் பெண்பாலாக வுரைக்கப்பட்டது காவிரியாறென்க. ஆடியவாறு-ஆடியபடியே. கொழுந்தோள்-Pliant arm. திரை-அலை. போழ்தல்-இருகூறுக்குதல்.

(௭) மிழற்றல்-பாடல். பூவை-நாகணவாய்ப்புள், இதனை இக்காலத்து 'மயினு' என்று வழங்குப. முதனூலிற் கண்ட லின்னெட் (Linnet) என்னும் இசையறிபறவைக்கேற்ப ஈண்டுப்பூவை எனப்பட்டது. பொறி-கண்ணி, Trap. வளையம்-Hoop.

(௮) வெளியே திரிவதற்கென்று குறித்த காலத்தை இனிதாக்கும் பாடவேளை என்க. சிறார் பாடம் பயிலும்போது முறுமுறுவென்று ஒலித்தலின் அவ்வாறு கூறப்பட்டது. பணி-வேலை. ஈடுபடல்-அறிவு செலுத்தல்.

(௯) ஆட்சி-ஆளுகை. சிவணுவளி-மெய்யிற்படுங்காற்று. உளர்தல்-அசைதல். புரம்பரவு-பக்கத்தே பரவி வரும். வெருக்களி-அச்சத்தொடுகூடிய மகிழ்வு.

(௧௦) அளைந்த-கலந்த. நம்புநசை-ஒன்றனைப்பெறுதற்கு எதிர்பார்த்திருக்கும் அவா. உரங்கொளல்-வலிமைப்படல். ஓரரும்பொருள் பெறவிரும்பினர் அப்பொருள் பெறுதற்கு முன்னரே அதனைப்பெற்றார்போல நினைந்து மகிழ்தலும், அதனை யெளிதிலடைதலும் அதன்கண் அத்துணை விருப்பஞ்செய்யாமையும் வழக்கிற்கண்டுகொள்க. 'துளிவிழியிலுகுதல்' துன்பக்குறிப்பு.

செழுமுளரி யிதழ்வண்ண வெழில்வயங்கு திணிநலமு
மெழுநாள்க டொறும்பெருகு செய்திறமு மின்னுத
கொழுமதியு மதுகைதரு கொழுங்களியுங் கவல்வதிலாப்
பழுதுகெடு பகற்பொழுதும் பரிவில்லாக் கங்குலும். (கக)

தாளாண்மை தூயனவுந் தயங்குகதிர் நாள்விடியல்
வூளாது கழிந்துவிடு மின்றுயிலு மற்றுமெலா
நாளாலு முடையசிறுர் நாளைவரு தீதுள்ளார்
நீளாத கவலையெலா நிகழ்நாண்மேற் பிறிதில்லார். (கஉ)

அழிவுதரும் விதிவினையா ரதற்கிரையாய் விளையாடப்
பழிவிதியி னுழையோரும் பாழ்வினையின் கொல்படையு
மொழிசிறுவர் தமைச்சூழ முதிர்ந்துகடி கொளுமாறு
விழிகொடுகா ணுதிநங்காய் விளங்குபெரு வளமுடையாய். (கங)

சிறுதூற்றி னிடைமறந்து சிறுவர்தமை யுணவுகொளக்
கறுவுடனக் கொல்படைதான் காவலொடு முறுநிலையை
மறுவின்றி வயங்குபுகழ் மருவுடையாய் மற்றவருக்
குறுதியுறக் காட்டியவர் மக்களென வுரையாயோ. (கச)

மாந்தருளங் கொழுதியுணும் வல்லெருவை தமைப்போல
வீர்ந்தவரைப் படுவிக்கு மின்னுத கொடுங்காதல்
காந்துசினம் விளர்வெருவு கரந்தியங்கு கழிநாண
மேந்துமெழின் மெலிவிரக மிளமையெலாங் கழிக்குமால். (கரு)

அவ்வியந்த னெயிறதுக்கி யாழ்நெஞ்சி னகங்கறிப்பச்
செவ்விதலா வழுக்காறுந் திறங்குழைக்கும் பெருங்கவலு
மொவ்வலிலா வலிக்குமுகத் தெனியாத வுள்ளுடைவு
மெவ்வமதின் கூர்ங்கணையு மிடையுருவி யடையுமால். (கசு)

(கக) முளரி-தாமரை, முதனூலில் ரோஸ் என்பதற்கேற்ப இஃது ஈண்டுப்பொருத்தப்பட்டது. முறுக்கவிழ்ந்த தாமரை யிதழ்போலும் இளமையழகு வாய்க்கப்பெற்றவரென்பதாம். கொழுமதி-நியுவழிப்படு நுண்ணறிவு, Wild wit. மதுகைதரு-மெய்வலியாற் பிறந்த. கவல்வு-கவலை, பரிவு-துன்பம்.
(கஉ) தாளாண்மை-Spirit. கதிர்-ஞாயிறு. விடியல்-காலை.
(கங) விதியின் உழையோர்-ஊழ்வினையின் மந்திரிகள். முதிர்ந்து-சூழ்ந்து. கடிகொளல்-காவல்கொளல். நங்கை-காவிரி யென்னு நங்கை.
(கச) தூறு-பதுங்கியிருத்தற்கு உபகாரப்படும் குறிய புதல். கறுவு-வைரங்கொளல். ஈண்டுக் காவிரி விளிக்கப்பட்டது காண்க. மக்களாய்ப் பிறந்தவேதுக்கவேதுவாமென்னும் உறுதிமொழியிற்போந்த பொருள் ஈண்டு வலியுறுக்கப்பட்டது காண்க.
(கரு) கொழுதி-மூக்கினுற் கோதி. எருவை-ஒருவகைப்பருந்து. ஈர்தல்-பிளத்தல். காந்துசினம்-அழலும் கோபம். விளர்வெருவு-வெள்ளிய அச்சம், அச்சமுடையார்க்கு மெய்வெளுத்தலின்வ்வாறு சொல்லப்பட்டது. கரந்து-ஒளிந்து. கழி-மிகுந்த. ஏந்தும் எழில்-மிக்க அழகு.
(கசு) அவ்வியம்-Jealousy. எயிறதுக்கல்-பற்கடித்தல். கறித்தல்-கடித்துணல், குழைத்தல்-தளர்வித்தல். முகஞ்சுளிக்கச்செய்யும் மனத்தளர்வென்க. எவ்வம்-துன்பம். இடையுருவல்-ஊடுவு துழைதல்.



பேராசை யொருசிலரைப் பிறங்கியெழ நனிகடவி
யோராவவ் வேழையரை யுடன்சுழற்றி யிளிவினிலுஞ்
சீராத விகழ்வினிலுஞ் செலப்படுத்துத் திரிதரவுந்
தீராத பொய்ம்மையெனுந் தெறுக்காலிற் கோட்பட்டார். (கஎ)

இளகலிலா வன்கண்மை யினைதலிலா விருவிழியும்
பளகுமிக வவர்விழிநன் றெளியரும்பப் பணித்துநக
வுளகுருதி வறந்துகெட நினைந்திரங்கு முயர்தகவுந்
தளவவிழ்த லெனத்துயரி னிடைநகூஉந் தனிவெறியும். (கஅ)

ஆண்டுகளென் றுரைபடுக ராழ்நிலத்திற் கோளிழைப்ப
வீண்டிநிற்குங் கொடும்படைதா மிறவியெனு மறையனுக்கு
நீண்டபெருங் கிளையெனினு நீடியதம் மிறைவனிலு
மூண்டபெருங் கொடுமையினுர் முறைமைசொலற் பாலதோ. (கக)

ஒன்றுமுளி யிடைமுறிப்ப வொன்றுநரம் பினையெரிப்பத்
துன்றுகொழுந் தசையிசிப்ப மற்றொன்று தோன்றுமுவை
நின்றவுயி ருறுப்பிடங்க ணிலையுருவி வெருண்டலைப்பப்
பொன்றுமிடி யுயிர்விறைப்பப் பனிக்கைதனைப் பொருத்துமால். (உ0)

சிறிதுசிறி துடலையுணுந் தெரியகவை யினநிறைப்பப்
பிறிதுவர வவாவரும் பேதுறுவ ரவர்வினையால்
வறிதுபிறர் வருந்துதல்கண் டினைவோரும் வருந்தாத
குறியவரு மெல்லாருங் கலுழ்ந்திரங்கக் குறிப்பட்டார். (உக)

இன்பமெலாம் விரைந்தோடு மிடர்தாழ்த்து வருதலிலை
பின்புவரும் விதிவினைதல் பீழைதரு மாதலினுன்
முன்புசிறு ரவையறிதல் வேண்டாயா மொழியமைந்தா
மின்புழறி யாமையெனி னறிவுகொள லெளிமையே. (உஉ)

நாகபட்டினம் - வேதாசலம் பிள்ளை.

---

(கஎ) பிறங்கி-உயர்ந்து. கடவி-வலியச் செலுத்தி. சீராத-சிறவாத, இப்பொருட்டாதல் ஆசிரியர் நச்சினுர் க்கினியருரையிற் காண்க. தெறுக்கால்-தேட்கொடுக்கு. கோட்படல்-கொள்ளப்படுதல்.
(கஅ) வன்கண்மை-கன்னெஞ்சுடைமை. பளகு-குற்றம். அவர்-சிறுர். இரத்தம் வற்றும்படி முன் செய்த குற்றங்களை நினைந்திரங்குந் தன்மை. தளவு-மல்லிகை. வெறி-பித்து.
(கக) படுகர்-பள்ளநிலம். கோளிழைத்தல்-கொல்லுதல். இறவி-சாக்காடு. கிளை-சுற்றம்.
(உ0) முளி-கணு, Joint. இசித்தல்-இழுத்து அழுத்தல். உயிருறுப்பிடம்-பிராணுதாரம். மிடி-வறுமை. பனிக்கை-Icy Hand.
(உக) அகவை-வயது. முற்கூறிய நோய்களின் தொகுதி முற்ற என்க. பேதுறல்-இடரெய்தல். கலுழ்தல்-அழுதல். குறிப்படல்-விதிக்கப்படுதல்.
(உஉ) பீழை-வருத்தம். மொழியமைந்தாம்-இவை கூறுதல் இத்துணையினமைந்தாமென்பது.

# A STUDY OF WORDS.
# சொற்பொருளாராய்ச்சி.

வடமொழியிற் **பாணினி** முதலாயினர் சொற்பொருளாராய்ச்சி செய்து அம்மொழியின்கணுள்ள பகுதிகளனைத்தையும் ஒருங்கு தொகுத்துவைத்திருக்கின்றனர். ஆங்கிலம் முதலிய பிறமொழிகளிலும் அவ்வாறே பகுதித்தொகைகள் தொகுக்கப்பட்டுள. ஆங்கிலவாணர் அத்துணையில் நின்றுவிடாமல் இவ்வழியிற் புகுந்து மேன்மேலும் ஆராய்ச்சி செய்து தத்தங் கருத்துக்களை வெளியிட்டும், ஆராய்ச்சியி னிறுதியில் நின்றனவற்றைச் சேர்த்து அகராதி செய்தும், தம்மொழிக்கணுள்ள சொற்களி னியல்புகளை நன்குணர்ந்து நாடோறும் மொழிநூற் புலமை நடாத்துகின்றனர். இவ்வாறாக, நாம் அத்தகையாரது ஆளுகையிலிருந்தும், அன்னாரது நூல்களைக் கற்றும், அவர்கள் செய்யும் பெருமுயற்சிகளை யெல்லாங் கண்ணாரக்கண்டும், நமது தாய்மொழியாகிய தமிழிற்காக நாமொன்றும் புதுமை வழியாலுழைத்தலின்றி வாளா காலம்போக்குதல் நேரிதன்றென வுணர்ந்த யாம், ஏதோ எம் சிற்றறிவிற் கெட்டிய மட்டில் ஆராய்ந்த சிலவற்றைத் தொகுத்துச் 'சொற்பொருளாராய்ச்சி' யென்னுந் தலைப்பெயரிட்டு வெளியிடலாமெனத் துணிந்தேம். துணிந்து தமிழ்ப்பகுதிகளனைத்தையும் ஓராற்றாற்றொகுத்து வைத்துக் கொண்டுளேம். அன்னணந் தொகைசெய்து வைத்துள குறிப்பினின்றும் ஒவ்வொரு பகுதியாகத் தனித்தனி யெடுத்துக்கொண்டு ஆராய்ச்சிசெய்து வாராநின்றேம். அவ்வாராய்ச்சியிற் சிற்சிலவற்றைத் தமிழுலகமும் அறியுமாறு வெளிப்படுத்துகின்றேம். **ஆசிரியர் தொல்காப்பியனார்** "மொழிப்பொருட் காரணம் விழிப்பத் தோன்றா" என்று கூறியதற்குமாறாக யாம் உழைக்கப்புகுந்தேமென்று கருதிப் பேரறிவாளராயினர் எம்மை யெள்ளலர் ஏற்றுக்கொள்வாரென நம்புகின்றேம். "பழையன கழிதலும் புதியன புகுதலும், வழுவல கால வகையி னானே" என்ற **பவணந்தி முனிவர்**தங் கூற்று யாமனைவரும் ஏற்றுக்கொள்ளத் தக்கதோர் பொருள்பொதி மெய்யுரையன்றே? தமிழ் வல்லீர்! நம்மக்கள் இது காறுஞ் செல்லுதற்கரிதாயிருந்த தமிழ்ச்சொற் காட்டிற் புகுந்து வழியறுத்துச் சென்று ஆராய்ந்து கண்டபொருள்களை நும்முன்னர் அடியுறையாக இடுகின்றேம்.

I. **அறு** என்னும் பகுதி.

இதனடியாக, அறம், அறல், அறவு, அறவை, அறுதல், அறுதி, அறுத்தல், அறுப்பு, அறும்பு, அறுகால் அல்லது அறுதாள், அறுவை, அறை, அற்றம், அற்றை, ஆறு முதலிய பல சொற்கள் பிறக்கின்றன. இவையிற்



றுட் சிலவற்றைப் பகாப்பதங்களெனக் கூறுவாருமுளர். அவர்களனைவரும் யாம் கூறுமாற்றைச் செம்மை வழியாற் சிந்தித்து ஏற்புடையனவாயிற் கொள்வாராக.

(1) அறு + அம்: அறம்=அறுக்கப்பட்டது: மனுமுதலிய நூல்களால் இன்னன செய்க இன்னன தவிர்க என வரையறுத்துக் கூறப்பட்டமைபற்றி 'அறம்' என்பது அங்ஙனம் அறுத்துரைக்கப்பட்ட தருமத்திற்காயிற்று. ஈண்டு 'அம்' செயப்படு பொருண்மை விகுதி. தொழிலாகு பெயர்.

(2) அறு + அல்: அறல்=கருமணல், சிறுதூறு, நீர், விழவு முதலிய பல பொருளுந் தருவது. ஒருங்கு சேர்ந்து கருங்கட்டியா யிருந்தது அற்று வேறுபட்டுத் தனித்தனியாகிப் பிரிந்து நின்று கருமணலாயிற்று; தரையினுள்ளிட்ட விதையானது தன்மீதுள மண்ணை யறுத்துக்கொண்டு வெளிக்கிளம்புதலிற் சிறுதூறாயிற்று; கிணறு முதலியன வெட்டிய வழிப் பக்கங்களின்றும் அடியினின்றும் மண்ணையும் பாறையையும் அறுத்துக் கரைத்துக்கொண்டு வெளிப்படுதலின் நீராயிற்று; கடவுட் பூசை முதலிய காலங்களில் மக்களாவார் செயலற்று ஒரு மனத்தினராகி யிருத்தலின் விழவாயிற்று.

(3) அறு + அ + வ் + உ: அறவு=அறுபட்ட இடம், ஒடிவு, கடவை. புல் முதலியன அறுபடுதலின் அங்ஙனம் அறுபட்ட இடத்தையும், அறுதல் ஒடிதலுமா மாதலின் ஒடிவையும், வேலி நாற்புறமும் வேய்ந்துழி அதனுள்ளிருப்பான் வெளிச்சேறற்கு அவ்வேலியுட் சிறிது அறுத்து வாயில் செய்து கோடலிற் கடவையையு முணர்த்திற்று.

(4) அறு + அ + வ் + ஐ: அறவை=அநாதி; உறவற்றவனாதலின் இப்பொருள் தருவதாயிற்று.

(5) அறு + தல்: அறுதல்=கைம்பெண். மாங்கலியமிழந்தார் தாலியறுபடுதல் இயல்பாமாதலின் இச்சொல் தொழிலாகுபெயராய்க் கைம்பெண்ணை யுணர்த்துவதாயிற்று. இஃது இகரவிகுதிபெற்று 'அறுதலி' யென நிற்றலுமுண்டு. இவ்வாறாகவுஞ் சிலர் இதனை 'அறுதாலி' யென்றதன் குறுக்கலாகக் கூறுவாராயினர்.

(6) அறு + தி: அறுதி=இல்லாமை, சாவு, சொந்தம், முடிவு, முடிந்தவிலை, விலைச்சீட்டு முதலிய பல பொருளையுந் தாராநின்றது. இது பொருளறுதலில் இல்லாமையையும், உயிரறுதலிற் சாவும், பிறருக்கு உரிமையறுதலிற் சொந்தமும், அறும் நிலையாதலின் முடிவும், மேற்பேச்சற்றுத்தீர்ந்த விலையாதலின் முடிந்தவிலையும், ஒருவனுக்குரித்தாய பொருள் விற்கப்பெற்றமை

யின் அவனது உரிமையற்று வாங்கிஞனிடஞ் சேர்தலின் அங்ஙனம் விற்றுரிமையற்றதற்கு அறிகுறியாகிய விலைச்சீட்டுமாகிய பலவற்றையு முணர்த்துவதாயிற்று.

(7) அறு + த் + தல்: அறுத்தல்=‘அறுதல்’ என்பதன் பிறவினை.

(8) அறு + ப் + பு: அறுப்பு=அறுத்தல், அறுத்த துண்டு, ஆக்ஷேபம். தொழிலாகுபெயராய் அறுக்கப்பட்ட துண்டையும், ஒருவர் பேசுழி அவர் பேச்சை யூடறுத்துத் தடுத்தலின் ஆக்ஷேபத்தையு முணர்த்திற்று.

(9) அறு + ப் + பு: அறு + ம் + பு: அறும்பு=கொடுமை, பஞ்சகாலம்; ‘அறுப்பு’ என்பது மெலித்தல் விகாரம் பெற்று ‘அறும்பு’ என நின்றது. நன்மையற்றுக் கொடுமையையும், நாட்டின்கண் உணவு பொருள்களெல்லாம் அறுங்காலமாமாதலிற் பஞ்ச காலத்தையுங் குறிப்பதாயிற்று.

(10) அறு + கால்: அறுகால்; அறு + தாள்: அறுதாள்=பாம்பு. அற்ற கால்களையுடையது, அஃதாவது, கால்கள் அற்றது ஆதலிற் பாம்பாயிற்று; வினைத்தொகை நிலைக்களத்துப்பிறந்த அன்மொழித்தொகை.

(11) அறு + வ் + ஐ: அறுவை=துகில் அல்லது வஸ்திரம். நீளமாக ஒரே நிரையாய் நெய்ததனை யிடையிடையே யறுத்துத் தனித்தனி வஸ்திரமாக்குதலின் துகிலை யுணர்த்துவதாயிற்று. அறுக்கப்பட்டது அறுவை; ஈண்டு ‘ஐ’ செயப்படு பொருண்மை விகுதி. முன்காலத்தில், இக்காலத்திலும் பலவிடங்களில், சாலியர் தறியின்கண் ஆடைநெய்வுழி ஒரேநிரையாய் நீளநெய்துகொண்டே போவார்கள். அவ்வாறே முழுதும் நெய்த பின்னர் அறுத்தற்கென இடம் விட்டிருந்த இடங்களில் அறுத்துத் தனித்தனி யுடையாக்குவார்கள். இவ்வழக்கத்தை யநுசரித்தே நம் தமிழ்மொழியின்கண்ணே பிற சொற்களும் பிறந்திருக்கின்றன. உதாரணமாகத் ‘துணி’, ‘துண்டு’, ‘கூறை’ முதலிய சொற்களின் பொருட்காரணத்தையு முய்த்துணர்க. துணிக்கப்படுதலிற் றுணியும், துண்டிக்கப்படுதலிற் றுண்டும், கூறுபடுத்தப்படுதலிற் கூறையுமாயின.

(12) அறு + ஐ: அறை=இஃது உள், மலை முழைஞ்சு, குறை, திரை, பாத்தி, பாறை முதலிய பலபொருள் பயப்பதோர் சொல். நான்கு பக்கங்களினும் மதிலெழுப்பி எனைய விடங்களினின்றும் அறுக்கப்படுதலின் உள்ளாம்; மலையின்கண் அறுத்துக் குடைந்து குகை செய்யப்படுதலின் முழைஞ்சாம்; அற்றது குறைந்ததாமாதலிற் குறையாம்; கடலின் நீர்ப்பரப்பினின்றும் அற்று எழுந்து மறிந்துவீழ்தலிற் றிரையாம்; நிலத்தின்கட் கரை கோலப்பட்டு மற்றையவற்றினின்றும் அறுபட்டுநிற்றலிற் பாத்தியாம்; நிலப்பரப்பினை யறுத்துக்கொண்டு மேலெழும்பித் துருத்து நிற்றலிற் பாறையாம்.



(13) அறு + அம்: அற்று + அம்: அற்றம்=அச்சம், அழிவு, உண்மை, சமயும், சோர்வு, மறைவு, மெலிவு, வறுமை முதலிய பல பொருள் பயப்பது. தைரியமறுதலின் அச்சமும், வாழ்வறுதலின் அழிவும், தன்னொடுமிடைந்த பொய்ம்முதலியவற்றினின்றும் அறுதலின் உண்மையும், பொருண் முதலாயின அற்ற சமயமும், வலியற்ற சோர்வும் மெலிவும், கண்கூடற்ற மறைவும் பொருளறுதலின் வறுமையுமாம்.

(14) அறு + ஐ: அற்று + ஐ: அற்றை=சிறுமை. மேன்மையற்று நிற்கும் நிலையாதலிற் சிறுமையாயிற்று.

(15) அறு: ஆறு=நதி, வழி. இது முதனிலை நீண்டதொழிலாகுபெயர். நதியானது தரையை யறுத்துக்கொண்டும் காடு முதலியனவற்றை யூடறுத்துக் கொண்டும் செல்லுதலின் இப்பெயர்த்தாயிற்று. கல்லுங்கரடுமாயிருந்த நிலத்தை வெட்டி யறுத்துத் திருத்தி மக்கள் நடப்பதற்கு ஏற்றதாக்குதலின் வழியாயிற்று.

இனி இப்பகுதியினின்றும் பிறக்கும் வினைவிகற்பங்களைப் பற்றிக் கூறப்புகின் விரியுமென விடுத்தனம். இவ்வாறு ‘அறு’ என்னும் இவ்வொருபகுதியினின்றுமே பல சொற்கள் மேன்மேலுங் கிளைத்துப் பலவேறு பொருள் பயப்பனவாமாறு கண்டோம். இவையிற்றுட் சில நம் முன்னோருது கருத்துக்கள் இன்னின்ன வாற்றிற் சென்றுள வென்பதனையும் முன்னுளிலிருந்த வழக்கத்தையும் இவைபோல்வன பிறவற்றையும் நமக்குத் தெரிக்கின்றன. இன்னும் உற்று நோக்கிச் சிலர் “‘அறு’ என்னும் இப்பகுதியும் தனிப்பகுதியன்று; இதற்கு மூலப்பகுதி பிறி தொன்றுளது” என்றுகூறினுங் கூறலாம். ‘அல்’ என்னும் எதிர்மறையிடைச்சொல்லொடு உவ்விகுதி சேர்ந்து வினைத்தகைப்பட்டு நின்றதே ‘அறு’. இக்கூற்று யாவருக்கும் உடன்பாடாயின் ஆயிரக்கணக்காக விரிகின்ற தமிழ்ப் பகுதிகளெல்லாம் நூற்றுக் கணக்காகச் சுருங்கிவிடும். இவ்வாறே வடமொழி வையாகரணராகிய பாணினிபகவான் இரண்டாயிரக்கணக்காக வகுத்திருந்த சம்ஸ்கிருததாதுக்களனைத்தையும் சுருக்கி எழுநூற்றிற்குள் அடக்கிவிட்டார் காலஞ்சென்ற * மோக்ஷமூல பட்டாசாரியர் என்பார்.

யாம் இதன்கண் வழியல்வழிச் செல்வதாகப் பேரறிவாளர் காண்பராயின் அன்னார் எம்மைத் தெருட்டுவாராக.

வி. கோ. சூரியநாராயணசாஸ்திரியார்,

---

* The late Professor Max Müller.

# CURTAIN LECTURES.

# பள்ளியறைப்பிரசங்கம்.

—⁕—

## First Night.—முதலிரவு.

### இராமசுப்ப ஐயர் தம் நண்பருக்குப் பத்து ரூபாய் கடன்கொடுத்துவிட்டார்.

"உம்மிடத்திற் பண மதிகமாயிருக்க வேண்டும். இல்லாவிட்டாற் கேட்பவர்களுக் கெல்லாம் கொடுப்பீரோ? உமக்கு வேண்டும்போது மாத்திரம் யார் கொடுப்பாரோ? நான் அறியேன். அவ்வளவுதான். உங்கள் மனையாள் மாத்திரங் கஷ்டப்படவேண்டும். ஆகா! அந்தப் பத்துரூபாயிருந்தால் எத்தனை காரியஞ் செய்திருக்கலாம்! தெருவிற் சிந்திக்கிடக்கிறதோ பணம்! உங்களுக்குத் தான் எப்போதும் புத்தியில்லையே! மூன்று வருஷமாய்க் குற்றாலப்புடவையொன்று வேண்டுமென்று கேட்டுக் கொண்டேயிருக்கிறேன். அந்தப்பத்து ரூபாயிருந்தால் வாங்கியிருக்கலாமே! நான் எப்படி யிருந்தால் உங்களுக் கென்ன? என்பதவிக்குத் தக்கபடி நான் உடுப்பதில்லை யென்பது ஊராருக்கெல்லாந் தெரியும்! அது உங்களுக் கென்ன? ஒன்றுமில்லை. உங்களைச் சேர்ந்தவர்கள் தவிர மற்ற எல்லாரிடத்திலும் உங்களுக்குப் பிரியந்தான். ஐயோ! நுங்குணம் எனக்குத் தெரிந்தவாறு உலகத்தார்க்குந் தெரியலாகாதா! பொருளை யழித்து வள்ளலென்னும்பெயர் படைத்தாலுமக்குப் போதும். உம்மை யடுத்த நானு மென்மக்களும் அதற்காக வருந்தவேண்டும்.

"பெண்களுக்குப் பாவாடை கிழிந்து போம்போலிருக்கிறது. அப்படியானாற் புதுப்பாவாடை யெங்கேயிருந்து வரும்? என்ன சொல்லுகிறீர்? **வாங்கியின்னும் ஒரு மாதம் ஆகவில்லையா?** ஆனால் என்ன? ஆறுமாதத்திற் கப்புறமாயினுங் கிழியா திருக்குமோ? அப்பொழுதென்ன செய்ய வேண்டும்? ஐந்து ரூபாயிருந்தாலும் வாங்குதற்குப் போதுமே. ரூபாயைத்தான் கடன் கொடுத்து விட்டீரே! பெண்கள் உடையில்லாமற்றான் திரியவேண்டும். அது ஒன்றும் உமக்கு அவசியமில்லை. பணம் உம்முடையதே. உம்மைச் சேர்ந்தவர்களுக்கு மாத்திரமில்லை.

"வீட்டுவரிக்காரன் நீர் வீட்டிலில்லாத சமயத்து மூன்று முறை வந்திருந்தான். பணத்தை யிப்படிக் கேட்டவர்களுக் கெல்லாம் கொடுத்து வந்தால் வரியெப்படிக் கொடுக்கவேண்டுமோ? தெரியவில்லை.



"இன்றைக்குக் குழந்தை **நடராஜன்,** விளையாடும்போது சன்னற் கண்ணாடியை யுடைத்து விட்டான். வேறு கண்ணாடி போட்டவேண்டுமென்று நினைத்தேன். நீர் பத்து ரூபாய் கடன் கொடுத்த பிறகு எப்படிப் போடுவதோ? அறியேன். சன்னல் திறந்த வெளியாகவே யிருக்கட்டும். அவ்வறையில் நடராஜன் எப்படிப் படுத்துறங்குவானோ? தெரியவில்லை. அவனுக்கிப்பொழுதோ ஜலதோஷம் பிடித்திருக்கிறது. இந்தப் பனிக்காற்றில் அவன் தூங்கினால், இறக்கவேண்டியது தான். அவ்வருமைப் பையனிறந்தால் அந்தப்பழி உம்முடைய தலையில் தான் விடியும். பணத்தை யிந்தமாதிரியாகப் பாழ் செய்யாதிருந்தாற் கண்ணாடியும் போடலாம், இன்னும் எத்தனையோ காரியமுஞ் செய்யலாம்.

"வரும்புரட்டாசியில் திருப்பதிக்குப்போக வேண்டுமென்றிருந்தேனே! சிறு குழந்தை **கமலாம்பா**வுக்காகச் செய்த பிரார்த்தனை முடிக்க வேண்டுமன்றோ? இருந்த ரூபாயைக் கடன்கொடுத்துவிட்டீர்களே! இப்பொழுதென் செய்வது? ஒருவரும் போவதற்கில்லாமற் போயிற்று. கமலாம்பாவுக்கு மீட்டும் வயிற்று நோய் வந்து விட்டால் என் செய்வேன்? வயிற்றுவலி வருவது நிச்சயந்தான். அவள் இறக்கவே வேண்டும். ஐயோ! முத்துப் போன்ற பெண்ணை யிழக்கவேண்டுமே! என்றலைவிதிக்குயார் என்ன செய்வார்கள்? அந்தப் பத்து ரூபாயிருந்தாற் பெண் பிழைத்திருக்குமே! பொருளையும் அழிக்கவேண்டும், மக்களும் உயிரோடிக்கவேண்டு மென்றால் எப்படியாகும்?

"தெருக்கதவு தாளில்லாது காற்றிலடிபடும் ஓசை யுமது காதில் வீழ்ந்ததோ? அதற்கென்ன செய்ய வேண்டுமென்று உமக்கு நன்றாய்த்தெரியும். இன்றைக்குத் தான் கருமானையழைத்து வரச்சொல்லுவமென்று நினைத்தேன். பத்து ரூபாய் கடன் கொடுத்தபிறகு அவனையழைப்பதனாற் பயனென்னை? இனி இராவெலாம் இதே சத்தந்தான். எனக்குத் தலைவலி வரும்போலிருக்கிறது.

"மழைக்காலம் வந்து விட்டால் வீட்டில் ஜலம் ஒழுகுமே! அது உங்களுக்குந் தெரியும். எல்லாருஞ் சலத்தில் நனையவேண்டியது தான். என்ன சொல்லுகிறீர்? **ஜலம் ஒழுகாதா?** வாயாற் சொல்வதற் கென்ன? மழை வந்தாலன்றோ தெரியப் போகிறது? **ஒழுக்கையடைத்து விடலாமா?** பண மிருந்தாலன்றோ அடைக்கப் போகிறீர்? கேட்டவர்க்கெல்லாம் பத்து ரூபாய் கடன் கொடுத்தால், பணமெப்படிக் கையிலிருக்கும்?

"வீடெங்கும் எலிகள் அலையு மொலி கேட்டதோ? எனக்கு நன்றாய்க் கேட்கின்றதே! அச்சத்தம் உங்களைமாத்திரம் எழுப்பினால் தோஷமில்லை.

எல்லாரையும் எழுப்பிவிடுகின்றதே? எலிக்கூண்டு வாங்கி வைக்கவேண்டுமோ? வாய் வார்த்தைக்கென்ன? சுலபமாய்ச் சொல்லிவிடலாம். பணமிருந்தாற் கூண்டு வாங்கிவைக்கலாம். ஒவ்வொரு நாளும் பத்து ரூபாய் இழந்து வந்தால், கூண்டு எப்படி வாங்கமுடியும்?

“சற்றுப் பொறும்! ஏதோ சத்தமுண்டாகின்றது. திருடன் வந்துவிட்டானோ? பூனையா? இருக்கட்டும். தெருக்கதவையிவ்வாறு தாளில்லாது வைத்திருந்தாற் கள்வர் வருதலும் ஓர் ஆச்சரியமா! பணத்தைக் கேட்டவர்கட்கெல்லாங் கொடுத்து விட்டாற் புதுத்தாளெப்படிப் போடுவதோ?”

இங்ஙனம் இராமசுப்பையர் பத்து ரூபாய் கடன் கொடுத்து விட்டமையால், அவர் காதலி **கனகம்மா**, மேற் சொல்லிய வாறு, குற்றாலக் கூறையில்லாதிருக்க வேண்டும்; பெண்கள் பாவாடையில்லாமல் திரியவேண்டும்; வீட்டு வரி செலுத்தப்படாது பாக்கியாயிருக்கவேண்டும்; பலகணிக் கண்ணாடியின்றித் திறந்த வெளியாயிருக்கவேண்டும்; அது காரணம் பற்றி நடராஜன் இறக்கவேண்டும்; திருப்பதிக்குப் போவதற்கில்லாமற் கமலாம்பா வயிற்று நோயால் வருந்தி யுயிர்துறக்கவேண்டும்; தெருக்கதவுதாளில்லாது, கள்வர் வீட்டில் நுழைவதற்குங் காரணமாகவேண்டும்; எலிப்பொறிவாங்கிவைத்தற்குப் பணமில்லாமையால், அவை வீடெங்குந் திரிதலால் எல்லோரும் உறங்காதிருக்கவேண்டும்.

இவற்றிற் கெல்லாங் காரணம் இராமசுப்பஐயர் பத்து ரூபாய் கடன் கொடுத்ததே! மற்றொன்றுமில்லை.

ஐக்கராஜு-ப. வாசுதேவையபந்துலு.

---

## TIRUVIDAIMARUDUR KALAMBAKAM-A REVIEW.
## திருவிடைமருதூர்க் கலம்பக வாராய்ச்சி.

(339-ஆம் பக்கத் தொடர்ச்சி.)

இக்கலப்பகத்தின்கண் ஆற்றிடை முக்கோற்பகவரை வினாதல், கண்டு கைசோர்தல், இளவிவேட்டல், நற்றாயிரங்கல், முன் பனிக்காலம், வெறி விலக்கல் முதலிய துறைகளும் விரவிச் செவ்விதாயமைந்து கிடக்கின்றன. இன்னும் இந்நூலாசிரியர் புதியனபுகுதல் என்னும் வழக்குப்பற்றிக் கிளிப்பயிற்று, சல்லாபம், குரவை, பன் வினாவுத்தரம் என்னும் உறுப்புக்களையும் கற்றோர் பலரும் உற்றுணர்ந்து களிக்குமாறு கூட்டி முடித்திருக்கின்றனர்.



மேற்கூறிய கிளிப்பயிற்றின்கண், கிளி, கொக்கு, காக்கையெனும் பக்ஷிகளின் பெயரையமைத்திருத்தலை யுய்த்துணர்க. இவ்வாறே “சீறு நாற்கோட்டு” என்னுந் தொடக்கத்த வெண்பாவின்கண் அத்தி, அரசு, மா, சூரை, வேல், மருது என்னும் விருக்க பேதங்களின் பெயர்களையும் அமைத்திருக்கின்றனர். இன்னும் வலைச்சியார், கீரையார் என்னு முறுப்புக்களின்கண் திரலை கெளிறு, திருக்கை, சேல், மகரம் என்னு மீனினங்களையும் ஆரை, காசினி, வள்ளை, பண்ணை, முன்னை, வேளை, பசலை யென்னுங் கீரைகளின் பேதங்களையும் வேறுபட்டு வருமாறு பொருத்தியிருத்தலையு முய்த்துணர்க.

‘கச்சிக்கலம்பகமாங்காண்’ ‘மருதூர்க்கலம்பகமம்மா’ என்னு மீற்றடிகள் பெற்ற வினாவுத்தரங்களா யமைதலுற்ற வெண்பாக்களை யுற்றுநோக்குழி யவ்விருகலம்பகங்கட்குமுள்ள வேற்றுமையினை யந்நூலாசிரியர் தங் கருத்திற்கொண்ட வாறமைத்திருத்தலை யொருவாறறியலாகும்.

இனிமுடியடி தேடிச்சென்ற பிரமவிட்டுணுக்களைத் “தேமேவுந்துளவமணி” யென்னுந் தொடக்கத்த செய்யுளின்கண், கொம்புறுகோலமெனவும் கொம்பிலாக்கோலமெனவும் முரண்டொடை நயம்படச் செறித்திருத் தலழகிதே. இவ்வாசிரியர் “வருஞாயிற்றை” யென்னுந் தொடக்கத்த கட்டளைக் கலித்துறையில் அரதனமாலையணி நலந்திகழப் பொருத்தியிருப்பதை யாவரும் கண்டு மகிழ்பூப்பாராக.

இந்நூற்கண் நாரைவிடுதூது, அன்னம் விடுதூது, கிள்ளை விடுதூது, குயில்விடுதூது, தென்றற்றூது, நெஞ்சுவிடுதூது, பூவைவிடுதூது, வண்டுவிடுதூது, மேகம்விடுதூது, என்னுந் தூதுகளழகினவாயமையப் பெற்றுள்ளன. அன்னம்விடுதூதின்கண் ‘நீ தூது சென்று எனதன்பரை யழைத்து வரின் நீ செய்த நன்றியை யெக்காலத்தும் மறவேன்’ என்று தலைவி ஔபசாரிகமாகக் கூறியதுடன் ‘இதுகாறும் ஒழித்திருந்த உணவினையும் உவப்பேன்’ என்று பொருள் படுமாறு “ஏல வழைத்துவந் தான்மற வேனின் வியற்பெயரே” என்று கூறிய நயத்தினையும்; இப்பெற்றி பற்றியே “தந்திரங்கற்றொளிர்” என்னுந் தொடக்கத்த நாரை விடுதூதின் கண் “மறவேன் குருகையென் வண்கைகண்டே” என்பதன் கண் வாய்ந்துள நயத்தினையும் யாவரு முய்த்துணர்வாராக. இவ்வாறே கிள்ளை விடுதூதினு மிவ்வாசிரியர் மேற்கூறிய நயத்தினையே பாராட்டி யிருக்கின்றனர்.

இன்னும் இவ்வாசிரியர் இந்நூல்வாய் நான் காரைச் சக்கிரபந்தம் சுழிகுளமாதிய மிறைக்கவிகளையு மரிய பொருளுடன் பொருத்தியிருக்கின்றனர். உதாரணமாக வோரிரு செய்யுளைச் சித்திரந் தீட்டி யமைத்துக் காட்டுவாம்.

## நான்காரைச் சக்கிரபந்தம்.

பாவாண ராதி பரபதிமே லாதேவ
தேவா மருதா திரசுருதி—மாவேறு
பாகாவென் றேறுபெண் பாகா பவளவரை
வாகாதே தாநீ வரம்.

என்னு மிந்நூல்நான்காரைச் சக்கிரபந்தச் செய்யுளைச்சக்கிரச்சித்திரந் தீட்டி அதன்கணமைத்துக் காட்டியிருக்கின்றாம்.






இன்னணம் மேற்கூறிய பா சக்கிரச் சித்திரத்தில் நான் காரை பெற்று நடுவே 'ரகரம்' நிற்கப்பெற்றுக் குறட்டின் மேற் 'பசுபதி' யென்னும் பெயர் அமையப் பெற்றது காண்க.

### சுழிகுளம்.

பசுபதி யாமே காகா
சுதிவரு தேரா யோகா
பவமம ராவா ராமே
திருமரு தூரா தேயா

சுழிகுளம் என்றாலென்னை? "தெழித்தெழு நீர்குளத் தினுட்செறிந் ததைக் கொடு, சுழித்தடங் குவபோ லடங்குதல் சுழிகுளம்". ஆரவாரித் தெழா நின்றபுனல் குளத்தினுட் டனதிடத்தடைந்த பொருளொன்றினைக்கைக் கொண்டு சுற்றித்தன்னுட் சுழித்தடங்கு மாபோற் பாவினகத்துச் சுற்றிப் பொருளைக் கொண்டடங்கும் பாவே சுழிகுளமாம்.




எட்டெழுத்துக்கொண்ட முச்சீரடி நான்குகொண்ட இச்செய்யுள்மேனின்று கீழிழிந்தும் கீழ் நின்று மேலேறியும் புறநின்று வந்துண் முடியப் படிப்பினும் அவ்வரிகணான்குமே பெற்ற செய்யுளாய் முற்றுப் பெற்றதை யுய்த்துணர்வாராக.

இந்நூலிடத்து முன்பனிக்காலத்துறையின் கண் "மனத்தின்மரு தூர்ப் பூச விழாவுமெண்ணி னிலையோ மலர்க்கணாளே" என்றிசைத் திட்டமை யானே இந்நூலுடையார்க்குத் தைப்பூச விழவின்கணுள்ள ஆர்வமிகுதி செவ்வனே விளங்கும்.

“ தேடரிய மூர்த்தி திரமகா லிங்கரென்று
நாடுமென துள்ளத்தே நண்ணியதா—னீடுதினங்
கண்டுளபன் ஞெய்காள் காந்திரா தோடுங்க
டண்டுளபன் கஞ்சா தனன்.”

பூட்டுவிற் பொருள் கோளாக வமைத்தவிவ் வெண்பாவில் இலிங்க பஸ் மத்தாற் சகல வியாதியும் நிவாரணமாகு மென்னும் வைத்திய வுணர்ச்சியினைத் தெளித்தமையானே யிந்நூலாசிரி வைத்தியத்தினும் வல்லுநரென்பது போதரும்.

இக்கலம்பகச் சம்பிரதச்செய்யுள் மிக்க அழகுடன் அமையப் பெற்றது. பற்பலவித நோய்களுந் தொலையுமாறு புண்ணிய தீர்த்தங்களுட் பலரும் ‘ வெல்லங் கரையுமா வியாதிகரையு’ மென்னும் பழமொழிப்படி வெல்லத்தைக்கரைக்கும் வழக்கத்தினை இந்நூலாசிரியர்

“ வீணுரு துறைநீர்க் குளத்திற் குளங்கொண்டு
விட்டாற் புதம்புரிகுவோம்.”

என்னுஞ் செய்யுளடியிற் குறிப்பித்துளார்.

“ மெய்யுறுவேத வேதியர்” என்னுந் தொடக்கத்த நற்றா யிரங்கற்றுறைக்கண் நான்குவருணத்தவரையுங் கூறிய வஞ்சப்புகழ்ச்சியணியைச் சிறப்பித்தது யாவராலும் பெரிதும் வியந்து பாராட்டத் தக்கதே.

இந்நூலுடையார் வைணவத் துவேஷியல்லரென்பது “ இறை சூழ் பதின்மர், மிகுத்தரி வைகுந்த நண்ணனன் றேவிதி மெய்ப்பிப்பையே” யென்று நானிக்கண் புதைத்தற் றுறையின் கண் ஆழ்வார்கள் பதின்மரையுஞ் சிலேடையாற் புகழ்ந்தமையானினிது விளங்கும்.

இனியிக் கலம்பகச் செய்யுள்களனைத்தினும் தாரகைநாப்பணுவாமதியென விளங்கிக் கற்றோர் பலருங் களிகொள்ளுமாறு இலங்குஞ் செய்யுள் களி யென்னும் முறுப்பமைந்த செய்யுளே. அதனை யீண்டுத் தீட்டவு மெம்மனங்களிக்கூத்தாடுகின்றது.

ஓங்களிய ரென்னுமிடை மருத வாண
ருபயபத மலர்களைத்தா முள்ளே கொள்ளும்
பூங்களியேங் கதிர்கடிகை மாறி னாலும்
பொய்யுரையே மெய்ம்மொழியே புகல்வோ மப்பா
கோங்களிசூழ் பொங்கர்திருப் பனந்தா ளின்கட்
குடியேறி யரன்சடைய னெனம்பேர் தாங்கத்
தாங்களினு லின்புறமா லயன்பி னேகிச்
சாற்றரிமுண் டகனெனப்பேர் தாங்கி னூரே.



திருப்பனந்தாளின்கட் குடியேறி யரன் சடையனெனப் பெயர் தாங்கி— சடை : கள். அழகிய பனந்தாளி லூறிய கள்ளினாற் குடிமயக்கேறியதனாற் சடையன் எனப் பெயர் வாய்ந்ததாய்த் தற்குறிப்பேற்றியதுடன், திருப்பனந்தாள் என்னுந் தலத்துத் திருக்கோயில் கொண்ட சிவ பெருமாற்குச் சடையப் பீச்சுவர ரென்னும் பெயருண்மையுந் தெரிக்கப்பட்டுளது.

இதன்கண் மாலுமயனும் பின்றொடர்ந்து அரி, முண்டகன் (அரி-கள், முண்டகம்-கள்) என்னப் பெயர்வாய்ந்த தெங்ஙனமோ வெனின் அவர்களுந் திருப்பனந்தாளைக் கொண்டனரா லென்க. திருமால் திருப்பனந்தாளைக் கொண்டதாவது - திரு - அழகிய - பனம் - (ஆல்)இலைமேல், தாள் - (உலகப் பாதுகாப்பாம்) முயற்சியினைக் கொண்டவாறென்க. பிரமன் திருப்பனந்தாளினைக் கொண்டது-, திருப்பு - திரும்புந்தன்மைசேர்ந்த, அனம்- அன்னவாகனத்தின்மேல் - தாள் - பாதங்கொண்டேறலை யுட்கொண்டு கூறியவாறென்க. இச்செய்யுளின்கண் நான்கடியினும் ‘ களி’ யென்னு மெதுகை நயம்பற்றியதை யாவருமுற்றறிவாராக. இன்னும் பலவித நயங்களையும் ஈண்டு விரிவஞ்சி வரையாதுவிடுத்தாம்.

இனி யிக்கலம்பகத்தி னொவ்வொரு செய்யுளினு மொவ்வோரணி நலஞ் செறிந்தமையின் அவையிற்றினை யீண்டு முற்றிலுந் தந்துரைத்த லியலாதாமாதலிற் கற்றோர்பலரும் இக்கலம்பகத்தினைக் காதலுடன் கருத்தூன்றிக் கண்ணுறுமாறு வேண்டுகின்றாம்.

இவ்வாராய்ச்சியின்கண் யாம் எஞ்சிற்றறிவிற் கெட்டியவாறு கூறியவற்றுட்பொதுளிய குறைபுரைகட்காக இந்நூலாசிரியரும் மற்றும் புலவர் சிகாமணிகளும் எம்மைப் பொறுத்தருளுமாறு அன்னோரை மிகு வணக்கமுடன் பிரார்த்திக்கின்றாம்.

இந்நூல் சென்னையிற் பல புலவருங் கூடியகுழாத்திடை யரங்கேற்றப்பட்டு முடிந்தபோழ்து இவ்வாசிரியர் கூறிய வெண்பாவினையு மீண்டு வரைகின்றாம்.

“கலம்பகஞ்சொ ரொண்மருதூர் சித்தனூர் பிதோர்
கலம்பகஞ்சொற் றேன்பொருளுங் கண்டே—கலம்பாவுஞ்
சென்னைநக ரிற்புலவர் தேர்ந்துரைசெய் தாரொரணி
வன்னவரா சித்தரென லாம்.”

ந. பலராம ஐயர்.

# REVIEWS OF BOOKS.
## புத்தகக் குறிப்புகள்.

### இந்துதேச சரித்திரம்.

[பெயர்பெற்ற **மாக்மில்லன் கும்பெனியார்** எஸ். பி. ஸி. கே. யந்திர சாலையிற் பதிப்பித்தது ; விலை அணா-12, தபாற்கூலி வேறு. பிரதிகள் எஸ். பி. ஸி. கே. புத்தக சாலையிலேயே அகப்படும்.]

இது மிடில்ஸ்கூல் அல்லது லோயர் ஸெகண்டரி பாடசாலைகளுக்கு உபயோகப்படக்கூடியவாறு எழுதப்பட்டுளது. சென்ட்ரல் சர்க்கிள் பாடசாலை இன்ஸ்பெக்டரும் சென்னைத் துரைத்தனத்தாருக்குப் பாரஸீக இந்துஸ்தானி பாஷைகளில் மொழிபெயர்ப்பாளரும் பரீக்ஷகரும் சென்னைச் சர்வகலாசாலை நிர்வாக சபையின் அவயவிகளிலொருவருமாகிய **ஈ. மார்ஸ்டன் துரையவர்கள் பி. ஏ.,** ஆங்கிலத்தில் இந்துதேச சரித்திரமொன்றெழுதினர். அஃது ஆங்கிலம் பயிலாத நம் இந்திய இளைஞர்க்கும் உபயோகப்படும்படி மொழி பெயர்க்கப்பட்டுளது. இம்மொழிபெயர்ப்பின்கண்ணே மத்தியதரப் பாடசாலைகளுக்கென்றேற்படுத்தப்பட்ட சரித்திரபாகம் முழுவதும் அடங்கியிருக்கின்றது. மொழிபெயர்ப்பாசிரியர் முகவுரையிற் கூறுமாறே "கல்விகற்கும் சிறு பிள்ளைகளின் அறிவுக்குத் தக்கபடி ஆங்கில பாஷையிலுள்ள இதன் முதனூலைப்போலவே மொழிபெயர்த்துச் செய்யப்பட்ட இக்க வழிநூலும் எளிதிற் பொருள் விளங்கக்கூடிய தெளிவான தமிழ் நடையில் எழுதப்பட்டிருக்கின்றது." இஃது எழுபத்தைந் தத்தியாயங்களும் வருஷக்கிரம விஷய அட்டவணையுங் கொண்டது ; முந்நூற்றெட்டுப் பக்கங்களுள்ளது ; மிகவுஞ் சிறப்பான மக்களுருவப்படங்களும் அருமையான நாட்டின் பாகுபாடுகளை விளக்கும் படங்களும் தன்னகத்துக்கொண்டு விளங்குகின்றது; இதற்கிணையான இந்துதேச சரித்திரம் இதுவரை எழுதப்படவேயில்லை. இனிமேலெழுதப்படுமோவென்பதும் சந்தேகம். இஃது இவ்வாறாக. மொழிபெயர்ப்பு வகையாற் செய்யப்பட்ட இத்தமிழ்நூல் மிகவும் இனிமையான தெளிவமைந்த நடையில் யாவரும் விரும்பத்தக்கவாறு அமைக்கப்பட்டிருக்கின்றது. வாக்கியங்களெல்லாம் சிறிதேனுந் தடைப்படாமல் இசை நலம் பயக்கத்தக்கவாறு செல்லுகின்றன. வடமொழிச் சொற்களைப் பெரிதும் பெய்து தமிழ் நடையைக் கெடுத்துவிடாது நல்ல தமிழ்ச்சொற்களைக்கொண்டே செவ்விபெற நூலினை யமைத்திருக்குந் தன்மை யாவரும் வியக்கத்தக்கதே. இது பள்ளிக்கூடச் சிறுரேயன்றி ஏனையோரும் இன்பங் குன்றாதவாறு படிக்கலாம்படி யமைந்துளது. நமது மார்ஸ்டன் துரையவர்களுக்கு இவ்வாறு தக்க மொழிபெயர்ப்பாசிரியர் கிடைத்தமைபற்றிப் பெரிதுங் களிகூர்கின்றோம்.

### பாரதஸாரம் : முதற்பாகம்.

[சென்னைத் தாம்சன் கம்பெனியார் அச்சியந்திரசாலையிற் பதிப்பித்தது. விலை : அணா. 0-10-0. தபாற்கூலி வேறு.]

இது சென்னைப் பிரமஞான சபையின் அவயவிகளி லொருவராகிய **அன்னிபேஸன்ட் அம்மை யவர்கள்** ஆங்கிலமொழியிற் செய்துள மகாபாரதத்தை மொழிபெயர்த்து ஆங்காங்குச் சில பாடல்களை யியைத்து யாவருக்கும் பொருள் விளங்கத்தக்க தெளிவான நடையிலமைத்தது. இது குளும்பேட்டை ஜமீந்தாரவர்களாகிய ம-௱-௱-ஸ்ரீ, முத்துக்குமாரசுவாமி முதலியாரவர்களது வேண்டுகோட்கிணங்கிக் **கல்தளம் - குப்புசாமி முதலியார் பி.ஏ.,** இயற்றியது. பாரதத்தின்கட்கூறப்பட்டுள நீதிகளனைத்தும்யாவருக்கும் முகஞ்செய்து தோன்றுமாறெழுதப்பட்டுளது; முற்காலத்தில் நமது இந்தியா இருந்த நிலைமையும் அக்காலத்து ஒழுக்க வழக்கங்களும் பயின்ற படைக்கலங்களும் இவைபோல்வன பிறவுந் தெளிவுபெற வெடுத்துக் காட்டப்பட்டுள. இது நமது ஞானபோதினியின்கண் அவ்வக்காலத்துச் சிறிது சிறிதாக வெளிப்போந்தது ; அங்ஙனம் போந்தனவனைத்தையும் ஒரு சேரத் தொகுத்துப் பொதுளிய பலவகைப்பட்ட பிழைகளையும் போக்கித் தூய்தாக்கியிருக்குந் தன்மை மிகவும் வியக்கத்தக்கதே. இது மிகவும் பளபளப்புள்ள உயர்ந்த காகிதத்தில் யாவரும் விரும்பத்தக்கவாறு அச்சிடப்பட்டுளது. இது 180-பக்கங்கள் கொண்டது; சென்னைக் கிறிஸ்தியன் காலேஜ் தலைமைத் தமிழ்ப்பண்டிதர் பிரமஸ்ரீ வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியார், பி. ஏ. பதிப்பித்துவரும் **கலாநிதி** யென்னும் நூற்முறைகையுள் முதற்கலையாம். இது நிற்க, இவ்வாறு பாரதஸாரம் என்னும் இவ்வினியநூலைச் செய்த நமது குப்புசாமி முதலியாரவர்கள் கூடிய சீக்கிரத்தில் ஏனைய பாகங்களையும் அச்சிட்டு வெளிப்படுத்துவாரென்று நம்புகின்றோம்.



### திருவுத்தரகோச மங்கை மங்களேசுரி பிள்ளைத்தமிழ்.

[சென்னைப் பண்டித மித்திர யந்திரசாலையிற் பதிப்பித்தது ; விலை : அணா 0—2—0. தபாற்கூலி வேறு.]

இந்நூல் சொற்பொருணயங்களிற் சிறந்து சந்தவின்பம் பெரிதும் பயந்து தொடை நோக்கும் நடை நோக்கும் மிக்குப் பயின்று விளங்குகின்றது ; இராமநாதபுரச் சமஸ்தானத்தைச் சேர்ந்ததும் மணிவாசகப் பெருமானாரது அற்புதத் திருப்பாடல் பெற்றதுமாகிய திருவுத்தரகோச மங்கைத் தலத்தின்கண் எழுந்தருளியிருக்கும் தேவியாகிய மங்களேசுரி யம்பிகைமீது பாடப்பட்டது ; நூலாசிரியராவார் இன்னரென்பது புலப்படவில்லை ; எனினும் சொற்பொருளமைப்பினை யுற்றுநோக்குமிடத்துத் துறைமங்கலஞ் சிவப்பிரகாச சுவாமிகள் தாமோவென ஐயுறுதற் கிடனுமுண்டு. இது மதுரை ஜில்லாவைச்சார்ந்த வானரமதுரை டிஸ்டிரிக்ட் முன்சீப், **ம-௱-௱-ஸ்ரீ, வ - த. சுப்பிரமணிய பிள்ளையவர்களாற்** பதிப்பித்து வெளியிடப் பெற்றது. தமிழின்மீது ஆர்வமுடையார் யாவரும் வாங்கிப் படிக்கத்தக்கது.

### பெண் மலையாளம் :

[க. கிருஷ்ணசுவாமி ஐயர், பி. ஏ., தமது ராயல் விக்டோரியா யந்திர சாலையிற் பதிப்பித்தது. விலை : அணா 0—6—0; தபாற்கூலி வேறு.]

இது ராவ் பகதூர் - கே. வீரேசலிங்கம் பந்துலுகாரு என்பார் ஆந்திர மொழியிலியற்றிய 'சத்தியராஜ அபூர்வதேச யாத்திரை' யென்னும் நூலினின்றும், **க. கிருஷ்ணசுவாமி ஐயர், பி-ஏ.,** மொழி பெயர்த்ததோர் விநோத

மான தமிழ்க்கதை. இதன் கண்ணே மலையாளதேச வழக்கத்தைப் படைத்திட்டுக்கொண்டு கூறுமுகத்தால் முதனூலாசிரியர் கொண்ட கருத்தாகிய இந்துசன சமூகச் சீர் திருத்தமும் உடன் கூறப்பட்டுளது. இக்காலத்து இந்துப் புருஷர்களுக்குள்ள சுதந்திர மெல்லாம் மகளிர்கட்குக் கொடுக்கப்பட்டும், மகளிர்கட்குள்ள கட்டுக் காவல்களெல்லாம் புருஷர்கட்கு ஏற்படுத்தப்பட்டு மிருந்தால் நம் புருஷர்களெல்லாம் என்னபாடு படார்! இதனைத் தெளிவுபெற இந்நூல் காட்டுகின்றது. இது போலவே நம் மகளிர்களெல்லாம் அத்தகைய பாடுகள் படுமாற்றை யுய்த்துணர்ந்து அவர்களை நல்வழிப் படுத்தற்குரிய வழிகளை நாடவேண்டு மென்பது இதன் நீதியாம். இந்நூல் யாவருக்கும் பொருள் விளங்கத்தக்க எளிய நடையில் எழுதப்பட்டுளது; புருஷரும் பெண்டிரும் ஒருங்கே வாசிக்கத்தக்கது; எட்டு அத்தியாயங்களுள்ளது; 106 - பக்கங்கள் கொண்டது. தற்காலத்திலாதல் முற்காலத்திலாதல் மலைநாட்டி லில்லாத வழக்கங்களுட்பல ஆண்டுளவாகக் குறிக்கப்பட்டிருத்தல் பொய்யென ஒதுக்கப்படுமாயினும் 'கதைக்குக் காலுண்டா?' என்னும் வழக்குப்பற்றி யேற்புடைத் தாகும்போலும்.

---

## EDITORIAL NOTES.

## பத்திராதிபர் குறிப்புக்கள்.

**ஒரு வடமொழிக் கலாசாலை:**—தர்பங்காவில் இக்கலாசாலை யொன்று மகாராஜா அவர்களால் விரைவில் ஸ்தாபிக்கப்படும். அதிற்கலைபயிற்றுவோருக்கு உயர்ந்த சம்பளங் கொடுக்கப்படும். அதற்கு வேண்டிய நிதியும் முன்னமேயே சேகரிக்கப்பட்டுளதாம். நம்முடைய தமிழ் மொழிக்கும் இத்தகைய கலாசாலைகள் ஏற்படுதல் என்நாளோ!

***

**கல்வி மூடபக்திக்கோர்பகை:**—வித்தையினால் நன்மை விளையுமேயன்றோ? இஃதுணராச் சில்லோர் தம் மூடபக்தியான கொள்கைகளுக்கும் வழக்கங்களுக்கும் அழிவு வந்துவிட்டதே யென மருண்டு வருந்துவாராகின்றனர். அந்தோ! என்னேயிவர்தம் அறியாமை! இன்னோர் அகவிருள் வித்தையா லொளிபெற்றொழிந்தாலன்றி உண்மையிதுவென்பதை இவர் எங்ஙனமறிவார்? வித்தையின் அபிவிருத்தியால் மூடபக்தி நாடோறுங் களையப்பட்டு வருவதைப்பற்றி யாம் பெரிதுங் களிகூர்கின்றோம். உண்மை யொருபோதும் அழியாததன்றே?

***

**செவியறிவுறூஉ:**—நாளது ஆகஸ்டுமீ 2உ வெளிப்பட்ட 'லோகோபகாரி"ப் பத்திரிகையின்கண் நமது ஞானபோதினியைப்பற்றி யெழுதியிருந்ததிற் சில தவறான கூற்றுக்கள் காணப்பட்டமையின் அவையிற்றைத் திருத்தி யுண்மையை யுணர்த்துதல் நமது கடமையாகின்றது. முதற்கட் சென்ற ஒரு வருடகாலமாக ஞானபோதினிப் பத்திரிகையை நடாத்திவந்தது அறுவரடங்கியதோர் நிர்வாக சபையாயிருப்ப, அதனை நடத்தினவர்



மகா-௱-௱-ஸ்ரீ கல்குளம்-குப்புசாமி முதலியாரொருவரே யென்றது பிழை. அன்றியும் பத்திராதிபரும் மானேஜரும் வேறிருக்கக் காரியதரிசியாக மட்டில் நின்றுழைத்தவர் பத்திரிகையை நடத்தினவராதலெங்ஙனம்? இரண்டாவது அவர் ஞானபோதினியின் விருத்தியைக் கருதிய பலருளொருவரே யென்பது யாவரு முணர்ந்த விஷயம். இனி யிது நிற்க. ஒரே அச்சியந்திரசாலையிற் பதிக்கப்படுகின்ற இரண்டு பத்திரிகைகளுள் ஒன்று மற்றொன்றன் உண்மை நிலையையிற்றென் றுணராது பிறிது படக் கூறுதல் நேரிதன்றாம். நமது லோகோபகாரிப் பத்திராதிபர்க்கு இவ்வாறு யாவர் கூறினரோ? அறியேம்.

***

**மகளிரே நாட்டின் உயர்நிலைக்குக் காரணம்:**—பூர்வம் இந்தியாவிற் கல்வியிற் சிறந்து விளங்கி அநேகவித நன்மைகளைச் செய்து வந்த மகளிர் பலரிருந்தனர். ஒரு வகுப்பார் உயர்நிலை யெய்த வேண்டுமானால் அன்னார் மகளிர் உயர்நிலை பெறவேண்டு மென்றும் மகளிரின் நிலை உயர்ந்தாலன்றி அத்தேசம் சகல நன்மைகளையும் பெறுதலியலாதென்றும் கூறும் நூல்கள் நம்மிந்தியாவிற் பல உண்டு. உதாரணமாக மகா பாரதத்திற் கூறப்படும் பின்வரும் வாக்கியங்களைப் பார்க்கலாம்:—மனையகத்துள்ள வேலை யனைத்தையும் செவ்வனே செய்பவள் மனைவி; இன்புறு மக்களைப்பெறுவாள் மனைவி; தன்னுயிரினும் மேலாகத் தன் கணவனுயிரைக் கருதுவாள் மனைவி; மனிதனிலும் பாதி மனைவி; அவனுக்குற்ற நண்பர்களுட் சிறந்தவள் மனைவி; அறம் பொருளின்பம் என்னும் மூன்றனுக்கும் அவளன்றே மூலாதாரமாயிருப்பவள்? நாலாவதாகிய வீட்டைப் பெறுவதற்கும் அவளன்றே இன்றியமையாதவள்? மனைவியருடையாரே தத்தங்கடமைகளை நிறைவேற்றுபவர்களாகின்றனர். அவர்களே இல்லறவாசிகளாகின்றனர்; அவர்களே அமைந்த சிந்தையர்; அவர்களே நன்னிலைவாணர்; நாம் தனித்திருக்குங் காலங்களில் நமக்குச்செவியமுதூட்டுவோர் நம்மனைவியரன்றே? நம்மதாசார காரியங்களில் அவர்கள் நம் தந்தையரையும் நமக்குப் பிணிவருங் காலங்களில் நம் அன்னையரையும் நிகர்ப்பரன்றே? வாழ்க்கை வெங்கானிலலைந்து திரியுந் தந்தலைவருக்குத் தங்குமிட மொப்பர். மனைவியுடையானையே வையகத்திற் பலரும் நம்புவர். ஆகையால் மனைவியினுஞ் சிறந்ததோர்பாக்கியம் மாந்தருக்குண்டோ?

***

**மாதரைப்பழித்தல்:**—பண்டைநூல்களுட் சில மகளிரைக் கொடியரென்றும் பாதகிகளென்றும் வஞ்சகியரென்றும் பலபடப் பழித்துக்கூறியிருப்பதனை நாம் காண்கின்றோம். இங்ஙனம் மாதரார்மீது தீய வெண்ணம் நிகழ்ந்ததற்குற்ற காரணங்கள் இன்னவாமென்று சுட்டிக்காட்டுதலும் மகளிரைப்பற்றிய நல்லெண்ணம் இன்னகாலத்திற்றான் மாறியதென வரையறுத்துக் கூறுதலும் அசாத்தியமாகின்றன. எனினும் மும்பாபுரிவாசியாகிய பந்தார்க்கரென்பவர் யாஸ்கர் என்பவர் காலத்திலிருந்து இம்மாறுபாடு தொடங்கியிருக்கலாமென்று ஊகிக்கின்றனர். நம் மகளிரை நாம் படிப்பிப்பதனால் மோக்ஷசாதனமான கடமைகளிலொன்றை நாம் நிறைவேற்றுவதனோடு இந்து சமூகம் நன்னிலை யெய்துவதற்கு இன்றியமையாத காரியங்களுளொன்றைச் செய்பவருமாகின்றோம். சின்னாண்முன்னர் மகளிரைப் பழித்துக் கூறலே தொழிலெனக் கொண்டியற்றப்பட்டுள சில புன்னூல்களை

நாம் பொருட்படுத்துதலின்றி நம் பூர்வீகர் ஆழ்ந்த கருத்துடன் இயற்றியிருக்கின்ற அருமை நூல்களைப்படித்து அவற்றின்கணுள்ள உண்மைப் பொருளைக் கண்டு தெளிந்து அதன்படி ஒழுகுதலே மேதக்கதாம்.

* * *

**பெண்கல்வி:**—இக்காலத்திற் புருடர்கள் தங்கள் மனைவியரைப் படிப்பிக்கும் விடயமாய்க் கல்கத்தாவிலுள்ள **கோசலையம்மையவர்கள்** மகாபோதிப் பத்திரிகையிற் கூறும் ஒரு விஷயம் யாவரும் கவனிக்கத்தக்கது. 'சென்ற நூற்றாண்டின் இறுதிக் காற்பகுதி முதலாய் நம் நாட்டின்கணுள்ள அறிவாளர்க்கு நம் பெண்களைப் படிப்பித்தல் வேண்டுமென்ற வெண்ணம் நிகழ்ந்தது. நிகழவே அவர்கள் தங்கள் மனைவியரும் மகளிரும் கல்வி கற்றாற் போதுமெனக் கருதித் தாங்களெளிதிற் பயிற்றுவிக்கக்கூடிய பாஷை எதுவோ அதனைப் பயிற்றுவிக்கத் தலைப்பட்டனர். அந்தோ! தாங்களிங்ஙனம் தலைப்படுவதனாற் பின்னர் நிகழக்கூடியனவற்றைப்பற்றிச் சிறிதேனும் ஓராதவராயினர். இவர் பயிற்றுவிக்கப் புகுந்த பாஷை பிறநாட்டுப் பாஷையாயிருந்தமைபற்றி அவர்தம் மகளிர்க்கு விளைந்த பயன்கள் அன்னாரை நம்மிந்துக் குடும்பங்கட்கு ஒவ்வாதவராக்கிவிட்டன. இதனாலன்றே பெண்கல்வி பயனிலதென முழங்குவார்க்குக் கற்ற மகளிரை உதாரணமாகக் காட்டல் சிற்சில சமயங்களில் அரிதாய் முடிகின்றது.' மேற் புலப்பாஷையில் மிகவுந் தேர்ச்சியடைந்து பி. ஏ., பட்டம் பெற்ற இம்மாது சிரோமணி இங்ஙனங் கூறுவது முற்றும் உண்மையே. நம் சிறுவர்கள் செய்யும் பெரும்பிழையாவது நம் மகளிர்க்கு ஆரம்பத்திலேயே ஆங்கில நெடுங் கணக்கிலுள்ள வெழுத்துக்களாகிய ஏ. பீ. சீ. என்று அக்ஷராப்பியாசந் தொடங்குவதேயாம். இச்சிறுமிகள் அயல் நாட்டெண்ணங்களை மனத்துட் கொண்டவர்களாய் இந்துக் குடும்பங்கட்குப் பொருத்தமில்லாத சில நவீன ஒழுக்க வழக்கங்களில் தலையிட்டுக்கொண்டு தவிக்கின்றனர். அப்பொழுது இவர்களை அவற்றினின்றும் விலக்குவது அரிதாய் முடிகின்றது.

* * *

**இந்துக்களின் விவாகமுறை:**—மைசூர்ச் சமஸ்தானத்திலுள்ள வடமொழிக் கலாசாலைத் தலைமைப் புலவராகிய **பிரமஸ்ரீ - வேங்கடராமசாஸ்திரியாரவர்கள்** கூறுமாறு நம்மவர்களின் விவாகமுறையிற் கன்னிகாதானமென்பதும் கல்யாணமென்பதும் வேறு வேறு கிரியைகளாமாதலின் இவ்விரண்டுங் காலவிடையீடு பட்டு நிகழலாகுமென்பதும், அவ்வாறு நிகழ்தல் சாஸ்திரவிருத்தமன்றென்பதும் தோன்றுகின்றன. இவ்விரண்டையும் வெவ்வேறு காலங்களிற் செய்வதனாலே பல நன்மைகளுண்டாகுமென்பது ஒருதலை. கல்யாணம் முற்றுப்பெற்ற பின்னர் நிகழக்கடவ பலதீங்குகள் இதனாற் களையப்படலாம். கன்னிகாதானத்திலேயே கல்யாணம் முற்றுப்பெறவில்லை. ஆகவே கல்யாணம் முற்றுப்பெறுதலின்றிக் கன்னிகாதானமட்டில் நிகழ்ந்த பிறகு அக்கன்னிகைக்குத் தன்னை ஏற்றுக்கொண்டானை யிழக்கும் தௌர்ப்பாக்கியம் சம்பவிக்குமேல் அவளைப் பிறனொருவனுமேற்றுக் கொள்ளலாம். ஆதலின் இப்பொழுது நடக்கும் விவாகமுறைகளிற் குழந்தைகட்குக் கல்யாணஞ் செய்தலை நிறுத்தி அவர்களைக் கன்னிகாதானம் மட்டிற் செய்யின் நம் நாட்டிற் பாலிய விதவைகளும் மல்கார்; அது காரணமாக விதவா விவாகங்களும் மல்கா என்பது திண்ணம்.



**இந்தியாவின் வறுமை :**—இதனைப் போக்க இறைவன் எப்போது தான் கடைக்கணிப்பானோ! தெரியவில்லை. தற்போது இந்நாட்டிற் பசியால் வருந்தி உபகாரம் பெறுபவர்களின் மொத்தத்தொகை 5,31,755 என்று அறிகின்றோம்.

* * *

**ஒரு தீர்மானம் :**—இந்தியா விஷயங்களிற் பெரிதும் அனுபவமுற்ற கனவான்கள் பலர் கொண்ட சபையொன்று சென்ற ஜூன்மீ 7உ **வெஸ்ட்மினிஸ்டர்** அரண்மனையிற் கூடிற்று. அதில் முடிவிற்கு வந்த தீர்மானம் வருமாறு: 'இந்தியாவில் க்ஷாமத்தால் ஆயிரக்கணக்கான ஜனங்கள் மாளுவதையும் இந்தியர்கள் க்ஷேமத்துக்காக ஆங்கிலேயருக்கு இருக்க வேண்டிய பொறுப்பையும் உத்தேசித்து ஒரு சங்கம் ஏற்படுத்த வேண்டும். அச்சங்கத்துக்கு 'இந்தியா க்ஷாம நிவாரண சங்கம்' என்னும் பெயரிடவேண்டும். இச்சங்கம் இந்தியாவில் அடிக்கடி க்ஷாம முண்டாவதற்குக் காரணங்களைப் பற்றியும் அப்படி க்ஷாம முண்டாகாமல் தடுப்பதற்குள்ள நல்லுபாயங்களைப் பற்றியும், பரியாலோசித்து இந்தியாவின் நன்மையை நாடவேண்டும்' என்பதே.

* * *

**மாறுபாடுடைய நாடு :**—இந்தியா ஓரதிசயமான நாடு. **பிஷப் வெல்டன்** என்பவர் அதனைத் 'துக்கம் நிரம்பிய நாடு' என்பர். அது பூமியிலுள்ள செழிப்பான நாடுகளிலொன்று. ஆனால் அதன் நாட்டார்கள் மிகவும் உணவின்றி வருந்துகின்றார்கள். அதன்கணுள்ளோர் நாகரிக ஜாதிகளுள் மிகவும் தாழ்ந்தவராயிருக்கின்றனர். அங்கேயோ அனேக லட்சக்கணக்கான மனிதர்கள் பசியினாற் சாகின்றனர். ஆனால் அது செல்வ விருத்திக்கேற்ற நாடு; அதிற் பணம் நன்றாய் விளையும். பம்பாய்த் தனசாலையின் விசாரணைத்தலைவர்களின் ஆவேதனப்பத்திரத்தைப் பார்க்குங் காலத்தில் அரை வருடத்துக்கு இலாபம் ரூ. 1755719-9-3 ஆம். பம்பாய்த் தனசாலையைப் போலவே இன்னும் எவ்வளவோ இருக்கின்றன. இத்தேசத்து மனிதர்களைத் தவிர மற்றைய யாவையும் விருத்தியாகின்ற நிலைமையிலிருக்கின்றன. வளர்வோன் மனிதன் ஒருவனே. அவனும் அழிந்து படுகின்றனன். துரைத்தனத்தாருக்கு வர்த்தகத்தினாலும் வேளாண்மையினாலும் வருகின்ற வரும்படி மிகவுஞ் சந்தோஷகரமாயிருக்கின்றது. மனிதர் வருந்துவதைப்பார்த்துத் துரைத்தனத்தாரும் இரங்குவார்களென்பது திண்ணம். எனினும், அந்தோ! நமது எளிய இந்தியாவும் இந்நிலையை யெய்தலாமோ?

* * *

**விக்டோரியா ஞாபகச் சின்னம் :**—மாட்சிமை தங்கிய **எட்வர்ட்** மன்னரவர்கள் 'விக்டோரியா சக்கிரவர்த்தினியின் ஞாபக நிதிக்குப் பரிபாலகராயிருக்கும் கனம் பொருந்திய இராஜப்பிரதிநிதி யவர்களுக்குச் சில விலையுயர்ந்த வர்ணப்படங்களளித்தார்கள். இப்படங்கள் கல்கத்தாவிலுள்ள 'விக்டோரிய ஞாபகசாலை'யில் வைக்கப்படும். இப்படங்கள் காலஞ்சென்ற மகாராணியவர்கள் உத்தரவுப்படி அவர்கள் வாணாளிலும் அரசாட்சியிலும் நடந்த அரிய செயல்களை விளக்கிக் காட்டுமாறு வரையப்பட்டனவாம்.

* * *

**மானுட எலும்புகள்:**—இவை இருப்புச் சாமான்களினும் மிக்க வலியுள்ளனவாய் எளிதிலொடியாதவாறு திண்மையும் வாய்ந்தனவாம்.

**மக்கள் மூளை:**—ஆடவர் மூளை ஏறக்குறைய 3-அல்லது 3½ ராத்தல் நிறையுள்ளதாம்; மகளிர்மூளை ஏறக்குறைய 2-அல்லது 2½ ராத்தல் நிறையுள்ளதாம். இவ்வுறுப்பு வேறுபாடே இவ்விருவகையாளருடைய குணவேறுபாட்டிற்குங் காரணமாகக் கருதப்படுகின்றது.

***

**பிராணவாயு வைத்தியசாலை:**—விட்ஜாராய்ச் சதுரத்திற் பிராணவாயு வைத்தியசாலையாரால் கூடிய ஒரு பெருஞ்சபையில், படுகாயங்கள் பலவற்றுக்கும் பிராணவாயுவைக் கொண்டு வைத்தியம் செய்வதே மிகவும் சிறந்ததென்பது செய்து காட்டப்பட்டது. அத்தருணம் **ஆர்கைல் பிரபு** சபாநாயகராய் வீற்றிருந்தார். இம்முறையைக் கண்டு பிடித்த **டாக்டர் ஸ்டோகர்** என்பவர் தனித்துவானத்தினாலவும் பிராணவாயு இரணங்களையாற்றும் அற்புத குணமுடைத்தென்பதைத் தாம் முதன் முதலில் ஜுலூ யுத்தத்தில் அறிந்ததாய்ச் சொன்னார். காயம் பட்ட சுதேச வீரரிற் சிலர் மலையுச்சி சேர்ந்து அவ்விடத்தில் வாசஞ்செய்ததனாற் குணமடைந்தனராம். தென்னாபிரிகா யுத்தத்திற் குண்டு பாய்ந்து காயம்பட்டவர்கள் குணப்பட்டதெல்லாம் பிராணவாயுவின் சம்பந்தத்தினாற்றான். நூற்றில் தொண்ணூறு பேர் அங்ஙனம் அனுகூலமடைந்தனரென்று வைத்தியசாலைக் கணக்குக்கள் காட்டுகின்றன.

***

**ஒருவான நூற்புலவர்:**—கைத்தொழிற் சங்கத்தார் கூடிய வருஷாந்த சபை முடிந்த பிறகு **ஸிர்ராபர்ட்பால்** என்பவர் விண்மீன்களின் உற்பத்தியைப் பற்றி யோருபந்நியாசஞ் செய்தனர். நமது கண்களுக்குப் புதிதாக விண்மீன் தோன்றுவது அப்போது நூதனமாக உண்டாவதனாலன்றென்றும், விண்மீன் யாவும் முன்னமேயே ஒருங்காயமைந்துள்ளன வென்றும், உஷ்ணம் அதிகரிக்குங் காலங்களில் அவை ஒளிபெற்றுத் தூரதிருஷ்டிக் கண்ணாடிகளுக்கும் நமது கண்களுக்கும் புலப்பட்டும் குளிர் மிகுங் காலங்களில் அங்ஙனம் புலப்படாது மறைந்தும் மாறி மாறி வருகின்றனவென்றும், இக்காரணத்தால் இன்னும் தூரதிருஷ்டிக் கண்ணாடிக்கும் புலப்படாது கோடிக்கணக்கான விண்மீன்கள் வானிலிருக்கக்கூடுமென்றும் அவர் உபந்நியாசத்தில் வெளியிட்டார்.

***

**கைம்முதல்வாணிபம்:**— எவற்றையும் அடக்கித் தீங்கிழைக்குங் கைம்முதல் வாணிபத்தின் வன்மையினால் தற்காலத்து உழைப்பாளிகள் மிகவும் வருந்துகின்றனர். இப்பொழுது அடிமைகள் என்ற பெயருடையோர் இலரேனும் சாதாரண வேலைக்காரர்கள் அடிமைகளினும் இழிந்த நிலைமையிலிருக்கின்றார்கள். இது விரும்பற்பாலதன்று. இவ்வாறே யிருந்தால் ஜனங்கள் சௌக்கியத்தையும் இது வேரொடுங்களையும்.

***

**தாமேதம்நோயை யாராய்தல்:**—அருமறை மருந்துகளின் விற்பனை இக்காலத்து மாறுடருக்குற்றதோர் பெருங்கேடா யிருக்கின்றது. இதனாற் பலவகைப்பட்ட அதிசயமான பயன்கள் உண்டாகின்றனவென்று சொல்லிப் பலர் ஏழைச் சனங்களுக்கு ஆசைகாட்டுகின்றனர். மனிதர் தாமே தந்நோயின் குணத்தை யாராயப் புகுதலைக்கண்டு வைத்தியவுலகம் விழித்துக் கொண்டிருக்கின்றது. அவர்கள் தம் நோய் அநேகமாய்த் தீர்ப்பரிதாகும் நிலையினை யடையும் வரையில் வைத்தியரை யழைப்பதில்லை.

---

# ஞானபோதினி.

## ஒரு மாதாந்தத் தமிழ்ப்பத்திரிகை.

தாமின் புறுவ துலகின் புறக்கண்டு
காமுறுவர் கற்றறிந் தார்—திருக்குறள்.

சம்புடம் V. } 1901வருஷம் செப்டம்பர்மீ 20உ { புத்தகம் 2.

விஷயங்கள்.

பயிர்த்தொழிற் கல்வி.— பத்திராதிபர் ... 41
இராமாயணம்.— தி. த. கனகசுந்தரம் பிள்ளை, பி. ஏ. ... 45
உள்ளப்பயிற்சி.— ச. கி. சுந்தராசாரியர் ... 52
ஒரு நண்டுத்தெறுக்கால்— வி. கோ. சூரிய நாராயண சாஸ்திரியார், பி. ஏ. ... 58
மரீசி கண்ட பாவனைக்காட்சி.— ந. பலராம ஐயர் ... 59
இடவுணர்ச்சி.— வ. சு. சண்முகம்பிள்ளை ... 63
மகாபலிபுரம்.— செய்யூர்-முத்தைய முதலியார் ... 69
விநோதக் கூற்றுக்கள்.— கி. தே. வேங்கடவரதாசாரியர் ... 72
புத்தகக் குறிப்புக்கள்.— ... 74
பத்திராதிபர் குறிப்புக்கள்.— ... 78

பத்திராதிபர்:— { எம். எஸ். பூர்ணலிங்கம் பிள்ளை, பி. ஏ.
வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியார், பி. ஏ.

சென்னை:
தாம்ஸன் கம்பெனியார்
பதிப்பிப்பது.

1901.

வருஷ சந்தா ரூ. 2—8—0] [சஞ்சிகை ரூ. 0—4—0

# ஞானபோதினி.

சம்புடம் V. } 1901௵ செப்டம்பர்௴ 20௳ { புத்தகம் 2.

## AGRICULTURAL EDUCATION.

## பயிர்த்தொழிற் கல்வி.

வேளாண்மையிற் சிறந்ததோர் தொழிலில்லை யென்பது நம்மவர் யாவரும் அறிந்ததே. உழவு சிறப்புடைத்தெனக் கருதியே நமது திருவள்ளுவனாரும் தமது திருக்குறளின்கண் ஓரதிகாரத்தில் அதனைச் சிறப்பித்துக் கூறுகின்றனர். பிறரிடத்துச் சேவகஞ் செய்து வாழ்தலினும் பயிர்த்தொழில் செய்து வாழலே மேல் என நமது அவ்வையாரும் கூறியிருக்கின்றனர். "தொழுதூண் சுவையின் உழுதூணினிது", "சீரைத்தேடின் ஏரைத்தேடு", மேழிச்செல்வங் கோழைபடாது" என்று நம் சிறுபிராயத்திற் கற்றன நம்முடைய நினைவிலேயே இருக்கின்றனவன்றோ? கம்பரும் இப்பயிர்த்தொழிலைச் சிறப்பித்தே ஏரெழுபது என்னும் நூலை இயற்றினர். இவ்வாறாக இப்பொழுது நம் இந்தியாவிற் பயிர்த்தொழில் பெரிதும் பாராட்டப்படுதலின்றிச் சிறிது சிறிதாகத் தனது மகிமை குன்றிப்போவதைப்பற்றி எண்ணுந்தோறும் எம் மனம் புழுங்குகின்றது.

பயிர்த்தொழிலை நன்கு செய்வதற்கு அதனைப்பற்றிய கல்வி உணர்ச்சி மிகவும் இன்றியமையாததன்றே? நம்முடைய பயிர்த்தொழில் செய்யுங் குடியானவர்களுக்கு அப்பயிர்த்தொழிலைப் பற்றிய கல்வியைப் புகட்டுவார் யாவர்? நம்முடைய துரைத்தனத்தாரோ அன்றி மிக்க நிலமுடைய நம்முடைய பிரபுக்களோ? இக்

கல்வி விஷயமாக நாம் நம் துரைத்தனத்தார்மீது குறை கூறுவ
திற் பயனில்லை. அவர்கள் சென்னைக்கடுத்த சைதாபுரத்திற் பயிர்த்
தொழிற் கலாசாலை ஒன்று நாட்டி ஏதோ தம்மாலியன்றவளவு அக்
கல்வியை ஜனங்களுக்குப் புகட்டி வருகின்றனர். இன்னும் அக்
கல்வியில் நம்மவர்களுக்கு மிக்க ஆர்வம் பிறக்கவில்லை. ஆகை
யாற்றான் அக்கலாசாலையிற் சென்று படிப்போர்தொகை மிகக்
குறைவாயிருக்கின்றது. இக்குறைவிற்குக் காரணம் யாதென
ஆராயுமிடத்து எமக்கொன்று தோன்றுகின்றது : உழவு தொழி
லில் தலைப்பட்டு வேலை செய்யும் குடியானவர்களை அவ்வவ் வூர்க
ளில் ஒருங்குகூட்டி அவர்களுக்கு முன்னே சில சோதனைகள்
செய்துகாட்டி அவர்களை இப்பயிர்த்தொழிற் கல்வியால் மிக்க
நன்மையுண்டென்று நம்பும்படி செய்யவேண்டும். அப்படிச்
செய்கிறவரையில் நம்மவர்கள் இப்பயிர்த்தொழிற் கல்வியில் விருப்
பங்கொள்ள மாட்டார்கள். இப்பயிர்த்தொழிற் கல்வியைப் பற்றிய
பிரசங்கம் முதலியனவெல்லாம் ஆங்கில பாஷையில் இருந்தால்
அவற்றால் நம் குடிகளுக்கு யாதுபயன்? அவை யனைத்தும் நம்
உழவர்களெல்லாம் எளிதில் அறிந்துகொள்ளத் தக்கபடி நம்
முடைய தமிழ்ப்பாஷையிலிருந்தாலன்றோ மிகவும் பயனுடையன
வாகும்.

பயிர்த்தொழிலையே ஒரு கைத்தொழிலெனக்கொண்டு அதன்
கண் கைம்முதலிட்டு வேலைசெய்தாலன்றி நம் நாட்டின்கண்
பயிர்த்தொழில் மேம்படாது. பிறநாட்டில் விளையும் பொருள்க
ளெல்லாம் நம் நாட்டிற்கு வந்து மிகச் சுலபமான விலைக்கு விற்
கும்போது நம்முடைய நாட்டிலேயே விளைகின்ற பொருள்களை
நம்மவர் விரும்பிப் பெறுதலெங்கே? யாவரும் நயமான விலை
யுள்ளதை யன்றோ நாடுவார்கள்? ஆகவே நம் நாட்டு விளைபொ
ருள்கள் பிறநாட்டு விளைபொருள்களினும் விலை நயமாயிருக்க
வேண்டுமானால் பிறநாட்டில் விளைகின்ற பொருளின் அளவினும்
நம் நாட்டில் விளைகின்ற பொருளின் அளவு மிகவும் அதிகமா
யிருக்கவேண்டும். அவ்வாறு இருந்தாற்றான் பிறநாட்டுப் பொருள்
களினும் நம் நாட்டுப்பொருள்களை மிகக் குறைந்தவிலைக்கு விற்
இயலும். அவ்வாறு நயவிலைக்குப் பொருள்களை விற்க வே



மாகில் நம் நாட்டுக் குடியானவர்கள் நிலத்தின் பண்புகளையும்
மண்ணின் தன்மைகளையும் எருவின் இயல்புகளையும் பற்றித் தாம்
அறிந்துள்ள விஷயங்களோடு சிறிது அவற்றைப்பற்றிய நூல்களை
யும் உணர்ந்துகொள்ள வேண்டும்.

ஒரு காலத்தில் இங்கிலாந்திற் சுயதேச வியாபாரிகளையும்
பிறநாட்டு வணிகர்களையும் ஒப்பநோக்கிச் சட்டங்க ளேற்படுத்திய
போது, ஜெர்மனி பிரான்சு முதலிய நாட்டின் விளைபொருள்கள்
ஏராளமாய் வந்திறங்கின. அப்பொழுது இங்கிலாந்தின் பயிர்த்
தொழில் தலைதாழ்ந்து போயிற்று. இஃதுணர்ந்த ஆங்கிலேயர்
விழித்துக்கொண்டு பயிர்த்தொழிற் சங்கங்கள் ஆங்காங்கு ஏற்
படுத்தியும் அவற்றின்கண் தமக்குவேண்டிய விஷயங்களை ஆராய்ந்
தறிந்தும் தம்முடைய தேசவியாபாரிகளைக் கொண்டு அவர்கள்
சென்ற புதிய புதிய தேசங்களினின்றும் நேர்த்தியான புதிய
எருக்களைத் தருவித்துத் தம்முடைய நிலங்களிற் பெய்தும் உழுது
பயிர்செய்து ஒன்றிற் கிரண்டாகப் பொருள்களை விளைத்தும்
தலை நிமிர்ந்து நின்றனர். அதனாலன்றோ பயிர்த்தொழிலிற் சிறந்த
வராக நம் ஆங்கிலேயர் மதிக்கப்படுகின்றனர்? அவர்களுக்கு
இணையாகப் பிறநாட்டார் எவரையும் எடுத்துரைக்க முடியாது.
நம் ஆங்கிலேயர் ஆஸ்த்ரேலியாவினின்றும் பெரூக் கடற்கரை
யோரத்தில் ஆண்டீஸ் மலைச்சாரலிலும் மேலையிந்தியன் தீவுகளிலும்
பல்லாயிரக் கணக்கான கூட்டங் கூட்டங்களாகக் கடற்பறவைகள்
பலதங்குதலால் உண்டாகும் எருக்களைச் சீத்து வாரிப் பொதிக
ளாகக் கட்டிக் கப்பல் கப்பலாக ஏற்றித் தம் நாட்டிற்குக் கொணர்
ந்து நிலங்களிலிட்டு அவற்றின் விளையுந் தன்மையை நாடோறும்
உயர்த்திவருகின்றனர். இத்தன்மையான எருவிற்குக் * குவானோ
என்று ஆங்கிலபாஷையிற் பெயர். இன்னும் நம் ஆங்கிலேயர்
இன்ன நிலத்தில் இன்னபொருள் தான் விளையுமென்றும் இன்ன
பொருளுக்கு இன்னநிலந்தான் தக்கதென்றும் நேரே பரீக்ஷித்
தறிந்துகொண்டும் இன்னபொருள் விளைவதற்கு இன்ன எரு இட
வேண்டு மென்றும் இன்ன எரு இட்டால்தான் இன்னபொருள்
விளையுமென்றும் எருக்களைச்செய்யும்விதம் இன்னின்னவென்றும்
நூல்களிற் படித்தும் பயிர்த்தொழிற் கல்விக்கென்று ஏற்பட்டுள்ள

* Guano.

சங்கங்களிற் சென்று அவற்றின் அவயவிகளோடு உசாவித் தடை
விடைகளால் உண்மைகளைத் தெளிந்தும் தம்போலும் பிறர்க்கு
அவ்வாறு தெளிந்த விஷயங்களை அறிவுறுத்தியும் வருதலா
லன்றோ அவர்கள் இத்தொழிலின்கண் மேம்பாடெய்தினர்? இம்
மேம்பாட்டிற் கெல்லாம் காரணமாயும் பேருதவியாயும் இருந்தவர்
அந்நாட்டுத் துரைத்தனத்தார்களோ? அல்லர் அல்லர். மற்று
அந்நாட்டின்கணுள்ள பிரபுக்களும் தனவான்களுமே முன்னுக்கு
வந்து பொருட் செலவு செய்து தங்கீழுள்ள குடியானவர்களுக்
குப் பயிர்த்தொழிற் கல்வி யுணர்ச்சி யெழுப்பி அவர்களைப் புது
மைவழியி லுழைக்கும்படி செய்து கைதூக்கிவிட்டனர். அவ்
வாறே நம் இந்தியாவிலும் நிலவுரிமையுடைய ரெனப்படுந்துரைத்
தனத்தார் செய்யவேண்டியன ஒருபுறமிருப்ப, பிரபுக்களுந் தன
வான்களுமாகிய சிற்றரசர்களும் குறுநிலமன்னர்களும் ஜமீந்தா
ரர்களும் மிட்டாதாரர்களும் மிராசுதாரர்களும் முன்னுக்கு வந்து
முதல் சேர்த்துப் பயிர்த்தொழிற் கல்வியைத்தக்க ஆசிரியர்களைக்
கொண்டு நம்முடைய சுயபாஷையில் நம் குடியானவர்களுக்குக்
கற்பித்தாலன்றி நம் நாடு பயிர்த்தொழில் விஷயமாக முன்னுக்கு
வருதல் அரிதென்பது நிச்சயம். இது விஷயமாக நாம் நம் துரைத்
தனத்தாரிடத்தில் எல்லாவித உதவியையும் எதிர் பார்த்தல் நேரி
தன்று. அவ்வாறு எதிர் பார்க்கினும் அவர்கள் நமக்கு அதிக
மாக உதவியிடுவார்கள் என்று நம்பவேண்டாம். அவர்களெவ்வளவு
மட்டில்தாம் உதவிசெய்வார்கள்? ஆகவே நம் நாட்டிற் பயிர்த்
தொழிற் கல்வியை விருத்தி செய்யவேண்டியவர்கள் நம்மவர்களே
யன்றித் துரைத்தனத்தாரல்லர். ஆதலின், இந்தியர்காள்! சுதே
சாபிமானிகாள்! சுதேசக் கைத்தொழி லபிவிருத்தியை விரும்பு
வீர்காள்! இனியேனுங் கால தாமதஞ் செய்தலின்றி விழித்துக்
கொண்டு நம் நாட்டிற்குத் தக்க விதமாகப் பயிர்த்தொழிற் கல்வி
யை நம் நாட்டுக்குடியானவர்களுக்கு நன்றாகப்பயிற்றுவீராக. இத
னைச் செய்தல் நமது கடமைகளுள் மிகச் சிறந்ததென நாம் யாவ
ரும் அறிந்து அதற்குத்தக நடப்போமாக.

[ஈண்டு எழுதிய விஷயங்களுட் பெரும்பாலன நம் நண்ப
ருள் ஒருவரும் ஆங்கில நாடு சென்று பயிர்த்தொழிற் கல்வியிற்



பட்டம் பெற்றுப் போந்தவருமாகிய ம-ா-ா-ஸ்ரீ ஆர். சுவாமிநாத
ஐயரவர்களோடு செய்த சம்பாஷணையின் மூலமாக அறிந்து
கொண்டனவாம். அவற்றை நம்பத்திரிக்கை படிப்போர் யாவரும்
அறிந்து கொள்ளும்படி இங்கே வரைந்தனம்.]

பத்திராதிபர்.

---

## RAMAYANAM.

## இராமாயணம்.

இராமாயணம் என்னும் இவ்விதிகாசம் வான்மீகியாரால் இய
ற்றப்பட்டது. இதன் உத்தரகாண்டத்தில் ஐம்பத்தேழாவது சரு
க்கத்திற் கூறியபடி வான்மீகியாருடைய ஆச்சிரமம் கங்கையின்
தென் கரைக்கண்ண தாகலானும், முதற்காண்டமாகிய பால காண்
டத்து ஐந்தாஞ் சருக்கத்திற் கூறியபடி இது கோசல நாட்டை
அரசு செய்த இக்ஷ்வாகு குலத்தார் சரித்திரமாகலானும் இது
பிறந்த இடம் கோசலநாடென்பது பெறப்படும். கோசல நாட்
டில் வாழ்ந்த சூதர்களிடத்தில் இக்ஷ்வாகு குலத்தரசருட்சிறந்த
இராமனுடைய வலியையும் கொற்றத்தையுங்கூறுஞ் சிற்றிதிகாசங்
கள் பல எழுதாக்கேள்வியாய் வழங்கி வந்தனவாக, அவைகளை
ஆதாரமாகக்கொண்டே வான்மீகியார் இதனைச் செய்தார் என்று
கொள்ளப்படுகின்றது. கிருஷ்ண துவைபாயனர் மகாபாரதம் செ
ய்ததுபோலச் சிற்றிதிகாசங்கள் பலவற்றை ஒன்று சேர்த்து ஒரு
பெரு நூலாக யாக்காது வான்மீகியார் அக்காலத்து வழங்கிவந்த
சில சிற்றிதிகாசங்களிலுள்ள கதையை மாத்திர மெடுத்துக்கொ
ண்டு அதை யமைத்துத் தாமொரு நூலியற்றினரென்க. மகாபாரத
த்தைப் போலவே இராமாயணமும் முதலில் எழுதாக்கேள்வி
யாய்ப் பயின்று வந்தது. நூல்களை நெட்டுருப்பண்ணி அவைக்
களங்களிற் பாடுவதே தந்தொழிலாகவுடைய குசீலவர்கள் அத
னைக் கற்றுக்கொண்டு தாஞ்செல்லுந் தேசங்கடோறுமுள்ள ராஜ
சபைகளிலும் மற்று மிடங்களிலும் எடுத்தோதி வந்தார்கள்.
இந்தக் குசீலவர்களையே பிற்காலத்தார் இராமன் புத்திரர்களாகிய
குசலவர்களாக்கிவிட்டார்கள். காவிய இலக்கணங்களுக்கியைய

முதன் முதற் செய்யப்பட்டமையின் இராமாயணம் ஆதிகாவியமெனப்பெயர் பெறும்.

இது வான்மீகனாற் செய்யப்பட்டபோது ஐந்து காண்டங்களையே உடைத்தாயிருந்தது. ஏழாவதாகிய உத்தரகாண்டம் வெகு காலத்திற்குப்பின் இயற்றிச் சேர்க்கப்பட்டதென்பதற்குச் சிறிதும் சந்தேகமில்லை. ஆறுங்காண்டத்தின் முடிவே முன்னர்க் காலத்தில் நூல் முழுமைக்கும் முடிவாயிருந்ததென்பது மிகத் தெளிவாய்த் தெரிகின்றது. முதலாவதாகிய பாலகாண்டத்துள்ள பல பாகங்கள் பின்வருங் காண்டங்களிலுள்ளவைகளோடு முரணுகின்றன. அதுவுமன்றி அதனிடத்து இரண்டு அநுக்கிரமணிகைகள் காணப்படுகின்றன. அவை முதற்சருக்கமும் மூன்றும் சருக்கமும். இவைகளிரண்டும் ஒரே காலத்திற் செய்யப்பட்டனவல்ல. முதற்சருக்கம் பால காண்டக்கதையையும் உத்தர காண்டக்கதையையும் சங்கிரகித்துக்கூறுமையின், அஃது அவ்விரண்டு காண்டமும் வான்மீகர் இயற்றிய நூலோடு சேர்க்கப்படு முன்னர்ச் செய்யப்பட்டதென்பது தேற்றம். அயோத்தியா காண்டத்தில் முதலில் நூலிற்குத் தொடக்கமா யிருந்த பாகம் அதனினின்றும் பிரிக்கப்பட்டு இப்போது பாலகாண்டத்தில் ஐந்தாஞ் சருக்கத்திற்குத் தொடக்கமா யிருக்கின்றது. இவைகளே அன்றி, வான்மீகனாற் செய்யப்பட்ட நடுவணைந்து காண்டங்களிலும் சில சருக்கங்களும் சுலோகங்களும் புதிதாகச் செய்து சேர்க்கப்பட்டுள்ளன. இவைகள் முன்னும் பின்னுமுள்ள சருக்கங்களோடும் சுலோகங்களோடும் ஒட்டப்பொருந்தாமையின் யாவரும் கண்டுணாற்கெளியவைகளா யிருக்கின்றன. இவைகளையெல்லாம் மேலைத்தேசத்துப் புலவராகிய * ஆசிரியர் ஜாக்கோபியார் மிக நுண்ணிதாக வாராய்ந்து நிரூபித்துள்ளார்.

இராமாயணத்தில் இப்போதுள்ள சுலோகத்தொகை இருபத்து நாலாயிரம். உத்தரகாண்டத்தில் நூலினளவு கூறுமிடத்து இராமாயணம் ஆறு காண்டத்தோடு ஒருத்தர காண்டமுமுடைத்தென்பதும் ஐஞ்ஞூறு சருக்கமும் இருபத்து நாலாயிரஞ் சுலோகமுங் கொண்டதென்பதும் சொல்லப்பட்டுள. இதனால் உத்தர

* Prof. Jacobi.



காண்டம் சேர்க்கப்பட்டது இராமாயணம் பலவாறு வளர்ந்து இப்போதுள்ள அளவினதாயபோதென்பது செவ்வனே புலப்படும். மகா பாரதத்திற்குரைத்தது போல் இராமாயணம் ஆதியில் இத்தனை சுலோகங்கள் கொண்டதா யிருந்ததென்று கூறமுடியாது. அக்கணக்கு நூலின் எவ்விடத்தும் சொல்லி இல்லை. மகா பாரதத்தைப் போலவே இராமாயணமும் காலஞ் செல்லச் செல்ல வளர்ந்து கொண்டு வந்தது. புதிய உபாக்கியானங்களும் கதைகளும் வேண்டிய வேண்டியாங்குச் சேர்க்கப்பட்டு மகாபாரதம் வளர்ந்தது; இராமாயணம் அங்ஙனமன்றி ஓரிடத்திற் கூறிய கதைகளையும் காட்சிகளையுமே பெயர்த்தும் பெயர்த்தும் இரண்டு மூன்றிடத்திற் கூறுவதனாலும் வருணிப்பதனாலும் வளர்ச்சி அடைந்தது. இராமனுடைய குணங்களின் மேன்மையையும் சீதையினுடைய கற்பின் மிகுதியையும் மீட்டும் மீட்டும் புகழ்வதற்காகப் பல சுலோகங்களும் சருக்கங்களும் புதிதாய்ச் சேர்க்கப்பட்டுள்ளன. இராமனைக் காட்டிற் கனுப்பிவிட்டுத் தசரதனடைந்த துன்பமும், அவனைப்பிரிந்து தாயாகிய கோசலை பட்ட வருத்தமும் பிற்காலத்தில் தோன்றிய புலவர்களால் அநேக புதுச்சுலோகங்களில் வருணிக்கப் பட்டுள்ளன. அவ்வாறே இராமனுடைய தம்பிமார்களது அன்பும் ஆண்மையும், முனிவர்களது தவத்தின் பெருமையும், அவர்கள் வாசஞ் செய்த இடத்தின் சிறப்பும் எத்தனையோ முறை எடுத்துரைக்கப்பட்டுள்ளன. சீதையை யிழந்ததனால் இராமனடைந்த பெருந்துக்கமும் அவளை மீட்பதற்காக அவன் செய்த முயற்சிகளும், புரிந்த யுத்தங்களும் இராமாயணத்தில் எண்ணிறந்த புலவர்களால் விரித்து விரித்துச் சொல்லப் பட்டுள்ளன.

இராமாயணஞ் செய்துள்ளது சுலோகத்தால். அதுவே சம்ஸ்கிருதப்பாக்களுளெல்லாம் செய்ய எளிதானது. அதனால் அது புலவர்களுக்கு வேண்டியபடி புதுச்சுலோகங்களையுஞ் சருக்கங்களையும் செய்து சேர்க்க இடங்கொடுத்தது. அதனாலேயே ஒரு சருக்கத்தில் நன்றாக விரித்துரைத்துள்ள சம்பவங்கள் அதனையடுத்து [illegible] தொடர்ந்து வரும் இரண்டு மூன்று சருக்கங்களில் மீட்டும் மீட்டுங் கூறப்பட்டுள்ளன. இச்சொருகுகவிகளால் நூல் அழகு

கெட்டதொன்றன்றி ஒருமுறை கூறியதனையே மறித்தும் மறித்தும் கூறுவதனாற் கதை யினிமையும் பாழ்பட்டுக்கிடக்கின்றது.

இனி இராமாயணம் தோன்றிய காலத்தைப்பற்றிச் சிறிது ஆராய்வாம். மகா பாரதத்தின்கணுள்ள உண்மையான இதிகாசப் பாகங்கள் ஒன்று சேர்த்து ஒரு வழிப்படுத்தப் படுமுன்னம் இராமாயணத்தில் வான்மீகனாரால் இயற்றப்பட்ட பாகங்கள் தோன்றியிருக்க வேண்டுமென்பது புலப்படுகின்றது. இராமாயணத்திற் பாரத வீரர்களின் கதைகள் சொல்லப்படாதிருக்க, மகா பாரதத்திற் பல விடங்களில் இராமனுடைய சரித்திரம் குறிக்கப்பட்டுளது. அன்றியும் மகா பாரதத்திற் கர்ண பருவத்தில் இராமாயணத்து யுத்தகாண்டத்திலிருந்து ஒரு சுலோகம் எடுத்தாளப்பட்டுளது. இவைகளினால் வான்மீகியாரியற்றிய ஆதி காவியம் மகா பாரதம் யாக்கப்படுகின்ற காலத்தில் ஒரு பழநூலாக வழங்கிவந்திருக்கவேண்டுமென்பது தேற்றம். மகா பாரதத்தில் வனபருவத்திற் கூறப்பட்டுள்ள ராமோபாக்கியானத்திற்கு முதனூல் வான்மீகி ராமாயணமே போலும். அதன் சுலோகங்கள் சில வான்மீகியின் சுலோகங்களோ டொத்திருக்கின்றன. அதனை இயற்றினவரும் அதனைக் கேட்பவர்கள் இராமாயண மறிந்தவர்களாயிருப்பார்கள் என்ற எண்ணத்தோடேயே இயற்றினவராய்த் தோன்றுகின்றனர்.

புத்த சமய நூல்களுள் ஒன்றாகிய புத்த ஜாதகக்கதையில் தசரத ஜாதகத்தில் இராமனுடைய கதை கூறப்பட்டுளது. இதிற் கூறப்பட்டகதை இராமனுடைய வனவாசத்தோடு முடிகின்றமையின் தசரத ஜாதகம் இராமாயணத்திற்கு முற்பட்டதென்பது தோன்றும். ஆயினும் தசரத ஜாதகத்தில் அதையியற்றினவருக்கு இராமன் இலங்கைக்குச் சென்றதும் தெரிந்திருக்க வேண்டுமென்பதற்குச் சில குறிகள் காணப்படுகின்றமையானும் இராமாயணத்து யுத்த காண்டத்தில் உள்ள சுலோகம் ஒன்று அதில் உரை நடையிற் சேர்த்து எழுதப்பட்டுண்மையானும் இராமாயணம் தசரத ஜாதகத்திற்கு முற்பட்டதென்று இப்போது கொள்ளப்படுகின்றது. புத்தனைப்பற்றி இராமாயணத்தில் ஓரிடத்திலேயே குறிக்கப்பட்டுளது. அது பிற்காலத்திற் புதிதாய் இயற்றிச் சேர்க்கப்பட்ட பாகத்திலாதலின் மேற்கூறிய கொள்கைக்குச் சிறிதும் முரணாகாது.



இராமாயண நூலுடையார்க்குக் கிறிஸ்துபிறக்க முந்நூறு வருஷங்களுக்குமுன் இந்தியாவிற்கு வந்த கிரேக்கர்களைத் தெரியுமோ வென்பதும் இராமாயணத்தின் கால நிர்ணயத்திற்கு ஒருதவியாகும். கிரேக்கர்களாகிய யவனர்களைப்பற்றி இராமாயணத்தில் இரண்டிடத்திலேயே கூறப்பட்டிருக்கின்றது. அது பால காண்டத்திலும் கிஷ்கிந்தா காண்டத்திலுமாம். இவையிரண்டும் பிற்காலத்திற் புதிதாய் இயற்றிச் சேர்க்கப்பட்ட பாகங்கள் என்று மேற்கூறிய ஆசிரியர் ஜாக்கோபியார் காட்டியிருக்கின்றனர். ஆகவே இது வான்மீகியார் இயற்றிய இராமாயணத்தில் இப்பாகங்கள் சேர்க்கப்பட்டது இந்தியாவிற்குக் கிரேக்கர்கள்வந்ததன் பின் என்பதையே காட்டும்.

இராமாயணத்தில் இந்தியாவின் கீழ்பாகத்தில் இருந்தனவாகக் கூறப்படும் இராச்சியங்களும் அதன் கால நிர்ணயத்திற்கோராதாரமாகும். இராமாயணத்திற் பாடலிபுத்திர நகரத்தைப்பற்றிச் சொல்லப்படவே இல்லை. அது கிறிஸ்துபிறக்க முந்நூற்றெண்பது வருஷங்களுக்குமுன் வைசாலி நகரத்தில் இரண்டாம் புத்த சங்கம் இரீஇய காலாசோக அரசனால் உண்டாக்கப்பட்டது. கிரேக்கர்கள் இந்தியாவிற்கு வந்தபோது அஃது இந்தியாவிற்குத் தலைநகரமாயிருந்தது. பாலகாண்டத்தில் முப்பத்தைந்தாஞ் சருக்கத்திற் பாடலி புத்திர நகரம் இருந்த இடத்தின் வழியாக இராமர் போனதாகக் கூறப்பட்டுளது. முப்பத்திரண்டாம் முப்பத்து மூன்றும் சருக்கங்களிற் பாலகாண்டத்தை இயற்றினவர் இராமாயணத்தின் பெயர் எவ்வளவுதூரம் பரவியிருந்ததென்பதைக் காட்டுதற்குப்போலும், இந்தியாவின் கீழ்பாகத்திருந்த கௌசாம்பி, கான்யகுப்ஜம், காம்பிலி ஆதியாம் பலநகரங்களின் தோற்ற வரலாறுகளை எடுத்துக் கூறியிருக்கின்றனர். அந்தக் காலத்திற் பாடலிபுத்திரம் இருந்திருக்குமாயின் அது தோன்றிய வரலாற்றையும் அவர் கூறாதுவிடார்.

இராமாயணத்தில் வான்மீகியார் இயற்றிய பாகத்தில் வரும் [illegible] கோசல நாட்டிற்குத் தலைநகரம் 'அயோத்தியா'

வென்றே கூறப்பட்டுளது. அதனைப் பௌத்தர்களும், சமணர்களும், கிரேக்கர்களும் பதஞ்சலியாரும் எவ்விடத்தும் சாகேதமென்றே கூறுகின்றனர். உத்தரகாண்டத்தில் இராமன் குமாரனாகிய லவன் **சிராவஸ்தி** என்னும் நகரத்தைத் தனக்கு ராஜதானியாக்கிக் கொண்டான் என்று சொல்லப்பட்டுளது. புத்தனுடைய காலத்திற் கோசல நாட்டை அரசாண்ட பிரசேனஜித்து என்னும் அரசனும் **சிராவஸ்தி**யிலிருந் தரசாண்டதாகவே தெரிகின்றது. இவைகளெல்லாம் பழைய அயோத்திநகரம் குடி எழும்பாத முன்னும், அதுவே கோசல நாட்டிற்குத் தலைநகரமாய் இருந்தபோதும், அதற்குப் புதிதாய்வந்த **சாகேதம்** என்னும் பெயர் வழங்காததற்கு முன்னும், **சிராவஸ்தி** என்னும் நகரம் ராஜதானி ஆக்கப்படாததற்கு முன்னும் இராமாயணத்தின் பழம்பாகம் இயற்றப்பட்டதென்பதை நன்கு புலப்படுத்துகின்றன. அன்றியும் பாலகாண்டத்தில் **மிதிலை**யும் **விசாலை**யும் இரண்டு நகரங்களாகவும் வெவ்வேறரசர்களால் ஆளப்பட்டன வாகவும் கூறப்பட்டிருக்கின்றன. இவைகளிரண்டும் புத்தர் காலத்தில் **வைசாலி** என்று பேர்பெற்ற ஒரு நகரமாகி ஓரரசின் கீழாகி விட்டது.

இதுகாறும் கூறியவாற்றால் இந்தியாவிற் புத்த சமயம் தோன்றுவதற்கு முன்னரேயே வான்மீகியாரால் இராமாயணம் இயற்றப்பட்ட தென்பதும் புதிதாய்ச் செய்து சேர்க்கப்பட்டனவாகிய பாலகாண்டம் முதலிய சில பாகங்களும் அக்காலத்திலேயே சேர்க்கப்பட்டு விட்டன வென்பதும் தெரிய வருகின்றன. இதனினும் வரையறவாக இதைப்பற்றிச் சொல்லுதல் கூடாது.

சில மாசங்களுக்குமுன் வான்மீக ராமாயணத்தைத் தமிழ் வசனநடையில் மொழிபெயர்த்து வெளியிட்ட பண்டிதர் நடேச சாஸ்திரியார் தமது முகவுரையில் "மகாபாரதம் உண்டாவதற்கு வெகு காலங்களுக்கு முன் இராமாயணம் தோன்றி எழுத்தில் ஏற்படுத்தப்படாமல் வேதம் போல் ஜனங்களுக்குள் அத்தியயன ரூபமாய் விளங்கிவந்ததென்றும், இராமாயணத்திற் கூறப்பட்டிருக்கும் விஷயங்கள் மகாபாரதத்திலிருக்கும் விஷயங்களைக் காட்டிலும் பழமையான விஷயங்கள் என்றும் தெரிகிறது" என்று கூறித் தமது கொள்கைக்கு ஏழு காரணங்களும் எடுத்துக் காட்டியிருக்



கிறார். இங்ஙனம் பண்டிதர் கொண்ட கொள்கை நாம் மகாபாரத ராமாயணங்களைப் பற்றி எழுதியவற்றில் எடுத்துக்கூறிய கொள்கையோடு ஒற்றுமை யுடைத்துப்போற்றோன்றினும் அஃது உண்மையில் அங்ஙன மன்றென்பதை இங்குச் சிறிதெடுத்துக் கூறுவாம்.

பண்டிதர் மகாபாரதத்திற்கு இராமாயணம் முந்தியதென்றும் முன்னையதிற் கூறும் விஷயங்களினும் பின்னதிற் கூறும் விஷயங்கள் பழமையானவை யென்றும் கொண்டிருக்கிறார். பாண்டவர்களுடைய காலம் இராமனுடைய காலத்திற்குப் பிந்தியதென்பது அவர் கொள்கைபோலும். எமது கொள்கை அதுவன்று; பாண்டவர்களுடைய காலம் முன் என்றும் இராமனுடைய காலம் பின் என்றும் நாம் கொள்கின்றோம். இந்தியாவிலுள்ள ஆரியர்கள் இமயமலைக்கு அப்புறத்திலிருந்து வெகு காலத்திற்கு முன் இங்கே வந்து முதலிற் பஞ்சநதி தீரங்களிற் குடியேறிப் பின்னர்க் கிழக்கிலும் தெற்கிலும் மற்றை யிடங்களிலும் பரவினார்கள் என்பது இப்போது வழக்காற்றிலுள்ள கொள்கை. இஃதுண்மையாயின் உத்தரத்திலுள்ள அஸ்தினாபுரத்தில் வாழ்ந்த பழைய அரசர்களின் காலம் அந்நகரத்திற்குத் தென்கிழக்கிலிருந்த அயோத்தியில் வாழ்ந்த பழைய அரசர்களின் காலத்திற்கு முற்பட்டதென்பது பெறப்படும். பாரத யுத்தம் நடந்த காலத்தில் ஆரியர்கள் பஞ்ச நதிதீரங்களைக் கடந்து கிழக்கிலும் தெற்கிலும் பரவி இராச்சியங்கள் ஏற்படுத்தினதாகக் காணப்பட வில்லை. ஒரு பெண் நாயகர்கள் பலரை மணத்தலாகிய அநேகபதி விவாகம் முதலிய மிகப்பழைய வழக்காறுகள் பாண்டவர் காலத்திருந்தமையின் பாரத யுத்தம் நடந்த காலம் மிகவும் முற்பட்டதென்பது தேற்றம். இராமனுடைய காலத்தில் இவ்வகை வழக்காறுகள் இருந்தனவாகத் தெரியவில்லை. மகாபாரதத்தில் அநேக ராச்சியங்கள் தக்ஷிணத்தில் இருந்தனவென்றும் யவனர் முதலிய ஜாதியார் அநேகர் இருந்தார்கள் என்றும் கூறப்பட்டுளதே என்னின், இவைகளெல்லாம் பிற்காலத்திற் புதிதாய்ச் சேர்க்கப்பட்ட பாகங்களிற் காணப்படுகின்றனவே அன்றி ஆதியில் தோன்றிய பாகங்களில் அல்ல என்பது. மகாபாரதம் முதலில் எழுதாக்கேள்வியாயே பயின்று வந்த

தென்றும் அதில் விநாயகர் அதனைக் கொம்பினால் மேருமலையில் எழுதினார் என்று கூறும் பாகம் பிற்காலத்துச்செய்து சேர்க்கப் பட்டதென்றும் அஃது எல்லாப் பிரதிகளிலும் காணப்படவில்லை யென்றும் முன்னரே கூறியுள்ளோம். இவைகளினாற் பண்டிதர் தமது கொள்கைக் காதாரங்களாகக் காட்டும் காரணங்கள் ஏழும் அவர் கொள்கையை வலியுறுத்தாமை கண்டு கொள்க.

தி. த. கனகசுந்தரம் பிள்ளை.

---

# THE CULTURE OF THE INTELLECT.

## உள்ளப் பயிற்சி.

### VI. மனோதர்மம் அல்லது கருத்துணர்வு. (Imagination.)

இனி இதை யடுத்துச் சிறப்பாகப்பயிற்சியடையவேண்டியதோ ராற்றலுளது. அது மனோதர்மமாகும். ஆசிரியராதல், மாணாக்கராதல், இவ்வாற்றலுக்குரிய நேரிய பயிற்சியினது இன்றியமையாமையைப்பற்றிப் போதுமானவளவு வலியுறுத்தப் பட்டிலரோ வென்று அஞ்சுகின்றேம். இது, "கட்டுக்கதையைச் சார்ந்ததே யன்றி மெய்ப்பொருளைப் பற்றியதன்று" என்றும், "தக்க திருத்தப்பாடுடைய அறிவைக் கைக்கொள்ள விரும்பும் கோடாத நெறியுடைய மாணாக்கனுக்கு யாதும் பயன்படற் பாலதன்று" என்றும், மனோபாவத்தை எள்ளுவாரும் சிலர் உளர். இஃதுண்மையன்று. புதிது புதிதாகத் தோற்றுவிக்கும் மனோபாவத்தின் மேன்மேலு மோங்குறூஉம் வன்மை காரணமாகவே, சீரிய நூற்றுணிவுள்ள மக்களினுயர்ந்தோர் மிகச் சிறந்த தங்கள் காட்சிப் பொருள்களை ஆராயத்துணிந்தன ரென்பது யாவரும் நன்குணர்ந்த விஷயமே. பௌமிய நூலிலும், என்பியல் நூலிலும், கீதை என்னும் பாவலர் கண்டருளிய புதுமையான கருத்துக்கள் இதற்குத் தக்க சான்று பகரும். அற்றேல் நியாயமின்றித் தன்னிச்சையாய், நிலையற்று மனம் போனபடி யெல்லாம் சென்றுழியே மனோபாவம் நூலறிவினுக்குத் தீரா விரோதியாம். நியாய வொழுங்கிருப்பின், அதுபலவாற்றானும் துணைக் கருவிகளுள் மிகச்சிறந்ததும் இன்றியமையாததுமாகும். அதான்றியும், சரித்திரத்திலும் பொருளியல் உணர்ச்சியிலும், செய்யுளியலிற்போன்று மனோபாவம் மிக்க வின்றியமையாததாகின்றது. மெய்யாகவே, சரித்திரக்காரன் தனக்குவேண்டிய விஷயங்களைப் புதுவதாய்ப் படைத்துக்காட்டலியலாது. ஆயினும் தன் விஷயங்களை அவன் அழகுற இயைத்து, நல்லுருவோடு வகுத்து ஒழுங்குபடுத்தல் வேண்டும். இவ்வாறியைப்பது மனோபாவத்



தின் தொழிலேயாம். எவ்விதமான அரம்பைமகளிர் கதைகளும், விசித்திரக் கட்டுக் கதைகளும், உறுதியாகவே பயன்படத்தக்கன. இவையிற்றை மனோதர்மப்பயிற்சியினுக்குக் கவலையாய் உபயோகப்படுத்தினும் இழுக்கில்லை. ஆயினும், இம்மனவலியின் மிக்க பயன்படத்தக்க பயிற்சி இது மெய்ப்பொருளோடு இயையும்போதேயாம். ஆகையின் மாணாக்கன் இன்னணம் பயில வேண்டும் என்று யாம் வற்புறுத்துகின்றோம். மனத்தைக்களிப்பித்து மனோபாவத்தை ஓங்கச்செய்யும், மக்கட்பண்பு, சிறப்பு, ஆகிய இவையிற்றின் காட்சிகளின் பொருட்டுக் கட்டுக்கதைகளைப் படித்தல் அவசியமன்று. தாமே படைக்கும் காலச்சரித்திரத்தைச் சுருக்கிக்கூறும் இவ்வுலகெனும் போராடரங்கிற்போதரும், கரிகாற்சோழன், உக்கிரகுமார பாண்டியன், சிவஞானசுவாமிகள் என்றின்னோரன்ன பெயர் பெற்ற மக்களின் வாழ்க்கை; மேற்சாற்றிய பயனின் பொருட்டே இது காறும் வரையப்பட்டுள மிகச்சிறந்த விநோத நூலினும் மிக்க கல்விப்பயன் பெற்றுளது; சாலவுஞ் சிறந்த செய்யுளினும் மிக்க மதிப்புவாய்ந்துளது. எல்லா மனமுமே செய்யுணடையிற் களிப்படைவனவல்ல. ஆனால், மனத்தைக் கவரத்தக்கதும், முதலடியிலேயே நன்கு புலப்படத்தக்கதுமான விஷயத்தினால் எல்லா மனமும் அரும்பி உயர்ந்தோங்கும். சிறந்த நன்னெறி பற்றி ஒழுகும் மக்களின் வாழ்க்கைகளில் மனத்திற் பன்முறையும் கருதிப்பயில்வது ஒன்றிரண்டாம் வாணிகமாம், ஒரேயடியில் முன்னர்ச் செய்யப்பட்டனவும் இனிச்செய்ய வேண்டுவனவும் ஆகிய இவ்விரண்டையும் மிகப்பயன்படத் தக்கவாறு நாம் அறிகின்றோமாகலின். ஆனால் மனோபாவத்தைப் போதியவளவுபயிற்றுதற்கு, மனக்கண்ணின்முன் ஊக்கமெழுப்பும் தோற்றங்களை இனிமையாய்த் தோன்றும்படி செய்வது மட்டும் போதாது. இத்தகைய மனத்தின் கேவலம் செயப்பாட்டு நிலைமையினின்றும் ஒருவித ஆற்றலும் வளராது. தொன்னூல்களை முடித்துக் கண்களை மூடிய வளவில் தனது மனத்தின் கண்ணே கதைப்போக்குக்களை எல்லாம் ஒழுங்காய்ப் பொருத்தமான குறிகளோடும் நிலைமையோடும், தோற்றத்தோடும், தனித்தனி மனக்கண்ணின் முன்னர்க் கொண்டுவரும் வன்மை பெறும் வரையில், மாணாக்கன் திருப்தி யடைதலின்றி அவற்றின் அழகிய சாயல்கள் செல்வுழி அவைகளை உறுதியாகப் பற்றிக்கொள்ளும்படி தனது மனோபாவத்தைத் தூண்டவேண்டும். வாழ்க்கையில் நன்றாகக் கண்களைத் திறந்துகொண்டு நடந்து செல்வதாகத் தோன்றினும் ஒன்றையுங் கவனித்துக் காணாத மாக்கள் இருப்பது போன்றே இடையிடைக் கிடைக்குமவகாசத்தில் மனோபாவத்தை எழுப்பும், அல்லது, இடுக்கண் வந்துற்றகாலை மக்களுக்குப் பொறுமை யூட்டிப் புறங்காக்கும், மிக்க பயனுள்ள கதையிற்பட்ட மெய்க்கற்பனைகளுள் எதாயினு மொன்றைப்பற்றிக் கொள்ளாமல் நூல்கள் முழுமையும் படிக்கும், அன்றி, விஷயங்களைப் பொருள் நோக்காது இனிக்கும் வேறு சிலருமுளர். ஆதலான்

எப்போதும், சிறந்த நூலின் பகுதி யொன்றை நீவிர் கற்ற பிறகு அப்பக்கங்களில் யாது பதிப்பித்திருக்கிறது என்பதல்லாது, நுமது மனச்சித்திரக்கூடத்தில் ஒளிரு மோவியம் யாதென நும்மையே வினவிக்கொண்மின். நுமது மனோபாவம், ஒளியுடைத்தாகவும், விசித்திரமாகவும், மெய்ப்பொருளுடைத்தாகவும், வைத்துக்கொண்மின். ஒரு விஷயம் நிகழ்ந்ததென்று மட்டும் நுமக்கு உணர்ச்சியிருந்தால், அதனை நீவிர் உணராததாகவே கருதுமின். அது நிகழ்ந்தவாறே இப்போது நுமது மனத்தின் கண்ணும் தோன்றுமாயின், அவ்விஷயம் நுமக்குத் தெரிந்ததாகக் கருதலாம்.

VII. மனோபாவம் மக்களுள் ஒவ்வொருவரிடத்திலும் இருப்பதாக ஒருவாறு கருதக்கூடியதோ ராற்றலாயிருப்பினும், நாம் இயற்கை வனப்பு நூலெனக்கூறும், அறிவிற்குரிய வுணர்ச்சி, மனோவிகாரங்கள், ஆகிய இவையிற்றின் வகுப்பொன்றில் மிக்க இயைபுடைத்தென்பது தெரிகின்றது. மனிதன் மிக்க மனோபாவமின்றி இப்புவியினில் வாழலாம், அதான்றியும், ஆண்மையோடும் வாழலாமென்ப. வீடொன்று காற்று மழைகளை உட்செல்லவொட்டாமல் ஒளிமட்டில் உட்செல்லத்தக்கதாய் நன்றாக அமைக்கப்பட்டிருந்தும் அருவருக்கத் தக்கதாயிருத்தலுங் கூடுமாகலின், அழகிய வீடொன்று கிடைத்தலியலும் போது ஒருவரும் இலக்கணக்குறைவுற்ற வீட்டிலிருக்கத் தாமே ஆவல் கொள்ளார். ஆகலின் இவ்வாழ்க்கைப் பயனைப்பெற விரும்பும் ஒவ்வொருவரும், பயிற்சியடைந்த மனோபாவத்திற்குற்ற வுணவாகிய அழகு என்பதனை நாடவேண்டும். தம்மாலியன்றதெல்லாம் செய்வதே அவ்வாழ்க்கைப் பெரும்பயனும். முன்னர்க் குறித்தாங்கு, ஒரு மனிதன் நூல்களான் மட்டுமே உயிர்த்திருத்தலில்லை எனுங்கூற்று உண்மையாயிருப்பின், அறிவினன் மட்டும் பிழைத்திருத்தலியலாது என்பதும் மெய்யே. "எப்போதும் சிறிதளவேனும் தேர்தல் செந்நலம் பயக்கும்" என்பது தற்கால மூதறிவுடையாரொருவர் கூற்று. அற்றேல், இக்கூற்றினுற் கேவலம் முறைப்பாடில்லாத உணர்ச்சி என்றும் நன்மை பயப்பதாம் என்று அவர் கூறக்கருதினாரல்லர். மற்று, "மிகச் சிறந்ததன்றேனும், தம் கண்ணிற்படும் யாவற்றையும், பின் நேரக்கூடிய பயன் கருதி ஒவ்வொருவரும் ஆராய்ந்து மேற்கோடல் அறிவுடைமையின் பாற்படும்" என்று கருதினர் போலும். மிகச்சிறந்த பொருள்கள் வேண்டிய போதெல்லாம் அகப்படா. நமக்கு அடிக்கடி புலப்படும் தீங்குகளனைத்தும், தத்தமது நல்லியல்பில்லாமலிருக்க வில்லை. ஆதலின், அவற்றைச் செல்லும்போதே கைப்பற்றாது இகழ்வது ஏற்புடைத்தன்று. தன் ஒழுங்குடை நாட்டத்திற்கு உற்ற நல்லிலக்காக ஒவ்வோரிளைஞனும் குறியாய் வைத்துக்கொள்ள வேண்டியது, பொதுப்பட்ட அறிவன்று; மற்று, சிறந்ததும், அழகிதும், நல்லதுமான பொருள்களினுணர்ச்சியேயாம். மனோபாவத்தைப் பற்றிய மட்டில் இத்துணை யறிவு இயற்கைவனப்புநூற் பயிற்சியை மனம் விசேஷமாய் அடைந்தறியே பெற



லாம். வேறு வகையான் மொழியுமிடத்து, செய்யுள், சித்திரந்தீட்டல், இசை, பொதுவாக நற்கலைகள், ஆகிய இவையனைத்தும் உயர்வும் அழகும் வாய்ந்த பொருள்களைப் பல்வேறு வகைப்பட்ட ஒவ்வொரு முறையிலும் நிலைமையிலும் தோற்றுவித்தலின் மகிழ்ச்சியடையும். இவைகள் ஏதோ ஒருவகையான் அழகின்பாற்படுவனவாகாது, பயிற்சியடைந்த மனத்தினது சாரமும், மேன்மையுமான மலரின்பாற் படுவனவாம். நுட்பநோக்கினன் மட்டும் விஷயங்களை யறிந்து, உறுதிப்பாட்டொடு காரியங்களை நிறைவேற்றும் மனிதனொருவன், இவ்வுலகிற்பட்ட பெரும்படியான தொழில்களைச் செய்வதற்கு ஏற்றவனாகலாம். ஆயினும், அவன் நாகரிகமும் வனப்பு மற்ற பிராணியாயிருக்கலாம்; கோட்டமுள்ளோனும், இடங்கொடாதவனும், கொண்டதுவிடானும், பிடிவாதமுடையானும், விடாப்பிடியாளனும், வீண்வாதக்காரனும், மானமிலானும், அன்றி அகந்தையாளனுமாயிருக்கலாம். இவ்வாறமைந்த ஒருவனது கோட்டங்களை இயற்கை வனப்பு நூற்பயிற்சியினால் நிமிர்ப்பது, சனசமூகத்திற்குப் பெரும்பயன் விளைக்கத்தக்கதே யன்றி, அத்தகையோனுக்கே இன்பமூற்றாகலாம். ஆகையால், சிறுவனொருவன் தனது மனோபாவத்திற்கு அழகு மிக்க பொருள்களனைத்தையும் அதன் இயற்கை உணவாகக் கொடுக்கத் தொடங்கட்டும். நகரத்தில் நூதனமாகக் கட்டப்பட்ட செம்மைசான்றதோர் கட்டிடமிருப்பின், அவன் அதனை நின்று நோக்கக்கடவன். செவ்விய ஓவியங்கள் காண நேர்ந்துழி, அவற்றின் நலத்தைச் சிறிது நுகருமாறு சிறிதேனும் கடைக்கணிக்கத் தவா வண்ணம் தனது செய்தொழிற் கடமைகளிலேயே ஆழ்ந்து கிடக்கவேண்டாம். வினோத சாலைகளில் மிகச்சாதுரியமாகப் பரிபூர்வோர்களும், கைதேர்ந்த கரணம் போடுபவர்களும் இருந்தாற் கேவலம் குழந்தைகளை உவப்பிக்கும் போலி உபாயங்களென அவன் அவற்றைக் கருதற்பாலனல்லன். மற்று, இவைகளை, மக்கடம் உறுப்புக்களின் அதிசயிக்கத்தக்கவலியும் வணக்கமும் ஆகிய இவைகளின் நுட்பமான தோற்றங்களென அறிவுடையோன் ஒவ்வொருவனும் மெய்ச்சவேண்டும். பொதுவாகக் கூறுமிடத்து, உள்ளத்தேர்ச்சியை அடைய விரும்பும் சிறுவன் மெய்ச்சலாற்றலை வளர்க்கவேண்டும். உயர்வுவாய்ந்த பொருள்களை மெய்ச்சுவதனால், நாம் அதிசயிக்கும் பொருள்களைப்போன்று நாம் ஆகுமாற்றில் இரண்டொருபடி ஏறலாம். ஆதலின், இம்மன்பேருலகத்தின் நாப்பண், வழக்கமாய்ப் பெரிதும் அதிசயமடையாதவொருவன், இவ்வுலகின்கண் அதிசயிக்கத்தக்க பொருள்கள் மிகவும் இலவென்பதை நிரூபியான்; மற்று, தனதாற்றல்கள் குறுகிக்கிடக்கின்றனவென்றும் தான் சுருங்கிய அறிவுடையீன் என்றுமே புலப்படுத்திக் கொள்வான். இயற்கை யொழுங்கின்படி வனப்புநூற் பயிற்சி அடைய விரும்பும் சிறுவன் செய்யக்கூடிய பெருந்தீங்கு ஒவ்வொரு பொருளிலும் குற்றங்காண்டலும், வியப்பின்மை யென்னும் அணங்கின் வறுநலம் வேட்ட

துமாம். உள்ளுடைந்து மூப்படைந்து வெறுப்புற்றவனிடத்தில் இஃதோராற்றாற் பொருந்தினும் பொருந்தும். முன்னுக்கு வரவேண்டிய இளைஞனொருவனிடத்தில் இஃதொருபோதும் பொருந்துவதன்று. தானே உறுதிப்பொருளொன்றும் இயற்றாது, மற்றையவர்களின் காரியங்களிற் குற்றங்காணும் தொழிலை மேற்கொண்டு அன்னணம் குற்றம் படைத்துக் காட்டற்றொழிலை ஆராய்ச்சி யென்று வாய்ப்பறையறையும் சிறுவனொருவனிடத்தில் நலமொன்றேனு மிருக்குமென்று எதிர்பார்த்தலடாது. இளைஞனொருவன் கற்கவேண்டிய முதற்பாடம் குற்றம் பார்த்தலல்லாது நயங்காண்டலேயாம். ஆராய்ச்சியென்னும் பெயர்க்குரியனவெல்லாம், மதிநுட்பமும், தீர்க்கானுபவமும் கலந்துழிக் கனியுமோர் நற்கனியாம். பழக்கமுற்ற மூப்படைந்த வீரரொருவரே போரில் இங்ஙனமே பொருகவென்பதை விளம்பலியலும். என்னை?

" நூலை யுள்ளபடி யாய்வலெனு நொய்யமகனே
போலி யாயபல தோமுரைசெய் புன்மைநெறியாய்
சீல முள்ளபுல வோர்மனதின் செவ்வியுணராய்
வேலை யொத்தசின வீண்மொழி விடுத்தியொழிதி.
பாந்த ளேபிறிது பாந்தளின பாதமுணரும்
வாய்ந்த மாதறி மகார்றுமை வந்தியுணரா
ளாய்ந்த செய்யுளல மான்றகவி வாணரறிவா
ரேய்ந்த வூறுணரு மோர்விழிய வெங்ஙனறிவாய்?
மதுர மிக்கொழுகு மாங்கனி வடித்தசுவையார்
முதுத மிழ்க்கவிதை முற்றுணர்கி லாதுபிசிதத்
துதி கருங்கனியை யொத்தகுறை யோருமுறையாற்
கொதிக னென்றுறு கொடுங்கொடி நிகர்ப்பைகொடியோய்!"

என்ற பாவலர் கோமான் வாக்கையும் காண்க. பல்வகை விஷயங்களிற் சிறுவர்களுக்கு உண்மையாகவே ஓர் அபிப்பிராய மிருக்கலாம், அன்றி அங்ஙனமிருத்தலும் மேதக்கதே. ஆயினும், அவையிற்றை அவர்கள் வெளிப்படுத்துவதற்கு யாதொரு நியாயமுமில்லை. அநுபவமுதிர்ச்சி யில்லாத ஆராய்ச்சித் திறமுடைய மக்களான் வெளிப்படுத்தப்படுங் கோட்பாடுகளெல்லாம் ஜனங்களை அல்வழிப்படுத்தலே யன்றி, அதன் காரணமாக வெழூஉம் ஆக்கியோனது போலி மகிழ்ச்சியையுமே விளைக்கற்பாலன.

" கண்ணி லாதுழல் கசட்டறிவி னுயனுகலை
யெண்ணு மிவ்விட மெலாமினிய தூய்மையுடைய
வுண்ணி லாமலெழு தந்தநகொ ளுன்றனகைதான்
மண்ணி லிவ்விடையின் வாரலை மயங்குபொறியாய்!"



வனப்பு நூற்பயிற்சிக்கு, இயற்கையிலும் தொழிலிலும் பெருமை வாய்ந்தனவும் அழகு மிக்கதுமானவைகளே இயல்பான அன்றிச் சுகமான வுணவெனச் சாற்றினேம். நற்பொருள் விளைவுகளும், நகைப்பொருள் விளைவுகளும் துணைக்கருவிகளாக மட்டுமே பயன்படத்தக்கன. ஒருவன் தான் நகைக்க முடியாதுபோயின் அஃது அவனுக்குப் பெரு நஷ்டமேயாம். ஆயின், ஒரு புன்னகையினாற் பொருந்தாதனவற்றை மெதுவாய் நாம் தொலைத்துவிடுதலியலும். இதன் காரணமாக நகைத்தல் மிகவும் பயன்படத்தக்கது. மற்று அதை நாம் பரிபாலிக்கும்படி கூறுவதன் காரணமாகவன்று. இவ்வுயிர் வாழ்க்கை நாம் மேற்கொண்டதோர் மெய்யான கடமை. அங்காந்த இனி நகையினாலேயே, ஒருவனும் பெருந்தகைமையும் நன்மையு முற்றவனாகமாட்டான். மிகச் சீர்திருந்திய நகைமொழிநிலை யனைத்தும், கூழைப் பதப்படுத்தலையாதல் சிற்றுணவிற்கிடுமோர் இன்மணப்பொருளையாதலொக்கும். கேவலம் தனி மிளகையேனும் மிளகாயையேனும் ஒருவரும் உண்ண மாட்டார். பல்வகை மேன்மைப்பாடுகளைத் தனது மனத்திற்சிறுவனொருவன் நிரப்பிக்கொள்ளட்டும். ஆனால் நகைத்தற் குரியனவற்றை மட்டுமே அவன் கருதவேண்டாம். அல்லது திரித்துரையையும், வழூஉப்பொருளையும், இளிவரற்புனைவையும், வழக்கமாய்ச் சிந்தித்துத் தனது மனக்கண்ணை ஊனமாக்கிக் கொள்ளவேண்டாம். குறுகிய மனமுடையான் ஒருவன் என்பதைத் தோற்றுவிக்கப் பொருள்களின் நகைவிளை பக்கத்தை மாத்திரம் நோக்கும் வழக்கத்தைக் காட்டிலும் மிகத்திருந்திய சான்று ஒன்று மின்றாம். என்னேவெனில், நகைவிளை பக்கம் எப்போதும் பொருள்களின் மேற்புறத்திலேயே பதிந்து கிடக்குமென்றார் அரிஸ்தாதில் ஞானியும். இந்நாட்டில் இற்றை நாளில் மிகமலிந்து கிடக்கும் நகைப்பொருள் வாய்ந்த விநோத நூல்களையும் குணக்குறிப்புக்களையும், நற்பொருளிறுதி நாடகம் போன்று ஏதோவொரு பொழுது போக்காக மட்டுமே கருதப்படுமேல், அவையிற்றை மேற்கொள்ளலாம். புன்மையும், இழிதகைமையுமுடைய மானுடகுணத்தின் இளிநகைக் குறிப்புக்களை நுனிப்புன் மேய்ச்சலாய் நோக்குதலினும், மிக நுணுகி உணரும் மாணாக்கர்களுக்கு நற்கலைப்பயிற்சி அதனினும் மிக்க நன்மையு மின்பமும் வாய்ந்ததாகின்றது. ஆராய்ச்சி நூலின் கடுமைத் தொழில்களினின்றும் விலகி ஆறுவதற்கு, விநோதநூலென்று பெயர்கொண்டவற்றைப் படிப்பதினும் மிகத்தொல்லாசிரியரின் சிறந்த பழமொழியை ஒழுங்குற்ற செய்யுணடையில் அமைத்தலாதல், மிகப் பயனுடையதோர்வழியில் உழைத்தலாகும். அவ்வாறு விநோதநூலிற் காலம் போக்குதல், வாழ்க்கையிற் செயலற்றிருக்கும் சில வேளைகளில், மிக்க மடிபுகுந்த மனத்தினர்க்கு விசேடமாய் ஏற்பட்டதோர் தொழிலாம்.

ச. கி. சுந்தராசாரியன்.

## A BLACK SCORPION.
## ஒரு நண்டுத்தெறுக்கால்.

சென்னைக் கிறிஸ்தவ கலாசாலையின்கணுள்ள உயிர்ப்பொருட் சாலைக்கு உயிருள்ள நண்டுத்தெறுக்கா லொன்று கஞ்சத்தினின்றும் ஆகஸ்டு௴ 15-ஆந் தேதி போந்தது. அஃது அப்பொழுது சினையாயிருந்தது; ஏறக்குறைய ஒரு சாண் நீளமுள்ள அது 19-ஆந் தேதி ஈனத் தலைப்பட்டது. அவ்வாறு தலைப்பட்டு மூன்று நான்குமணி நேரத்தினுள் 20 குஞ்சுகள் வெளிப்பட்டன. ஒவ்வொரு குஞ்சும் தன் தாயின் வயிற்றினின்றும் வெளிப்பட்டவுடன் தானாகத் தனது இயற்கையுணர்ச்சிவலி காரணமாகத் தன்னுடைய தாயின் முதுகின்மே லேறிக்கொண்டது. அவ்வாறு அவ்விருபது குஞ்சுகளும் தன் முதுகிலேறிக்கொண்ட பிறகு தாயானது தனது கொடுக்கை வளைத்து நிறுத்தி அவற்றைப் பாதுகாத்துக்கொண்டது. தாய் கருந்தேளாயினும் குஞ்சுகள் வெண்ணிற முள்ளனவாயிருந்தன. தாயின் கழுத்திற்குச் சிறிது கீழேயுள்ளதோர் புழைவழியாகக் குஞ்சுகள் வெளிப்பட்டன. ஆகவே தாய்த் தெறுக்காலின் முதுகுவெடித்து அதன் குஞ்சுகள் வெளிப்படுகின்றன வென்ற சாமானியக் கொள்கை தவறுடைத்தாகின்றது. தாய் தன்னது குஞ்சுகளைப் பாதுகாத்தலிற் காட்டுங் கவலை யாவருங் கண்டு வியக்கத்தக்கது. தானறியக் குஞ்சுகளினருகே ஒரு சிறு துரும்பையெடுத்துப் போகடினும், தாய் வெகுண்டு கொடுக்கினாற்கொட்ட முயலுகின்றது. தாய்க்குத் தெரியாமற் குஞ்சுகளைத் தொடலாம்.

இனி அத்தெறுக்காலினிடத்தில் 22-ஆந் தேதி மாலை சில சோதனைகள் செய்து பார்த்தோம். முதற்கண் அதன் குஞ்சுகளுள் ஒன்றைக் கலாசாலை உயிர்நூற் புலவர் கொன்று அத்தாயின் முன்னர் வைத்தனர். அப்படி வைத்தவுடனே அது தனது இறந்த அக்குஞ்சை யெடுத்துத் தின்றுவிட்டது. பிறகு பிறிதொரு குஞ்சைக் கான்முறித்துத் தாயின் முன்னர் இட்டனர். அதன்மேல் அத்தாய் தனது குஞ்சுகளுளொன்று காலொடிந்து போனமையால், தன் முதுகிலேறிக் கொள்ளமாட்டாது தவிப்பது கண்டு உடனே தனது கரங்களையும் கால்களையும் நீட்டி அதற்குப் பலவிதத்தினும் உதவிசெய்து பார்த்தது. அவ்வாறு செய்து பார்த்தும் அக்குஞ்சு தன் தாயின் முதுகின் மீது ஏறிக்கொள்ளும் வலியிலதாயிற்று. அஃதுணர்ந்த அதன் தாய் அக்குஞ்சின்மேல் உடனே பாய்ந்து அதனைக்கொன்று தின்றுவிட்டது. இவ்வாறு அத்தாய்த் தெறுக்கால் சிறிதேனும் அன்பின்றிச் செய்தமைக்குக் காரணமென்னை? தன் குஞ்சு நகர்தலின்றி வாளா வருந்தியுழன்று துன்புறுவதினும் அது சாதலே நலமென்று கருதிற்றோ? அற்றேல் அது தன் குஞ்சினைக்கொன்ற மட்டில் நில்லாது அதனைத் தின்னவும் புகுவானேன்? நம் உயிர்நூற் புலவர் செய்த சோதனையினும் இறந்த தன்



குஞ்சைத் தாய் தின்றுவிட்டதே! ஆதலின் இதன் மெய்க்காரணம் பிறிதொன்றாய்த்தா னிருக்கவேண்டும். அஃதென்னை? நந்தம் உயிர்நூற் புலவர் பின்வருங் காரணங் கூறுவாராயினார்:—அத்தாய்த் தெறுக்காலானது அவ்வாறு தின்னாது தன்னுடைய இறந்த குஞ்சையும் தற்காத்துக்கொள்ள முடியாத குஞ்சையும் அஃதஃதிருந்த இடத்திலேயே கிடக்கும்படி விட்டுவிடுமாயின், தேள்களுக்கும் தெறுக்கால்களுக்கும் பகையாகிய பிறஜந்துக்கள் அக்குஞ்சுகளையுந் தின்றுவிட்டுத் தேள்தெறுக்கால்களில் குஞ்சுகள் எங்கேனும் காணப்பட்டால் அவ்விடத்திற்குச் சமீபத்திலேயே அவற்றின் தாயும் உடன் பிறந்த மற்றைக் குஞ்சுகளும் இருக்குமென்பது திண்ணமாதலின் அக்குஞ்சுகள் வந்த வழியாகத் தாமுஞ்சென்று மற்றைக் குஞ்சுகளும் அவற்றின் தாயும் இருக்குமிடம் அறிந்துகொண்டு அவை சோர்ந்திருக்கும் அற்றம் பார்த்து அவையனைத்தையுங் கொன்று தின்னப் புகுதலியலும். ஆதலின் தன் பகையாய ஜந்துக்களினின்றுந் தானுந் தன் மற்றைய குஞ்சுகளும் தப்பிப்பிழைக்கக் கருதியே அத்தாய்த் தெறுக்கால் அங்ஙனஞ் செய்ததென்க. அஃறிணைப் பொருள்களிடத்தும் இவ்வியல்பு என்னே! பலவற்றின் நலங்கருதி யொன்றனைக் கோறலு மென்னே! தான் கொல்லாவிடினும் தன் பகையாகிய பிறிதொன்றனாற் கொல்லப்படுமன்றோ? தற்காக்கும் வன்மை யற்றது தரணியில் வாழுதல் தகாதோ? என்னே! இயற்கை யொழுங்கு! என்னே! இறைவன் படைப்பு மகிமை! அவனருட் செயல்களின் காரணங்கள் அவனருளாற் புலப்பட்டா லன்றி அவை பிறிது வழியால் நமக்குப் புலப்படுதலு முண்டோ? இவ்வாறு கடவுளருளால் நம் ஆங்கிலவாணர் பலவகைப்பட்ட பொருள்களின் பெற்றிகளையும் உய்த்துணர்ந்து வெளியிடும் நூல்கள் அனைத்தையுங் கூட்டுண்ணுதல் என்றுகொலோ? அம்மேற்புல விஞ்ஞானிகளைப்போல நாமும் உழைத்துப் பொருளியல் உணரவேண்டாவோ? தமிழ் வல்லீர்! எழுமின்! எழுமின்!!

வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியார்.

## AN ADAPTATION OF ADDISON'S VISION OF MIRZA.
## மரீசி கண்ட பாவனைக் காட்சி.

கலிநிலைத்துறை.

1. பாண்டி நாட்டினிற் பல்வளம் பெருகிய பழனிச்
சேண்ட டாவிய சிகரியி னொருபுடை செறிந்த
மாண்ட தொல்குடி மறையவர் சேரியின் மதிநூற்
காண்ட லோங்கிய மரீசிநற் பெயரிய கற்றேன்.

2. நண்பர் சூழுற வதிதரு நாளொரு நண்ப
னெண்ப ரந்தவவ் விருங்கலைக் கிழவனை யேத்திக்
கண்ப டாதநீ கண்டதோர் காட்சியை யெமக்குப்
பண்பி னாலுரை செய்யெனப் பனவனும் பகர்வான்.

3. ஐய யான்சொலு மதனைநும் மஞ்செவித் தேக்கி
மெய்யை யோர்ந்தல கியல்பினை விரும்புதி ரொருகால்
மையு லாஞ்சிகை மலைமிசை யிவர்ந்தன மகிழ்ந்து
பைய யானத னெழில்வளம் பார்த்தினி திருந்தேன்.

4. கந்த நாறுபைங் காந்தளங் கரந்தரும் பொடிகொண்
மந்த மாருதஞ் சூலுடை மடந்தைபோல் வயங்க
நந்த மாநுட நடலைசேர் வாழ்வினை நாடிச்
சிந்தை செய்தனென் றிறனுறப் பற்பல திறத்தான்.

5. இறுதி யிற்றுணிந் தேயிவ ணிசைதரு மனிதன்
வறிது நீடுமோர் சாயையா மாநுட வாழ்வுஞ்
சிறிது முண்மையில் லாதவோர் கனவெனத் தெளிந்து
ளுறுதி யுற்றனெ னுவகையு மற்றனெ னுளத்தே.

6. அன்ன காலையி லண்மையி னம்மலை முடிமேற்
பன்னு மாவினம் புரக்குங்கோ பாலனை நிகர்த்துத்
துன்னு வேய்ங்குழ லொருகையிற் றுதையத்தன் மேற்கார்
மன்னு கம்பலம் வயங்கமுன் வந்தவற் கண்டேன்.

7. இனையன் யாவனென் றெண்ணுறு மெல்லையி லெதிர்நின்
றினையன் றன்மலர் வாயிடை யமுதினை யுகுத்த
வினையை யொப்பத்தன் வேய்ங்குழ லிசைத்தனன் வெதிரின்
சினையுந் தீங்குரல் சேர்த்திய செய்கையு மென்னே.

8. மாணு மம்மலர் வாயினின் றொழுகிய மதுவோ
யாணர் வண்டின மமையிடை யீட்டுமின் னறையோ
பூண ராப்புனை புங்கவன் சாமமோ பொருந்தும்
வேணு கானத்தி னியல்பினை விள்ளலு மெவனோ?

9. திருந்து நல்லற மிம்பரிற் செவ்விதின் மகிழ்ந்து
புரிந்த புண்ணியப் புகழுளா ரும்பரிற் புகுத
வருந்து மந்தத்தின் மனமுறு மயர்வினை யொழிப்பான்
முருந்து மூரலா ரரம்பையர் முரலிசை யமுதோ?

10. பரிதி மாறனிப் பாசுரம் பயிலுமின் னிசையோ
சுருதி நாரதன் றும்புரு சொரியும்வான் சுவையோ
விருது கூறிய வேமனை வென்றசா தாரிக்
கருது யண்ணிசை யோவிவன் காட்டிய தேம்?



11. கன்னி பாகன்றன் கழலிணை கருதுபு களித்த
மன்னு சீர்த்தியா னாயன்றன் மகிழிசை மடுக்கு
நன்ன ராவின மெனமுகி னாண னிசைகேட்
டுன்னி யேங்குகோ வியரென வுருகினே னுள்ளம்.

12. இன்று காறும்யா னறிகிலா வின்னிசைத் தேக்கி
யன்று யாழிசை யான்மகி ழச்சமா வென்னத்
துன்றி னேனவன் சொலற்கரி தாயபே ரின்ப
மன்ற வென்மனத் தடைதந்தென் வயமிலே னின்றேன்.

13. இம்ம லைத்தலை யிடையொரு சித்தனேய் தருமென்
றம்ம முன்பல முதியர்வா யறிந்துளே னெனினும்
விம்மு வேய்ங்குழல் வியனெழு கிசையுடன் வெளிவந்
தெம்ம னோரெதி ரியையுமென் பதையுண ரேன்யான்.

14. இன்ன வாறிவ னின்னிசை யேற்றுள மிரவி
முன்ன மாலிபோ லுருகியம் முன்னவ னிடத்துத்
துன்னு மன்பினத் தூயவன் மொழிசெவித் தோய
வென்ன கத்தினில் வேட்டினி திருந்தனெ னிப்பால்.

15. நேய மோடுதன் னிசையினை நிறுத்தியந் நிமலன்
சேய நிற்குமென் றன்முகஞ் செவ்விதி னோக்கிச்
சேய நன்மரை முகமகிழ் சிறந்துதன் கரத்தா
னாயி னேனையு மழைத்தன னண்ணினே னவன்முன்.

16 என்றன் கண்ணிணை யென்னுநல் லெழிற்சகோ ரங்க
ளன்று தேக்கப்புன் னகைநில வொழுக்குநற் றவத்தோன்
மன்ற னாறிய மலரடி வணங்கினேன் மகிழ்ச்சி
மன்ற நீடிய மனத்தினால் வாயுரை மறந்தேன்.

17. ஒப்பி லாவழி வொளிவிடுத் துயர்மனக் கமலந்
திப்பி யஞ்செறி மணத்துடன் சிறந்திவண் மலர
விப்பு விக்கணோ ரிதயத்தி னிருளினை யொழிக்கும்
வெப்ப நீத்தவா னிரவியா ரியனென வியந்தேன்.

18 பணிந்த வென்றனைப் பரிவொடும் பங்கயக் கரத்தா
லணைந்தெ டுத்தென தகங்களி யடைதர வன்பு
திணிந்த நோக்கொடச் சித்தன்றன் வாய்மலர் திறந்து
குணந்தி ருந்திய மரீசியின் கொள்கையைக் குணித்தேன்.

19. தனிமை யுறாயிவட் சார்ந்தநீ மனத்துடன் சாற்று
மினிமை யாந்தனி மொழியினை யென்செவி யேற்றேன்
மனமகிழ்ச்சியோ டென்னுடன் வருதியென் றிசைத்தா
னினிகொ ளாங்கவன் வழிச்செலு றாலெனத் தொடர்ந்தேன்.

20. எளிய னேனையு மிகழ்ந்திடா தெடுத்தரு ளியவெம்
மனிகொ ளும்பெரு மானட லாறுமா முகத்தோன்
களிகொண் டாடுமிக் காமர்சீர் மலையுயர் முடிமேற்
றெளிவு சேர்மதிச் சித்தனென் றனைக்கொடு சென்றான்.

21. ஆங்குச் சென்றபி னருந்தவ னன்புடன் விளித்துப்
பாங்கிற் கீட்டிசைப் பார்க்குக வுரையெனப் பகர்ந்தான்
யாங்கர் நீடிய பைம்புல மிசையலை பாயும்
வீங்கு வெள்ளமு மீதொரு பாலமும் விளங்கும்.

22. இன்ன யாவென விசைத்தலு மிசைவலோன் கூறு
மன்னு மிப்புல மிருவினை மருவிய துன்ப
மென்னு பைம்புல மினையவா ரியுமினைந் தெறியு
நன்ன ரூழியின் பிரிவென நாடுதி நண்பா.

23. என்ற வன்மொழி யேற்றுளம் வியந்தனெ னீண்டுத்
துன்றும் வெண்டிரை வெள்ளமோர் முகில்வழித் தோன்றிக்
குன்றி மற்றுமோர் கொண்டல்வாய்க் குறைதர வோடி
யொன்று மாறெவ னுரைத்தியெற் குத்தம வென்றேன்.

24. சித்த னென்மொழி சிந்தையிற் கொண்டிவை தெரிப்பா
னத்து மன்பநீ காண்பது ஞாயிறென் றூழி
வைத்த வந்திடு காலமா மூழியின் வகையா
மித்த ராதலத் தோற்றமு டிறுதிகா றியங்கும்.

25. இருபு றத்தினு மெழிலியின் மயங்கிய வினைய
திரைபு ரண்டொலி கடலினைச் செவ்விதி னாய்ந்து
விரவு மாறதன் மீதிவண் விளங்குக யாவென்
றுரைசெய் வாயென வுரைத்தன னொண்டவச் சித்தன்.

26. பரவை வாயொரு பாலங்கண் டேனெனப் பகர்ந்தேன்
மருவு மன்னது மாறுட வாழ்வென மதிப்பாய்
தருவு வாயதைத் துணைவிழி யாலெனச் சொற்றான்
பொருவி லாதவப் புண்ணியத் தவம்பல புரிந்தோன்.

27. உற்று நோக்கவவ் வுவரிவா யோங்கிய பால
முற்று நின்றகண் மூவிரு பஃதுட னொருபான்
பெற்றுப் பற்பல பின்னமாங் கண்களும் பெருக
நிற்ற லாலொருங் கமைவன றுறென நினைந்தேன்.

28. இன்ன வண்ணம்யா னிவைதமை யெண்ணுறு மெல்லை
முன்ன மீதெழின் முற்றிய வாயிர முழைவாய்
மன்னி நின்றதிவ் வாரியின் பெருக்கினின் மறைந்து
பின்ன மாயதோர் பிரளயத் தென்றனன் பெரியோன்.



29. இனைய பாலத்தி லின்னும்யா வுளவென விசைத்தி
யெனவு ரைத்தன னிருந்தவ னதன்மிசை யீண்டி
யினிதி னெண்ணில்பன் மாந்தர்க ளியங்கலு மிருள்சேர்
கனமி ரண்டதன் கடைகளிற் செறிதலுங் கண்டேன்.

30. என்று கூறிப்பின் பினையபா லத்தினை யின்னு
நன்று நோக்கலு நடப்பவர் தமிற்பலர் நழீஇக்கீழ்
மன்ற வோடுறும் வாரிவாய் வீழ்தலைக் கண்டு
துன்று மின்னதன் சூழ்ச்சியு மியாதெனச் சூழ்ந்தேன்.

31. அறைந்த பாலத்தி னடியினி லளவிலாப் பொறிகண்
மறைந்தி ருப்பவை மாந்தர்தங் கால்பட வல்லை
திறந்து போகமீச் செறிபவர் திடீரெனச் சிதைந்து
நிறைந்த வெள்ளத்தி னாழ்ந்துயிர் நீத்தலைக் கண்டேன்.

32. இன்ன தன்மைசேர் படுகுழி பற்பல வீண்டித்
துன்னிப் பாலத்தின் றொடக்கத்துத் துறுமுமப் பரிசான்
மன்னு மாந்தர்கள் பற்பலர் மங்குல்வாய்த் தோன்று
முன்ன ரக்குழி வாய்விழுந் தொழிந்தனர் மொழியின்.

(இன்னும் வரும்.)

ந. பலராம ஐயர்.

## KANT'S CONCEPTION OF SPACE.

## இடவுணர்ச்சி.

### 1. * மானத விளக்கம்.

நாம் அனைவரும் புறப்பொருள்கள் எல்லாம் நமக்கு வெளியிடத்திலே உள்ளனவென்றும், அவற்றுள் ஒவ்வொன்றும் மற்றையவற்றைப் போலவே யாதானும் ஓர் இடத்தில் இருக்கின்றதென்றும் அறிந்திருக்கிறோம். இவ்வாறு இவையிருக்கும் இடத்திலே தான் அவ்வவற்றின் உருவமும், அளவும், அவை தம்முள் ஒன்றற்கொன்றுள்ள நிலைமையும் நமக்கு வெளியாகின்றன. நாம் இங்ஙனம் இடத்திற்றான் இவ்வொவ்வொன்றையுங் காணக்கூடும். நம்மைப்பற்றியே நமக்கு உணர்ச்சி உண்டாகும்போது, அஃதாவது நம் நிலைமை நமக்குத் தெரியும்போது, நாம் ஆன்மாவை நேரே ஒரு புறப்பொருளைக் காணுதல் போலக் காண்கின்றோமல்லோம். ஆயினும் இத்தகைய உணர்ச்சி யொன்றனாற்றான் நம் நிலையே நாம்உறுதிபெறக் காணத்தக்கதோர் விஷயமாகின்றது. ஆகையால் நம் அகத்தே நிகழ்வன என நிச்சயிக்கப்

* மானதம் = Metaphysical.

படுவன எல்லாம் ஒன்றற்கொன்று கால சம்பந்தமுடையனவாகத் தோற்றுகின்றன. நாம் எப்படி **இடம்** நமக்குள்ளே இருப்பதன்றென்று அறிவோமோ அப்படியே **காலம்** நமக்கு வெளியே இருப்பதன்றென்றும் அறிகிறோம். அங்ஙனமாயின் **இடம், காலம்** என்பன யா? அவை உள்ளவாறே உண்மைப் பொருள்களா? அவை எண்ணத்தின்பாற் படுவனவேயோ? அல்லாக்காற் பொருள்களுக்குள் அமைந்துள இயைபுகள் தாமோ? அவை இன்னணம் நாம் பொருள்களைக்காணுவிடினும் அப்பொருள்களிடத்திலேயே உள்ளனவேயோ? இஃதன்றிக் **காலமு மிடமும்** நமக்குப் பொருட்புலனுருந்தோறும் இன்றியமையா திருப்பனவாமன்றி வேறெவையும் அல்லவோ? காலமு மிடமும் இன்னணம் நம் மனவமைதியின்பாற் பட்டனவேயன்றி மனத்திற்குப் பிறிதாய வேறெவற்றிற்கும் காலமு மிடமும் உள்ளன எனல் சாலுமா சாலாதா? இவைகளுக்குத் தக்க விடைதருதற்காக இடத்தைப்பற்றி ஒரு மானத விளக்கம் செய்யத் தொடங்குவாம். இடமென்னும் எண்ணத்தில் இன்னது உள்ளது என்பதைப்பற்றி விவரமானதாகாவிடினும் விளக்கமானதொரு விஷயத்தைச் சொல்லுகின்றமையால் அதனை **விளக்கம்** என்போம்; இவ்விளக்கம் இடம் காரண உணர்ச்சி யென்றற்கு நமக்குள்ள காரணங்களை எடுத்துரைத்தலின் மானதமாம்.

(1) இடமானது புறப் பொருள்களை நாம் காண்பதனால் அக்காட்சிகளினின்றும் நம்மால் ஊகிக்கப்படுவதொரு அநுபவம்பற்றிய எண்ணம் அன்று. ஏனெனில் எனக்குப் புலப்படுவனவான சில காட்சிகள் தம்முள் வேற்றுமைப் படுவன என்பதையும் அவை வெவ்வேறு இடத்திலுள்ளன என்பதையும் யான் அறிந்திருந்தாலொழிய, அவை யெனக்குப் புறமான ஒன்றற்கு, அஃதாவது யானிருக்கும் இடமல்லாத வேறோர் இடத்திலுள்ள தொன்றற்குச் சம்பந்தமுடையன என்பது எனக்குத் தெரியாது. அஃதன்றியும் அவை தம் அமைப்பில் வேறுபட்டு வெவ்வேறு இடங்களில் உள என்ற உணர்ச்சியிலேனெனில் அவை ஒன்றன் புறத்தொன்றாயும் ஒன்றன் பக்கத்தொன்றாயும் உள்ளன என்பதும் எனக்குத் தெரியாது. ஆகையால் **இடம்** என்னும் உணர்ச்சி நாம் நமக்குப்புறத்தேயுள்ளனவற்றைக் காணுந்தோறும் இன்றியமையாது நிகழுவதென்பது போதரும். நாம் காணும் பொருள்களுள் ஒன்றற் கொன்றுள்ள புறவியைபுகளின் அநுபவம் யாதொன்றும் நமக்கு **இடம்** என்னும் எண்ணம் உண்டாவதற்குக் காரணமாகாது; இடமெனும் உணர்ச்சி முன்னரே இருந்தாலன்றி நமக்குப் புறப்பொருளநுபவமே இலதாமாதலின்.

(2) இடமானது புறப்பொருளுணர்ச்சி எல்லாவற்றிலும் நம்மால் முன்னரே அறியப் பெற்றதோர் இன்றியமையாத காரணவுணர்ச்சியாம். இடத்தில் ஒரு பொருளு மில்லாதிருப்பதாக நாம் மிக எளிதில் எண்ணலா



மெனினும், என்ன முயற்சி செய்தாலும் இடம் நீங்கிவிட்டதாக எண்ணல் இயலாது. ஆதலின் இடமானது காட்சிக்கு இன்றியமையாததொரு தன்மையாம். அஃது அக்காட்சியைச் சார்ந்ததோர் * தீர்ந்த எண்ணமன்று. ஆகையால் அது காரணம் பற்றியதாம்; புறப்பொருட் காட்சியிலெல்லாம் ஆவசியகமாய் நம்மால் முன்னரே எண்ணப்பட்டதாம்.

(3) இடமானது பொருள்களுக்குள்ள இயைபுகளின் நியாயங்காட்டக் கூடியதும் அல்லது பொதுவானதுமான மனோபாவனையன்று; அது கலப்பில்லாத புலப்பாடாம். யாங்ஙனமெனில் நமக்கு ஒரே **இடத்தைப்** பற்றித்தான் உணர்ச்சியுண்டு. நாம் அநேக இடங்கள் உள்ளன போலப் பேசுதல் உண்மையே. ஆயினும் நாம் உள்ளவாறே எண்ணுவது அவை தனித்தனி ஒரே மாறுபாடில்லாத **இடத்தின்** பாகங்களென்பதேயாம். இஃதன்றியும், இப்பாகங்களெல்லாம் ஒரே வியாபகமான **இடம்** எனப்படுவதன் **முன்னரே** இருப்பன என்றேனும், இவை யொன்றாய்ச் சேர்ந்து தான் அந்த முழுமையான இடம் உண்டாகிறதென்றேனும் சொல்லலாகாது. ஆனால் இவற்றை அதன் **கண்ணேயே** உள்ள பாகங்களாகவே எண்ணக்கூடும். **இடம்** என்பது ஒன்றே ஒன்று தான். நாம் ‘இடம் பல’ என்போமானால் இந்த **ஓர் இடம்** அநேகவிதமாய்க் குறிக்கப்படலாமாதலின் ‘இடம் பல’ என்னும் நம்பொதுஎண்ணம் இத்தகைய குறிப்புக்களையே முன்னரே ஆதாரமாகக் கொண்டுளது என்பதே நமது உட்கருத்து. ஆதலால் **இடம்** என்னும் அத்தனி யெண்ணத்துக்கு ஆதாரமாயுள்ளது காரணவுணர்ச்சியே யன்றி அநுபவ வுணர்ச்சியன்று. ஆதலால் ஒரு முக்கோணத்தின் இரண்டு பக்கங்கள் மூன்றாம் பக்கத்திலும் பெரியன என்னும் க்ஷேத்திரகணித உண்மை கோடு, முக்கோணம் என்பனவற்றின் பொது எண்ணத்தினின்றும் ஒருபொழுதும் உண்டாகாது. அது காரணவுணர்ச்சியினாற்றான் உண்டாகும். இவ்வுணர்ச்சியிருந்தென்றால் அதைக் காரணமுறைப்படியும் நியாயவழிக்குரிய உறுதியுடனும் ஊகிக்கலாகும்.

(4) இடமானது நமது உணர்ச்சிக்கு அளவற்ற தொன்றாகக் காணப்படுகின்றது. அநுபவத்தாலறியப்பட்ட ஒவ்வோரெண்ணத்திலும் அவ்வெண்ணத்தின் கீழ் அடங்கிய கணக்கிறந்திருக்கக்கூடிய பொருள்களுக்கெல்லாம் பொதுவாக ஒரு பண்பைப்பற்றி நாம் உண்மையில் நினைக்கிறோம். ஆனால் அநுபவவுணர்ச்சியின் இயல்பினாலேயே அது தனக்குள் கணக்கிறந்த * தீர்ந்த எண்ணங்களை உடையதென எண்ணுதல் முடியாதாம். ஆனால் இடமெனிலோ இன்னணமே அதன் பாகங்களெல்லாம் கணக்கிறந்தனவாய் ஒரே காலத்தில் அதனிடத்திலிருப்பனவாக எண்ணப்படுகின்றது. எனவே இடத்தைப்பற்றிய முதன்மையான உணர்ச்சி காரண உணர்ச்சியே யன்றி அநுபவத்தாலாய எண்ணம் அன்றாம்.

* தீர்ந்த எண்ணம் = Determination.

## 2. * மனோதீத விளக்கம்.

மனோதீத விளக்கமானது எப்படி ஒரு விதியினின்று மற்றும் காரண முறையான † தொகையறிவு விளக்கப்படலாமென்பதைக் காட்டத் தலைப்படுகின்றது. அது பயனடைதற்கு (1) இப்பொழுது நாம் விசாரிக்கும் விதியினின்று பெறத்தக்க தொகையான உண்மைகள் உள்ளவாறே யிருக்கின்றன என்பதையும் (2) அவ்விதிக்குக் குறித்ததொரு பொருள் கொண்டாலே அவை அன்னணம் பெறப்படும் என்பதையும் நிரூபித்தல் வேண்டும்.

க்ஷேத்திர கணிதமானது இடத்தின் குணங்களைத் தொகையாயும் அதே காலத்திற் காரணவகையானும் நிச்சயிக்கின்றதொரு நூலாம். இடத்தைப் பற்றி இத்தகைய அறிவு உண்டாகக் கூடுமானால் அஃது எத்தன்மைத்தாயிருத்தல் வேண்டும்? அதைப்பற்றிய நம்முதலுணர்ச்சி மனத்துக்கே யுரியதோர் உணர்ச்சியாய்த்தான் இருத்தல்வேண்டும்; ஏனெனில் க்ஷேத்திர கணித உண்மைகளின் உண்மைபோன்ற புதிய உண்மை யாதொன்றும், ஒரு குறித்த எண்ணத்தின் ஆராய்ச்சியினின்றும் அடையப்படாதாம். இம் மனவுணர்ச்சியோ காரணவகையினதாதல் வேண்டும். அஃதாவது அது நாம் ஒரு புறப்பொருளை நேரிற் காணுதற்கு முன்னரே நம்மிடத்திருந்திருத்தல் வேண்டும்; ஆகையால் அது கலப்பற்ற தனியுணர்ச்சியே யன்றி அநுபவவுணர்ச்சியன்றாம். என்னையெனின், இடம் மூவகை யளவினதேயாமென்றற்போன்ற க்ஷேத்திர கணித உண்மையெல்லாம் நிரூபண நிச்சய முடையனவாம்; அஃதாவது, நம்முணர்ச்சிக்கு ஆவசியகமெனத் தோற்றுவனவாம்; இப்படிப்பட்ட உண்மைகள் அநுபவம் பற்றினவையல்ல; அநுபவம் பற்றிய உண்மைகளினின்று ஊகிக்கப்படுவனவுமல்ல. அப்படியானால், பொருள்களுக்கு முன்னரே அவற்றின் புறவுணர்ச்சி நம் மனத்தில் எப்படியிருத்தல் கூடும்? அப்பொருள்களைப் பற்றிய எண்ணம் அம்மனத்திற்காரணவகையால் எப்படி அநுமானிக்கப்படும்? தெளிவாகவே, இவ்வுணர்ச்சி நம்மிடத்திலேயே இருத்தல் வேண்டும்: அஃதாவது நம்முடைய மனவமைதியைச் சேர்ந்ததாய்த்தான் இருத்தல் வேண்டும்; இதனால் இம்மனவமைதி பொருள்களினால் அவற்றை நேராய் அறியும்படி அல்லது உணரும்படி வலியுறுத்தப்படுகின்றது; ஆகையால் உணர்ச்சி புறக்காட்சிகளுக்கெல்லாம் இன்றியமையாத ‡ சர்வவியாபக வடிவாகவே இருத்தல் வேண்டும் என்பது வெளிப்படை.

ஆகையால் நம்முடைய இவ்விளக்கம் ஒன்றுதான், க்ஷேத்திரகணிதம் காரணவகையானதும் தொகுதியானதுமான ஒருவகை அறிவுநூலாயிருக்கலாமென்பதைத் தெளிவாக்குகின்றது. மற்றைய விளக்கங்கள் இங்ஙனஞ்

* மனோதீதம் = Transcendental.
† தொகையறிவு = Synthetic Knowledge.
‡ சர்வ வியாபக வடிவு = Universal form.



செய்யப் பிழைபடுகின்றன. அவை புறத்தில் நாம் விளக்கம் போன்று இருப்பனவேனும் இக்கூறிய பிரமாணத்தினால் அதனினின்றும் எளிதிற் பகுத்தறியப்படலாம்.

### * துணிபுகள்.

i. இடமானது ஒருவாற்றானும் பொருள்களுக்கே யுரியதோர் பண்பன்று; அன்றிப் பொருள்களுக்கே, அவை தாமே தத்தமக்குடையதோர் இயைபுமன்று. அது புறப் பொருளுணர்ச்சியில் நம் இயற்கைத் தன்மைகளை அறவே நீக்கினும் அப்பொழுதும் அப்பொருள்களைச் சார்ந்துள்ளதோர் தீர்ந்த எண்ணம் அன்று. ஏனென்றால், நாம் பொருள்களைக் கண்டுணர்தற்கு முன்னரே, அவைகள் ஒவ்வொன்றையும் சார்ந்தேனும், அல்லது அவைகள் ஒன்றற்கொன்றுடைய இயைபினைச் சார்ந்தேனும் உள்ள, யாதானும் ஒரு தீர்ந்த எண்ணத்தைக் காரணவகையாற் காணல் ஒருபோதும் இயலாது.

ii. இடமானது புறத்தே புலனாகுங் காட்சிகள் அனைத்துக்கு முரிய † வடிவேயன்றி வேறொன்று மன்று. அது நமக்குப் புறவுணர்ச்சி உண்டாவதற்கு இன்றியமையாத ‡ அறிநிலையாம். நம்முடைய ஏற்குந் தன்மை, அல்லது பொருள்களால் வலியுறுத்தப் படுந்தன்மை, நமக்குப் பொருளைப் பற்றி யாதானுமோருணர்ச்சி யுண்டாவதன் முன்னரேயே ஆவசியகமாய் இருக்கிறது. ஆதலின், ஒரு பொருளை நேரிற்காணுதற்கு முன்னமேயே எல்லாக்காட்சிகளின்வடிவும் நம்மனதில் எப்படிக் காரணவகையால் இருத்தலியலு மென்பதையும், மேலும் இவ்வடிவு எல்லாப்பொருள்களையும் அறியவேண்டியதோர் கலப்பற்ற தனி உணர்ச்சியாகிப், பொருள்களை அநுபவத்திற் கண்டால் அப்பொழுது அறியப்படுகிற அவைகளுக்குள்ள இயைபுகளை, அவ்வநுபவத்திற்கு முன்னரேயே நிச்சயிக்கின்றனவான விதிகளை எப்படித் தன்னிடத் தடக்கியுள்ள தென்பதையும் எளிதில் அறியலாகும்.

ஆகையால், நம் மானுட இயற்கையை மாத்திரம கொண்டுதான் நாம் இடம், இடம்கொள்ளும் பொருள் முதலானவற்றைப் பற்றிப் பேசலாகும். புறப்பொருளுணர்ச்சி யெல்லாவற்றிற்கும் இன்றியமையாத - அல்லது பொருள்களால் வலியுறுத்தப்படுகிற - நமக்கேயுரிய தன்மைகள் நீங்கிவிட்டனவாகக் கருதினால இடம் என்னும எண்ணம யாதொரு பொருளுமில்லாததாய்ப் போய்விடும். பொருள்கள் நம் உணர்ச்சிக்கு எட்டினமட்டுமேயன்றி இடவளவை யுள்ளனவாகக் கூறமுடியாது. 'புலப்பாடு' என்று நாம் சொல்லுகிற இந்த ஏற்குந் தன்மையின மாறுபாடில்லாத வடிவு பொருள்கள் நமக்குப் புறத்தே யுள்ளனவாக நாம் உணரும் இயைபுகளுக்கெல்லாம் ஆவசியகமான நிலைமையாம்; இந்த வடிவு பொருள்களினிட

* துணிபுகள் = Inferences.
† வடிவு = Form.
‡ அறிநிலை = Subjective condition.

மிருந்து நீங்கினதாகக் கருதப்படுமாயின் அது தான் இடம் என்னும் பெயரால் அறியப்படுகிற கலப்பில்லாத தனியுணர்ச்சியாம். நம்முடைய காட்சிக்கு உரியவான தன்மைகளைப் பொருள்கள் இருத்தற்கே காரணமான நிலைமைகளென்று சொல்லலாகாது. அத்தன்மைகள் பொருள்கள் நமக்குப் புலப்படுகின்ற மட்டிலேயே அப்பொருள்களுக்கு உரியனவாம். ஆதலால், இடம் நமக்குப் புறமாகத் தோன்றக்கூடிய பொருள்கள் எல்லாவற்றையும் வியாபித்திருக்கின்றது எனச்சொல்லுதல் நேரிதாமாக, அவற்றை எவ்வகைப் பிராணி நோக்கினும், அல்லது அவை காணப்படினும் காணப்படாவிடினும், அவை தம்மிற்றும் உள்ளவாறே அவற்றை இடம் வியாபித்திருக்கின்றது எனச் சொல்லுதல் பொருந்தாதாம். என்னையெனின், நாமொழிந்த மற்றும் மனவுணர்வுள்ள உயிர்களுக்கும், பொருளுணர்ச்சியில் நமக்கு எங்கும் உளவாகத் தோன்றும் நிலைமைகளே யுள்ளனவென்று தீர்மானித்தற்கு நமக்கு யாதொரு வழியுமில்லை. ஒரு தீர்மானம் ஒரு பிராணிக்கு உரியதாகும் வரையறைகளை இன்ன என்று குறிப்பிப்போமாயின், அத்தீர்மானம் அதன் பின்னர் ஒரு வரையறையுமின்றி உண்மையாம். எல்லாப் பொருள்களும் ஒன்றன்பக்கத் தொன்றாய் இடத்தில் இருக்கின்றன என்னும் உண்மை நாம் நமக்கேயுரிய காட்சியுணர்ச்சியைப் பற்றியே பேசுகிறோம் என்னும் வரையறையுடனேயே உண்மையுடையதாகும். ஆனால் புறக்காட்சிகளாய் எல்லாப்பொருள்களும் ஒன்றன்பக்கத் தொன்றாக இடத்தில் இருக்கின்றன என்று சொல்லி நம் உண்மையின் விஷயத்தை இதைவிட நன்றாய்க் குறிப்பிப்போமாயின், அஃது எவ்விடத்தும் யாதொரு விலக்குமின்றி யுண்மையுடையதாகும். ஆதலின் நமது விளக்கம் நாம் எப்பொருளைப் புறத்தே காணலாகுமோ அப்பொருளுக்கே உரியதோர் தீர்ந்த எண்ணமாக இடத்தின் உண்மைநிலையை—அஃதாவது, பொருள்பற்றிய உண்மையை - நிறுவுகின்றது. பொருள்கள் உள்ளவாறே-அதாவது, நமக்குரிய பொருளுணர்ச்சி அமைதி நீங்கலாகவே-அவ்வப்பொருளுக்குத் தக்கபடி இடமானது உள்ளது என்று அறிவினால் எண்ணப்படின், அது * கருத்துநிலையாய் விடுமேயன்றிப் பிறிதன்றாம் என்பதும் அதே காலத்தில் ஏற்படுகின்றது. ஆதலால் நம்மாற் காணக்கூடிய எல்லாப் புற அநுபவங்களையும் குறிக்கும்பொழுது இடம் அநுபவவுண்மை உடையதென்பதை நாம் வற்புறுத்துகின்றோம்; ஆனால் அதன் மனோதீதக் கருத்து நிலையையும் நிறுவுகின்றோம்; அதாவது, அதனையே வேற்றுச்சொற்களாற் கூறப்புகின், இடம் நமக்குக் கூடுமான அநுபவங்களுக்கேயுரிய வரையறைகளை யுடையதென மதியாது, பொருள்கள் உள்ளவாறே அவற்றிற்கு உரியதோர் ஆவசியகத்தன்மையென எண்ணுவோமானால் இடமானது யாதொன்றுமன்று என்னுங் கொள்கையைக்கொள்ளுகின்றோம்.

வ. சு. சண்முகம் பிள்ளை.

* கருத்துநிலை = Ideality.



# MAHAVELLIPORE.

## மகாபலிபுரம்.

செங்கற்பட்டு ஜில்லாவைச் சேர்ந்த இதற்கு ஏழுகோயிற்பட்டணம் என்ற வேறு பெயருமுண்டு. இது சதுரங்கப்பட்டணத்துக்கும் கோவளத்துக்கும் மத்தியிலுள்ளது. நம்மவர்கள் ஆயிரக்கணக்காய் யாத்திரை செய்யும் புண்ணிய ஸ்தலங்களுள் இதுவும் ஒன்று. இவ்விடத்தில் அமைக்கப்பட்டிருக்கும் கோயிலால் நம்முடைய முன்னோர்கள் கல்வெட்டுத் தொழிலில் எவ்வளவு கைதேர்ந்திருந்தனர்களென்பது நன்கு விளங்கும். இக்கோயிலைக் கண்ணுறுவா ரெவரும் ஆச்சரியமடையாதிரார். கண்டவர் மனத்தைக் கவரும் இக்கோயில் சமுத்திரக்கரையோரத்திற் கட்டப்பட்டுள்ளது. இக்கோயில் பார்ப்பவர்க்கு ஐந்து பிரிவாகத்தோற்றும். இவைகளில் ஒன்று தனித்தும், ஏனைய நான்கும் ஒரு கூட்டமாகவுங் காணப்படுகின்றன. கூட்டமாயுள்ள நான்கும் தெற்கு வடக்காக ஒரு வரிசையிலிருக்கின்றன. அன்றியும் இவை நான்கும் ஒரே பாறையினின்றும் வெட்டப்பட்டன போலவுங் காணப்படுகின்றன. அப்படியிருக்கும் பக்ஷத்தில், இக்கற்பாறையானது தென்பாகத்திற் சுமார் 40 அடி உயரமும் வடபாகத்தில் 20 அடி உயரமும் இருந்திருத்தல்வேண்டும். வடகோடியிலுள்ள கோயில் 16 அடி உயரமும் 11 சதுரடிப் பரப்பும் உள்ளது. இக்கோயில் ஒன்றுதான் வேலை பூர்த்தியானதாகக் காணப்படுகின்றது. ஆனால் இதன் உட்புறத்தில் விக்கிரகமொன்றும் வைக்கப்பட்டிருக்கக் காணோம். ஆகையால் இதனை எதற்காகக் கருதினார்களென்பதையும் நாம் சரியாய் ஊகித்தறியக் கூடவில்லை. தென்பாகத்தில் உள்ள இதற்கடுத்த கோயிலும் இதைப் போலவே உள்ளது. இது 16 அடி நீளமும் 11 அடி அகலமும் 20 அடி உயரமும் உள்ளது. இதற்கடுத்தது மூன்றாவதுகோயில். இதுவே மிகவும் விசித்திரமானது. இது 42 அடி நீளமும், 25 அடி அகலமும் 25 அடி உயரமும் உள்ளது. இதன் தலைப்புறம் வில்வளைவாகத் தோண்டப்பட்டுள்ளது. இக்கோயிலின் வெளிப்புறம் முழுவதும் வேலை பூர்த்தியாயிருக்கிறது; உட்புறத்திற் கொஞ்சத்தூரம் மட்டில் வேலைசெய்து மற்றது குறையாகவிடப்பட்டுள்ளது. ஏதோ அபாயம் நேர்ந்து வேலையை நிறுத்தி விட்டதாகக் காணப்படுகிறது. மேன்மாடத்தில் ஒரு பெரியவெடிப்பு விட்டிருக்கிறது; அதனால் உட்புறத்தில் நல்ல வெளிச்சமுண்டு. மேலேயிருந்து அநேகம் சிறுபாறைகள் இடிந்து தரையில் விழுந்து கிடப்பதை அவ்வெளிச்சத்தில் நாம் நன்றாய்க்காணலாம். இவ்வெடிப்பு நிகழ்ந்ததற்குப் பலபேர் பல்வேறு விதமாய்க் காரணங்கூறுகின்றனர். பூகம்பத்தால் நிகழ்ந்திருக்கலாமென்பது அநேகருடைய அபிப்பிராயம். ஆனால் அந்த இடத்தை நாம் கவனித்துப் பார்த்தால் அவ்வெடிப்பு நிகழ்ந்ததற்குக்

காரணம் அவ்விடத்தில் வேலை செய்தவர்களுடைய திறமைக் குறைவாயிருக்கலாமென்பது தோற்றுகிறது. வெளிப்புறம் முழுவதும் வேலை செய்து விட்டுப் பின்பு உட்புறம் தோண்டப் புகுந்திருப்பார்கள். தம்முடைய கைத்தொழில் திறமையால் கோயில் தோண்டியதாக வின்றிக் கட்டப்பட்டதாகவே பார்ப்பவர்களுக்குச் சிறப்புடன் தோற்றுவிக்குமாறு தூண் முதலியனவும் நிறுத்தி வேலை செய்து வந்திருப்பார்கள். ஆனால் அங்ஙனம் செய்தவர்கள் கற்கூரையின் பளுவுக்குத்தக்க பெரிய தூண்களாக நிறுத்தாமற் சாதாரண வீடுகளில் மரக்கூரைகளுக்கு நிறுத்துவது போன்ற மெல்லிய தூண்களாகவே செதுக்கியிருக்கிறார்கள். இவ்வேலை மட்டிற் பூர்த்தியாயிருக்கும் பக்ஷத்தில், எப்போதாவது மேற் கூரை முழுவதும் திடீரென்று ஏககாலத்தில் இடிந்து விழுந்து கீழ்க்கட்டிடத்தையும் அதிலுள்ளவர்களையும் பொடிப் பொடியாக்கி விட்டிருக்கக்கூடும். ஆனால் அங்ஙனமின்றி வேலை குறையாயிருக்கும் போதே, வெடிப்பு விட்டபடியால், இதன் குறிப்பை அவர்கள் தெரிந்துகொண்டு மேலே வேலை செய்வது அபாயத்துக்கிடமென்றெண்ணி அதனுடன் வேலையை நிறுத்தி விட்டிருப்பார்கள். நான்காவது கோயில் 27 அடி நீளமும் 25 அடி அகலமும் 34 அடி உயரமும் உள்ளது. இதன் தலைப்புறம் முழுவதும் அநேகம் சித்திரங்களுடன் வேலை செய்யப்பட்டுப் பூர்த்தியாயிருக்கிறது. ஆனால் அடிப்புறம் அப்போது தான வேலை துவக்கி நிறுத்தி விட்டிருக்கிறார்கள். முற்கூறிய கோயிலுக்கு நேர்ந்த ஆபத்துக்குப் பயந்தோ அல்லது வேறு எக்காரணத்துக்கோ அறியக்கூடவில்லை. இவைகளெல்லாம் ஆறுவது நூற்றாண்டிற் செய்யப்பட்டிருக்கவேணடுமென்றும், இவைகள் பௌத்தருடைய கோயில்களைப் போலவே காணப்படுகின்றன வென்றும் இக்காலத்துச் சரித்திர வித்வான்கள் அபிப்பிராயப்படுகின்றார்கள்.

கடலோரத்தில் தனியாயுள்ள கோயிலானது சமுத்திரத்தின் அலைகள் அதன்மேல் வந்து மோதும்படி யமைக்கப்பட்டிருப்பதனாற் பார்ப்பதற்கு மிகவும் ஆச்சரியத்தை விளைவிக்கின்றது. இது பூர்வீக திராவிடர்களுடைய கோயில் மாதிரியாகவே கட்டப்பட்டுள்ளது; ஆகையால் இதற்குக்கோபுர வாசற்படியில் விசேஷமாக வேலை செய்யப்படாமல் மூலஸ்தானத்துக்கு மேலே பெரியவிமானமொன்று கட்டப்பட்டுள்ளது. இக்கோயிலின் பரப்பு சுமார் 1600 - அடியும் விமானத்தின் உயரம் 60-அடியும் இருக்கலாம். இதன் சிகரத்தில் உயர்ந்த கல்லிற் செதுக்கப்பட்ட ஒரு கலசம் நிறுத்தப்பட்டுள்ளது. இக்கலசம் எவ்விதக கேடுமடையாமல் இப்போதும் பொலிவுடன் விளங்குகின்றது. கீழ்ப்புறத்திலிருந்த கோபுரவாசற்படிக்கும் மூலஸ்தானத்துக்கும் இடையே யிருந்த வழியை அடைத்து விட்டபடியால் இவையிரண்டும் வெவ்வேறு கோயில்களாகக் காணப்படுகின்றன. இங்ஙனம் அவ்வழியை அடைத்திருக்கக் கூடுமென்பதற்கு வேறு அத்தாட்சிகளுங்



காணப்படுகின்றன. விமானமுள்ள பெரிய கோயிலுக்கு நேரியவழியொன்றுமில்லை. சிறுகற்பாறைகளின் பேரில் ஏறி அங்கிருந்து உள்ளே செல்லவேண்டியிருக்கிறது. கோபுரவாயிலென்று கருதப்படும் சிறிய கோயிலுக்குத் தரையிலேயே பெரியவழியொன்று தென்புறத்திலிருக்கிறது. சாதாரணமாக எல்லாக்கோயில்களிலும் உள்ளபடியே அவ்விடத்திலும் தீபஸ்தம்பம் ஒன்று இருக்கிறது. ஆனால் அஃது இருக்குமிடத்தை நாடுவதற்கு வழியொன்றையுங்காணோம். ஸ்தம்பத்தின் முனையில் ஒரு மூளைவைக்கப்பட்டுளது. கோயிலுக்குச் சமீபத்திற் சிறிய இடபங்களின் உருவங்களும் ஒரு மகேசுரன் உருவமும் கல்லில் வெட்டப்பட்டுக் கிடக்கின்றன. ஆனால் இவைகளெல்லாம் உப்பங்காற்றுப்பட்டு உருமாறிக் கிடக்கின்றன. மூலஸ்தானத்தில், மிகவுமுயர்ந்த கருங்கல்லினால் 16 பக்கங்களுடன் செதுக்கப்பட்ட லிங்கமொன்று வைக்கப்பட்டுளது. இதற்குப் பின் புறமாக உள்ள தாழ்வாரத்தில், சேஷசயனத்தில் விஷ்ணு பள்ளிகொள்ளும் விதமாக உருவம் வைக்கப்பட்டுளது. ஒரே கூரையின் கீழ் இவ்விரு விக்கிரகங்களும் எங்ஙனம் வைக்கப்பட்டனவோ காரணம் அறியக்கூடவில்லை. ஒரு வேளை சைவம் வைணவ மென்னு மிரு மதத்தினருக்கும் வேறு பாடு தோன்றிய காலத்துக்கு முன்னரேயே அவ்விக்கிரகங்கள் ஸ்தாபிக்கப்பட்டனபோலும். இக்கூற்றுக்கு அநுசரணையாகச் சுவர்களிற் பார்வதி, பரமேசுவரன், சுப்பிரமணியர் உருவங்களோடு பிரமவிஷ்ணுக்களின் உருவங்களும் செதுக்கப்பட்டுள்ளன.

கற்பாறையின் இடப் பக்கத்திலேதான் அர்ச்சுனன் தவம் புரிந்ததாய்ச் சொல்லுகின்றார்கள். பாறையின் இடப் பாகத்தின் மேற் புறத்தில் மகாபலிச் சக்கிரவர்த்தியினுடைய பெரிய உருவம் செதுக்கப்பட்டிருக்கிறது. சக்கிரவர்த்தியினுடைய சமீபத்தில் ஐந்து அரசர்களும் அவர்கள் மனைவிகளும், நான்கு யுத்தவீரர்களும், ஐந்து சந்நியாசிகளும் ஒரு மகர்ஷியும் விளங்குகின்றார்கள். சிங்கம், புலி, சிறுத்தை, கலைமான் முதலிய மிருகங்கள் அச்சித்திரங்களில் ஆங்காங்குக் காணப்படுகின்றன. அப்பாறையின் கீழ்ப்புறத்தில் ஒரு குரு தமது ஐந்து மாணவர்களுடனும் ஒரு மகர்ஷியுடனும் உட்கார்ந்திருக்கின்றார். இந்தக் குரு புத்தரா யிருக்கலாமென்றெண்ணுதற் கிடமுண்டு. அந்த மாணவரில் மூவருடைய தலைகளுடைந்து போயிருக்கின்றன. அப்பாறையின் மத்தியபாகத்தில் வாசுகியின் வாலும் உடலின் அடிப்பாகமும் காணப்படுகின்றன. இதற்குக் கீழே நாகராஜனது குமாரத்தி உலூபியினுடைய உருவம் காணப்படுகிறது. நாகராஜனது மேற்பாதி உடல் உடைந்துவிட்டதாயும் அவ்விடத்திற் பூமியிற் புதைக்கப்பட்டிருப்பதாயும் செவியுற்ற ஓர் ஆங்கில தனவான் அதனைத் தோண்டியெடுக்கச்செய்து உடைந்து போனவிடத்தில் அதைப் பொருத்தி அவ்வுருவம் முழுவதுக்கும் ஒரு

புகைப்படம் பிடித்தார். அதிற் கையிரண்டும் தலைமேற் கூப்பிய ஒரு மனித னுருவமும், தலை நிமிர்ந்து நின்ற ஓர் எழுதலை நாகமும் இன்னும் புத்தமதத் தைச்சார்ந்த பலகுறிகளும் காணப்பட்டன. இவற்றிற்கு வலப்புறத்தில் தத்தம் மனைவியுடன் கூடிய பல அரசர்களும் மனிதர்களும் கருடர்களென்று சொல்லப்படும் பக்ஷிகளுடன் கூடிய மனிதர்களும் அநேக வானரங்களும் காணப்படுகின்றன. இவ்விடத்தில் ஒரு பூனை தவஞ்செய்கின்றது; இதற் கருகிற் பல எலிகள் ஓடிக்கொண்டிருக்கின்றன. இன்னும், யானை, சிங்கம், கரடி, கோழி, வாத்து முதலியவைகளுங் காணப்படுகின்றன. ஆனால் இந் தப்பாகங்களெல்லாம் காடு அடர்ந்து மரங்களாலும் முட்களாலும் சூழப் பட்டு மறைந்து கிடந்தன. மேலேகூறிய புகைப்படமெடுத்த ஒருவாரங் கழித்துச் சென்னைத் தேசாதிபதியாயிருந்த நேபியர் பிரபுவவர்கள் அவ்வி டம் சென்று பூமியில் ஏழெட்டடி ஆழம் தோண்டிப் பரிசோதிக்கச் செய்த னர். உடைந்துபோன உருவங்கள் அநேகங் காணப்பட்டன. பெரிய யானையின் உடைந்துபோன துதிக்கையுங் காணப்பட்டது. புத்த குருவின் இடப் பாகத்தில் ஒருகலைமான் தலை குனிந்து தனது மூக்கைக் காலாற் சொரிந்து நின்றதைக் கண்டவர்களனைவரும் உயிருள்ள மானென்றே மயங் கினார்கள். யானை புலி முதலிய மிருகங்கள் ஒரு புறத்தில் உயிருள்ளவை போன்றே விளங்குவதும், புத்தகுருவும் அவர் மாணாக்கர்களும் இப்புறத் தில் தோன்றுவதும் நாகராஜனும் அவன் குமாரியும் பின்புறத்திற்காணப் படுவதும் பார்ப்பவர்களுக்கு மிகவும் ஆச்சரியத்தை விளைவிக்கின்றன. இவைகளிலிருந்து நாம் தெரிந்துகொள்ளக் கூடிய முக்கியமான விஷயமிது வொன்று: மனிதர் தத்தம் மனைவியுடன் செல்வதும், கொடிய மிருகங்கள் இடைக்கிடையில் வசிப்பதும் இவர்களுடன் அநேகர் புடைசூழ மகாபலிச் சக்கிரவர்த்தி செல்வதும் ஆகிய இக்காட்சிகள், அக்காலத்திற் பௌத்தமத மானது நல்லெண்ணம், பொறை, ஜீவதயையென்றுமிக் கொள்கைகளைப் பெற்றிருந்த தென்பதையும் மதஸ்தாபனமானது மிகவுஞ் சமாதானத்துட னேயே செய்யப்பட்ட தென்பதையும் ஒருவாறு தெற்றெனத் தெரிக்கின் றன.

சேய்யூர் - முத்தைய முதலியார்.

---

## விநோதக் கூற்றுக்கள்.

### 1. தும்மல் சிறையிலடைத்தது.

ஒரு சிறைச்சாலையில் வேடிக்கை பார்க்கவந்தவர் "நீ யேனடா சிறை யிலிருக்கிறாய்?" என்று ஆங்குள்ள ஒருவனைப் பார்த்துக்கேட்டார். அதற் கவன் "தும்மினேன், ஐயா" என்றான்.



"என்ன? நீ தும்மினதற்கா உன்னைச் சிறையி லடைத்தார்கள்?" என்று அவர் மீட்டுங் கேட்டார். அதற்கவன் "ஆம், ஐயா, நான் நடுநிசி யில் ஒரு பிரபுவின் வீட்டிற் சென்று தும்மினேன், அப்பிரபுவும் விழித்துக் கொண்டு என்னை உடனே பிடித்துக் கொண்டார்" என்றான்.

### 2. மூடர்களின் பெயரேடு.

ஓர் அரசனிடத்திற் சில வியாபாரிகள் சென்று அநேக உயர்ந்த அழ கான குதிரைகளைக் காட்டினார்கள். அரசனும் அவைகளை மெய்ச்சி வாங்கி னான். ஓர் இலட்சம் ரூபாயையும் கொடுத்து இன்னும் உயர்ந்த குதிரைகள் கொண்டு வரும்படி அனுப்பினான். இஃது இப்படியிருக்க ஒரு நாள் அரசன் சிரித்து விளையாடுஞ் சமயத்தில் தனது முதன் மந்திரியை நோக்கித் தன் இராஜ்ஜியத்தில் உள்ள மூடர்களின் பெயரை யெல்லாம் எழுதிக் கணக்கிடும் படி கட்டளையிட்டான். மந்திரியும் அப்படியே செய்து, எல்லாருடைய பெயர் களுக்கும் முதலில் அரசனது பெயரை எழுதி அரசனிடங் கொடுத்தான். அரசன் சினந்து "ஏன் அப்படிச்செய்தாய்?" என்று கேட்டான். "ஏனென் றால் முன் பின் முகமறியாதவரும் இனித்திரும்பி வாராதவருமான வியாபா ரிகளிடம் இலக்ஷ ரூபாயைக் கொடுத்தனுப்பிவிட்டீர்களே!"

"ஆ, அப்படியா? அவர்கள் குதிரைகளுடன் திரும்பி வருவார்களென் றன்றோ நினைத்தேன்?"

"அப்படி அவர்கள் திரும்பிவந்தால் தங்கள் பெயரை அழித்துவிட்டு அவர்கள் பெயரை எழுதுவேன்."

### 3. மகாராஜாவை என்னோடு பேசவைத்தேன்.

"இன்றைத்தினம் மகாராஜா என்னோடு பேசினார்" என்று ஒருவன் மற் றொருவனோடுரைத்தான்.

மற்றவன் மிகவும் ஆச்சரியப்பட்டு "உன்னோடா மகாராஜா பேசவந்தார்? என்ன பேசினார்? அடே! உனக்குச் சுக்கிர தசை யடிக்கிறதடா!" என்றான்.

"நான் கோட்டை வாசல் வழியாய்ப் போய்க்கொண்டிருந்தேன். மகா ராஜா அவர்கள் குதிரைவண்டியிலே வந்தார். நான் ஒதுங்காமல் நின்றேன். இராஜாவுக்கு முன்னே வந்துகொண்டிருந்த ஒருவருக்கும் நான் நகரவே யில்லை. பிறகு மகாராஜா அவர்களே என்னைப்பார்த்து "அடே! ஆரடா நீ? விலகி நில்; நீ ஏன் இங்கே நிற்கிறாய்?" என்று கேட்டார்."

க. தே. வேங்கட வரதாசாரியன்.

---

# REVIEWS OF BOOKS.

# புத்தகக் குறிப்புக்கள்.

## மில்லர் சரித்திரம்.

[இது தாம்ஸன் கம்பெனியார் பதிப்பித்தது; 10 அணு, 12 அணு, 1 ரூபா என மூவகை விலை யேற்பட்டுளது; தபாற்கூலி வேறு.]

இது சென்னைக் கிறிஸ்தவ கல்லூரியின் முதலுபாத்தியாயராகிய மில்லர் துரையின் சரித்திரத்தைக் கூறுவது. இதனை இயற்றினார் அக்கல்லூரி உபாத்தியாயர்களுள் ஒருவராகிய இராசரத்தினம் பிள்ளையவர்கள். மில்லர் துரையவர்கள் இத்தென்னிந்தியாவிற்செய்த நன்மைகள் பல; இங்குள்ள மாணவர் நயத்திற்காகவே அவர் தம் வாழ்நாள் முழுமையும் ஒப்பித்துவிட்ட அரிய செய்கையும் மிகவும் வியக்கற்பாலது. இவைகளைத் துரையவர்கள்பாற் கல்வி பயின்றோரும் அவரால் நன்மையடைந்தோரும் மற்றோரும் மறவாதிருத்தற்காக அவரது குண நலங்களையும் செயனலங்களையும் எடுத்து இன்புற வெழுதி நிலவச்செய்வது ஒரு நன்வினையேயாம். ஆயினும் இச்சரிதத்தை இங்கிலீஷில் எழுதாது தமிழில் எழுதியதற்குத் தக்க காரணம் ஒன்றும் காண்கிலேம்; மில்லர் துரையின் சுவபாஷை இங்கிலீஷ்; அவர் எண்ணுவதும் உரையாடுவதும் எல்லாம் இங்கிலீஷில்; அவர் கற்பித்ததும் அவரிடத்துக் கற்போர் பயின்றதும் இங்கிலீஷ்; ஆகவே அவருடைய சொல்லாற்றல் குணநலம் முதலியவற்றை இங்கிலீஷ்ப் பாஷை தெரிப்பது போல் மற்றொரு பாஷையும் தெரிக்கமாட்டாது; அஃதங்ஙனமாக, தமிழ்ப்பாஷையில் அவர் சரிதத்தை எழுதினது ஒரு பெருங் குறையேயாம். ஒருபோது இதனை ஆக்கியோன் கொள்கை இத்தகையபேருபகாரியைப்பற்றி இங்கிலீஷ் அறியாதாரும் அறிதல் வேண்டும் என்பது போலும். அதுபோக, இப்புத்தகத்தில் நம்மை மனங்களிக்கச் செய்வதொன்றுண்டு. அஃதென்னவெனில், இராசரத்தினம் பிள்ளை தாம் கிறிஸ்தவராயிருந்தும் தாமெழுதும் சரிதம் கிறிஸ்தவ போதகரொருவரின் சரிதமாக விருந்தும் மேற்கோள்களும் நீதி வசனமும் எடுத்துக் காட்டவேண்டிய விடங்களில் விவிலிய புஸ்தகம் முதலிய கிறிஸ்தவ நூல்களிலிருந்தெடுத்துக் காட்டாது சைவவைணவ நூல்களில் இருந்தெடுத்துக் காட்டியிருக்கின்றமையே. இது தமிழ்நூல்கள் மாணவர்களுக்கு நீதிபோதிக்கத் தக்கவைகளல்லவென்று மனத்தெழுந்தவாறு கூறும் ஒருசார்க் கிறிஸ்தவ போதகர்களின் வாயை யடக்க வேற்றது போலும்.

## ஸ்ரீராமாநுஜ சரிதம்.

[இது சென்னைத் தாம்ஸன் கம்பெனியிற் பதிப்பித்தது. விலை அணு 8; தபாற்கூலி வேறு.]

மேற் குறித்த பெயர் வாய்ந்த வசன நூல் ஒன்று எமது பார்வைக்கு வந்தது. இதனை இயற்றியவர் சென்னைச் சர்ச் ஆவ் ஸ்காட்லாண்டு மிஷன் காலேஜ் உதவித் தமிழ்ப்பண்டிதர் ம-ா-ா-ஸ்ரீ, தி. கோ. ஸ்ரீரங்காசாரியர். இந்நூல் எவரும்படித்தற்குரிய இனிய செந்தமிழ் வசன நடையினியன்றுள



6 பாரம் கொண்ட ஒரு சிறுநூல். இது ஸ்ரீ விசிட்டாத்வைத மதப்பிரவர்த்தகராய ஸ்ரீராமாநுஜாசாரியரது சரித மகிமையை எளிதாகவும் தெளிதாகவும் எடுத்தியம்புகின்றது. இதனுட்கூறப்படும் ஸ்ரீராமாநுஜரது காலநிர்ணயமும், விசிஷ்டாத்வைதக் கோட்பாட்டின் விவரங்களும், சரிதப் போக்கினுள் ஆங்காங்குக் குறிக்கப்படும் சில விசேடப்பொருள்களும், மேற்கோட் செய்யுட்களும், வைகுண்டம், தொண்டைநாடு ஸ்ரீபெரும்பூதூர் இவற்றின் வருணனைகளும் சால்புடையனவாகக் காணப்படுகின்றன. வைணவ சம்பிரதாய நூல்களுள் ஒன்றான குருபரம்பராப்பிரபாவம் என்னும் நூலினுள் ஸ்ரீராமாநுஜரது அவதாராதி வைபவங்கள், பலசுலோகங்களும் பாடல்களும் சம்பிரதாய மொழிகளும் செறிந்த மணிப்பிரவாள வசனநடையில் முன்னோர்களால் எழுதப்பட்டுள்ளன வேனும், அந்நூல் வைணவராயினார்க்கேயன்றிப் பிறர்க்கும் ஒப்பப் பயன்படாமையின், யாவர்க்கும் பயனுறத்துவான் கருதி இந்நூலினை இன்றியமையா விடங்களில் அத்தகைய மரபுச்சொற்களைத் தழுவி வேண்டுழி விடயங்களைப் பெருக்கியும், சுருக்கியும், விளக்கியும் நமது நண்பர் இயற்றி வெளியிட்ட செயலை வியக்கின்றேம். இத்தகைய நூல்கள் நம் தமிழ்மொழிக்கண் மிகுதியாகத் தோன்றி வெளிவருதல் அவசியமே. இப்பயனுடைச்செயலிற்கு நம் தமிழ்மொழியாளர் துணைபுரிதலும் அவசியமே. இந்நூலாசிரியரது இம்முயற்சி பயனுறுமாறு வேண்டுவதோடு இவர் இந்நூலின் முதற்கட்புத்தக விளம்பரத்திற் குறிப்பிட்டுள்ள ஸ்ரீ சங்கர விஜயம் என்னும் நூலினையும் விரைவில் வெளிக்கொணருமாறு விரும்புகின்றேம்.

இது காறும் இந்நூலின் குணங்களைப் பாராட்டி யெடுத்துக் கூறியது போலவே, இந்நூலிலுள்ள குற்றங்குறைகளுள் யாம் கண்டவற்றிற் சிலவற்றை நடுவு நிலைமை குன்றாது இங்குக் காட்டுவதும் எமக்கு ஒரு கடப்பாடாம்.

இந்நூலின் 2-ஆம் பக்கத்தில் (அவதாரிகையில்) "உள்ள நடுக்கடலில் திசைதப்பி யலைபவனுக்குக் காருணிகனான ஒருவன் தோணியை யுதவினாற்போலப் பிறவிப் பெருங்கடலில் வீழ்ந்து துன்பப்படும் மக்கள் அப்பிறவிக் கடல் கடந்துய்யலாம்படி மீளவுங் கருணைகொண்டு, கிணற்றினுள் வீழ்ந்த குழந்தையை யெடுக்க அதனுள் உடன் குதிக்குந் தாயைப்போல அத்திருமால் தானே, இப்புவியில் இராமகிருஷ்ணாதி யவதாரங்களைச் செய்து" என்ற வாக்கியத்தில் முதலிற்கூறிய உவமையில் தோணியை யுதவினாற்போல என்ற உபமானத்துக்கு ஏற்ற உபமேயம் காணப்படவில்லை; வேதம் முதலிய சாஸ்திரங்களை வெளியிட்டளித்து என்று உபமேயங் கூறினாற் பொருந்தும். பிரதானமான அவ்வுபமேயத்தை உய்த்துணரவைப்பது தெளிவன்று. 6-ஆம் பக்கத்தில் தொண்டைநாட்டு வருணனையிற் "பொய்கை பூதம் பேய் மழிசையர்கோன் முதலிய ஆழ்வார்கள் அவதரிக்கப்பெற்றதுமான இத்தொண்டை நாட்டினுள்" என்று எழுதப்பட்டிருக்கிறது. ஆழ்வார்கள் பன்னிருவருள் இங்குக் குறித்த நால்வர் தவிர மற்றை யெண்மரிற் குலசேகராழ்வார் சேர நாட்டிலும், தொண்டரடிப் பொடியாழ்வார் திருப்பாணாழ்வார் திருமங்கையாழ்வார் என்ற மூவரும் சோழநாட்டிலும், மற்றை நால்வரும் பாண்டி நாட்டிலும் பிறந்தவராதலால், 'முதலிய ஆழ்வார்கள்' என்றது பொருள்படாது வெற்றெனத்தொடுத்தலாம்.

இராமாநுசன் ஆளவந்தாரது குறைகளை நீக்கிய விவரத்தை முன்பு கூறி அதன்பின் 'ஸ்ரீ ஆளவந்தார் மிகவுங் கடாக்ஷித்ததும், அவரது விரல்கள் நிமிர்ந்ததும் உங்கள் மனதில் தோன்றவில்லையோ' என்ற விஷயத்தை யெழுதினால், படிப்பவர்க்கு விஷயம் இனிது புலப்படும். அங்ஙனமின்றி முன் பின்னாக மாறுபட, பிந்தின செய்தியை 21-ஆம் பக்கத்திலும் முந்தின செய்தியை 34-ஆம் பக்கத்திலுங் காட்டியது உசித மன்று. ஆளவந்தாருக்கு மூன்று குறைகளிருந்தனவென்றும், அவை இன்னவை யென்றும், அவற்றை இராமாநுசன் தீர்க்க உடன்பட்டனனென்றும், 34, 35-ஆம் பக்கங்களிற் குறித்துள்ளார். அக்குறைகள் இன்னின்னவகையால்தீர்க்கப்பட்டன வென்பதைப்பின்பு தெளிவாக விளக்கவில்லை. 48-ஆம் பக்கத்தில் ஒரு விஷயத்தை யெடுத்துக்கூறி அதன் முடிவில் 'இதனாலன்றோ ஆளவந்தாரது குறைகள் யாவும் நீங்கின' என்றெழுதியுளார். ஒரு செய்தியாற் குறைகள் யாவும் எங்ஙனம் நீங்கின ? அங்ஙனம் நீங்கினவென்றாலும், பின்பு 57-ஆம் பக்கத்தின் முதலில் வேறொரு விஷயத்தை யெடுத்துக்கூறி 'அதனாலன்றே நம் யமுனைத் துறைவரது மற்றைக் குறைகளும் நீங்கின' என்றும் எழுதுகிறார். முன்னமே குறைகள் யாவும் நீங்கினவெனின், இங்கு மீண்டும் மற்றைக் குறைகளும் நீங்கின என்றல் எங்ஙனம் சாலும் ? இங்கும் ஒரு செய்தியாற் குறைகள் நீங்கினவே என்றல் பொருத்தமோ ? மற்றொரு செயலால் மற்றொரு குறை நீங்கினதை இன்னதென்று குறிப்பிடவேயில்லை. இராமாநுஜ சரிதத்தில் முக்கியமான இவ்விஷயத்தை ஒழுங்காக எழுதியிருந்தால் உபயோகமாயிருக்கும்.

வைகுண்டமொழிந்த அனைத்துலகங்களையும் லீலாவிபூதி யென்பதே வைணவ சம்பிரதாயம்: அதற்குமாறாக 29-ஆம் பக்கத்து அடிக்குறிப்பில் 'லீலாவிபூதி [இப்பூலோகம்]' என்றது மரபுவழுவாம்.

உடையவரது பஞ்ச ஆசாரியருள் ஒருவர் பெயரைத் 'திருமாலையாண்டான்'என்று வழங்குதலே மரபு. "திருமாலை யாண்டான் திருக்கோட்டி நம்பி திருவரங்கப், பெருமா ளரையர் திருமலை நம்பி பெரியநம்பி, யருமால் கழல்சே ரெதிராசர்" என்று திவ்விய கவி-பிள்ளைப் பெருமாளையங்காரும், மற்றும் இவ்வாறே பிற ஆசிரியர்களும் கூறியிருக்கிறார்கள். அங்ஙனமிருக்க, இந்நூலில் அப்பெயரைத் 'திருமலையாண்டான்' என்று விகாரப்படுத்தித் தங் குறிவழக்க மிக வெடுத்துரைத்தலாக நூல் முழுவதும் வருமிடந்தோறும் அங்ஙனமே குறித்துள்ளார். இது சம்பிரதாயத்துக்கு மாறும். அன்றியும், பொருளடக்கத்தில் மாத்திரம் 'திருமாலையாண்டான்' என்று தாமே குறித்திருத்தல் மாறுகொளக் கூறலுமாகிறது.

32-ஆம் பக்கத்தில் "பாதநூளிகள்....வேண்டுவதன்றோ" என்ற முடியும், 92-ஆம் பக்கத்தில் (அநுபந்தத்தில்) இளையாழ்வாரை நோக்கி அவர் தாயார் கூறிய வாக்கியத்தில் 'நீ....வாழ்வீராக' என்ற முடிபும் பால்வழுவாம். அன்றியும், இரண்டாவதாகக் காட்டிய வாக்கியத்தில் மகனைத்தாய் 'வாழ்வீராக' என்றலும் இயல்வதன்று. 67-ஆம் பக்கத்தில் "தந்தையின் பொருளைத் தனயன் பெறுவதுபோலச் சடகோபனருளிய திருவாய்மொழியின் "ஒருநாயகம்" என்றதிருப்பதிகத்தை அத்திரு நாரணனுக்குச் சமர்ப்பித்து" என்ற விடத்தில் உபமான உபமேயங்கள் இயையவில்லை. 80-ஆம் பக்கத்திற் "கடித்த பாம்பு வலிதாகில் விரசை என்னும் நதியில் மூழ்கி



வைகுண்ட நாதனைச் சேவிக்கும்" என்ற வாக்கியத்தில் எழுவாய் காணப்படவில்லை ; உள்ளபடி பார்த்தாற் 'கடித்த பாம்பு' என்பது எழுவாய்போலத் தோன்றும். அஃது எழுவாயன்று ; உரிய எழுவாய் பெய்து எழுதல் வேண்டும்.

உடையவரது அந்திம நிலையில் அவரை அனைவரும் நன்கு ஓம்பிவந்தனரென்ற விஷயத்தை 86-ஆம் பக்கத்திற் 'செவ்வனே பழுத்திருந்த தேமாங்கனிக்குக் கிளித்திரள்கள் காத்திருக்குமாறு போல அவ்வெம்பெருமானுருடைய திருமேனியைக் காத்திருப்பாராயினர்' என்று விவரித்துள்ளார். இதிற் காட்டிய உவமை விபரீதப்பொருள் பயக்குமாதலாற் சிறவாது. 'தேமாங்கனிக்கு' என்ற நான்காம் வேற்றுமையும் அவ்விபரீதார்த்தத்தை வற்புறுத்தக் கூடியதாதலாலும், உபமேயத்திலுள்ள 'திருமேனியை' என்ற இரண்டாம் வேற்றுமையோடு முரணுதலாலும் அது தகுவதன்று.

பிழை திருத்தத்திற் காணாத பிழைகள் பல இந்நூற் பதிப்பில் எங்கும் பொதுளியுள ; அவை பார்ப்பவர்க்கு அருவருப்பைத் தருமாதலால், அவற்றை விலக்குதல் இன்றியமையாது. முகவுரையின் முதற்பக்கத்திற் 'பழைநடை', நூலிற் பக்கம் 8-இல் 'ஆயுஷ்காமயோகம்', 10, 20, 53, 85-இல் 'இராமநுசன்', 16-இல் 'காளஸ்தி', 50-இல் 'மாயாவதி', 67-இல் 'கண்வளர்க்கையில்', 71-இல் 'கூரத்ததாழ்வான்', 72 - இல் 'அரணைமேல்', 73-இல் 'வறலாற்றை', 82-இல் 'புதல்வரானப்பட்டர்', 89-இல் அடிக்குறிப்பில் 'உதத்துவஞானம்', 95-இல் 'திருக்குறுகை', இவை முதலியவை முக்கியமானவை. இங்ஙனம் அச்சுப்பிழையாகாத எழுத்துப்பிழைகளும் சில காணப்படுகின்றன ; அவை விரதத்தை 'விருத' மென்றும், நாகரிகத்தை 'நாகரீக' மென்றும் எழுதியது போல்வன.

இன்னோரன்னவற்றை யெல்லாம் நம்நண்பர் மறுபதிப்பில் நன்கு திருத்தி ஸ்ரீ ராமாநுஜ சரிதத்தைப் பலர்க்கும் இனிது பயன்படும்படி செய்வாரென நம்புகின்றேம்.

### கோவலவெண்பா.

[இது சென்னை வெ. நா. ஜூபிலி அச்சுக் கூடத்திற் பதிப்பிக்கப்பட்டது. விலை : அணா-4. தபாற்கூலி வேறு.]

இது சங்கநூல்களு ளொன்றாகிய சிலப்பதிகாரத்தின் கதையை யெடுத்துக்கொண்டு செய்யப்பட்டுளது ; காப்பியத்தலைவனான கோவலன் பெயரைவைத்துக் 'கோவல வெண்பா' வெனப்பெயரிடப்பட்டுள்ளது ; கடவுள் வாழ்த்து முதல் ஆக்கியோன் பெயரீறாக 298-பாடல்கள் கொண்டது. முதனூலாகிய சிலப்பதிகாரத்தைப் போன்றே வழி நூலாகிய இஃதும் புகார் காண்டம், மதுரைக்காண்டம், வஞ்சிக்காண்டம் என மூன்று காண்டங்களாகப் பகுக்கப்பட்டுளது. புகார்காண்டக் கதை முதனூலிற் பெரிதும் விரிந்திருப்ப வழிநூலுடையார் அதனை மிகச்சுருக்கி 60-வெண்பாக்களிற் கூறிவிட்டனர். இங்ஙனங் கூறியதன் காரணம் கல்வியறிவிற்றேரும் இளைஞர் இன்பச்சுவை கற்றலடாதென்ற கொள்கையேபோலும். இரண்டாவதாகிய மதுரைக்காண்டமே ஏனைய பகுதிகளினும் மிக்க சிறப்புடைத்தாக விளங்குகின்றது. இங்ஙனங் கூறியதனால் ஏனைய காண்டங்கள் சிறப்பில

வென்று கொள்ளற்க. இவ்வாறு மதுரைக்காண்டம் மிக்க பொலிவும் மேம்பாடுமெய்தி விளங்குதற்கு அக்காண்டத்தின் கதைச் சுவையும் ஒரு காரணமாதல் யாவரும் அறிவர். நூலினுள் ஆங்காங்கு நீதிகளை யெடுத்துக் காட்டிச் செல்லுமாறு யாவருங் கண்டு போற்றிக் கொள்ளத்தக்கது. மாணாக்கர்களது அறிவு முதிர்ச்சிக்குத் தக்கபடி நூலின் நடையும் அமைந்திருக்கின்றது. இடர்ப்பட்ட சொன்முடிபுகள் பொருண்முடிபுகளின்றிப் பல்வகைப்பட்ட அணி நலங்களும் செறிந்து ஓசையுடைத்தாய் நவின்றோர்க்கினிதாய் யாக்கப்பட்டுள இக்கோவல வெண்பாவினாசிரியர் இராசதானிக் கலாசாலைத் தமிழ்ப்பண்டிதர் ம-ள-ள-ஸ்ரீ பு. மா. **ஸ்ரீநிவாசாசாரிய ரவர்கள்.** இப்புலவர் வசன ரூபமாகச் செய்துள போஜராஜ சரித்திரத்தை நமது சென்னைச் சருவகலா சங்கத்தார் 1903-ஆம் வருஷத்து எவ். ஏ., பரீட்சைக்குப் பாடமாய் ஏற்படுத்தி யிருப்பதுபோல, இந்நூலிற் சில பகுதிகளை அன்னார் ஏதேனும் ஒரு வருஷத்திற் பிரவேச பரீக்ஷைக்குப் பாடமாக நியமிப்பார்களென் றெண்ணுகின்றோம்.

---

# EDITORIAL NOTES.

## பத்திராதிபர் குறிப்புக்கள்.

**மதுரைத் தமிழ்ச்சங்கம்** :—இச்சங்கம் நாளது செப்டெம்பர் மாதம் பதினைந்தாந்தேதி ஞாயிற்றுக்கிழமை யன்று மதுரைமா நகரத்து முதன்முறை கூடிற்று. அப்பொழுது பல தேயத்துத் தமிழ்ப்பண்டிதர்களுந் தமிழ்ப் பத்திராதிபர்களும் போந்திருந்தனர். மதுரைமா நகரத்துக் கனவான்களனைவரும் அச்சபையை யலங்கரித்தனர். அச்சமயத்து இராமநாதபுரம் **பாஸ்கரசாமி சேதுபதியவர்கள்** சபாநாயகராக வீற்றிருந்தனர். அற்றை நாட்காலையிற் சங்கத்தின் அக்கிராசனாதிபதியாகிய **பாண்டித்துரைத் தேவரவர்களும்** மற்றையோரும் மதுரைச் சொக்கேசராலயஞ் சென்று அருச்சனைகள் செய்து ஆண்டுள்ள சங்கத்தாராலயத்தை யடைந்து அன்னாரை வழிபட்டுப்போந்து அற்றைப் பிற்பகலிற் 'சேதுபதி செந்தமிழ்க் கலாசாலை' யையும் 'பாண்டியன் புத்தகசாலை' யையுந் திறந்து கல்வியறிவின் பொருட்டு அக்கலாசாலையிற் சேர்ந்து படிக்கப்புகுந்த மாணாக்கர்கட்கு நல்லோரையில் ஆசிரியர்களைக்கொண்டு பாடஞ்சொல்வித்துச் சங்கக் கூட்டத்திற்கு வந்தார்கள். சங்கங்கூடிய அம்மண்டபத்தில் எள்விழற்கிடமில்லாதவாறு ஜனங்களடர்ந்திருந்தனர். இத்தகைய சபையிற் சபாநாயகரவர்களது ஆணையின்படி சங்கத்தின் அக்கிராசனாதிபதியாகிய பாண்டித் துரைத் தேவரவர்களெழுந்து இப்புதிய தமிழ்ச்சங்கத்தின் நோக்கங்களையும் இயல்புகளையும் சங்கத்தின் அவயவிகளாவார் ஒழுகவேண்டிய முறைகளையும்பற்றி யினிது கூறி முடித்தனர். அதன்மேற் கும்பகோணக் கலாசாலைத் தமிழ்ப் பண்டிதரும் மகாவித்துவானுமாகிய **பிரமஸ்ரீ சாமிநாத ஐயரவர்களும்**, முகவைச் சமத்தான வித்துவானாகிய **ம-ள-ள-ஸ்ரீ இராகவையங்காரவர்களும்**, சென்னைச் சர்ச் ஆவ் ஸ்காத்லாந்து மிஷன் கலாசாலைத் தலைமைத் தமிழ்ப் பண்டிதராகிய **ம-ள-ள-ஸ்ரீ சடகோப ராமாநுஜாசாரிய ரவர்களும்**, சென்னைக் கிறித்தவ கலாசாலைத் தலைமைத் தமிழ்ப்பண்டிதராகிய **பிரமஸ்ரீ வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியாரவர்களும்** முறையே பிரசங்கித்தார்கள்.



அந்தப் பிரசங்கங்களைக்கேட்டு யாவரும் மகிழ்ந்தார்கள். பின்னர்ச் சபாநாயகராகிய சேதுபதியவர்கள் எழுந்து கடன்மடை திறந்தாற்போலப் பிரசங்கமாரி பொழிந்து ஆண்டுப்போந்துள வித்துவான்களனைவரையும்பற்றி வியந்துபேசி அன்னார்க்கும் இத்தமிழ்ச் சங்கத்திற்கும் உள்ள இயைபுகளை யினிது விளக்கியதேயன்றிப் பாண்டித்துரைத்தேவரவர்களுக்கும் இப்புதுத் தமிழ்ச்சங்கத்திற்கும் உள்ள பொருத்தத்தினைத் தெளிவுபெறக்காட்டி யாவருங் கரகோஷஞ்செய்து கொண்டாடும்வண்ணந் தமது பிரசங்கத்தை முடித்தனர். அவ்வளவிற் பாண்டித்துரைத் தேவரவர்களெழுந்து சேதுபதியவர்களையும் ஏனையோரையும் பற்றி நன்குமதித்துப்பேசி நின்றனர். யாவருக்கும் வந்தன மளித்தபின் சபை கலைந்தது. சங்கத்தின் பொருட்டுச் சேர்ந்திருக்கும்பணம் ரூ. 50,000 ஆம். இதற்கெனச் சேதுபதியவர்கள் மாதம் ஒன்றுக்கு ரூ 550 உதவி வருகின்றனர். அஃது ஒவ்வொருமாதமும் நடந்து வருதற்குத் தக்க நிலையான ஏற்பாடுஞ் செய்து விட்டனர்; தமது சமத்தான வித்துவானாகிய இராகவையங்கா ரவர்களையுஞ் சங்கத்திற்குச் **செந்தமிழ்** என்றதோர் மாதாந்தத் தமிழ்ப்பத்திரிகை நடாத்தும்பொருட்டு அளித்து விட்டனர். இப்பொழுது பாண்டியன் புத்தக சாலையில் உள்ள நூல்களின் தொகை ஆயிரத்திற்கு மேலிருக்கலாம். அதன்கட் பல அருமையான நூல்களின் ஏட்டுப்பிரதிகளும் சேகரித்து வைக்கப்பட்டுள. இப்பொழுது சேதுபதி செந்தமிழ்க்கலாசாலையிற் படிக்கும் மாணாக்கர்களின் தொகை 17. அவர்களனைவரும் ஏழைகளாயிருத்தலின் அவர்கட்குச் சங்கத்தாரே அன்னவஸ்திராதிகளும் உதவுகின்றனர். இச்சங்கத்திற்கென ரூ. 5000-க்கு நிலம் வாங்கியிருக்கிறார்கள். கூடிய சீக்கிரத்தில் இத்தமிழ்ச் சங்கத்திற்குக் கட்டிடமும் நேர்த்தியாக அமைக்கப்படுமென்பது திண்ணம். நிலம் சேதுபதி ஹைஸ்கூலிற்கு அருகேயுள்ளது. இச்சங்கக் கூட்டத்திற்கெனச் சென்ற ஒவ்வொருவருடைய சௌகரியங்களும் நன்கு கவனிக்கப்பட்டன. எல்லா விஷயங்களினும் இச்சங்கத்தின் முதற்கூட்டமானது சர்வ மங்களகரமாகவும் மகாநந்தகரமாகவும் நடந்தது. இதுபோலவே இனி நிகழக்கடவ கூட்டங்களும் நடக்குமென்பது தேற்றம். இனிச்சங்கத்தின் ஏனைய விஷயங்களையும் இம்முதனாட் கூட்டத்திற் பிரசங்கித்த புலவர்களது பிரசங்கச் சுருக்கங்களையும் பற்றி யடுத்த சஞ்சிகையில் விரித்துக் கூறுவாம்.

**முனிமொழி**:—யாம் இம்மதி 15-ஆந்தேதி கூடிய மதுரைத் தமிழ்ச்சங்கத்திற்குச் சென்றுழி நெல்லையினின்றும் போந்த ம-ள-ள-ஸ்ரீ பால்வண்ண முதலியாரவர்கள் முனிமொழி யெனப் பெயர் கொண்டதோர் பழைய செந்தமிழ்ச் செய்யுணூலொன்று அகப்பட்டுளதெனப் பிரமஸ்ரீ உ. வே. சாமிநாதையரவர்கள் முதலிய பலவித்வான்கள் முன்னிலையிற்கூறிப் பிரதியையும் விரைவில் அனுப்புவதாகவும் வாக்களித்தனர். அற்றேல் அவ்வையார் அருளிய "தேவர் குறளும்" என்றபாவிற் போந்துள 'முனிமொழியும்' என்ற சொற்றொடர்க்கு 'வியாசசூத்திரங்கள்' எனப் பொருள்கோடலும், 'வாதவூர் முனிவன் சொன்ன' எனப்பொருள் கோடலும் பொருந்தா வென்பது மலையிலக்கன்றோ ?

**திராவிட பாஷா சங்கம்** :—இதைப்பற்றி அடிக்கடி நாம் நமது பத்திரிகையில் எழுதி இருக்கின்றோம். எப்பொழுதும் நம்மவர்கள் தாம் தொடங்கும் காரியங்களி லெல்லாம் ஆரம்ப சூரத்துவம் காட்டுவார்க ளென்பது ஒவ்வொருவரும் அனுபவத்திற் கண்ட விஷயமே. முதற்கண் இச்சங்கம்

காலஞ்சென்ற சேஷாத்திரி யாசாரியர்வர்களால் தொடங்கப் பட்டபோது அஃதெவ்வாற்றானும் முன்னுக்கு வந்து யாவரும் விரும்பத்தக்க விதமாக உழைக்குமென்று யாவரும் நம்பியதற்கு விரோதமாக இப்பொழுது அச்சங்கம் வளர்ச்சியின்றிப் பிறந்த நிலையிலேயே இருந்து இருக்குமிடமும் தெரியாது மழுங்கிக்கிடத்தல் யாவரும் பரிதபிக்கத் தக்கதே. இச்சங்கத்தின் காரியதரிசிகளாவார் இச்சங்கத்தினை இன்னும் இவ்வாறே தூங்கிக்கிடக்க விடாது அதனை யெழுப்பி மேன்மேலும் வளரச் செய்வாராக.

**திராவிட வர்த்தமானி**:—இப்பெயர் கொண்டதோர் வாரத்தமிழ்ப் பத்திரிகை நமது சென்னையின்கட் பிரசுரிக்கப்பட்டு வருகின்றது. அதற்குப்பொதுவிற் பத்திராதிபர் ரெவரண்டு கெல்லெட் துரையவர்கள் எம். ஏ. இப்பத்திரிகையிற் சிலசஞ்சிகைகளை யாம் கண்ணுற்ற மட்டில், நேர்தியான பளபளப்புள்ள கடிதத்தில் யாவரும் வாசிக்கத்தக்க எளிய தெளிவான தமிழ்நடையிற் பலவகைப்பட்ட விஷயங்களையும் பற்றி விவகரித்து நம் இந்தியர்களாவார் யாவர்க்கும் எவ்வகையிலும் பயன் படத்தக்க விதமாய் அஃது அச்சிடப்பெற்று வெளிப்படுகின்றதென்பது தோன்றுகின்றது. இப்பொழுது வெளிப்பட்டு வரும் இச்சஞ்சிகைகளினுடைய அமைப்புக்குத் தக்கபடியே இனிவரும் சஞ்சிகைகளும் நடந்துவருமாயின் இம்முயற்சி கைகூடிற்றென்பதன் கண் யாதோரையப்பாடு மில்லை.

**புதிய வைஸ்-சான்ஸலர்**:—சென்னைச் சர்வகலாசாலைக்கு வைஸ் சான்ஸலராக நியமிக்கப்படுவோர்க ளெல்லாம் இதுகாறும் இராஜாங்க உத்தியோகம் வகிப்போர்களாகவே இருந்தனர். இப்பொழுது அங்ஙனம் ஏற்பட்ட விதியைப் போலியெனப் புறக்கணித்து ஒதுக்கிவிட்டு அவ்வுத்தியோகத்திற்குக் கலைநலஞ் சான்றோ ரெவரேனும் நியமிக்கப்படலா மென்று தாம் மேற்கொண்டதற்கு அறிகுறியாக நமது சென்னைத் தேசாதிபதி யவர்கள் சென்னைக் கிறித்தவகலாசாலைத் தலைவரும் தென்னிந்தியாவின் கல்வி விஷயமாக மிக்க பொருட் செலவு செய்து அன்போடு சென்ற 40 வருஷ காலமாக உழைத்து வருபவருமாகிய ஆனரபில் ரெவரண்ட் வில்லியம் மில்லர் துரையவர்கள், எம். ஏ., எல், எல், டி., டி. டி. டி. எல்., சி. ஐ. இ., தக்கவரென்று கருதி அவர்களை அவ்வுத்தியோகத்திற்கு நியமித்திருக்கின்றனர். இதன்கண் நமது தேசாதிபதி யவர்களது செய்கை மிகவும் வியக்கற்பாலது. இதற்காக நாமனைவரும் மகிழ் சிறப்போமாக.

**மாக்கின்லி துரையவர்கள்**:—அமெரிக்காவிலுள்ள ஐக்கியமாகாணங்களின் தலைவராகிய மாக்கின்லி துரையவர்கள் துப்பாக்கியாற் சுடப்பட்டு உயிர் துறந்தனர். இம்மகான் உயிர்துறந்தமைப் பொருட்டு யாவரும் துக்கங்கொண்டாடும் வண்ணம் அவர்க்கு மரியாதையாக இம்மதி 19 - ஆந்தேதி வியாழக்கிழமை விடுமுறை நாளாயிற்று. இவ்வளவு புகழ்வாய்ந்த பெருபகாரியின் பொருட்டு யாவருந் துக்கிக்கவேண்டியது அவசியமே.

**ஸர். கே. சேஷாத்திரி ஐயரவர்கள்**:—மைசூர் இராஜ்ஜியத்திற் சென்ற பல்லாண்டுகளாக அமைச்சுத் தொழில்பூண்டு, அரசருங் குடிகளும் ஆங்கிலரும் கொண்டாடி வியக்கும் வண்ணம் இராஜ்ஜியத்தை நடாத்தியதேயன்றி அதற்கு இன்றி யமையாதனவாகிய பலவகைப்பட்ட சீர்திருத்தங்களுஞ் செய்து புகழ்பெற்று விளங்கிய பிரமஸ்ரீ ஸர். கே. சேஷாத்திரி ஐயரவர்கள் சின்னாளின் முன்னர்க் காலஞ்சென்றனர் என்று கேள்வியுற்ற யாவரும் அவர் பொருட்டு இரங்குவாரென்பது திண்ணம்.

---

# ஞானபோதினி

## ஒரு மாதாந்தத் தமிழ்ப்பத்திரிகை.

தாமின் புறுவ துலகின் புறக்கண்டு
காமுறுவர் கற்றறிந் தார்—திருக்குறள்.

சம்புடம் V. } 1901ஹ அக்டோபர்மீ 20உ { புத்தகம் 3.

விஷயங்கள்.


மதுரைத் தமிழ்ச்சங்கம்.—பத்திராதிபர் ... 81
இராமாயண வாராய்ச்சி.—I. பண்டிதர் ச. ம. நடேச சாஸ்திரியார், பி. ஏ. 84
II. திரு. ஈ. வேங்கடாசாரியர் ... 90
வாயுமானி.—சி. சுப்பிரமணியாசாரி, பி. ஏ., எல். டி. ... 95
சிலப்பதிகார வாராய்ச்சி.—பி. ஏ. பிரணதார்த்திஹரசிவன், பி. ஏ. 97
இராதாராணி.—கி. அ. ஸ்வாமிநாத் ஐயர் ... 102
நீதிசாத்திரம்.—கா. நமச்சிவாய முதலியார் ... 108
விநோதக்கூற்றுக்கள்.—க. தே. வேங்கட வரதாசாரியர் ... 111
கடிதம்.— ... 112
புத்தகக் குறிப்புக்கள்.— ... 117
பத்திராதிபர் குறிப்புக்கள்.— ... 119



பத்திராதிபர்:— { எம். எஸ். பூர்ணலிங்கம் பிள்ளை, பி. ஏ.
வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியார், பி. ஏ.

சென்னை:
தாம்ஸன் கம்பெனியார்
பதிப்பிப்பது.

1901.

வருஷ சந்தா ரூ. 2—8—0] [சஞ்சிகை ரூ 0—4—0.

# ஞானபோதினி

சம்புடம் V. } 1901ஆம் அக்டோபர் மீ 20உ } புத்தகம் 3.


## MADURA TAMIL SANGAM.

## மதுரைத் தமிழ்ச்சங்கம்.

"ஆவியந் தென்றல் வெற்பி னகத்தியன் விரும்புந் தென்பா
னாவலந் தீவம் போற்றி நாவலந் தீவந் தன்னுண்
மூவர்கட் கறியா னிற்ப முத்தமிழ்ச் சங்கத் தெய்வப்
பாவலர் வீற்றி ருக்கும் பாண்டிநன் னாடு போற்றி"

என ஆன்றோராற் சிறப்பித்துக் கூறப்படுஞ் செந்தமிழ்ப் பாண்டி நாட்டின் தலைநகராகிய 'ஆயிரங் கண்ணே னருங்கலச் செப்பு, வாய்திறந் தன்ன மதிலக வரைப்'பினையுடைய மதுரைமாநகரத் தின்கண்ணே சென்ற மதி பதினைந்தாந்தெய்தி ஞாயிற்றுக்கிழமையன்று புதுவதோர் தமிழ்ச்சங்கங் கூடியது யாவரு முணர்ந்ததே. அற்றை ஞான்று அரங்கேறிப் பிரசங்கித்த புலவர்களது பிரசங்கங்களின் சுருக்கங்களையும் பிறவற்றையுங் குறித்துச் சென்ற மதி 24-ஆம் தெய்தி செவ்வாய்க்கிழமை வெளிப்பட்ட **சுதேசமித்திரன்** பத்திரிகையில் "மதுரை நகரான்" எனக் கையெழுத்திட்டு ஒருவரெழுதி யிருக்கின்றனர். அவற்றை ஆண்டுக்கண்டு கொள்க. இனிச்சங்கத்திற்கு இன்றியமையாத சிலவற்றைக் குறித்துப் பேசுவாம்.

நமது மதுரைத் தமிழ்ச்சங்கத்திற்கெனப் பொருள் பெரிதுஞ் சேர்ந்திருத்தலானும் நாளடைவில் அப்பொருள் விருத்தி

யடையுமாதலானும் முதற்கட் சங்கத்தினைத் துரைத்தனத்தார் அறியப் பதிவு செய்து யாவரும் ஏற்றுக்கொள்ளத்தக்க தாக்க வேண்டும்.

சங்கங்கள் யாவற்றினுக்கும் இன்றியமையாத அவயவிகளுட் காரியதரிசியாரே முக்கியமானவர். நமது தமிழ்ச்சங்கம் பெரிதாதலானும், இதற்குப் பொருள் விசேடித்திருத்தலானும், சங்கம் விருத்தியடையவே கடிதப்போக்குவரவு அதிகரிக்குமாதலானும், சங்கத்திற்கு வேண்டுவனவற்றை யெல்லாம் மேற்கொண்டு நடாத்துபவ ரொருவர் தனியே சங்கத்திற்கே வேண்டுமாதலானும் கௌரவ காரியாதரிசியாயிருந்தாற் சங்க விஷயங்களில் ஏற்றக்குறைவேதேனும் நிகழ்ந்தவழிச் சங்கத்தார் சில சமயங்களிற் கண்ணோடி வாய்வாளாமை மேற்கொள்ளவேண்டி வருமாதலானும், கௌரவ காரியதரிசியாரைக் கண்டித்துக் கேட்பதற்கியலாது போதலு நேருமாதலானும், கௌரவ காரியதரிசியார் ஊக்கத்துடன் வேலை செய்வா ரென்பதும் அத்துணை நிச்சயமில்லையாதலானும், மாதச் சம்பளத்துக்கு ஒருவரைக் காரியதரிசியாராக நியமித்து விடுதலே நலமென்பது எமது கொள்கை. அங்ஙனம் நியமிக்குமிடத்து அன்னார்க்குத் தக்க சம்பளங்கொடுத்து அவரை ஊக்குதலும் வேண்டும்.

சென்னைச் சர்வகலாசாலைப் பரீக்ஷைகட்குப் படிக்கும் மாணவர்களை வருடந்தோறும் அவ்வவ்வகுப்பிற்குத் தக்கபடி சர்வகலாசாலைத் திராவிட பாடசபையாரால் ஏற்படுத்தப்பட்டுள்ள நூல்களிற் பரீக்ஷைசெய்து அதன்கண் தேறியவருள் முதலைவர்க்கு மட்டிற் பரிசளிப்பதாய் நமது சங்கத்தார் நிச்சயித்திருக்கின்றனர். அங்ஙனம் பரிசு மட்டில் அளித்து நின்றக்கால், பரீக்ஷைக்குச் சென்று பரிசு வாங்கத் தகுந்த வன்மையுடையோர் மட்டுமே சங்கத்தார் செய்யும் பரீக்ஷைக்குச் செல்வாரேயன்றி ஏனையோர் அதனை விரும்பிச்செல்லார். அன்றியும், சர்வ கலாசாலையாரால் நடத்தப்படும் பரீக்ஷைகளோடு சங்கத்தார்தாமும் இங்ஙனம் ஒரு பரீக்ஷை நடாத்துவதும் தமிழ் கற்பார்க்கு அத்தமிழின்கண் மிக்க ஆர்வம் விளைத்தற்பயன் கருதியேயன்றோ? ஆதலான்



நமது சங்கத்தார் அங்ஙனம் பரீக்ஷை செய்யுங்கால் அதன்கட் பரிசு பெறுமற்போன போதிலும் தேறித் தக்ககலவியளவு காட்டுவார் யாவர்க்கும் யோக்கியதா பத்திரமளித்தல் வேண்டும். அன்னாருள் முதலைவர்க்கு மாத்திரம் யோக்கியதா பத்திரத்தோடு பரிசுமளிக்கலாம். இவ்வாறு செய்தாற்றான் அவ்யோக்கியதா பத்திரப்பேற்றின் பொருட்டேனும் பலரும் விரும்பிப் பரீக்ஷைக்குச் செல்வர். மற்றும், தமிழ்ப்பரீக்ஷைக்குச் செல்வார் யாவரும் கௌரவத்தின் பொருட்டாதல் ஜீவனத்தின் பொருட்டாதல் அன்றி யிவ்விரண்டன் பொருட்டுமாதல் செல்வாராதலின் தேறிய பலருள் முதலைவர்க்கு மட்டிற் பரிசளித்து மற்றையோரைக் கவனியாது நின்றுவிடுதல் நேரிதன்று. இவ்வாறன்றி யாம் கூறுமாறு தேறினாரனைவர்க்கும் யோக்கியதா பத்திரங் கொடுத்துவந்தால் அங்ஙனந் தேறியவருள்ளெவரேனுஞ் சீவனார்த்தமாய்ச் செல்வுழித் தங்கல்வியளவைப் பிறரறியுமாறு தாம் பெற்ற பத்திரத்தைக் காட்டிப் பயனடைவாரன்றே.

இப்பொழுது நமது தமிழ்ச்சங்கத்தின் ஓருறுப்பாக மகாராஜா பாற்கர சேதுபதி யவர்களால் ஏற்படுத்தப்பட்டிருக்கும் செந்தமிழ்க்கலாசாலையிற் படிப்போர்க்குத் தமிழ்ப்பாஷாஞானம் விருத்தியாவதற்குத் தக்கவாறு வருஷந்தோறும் இன்னின்ன நூல்கள் கற்பிக்கப்படுவன வென்றும் இன்ன நூல்கள் கற்றபின்னர் இன்ன நூல்கள்கற்பிக்கப்படுமென்னும் ஓரியைபு உண்டாக்கித்தமிழ்ப் பத்திரிகைகளின் மூலமாய் யாவருமறிய வெளிப்படுத்துதல் வேண்டும். வருடந்தோறுங் கற்பிக்கப்படும் நூல்களிற்பரீக்ஷை செய்து அதிற்றேறியமாணவர்க்கே வேறு நூல் கற்பித்தல் வேண்டும். அங்ஙனம் விதித்தபடி சில வருஷங்களிற் கற்றுத்தேறின் அவரவர் யோக்கியதைக் கேற்பப் ‘பண்டிதர்’, ‘புலவர்’, முதலிய பட்டங்களை யளித்தல் வேண்டும். இப்பரீக்ஷை சேதுபதி செந்தமிழ்க் கலாசாலையிற் படிப்போர் மட்டில் நில்லாது மற்றைய ஊர்களில் உத்தியோகங்களிலிருப்பவரும் பிறவாசிரியர்களிடங் கற்றுத் தமிழ்க்கல்வியில் ஆர்வமுடையரா யிருப்பாராதலின் இன்னின்ன நூல்கள் கற்றபின்னர் அவற்றின்கட் பரீக்ஷை நிகழுமென்று பத்திரிகைகள் மூலமாய்ச் சங்கத்தார் தெரிவிப்பாராயின் அவரும் அந்நூல்களைக் கற்றுப்

பரீக்ஷைக்குச்செல்ல விரும்பலாம். சர்வகலாசாலை மாணாக்கர்களுக்குப் பரீக்ஷை நடக்குமாறு போலவே இவர்களுக்கும் பரீக்ஷைகள் நடத்தி வரல் வேண்டும். அங்ஙனம் செய்தாற்றான் இக்காலத்துத் தமிழ் எழுத்துக்கள் மட்டுங் கற்று எளிய நடையினுள்ள வசன நூல்களையும் பிழையறப்படிக்க வியலாது செய்யுட்பெயரையுங் கேட்டிலராய் இருந்தபோதினும் 'புலவ'ரெனவும் 'பண்டித'ரெனவும் 'வித்துவா'னெனவும் 'அட்டாவதானி'யெனவும் போலியாகப்பட்டப் பெயர் புனைந்துகொண்டு தாமுங்கற்றார்போலச் செருக்கித்திரியும சில கையறியாமாக்களிடத்திருந்து தவிக்குந் தமிழ்மகள் உயர்நிலையெய்தி வனப்புற்று வளர்வாள். இனி, நமது சங்கத்தினின்றும் வெளிப்படவிருக்கும் 'செந்தமிழ்' என்னுமாதாந்தத் தமிழ்ப்பத்திரிகையைப்பற்றிய சில விஷயங்களையுஞ் சங்கத்தாரது அபிப்பிராயத்திற்கனுப்பப்படும் நூல்களை ஆராய்ச்சி செய்ய வேண்டிய முறையைப்பற்றிய விஷயங்களையும் பிறிதொரு சஞ்சிகையில் விரித்துக்கூறுவாம்.

இன்னும், 'பத்திராதிபர் குறிப்புக்கள்' என்ற தலைப்பின் கீழ்ச் சில விஷயங்கள் நம் தமிழ்ச்சங்கத்திற்கு ஆவனவென்று கருதி வரைந்திருக்கின்றோம். அவற்றை ஆண்டுக்காண்க.

**பத்திராதிபர்.**

---

# RAMAYANAM: REJOINDERS.
# இராமாயண வாராய்ச்சி.

## I

நிகழ்ந்த செப்டம்பர் மாதத்து ஞானபோதினிப் பத்திரிகையில் **ம-ா-ா-ஸ்ரீ, தி. த. கனகசுந்தரம் பிள்ளையவர்கள்** "பண்டிதர் மகாபாரதத்திற்கு இராமாயணம் முந்திய தென்றும் முன்னையதிற்கூறும் விஷயங்களினும் பின்னதிற்கூறும் விஷயங்கள் பழமையானவை யென்றும் கொண்டிருக்கிறார். பாண்டவர்களுடைய காலம் இராமனுடைய காலத்திற்குப் பிந்திய தென்பது அவர் கொள்கை போலும். எமது கொள்கை அதுவன்று. பாண்டவர்களுடைய காலம் முன் என்றும் இராமனுடைய



காலம் பின் என்றும் நாம் கொள்கின்றோம்" என்று எனது கொள்கையை ஆக்ஷேபித்துத் தமது கொள்கையை வெளியிட்டிருக்கின்றார். இது புதுமையிற் புதுமை. எனது கொள்கைக்கு நான் ஏழு காரணங்களை எடுத்துக்காட்டியிருக்க அவைகள் உண்மையில் அங்ஙனமல்ல என்பதை எடுத்துக்காட்ட முயன்று, எனது கொள்கை ஒவ்வொன்றையும் எடுத்து ஆக்ஷேபித்துத் தள்ளித் தமது கொள்கையை நிரூபியாமல் 'எமது அபிப்பிராயம் இது' என்று மொத்தமாய்ச் சொல்லி முடிக்கின்றார். பாண்டவர்கள் காலத்துக்குப்பின் இராமர் காலம் என்று அவர்கள் வர்தாடுகின்றபடியால் அவர்கள் முன்பாக நான் நின்று மறுமொழி சொல்லுவதைவிட வாயை மூடிக்கொண்டிருப்பதே மேன்மை. அப்படி நான் இருந்தால் தமது கொள்கையே நிலைநின்றது என்று அவர் நினைத்துவிடுவாராகையால் நானிப்பொழுது மறுமொழி சொல்லக் கடமைப்பட்டவனாகின்றேன். பாண்டவர்களுக்கு ஸகாய பூதராயிருந்த ஸ்ரீ கிருஷ்ணன் இராமனுக்கு எவ்வளவோ பின்னிட்டு அவதரித்தவர் என்பது மேலைத்தேசத்துப் புலவர்கள் கீழைத்தேசத்துப் புலவர்கள் ஆக எல்லோருக்கும் ஒப்ப முடிந்த கொள்கை. பாண்டவர்கள் காலம் இராமனுடையகாலத்துக்கு முன்பாக இருக்கவேண்டும் என்று பிள்ளையவர்கள் சொல்லுவது கிருஷ்ணாவதாரம் இராமாவதாரத்துக்கு முந்தியிருக்கவேண்டும் என்று சொல்லுவது போலும். இதை எத்தேசத்து வித்வான்களும் ஒப்புக்கொள்ள மாட்டார்கள்; மேலும் அவ்வாறு சொல்லுகிறவர்களுக்குச் சரித்திர ரகஸ்யமே தெரியாதென்றும் அவர்களை ஒன்றும் தெரியாதவர்கள் என்றும் அசட்டை பண்ணி விடுவார்கள்.

பிள்ளையவர்கள் "இங்ஙனம் பண்டிதர்கொண்ட கொள்கை நாம் மகாபாரத ராமாயணங்களைப் பற்றி எழுதியவற்றில் எடுத்துக் கூறிய கொள்கையோடு ஒற்றுமை யுடைத்துப்போற் றோன்றினும் அஃது உண்மையில் அங்ஙனமன்று" என்று எடுத்துக்காட்டுகின்றார்.

என் கொள்கையை அவர்கள் ஒப்புக்கொள்ளவே வேண்டாம். இராமாவதாரத்துக்கு முன் கிருஷ்ணாவதாரம் என்று வாதிப்பவர்கள் "நேர்நின்று காக்கை வெளிதென்பார்" போலும். அவர்கள் என் கொள்கையை ஒப்புக்கொள்வதைவிட ஒப்புக்கொள்ளாமலிருப்பதேதான் எனக்குமரியாதை. ஆனால் அவர்கள் எழுதிய வசனத்தின் அருத்தந்தான் இன்னதென்று எனக்குப் புலப்படவில்லை. என்கொள்கை அவர்களுடைய கொள்கைக்குச் சில விஷயங்களில் ஒத்திருந்தும் அப்படியன்றென்றால் என்ன அருத்தம்? எனது கொள்கைக்கு ஆதாரமாக நான் கொண்ட ஏழு காரணங்களைச் சுருக்கி எல்லாருமறிய இங்குக் காட்டுகிறேன் :—

| இராமாயணம். | மகா பாரதம். |
|---|---|
| 1. மகாபாரதக் கதை இராமாயணத்தில் ஓரிடத்திலேனும் காணப்படவில்லை. | 1. இராமாயணக்கதை மகாபாரதத்தில் 3, 4, இடங்களிற் காணப்படுகின்றது. |
| 2. இராமாயணத்திற் பரத கண்டத்தின் தென்பாகம் எல்லாம் தண்டகாரணியம் முதலான அரணியங்கள். | 2. மகாபாரதத்தில் தென்பாகமெல்லாம் ஆந்திரம், கர்ணாடம், சோளம், பாண்டியம் முதலிய தேசங்களிருந்தனவென்பதும், அவற்றின் அரசர்கள் பாண்டவர்களுடைய சபைக்கு வந்திருந்தனர் என்பதும் காணப்படுகின்றன. |
| 3. சீதாதேவி. | 5. த்ரௌபதை ராஜ்ய தந்திரம், மதவிஷயம் இவைகளிற் சீதையை விடத் தேர்ச்சி யடைந்தவள். த்ரௌபதையின் சார்வாகஸம்வாதம சத்தியபாமைக்கு அவள் புகட்டிய அறிவு இவைகளினால் நாகரிகம் விருத்தியடைந்த பிற்காலத்தில் த்ரௌபதி யிருந்திருக்கவேண்டும் என்பது. |
| 4. ஸ்ரீராமர் காலம் திரேதாயுகம். | 4. பாண்டவர்கள் துவாபர யுகத்தின் அந்தத்திலும் கலியுகம் ஆரம்பிக்கும்பொழுதும் இருந்தனர். |
| 5. மலை மரம் கல் இவைகளைக்கொண்டே இராமாயண யுத்தம் பெரும்பாலும் நிகழ்ந்தது. | 5. மகா பாரதத்திலோ நாகரிக யுத்தம்; பத்மவ்யூகம், சகடவ்யூகம் முதலிய பலவித வ்யூக வகுப்புக்கள் காணப்படுகின்றன. |
| 6. இராமாயணத்தில் இரண்டொருபாகத்தில் யவனர் முதலிய மிலேச்ச ஜாதியார் இருந்தனரென்பது தெரியவருகிறது. | 6. மகா பாரதத்தில் அநேக பாகங்களில் இச்சாதியார்களிருந்தனரென்பதும் அவர்கள் பாஷையை விதுரர் யுதிஷ்டிரர் முதலியவர்கள் பேசினரென்பதும் தெரியவருகின்றன. |
| 7. இராமாயணம் முதலில் வாய்மொழியாகப்பரவியது. | 7. மகாபாரதம் விநாயகர் எழுதியது. |

சரித்திரக்கண்ணைக் கொஞ்சம் நன்றாகத் திறந்துபார்க்கும் எவர்க்கும் இக்காரணங்களால் இராமாயண கதையின் காலம் முன் என்றும் மகாபாரத கதையின் காலம் பின் என்றும் கரதலாமலகம்போல்விளங்கும். மகாபாரதத்தில் அநேக ராச்சியங்கள் தக்ஷிணத்தில் இருந்தனவென்றும் யவனர் முதலிய ஜாதியார் அநேகர் இருந்தார்கள் என்றும் கூறப்பட்டுள்ளதே என்னின் "இவைகளெல்லாம் பிற்காலத்திற் புதிதாய்ச் சேர்க்கப்பட்ட பாகங்களிற் காணப்படுகின்றன" என்றுபிள்ளையவர்கள்சொல்லுவது அவர்கள்வடநூலைப் படித்துச் சொல்லுவதாகப் புலப்படவில்லை. ஏனெனில் இவைகள் வரும் இடங்கள் பொது நடைக்கு ஒத்திருக்கின்றனவேயன்றிப் புது நடையாகக்



காணப்படவேயில்லை. நல்லது, அவர்களுடைய கோணல் வழியை ஒப்புக்கொண்டே, இராமாயணத்தில் தக்ஷிணபாகம் அரணியமாகக் கூறப்பட்டிருக்கின்றதே என்றால், அதற்கு அவர்கள் என்ன மறுமொழி சொல்லுவார்களோ தெரியவில்லை. ஒருகால் அநேக தேசங்கள் சொல்லியிருந்த சருக்கங்களை நமது நாட்டார்கள் ஒளித்துவிட்டார்கள் என்று சொல்லுவார் போலும்!

இராமாயணம் மகாபாரதம் இவ்விரண்டு கிரந்தங்களிலும் மிகச் சில இடங்களே பிற்காலத்திற் சேர்க்கப்பட்டவையா யிருக்கலாம் என்பது எல்லாருக்கும் தெரிந்த விஷயம். இதைப் பற்றிப் பலர் பலவிதமாய்த் தம் தம் மனத்திற்குத் தோன்றியபடி யெல்லாம் எழுதி யிருக்கின்றார்கள். ஆனாலிவ்வாறு சேர்க்கப்பட்ட காரணத்தினாலே ஆதிகிரந்தங்களின் அழகு போகவேயில்லை. கொஞ்சம் கவனமாய்ப் படிக்கின்ற ஒவ்வொருவர்க்கும் இது சேர்க்கை இஃது ஆதிநூலின் பாகம் என்பது நன்றாகவிளங்கும். சேர்க்கப்பட்ட இடங்களை ஒரு பொருளாக எண்ணி ஒருவரும் இது வரையில் இராமாயணம் மகாபாரதம் இவ்விரு கிரந்தங்களையும் சீர்தூக்கிப் பேசினதில்லை. ஆதிநூல்களையே கைப்பற்றிக் கொள்கைகளை ஏற்படுத்துவது இதுவரையில் வழக்கத்தில் வந்துகொண்டிருக்கிறது. அஸ்தினாபுரம் வடக்காகையாற் பாண்டவர்கள் காலம் முன்; அயோத்தி அதற்குத் தென்கிழக்காகையால் இராமர்காலம் பின் எனபது இவ்விரு தேசங்களும் வெவ்வேறு வமிசத்தின் பிரதான நகரம் என்பதை மறந்து பிள்ளையவர்கள் எழுதுவது போலும். பஞ்சபாண்டவர்கள் திரௌபதி ஒருத்தியை மணந்த விஷயமாய் அநேகபதி விவாகத்தைப் பிள்ளையவர்கள் எடுத்துக்காட்டி அவர்கள் காலம் முற்காலம், இராமர்காலம் பிற்காலம் என்கின்றார். இவ்வழக்கம் பஞ்சபாண்டவர்களை யல்லாது இன்னும் எவ்வளவு பெயர்கள் விஷயமாய் மகாபாரதத்தில் எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது? இவ்வொரு விஷயத்தைக் கொண்டு மேலைத்தேசத்துப் புலவர்கள் பரிகாஸம் பண்ணுவது போலக் கீழைத்தேசத்துப் புலவராகிய பிள்ளையவர்களும் சொல்லுவது வெகு ஆச்சரியம்! அஃது அப்படியே உண்மையாகவே யிருந்தாலும் அதை நாம் துவாபர யுகத்தின் கடையிற் சிறுபான்மை வழங்கி வந்த ஒருவித விவாகம் என்றால் அதற்கு மறுமொழி என்ன? அதே மகாபாரதத்தில் ஏகபத்நீவிரதம் அதிகமாக விளங்குகின்றதே; அன்றியும் அநேகபதி விவாகம் ஸித்தாந்தமாக ஏற்படவில்லையே. இஃது ஒன்றே பெரு வழக்கமாக மகாபாரதமெங்கும் இவ்வாறிருந்தால் அநேக பதி விவாகம் அக்காலத்துச் சித்தாந்தம் என்று ஒப்புக்கொள்ள இடமாகும். இப்பொழுது நீலகிரியில் வசிக்கும் தொதுவர்களுக்குள் அநேகபதி விவாகம் வழக்கமா யிருக்கிறது. ஆகையாற் பாண்டவர்கள் தொதுவர்கள் என்பர்போலும். அவ்வாறே சிலமேலைநாட்டுப் புலவர்கள் சொல்லியு மிருக்கிறார்கள். அஸ்தினாபுரம் அவ்வளவு வாஸ

யோக்யமன்று என்றும் ஆகையாலேயே பாண்டவர்களுக்கு முன் இந்தியாவுக்கு வந்த சூரியவமிசத்தரசர்கள் அஸ்தினாபுரத்தைத் தாண்டி அயோதிக்கு வந்தார்கள் என்றும் அவர்களுக்குப் பின் வந்த சந்திரவமிசத்தரசர்கள் கிழக்கேபோக வழியில்லாமல் அஸ்தினா புரத்திலேயே தங்கினார்கள் என்றும் சொன்னால் அதுவும் எனது கொள்கைக்கு ஓர் ஆதாரமாகும்.

மேற்கூறிய **ஞானபோதினி** 51-ஆவது பக்கம் 6-ஆவது வரியில் ஆரம்பித்து 52-ஆம் பக்கம் 6-ஆவது வரியில் அதை முடித்துப் பிள்ளையவர்கள் 33 வரிகளிற் "பண்டிதர் தமது கொள்கைக்கு ஆதாரங்களாகக் காட்டும் காரணங்கள் ஏழும் அவர் கொள்கையை வலியுறுத்தாமை கண்டு கொள்க" என்று சாதித்துவிட்டார்கள். இது "நாம் சொல்லுவதைக் கேளுங்கள், அவன் சொல்வதைக் கேட்கவேண்டாம்" என்பது போலும். நான் சொல்லும் இரண்டொரு காரணங்களுக்கு ஆதாரமான இடங்கள் பின்னாற் சேர்க்கப்பட்ட பாகங்கள் என்று ஒரே எதிர்மறை முகமாக என்னைத் தடுப்பதைக் காட்டிலும் தாம் கொண்டிருக்கிற அபிப்பிராயங்களுக்குக் காரணங்களைத் திட்பமாய் விதிமுகமாகத் தாமாகவே எடுத்துக்காட்டி நிரூபித்தால் அது பிள்ளையவர்களுடைய ஸம்ஸ்கிருத பாண்டித்தியத்திற்கு அழகாயிருக்கும். மேலைநாட்டுப்புலவர்கள் நமது தேசாபிமானிகளல்லர்; மதாபிமானிகளுமல்லர். அவர்கள் சொல்லுவதவ்வளவையும் விவேகிகள் அங்கீகரிக்க முடியாது. இராமரே நிஜபுருஷரல்லர் நாகரிகத்துக்கு ஒரு பெயர் என்றும், சீதையே ஸ்திரீயல்லள் கலப்பை என்றும், அவர்களில் ஒருவர் எழுதி இராமாயணம் என்றால் தென்தேசத்துக்கு நாகரிகமும் வியவசாயமும் பரவ ஆரம்பித்த ஒருகதை என்கிறார். இவையெல்லாம் நாம் ஒப்புக்கொள்ளத்தக்கவையோ? பிள்ளையவர்கள் 'இராமாவதாரம் முன், கிருஷ்ணாவதாரம் பின்' என்று சொல்லுகிறாரா? அல்லது 'இராமாவதாரத்துக்கு முன் கிருஷ்ணாவதாரம்' என்கிறாரா? அவர்கள் கொள்கை கிருஷ்ணாவதாரம் முன் என்றிருக்குமாயின் அவருடன் இனி நமக்கு வழக்கேயில்லை. மற்றெவருக்கும் அப்படியேயாகும். அக்கொள்கைக்கு ஸர்வாதிபதி அவர் ஒருவரே.

பாலகாண்டத்திற் சில கட்டங்கள் சேர்க்கப்பட்டிருக்கலாம். முதலிரண்டு சர்க்கங்கள் ஒருகால் பிற்காலத்திற் சேர்க்கப்பட்டிருப்பினுமிருக்கலாம். பாலகாண்டம் முழுவதும் பிற்காலத்திற் சேர்க்கப்பட்டதென்று பிள்ளையவர்கள் தாம் மேலைநாட்டு ஜாக்கோபியாருடன் சேர்ந்துகொண்டு முதல் முதல் எடுத்துக் கூறுகிறார்கள் என்றெண்ணுகிறேன். உத்தரகாண்டம் வால்மீகிசெய்யவில்லை என்று சிலர் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். பாலகாண்டமும் வால்மீகியுடையதன்றென்பதை நான் இப்பொழுதுதான் கேள்விப்படுகிறேன். சிற்சில கட்டங்கள் பின்பு சேர்க்கப்பட்டாலும் ஆதி காவியத்தின் அழகு பாலகாண்டத்திற் காணப்படுகிறது. 'ஒரு தடவை

கூறியதனையே மறித்தும் மறித்தும் கூறுவதனாற் கதையின் இனிமையும் பாழ்பட்டுக்கிடக்கின்றது' என்று பிள்ளையவர்கள் அபிப்பிராயப்பட்டிருக்கின்றார். இது மூலகிரந்தத்தைப் படியாமல் மொழி பெயர்ப்பிற் படித்த தோஷத்தின் கொள்கையாகவே யிருக்கவேண்டும். ஏனெனில், மூலகிரந்தத்திற் படித்தால் என்னதான் மறித்து மறித்துக் கூறுவதாக இருந்தாலும், புதுமையாகவே தோன்றும். யுத்த காண்டத்தில் மட்டும் பல யுத்தங்களை ஒரே மாதிரியாக முனிவர் எழுதியிருக்கிறபடியால் இரண்டோர் இடத்தில் ஏன் இப்படி எழுதவேண்டும் என்று தோன்றும். என்ன இருந்தபோதிலும் மறித்து மறித்துக்கூறி முனிவர் கதையைப் பாழாக்கினதாக நாம் இது வரையிற் கேள்விப்படவேயில்லை.

* டாக்டர் ஏ. ஏ. மாக்டானெல் என்ற மேலை நாட்டுப்புலவர் போன வருஷம் (1900) ஸம்ஸ்கிருத பாஷையின் சரித்திரம் என்று ஒருபுஸ்தகம் எழுதிப் பிரசித்தப்படுத்தினார். அம்மேலை நாட்டுப்புலவர் சொன்ன சில விஷயங்களைப் பிள்ளையவர்கள் மேற் கூறிய ஸெப்டம்பர்மீ ஞானபோதினியில் அழகாய்ப் பெரும்பாலும் மொழிபெயர்த்துக்காட்டி அதனுடன் நில்லாமல் என் கொள்கையைத் தடுக்க ஆரம்பித்தார். சற்று நிதானித்து அதேபுஸ்தகத்தைப் பிள்ளையவர்கள் முற்றிலும் கவனித்திருப்பார்களேயானால் இங்ஙனம் செய்திருக்கமாட்டார். ஏனெனின் அந்த டாக்டர் மாக்டானெலே என் கொள்கையை அநுசரித்துப் பலஆதாரங்கள் சொல்லியிருக்கிறார். இரண்டொன்று இங்கு நான் காட்டுகிறேன். அப்புஸ்தகத்தையே எல்லாரும் படித்து அறிந்து கொள்ளுவது நலம். அந்த டாக்டர் இக்ஷ்வாகு, தசரதர், ராமர் என்ற பெயர்கள் ருக்வேதத்தில் இராமாயணகதையின் சம்பந்தமின்றிச் சொல்லப்பட்டுளதென்றும் அவ்வாறே மகாபாரதத்தின் கதாநாயகர்களிற் சிலபெயர்கள் யஜுர்வேதத்தில் வந்துளவென்றும் எழுதியிருக்கிறார். இது ராமாயணம் பழையது என்பது போலும். மறித்து மறித்துக் கூறிக் கதையை முனிவர் பாழாக்கினதாகப் பிள்ளையவர்கள் கொள்ளும் கொள்கைக்கு விரோதமாய் மாக்டானெல் அவர்கள் இவ்விராமாயணத்தை வெகுவாகப் புகழ்ந்து கல்லும் காவேரியும் உள்ள வரையில் விளங்கப்போகும் கிரந்தம் இஃது ஒன்றே என்றும் கோடிக்கணக்காய் ஜனங்கள் ஆனந்தத்துடன் படித்துவரும் கிரந்தம் இஃது ஒன்றே என்றும் மேலை நாட்டார்களுக்கு விவிலியநூல் போல ஹிந்துக்களுக்குள் விளங்கும் கிரந்தம் இவ்விராமாயணம் என்றும் சொல்லி முடிக்கின்றார். இதுதான் வடமொழியின் உருசியை அறிந்ததற்கு அழகு.

ச. ம. நடேச சாஸ்திரி.

---

* Dr. A. A. Macdonell.

## II.

சென்ற மாதத்து ஞானபோதினிப் பத்திரிகையில் ம-௱-௱-ஸ்ரீ, தீ. த. **கனகசுந்தரம் பிள்ளையவர்கள் (பி. ஏ.)** 'இராமாயணம்' என்ற தலைப்புக் கொடுத்து எழுதிய சில பக்கங்களை, விஷய கௌரவத்தைப் பற்றியும் எழுதியவர் பெருமையைக் கருதியும் ஒருமுறைக் கிருமுறை நன்றாகப் படித்துப் பார்த்தோம். பார்த்தபொழுது பிள்ளையவர்கள் எழுதியுள்ள விஷயங்கள் யாவும், அவர்கள் தாமாகவே இராமாயணம், பாரதம், புத்தஜாதகக் கதை, மற்றும் பல பௌத்த நூல்கள், சமண நூல்கள், கிரேக்க நூல்கள், ஜாக்கோபியார் எழுதிய நூல் முதலிய பல நூல்களையும் படித்துப் பார்த்து நுட்பமாக ஆராய்ச்சி செய்து சாரமாகப் புதிதாய் எழுதிப் பலர்க்கும் பயன்பட வெளியிட்டவை யென்றே யெண்ணினோம். அதனால் அவரது வடமொழித் தேர்ச்சி, பிறமொழிப்பயிற்சி, நூலாராய்ச்சி முதலியவற்றைப் பற்றி மிகவும் அரியவையென வியக்கவும் நேர்ந்தது. அன்றியும் ஆஸ்திகர் நாஸ்திகர் ஆஸ்திகநாஸ்திகர் என்ற மூன்றுபகுப்பில் எவ்வகை நிலையை மேற்கொண்டும், தேசாபிமான பாஷாபிமான மதாபிமானங்களை எவ்வளவு வரை கைவிடாதும், இவை துணிந்து எழுதப்பட்டனவோ வென்ற சங்கையும் நிகழ்ந்தது. பின்பு ஒருகால் தற்செயலாய் எமது கைக்கு எட்டின ஓர் புதிய * இங்கிலீஷ்ப் புத்தகத்தைப் படித்துவந்த பொழுது பிள்ளையவர்கள் எழுதியவற்றுட் பெரும்பாலன அதிற் காணப்பட்டன. பிள்ளையவர்கள் எழுதியவற்றிற் பண்டித நடேசசாஸ்திரியார் சம்பந்தமாக எழுதிய கடைசிப்பக்க மொழிய மற்றை முதலாறு பக்கங்களிலுள்ள விஷயங்கள் பலவும் மேற் குறித்த இங்கிலீஷ்ப் புத்தகத்தில் ஏ. ஏ. மக்டானெல் துரையவர்கள் (எம் - ஏ) எழுதியவையாகவே யிருந்தன. (சென்ற வருஷத்திறுதியில் வெளிப்பட்ட நடேசசாஸ்திரியார் புத்தகத்தைப் பற்றிச் சென்ற வருஷத் தொடக்கத்திலேயே வெளியான மக்டானெல் புத்தகத்தில் யாதொன்றும் எழுதப்பட்டிராதன்றோ !) இது கண்டவுடனே, எமக்கு முதலிலுண்டான எண்ணமும் வியப்பும் சங்கையும் முற்றும் நீங்க, வேறுவகையான எண்ணங்களும் மிக்க வியப்பும் ஆசங்கையும் அதிகமாத் தோன்றின. அன்றியும், யாம் இளமையில் ஒருகாற் படித்த "பிரதாப முதலியார் சரித்திர"த்திலுள்ளதொரு விஷயம் ஞாபகத்துக்கு வந்தது; அது வருமாறு :—

"ஒரு புலவர், நான் பாடின ஒரு கவியைப் பார்த்து, அதை நான் கம்பராமாயணத்திலிருந்து திருடிக்கொண்டதாகக் குறை கூறினார். 'நான் திருடவேயில்லை' என்றேன். அவர் அந்தக்கவி கம்பராமாயணத்தி லிருப்பதாகக் காட்டினார். நான் உடனே அவரைப்பார்த்து, 'நான் அந்தக்கவியைக் கம்ப

* "A. History of Sanskrit Literature by Arthur A. Macdonell, M.A., Ph. D."



ராமாயணத்திலிருந்து திருடி யெடுத்துக் கொண்டிருப்பேனாற் பிறகு அந்தக்கவி கம்பராமாயணத்தில் எப்படி யிருக்கக்கூடும்? ஆகையால், நான் திருடவில்லை யென்பதற்கு அந்தக்கவி கம்பராமாயணத்தி லிருப்பதுவே சாக்ஷி' என்று மெய்ப்பித்தேன்" என்பது.

யாம் இப்படி மனம் சபலப்பட்டதற்குக் காரணம், பிள்ளையவர்கள் தமது கையெழுத்திட்டு எழுதியதில் மக்டானெல் பெயர் எங்குங் காணப்படாமையே. பிறர்பொருளைத் தம்பொருளாக் கருதவேண்டும் என்ற நீதிநூற் கொள்கைக்கு விபரீதார்த்தஞ் செய்வார்போன்று, பிறர் எழுதியவற்றை அப்படியே தாம் எடுத்துக்கொண்டு தமது சொந்தம்போலவே வெளியிடுதலைச் சில சிறு புலவர்கள் தமது வழக்கத்தில் ஒருசார் வைத்துக்கொண்டிருப்பினும், இங்கிலீஷ்ப் பாஷையிலுந் தேர்ந்து நாகரிகம் முதிர்ந்த பிள்ளையவர்கள்போன்ற மெய்ப்புலவர்கள் இங்ஙனஞ் செய்தலை என்ஞான்றும் மரபாகக் கொள்ளாரென்பதே எமது துணிபு. பிள்ளையவர்கள் எழுதியவற்றையே துரையவர்கள் எடுத்துக்கொண்டனரென எண்ணலாகாதோவெனின், இவ்விருவரும் எழுதின நூல்கள் வெளிப்பட்ட காலத்தின் முன் பின் முறைமை அங்ஙனங்கொள்ள இடங்கொடுக்கவில்லை யென்பது தேற்றம். ஒருவர் எழுதியதை மற்றொருவர் பாராமலே இருவர்க்கும் ஒரே மாதிரியான எண்ணம் தத்தம் நூலாராய்ச்சியால் தனித்தனி ஜனித்திருக்கலாமே யென்றால், தற்காலத்தில் அவ்வாறு கொள்ளுதலொன்றே இன்னோரன்னவற்றிற்கெல்லாம் ஏற்ற வகையென அமைக்க. மேலும் பிள்ளையவர்கள் தாம் எழுதியதில் யாண்டும் பிறர் கூற்றாக வெளியிடாமையால், இங்ஙனங் கருதுதல் தவறாகாது. ஜாக்கோபியார் எழுதியவற்றுட் சிலவற்றை மாத்திரமே தமது பெருநூலில் ஒருசார் எடுத்தாண்ட மக்டானெல் துரையவர்கள் அந்த ஜாக்கோபியாரது பெயரை மறவாமல் ஒருமுறைக்குப் பலமுறை காட்டியிருக்க, அதுகண்ட பிள்ளையவர்கள் தாம எழுதியவற்றுள் முக்காலே யரைக்காற் பங்கும் மக்டானெல் எழுதியவையாகவே யிருந்தால், அத்துரையவர்கள் பெயரை எங்குங் காட்டாது ஒளித்திடுவரோ? இதனால், நடேச சாஸ்திரியார் சம்பந்தமாகப் பிள்ளையவர்கள் எழுதிய சிலவற்றிலும், நிகழ்ந்த ஏப்பிரல் மாதத்தில் மகா பாரதத்தைக் குறித்துப் பிள்ளையவர்கள் எழுதிய விஷயங்களிலும் இப்படிப்பட்ட ஐயம் நிகழ இடமுண்டாகாமற் போகாது. சிறிது காலத்துக்கு முன் வெளிப்பட்டதொரு புறத்தேசத்து நூலை நாடிப்படித்து அதிலிருந்து சிலவற்றை முக்கியமாத் தேர்ந்து சிரமமெடுத்துக்கொண்டு மொழிபெயர்த்துப் பலர்க்கும் உதவ வெளிப்படுத்தினரெனக் கொண்டாலும், அந்தமகோபகாரத்துக்காகப் பிள்ளையவர்களுக்குத் தமிழுலகம் வந்தனஞ் செலுத்தக் கடமைப்பட்டதாயிருக்கிறது. இஃது எவ்வாறாயினும் ஆகுக. இனி விஷய சம்பந்தமாகச் சிறிது நிகழ்த்துவோம்.

சூதர்கள் வார்த்தையை ஆதாரமாகக்கொண்டு வால்மீகி இராமாயணஞ் செய்யவில்லை; நாரதருபதேசத்தை முக்கியமாக்கொண்டே நூல் செய்தனர். (நாரதரையும் ஒருசூதரென்பர் போலும்!) குசீலவர்கள் பெயரால் இராமபுத்திரர்கள் குசலவரெனப்பெயர்பெறவில்லை; குசலவர் தொழிலாற் குசீலவரென்ற பெயர் தோன்றிய தென்னலாம். ஏழுகாண்டங்களும் வால்மீகி செய்தனவே; முதலிறுதிக்காண்டங்கள் பின்பு சிலராற் சேர்க்கப்பட்டனவல்ல. ஆறுங்காண்டத்தோடு நூல் முடியவில்லை; ஏழாங்காண்டத்தோடேயே முடிகிறது. பாலகாண்டத்திலுள்ளவற்றோடு பின்வருங் காண்டங்களிலுள்ளவை முரணுகின்றனவில்லை. இரண்டு அநுக்கிரமணிகைகளும் ஆதிகாலத்திற் செய்யப்பட்டனவே. இப்பொழுது உள்ள பாலகாண்டத் தொடக்கம் நூல் தொடக்கமே; அயோத்தியாகாண்டத் தொடக்கமோ இரண்டாவது காண்டத்தின் தொடக்கம். நூலினழகுகெடவுமில்லை; கதையினினிமை பாழ்படவுமில்லை. திரிகாலஞானியான வால்மீகிக்குக் கிரேக்கர் முதலியோரைப் பற்றித் தெரிந்திருக்கத் தடையில்லை; ஆயினும், கிரேக்கரே யவனரென்பது என்ன நிச்சயம்? யவனரைப் பற்றி இராமாயணத்திற் கூறியுள்ள பாகங்கள் புதிதாய் இயற்றிச் சேர்க்கப்பட்டவையல்ல. பாண்டவர் காலம் இராமன் காலத்துக்கு மிகவும் பிந்தியதே. அநேகராச்சியங்கள் தக்ஷிணத்திலிருந்தன வென்பது மகாபாரதத்திற் புதிதாய்ச் சேர்க்கப்பட்டதன்று. விநாயகர் பாரதமெழுதியவரலாறு பண்டையதே. இவ்விஷயங்களை அநேகம் பிரமாணங்களைக் கொண்டு எளிதிற் சாதித்து இவற்றிற்கு விரோதமான கொள்கைகளைச் சுலபத்தில் மறுக்கக்கூடும்.

ஆயினும், இந்த வாதம் தொடங்குமுன் யாம் சில விஷயங்கள் கேட்டறிய வேண்டியிருக்கின்றன; அவை யாவையெனின்,—நமது பிள்ளையவர்கள் சுருதி ஸ்மிருதி இதிகாச புராணங்களை யெல்லாம் பிரமாணமாகக் கொள்ளுகிறாரா? அல்லது, எவ்வளவு வரையிற் கொள்ளுகிறார்? பிரதியக்ஷ அநுமானப் பிரமாணங்களை தவிரச் சப்தப் பிரமாணமும் அவர்க்கு உடன்பாடுதானா? இராமகிருஷ்ணர்களைத் தமது தெய்வமாகக் கொண்டாடாவிடினும் விஷ்ணுவினவதார மென்றாயினும் ஒப்புக்கொள்ளுகின்றனரா? மகாபாரதத்திற் கூறப்பட்ட பாண்டவர் செய்கைகள்பல கிருஷ்ணசகாயத்தோடு நடந்தன வென்பது அவரால் அங்கீகரிக்கப்படுகின்றதா? அவர் மேற்கோளாகக் கொள்ளும் இராமாயண பாரதங்கள் வடநூல்களேயோ? அன்றி, அவற்றின் மொழிபெயர்ப்புத்தாமோ? அவருக்கு வடமொழிப் பயிற்சியுண்டா? இவற்றிற் கெல்லாம் சரியான விடை தெரிந்து கொள்வதோடு, இராமாயணத்தில் இன்னின்ன காண்டத்தில் இன்னின்ன சர்க்கத்தில் இன்னின்ன சுலோகங்கள் புதியவை அல்லாதவை பழையவை யென்பதைப் பற்றியும், பாரதத்திலும் எந்தெந்தப் பருவத்தில் எந்தெந்த உபபருவத்தில்



எந்தெந்த அத்தியாயத்தில் எந்தெந்தச் சுலோகங்கள் பழையன? எவ்வெவை புதியன? என்பதைக் குறித்தும், பிள்ளையவர்களிடமிருந்து அவர்கள் கையெழுத்துப்பட ஒரு விவரக் குறிப்பு வாங்கிக் கொண்டே இதில் தலையிட வேண்டி யிருக்கிறது. இல்லாவிடின், நாம் சிரமப்பட்டு அநேக மூலப்பிரமாணங்களை நாடி யெடுத்துக்காட்டியபின் 'அவை நமக்கு உடன்பாடல்ல' வென்றும், 'பிற்காலத்துப் புதிதாய்ச் சேர்க்கப்பட்ட பாகங்களேயன்றி ஆதியில் தோன்றியவையல்ல' வென்றும், 'மேலைத்தேயத்தார் கூற்றையே தழுவினேன்' மென்றும் கூறத்தொடங்கி விட்டால் என்ன செய்வது? இவற்றிற் கெல்லாம் அடுத்த சஞ்சிகையில் ஏற்றவிடை பிள்ளையவர்கள் பெயரால் வெளிவந்தால், அதற்கேற்பப் பின்பு நாம் சில கூறலுறுவோம். பிரமாணங்களை முதலில் நிச்சயித்துக்கொண்டு அதன் பின்பு பிரமேய விசாரஞ் செய்யத்தொடங்குதலே மரபு.

'மகாபாரதத்தில் **ஏழாவது பருவத்தில்**' இராமாயண யுத்தகாண்டச் சுலோகமொன்று வந்துள்ளது' என்று மக்டானெல் புத்தகத்திலிருக்கிறது. பிள்ளையவர்களோ 'மகாபாரதத்திற் **கர்ணபருவத்தில்** இராமாயணத்து யுத்தகாண்டத்திலிருந்து ஒரு சுலோகம் எடுத்தாளப்பட்டுளது' என எழுதியுள்ளார். **ஏழாவதுபருவம் துரோணபருவம், கர்ணபருவமோ எட்டாவது.** இந்த மாறுபாடு, மொழி பெயர்க்குங்கால் நேர்ந்த பிழையோ? அல்லது, இராமாயணத்திற் பாலகாண்டம் போலப் பாரதத்திலும் முதலில் ஏதேனும் ஒரு பருவம் புதிதாய் விலக்கத் தக்கதோ? அன்றி, "முன்னோர் நூலின் முடிபொருங்கொத்துப், பின்னோன் வேண்டும் விகற்பங்கூறி" என்ற வழிநூலிலக்கணம் வழிநூல் வகைகளுளொன்றாகிய மொழிபெயர்ப்பிலுங் கொள்ளப்பட்டதோ? மற்று, முதனூலிலுள்ளது வழுவென மாற்றப்பட்டவாறோ? இனி, தாமாக வேறொன்று கண்டபடியோ? இன்னதென்று விளங்கவில்லை. பிள்ளையவர்கள் இதனைத் தெரிவிப்பதோடு, அந்தச் சுலோகம் இன்னதென்றும், அப்படியே புத்த ஜாதகக் கதையிற் சேர்த்தெழுதப்பட்ட இராமாயண சுலோகமும் இன்னதென்றும் தெரிவித்தால், அவற்றின் தன்மையும் ஆராயப்படும். '**இராமாயணஞ் செய்துள்ளது சுலோகத்தால். அதுவே** சம்ஸ்கிருதப் பாக்களுளெல்லாம் செய்ய எளிதானது' என்று காட்டிய வாக்கியத்தின் கருத்தைப் பிள்ளையவர்கள் விவரித்தெழுத விரும்புகிறோம். மற்றும், துரையவர்கள், வால்மீகியாச்சிரமம் கங்கையின் தென்கரையிலுள்ளதென்று உத்தர காண்டத்தின் **நாற்பத்தைந்தாஞ் சருக்கத்திற்** கூறியுள்ளதாகக் கூறுகிறார். பிள்ளையவர்களோ, தொடக்கத்திலேயே, **ஐம்பத்தேழாவது சருக்க** மென்கின்றார்; இவ்வேறுபாடு என் வந்தது? இதன் காரணத்தையும், ஐம்பத்தேழாஞ் சருக்கத்திற் கூறியுள்ள இடத்தையும் பிள்ளையவர்கள் எடுத்துக் காட்டுவாராக.

நாட்டார் நகரத்தார், ஆண்பாலார் பெண்பாலார், பெரியோர் சிறியோர், முனிவர்கள் புலவர்கள், கற்றவர் கல்லாதார், அகச்சமயிகள் புறச்சமயிகள், இத்தேயத்தார் பிறதேயத்தார் ஆகிய அனைவரும் தொன்று தொட்டுக் கூறி வருங் கொள்கைக்கு இயையப் பண்டிதர் நடேச சாஸ்திரியார் கூறிய கொள்கையை மறுத்தற்குப் பிள்ளையவர்கள் காட்டிய காரணம் இரண்டே. i. அயோத்தி அஸ்தினாபுரத்துக்குத் தென்கிழக்கிலிருத்தல். இதைக் கூறும்போது பிள்ளையவர்கள் தாமே 'இப்போது வழக்காற்றிலுள்ள கொள்கை. இஃதுண்மையாயின்' என்று துணிவில்லாமற் சங்கைக்கு இடங்கொண்டே யெழுதியிருத்தலால், 'அவர் தமது கொள்கைக்கு ஆதாரமாகக் காட்டுங் காரணம் அவர் கொள்கையை வலியுறுத்தாமை கண்டு கொள்க.' வழக்காற்றிலுள்ள கொள்கை யென்பதில் ஆக்ஷேபத்துக்கிடமுண்டு. ஆரியர்கள் ஓரிடத்திலிருந்து ஒரே காலத்தில் ஒருங்கே பிரயாணப்பட்டு ஒரே வழியால் வந்து ஒவ்வோரிடத்திற் சிற்சில காலந் தங்கிப் பின்பு அவ்வனைவரும் ஒருசேரத் தம்தம்மரபினருமுட்பட அவ்விடத்துக்குஅப்பாற்சென்றனரென்றும், பின்புஅவர்களில்எவரும் எக்காலத்தும் எக்காரணத்தாலும் வடக்கேசென்றிலரென்றும் சரித்திரசித்தாந்தம் ஏற்பட்டால்மாத்திரமே பிள்ளையவர்கள்கொள்கை நிலைக்குமேயொழிய மற்றைப்படிநிலையுறாது. சரித்திரத்துணிவு அன்னதன்றென்பது தேற்றம். அன்றியும், அயோத்தி இராமன் காலத்திலேயே நூதனமாய் ஏற்பட்ட தொரு நகரமன்று. இக்ஷ்வாகு காலம் முதல் தொன்று தொட்டுள்ளதன்றோ? விரிப்பிற் பெருகும். ii. அநேகபதிவிவாகத்திற்குப் பிந்தினது ஏகபதி விவாகமென்பது. இதிலும் பல ஆக்ஷேபங்கட்கு இடமுண்டு. அன்றியும், பாரத சரித்திரம் முழுவதிலும் ஏகபதி விவாகமென்பது கூறப்படாமல் அநேகபதி விவாகமே எங்குங் கூறப்பட்டிருந்தாலன்றோ அது பிள்ளையவர்கள்கொள்கைக்குச்சாதனமாம். அப்படியில்லையே. துரியோதனன்தாயும் அவன்மனைவியும் அவன்தங்கையும் சுபத்திரை உத்தரையாதிய ஏனையோரும் பலரை மணஞ்செய்து கொண்டதாகப் பாரதங் கூறிற்றிலதே! என் செய்வது? மற்றும், பிள்ளையவர்கள் சொல்லுகிறபடி கொண்டால், இப்பொழுதும் சிற்சில விடங்களில் அநேகபதிவிவாகம் நிகழ்தலால் அது செய்பவர்கட்கெல்லாம் பிந்தினது இராமன் காலமென்றன்றோ சொல்லவேண்டிவரும்? அதிவ்யாப்தி அவ்யாப்தி முதலிய குற்றங்கட்கு இடமில்லாமல் ஆராய்ச்சி செய்தெழுதினால் நன்றாயிருக்கும். திரௌபதியின் அநேகபதிவிவாகந் தானும் தற்காலப் பொதுவழக்குப்படி நிராக்ஷேபமாக நடந்ததென்று சரித்திரம் உண்டோ? உலக வியல்புக்கு மாறானதென அச்செயல் முதலில் மிகவும் ஆக்ஷேபிக்கப்பட்டதென்றும், பின்பு தக்க சில நியாயங்களாற் சிறப்பாக அங்கீகரிக்கப்பட்டதென்றும், அவ்வாறிருந்தும் பின்பு அதனைச் சிற்சில சமயங்களிற் சிற்சிலர் இழித்துக் கூறினரென்றும் பாரதம் கூறுகிறதே! அநேகபதிவிவாகமே அக்காலத்து வழக்காறாயிருந்



தால் சர்வஜன சம்மதமான அஃது எங்ஙனம் சிலராலேனும் இகழப்படும்? இத்தன்மையவற்றை யெல்லாம் உணர்வுடையார் சீர்தூக்கிக் குற்றத்தை விலக்கிக் குணத்தைக் கொள்வாராக.

மேல் யாம் கேட்ட சிலவற்றிற்கு விடை வந்த பின்பு எழுதவேண்டியவை எழுதப்படும்.

திரு. ஈ. வேங்கடாசாரியன்.

---

# THE BAROMETER.

## வாயுமானி.

இப்பூமண்டலம் வாயுவாற் சூழப்பட்டிருக்கிற தென்பது யாவரும் அறிந்த விஷயம். ஆனால் அவ்வாயு எவ்வளவு உயரம் பரவியிருக்கிறதென்பது யாவரும் அறியாத விஷயம். அஃது ஏறக்குறைய ஐங்காத உயரம் மட்டுமே பரவியிருக்கிற தென்பது சிலர் கொள்கை. இது தவறு. திடதிரவ வாயுக்களென்னும் மூவகைப் பதார்த்தங்களுள் வாயு பதார்த்த மென்பது வெளியிட மெங்கும் வியாபிக்குந் தன்மையையுடையது. பூமியைச் சூழ்ந்துள்ள வாயுவும் மேல் நோக்கிச் செல்வதன்கண் வெளியிடம் எல்லையிலதாக விருத்தலின், தானும் வரையறை யின்றி வியாபிக்குமென்பது வெளிப்படை. இவ்வாறு வரையறை யின்றி வியாபியாநிற்குமாயினும் இத்துணை வாயுவும் பூமியின் மீது உறுத்தும் அழுத்தல்வலியினைச் சிறிதும் பிசகாமல் அளவிடுதல் கூடும். * வாயுவின் அழுத்தல்வலியினை யளவிடுதற்கு வேண்டிய கருவியினையே 'வாயுமானி' என்று சொல்வார்கள்.

இருமுனையுந் திறந்துள்ளதோர் கண்ணாடிக்குழாயினை யெடுத்துக்கொள்ளுங்கள். அதன் ஒரு முனைக்கண் காகிதத்துண்டைப் பொருத்தி மற்றொரு முனையின் வழியாக உள்ளிருக்கும் வாயுவினை உறிஞ்சினாற் காகிதத்துண்டு கீழ் வீழாமற் கண்ணாடிக் குழாயோடும் ஒட்டிக்கொள்ளுகிறது. இதற்குக் காரணமென்ன? உள்ளிருக்கும் வாயுகுறையவும் வெளியிலுள்ளவாயு உட்புக முயல்வதன்கட் காகிதத்துண்டை உட்புறமாக அழுத்துகிறது. கண்ணாடிக் குழாயினை எப்புறமாக நிறுத்தினும் இவ்வாறே காகிதத்துண்டு அழுத்தப்படுவதைக் காண்பீர்கள். இதனால் வாயுவிற்கு எப்புறத்தும் இவ்வழுத்தல்வலி யுண்டென்பதறிகிறோம்.

பிறகு ஒரு கண்ணாடிப்பாத்திர மெடுத்து நிறையச் சலம்விட்டு அதன் வாய்ப்புறத்தைக் காகித வட்டையால் மூடிக் கவிழ்ப்பீர்களானால் நீர் சிறி

* Atmospheric Pressure.

து கீழ்விழாதிருப்பதைக் காண்பீர்கள். இதற்குக் காரணமென்ன? அப்பாத்திரத்துள்ள நீரின் அழுத்தல்வலியினும் அதிகமாக அட்டையின் கீழ்ப்புறத்தினின்றும் வாயு அழுத்துவதேயாம். பாத்திரத்தைக் குப்புறக் கவிழ்த்ததுபோல மற்றெப்புறங் கவிழ்ப்பினும் நீர் கீழ்விழாதிருப்பதைக் காண்பீர்கள். இதனால் வாயு எப்புறத்தினின்றும் நீரை வீழாதிருக்கும்படி அழுத்துகிறதென்பது வெளிப்படை. பின்னர் ஒரு கிண்ணத்திற் சலம்விட்டுக் குப்புறக் கவிழ்த்த கண்ணாடிப் பாத்திரத்தை வாய்ப்புறம் சலத்தில் அமிழும்படி வைத்து அட்டையை யெடுத்துவிடுங்கள். இப்போதும் பாத்திரத்துநீர் கிண்ணத்துநீர் மட்டத்திற்கு விழுந்துவிடாமல் மேலாகவே நிற்கிறது. இவ்வாறு அதனை மேல் நிறுத்துவது எது? வெளியிலுள்ள வாயுவே. ஆனால் அவ்வாயு பாத்திரத்து நீரை நேராக அழுத்தவில்லை. வாயு கிண்ணத்து நீரைக் கீழ்ப்புறமாக அழுத்தாநிற்க அந்நீர் அவ்வழுத்தல்வலியோடுங் கண்ணாடிப்பாத்திரத்துநீரை மேற்புறமாக அழுத்துகிறது. அஃதாவது கிண்ணத்து நீர்மூலமாக வாயுவே கண்ணாடிப் பாத்திரத்துநீரை மேல் நிறுத்துகிறது. நீரினும் 13½ பங்கு கனமுள்ள பாதரசத்தினைப் பாத்திரத்தினுங் கிண்ணத்தினுமூற்றினாலும் இவ்வாறே பாத்திரத்துள்ள ரசமவ்வளவையுஞ் சிறிதுங் கிண்ணத்தில் விழுந்துவிடாதபடி வெளியிலுள்ள வாயு தாங்கிக்கொள்ளும்.

இதனால் வாயுவிற்கு அதிகவலியுண்டென்பது விளங்குகிறது. இவ்வளவுதான் அதன் வலியென்று நிச்சயிக்கக் கண்ணாடிப் பாத்திரத்திற்குப்பதில் ஒரு சதுரங்குலக் குறுக்களவும் ஒரு கஜ நீளமுமுள்ள கண்ணாடிக்குழாய் நிறையப்பாதரசம் விட்டுப் பின்பு அதை விரலால்மூடிக் கிண்ணத்திலுள்ள பாதரசத்திற் குப்புறக்கவிழ்த்து விரலையெடுத்து விடுங்கள். அவ்வொருகஜம் அல்லது 36-அங்குல உயரமுள்ள பாதரசமவ்வளவையும் வெளியிலுள்ள வாயு தாங்கமுடியவில்லை யென்பதைக் காண்பீர்கள். ஏனெனிற் குழாயிலிருந்த பாதரசத்திற் கொஞ்சம் கிண்ணத்தில் விழுந்துவிட ஏறக்குறைய 30-அங்குல வுயரமளவே ரசம் குழாயில் நிற்கும்; மற்றைய ஆறங்குல நீளமுள்ள இடம் வாயு சிறிதுமில்லாத சூனியமேயாகும். இதனால் 30-அங்குல வுயரமுள்ள ரசத்தினழுத்தல்வலியளவே வாயுவின் அழுத்தல் வலியுமென்பது கரதலாமலகம். ஒரு சதுரங்குல விஸ்தீரணத்திற்கு 30-அங்குல வுயரமுள்ள ரசத்தின் அழுத்தல்வலி ஏறக்குறைய ஐந்து வீசை எடையளவென்று கணிக்கப்பட்டிருக்கிறது. அதனால் வாயுவின் அழுத்தல்வலியும் ஒரு சதுரங்குல விஸ்தீரணத்திற்கு ஏறக்குறைய ஐந்து வீசையெடையளவென்பது வெளிப்படை. வாயுவின் அழுத்தல்வலி 30-அங்குல வுயரமுள்ள பாதரசத்தின் அழுத்தல்வலிக்குச் சரியானதென்றும் பாதரசம் நீரினும் 13½-பங்கு கனமுள்ளதாதலின், அவ்வாயுவின் அழுத்தல்வலி 30 × 13½-அங்குலம் அல்லது கிட்டத்தட்ட 34-அடி உயரமுள்ள நீரின் அழுத்தல்வலியோடொக்கும்.



இவ்வள வுயரமுள்ள குழாயினைப் பெறுவது அசாத்தியமாதலாற்றான் பாதரசங்கொண்டு சோதனை விவரித்ததென்க.

ஆழ்ந்த கிணற்றினடியிற் போகப்போக மேலுள்ள நீரின் அணுக்களும் அதிகமாவதனால் அவற்றாலுண்டாம் அழுத்தல்வலியும் அதிகமாம். அதுபோலவே வாயுவின் அழுத்தல்வலியும் பூமியின் மீதுள்ளதைப் பார்க்கிலும் உயரச் செல்லச்செல்லக் குறைவும் சுரங்க முதலியவற்றினடியிற் செல்லச்செல்ல வதிகமும் ஆய்க்கொண்டுவரும். ஆதலின் வாயுமானியை யொரு மலையினுச்சிக்குக் கொண்டுபோவோமானால் வாயுவின் அழுத்தல்வலி குறையக் குழாயிலுள்ள பாதரசத்தினுயரமுங் குறையும். அன்றியதனையொரு சுரங்கத்தினடிக்குக்கொண்டுபோவோமானால் வாயுவின் அழுத்தல்வலி யதிகமாக அப்பாதரசத்தினுயரமு மதிகமாகும். இவ்வாறு எவ்வளவு குறைகிறது அல்லது அதிகப்படுகிறதென்பதைக் கொண்டு பண்டிதர்கள் மலைகளின் உயரத்தையுஞ் சுரங்கங்களின் ஆழத்தையுங் கணிக்கிறார்கள்.

இவ்வாயுமானியால் இன்னுமோருபயோக முளது. மழைவெயில் காற்றுக்களால் வாயுவின் அழுத்தல்வலி பேதப்படுவதனாற் சீதோஷ்ணதி வாயுஸ்திதி வேறுபடும் போதெல்லாம் வாயுமானியின் பாதரச வுயரமும் வேறுபடும். பாதரசத்தினுயரந் திடீரென்று அதிகப்பட்டினுங் குறையினும் வெகு சீக்கிரத்திற் புயற்காற்றடிப்பது திண்ணமென்று ஊகிக்கலாம்.

சி. சுப்பிரமணியாசாரி.

---

## SILAPPADIKARAM : A STUDY.

## சிலப்பதிகார வாராய்ச்சி.

(நான்காம் சம்புடம் 252-ஆம் பக்கத்தொடர்ச்சி.)

உறையூரில் ஒருநாட் டங்கி மறுநாள் வைகறையில் மதுரை நோக்கிச் சென்றனர். அவர்கள் போம்வழியில் ஒரு வைணவப் பிராமணரைச் சந்தித்தார்கள். அவ்வந்தணர் பாண்டிய ராஜனுடைய புகழையும், அவன் வாழ்க்கையின் பெருமையையும், அவனது வீரத்தன்மையையும், அந்நாட்டுச் சிறப்பையும் வியந்துபேசிக்கொண்டேவந்தார். இவ்விடத்தே இக்காப்பியத்தினிரண்டாங் காண்டமாகிய மதுரைக்காண்டம் தொடங்குவதனால் அந்நாட்டின் தலைவனது சிறப்பைக் கூறுதல் சால்புடைத்தென நூலாசிரியர் கருதினார் போலும். அவ்வைணவரை நோக்கிக் கோவலன் மதுரை செல் வழி வினவ அவ்வேதியர் கூறுவாராயினர். அவ்வழி புகலும் வாயிலாற் பாலை

நிலத்தையும், வனத்தையுஞ் செவ்வனே வருணித்துக் கடைசியாய் மதுரையை யடைவதற்கு மூன்றாறுகள் கூறுகின்றார். இவ்வனைத்தையுங் கேட்டு வந்த கௌந்தியடிகள், இவர்களது வினையை யங்கீகரித்து அன்புடன் விடையளித்த விப்பிராரிடத்து விசுவாசமொழி பகரவேண்டியிருப்ப, அவர் தம் தலையாத்திரையின் நோக்கத்தைப் பழித்துத் தெழித்தனர். இவ்வடிகள் இவ்வடாத மொழிபகர்ந்தது, அந்நாட் சயினர்கள் புறமதத்தினரிடத்துப் பாராட்டிவந்த வெறுப்பைக் காட்டுகின்றது.

பிறகு இம்மூவரும் வழிநடந்தார்கள். அப்பொழுது, மாதவியின் தோழியாகிய வசந்தமாலையின் உருத்தாங்கி வந்த வனசாரணியைக் கோவலன் கண்ணுற்றான். இவ்வனசாரணியை யிங்குக்கொண்டுவர நமதாசிரியர்க் காதாரமே கிடையாது. ஆயின் இவளது தோற்றமும் ஒரு நோக்கம் பற்றியே யிருக்கிறது. இதன் மூலமாகக் கோவலனைப் பிரிந்த மாதவி படுந்துன்பத்தை ஆசிரியர் நமக்குரைக்கின்றனர். அக்காரியத்திற்கு இவ்விதப் பாத்திரத்தைக் கற்பித்தது நமதாசிரியரின் நாடகத்திறத்தைக் காட்டுகிறதென்போம். இவ்வசந்தமாலையைக் காண்டலி னின்றும் அப்பார்ப்பார் கூறிய மூன்று வழிகளுள் எவ்வழிப் போயினர் கோவலன்முதலியோ ரென்பதுந் தெரிகிறது.

இவ்விதம் வழிநடக்கும் மூவரும் நடைசலித்தும் வெயிலாற்களைத்தும் போனபடியால் ஆங்குத் தோன்றிய ஓர் ஐயை கோட்டத்திற்றங்கினர். ஆங்குச் சாலினியென்னும் ஒரு சாமியாடி குறிகள் சொல்வதும், கள்வர்கள் தமக்கு விலையுயர்ந்த பொருள்கள் திருடக்கிடைத்தால் அவ்வம்மைக்குப் பலி முதலிய பிரார்த்தனைகள் நிறைவேற்றுவதாகக் கூறுவதும், இன்றும் நடந்து வருபவைகளாகவும், நகைவிளைக்கக் கூடியனவாகவு மிருக்கின்றன. அவணுறைந்துள்ள கண்ணகி சிறிது நாளிற் பலராலும் தொழப்படுவாளென்று சாலினி கூறிய முன்னுரையானது கவுந்தி முதலியவர்களுக்கு விம்மிதத்தையுண்டாக்கிற்று. இவ்விடத்திற் கூறிய பலிப் பொருள்களின் வேற்றுமையும், கள்வர்கள் ஐயைக்குப் பலி படைப்பதாகக் கூறும் பாடல்களும், துர்க்கையைத் தோத்திரஞ் செய்யும் பாக்களும் அவ்வமயத்திற்கும், டலிக்கும், பாடும் மனிதர்களுக்கும் மிகப் பொருந்தியவைகளாகவேயிருத்தல் காண்க. முன் பாகத்தின் நடையைப் பெற்ற இளங்கோவடிகள் இங்கு நடைமாறிவிளங்குதல் அவரது வல்லமையைக் காட்டுகின்றது.

அங்கு ஒருபொழுது தங்கிப் பிறகு பகற்பிரயாணத்தைப் பரிதியின் வெப்பத்திற் கஞ்சிவிடுத்து, இராப்பயணத்தையடுத்துப்புறப்பட்டு மதுரைக்கருகிலுள்ள தோர் கிராம மடைந்தனர். அவ்விடத்திற் கவுந்திகண்ணகியரை யோரிடத்திலிருத்திப் பக்கத்திலுள்ள தடாகத்திற் காலைக்கடன் முடிக்கச் சென்ற கோவலன், மாதவியிடமிருந்து தூதாகவந்த கவுசிகனென்னுமந்தண



னைக்கண்டான். கோவலனைக் கண்டகவுசிகன் அவன் கோவலனெனத் தெளிவி யானாயினன். அத்தகையான் கோவலனைத் தெளிதற்கியற்றிய தந்திரம் வியக்கற்பாலதே. இக்கவுசிகனேற்று வந்த மாதவியின் திருமுகம் பார்ப்பவர் மனத்தைப் பரிகவிக்கச் செய்யும். இத்திருமுகமே அவளது பெருந்தன்மையையும், கம்பீரகுணத்தையும் காட்டுகின்றது. அத்திருமுகத்திற்கு விடையளித்துக் கவுசிகனை விடுத்த கோவலன் திரும்பக், கண்ணகியைச்சேரலும் மூவரும் அக்கிராமத்திற் பகற்பொழுதிருந்து இரவிற் புறப்பட்டு மறுநாட்காலையில் மதுரை யடைந்தனர்.

அன்று காலையில் வீசிய தென்றலின் தன்மையைப்பற்றி யாசிரியர் வருணிப்பது அதைப்படிக்கும் ஒவ்வொருவருடைய மனத்தையும் கொள்ளைகொள்ளக் கூடியது. அவ்வைகறையிற் பொலிந்த மதுரைமாநகரின் தோற்றத்தை யாசிரியர் வருணித்திருப்பதும் அற்புதமென்றே கூறலாகும். இப்பொழுதும் திருவாங்கூர், புதுக்கோட்டை முதலிய கர்னாடக ராஜதானியிலிருப்பவர்கள் இவ்வருணனையை நன்கே யனுபவிப்பர். இன்னும், வைகையாற்றையும், மதுரைமாநகரையும் துயருறுவதாக வருணித்தது, அன்று அவ்வூர்ப் போந்தார்க்கு விளையும் தீங்கைக் குறிப்பித்தற்கென்றே கொள்ளவேண்டும். அந்நகர்க் கொடிகளே அவர்களை வாராதீரென்று சொன்னதாக உத்பிரேக்ஷிக்கின்றார்.

“ வாரலென் பனபோன் மறித்துக்கை காட்ட”

இக்கொடிகளையே **கம்பநாடர்** மிதிலைக் காட்சிப்படலத்தில்,

“ கைகளை நீட்டி யந்தக் கடிநகர் கமலச் செங்க
ணையனை யொல்லை வாவென் றழைப்பது போன்ற தம்மா”

என்றனர்.

இவ்விதம் மதுரை புக்க மூவரும் அந்நகர்ப் புறஞ்சேரியிற் றங்கினார்கள். அப்புறஞ்சேரி தவமுனிவர்களி னிருக்கையாதலாலும், கவுந்தியடிகளாங்குத்தங்க விரும்பினராதலாலும், மறுநாட்காலையிற் கோவலன் கவுந்தியைப் பணிந்து, தான் மதுரைப்பட்டணஞ்சென்றுதங்களுக்குத் தகுந்ததோருறைவிடந்தேடிவரத் தனக்கு அனுமதிகொடுக்கும்படி கேட்டான். அப்பொழுது, கவுந்தி கோவலன் நிலைக்கிரங்கி, பெண்களைத்தொட்டும், வயிற்றுணவையிட்டும், காதலினாலும் விளையுந்துன்பங்கள் பலவென்றும், அத்துன்பங்களைத்தப்பினவர்களிலரென்றும், அத்தகைத்துன்பமடைந்தவர்களில் தெய்வத்தன்மை பெற்ற ரகுராமனும், நரேந்திரனும் நளனுங்கூடச் சேர்ந்தவர்களென்றும், சொல்லி அவன் துக்கத்தைப்போக்கி, பிறகு அவ்விருவருக்கும் கிடையாப் பொருளாகிய பத்தினிச் செல்வம் கோவலனுக் கிருப்பதோர் பாக்கியமெனப் பகர்ந்து தேற்றி மதுரையுட் செல்லச் செலவீந்தாள். அவ்வாறே கோவலன் மதுரைநகர்க்கட் சென்று அந்நகரின் வனப்பைக் கண்ணுற்று வருகின்றான்.

இவ்விடத்தில் நகர்வருணனை மிக மேம்பாடுடையதாக விருக்கிறது. தெருக்களை வருணித்து வரும்பொழுது பொதுமகளிரின் தெருக்களை வருணித்திருப்பது மிக வருமையாயிருக்கிறது. சாமானியமாய் ஒரு நகரை வருணிக்கும்பொழுது நம்புலவர்கள் உயர்வுநவிற்சி யணியிலேயே உயர்த்துவார்கள் சிலப்பதிகார முடையார் அத்தகையினரல்லர். உள்ளதை உள்ளபடியேதெளிவாகவும், இன்பம் விளைக்கக் கூடியதாகவும் வருணிக்கிறார். இக்காதையில், ருதுக்களைப்பற்றிக் கூறியதும், நவரத்தினங்களின் நயத்தைப்பற்றி விவரித்துரைத்ததும், காப்பிய விலக்கணத்திற் கின்றியமையாதனவாயினும், இடத்தைக் கவனிக்கும்பொழுது அவை பொருத்தமுடையன வலவென்றே எமக்குத் தோற்றுகின்றன.

பிறகு புகாரைப் பிறப்பிடமாகக் கொண்டு தற்போது தலயாத்திரை செய்துவரும், மாடலன் என்னுமோ ரந்தணர் வருகின்றார். இவருக்குக் கோவலனை நன்றாய்த்தெரியும். அவ்வந்தணர் கோவலனுடைய பராக்கிரமங்களையும், வளங்களையும், அறச்செய்கைகளையும், பெருங் குணங்களையும் கூறிக் கோவலனைப்புகழ்ந்து, அத்தகையானுக்கு இக்கதிவரக் காரணமென்னென வினவினார். இப்பொழுதே நமக்குக்கோவலனுடைய குணாதிசயங்களை யாசிரியர் கூறுகின்றார். அப்பொழுது கோவலன் தனக்கு முன்னிரவில் நிகழ்ந்ததீக் கனவை மாடலனிடங்கூறி அதன் பயனைக்கேட்கின்றான். அக்கனவு கண்ணகி புகாரிற் கண்டகனவே யாதலிற் படிப்போர்க் கோர்விதக் கவலையையும், பரபரப்பையு முண்டாக்குகின்றது. அப்பொழுதே, அப்புறஞ்சேரி துறவிகளுக்கே தகுதியாதலின் கோவலன் தனதில்லாளுடன் மதுரை சென்று வாழ்தலே மேன்மையெனக் கவுந்தியும் மாடலனு முரைத்தனர். இவர்கள் இவ்விதம் பேசிக்கொண் டிருக்கையில் மாதரி யென்னுமோ ரிடைச்சிவந்து கவுந்தியை வணங்கி நின்றனள். கவுந்தி அவளது அறவொழுக்கத்தையும், நற்குணங்களையும் ஆய்ந்து, கோவலன் தக்கவிடுதி மதுரையிற் பார்த்து வருமளவும், கண்ணகியை யிவளிடமே அடைக்கலமாக வைக்கலா மென்று [illegible]கித்து அவளிடமும் அவ்வாறே புகன்றனன். அவளிடத்துக் கண்ணகியை ஒப்படைக்கும்பொழுது கண்ணகியைப்பற்றிக் கவுந்தி மாதரியிடம் புகல்வது மனத்திற் றைக்கத்தகுந்தது. முதலிற் கோவலகண்ணகியர்களினுயர்குடியைப்பற்றிச் சொல்லும் வாயிலாக அக்கண்ணகி இவ்வளவு சுகமாய்வாழ்ந்தவளென்பதையுங் குறிப்பிக்கிறாள். பிறகு, அவளது கற்பைவியந்து கூறுமுகமாய் அவளைப் பிறாணுகாது காக்கவேண்டுமென்று வற்புறுத்துகிறாள். கடைசியாய், அடைக்கலப்பொருளை ஆதரவுடன் பாதுகாத்துத் திரும்பக்கொடுப்பவர்களுக்கு அதனால்வரும் நன்மைகளைக்கூறி, அதற்குச் சான்றாக ஒரு குரங்குக்கதையையும் பகர்ந்து, கண்ணகியை யொப்பிக்கிறாள். உடனே, கோவலன், கண்ணகி, மாதரி இவர்கள் இடைச்சேரிக்குச் செல்கின்றார்கள். போகும்வழியிலிவர்கள் சந்திக்கும் இடையர் குழாங்களை யாசிரியர்



161290 2008

செவ்வனே வருணித்துளர். இஃது அவரது ஊன்றிப்பார்க்குந்திறத்தைவிளக்குகின்றது. இங்கு, கோட்டை கொத்தளச்சுவர்களில் வைத்துள்ள காப்புக்கருவிகள் வருணிக்கப்பட்டிருக்கின்றன. அதனால் அக்காலத்தவர் உபயோகித்துவந்த சமர்க்கருக ளின்னவையெனத் தெரிகின்றன.

இடையர் சேரியிற் கோவலகண்ணகியார்களுக்கோர் தனிவிடுதி விடப்பட்டதுடன் மாதரியின் மகளாகிய ஐயையென்பாள் கண்ணகிக்குப் பாங்கியாகவுமனுப்பப்பட்டாள். ஜயினர்கள் புறமதத்தினர் சமைத்தவடிசிலையருந்தக்கூடாதாதலின், கண்ணகி சமையற்செய்தாள். ஒருபோதும் சமையற்செய்தவளல்லளாதலின் கையைச்சுட்டுக்கொண்டு பல்விதத்துன்பமடைந்தாள். ஊணருந்திய கோவலன் மதுரை மாநகர் செல்வதற்கு முன் கண்ணகியுடன் உரையாடுவதும், கண்ணகி விடையளிப்பதும் மிகச்சாதுரியமுள்ளனவாகவும், படிப்பவர்மனத்தை யுருக்கக்கூடியனவாகவுமிருக்கின்றன. அச்சம்பாஷணையிற் கோவலன் தனது துர்நடத்தைக்கும், அதன் காரணமாக நேர்ந்த பெற்றோர்களுக்கும், மனைவிக்கும் செய்த அபராதத்திற்கும் இரங்குகின்றான். நமதாசிரியர் இச்சம்பாஷணையைப் புகாரிலேயே காட்டியிருப்பின் மேன்மையாயிருந்திருக்கும். ஆயினும், இவ்விடத்தும்பொருந்தும். இவ்விடத்திற் கண்ணகி தன்னுடன் மதுரை செல்லச் சம்மதித்ததற்குப் புகழ்ந்தும் வியந்தும் கோவலன் கூறுகிறான். அதற்குக் கண்ணகி யளித்தவிடையானது அவளுடைய அன்பு, அடக்கம் முதலிய நற்குணங்களைப் படிப்பவர்களுக்கு அநுதாபத்தையுண்டாக்கும்படி காட்டுவதுடன், ஒருவாறு அவள் கோவலன் பிரிந்திருந்த காலத்திருந்த நிலைமையையும் தெரிக்கிறது. இதனால், தன்னுடைய ஊழ்வினையை உறுதியுடன் அநுபவிக்கும் அவளுடைய உத்தமகுணமும் தெரிவதனாற் படிப்பவர்களுக்கு அவளிடத்தில் ஒருவித அநுதாபமுண்டாகிறது. இங்குக் கோவலகண்ணகியர்க ளொருவரோடொருவர் பேசும்பொழுது காட்டிய கூச்சத்தை நோக்கில், அவர்களுக்குள், கோவலன் மாதவிபாற் செல்வதற்கு முன்னிருந்த இனிமையும், சரசமுமின்னுந்திரும்ப வில்லையெனக்கொள்ளலாம். அதன்பிறகு, கோவலன் கண்ணகிபால் விடைபெற்றுக்கொண்டு நகரத்திற்குப் புறப்பட்டான். புறப்படும்பொழுது வெறித்தகாளையொன்று எதிர்வரக்கண்டும், அதைத் துர்க்குறியெனமதியாது சென்று விட்டான்.

மதுரைமாநகர் புக்குத் தனதிடமிருந்த சிலம்பொன்றை விலைப்படுத்துவான் கடைவீதியிற் செல்லும்பொழுது, நூறு பொன்வினைஞர்கள் புடைசூழ ஒரு தட்டான் எதிரே வரக்கண்டு, அவனை யணுகித் தனது சிலம்பின் விலையை மதித்தல் வேண்டுமெனக் கேட்டான். கோவலனைப் பிடித்தகொடுவினையால், அத்தட்டான்தானே சிலதினங்களுக்கு முன் அதைப்போன்றசிலம்பொன்றை அரண்மனையினின்றுந்திருடி யாங்குள்ளார் பலராலும் சந்தேகிக்

Rm211, M97 M97.5-6

கப்பட்டிருந்தான். அக்கொடியவன், இதுவே தக்கசமயமெனக்கொண்டு இவனைக்கள்வனாக்கி, இச்சிலம்பைக் கொடுத்துத் தான் தப்பிக்கொள்ளலாமென்று தீர்மானித்தவனாய்க் கோவலனை நோக்கி, "இச்சிலம்பை வாங்குஞ் செல்வம் படைத்தவள் இவ்வூரரசியொருத்தியே. ஆதலின், அவளிடமிதைக் காட்டிவருகின்றேன். அது வரையில் தாமெனது வீட்டிற்றங்கியிருங்கள்" என்று சொல்லி வீட்டையுங்காட்டி விட்டுப்போய் விட்டான். போனபொன்வினைஞன் அரசனைக்கண்டு, காணமற்போனசிலம்பைத்திருடிய கள்வனைப் பிடித்துச் சிலம்பையும் மீட்டுவந்ததாகக் கூறினான். அதுகேட்ட அரசன் பட்ட மகிஷியினூடலைத்தீர்க்கும் பொருள்கிடைத்ததென் றெண்ணி, அந்தப் பரபரப்பில் நடந்தவற்றைத் தீரவிளங்க விசாரியாமற், "கள்வனைக் கொன்று காற்சிலம்பீயாய்" எனலும், படுபாவி சில கொலையாளர்களைக் கூட்டிக்கோவலனைக் கொல்லச் சென்றான். அக்கொலையாளருளொருவன், கோவலன் முகக்குறியை யுற்று நோக்கி "அவன் கள்வனாயிருத்தலசாத்தியம்" என்றான். அந்தக்கிராதகனான தட்டான் திருட்டுத்தன்மையையும், திருடர்களின் தோற்றத்தையும் பற்றி ஒரு பெரிய பிரசங்கஞ்செய்யக் கிளம்பிவிட்டான். இவ்விதம், அத்தட்டான் உபநியாசஞ் செய்துகொண்டிருக்கையில், அவர்களுட் புல்லறிவாளனொருவன் முன்னே வந்து தன்கையிலிருந்த 'அரிவாளொன்றாற் கோவலன் தலையைக் கொய்து விட்டான்! இவ்வண்ணம், ஒரு குற்றமுமியற்றாத கோவலன் கொலையுண்டதற்குத் தக்க காரணம் ஏற்படாமையின், ஆசிரியர், "வினைவிளை காலமாதலின்", என்றும், "பண்டை யூழ்வினை யுருத்தென", என்றுஞ் சமாதானங்கள் கூறுகின்றனர். இவ்விதம், இத்தொடர்நிலைச்செய்யுள் முழுதிலுமே ஊழ்வினையின் பயனே மேலிட்டிருக்கக்காண்கிறோம். இவ்வாறு கோவலன் முடிவைக் கண்டவர்களுக்கு, உடனே அவனிடத்து உயிரை வைத்திருக்கும் கண்ணகியின் கதி யென்னாயிற்றென்று அறிய வெண்ணமுண்டாகும்.

பி. எ. பிரணதார்த்திஹரசிவன்.

---

# RADHARANI: A NOVEL.

# இ ரா தா ரா ணி.

## முதல் அத்தியாயம்.

இராதாராணியென்னும் ஒருபெண் மகேசுவரபுரத்திற்கு இரதோத்ஸவம் பார்க்கப்போயிருந்தாள். இச்சிறுமிக்கு இன்னும் பதினோர் ஆண்டுகள் பூர்த்தியாகவில்லை. அவளுடைய நிலைமை முதலில் நன்றாயிருந்தது; தனவானுடைய மகள். ஆனால் தகப்பன் பரலோகமடைந்தான். அவளது தாயாரின்மேற் பங்காளியொருவன் 'கோர்ட்டில்' 'தாவா' செய்து சகல சொத்துக்களையும் அபஹரித்தான். அதற்காக அவள் 'ஹைகோர்ட்டி'ல் அப்பீல் செய்தாள்; அங்கும் அக்கைம்பெண்ணுக்கு விரோதமாய்த் தீர்ப்பாயிற்று. தீர்ப்பான பிறகு 'டிக்கிரீதார'னான பங்காளி வீடு முதலிய எல்லாவற்றையும் தன் சுவாதீனஞ் செய்துகொண்டு தாயையும் பெண்ணையும் வீட்டைவிட்டுத் துரத்திவிட்டான். ஆஸ்தி முழுவதும் சுமார் பத்துலக்ஷம் ரூபாய்களிருக்கும். டிக்கிரீதாரன் அவையெல்லாவற்றையும் தன் வசப்படுத்திக்கொண்டான். கையிலிருந்த பொருளைக் 'கோர்ட்டுச்' செலவு முதலியவற்றிற்குச் செலவழித்துவிட்டாள். கையில் ஒருகாசும் இல்லை. இராதாராணியின் தாய்தான் அணிந்திருந்த இரண்டொரு நகைகளை விற்று 'ப்ரிவிகௌன்ஸி'லுக்கு 'அப்பீல்' செய்தாள். கையிலிருந்ததெல்லாம் செலவழிந்து கூழுக்கு வழியில்லாமற் போயிற்று. தலைவனில்லாதவள்; மற்றென்செய்வாள்? சிறிது தூரத்திலேயே ஒரு சிறியகுடிசை போட்டுக்கொண்டு சரீரக் கஷ்டப்பட்டுக் கிடைத்ததை வைத்துக்கொண்டு காலக்ஷேபம் செய்து வந்தாள். இராதாராணிக்குக் கலியாணம் செய்யமுடியவில்லை. ஏழைக்குடும்பத்திற் பிறந்த பெண் யாருக்கு வேண்டும்? யார் வாங்கிக் கொள்வார்கள்?



இந்தத் துரதிஷ்டத்துக்கேற்க, மேற்சொல்லிய உற்சவத்திற்குச் சில நாட்களுக்குமுன் இராதாராணியின் தாயாருக்கு மிகவும் பலஹீனமுண்டாயிற்று. அதனாற் கூலிவேலை செய்து காலங்கழிப்பது கூட நின்று போயிற்று. இனி அன்னத்துக்குமார்க்கமில்லை. தாயார் பிணியால் வருந்திக்கொண்டிருந்தமையால் அவர்களுக்கு உபவாஸமே கதியாயிற்று. இராதாராணியால் ஒன்றும் செய்யமுடியவில்லை. இரதோற்சவத்தினன்று தாயாருக்குச் சிறிது இறங்குமுகமாய்க்காணப்பட்டது. பத்தியத்திற்கேதாவது கொடுக்கவேண்டும். ஆனாற் பத்தியத்துக் கெங்கிருந்து கொண்டுவருவது? யார் கொடுப்பார்கள்?

இராதாராணி கண்ணீர் விட்டுக்கொண்டு அங்கங்கே தரையில் விழுந்திருந்த காட்டு மலர்களைப் பொறுக்கிக்கொண்டுவந்து ஒரு மாலைகட்டி இதைத் திருவிழாவில் விற்றால் இரண்டு காசுகிடைக்கும், தாயார் பத்தியத்துக்கு ஏதாயினுங் கொண்டு வந்து கொடுக்கலாம் என்று தன் மனத்தில் யோசித்தாள்.

ஆனால் திருவிழா நடக்கும்பொழுது நல்ல பகற்காலத்திற் பெருமழை பிடித்தது. மழையைப் பார்த்து உற்சவத்துக்கு வந்த ஜனங்களெல்லோரும் ஓடிப்போனார்கள். பூமாலையை ஒருவரும் வாங்கிக்கொள்ளவில்லை. இராதாராணி தனக்குள், நான் இப்பொழுதே போகக்கூடாது. மழை நின்றால் திருவிழாக்கூட்டம் மறுபடியும் சேரும். அப்பொழுது யாராவது பூமாலையை வாங்கிக்கொள்வார்களென்று யோசித்தாள். ஆனால் மழை நிற்கவில்லை. பழயபடி உற்சவமும் நடக்கவில்லை. மாலைப்பொழுதாயிற்று. இரவு

நெருங்கிற்று; நள்ளிருளாயிற்று. அப்பொழுது இராதாராணி தன்னையறியாமலே அழுதுகொண்டு வீட்டுப்பக்கம் திரும்பினாள்.

எங்கும் இருள் மயமாயிருந்தது. வழிமுழுவதும் சேறாயிருந்தமையாற் சறுக்கிற்று. எதுவுங் கண்ணுக்குத் தெரியவில்லை. இந்த ஸ்திதியிற் கார்காலத்து மழை அடைமழையாய்ப் பிடித்துக்கொண்டு விடாது பெய்தது. தாயாரினுடைய உபவாசம்ஞாபகத்துக்குவந்து, இராதாராணியின் கண்களில் மழைத்தாரைகளைவிட நீர் அதிகமாய்ப் பெருக ஆரம்பித்தது. அவள் அழுதுகொண்டு அங்கே சறுக்கிவிழுந்து எழுந்து வந்துகொண் டிருந்தாள். அவளது மிகவுங் கரிய கூந்தல்வரிசை இருபாரிசங்களிலுந் தொங்கின வண்ணமாய் மழையில்நனைந்து தண்ணீர் சொட்டிக்கொண் டிருந்தது. ஆனால் இராதாராணி அந்த இரண்டுகாசுபெறுமான பூமாலையைத் தன்னிடத்திலேயே வைத்துக்கொண் டிருந்தாளேயன்றி அப்புறம் எறிந்துவிடவில்லை.

இவ்வித அந்தகாரத்தில் சற்செயலாய் ஓராணொருவன்வந்து இராதாராணியின்மீது விழுந்தான். ராதாராணி இதுவரைக்கும் 'ஹோ' என்று அழுததுபோலவே அப்பொழுதும் அழுதாள்.

மேலேவிழுந்த ஆள் "யாரம்மா, ஏன் அழுகிறாய் ?" என்று வினவ,

அஃது ஆண்குரலாயிருந்தது. குரலோசையைக்கேட்டு இராதாராணி ரோதனஞ்செய்வதை நிறுத்தினாள். அவன் இராதாராணிக்கு அறிமுகமானவனல்லன். சிறுமியாயிந்தாலும் அந்த வயதிற் கூட அவனது வார்த்தைகளினால் அவன் மிகவுந் தயாளுவென்று தெரிந்து கொண்டாள். இராதாராணி அழுகையை யெல்லாம் அடக்கிக்கொண்டு "நான் ஏழைகள்வீட்டுப்பெண். எனக் கொருவருந் திக்கில்லை. தாயார் மாத்திரம் மீந்திருக்கிறாள்" என்றாள்.

**புருஷன்** :—நீ எங்கே போயிருந்தாய் ?

**ராதா** :—நான் இரதோற்சவத்தைப் பார்ப்பதற்குப் போயிருந்தேன். வீட்டுக்குத்திரும்பிப் போகின்றேன். இந்த மழையிலும் இருட்டிலும் வழியே தெரியவில்லை.

**புருஷன்** :—உன் வீடு எங்கே ?

**ராதா** :—ஸ்ரீராமபுரத்தில்.

**புருஷன்** :—என்னுடன் கூடவா. நான் அங்கேபோகின்றேன். நட; உன் வீடு எங்கே ? சொல்லு. உன்னை அகத்தில் விட்டுவிட்டுப் போகின்றேன். மிகவும் சறுக்குகின்றது. என் கையைப்பிடித்துக் கொண்டுவா. இல்லாவிட்டால் விழுவாய்.

என்று சொன்னான். இப்படிசொல்லி அந்தப்புருஷன் இராதாராணியையழைத்துக்கொண்டுபோனான். இருட்டாயிருந்தபடியால் இராதாராணியின்



வயது அவனுக்குத் தெரியவில்லை. ஆனால் அவளது குரலோசையினால் அவள் வளர்ந்த பெண் என்பது தெரியவந்தது. அவள் அவன் கையைப் பிடித்துக் கொண்டாள். அவள் கையின் ஸ்பரிசத்தினாலும் அவள் பெரிய பெண்ணென் றறிந்து 'உனக்கு எத்தனை வயது ?' என்று கேட்டான்.

**இராதா** :—பதினொரு வயது.

**புருஷன்** :—உன் பெயர் என்ன ?

**இராதா** :—இராதாராணி.

**புருஷன்** :—ஓ ராதாராணீ, நீயோ சிறுமி ; தனிமையாய் உற்சவத்துக்குப் போனது என்ன ?

இப்படியே பேசிக்கொண்டு நல்ல வார்த்தைகளினாற் கேட்டு அதன் மூலமாய்க் காட்டுப்பூமாலை சமாசாரத்தை வெளிக்குக் கொண்டுவந்தான். பிறகு தான் தாயாருக்குப் பத்தியத்துக்காக அம்மாலையை விற்கும்பொருட்டு உற்சவத்துக்குச் சென்று மழையினால் திருவிழாவில் மாலையை விற்பதற்குக் கூடாமல் அதனைக் கொண்டுவந்து விட்ட செய்தி அவ்வளவையும் சொன்னாள். இதைக் கேட்டு அந்தப் புருஷன், நான் எங்கள் சுவாமிக்கு ஓர் மாலையினிமித்தம் போய்ப் பார்த்தேன். திருவிழா நடுவில் நின்றுவிட்டது. எனக்குப் புஷ்பம் கிடைக்கவில்லை. மாலையை விற்குமிடத்தில் நான் விலை கொடுத்து வாங்கிக்கொள்ளுகின்றேன் என்றான்.

இராதாராணிக்கு மிகவும் சந்தோஷமாயிற்று. ஆனால் இவ்வளவு கஷ்டப்பட்டு என்னை இருட்டிற் கைப்பிடித்து அகத்துக் கழைத்துக்கொண்டு போகிறவனிடம் கிரயம் வாங்கிக் கொள்ளலாமா என்று மனதில் யோசித்து, உடனே அப்படிக் கிரயத்தை நான் வாங்கிக்கொள்ளாமற் போவேனாயின் தாயாருக்கு அன்னமில்லாமற் போகின்றது. ஆகையினால் வாங்கிக் கொள்ளவேண்டுமென்று உறுதிசெய்துகொண்டு மாலையைத் தன்னுடன் வரும் புருஷன் கையிற் கொடுத்தாள். அவன் 'இதன்கிரயம் 4 காசுவாங்கிக்கொள்,' என்று விலை கொடுத்தான். இராதாராணிவாங்கிக்கொண்டு, 'இதென்ன காசு ; பிடித்துப்பார்த்தால் பெரிது பெரிதாய்க் காணப்படுகின்றதே,' என்றாள்.

'அது பெரியகாசு; இரண்டே கொடுத்திருக்கிறேன். அதிகம் கொடுக்கவில்லை; பார்,' என்றான் அந்தப்புருஷன்.

**இராதா**:—ஈதென்ன ? இவ்விருட்டிற் கூடப்பிரகாசிக்கிறமாதிரி தென்படுகின்றது. மறந்து ஏதாவது ரூபாய்களைக் கொடுத்திருக்கக் கூடுமென்று தோன்றுகின்றது.

**புருஷன்**:—இல்லை. புதியகாசு; அஃது ஒளிவீசுவதுண்டு.

**இராதாராணி**:—நல்லது. வீட்டுக்குப் போய் விளக்கையேற்றிப் பார்க்கின்றேன். காசாயில்லாவிட்டால் உங்களிடம் கொடுக்கிறேன். அதுவரையில் தாங்கள் அவ்விடம் நின்று கொண்டிருக்கவேண்டும்,

சிறிது நேரத்திற்கெல்லாம் இராதாராணி தாயாரிருக்கும்வீட்டண்டை அவர்களிருவரும் வந்தார்கள். அங்கே இராதாராணி ‘நீங்கள் உள்ளேவந்து நிற்கவேண்டும். நான் விளக்கேற்றி ரூபாயோ அல்லது காசோ என்று பார்க்கிறேன்’ என்றாள். கூடவந்த புருஷன் ‘நான் வெளியே நிற்கின்றேன். நீ முதலில், கட்டிக்கொண்டிருக்கும் வஸ்திரத்தை எடுத்துவிட்டு வேறு புடவையைக் கட்டிக்கொண்டு பிறகு விளக்கை ஏற்று’ என்றான்.

**இராதா** :—எனக்கு வேறே சிற்றாடை இல்லை. இருந்த ஒன்றைத் தோய்ப்பதற்கு வண்ணாத்தியினிடம் போட்டிருக்கின்றேன். நான் எப்பொழுதும் ஈரத்துணி யுடனேயே இருக்கிறேன். எனக்கு நோய்வருவதில்லை. ஒரு பக்கம் தலைப்பைப் பிழிந்து கட்டிக்கொள்ளுகிறேன். நீங்கள் உள்ளேவந்திருங்கள். விளக்கேற்றுகிறேன்.’

**புருஷன்** :—‘நல்லது’.

வீட்டில் எண்ணெய் இல்லாமையால், போரிலிருந்து ஒருபிடி வைக்கோல் பிடுங்கி சகிமுகிக்கல்லையடித்து நெருப்புண்டாக்கவேண்டியதாயிற்று. அதற்காகச்சிறிது நேரமாயிற்று. வெளிச்சத்தில் இராதாராணி பார்க்கவே அது காசாயில்லாமல் ரூபாயாயிருந்தது. இராதாராணி வெளியேவந்து பார்த்தாள். ரூபா கொடுத்தவனைக் காணோம். அவன் புறப்பட்டுப் போய்விட்டான்.

**இராதாராணி** :—சோர்ந்த முகத்துடன் இந்தச் சமாசாரத்தையெல்லாம் தாயாருக்குச்சொல்லி தாயார் முகத்தைப்பார்த்துக் கொண்டு பச்சாத்தாபத்துடன் ‘அம்மா, இப்பொழுது என்ன செய்யலாம்? என்று கேட்டாள்.

**தாயார்** :—‘என்ன செய்யலாமம்மா ?’

‘அவன் என்னவோ தெரியாமற் கொடுத்தவன் அல்லன். அவன் கொடையாளி. நம் துக்கத்தைக்கேட்டுத் தானஞ்செய்தான். நாமோ பிச்சைக்காரர்களானோம். தானம் பெற்று வைத்தியம் பண்ணிக்கொள்வோம்’ என்றாள்.

அவர்களிருவரும் இவ்வாறு பேசிக்கொண்டிருக்கையில், யாரோ வாசற்படிக்கப்புறத்திலிருந்து சங்கிலியைத் தொட்டு ஆட்டினார்கள். ராதாராணி கதவைத்திறந்தாள். அவனே மறுபடியும் வந்தானென்று எண்ணினாள். ஐயோ, கிரகசாரமே! அவனல்லன். அவன் ஏன் வருவான்? இந்தக் கருடப்பார்வை ஜவுளிக் கடைக்காரன்.

இராதாராணி வசிக்கும் கடைத்தெருவுக்கும் வெகுதூரமில்லை. அந்தக் குடிசைக்கு அருகிலேயே ஜவுளிவர்த்தகம் பத்மலோசனன்கடை. கருடப் பார்வை பத்மலோசனனே ஒரு ஜதை சாந்திபுரம் சேலைகளைக்கொண்டு



வந்துசங்கிலியைப் பிடித்து ஆட்டினவன். கதவைத்திறக்கவே அந்தச் சேலைகளை ‘இராதாராணி, நீ வாங்கிக்கொள்’ என்று சொல்லிக் கொடுத்தான்.

**இராதாராணி**:—‘இதென்ன? எனக்குச் சேலை கொடுத்தது யார், என்று வினவினாள். பத்மலோசனன் இராதாராணி சொன்னதைக் கேட்டுச் சிறிது வியப்படைந்து, ‘அவர் யாரோ என்னவோ தெரியாது. இப்பொழுது தான் ஒரு பெரிய மனிதர் எனக்கு ரொக்கம் கொடுத்து இந்தச் சேலைகளை இராதாராணிக்குக் கொடுத்து விட்டுவா’வென்று சொன்னார்.

**இராதாராணி**:—அவனாகவே இருப்பான். வேறேயார்? என்ன பத்மலோசனா, அவனேவந்து இந்தச் சேலைகளைப் பேரம் செய்தானா? என்று கேட்டாள்.

இராதாராணியின் தகப்பனார் காலமுதல் பத்மலோசனன் நன்றாய்த் தெரிந்தவனாயிருந்தான். அவர் ஜீவித்திருந்த காலத்தில் 4 ரூபாய் விலையுள்ள சேலைக்குப் பிரமாணம் செய்து 8½ ரூபா அசல் கிரயமென்று அதன்மேல் ரூபாய்க்கு இரண்டணா லாபமென்றும் சொல்லி வாங்கிக்கொண்டிருந்தான்.

**இராதா**:—பத்மலோசனா, அந்தப் பெரிய மனிதரை நீயறிவாயா?

**பத்மலோசனன்**:— உங்களுக்குத் தெரியாதா என்ன?’

**இராதா**:—தெரியாது.

**பத்மலோசனன்**:—உங்கள் குடும்பத்தைச் சேர்ந்தவனென்றெண்ணினேன். எனக்கும் தெரியாது.

எப்படியானாலென்ன? பத்மலோசனன் ‘நாலு ரூபாய்ச்சேலைக்கு எட்டரை ரூபாயும் லாபம் வேறேயும் வாங்கிக் கொண்டேன். இனி அதிகப் பேச்சினாற் பயன் இல்லை’ என்று யோசித்து களித்த மனத்துடன் தன் கடைக்குப் போனான்.

பின்பு, இராதாராணி ‘மாலைக்கு அவன் கொடுத்த ரூபாயைத் தாயாருடைய பத்தியத்திற்குப் போஜனபதார்த்தங்கள் வாங்கிக்கொண்டு வருவதற்குக் கடைத்தெருவுக்குப்போனாள். கடைக்குச் சென்று வேண்டிய பதார்த்தங்களையும் எண்ணெயும் வாங்கிக்கொண்டும் வந்து விளக்கையேற்றினாள். தாயாருக்குச்சமையல் செய்தாள். பிறகு தாயாருக்குப் பத்தியம் கொடுக்கவேண்டுமென்று யோசித்து அறையைப்பெருக்கினாள். பெருக்கும்பொழுது ஒருகாகிதம் அகப்பட்டது. அதைத்தாயாருக்குக் காட்டி, இதென்னவென்று கேட்டாள்.

தாயார் பார்த்து, இது ‘நோட்டு’ என்று சொன்னாள். இராதாராணி ‘அவனே போட்டுவிட்டுப் போனானோ என்னவோ?’ என்றாள்.

தாயார் :—உனக்குக் கொடுத்து விட்டுப்போனான். அதில்பார். "இராதா ராணிக்கு இந்த நோட்டு" என்று எழுதியிருக்கிறான் என்றாள்.

இராதா :—அப்படிப்பட்டவன் அவன் யாரம்மா ?

தாயார் :—அவன் பெயர்கூட நோட்டிலே எழுதியிருக்கிறது. ஏனென்றால் இதை எவராவது திருட்டுநோட்டென்று சொல்வார்களென்று தன்பேர் எழுதியிருக்கிறான். அவன் பெயர் ருக்மிணீகுமாரராயன்.

மறுநாள் தாயார் மகள் இருவர்களும் ருக்மிணீ குமாரராயனைத்தேடினார்கள். ஸ்ரீராமபுரத்திலும் அவன் சமாசாரமே கிடைக்கவில்லை. நோட்டை அவர்கள் மாற்றவில்லை. அப்படியே வைத்துக்கொண்டு இருந்தார்கள். அவர்கள் ஏழைகளாயிருக்கினும் பேராசையுள்ளவர்களாயிருக்கவில்லை.

தி. அ. ஸ்வாமிநாத ஐயர்.

---

# MORAL VERSES.

## நீதிசாத்திரம்.

### நூன்முகம்.

அளப்பருநீதி நூல்கள் நந்தமிழ்நா டியற்றிய தவமென விளங்காநிற்கின்றன. அவை செந்தமிழ்க் கடலைத் தம்மறிவாம்புணைகொடு கடந்த செந்நாப்புலவோரா னருளப்பெற்று, எந்நாட்டவருந் தம் முடிசூட்டிக் கொள்ளுமாறு பொலிவெய்தி நின்றன. அஃதங்ஙனமாக, வடநூல் வல்லார் தந்நூலி னாங்காங்கு கண்டன சில்ல திரட்டி 'நீதிசாத்திர'ப் பெயராற் காட்டினர். அக்கருத்துக்களு நந்தமிழ்வல்லோர்பாற்பட்டுத் தத்தநூல்களுட் பல் வேறிடங்களிற் கூறியிருப்பினும் யாம் அவையிற்றை யொருங்கே மொழிபெயர்ப்பா னார்வமுற்று ஓராற்றால் நீதிசாத்திரப் பெயரானே யியற்றுவனாயினேம்.

தமிழ்வல்லோர் இவையிற்றை இலக்கண வழூஉக்களுக்குக் காட்டாவெனினுங் கைக்கொண்டு எம்மை மருட்டாவழித் தெருட்டுவாராக.

மண்முகத் தெனது மயறெறப் போந்த
சண்முக னருளுளந் தழீஇ
யுண்மைநூ லறைகுவ னுலகி னோர்க்கே.

### காப்பு.

ஆதிநூற் கூற்றுக் கமரைங் கரற்றொழுது
நீதிநூல் கூற நினைந்து.



காப்புக்கு முன்னாங் கடவுளெனக் கைக்கரியன்
றோப்பு முறைக்குமுன் னூற்றவருண் — மாப்பாவை
யண்டுநிறப் பெம்மா னமர்நீதி சாத்திரக்கிங்
கொண்டுணை யாகி யுறும்.

### அவையடக்கம்.

வேதச் சினையா விரிசாத் திரமலரா
போதப் புலவோர் புகழளியாச் — சீதந்
தருசோலை யாமவையைச் சார்தும் பிழையா
வருமூல வெப்பகற்று மாறு.

### நூல்.

வாய்மையே மெய்த்தாய் வயங்கறிவே மேதாதை
தூய்மைசெய் நல்லறமே சோதரமா — மேய்ந்ததயை
நட்பாகுஞ் சாந்தமனை நற்புத் திரன்பொறையா
முட்கொள் ளிவையே யுறவு. (௧)

மானம் படவரின் வாழா துயிர்நீத்திங்
கீனம் படாதுயர்வை யெய்துகவே — மானமது
பட்டால் வசைமதியம் பானுவுள ஞான்றுமுயிர்
விட்டாலுஞ் சீர்த்தி விடா. (௨)

அந்தணருக் காமடிசி லாவினுக்கிங் கெய்தும்புல்
சிந்தைவலி மிக்க திறல்வீரற் — குந்தமர்
லொன்னார் தமைச்செறுத லுற்றகொழு னற்பெறுதன்
மின்னாருக் கெய்தும் விருப்பு. (௩)

பிறர்தாரந் தன்னையே பெற்றதா யாகப்
பிறர்பொருளை யோடாகப் பேணி — பொறைமேவும்
வைப்பிலுயிர் யாவுந்தன் மன்னுயிரா வுற்றோனே
யொப்பிலுயர் ஞானி யுணர். (௪)

யாக்கை யிளமை யநித்தியமே யஃதுறாஉம்
வாழ்க்கை யொடுவளனு மாறுமே — நீக்கமறுஞ்
சாவோ தலைநிற்குந் தன்மைத் துயிர்வாழ்வீர்
ஆவோ புரிவீ ரறம். (௫)

தந்தை யொடுதன் றனித்துணைவன் றானீன்ற
மைந்த னெனினும் வனப்பினரேற் — பைந்தொடியார்
சிந்தையன் னார்வயமாச் செல்லுமாற் காளையீர்
சிந்தை யகன்மி னினைந்து. (௬)

அத்தி மலரு மடர்வெண் கரிக்கொடியும்
வித்தகநன் னீர்மேவு மீனடியுஞ் — சுத்தமுற
வித்தறையிற் காண்கினுங் காணே மெழினல்லார்
சித்தமுறு மெண்ணத் திடன். (௭)

பூஞ்சத்தி லன்னம் பகர்வோன் வளமரீஇ
விஞ்சு தனதான மீந்திடுவோ — னெஞ்சம்
வலியா னமரில் வறுமையிற் சீலம்
பொலிவான் புகழே புகழ். (௮)

தேட்டை யடியார்க்குச் சேரிளமை யில்லாட்கு
வீட்டை யடைநெறிக்கு மேவுயிரைப் — பாட்டளியார்
பூத்தலர்ந்த கொம்பைப் பொருமின்னே மேதினியி
னீத்தலே நல்ல நெறி. (௯)

உடலிற் றலைதலையா மோங்குறுப்பிற் கண்ணும்
விடலில் சுவையிலுவர் மேவுங் — கடலிற்
பெரிதாகும் கண்ணுய் பெருகுநன் னீரே
யரிதாமோ ராற்றுக் கறி. (௰)

தடம்பலமண் ணொன்றுங் கோப்பலபா லொன்று
முடன்மே லணிபல வொன்று — மிடும்பொன்
னமையும்பன் னூல்க ளறையு மிறையொன்றே
சமயம் பலவினுக்குந் தான். (௧௧)

பொருணசையோர்க் குற்றார் போத குருவில்லை
வருகாமிக் கில்வெட்க மானந் — தருகல்வி
தோய்வோர்க் கிலைசுகமுந் துஞ்சல் பசித்தோர்க்
கேய்சுவையும் பக்குவமு மில். (௧௨)

வள்ளல்வறி யோனு வழங்கான் வளவனு
வெள்ளும் பதகனுண் டேய்சதமாக் — கொள்கலியி
னல்லோனுட் சின்னுளா நாயகனே ரூழியனுப்
புல்லோ னரசாகிப் போம். (௧௩)

காதன் மனையாளைக் கையகற னல்லோர்நெஞ்
சேதம் படநிற்ற லெய்துகடன் — கோதார்
குலத்தானைக் காண்டல் கொடுவறுமை யிற்சார்
நலத்தானு மாயே நமன். (௧௪)

கா. நமச்சிவாய முதலியார்.

---



# TIT BITS.

## விநோதக் கூற்றுக்கள்.

### ஒரு பத்திராதிபரின் தந்திரம்.

ஓரூரிலே ஒருவர் புதிதாய்ப் பத்திராதிபராயினார். அந்த ஊரிலே சூதாடுவோர் அனேகர் ஜனங்களுக்குக் கஷ்டத்தை கொடுத்துக்கொண்டுவந்தனர். "இச்சூதாடுவோரைப்பற்றிக் கண்டித்து எழுதாவிட்டால் உம்முடைய பத்திரிகையை நாங்கள் ஆதரிக்கமாட்டோம்" என்று ஜனங்கள் சொல்லிவிட்டார்கள். அவரும் அப்படியே அடுத்த சஞ்சிகையிற் சூதாடுவோரைப்பற்றி நிந்தித்து எழுதி வெளியிட்டுத் தாம் ஒரு வேலைக்காரனைப்போற் கையிற் கத்தரிக்கோலுடன் ஒருபக்கமாக உட்கார்ந்துகொண்டார். சிறிதுநேரம் சென்றதும் வலிய உடம்பினையுடைய ஒருவன் கையில் ஒரு பருத்ததடியை எடுத்துக்கொண்டுவந்து இவரைநோக்கிப் "பத்திராதிபர் உள்ளேயிருக்கிறாரா?" என்றுகேட்டான். "இப்பொழுதுதான் வெளியிற் சென்றார். இதோ வந்துவிடுவார். பத்திரிகையை வாசித்துக்கொண்டிருங்கள்" என்று சொல்ல அவனும் அப்படியே ஒரு நாற்காலியிற் கால்மேற்காலைப் போட்டுக்கொண்டும் தனதுதடியைப் பக்கத்தில் வைத்துக்கொண்டும் மிகவும் கோபத்துடன் ஒரு பத்திரிகையெடுத்து வாசித்துக்கொண்டிருந்தான்.

பத்திராதிபரும் படியிறங்கிக் கீழேசென்றார். அப்பொழுது தனக்கெதிரில் ஒருநீண்டதடியைக் கையிலெடுத்துக்கொண்டுவந்த மற்றொருவன் இவரைநோக்கிப் "பத்திராதிபர் உள்ளேயிருக்கிறாரா?" என்று மிகவும் கோபத்துடன்கேட்டான். "ஆகா, இருக்கிறார். மாடத்தின்மேல் ஒரு பிரசுரத்தைப் படித்துக்கொண்டிருக்கிறார். மேலேயேறிச் செல்லுங்கள்" என்றார். இப்படி உரைத்ததும் இவன் தடியுடன் மேலேசென்று நாற்காலியிலிருந்தவனை ஓர் அடிபலமாயடித்தான். அவனும் அந்தஅடியைத் திருப்பினான். சண்டையும் வலுத்தது. இரண்டு பேர்களுங்கட்டி மல்லுக்குநின்று படிகளில் உருண்டுருண்டு கடைசியிற் படிகளினடியில் நன்றாய்த் தங்களுக்குத் திருப்தியாய் மாறிமாறி அடித்துக் கொண்டார்கள். பத்திராதிபரின் தந்திரம் எத்தகையது!

### புத்திமதிகேட்டல்.

ஒருநாள் ஒருவன் ஒரு வக்கீலிடம் வந்து ஓர் அரைரூபாயைக் காட்டி 'இது செல்லுமா?' என்று கேட்டான். அவ்வக்கீலும் அந்த நாணயத்தைக் கையில் வாங்கிப்பார்த்து 'நன்றாய்ச் செல்லும்' என்று சொல்லி அதைத் தன் பையிற் போட்டுக்கொண்டு, என்னிடத்தில் யோசனை கேட்க வருகிறவர்கள் எனக்குக் கட்டணம் ஒரு ரூபாய் கொடுக்கவேண்டும். ஆகையால் நீர் வீட்டுக்குச் சென்றதும் பாக்கி அரை ரூபாயையும் சிறிது சீக்கிரமாகவே எனக்கு அனுப்பிவிடும்" என்றார்.

க. தே. வேங்கட வரதாசாரியன்.

# CORRESPONDENCE.

## கடிதம்.

### ஸ்ரீ இராமாநுஜசரிதவாராய்ச்சிவிடையும் அது போலியாமாறும்.

இஃது இராமாநுஜ சரித நூலியற்றியவரால் எம்மிடங் கொடுக்கப்பட்டது. இதனடியிற் கையெழுத்து வைத்திருக்கும் ஸ்ரீ. நரசிம்மாசாரியர் என்பவர் ஞானபோதினிக்கு யாதோரியைபு மில்லாதவரா யிருத்தலேயன்றி இதில் எழுதின விஷயங்கள் போலியாயிருக்கவும், அவரது ஆவலை மறுமை கருதியும் பிறர்க்கு உண்மை விளங்குதல் நோக்கியும் உள்ளபடி அவரது விடையைப் பிரசுரஞ் செய்து அதுபோலியாமாறும் அடியிற் காட்டலாயிற்று. ஆங்காங்கே இருதலைப் பகரத்திலுள்ளன நமது மறுப்புக்களாம்.—[**பத்திராதிபர்.**]

ஞானபோதினியைப் படிக்கும் அன்பர்களுக்கு ஒரு விண்ணப்பம் :

1. 'நூலிலுள்ள குற்றங்குறைகளுள் யாம் கண்டவற்றிற் சிலவற்றை நடுவு நிலைமை குன்றாது இங்கு எடுத்துக் காட்டுவதும் எமக்கு ஒரு கடப்பாடாம்' என்ற நம் நண்பர், மற்றை நூல்களிற் சிறிதுங் குறை காணாமையே தமது நடுவு நிலைமையோ ?

[இது கேட்டற்கு இவர்யார் ? குறிப்பெழுத எடுத்துக்கொண்ட மூன்று நூல்களுள் முந்தினது அவ்வளவு விசேட ஆராய்ச்சிக்கு இடமன்றென விட்டிருத்தலாகாதா ? அல்லதூஉம் அதிலும் ஒரு பெருங்குறை காட்டியது இவர் கண்ணில் ஏன் படவில்லை ? பிந்தின நூலிற் பிழையில்லையென்பது எமது துணிவாகக் கூடாதா? ஒரு நூலிற் குற்றங்கூறியவிடத்து 'ஊரிலுள்ள புத்தகங்களின்மேலெல்லாம் ஏன் அப்படிக் கூறவில்லை?' என்பது ஏற்றவிடையோ ?]

2. (ஞானபோதினி: பக்கம் 75 - இல்) (பகவான்) 'நடுக்கடலில் திசைதப்பியலைபவனுக்குக் காருணிகனானொருவன் தோணியையுதவினாற்போல......மீளவுங்கருணை கொண்டு......இராமகிருஷ்ணாதி அவதாரங்களைச் செய்து'—இவ்வாக்கியத்தில் 'உபமானத்திற்கு ஏற்ற உபமேயம் காணப்படவில்லை' என்கின்றார், நண்பர், 'உதவினாற் போலக்கருணைகொண்டு, அவதாரங்களைச் செய்து' என முடிபுசெய்து உபமானோபமேயப் பொருத்தத்தை அறிவாராக.

[ஒரு பெரிய சொற்றொடரிற் சில சொற்களை யிடையிடையே விட்டு எழுதிக்காட்டின மாத்திரத்தால் உபமானத்திற்கு உபமேயம் வந்திடுமோ ? தோணியை யுதவுதற்கு உபமேயம் பொருந்தவில்லையே. 'அவதாரங்களைச் செய்து' என்பதற்கு வேறுவமை தனியே கூறப்பட்டிருக்கிறதன்றோ ? அதனை மறைத்துக்காட்டுதல் பொய்ம்மையின்பாற்படாதோ ? இவர் கூறியபடி முதனூல்களில் இல்லையே. அவ்வாக்கியங்களை விரிவஞ்சியிங்கு எழுதாது விட்டனம். வேண்டுழி யெடுத்துக்காட்டுவாம்.]

இங்ஙனமே, (ஞானபோதினி 76-ஆம் பக்கத்தில்), தந்தையின் பொருளைத் தனயன் பெறுவது போலச் சடகோபனருளிய திருவாய்மொழியின் "ஒருநாயகம்" என்ற திருப்பதிகத்தை அத்திருநாரணனுக்குச் **சமர்த்து**



என்ற வாக்கியத்தின்கண்ணும் 'உபமான உபமேயங்கள் இயையவில்லை' என்கின்றார். நம் நண்பர், தந்தையின் பொருளைத் தனயன் பெறுவதுபோல இராமாநுசன் திருவாய்மொழியில் தமக்குள்ள உரிமையினாற் சமர்ப்பித்தார்' என்னும் பொருளைநோக்கிப் பொருத்தங் காணகில்லாது குறைகூறுகின்றார்.

[இங்ஙனங் கொண்டாலும் உபமானவுபமேயங்கட்கு இயைபில்லையே. பெறுதற்குச் சமர்ப்பித்தல் எங்ஙனம் ஒப்பாதற்கு ஏற்கும் ? 'பிதிருதனத்தைப் புத்திரன் விநியோகங் கொள்ளுமாபோல......ஒரு நாயகத் திருவாய்மொழியைத் திருநாரணற்குச் சமர்ப்பித்தருளினார்' என்று முதனூல்களிலுள்ளதை நன்கு ஆய்வாராக. விநியோகங்கொள்ளுதல் என்பதற்குப் பொருள் 'பெறுதல்' அன்று என்பதை நல்லாசிரியரை யடுத்துக் கேட்டுணர்க.]

3. (ஞானபோதினி: பக்கம் 75-இல்), 'பொய்கை பூதம் பேய் மழிசையர் கோன் முதலிய ஆழ்வார்கள்'—என்னும் இவ்வாக்கியத்தும் 'ஆழ்வார்கள்' என்றது காரண விடுகுறியளவாய்நின்று இளையாழ்வார்முதலிய ஆசாரியர்களையும் தழுவவேண்டுமென்பது ஆசிரியரது கொள்கையாதலின் 'முதலிய' என்கின்றார் எனவறிக.

[காரணவிடுகுறியின் இலக்கணத்தையுணர்ந்திருந்தால் இவர் இவ்வாறு எழுத இடமில்லை. காரண மாத்திரத்தாற் பலபொருள்களைக் குறித்தற்குரிய சொல் அங்ஙனமன்றி யிடுகுறியளவாய் நின்று ஒன்றற்கே யுரிமை பூண்டிருத்தலன்றோ அதனிலக்கணம். அதனால் ஆழ்வார்களென்றது பொய்கையார் முதலிய பன்னிருவரையே குறிக்குமேயன்றிப் பிறரை யுணர்த்த மாட்டாதே. இளையாழ்வார் முதலிய ஆசாரியர்களைத் தனியே ஆழ்வார்களென்றல் வைஷ்ணவ சம்பிரதாய மன்றென்பதை யறிவாராக. சொல்லளவினாற் கொள்வோமெனின் எதிலாழ்பவரையுங் கொள்ளவேண்டியதாய் அதிவ்யாப்தியென்னுங் குற்றத்திற்கிடமாம். அல்லதூஉம் இளையாழ்வார் அவதரித்தற்கிடமான நாட்டின் சிறப்பைக் கூறுமிடத்து அவரும் அவர்க்குப் பின்னிட்டோரும் அவதரித்ததை யெடுத்துரைத்தல் தகுதியன்றே.]

4. (ஞானபோதினி பக்கம் 76-இல்) 'இப்படியிருந்தால் விளங்கும், அப்படியிருந்தால் விளங்கும்' எனக் கூறுகின்றார். இவர்க்கு வேண்டிய விளக்கமே யாவர்க்கும் வேண்டியதாமோ ? அஃது ஆசிரியர்க்கன்றோ தெரியும்? கண்ணில் நோய்கொண்டவொருவனுக்குச் சூரியன் நீலநிறமுடையவனாகக்காணப்படின் அது எவருடைய குற்றமாகும்? ஒருவர் தமக்குவிளங்காதவிடயத்தை ஆசிரியரிடம் கேட்டறியல் வேண்டுமேயன்றி நூலாசிரியர்களிடங் குற்றங் கூறலாமோ?

[இஃது அவ்வளவும் வெறிக்கூற்றும் அசங்கதமுமாம். முதனூல்களில் தெளிவாக எழுதப்பட்டுள விஷயங்களை முறைபிறழ ஒழுங்கின்றி யெழுதிக் குழப்பத்துக்கு இடஞ்செய்தல் ஏலாதென்பது வெளிப்படை.]

5. ஷை பக்கத்தில், 'இதனாலன்றோ ஆளவந்தாரது குறைகள்யாவும் தீர்ங்கின'—இதில், விடயம் இன்னதென வறியாமல் நமது நண்பர் குற்றங் கூறுகின்றார். அந்தோ! ஆளவந்தாரது விரல்கள் நிமிராமை காரணமாகத் தெரிந்த 3-குறைகள் மிகப்பெரியன. சாதாரணமான மற்றைக்குறைகள் பல. அவ்வாளவந்தாரது திருவுள்ளப்படி பல்வகைச் சிறப்புச்செய்திகள்

இராமாநுசன்முகமாய் நிகழ்ந்தமையின் அவற்றைவெளியிட இந்நூலாசிரியர் அங்ஙனம் பலபடிவியந்து அநுவாதமுகத்தாற் கூறினார் என்பதை நம் நண்பர் தெளிவாராக.

[இது மிகவும் நேரிது! ஆளவந்தாரைக் குறைகட்கு ஒரு கொள்கலமாக்குகின்றார். அங்ஙனமிருந்தால் மற்ற விரல்களும் மடங்கியிருக்குமல்லவோ? மூன்றே மடங்கியது என்னை? "மூன்று திருவிரல்கள் மடங்கியிருக்க...... இளையாழ்வாரும் 'ஏதாகிலுந் திருவுள்ளத்திலே கருத்துக்கள் உண்டாகக் கடவன' என்று விசாரித்தருளி 'முன்பு வியாக்கியானசமயத்திலே அபிமத ஸல்லாபங்களைக் கேட்டவர்கள் உண்டோ?' என்ன, ஸ்ரீபாதத்து முதலிகளெல்லாருங் கூட 'வேறொன்று மறியோம்' என்ன இளையாழ்வாரும் அவரகவாயி லெண்ணத்தி னேற்றமறிந்து......ஒருப்பட்டவாறே மூன்று விரல்களும் விட்டு......கைநிமிர" என்றன்றோ முதனூல்களெல்லாம் முழங்குகின்றன. அள்விறந்த குறைகள் நிறைந்திருந்தால் 'வேறொன்று மறியோம்' என்பார்களோ? அவர்கள் அறியாத குறைகளை யிவர் அறிந்தார்போலும்! ஆசாரியர்க்கு இல்லாத குறைகளை யெல்லாங் கற்பிக்குந் திறன் வியக்கற்பாற்று. ஸ்ரீ ராமாநுஜ சரித நூலிலும், 'நமது ஆளவந்தார்க்கு மனதில் மூன்று எண்ணங்கள் உண்டு' என்பதன்றே முதலிற் காணப்படுகின்றது. அநுவாத முகத்தாற் கூறினாரென்கின்றனரே. இதில் அநுவாத விலக்கணம் எங்கே? 'ஆளவந்தாருடைய பிரதமமான இழவைத்தீர்த்தருளினார்.' 'இரண்டாம் இழவையுந் தீர்த்தருளினார்.' 'திருதீயமான இழவையுந்தீர்த்தருளினார்' என்று இவ்வாறு முதனூல்களெல்லாம் ஒரு நிகராக விளங்கக்கூறுதலை உணர்ந்து அடங்குவாராக.]

6. (ஞானபோதினி: பக்கம்76-இல்), 'லீலாவிபூதி [இப்பூலோகம்]—இது மரபுவழு' என்றார். அந்நூலாசிரியர், 'இப்பூவுலகமே' என்றது, திருமால் லீலை கொண்டாடிய காரணத்தாற் பெரியார் கூறும் மரபிற்கிணங்கி அங்ஙனங் கூறியதை யவை வரல்லார் அறியார்.

[இவ்வொருவர் குற்றத்துக்கு அனைவரையும் உள்ளாக்குகிறார்! திருமால் லீலை கொண்டாடியது பூலோகத்தில் மாத்திரமேயோ? மற்றவுலகங்களிலில்லையோ? பூமியைப்பற்றிக் கூறுமிடத்து லீலா விபூதியாகிய இப்பூலோகம் என்றால் ஒருவாறு பொருந்தினும் பொருந்தும். லீலா விபூதிக்கு இலக்கணங் கூறவந்த விடத்து 'லீலா விபூதி இப்பூலோகம்' என்றால் ஏன் தவறாகாது? லக்ஷண வாக்கியங்கள் அவ்யாப்தி முதலிய குற்றங்கட்குச் சிறிதும் இடமின்றி யிருத்தல்வேண்டுமென்பது அனைவர்க்கும் ஒப்பமுடிந்ததேயாம்.]

7. 'திருமலையாண்டான்', 'திருமாலையாண்டான்' என இரண்டு வகையாக் கூறுவதும் பழய புத்தகங்களின் வழக்கென நண்பர் அறியவேண்டும். அன்றியும், அங்ஙனம் அறியக் கூடாவிடின் அச்சுப்பிழை என்றாயினுங் கொள்ளலாமன்றோ? அச்சுப்பிழைகள் நம் தமிழ்ப்புத்தகங்களிலிருத்தலியற்கையென்பதையும் நண்பர் தம் புத்தகத்தினின்றும் உதாரணங்கண்டுணர்வாராக.

[பழைய புத்தகங்களிலெல்லாம் 'திருமாலை யாண்டான்' என்றேயுளது. 'திருமலையாண்டா' னென்று உண்டாகில் அவ்வகைப் புத்தகங்காட்டவேண்டும். வெற்றுரை பயனுறாது. ஒருவகை யச்சுப்பிழையே நூன் முழுவதும் வந்ததெனின், அஃதும் அகற்றற்பாற்றே. ஒரு புத்தகத்திற்



காட்டியபிழையை மறுத்தற்குப் புத்தகங்களையெல்லாம் பிழை யென்றல் சாலுமோ? 'அச்சுப்பிழைகள் நம் தமிழ்ப் புத்தகங்களிலிருத்தல் இயற்கை' என்று தனித் தன்மைப் பன்மையா லெழுதியதை யாம் மறுப்பானேன்? அச்சுப்பிழைகட்குந் தமிழ்ப்புத்தகங்கட்கும் இடைவிடாத்தொடர்பு கற்பித்தல் இவர் துணிபுபோலும். பிழையில்லாத் தமிழ்ப் புத்தகங்களுங் காணலாமன்றோ?]

8. ௸ பக்கத்தில், 'பாததூளிகள் ........ வேண்டுவதன்றோ?'—என்ற இவ்வாக்கியத்தில்'வேண்டுவது' என்பதைச் செயப்பாட்டு வினைப்பொருட்கண் வந்த செய்வினைத் தொழிற்பெயர் என்பதையும், 'அன்று' என்பதை ஐம்பால் மூவிடங்கட்குப் பொதுவான முற்று என்பதையும் நம் நண்பர் அறியவேண்டுவ தவசியமே.

[இவர் கூறுகிறபடி வேண்டப்படுதலென்று பொருள் கொண்டாலும் பொருந்துமாறெங்ஙனே? அன்று என்பதற்குக் கூறியஇலக்கணம் ஈண்டைக்கு ஏலாது.]

இனி, 'நீவாழ்வீராக' என்றவிடத்து அச்சுப் பிழையால் வந்த 'நீ' என்னுமொருமைப் பெயர் சில பிரதிகளில் மாத்திரம் காணப்படுமேயன்றிப் பலபிரதிகளில் 'நீர்' எனப்பன்மையாயிருத்தலையும் அன்னார் ஆராய்ந்து வழாநிலை எனக் கொள்வாராக.

['நீர்' என்று பதிப்பித்த புத்தகம் சிலகாட்டிப் பின்னரே இது கூறத்தக்கது. அங்ஙனங் காட்டாது கூறுதலில் யாதுபயன்?]

9. (ஞானபோதினி பக்கம் 76-இல்) 'கடித்த பாம்புவலிதாகில்...... சேவிக்கும்'என்ற இதற்கு எழுவாய், இதன்முன் வாக்கியமாகிய 'கடியுண்ட பாம்பு வலிதாகில்.........சேவிக்கும்' என்ற வாக்கியத்திலுள்ளதே எழுவாய் எனக்கொள்க. இவ்விரண்டு வாக்கியங்களையும் தொடர்நிலையாக அன்னார் அறிவாராக. இங்ஙனங் கூறல் பாஷை நடை என்க. இதனை, பிறபாஷைகளிலுங்காண்க. உதாரணம்.("Great honor to the fire-flies. But." என்ற Carlyle என்னும் ஆங்கில வித்வானது) வாக்கியத்தினுங் காண்க.

[இரண்டு வாக்கியங்கட்குந் தொடர்பின்மை விளக்குமாறு முந்தின வாக்கியத்தினிறுதியில் முற்றுப்புள்ளி கொடுத்திருத்தலை யுற்றுநோக்கியொழிவாராக. நலிந்து அங்ஙனங்கொண்டாலும் மயங்கவைத்தலென்னுங் குற்றங் கைவிடாதே. வழுப்பட்டநடையைப் பாஷைநடையென்றல் தகாதன்றோ? இவர்காட்டிய ஆங்கிலமேற்கோள் இதற்கு ஒத்ததன்றென்பது ஒப்புநோக்கி யுய்த்துணரற்குரியது. அல்லதூஉம் 'கடித்தபாம்பு வலிதாகில் விரஜையிலே தீர்த்தமாடி ஸ்ரீவைகுண்டநாதனை ஸேவித்துக்கொண் டிருக்கிறேன்; கடியுண்டபாம்பு வலிதாகில் திருக்கோனேரியில் தீர்த்தமாடித் தேவரீரை ஸேவித்துக்கொண் டிருக்கிறேன்' என்று இங்ஙனம் முதனூல்களில் எல்லாம் மிகத் தெளிவாகவிருத்தலைக்கண்டு தெளிக.]

10. (ஞானபோதினி: பக்கம் 77-இல்) 'செவ்வனே பழுத்திருந்த தேமாங்கனிக்குக் கிளித் திரள்கள் காத்திருக்குமாறுபோல அவ்வெம்பெருமானுடைய திருமேனியைக் காத்திருப்பாராயினார்'—இதில், நம் நண்பர் விபரீதப் பொருள் கொள்கின்றார். இதில் இங்கு, அநுபவ யோக்கியவஸ்து என்று மாத்திரங் கொள்ளவேண்டுமே யொழிய வேறுவகை கொள்ளலாமோ? இதனை நம் நண்பர், "உண்டிட்டாயினியுண் டொழியாய்" என்ற

பெரியார் செய்யுளிலும், 'அஹமன்னம்'' அன்னாதோஹம்'' என்ற வேத வாக்கியங்களிலும் கண்டு தெளிவாராக. இவ்வாக்கியங்கட்கும் இங்ஙனமே விபரீதமாகக்கொண்டு கடவுள் சேதனர்களுடைய என்பு முதலியவற்றைப் பற்றித் தின்கின்றான் எனவும் சேதனரும் கடவுளுடைய என்பு முதலியவற்றைப் பற்றித் தின்கின்றார் எனவுங் கூறுவர்போலும். நிற்க.

[இது மிகைபடக்கூறல். 'பழுத்திருக்கிறதேமாவைக் கிளித்திரள்கள் காத்திருக்குமாபோலத் தத்துல்யரான இவர்களும் விமலசரம விக்ரகத்தைக்''கையிற்கனி''இத்யாதிப்படியே மெய்யிற்பிறங்கியசீரைப்'பழுக்கச்சேவித்துக்கொண்டு' என்று முதனூல்களிலுள்ளதற்கேற்ப எழுதினாலே விபரீதப் பொருள்பயவாது. வேற்றுமையை வேறுபடுத்தியது மயக்கத்திற்கிடமே.]

தாய் மகனை, 'அவர்' எனச் சிறப்பித்துக் கூறல் 'இயல்வதன்று' என்ற நம் நண்பர், அறிவொழுக்கங்களா லுயர்ந்தார் வயதிற்சிறியாரெனினும், தாய்முதலோராற் சிறப்பிக்கவுரியராவர் என்பது பண்டைப்பெரியோர் கொள்கையென அறியவேண்டுமே! இனி, இம்மரபைத் ''திருநெடுந்தாண்டகம்'' என்ற பிரபந்தத்தின் வியாக்கியானத்தால் தெளிவுபெற அறிவாராக.

[பெரியதொரு நூலுரையின் பெயர் மாத்திரத்தை யெழுதி மருட்டத் தொடங்கவேண்டா. மேற்கோள் வாக்கியத்தை யெடுத்துக்காட்டித் தமது கொள்கையைத் தாபித்துக்கொள்ளலே தர்க்கலக்ஷணம்.]

அன்பர்காள்! யாம் வீணே பயனற்ற இத்தகையசெயலிற் காலம்போக்கோமாதலின், அறிவுடைய இத்தமிழுலகம் உண்மையீதென வுணருமெனுமுறுதிகொண்டு இரண்டொரு வார்த்தையால் இத்துடன் முடித்துவிடுகின்றோம்.

**குறிப்பு** :—ஞானபோதினி: பக்கம்75-இல் ''நடுக்கடலில்......அவதாரஞ்செய்தது'' என்ற வாக்கியமும், 76-இல் '' தந்தையின் பொருளை...... சமர்ப்பித்து'' என்றவாக்கியமும், 77-இல் '' கடித்தபாம்பு......சேவிக்கும்'' என்ற வாக்கியமும் பூர்வாசாரியர்களுடையன. இங்ஙனமாக, தாம் தமது சிற்றறிவிற் கேற்றபடி குற்றங்கூறுவது பாகவதாபசாரத்திற் காளாக்குவதுடன் போலியாராய்ச்சி என்பதும் தெற்றெனவிளங்கும்.

[பூர்வாசாரியர்கள் எழுதிய முதனூல்களில் இப்படியெல்லாம்வாக்கியமில்லையென்பது அந்தந்த நூல்களைப் பார்த்தால்தானே புலப்படும். மேல்யாம் காட்டியுமிருக்கின்றோம். ஆகவே இவரது கூற்றுப்பொய்யுரையாய் இவர் வைணவநூல்களு மறியாரென்பதனை வலியுறுத்துகின்றது. முதனூல்கட்கு முரணாகக்கூறுவது சிற்றறிவும் பாகவதாபசாரமு மாமேயன்றி யதனையெடுத்துக்காட்டியது அங்ஙனமாகாதென்க. தமது போலியாராய்ச்சியைப் பிறரிடத்துக் கண்ணாடியிற்போலக் காண்கின்றார்; இத்தெளிவிருந்தபடியென்னே !]

கிறிஸ்டியன்காலெஜ் ஆங்கில மாதாந்தத் தமிழ்ப்பத்திரிகையில், 'நூலாராய்வோர் குற்றத்தைக் கூறாமல் குணத்தையேகூறி நூலியற்றுவோர்க்கு ஊக்கத்தினை விளைவிக்கவேண்டும்' என்னும் கருத்தடங்கிய வாக்கியமொன்றெழுதிய நம் நண்பர் இங்ஙனம் குற்றம்கூறலும் தகுதியோ? இதுவும் நடுவுநிலைமையேயோ? ஆதலின், நமது நண்பர் இனி, இத்தகைய அற்பமும் குறைவுமான காரியங்களில் முயலாமல் நற்காரியங்களில் தமது வாணாளைச்செலவிட்டுப் பத்திரிகையையும் பயன்படுத்துமாறு எல்லாம்வல்ல இறைவனை வேண்டுகின்றேன்.



[கிறித்தவக்கலாசாலை ஆங்கில மாதாந்தப் பத்திரிகையில் யாம் எழுதியவற்றின் கருத்து இஃதன்று. அதில் 'இதனால் நூல்களிற் குற்றங்கள் மிகுந்துகிடந்தால் அவற்றை யெடுத்துக்காட்டாது பொதிந்து மூடி வைக்கவேண்டுமென்று யாம் கூறவரவில்லை. நூல்களிற் குற்றங்காணின் அவற்றை நூலாசிரியர்மனம் புண்ணாகாமல் இன்சொற்களா லெடுத்துக் காட்டிக் கூடுமானால் அவற்றைப் போக்குமாறு இவையென்று சுட்டலும் குணங்காணின் அவற்றையெடுத்து வியந்து மதித்துப்பேசலும் வேண்டும்' என்று யாம் எழுதியதனால் எமது கருத்து நன்குவெளியாம். அங்ஙனமே யிந்நூலின் குணங்களைப்பற்றி முதலில் மிகவும் வியந்துகூறிப் பின்பு குற்றங்களை இன்சொற்களா லெடுத்துக்காட்டி அவற்றைப் போக்குமாறிவையென்று சுட்டியு முள்ளோமாதலால் தகுதியினின்றும் நடுவுநிலைமையினின்றும் தவறினோ மல்லேம். யாம்செய்ததொழில் அற்பமும் குறைவுமாகாது; நற்காரியமேயாம். இது பத்திரிகையையும் மிகப்பயன்படுத்துவதே.]

'விரீதம்' 'நாகரிகம்' முதலிய வடமொழிகள் தமிழில் எற்றவாறு திரிந்து வழங்கும் என்பதையும் நண்பர் அறிவாராக.

[வடமொழிகள் மனம்போனபடியெல்லாந் திரியுமென்பது அறிதற்பாற்றன்று. உண்டாயிற் குறித்தவற்றிற்கு மேற்கோள் காட்டுக. இனியிது நிற்க. சில குற்றங்காட்டியதற்கே இன்னணம் அவத்தைப்பட்டுப் புழுங்கியழுவாரும் இவர் யாம் அவர் நூலிலுள்ள குற்றமனைத்தையுங் காட்டிவிட்டால் என்படார்? அயயம் நேர்ந்துழி ஏனையவற்றையும் எடுத்துக்காட்டத் தடையில்லையென்க. மற்று, மேற்குறித்த ஆராய்ச்சி விடையினை யெழுதியவரது ஆவலின்படி அதனையிங்குப் பதிப்பித்தோமாயினும் இனி இத்தகைய சாரமற்ற வீண்வாதத்திற்குப் பத்திரிகையில் இடங்கொடோம்.]

---

# REVIEWS OF BOOKS.

## புத்தகக்குறிப்புக்கள்.

**ஸ்ரீமத் வால்மீகி ராமாயண வசனம்.**—பாலகாண்டம.

[இது சென்னை எஸ்பிளனேடிலுள்ள புத்தக வியாபாரிகளுள் தலைநின்றவராகிய வெ. கல்யாணராம ஐயரவர்கள் பதிப்பித்தது. விலை ரூ. 1—12—0; தபாற்கூலி வேறு.]

வடமொழியிலே ஆதிகாவியமெனச் சிறப்பித்துச் சொல்லப்படுவதும் விசேஷ கௌரவம் வாய்ந்ததும் பல்லோர்களாலும் பூஜாகாலங்களிற் பாராயணஞ் செய்யப்படுவதும் பல அருமையான இரகசியங்களையும் நல்லொழுக்கங்களையுங் கற்பிக்க வல்லதும் ஆகிய நூல் ஸ்ரீமத் வால்மீகி மகர்ஷியாற் செய்யப்பட்டுள இராமாயணமேயாம். இவ்விராமாயணத்தையும் வாமன போதாயனங்களாகிய இராமாயணங்களையும் கற்று வழிநூலிலக்கணத்திற்கேற்பப் புதியனவாகச் சிலவற்றை யமைத்துச் செய்துள கம்பரது இராமாயணமும் அதற்கியைந்தபடி செய்யப்பட்ட கம்பராமாயண வசனமும் இருப்ப, வால்மீகி ராமாயண வசனமொன்று ஏற்பட வேண்டுவதன் ஆவசியகத்தைப்பற்றி யந்நூலின் முகவுரையே தெளிவுபெறக் கூறுகின்றது. ஆதலின் இந்நூலின் இன்றியமையாமையைப்பற்றி யாமொன்றும் எடுத்துக் கூறவேண்டுவது அத்துணையவசியமில்லை. மற்று, இத்தமிழ்நூலை வடமொழியினின்றும் மொழிபெயர்த் தியற்றியவர் **பிரமஸ்ரீ பண்டிதர் ச. ம.**

நடேச சாஸ்திரியாரவர்கள், பி. ஏ. இது கும்பகோணக் கலாசாலைத் தமிழ் வித்துவான் பிரமஸ்ரீ உ. வே. சாமிநாத ஐயரவர்களாலும், ஸ்ரீ வை. மு. சடகோப ராமாநுஜாசாரிய ரவர்களாலும் பார்வையிடப் பட்டது; மிக்க இனிமையுந் தெளிவும் வாய்ந்த தமிழ் நடையிலமைக்கப்பட்டுளது. எவ்விடத்திலேனும் படிக்கும்போது அதிகமாகத் தடைப்படுதலின்றி ஒழுகிய வோசை யுடைத்தாய்ச் செவ்வனே செல்லுகின்றது. எப்பொழுதும் மொழி பெயர்ப்புக்களெல்லாம் விசேஷமாய்த் திருத்திகரமாயிருத்த லில்லையென்று பலரும் மொழிபெயர்ப்பு முறையைப்பற்றிக் குறைகூறக் கேட்டிருக்கின்றோம். அவ்வாறு கூறப்படும் தோஷத்திற்கு இந்நூல் ஒரு விலக்காம் என்பது அதனைப் படிப்பார் யாவர்க்குந் தெற்றெனப்புலனாம். அன்றியும் மொழிபெயர்ப்பு முறையிற் சிலர்க்குச் சில முடிபுடைய வாக்கியங்களை விசேஷ பிரீதியாம். வேறு சிலர்க்கு வேற்று முடிபுடைய வாக்கியங்களை விருப்பமாம். அவ்வாறொன்றுமின்றி யிந்நூல் யாவரும் விரும்பத் தக்கவாறு நன்கு அமைந்திருக்கின்ற தன்மை அனைவருங்கண்டு களிகூரத் தக்கதே. மிகவு முயர்வான காகிதத்திற் பெரிய எழுத்துக்களில் அச்சிடப்பட்டுளது. ஆடவரும் பெண்டிரும் ஒருங்கே விருப்பங் குன்றாதவாறு படிக்கத் தக்கது. இதனை நம்மவர் யாவரும் வாங்கிப்படிப்பார்களென்று நம்புகின்றோம்.

**"இந்தியா" ஸ்திரீயின் அழுகை.**

[*இது நாகர் கோயிலிலுள்ள நாஞ்சிநேசன் அச்சியந்திர சாலையிற் பதிப்பிக்கப்பட்டது; விலை அணா 3; தபாற்கூலி வேறு.*]

இந்நூல் திருவாங்கூரைச் சேர்ந்த கோட்டாற்றிலுள்ள **மீனாட்சி நாயுடு அவர்களால்** எழுதப்பட்டது. தெள்ளிய நடையில் வாசிப்பவர் மனமுருகும்படி இஃது எழுதப்பட்டிருக்குந் தன்மை யாவரும் அறியத்தக்கது. பாலிய விதவைகளின் விவாகம் நமது சாஸ்திரங்களிலுள்ள மேற்கோள்கள் பலவற்றை யெடுத்து ஆதாரமாகக் காட்டி வலியுறுத்தப்பட்டுளது. இந்தியாவிலுள்ள இளங்கைம்மைகள் படுந்துயரம், கறந்தபால் கறந்தவண்ணம், தெரிவிக்கப்பட்டுளது. இந்தியாவின் அபிவிருத்தியைக் கருதி யுழைக்குந் தேசாபிமானிகள் யாவரும் இவ்விந்திய மாதின் அழுகையைக்கேட்டு இனிமேல் அவள் அழாதிருக்கும் வண்ணம் தக்கவாற்றான் முயற்சி யெடுத்துக் கொள்வார்களென்பது திண்ணம்.

**மதுரைச் சோக்கேசர் தாலாட்டு.**

[*இது சென்னைப் பண்டிதமித்திர யந்திரசாலையிற் பதிப்பித்தது இதன் விலை அணா-4; தபாற்கூலி வேறு.*]

இந்நூல் பெரிய குளத்திலுள்ள தமிழ்ப்புலவராகிய **கருவை - சங்காலிங்கம் பிள்ளையவர்கள்** இயற்றியது; பல அருமையான நூல்களின் விஷயங்களையெல்லாம் மேற்கொண்டு எழுதியது; மதுரைச் சொக்கலிங்கப் பெருமானது திருவிளையாடற் புராண முதலியவற்றின் சாரமாயுள்ளது; ஏறக்குறைய எண்ணூற்றுக்கு மேற்பட்ட கண்ணிகளுள்ளது; இனிமையுஞ் செவ்வியும் வாய்ந்த தெளிவான நடையில் அமைந்துளது; பாமரரும் பண்டிதரும் ஒக்கப்பாராட்டத் தகுவது; பத்திச்சுவை மிக்கொழுகுவது; மகளிரும் மகிழ்சிறந்து படிக்கற்பாலது; தமிழராவார் யாவரும் வாங்கி வாசிக்கத் தக்கது.



# EDITORIAL NOTES.
## பத்திராதிபர் குறிப்புக்கள்.

**நூலறிவின் இன்றியமையாமை:**—நூலெல்லாம் முற்காட்சியே. முற்காட்சி யெல்லாம் நன்மையைக் கைக்கொண்டு தீமையை விலக்குதற்கண் இறுதியில் ஓரளவி லுதவுகின்றன. நாம் செல்லும் வழியிற் கிடக்கும் ஒரு பொருளின் காட்சி அதன்மீது இடறிவீழாது நம்மைத்தடுத்தல் நிச்சயமாதல் போல, நூலுறுப்புக்களாய பிணிப்புண்ட நுட்பக் காட்சிகளும் அரிய பொருள்களை நாம் நாடிச்செல்வுழிப் போதரும் இடையூறுகளான் எற்றுண்டு வீழாது நம்மைத்தடுத்தலும் நிச்சயமே. இவ்வாறு பிறப்பினும் செயலினும் ஒன்றுதல் பற்றி மிகவும் எளியனவும் மிகவும் நுண்ணியனவுமாகிய உணர்ச்சிகளை யெல்லாம் நாம் ஒரேவிதமாக நடாத்துதல்வேண்டும். நமதாற்றல்கள் செல்லுமட்டும், விரிந்த அறிவினை யடைதற் கேனும் அன்றி யாவருமே அடைந்துள அக்குறுகிய அறிவினையும் முன்னதனோடு ஒருங்கேயொழித்து விடுதற்கேனும் ஒற்றுமைநயத்தாற் கட்டுண்டுளோம்.

**நாகரிக இந்தியர் கடமை:**—மக்களுடைய ஜீவான்மாவினது தெய்வத்தன்மையைப்பற்றிய வுணர்ச்சியும், விலக்கின்றி ஒவ்வொரு மனிதனுடைய உயிரின் கண்ணும் கௌரவம் பாராட்டலுமே மெய்ச்சமயக் கோள்களாம். இவற்றைச் சாமானிய ஜனங்களுணராதவாறு மறைத்துக்கொண்டு நிற்கும் பழைய மூடபக்தியாவன அனைத்தையும் அறவே களைந்தெறிய முயலவேண்டும். கூடியமட்டில் இம்மெய்ச்சமயக் கோள்களை யாண்டும் பரவச்செய்தல் வேண்டும். இக்கொள்கைகள் தொன்று தொட்டுள்ள நமது இந்துமதத்தில் உள்ளனவேயாம். ஆயினும் அவை மறைந்துகிடக்கின்றன. அவைகளை மாசு கழீஇப் பொலிவுபெறச் செய்தல்வேண்டும். அங்ஙனம் செய்தால் மட்டில் இந்துமதத்துக்கு இப்போதுள்ள குறைகள் நீங்கும். இந்துக்கள் பேரவாவுடன் விரும்பும் நன்மைகளும் அன்னார்க்கெளிதினில் வந்தெய்தும். ஆகவே நாகரிகமடைந்த இந்தியர்களாகிய நம்மவர் யாவரும் மேற்கூறியவற்றைத் தம்முடைய கடமைகளெனக் கருதி அவற்றிற்குத் தக ஒழுகுவாராக. இக்கருத்தினை நமது சென்னைமா நகரத்தினின்றும் வெளிப்படும் **ஆரியன்** என்ற மாதாந்த ஆங்கிலப்பத்திரிகையின்கண் உருஷியப்பிரபுக்களு ளொருவராகிய **தாலுஸ்தாயீ** என்னும் பேரறிவாளரும் வலியுறுத் துரைக்குமாறு காண்க.

**நூற்பதிவுகாரர்:**—சென்ற ஆகஸ்டு௴ 21௳ வெளியான போர்ட் ஸெண்ட் ஜார்ஜ் கெஜட்டில், நமது சென்னையிராஜதானியில் அச்சிட்டு வெளிப்படும் நூல்களின் தொகுதி, மூன்று மாதங்கட் கொருமுறை வெளிப்படும் வழக்கம்போல, இப்பொழுதும் வெளிப்பட்டுளது. அதன்கண் யாவருங் கவனிக்கவேண்டியதோர் விசேடமுளது. இதுகாறும் நூற்பதிவுகாரர் அவ்வந்நூல்களைப் பற்றிய தமது குறிப்புக்களை வெளியிடுவது வழக்கம்; அவ்வாறு வெளியிடுவதற்கென்றே கெஜட்டில் இடம் விட்டிருப்பதுமுண்டு. இஃது இவ்வாறாகத் தற்காலம் வெளிப்பட்டுள மூன்றுமாத நூற்குறிப்புக்களுள் நூற்பதிவுகாரது அபிப்பிராயங்களுள் ஒன்றேனுங் காணப்படவில்லை. அன்னார் குறிப்புக்க ளெழுதுவதற்கென விடப்பட்டிருக்கும் இடத்தையுங் காணோம். இது யாவருங்கண்டு களிகூரத் தக்கதன்றே? இது விடயத்தில் நம் சென்னைத் துரைத்தனத்தாருக்கு நம்மவர் கடமைப்பட்டவராகின்றனர்.

**மதுரைத் தமிழ்ச்சங்கத்திற்கு வேண்டியன சில:**—முதற்கண், சங்கத்திற்கென 5000 - ரூபாய்க்கு வாங்கப்பட்டுள நிலத்தின்கண் யாவரும் விரும்பத்தக்க விதமாகச் செவ்வி வாய்ந்ததோர் கட்டிடம் கடிதில் அமைத்தெழுப்புதல் இன்றியமையாதது. சென்ற மதிகூடிய சங்கக்கூட்டத்திற்கு அக்கிராசனாதிபதியவர்கள் வெகு சீக்கிரத்தில் ஒழுங்கான பல ஏற்பாடுகளைச் செய்திருந்தமையைக் கவனிக்குமிடத்து அடுத்த வருஷம் சங்கப்புலவரெலாம் வந்து ஒருங்கே கூட்டங்கூடுமுன் கட்டிடம் அமைக்கப்படுமென்று நம்புகின்றனம். வருடந்தோறும் நிகழக்கடவ நமது சங்கக்கூட்டம் மிகப் பெரிதாயிருக்குமாதலின் அதற்கெனப் போதரும் யாவரும் இனிதினிருக்கத் தக்கவாறு சபாமண்டபத்தைத்தக்க வளவு அகன்றதாயும் வளிநன்கு ஊடறுத்துச் செல்லத்தக்கதாயும் மிக்க ஒளியுள்ளதாயும் வெகு தூரத்திலிருப்பவர்களும் பிரசங்கிப்போரது வாய்மொழிகளைச் சிறிதேனுந் தவறவிடாது செவிக்கொள்ளுதற்கண் உதவத்தக்கதாயும் அமைத்தல் வேண்டும். மதுரை மாநகர் செய்த தவக்காற்றோன்றிச் ‘செந்தமிழ்ப் பாற்கடல் புந்திமத் தாற்கடைந், தப்பொ ருளாகிய தப்பநல் லமுதைத், யுரையெனத் தந்த நரைமூதாள’ராகிய உச்சிமேற் புலவர்கொள் நச்சினார்க்கினியருக்கு நமது அன்பின் அறிகுறியாக வெண்கற்சிலை யொன்று அமைத்து நமது சங்கத்துச் சபாமண்டபத்தலைக்கண் நிறுவுதல் வேண்டும். இதனைக் கவனித்துச் சங்கத்தின் அக்கிராசனாதிபதியவர்களும் வித்துவான்களும் ஏனைய அவயவிகளும் அனுமோதிப்பார்களென்று நம்புகின்றோம்.

**ஜனப்பிரியன்:**—இப்பெயர் கொண்டதோர் மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை சென்ற ஒரு வருடகாலமாக நடந்து வந்து இப்பொழுது இரண்டாம் பிராயத்தினையுற்று முன்னையினும் மிக்கவலியடைந்து, **ம-ள-ள-ஸ்ரீ, சருக்கை-இராமசுவாமி ஐயங்காரவர்கள், பி. ஏ.,** பத்திராதிபராக நடாத்துகின்றமையின் மிகவும் மேம்பாடெய்தி விளங்குகின்றது.

**விவேகபாநு:**— இத்தலைப்பெயர் பூண்டதோர் தமிழ்ப்பத்திரிகை ஆதரிப்பாரின்றி நின்றுவிட்டதெனக் கேள்வியுற்றுப் பெரிதும் மனமுளைகின்றோம். அது தொடங்கிய கம்பீரத்தையும், மேற்கொண்டுலாவிய விஷயங்களினுயர்வையும், விஷயங்களெழுதப்பெற்ற தமிழ்நடையையும்பற்றி உற்றுநோக்கினார்யாவரும் இவ்வாறு அம்மாதாந்தத் தமிழ்ப்பத்திரிகை நின்றுவிட்டமையைப்பற்றி யிரங்குவாரென்பது தேற்றம்.

**திருப்பாதிரிப் புலியூர்ப் பெண்பாடசாலை:**—இப்பாடசாலையையொட்டி இரட்டணை **அசலாம்பிகை யம்மையவர்கள்** வாரந்தோறும்ஞாயிற்றுக் கிழமைமாலை 3 மணிமுதல் 5 மணிகாறும் ஆண்டுள்ள பெரிய மனிதர்களுடைய மனைவிமக்கள் முதலாயினாரைக் கூட்டிவைத்துக்கொண்டு அவர்கட்கு நம் தமிழ்ச் செய்யுட்களின் சுவையையும் அருமை பெருமைகளையும் எடுத்துக் காட்ட விரும்பிக் கம்பராமாயணப் பிரசங்கம் நடத்திக்கொண்டு வருகின்றார்கள். தமிழ்க் கலை நலம் வாய்ந்த மகளிர்கள் கிடைத்தலருமையென்றுணர்ந்து, அத்தகையாரது உதவிகிடைத்தபோதே யாவரும் பயன் பெறவேண்டுமாதலின் அந்நகருளார் அனைவரும் அவ்வம்மையவர்கள் முயற்சி கைகூடும் வண்ணம் செய்வார்களென்றெண்ணுகின்றோம். நம் அசலாம்பிகையம்மை யவர்களைப் போன்ற சில பண்டிதைகள் சென்னை, மதுரை, நெல்லை முதலிய இடங்களிலும் எழுந்து பெண்கல்வியை விருத்தி செய்வார்களாக.

OFFICE ... 1. DEC 1901 MADR

# ஞானபோதினி

ஒரு மாதாந்தத் தமிழ்ப்பத்திரிகை.

தாமின் புறுவ துலகின் புறக்கண்டு
காமுறுவர் கற்றறிந் தார்—திருக்குறள்.

சம்புடம் V. } 1901ஆு நவம்பர்மீ 20உ {புத்தகம் 4.

விஷயங்கள்.

வறுமையுந் தமிழ்ப்புலமையும்.—பத்திராதிபர் ... 121
திருவள்ளுவர்.—திருமணம் - செல்வகேசவராய முதலியார், எம். ஏ., ... 124
மிருச்சகடிகை.—த. ச. நாராயண சாஸ்திரியார், பி.ஏ, பி.எல். 130
‘கதிரொளிக்கீழ்ப் புதுமையிலைகாண்’.—கு. ரா. ஸ்ரீநிவாச ஐயங்கார், பி.ஏ. 136
தென்னிந்திய சரிதம்.—சருக்கை-கி. வரதாசாரியர் ... 138
மரீசிகண்ட பாவனைக்காட்சி.—ந. பலராம ஐயர் ... 145
இராதாராணி.—கி. அ. ஸ்வாமிநாத ஐயர் ... 149
பள்ளியறைப் பிரசங்கம்.—ஜங்கராஜு. ப. வாசுதேவைய பந்துலு... 151
கடிதம்.—
புத்தகக் குறிப்புக்கள்.—
பத்திராதிபர் குறிப்புக்கள்.—

பத்திராதிபர்:— { எம். எஸ். பூர்ணலிங்கம் பிள்ளை, பி. ஏ.
வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியார், பி. ஏ.

சென்னை:
தாம்ஸன் கம்பெனியார்
பதிப்பிப்பது.

1901.

வருஷ சந்தா ரூ. 2—8—0] [சஞ்சிகை ரூ 0—4—0

# ஞானபோதினி.

சம்புடம் V. } 1901௵ நவம்பர்மீ 20உ {புத்தகம் 4.


## POVERTY AND TAMIL SCHOLARSHIP.

## வறுமையுந் தமிழ்ப்புலமையும்.

முற்காலத்தே செந்தமிழ்ப்புலமை மக்களிடத்தே மிகுந்திருந்ததென்றும், இக்காலத்தே அது நாளாவட்டத்திற் குறைந்துபோகின்றதென்றும் பலர் கூறுகின்றனர். இக்கூற்று உண்மைதானோவென்று ஆராயப்புகுந்தால் இதன்கட் கொள்கைகள் வேறுபடும். செந்தமிழ்க்கல்வியும் புலமையும் வரவர மிகுந்துகொண்டேயிருத்தல் கண்கூடாகவும் பலர் மேற்கூறியவாறு உரைத்தற்குத் தக்க காரணங்கள் புலப்படவில்லை யென்றும், ஆங்கிலவரசாட்சியின் பெருநலனாகிய அச்சியந்திரத்தி னுதவியால் தமிழ்நூல்களுட் சிறந்தனவெல்லாம் வெளிப்பட்டுலவுகின்றனவாதலின் யாவரும் அவற்றைப் படித்துணரத்தக்க நிலையிலிருக்கின்றனரென்றும், அவ்வாறே பலரும் அங்ஙனம் வெளிப்பட்ட நூல்களைப் படித்துக் கல்விமான்களா யிருக்கின்றனரென்றுங் கூறுவர் ஒருசாரார். தமிழ்நூற்பயிற்சி முன்னையினும் இப்போது அதிகமாயிருக்கின்றதெனினும், ஆழ்ந்த கல்வியும் நிரம்பிய புலமையும் வாய்ந்த நன்மக்கள்தொகை மிகக்குறைவேயென்றும் அக்குறைவிற்குக் காரணங்கள் பலவென்றுங் கூறுவர் மற்றொருசாரார். இவ்விருசாரார் கூற்றையுஞ் சீர்தூக்கி ஆராயுமிடத்து இருகூற்றினிடத்தும் உண்மையுளதென்பது புலனாம்.

மற்று, முற்காலத்துத் தமிழ்ப்புலமைசான்றோர் மிக்கிருந்தமைக்குக் காரணங்கள் பலவாம்: அக்காலத்தில் அரசபாஷையுந் தமிழே; அரசருந் தமிழ்வல்லரே;ஆகவே தமிழ்வாணர் அரசர்களான் ஆதரிக்கப்பட்டுச் செல்வமும் புகழுமடைந்து சிறந்தனர். அக்கா

லத்தில் நாட்டின்கட் செல்வப்பெருக்குக் குறைந்திருந்தமையானும், கள்வர்பயம் மிக்கிருந்தமையானும், காடுமுதலியன கடந்து சேறல் அரிதாயிருந்தமையானும், நிலங்களின் விளைநலன் குன்றியிருந்தமையானும், பொருட்செல்வமனைத்தும் வல்லாளராகிய அரசரிடத்தேயே யொருவழித்தொக்கிருந்தமையானும் புலவர்களாவார் அரசரைநாடிச்சென்று அவ்வரசரது அமயம் நோக்கி யிருந்து, அதுநேர்ந்துழி மன்னனைப்புகழ்ந்து பல்வகைப்பொருள்களொடு யானை முதலியன பரிசுபெற்றும், அரசன் பரிசில் நீட்டித்தவழி வெகுண்டு வேற்றரசரிடஞ் சென்று பரிசுபெற்றும், சொல்லேருழவராய்த் தமிழ்ப் புலமையே வாழ்க்கைத் தொழிலாய்ப்பூண்டு காலங் கழித்தனர். அன்னோர் தம்மிடத்து வாழ்க்கைக்குப் போதிய செல்வமிருந்தவழி அரசரை நாடிப் போவதில்லை. வறுமை வந்து வருத்தும்போதே அவர்கள் செந்தமிழ்ப் பாடல்களைப் பாடிக் காவலனிடத்தோ கடவுளரிடத்தோ முறையீடுசெய்வார். ஆகவே வறுமையும் அக்காலத்துத் தமிழ் வாணரது புலமையின் மாட்சிக்கு ஒருபெருங்கருவியாயிருந்தது. வறுமை யில்வழிப் புலமையில்லை; புலமையில்வழி வறுமையில்லை. செல்வமுள்வழிப் புலமையில்லை ; புலமையுள்வழிச் செல்வமில்லை. இதுபற்றி யன்றே.

> "பல்லான்ற கேள்விப் பயனுணர்வார் பாடழிந்
> தல்ல லுழப்ப தறிதிரேற்—றொல்சிறப்பி
> னாவின் கிழத்தி யுறைதலாற் சேராளே
> பூவின் கிழத்தி புலந்து"

என்று **சைனமுனிவருங்** கூறுவாராயினர். மேலும் அவர்கள் பொருளின்மையை வறுமையாக்கருதாது அறிவின்மையையே வறுமையாக்கருதினரென்பது,

> "நுண்ணுணர் வின்மை வறுமை யஃதுடைமை
> பண்ணப் பணைத்த பெருஞ்செல்வ—மெண்ணுங்கால்
> பெண்ணவா யாணிழந்த பேடி யணியாளோ
> கண்ணவாத் தக்க கலம்"

என்றதனால் வெளியாம். அன்னோர் மிடித்துன்பத்தை யெடுத்துரைத்த பாடல்கள் அளவில; தமக்குப் பேராதரவாயிருந்த வேந்தர்கள் வீந்துழி அப்புலவர்கள் புலம்பி யலமந்துரைத்தபாடல்கள் அளவில. அவற்றைப் **புறநானூ**ற்றிற்காண்க. அப்பாடல்களை யாம்படிக்குந் தோறும் அவர்களது இலம்பாட்டை வியத்தலும் நேருமென்பது



திண்ணம். அவர்கள் வறுமையுற்றிராதவழி அவ்வருமையான பாடல்களை யாம் படித்தலெங்ஙனம்? வறுமை நீங்கிச்செல்வமடைந்த பின்னர் அஃது அவர்கள் தமது கல்வியை மறத்தற்கோரேதுவுமாயிற்று. இக்கூற்று,

> "நள்ளி வாழியோ நள்ளி நள்ளென்
> மாலை மருதம் பண்ணிக் காலைக்
> கைவழி மருங்கிற் செவ்வழி பண்ணி
> வரவெமர் மறந்தன ரதுநீ
> புரவுக்கடன் பூண்ட வண்மை யானே"

எனக் கண்டீரக்கோப் பெருநள்ளியையும்,

> "சென்றது மன்னெங் கண்ணுளங் கடும்பே
> பனிநீர்ப் பூவா மணிமிடை குவளை
> வாணூர்த் தொடுத்த கண்ணியுங் கலனும்
> யானை யினத்தொடு பெற்றனர் நீங்கிப்
> பசியா ராகன் மாறுகொல் விசிபிணிக்
> கூடுகொ ளின்னியங் கறங்க
> வாடலு மொல்லார்தம் பாடலு மறந்தே"

எனவல்விலோரியையும் **வன்பரணர்** பாடியவற்றான் வலியுறுமாறு காண்க. இற்றை நாளினும் ஆராய்ச்சி நிகழ்த்தியவழிச் சிற்சிலவிடங்களில் நன்னிலையிலுள்ள சிலர் தம்து மூதாதையர் மிக்ககீர்த்திவாய்ந்த தமிழ்ப்புலவராயினமைபற்றிப் பரிசு கொடுக்கப்பெற்ற கிராமங்களை தாங்களிப்போது அநுபவித்து வருவனவென்றும், தாங்கள் நிலத்தின்பயிர்த்தொழின் முதலியவற்றிற் கவனஞ் செலுத்த வேண்டியிருந்தமையின் தங்கள் பரம்பரைத்தொழிலாகிய தமிழ்நூற்பயிற்சிசெய்து அதன்கட் புலமை நடாத்துதல் நின்றுபட்டதென்றும் கூறித், தமது முந்தையோர் புகழில் தாமுங்களித்து அவ்வளவில் அமைவாராகின்றனர்.

முற்காலத்தில் தமிழ்ப்புலவர் அரசரிடத்துள்ள செல்வத்தைத் தமது எய்ப்பினில் வைப்புச்செல்வமாகவும் அவரது வறுமையைத் தமது வறுமையாகவும் கருதி யொழுகினர். இது புறநானூற்றிற் **பெரும்பதுமனார்** பாட்டானும் வலியுறுவது காண்க. இக்காலத்திலோ செல்வம் ஒருவழித் தொக்கிராது யாண்டும்பரவி நிலவுதலின் அதனைப் போற்றுதற்கட் சிலரும், தமிழ்ப்புலமைத் தொழிலான் வரத்தக்க ஊதியத்தினும் பிறதொழில்களான்வரும் ஊதியம் அதிக

மென்றுணர்ந்து தமிழ்க்கல்வியைக் கைவிட்டு வேற்றுத்தொழின் முயற்சியிற் சிலருமாகப் பிரிந்துழைத்தலின், தமிழ்க்கல்வி குறைவுறத் தலைப்பட்டது. முற்காலத்தில் தமிழ்ப்புலமைக்குச் சிறந்ததோர் கருவியாயிருந்த வறுமை இக்காலத்தில் தமிழ்ப்புலமைக்குப் பெருங்கேடாய்ப் பொருந்தியதந்தோ! இன்னுஞ் சின்னாளில், உள்ள தமிழ்ப்புலவர்களது வறுமையும் இன்னே களையப்படாதொழியின், அஃது அருந்தமிழ்ப்புலமையெனும் ஆரமிழ்தில் வீழ்ந்து அதனை நஞ்சமாக்கிவிடுங்காண்; புலமையே யின்மையாய்விடும். ஆதலின் அறிவுடையாளர்காள்! தமிழ்ப்புலமை மாட்சியுறச் செய்ம்மின்! தமிழராய்ப்பிறந்த நீவிர் ஒவ்வொருவருஞ் சிறிதேனும் பாஷாபிமானமுடையிராய்த் தமிழ்ப்புலமை யொழிந்துபடாது அதனைப் போற்றுவீராக.

“நாருத் தகடேபோ னன்மலர்மேற் பொற்பாவாய்
நீருய் நிலத்து வினியரோ—வேரும
புன்மக்கள் பக்கம் புகுவாய்நீ பொன்போலு
நன்மக்கள் பக்கந் துறந்து”

என்று புலம்பிய தமிழ்ப்புலவர் வாய்மொழியைச் சிறிது செவியிலேற்பீர் அறிவான்மிக்கீர்!

பத்திராதிபர்.

---

# TIRUVALLUVAR.

## * திருவள்ளுவர்.

தமிழ்க்குக் கதியாவார் இருவர் எனச் சில புலவர் புகல்வதுண்டு. கதி என்பதிற் ககரத்தைக் கம்பநாட்டாழ்வாருக்கும், திகரத்தைத் திருவள்ளுவருக்கும் ஞாபக சூத்திரமாகக் கொள்ளல் வேண்டும். தமக்கு முற்பட்ட சிறந்த நூல் ஒவ்வொன்றிலும் ஒவ்வோர் அகப்பை அள்ளிக்கொண்டதாகக் கம்பர், தமது இராமாயணம் அரங்கேறுகையில், கூறினரென்று ஆசிரிய பரம்பரையில் நாம் கேட்டு வருகிறோம். பழைய நூல்களிற் பயிற்சி மிக்கவர்கள் இதன் உண்மையை நன்குணர்வர். திருவள்ளுவர்க்குப் பிற்பட்டவர்களுள், திருக்குறளில் ஓர் அகப்பையாயினும் அள்ளிக்கொள்ளாத சிறந்த பாவலர் ஒருவருமிலர் என்பதும் நாம் நன்கறிவோம். பண்டை நாட் கவிச்சுவையெல்லாம் வாரிக்கொணர்ந்து ஓரிடத்தே பொதிந்து, இற்றை நாட்கவிராயரெல்லாம் கொள்ளைகொள்ள வைத்த கவிச்சக்கிரவர்த்தியையும், அவர் கவித்திறத்தையுஞ் சுட்டிச், சிலவாண்டுகளுக்கு முன்னே ஒரு சங்க முன்னிலையிற் சிறிதெடுத்துரைத்தேன். வேட்டவேட்ட பாவலரும் நாவலரும் வேண்டுவ அடங்க அள்ளிக்குடிக்கும் ஊற்றுக்குழியான உத்தர வேதத்தையும், அதனை உரைத்தருளிய திருவள்ளுவரையுஞ்சுட்டி, எனக்குத் தாயகமான இவ்விராசதானிக் கல்லூரியின் தமிழ்ச்சங்க முன்னிலையில் இவற்றை என்னாலியன்றதை எடுத்துரைப்பான் வந்தேன்.



செப்பலோசையைத் தழுவி, முதலடி நாற்சீராயும் ஈற்றடி மூச்சீராயும், ஒருவிகற்பத்தானும் இருவிகற்பத்தானும் வருகிற ஈரடிவெண்பாக்குறள் வெண்பா எனப்படும். இது குறள் எனவும் வழங்கும். கலிப்பாவாற்றொகுத்த நூல் ஆகுபெயரிலக்கணத்தாற் கலியென வழங்குமாறுபோலக் குறட்பாவானியன்ற நூல் குறள் என வழங்குவதாயிற்று. திரு என்பது அழகு என்னும் பொருட்டு. திருக்குறள் என்பது அழகிய குறள் எனறவாறு. ஆகவே நூற்பெயரான திருக்குறள் என்பது அடையடுத்த வாகுபெயராம். இது முற்காலத்தில் ஆசிரியர் பெயரால் திருவள்ளுவர் என்றும், திருவள்ளுவரால் இயற்றப்பட்டு எல்லார்க்கும் எல்லாப்பயனையும் அளித்தலின் திருவள்ளுவப்பயன் என்றும் வழங்கியது. சங்கப்புலவரிற் பதின்மூவர் இதனை முப்பால் எனச் சிறப்புப்பாயிரம் உரைத்தனர். பதினெண் கீழ்க்கணக்கை இன்னவென்றியம்பும் பழம் பாட்டும் இதனை முப்பால் என்றே உரைக்கின்றது. சிலர் இதனை வள்ளுவர் வாய்ச்சொல் என்றும், வள்ளுவர் வாய்மொழி என்றும் வழங்கினர். தெய்வநூலென்றும், பொய்யா மொழியென்றும், வாயுறை வாழ்த்தென்றும், தமிழ் மறையென்றும், பொதுமறையென்றும் ஒரோருவர் புனைந்துரைத்தனர். ஆயினும் இந்நூல் நெடுநாளாகத் திருக்குறள் என்று வழங்கிவருகின்றது. மாணவர்கட்குத் தமது நூலை உபதேசிக்கும் உருவமாகப் பிரதிட்டிப்பித்திருக்கும் திருவள்ளுவருடைய அர்ச்சை விக்கிரகத்தில் இடது கையில் ஏட்டுச்சுவடி பிடித்திருப்பதாகக் காட்டி அதன் மேல் திருக்குறள் என்ற பெயர் செதுக்கியிருக்கின்றது.

திருவள்ளுவருடைய திருவுருவத்தின் தோற்றப் பொலிவை அறிய அவாவுகின்றவர்கள், திருமயிலையில் அவருடைய திருவாலயத்திற்குச் செல்வாராக.

“திருமுடி மிசையார் மயிர்முடி யழகும் தீர்க்கபுண் டரநுத லழகுந்
திரண்மணி புயந்தை வருஞ்செவி யழகுந் திகழ்நெடுந் தாடியி னழகு
மருமுடி செபமா லிகைசின்முத் திரைசே ரபயநேர் வலக்கையி னழகு
மமிழ்துறழ் தமிழ்மா மறைமூறை வாத மணமதரு மிடக்கையி னழகும்

* திருவள்ளுவரைப்பற்றிய இக்கட்டுரை சின்னாள் முன்னர்ச் சென்னை இராசதானிக் கலாசாலைத் தமிழ்ச் சங்கத்தின் முன்னர்ப் படிக்கப்பட்டது.—ப.—ரீ.

கருமுடி யோசப் பட்டையி னழகுங் கடிசொள்கிட் கோவண வழகுங்
கழல்களிற் றிகிரி வளைவரை யழகுங் கமலநல் லாதனத் தழகுந்
தருமுடி முகிழ்ரேய் மயிலையி னிடைமா தவர்கள்கண் டிறைஞ்சவீற் றிருக்குந்
தலைபுகழ்த் திருவள் ளுவரெனு நாம சற்குரு சரணமே சரணம்"

என்கிற ஸ்வரூபஸ்துதியிற் கூறியபடியே, தலையிற் சடையை முடித்திருக்கும் முடியினழகும், அடர்ந்த மீசையினழகும், அலைந்து மார்பிற் புரள்கின்ற தாடியினழகும், அகத்தினழகைக் காட்டுகின்ற முகத்தினழகும், ஆஜாநுபாகுவாய் அகன்ற மார்பையுடைய தேககாத்திரமும், காணபவர்க்கு, யூரோப்பியரிற் சிறந்த ஞானவான்களான ஸாக்கிரெடிஸ், ப்ளேடோ என்பவரை நினைவூட்டுகின்றனவாய் இருக்கின்றன. வலக்கையில் ஜபமாலைகயும் இடக்கையில் தமிழ் மறையுமாகக் கமலாசனமிட்டு வீற்றிருப்பதைப் பார்த்தால் அகத்தியர்க்கு இரண்டாவராக எண்ணத்தக்க தமிழ் முனிவரோ இவர் என்று தோன்றும். தமிழ்ப்புலவர்கள் இவரை அகத்தியனுருடைய பௌத்திரராகவே வமிசாவளி வரையறுத்துக் காட்டுகின்றனர்.

மதியூகிகளான சில தமிழாசிரியருடைய தற்கால ஆராய்ச்சியாலும் சிலப்பதிகாரம் மணிமேகலை யென்னும் பெருங்காப்பியங்களிற் கிடைக்கலான ஆதாரவுகளாலும் பிறவாற்றாலும் திருவள்ளுவர் ஏறக்குறையச் சாலிவாகன சகாப்தத்தின் தொடக்கத்தில், அதாவது கி. பி. முதனூற்றாண்டில் இருந்தவரென்பது துணியப்படுகின்றது. இன்னும் முற்பட்டவர் எனத்துணிந்துரைத்தற்கான ஆதாரங்கள் அகப்படவில்லை. ஆயினும் இன்றளவும் நின்று நிலவுதலான தமது நூலை வள்ளுவனார் வரையறுத்து வகைப்படுத்திக் கொண்டு, மயிலைமாநகரிலே உதர நிமித்தமாகத் தமது தறியின்மேல் தலை குனிந்து சீலை செய்யாநிற்கையில், ஐயிரோப்பியருடைய அந்தகார காலம் அப்பாற்பட்டதில்லை, மத்திய காலமும் உதயமாயிற்றில்லை ; துருக்கருடைய மகம்மதியமதம் தோன்றிற்றுமில்லை. கிறிஸ்தவமதம் அப்போது தான் முளைகிளம்பிக் கொண்டிருந்தது, இந்தியாவிலும் சைவம் அத்துவிதம் வைணவம் என்னும் சமயபேதங்களுக்குரிய சமயாசாரியர்கள் எல்லாரும் வள்ளுவனார்க்கு நெடுங்காலம் பிற்பட்டு அவதரித்தவர்கள். வள்ளுவர் காலத்தில் தமிழ்நாடு பேரும் புகழும் அடைந்து உச்சதசை உற்றிருந்தது. மேலும் தமிழ் நாடானது வடக்கிலும் குடக்கிலும் குணக்கிலும் உள்ள பல தேயத்தவரும் வந்து வாணிகஞ்செய்யும் பெரிய வியாபாரஸ்தானமாகவும் இருந்தது. அதற்கு நெடுங்கால முன்னரே ஆரிய பிராமணர்கள் திராவிட தேசத்திலே குடியேறி நிலை பெற்றும், தமிழ் நாட்டு மூவேந்தரிடத்திலும் அமாத்தியரும் புரோகிதருமாக உத்தியோகித்தும், ஆலயங்களில் அர்ச்சகராக அமர்ந்தும், ஆரியக்கோட்பாடுகளை ஆங்காங்குப் பரவுவித்தும் இருந்தனர். அக்காலத்துக் கல்விச்சங்கமான கடைச்சங்கமும் மதுரையில் நன்கு நடந்துவந்தது சேரசோழ பாண்டியர்களுடைய பிரதான பட்டணங்களிலே சைவ வைணவ ஆலயங்களுக்கு அணித்தாக ஜைனபௌத்த ஆலயங்களும் விளங்கியிருந்தனவென்று அக்காலத்திலக்கியங்கள் சான்று பகர்கின்றன. இக்காலத்தில் மறக்கலான இந்திரனுக்கும் பிரமனுக்கும் அக்காலத்தில் ஆங்காங்கு ஆலயங்கள் உண்டு. அக்காலம் சமய வேறுபாடுகளில் க்ஷாத்திரம் சாதிப்பதில்லையாய், அவரவர் இராஜபயமின்றித் தத்தமது வழிபடுகடவுளை நிர்ப்பயமாக வணங்கி வந்த காலமாகக் காணப்படுகின்றது. பிரபுக்களும் வீரரான வள்ளல்களும் அரசர்களும் அரிய புலவரை ஆதரித்துவந்தனர். கவிதாசிருஷ்டி எங்கும் பரந்திருந்தது. கல்வித்துறை மாத்திரமேயன்றிச் சிற்ப முதலான சித்திரவேலைகளும் வெகுவாய்ச் சன்மானிக்கப்பட்டு வந்தன. நீராவியந்திரம் அச்சியந்திரம் மின்சாரவினோதம் என்பன தவிர ஏனையெவ்வாற்றானும், அக்காலமானது நனிநாகரிகத்தான் மேம்பட்ட இக்காலத்துக்குப் பிரதிசாயலென்று உரைக்கத்தக்க காலமாகவே இருந்தது.



இன்னோரன்ன காலத்தில் இன்னோரன்ன நாட்டில், கர்ண பரம்பரையில் வழங்குமாறு, திருமயிலையில், ஆதிபகவன் என்பவருடைய மக்கள் எழுவரில் இறுவராய்ப் பிறந்தார் நமது திருவள்ளுவர். இவரைப்பற்றி வழங்கிவருகிற சரித்திரம் முற்றும் புலவர்களில் வழங்கிவருகின்ற கர்ண பரம்பரையேயாதலின், இதிற் கொள்ளற்பாலதிதுவென்றும், தள்ளற்பாலதிதுவென்றும், துணிவது கூடாத காரியமாக இராநின்றது. "கன்னன் பிறப்பும் பின்னுவிற்றுலங்கிற்றுக் கம்பன்பிறப், பின்னந் தெரிந்தார்களில்லையில்லை முக்காலுமிது மெய்யே" என்ற புலவர் புராணம், ஆதிபகவனாலே திருமயிலையில் விடப்பட்ட இவரை மகப்பேறில்லாத வேளாளன் ஒருவன் கொண்டுபோய் வளர்த்து, வாசுகியென்னுமோர் பெண்ணை மணஞ்செய்வித்துக், காலகதி அடைந்தனனென்றும், இவருடைய மனைமாட்சி வசிட்டருடைய மனைமாட்சியோ டொத்ததென உலகினர் பேசி வந்தனரென்றும், இவர் "ஊரிலுள்ளவரொடு வாழாமல் ஊர்ப் புறஞ்சேர்சார்ந்து, தெள்ளு சொற்புலமை வாய்ந்து சேலைநெய்திருந்தவாற்றால், வள்ளுவரென்றார் பல்லோர் வளமையோனென லோராரோ" யென்றும் உரைக்கின்றது. இன்னும் அப்புராணம் " பாதிவான்மதிவாழ்சென்னிப் பரமனே பரமென்றோர்ந்து, சோதிடமாதிநூல்கள் துயனவாகச்சொல்லி, நீதிமுற்றுணர்த்தும் பெட்பால் நிகமமேயிதுவாமென்னத், தீதின்மெய் யறிஞர் போற்றத் திருக்குறணூலுஞ் செய்தான்" என்றும் இயம்புகின்றது. இப்புராணத்திற் கூறும் ஏனைவரலாறெல்லாம் கர்ணபரம்பரையை ஒத்தேயுள்ளன. ஆயினும் வள்ளுவனாரை "இல்லறமென்னும் பொன்னுக் கியலுரையாணி" என்றும், இவர் நூலின் ஏற்றத்தைச் சமயவேறுபாடின்றி,

"நால்வர்சொல் சைவர் வேதம் நனிர்குரு கூரன் சொல்லைப்
போல்வலார் சிலர்தாஞ் சொல்லும் பொருவில்பா கவதர் வேதம்
வால்வளை யுலவும் வீதி மயிலைவள் ளுவன்சொல் யார்க்கும்
மேல்வழி யுணர்த்திக் கீழ்மை விலக்குநல் வேத மாமே."

அஃதாவது, சைவசமயாசாரியர்கள் அருளிய தேவார திருவாசகங்களும் வைணவ ஆழ்வார்கள் அருளிச்செய்த நாலாயிரப் பிரபந்தமும் வள்ளுவர் குறளும் உலகினர்க்குக் கீழ்மையை விலக்கி மேல்வழியை உணர்த்தும் நல்ல வேதங்களாம் என்றும், இவர் நூலில் உரைத்த தருமங்களிற் கொலை மறுத்தலே முக்கியமான தருமம் என்பதைக்குறித்து,

"இந்திர பதவிக் கேற்று மிவுளியா கமும்பொல் லாதென்
றுந்திய கருணை வாய்ந்தோர்க் குறுதியுண் டாகத் தோற்றும்
சந்திர வதனத் தாதி தருமகா ரெழுவர் தம்மிற்
பிந்திவள் ளுவப்பேர் தாங்கும் பெரியவன் பேசு நூலே"

என்றும்,

"பறந்த வோதிமப் புள்ளிறை யாதியர் பகர்ந்தசொற் குறித்தேனு

மிறந்த வூனுமுண் பதுதகா தென்பதே யியற்றமிழ் மறைக்கோளே"
என்றும் அப்புராணம் புகல்கின்றது.

இனி இவருடைய திருநாமத்தைப்பற்றி மேற்கூறிய புலவர் புராணம் **வளமையோன்** என்று கூற அறியாத பாமரர்கள் வள்ளுவன் என வழங்கி விட்டனரென்று கூறுவது கண்டோம். திருவள்ளுவ மாலைக்கு உரையியற்றிய திருத்தணிகைச் **சரவணப் பெருமாளையர்** "**வள்ளுவர்** என்பது வண்மையையுடையவர் என்பதை விளக்கி நின்றதாகலின், அது வேதத்தில் இலைமறை காய்கள்போற் பல விடங்களினும் மறைந்து வெளிப்படாதிருந்த மெய்ப்பொருள்களையெல்லாம் தொகுத்து உலகத்தாருக்குக் கொடுத்தருள் செய்தவர் என்னுங் காரணம்பற்றி வந்த பெயராயிற்று" என்றனர். **கபிலர்** இயற்றிய அகவலில் "தொண்டைமண் டலத்தில் வண்டமிழ் மயிலைப், பறைய ரிடத்தில் வள்ளுவர் வளர்ந்தனர்" என்றுரைத்திருக்கின்றது. திருக்குறள் கலாரத்நாகர அச்சுக்கூடப்பதிப்பில் திருவள்ளுவமாலையின் அநுபந்தமாக வைத்திருக்கிற திருவள்ளுவர் வரலாற்றை யுரைக்கும் அகவலில் "மைப்புய லணிபொழின் மயிலாப் பூரில், வள்ளுவர் மனையிடை வள்ளுவர் வளர்ந்தனர்" என்று கூறியிருக்கின்றது. **பிங்கல நிகண்டில்** "வள்ளுவன் சாக்கை யெனும்பெயர் மன்னற், குள்படு கருமத் தலைவற் கொன்றும்" என்றும், பிற்பட்ட **சூடாமணி நிகண்டில்** "வருநிமித் திகன்பேர் சாக்கை வள்ளுவ னென்று மாகும்" என்றும் வருவது முறையே கன்மத்தலைவன் ஜோசியன் எனப்பொருள் படுகின்றதாயினும், உலக வழக்கில்



வள்ளுவன் என்பது பறையர்களுக்குக் குருக்களாய் ஜோசியமே ஜீவனமாக இருக்கும் வள்ளுவ சாதியிற் பிறந்தவனையே குறிக்கின்றது. சங்கப் புலவர்கள் இவரைத் தேவர், முதற்பாவலர், மாதாநுபங்கி, செந்நாப்போதார் எனப்பலவகையாகப் புனைந்துரைத்தனரேனும், "அறம்பொருளின்பம்வீ டென்னுமந் நான்கின், திறந்தெரிந்து செப்பிய தேவை-மறந்தேயும், வள்ளுவ னென்பானோர் பேதை யவன்வாய்ச்சொல், கொள்ளா ரறிவுடையார்" என்கிற பாட்டில் காகுஸ்வரம் என்கிற ஒலிக்குறிப்பினாலே, சாதியிழிவுதோன்ற, 'வள்ளுவனென்பான்' என்பதாக உரைத்திருத்தலின், இவர்க்கு வள்ளுவரோடு உண்டான தொடர்பால் தோன்றிய காரண விடுகுறியேபோலும் வள்ளுவர் என்னுந் திருநாமம்.

வள்ளுவரிடத்தில் ஏலேலசிங்கர் என்பவர் ஈடுபட்டு மெய்யன்புடையவராக இருந்த வரலாற்றினுக்கு உலகவழக்கிலே "ஏலேல சிங்கன்பொருள் ஏழுகடல்போனாலுந் திரும்பும்" என்கிற பழமொழியும், "ஏலேலோ ஏலவலி" என்று, சுமையிழுக்கிற ஆட்கள் பாடுகிற பாடலுமேயன்றி, நூல்களின் வாயிலான சான்று ஒன்றுமில்லை.

இனி இடையாலும் கடையாலும் சங்கம் அழிந்தது. அஃதாவது இடைக்காடராலும் திருவள்ளுவராலும் மதுரையிலிருந்த கடைச்சங்கம் அழிந்தது என்பதற்குப் புலவர்கள் கர்ணபரம்பரையன்றித் தக்க சான்றுகள் பிறவில்லை. உள்ள சான்றுகளெல்லாம் வள்ளுவர் தமது நூலை அரங்கேற்றிய பின்னரும் சங்கம் செழிப்புற்றிருந்ததற்கே ஆதாரமாகின்றன. அச்சான்றுகளையெல்லாம் ஈண்டு விரிப்பசாயின், இந்த வியாசமும் விரிவுறும், பொழுதுமில்லை. திருவள்ளுவமாலையிற் பாயிரங்கூறிய புலவர்களெல்லாம் ஏககாலத்தில் இருந்தவருமல்லர். புறநானூறு முதலானவற்றின் சார்பைக்கொண்டு ஆராயுமிடத்திற் பதின்மர் பன்னிருவர் ஏககாலத்தவராக இருத்தல்கூடும் என்பது தெளியப்படும். எங்ஙனமாயினும், சங்கப்புலவர்கள் ஓரோர் காலத்தில் திருக்குறட்குக் கூறியபாயிரத்தைப் பின் எவரோ ஒருவர் திருவள்ளுவமாலையாகத் தொடுத்தனர் என்பதே தேற்றம்.

(இன்னும் வரும்.)

திருமணம்-செல்வகேசவராய முதலியார்.

---

# MRICHCHHAKATIKĀ.

## மிருச்சகடிகை.

இப்பெயர் கொண்ட நூலானது வடமொழியிலியற்றப்பட்டுள்ள தசரூபகங்களுள் ஒன்று. இது 'மல்லிகாமாருதம்' 'மாலதீமாதவம்' 'புஷ்பபூஷிதம்' முதலிய நூல்களைப்போலப் பத்து அங்கங்கள் கொண்டதோர் சிறந்த பிரகரணம். உயர்குலத்திற் பிறந்து உன்னத தசையிலிருந்து உத்தம குணங்களோடு கூடியிருந்து விதிவசத்தினால் இழிவு நிலையையடைந்த **சாருதத்த**னென்னும் ஓர் எளிய பிராமணன் இதற்குத் தலைவனவன். வேசியர் சாதியிற்பிறந்தும் விசேஷக் கற்புடையவளான **வஸந்தஸேனை** என்பாள் இதற்குத் தலைவி. இவர்களிருவருடைய காதலின் பெருமையை விரித்துப் புகழ்வதற்கே இந்நூல் பிறந்தது. இதில் ஹாஸ்யம் (நகை) முதலிய பலவிதச் சுவைகள் நிறைந்திருப்பினும் சிருங்காரமே (உவகையே) முக்கிய ரஸமாம். இது பொய்யுரையேயாயினும் கதா ஸந்தர்ப்பம் வெகு இனிதாயும் இயல்பாயு மமைந்து மேற்றிசை நாடகப்புலவர்கோன் **ஷேக்ஸ்பியர்** இயற்றிய நவீன நாடகங்களைப்போற் படிக்கப்படிக்க இன்பந்தரத்தக்கதாயும் உலகுக்கு ஒத்ததாயும் இருக்கின்றது. இதன் நடையோ வெகு சுந்தரமாயும் யாவரு மெளிதிலறிந்து களிக்கத்தக்கதாயு மிருக்கின்றது. பற்பல சாதியாரும் பற்பல வருணத்தாரும் இந்நூலகத்துப்புகுந்து தத்தங்குணங்களைத் தெற்றென வெளியிடுகின்றனர். கதா விஸ்தாரத்திலும் நாடகபாத்திரக் கையாடலிலும் வடமொழியில் இப்பிரகரணத்திற்கு ஈடு ஒன்றுமில்லையென்றே கூறல் வேண்டும்.

இவ்வற்புதமான நாடகம் எக்காலத்திலுண்டானதென்றும் யாவரால் இயற்றப்பட்டதென்றும் விசதமாய்த் தெரியவில்லை. இந்நூலின் முன்னுரையிற் 'சூத்திரகன்' என்னு மரசன் இதனை இயற்றியதாகக் கூறியிருப்பினும், அவ்வரசனது மரணமு மாங்கே யுரைக்கப்பட்டுள்ளதனால், இந்நூல் அச்சூத்திரக பூபதியினால் இயற்றப்பட்டதன்றென்பது உள்ளங்கை நெல்லிக்கனிபோலத் தெளிவாய்ப் புலப்படுகின்றது. ஆயினும் இச்சூத்திரகனென்னு மரசன் எக்காலத்திலிருந்தனனோ, எந்நாட்டையாண்டனனோ? அஃதொன்றுந் தெரியவில்லை. சில மேற்றிசைப்புலவர் **ஸ்காந்தபுராண**த்திற் பவிஷ்யத்தைக் கூறுமத்தியாயத்திற் "சாணக்கியனால் நாசஞ்செய்யப்படப்போகும் நந்தனுக்கு இருபது வருஷங்களுக்கு முன் சூத்திரகனென்னுமோர் அரசன் உண்டாவான்" என்றுகூறியிருப்பதனால், இந்நாடகாசிரியனை சூத்திரகனுமவ்வரசனாகத்தானிருக்க வேண்டுமென்று நினைத்துக் கொண்டு கிறிஸ்து பிறப்பதற்கு மூன்று நூற்றுண்டுகளுக்கு முன்னரே



இம்மிருச்சகடிகையென்னும் நாடகம் எழுதப்பட்டிருக்க வேண்டுமென்று ஊகிக்கின்றனர். * விண்டிஷ் பண்டிதர் முதலிய மற்றுஞ்சில மேற்றிசைப் புலவர்கள் இந்நாடகமே ஏறக்குறைய கி. மு. 300 - ஆம் வருஷத்தில் † மியாண்டர் காலத்தில் வெகு உன்னத நிலைக்கு வந்திருந்ததென்றும், கிரேக்க தேசத்திலிருந்து ‡ மகனீய அலெக்ஸாந்தர் ‡ இந்தியாவின்மீது படையெடுத்து வந்தகாலத்தில் நடித்துக் காட்டப்பட்டதுமான § அட்டிக் பிரஹஸனங்களை அனுசரித்து எழுதப்பட்டதென்றும், இதுவே ஸம்ஸ்கிருத பாஷையில் முதன் முதலிலுண்டாகிய தென்று மெடுத்துரைக்கின்றனர். ஆனால் இக்கொள்கையை ஸ்தாபிப்பதற்கு இந்தியாவைப்பற்றிய சரிதங்களிலாவது, யவனதேச சரித்திரத்திலாவது சிறிதேனு மாதாரமில்லை. மேலும் அலெக்ஸாந்தர் இந்தியாவின்மீது படையெடுத்து வந்தபொழுது, அவருடன் கூடவாவது, அவருக்குப் பின்னராவது கிரேக்க தேசத்திலிருந்து நடர்கள் வந்ததாகவேனும் கிரேக்க நாடகங்கள் நடிக்கப்பட்டதாகவேனும் சிறிதேனுந் தெரியவில்லை. மேலும் இந்நாடகத்தையும் கிரேக்க நாடகங்களையும் நன்கு யொத்துப்பார்க்குங் காலையில், இவ்விரண்டுக்கும் கொஞ்சமேனும் சம்பந்தமில்லையென்பது தெற்றென விளங்கும். || வீபர் பண்டிதரவர்கள் இவ்வபிப்பிராயத்தில் முற்றுங் கலக்காவிடினும், திரைகள் ஸம்ஸ்கிருத நாடகங்களில் 'யவனிகை' யென்று கூறப்பட்டிருப்பதனால் இத்திரைகளை யவனரிடத்திலிருந்துதாம் இந்துக்கள் எடுத்துக்கொண்டிருக்கவேண்டுமென்று நினைக்கின்றனர். ஆனால் கி. மு. 500- ஆவது ஆண்டுக்கு முன்னரே 'யவனிகை' என்னுமிப்பதம் **பாணினி** முனிவரால் அவரது வியாகரணத்தில் விளக்கப்பட்டிருப்பதை இம்மேற்றிசைப் புலவர்கள் அறிந்திலர் போலும். இப்பதம் யு= சேருதல் கூடுதல் என்னும்தாதுவிலிருந்து யுவந்தி ஸ்த்ரீ நடா: = நடர்கள இதனிடையிற்கூடுகின்றனர் ஆதலால், [illegible] என்பதனால் யவநிகா என்று பரிணமித்தது. இதற்கும யவன (கிரேக்க) தேசத்திற்கும் யாதொரு சம்பந்தமுமில்லை. மேலும் அக்காலத்திற் கிரேக்க நாடக சாலைகளிலேயே திரைகள் உபயோகிக்கப்பட்டன வல்ல என்பது அவர்களது சரித்திரங்களாலேயே தெரியவருகின்றது. அப்படியிருக்க இந்துக்கள் இவ்வழக்கத்தை அலெக்ஸாந்தர் முதலிய யவனர்களிடத்திலிருந்து எடுத்துக்கொண்டிருப்பார்களென்பது மிகவும் அசங்கதமே. காளிதாசர் பவபூதி முதலியோர் இயற்றிய நாடகங்களையும் ஷேக்ஸ்பியர் இயற்றிய நாடகங்களையும் இக்காலத்தில் ஆராய்வோர்களுக்கு, இவ் விருவகை நாடகங்களுக்குமுள்ள ஒற்றுமைகள் இவ்வளவ்வளவென்று சொல்லமுடியா. ஆயினும் ஷேக்ஸ்பியர் தமது

* Windisch. † Meander. ‡ Alexander the Great. § Attic Comedies. || Weber.

நாடகங்களைக் காளிதாசரியற்றிய நாடகங்களைக்கண்டு, அவற்றை யனுசரித்து எழுதினரென்று சொல்வது எங்ஙனமொக்கும்? இஃது இப்படியிருக்க, ஸ்காந்தபுராணத்திற் கூறியிருக்கும் சூத்திரகனுக்கும், இந்நாடகத்திற் கூறியிருக்கும் சூத்திரகனுக்கும், பெயர் ஒன்றாயிருப்பதன்றி, வேறு யாதோர் ஒற்றுமையுங்கிடையாது. மேலும் இந்நூலின் முதலங்கத்தில் "நாணக" நாணகம் என்னும் பதம் உபயோகிக்கப்பட்டிருக்கின்றது. இந்நாணயம் கி. பி. முதலாம நூற்றாண்டில் கநிஷ்கனென்னு மரசனால் முதன் முதல் உண்டாக்கப்பட்டு வழங்கிவந்த விஷயமானது * வில்ஸன் பண்டிதரவர்களால் நிரூபிக்கப்பட்டிருப்பதனால், இந்நூல் கி. பி. இரண்டாம் நூற்றாண்டுக்குமுன் எழுதியிருக்க முடியாதென்று வீபர் பண்டிதர் அவர்களே அவரது **இந்துநூற் சரித்திரம்** 205-ஆவது பக்கத்தில் வரைந்திருக்கின்றனர். இத்தகைய அற்புதமான நாடகம் அச்வமேதம் முதலிய யாகங்கள் புரிந்த ஒரு பிரசித்தமான சக்கிரவர்த்தியினால் ஸம்ஸ்கிருத பாஷையில் முதன் முதலில் எழுதப்பட்டிருக்குமாயின், கி.பி. முதல் நூற்றாண்டு முதல் ஒன்பதாவது நூற்றாண்டு வரையிலுமிருந்த கவிகள், ஸாஹித்தியஞ் செய்தவர்கள், சரித்திரமெழுதினவர்கள் ஆகிய இவர்களுள் ஒருவரும் இந்நூலைப்பற்றி யாவது இந்நூலாசிரியரைப்பற்றியாவது, எடுத்து ஒன்றுங்கூறாதது மிகவும் விந்தையே. இந்நாடகம் உண்மையாய்க் கி. பி. இரண்டாவது நூற்றாண்டிற் பிறந்திருக்குமாயின் கி. பி. ஆறாவது நூற்றாண்டில் ஸ்ரீஹர்ஷவிக்கிரமாத்தியமஹாராஜனுடைய சபைக்கு ஒரு பேரணியாய்விளங்கிய கவிகளாகிய ஸகல கவிகுலஸார்வபௌமன் காளிதாசன் சாதாரண கவிகளாகிய தாவகன் ஸௌமில்லன் கவிபுத்திரன் முதலாயினோர் தனக்கு முன் நாடகமெழுதினவரென்று தனது **மாளவிகாக்கினிமித்திர**த்திற் சொன்னவன், நவரஸங்களுமமைத்து, வெகு நன்னடையில் மகா பிரசித்தி பெற்ற சூத்திரக மஹாராஜரால் ஸம்ஸ்கிருத பாஷையில் முதன் முதலெழுதப்பட்டதென்று சொல்லப்பட்ட இந்நாடகத்தையாவது, அல்லது அதனை யியற்றிய ஆசிரியரையாவது கூறாதது விந்தையினும் விந்தையே. அப்படியே கி. பி. ஆறாவது நூற்றாண்டின் இறுதியிற் **போஜன்** அல்லது **முதலாவது சீலாதித்திய பிரதாப சீலமஹாராஜ**ரது சபையில் கவி சிரோமணியாய் விளங்கிவந்தவரும், **காவ்யரதர்சம், தசகுமார சரிதம், மல்லிகாமாருதம்** முதலிய கிரந்தங்களை யியற்றிய **தண்டி** மஹாகவி வாணரும், தமக்கு முன்னிருந்த கவிகளையெல்லாம் பற்றித் தமது ஹர்ஷ சரிதத்தின் முன்னுரையிற் புகழ்ந்து எழுதினவரும், கி. பி. ஏழாவது நூற்றாண்டின் முன் பாதியில் **ஹர்ஷ வர்த்தனன்** அல்லது **இரண்டாவது சீலாதித்திய பிரதாப சீல**னென்று பிரசித்திபெற்ற மஹாராஜருடைய சபையில் அளவிலாப் புகழ்பெற்ற **பாணபட்ட**ரும், அப்படியே கி. பி. ஏழாவது நூற்றாண்டினிறுதியில் யசோவர்மனது சபையிற்

* Wilson.



சிந்தாமணிபோல் விளங்கிவந்த **பவபூதி** மஹாகவியும், இம்மிருச்சகடியைப் பற்றியாவது, அதனை யியற்றியவரைப் பற்றியாவது ஒன்றும் சொன்னாரல்லர். வாஸ்தவமாய் ஆராய்ந்து பார்க்குங்கால் கி. பி. ஒன்பதாவது நூற்றாண்டுக்கு முன்னிருந்த கவிகளாவது சரித்திரக்காரர்களாவது இவ்வற்புதமான நாடகத்தைப்பற்றி எவ்விதத்திலும் எடுத்துரைத்தனர் அல்லர். இவர்களது காலத்தில் இத்தகைய நூலொன்று இருந்திருக்குமாயின் அதனைப்பற்றி அவர்கள் கூறாமலிருப்பரென்பது சிறிதேனும் ஒப்பத்தக்கதன்று. கி. மு. 300-ஆம் வருஷம் முதற் கி. பி. 900-ஆம் வருஷம் வரையில் ஸம்ஸ்கிருத நூல்களைப்பற்றி எழுதியிருக்கும் யவன சரித்திரக்காரர்களாயினும், சீனதேசத்துச் சரித்திரக்காரர்களாயினும், மஹம்மதிய சரித்திரக்காரர்களாயினும், வேறு எந்தத்தேச சரித்திரக்காரர்களாயினும், இந்நாடகத்தைப் பற்றியாவது, அதனையியற்றிய சூத்திரக மஹாராஜரைப் பற்றியாவது, ஒன்றுமெழுதினரல்லர்.

இப்புத்தகத்தையும், இதனையியற்றிய சூத்திரகனையும்பற்றி முதன் முதற் **காவ்யாலங்கார சூத்திரவிருத்தி** என்னும் அலங்கார சாஸ்திரத்தில் **வாமனபண்டிதர்** தாம் சொல்லியிருக்கின்றனர். மேற்றிசை ஸம்ஸ்கிருதப் புலவருட் சிலரும், நமது தற்காலத்துச் சமஸ்கிருதப் புலவருட் சிலரும் இம்மிருச்சகடியின் முதல் அங்கத்தினகத்தில் விடனது வாயிலாக வரைந்ருதிக்கும்,

* லிம்பதீவ தமோ(அ)ங்கா³நி வர்ஷதீவாஞ்ஜநம் நப⁴: ।
அஸத்புருஷஸேவேவ த்³ருஷ்டிர்விப²லதாம் க³தா ॥

என்னும் சுலோகத்தின் முன்பாதி தண்டி மஹாகவியின் காவ்யாதர்சத்தில் "உத்பிரேக்ஷை" என்னுமணிக்கு உதாரணமாகக் கூறியிருத்தலைக் கண்டு, மேற்படி யுதாரணம் இம்மிருச்சகடியிலிருந்து தான் மேற்கோளாகத் தண்டியினால் எடுத்துரைக்கப்பட்டிருக்க வேண்டு மென்றும், அதனால் தண்டியினுடைய காலத்திற்கு முன்னரே இந்நாடகத்தை யியற்றிய சூத்திரக கவி யிருந்திருக்க வேண்டு மென்றும் அபிப்பிராயங் கொண்டிருக்கின்றனர். ஆனால் இவர்கள் தண்டி மஹாகவியின் காவ்யாதர்சமென்னும் நூலை நேரில் ஆராய்ந்தவர்களென்று யான் நம்பவில்லை. இவ்வர்த்த சுலோகம் காவ்யாதர்சத்தின் இரண்டாவது பரிச்சேதத்தில், அலங்காரப் பிரகரணத்தில், உத்பிரேக்ஷா சக்கிரத்தில் உத்பிரேக்ஷாலங்காரபேதங்களுக்குள் ஓர் உதாரணமாகக் கொடுக்கப் பட்டிருக்கிறது. இதில் ஒவ்வோர் அலங்காரத்தையுமெடுத்துக் கொண்டு, முதலில் அதன் லக்ஷணத்தைக் கூறிப் பிறகு அதற்கு

* இச்சுலோகத்தின் முதற்பாதி முழுதும் தெலுங்கு லிபியில் அச்சிடப்பட்டுள்ள வால்மீகி ராமாயணப் பிரதிகளுட் சிலவற்றில் காணப்படுகின்றது.

உதாரணங்களைக் கூறுகிறார். ஒவ்வோர் அலங்காரத்துக்கும், அதன் பேதங்களுக்கும் இவ்வலங்கார சாஸ்திரத்திற் கொடுத்திருக்கும் உதாரணங்கள் யாவும் தண்டி யியற்றியவைகளே. அப்படியிருக்க, இவ்வர்த்த சுலோகத்தை மாத்திரம் வேறொரு கிரந்தத்தி லிருந்து உதாரணமாகக் கூறினார் என்பது முற்றும் அசங்கதமே. மேலும் இதனது சந்தர்ப்பத்தை நோக்குவாம்.

अन्यथैव स्थिता वृत्तिश्चेतनस्येतरस्य वा ।
अन्यथोत्प्रेक्ष्यते यत्र तामुत्प्रेक्षां विदुर्यथा ॥
मध्यन्दिनार्कसन्तप्तः सरसीं गाहते गजः ।
मन्ये मार्तण्डगृह्याणि पद्मान्युद्धर्तुमुद्यतः ॥

இவ்வர்த்த சுலோகம் உத்பிரேக்ஷாலங்காரத்திற்கு ஓர் சிறந்த உதாரணமானது பற்றி

कर्णस्य भूषणमिदं ममायतिविरोधिनः ।
इति कर्णोत्पलं प्रायस्तव दृष्ट्या विलङ्घ्यते ॥
लिम्पतीव तमोऽङ्गानि वर्षतीवाञ्जनं नभः ।
इतीदमपि भूयिष्ठमुत्प्रेक्षालक्षणान्वितम् ॥

ஈண்டு மேற்கூறிய பாதி சுலோகம் மிருச்சகடியி லிருந்து எடுத்ததென்றாவது, சூத்திரககவி எழுதியதென்றாவது இக்கிரந்தத்திலிருந்து சிறிதும் சொல்வதற் கவகாசமில்லை. மேலும் **ஸரஸ்வதீகண்டாபரணம், ஸாஹித்யதர்ப்பணம், காவ்யப் பிரகாசிகை, சந்திராலோகம்** முதலிய அலங்கார கிரந்தங்களிலும், இவ்வர்த்த சுலோகமும் உத்பிரேக்ஷா லங்காரத்திற்கு உதாரணமாகக்கூறியிருக்கின்றது. ஆயின் ஒருவராயினும் இதனை மிருச்சகடியி லிருந்து எடுத்ததாகக் கூறவில்லை. அப்படி யிருக்கத் தண்டி ஆசாரியர் இதனை மிருச்சகடியிலிருந் தெடுத்து உதாகரித்திருக்கிறார் என்பது ஸர்வாசங்கதம். காரிருளை வர்ணிக்குங் காலையில், இவ்வுதாரணத்திற் கூறியதைப் பார்க்கிலும் மேலாக வர்ணிக்க முடியாமையினால், ஒவ்வொரு கவியும் இதனையே யல்லது, இதன் அர்த்தத்தைத் தமது கிரந்தங்களுட் சேர்த்துக் கொண்டனர். அப்படியே இம் மிருச்சகடியை எழுதினவரும் இவ்வுதாரணத்தைப் பூர்வார்த்தமாக எடுத்துக்கொண்டு, அதைச் சந்தர்ப்பத்திற் கேற்றபடி பூர்த்தி செய்வதற்காக "असत्पुरुषसेवेव दृष्टिर्विफलतां गता" என்னும்உத்தரார்த்தத்தைஎழுதியிருக்கக் கூடும். மேலும் இவ்விரண்டுக்கும் உள்ள அர்த்தங்களையும் சேர்த்துப் பார்க்குங்காலையில், பிரிக்கக்கூடாத பொருத்தம் ஒன்றும் காணப்படவில்லை



ஆனதுபற்றி, இச் சூத்திரககவி தண்டிக்கு முன்னராயினும், அவரது காலத்திலிருந்தவ ரென்றாயினுஞ் சொல்வதற்குக் கொஞ்சமேனு மாதாரமில்லை.

மேற்கூறிய காரணங்களால் ஏற்படுவது யாதெனில்:-இம்மிருச்சகடியை இயற்றிய சூத்திரகனென்னுங்கவி கி-பி. இரண்டாவது நூற்றாண்டுக்குப் பின்னும், காவ்யாலங்கார சூத்திரவிருத்தியை எழுதின வாமனபண்டிதருக்கு முன்னும் இருந்திருக்க வேண்டுமென்பதே. ஆனால் இவ்வாமனபண்டிதர் விளங்கிய காலம்யாது? பாணினியின் அஷ்டாத்தியாயிக்குக் **காசிகாவிருத்தி** என்னுமுரை எழுதினவர் இவரோ? அல்லது, வேறொருவரோ? இவ்விஷயங்களைப்பற்றி ஒருவரும் இதுவரையிலும் ஓர் உறுதிக்கு வரவில்லை. காபெல்லர் என்னும் ஒருபெரியமேற்றிசைப்புலவர் இக்காவ்யாலங்கார சூத்திரவிருத்தி கி-பி-பன்னிரண்டாவது நூற்றாண்டில் எழுதப்பட்டிருக்கவேண்டுமென்று சொல்லுகிறார். ஆனால் அவர் கூறிய காரணங்கள் சிறிதேனு மொப்பத்தக்கனவல்ல. இக்கிரந்தத்தில் அமருசதகம், உத்தரராமசரிதம், காதம்பரீ, கிராதார்ஜுனீயம், குமாரஸம்பவம், மிருச்சகடி, மேகதூதம், ரகுவம்சம், விக்ரமோர்வசி, மஹாவீரசரிதம், வேணீஸம்ஹாரம், சாகுந்தலம், சிசுபாலவதம், ஹர்ஷசரிதம், ஹரிப்பிரமோதம், காமந்தகநீதி, நாமமாலை முதலிய கிரந்தங்களிலிருந்து இவ்வலங்கார சாஸ்திரத்தில் உதாரணங்கள் மேற்கோட்பாக்களாகப்பல கூறப்பட்டிருக்கின்றன. மேலும், சூத்திரகன், காளிதாசன், பவபூதி, மாகன், விசாகிலன், கவிராஜன் முதலியவர்களும் இக்கிரந்தத்திற் கூறப்பட்டிருக்கின்றனர். இவர்களுக்குட் பவபூதி யென்னுங்கவி கி-பி ஏழாவது நூற்றாண்டின் இறுதியிற் கான்யகுப்ஜ மகாராஜன் யசோவர்மனது ஸபையிலிருந்தனரென்பதை யாவரும் ஒத்துக்கொண்டிருக்கின்றனர். சில வருஷங்களுக்குமுன் இறந்துபோன **எல்.ஆர் .வைத்திய** ரென்னும் நம்நாட்டுப் புலவரொருவர் **வேணீஸம்ஹார** நாடகத்தை எழுதிய பட்டநாராயணர் கி-பி 8-ஆவது நூற்றாண்டி லிருந்திருக்கவேண்டுமென்று தமது வேணீ ஸம்ஹாரநாடக முன்னுரையில் நிச்சயித்திருக்கின்றனர். காமந்தக நீதிஸாரம் பவபூதிகாலத்திற்கு வெகு நாட்களுக்குப்பின் எழுதியிருக்க வேண்டுமென்பது, அக்கிரந்தத்திலிருந்தே தெரியவருகிறது. அமருசதகம், அமரு என்னும் அரசனது தேகத்திற் புகுந்து ஸ்ரீ சங்கராசாரியர் எழுதியதென்பது ஸர்வபிரஸித்தம். ஸ்ரீசங்கராசாரிய சுவாமிகள் பாகாயப் பிரவேசஞ் செய்தனரோ அல்லரோ,அமருவும் அவரும் ஒரேகாலத்தி லிருந்தனரென்பதைப் பற்றிச் சிறிதேனும் சந்தேகமில்லை.

(இன்னும் வரும்.)

த. ச. நாராயண சாஸ்திரியார்.

# 'THERE IS NOTHING NEW UNDER THE SUN.'
## 'கதிரொளிக்கீழ்ப் புதுமையிலை காண்'

பண்டைநாள் தொட்டு நம்முலகின்கட் புதிது புதிதாய் எத்தனையோ நூல்கள் அவ்வக்காலங்களுக் கேற்றபடி வெளிப்பட்டுக்கொண்டு வந்திருக்கின்றன. நமது தமிழ்ப்பாஷையில் அதிகமாக நூல்கள் கிடையா. ஆனாற் சம்ஸ்கிருதம், லாடின், க்ரீக் முதலிய பழைய பாஷைகளிலும், ப்ரெஞ்சு, ஜெர்மன், இங்கிலீஷ் முதலிய மற்றுமுள்ள தற்காலத்திற் பலராலும் பேசப்பட்டனவும், கொண்டாடப்பட்டனவுமான பாஷைகளிலும், அளவற்ற நூல்கள் இருக்கின்றன. மேலும் தற்கால பாஷைகளிலோ, ஜெர்மெனியில் வருஷத்துக்கு 25000 புதுநூல்கள் வெளிப்படுகின்றனவாம்; பிரான்ஸில் 12000-புதுநூல்கள் வெளிப்படுகின்றனவாம். இங்கிலீஷ்ப் பாஷையில் (இங்கிலாந்திலும், ஐக்கியமாகாணங்களிலும்) 12500-புஸ்தகங்கள் வெளிப்படுகின்றனவாம். நமது இந்தியாவிலுள்ள பங்காளி பாஷையிற்கூட வருஷத்துக்கு 1000-புதுநூல்கள் வெளிப்படுகின்றனவாம். அவ்வாறிருக்க நமது தமிழிலோ வருஷத்துக்கு 50-புதுநூல்கள் கூட வெளிப்படுவதில்லை.

இது நிற்க. 'புதிது' என்பதன் பொருள்தான் என்னை? புதுநூல் என்றால், புதிதாய கடிதத்திற் புதிதாயடுக்கி வைக்கப்பட்ட எழுத்துக்களுடன் அச்சிடப்பட்டது என்பது வரையில் நிச்சயம். ஆனால் இது முக்கியமான பாகமன்று. சிறிது, உள்ளே இருக்கும் விஷயத்தினது குணகுணங்களையும் ஆராயவேண்டும். அவற்றினது மேன்மைதான் நூலினது மேன்மைக்குக் காரணம். நூலிலுள்ள விஷயம் மேன்மைத்தாயிருக்குமாயின் நூல் மேன்மையானதென்றும் நூலிலுள்ள விஷயம் தாழ்மைத்தாயிருந்தால், நூலுந் தாழ்மையானதென்றுங் கூறப்படும். மேலும், நூல் எவ்விதமாய் எழுதப்பட்டுளது என்பதையுங் கவனிக்க வேண்டும். நூல்கள் செய்யுளாயிருக்குமாயின் செய்யுளினிலக்கணங்களெல்லாம் பொருந்தியிருக்கின்றனவா வென்றும், வசனநடையா யிருந்தால் அதன் இலக்ஷணங்களையெல்லாம் உடையனவா வென்றும் ஆராய்ந்தறிந்து, அவற்றுள் இன்னது உயர்ந்த நூலென்றும் இன்னது தாழ்ந்தநூலென்றும் பகுத்து வேறுபடுத்தல் வேண்டும். இன்னும், ஒவ்வொரு விஷத்தையும் எடுத்துரைக்கும் விதத்தையும் ஆராயவேண்டும். இம்மூன்று லக்ஷணங்களும் முழுவதும் பொருந்தியிருக்குமாயின், அந்நூல் உயரியதெனக் கூறப்படும். ஆனால் இம்மூன்றும் ஒரே அளவாக ஒரேநூலிற் பொருந்தியிருப்பது அரிதாயினும், சற்று ஏறக்குறைய வெவ்வேறு அளவைகளில் வேண்டிய அளவு காணப்படுமாயின், அப்பொழுதும் அந்நூல் உயரிய தெனவே கூறப்படும். ஈதிவ்வாறாக.



இனித் தற்காலத்தில் ஆராய்ச்சி செய்பவர்களோ, நூலின்கண்ணே வேறோர் இலக்கணம் கண்டு பிடிக்க முயலுகின்றார்கள். அஃதென்னை யென்றால், நூலிற் சொல்லிய விஷயம் புதிதாயிருக்குமாயின் நூல் உயரியது; அல்லாவிடில் நூலைப் பயனற்றதாகத் தள்ளி விடலாமென்கின்றார்கள். அப்பெரியோர்கள் சொல்லியபடி பார்த்தால் நளவெண்பா இருக்கும்பொழுது நைடதம் வேண்டுவதில்லை. ஆனாலோ, தமிழபிமானிகள் எத்தனை லாபம் வரினும், நைடதத்தையாவது, நளவெண்பாவையாவது கைவிட மாட்டார்கள். மேலும், நமது பாஷையிற் செய்யுள்வேண்டிய வளவு இருக்கின்றன; இனிச்செய்யுள் வேண்டாமென்கின்றார் ஒருவர். அந்தோ! சிலப்பதிகாரம், திருக்குறள், முதலிய பெருநூல்களிருந்தும், கூலவாணிகன் சாத்தனார் மணிமேகலை பாடியது நேரன்றுதான்! மேற்குறித்த நூல்களெல்லாமிருக்கக்கண்டும் கம்பன் வசனநடையில் தனது இராமாயணத்தை எழுதாது செய்யுள்நடையிலெழுதியதும் நேரன்றுதான்! இவ்வாறே பாரத வெண்பாவிருக்க வில்லிபுத்தூரார் பாடியபாரதமும், இவ்விரண்டுமிருக்க நல்லாப்பிள்ளைபாடிய பாரதமும் பயனிலவென்று கருதப்படும்போலும்!

சின்னாள் முன்னர்ச் சுதேசமித்திரனிற் "பாவலர்விருந்தின் ஆராய்ச்சி" எழுதியவர் இங்கிலீஷ் முதலிய பாஷைகளில் வெளியாகும் புத்தகங்களின் கணக்கை யறிந்திருப்பாராயின் அவர் இவ்விதம் எழுதியிருக்கமாட்டார். மேலும், அது செய்யுள்நடையி லெழுதப்பட்டுளது என்பதைக் கண்டவுடனே முன் புராணமெழுதியவர்கள் மேற்கொண்டெழுதிய விஷயத்தைப் பற்றியே எழுதியிருக்கின்றனர் என்று குருட்டுத்தனமாக நினைத்தனர்போலும்!

மேலும் 'கதிரொளிக்கீழ்ப் புதுமையிலைகாண்'. பொழுதுவிடிந்தெழுந்தாற் பசி, வேலை, ஆசை, நாசம் முதலியனதாம், தொன்றுதொட்டு நம்முடன் கூடக் குடிகொண்டிருக்கின்றன. தினம் சாப்பிடுவதுதானா வென்று யாரேனும் கேட்பதுண்டோ? வேண்டுமானாற் புதிது புதிதாய் அன்னத்தைப் பாகஞ்செய்து சாப்பிடலாம். ஆனாற் சாப்பிட்டுத்தானே தீரவேண்டும். உலகந்தோன்றியகாலமுதல் சத்யம் பரிபாலிக்கப்படவேண்டு மென்றும் அசத்யம் நாசமாய்ப் போய்விடவேண்டுமென்றும் எத்தனையோ பாஷைகளில் எத்தனையோபெயர்கள் எழுதியிருக்கின்றார்கள். இவையெல்லாம் அநாவசியமென்று எவருஞ் சொல்லக்காணோம்; அவை அநாவசிய முள்ளனவுமல்ல. ஆகையின் சூரியவெளிச்சத்தின்கீழ்ப் புதிதொன்று மிலதென்று நினைந்து காலத்திற்சேற்பச் செய்யப்பட்டு வெளிப்படும் எவற்றையும் எவரும் தடுப்பது அசாத்தியம்.

கு. ரா. ஸ்ரீநிவாச ஐயங்கார்.

# SOUTH INDIAN HISTORY.
# தென்னிந்திய சரிதம்.

---

தென்னிந்தியாவின் பூர்வ பாரம்பரியங்கள் அதன்கண் திராவிடகுலத்தார் குடியிருந்தனரென்று குறிக்கின்றன. அக்குலத்தார் ஆண்டே பிறந்தவராயினும் ஆகலாம்; அன்றிப்பெலுச்சிஸ்தானத்திலுள்ள **பிராகியூ**க்களைச் சேர்ந்தவராயினும் ஆகலாம். **திராவிடர்**கள் மேற்றிசையினின்று புறப்பட்டு, ஸிந்து, கூர்ஜ்ஜரம் முதலான இடங்களைக் கடந்து வரும் வழியில், பிராகியூ சாதியாரை ஆங்காங்கு விட்டுவிட்டுப் போந்தனரோ, அன்றி அத்தேயத்திலேயே பிறந்து பாரஸீக வளைகுடாவின் வழியாக வியாபாரஞ்செய்து சிறிது நாகரிகமடைந்தவராயினரோ? அறியேம். பின்னர்க்கூறிய தன்மையெனின் பிராகியூக்கள் தங்குலத்தினின்றும் பிரிந்து அலைந்து திரியும் வகுப்பினராகவாதல் சுயேச்சையாய்க் குடிபோகுஞ் சாதிகளாகவாதல் இருத்தல்வேண்டும். முற்காலத்தில் வட இந்தியாவின் பெரும்பாகத்திற் குடியிருந்தனரெனத் தோற்றுகின்ற சாதியாரும் திராவிடரும் பிறப்பில் துரானியராயினும் முற்கூறியவர் அவ்வம்சத்தில் மங்கோலிய சிதேய வகுப்புக்களினின்றும் உதித்தவர். 'ஆரியர்படையெடுப்பு' என்று கூறப்படுங்காலத்தில் இச்சிதேய சாதியார் அநேகமாய்த் தென்னிந்தியாவிற்கும் இலங்கைக்குந் துரத்தப்பட்டனரென்று பலரும் எண்ணுகின்றனர். அப்பழங்குடிகளில் இப்பொழுது காணப்படுகின்றவர் நீலகிரியிலுள்ள தொதுவர்கள், வடக்குமலைச் சாதியாராகிய பில்லர்கள், கோலர்கள், காண்டர்கள், சந்தலர்கள், நாகர்கள் என்பவரே. இந்தோ-ஜர்மானிய சாதியாருடைய முன்னோரென் றெண்ணப்படும் **ஆரியர்** மத்திய ஆசியாவிலிருந்து இந்தியாவின்மேற் படையெடுத்துவந்து, பஞ்சாப்தேசத்தில் வெகுநாளிருந்தபின் அயோத்திக்கு வந்து அங்கிருந்து தென்னிந்தியாவின் மீதும் இலங்கையின் மீதும் படையெடுத்தனர். சுதேச வகுப்பினரைத் தவிர்த்து இந்துக்கள், தென்னிந்தியாவி லிருக்குந் திராவிடரென்றும் வடபாகங்களிலிருக்கும் ஆரியரென்றும், இருபெருஞ் சாதியாய்ப் பிரிக்கப்பட்டுளர். இவ்வீரிடங்களையும் பிரித்து அவற்றின் நடுவிற் கிழக்கே ஒரிஸாமுதல் மேற்கே மைசூர் வரையிலு முள்ளதோர் அகன்ற நிலத்தில் இவ்விருசாதியாருங் கலந்து போயினர்.

தென்னிந்திய சரித்திரத்தைக் கூறுதற்கு அதனை மூன்று பகுதிகளாகப் பிரித்து எளிதாக்கிக் கொள்வோம். அவையாவன :—யாம் அறியும் பூர்வ காலம் முதல் மாலிக் காபர் படை யெடுத்து வந்த கி. பி. 1310-ஆம் வருஷம் வரையில் முதலாவதும், அதுமுதற் கோலகுண்டாதேசம் அழிந்த



கி. பி. 1678-ஆம் வருஷம் வரையில் இரண்டாவதும், அவ்வருஷம் முதல் ஆங்கிலத் தலைமை நிலை நிறுத்தப்பட்ட வரையில் மூன்றாவதுமேயாம்.

## முதற்பகுதி (ஆதிமுதல் கி. பி. 1310 வரை.)

தென்னிந்தியாவில் நமக்குத் தெரிந்தனவற்றுட் பழைய அரசுகள் பாண்டிய சோழ சேர (அல்லது கேரள) ராச்சியங்களே. இவை கி. மு. மூன்றாம் நூற்றாண்டி லிருந்தன போலும். **பாண்டியர்** இந்தியாவின் தென்பாகமாகிய மதுரை திருநெல்வேலி, தென்றிருவாங்கூர் ஆகிய ஜில்லாக்களையும், **சோழர்** கீழைத் தொடர்மலைக்கும் மதுரை முதல் தென்பெண்ணையாறு வரையிலுள்ள கடற்கரைக்கும் நடுவிலிருக்கும் நாட்டையும், **சேரர்** வடதிருவாங்கூர், கொச்சி, மலையாளம், தென்கன்னடம் ஆகிய இடங்களையும் ஆண்டனர். அப்பொழுது சென்னை இராசதானிக்கு வடக்கில் ஆண்டவர் **ஆந்திரர்** என்பர். அவர் கிறிஸ்துசகந் தொடங்கிய காலத்தில் மிகவும் வல்லவராயிருந்தனர். கிருஷ்ணாநதிக்கு வடக்கிலுள்ள உள்நாடனைத்தும் அவரைச்சேர்ந்ததே. ஆந்திரபல்லவ ராச்சியங்களுக்கு இடையிலிருந்தநாடு குடியற்ற பாழ்ங்காடாயிருந்ததுபோலும். **பல்லவ** தேயம் பெண்ணையாறுமுதற் கலிங்கநாட்டுத் தென்னெல்லை வரையிலும் வியாபித்துச் சேலத்தின் வடபாதியோடு பலமனேரி, கோலாறுவரையிலுள்ள பாலாற்றுப்பாய்ச்சல் முழுவதூஉம் அணைத்தது. ஏறக்குறைய ஒன்பதாம் நூற்றாண்டுமுதற் சோழர் கருவூர்முதல் மேற்கே மைசூர்வரையிலிருந்த கொங்கு ராச்சியத்தைச் சயித்துச் சேர்த்துக்கொண்டு, விரைவில் அழிந்துகொண்டிருந்த கோதாவரியாற்றுக் கழிமுகத்தின் எதிர்நிலத்திருக்கும் சாளுக்கிய ராச்சியம்வரை அழித்துத் தந்தேயத்தை மேற்கிலும் வடக்கிலும் பரப்பினர். இப்பொழுது வழங்கும் பாரம்பரியங்களின்படி முற்காலத்து மிக வன்மையடைந்ததோர் அலைந்துதிரியுஞ்சாதியின் கிளையாகிய **குறும்ப**ரென்பவர் நாளாவர்த்தியிற் **பல்லவ**ரென்ற பெரியஜாதியாராகக் கிளம்பினர். இந்தச்சாதியார் பூர்வகாலத்திலேயே தென்னிந்தியாவில் தலைமையடைந்தனர். இவர்களின் வன்மை மிக அதிகமாயிருக்கும்போது, முற்கூறிய பல்லவதேய மனைத்தினையும் இஃதணைத்தது. பூர்வகிரேக்க ரோம நூலாசிரியர் **கலிங்கான** வம்சத்தையும் அச்சாதியையும் பற்றிக்கூறுகின்றனராதலின் அவ்விராச்சியம் முற்காலத்தில் மிக்க வன்மையும் சுவாதீனமுமடைந்ததென்று தோன்றும். சனங்கள் தூரதேசங்கட்கு வெகுநாட்பிரயாணஞ் செய்யத்தொடங்குந் துணிவுள்ள கடல் வியாபாரிகள். சில்லாண்டுகள் கழித்து அவர் தேயத்தின் தென்பாகங்களைப் பல்லவராண்டனர். கடைசியில் ஏறக்குறையக் கி. பி. 1000-ஆம் வருஷத்தில் அவர் நாடுமுழுவதூஉம் அவரினும் வன்மையின் மிக்க அயற்றேயத்தார் பிடுங்கிக்கொண்டனர். முதன் முதலில் நாகரிகமடைந்தது **பாண்டிய** ராச்சியமே. சோழர் முதன்மை யெய்திய வரையில்

தென்கோடியில் அஃதே தலைநாடாயிருந்தது. இச்சோழர் பதினோராம் நூற்றாண்டில் இதுகாறுந் தென்னிந்தியாவில் யாமறியாததோர் மேனிலையடைந்தனர். இப்பருவத்திற் போர்களினாலும் படையெடுப்புக்களினாலும் புதுப்புதுச் சாதிக ளுண்டாதலினாலும் அவர் அதிகார நிலை அடிக்கடி மாறிற்று. அதனாற் பதினோராம் நூற்றாண்டின் தொடக்கத்தில் விஷயங்களின் நிலைமை வேறோருருக்கொண்டது. அஃதாவது :—பாண்டிய சோழ சேர ராச்சியங்கள் தம் முன சுவாதீனத்தினை யிழவாதிருந்தன; ஆனாற் பிற்கூறியவருடைய வட எல்லையில் **ஆயசால வல்லாளர்** அடிக்கடி எதிர்த்தனராதலின் அவர் மிகத்துன்ப மடைந்தனர். அவ்வல்லாள ரென்பார் **மேலைச்சாளுக்கியருள்** ஒரு பிரிவினர்; மைசூரில் ஸ்தாபிக்கப்பட்டிருந்து விருத்தியடைந்து வரும் யாதவ குலத்தினர். **சாளுக்கியரோ** நிஜாம் ராஜ்ஜியத்திற் **கல்யாணபுரியிற்** கருகிலிருந்ததோர் இராஜ புத்திர சாதியார். இவர் தந்தேயத்தைப் பரப்பிக் கீழைக் கடற்கரையை நோக்கிப் படை யெடுத்துச் சென்று பல்லவதேயத்தின் வடபாகங்களைச் சயித்தனர். பின்னர் அவர் தென்னிந்தியாவின மேற்கில் தந்நாட்டினுள் வசித்த **மேலைச்சாளுக்கியரென்றும்**, பல்லவரிடமிருந்து பிடுங்கிக்கொண்ட கிருஷ்ணா கோதாவரி நதிகளினடுவிலிருந்தநாட்டிற் குடியேறிய **கீழைச்சாளுக்கியரென்றும** இருபிரிவினராயினர். கி.பி. 1064-ஆம் வருடத்திற் சோழராச்சியத்தையும் கீழைச்சாளுக்கிய ராச்சியத்தையும் சேர்த்து **இராஜேந்திரசோழனென்பான்** ஆண்டனன், அவன் தந்தை யொரு சாளுக்கிய ராசகுமாரியை மணந்தனனாதலின். இதன்பின் இலங்கையும் பல்லவ பாண்டிய தேயங்களும் சயிக்கப்பட்டன. கடையிற் கூறிய நாட்டிற் சோழபாண்டியரென்றதோர் சிறுவம்சத்தரசர் ஆண்டனர். சின்னாட்பின்னர் ஆயசாலவல்லாளர் தந்தேயத்தை யின்னும் விஸ்தாரமாக்கிக்கொண்டனர். கி, பி. 1310-ஆம் வருடத்தில், தென்னிந்தியாவின்மேல் மகம்மதியர் முதன்முதற் படையெடுத்துவந்து அதன் பழைய வம்சங்களை வேரோடறுக்கத் தொடங்கி அவர் ஜயத்தினைக் குறைத்திராவிடின் ஒருவேளை அவர் சமநிலங்களிலிருந்த பூர்வ சாதியாரையும் வென்றிருப்பார்.

முன் சொல்லிய முக்கியமான இராச்சியங்களைப்பற்றி யின்னுஞ் சில விஷயங்கள் இனியனவாயிருக்கலாம். அவை பின்னர்க் கூறப்படும்.

**பாண்டியர்** :—இவ்வம்சத்தைப் பாண்டியனென்ற ஒருழவன் நிலைநிறுத்தினனென்பது கூறப்பட்டுளது. அக்குலத்தரசர் மீன்குறி யுடையவராதலின் அவருக்கு மீனவரென்றும் பெயர். முதன்முதலிற் றலைநகராயிருந்தது திருநெல்வேலி யாற்றின் கழிமுகத்தின் அருகிலிருக்குங் **கொற்கையென்பதே**. ஆனாற் சிலநாளிற் கன்னியாகுமரிமுனையினுக்கருகிலிருக்கும் **கல்யாணநகரம்** தலைமைப்பட்டணமாய்க் கடைசியில் **மதுரைக்கு** அப்பதவியினைக்



கொடுத்துவிட்டது. **மேகாஸ்தினீஸ்** என்பவர் பாண்டிய நாட்டினுக்குப் **பண்டையநா** டென்ற பெயர்கொடுத்து மதுரையையும் அதன் அரசனையும் பற்றிக் கூறியிருக்கின்றார். மதுரைக்கோயிலின் சமயச் சார்பான கதைகளிலோராட்டவணை கொடுக்கப்பட்டுளது. அது பெரும்பாலும் நம்பத்தக்கதன்று. 1064-ஆம் வருடத்தில் **இராஜேந்திர குலோத்துங்க சோழன்** படையெடுத்துவந்தவரையில் 73 பாண்டியராசர் ஆண்டனரென்று அது கூறுகின்றது. ஆனால் மதுராபுரியைப் பலப்படுத்திப் பெரிதாக்கி ஆண்டுப் பெயர்பெற்ற தமிழ்ச்சங்கத்தைஸ்தாபித்த **வம்சசேகரபாண்டியனைப்பற்றி** யாமறிந்தாற்போதும். **முதற்சோழபாண்டியன்** உயிர்துறந்தபின் 1100-ஆம் வருஷம் வரையிற் சிலநாள் அரசாளுகையின்றியிருந்தது. அவ்வருஷம் முதல் நாற்பத்தொருவர் கொண்டதோர் வம்சத்தார் ஆளத்தொடங்கினர். அப்பொழுது நடந்த முக்கிய காரியங்களாவன சோழரோடனேக சண்டைகளும் சமாதானங்களும், 1701-ஆம் வருஷத்தில் நாட்டின்மேற் படையெடுத்துவந்த இலங்காபுரிவசனாகிய **முதற்பராக்கிரம பாஹு**வின் வென்றியும், கடையில் 1310-ஆம் வருஷத்தில் மகம்மதியத்தலைமையும் பாண்டியரழிவுமேயாம்.

**சோழர்** :—சோழராச்சியமும் பாண்டிய வம்சத்தினும் பூர்வீகமானது. ஆனால் 1023-ஆம் வருஷத்திற்கு முன் அதன் சரித்திரம் ஒருவருக்குந் தெரியாது. கி. மு. மூன்றாம் நூற்றாண்டில் வட இந்தியாவில் மகத நாட்டினையாண்ட **அசோகன்** எனபவன் அதற்குச் **சோடராச்சிய**மென்று பெயர் கொடுத்துத் தன் கட்டளைகளுள் அதைப்பற்றிக்கூறியிருக்கின்றான். இரண்டாம் நூற்றாண்டிற்சோழர்தலைநகர் **உறையூர்**. ஏழாம்நூற்றாண்டிற் **கும்பகோணம்**. பத்தாம்நூற்றாண்டில் **தஞ்சை**. முதன் முதலிற் பாண்டியரோடு இடைவிடாது போர் புரிதலே யிவர் செய்கையா யிருந்தது. ஆனால் அதன்பின் அவர் தங்கவனத்தைக் **கொங்கு**ராச்சியத்தின்மேற் செலுத்தி அவரைக் கி. பி. 900-ஆம் வருஷத்திற் றொலைத்தனர். சிங்களக் கதைகள் சோழர் கிறிஸ்துசகந் தொடங்கு முன்னர் இலங்கையைச் சயித்ததாகவும் அதனை 44 வருஷம் ஆண்டதாகவும் கூறுகின்றன. 10-ஆம் நூற்றாண்டில் இன்னொரு முறை படையெடுத்ததாகவும் அதிற்றோற்றதாகவும் எண்ணப்படுகின்றது. **இராஜராஜ சோழன்** தன்மனைவி காரணமாகக் **கலிங்க வேங்கிதேயங்களாகிய கீழைச்சாளுக்கிய** நாட்டினைத் தன் மகனுக்குச் சேர்த்து வைத்தனன். 1059-ஆம் வருஷத்தில் இவ்வரசன் இலங்கைமேற் படையெடுத்துச் சென்று **மிஹிந்துராச**னையும் அவன் மனைவியையுஞ் சிறைப்படுத்தி முடியணிகளைக் கைப்பற்றிக்கொண்டு ஒருசோழப் பிரதிநிதியை யாளும் பொருட்டு வைத்தான. அவன்பின் வந்த **குலோத்துங்கன் முதலாவன்** அல்லது **இராஜேந்திர சோழனே** அவ்வம்சத்தில் மிக வன்மையடைந்தவன். அவன் தன்னாட்டினை ஒரிஸா வரையிற் பரப்பிக் காஞ்சீபுரத்துப் பல்லவரை யழித்

தச் சின்னாள் பாண்டிய ராச்சியத்தையுஞ் சேர்த்துக்கொண்டான். இன்னும் இவன் மேலைச் சாளுக்கிய நாட்டையும் அழித்தனனென்பதூஉந் தோன்றுகின்றது. சோழர் வெகுநாட் சண்டை செய்துங் கடைசியில் இலங்கையையிழந்தனர். ஆனாற் பின்னர் வந்த சோழன் காலத்திற் பழிவாங்குதற்காகச் சிங்களர் படையெடுத்து வந்து எளிதிற் றோற்றனர். பாண்டியர் தோற்றபின் இராஜேந்திர சோழன் மகனாகிய **கங்கை கொண்டான் சுந்தர பாண்டிய** னென்ற பெயருடன் ஆண்டான். குலோத்துங்கன் காலம் முதற் சோழர் வன்மை குறைந்து கொண்டேவந்து கடைசியில் 1310-ஆம் வருஷத்தில் மகம்மதிய படையெடுப்பின்பின் அவ்விராச்சியம் மறைந்துவிட்டது.

**சேரகோங்கர்** :—அசோகனது கல்வெட்டெழுத்துக்களின்படி, சேரர் பாண்டியசோழரது காலத்தவர் என்பது போதரும். ஆயினும் அவரைப் பற்றி யொன்றுந் தெரியவில்லை. சின்னாண்முன்னர்க்கூட அவர் கொங்கு ராச்சியத்துச் சாதியாரேயோ அன்றி வேறு சாதியாரோ என்றதோரையப்பாடிருந்தது. ஆதலாற் கொங்குராச்சியத்தைப் பற்றியும் சேர அல்லது கேரள ராச்சியத்தைப் பற்றியும் தனித்தனியே கூறல் இன்றியமையாததாகின்றது. கொங்குநாட்டில் முதன்முதல் ஆண்டதாகத் தெரிகின்ற வம்சத்தில் ரெட்டி சாதியைச்சேர்ந்த அரசர் எழுவர் இருந்தனர். அவராளுகையிற் கர்னூடகம் சயித்துச் சேர்த்துக்கொள்ளப்பட்டது. நாடுபரவிற்று. சேரசோழ பாண்டியர்மேற் பெற்றவெற்றியினாற் கீர்த்தியுடன்பரவிற்று. அவர்களுள் முதலறுவர் சைனர். ஆனால் எழாவதரசன் சைவசமயத்தை மேற்கொண்டனன். இவ்வரசன் ஒரு மைசூர்த்தலைவனொடு போர்புரிகையில் இறந்தனன் போலும். பின்னர் அத்தலைவன் சிம்மாசனத்தில் ஏறினான். கங்கவம்சத்தை நிலைநிறுத்தியவன் இவனே. இவ்வம்சம் கி. பி. 189 முதல் ஏறக்குறைய கி. பி. 878 வரை ஆண்டது. இவராளுகையில் நாடு இன்னும் பரவிற்று. இவர் அதிகாரம் **ஹரிஹரபுரம்** வரையிற் சென்றது. கடைசியிற் சோழர் இந்நாட்டினைப் பிடித்துச் சேர்த்துக்கொண்டனர். அவர் அதனைப் பதினோராம் நூற்றாண்டின் மத்திவரையில் வைத்துக்கொண்டிருந்தனர். அப்பொழுது அது கலகஞ்செய்து பல சிற்றரசுகளாய்ப்பிரிந்தது. இவற்றை ஆயசாலவல்லாளர் சுமார் 1080-ஆம் வருஷத்திற் பிடித்துக் கொண்டு 250 வருஷம் ஆண்டனர். சேரரைப்பற்றிச் சிறிதேயறிவோம். பூர்வகாலத்தில் அவர் வடதிருவாங்கூரிலும் கொச்சியிலும் மலையாளத்திலும் கன்னடத்திற் சில பாகங்களிலும் இருந்தனரென்பது தோன்றுகின்றது. ஆனாற் கிறிஸ்துபிறந்து சில நாட்களிற் கன்னடத்தைத் தனியாக வேறொரு வம்சத்தார் 12-ஆம் நூற்றாண்டு வரையில் ஆண்டனர். சேரராச்சியம் 24 பிரிவுகளாயிற்றென்பதும் அவற்றைப் பிராமணர் ஆண்டனரென்பதும் கர்ண பரம்பரையாகத் தெரிகின்றன. இப்பிரிவு முறை திருத்திகரமா



யில்லை. தலைவர் நால்வர் சேர்ந்து ஆண்டுபார்த்துப் பயனின்றிக் கைவிடவே க்ஷத்திரியனொருவன் அரசனாயினன். இவ்வரசருட் கடைசியிலிருந்த **சேரமான் பெருமாள்** என்பவன் மகம்மதிய சமயத்தவனாய் 825-ஆம் வருஷத்தில் மெக்காவுக்கு யாத்திரை சென்றனன். அங்கிருந்து அவன் திரும்பிவரவேயில்லை. (இவரே சுந்தரமூர்த்தி நாயனார்க்குப் பேராதரவாயிருந்தவரும் சேக்கிழார்சுவாமிகளாற் பெரியபுராணத்திற் சிறப்பித்துக் கூறப்படும் சேரமான் பெருமாள் நாயனாரும் ஆகிய அப்பேரறிவாளர் தாமோ என்று ஐயுறற்கிடமுமுண்டென்பர் சிலர்.) அவன் போமுன்னர்த் தன்னாட்டைப் பிரதான பிரபுக்களுக்குப் பிரித்துக் கொடுத்துவிட்டுச் சென்றனன். இதனாற்றான் திருவாங்கூர் கொச்சி நாடுகளுண்டாயின. இதனாலேயே கள்ளிக்கோட்டை மகாராஜாவைச் சேர்ந்த நாடுகள் சுவாதீனமடைந்தன. சேரநாட்டுக்கரையிற் கி.மு. ஆறும் நூற்றாண்டில் யூதர்கள் குடியேறினதாகக் கூறப்பட்டுளது. அவரைச்சேர்ந்த நாடுகள் இன்னும் ஆண்டுள.

**பல்லவர்** :—பல்லவரது சிற்பவேலைகளில் இன்னுஞ்சில காண்கின்றனவாதலின் அவர் சரித்திரம் மற்றையோரதனினும் இனியதாயிருக்கும். அவர் சாம்பொதுவில் இந்திய ஆயர்குலங்கட்கு முதல்வனாகிய **தாது** என்பவனது பின்னோர்களென்று சொல்லிக்கொண்டனர். அவர் முற்கூறியாங்குக் குறும்ப சாதியார். அவர் முதன்முதலில் திராவிடத்தில் தங்கியபோது ஒருவரும் ஆளவில்லையென்பதும் அதனாற் கலகங்கள் உண்டாகவே ஓரரசனை வைத்துக்கொண்டனரென்பதுங் கூறப்பட்டுள. இவ்வரசன் பெயர் **கோமாண்டக் குறும்பப்பிரபு** என்பது. இவனே பல்லவ வம்சத்திற்கு முதல்வன். இவன் காலத்தில் நாடு 24 பிரிவுகளாக்கப்பட்டது ஒவ்வொரு பிரிவிலுங் கோட்டையொன்றுண்டு. அவற்றுட் சிறந்தது சென்னையருகிலுள்ள புரளூர்க்கோட்டையாம். மற்றைக்கோட்டைகளிற் சில மஹேந்திரவதி, ஆம்பூர்ப்பேட்டை, நாராயணவனம், வள்ளிமலை, படைவீடு ஆகிய இடங்களிற் காணப்படுகின்றன. படைவீட்டிலுள்ள அழிவுகளினால் அவ்வூர்ச்சுற்றளவு 16 மைல் வரையினுமிருந்ததென்பது தெரிகிறது. இவரும் அயற்றேயத்தரசரும் செய்த செப்புத்தகட்டுச் சாசனங்களால் இவரது மெய்ச்சரிதம் வெளிப்படும். அவற்றின்படி. ஆறும்நூற்றாண்டின் கடையில் இவர் வன்மையினது உன்னதபதவியில் இவர் நாட்டின் வட எல்லைகள் ஒரிஸ்ஸாவும் நர்மதாநதியும்; கீழ்த்தென் னெல்லைகள் முறையே கடலுந் தென்பெண்ணையாறும்; மேலெல்லை சேலம் பங்களூர் வழியாய்ப் பேராறுவரையினுமிழுத்ததோர் கோடுமேயாம், தலைநகர் **காஞ்சீபுரம்**. அப்பொழுது அது வெகு நாகரிகமடைந்திருந்தது. தென்னிந்தியாவில் மதசம்பந்தமாய்ச் சிறந்த நகர் அஃதே. ஒரு காலத்திற் சைன மதமே அரசசமயமாயிருந்தது. ஆனால் நான்காம் நூற்றாண்டிற் பௌத்தமதத்தவ

ரும் பிராமணரும் அங்கிருந்த தாகக் கூறப்படுதலினாற் பரந்த கொள்கைகள் அவரிடமிருந்தன வென்பது தோன்றுகின்றது. கடல் வாணிகம் நன்கு நடந்தது. சனங்கள் கடலூர் முதற் கஞ்சம் வரையிலுள்ள பல துறை முகங்கள் வழியாக உரோமரோடும் மற்றைய மேலைச் சாதியாரோடும் வியாபாரஞ் செய்தனர். **மகாபலிபுர** மென்னும் எழுகோயிற் பட்டணத்தில் தனிக்கற்றூண் மண்டபங்களும் கோயில்களும் பல்லவர் செய்தன ரென்று பல்லோருங் கூறுகின்றனர். தென் கோயில்களிலும் கணேசர் விக்கிரகத்திலுமுள்ள எழுத்துக்களில் அவ்வம்சத்தரச ரொருவன் பெயர் உளது. ஏழாம் நூற்றாண்டிற் கீழைச் சாளுக்கிய அரசரில் முதல்வனான **குப்ஜ விஷ்ணு வர்த்தன** னென்பவன் வெங்கி, கலிங்கம், ஆந்திரம் ஆகிய வடபாகங்களைச் சேர்த்துக் கொண்டனன். மேலைச்சாளுக்கியரைச் சேர்ந்த **புலகேசி யிரண்டாவன்** தெற்கிற் பல நல் வெற்றிகள் பெற்றனன். அது முதற் பல்லவராச்சியம் அழிந்துகொண்டே வந்தது. பதினோராம் நூற்றாண்டில் இராஜேந்திர குலோத்துங்க சோழன் முதலாவன் மகனாகிய **ஆதொண்டைச் சக்கிரவர்த்தி** அவரைப் புறமுதுகிடச்செய்தான். இதுதான் பல்லவர் அடைந்த கடைத்தோல்வி. திராவிடம் சோழ ராச்சியத்திற் சேர்ந்தது. அது முதல் அதற்குத் **தொண்டைமண்டலம்** என்று பெயர்.

**சாளுக்கியர்** :—சாளுக்கியர் ஓர் இராஜ புத்திர சாதியார். அவர் முதன் முதலில் ஆறாம் நூற்றாண்டின் றொடக்கத்தில் தலைக்கிளம்பினர். அவ்வம்சத்தை நிலை நிறுத்தியவன் **ஜயசிம்மன் முதலாவன்**. அவன் சூரிய குலத்திற் பிறந்ததாகச் சொல்லிக்கொண்டனன். முதற்றலைநகர் நிஜாம் ராஜ்யத்துக் **கல்யாணபுரி**. அங்கிருந்து சாளுக்கியர் தந்நாட்டினைக் கிழக்கே கோதவரி கிருஷ்ணா நதிகளுக்கு நடுவிலுள்ள கடற்கரை வரையும் வடக்கே தௌலதாபாக்கம் வரையும் வியாபித்தனர். மைசூரின் பெரும்பாகம் அவரைச் சேர்ந்ததே. ஜயசிம்மன் இறந்தபின் அவனுக்குப் பிறந்த **இராசசிம்மன்** பல ஜயங்கள் பெற்றனன். காஞ்சீபுரத்துப் பல்லவ ராஜனோடு நட்புப் பாராட்டித் தன்வன்மையினை யதிகரித்துக் கொண்டனன். ஏறக்குறைய 610-ஆம்வருஷத்தில் அரசவம்சத்தவர் நாட்டினைப் பிரித்துக்கொண்டனர். **சத்தியாசிரயன் முதலாவன்** மேலைத்தக்ஷணத்தில் இருந்தனன். குப்ஜவிஷ்ணு வர்த்தனன் பல்லவரிடமிருந்து பிடுங்கிக்கொண்ட நாட்டினிற் கீழைச்சாளுக்கிய ராச்சியத்தை நிலைநிறுத்தினான். சத்தியாசிரயன் மேலைச்சாளுக்கிய அரசருள் உயர்ந்தோரில் ஒருவன். ஆனால் அவன்பின் அவ்வம்சம் சிறிது அற்றது. கடைசியில் 670-இல் **முதல்விக்கிரமாதித்தியன்** பட்டத்துக்கு வந்தான். சின்னூற்றாண்டுகட்குப்பின்னர் வம்சம் மறுபடியும் அற்றது. அதன் பின் அவ்விராச்சியத்தைப் பற்றி ஏறக்குறைய 200-ஆண்டுகட்கு ஒன்றுந்தெரியாது. பிறகு அது முன்போல் வன்மையடைந்தது. 1126-வரையில் அவ்



வாறே யிருந்தது. பின் அது விரைவில் அழிந்து விட்டது; 1189-க்குப் பின் அதனைப்பற்றி யொன்றுமே யறியோம். கீழைச்சாளுக்கியர் பிரிந்த பின் சிறிதுசிறிதாய்த் தந்நாட்டினை ஒரிஸா வரையிற் பரப்பினர். தலைநகர் இராஜ மஹேந்திரவரம். 1064-இல் இராஜ ராஜ சோழன் சாளுக்கிய இராசகுமாரியை மணந்து கொண்டதனால் அவன்மகன் இராஜேந்திரன் கீழ்க் கீழைச்சாளுக்கிய ராச்சியமும் சோழராச்சியமும் ஒன்றாயின. அப்பொழுது முற்கூறிய தேசம் சோழராச்சியத்தின் வடபாக மாயிற்று. அது கடைசியில் வாரங்கல் **கஜபதி**களாற் பிடித்துக்கொள்ளப்பட்டது. சாளுக்கியர் முக்கியமாய்ச் சிற்பம் வல்லோர். அவரிருந்த நாட்டிற் சிற்ப சாஸ்திரத் தொழிலலஞ் சான்ற சிலகட்டிடங்களுள. பல்லவர் தோல்வி பௌத்த ஜைன மதங்களைப் பிராமணர் வென்றவாற்றைக் காட்டுதலான் முக்கியமானது.

**சருக்கை-வரதாசாரியன்.**

---

## AN ADAPTATION OF ADDISON'S VISION OF MIRZA.

## மர்சிகண்ட பாவனைக்காட்சி.

(63-ஆம் பக்கத்தொடர்ச்சி.)

**அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.**

33. இந்தப் பொறிகள் பாலத்தி னிடையிற் குறைந்து மிறுவாயிற்
பந்தி யாக முழுக்கண்கள் பரித்த விடத்துப் பலவாயுஞ்
சிந்திக் கிடந்த திடிந்துநனி சிந்தைக் கண்கள் மீதுஞ்சிலர்
குந்திக் குந்தி நடந்தனராற் கொடிய வமண்புல் லரைநிகர்ப்ப.

34. எனினு மவர்க ளிதுகாறு மிடர்கள் பொதுளு மிவ்வழியிற்
றனியுற் றேங்கி நடந்ததனாற் சோர்ந்து வீழ்ந்தார் நிரைநிரையா
யினைய விந்தை சேர்பாலத் தெண்ணில் பலவாம் பொருள்கண்ணுற்
றெனது சிந்தை யெனைத்தரப்ப வெண்ணிச் சிறிது போழ்தமர்ந்தேன்.

35. கவலை சிறிது மனத்திலராய்க் களித்துச் சிரித்து விளையாடு
நவையில் பலரந் நிலைதனிலா நழுவி விழுந்து வினிதலையுந்
தவறி யாங்கு வீழ்பொழுதிற் றப்பு மாறு கைக்கெட்டு
மெவையும் பிடிக்க முயறலையு மெண்ணி யெண்ணி யேங்கினெனால்.

36. உண்மை யாயப் பரம்பொருளை யுயர்வா னோக்கித் தியானிக்குந்
திண்மை கூர்ந்த சிந்தையர்போற் சிலராண் டிருந்த வன்னணமே
விண்மீ திருந்து விழுந்தொளிக்கு மீன்போற் றவறி வாரிவயின்
வண்மை தீர்ந்தோர் வளப்பமென மறைந்தெ ழுந்து போயினரால்.

37. முற்றும் பலர்தங் கட்கெதிரின் மன்னு சோதி யுடனெழுந்து
சுற்றி யசைந்தா டும்பலவாந் தோன்றுங் குமிழி தமைத்தொடர்ந்து
பற்று மாறு தமதுகரம் பண்பி னீட்டும் பருவத்து
ளொற்று திரையிற் சானழுவி யிமைக்கு முன்னர் மூழ்கினரால்.

38. இன்ன குழப்பத் திடைச்சில்லோ ரிமிர்வாள் பற்றி யிங்குமங்கு
நன்ன ரோடி நாற்புறமு நாடிப் பொறியி லாவழிக்கண்
மன்னு வோரை வழிமறித்து வாளாற் றடிந்து பொரியுள்விழ
வின்ன லியற்றிப் பாலமிசை யேகு மவரைக் கண்டனனால்.

39. போறியி லிங்ஙன் வீழ்த்தாமற் போவ ரேலம் மாந்தருயர்
நெறியிற் சென்று நேருமிடர் நீங்கி யுய்த னிச்சயமா
மறிவு சிறிது மிலாசவெனை யன்பிற் றடுத்தாண் டருளிவண்
செறியு மிணைய விந்தைபல தெரித்த சித்த னெனைநோக்கி.

40. அன்ப வின்னு முனதரிய வறிவுக் கெட்டாப் பொருளுளவே
லின்பி னோடென் பாலுரைத்தி யென்றான் யானு மேறெடுத்து
முன்பு பார்த்தேன் மாகநின்று மூரிக் கழுகு கூகைகொடி
யன்பி னோடும் பாலமிசை வந்து பலகா லிறங்கினவால்.

41. இன்னும் வலிய விருஞ்சிறைக ளிருபா லுடைய பாலர்பல
ரன்னப் பறவைக் குழுவிடையாண் டமர்க லாக விறும்பூது
துன்னு முளத்தோ டின்னவையா தூய நேயத் தொடர்புள்ளா
யென்ன விசைத்தே னிருந்தவனு மென்பா லன்பு செறிந்திடவே.

42. நண்ணு மறிவி னலனுடையாய் நாடு மினிய நானிலத்தோ
ரெண்ணு ளாடும் பொருளாசை யேக்கற் காமம் வீண்பத்தி
புண்ணை யொக்கும் பொறாமைகதம் பொருந்து நன்றி கோறன்முத
லெண்ணி லாத கவலைபல விளைவையென் றறிதி யெனவுரைத்தான்.

43. ஐய னுரைத்த மொழிகேட்டே னறிவு கலங்கி வெய்துயிர்த்தே
யைய கோமா னுடவாழ்க்கை யநித்த மேயெம் மானுடனும்
வைய மிசைச்சஞ் சலத்தாழ்ந்து வாணண் முழுதும் வேதனைப்பட்
டுய்யு நெறியின் றுயிர்நீத்த லோகோ கொடிதென் றுரைத்தேனால்.

44. இந்த வுரைகேட் டிருந்தவத்தோ னென்மீ திரங்கி யெனைநோக்கி
யந்த ளுள வினிமனித னரிய நித்த மடைதரச்செய்
விந்தை சேர்யாத் திரைமுதற்கண் விரிக்க கூறும் பிரபஞ்சந்
தந்த வாழ்வு தனைக்காண றவிர்வாய் சிறிதும் வருந்தேனீ.

45. ஊழி யூழி தோறுமிவ னுயர்பா லத்தின் பொறிவழியா
வீழு மனிதர் தமையிழந்து விரைந்து நடக்கும் வெள்ளமிருள்



வாழு முகில்வாய் மறைதலைநீ மகிழ்ந்து காண்டி யென்றுரைத்தா
னேழை யேனு மாணைவழி யேய்ந்து நோக்கி னேனப்பால்.

46. சித்த னென்கண் ணிணைவிளங்கச் சிறக்கும் பார்வை யருளினனோ
தத்து மலைகள் செறியுததி சாரு முகிலை விலக்கினனோ
நத்தி முனம்யா னுடியபுன் னுறு புலத்தின் புறத்தொருபே
ரத்தி யிலக வொருவயிர வடுக்க லத்தை யூடறுத்து.

47. இரண்டு பாலுஞ் சமனாக விடையிற் பிரித்த தாலின்னு
மிருண்ட முகிலோர் பாதிதனி லிறுத்த லானப் பாலறியேன்
றிரண்ட மற்றோர் பாதியிடைச் சிறிய தீவம் பலசெறிந்த
சுருண்ட வலைக ளுற்புறமுஞ் சுடர்வி டுத்துச் சூழ்ந்தனவால்.

48. அன்ன திடர்க ளிடையேபல லாரா மங்கண் மலர்பொதுளி
மின்னி நறிய மணம்பரப்பி மிளிர்ந்து நறையூ றியகனிக
ளன்னர் நிறைந்து நீரருவி நாப்ப ணிலங்க வயங்கினவெள்
ளன்ன முதலாம் பலபறவை யவற்றி னிடைவாழ்ந் திருந்தனவால்.

49. மன்ற னாறு பொழிலினிடை வயங்கு குயிலி னிசையமுதுந்
தென்ற லாலம் மரங்களிடைச் சிறக்கு மொலியுந் தேனருவி
குன்றி னின்று வீழொலியுங் குமரர் புனலாட் டொலியுமெழு
றுன்று மகளி ரிசையுஞ்செவித் துணைவாய்க்கேட்டு மகிழ்ந்தனனால்.

50. ஆண்டுப் பலர்பொன் னுடையுடுத் தணிந்து நறிய சாரகலம்
பூண்டு கலவை பூசிமலர் புனைந்து மரங்க ளிடையுலவி
நீண்ட வருவிக் கரையினிடை நின்று மிருந்தும் பாழ்ங்குழலில்
வேண்டு மிசைகள் பயின்றுமலர் விளங்கு மஞ்ச மிசைத் துயின்றும்.

51. இருந்த னோக்கி யெனதைய மின்ப வாரி யிடைமூழ்கி
யருத்தி யோடாங் கிருசிறைக ளடைந்தா லினைய மனங்கவருந்
தீர்த்த பொழில்க ளிடையேக றகுதி யாமே யெனநினைத்தேன்
சிரித்தச் சித்த னெனைநோக்கிச் செய்ய பவள வாய்திறந்து.

52. ஐய னேயென் பாலமைந்த வன்பி னோய்ம ரீசியெனும்
மெய்ய னேயிப் பாலமிசை விரவிக் கிடக்கும் பொறியாகும்
வெய்ய மரண வாயிலின்றி விளங்கு மினைய திடர்சேரச்
செய்ய வழிவே றில்லையென்று செப்பிப் பின்னுஞ் செப்புவனால்.

53. உன்ற னிணைக்கட் புலனுணரு மோங்கு முத்தி யளவுமெதிர்
துன்று பசிய புள்ளிகள்போற் றோன்று திடர்கள் வேலைவயி
னின்ற மணலின் றொகைதனினு நிரம்ப வதிக மாகினவா
யன்றி யுன்கண் ணறிவறியா வநந்தந் திடரப் பாலுளவால்.

54. இன்ன யாவுஞ் சான்றோர்க ளிருந்த பின்ன ரடைதருசீர்
மன்னு மாட மாளிகையா மற்று மவர்செய்ந் நல்வினையின்
பன்னு தரத்திற் கிணையாகப் பலவாய் வெவ்வே றுகவமைந்
தன்ன திடர்க ளவரவர்கட் கமைந்த வின்ப மளித்திடுமால்.

55. தன்னி லுறைவோர் தகைமைக்குந் தக்க வன்றோர் விருப்பினுக்கு
நன்ன ரியைந்து வேண்டுவன நாடு முன்ன ரளித்தவர்க்குப்
பன்னு மின்பம் பயந்திணைய பண்பு வாய்ந்த தீவமெலா
முன்னு முயர்வீ டெனவொளிர்த லுண்மை காண்டி யுத்தமனே.

56. ஈதின் னணமீண் டியலுறுமே லெழின்ம ரீசிப் பெயருடையாய்
வாதை பலயா மடையினுமிம் மாண்பு சேரு மிடம்பெறற்குக்
காதல் கொண்டு நலம்புரிவான் கடைப்பி டித்திம் பரின்மேவ
னீதி யன்றே பலகாலு நினைந்து நன்னர்த் தெளிந்திடுதி.

57. இனைய மறுமைப் பயன்பெறுதற் கிடன்சேர் மனித வாழ்க்கைமிக
வினையுந் துன்பம் பயப்பதென விகழ்தற் பால தோவியம்பா
யினிய சுகத்தை நணியுதவு மீடி னிலைமை யடைதரச்செய்
யனைய மரண மருவருப்போ டஞ்சற் பால தோவறைதி.

58. இனைய தாய நித்தியமா மிணையி லாத பேரின்ப
மனித னடைதல் சாலுமெனின் மற்றிவ் வாழ்வு பயனிலதோ
வினிதி ளுய்தி யென்றுரைத்தா ரென்னை யிங்ஙன் றெருட்டியவப்
புனித னுண்மைப் பொருள்விளக்கப் புகுந்த பொருவி லாவறிஞன்.

59. பகரன் முடியா வாநந்தம் பரித்த மனத்தி னேனனைய
நிகரி லின்பஞ் செறிதிடரை நின்று நோக்கி னேன்பின்னர்ப்
புகரி லோயப் பெருங்கடலிற் பொருந்து மெழில்சே ரொளிவைரச்
சிகரிக் கப்பா லுளமுகிலிற் செறிவ யாவை தெரித்தியென்றேன்.

60. அறிஞ னொன்றும் பகர்ந்திலனு லவனைப் பின்னு முசாவநினைந்
தெறியு மலைவா யிலங்குதிட ரெழிலைக் காண றவிர்ந்தருகி
லுறைமா தவன்றன் முகநோக்க வுவனை யாண்டுக் கண்டிலென்பின்
செறியு மின்பத் திடர்காணத் திரும வவையு மறைந்தனவால்.

61. பொங்கி யலைக ளூற்புறமும் புரண்டு வீசுங் கலுழியுமீத்
தங்கி யொளிரும் பாலமும்வான் றடவும் வயிரக் குன்றமுமோர்
பங்கி லின்பம் பயந்ததிடர் பலவு மறைந்து நீங்கவவ
ணெங்கும் யான்முன் கண்டபுலத் தெருது மாடு மியங்கினவால்.

62. என்று தான்மு னிணைவிழியா லிமையா தெதிர்காண் காட்சியினைத்
துன்று தவத்தோன் மரீசியெனுஞ் சுருதி நாவான் சொற்றபின
ரன்று பாங்க ரமர்ந்தவன்ற னமுத மொழிகேட் டகங்களித்தோர்
நன்று நன்றென் றவற்றொழுது நாடித் தத்த மிடம்பெயர்ந்தார்.

ந. பலராம ஐயர்.



# RADHARANI: A NOVEL.

# இராதாராணி.

## இரண்டாம் அத்தியாயம்.

இராதாராணி தாயார் பத்தியம மாத்திரம் வாங்கிக் கொண்டாள். ஆனால் ரோகத்தினின்று விடுபட அவள் கொடுத்துவைக்கவில்லை. அவள் மிகவும் பணக்காரியாயிருந்தாள். தற்காலம் மாத்திரம் ஏழையாய் விட்டதில் இவ்வித மனோதுக்கங்களையும் சரீர கஷ்டங்களையும் சகிக்க முடியாமற் போய் விட்டாள். நோய் விருத்தியாகி அவளுக்கு முடிவு காலம் நெருங்கிற்று.

இந்தச் சமயத்திற் சீமையிலிருந்து 'பிரிவி கௌன்ஸி'லில் அவள் பக்கம் தீர்ப்பானதாய்ச் செய்திவந்தது. ஆஸ்தியை யெல்லாம் அவளுக்குக் கொடுப்பதன்றிச் செலவான ரூபாய்களையும ஜாமீன ரூபாய்களையுங்கூடக் கொடுக்க வேண்டுமென்று 'டிக்ரி' நிஷ்கர்ஷையாயிற்று. காமாக்கியநாதன் 'ஹைகோர்ட்'டில் இவள் பக்கம் 'வக்கீ'லாயிருந்தவன் தானே அவள் குடிசைக்கு வந்து அவளுக்கு இந்தச் செய்தியைச் சொன்னான். அந்த வார்த்தையைக் கேட்டு நோயாளியின் கண்களினின்று அதிகமாய் நீர்த்தாரை பெருக வாரம்பித்தது.

அவள் சிறிது நேரத்திற் கெல்லாம் கண்களைத் துடைத்துக் கொண்டு காமாக்கிய நாதனைப்பார்த்து: "அணைந்துபோன தீபத்துக்கு எண்ணெய் வார்த்துப் பிரயோஜன மென்ன ? நீ சொல்லிய இச்செய்தியினால் என் பிராணன் நிற்கப்போகிறதில்லை. என் ஆயுள் முடியுங்காலம் வந்திருக்கிறது. ஆனால் இனி உணவில்லாமற் பிராணத்தியாகம் பண்ணவேண்டிய அவசரமில்லை என்னும் நிச்சயத்தினாற் சுகமடைந்தேன். ஆயினும் அதைக்கூட யார் அறிவார்? இராதை இன்னும் இளம்பெண். இந்தச் சகல சம்பத்தையும் அவள் நிமித்தமாய் யார காப்பாற்றிக் கொடுப்பார் ? நீயே ஆதாரம். உன்னை நம்பினேன். இந்த என் முடிவு காலத்தில் உன்னை ஒரு பிச்சை கேட்கிறேன். தயைசெய்துகொடு. உன்னை யன்றி வேறு யாரை வேண்டிக் கொள்வேன் ?" என்று சொன்னாள்.

காமாக்கியன் மிகவும் பெரிய மனுஷ்யன் அன்றியும் இராதாராணியின் பிதாவுக்குச்சுற்றத்தான். இராதாராணியின் தாய்கஷ்டஸ்திதிக்கு வந்ததுமுதல் அவளைப் 'பிரிவிகவுன்ஸி'லில் அபீல் முடிவாகும் வரையில் தன் வீட்டில் வந்திருக்கும் பக்ஷத்தில் தன்தாயாரைப்போல வைத்துக்கொண்டிருப்பதாக மிகவும் பிரார்த்தித்தான். இராதாராணியின் அன்னை அதற்குச் சம்மதிக்கவில்லை. காமாக்கியன் மாதத்துக்கேதாவது செலவுக்குகொடுக்கிறேன் அதை வாங்கிக்கொள் என்று சொன்னான் அதற்கவள் என்னிடம் கொஞ்சம் மீந்திருக்கின்றது, வேண்டும்போது வாங்கிக்கொள்ளுகிறேனென்று சாக்குச்சொன்னாள். அவன் சகாயத்தை அடைவதற்குச் சம்மதிக்கவில்லை. ருக்மிணீகுமாரன் செய்த தானத்தைப் பெற்றதுதான் முதன்மை. கடைசியாய்ப் பெற்ற தானமும் அதுவே. இராதாராணியின தாயார் இவ்வளவு கஷ்ட

தசையிலிருப்பது காமாக்கியனுக்குத் தெரியாது. இவர்கள் நிலைமையைக் கண்டு காமாக்கியன் மிகவும் துக்கித்தான். இராதாராணியின் தாய் தன் அந்தியகாலத்தில் வேண்டிக்கொண்டதைக்கேட்டு அவனுக்கு இன்னும் துக்கம் அதிகரித்தது. அதன்மீது அவன் இராதாராணியின் தாயாரைப்பார்த்து, "தாங்கள் உத்தரவு கொடுங்கள் நான் என்னசெய்யவேண்டும்? தங்கள் இஷ்டப்படி நிறைவேற்றுகின்றேன்" என்றான்.

இராதாராணியின் தாய், "நான்போகிறேன். இராதாராணி இருக்கிறாள். 'கோர்ட்'டில் எங்கள்மாமாவின் 'உயில்' ஆயத்தமாயிற்று, அவ்வாஸ்திக்கெல்லாம் இராதாராணி ஒருத்தியே அதிகாரியாவாள்; நீ அவளை உன்மகளைப்போற் பார்த்துக்கொள்ளவேண்டும். இதுதான் நான் பிரார்த்திக்கிறது. நீ இதற்குச் சம்மதித்து ஒப்புக்கொள்ளும்பக்ஷத்திற் சுகமாய் பிராணனை விடுவேன்" என்றாள். காமாக்கியன் "நான் பிரமாணமாய் இராதாராணியை என் மகளைவிட அதிகமாய்ப் பார்த்துக்கொள்ளுகிறேன். நான் இவ்வார்த்தையைத் திரிகரணசுத்தியாய்க் கூறுகிறேன். தாங்கள் இதனை நம்பவேண்டும்" என்றான்.

ஆயுள் முடிவை நெருங்கப்பெற்ற இராதாராணி தாயார் காமாக்கியன் கண்களில் நீர்ததும்பிப் பெருகுவதைப்பார்த்து அவன் பேச்சில் நம்பிக்கை கொண்டாள். அவளது மடிந்த உதட்டிற் களிப்பைக்குறிக்கும் சிரிப்புக் காணப்பட்டது. காமாக்கியன் அச்சிரிப்பைப் பார்த்து 'இனி இவள் பிழையாள்' என்றறிந்து கொண்டான்.

காமாக்கியன் அவளைப் பார்த்து, 'இப்பொழுதாவது தாங்கள் என் வீட்டுக்கு வந்து சிலநாளிருந்து தங்கள் வீடு 'கோர்ட்டு' மூலமாய் சுவாதீனமான பின்னர் அங்கே போகலாம்' என்று சாலவும் வேண்டிக்கொண்டான். இராதாராணி தாயாரின் அகங்காரம் வறுமையினால் உண்டானமையால் வறுமை நிலைமையில் அவனகத்துக்குப் போகச் சம்மதிக்கவில்லை. இப்பொழுது அவ்வறுமை போய் விட்டது; அவ்வகங்காரமும் போய் அவன் வீட்டிலிருக்க ஒப்புக்கொண்டாள். காமாக்கியன் இராதாராணியையும் அவள் தாயையும் தன் இல்லத்துக் கழைத்துக்கொண்டு சென்றான்.

அவன் அவளைத் தாயெனக்கருதிச் சிகிச்சை செய்தான். ரோகம் நிவர்த்தியாகவில்லை. சில நாட்களில் அவள் தெய்வகதி யடைந்தாள். காலக்கிரமத்திற்காமாக்கியன் இராதாராணியின் ஆஸ்தியை யெல்லாம் சுவாதீனம் செய்து கொடுத்தான். ஆனால் இராதாராணி இன்னும் சிறு பெண்ணாயிருந்தமையாற் காமாக்கியன் அவளைச் சொந்த வீட்டுக்குத் தனிமையாய் அனுப்பிப்பதற்கு மனது வராமல் தன் வீட்டிலேயே வைத்துக்கொண்டிருந்தான். 'கலெக்டர்' துரையே அவள் ஆஸ்தியைக் 'கோர்ட் ஆவ் உவார்ட்ஸ்' சுவாதீனம் செய்துகொள்வதற்கு முயன்றார். காமாக்கியன் தான் இராதாராணியினிமித்தம் அவள் ஆஸ்தியைக் காப்பாற்றுவது போல் சர்க்கார் உத்தியோகஸ்தர்கள் காப்பாற்றார்கள் என யோசித்து, இவ்விஷயத்தைப் பற்றி வாதித்ததன்மேற் 'கலெக்டர்' சும்மாவிருந்தார். காமாக்கியன் தானே இராதாராணி ஆஸ்தியின் விசாரணை செய்துகொண்டிருந்தான். இனி ஆக வேண்டியது இராதாராணி விவாகம்; ஆனாற் காமாக்கியன் நவீன சீர்திருத்தக் காரனானமையாற் பாலிய விவாகம் செய்வதற்கு அவன் இஷ்டப்படவில்லை. சீக்கிரமாய்க் கல்லியாணம் செய்யாத பட்சத்தில் ஜாதிப்பிரஷ்டம்



செய்து விடுவார்களென்னும் பயமுமில்லை; தன் மகளுமல்லள். 'இராதாராணி இஷ்டம் வந்த பொழுது தானே கல்லியாணம் பண்ணிக்கொள்ளட்டும், அது வரையில் வாசித்துக் கொண்டிருக்கட்டும்' என்று அந்த விவாக விஷயத்தில் யாதொரு பிரயத்தனமும் செய்யாமல் அவளுக்குச் சரியாய்ப்படிக்கவும் எழுதவும் கற்பித்து வந்தான்.

இரண்டாம் அத்தியாயம் முற்றிற்று.

தி. அ. ஸ்வாமிநாத ஐயர்.

---

## CURTAIN LECTURES.

## பள்ளியறைப் பிரசங்கம்.

### Second Night-இரண்டாமிரவு.

**இராமசுப்பஐயர் தம் நண்பர் கிருஷ்ணசாஸ்திரியாருடன் நாடகம் பார்க்கப்போய் இரவில் ஒரு மணிக்குமேல் வீட்டுக்கு வந்தார்.**

"இப்படி யார்தான் கஷ்டப்படுவார்களோ தெரியவில்லை! இவ்வளவு துன்பப்படவேண்டுமென்று தெரிந்திருந்தால் உமக்கு ஒருத்தியும் வாழ்க்கைப்பட்டிருக்க மாட்டாள். பெண்ணாய்ப் பிறந்தால் வெளியே போகாமல் அடுப்பங்கரையில் உட்கார்ந்து உழைக்கவேண்டும். புருஷர்கள் மாத்திரம் தங்கள் மனம் போனபடி யெல்லாம் தெருத்தெருவாய்த் திரியவும், கூத்துப் பார்க்கவும், சீட்டாடவும் போகலாம். இது என்ன நியாயமோ? தெரியவில்லை. நீர் சீட்டாடுவதில்லையா? அது எனக்கெப்படித் தெரியும்? நீர் ஆடினாலென்னவோ, அது நான் வாழ்ந்தது போல்தான் இருக்கும்.

"சரி! இன்னும் நித்தியமும் இந்த இழவுதான். ஏதோ போனாற் போகட்டும் என்று இன்றைக்கு விழித்துக் கொண்டிருந்தேன். நாளைமுதல் விழித்துக்கொண்டிருப்பேன் என்று நினைக்கிறீரோ? அந்த யோசனை உமக்கு வேண்டியதே யில்லை. வேலைக்காரி உமக்காக எழுந்திருப்பாளோ? பார்ப்போம்! நாளைமுதல் அவளை இங்குப் படுத்துக்கொள்ள வேண்டாமென்று சொல்லி விடுகிறேன். கதவை வெளிப்புறம் பூட்டிக்கொண்டு போகிறீரா? சரிதான், நாங்கள் பிழைத்திருப்பது உமக்கிஷ்டமில்லை! எனக்கென்ன! நீர் என்ன வேண்டுமென்றாலும் செய்யும். நான் என்னவோ கதவைத் திறப்பதில்லை. என் பிராணன் போனாலும் சரி. ஊரெல்லாம் திருடர் பயம் அதிகமாயிருக்கிறது. நீர் இப்படித் தினமும் நாடகம் பார்க்கப்போம். எங்களை யாராவது வந்து அடித்துவிட்டு வீட்டிலிருப்பதை யெல்லாம் எடுத்துக்கொண்டு போகட்டும். அப்படியானால் தான் உமக்குப் புத்தி வரும். எனக்கென்ன தலையெழுத்தா அடிபட வேண்டுமென்று? இராத்திரி ஒன்பது மணிக்குள் நீர் வீட்டுக்கு வாராவிட்டாற் பிள்ளைகளை யழைத்துக்கொண்டு என் தாயார் வீட்டுக்குப் போய்விடுகின்றேன்.

"இனிமேற் சீக்கிரம் வந்துவிடுகிறீரா? உமக்கென்ன? அழுகிற பிள்ளைக்கு வாழைப்பழம் காட்டுவதுபோல் இப்பொழுது சொல்லிவிடுகிறீர். நாளை என்னசெய்யப் போகிறீரோ? எனக்கெப்படித்தெரியும்? உமக்குத்தான் தகுந்த சிநேகிதர்கள் அகப்பட்டிருக்கிறார்கள். அவர்களோடு சேர்ந்தால் உமக்கு மனையாள், மக்கள் என்னும் ஞாபகமே யற்றுப்போய் விடுகின்றதே! நாளைக்காலை,—என் நாளை?—இன்றைக் காலைதான் — இப்பொழுது தான் பொழுதுவிடியப் போகிறதே! காலையி லெழுந்ததும் தலைவலியென்று சொல்லுவீர். அப்புறம் காய்ச்சல்வரும், மருந்து வாங்கவேண்டும் என்பீர், வைத்தியனை அழைத்துவரவேண்டு மென்பீர், பத்தியத்திற்கு முருங்கைக்காய் வாங்கவேண்டு மென்பீர். நான் என்னவோ ஒன்றும் வாங்கப்போகிறதில்லை. ஏன்? தெருவிலிருப்பவ ரெல்லாரும் இராமசுப்ப ஐயர் கூத்துப்பார்க்கப் போயிருந்தார். தலைவலியும் காய்ச்சலும் வந்துவிட்டதென்று இகழ்வதற்கா?

"உமக்குக் காய்ச்சல்வராதா? வராவிட்டால் நல்லது தான். வந்தால் உமக்கு வேண்டியன வெல்லாம் நீரே வாங்கிவரவேண்டும். தலை நன்றாய் வலிக்கவேண்டும். அப்பொழுதுதான் எனக்குச் சந்தோஷமாயிருக்கும். இன்றைக்கு ஒருமணியாயிற்று, நாளை இரண்டுமணியாகும், அப்புறம் இரவெல்லாம் வீட்டிற்கு வரமாட்டீர். குடும்பம் சீக்கிரம் விடிந்தாற் போல் தான், என்ன சொன்னீர்? பைத்தியம் பிடித்தாற்போற் பேசுகிறேனா? உமக்குப் பைத்தியமோ? எனக்கோ? ஆம்! எனக்குத்தான் பைத்தியம். ஒருமணி வரையில் விழித்திருந்து கதவைத்திறந்தேனே! எனக்குப் பைத்தியம் பிடித்துத் தான் விழித்துக்கொண்டிருந்தேன்.

"இன்றைக்கு எவ்வளவு இரண்டு ரூபாய் செலவாயிற்றோ கூத்துப் பார்த்ததற்கு? நீர் ஒன்றும் கொடுக்கவில்லையா? ஏன்? உங்கள் சிற்றப்பன் மகனோ கூத்தாடியவன் யார்? கிருஷ்ண சாஸ்திரியார் கொடுத்தாரா? சரிதான்! நீங்கள் உருப்பட்டாற் போல்தான! கிருஷ்ண சாஸ்திரிகள் சகவாசம் அகப்பட்டதா? இருக்கட்டும். தான் கெட்டது போதாமல் உம்மையுங் கெடுக்கத் தலைப்பட்டானா அந்தப்பாவி? இன்றைக்கு உமக்குக் கொடுத்துக் காட்டினானோ நீரும் இப்படியே கொடுக்கவேண்டு மென்று? பெட்டியையும் நகைகளையும் என் தாயிடம் கொடுத்துவிடுகின்றேன். ஏன்? கிருஷ்ண சாஸ்திரிகள் மனையாளுக்கானகதி எனக்கும் ஆவதற்கா? போய்ப்பாரும் வேண்டுமானால் அவளை. கழுத்தில், பாவம், மாங்கலியம் ஒன்றுதான் இருக்கிறது. அவள்தான், பாவம், வாயில்லாப்பூச்சி, நானும் அப்படியே யிருப்பேனென்று நினைக்கவேண்டாம். மக்கள்மீது உமக்கில்லாவிட்டாலும் எனக்குக் கொஞ்சம் அபிமானம் இருக்கிறது.

"அந்தப் பாதகன் கிருஷ்ண சாஸ்திரி இன்றைக்கு உமக்குக் கொடுத்தான். நாளை ஒன்றுக் கிரண்டாய் உம்மிடத்தில் வாங்கப்போகிறான். அவன் மாத்திரமா? அவனுடைய நண்பர் எல்லாருக்கும் நீர் கொடுக்கவேண்டி வரும். சம்பாதிப்ப தெல்லாம் இப்படிக் கூத்திற்குக் கொடுத்துவந்தால் வேறுவினை வேண்டியதில்லை. இருப்ப தெல்லாம் இப்படிப் போக்கடித்துக் கொண்டால் நம் மக்கள் எப்படித் தலையெடுப்பார்கள்? உம்முடைய பெயரைச் சொல்வதற்கும் அவமானமா யிருக்குமன்றோ? அவர்கள் பொருட்டாயினும் கூத்திற்குப் போவதை நிறுத்தமாட்டீரா?......"



இங்ஙனம் பிரசங்கித்துக் கொண்டிருக்குங்காற் கனகம்மாவுக்கு நித்திராதேவி பிரசன்னமாய்விட்டாள்.

"கிரு—ஷ்—ண" என்றான் சாஸ்திரி யென்னுஞ் சொல் உள்ளேயே நின்று விட்டது.

ஜக்கராஜு ப. வாசுதேவைய பந்துலு.

---

# CORRESPONDENCE.

## கடிதம்.

### தமிழுலகர்க்காத் தந்த விண்ணப்பம்.

பிரமஸ்ரீ சூரிய நாராயண சாஸ்திரிகளாகிய பரிதிமாற்கலைஞரவர்கட்குத் தமிழுலகோர் பொருட்டுத் தந்த விண்ணப்பம்:

சென்ற ஞானபோதினிச்சஞ்சிகைகளுளொன்றில் தாங்கள் அறு என்ற நாலுவைக் கொண்டாய்ந்த பகுபத முடிவுகளைக் கண்டு ஆநந்தங் கொள்ளார் சிலரேயாவர். அறம், குதிரை, நிலம் முதலியன பகாப்பதங்களெனச் சிவஞான முனிவரே கூறினுமென்னை? நங்கோயைப் பெரிய சந்திரசேகரம்பிள்ளை யவர்களிடம் அவர்கள் முடித்து வைத்திருக்கும் காரணப் பதமுடிவுகளை நோக்கிக் காலஞ்சென்ற மகா வித்துவான் தாமோதரம்பிள்ளை யவர்கள் சித்தாந்தத்தினையே தங்கருத்துங் காலமுமெலாமூன்றிச்செலுத்திய அம்மாபாடிய முடையார்கூற்று இவ்விடயத்திற் கூற்றேயா மென்றனர். புதா நாவலர்களுளரேனும் அவர் தஞ்செய்கைகண்டு மறுபடிற் றுமஞ்சலேனோ?

"கோக்கண்டு மன்னர் குரைகடற் புக்கிலர் கோகநகப்
பூக்கண்டு கொட்டியும் பூவாதொழிந்தில பூதலமேற்
காக்கின்ற மன்ன கவியொட்டக் கூத்தனின் கட்டுரையாம்
பாக்கண் டொளிப்பர்க ளோதமிழ்ப் பாடிய பாவலரே"

என்ற தூக்குத் தூக்கற்பாலதே. தாதுக்களைக் கொண்டு பதமுடிபு கண்டு "முடித்தற்கரிய வென்பாரு முளர்; முடிப்பான் பக்கம் வலியுடைத்து" எனவுரையாசிரியர் பெருந்தேவனார் கூறியுள்ளாரன்றே? இவரும் முதைநுனிமதிகொடு பிரிக்கவகையறியாரே, அங்ஙனம் அரியவெனக் கூறியவரென்ப. தங்கை செல்வியங்களியிற் பேசுதரும். இதனிற்க, ஜாவபாஷையினைக் கற்றுத் தேர்ந்து பட்டம்பெற்று வடமொழிப் பயிற்சியுங் கொண்டீர்ந்த தாங்கள் ஆங்கிலத்தாரியற்றி யெழுதுவெழுத் தேற்றிய நன்முறைக வொப்புவே தாதுபதார்த்த விளக்க வகராதி யொன்றியற்றி வெளிப்படுத்தல் சாலவுமம் நீடூழி பெயர் நின்று நிலவுதற் கேதுவுமாம். அங்ஙனஞ் செய்தல், பட்டாசாரியர் மோக்சமூலர் முதலியோ ரியற்றியனவும், இலிங்க பட்டீயமும், சிலப்பதிகாராதிகளிற் பகுதிப் பொருளுரையெடுத்தோதப்பட்டனவும், வீரசோழியத் தன்கணே தெரிக்கப்பட்டனவும், தொல்காப்பியத்துற்றனவும்,

"விளக்கப் படுதலான் விளக்கெனப் படுமே"
"ஆழ முடையதா ழெனப்படும்"
"அவாவற வனித்தலா னறமெனப் படுமே"
"பயன் விருதி யெய்தும் பின்னைக்கே"

எனலாதியவாப் பேரகத்தியமென வழங்குமதுவும், அறுவகை யிலக்கணம் ஏழாமிலக்கணம் என்னுமவையும், மேலும் பலவற்றொடு நொளது காறுஞ் சென்னையாதிய தலங்களினின்றும் பல்வகைப் பரீக்ஷைகட்குப் பற்பல பண்டிதர்கள் வெளியிட்ட வுரைக்கணமும், ஆறுமுக நாவலரவர்கள் சௌந்தர நாயகம்பிள்ளை யவர்களாதியோர் அச்சிட்ட விலக்கணங்களிற் காணும் பூருபத முடிபுகளும், வேறும் பல்வேறு வகையினுற்ற வகையுங் கண்டோர்ந்தாய்ந்த தமக்கு மிகக் சுலபமாம். ஈழேகாட்டிய எம்மூர்ப் பெரிய சந்திரசேகரம்பிள்ளை யவர்கண் முடித்து வைத்திருக்கும் பகுபத விளக்கமாஞ் சொற்பொருளாய்ச்சியும் கண்ட சாமோதரம்பிள்ளை யவர்கள் ஐயரொருவரோடு சேர்ந்து முடித்து வைத்திருப்பதாயும் எமக்கெழுதிய கடிதங்கள் சிலவற்று ளொன்றின் அச்சிடுவதாக விரும்பின் எமக்கனுப்புவதாக வாக்களித்திருந்த அச்சொற் பொருளாராய்ச்சி முடிவும், யாழ்ப்பாணத்துப் பண்டித ரொருவர் தாதுப்பொருட் காரணங்காட்டி அச்சேற்றி யிருக்கும் சூடாமணி நிகண்டும் பெற்றுக்கோடல் நெடுநாட் சிரமத்திடைப்படுத்தாது விரைவின் வெளிப்படுச்சற்கா முதவியாமன்றோ? இன்னம் தமது ஞாபகக் களஞ்சியத் தூற்றவும் யோசிக்க வுடன் வெளியாமவையுஞ் சேர்ந்தாமல்லோ மெனல் குறையன்றே. வேண்டுற்ற இத்தகையதோரகராதி சௌகரியமுற்ற சம்போஷியரா னன்றே வெளிவந்து நிலவவேண்டுவது? இம்முயற்சியிற் பிரவேசித்து ஊக்கமுடன் சம்பூர்ணமாக்கிப் புத்தக ரூபமாய் வெளிப்படுத்தற்குத் தக்க பல வநுகூலங்களையும் எம்பெருமான் கிருபை பாலிக்குக தமக்கென வன்றேன் திருவருளை யிரந்து பிரார்த்திக்கின்றேம்.

சி. வீரா. சாமிநாத பிள்ளை.

## REVIEWS OF BOOKS.
## புத்தகக் குறிப்புக்கள்.

### திருவிளையாடற்புராண சங்கிரகம் :

[இது அ. வேணுவனலிங்கம்பிள்ளையவர்கள் பாளையங்கோட்டை ஸி. எம். எஸ். அச்சுக்கூடத்திற் பதிப்பித்தது. இதன் விலை தபாற்கூலி யுள்பட அணா 5.]

இருநூற்று நாற்பது பாடல்களானியன்ற இச்செய்யுணூல் பரஞ்சோதி முனிவர் இயற்றியருளிய திருவிளையாடற் புராணத்தின் சாரச்சுருக்கமாம்; மகா-ள-ள-ஸ்ரீ, வே. ஷண்முகம் பிள்ளையவர்கள் இயற்றியது; ஸ்ரீலஸ்ரீ வள்ளிநாயக சுவாமிகள் எழுதிய நூன்முகமுடையது; பல வித்வான்களாலும் சிறப்பித் துரைக்கப்பெற்றது. இதன்கட் கடவுள் வாழ்த்துமுதல் மூர்த்தி விசேட மீறாகியாகவுள்ள 15 பாடலும் நால்வகையாப்பு விகற்பங்களானியன்றன; பற்று நூன்முழுதும் ஒரே வகையான வெண்சீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தத்தானியன்றுளது. இவ்வாறன்றி யிடையிடையே வெவ்வேறு வகையான யாப்பு விகற்பங்கள் விரவி வந்திருப்பின் மிக்க இன்பம் பயக்குமென்பது எமது துணிபு. இனி இது நிற்க, நூன்முழுதும் பத்திச் சுவையுடைத்தாமாறு நூலைப்படித்துக் காணத்தக்கது. திருவிளையாடற் புராணத்தின்கட் கூறப்பட்ட விடயங்களுளொன்றும் விடப்பெறுது யாவும்



அடங்குமாறு செறித்துக் கூறப்பட்டுள தன்மை மிகவும் பாராட்டற்குரியதே. செய்யுட்களெல்லாம் ஓசையின்பங் கெடாமல் மிக்க செவ்விவாய்ந்து செல்லுகின்றன. புத்தகத்தினிறுதியில் 'திருவருள் வியப்பு' என்று தலைக் குறியிட்டுக்கூறிய 10 பாடல்களும் மிக்க அழகும் இனிமையும் வாய்ந்தனவாம். ஈற்றில் அச்சிடப்பட்டுள திருவிளையாடல் அட்டவணையும் பாண்டிய ராஜர்களின் நாமாவளியும் மிகப்பயன்படற்பாலன. நல்ல பளப்பளப்புள்ள கடிதத்திற் பெரிய எழுத்துக்களில் யாவரும் விரும்பத்தக்கவாறு இந்நூல் பிரசுரிக்கப்பட்டுளது.

### பரிதுலை : ஓர் உழவன் மகள் :

[இது சென்னைச் சடகோபாசாரியர் அண்டு கம்பெனியார் வெ. நா. ஜுபிலி அச்சுக்கூடத்தில் அச்சிட்டு வெளிப்படுத்தியது; விலை அணா 8. தபாற் கூலி வேறு.]

இந்நூல் 'வித்தியாரண்ய நகரம்' என்ற நூலும் 'நன்றியறியா மகன்' என்ற நூலும் இயற்றியவராகிய மகா-ள-ள-ஸ்ரீ து. ரா. ஸ்ரீநிவாஸஐயங்கார், பி. ஏ., இயற்றியதோர் சரித்திர விநோத கதை; துங்கபத்திரா நதீதீரத்தில் ஸ்தாபிக்கப்பட்டிருந்த விஜயநகர ராஜ்யத்தைப்பற்றியது. இதில் வருணிப்பதற்கென எடுத்துக்கொண்ட கட்டங்கள் யாவும் நல்லனவே; அவற்றுட் சில மிக்க அழகுபெறப் புனைந்து காட்டப்பட்டுள. ஆதிமுதல் அந்தம்வரை, கதை யினிமைபெற அமைந்துளது. இதன்கண்ணே தலைவியாகிய பரிதுலையின் குணப்புனைவு மிகவும் நன்றாயிருக்கின்றது; யாவருள்ளத்தையுங் கவரத்தக்கது. இவ்வசனநூல் யாவருக்கும் பொருள் விளங்கத்தக்க தெளிவான தமிழ் நடையில் எழுதப்பட்டுளது; எனினும் இறுதி 20 பக்கங்களினும் எழுத்துப்பிழைகள் அதிகமாயிருக்கின்றன. அவை அவசரப்பட்டு அச்சிட்டமையான் நேர்ந்தனபோலும்; மறுபதிப்பிலாயினும் அவற்றைக் களைந்து விடல்வேண்டும்.

### நூதன வாசக புத்தகங்கள் :

[இவை லண்டன் நியூயார்க் முதலிய இடங்களிலுள்ள லாங்குமன்ஸ் கிரீன் புத்தகச் சங்கத்தார் பதிப்பித்தன; சென்னை அட்கின்ஸன் கம்பெனியாரிடத்திலகப்படும். விலை: முதல் வகுப்புப் புத்தகம்-3 அணா; இரண்டாம் வகுப்புப் புத்தகம்-3 அணா; மூன்றாம் வகுப்புப் புத்தகம் 3½-அணா; நான்காம் வகுப்புப் புத்தகம் 4½-அணா. இவை யனைத்திற்குந் தபாற்கூலி வேறு.]

இந்த நூதன வாசகபுத்தகங்கள் தமிழ் கற்கும் முதல் நான்கு வகுப்பு மாணுக்கர்கட்கும் உபயோகபபடக் கூடியவணணம் எழுதபபட்டுள. இந் நான்கு புத்தகங்களுள் முதலிரண்டு வகுப்புப் புத்தகங்களைப்பற்றி முன்னரே நமது பத்திரிகையில் இரண்டு வெவ்வேறு சஞ்சிகைகளில் விரித்தெழுதியிருக்கின்றோம்; ஆதலின அவ்விரண்டுமொழிந்த ஏனைய இரண்டு வகுபபுப் புத்தகங்களையும பற்றிக் கூறுகின்றோம். முதற்கண் நமது லாங்குமன்ஸ் சங்கத்தார் பதிப்புக்களெல்லாம் எப்பொழுதும் கண்கவர் வனப்பினவாம்; நல்ல பளபளப்புளள கடிதத்திற் பெரிய எழுத்துக்களில் அவைகள் அச்சிடப்பட்டிருக்குந்தன்மை படிக்கும மாணுக்கர்கட்குப் பேருக்கத்தை விளைக்குமெனபதன்கண் ஐயப்பாடே யில்லை. நல்லுடை யில்லாரை ஞாலம் மதியாதன்றே! மற்று நூல்களுட் கூறப்பட்ட விஷயங்கள் யாவும் குறித்தவகுப்பு

மாணாக்கர் திறத்திற்கேற்றனவே ; விஷயங்களும் பல்வேறு வகையினவாய் மாணாக்கர்க்குச் சுவை விளைக்கத்தக்கன ; ஆங்காங்குக் காணப்படுஞ் சித்திரப் படங்களும் மிக்கசெவ்வியவாயிருந்தன. விஷயக்கிரமம் கருதியே நூல்களிற் பாடங்களின் வைப்புமுறை யேற்பட்டுளதேயன்றிச் சொற்கடுமை யானும் நடையின்மையாதல் கருதியன்று. இஃது உற்றுநோக்குவோர் யாவர்க்குந் தெற்றெனப் புலனும். மாணாக்கர்கள் பாஷை நூல்கள் கற்பது விஷய வுணர்ச்சிப் பயனோடு பாஷாஞானப்பயனுங் கருதியேயாம். ஆதலின் முற்பட்டுப்போந்த பாடங்களினும் பிற்படப் போதரும் பாடங்கள் சொல்லமைதி, நடையமைதிகளினும் முதிர்ந்துகொண்டே செல்லுதல் வேண்டும். இக்கருத்து யாவருக்கும் ஒப்ப முடிந்ததே. இவ்வாறே மூன்றும் வகுப்புப் புத்தகத்தின் நடைக்கும் நான்காம் வகுப்புப் புத்தகத்தின் நடைக்கும் வேறுபாடு மிகவுங் காணப்படவேயில்லை. இவ்வொரு குறையும் நீக்கப்படுமாயின் பொன்மலர் நாற்றமுடைத்தாதல் போலும். மேலும் சென்னைப் பள்ளிக்கூடப் பாடபுத்தக நியமன சபையாரால் இந்நூல்களனைத்தும் அங்கீகரிக்கப் பட்டுள வென்பதே இவை மிகச்சிறந்தன வெனபதற்குப் போதிய சான்றாம். இது நிற்க. நமது பள்ளிக்கூடங்களில் இவ்வாசக புத்தகங்கள் பாடமாக வைக்கப்படுமென நம்புகின்றோம்.

---

## EDITORIAL NOTES.
## பத்திராதிபர் குறிப்புக்கள்.

---

**கற்றறிமூடர்** :—உலகத்தில் எந்த மூலையிலே கொண்டுபோய் வைத்தாலும், அங்கேயுந்தன்னைச் சுற்றியிருக்கின்ற நிலைமைகளனைத்தையும் உள்ளவாறே யறிந்து, ஆண்டுள்ளார் யாவர்க்கும் ஒப்பப்பயனபட்டு மேதக்க மனிதனென்று எத்தகையோருங் கொண்டாடத்தக்கவாறு ஒழுக வல்லோனே கற்றறிந்தவனெனப்படுவான். இதுவே கல்வியின் மெய்ப்பொருள், இதுவே யதன் மெய்ப்பயன். இதற்கென்றே அது பெரியோர்களான் ஏற்பட்டதுமென்க. பிறபாஷையறி வுணர்ச்சியும், இறந்த காலத்தில் நிகழ்ந்த விஷய ஞானமும், பயனற்ற விஷயங்களுட் பலவற்றை மூளையுட் புகுத்துதலும் கல்வியின்பாற்படா. இவற்றினகண் தலையிட்டுழலுவோர் கற்றறிமூடர்களே யல்லரோ?

**தன்னைத்தானறிதல்** :—ஒவ்வொருவனுந் தன்னைத்தானுணர்தலெவ்வாறு? என்றுஞ் சிந்தனையாலன்று, செய்கையாலேயே. தன்றன் கடமையைச்செய்ய முயன்றால், ஒவ்வொருவனும் உடனே தனனைப்பற்றிய மெய்ம் மதிப்புடையனாய்த் தன்னைத்தானறிவான். அங்ஙனம் அவ்வகடமை செய்தற்கண் உண்மையும் விடாமுயற்சியு முடையோனாகுக; உயர்நிலையாளர் தன்மாட்டு அருள்கூரத் தக்கவாறும், வல்லாளர் தன்மீது அன்பு வைக்கத் தக்கவாறும், நற்குறியுளாளர் தனக்கு உதவி செய்யத்தக்கவாறும் புலவர் தன்னைப் பக்ஷமாய் நடத்தத் தக்கவாறும், பிறர் ஒவ்வொருவருந் தன்மீது அன்புபாராட்டத் தக்கவாறும ஒழுகுதல் வேண்டும். இதுவே கடமை செய்தற்கண் யாவருங் கவனிக்கவேண்டியது. வாய் மட்டுமே புன்னகையுடன் வாசித்தலியலாது ; அதனோடு விரலியக்கமுஞ் சேர்தல் வேண்டும்.



தன்னது ஆற்றல்களையறிந்து அவற்றை மிதமாக முன்னுணர்ச்சியோடு உபயோகிக்கும் வல்லமையுடையானே உலக வாழ்க்கையில் தான் மேற்கொண்ட கடமைகளைக் கடைக்கூட்டி முடிப்பான். அங்ஙனம் முடிப்போனே தன்னைத்தானுர்ந்தோன்.

**மெய்யுணர்ச்சி வேட்கை** :—ஒருவன் ஒவ்வொரு பொருளினுமுள்ள தன்மையாவதிஃதெனக்கண்டு அதனை மதிக்குமிடத்தேயே அவனது மெய்யுணர்ச்சி வேட்கை வெளியாகின்றது. ஒவ்வொருவனுந் தனது கொள்கைகளை வெளியிடுமிடத்து விதிமுகத்தான் அவற்றை வெளிப்படையாக விளங்கக் கூறுதல் வேண்டும்; மற்று மறைமுகத்தாற் றமது கொள்கைகளைக் குறிப்பாகப் பிறர் ஐயுறத்தக்கவாறு கூறுவார் பலருளர். இவ்வாறன்றி விளங்கக்கூறுவோரே மெய்யுணர்ச்சி வேட்கையுடையாரென்க. பேறிலாளர்க்கு இன்றியமையாதது மெய்யுணர்ச்சி வேட்கையேயாம்.

**தம்வயமுடைமை** :—தம்மைத் தாம் அடக்கியாள முடியாதவாறு தமதுள்ளத்தைத் தன்வயப்படுத்த வல்லதெதுவும் அழிவுபயக்கற்பாலதாதலின் அதற்கிடங்கொடுத்தலாகாதென்க. "தன்னைத்தா னெஞ்சங் கரியாகத் தானடங்கிற், பின்னைத்தா னெய்தாப் பயனில்லை—தன்னைக், குடிகெடுக்கு நெஞ்சிற்குக் குற்றேவல் செய்யிற், பிடிபடுக்கப் பட்ட களிறு" என்ற அறநெறிச்சாரமுடையார் கூற்று நம்மவர் யாவருஞ் சிந்தனை செய்யற்பாலதன்றோ?

**உயிருடையார்** :—பிறரிடத்து அன்பு பாராட்டுதலிற் களிப்பவரே யுயிருடையார்; மற்று அன்பு பாராட்டாதோரும், வேண்டா வெறுப்புடன் பாராட்டுவோரும், பிறர் பாராட்டுழித் தாங் கண்டு களியாதோரும் முதலாயினார் உயிருடையாராயினும் உயிரிலாரே.

**பக்தி வஞ்சகர்** :—பக்தி ஒரு கருவியாமேயன்றித் தானே யொரு பயனுதலில்லை ; பக்தியால் ஆன்மாவின்கண் தூயவமைதி தோன்றும் ; அது பேரறிவுடைமைக்குப் பெருங்கருவியாம்; ஆதலிற் பக்தியே யொரு தனிப் பெரும்பயனாகக் கொண்டு நடிக்குநருட் பெரும்பாலோர் வஞ்சகரென்றே கோடல் வேண்டும். இத்தகையார்க்குப் 'பக்தி வஞ்சகர்' என்று பெயரிடலாம்.

**சிறந்த நல்லதிர்ஷ்டம்** :—ஒருவனுக்கு நல்லதிர்ஷ்டமானவற்றினுஞ் சிறந்தது அவன் தனது குறைகள் யாவும் நிரமபப்பெற்றுக் குற்றங்களெல்லாங் களையப்பெறுதலாம். ஆகவே பிறர் தனது குற்றங்குறைகளையெடுத்துக் காட்டியவழி, அங்ஙனஞ் செய்தமை பற்றி அவர் பால் சினந்து கூறுதலொழிந்து இயல்பு திரிந்து ஒருவன் பிறிதுபட வொழுகுவானாயின், அவனை யறிவுடையோர் பித்தனென்றெள்ளுவாரே யன்றி வேறன்று.

**ஜாதிபேதம்** :—நமது இந்தியாவின்கண்ணே ஜாதி பேதங்களிருத்தலாற் பல கேடுகளுந் தீங்குகளும் விளைகின்றனவென்பதும், அப்பேதங்கள் யாவும் நியாய விருத்தமென்பதும், அவை கடிதிற் களையப்படல்வேண்டுமென்பதும் நம்மவருட் படித்தவர் பலருக்குமுற்ற கொள்கைகளாம். அன்னார் கொள்கைகளை வலியுறுத்துவான் 'இந்துஜன சமூகச் சீர்திருத்தக்காரன்' என்னும் ஆங்கிலப் பத்திரிகை சில காரணங்கள் காட்டுகின்றது. அவையாவன :—(1) மக்களெல்லாரும் சகோதரரென வாழல்வேண்டுமென்ற கட்டளை விதியொடு மாறுபடுதல் (2) மக்களெவ்வார் நமக்குள்ளே ஒழுகவேண்டிய நீதி

முறைமையோ டொவ்வாமை (3) ஒற்றுமை நீங்கியுட்கலகங்கள் பல உண்டாதல் (4) தன்னலநாட்டம் மேலிட்டு வியாபகவுணர்ச்சி குன்றிப் பிறர் மாட்டு அநுதாபங் குறைதல் (5) நாட்டிலுள்ளாரனைவரையு மொருங்கு கூட்டி யொரே வகுப்பினராய் ஒத்துவாழலைத் தடுத்தல் (6) தீயவழக்கங்கள் பல கிளைத்தோங்கி மக்களின் உடல் வன்மையைக் குறைத்தல் (7) திமிர்வாதம் பாரிசவாயுமுதலிய நோய்கட்கு ஆளாயினார்போல, நம்மவரது உள்ளத் திறற்றல்கட்கு இயக்கமில்லாதவாறு அவற்றை யடக்கி, அவர்களை விலங்கனையராக்குதல் (8) நாமனைவரும் ஒருமைப்பாடிழந்து என்றென்றும் புறத்தேயத்தினராளுகைக் கீழிருந்து அன்னார் குடிச்சனங்களாயினமை முதலியனவாம். இக்காரணங்களனைத்தையும் நம்மவராவார் சீர்தூக்கி யாராய்ந்து நல்வழிநாடி யொழுகுவாராக.

**இராமநாதபுரம் மகாராணியார் பெண் பாடசாலை** :—இப்பெயருள்ளதோர் பெண்பாடசாலை மதுரைமாநகரத்தின் கண்ணே இராமநாதபுரம் சேதுபதியவர்களின் பட்ட மகிஷியாரால் ஏற்படுத்தப்பட்டு நடந்து வருகின்ற தென்பதைப் பற்றிப் பத்திரிகைககளிற் படித்துக் களிப்படைந்தோம். இப்பாடசாலையிற் படிக்கும் பெண் பிள்ளைகளின் தொகை வரவர மிகுந்து கொண்டே வந்து எடுத்த முயற்சி கைகூடிற்றென்று சொல்லத் தக்கவாறு இப்பள்ளிக்கூடம் ஓங்கிச்சிறப்பதாக. இறுதியில் இஃது ஒரு பெரிய பெண்டிர் கலாசாலையாகவும் பரிணமித்து விளங்கும்படி இறைவன் திருவருள் புரிவாராக.

**பஞ்சம்** :—முன்னினும் இப்போது பஞ்சக்கொடுமை குறைந்து வருகிறதாகச் சில பத்திரிகைகள் கூறுகின்றன. துரைத்தனத்தார் ஏற்படுத்தியிருக்குங் கஞ்சித்தொட்டிகட்கு உணவினிமித்தம் வருவார் தொகை வர்வரக் குறைந்துக்கொண்டே வருகிறதெனக் கேட்டுக் களிப்படைகின்றோம்; எனினும் இவ்வாறு தொகை குறைவது பஞ்சத்தொலைவிற்குற்ற அறிகுறியேயோவென்று சிலர் ஐயுறுவாராயினர். ஜெயபூர்த்தரசர் இந்திய பஞ்ச நிவாரண சங்கத்திற்கு இன்னும் நான்கு லக்ஷம் ரூபாய் நன்கொடையாக அளித்தனரென்பது அவ்வையுறவை வலியுறுத்துவதற்காதோ?

**காங்கிரேஸ் மகாசபை** :—பிரதி வருஷமும் நடப்பது போலக் காங்கிரெஸ் இந்த வருஷம் கல்கத்தாவில் நடக்கப்போகின்றது. அதற்கேற்ற முயற்சிகளும் ஆங்காங்கு நிகழ்கின்றன. நமது தென்னிந்தியாவினின்றும் கனவான்கள் பலர் அம்மகாசபையின் கூட்டத்திற்குப் பிரதிநிதிகளாவும் காணுநர் கேட்குநர்களாகவுஞ் செல்வார்களென்று எண்ணுகின்றோம். நம் இந்தியாவின் தலைநகராகிய அவ்வூர்காட்சியி னிமித்தமேனுஞ் செல்லுவார் அக்கூட்டத்தைக் கவனியாதிரார். அக்கூட்டத்தில் **தீன்ஷா இடல்ஜீவாச்சா** என்னும் பார்சீ கனவான் சபாநாயகராக வீற்றிருப்பாரென்பதுகேட்டு மகிழ்வார்கள் அநேகர்.

**தென்னாபிரிகா யுத்தம்** :—இந்த யுத்தந்தொடங்கி யேறக்குறைய ஈராண்டுகட்கு மேலாகின்றன. இன்னும் அது நின்றபாடில்லை. கிரைத்தண்டுபிடுங்க ஏலேலப்பாட்டா? இச்சிற்றிராச்சியமாகிய திரான்ஸ்சுவாலைப்பிடிக்க இத்துணை நாளா? ஒருவேளை நம்முடைய ஆங்கில வீரர்கள் கருணைத்திறங் காட்டி யொழுகுகின்றனரோ? கையிற் படைக்கலங்கொண்டு போர்க்களத்திற் புக்க பிறகு கண்ணோடி நடப்பதுமுண்டோ? மகாபாரத யுத்தத்தில்



வீரர் சிங்கமாகிய அருச்சுனன் கருணை மேலிடப்பெற்றுப் போர்செய்தற்கண் ஊக்கங்குறைந்து பேசுவானாக, அப்போது கண்ணபிரான் அவனுக்குப் பகவற்கீதையை யுபதேசம் பண்ணி மேற்கொண்ட கடமையைச்செய்து முடிக்குமாறு வலியுறுத்துரைத்தாற் போல, இப்போது நம் ஆங்கில வீரர்கட்கும் அவ்வாறு எடுத்துரைப்பா ரொருவருமிலரோ? யுத்தம் நீடித்து நடந்தால் யாவருக்கும் அதன்கட் சுவை குறைந்துபோதல் இயல்புதானே. புறத்தேயிருந்து யுத்தமுடிவைமட்டிற் கவனிப்பாரிடத்திலேயே இவ்வாறாயின், யுத்த களத்திலேயே யிருந்து இரண்டு வருஷங்களாகப் போர்புரிவார்க்குச் சுவைக்குறைவு நிகழ்தல் இன்னும் அதிகமாமன்றே. ஆதலின் நமது கிச்சினர் பிரபுவவர்கள் சின்னாண் முன்னர்த் தாம் விடுத்த கட்டளையை வற்புறுத்திப் போரைக்கூடிய சீக்கிரத்தில் முடித்து வெற்றி முரசம் முழங்குவாரென்று நம்புகின்றோம்.

**ஐரோப்பாகண்டத்திற் குழப்பம்**:—ஒரு பிரெஞ்சு வியாபாரிக்குத் துருக்கி தேசத்தாரால் நிகழ்ந்த நஷ்டத்தின் பொருட்டு அன்னார் அவனுக்கு ஈடுசெய்து கொடுக்க வேண்டுமென்று பிரெஞ்சு தேசத்தார் கேட்ட பொழுது துருக்கியரசன் அசர்கிணங்காமையாலே பிரான்சுக்கும் துருக்கிக்கும் மனஸ்தாபமுண்டாய்விட்டது. கான்ஸ்டாண்டிநோபிலிலிருந்த பிரெஞ்சு ராயபாரியும் பாரிஸ் நகரத்திலிருந்த துருக்கிராயபாரியும் முறையே அவ்வவ்விடம் விட்டு நீங்கிவிட்டனர். சேயல்லார்டு பிரபு வென்னும் சேனைதலைவரின் கீழ் ஒரு பெரிய பிரெஞ்சுச் சைன்னியம் அடங்கியதோர் கப்பற்கூட்டம் துருக்கி தேசத்தைச் சேர்ந்த துறை முகங்களனைத்தையும் கைப்பற்றிக் கொள்ளுமாறு புறப்பட்டு வந்து அவற்றுட் சிலவற்றையுங் கைக்கொண்டது. இவ்வாறு எதிர்பார்க்கப்படும் இவ்யுத்தமானது எவ்வாறு முடியுமோ? அறிகிலேம். துருக்கி பிரான்சுக்கு இணங்கிவிட்டதாகவுங் கேள்வி.

**சென்னைச் சருவகலாசாலைக்குப் புதிய அவயவிகள்** :—வருஷா வருஷம் நமது சென்னைச் சருவகலாசாலைக்குப் புதிய அவயவிகள் தெரிந்தெடுக்கப்படுவது போல இவ்வருஷமும் இருவர் தெரிந்தெடுக்கப்பட்டுளர். இவ்வருஷம் பன்னிருவர் அவயவிப்பட்டம் பெற விரும்பி முனைந்து நின்றனர். அவர்களுள் ம-ா-ா-ஸ்ரீ, ம. விசுவநாத ஐயரவர்கள் பி. ஏ. பி. எல்லும் ம-ா-ா-ஸ்ரீ, டி. சங்கரராய ரவர்கள், பி. ஏ. யும் தெரிந்தெடுக்கப்பட்டனர். முன்னவர் கடலூர்ச் சில்லா மஞ்சக்குப்பத்தில் முதல் வகுப்பு ஜில்லா முன்சிபாயிருப்பவர்; பின்னவர் காலஞ்சென்ற கீர்த்திமான் கோபாலராயரவர்கள் குமாரரும் இராஜமகேந்திரபுரக் கலாசாலைப் புலவருமாவர். இவ்விருவரும் மேற்கூறிய அவயவிப்பட்டத்திற்கு எவ்வாற்றானுந் தகுதியுடையவர்களே.

**ஆப்கானிஸ்தானத்தின் நிலைமை** :—சின்னாண் முன்னர் ஆப்கானிஸ்தானத்தின் அமீராகிய **அப்துல்ரஹிமா னவர்கள்** காலஞ்சென்று விட்டமையால் அவரது மூத்த மகனும் பட்டத்திற்கு எவ்வாற்றானு முரியவருமாகிய **ஹபிபுல்லாகான் அவர்கள்** ஆப்கானிஸ்தானத்திற்குப் புதிய அமீராகப் பட்டாபிஷேகஞ் செய்யப்பட்டனர். இதுவிடயத்தில் நமதிராசப்பிரதிநிதியவர்களாகிய **கர்ஸன்பிரபு அவர்கள்** செய்த ஏற்பாடுகள் மிகவியக்கத்தக்கனவே. ஒருவேளை இப்பொழுது புதிய அமீராயிருக்கின்ற ஹபிபுல்லா

அவர்களது சகோதரருளொருவர் உருஷியா தேசத்துச் சக்கிரவர்த்தியாரது ஆதரவிலிருத்தலின் அவர் அன்னாரது உதவிபெற்றுப் போர்க்கு வந்தாலும் வரலாம் என்று பலர் எதிர்பார்த்திருந்தனர். இப்பொழுது ஆப்கானிஸ்தானத்திற் சாந்தமு மமைதியும் தலையெடுத்திருக்கின்றன. ஜனங்களுக்குள் முறுமுறுப் பொன்று மில்லையாம். மேலும் மாரிகாலம் நெருங்கிற்றுதலின் வாணிகச்சாத்துக்கள் பயணப்பட் டெழுவதற்கு ஏற்றகாலம் வந்துவிட்டமையானும் இராசாங்க விஷயங்கள் தவிரக் குடிகட்கு வேறு விஷயங்களும் காரியங்களும் ஏற்பட்டு விட்டமையானும் வருகிற வேனிற்காலம் வரையில் ஒருவகையான கலகமும் நாட்டின்கண் நிகழ்தற் கிடமில்லையென்பது திண்ணம். அன்றியும், புதிய அமீரின் குணங்களும் ஆட்சித்திறனும் மிகவும் பாராட்டற் பாலனவாம். ஜனங்கட்கும் அவர்மீது அன்பு மிகுந்துகொண்டே வருகின்றதாம். நம் இந்தியாவினின்றுஞ் சில மகம்மதிய கனவான்கள் அமீரவர்களைக் காணுதற் பொருட்டுச் செல்வார்களென்பது கேட்டு மகிழ்கின்றோம். இவையனைத்தும் நங்கருத்தை வற்புறுத்துமாறு காண்க.

சுதேசவர்த்தமானி:—1891௵ ஆகஸ்டு௴ 1௳ முதல் இப்பத்திரிகை சிதம்பரம் சித்தாந்த வித்தியாநுபாலன யந்திரசாலையில் மாதமொருமுறை பிரசுரிக்கப்பட்டு வருகின்றது.

நம் நாட்டு மொழியாய்ச் சிறந்த தமிழ்க்கல்வி வரவரக் குறைவுற்று வருதலால் அதன் வளர்ச்சிக்கு வேண்டும் சாதகங்களைத் தமிழ்நாட்டார் கைக்கொண் டொழுகும்படி தூண்டிப் போதித்தலும், ஆரிய வருணாச்சிரம தருமங்கள் நிலைகுலைந்து கெட்டுவருதலால் அவைகள் அபிவிருத்தி யடைதற்கு வேண்டும் உபாயங்களை யெடுத்து இதமாக வுபதேசித்தலும், பிராசீன இந்துதேவாலய மடாலய தருமங்கள் வரவர மிக்ககேட்டிற் கிலக்காகுதலால் அவைகள் க்ஷேமம் எய்துதற்குவேண்டும் பரிபாலன முயற்சிகளைச் செய்யத்திடமாக வெடுத்துக் காட்டுதலும், இகபரத்துக்குரிய எல்லா நன்மைகளையும் அடைதற்குச் சாதனமான மானிட தேகத்தில் நாம் நோய் முதலியவற்றால் இடருறாது நீடிருந்து சுகவாழ்வு கூரும்படி சுகாதாரங்களைப் பேணுதற்கென்றே நியோகிக்கப்பட்ட நகரச்சபையார் தங்கடமையைச் சாங்கிரதையுற்று நடத்தி ஜனோபகாரிகளாய்ப் புகழாபரணம் பூணும்படி நியாயவழிகளை எடுத்துரைத்தலும், மகாகனம் பொருந்திய நமது பிரிட்டிஷ் அரசினர் கல்வியறிவாற்றலுடைய நீதி மன்னராய்த் தங்குடை நீழலில் நம்மை வைத்துப் பாதுகாத்திடலால் அவர் செங்கோன்மைப் பெருநன்றி மிகப்பாராட்டி மேலும் வேண்டும் இகபரக்ஷேமானுகூலங்களை நமக்குச் செய்துவர அவர்களைப் பிரார்த்தித்து வருதலும், இப்பத்திரிகையின் முக்கிய நோக்கமாம். இன்னும் நானாவித தேசவர்த்தமானங்களும், செய்தொழில் விருத்திக்கும் வர்த்தக விருத்திக்கும் வேண்டும் கல்வியறிவுகளும், இதில் எழுதப்படும். சிதம்பரச் செந்தமிழ்ச் சங்கவரலாறு மாசந்தோறும் இதில் வெளியாகும். சந்தாவிபரம் குறித்த செந்தமிழ்ச் சங்காபிமானிகளுக்கு ரூ. 0—12—0 மற்றவர்களுக்கு 1—0—0 கையொப்பக்காரராக விரும்புவோர் அடியிற்கண்ட விலாசத்துக்குத் தங்கள் தெளிவான விலாசத்தை விரைவி லெழுதக்கடவர்:—**சபாபதிநாவலர்,** மானேஜர், சுதேசவர்த்தமானிப் பத்திராதிபர், நெ. 77, தெங்கழுநீர்ப் பிள்ளையார் கோவில்தெரு, சிதம்பரம்.

REGISTERED ... 362 MADRAS


# ஞானபோதினி

தாமின் புறுவ துலகின் புறக்கண்டு
காமுறுவர் கற்றறிந் தார்—திருக்குறள்.

சம்புடம் V. } 1901௵ டிசம்பர்௴ 20௳ { புத்தகம் 5.


## THE LAWS OF JOURNALISM.

## பத்திரிகை மரபு.

தினப் பத்திரிகை யாதல், வாரப் பத்திரிகை யாதல், பக்ஷப் பத்திரிகை யாதல், மாதப் பத்திரிகை யாதல் இன்னும் எப்பத்திரிகை யாதல் நடத்துவோரே பத்திராதிபராவர். ஒருவர் ஒரு பத்திரிகைக்கு அதிபர் எனவே, அவர் அப்பத்திரிகையை நடத்துதற்கட் சர்வ சுதந்திரமு முடையாரென்பதும், அதன்கண் வெளிப்படும் விடயங்கள் யாவும் ஓராற்றாலேனும் பொதுநலங் கருதியனவா மென்பதும், அவை யனைத்தும் பத்திராதிபர் அநுமதி பெற்றனவா மென்பதும் சொல்லாமலே விளங்கும். ஆகவே, பத்திராதிபரும் காவற் சாகாடு உகைப்பார் போலப், பெருங் கவலையொடு பத்திரிகையை நடத்துதல் வேண்டும். பத்திரிகையோடு இயைபுடையார் சந்தாத் தொகை செலுத்துங் கனவான்களும், விஷயதானஞ் செய்யுங் கனவான்களு மாவார் பொதுவாக இவர்களது சுவைக் கேற்றபடியே பத்திராதிபர் தமது பத்திரிகையை நடத்துதல் உசிதமேயாயினும், ஒவ்வொருவருடைய சுவைக்கு மியைய நடத்துத லென்பது அசாத்தியம். அங்ஙனம் நடத்தப்புகினும் அது கிழவனு மகனுங் குதிரையைத் தூக்கிச் சுமந்த கதையாய் முடியும்; ஒவ்வொருவர் விருப்பத்தையும் பூர்த்தி செய்தல் இயலாது போமென்பது திண்ணம். ஆகவே பத்திராதிபர் பலர் விரும்புமாறு பத்திரிகையை நடத்துதல் கூடுமே யன்றி, யாவரும் விரும்புமாறு நடத்துதல் முடியாது. இவ்

வாறு முடியாது போகவே அதுபற்றி அதிருப்தியடைந்த சிலர் பத்திரிகையின் மீதும் பத்திராதிபர் மீதுங் குறைகூறப் புகுவார்கள். அந்தோ! அவர்கள் அம்மட்டில் நிற்பார்களோ? பத்திராதிபரை யிழித்தும் பழித்து முரைப்பர், தெழிப்பர்; இறுதியில் தாங் கருதிய பயனொன்று மில்லையாக விழிப்பர்! இவ்வாறு இழிப்பும் பழிப்பும் வீணாக வந்தெய்திய போதும் பத்திராதிபர் அவை போலியாமெனத் தெருண்டு, மனந் திரிதலின்றி ஒரே தன்மையரா யிருத்தல்வேண்டும். எந்தப் பெரிய மனிதனுக்குக் குறை கூறாதிருந்தனர் உலகினர்?

"நெல்லுக் குமியுண்டு நீர்க்கு நுரையுண்டு
புல்லிதழ் பூவிற்கு முண்டு"

என்றார் நாலடியாரினும். ஓராற்றால் உற்று நோக்கு மிடத்துப் பத்திராதிபர் நிலைமை பரிதபிக்கத்தக்கதே! எவர் எதுகூறினுங் கூறுக; மேற்கொண்ட கடமையைக் கைசோர விடாது கடைக்கூட்டி முடிக்கத்தக்க வுள்ளக் கிளர்ச்சியோ டெழுதல் வேண்டும்.

இனிப் பத்திரிகையை யொழுங்குபெற நடத்துவதிற் சர்வாதிகாரமு முடையவர் பத்திராதிப ராதலின், அவர்க்கு விஷயதானஞ் செய்வோர்களது விஷயங்களில், தாம் விரும்பியபடி சில திருத்தங்கள் செய்துகொள்ளுஞ் சுதந்திர முண்டு. இதை நம்முடைய நண்பராவர் அனைவரும் அறிதல் வேண்டும். விஷயம், எழுதுவோருடையதாயினும் பத்திரிகை, பத்திராதிபருடைய தாதலின் விஷயதானஞ் செய்வோர் பத்திராதிபர் திருத்தங்கட்குச் சிறிது இயைதல் வேண்டும். பத்திராதிபருங் காரணமின்றித் திருத்த மாட்டாரென்ற எண்ணமும் மனத்திலிருத்தல் வேண்டும். அல்லாக்கால், அது மனவருத்தத்திற் கிடனாம். அரச விசுவாசக்குறைவு காட்டுஞ் சொற்களுந் தொடர்களும் வாக்கியங்களும் நீக்கிவிடப்படும். யாரேனு மொருவரைச் சுட்டித் தக்க காரணமின்றிப் பிறிதுபட வுரைப்பன பத்திரிகையி லிடம்பெறா. நிந்தைச் சொல்லும் வழூஉச்சொல்லும் புணர்த்தும் இடக்கரடக்காமலு மெழுதப்படுவன ஏற்றுக் கொள்ளப்படா. வீண் வாதத்திற்கும் வன்புரைக்கும் இடமாகிப் பயனிலவா யொழிவனவும் அங்கீகரிக்கப்படா. உண்மை தோன்ற விஷய வாதஞ் செய்வன கொள்ளப்படும். அங்ஙனம் வாதிக்கு மிடத்து, வெகுளனு மொரு தோல்வி



நிலை யாதலின், வெகுளிச் சொற்கள் வெறுக்கற் பாலனவே. அவை விஷயங்களிற் காணப்படினுங் களையப்படும். இங்ஙனங் கூறியதனால் விஷயங்களனைத்தும் மாறுபட்டுப் போமென ஐயுறற்க. மாறுபாடு மிக்கவழி, விஷயதானஞ் செய்தார்க்கு அஃது அறிவிக்கப்படும். அவரும் இணங்கிய பின்னரே அது பத்திராதிபராற் பிரசுரிக்கப்படும். ஒரு காலத்தில் ஓராங்கிலப் பத்திரிகைக்கு எப்பொழுதும் வழக்கமாக விஷயதானஞ் செய்யுமொருவர் அதற்குத் தாம் கருதியதோர் விஷயம், தாம்விரும்பியவாறு எழுதி விடுத்தனர். அதைப் பெற்ற பத்திராதிபர் அதில் தமக்கு வேண்டியவாறு சில திருத்தங்கள் செய்து அதனைப் பதிப்பித்தனர். அதுகண்டு விஷயதானஞ் செய்த கனவான் வெகுண்டு, "அவ்விஷயத்தைக் குறித்து இன்னதுதா னெழுதவேண்டு மென்பது யானொருவனே அறிவேன்; அப்படியிருக்க நீர் அதை மாற்றியது பிழை" என்று நிருபம் போக்கினர். அது பெற்ற பத்திராதிபர் புன்னகை செய்து, "அவ்விஷயத்தைக் குறித்து இன்னதுதான் பிரசுரிக்க வேண்டு மென்பது யாமொருவரே அறிவேம்; அப்படி யிருக்க, நீர் அது மாற்றப் பட்டதற்காக வெகுள்வது பிழை" என்று கடிதம் விடுத்தனர். இதுபோன்ற அமயங்கள் நம் தமிழ்ப் பத்திராதிபர்கட்கும் நேரலாம்.

இனிப் பத்திரிகையிற் போதிய இடமில்லாவழிச் சில விஷயங்கள் சுருக்கியும், இடைவிட்டும், குறைத்தும் பதிப்பிக்கப்படும். இங்ஙனஞ் செய்தல் பத்திரிகையின் அநுகூலத்தைக் கருதியேயன்றி வேறு விஷயத்தின்கண் நிகழ்ந்த குறைபாட்டினா லன்றென்றுணர்க. சுவைப்பிறழ்வுடைய விஷயங்கள் பதிப்பிக்கப்படா. பத்திராதிபர் பார்வைக்கு அனுப்பப்படும் புத்தகங்களெல்லாம் மிக்க கவலையொடு, நடுவு நிலைமை குன்றாது, ஆராயப்படும். பிறருடைய கருத்துக்களுக்கேற்ப மாறுபடாது, தம் கருத்தின்படியே குறிப்புக்கள் எழுதப்படும். பத்திராதிபர் குறிப்பிக்கும் அபிப்பிராயங்கள் பிறர் நூல்களை அழிந்துபடச் செய்யவேண்டு மென்ற நோக்கத்தோ டெழுதப்படுவனவல்ல. நூலாசிரியர்களது ஊக்கத்தை யெழுப்புதலே பத்திராதிபர் உட்கிடை யென்ப துணர்க.

எவ்வாற்றானும் பத்திராதிபர் பார்வைக் கனுப்பிய புத்தகங்களாதல், பத்திரிகைக் கனுப்பிய விஷயங்களாதல் திருப்பி யனுப்பப் படுவ

னவல்ல. அவ்வவற்றின் ஏற்றந் தாழ்வு கருதி நடத்தலே வழக்காற ன்றி, மற்று அவற்றைக் குறித்து ஒன்றும் முற்படக் கூறுதற்கியலா தென்பதும் அறிக.

பத்திராதிபர்.

---

## TIRUVALLUVAR.
## திருவள்ளுவர்.

---

(129-ஆம் பக்கத்தொடர்ச்சி.)

திருக்குறளும் தொல்காப்பியமும் ஆகிய இரண்டுமே, சிதைவுறாமல் இப்பொழுது வழங்கும் நூல்கள் எல்லாவற்றினும் முற்பட்டனவாம். திருக்குறளுக்குப் பன்னெடுநாள் பிற்பட்டவையெல்லாம், எத்தனையோ வேறுபாடுற்றும், பற்பல விடங்களில் ஆசிரியர் வாக்கு இதுவேயென்று துணியலாகாதவாறு மாறிவிட்டனவாகவும், ஆயிரத்தெண்ணூறு யாண்டுகளாக ஒரெழுத்துஞ் சிதைவுறாமல் வழங்கிவருவதே இந்நூலின் பெருமையை உணர்த்துவதன்றியும், இஃது என்றும் அழியாது நின்று நிலவும் என்பதற்கும் சான்றாகின்றது. இஃது இங்கிலீஷ், ப்ரெஞ்சு, ஜர்மனி, இலத்தின், தெலுங்கு முதலான பாஷைகளிலும் மொழிபெயர்க்கப்பட்டுப் பல தேயங்களினும் வழங்கிவருகின்றது. திருவள்ளுவர் தமிழர்க்குச் செய்த உபகாரம் உலகினர்க்கே செய்த மஹோபகாரமாகிவிட்டது. இந்நூலாசிரியரைத் தமிழர் பிரமனுடைய அவதாரமென்றே யெண்ணி, இவரைத் தெய்வப்புலவர் என்கின்றனர். கிறிஸ்தவர்களுக்கு விவிலிய நூலும், துருக்கர்களுக்குக் குரானும், புத்தர்கட்குத் திரிபிடகமும், பிராமணர்களுக்குச் சதுர்வேதமும் எங்ஙனம் ஸர்வோத்கிருஷ்டமோ, அங்ஙனமே தமிழர்களுக்குத் திருக்குறள் ஸர்வோத்கிருஷ்டமாம்.

தமது திருக்குறள், சங்கத்தார் முன்னிலையில் அரங்கேறிய பின்னர், மயிலைக்கு மீண்டு மனைவியோடு இல்லறநடத்தி வருநாளில், மனைவி காலகதியடைந்துவிட்டனர். இம்மனைவியாருடைய கற்பின்றிறத்தைக் குறித்துச் சிற்சில வரலாறுகள் வழங்குகின்றன. தனது தவம் சித்தியுற்றதா என்றறிய விரும்பிச், தன்மீது எச்சமிட்ட ஒரு கொக்கைக் கண்விழித்து எரித்துவந்த கொங்கணருஷி, மயிலையில் வள்ளுவருடைய வீட்டிற் பிக்ஷைக்குச் சென்றபோது, வள்ளுவர் மனைவியார் தமது பர்த்தாவுக்குத் தொண்டுசெய்துகொண்டிருந்தமையால், பிக்ஷையிடச் சிறிதுகாலந் தாழ்க்கவே, கோபத்துடன் விழியை உருட்டிப்பார்த்த அந்த ருஷியை நோக்கிக் "கொக்கென்று நினைத்தையோ கொங்கணவா?" என்று கேட்ட மாத்திரத்தில், ருஷி திடுக்கிட்டு



அவருடைய கற்பின் திண்மையை மிகவும் மெய்ச்சினன் என ஒரு வரலாறுண்டு. அம்மனைவி துஞ்சியபோது வள்ளுவர்,

"அடிசிற் கினியாளே யன்புடை யாளைப்
படிசொற் பழிநாணு வாளை—யடிவருடிப்
பின்றூங்கி முன்னுணரும் பேதையை யான்பிரிந்தா
லென்றூங்குங் கண்க ளெனக்கு"

எனப்புலம்பிட்ட வெண்பாவாலும், அவர் மனைமாட்சி நன்கு புலப்படும். வள்ளுவர் சரிதத்தைப் பலர் சாற்றக்கேட்ட கச்சி விட்டலையரசன் மயிலை சென்று ஒரு சிற்பனால் வள்ளுவ ருருச்செய்து பிரதிட்டிப்பித்துப் பூஜை செய்யும்படி இலிங்கதாரணர்க் கீந்தான் எனப், **புலவர் புராணம்** புகல்கின்றது.

தமிழிலக்கியங் கூறும் பொருளெல்லாம் அகப்பொருள் புறப்பொருள் என்னும் இரண்டு பாகுபாடுடையன. அவற்றுள், அகமென்பது இன்பமென்னும் இயல்பினையுடையதாகி உள்ளத்தின் கண்ணே நிகழும் ஒழுக்கமாம். புறப்பொருளென்பது அறம் பொருள் என்று சொல்லப்படும் இயல்பினையுடைத்தாய்ப் புறம்பே நிகழும் ஒழுக்கமாம். ஆகவே அறம் பொருள் இன்பம் என்னும் மூன்றும் உரைத்தலால் திருக்குறள் முப்பால் எனும் பெயர்த்தாயிற்று. அறமென்பது இல்லறந் துறவறம் என்னு மிரண்டுமாம். இல்லறத்திலே நின்று பொருளீட்டி இன்பநுகர்ந்து துறவியாகி வீடெய்தலாம் இந்நூலாற்போந்த கருத்து. அங்ஙனமாயின் இல்லறம்-பொருள்-இன்பம்-துறவறம் என்ற முறையாக வையாத தென்னையெனின், அறமாகிற ஒப்புமை பற்றிச் சேரவைத்தாரென்பது. மேற் கூறியாங்கு மனிதன் வீடெய்தலே வள்ளுவர்க்குக் கருத்தாதலைத் துறவிகட் கின்றியமையாத அருளுடைமை முதலான குணங்களைச்சொல்லித், துறவறவியலின் இறுதியில் அவாவறுத்தலை அதிகாரப்படுத்தி, அவ்வதிகாரத்தினிறுதியில் "ஆரா வியற்கை யவா நீப்பி னந்நிலையே, பேரா வியற்கை தரும்" என உரைத்ததனுல் உணரலாகும். பரிமேலழகர்க்கும் இக்கருத்தே கருத்தாதல் அப்பாவின் கீழே

"நன்று ஞாலங் கடந்துபோய் நல்லின் திரிய மெல்லாநீத்
தொன்றாய்க் கிடந்த வரும்பெரும்பா ழுலப்பி லதனை யுணர்ந்துணர்ந்து
சென்றாங் கின்ப துன்பங்கள் செற்றுக் களைந்து பசையற்றா
லன்றே யப்போ தேவீடு மதுவே வீடு வீடாமே"

என்ற **நம்மாழ்வார்** பாசுரத்தை மேற்கோள் காட்டியிருப்பதே நன்கு புலப்படுத்தும்.

ஊழைத்தழுவாத தேயத்தினரும் மதத்தினரும் இல்லை. இன்ப நுகர்தற் கின்றியமையாதன இல்லறமும் பொருளும். இல்லறம் நன்கு நடத்தற்கும் பொருள் நன்கீட்டற்கும் ஊழே காரணமென்பது எல்லார்க்கும் ஒப்ப முடிந்த

தாகலின், அதனைச் சிங்கநோக்காக அறத்திற்கும் பொருளுக்கும் இடைப்
பெய்து வைத்தார். இன்பம் வீடுபேற்றிற்குக் காரணமாகுமோ? அது மீண்டு
மீண்டும் பிறப்பெய்தற்கன்றோ காரணமாவது. அதனை இன்னோரன்ன நூல்
களிற் கூறுவது ஏற்றக்குறைவா மன்றோ எனின், அற்றன்று. அகப்பொரு
ளான இன்பம் பிறவித்துன்பமும் பிறதுன்பமும் பயப்பதாயின், கடுந்துறவி
யான **வாதவூரர்** திருக்கோவையாரை இயற்றியருள்வரா? **சடகோபர்** திரு
விருத்தத்தைத் திருவாய் மலர்ந்தருள்வரா? காமவின்பமே கதியாகக் கடைப்
பட்டவர்கள் கரையேறி உய்தற்பொருட்டே நூல்கள் இன்பத்தை எடுத்
துரைப்பது என்னுங் கருத்தை **இறையனா ரகப்பொரு ளுரையிற்** "காமம்
நன்றாமாறுமுண்டு" என, நக்கீரர் விரித்துரைத்ததைக் கண்டு தெளியலாம்.
அவற்றையெல்லாம் ஈண்டெடுத் துரைப்பதாயின் இடனின்று, காலமுஞ்
சாலாது. ஆசிரியர் **தொல்காப்பியனார்க்கும்** இது கருத்தாதலைக்

"காமஞ் சான்ற கடைக்கோட் காலை
யேமஞ் சான்ற மக்களொடு துவன்றி
யறம்புரி சுற்றமொடு கிழவனுங் கிழத்தியுஞ்
சிறந்தது பயிற்ற லிறந்ததன் பண்பே"

என்னும் பொருளதிகாரச் சூத்திரமும் அதன் உரையும் நன்குணர்த்தும். இல்
லறத்தில் நிற்போன் குடித்தனம் நன்கியற்றாநின்று, மனையாளோடு இன்ப
நுகர்ந்து பின் துறவியாய் வீடுபெறுவதே இந்நூலின் இனிது முடிந்த
பொருள்.

நன்று, இரண்டாவது பாலினைப் பொருட்பால் எனப் பெயரிட்டுக்கொ
ண்டு, அரசியல் அமைச்சியல் முதலாயினவற்றை விரித்துரைக்கின்ற நோக்க
மென்னை என்பது, திருக்குறளை ஒருமுறை ஓதினார் மனதில் இயற்கையாக
எழுகின்ற கடா. நூலை ஓதுகின்றவர்களும், நூற்கு உரைகாண்கின்றவர்
களும் இயன்றமட்டில் அவ்வந்நூலாசிரியருடைய கருத்தை உய்த்துணர்தல்
வேண்டும். அங்ஙனமன்றித் தத்தம் மதத்தை நூலிலேற்றி யுரைத்தலும்,
நூல், தம்மதத்துக்கு இடங்கொடாவிடின், வலிந்தும் நலிந்தும் பொருள்
கோடலும் பாடபேதம் பண்ணுதலும் அவமான காரியங்களாம். நம்மாலியன்ற
வரையில் இப்பாலில், ஆசிரியர்கருத்து இன்னதென்பதை ஆராயப்புகுவோம்
"இருமையும் பயப்பதாய பொருள் கூறுவான் எடுத்துக்கொண்டார். அது
தன் துணைக்காரணமாய அரசநீதி கூறவே அடங்கும். அரசநீதியாவது
காவலை நடாத்து முறைமை. அதனை அரசியல், அங்கவியல், ஒழிபியல் என
மூவகைப்படுத்துக்கூறுகின்றார்" எனப் பொருட்பாலுக்குப் பாயிரங்கூறி உரை
கூறப் புகுகின்றனர் பரிமேலழகர். காமத்துப்பாலின் உரைப்பாயிரத்திலும்,
பரிமேலழகர், "இவர் பொருட்பாகு பாட்டினை அறம் பொருள் இன்பம் என
வடநூல் வழக்குப் பற்றியோதுதலான்..." எனக்கூறுதலால், திருக்குறளுக்கு



வடநூற் போக்கையே பின்பற்றி, இவர் உரை கூறுவதாகத் தோன்றுகின்றது.
இக்கருத்துப் பற்றியேபோலும் இவர் "படைகுடி கூழமைச்சு நட்பர ணாறு
முடையா னரசரு ளேறு" என்கிற விடத்தில் "ஈண்டுக்குடி யென்றது அதனை
யுடைய நாட்டினை" என்றும், இறுதியிலுள்ள பதின்மூன்றதிகாரத்தை ஒழி
பியல் என்றுங்கொண்டது. **திருவள்ளுவமாலையிற்** போக்கியார் என்பவர்,

"அரசிய லையைந் தமைச்சிய லீரைந்
துருவ லரணிரண்டொன் றொண்கூ—ழிருவிய
திண்படை நட்புப் பதினேழ் **குடிபதின்மூன்**
றெண்பொரு ளேழா மிவை"

எனக்கூறிய வெண்பாவில் 'அரணிரண்டு' என்பதில் நாட்டை அரணின்பாற்
படுத்தியிருப்பதும், 'ஒன்றொண்கூழ்'என்பது, பொருள் செயல் வகை யென்ப
தும், குடிபதின் மூன்றென்பது, இறுதியிலுள்ள பதின்மூன்றதிகாரமும் குடி
யென்பதும் தெளியப்படுகின்றன. ஆகவே, சங்கத்தார் காலத்தில் ஒழிபியல்
என்பதொன்றில்லை யென்பதும், குடி என்பதை அவர்கள் நாடாகக் கொண்
டிற்றிலர் என்பதும் தேற்றமாம். ஒழிபியலும் காவலை நடாத்து முறைமை
யானால் அதனுள் ஆசிரியர் உழவு - நல்குரவு - இரவு முதலியவற்றை அதி
காரப்படுத்துவரோ? குடிமையும், அதற்கின்றியமையாத குணங்களும், குடி
செயல் வகையும், அதற்கேதுவான உழவும், அது செய்யாதார் எய்தும் நல்
குரவும் அதனால் இரவும் பிறவும் காவலை நடாத்து முறைமையின் பாற்படு
மோ? அரசியலை முதலிலும், குடியியலை இறுதியிலும் வைத்துப் பொருட்பால்
உரைத்த ஆசிரியர்க்குக் கருத்து வேறாதல் வேண்டும். இப்பாலில் இம்மை
மறுமை பயப்பதான செல்வத்திற்குத் துணைக்காரணமான அரசநீதியையே
கூறுவது ஆசிரியர்க்குக் கருத்தானால் இப்பாலை அரசியலென்றே பெயரிட்டுக்
கூறியிருக்கலாமே. ஆகவே ஆசிரியர் கருத்துப் பரிமேலழகர் கருத்தன்றாதல்
வெள்ளிடை விலங்க லாயிற்று "இல்வாழ்வா னென்பா னியல்புடைய
மூவர்க்கு, நல்லாற்றி னின்றதுணை" யாய்த், "தென்புலத்தார் தெய்வம்
விருந்தொக்க லானென்றாங் கைம்புலத்தா றோம்பலை". இங்ஙனம் ஓம்புதல்
பொருளின்றி முடியாதன்றோ? ஆகவே பொருட்பாலில் அப்பொருளீட்டு
மாறு கூறினாரன்றிக் காவலை நடாத்து முறைமையைக் கூறினாரல்லர்.
அரசனும் இல்வாழ்வானே, குடிகளும் இல்வாழ்வாரே, அரசன் பொருளீட்டு
மாறு வேறு, குடிகள் பொருளீட்டுமாறும் வேறே. "உறுபொருளும் உல்கு
பொருளு மொன்னார்த் தெறுபொருளும் வேந்தன் பொருள்." குடிகளுக்கு
"உழந்தும் உழவே தலை." "தென்புலத்தார் ... ஐம்புலத்தா றோம்பல்தலை"
என்றதனால், அரசனுக்கு இறைப்பொருள் ஆறிலொன்றாயிற்று, இவ்வைம்
புலத்திற்கும் ஐந்து கூறு வேண்டுதலின்: ஆகவே இதனைப் பொருட்பாலில்
வேறு கூறாராயினர். அவ்வாறிலொன்று பெறுதற்கு அரசன் செய்யுந்தொழி

லாவது "குடிபுறங்காத் தோம்பிக் குற்றங்கடிதல்." அரசன் பொருளீட்டு தற்குக் குடிகளும் ஒரு வாயிலாதலினன்றே "படைகுடி கூழமைச்சு நட்பரணாறு முடையானரசருளேறு" என்றார். இறைமாட்சியில் ஆலோசனை சொல்லக்கூடிய அமைச்சருடனே பகைவர் ஊறு செய்யலாகாத அரணி விருந்து கொண்டு படையையும் நட்பையுந் துணையாகக்கொண்டு அரசன் பொருள் செய்யவேண்டும் என்பது பொருட்பாலின் முற்பகுதியின் கருத்து. கயமையில்லாத குடிகள் தங்கள் குடிமைக்கேற்ற குணங்களையுடையராய்ப் பொருளின்மையால் நல்குர வெய்தி இரவாமல் உழவுதொழில் செய்து தங்கள் குடியை மேம்படுத்திக் கொள்ளக்கடவர் என்பது பொருட்பாலின் பிற்பகுதியின் கருத்து. "அறனீனு மின்பமு மீனுந் திறனறிந்து, தீதின்றி வந்த பொருள்" என்பவாகலின், அறத்தாற்றினீட்டிய பொருள் அறத்தையும் (காம) இன்பத்தையுங் கொடுக்கும், ஆதலால் அப்பொருள் அவ்வாற்றின் ஈட்டுக என்பதே இப்பாவின் ஒரு தலையான நோக்கமாம். இங்ஙனம் மன்பதைகள் உய்ந்துபோமாற்றை உரைப்பான் எடுத்துக்கொண்ட இந்நூலுக்குப் பாயிரமாக அமைத்துக்கொண்ட அதிகாரம் நான்கில், பொருளும் இன்பமும் அறத்துவழிப்படுவன வாதலின் அவ்வறனை வலியுறுத்தும் அதிகார மொன்றும், அவ்வறமுதலானவற்றை உலகினர்க்கு உணர்த்தவல்லார் நீத்தாராகலின் அவர் பெருமையை உணர்த்தும் அதிகார மொன்றும், "மழையின்றி மாநிலத்தார்க்கில்லை" யாதலின் வான்சிறப்புரைக்கும் அதிகார மொன்றுமாக வைத்து, முதற்கட் கடவுள் வாழ்த்தைக் கட்டுரைத்தார். இக்கடவுள் வாழ்த்தைத் தாம் எடுத்துக்கொண்ட இலக்கியம் இனிது முடிதற்பொருட்டு இந்நூலுக்கு ஏற்புடைக்கடவுளை வாழ்த்திய வாழ்த்தாகக் கொண்டனர் பரிமேலழகர் முதலாயினோர். வானை இன்றியமையாத உலகத்தில் நீத்தாரால் உணர்த்தப்படும் அறம்பொருளின்பவகையால் வீடு பெறற்குரிய மாந்தர் தெய்வபக்தியுடையராய்க் கடவுளை வாழ்த்துதல் ஒரு தலை என்பது வள்ளுவர்க்குக் கருத்து. அதனாலன்றே இவ்வதிகாரத்தில் ஸர்வ ஜகத்காரணனான ஆதிபகவனை எழுவாயாக முதற்பாவில் நாட்டி, அவனை வணங்காவிடின் "கற்றதனாலாய பயன் என்கொல்" என்றும், யாக்கை பெற்றதனாலாய பயனும் அவனை வணங்குதலே, அவனை வணங்காத்தலை "கோளிற் பொறியில் குணமிலவே" என்றுங்கூறி, அவனை வணங்கலானாய பேறுகளை யெல்லாம் பயனிலையாகக் கடைப்பிடித்துப் போந்தார் நம் வள்ளுவர். ஆகவே மாந்தர் கடவுளை வாழ்த்துதலின் இன்றியமையாமையைக் கருதிற்று இவ்வதிகாரம் என்க. ஆசிரியர் தம்மைத் தன்மையாகவும் கடவுளை முன்னிலையாகவும் வைத்துரையாமையும் இக்கருத்தை வலியுறுத்துகின்றது.

திருமணம்-செல்வ கேசவராய முதலியார்.

---



# VIKRAMORVASIYAM.
# விக்கிரமோர்வசீயம்.

---

### மொழி பெயர்த்தவரின் மனக்கடவுள் வணக்கம்.

மின்னை யன்ன மேனி யாளை மிக்க வஞ்சன் கொண்டுபோய்த்
தென்னி லங்கை வைத்த செய்தி தீர வான ரஞ்சொல
மன்னு மாழி யைக்க டந்து வந்து மற்ற வன்பட
நன்னர் வாளி யேவு சீதை நாத னெங்க ணாதனே. (௧)

---

## முதலங்கம்.

---

### முன்னுரை.

புவிவானங் களினிறைந்து புகழ்மறையின் முடிவிலொரு புருட னாக
எவனோதப் படுதலுறு மீச்சுவர மொழியெவனி விதரர்க் காகாத்
தவவாரும் பொருள்சிறந்து தயங்குமெழுத் ததுவியமந் தாங்கு மோக்கத்
தவர்தேடற் குரியனெவன் றானுவெவ னன்பெளிய னன்ன லத்தோன். (௨)

(நாந்தியினீற்றில் திரைக் கெதிர்முகமாக நோக்கி.)

**சூத்திரதாரன்:**—ஆன்றோய்! இவ்விடத்திலேதான்.

**உதவிக்காரன்:**—(புக்கு) கற்றோய்! இருக்கின்றேன்.

**சூத்திரதாரன்:**—ஆன்றோய்! பழைய கவிகளின் பாமாலை, பெரும்பாலும் அவையோர்கள் கண்டொழித்த காட்சியது; ஆகையால் யான் இப்போழ்து **விக்கிரமோர்வசீய**மென்னும் பெயரிய புதிய நாடகத்தை வழங்கச் செய்வேன்; ஆனதுபற்றித் தத்தம் வேடங்களில் தெளிவோடும் ஊக்கத்தோடும் இருக்கவேண்டுமென வேடக்காரர்களுக்குக் கூறுக.

**உதவிக்காரன்:**—கற்றோன் எது கட்டளையிடுகின்றனனோ? [அகல்கின்றனன்.]

**சூத்திரதாரன்:**—ஆன்றோர் முன் இன்று விண்ணப்பிக்கின்றேன் காண்.

அன்பிற் குரியார்மே லாமிரக்கத் தோவன்றேற்
பொன்போனல் வத்துப் புருடன்மேன்—மன்பரிசு
தன்னாலோ விக்காளி தாசன்செய் நூல்கேண்மின்
மன்னூக்க மார்மனத்தான் மற்று. (௩)

(வானத்திற் செவிகொடுத்து) என்னைகொல்? எனது விண்ணப்பத்தின் பின்னர் அயர்வுற்ற அன்னப்பேடுகளி னுடையபோல் ஆகாயத்தில் அரவங் கேட்கப்படுகின்றது. (சிந்தித்து) இருக்கட்டும் தெரியும்.

நரனன்ப ஞய முனியூருவந்த சுரங்கை கைலை நகமேல்
வரநாத னுக்கு விறைநட்ட மாடி மகிழ்வோடு மீண்டு வரலும்
அரையாற்றின் வந்து சிறைசெய்த னர்க ளசுரர்க ளாகை யினினச்
சரமாத ரீட்ட மிதுநொந்து கூவுஞ் சரணுகி விற்கு மவனே. (௪)

[என்று அகல்கின்றான்.]

## முன்னுரை முற்றிற்று.

பின்பு புகுகின்றனர்கள் அச்சர மாதர்கள்.

**அச்சரமாதர்கள்** :—காக்க! காக்க! யாவர் அமரர்பாற் பரிவுடையோர்; எவர்க்கும் வானத்திற் போக்குளது.

பிறகு புகுகின்றனன் அரசனும் தேரொடு பாகனும்.

**அரசன்** :—சாலும் சாலும் அழுது கொடுவிளித்தல் ஞாயிற்று வணக்கத்தினின்று மீளும் புரூரவனுமென்னை யடைந்து; எதனின்றும் நீவிர் புரத்தற்குரியீர்கள்?

**அரம்பை** :—அசுரச்செருக்கினின்றும்.

**அரசன்** :—என்னைதான் நும்வயின் அசுரச்செருக்கு பிழைத்தது?

**அரம்பை** :—கேளும் மகாராசரே! எவள், தவமேன்மையிற் பேரையமுற்ற மகேந்திரற்கு இனிய படைக்கலம்; அழகிற் செருக்கடைந்த திருவினுக்கு வேற்றுப்போலி; சுவர்க்கத்திற்கு அணி; அந்த நம்முயிர்த்தோழி உருப்பசி குபேரன் மனையினின்று திரும்புமவள், இடைவழியிற் காணுற்ற கேசி யென்னும் அசுரனாற் சித்திரலேகைத் துணைவியோடு சிறைபிடித்துக்கொடு போகப்பெற்றனள்.

**அரசன்** :—எத்திசைக்கூற்றால் அக்கொடியோன் சென்றனன் தெரியுமா?

**சகசனியை** :—வடகிழக்கால்.

**அரசன்** :—அதனாற்றுயரொழிமின்; முயல்வே னுந் தோழியை மீட்டுக்கொணர்கைக்கு.

**யாவரும்** :—சந்திரனுக் கொன்றுவிட்ட உமக்குத் தகுங்காண்.

**அரசன்** :—நீயிர் எவ்விடத்தென்னை யெதிர்பார்ப்பீர்கள்?

**அரம்பை** :—இந்த ஏமகூட சிகரத்தில்.

**அரசன்** :—பித்தன் மாதிரத்தைக் குறித்துப் பரிகளைத் தூண்டு விரைந்து சேறற்கு.

**பாகன்** :—எது கட்டளையிடுகின்றனனோ ஆயுளாளன்.

(என்று சொன்னவண்ணஞ் செய்கின்றான்.)

**அரசன்** :—(தேரின்வேகத்தைத் தோற்றுவித்துக்கொண்டு) நன்று நன்று! யானேவெனின் இத்தேரின் விசையினால் முன்னரே புறப்பட்ட கலுழனையுங் கிட்ட வல்லேன்; இந்திரன் பகைவனுமவனைக் குறித்தென்னவோ? எனக்கோ



தேர்ப்பொடியிற் பொடிந்துபுய லிவைகண் முன்னஞ்
செல்லலுறு கின்றனசக் கரத்தி னோட்ட
மார்நடுவெண் வேற்றரத்தின் வரிசை தன்னை
யாக்குவது போலுமய சிரத்தி லிட்ட
வார்கிடந்த கவரியெழு தோவி யத்துள்
வைத்தபொருள் போலவசை யாது நிற்கும்
ஓர்தடியின் முடியிலுள கொடியின்சீலை
யுற்றமருங் கதனிலுறும் விரைவின் காலால். (௫)

[அகன்றனன் அரசனும் தேரொடு பாகனும்.]

**அரம்பை** :—முற்குறித்த இடத்தினை யடைகின்றோம்.

**மிகுந்தவர்கள்** :—ஆம்.

(என்று குன்றேறல் நடித்துக்காட்டி நின்றனர்கள்.)

**அரம்பை** :—அகற்றுவர்கொல் அவ்வரசமுனிவர் நம்மனச்சள்ளையை?

**மேனகை** :—உனக்கையம் வேண்டா; போர் கிட்டும்பொழுது மகேந்திரர், இடையுலக வரசர்களினிடையில் அவரையே வெற்றிப்படை முகத்தில் ஏவி வைக்கின்றாரன்றோ!

**சகசனியை** :—(கணமாத்திரமிருந்து.) தோழிகாள்! பொறுத்துக் கொண்மின்; அவ்வரச முனிவருடைய மான்கொடியாடுஞ் சோமதத்தமென்னு மித்தேர் காணப்படுகின்றது; அவர் முடியாத்தொழிலினராகத் திரும்புமவ ரல்லரன்றோ!

(எல்லோரும் அன்னூந்த கண்ணினராகக் காண்கின்றனர்கள்.)

(பின்னர் புகுகின்றனர்கள் அடங்கிய வேகத்தேரொடு அரசனும் பாகனும் சித்திரலேகையாற் பற்றண்டவளும் அச்சத்தான் மூடிய கண்ணளுமகிய உருப்பசியும்.)

**சித்திரலேகை** :—ஆற்றிக்கொள், ஆற்றிக்கொள்.

**அரசன்** :—அச்சமுள் ளாய்சுர ரேதிலா னுக்கிய வச்ச மகன்றதால்
வச்சிர வாயுதன் மேன்மையோ வாழ்வுறு விப்பது முச்சகம்
நிச்சய மாகையி னாலெயிர் நீள்விழி யின்னுறை நீக்குவாய்
வச்சறு தாமரை வாவியல் வாங்குறு போதலர் போலவே. (௬)

**சித்திரலேகை** :—உயிர்ப்பு வீங்கலான் மாத்திரம் உயிர் பிழைத்திருப்பவள் இன்னமும் உணர்வடைகின்றிலள்.

**அரசன்** :—மங்களத்தினாய்! அங்கவள் மிகவு மஞ்சினள்.

அஞ்சல் விதிர்ப்பிவளி னய்ந்தமலர் போலினிய
நெஞ்சினையின் றும்மிகந்து நீங்கவிலை—செஞ்சேலை
மன்னுநகி லின்னடுவெண் வாங்குயிர்ப்பி னாத்தாற்
பன்னுதலைப் பட்டதுநீ பார். (௭)

**சித்திரலேகை :**—நின்னை நிலைப்படுத்திக்கொள் ; அச்சரமா தல்லள்போற் றோன்றுகின்றனை யெனக்கு.

(உருப்பசி உணர்வடைந்து வருகின்றனள்.)

**அரசன் :**—மங்களத்திறாய் ! நினதுதோழி உணர்வடைகின்றனள். காண்.

> தண்ணென்கதி ரெழவீங்கிய தமநீங்கிய விரவின்
> எண்ணின்மிகு புகையெஞ்சிய விரவிற்கன லெரியின்
> வண்ணக்கரை யழிவுற்றபின் றெளிவாய்சுர நதியின்
> உண்ணின்றலை மயலில்லளா வுறுமிவ்வுய ருடலாள். (அ)

**சித்திரலேகை :**—தோழி ! நம்பிக்கையுடையவளாயிரு ; நின்பகைவர் அவா விழந்தோராய்த் தோற்புண்டனரன்றோ.

**உருப்பசி :**—(கண்விழித்து.) வல்லமையைக்காட்டிய மகேந்திரனாலா ?

**சித்திரலேகை :**—மகேந்திரனாலன்று ; மகேந்திர னிகர்த்த மனவுறுதிகொண்டவராய புரூரவரென்னு மிவ்வரச முனிவரால்.

**உருப்பசி :**—(அரசனை நோக்கித் தன்னுள்.) அசுரனாலெனக்கு உதவி செய்யப்பட்டதன்றோ.

**அரசன் :**—(உருப்பசியை இயல்படைந்தவளாக்கண்டு தன்னுள்.) நாராயண முனியைக் கலக்க நினைத்த அச்சரப் பெண்களெல்லோரும், அவர்கவா னின்றுதித்த இவளைக்கண்டு நாணமுற்றனர்களென்பது தகுங்காண். இல்லாவிடின், இவள் தவசியினது படைப்பாயிருக்கைக்குத் தக்கவளல்லள்.

> இவள் படைப்பு விதியுட் படைப்பவ
> னின்க திர்மதி யோசிருங் காரமோ
> உவந்த மன்மத னோமலர் கட்கிட
> மூற்ற மாதவ மோமறை யோதலின்
> தவச டன்விட யத்தில் வெறுப்பினைத்
> தாங்கு மப்பழை யோன்முனி வன்களி
> நிவந்த நெஞ்சினுக் கின்னுரு வம்மிதை
> நேர்ந்த ளித்திட வெங்ஙனம் வல்லனே. (க)

**உருப்பசி :**—அடி ! அந்த நட்புச்சனம் எவ்வாறுதானிருக்கும் ?

**சித்திரலேகை :**—அபயமளித்த மகாராச ரறிகின்றனர்.

பு. மா. ஸ்ரீநிவாசா சாரியர்.

---



# DEBT.

## கடன் கோடல்.

---

உலகத்திலுள்ள துன்பங்கள் பலவற்றினும் ஒருவனுக்குப் பொறுத்தற் கரிய துன்பமாவது கடன்பட்டு வாழ்தலேயாம். நம்மிந்தியா தேசத்தில் கடன் பெறுவதானது இப்போது மிகவும் சாதாரணமான வழக்கமாகிவிட்டது. செல்வர்முதல் வறியரீறாகக் கடன் படுவதிலேயே கண்ணோக்கமா யிருக்கின்றார்கள். இவர்கள் தங்கள் கையிலுள்ள பொருள்களை யெல்லாம் வீணிலே செலவழித்துவிட்டுப் பின்பு கடன்பட்டுக் கலங்கி நிற்கின்றனர். இன்னோ ரனுபவித்துவரும் நிலையானது கன்மனமுடையாரையும் அனலிவிட்ட மெழுகுபோல் உருக்கக்கூடியதாயிருக்கிறது. தேகத்திலே ஒரு நோய் வந்தால் அதனை ஔஷதாதிகளால் போக்கிக் கொள்ளலாகும், மனதுக்கு ஒரு நோய் வந்தாலோ அது உடலை மட்டில் வைத்து உயிரை வாட்டி நாள்தோறும் சிறிது சிறிதாக அவ்வுயிரையே யுட்கொள்ளும். ஆகையால் அத்தகைய துன்பம் வாரா வண்ணந் தடுத்துக்கொள்ளவேண்டியது அறிவுடைய மாந்தர்தந் தவறாக்கடன்பாடாம். ஆனால் கடன்கொள்ளல் சிற்சிலருக்குச் சிற்சில ஸமயங்களில் இன்றியமையாததே. அரசரும் வணிகரும் கடன் கொள்ளாமலே காலந்தள்ளுதல் ஒருவாற்றானும் இயையாது ; இன்னோர் ஆவசியகமான காலங்களில் கடன் கொடுத்தும் கொண்டும் வந்தால்மட்டில் இவர்களுக்கும் ஏனையோர்க்கும் பயன் விளைதல்கூடும். அரசர் வணிகரல்லாத மற்றவர்களுக்கும் கடன் பெறவேண்டிய இன்றியமையாத சமயங்கள் சிலகாலங்களில் நேருதலுண்டு. அப்படிப்பட்ட சமயங்களில் இயல்புக்குத் தக்கவாறு கடன்பெற்றுக்கூடிய சீக்கிரத்தில் அதனைத் திருப்பிக்கொடுத்துவிடுதல் குற்றமாகாது. அப்படிப்பட்டவர்களைப் பற்றி நாம் கவலை கொள்ளவேண்டிய தவசியமில்லை. நம்மவர்களிற் பலர் தமக்குள்ள பொருள்களை யெல்லாம் வீணிலே செலவழித்து அபரிமிதமான கடனைப்பெற்று மீட்டுங் கொடுக்க வகையற்று நெஞ்சம் புண்ணாய், புண்ணிற் கோலிடுவதுபோல் கடன்காரர் குத்திவருத்த ஆற்றொணாத்துயரத்தி லாழ்கின்றனர். இன்னோர் படுங் கடனும் செய்யும் செலவும் நேரியனவோ என்பதைப்பற்றியும், அங்ஙனம் செய்வதனால் விளையும் எண்ணிறந்த தீங்குகளைப்பற்றியும், அவைகளைப் போக்கிக் கொள்வதற்கான நல்லுபாயங்களைப் பற்றியும், ஒவ்வொருவரும் கவனிக்க வேண்டியது மிகவும் ஆவசியகமாதலால் அவைகளைப்பற்றியே ஈண்டு விவரமா யாராய்வாம்.

நம்மவர்கள் சாதாரணமாய் இக்காலத்தில் கடன்படுவதற்குள்ள காரணங்கள் பலவற்றையும் ஆராய்ந்து பார்க்கின், அவைகளை இரண்டு பிரிவாக ஒருவாறு வரையறுத்துக் கூறலாம்.

**முதலாவது** : வீண் வழக்குக்களில் தலையிட்டு அபரிமிதமாகச் செலவு செய்து கடனுக்குள்ளாதல். **இரண்டாவது** : செல்வர்களைப் பார்த்துத் தாமும் **போலிச்செல்வர்**களாகித் தம்மியல்பறியாது செலவிட்டுக் கடனுக்குட்படல்.

இவற்றுள் முதலிற்கூறிய வழக்காளிகள் நிலைமை மிகவும் பரிதபிக்கத்தக்கது. இவர்கள் வழக்குண்டானதற்குக் காரணத்தை விசாரித்தால், அது மிகவும் ஸ்வற்பமாயிருக்கும். பின்வரும் பேராபத்துக்களை இவர்கள் ஒரு நிமிஷ நேரமாவது ஆராய்ந்து பார்த்திருப்பார்களானால், இவர்களே வழக்கினின்றும் விலகியிருப்பார்கள். வழக்கென்று நியாயஸ்தலங்களுக்குச் சென்று விட்டாலோ, பின்பு இவர்கள் செலவு செய்யும் ரூபாயைக் கணக்கிட்டு முடியாது ஒரு வழக்கினின்றும் பல வழக்குக்கள் கிளைக்கும். ஆரம்பத்திலிருந்த சிறு பகையானது காற்றுடன் சேர்ந்த நெருப்பைப்போன்று விரைவினில் விருத்தியாகும். பொய்ச்சாட்சிகளும் பொய்ப்பத்திரங்களும் மேன்மேலும் பிறக்கும். சாட்சிக்காரரோ, 'எரிகிற வீட்டில் கொண்ட மட்டில் லாப'மென்று வந்த மட்டும் பெறுவர். வழக்காளியோ, 'சாட்சிக்காரன் காலில் விழுவதினும் சண்டைக்காரன் காலில் விழலாகாதா?' என்று நினைப்பானே யொழிய அதனுடனாவது சமாதானத்துடன் திரும்பான். கையிலுள்ள பொருளெல்லாம் செலவழிந்ததும், நமது பட்சம் ஜயமானால் சகல கடன்களையு மொருங்கே தீர்த்து விடலாமென்று மேலும் மேலும் கடன்பட்டுக் கடைசியில் மீளாத் துயரத்துக்காளாவான். ஏனெனில், வழக்கில் ஜயாபஜய மிரண்டு மொன்றே. தோற்றவன் அன்றே கெட்டான். ஜயித்தவன் சில நாளைக்கெல்லாங் கெட்டான். கானலை நீரெனக்கருதிக் கலங்குமாறு வழக்கினாற் பெரிதும் பயனடையலாமென்று கருதியவன் தன் இதர சொத்துக்களை யெல்லா மிழந்து தானும் கடனுக்குள்ளாகிப் பரிபவப்படுகின்றவனாகின்றான்.

இரண்டாவது கூறிய போலிச்செல்வர்களின் நிலையோ, வழக்காளிகளின் நிலையினும் அதிகமாக வருந்தற்பாலது. இன்னோர்க்கு, வருவாய்க்குத் தகுந்தபடி செலவு செய்தல் பேரவமானமாம்! ஆயிரமுடையார் ஐம்பது கொடுத்தால், தாமும் அங்ஙனமே செயதல் வேண்டும்; அல்லாக்கால், அது தமக்கு இழுக்காகும்! அந்தோ! இன்னோர் தத்தம் இயல்பினை உணராதவாறென்னே! தமது கையிலிருந்து மிதமிஞ்சிச் செலவழிக்கினும் அஃததுணைக் குற்றமாகாது. கடன்பட்டு ஆயிரமாயிரமாகச் சுபாசுபங்களிலும் இதர விஷயங்களிலும் பொருளை வாரி யிறைப்பது எவ்வளவு அறியீனம்!

கடன்பட்டு வாழ்வதினும் இரந்து வாழ்தல் மிக மேலானதன்றோ? கடன் கொடுத்தவனைக் காததூரத்துக் கப்புறங்கண்ட விடத்தும், கடன் பட்டவன் தலைகுனிந்து வருந்துவதை என்னென்றுரைக்கலாம்? அக்காலத்துள்ள அவன் மனநிலையை யாரே அறிய வல்லார்? இதனாலன்றே,



'கடன் பட்டார் நெஞ்சம் போலக் கலங்கினானிலங்கை வேந்தன்'

என்று கம்பரும் கூறுவாராயினர்? நம் நாட்டிற் பெரும்பான்மையோர் கடன் பெறுங்காலத்தில் யோசனை செய்வதே கிடையாது; கண்ணை மூடிக்கொண்டு எத்தகைய நிர்ப்பந்தமான விதிகள் ஏற்படுத்திய போதிலும் அவற்றிற்கெல்லாம் இணங்கிக் கடன் கொள்ளுவதிலேயே கருத்தாய் நிற்பர்; அவ்விதிகளின்படி தம்மால் நடக்கக்கூடுமோ, குறித்த காலத்தில் தாம் வாங்கிய தொகையை மீட்டுங்கொடுத்த லியலுமா வென்பதை யொருபொழுதுமோரார். கடன்காரன் வந்து மறிப்புழி, வேறோரிடத்திற் கடன்பெற்று அவன் தொல்லையைத் தீர்ப்பர். ஓரிடத்திற் கடன் பெறுவதும் அதனைத் தீர்க்குமாறு மற்றோரிடத்திற் கடன் பெறுவதுமாக, இவ்விதமாய்த் தம்வாணாள் முழுவதையும் வீணாளாய்க் கழியாநிற்பர். அந்தோ! அரும்பெரு மானுடப்பிறவியாலெய்தும் பயனிதுவேயோ! நம் நாட்டிலுள்ள செல்வர்களில் எத்தனை பெயர் இக்கடனால் வறுமை யெய்தினர்! எத்தனை ஜமீன்தாரர் தமது ஜமீனையிழந்து தமக்குப் பிறர் ஜாமீன் சொல்லவேண்டிய நிலைமை யெய்தினர்! எத்தனை பெயர் யாவராலும் நன்கு மதிக்கத்தக்க உயர்நிலையிலிருந்து, யாவராலும் பரிகசிக்கத்தக்க இழிநிலை யடைந்தனர்! எத்தனை பெயர் கடன்காரன் செய்யும் அவமானங்களைப் பொறுக்கலாற்றாது தற்கொலை புரிந் துயிர்துறந்தனர்! அம்மம்ம! கடனால் விளையுந் தீங்குகளை யாராயின், கடனிலுங்கொடியதொன்றிவ்வுலகிலுமுளதோ?

செல்வர் ஆயிரக்கணக்காய்க் கடன் பெறுவதுபோல ஸ்வற்பவரும்படியுடையாரும் தம்மியல்புக்கு மிஞ்சிய கடனைப் பெறுகின்றனர். மாதச்சம்பளமுடையார் கடைகளில் சாமான்களெல்லாம் கடனாய்ப் பெறுவர். கடைக்காரனோ, ஒன்றுக்கு இரண்டாய் விலையிட்டுக் கடைசியில், குருவியின் தலையிற் பனங்காயைச் சுமத்தியதுபோல, இவர்கள் தலையிலுந் தாங்கொணாக் கடனைச் சுமத்துவன். குடித்தனக்காரர் பலர் விதை முதலியவற்றிற்காகக் கடன் பெறுவதுண்டு; கழனிகளில் எரு தழை முதலியன இட்டுக் காலை முதல் மாலைவரை வருந்தியுழைத்துப் பயிரிட்டுத் தானியத்தை யறுக்குங் காலத்தில், கடன்காரன் வந்துமறித்து, அத்தானிய முழுவதையுந் தன் கோணிகளில் நிரப்பிக்கொண்டு போய்விடுவான்.

ஆதலின், செல்வர் முதல் வறியரீறாக யாவர்க்கும் கடன் பெறுவதாலுண்டாகுந் தீங்குகள் பலவாம். கடன் பெறுவோர் அங்ஙனம் பெறுவதற்கு முந்தி, அதனால் வருந் தீமைகளையும், 'ஆகா றளவிட்டி தாயினுங் கேடில்லை, போகா றகலாக் கடை' என்ற திருக்குறளையும் 'கடனுண்டு வாழாமை காண்டலினிதே' என்ற நந்தமிழ் மூதாட்டியின் வாக்கையுஞ் சற்றே கவனித்தல் இன்றியமையாததன்றே?

## நிலைமண்டிலவாசிரியப்பா.

ஆங்கில மன்னரா மறிவினின் மிக்கோர்
பாங்குட னாளுமிப் பரந்தநாட் டினிற்சீர்
திருத்த மென்னுந் திகழொளி தோன்றிப்
பொருத்த மில்லாப் பொல்லா விதிகளை
மாற்றுதல் நலமென மதியுட னுரைக்கிற்
கூற்றுவ னுரையெனக் கொதிப்பது மென்னே!
எவ்வெவர் கூறினு மெப்பொரு ளாயினுஞ்
செவ்விதேற் கொண்டபின் செல்லலு மிழிவோ?
நம்மவர் நலந்தனை நயம்பட நாடினோர்
செம்மை மொழிகளைச் சிதைப்பது மழகோ?
பொல்லாக் கடனதிற் பொட்டெனத் தலையிட்
டெல்லாப் பழிச்சொலு மேற்றுத் திரிகுவீர்!
என்னோ நீவி ரெட்டுணை யேனு
மன்னோ ருரைதனை யறியா தேங்குதல்?
கல்லாப் புல்லர்போற் கடனெனுங் கடலி
லல்லும் பகலுநீ ரமிழ்ந்து விழிப்பதென்?
கடனென் பதனை விடமெனக் கருதீர்!
திடமுடன் பெறுவீர்! திகைத்து நிற்பீர்!
மாளா வழக்கினில் மாண்டகு பொருளெலாம்
வாளா விறைத்து வகையிலா தேங்குவீர்!
மைந்தர் மணமெனிற் சிந்தை களிந்துநீர்
நுந்த மியல்பினை நொடிப்பொழு தோரீர்!
'செல்வர் மணந்தனிற் செலவிடும் விதம்போல்
நல்லது, யாமும் நல்குவோ' மென்பீர்!
பத்தி ராயிரம் மொத்தமா யளிப்பிரே
லெத்தகை வட்டியுஞ் சித்தமே யென்றுநீ
ரான்றோர் நுந்தமக் கன்புடன் நிறுவிய
வான்றோய் வீட்டையும் வளம்பெறு நிலத்தையுந்
தேடரும் பொருளையுந் தெளிவிலா தையகோ!
ஈடென வன்னோர்க் கெழுதிநீர் வைப்பீர்!
இவ்வா றிடுக்கணுற் றெய்திய பொருளை
ஒவ்வா விதந்தனி லொழிப்பது மென்னே!
மணமகன் றனையும் மற்றங் குளாரையுங்
கணமதில் வெருட்டிக் கண்ணினால் மயக்கி
நகுவார்க் கிடமாய் நடுவினிற் றோன்றி



வெகுவா யரற்றி வெற்றொலி செய்து
மானம் விற்றுணும் மானமில் வேசைய
ராடலுக் காயிரம்! பாடலுக் காயிரம்!
நாடிய வவள்தன் நட்டுவற் காயிரம்!
பந்தலுக் காயிரம்! பார்ப்பவர் வியக்குஞ்
செந்தழற் காயிரம்! சேவகர்க் காயிரம்!
உடைக்கோ ராயிரம்! உணவுக் காயிரம்!
கடைக்கட் டங்கிய கடனுக் காயிரம்!
விரும்பி வந்தோர் வெகுமதிக் காயிரம்!
தெரிந்தோர்க் காயிரம்! தெரியார்க் காயிரம்!
என்றே நீவி ரெய்திய பணமெலா
மன்றே வீணினி லறவே யொழிப்பீர்!
என்னே பெருமை! என்னே புகழ்ச்சி!
மருமக ளுங்கள் மனையகம் புகுமுன்
தெருவினி லும்மைத் தேடுவார் பலரே!
'அவரா' வென்பீர்! 'ஐயோ' வென்பீர்!
'எவருமுள் ளிலையென் றியம்புமி' னென்பீர்!
நாணா துமையவர் நாடி யுட்புகிற்
காணா தோடிக் காற்றாய்ப் பறப்பீர்!
தந்தை தாயர் மைந்தர் முதலினோர்
சிந்தை யுருகிச் சிதறுண் டழவும்
இல்லும் நுந்தமக் கிலையே யென்று
பல்லோ ரெள்ளிப் பரிகசித் திடவும்
வீடும் வாசலும் வெளியார் கொள்ளவும்
வாடி யந்தோ! வருந்துவீர்! வருந்துவீர்!!
முன்னோர் நுமக்கு முதற்பொருள் படைத்து
மென்னோ நீரிவ் விழிநிலை யடைந்தீர்?
உள்ள நும் மியல்பினை யுள்ளவா றாய்ந்திரே
லெள்ளள வேனு மிக்கதி யெய்துமோ?
அன்பாய் நீவி ரகமகிழ்ந் தீன்ற
இன்பப் புதல்வர்க் கென்னோ வைப்பீர்?
மதியுட னுழைக்கினும் மாற்றொணாக் கடனை
நிதியென் றவர்க்குநீர் நிறுத்தலு நீதியோ?
ஏழையென் றுமைப்பல ரெள்ளினுங் கேடிலை;
கூழைக் குடித்ததாய்க் குழறினு மிழிவிலை;
கடன்மிகக் கொண்டு கடனளித் தார்க்குநீ
ரடிமை யானிரென் றறைதலே தீதாம்.

தீதோ விலேயோ தெளிவுட ஞய்வீர்!
ஏதோ வுரைத்தனென் றெம்மையு மெள்ளலீர்!
75. கடன்பெறுங் மகாள்கையைக் கனவினுங் கொளாது
விடுமின் விடுமின் விடுமின் விடுமினோ!!!

சேயூர் - முத்தைய முதலியார்.

## THE GREATNESS OF SATAKOPA.

## மாறன் பெருமை.

'மாறன்' என்பவர் விசிஷ்டாத்துவைத சித்தாந்திகளான ஸ்ரீவைஷ்ண வர்களால் தத்துவார்த்தங்களை யருளிச் செய்தவரென்று கொண்டாடப்படும் பதின்மருள் தலைமைசான்றவர் இவரைப் பிரபன்ன ஜன கூடஸ்தரென்றும்

"அம்பொன் னரங்கர்க்கு மாவிக்கு மந்தரங்க
சம்பந்தங் காட்டித் தடைகாட்டி—உம்பர்
திவமென்னும் வாழ்வுக்குச் சேர்ந்த நெறிகாட்டு
மவனன்றோ ஆசாரி யன்.

என்று சொல்லுகிறபடி ஆசாரிய விலக்கணம் பூர்த்தியா யமையப் பெற்ற வராதலின் பரமாசாரிய ரென்றும் சொல்வதுண்டு. இவருடைய நாமங்கள் பலவுளவாயினும் சர்வ சாதாரணமாய் வழங்கிவருகிற நாமங்களாவன :—திருவாய் மொழிப்பெருமாள், வேதமெழச்செய்தபெருமான், நம்மாழ்வார், ஞானப்பிரான், ஞானத்தமிழ்க்கரசு, திருமெய்ஞ்ஞானக்கனி, அமுதகவி, முத்தமிழ்க் குரிசில், பாவலர் தம்பிரான், வினவார்துணர்ந்த விரகன், குருகைப்பிரான், பொருனைத் துறைவன், திருநாவுடைய பிரான், தென்னரங்கன்பொன்னடி, திருநாவீறன், நங்கை சிறுமுனி, நம்பிகணுதன், காரிமாறன், முனி வேந்தன், வகுள பூஷணன், ஜன்மபோகி, பராங்குச முனி, சடகோப மகர்ஷி.

என இவைபோன்ற திருநாமங்கள் பலவுள. இவ்வளவு நாமங்களும் உபசாரமாய் வழங்குகிறவோ அல்லது உண்மையா யிவருக் கவ்வளவு ஏற்றமுண்டோ வென்று விசாரிக்குங்கால் இந்த நாமங்களொவ்வொன்றும் அவருடைய பிரபாவத்தி னெவ்வொரு வைலக்ஷண்ணியத்தை விளங்கும்படி ஒவ்வொரு சந்தர்ப்பங்களிற் சாற்றப்பட்ட தென்பது விளங்கும். அவை விரிக்கிற் பெருகும். இவ்வாழ்வார்,

"செந்தமிழ் மணக்குந் தென்பாண்டி நாட்டில்
கங்கையிற் புனிதமாங் காவிரி கைதொழு



மேதக வுற்று விளங்கிரு மருங்கினும்
பொன்கொழித் தோடும் பொருனைத் துறையிற்
குவலயம் போற்றுங் குருகூரதனில்"

திருவழுதி வளநாடர் வம்சத்தில் காரி மகாராஜனுடைய மனைவி மகப்பேறில்லாது வருந்தி திருக்குறுங்குடி நம்பியை வெகுநாள் பிரார்த்திக்க அவரும் "நாமே வந்து பிறக்கிறோம்" என்று வரப்பிரதானம் பண்ணின பிரகாரம் உடைய நங்கையாரிடத்தில் "என்நோன்பு நோற்றாளோ இவனைப் பெற்றவயிறுடையாள்" என்று யாவருங் கொண்டாடும்படி பகவத் அவதாரமாக அவதரித்தருளினார். சர்வேசுவர னிவ்வாறு அவதரிக்கவே,

"சென்றாற் குடையா மிருந்தாற்சிங் காதனமாம்
நின்றான் மரவடியாம் நீள்கடலு—ளென்றும்
புணையா மணிவிளக்காம் பூம்பட்டாம் புல்கும்
அணையாந் திருமாற் கரவு"

என்றபடி சர்வகால சர்வதேச சர்வாவஸ்தைகளிலுஞ் சர்வேசுவரனை விட்டுப் பிரியாது நிரந்தரகைங்கிரியஞ் செய்துகொண்டு வரும் ஆதிசேஷனும் மழையும் வெயிலும் இவர்மேற் படாதிருக்கும்படியாக இவருக்கு முன்னரே உறங்காப்புளி யென்றழைக்கபபடுகிற திருப்புளிய மரமாய் வந்தவதரித்தருளினார். இவ்வாழ்வார் பிறக்கும்பொழுதே,

"அவயவ மெல்லாம் நெரிந்திட வெருவுற் றமைந்தயோ னித்துவா ரத்தாற்
புவியினிற் றனதா மூழ்வினை யோடுற் பூதமாம் புறம்பில்வா யுவினு
னவையுறு ஞானந் தான்பறி பட்டு நண்ணிய பசியினு னலியுண்
டுவகையி லன்னை யெண்ணெயாற் பாலா லுயிர்பரி கரிக்கவுய்ந் திருக்கும்."

என்று கர்ப்ப உபநிடத முறையிடுகிறபடி ஜனனாவஸ்தையில் சகலான்மாக்களையும் வருத்தி ஞானத்தைப் பறித்துக் கொண்டுபோகிற சடம் என்கிற வாயுவானது இவரிடம் நெருங்க இவரதைக் கோபித்துக் கொண்டு பரிபூரண ஞானாதிகராய் ஜிதேந்திரியராய்ப் பிறந்தமையின் இவருக்கு சடகோப ரென்கிற திருநாம முண்டாயிற்று. இவர் பிறந்ததுமுதல் கண்களை விழித்து முறுவல் செய்யாது முலையுண்ணுமல் மௌனத்தோடே வைகாலசைவின்றி யிருப்பினும் யாதொரு வாட்டமுமின்றி திவ்விய தேஜஸ்லோடேகூடி விளங்கவே பெற்றோர்கள் தங்களுக்கு முன்வாக்களித்த பகவத் வாக்கியத்தை மறந்து தங்கள் பிள்ளையென்று புத்திபண்ணி அதைப்பேசுவிக்கைக்காகத் தாமிர பர்ணியின் தென்கரையிலே நித்தியவாசம் பண்ணிக்கொண்டெழுந்தருளி யிருக்கும் பொலிந்துநின்றபிரானைச் சேவிக்கப்பண்ணி இக்குழந்தைக்கு 'மாறன்' என்று திருநாமஞ் சாற்றி அருகிலிருந்த புளியமரத்தினடியிலே பொற்றொட்டிலில் வளர்த்திப் பாதுகாத்து வந்தும் பூர்வம்போல கண் வாய் திறவாதிருக்கவே நம்பிவாக்கியத்தைச் சிறிது நினைந்து தம் விதியையும் நொந்து இராஜா

வும் இராஜபத்நியு மரண்மனைக் கேகினார்கள். இவ்வாழ்வார் திருப்புளிய மரத்தினடியில் பதினாறு வருடம் "உண்ணுஞ் சோறும் பருகு நீரும் தின்னும் வெற்றிலையு மெல்லாம் கண்ணன் எம்பெருமான்" என்று திருக்கண் மலர்களை விழியாது ஆகாராதிகளை யொழித்து மௌனியாய்ப் பத்மாசனத்தில் ஞானமுத்திரையோடே எழுந்தருளியிருந்தார். இவரிப்படி யிருக்க திருக்குருகூருக்குச்சமீபமாயுள்ள திருக்கோளூரி லவதரித்துத் திவ்விய தேசயாத்திரையாய் அயோத்திக்குச் சென்று அங்கே யோக நிஷ்டையி லிருந்த ஸ்ரீமதுரகவி ஆழ்வாருக்குத் தென்றிசையில் ஒரு தேஜஸ் தோன்ற அவர் தனது யோக மகிமையினாலிது அப்பிராகிருத தேஜஸ் என்றறிந்து தென்றிசை நோக்கி வரவே தேஜஸ்ஸும் தெற்கேயே போகக் கடைசியா யிப்புளிய மரத்தில் வந்து அடையவே இவரும் திரிகால உணர்ச்சியினால் சடகோபனை பகவதவதார மென்றறிந்து தனக்கு அவனை ஆசாரியனாக மதித்து உறங்காப் புளியான திருப்புளிய மரத்தடியிலே பதினாறு பிராயமுடையவராய்க் கண்களை விழியாமல் பத்மாசனத்தில் திவ்விய தேஜோமயமாய் ஞானமுத்திரையோ டெழுந்தருளியிருக்கும் சடகோபனைப் பார்த்து இவருக்கு உயிருண்டோ காது கேட்குமோ வென்று அறிகைக்காக ஒரு சிறு குண்டுக்கல்லை அவர் முன்னே போட அவரும் திடுக்கென்று திருக்கண்கள் மலரவிழித்துப் பார்க்க மதுரகவியும் இவருக்கு வாக்குண்டோ இல்லையோ வென்று அறிகைக்காக அவனைப் பார்த்து "செத்ததின் வயிற்றிற் சிறியது பிறந்தால் எத்தைத்தின்று எங்கேகிடக்கும்"? என்று கேட்க அவரும் "அத்தைத்தின்று அங்கேகிடக்கும்" என்று விடையளித்தார். இக்கடாவிடையி னர்த்தத்தைக் கீழே கண்டுகொள்க. மதுரகவிகளும் இவர் மகானுபாவரென்றறிந்து இவர் திருவடிகளில் பக்தி பண்ணி நாம் கரையேற வேணுமென்றெண்ணங்கொண்டு சடகோபருடைய திவ்விய மங்களவிக்ரகத்தை யனுபவித்துக்கொண்டு அவர்மீது "கண்ணிநுண் சிறுத்தாம்பு" என்று தொடங்கிய பத்துப் பாசுரங்களைப்பாடி "தேவுமற்றறியேன் குருகூர் நம்பி, பாவினின்னிசை பாடித்தரிவனே" என்று ஒருபடிப்பட்டு ஆநந்தக்கடலில் மூழ்கியிருக்கும்பொழுது சடகோபரும் இவருக்குப் பிரசன்னராய் "லோகோஜ்ஜீவனார்த்தம் நாம் உடையநங்கையின் வயிற்றில் வந்தவரித்தோம். அஞ்ஞானத்தைக் கடிந்து ஞானத்தை யூட்டக்கூடிய தத்துவங்களை வெளியிடுகிறோம், நீர் பட்டோலை கொள்ளும்" என்று நியமித்து உறங்காப் புளி யென்ற புளியமரத்துக் குள்ளிருந்தே பாசுரங்களை வெளியிட மதுரகவி

1. ஞானசூனியமாகிற பிரகிருதியில் ஜீவன் சரீரசம்பந்தம் பெற்றால் எதைத்தாரக போஷக போக்கியமாய்க்கொண்டு எவ்விடத்திலே யிருக்கும்? விடை. அந்தப்பிரகிருதியையே போக்கியமாகக் கொண்டு அங்கே கிடக்கும்.

2. பிரகிருதியிலகப்பட்ட ஜீவன் ஞான விகாசத்தை யடைந்தால் எதை அனுபவித்து எங்கே யிருக்கும்? விடை. அகாரப் பொருளான ஸ்ரீயப்பதியையே தாரகாதிகளாய்க் கொண்டு அவன் சன்னிதியிலே யிருக்கும்.



கள் பட்டோலை கொண்டு ஆதிசங்கல்பத்தை நிறைவேற்றியருளினார்.) சடகோபராலருளிச் செய்யப்பட்ட பிரபந்தத்துக்குத்தான் திருவாய்மொழி யென்று பெயர். மாறன்பணித்த மறையென்பது மிதுவே. இவர் திருவிருத்தம், திருவாசிரியம், பெரிய திருவந்தாதி யென்ற மூன்று திவ்வியப் பிரபந்தங்களினால் ருக்கு, யசுர், அதர்வணம் என்கிற மூன்று வேதங்களின் சாரார்த்தத்தையும் சரம பிரபந்தமான திருவாய் மொழியால் சாமவேத சாரார்த்தத்தையு மருளிச்செய்தார். இது கேவலம் தமிழிலே பயின்று வடமொழிப்பயிற்சியின்று சாஸ்திர வாசனையறியாத சிற்றறிவுடையோர் பேரபிமானத்தாற் கொண்டகருத்தன்று. சடகோபருடைய அருட் செயல்களை திரவிடவேத மென்று, திரவிடவேதம் கீர்வாண வேதமாகிற உபயவேதாந்தப் பிரவார்த்தகர்களாய் அக்கிர வருணத்தி லவதரித்தும் வருணபிமானமின்றி ஞான சிரேஷ்டர்களாய் விளங்கிய ஆரியமணிகள் ஏககண்டமாய், நிருணயித்திருக்கிறார்கள்.

ஸ்ரீவை - இராமசாமி பிள்ளை,

---

## PEACE OF MIND.

## மனவமைதி.

மனவமைதியாவது தாக்கருந் துன்பங்கள் தலைவந்தக்காலும் அவற்றைக்கண்டு உள்ளமுடையாது அவை போலியாமென நீக்கி நிற்கும் உரனுடைமையாம். இதனைக் கலக்கமில் சிந்தை யென்பாருமுளர். இயற்கையால் நேருந் துன்பங்கள் கண்டு மக்கள் மனம் வருந்துவாரெனினும், அன்னார் தாஞ் சினஞ் செலுத்துதற் குரியதோ ரிடமுமின்மையாற் றமே யடங்கியமைவர். மற்றுச்செயற்கையால் நேருந் துன்பங்களான் உள்ளநிலை வேறுபடாதிருத்தலே மேதக்கதாம். செயற்கையால் நேருந் துன்பங்களாவன பிறர் தமது மொழி செயல்களான் அறிந்தாதல் அறியாமலாதல் செய்வனவாம். அன்னார் அறியாது செய்தனராயின் மனவமைதி குலைந்து வெகுள்வதற்கு நியாயமில்லை. எனவே பிறர் அறிந்துவேண்டுமென்று துன்பஞ்செய்துழியே பலர்க்கும் மனவமைதி குன்றுதலியல்பு. அன்னாரை யொறுக்க அறக்கடவுளும் அரசனுமுளர்.

"தம்மை யிகழ்ந்தமை தாம்பொறுப்ப தன்றிமற்
றெம்மை யிகழ்ந்த வினைப்பயத்தா—னும்மை
யெரிவாய் நிரயத்து வீழ்வர்கொ லென்று
பரிவதூஉஞ் சான்றோர் கடன்"

என்று வேளாண்வேதம் முழங்குதலை யாவரே கேட்டிலாதார்? நாவடக்கமின்றி வாய்திறந்து வழங்குஞ்சொல் பிறர்க்குத் துன்பஞ் செய்யுமென்பதை

யுணர்ந்தும் உணராப்பேதைகள் எத்துணையோர்! இத்தகைய பேதைகளாயினோரது புன்சொற்களைக் கேட்குமாறு நேரிடினும் அவற்றாற் சிந்தை கலங்கலின்றி வாளாதிருத்தலே நலம். அவ்வாறன்றி அவர் வாயை யடக்குவேமெனப் புகுவார் செயல் வீணாகுமென்பது திண்ணம். இதனைத்,

“தெரியா தவர்தந் திறனில்சொற் கேட்டாற்
பிரியாதார் போல விருக்க—பிரிவில்லா
வம்பலர் வாயை யவிப்பான் புகுவாரே
லம்பலந் தாழ்க்கூட்டு வார்”

என்ற பழமொழிப் பாடல் வலியுறுத்துமாறு காண்க. தம்மினும் மிக்கார் தமக்குத் துன்பஞ்செய்தாராயினும் அவர் மாட்டுச் சினஞ்செய்யாதமைதல் அறிவுடைமையாம்; தம்மையொத்தார் அங்ஙனஞ்செய்யின் அவரைவெகுளாதமைதல் நலமுடைத்தாம்; தம்மினும் இழிந்தார் அவ்வாறு செய்துழிச் சினங்காத்தமைதல் சிறப்புடைத்தாம். ஆகவே இம்மூவகையிடத்தும் மனவமைதியுடையராதலே வேண்டற்பாலதாம்.

மனம் இயற்கையாகவே யெப்பொழுதுஞ் சஞ்சலப்படுந் தன்மையது. அதனை யடக்கியாளுதல் ஒவ்வொருவருக்கு முற்ற கடப்பாடாம். தீயோர் மல்கிய இவ்வுலகத்தியல்புகளு ளொன்று தம்மினு முயர்ந்தோரைத் தமக்கிணையாவாரென மதித்தொழுகுதலாம். அதனாற் பெரியோர்க்கு வருவதோர் இழிவென்னை? ஒன்று மின்றென்பது தேற்றம். மற்று அது புன்காகம் அன்ன நடை நடக்கப் புகுவதுபோலும்! இதுபற்றியன்றே,

“நெறியா லுணராது நீர்மையு மின்றிச்
சிறியா ரெளியரா லென்று பெரியாரைத்
தங்கணேர் வைத்துத் தகவல்ல கூறுதல்
திங்களை நாய்குரைத் தற்று”

என்று **முன்றுறையரையனார்** கூறியதூஉமென்க.

என்னே மனவமைதியினியல்பு! அதுவே எல்லா நற்குணங்களுக்கும் முதற் பெருங்கருவி; அதுவே பெரியோருக் குற்றதோர் வல்லரண்; அதுவே யின்பப்பேருற்று; அதுவே யன்பினுக் காணிவேர்; அதுவே யருளிற்கு வித்து; அதுவே மெய்த்தவம்; அதுவே தவப்பயன்; அதுவே நல்லறன்; அதுவே தலைப்படுவிரதம்; அதுவே சிந்தைக் கணிகலன்; அதுவே நிலமகள் பெருநலன்; அதுவே யுளத்திற்கு நந்தா விளக்கு; அதுவே புகழொளி வழங்கும் மதியம்; அதுவே தீங்கிருள் சீக்கும் பரிதி!

இத்துணைச் சிறப்புக்களுமுடையதாய் விளங்காநிற்கும் அம்மனவமைதிப் பேறுடையாரே பாக்கியவான்கள்; அவரே நோயற்ற வாழ்க்கையர்; அவரே பேரறிவாளர்; அவரே நல்லொழுக்கமுடையார். ஆதலின் மனவ



மைதியுடைமையே நமது கடமைகளுட் சிறந்ததாமென வுணர்ந்து அது பெறத்தக்கவாறு ஒழுகுவோமாக. நூல்களனைத்திற்கும் முடிந்த கருத்து இதுவேயாகும்.

என்று மென்குறை யெங்கும் பரப்புவோ
னென்றன் மாணவ னென்னினு மற்றென்பா
னின்று வேலை நிகழ்த்துந னென்னினு
மன்ற வென்குரு வாக மதிப்பெனால்.

வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியார்.

---

## RADHARANI: A NOVEL.

## இராதாராணி.

---

### மூன்றாம் அத்தியாயம்.

அஞ்சுவருஷங்கள் ஆயின. இராதாராணி பதினாறுவயதுள்ள பரமசுந்தரியாயினாள். அவள் அந்தப்புரத்திலேயே இருந்தமையால் அவளது ரூபசவுந்தரியாதிகளை எவரும் பார்ப்பதற்கு அவகாசமில்லை. அவளது கல்லியாணகாலம் நெருங்கிற்று. அவள் யாரை வரிக்கின்றாளோ அன்னானுக்குக் கலியாணம்பண்ணலாம் என்று காமாக்கியன் யோசித்து, அவள் விருப்பத்தை அறிந்துகொள்வதற்குத்தன்மகளான வசந்தகுமாரியை யழைத்துத்தன் மனக்கருத்தை யவளுக்குத் தெரிவித்தான். வசந்தகுமாரி இராதாராணிக்கு முக்கிய சிநேகியாயிருந்தாள். தந்தை கூறியதைக்கேட்ட வசந்தகுமாரி மந்தகாசத்துடன் தகப்பனைப்பார்த்து, ‘ருக்மிணீகுமாரராயனென யாரேனு மிருக்கின்றானா?’ என வினவினாள்.

காமாக்கியன் வியப்புற்று ‘அபபெயருள்ளவனை நான் பார்க்கவில்லை. ஏன்?’ என்று கேட்டான்.

**வசந்தகுமாரி.**—இராதாராணி ருக்மிணீகுமாரனை யன்றி மற்றெவரையும் மணப்பதில்லை யென்றாள்.

**காமாக்கியன்.**—அஃதெவ்வாறு? அவ்வன்னிய புருஷனுக்கும் இராதாராணிக்கும் பரிசயமாவதற்குக் காரணமென்னை?

வசந்தகுமாரி தலை வளைந்துகொண்டு புன்முறுவல் செய்து இராதாராணியினிடம் தான்கேட்ட இரதோற்சவத்தன்றிரவு நடந்தவற்றையெல்லாம் சவிஸ்தாரமாய்த் தந்தைக்குத் தெரிவித்தாள். காமாக்கியன், ருக்மிணீ குமாரனைப் புகழ்ந்து, இராதாராணி என்னவோ பிரமை பிடித்திருப்பதுபோல் தோற்றுகிறது. கலியாணம் நன்றியறிவை யனுசரித்துச் செய்யத்தகுந்ததன்று. ருக்மிணீ குமா

ரனுக்கு நன்றியறிவைப் பாராட்டுவது இராதாராணிக்குக் கடமையே. சமயம் வாய்க்கும்பொழுது அவனுக்கு அவசியம் பிரதியுபகாரம் செய்தே தீரவேண்டும். ருக்மிணீ குமாரனுக்கு இவளைக் கல்யாணம் பண்ணிக்கொள்ளு மவ்வளவு பாத்தியதை ஒன்றும் காணப்படவில்லை. இவ்வளவுக்கும் அவன் எச்சாதியானோ? எவ்வளவு வயதானவனோ? என்பவை யாருக்கும் தெரியா; அவனுக்கு வேறே பெண்டு பிள்ளைகள் இருக்கின்றார்களோ என்னவோ, அவன் இவளை மணப்ப தெங்ஙனம்? இவற்றை யெல்லாம் யோசிக்குமாறு இராதாராணிக்குக் கூறவேண்டு மென்று சொன்னான்.

**வசந்தகுமாரி.**—அப்படிப்பட்ட சம்பந்தம் ஒன்றும் காணப்படவில்லையென்று இராதாராணிக்கே நன்றாய்த் தெரிந்திருக்கிறது. ஆனால் அவ்விரவுமுதல் ருக்மிணீகுமாரனது உருவத்தைக் கற்பித்து மனத்தின்கண் வைத்திருக்கிறாள். ஜனங்கள் சுவாமியைப் பூஜிப்பதுபோல் அப்பிரதிமையைப் பிரதிதினமும் மனத்தினிடத்தே பூஜிக்கின்றாள். அவள் நம்மகத்துக்கு வந்து ஐந்தாண்டுகளாயின. இதுகாறும் ஒரு நாளாயினும் ருக்மிணீ குமாரன் பேச்சை எடுக்காத நாளில்லை. வேறு யாரை மணந்தாலும் இராதாராணி தனக்குச் சுகமில்லை யென்று உரைத்தாள்.

**காமாக்கியன்.**—(தனக்குள்) இஃதோர் பைத்தியப்பிணி; இதற்குச்சிகிச்சை ஆவசியகம்; ஆனால் ருக்மணீகுமாரனைக் கண்டு பிடிப்பதே முதற் சிகிச்சையென றெண்ணிக் கொண்டு, தானே ருக்மிணீ குமாரனைத் தேடுவதற்குப் பிரயத்தனப்பட்டு, கல்கத்தா முதலிய விடங்களில் தேடினதன்றித்தன் நண்பர்களுக்குந் தேடும்படி சொன்னான். இவ்வளவேயன்றி தன் கக்ஷிக்காரர்களுடன் சொல்லிக் கிராமாந்தரங்களிலுந் தேடும்படி செய்தான். கடைசியாக ஒவ்வொரு சமாசார பத்திரிகையிலும் விளம்பரம் செய்தான். எப்படி யெனில் :—

## விஞ்ஞாபனம்.

பாபு ருக்மிணீகுமார ராயரவர்களுக்குத் தெரிவிப்ப தென்னவென்றால். இதனடியிற் கையொப்ப மிட்டவரிடம் அவசியம் வந்து பேசவேண்டும். அங்ஙனம் பேசுவதனால் ருக்மிணீ குமாரராயருக்கு மிகவும் சந்தோஷ முண்டாகுமே யன்றி அசந்தோஷத்துக்கு எத்துணையும் காரணமில்லை.

இங்ஙனம்.
**ஸ்ரீ. காமாக்கிய நாதன்.**

என்ன செய்தும் ருக்மிணீகுமாரனது சமாசாரங்கிடைக்கவில்லை. தினங்கள் சென்றன. மாதங்கள் கழிந்தன. அந்த வருஷம் போயிற்று ருக்மிணீ குமாரன் வரவேயில்லை.



சிலநாட்களுக்குள் இராதாராணிக்கு மற்றொரு கடுமையானவிபத்து சம்பவித்தது. அஃதென்னவெனில் காமாக்கிய நாதன் லோகாந்தரம் அடைந்ததேயாம். இராதாராணி அதனால் மிகவும் துக்கமுற்று இரண்டாம் முறை தந்தையை யிழந்தவளாக வெண்ணிக் கொண்டாள். காமாக்கியனது சிராத்தம் முதலியன கழிந்த பின்னர் இராதாராணி தன் பிதுரார்ஜிதமான வீட்டுக்குப் போய் அங்கே வசித்துக்கொண்டு தன் ஆஸ்தியின் விசாரணை முதலியவற்றைத் தானே பார்த்துவர வாரம்பித்தாள்.

காமாக்கியனது திறமையால் அவளுடைய ஆஸ்தி அதிகமாய் அபிவிருத்தியாய்க் கொண்டிருந்தது.

ஆஸ்தியை யெல்லாம் சுவாதீனம் செய்துகொண்டு, இராதாராணி அப்பொழுதே இரண்டுலக்ஷம் ரூபாய்களைக் கவர்ன்மெண்டாரிடம் கொடுத்து அதைக்கொண்டு தன் சொந்த ஊரில் ஏழைகள் தங்குமிடம் ஒன்று ஏற்படுத்த வேண்டுமென்றும், அதில் அன்ன சத்திரத்திற்கு "ருக்மணீ குமாரராயர் மாளிகை" என்று பெயரிட வேண்டுமென்றும் விண்ணப்பம செய்துகொண்டாள்.

சர்க்காரார் இந்தப் பெயரைக் கேட்டு ஆச்சரியப்பட்டார்கள். ஆனால் அதைப்பற்றி இராதாராணியுடன் வாதிப்பவர் எவர், ஆதுலர்சாலை ஸ்தாபிதமாயிற்று. இராதாராணியின் தாயார் தன்வறுமை நிலைமையில தன் சொந்த ஊரை விட்டு ஸ்ரீராமபுரத்திற் குடிசை போட்டுக் கொண்டிருந்தாள். ஏனெனில் ஓர் ஊரிற் பணக்காரராயிருந்து, திடீரென்று, ஏழைகளாய் விட்டால் அவ்வூரில் வசிப்பதற்கு எவருக்குமே கஷ்டமா யிருக்குமன்றோ? ஸ்ரீராமபுரம் அவள் சொந்த ஊருக்குச் சிறிது தூரமாயிருந்தது. அவள் சொந்த ஊரை நாம் இராஜபுரம் என்றழைப்போம். இப்பொழுது இராதாராணி இராஜபுரத்திலிருப்பாள். ஆதுலர்சாலை இராஜபுரத்தில் இராதாராணியின் வீட்டுக்கெதிரே ஸ்தாபிதமாயிருந்தது; நாநாதேசங்களினின்று தீனர்கள் அகதிகள் வந்து அங்கே வாசம் செய்து வந்தார்கள்.

ஒன்றிரண்டு வருஷங்களுக்குமேல் ஒரு பெரிய மனுஷ்யன் அவ்வாதுலர் சாலைக்கு வந்தான். அவன் நடவடிக்கைகளைப் பார்த்தால் தீரனும், கம்பீரனும், மிகவும் தனிகனும் தென்பட்டான். அவன் ருக்மணீகுமார ராயர் மாளிகை என்றெழுதியிருந்த வாயிலின் அருகேவந்து நின்று காவலாளிகளைப் பார்த்து இது யாருடைய வீடு? என்று கேட்டான்.

**காவலாளிகள்** :—இதுயார்வீடு மன்று. இங்கேதீனர்களான அநாதைகள் இருக்குமிடம். இதை ருக்மணிகுமார ராயர்மாளிகை என்று சொல்லுவார்கள்.

**பெரியமனிதன்** :—இதன் உள்ளே போய்ப் பார்க்கலாமா?

**காவளாளிகள்** :—கேவலம் அநாதைகளா யிருப்பவர்களே போய் வாசஞ் செய்கையில் தாங்கள் போவதற்கு ஆட்க்கம் உண்டா ?

பெரியமனிதன் உள்ளேபோய்ப் பார்த்துக்கொண்டு வெளியேவந்து, இவ்விடத்து ஏற்பாடுகளைப்பார்த்தால் மிகவும் சந்தோஷமா யிருக்கிறது. இவ்வன்ன சத்திரத்தை ஏற்படுத்தியது யார் ?

**காவலாளிகள்** :—ஸ்ரீமதி ராதாராணி.

**பெரியமனிதன்** :—அப்படியானால் இதை ருக்மணீகுமாரராயா மாளிகை என்று சொல்வதென்னை ?

**காவலாளிகள்** :—எங்களுக்கு அந்தச் சங்கதி ஒன்றும் தெரியாது.

**பெரியமனிதன்** :—ருக்மணீ குமாரராய ரென்பது யாருடைய பெயர் ?

**காவலாளிகள்** :—யாருடைய பேருமன்று.

**பெரியமனிதன்** :—நீங்கள் சொல்லும் இராதாராணி வீடு எங்கே இருக்கிறது ?

**காவலாளிகள்** :—எதிரேயுள்ள பெரியமாடவீடு.

**பெரியமனிதன்** :—இராதாராணி கணவனுள்ளவளா ? கைம்பெண்ணா? உங்களுக்குத் தெரியுமா ?

**காவலாளிகள்** :—கணவனுள்ளவளு மல்லள் கைம்பெண்ணுமல்லள். அவள் கலியாணமே பண்ணிக்கொள்ளவில்லை. பெரிய சாவகாரியின் மகள். அவளுக்கெவருமில்லை. கன்னியாதானம் செய்பவர் கூட இல்லை.

**பெரியமனிதன்** :—அந்த அம்மா புருஷர்கள் எதிரே வருவதுண்டா ? இப்படிக் கேட்கிறேனென்று கோபித்துக் கொள்ளவேண்டாம். இந்தக் காலத்தில் அநேக பெரிய மனிதர்களுடைய வீட்டு ஸ்திரீகள் ஐரோப்பிய ஸ்திரீகள் போலப் புருஷர்களுடன் கூடவந்து ஓய்வுக்காக உலாவுவதுண்டு. ஆகையினாற் கேட்க நேர்ந்தது.

**காவலாளிகள்**:—எங்கள் ஸ்ரீமதி ராதாராணி அவ்விதக் கெட்ட நடவடிக்கை உள்ளவளல்லள். புருஷர்களின் எதிராகவாவது வெளியிலாவது வருவதில்லை. இவ்வார்த்தைகளைக் கேட்டுப் பெரிய மனிதன் அங்கிருந்து இராதாராணியின் இல்லத்தை நோக்கிச் சென்று அதன் அந்தப்புரத்திற் பிரவேசித்தான்.

தி. அ. சுவாமிநாத ஐயர்.

---



# SILAPPADIKARAMA STUDY.
## சிலப்பதிகாரவாராய்ச்சி.

(102 - ஆம் பக்கத் தொடர்ச்சி.)

இதனுடன், இப்புத்தகத்தின் ரசபாகம் முடிந்துவிடுகிறது. ஏனெனில் அவ்வளவு ஆவலுடன் கண்ணகியின் கதியை யறிய விரும்புகின்றவர்களுக்குக் கண்ணகியின் பிரிவாற்றாமையையாவது, கோவல னிறந்ததைக்கேட்டுத் தவித்தலையாவது கூறாது, கற்பரசியாகிய கண்ணகி கணவன் பிரிந்த காலத்துக் குதூகலமாய் ஆய்ச்சியர் குரவையைக் கண்டானந்திப்பதாகக் கூறியுள்ளது. இக்கதையில், இடைக்குலப்பெண்கள் அரண்மனைக்குத் தயிர் பால் கொடுக்கும் வழக்கத்தையும், தினசரிவேலையைச்செய்த மாதரி அன்று சில துர்நிமித்தங்களைக்கண்டஞ்சி அவற்றின் தீப்பயன்கள் போமாறு கண்ணனைக்குறித்துக் குரவைபாட வேற்பாடு செய்ததையும் கூறியிருக்கிறார்.

இக் குரவையைத் தனியே நோக்குவமேல், அது மிக ரம்மியமானதென்றே சொல்லுவோம். அதன்நடை இன்பமாகவும், எளிதாகவும் தங்குதடையன்றியுமிருக்கிறது இக்காதையிலுள்ள பாடல்கள் ஒப்புயர்வற்றனவாகவும், ஒருவராலும் பின்பற்றக்கூடாதன வாகவு மிருக்கின்றன. இடையர்களுக்குக் கண்ணனிடத்துள்ள அன்பையும், மதிப்பையும் காட்டுவதுடன், படிப்பவர்களுக்குத் தூய்மையாகிய இன்பத்தையும் விளைக்கின்றன. இக்குரவையைக் கதையின் போக்குடன் பொருத்திப் பார்க்குமளவில், இஃது அநாவசியமென்று தோன்றுவதுடன், தெரியாதாயினும் கணவனிறந்தவுடனே கற்பரசியாகிய கண்ணகி களித்திருந்தனளென்று கூறுதல் காவிய தருமத்திற்கே பொருந்தாததாக விருக்கிறது. இன்னும், அவ்விடையர் சேரியிற் பல்விதமான துர்நிமித்தங்கள் நிகழ்ந்ததாகக்கூறிய வாசிரியர் அத்தகைய அசம்பாவிதமும் அகாரணமுமான தீய மனோபாவங்கள் கண்ணகிக்கு நிகழ்ந்ததாகவுரைத்திருப்பின் கண்ணகியின் கற்பிற்குப் பொருந்தியதாக விருந்திருக்கும். கண்ணகியின் பிரிவாற்றாமையைச் சொல்லவேயில்லை. நிகழ்ந்த துர்நிமித்தங்களையாயினும் கண்ணகி கவனித்துக் கன்றினாளென்றாவது வரைந்து அவள் மனோவிசாரத்தைப் போக்கவேண்டி ஆய்ச்சியர் குரவை யேற்பாடா யிற்றென்பது கூறியிருக்கலாம். இக்குரவை யந்தத்தில், மாதரி வைகைக்கு நீராடப் போனதாகவும், ஆங்குக் கோவலன் முடிவைத்தெரிந்து கொண்டதாகவும்கூறி யிருக்கிறார். திரும்பிய மாதரியின் முகக்குறிகளைக்கண்ட கண்ணகியின் பரபரப்பை நன்கு குறித்திருக்கிறார். பிறகு, தீச்செய்தியைக் கேட்ட கண்ணகி, கீழேவிழுந்து தலைமயிரைப் பிய்த்துக்கொண்டும் மார்பிலும் முகத்திலும் புடைத்துக்கொண்டும் ஒருமுறை தன்கணவனைக்கூவி

யும், ஒருகால் தானுயிர் தாங்கி யிருப்பதற்குத் தன்னைக்கடிந்துகொண்டும், ஒருபொழுது பக்கத்திலிருக்கும் இடைக்குலமாதர்களை முன்னிலையாக்கியும் ஒருவேளையில் தரும தேவதையை விளித்தும், பலவாறாகப் பரிதவித்துப் பதறிப் புலம்புவாளாயினாள். பிறகு, சூரியனைப் பார்த்து, "பூவுலகில் யாவற்றையும் கண்டுவரும் புண்ணியனே! என் கணவன் உண்மையிற் கள்வனோ?" என்று வினவலும், பரிதி ஆகாயவாணியாக, "அவன் கள்வனல்லன் அவனைக் கள்வனெனக் கொண்டதற்காக இந்நகர் தீவாய்ப்படும்," என்று விடையளிப்பானாயினன். அவ்விடை பெற்றதும் திடீரென வெழுந்து, கோபக்கனல் பொறிவீசத் தன்கையில் மிகுந்துள்ள சிலம்பையேந்தி மதுரை மாநகர் புக்கனள். போகும் வழியிற் சந்தித்த நகரத்தார்களிடத்தும், முக்கியமாய் மாதர்களிடத்தும் தனக் குற்றதை யுரைத்து, "நீதியில்லையோ?" என்று புலம்பிக்கொண்டே சென்றாள். சென்றவள் இறந்துகிடந்த தனது கணவன் சவத்தைக்கண்டு, தனது கற்பின் வலியால் அதற் குயிருண்டாக்கிக் கட்டியணைத்துக்கொண்டனள். அது, வினையின் பயனால், மறுபடியும் பிணமானது கண்டு, அதனைவிடுத்து அரசன் கோயிலேகினள். இங்குக் கண்ணகியின் குணம் அதிக மாறுதலடைகிறது இதுவரையிற் றுன்பமெய்திய கற்புடை மாதரைப் போன்றனள். அவள் இடையர் சேரியைவிட்டுப் புறப்படலுமே காளிபோலாகி விட்டாள். அவளுடைய கோபமானது கண்டார் வெருவுங்கனலாகிவிட்டது அவள் தனது கற்பின் அணிகலன்களாகிய,நாணம், பொறுமை, அச்சம், அடக்கம் முதலியவைகளை முற்றத் துறந்து விட்டனள். இன்னும், அவள் அவ்வரண்மனை வாயிற்காப்போரிடந் தன்னைப்பற்றிக் கூறிப் பிரவேசம் பெறுதல் அடக்க வொடுக்கமுடைய அரிவையர்க்கியலாததாக விருக்கிறது. அரசன் வினாக்களுக்கு விடை யளித்தலும் மிக அசம்பாவிதமும் அதிகப் பிரசங்கமுமா யிருக்கிறது. தன் னுயிர்க்காதலனுடைய முடிவைப் பற்றிப் பேசச்சென்றவள் தன்னரசனைப் புகழ்தலென்னே? அவள் கூற்றைக் கேட்டு அச்சிலம்பு தன் மனைவியுடையதன்றெனத் தெளிதலும், அவ்வரசன் "அந்தோ! ஒரு சண்டாளன் மொழியை நம்பித் தீர விசாரியாது தீர்ப்புச் செய்து, ஒரு நிரபராதியைக் கொன்று, ஒரு கற்பரசியையுந் துன்பத்திற்குள்ளாக்கி ஒருபொழுதும் நீதிதவறி யரசாட்சி செய்தறியாப் பாண்டிய குலத்திற்கே பழியையும் விளைத்தேனே!" என்று கதறிக்கீழே விழுந்து தன் பிராணனை யிழந்தனன். அவனிடத்து அன்பும், ஆர்வமுமுற்ற அவன் மனைவி கண்ணகி போலாது, தன்னாயகன் றாளிற் றலையைவைத் துயிர்நீங்கினள். இக்குலமகள் சிறப்பைக் கண்டுந் தெளியாது, இவ்வீருயிர்ப்பலியைப் பெற்றுந் திருப்தியடையாது தன்னாயக னொருவனுயிரின் பொருட்டு அந்நகருள்ளாரனைவரையுந் தொலைக்க நிச்சயித்துத் தன் கொங்கைகளு ளொன்றைத் தன் கையாற்றிருகி மதுரைமீதெறிய அவ்வூ ரழற்பட் டழிந்தது. இக்கண்ணகியே



புருஷரை யிழந்து துன்புற்ற அநேகங் கற்புடை மங்கையர்களைச் சான்றுகூறுகின்றாள். ஆயினும், அவர்களக்காலத்துச் செய்த செயல்களைக் கவனியாது, நூதனமாக வொரு செயற்செய்ய நினைந்து அப்பட்டணத்தைத் தீவாய்மடுத்தனள்.

அவளிவ்விதஞ் செய்ததெவ்வாறு பொருந்துமோ? யாமறிகிலெம். அவள் கணவனை அநியாயமாய்க்கொன்றதன் நிமித்தம் அவள் கொடுந்துன்பத்திற்குட்பட்டாளென்பதுண்மையே. எனினும், நீடுநாட்களுக்கு முன்னரேகண்ட கனவின் நிகழ்ச்சியாகலின் வினைப்பயனே யெனக்கொண்டு, அதுபோன்ற நிலைமையிற் கற்புடைய மாதர்கள் செய்துள்ளவண்ணமே அவளும் உயிர்துறந்திருத்தலே அவள் கற்பிற்கறிகுறியாம். அவ்வாறு தன் கணவனிறக்கக் கேட்டதுமுயிர் நீங்காது அரசனிடத்துச்சென்று வாதித்தாள். அரசனுமவள் வாதத்தை யவமதித்திலன். தான் செய்த தவற்றினையு மொப்புக்கொண்டு, அதற்கிரங்கித் தன்னுயிரையே பலியிட்டனன். அரசனுடன் விட்டுவிடக்கூடாதா? மதுரைமாநகர் முழுதையுங் கொளுத்தியதனாற் றன்மணவாளனை மீண்டுமடைந்தனளா? ஆதலின் இதனையொரு காவியாதர்ம மென்றே கொள்வோம் இன்னும். அவ்விதம் தீமூட்டிய அம்மணி, அந்தணர், துறவியர், பசுக்கள், கற்புடைமகளிர், கிழவர்கள், குழந்தைகள் முதலியவர்களை விடுத்து மற்றவர்களைப் பொசுக்குமாறு அக்கினி பகவானுக் காணையிடுகின்றாள்! என்னே இவளது கருணை! அந்தணரல்லாத ஜாதியர்களிற் காளையர்களைக் கணவர்களாயுடைய கற்புடைய மங்கையர்களெக்கதியடைவார்களோ? இவள் காதலனுக்குத் தீங்கியற்றியதற் கிக்கதியானால், அக்கற்புடைய மங்கையர்களின் வஞ்சினத்தை யினியார்பூரல் முடிக்கிறது? இவ்வித வநியாயத்திற்குச் சமாதானமாக மதுரை தீவாய்ப்படும்படி முன்னதோர் சாபமிருக்கிறதென்று ஆசிரியர் சொல்லுகிறார். அவ்வண்ணம் ஆயிரஞ் சாபங்களிருக்கலாமாயினும், இக்காரணமன்று அதற்கேற்படத் தக்கது.

இனிக்கட்டுரை காதையிற் கோவலன், கண்ணகி மதுரைமாநகர், இவைகட் கிக்கதி நேரத்தகுந்த முகாந்திரங்கள் கூறுகின்றார். ஒவ்வொருவருடைய வாழ்நாட் சுகதுக்கங்களும் முற்பிறப்பிற் செய்த கருமத்தினாலாகின்றன வென்னும் கொள்கையை வற்புறுத்தவேண்டியே இக்கதையை இளங்கோவடிகள் எழுதினாரென வூகிக்கலாகும். அதற்கேற்பவே, அக்கொள்கையையும் மதுரைக் கிராமதேவதையின் முகமாயுரைக்கின்றனர். இவ்வாறிவர்களுக்குள்ள வினைத்தும் முன்வினையின் பயனேயெனப் பகர்ந்து, கண்ணகி அன்றைக்குப் பதினைந்தாநாளன்று ஓர்வேங்கைமரத்தினிழலில் இருக்கத் தன்கொழுநனைக் காண்பாளெனக் கிராமதேவதை கூறியருளினாள். அவ்வாறே அன்றைத்தினம் அவ்வேங்கையின் நிழலிலேயே வானவர் பலருமேற்றத்தன் கணவனுடன் கண்ணகி சேர்ந்தாளென்று நமதாசிரியர் கூறுகின்றார். இதனுடன் மதுரைக்

காண்டம் முடிவுபெறுகின்றது. இதனுடன்இக்காப்பியமே முடிவெய்தி விட்டதெனக் கூறினுமமையும்.

இனி வஞ்சிக்காண்டத்திற் கண்டிருப்பன வெல்லாம், கண்ணகி விண்ணுலகேறக் கண்கூடாய்க் கண்டு வியந்த மலைக்குறவர்கள், அவளுடைய ஞாபகார்த்தமாய முருகரைக்குறித்து ஆடிய குரவையும், அவ்விதங்கண்ட செய்தியை ஆங்கு வேட்டைக்குப்போந்துள்ள செங்குட்டுவச் சேரனுக்குரைத்ததும், அவன் அத்தகைய கண்ணகியைக் கோயிலில்வைத்துத் தொழவேண்டிச் சிலையுருச்செய்வான் சிலைபெற இமயமலை யெய்தியதும், அச்சிலையைக் கங்கையாற்றில் நீர்ப்படுத்துப் பிறகு தன்னாட்டிற்றாபித்துப் பூசித்ததும், கண்ணகி, செங்குட்டுவன் கயவாகு முதலியவர்களுக்கு வரமீந்ததுமே. ஆகவே வஞ்சிக்காண்டம் இக்காப்பியக்கதைக்குச் சம்பந்தப்பட்டிலது.

எனினும், இக்காண்டத்திலும் பல அரிய விஷயங்களுள. குன்றக்குரவையிலுள்ள பாடல்கள் மிக வின்பமாயிருக்கின்றன. ஆயினும் ஆய்ச்சியர்குரவைப் பாடல்கள் போலா. இதில், மிக ஆக்கிலாதத்துடன் முருகனை வருணித்துத் துதித்துளர் பிறகு, காட்சிக்காதையில் வனவருணனை மிக மேம்பாடுடைத்து. இங்குந்தான் கண்ணகியின் வரலாற்றைக்குறவர்கள்செங்குட்டுவனுக்குரைக்கிறார்கள். அப்பொழு தருகிலிருந்த மதுரைச் சாத்தனாரென்பார், கண்ணகிக்கு மதுரையில் நேர்ந்தவற்றையுங் கூறினார். அப்பொழுதே கண்ணகியைக் கோயிலில் வைத்துவணங்குவதாக நிச்சயித்தனனரசன். தனது சபையோர்களி னனுமதியின்பேரில் இமயமலை போய்ச் சிலைகொண்டு வருவதாகப் புறப்பட்டுவிட்டான் போனவிடத்தி லவனை யெதிர்த்த சில ஆரியமன்னர்களைச்செயித்து, இமயமலையடைந்து அதினின்று மொருசிலையை யெடுத்து அவ்வாரியமன்னர்களின் தலைகளிற் சுமத்திக் கங்கையிற் குளித்து ஊருக்குப் புறப்பட்டான். அவ்விடத்தில், மாடலன் என்னுமொரு பிராமண யாத்திரிகர் அரசனைக்கண்டு, கோவலன் கண்ணகியர்களின் முழுவரலாற்றையுங்கூறி, அவர்களுடைய முடிவைக்கேட்ட அவர்களின் தாய் தந்தையர்களும், மாதவி யென்ற நாடகக்கணிகையும் பட்டபாட்டையும் பகர்ந்தனர். பிறகு தான் யுத்தத்திற் பிடித்துவந்த ஆரியமன்னர்களைத் தனது கவுரவசின்னமாகச் சோழ பாண்டியர்களுக்குக் காட்டும்படி சேரனனுப்பினான். இங்கு மாடலனுக்குத் தன்னிறையுள்ள பொன்னைத் தானமாகக் கொடுத்தான் செங்குட்டுவன். எனவே, இப்பொழுதும் திருவனந்தை மகாராஜா துலாபாரமென்று வருஷந்தோறும் கொடுத்துவரும் பொற்றானமானது இச்சேர நாட்டரசர்களால் நெடுநாளாகக் கொடுபட்டு வருகிறதென்று தெரிகிறது. பிறகு சேரன் தன்னூரடைந்து. நகர்வலம்வந்து கோயிலிற் புக்கான். அப்பொழுது, "சண்டையிற் சரணடைந்த மன்னர்களைச் சிறையாக்கியது வீரமே வீரம்!" என விகழ்ந்தார்களென்று தூதர்கள் கூறினார்கள். உடனே அவ்வரசர்களுடன் போர்



புரிந்து அவர்களை முறியடிப்பேனெனச் சினந்து சீறிய சேரனைநோக்கி மாடலன் கூறுவானாயினான்: "சேரராஜனே! கோபந்தணிக. பொறையையணிக. நமக்கினிச் சண்டை முதலியவற்றிற் கழிக்கக்காலமில்லை. யாகாதி சத்கிருத்தியங்களைச் செய்வதேமேன்மை" என்று சொல்லி, இளமை, செல்வம், யாக்கை, இவற்றின் நிலையாமையையும் வற்புறுத்திக்கூறினான். அவ்விதமே அரசனுஞ் சாந்தனாகி, யாகாதிகளைச்செய்து, கண்ணகி விக்கிரகத்தையும் புதிதாய்க் கட்டுவித்த கோயிலிலிருத்தினான்.

இனி வாழ்த்துக்காதையை வாசிப்பவர்கள் உருகி யுட்கசிந்து கண்ணீர் விடாதிருக்கமாட்டார்கள். இவ்விடத்திற் கோவலன்கண்ணகியர்களின் தாய் தந்தையர்கள், மாதவி, அவள் மகள் மணிமேகலை இவர்களின் நிலையைக்குறிப்பாலுரைக்கிறார் நூலாசிரியர். அவ்விதமுரைக்கவேண்டிச் செய்த தந்திரம் மிக வியக்கத்தக்கதே.

இனிக்கடைசியாய் வரந்தரு காதையிற் கோவலன்கண்ணகியர்களின் தாயார்களையும், மாதரியென்னும் இடைச்சியையும், மறுபிறப்பிற்காட்டி, அவர்கள் வருந்துவதாகவும் காட்டுகிறார். ஏன் மறுபிறப்பிலும் அவர்களை யித்துன்பத்திற் காளாக்க நினைந்தனரோ ஆசிரியர்? நாமறிந்திலம். தமது கொள்கைகளாகிய கருமம், மறுபிறவி, முத்திமுதலியவைகளைத் தெரிக்கவேண்டியே இவ்விதஞ் செய்திருக்கலாம். இக்கதைமுழுவதும் முதிர்ந்த அறிவு நிறைந்த ஒழுக்க நியமங்களும், மதக்கோட்பாடுகளுமாகவே யிருக்கின்றன. இதுவே தமக்குக்கிடைத்த சில துண்டு விஷயங்களை வைத்துக்கொண்டு இளங்கோவடிகள் கதை யமைத்த முறைமை.

பி. ஏ. பிரணதார்த்திஹரசிவன்.

---

## BRILLIANTS ON TINSIL?

## காக்கைப் பொன்னிலுங் கல்லிழைப்பதா?

---

ஆரியர்காள்! நிகழும் 1901௵ நவம்பர்௴ 29௳ வெள்ளிக்கிழமை யன்று வெளிவந்த **சுதேசமித்திரன்** அங்கத்தில் தீட்டப்பட்டிருக்கும் **அகலதீபம்** எனும் நிருப நேயருடைய "ஆசாரச் சீர் திருத்தத்தை மேற்கொண்டவருக்கு நேர்ந்த தர்மசங்கடம்" எனும் கடிதத்தினால் வயது பதின் மூன்றுடையவளும், தமிழில் இலக்கியப்பயிற்சி யமைந்தவளும், ரூபம் விவேகம் முதலிய உயர் நலங்கள் வாய்ந்தவளுமாகி விளங்கும் ஒரு கன்னிகைக்காக அக்கன்னிகையின் பிதா (தற்காலம் செல்வப் பெருக்கற்றவராயிருத்தலால்) மணமகனைக் கிரயத்திற்கு வாங்கக்கூடவில்லை யென்றறிய ஒருவகையிற் பரிதாப

மும் மற்றொரு வகையில் நாணமும் அதைப்படிக்கும் நடுநிலையுள்ளோர் எவர்க்கும் விளையாமற் போகா.

புத்திரர்களைப் பெற்றவர்கள் அப்புத்திரர்களை யௌவனதிசை வந்ததும் அதிகவிலை கொடுக்கும் பெண்களுக்கு விற்பனை செய்வதையே பொருள் தேடும் இலௌகிக உபாயங்களுள் ஒன்றாகக்கருதி அதற்கேற்ற வைதிகத் தரகர்களைத் தெரிந்து பெண்ணைப்பெற்ற தௌர்ப்பாக்கியன் எங்கேயென நாடவிட்டு வியாபாரத்திற் கண்ணாயிருக்கிறார்கள். அவ்விஷயமாக லச்சையென்பது நம் தென்னிந்தியா வேதியரிடத்துச் சிறிதுமின்றிக் குடியோடிப் போய்விட்டது.

பெண் வைத்திருப்பவர்களும், படிப்பிக்கச் சக்தியின்றி அவலமாய்ப் புதல்வரை வைத்திருப்பவர்களுந் தவிர நடுத்தர அந்தஸ்துள்ள புத்திரர்களை வைத்திருப்பவர்கள்கூட இவ்வாறு முறையிடும் நமது கட்சியிற் கலக்க இசையார்கள். ஆதலின் நாம் எவ்வாறு முறையிடினும், கண்ணீர்விடினும், நாணமுறினும் உருசிகண்ட பூனை யுரியைத்தாவும் எனும் ஆன்ற மொழிப்படி பணப்பைகளை யெளிதிற்பெற்று வழிகண்டவர்கள் அவ் வநுஷ்டானத்தைக் கவுரவத்திற்கு விரும்பிக் கைவிடுவார்களென்பது கனவிலு மில்லை.

இத்தீய வழக்கம் தேய்வதற்குப் பிரம சிருட்டியின் பெண்கள் தொகையாவது சுருங்கவேண்டும். நாகரிக வுணர்ச்சிபெற்ற மைந்தர்களாவது இவ்வாறு பணம்பறிக்கும் வழக்கத்தினைத் தடுத்துத் தத்தம் இருமுது குரவர்களின் இழிவுள்ள விற்பனைக்கு இணங்காமல் அகலவேண்டும். இவ்விரண்டில் முந்தியது என்றைக்கும் இயல்வதென் றெண்ணுதற்கில்லை. பிற்பட்டதோ ஒருகால் நிகழ்தலுங்கூடும். என்றாலும் அந்நிகழ்ச்சியும் மிக்கரிதாயிடுமன்றி எளிதாதலாவது கொள்ளற்பாலதன்று.

ஆகவே அசலதீபமென்பவர் எடுத்துக்காட்டிய கோபஐயரை யொத்தவர்களும் அவர் கன்னிகையைப் போன்றவர்களும் இனிச் செய்யக்கடவதியாது?

அறிவின் மிக்கீர்! சீர்திருத்தத்திற் சிறந்தீர்! ஆயுங்கள். நல்லவரனைக் கொள்வதற்குக் களவுதொழிலைக் கைக்கொள்வதா? கீழ்வருணத்தவரிற் கலப்பதா? அன்னியமதத்தை அடைவதா? இத்துன்பத்தினால் மனம் வெந்துவெந்து புண்படுவதா? இவைகளுளொன்றையும் புரியக்கூடுமென்று எவரும் புகலார். ஊர்வாய்க்கஞ்சி யொன்றுமறியாப் பேதை யொருவற்குத்தக்க எழில் குணம் கல்வி அறிவு முதலிய வனைத்தும் அமைந்த அரிய பெண்மணிகளைப் பொருளில்லாக்குறை யொன்றற்காகவே விதியின்றிக் (காக்கைப் பொன்னில் விலையுயர்ந்த இரத்தினக்கல்லைப் பொருத்திவிடத் தீர்மானித்து அவ்வாறே நிறைவேற்றுவோரைப் போன்று) மணத்தானளிப்பதற்கே எவரும் மனமிசைவார்கள்.



கவனிக்குங்கால் இதைவிடச் சகித்தற்கரிய கொடுந்துன்பம் பெண்ணின் தந்தை அடையார்க்கிலை. இத்தகைய இடர்ப்பாட்டைக் கட்டுப்பாட்டிற்கஞ்சி எவ்வாறு தாங்குவது? பிதாவின் துன்பமே இவ்வளவு கொடிதாயின் அத்தகைய விவாகபந்தத்திற்குட்பட்டுத் தன் வாழ்நாள் முழுமையையும் கவலையென்னும் கறையானுக்கு இரையாக்கப்பிறந்த அக்கன்னிகையின் நிலைமையும் வாழ்க்கைநலனும் எவ்வளவு கைப்புள்ளனவாகுமென்பதை எடுத்தியம்பவும் வேண்டுமோ? இதை நன்குணர்ந்தே பிரஸ்தாப ஐயரவர்களின் குமாரத்தி தான் தகுந்தவரன் கிடையாவிடில் ஆயுள்முழுமையும் ஔவைபோலிருந்து கழிப்பதல்லாது அவிவேகியை மணப்பதில்லை யென்றும், முதியோர் இக்கொள்கைக்கிணங்காது பலாத்காரமாய்த் தன்னை விவாகத்திற்கு உட்படுத்தினால் தனக்கே தேகநாசம் விளைவதில் தடையில்லை யென்றும், துணிந்து கூறுவதாகவும் தெரிகின்றது.

அறிஞர்காள்! இத்தகைய அறிவுள்ள வயதேறிய பெண்களைச் சிறிதும் இரக்கமின்றிச் (சுக போஜனாதி தாம்பூலங்களைத் தவிர வேறுவித சம்பந்தமும் கவலையும் இலாத) சுற்றத்தார்க்கஞ்சிப் பாழ்ங்கூபத்தில் தள்ளுவதுபோலும் ஒரு பாமரனுக்குப் பாணிக்கிரகணம் புரிந்து பெற்றவர்கள் தம் கடமையைக் கழித்துக் கொள்வதிலும் நயவஞ்சமும் மிகக் கொடுமையும் வேறுண்டோ? இத்தகைய செய்கையினாற் கொடுநரகம் சம்பவிக்குமென யுக்தி வாயிலாய் நோக்குங்கால் நடுநிலையுடையோர் கூசாது புகலலாம்.

விவாகத்தின் பொறுப்பும் கருத்தும் இன்ன வென்பதே யறிந்துகொள்ள வயதுவராத இளஞ் சிறுமிகளைப் பெற்றோர் தங்களிச்சையின்வழி முன் பின் யோசியாமல் எவ்வகைப் பொருத்தத்தையும் எதிர்பாராது வயதேறப் பெற்ற ஒரு கிழமகற்கோ? அல்லது குணக்கேடற்கோ? அங்கவீனற்கோ? கட்டித்தொலைப்பதாகிய பால விவாக மென்னும் பாதக விவாகத்தைக் காட்டிலும், வயது வந்தவர்களாய், விவாக பந்தத்தின் பொறுப் பித்தன்மையதென வுய்த்துணர்ந்தவர்களாய்ப் பலவகையான பேரெண்ணங்களை ஊமர்கண்ட கனாப்போல் உட்கொண்டவர்களாய் விளங்கும் பெதும்பைப் பருவம்பெற்று முதிர்ந்த தகுந்த கன்னிகைகளை, அக்கன்னிகைகளின் கருத்திற்கு நேர்முரணாகத் தகாத பேதைமைப் புதல்வர்க்கு மணம் புரிந்தளித்தல் அறங்கொடிதுகாண்! அறங்கொடிதுகாண்!!

இவ்வாறு கட்டாயத்தின்பேரில் ஒரு பெண்மணியை விருப்ப மெய்தாதவொருவற்கு உட்படுத்துவதற்கும் முன் மொகலாய மன்னர்கள் நந்தேயத்தை யாண்ட காலத்து அவர்களுட் சிற்சிலர் செய்ததாக நாம் கேட்கும் குரூரச் செய்கைகட்கும் யாது பேதம்?

பால விவாகத்தைத் தடுப்பது எத்தகை இன்றி யமையாததோ அத்தகை அருங்கடனே இப்பலவந்தவிவாகத்தடுத்தலுமாகும். பாலவிவாகத்தினால் நேரும்

நஷ்டங்களுள் முதன்மையானதாகிய பாலவிதந்துக்களின் அபிவிருத்தியினால் எத்தகைய சீர்கேடுகளும் ஒழுக்க வழுவுதலும் மானத் தாழ்வுகளும் நம் தேசத்தில் சம்பவிக்கின்றனவோ, அத்தகைய சம்பவங்கள் யோக்கியதையற்ற கணவனுக்கு வாழ்க்கைப்பட்ட யோக்கியதையுள்ள பெண்களாலும் விளையத் தடையில்லை. அவர்கட்கும் இவர்கட்கும் பகிர்முகத்தோற்றத்தின் பேதமேயன்றி அந்தர்முகத்தில் ஒன்றுதான். கணவனில்லாதவர்கள் துன்பத்தினும் அவிவேகக் கணவனையடைந்து மனவொற்றுமையில்லாது மறுகும் மங்கையரின் துன்பம் எண்மடங்கதிகமே.

"கொள்ளும்போதே குருடு" என்பதுபோற் கொடுக்கும்போதே குறை மனதாய்க்கொடுக்கும் பெண்களின் மனப்போக்குப் பின்னர் யாதாமென்பது கவனிக்கத்தக்க விடயமாகவும், அதனை யெண்ணிப்பாராது மேல்விளைவு யாதாயினுமாகுக வெனுங் கருத்தொன்றே மேற்கொண்டு காரியத்தை முடிப்பதில் யாதுபயன்? இத்தகைய உள்ளுழல்கள் விளையவொட்டாமற் றடுப்பதில் நாகரிகத்தினையுடைய சிலராவது முயல்வது தவறுப்பெருங்கடனன்றோ?

பெண்ணையீன்றவன் பொருளற்றவனாயிருக்கும் காரணத்தைக்கொண்டே தக்கவரனைப் பெற்றவர்கள் மணம்புரிந்துகொள்ள முன்வருவதில்லையென்றுவிலினால் அதற்கஞ்சித் தகுந்த சிறப்பமைந்தபெண்ணைத் தகுதியில்லாத ஒருவற்காவது (மங்கைப்பருவமென்னும் தடைக்கஞ்சித்) தொலைத்துவிடுவது என்னநியாயம்? பொருளில்லாமையால் தக்க வரனையடைய விதியில்லாத பெண்களை மங்கைப்பருவம் என்னும் தடைக்குட்படுத்தாது பிறகு தக்கவரன்கிடைக்கையில் ஏனோ மணம்புரிவித்தல் கூடாது? முற்காலத்தில் தீமையென்று விலக்கப்பட்ட பல அடாத வழக்கங்களையெல்லாம் தற்காலத்தோர் சிலர் எவரது அனுமதியையும் விரும்பாமற் புரியத்தலைப்பட்டு வரவில்லையா?

முதல் வருணத்தினர் என்னும் உயர்வைப் பாதுகாத்துக்கொள்வதற்கு இன்றியமையாததாய்த் தொன்றுதொட்டு நம்மவரால் அநுசரிக்கப்பட்டுவரும் போஜனாதி அம்சங்களிலும் சமரசமார்க்கத்தைத் தழுவி மேன்மைப்பட வேண்டுமென வெளிவந்து புகலும் சிலரது நோக்கங்களை நோக்கப் பின்னர் பெருந்தீங்கை விளைக்கத்தக்கதாயும், மனச்சான்றிற்கு விரோதமாயும், பாபமற்றதாயும் உள்ள இப்பலவந்தவிவாகத்தைத் தடுப்பது எத்துணைக் கடமையும் சிறப்பும் தூய்மையும் நன்மையும் உடையதென்பது பார்ப்பனராய்த் தோன்றிய எவர்கட்கும் அறிவிற் சிறந்த பிறர்க்கும் விளங்காமற் போகா. ஆதலின் பருவம் வந்தாலென்செய்வதென்னும் பயத்தைக் கைவிட்டுப் பிரஸ்தாபப் பெண்ணையொத்த தீர்க்க யோசனையுள்ள பெண்களை வைத்திருப்பவர்களில் இரண்டொருவராவது அமைதியுடனிருந்து பெண்ணின் மனத்திற்கிணங்கிய மணமகன் கிடைத்தபோது மணம்புரிவிக்கத் துணிந்து முன்னிற்கவேண்டும். அவ்வாறு முன்னிற்பவர்களை இனத்திற் சிலராவது இகழாதேற்கவும் வேண்



டும். இவ்வாறு நன்மையை யுய்த்துணர்ந்து நம்மவர்கள் ஒரு சாதக விதியை ஏற்படுத்திக் கொள்ளா தொழிவது சிறிதும் பெருமதியாகாது.

காக்கைப் பொன்னிற்கும் இரத்தினக் கல்லிற்கும் எவ்வளவு பொருத்தமோ அவ்வளவுபொருத்தந்தானும் இப்பலவந்தவிவாக தம்பதிகட்கில்லையென்பது தேற்றம். முற்காலத்திலும் இத்தகைய பலவந்தவிவாகம் நடந்துவந்ததாகத் தெரியவில்லை.

**அசலாம்பிகை யம்மை.**

---

## CORRESPONDENCE.

## கடிதம்.

---

### I. நன்னூற் காண்டிகையுரை.

கனம்பொருந்திய திருவல்லிக்கேணி **வை-மு - சடகோபராமாநுஜாசாரியராலும்** திருத்தப்பட்ட நன்னூற் காண்டிகையுரையில் சில இழுக்குங் கண்டனம். இயற்றமிழ்நூலுள் அச்சிலவும் கூடாவாகலின் அவையிற்றை யீண்டு எடுத்துக்காட்டுதும் :—

(1) வைச்ச வச்ச, பைய பய-இவைபோலியுளடங்கா, செய்யுள் விகாரங்களுள் அடங்கும்.

(2) ஐந்து அஞ்சு என்றபோலியில் ஐகாரம் அகரமாதல், 'அம்முனிகர' மென்றதன்கீழ் உரைத்தவற்றுள் அடங்குமன்றோ?

(3) இளமை பழமை யென்பதே இயற்கைப் பெயராம். அவை 'ஈறுபோத'லென்ற சூத்திரத்துள் இனையவும் என்ற விதப்புக்கிளவியான் இடை அகரம் ஐயாகி இளையர் பழையர் எனவாம். இங்ஙனம் செந்நெறி யிருப்பப் போலிச் சூத்திரத்தால் இளைமை பழைமையென எங்ஙனம் கூறலாம்?

(4) நேசம் நேயம், கசம் கயம், எனவாம். நேயம் நேசம் கயம் கசம் என எங்ஙனமாகும்? அங்ஙனமாதலைக் காசா காயா, இசைதல் இயைதல், வைசாசி வையாசி, ஈசல் ஈயல், என்பவற்றானும் உணர்க.

(5) கு இன், 'எல்லையின்னும்', 'இன்னென வரூஉம்' என்றபடி இன், ஐந்தாவதற்குச் சிறப்புடை யுருபேனும் முறையின் வைப்பெனும் அழகுபட அனுவதியாது "ஐந்தாவதனுருபில்லு மின்னு" மென்றார், மேலை "அஃகிய இ உ என்றதுபோல்" இன்னும் இல்லுமென ஏன் அமைப்பான் வேண்டும்?

(6) மாசிலனுதல் - தல்விகுதியன்று; அல்விகுதியேயாம். மாசிலனுகல் எனின் வியங்கோட்குக் கல்விகுதியும் உண்டாம் போலும்.

(7) 'பஞ்சிதன் சொல்லா' என்பதில் பஞ்சு என்பதே இயற்கைப் பெயர் பஞ்சியெனல் கூடாது.

(8) முற்றாய்தச்சூத்திரத்தின் கீழ் ஆய்த வெழுத்தென்பதற்கு ஆய்தம் போலெனக் கருவிப்பொருள் கூறினார். அதற்கு அதுதான் பொருளோ?

வேறுபொருள் இன்றோ ? அடுப்புப்போறலின் அடுப்பெழுத்தென அதற்கு மற்றொரு பெயர் வரும்போலும்.

(9) ‘அ ஆ உ ஊ ஓ ஔ யம் முதல்’ என்ற சிறப்பு விதியில் யோகம் என உதாரணங் காட்டினார். ‘ரவ்விற்கம்முதல்’ என்றதன்கீழ் உயோகம் என உதாரணங்காட்டினார். ‘இ ஈ ஐ வழி’ யென்ற சூத்திரத்தின்படி இவன் என்பதை இய்ன் எனவும் எழுதுவர்.

(10) வியங்கோள் மரியாதையாக ஏவும் ஏவலெனச் சிற்றிலக்கணங்களும் கூறும். அதன்கண் அப்பொருள் அமைந்து கிடத்தலின் ; வியம் எனினும் பெருமை யெனினுமொக்கும். வியச்சொற்கு ஏவற்பொருள் கூடின் ஏவலென வேறுகூறுதல் மிகைபடக் கூறலாம். ஏவற்கும் வியங்கோட்கும் பெரிதும் வேறுபாடிருத்தலைக் காணாராயினர்.

(11) ‘ஆழா கோனவ் வணையவும் பெறுமே’ என்றதன்கீழ் ஊ, ஊன் எனக்கூறுவார் கூற்றுப்பொருந்திலது எனப்பல கூறினார். நன்று! ‘உயிர் மவிலாறும்’ என்ற சூத்திரத்தினும், ‘ஊவெ னொருபெயர் ஆவொடு சிவணும்,’ ‘நெட்டெழுத் தேழே யோரெழுத் தொருமொழி’ என்ற தொல்காப்பியச்சூத்திரத்தினும், ஊன்குயினென முறையின் வைத்துக்கூறாது ‘குயினூன் வேற்றுமைக் கண்ணு மியல்பே’ யென்ற சார்ச்சிக் கூற்றினும் இவர்க்கு வேறு சான்று என்னைவேண்டும்? ஊன் இயற்கைமொழியன்று என்பதை ‘ஊத்தை’ ‘ஊத்தைப்பிணம்’ என்பவற்றானும் தெளிக.

(12) ‘மரப்பெயர் முன்ன ரினமெல் லெழுத்து, வரப்பெறு னவுமுள வேற்றுமை வழியே:’ ஈண்டுப் பெறுநவும் எனின் நேர் என்றார். ந், காலங்காட்டா விடைநிலையாதலின் காலங்காட்டு மிடைநிலைபெற்ற வினைபோல மறைப்பொருள் தரவல்லதோ ?

(13) ‘மக்கள் தேவர் நரக ருயர்திணை’: ஈண்டும் நாகரென இருக்கின்றேரெனத் துணிந்தார். நரகராவார் யாவர் ? நாகராவார் யாவர் ?

(14) ‘மெய்க ளகரமும்’ என்றதன்கீழ் அஃகேனம் என்பதிற் கேனம் சாரியையெனக் கூறினர். குன்ற முதலியன சாரியை தவிர்ந்து நிற்பான்போல அஃது நிற்றல் கூடுமோ?

(15) போலிச்சூத்திரத்திற் கூறாதன கூறினார். மறம், மறல், திறம், திறல், என்பன தனித்தனிப் பலபொருள் ஒரு சொல்லாம். மறம், திறம், என்பன மறல், திறல, எனப்போலியாயின் ‘அகம் அகன், நலம் நலன்’ என்பன பொருளொத்து நிற்றல்போல் நிற்றல் கூடுமோ ? திறம்திறன், திறம் திறல், என ஒரு சொல்லே இருவகைப் போலிபெறுமாறெங்ஙனம் ?

(16) ‘சாவவென்’ என்னும் ஒருமொழிச்சிறப்புச்சூத்திரத்தின்கீழ் நன்றுப்படித்தான் போல்வதும் பொருந்துமென வுரைத்தார். ‘ஒருமொழி மூவழிக்குறைதலுமனைத்தே’ என்பது நின்று பயனின்மையோ மிகைபடக் கூறலோ ? என்னை?

(17) ‘நடவாமடிசீ’ யென்றதன் கீழ்ச் சீத்தான் பொருவினான் என்பவற்றுக்கு முறையே சீவினான், பொருந்தினான் எனப் பொருள் காட்டினார்.



கோழிசீக்கும், நிலவு சீக்கும், பொருநர், பொருநுதல், என்பவற்றுக்கும் அப்பொருளேயோ ?

(18) அச்சூத்திரத்தின்கீழ் வௌவினான் வவ்வினான்; ‘அம்முனிகரம்’ என்றதன்கீழ் வௌவினான் வவ்வினான் என்றார். நேர்நேர் என்றவர் இதனை நோக்காமே போயது என்னை ?

(19) ஞண்டு ஞெண்டு என மொழிமுதல் அகரத்துக்கு எகரம்போலியாமெனச் சொல்லினர். ‘ஆ எ ஒ எனு மூவுயிர் ஞகாரத்துரிய’ என்ற தொல்காப்பியச் சூத்திரத்துக்கு நச்சினார்க்கினியர் எகரத்துக்கு ‘ஞெண்டு’ என்றார். அதுபோலியாமாறென்னை ?

(20) அந்தோ, ஹந்த என்பதின் திரிபாயின் அக்கோ, அச்சோ அத்தோ அன்னோ ஐயோ என்பவை யெதன் திரிபாகும்?

கறைசைகிழார்.

---

## II. திருவள்ளுவர்.

---

**ஐயன்மீர் !**

சின்னாண் முன்னர்யான் சென்னைக்குப் போந்தகாலத்து இராஜதானிக் கலாசாலையிற் கூடியதோர் பொதுஜன சபையில் ம-ா-ா-ஸ்ரீ. **செல்வகேசவராயமுதலியாரவர்கள், எம். ஏ.,** “திருவள்ளுவர்” என்னுந் தலைப்பெயரிட்டோதிய வியாசத்தின்கண் திருக்குறளின் அரசியலில்

“படைகுடி கூழமைச்சு நட்பர ணாறு
முடையா னரசரு ளேறு”

என்னுங்குறளிற் குடி யென்னும் பதத்திற்குப்பரிமேலழகியார் “குடியென்றது அதனையுடைய நாட்டினை” யென வுரைகூறியிருத்தல் ஆசிரியர் கருத்தோடு முரணுமெனக் கூறினார். திருவள்ளுவமாலையில்

“அரசிய லையைந் தமைச்சிய லீரைந்
துருவ லரணிரண்டொன் றொண்கூ—ழிருவிய
றிண்படை நட்புப் பதினேழ் குடிபதின்மூன்
றெண்பொரு ளேழா மிவை”

என்னும் பொருட்பாவின் உறுப்பியல்களைக் கூறும் **போக்கியார்** செய்யுளிற் குடி பதின்மூன்றெனக் கூறியிருத்தாலானும் ஒழிபியலிலுள்ள பதின்மூன்றதிகாரமும் குடிகளின் பொதுவிலக்கணங்களையுஞ் சிறப்பிலக்கணங்களையும் கூறுதலானும், அரசற்குக் குடி யின்றியமையாவங்கங்களு ளொன்றாதலின் ஆசிரியர் திருவள்ளுவனார் சிறப்பு வகையாற் குடிமையைக் கூறவுன்னி இறுதிக்கண் வைத்துக் **குடியியல்** எனவே கூறியிருத்தல் வேண்டுமெனவும்’ பரிமேலழகியார் உரை யெழுதுங் காலத்துத் தங்கருத்திற் இயைய **ஒழிபியல்** எனத்திருத்தியிருத்தல் வேண்டுமெனவுங் காரணங் காட்டினார்.

அரசற்கின்றியமையாததாய குடியினை அங்கவியலுட்கூறாது தனித்துக்கூறி அங்கவியலில் நாட்டினை மொழிதல் தாம் இன்னின்னவற்றை யிவ்விய

லுட் கூறுதுமென வியம்பியதனோடு முரணி மற்றொன்றுவிரித்தலாகு மாதலானும், அமைச்சு குடி யரண் முதலாய வேனைய வுறுப்புக்கள் பொருந்தப் பெறினும்

"நாடென்ப நாடா வளத்தன நாடல்ல
நாட வளந்தரு நாடு"

என்னுங் குறட்கேற்பத் தன்னகத்து வாழுநர்க்குச் செல்வத்தினைத் தேடாது தருவதே நாடாதலான் அத்தகைய "நாடொன்றில்லாதான் அரசனாகானாதலானும், நாடொன் றில்லாவிடத்துக் குடிகளிருத்தலியலா தாதலானும் ஆசிரியர் கருத்து அற்றன்றென மறுக்க.

அற்றேல், போக்கியார் நூலரங்கேற்றிய காலத்திருந்தாரு ளொருவரன்றே? அரண் ஓரதிகாரத்தானும், நாடு ஓரதிகாரத்தானும் நூலிற் கூறப்பட்டிருப்ப அரணிரண்டென்ற தென்னையோவெனின், அரசற்கு நாடே பேரரணாதலானும் அவ்வரணில்லாவிடத்துச் சிற்றரணிருப்பினும் பயனில்லையாதலானும், 'அரண்' எனவாசிரியர் கூறியது பேரரணாகிய நாட்டின் ஒருறுப்பேயாமாதலானும், அக்கருத்தினை யுட்கொண்டே போக்கியார் அரணிரண்டென நாட்டினையும் அரணினையும் பொதுப்படக் கூறினாரென்க.

அற்றேல், இறுதிக்கணுள்ள பதின்மூன்றதிகாரத்தையும், ஆசிரியர் ஒழிபியலி லடக்கியிருப்பப் போக்கியார் குடிபதின்மூன்றெனக் கூறியதென்னையோவெனின், அரசற் கின்றியமையாதனவற்றை யங்கவியலுட்கூறி அத்துணைச்சிறப்பிலதும் குடிகளையே குறித்ததுமாய குடிமை முதலியவற்றைக் கடையில் வைத்தொழிபியலெனப் பெயரிட்டனரே யன்றி மற்றன்று. போக்கியார் ஒழிபியலைக் குடியியலென்றது அவ்வியலின் றொடக்கத்துக் குடிமையை யாசிரியர் கூறியிருத்தலான் முதன்மைபற்றிக் குடி பதின்மூன்றென்றாரெனல் வேண்டும்.

இவ்வாறு கொள்ளாது ஆசிரியர் பரிமேலழகியார் உரையிற் குற்றங் காண்டல் தகுதியுடைத்தன்றாம். மற்றும் ஆசிரியர் கருத்தினை யுள்ளவாறே தெரித்திருத்தலானன்றோ ஏனையோருரையிற் பரிமேலழகியாருரையே சிறப்புடைத்தென வான்றோராற் கொள்ளப்பட்டதூஉம்?

ஜக்கராஜு. ப - வாசுதேவையபந்துலு.

---

# EDITORIAL NOTES.
## பத்திராதிபர் குறிப்புக்கள்.

---

**நன்றியறியாமை**:—இஃது உய்தி யில்லதோர் பெருங்குற்றமாக நம்மவர்களாற் கருதப்படுகின்றது. "எந்நன்றி கொன்றார்க்கு முய்வுண்டா முய்வில்லை, செய்ந்நன்றி கொன்ற மகற்கு" என்றார் **திருவள்ளுவனாரும்**. எனினும் இஃது ஒருவகைச் சோர்வெனவே நாம் கருதுதல் வேண்டும். மிக்கவன்மையுடையார் நன்றியறியாதவராயினமை யாம் என்றும் எங்கும் அறிந்திலேம். ஆகவே நன்றியறியாதவர் மாட்டும் யாம் கண்ணோட்டமுடையராதல் நமது கடப்பாடுகளுளொன்றாம்.



**கல்விப்பயிற்சி**:—மக்களைப் பூரண வாழ்க்கைக்குத் தகுதியுடையவராக்குதலே கல்விப்பயிற்சியின் முழுநோக்கமாம். முதற்கண், வாழ்க்கைத் தொழில் நடத்துவதற்கு ஏற்புடையனாதல் தனக்குரிய கடமையாம்; ஆயினும் அஃது இறுதியிற் பிறர்க்குரியதோர்க் கடமையுமாகின்றது. ஆதலின், தனக்கும் பிறர்க்கும் ஒத்ததோர் கடமையை முடிக்கவல்லது நேரியகல்வி பயிற்சியாம். அறிவுடையராய்க் காலங்கழித்தல் இவ்வாறென்றுணர்தல் கல்விப்பயிற்சியின் இரகசியங்களு ளொன்றாம். மனிதன்முன்னுக்கு வந்ததெல்லாம் தற்பயிற்சியாலேயே: நூற்படிப்பெல்லாம் பிறரைக்கொண்டு காண்டலேயாம். அஃதாவது தன்னுடைய ஆற்றல்களைக்கொண்டு நேரே கண்டறிதலை விடுத்துப் பிறருடைய ஆற்றல்களைக்கொண்டு, தலைசுற்றி மூக்குத் தொட்டகதையாய்க் கண்டறிதலாம். 'கற்றலிற் கேட்டலே நன்று' என்பதும் இதுபற்றியன்றோ? படிப்பு விஷயங்களில் ஏகரீதி கேடு விளைக்கற்பாற்றே. மக்களையடித்துக் கலைபயிற்றுதல் தமக்கு அவர்கண்மீதுள்ள அன்பினான்மட்டுமன்று. மற்று உய்த்துணருமிடத்துத் தமக்கு அதிகாரத்தின்மீதுள்ள ஆசையினாலாம்.

**ஒழுக்கவிதிகள்**:—ஒழுங்கற்ற நிலைமைகளில் வாழ ஒருவரும் விரும்பலாகாது; எனினுந் தற்செயலாய் ஒருவன் அவற்றின்கண் அகப்பட்டுக்கொண்டானாயின், அவைகள் அவன் குணத்தைப் பரிசோதித்து அவன் இவ்வளவு உறுதிப்பாடுடையான் என்பதை வெளிப்படுத்துகின்றன. ஒருவனுக்குப்பிறரிடத்து அன்பு நிகழாதாயின், முகமனுரைவழக்காதல் அவன் கற்றுக்கோடல் வேண்டும்; அல்லாக்கால் அவன் மேற்கொண்டன கைகூடுதலரிது. பிறர் தம்மை நிந்திக்குமிடத்து ஒருவருக்கும் அதனை யெதிர்த்து நிற்றலாதல் அதற்கு நியாயஞ்சொல்லுதலாதல் இயலாது; மற்று, ஒவ்வொருவரும் அதனைப் பொருட்படுத்தாது புறக்கணிப்பராயின் அது தானே அடங்கிவிடும். மக்கள் உண்மையாளராயிருத்தல் கூடும்; மற்று நடுவுநிலைமையாளராயிருத்தலரிது; ஆயினும் ஒவ்வொருவருந் தம்மாலியன்ற மட்டும் நடுவுநிலைமை குன்றாதிருக்க முயல்வாராக.

**புலவர்களியல்பு**:— பெரும்பாலும் நந்தமிழ்மொழிக்கண், புலவர்களாவார் பிறர்கூற்றை மறுக்குமிடத்து நிந்தைச் சொற்புணர்த்தெழுதுகின்றனர்; அன்னார் ஒருவன் தமக்குத் தவறுசெய்கின்றனனென நினைத்தால், உடனே அவனைத்தமது ஜன்மவிரோதியாகக் கருதி யொழுகுகின்றனர். மற்று, தம் பெருமை தாமறியாப் புலவர்கள் பலர் ஆங்காங்குக் காணப்படுகின்றனரென்பதும் மெய்யன்றோ?

**மக்களியல்பு**:—ஒவ்வொருவரும் பிறருக்குச்சமானராதற்கண் வரம்பு கடந்த விருப்பங் கொள்ளாரெனில் இப்பொழுது இருப்பதனினும் மிக்கநல்லுணர்ச்சி மக்களுக்குள் ஏற்படும்; அஃதாவது ஒருவரை யொருவர் இன்னும் மிக நன்றாய் அறிவார்கள். எனவே சிறப்புடைய மக்களே மற்றையோரினுஞ் சிறிது தாழ்நிலையிலுள்ளவராகின்றனர். அவரினிழிந்தார் அவருக்குச்சமானராதற்கு எப்பொழுது அமயம் வாய்க்குமென்று எதிர்பார்த்து நிற்றலினென்க. இவ்வுலகின்கண் ஒருவரை யொருவர் கண்டக்கால் அவரை அறிந்துகோடல் அத்துணைச் சிறப்புடைய விஷயமாக மதிக்கப்படுகின்றிலது; மற்று அதுபோழ்ந்து தமக்கு முன்னிற்பாரினுந் தாமிக்க வல்லாளராகத் தோற்றுதலே விஷயமாக மதிக்கப்படுகின்றது. வெளியிட்டுரைத்தாற் பிறருக்குத்துன்பந்தரவல்லது எதுவாயினும் ஒவ்வொருவருக்கும் இயற்கையாக வுண்டு. ஆதலின் அது பிற

ர்க்குப் புலனாகாத வாறு ஒழுகுதல் ஒவ்வொருவருக்கும் உற்றதோர் கடன் பாடாகின்றது. என்னே இக்கர வொழுக்கம்! ஒவ்வொருவனுந் தனது யாக்கை நிலையையாயினும் ஒழுக்கநிலையையாயினும் பற்றிச் சிறிதளவு சிந்திப்பானாயின், அவன் தன்னை நோயாளி யெனவே பெரும்பாலுங் காண்கின்றான். அங்ஙனங் கண்டவுடனே அந்நோய் நீக்கும் வழியை நாடுதல் வேண்டாவோ? விருப்பமிருந்தால் வேண்டிய வழியும் ஏற்படுமன்றோ? தான்மெய்யெனக்கண்டுணர்ந்ததைச் சீர்தித்து முடிப்பதற்கு வேண்டிய வன்மை ஒவ்வொருவனுமுடையான். வீண் தற்புகழ்ச்சியின் நாற்றம் ஜனங்களுடைய மூக்கைத் தொளைப்பதாகப்பலர் சொல்லுகின்றனர். அஃது அங்ஙனமாயினும் ஆகலாம்; ஆனாற் பிறர்செய்யும் அநியாய நிந்தையினின்றும் புறப்படும் நாற்றத்திற்கோ ஜனங்களுக்கு மூக்கேயில்லை. சில சாமார்த்திய முள்ள இளைஞர்கள் பிறர்கண்டவுண்மைகளைத் தாம் எடுத்து வழங்குமிடத்து அவற்றை அப்பிறர் கண்டனவென ஒத்துக்கோடற்கு நாணுதலெவனோ? அங்ஙனம் ஒத்துக்கோடலால் தமது சுதந்திர யூகத்திற்கு ஓரிழுக்காமென அன்னோர் கருதுகின்றனர் போலும்! தவறனைத்தினும் இது மிக்க மூடத்தனமானதன்றோ?

**தவற்றினும் உண்மையுண்டு** :—தீயபொருள்களினும் நன்மைப்பண்பு சிறிதுண்டு. உற்று நோக்கினால் இதிலுள்ள வுண்மை யாவருக்குந் தெற்றெனப் புலப்படும். "கேட்டினு முண்டோருறுதி" யென்றார் **திருவள்ளுவனாரும்**. இவ்வாறே தவற்றினுமுண்டாலோருண்மை. இக்கூற்றைப்பொதுப்படப் பல்லோரும் ஒத்துக்கொள்கின்றனராகவும், சில்லோரே இதனை ஞாபகத்தில் வைத்து நடப்பவர். ஏன் சில்லோர்? ஒருவருமில்லை யென்று துணிந்துரைத்தாலும் பிழையில்லை. ஏனெனில், பிறர்பக்கங்களையாராய்ந்து தம்பக்கங்களை நிறுவும்போது ஒருவரேனும் மேற்போந்த வாக்கியத்தினுண்மையை மறவாது கொண்டு நடக்கின்றாரல்லர். அந்தோ! எளியமக்கள்! என்செயவல்லர்! பிறர் கொள்கைகளைப் பூர்வபக்ஷம் பண்ணித் தங்கொள்கைகளைச் சித்தாந்தப்படுத்துகின்றவுஷ்ணத்தில் அதனை மறந்துவிடுகின்றனர்! ஆகவே யாவரும் அதனை யடிக்கடி சிந்தனைசெய்து அதற்குத்தக ஒழுகுவாராக.

**சென்னைச் சர்வகலாசாலைப் பிரவேச பரீக்ஷை** :—இவ்வருஷம் நிகழும் டிசம்பர்மீ 2உ முதல் தொடங்கி நடந்த இப்பரீக்ஷையிற் சென்னையிலும் நெல்லூரிலும் பரீக்ஷிக்கப்பட்ட மாணாக்கர்களுட் சிலருக்குப் பலவினாப்பத்திரங்களின் உணர்ச்சி முன்னரே யேற்பட்டுளதென்று ஐயுற்று விசாரித்தவிடத்து அவ்வையப்பாடு நிச்சயமேயாயிற்று. அந்தோ! இவ்வாறு வினாப்பத்திரங்கள் குறித்த காலத்திற்கு முன்னரே வெளிப்படுதல் எவ்வழியாகவோ? அதனையின்னும் நன்றாக உணர்ந்தபாடில்லை. அம்மாணாக்கர்கட்கு மறுபரீக்ஷையொன்று நிச்சயமாய் நிகழுமென்பது தேற்றம். என்னே மாணாக்கர் தம் விதி! தங்கள் கேட்டைக் கருதியேனும் மாணாக்கர்கள் இனித் தீவழிவிடுத்து நல்வழி நாடுவாராக.

**பிழைதிருத்தம்** :—இச்சஞ்சிகையிற் **கடன்கோடலென்னும்** விஷயத்தின்கண் 175-ஆம் பக்கத்தில் ஈற்றயலடியில் உள்ள 'மூதாட்டியின்' என்றதனை 'மூதாளரின்' என்று திருத்திப்படிக்க.

---

# ஞானபோதினி

OFFICE OF THE REGISTRAR OF ... REGISTERED 19 FEB 1902

## ஒரு மாதாந்தத் தமிழ்ப்பத்திரிகை.

தாமின் புறுவ துலகின் புறக்கண்டு
காமுறுவர் கற்றறிந் தார்—திருக்குறள்.

சம்புடம் V. } 1902வரு ஜனவரிமீ 20உ { புத்தகம் 6.

விஷயங்கள்.


| | பக்கம். |
|---|---|
| தமிழ்ப்புலவர் பொறுமை.—பத்திராதிபர் ... | 201 |
| திருவள்ளுவர்.—திருமணம்—செல்வகேசவராய முதலியார், எம். ஏ.,... | 203 |
| விக்கிரமோர்வசீயம் —பு. மா. ஸ்ரீநிவாசாசாரியர் ... | 209 |
| இராமாயணத்தின் தத்துவபோதம்.—பி. எஸ். சுப்பிரமணியர், பி. ஏ.,... | 213 |
| சரித்திர விநோதாமிர்தம் —சி. சாமிநாதபிள்ளை ... | 217 |
| இராமாயண வெண்பா.—தி. கோ. நாராயணசாமிப்பிள்ளை ... | 221 |
| பழமொழிப் பத்து.—நா. வெ. சுந்தரராஜ ஐயர், பி. ஏ., எல்.டி., | 226 |
| வானவில்: ஒரு தனிப்பாசுரம்.—ந. பலராம ஐயர் ... | 227 |
| கூட சதுக்கம.—திரு. இராமசாமி செட்டியார் ... | 228 |
| இராதாராணி.—தி. அ. ஸ்வாமிநாத ஐயர் ... | 228 |
| புத்தகக் குறிப்புக்கள்— | |
| பத்திராதிபர் குறிப்புக்கள்.— | |


பத்திராதிபர் :— எம். எஸ். பூர்ணலிங்கம் பிள்ளை, பி. ஏ.
வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியார், பி. ஏ.

சென்னை :
தாம்ஸன் கம்பெனியார்
பதிப்பிப்பது.

1902.

வருஷ சந்தா ரூ. 2—8—0 சஞ்சிகை ரூ. 0—4—0

# ஞானபோதினி

சம்புடம் V. } 1902௵ ஜனவரி௴ 20௳ { புத்தகம் 6.


600 008.

## TAMIL PANDITS' JEALOUSY.

## தமிழ்ப்புலவர் பொறாமை.

நல்லாசிரியரை யடுத்துத் தமிழ்க்கலை பயின்று பரந்தகொள்கை யாளராய்த் திகழும் அறிவுடையோரே தமிழ்ப்புலவராவார். அன்னார் தமக்குட் பொறாமை நிகழ்தல் அதிசயமான தொன்றன்றோ?

"தம்மினுங்
கற்றாரை நோக்கிக் கருத்தழிக கற்றதெலா
மெற்றே யிவர்க்குநா மென்று"

என்ற நீதிநெறிவிளக்கமுடையார் கூற்றுக் கல்வி விஷயமாகப் பொறாமைப்படுதல் ஓராற்றா லேற்புடைத்தாகுமென வலியுறுத் துரைக்குமாயினும் அதன் மெய்ப்பொருளுணர்ந் தொழுகுவோர் மிகச்சிலரே. அது கருதிய தெல்லாம் அங்ஙனங் கருத்தழிந்து அவர்போலுங் கல்விமான்களாகத் தக்கவாறு மேன்மேலும் நூற்படிப்பின்கண் ஆர்வமுடையரா யெழுதல் வேண்டு மென்பதாம்? அவ்வாறன்றிக் கற்றறிந்த புலவர்களாயினாரது ஆக்கக்கண்டு நெஞ்சம் புழுங்கி யழுக்கறுத்த லதன்கருத்தன்று.

மற்றுப்பிறரது ஆக்கங்கண்டு பொறாமைப்படுவது இறப்பப் பெரியதோர் தீக்குணமாக நூல்கள் முழங்குமாற்றை நன்குபடித் தறிந்தவரெனச் சொல்லிக்கொள்ளும் தமிழ்ப்புலவர்களே தமக்குள் அழுக்காறுடையராயொழுகுதல் எவ்வாறு நேரிதாகும்? அவர் தங் கல்விப்பயன் யாதாயிற்று? கல்விக்குப் பயன் நல்லொழுக்கமன்றோ? பூத்தாலுங் காயா மரமுளவாதல் போலவும், மூத்தாலும் நன்கறியார் தாமும் நளியுளராதல் போலவும், பாத்தி விரைத்தாலும் நாறாத

வித்துளவாதல்போலவும், உரைத்தாலும் உணர்வுதோன்றாதபேதைகளுளராதல் போலவும், எவ்வளவு படித்தாலும் ஒழுக்கந்திருந்தாத புலவரும் உளரேபோலும்! இத்தகைய தமிழ்ப்புலவரைத் தமிழ்ப் புலவரென்னலாமோ? இவர்களைப் போலிப்புலவர்களென்றாற் படுமிழுக்கென்னை?

இது நிற்க. இவ்வுலகின்கண் உள்ளவாறே பெருமைவாய்ந்த நற்றமிழ்ப் புலவராவார் ஆக்கஞ்சிறந்தொளிருமிடத்து, அதுகண்டு புன்புலவர் வெறுத்து வேறுபட வொழுகினென்னாம்? தாமேயழிந்துபடுவரேயன்றிப் பிறிதில்லை.

> "அழுக்கா றெனவொரு பாவி திருச்செற்றுத்
> தீயுழி யுய்த்து விடும்"

என்ற திருவள்ளுவனார் கூற்று மெய்ம்மையுடைத்தன்றோ? தம்மினும் உயர்ந்த புலவர்கள்து நன்கு மதிப்பே ஒவ்வொருவரானும் ஏற்றுக் கொள்ளத்தக்கது; மற்றுத் தம்மினுமிழிந்த புன்புலவர்கள் தம்மை நன்கு மதித்தாலென் மதியாக்காலென்?

> "அவமதிப்பு மான்ற மதிப்பு மிரண்டு
> மிகைமக்க ளான்மதிக்கற் பால—நயமுணராக்
> கையறியா பாக்க ளிழிப்பு மெடுத்தேத்தும்
> வையார் வடித்தநூ லார்."

பொறாமை பிடர்பிடித்துந்துதலான் ஒருபுலவர் மற்றொருபுலவர்க்குத் தீங்கேதேனும் மொழியினுதல் செயலினுதல் இயற்றுவரேல் அஃது அவரைக் கல்லாரு மிழிகுலத்தாருமாகச் செய்துவிடுங்காண். ஒரு புலவர் தாமுயரவேண்டின் நல்லாற்றின் முயன்று உயர்க; அதற்காகப் பிறரை யிழிவுபடுத்துவா னெழுவதென்னை? ஒருவருக்கொருவர் துன்பம் நேராதவாறும் இன்பம் மிகுமாறும் உதவுதலே மேதக்கதாம். ஒரு தமிழ்ப்புலவர் ஏதேனுமொன்றனாற் புகழ்நலம் பொலிந்து சிறந்துழி அதுகண்டு மகிழ்ச்சியடைதலே ஏனைய புலவர்கள் யாவர்க்கும் எய்தியதோர் கடப்பாடாகவும், அதனை மறந்து பொறாமைப் பேய்க்காளாகி அவரொடு மாறுபட்டு அவரடைந்த நன்மையின்பயனைத் தாமும் நுகரவேண்டி அவருக்கு இடுக்கண்விளையத்தக்கவாறு ஏதேனுமொன்று செய்தல் எவ்வாறு ஏற்புடைத்தாகுமோ? 'குடிக்கவியலாதேற் கொட்டிக் கவிழ்ப்பல்' என்பது புல்லறிவாளனது வெறிக்கூற்றேயன்றோ? 'கீரைக்கடைக்கெதிர்க்கடை' வைப்பார்போன்று தமிழ்ப் புலவர்களாவார் ஒருவரோடொருவர் முரணித்தாக்குதல் சாலாதுகாண். ஒருவனுண்பதைத் தடுப்பது தவறுடைத்தன்றோ? வேண்டுமெனின், நன்னெறியானுணவு கிடைக்குமாற்றை யுய்த்துணர்ந்து ஒழுகாது பிறிதுபடவொழுகுதல் பைத்தியமேயென்க.

இனித் தமிழ்ப்புலவர்க்கும் பொறாமைக்கும் இன்றியமையாததோர் தொடர்பு கற்பித்தல் எமது கருத்தன்று. பெரும்பான்மையாகத் தமிழ்ப்புலவர் பலர்மாட்டு இப்பொறாமைத் தீக்குணம் நிகழ்தல் கண்டு மனம்புழுங்குவேம் இங்ஙனம் எழுதினேம். செந்தமிழ்ப் புலவராவார் தமக்குட் பொறாமைப்படுதலின்றி மனமொத்த நட்பாளராய் வாழ்ந்து நந்தமிழ்மொழிக்கும் தமிழ்நாட்டிற்கும் புகழ் மிகத்தக்கவாறு ஒழுகுவாராக. நமது மதுரைப் புதுத் தமிழ்ச்சங்கங் கருதுவதும் இஃதேயாமென்பது தேற்றம்.

பத்திராதிபர்.

---

# TIRUVALLUVAR.

## திருவள்ளுவர்.

---

[168-ஆம் பக்கத் தொடர்ச்சி.]

எடுத்துக் காட்டாகற்பாஷான அரசியலில் வாழ்வாங்கு வாழுங்குடிகள் இம்மையின்ப நுகர்ந்து இறுதியாக ஈறிலின்ப மெய்தற்குச் சோபானமான இந்நூலில், துறவறமாகிய படியின்றியும்அவ்வீறிலின்பமெய்தலாகும் என்பதே ஆசிரியர்க்குக் கருத்து. "அறத்தாற்றின் இல்வாழ்க்கை ஆற்றின் புறத்தாற்றில், போஒய்ப் பெறுவதெவன்" என்றும், "வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையுந், தெய்வத்துள் வைக்கப்படும்" என்றும் நமதாசிரியர் கூறுகின்றனர். ஆகவே வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவனுடைய இலக்ஷணத்தை அறப்பாலில் இல்லறவியலிலும், பொருட்பாலிற் குடியியலிலும் நாம் ஆராய்ந்தறிதல் வேண்டும். ஆயின் அவன் தன் மனதிற் றோன்றுமாறோ அல்லது நூலோர் தத்தமக்குத் தோன்றியாங்கு நுவன்றவாறோ ஒழுகற்பாலனல்லன். உயர்ந்தோ ரொழுக்கத்தையே பற்றுக்கோடாகக் கொண்டு ஒழுகற்பாலன் என்னுங் கருத்தால், "எவ்வ துறைவ துலகம் உலகத்தோ, டவ்வ துறைவ தறிவு" என்றும், "உலகத்தோ டொட்ட வொழுகல் பல கற்றும், கல்லா ரறிவிலா தார்" என்றும் இயம்பினராகலின் அவ்வுயர்ந்தோ ரொழுக்

கத்தை எடுத்துக் காட்டுவதே ஆசிரியருடைய நோக்கமாயிற்று. ஆகவே
இல்வாழ்வானுக்கு மேல்வரிச்சட்டமாகச் சில கூறுதலே இந்நூலின் கருத்து.
அங்ஙனம் ஆசிரியர் மேல் வரிச்சட்டமாகக் கூறும் அமிசங்கள் சில
வற்றை ஆராய்ந்து பார்த்தல் வேண்டும். துறவறத்திற்கு அடியானது அருள்.
அவ்வருள்தானும் "அருளென்னும் அன்பீன் குழவி" என்கிறபடி, அன்பு
காரணமாகச் சனிப்பது. இத்தகைய அன்பே இல்வாழ்வானுக்கு அடியாவது.
ஆகவே இல்லறந் துறவறமாகிய அறம் இரண்டற்கும் அன்பே அடியென
பது தெளிவு? இது மாத்திரமோ. அறத்துக்கு மறுதலை மறம். ஒருவன்
செய்த பகைமைபற்றி உள்ளத்து மறம் நிகழ்ந்தால், அவனை நட்பாகக்கருதி
அவன் மேல் அன்பு செய்ய அது நீங்கு மாதலின், அம்மறத்தை அகற்றுதற்
கும் அவ்வன்பே துணையாம். "அறத்திற்கே அன்புசார் பென்ப வறி
யார், மறத்திற்கு மஃதே துணை". மறத்தை நீக்கி அறத்தைச் செய்தார் துறக்க
மெய்தல் துணிவு. "அன்புற் றமர்ந்த வழக்கென்ப வையத், தின்புற்றா ரெய்
துஞ் சிறப்பு." ஆகவே அந்தமி லின்பத் தழிவில்வீ டெய்தலான மாந்தர்
க்கு அன்பு இன்றியமையாதது என்ற வாறு. அவ்வன்பில்லாதவரால் உல
கிற்கு ஒரு பயனுமில்லை. அன்புடையவரே தம்முயிரையுங் கொடுத்து
உதவத்தக்கவர். "அன்பிலா ரெல்லாந் தமக்குரியர் அன்புடையா, ரென்பு
முரியர் பிறர்க்கு." இங்ஙனம் அன்பு காரணமான இல்வாழ்க்கையின் பய
னாவது இல்லார்க்கு ஈந்து அதனாற் புகழ்பெறுதலாம். "ஈதல் இசைபட
வாழ்தல் அதுவல்ல, தூதிய மில்லை யுயிர்க்கு". ஏனெனின், "ஒன்றா உலகத்
துயர்ந்த புகழல்லால், பொன்றாது நிற்பதொன் றில்" இத்தகைய புகழும்
ஈதலால் வருவதாயின் அதுவே சிறந்ததாம், "உரைப்பார் உரைப்பவை யெ
ல்லாம் இரப்பார்க்கொன் றீவார்மே னிற்கும் புகழ்" ஆதலின் பொருள்படைத்
தார் அப்பொருளை எவர்க்குங் கொடாமற் சேமித்து வைத்தலினும், இல்
லாத வறிஞர்க்கு ஈதலால், உண்டாகும் இன்பமே பெரிது. சேமித்தபொ
ருள் கள்வர் முதலானவரால் வௌவப்படாமல் வைக்குமிடம் இல்லையா
வோவெனின், "அற்றா ரழிபசி தீர்த்தல் அஃதொருவன், பெற்றான் பொ
ருள்வைப் புழி". இங்ஙனம் ஈந்துவிட்டால், ஒருவன்தான் வறிஞனாய் இன்ன
லெய்தலாகுமே யெனின், "பாத்தூண் மரீஇ யவனைப் பசியென்னுந், தீப்
பிணி தீண்ட லரிது." இத்தகையான் மேலுலகம் அடைதல் ஒருதலை. "மே
லுலகம் இல்லெனினும் ஈதலே நன்று" என்பது இவ்வாசிரியர் கொள்கை
"நல்லா றெனினுங் கொளல் தீது" ஆகலின் இல்லார்க்கு ஈதல்செய்யுமிட
த்தும் அவரால் பிரதியுபகாரமடைய விரும்புதல் தக்கதன்று. "கைம்
மாறு வேண்டா கடப்பாடு மாரிமாட் டென்னாற்றுங் கொல்லோ வுலகு."
உதவிசெய்பவர் கைம்மாறு வேண்டாராதலின், உதவிபெற்றவன் அவர்
செய்த நன்றியை மறத்தலாகாது. அன்புகாரணமாய், ஈதலாற் பெறும்புகழே
பயனாய்ப், பிறனில் விழைதல் - அழுக்காறு - வெஃகல் - புறங்கூறுதல் முத



லானவற்றை அஞ்சி, விருந்தோம்பி, யாவர்மாட்டும் இனியவைபேசி, அடக்கம்
பொறுமை முதலான நல்லொழுக்கம் பொருந்தி, நன்றே தரினும் நடுவிகந்தா
மாக்கத்தை ஒழிய விடுபவனாய் இல்வாழ்வானுக்குச் செய்ந்நன்றிமறவாமை
யாகிய குணமே மிகவும் ஏற்றமுடையது. முன்தான் ஒருபகாரமுஞ் செய்யாம
லிருக்கத் தனக்கு இறுதிவந்த சமயத்தில் தனக்கு இன்னது செய்தால்
இன்னநன்மை உண்டாகுமென் றாராயாமல் தனக்கு ஒருவன்செய்த உபகாரத்
துக்குக் கைம்மாறாக வையகத்தோடு வானகத்தைச் சேர்த்துக் கொடுத்தாலும்
அதற்கு ஈடாகாது.அவ்விறுதிக்கண் அவன்செய்த உபகாரம் தினையளவாயினும்
தான் அதனைப் பனையளவாகப் பாவிக்கவேண்டும். மனிதன் இயற்றும் எனைப்
பாவங்களுக்கெல்லாங் கழுவாய் உண்டு; செய்ந்நன்றி மறந்த பாவத்துக்கு மாத்
திரம் கழுவாய் இல்லை. உதவி செய்தவர் பிரதியுபகாரம் வேண்டாமையால்
உதவி பெற்றவன் செய்யலாவது பிறிதில்லை. அவர் செய்ததை மறவாமல்
நினைத்திருப்பதே சாலும். அவர் ஒருகால் தனக்குத் தீங்குசெய்ய நேரினும்,
தான் அவர்க்குக் கேடு சூழாது அவர் செய்த உபகாரத்தையே நினைந்து
அமைந்து, அத்தீமையை மாத்திரம் அப்பொழுதே மறந்துவிடுக. "நன்றி
மறப்பது நன்றன்று நன்றல்ல, தன்றே மறப்பது நன்று." அங்ஙனம் மறந்து
விடுதற்கு உபாயம் என்னெனின் "கொன்றன்ன வின்னா செயினும் அவர்
செய்த, ஒன்று நன்றுள்ளக் கெடும்". மலைமேற் செய்த ஹிதோபதேசத்தில்
"மனிதர் செய்யும் தீமையை நீங்கள் மன்னிப்பீராயின், பகவான் உங்களையும்
மன்னிப்பார்" என்றுரைத்தார் ஏசுநாதர். பேகன் என்னும் ஆங்கிலவாசி
ரியர் "பழிக்குப் பழி தீர்த்துக்கொள்பவன் பகைவனோ டொத்தவன்.
அதைப் பாராட்டாமல் மன்னிப்பானாயின் அவனிலும் உயர்ந்தவனாவான்.
ஏனெனின் மன்னிப்பது இராஜகுண மாகின்றது" எனக் கூறியிருக்கின்ற
னர். ஸாமலன் என்பவர் தமது மூதுரையில் "ஒருவன் செய்த குற்றத்
தை மன்னிப்பதே ஒருவனுக்குப் பெருமையாம்" என்றனர். ஆனால் நமது
வள்ளுவரோ, பிறர் செய்யும் தீமையை மன்னிக்கும்படி சொல்லாமல்,
அதனை அப்பொழுதே மறந்துவிடுக என்றனர். ஏசுநாதர் அவ்வுபதேசத்
தில், "உங்கள் பகைவரை நேசியுங்கள்: உங்களைச் சபிக்கின்றவரை வாழ்
த்துங்கள்: உங்களை வெறுக்கின்றவருக்கு நன்மைசெய்யுங்கள்" என்றார்.
நமதாசிரியரும், பொறையென்னும் அதிகாரத்தில் "மிகுதியால் மிக்கவை
செய்தாரைத் தாந்தம், தகுதியான் வென்று விடல்" என்றும், இன்னா
செய்யாமை யென்னும் அதிகாரத்தில் "இன்னாசெய்தாரை ஒறுத்தல்
அவர்நாண, நன்னயஞ் செய்துவிடல்" என்றும், பண்புடைமை யென்
னும் அதிகாரத்தில் "நண்பாற்றா ராகி நயனில செய்வார்க்கும், பண்
பாற்றா ராதல் கடை" என்றும் சான்றாண்மை யென்னும் அதிகாரத்தில் "இன்
னாசெய்தார்க்கு மினியவே செய்யாக்கா லென்ன பயத்ததோ சால்பு" என்றும்
பல்விடத்தும் இவ்வுறுதியை உரைத்தனர். இங்ஙனம் இன்னா செய்தார்க்

ளும் இனிய செய்யுமாறு வற்புறுத்தற்கண் எல்லாரும் ஓராறுபட்டு ஒப்பவ ராயினும், தீமையை மறந்து விடுக என்னுமிடத்தில் ஏனையரிற் சிரியராயி னார் நமது வள்ளுவனாரே. இல்வாழ்வான் ஏனை மூவர்க்குந் துணையாகி, மற்றை யில்வாழ்வார் முதலாயினாருடனே கலந்துறவாடுகையில் அனுசரித்தலான பொது லக்ஷணங்களைச் சொன்னார் இல்லறவியலில். பொருட்பாலிற் குடியி யலில் அவ்வில்வாழ்வான் அரசியலிலே ஒருகுடியாய்க் கௌரவமான குணங் கள் பொருந்தி நல்குரவால் இரந்து இன்னலெய்தாமல் உழவுதொழிலால் தன் குடியை மேம்படுத்தும் திறத்தைக் கூறுகின்றார். இங்கே விளக்கும் தலைமை யான குணங்கள் மூன்று, மானம், பெருமை, சான்றாண்மை என. மானமாவது எப்போதும் தமது நிலையில் தாழாமையும் அங்ஙனம் தாழ்வுவரின் உயிர் வாழா மையுமாம். ஆங்கிலத்தில் Death rather than dishonor என்பதற் கேற்பத் தமிழிலும் "மானம் பெரிதோ பிராணன் பெரிதோ" என்றோர் முதுமொழி வழங்கிவருகின்றது. "மயிர்நீப்பின் வாழாக் கவரிமா வன்னார், உயிர்நீப்பர் மானம் வரின்" என்றார் வள்ளுவர். அவரவரெய்தும் பெருமைக்கு வள்ளு வனார் ஊழ் முதலானவற்றைக் காரணமாகக் கொண்டிலர். அவரவர் பெரு மைக்கு அவரவர்களும் அவரவர்களுடைய செய்கை வேறுபாடுகளுமே கார ணம் என்பதை "ஒருமை மகளிரே போலப் பெருமையுந், தன்னைத்தான் கொண்டொழுகி னுண்டு" எனவும் "பிறப்பொக்கு மெல்லா வுயிர்க்கும் சிறப் பொவ்வா, செய்தொழில் வேற்றுமை யான்" எனவும் உரைத்தனர். பெருமை யின் இலக்ஷணம் செயற்கரிய செய்தல், தருக்கின்மை, பிறர்குற்றங் கூறாமை முதலான நற்குணங்களாம். பெருமை பெரியாரது தன்மை என்பதை "பெரு மையுடையவ ராற்றுவ ராற்றி, னருமை யுடைய செயல்" என்றும் "பெருமை பெருமித மின்மை" என்றும் "அற்றமறைக்கும் பெருமை" என்றும் விளங்க வைத்தார். சான்றாண்மை யாவது பலகுணங்களானும் நிறைந்து அவற்றை ஆளுந்தன்மை. இவ்வதிகார மொன்றுமே திருக்குறளின் சிரோபூஷணமாகக் கொள்ளற்பாலது, மனிதர் நல்வழிப்பட்டு மேம்பா டெய்தற்கு எடுத்துக்காட்ட லான மனிதனுடைய திறத்தை விளக்குவது இவ்வதிகாரமே யாதலின். இங் ஙனம் எடுத்துக் காட்டலான மனிதனது சால்புக்கு ஆதாரமான குணங்கள் ஐந்து. "அன்பு நாண் ஒப்புரவு கண்ணோட்டம் வாய்மையோ, டைந்துசால் பூன்றிய தூண்." இச்சால்புடைமையின் பயனாவது இன்னா செய்தார்க்கும் இனியவே செய்தலாம். "ஊழி பெயரினும் தாம்பெயரார் சான்றாண்மைக், காழி யெனப்படு வார்". இவர்களது பெருமை "சான்றவர் சான்றாண்மை குன்றி னிருநிலம், தாங்காது மன்னோ பொறை" என்பதனால் நன்கு புலப்படும். குடிகளை யோம்புதற்கு அமைச்சு முதலிய அங்கங்களுடனே அரசியற் றிப் பொருளீட்டும் அரசனைப்பற்றிச் சொல்லுமிடத்திற் கல்வி ஊக்க முடைமை - நட்பு என்னூற்போல்வன போந்தமை எல்லாரும் அறியத்தக்க விஷயங்களாதலினெனக. கல்வியைப்பற்றிக் கூறுமிடத்திற் கல்வியின் பய



னைக்கூறிய "தாமின்புறுவ துலகின் புறக்கண்டு, காமுறுவர் கற்றறிந் தார்" என்னுங்குறள் மிகவும் பாராட்டற்பாலது. ஊக்கத்தின் பெருமையை "சூழ் கீம் அதர்வினாய்ச் செல்லும் அசைவிலா, ஊக்க முடையா னுழை" என்பதனால் உணரலாம். நட்பு அரசின் அங்கவியலிற் சேர்ந்ததாயினும், குடிகட்கும் இன் றியமையாச்சிறப்பிற்றாதலிற் போலும் இதனைக் குடியியலுக்கு முன்னே வைத் தது. நட்பினாலுண்டாகும் இன்பம் காமவின்பம்போல உறுகாண் எனக் காட் டலாவ தொன்றன்று. சின்னீரதான காமவின்பம் போலே, நட்பினாலாய வின்பம் தேய்வதன்று, அந்நட்புப் பெரியோரிடத்துப் பொருந்துந்தோன்றுங் கு மிடத்து. "நிறைநீர நீரவர் கேண்மைபிறை". இங்ஙனம் கற்றறிந்த பெரி யோர்களுக்குள்ளே உண்டாய் நாட்குநாள் வளர்வதான நட்பின்பத்தை "நவி றொறு நூனயம்போலும் பயிறொறும் பண்புடையாளர் தொடர்பு" என உவ மைமுகத்தான் விளக்கிய திறம் மிகவும் வியக்கற்பாலது. இத்திறம் அக் கவிருதிறத்தையும் சுவைத்தவர்கட்கே கண்கூடாகும். இன்னோரன்ன வின் பந் தருவதாயினும் "நகுதற் பொருட்டன்று நட்டல் மிகுதிக்கண், மேற் சென் றிடித்தற் பொருட்டு". உற்றதுரைத்த பின்னரன்று நட்பினர் ஒரு வருக்கொருவர் செய்யும் உதவி: "உடுக்கையிழந்தவன் கைபோல வாங்கே இடுக்கண் களைவதாம் நட்பு". இந்நட்பின் சூக்ஷ்மத்தை "இனைய ரிவரெமக் கின்னம்யா மென்று, புனையினும் புல்லென்னும் நட்பு" என இவ்வாசிரி யர் உரைத்தாங்கு வேறெவரும் உரைப்ப நான் இதுகாறுங் கண்டதும் இல்லை; கேட்டதும் இல்லை. நட்பிற் பிழைபொறுத்தலைக் குறித்துப் பேகன் (Bacon) என்னும் ஆசிரியர், விவிலியநூலில் ஜாப் (Job) என்னும் மகான் "நாம் கட வுளிடத்தில் நன்மைபெறுமாறு, போலவே தீமையைத் தானும் அமைதி யுடனே ஏற்றுக்கொள்ளக் கடவேமன்றோ?" என்றுரைப்பதை மேற்கோள் காட்டி, நட்பினர் திறத்திலும் ஒழுகுவாறு அங்ஙனமே எனக் கூறிவிட்டனர். நமது தமிழாசிரியரோ, அங்ஙனமன்றி. "பேதைமை யொன்றோ பெருங்கிழமை யென்றுணர்க நோதக்க நட்டார் செயின்" என்றும், "கேளிழுக்கங் கேளாக் கெழுதகைமை வல்லார்க்கு, நாளிழுக்க நட்டார் செயின்" என்று முரைத் தார். துறவறத்துக் கடியான அருளாவது கொல்லாமை. உண்ணற்பொருட்டு ஊனைக்கொள்வா ரிலராயின் விலைப்பொருட்டு ஊன் விற்பாரு மில்லையாவர்: "அவிசொரிந் தாயிரம் வேட்டலி னொன்றன், உயிர்செகுத் துண்ணாமை நன்று." தவநிலையில் நிற்பவராய் நடித்துக் காமவின்பத்தை விரும்பும் கூடாவொழுக் கத்தினர் புலித்தோல் போர்த்துப் பைங்கூழ்மேயும் பசுவுக்குச் சமமாவர் எனவுரைத்து, "மழித்தலும் நீட்டலும் வேண்டா வுலகம், பழித்த தொழித்து விடின்" என்றனர். இன்னவர்கள் "உள்ளத்தா லுள்ளலுந் தீதே பிறன்பொரு ளைக், கள்ளத்தாற் கள்வே மெனல்." அப்பால் வாய்மை முதலாக அவாவறுத்த லீறாகத் துறவறத்துக் கொருதலையானவற்றைக் கூறுமிடத்தில் வாய்மையை மாத்திரம் சற்று ஆராய்ந்து பார்ப்போம். "யாமெய்யாக் கண்டவற்று ளில்லை

யெனைத்தொன்றும், வாய்மையினல்லபிற". திரிகரண சுத்தியிற் பிரதானமான மனோசுத்திக்குக் காரணம் இவ்வாய்மையே". "புறந்தூய்மை நீரானமையும் அகந்தூய்மை, வாய்மையாற் காணப்படும்". வாய்மைவல்லான் பிறவறங்களைச் செய்யவேண்டா. திருவள்ளுவர்க்கு "வாய்மை யெனப்படுவ தி யாதெனின் யாதொன்றுந் தீமையிலாத சொலல்". என்று. தமிழ்வேதமாகக் கொள்ளப்படும் இந்நூலில் அறத்துப்பாலில் துறவற வியலில் வாய்மையை வற்புறுத்து மிடத்திற் "பொய்ம்மையும் வாய்மை யிடத்த புரைதீர்ந்த நன்மை பயக்கு மெனின்" என இவ்வாசிரியர் எடுத்துரைத்தது ஏற்குமா? கலப்பாலில் துளிப்பிரை விட்டாற் போலே இஃது இந்நூலின் பெருமையைக் குன்றச் செய்வதன்றோ? எனின் அற்றன்று. உலகத்துக் கின்றியமையாதவற்றை இத்தனை திட்பநுட்பமுமாகக் கூறிய குரவர், இது நூலின் பெருமையைக் கெடுப்பதாக இருப்பினும், இதனால் உலகினர்க்குக் கேடுண்டாவதாக இருப்பினும், இதனை இங்ஙனம் இவ்விடத்திற் கூறியிரார். உலகினருடைய பொதுநன்மையை நாடினவர் நமதாசிரியர்: இன்னா செய்தார்க்கும் இனிய செய்யும்படி வற்புறுத்துகின்றவர். எல்லாருடைய பொது நன்மைக்கும் வாய்மையே காரணமன்றோ? அந்நன்மையானது ஏகதேசமாக ஒரோவோர் காலத்துப் பொய்ம்மையாலும் விளைவதாயின் அது மெய்ம்மையோ டொத்ததே யன்றோ? ஆகவே அப்பொய்ம்மை மெய்ம்மையின்பாலது தானே. அப்பொய்ம்மையாற் கெடுவாரின்மையின் அது தன்னெஞ்சைச் சுடுவது மில்லையே. இங்ஙனம் புரை தீர்ந்த நன்மை பயக்கும் பொய்ம்மை, மெய்ம்மையின் பாலது என்று கூறும் கருத்துப்பற்றியே போலும், 'இவர் வாய்மை யெனப்படுவ தியாதெனின் யாதொன்றுந், தீமையிலாத சொலல்' என வரையறுத்துக் கொண்டது. இந்நூலில் அவ்வப்பாலில் அவ்வவ்வியலில் எவ்வெவரை நோக்கி எவ்வெவ் விஷயங்கள் கூறப்பட்டனவோ, அவ்வவ் விஷயங்கள் அவ்வவரையே நோக்கின என்பதில்லை. குடித்தனமோ துரைத்தனமோ என்பது பழமொழியாதலின், அரசர் அமைச்சர்களுக்குக் கூறியவற்றிற் பல குடியானவனுங் கொள்ளற்பாலன. குடியியலிற் கூறிய வற்றிற் பல அரசரும் அமைச்சருங் கொள்ளற்பாலன, துறவறத்திற் கூறிய புலான்மறுத்தல், வாய்மை முதலாயின ஏனை யறங்காப்பாருங் கொள்ளற் பாலனவே. மனிதன் பலவேறு நிலைமைகளிற் றழுவற்பாலனவற்றை ஆங்காங்குக் கூறியிருப்பினும், நல்லரசனுடைய நாட்டிலே இல்வாழ்வான் சான்றாண்மையுடனே குடிமையை நடத்தாநின்று இன்பநுகர்ந்து பின் துறந்து துறக்க மெய்தலே இந்நூலின் நோக்கமாதலின், ஒவ்வொருவரும் இத்தமிழ் மறையை முற்றவும் நன்கு கற்றல்வேண்டும். "கற்க கசடறக் கற்பவை கற்றபி, னிற்க வதற்குத் தக".

திருமணம்-செல்வக்கேசவராய முதலியார்.

(இன்னும் வரும்.)

---



# VIKRAMORVASIYAM.

## விக்கிரமோர்வசீயம்.

---

**அரசன்**:—(உருப்பசியை நோக்கி) அவ்விஃது பெருந்துன்பத் தழுந்துகின்றது காண்க நீ,

தற்செய லாவெவ னன்மைக டூங்கிய கண்வழி யின்வயின்
சிற்கலுற் றொரு காலைநீ நேர்ந்தக வின்னுடை யாயவன்
ஒற்கமி லாவுவப் புற்றவ னுகுவ னேவுனை விட்டிவண்
நிற்க ணிறைந்த தொடர்புடை யாயம் தெங்ஙன நிற்குமே. (10)

**உருப்பசி**.—(தன்னுள்) இவரது மொழி தகைமையானதே; இல்லாவிடின் சந்திரனின்றும் அமுதமெனின் அங்கு இறும்பூ தென்னை?

(விளக்கம்) :—ஆகையாற்றான் இதைப்பார்க்க என்மனம் விரைகின்றது.

**அரசன்**:—(கையாற் காட்டிக்கொண்டு.)

மின்னுடலாய் பொற்கூட மேவுமிந்தத் தோழியர்கள்
மன்னியகோ ணீங்கியவெண் மாமதிநேர்—உன்முகத்தை
மீண்டுவந்த தற்குரிமை மேவுபிர சாதமதாக்
காண்டலுறு கின்றனர்கள் காண். (11)

(உருப்பசி அரசனைக் காதலோடு நோக்குகின்றனள்.)

**சித்திரலேகை**:—தோழி! என்ன பார்க்கப்படுகின்றது?

**உருப்பசி**:—இன்பதுன்பங்களை யொப்பநாடுவதா மிச்சனம்.

**சித்திரலேகை**:—(சிரிப்போடு) அடி! எது?

**உருப்பசி**:—நட்புச்சனம்.

**அரம்பை**:—(களிப்போடு) தோழிகாள்! இவ்வரசமுனிவர், சித்திரலேகையைத் துணைவியாகக் கொண்ட இன்றோழியைக் கைக்கொண்டு விசாகை மீனுடன் கூடிய கடவுட்சந்திரன்போற் கிட்டினர்.

**மேனகை**:—(கண்டு) இவ்வின்றோழியு மீட்டுக்கொணரப் பட்டனள்; இவரும் புண்படாவுடலினர்; என்ற இரண்டும் நமக்கு இனியனவாகவே அமைந்துள்ளன.

**சகசனியை**:—நன்கு மொழிகின்றனை; வெலற்கரியரன்றோ அசுரர்கள்.

**அரசன்**:—பாக! இஃது அக்குன்றக் குவடு; தேரினையிறக்கு.

**பாகன்**:—எது கட்டளையிடுகின்றனனோ ஆயுளானன்.

(என்ற சொன்னவண்ணஞ் செய்கின்றான்)

**அரசன்**.—(சக்கரத்தி னசைவைத் தோற்றுவித்துக் கொண்டு தன்னுள்) அந்தோ! பயனுடைத்து எனது சிற்றின்பத்திறக்கம்.

தேரசைவா விப்புயந்தான் றோர்கீர்த்த வல்குவினுள்
ஏரமைந்த நற்புயத்தோ டேயிடித்து—நேரியைந்த
வன்ன மயிர்ப்புளகம் வாய்ந்திருப்ப தங்கமிலான்
முன்னமுளைத் திட்டதுபோன் மோ. (12)

**உருப்பசி.**—(நாணத்தோடு) சிறிது முன்னே செல்.

**சித்திரலேகை.**—(சிரிப்போடு) யான் வலியற்றவள்.

**அரம்பை.**—இங்கு அரசமுனிவரைப் பூசிக்கின்றோம்.

(நெருங்குகின்றனர்கள்.)

**அரசன்.**—பாக! தேரினை நிறுத்து காண்.

ஆசை வாய்ந்தவ ளாகுமிந் நன்னுதல்
ஆசை வாய்ந்திடு தோழிய ரோடவண்
ஏச றுங்கொடி யோடிரு துத்திரு
வீசி மேவலின் மேவுறு மீண்டுமே. (13)

(பாகன் அவ்வாறு செய்கின்றான்.)

**எல்லோரும் :**—அம்ம! மகாராசர் வெற்றியினால் வளர்கின்றனர்.

**அரசன் :**—நீவிருந் தோழியின் சேர்க்கையால்.

**உருப்பசி :**—(சித்திரலேகையாற் பற்றுண்ட கையினளாய்த் தேரினின் றிழிந்து) தோழிகாள்! என்னைத் திடமுறக் கட்டிக்கொண்மின்; நட்புச்சனத்தை மீண்டுங் காண்பே னென்னு மாசை எனக்கில்லா திருந்ததன்றோ?

(யாவரும் மிக்க விரைவினராய்க் கட்டிக்கொள்கின்றனர்.)

**அரம்பை :**—எவ்வாற்றானும் மகாராசர் பல்லாயிர மாண்டு காசினியைக் காத்துவருக.

**பாகன் :**—ஆயுளாள! கீழைத் திசையில் தேரினது பெருவேகத்தால் ஒலி காட்டப்பட்டது.

உருக்கிய வாடகத் துற்ற தோள்வளை
தரித்திடு மீங்கிவ னொருத்த னுந்தடித்
திருத்திய வாரிதம் போல வேயினி
திருக்குமிந் நாகமீ திழிகின் றனரோ. (14)

(காண்கின்றனர்கள் அச்சரமாதர்கள்.)

**அச்சர மாதர்கள் :**—அகோ! சித்திரரதன்.

(பின்பு புகுகின்றனன் சித்திரரதன்.)

**சித்திரரதன்.**—(அரசற்கெதிர் முகமாக நின்று) ஓ! மகேந்திரனுதவி யளவினதாய வல்லமை மேன்மையால் வளர்கின்றனை நீ.



**அரசன்.**—(தன்னுள்) அடே! கந்தருவ வேந்தன்.

(விளக்கம்).—இனியநண்ப! நல்வரவா?

(தேரினின்றிழிந்து இருவரும் ஒருவர்க்கொருவர் கைபிடித்துக் கொள்ளுகின்றனர்.)

**சித்திரரதன்.**—நண்ப! கேசி உருப்பசியைத் தூக்கிக்கொண்டுபோய் விட்டதாக நாரதர் சொல்லக்கேட்டு இவளை மீட்டுக் கொணர்கைக்குத் கந்திருவ சேனை இந்திரனாலேவப்பட்டது; பிறகு யாம் நினது வெற்றியின் மேன்மையை இடையிற் சாரணர்கூட்டங் கூறச் செவியேற்று இங்கிருக்கும் நின்னைக் காண்பான் வந்தனம்; அந்த நீ இவளை முன்னிட்டுக் கொண்டு எம்மோடுகூட வானவர் கோனைக் காணற்குரியை; இந்திரனுக்குப் பேரிட்டஞ் செய்யப்பட்டதன்றோ. காண்! காண்!!

நாரணனுன் முன்னமிவ ணன்குபடைக் கப்பட்டாள்
காரணவும் வாகனனார் காரணமா—நேரணைந்த
மித்திரனு முன்னாலே மீட்டமரர் தம்பகைவன்
கைத்தலத்தி னின்றுமிவண் காண். (15)

**அரசன்.**—வேண்டா மிவ்வாறு.

எதினிவன் பாங்கி னோர்க ளியற்பகை சயிக்கின் றோர்கள்
இதுகையிற குலிசத் தோன்ற லேற்றவல் லமையே யன்றோ
குதரவன் முழையி னின்றுங் கொடியபஞ் சான னத்தின்
எதிரொலி யதுவு மோடி யினக்கயம் பிளக்கு மன்றோ. (16)

**சித்திரரதன் :**—இது தக்கதுதான்; தருக்கின்மையன்றோ வல்லமைக்கணி.

**அரசன் :**—நண்ப! சதமகனைக்காண இது சமயமன்று? ஆகையால் நீயே அங்கிவளைக் கொண் மருங்கணைவி.

**சித்திரரதன் :**—நீ எங்ஙனம் நினைகின்றனையோ. நீவிர் இங்கே இங்கே.

(அச்சரமாதர்கள் புறப்பட்டனர்.)

**உருப்பசி :**—(ஏகாந்தத்தில்) அடி! சித்திரலேகை! உதவிசெய்த அரசமுனிவரை விடைகேட்க வலியற்றவளாகின்றேன்; நீ எனக்கு முகமாயிரு.

**சித்திரலேகை :**—(அரசனைக்கிட்டி) ஓ! நண்பரே! 'மகாராசரது கீர்த்தியைப் போல் தன்னை மகேந்திர லோகமடைவிக்கைக்கு மகாராசர் விடைதர வேண்டுகின்றேன்' என்று உருப்பசி விண்ணப்பிக்கின்றனள்,

**அரசன் :**—போகலாம் மீட்டுங் காண்கைக்கு.

(எல்லோரும் கந்தருவரோடு வானத்தெழும்புதலைத் தோற்றுவிக்கின்றனர்கள்.)

**உருப்பசி :**—(எழும்புதலின் தடையைத் தோற்றுவித்து) அகோ! கொடிக்கிளையில் எனது ஒற்றைச்சர முத்து மாலை பற்றிக்கொண்டது.

(கபடத்தோடு திரும்பி அரசனைப் பார்த்தவளாய்) சித்திரலேகை ! இதை விடுவிகாண்.

**சித்திரலேகை** :—அறப்பற்றிக் கொண்டதன்றோ ; விடுவித்தற் கரிதென்றே எனக்குத் தோற்றுகின்றது ; இருக்கட்டும் ; இதை விடுவிப்பேன்காண்.

**உருப்பசி** :—(சிரிப்போடு) தோழி ! எனது சொல்லினை மறவேல்.

(சித்திரலேகை விடுவிக்கின்றனள்)

**அரசன்** :—ஆ !

இவள்செலவுக் குக்கணப்போ திங்கிடையூ றேற்ற
தவழ்கொடியே யெற்குநலஞ் செய்தாய்—இவள்திருப்பப்
பட்டவரை யாமுகத்தாள் கட்கடையி னுள்பார்க்கப்
பட்டனளின் றென்னாலே பார். (17)

**பாகன்** :—

இந்தி ரன்வயிற் றீமைசெய் தேய்ந்ததா னவரை
வந்து வர்க்கடல் வீழ்த்தியிவ் வாயுவின் படையின்
சந்த வம்புசேர் தூணியைச் சார்ந்தது மீண்டும்
தந்த நஞ்சுகா லரவுதன் னளைதனைப் போல. (18)

**அரசன்** :—தேரினைச் சித்தப் படுத்து ஏறுவதற்குள்.

**பாகன்** :—அப்படியே.

(என்று தேரினைச் சித்தஞ் செய்கின்றனன் ; அரசன் காட்டியபடியே தேரேறுகின்றான்; உருப்பசி கெட்டியிற்போடு வேந்தனைப் பார்த்துக்கொண்டே தோழிகளோடு அகன்றனள்.)

**அரசன்** :—(உருப்பசி வழிமேல் வைத்த முகத்தினனாய்) அகோ ! கிடைத்தற் கரியதைக் காதலித்த தன்றோ எனது விருப்பம்.

இச்சுர மங்கை தந்தை யிடைப்பதத் தேறு வாளென்
னச்சிர மாய மெய்யி னகத்தினை வலிய வாக
நச்சுறு நளினத் தேய்ந்த தலையறு நாள நூலை
யச்சுறு மரச வன்னப் பெடையென விழுக்கின் றாளால். (19)

(என்ன எல்லோரும் அகன்றனர்.)

**முதலங்கம் முற்றிற்று.**

பு. மா. ஸ்ரீநிவாசாசாரியர்.



# THE PHILOSOPHY OF RAMAYANA.

# இராமாயணத்தின் தத்துவபோதம்.

---

நம் தேசத்தில் ஆஸ்திகர்களாயிருப்பவரனைவரும் இராமாயணத்தை மிக மேலான கிரந்தமாகக் கருதுவதும் அதன்மீது ஒப்பற்ற மரியாதையையும் கௌரவத்தையும் பாராட்டி அதற்குத் தலை வணங்குவதும் நாம் நன்கறிந்த விஷயம் ; அதன் மகிமை அளவற்றதெனப் பலருங் கொண்டாடுகின்றார்களென்பதற்கு அது வேதமெனப்படுவதே போதுமான சான்றாகும். இராமாயணத்தைப் படிப்பதனால் அடையும் பேறு மிக்க அற்புதமானது என்றும் இப்பாரத வருஷத்திலுள்ள ஆரியர்களில் அவரவர் அவாந்தர மதபேதங்களும் அவரவர் ஆசார அபிமானங்களும் பலவாறாக அமைந்திருப்பினும் அவர்களில் ஒவ்வொருவரும் சரியாகவோ சரியின்றியோ இராமாயணம் மற்ற எந்த நூலிலும் சிறப்பு வாய்ந்ததென்றும் அங்கீகரிப்பதை நாம் ஆக்ஷேபிக்க வல்லேமல்லேம். அவ்வொவ்வொருவரும் ஸ்மார்த்தராயினும், வைணவராயினும், மாத்வராயினும் இராமாயணத்தின் தெய்வத் தன்மையை ஐயமின்றிக் கருத்திற்கொள்வதும், அதுவே மேலான சன்மார்க்கத்தின் விதிகளையுடையதென்றும் உயர்ந்த தருமங்களை நடத்திக்காட்டும் தந்திரமென்றும் அதனைக் கைக்கொள்வதும் நாம் தெளிவாயறிந்த விஷயம். நம்முட் சிறந்த நூல்கள் பலவுளவாயினும் அவற்றுள் இராமாயணத்திற்கு இத்துணைச் சிறப்புரைப்பதற்குக் காரணம் யாதென்று வினவ நூல்களை உய்த்துணர்வோர் ஒவ்வொருவர் மனத்தினுந் தோன்றலாம்.

அஃது ஒரு தேசசரித்திரம் என்பதனாலோ ? ஓர் உத்தம புருஷனுடைய வரலாறென்பதனாலோ? மானுடர் இவ்வாறு நடக்கவேண்டியதென்ற உயர்ந்த தர்மங்களை உபதேசிக்கின்றதனாலோ ? சுலபமும் ருசியுமான கீர்வாண நடையியற்றப்பட்டுச் சொற்சுவை பொருட்சுவை அலங்காரம் முதலியன நிரம்பியிருக்கின்றதனாலோ ? அல்லது அந்நூலின் கதாநாயகன் சர்வக்ஞனது அவதாரமென்பதனாலோ? எக்காரணத்தால் அஃது இத்தகைய மாண்பினைப் பெற்றது ? மேற்கூறிய எல்லாச் சிறப்புக்களும் ஒருங்கு வாய்ந்திருப்பினும் இந்நூல் மற்றெந்நூலினும் சிறப்பு வாய்ந்தது என்பதற்கு அவையே போதுமான காரணங்களாகுமோ ? பல்வகை அறங்களையும் வித்தைகளையும் விவரித்துரைக்கும் ஸ்காந்தமும், மெய்யறிவுணர்த்துதற் கென்றே அமைந்த பாகவதம் விஷ்ணுபுராணம் முதலிய சிறப்புற்ற கிரந்தங்களும் மேற்கூறிய சிறப்பு மாத்திரமன்றி ஈசுவர அவதாரங்களையும் ஈவரப் பிரத்தியக்ஷத் தோற்றத்தினையும் கூறுகின்றன. அவைகட்குப் புராணமென்று பெயரிட்டு, இராமாயணத்துக்கு விசேஷார்த்தமுள்ள இதிகாசமென்ற நாமமளிக்கக்காரணமென்னை? இராமயணத்தை வேதமாகக் கருதக்காரணமுளதெனில் மெய்யறிவைப்

பயக்க வல்லதாயும் மனிதர்களின் அறிவுக்கு மேலான பயனுடை யிருக்கின்ற "உபநிஷதவித்தை" இராமாயணத்தில் எங்கிருக்கின்றது? வேதமே இராமாயணமெனக் கொள்வதற்கு ஈசுவரனே மானுடருள் ஒருவனாக வந்தானென்பதும் மனிதர்களைப்போல் அவனும் வருந்தினனென்பதும் அவன் ஒரு மனிதனாகவே இருந்து தன்னுடைய பராக்கிரமத்தினாலும் அறிவினாலும் பிறருக்குதவி புரிந்தானென்பதும் போதுமான காரணங்களாகுமா? சாதாரணமாய்ப் புண்ணிய மென்றும் பாவமென்றும் இன்னவை நல்லவை இன்னவை தீயவை யென்றும் உரைக்கும் கதைகளும், ஞானிகளுடையவும் அரக்கர்களுடையவும் தன்மையை விவரிக்கும் வரலாறுகளும் மனிதனுடைய ஆத்ம லாபத்தைப் பயக்கக் கூடியனவா வென்பதும் அவனுடைய வாஸ்தவ சுபாவம் இன்னதென வுணர்த்தி முன்னர் அவன் இவ்வாறு இருந்தா னென்றும் பின்னர் இத்தகையவன் ஆவா னென்றும் குறித்துக் காட்டும் இயல்பை யுடையனவா வென்பதும் அனைவரும் சந்தேகமுறக் கூடியவை யல்லவா? ஆனால் இராமாயணத்தில் மறை பொருளாக வேதாந்தத் தத்துவார்த்தம் அடங்கி யிருக்கிற தென்றும் வெளிப்படையாகச் சாதாரணமான கதைகளை இராமாயணம் உரைப்பதாயினும் அக்கதைகள் அதன் முக்கியமான கருத்தென்று கொள்ளாமல் மறைந்திருக்கும் தத்துவார்த்தத்தையே ஒவ்வொருவரும் ஆராய்ந்தறிய வேண்டிய தென்றும் அந்தத் தத்துவப் பொருளின்ன தென்றும் வெளிப்படையான கதைகளின் பிரயோசனம் இன்னதென்றும் நாம் விவரிக்க வேண்டியது மவசியம். இராமாயணத்தில் தர்மம், மதம், சரித்திரம் முதலியவைகட் குரிய விதிகள் நிரம்பியிருக்க அவ்விதிகளுக்குக் குறை வின்றியும் அவைகளை விவரிக்கும் வசனங்களையே ஆதாரமாகக் கொண்டும் அவற்றுள் அடங்கியிருக்கும் தத்துவார்த்தத்தை விவரிப்பது உசிதமே யல்லாது அவ்விதிகளுக்கு இடையூறாக வாவது வசனங்களுக்குப் புறம்பேசென்றாவது சம்பந்த மில்லாத ஓர் அர்த்தத்தைக் கற்பிப்பது உசிதமன்று. அப்படிக் கற்பிக்கப்படும் பொருள் நிராதாரமாக இருக்குமாகையால் அஃது ஒருவராலும் அங்கீகரிக்கப் படவுமாட்டாது. பிரபோத சந்திரோதயம் முதலிய சிறு நூல்கள் மறைபொருளாக ஓர் அர்த்தத்தையும் வெளிப்படையாக மற்றோர் அர்த்தத்தையும் விவரிக்குமாறு இராமாயணமும் அவ்வாறே இருபொருளை யுடையதென்றும் அதில் மறைந்திருக்கும் பொருளானது பரமவேதாந்தத்தையே குறிக்கிற தென்றும் நாம் கருதுகின்றனம். அந்த இரகசியார்த்தம் யாதெனில்:—

இராமாயணம் ஏழு காண்டங்களாக அமைக்கப்பட்டிருப்பதுடன் காயித்திரி மந்திரத்தின் இருபத்து நான்கு அக்ஷரங்களில் ஒவ்வோர் அக்ஷரத்திற்கு ஆயிரம் சுலோகங்களாக இருபத்து நாலாயிரம் சுலோகங்கள் இராமாயணத்தில் அடங்கியிருக்கின்றன வென்பதும் மேலோர்களாற் கூறப்படுகின்றது. இதுவன்றி "தபஸ்ஸ்வாத்யாயநிரதம்" என்று காயித்திரியின் முதலக்ஷரமாகிய 'த' கரத்தில் ஆரம்பித்து, "யாமேவராத்ரிம் ப்ரஸ்தாவம்" என்று காயித்திரியின் கடைசி யெழுத்தாகிய "ய" கரத்தில் முற்றுப்பெற இராமாயணமானது இயற்றப்பட்டிருக்கின்றதை நாம் அறிகின்றோம். இராமன் அவதரித்த குலம் சூரியவம்சம் என்றும் அகஸ்தியமா முனிவருடைய உபதேசத்தின்பேரிற் சூரியனைப் பூஜித்து இராமன் வெற்றிபெற்றானென்றும் புகன்று இராமாயணத்திற் சூரியனுடைய மான்மியமானது உரைக்கப்படுகின்றது. இராமன் அவதரித்த குலத்துக்கு வசிஷ்டமாமுனிவர் ஆசாரியரென்றும் இராமனுடைய இளமைப்பருவத்தில் "பலை" "அதிபலை" யென்ற இரண்டுவித்தைகளை அவனுக் குபதேசித்துச் சீதாபிராட்டியை அவனுக்கு விவாகஞ் செய்வித்தவர் விசுவாமித்திர முனிவரென்றும் சொல்லி அவ்விரண்டு முனிவர்களுடைய பெருமைகளையும் இராமாயணம் ஒருவாறு விளக்கிக் காட்டுகின்றது. இவைகளுக்குக் காரணம் விசாரிக்குங் காலத்திலும் 'ஓம் தபஸ்ஸ்வாத்யாய நிரதம்' என்று பிரணவமந்திரமாகிய ஓங்காரத்தை முதலாக்கூறி இராமாயணத்தைப் படிக்கின்றதை யோசிக்குமிடத்தினும் "யோவேதாதௌ ஸ்வர: ப்ரோக்த:" என்று ஓங்காரத்தை வேதத்திற்காதியாச் சொல்லுகிற வேதவசனத்தை யனுசரித்து யாம் அடியிற் கண்டவாறு கருதுகின்றோம். பிரணவமந்திரத்துக்கு அங்கங்களாக பூ:, புவ:, ஸுவ:, மஹ:, ஜந:, தப:, ஸத்யம், என்று ஏழு வியாகிருதிகள் ஏற்பட்டிருக்கின்றமையால் ஒவ்வொரு வியாகிருதிக்கும் ஒரு காண்டமாக இராமாயணத்திற்கு ஏழு காண்டங்கள் அமைக்கப்பட்டன வென்றும் அந்த ஏழு வியாகிருதிகளுக்கும் அத்திரி, பிருகு, குத்ஸர், வசிஷ்டர், கௌதமர், காச்யபர், ஆங்கீரஸர் என்று ஏழு ருஷிகள் ஏற்பட்டிருந்தும் அவ்வேழு வியாகிருதிகளுக்குள் மத்திய வியாகிருதியும் 'மஹ இதி தத்ப்ரஹ்ம' என்கிறபடி பிரம சுவரூபத்தையே குறிக்கின்றது மாகிய வியாகிருதியின் ருஷியாகிய வசிஷ்ட மகா முனிவரைக் குலாசாரியராகச் சொல்லப்பட்டிருக்கிற தென்றும் நாம் கொள்ளலாம். வியாகிருதிகள் ஏழனையுங்கொண்டு காண்டங்கள் ஏழனையும் ஏழு ருஷிகளுக்குள் முக்கியரான வசிஷ்டராகவும் அமைப்பதற்குமுன் "ப்ரணவஸ்ய ருஷி: ப்ரஹ்மா" என்று சொல்லப்படுகிறபடி சதுர்முகனே வியாகிருதிகளின் அங்கியாகிய பிரணவமந்திரத்துக்கு ருஷியாயும் மகாவியாகிருதிக்கு அவரே தேவதையாகவு மிருத்தலால் அவர் தாம் இராமாயணக்கதையை வால்மீகி முனிவருக்கு உரைத்து, சரித்திரம் நடந்தபடியே பார்க்க அம்முனிவருக்கு அநுக்கிரகித்ததாகவும் சொல்லப்படுகிறது. இவ்விதமாக இராமாயணத்தின் உற்பத்தியும் அதன் ஸ்தூல ரூபமான ஏழு காண்டங்களின் அமைப்பும் ஏற்பட்டபின் பிரணவமே சாவித்திரியாக விஸ்தரித்தமையால் சாவித்திரியின் இரு

பத்து நான்கு எழுத்துக்களைக் கொண்டு எழுகாண்டங்களுள் அடங்கிய இருபத்துநாலாயிரம் சுலோகங்களும் அமைக்கப்பட்டன. சாவித்திரிக்கு ருஷி விசுவாமித்திர ரென்றும் அதற்கு தேவதை ஆதித்திய னென்றும் நாம் தெரிந்திருக்கிறோம். அதற்கு அநு குணமாகவே இராமாயணத்தின் தொடக்கத்தில் விசுவாமித்திர முனிவரின் வரவையும் இராமாயணத்தின் முக்கிய இடமாகிய இராவண வதகாலத்தில் ஆதித்தனுடைய அநுக்கிரகத்தை நாம்பார்க்கிறோம். "தத்ஸவிதுர்வரேண்யம்" என்று சாவித்திரியானது ஆதித்தனுடைய தேஜஸையே வற்புறுத்தி உணர்த்துகின்றதென்றும், இராமாயண சுலோகங்கள் சாவித்திரியின் அக்ஷரங்களால் தொடங்கி அமைக்கப்பட்டன வென்றும் நாம் நன்கு அறிகிறோம். சாதாரணமாக ஒவ்வொரு மந்திரத்துக்கும் ரூபம், சந்தஸ், தேவதை ருஷி என்று நான்கு அம்சங்களுள்ளன. இராமாயண மந்திரத்தை அடியிற் கண்டபடி நான்கு விதங்களாகப் பார்க்கின் அதன் அம்சங்களும் நான்கு விதங்களாக வேறுபடுகின்றன.

| ரூபம். | சந்தஸ். | தேவதை. | ருஷி. |
|---|---|---|---|
| 1. சமஷ்டிப்பிரணவம் அல்லது ஓங்காரமாக | தேவீகாயத்திரீ சந்தஸ் | பரபிரம்மம் | சதுர்முகன். |
| 2. வியஷ்டிப் பிரணவம் அல்லது எழுவியாகிருதிகளாக. | காயத்திரீ முதலிய எழு சந்தசுகள். | 1. சதுர்முகன் முக்கியன். | 2. வசிஷ்டன் முக்கியன். |
| 3. சாவித்திரி. | நிஜத் காயத்திரீ சந்தஸ். | சூரியன். | விசுவாமித்திரன் |
| 4. இராமாயணம். | அநுஷ்டுப் முதலிய சந்தஸுகள். | இராமன். | குசலவர்கள். |

இவ்வாறு இராமாயணத்தை வேதங்களுக்கு வித்தாகிய சமஷ்டிப் பிரணவமாகப் பார்த்தால் அதன் தேவதை நிர்க்குணப் பிரம்மமென்றும், அதன் ருஷி சதுர்முக னென்றும், வியஷ்டிப் பிரணவமாகப் பார்த்தால் அதன் தேவதை சகுணப் பிரம்மமாகிய ஹிரண்ய கர்ப்பனென்றும், ருஷி வசிஷ்டனென்றும், சாவித்திரியாகப் பார்த்தால் அதன் தேவதை சூரியனென்றும், ருஷி விசுவாமித்திர னென்றும், இராமாயணமாகவே பார்த்தால் அதன் தேவதை இராமனென்றும் இராமாயணத்தை உபாசித்த ருஷிகள் குசலவர்களென்றும் தெளிதிற்புலப்படும். ஆகையாற் சூரியனே இராமன் சகுணப்பிரம்மமும் இராமன் நிர்க்குணப்பிரம்மமும் இராமனன்றி வேறில்லை. வேதங்களும் சமஷ்டிப் பிரணவமாகிய ஓங்காரத்தினின் றெழுந்து பிரணவத்துக்கு எழுவித வியாகிருதிகள் ஏற்பட்டனபோல் வேதங்களும் எழுகாண்டங்களாக அமைந்து சாவித்திரி மந்திரமே அவைகளில் நிரம்பி யிருக்கின்றது, அவ்வாறே இராமாயணமும்

(1) அக்கினி, வாயு, அர்க்கன், வாகீசன் முதலிய எழுபேர்களின் வாகீசனெனிய சதுர்முகன் மஹா வியாகிருதிக்கு தேவதை. (2) அவ்வாறே 'மஹா' வியாகிருத்திக்கு வசிஷ்டன் ருஷி.



அமைக்கப்பட்டமையால் "வேதவேத்யே பரே பும்ஸி ஜாதே தசரதாத்மஜே। வேத: ப்ராசேதஸாதாஸீத் ஸாக்ஷாத் ராமாயணாத்மநா॥" என்றபடி இராமாயணத்தைப் பிரத்தியக்ஷ வேதமென்றே சொல்வது பொருந்தும். இது நிற்க, "அஸாவாதித்யோ ப்ரஹ்ம இதி" என்னும் வசனத்தால் பரப்பிரம்மத்தைச் சூரியாவச்சின்னமாகப் பார்ப்பதாலும் பரப்பிரம்மத்துக்கும் பரப்பிரம்மஅவச்சேதகமாகிய சூரியனுக்கும், சூரியாவச்சேதகமாகிய இராமனுக்கும் பேதமில்லாமைபற்றி இராமனைச் சூரிய குலத்திற் பிறந்தாரென்ப போலும். இவ்விதமாக வேதமே இராமாயணமாயின், பரப்பிரம்மமே இராமனையின் பரப்பிரம்ம வித்தையாகிய உபநிடதத்தின் சாரம் இராமாயணத்தில் எங்கு விளங்குகின்றதென்னும் வினா மிக்க உசிதமானது. பின்னர்க் கூறுவனவே அவ்வினாவுக்கு விடையாகும்.

(இன்னும் வரும்)

பி. எஸ். சுப்பிரமணிய ஐயர்.

---

## NECTAR OF HISTORIC CURIOSITIES.

## சரித்திர விநோதாமிர்தம்.

---

### "வனப்பினில் வென்ற வேந்தை" என்ற கவியின் ஆட்சேபசமாதானம்.

பின்னரும் ஒரு பாரிய சூரியார்,

"வனப்பினில் வென்ற வேந்தை வயங்கொளுங் கால மென்னுக்
கனைத்துவண் டிவருங் கூந்தல் கருதிய விலக்கந் தப்பாத்
தனிப்படை யாக வேறற் றெண்ணினன் றரளஞ் சிந்தக்
குனிக்குமென் கரும்பான் மேரு வில்லியை வெல்லுங் கோளான்"

என்ற செய்யுளைப் பற்றிக்கொண்டு, அதிலே "தரளஞ்சிந்தக் குனிக்குமென் கரும்பான்" என்றவதனை உதாத்த சத்தமாய்ப் பலதடவை வற்புறுத்திய படியே யோதிக்காட்டி, இஃதென்னை ? வில்லைக் குனிக்கையில், தரளஞ்சிந்தில், கணுக்கள் தெறித்தனவாகவாகி, ஒடிந்த வில்லாமன்றோ ? அன்றியும் "மென்கரும்பு" வில்லென விசைத்தபடியாவது ? கொழுந்தாடைக் கரும்பேயோ ? என்றார். அப்போது இவ்வேழையும்,*

* ஏழை - என்றது அதிவீரராம பாண்டியரின் பத்தினியாராகிய மதன லீலையார். இவர் அவ்வரசரின் காமக்கிழத்தியராகிய பொற்கொடியாரை ஆண்வேடந்தரிக்கச் செய்து, தாமும் ஷை பாண்டியரேயென்ன அவருடையாதிய வற்றால் வேடந்தாங்கி அவருத்திரவின்படி சிவாலயமொன்றில் "நைடதத்தை" அரங்கேற்றிய தன்மையைத் தம் பத்தாவோடு கூறுங் கூற்றினோர்பாக மிது வென்க.

" காணாமல் வேண்டுமெலாங் கத்தலாங் கற்றோர்முன்
கோணாமல் வாய்திறக்கக் கூடாதே—நாணாமற்
பேச்சுப்பேச் சென்னும் பெரும்பூனை வந்தக்காற்
கீச்சுக்கீச் சென்னுங் கிளி"

என்றபடி, அவ்விடந்தாமில்லாததால், பலபல பேசுபவளாகி, "ஆளை ஆள் குத்தும் - ஆர்மிடுக்குப் பத்துப்பேரைக் குத்தும்" என்பதுபோல் தேவரீருடையாதியவற்றால் தம்மிடுக்காளாகி, அவரை அவ்வழியே யடக்கத் தீர்மானித்து, "அந்தணர் வீட்டிற் சந்தனமணக்கும்" "பூவொடு சேர்ந்த நாரு மணக்கும்" என்றவாறு தேவரீரைச் சார்ந்ததனால் தம்மிட மிருந்துண்டான வாக்காதிய வல்லபாதிகளில், "கருவையுருவறியான் - கண்டாரைப் பேரறியான்" என்ற நிலையினின்ற வெனக்குங் கிஞ்சித்துண்டானதாக,—"குப்பையில் முளைத்தகொடி - கூரையேறினதுபோல" வெனத் தாமிருக்குமாசனங் கிடைத்த பெருமையால், "எதிர்த்தும்ம லெடுத்துக்கொடுக்கும்" என்றதை யநுசரித்து வினவிய வித்துவான் தும்மியதூயநன்னிமித்தமுஞ் சேரப், - பொற்கொடியிடந் துடிக்கின்றதென, அடுத்த வரன்கோவிற் காலபூசைக் காண்டமொலிக்க, "சபையிலே நக்கீரன் - சண்டையிலே சவியசாசி" என்ற தன்மையிலாகி, எனது முதற்றெய்வத்தை முன்னிட்டு, அவரை நோக்கி, ஐய புலவீர்,

(அநங்காங்காதிய விளக்கம்.)

" வாவி யாவு மதன்பெருந் தூணிசெய்
யாவு மார னெடுக்குஞ் சிலையிடங்
காவெ லாமவன் காகள சாலைகள்
பூவை மார்மனை போர்க்கள மென்பவே"

என்பதனால், பூக்கள் நிறைந்த சகல தடாகங்களும் மன்மதனுக்கு அம்பறாத் தூணி; கரும்புவயல்களனைத்தும் வில்லை வைத்திருக்கும் நிலைகள்; குயில் செறிந்த சோலைகளனைத்தும் எக்காளங்கள் மாட்டிய மூலைத்தானங்கள்; ஸ்திரீ ஜாதிகள் வசிக்கும் இல்லங்களனைத்தும் அவன் யுத்தகளங்கள்; என்பதே சிறப்பு. ஆயின் மதனம்புகளாந் திரவிய பாணங்கள் ஐந்தென்றுகூறல் என்னை? எனின், அவை அவன் றொழிலுக்குச் சிறப்பினுட் சிறப்பாய் விசேடித்த வென்பதனாலாம்; ஆக, அதனையிட்டும், விரகதாப மயக்கத்தாலுற்ற தமயந்தி கூறிய,

" கூற்ற மென்னக் கொலைபுரி வேனிலான்
றூற்றி தழ்க்கம லத்திறை நோன்மைய
ஆற்றல் சான்ற மலர்க்கணை யைந்தல
தேற்ற நல்கி னுலகினை யென்செயான்"



என்ற விதனைக்கொண்டும், கணையைந்தே யெனக் கருதல் தகாதாம் என்று பின்னுங் கூறுமுன்னமே, அப்புலவர், "வாவியாவு மதன் பெருந் தூணி" என்றதனால், தடாகத்தேயுள்ள குவளை அரவிந்தமாகிய வவையே யன்றி, அவற்றுடனங்குள்ள வேனைய சகல மலர்களுங் கணையாமெனப் பொருட்படுகின்றதே! அன்றியே, தலப்பூக்களாகிய சூதமசோகு முல்லைக ளவன் கணையன்றே? இவண் தடாகமலர்களெல்லாங் கணைகளே யென்றவாற்றிற் றலமலர்களியாவுமே கணைகளாமே எனவுமாமன்றோ? எனவும், வில்லைப்பற்றி வினவியதிற் "சணப்பன் வீட்டுக்கோழி தானே விலங்கில் மாட்டிக்கொண்டது போலவும்" "தன்னாலேதான் கெட்டால் அண்ணாவி யென்செய்வார்" என்றது போலவும், அம்பு நம்மாற் கேள்விக் கிடமாயிற்று எனவும் இசைத்தார். அதற்கு அடியேனும் ஐய, இஃதறிவினாலேயாயினும், யாவுமெம் வாய்கொடே சிறப்பிக்க வேண்டுமெனக் கொண்டீர் போலும். ஆயிற் கூறுதுங் கேண்மோ. கீழேகூறிய அவ்வண்ண மேற்றலுமன்றி, "எங்கண் மாதவனிதய மாமலரிலே" சனித்தும், யாவருள்ளத்திலையுஞ் சனித்தும் வருதலால், மனோசன், மனோபு, சித்தசன் - என்பனவாதிய பெயர்களைக் காரணத்தோடடைந்த மன்மதராசனுக்குக் "கசரததுரகமாக்கடல்" முறையே இரவே, தென்றலே, கிளியொடு பூவையே, மங்கையரேயாம். அன்றியே அவன் படைவீடு பூஞ்சோலையும் இளமஞ்சட்காடும், யுத்தகளம் சிவாசசயனமும் மனவிலாசப் பிரதேசமும், கொடிமகர மீனங்களோடு மங்கையரும் பூந்தொடையலும், பேரிகை கடலும், எக்காளங்கண்ட குயிலோடன்றிலு மகன்றிலும், தேருருள் சந்தனச் சாணையும், சொற்றகிளியாதியாங் குதிரைச் சேணம் மல்லிகையும், கடிவாளம் இலைஞ்சியும், மகுடம் சிதனமும், உடுக்கும் பட்டு மாந்தளிரும், சரபூடணம் மாதுளமருவும், குடைசந்திரனும், அதன் காம்பு அதன் கிரணமும், சாமரை கமுகம்பாளைக் குலையும், உடைவாள் தாழம்பூவும், மெய்க்கவசம் புன்னையலரும், பரிசை மணமுஞ் சந்தனுதிப் பூச்சும் விருகினிலையும், மாலையும் வெற்றிமாலையும் இலைஞ்சித் தொடையும், காளாஞ்சி சம்பகமே வனசமே மல்லிகையே யாமலர்களும், தண்டாயுதம் அல்லியும், ஈட்டி வாழைக்குருத்தும், திருநாள் இளவேனிலும், பாடகர் கீதமதுகரரும், தோழனும் பாகனும் வசந்தனும், தம்பி சாமனும், மனைவியர் இரதியுந் தேவதாரியு மாதரியும், மகார் அநிருத்தனும் விடயாநந்தனும் - ஆடுங்கூத்துப் பேடும்,

" ஆமே கொடிவள்ளை யம்புயமு நெய்தற்பூ
தூமே கரும்பு புனலாட்டுக்—காமவே
டென்றலுறு மென்மறுகு தேராடன் மீடமதி
லன்றுநக ருக்கடையா ளம்"

என்ற சுபவள மமைந்துளதாய்ப் பொருந்துமடையாள நகரம் கந்தர்ப்பபுரியும் ஆரோக்கியமாபுரியுமாம். அத்தென்றலிரத் திருமாரற்கு அரண் மங்கையர்

குழற்காடும், மலை சுத்தோதகச் சிற்றருவியாற் செழுக்கச் சுவாதரகியும் ஆகும். நகாங்குசனுகியவவற்கு ஏனைய பலப்பல கருவிகளுடனே காமகாண்டமாகியவில் பூம்பச்சைத் தண்டோடு மாவு மல்லிகையுங் கமலமு நெய்தலுமா இயவற்றின் றண்டன்றிக் குறித்திட்ட கருப்பந்தண்டுமாம். அன்றியுமாம்வில் பூவாம். இதனால் அவற்குப் புட்பதநுவா புட்பதநுவன் புட்பசாபனெனும் பெயர்களும் வழங்குமன்றோ ? மேலும் இருப்பு வில்லுடனே பொன்வில்லும் மன்மத தந்திர மலர்க்காண்டபமும் சிறந்த புட்பவிசேடக் காமநூற் சுமநசக் கோதண்டமுமாமே. நாணி,

"பட்டுநூல் பவளம் வண்டுவெண் டரளம்
விட்டுவே ளெய்யும் வின்னுணி யைந்தே"

என்பவற்றுடன், பிச்சிக்கொடியும் தாமரை நூலும் வெட்டிவேரும் பல புட்ப நாளங்களுமாம். அம்பு கீழேகூறிய ஐந்தனோடு நெய்தலு மல்லியுஞ் சேரச் சத்தபாணமுமாம். பாவபாணம் இங்கிதம் மதநம் வசிகரணம் மோகனம் சந்தாபமாம். நாணியிற் பொருந்தும் வண்டரே தூதரும், அ-இ-உ-எ-ஒ- என்னும் ஆணெழுத்தா மதநபஞ்சாக்கரமே மந்திரமாம். இங்ஙனங்கூறிப் போந்தவற்றாற் கிரகிக்கவுந் தம்வினவிற்கு விடையாகவும் யூகித்தமைய வேண்டுவது கரும்பெல்லாம் வில்லேயெனலும், நன்மணங்கமழு மலரெல்லாஞ் சாயகமேயெனலுமாம். சுருக்கத்துட் சுருக்கமா யுரைக்கவெனின் காமத்தை வளர்க்கும் பொருளனைத்து மவ்வநங்கனின் உபகரணங்களே யென்பர் பெரியர்.

இப்பால் நாங் குழுமிய விடந்திப்பிய கேத்திரமாதலாலும், இவண் பால-குமர-யௌவன-விருத்தரா மாண்பாலாரும், வாலை - தருணி - பிரவிடை - விருத்தையராம் பெண்பாலாருங் கூடியிருத்தலாலும், அத்திருமகண் மகன் அம்பெய்யுமிடம் அவை செய்யுமவத்தை அவையிற்றைச் சார்ந்தன பலவாமவையெல்லாம் வித்தாரப்படப் பிரசங்கித்தல் கூடாததன்றோ? அங்ஙனம் பிரசங்கிக்கினு மது பிரத்தியேகமாவதோர் மதனுகமப் பிரசங்கமாம். மற்றொன்று விரித்தலாகுமாதலின் அதனை இவண் விறுவிமேலே செல்லுவாம். தேவர் மக்கள் விலங்கு புள்ளாதிய வகுப்பிற் கொவ்வோர் தனிவில்லும் வளைக்குமவன், திரிமூர்த்திகளையுந் தன்னுணைக்குட் படுத்திவரும் பெருமை வாய்ந்த தெய்வமன்றோ?

"ஒத்தேறு முருவமில்லாப் பிரமமொன்று மேயொழிய வுருவ முள்ளா
ரெத்தேவ ராயினுமோர்பூங்கணையாற் றம்போத மெல்லா நீங்கி
மத்தேறி யுடைதயிர்போன் மனஞ்சுழன்று செயன்மறந்து மடவா ராசைப்
பித்தேறி யிதழுரைத்தப் பேதையர்க்குப் பேதையராய்ப் பின்செல் வாரால்."
"அலையேறும் வாரிதிசூ ழம்புவியி லெவனைவெல்வா ராரே செந்தீ
யுலையேறு மெழுகனமுத் தேவரும்பூங் கணைக்காற்றா துருகி வெள்ளி



மலையேறி னொருவன் கடலேறி னொருவன் மறந்து விண்ணின்
றலையேறி னொருவ னாயினும்போ யின்னமங்குத் தவிர்ந்தா ரொல்லோ?"
"வேதாவு முகம்வெளுத்து விண்டுமார் பகஞ்சிவந்து விடைவல் லோனும்
பாதாதி கேசாந்தம் பாதியுடல் கறுத்துவச்சிர பாணி வேந்தும்
போதாமன் முகத்திருகண் புரத்துமோ ராயிரங்கண் புகுதப் பெற்ற
தேதாலென் கணைதுரக்கி வீடுபடா ரெவரேதா மிலக்காகாரே"

எனப் 1 பாவயோனிய னுதலால் 2 அசினயோனியோடு 3 கிருபீடயோனியைக் கரந்தாங்கு 4 சாமகானனுற் சாப்பட்டானென வாளா பொய்ம்மையிற் புகலப்படுஞ் 5 சாமயோனியாம் 6 பதுமயோனி யிளவலான 7 பருவயோனியத்தச் 8 சங்கற்பயோனியே கூறியுள்ளது மறியீரல்லீர்.

அச்சம்பராரிக்குச் சிறந்த சிறப்பாகக் கூறப்படுவதும், சதாவவன் புயத்தேயுற்றதும், கெட்டுவாடாது - ஒடியாது, முதிர்ந்து வெண்டோடியு மிக விளமையா யுவர்த்து நில்லாது, பக்குவவினிய விளமையேறிய தெய்விகவொற்றைக் கருப்புவில்லின் திவ்வியசத்தி இத்தகையதென எவராற் கூறலமையும்? இதனைக் கூறப்புகுந்ததானன்றோ ஆதிசேடற்கு ஆயிரநாவும் பிளந்துகெட்டதுஞ் சரசோதிக்கு மூக்குப் போயினதுமாயின. நிற்க, அத்தெய்விகத் தன்மையுற்ற காமகாண்ட நாமக் கழைத்தநுவையுருவிலி வளைக்குந்தோறும் வளைக்குந்தோறும், அப்பிரத்தியுங்கன் பாணங்களுக்கு முன்னேடுந் தூதாகவும், இலட்சியங் காட்டவிட்ட குறியாகவும் காமரங்கணுக்களின்னும் முத்துக்கள் தெறித்தோடுவதும், சிமிருங்கால் ஒத்தசித்தில முடனேயுற்பத்தியாதலு மாமேயெனி னென்னைகாண்? கூறிப்போந்தாங்கத் * துரோணமுனிக்குக் கடவுட்டன்மை யுண்டெனலை மறத்தல் கூடாததன்றோ? என்று கூறவே அப்புலவரு மமைந் தடங்கினர்.

சி. சாமிநாதபிள்ளை.

---

## RAMAYANA VENBA.

## இராமாயண வெண்பா.

### பாயிரம்.

#### காப்பு.

கடலுலகில் வெள்ளைக் கவியா விராமன்
அடல்பரவு விக்க வருளும்—தடவிலுப
காரிமா றன்றீங் கனியிசைப்பாக் காட்டுகவி
காரிமா றன்பூங் கழல். (1)

---

1. பாவி.—2. மான்.—3. நெருப்பு.—4. சிவபெருமான்.—5. 6. பிரமன்.—7. கரும்பு.—8. மன்மதன்.

* துரோணமுனி = துரோணமாகிய முனி—துரோணம், முனி - என்பனவில்லாம்.

### இதுவுமது

சீரா ரிராமா யணவெண்பாச் செப்புதற்குத்
தாரார் தமிழ்வேதந் தந்தருளிப்—பாராரும்
கற்பா ரிராம பிரானையென்று கட்டுரைத்த
சொற்பா வலன்றாள் துணை. (2)

### அவையடக்கம்.

வெண்பாவில் வல்லுநர்கண் மேவுபெருந் தேவனார்
எண்பாரி னல்லபுக ழேந்திமுதல்—நண்பானோர்
முன்பாக நான்மொழிதல் மூங்கைநல் யாழிசைத்தற்
கன்பாக வேமுயன்ற தாம். (3)

### வரலாறு.

தெய்வ மலர்க்காகச் செல்வீமன் மாருதியை
எய்து நெறிக்கண் ணினிதுற்றுச்—செய்தநண்பின்
முன்னோன்றன் பின்னோ னுவக்க மொழிந்தனனாற்
பொன்னோன்ற மார்பன் புகழ். (4)

பஞ்சவரில் விஞ்சு பலமுடைய மாருதியே
செஞ்சொ லுடைய தெசரதன்றன்—மஞ்சர்களிற்
கோதண்டன் றன்சரிதம் கூறுவேன் கேட்டிடுக
கோதண் டுதலின்றிக் கொண்டு. (5)

சீதா பிராமன் றிருக்கதையைக் கேட்பவர்க்குப்
போத வினைத்தபொருள் பொற்புபலம்—மோதுபோர்
வெல்விஜய மின்னபல வேண்டுவன மேவுவன
நல்விஜய சோதரனே நன்கு. (6)

மக்கள் மனைவிபதி மாநட்பு மேன்மைமித்ரர்
ஒக்க வினைய ரொருமைதுட்ட—விக்கிரகம்
சிட்ட பரிபா லனமுறைசெய் செஞ்சரிதம்
எட்டுவிக்கும் வீட்டுலக மே. (7)

### காரண முதலியன.

வெள்ளைக் கவிவிருப்பாற் சொன்னேனல் வேறன்று
வள்ளற் கவிச்சக்ர வர்த்தியருள்—தெள்ளுகவி
ஓரிடைச் சொற்பொருளு மோர்ந்துணரே னோர்ந்தவுர
வோரிடைச்சொல் லோடுநகை யுற்று.

பாயிரம் முற்றிற்று.

---



## நூல்.

### பாலகாண்டம்.

### நாடு.

செங்கமலம் பொன்னேற்கத் தேங்குவளை தேனேற்க
அங்கமுகின் பாளை யரும்பமுத்தம்—சங்குதவழ்
மாசரயு வாளை துள்ள வாரியலை வீசுபண்ணைக்
கோசலநன் னாடென்ப கொண்டு. (1)

வாழை கமுகலைப்ப வான்றேற னெல்விளைப்பத்
தாழை மலர்விள்ளத் தண்ணன்னல்—சூழில்
மதனன் குடையை வருடி மறுத்தீர்த்
திதனன் குடைத்தாக்கு மே. (2)

கோக்கடக்கங் காட்டக் குருகு நடைகாட்ட
மக்க டுயிலவண்டு வண்கீதம்—மிக்குறவே
பாட விலமருதப் பாவையர்கள் பாண்குரவை
யாட விலவுறு மால். (3)

கண்கட்டு வித்தை களைகட்டு வித்தையிவை
பண்கட்டு சொல்லார் பயின்றுபயிர்—விண்முட்டி
யோங்கவு மாடவருக் கொண்காம மென்பயிர்மேற்
பாங்குறவு மேவிளைவிப் பார். (4)

பொன்மாரி நாவலர்க்குப் பெய்யும் புரவலன்போல்
விண்மாரி பெய்ய விதைவித்தி—மண்மா
மகளுடலைப் பைம்பூம் பயிர்ப்போர்வை மண்ணிப்
புகழுடல்போற் செய்வார் அரிந்து (5)

வாய்மை கடைப்பிடித்து வண்மை தவறாத
தூய்மையர சன்புகழ்போற் சொல்லெல்லாங்—காயாப்
பலமா னனிகனிந்து பார்மன் பதைக்கு
நலமா வளர்ந்துநல்கு நாடு. (6)

தாசரதி மன்பதைமேல் வைத்த தயைபோல
மாசில் சரயு வளங்காட்ட—ஆசில்
மலைகடல்கான் காட்டும் வளப்பொருள்கள் மல்கும்
நலவடபாற் கோசலநன் னாடு. (7)

### நகர்.

பொன்னேக் கணியும் புலனோக் கரும்புகழ்வும்
எந்நோக் கரும்விரும்பு மேணிலையும்—பின்னோக்கில்

நோகேத மின்மையொடு நோலுமொரு வீடென்ப
சாகேத மென்னுநகர் தான். (8)

மாதவரும் மானவரும் வானவரும் வாழ்ந்துலகிற்
போதசுகங் கொண்டியலும் பொற்புறலால்—மேதகவே
வாழ்வுறுமவ் வைகுந்த * மானக ரயோத்தியென்ப
சூழ்வுறிலெவ் வூர்பொருவ சொல். (9)

போரா வழியாப் புரியுளதே விந்நகர்க்கு
நேரா நிகழ்த்தலா நீள்சரயு—வாருமது
மாவிரசை மானகர மானுமதில் வாழ்மன்னன்
மாவிரசை மாணிகரு மால். (10)

நாக முழுகொடிகள் நாக முறவிரண்டு
நாக முறுசுடர்கள் நாகமென—நாக
மரக்கா நகரநடு வண்ணனு காபா
மரக்கா வலர்க்கஞ்சு மாறு. (11)

## திருவவதாரம்.

அந்நகரை யாண்டுவந்த வாதித்தன் மாமரபு
மன்னு தயரதப்பேர் வாள்வேந்தன்—பன்னரிய
புத்திரப்பே றின்றிப் பொருகலைக்கோட் டாரியனால்
அத்திரத்து வேள்விசெய்வித் தான். (12)

மகத்தி லெழுந்துவந்த மாபூதந் தந்த
தொகுத்தவமு தத்திரளைத் தொட்டுப்—பகுத்துத்தன்
மும்மனைவி யாரை முறையே யருந்துவித்தான்
வெம்முனைவெல் வெங்களிற்று வேந்து. (13)

மேட மதிநவமி மீன்கழை கற்கடகம்
நாடு பதினொன்றில் நால்வருயத்—தேடைவர்
உச்சமுறக் கோசலைபா லுற்பவித்தான் விண்ணோர்தம்
அச்சமற மெச்சுபுத னாங்கு. (14)

ஒருமகவைக் கைகை யுதவ விருசேய்
அரிய சுமித்திரையீன் றாளால்—விரையாய்
இராமன் பரத னிலக்கு மணன்சீர்ப்
பராவுசத்து ருக்கனென்போர் பார். (15)

நாலு மறைபோலிந் நால்வருங்கல வித்துறைகள்
ஏல முறையா லினிதுகற்றுச்—சாலவளர்
போதுவிசு வாமித்ரன் போந்துமன்ன னின்னுதிக்
காதலனைத் தாவென்றான் கண்டு. (16)

* மால் + நகர்.



கண்ணெனினுஞ் செல்வக் கடலெனினு மற்றெந்த
எண்ணெனினுங் கேட்கி லினிதீவேன்—மண்ணிலுமவ்
விண்ணிலுநின் மேவா ரிருக்கி லவரைவென்று
நண்ணுவன்சொ லிக்கணத்து நான். (17)

என்றா னிகன்மன்ன னேற்றான் சினமுறவன்
கன்றா விழியிற் கனலெழவே—யின்றான்முன்
சேரா வசிட்ட னிலைகண்டு மன்னனின்சேய்க்
காராய்க நன்மையென்றா னல். (18)

பறவைக்காத் தன்னூன் பரிந்தளித்தோன் சேயும்
அறவுயிர் வான்போ லளித்தான்—அறவன்கைக்
கொண்டுறுவா னுற்றார் குமரர் மலர்தொடரும்
வண்டுறழச் சென்று மருங்கு. (19)

சொல்வித்த விஞ்சை சுரங்கடத்தக் கோக்குமரர்
நல்வித் தகன்பின் னடந்துசென்று—வில்வித்தன்
தாடகையைக் கொன்று தனைய ரிருவரிலோ
ராடவனை விண்ணேற்றி னான். (20)

அருவேள்வி காத்தளவி லாய்படைக ளேற்றாங்
குரைபல் சரித முணர்ந்து—கரியசெம்மல்
கல்லைத்தன் காற்பொடியாற் பெண்கண்டு கௌதமற்கீந்
தெல்லைக்கண் டான்மிதிலை யே. (21)

பொன்பெற்ற தாலரிய பூவிற் சிறந்ததால்
மின்பெற்ற வண்டர் விரவுவதால்—நன்பெற்ற
நீர்நிலைய தாற்றண்டு சிற்றதனாற் கஞ்சமென்ப
ஏர்நிலைய தாமிதிலை யே. (22)

பூவின் முடியோ புலவர் பெரும்புகழோ
தேவன் புவியளந்த சேவடியோ—கோவின்
புரத்தேறு மேனியோ வென்னநின்ற பொற்கோ
புரத்தூர் புகுந்தார் புரிந்து. (23)

கண்ணோ கமலக் கடிமலரோ கற்பகமோ
எண்ணோ வெனுங்கன்னி யோர்மாடப்—பெண்ணோ
வழுவா வெனது மனநிலையைப் பேர்ப்பாள்
எழுவா ளிவளென்றா னீங்கு. (24)

தி. கோ. நாராயணசாமிப் பிள்ளை,

# TEN PROVERBS

## பழமொழிப் பத்து.

### காப்பு.

பண்பாடு நீதிப் பழமொழியி னிற்சிலயான்
வெண்பாவீ ரைந்தில் விளம்புதற்குக்—கண்பாயும்
வையைநாட் டிற்றிலக மாமதுரை யாளுமுமை
துய்யமலர்ப் பாதந் துணை.

1. முன்மொழியா நூலின் முதிருஞ் சுவைபலவும்
புன்மொழிபெ யர்ப்பிற் புலப்படுமோ—வின்மொழிகே
ளோவியத்திற் றோற்ற மொருவர் றமைந்திடினு
மாவிகுண முந்துலங்கு மா.

2. மாசொன் றுளதாய வைரமோ வெட்டுணையுந்
தூசிமரு வாப்பரலோ தூயதாந்—தேசிகன்முன்
பொய்த்த தருமனோ பொய்த்தவிலா மூங்கையோ
வுத்தமனு மன்னு ளுரை.

3. என்றுங் கயவ ரிழைத்திடினுந் தீமையினை
நன்றியே தாம்புரிவர் நல்லோர்கள்—ஒன்றியே
தன்னைக் குறைத்திடினுஞ் சந்தனந்தான் கோடரிக்
இன்மண மீத லியல்பு.

4. காலவே யினவிலை சார்ந்திடுநா ளெப்பொருட்கு
மேலா விலைதுணிபின் மேவுமே—சீலமுடை
னேதுங் கதியிலதென் றேங்குறுபாஞ் சாலிதனைத்
த்தனுகா திட்டசெயல் தேர்.

5. வித்தைவிந யத்தால் விநயந் தகைமையினு
லத்தகைமை யீட்டு மரும்பொருளால்—வித்தமுஞ்
செம்மைநெறி சேர்ந்தொழுகுஞ் செய்கையாற் சீர்பெறுமே
யிம்மைமறு மைச்சுகமு மீந்து.

6. ஆவனவா மெவ்வினையு மாகா தொழியாவாம்
போவனவும் போமே புவிமீது—தீவிரமாத்
தெங்குளின நீரினையுஞ் சிந்துரந் துற்றியவோர்
பங்கமுறு வெள்ளிலையும் பார்.



7. வித்தையொடு வித்தம் விழையுங்கால் வீதனரை
யெத்துணையு மேற்கிலமென் றெண்ணுமின்—சித்தந்
தருமம் புரிமின் றருணம்வே றில்லை
யுருமிவருங் கூற்றை யுனி.

8. மாந்தர் மதிப்பு மருவரிய நன்னிலையு
மேந்திழையாண் மக்க ளிருநிதியுஞ்—சார்ந்தெனையே
மாயவெஞ் சூதின் வலியான் மறுகணமே
போயவா லாவா புரண்டு.

9. நல்லா ரிடத்து நலந்தேடார் குற்றமே
பொல்லாத மாந்தர் புகல்வரா—னல்லாய்கே
ளாவி னினிய வமுதினைவிட் டீயதன்கண்
மேவியபுண் ணீர்விரும்பு மேல்.

10. மாநிலத்தா ரந்தோ மறலி தனைமறந்தே
யீனமுறு மின்பத் திழுபடுவர்—ஞானமிலார்
மண்டு மசகமதை வாய்க்கொ டவளையைப்பாம்
புண்டறனைக் கண்டறியா ரோ.

நா. வெ. சுந்தரராஜ ஐயர்.

# RAINBOW : A SONNET.

## வானவில் : ஒரு தனிப்பாசுரம்.

இருண்முகி னனிதிரண் டிமிர்வா னிடையெம
தருண்மிகு மிரவியி னீரொளி பாயவாண்
டொல்லையின் வானவி லொளிர்தல் கண்ணுறு
மெல்லையி னெமதக மிருங்குதி கொளுமால்.
எழின்மயிற் றோகையி னியனலங் கவர்ந்து
கெழுமிய பன்னிறங் கிளரத் தோன்றி
வான்படாத் தொருவன் வரைந்தபொற் கோடெனத
தான்பொறி தூரியத் தனிநலங் கவற்றி
யிலங்குந் தோற்றம் புலங்கொளுந் தொறுமன
மெம்வயி னில்லா தம்மவோ டுறுமால்.
உற்று நோக்கினஃ தெற்றயங் கியசுடர்ச்
சோதியங் கடவு ளேதருட் பேரொளி
சிறந்த மாயையுட் சேரப்
பிறந்தழி யுடலினைப் பெரிது நிகர்க்குமே.

ந. பலராமையர்.

## THE HIDDEN FOURTH.

### கூடசதுக்கம்.

[ஆதிபுரி வடிவுடையம்மைமீ தியற்றப்பட்டது.]

கட்டளைக் கலித்துறை,

ஸ்ரீதராத ராமல யாகில மேவுறுந் திண்புலவற்
கா ராயும் போதைந் தொரு வேழ மிந்த வனப்பெடைவான்
சேராணற் கேழ்முடி மாதரி பேணிச் சிறியனையாள்
பேராரு மாதி புரிவாழ் வடிவுடைப் பெண்ணமுதே.

☞ நான்காமடியி னெழுத்துக்கள் ஏனைய மூன்றடியினுள்ளுங் கரந்து கிடத்தலின் இது கூட சதுக்க மாமாறு காண்க.

திரு. இராமசாமிச்செட்டியார்.

---

## RADHARANI : A NOVEL.

### இராதாராணி.

---

#### நான்காம் அத்தியாயம்.

புதிதாய் வந்த அந்தப் பெரிய மனிதனுடைய வஸ்திரங்கள் பங்காள தேசத்துப் பெரிய மனிதர்களது வஸ்திரங்களைப் போலிருந்தன; மிகவும் டம்பமாயு மில்லை ; அதி சாமான்யமாயு மில்லை. ஆனால் அவன் கையில் ஒரு வைர மோதிரம் அணிந்திருந்தான் அதைப்பார்த்து இராதாராணியின் சேவகர்கள், நாம் எப்பொழுதும் இவ்வளவு சிறந்த மோதிரத்தைப் பார்த்ததேயில்லையென்று பரஸ்பரம் பேசிக்கொண்டார்கள். பெரிய மனிதனுடன் எவரும் வாராமையினால் இவன் யாரென்று விசாரித்து அறிந்துகொள்ளச் சரிப்படவில்லை. அவன் தானாகவே தன் சமாசாரத்தைச் சொல்வானோ என்னவோ என்று எதிர்பார்த்திருந்தார்கள். ஆனால் அவன் தன் செய்தியைச் சொல்லவில்லை. அவன் இராதாராணியின் திவானிடம் சென்று அவன் கையில் ஒரு காகிதம் கொடுத்து இதை யுங்கள் எஜமானியிடம் கொடுத்துப் பதில் கொண்டு வரவேண்டு மென்றான். திவான்—எங்கள் எஜமானி பெண்பிள்ளை ; கல்யாணமாகாதவர்; இன்னமும் இளம் பிராயத்திலேயே இருக்கிறார். ஆகையால் யாராவது அறிமுக மில்லாதவர்கள் அவருக்குக் காகிதம் கொடுத்தால், நான் முதலில் படித்துப்பாராமல் அவருக்கு அனுப்பக்கூடா தென்று உத்தரவாயிருக்கிறது. பெரியமனிதன்—நீங்கள் படிக்கலாம்.

திவான் காகிதத்தைப் படித்தார் :—



“ பிரிய சகோதரீ,

இவர் புருஷனாயிருந்தாலும் ஏகாந்தமாய் இவருடன் பேசத்தகும். பயமொன்றும் இல்லை. நடந்த சமாசாரத்தை எனக்குத் தெரியப்படுத்துக.

இங்ஙனம்

வசந்தகுமாரி.”

காமாக்ஷியின் மகள் கையெழுத்தைப் பார்த்து ஒருவரும் ஒன்றுமாக்ஷேபிக்கவில்லை ; கடிதம் அந்தப்புரத்துக்குப் போயிற்று. அந்தப்புரத்தினின்று பரிசாரிகை யொருத்தி காகிதம் கொண்டுவந்தவனை அழைத்துக்கொண்டு போவதற்குவந்து, வந்த பெரியமனிதனைப் பின் அழைத்துக்கொண்டு போனாள். வேறெவரும் அவனுடன் கூடப்போகவில்லை; உத்திரவில்லை. பரிசாரிகை அந்தப் பெரிய மனிதனை யழைத்துக் கொண்டுபோய் அநேக விதமான அபூர்வ வஸ்துக்களால் அலங்கரிக்கப்பட்ட மஹாலில் உட்காரவைத்தாள். இராதாராணியின் அந்தப் புரத்துக்குட் புருஷன் பிரவேசித்தது இதுவே முதல் தடவை. இவனைப் பார்த்ததும் ஒரு பரிசாரிகை இராதாராணியைக் கூப்பிடப்போனாள், மற்றொருத்தி மறைவில் நின்றுகொண்டு வந்த புருஷனை இமை கொட்டாமற் பார்த்த வண்ணமாய் நின்றுகொண் டிருந்தாள்.

அவனுடைய மேனியின் நிறம் வெண்மையாயும் மலர்ந்த மல்லிகை ராசியையொத்துமிருந்தது ; அவனது சரீரம் நீண்டும் சிறிது பருத்து மிருந்தது. கபாலம் தீர்க்கமாயும் அதி சூக்ஷ்மமாயும் பரிஷ்கரிக்கப்பட்ட மிகவும் கருமை நிறமுள்ள சுரஞ்சிதமான கேசஜாலத்தினால் அலங்கரிக்கப்பட்டிருந்தது; கண்கள் அகன்று நிலையுள்ள கடாக்ஷத்துடன் கூடியிருந்தன. இரண்டு புருவங்களும் சூக்ஷ்மமாயும், மெல்லிய வாயும், கனத்த கறுமை நிறம் பொருந்தியுமிருந்தன ; மூக்கு நீண்டும் உயர்ந்து மிருந்தது ; அதர்மரக்த வர்ணமாய் மெல்லியதாயும் கோமளமாயு மிருந்தது. கழுத்து தீர்க்கமாய்ச் சதை அடர்ந்திருந்தது. மற்றைய அங்கங்கள் உடையினால் மறைந்திருந்தன. வஸ்திரத்தினால் மூடப்படாது காணப்பட்டுக் கொண்டிருந்த கைவிரல்கள் சுப்பிரமாயும் நன்றாயமைந்தனவாயும் இருந்தமை யன்றி பவித்திர விரலில் மிகவும் சிலாகிக்கத் தகுந்த உயர்ந்ததோர் வைரமோதிரம் பிரகாசித்துக் கொண்டிருந்தது.

இராதாராணி அங்கேவந்து நின்று பரிசாரிகையை வெளியே போகும்படி சொன்னாள். இராதாராணி வந்தவுடனே அந்த மஹாலில் உட்கார்ந்திருந்தவனுக்கு ஓர் அபிநவ சூரியோதயமானது போன்றிருந்தது. அந்த ரூபராசியின் காந்தி அதன் தலையிலுள்ள கூந்தல்வரை ஒளிர்ந்தெழுந்ததோ என்னும்படி பிரகாசித்துக் கொண்டிருந்தது. இராதாராணி அந்தப்புருஷனுக்கு பிரதம தர்சனத்துக்குசிதமான வணக்கம் செய்யவேண்டியது அவசியம். ஏனெனில் அவன் புருஷனாயும் மேலும் வயதிற் பெரியவனாயும் இருந்தான். ஆனால் அப்பொழுது அவன் அந்த உவமையற்ற சௌந்தரியத்தைக் கண்டு மதிமயங்கியும் அசைவற்றும் இருந்தான். இராதாராணி சிறிது அதிர்ப்தியடைந்து தாம் இப்படி இரகசியமாய் என்னைப்பார்க்க விரும்பினதற்குக் காரணம் யாது? நானோ பெண்பால் ; கேவலம் ஸ்ரீமதிவஸந்த குமாரியின் வார்த்தையின்மேல் தம்மைப் பார்ப்பதற்குச் சம்மதித்தேன் என்றாள். பெரிய மனிதன் - நான் உன்னை இப்படிப் பார்ப்பதற்கு மாத்திரமே இஷ்டப்பட்டு வந்த

வனல்லேன். இராதாராணி சிறிது வருத்தமடைந்து, அப்படி யில்லாமலிருக்கலாம் ; ஆனால் வசந்தகுமாரி ஏன் இப்படி நான் தம்மைப் பார்க்கவேண்டுமென்று விரும்பினாளோ அதைப்பற்றி அவள் எழுதவில்லை. தங்களுக்கு அது தெரிந்திருக்கலாமென்பது தோன்றுகின்றது.

பெரியமனிதன் ஒரு பழைய சமாசார பத்திரிகையை வாங்கி இராதாராணிக்குக் காண்பித்தான். அதைப் படித்துப்பார்க்கவே காமாக்ஷியன் தன் பேரால் பாபு ருக்மிணீகுமார ராயனுக்குக் கொடுத்த விளம்பரமா யிருந்தது. இராதாராணி அதுவரைக்கும் நின்றிருந்தாள். நின்றிருந்த வண்ணமாகவே தென்னம் ஓலைபோல் அசைந்தாள். பெரியமனிதனுடைய தேவதுல்லியமான தேகக்கட்டைப்பார்த்து இவரே அந்த என்னுடைய ருக்மிணீ குமாரராயரென்று கருதினாள். இனிச் சகிக்கமுடியாதவளாய் தாங்கள் ருக்மிணீ குமாரராயரவர்களா? அதுவே தங்கள் பெயரா? என்று கேட்டாள். பெரியமனிதன்—அன்று. 'அன்று' என்ற வார்த்தையைக் கேட்டு இராதாராணி மெள்ள ஆசனத்தில் உட்கார்ந்தாள். இனி நிற்க முடியவில்லை. மார்பு பிளந்துவிட்டதுபோலிருந்தது. பெரிய மனிதன்—அன்று; நான் ருக்மிணீ குமாரனாயிருக்கும் பக்ஷத்திற் காமாக்ஷியன் இந்த விளம்பரத்தை வெளிப்படுத்தியிரான். ஏனெனில் அவனுக்கும் எனக்கும் மிகவும்பரிசய மிருந்தது. ஆனால் விளம்பரம் பிரசித்தமானவுடனே, நான் பார்த்து வாங்கிவைத்துக் கொண்டேன் என்று சொன்னான். இராதாராணி—தங்களுக்கும் இந்த விளம்பரத்துக்கும் சம்பந்தமில்லாமலிருக்க இதனை ஏன் வாங்கி மறைத்துவைத்துக் கொண்டீர்கள். பெரியமனிதன்—ஓர் ஆவலின் பொருட்டு வாங்கிவைத்துக் கொண்டேன். இந்த எட்டு வருஷங்களாக அங்கங்கே திரிந்து கொண்டிருந்தேன். ஆனால் ஜனங்கள் சொல்லிக்கொள்வார்கள் என்னும் பயத்தினால் என் நிஜமான பெயரை வெளிப்படுத்தாமற் கற்பனையான பெயரைச் சொல்லிக்கொண்டிருந்தேன். என்னுடைய கற்பனைப் பெயர் ருக்மிணீ குமாரன். நீ இவ்வளவு வருத்த முறுவதற்குக் காரணம் யாது? இராதாராணி சிறிது மனம் தேறினாள். பெரிய மனிதன்—ருக்மிணீகுமாரனென்னும் பெயருள்ளவனை நான் பார்த்ததில்லை. என்னைப்பற்றியே விளம்பரம் பிறந்திருக்குமோ? அப்படிப்பட்ட விசேஷ மொன்றுமில்லை. ஆனால் அதனை யாவர் நிஷ்கர்ஷையாய்ச் சொல்வதற்குக் கூடும்? பிறந்திருக்குமோ, என்னவோ? இருக்கட்டும்; பார்க்கலாமென்று விளம்பரத்தை வாங்கி வைத்துக்கொண்டேன். ஆனால் காமாக்ஷியனைப்பார்க்க எனக்கு அநுகூலப்படவில்லை.

"அதன்மேல்".

அதன் மேல், காமாக்ஷியனது சிராத்தத்துக்கு வரவேண்டுமென்று அவன் பிள்ளைகள் எனக்குக் கடிதம் எழுதியிருந்தார்கள். ஆனால் வேறே காரியங்களிருந்தமையால் எனக்கு வருவதற்குச் சாத்தியப்படாமற் போயிற்று. இந்த என் தவறுக்கு மன்னிப்பு வேண்டிக்கொண்டு போகலாமென்று அவன் பிள்ளைகளிடம் வந்தேன். வரும்பொழுது, ஏதோ கவனமில்லாமல் விளம்பரத்தைக் கையில் எடுத்துக்கொண்டு வந்தேன். அப்படியே பேசிக்கொண்டிருக்கையிற் பிரஸ்தாபத்தின் மேல், இந்த விளம்பரம் எதற்காகக் காமாக்ஷிநாதன் பிரசுரித்தான் என்று பெரிய குமாரனைக்கேட்டேன். அவன் இராதாராணிக்காகப் போடப்பட்டதென்றான். நான் இராதாராணி என்பவள் ஒருத்தியைப் பார்த்திருக்கின்றேன். அவள் சிறு பெண். நான் ஒரே நாள்



தான் பார்த்த போதிலும் மறுபடியும் அவளை நான் மறக்கவில்லை. அவள் தாயாரின் பத்தியத்துக்காகத் தான் உபவாசமாயிருந்து வன புஷ்பமாலையைக் கட்டிக்கொண்டு அந்த இருட்டு ராத்திரி மழையில்,—மேலே சொல்லப் பெரிய மனிதனுக்கு நா எழவில்லை. அவன் கண்களினின்று நீர் பெருகிற்று. இராதாராணியின் கண்களினின்றும் நீர் பெருகத் துவக்கிற்று. இராதாராணி கண்ணீரைத் துடைத்துக்கொண்டு, அந்தப் பாழும் சிறு நாளைய சமாசாரத்தைக் கட்டிக்கொண்டு என்ன பிரயோஜனம்? தங்கள் கதையைச் சொல்லி யாகட்டும் என்றாள்.

பெரியமனிதன் - ஐயோ! அவளை வையக்கூடாது; இப்பிரபஞ்சத்திற் சந்திரமுகி எவளாயினு மிருந்தால் அவள்தான் இராதாராணி; எவளாயினும் பவித்திரமான ஸரள ஹிருதய முள்ளவளாயிருந்தால் அவள்தான் இராதாராணி; அமிர்தமயமான உரைகளாடுபவளாயிருந்தால் அவளே இராதாராணி; யதார்த்தத்தில் அமிர்தமயமான வாணி - அவள் பேசும் பிரதி அக்ஷரத்திலும் வீணையின் ஒலி துவனிக்கும், மிதபாஷிணி, மேலும் வார்த்தைகளெல்லாம் பரிஷ்காரமாயும் சுமதுரமாயும் இருப்பதே யன்றி மிகவும் ஸரளமானவை. யானெப்பொழுதும் அத்தகைய கண்ட ஸ்வரத்தை யாவது வார்த்தைகளையாயாவது கேட்ட தில்லை யென்றான் ருக்மிணீ குமாரன்—(பிரகிருதம் இவனுக்கு ருக்மிணீ குமாரன் என்றே பெயரிருக்கட்டும்), மேல் விவரித்த விதமாய் வர்ணனை செய்துகொண்டே மனதின் கண், இன்று அத்தகைய கண்டஸ்வரத்தைக் கேட்பது போலிருக்கிறதென்று எண்ணிக்கொண்டு, மீண்டும், அக்கன்னிகையின் கண்ட ஸ்வரத்தைக் கேட்டு இத்தனை தினங்களானபோதிலும் அதை நேற்றே கேட்டதுபோலிருக்கின்றது; இன்று இந்த இராதாராணியின் கண்ட ஸ்வரத்தைக் கேட்டு அந்த இராதாராணியே ஞாபகத்துக்கு வருவதேன்? இவளே அந்த இராதாராணியா யிருப்பாளோ? நான் சுத்த உன்மத்தன்! ஏழையும் துக்கானுபவியும் குடிசை வாசியுமான அந்தப் பிச்சைக்காரி யெங்கே? இந்த உயர்ந்த மாளிகையிற் சுகித்திருக்கும் இந்திராணி யெங்கே? ஒன்றுக்கொன்று சம்பந்த மெங்கே? நான் அந்த இராதாராணியை இருட்டிற் சரியாய்ப் பார்க்கக் கூடாமையால், அவள் சுரூபியோ குரூபியோ நன்றாய்த் தெரியவில்லை. ஆனால் சசிதேவியையும் பழிக்கும் இந்தச் சுந்தரியின் சதாம்சத்தில் ஓரம்ச ரூபமாயினும் அவளுக்கு இருந்த பக்ஷத்தில் அவள் உலகமோஹினியே யாவாள். அதற்கொன்றும் சந்தேகமில்லையென்று எண்ணிக் கொண்டான்.

இது நிற்க, அதிர்ப்தியடைந்த செவிப் புலனுடையவளாய் ருக்மிணீ குமாரனது இனிமையான வாக்கியங்களைக் காதாரக்கேட்டு, மனத்திற்குள், நீ பாவியான இந்த ராதாராணியைப் பற்றிக் கூறுவதெல்லாம் உனக்கு மாத்திரம் தகுந்ததாயிருக்கின்றது; நீ இந்த எட்டு வருஷங்களுக்குப் பின்பு இராதாராணியை மீண்டும் மோசஞ்செய்து விட்டுப்போவதற்கு நந்தனவனத்தை விட்டுப் பூமிக்கு இறங்கிவந்தாயா என்ன? என்மானசிகபூஜை உன்னைச் சேருவதற்கு இந்நாட்கள் பிடித்தனவா என்ன? நீ அந்தர்யாமியா என்ன? அப்படி யில்லாத பக்ஷத்தில் மூடி மூடி வைத்துக்கொண்டு மனத்தின்கண்ணே செய்துவந்த இந்தப்பூஜை உனக்கெவ்வாறு தெரியும்? என்றிங்ஙனம் எண்ணிக் கொண்டாள்.

இவர்களிருவரும் நல்ல வெளிச்சத்திற் பரஸ்பரம் நன்றாய்ப்பார்த்துக் கொண்டது இதுதான் முதல்முறை. இருவரும் பரஸ்பரம் முகத்தைப் பார்த்

துக்கொண்டு தமக்குள்தாம் தம் எதிரேபார்த்துக் கொண்டிருக்கும் ஆகிருதியைக் குறித்து, இனி இத்தகையது உண்டா? இந்தக் கடல் சூழ்ந்த பூவுலகத்தின் கண் இது போன்ற தேஜோமயமானதும் இப்படிப்பட்ட மதுரமானதும் இவ்வளவு சுகமயமானதும் இத்தகைய சஞ்சலமாயிருந்தும் ஸ்திரமானதும், இவ்விதம் மலர்ந்திருக்கும் லஜ்ஜையுடன் கூடியதுமான வஸ்து மற்றொன்றுள்ளதோ? வெகு நாளாய்ப் பரிசயமாயிருந்தும் மிகவும் அபிநவமாயும், ஒவ்வொரு க்ஷணத்திலும் அபிநவமதுரமாயும் சொந்தமாயினும் அத்தியந்தம் அயலாயும் வெகுநாளாய் ஞாபகத்திலிருந்தும் அதிர்ஷ்ட பூர்வமாயுமுள்ள இவ்வித பதார்த்தத்தை நான் எப்பொழுதும் பார்த்ததில்லை. இனி என்றும் பார்க்கப்போகிறதில்லை. இனி இதுபோன்றது உண்டாமா? என்றிவ்வாறு ஒருவரைப் பற்றி யொருவர் நினைத்துக்கொண்டார்கள்.

இராதாராணி மிகுந்தகஷ்டத்துடன்,—கண்ணீர் பெருகுவது நிற்கவில்லை; இப்பொழுதும் எங்கிருந்தோ பாழுஞ் சிரிப்பு ஒரு பக்கம் வந்துகொண்டிருக்கிறது. ஆகையால் மிகுந்த கஷ்டத்துடன் தாங்கள் இதுவரையிற் கேவலம் பிச்சைக்காரியின் பேச்சையே சொல்லி முடித்தீர்கள். தாங்கள் இங்கே வந்து தரிசனம் கொடுப்பதற்குக் காரணம் என்னவோ அதைக்குறித்து ஒன்றும் சொல்லவில்லை என்றாள். இதைப்படிக்கும் நண்பர்களே, நீங்கள் சொல்லுங்கள். இந்தப் பேதைப் பெண் என்ன வார்த்தை கேட்டாள்? இப்படி கேட்கலாமா? எவனை யார்புறத்தழுவி ஆநந்தக் கண்ணீர் ததும்பிப் பெருகும்பொழுது, பிராணேசுவரா; துக்கம் அநுபவித்த அடியாளின் பாக்கியமே, நெடு நாள் காதலிக்கப்பட்டவனே என்று இவ்வாறு விளிப்பதற்கு வாயினின்றும் வார்த்தைகள் தன்னியல்பாய்ப் புறப்படுமோ, அப்படிப்பட்டவனைப் பார்த்து அந்தத் தரித்திர இராதாராணியின் பேச்சுக்களாற் பயனென்ன? நீவந்த சங்கதியைச் சொல் என்று பரிஹாசஞ் செய்தாளன்றோ? இப்படியுமுண்டா? உங்களில் ரசிகர்களான ஸ்திரீகளிருக்கின்றார்கள், புருஷர்களுமிருக்கின்றார்களல்லவா? நீங்களேசொல்லுங்கள் கேட்போம். கன்னிகையான இராதாராணி இந்தச் சந்தர்ப்பத்தில் எவ்வாறு பேசியிருக்கவேண்டியிருந்தது! செல்லுங்கள் கேட்போம்.

இராதாராணி மனத்திற் பரிதாபமடைந்தது ஏனெனில், அவள் கேட்ட கேள்வியினால், ஆக்ஷேபம் செய்தது போலாயிற்றென்று பரிதாபப் பட்டாள். ருக்மிணீகுமாரன், சிறிது யோசனையற்றவனாய், அதே சொல்லுகின்றேன். நான் அந்த இராதாராணியை அறிந்தவன். அந்த இராணியைப்பற்றி ஞாபகத்துக்குவந்தது. அந்தகாரமயமான இராத்திரியிற் சந்திரனைப் பார்த்ததுபோல் இந்த இராதாராணியே அந்த எனது இராதாராணியாய் இருப்பாளோ என்று சிறிது ஆசையுண்டாயிற்றென்றான். அதற்குள் இராதாராணி "தங்கள்ராணி!" என்று கூறியது கூறலாய்ச் சொல்லிக் கேலிசெய்து நகைத்தாள். என்ன! நகையாமல் என்ன செய்ய வேண்டும்! நீங்கள் நம் இராதாராணியை நிந்திக்க வேண்டாம். திட்டுதல் உங்களுக்கெல்லாம் சாமானியமானது. அதுவே உங்களுக்குச் சுபாவம். ஆனால் நீங்கள் நம் இராதாராணியைத் திட்டிக்கொண்டே இருக்கவேண்டாம். ருக்மிணீ குமாரன் தனக்குள் "நீயே அவளன்றோ; என்னுடையவளன்றோ?' என்றெண்ணிக்கொண்டு வெளிப்படையாய் ஆம்; என் இராதாராணி; நான் அவளை ஒருநாளிராத்திரி மாத்திரம் பார்த்து—பார்த்தேனென்று எப்படிச் சொல்வேன். இவ்வெட்டு வருஷங்களிலும் மறக்கவில்லை. என் இராதாராணியே ஆவாள்" என்று சொன்னான்.



இராதாராணி—"ஆகட்டும்; தங்கள் இராதாராணியாயேயிருப்பாள்" என்றாள். ருக்மிணீ குமாரன் மீண்டும் சொல்லலுற்றான்: அந்த ஆசையை வைத்துக்கொண்டு காமாக்கியனது மூத்த குமாரனைபார்த்து 'இராதாராணி என்பவள் யார்' என விசாரித்தேன். அவன் எல்லா சங்கதிகளும் விவரமாய்ச் சொல்வதற்கு மனமில்லாதவன் போற் சாதாரணமாய் எங்களுக்கு சம்பந்தப்பட்டவர் குமாரத்தி என்று சொன்னான். அவனுக்குப் பூர்த்தியாய்ச் சொல்ல இஷ்டமில்லையென்றறிந்து அவனுக்கு விசேஷமாய்த் தொந்தரவு கொடாமல் இராதாராணி ருக்மிணீ குமாரனைக் குறித்து விசாரிப்பதற்குக் காரணமென்னவென்று மாத்திரங்கேட்டு அப்படி அவசியமாயிருக்கும் பக்ஷத்தில் அந்த ருக்மிணீ குமாரனைப்பற்றி நான் சில சங்கதிகள் சொல்லக்கூடும் என்று சொன்னேன். இவ்வார்த்தையைக் கேட்டு அவன், அவள் ஏன் ருக்மிணீ குமாரனைப்பற்றித் தேடுகின்றாளோ, அந்தசங்கதி எனக்கு நன்றாய்த்தெரியாது; எங்கள் தங்கைக்குத் தெரிந்திருக்கும்; எங்கள்தங்கைக்குக்கூட நன்றாய்த் தெரியுமோ என்னவோ? நீங்கள் இவ்விஷயத்தைப் பற்றிய சமாசாரத்தைப் பற்றிச் சொல்லக் கூடுமென்று எங்கள் தங்கையினிடம் சென்று சொல்லி வருகிறேனென்றுகூறி, எழுந்துபோய்ச் சிறிதுநேரத்திற்குள் மறுபடியும் திரும்பிவந்து, எங்கள் தங்கைகூட எல்லா சங்கதிகளையும் அவிழ்த்துச் சொல்லவில்லை, இக்காகிதம் கொடுத்து இதை நானேகொண்டுபோய்த் தங்களுக்குத் தெரிவிக்கவேண்டுமென்று சொன்னாளென்று சொல்லி இக்காகிதத்தைக் கொடுத்தான். நான் அந்தப்பிரகாரம் காகிதத்தைக் கொண்டுவந்து உன்னிடம் கொடுத்தேன்; நான் என்ன அபராதஞ் செய்தேனோ தெரியவில்லையென்று சொன்னான்.

இராதாராணி—அபராத மென்னவோ செய்தீர், அதனைக் கடைசியிற் சொல்லுகிறேன்; இப்பொழுது இவ்வளவு மாத்திரம் சொல்லக் கூடும்: என்ன வென்றால், தாங்கள் என்னவோ மிகவும் பிரமைப் பட்டு இங்கே வந்திருக்கிறீர்கள். தங்கள் இராதாராணி யாரோ அது தெரியவில்லை. அந்த இராதாராணியின் விருத்தாந்த மெல்லாம் கேட்கும் பொழுது, இது போன்றதுதான் என்று சொன்னாலும் சொல்லலாம். ஆனால் உறுதியாய்ச் சொல்ல முடியாது என்றாள். ருக்மிணீ குமாரன் அந்த ரதோற்சவத்தில் நடந்த விருத்தாந்தமெல்லாம் விவரமாய்ச் சொன்னான். ஆனால் தான் அவளுக்குக்கொடுத்த ரூபாய்கள் முதலிய சங்கதிகளைச் சொல்லவில்லை. இராதாராணி—இதனாலேயே தாங்கள், ஏதோ அபராதம் செய்தவராக ஏற்பட்டது; அதைத்தான் யோசித்துக் கொண்டிருந்தேன். ஆனால், பிரத்தியக்ஷமாய்ச் சொல்வதெப்படி? இவ்வளவுக்கும் அவளைப்பற்றிச் சொல்வதற்கு மனம் வரவில்லை. ஏனென்றால் தாங்கள் தயாளுவென்று தென்படவில்லை. தாங்கள் அப்படி யதார்த்த இருதயராயிருந்த பக்ஷத்தில் அவ்வித துர்த்தசையிலிருந்த அவ்வேழைப் பிச்சைக்காரப் பெண்ணுக்கு ஏதாவது சகாயம் செய்திருப்பீர்கள். அவ்வித சகாயம் செய்த சங்கதியே சொல்லவில்லை. அதென்ன நிச்சயமன்றோ? ருக்மணீ குமாரன்—அவ்வளவு விசேஷமான சகாயம் செய்வதற்குக் கூடவில்லை. நான் அன்றைத்தினம் ரதோற்சவத்தைப் பார்ப்பதற்குப் படவின்மேல் வந்திருந்தேன். ஒருவருக்கும் தெரியாமல் இருக்கவேண்டுமென்று சாதாரண வஸ்திரங்கள் தரியாமல் வேறு வஸ்திரங்களைத் தரித்துக்கொண்டு, யாராயினும் கேட்டால் ருக்மிணீ குமாரனென்று மாறு பெயர் சொல்லிக்கொண்டு வந்திருப்பேன். நல்ல நடுப்பகலுக்குமேற் பெருமழை வந்ததன்பேரிற் படவிலிருப்பதற்குச்சரிப்படாமற் படவைவிட்டுத் தனிமையாய் ஆற்றங்கரையின் மீது வந்

திருந்தேன். என்னிடம் சிறிது பொருளிருந்ததை இராதாராணிக்குக் கொடுத்தேன். அதுமிகவும் கொஞ்சம். மறுதினம் காலையிலேயே மறுபடியும் வந்து அவள் விருத்தாந்த மெல்லாம் விசாரித்துக் கொள்ளலாமென்று யோசித்திருந்தேன். ஆனால் அந்த ராத்திரியே என்தந்தைக்கு உடம்பு அசௌக்கியமா யிருக்கிறதென்று செய்தி தெரிந்ததனால் அப்பொழுதே காசிக்குப் புறப்பட்டுப் போனேன். என் பிதா அதிக தினங்கள் படுத்தபடுக்கையா யிருந்தபடியாற் காசியிலிருந்து புறப்பட்டு வருவதற்கு வருஷத்துக்குமேல் ஆய்விட்டது. ஒரு வருஷத்துக்குப் பிற்பாடு நான் மறுபடியும் அந்தக் குடிசை யண்டைவந்து பார்த்தேன். அங்கே அது காணப்படவில்லை.

இராதாராணி—பார்த்தால் அந்த இராதாராணியின்மேல் தங்களுக்கு அன்பும் விசுவாசமும் அதிகமாயிருப்பதாகத் தென்படுகின்றது. அதற்குக் காரணமென்னவோ கேட்பதற்கு ஆசையாயிருக்கிறது. ஸ்திரீகளுக்கு இப்படிப் பட்டதையெல்லாம் கேட்டுத்தெரிந்து கொள்வதற்கு மிகவும் ஆசை. அவ்வாசைக்கு உட்பட்டு ஓர் அம்சம் கேட்கிறேன். கோபிக்கக்கூடாது, அந்த உற்சவத்தன்று மழை வந்ததன்றோ ? நிற்பதற்கு இடமில்லாமல் அந்தக்குடிசைக்குப் போயிருக்க வேண்டுமென்பது தோன்றுகிறது. அந்தக் குடிசையில் எத்தனை நாழிகை இருந்தீர்கள்? ருக்மணீ குமாரன்—வெகுநேரம் நின்றிருக்கவில்லை. நான் இராதாராணியின் கையிற் கொடுத்ததைப் பார்ப்பதற்காக அவள் விளக்கேற்றப்போனாள். அப்பொழுது அவளுக்கு ஒரு ஜதை சேலை வாங்கும் பொருட்டுப்புறப்பட்டுப்போனேன். இராதாராணி—மற்றேதாயினும் கொடுத்து வந்தீர்களா என்ன? ருக்மணீ குமாரன்—வேறென்ன கொடுக்கப்போகிறேன்? ஒரு சிறிய நோட்டிருந்தது. அதை யந்தச் குடிசையிலேயே வைத்துவிட்டு வந்தேன்.

இராதாராணி—'கொஞ்சம் வேலையிருக்கிறது. இதோ வந்துவிட்டேன்; ஒரு க்ஷணம் தயவு பண்ணுங்கள்' என்று சொல்லிவிட்டு எழுந்து உள்ளே போனாள். அவள் அந்த நோட்டைக் காப்பாற்றி வைத்திருந்தாள். அதையெடுத்துக்கொண்டுவந்து மறுபடியும் சொல்ல ஆரம்பித்தாள்.

தாங்கள் அவ்வாறு நோட்டை வைத்துவிட்டுப் புறப்பட்டுப்போனது சரியான யோசனையாய்த் தோன்றவில்லை. அந்தக் குடிசையிலுள்ளவர்கள் நோட்டு அகப்பட்டபிறகு யாரோ இழந்துபோய் விட்டார்கள் என்று எண்ண மாட்டார்களா ? ருக்மணீ குமாரன்—இல்லை இல்லை; அதற்கிடமில்லை. பென்சிலால் அதன் பின்பக்கம் 'இராதாராணிக்காக' என்றெழுதி அதன்கீழ்ருக்மணீ குமாரராயன் என்று கையொப்பமிட்டேன். அதைப்பற்றியே இராதாராணி ருக்மணீ குமாரனைத் தேடிக்கொண்டிருக்கலாமென்று நம்பி அந்த விளம்பரத்தை வாங்கிவைத்துக் கொண்டேன். இராதாராணி—அதற்காகத்தான், தாங்கள் பெரிய தப்பிதம் செய்ததாக முன்னே சொன்னேன். தங்கள் திருவடித் தரிசனத்துக்காக அவள் அவ்வளவு ஆவலுடனிருந்தும் தாங்கள் இத்தனை வருஷங்களாயும் தரிசனம் கொடுக்கவில்லை. அந்த இராதாராணி அந்த ருக்மணீ குமாரனைத் தேடிக்கொண்டிருந்தாளா இல்லையா ? இதைப் பாருங்கள். இப்படிச்சொல்லி இராதாராணி அந்த நோட்டை ருக்மணீ குமாரன் கையிற் கொடுத்துச் சாஷ்டாங்கமாய் நமஸ்கரித்து 'மகாப்பிரபோ! தாங்கள் அன்று எனக்குப் பிராணதானம் செய்தீர்கள். இப்பூமியில் தாங்களே எனக்குச் சுவாமி' யென்று வினயமாய் விண்ணப்பம் செய்தாள்.

தி. அ. ஸ்வாமிநாத ஐயர்.



## REVIEWS OF BOOKS.
## புத்தகக் குறிப்புக்கள்.

**வானர மதுரைத் தலபுராண வசனம் :—**

[இது சென்னை ஸ்டார் ஆவ் இந்தியா அச்சுக்கூடத்திற் பதிப்பிக்கப்பட்டது. இதன் விலை அணா-2.]

இந்நூல் மானாமதுரையென்று வழங்கப்படும் வானர மதுரை டிஸ்ட்ரிக்டு முனிசீபாகிய ம-ா-ா-ஸ்ரீ வ. த. சுப்பிரமணியப்பிள்ளையவர்களால்இயற்றப்பட்டது. 41 - பக்கங்களடங்கியது ; வடநூற் புராணத்தையே பெரும்பாலுந் தழுவி யெழுதப்பட்டுளது ; ஆடவர் பெண்டிர் முதலிய யாவரும் படித்துக் களிகூருமாறு எளிய நடையினியன்றுளது; இதன் முன்னர்ப் பதின் மூன்று பாயிரச் செய்யுட்களுள ; இரு நான்கு அத்தியாயங்கள் கொண்டன; பத்திச் சுவை மிக்கொழுகுவது. இவ்வூர்த் தமிழ்ச் செய்யுட் புராணம் அச்சிடப்பெறாமையானும், மேலும் அது பண்டிதர்க்கே பயன்படுமாதலானும் இதனை வசன நூலாக வியற்றியது நேரிதே. நூலினிறுதியில அநுபந்தமாகக் கிரந்தவெழுத்திற் பத்திரசம் நிரம்பிய வடமொழிச் சுலோகங்கள் சில அச்சிடப்பட்டுள. இவைமிக்க இனிமை வாய்ந்தவை. அத்தியாயங்களிற் புராணவரலாறும், சந்திரன் பாண்டியன் ஸ்ரீராமர் மாணிக்கவாசகர் இவர்கள் பூஜித்துப் பேறடைந்தமையும், விபூதிமகிமை சிவபுண்ணிய மகிமை வைகைநதி மகிமையுமாகிய இவைகள் சொல்லப்பட்டிருக்கின்றன. இச்சிறு நூலை யாவரும் வாங்கிப்படித்து அகமகிழ்வாரென நம்புகின்றோம்.

**விக்டோரியா மகாராணியவர்கள் ஞாபகச்சின்னம் :**

[இது சென்னை விடிபிரஸில் அச்சிடப்பட்டது ; இதன் விலை, கவர் கட்டடம் 0-8-0, வி. பி. பி. மூலமாய் 0-12-0 புத்தகம் வேண்டுவோர்: -பி. எம். சாமிசெட்டியார், 30, சவரிமுத்து வீதி, சென்னப்பட்டணம்—என்றெழுதவும்.]

இஃது, தற்போது நமது சக்கரவர்த்தியாக விளங்குபவர், 1875-76-ஆம் வருடத்திற் பிரின்ஸ் ஆவ் வேல்ஸ் என்னும் பட்டப் பெயருடன் இந்தியாவிற்கு வந்தபோது அந்த ராஜப் பிரபுவுக்குப் பிரஜைகள் புரிந்த சிறப்பனைத்தும் அடங்கிய 'இராஜதூதன்' என்னும் புத்தகத்தின் அதிபராகிய ம-ா-ா-ஸ்ரீ பி. எம். சாமிசெட்டியாரால தொகுக்கப்பட்டது, 104-பக்கங்கள் கொண்டது. இந்நூல்மிகவுந் தெளிவான தமிழ் நடையில் எழுதப்பட்டுளது ; வாசிப்போர் எளிதில அறிந்துகொள்ளக்கூடியது. இந்நூலின் பிற்பாகம், மகாராணியவர்கள் தேகவியோகத்தைக் குறித்து வர்த்தமானப்பத்திரிகைகளி லெழுதிய குறிப்புக்களும் பல வித்வான்களெழுதிய சரமகவிகளும் அடங்கியுள்ளது.

---

## EDITORIAL NOTES.
## பத்திராதிபர் குறிப்புக்கள்.

---

**வளர்ச்சியின் வாய்மொழி :**—இப்பொருள்படத் தக்கதோர் ஆங்கிலத் தலைப்பெயர் கொண்ட மாதாந்தப்பத்திரிகை யொன்று சென்னை இந்துஜன

சமூகச் சீர்திருத்த சபையாராற் பிரசுரிக்கப்பட்டு வெளியாகின்றது. இதற்கு முன்னர் இந்துஜன சமூகச் சீர்திருத்தக்காரன் என்றதோர் ஆங்கிலப்பத்திரிகையை இவர்கள் வாரந்தோறும் அச்சிட்டு வெளிப்படுத்திக்கொண்டிருந்தனர்; அஃது இப்பொழுது மும்பாபுரியில் நடைபெறுகின்றது; ஆகவே தமக்கெனவொருபத்திரிகை யில்லாக் குறையைப்பற்றி யோசித்து மேற்கூறிய சபையார் 'வளர்ச்சியின் வாய்மொழி' யென்றதோர் புதியபத்திரிகை தொடங்கினர் போலும். இது சென்ற அக்டோபர்மாதம் முதல் ஆரம்பித்து நடக்கின்றது. இப்பத்திரிகையின் மூன்றுமாதச் சஞ்சிகைகள் கண்ணுறப்பெற்றோம். அவைகளில் ஆங்கிலம், தமிழ், தெலுங்கு, என்ற முப்பாஷைகளிலும் விஷயங்களெழுதப்பட்டிருந்தன. இத்தகைய திரிபாஷாபத்திரிகையினாற் பெரும்பயன் விளையவுங்கூடும். விஷயங்களெல்லாம் நல்லனவே. இப்பத்திரிகை நீடூழி நமது நாட்டின்கணுலவி விளங்குவதாக.

**சென்னைச் சந்தை** :—சில வருஷங்களாகத் தடைப்பட்டிருந்த இச்சந்தை சென்ற டிசம்பர்மீ 26, 27, 28, 30, இந்தத் தேதிகளிற் பீபில்ஸ்பார்க்கிற் கூடிற்று. முன்னொருவிசை சம்பவித்த தீவிபத்தின் பயங்கரக்காட்சி இன்னும் ஒவ்வொருவர் மனத்துங் குடிகொண்டிருந்தமையால், அவ்வித ஆபத்து இப்போது மீண்டும் நேராவண்ணம் வேண்டிய முயற்சிகள் முனிசிபாலிடியாரால் எடுத்துக்கொள்ளப்பட்டன. தீயவிக்கும் யந்திரங்கள் எண்டிசையிலுந் தயாராயிருந்தன. மின்சார விளக்குக்கள் எங்கும் பிரகாசித்தன. ஓலைப்பந்தலால் முழுவதும் மூடியடைத்து விடாமல், பெரும்பாகம் வெளியாக விடப்பட்டிருந்தது. ஆபத்து நேரினும் தப்பியோடலாமெனும் எண்ணம் நிகழவே, ஆடவரும் மகளிரும் அச்சமின்றி ஆயிரக்கணக்காய் வந்துபார்க்கத் தலைப்பட்டனர். மத்திய பாகத்தில் வாத்தியம் வாசிக்க இடம் அமைக்கப்பட்டிருந்தது. இதனைச் சுற்றி ஓரகன்ற வீதியும், அதற்குப்பக்கத்தில் ஆங்காங்குப் பல கடைகளு மிருந்தன. சென்னையிலுள்ள பெரிய கடைகளில் அனேகம் ஈண்டுக்காணப்பட்டன. இவற்றிற்குக் கிழக்கிற் கோலாட்டக் கொட்டகையும், தென்கிழக்கிற் பந்தயஸ்தானமும், தென்மேற்கில் வேறொரு பெருங் கொட்டகையும், மேற்கில் உத்தியோகஸ்தர் வசிப்பதற்கு இடமும் அமைக்கப்பட்டிருந்தன. தென்மேற்கிலிருந்த கொட்டகையில், சில ஐரோப்பியர்கள் தங்கள் பாதங்களிற் சிறு சக்கரங்களைக் கட்டிக்கொண்டு, அவற்றோடு வழுவழுப்பான சறுக்குப் பலகைகளின்மீது நடந்தும் ஓடியும் விதவிதமாய் நடித்துத் தங்கள் சாமர்த்தியத்தைக் காட்டினார்கள். தென் கிழக்கிலிருந்த பந்தய ஸ்தானத்தில் ஏறுகுதிரைப் பந்தயம், குதிரைவண்டி, மாட்டுவண்டி, துவி சக்கரவண்டி, ரிக்ஷாவண்டி முதலிய வண்டிப்பந்தயம், மனிதர்களின் ஓட்டப்பந்தயம், மல்லயுத்தப் பந்தயம் முதலிய பலவேறு விதமான பந்தய நிகழ்ச்சிகளால மாலைக் காலங்கள் மிகவேடிக்கையாகக் கழிந்தன. இவைகளில் வெற்றிபெற்றோர்க்கு ஒன்றுமுதல் நூறுரூபாய் வரை தரத்துக்குத்தக்கபடி பரிசளிக்கப்பட்டது. இரண்டாவது தினத்தில் நாய்க்காட்சி நிகழ்ந்தது. உயரத்தில மிகப் பெரியதும் மிகச் சிறியதுமான நாய்களும், மிகவும் அழகிய நாய்களும், வெவ்வேறு வகை ஜாதி நாய்களும் காண்பிக்கப்பட்டன. இவற்றுடன் பார்வைக்கு மிகவும் விகாரமான நாய்களும் கொண்டுவரப்பட்டன. இவற்றிற்கெல்லாம் ஒன்று முதல் 15 ரூபா வரை பரிசளிக்கப்பட்டது. நான்காம் நாள் பந்தய மைதானத்தில் பாணவேடிக்கை நிகழ்ந்தது. கனம் பொருந்திய கவர்னரவர்களும் இச்சந்தைக்கு விஜயம் செய்து கௌரவப்படுத்தினார்கள். பாரிஸ்



முதலிய விடங்களில் நிகழும் அற்புதக்காட்சிகளைக் கண்டு களிகூரப் பிராப்தியற்ற நம்மனோர்க்கு இச்சென்னைச் சந்தைக்காட்சி, காணத்தக்க பெருங்காட்சியேயன்றோ? இஃது ஒவ்வொரு வருஷமும் நடக்குமென்று நம்புகின்றோம்.

**அரசின்பயன்** :—குடிகளின் நன்மைக்கே அரசு உழைக்கவேண்டுமென்பது தற்காலத்து நாகரிக முள்ளார் பலருக்கும் ஒப்ப முடிந்ததோர் கொள்கை. இராஜ்ய நன்மைக்கே குடிகளுழைக்கவேண்டுமென்பது முந்தையோர் கொள்கை. இது நிற்க, ஒவ்வொருவனுடைய தன்வயத்திற்கும் வரம்பில்லை; ஆயினும் அது பிறருடைய தம்வயத்தால் வரம்புடையதாகும். இதனைப் பாதுகாக்கவேண்டியது அரசின் கடமைகளுளொன்று. மேற்கூறிய வரம்பைத் தவிர்த்துப் பிறிது வரம்பு ஏற்படுத்தவாதல் இத் தன்வயமுறையைப் பாதுகாத்தற்கு வேண்டிய பொருளுக்குமேல் அதிகமாக வரிப்பணந் தண்டவாதல் புகுதல் நியாயமில்லை. மக்களுள் ஒவ்வொருவரையும் பிறரெவரும் நலியாதவாறு பாதுகாத்தலும், வேற்றுநாட்டுப்பகைஞரினின்று பாதுகாத்தலுமே அரசின் தலைநின்ற கடமைகளாம் என்பர் இக்காலத்து அரசியலுணர்ந்த சிலர்.

**அடையாற்றுப் பிரசங்கம்** :—கனம் பொருந்திய அன்னிபெஸண்ட் அம்மையவர்களின் திவ்யப்பிரசங்கம் சென்ற மதியங் கடைநான்கு நாட்களிலும் இச்சென்னைபுரிக்கடுத்த அடையாற்றின்கண் வழக்கம்போல மிகச் சிறப்பாக நடந்தேறிற்று. பிரமஞான சபையின் அவயவிகள் பலரும் பலவிடங்களிலிருந்து வந்து கூடியிருந்தார்கள். அன்றியும், அநேக ஆங்கில கனவான்களும் ஜமீந்தாரர்களும் இராஜாக்களும் ஆங்குவந்து குழுமியிருந்தனர். திடீரென்று கண்ட சுரத்தில் இந்த அம்மையவர்கள் உரிய காலத்திற் காசியினின்றும் சென்னை வந்து சேர்தல் இயலுமோ வென்னும் சந்தேகம் நிகழ்ந்தது. இப்பிரசங்கத்தைக் கேட்டுக் களிகூரப்பேரவாக் கொண்டிருந்த பல்லாயிர ஜனங்களும் அம்மையவர்களின் வரவைப் பேராவலுடனும் கவலையுடனும் எதிர் பார்ப்பாராயினர். இறைவனருளால் சுரம் ஒருவாறு தணியவும், அம்மையவர்கள் தம்முடைய தேக நலிவையும் சிரமத்தையும் பொருட்படுத்தாது சென்னை சேர்ந்து விட்டார்களென்னும் செய்தி யறியவே, கல்வியின் மணம் பெற்றார் பலரும் ஒருங்குதிரண்டு அன்றுகாலை, பொழுது புலருவதற்குமுன் அடையாறு சேர்ந்து அம்மண்டபத்தின் வாயிலில் அடையத் தலைப்பட்டனர். இவர்கள் மேல்விழுந்து உட்சென்றதை நினைக்கின், அவ்வாயிலை மோக்ஷவாயிலென்றே சொல்லலாம். எள்விழுவதற்கும் இடம்பெறாத அச்சபைக்குள், அம்மையவர்கள் 8 - மணிக்குப் பிரவேசித்தார்கள். கல்லாதவர்களன்றிக் கற்றவர்களாலேயே நிறைந்து ஆயிரக்கணக்காய்க் கூடிய இம்மண்டபத்தில் அவர்கள் நிற்கவும் இடமின்றிக், கடலொலியோ, மேகமுழக்கமோ என்று ஓசையுண்டா யாரவாரத்துடனிருந்த இச்சபையானது, அம்மையவர்கள் பிரவேசமானதும், உடனே நிசப்தமாய் மாறியதை என்னென்று சொல்லலாம்! அம்மையவர்கள் மேடைமீதேறி வாய்திறந்ததும், ஆங்குள்ளார் இமையா நாட்டம் பெற்றனர்; அவர்களது கருத்தும் மனமும் ஒருவழிப்பட்டு அம்மையவர்கள் பிரசங்கமாரியில் ஈடுபட்டன; ஒவ்வொருவரும், பயபக்தி விசுவாசத்துடனும், அன்புடனும், ஆர்வத்துடனும், அம்மையவர்கள் நாவாரக் கூறியதைக் காதாரக்கேட்டு மனமாரமகிழ்ந்து ஆநந்த பரவசராயி

னர். முதல்நாள் மகம்மதிய மதத்தைப் பற்றிய பிரசங்கம் நடந்தது. ஏனைய மூன்று நாட்களிலும் ஜைனமதம் சிக்கியமதம், பிரமஞானம் என்னும் விஷயங்களைப்பற்றி நடந்தன. இந்தப் பிரசங்கங்களின் சாராம்சத்தை இங்கே இரண்டொருவரிகளிற் கூறிவிடுதல் முடியாது. ஆயினும், இந்த அம்மையவர்கள் பிரசங்கங்களில் நாம் பொதுவாய்க் கவனிக்கவேண்டிய தொன்றுண்டு. ஒவ்வொருமதத்துக்குமுள்ள கோட்பாடுகளும் அவைகளுக்குக் காரணங்களும் இவையெனவும், அவைகளை யனுஷ்டிப்பதனாலுள்ள நன்மைகளின்னின்னவென்றும், இவைகளை நம்பிக்கையுடனும் பக்தி விசுவாசத்துடனும் நாம் ஆராயவேண்டு மென்றும், அங்ஙன மாராயாது நந்தேயத்துள்ள மதாசாரங்களையும் தெய்வங்களையும் பழித்துக் கூறுதல் அறிவுடைமையன் றென்றும், உலகமனைத்துக்கும் கடவுள் ஒருவரே யென்றும், அக்கடவுள் ஒருவரையே நந்தேயத்துள்ள பல மதங்களும் நாடுகின்றன வென்றும், ஆனால் ஒரே விதத்தில் நாடாமல் வெவ்வேறு மதங்களும் வெவ்வேறு விதங்களில் நாடுகின்றன வென்றும், அந்த வேறுபாட்டால் நாம் மருளப்படா தென்றும் கூறினார்கள். ஏனெனில், சென்னைபுரிக்கு வரவேண்டுமானால், கல்கத்தாவிலுள்ளவர்கள் தெற்கு நோக்கியும், இலங்கையி லுள்ளவர்கள் வடக்கு நோக்கியும், பம்பாயிலுள்ளவர்கள் கிழக்கு நோக்கியும் செல்லவேண்டி யிருக்கிறதென்றும் ஆனால் இவர்கள் யாவரும் சேருவது சென்னைபுரியே யென்றும், வெவ்வேறு திசையாய்ச் சென்றார்களே யென்று நாம் கலங்கவேண்டியது அவசியமில்லை யென்றும், அதுபோலவே கடவுளும் கேந்திரமாகிய ஓரிடத்திலுள்ளா ரென்றும், அவரைச் சுற்றிலும் அவரை நாடிப்போகும் வழிகள்தாம் அநேக மதங்களாக விருக்கின்றன வென்றும், ஆகையால் எந்த மதமாயினுஞ்சரி, அதனைப் பயபக்தி விசுவாசத்துடன் பின்பற்றுவோமானால், அது நம்மை அவரிடம் கொண்டு செலுத்துவது ஒருதலையென்றும், ஆனால் நம்பிக்கையும் அன்பும் முக்கிய மென்றும், கடல்மடை விண்டாற்போல மொழிந்தார்கள். ஆ! ஆ! என்னே இந்த அம்மையின் அறிவு! என்னே இவர்களின் பரந்தஞானம்! நந்தேயத்திலே பிறந்து நந்தேயத்திலே வளர்ந்து நம்முடைய மதங்களையும் ஆசாரங்களையும் கோட்பாடுகளையும் தெய்வங்களையும்பழித்தும் இழித்தும் நாக்கடிப்பாகவும் வாய்ப்பறையாகவுங் கூறிச் செருக்கித்திரியும் நம்மவர்கள் இந்த அம்மையவர்களின் அமுத வாக்கைக் கேட்டேனும் நல்வழிப்பட்டுய்யார்களா? கருணாநிதியாகிய கடவுள் இந்த அம்மையவர்களுக்கு நோயற்ற நீண்ட வாழ்வை யனுக்கிரகித்துக் காப்பாராக.

**பிரதமகலா பரீட்சை** :—சென்ற 1901-ஆம் வருஷத்தில் நமது சென்னைச் சர்வகலாசாலைப் பிரதம கலா பரீட்சைக்குச் சென்றவர் தொகை 1923 ஆம்; அவர்களில் தேறினவர் தொகை 695 ஆம். இனி, நமது சென்னை மாநகரினின்றும் பரீட்சைக்குச் சென்றவர் தொகை 507 ஆம்; அவர்களுள் தேறினவர் தொகை 172 ஆம்.

**பஞ்சம்** :—இந்தியா முழுவதிலும் பஞ்சக்கொடுமையால் வருந்தித் துரைத்தனத்தாரது உதவி பெற்று வருவோர் தொகை 181,600 ஆம். சென்ற வாரத்தில் மட்டிலே 23,500 பேர் அதிகமாய் வந்திருக்கின்றனர். இவர்களில் 107,000 பேர் பம்பாய் சிந்தினின்றும், 34,000 பேர் பரோடாவினின்றும், 23,000 பேர் இராஜபுதன சுதேச ராச்சியங்களினின்றும், வந்தார்களாம். நாடெங்கணும் மழை பெய்தலின்றி வருந்துவது படிப்படியாய் மிகுந்துவருகிற தென்பது பலரும் அறிந்த விஷயம்.



**குரங்குகளுக்குட் பாஷை வழக்கு** :—சின்னாண் முன்னர் இங்கிலாந்திலுள்ள லிவர்ப்பூல் நகரத்திலுள்ள கார்னர் என்ற கலைவலாளரொருவர் நாளுஞ்செய்தசோர் பிரசங்கத்திற் குரங்குகளும் நம்மைப்போல ஒரு பாஷையைப் பேசுகின்றனவென்று சித்தாந்தப்படுத்தினராம். அவர் தாம் முதன் முதலிற் சிகாகோ நகரத்திலுள்ள மிருகசாலைக் குரங்குகளை மூன்று நான்கு ஆண்டுகளாய்க் கவனித்ததில், அவை தமக்குள் ஏதோ ஒருவகையாய்ப் பேசிக்கொள்ளுகின்றன வெனக்கண்டு சப்தக்கிரகண யந்திரத்தால் அவை பேசியதைப் பிடித்து வைத்துக்கொண்டனர். பின்னர் அவர் நியூயார்க்கு நகரஞ்சென்று அங்கே ஒரு குரங்கினெதிரில் மேற்கூறிய யந்திரத்தின் சாவியை முறுக்குதலும், அதினின்றும் வெளிப்பட்ட சப்தங்களைக் கேட்ட அக்குரங்கு விடை கூறுவதுபோற் சில பேசிற்றாம். அவற்றையும் அவ்யந்திரத்திற் பிடித்துக்கொண்டு அவர் அமெரிக்கா கண்ட முழுதுஞ் சுற்றிப் பல குரங்குகளைக் கண்டனராம். அதன்மேற் காட்டிலேயே போய் வாலில்லாட்டெருங் குரங்குகளைப் பார்த்துச் சோதிக்கவேண்டு மெண்ணந் தோன்றுதலும், அவர் ஆப்பிரிக்கா கண்டத்தில் அத்தகைய குரங்குகள் அடர்ந்திருக்கும் நிகாமியென்னும் ஏரிக்கருகில் தங்கி ஒரு கூண்டு செய்து கொண்டு அதில் வசித்தனராம். சாதாரணமாய்க் காட்டு மனிதனெனப்படும் அக்குரங்குகள் மிக்க சங்கோசமும் பேச்சு விருப்பின்மையுங் காட்டியதனால் தமக்கு அதிகமாய் அறிந்து கொள்ள இயலாவிட்டாலும் மேற் கூறிய சித்தாந்தத்தை வலியுறுத்துவதற்குப் போதிய ஆதாரங்கள் கிடைத்தனவாம். எனினும் அக்குரங்குகளுளொன்றைத் தம்மோடு கொணர்ந்து நிறுத்தி யாவர் முன்னும் பேச விடுங்காறும் தாம் இது விஷயமாய்ச் சோதித்தறியுமாறு தீர்மானித்திருப்பதாகக் கூறியிருக்கின்றனராம். அவருடைய எண்ணம் கைகூடிற்றெனில் அது மிகவும் ஆச்சரியமான தொன்றன்றோ?

**புதுக்கோட்டை ஸ்ரீராஜாங்கம்** :—இம்மதி 15-ந்தேதி வெளிப்பட்ட புதுக்கோட்டை ஸ்ரீராஜாங்கக் கெஜெட்டில் ஒரு விஷயங்கண்டு களிகூர்கின்றாம். 'அரசரவர்கள் தம் நாட்டிலுள்ளார் யாவரும் இராஜ்ய காரியங்களிற் பொது நன்மையை யொட்டிய விஷயங்களைப் பற்றி அறிந்து கொள்ளும் பொருட்டு ஒவ்வொரு வருஷமும் பொங்கற் பண்டிகை கழிந்தபின் தலைநகரில் ஒரு கூட்டங் கூட்டுவார்கள். அக்கூட்டத்திற்குத் தம் நாட்டின்கணுள்ள முக்கியமான குடித்தனக்காரர் வியாபாரிகள் முதலாயினோர் தமக்குற்ற பிரதிநிதிகளை யனுப்பலாம். அங்ஙனம் அனுப்பப்படும் பிரதிநிதிகளின் முன்னிலையில் திவானவர்கள் கழிந்த வருஷத்தில் துரைத்தன சம்பந்தமாய் ஏற்பட்ட முக்கிய விஷயங்களைப் பற்றியும் அடுத்த வருஷத்திற்செய்யக்கருதி யிருக்குங் காரியங்களைப் பற்றியும் எடுத்துரைப்பார். அடுத்த பிப்ரவரி௴ 7-ஆந் தேதியன்று இவ்வருஷத்துக் கூட்டங்கூடும்' என்ற விஷயத்தைக் கண்ணுற்ற யாவரே களிப்புறாதார்? இவ்வருஷக் கூட்டத்திற்காகத் திவானவர்கள் 30-பிரதிநிதிகள் தெரிந்தெடுத் திருக்கின்றனராம். இந்தக் கூட்டத்திற்கு வர விரும்பும் ஏனையோர் திவானவர்கட்குப் பத்து நாளைக்கு முன்னரே யெழுதிக் கேட்டு உத்தரவு பெற்றுக்கொள்ள வேண்டுமாம். நமது சுதேசராச்சியங்கள் செவ்வனே யாளப்படுவதில்லை யென்ற குறைபாடு தம்முடைய நாட்டைச்சாராத வண்ணம் நமது புதுக்கோட்டை யரசரவர்கள் செய்யப் புகுந்திருக்கும் இவ்வேற்பாடு மிகவும் மெச்சத்தக்

கதே. அவருடைய முயற்சிகள் நிறைவேறுமாறு கடவுளை வேண்டுகின்றோம்.

**காங்கிரேஸ் மகாசபை** :—இந்தியாவுக்குப் பற்பல நன்மைகளைப் புரிந்துவரும் காங்கிரெஸ் என்னும் இச்சபையானது சென்ற மதியத் திருதிவாரத்தின், வியாழன் வெள்ளி, சனிக்கிழமைகளிற் கல்கத்தா நகரத்திற் பதினேழாமுறை கூடிற்று. **தீன்ஷா இடல்ஜீவாச்சா** என்னும் பாரசிக கனவான் சபா நாயகராய் வீற்றிருந்தார். சபையிற் கூடியிருந்தவர்களின் தொகை 5000-க்குமேல் இருக்கலாமென்று மதிக்கப்படுகிறது. சபா நாயகர் ஆரம்பத்தில், இந்தியர்களின்மீது அளவிறந்த அன்பு பூண்டு அரசாட்சி புரிந்துவந்த மகாராணியவர்கள் காலஞ்சென்ற விஷயத்தைப்பற்றி இந்தியாவிலுள்ள ஜனங்கள் யாவரும் ஆற்றொணாத் துயரத்தால் வருந்தா நிற்பதைத் தெரிவித்தனர். அதன்பின்னர், மகாராணியவர்களைப்போலவே நம்மீது அன்பு பாராட்டுவார்களென்று எதிர்பார்க்கப்படுகிற **எட்வர்டு** மன்னருக்கும் **அலெக்ஸண்ட்ரா** சக்கரவர்த்தினிக்கும் சமீபத்தில் மகுடஞ்சூட்டவிருக்கும் தினத்தைச் சந்தோஷத்துடன் கொண்டாடுவதற்கு இந்தியாவிலுள்ளார் யாவரும் ஆவலுடன் எதிர்பார்த்திருப்பதாயும், அந்தச் சுபதினத்தில், முற்காலத்து இந்து ராஜாக்களின் வழக்கம்போல் நம் எட்வர்டு மன்னரும், குடிகள் என்றும் மறவாதிருக்கும்படியான வோர் நன்மையை யளிக்கக் கருணை புரிவாராயின் அது மிகவும் நலமுடைத்தென்றும் கூறினர். அதன் பின்னர், இந்தியாவில் தற்காலம் மிதமின்றி வருந்திவரும் பஞ்சத்தைப்பற்றியும், இந்தியர்களுக்குள்ள ஏனைய குறைபாடுகளைப் பற்றியும், யாவரும் வியக்கத் தக்கவாறு ஒவ்வொன்றை யெடுத்துப் பேசினர். காங்கிரெஸில் எடுத்துப் பேசப்பட்ட விஷயங்கள் யாவும் நமது துரைத்தனத்தாரால் கவனிக்கப்படுமென்று நம்புகிறோம். அடுத்த வருஷம் காங்கிரெஸ் பம்பாய் இராஜதானியிற்கூடும்.

**சென்னை உபாத்தியாயர் சங்கம்** :—1900-ஆம் வருஷத்திற் [illegible]லிருந்த இச்சங்கஞ் சென்ற மாதஞ் சென்னையிற் சிறுவர் கிறித்தவக் குமாரத்தின் கட்டிடத்திற் கூடிற்று. முதன்மணி நமது தேசாபிமானி[illegible] பொருந்திய **ஆம்தில் சீமானவர்களும்** பின்னர் இராசதானிக் கலாசாலை உயர் நூற்புலவராகிய போர்ன் துரையவர்களும் சபா நாயகராக வீற்றிருந்தனர். இதன்கண் தற்காலத்திற் கல்வி கற்பிக்கும் முறைமையிலுள்ள பெருங் குறைபாடுகள் சில நன்கெடுத்துக் காட்டப்பட்டன. ஹால் துரை படித்த வியாசத்தினின்றுங் கல்வி கற்பிக்கு முறையைப் போதிக்கும் பள்ளிக்கூடங்களின் கீழ்ப்பாகங்களில் விருத்திக்கு இடமிகவுண்டென விளங்காநின்றது. அவற்றில் நடக்கும் வேலையை யின்னும் நன்றாக விசாரணைசெய்தல் இன்றியமையாததே. ஹால் துரை சொன்ன மற்ற விஷயங்கள் உடனே நடவாவிடினும் இது நடக்குமென்று நம்புகின்றேம். மிஸ் கார் அம்மையவர்கள் இப்பொழுது பெண் பாடசாலைகளிற் படிப்பிக்கப்படுங் கல்வியினைப்பற்றிப் படித்த வியாசம் மிகவும் நன்றாயிருந்தது. பஞ்சமர் கல்வியைப் பற்றிக் கௌடி துரை படித்ததும் நன்றாயிருந்ததெனச் சிலர் எண்ணுகிறார்கள். வேறு சிலர் எழுந்து பேசினவை இன்பகரமாகவேயிருந்தன. இக்கூட்டம் நிகழ்ந்ததிற் பல்லாற்றானும் பயன் விளையலாமென்றே நினைக்கின்றேம். எவ்வாற்றானும் பெண்கல்வியேனும் விருத்தியாகாவிடின் யாமனைவரும் மிகவும் விசனப்பட்டவராவே மென்பது திண்ணம்.

# ஞானபோதினி.

சம்புடம் V. } 1902௵ பிப்ரவரி௴ 20௳ { புத்தகம் 7.

## TAMIL DICTIONARY.

## தமிழ் அகராதி.

நம் தமிழில் 'அகராதி' என்ற சொல்லே ஆட்சேபத்துக்கு இடமாயிருக்கின்றது. எழுத்துக்களுக்குக் கரச்சாரியை வழக்கு, தமிழ் மொழிகளிலேயன்றி வடமொழிகளில் இன்று; வடநூலார் கொள்வது காரச்சாரியையே. ஆதலின், தற்காலத்தில், 'அகராதி' யென்று வழங்குஞ்சொல், 'அகாராதி' யென்றிருத்தல் வேண்டுமென்பது பலருடைய கொள்கை. அற்றேல், பாஷையில் வழங்கி வந்த அகராதி யென்ற சொல்லை அகாராதி யென்று மாற்றுதல் ஏற்புடைத்தாகுமோ? அகாராதி யென்ற சொல்லே அகராதியென மருவிற்றென்றாற் படுமிழுக்கென்னை?

அகராதியென்ற சொற்பொருளாராய்ச்சி யிவ்வாறாக, பிறபாஷைகளிலுள்ள அகராதிகட்குள்ள கௌரவமும் மகிமையும் நந்தமிழ் மொழியின்கணுள்ள அகராதிகட்கு ஏற்படாமற் போயினவென்று பல்லோர் கூறக்கேட்டிருக்கின்றோம். இஃதுண்மையே யென யாம் அனுமோதிப்பதின்கண் யாதொரு தடையுமில்லை. ஏனெனில், பிறபாஷைகளிலுள்ள அகராதிகள் பாமரர் பண்டிதராகிய இருதிறத்தாராலும் அங்கீகரிக்கப்பட்டு மேற்கொள்ளப் படுமாறுபோல, நம்முடைய தமிழ்மொழியின்கணுள்ள அகராதிகள் பாமரர்களால் மட்டும் மேற்கொள்ளப்பட்டுப் பண்டிதர்களால் மேற்கொள்ளப் படாமலிருக்கின்றன.

இக்குறைபாட்டிற்குக் காரணம் யாதெனை ஆராயப்புகுந்த விடத்து, நம் தமிழகராதிகளிற் காணப்படுஞ் சொற்கள் தமிழ் நிகண்டுச் சொற்கள் மாத்திரமேயன்றி, ஆன்றோ ராட்சிக்கும் சொற்பொருளுணர்ச்சிக்கும் ஒத்துவாராத பலவகைப்பட்ட பாஷாந்தர மொழிகளும் பிறவுமாம். ஒருபாஷை நாள்தோறும் வளர்ச்சி யடைந்துகொண்டே வருவதாயின், அதன்கண் நாகரிக விருத்திக்கேற்றபடி சில புதுச்சொற்கள் புகுந்து பயிலுதல் இயல்பே. ஆதலின் முன்னரே ஏற்பட்டுள்ள சொற்களைத் தவிர்த்து வேறு புதுச்சொற்கள் ஆக்கவகையானுதல், மேற்கோள்வகையானுதல் கொள்ளப்படா வென்பது அறிவுடைமையின்பாற் படுமோ? நந் தமிழ்மொழி பேசுநருட் பலருக்குச் சான்றோர் செய்யுட்சொல் இவையெனவும் சாமானிய வழக்குச்சொல் இவையெனவும் பகுத்தறிந்துகோடல் அரிதாயிருக்கின்றது. இக்குறையை நீக்கவேண்டுவது அகராதிகளின் கடமைகளிலொன்றன்றோ? இச்சொல் செய்யுட்சொல் என்றும் இச்சொல் இழிசினர் வழக்குச்சொல் என்றும் ஆங்கிலமுதலிய பிற பாஷைகளிலுள்ள அகராதிகள் வரையறுத்துக் காட்டுமாறுபோல நம்தமிழகராதிகளும் வரையறுத்துக் காட்டுதல் வேண்டும். இனிக் குழூஉக்குறிபோல வழங்குஞ் சில சங்கேதவழக்குச் சொற்களும் அகராதிகளில் தனித்தனி யிடம்பெறுதல் வேண்டும். மரக்கலத்தொழில் செய்யும் மீகாமர் வழக்குச் சொற்களும், கொற்றொழிற் சொற்களும், கம்மத்தொழிற் சொற்களும், தச்சுத்தொழிற் சொற்களும், நெய்தற்றொழிற் சொற்களும் பிறவும் அகராதிகளிற் காணப்படாவிட்டால் அவ்வகராதிகளாற் சிறப்பும் விசேடப்பயனுமில்லையென்று துணிந்துரைக்கலாம். இன்னும் உள்ளவாறே நோக்குமிடத்து நிகண்டுகளையாரும் பிழைபோன விடங்களுண்டு. உதாரணமாகச் சூடாமணி நிகண்டிற் "சாகஞ்சா கினிவெள் ளாடு தேக்கெனுந் தருவு தேனீ" யென்று கூறப்பட்டுளது. 'சாகம்' என்ற சொல்லுக்குத் தேனீயென்ற பொருளில்லை. 'சரகம்' என்ற சொல்லுக்கே அப்பொருளுண்டு. ஆகவே 'சரகம்' என்றதிலுள்ள ரகரத்தைச் சகர ஆகாரத்தின் அடிக்குறியாகிய காலென வரிவடிவிற்கண்டு மருண்ட மருட்சியே அப்பிழைக்கு உற்ற காரணமாமாறு தேற்றம். இவ்வாறு ஆராய்ச்சிக் குறைவால் நிகழ்ந்தவழு பிற்றைநா ளிலக்கியங்களிலும் இடம்பெற்று விட்டது. இலக்கண விலக்கியத் தெழுவரம் பிசைத்த சிவஞானமுனிவ



ரது மாணாக்கருட் சிறந்தவரும், தணிகைப்புராண நூலாசிரியருமாகிய கச்சியப்பமுனிவர் தமது வண்டுவிடுதூது என்னும் நூலின்கண் "ஏக்கீலங்க டாங்கி யுகையாத சாகமே" என்று வண்டை விளிக்கின்றனர். ஆகவே நிகண்டேயி இலக்கியங்களினும் பயின்றுவருஞ் சொற்கள் தவறுடையன வென்பது பின்னர் நிகழும் ஆராய்ச்சிகளிற் காணப்படினும் அவற்றைத் திருத்தப்புகுதல் ஒருநாளுஞ் சாலாது.

இனி இது நிற்க. ஆசிரியர் தொல்காப்பியனார் "மொழிப்பொருட் காரணம் விழிப்பத்தோன்றா" என்றாரேனும் இக்காலத்து ஆராய்ச்சிகளுக்கேற்றபடி நந்தமிழகராதிகளில் ஓராற்றாற் சொற்பொருட் காரணங்களுங் காட்டப்படுதல்வேண்டும். சில சொற்களின் அரும்பொருள்களுக்கு நல்லிசைப் புலவர்களது பாமுறைகளினின்றும் பிரயோகங் காட்டிச் செல்லவேண்டும் நம் அகராதிகள். ஆங்கிலம் முதலிய பிறபாஷைகள் நந்தமிழ்மொழிக்கு எத்துணையோ நூற்றாண்டுகள் பிற்பட்டுத் தோன்றியும் அவையனைத்தும் புதுமை வழிகளிற் புகுந்து சிறந்து குறைபாடுகளொழிந்து விளங்குதல் நாம் கண்கூடாகக் காண்பதொன்றன்றோ? ஆகவே யாம் மேற்கூறிய விஷயங்களை நமது மதுரைப் புதுத் தமிழ்ச் சங்கத்தின் அதிகாரிகளும் அவயவிகளும் செவிக்கொண்டு ஏற்றவாறு முயன்று தக்க தமிழகராதிகள் வெளிப்படுத்தித் தமிழுலகத்தைக் கடமைப் படுத்துவார்களென்று நம்புகின்றோம்.

பத்திராதிபர்.

---

# TIRUVALLUVAR.

## திருவள்ளுவர்.

[208 - பக்கத்தொடர்ச்சி.]

"அறத்தாற்றி னில்வாழ்க்கை யாற்றிற் புறத்தாற்றிற் போஒய்ப் பெறுவதெவன்" எனக்கூறிப் பின்னே "தலைப்பட்டார் தீரத் துறந்தார் மயங்கி வலைப்பட்டார் மற்றை யவர்" எனக்கூறியதும், "ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று சூழினுந் தான்முந் துறும்" எனக்கூறிப் பின்னே "ஊழையு முப்பக்கங் காண்ப ருலைவின்றித் தாழா துஞற்று பவர்" எனக்கூறியதும் முரண்படக்கூற

லாம்; "இன்னாசெய் தாரை யொறுத்தல் அவர்நாண நன்னயஞ் செய்து விடல்" எனக்கூறிப்பின்னே "இன்னாசெய் தார்க்கும் இனியவே செய்யாக் கால், என்ன பயத்ததோ சால்பு" "என்றும் "நண்பாற்றா ராகி நயமில செய் வார்க்கும் பண்பாற்றா ராதல் கடை" என்றுங் கூறியது கூறியதுகூறலாம்; நட்பு அதிகாரப்பட்ட விடத்திற் சூது மருந்து என்பனவற்றை விரித்துரைத்தது மற்றொன்று விரித்தலாம் எனின், மேற் கூறியாங்கு நூலினை முற்றக் கற்று நூலின் நோக்கத்தைத் தொகுத்துப்பார்த்து நுணித்தறிவார்க்கு இவைகளும் இவைபோல்வனபிறவும் அக்குற்றங்கள் ஆகாவாமென்க. இந்நூல் ஏறக்குறைய இப்பொழுது எஞ்சிநிற்கும் இலக்கியங்கள் எல்லாவற்றினும் முற்பட்டதாகக் காண்கின்றது. எங்ஙனமாயினும், இதற்கு முன்னே இன்னோரன்ன நூல் தமிழில் இருந்ததாகக் கண்டதுமில்லை, கேட்டதுமில்லை. வடமொழியில் உள்ள மிருதிகளும் சமயச் சார்புடனே நியாயப்பிரமாணங்கள் வருணாசிரம தர்மங்கள் முதலானவற்றை அவ்வக்காலத்துக்கேற்றபடி கூறிய நூல்களாயின. நாம் கண்ட கேட்ட பிறதேயங்களிலும் இவ்வகையான நூல் யாதொன்றும் இருப்பதாக இதுகாறுங் கேட்டிலோம். ஆகவே இஃது இணையில்லாத நூலாயிற்று. நூற்பாகுபாடுகளும் நூற்போக்கும் நுதலிய பொருளும் நமதாசிரியர் தமது கல்வி கேள்விகளினாற்றலால் தாமே தமது புந்தியிற் புதுவதாகக் கூர்ந் துய்த்தறிந் துரைத்தனவாதலின் இவ்வாசிரியரும் இணையில்லாதவராயினார்.

"ஆரியமுஞ் செந்தமிழு மாராய்ந் திதனினிது
சீரியதென் றொன்றைச் செப்பரிதால்—ஆரியம்
வேத முடைத்துத் தமிழ்திரு வள்ளுவனார்
ஓது குறட்பா வுடைத்து"

என்றுரைத்தார் இருமொழியிலும் வல்லராக எண்ணப்பட்ட கடைச்சங்கத்தினர். "என்னினுயர்வுறும் இனித் தமிழ்மொழியென, முன்னூறு பெரு வடமொழி யழுக்காறுறும்" என்றனர் பிற்பட்டவர்கள்.

வள்ளுவனார் ஒவ்வோரதிகாரத்தையும் பப்பத்துக்குள்ளாகக் கூறுவதென்று வரையறுத்துக் கொண்டதில் இருவித இடர்ப்பாடுண்டு. அதிகாரப்பட்ட பொருள் பத்துக் குறட்குக் குறைவதாயின், கூறியது கூறுதல் மற்றொன்று விரித்தல் மிகைபடக்கூறல் முதலான குற்றங்களுக்கு இடமுண்டாகும். அதிகாரப்பட்ட பொருள் பத்துக்குறளின் மிகுவதாயின் குன்றக்கூறல் முதலான குற்றங்களுக் கிடமுண்டாகும். அன்றியும் விதிமுகத்தானும் மறைமுகத்தானும் பல அதிகாரங் கூறவேண்டுவதுமாகும். கடவுள் வாழ்த்து அதிகாரப்பட்ட விடத்தில் நீடுவாழ்வார் இன்னார் என்பது இரண்டு குறளால் உணர்த்தினார். அவ்விரண்டு குறளையும் ஒன்றாக இணைத்திருக்கலாம். "அறவாழியந்தணன்றாள் சேர்ந்தார்க் கல்லாற் பிறவாழி நீந்தலரிது" என்ற குறளையும் "பிறவிப் பெருங்கட னீந்துவா நீந்தார், இறைவனடி சேராதார்" என்ற குறளையும் ஒரு முடிபாக முடிப்பது நன்றாகும். இல்வாழ்க்கை அதிகாரப்பட்ட வீடத்தில், துறவறத்தினும் இல்லறம் ஏற்றமுடையது என்பதற்கு "அறத்தாற்றி னில்வாழ்க்கை யாற்றிற் புறத்தாற்றிற் போஒய்ப் பெறுவ தெவன்?" என்றும், "இயல்பினா னில்வாழ்க்கை வாழ்பவ னென்பான், முயல்வாரு ளெல்லாந் தலை" என்றும் "ஆற்றி னொழுக்கி அறனிழுக்கா வில்வாழ்க்கை, நோற்பாரி னோன்மை யுடைத்து" என்றும், மூன்று குறள் கூறினார். நட்பு அதிகாரப்பட்ட விடத்திற் கூறவேண்டுவனவெல்லாம் ஓரதிகாரத்தில் அடங்காமையால், அதனைப் பல வதிகாரங்களாக வகுத்துக் கொண்டார்.



நமதாசிரியர் இந்நூலை ஏனைப் பாக்களாற் கூறாது குறட்பாக்களாற் கூறிய எடுத்துக்கொண்டதனால், சுருங்கச்சொல்லல் விளங்கவைத்தல் நவின்றோர்க்கினிமை நன்மொழிபுணர்த்தல் முதலான அழகுகள் இந்நூலில் இனிதாக அமைவனவாயின. ஆயினும் குறட்பாவாற் கூறுவதனாற் குறையொன்று குறுக்கிடுகின்றது. அதுதான் யாதோவெனின், அதிகாரப்பட்ட விஷயங்களை இன்னதிதுவென ஒரு முடிபால் விளக்குவது விளங்கவைத்தலாக இருக்கும். அங்ஙனம் முடிபொன்றால் முடித்துக்கூற முடியாதாக, அதிகாரப்பட்ட பொருள் விரிவதாயின், அதனை ஒரு குறட்பாவில் விளங்க வைப்பது இயலாது. அமைச்சு, தூது, அரண், நட்பு என்றாற் போல்வனவற்றை விளக்குகின்றுழி இக்குறைவு எல்லார்க்கும் இனிது விளங்கும்.

இம்முதற்பாவலர் தமது நூலில் ஒவ்வோரதிகாரத்தையும் பப்பத்துக் குறட்பாவாகக் கூறுவதனாலும் இந்நூலைக் குறளாற்கூறிய எடுத்துக் கொண்டதனாலும் எழுகின்ற இடர்ப்பாடுகளன்றி, இந்நூலில் வழூஉச்சொற் புணர்த்தல், மயங்கவைத்தல், வெற்றெனத் தொடுத்தல், சென்று தேய்ந்திறுதல், நின்று பயனின்மை முதலான குற்றங்கள் பலமுறைதேடித் துருவிப்பார்த்த விடத்துங் காணப்படுவனவல்ல. ஆகவே இந்நூலின் நலங்களை இயன்றமட்டில் ஒருவாறு ஆராய்ந்து பார்ப்போம்.

**நாலடியா**ரிற் "பெரியோர் கேண்மை பிறைபோல நாளும், வரிசை வரிசையா நந்தும் - வரிசையால், வானூர் மதியம்போல் வைகலுந் தேயுமே, தானே சிறியார் தொடர்பு" எனப் பெரியோரது நட்பு வளர்பிறைச் சந்திரனைப்போல நாட்குநாள் வளரும்; இழிஞர் நட்புத் தேய்பிறைச் சந்திரனைப் போல நாட்குநாள் தகர்ந்துவிடும் என்பதை, வள்ளுவர் "நிறைநீர நீரவர் கேண்மை பிறைமதிப் பின்னீர பேதையார் நட்பு" என ஒரு குறளிற் சுருங்கச் சொல்லி யிருக்கின்றனர். "பெருமுத் தரையர் பெரிதுவந் தீயும், கருனைச் சோறார்வர் கயவர்-கருனையைப், பேருமறியார் நனிவிரும்பு தாளாண்மை, நீருமமிழ்தாய் விடும்" என்ற நாலடியின் கருத்துத் "தெண்ணீ ரடுபுற்கை யாயினுந் தாடந்த, துண்ணலி னூங்கினிய தில்" என்ற குறளில் அடங்கியிருக்கின்றது.

"தினையனைத்தே யாயினுஞ் செய்தநன் றுண்டால், பனையனைத்தா வுள்ளுவர் சான்றோர் - பனையனைத், தென்றுஞ் செயினு மிலங்கருவி நன்னாட, நன்றில நன்றறியார் மாட்டு" என்றது நாலடி. "தினைத்துணை நன்றி செயினும் பனைத்துணையாக், கொள்வர் பயன்றெரி வார்" என்றது குறள். ஒருபொருளையே யோதும் இரண்டுநூலை ஒப்பிட்டுப் பார்க்குமிடத்தே அவ்வந்நூலின் திறம் விளங்குமாதலின் இங்ஙனம் நாலடியையும் குறளையும் ஒப்பிட்டுப் பார்த்தோம். ஒப்பிட்ட ஒவ்வொரு பொருளையும் நம்து குறளே சுருங்கச்சொல்வதா யிராநின்றது. ஆகவே இந்நூலிற் சுருங்கச்சொல்லல் என்னுமழகு நன்கமைந்துளது என்பதற்கு ஐயமின்று. நாலடி நீங்கலாகக் குறளோடு ஒப்பிடலான புராதன நூல்கள் இன்மையின் ஈதிம்மட்டில் நிற்க.

இங்ஙனஞ் சுருங்கச்சொல்லிப் போதல் இவ்வாசிரியர் வழக்காயினும், பொருள் கவர்படுதலும் திரிபாதலுமின்றித் தாம் கூறுவனவற்றை யெல்லாம் விளங்கவே வைத்திருக்கின்றனர். ஒரோவிடத்துண்டாகின்ற திரிபுதானும் உரையாசிரியர் தாஅனுட்டித் தனது கூறுதலானும், பிறிதொடுபடாஅன் தன் மதங்கொளலானும் எழுவதேயன்றி ஆசிரியரால் நிகழ்வதன்று.

இந்நூல் முற்றுமே நவின்றோர்க்கினிமை பயப்பதாயினும், ஒவ்வோரதிகாரத்தினும் பெரும்பான்மையாய் ஒவ்வொரு குறள் நடுநாயகம் போன்று தனிநயம் பயப்பது. இந்நூலை ஒருமுறை யிருமுறை ஓதினோர்க்கும் உணர்தலொன்றாகக் கிடக்கின்றது. இது மூன்றாவது பாலிற் பின்னும் சிறப்பாகக் காணப்படும். சிலவற்றை ஈண்டு எடுத்துக்காட்டுவோம். "உண்டார்க ணல்ல தடுநறாக் காமம்போல், கண்டார் மகிழ்செய்த லின்று" என்பது தகையணங் குறுத்தல். குறிப்பறிதலில் "இருநோக்கிவளுண்கணுள்ள தொருநோக்கு, நோய்நோக்கொன் றந்நோய் மருந்து." "மழித்தலு நீட்டலும் வேண்டாவுலகம் பழித்த தொழித்து விடின்" என்றனர் கூடாவொழுக்கத்தில். "உடுப்பதூஉ முண்பதூஉங் காணிற் பிறர்மேல், வடுக்காண வற்றாகும் கீழ்" என்பது கயமை. நன்றியில் செல்வத்தை விரிக்குமிடத்தில் "வைத்தான்வாய் சான்ற பெரும்பொரு ளஃதுண்ணான், செத்தான் செயக்கிடந்ததில்." பெருமை என்னு மதிகாரத்தில் "பணியுமாமென்றும் பெருமை சிறுமை, அணியுமாந் தன்னை வியந்து." "செவிக்குணவில்லாத போழ்து சிறிது வயிற்றுக்கு மீயப்படும்" என்றார் கேள்வியில். "அவ்வித்தழுக்கா றுடையானைச் செய்யவள், தவ்வையைக் காட்டிவிடும்" என்பது பொறாமையின் பயன்.

நன்மொழி புணர்த்தலாவது அவ்வப்பொருளுக்கேற்ப நல்ல சொற்களைச் சேர்த்தல். இதைச் சுட்டி நாம் எடுத்துரைக்க வேண்டா. "பழகுதமிழ்ச் சொல்லருமை நாலிரண்டில்" என ஔவையார் உரைத்துவிட்டனர். பிற்பட்டவர்களில் இலக்கணக் கொத்துடையார் "பல்காற் பழகினுந் தெரியாவுளவேல், தொல்காப்பியந் திருவள்ளுவர் கோவையார் மூன்றினு முழங்கும்" எனக்கூறினர்.



ஓசையுடைமை என்பமைதச் சந்தவின்ப முடைத்தாதல் எனக்கொள்ப வாதலின் ஈண்டு ஆராய்ச்சியின்று. நுதலும் பொருளைப் பலமுறையும் சிந்தித்தால் ஒருகாலைக் கொருகாற் கருத்து ஆழ்ந்து செல்வத்தை ஆழமுடைத்தாதல் என்னும் அழகென்பர். இவ்வழகு இந்நூலில் மிக்கிருப்பது மூன்றாவது பாலிலாதலின், வேண்டுவார் ஆண்டு ஆராய்ந்து கொள்க. முறையின் வைப்பதான அழகு பழைய தமிழ் நூல்களிற் குறளைக்காட்டிலும் வேறு எதனிடத்தும் நாம் கண்டதில்லை. வீடுபேற்றின் விழுமிய பொருளில்லை. அப்பேறு பெறுவதே இந்நூலின் முடிந்த நோக்கமாதலின் இதன்கண் விழுமியது பயத்தலும் உண்டு. குறளை எடுத்து மேற்கோள் கொடாத உரையில்லை. "ஆலும் வேலும் பல்லுக்குறுதி, நாலு மிரண்டுஞ் சொல்லுக்குறுதி." ஆகவே விளங்குதாரணத்த தாகுமழகு இந்நூல் முற்றும் உள்ளதாகும்.

பெண்பாலினர் தாம் அழகு மிக்குடையராயினும் அணிகலனணியும் அவாவுடையவர்கள். கவிவாணர்களும் தாம் உரைக்கும் பொருள் அழகுடையதாயினும் அதனை அணியமைத்தே அறைவர். "அணியிலாக்கவிதை பணியிலாவனிதை" என்றார் அகத்தியரும். நமதாசிரியரும் ஆங்காங்குச் சிற்சில அணிகளை அமைத்துவைத்தனர்.

பின் வருநிலை ஒரோ விடத்துக் காணப்படுகின்றது. "இறந்தா ரிறந்தா ரனையர் சினத்தைத், துறந்தார் துறந்தார் துணை." "நோயெல்லா நோய்செய்தார் மேலவாம் நோய்செய்யார், நோயின்மை வேண்டுபவர்." "பற்றுக பற்றற்றான் பற்றினை யப்பற்றைப், பற்றுக பற்று விடற்கு." "சொல்லுக சொல்லைப் பிறிதோர் சொல் அச்சொல்லை, வெல்லுஞ்சொல் இன்மை யறிந்து". "குன்றி யனையாருங் குன்றுவர் குன்றுவ குன்றியனைய செயின்".

பிறிதுமொழிதல் என்னும் ஒட்டணி இடத்துக்கேற்ப இயைந்துள்ளது: எளியரென்று பலரொடு பகைகொள்வான் தான் வலியனேயாயினும் அவர் ஒருங்குசேர்ந்த விடத்து வலியழிவான் எனக்கூற வந்தவர் "பீலிபெய் சாகாடுமச்சிறும் அப்பண்டம், சாலமிகுத்துப் பெயின்" என்றார். பகைமேற் செல்லத் தொடங்கித் தன்னாற் செல்லக்கூடிய அளவுவரையிற் சென்று நின்றவன் பின் அவ்வளவைக் கடந்து மேலுஞ் செல்வனாயின் உயிர் முடிவான் எனக்கூற எடுத்துக்கொண்டதை "நுனிக்கொம்ப ரேறினா ரஃதிறந்தூக்கின் உயிர்க்கிறுதியாகிவிடும்" என்று கூறிவிட்டார். அரசர் தமக்குச் சாதகமும் பகைவர்க்குப் பாதகமுமான இடத்தில் நின்று சண்டைசெய்க என்ற கருத்தை "நெடும்புனலுள் வெல்லு முதலை அடும்புனலின், நீங்கின் அதனைப்பிற" என்றும் "கடலோடா கால்வல் நெடுந்தேர் : கடலோடும், நாவாயும் ஓடா நிலத்து" என்றும், "காலாழ்களரி னரியடுங் கண்ணஞ்சா, வேலாண்முகத்த களிறு" என்றும் எடுத்துரைத்தார். இன்னும் சில விடங்களில் இங்ஙனம் உரைத்திருக்கின்றனர்.

உவமைகளை அமைக்கமுடியாத இடங்களிலும் பொருளாற்றலை உரமெய்துவிக்க வேண்டின இடங்களிலும் உருவகமும் ஏகதேச வுருவகமும் அமைத்திருக்கின்றனர். அவற்றிற் சில வருமாறு :—“சினமென்னுஞ் சேர்ந்தாரைக் கொல்லி” “பெருமைக்குமேனைச் சிறுமைக்குந் தத்தங், கருமமே கட்டளைக் கல்”. “அல்லற்பட் டாற்றாதழுதகண்ணீ ரன்றே, செல்வத்தைத் தேய்க்கும் படை”. “பொருளென்னும் பொய்யாவிளக்கம்.” “கண்ணோட்ட மென்னுங் கழிபெருங் காரிகை” “அருளென்னுமன்பீன் குழவி பொருளென்னுஞ் செல்வச் செவிலியாலுண்டு.” “கேட்டினுமுண்டோ ருறுதி கிளைஞரை நீட்டியளப்பதோர் கோல்”.

ஒரு நீதியை விளக்குமிடத்தில் தாம் வற்புறுத்த விரும்பும் பிறிதொரு நீதியை உவமானமாக எடுத்துக்காட்டி யிருக்கின்றனர் சிற்சில விடங்களில். “அழுக்காறுடையான்கண் ஆக்கம் போன்றில்லை, ஒழுக்கமிலான் கண் உயர்வு”. ‘இன்மையுள் இன்மை விருந்தொரால் வன்மையுள், வன்மை மடவார்ப்பொறை”. ‘தெருளாதான் மெய்ப்பொருள் கண்டற்றால் தேரின், அருளாதான் செயயு மறம்.” “பொச்சாப்புக் கொல்லும் புகழை அறிவினை, நிச்ச நிரப்புக்கொன்றாங்கு.” “கொல்லா நலத்தது நோன்மை பிறர்தீமை, சொல்லா நலத்தது சால்பு.” “முதலிலார்க் கூதியமில்லை மதலையாஞ் சார்பிலார்க் கில்லை நிலை.”

புலவர்களுடைய கல்வி கேள்விகளின் சிறப்பும் பிரபஞ்ச வியாபாரமும் பிரகிருதி ஞானமும் அவர்கள் தங்கள் நூலில் நுதலும் பொருள்களை விளக்கும்படி காட்டும் உவமானங்களாலே நன்கு விளங்கும். சாதாரணமான சம்பாஷணையில் தானும் அவரவர்கள் எடுத்துக்காட்டும் உவமானங்களால் அவரவர்களுடைய யோக்கியதை, இனத்தியல்பு, தொழிற்றிறம், மதியூகம், மனப்போக்கு முதலான சுபாவங்களெல்லாம் நன்கறியக்கூடும் அன்றோ. “ரவிகுடனிதாவு கவிகுசுனு” எனத் தெலுங்கரில் ஒரு பழமொழி உண்டு. அஃதாவது கதிரவன் நுழைந்து பாராத இடத்தையும் கவிகள் கண்டறிவர் என்பதாம். ஒரு ஸம்பந்தமும் இல்லாத பொருள்களுக்கு ஒற்றுமை நயங் கற்பித்து உவமானங்கொள்ளுதல் சிறந்த கவிராயர்களதியல்பாக இருக்கின்றது. தலைமயிருக்கும் ஒருவன் நிலைமைக்கும என்ன சம்பந்தமுண்டு? ஆயினும் நுணித்தறிவார்க்கு ஒற்றுமை புலப்படும். “தலையினிழிந்த மயிரனையர் மாந்தர் நிலையினிழிந்தக்கடை.” ஆமைக்கும் அடக்கத்துக்கும் கற்பித்த ஒற்றுமை நயத்தைப் பாருங்கள் :—“ஒருமையுளாமைபோல் ஐந்தடக்கலாற்றின், எழுமையு மேமாப்புடைத்து” அனிச்ச மலர் அதிதிக்கு ஆதாரமாவதைப்பாருங்கள் :—“மோப்பக்குழையு மனிச்சம் : முகந்திரிந்து, நோக்கக் குழையும் விருந்து.” ஒருவனுடைய நிழலும் அவன் தீமையின் பயனும் ஒற்றுமைப்படுவதை உற்றுநோக்குங்கள் :—“தீயவை செய்தார் கெடுதல் நிழல்தன்னை, வீயாதடியுறைந்தற்று.” இன்னும் “கழாஅக்கால் பள்ளியுள் வைத்தற்றால்சான்றோர், குழாஅத்துப்பேதைபுகல்.” “சொல்வணக்கமொன்னார்கட் கொள்ளற்க வில்வணக்கம், தீங்கு குறித்தமையான்”. “நவி



றொறு நூனயம்போலும் பயிறொறும், பண்புடையாளர் தொடர்பு” என்றாற் போல்வனவற்றுள்ளும் இத்திறத்தை நன்கறிக.

சிற்சில விடங்களில் இவ்வாசிரியர் காட்டுகின்ற உவமைகளை நீக்கி வேறு எதை அமைத்துவைத்தாலும் பொருள் அவ்வளவு நன்றாக மனதிற் பதியாது அவ்வப்பொருளின் சிறப்பையோ அல்லது இழிவையோ வேறுவாயிலாக உரைக்கவும் இயலாது. உதாரணம் சில வருமாறு :—“உடுக்கை யிழந்தவன் கைபோல வாங்கே, இடுக்கண் களைவதா நட்பு” “வேலொடு நின்றா னிடுவென் றதுபோலும், கோலொடு நின்றா னிரவு” “வினையான் வினையாக்கிக் கோடனனைகவுள், யானையால் யானையாத் தற்று” “பொருட்பெண்டிர் பொய்ம்மை முயக்கம் இருட்டறையில், ஏதில் பிணந்தழீஇ யற்று” “அற்றார்க்கொன்றாற்றாதான் செல்வம் மிகநலம், பெற்றாள் தமியள்மூத் தற்று” இவ்வாசிரியர் காட்டிய உவமானங்கள் பரந்துபட்ட ஒரு வியாசத்துக்கு இடந்தருவனவாக விரிந்திருத்தலின் இவற்றை இங்கே இன்னும் விரித்துரைப்பது இயலாது.

ஒரோவிடத்துப் புகழ்வார் போன்று பழிப்பர் இவ்வாசிரியர். “தேவரனையர் கயவரவருந்தா, மேவன செய்தொழுகலான்”. நன்றறிவாரிற் கயவர் திருவுடையர், நெஞ்சத்தவலமிலர்.” அசம்பாவிதமான சில சம்பவங்களைக் கூறி அதிசயங் காட்டுவர் ஒரோவிடத்தில். “நீங்கிற் றெறூஉங் குறுகிற்றண்ணென்னுந்தீ, யாண்டுப் பெற்றா ளிவள்.” “பிணிக்கு மருந்து பிறமன் அணியிழை, தன்னோய்க்குத் தானே மருந்து.” நலம்புனைந்துரைத்தல் என்னும் அதிகார முழுவதும் அதிசயோக்தி. இஃது இக்காலத்தவர்க்குத் தக்கதன்றாம். ஆயினும் அது புணர்ச்சி மகிழ்ந்த தலைமகன் தலைமகள் நலத்தைப் புனைந்து சொல்லியதாகப் புனைந்துரைத்ததாதலின் அதனைக் குற்றமாகக் கூறலாகாது.

இத்திருக்குறளை இயற்றியருளிய ஆசிரியர் இன்ன மதத்தினர் என்பதை விரித்துரைப்பதற்கில்லை. இவர் எச்சமயத்தவராயினுமாக. “ஐந்தவித்தா னாற்றலகல்விசும்பு ளார்கோமா, னிந்திரனே சாலுங் கரி” என்றும் “மறப்பினுமோத்துக் கொளலாகும் பார்ப்பான், பிறப்பொழுக்கங் குன்றக் கெடும்” என்றும் “அந்தணர் நூற்கும் அறத்திற்கு மாதியா, நின்றது மன்னவன்கோல்” என்றும், “இயல்புளி கோலோச்சு மன்னவனாட்ட, பெயலும் விளையுளுந் தொக்கு” என்றும், “முறைகோடி மன்னவன் செய்யின் உறைகோடி, யொல்லாது வானம்பெயல்” என்றும், “ஆபயன் குன்றும் அறுதொழிலோர் நூன்மறப்பர், காவலன் காவானெனின்” என்றும் வருவனவற்றால் இவர் பொதுப்பட ஹிந்துமதத்துக்குட்பட்டவர் என்பது துணிவு. ஆயினும் முதற்பாவில் முதற்குறளில் விஷ்ணுவுக்குரிய பகவத் நாமத்தை உரைத்தமையாலும், இரண்டாவது பாவில் “மடியிலா மன்னவனெய்தும் அடியளந்தான், தாஅயதெல்லா மொருங்கு” என நிலங்கடந்த நெடுமுடியண்ணலைக் குறித்தமையாலும், மூன்றாவது பாவில் “தாம்வீழ்வார் மென்றோள் துயிலினினிது

கொல் தாமரைக் கண்ணனுலகு" எனப் பரமபதத்தைக் குறித்தமையாலும், வள்ளுவர் வைணவரென்பார் வைணவர். "குறமுனிவன் முத்தமிழுமென் குறளு நங்கை, சிறுமுனிவன் வாய்மொழியின் சேய்" எனத் திருவள்ளுவரே கூறினதாகக் கூறும் ஒரு தனிப்பாடலையும் ஆதாரங்காட்டுகின்றனர். "ஊரவர் கௌவை யெருவாக வன்னைசொல், னீராக நீளுமிந் நோய்" என்னும் அலரறிவுறுத்த லதிகாரத்துக் குறளும் "ஊரவர் கௌவையெருவிட்டன்னை சொன்னீர்படுத்து" என்னும் நாற்பான் மூன்றாந் திருவாய்மொழியின் நான்காம்பாசுரமும், "கண்டு கேட்டுண்டுயிர்த் துற்றறியு மைம்புலனு மொண்டொடி கண்ணேயுள" என்னுந் திருக்குறளும் "கண்டு கேட்டுற்று மோந்துண்குழலுமைங்கருவி, கண்டவின்பந் தெரிவரிய வளவில்லாச் சிற்றின்பம் ஒண்டொடியா டிருமகளு நீயுமேதிலா நிற்ப" என்னுந் திருவாய்மொழியும், பதினெட்டாவது திருவாய்மொழியில் "அணைவதரவணைமேல்... பூணைவன், பிறவிக்கடனீந்துவார்க்கே" என்னும் முதற்பாசுரமும் 'பிறவிப்பெருங் கடனீந்துவர் நீந்தாரிறைவனடி சேராதார்" என்னுங் குறளும் ஒன்றை யொன்று அடியொற்றிக்கொண்டாற்போலே யிருப்பதும் வள்ளுவர் வைணவர் என்னும் வைணவர்க்குற்ற சான்றாம். "எண்குணத்தான் தாளை வணங்காத்தலை" என்றது சிவபரமாதலாற் சைவர்கள் வள்ளுவரைச் சைவர் என்ப. "மலர்மிசை யேகினன்" என்றதனாலும்; "அவிசொரிந்தாயிரம் வேட்டலினொன்ற னுயிர் செகுத்துண்ணாமை நன்று" என்றதனாலும் ஜைநர்கள் வள்ளுவனை ஜைநர் எனக்கூறிக் கொள்வர், போப்பையர் "எங்கள் யேசுநாதர் மலைமேற் செய்த ஹிதோபதேசத்தின் பிரதி சப்தமாகும் இத்திருக்குறள்' என்பர். எவரெவரெத்திறத்தார் அவரவர்க்கு அவ்வத்திறத்தவராய்க் காணப்படும் இவரை சர்வசமய சமரசவாதி யென்பேன் நான்.

முற்றிற்று.

திருமணம்-செல்வக்கேசவராய முதலியார்.

---

## VIKRAMORVASIYAM.
## விக்கிரமோர்வசீயம்.

---

### இரண்டாமங்கம்.

பின்பு புகுகின்றனன் விதூடகன்

**விதூடகன்** :—ஏ! ஏ! பெருண்டிக் காணிக்கைப் பொருள்களினாற் போல் இவ்வேத்து மறையாற் பரவிய சனக்கூட்டத்துள் எனது நாவைக் காக்கவல்லேனல்லேன்; ஆகையால் அங்கவன் பணித்தவிசினின்று வருமளவும்



சனநடையாலொழிந்த விமானத்தையொத்த பிரதிச்சந்த மென்னும் பெயருடைய மேன்மாடத்தருகில் இருப்பேன். (சுற்றிப்போய்இருந்தனன்)

(புக்கு)

**தொழுத்தை**:—' அடி நிபுணிகை! எது முதலாகப் பெரியோர்மகர், சூரிய பகவான் வணக்கஞ்செய்து திரும்பினரோ அது முதலாகப் பாழ் மனத்தினராய்க் காணப்படுகின்றனர்; ஆகையால் நீ போய் இவரது ஆசைக்குக் காரண மின்னதென ஆன்றோன் பிரமசாரித்தோழன் மூலமாய் அறி' என்று காசிராசன் மகளாகிய தேவியினால் ஏவப்பட்டிருக்கின்றேன்; ஆகையினாலே சாதியினாலந்தணன் எவ்வாறு வஞ்சித்தற்குரியன்? இல்லாவிடின், அடர்த்தியற்ற புல்லின் நுனியைப்பற்றிய பனிநீர்போல் இவனிடத்தில் வேத்துமறை வெகு நாணில்லாது; இவனைத் தேடுகின்றேன் காண் (சுற்றிப்பார்த்து) இவன்சித்திரித்த குரங்குபோற் சும்மா இருக்கின்றான்; கிட்டுகின்றேன் காண். (கிட்டி) ஐயரே! தொழுகின்றேன்.

**விதூடகன்** :—மங்கள முனக்கு. (தன்னுள்) இக்கொடிய தொழுத்தையைக் கண்டு அந்த இராசரகசியம் நெஞ்சைப்பிளந்து வெளிப்படுகின்றது. (விளக்கம்) நிபுணிகை! பாட்டுத்தொழிலை விட்டு எங்குப்புறப்பட்டிருக்கின்றாய்?

**நிபுணிகை** :—தேவியின் பேச்சால் உம்மைக்காணவே.

**விதூடகன்** :—அங்கவள் என்ன ஏவுகின்றனள்?

**நிபுணிகை** :—' ஐயரெப்பொழுதும் என்பாற் பரிவுடையர்; வேதனையையும் பெருந்துக்கத்தையும் அனுபவிக்கும் வண்ணம் என்னை ஒருபோதும் உபேக்ஷிக்கின்றிலர்' என்று தேவியுரைக்கின்றாள்.

**விதூடகன்** :—நண்பனால் என்னமாறுபாடு அங்கவட்குச் செய்யப்பட்டது?

**நிபுணிகை** :—எவள் பொருட்டாக் காதலர் காதலினரோ, அம்மாதின் பெயரால் அங்கவள் அவரா லழைக்கப்பட்டாள்.

**விதூடகன்** :—(தன்னுள்) அங்கவனண்பனால் மறைவேற்றுமை எங்ஙனஞ் செய்யப்பட்டது? இப்பொழுது நான் நாவடக்கத்தால் என் துன்பமனுபவிக்கின்றேன்? (விளக்கம்) அங்கவளால் 'உருப்பசி!' என்று அழைக்கப்பட்டனளா? அவ்வச்சரமாதின் தரிசனத்தாற் பித்துப்பிடித்த அங்கவன், அங்கவளை மாத்திரமன்றி என்னையும் களியாட்டு வெறுப்பினனாய்ப் பீடிக்கின்றான்.

**நிபுணிகை** :—(தன்னுள்) தலைவரது மறையரணப் பேதிப்பு என்னால் தந்திரமாகச் செய்யப்பட்டது. (விளக்கம்.) அங்கவளுக்கு என்ன விண்ணப்பிக்கின்றது?

**விதூடகன்** :—நிபுணிகை! 'தோழனைப் பேய்த்தேரினின்றும் திருப்புகைக்காக முயல்வேன் ; பிறகுதேவியின் முகத்தை நோக்குவேன்' என்று அங்கவளுக்கு விண்ணப்பிகாண்.

**நிபுணிகை** :—ஐயர் எது கட்டளை யிடுகின்றனரோ [என்று அகன்றனள்.]

(நிஷ்க்ரமிக்கும்)

**வைதாளிகன்** :—தேவன் வெற்றிபெறுக.

பார்த்த லளவிச் சனங்களின் பல்லிருண் மாய்த்திடு செய்கையால்
தேர்க்கதி ரோற்கு முனக்குமே செல்லதி காரநே ராக்குமால்
நீர்க்கம லத்திறை வானடு விற்குமொ ரேகண நீபகற்
சீர்ப்பிரி வைந்துட ஞென்றிடைச் செல்குவை சிந்தையின் வண்ணமே.

**விதூடகன்** :—(காதுகொடுத்து) இந்நண்பன் பணித்தவிசினின்று எழுந்து இங்கேயே வருகின்றான் ; இவனது மருங்கி லிருப்பவனாகின்றேன்.

[என்று அகன்றனன்.]

## உட்புகல்.

பின்பு புகுகின்றனன் காதல்கொண்ட வரசனும் விதூடகனும்.

**அரசன்** :—காண்டலள வான்றார் கட்கடையா நற்கணையான்
தூண்டியவெங் கூர்வாய் சுடுசரத்தால்—தோண்டுநெறி
உற்ற வெனதுளத்தை யும்பரிடத் தம்மாது
பற்றிப் புகுந்தனளே பார். (21)

**விதூடகன்** :—(தன்னுள்) பீழையன்றோ புகுந்தது எளியவளான அக்காசிராசன் மகளுக்கு.

**அரசன்** :—மறைப்புதையல் காக்கப்படுகின்றதா ?

**விதூடகன்** :—(தன்னுள்) தாசியின் மகளால் வஞ்சிக்கப்பட்டவனா யிருக்கின்றேன் ; இல்லாவிடின், என்னை ஏன் நண்பனிவ்வாறு கேட்கின்றான் ?

**அரசன்** :—இங்கு நீயேன் வாளாவிருக்கின்றனை ?

**விதூடகன்** :—எவ்வாறு உனக்கும் மறுபேச்சு விரைவாய்ச் சொற்றிலேனோ அவ்வாறு எனது நா தடுக்கப்பட்டிருக்கின்றது.

**அரசன்** :—தக்கதே ; இனி மனச்சுழற்சி கொண்ட என்னை எங்கு இப்போழ்து களிப்பிக்கக் கடவேன்?

**விதூடகன்** :—மடைப்பள்ளியையே சேர்வோம் ; அங்கே சம்பாரங்கணிறைந்த ஐவகை யுணவுள்ள பாத்திரங்களைக் கண்டு ஆசையை வலியக் களிப்பிக்கக்கூடும்.



**அரசன்** :—(கைப்போடு) ஆண்டு விருப்புற்ற பொருட்குவையின் சேர்க்கையால் நீ களிப்பாய் ; அடைதற்கரிய பொருளை விரும்பிய வென்னால் ஆன்மா எவ்வாறு களிப்பிக்கத் தக்கது ?

**விதூடகன்** :—அங்குநீ, அங்கவளுருப்பசியின் கண்ணோக்குற்றனையன்றோ ?

**அரசன்** :—ஆயினென்னை ?

**விதூடகன்** :—அடைதற்கரிய ளல்லளென்று ஊகிக்கின்றேனன்றோ?

**அரசன்** :—இது பட்சபாதமென்று எண்ணுவாய்.

**விதூடகன்** :—இவ்வாறு கேட்கும் நின்னால் எனக்குக் களிப்பு வளர்க்கப்பட்டது. அங்கவளுருப்பசி என்போனல்லுருவத்தினளா ? அன்றி, உருவத்திற் சிறந்தவளா ?

**அரசன்** ;—(கைப்போடு) மாணவக ! அம் மேனியை உறுப்புக்கடோறும் உரைத்தற்கரிய வருணனை யேய்ந்ததென்றே அறிதி, சுருக்கமாய்க் கேள்.

**விதூடகன்** :—கருத்தாயிருக்கின்றேன்.

**அரசன்** :—கோலநிலைக் குச்சிறந்த கோலங் குலவணிக்கே
ஏலு மணிகலனா மென்னெனலுவ - சாலும்
உவமையினுக் குஞ்சிறப்பை யுற்ற வுவமை
அவளுடல மென்றே யறி. (22)

**விதூடகன்** :—ஆகையாற்றான் வானமுதை விரும்புஞ் சாதகவிரதம் நின்னாற் கைக்கொள்ளப்பட்டது.

**அரசன்** :—விருப்பங்கொண்ட மனத்துக்குத் தனித்திருக்கு மிடத்தைவிடச் சரண் வேறின்று ; ஆகையால் நீ பிரமதவன வழியைக் காட்டு.

**விதூடகன்** :—(தன்னுள்) என்ன கதி ? (விளக்கம்) இதோ இதோ நீ. (சுற்றி) பிரமதவனத்திலுண்டாகிய இத்தென்றலினால் நீ விருந்தினன்போல் எதிர்கொள்ளப்பட்டாய்.

**அரசன்** :—(நோக்கி) இக்காற்றுக்குச் சிறப்புடைமை தக்கதே. எதனால் இது
சந்தமார் மாதவியைத் தண்ணியதா கச்செய்துங்
குந்தக் கொடியினைக்கூத் தாட்டுவித்தும்—வந்தெற்குத்
தோன்றுமாற் கண்ணோட்டங் கேண்மையிவற் றின்றொடர்பால்
ஏன்றவிழை வோனவன்போ லே. (23)

**விதூடகன்** :—இப்படியே உனதெண்ணம் இருக்கட்டும்; நீ இப்பிரமதவன வாயிலுட் புகு.

**அரசன்** :—முன்னே புகு. (இருவரும் புகுகின்றனர்)

**அரசன்** :—(நோக்கி) தோழ ! பிரமதவனத்துட்புகுதல் வெம்மையை நீக்குவதென்பது என்னானன் கெண்ணப்பட வில்லையன்றோ.

வெப்ப நீங்குகைக் காக விரைந்தியா
னிப்பொ ழிற்க ணியையுடன் புக்கதும்
அப்பு நீள்பெரு வெள்ளத்தி னாழ்ந்தவன்
தப்ப நீர்க்கெதிர் தாண்டுதன் மானுமே. (24)

**விதூடகன்** :—எவ்வாற்றால் ?

**அரசன்** :—

எளிதினிற் கிடையாப்பொருளினை விரும்பு மியல்பினின்றொழிப்பதற் கரிய உளமென திதனைக் குறைத்தனன் மூனமு முறுமலர்க் கணையினன் மலய வளியினி லுதிரும் விளரிலை யுடைய வயங்குவ வனத்திடைத் தேமா முளைகளி னணியைக் காட்டுபு வதிய முனக்கிடைப் பதுவுமிங் குளதோ.

**விதூடகன்** :—சாலு மழுதல் ; காலநீட்டித்தலின்றிக் காரிகையைச் சம்பாதித்துக்கொடுக்கு மன்மதனே நினக்குச் சுகத்தைக் கொடுப்பவனுமாகுவன்.

**அரசன்** :—ஏற்றுக்கொள்ளப்பட்டது அந்தணன் மாற்றம்.

(இருவருஞ் சுற்றுகின்றனர்.)

**விதூடகன்** :—நீ காண்பாயாக ; வசந்தாவதாரத்தைக் காட்டுகின்ற பிரமதவனத்தினழகை.

**அரசன்**:—பாதவங்கடோறும் பார்க்கின்றேன் ; இங்கேயோ,

மாதருகிர் போற்சிவந்து மருங்கிரண்டிற் கருமையுறக் குரவ மன்னும்
போதரத்த நிறத்தழகு பொருந்திளவ சோகமலர் போதி னிற்கும்
சூதமாப் புதியவிணர் துகட்கணத்தி னுனிகபிசத் தோடு தோன்றும்
ஒதரிவை மடந்தைநிலைக் கிடையிலுறு மதுத்திருமுன் னூரிய நண்பே.

**விதூடகன்** :—மணிக்கற்பலகை படுத்த இந்தமாதவீ மண்டபம். வண்டுகண் மொய்த்தலாலுதிர்ந்த பூக்களினால் மறைக்கப்பட்டதாய்க் கொண்டு, தானே கைக்கொண்ட காணிக்கைப் பொருள்களை யுடையதுபோல் உன்னை எதிர்பார்க்கின்றது ; ஆகையாலிப் போழ்திதனை நீ யருள்வாயாக.

**அரசன்** :—நினக்கெங்ஙனம் இனிக்கின்றதோ (சுற்றிப்போயிருந்தனர்கள்)

**விதூடகன்** :—இங்கே நீ சுகமாயிருந்துகொண்டு, விளங்கிய கொடிகளாற் பற்றிய கண்ணுடையவனாய் உருப்பசியினிடத்தில் ஊன்றிய வாசையைப் போக்குவாயாக.

பு மா. ஸ்ரீநிவயசாசாரியர்.

---



# RAMAYANA SARAM. *

# இராமாயண ஸாரம்.

---

## அத்தியாயம்—I.

### முகவுரை:

உலகத்திலுள்ள நூல்களிலே பெருமையுஞ் சிறப்பும் வாய்ந்து விளங்குவன **மகாபாரதம், இராமாயணம்** என்னும் இதிகாசங்கள் இரண்டுமாம். இவ்விரண்டு நூல்களும் இந்தியாவுக்கு இரண்டு கண்களாகப் பாவிக்கப்படுகின்றன. மனுதர்ம சாஸ்திரமும், வேதமும் கல்வியிற் சிறந்தவர்களுக்கு மட்டிற் பயன்படுகின்றன. கல்வியின் வாசனையறியாத மற்றவர்கள் அவைகளையறிந்துகொள்ள வேண்டுமானால், கற்றவர்கள் மூலமாகவே அறிந்துகொள்ள வேண்டும். ஆனால் மகாபாரதம் இராமாயணம் என்னும் இவ்விரண்டு நூல்களுமோ, அப்படிப்பட்டனவல்ல. இந்நூல்களுட் கூறப்பட்டுள்ள கதைகள் இளைஞர்முதல் வயோதிகரீறாகவுள்ள நம்மவர்களுள் ஒவ்வொருவருடைய வாழ்க்கையிலும் புகுந்து நம்மை நன்மார்க்கத்துக்குத் திருப்பும்படியான அற்புத சக்தியைப் பெற்றிருந்து பண் படுத்துகின்றன. ஒவ்வொரு வீட்டிலும் மாதாக்கள் மக்களுக்கும், ஆசிரியர்கள் மாணாக்கர்களுக்கும், முதியவர்கள் இளையவர்களுக்கும் பாரதராமாயணக் கதைகளைச் சொல்லி வருவது தொன்றுதொட்ட வழக்கமாயிருக்கின்றது. குழந்தைகள் வளரும்போதே இக்கதைகளை அடிக்கடி கேட்டு வருவதனால், இக்கிரந்தங்களிற் கூறப்பட்டிருக்கும் கதாநாயகர்களின்பெருமை சிறுமைகள், அக்குழந்தைகள் மனத்திற் பசுமரத்தறைந்த ஆணியைப்போலப் பதிந்து விடுகின்றன. அன்றியும், இவற்றிற் சொல்லப்பட்டிருக்கும் உத்தம புருஷர்களின் மீது ஒருவித அன்பும் பக்தியும் இயற்கையிலேயே தோன்றுவதுடன் அவர்களைப் போலவே தாங்களும் சன்மார்க்கத்தில் ஒழுகவேண்டுமென்னும் எண்ணமும் அவ்விளைஞர்கள் மனத்தில் உண்டாய் விடுகின்றது.

சன்மார்க்கத்துக்குத் திருப்பும்படியான வல்லமை இவ்வரிய பெரிய கிரந்தங்களுக்குள்ளதென்பது உண்மையே யானாலும், இவைகளுக்கு முன்னொரு காலத்திலிருந்த அவ்வளவு வல்லமை இக்காலத்திற் கிடையாது ; இவ்விஷயத்தைப்பற்றி நாம் ஒவ்வொருவரும் பெரிதுங் கவலைகொள்ள வேண்டியவர்களாயிருக்கின்றோம். அவ்வித வல்லமையை இந்தக் கிரந்தங்கள் மீண்டும் பெறுமாயின், நம்மிந்தியாவானது வெகு சீக்கிரத்திலேயே தனது பூர்வீக உன்னத பதவியை யடையுமென்பது நிச்சயம். இவ்விரண்டு நூல்களும் சற்குணம் நிறைந்த உத்தமபுருஷர்களை நமக்குத் திருஷ்டாந்தமாகக் காட்டுகின்றன ; அவ

* Adapted from Mrs. Annie Besant's—SHRI RAMA CHANDRA, The Ideal King.

ர்கள் அக்காலத்தில் அநுசரித்து வந்த நீதிகளையும், அவர்களில் முதிர்ந்தவர்களும் இளையவர்களும், புருஷர்களும் மனைவியர்களும், பெற்றோர்களும் பிள்ளைகளும், சகோதரர்களும் சகோதரிகளும், சத்துருக்களும் மித்திரர்களும் ஒருவர்க்கொருவர் எவ்வாறு நடந்துகொண்டார்களென்னும் ஒழுக்கமுறைமையையும் இந்நூல்கள் நமக்கு விவரமாய்த் தெரிவிக்கின்றன. இவ்வரிய விஷயங்களை நமக்குத் தெளிவா யெடுத்துக் காட்டுவதில் மகாபாரதத்தினும் இராமாயணமே பல மடங்கு சிறப்புடைத்தென்று சொல்லலாம். ஏனெனிற் பாரதத்திலுள்ள பெருங்கதையானது, நன்மையுந் தீமையும் ஒன்றோடொன்று வெகுவாய்க் கலந்து மயங்கிக் கிடந்த துவாபரயுகத்திறுதியின் இயல்பைக் கூறுவதாகும். இந்தக் கிரந்தமானது இக்காலத்தில் நடித்துக் காட்டப்படும் நாடகங்களைப் போன்றது. இதிலுள்ள கதாபுருஷர்களிடம் நற்குணமுந் தீக்குணமும் ஒருங்கே கலந்துள்ளன. இக்கதையிற் சிரோபூஷணமாய் விளங்குபவர் **ஸ்ரீ கிருஷ்ணபகவான்** ; ஆனால் அவர் மகாவிஷ்ணுவின் அவதாரம் ; அவர் மனுஷாதீதர் ; ஆகையால், அவர் மாசற்ற மணியென்பது நாம் கூறாமலே விளங்கும். ஏனைய கதாபுருஷர்களில், யாதொரு நிந்தைக்கும் இடம்பெறாத **பீஷ்மர்** ஒருவரைத் தவிர, மற்றவர்களில் ஒருவரையேனும் சற்குணசம்பன்னரென்று நாம் ஒருநாளுஞ் சொல்ல முடியாது. இவர்களில் ஒவ்வொருவரிடத்தும், நற்குணமுந் தீக்குணமும் ஒருங்கே கலந்துள்ளமையால், இவர்கள் செயல்களில் ஒவ்வொன்றையுந் தனியா யெடுத்துக்கொண்டு, இது நன்னெறியோ அல்லது தீநெறியோ என்று ஆழ்ந்த கருத்துடன் நாம் ஆராய்ந்து, அதன் பின்னரே ஒருவாறு தெளிவான முடிவுக்கு வரவேண்டியவர்களாயிருக்கின்றோம். ஆகையினால், மகாபாரதமானது கூரிய புத்தியையும், முதிர்ந்த அறிவையும், பகுத்தறியும் வல்லமையையும் பெற்று, பாபத்துக்குந் துன்பத்துக்குமுள்ள தொடர்பினை அறியவல்ல மதிமான்களுக்கு மட்டிற் பயன்படத்தக்கதோர் அரிய நூலாயிருக்கின்றது.

ஆனால் இராமாயணத்திலோ, மேற்கூறியபடி பகுத்தறியவேண்டிய கஷ்டம் நமக்குச் சிறிதேனும் இல்லை. இதிற் கூறப்பட்டுள்ள கதாபுருஷர்களின் குணாகுணங்கள் மிகவுந் தெளிவாய் வகுத்துக் காட்டப்பட்டுள்ளன. அவர்களுடைய குணங்களெல்லாம் விதியாகவேனும் விலக்காகவேனும் அமைந்து கிடக்கின்றன. ஒருவருடைய குணங்களைப் பார்த்தால், அவைகளைப் பார்க்கும்போதே நமக்கு ஒருவிதமான சந்தோஷமுண்டாகும் ; மற்றொருவருடைய குணங்களோ, அவ்வளவும் வெறுப்பைத் தரும். வெண்மையான வஸ்துக்களெல்லாம் வேறாகவும் கருமையான வஸ்துக்களெல்லாம் வேறாகவும் பிரித்து வைக்கப்பட்டிருக்கும் பக்ஷத்தில், இவைகளைக் கண்டு தெளிவதில் நமக்குக் கொஞ்சமேனுங் கஷ்டமிராதன்றோ? அவ்வாறன்றி, ஒரே வஸ்துவில் வெண்ணிறமுங் கருநிறமுங் கலந்திருக்கும் பக்ஷத்தில், அதைப் பார்க்கும்போது



இது வெளுப்போ, கறுப்போ, அல்லது கலப்போ வென்று நாம் எவ்வளவோ கலக்கப்பட நேருமன்றோ ? இதுபோன்று கலங்கும்படியான சந்தர்ப்பம் நமக்கு இராமாயணத்தில் எவ்விடத்துங் கிடையாது. ஏனெனில், இந்நூலிற் சன்மார்க்க முடையவர்களெல்லாம் வேறாகவும், துன்மார்க்க முடையவர்களெல்லாம் வேறாகவும் பிரித்து வைக்கப்பட்டிருக்கின்றனர். சற்குணமுந் துர்க்குணமும் ஒருங்கே கலந்து இவர் சன்மார்க்கரோ அல்லது துன்மார்க்கரோ வென்றுநாம் கலங்கத்தக்க கதாபுருஷர் இராமாயணத்தில் ஒருவரேனும்இலர். அறிவிற் குறைந்த இளைஞர்களும் இந்நூலை வாசிக்கும் பொழுதே இன்னர் சன்மார்க்கரென்று தெளிந்து ஆனந்தம் பெறுவார்கள் ; இன்னர் துன்மார்க்கரென்று கண்டு கசந்து வெறுப்பார்கள். ஓர் உத்தமமான மனைவிக்குத் திருஷ்டாந்தம் வேண்டுமானாற், சகல சற்குணங்களையுமே சம்பத்தெனப் பெற்ற சீதாபிராட்டியினும் மேலான மனைவி யுண்டோ ? செங்கோல் புரியும் அரசர்க்கோருதாரணம் வேண்டுமானால், நீதிகளே நிதியெனப்பெற்ற ஸ்ரீராமசந்திரனைப் பார்க்கிலும் மேலான ஒரு மன்னவனுண்டோ ? சகோதரவாஞ்சையிற் சிறந்தவர்கள் வேண்டுமானால், தமையனுயிரையே தன்னுயிரெனப்பாவித்த இலக்ஷ்மணனிலும் மேலான உடன் பிறந்தானுண்டோ? ஆ! ஆ ! ! என்னே இவர்கள் பெருமை ! என்னே இவர்கள் சிறப்பு ! ! இந்த உத்தமர்களின் திருநாமங்களை உச்சரிக்கும்போதே நம்மவர் ஒவ்வொருவருடைய மனமும் ஆனந்தக் கூத்தாடுகின்றதன்றோ ? இவர்களுடைய பெயரை நினைக்கும் பொழுதே இவர்கள் அந்நாளிற் செய்த அற்புதச் செயல்களெல்லாம் இப்போது நமது கண்ணெதிரேயே நிகழ்வனபோலத் தோற்றுகின்றனவே !

பூர்வீகத்தில் இந்தியாவானது இன்ன நிலைமையிலிருந்ததென்பதை நாம் தெரிந்துகொள்ள வேண்டுமானால், அதற்கு இவ்விரண்டு நூல்களுமே பேராதரவாய் நின்று நமக்கு உதவி செய்கின்றன. ஆனால், அக்காலத்து இந்தியாவின் நிலைமையை பிரத்தியட்சத்திற் காண்பதுபோல், இந்நூல்கள் மூலமாய் நாம் இப்போது தெரிந்துகொள்ளக்கூடுமென்பது முடியாத காரியம். ஏனெனில், ஒரு காட்சியை நாம் நேரிற் கண்ணினாற் பார்ப்பதற்கும், அக்காட்சியைப் படமெடுத்து அது மிகவும் மாசு படிந்த பிறகு அப்படத்தைப் பார்ப்பதற்கும் எவ்வளவோ வித்தியாசம் இருக்கின்ற தன்றோ ? அதுபோலவே, பூர்வீக இந்தியாவின் நிலைமையை இந்நூல்கள் மூலமாய் நாம் இப்போது தெரிந்துகொள்வதானது, மாசுபடிந்த படத்தின் மூலமாய் உண்மைக் காட்சியைக் கண்டறிவதேயாம். இவ்வித நிலைமையிலிருந்த போதிலும், இந்நூல்களின் சிறப்பை இவ்வளவென்று அளவிட்டுச் சொல்லுதல் முடியாது. அக்காலத்தில் வசித்த ஒவ்வொரு ஜாதியாரும், சமூகத்தாரும், குடும்பத்தாரும் எந்நிலைமையிலிருந்தார்களென்பதையும், எவ்வாறு ஜீவனம் செய்துவந்தார்களென்பதையும், அவர்களுடைய இன்பதுன்பங்கள் இன்னின்னவென்பதையும், சிறுவர்கள் எவ்வாறு கற்பிக்கப்பட்டார்களென்பதையும், பொதுஜன அபிப்பிராயம்

இத்தகைய தென்பதையும், இன்னும் இவைபோன்று முக்கியமான பல வேறு விஷயங்களையும் இந்த நூல்கள் நமக்கு வெள்ளிடை மலைபோல விளக்குகின்றன.

ஆகையினால், இராமாயணம் என்னும் பெருமை வாய்ந்த இந்நூலானது நம்மில் ஒவ்வொருவரும் அவசியம் வாசிக்கத் தக்கதாயும், அங்ஙனம் வாசிப்பதனால் நமக்கு அளவிறந்த நன்மைகளைக் கொடுக்கத் தக்கதாயு மிருக்கின்றது. இவ்வரிய நூலை நாம் வாசித்துக் கொண்டு போகும்போதே, இதிலுள்ள கதாபுருஷர்கள் எதற்காகத் தோன்றினவர்களென்பதையும், இவர்களில் ஒவ்வொருவராலும் என்னென்ன நீதிகள் கற்பிக்கப் படுகின்றன வென்பதையும், அவைகளைத் தெரிந்து கொள்வதனால் தற்காலத்து இந்தியாவானது எவ்வித நன்மையடையக்கூடு மென்பதையும் நாம் ஆராய்ந்து பார்த்துக் கொண்டே செல்வோமாக.

இராமாயாணம் என்னும் இவ்வரிய கிரந்தம் ஆதிகாலத்தில் எந்த ஸந்தர்ப்பத்தில் எவ்வாறு இயற்றப்பட்ட தென்பதைப்பற்றி முதலில் ஆராய்வோம். முன்னொரு காலத்தில் **வான்மீக** மகர்ஷியானவர் **நாரத** முனிவரைப் பார்த்து "முனிபுங்கவரே! பூலோகத்தில் தன்னுடைய கடமை யின்ன தென்பதை யுணர்ந்தவனும், நன்றியுள்ளவனும், சத்தியவந்தனும், ஐம்பொறிகளையும் அடக்கியாள்வோனும், கூரியபுத்தியும் நேரிய வொழுக்கமும் ஒருங்கே யமையப் பெற்றவனுமாய் விளங்கிய உத்தமன் எவனேனும் எக்காலத்தேனும் இருந்ததுண்டோ? அத்தகைய பேரறிவாளன் இருந்திருக்கும் பக்ஷத்தில் அவனுடைய திவ்ய சரித்திரத்தை நீவிர் தயைசெய்து எனக்குக் கூறி யருள்வீராக" என்று கேட்டுக்கொண்டார். இதனைச் செவியுற்ற நாரத முனிவர் மிகவும் மனமகிழ்ந்து, வான்மீகியாரைப் பார்த்துப் பின்வருமாறு கூறுவாராயினார்: "தவசிரேஷ்டரே! நீவிர் கேட்டபடி பூலோகத்திற் சகல சற்குண சம்பன்னனாய் ஓரரசிளங்குமரன் தோன்றி யிருந்தது உண்மையே. அவன் இக்ஷ்வாகு என்னும் பெருமைவாய்ந்த அரசவம்சத்தில உதித்தவன். அவன் பெயர் ஸ்ரீராமசந்திரன். அவனே அரசர்சிகாமணி. அவனே அரசரேறு பொறுமையே பொருளெனக் கொண்டவன்; நான்குவேதம், ஆறுசாஸ்திரம், அறுபத்துநான்கு கலைகள் ஆகிய இவையனைத்தும் ஐயந்திரிபற உணர்ந்தவன்; யுத்தத்தில் மறலியையும் ஒரு பொருளென மதியாத வீரத்தன்மையை யுடையவன்; செங்கோல் செலுத்துவதில் எள்ளளவேனுந் தவறி யொழுகா நீதிமான்.

* "மாநிலங்கா வலனாவான் மன்னுயிர்காக் குங்காலைத்
தானதனுக் கிடையூறு தன்னாற்றன் பரிசனத்தா
லூனமிகு பகைத்திறத்தாற் கள்வரா லுயிர்தம்மா
லானபய மைந்துந்தீர்த் தறங்காப்பா னல்லனோ?"

* பெரியபுராணம்.



என்னும் ஆன்றோர் வாக்கின் கருத்தினைச் சிரமேற் கொண்டொழுகிய செம்மல். மன்னுயிரையே தன்னுயிரென மதித்துவந்த பேரறிவாளன். இவன் ஆண்டநாட்டிலுள்ள குடிகளுக்கு வறுமை பிணி முதலிய துன்பங்கள் அணுகினதேயில்லை. சோரபயம், சத்துருபயம் முதலிய பயங்களுங் கிடையா. மாதம் மும்மாரி பெய்யவும், நாடெங்குந் தழைத்தோங்கவும், குடிகள் எவ்வகை அச்சமுமிலராய்க் காலங்கழிக்கவும், கண்டோர் யாவரும் இஃது என்னதேவேந்திரனது அமராவதியோ அல்லது குபேரனது அளகாபுரியோ வென்று அதிசயிக்கவும், இவ்வாறாக அரசுபுரிந்தான் ஸ்ரீராமசந்திரன்" † என்று ஸ்ரீராமபிரானது குணாதிசயங்களையும், அயோத்திமா நாட்டின் சிறப்பியல்புகளையும் ஒருவாறு சுருக்கமாய் எடுத்துக் கூறினார் நாரதமுனிவர். இவையனைத்தையுங் கருத்துடன் கேட்டுவந்த வான்மீக மகர்ஷி உடனே ஆநந்த பரவசராயினார். அத்துணைச் சிறப்புவாய்ந்த அரசனின் பெருமைகளைக் கேட்டால் யார்தாம் ஆனந்தக் கூத்தாடார்? யார்தாம் ஆநந்தபரவசம் அடையார்? எந்தத் தேசத்திலே கோவுங் குடிகளுங் கருத்தொத்துத் தரும சிந்தையுடையவர்களாய்ப் பொதுநன்மைக்குப் பாடுபடுகின்றார்களோ, அந்தத்தேசம் அயோத்திமா நகரைப்போலவே செழித்தோங்கு மென்பது நிச்சயம். எந்த ஜாதியில் ஒவ்வொருவருந் தத்தம் வருணாசிரமங்களிற் பிறழ்வுறாது கௌரவ மாயுங் கண்ணியமாயுங் காலங்கழிக்கின்றார்களோ, அந்த ஜாதியாருக்குச் சகலவிதமான இன்பங்களுங் கருணாநிதியாகிய கடவுளால் அவசியம் அளிக்கப்படும். ஆன்மஞான வழியின் ஒழுக்கமே, ஆக்கத்தைப் பெறுவதற்கோர் நேரியவழியாம். அவ்வழியி லொழுகுவார்க்கென்றே ஆக்கத்தைப் படைத்துள்ளான் இறைவன். ஆகையால், உலகத்திலுள்ள ஜாதியார்களெல்லாம் செல்வத்திற் சிறப்புற்றோங்கவும், ஒரு ஜாதியார் மட்டிற் குறைந்து படுவார்களானால், அதற்குக்காரணம் அதிலுள்ள ஜனங்கள் தத்தம் வருணாசிரமங்களை யலக்ஷியம் செய்து ஆன்மஞான வொழுக்கத்தை யடியோடே மறந்து, அதருமவழியை மேற்கொண்டு ஒழுகுவதேயாம். இந்த உண்மையைக் கவனித்து, இனியேனும் நம்மிந்தியச் சிறுவர்கள் ஞானமார்க்கத்தை நாடித் தருமவழியி லொழுகுவார்களானால், இந்தியாவைப் பீடித்துவரும் க்ஷாமமும் ஒழியும்; தேசமும் க்ஷேமப்படும்; அழகிழந்து நாணித் தலைகுனிந்துள்ள நம்மிந்தியமாதும், செல்வத்திற் சிறந்துள்ள ஏனைய ஜாதியார் முன்னிலையில் ஒருவாறு தலை நிமிர்ந்து, மீண்டும் பொலிவுடன் விளங்குவாள்.

மேற்கூறியபடி ஸ்ரீராமபிரானது வரலாற்றைக்கேட்டு மனமகிழ்ந்த வான்மீகர் தம்முடைய ஆசிரமத்துக்குத் திரும்புவாராயினார். இவர் சென்ற வழியி னிருபுறங்களிலும், விலங்குக ளெல்லாம் கவலையற்று ஒன்றோடொன்று விளையாடிக் கொண்டிருந்தன; பக்ஷிகளெல்லாம் மிகவும் இனிமையாகப் பாடிக்கொண்டிருந்தன; இவைகளை யெல்லாம் பார்க்க இவருடைய மனமும்

† வான்மீக ராமாயணம், பாலகாண்டம் § i.

அதிக சந்தோஷத்தை யடைந்தது. இங்ஙன மிருக்கையில், ஆங்குள்ளதோர் மரத்தின்மீது இரண்டு அன்றிற் பறவைகள் ஒன்றோடொன்று மிகவும் உல்லாசமாய் விளையாடிக்கொண்டிருந்தன. அச்சமயத்தில், யாதோவொரு மூலையிலிருந்து திடீரென்று ஒரு வேடனுடைய அம்பு வந்து, ஆங்கிருந்த ஆண்பறவையின் மீது ஊடுருவப்பாய்ந்து அதனுயிரை அரைநொடியிலே தொலைத்தது. அதனருகிருந்த பெண்பறவை, தன் இன்துணைவன் இறந்துபட்டது கண்டு துடிதுடித்துப் பதைபதைத்துக் கண்டவர்மனங் கலங்கும்படி அவ்விறந்த அன்றிலைச் சுற்றிச்சுற்றி வந்து, ஆற்றொணுத் துயரத்திலழுந்தி யலமந்து நின்றது. இந்தத் துக்கக் காட்சியைக்காண யாருடைய மனந்தான் சகிக்கும்? கல்மனமாகிலும் கரைந்து படுமன்றே? இதைப் பார்த்த மகர்ஷிக்குச் சினம் பெருகியது; மனம் உருகியது.

* "தன்னுயிர் நீப்பினுஞ் செய்யற்க தான்பிறிதின்னுயிர் நீக்கும் வினை"

என்னுஞ் செய்யுட் கருத்தை நன்குணர்ந்தொழுகும் முனிபுங்கவருக்கு, ஜீவவதையைக் கண்ணெதிரிற் கண்டும் வாளா விருத்தல் கூடுமோ? ஜீவவதையே சகலவிதமான துன்பங்களுக்குங் காரணமாதலாலும், யாதொரு தீங்கிழையாத அப்பறவையைக் கொன்றது பொறுத்தற்கரிய மகாபாப மாதலாலும், அவ்விதத் தீச்செயல் புரிந்தவனுக்கு ஒருநாளுஞ் சுகமுண்டாகாதொழிகவென்று முனிவர் சாபமிட்டார். இவர் கூறிய மொழிகள் பலவகைப் பண்களோடு கூடிப் பாங்குட னமைந்ததோர் சுலோகமாய் முடிந்தது. உடனே பிரம்மாவானவர் இவருக்கு முன்பாகத்தோன்றி, இவர் அப்போது கேட்டுவந்த ஸ்ரீராமபிரானின் சரித்திரத்தை அதே மாதிரிப் பண்ணமைந்த பாடல்களாற் பாடும்படி கூறி, அக்கிரந்தமானது இவ்வுல குள்ளவரையில் அழியாது உலகத்தவர்க்கு நன்மை தரக்கடவதென்று ஆசீர்வாதமுஞ் செய்து போயினார். இவ்விதமாக இராமாயணமானது வான்மீக மகர்ஷியின் ஹ்ருதயத்தினின்று மெழுந்த அன்பின் மிகுதியாலுண்டாயிற்று. இதனை யார்யார் பயபக்தி விசுவாசத்துடன் பாராயணஞ் செய்கின்றார்களோ, அவர்களுக்கும் அவ்வாறே அன்புமேலிட்டு, இகத்திலும் பரத்திலுஞ்சகலவித இன்பங்களுங் கிடைக்குமென்பது நிச்சயம். இதனாலன்றே,

† "நாடிய பொருள்கை கூடு ஞானமும் புகழு முண்டாம்
வீடியல் வழிய தாக்கும் வேரியங் கமலை நோக்கு
நீடிய வரக்கர் சேனை நீறுபட் டழிய வாகை
சூடிய சிலையி ராமன் றோள்வலி கூறு வார்க்கே"

என்று கம்பருங் கூறுவாராயினார்?

(இன்னும் வரும்.)

செய்யூர் - முத்தைய முதலியார்.

* திருக்குறள். † கம்பராமாயணம்.



# KALLADAM : A STUDY.
## கல்லாட வாராய்ச்சி.

(சம்புடம் IV, 455 - ஆம் பக்கத் தொடர்ச்சி.)

தமிழ்மாதின் எழில்நலனை இனிது நுகரவிரும்புநர்க்குக்கல்லாடத்தினும் சிறந்தவேறு நூலொன்று மின்றென்றும். "ஒருபானை சோற்றிற்கு ஒரு சோறு பதம் பார்த்தாற் போதும்" என்பதற் கிணங்க இந்நூலின்கணுள்ள பலதுறைகளையும் தனித்தனியே ஆராய்ந்து அவற்றின் நலத்தையின்புறப் புகின் விஷயம் விரிந்தோடுமாகலின் ஒரு துறையை மட்டுமே இவ்விடத்திற் சற்று விரிவாயாராயப் புகுந்தனம். இந்நூலின் முதற்செய்யுள் "தமர் நினைவுரைத்து வரைவுகடாதல்' என்னும் துறைத்து. தம்மிலொப்பற்ற காதலுடைய தலைவனும் தலைவியும் இயற்கைப் புணர்ச்சியால் இன்பமெய்தி, பின்னர் தோழியாலாகிய பாங்கியிற்கூட்டத்தினின்பத்தினையும் துய்த்துவருகையில், தலைவிக்கு நலங்கள் முற்றுவதைக் கண்டையுற்ற தாயார் முதலியோர் இவள் வெளியுலாவுதற்குப்போகவிடாமையையும்,மற்றையுறவினர்தம்மக்கட்குப் பெண்கேட்கவிருக்கும் தருவாயையும் தோழியறிவாளாயினள். தலைவனோ வரைவிற்குடன்படிற் சில நாளேனும் தானுகரு மின்பம் தடைப்படுமென அஞ்சி இன்னும் சிறிதுகாலம் களவொழுக்கத்தினையே விரும்புவானாயினான்; அப்பொழுது பாங்கி தலைவர்க்குத் தலைவியின் நிலையைக்கூறிக் கடிதில் மணமுடிக்கத்தூண்டுதலே தமர் நினைவுரைத்து வரைவுகடாதல் என்பதாம். இத்துறையை விளக்கிய கல்லாடச் செய்யுளின் மொழிப்புப்பின் வருமாறு:—தேவாமிர்தத்தையும் கற்பகதருவையும் தனக்குக் குற்றேவல் செய்யும் நிதியாகப்படைத்த உடலக்கண்ணனது பதவியைக் கவர்ந்துகொண்ட சூரபன்மன் தம்பி தாருகாசுரன் போய் ஒளித்த தானமாகிய, அருளும் கல்வியும் பொங்கித்ததும்புமான்றோருள்ளம் போலத் தேன் நிறைந்தொழுகுமிருலானது நிலவைப்போற் கிடக்கும் **எழுமலையைப்** பொடியாயுதிர்ந்து போக வேல்தொட்ட வள்ளிமணாளனாகிய அறுமுகக் கடவுள் மயில்வாகநத்தில் மகிழ்வுடன் வீற்றிருக்கும் பதியாகிய அருவிபொழியும் பரங்குன்றத்தை யருகே பெற்ற நான் மாடக்கூடற் கண்ணுறையும் பிறையைச் சடைக்கண் தரித்த பரமசிவமும், பாண்டியனது மனத்தின் சங்கை யொழியக் 'கொங்குதேர் வாழ்க்கை' யென்று ஆரம்பித்த வண்டுமுகப் பாசுரத்தைச் செந்தமிழாற்கூறிப் பொற்கிழியைத் தருமிக்கருள் செய்து எனதுள்ளத்தையே கோயிலாக்கொண்டு எனக்கு வேண்டியவற்றையளியா நின்ற கருணையங்கடலும் அர்த்த நாரீச்சுரரும் ஆகியவரது உபய பாதமலரை ஒருபோதும் நீங்காத மனத்தினை யுடைய சிலம்பனே—யான் கூறுவதைக்கேள். இவளது இணைமுலைகளோ அறிவில்லாச்சிறியர்க்குப் பெரிய நூலில் அரிய நுட்பப் பொருளை விவரித்த ஆசிரியர்க்குக் குற்றம் ஓங்கிவளர்

வதுபோலப் பெருத்தன. இடையோ ஊனைத்தின்றூன் பெருக்கும் தவத்தினரது தவம் போலக் கட்குப் புலப்படாது தேய்ந்தது ; அளகமோ கடவுட்சிந்தையில்லாத நாத்திகர் மனம் போலிருண்டது ; கண்களோ வண்டு குடையும் செங்கழுநீர் மலர்போற் கறுத்துச் சிவந்தன ; இது நிற்க இவள் தமரோ இவளை யேகாந்தத்திற் கண்சிவந்துறுத்தி வாசற்படி கடவாவண்ணம் வற்புறுத்தினர் ; (ஆதலின் நீ விரைவிற் களவொழுக்க மகற்றி வரைவிற்கு முடுகுவாயாக).

இத்துறையாற் கல்லாடரது அளவிறந்த சிவாநுபூதிச் செல்வமும் அறுமுகக்கடவுளிடத்துள்ள அன்பின் மிகுதியும் அரிய நூலின் நுட்பங்களைப்பகுவர்க்கன்றி மற்றையார்க் குரைக்குநர் பாலுள்ள வெகுளியும் புலாலுண்டு தவம் செய்வார் மாட்டு இவர்க்கிருக்கும் தறுகண்மையும் ஈசுர சிந்தையற்ற நாத்திகர் பக்கலிருக்கும் அச்சமும் தமிழ் மொழிக்கணுள்ள அடங்காப் பேருவகையும் தெற்றெனை விளங்கும்.

கல்லாடர்க்குத் தமிழ்மாதிட மிருக்கும் ஆர்வம் கீழ்வரும் பிரயோகங்களாலினிது புலப்படும். ஒரிடத்தில் 'சங்கத்துறை தமிழ்' என்றும், மற்றோரிடத்தில் 'தேவர் மருந்தும் தென்றமிழ்ச்சுவை' யென்றும், மற்றோரிடத்தில் 'மலையத் தமிழ்' என்றும், வேறோரிடத்து

'உவட்டா தமையா வுணர்வெனு பசியெடுத்
துள்ளமும் செவியும் உருகிநின் றுண்ணும்
பெருந்தமி ழமுது' என்றும், இன்னுமோரிடத்தில்,
'உள்ளுதோ றுள்ளதோ றுணவமு துறைக்குந்
திருமுத்தமிழும்' (83-ஆம் அகவல்.)

என்றும் பலவாறு தமிழது வியக்குஞ் சிறப்பை உரைத்திருப்பதனாற் புலவர் பெருமான தமழமிழ் தருந்திய தண்டமிழ்வாண ரென்பதற் கையமுமுளதோ ?

இன்னும் வரும்.

எஸ். ஏ. திருமலைக் கொழுந்து பிள்ளை.

---



# CLASSICAL TAMIL CULTURE.

# செந்தமிழ்க் கல்வி.

## ஆசிரிய வணக்கம்.

தூயபுகழ் மிகுவீர சைவசம யந்தனக்கோர் சுடரோ ளாகி
மேயதமிழ்க் கலைகளெலா முறைமையினு னறிவகத்தின் மேவ வாய்ந்து
போயகலத் தீமதியெம் போல்வாருக் கெஞ்ஞான்றும் பொலிவி னல்குந்
தாயனைய விராமலிங்கச் சற்குரவ னிணையடிக ளாழ்ந்து வாழ்வாம்.

மலர்தலை யுலகின் கண்ணே நால்வகைத் தோற்றத் தெழுவகைப் பிறப்பினுள்ளு மூசல்போலப் பிறந்திறந்துழலும் ஆன்மகோடிகட்கு மானுடயாக்கை கிடைக்கப் பெறுவது சாலவரிது. கிடைக்கப் பெறின் கடலைக்கையா னீந்திக் கரையடைந்தது போலாம். இதற்கு " அண்டசஞ் சுவேத சங்க ளுற்பிச்சஞ் சராயு சத்தோ, டெண்டரு நாலெண்பத்து நான்குநூ றாயி ரத்தா,யுண்டுபல் மேனியெல்லா மொழித்துமா னுடத்து தித்தல்,கண்டிடிற்கடலைக் கையா னீந்தினன் காரி யங்காண்" எனவும், "பரவை வெண்டிரை வடகடற் படுநுகத் தொளையுட்,டிரைசெய்தென் கடலிட்டதோர்நோன்கழிசிவணி,யரச வத்தொளையகவயிற் செறிந்தென வரிதாற், பெரிய யோனிகள் பிழைத்திவண் மானுடம் பெறலே" எனவும் வரும் அறிஞர் வாக்கியங்களே போதிய சான்றாம். இது புண்ணியமேலீட்டினாலேயே சித்திக்க வேண்டுமென்பார் " புன்மர னெளி புழுப் புள்வி லங்கெனும், பன்மய றுயர்செயும் பவங்க டப்பியே, வன்மை கொ ணிலமிசை மக்க ளாகுத,னன்மைகொ ளுயிர்க்கலா லரிது" என்று பிரபுலிங்கலீலை நூலுடையாரும் அந்நூலுட் கூறுவாராயினர். இவ்வாறரிதி னெய்தக்கூடிய மானுட சரீரமோ இன்னகாலத்தின்ன காரணத்தா லிங்ஙனு மிறந்தொழியுமென்பது தேறற் கரியவிஷயம். "பால னென பருவம்போய் பன்னு குமாரப் பருவம்போம், கோல மான தருணம்போய் கோலை யூன்றிக் குனிந்தெழுந்து, காலன் மாய்க்க வனைவர்களுங் கல்லெலன் றழுது பேர்மாற்றி, யேலப் பிணமென் றொருபெயரிட் டிடுகொட் டிடுத லொருதலையே" என ஞானமுதிர்ச்சியுடையார் கூறியபடியே ஒவ்வொருகாலத் தொவ்வொன்றழியத் தானு முடிவி லழிதருந் தன்மையுடைய திச்சரீர மென்பதி யாவரும் சுருதியுத்தி அநுபவங்களானறிந்த விஷயமாதலிற் " காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்" என்னும் பழமொழிப்படியே எய்தற்கரிய விவ்வியாக்கை யெய்திய ஞான்றே எமக்குறுதிப் பொருள்களாயுள்ளன யாவையோ வென்றாய்ந்தவற்றைக் கைப்பற்றிக் கோடல் மாந்தர்க் கின்றியமையாத தோர் கடைப்பாடென்றறிக.

இவ்வாறு கைப்பற்றிக்கொள்ளுந் தன்மையுடைய பொருள்களியாவை யெனிற் கூறுதும்,—அறம் பொருள் இன்பம் வீடென்னு நால்வகைத்தாய புருஷார்த்தங்களாம். இம்மை மறுமை வீடென்னு மூன்றுந் தருமாற்றலுடைமையின் அறத்தை முதலாவதும், இம்மை மறுமை யென்னு மிரண்டுந் தருமாற்றலுடைமையிற் பொருளை யிரண்டாவதும், இம்மையின்ப மொன்றையே தருமாற்றலுடைமையி னின்பத்தை மூன்றாவதுமாக நிலைப்படுத்தி, முந்திய மூன்றனனுபவமுந் தீர்ந்து விரக்தியுண்டான பின்னரே யடையப்படுவது வீடென்பவாதலான் வீட்டை அம்மூன்றற்கு மிறுதியாகவும் முறைப்படுத்தி நிறீஇய தென்க. "சேருவர் வீடும் போகந் தீர்ந்துழிச் சேர்த லாலே" என்றார் **சேதுபுராண**த்தாரும். அற்றேல், தெய்வப் புலமைந்திருவள்ளுவ நாயனார் வீட்டியல்பு கூறாதொழிந்த தெற்றிற்கெனின் "தானே முழுதுணர்ந்து தண்டமிழின் வெண்குறளா, வானா வறமுதலா வந்நான்கு மேனோருக், கூழினுரைத்தாற்கு மொண்ணீர் முகிலுக்கும், வாழியுல கென்னாற்று மற்று" என்று **நக்கீரதேவர்** முதலியோர் பாயிரத்து ளருளினாராதலின் நாயனார் அவ்வீட்டிலக்கணங்களை அறத்தின் பகுதியாகிய இல்லற துறவறமென்னு மிரண்டனுள் துறவறத்தின் பாற்படுத்துப் புருஷார்த்தங்கணான்குமே கூறினாரென்க. ஆயின் ஏனையவற்றைத் தனித்தனிவியந்து வீட்டைத் துறவறத்தின் பாற்படுத்த திழுக்கன்றோ எனின், அன்று, "வீடென்பது சிந்தையு மொழியுஞ் செல்லா நிலைமைத்தாகலின் துறவறமாகிய காரணவகையாற் கூறப்படுவதல்லது இலக்கணவகையாற் கூறப்படாமையின் நூல்களாற் கூறப்படுவன ஏனையமூன்றுமேயாம்" என்று **பரிமேலழகர்** கூறுதலானென்க. இத்தகைத்தாய சிறப்பு நோக்கியன்றே அறம்முதற் கண்வைக்கப்பட்டதூஉமென்பது.

இனிப் பொருளாவது, முன்னின்ற அறத்தையும் பின்னின்ற இன்பத்தையும் தலைக்கூட்டுதற்குறு பெருந்துணையாய் நிற்பதொன்று. சிங்கநோக்கமாக இடையேவைத்தாளுதற்கு மிதுவே காரணம் போலும். இஃது இறைமாட்சிமுதற்பல திறப்படும். அங்ஙனமாக "கல்வியுடைமை பொருளுடைமை யென்றிரண்டு, செல்வமுஞ்செல்வமெனப்படும்" என்றிங்ஙனம் இருதிறப்படுத்து வழங்குவதென்னெனின், பொருள் செயல்வகை படைமாட்சி முதலியவை பொருளின் பகுதியாகவும் கல்வி கேள்வி அறிவுடைமை முதலியவை கல்வியின் பகுதியாகவும், அடங்குதல்பற்றி யென்க. இவற்றை "பொன்னினாகும் பொருபடையப்பட்டை, தன்னினாருந்தரணி தரணியிற், பின்னையாகும் பெரும்பொருளப் பொரு, டென்னுங் காலத்துன் னாதன வில்லையே" "கற்பக்கழி மடமஃகுமடமஃகப், புற்கம்தீர்ந் திளவுலகின் கோளுணருங் கோளுணர்ந்தாற், றத்துவமான வெறிபடரு மந்நெறி, யிப்பாலுலகத் திசைநிறீஇ யுய்ப்பா, லுயர்ந்த வுலகம் புகும்" எனவும் வரும் ஆன்றோர் வாக்கியங்களானு மறிந்துகொள்க. இவ்விரு செல்வங்களும் ஏனையோர்க்கு முரியனவே யாக நாயனார் அரசன் மேல்



லைவைத்துக்கூறியது. இவற்றை அரச னுடையனாயக்கால் தன்னுயிர்க்கே யன்றி மன்னுயிர்க்கும் பயன்படுதற் சிறப்புடைமைநோக்கி யென்க.

செல்வப் பொருளாவது நன்னெறியா னீட்டப்படும் பொன்மணி நில முதலியவாம். நன்னெறியா னீட்டப்படும் பொருளே அறமுதலிய புரிதற் கேதுவாயிருந்து இருமை யின்பத்தையு முதவுறும். ஏனைப் புன்னெறிகளா னீட்டப்படும் பொருளால் அறமுதலிய செயினும் அது பெரும் பயனல்கா தொழிவதன்றி இம்மையினும் பெருந்துன்பத்தையும் இகழ்ச்சியையு முதவுறு மென்பதொரு தலையாம். இவ்வாறாதலினன்றே "தீவினை விட்டீட்டுபொருள்" என **ஔவையா**ரும், "அருளொடு மன்பொடும் வாராப் பொருளாக்கம், புல்லார் புரள விடல்" எனவும், "அறனீனு மின்பமு மீனுந் திறனறிந்து, தீதின்றி வந்த பொருள்" எனவும் **திருவள்ளுவ**ரும் கூறுவாராயினதூஉ மென்பது.

இனிக் கல்விப் பொருளாவது கற்றற்குரிய நூல்களைக் கற்றல். கற்றற்குரிய நூல்களாவன பதார்த்தத்தை யுணர்த்தும் நிகண்டு முதலியனவும், சொல்லையும் பொருளையும் நிச்சயஞ் செய்தலான் மாந்தர்க்கிருகண் போலுதலின் * "எண்ணு மெழுத்துங் கண்ணெனத் தகும்" எனவும் "எண்ணென்பவேனை யெழுத்தென்ப விவ்விரண்டுங், கண்ணென்ப வாழு முயிர்க்கு." எனவும், "எண்ணுமெழுத் துங்கண் ணிவையாய்ந்திந் நூற்பயனைக், கண்ணாககாண் பார்கற் கதி'. எனவுங் **கொன்றைவேந்த**னினும் **திருக்குற**ளினும் **பரமத திமிரபாநு**வினும் சிறப்பித்துரைக்கப்பட்ட தருக்கம் இலக்கணம் என்பனவும், மன்னனு மன்னுயிரு மொழுகுந்திறத்தை விதிவிலக்குகளான் விளங்கக்கூறும் நீதிநூல்களும், திரிபதார்த்தங்களையும் அனுமான முதலிய பிரமாணங்களாலும் தடத்த முதலிய இலக்கணங்களாலும் உணர்த்தும் வீட்டு நூல்களும், பிறவுமாம்.

கல்விப்பொருள் செல்வப்பொருளினும் அனேக மடங் குயர் வுடைத்தாதல் பற்றி மாந்தர்களான் அத்தியாவசியகம் ஈட்டற் குரிமை யுடைத்தாம் எது பற்றியெனிற் செல்வப்பொருள் இம்மையின்ப மொன்றையே யுதவுதலானும், பிறர்க்குக் கொடுக்குந்தோறும் நிறைவின்றிக் குறைவை யடைதலானும், அவையின்க ணெல்லாருந் தன்னையுடையானை மெய்ச்சும்படிச் செய்யாமையானும், தாமுயிரோடிருக்கும் பொழுதே அழிவுறக் காண்டலானும் கள்வர் அக்கினி அரசர் முதலியோராற் கவரப்படுகின்றமையானும் பிறவாற்றானும் இழிபுடைத்தாக ; அங்ஙனமின்றிக் கல்விப் பொருள் வருபிறப்புக்களினுமுடன் சென்றுதவலே யன்றி இப்பிறப்பினும் பல்வகையானின்ப முதவலானும் பிறர்க்குக் கொடுக்குந் தோறுங் குறைவின்றி நிறைவே யடைதலானும்

* எண் என்பதற்குத் தருக்கமெனப்பொருளாமாறு "சாண்டலனு மானங் கதையருத்தா பத்திபிவை, யெண்டினசத்த வெண்ணெனவே வெண்" என்பதனானறிக.

அவையின்கண் எல்லாருந் தன்னை யுடையானை மெய்ச்சும்படி செய்தலானும் தாமுயிரோடிருக்குங் கால் தனக்கொரு கேடின்றி யிருத்தலானும் கள்வர் அக்கினி அரசர் முதலியோரால் கவரப்படுதலின்மையானும் பிறவாற்றானு முயர்வுடைத்தாகலின் ஈட்டற்குரிமை யுடைத்தென்பது. இதனை "இம்மை பயக்குமா லீயக் குறைவின்றாற், றம்மை விளக்குமாற் றாமுளராக் கேடின்றா, லெம்மை யுலகத்து மியாங்காணேங் கல்விபோன், மம்ம ரறுக்கு மருந்து" "வைப்புழிக் கோட்படா வாய்த்தீயிற் கேடில்லை,மிக்க சிறப்பி னரசர் செறின் வவ்வா, ரெச்ச மெனவொருவன் மக்கட்குச் செய்வன, விச்சைமற் றல்ல பிற" என்றுவரும் நீதிவாக்கியங்களான் தெற்றென உணர்க.

வி. கே. தில்லைநாயக முதலியார்.

---

## RAMAYANA VENBA.

## இராமாயண வெண்பா.

கண்ணுங் கருத்துங் கவரக் களியனங்கன்
நண்ணு மலர்சுருப்பு நாணெய்ய—எண்ணும்
பிடிகாளை யன்னவர்கள் பேதுற்று நின்றார்
வடிநோக் கலரான் மலைந்து. (25)

சனகன் மகளிகழுஞ் சாலைமண்ட பத்தில்
அனகன் முதலோ ரணுக—வினவியகோ
மானுவக்க வன்னோர் வரவுரைத்தா னோர்மன்னன்
வானுவக்க வேறுவைத்தான் வாய்ந்து. (26)

தாசரதி கொற்றங்கள் சாற்றச் சனகன்கேட்
டாசறுவில் லேயத னேடுற்ற—மூசிழையாள்
மண்ணு மணத்துக்கு மாறாய தென்றுரைத்தான்
எண்ணு மணத்துக் கியைந்து. (27)

அத்தனுவைக் காண்கின்ற வத்தனிவ னேயென்ன
மெய்த்தவனும் வேண்டவது மேவியதால்—வித்தகன்கை
ஏற்றது கண்டனரங் கிற்றதுகேட் டார்வானோர்
ஆற்றலரன் சாபமென லாய்ந்து. (28)



நகரை யணிகென்று நல்லோலை போக்கி
நிகரில் மணநாளை நேராய்ந்—திகன்மன்னன்
இன்பக் கடலாழ வேனை யரசவெள்ளம்
முன்புக் கனநகரை மொய்த்து. (29)

தயரதனுஞ் சேனைத் திரளோடு சந்த்ர
சயிலத் திறுத்துடனே சார்ந்தான்—அயிலியைந்த
கைத்தலத்த வேந்தர் களியா ளளவளாய்
மெய்த்தலத்து வீற்றிருந்தார் மேல். (30)

கோலங்கண் டார்வீதி கோலியே கல்யாணக்
கோலங்கொண் டாரிருவர் கோநகர்வாழ்—சீலரெலாம்
கண்டுவக்க நெஞ்சங் கவர வுலாப்போந்தான்
வண்டுழக்குந் தண்டுழாய் மால். (81)

அனிச்ச மலர்மேலே யந்தளிர்க்கால் நோவப்
பனிச்சைவண்டு நாதம் படிப்ப—இனித்ததிரு
மாதேவல் மாதர் மருங்குறவே வந்தாளம்
மாதேவ மண்டபத்தின் வாய். (32)

மணவாளக் கோலமணி மன்னுமலர்ப் பொன்னும்
தணவா மணவறையைச் சாரக்—குணவாளர்
செய்தக்க செய்தபின்னர்த் தெய்வ வசிட்டனிட்டான்
நெய்தொக்க வோம னிலை. (33)

ஏனைச் சடங்கு மினிதியற்ற வண்சனகன்
மானை யிராமன் மலர்க்கரத்தில்—தானமுற
ஈந்தா னவனு மெழிற்சனகி கைப்பிடித்தான்
வாய்ந்தா ரெழுந்தார் மகிழ்ந்து. (34)

தானந் தருமந் தழைத்தோங்கத் தாபதர்கள்
மானந் தருமாசீர் வாதமுறக்—கானந்தும்
அம்மிமே லேற்றி யருந்ததியைக் காட்டினான்
விம்மிதமால் யானையனான் மேல். (35)

மற்றைச் சகோதரரும் வாய்ந்த மணமருவக்
கற்றைக் குழலார் கழறுசுபம்—பெற்றுமிகு
போகக் கடலிடையே புக்கிருந்தார் பூவாளி
வேகக் கனலவிய வேறு. (36)

தானை புடைசூழச் சக்ரவர்த்தி சேயருள்ளிட்
டானவரோ டேகு மதரிடையே—கூனற்கூர்

மாமழுவான் மூவேழ் வமிசத் தரசரைக்கொன்
றேமகிழ்வான் வந்தா னெதிர். (37)

தாடகையைக் கொன்றான் றனைக்கிட்டி முன்னேதன்
தாடலைமேல் வைத்தமன்னைத் தள்ளிநின்றான்—ஆடலென்னிம்
மானச் சிலையை வளையென்றான் வல்லாயேல்
ஊனச் சிலையிறுத்தா யுற்று. (38)

என்றமொழி கேட்ட விராம னகத்திடையே
மன்ற வுவகை வரக்கடந்து—துன்றப்
பொருபுயமும் பூரித்துப் புன்முறுவ லுற்றான்
திருமுகமுந் தேசுஞ் சிறந்து. (39)

வாங்கினான் றசரதி வள்ளன் மலர்க்கரத்தால்
வாங்கியிதி விட்டவொரு வாளிக்குப்—பாங்குகுறி
என்னென்றான் யான்செய்த வெல்லாத் தவப்பயனு
முன்னென்றான் வந்த முனி. (40)

சரமுய்த்திட் டன்னோன் றவமனைத்துங் கொள்ள
உரமெய்த் தவனேக வுன்னும்—பரனுற்ற
மாகா தலனோடு மன்னர்கோன் வந்துற்றான்
சாகேத நன்னகரந் தான். (41)

பரதாநின் மூதாதை பார்க்கவவா வுற்றான்
வரதாநீ கேகயம்போய் வாராய்—துரிதமாய்
என்றா னிகுண்மன் னிசைந்தா னிளைஞனொடு
சென்றா னிருந்தானச் சேய். (42)

பாலகாண்டம் முற்றிற்று.

தி. கோ. நாராயணசாமி பிள்ளை.

---

# RADHARANI: A NOVEL.

## இராதாராணி.

### ஐந்தாம் அத்தியாயம்.

இராதாராணி கைகளைக்கூப்பிக் கொண்டு, 'தாங்கள் ருக்மிணீ குமார ராயரென்பது தங்கள் நிஜமானபெயரன்றென்று சொன்னீர்கள். அடியாள் எந்தப்புருஷனை எனது வழிபடும் கடவுளாக எண்ணியிருந்தேனோ அந்தப்



புருஷனது பெயரைத் தெரிந்து கொள்வதற்கு மிகவும் ஆவலாயிருக்கின்றேன் என்றாள்,

**ருக்மிணீ குமாரன்** :—என்பெயர் தேவேந்திர நாராயண ராயன்.

**இராதாராணி** :—ராஜா தேவேந்திர நாராயணராயரவர்கள் என்ற பெயரைக் கேள்வியுற்றிருக்கின்றேன்.

**ருக்மிணீ குமாரன்** :—இந்தக்காலத்தில் இப்படியே பலரை ராஜா என்று சொல்லுகிறார்கள் ; என்னைக் குமார தேவேந்திர நாராயணராய னென்றழைத்தால் எனக்கு அதிகமரியாதை செய்தமாதிரியாகும்.

**இராதாராணி** :—இப்பொழுது எனக்குத் தைரியம் அதிகரித்தது தாங்கள் என் சுயஜாதியாரா யிருப்பதனால், தங்களுக்கு இன்று விருந்து செய்ய விருப்பங் கொண்டிருக்கின்றேன். தயவுகூர்ந்து அமுது செய்ய அங்கீகரிக்க வேண்டு மென்று கேட்டுக்கொள்கின்றேன்.

**ராஜா தேவேந்திரநாராயணன்**:—'நான் உன்வீட்டிற் போஜனம் செய்யாமற் போவதில்லை'. என்று கூறினான்.

இராதாராணியின் உத்தரவுப்படி அவளது திவான்வந்து ராஜாதேவேந்திர நாராயணனை அழைத்துக் கொண்டுபோய் யதோசிதமாய் உபசரித்தாள். ராஜா தேவேந்திர நாராயணன் போஜனத்துக்குவந்துஉடகார்ந்தவுடன்இராதாராணி தானே வந்து பரிமாறினாள் போஜனமானபின் இராதாராணி "வெகு காலமாய், ஒருநாளில்லாவிட்டால் இன்னொரு தினமாவது தங்கள் தரிசனத்தைப் பெற்றுத் தங்களைப்பூஜிக்கவேண்டு மென்னும் ஆசையுடன் பூஜை சாமக்கிரிகளைச் சேகரித்துக்கொண்டிருந்தேன் இந்த ஹாரமோ அதிசாமானிய மானது; ஆனால் நான் கொடுத்தேனென்று தங்கள் ராணியார் அணிந்துகொள்ளுமிடத்தில் நான் கிருதார்த்தையாவேன்" என்று சொல்லி, அந்த விலையற்றதும் உயர்ந்த வைரங்கள் பதிக்கப்பெற்றதுமான நக்ஷத்திர ஜாலமோ என்னும்படி பிரபையுடன் விளங்கிய ஒரு ஹாரத்தைக் கையிற் பிடித்துக்கொண்டு காட்டினாள்.

**தேவேந்திர நாராயணன்** :—'என் ராணியார்? ராணி இல்லை. என் மனைவி போய் இப்பொழுது பத்து வருஷங்களாகின்றன. மறுபடியும் நான் விவாகம் செய்துகொள்ளவில்லை' என்றான்.

இராதாராணிக்குச் சற்றுநேரம் ஒன்றும் தோன்றவில்லை. மிகுந்த கஷ்டத்துடன் மனத்தை ஸ்திரப்படுத்திக் கொண்டாள். மனது ஸ்திரப்பட்டதோ இல்லையோ விளங்கவில்லை.

**இராதாராணி** :— தங்களுக்காகச் செய்துவைத்தது, தாங்களே அனுக்கிரகித்தருள வேண்டும். உத்தரவானால் தங்களுக்கு இந்த ஹாரத்தை நானே அலங்கரிக்கின்றேன் என்று சொல்லி, இனிய மந்தஹாஸத்துடன் அந்த நக்ஷத்திர மாலையை நிகர்த்த ஹாரத்தைத் தேவேந்திர நாராயணனுக்கு அலங்காரம் பண்ணினாள். தேவேந்திர நாராயணன் அலங்கரிக்கப் பெற்றவனாய் முகத்தில் மந்த ஹாஸம் தவழ இந்த ஹாரம் என்னுடையதே ஆயிற்றென்றான்.

**இராதாராணி** :—தாங்கள் தயவுகூர்ந்து அங்கீகரிக்கும் பக்ஷத்தில்,

**தேவேந்திர நாராயணன்** :—அங்கீகரித்தேன். இப்போது இஃது என் சொந்தப் பதார்த்தம் யார் எனக்கு இஷ்டமானவர்களோ அவர்களுக்குக் கொடுக்கலா மன்றோ?

**இராதாராணி** :—தங்களுக்கு எஃது உபயோக மில்லையோ அதை யிதரர்களுக்குத் தானம் செய்வது அரசர்களியற்கையாயிருக்கிறது.

**தேவேந்திர நாராயணன்** :—இந்த ஹாரம் எனக்கு யோக்கியமான தன்று. அவ்வளவேன், நானே இந்த ஹாரத்துக்கு யோக்கியனல்லேன். நீயே இதற்குத் தகுந்தவள். உனக்கே இந்த ஹாரத்தைத் தானம் செய்தேன்.

இப்படிக்கூறி ஹாரத்தை வாங்கி இராதாராணியின் கண்டத்தில் தரிக்கச் செய்தான். இராதாராணி அதிருப்தி யடையவில்லை. தலைவணங்கிக்கொண்டு புன்சிரிப்புடன் ஒவ்வொருமுறை தலைநிமிர்ந்து தேவேந்திர நாராயணனது முகத்தைப் பார்த்துக் கொண்டிருந்தாள். தேவேந்திர நாராயணன் இதைத் தெரிந்துகொண்டு 'நான் இந்த ஹாரத்தை வாங்கிக்கொள்வதில்லை; அதை உனக்கே கொடுத்தேன். எனக்கு வேறே ஹாரம் கொடு' என்று கேட்டான்.

**இராதாராணி**:—எந்த ஹாரத்தை?

**தேவேந்திரநாராயணன்** :—உன் கழுத்தில் முதலிலிருந்த ஹாரத்தை.

இராதாராணி பரிசாரிகையை நோக்கி, 'சித்ரா! இங்கே வா' என்றாள். சித்திரை மறைவில் நின்று கொண்டு பார்த்திருந்தவள், 'இதோ வந்தேன்' என்றாள்.

**இராதாராணி** :—சுபவாத்தியங்கள் வாசிக்கும் வனிதையர் எங்கே யிருக்கிறார்கள்?

**சித்திரை** :—இங்கேயே இருக்கின்றார்கள்.

**இராதாராணி** :—அப்படியாயின் அவர்களை வாசிக்கும்படி சொல்.

இவ்வாறு சொல்லி இராதாராணிதன்கண்டத்திலிருந்த ஹாரத்தை எடுத்து ராஜா தேவேந்திர நாராயணனது கண்டத்தில் அலங்கரித்தாள். அவர்கள் வீணை, பிடில், சார்ந்தா, சுரபத்து, பியானோ முதலிய சுப வாத்தியங்களை வாசித்தார்கள்.

இனி யதா விதியாய் விவாகம் நடவாதா? நடவாமலிருக்குமா? வசந்த குமாரிவந்தாள். அவள் சகோதரர்களும் வந்தார்கள். ராஜா தேவேந்திர நாராயணனுடைய பரிவார மெல்லாம் வந்தன. ஆனால் அந்தக் கதையை யெல்லாம் கேட்டு நமக்கொன்றும் பயனில்லை. நமக்கு வெகுமானம் கொடுக்கப்போகிறதில்லை. எழுந்திருங்கள் போவோம். இவ்வாறு எழுதிய இந்தக் கதையைப் பண்டிதர் முதலானவர்கள் தயவுகூர்ந்து வாசிப்பதே பெரிய வெகுமதி.

**முற்றிற்று.**

தி. அ. ஸ்வாமிநாத ஐயர்.



# CURTAIN LECTURES.

## பள்ளியறைப் பிரசங்கம்.

### Third Night - மூன்றாமிரவு.

**இராமசுப்ப ஐயர் தம்வீட்டிற் பாரம்பரியமாய் வந்த குடையொன்றினைத் தம் நண்பருளொருவராகிய வேங்கடராயருக்கு மழையில் நனையாது வீடுபோய்ச்சேருதற்குக் கொடுத்துதவினார்.**

"பொழுது விடிந்தால் இதே இழவாய் விட்டது. **என்னவா?** உமக்குக்கேட்பதற்கும் வாயிருக்கின்றதா? போன சங்கிராந்திப் பண்டிகைபோய் இன்னும் ஒருவருஷம்ஆகவில்லை.அதற்குள்மூன்று குடைகள் மாயமாய்ப்போய் விட்டன. **நீர் என்ன செய்வதா?** குடையைக் கொடுக்காமலிருக்க வேண்டியது. வேறென்ன செய்வது? **உம்முடைய சிநேகிதன் மழையில் நனையக்கூடா தென்று கொடுத்தீரா?** என்? அந்தப்பாவி வேங்கடராயன் நனைந்தால் ஆகாதோ? என்னபாவம்! அவன் உடுத்திருக்கும் பட்டாடையும், போர்த்திருக்கும் சால்வையும் மழையில் நனைந்தால் கெட்டுப்போய்விடும். அப்படி விலையுயர்ந்த வஸ்திர மிருப்பவனுக்கு ஒருகுடைக்குத்தானா கதியில்லாமற்போயிற்று? **அவனுக்குச் சளிபிடிக்குமா?** அந்தச் சனியனைச் சளிதான் பிடிக்கட்டுமே! நன்றாய்ப்பிடிக்கட்டும். அப்பொழுது தான் புத்திவரும். அப்புறம் ஒரு குடையாவது வாங்குவான்.

"மழை தாரை தாரையாய்ப் பொழிவதும் உம் காதிற் படுகின்றதோ? பிரளயகாலம் வந்ததுபோற் பெய்கின்றதே? ஜன்னல் கண்ணாடிகளெல்லாம் காற்றடிப்பதனால் உடைந்து போம்போ லிருக்கிறதே! காதாரக்கேட்டீரா? **உமக்கொன்றும் கேட்கவில்லையா?** கேட்குமா? கேட்டால் குடையை யெப்படிக் கொடுக்க முடியும்? என்ன சொன்னீர்? **தூக்கம் வருகின்றதா?** நீர் செவிடராயிருக்க வேண்டும்; இல்லா விட்டால் இந்த வல்லிடி மழையில் தூங்குவதற்கு ஆகுமோ? என்ன சொல்லுகிறீர்? **பேசாமல் படுத்துக்கொள்ளவா?** நான் மாட்டேன். எனக்குத் தூக்கம் வந்தாலன்றோ படுத்துக்கொள்வேன்? இந்தமழையிலும் காற்றிலும் எனக்குத்தூக்கம் வராது. **நீர் தூங்க வேண்டுமா?** நீர் தூங்கக்கூடாது. உம்மைத் தூங்க விட்டாலன்றோ நீர் தூங்குவதற்கு? விழித்துக் கொண்டேதா னிருக்கவேண்டும்.

"வீட்டிலிருக்கும் குடைகளையெல்லாம் ஒவ்வொன்றாகக் கொடுத்துவிட்டால், நாம் என்ன செய்வதென்னும் யோசனை கொஞ்சமாவது இல்லையே உமக்கு! **வேங்கடராயன் குடையை நாளைக் கொடுத்துவிடுவானா?** அவன் கொடுத்த காலத்திற்குப் பார்த்துக்கொள்ளலாம். இன்னும் நாலைந்து நாள் மழை விடப்போகிறதில்லை. வேங்கடராயனும் குடையைக் கொடுக்கப்போகிறதில்லை. **எனக்குப் பைத்தியமா?** எனக்குப் பைத்தியமோ உமக்குப் பைத்தியமோ நாளையன்றோ தெரியப்போகிறது! இப்பொழுதென்ன அதைப்பற்றி? பொழுதுவிடிந்தாற் பிள்ளைகளெல்லாரும் பள்ளிக்கூடத்திற்குப் போகவேண்டுமே? ஒரு குடைகூட வீட்டிலில்லாவிட்டால் அவர்கள் எப்படிப் போவார்கள்? **பள்ளிக்கூடத்துக்குப் போகவேண்டாமா?** என்?

அவர்கள் படிப்பெல்லாம் பாழாய்ப்போவதற்கா? பிள்ளைகள் படித்தால்தானே முன்னுக்கு வருவார்கள்; இந்த மழையில் அவர்களை யெப்படி நான் பள்ளிக்கூடம் போகும்படி சொல்வது? 'குழந்தைகள் இருக்கிறார்களே, அவர்கள் கஷ்டசுகமெல்லாம் நம்முடைய பொறுப்புத்தானே' என்ற யோசனை கொஞ்சமாகிலும் இல்லாவிட்டாற் குடும்பம் முன்னுக்கு வருவது எப்படி? அந்தப் பிள்ளைகள் தாம் எப்படித் தலையெடுப்பார்கள்? பிள்ளைகளுடைய யோகக்ஷேமத்தைக் கருதாத புருஷனுக்கு விவாகம் ஏன்? என்னைப்போல் ஒன்றுமறியாத பேதையர் கழுத்துக்கு அரிவாளா யிருப்பதற்குத்தான். வேறென்ன?

"ஓகோ! இப்பொழுதுதான் எனக்குத் தெரிந்தது உம்முடைய தந்திரம்; சரிதான். நாளைத்தினம் நான் என் தாயார்வீட்டுக்கு உண்ணப்போவது உமக்குத் தெரியும். அதைத் தடுப்பதற்காகத்தான் நீர் இவ்வளவு செய்தது.— ஐயோ! வேண்டாமே! ஒரு சமாதானமும் நீர் எனக்குச் சொல்லவேண்டியதில்லை. நான் அங்கே போவது உமக்கு இஷ்டமில்லை. அது எனக்கு நன்றாய்த் தெரியும். அதற்காகவே நீர் இந்த வழி தேடினீர்போலும். **அதற்காகச் செய்யவில்லையா?** ஏன் பொய் சொல்லுகிறீர்? உம்முடைய எண்ணமெல்லாம் எனக்கு நன்றாய்த் தெரிந்தது. நீர் என்ன வேண்டுமென்றாலுஞ் செய்யும். என் தலையில் இடிவிழுந்தாலுஞ் சரி நான் என்னவோ போகாமல் நிற்கப்போகிறதில்லை. குடையில்லாவிட்டாற் போகமாட்டேன் என்று நினைத்தீரோ? மழையில் நனைந்துகொண்டு போகின்றேன். **ஜட்காவிற் போகலாமா?** எனக்கென்ன தலையெழுத்தா ஜட்காவில் போவதற்கு. 'இராமசப்ப ஐயர் மனையாள் கொஞ்சமாவது வெட்கமில்லாமல் ஜட்காவண்டியில் ஏறிப்போனாள்' என்று ஊராரெல்லாம் இகழ்வதற்கா? நான் ஜட்காவில் ஏறமாட்டேன். நடந்துதான் செல்வேன். குடையில்லாததனால் வழி முழுவதும் நனைந்து செல்லவேண்டும். உம்மைப்போற்பாதக்குறடு போட்டுக்கொண்டு சடக் படக் என்று மினுக்கி நடக்க எனக்குத் தெரியுமா? ஈரமெல்லாம் தலைக்கேறட்டும்; அப்புறம் ஜலதோஷம் பிடிக்கும். காய்ச்சல்வரும். அவற்றை யெல்லாம் கட்டிக்கொண்டு உமக்கென்ன? வேங்கடராயன் தயவு சம்பாதித்தீ[illegible] அது போதும்.

"நான் காய்ச்சலோடு படுத்துக்கொண்டாற் பிள்ளைகள் சாப்பாட்டுக்கென்ன செய்வார்கள்? நீர் என்னவோ உமக்கு வேண்டிய இடத்திற் சாப்பிடுகின்றீர். பிள்ளைகளை யப்படி விடுதற்காகுமா? இந்தக் கஷ்டமெல்லாம் உமக்குத் தெரிந்தால் தானே? எருத்துப்புண் காக்கை யறியுமா? பசு கன்று போடவில்லை யென்று குதிரை யோலமிட்டழப் போகிறதா? அது ஒன்றுமில்லை.

"மழையில் நனைந்து சென்றால் என் புதுப்பட்டுப்புடவை போவதற்குட் சேறாகிக் கெட்டுப்போய் விடுமே? ஊரெல்லாம் என்னைப்பார்த்து நகைக்குமே? **பட்டுப் புடவையைக் கட்டவேண்டாமா?** சரிதான்! பிச்சைக்காரி வேஷம் போடவேண்டுமென்று சொல்லுகிறீரோ? அப்போதாவது உமக்குச் சந்தோஷமா யிருக்குமா? மற்றைப்பெண்டிரைப்போல் நான் எங்கேயாவது போகிறேனா? தெய்வமே யென்று வீட்டில் அடிமைபோல் உழைத்துச் சாகிறேன். ஏதோ ஒருநாள் என் தாய் வீட்டுக்குப் போக வேண்டுமென்றாற் கந்தைத்துணி யுடுத்துச் செல்லவேண்டுமென்கிறீரே? இது உமக்குத் தருமமா? எந்தப் புருஷனாயினுந் தன் மனைவியைக் கந்தை யுடுத்து வெளியே



செல்லும்படி விட்டதைப் பார்த்திருக்கிறீரா? எங்கேயாவது கேட்டதும் உண்டா? நீர் என்னவேண்டுமென்றாலும் சொல்லும்; நான் பட்டுப்புடவையைக் கட்டிக்கொண்டே போவேன். அது நனைந்து ஒன்றுக்கும் உதவாதுபோனால்தான் உமக்குப் புத்திவரும்.

"ஐயோ! பாவமே! மழை முன்னிலும் அதிகமாய் விட்டதே. நாளைத் தினம் நான் என்ன செய்வேன்? என் தாய் வீட்டுக்கு எப்படிப் போவதோ? எனக்கு ஒன்றும் தோன்றவில்லையே? அது எப்படியானாலும் சரி. நான் போகவேவேண்டும். **ஒரு குடையை இரவல் வாங்கிக் கொள்ளவா?** ஒருகாலும் வாங்கமாட்டேன். **புதுக்குடை வாங்கி வருகிறீரா?** பணமில்லாமல் எப்படி வாங்குவீரோ? யான் அறியேன், இருக்கும் பணத்தை யெல்லாம் குடைகள் வாங்குவதிற் செலவழித்தால், நாம் என்ன மண்ணைத்தின்னுகிறதா? **எப்படியாவது ஒன்று வாங்கிக் கொடுக்கிறீரா?** எப்படியாவது வாங்கிக்கொண்டு வந்தால், அந்தக்குடையை யொடித்துத் தெருவில் எறிந்துவிடுகின்றேன். எனக்கு நம்மகுடைதான் வேண்டும். இருந்த குடையை வேங்கடராயனுக்குக் கொடுப்பானேன்? புதுக்குடை வாங்குவானேன்? இருந்தால் நமக்குச் சொந்தமாயிருக்க வேண்டும். இல்லாவிட்டால் வேண்டவே வேண்டாம்.

"ஐயோ! என் குடைக்கு நேற்றுத்தானே புதிதாய் உறை போடுவித்தேன்! இப்படியெல்லாம் நேருமென்று எனக்குத் தெரிந்தால் போடுவித்திருக்கமாட்டேனே! என் கைப்பணம் செலவிட்டு உறை போடுவிக்கிறது, அதை நீர் வேங்கடராயனுக்குக் கொடுத்துவிடுகிறது. வெகு நன்றாயிருக்கிறது! கடைத்தேங்காயை யெடுத்து வழிப்பிள்ளையார்க் குடைத்ததுபோலன்றோ ஆகிறது. **நீர் தூங்கவேண்டுமா?** உமக்கென்ன குரட்டைவிட்டு நன்றாய்த் தூங்குவீர். வாய் திறவாமல் எல்லாவற்றையும் பொறுத்துக்கொண்டிருக்கும் என்போன்ற மனையாளும் உம்மக்களும் உம்முடைய ஞாபகத்திற்கு வருவார்களா? வீட்டிலுள்ள பொருளில் எதனை யாருக்குக் கொடுக்கலாம் என்பது ஒழிய வேறு எண்ணம் உமக்கேன்?

"புருஷர்களாமே! 'பெண் சுதந்திரத்திற்குரியாள் அல்லள்' * என்று யாரோ ஒருவன், பெண்களை வீணிற் பெற்றுவைத்தவன்போல் தருமசாஸ்திரம் எழுதினானாம். புருஷர் மாத்திரம் சுதந்திரமாயிருக்க யோக்கியராம். புருஷர்கள் யோக்கியதை தெரிந்ததே! ஒரு குடையைப் பத்திரமாய் வைத்துக்கொள்ளத்தெரியாதவர்கள் உலகத்திலுள்ள பெண்டிருக்கெல்லாம் உடையவராமே!

"நாளைக்கு நான் மழையில் நடந்து செல்வதனாற் கடைசியாய் என் பிராணனுக்குத் தான் வரப்போகிறது. மழையில் நனைத்தால் என் உடம்பிற்காகாதென்பது உமக்கு நன்றாய்த் தெரியும். ஆனால் அதுதானே நீரும் வேண்டுவது! அப்புறம் எந்நேரமும் ஊர் திரியலாம். நீர் விரும்பியபடியெல்லாம் செய்யலாம். நன்றாய்ச் சுகப்படுவீர். பிள்ளைகள் கதி அதோகதிதான். அதைப்பற்றி உமக்கென்ன விசாரம்? உம்முடைய கஷ்டமெல்லாம் நிவர்த்தியாகுமோ இல்லையோ! அதுவே உமக்குப் போதுமான காரியம். ஏன்

* இது "நஸ்த்ரீ ஸ்வாதந்த்ரிய மர்ஹதி" என்பதனை யுட்கொண்டு கூறப்பட்டுளது.

வீணாக என் வாயைத் தூண்டுகின்றீர்? இல்லாவிட்டாற் குடையை ஏன் வேங்கடராயனுக்கு அழுதீர்?"

மழை யதிகரித்ததனால், கனகம்மா தான்கூறியனவெல்லாம் தன் செவியிற் படாமையால் தன்கொழுநன்காதிலும் படாவென்று நினைத்து வாய் வாளாமை மேற்கொண்டாள். இராமசுப்ப ஐயரும் மழையும் இடியும் ஒருங்கே யோய்ந்தனவென நினைத்துத் தூங்க ஆரம்பித்தார்.

வாசுதேவையபந்துலு.

---

## REVIEWS OF BOOKS.

## புத்தகக் குறிப்புக்கள்.

### திருப்புகழ் இரண்டாம்பாகம் :

[இது வ. த. சுப்பிரமணியபிள்ளை யவர்கள் சென்னை ஸ்டார்ஆவ் இந்தியா அச்சுக்கூடத்திற் பதிப்பித்தது. லிங்கசெட்டித்தெரு 292-ஆம் நம்பர் வீட்டிற் கிடைக்கக்கூடியது. இதன் விலை ரூபா 2; தபாற்கூலி அணா 3.]

628 பாடல்களடங்கிய இவ்வருமைப் பிரபந்தம் நல்ல பளபளப்புள்ள கனத்த கடிதத்திற் பெரிய எழுத்துக்களில் யாவரும் அகமகிழுமாறு பிரசுரிக்கப்பட்டுளது; ஏறக்குறைய 450 பக்கங்கள் கொண்டது; ஸ்தலப்பாடல்கள் பொதுப்பாடல்கள் என இருபகுதியுடையது. நூலின் முன்னர்ச் சிறப்புப்பாயிரம் முகவுரை, திருப்புகழ்ச் சிறப்புப்பாயிரம் எனும் இவற்றையும், பின்னர்ப்பாட்டு முதற்குறிப்பகராதியையும் கொண்டுள்ளது. இதன் முதற்பாகம் 1894-ஆம் வருஷம் அச்சிடப்பட்டது: அச்சிட்ட நாலைந்து வருஷத்திற் புத்தகமெல்லாம் செலவாய்விட்டன; தற்காலம் முதற்பாகம் ஒருபிரதியேனும் கிடைப்பதரிதாய் விட்டது. புத்தகம் வாங்கிப் படிப்பதில் மேல்நாட்டினை ஒரு சிறிது மொவ்வாத நந் தமிழ்நாட்டினும் இப்புத்தகம் இவ்வளவு ஆதரத்துடன் வாங்கி வாசிக்கப்பட்ட தென்றால் அதன் அருமை பெருமைகள் யாமெடுத்துரையாமலே விளங்கும். "வாக்கிற் கருணகிரி" என்ற தனிப்பாடலினாலும் "ஐயா வருணகிரி யப்பா வுனைப்போல, மெய்யாக வோர்சொல் விளம்பினர்யார்?" என்று மகானாகிய தாயுமானஸ்வாமிகள் கூறினமையாலும், இந்நூல் சொல்லினும் பொருளினும் ஒருங்கே சிறந்த தென்பது சாமானியருக்குந் தெற்றெனப் புலப்படும். துதிநூலாகிய இப்பிரபந்தத்தை இதனினும் நன்றாயச்சிடுதலியலா தென்பது எமது தெளிந்த எண்ணம். என்னையெனின், தலங்களை வரிசைப் படுத்தியிருப்பது மிகநன்றா யிருக்கின்றது. முதற்பாகத்தில் முதலில் முருகபிரானின் ஆறுபடை வீடுகளாகிய திருப்பரங்குன்றம், திருச்செந்தூர், பழநி, திருவேரகம், குன்றுதோறாடல், பழமுதிர்சோலை இவற்றின் பாடல்களும் அப்பாற் பஞ்சபூத ஸ்தலங்களாகிய காஞ்சீபுரம், திருவானைக்கா, திருவண்ணாமலை, திருக்காளத்தி, சிதம்பரம் இவற்றின் பாடல்களுமுள்ளன. அவற்றின் தொகை 603. இரண்டாம் பாகத்திலோ காசி முதல் இராமேசம் ஈறாகவுள்ள திருவொற்றியூர், திருவாலங்காடு, திருமயிலை, விருத்தாசலம், சீகாழி, நாகபட்டினம், வேதாரணியம், திருவாரூர், கும்பகோணம், தஞ்சாவூர், திருவையாறு, வயலூர், கருவூர், மதுரை, திருக்குற்றாலம் முதலிய இடந்தெரிந்த தலங்கள் 124-ம், அத்திக்கரை, பாசை, விஜயபுரம் முதலிய இடம் விளங்காத தலங்கள் 14-ம், உதக்குள்ளான்ஒருவன் சிவதரிசனங் கருதித் தக்கணம் செல்லின் அவன் கண்ணுறூஉம் வடநாடு, தொண்டைநாடு, நடுநாடு, சோழநாடு, கொங்குநாடு, பாண்டிநாடு என்னும் நாடுகளின் கிரமப்படியாதல் இவையியலாவழித் தலப்பெயர்களின் அகராதிமுறைமைபற்றியாதல் வைக்கப்பட்டிருக்கின்றன. இங்ஙனம் இரண்டாம் பாகத்துள்ள ஸ்தலப்பாடல்களின் தொகை 321; பொதுப்பாடல்களின் தொகை 307. அவ்வத்தலத்தின் பாடல்களை வரிசைப்படுத்தும் பொழுது அப்பாடல்கள் சந்தவினமாயின, பெரியன, சிறியன என்னும் முறைமை பற்றியும் அவையும் அகராதி முறைமை பற்றியும் வைக்கப்பட்டுள்ளன. பொதுப்பாடல்களு மிப்படியே. இவற்றையெல்லாம் நேரிற் புத்தகத்திற் கண்டுகொள்வதே நேரிதாம். ஒவ்வொரு பாட்டுக்குஞ் சந்தக் குழிப்பு எழுதி, விஷயசூசிகை, அரும்பதவகராதி முதலிய சேர்த்திருக்கலாமெனினும் அங்ஙனஞ்செய்ய நந்தம் பதிப்பாசிரியருக்கு அவகாசமிருந்திராதது என்பதும் அதற்குத்தக நந்தமிழுலகம் பொருளுதவி செய்யா தென்பதுமே முக்கிய காரணமாகின்றன. எனினும், பாடல்களில் எளிதிற் பொருள் விளங்காத இடத்தெல்லாம் எழுதியுள்ள குறிப்புக்கள் மிகவும் பாராட்டற்பாலன. முதற்பாகம் விரைவில் இரண்டாம் பதிப்புக்கு வருமென நம்புகின்றோம். இங்ஙனம் திருப்புகழைத் தேடி அச்சிடுவதிலேயே தமது ஆயுட்காலம் முழுமையும் மிக ஊக்கத்துடன் கழித்துவரும் பிள்ளையவர்களுக்குத் தமிழுலகம் மிகக் கடமைப்பட்டிருக்கின்றது. இப்புத்தகத்தை அன்பர்கள் ஆசையுடன் வாங்கிப் படித்துப் பயனடைவதும் தக்க முயற்சிசெய்து மூன்றாம் பாகத்துக்குப் பழைய ஏட்டுப் பிரதிகள் சம்பாதித்தனுப்புதலுமே தக்க கைம்மாறாம்.



### நாடகவியலுரை :

[இது சென்னைச் சடகோபாசாரியர் அண்டு கம்பெனியார் பதிப்பித்தது; இதன்விலை அணா 0-12-0. தபாற்கூலி வேறு.]

நாடகவியல் என்னும் நூல் சென்னைக் கிறித்தவ கலாசாலைத் தலைமைத் தமிழ்ப்பண்டிதர் பிரமஸ்ரீ வி.கோ. சூரியநாராயண சாஸ்திரியாரவர்கள், பி.ஏ. இயற்றியது; இஃது அன்னார் பதிப்பித்துவரும் தமிழ்மகளின் மேகலையுள் முதற் கிங்கிணியாம்; இது நாடகத்தினுடைய இலக்கணங்களை யெல்லாம் ஒருசேரத்தொகுத்துக் கூறுவது. இதற்கு உரைவகுத்தவர் நாடகவியலாசிரியர் மாணாக்கரு ளொருவரும் கடலூர்க் கலாசாலைத் தமிழ்ப்பண்டிதருமாகிய பிரமஸ்ரீ ந. பலராமையரவர்கள். நாடகவியலுரை யென்ற இந்நூலின்கண் முகவுரை, நூலாசிரியர் வரலாறு, மேற்கோள் நூல்களின் பெயர் முறை முதலாயினவும் அடங்கியிருக்கின்றன. இது 160 பக்கங்களுள்ளது. 1903-ஆம் வருஷத்துப் பி. ஏ., பரீட்சையின் பாடமாகிய நாடகவியலின் முதன் முப்பத்து நான்கு பக்கங்கட்கு மட்டிலே இதன்கண் உரைகாணப்படுகின்றது; எனவே இவ்வுரை மாணாக்கர்களுடைய பயன் கருதியே எழுதப்பட்டுளது போலும். ஒவ்வொரு சூத்திரத்திற்கும் பதவுரையும் விசேடக் குறிப்புக்களும்

காட்டப்பட்டுள. உரை நடை மிகத்தெளிவாகவும் யாவரும் விரும்பி மேற்கொள்ளத் தக்கவாறும் அமைந்திருக்கின்றது. நூலாசிரியரது உள்ளக்கிடக்கைகளனைத்தையுஞ் சூத்திர வாயிலானுய்த் துணர்ந்தும் உரையிற் கோடலாதிய உத்திவகையாற் பெய்துரைத்தும், அவசியமான விடங்களில் தெளிவுபெற விளக்கியும் உரை செல்லுந்தன்மை யாவரும் பாராட்டற்குரியதே. இவ்வுரை புதிதாக நாடக மெழுதப் புகுவோர் ஒவ்வொருவருக்கும் இன்றியமையாதது. ஓராற்ருற் பார்க்குமிடத்து இவ்வுரை பொதுஜன நன்மை நாடியுஞ்செய்யப்பட்டதாமாறு தெற்றெனப் புலனும். நமது பலராமையரவர்கள் எஞ்சிய பகுதிகட்கும் உரை யெழுதி முடிப்பார்களென்று நம்புகின்றேம். அங்ஙனம் அவர் செய்யுமிடத்து விசேட நன்மைவிளையு மென்றற்கண் யாதோரையப்பாடுமில்லை.

## சோமசுந்தரக் காஞ்சி யாக்கம் :

[இது சென்னைப் பண்டித மித்திர யந்திரசாலையிற் பதிப்பித்தது; இதன் விலை இவ்வளவென்று நூற் புறத்தெங்குங் குறிக்கப்படவில்லை.]

இது **சோமசுந்தரக்காஞ்சி** யென்ற நூலின் மேற் சிலர் குற்றங்களேற்றியவழி, அவை யனைத்தும் போலியா யொழிதல் காட்டிச் செல்வதோர் வாதநூல். இதனை யியற்றினார் சென்னைக் கிறித்தவ கலாசாலை உதவித்தமிழ்ப் பண்டிதர்களு ளொருவராகிய ம-ா-ா-ஸ்ரீ, **நாகபட்டினம்-வேதாசலம்பிள்ளையவர்கள்.** இந்நூலின்கண் நூற்பொருளாராய்வார் இனையராதல் வேண்டுமென்பதும், பொருளிலக்கணமாவது இது வென்பதும், அப்பொருட் கூறுபாட்டியல் இனையதென்பதும், காஞ்சித்திணை கையறுநிலை தாபதநிலை மன்னைக் காஞ்சி முதலியவற்றின் பொருண்மரபு இவ்வாறு மென்பதும், ஆனந்தக் குற்றமென வொன்றுகோடல் போலியா மென்பதும் பிறவும் ஒழுங்குபெற விளக்கப்பட்டுள்ளன. இடையிடையே மேற்புலவாணர் கருத்துக்களுங் காட்டப்பட்டுள. மிக்க செவ்விவாய்ந்த நடையில் நூன் முழுதும் இயன்றுளது; வாதமுறை பிறழாது எழுதப்பட்டுளது. இவர் கூறியன பலர்க்கு மொப்ப முடிந்தனவா மென்பது தேற்றம். பலர்வாதஞ் செய்வுழி விஷயத்தை விடுத்துப் புறம்பான வேறு பலவற்றை நவிந்தியைத்தும் நிந்தைச் சொற்புணர்த்தும் எழுதுகின்றனர். இன்னர் போலாது சோமசுந்தரக் காஞ்சியாக்க முடையார் நேரிய நெறியிற் சென்று மேற்கோள்வென்றி பெறுமாறு மிகவும் பாராட்டற்பாலதே.

## மருங்காபுரிப் பிரபந்தத்திரட்டு :

[இது சாப்டூர் என்னும் மருதூர்ச் சமஸ்தான வித்துவான் **ஸ்ரீசிதம்பரப் புலவர்** பார்வையிட்டது ; சென்னைப் பண்டித மித்திர யந்திரசாலையிற் பதிப்பித்தது ; விலைகுறிப்பிக்கப்படவில்லை.]

இந்நூல் மருங்காபுரிச் சமஸ்தானத்து ஆதீன கர்த்தர் **ரங்ககிருஷ்ண முத்துவீரப்பூச் சேயமகாராஜா அவர்களின்மீது மாம்பழக்கவிச்சிங்கநாவலரவர்கள்** இயற்றியது. நூலாசிரியரை யறியாதார் தென்னாட்டினு ளொவருமில்லை. இதன் கண்ணே சீட்டுக்கவி, கும்மி, தெம்பாங்கு, தங்கப்பாட்டு, பல்வகைய ஆசிரியவிருத்தங்கள், வெண்பாக்கள், கீர்த்தனைகள் முதலிய பலவித இயலிசைப் பாடல்களுள்ளன. நூல் முழுவதும் மிகவும் எளிய நடையில் அமைந்துளது ; படிப்பதற்குப் பெரிதும் விநோதமா யிருக்கின்றது ; வித்துவான்கள் பலர் இதைக்குறித்துச் சிறப்புக்கவிகள் சொல்லியிருக்கின்றனர் ; நூல் நல்ல பளபளப்புள்ள கடிதத்தில் அச்சிடப்பட்டுளது ; ஆதலிற் பலரும் வாங்கிப் படிப்பார்களென்று நம்புகின்றேம்.



## காங்கிரேஸ் மகாசபை :

[இது மதராஸ் ரிப்பன் அச்சியந்திரசாலைத் தலைவராகிய **ஸ்ரீ. வை. சிவசங்கர செட்டியாரவர்கள், பி ஏ.,** பதிப்பித்தது; இதன் விலை அணா 4; தபாற்கூலிவேறு.]

இஃது இந்தியன் நாஷனல் காங்கிரெஸ் என்று வருஷந்தோறுங் கூடுகின்ற மகாசபையின் சுருக்கமான சரித்திரமாம் ; **கல்குளம் - குப்புசாமி முதலியார் ; பி. ஏ.,** இயற்றியது ; இது நமது ஞான போதினிப் பத்திரிகையின்கண் அவ்வக்காலங்களில் விஷய ரூபமாக வெளிப்பட்டிருக்கின்றது ; அதற்கும் இப்பொழுது வெளிவந்திருக்கும் புத்தகத்திற்குஞ் சிற்சிலவிடங்களிற் பேதங்களு முண்டு. காங்கிரெஸைப்பற்றி நம்மவராவா ரனைவரும் அறிந்திருத்தல் நலம் என்றுகருதி நம்முடைய முதலியாரவர்கள் யாவருக்கும் பொருள் விளங்கத்தக்க சாமானிய எளியநடையில் எழுதியிருப்பதே யன்றியும் குறைந்த விலையும் ஏற்படுத்தி யிருக்கின்றனர். இவர் எழுதிய பாரத ஸாரத்திற்கும் இதற்கும் நடையமைப்பில் மிக்க வேறுபாடு காணப்படுகின்றது ; இதன்கண் எழுத்துப்பிழைகளும் பிறவும் கொஞ்சம் அதிகமாகவே காணப்படுகின்றன. இதற்குத் தக்ககாரணம் நன்குபுலப்படவில்லை. ஒருவேளை, அவசரப்பட்டு அச்சிட்டமையான் அவைகள் நேர்ந்தனபோலும். நமது முதலியாரவர்கள் மிகச் செவ்வையாய் அளவிறந்த கவலையோடு ஒருவருக்குப் பலரிடங்காட்டித் திருத்தி அச்சிடும் பெற்றியராதலின் இஃது அவர் தம் இயல்பொடு மாறுபடுதலின் இத்துணை யெழுதினேம், வேறன்று.

## பஸ்மமகாத்மியம் :

[இஃது **ஈ. சபாபதிமுதலியா** ரவர்களாற் பண்டித மித்திர யந்திரசாலையிற் பதிப்பிக்கப்பட்டது; இதன் விலை அணா 2, தபாற்கூலி வேறு.]

இந்நூல் சென்னைக் கிறித்தவ கலாசாலை உதவித்தமிழ்ப் பண்டிதர்களு ளொருவராகிய **ஈக்காடு - இரத்தினவேலு முதலியாரவர்கள்** இயற்றியது ; பல்லோரும் அங்கீகரிக்கத்தக்க பலவகைப்பட்ட சம்ஸ்கிருத நூல்களினின்றும் திரட்டப்பெற்ற மேற்கோள்களுள்ளது; சிவபத்தராயினார் யாவர்க்கும் உபயோகமாகும்படி யெழுதப்பட்டுளது, இதன் கண்ணே திருமாலாதிய சர்வதேவர்களும் விபூதி தரித்தவர்களே யென்பதும், விபூதி சேகரிக்கும் விதியும், பஸ்மதாரணம் ஸ்மார்த்தமாகாது சிரௌதமே யென்பதும், சில ஆசங்கை நிவர்த்தியும் கூறப்பட்டுள்ளன. இந்நூலிற் காட்டிய பிரமாண நூல்களின் தொகை சஙு-ஆம். இது சைவர்களனைவர்க்கும் இன்றியமையாதது. இதனை யாவரும் வாங்கிப்படித்து உய்வார்களென்று நம்புகின்றேம்.

## ஸ்ரீ விருத்திப்பிரபாகரம் :

[இது மதராஸ் ரிப்பன் ப்ரெஸிற் பதிப்பித்தது; இதன் விலை ரூ. 4.]

இப்பெயரிய வேதாந்தநூல் பூர்வத்தில் **சாது ஸ்ரீ நிச்சலதாஸர்** என்னும் பெரியாரால் ஹிந்தி பாஷையிற் செய்யப்பட்டது. தமிழறிந்தாரும் அதிலடங்

கிய உண்மைகண்டு கடைத்தேறும்படி **தஞ்சைக் குப்புசாமி ராசு** என்பவர்
அதனைத்தமிழில் மொழிபெயர்த்துத்தர ரிப்பன்ப்ரெஸ் அதிபர் அச்சிட்டு வழங்
கினர். ஸ்ரீ நிச்சிலதாஸர் வேதாந்த வுணர்ச்சி மிக்வுடையாரென்பது அவரது
நூலாகிய **விசார** சாகரத்தால் முன்னரேதமிழுலகம் அறியும். விசாரசாகர மிய
றிய பின்னர், "ஏழுவருட பரியந்தம் மெல்ல இருபத்தேழு லக்ஷம் சுலோகக்
கணக்குள்ள நூல்களைத்தான் சங்கிரகஞ் செய்து அவற்றை விசாரித்து, தீவிர
புத்திமான்களாகிய ஹிந்தி பாஷை யுணர்ச்சி யுள்ளார் பொருட்டு எல்லாவற்
றின் நிண்ணய வடிவ ஸ்ரீவிருத்திப் பிரபாகர மென்னும்" இந்நூலினை யியற்றி
னர் என மொழி பெயர்ப்பாசிரியர் கூறுதலின் விசார சாகரதிற்கும் இதற்கும்
உள்ள பொருத்தமும், இந்நூலினது சிறப்பும் நன்கு விளங்குகின்றன. "அகம்
பிரஹ்மாஸ்மி என்னும் விருத்தியாற் காரியத்தோடு அஞ்ஞானத்தின் நிவர்த்
தியும், பரமானந்தப் பிராப்தியு முண்டாகின்றன வென்பது வேதாந்த சித்தாந்
தம். ஆண்டு, விருத்தி யென்பது யாது? அதன் காரணம் யாது? அதன்
பிரயோஜனம் யாது? என்றிவ்வாறு அறியும் வேட்கை யுண்டாகி அக்காரண
மாய் இவ் "விருத்திப் பிரபாகரம்" என்னும் நூல் சொல்லப்படுகின்றது"
எனவரும் முதல் வாக்கியங்களால் நூற் கருத்தும் நூற்பயனும் ஒருவாறு அறி
யப்படும். இந்நூலின் கண் விருத்தியின் சொரூபமும், பிரமை அப்பிரமை
யென்னும் வடிவங்களாகிய அதன்பேதமும், பிரமாண முதலிய வடிவங்களா
கிய அதன் காரணமும், வியவகார சித்தியும் மோக்ஷ சித்தியுமாகிய அதன் பய
னும் நிரூபிக்கப் படுகின்றன. விசாரசாகரத்துட் பிரிவுகள் தரங்கமெனப்
பட்டமைபோல், பிரபாகரமென்னும் நாமத்திற் கேற்ப உட்பிரிவுகளாகிய பிர
கரணங்கள் பிரகாசங்க ளெனப்பட்டன. இந்நூல் எட்டுப் பிரகாசங்கள்
கொண்டது. முதல் ஏழு பிரகாசங்களும் "விருத்திதீபிகை" யென்னும்
பெயரொடு முன்னரே பதிப்பிக்கப்பட்டன. எட்டாம் பிரகாசத்தைச் சேர்
த்து நூலாசிரியர் தீபிகையைப் பிரபாகர மாக்கினர். தமிழ் நூலுள் எட்டும்
ஒருங்கே காணப்படுகின்றன. இனித்தமிழ் விருத்திப் பிரபாகரத்திற்குச் சிறந்த
முகவுரை யொன்று எழுதப்பட்டிருக்கின்றது. அம்முகவுரையுள் நூலின்
சிறப்பும் நூற்பயனும், நூலைத்தமிழ் மொழியில் மொழிபெயர்த் துபகரித்தமை
யும் நூலாசிரியர் சரித்திரச் சுருக்கமும் விளக்கமாகக் கூறப்பட்டன. நூலாசிரி
யர் தேக வியோகமெய்திய காலம் விக்கிரமசகம் 1920 - எனக்கூறப்பட்ட
தாயினும் சகவுணர்ச்சி மாண்டவிக்காலத்துக் காலமறிதல் இதனால் எளிதான
தில்லை. ஆயினும் ஏறக்குறைய 40-ஆண்டுகட்கு முன்னர் அவர் மரித்தனர்
எனக் கணித்து அறிந்தோம்(கி. பி. 1862.) "இந்நூலாசிரியர் இவ்வரிய நூலை
மிகவெளிய நடையில் வசனரூபமாக எழுதி யிருத்தல் பற்றி அவ்வாறேஇங்கும்
யாவரும் எளிதிலுணருமாறு இஃது எளிய தமிழ் நடையில் மொழி பெயர்க்க
லாயிற்று" என்னும் மொழி பெயர்ப்பாசிரியரோடு முரணுவாரில் யாமும் ஒரு
வராக நேர்ந்தமை யெமக்கு விசனந்தருகின்றது. தருக்க சங்கிரகம் தருக்க
கௌமுதி முதலிய தருக்க நூல்களும்,வேதாந்த சூளாமணி,கைவல்ய நவநீதம்,
பஞ்சதசப்பிரகரணம் முதலிய தமிழ் வேதாந்த நூல்களும், ஸம்ஸ்கிருதவே
தாந்த நூல்களும், விசாரசாகரமும் உணர்ந்தார்க் கன்றி மற்றை யோர்க்கு
இந்நூல் எளி தெனல் சர்வ சம்மதமாகாது. நூலுட் பொரும்பான்மை காணப்
படும் பதங்கள் ஆரியப்பதங்கள். அவற்றிற்கு அரும்பதவுரையுங் காணப்பட
வில்லை. வசனநடையும் சிலவிடங்களில் வடமொழி நடையைப் பின்பற்றிய
தாகின்றது. இவ்வாறு மொழிபெயர்த்தல் மொழி பெயர்ப்பவருக்குச் சுலபம்.
ஸம்ஸ்கிருத எழுத்தறியா விடினும் பாஷையுணர்ச்சி யுடைய பண்டிதர்களுக்கு



அதனை யறிதல் சுலபம். மற்றுத் "தமிழ்ப்புலமையும் வடமொழிப் புலமையு
மொருங்கே யுடைய தீவிரதர புத்திமான்களுக் கிந்நூல்' என்று சொல்லுவ
ராயின், எம்முடைய ஆக்ஷேபத்தை விலக்கிக் கொள்கின்றோம். அத்தகை
யோர்க் கேற்பட்ட நூல்களுள் இதுவுமொன்று எனயாம் சம்மதிக்கின்றோம்.
இந்நூல் நல்ல காயிதத்தில் அக்ஷரப் பிழைகளின்றி நன்றாகப் பதிப்பிக்கப்
பட்டமையும், நெடுங்காலம் கெடாதிருக்கத் தக்கவாறு கவசமிடப்பட்டமையும்
பதிப்பித்தோர் உழைப்பிற்குச் சான்று பகர்கின்றன. வேதாந்த வுணர்ச்சி
தலைக்கூடி முத்திபெற விச்சிக்கும் புலவர்கள் இதன் விலை ரூபா நாலையு
மொரு பொருளாக மதியாது நூலினை வாங்கிக் கற்பரென நம்புகின்றோம்.

---

## EDITORIAL NOTES.

## பத்திராதிபர் குறிப்புக்கள்.

**ஞானசாகரம்:**—இது சென்னை வேதாகமோக்த சைவசித்தாந்த சபைப்
பிரசுரங்களி லொன்று. இம்மாதாந்தப் பத்திரிகை சமயசாத்திர தத்துவ
சாத்திர பௌதிக சாத்திர இலக்கணப்பொருள் விரிப்பதாம். இப்பத்திரிகை
யின் அதிபராவார் சென்னைக் கிறித்தவ கலாசாலை உதவித் தமிழ்ப் பண்டிதர்
தருளொருவராகிய **நாகபட்டினம்-ஸ்ரீ வேதாசலம் பிள்ளையவர்கள்**. இது
பிலவஹு தைமீ முதல் வெளிப்படுகின்றது; சென்னைப் பண்டித மித்திர
யந்திர சாலையில் முத்திரீகரிக்கப் படுகின்றது. இதன்கணடங்கிய பொருள்க
ளாவன: ஞான சாகரம், கௌரவாபிமான சீலர், வேதாகமோக்த சைவசித்
தாந்தசபை, சோமசுந்தர விஜயம், சகளோபாசனை, தமிழ்வடமொழியி னின்று
பிறந்ததாமா?, தமிழ்ச் சொல்லுற்பத்தி, சமாசாரக் குறிப்புக்கள் என்பன
வாம். 24-பக்கங்கள் கொண்ட இம்முதற்சஞ்சிகை நல்ல கடிதத்தில் நன்கு
பதிப்பிக்கப்பட்டுளது. இதனைத் தமிழராவார் யாவரும் வாங்கிப்படித்து நமது
பிள்ளையவர்களை யூக்குவார்களாக.

**சித்தாந்த தீபிகை.**—உண்மை விளக்கம் அல்லது சித்தாந்த தீபிகை
யென்ற இம்மாதாந்தப் பத்திரிகையை யறியாதா ரொருவருமிலர். இப்பத்திரி
கையின் சென்ற நவம்பர் டிசம்பர் மாதத்துச் சஞ்சிகைகளைக் கண்ணுற்
றதிற்பல அருமையான விஷயங்கள் ஆங்கிலமொழியிற் பிரசுரிக்கப்பட்டிருந்
தன. அவ்விஷயங்களு ளொன்று 'செவ்வந்திமா நகரக்கல்லூரிப் பாட்டு'
என்பது. இது நமது ஞானபோதினிப் பத்திரிகைக்கென்று எழுதப்பட்டுத்
தமிழ் முகவுரையோடும் அதன்கட் பிரசுரிக்கப்பட்டுளது. அதே விஷயம்
ஆங்கில முகவுரை யொன்றொடு கூட்டித் சித்தாந்த தீபிகையின் மேற்கூறிய
சஞ்சிகைகளிற் பதிப்பிக்கப்பட்டுளது; அங்ஙனம் பிரசுரிக்கப்பட்டதன்கண்
இது முன்னரே ஞானபோதினியில் வெளிப்பட்டுள தென்பது குறிப்பிக்கப்ப
டவில்லை. மாற்றுப் பத்திரிகையாக நமது ஞானபோதினியைப் பெறுகின்ற சித்
தாந்த தீபிகைப் பத்திராதிபர் இவ்வுண்மையை விளக்காமற் போனதென்னே?
விஷயதானஞ் செய்த **நாகபட்டினம் ஸ்ரீ. வேதாசலம் பிள்ளையவர்களும்**
இதைக்குறித் தொன்றும் தமது ஆங்கில முகவுரையின்கட் பேசினாரல்லர்.
அம்முகவுரைக்கண் ஞானபோதினிப் பெயர் குறிக்கப்பட்டுளதே யென்னின்

அது 'வேனிற்பாட்டு' என்ற பிறிதொரு விஷயமாக நிகழ்ந்ததா மென்க. ஆகவே பத்திரிகை யொழுங்கொடும் [illegible] மரபொடும் ஒத்துவாராத இச்செயல் எவ்வாறு மேற்கொள்ளப்பட்ட[illegible]றிகிலேம்.

**சென்னைச் சர்வகலாசாலை விசாரணைச் சங்கம் :—**இம்மதி 19-ஆந் தேதி மாலை மேற்கூறிய சங்கத்தார் சென்னைக்கிறிஸ்தவ கலாசாலையிற் புகுந்து அக்கலாசாலையின்கட் கல்விகற்பிக்கப்படும் முறைகள் முதலாயின வற்றைப் பற்றி விசாரணை செய்தார்கள். இன்னும் மற்றைய கலாசாலைகளுக்குஞ் சென்று இவ்வாறே விசாரிப்பார்களென்பது தெரிகின்றது. இத்தகைய விசாரணைகளால் [illegible]சிறந்த நன்மைகளுண்டாகு மென்பது திண்ணம். இச்சங்கத்தார் விசாரணையி னிறுதியில் தங்களபிப்பிராயங்க ளனைத்தையும் புத்தகரூபமாக வெளியிடுவார்க ளென்பது துணிவு.

**பிரவேச பரீட்சை :—**நமது சென்னைச்சர்வ கலாசாலைப் பிரவேச பரீட்சைக்குச் சென்ற 1901-ஆம் வருஷம் போன மாணாக்கருட் சிலருக்கு அப்பரீட்சையின் வினாப்பத்திரிகைகளுட் பலவற்றின் முன்னுணர்ச்சியேற்பட்டிருப்பதாக வுணர்ந்து கொண்ட சர்வகலாசாலை யதிகாரிகள் அங்ஙனம் முன்னுணர்ச்சி பெற்ற மாணவர்கட்கு மறு பரீட்சை யொன்று ஏற்பாடு செய்திருக்கின்றனர். அது வருகிற மார்ச்சு௴ மூன்றாந்தேதி நிகழுமாம். பரீட்சை நிகழுமிடம் சென்னையே, வெளியூர்களிலுள்ள மாணாக்கரனைவரும் ஈங்கே பரீட்சைக்கு வரல்வேண்டுமாம். இத்தகைய தௌர்ப்பாக்கிய நிலைமைகட்கெல்லாம் மாணாக்கராவார் தங்களையேன் ஆளாக்கிக் கொள்ளவேண்டும்? இனிமேலாவது மாணாக்கர்கள் கவனித்து நேரியவழியில் நடப்பாராக.

**சென்னைச் சர்வகலாசாலை வருஷாந்தக்கூட்டம் :—**இது வருகிற மார்ச்சு௴ 21-ஆந்தேதி வெள்ளிக்கிழமையன்று மாலைகூடும். இதன் கண்ணே சென்ற வருஷத்திற் பட்டப் பரீட்சைகளிற் றேறிய மாணாக்கர்களெல்லாம் தத்தமக்குரிய பட்டம் பெறுவார்கள். அற்றை ஞான்று மாலை, அங்ஙனம் பட்டம் பெற்று உலகவாழ்க்கையிற் புகுகின்றவர்கள் நலங்கருதிக் கனம் பொருந்திய **திவான் பகதூர் ஸ்ரீநிவாசராகவ ஐயங்காரவர்கள், பி. ஏ.,** உபந்நியாசஞ் செய்வார்கள். இவர் பரோடா வென்னுஞ் சுதேசராஜ்யத்தின்கண் அமைச்சுத் தொழில் பூண்டு யாவரும் தம்மைப் புகழ்ந்து கொண்டாடத்தக்கவாறு நடந்து வந்தவர் ஆதலின் உலக வியாபாரம் நன்குணர்ந்த நம் ஐயங்காரவர்கள் அவ்வுபந்நியாசத்தின் மூலமாய்ச் சர்வஜனங்களையுங் களிப்பிப்பாரென்று எதிர் பார்க்கின்றனம்.

**போதகாசிரியர் பட்டப்பரீட்சை :—**இவ். எல். டி. பரீட்சையில் ஐம்பத்தோ ராசிரியர்கள் தேறிப் பட்டம் பெறுதற்குரிய ராயினார்கள். அவர்களில் மூவர் முதல் வகுப்பில் தேறியிருக்கின்றன ரென்பது யாவரும் களிகூரத்தக்க விஷயம்.

**இந்திய வித்யா விசாரணை மந்திரி :—**நமது **கர்ஸன் பிரபுவவர்கள்** நமது இந்தியாவிற்கு வித்யா விசாரணை மந்திரி யொருவர் நியமிக்கப்படுதல் வேண்டுமென்று பலமுறைகளிலு மெடுத்துப் பேசியு மெழுதியும் முயன்று தாம் மேற்கொண்ட காரியத்தைச் சாதித்துவிட்டனர். இந்திய மந்திரியின் அநுமதியின்மேல் **ஆஸ்கார் ப்ரௌனிங்கு** துரையவர்கள் மேற்கூறிய இந்தியவித்யா விசாரணை மந்திரியாராக நியமிக்கப் பட்டுள ரென்பது கேட்டு மகிழ்வார் பலர்.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
REGISTERED
30 APR 1902
MADRAS

# ஞானபோதினி.

சம்புடம் V. } 1902ஹு மார்ச்சு௴ 20உ { புத்தகம் 8

## TAMIL LITERATURE.

## தமிழ்ப்புலவர் சரிதம்.

உலகின்கணுள்ள நாகரிக நாடுகளில் வழங்கும் பாஷைகளெல்லாம் நன்னிலையிலிருக்கின்றன. அவ்வந்நாடுகளின் நாகரிக விருத்திக்கேற்றவாறு ஆங்காங்குப் பயிலுறாஉம் பாஷைகளும் விருத்தியடைந்து ஒளி சிறந்து விளங்குகின்றன. அவ்வப் பாஷைகளின் மகிமையும் சிறப்பும் அவ்வப்பாஷைகள் வல்ல புலவர்களானும் அன்னாரியற்றிய நூற்றொகைகளானும் புலனாம். ஆகவே ஒவ்வொரு பாஷையின் சிறப்பையும் விளக்குங் கருவிகளுள் தலை நின்றது அப்பாஷையின் புலவர்சரித மென்பது துணியப்படும். படவே ஒவ்வொரு பாஷைக்கும் புலவர் சரிதம் வகுக்கப்படுதல் இன்றியமையாததொன்றாம். எனவே புலவர்சரித மில்லாமை பாஷைக்கே யொரு குறைவாக மதிக்கப்படுதன்மட்டில் நில்லாமல் அப்பாஷை பயின்றோர்க்கும் பயில்வோர்க்கும் உற்றதோர் பெருங் குறையாகவும் மதிக்கப்படுகின்றது.

இத்தகைய குறைபாடு நமது தமிழ்மொழிக்கண்ணு முண்டுகொல்? இது விஷயமாக ஆராய்ச்சி செய்தவழித் தோன்றுவன யாவை? ஓராற்றால் உற்று நோக்குமிடத்து இக்குறைபாடு முன்னொரு காலத்திருந்து பின்னர்ச் சிறிது சிறிதாக நீங்கத் தலைப்பட்டு வாராநின்றது. சில நூற்றாண்டுகட்கு முன்னர் எழுதப்பட்டதாகத் தோன்றுகின்ற 'தமிழ் நாவலர் சரிதை' என்றதோர் நூலுளது. அந்

நூல் தமிழ் நாவலர்களுட் சிலருடைய சரித்திரங்களைக் கூறுமுகத்தால் அவ்வந்நாவலர்கள் பற்பல மெய்ங்களிற் பாடிய செய்யுட்களையும் இடையே யெடுத்துரைக்கின்றது. அஃது ஒருவாறு உய்த்தமியுமிடத்துத் தற்காலத்து வெளிப்பட்டுலவும் 'தனிப்பாடற்றிரட்டு' என்னும் நூலையும் போலாகின்றது. இன்னின்ன பாடல்கள் இன்னின்ன சந்தர்ப்பங்களிற் பாடப்பெற்றன வென்பது குறிப்பிக்கப்பட்டிருத்தலின், தனிப்பாடற்றிரட்டினுந் தமிழ் நாவலர் சரிதை மேதக்கதென்பது தேற்றம். தனிப்பாடற்றிரட்டு இத்தமிழ் நாவலர் சரிதையினுதவிகொண்டே தொகுக்கப்பட்டிருக்கலாமென்பது தோன்றுகின்றது.

இது நிற்க. யாழ்ப்பாணத்திற் காசிசெட்டி யென்பாரொருவர் தமிழ்ப் புலவர் சரிதத்தைத் தொகுத்து ஆங்கில மொழியிலெழுதிப் பல்லாண்டுகட்கு முன்னர் வெளியிட்டனர். அது நூலாராய்ச்சி முறையைத் தழுவி ஒருவாறு எழுதப்பட்டுளது; அது காலக்கிரமப்படி யெழுதப்படாமை காலவரையறை காண்டலரிதாகின்றமை பற்றியே போலும். அதன்கண் நல்லிசைப் புலவர் பலருடைய சரிதங் காணப்படாமையாற் குன்றக்கூறலென்னுங் குற்றந் தங்குவதாயிற்று. அதன் பின்னர் யாழ்ப்பாணத்து ஆ. சதாசிவம் பிள்ளை யென்பார் 'பாவலர் சரித்திரதீபகம்' என்றதோர் நூலியற்றிப் பிரசுரித்தனர். அது தமிழ்ப் புலவர் பெயர்களை அகராதிக் கிரமப்படுத்தி யெழுதியதோர் தமிழ் வசனநூலாம்; இடையிடையே அவ்வப் புலவருடைய பாடல்களும் உதாரணமாகக் காட்டப்பட்டுள. கால நிர்ணய விஷயத்தில் இந்நூல் அதிக திருப்திகரமானதா யிருக்கவில்லை. இதன்கட் சில அருமையான விஷயங்களுங் கூறப்படாமற்போயின.

இனிக் கும்பகோணக் கலாசாலையில் தமிழ்ப்புலமை நடாத்தி வரும் மகா வித்துவான் பிரமஸ்ரீ உ. வே. சுவாமிநாதையரவர்கள் தாம் பதிப்பித்த சிலப்பதிகாரத்தினும் மணிமேகலையினும் தமிழ் நூல்கள் பலவற்றைப் பற்றிய குறிப்புக்க ளெழுதியிருக்கின்றனர். இன்னும் புறநானூற்றிலும் நல்லிசைப்புலவர் பலருடைய சரித்திரக் குறிப்புக்களும் அப்புலவர்களை யாதரித்தாரைப் பற்றிய குறிப்புக்களும் வரையப்பட்டுள. இவையனைத்தையும் ஒருங்கு தொகுத்து இன்னுந் தாம் அருமையாகக்கண்டுகுறித்துவைத்துள விஷயங்களையுங்கூட்டித்



தனிநூலாக வெளிப்படுத்தப் போகின்றனரெனக் கேள்வியுற்றுக் கழிபேருவகைப் பூக்கின்றோம். இம்முயற்சி கைகூடுமாறு நம் ஐயரவர்கட்கு இறைவன் திருவருள் புரிவாராக.

இடையிற் பாறைக்கிணறு வெட்டப்புகுந்து முகவையம்பதி முதலிய விடங்களிற் பெரும்புகழ் படைத்தவரும், திருவாமாத்தூரிலிருந்து காலங்கழித்தவருமாகிய 'திருப்புகழ்ச் சுவாமிகள்' என்ற முருகதாச சாமியார் இயற்றிய 'புலவர் புராணம்' என்றதோர் நூல் வெளிப்போந்துளது. [அது கனம்பொருந்திய திவான்பகதூர்-வ. கிருஷ்ணமாசாரியரவர்களாற் பதிப்பிக்கப்படுகின்றது. முதற்பாகம் வெளியாயிற்று. பின்னிரண்டு பாகங்களும் விரைவில் வெளிவரும் என்று நம்புகின்றோம். இதன் முதற்பாகத்திற் சில பகுதிகள் நமது சர்வகலாசாலையின் பிரதமகலா பரீக்ஷைக்கும், கலா வித்தியார்த்திப் பட்டப் பரீக்ஷைக்கும், கலாநாயகப் பட்டப் பரீக்ஷைக்கும், பாடமாயேற்படுத்தப்பட்டுள.] இந்நூல் முழுதுஞ் செய்யுளானியன்றுளது. சாமானியமாகப் புலவர் வீடுகளிற் கதையாகச் சொல்லிக்கொள்ளும் விஷயங்களெல்லாம் ஒருவாறு தொகுத்து இந்நூலின்கட் கூறப்பட்டுள. காலவரையறை, நூலாராய்ச்சி முதலியன இந்நூலின்கட் கண்டிலேம். இதனை யொரு காப்பியமாகக் கருதி ஆராய்தல் ஈண்டு எடுத்த விஷயமன்று. தமிழ்ப்புலவர் சரிதமாகுமட்டில் இஃது ஓராற்றாற் பயன்படுவதாகும்.

இதுகாறும் தமிழ்ப்புலவர் சரித விஷயமாக வெளிப்பட்ட நூல்களைப்பற்றி யுரைத்தாம். இனிச் சிற்சில நூல்களைப் பதிப்பித்த பதிப்பாசிரியர்கள் அவ்வந் நூலின் பதிப்புரைக்கண் நூலாசிரியர் வரலாறுகளும் தாங்கள் ஆராய்ச்சிசெய்தமட்டிற் கூறியிருக்கின்றனர். சிலர் இக்காலத்தில் வெளிப்படும் தமிழ்ப் பத்திரிகைகளில் விஷயங்களாகத் தமிழ்ப் புலவர் சிலரைப்பற்றி யெழுதியிருக்கின்றனர். இதற்கிடையிற் சில்லாண்டுகட்கு முன்னர் அஷ்டாவதானி - வீராசாமி செட்டியார் என்பார் 'விநோத ரசமஞ்சரி' என்பதோர் நூலியற்றியிருக்கின்றனர். அஃது அதன்பெயர்ப் பொருளின்படி விநோதார்த்தமாக எழுதப்பட்டதோர் கதைத் தொகுதியெனக் கொள்ளற்பாலதேயன்றித் தமிழ்ப்புலவர்களைப் பற்றியதோர் மெய்ச்சரிதமாகக் கொள்ளப்படுவதன்று.

எனவே குறைபாடுகளனைத்தும் நீங்கி, யாவரும் ஏற்று மேற்கொள்ளத்தக்கதாய் தமிழ்ப்புலவராவா ரனைவரையும் பற்றி ஒருங்கே கூறுவதாய் அன்னாரியற்றிய நூல்களின் ஆராய்ச்சிகளுமுடையதாய்க் காலவரையறையும் தெளிவுபெற நியாய வாயிலாற் காட்டுவதாய் ஒரு தமிழ்நூல் இதுகாறும் வெளிப்பட்டிலது. அத்தகைய தொன்று என்று வெளிப்படுமோ? அறியோம். இந்த விஷயத்தைக்குறித்து நம்முடைய மதுரைப் புதுத் தமிழ்ச் சங்கத்தின் அதிகாரிகள் நன்கு கவனித்து நடப்பாராக.

பத்திராதிபர்.

---

## RAMAYANA SARAM.

## இராமாயண ஸாரம். *

---

[260-ஆம் பக்கத்தொடர்ச்சி.]

யாதேனுமொரு விஷயத்தைச்செய்யப் புகு முன்னர், அதனை எவ்வாறு செய்து முடிக்கவேண்டுமென்பதைப்பற்றி ஒவ்வொருவரும் தமது மனத்துள் நன்காராயவேண்டியது அவசியமன்றோ? ஆகவே, வான்மீகியாரும் ஸ்ரீராம சரிதத்தைச் சுலோகங்களான் இயற்றுவதற்கு முந்தி அச்சரிதத்தில் நிகழ்ந்த ஒவ்வொரு செயலினைப்பற்றியும் ஆழ்ந்த கருத்துடன் ஆராயத் தொடங்கித் தமது அகக்கண்களைத் திறந்து அவையனைத்தையும் உற்று நோக்கினார். அங்ஙனஞ்செய்யவே, ஸ்ரீராமர், இலக்ஷ்மணர், சீதை முதலியவர்கள் அவரவர் நிஜவுருவத்தோடு எதிர்நின்று தத்தம் நிலைமைக்குரிய செயல்களைப் புரிவது போல் வான்மீகியாருடைய ஞானதிருஷ்டிக்குத் தோற்றியது. இவ்வாறாக ஸ்ரீராமபிரானுடைய சரித்திரம் முழுவதையும் பிரத்தியட்சத்திற் பார்ப்பதைப் போலவே, வான்மீகியார் தமது ஞானக்கண்ணினாற் கண்டு கொண்டார். ஒவ்வோர் அம்சத்திலும் உண்மையானதோர் உயிருள்ள சித்திரம் போலும் சரித்திரம் தமக்கு முன்னே விரிந்து தோன்றுமாற்றைக் கவனித்துவந்தார். யாவற்றையுஞ் சுற்றியிருப்பதும், யாவற்றினூடும் புகுந்திருப்பதுமாகிய சூக்கும ஆகாயத்தின்கண் உலகின்கண் நிகழும் ஒவ்வொரு செயலும் அழியாததோர் குறியீடு செய்வதாயிருக்கின்றது. அங்ஙனம் குறியீடு செய்யாத காரியமொன்றும் என்றும் நிகழ்வதில்லை. ஆதலானன்றே வான்மீகியார் ஸ்ரீராமசரிதமனைத்தையும் உய்த்துணர்வா ராயினார்.

* Adapted from Mrs. Annie Besant's SHRI RAMA CHANDRA, The Ideal King.



நாம் நம்முடைய அறிவை விருத்தி செய்வதற்கு இரண்டுவிதமான வழிகள் உள. மற்றவர்கள் நமக்குக் கூறுவதைக் கேட்டும், அவர்கள் எழுதி வைத்துள்ள நூல்களைப் படித்தும் விஷயங்களை யறிந்துகொள்வது ஒரு வழியாகும். மற்றொரு வழியாவது, இயற்கையிலேயே நமக்குண்டாயிருக்கும் சிற்றறிவைக் கொண்டு ஒவ்வொரு விஷயத்தையும் பற்றித் தீர்க்காலோசனை செய்து நாமே அதன் திட்பநுட்பங்களைச் சிந்தித்துத் தெளிந்துகொள்வது. இவ்விரு வழிகளுள்ளும், பின்னர்க் கூறப்பட்டதே மிகவும் கடினமானது; ஆயினும், அதுவே மிகவுஞ் சிறப்புடைத்து. முதலிற் கூறிய அறிவையடைந்த பின்புதான், இரண்டாவது சொல்லப்பட்ட அறிவை நாம் பெறுதல் கூடும். நம்மிலும் அறிவில் உயர்ந்தவர்கள் சொல்வது யாதோவென்பதை நாம் முதலில் தெரிந்துகொள்ளல் வேண்டும்; அதை நன்றாய்த் தெரிந்துகொண்ட பின்பு, அதைப்பற்றி நாமே தனியாய் ஆழ்ந்த கருத்துடன் ஊன்றிப்பார்த்து அதன் உள்ளுறை பொருள்களைப் பிறருதவியின்றி நாமே உய்த்துணர்ந்து கொள்ளல்வேண்டும்.

வான்மீகியார் செய்ததும் இவ்வாறேயாம். முதலிற் கதையைத் தெரிந்துகொண்டார். அதன்பின்னர் அதைப்பற்றி நன்றாயோசித்து, அதை இன்னவித சுலோகங்களினால் அமைக்கவேண்டுமென்பதையும், அவற்றை இன்னவாறு வகுக்கவேண்டுமென்பதையும் முன்னதாகத் தம் மனத்துக்குள்ளே வரையறுத்துக் கொண்டு, பின்பு சுலோகங்கள் இயற்ற ஆரம்பித்து, ஸ்ரீராம சரிதம் முழுவதையும் இருபத்து நாலாயிரம் சுலோகங்களினாற் பூர்த்திசெய்தார். இந்தச் சுலோகங்கள் யாவும் ஐந்நூறு அத்தியாயங்களாகவும், ஏழு காண்டங்களாகவுந் தொகுக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு இயற்றப்பட்ட சுலோகங்களைப் பலர்க்கும் பயன்படுமாறு பரவச் செய்வதற்கு அக்காலத்திற் போதிய மார்க்கங்கள் கிடையா. புத்தகங்களுஞ் சுவடிகளும் அக்காலத்திற்குப் பின்தோன்றியனவேயாம். பாஷைகளெல்லாம் அப்போது ஒலிவடிவிலேயே இருந்தன; வரிவடிவிலிருந்த பாஷை ஒன்றேனுங் கிடையாது. ஆகவே, வான்மீகியார் தாமியற்றிய சுலோகங்களைச் சிறப்புடன் பாடத்தக்க சிறார் யாவரென்று யோசித்துக்கொண்டிருக்கையில், இளஞ் சந்நியாசிகள் இருவர் வந்து அவர் இணையடிகளில் விழுந்து வணங்கினார்கள். அவர்களில் ஒருவருடைய பெயர் **குசன்**; மற்றவருடைய பெயர் **லவன்.** அவர்களிருவரும் ஸ்ரீராமபிரான் புத்திரர்கள்; ஆனால், அவர்களுக்குத் தாம் இன்னாருடைய புத்திரரென்று அப்போது தெரியாது. அதற்குக் காரணம் நாம் பின்னால் அறிந்துகொள்வோம். அந்தப் பால்ய சந்நியாசிகளிருவரும் இனிய குரல் படைத்தவர்களாயும், சங்கீத சாஸ்திரத்தில் வல்லவர்களாயுமிருந்தபடியால், வான்மீகியார் தாமியற்றிய சுலோகங்களனைத்தையும் அவர்களுக்குப் போதித்து, அவைகளை முனிவர் குழாங்களிலும், பிராமண கோஷ்டிகளிலும், சான்றோரவைக்களங்களிலும் பாடும்படி

ஆஞ்ஞாபித்தனுப்பினார். அங்ஙனம் ஆஞ்ஞாபிக்கப்பட்ட அவ்விளைஞர்களிருவரும் அந்தச் சுலோகங்களை அநேக விடங்களில் பாடிவிட்டுப் பின்பொருநாள் அயோத்திமா நகரத்து வீதிவழியாகச் சென்றார்கள். அயோத்திமாநகரமானது அக்காலத்தில் மகா வைபவத்தோடு ஸ்ரீராம சந்திரனால் அரசாளப்பட்டு வந்தது. வீதிவழியாகச் சென்ற இச்சிறுவர்களை அரசன் பார்த்தான்; அகமகிழ்ந்தான். அச்சிறுவர்களின் பேரழகும், உருவத்தின் தோற்றமும் ஸ்ரீராம சந்திரனுடைய கண்ணையும் மனத்தையும் ஒருங்கே கவர்ந்தன. உடனே அவர்களை வரவழைத்துத் தன்னுடைய இராஜசபையின் முன்பாகப் பாடுமாறு மன்னனும் வேண்டினான்; மைந்தரும் இணங்கினார்கள். ஸ்ரீராம பிரானின் பிறப்பு வரலாற்றையும், அவருக்கு நேர்ந்த துன்பங்களையும், துக்கங்களையும், சீதாபிராட்டியாருக்குநேர்ந்த பேராபத்துக்களையும், இலக்ஷ்மணருடைய இலக்ஷணங்களையும், பரதருடைய விரதமகிமையையும் ஏனைய வெல்லா விஷயங்களையும் அந்தந்தக் கதா புருஷர்களின் முன்னிலையிலேயே கடல்மடை விண்டாற்போலக் கீதமாரியைப் பொழிந்தார்கள். ஆங்கிருந்தா ரனைவரும் இந்த விந்தையான சரித்திரத்தைக்கேட்டு ஆச்சரியமும் ஆனந்தமு மடைந்து மெய்ம்மறந்து பரவசமானார்கள். அச்சிறுவர்களிருவரும் பார்வைக்குப் பரமனடியாரைப் போல வேடம் பூண்டிருந்த போதிலும், அவர்களிடம் பொலிவுடன் விளங்கிய இராஜ கம்பீரத் தோற்றத்தால், அச்சபையிலிருந்தா ரனைவரும் அவ்விளைஞர் முனிவரோ அல்லது மன்னரோவென மயங்கினார்கள்.

இந்தச் சிறுவர்கள் மூலமாய் வெளிவந்த ஸ்ரீராமபிரானுடைய சரித்திரத்தை நாம் கேட்பதற்கு முன்னம், இச்சரிதம் உண்டான காலத்தின் நிலைமையைப் பற்றியும், ஸ்ரீராமபிரான் வந்தவதரிக்க நேர்ந்த காரணங்களைப் பற்றியும் இங்கே சற்றுக் கவனிப்போம்.

இவ்வுலகத்தின் கால வரையறையான்து **சத்திய (கிருத)** யுகமென்றும், **திரேதா**யுகமென்றும், **துவாபர**யுகமென்றும், **கலியுக**மென்றும் நான்கு யுகங்களாக (அதாவது பெரும் பிரிவுகளாக) வகுக்கப்பட்டுள்ளன. ஸ்ரீராமர் அவதரித்திருந்தது திரேதாயுகத்தின் அந்திய காலமாகும். அவர் இவ்வுலகத்தினின்றும் மறைந்த பிறகு துவாபர யுகம் ஆரம்பித்தது. அந்த யுகத்தின் அந்தியத்தில் ஸ்ரீ கிருஷ்ண பகவான் தோன்றினார்; அவர் இறந்ததும் கலியுகம் பிறந்தது.

ஸ்ரீராமபிரானை உண்மையில் யாவரென்று நாம் ஊன்றிப் பார்க்கில், அவர் சாமானியராகக் காணப்படவில்லை. அவரை யுத்தத்தில் வல்ல ஒரு வீரனென்றாவது, அல்லது பராக்கிரமத்திற் சிலாக்கியம் பெற்ற ஒரு மன்னவன் என்றாவது சாமானியமாகக் கருதுவதும் அறிவீனமாகும். அவரோ, சாமானியாதீதர்; அவர் தெய்வத்தன்மை வாய்ந்த அவதாரபுருஷர். அங்ஙனமாயின், உலகத்துள்ள மாந்தரெல்லோரும் தேவதாம்சரல்லரோ? ஆம்;



தேவதாம்சர்தாம்; ஒவ்வொருவருடைய ஹிருதயத்திலும் பரமாத்மாவானது பிரதிபலித்துக் கொண்டிருக்கின்றது; அந்தப் பரமாத்மாதான் ஒவ்வொருவரையும் நற்பதவிக்குப் பிடர் பிடித்துந்துகின்றது; அதற்கு எவரொருவர் ஈடுபட்டு உடன் செல்கின்றாரோ, அவரே பாக்கியங்கள் பலவற்றுள்ளும் மேலான பாக்கியத்தைப் பெற்ற புனிதராகின்றார். ஆனால், அவதாரமென்பதோ, இதனினும் ஆழ்ந்த கருத்துடைத்து. ஸ்ரீராமபிரான் அவதார புருஷர் என்று நாம் சொல்லும்போது, **அவதாரம்** * என்னும் பதமானது, விண்ணுலகினின்றும் மண்ணுலகத்திற்குக் கடவுளே மானிட உருவத்தோடு போந்தனர் என்னும் பொருள் பயப்பதா யிருக்கின்றது. அந்த அவதார காலத்தில் அவர் தெய்வத்தன்மை நிறைந்தவராயிருக்கின்றார். அப்போது அவரிடம் விளங்குந் தெய்வத்தன்மை மாந்தரிடத்தில் விளங்குவதைப் போலன்று. சிற்றறிவும் சிறுதொழிலும் சின்னாளும் பல்பிணியுமுள்ள மாந்தராம் மக்களிடத்து விளங்குந் தெய்வத்தன்மை அணுவிலும் அணுவாகவுள்ளது; அவதார புருஷராம் அவரிடத்து விளங்குந் தெய்வத்தன்மையோ, பரிபூரணமாயுள்ளது.

இவ்வாறு அவதாரங்கள் தோன்றுவதற்குப் பல காரணங்கள் உள. உலகத்திலே நன்மைசெய்வோர்களுக் குதவிபுரிந்து அவர்கள் வலிமையைப் பெருக்கவும், தீமை செய்வோர்களையழித்து அவர்கள் வலிமையைக் குறைக்கவும் கடவுள் அவதார புருஷராய்த் தோன்றுகின்றா ரென்பது ஒரு முக்கிய காரணமாகும். இதுவே எல்லா அவதாரங்களுக்கும் பொதுவான காரணமென்று சொல்லலாம்:

"சாவாது பிறவாது தனிமுதலா யிருந்தநா
னாவிவ் வுலகுபடு மழிதுயர்தீர்ப் பதற்காக
மேவாது நின்றேயென் மாயையினான் மெய்யேபோ
லோவாது பிறந்திடுவே னுகந்தோறு முகந்தோறும்."

"ஏ பாரதா! தருமம் அழியும் போதும், அதருமம் அதிகரிக்கும்போதும், யானே நேரில் வருகின்றேன். நல்லவர்களைக் காத்துத் தீயவர்களையழித்துத் தருமத்தை நிலைநாட்டுவதற்காக நான் யுகத்துக்கு யுகம் பிறந்துகொண்டிருக்கின்றேன்" † என்று பகவற்கீதையிலேயே சொல்லப்பட் டிருக்கின்றது.

அவதார புருஷர் துஷ்ட நிக்கிரகஞ் செய்யும் விஷயமாக ஓர் ஆசங்கை உண்டாகின்றது. உலக முறையானது ஒன்றற்கொன்று மறுதலைப்பட்ட சக்திகளால் இயலுகின்றது. ஈசுவரனால் உயிர்ப்பிக்கப்பட்ட அகவாழ்க்கையின்

* அவ—கீழே, த்ரு—குதித்தல்

† பகவற்கீதை I-V-7-8.

வன்மைகளனைத்தையும் இவ்வுலகமானது வெளிப்படுத்துகின்றது. பூமியி லிடப்பட்டதோர் விதையானது முளைத்துச் செடியாகித் தளிர்த்துப் பூத்துக் காய்த்துத் திவ்யமான கனிகளையுந் தருகின்றதன்றோ? அவ்வாறே இவ்வுலகமும். பரமாத்மா வென்கிற விதையானது மாயையிலே இடப்பட்டு, உலகமாக உற்பவித்து, மக்களையே மலர்களாகக் கொண்டு, வளர்ச்சியுற் றிற்கின்றது. அம்மலரினின்றுமே தெய்வீக மென்னும் தீங்கனி தோன்றுகின்றது. ஏனெனில் நாமுங் கடவுளரே; ஆனாற் கடவுளாகும் நெறியிலுள்ளோம்.

இந்தப் பிரபஞ்சம் இயங்குவதற்கு இரண்டு வித சக்திகள் இன்றியமையாதவைகளாயிருக்கின்றன. இந்த இரண்டு சக்திகளும் ஒன்றுக் கொன்று மாறுபட்டிருப்பது போலக் காணப்படுகின்றன. ஒரு சக்தியானது பிரபஞ்ச விருத்திக்கு அனுசரணையா யிருக்கின்றது; இந்தச் சக்தியைத்தான் பிரபஞ்ச விருத்திக்கு உதவி செய்வதாக நாம் நினைக்கின்றோம். மற்றொரு சக்தியோ பிரபஞ்ச விருத்திக்கு எதிர்முகமாய் நின்று வேலை செய்கின்றது; இந்த சக்தியை அதற்கு இடையூறு செய்வதாக நாம் நினைக்கின்றோம். ஆனால் அவற்றின் உண்மை இஃதன்று. வெளித் தோற்றத்தால் நாம் வேறுபட நினைக்கலாயினோம். ஏனெனில், பிரபஞ்ச விருத்தியானது நடைபெற வேண்டு மானால், அதற்கு அனுசரணையாகத் தோற்றிய சக்தி எவ்வளவு அவசியமோ அது போலவே அதற்கு எதிர் முகமாய் நின்ற சக்தியும் அவசியமா யிருக்கின்றது. இதற்கு உதாரணமாக ஒரு துவிசக்கர வண்டியை * யெடுத்துக்கொள்வோம்; இந்த வண்டியைப் பூமியின்மீது படாமல் உயரத்திலே தூக்கிப் பிடித்துக்கொண்டு, அதன் சக்கிரங்களைச் சுற்றினால், அந்தச் சக்கிரங்கள் ஒரே யிடத்தில் கிறுகிறு வென்று சுற்றுமே யொழிய, அந்த வண்டியானது சற்றேனும் இடம் விட்டுப் பெயருமோ? அந்த வண்டி இடம் விட்டுப் பெயர வேண்டுமானால், அதற்கு ஒருவிதமான தடை வேண்டும். அதற்காக அதைப்பூமியின் பேரில் நன்றாய்ப் படியவைத்துப் பின்பு அதன் சக்கிரங்களைச் சுற்றுவோமானால், அப்போது அந்த வண்டி அதிவேகமாய்ச் செல்லும். இவ்விதமான இயல்பை நாம் ஒவ்வொரு விஷயத்திலுங் காணலாகும். ஒரு விஷயம் அபிவிருத்தி யடையவேண்டுமானால், அந்த விஷயத்துக்கு இடையூறுக ளிருக்கவேண்டியதும் ஆவசியகம். நாம் மேலே குதித்தெழும்ப வேண்டுமானால், நம்முடைய முழுப்பலத்தையுந் தாங்கி நிற்க ஒருவிதத் தடை வேண்டியதாயிருக்கின்றது. அதற்குத் தரை உதவிசெய்கின்றது. இந்தத் தரையின்மீது உதைத்தெழும்பினால்தான் நாம் மேலே கிளம்புதல் கூடும். இப்படி நம்மை மேல்நோக்கிச் செலுத்துவதற்கு எதிராய் நின்று உதவிசெய்யுந் தடைகளையே 'தீமை' அல்லது 'கெடுதி' யென்று உலகத்தில் மாந்தர் கூறுவார்கள்; ஆனால், இந்தத் தீமைகள்தாம் நமக்கு அளவிறந்த நன்மைகளைச் செய்கின்றன வென்பதை நாம் ஒவ்வொருவரும்

* Bicycle.



நன்றாய்த் தெரிந்துகொள்ளல் வேண்டும்; அந்தத் தீமைகளுக்கு நாம் இணங்கிக் கீழ்ப்படிந்து விடாமல், அவற்றை எதிர்த்து மேல்நோக்கிச் செல்வோமாகில், நமக்கு நன்மை உண்டாகுமென்பது நிச்சயம். தீமைகளுக்கு இணங்கி விடுவோமானால், நமக்கு நன்மை ஒருநாளும் உண்டாகமாட்டாது. மேலே எழவேண்டுமானால், பூமியின்மீது குப்புறக் கவிழ்ந்து படுத்துக்கொள்வதனால் யாது பயன்? தேகத்திற் பலம் அபிவிருத்தியடைய வேண்டுமானால், அதற்கு முழுச்சோம்பேறியாய் மூலையிற் படுத்துறங்கினால் எவ்வளவேனும் பலம் வருமோ? பந்து விளையாடியும், பளுவான வஸ்துக்களைத் தூக்கியெறிந்தும், அவயவங்களைப் பயிற்சிசெய்து, அவைகளுக்கு வேலையிட்டு வந்தாலன்றோ, அந்த அவயவங்கள் மேன்மேலும் பலமுடையனவாகிப் பின்னும் பளுவான வஸ்துக்களையும் எளிதில் தூக்கியெறியத்தக்க பேராற்றலைப் பெறுவனவாகும்? அதுபோலவே, நமக்கு நேரும் தீமைகளை அவ்வக்காலத்திலேயே எதிர்த்துச் செல்ல நாம் முயலுவோமானால், அத்தீமைகளை வெல்லத்தக்க வல்லமையை, அத்தீமைகளே நமக்குக் கொடுக்கும்; அங்ஙனமன்றி, நமக்கு நேருந் தீமைகளுக்கு நாம் இணங்கிவிடுவோமானால், அவைகளே முன்னின்று நம்மை நாசஞ்செய்யும். ஆகையால், நம்முடைய வாழ்நாட்களில் துன்பங்கள் சம்பவிக்கும்போது அவைகளைக் கண்டு அஞ்சி நடுங்கி அதைரியப்பட்டு நில்லாமல், அறிவென்னுந் துணைவனைக் கொண்டு, மிதித்து மேற்செல்வோமானால், முடிவிற் பெறற்கரிய நன்மைகளையும் பெறுதல் கூடும். நம்முடைய விருத்திக்கு நன்மை யெப்படிக் கடவுளாற் கொடுக்கப்பட்டிருக்கின்றதோ, அதுபோலவே, தீமையும் அவராலேயே கொடுக்கப்பட்டிருக்கின்றது. இவ்வுண்மையை,

* "ஒன்றாகி மூலத் துருவம் பலவாகி
யுணர்வு முயிரும் நிறிதாகி யூழி
சென்றாற் சுறுங்காலத் தந்நிலைய தாகித்
திறத்துலகந் தானாகிச் செஞ்செவே நின்ற
நன்றாய ஞானத் தனிக்கொழுந்தே யெங்க
ணவைதீர்க்கு நாயகமே நல்வினையே நோக்கி
நின்றாரைக் காத்தி யயற்பேரைக் காய்தி
நிலையில்லாத் தீவினையு நீதந்த தன்றோ"

என்னும்ஆன்றோர் வாக்கிலும் அறியலாகும். நன்மை தீமை யென்னுமிரண்டும நம்முடைய விருத்தியையே நாடுகின்றன; ஆனால், இரண்டும் ஒரேவிதத்தி லல்லாமல் வெவ்வேறு விதத்தில் நாடுகின்றன.

இதனை யறியாது ஜனங்கள் தீமைகளுக்கு இணங்கி விடுவார்களானால், உலகமெங்கும் தீமைமிகுந்து பிரபஞ்ச விருத்திக்கே அபாயம் நேரிடும்போ

* கம்பராமாயணம்.

லிருக்கின்றது. அப்போது கடவுள் உலகில் அவதாரமாய்த் தோன்றி நன்மை தீமைகளைச் சமநிலைப்படுத்துகின்றார். இத்தகைய சமயங்களில் தீமைகளுக்கெல்லாம் உறைவிடமாய் ஒருவன் காணப்படுகின்றான்; அவனே அவதார புருஷருக்குச் சத்துருவென முற்பட்டு நிற்கின்றான். இவ்வாறு இராமாயணத்திற் காணப்பட்டவன் இராவணன்; தீமைகளெல்லாந் திரண்டுருண்டு வளர்ந்த மலை போன்றவன். நன்மைகளெல்லாம் ஒருருவென விளங்கியவர் ஸ்ரீராமசந்திரர். இங்ஙனம், நன்மைக்கு ஸ்ரீராமபிரானும் தீமைக்கு இராவணனும் பிரதிநிதிகளாய் நின்று அமர்புரிய, ஸ்ரீராமபிரானே வெற்றிபெற்றார். நன்மையுந் தீமையு மெதிர்நின்றால் நன்மைதானே ஜயமடையும்? நெருப்பை யவிக்கச் சருகாலாகுமோ? மெய்யைப் பொய்வெல்லுமோ? குணத்தைக் குற்றங் கொல்லுமோ? இன்பத்தைத் துன்பம் அழிக்குமோ? சித்தை ஜடம் ஜெயிக்குமோ? இரவியை இருள் மூடுமோ? அறத்தை வெல்ல யாராலாகும்? ஆகவே, இராவணன் தோல்வியடைந்தான்; ஸ்ரீராமபிரானாற் கொலையுண்டான். ஆனால், கொலையுண்ட பிறகு அவனுக்கு வைகுண்ட பதவி கிடைத்தது. இராவணனோ, தீமைகளுக்குப் பிரதிநிதியா யிருந்து கெடுதிகளையே செய்துவந்தவன். அங்ஙனமிருந்தும், அவனுக்கு அவ்வித பதவிகிடைத்ததனால், தீமைக்கும் மூலாதாரமாயுள்ளவர் ஈசுவரர்தாமென்பது கரதலா மலகம் போல் விளங்குகின்ற தன்றோ?

அவதார முண்டாவதற்கு மேலேகூறிய காரணமன்றி வேறு சில காரணங்களு முண்டு. அவதார புருஷர் சில சமயங்களிற் குருவாய்வந்து உபதேசஞ் செய்கின்றார். கிருஷ்ணாவதார மெடுத்துப் பகவற்கீதை உபதேசித்தருளியதை யாவரே அறியாதார்? சில சமயங்களில் உலகினர்க்குத் திருஷ்டாந்தமாய்க் காட்டும் பொருட்டு அவதாரந் தோன்றுதலுண்டு. இவ்வாறு திருஷ்டாந்தமாய் விளங்குவது முற்றத் துறந்த முனிவர்களுக்கும் சந்நியாசிகளுக்கு மன்று. இல்லறம் பூண்டொழுகும் புருஷனும் மனைவியும், மக்களும், சகோதரரும் இன்னவாறு ஒழுகவேண்டு மென்பதையும், அரசர்க்கும் குடிகளுக்கு முள்ள ஒற்றுமை யின்ன தென்பதையும் தாமே தம்முடைய அவதாரகாலத்தில் நடந்து காட்டி விளக்குகின்றார். இவற்றிற்கெல்லாம் ஒப்பற்ற திருஷ்டாந்தமாய் விளங்கியதுதான் ஸ்ரீராமாவதாரம். உத்தம புருஷருடைய இலக்ஷணங்களை நாம் தெரிந்துகொள்ள வேண்டுமானால், இல்வாழ்க்கையிலுள்ள சகல தருமங்களையும் வெள்ளிடை மலைபோல் விளக்கிக்காட்டிய ஸ்ரீராமபிரானினும் மேலான ஒருவரை நாம் எந்த நூலிலுங் காண்டலரிது.

ஸ்ரீராமாவதாரத்தின் முக்கியமான கருத்து க்ஷத்திரிய தருமத்தை நன்றாய் விளக்கிக்காட்டவேண்டுமென்பதேயாம். ஏனெனில், க்ஷத்திரியரெல்லோரும் தங்கள் புஜபலபராக்கிரமத்தையும் அரசாளும் ஆற்றலையும் துன்



மார்க்கத்திற் பிரயோகிக்கத் துணிந்துவிட்டார்கள். நாடெங்கும் கொடுங்கோன்மை மிக்கது. ஒவ்வொரு க்ஷத்திரியனுக்கும், மற்றவனைக் காப்பதற்குப் பிரதியாக, அவனை வதைப்பதே தொழிலாய் முடிந்தது. யாவரும் சுயநலப் பிரியராயினார்கள். இதுவோ க்ஷத்திரிய தருமம்? இதற்கோ இறைவன் அவர்களுக்கு அளவிறந்த பலத்தைக் கொடுத்தருளினான்? பலவான் கடமை எளியானைக் காத்து இரக்ஷிப்பதன்றோ? அவனைக்கொன்று பக்ஷிப்பதன்றே? இதுபோலவே, பலத்தில் மிக்க இளைஞனெவனும், தன்னைப்பார்க்கிலும் பலத்திலும் வயதிலுங் குறைந்த சிறுவர்களை ஒருநாளும் அடித்து வருத்துதல் கூடாது. அவர்களை அன்புடனும் பக்ஷமுடனும் பாராட்டல்வேண்டும். அல்லாத பக்ஷத்தில், நெறிதப்பி யொழுகிய சிறுவன் பற்பல துன்பங்களாற் பரிபவப்படநேரும்.

* "எளியரை வலியர் வாட்டின் வலியரை யிருநீர் வைப்பி
னளியறத் தெய்வம் வாட்டும்"

என்ற மூதுரையும் மேற்கூறிய விஷயத்தை வலியுறுத்துவ தன்றோ?

க்ஷத்திரியர்கள் தங்கள் பலத்தைத் துன்மார்க்க வழியிற் செலுத்தினார்களன்றே? இதற்குத் தண்டனையாகப் **பரசுராமர்** க்ஷத்திரிய வம்ச முழுவதையும் அழித்து நாசமாக்கினார். அவர்களில் ஒவ்வொருவரையும் தம்முடைய கோடரியாற் குத்தி வதைத்துத் துன்மார்க்கத்திற் பலத்தைச் செலுத்தும் பிறருக்கும் அதே கதி கிடைக்குமென்பதை அவர்களுக்கு விளங்கக் காட்டினார். அந்த நீதி பரசுராமராற் போதிக்கப்பட்ட பிற்பாடு, உத்தமமான க்ஷத்திரியன் இன்னவாறொழுக வேண்டுமென்பதற்குத் திருஷ்டாந்தமாக ஸ்ரீராமபிரான் அவதாரஞ் செய்தார்.

இவர் கொண்டிருந்த குணங்களெல்லாம் க்ஷத்திரியருக்கு மிகவும் அவசியமானவைகளாகும். அவ்வித குணங்களெல்லாம் இப்போது இந்தியாவில் முன்னிருந்த வாசனையுமின்றி அழிந்துபட்டுக் கிடப்பதை என்னென்று சொல்லலாம்? ஒரு ஜாதியார் முன்னுக்கு வரவேண்டுமானால், அவர்களிடம் வீரத்தன்மை, அளவிறந்த பலம், துன்பங்களைச் சகித்திருக்கும் வல்லமை, கௌரவத்தின்மீது ஆசை, துஷ்டநிக்கிரக சிஷ்டபரிபாலனஞ் செய்யுந் திறமை, முதலிய நற்குண நற்செய்கைகள் நன்றாயமைந்திருத்தல் வேண்டும். இவைகளை யெல்லாம் பூர்வீக இந்தியாவிலிருந்த வீரர்கள் மிகுதியாகப் பெற்றிருந்தார்கள்; அதனால்தான் அப்போது இந்தியாவும் மிகப்பொலிவுடன் விளங்கிக்கொண்டிருந்தது. இப்போதுள்ள வீரர்களோ, அவைகளை அலக்ஷியம் செய்ய ஆரம்பித்து விட்டார்கள்; ஆகவே, இந்தியாவின் சிறப்பும் கொஞ்சம் கொஞ்சமாய்க் குறைந்துபட ஆரம்பித்துவிட்டது. எந்த ஜாதியார் மேற்கூறிய குணங்களைக் கைசோர விடுகின்றார்களோ, அந்த ஜாதி

* காஞ்சிப்புராணம்.

யார் மேன்மை யடைவார்களென்று கனவிலுங் கருதுவதற்கு இடமில்லை. ஆகையால், அந்த உத்தமகுணங்களை இன்னமுங் கைசோரவிடாது, அவற்றை மீண்டுங் கைக்கொள்ள நாம் ஒவ்வொருவரும் முயலுவோமாக.

வீரத்தன்மையும் பலமும் யார் ஒருங்கே பெற்றிருக்கின்றார்களோ, அவர்களிடம் கெட்ட எண்ணமும் அகங்காரமும் உடன்தோன்றி விடுவது வழக்கம். ஆனால், ஸ்ரீராமசந்திர னிடத்தில் இத்தகைய துர்க்குணங்கள் எள்ளளவேனும் இருந்தது கிடையாது. அயலாரிடத்து அன்பும், ஐங்குரவரிடத்து மரியாதையும், வயதிலும் அறிவிலும் உயர்ந்தோரிடத்து வணக்கமும், ஸ்ரீராமபிரானிடம் ஆபரணங்களாய் விளங்கின. இவ்வாறே நம்மிந்தியாவிலுள்ள சிறுவர்கள் எவ்வளவுதான் வீரத்தன்மையும் தைரியமும் பெற்றபோதிலும், கொஞ்சமாவது இறுமாப்படைதலே கூடாது; இவர்களுக்குப் பெரியோரிடம் வணக்கமும் பக்தியும் இருந்தால் மட்டில் இவர்களுடைய வீரத்தன்மைக்குச் சிறப்புண்டு.

இங்ஙனங் கூறியதனால் வயதில் முதிர்ந்தவர்களையும் உன்னத பதவியிலிருப்பவர்களையும் பார்த்துச் சிறுவர்கள் மனநடுக்கமும் அச்சமுங் கொள்ள வேண்டுமென்று எண்ணவேண்டுவதில்லை. மைந்தன் நன்னடையிலிருந்தால், தந்தை கண்டு சிந்தை களிப்பானல்லனோ? சிஷ்யன் உத்தம வழியிற் சென்றால், ஆசிரியன் பார்த்து அகமகிழ்வானல்லனோ? சிறியவர்கள் கூரிய புத்தியும் நேரிய நடையுமுடையவர்களா யிருந்தால், அவர்களைக்காணும் பெரியவர்கள் அவர்கள் புத்திசாலித் தனத்துக்காக வியந்து புகழ்வார்களே யொழிய அவர்களை இகழார்கள். அதுபோலவே, ஒருவன் வீரத்தன்மையும், மனோதைரியமும், பேராற்றலும் பெற்றிருந்தால், அவனைக்காணும் மற்றவர்கள் அவனுடைய பெருமைவாய்ந்த குணங்களைக்கண்டு மெய்ச்சிக் கொள்வார்களே யொழிய, அவன் தம்மிடம் வணங்கா முடியனாயிருக்கின்றானே யென்று அவனை ஒருநாளும் இழித்துக்கூறார்கள். ஏனெனில், கற்றாரன்றே கற்றாரைக் காதலிப்பார்?

* "நற்றாமரைக் கயத்தி னல்லன்னஞ் சேர்ந்தாற்போற்
கற்றாரைக் கற்றாரே காமுறுவர்."

† "கற்றோ னருமைகற்றோ னேயறியும் வந்திமகப்
பெற்றோ ளருமையறி யாள்."

அவ்வாறே, வீரர்தாம் வீரனையும் விரும்புவார். வீரர்களின் உத்தம குணமும் இதுவேயாம்.

செய்யூர் - முத்தைய முதலியார்.

* மூதுரை † பாலபோதம்



# THE BLIND BARD-VI'RARA'GHAVA MUDALIYAR.

## அந்தகக்கவி வீரராகவ முதலியார்.*

அந்தகக்கவி வீரராகவ முதலியாரென்பவர், † செங்கற்பட்டு ஜில்லாவிலுள்ள பொன்விளைந்த களத்தூர் (பொற் களந்தை) க்கருகிலுள்ள பூதூரிலிருந்த **வடுகநாத முதலியார்**க்குப் புத்திரரா யுதித்தனர். இவர் பூர்வ கன்மத்தின்பலனாற் பிறவிக்குருடராயிருந்தும் கல்வியில் ஆதிசேடனையும் அகத்தியனையும் போன்று பிரசித்திபெற்றவராயினர். இவர் காலத்தில் இவர் குடும்பத்தார் **பூதூர்** நீங்கிப் **பொற்களந்தை** குடிபுக்கனர். இவர் காஞ்சிபுரஞ்சென்று கல்வி பயின்றனர் என்பதும் பிறகு கல்வியிற்சிறந்து விளங்கினர் என்பதும் "தமிழ் நாவலர் சரிதை" ‡ யிலுள்ள பின்வரும் அடிகளாற் றெரியவரும். "கவிவீரராகவன் காஞ்சிபுரத்திற் படித்தபோது கந்தபுராணங் || கச்சியப்பர் பாடியது :—

"போங்குபுக ழயோத்தியில்வாழ் தசரதமன்னன் போனிடத்தும் பூதூர்வேந்தன்
துங்கவடு கன்னிடத்தும் வீரரா கவரிருவர் § தோன்றி னரால்
அங்கொருவ ¶ னொருகலைமா னெய்திடப்போய் வசைபெற்றா னவனி பாலன்
இங்கொவன் § பல்கலைமா னெய்திடப்போய்க் கவியினா லிசைபெற் றானே."

"வடாயி ரங்கோடி †† யெழுதாது தன்மனத் தெழுதிப் படித்தவிரகன்
இமசேது பரியந்த மெதிரிலாக் கவிவீர ராகவன் விடுக்குமோலை
சேடாதி பன்சிர மசைத்திடும் புகழ்பெற்ற திரிபதகை குலசேகரன்
தென்பாலை சேலம் புரந்துதா னந்திர்த்த செழியனெதிர் கொண்டுகொள்க
‡‡ பாடாத கந்தருவ மெறியாத கந்துகம் பற்றிக் கொலாத கோணம்
பறவாத கொக்கனற் பண்ணாத கோடைவெம் படையிற் §§ றொடாதகுந்தம்

* 'செய்யூர் முருகன் பிள்ளைத்தமிழ்' என்னும் நூலுக்கு எழுதிய முகவுரையினின்றும் எடுத்து அதனோடு சிலவற்றைக் கூட்டியும் அதினின்று சிலவற்றைக் குறைத்தும் இங்குப் பதிப்பிக்கப்பட்டுளது.

† 'இது செங்கழு நீர்ப்பட்டு' என்பதன் திரிபு. ‡ இந்நூ லேட்டுப் பிரதியிலுள்ளது, இன்னும் அச்சிடப்படவில்லை. || இவர் கந்தபுராண நூலாசிரியராயகச்சியப்ப சிவாசாரிய சுவாமிகளாயிருந்தாலு மிருக்கலாம். கந்தபுராணத்திற் றேர்ந்த வேறொருவராயிருந்தாலு மிருக்கலாம். முன்னையோரெனச் சொல்லின் முரணுவார்சிலருளர். § (1) ஸ்ரீ இராமபிரான் (2) அந்தககவி வீரராகவன். ¶ கலைமான் = மாரீசனாகிய மாயமான், பல்கலைமான் = சரஸ்வதி (கல்வி). § 'வடாயிரங்கோடி **எழுதுவன்றன்மனத்** தெழுதிப்படித்த விரகன்' எனவும் பாடம். †† கந்தருவம் = இசை; குதிரை. கந்துகம் = பந்து; குதிரை. கோணம் = வளைந்த வளைந்தவாள்; குதிரை. கொக்கு = ஒரு பறவை; குதிரை. கோடை = வேனிற்காலம்; குதிரை. குந்தம் = சூலம்; குதிரை. இப்பதங்கட்கு இங்குரைத்த இருபொருளுளவேனும் தத்தம் அடைமொழியால் முன்னைய பொருள் நீங்கப் பின்னையதாகிய குதிரை யென்னும் ஒன்றனையே குறித்து நின்றதென்க. ‡‡ '**படையாய்த்** தொடாத குந்தம்' எனவும் பாடம்.

*சூடாத பாடலம் பூவாத மாவொடு தொடுத்துமுடி யாதசடிலம் [ண்டுமே."
சொன்னசொற் சொல்லாத கிள்ளையொன் றெங்குந் துதிக்கவர விடல்வே

இச்சீட்டுக்கவியின் முதலடியினால் இவர் கல்வி கற்ற அருமை இவ்வளவின தென்பது ஒருவாறு தெரியவரும். காஞ்சீபுரத்திற் கல்விகற்றுப் பிறகு தம்மூராகிய பொற்களந்தை நகர்போந்து தம் மனையாளொடு வாழுநாட்களில் ஒருநாள் தாம் வெளிச்சென்று திரும்பிவருவதை அருகிருந்தவர்களிலொருவர் அவர்தம் மனைவிக்குத் தெரிவிக்க, அவள் இவரது பெருமையைக் குறியாது அங்கவீனமாகிய சிறுமையைக்குறித்து 'இவர் வித்வத்திறமையினால் யானைக்கன்றும் வளநாடும் பெற்று வந்தனரோ?' என்று மிக்க அலக்ஷியமாய்ச் சொல்ல, அதனைச் செவியுற்ற நம்புலவர், "அருளில்லார்க் கவ்வுலகமில்லை பொருளில்லார்க், கிவ்வுலக மில்லாகி யாங்கு" என்பதை மனத்திற்கொண்டு, மனைவியிகழ்ந்ததன் காரணமறிந்து உடனே பொருள் தேடு நிமித்தம் வீட்டைவிட்டுப் புறப்பட்டு ஒரு சிஷ்யனைத் தம்முடன்கொண்டு தேசயாத்திரை சென்றனர். இதற்கிடையிற் பல சிறு நூல்களையும் பெருநூல்களையும் விடுகவிகளையு மியற்றினர். அவ்வாறு போம்போது ஒருநாட் கவிராயர் தம் சீடனுடன் ஒரு குளக்கரையில் தங்கியிளைப்பாறிக் கொண்டிருக்கையில் அவர் கொண்டுவந்த கட்டமுதை நாய் தூக்கிக்கொண்டு போய்விட்டது. அப்போது அவர் பாடிய செய்யுள் :—

† "சீராடை யற்ற வயிரவன் வாகனஞ் சேரவந்து
பாராரு நான்முகன் வாகனந் தன்னைமுன் பற்றிக்கௌவி
நாரா யணனுயர் வாகன மாயிற்று நம்மைமுகம்
பாரான்மை வாகனன் வந்தே வயிற்றினிற் பற்றினனே."

அவர் பிறகு மேற்சென்று சோழநாட்டை யடைந்து அங்குச் சிலநாளிருந்து அதன் பிறகு ஈழ நாட்டிற்குச் சென்றனர். அதன் வடபாகத்தை அக்காலத்திற் **பரராசசிங்கம்** என்னும் தமிழரசன் ஆண்டுகொண்டிருந்தான். அவ்விடஞ்சென்று அவர் அரசனுடைய பேட்டிக்குப் பலநாட்காத்திருந்தார். அப்படிக் காத்திருந்தும் அரசனைக்காணும் சமயம் சீக்கிரத்தில் வாய்க்கவில்லை. அரசனைத் தவிர மற்றெல்லோரும் நாளடைவிற் கவிராயருடைய கல்வித்திறத்தினையும் யாழ்வாசிக்கும் திறத்தினையுங்கண்டு களித்தனர். ஆயினும் அரசன் சபையிலுள்ள வித்துவான்களும், பாவலரும், நாவலரும் அவருடைய வரவை அரசர்க்குத் தெரிவித்திலர். அவர் பலநாளாக அரசனுடைய பேட்டிதேடிவந் திருக்கின்றனர் என்பதும், யாழ்வாசிப்பதில் மிக்க திறமையுடையவரென்பது மொருநாளறிந்த அரசன் மனைவி அரசன்மீது கோபங்கொ

* பாடலம் = பாதிரிப்பூ; குதிரை. மா = மாமரம்; குதிரை சடிலம் = சடை; குதிரை. கிள்ளை = கிளி; குதிரை. வயிரவன் † வாகனம் = நாய். நான்முகன் வாகனம் = அன்னம். நாராயணன் வாகனம் = கருடன் (பருந்து). மைவாகனன் = ஆட்டுக்கடாவை வாகனமாக உள்ளவன் = அக்கினி.



ண்டு அன்றிரவு அவன் பள்ளியறைக்கு வந்தபோது வழக்கப்பிரகாரமிராது கடுகடுத்த முகத்துடன் ஒதுங்கி நின்றனள். இக்கோபத்திற்குக் காரணம் இன்னதென அறிகிலாது அரசன் அவள் கோபத்தை ஆற்றமுயன்றும் முடியவில்லை. மறுநாட்காலையில் அரசனது சிங்காரவனத்திலிருந்த ஒரு மரப்பொந்திற் கிளி ஒன்று வெளியே வருவதும் உள்ளே போவதுமாயிருந்தது. இதையுற்று நோக்கிக் கொண்டிருந்த அரசற்கு இதன் காரணம் இன்னதெனப் புலப்படவில்லை. முன்னரே மனைவியின் கோபத்திற்குக் காரணம் இன்னதெனத் தோன்றவில்லை. அதனால் அரசனுக்கு மனக்கவலை அதிகமாய்விட்டது. அரசன் கொலுமண்டபத்திற்கு வந்தவுடன் அவ்விடத்துள்ள புலவர்களை நோக்கி, "என்மனத்துள கவலை யின்னதெனவும் அதற்குக்காரணம் ஈதெனவுங் கண்டு உரைமின்" என்னலும், 'கண்டசுத்தி' பாடும் புலவர்களும் ஒன்றுந்தோன்றாது விழித்தார்கள். அவர்கள் விழிக்கும் விழிக்குத் திக்குசள் எட்டும்போதாவாயின. அவர்களில் ஒருவர் அரசனுடைய மனக்கவலையை எப்படியாயினும் நீக்கவேண்டு மென்னும் எண்ணங்கொண்டு அந்தகக் கவிவீரராகவ முதலியாருடைய ஆற்றலையும் குணத்தையும் அரசற்கு எடுத்துரைத்து அவர் அதன் காரணத்தை உரைக்கவல்லவர் எனலும் அரசன் அவரை வரும்படி உத்தரவு செய்தான். அவர் வந்தபோது அவர் அந்தகராயிருத்தலால் இராஜ தரிசனத்திற் குரியரல்லர் என்னுங் காரணம்பற்றி இராஜசபையிற் குறுக்கே ஒருதிரை போடப்பட்டிருந்தது. கவிராயருடன் வந்த கற்றுச்சொல்லி தானு மவரும் கொலு மண்டபத்தை அணுகினவுடன் குறுக்கேயிருந்த திரையைக்கண்டு, * "திருச்சிற்றம்பலம்" என்னவே, குறிப்பறிந்த குரவர் "முத்துத்திரை இற்றுவிழ" என்றனர். உடனே திரை அறுந்துவிழுந்தது. அதைக் கண்டோர் அச்சமும் பக்தியும் பெருகி அவரை அரசற்கு அருகே கொண்டுபோய் ஓரிருக்கையில் உட்காரவைத்து உபசரித்தனர். பிறகு அவரை இன்னும் பரீக்ஷிக்கவேண்டி அரசனுடைய கையில் ஒரு வில்லு மம்புங்கொடுத்து, 'அரசனுடைய கோலம் எம்மாதிரியானது?' என்று மந்திரிமார் கேட்க, அவர்,

† "வாழு மிலங்கைக்கோ மானில்லை மானில்லை
ஏழு மராமரமோ விங்கில்லை—ஆழி

* 'சிவசிதம்பரம்' என்றான் எனவும், அவர் 'அது அண்ணாமலையாகாதோ' என்றார் எனவும், உடனே திரை அக்கினிக்கிரையாய தெனவும் சொல்வர் சிலர். இரட்டையர்களைப் பற்றியும் இதைப்போன்று ஒரு கதை வழங்குகின்றது.

† 'இலங்கைக்கரசனாகிய இராவணன் இப்போதோ இவ்விலங்கையில் இல்லை, மாரீசனாகிய மானுமில்லை. ஏழுமராமரமும் இவ்விடத்தில்லை. சேது பந்தனஞ்செய்த ஸ்ரீராமனைப்போன்று விளங்கும் ஏ! அபிராமா! கையில் வில்லுங் கணையுங் கொண்ட காரணம் யாது?' என்பது இதன் பொருள்.

அலையடைத்த செங்கை யபிராமா வின்று
சிலையெடுத்த வாறெமக்குச் செப்பு"

என்று சொல்லிப் புத்திசாதுரியமாக அரசன் கோலத்தைப் போர்க் கோலமாக்கி உத்பிரேக்ஷித்துக் காட்டினர். பிறகு அவரை வருவித்ததன் காரணத்தைத் தெரிவிக்க, அவர் அரசனுடைய உட்கருத்தையும் அதன் காரணத்தையு மறிந்து பாடிய செய்யுள் :—

†" வடவைக் கனலைப் பிழிந்துகொண்டு மற்று மொருகால் வடித்தெடுத்து
வாடைத் துருத்தி வைத்தூதி மறுகக் காய்ச்சிக் குழம்புசெய்து
புடவிக் கயவர் தமைப்பாடிப் பரிசு பெறுமற் றிரும்பிவரும்
புலவர் மனம்போற் சுடுநெருப்பைப் புழுகென் றிறைத்தாற் பொறுப்பா [ளோ
§ அடவிக் கதலிப் பசுங்குருத்தை நச்சுக் குழலென் றஞ்சியஞ்சி
அஞ்சொற் கிளிகள் பஞ்சரம்விட் டகலா துறையு மளங்கா
திடமுக் கடவா ரணமுகைத்த தேவே சேவ சிங்கமே
திக்கு விஜயஞ் செலுத்திவருஞ் செங்கோ னடாத்து மெங்கோவே."

அரசன் தானினைத்திருந்த இரண்டு விஷயங்களும் அதற்குத்தக்க காரணங்களும் இப்பாட்டாற் புலப்படப்பெற்றுக் கவிராயர்க்குப் பற்பல பரிசளித்தனன். அவற்றில் யானைக்கன்றும் பொற்பந்தமும் முக்கியமானவை. அவர் தாம் பொற்பந்தம் பெற்றபோது பாடிய வெண்பா :—

" போங்குமிடி யன்பந்தம் போயதே யென்கவிதைக்
கெங்கும் விருதுபந்த மேற்றதே—குங்குமந்தோய்
வெற்பந்த மானபுய வீரபர ராசசிங்கம்
பொற்பந்த மின்றளித்த போது."

யானை பெற்றதற்குப் பாடிய விருத்தம் :—

"இல்லெனுஞ்சொல் லறியாத சீதையில்வா ழுதானனைப்போய் யாழ்ப்பா ணன்
பல்லைவிரித் திரந்தக்கால் வெண்சோறும் பழந்தூசும் பாலி யாமற் [யான்
கொல்லவினைந் தேதனது * நால்வாயைப் பரிசென்று கொடுத்தான்பார்க்குள்
தொல்லையென †தொருவாய்க்கும் நால்வாய்க்குமிரையெங்கே துருவுவேனே"

இவ்வாறு சொன்னபோது அரசன் அவ்யானைக் கன்று வளரும்படியான நாடுங் கொடுத்தான். பிறகு சிலகாலம் அவர் அந்த அரசனிடத்திருந்தார். ஈழநாட்டுப் புலவர்கள் கவிவீரராகவ முதலியாரவர்கட்கு விடுத்தவினாக்களும் அவர் பகர்ந்த விடைகளும் வருமாறு :—வினா :—உதிரமுண்ணும் பறவை

† (1) மனைவி சினங்கொண்டதற்குக் காரணம் கவிராயர்க்கு அரசன் பேட்டி கொடாதிருந்தது. § (2) கிளிவெளியே செல்லாததற்குக் காரணம் காற்றிலசையும் வாழைக் குருத்தை நச்சுக்குழலென்று பயப்பட்டிருந்தது.

* நால்வாய்—தொங்குகின்ற வாயையுடையது (யானை).

† ஒருவாய் நால்வாய் என்பதனாற் பெறப்படு நயமுங்காண்க.



யாது ? **விடை** :—துக்கம். **வினா** :—'பசும்பால்' என்னும் பண்புத்தொகைக்குப் பொருளென்ன ? **விடை** :—கார்காலத்து வெள்ளாட்டுப்பால். **வினா**:— "பங்கமின் மாது பசுமஞ்ச ளன்றிழந்தும், மங்கலமு நன்கலமு மற்றிழவாள்" பின்னிரண்டடியும் யாவென, **விடை** :—சங்கையென்ன " மங்கல மென்ப மனைமாட்சி மற்றதன், நன்கல நன்மக்கட் பேறு" என்று அவர்கள் கேட்டதற்கேற்பத் தனிச்சொல் தான் இடைப்பெய்து திருக்குறளி லொருகுறளைக் கொண்டு விடைகொடுத்தார். *

இவர் இராமாயணம் அவதானித்துச் சொன்னபோது அரசன் (பரராசசிங்கம்) பாடியது :—

" இன்னங் கலைமகள் கைம்மீதிற் புத்தக மேந்தியந்தப்
பொன்னம் புயப்பள்ளி புக்கிருப் பாளென்ன புண்ணியமோ
கன்னன் சயந்தன் கவிவீர ராகவன் கச்சியிலே
தன்னெஞ்ச மேடெனக் கற்றான் கனமுத் தமிழையுமே."

இக்கவியினாலும் இவர் கற்றறிந்த அருமை தெரியவரும். இவர் அரசன் மீது வண்ணம் பாடியபோது அதன் சொன்னோக்கும் பொருணோக்குந் தொடைநோக்குங் கண்டுகளித்து இவருடைய கல்வித்திறத்தை அரசன் வியந்த செய்யுள் :—

" விரகன்முத் தமிழ்க்கவி வீர ராகவன்
வரகவி *மாலையை மதிக்கும் போதெலாம்
† உரகனும் வாணனு மொப்பத் தோன்றினாற்
சிரகர கம்பிதம் செய்ய லாகுமே."

இவரியற்றிய **ஆருலா**வைக் கேட்டு ஆனந்த மடைந்து பரராசசேகரன் (பரராசசிங்கம்) பாடியது :—

§ " புவியேர் பெறுந்திரு வாரூ ருலாவைப் புலவர்க்கெல்லாஞ்
செவியே சுவைபெற மாறுசெய் தான்சிவ ஞானமனு
பவியே யெனுநங் கவிவீர ராகவன் பாடியநற்
கவியே கவியவ னல்லாத பேர்கவி கற்கவியே."

* இவ்வினாக்கள் மொத்தம் ஐந்தென்றும், அவற்றிலிரண்டு நமக்கு ஞாபகமில்லையென்றும், அந்தகக் கவிராயர் மரபிற்றோன்றிய காலஞ்சென்ற கவி வீரராகவ முத்தையென்றும், அந்தகக் கவிராயர் மரபிற்றோன்றிய காலஞ்சென்ற கவி வீரராகவ முத்துசாமி முதலியார் சொல்லத்தாம் கேட்டதாக வித்வான் ம-ா-ா-ஸ்ரீ மாகறல் - கார்த்திகேய முதலியார் தெரிவித்தனர்.

† இஃது இவரியற்றிய கழுக்குன்ற மாலையைக் குறித்த தென்பாரு முளர்.

‡ சிரக்கம்பிதம் செய்ய ஆயிரந்தலைகளையுடைய ஆதிசேடனும் கரக்கம்பிதம் செய்ய இரண்டாயிரம் கைகளையுடைய பாணாசுரனும் வேண்டு மென்பது.

§ **ஆருலா** ஆசிரியர் இவர்தாமோ வெனச் சரியாய் அறியும் பொருட்டுக் கும்பகோணம் காலெஜ் தமிழ்ப்பண்டிதர் பிரமஸ்ரீ உ. வே. சுவாமிநாத ஐயரவர்கட்கு எழு

பிறகு இவர் யாழ்ப்பாணத்திற் சின்னாளிருந்து தான் பெற்ற பல்லக்கு முதலிய பரிசுகளுடனும் பரிவாரங்களுடனும் தன்னூர்க்குத் திரும்பிவந்தனர். இஃதிப்படியாக, 'யாழ்ப்பாண வைபவம்' என்னு * நூலில், ஈழ நாட்டை அரசாண்ட உக்கிரசிங்க ராஜனுடைய குமாரன் வாலசிங்க ஜயதுங்க வரராஜன் காலத்து இவர் யாழ்ப்பாணத்திற்குப் போனாரென்பதும் இன்னுஞ் சில விஷயங்களும் தெரிய வருகின்றன :—" இரண்டு கண்ணு மிழந்த கவிவீரராகவ முதலியா ரென்பவர் யாழ்ப்பாண வாலசிங்க மகாராஜன்பேரிற் பிரபந்தங்களியற்றிச் செங்கடக நகரிக்குப்போய்•ராச சமுகத்தில் யாழ்வாசித்துப் பாடி வருங்காலத்தில் அரசன் மிகச் சந்தோஷப்பட்டு இலங்கையின் வடதிசையிலுள்ள மண்திடல் என்னும் நாட்டை அவருக்கு உபகாரமாக்கொடுத்தான். இந்நாட்டுக்கு அவர் யாழ்ப்பாணம் எனப் பெயரிட்டு இவ்விடம் வந்து சேர்ந்து வடதிசையி லிருந்து சில தமிழ்க் குடிகளை யழைப்பித்து அக்காலத்திற் சிங்களவரையும் மற்றும் பிறரையும் அரசாளக் கருதித் தமிழ்க் குடிகளையுமங்கிருந்த சிங்களவருடன் குடியேற்றிச் சிலகாலம் அரசாட்சி செய்து வயோதிகராய் இறந்தார். இப்படி யிருக்குங்காலத்துப் பொன்பற்றியூர் வேளாளனாகிய பாண்டிவளவ னென்னும் பிரபுவின் முயற்சியால் திரை உக்கிரசோழன் மகன் சிங்ககேதுவுக்கு மருகனாகிய சிங்கையாரியன் என்பவன் பிறகு யாழ்ப்பாணத்திற்கு அரசனாயினான். அவன் அப்போது பற்பல இடங்களிலிருந்த வேளாளரைக் கொண்டு வந்து இவ்விடம் குடியேற்றினான். அவர்களில் உயர்குல வேளாள மரபினராகிய தொண்டை மண்டலத்து மண்ணுடுகொண்ட முதலியாரை இருபாலையிலும், செய்யூர் இருமரபு துய்ய தனி நாயக னென்னும் வேளாளரை நெடுந்தீவிலுங் குடியேற்றினன். * * * * சிங்கையாரியன் காலத்துப் புவனேகவாகு என்னும் மந்திரி அங்குள்ள கந்தசாமி கோயில் திருப்பணி சாலிவாகன சகம் 870 - ஆம் (870 + 78=948-கி. பி.) வருஷத்தில் நிறைவேற்றினான்."

'யாழ்ப்பாண வைபவம்' என்னும் நூலிலுள்ள இவ்விஷயம் முழுதும் உண்மையென நம்புவதற்கிடமில்லை. அவரங்கேயே யிருந்திறந்தா ரென்பதும் யாழ்ப்பாணத்திற்கு அரசராயிருந்து ஆண்டனர் என்பதும் அவரிருந்த காலம் கி. பி. 948-ஆவது வருஷத்திற்கு முற்பட்டது என்பதும் பொருத்தமுற்றனவாகத் தோற்றவில்லை. அவர் தமிழர்களை அவ்விடங் குடியேற்றியிருக்கலாம். மற்றவை எவ்வளவு உண்மை யென்பதுமேலே தெரியவரும். இவர் பரிசுபெற்றுத் திரும்பித் தம்மூர்க்குப் போம்போது திருநெல்வேலியிலுள்ள கயத்தாற்று அரசன்பேரில் ஒருலாப் பிரபந்தம் பாடினர். அதனைக்

திக் கேட்ட போது அவர், " ஆரூருலா கவிவீரராகவ முதலியார் செய்ததே. வேறெவருஞ் செய்யவில்லை. இவ்வுலாவை யான் பலமுறை படித்திருக்கிறேன். விரைவிற் பதிப்பிக்கவுங்கூடும்" என்று எழுதியது கண்டு களிகூர்ந்தேன்.

* பக்கம் 11 - 14.



கேட்டுக்களித்த கவிகளிலொருவர் அப்போது இவரைப் புகழ்ந்து பாடிய வெண்பா :—

" ஒட்டக்கூத் தன்கவியு மோங்கியகம் பன்கவியும்
பட்டப் பகல்விளக்காய்ப் பட்டவே—யட்டதிக்கும்
வீசுங் கவிவீர ராகவனும் வேளாளன்
பேசுங் கவிகேட்ட பின்."

இக்கவியினால் இவர் கம்பர்க்கும் ஒட்டக்கூத்தர்க்கும் பிந்தினவரென்பது ஏற்படுகிறது. ஒட்டக்கூத்தரும் கம்பரும் குலோத்துங்கசோழன் காலத்திருந்தவர்கள். * அவனிருந்தது பதினோராம் நூற்றாண்டினிறுதியில். ஆகவே, யாழ்ப்பாண வைபவத்திற் கூறுங்காலம் சரியான தன்றென்பது எளிதில் விளங்கும்.

" மின்னு மாளிகை யனந்தை யாதிபதி சந்த்ர வாணமகி பாலன்முன்
வீர ராகவன் விடுக்கு மோலைதன் விருப்பி னல்வலிய வேயழைத்
துன்னு காவிய மதிற் பெருத்ததொரு கோவை யோதுகென வோதினன்
ஞேதி மாதமொரு மூன்று போகியொரு நாலு மாதவள வாகவு
மின்ன முந்தனது செவியி லேறவிலை யென்னி லென்னவுல கெண்ணுமே
விராச ராசர்திறை கொள்ளுமென் கவிதை யிங்கு வந்துகுறை யாகுமோ
தன்னை யென்சொலுவ ரென்னை யென்சொலுவர் தான்றமிழ்க்குமண மல்ல
தன்பு கழ்க்குமிது நீதி யோகடிது தானி னேவருதல் வேண்டுமே" [வோ

என்னுஞ் சீட்டுக்கவியினால் இவர் அனந்தையாதிபதி சந்த்ரவாணன் மீது ஒரு கோவை பாடினரென்பது தெரியவருகிறது.

கல்குளம் - குப்புசாமி முதலியார்.

## A PESSIMIST TURNED AN OPTIMIST.

## வெறுத்தவன் விரும்பினான்.

ஒருகால் மிகவுஞ் செருக்குற்று அகத்தியமுனியால் அச்செருக்கடங்கிப் புகழ்பெற்று விளங்குவதும் புயற்காற்று நாற்றிசைகளினுஞ் சூழ்ந்து அடிக்க மேகத்தை முட்டிவளர்ந் திருப்பதுமான பர்வதம் விந்தியமென்ப. அப்பர்வதமும் அதினின்றும் மேகமுழக்கம் போல இரைந்து கொண்டு வீழும்காறுகளும் அவைகளி னிருபக்கங்களினும் அடர்ந்த காடுகளும் பார்ப்போரது மனத்தை நடுங்கச்செய்யும் பயங்கரமான தோற்றமுடையன. அக்காட்டில் ஒரு காலத்திற் சுகேசன் என்பவன் ஒருவனிருந்தான். அவன் வாலிப

* Kulottunga Chola Deva I (1070—1118.) See South Indian Inscriptions, Vol II Part ii Page 153.

தனையில் மற்ற ஜனங்களுடன் தானு மொருவனாய்க்கூடி யாடி ஜனங்களிடத்துமிக்க அன்புடையானாகவும் வாழ்ந்து வந்தவன். கசிந்த மனமுடையனாகவும் வருந்தினோரது துன்பத்தைப் பார்க்கப்பொறாது தனது செல்வத்தை அறநெறியில் முற்றிலுஞ் செலவிட்டனன். அவனிடத்தில் யாசிப்போரும் களைப்படைந்த பிரயாணியும் யாதும் பயனடையாது போகார். தன்னாலியலாது போனபொழுதே பொருள் கொடுத்து உதவுவதினின்றும் விலகினன். சின்னாளில் வறுமைமேலிட்டு வருந்துவானாயினான். அப்பொழுது, இப்படி நன்னெறியிற் செலவிட்டதற்குக் கைம்மாறாகத் தான் முன்னுதவியவர்களிடத்தினின்றும் நன்றி பாராட்டப்படுதலை எதிர்பார்த்துத் தனக்குச் சகாயஞ் செய்யும்படி அவர்களுக்கு விண்ணப்பஞ் செய்து கொண்டனன், இரக்கமென்பது அற்பாயுளுள்ள தாகையால், நன்றியறிவில்லாத ஜனங்களும் அவனை வெறுக்க, தான் அவர்களை முன் பாரட்டியதுபோற் பாராட்டாது அவர்களைப் பற்றி மாறுதலாய் நினைக்கத் தலைப்பட்டனன். இதற்கு முன் அவர்களிடம் தான் காணாத ஆயிரக்கணக்கான குற்றங்களையுங் கெடுதல்களையும் இப்பொழுது அவர்களிடம் அவன் கண்டான். எங்குநோக்கினு மாங்காங்கு ஜனங்களது நன்றியறியாமையாலும், இரண்டகத்தாலும், நம்பிக்கைத் துரோகத்தாலும், அவர்கள் மேலுள்ள இவனது வெறுப்பு இப்பொழுது முன்னிலும் பெருகியது. ஆகையால் தான் வெறுக்கும் நகரங்களி லில்லாது இக்காட்டிற்குச் சென்று ஏகாந்தமாய் நினைத்து நினைத்துத்துக்கித்துத் தனது கண்ணிய முள்ள மனத்தின்கட் சிந்தனை செய்து கொண்டிருந்தான்.

வெயில் காற்று மழைகளால் வருந்தாது அவைகளின் கொடுமைக்குத் தப்ப அவனுக்குப் புகலிடம் ஒருகுகையே. அம்மலைச் சாரலிலிருந்து மிகவும் வருத்தத்துடன் சேகரிக்கப்பட்ட பழங்களே அவனுக்கு உணவாம். மிகவும் வேகமாயோடுங் கானாறுகளினின்றும் பலவகைய ஆபத்துக்களைக் கடந்து அவன் கொணர்ந்த தண்ணீரே அவனது தாகத்தைத் தீர்ப்பது. இப்படி அவன் ஜனக்கூட்டங்களினின்றும் விலகி ஏகாந்தமாய் அவன் தியானத்திற் காலத்தைக்கழித்துக் கொண்டும் ஒத்த சிருஷ்டி வர்க்கத்தின் உதவியில்லாது தான் உயிர் வாழ்வதனாற் சிற்சில சமயங்களிற் சந்தோஷமடைந்துகொண்டு மிருந்தான். அப்பெரிய பயங்கரமான மலையைப் பிரதிபிம்பித்துக்காட்டும் பளபளப்பான மேற்புறத்தை யுடையதோர் பெரிய சுனையானது அம்மலையடிவாரத்திலிருந்தது. அச்சுனையின் கரைக்கு அவன் சிற்சில சமயம் இறங்கிவந்து செங்குத்தான ஒரு பாறையின்மேற் சாய்ந்துகொண்டு தனக்கெதிரிலிருக்கும் நேர்த்தியான் நிலப்பரப்பை நோக்குவான்.

“இயற்கை எத்தகைய வனப்புடையது! அவ்வியற்கை பயங்கரமாயிருக்கும் பொழுதினும் எவ்வளவு வனப்பு வாய்ந்துளது! எனக்குக் கீழே



தோன்றும் சமபூமியானது, அதோ தெரிகின்றனவே! மேகங்களுக்கிடையினுள் தமது பெரிய முடியை மறைத்துக்கொண் டிருக்கும் பயங்கரமாகவும் கூட்டங் கூட்டமாகவுமுள்ள மலைப்பாறைகள், அவைகளுக்கும் தனக்கும் உள்ள வேற்றுமையை நன்கு தோற்றுவிக்கின்ற தன்றோ? இக்கருத்துப்பற்றியே அவைகள் அமைக்கப்பட்டன போலும். இவைகளின் வனப்பினும் அவைகளின் உபயோகமே அதிகமாயிருக்கின்றது. ஆகையால் நூற்றுக் கணக்கான யாறுகள் அவைகள் பாயும் தேசங்களிலெல்லாம் சுகத்தையும் செழிப்பையுங் கொடுக்கின்றன. இவ்வுலகத்தின் ஒவ்வொரு பகுதியும் அழகுவாய்ந்த தாகவும் நேர்மையுள்ளதாகவும் யூகமுள்ளதாகவு மிருக்கின்றது! மிகவும் கெட்ட எண்ணமுள்ள மனிதரோ இயற்கைக்கு இலக்கண வழுவாகவும், படைக்கப்பட்ட பொருள்களுட் சுபாவந் தப்பினவராகவு மிருக்கின்றனர்! புயற்காற்று, சுழற்காற்று இவைகளும் உபயோகமுள்ளனவாக விருக்கின்றன. எங்கும் நிறைந்திருக்கு மெழிலில் தீக்குணமுடையவனும் நன்றியறி வில்லாதவனுமான மனிதனோ அவ்வெழில் யாவையும் மாசுபெறச் செய்வது? சகலத்திற்கும் கடவுளின் பேரறிவை இகழுந் தீக்குணமுடைய வகுப்பில் யானும் ஏன் ஒருவனாகப் பிறந்திருக்கின்றேன்? மனிதர்கள் சிறிதுந் தீக்குண மில்லாராயின் யாவும் நிர்விகற்பமாகவும் ஒற்றுமையாகவும் ஒழுங்காகவு மிருக்குமே! பரிபூரண சற்பாத்திரத்தால் விளையும் பயனுஞ் சன்மார்க்க நிலைமையிலன்றோ இருத்தல் வேண்டும். ஓ! ஓ!! தேவா! நான் ஏன் பின்னும் அஞ்ஞான மென்னு மிருளிலும், தடுமாற்றத்திலும் துயரிலுங் கிடந்துழல வேண்டும்?” என்று அடிக்கடி ஓலமிடுவான்.

ஒருநாளிப்படி ஓலமிட்டுத் தனது தடுமாற்றத்தைத் தீர்த்துக்கொள்ளும் பொருட்டும் மனக்கலக்கத்தை முடித்துக்கொள்ளும் பொருட்டும் தன்கீழிருந்த சுனையிற் குதித்து விழுஞ் சமயத்தில் தண்ணீரின்மேல் தானிருந்த கரையை நோக்கி நடந்துகொண்டு வரும் ஒரு கம்பீரமான சரீரியை நோக்கினன். அப்படி எதிர்பார்த்திராத ஓர் உருவம் அவனை அச்செயலினின்றும் தடைப்படுத்தியது. அவன் தயங்கினான்; யோசனை செய்தான்; அந்தச் சரீரியின் தோற்றத்தில் ஏதோ பயங்கரமாகவும் தெய்வீகமாகவு மிருப்பதைத்தான் கண்டதாகவும் நினைத்தான். “ஏ, மானவா! உனது துடுக்கான துணிவைத்தடு. சர்வ ஞானியான ஈசுவரன் உனது நியாயத்தையும் நேர்மையையும், கிலேசத்தையும் அறிந்தார். உனக்குதவி புரிய என்னை அனுப்பியிருக்கின்றார். என் கையைப் பிடித்துக்கொள்; நான் உன்னை அழைத்துச்செல்லு மிடத்துக்கெல்லாம் நீ பயப்படாமல் என்னுடன் வா. நீ எண்ணிய வெல்லாம் நேரியனவல்லவென்று உனக்கு உணர்த்த வந்தேன். நான் யூகத்தினா லல்லது மற்று நே[illegible]தால் தவறிப்போவாரை அவர் தம்தவற்றினின்றும் திருப்பிக்கொணர்தற்கு என்னைச்சர்வேசுவரர் ஆதரித்து வைத்துக்கொண் டிருக்கின்றார். ஆகை

161290
Rm211,M97
M97.5-6.

யால்என்னுடன்வா. ஞானச்சுடர்களிரும்” என்று வந்த ஆகாயவாசியு முரைத்தார்.

சுகேசனும் இப்படிக் கந்தர்வன் உரைத்தலோடும் அவனுடன் சுனையிலிறங்க இருவரும் தண்ணீரின்மேற் சென்று அச்சுனையின் மத்தியில் வந்து முழுகினார்கள். தண்ணீரும் அவர்கள் தலைக்குமேல் ஓடிச் சேர்ந்துகொண்டது. அவர்கள் வெகுதூரம் கீழே சென்றார்கள். கடைசியாகச் சுகேசனும் தனதுயிரைக் காப்பாற்றமுடியாதெனவிட்டுவிட ஆயத்தமாயிருக்கும் பொழுது தான் அக்கந்தருவனோடு தண்ணீரின் கீழே, மனிதர்கள் காலடிபடாத வேறோருலகை அடைந்து அதில் நின்றான். தான் விட்டுவந்த சூரியனைப்போல் ஒரு சூரியனையும் தன் தலைக்குமேலே நிர்மலமான ஆகாயத்தையும்தன் பாதங்களுக்குக் கீழே மிகவுஞ் செழித்த பசும் புல்லையும் அவன் பார்த்தவுடன் அவனடைந்த வியப்பு உரைக்குந் தரத்ததோ ?

“ நீ ஆச்சரியப்படுகின்றாய் ! சிறிதுபொறு. இவ்வுலகமானது சகலசக்தியுமுள்ள கடவுள் சிருஷ்டியே. இவ்வுலகின் அறிவுள்ள ஜனங்கள் உன் மனத்துக்கேற்றவர்கள். இவர்கள் துன்மார்க்க மின்னதென்றே அறியார். மற்றெல்லா விஷயங்களிலும் இவ்வுலகமும் நீ வீட்டுவந்த உலகத்தைப் போன்றதே. ஆனால் இவ்வுலகம் ஒருநாளுந் தீங்கிழையாத ஜனங்களாற் குடிகொள்ளப்பட்டிருக்கின்றது. இப்பொழுது மற்று அந்த உலகைக்காட்டிலும் இவ்வுலகில் உனக்கு இருக்க இச்சையிருந்தால் நீ இதிலேயே தாராளமாய்க்குடிகொண்டிருக்கலாம். ஆனால் உனது சஞ்சலங்களை நிவர்த்தி செய்து உனது அயலாருடனும் உனது புதிய குடியிருப்பிடத்துடனும் அறிமுகம் உண்டாக்கி வைக்கும் பொருட்டு உன்னுடன் சிறிதுநேர மிருக்கும்படி விடையளி” என்று அக்கேசரனும் உரைத்தான். “ துன்மார்க்க மில்லாத உலகமா ! துன்மார்க்கமில்லாத அறிஞர்களா ! ஏ பரமதயாளோ ! நீகடைசியாக எளியேனது விண்ணப்பத்தைக்கேட் டருளினையே ! இஃதாகிலும் எனக்கு இன்பத்தையும், ஆனந்தத்தையும், ஆறுதலையும் அளிக்கும். நன்றியறியாமைக்கும் அநியாயத்திற்கும், மோசத்திற்கும் வல்லடிக்கும் ஜனங்களை இழிவுபடுத்தும் இதையொத்த மற்றனேக குற்றங்களுக்கும் ஆளாகாத ஜனங்களுடன் வாழ்வதற்கு நித்தியத்துவம் இருந்தால் !” என்று மிகவும் பரவசத்துடன் சுகேசனும் உரைத்தான். அக்கந்தருவனும் “நீ ஓலமிடுதலொழிவாய், சுற்றிலும்பார் ; நம்மெதிரிலிருக்கும் ஒவ்வொரு பொருளையும் செயலையும் பார்த்துச்சிந்தித்து உணர். உனக்குப் புலப்படுவதை எனக்குத் தெரிவி. நீ சரியாய் நினைக்கு மிடத்திற்கெல்லாம் என்னை அழைத்துச் செல். நான் உனக்குக்கையாளாகவும் போதகனாகமிருக்கின்றேன்” என்றான்.

சுகேசனும் அவன் தோழரும் சிறிது நேரம் மௌனமாய் நடந்தார்கள். முன்னவன் ஆச்சரியத்திலாழ்ந் திருந்தனன். கடைசியில் முன்னிருந்த அமை



தியை யடைந்து, “ மேற்புறத்தில் நான்விட்டுவந்த தேசத்திற்கு இஃது ஒத்திருக்கிறது. ஆனால் நான் விட்டுவந்த பூமிக்குக் கீழேயுள்ள இவ்வுலகமானது பூர்வமான காட்டுத்தன்மையை அடைந்தே யிருக்கின்றது. இங்கு மாம்சபக்ஷணஞ் செய்யும் மிருகங்களும், அவைகளுக்குணவாக ஏற்படுத்தப்பட்ட மற்ற பிராணிகளு மிருக்கின்றன. அந்த உலகத்திலு மப்படியே. ஆனால் என்னைக்கேட்டால் இத்தீங்கை நீக்கிப்பேருண்டிப் பிரியங்கொண்டு மற்றபிராணிகளைத் தொலைத்துப் பக்ஷிக்கும் மிருகங்களையும் படையாம லிருப்பது நன்மை என்பேன்” என்றுரைத்தான். நீ தாழ்ந்த பிராணிகளிடத்து மிகவுங் குழைந்தமனமுள்ளவனா யிருத்தல் எனக்கு மிக்க வியப்பை உண்டாக்குகின்றது. ஆனால் மிகவும் இழிவான பிராணிகளைப்பற்றிய விஷயத்தில் இந்த உலகமும் அநேக தெளிவான காரணங்களால் மற்று அந்த உலகத்தை ஒத்திருக்கின்றது. ஏனெனின், நிலத்திலுண்டாகும் மரக்கறி பதார்த்தங்களை உண்டு ஜீவிக்கும் பிராணிகளினும் அவைகள் ஒன்றுக்கொன்று இரையாகி உற்பவித்து எண்ணிற்குறையாது அதிகமாகி ஜீவிக்கின்றன. இதனுடன் நில்லாமல் நாம் அதோ ஜனங்கள் குடிகொண்டிருக்கும் நாடிருக்கின்றதே; அதற்குச்சென்று அதைப் பார்ப்பதனால் நமக்கென்ன போதிக்கப்படுகின்றன வென்பதை யறிவோம்” என்று உரைத்தான் ஆகாயவாசியும்.

அவர்கள் சீக்கிரத்தில் அக்காட்டின் எல்லையைக்கடந்து தீக்குணமில்லாத ஜனங்கள் குடியிருக்கும் நாட்டினுட் புகுந்தார்கள். சுகேசனும் அத்தகைய மாசற்ற ஜனங்களின் கூட்டத்தில் தான் அடைய விரும்பிய ஞானானந்தத்தை எதிர் பார்த்திருந்தான். ஆனால் அவர்கள் அவ்வனத்தைக் கடந்தார்களோ இல்லையோ, உடனே அணிற்கூட்டத்தால் வெருட்டுண்ட ஒருவன் நடுநடுங்கி ஓடுவதைக்கண்டார்கள். “ ஐயோ ! இவன் ஓடுவதேன் ? இத்தகைய வலியற்ற ஜந்துக்களுக்கு இவன் ஏன் பயப்படவேண்டும் ?” என்று அவனுரைத்ததும் இரண்டு நாய்கள் மற்றொருவனைத் தொடர்ந்து செல்ல அவனும் மிக்க பயத்துடன் அவைகளினின்றுந் தப்பிக் கொள்ள ஓடுவதைக் கண்ணுற்று, “ ஐயா! இது மிகவும் ஆச்சரியம்! இத்தகைய நூதனச் செய்கையின் காரணத்தை நான் நினைக்கவும் கூடவில்லை !” என்றான். அதுகேட்ட கந்தருவன் “ இந்தக் காட்டிற் கொஞ்ச நாளாக ஒவ்வொரு ஜாதிப் பிராணிகளும் மிகவும் வலியுடையனவாயின. ஏனெனின், முதலில் ஜனங்கள் அவைகளை வஞ்சனையாலேனும் பலத்தாலேனும் நாசம் செய்வது நியாயமன்றென நினைத்து வாளாவிருந்தமையின் புலனுக்குத்தோற்றாது அதிகரித்தன. இப்பொழுது அவைகள் அடிக்கடி அவர்களது குற்றமற்ற எல்லைகளை அழிக்கின்றன.” அதற்குச் சுகேசன் “ ஆகையால் அவைகள் நாசப்படுத்தப்பட வேண்டும். இத்தகைய அலக்ஷியத்தின் பயனைப் பார்த்திரோ ?” என்றான், “ கீழை ஜாதிப் பிராணிகள் விஷயமாய்ச் சற்று முன் நீ காட்டிய

இரக்கம் இப்பொழுது எங்கே சென்றது? அந்த நியாயத்தின் பகுப்பினை இப்பொழுது நீ மறந்தனையோ?" என்று கேட்டான் ஆகாயவாசியும்.

"எனது தவற்றை நான் ஒப்புக்கொள்ள வேண்டியதே. உலக வின்பங்களை நாமே அனுபவிக்க விரும்பின், இக்கொடிய பிராணிகளைக் கொடுமையோடேனும், அநீதியோடேனும் தண்டிக்க வேண்டியதே. எனக்கு இஃது இப்பொழுதுதான் நன்கு புலப்பட்டது. ஆயினும் அறிவில்லாக் கொடிய பிராணிகளிடத்து மனிதர் நடந்து கொள்ள வேண்டியதை இனி நாம் சிந்தியாது, அவர்கள் ஒருவரோடொருவர் நடந்துகொள்ளும் முறையை நோக்குவாம்" என்று சுகேசனுமுரைத்து அவர்கள் இன்னும் நடந்தவுடன் அழகுள்ள வீடுகளையும், நகரங்களையும் காணாமையால் அவனுக்கு வந்த ஆச்சரியம் இன்னும் அதிகரித்தது. அவனது வழிகாட்டியும் அவன் ஆச்சரியத்தைக் கண்டு, "இந்தப் புதிய உலகில் ஜனங்கள் புராதன நேர்மையிலேயே திருப்தி யடைந்திருக்கிறார்கள்; ஒவ்வொருவருக்கும் வீடு உண்டு; அது நாகரிக மில்லாதிருந்தும் அவரது சிறிய குடும்பங்களுக்குப் போதுமானதாயிருக்கின்றது; பார்ப்போருக்கு அழுக்காற்றை உண்டு பண்ணக்கூடியதும் தங்களுடைய கர்வத்தை அதிகரிப்பதுமான வீடுகளை அவர்கள் கட்டக்கூடியவர்களல்லர்; தாங்கள் கட்டிக்கொண்டது சௌக்கியத்தைக் கருதியே யொழிய ஆட் பகட்டுக்காக வன்று" என்றெடுத்துரைத்தான்.

"இவர்களுக்குஞ் சிற்பாசாரிகளாவது, சித்திரக்காரர்களாவது கிடையார். இந்த உபயோகமற்ற கலைகள் இல்லாதிருக்கினு மிருக்கலாம்; ஆனால் அதிக பொழுது இங்கே நிற்பதற்குமுன் இவர்களுள் மிகவும் ஞானவான்கள் சபையில் என்னை அழைத்து வந்துவிட்டால் நானுமக்கு மிகுதியும் நன்றி பாராட்டுவேன். சீருள்ள சம்பாஷணையைவிட மற்றெதுவும் எனக்கு ஆனந்தத்தைத் தருவதில்லை; ஞானம் தவிர மற்றெதிலும் நான் மோகிப்பதில்லை."

"ஞானமா, நீ பேசுவது எவ்வளவு நகைக்கத்தக்கதாக விருக்கின்றது! இங்கே ஞான மென்பது கிடையாது; அஃது இங்கே வேண்டப்படுவது மில்லை. உண்மையான ஞானமென்பது நம்முடைய கடமை பிறர்க்கின்னதென்றும் நமக்குப் பிறர்களது கடமை இன்னதென்றும் அறிவதே. அத்தகைய ஞானம் இங்கு வேண்டுவதெவன்? தனக்கு நியாயமாகத் தோன்றுவதை இயற்கையாயுணர்ந்தே செய்கிறான். அதையே மற்றவரிடத்தும் எதிர்பார்க்கின்றான். ஞானமென்றாற் செருக்குள்ள ஆராய்வு என்றாவது விணான யோசனை யென்றாவது மமதையினின்றும் இடம்பத்தினின்றும் பேராசையினின்றும் எழும் சந்தோஷம் என்றாவது நீ பொருள் படுக்கின் நாம் அவைகளை நாடாத நற்குணமுடையராவோம்."



"நீர் சொல்லுவதெல்லாம் உண்மையாயிருக்கலாம். ஆனால் ஜனங்களிடத்தில் ஏகாந்தமா யிருக்கவேண்டுமென்ற ஆவலுடைய ஒரு குணத்தைக் காண்கிறேன். ஒவ்வொரு குடும்பமும் தனது சொந்த எல்லைக்குள்ளாகவே சங்கங்களாக ஒன்று கூடாமலும் ஒருவருக்கொருவர் போக்குவரவில்லாமலும் இருக்கின்றது."

"அஃது உண்மைதான்; இங்கே ஏற்படுத்தப்பட்ட சங்கங்கள் கிடையா; அப்படி ஏற்படுத்தப்பட்ட சங்கங்கள் வேண்டப்படுவதுமில்லை. அவை உண்டாவதெல்லாம் பயத்தினாலோ அல்லது நட்பினாலோ; இந்த ஜனங்களோ ஒருவரிடத்து ஒருவர் பயப்படுவதற்குக் காரணமில்லாது அத்தகைய நேர்மையுள்ளார் இங்கே யாவரும் சமமான புண்ணிய புருஷர்களாகையால் தனித்த நட்புக் கோடலுக்கு முகாந்திரமில்லை."

"ஆனாலப்படிச் சீர்திருத்தமுள்ள வித்தை யில்லாததும் ஞானமில்லாததும், நட்பில்லாததுமான இந்த உலகத்தில் நானிருந்து காலத்தைக் கழிக்கவேண்டியதா யிருந்தால், ஒரு சுலபமான தோழனையாவது கூடவைத்துக்கொள்ள விரும்புவேன்; ஏனென்றால் அவனுடைய எண்ணத்தை எனக்குச் சொல்லவும் எனது எண்ணங்களை அவனுக்குத் தெரிவிக்கவும் கூடும்" என்று சுகேசன் உரைத்தான்.

"இவ்விரண்டு மெதற்காக? முகஸ்துதியும் பிறர் விஷயத்தில் தலைநுழைத்துக் கொள்வதும் மிகவும் கொடியன. ஆகையால் இங்கே அவைகளிருக்கக்கூடா. ஞானம் என்பதோ! இங்கே அதைப்பற்றிப் பேச்சேயில்லை."

"அப்படி யிருந்தாலுங்கூட இங்கே ஜனங்கள் சந்தோஷமாய் இருக்க வேண்டும். ஒவ்வொருவரும் தமக்குள்ளதை வைத்துக்கொண்டு திருப்தி யடைந்திருக்கின்றார். தம் ஜீவனத்திற்கு எவ்வளவு வேண்டியதோ அதைவிட அதிகமாகச் சேகரித்துக்கொள்ளத் துஷ்டத்தனமாய் முயலுவதில்லை. ஆகையால், ஒவ்வொருவரும் தம்முடைய இரக்கத்திற்குப் பாத்திரமாய் வருந்துவாருக்கு உதவிசெய்யப் போதுமான காலவளவு இருக்கின்றது" என்று இப்படி அவன் உரைத்தவுடன் சாலை ஓரத்தில் உட்கார்ந்துகொண்டு மிகவும் பரிதபிக்கத்தகுந்த நிலைமையிலிருந்த ஒரு கடைகெட்டவனது ஓலமானது தன் காதுகளில் வந்து தாக்கியது. அவனது நிலைமை இவன் மனத்தை உருக்கியது. சுகேசனும் அவனுக்கு உதவிபுரிய ஓடினான். அவனை நோக்கப் பசிடால் வருந்தி இறக்குந் தருணத்தி லவனிருந்ததைக் கண்டான்.

"என்ன ஆச்சரியம்! தீக்குணமென்பதையே அறியாத ஜனங்கள் தங்களுக்கு உதவி புரிவாரின்றிப் பசியால் வருந்துவதா?"

இறக்குந் தருணத்திலிருந்த அப்பாவியும் "ஆச்சரியப்படாதே. தங்களை ரக்ஷித்துக் கொள்வதற்கே போதுமானதை வைத்துக்கொண்டு திருப்தி யடைந்திருக்கும் ஜனங்கள் தாங்கள் உட்கொள்வதை எனக்குக் கொடுத்து

விட்டால், யான் அவர்களுக்குத் தீங்கிழைத்ததாகாதோ? தங்களுக்கு வேண்டியதையே மாத்திரம் அல்லாது சிறிதும் மிகுதியாகப் பிறர்க்களிக்க அவர்களுக்குக் கிடையாது. ஆதலால், அதை அவர்கள் மிச்சம்பிடிக்க முடியாது" என்றான்.

"அவர்களுக்கு எவ்வளவு ஆவசியகமோ அதைவிட அதிகமே யவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்க வேண்டும். நான் சற்றுமுன் தெரிவித்த அபிப்பிராயத்துக்கு மாறாகவே இப்பொழுதுரைக்கின்றேன்; எல்லாம் எனக்குத் தடுமாற்றமாகவும், கலக்கமாகவும், மலைப்பாகவும் இருக்கின்றன. இங்கே நல்குங்கொடை யில்லாமையால் நன்றியறிவின்மை யில்லாதது ஒரு நற்குணமாகாது. ஆயினுமவர்களுக்கு ஒரு மேன்மையிருக்கின்றது. தங்கள் தேசாபிமானமாவது அவர்களுக்கு ஒரு பெருந் தர்மமாக இருக்குமென்று நம்புகிறேன்."

"சுகேசா! பொறு; ஞானம் என்னும் வியாஜத்தை விட்டுவிடவும் வேண்டாம். அயலாருடைய நயத்திலும் அதிகமாக நமது சுயநயத்தைப் பாராட்டுதற்குக் காரணமாயிருக்குமெண்ணமே வேறோர் தேசத்தைவிட அதிகமாக நமது சுயதேசத்தைப் பாராட்டுவான் தூண்டுகின்றது. எங்கும், யார்க்கும் எக்காலும் நிறைந்த அருளினுங் குறைந்த மற்றெதுவுந் தீக்குணமுள்ளதாகவே யிருக்கின்றது. இங்கும் அப்படியே" என்று அக்கந்தருவரும் தம்முகம் எழிலாலும் உக்கிரத்தாலும் விளங்க உரைத்தனர்.

"என்ன வாச்சரியம்! நான் எத்தகைய உலகிற்கு அழைத்து வரப்பட்டேன்! மிதமென்னும் ஒரே நற்குணந்தவிர வேறெந்த நற்குணங்களும் இவர்களிடத்திலில்லை. இந்த விஷயத்திலும் மிருகஜாதிகளினுங்கூட உயர்ந்தவரா யிருக்கவில்லை. இவர்கள் ஒரு விநோதமுங்கூட அனுபவிப்பதில்லை. தைரியம், உதாரம், நட்பு, ஞானம், சம்பாஷணை, தேசாபிமானம் இவை முதலிய நற்குணங்கள் யாவும் இவர்களறியாதாராகவே யிருக்கின்றனர். ஆகையால் தீக்குணத்தை அறியாததே நற்குணத்தை அறியாததாகும். ஓ! தேவா! நானிழிந்து பேசின உலகத்திற்கே என்னை மறுபடியும் அழைத்துச் செல்லும். நன்றியறிவின்மை, நிந்தனை, வெறுப்பு இவைகளுக்கு நான் ஒருவேளை பாத்திரனாக விருப்பதனால் இவைகளை நான் இப்பொழுது பொறுப்பேன். கடவுளின் பேரறிவின்கண் நான்குற்றம் சாற்றுவதனால், எனது அறியாமையையே நான் வெளியிட்டனன். ஆகையால், இது முதல் தீச்செய்கையினின்றும் விலகி, தீச்செய்கை யுடையாரின்மேல் இரக்கங் கொள்வேன்" என்றும் சுகேசன் கழறினன்.

இதைச் சொல்லி முடித்த அக்கணமே ஆகாயவாசியும் மிகவும் பயங்கரமான தோற்றமும் அன்புங்கொண்டு தமது எல்லா மேகங்களையும் முழங்கச் செய்து தாம் ஒரு சுழற்காற்று ரூபமாய் மறைந்தார். சுகேசனும் அப்பயங்



கரமான காட்சியால் மதிமயங்கி மனோபாவமான உலகைச் சுற்றிப்பார்க்க முன்னிருந்த அதே நிலைமையிற் குறைகூறிச் சஞ்சலப்பட்ட அதே யிடத்திற்றான் இருக்கக் கண்டான். தன் உயிர்க்குக் கேடு செய்யும் பொருட்டு அச்சுனையில் தாவுவதற்குத் தனது வலதுகாலை முன்வைத்து நின்றது போலவே, இப்பொழுது இருக்கவுங் கண்டான். அக்காலும் பின்வாங்கப்படாமலே யிருந்தது. சர்வசக்தியுள்ள கடவுளும் அவன் மனத்திற் பதிந்திருந்த எண்ணங்களை மாற்றிவிட்டனர். அச்சுகேசனும் பிறகு அச்சுனையினின்றும் மனக்கிளர்ச்சியுடன் விலகித் தான் அதுகாறும் இருந்த பயங்கரமான இருப்பிடத்தையும் விட்டுத் தனது நகரத்துக்குச் சென்று வியாபாரத்தில் மிக்க ஊக்கத்தோடிறங்கித் தான் ஏகாந்தத்திற் சற்றுணர்ந்த ஞானத்தைப் பயன் படுத்திச் சில ஆண்டுகள் செட்டாய்ச் செலவு செய்து சீக்கிரத்திற் செல்வவானாயினன். வீட்டில் வேலைக்காரர்களு மதிகரித்தனர். அந்நகரத்தின் எல்லாப் பக்கங்களிலிருந்தும் அவன் தோழர்கள் வந்து அவனைச் சூழ்ந்தனர். அவன் அவர்களது நன்றியறியாமையை மறந்து அவர்களை அவமதியாது அழைத்து அவர்களுடன் கூடிக் குலாவினன். முன் துன்புற்ற வாலிபனும் துன்பந்தொலைந்து, செல்வம் மிகுந்து, நிலைமை சிறந்து, அதிக ஆயுளடைந்து வாழ்ந்து வந்தான்.

க. தே. வேங்கட வரதாசாரியன்.

---

## VIKRAMORVASI'YAM.

## விக்கிரமோர்வசீயம்.

அரசன் :—(பெருமூச்செறிந்து)

வணங்கிய தளிர்க ளேய்ந்து வதியுவ வனத்து வல்லி
மணங்கொளப் பூத்து நின்று மன்னவ ளுருவ நோக்கத்
திணங்கிநன் னிலைநி லாத வென்னிணை விழிகள் சால
அணங்கறப் பற்றி நிற்க வாற்றல தோழ மாதோ. (27)

ஆகையால் யா னெங்ஙனங் கைவந்தபலத்தின னாகுவனோ அங்ஙனமேற்ற சூழ்ச்சி யாராய்க.

விதூடகன் :—(நகைத்து) அகலிகையினிடத்தி லாசையுற்றவனாகிய மகேந்திரனுக்கு வைத்தியனாகிய பிருகஸ்பதியும், உருப்பசியினிடத்தி லாசைகொண்டவனான உனக்கு நானும் ஆகிய இருவரும் இங்கு பித்தர்.

அரசன் :—இவ்வாறு வேண்டாம் வேண்டாம்; மிகுநட்பன்றோ காரியத்தைக் காட்டுவது.

**விதூடகன்** :—இந்தயான் ஆலோசிக்கின்றேன் ; அழுகையினால் எனது சமாதியைக் கலையேல். (ஆலோசனையை நிரூபிக்கின்றான்)

**அரசன்** :—(நிமித்தத்தை யறிந்து தன்னுள்)

கலைமதி முகத்தி னாளக் கனங்குழை யரியள் காமன்
சிலையுறப் புரியுஞ் செய்கை நினைப்பதற் கிதுவு மன்னே
பலமுற வருவ போலும் பன்னுறு சித்தி யாவும்
சலனம தின்றி நெஞ்சந் தீர்ந்துமா நந்த மன்றே. (28)

பிறகு புகுகின்றனர் ஆகாயவழியாகச் சித்திரலேகையும் உருப்பசியும்.

**சித்திரலேகை** :—தோழி ! காரணமின்றி எங்கே போகின்றாய் ?

**உருப்பசி** :—தோழி ! அப்பொழுது கொடிக்கிளையினாற் கணப்பொழுது விக்கினஞ் செய்யப்பெற்ற ஆகாசகமனையான என்னைப் பரிகாசஞ் செய்து இப்போழ்து என் கேட்கின்றாய் ?

**சித்திரலேகை** :—அரசமுனிவரான அந்தப் புரூரவரின் சன்னதியைக் குறித்துப் போகிறையா என்ன ?

**உருப்பசி** :—ஆம்; இது எனது நாணமற்ற முயற்சி.

**சித்திரலேகை**:—தோழியினால் முதலில் அங்கு அனுப்பப்பட்டவன் யாவன்?

**உருப்பசி** :—அடி ! மனம்.

**சித்திரலேகை** :—நன்றாக நிச்சயிக்கப்பட்டது ; யார்தான் உன்னை ஏவுகின்றான்?

**உருப்பசி** :—மன்மதனன்றோ என்னை ஏவுகின்றான்.

**சித்திரலேகை** :—இதற்குமேல் மறுபேச்சில்லை யெனக்கு.

**உருப்பசி** :—ஆகையால் எவ்வழியாற் போவோமுக்கு விக்கினங்களில்லாமலிருக்குமோ அப்படிப்பட்ட வழியைக்காட்டு.

**சித்திரலேகை** :—தோழி ! நம்பிக்கை யுடையவளாயிரு ; அபராசிதையெனப் பெயர்கொண்ட மந்திர மூலமாய்த் தலைக்கோல மணிந்துகொள்ளும் வித்தியையே யுபதேசித்த மேன்மைபெற்ற தேவகுருவினால் அசுரர்கையில் அகப்படாதவர்களாய்ச் செய்யப்பட்டிருக்கின்றோமன்றோ.

**உருப்பசி** :—தோழி ! எல்லாவற்றையும் நினைக்கின்றேன்.

(ரெத்தமார்க்கத்திற் புகுகின்றனர்.)

**சித்திரலேகை** :—தோழி! பார்! பார்! இந்தக் கடவுட் கங்கையோடு •எமுனைகலக்கும் விசேடத்தாற் பரிசுத்தமாகிய நீரில் தன்னைப் பார்த்துக் கொள்வது போன்றிராநின்ற பிரதிட்டா நகரத்தினது சிகரத்தினம் போன்ற அரசமுனிவரரண்மனையை யடைந்தவர்களாகின்றோம்.



**உருப்பசி** :—(ஆசையோடு பார்த்து) வேற்றிடத்தை யடைந்திருக்கின்ற சுவர்க்கமென்றே சொல்லத்தக்க தன்றோ. (ஆலோசித்து) அடைந்தோரை யளிக்குமிவர் எங்கேதானிருப்பர் ?

**சித்திரலேகை** :—நந்தனவனம் போன்ற இந்தப்பிரமத வனத்தி லிறங்கி யறிவோம்.

[இருவரும் இறங்குகின்றனர்.]

**சித்திரலேகை** :—(அரசனைப்பார்த்து) தோழி ! பிரதமையி லுதித்த கடவுட் சந்திரன் நிலாவைப்போல் இவர் உன்னை எதிர்பார்க்கின்றனர்.

**உருப்பசி** :—(பார்த்து) அடி ! இப்போது அரசமுனிவர், முதனோக்கினிலும் விசேடமுடைய ஆசைநோக்குடையவராக எனக்குத் தோற்றுகின்றனர்.

**சித்திரலேகை** :—தக்கதுதான்.

**உருப்பசி** :—இவர், சனமில்லாத விடத்தில் தன்னருகிலுள்ள தோழனோடு ஏதோ ஒன்றை ஆலோசித்துக்கொண் டிருக்கின்றார். நான் திரக்கரிணி வித்தையில் மறைந்துகொண்டு இவரருகினின்று கேட்பேன்காண்.

(சொன்னபடி செய்கின்றனர்)

**விதூடகன்** :—தோழ! சிந்திக்கப்பட்டது அடைதற்கரிய காதலியை யடையுமுபாயம்.

(அரசன் சும்மாவிருக்கின்றான்)

**உருப்பசி** :—எவள், இவரால் வேண்டப்பட்டவளாய்த் தன்னைப் பேறுபெற்றவளாக்குகின்றாளோ இப்பெண் யாவள்கொல் ?

**சித்திரலேகை** :—என்ன ? மனிதத் தொழில் மேற்கொள்ளப் படுகின்றது?

**உருப்பசி** :—மேன்மையினால் விரைவி லறிந்துகொள்ளமாட்டாதவளாயிருக்கின்றேன்.

**விதூடகன்** :—அடையுமுபாயஞ் சிந்திக்கப்பட்டதென்று சொல்லுகின்றேன்காண்.

**அரசன்** :—ஆனாற் சொல்.

**விதூடகன்** :—நீ கனவிற் சேர்க்கையைப் பண்ணும் தூக்கத்தைக் கொள்வாயாக ; அன்றேல், அந்தவுருப்பசியினது சித்திரவுருவத்தைப் பார்த்துக்கொண்டேயிரு.

**உருப்பசி** :—வலியற்ற நெஞ்சமே ! ஆற்றிக்கொள், ஆற்றிக்கொள்.

**அரசன்** :—இரண்டுங் கூடாதவைகளே.

மன்மதன் சரத்தா லிம்மன நாளு மன்னிய சள்ளைய துள்ளே [மால்
தன்கன விடையே சேர்க்கையைச் செய்யத் தகுந்துயி லெங்ஙனம் வரு

நன்முகத் தினளாங் காதலி யவளை நலமுறச் சித்திரத் தெழுவ
நன்கன மெழுதி முடிப்பதன் முனமே நயனநீர் நிறைவன வன்றே. ()

**சித்திரலேகை** :—உன்னுற் கேட்கப்பட்டதா ?

**உருப்பசி** :—கேட்கப்பட்ட தென்னுல் ; மனத்துக்கோ திருத்தியுண்டாக வில்லை.

**விதூடகன்** :—இவ்வளவினதே எனது புத்தியின் பெருமை.

**அரசன்** :—(பெருமூச்சொடு)

அவண்மிகக் கடின மாய வென்னக நோயை யுன்னுள்
பவமதி னறிந்த வாசை படரெனை யிகழ்ந்தாள் கொல்லோ
பவரலர்க் கணையன் கிட்டாப் பலத்தின நீர்மை யற்ற
அவள்புணர்ப் பாசை யெற்கிங் கமைத்துநற் சுகியாய் வாழி. (30)

**சித்திரலேகை** :—உன்னுற் கேட்கப்பட்டதா ?

**உருப்பசி** :—ஆ ! சீ ! ஆ ! சீ ! என்னையு மிவ்வாறு நினைக்கின்றனர் மகாராசர் ! இவர்க்குமுன்னே மறுவார்த்தை சொல்ல வலியற்றவளாயிருக்கின்றேன் ; பிரபாவத்தினு லுண்டாக்கப்பட்ட புயமரப்பட்டைப் பத்திரிகையினுற் சம்பாதித்த மறுமொழி யுடையவளாக எண்ணுகின்றேன்.

**சித்திரலேகை** :—சம்மத மெனக்கு.

(உருப்பசி விலாசத்துடன் எடுத்துச் சொன்னவண்ணஞ் செய்கின்றுள்.)

**விதூடகன்** :—(பார்த்துப் பரபரப்புடன்) அவித ! அவித ! ஓ ! தோழ ! பாம்பின் ருேல்போல வேதோ வொன்று எதிர்முகமாக வருகின்றது.

**அரசன்** :—(உய்த்து நோக்கி) இது, மரப்பட்டையுள் வரையப்பட்டுள்ள அக்கரக்கோவை.

**விதூடகன்** :—அங்கவளுருப்பசி, நினது அழுகையைக் கேட்டு ஆசையைக் காட்டு மக்கரங்களை விடுத்தாள் ; இஃதுண்மையே.

**அரசன்** :—மனோரதங்கட்கு அவிஷயம் இல்லை. (எடுத்து வாசித்துக் களிப்போடு) நினது ஊகம் தெள்ளிதே.

**விதூடகன்** :—நீ தெளிவுடையவனுக விரு ; இங்கெழுதியுள்ளதைக் கேட்க விரும்புகின்றேன்.

**உருப்பசி** :—ஐய ! நல்ல சதுரனுயிருக்கின்றுய்.

**அரசன்** :—நண்ப ! கேட்பாயாக.

**விதூடகன்** :—கருத்தாயிருக்கின்றேன்.

**அரசன்** :—(வாசிக்கின்றுன்.)



எங்ஙனநல் வினையில்லா யாவின்னு னென்குமதிப் பெய்தி னேனோ
அங்ஙனநற் காதலினை யார்நின்மே லெற்கில்லை யாயின் வாடிப்
பங்கமுறுஞ் சுரதருவின் பனிமலர்மே லெவ்வண்ணம் படுப்பன் றேவர்
துங்கவனக் காற்றுமறச் சுடுவதெவ னென்னுடலிற் சுவாமி மாதோ. ()

**உருப்பசி** :—இப்போது என்னை தான் சொல்லுகிறுர் ?

**சித்திரலேகை** :—கமல நாளம்போன்ற அங்கங்களினுல் இவராற் சொல்லப்பட்டதன்ருே.

**விதூடகன்** :—பசித்திருக்கு மெனக்குச் சுவத்திவாசனப் பணிகாரக் கூட்டம் போல், உனக்கும் இத்தேற்றரவு தெய்வாதீனமாய்க் கிடைத்ததன்ருே.

**அரசன்** :—தேற்றரவென் றெவ்வாறு சொல்லுகின்றுய்.?

ஒத்த வன்பி னைத்தெ ரிப்ப தொண்பொ ருட்பு ணர்ப்பது
பத்தி ரத்த தாய காதற் பற்றி னுடன் செய்திமேல்
வைத்த கண்ம யிர்கொ ளம்ம தர்த்த கண்ணி னுண்முகம்
ஒத்து நின்று நண்ப னேயு றைந்த தென்மு கத்தொடே. (32)

**உருப்பசி** :—இங்கு நமக்கு ஆசை சமபாகத்தினது.

**அரசன்** :—தோழ ! விரல் வியர்வையால் அக்கரங்கள் அழிவுறும் ; தரிக்கப்படட்டும் காதலியின் கையெழுத்து.

**விதூடகன்** :—அப்படியே (என்றெடுத்துக்கொண்டு) அங்கவள் உருப்பசி, நினது மனோரதங்களின் மலரைத் தோற்றுவித்துப் பலத்தில் இப்போழ் தேன் தாழ்க்கின்றுள்?

**உருப்பசி** :—அருகணைவதற்கு அச்சமுற்றிருக்கும் மனத்தை நிலைப்படுத்திக் கொள்வதற்குள், நீ இவருக்கு நின்னைச்காட்டி எனக்குத் தக்கதெதுவோ அதனைச்சொல்.

**சித்திரலேகை** :—அப்படியே (திரக்கரிணியை நீக்கி யரசனைக்கிட்டி) வெற்றிபெறுக கொற்றவனே !

**அரசன்** :—(களிப்போடு) உனக்கு நல்வரவா ? (பக்கத்திற்பார்த்து) மங்களத்தினுய் !

அங்ஙனமத் தோழியைநீத் தார்ந்தநீ யோகையினை
இங்கெனக்குச் செய்கின்று யில்லையால்—சங்கமத்தின்
முன்காணப் பட்டுளதாய் மூதமர ராற்ருேடிலா
மன்காளிந் திநதிபோன் மற்று. (33)

**சித்திரலேகை** :—முன்னர் முகிலினணி காணப்படுகின்றது ; பின்னர் மின்னற்கொடி.

**விதூடகன்** :—(மறைத்து) இவளெங்ஙன முருப்பசியல்லள் ? அங்கவளின் இனிய தோழியிவள்.

சித்திரலேகை:—உருப்பசி மகாராசனைத் தலைவணங்கி விண்ணப்பிக்கின்றனள்.

அரசன்:—என்ன ஏவுகின்றாள்?

சித்திரலேகை—'அசுரனாலுண்டான உபத்திரவத்தில் எனக்கு மகாராசரே இரட்சகராக இருந்தனர்; அந்த யான், நுந்தரிசனத்திலுண்டான மன்மதனால் வலிப்பப்பீடிக்கப்பட்டவளாய் மீண்டும் மகாராசரால் அருளத் தக்கவள்' என்று.

அரசன்:—கோலமுகத்தினாய்!

பு. மா. ஸ்ரீநிவாசாசாரியர்.

---

## THE CULTURE OF THE INTELLECT.

## உள்ளப்பயிற்சி.

---

### VIII. ஞாபகசக்தி. (Memory.)

முக்கியமாய்ப் பயிற்சியடையவேண்டிய மனத்தின் மற்றோராற்றல் ஞாபக சக்தியாம். ஒருபாற் சேமித்துவைத்தாலன்றி நிதியை ஈட்டுதலில்யாது பயன்? இவ்வாறே நம்மால் ஞாபகத்தில் நிறுத்திவைத்த லியலாதனவற்றைக் கற்பதும் பயனற்றதே. நல்லவேளையாய், மனத்தினாற்றல்களனைத்தினும் இது பயிலப்பயில மிகவும் விருத்தியாவது ஒன்றாம். மேலும், குறுகிய மனோபாவத்திற்காதல், மழுங்கிய பகுத்தறிவிற்காதல் துணைக்கருவிகளில; ஆயினும், ஞாபகசக்திக் குறைவிற்கோ தக்க துணைகளுள. பிற்சாற்றியன மனத்திலொருகாற் படிந்த விஷயங்களை ஆங்கே நிறுத்திக் கொள்வதிற் கவனிக்கவேண்டிய மிகச்சிறந்த குறிப்புக்களாம்:— (1) முதன்முதலிற் படிந்த கருத்து, தெளிவும் கூர்மையு மழுத்தமு முடைமை. விளக்கமும் தெளிவுமின்றித் தான் உட்கொண்டனவற்றை நினைவு கூர்ந்து கொள்ளலாமென்று ஒருவனும் நம்பவேண்டாம். முன்பின் பிறழ்ந்து மனத்தின்கட் பாய்கின்ற மங்கி ஊற்றமில்லனவாகிய பொருள் நோக்கங்களின் தொகுதி, ஒரே குழப்பமடைந்து, ஒன்றையுங் காட்டவின்றிப் பொருள்களனைத்தையும் மறைத்துத்தானும் மறைந்துபடும். பரந்ததோர் விஷயமுழுவதையும் பற்றிய கலக்கமுற்ற எண்ணங்களுடைமையினும், அதன்கண் ஏதேனுமொரு பகுதியைப்பற்றி மட்டில் தெளிவான கருத்துடைமை ஞாபகசக்திக்கு மிக்க நன்மை பயக்கும். (2) ஒழுங்கும் பாகுபாடும் போன்று ஞாபகத்திற்குத் துணைபுரிவது வேறொன்றுமில்லை. என்றும் வகைகள் சிலவே, தனிப்பொருள்கள் பலவாம். வகையொன்றனை நன்று அறிவது, அவ்வகையின்பாற் பட்ட



தனிப்பொருளின் மிக்க சாரமும், மனத்தில் நிறுத்துவதன்கண் நேரும் கஷ்டத்தைக் குறைப்பதுமான பண்பினை யறிவதாகும். (3) இதனை யடுத்துச் சிறந்தது பல்காற்பயிறல். ஓரடியில் முளை உட்செல்லாவிடின் மீட்டும் மீட்டும் அதனைக்கடாவுக. இவ்விஷயத்தில் முதலைப் பிடியாயிருத்தல் பயனற்றுப் போகாது. வடமொழியிற் கடவுளைக்குறிப்பது "தேவன்" என்னும் மொழியென்பதை நினைவு கூர்ந்திருத்தல் அரிதெனக் காணுமொருவன், நாடோறுமாதல் வாரந்தொறுமாதல் எவ்வேழு முறை அதனைத் திருப்பித் திருப்பிச் சொல்வானேல், பிறகு ஒருபோதும் மறவான். இயற்கையாய் ஒருவன் தனது ஞாபகசக்தி எவ்வளவு அஃகியதாயிருக்குமோ அவ்வளவு அவன் பன்முறைப் பயிற்சியால் அக்குறையை நிரப்புவான் உறுதிகோடல் வேண்டும். நமதாற்றல்கள் மந்தகதி வாய்ந்த விலங்கினை ஒத்து இடைக்கிடையே கசையடி பெறவேண்டியனவாகின்றன. அல்லவேல் அவை சிறிதும் இடங்கொடாவாம். (4) அன்றியும், ஞாபக சக்தி குறைந்திருப்பிற் காரணத்துவம் வலியுடைத்தாயினுமாகலாம். நேரிதாகப் பயன்படுத்தினாற் பிற்சாற்றிய இப்பற்றுக்கோடே பார்வைக்கெல்லாம் குறைபாடாயினும் அதை ஒருண்மை நலனாய் மாற்றத்தக்கவாறு நாம் செய்து கொள்ளலாம். மிகத் தீவிரமான ஞாபகசக்தி யுடையோரும் தாமவ்வாற்றலுடைமையில் திருப்தியுற்று உணர்ச்சித்திறம் வாய்ந்த கிள்ளை போன்று பல்லோரும் புகழத் தங்களாற்றலைப் புலப்படுத்துவார்கள். காரணமின்றி நினைவுகூரப் பின்வாங்கும் மனிதனோ விஷயங்களின் காரண வியைபை நன்கு தேர்ந்தறிந்த பின்னர், காரணமில்லாப் பொருள் விளங்காத் தொடர்ச்சியென அவன் மனத்தினியல்பு ஏற்றுக்கொள்ளச் செய்யாததை, பகுத்தறிவினாலாய சில ஒழுங்கிணக்கங்களால் ஒருங்குபிணைக்கின்றனன். (5) செயற்கைப்பொருளிணக்கம் படைத்துக்கோடலும் சிலவேளைகளிற் பயன்படும். சிறுவனொருவன் 'திருக்குற'ளும் 'திருவள்ளுவ'ரும் 'திரு'வெனத் தொடங்குதலான் திருக்குறளினாசிரியர் திருவள்ளுவரென நினைவுகூர்தல் இதற்கு உதாரணமாகும். ஆயினும் இத்தகைய தந்திரங்கள் பயிற்சி நன்கு அடையாத ஒரு தலைவியின் வேண்டுகோள்களுக்கு இணங்குவதாமேயன்றி ஆண்மையுற்ற மனச்செயலின் பாற்படாவாம். செயற்கை ஞாபகக்குறி முறையெனச் சாற்றப்படுவனவற்றை ஒழுங்காய் உபயோகப்படுத்துவதில் எமக்கு உறுதியான நம்பிக்கையில்லை. உள்ளுறை யாற்றல்களினியற்கை யோட்டத்திற்கு இடையூறு செய்யும் காரணமில்லா நகையாடற் குரிய குறிகளை அவைகள் மனத்தில் நிரப்புகின்றன. இவ்வகையந்திர உறுப்புக்களின்வைப்புப் போன்ற முறை சாதாரணமாகச் சரித்திரத்தின்கண் நிகழும் தேதிகளை நினைவுகூரலில் உபயோகப்படுவது வழக்கம். ஆனால் இவைகளைக் காரணப்பற்றுக் கோட்டினாலாதல் தற்செயலாக இயலுறும் ஆன்றோர் நாமத்தொடர்ச்சியாலாதல் நன்கு நினைவு கூர்ந்திருத்தலியலும். சாகாடிஸ் புலவர்பெருமான் நச்சுணவு உட்கொண்டபோது ப்ளேடோ இருபத்தொன்பதா மாட்டைப்பருவ முடை

யார் என்று யாம் ஞாபகம் வைத்திருத்தல் இதற்கு ஒருதாரணமாம். சிந்துநதிக்கரையிலிருந்த பிராமணர்களுடைய வேதமொழியினுடன் சாகரடிஸ் ப்ளேடோ என்பவர்களது பாஷையைக் கைகலக்குமாறுசெய்த ஜயம்பெற்ற ஜனக்கூட்டத்தின் தலைவனும் மாஸிடன் தேயத்துப் பிலிப் எனுமரசனது புகழ்வாய்ந்த மகனுமாகிய அலக்ஸாந்தர் என்பவனுக்கு இந்த ப்ளோடோவின் மாணாக்கராகிய அரிஸ்டாடில் ஆசிரியர் என்று நினைவு கூர்ந்திருத்தல் இதற்கேற்ற மற்றோருதாரணம். (6) இறுதியில், ஒருவன் தனது ஞாபகசக்தி எவ்வளவு தீவிரமாயிருந்தபோதிலும் வரைந்து வைக்கப்பெற்ற குறிப்புக்கள் பயக்குமுறுதியான நன்மைகளை எள்ளாதிருக்கக் கடவன். குறிபேட்டினின்றும் உரைத்தல் ஞாபகசக்தியை வலியுறுத்தாது, மற்று ஞாபகசக்தியைக் குறைக்குமென்ப தொருதலை. ஆயினும். எளிதிற் பயன்படும்படியான விஷயங்களின் தொகுதிகளைக் கையால் தீட்டிய அல்லது அச்சிட்ட குறிப்பாக நிலைபெற வைத்திருத்தல் ஒருங்கே திரட்டியமைக்கப் பெற்ற கணக்கிலாப் பொருள்களை வேண்டுமோரையில் ஒருவன் பயன் படுத்த இயலுமாறு செய்யும். இந்நோக்கத்தைக் கைக்கொண்ட சிறுவன் சில நூல்களின் இடைக்கிடையே வெள்ளேடுகளை வைத்துக் கட்டவும், மற்றுஞ்சில நூல்களுக்கு முதற்குறிப்பகராதி செய்யவும் இவ்வாறு எளிதில் உடனே கண்டறியும்படி தான் அறிபொருள்களைப் பாகுபாடு செய்து அட்டவணைப் படுத்தவும் எவ்வளவு கடிதில் தொடங்குவானாயினும் நன்றேயாம். நமது பாகவதர்கள் இடையேடு வைக்கப் பெற்ற நூல்களைக் கைக்கொண்டு ஏற்ற சிறந்த விடங்களில் அமயத்திற்குப் பொருந்திய உதாரணங்களாக உயிர் வாழ்க்கையில் இயலுறும் விஷயங்களாதல் நூல்களிற் படித்த உபகதைகளாதல், ஆங்காங்கே அருகில் தீட்டி விடுப்பார்களாகில், தங்கள் பிரசங்கங்களை நிச்சயமாகவே மிகமேன்மை பெறச்செய்வார்கள். இயற்கையில் மிகக் குறைந்த ஞாபக சக்தியுடையோராயினும் இக்காலத்திற் சாதாரணமாய் மிகவும் பொருள் விரிவு விளக்கமற்ற தங்கள் ஞானப் பிரசங்கங்களினிடையிற் சாதனைக் கடுத்த பலப்பல விவகாரங்களுடன் தங்கள் நூற்குவியலினின்றும் புதுவதும் பழையதுமான பொருள்களுடன் விவரித்தலை அவர்கள் இவ்வாறு அறிவார்கள். இராஜாங்க விஷயங்களிற் பயிலும் மாணவர்கள் அரிஸ்டாடில் என்பவ ரியற்றிய அரசியல் நூலிற் பயன்பெற இடையேடு அமைக்கலாகும். இவ்வாறு பொது ஜனவாழ்க்கையின் மிகவும் இக்காலத்திற்குரிய அனுபவத்தின் பழக்கத்தினனே விளையக் கூடிய முரட்டுத்தனத்தினின்றும் ஒருபுறநோக்கத்தினின்றும் மனத்தைப் பிணித்துச் சீர்திருத்தலாகும்.

ச. கி. சுந்தராசாரியன்.

---



# THE STATEMEN OF DROUPATHI.

## பாஞ்சாலி கூற்று.

மூதறிவாளர்காள்! மகாபாரதம் பழம்பொருந்து சருக்கத்திற் பாஞ்சாலி கூற்றாகப் புனைந்துள்ள,

"அம்புவி தனிற்பெண் பிறந்தவர்க் கெல்லா மாடவ ரிலாமையி னல்லால்
நம்புதற் குளதோ வென்றனள் வசிட்ட னற்றவப் பன்னியே யனையாள்"

என்ற செய்யுளடிகளால் தற்காலத்தோர் பலரும் பெண்பாலாரெவர்க்குமே கற்பிற் கலங்காத மனத்திட்பம் இலதென்றும் வசிட்ட முனிவரின் இல்லறக் கிழத்தியாய அக்கற்புக்கடவுளே யன்ன பாஞ்சாலியே இங்ஙனம் குறித்தனளென்பதனால் அவ்வருந்ததி யாதியோர் கற்பும் ஐயுறற்பாற்றென்றும், அங்ஙனம் அம்மாதரசி உலகின்மேல் வைத்துரைத்தது தனது மாசற்றமனநிலையைக் குறிப்பானுணர்த்துதற் பொருட்டேயாமென்றும், அதற்கநுகுணமாகக் கர்ணனிடத்திற் பாஞ்சாலிக்குள் ஒருதலையான காதலிருந்த துண்டெனக் கர்ண பரம்பரையான கதையொன்றுலகின்கண் நிலவுகிறதென்றும் நீளப்பொருள் கொண்டுரைத்தலைக் காண்கின்றோம்.

இவ்வாறு பொருள் கோடலினால் விளையும் இழிவு சிறிதன்று. இஃதிருபாலார்க்கு முரித்தாமன்றி விலக்கன்று ஆதலின், இதனைச் சுருதி யுக்தி யநுபவம் எனும் மூன்று வழிகளானுமாராய்ந்து அறிவின் மிக்கோர் எம்போலியாது ஐயவிபரீதங்கள் அகன்றொழியுமாறு தக்க சமாதான மளிப்பார்களென ஆவல் மிகுந்து இஞ்ஞானபோதினி வாயிலாய் எம்மனோர்க்குள்ளெழும் ஐயப்பாட்டினை வரைய விழைந்தனம். நிற்க.

பாஞ்சாலிகற்பே பழுதெனின், அப்பாவையைச் சுயோதனன் அரசவையிற்களைந்த துகில் உலவாக்கிழிபோல் மேன்மேலும் வளர்ந்து மண்ணும் விண்ணும் மதித்து வியக்குமாறு மானங்காத்ததென்? அச்செய்யுளிரண்டாமடியினீற்றிலேயே அருந்ததிக் கொப்பாள் என்றுபசரித்த தெவ்வாறு? அதே பாஞ்சாலி தனது முற்பிறப்பினில் நாளாயணி யெனும் பெயர்தாங்கி அங்கமெலா மழுகிக்கரைந்த பிணியுடையராகக் காணப்பட்ட தன் அன்புடைய பதியை வெறாது அப்பதியுடனொருங்குறைந்து அவர்க்குக் குற்றேவல் பலவும் புரிந்து அவர் இவள் மனத்தைச் சோதிப்பான் விருப்பிச்செய்த சகித்தற்கரிய கொடுமைகள் பலவற்றினையும் சலியாது பொறுத்துக் களிப்புடனிருந்து வந்ததாகக்கூறும் பூர்வ சரிதங்கட்குப் போக்கென்னை?

கற்புக்குக் கட்டளைக் கல்லாக விளங்கிய காந்தை நாளாயணி யல்லளோ? அந்நாளாயணிதானே இப்பாஞ்சாலியா யவதரித்தது. இஃதன்றியும்,

"வெங்கனல் மூழ்கியும் புலன்கள் வீக்கியும்
நுங்குவ அருந்துவ நீக்கி நோற்றவர்
எங்குளர் கற்பினவர் தில்லின் மாண்புடை
மங்கையர் மனத்தவ நவிலற் பாலதோ"

எனவும் "கல்லொடுந் தொடர்ந்த நெஞ்சங் கற்பின்மேற் கண்டதுண்டோ" எனவும் கூறப்பட்ட ஆன்ற முடிபுகள் யாவாம்? கணவன் துஞ்சினனெனல் செவிப்பட்ட வளவில் உயிர்நீத்த சூரபன்மன்மனைவி பதுமகோமளை அப்புவியிற் பிறந்த பெண்ணலளோ? காதலனைக்கண்டு அவன்மேல் வீழ்ந்து புலம்பியதும் உயிர்நீத்த இராவணன் மனையாளாகிய மயன்மகள் பெண்பாலலளோ? முன்னைப் பிறவியிற் கமலச் செல்வியாக எண்ணப்படினும்

மூதறிவேதுமின்றி மண்ணுலகிலுள்ள ஏனையமாதர் போன்ற இயற்கை யுணர்வு கொண்டே கற்பைக்காத்து அனற்குளித்த சீதாபிராட்டியும் பெண்ணலளோ? இன்னும் ஆராயப்புகின் அகலிகை நீங்க அநசூயையாதிய வேளைய வெண்ணிறந்த முனி பன்னியரும் அரச மாதர்களும் பிறவுமுள்ள கற்புடைக் காந்தையர்களும் கோடிக் கணக்காக நமது முன்னூல்களிற் கண்டுணர்தலெளிதேயன்றோ.

ஆதலின் கற்புடைமாதர்கள் உலகிலறவே யொழிந்தன ரென்றுவது பாஞ்சாலியே கற்பில் வழுவின ளென்றுவது கொள்ளுதற்கிடமில்லை. கொள்வின் உய்தியில் பெருங் குற்றத்தை யுரித்தாகக் கொள்ளவேண்டுவதுமன்றி அதே பாரதத்தில் முன்பின் ஓதப்படும் கற்பின் பெருமையை வலியுறுத்துகின்ற கதாபாகங்கட்கு முரணாய் மாறுபடுகின்றதுண்மை. அன்றியும் அம்மங்கை தன் கூற்றில் தவறுய கருத்தினை வைத்தே புகன்றுளெனின், அவளைத் தரும பத்தினியாகக்கொண்ட பாண்டவர் அவ்வுறுதிமொழிகேட்டு யாது புரிந்தனர்? வாளா விருந்தமை எத்துணிபுபற்றி? இல்லாள் என்மனத்தில் மாசுளதெனக் குறிப்பிடக்கேட்ட கணவனுள்ளம் அமைதியுடனிருந்ததெனிற் சிறுபிள்ளைகளும் விம்மிதமுறுவரே! பேடிகளும் பொருத விடயத்தைச் சுத்தவீரர்களாகிய பாண்டவர் பொறுத்து வாளாவிருந்தன ரென்பதினும் வசைவேறுண்டோ? ஆண்மை யுடையோர் இக்கருத்தை யறையவுந் துணிவரோ?

சோதரர்காள்! மற்றெவ்வழிச் சென்று கோட்டமில் பொருள் கோடலாகும்? அச்செய்யுட்கருத்து வேறுள்ள ஜைமினி பாரத முதலியவற்றுள் வேறுபடுகின்றதா? அல்லது கண்ணன் வினவிய குறிப்பும் பாஞ்சாலியளித்த விடையும் இன்னவாமென விளங்கவிரித்தோதிய நூற் பிராமாணம் வேறுளதா? அதுவுமன்றி அச்செய்யுளும் செய்யுட்கருத்துமே சற்பிதமா? அல்லது இச்செய்யுட்கே உலகவழக்கொடுஞ் சுருதி வழக்கொடு மாறுகொளாத செம்பொருள் வேறுவிரிக்கவுளதா?

இவ்வாறெல்லாம் அடாப்பொருள்கொண்டு இடர்ப்படுதலினும், "கற்பிற்றவறுறவோர் காரிகை, தன் மனத்தாற் பிறரை நச்சளாயினும் அவள் கட்டழகுடையளேல் ஆடவர் பிறரால் விழையப்படு பொருளே யாவளன்றி அவள் கற்புடையளென வஞ்சி அவ்வாடவரால் வெறுக்கப்படுதல் பெரும்பான்மையு முலகிலின்று" எனும் கொள்கையே கொண்டு அப்பாஞ்சாலியார் "அம்புவி தனிற்பெண் பிறந்தவர்க் கெல்லாம் ஆடவ ரிலாமையி னல்லால்" என்று கூறியதாகப் பொருள்கோடல் (உலகநடைக்கு மாறுபடாதாதலின்) அமைவுடைத்தெனலாம்.

இதற்குத் தான அருங்கற்புடையளாயிருந்தும் தன்பாற் றீயெண்ணமேற்றுப் பல்வழியாலும் முயன்ற கார்த்தவீரியனாற் பின்னர்ப் பரிபவம்பலவெய்திய இரேணுகையே உறு சான்றாம்.

"அல்லலே பெண்ணெனப் பிறத்த லாங்கதி
னல்லலே யிளமையிற் சிறத்த லாங்கதி
னல்லலே கட்டழ குடைமை யாங்கதி
னல்லலே யிரவலர் சார்பி னுகுதல்"

என முன்னோர் கூறியது இதுபற்றியான்றோ?

இவையனைத்தையுஞ் சீர்தூக்கி நூற்றுறை பழகிய நுண்ணறிவாளரெவரேனும் நற்பொருளிதுவென நாட்டிப் புகழ்பெறுமாறு எதிர்விழைகின்றனம்.

அசலாம்பிகையம்மை.

---



# REVIEWS OF BOOKS.

# புந்தகக் குறிப்புக்கள்.

---

## திருவொற்றி முருகர் மும்மணிக்கோவை:

[இது திருப்பத்தூர் - ஸ்ரீமான் கல்யாண சுந்தர நாடாரவர்கள் சென்னைச் சின்னைய நாடாரச்சுக்கூடத்திற் பதிப்பித்தது. இதன் விலை: அணா-8. தபாற்கூலி வேறு.]

இந்நூல் சென்னைக் கிறிஸ்டியன் காலேஜ் உதவித் தமிழ்ப்பண்டிதர்களுள் ஒருவராகிய **நாகபட்டினம் - ஸ்ரீ வேதாசலம் பிள்ளையவர்கள்** இயற்றியது. இந்நூலியற்றற்காரணம் பிரார்த்தனை மாத்திரை யென்பது நூல் வரலாற்றினுன் விளங்கும். நூலின் காப்புச் செய்யுளில் முப்பது முழுமுதற்சொற்களிருத்தல்கண்டு அதற்கியைய முப்பது செய்யுட்களானியன்ற மும்மணிக்கோவையாக இது யாக்கப்பட்டதென்பர். ஆசிரியப்பா, வெண்பா கட்டளைக்கலித்துறை யெனனும் மூவகை யாப்பும் முறையே மாறி மாறி வரப்பாடப்படுவதாம் இப்பிரபந்தம். இத்தகைய கோவை, மாலை முதலிய நூல்கள் அந்தாதித்தொடை மண்டலித்து வருதல் வேண்டுமென்பது ஒரு நியமமாம். அந்நியமமும் ஓராற்றால் இந்நூலின்கண் தழுவப்பட்டுளது. இறுதிப்பாடலின் இறுதிச்சீர் முதற்பாட்டின் முதற் சீரோடு அந்தாதித்தொடை மண்டலித்து வாராமை சில்லோர்க்கு இழுக்கெனத் தோன்றலாம். நெஞ்சொடு கிளத்தல், அருளியல் புரைத்தல், காம மிக்க கழிபடர்கிளவி, முதலிய பற்பல துறைகளினும் செய்யுட்கள் யாக்கப்பட்டுள. பத்துப்பாட்டுப் புறநானூறுதிய சங்கச்செய்யுட்களில் இந்நூலாசிரியருக்குப் பழக்கமுடைமை இந்நூலைப் படிப்பார் யாவருக்கும் தெற்றென விளங்கும். சிற்சில சொற்களும், சொற்றொடர்களும், அப்பழமை மணம் கெடாதவாறு இப்புது நூலின்கண் அமைக்கப்பட்டிருத்தல் மிகவும் வியக்கத்தக்கதே. இயற்கைப்பொருட் சிறப்பும், அணிநலப்பொலிவும், மிக்கு விளங்கு மிந்நூலினை யாவரும் ஏற்று மேற்கொள்வாரென்பதொருதலை. இத்தகைய இனிமையும், பொருட்செறிவும், யாப்பழகும் வாய்ந்த நூல்கள் பல நமது பிள்ளையவர்கள் மேன்மேலு மியற்றிச் செந்தமிழுலகத்தைக் கடமைப்படுத்துவாராக.

## தனிப்பாசுரத்தொகை: முதல் வரிசை:

[இது சென்னை மினெர்வா அச்சுக்கூடத்திற் பதிப்பித்தது. இதன் விலை ரூபா - 1. தபாற்கூலிவேறு.]

இந்நூலின் பாசுரங்கள் நமது ஞானபோதினியின் கண்ணே அவ்வக் காலங்களிலே வெளியாயிருக்கின்றன. அவை யனைத்தும் 1899 - ஆம் வருஷம் திரட்டி அச்சிடப்பட்டன. அப்பதிப்புப் பிரதிகள் விசேஷமாய்ச் செலவாய்விட்டமையின் வேறு பதிப்பு வெளியிடக்கருதிய நூலாசிரியர், ஆங்கில நாட்டிற் கோதிர்த்சபுரிச் சர்வகலாசாலையில் தமிழ்ப்புலமை நடாத்தும் கனம்பொருந்திய ஜீ. யூ. போப்பையரவர்கள், எம். ஏ., டி டி., செய்தளித்த ஆங்கிலமொழிபெயர்ப்பையும் உடன் கூட்டி அச்சிட்டிருக்கின்றனர். இப்பதிப்புத் தமிழ்மகண் மேகலையுள் இரண்டாம் கிங்கிணியாம். இது சென்னைத் தேசாதிபதியவர்களாகிய ஆண்ட்ஹில் சீமான் அவர்க

ளுக்கு அங்கிதஞ்செய்யப்பட்டுளது; காலஞ்சென்ற ராவ் பகதூர் சி. வை. தாமோதரம் பிள்ளையவர்களாற் சிறப்புப்பாயிரம் சொல்லப்பெற்றது. மேற்கூறிய ஆங்கில மொழிபெயர்ப்பாசிரியராகிய போப்புத்துரையவர்களுடைய முகவுரையுங் கொண்டது; கடவுள் முதல் திருவள்ளுவரிறுதியாகவுள்ள 41-தனிப்பாசுரங்களடங்கியது. முன்னிற் பதிப்பிற்போலாது நூலின் பாசுரங்களனைத்தும் முறைப்படுத்து ஒழுங்குபெற வைக்கப்பட்டுள. இந்நூல் பல்லோரானும் இனிது பாராட்டி மேற்கொள்ளத்தக்க நலம் வாய்ந்து விளங்குகின்றமை யாவர்க்கும் ஒப்ப முடிந்ததே. நல்ல பளபளப்புள்ள உயர்ந்த கடிதத்தில் நன்கு பதிப்பிக்கப்பட்டிருக்குந் தன்மை யாவரும் கவனிக்கத்தக்கதே. முற்பதிப்பிற்கும் இப்பதிப்பிற்கும் சிற்சிலவிடங்களில் வேறு பாடங்கள் காணப்படுகின்றன. இந்நூலாசிரியராகிய சென்னைக் கிறித்தவ கலாசாலைத் தலைமை தமிழ்ப்பண்டிதர் **பிரமஸ்ரீ வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியார் அவர்கள் பி. ஏ.,** மேன்மேலும் இத்தகைய நல்வழிகளிலுழைத்துப் புதுநூல்கள் வெளிப்படுத்துதற்கண் இறைவன் திருவருள் புரிவானாக. இனி, இத்தகைய சிறப்புவாய்ந்த இந்நூல் வெளிவந்து மூன்று வருடமாயும் நம்முடைய சர்வகலாசங்கத்துத் திராவிட பாட சபையாரால் இதுகாறும் கவனிக்கப்படாதிருந்ததேனோ? அறிகிலேம். இவ்விஷயத்தை அன்னவதிகாரிகள் கவனித்து இந்நூலினைப் பிரதம கலா பரீக்ஷைக்குத்தக்கதோர் பாடமாக ஏற்படுத்தி நூலையும் நூலாசிரியரையும், மேன்மைப்படுத்துவார்களென்று நம்புகின்றோம்.

காங்கிரேஸ்மகாசபை :

[இது சென்னைச் சடகோபாசாரியர் அண்ட் கம்பெனியார் பதிப்பித்தது. இதன் விலை: அணா 8. தபாற்கூலி வேறு.]

இந்நூலியற்றினர் சென்னைச் சுதேசமித்திரன் பத்திரிகையின் உதவிப் பத்திராதிபராகிய **ம-ள-ள-ஸ்ரீ ழ. அ. சங்கரலிங்கம் பிள்ளையவர்கள் பி. ஏ.** பதினைந்து பதினாறும் காங்கிரெஸ் மகாசபைக் கூட்டங்களில் நிகழ்ந்த விஷயங்கள் யாவற்றையும் ஒருங்குதிரட்டிக் கூடுமுகத்தாற் பற்பல அரிய விஷயங்களை எடுத்துக்கூறுவது; ஏறக்குறைய 144 பக்கங்கள் கொண்டது. நூலாசிரியரது முகவுரையும், இந்தியாவினது ஆதி சரித்திரம் காங்கிரெஸ் மகாசபையினது வரலாறுகளடங்கிய நான்முகமும் இந்தியக் காங்கிரெஸ் மகாசபை காங்கிரெஸ் பிரசித்தப்பத்திரிகை யென்னும் உபோற்காதமும், காங்கிரெஸ் மகா சபைக்கூட்டங்களின் அட்டவணையும், அவற்றில் தீர்மானிக்கப்பட்ட விஷயங்களின் அட்டவணையும், முடிவுரைக் குறிப்புமெனக் கூறப்பட்ட விஷயங்கள் யாவும் இந்நூலிற்கு இன்றியமையாத அங்கங்களே. நல்ல பளபளப்புள்ள கடிதத்திற் பெரிய எழுத்துக்களில் நன்கு பதிப்பிக்கப்பட்டுளது. சுதேசாபிமானிகளாகிய நம்மவரனைவரும் இப்புத்தகத்தை விலைக்குப் பெற்று நூலாசிரியரை ஊக்குவாரென நம்புகின்றோம். இந்நூல் யாவருக்கும் பொருள் விளங்கத்தக்க இனிமையும் தெளிவும் வாய்ந்த தமிழ் நடையிலெழுதப்பட்டிருப்பது இதனைச் சிறப்பிக்கும் அம்சங்களுளொன்றும்.

ஸமரஸ ஞான சந்திரிகை :

[இது சென்னை மினெர்வா அச்சுக்கூடத்திற் பதிப்பிக்கப்பட்டது; இதன் விலை ரூ. 1—0—0; தபாற்கூலி வேறு.]

இந்நூல் சமயப் பொறுமை வளர்ப்பான் வெளிப் போந்ததோர் வைதிக தத்வஞான நூல்; இது 86-பக்கங்கள் கொண்டது; **இராஜா ஸர்**



**ஸவலை இராமசாமிமுதலியார் அவர்களுக்கு** உரிமை பூண்டுள்ளது; ம-ள-ள-ஸ்ரீ தண்டலம் - பாலசுந்தர முதலியாரவர்களால் முகவுரை யெழுதப்பெற்றது; நூலாரம்பத்திற் பரசிவ வணக்கமும் சற்குரு வணக்கமும் கொண்டுள்ளது. இதனை இயற்றியவர் **ஸ்ரீமான் வீச்சூர் - முத்துக்குமாரசுவாமி முதலியாரவர்கள், பி. ஏ.** நம்மிந்தியா தேசத்திலே தொன்று தொட்டு விளங்கும் மதங்கள் பற்பலவாம். இந்த மதங்களில் இற்றைஞான்று உலவாநிற்கும் மதவாதிகளிற் பெரும் பான்மையோர் தமது மதத்தைப் போற்றுவதும் ஏனைய மதங்களைத் தூற்றுவதுமே நாம் யாவரும் அனுதினமுங் கண்கூடாகக் கண்டுவரும் விஷயங்களாயிருக்கின்றன. ஒரு தேசம் உயர்நிலை யெய்தவேண்டுமானால், அத்தேசத்திலுள்ள பற்பல மதஸ்தர்களும் தத்தம் மதச்சண்டைகளை யொழித்து யாவரும் ஒற்றுமை யுடையராதல் வேண்டும்; அவ்வாறன்றி ஒவ்வொருவரும் மதச்சண்டையில் தலையிட்டுப் பிறமத தூஷணஞ்செய்து உள்ள ஒற்றுமையையுங் கெடுப்பார்களானால், அந்தத்தேசம் நாளுக்குநாட் குறைந்துபடுமேயன்றி ஒருநாளும் உயர்ந்தோங்காது. ஐக்கியபலத்தை அதிகரிக்க வேண்டுமென்பதன்றோ காங்கிரெஸ் மகாசபையின் கருத்துமாகும்? இவையிற்றை உணராது, மதத்வேஷிகளாய்த் திரியும் நம்மவர்க்கு மதி புகட்டவேண்டுமென்றும், அங்ஙனம் செய்வதில், சந்திரனானவன் சான்றோனென்றும், சண்டாளனென்றும் வேற்றுமை பாராட்டாது யாவர்க்குந் தனது வெளிச்சத்தைத் தந்து பயன்படுமாறு, தமது 'ஞானசந்திரிகை'யும், இந்துவென்றும் பௌத்தனென்றும், மகம்மதியனென்றும், கிறிஸ்தவனென்றும், வேற்றுமை பாராட்டாது யாவர்க்கும் ஒருங்கே பயன்படவேண்டுமென்றும், இந்நூலாசிரியர் கருதினர்போலும். ஆதலின், இவருடைய கருத்து யாவர்க்கும் ஒப்ப முடிந்ததே யென்பதில் யாதோர் ஐயப்பாடுமில்லை. அன்றியும் சந்திரனிடத்துக் களங்கங் காணப்படுதல்போல இந்நூலின்கட் சில குறைகளுங் காணப்படலாம்; எனினும் கடவுள் ஒருவரே யென்பதும், உலகிலுள்ள பற்பல மதஸ்தர்கள தேடுவதும் நாடுவதும் அக்கடவுள் ஒருவரையே யென்பதும், துவைதி அத்வைதி விசிஷ்டாத்வைதியாகிய இனனோர் யாவர்க்கும் உள்ளபொருள் ஒன்றென்பதைத் துணிவதே ஸமரஸஞானமென்பதும், அந்த ஞானத்தை உலகோர்க்கு வலியுறுத்துக் கூறுமாறு வெளிப்போந்ததே 'ஸமரஸஞான சந்திரிகை'யா மிந்நூல் என்பதும், இதனைப் படிப்போர் ஒவ்வொருவர் மனத்தும் வலியுறுத்தாமற்போகா. மதவாதிகளும் மதச்சண்டைகளும் அதிகரித்து அவரவர்கள் தங்கள் தங்கள் கல்வியையும் காலத்தையும் வீணிற்போக்கும் இக்காலத்து இத்தகைய நூல் வெளிப்போந்தது நேரிதே. ஒவ்வொரு மதத்திலுள்ள குற்றங் குறைபாடுகளை யெடுத்துக்காட்டி அதனால் அந்தந்த மதத்தினரை மனநோவச் செய்யவேண்டுமென்பது இந்நூலின் கருத்தன்று. அன்றியும், இந்நூலாசிரியர் யாவரையும் பொதுவாய்ப் புகழ்ந்துபேசும் பெற்றியரென்பது, இந்நூலை உற்று நோக்குவார்க்குத் தெற்றென விளங்கும். சிற்சில விடங்களில் வேண்டாகூறலென ஒதுக்கற்பாலனவுமுள. நூலின் நடை மிகவும் செவ்வி வாய்ந்துள்ளது; இனிய நடையின் இயன்றுள்ளமையின், ஆடவர்மகளிர் யாவர்க்கும் பயன்படத்தக்கது. மதவாதிகளேயன்றி ஏனையோரும் இந்நூலை வாங்கிப்படித்து ஆனந்திப்பார்களென நம்புகின்றோம். நம்முடைய முதலியார் சர்வமத சம்மதமான நூல்கள் பலவெழுதி நாட்டி யாவரையும் ஒற்றுமைப்படுத்தி யொளிர்வாராக.

## EDITORIAL NOTES.

## பத்திராதிபர் குறிப்புக்கள்.

**தமிழில் எம். ஏ. பட்டம் பெற்றவர் :**—சென்ற ஜனவரியில் நிகழ்ந்த எம். ஏ. பரீக்ஷையில் தமிழை முதற்பாஷையாகவும் கன்னடத்தை இரண்டாம்பாஷையாகவும் கொண்டுசென்று தேறினர் ஒருவர். அவர் திரிசிரபுரத்திலுள்ள எஸ். பி. ஜி. கலாசாலையின்கண் வெகுநாட் சரித்திரப்புலமை நடாத்தினவரும் இப்பொழுது சரித்திரப்புலமையும் வடநூற் புலமையும் தமிழ்நூற்புலமையும் ஒருங்கே நிகழ்த்துபவருமாகிய ம-ா-ா-ஸ்ரீ பி. துரைராயரவர்களாவார். மேற்கூறியாங்கு மூவகைப் புலமை படைத்த இவர் நந்தமிழின்கண்ணே பல்லாற்றானும் உழைத்துப் பலரையு மின்புறுத்துவாராக.

**எம். ஏ. பட்டம்பெற்ற பெண்பாலார்:**—சென்ற வருடத்தில் நிகழ்ந்த எம். ஏ. பரீக்ஷையில் இராஜதானிக் கலாசாலைத் தத்துவப்புலமை நடாத்தும் சத்தியநாதனவர்களது மனைவியார் ஆங்கிலமொழியில் தேறி எம். ஏ. பட்டம்பெற்றதுபோல் இவ்வாண்டு நிகழ்ந்த எம். ஏ. பரீட்சையில் ஆங்கில மொழியில் அன்னாரது இளைய சகோதரியாராகிய கிருஷ்ணம்மா வவர்கள் தேறிப் பட்டம் பெற்றார்கள். இவ்வாறு நம்முடைய இந்து மகளிரும் பி. ஏ. எம். ஏ. முதலிய பரீட்சைகட்குப் படித்துப் பட்டம்பெறுதல் எந்தநாளோ! நம்மவர் பெண்கல்வியைப்பற்றி வீண் முழக்கஞ் செய்வார்களேயன்றி விஷயத்தை உடனே மேற்கொண்டு செய்யப் புகுவார்களல்லர். அதற்கு நாமென்ன செய்யலாம் ?

**சென்னைக் கிறிஸ்தவ கலாசாலைப் பரிசிற் கோடை நாள் :**—வருகிற ஏப்ரல் மாதம் 4-தேதி வெள்ளிக்கிழமையன்று மாலை நான்குமணிக்குமேல் சென்னைக் கிறிஸ்தவ கலாசாலை மாணாக்கர்கட்குப் பரிசில் கொடுக்கப்படும். அவ்வமயத்து நமது சென்னையிராஜதானித் தேசாதிபதி யவர்களாகிய ஆண்ட்ஹில் சீமானவர்கள் சபாநாயகராக வீற்றிருக்கக் கருணை கூர்ந்தார்கள். இவ்வாறு பரிசில் கொடுத்தால் மாணாக்கர்களுக்கு மிக்க ஊக்கம் விளையும் என்றற்கண் யாதோர் ஐயப்பாடுமில்லை.

**எம் டி. பட்டம்பெற்றவர் :**—மதுரைமாநகரத்திற் பிறந்து சென்னை மாநகரின்கண்ணே வைத்தியத்தொழில் பூண்டு பலர்க்கும் உபகாரஞ்செய்து வரும் எம். கிருஷ்ணஸ்வாமி ஐயரவர்களும் மைசூரில் வைத்தியத்தொழில் செய்துவரும் இராமசுவாமி ஐயங்காரவர்களும இவ்வருஷத்தில் எம். டி. பட்டம்பெற்றதற்காக மிகவும் சந்தோஷப்படுகின்றோம்.

**நிலவரி வரும்படி :**—நமது சென்னையிராஜதானியில் சென்ற வருஷத்து நிலவரி வரும்படி 960 லக்ஷமேயாக, இவ்வருஷத்து நிலவரி வரும்படியோ 997 லக்ஷமாம். எனவே நமது சென்னையிராஜதானி நிலவரி வரும்படியில் 37 லக்ஷம் அதிகமாயிருக்கின்றது.

**கன்னியாகுமாரி :**—நம்மிந்தியா தேசத்தின் தென்கோடியும் மிகப்பெரியதோர் க்ஷேத்திரமுமாக மதிக்கப்படும் கன்னியாகுமாரி முனைக்கண் புதியதோர் துறைமுகம் வகுத்து அதனைக் கப்பல்கள் செல்லும் பெரியபாதையோடு சேர்ப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன [illegible]வன்றும் ஐரோப்பிய சுதேசவியாபாரிகளிற் பலர் அவ்விடத்தில் வாணிபங் கருதிமிக்க நிலம்வாங்கி யிருக்கின்றனரென்றும் கேள்விப்பட்டு மகிழ்கின்றோம்.

# ஞானபோதினி

சம்புடம் V. | 1902ஞு ஏப்ரல்மீ 20உ. | புத்தகம் 9.

## AGRICULTURAL BANKS.

## கிருஷி நிதிகள்.

நம் இந்தியாவின்கண்ணே அடிக்கடி பஞ்சங்கள் தோன்றி நம்மவர்களைப் பலவழிகளினுந் துன்புறுத்தாநின்றன வென்பது உண்மையே. நமது துரைத்தனத்தாரும் இதனை ஓராற்றானறிந்து பஞ்ச நிவர்த்திக்கேற்ற முயற்சிகள் செய்யத்தலைப்பட்டனர்; எனினும் அவை அத்துணை பயன்பட்டில. ஒரு காலத்தில் எல்ஜின் பிரபு இராஜப் பிரதிநிதியா யிருந்துழிக் கொடிய பஞ்சமொன்று இந்தியாவிற் புகுந்து பல்லாயிர வுயிர்களை வதைத்து நாட்டினை அலங்கோலப் படுத்திப் பாழாக்கிற்று; அது கேட்ட துரைத்தனத்தார் இந்தியாவிற்கு ஏதேனும் பணவுதவி செய்யவேண்டுமென்று ஆலோசித்தனர். அவ்வமயத்து, மிக்க புகழ்சான்ற மார்லி யென்னும் நிபுணர் இந்தியாவில் நேர்ந்த பஞ்சத்தைப் பற்றி நன்காராய்ந்து தமது அபிப்பிராயங்களை வெளியிட்டனர். அஃதுணர்ந்த பொக்கிஷ மந்திரியாரும் பணவுதவி செய்யலாமென்றிணங்கினர். அஃது அந்தோ! நம்மவர் துரதிர்ஷ்டத்தினால் நின்றுபட்டது. இனிக் கர்ஸன் பிரபு இராஜப் பிரதிநிதியாய் வந்த பின்றைத் துரைத்தனத்தார் இதன்கட் பெருங்கவலை காட்டினர். எனினும் பஞ்சங்கள் தோன்றுவதைக் குறித்தும் அங்ஙனந் தோன்றுவதன் காரணங்களைக் குறித்தும் நம்மவர்கட்குந் துரைத்தனத்தார்க்கும் அபிப்பிராய பேதங்களிருக்கின்றன. ஆயினுஞ் சீமையிற் பாராளுமன்றிலும் இந்திய விஷயங்கள் அடிக்கடி கவனிக்கப்படுவனவாயின. இன்னும் நமக்கு அனுகூலமாகப் பல காரணங்கள் தோன்றியிருக்கின்றன. ஆதலின், நம் இந்தியாவின்கணுள்ள ஏழைப் பயிர்த்தொழிலாளிகளது நன்மையுங் கவனிக்கப்படு மென்ப தொருதலை.

முற்காலங்களில் நம் இந்தியா சகல சுகங்களையும் அடைந்து பொன்னுலகம்போற் பொலிந்திருக்கையிற் பயிர்த்தொழிலாளிகள் தத்தம் வீடுகளிலேயே தானியக் களஞ்சியங்கள் வைத்திருந்தனர்; தங்கள் பெண்டு பிள்ளைகட்கு அணிகலன்களிட்டிருந்தனர்; பக்கத்திலே கேட்கினும் அவர்கட்குக் கடன் கிடைத்தது. மற்று இப்போதோ உழவர் நிலைமை முழுதும் மாறிப்போய்விட்டது: தானியக் களஞ்சிய முடையராயிருந்த வுழவர் தரித்திரக்களஞ்சியங்களாயினர்; இந்திரன்கலையா யவர் மருங்கிருத்தலின் அவர்தம் பெண்டு பிள்ளைகளை யணிவித்த லெங்ஙனமியலும்? இக்காலத்திற் பயிர்த்தொழிலாளிகளுக்கு ஒரு காசுங் கடன் கிடைப்பதில்லை. ஆதிகாலங்களிற் பஞ்சங்கள் தோன்றியக்காற் பயிரிடுவோன் தனது தானியக் களஞ்சியத்தினின்றுந் தானிய மெடுத்துண்பான்; அது போதாதாயின் வீட்டு அணிகளை விற்றுப்பிழைப்பான்; அதன்மேலும் பஞ்சந்தணியாது சில்லாண்டு நீடித்திருந்துழிப் பக்கத்திலே கடன் வாங்கித் தன்னைப் பாதுகாத்துக்கொள்வான். இப்போது ஓராண்டு மட்டிலே பஞ்சம் இலகுவாய்த் தலை காட்டினும் உழவன் கண் கலங்கி உணவு முடையுமின்றி, ஏர்க்காலையுந் தாறுகோலையும் இறப்பிற் செருகிவிட்டு வானத்தை அண்ணாந்து பார்க்கின்றான். இத்தகைய வுழவனைப் பாதுகாப்பது யாவர்க்கு மெய்தியதோர் கடப்பாடாம். பயிரிடுவோர்க்குப் பணக்கடன் கொடுத்து அபரிமிதமான வட்டி வாங்கி அவர்களை யேழைகளாக்கி முழுதும் விழுங்கிவிட முயலும் சாவகாரிகளது வாயினின்றும் அவர்களைத் தப்புவித்துக் காத்தல் வேண்டும். இதனை யுணர்ந்தே நம் துரைத்தனத்தார் உழவர்கட்கு உதவி செய்ய முயலாநின்றனர்.

• வறுமைக் கிருப்பிடமான வுழவன் கடன் வாங்கி அதிக வட்டி கொடுத்து மூழ்கிப்போகா வண்ணம், அவனுக்குப் பயிர்த்தொழிற் காலங்களிற் குறைந்த வட்டிக்குக் கடன் கொடுத்து உதவி செய்யுமாறு சில சிறந்த கிராமங்கடோறும் கிருஷிநிதிகள் ஏற்படுத்தப்படல் வேண்டும். அங்ஙனம் அவை யேற்படாவிடிற் பயிரிடுவோர் நிலைமை மிகவும் பரிதபிக்கத் தக்கதாகும். இம்மதி முதற்றெய்தி யன்று வெளிப்பட்ட சென்னை மாகாண வரவு செலவு கணக்குத் திட்டத்தின்கட் கிருஷி நிதிகள் தாபிக்கும் விடயமாய்த் துரைத்தனத்தார்



சிறிதுபணம் அளியாநிற்பரென்ப துணர்ந்து களிகூர்கின்றோம். கனம் பொருந்திய நிக்கல்ஸன் துரையவர்கள் கிருஷி விஷயங்களில் மிக்க அநுபவ முடையவராதலின் அன்னாரது யோசனையின்படி நடத்தப்படுங் கிருஷிவிஷயங்கள் செவ்வையாய் நடைபெறு மென்றும் நமது இராஜதானி யுழவர்கள் சிறிது காலத்திலேயே யுதவி பெறுவார்களென்றும் யாம் நம்புகின்றனம்.

இன்னும் இந்தியாவினது மற்றை மாகாணங்களினுங் கிருஷிநிதிகளைத் தாபிக்குமாறு துரைத்தனத்தார் முயன்று வருகின்றனர். மேலுங் கிருஷிநிதிகள் இப்படித் தாபிக்கப்படல் வேண்டு மென்பதையும் இன்னின்ன விதிகட்கு அடங்கியவைகளா யிருத்தல் வேண்டு மென்பதையும் இன்னின்னவாறு நடத்தப்படல் வேண்டு மென்பதையும் பற்றித் துரைத்தனத்தார் செய்துள ஏற்பாடுகளனைத்தும் யாவரும் ஒத்துக்கொள்ளக் கூடியனவே. இங்ஙனந் துரைத்தனத்தாரது விருப்பமும் ஜனங்களது அவசியமு மொன்றுதலான் நம் இந்தியாவின்கணுள்ள சிறந்த கிராமங்கடோறுங் கிருஷிநிதிகள் ஏற்பட்டுப் பயிர்த்தொழிலாளிகளை உய்விக்கு மென்பது திண்ணம்.

இஃதன்றி, ஒவ்வொரு கிராமத்தினுமுள்ள தலைவர்கள் சிலர் ஒருங்கு கூடித் தமக்குட் பணந்திரட்டி, அதை ஒரு மூலதனமாக வைத்துக்கொண்டு ஏழை யுழவர்கட்குக் குறைந்த வட்டிக்குப் பணங் கொடுத்து உதவியக்கால் அஃதே சிறப்புடைத்தாகும். அப்படிச் செய்தலியலாது போயின், அவ்வமயத்துத் துரைத்தனத்தார் ஏற்படுத்திய உழவர்க்கெய்ப்பினில் வைப்புச்சாலையிற் பணம்பெறுதல் நேரிதாம்.

பத்திராதிபர்.

---

## RAMAYANA SARAM.

## இராமாயண ஸாரம்.

[292 - ஆம் பக்கத் தொடர்ச்சி.]

ஸ்ரீராமசந்திரன் எந்த நாட்டிற் பிறந்து எவ்வாறு வளர்ந்துவந்தானென்பதைப்பற்றி யிங்குச் சற்றே ஆராய்வோம்.

அலைகடலென்னும் ஆடையாற் சூழப்பட்ட நிலமகள் தனக்கு முகமென மிளிர்வது கோசலநாடாம். அந்த முகத்துக்குத் திலகமென ஒளி வீசுவது

அந்நாட்டின்கணுள்ள அயோத்திமாநகரம். இந்நகரத்தின் சிறப்பை இவ்வளவென்று அளவிட்டுக் கூறுதல் இயலாது ; இதைக் காண்பாரனைவரும், பிரமன் முதலிய தேவருலகிற்கெல்லாம் மேற்பட்ட உலகம் இதுவோ என்று மயங்குவார்கள். இந்நகரம் சரயு வென்னும் வற்றா நதியின் ஜலம் பாயப்பெற்றது ; ஆகையால், நீர்வள நிலவள முதலியவற்றில் எக்காலத்துங் குறையாத செழிப்புடன் விளங்குவது ; இதிலுள்ள மாடமாளிகை கூடகோபுரங்களின் அலங்காரத்தைப் பார்க்கப்பார்க்கப் பரமானந்த முண்டாகும். இந்நகரத்தின் இடையிடையே செல்லும் அகன்று நீண்ட அரசர்வீதி, அந்தணர் வீதி, கடைவீதி, கணிகையர் வீதி, வைதிகர் வீதி, வைசியர் வீதி, முதலிய பற்பல வீதிகளும், ஆங்காங்குத் தோன்றும் மாட வீடுகள், மணிப்பந்தல்கள் முதலியவற்றின் விநோதக் காட்சியும், சுவர்க்க லோகத்தையும் இழிவு படுத்தத் தக்க பேரழகுவாய்ந்தன, பூஞ்சோலை, மாஞ்சோலை, கமுகஞ்சோலை, கருப்பஞ்சோலை முதலிய விதவிதமான சோலைகளும், அரச மண்டபம், ஆஸ்தான மண்டபம், ஆடல் மண்டபம், பாடல் மண்டபம், பாவலர் மண்டபம், பொதுஜன மண்டபம் முதலிய பற்பல சித்திர விசித்திர மண்டபங்களும் நகரத்தின் நாலுபக்கங்களிலுங் காணப்பட்டன. இவ்விதச் சிறப்புக்களை யெல்லாம் நாம் ஆராய்ந்து பார்ப்பதனால், அக்காலத்தில் அயோத்திமாநகரம் எவ்வளவு உயர்ந்த நாகரிகத்தில் இருந்த தென்பது நமக்கு இப்போது மிகவுந் தெளிவாய்ப் புலனாகின்றது. இந்தப் பட்டணத்துக்கு அக்காலத்திற் சத்துரு பயமென்பதே கிடையாது. யுத்தத்தில் இதனை வெல்லத்தக்கவர் ஒருவரும் இல்லாமையினால்தான் இதற்கு அயோத்தி யென்று காரணப்பெயர் கொடுக்கப்பட்டது. இத்துணைச் சிறப்புப் பெற்று விளங்குமாறு அந்நகரைச் செங்கோலோச்சி யாண்டு வந்தவன் இக்ஷ்வாகு வம்சத்தைச் சார்ந்த வோர் மன்னன். இவ்வரசன் ரத கஜ துரக பதாதியென்னும் நால்வகைப் படைகளையும் மிகுதியாகப்படைத்தவன் ; இவனிட மிருந்த வீரர்கள் யாவரும் யுத்த முறைமையை நன்றாய்க் கற்றவர்கள் ; தரும யுத்தமே செய்பவர்கள் ; அதரும யுத்தத்தைக் கனவிலுங் கருதாதவர்கள் ; புலிமுதலிய துஷ்டமிருகங்களையும் ஒரு நொடியிற் கொன்று வெற்றிபெறுவார்கள் ; ஆனால் யுத்தகளத்தில் வலிகுறைந்து நிராயுதபாணியாய் நின்றுவிட்டால், அவர்களுக்கு ஒரு துன்பமுஞ் செய்யமாட்டார்கள். அடிமைகளையும் பயந்து ஒளிப்பவர்களையும், அபயமென்று தம்மைச் சரணமடைந்தோர்களையும் ஒருபொழுதுங் கைவிடார்கள் ; அவர்களைக் காத்து இரக்ஷிப்பதே தமக்குற்ற கடமையாய்க் கொண்டொழுகுவார்கள்.

[தரும யுத்தத்தி னியல்பு நந்தமிழ்ப் புறப்பொருளிலக்கணங்களிற் கூறப்படுந் தழிஞ்சி யென்னுந் துறையின் பாற்படும். தழிஞ்சியாவது ஒரு வீரன் தனக்குக் கெட்டோடுவார் முதுகு புறத்துக் கூரிய வாளோச்சாத மிக்க மறப்பண்பை விரும்பிச் சொல்லுவதாம்.



“வீறின்மையின் விலங்காமென மதவேழமு மெறியா
னேறுண்டவர் நிகராயினும் பிறர்மிச்சிலென் றெறியான்
மாறன்மையின் மறம்வாடுமென் றிளையாரையு மெறியா
னாறன்மையின் முதியாரையு மெறியானயி லுழவன்”

என்றார் சிந்தாமணியினும்.]

இவர்கள் யாவரும் விதிப்படி நேரியவழியில் நடந்து வருகின்றார்களா வென்பதையும், தன்னாட்டி லுள்ள சாதுக்களுக்கு யாதொரு தீங்கும் அணுகாமலிருக்கின்றதா வென்பதையும்பற்றி அரசன் அல்லும் பகலுங் கவனித்து வருபவனாயிருந்தான். அவன் நாட்டில் வாழ்ந்த அந்தணரனைவரும் செந்தண்மை பூண்டவர்களாய், ஜெபதபங்களைக் காலக்கிரமப்படி செய்பவர்களாய், வேதாகமங்களைப் பயபக்தியுடன் ஓதுபவர்களாய், சத்தியத்தைக் கடைப்பிடித்தவர்களாய், யாவரும்வணங்கத்தக்கமுனிவர்குழாமொத்துவிளங்கினர். * இவ்வரசன் கீழிருந்த குடிகளும் கல்விச்செல்வத்திலும் பொருட்செல்வத்திலுங் குறைவற்றவர்களா யிருந்தனர். அன்றியும், அவர்களில் ஒவ்வொருவருக்கும் ‘போதுமென்ற மனமே பொன் செய்யுமருந்து’. இந்தக்கொள்கையைப் பெற்றால், அவர்களுக்குக் குறைவு முண்டோ ?

† “ தம்மின் மெலியாரை நோக்கித் தமதுடைமை
யம்மா பெரிதென் றகமகிழ்க — தம்மினுங்
கற்றாரை நோக்கிக் கருத்தழிக கற்றதெல்லா
மெற்றே யிவர்க்குநா மென்று”

என்னும் ஆன்றோர் வாக்கின் ஆழ்ந்த கருத்திற்கிணங்க, அவர்களில் ஒவ்வொருவரும் தமக்குத் தாழ்ந்த நிலைமையிலுள்ளாரைக்கண்டு தாமே செல்வத்திற் சிறந்தவர்களென்று அகமகிழ்பவர்களாயும், தம்மினுங் கற்றவர்களைப் பார்த்துத் தாம் “ கற்றதுகைம் மண்ணளவு கல்லா துலகளவு” என்று கருத்தடங்கிமேன்மேலுங் கற்கவிரும்புபவர்களாயுமிருந்தனர். அயோத்திமாநகர்முழுவதிலும் வறுமைப்பிணியால் வருந்தியவர்களையேனும், கல்வியின் மணமறியாத நிரக்ஷர குக்ஷியையேனும் காணுதல் அருமையாயிருந்தது. இத்துணைச்சிறப்பு வாய்ந்த இந்தியாவானது இப்போ தடைந்திருக்கும் இழிநிலைமையை யென்னென் றெடுத்துரைப்பது ! இக்காலத்திற் கற்றோர் சிலராயுங் கல்லாதார் பலராயுமிருக்கின்றனர். அன்றியும், இப்போதுள்ளவர்களில் அநேகர் “ ஆசைக்கோரளவில்லை யகில மெல்லாங் கட்டியாளினும்” என்னுந்தாயுமானார் வாக்குக்குத்தாமே இலக்கென முன்வருகின்றனர். இன்னோர்பால் திருப்தியென்பது மருந்துக்குங் கிடைத்தலரிது. செல்வத்தைக் குறைவாகப் பெற்றவர்களில் எத்தனையோ பெயர், தமக்குக் கிடைத்த அந்த

* வான்மீக ராமாயணம் § V † நீதிநெறிவிளக்கம்.

அளவுக்கு மட்டில் திருப்திப்பட்டு அமைதியாய்க் காலங் கழிக்கின்றனர். இவரிப்படி யிருப்பச் செல்வத்தைமிகுதியாகப்பெற்ற கோடீசுவரரிற் பெரும் பான்மையோர், தாம் கொண்ட அளப்பருஞ் செல்வத்துடனும் அமைதி யுறாது, தம்மினும் மிக்காரைநோக்கித்தாமும் அவ்வாறு பெற்றிலமேயென்று வாழ்நாள் முழுவதும் வருந்தி வாடா நிற்பர். அந்தோ! என்னே இவர்தம் அறிவீனம்!! திருப்தியென்பது அவரவருடைய மன நிலையைப் பொருந்துவதேயன்றி அன்னோர் எய்தும் பதவியையேனும் செல்வத்தையேனும் பொருந்துவதாமோ? திருப்திக்கும் அதிருப்திக்கும் காரணமாயுள்ளது அவரவர் மனத்தின் நிலைமையே யாகும். ஆகையால், மனநிறைவே திருப்தியாமென் பதை யொருவரும் மறத்தல் கூடாது.

இவ்வரசன் செங்கோலுக் குட்பட்டிருந்த ஆடவரும் மகளிரும் அகமும் புறமும் ஒத்தவர்கள்; நற்குண நற்செய்கையர்; ஆகவே, இவர்கள் யாவரும் பேரழகுவாய்ந்து பொலிவுடன் விளங்கினார்கள். ஏனெனில், நாகரிகத்தை நன்குணர்ந்து, தூயசிந்தையராய், நன்னெறியி லொழுகுவார்க்குத் தேகத்தில் வனப்பும் பொலிவும் உடன்தோன்றுவது இயல்பேயாம்.

தசரதமகாராஜன் தனக்கு மந்திரிகளை ஆராய்ந்து கொள்ளும் விஷயத்திற் காட்டிய புத்தி சாதுர்யம் பல ஜனங்களாலும் பாராட்டத் தகுந்ததாயிருந்தது. இவ்வரசனால் நியமிக்கப்பட்ட அமைச்சர்கள்,

* "தம்முயிர்க் குறுதி யெண்ணார் தலைமகன் வெகுண்ட போதும்
வெம்மையைத் தாங்கி நீதி விடாதுநின் றுரைக்கு மெய்யர்
செம்மையிற் றிறம்பல் செல்லாத் தேற்றத்தார் தெரியுங் கால
மும்மையு முணர வல்லா ரொருமையே மொழியு நீரார்."

கல்வியில் வல்ல கலைவலாளர்; அரசன் நன்மையை நாடிச் சமயம் வந்துழியெல்லாம் அவனுக்கு இடித்திடித்துப் புத்திபுகட்டும் பேரறிவாளர்; இராஜ்ய தந்திரங்களை நன்குணர்ந்த நிபுணர்; அவைக்களங்களில் அஞ்சாது பேசும் ஆற்ற லுடையவர்; கேட்பார்க் கின்பம் பயக்க நன்மொழி பகரும் நாவலர்; தம்முயிரைக் கைவிடினுஞ் சத்தியத்தைக் கைவிடாத உததம சீலர்; இத்தகைய மந்திரிகளையும் அயோத்திமாநாட்டையும் ஆளப் பெற்றுக் குறையற்றவனாய் வாழ்ந்தான் தசரதமகாராஜன் †

ஆனால், குறையற்ற வாழ்க்கையராய் நிலைத்திருத்தல் மண்ணுலகில் வாழும் மாந்தர்க்கு அரியதன்றே! ஆகவே, குறையற்றிருந்த நம்தசரதருக்கும் ஒரு பெருங்குறை நிகழ்ந்தது. சகல பாக்கியங்களும் பெற்றார் தசரதர்; ஆனால், புத்திரபாக்கியம் மட்டிற் பெற்றாரல்லர். என் செய்வார்? புத்திரபாக்கியம் எளியதோர் பேறன்றே!

* கம்பராமாயணம். † வான்மீக ராமாயணம் § VI.



* "பெறுமவற்றுள் யாமறிவ தில்லை யறிவறிந்த
மக்கட் பேறல்ல பிற."

பெறுதற்கரிய மேலான பாக்கியங்களுள் மேலானதெனக் கருதப்படுவதன்றோ புத்திர பாக்கியம்?

† "பொன்னுடைய ரேனும் புகழுடைய ரேனுமற்
றென்னுடைய ரேனு முடையரோ—வின்னடிசிற்
புக்களையுந் தாமரைக்கைப் பூநாறுஞ் செய்யவாய்
மக்களையிங் கில்லா தவர்."

† "சொன்ன கலையின் றுறை யனைத்துந் தோய்ந்தாலு
மென்ன பயனுடைத்தா மின்முகத்து—முன்னங்
குறுகுதலைக் கிண்கிணிக்காற் கோமக்கள் பால்வாய்ச்
சிறுகுதலை கேளாச் செவி."

ஆயிர மாயிரமாகப் பல்வேறு யாகங்களை இயற்றிய போதிலும், மக்களைப் பெறாமாந்தர் வானுலகத்தை எந்நாளேனும் எய்துவரோ? புத்திரர்களைப் பெறாப்பாவியர் புத்என்னும்நரகவாயின் இடைப்பட்டு இடர்ப்படுவாரன்றோ? குழந்தைகளின் மழலைச் சொல்லைக் கேளா மாந்தரன்றோ குழலோசை இனிதென்றும் யாழோசை இனிதென்றும் வாய் கூசாது கூறுவர்? மாந்தர்க்குத் தேவாமிர்த மொத்துப் பேரானந்தம் விளைக்குஞ் செவியமுதமன்றோ மக்களின் மழலைச்சொல்? அந்த மழலைச் சொல்லைக் கேளாத செவியும் ஒரு செவியோ? அக்குழந்தைகளுடன் அளவளாவி அவர்களுக்கு நல்முத்தந்தாராத வாயும் ஒருவாயோ? அவர்களை வாரி யெடுத்து மார்புறத் தழுவி உடலின்பம் பெறாத உடலும் ஒருடலோ? அக்குழந்தைகள் தவழ்ந்து விளையாடப்பெறாத இல்வாழ்க்கையும் ஒரு வாழ்க்கையோ? அஃது இல் வாழ்க்கையேயன்றோ? அன்றியும், புஷ்பங்கள் அலராத பூஞ்சோலைக்கு ஏதேனுஞ் சிறப்புண்டோ? தாமரை யிருந்தும் பூவாத் தடாகத்துக்கு ஏதேனும் பொலிவுண்டோ? சந்திரன் பிரகாசியாத ஆகாயத்துக்கு ஏதேனும் அழகுண்டோ? இவைபோல மக்களைப் பெறாத மாந்தரின் மனைக்கு ஏதேனும் மதிப்புண்டோ?

‡ "தொக்கிள மலர்துதை விலாத சோலையும்
புக்கிளந் தாமரை நகாத பொய்கையு
மிக்கிளம் பிறைவிசும் பிலாத வந்தியு
மக்களை யிலாததோர் மனையு மொக்குமே."

* திருக்குறள். † நளவெண்பா. ‡ சூளாமணி. வான்மீக ராமாயணம், § VIII.

* "கண்ணில் யாக்கையுந் திங்களில் கங்குலுங் கண்போ
லண்ணன் மந்திரி யில்லர சாட்சியு மருளி
நிண்ணெ னெஞ்சமும் புலவரி லவையுமொண் டும்பால்
வண்ண வாயிள மக்களில் வாழ்வுமொப் பாமால்."

இவற்றை யெல்லாங் கருதினார் தசரதர்; தொன்று தொட்டு வந்த இரவி குலம் பழுது படும்படி புத்திரப்பேறில்லாப் பாவியானேமே யென்று உள்ளங் கலங்கினார்; உடல் மெலிந்தார்; ஆற்றொணாத் துயரக்கடலில் அழுந்தினார். அவரோ, அப்போது முதுமைப்பருவ மடைந்திருந்தனர். ஆகையால் நகரத்து ஜனங்களும் தசரதருக்குப் பின் தலைவனற்ற தம்மை யாவரே காப்பாரென்று அலமந்து நின்றனர். பின்பு, தசரதர் எண்ணாது மெண்ணித் தம்மனத்துள் ஒன்றுந்தோற்றாது, வசிஷ்டரின் மலரடிகளை வணங்கித் தம் குறையை அவருக்கு விண்ணப்பித்தனர். அம்முனிபுங்கவர் ஞானதிருஷ்டியா லாராய்ந்து பார்த்து அசுவமேத யாகம் புரியின் அரசனுக்கு மகப்பேறு உண்டாகுமென்று கூறினார்.

(இன்னும் வரும்.)

செய்யூர் - முத்தைய முதலியார்.

---

## VIKRAMORVASI'YAM.
## விக்கிரமோர்வசீயம்.

---

இனியதோற்றத்தவள்பெருங்காதல னென்றுநீபுகல்கின்றாய்புரூரவன்
நனியவண்ணிமித்தத்துறுபீழையை நன்குகண்டிலையாலிருவர்க்குமே
தனியிலாதுசாதாரணமாயவிவ் வாசைதானுடன்கூட்டிடும்வேட்கனன்
* மனியவெம்பொருள்வெம்பொருடன்றொடே மன்னவைத்தற்குப்போல
[மன்மாதரோ. (36)

**சித்திரலேகை:**—(உருப்பசியை யடைந்து) தோழி! உன்னிடத்திலுங் காட்டில், மன்மதன் மிகவுந் தயையற்றவனாயிருக்கக்கண்டு, இனிய நண்பனுக்குத் தூதியாக வந்தவளாகின்றேன்.

**உருப்பசி:**—(திரக்கரிணியை நீக்கி) அடி! சித்திரலேகே! நின்னால் விடப்பட்டவளாகின்றேன்.

**சித்திரலேகை:**—இனி அறிவேன் எவன் எவளை விட்டிடப் போகிறானென்று; இப்போழ்து இச்சமயத்துக்குத் தக்கவியவகாரத்தை யறிவாயாக.

**உருப்பசி:**—(நாணத்தோடு) செயம் பெறுக மகாராசர். (என வணங்குகின்றாள்.)

**அரசன்:**—சுந்தரி!

---

* சீகாளத்திப் புராணம்.



இந்திரனை யன்றிமற்றோ னேவனையுஞ் சேராத
இந்தச் சயவசன மீங்கெதனா னீபுகன்றாய்
எற்கே சயமதனாலே. (35)

(கைகளைப் பிடித்து இவளை இருக்கச்செய்கிறான்.)

**விதூடகன்:**—அரசனுக்கு இனியநண்பனாகிய அந்தணன் ஏன் வணங்கப்படுகின்றிலன்?

(உருப்பசி சிரிப்போடு வணங்குகின்றாள்)

**விதூடகன்:**—மங்கள முனக்கு.

(திரைக்குள்) **தேவதூதன்:**—சித்திரலேகை! விரைவி, விரைவி உருப்பசியை.

எண்சுவை தெரிக்கு மெப்பிர பந்தம்
பண்புற நுமக்குப் பரதமா முனிவன்
ஓதுவித்தனனோ வுபரபி சயத்திறம்
மோதகற் பயிற்சி மூண்டுள வத்தை
வண்ணநல் லமுதம் வசையறப் பருகி
விண்ணுலா மமரர் வியக்குந் தலைவன்
உலக பாலர்தம் முடனே
கலந்திது போழ்து காணநெஞ் சினனே. (36)

(எல்லோருங் கேட்கின்றனர், உருப்பசி நெஞ்சயர்ச்சியை அபிநயிக்கின்றாள்)

**சித்திரலேகை.**—கேட்கப்பட்டதா இன்றோழியால் தேவதூத வசனம்? அனுமதி கொடுக்கட்டும் மகாராசர்.

**உருப்பசி.**—(பெருமூச்செறிந்து) இல்லை எனக்கு வாய்; மகாராச! இந்தச்சனம் பரவசமானது; மகாராசாவினால் விடைதரப் பெற்றவளாக இச்சிக்கின்றேன், தேவர்களில் அபராதஞ் செய்தவளல்லளாக என்னைச் செய்து கொள்ளற்கு.

**அரசன்:**—(மிகவருந்தி மனத்தை நிலைப்படுத்திக்கொண்டு) உங்களுக்கு இறைவன் கட்டளையைத் தடுப்பவனாகின்றிலேன்; நினைக்கத்தக்கது இச்சனம்.

(உருப்பசி, பிரிவின்றுயரைத் தோற்றுவித்துக் கொண்டு சகியோடு சென்றாள்.)

**அரசன்:**—(பெருமூச்சோடு) தோழ! இப்போழ்து நாட்டத்திற்கு அவமே.

**விதூடகன்:**—(பத்திரத்தைக் காட்டவிரும்பி) அரச! (என்றதனைப்பேசில் தன்னுள்) ஆ! சீ! உருப்பசியின் பார்வையினால் அற்புத மடைந்துள்ள நான், ஆ! சீ! கையினின்றும் நழுவிய புயமரப்பட்டையை அநவதானத்தால் அறிந்திலேன்.

**அரசன்:**—தோழ! என்ன சொல்ல விருப்பினவனா யிருக்கிறாய்?

**விதூடகன்:**—இவ்வாறு சொல்ல விருப்பினவனா யிருக்கின்றேன்; நீ கண்ணீர் விடேல்; உருப்பசி நின்னிடத்தில் திடமாகப் பற்றிய மனமுடையவ

என்றோ? அவள் இச்சனத்தை யடைந்துள்ள அநுராகத்தைச் சிதைப் பாளல்லளென்று.

அரசன்:—எனது நெஞ்சமும் இதனை ஊகிக்கின்றது;

செல்லுங்கா றன்னுடற்குச் சேரிறைமை பூண்டிருத்தல்
இல்லா வவளா லிணைநகிலின்—கம்பவினை
காட்டுயிர்ப்பி னாலேயென் கண்ணவசங் கொண்ணெஞ்சம்
வேட்டுவைக்கப் பட்டதுபோன் மே. (37)

விதூடகன்:—(தன்னுள்) நடுங்குகின்ற தென்மனம்; அங்கவன் நண்பனாற் புய மரப்பட்டையின் பெயர் எடுக்கத் தக்கதாகு மென்று.

அரசன்:—மனச்சுழற்சி கொண்ட என்னை எதனால் இப்போழ்து ஆசையுறு விப்பேன். (சிந்தித்து) ஆ! புயமரப்பட்டையைக் கொணா.

விதூடகன்:—(துக்கத்தைத்தோற்றுவித்து) காணப்படவில்லையே! உருப்பசியின் வழி யாற் சென்றது.

அரசன்:—எங்கும் கண்விழிப்பற்றவன் மைம்பெண்மகன்; அடே! தேடு வாய் நீ.

விதூடகன்:—இங்கே இங்கே இருக்கும்.

(தேடுதலை அபிநயிக்கின்றான்)

(பின்பு புகுகின்றனள் காசிராசன் மகள் பரிவாரத்தோடு)

தேவி.—அடி! நிபுணிகை! நீ சொன்ன துண்மையா? "ஆன்றோன் மாண வகனோடு இக்கொடிவீட்டிற் புகும் பெரியோர்மகர் பார்க்கப்பட்டார்" என்று.

நிபுணிகை:—தலைவி, என்னால் முன்னம் வேறுவகையாக விண்ணப்பிக்கப் பட்டிருக்கின்றனளா?

தேவி:—'அதனால், இவர் ஏகாந்தத்துத் தம் மனம்போனபடி பேசும் பேச் சுக்களை, 'நீ சொன்னது உண்மையா?, அன்றோ?' என்று, கொடிக்குள் மறைந்தவளாய்க் கேட்பேன் காண்.

நிபுணிகை:—தலைவிக்கு எவ்வாறு தோன்றுகின்றதோ.

தேவி:—(உலாவி) நிபுணிகை! இஃதென்? பழைய மரவுரிபோலத் தென்ற லினால் இம்முகமாய்க் கொண்டு வரப்படுகின்றது.

நிபுணிகை.—(ஆராய்ந்து) தலைவி! புரள்வதினால் ஊகிக்கப்பட்ட எழுத்துக் களமைந்துள்ள புயமரப்பட்டையன்றோ இது; அந்தோ! தலைவி யின் சிலம்புநுனியிற் சிக்கியது. (எடுத்து) உன்னால் எவ்வாறு வாசிக்கப் படும்?



தேவி:—இதை நீயே முழுவதும் வாசிகாண்; மாறின்றி யிருக்குமாயின் பின்பு கேட்பேன்.

நிபுணிகை:—(அவ்வாறு செய்து) அதே அபவாதம் போல் தோன்றுகின்றது; தலைவரைக் குறித்து உருப்பசியாற் செய்யப்பட்ட செய்யுள் எனவும், ஆன்றோன் மாணவகனது அநவதானத்தினால் நம்முடைய கைக்கெட் டியதெனவும் ஊகிக்கின்றேன்.

தேவி:—ஆனால், இதன் பொருளை யுணர்ந்தவளாகின்றேன்.

(நிபுணிகை அரசனால் முன்னர்ப் படிக்கப்பட்ட அதனையே படிக்கின்றனள்.)

இந்தக் காணிக்கைப் பொருள்கொண்டு அச்சரப்பெண்பாற் காத லுடையோனைக் காண்பேன்.

நிபுணிகை:—அவ்வாறே.

(கொடிவீட்டைக்குறித்துச் செல்கின்றனர்.)

விதூடகன்:—ஓ! தோழ! காற்றின் வயப்பட்டுச் சென்று செய்குன்றினுச் சியிற் காணப்படுகின்றது.

அரசன்:—(எழுந்திருந்து) பகவனே! இளவேனிலினினிய நண்பனே! மன்மதன் சுற்றத்தோனே! தென்றிசை வாயுவே!

மணங்கொள்வா னிளவேனி லானிறைத்து
வைத்தகொடி மலர்ப்பொடியை வாரிக் கொள்வாய்
கணங்குழையென் னாயகிதன் காதல் காட்டக்
கையெழுது மெழுத்தினைநீண் கவர்ந்தென் கண்டாய்
திணமறிகின் றாயெதனா லிவ்வ கைத்தாந்
தெருளிலுளங் களிப்புறற்குச் சேரு பாயம்
நணப்பிழைத்த விழைவுலைந்த சனத்தை யஞ்ச
னாதேவி பாற்றெரித்த வேண்ட லோய்நீ. (38)

நிபுணிகை:—தலைவி! அதே புயமரப்பட்டையின் தேடுகை நடக்கின்றது.

தேவி:—காண்கின்றேன்.

விதூடகன்:—ஓ! தோழ! வாடிய வகுளத்தினொளிபெற்ற மயிற்றோங்க யினால் வஞ்சிக்கப்பட்டவனாகின்றேன்.

அரசன்:—எவ்வாற்றானும் கேடுற்றேனாகின்றேன்.

தேவி:—(அருகணைந்து) சாலும்! சாலும்! பரபரப்பு; இது புயமரப்பட்டை.

அரசன்:—(விரைவோடு தன்னுள்) அயே! இவள் தேவி. (விளக்கம்) தேவிக்கு நல் வரவா?

தேவி:—இப்பொழுதெனக்குத் தீவரவு உண்டாயிற்று.

அரசன்:—(மறைவில்) தோழ! இங்கென்ன பரிகாரஞ் செய்யத்தக்கது?

விதூடகன்:—கையும் பொருளுமாய்க் கண்டு பிடிக்கப்பெற்ற கள்ளனுக்கு மறுமொழியுண்டா?

அரசன்:—தேவி! இது தேடப்படுகின்றிலது; இம்முயற்சி மற்றொன்றைத் தேடற் பொருட்டதன்றோ!

தேவி:—தகும் தனது காதலை மறைத்தற்கு.

விதூடகன்:—தேவி! இவரது பித்தத்தை நீக்குதற்கேற்ற உண்டியை விரைவி.

தேவி:—நிபுணிகை! அந்தணனால், தோழன் அழகாக அறிவூட்டப் பட்டனனன்றோ!

விதூடகன்:—ஆன்றோய்! இதைக்கண்டு ஆவேசித்தபேய் விடுகின்றிலது.

அரசன்:—மூர்க்க! நீ என்னைத் தவறிழைத்தவனாக வலிய மொழிகின்றனை.

தேவி:—உன்மீது குற்றமில்லை; எந்தயான், உன்னுடைய பிரதிகூலத்தை நோக்கினவளாய் உன் முன் நிற்கின்றேனோ? அந்தயானே இங்குக் குற்றமுடையவள். நிபுணிகை! இங்கே

(என்று கோபத்தைத் தோற்றுவித்துக்கொண்டு புறப்படுகின்றாள்.)

அரசன்:—(தொடர்ந்து)

சேர்பிழையி னேன்றானே சீற்ற மகன்றிடுவாய்
ஆர்கருணை செய்வா யரம்பையினை—நேர்துடையாய்
மன்வணங்கத் தக்கசன மற்றழன்றக் காலடியன்
என்வகையாற் பிழையில னே. (39)

(என்று கால்களில் வீழ்கின்றான்.)

தேவி:—(தன்னுள்) எளியமனமே! நானோ வேண்டுகோளை நன்குமதிக்கின்றிலேன். ஆனால், தாரட்சிணியத்தாலுண்டாகும் உன்னுடைய பச்சாத்தாபத்திற்குப் பயப்படுகின்றேன்.

(என்று அரசனை விட்டுப் பரிவாரத்தோடு அகன்றனள்)

விதூடகன்:—ஓ! தோழ! கார்ப்பருவத்தாறு போல் தெளிவற்றவளாய்த் தேவி சென்றனள். எழுந்திரு காண்!

அரசன்:—(எழுந்து) தோழ! இது தக்கதன்று; பார்

இன்னுரை சன்பல கோடியி யைந்துள தென்றாலும்
துன்னிய காந்தச னங்களின் வேண்டுகை தோகையருள்
கொன்னனு ராசமி கந்தறு கற்பித வன்னங்கொள்
மன்னிய தோர்மணி யாய்குநர் நெஞ்சென வாயதே. (40)



விதூடகன்:—உனக்கு அனுகூலந்தானிது; கண்ணோயால் வருந்துவோன் எதிரிலுள்ள விளக்கொளியைப் பொறானன்றோ.

அரசன்:—வேண்டா மிவ்வாறு; உருப்பசியைப் பற்றிய மனமுடையேனாயினும் எனக்குத் தேவியினிடத்தில் நன்மதிப்பு அதுவேதான். ஆயினும், வணக்கத்தைக் கடந்ததனால் இவள்பால் தைரியங் கொள்வேன்.

விதூடகன்:—இருக்கட்டுங் காண் தைரியம்; உன்னை விரும்பிநிற்கும் அந்தணனது உயிரைத் தாங்குவாய் நீ; நீ நடுப்பகலுணவு கொள்ளுங் காலமன்றோ!

அரசன்:—(பார்த்து) நாளின் அரைப்பகுதி கழிந்தது; ஆகையினாலன்றோ,

வெம்மைதாங்கிலதாய்மயில்பாதவவேரின்கீழ்ப்பனிப்பாத்தியுண்மேவிடும்
அம்ம கன்னிகா ரத்தரு மொக்குளை யளிபி னந்தவற் றின்மிசை யார்தரும்
செம்மை சேர்ந்தகாரண்டவம்வெந்தநீர் தீர்ந்துதீரபங்கேருகஞ்சேர்வுறும்
வெம்மைவாய்விளையாட்டுமனைத்தலைமேவுபஞ்சரக்கிள்ளைநீர்வேண்டுமால்.

[என்றுசென்றன ரெல்லோரும்.]

இரண்டாமங்கம் முற்றிற்று.

பு. மா. ஸ்ரீநிவாசாசாரியர்,

---

## SILAPPADIKARAM: A STUDY.

## சிலப்பதிகார வாராய்ச்சி.

---

இனி யிக்காப்பியத்திற் கண்டிருக்கும் ஸ்திரீ புருஷர்களின் குணாகுணங்களைப் பற்றிக் கூறுவாம். அவ்வித மாராய்வதிற் சாமானியர்களை விடுத்துக் கோவலன், கண்ணகி, கவுந்தி, மாதவி, முதலிய முக்கியர்களை யெடுத்துக் கொள்வோம். அவருள்ளும் முதன்முதற் கோவலனை யாராய்தும்.

முதன் முதலிற் கண்ணகிபாற் காதல்மிக்கு நகைபாராட்டி நலம்புனைந்துரைக்கு நிலையிற் கோவலனைக் காண்கிறோம். ஆங்கவன் சழறுங்காதன் மொழிகளை யுற்று நோக்குபவர்க்கு அவன் கண்ணகியிடத்துக் கொண்டமையலின் மிகுதியும், அதை வெளிக்காட்டுந் திறனில்லாத் தன்மையும் புலப்படும். அத்தகைய ஆர்வத்தைக் காட்டிய கோவலன் அரைக்கணத்தி லக்கண்ணகியை விடுத்து நாடகக்கணிகையாம் மாதவியை யடுத்ததும், பிறகு அற்பவிஷயத்தை முன்னிட்டு மாதவியைக் கடிந்து கண்ணகிபாற் றிரும்பியதும், அவன்றன் சலன சித்தத்தைக் காட்டுகின்றன. ஆயினும் யாரைக் காதலித்த போதிலும், சம்பந்தம் நீடித்திருக்கும் வரை விசேஷப் பற்றுடை

னிருக்குமோர் நற்குணம்மட்டும் அவனிடத்துண்டு. கோவலன் வெகுளி மிக்கானென்பதை அவன் மாதவியினிடமிருந்து பிரிந்ததே காட்டுகின்றது. கானல்வரியி லவன் பாடிய பாட்டுக்கள வன்றன் சங்கீதத் தேர்ச்சியையும், உள்ளப் பயிற்சியையும் வெளியிடுகின்றன. இன்னும் அவன் மறுபடியும் கண்ணகியை யடைவதும், தன்னுடைய துர்நடத்தைக் கிரங்குவதும், கவுந்தி சபித்த பொழுது வம்பப் பரத்தையர்க்குப் பரிந்து பேசுவதும், அவனது நன்மனத்தைக் காட்டுகின்றன. மாதவியி னிரண்டாந் திருமுகத்திற்கு அவன் செய்த மறுமொழியினால், விரோதியினிடத்துக் கொள்ளவேண்டிய சால்புடை வெகுளியும், அந்தரங்க வெறுப்புந் தெரிகின்றன. யாரையும் நம்பும் பெற்றியா னென்பது அப் பொன்வினைஞனாலேமாற்றப்பட்டதனாற் றெரிகிறது. பொதுப்பட நோக்குங்காற் கோவலன் நற்குணமுடையா னென்றே சொல்லலாம். அதனாலேயே, அவனுக்குத் தீவினை விளையுங்காலத்து நம்மன மிரங்குகின்றது. இனிப்புறஞ்சேரியில் மாடலனென்ற வந்தணனுரையைத் தவிர வேறெவ்வகையானுங் கோவலனுடைய பராக்கிரமமும், ஆண்மையும் நமக்கு தெரியக் காரணமில்லை. ஆகையாற் கதா நாயகனுக்கு வேண்டிய பெருமையும், கம்பீரமும் கோவலனுக்கில்லை யென்றே சொல்ல வேண்டும்.

கண்ணகியை நோக்குங்கால், தேவந்தியிடத்துத் தன் கனவை யுரைத்துக் கொண்டிருக்கும் பொழுதுதான் நமக்கு முதன் முதலிலவடன்மனோபாவ மேற்படுகின்றது. அதற்கு முன் அவளைப்பற்றிப் புறக்கூற்றாய்க் கூறுவதினின்றும், அவடன்றலைவனுடைய தீய நடவடிக்கையைப் பொறுமையுடன் சகித்து வந்தாளென்பது மட்டுந்தெரியும். கோவலனுடைய தீயவொழுக்கமும், கண்ணகியின் பொறையும் ஒன்றுசேர்ந்து கண்ணகிபால் நமக்குத் தாபத்தை யுண்டாக்குகின்றது. கண்ணகி கபடமற்ற மடமைக்குணம் பொருந்தியவள். தன்கணவன் தன்னைக்கவனியாது தீநெறிச்சென்றும், அதைக் கருதாது அவனைக் காதலித்து வந்தாள். இந்நூலில் எங்கெங்குக் கண்ணகியைப்பற்றிப் படிக்கிறோமோ அங்கங்கெல்லாம் அவள்சிறிதும் முறுவலின்றிக் கவலையுற்றுக் கண் கலங்கியே யிருக்கக் காண்கிறோம். கோவலன் மிடியால் ந்துகிறானென்று தெரிந்து கொண்ட கண்ணகி, அவனுடைய தீயவொழுக்கத்தையும் மதியாது, தன்னைப் புறக்கணித்திருந்ததையும் பாராட்டாது, இனியும் பொருளை மாதவிக்கே கொடுத்தாலுங் கொடுப்பானென்று ஐயுற்றும், தன் கணவனுக்கு உதவி செய்ய நேர்ந்ததே பெரும்பாக்கிய மென்று நினைத்தவளாய்த் தன்னிடத்துக் கடைசியாயிருந்த சிலம்பை விற்றுப் பொருளாக்கும்படி கழற்றிக்கொடுத்தாள். இஃது அவளுக்குத் தன்றலைவனிடத்திருந்த பற்றையும், அவடன்றூய வொழுக்கத்தையுங் காட்டுகின்றது. இக்குணங்கள், இடையிடும் அபாயங்களையும் மதியாது தானும் மதுரைக்குத்



தன் கணவனுடன் போவதாகப் புறப்படுவதாகச் சொல்லும்பொழுது சிறந்து விளங்குகின்றன. போகும் வழியில், வம்பப்பரத்தையர்களின் கூற்றால்நடுக்க மெய்தியதும், அவர்தம்மைக் கவுந்தி சபித்த பொழுது அவர்களுக் கிரங்கியதும், அவளுடைய மனோபாவத்தின் நுட்பத்தைக் காட்டுகின்றன. இன்னும், மதுரையை யடுத்த இடைச்சேரியிற் கோவலன் தன்னுடன் போந்ததற்காகக் கண்ணகியை வியந்து பேசியபொழுது கண்ணகி கூறும் மறுமொழி படிப்போர் மனத்தை யுருக்கத்தக்கதா யிருக்கின்றது. இதுவரைக் கண்ணகி நுண்ணிய உணர்ச்சியும், பெருந்தன்மையும், நன்னடத்தையுமுள்ள நங்கையாய்க் காண்கிறாள். அவள் கணவனிறந்ததும் முற்றும் மாறுதலடையக் காண்கிறோம். அவளது அச்சமுமமைதியு மில்லாத் தோற்றமும், ஊராரை நோக்கிப் புகன்ற வஞ்சின மொழியும், முரட்டுத்தனமாகவும், பெண்மைக்குணமற்றும் அரசனுடன் செய்த வாக்குவாதமும், அரசனும் அவன் மனைவியுமிறந்துந் தன்பழிக்குப் பழிவாங்க நினைந்ததும், ஒரு பாவத்தையு மறியா துதவியற்றிருந்த மதுரைமா நகரத்தாரை யநியாயமா யருளற்றுச் சபித்ததும், மேலே நாம் குறித்த கண்ணகியின் குணங்களை முற்றும் மாற்றி விடுகின்றன. இவ்விதம் படுபாடாய்க் கண்ணகியை நமதடிகள் மாற்றியது காவ்யாதர்ம மென்றே கொள்வோம். ஆயின், அக்காலத்து நடமாடிய கதையின் போக்கிற்கேற்பக் கூறினாரென்னலாம்; எனினும், இவ்வளவு பயங்கரமாகக் கண்ணகியைக் காட்டாது அவரது நோக்கத்தையும் முடித்துக் கொண்டிருக்கலாம். இந்நூலில், முற்கூறிய குணங்களுடன் முரணாதிருக்க வேண்டுமாயின் கண்ணகி, வேறு சில பத்தினிப் பெண்டிர்களைப் போன்று தன் விதியைப் பொறுமையுட னநுபவித்திருக்க வேண்டும். "பொறை யெனப்படுவ தாடவர் தீக்குப்பூண்." ஆடவர்க்கிப்படியாயின் பேதைமையை யணிகலனாக்கொண்ட பெண்களுக்குக் கேட்க வேண்டுமோ? சீதாதேவியை யிப்பெரும் பதவியில் வைத்துக் கொண்டாடக் காரணம் மற்றியாதோ? அவளது அழகும், தெய்வத்தன்மையும், ஐசுவரியமும், கற்பும் மாத்திரமேயோ? அன்று! அன்று!! சீதாதேவியைக் கொடிய ராவணன் கொடுபோய் இலங்கையி லசோகமரத்தின்கீழ்க் குரூபிகளான அரக்கியர் பலர்சூழத் தனியே வைக்கத், தேவி தவிக்கிறாளென்று நாம் படிக்கவும், அவளுடைய தெய்வத்தன்மையையே கருதாது, அவடன் துன்ப நிலைக்கிரங்கி யதிசீக்கிரத்தில் இராமபிரான் வந்து காப்பாற்றிக் கைக்கொள்ளாரோ வென்றும் பிரார்த்திக்கிறோம்! இன்னும், தமயந்தியையும், சந்திர மதியையும் பெருமைப்படுத்தியதென்னோ? அவர்தம் கேட்டிலுறுதியும், துன்பப்பொறையுமே யன்றி வேறில்லை. மற்றும், நளாயணி, சாவித்திரி முதலிய நம்மாற் சிறப்பித்துக் கொண்டாடப்படும் பல்லோரன்ன பத்தினிப் பெண்டிர்களைப் பிரகாசிக்கச்செய்தது அவர்தம் துன்பப்பொறையைத் தவிர மற்றென்? இன்னும், அரசன் கொலு முன்

னர்த் துச்சாசனன் ஆடையை யவிழ்த்த பொழுது மானபங்கஞ் செய்யப்பட்ட திரௌபதியைக் கண்டு இரங்காதாரும், பிறகு துரியோதனனுடைய உதிரத்தை யவாவி வஞ்சின மொழிந்த பொழுது அவளைக் கண்டு வெருதாரு மெவர்? அத்தகைய வஞ்சினமே அவளை யுயர்பதவியினின்றும் வீழ்த்தித் தாழ்ந்தவர்களால் உயிர்ப்பலி கொடுக்கப் பெற்றுப் பூசிக்கும்படி செய்தது! நமது கண்ணகியும் முற்கூறிய மாதர்களைப் போன்று தன் துன்பத்தைப் பொறையுட னநுபவித்திருப்பாளாயின், இவ்வுலகுந்தொழும். அவ்விதமில்லாது, தன்னெல்லை தாண்டி நடந்தாளாதலின் எல்லோராலு மவமதிக்கப்படுகின்றாள். இத்தகையாள் செங்குட்டுவனாலும், மற்றவர்களாலும் பூசிக்கப்பட்டதாக நமது நூலாசிரியர் கூறுகிறார். அவ்விதம் பூசித்திருந்தால், அவளது அருமையான கற்பிற்கிராது; ஏனெனில், அவள் கற்பு அவ்வளவு அருமையுள்ளதன்று. அவடன் பொறைக்குமிராது, அவளிடத்துப் பொறையே யின்மையால். ஆகலின், அவளொக்கு மதுரையைத் தீயூட்டியவாறு தம் நகரங்களையுஞ் செய்து விடுவாளோ வென்ற பயத்தாலேயே யிருக்கவேண்டும். மேற்கூறிய காரணங்களாலேயே இப்பொழுது திரௌபதியைப்போலவே இரத்த வெறியாற் கண்ணகியுந் தாழ்ந்த ஜாதியார்களாற் பூசிக்கப்பட்டு வருகிறாள்.

பி. ஏ. பிரணதார்த்திஹரசிவனார்.

## FAMINE.

## பஞ்சம்.

மனிதர்களுக் குண்டாகக்கூடிய துன்பங்களிலெல்லாம் பஞ்சத்தாலுண்டாவதே மிகக் கொடியது. இது பார்ப்பவர்க்கும் அனுபவிப்பவர்க்கும் மிகுந்த அருவருப்பையும் அனுதாபத்தையும் உண்டாக்கக்கூடியது. பஞ்சம் மனிதர் செய்யத்தகாத தொழிலையும் செய்யும்படி செய்கின்றது. இத்தகைய பஞ்ச முண்டாவதற்குக் காரணங்கள் எவை யென ஆராய்வாம்:—அங்ஙனமாராயுமிடத்து அவைகள் இயற்கைக் காரணங்கள், செயற்கைக் காரணங்களென இருபிரிவினவாம். "மழை யின்றி மாநிலத்தார்க்கில்லை" என்ற ஆன்றோர் வாக்கின்படி மழை யில்லாவிட்டாற் பஞ்ச முண்டாகும். இது பற்றி யன்றே "மாரி வறப்பிற்பஞ்ச மெய்தும்" என்னும் பழமொழியும் வழங்கி வருகின்றது. இவ்வாறன்றி அகால மழையினாலும் அளவிற்கு மிஞ்சிய மழையினாலும் பஞ்ச முண்டாகலாம். இதனை வெள்ளப் பஞ்சமென்று சொல்லுவார்கள். வேண்டிய அளவிற்குமேல் உண்டாகும் மழையினால் வயல்களிலெல்லாம் மிக்க தண்ணீர் தேங்கி விதைகள் அழுகிப்போகின்றன. இன்னும் மலைப்பிரதேசங்களிற் காட்டாற்றின் பெருக்கால் விதைத்த விதைகளெல்லாம் அடித்துக்கொண்டு போகப்படுகின்றன.



இவைகளினாலுண்டாகும் பஞ்சத்தை நிலங்களைச் சீர்படுத்துவதனாலும், தகுந்த வரப்புகள் எழுப்புவதனாலும், கழிவு நீர் கழிதற்கு வழிவிடுதலாலும், கிராமங்களில் தகுந்தபடி சலதாரை கட்டுவித்தலாலும் வரவொட்டாமல் ஒருவாறு தடுக்கலாம். பூகம்பமும் பஞ்சத்திற்கு ஒரு காரணமாம். எவ்வாறெனில், களங்களினருகே நிலம் பிளவுபடுமேல், அருகிலிருக்கும் வாய்க்காலின் தண்ணீர் பிளப்பின் வழிச்சென்று களத்தைக் கெடுத்துவிடும். சிலசமயங்களிற் களமே பிளப்பில் தூர்ந்துவிடும். பூச்சி, புழு, வெட்டுக்கிளி, எலி, முதலியவைகள் அறுப்புக்காலங்களில், கதிர் முற்றிய சமயத்தில், அவைகளைக் கத்தரித்தெறிந்தால் தானிய நாசமாகிப் பஞ்சம் விளைகின்றது. 1812-13-ஆம் வருடங்களிற் சென்னை ராசதானியில் உண்டாகிய பஞ்சம், "எலிகள் விளைத்த தீங்கினால்" உண்டாயிற்றென்று தீர்மானிக்கப்படுகிறது.

இதுகாறும் பஞ்சத்தின் இயற்கைக் காரணங்களாவன எவையென விசாரித்தோம். இனி அதன் செயற்கைக் காரணங்களிற் சிலவற்றைப் பற்றி விசாரிப்போம்:—யுத்தமே பஞ்சத்திற்கு முதற்பெருங் காரணம். போரே நாட்டிற்கு நண்ணியதோர் நமன். இஃதே நம் பொருளனைத்தையும் விழுங்கும் மலைப்பாம்பு! இது முடிந்த நான்கல்லது ஐந்து வருடங்கட்கு நாட்டைப் பஞ்சம் பீடியாமல் விடாது. ஏனெனில், அநேக சமயங்களில் விவசாயக்காரர்கள் கூடக் கத்தி பிடித்துச் சண்டையிடும்படி நேரிடுகின்றது. ஆகவே, விவசாயத்தைக் கவனிப்பாரின்றி அது க்ஷீணத்தை யடைந்து கடைசியிற் பஞ்சத்தில் வந்து முடிகின்றது. இன்னும் போர்க் காலங்களிற் பகைவர் நாட்டிற் பிரவேசித்துத் தங்களெதிர்ப்பட்ட நிலங்களையெல்லாம் நாசப்படுத்தியும், கையில் அகப்படும் பொருள்களையும் தானியங்களையும் சூறையாடி விட்டும் ஓடிவிடுகிறார்கள். இவர்கள் போகும் பொழுதே பஞ்சமென்னும் விதையிட்டுப் போயினரோ வென்று சொல்லும்படி யுடனே பஞ்சமுண்டாகின்றது.

2. அறைகுறை விவசாயத்தினாலிப்பஞ்சம் சம்பவிக்கலாம். ஒரு நாட்டில் ஒவ்வொருவரும் தங்கள் குடும்பத்தின் ஒரு வருஷச் செலவிற்குத் தக்கபடி மாத்திரம் பயிரிட்டு மற்றைப் பாகங்களைத் தரிசாகவிட்டு விட்டால், ஏதாயினு மோர்வருடத்தில் விளைச்சல் சாவியாகப்போய் விட்டாலும் அல்லது திரளான சனங்கள் அயலூரிலிருந்து குடிபுகுந்து விட்டாலும் பஞ்சமுண்டாகுமென்பது யாவர்க்குந் தெரிந்த விஷயமே. சைதாப்பேட்டையில் விவசாயஞ் செய்யு முறைமையைக் கற்பிக்குங் கலாசாலையொன்றிருந்தும் நம்மிந்திய மிராசுதாரர்கள் ஆங்குச்சென்று யாவற்றையும் தெரிந்துகொள்ளாதது மிகவும் வியக்கத் தக்கதேயாம்.

3. வாணிபக் குறைவும் பஞ்சத்திற்கிடனே. இவ்விதம் நேர்தற்குக் காரணம் வழிகள் நெடுதலாயிருப்பதனாலும், வழிகளே யின்மையினாலும்,

நீர்ப்பாய்ச்சலுக்கு அவசியமான கால்வாய்களின் தேவையினாலுமே. ஒரு தேசத்தின் ஒரு பகுதியிற் பஞ்சம் மிகக்கொடுமையாக விருப்ப, மற்றொரு பகுதியில் ஜனங்கள் செவ்வனே ஜீவித்திருந்ததாகப் படித்திருக்கிறோம். இக்காலங்களிற் கால்வாய்கள் அதிவிரைவில் தோண்டப்படுவதனாலும், புகை வண்டிப் பாதை நாடெங்கும் ஊடுருவிச் செல்லுதலாலும் இவ்வித இடையூறுகள் அநேகமாய் நீக்கப்பட்டுள்ளன.

(4) தானியங்களைச் சரியான வழியிற் செலவிடாது ஒருவன் தனக்குத் தோன்றியவா றெல்லாம் வழியல்வழிகளிற்செலவிட்டாற் பஞ்சமுண்டாகு மென்பதற்கும் தடையுண்டோ? நங்கிராமங்களில் எத்தனை சனங்கள் திரளான தானியங்களைக் கருப்பனுக்கென்றும் சக்கிலியனுக் கென்றும், இருளனுக்கென்றும், வீரனுக்கென்றும், இன்னுமிவை போன்றவனேக தேவர்களுக்கென்றும் அக்கினியிலிடுகிறார்கள்! அந்தோ!! இவையனைத்தையும் நல்வழியிற் செலவிட்டால் பஞ்சமுண்டாவதற் கிடனுமுண்டோ? ஆங்கிலேய துரைத்தன வரசாட்சியாற் பஞ்சத்தின் செயற்கைக் காரணங்களெல்லாம் ஒருவாறு நீக்கப்பட்டுள்ளன. ஆகவே, நாம் அவர்கள் மாட்டு என்னாளும் நன்றிபாராட்டக் கடமைப்பட்டவர்களாகின்றோம்.

நான்குவேத, ஆறுசாஸ்திர, அறுபத்தினான்கு கலைஞானங்களுக்கு முறைவிடமாகியதும், பரதகண்டமென்று சொல்லப்படுவதுமாகிய நம்மிந்தியாவிற் பஞ்சமுண்டாவதற்குக் காரணம் ஜன மிகுதியாலென்பது சிலர் தம் அபிப்பிராயம். ஆனால் அவர்கள் கொள்கை பெருந்தவறு. முன்பு நடந்த ஜனகணிதக் கணக்கின்படி இந்தியாவில் ஜனவிர்த்தி, ஜர்மனி, இங்கிலாந்து முதலிய விடங்களிற்போல விரைவாக அதிகரிக்கவில்லை யென்பது எற்படும். குடியானவர்களின் அஜாக்கிரதையினாலும், மிதமிஞ்சிச் செலவழித்தலாலும் பஞ்சமுண்டாகின்ற தென்பது சிலர்தம் கொள்கை. அக்கொள்கையுந் தவறே. உலகத்திலுள்ள குடியானவர்களி லெல்லாம் நம்மிந்தியக் குடியானவர்கள்தாம் மிகவும் ஜாக்கிரதைக் காரர்களென்றும் வரவிற்கேற்றபடி செலவு செய்பவர்களென்றும், முன் யோசனைக்காரர்களென்றும், இவர்களைப் பார்ப்பவர்கள் ஒவ்வொருவரும் சாட்சிசொல்லுவார்கள்.

(5) இவைகள் யாவற்றிலும் பஞ்சத்தின் முக்கியகாரணம் நிலவரியே. நிலத்தின் விளைவிற்குமேல் வரி யேற்பட்டுவிட்டாற் பாடுபட்டவர்கள் எவ்வாறு பிழைப்பதோ? அறியோம். நம் நாட்டில் விளைவிற்பாதிப் பாகத்திற்குமேல் சர்க்கார்த் தீர்வைக்குப் போய்விடுகின்றது. மற்றைப்பாதியிற் குடியானவர்களுக்கு எங்கிருந்து கொடுப்பது? ஏர் பிடித்துழுதவர்கள் என் செய்வது? தன் ஜீவனம் எவ்வாறு நடப்பது? இன்னும் நிலத்தின் வளப்பத்திற்காக வேண்டிய எரு முதலாயின எவ்வாறு இடுவது? முற்காலத்தில் நம்மரசர் ஆண்டபோழ்து தீர்வை விளைச்சலில் ஆறி



லொரு பகுதியாக விருந்தது. அக்காலங்களில் மேற்கூறியவைகளுக்கெல்லாம் சரியாக விருந்தது. பஞ்சம் வருவது மிகவு மரிது. ஆனா லிக்காலத்திலோ பஞ்சமில்லாம விருப்பது மிகவு மரிதாயிருக்கின்றது. 1866-ஆம் வருஷத்தில் ஒரிசாவிலும், 1873-74-இல், பீஹாரிலும், 77 - 78-இற் சென்னை ராஜதானியிலும், 1890 முதல் தற்கால பரியந்தம் இந்தியா முழுமையிலும் பஞ்சமாக விருக்கிறது. தீர்வை மிகுதியாக விருப்பதனாலும், விளைச்சலிற் பெரும்பாகமும் நிலவரி முதலியவைகளுக்குப் போய்விடுகின்றமையினாலும் ஜனங்கள் தானியமிகுத்துத் தேவையான சமயங்களில் உபயோகிக்கக் கூடாமற் போய்விடுகின்றது. நம் நாட்டுக் கைத்தொழில், நெசவு முதலாயின சீமையின் யந்திரவேலைக்கு முன்னிற்க மாட்டாமற் பின்னடைந்துபோயின. எனவே தொழிலாளிகளுக்கும் வியவசாயக்காரர்கட்கும் தங்கள் நிலங்களைத்தவிர வேறு பிழைக்கும் வழி யில்லாமற் போய்விட்டது. தீர்வை மிகுதியானால் இத்திரளான ஜனங்கள் எவ்வாறு பிழைப்பர்?

பஞ்சமுண்டாவதற்கு அநேக உற்பாதங்கள் உள்ளன:— நம் நாட்டுக் கொள்கையின்படி வானத்தில் வால்நக்ஷத்திரம் என்ற ஒரு தோற்றம் காணப்படுமாகிற் பஞ்சம் சம்பவிக்கு மென்று சொல்லப்பட் டிருக்கிறது. இன்னும் காலையிற் கரியமேகங்கள் வானத்தி லொருங்கு கூடி இடிமுதலிய வாடம்பரங்களிற் சிறிதும் குறைவில்லாது, நண்பகலிற் கொடுமை கூட்டுங் கதிரவனையுங் கருதாது, அவனது கிரணங்களைத் தன்னுளடக்கி, வெளிக்கிளம்பு வாரது சிரசைக் கடுமழையாற் றுளைப்பதுபோலத் தோன்றிப், பகலுக் கிறைவோன் தன் குகைக்குச் செல்லுங்காறும் கடுங்கோபத்தினாலவனது கொடிய கிரணங்களைத் தடுக்கவேண்டு மென்ற வெண்ணங்கொண்டதுபோலத் தோன்றிப் பரவியிருந்து, அவன் மறைந்தவுடன் "இவ்வானத்திலா மேகங்கள் கூடிய!" வெனக் கண்டோர் வியக்க நீரைவிட் டலம்பினாற்போல, ஒரு துளியேனும் நிலத்திற் பெய்யாது கண்ணுக்கெட்டாத்தூரம் செல்லும். இவ்வாறு மழையில்லாவிட்டால் நீர்வளப்பமின்றி விளைச்சல் குன்றிவிடும். இது பற்றித்தான் "மாரியல்லது காரியமில்லை" என்று நந் தமிழ் முதாட்டி கூறினள்போலும். இன்னும், அந்தணர் முதலிய உயர் குலத்தவர் தங்கள் வேள்வி, நித்தியக்கடன், தேவபூசை, முதலானவைகளிற் தங்கள் காலத்தைச் செலவிடாது வேறு அகிருத்தியமான விஷயங்களைச் செய்யத் துணிவரேற் பஞ்சம் உண்டாகு மென்ப.

"சிறப்பொடு பூசனை செல்லாது வானம்
வறக்குமேல் வானோர்க்கு மீண்டு"

என்னுந் திருக்குறளை யிங்குணர்க. இதற்குத் திருஷ்டாந்தமாகப் பண்டிய நாட்டில் அரசாண்ட உக்கிரப்பெருவழுதி (உக்கிர குமாரபாண்டியன்) தன்றேயம் பஞ்சத்தாற் பீடிக்கப்படுதலின் காரணத்தை ஒரு முனிவ

பார்கேட்க, அப்பெரியோரும் " நின்றேயத்திலந்தணர் முதலிய உயர்குலத்தார் தங்கள் குலாசாரத்தையும், வேதாசாரத்தையும், விட்டுத் தங்கள் மனம் போனவழியும் அல்வழியிலுமெலாம் செல்லா நிற்கின்றார்கள். இது பற்றி யன்றோ நின்னாட்டிற் பஞ்சமெய்துவது" என்று சொன்னதாகப் புராணத்திற் சொல்லப்பட் டிருக்கிறது.

இத்தகைய காரணங்களும், உற்பாதங்களும் ஏற்புடையன வெனக் கொள்வோர்கொள்க. இனிப் பஞ்சத்தின் கொடுமைகளைப் பற்றிச் சற்று விசாரிப்பாம் :—பஞ்சமென்றாற் பதறாத பிராணியில்லை. பஞ்சம்வந்து விட்டால், பச்சாத்தாபம், பிரியம், ஆசை, மனிதர்களுக் கியற்கையான வாஞ்சை யின்னு மிவைபோன்ற மாந்தரின் இயற்கைக் குணங்களெல்லா மிருந்த விடந்தெரியாமல் மறைந்து விடுகின்றன. இதனையே

" மானங் குலங் கல்வி வண்மை யறிவுடைமை
தானந் தவமுயர்ச்சி தாளாண்மை—தேனின்
கசிவந்த சொல்லியர்மேற் காமுறுதல் பத்தும்
பசிவந் திடப்பறந்து போம்"

என நன்கு கூறியிருக்கின்றார். இதில் வருந்தும் சனங்களை நோக்குங்கால், கல்லுறு மனம் படைத்த கள்வரும் கண்ணீர் வடிப்பர். பஞ்சம்வந்துழி மிக்க நிலம் படைத்தவர்களிற் பெரும்பான்மையோர், நண்பரென்றும், குடிப்படைகளென்றும், வேறு கதியற்றுத் தம்மை யண்டிய மிடியர்களென்றுங் கருதாது தமது வயிற்றையே தெய்வமெனக்கருதிப் போஷிக்கத் தலைப்படுவார்கள். மேற்படியாரிற் சிலர் செவ்விய சிந்தையராய்த் தம்மை யண்டினோரை யாதரித்துப் புண்ணியம் கட்டிக்கொள்ளுவார்கள். இவ்வாறில்லாது செல்வமில்லா வேழையரும், அற்றைக் கூலியால் உயிரைக்காக்கு மிடியோரும், இளமையுந் தனமுமற்று மகனையே நம்பிய முதியோரும், கைப்பிடித்த கணவரே கதியெனக் கிடக்குங் காரிகைகளும், தங்கள் பசி தாங்காது எவ்வாற்றாலாயினும் வயிற்றை நிரப்பவேண்டுமென்று எண்ணங்கொண்ட வலியுறு தடியர்களுக்குக் கொள்ளைகொடுத்த அநாதையரும், தங்கள் தங்கள் விதியை நினைந்து நொந்து வருந்தி யாவையு மிறைவனது செயலெனத் தம்மை யடக்கித் தம்முயிரைக் காலனது கையில் ஒப்பித்து விடுகிறார்கள். சிலர் பிழைக்க வழியின்றித் தங்கள் வீட்டுத் தட்டுமுட்டுச் சாமான்களை விற்றும், வேறு சிலர் விதைக்கென்று வைத்திருக்கும் தானியங்களை யுபயோகித்தும் தினம் ஒருபோது வீதம் சாப்பிடுவார்கள். இதற்கும் வழியின்றித் திகைப்பவர் எண்ணிலர். நல்விளைச்சற் காலத்திற் கனவானென மதிக்கப்பட்ட ஒருவன் பஞ்சகாலத்திற் படுங் கஷ்டத்தைச் சொல்லொணாது.

அநேகர் பசிபால் மிக விளைத்துப்பசிபால் மிகவருந்துவார்கள். பாலகர்கள் ஒரு பக்கத்திற் பாலற்றுப் பதறுவார்கள். முதியவர்கள் ஒரு மூலையில்



மூர்ச்சையாய்க் கிடப்பார்கள். மகன் தந்தையிடம் சென்று " அப்பா ! நான் பசியாற் சாகிறேனே ! எனக்கு ஒருவாரமாக ஒரு கவளம் சாதங்கூடப் போடவில்லையே ! !" என்று அழுவான். மகள் மாதாவிடம் சென்று " அம்ம ! எனக்கேதாவது தின்னக்கொடு; எனக்குப் பசி பொறுக்க முடியவில்லையே" யென்று கதறுவாள் ! ! ஐயோ ! பாபம் ! ! எளியதந்தையர்கள் யாது செய்வார்கள் ! ! ! " பெற்றவர்க்கே தெரியுமந்த வருத்தம் பிள்ளை பெறும்பேதை யறிவாளோ" என்றபடி யவர்கள் படுந்துன்பத்தை யாதிசேடன்றன்னாயிரம் நாவாலும் சொல்லொணாது. இவ்வாறன்றி வருந்துங் குழவிகளுக் கிரங்கிச் சிலர் கொடுத்த பண்டங்களையும் ஈரமின்றி அவர்களினது கையினின்றும் திருகிப்பிடுங்கி யுண்பவர்கள் பலர். கருணையொடு கூடிய காரிகைகள் சிலர் தமக்குக் கிடைத்தனவற்றையும் இறக்கும் தம் மக்களுக்களிப்பார்கள். "கோடிப்பொன் கொடுத்தாலுங் குழவிகள்கிடைப்பதரிது" என்னும் உலக வழக்குப் பொய்க்கும்படி மிகுந்த குறைந்த விலைக்குந் தங்கள் குழவிகளையும் விற்பார்கள் அநேகர். நிலங்கள் சாவியாம் விட்டபடியால், தங்கள் ஆடு, மாடு, துணி, நகை நாணயம் இவைகள் யாவற்றையும் விற்றும் வாழ்நாட் கழிக்க முடியாமல் தவிப்பவர்கள் அநேகவாயிரவர். இதன் கொடியதுன்பங்களை யெல்லாம் பொறுக்க முடியாமல் தங்கள் உயிரை மாய்த்துக்கொள்ளுதலே தகுதியெனக் கருதி, விஷத்தினாலோ, ஆயுதங்களினாலோ, தூக்குப்போட்டுக் கொள்வதனாலோ, அல்லது, நதி, ஏரி, குட்டை, குளம், முதலானவைகளில் விழுந்தோ, அன்றிவரை பாய்ந்தோ, தங்கள் உயிரை மாய்த்துக்கொள்பவர் கணக்கிலர் ; அந்தோ ! என்னகொடுமை ! ! எவ்வளவு பயங்கரமான காட்சி ! ! ! இதேமாதிரியானவைகள் இப்பொழுது சமீபத்திலுண்டான பஞ்சத்திற் கணக்கில்லாமல் நடந்திருக்கின்றன. பஞ்சகாலங்களிற் சிசுவதை, தற்கொலை, முதலான தீச்செயல்கள் தலையெடுக்கின்றன. பிழைக்கும் வழியின்றாயின் எவ்வகைத் தீச்செயலையும் சற்றும் அஞ்சாமற்செய்ய யாவரும் தலைப்படுகின்றார்கள். பொய் சொல்லப்பின் வாங்குகிறார்களில்லை. இவ்வாறாகப் பஞ்சமென்னும் பாதகன் நாடுகளை நலிந்துதிரிகின்றான். ஆயினுந் தற்காலத்தில் நந்தேயத்தில் இராசாங்கமுறை பிறழாது செங்கோல் செலுத்தி நம்நாட்டை நாடெனக் கூறும் மதிப்பிழைத்த ஆங்கிலேய துரைத்தனத்தார் பஞ்சம்வராது அநேக வுபாயங்களைச் செய்துளர். அவற்றை மீறிவரினும் அவைகளைத் தடுக்கவும் உபாயம் படைத்துளர். அநேக கால்வாய்களைப் புதிதாகவெட்டி, முற்காலங்களிற் பயிரை யெங்குங் காணாதகளங்களைக் களித்துச்செழிக்கச் செய்கின்றார்கள். அன்றியும், பஞ்ச நிவாரணநிதியென மிக்க திரவியம் திரட்டிப் பஞ்சத்தால் விளையும் கொடுமையைத்தணிக்க ஆங்காங்குக் கஞ்சித்தொட்டிகளைக் கட்டுவித்தும், பஞ்ச நிவிர்த்தி வேலைகளை ஆரம்பித்தும், அங்கு வேலை செய்பவர்களுக்கு உணவும் உடையு மளித்தும் வரத்தகுந்த

வேற்பாடும் செய்துளர். இத்தகைய தர்மங்களைக் குறைவற நடத்தி வருவதற்காக வேற்படுத்தப் பட்ட உத்தியோகத்தர்கள் அடிக்கும் கொள்ளைக்கும் செய்யு மக்கிரமத்திற்கும் கேள்விமுறைகிடையா. நம்நாட்டுப் பஞ்சநிவர்த்திக்காகத் திரளான திரவியங்களாலும், ஏராளமான தானியங்களாலும் உதவி புரியும் அமெரிக்காதேசத்தார் மாட்டும் ஐரோப்பியர் மாட்டும் நாமென்றும் நன்றி பாராட்டக்கடமைப் பட்டுள்ளோம். நம்நாட்டிலினிமேலாகப் பஞ்சமுண்டாகாதென்று ஒரு முடிவாய்ச் சொல்லக் கூடவில்லை. கொஞ்சக் காலத்திற்கு முன் காலஞ் சென்ற ஓர் ஐரோப்பியப் பெருமாட்டி, இந்தியாவின் பஞ்சநிவாரண நிதிக்கென்று ஆயிரம் பவுன் கொடுத்து, அவ்வகை நிதி தற்காலத்திலில்லாதிருந்தால் அவ்வாறு நிதி கூட்டத்தருணம் வரும் வரையிலும், இப்பணத்தை வட்டிக்கிட்டுக் காப்பாற்றி வரும்படி, லார்ட்மேயருக்கு அனுப்பி யிருப்பதாகப் பத்திரிகைகளிற் படித்தோம். கருணையங் கடவுளினருளால் நா மம்மாதை வாயாரப் புகழ்வோமாக.

இக்காலத்திற் பஞ்சத்திநிமித்தம் அநேக லக்ஷம் ரூபாயைச் செலவிட்டும், இன்னுமிக்கொடிய தீமைநம்நாட்டை விட்டு முற்றும் களைவதற் கானவத்துணைத்திரவியமும் செலவு செய்யச்சித்தராயிருப்பதாகவும் உறுதிமொழி கூறுகின்றார்கள். இவ்வாறு நம்மிந்தியர்கள் வருந்துவதைப் பொறுக்க முடியாமல், தங்களாற்கூடிய உதவிபுரியும் ஆங்கிலேய வரசாட்சியை மேன்மேலும் பெருகச் செய்யுமாறு நம்மிறைவோனை நாம் இறைஞ்சிக் கேட்போமாக.

எம். வரதராஜ ஐயர்.

---

## LEARNING.
## கல்வி.

அருந்தமி ழவைக்க ணிருந்தருள் புரியும்
பெருந்தகை யாளர்காள் !

அறிவானும், ஆற்றலானும் மிக்கவர் குழுமிய இவ்வவையின்கண், அவ்விரண்டு மிலாப் புல்லறிவாளன் பேசத் துணிந்தது பெரிதும் பிழையே; ஆயினும்,

"கோக்கண்டு மன்னர் குரைகடற் புக்கிலர் கோகநதப்
பூக்கண்டு கொட்டியும் பூவா தொழிந்தில".

என்னும் நியாயத்தைக் கைக்கொண்டு ஒருவாற்றாற் றிடங் கொண்டனென். நிற்க.

ஈண்டெழுதுவான் புகுந்த விடயம் "கல்வி" என்பதே. அதனைப் பின்வரும் பத்துப் பிரிவான் விளக்குவாம். அவைதாம்.

(1) கல்வியின்ன தென்பதூஉம், கலைவல்லுந ராவார் இவ ரென்பதூஉம்.



(2) கற்றற் குரிய நூல்கள் யா ?

(3) கல்விப் பொருள், செல்வப் பொருள் என்னும் இரண்டிற் கல்விப் பொருளே சீருடைத் தென்பது.

(4) கல்விப் பயிற்சிக் கேற்ற காலம்.

(5) கல்வி கற்கும் முறை.

(6) கல்வி பயிலும் மாணுக்கர் கடனும், அவர் அநுசரிக்க வேண்டிய ஒழுக்க முறையும்.

(7) கல்விப் பயன்.

(8) கல்லாமை ; அதனான் வரும் இழுக்கு.

(9) கல்வியின் மாட்சிமை.

(10) கல்வி: தொகுத்துச் சுட்டல்.

**(1) கல்வி யின்னதென்பதூஉம், கலை வல்லுநராவார் இவர் என்பதூஉம்.**

கல்வியாவது கற்றற்குரிய நூல்களைக் கற்றல் :

"உலவிய விஞ்சை வித்தை யூதியஞ் சால மோதி
கலையுட னுறுதி கேள்வி யிருநான்குங் கல்வி யின்பேர்"

என்னும் நிகண்டினாற் 'கல்வி' யென்னும் ஒரு பொருள் குறிக்கும் வேறு சொற்களை அறிகின்றோம்.

கலைவல்லுந ராவார் விழுமிய நூல்களை விருப்புடன் கற்று, நீதி நெறியினில் நிற்கும் பெரியோர். ஆகவே, ஒழுக்கங் கெடுக்கும் கொழிப்புள நூல்களைப் புறக் கணித்து, மற்றும், உண்மை அறிவினை யூட்டவல்ல உயர் பெரு நூல்களி லூக்கம் வைத்துக் கற்பதே நந்தங் கடமை யாகும்.

"தரும நூலும் புராணத்தின் றன்மையுங்
கருதி யோர்ந்தவ ரேகலை வல்லரே"

எனக் கூர்ம புராணத்திற் கூறி யிருக்கின்றார்.

**(2) இனிச், கற்றற் குரிய நூல்கள் யா ?**

அறம், பொருள், இன்பம், வீடு என்னும் உறுதிப் பொருள்களை அறிவிக்க வல்ல அரும் பெரு நூல்களும், நூலின் பொருளை நுகர்தற் கெளிதாம்படி நமக்குதவும் பான்மை வாய்ந்த நிகண்டு, இலக்கணம், கணக்கு முதலிய நூல்களுமே கற்றற் குரிய நூல்களின் பாற்படும். அறமுதலாகிய பொருள்களைக் காணுதற்குக் கருவிபோற் கணித நூல்களும் இலக்கண நூல்களும் மனிதர்களுக்கு உதவலால் அவைகளைக் கண்களுக்குச் சமமென அறைந்துள்ளனர் ஒளவையாரும். அது தான் "எண்ணு மெழுத்துங் கண்ணெனத்தகும்"

என்பது. "எண்ணென்ப வேனை யெழுத்தென்ப விவ்விரண்டுங், கண்ணென் பவாழு முயிர்க்கு" என்னுந் திருக்குறளையுங் காண்க.

(3) இனிச், செல்வப் பொருளினுங் கல்விப் பொருளே சீருடைத் தென்பதைத் தெளிவுடன் விளக்குவாம்:

மனிதர்களாலே தேடற்பாலன வாகிய பொருள்கள் கல்விப்பொருள், செல்வப்பொருள் என இருவகையினவாம்: செல்வப்பொருள் கள்வர், வலியவர், அரசர், பங்காளிகள் என்னும் உயர்திணைப் பொருள்களாலும், வெள்ளம், அக்கினி என்னும் அஃறிணைப் பொருள்களாலும் கொள்ளை கொள்ளப் படுமன்றே! கல்வி அத்தன்மைத் தன்றென்பது யாவரு மறிந்ததே.

மேலும், செல்வப்பொருள் பிறருக்குக் கொடுக்குந் தோறும் குறைந்து கொண்டே வரும்; கல்விப்பொருளோ பிறருக்குக் கொடுக்கக் கொடுக்கப் பெருகி, கொடுப்பானுக்குங் கொள்பவனுக்கும் ஏககாலத்தில் இன்பம் பயக்கும். "தாமின் புறுவ துலகின் புறக்கண்டு காமுறுவர் கற்றறிந் தார்" மணற் கேணியைத் தோண்டுந்தோறும் ஊற்றுநீர் சுரந்து பெருகிக்கொண்டே வருதல் போலக் கல்வியைக் கற்குந்தோறும் அறிவு வளர்ந்துகொண்டேவரும். "தொட்டனைத் தூறு மணற்கேணி மாந்தர்க்குக் கற்றனைத் தூறு மறிவு."

"இம்மை பயக்குமால் ஈயக் குறைவின்றாற்
றம்மை விளக்குமாற் றாமுணராக் கேடின்றா
லெம்மை யுலகத்தும் யாங்காணேங் கல்விபோன்
மம்ம ரறுக்கு மருந்து"

என்ற நாலடியாரையும் நன்கு நோக்குக. என்னே! இதன் பெருமை! செல்வப்பொருளினைச் சம்பாதித்தலினும், காப்பாற்றுதலினும், இழத்தலினும் ஒருவன் எவ்வளவு இன்ன லடைந்து இடருறுகின்றனன். கல்விப் பொருளினை யடைந்தவனோ, நூல்களிற் பொதிந்துள்ள சொற்சுவை, பொருட்சுவைகளை அநுபவித்தலால் இம்மையில் மகிழ்ச்சியும், முத்தி நெறியினிற் செலுத்த வல்ல, முதன்மை நூல்களைக் கற்றறிந்ததனாற் பேரின்ப வாழ்க்கையும் பெறுதற் குரியவனாகின்றான். அறிவிலார்க்கு அறிவினைப் புகட்டுதலால் உலகத்தார் இக்கல்விமா னிடத்தில் அளவிலா அன்பும் ஆர்வமுங் கொள்ளுவர். காணுதலாலே நல்லொழுக்கமும், மதுரமான வுறுதிச் சொற்களைக் கேட்கையால் இன்பமும் உண்டாதலாற் கற்றவரிடத்தே எல்லாரும் அன்புடையவராவர். இம்மட்டேயோ? கல்வியில் வல்ல கலைஞர்கள் அரசரினும் மேன்மை மிக்கவர், என்னனை யெனிற், செல்லுமிடமெலாஞ் சிறப்புடன் விளங்குவார் கலை நலங் கண்ட கல்விமான்களே. இதனாலன்றோ,



"மன்னனு மாசறக் கற்றோனுஞ் சீர்தூக்கின்
மன்னனிற் கற்றோன் சிறப்புடையன்—மன்னனுக்குத்
தன்றேச மல்லாற் சிறப்பில்லை கற்றோற்குச்
சென்றவிட மெல்லாஞ் சிறப்பு."

என்றார் தமிழ் மூதாட்டியார்.

4. கல்விப் பயிற்சிக் கேற்ற காலம்:

எப்படி அழுக்குறாச் சீலையிற் சாயம் நன்றாய்ப் பற்றுமோ அப்படியே சிறுபிராயத்திற் கற்ற கல்வி புத்தியில் நன்றாய்ப் பதியும். அழுக்குப் படிந்த ஆடையிற் சாயம் செவ்விதிற் படியாத் தன்மைபோல, புத்தி சமுசாரத்தில் வீழ்ந்து வருத்தத்தை அடைந்து கொண்டிருக்கும் முதிர்ந்த பிராயத்திற் கற்றாலும் கல்வி நன்றாய்ப் பதியமாட்டாது. "இளமையிற் கல்" என்றார் ஔவையாரும். மேலும், ஒவ்வொரு நாளிலும் காலையிற் படிப்பதே அதிக பயனை அளிப்பதாகும். முன் நாள் இரவிற் படுத்துறங்கினதனால் மனம் கலக்கமற்று இருக்கின்றது. ஆகவே, காலையிற்படித்த பாடம் மனத்திற்றெளிவாய்ப் பதிகின்றது. கவலைக் கடலிற் கலங்கும் போழ்தாதல், அன்றி, வேறு விடயங்களில் மனம் அதிகமாய்ச் சென்றிருக்கும் போழ்தாதல், உடலுறு பிணியால் வருந்தும் போழ்தாதல் படிப்பது நலனைப் பயப்பதில்லை; எனவே, மனம் தெளிவாய், வேறு சஞ்சலத்தாற் பீடிக்கப்படா திருக்கும் போதே கல்வியைக் கற்கவேண்டும்.

5. கல்வி கற்கும் முறை:

கல்வியை நல்லாசிரிய ரிடத்துச் சந்தேகமும் விபரீதமும் அறக் கற்றல் வேண்டும். இதுவோ அதுவோ என ஒன்றிலே துணிவு பெறாது நிற்றல் சந்தேகமாம். ஒன்றை மற்றொன்றாகக் கொண்டு துணிதல் விபரீதத்தின் பாற்படும். 'கற்க கசடறக் கற்பவை' என்றார் ஆசிரியர் திருவள்ளுவனார். வருந்திக் கற்ற நூலை மறக்க விடாது அதனைப் போற்றுதல் வேண்டும். அப்படிச் செய்யாது அதனை மறக்க விட்டு வேறு நூலைப் படிக்க விரும்புவான் புல்லறிவாளனே.

"வருந்தித்தாங் கற்றன வோம்பாது மற்றும்
பரிந்துசில கற்பான் றொடங்கல்—கருந்தனம்
கைத்தலத்த வுய்த்துச் சொரிந்திட் டரிப்பரித்தாங்
கெய்த்துப் பொருள்செய் திடல்"

என்றார் பிறரும். கல்வியிற் றேர்ச்சி யடைய விரும்பின் இடைவிடாது கற்றல் வேண்டும். 'கல்வி கரையில கற்பவர் நாட்சில, மெல்ல நினைக்கிற் பிணிபல' என இருத்தலாற் சில நூல்கள் மட்டும் படித்து எல்லாம் வல்ல நிபுணன் யானெனத் தோள்தட்டி வெளிப்படுதல் பேதைமையே.

"முற்று முணர்ந்தவ ரில்லை முழுவதூஉங்
கற்றன மென்று களியற்க"

என்றார் நீதிநெறிவிளக்கத்தும்.

தம்மினு மிக்க சான்றோரை அவமதியாது "கற்றதெல்லா மெற்றே யிவர்க்கு நாமென்று" பின்னுங் கற்கக்கடவர். கற்கு நூல்களைக் களிப்புடன் கற்க; வெறுப்புடன் கற்றால் வீணாய் முடியும். வெறுப்புடன் அங்ஙன் கற்போனுக்குக் 'குங்குமஞ் சுமந்த கழுதை'யே யுவமை. ஆசையுடன் கற்குங் கல்வியே இறுதியிற் பெரும்பயன் விளைப்பதாகும். ஆசானிடத்திற் பாடங் கேட்கும்போது மிக்க அமைவுடன் கேட்கவேண்டும்.

'செவி வாயாக நெஞ்சுகள னாகக்
கேட்டவை கேட்டவை விடாதுளத்' தமைத்தல் வேண்டும்.

## 6. கல்விபயிலும் மாணாக்கர் கடனும், அவர் அநுசரிக்க வேண்டிய ஒழுக்க முறையும்.

தாங்கேட்ட பாடங்களை நாடோறும் போற்றலும் தாம் படித்த நூல்களைப் பலதாமுஞ் சிந்தித்தலும் நல்லாசிரியனையடுத்து அவையிற்றைக் குறைவுதீரக் கேட்டலும், தாங்கேட்டறிந்ததைப் பிறருக்கு அறிவித்தலும், மாணாக்கர் தங் கடன்களாம்; கல்வியுடையவர், கற்றறிந்தார்க்குப் புன்னெறி ஒரீஇ நன்னெறி தழீஇ, நன் மாணாக்கருக்கறிவுகொளுத்தி, யாவருக்கும் உறுதிமொழிகளைப் போதித்து, இம்மூன்று செயல்களையும் எஞ்ஞான்றும் தமக்குக் கடனாகக் கொள்ளல்வேண்டும்.

"நுண்மொழி நோக்கிப் பொருள்கொளலு நூற்கேலா
வெண்மொழி வேண்டினுஞ் சொல்லாமை — நன்மொழியைச்
சிற்றின மல்லார்கட் சொல்லலு மிம்மூன்றுங்
கற்றறிந்தார் பூண்ட கடன்."

இவைகளனைத்தினும் அதிகமாய்க் கவனிக்கவேண்டியதொன்றுண்டு. அஃது, கல்வியுடையவர் தாம் கற்றறிந்தபடி நல்வழியிலே ஒழுகுதல் வேண்டும்.

"கற்றபின் நிற்க வதற்குத் தக" என்றார் தேவரும்.
"நூன்முறை தெரிந்து சீலத் தொழுகு"

என நுவன்றருளினர் ஔவையாரும்.

பருகுவ னன்ன ஆர்வத்த னாகிப் பற்பல நூல்களைப் படித்தல்வேண்டும். கற்றாரோடு கலந்து பேசுதல் அளவிலாமகிழ்ச்சியும் ஆர்வமும் பயக்கும்.



"நுண்ணறிவி னாரொடு கூடி நகர்வுடைமை
விண்ணுலகே யொக்கும்"

என்ற நாலடியாரையுங் காண்க.

தான் மேன்மேலுங் கற்பதைத் தவிரத் தன்வழியி னுள்ளார்க்குந் தக்கவாறு கல்வியினைப் போதித்தல் வேண்டும்.

"எச்ச மெனவொருவன் மக்கட்குச் செய்வன
விச்சைமற் றில்லை பிற" என்றார் பிறரும்.

ஆகவே, மக்கட்கு ஒருவன் செய்வதி லெல்லாம் அதிக சிறப்புடையது அவருக்குக் கல்வி போதித்தலே.

## 7. கல்விப்பயன் :

புத்தகங்களைப் படிப்பதனாலேயே புத்திக்கூர்மை யுண்டாகாது. உலக வழக்கும் உணருஞ் சிந்தையனாய் இவ்வுலகத் தன்மையை அறிதல் வேண்டும். படித்ததைப் பிறகு சிந்திக்க வேண்டும். எல்லாம் வல்ல எழில்கொளும் அறிஞரே அடக்கமென்னும் அருங் குணத்தவராவர். சிறிது படித்தவனே எல்லாங் கற்றுவிட்டேனென்று வாய்ப்பறை யறைந்து முழங்கிக்கொண்டு எக்கழுத்தத்தோடும் உலவித்திரிவான்.

ஒருவருக்குக் கல்வி கற்பித்தலை ஒருவிளக்கேற்றுதற்கு ஒப்பிடுவர் யாழ்ப்பாணத்து நல்லூர் ஆறுமுக நாவலரும். "ஒருவிளக்கேற்றுதல் அவ்வொரு விளக்கிலே பல விளக்கும், அப்பல விளக்கினுள்ளும் ஒவ்வொரு விளக்கிலே பற்பல விளக்குமாக எண்ணிலா விளக்கு ஏற்றப்படுதற்கேதுவுண்டாமாறுபோல, ஒருவருக்குக் கல்வி கற்பித்தல் அவ்வொருவரிடத்திலே பலரும், அப்பலருள்ளும் ஒவ்வொருவரிடத்திலே பற்பலருமாக எண்ணில்லாதவர் கல்வி கற்றுக்கொள்வதற்கு ஏதுவாகும்." அவர்கற்ற கல்வி தாம் பிறருக்கு அதனைப் போதித்த தன்மையால் அப்பிறப்பினன்றி மற்றைப் பிறப்புக்களினும் சென்று சென்று உதவும். தாங்கற்ற கல்வியை நன்மாணாக்கர்களுக்குக் கருணையுடன் கற்பியாதவர் காட்டிலே நச்சுமாமரமாவார். வித்தியாதானம் மிகவுஞ் சிறந்தது. கலைகற்றறியாத பேதையின் முகத்தை மயானத்துக் குவமை கூறுவார்.

'கற்றி லாய்கலை கற்றுண ரார்முக
முற்று நோக்கின்ம யானத்தை யொக்குமால்.'

கல்வி தொடக்குங் காற்றுன்பந் தருவதாயிருந்து பின்பு இன்பம் பயக்கும். கல்வியாற் பயனடைய விரும்புகிறவர்கள் தாங்கற்றதைப் பிறருக்குச் சொல்லுந் திறத்தினையும் அடைய முயல வேண்டும்.

"சொல்வன்மை யின்றெனி னென்னாகு மஃதுண்டேற்
பொன்மலர் நாற்ற முடைத்து"

என்றார் குமரகுருபர சுவாமிகளும்

" இழிந்தவ னுயர்ந்த தொன்றை யிபம்பினு முயர்ந்தோன் வாயின்
இழிந்ததொன் றறினு முள்ள வியல்பறிந் தோம்பி நீக்கிப்
பொழிந்தெனப் பிறர்தாங் கூறும் புலப்படாப் பொருளுந் தெள்ளி
வழிந்தெனத் தெளியக் கேட்போர் மனங்கொளப் புகறல் வேண்டும்"

என்றருளினர் கச்சியப்ப முனிவரும்.

இருவிழிகளிருப்பினும் ஒளியின் உதவியின்றி நிலப்பொருள்களைக் காண்டலரிது. அதுபோலச் செல்வம் முதலிய இருப்பினும் நூற்கேள்வி யில்லையேற் பாவபுண்ணியம், இம்மை, மறுமை ஆகிய இவைகளைப் பற்றிய உணர்ச்சியில் தெளிவு நிகழாது. இதனாலன்றோ,

" இருவிழிகள் வாண்முகத்தி லிருந்தாலும் வானிரவி யெழுந்தா லன்றிக்
கருதுநிலப் பல்பொருளுங் காண்டலரி தாமுலகிற் கண்போல் யாரும்
பெருகியசெல் வமுமறிவும் பெற்றாலு நூற்கேள்வி பெறுவார்க் கன்றித்
திருவளர்புண் ணியபாவ மிம்மைமறு மையும்வீடுந் தெரியா வன்றே"

என்றார் திருக்குற்றாலப் புராணமுடைய திரிகூட ராசப்ப கவிராயரும்,

கல்வியை விருத்தி செய்வதற்கு முக்கியத் துணையாய் இருப்பது கேள்வி, "அஃதாவது, கேட்கத்தகுநூலின் பொருளைகளைக் கற்றறிந்தவர் சொல்லக் கேட்டல். கற்றவிடத்தே அதனாலாகிய அறிவை உறுதிப்படுத்தலாலும், கல்லாத விடத்தும் அதனை உண்டாக்கலாலும் கேள்வி மிகவும் இன்றியமையாத்துணை. ஒருவன் கல்லாதவனாயிருந்தும் கேள்வியுடையவனாயின் அக்கேள்வி அவனுக்குத் தளர்ச்சிவந்த விடத்துத் துணையாகும்.

" கற்றில னாயினுங் கேட்க வஃதொருவற்
கொற்கத்தி னூற்றாந் துணை" என்பதையுங் காண்க. 'கற்றலிற் கேட்டலே நன்று'

பிறருக்குத்தான் கற்றதைப் போதித்தலும், கற்ற கல்வியின் றுணையால் மேலும் கற்க முயன்று மெய்ஞ்ஞானத்தை அடைதலுமே, கல்வியின் றுணையால் நாம் செய்யவேண்டுவன.

" கற்றதுங்கேட் டதுந்தானே யேதுக் காகக்
கடபடமென் றுருட்டுதற்கோ கல்லா லெம்மான்
குற்றமறக் கைகாட்டுங் கருத்தைக் கண்டு
குணங்குறியற் றின்பநிட்டை கூட வன்றோ?"

என்றருளினர் தந்நேரிலாதொளிருந் தாயுமானவ ரெனும் பெரியோர்.

8. **கல்லாமை : அதனால் வரும் இழுக்கு.**



'கல்லாமை' என்னும் விஷயமே ஒரு பெரிய வியாசத்தின்பாற் படுமேயாயினும், 'கல்வி' யென எடுத்தவிடத்து அதனெதிர் மறையாம் 'கல்லாமை' என்பதைப்பற்றி 'மற்றொன்று விரித்தல்' என்னுங் குற்றத்திற் காளாகாதபடி, சுருக்கமாகவே 'ஒன்றின முடித்தல் தன் இனம் முடித்தல்' என்னும் உத்தியால் ஈண்டு எழுதுதல்.

" கல்லா தீண்ட வொருவ னுலகத்து
நல்லறி வாள ரிடைப்புக்கு—மெல்ல
இருப்பினு நாயிருந் தற்றே யிராஅ
துரைப்பினு நாய்குரைத் தற்று"

என்னும் பாடலாற் கல்லாதான் துயரம் மலையிலக்கன்றோ ?

9. **கல்வியின் மாட்சிமை :**

" அறம்பொரு ளின்பமும் வீடும் பயக்கும்
புறங்கடை நல்லிசையு நாட்டும்—உறுங்கவலொன்
றுற்றுழியுங் கை கொடுக்குங் கல்வியி னூங்கில்லை
சிற்றுயிர்க் குற்ற துணை."
"கடைநிலத் தோராயினுங் கற்றுணர்ந் தோரைத்
தலைநிலத்து வைக்கப் படும்."
"தனக்குப் பாழ் கற்றறி வில்லா வுடம்பு"

என்ற ஆன்றோர் மொழியாற் கல்வியின் மாட்சிமை தானே பெறப்படும். கலைநல மெவற்றினுஞ் சிறந்தற் பாலதே. கல்வியின் மாட்சிமை இம்மட்டேயோ ?

ஒரு தாய் கற்றுள்ள மகனிடத்தில் எவ்வளவு மகிழ்ச்சி கொள்கின்றாள் ! தன் மகனைக் கற்றோ னெனக்கேட்ட தாய் பெற்ற பொழுதிற் பெரிதுவக்கும்

" பிறப்போ ரன்ன வுடன்வயிற் றுள்ளுஞ்
சிறப்பின் பாலாற் றாயு மனந்திரியும்
ஒருகுடிப் பிறந்த பல்லோ ருள்ளு
மூத்தோன் வருக வென்னா தவரு
ளறிவுடை யோனா றரசுஞ் செல்லும்
வேற்றுமை தெரிந்த நாற்பா லுள்ளுங்
கீழ்ப்பா லொருவன் கற்பின்
மேற்பா லொருவனு மவன்கட் படுமே"

என்னும் புறநானூற்றின் செய்யுளே யான்மேற்கூறியதற்குத் தக்கசான்றாம்,

நம்மைப் படைத்த நான்முகத் தோனினும்
கல்வியின் நலத்தைக் கண்டவர் பெரியவ ரெனின்

என்னே இதன் மாட்சிமை !

"கலைமகள் வாழ்க்கை முகத்த தெனினும்
மலரவன் வண்டமிழோர்க் கொவ்வான் — மலரவன்செய்
வெற்றுடம்பு மாய்வனபோன் மாயா புகழ்கொண்டு
மற்றிவர் செய்யு முடம்பு"

என்றருளினர் குமரகுரு பரசுவாமிகளும். இதனை மனங்கொண்டோ அவன் நான்முகத்தோ னனதூஉம்! ஈண்டு இயற்றமிழாசிரியர் விசாகப் பெருமாளையர் கூறினது யாவரும் கவனிக்கத்தக்கது.
தெய்வப் புலமைத் திருவள்ளுவ நாயனார்,

'யாதானு நாடாமா லூராமா லென்னொருவன்
சாந்துணையுங் கல்லாத வாறு' என்னுந்

திருக்குறள் வெண்பாவினுட் கல்வியின் மேன்மையும், அதனைக் கற்றோர்க்குண்டாகும் பயனும் இவையென அருளிச்செய்தார். எங்ஙனமெனின் ஒருவன் சாந்துணையுங் கல்வியைக் கற்கக் கடவனென்பதும், அங்ஙனங் கற்றவனுக்கு எந்த நாடும், எந்த ஊரும், தன்னாடும், தன்னூருமா மென்பதுமாம். இல்வாழ்க்கை, புகழ், வாய்மை முதலியவற்றை ஒவ்வோரதிகாரத்து ளடக்குக் கூறிவந்த நாயனார் கல்வியைக் கூறுமிடத்து அதனைக் கல்விமென்னும் ஓரதிகாரத்துள் அடக்கிப் புலப்படக் கூறுவதற்கு இயலாமல் ஒவ்வொரு விஷயத்தை ஒவ்வோரதிகாரத்துள் அடக்கிப் புலப்படக் கூறுகின்றோமென்று தாங்கொண்ட கொள்கையும் பிறழ்ந்து எதிர்மறையாகக் "கல்லாமை" யென்று வேறோரதிகாரம் வகுத்துக்கொண்டு அதன் சிறப்பைக் கூறவேண்டியிருத்தலால் கல்வி எவ்வளவு மேன்மையுள்ளதென்று நாம் மதிக்கவேண்டும்!

செல்வ மனிக்குஞ் சிறப்புடைத் தெப்பொருள் ?
கண்போ லுதவுங் கவினுடைத் தெப்பொருள் ?
மெய்ப்பொருள் விளக்கும் மேன்மைய தெப்பொருள் ?
மெலிவிற் சோர்தனை மேவுவ தெப்பொருள் ?
புகழினைக் கொடுக்கும் பொற்புடைத் தெப்பொருள் ?
'கல்வி' யெனப்படுங் காண்டகு பொருளே.

### (10) கல்வி—தொகுத்துச் சுட்டல்

பலவற்றையுந் திரட்டிக் காட்டுதலே தொகுத்துச் சுட்டல. கல்வியின் மாட்சிமை பயன் முதலியனவற்றை சுருங்கச் சொல்லி விளங்க வைத்தல் என்றால் ஒருநாளும் இயலாது. அங்ஙனமிருக்க, தொகுத்துச் சுட்டல் என்று ஒரு பிரிவு வன் எடுத்துக் கொண்ட தென்றால்— என்றால் எழுத இயலாவிடினும், அறிவான் மிக்கவர் அருமையாக வரைந்



துளவற்றை எடுத்துரைப்பதற்கே என்க. அங்ஙனம் யாவருக்கு முதவும்படி 'கல்வி' யென்பதைப்பற்றி யார் எங்கு எழுதியிருக்கின்றனர்? சற்றே அதனைக் கேட்போம்; கூறுதி என்பார்க்கு யான் எடுத்துப்படிக்கும் அருமைத் திருப்பாசுரம் பினவருவதே.

"கல்வியே! மக்கடங் கண்ணே! புலவர்தஞ்
செல்வியே! மனத்தின் செவ்விய வுணவே!
நின்னொடு பயிறன் மன்னிய மாந்தர்
தமக்கும் பிறர்க்குந் தனிப்பே ரின்பங்
கரும்பயி றற்குக் கைக்கூலி போலத்
தரும்பொரு ளே! உயர் தனைமுத்தி வித்தே!
பரந்த பாரினும் விரிந்த வானினும்
எண்டிசை யின்கணும் பண்டிசை போகிய
பாவலர் நூலினும் பரிவுடன் மேவி
ஆவலின் விளையாட் டயர்தரு மங்காய்!
கதுமென நின்னைக் கைப்பிடித் தோர்தமக்
கெதுவுதா னாடே! எதுவுநல் லூரே!!
ஆகவு மென்கொ லநேகர்
ஊக மின்றிநா ளுலப்பவிட் டனரே!

வ. சு. செங்கல்வராயபிள்ளை.

---

## WAS RAMA JUSTIFIED IN KILLING VALI?
## ஸ்ரீராமர் வாலியைக் கொன்றது நீதியாமா?

செந்நாப்புலவீர்! உபோற்காதமெனத் தலைப்பெயரிட்டுக் காலவரையறையின்றியும் பிட்ட பேடணமாயும் மொழியும் வழக்கத்தை நீத்து, விடயத்தினுட்புகுவாம். இதன்கண் மேற்கொண்ட தர்க்கம் 'ஸ்ரீராமர் வாலியைக்கொன்றது நியாயமாமோ?' என்பது. விஷயம் யாதென நன்கு தேர்ந்தறியாது, தலைக்குறியை ஒருவகையாய் நோக்கி விட்டு, 'ஆ! ஈதென்னை! ஒருவர் இராமர் செயலை நியாயமா அநியாயமா வென்று விசாரணை செய்து தண்டனை விதிப்பான் தமதுத்தைவாய் அங்காந்து எழா நின்றனர் போலும்!' என்று சிலர் கூறுதல் கூடும். அத்தகையோர் சிறிது நேரம் தயவு செய்து மௌனஞ் சாதித்துப் பின்வருவனவற்றை செவி சாய்ப்பாராக:—

கனவான்களே! ஆசங்கை யொன்று நிகழ்வுழி, அதனைத் தேற வுணர்ந்து, உண்மைப்பொரு ளிதுவென நிறுவுதற்கண் மூவகைப்பிரமாணங்கள் சான்றோர் கொள்வது இயல்பு. அவைதாம் பிரத்தியக்ஷானுமான சப்த

மென்ப. தமிழிற் காட்சியளவை, அநுமானவளவை, உரையளவை யென அவை வழங்கப்படும். சுருக்கமாகச் சொல்லுமிடத்து, ஒவ்வொரு பொருளையும் ஒவ்வொருவருந் தாமே நேராகப் பார்த்துத் தெளிதல் வேண்டும். இது காட்சியளவை; அவ்வாறடையும் தெளிவு மிக்க மதிப்பெய்தல் வேண்டும். காட்சியளவை இல்லாவிடத்து, நாமே, அப்பொருளியலுதல் தகுதியாவென்று ஊகித்துத் தீர்மானிக்கலாம். இத்தகைய பிரமாணம் அநுமானமாம். அன்றி, அப்பொருள் நேர்ந்ததெனப் பிரமாதா கேள்வியுற்று அவ்விஷயத்தைப் பிறர் முன்னிலையில் நிறுவுதல்கூடும். அஃதுரையளவாம். இதுநிற்க, இங்கு யாம் எடுத்துக்கொண்ட விஷயம் 'ஸ்ரீராமர் வாலியைக் கொன்றது நியாயமோ?' என்பது இதைத்தர்க்கித்து நிறுவுவதன்கண் கிடைக்கும் பிரமாணங்கள் சிலவேயாம். பிரத்தியக்ஷப்பிரமாணம் ஒரு சிறிதும் இவ்விஷயத்தைப்பற்றிக் கிடைத்தலரிது. ஆகவே, அநுமானப் பிரமாணமும், சப்தப்பிரமாணமுமே யாம் கொள்வன. சப்தப்பிரமாணமும் வேதம் முதலிய உயரிய நூலின்கண் யாம் படிப்பதேயாம். அவ்வாறு படிக்கும்போது அம்மேதக்க நூல்கள் கடவுள் இவ்வுலகில் வந்து செய்யாநின்ற காரியங்களின் பலாபலன்களைப் பற்றி நமக்கு ஒன்றும் தெரிவிக்கவில்லை. கடவுளைப்பற்றி அவைகளே நேரே வரையறுத்துக் கூறவில்லை என்று ஆன்றோர் கூறுப. வேதங்களானே கரைகாணாக் கடவுளின் செயலைக்குறித்துப் புல்லியராகிய யாம் நன்று தீதென மொழிதலில் வேறு பேரிழுக் கொன்றுமில்லை. கடவுள் செய்யுந் தொழிலிற் றீமையுமுண்டோ? தவறுமுண்டோ? அவையிற்றைச் சீர்தூக்க நாம் யார்? அவர் செய்யும் எவ்வகைச் செயலும் ஒருவகை நன்மை நாடியே செய்யப்பட்டதென்று நாம் நன்கு அறியக்கடவோம். ஆகையால் ஸ்ரீராமர் கடவுளினம்சமென்பதை முகஞ்செய்து விட்டுப் பின்பு அவர் காரியத்தைத் தேர்வது அரணிய ருதிதமாம்.* அற்றேனும் ஸ்ரீராமர் மானுடக் கோலங் கொண்டு அதற்கேற்ப நடந்தனர் என்பவாதலின் அவரை ஒரு மனிதரென்றே கருதி யாம் இவ்விடயத்தைச் சீர்தூக்கி அறிவதாகும். மற்று இஃதே அறிவுடைமையின் பாற்படும்.

அவ்வாறு ஸ்ரீராமரை ஒரு சாதாரண மனிதரென்றே கொண்டு யாம் அவர் சுக்கிரீவன் துணைவேண்டி, அவன் மூத்தோன் வாலியைக் கொன்றது நேரிதாவென நோக்குவாம். ஸ்ரீராமர் வாலியை மடிவித்த புராண வரலாற்றில் இதனைப்படிக்கும் அனைவரும் பயின்றறிவாரென்பது திண்ணம். இராவணன் சீதாபிராட்டியைத் தூக்கிச் சென்றபிறகு சவரியென்பாள் கூறியாங்கு இராம லட்சுமணர் மதங்கமலையிற் சுக்கிரீவனை யடைந்து, ஆங்கு அநுமானருளால் அவன் நட்புக்கொண்டனர். ஆயினும் சுக்கிரீவன் வாலியாற் பன்முறையும் தோல்வி யடைந்தானாதலின், தீச்செயலுடையான் வாலியைக் கொன்று பட்டஞ்சுக்கிரீவன் சூடுதற்கு வேண்டு முதவியை இரா



மர் செய்வதாகவும் சீதாதேவியைத் தேடிப்பெறுதற்கு வேண்டு முதவியைச் சுக்கிரீவன் புரிவதாகவும் ஏற்படுத்திக்கொண்டனர். அவ்வாறே சுக்கிரீவனும், அவன் முன்னவனும், மோதி மல்யுத்தம் நடாத்தும்போது, சுக்கிரீவன் தளர்ந்து விழுவானாகச் சொன்ன சொற்றவறாத ஸ்ரீராமபிரான் ஒளித்திருந்து வாலியை மார்பினூடுருவிச் செல்லும்படி ஏவொன்றெய்து மாய்த்தான். இச்செயல் நீதியாமோ?

இராமபிரான் போரில் வீரமே பொருளெனக் கொண்டவராகவும் தர்மயுத்தம் பிறழ இவ்வாறு இயற்றலாகுமோ? ஓரிருவர் மற்போர் புரியுங்கால், நிராயுதராய் நிற்பர். அப்போது ஒருவர்மீது பாணந்தொடுத்து விற்போரிடையில் தொடங்குவது நேரிதோ? இது பற்றியே பாரதப்போரில் முதல் நாளில் விராடனது மூத்த குமாரனான சுவேதன் வீடுமனையெதிர்த்து விற்போர் செய்து அப்போரில் அவன் கையிலெடுக்கிற வில்லைப் பலமுறை துணித்து வெல்ல, அப்போது வீடுமன் சுவேதனை நோக்கி "உனக்கு விற்போரொழிய வேறோராயுதப்போர் தெரியாதோ?" என்று நகையாடலும், அவ வில்லைக் கைவிட்டு வாளையேந்திக் கொண்டு வருகையில், வீடுமன் தான் எதிரில் வாளெடுத்துப்போர் செய்யாமல் வில்லெடுத்துப் பொருது அவனது தோளையும் முடியையுந் துணித்த தன்மை தர்மப்போரின் வழி பிறழ்ந்ததெனப் பலருங்கூறுவர். மேலு மிருவர் பயிலுவான் தொடங்கும் யுத்தத்தில் ஒருவர்க்குத் துணைசெய்தல் அடாத காரியமாம். பதின்மூன்றாநாட் பாரதப் போரில் அபிமன்னியு கொலையுண்டமை இதனைப் போன்ற அதர்ம வழியாம். அன்றியும், இராமர் அவனைக் கொல்ல உறுதியாக நேரிருந்து போர் செய்யாது மறைந்திருந்து பாணமெய்தல் மிகவும் அநியாயமெனப் பலர் சாற்றுவர். இவை யனைத்தும் வாலியே கம்பராமாயணத்தில்,

"இருவர்போ ரெதிருங் காலை யிருவரு நல்லுற் றாரே
ஒருவர்மேற் கருணை தூண்டி யொருவர்மே லொளித்து நின்று
வரிசிலை குழைய வாங்கி வாயம்பு மருமத் தெய்தல்
தருமமோ பிறிதொன் றாமோ தகுகில தென்னும் பக்கம்"

என்றும்,

"தார மற்றொரு வன்கொளத் தன்கையிற்
பார வெஞ்சிலை வீரம் பழிப்பதே
நேரு மன்று மறைந்து நிராயுதன்.
மார்பி னெய்யவோ வில்லிகல் வல்லதே"

என்றும் கூறுநின்றனன் வாலி. மேலும்

"தீமைதான் பிறரைக் காத்துத் தான்செய்தாற் றீங்கன் றாமோ?"

"ஆவியைச் சனகன்பெற்ற வன்னத்தை யமிழ்தின் வந்த
தேவியைப் பிரிந்தபின்னைத் திகைத்தன போலுஞ் செய்கை"

என்றும்,

“அரக்கரோ ரழிவுசெய்து கழிவரே லதற்கு வேறோர்
குரக்கினத் தரசைக் கொல்ல மனுநெறி கூறிற் றுண்டோ?
இரக்கமெங் குகுத்தாய்? என்பால் எப்பிழை கண்டாய்? அப்பா!
பரக்கழி யிதுநீ பூண்டாற் புகழையார் பரிக்கற் பாலார்?”

என்றும்,

“ஒலிகட லுலகந் தன்னி னூர்தரு குரங்கின் மாடே
கலியது காலம் வந்து பரந்ததோ கருணை வள்ளால்
மெலியவர் பால வேயோ வொழுக்கமும் விழுப்பந் தாமும்
வலியவர் மெலிவு செய்தாற் புகழன்றி வசையு முண்டோ?”

என்றும்,

“கூட்டொரு வரையும் வேண்டாக் கொற்றவ! பெற்ற தாதை
பூட்டிய செல்வ மாங்கே தம்பிக்குக் கொடுத்துப் போந்து
நாட்டொரு கருமஞ் செய்தா யெம்பிக்கிவ் வரசை நல்கிக்
காட்டொரு கருமஞ் செய்தாய் கருமந்தா னிதின்மே லுண்டோ?”

என்றும், நேரிய ஒழுக்க முறைமையுடன் புகலா நின்றனன். இவை யனைத்தும் நோக்குமிடத்து வாலியைக் கொன்றது நியாயமாகாதென்று தெரிவிக்கின்றன. வாலி கொடியன்; தீச்செயலுடையான். ஆதலின், கொடியனைக் கொடிய பகையானே கோறல் வேண்டுமென்பது எவ்வகை நீதியாமோ? யாமறியேம். முடிவினலத்தாற் செயலினலமும் ஏற்படுமோ? அஃதன்றியும், அதர்மமாய் என்மீது அம்பெய்தனை யென்று கூறிய வாலிக்கு இலக்குமணர் “தர்மப்போரனைத்தும் மக்கள் போர் நிகழ்த்து மிடத்தே. ஒரு மனிதனும், குரக்கு வடிவமாகிய நீயும் வாதமிடும்போது தர்மப்போரென்? அதர்மப் போரென்?” என்று கூறினன். அதற்கு வாலி “நாங்கள் குரங்குகளாயின் குரங்களுள் நீதியென். யான் என் தம்பி மனைவியை மணந்தாலென். குரங்குகளுள் களத்திர பேதமுண்டோ? என்னை எது காரணமாகக் கோறல் வேண்டும்?” என்று மீட்டும் வினவுவானாயின் இவ்விக்காரணங்களான் இராமர் செய்த காரியம் அநீதியாமென்பதே புலப்படுகின்றது. ஆயினும், முன் கூறியவாறு, ஸ்ரீராமரைக் கடவுளெனப்பாவித்துக் கூறுமிடத்து, அவர் சிருஷ்டி, திதி, சங்காரமென முத்தொழிற்குங் காரணராதலின், எதனை எவ்வண்ணஞ் செயினும் செய்ப வல்லார் என்க. அன்றியுந் துட்ட நிக்கிரகஞ் செய்தல் அரச நீதியேயாம். மறைவினின்று பொருதற்குக் காரணமுமொன்றுண்டு. தன்னை வந்தடைந்தோர்க்குற்ற தளர்வெலாம் போக்குந் தன்மையான் ஸ்ரீராமன். இக்காரணமாகவே, வாலியைக் கொல்லச் சுக்கிரீவனிடத்தி லுடன்பட்டாரென்க. அவ்வாறாக எதிர் நின்று போர் தொடங்கின் ஒருகால் வாலியும் தன்னை வந்து சரணமடைந்தால், சுக்கிரீவனுக் களித்தவாக்குப் பொய்யாமென்று மறைந்து பாண மெய்தாரெனினுமாம்.



ஆதலான், இறுதியில் ஸ்ரீராமரை, மனிதனெனக்கருதினால், அவர் செய்த தொழில் ஒருநீத்தொழிலும், கடவுளெனக் கருதில் நற்றொழிலுமா மென்ப தொருதலை.

சருக்கை-கி. சுந்தராசாரியன்.

---

# CORRESPONDENCE.

## கடிதம்.

ஐயா!

அனேக வந்தனம். ஞானபோதினியின் கோட்பாட்டிற்கு மாறுதலாக ஒரு புத்தகத்தின் முகவுரையை இரண்டாம்முறை நும்பத்திரிகையில் அச்சுவாகனமேற்றி வெளிப்படுத்துவதற்கு உற்ற காரணம் விளங்கவில்லை. தமிழ்க்கவி சரிதம் இல்லையென முறையிட்ட தாங்கள் அந்தகக்கவி வீரராகவ முதலியார் சரிதத்தின் மீது பிரியம் பாராட்டிப் பதிப்பித்தீர்களோ? அம்முகவுரை ஒருவாற்றானும் மேன்மை யுடைத்தென்றாவது உண்மையை விளக்குவதென்றாவது சொல்லுதற்கு இடனேயில்லை. மேலும் முருகன் பிள்ளைத்தமிழின் ஆராய்ச்சியுங் காணப்படவில்லை, தனிப்பாடற் றிரட்டிற் கூறிய கவிகளைச் சந்தர்ப்பங்கள் கூட்டிப் பக்கங்களை நிரப்புதற் பொருட்டு எழுதியுள்ளதென்பது சாதாரணமாகப் படிக்குநர்க்கும் விளங்கும். இப்படி ஒருமுறை அச்சிட்டதைத் திரும்பவும் அச்சிடப்புகுந்தால் யாதொரு வரையறையுங் காணுதலியலாது. மேலும் புத்தகத்தை நும்பத்திரிகையுள் ஆராய்வதன்முன் முகவுரையையே பதிப்பித்தீர்கள். இவ்வகை வாசகங்களுக்கு இனியேனும் தாங்கள் இடங்கொடாம லிருக்கவேண்டுமென்பது எமது வேண்டுகோள். மனத்திற்றோன்றியதை யுள்ளபடி யுரைத்தேம், அதுவே ஆன்ற வொழுக்க மென்றுன்னி.

உண்மையுரைப்போன்.

## விடை.

‘உண்மையுரைப்போன்’ எனக் கைச்சாத்திட்ட நண்பரே! ‘சேயூர் முருகன்பிள்ளைத் தமிழ்’ என்ற நூலைப் பதிப்பித்த நம் நண்பர் ம-ள-ள-ஸ்ரீ, கல்தளம் - துப்புசாமி முதலியாரவர்கள், பி. ஏ., அதற்கு முகவுரையாக நூலாசிரியராகிய அந்தகக்கவி வீரராகவ முதலியாரது வரலாறும் எழுதிப் பதிப்பித்துளர். உற்று நோக்குமிடத்து நூல் இன்னும் முற்றிலும் வெளிப்பட்டிலவுவதாகக் கூறுதற் கிடமின்மையானும், சில்லோர்மட்டிற் பிரதிபெற்றுப் பார்த்திருக்கலாமாயினும் ஏனைய பல்லோரும் பாராமையானும், நூலின் முகவுரையேயன்றி நம் நண்பர் நம்பத்திரிகைக்கெனச் சில புது விஷயங்கள் சேர்த்து எழுதித் தருகின்றமை பற்றி முகவுரைக்கும் இதற்கும் வேறுபாடுண்மையானும், யாம் அந்தகக்கவி வீரராகவமுதலியார் சரித்தை நம்பத்திரிகைக்கட் பதிப்பித்தற்கு யாதொரு தடையுமில்லை. எனவே யாம் மேற்கொண்ட முறை தவறியதாக நீவிர் நினைத்ததற்காக இரங்குகின்றோம்.

பத்திராதிபர்.

# REVIEWS OF BOOKS.
## புத்தகக் குறிப்புக்கள்.

**திருவள்ளுவர்:**

[இது செங்கல்வராய நாய்க்கர் ஆர்பனேஜ் அச்சியந்திரசாலையிற் பதிப்பித்தது. விலை குறிப்பிக்கப்படவில்லை.]

சின்மதிகட்கு முன்னர்ச் சென்னை இராசதானிக் கலாசாலையின்கண் அக்கலாசாலைத் தமிழ்ச்சங்கத்து அவயவிகளும் ஏனையோருங் கூடியபலர் முன்னிலையில் ஒரு கட்டுரையென இது படிக்கப்பட்டது. பின்னர் அது சிறிது சிறிதாக நமது ஞானபோதினியின்கண் வெளிப்படுவதாயிற்று. அஃது இப்பொழுது தனித்து ஒரு புத்தக ரூபமாகவும் வெளிப்போந்துளது. ஏறக்குறைய முப்பது பக்கங்கள் கொண்ட இந்நூலின்கண் திருவள்ளுவரது புகழ்நிலையும் திருக்குறளின் சிறப்பும் நூலாசிரியரிருந்த காலமும் சமயமுமின்னவெனக் கூறுமுகத்தாற் பல அரிய பெரிய விஷயங்கள் இனிமைபெறக் கூறப்பட்டுளவாமாறு படிப்போரனைவர்க்கும் நன்கு விளங்கும். முருகதாச சாமியார் இயற்றிய புலவர் புராணத்தினின்றும் மேற்கோட்பாக்கள்பல வெடுத்துக் காட்டப்பட்டுள. 'வள்ளுவர்' என்ற பெயர்க்காரணமும் வள்ளுவர் பிறப்பும் வளர்ப்பும் நன்கு ஆராய்ச்சி செய்யப்பட்டுள. திருவள்ளுவர் இல்லறம் நடாத்திய சிறப்பும், அவர்தம் ஊழ்க்கோண் முறைமையும், நூலாசிரியர் கருத்தறியாது வடநூல் வழக்கை மேற்கொண்டு பாகுபாடுசெய்து 'குடியியல்' என்பதை 'ஒழிபியல்' எனப் பரிமேலழகர் பிறழவுரைத்தமையும், மேற்புல விஞ்ஞானிகள் பலருடைய கூற்றொடும் நந்தம் பெருநாவலர் கூற்றுக்களையும் ஒப்பிடலாம்படி லங்குமாறும், திருக்குறளிற் பல்வகைய நல்லியல்புகளையும் புனையுமிடத்து ஆசிரியர் தம் உள்ளக்கிடக்கையிஃதெனப்பிறர் காணலாம்படியிருக்கும் பெற்றியும், நூற்குவகுத்த அழகுகட்கெல்லா மிருப்பிடமாய்த் திருக்குறளிலங்குமாறும் உவமையுருவக மொட்டாதிய வணிகள் கொண்டு அஃதோங்குமாறும், பிறவும் மிகத்தெளிவுபெறக் காட்டப்பட்டுள. உயர்வு வாய்ந்த நல்ல செந்தமிழ்நடையில் இந்நூல் வகுக்கப்பட்டுளது. தமிழ்ப் புலவர்களைப்பற்றிய மெய்ச்சரிதமொன்று மின்றியுழலுறும் இக்காலத்தில் இத்தகைய நூல்கள்பல வெளிப்பட்டுலவுதல் இன்றியமையாததே. இந்நூலை யியற்றிய நம் நண்பர், ம-ள-ள-ஸ்ரீ, திருமணம் - செல்வக்கேசவராய முதலியாரவர்கள், எம். ஏ., இன்னும் இதுபோலும் பலநூல்களியற்றி வெளிப்படுத்தித் தமிழுலகத்தைக் களிப்பிப்பாராக. இது கலாசாலைகளிற் பயிலும் பி. ஏ., வகுப்பு மாணவர்கட்கு மிகவும் பயன்படத்தக்கது. இதனை யுணர்ந்து மாணாக்கர்கள் இதனை வாங்கிப் படிப்பார்களென்று நம்புகின்றோம். தமிழின்மீது அபிமானமுடைய ஏனைய கனவான்கள் நாம் சொல்லாமலே இதனைப் பெற்றுப் படித்து மகிழ்சிறப்பரென்பது திண்ணம்.

**சாவித்திரி வெண்பா:**

[இது வைக்கீல் வே. துரைசாமிபிள்ளை யவர்களாற் கும்பகோணம் லார்ட் ரிப்பன் அச்சுக்கூடத்திற் பதிப்பித்தது. விலை குறிக்கப்படவில்லை.]



கும்பகோணக் கலாசாலைத் தமிழ்ப்பண்டிதரும் மகா வித்துவானுமாகிய பிரமஸ்ரீ, உ. வே. சாமிநாதையரவர்களாற் பார்வையிடப்பட்ட இந்நூலை யியற்றினோர் ம-ள-ள-ஸ்ரீ ஐ. சாமிநாத முதலியாரவர்கள். இவர் சி. தியாகராஜச் செட்டியாரவர்கள்பாற் கல்வி பயின்றவர்களுளொருவர். இந்நூல் சிறப்புப்பாயிரம், ஆக்கியோன் வேண்டுகோள், சாவித்திரி சரித்திரச் சுருக்கம் ஆகியவிவற்றை முன்னுறுப்புக்களாகப் பெற்றுளது; பாயிரமுட்பட 228 வெண்பாக்கள் கொண்டது; விழுமிய பொருள் பயப்பது. சாவித்திரி சரித்திரக் கதையைக் கேட்டுளோர் யாவரும் செய்யுளாகச் செய்யப்பட்டுள இந்நூலின் இன்றியமையாமை காண்பர். கற்புடைமையின் மேம்பாட்டை விளக்குவதற்கு இந்தச் சாவித்திரி சரித்திரத்தினுஞ் சிறந்தது வேறொன்றுமின்று. இத்தகைய பெருமைவாய்ந்த இதனைச் செய்யுளாக யாத்தமை மிகவும் நேரிதே. இங்ஙனம் இவ்வளவுதூரஞ் செய்த நம்முடைய முதலியாரவர்கள் இந்நூலை நளவெண்பாவைப் போலக் காண்டங்களாகப் பகுத்து அச்சிட்டிருந்தால் இதன்கட் பயிலப்புகும் இளைஞர்கட்குப் பேருதவியாயிருந்திருக்கும். இனி, இந்நூலின்கணுள்ள பாடல்களெல்லாம் இனியவோசை யுடையனவாய்ப் படிப்போர்க்குங் கேட்போர்க்கும் இன்பம் பயப்பனவாயிருக்கின்றன. நூலினிடையிடையே பற்பல நீதிகளும் காட்டப்பட்டுள. பல்வகைய அணி நலங்களுஞ் சிறந்து காணப்படுகின்றன. இந்நூல் பிரவேச பரீக்ஷைக்குப் பாடமாக வைக்கத்தகுந்த தொன்றாம்; பிரவேச பரீக்ஷை வகுப்பிற்குக் கீழ் வகுப்புக்களிலிருந்து கல்வியறிவிற் றேறும் இளஞ்சிறார்க்குந் தக்கதோர் பாடமாயிருந்து பயன்படக்கூடியது. இது மகளிர்க்கு எவ்வாற்றானுமேற்றதென்பது சொல்லாமலே விளங்கும்.

**மரகதவல்லி:**

[இது மினெர்வா அச்சியந்திர சாலையிற் பதிப்பித்தது. இதன் விலை அணா 5. தபாற்கூலிவேறு.]

இத்தமிழ்க் கதையை இயற்றினோர் ம-ள-ள-ஸ்ரீ, பி. சி. கோவிந்தசாமி ராஜாவவர்கள். இஃது ஒருவாறு நல்ல நடையிலேயே யெழுதப் பெற்றுளதெனினும் ஆங்காங்குச் சில பிழைகள் காணப்படுகின்றன. இனிக்கதை சம்பந்தமாக, சுந்தரம்பிள்ளை தாசில்தாராயிருக்கும்போது பாராட்டிய கௌரவமுங் கர்வமும் செவ்வனே விளக்கிக் காட்டப்பட்டுள. மரகதவல்லியின் மாறுபட்ட வுணர்ச்சியைத் தெய்வசிகாமணிப் பிள்ளை நல்வழியிற் கொணர்ந்த விதம் மெய்ச்சத்தகுந்ததே. உயர்ந்த பதவி நம் இராசாங்கத்தாரிடஞ் சதமன்று என்பதும் பின்னர் நேரிடக் கடவனவற்றைக் கருதாமல் ஒழுகுவோர் துன்பமெய்துவர் என்பதுந் தெளிவாய்த் தெரிக்கப்பட்டுள. மரகதவல்லியினுள்ளம் திரிந்தது படிப்பினாலென்பது நூலாசிரியர் கருத்து. இவர் பெண்கல்வியைப் பற்றி மாறுபட்ட கொள்கையுடையாரென்று துணிந்து கூறுதற் கிடனுண்டு. மரகதவல்லியின் குணத்தைப் படிப்பிலாச் சில பெண்களின் குணத்துடன் மாறாக ஒப்பிடுகின்றனர். பெண்களைப் புருடர்க்குச் சமானராக்குதல் நேரிதன்றென்பது இவர் துணிபுபோலும். இவர் வைத்தியநூற் கல்வியின் மேம்பாட்டை யுள்ளவாறே யுயர்த்திக் கூறுதல் விரும்புதற்பாலதே. "அவள் கத்தரிப் பழம்போன்ற நிறத்தினள்" "சான்றவர் மனம்போல வெறுமையாயிருந்தன" என்றற்றொடக்கத்த உவமைகள் அசம்பாவிதமாகவும் சொற்பொருளுணரா துரைத்தனவாகவும் விளங்குகின்

றன. மனவெழுச்சி தானாகவே படித்தது முண்டாகத் தக்கவாறு உவமை கூறவேண்டும். மனவெழுச்சி தாராத வுவமைகள் கூறியென்ன பயன்? எனினும் இக்கதை இக்காலத்தில் வெளியாகி யிருக்குஞ் சில விநோத கதைகளிலும் மேம்பட்டதென்று கூறலாம்.

## திருவிடையூர்த் தலபுராணம்:

[இது கூடலூர்த் தேசாபிமானி அச்சியந்திரசாலையிற் பதிப்பிக்கப்பட்டது. இதன் விலை: அணா - 12. தபாற்கூலிவேறு.]

மேலைச்சேலூரென்று வழங்குந் திருவிடையூரின் தலபுராணம் இரண்டு காண்டங்களை யுடைத்து. அவற்றுள், முதற்காண்டம் இரட்டணைப் பெருமாளையரவர்கள் குமாரியார் அசலாம்பிகை யம்மையவர்களியற்றியது; இரண்டாங்காண்டம் குழந்தை வேலுப்பிள்ளை யென்பா ரொருவரியற்றியது. முதற் காண்டத்தில் 545-செய்யுட்களும், இரண்டாங் காண்டத்தில் 410 செய்யுட்களு முள்ளன. ஒரு புராணத்தின் சிறப்பு அந்நூற் பாயிரப்படலத்தினாலும், நாடுநகரப்படலங்களாலும் விளங்கும். இவைகொண்டு இப்புராணத்தை யாராயப் புக்குழி இது மிகவும் மேதகவுடைத்தாக விளங்காநின்றது. இதன்கட் பலகற்பனைகளும் ஆங்காங்குக் காணப்படுகின்றன. பெண்டிர் சிறப்பும் பெண்கல்விச்சிறப்பும் விசேடமாக இந்நூலின்கட் கூறப்பட்டுள. நாட்டுப்படலத்தின் நான்காஞ் செய்யுளாகிய "ஆடமைப் பசுந்தோளிய ராய்ந்தகேள் வியினும், பாட மைந்தில மெனும்பெரு நாணுளம் பற்றி, நாடியங்கவரினமென நானில மகளைச், சேடனும்பரி வோடிவண் சென்னியேந் துவதே" என்பது நம்கூற்றினை வலியுறுத்துமாறு காண்க. தற்குறிப்பேற்றம், வேற்றுப்பொருள் வைப்பு முதலிய பற்பலவணி நலங்களும் ஆங்காங்குப் பொதிந்து கிடக்கின்றன. "ஓதுதொழி லுங்குலமு முண்டியொடும் வேருய்ப், பேதமுறு பைங்கிளியு மிங்கிவர் பயிற்றுங், காதலுரை கற்றிவர் கருத்திசைவ தென்னின், மாதரினை யோர்மனம் வணக்கலரிதேயோ?" என்ற செய்யுட் பொருட்பேறணி கொண்டபாடலும், "பொங்கொளி நுதல்சசி யினைத்துணை பொருந்தும், பங்கய மணிப்பரும வல்குல் பணி கூவு, மங்கலுழு மேனிநிழன் மஞ்ஞையை யழைக்கும், மங்கையர் வயிற்கலக மின்றிவர வற்றோ?" என்ற வேற்றுப்பொருள் வைப்பணிகொண்ட பாடலும், இவைபோல்வன பிறவும் மிகவும் பாராட்டற்பாலன. இரண்டாங் காண்டத்திலும் முதற் காண்டமே மிக்க சிறப்புடைத்தென்பது இந்நூலினைப் படிக்குநர்யாவருக்கும் தெற்றென விளங்கும். எனினும், இரண்டாங்காண்டமுஞ் சிறவாமற் போகவில்லை. முதற்காண்டம் முதலாவதுதான். இரண்டாங் காண்டம் இரண்டாவது தான். இனி நூலினேற்றங் கண்டுழி, ஆடவர் மகளிரென்ற வேறுபாடு கருதாமல் நூலாசிரியர்களைக் கௌரவப் படுத்துதல் வேண்டும். திருவிடையூர்த் தலபுராணமென்னு மிந்நூல் பண்டிதர் பாராட்டத் தகுவதென்பது சொல்லாமலே விளங்கும். இந்நூலின்கட் சில பகுதிகள் நமது சென்னைச் சர்வகலாசாலைப் பிரதமகலா பரீக்ஷைக்குப் பாடமாக வைக்கத்தகுந்தன. அங்ஙனம் வைத்தல் பெண் கல்வியைப் பெரிதும் வளர்ப்பதாகும்.



# EDITORIAL NOTES.

# பத்திராதிபர் குறிப்புக்கள்.

**மக்களை வருத்திய தோர்மான்:**—ஜப்பல்பூரிற் பாடசாலைப் பரிசோதகராகிய ஷார்ப்பு துரையவர்கள் ஒரு கலைமான் வளர்த்துவந்தார். அஃது ஒருநாள் தன்னிருப்பிடம் விட்டு வெளியேறிப் போய்விட்டது. அங்ஙனம்போன அக்கலைமான் தன்னைப் பிடிக்க வந்தவர்களையெல்லாம் வெருட்டத்தொடங்கிற்று. அவ்வாறே தன்னைப் பிடிக்கவந்த சுதேசக் காவற்காரனொருவனைத் தன் கொம்பினாற் குத்தி அது காயப்படுத்திற்று. அதன் மேல் அவ்வூர்க்கலாசாலைத் தலைவராகிய பிரௌனிங் துரையும் லே என்ற மற்றொரு துரையுமாக இருவரும் வெளியே வந்து இதனை எதிர்த்தவளவில் இஃது அவர்களையும் முட்டிக் காயப்படுத்திற்று. இக்காலத்திற் சிலர் சுதேசி என்றும் வெள்ளைக்கார ரென்றும் வேறுபாடு கருதி நடந்த போதிலும் மிருகங்களும் அன்னாரிஷ்டப்படி வேறுபட்டு நடவா என்பது திண்ணம். குத்துண்ட காவற்காரனிறந்தான். துரைமார்கள் சௌக்கியமடைந்து வருகின்றனர். இவ்வாறு மக்களை வருத்திய அக்கலைமான் இறுதியிற் சுட்டுக்கொல்லப்பெற்றது. எவ்வளவு அருமையாகப் போற்றிவைக்கப்பட்ட பொருளும் பிறர்க்கு இடுக்கண் விளைப்பதாயின் அஃதொழிதல் இன்றியமையாததே.

**திருடன் கையிற் சிக்கிய காவல்வீரன்:**—சிங்கப்பூரில் ஒருநாள் ஒரு திருடன் இரண்டு காஸ்மீரச்சால்வைகளைத் திருடிக்கொண்டு வெளிவருகையில் ஒரு காவல் வீரன் எதிர்ப்பட்டான். அவனைக்கண்ட வளவில் திருடன் நடுங்கிக் கையிலுள்ள சால்வைகளைக் கீழே எறிந்துவிட்டு ஓட்டம் பிடித்தான். அவ்வளவிற் காவல்வீரன் சிறிது தைரியங்கொண்டு அத்திருடனைப் பின்றொடர்ந்தோடிப்பிடிக்க முயன்றனன். அதுகண்ட திருடன் இனித்தப்பவியலாதென்றுணர்ந்து பின்பற்றி வந்தகாவல் வீரன்மேற்பாய்ந்து அவனைப் பிடித்து யாட்டுக்குட்டிபோலத் தன்தோளின்மேற் போட்டுக்கொண்டு கதுமெனச்செல்லத் தொடங்கினன். இங்ஙனம் திருடன் கையிற் சிக்கிய காவல்வீரனோ தன்னைச் சிறைவீடு செய்து கொள்ள எவ்வளவோ முயன்று பார்த்தும் முடியாமற் போயிற்று. இறுதியிற் காவல்வீரன் தன் கையிலுள்ள போலிவெள்ளிக்குழலை யூதுதலும் மற்றொரு காவல் வீரன் போந்தனன். அதன்மே லிருவருங்கூடி அத்திருடனைப்பற்றிச் சிறையிலிட்டனர். என்னே காவல்வீரர்களின் வன்மை? இக்காலத்தில் தேகவன்மையில்லாது சோற்றுக்கு வீங்கிகளாய்த் திரிபவரெல்லாம் காவல் வீராவதென்றால், அவர்கள் மேற்கூறியவாறு திருடர் கையிற் சிக்கி விழியாமலென் செய்வர்?

**தஞ்சைச் சௌந்தரத்தம்மா:**—தஞ்சைமாநகரில் ஒரு குழந்தையைக் கொன்றதன் நிமித்தம் நியாயாதிபதியால் தீபாந்திர சிட்சை விதிக்கப்பெற்ற பிராமணச் சிறுமியாகிய சௌந்தரத்தம்மாவின் விஷயமாய்ப் பல்லோரும் அநுதாபங்கொண்டு அனுப்பியமனுவிற்கு நமது சென்னைத்தேசாதிபதியவர்களாகிய ஆண்ட் ஹில் சீமானவர்கள் தாம் மன்னித்தலியலாதென்று விடையளித்துவிட்டனர். அவ்வம்மையும் மரக்கலமேறி அண்டமான் தீவையடைந்தாள். என்னே அப்பெண்ணின் கதி! நீதிவிஷயங்களிற் சாதிவேற்றுமை கருதி நடத்தலுமுண்டுகொல்? மட்கலத்திலுள்ள கடு பொற்கலமுற்றால் தன் தனமை திரியுமோ? ஒருகுலத்திற் கொருநீதி யாவரே வகுப்பார்?

**சென்னைச் சட்டநிருபண சபை** :—இதற்குக் கனம்பொருந்திய **வில்லியம் மில்லர் துரையவர்களே** மீட்டும் நமது சென்னைச் சர்வகலாசாலைப் பிரதிநிதி யவயவியாகத் தெரிந்தெடுக்கப்பட்டன ரென்பது கேள்வியுற்றுக் கழிபேருவகைபூக்கின்றும். இந்நாட்டுச் சமீந்தாரர்களின் பிரதிநிதியவயவியாகப் **போப்பிலி** மகாராசா அவர்களே மீட்டும் நியமிக்கப்பட்டுள்ராம்.

**ஆங்கிலக் காட்சிச்சாலை** :—சீமையிற் 'பிரிட்டிஷ் மியூசியம்' என்னும் ஆங்கிலக்காட்சிச் சாலையில் வர்த்தமானப் பத்திரிகைகளைச் சேமித்து வைப்பதற்கு இடம் போதவில்லையாம். ஆகலின் அதுபற்றி மூன்று செய்நிலம் வாங்கி **ஹெண்டன்** என்னுமிடத்திற் பெரியதோர் கட்டிடங் கட்டப்போகின்றனராம். அந்த விடத்திற்கும் கட்டிடத்திற்கும் செலவு 18,000-பவுன் பிடிக்குமாம். இக்கட்டிடமும் கணக்குப் பார்த்துழி இன்னுமொரு நூற்றாண்டளவு வெளிப்படும் பத்திரிகைக் கட்டுக்கள் மட்டில் வைப்பதற்குப் போதிய இடமுள்ளதாயிருக்குமே யன்றி அதற்குமேலிராதாம். இப்பொழுதிருக்கும் பத்திரிகைகளின் தொகுதிகளே பெரியதோர் புத்தக சாலையாய் விட்டதாம். இதன் கண்ணே ஆங்கில ராஜ்யத்தின் பல பாகங்களினும் அச்சிடப்பெற்று வெளிப்படும் பத்திரிகைகளெல்லாம் சேர்ந்திருக்கின்றனவாம்.

**மணவினைச் செலவுக்குப் பயந்த மக்கள்** :—வங்காளத்து வைணவர்கள் விசேடமாய் வருணபேதம் பாராட்டுகிறதில்லையாம். ஏனைய உயர்ந்த சாதிகளினின்றும் பல்லோர் பிரிந்து மேற்கூறிய பிரிவு சாதியாரொடு வந்து சேர்ந்துவிட்டனராம். இதற்கு இன்னதுதான் காரணமென்று தெளியரது பல்லோரும் பலவிதமாய்க் கூறுகின்றனர். அவற்றுள் ஒன்றுபின்வருவதாம். வங்காளத்துள்ள உயர்ந்த சாதியாருள் மணவினை சமயந்தமாய் இக்காலத்திலேற்பட்டிருக்கும் கஷ்டங்களும் பணச்செலவும் மிகுதியாதலானும் அவ்வாறன்றி வைணவசாதியில் அவ்விரண்டும் மிகவுங் கொஞ்சமாதலானும் மேற்கூறியவாறு சாதிவிட்டுச் சாதிமக்கள் புகுவாராயினர். அந்தோ! இவையனைத்தையும் உய்த்துணர்ந்து நம்மவராயினர் தக்க ஏற்பாடுகள் செய்துகொண்டு தமக்கும் தம்மக்கட்கும் இடுக்கண் விளையாதவாறு நடத்தலென்று கொலோ? நாகரிக நிலை முதிர்ந்த இற்றைஞான்றினும், பண வருமையமைந்த இற்றை ஞான்றினும், கல்வி யறிவு மிக்க இற்றைனைச் பொருண்முறை நூலுணர்ச்சி சான்ற இற்றைஞான்றினும், மணவிஞான்றினும், செலவுமட்டுப் பட்டிலதெனின் என்செயற்பாலமோ! இதுவுங் காலக்கொடுமையே யன்றோ?

**தபால் விளம்பரம்** :—1902ஞு ஏப்பிரல்மீ 1உயிலும் அதற்குப் பின்தேதிகளிலும் 5 ரூபாய்க்கு மேற்படாமற் செய்யப்படும் (உள் நாட்டு) மணியார்டர்களுக்கு, கமிஷன் 2-அணாவிற்குப் பதிலாக, ஓர் அணா வாங்கப்படும். 5-ரூபாய்க்கு மேற்பட்டிருக்கிற தொகைகளடங்கிய மணியார்டர்களுக்கு இப்பொழுது வழக்கப்பிரகாரம் வாங்கப்படுகிற தொகைதான்.

மேற்கூறிய அல்லது அதற்குப் பிந்திய தேதிகள்முதல் 5-ரூபாய்க்கு மேற்படாமற் குறிக்கப்பட்டிருக்கிற தொகையையுடைய வாலியுபேயபில் உருப்படிகளின் சார்ஜ் 2-அணாவுக்குப் பதிலாக ஓர் அணாவாகக் குறைக்கப்பட்டிருக்கிறது. வசூல்செய்யப்படும் தொகை 5-ரூபாய்க்கு மேற்பட்டிருந்தால் வழக்கப் பிரகாரம் இப்பொழுது வாங்கப்படுகிற பிரகாரம் சார்ஜ்செய்யப்படும்.

# ஞானபோதினி.

சம்புடம் V. | 1902ஞு மேமீ 20உ. | புத்தகம் 10

## PATRONS OF TAMIL LITERATURE.

## தமிழ்நூலாதரிப்போர்.

முற்காலங்களிற் செந்தமிழ்நூல்கள் சேரசோழ பாண்டியர்களென்னும் மூந்நாட்டு வேந்தர்களானும் ஆதரிக்கப்பெற்றன. அதன்மேற் சிற்றரசர்களுங் குறுநில மன்னர்களும் ஆங்காங்குத் தோன்றித் தமிழ் நூல்களைப் போற்றுவாராயினர். பின்னர்த் திருவாவடுதுறை தருமபுரம் முதலிய மடங்களின் அதிபர்களான் அவை யாதரவடைந்து வந்தன. இக்காலத்தில் தென்னாடுகளிலுள்ள ஜமீன்தாரர்களுட் சில்லோரும் மேற்கூறிய மடாதிபதிகளும் தமிழை யாதரிப்பாராயினர். இடையிற் சென்னைச் சர்வகலாசாலையைச் சார்ந்த திராவிடபாட சபையார் தாமுந் தமிழ்நூல்களை யாதரிப்பேமெனப் புகுந்து சென்ற சில்லாண்டுகளாக ஓராற்றால் தமிழ்நூல்களுட் சிலவற்றைப் பற்பல பரீக்ஷைகட்கும் பாடமாயேற்படுத்தி வாராநின்றனர்.

இனி அற்றை நாட்களில் வெளிப்பட்ட தமிழ் நூல்கள் சங்கங்களினும் அவைக்களங்களினும் மடத்து வித்துவான்கள் முன்னிலையினும் புலவர்கள் முன்னிலையினும் ஆராயப்பெற்று மதிப்பெய்தி வந்தன. இற்றை நாட்களில் வெளிப்படும் நூல்கள் அத்தகைய ஆராய்ச்சிக் கிடனின்றித் தாமே அச்சுவாகனமேறி யுலவுகின்றன. நூலாராய்ச்சிக்கென ஏற்பட்ட சபைகளுந் தந்தொழிலை நேரிய வழிகளிற் செய்கின்றன வல்லவாய்க் கழிகின்றன. சென்னைத் திராவிட பாஷா சங்கமெனப் பெயர்புனைந்தெழுந்து சின்னாள் ஆரவாரஞ் செய்து நின்ற சபையுந் துயின்மேற் கொண்டது. அச்சியந்திரங்களினுதவியால் அளவிறந்த நூல்கள் வெளிப்படும் இக்காலத்தில் அவ்வந்

நூல்களின் ஏற்றத்தாழ்வுகளை யுள்ளவாறே குறித்தற்குத்தக்க கருவிகள் இன்னும் நன்கு ஏற்பட்டில. இத்தகைய கருவிகளை யினி தமைத்தற் குரிமையும் ஏற்றமும் வாய்ந்து நிற்பது. மதுரைப் புதுத் தமிழ்ச்சங்கமேயாம்.

இது நிற்க, சர்வகலாசாலைத் திராவிடபாட சபையாரால் ஆதரிக்கப்பெற்று வெளி வந்த நூல்கள் எத்துணைய ? அவர்கள், நூல்கள் அச்சிடப்பட்ட பின்னர்த் தமக்கு விருப்பமிருந்தால், அவற்றுள்ளும் சிலவற்றிற் சிறிது பாகமே பாடமென ஏற்படுத்துகின்றனர். அவைகளும் பெயர்த்து இரண்டாமுறை யச்சிடப்படுதல் வேண்டும் ; அவற்றின் விலையும் மிகக்குறைவாயிருத்தல் வேண்டும். அல்லாக்கால் அவை கவனிக்கப்படா. இத்தகைய ஆதரவுடையார் நந்தந் தமிழ்நூல்களைப் பாடம் வைத்தாலென்? வையாக்கலென்? கும்பகோணக் கலாசாலைத் தமிழ்ப்பண்டிதரும் மகா வித்துவானுமாகிய பிரமஸ்ரீ சாமிநாதையரவர்கள் தாம் சிந்தாமணியாதிய நூல்களைப் பதிப்பித்துழிச் சென்னைச் சர்வகலாசாலைத் திராவிடபாட சபையாரை நம்பியோ பதிப்பித்தனர் ? தமிழபிமானிகளன்றே அவர் பதிப்பிக்கும் நூல்களை விலைக்குப் பெற்றுப் படிப்பாராயினர்? அவரன்றே ‘ தமிழ் நூல்களை யாதரிப்போர்’ என்னும் பெயர்வகித்தற்குரியார் ? ஆங்கில மொழியில் நாடகப்புலமை சான்று விளங்கிய ஜெகப்பிரியர் என்பார் தாமியற்றிய நாடக மொன்றனுள், காதல் கொண்டுழலு மொருவனைக்கண்ட பிறனொருவன் அவனை நோக்கி “ நீ காதலித்துழலத்தக்க வளவு வருத்திய அந்நல்லாளின் இனிய பெயர் யாது கொல் ?” என்று கேட்டனன் ; அது கேட்ட காதலன் “ இராஜலதை” யென்றான் ; உடனே பெயர் கேட்டவன் ‘ அஃதெனக்கு இன்பந்தரவில்லை” யெனலும், மற்றையோன் “ அவட்குப் பெயரிடும்போது நும்மை யின்புறுத்தல் வேண்டுமென்ற கருத்தில்லை கண்டீர்” என்று கூறினனெனக் கூறுநின்றனர். இது நம்முடைய விஷயத்திற்கு மிகவும் பொருத்த முள்ளதே. இரண்டொருவரைத் தவிர்த்துத் தமிழ்நூல்வகுக்கு மேனையோரெல்லாம் மேற் கூறிய பேரறிவாளருதவியைக் கருதி யெழுதுகின்றாரல்லர்.

“ மன்னவனு நீயோ வளநாடு முன்னதோ
உன்னையறிந் தோதமிழை யோதினேன்—என்னை



விரைந்தேற்றுக் கொள்ளாத வேந்துண்டோ வுண்டோ
குரங்கேற்றுக் கொள்ளாத கொம்பு”

என்று மனமுளைந்துரைத்தார் கவிச்சக்கிரவர்த்தியும். அவரே எவ்வாற்றானு முயர்வு வாய்ந்த அரசனுதவியை யிகழ்ந்து சாமானிய ஜனங்களுடைய மதிப்பையே பெரிதெனக் கொண்டு நின்றார். அவர் போலவே தமிழ் நூலாசிரியராவார் யாவரும் தம்மை யாதரிப்போர் சாமானிய ஜனங்களாகிய தமிழ் மக்களே யன்றி யேனையோரல்லரென்பது துணிந்து அதற்குத்தக வொழுகுவாராக.

பத்திராதிபர்.

---

## THE HISTORY OF TAMIL RHETORIC.

## தமிழணியிலக்கண வரலாறு.

---

தமிழிலக்கணம் எழுத்து சொல் பொருள் யாப்பு அணியென்னும் ஐந்து பகுதிகளை யுடையது. இப்பாகுபாடனைத்து மடங்கிய இலக்கண நூல்கள் சிறு பான்மையா யுள்ளன. இவற்றுள் மிகப்பண்டையதும், இக்காலத்துத் தமிழுக் கிலக்கணமா யெடுத்தாளப் படுவதுமாகிய நூல் **தொல்காப்பியம்.** இந்நூலாசிரியர் தமிழிலக்கணத்தை எழுத்து சொல் பொருளென மூவகையாக்கிக் கூறிப் போந்தாரே யன்றி யாப்பணிகளை வேறதிகாரங்களா யமைத்துக் கூறிற்றிலர். இய லிசை நாடகமென்னு முத்தமிழையுங் கூறுவதாகிய **அகத்தியம்** வெகுகாலத்துக்கு முன்னரே இறந்தமையின், அகத்தியனார் இயற்றமிழ்ப் பகுதிகளை யின்ன முறைமைப்பட வகுத்து நூல் யாத்தனரென்று துணிதலியலாது. ஆயினும்

“ எழுத்துஞ் சொல்லும் பொருளு நாடிச்
செந்தமி ழியற்கை சிவணிய நிலத்தொடு
முந்து நூல் கண்டு முறைப்பட வெண்ணி”

எனத் தொல்காப்பியப் பாயிரச் சூத்திரத்துப் **பனம்பாரனார்** கூறியிருத்தலின் அகத்தியனாரும் தமிழின் பாகுபாடுகள் எழுத்துச் சொற்பொருள்க ளென்றே கொண்டனர்போலும். இம்மூன்று பகுதிகளையும் எழுத்தின் பின் சொல், சொல்லின்பின் பொருள் என முறைகாட்டிக் கூறாது இவ்வாசிரியர் இவற்றினிலக்கணங்களை விரவிக் கூறினாரென்ப. முதனூலாகிய வகத்தியத்து விரவிக்கூறிய முத்தமிழில் இயற்றமிழை வேறு பிரித்து அதன் பகுதிகளாகிய எழுத்துச் சொற்பொருள்களை முறைப்படுத்து ஆசிரியர் **தொல்காப்பியனார்** நூல் செய்தது போலவே தொல்காப்பியப் பொருளதிகாரத் தடங்கிக் கிடக்

கும் யாப்பணிகளைப் பிற்காலத்தார் வேறியல்களாக அமைத்து இலக்கணநூல் செய்தனர். பிற்காலத்துத் தோன்றிய இலக்கண நூல்களி லொன்றாகிய **நன்னூலை** யியற்றிய **பவணந்தி முனிவரும்** எழுத்துச் சொற் பொருள் யாப்பணிகளாகிய ஐந்து பகுதிகளையு மடக்கி நூல் கூறுவான் தொடங்கினமை.

“குணகுடல் குமரி குடகம் வேங்கடம்
மெனுநான் கெல்லையி னிருந்தமிழ்க் கடலு
ளரும்பொரு ளைந்தையும் யாவரு முணரத்
தொகைவகை விரியிற் றருகென”

என்று இந்நூலின் சிறப்புப் பாயிரத்துட் கூறியிருத்தலால் விளங்கும். எழுத்துச் சொற்களி னிலக்கணத்தைமாத்திர மினிதுணர்த்தித் தமிழ்ப் புலவர்களாற் புகழ்ந்துரைக்கப்படு மிந்நூல் ஏனைப்பொருள் யாப்பணிகளாகிய முப்பகுதிகளையு மடக்கிய நூலாயிருக்குமாயி னெத்துணைச் சிறப்பிற்றாகக் கொண்டாடப்படுமோ! தமிழினைந் திலக்கணங்களையு முணர்த்துவான் தொடங்கிய பவணந்தி முனிவர்செய்த நூலினுட் பொருள்யாப்பணிகள் காணப்படாமைக்குக் காரணம் யாதோவறிகிலோம். **இலக்கண விளக்க** முடையாரும் எழுத்து முதலிய பகுதிகளைந்தையு மடக்கி ஒரு நூலியற்றினர். இவ்வாறு இலக்கணப்பகுதிகள் யாவு மடங்கிய நூல்களன்றி இவற்றுள் ஒவ்வொன்றனையே விரித்துக் கூறுமிலக்கண நூல்களு முள. அவை **யாப்பருங்கலக்காரிகை** முதலியன. மேற்கூறியவாற்றால் அணியிலக்கணம் பண்டைக்காலத்து நூல்களில் தனித்து ஓரதிகாரமாக் கூறப்பட வில்லையென்பதும் பிற்காலத்து நூல்களில் வேறோரதிகாரமாகக் கூறப்பட்ட தென்பதும் விளங்குகின்றன. சங்கத்தார் காலத்துத் தோன்றிய இலக்கண நூல்களில் இப்பொழுதுள்ளதாகிய தொல்காப்பியத்தைச் சிறிதராய்வோமாயின், இந்நூலாசிரியர் காலத்து அணியிலக்கணத்தின் நிலைமை யித்தன்மைத்தா யிருந்த தென்பது நன்கு புலப்படும். இப்பழைய நூலின் பொருளதிகாரத்துள்ள பலவியல்களுள் உவமவியல் ஒன்று. இவ்வியல் பலவகையாகிய அணிகளுள் உவமமொன்றனையே கூறும். பொருட் புலப்பாட்டினுக் குபகார முடைத்தாதல் பற்றி யிவ்வியலை ஆசிரியர் பொருளதிகாரத் தடக்கினர். தொல்காப்பிய வகத்திணையியலில் அவர் உவமத்தினை உள்ளுறையுவமம் ஏனையுவமமென விருகூறாக்கிச் சுருக்கியோதி யுவமவியலுள் அவற்றை விரித்துக் கூறினர். உவமத்தின் கூறுபாடுகள் தொல்காப்பியத்துட் கூறியபடி நான்காகும். அவை தொழில், பயன் வடிவு வண்ணம் என்பனவாம். பிற்காலத்து நூல்களிலோ வென்றால் இவ்வணி பலவகையாகித் தோன்றும். உவமம் பலவகையாயிருத்தலானும் வேறுபல அலங்காரங்களுக்கு அடியாயிருத்தலானும் பிற்காலத்துத்தோன்றிய அலங்கார நூல்கள் இதனைப் பலவகையாக்கியும் வேறுபல அலங்காரங்களைக் கூட்டியும் பொருளணிக்கிலக்கணம் கூறுவன வாயின. சொல்லணி யெத்துணைச்



சிறப்பிற்றாய்ப் பிற்காலத்து நூல்களிற் காணப்படுகின்றதோ அத்துணைச் சிறப்புடைத்தாகத் தொல்லாசிரியர் கருதவில்லை யென்பது பழைய நூல்களையும் பிற்காலத்துச் செய்யுட்களையும் ஒப்பிட்டுச் சீர் தூக்கி நோக்க விளங்கும்.

தொல்காப்பியர் உவமமொன்றனையே அணியாகக் கொண்டனர். பொருளணிகள் பல உவமத்தினடியாகத் தோன்று மென்னுங் கருத்து **அப்பைய தீக்ஷித** ரியற்றிய **சித்ர மீமாம்ஸை**யிலுள்ள

* உவமை யென்னுந் தவலருங் கூத்தி
பல்வகைக் கோலம் பாங்குறப் புனைந்து
காப்பிய வரங்கிற் கவினுறத் தோன்றி
யாப்பறி புலவ ரிதய
நீப்பறு மகிழ்ச்சி பூப்ப நடிக்குமே

என்னும்பொருள் கொண்ட ஆரியையாலும் புலப்படும். பிற்காலத்து நூல் செய்த ஆசிரியர் உவமத்தின் விகற்பங்களை வேறுகுறியிட்டு வெவ்வேறலங்களாக்கி யுரைத்தனர். தொல்காப்பியர் அவற்றை உவமமாகக் கருதினரேயன்றி வேறு பெயராற் கூறிற்றிலர். இவ்வுவமத்தின் வேறுபாடுகளுட் குறிப்பினால் உவமை கோடலொன்று. இதனை **நச்சினார்க்கினியர்,**

“உயர்ந்ததன் மேற்றே யுள்ளுங் காலை”

என்னுந் தொல்காப்பியச் சூத்திரத்தில் ‘உள்ளுங்காலை’ என்பதனாற் கொண்டார். இதைக் குறித்த இவ்வுரையாசிரியருரை இங்கு ஆராயத் தகுந்தது. ‘“என்ற வியப்ப வென்றவை யெனாஅ”என மேல்வருஞ் சூத்திரத்துள்‘என்ற’ வென்பதோர் உவமவுருபு கூறினமையின், “வாயென்ற பவளம்” எனவும் “வாய்பவளமாக” எனவும் “வாய்பவளம்” எனவும் வருவனவும் அக்குறிப்புவமையின் பகுதியெனவே படும். இவற்றை வேறுவேறு பெயர் கொடுத்து விரித்துக்கூறாது முன்னத்தி னுணர்வனவே இவை யெல்லா மென்னுந் துணையே இலேசினாற் கூறி ஒழிந்த தென்னை யெனின், இவற்றாற் செய்யுள் செய்வார் செய்யும் பொருட்படைப் பகுதி எண்ணிறந்தனவாகலின், அப்பகுதி யெல்லாங் கூறாது பொதுவகையான் வரையறைப்படும் இலக்கணமே கூறி யொழிந்தா னென்பது. வாயென்ற பவளமெனவும் வாய்பவளமாக வெனவும் வாய்பவள மெனவும் வந்த பவளக் குறிப்புவமைகளை இக்காலத்தார் உருவகமென்றே வழங்குப. இனி வாய் பவளமெனவும் கண் கருவிளை யெனவும் பெயர்ப்பயனிலைவரின் அவற்றை ஒற்றுமைகாட்டி உருவகமென்றாராகலின் அதுவும் உவமையெனவே படுமென்பது.’ பொருளை உவமமாக்கி உவமை

---

उपमैकाशैलूषी सम्प्राप्ता चित्रभूमिकाभेदान् ।
रञ्जयति काव्यरङ्गे नृत्यन्तीतद्विदांचेतः ॥

என்ற ஆரியையின் மொழிபெயர்ப்பு இது.

யைப் பொருளாக்கிக் கூறுவதும் ஒருவமைவிகற்பமாகின்றது. ‘திருமுகம் வீழ்ந்த தெய்வத்தாமரை’ என்ற விடத்துத் திருமுகம் உவமையும் தாமரை பொருளுமாயின. இஃது உவமத்தொகையாங்கால் முகத்தாமரை யென நிற்கும். இதைக்குறித்து **நச்சினார்க்கினியர்** ‘இவற்றை வேறு உருவகமென்றும் பிறர் மயங்குப’ என்றார். இவ்வாறன்றி இன்னும் பலவாறாக வேறுபட்டு வந்த உவமச்சாதிகளை ஆசிரியர்.

‘‘ வேறுபட வந்த வுவமத் தோற்றங்
கூறிய மருங்கிற் கொள்வழிக் கொளாஅல்’’

என்ற சூத்திரத்திலடக்கினார். இதனுரையில் நச்சினார்க்கினியர் உவமத்தின் வேறுபாடுகளை விரித்துரைத்து உதாரணங் காட்டி விளக்கியிருக்கின்றார். இவ்வுதாரணச் செய்யுட்களுட் சில **தண்டியலங்கார** வுரையில் **வேற்றுமை** யணிக்கும் **தற்குறிப்பேற்ற** வணிக்கும் இலக்கியமாகக் காட்டப்பட்டிருக்கின்றன. தண்டியலங்காரத்து **நிரனிறை** யென்ற பெயராற் கூறப்பட்டிருக்கும் அணியினைத் தொல்காப்பியர் உவமத்தின்பாற் படுத்தோதுவர். ஆயினும் தொல்காப்பியத்துக் கூறிய நிரனிறை உவமையையும் பொருளினையும் நிரலே நிறுத்து ஒப்புமை கோடலென்றனையே குறித்தது. தண்டியலங்காரத்துள்ள நிரனிறையோ வெனின் இவ்வாறன்றி யின்னும் பலவாகச் சொல்லையும் பொருளையும் நிரலே நிறுத்துப் பொருள்கொள்வது. இவ்வணியைத் **தண்டியாசிரியர்** தமது **காவ்யாதர்சத்துட் கிரம** மென்றும் **சந்திராலோக** முடையார் **யதாஸங்கிய** மென்றும் கூறுவர்,

உவமத்தின் பலவிகற்பங்களையும் வேறணிகளாக்கி யுரைத்தல் நச்சினார்க்கினியர்க்கும் உடன்பாடன்மை அவர் இச்சூத்திரத்துக் கூறிய வுரையால் நன்கு புலப்படும். ‘‘இனி இவ்வோத்தினிற் கூறுகின்ற உவமங்களுட் சிலவற்றையுஞ் சொல்லதிகாரத்தினுள்ளுஞ் செய்யுளியலுள்ளுஞ் சொல்லுகின்ற சில பொருள்களையும் வாங்கிக்கொண்டு மற்றவை செய்யுட்கண்ணே அணியாமென இக்காலத்தாசிரியர் நூல் செய்தாருமுளர். அவை ஒரு தலையாகச் செய்யுட்கு அணியென்று இலக்கணங் கூறப்படா....................... அல்லதூஉம் பொருளதிகாரத்துப் பொருட்பகுதிகளெல்லாஞ் செய்யுட்கு அணியாகலான் அவை பாடலுட் பயின்றவை யெனப்பட்டன. என்றதனான் அவை யெல்லாந்தொகுத்து அணியெனக்கூறாது வேறு சிலவற்றை வரைந்து அணியெனக்கூறுதல் பயமில் கூற்றாமென்பது’’ என்றும், ‘‘இனி இரண்டு பொருளெண்ணியவற்றை வினைப்படுக்குங்கால் ‘ஒருங்கு’ என்பதோர் சொற்பெய்தல் செய்யுட்கு அணியென்ப. பிறவும் இன்னோரன்ன பலவுஞ் செய்யுட் கணியாமென்பது அவர் கருத்து. ஒருங்கே யென்பதே யன்றி மூன்றாழிசையுண் மூன்று பொருள் கூறி ‘எனவாங்கு’ என்பதொரு சொல்லான் முடிந்த வழியும் எனவாங்கு என்பதோர் மொழி என வென்பது ஓரலங்கார



மெனல் வேண்டுமாகலான் அவ்வாறு வரையறுத்துக் கூறலமையாதென்பது. பிறவும் அன்ன. இனி அவற்றைப் பொருளுறுப் பென்பதல்லது அணியென்பவாயிற் சாத்தனையுஞ் சாத்தனுலணியப்பட்ட முடியுந்தொடியு முதலாயவற்றையும் வேறு கண்டாற்போல அவ்வணியுஞ் செய்யுளின் வேறாகல் வேண்டுமென்பது’’ என்றும், ‘‘இனிச்செய்யுட் கணிசெய்யும் பொருட்படை எல்லாங் கூறாது சிலவே கூறி ஒழியின் அது குன்றக்கூறலாமென்பது’’ என்றும் அவர் கூறியிருத்தலால் உவமத்தினைத்தவிர்த்து வேறு சிலவற்றை அணியாகக் கொள்ளுதல் பயனின்றென்பது அவர் கருத்து.

(இன்னும் வரும்.)

குரு ராவ்.

---

# POETRY AND NATURE.

# இயலும் இயற்கையும்.

---

தமிழ்மொழியானது இயலிசை நாடகமெனு முப்பகுதித்தென்று எவருஞ் சொல்கின்றனர். இம்முப் பகுதிகளையும் முறையே உதாகரிக்கும் நூல்கள் முற்காலத்திலிருந்தன வென்பது வெறு மொழியே. இயற்றமிழில் இசையும் நாடகமும் அமைந்து கிடந்தன வென்று ஆழ்ந்து ஆலோசிக்குநர்க்கு விளங்குகின்றது. இயற்றமிழ்ப் பகுதியின்கண் நாடக லக்ஷணங்கள் பலவும் அமைந்து கிடந்தன. தற்காலத்தில் மேற்றிசை வாணருடன் நம்மவர் பெரிதும் ஊடாடியதனால் நாடகநூல் என்றுபல பிரத்தியேகமாய் வெளிவருகின்றன. ஆதலின் இயல் என்ற கண்ணே தமிழ்மொழியினிடந்து விளங்குறும் பலவகைப்பட்ட நூல்களும் அடங்கும். இப்பொருள்கொண்டே இக்கட்டுரையை எம் நண்பர்கள் ஆராயக் கடவர்.

பாஷாஞானம் எதன் பொருட்டு ஒருவன் பெறுவது ? பிறரைவசையாடுதற்கோ ? அன்றிப்பேதையரிடங் காமங்கூறுதற்கோ ? அன்றிப் பொழுது போக்குவதற்கு இடனின்றி வாய்க்கு வந்தனவற்றை வரைவதற்கோ ? ஒருகாலு மில்லை. உயரிய எண்ணங்களைத் தெளிவான நடையில் வெளியிடுவதற்கன்றி மற்று எதற்கும் பாஷாஞானம் பெறுவதில்லை. மேலும் ஆதி மனிதன் கடல் முதலிய இயற்கைப் பொருள்களைக் கண்டதும் அவனிடத்து ஒருவகை மனவெழுச்சி உண்டாகின்றது. அம்மனவெழுச்சியை வெளியிடுஞ் சொற்களிலேயே செய்யுட்டன்மை வாய்ந்திருக்கும். செய்யுளின் உற்பத்தியை நோக்குமிடத்து இயற்கையினின்றுற்பவித்ததென்று தெளிவோம்.

இவ்வாறாக. காலவகையாற்செய்யுள் எழுதுவதற்கு வரையறுத்தவிதிகள் பழைய காலத்தவர் செய்யுளின் பொதுத் தன்மையை யுக்தியால் ஆராய்ந்து

ஏற்படுத்தப் பட்டன. அவ்விதிகளை மாத்திரந் தழுவி இயற்கையின் வாசனையைச் சிறிதுங் கவனியாத மூடர்பலர் செய்யுள் எழுதப்புகுந்தனர். செய்யுளின் கவுரவங் கெட்டது; இனிமை யிறந்தது; இழிவினையேற்றது. கூலிக்குச் செய்யுள் எழுதுவாராயினர்.

'நமீ இந்து தேசமானது எல்லாத் தேசத்தினும் இயற்கைவனப்புப் பெரிதும் வாய்ந்தது' என்று பலர் கொள்கின்றனர். நம்தேசத்தைப் பூதேவியின் இன்பஸ்தானம் என்று தடையின்றிக் கூறலாம். இவ்வகை இயற்கை வனப்பு இருப்பவும் என்னே நம்புலவர்கள் தங்கள் கவிகளில் அதனைக்கொண்டாடுகின்றிலர்? எல்லாம் நம் நிகண்டுகளாலும் இலக்கணங்களாலும் வந்த தீங்கே. உவமான உவமேயங்களும் இன்ன இன்ன என்று எடுத்துக் கூறப்பட்டிருக்கின்றன. அதற்கு மாறாக எவனேனும் உவமானங் கூறினால் நம்மனம் கொதித் தெழுகின்றது. ஓர்ட்ஸ் வோர்த் என்னும் ஆங்கிலப் புலவர் லண்டன் நகரருகே ஓடும் ஒரே நதியாகிய தேம்ஸைக் கண்டு அவர்தம் கவிகளிற் பலவாறு வர்ணிக்கின்றார்: "கம்பீரமான இக்காட்சியைக் கண்டு சும்மா அருகேபோம் மாந்தர் உண்மையில் மூடர்களே. காலையின் அழகையே போர்வையாகக் கொண்டிருக்கிறது இந்நகரம்."

அத்தகைய புலவர்பெருமான் நம்தேயத்து நதிகளையும் காட்சிகளையுங் கண்டக்கால் எவ்வகையான பாடல்களை வரையார்? இனிமையாகச் சூரியன் மறைவதும் சந்திரன் எழுவதும் உலகிற்கே என்ன வனப்பைத் தருகின்றன! சந்திரன் குளிர்ந்த தன் கிரணங்களாகிய போர்வையை நம்நகரத்தின் மீதுங் கடல்மீதும் இடுவதானது எத்தகைய காட்சி யின்பத்தைத் தருகின்றது! பகல் முழுதும் உழைத்து வீட்டைத்தேடி யடையும் மாந்தர்க்கு எத்தகைய ஓய்வின்பத்தை யளிக்கின்றது!

இயற்கையே எத்தகைத் தொழிற்கும் மூலகாரணம். ஒரு நாட்டின் கைத்தொழிலினாலாய பொருள் எததேசத்தவராலும் எக்காலத்தவராலும் பரம்பரையாகப் பாராட்டப் பெறுகின்றது.

மாந்தராற் செய்யப்படுவதே செய்யுள். ஆயின் செய்வன வெல்லாம் செய்யுளாமோ? ஒருகாலும் ஆகாது. கற்களிலும் தூண்களிலும் இனிய சத்தங்களிலும் தம்மேன்மையை யுணர்த்திய பெரியோரனைவரும் ஒன்று கூடுமிடமும் ஊழி ஊழிக்காலம் நம்மனத்தை விட்டகலாத உண்மை மொழிகளுண்டாகுமிடமும் இயற்கையன்றி வேறு எது? ஒரு புத்திமான் செய்யுங் காவியம் சாதாரண உற்பத்தி என்பதினும் சாதாரண மனிதரும் உணர்தற் பொருட்டு அவதார புருஷனின் உயரிய எண்ணங்களென்னலே மேன்மை. இயற்கையி லீடுபட்ட புலவனே, மனம் எண்ணம் கை ஆகிய இவைகளின் உழைப்பினால் எவ்விதத்தும் சீரிய நூலை இயற்றுவான். ஒருவன் கம்பன் இராமாயணத்தை இயற்றினான் என்கின்றான். உண்மையாக ஆலோசிக்குமிடத்து 'இயற்கை வனப்பைக் கதை மூலமாய்த் தெரிவித்தான், அவ்வளவே' என்றறிவோம்.



ஷேக்ஸ்பியர், ஓர்ட்ஸ்வொர்த் முதலிய புலவர்களின் நூல்களை இந்தியர்களாகிய நாம் ஏன் கொண்டாடவேண்டும்? அவர்கள் கூறும் மொழிகள் நம்மனத்தை உற்சாகப்படுத்துவதுடன் அவை உண்மையெனத் தோற்றுவதனாலன்றோ? அன்னிய தேசத்தவர் கூற்றுங்களேனும் வெளித்தோன்றுமாயின் ஒருவர் முகத்தை ஒருவர் காணாமலிருப்பினும் அவர்களைக் கொண்டாடுகின்றோம். ஏன் அவ்விதம் கொண்டாடவேண்டும்? பொதுவாகிய இயற்கையை யுரைப்பதனால் எல்லோரும் இயற்கை வனப்பை உணர்கிற்பரோ? அதுவும் முடியாது. அம்மாதிரியே இயல், சிலை, படம் ஆகிய இவைகள் இயற்கையுடன் ஒன்றுபடாமலிருப்பின் அவைகளிடத்துள்ள மாந்தரின் மனவெழுச்சி படிப்படியாகக் குறைந்து கடைசியில் ஒன்றுமில்லா தொழியும்.

இக்காலத்தில் நகரங்களிலுள்ளார் இயற்கைவனப்பைச் செவ்வனே உணராமல் முற்காலத்துக் காவியங்களினின்றும் எதுகை முதலியவற்றை எடுத்துக்கொள்வதுடன் பொருளையும் சந்தர்ப்பத்தையும் உபயோகப்படுத்துகின்றனர். இவ்வகை நூல்களைப் பொருள் கருதி எழுதப் பெறுமவற்றுட் கூட்டவேண்டியதே. மேலும் இவைகள் நீடூழிகாலம் நிலைத்து உலகின்கண் உலாவுதலரிது.

இதுகாறும் இயற்கையின் மேன்மையை எடுத்துரைத்தாம். இனி நம் தமிழ்க்கவிகளில் ஆதிகாலந்தொட்டு எவ்வாறு இயற்கையைப் பாராட்டுகிறார்கள் என்பதை ஆராய்வாம். பிறகு இயற்கை யாசிரியனிடத்தினின்று நாம் உணரவேண்டிய மூவகைக் கட்டுரைகளையும் எடுத்துரைக்கின்றோம்.

சங்கப்புலி யென்று சொல்லத்தகும் திருவள்ளுவனார் நூல் எவ்விதத்தும் மேம்பட்டதென்று யாவருங் கூறுகின்றனர். இயற்கைமாதேவியின் இன்ப ரஸமனைத்தையும் பிழிந்து ஒழுக்கமாகிய சாரத்தைமட்டும் உலகோர்க்குபகாரமாய் உரைத்திருக்கின்றார். அவ்வளவே திருத்தக்கதேவர் காவியத்தைப்பற்றிச் சிறிது கவனிப்பாம். கவனித்தபிறகே அவர் காலத்துச் செய்யுளுக்கும் இடைக்காலத்துப் புராணங்களைப் பாடிய பெருமான்களின் செய்யுட்டன்மைக்கும் செவ்வனே வேற்றுமை விளங்கும். அதன்பிறகே வடமொழியின் சகவாச தோஷத்தால் ஏற்பட்ட வர்ணனைகளின் வனப்பும் சொற்களின் கம்பீரமும் பெரிதும் விளங்கும்.

(இன்னும் வரும்)

சருக்கை. இராமசாமி ஐயங்கார்.

---

# VIKRAMORVASIYAM.

# விக்கிரமோர்வசீயம்.

## மூன்றுமங்கம்.

பின்பு புகுகின்றனர் பரதசிடர்கள்.

**முதல்வன்:**—பைலவ! மகேந்திரன் மாளிகையைக் குறித்துச் செல்லும் பகவானுவாத்தியாயரால் நீ ஆசனம் தரிப்பிக்கப்பட்டாய்; கனன்மாளிகையைக் காக்கும்பொருட்டு நிறுத்தப்பெற்றேன் யான்; ஆகையினாலே வினவுகின்றேன், 'குருவினது பிரயோகத்தினால் தேவசபை களிப்பிக்கப்பட்டதா?' என்று.

**இரண்டாவன்:**—காலவ! நானறிகின்றிலேன் 'களிப்பிக்கப்பட்டதா? இல்லையா?' என்று, சரச்சுவதியாற் செய்யப்பட்டுள்ள காவியபந்தமாகிய அந்த இலக்குமிசுயம்வரத்துள், அவ்வச்சுவை வேற்றுமை யிடங்களில் உருப்பசி அம்மயத்தளாயினள்.

**முதல்வன்:**—என்ன? நினது பேச்சுக்குறை குற்றத்திற் கிடமுடையது போல்.

**இரண்டாவன்:**—ஆம்; அங்கு உருப்பசியின்வசனம் அநவதானத்தினால் மாறுபாட்டினதாயிற்று.

**முதல்வன்:**—எப்படியோ?

**இரண்டாவன்:**—இலக்குமி வேடம் பூண்டுள்ள உருப்பசி, வாருணிவேடம் பூண்டுள்ள மேனகையால் வினவப்பட்டாள்; 'தோழி! வந்து நிறைந்தனர், மூவுலகத்திறைவர்களாகிய உலகபாலர்கள் கேசவனோடு; அவர்களுள் யாரிடத்து நினது மனப்பற்று?' என்று.

**முதல்வன்:**—அப்புறம் அப்புறம்.

**இரண்டாவன்:**—பின்பு அவளுக்கு 'புருடோத்தமனிடத்தில்' என்று சொல்ல வேண்டியிருக்க, 'புரூரவனிடத்தில்' என்று வாக்கு வந்தது.

**முதல்வன்:**—புத்தியும், பொறிகளும் உண்டாகுவதனை அநுசரித்தவைகள்; குரு, அவளைக் கோபித்துக்கொண்டிலரா?

**இரண்டாவன்:**—சபிக்கப்பட்டாளுவாத்தியாயரால்; மகேந்திரனாலோ அநுகிரகிக்கப்பட்டாள்.

**முதல்வன்:**—எப்படியோ?

**இரண்டாவன்:**—'எதனால் என்னுபதேசம் நின்னாற் கடக்கப்பட்டது, அதனால் நினக்குத் துறக்கவாசம் உண்டாகுவதன்று' என்று உவாத்தியாயருடைய சாபம்; சாப முடிவில், நாணத்தால் வணங்கியமுகத்தினளாய அவளோ, மகேந்திரனால் சொல்லப்பட்டாள், 'எவரிடத்தில் மனப்பற்றுடையவளா யிருக்கின்றாய், எனக்குப் போர்நண்பினராகிய அவ்வரசமுனிவருக்குப் பிரியஞ் செய்யத்தக்கதாகையால், அவர் புத்திரப்பேற்றினராகு மளவும் நீ இச்சைப்படி அவ்வரையே யடையக்கடவாய்' என்று.



**முதல்வன்:**—தக்கது வேற்றுமனிதனை யறிந்துள்ள மகேந்திரற்கு.

**இரண்டாவன்:**—(சூரியனை நோக்கி) அம்ம! கதாபிரசங்கத்தினாற் கடக்கப்பட்டது உபாத்தியாயர் மூழ்கும்வேளை; வா இவரதருகிலிருப்பவராகுவோம்.

**முதல்வன்:**—அப்படியே

[என்று அகன்றனர்கள்.]

## கலப்புப் புணர்ப்பு. (மிச்சிர விட்கம்பம்.)

பின்பு புகுகின்றான் கஞ்சுகி.

**கஞ்சுகி:**—

இல்லறத்தோனுங்குடும்பி யேன்ற விளவயதில்
பல்ல சுகநுகரப் பார்க்கின்றான் பின்மகார்
வாங்கு பொறையினனாய் வன்றளர்ச்சி நீங்குகின்றான்
ஈங்கெமக்கோ நாடோறு மிவ்வுடலம் வாட்டுவதாய்
சேவிப் புருவினதாய்ச் சென்ற வயதுகளின்
தாவில் பரிணமந் தானம்ம! மங்கையர்பால்
ஏயதிகா ரங்கட்டமே.

(சிறிது சென்று) நியமத்தோடு கூடிய காசிராசன் மகளால் கட்டளையிடப்பெற்றிருக்கின்றேன், விரதத்தைச் சம்பாதித்தற்பொருட்டு என்றனால் மானத்தைவிட்டு முன்னே நிபுணிகைமூலமாய் மகாராசர் பிரார்த்திக்கப்பட்டிருக்கின்றனர்; இவ்வாறு நீ யென்பேச்சினால் விண்ணப்பி என்று ஆகையால் இப்போழ்து முடித்த மாலைச்செய்கடனையுடைய மகாராசரைப் பார்ப்பேன். (சுற்றிப் பார்த்து.)

அகோ! இனிமையுடையதன்றோ மகாராசமாளிகையின் சாயங்காலவியாபாரம். இங்கேயோ

நீசிவாய்த் தூக்க நிவந்தமந் தத்தால்
அசைவில வாகி யணைந்ததண்டத்தில்
சித்தரித்தன போற் சேர்ந்துள தோகை
வைத்தசா ளரத்தின் வழிவரும் புகையால்
நற்புறு வைய நாட்டுவ வலீகம்
சொற்பெறு மொழுக்கஞ் சோர்வில தாகிய

அந்தப் புரத்து ளார்கிழ் விச்சனம்
சந்தமென் மலர்ப்பலி தாங்கிய தலங்களில்
மாலைவாய்ச் செஞ்சுடர் மன்னிய மங்கல
நூலினும் வர்த்திபை நொய்தா
வேணுறப் பகுத்தங் கிருத்துகின் றதுவே.

(பார்த்து.) அயே! இங்கேயே வருகின்றான் தேவன்.
பரிசன மகளிர் தங்கள் பாணியா லேந்தப் பெற்ற
திருவிளக் கவைகள் சூழச் செலுமிவன் றடங்க டோளும்
விரிமலர்க் கன்னி கார வியன்சினை யுடைய தாகி
இருசிறை யிழவா தேரு மேந்தலி னிலகு மன்றே.

இவனை, நோக்கின் வழியில் இருந்துகொண்டு பிரதிபாலிப்பேன்.

(சுற்றிப்போய் இருந்தனன்)

பின்பு புகுகின்றனன் சொல்லப்பட்டுள்ள பரிவாரத்தினுடைய அரசனும், விதூடகனும்.)

**அரசன்:**—(தன்னுள்)

வினையின் மறைவெய்தும் வெவ்விழைவிற் றுய
தினமிகவுந் துன்பிலதாச் சென்றதுகாண் போக்கும்
விரகின்மை யானீட்சி மேவுமியா மங்கொள்
இரவெங்ங னஞ்செல்லு மே.

**கஞ்சுகி:**—(கிட்டி) தேவன் வெற்றிபெறுக; தேவி விண்ணப்பிக்கின்றாள் 'மணியிழைத்துள்ள அரமியத்தின்மேல் சந்திரன் இனிய தோற்றத்தினன்; அங்கு அருகிலிருக்கும் தேவனால், எவ்வளவுக்குள் சந்திரனுக்கு உரோகிணியின் சேர்க்கை, அவ்வளவுவரை பிரதிபாலிக்கத் தக்கவள்' என்று.

**அரசன்:**—ஆர்ய! சத்கிர்த்தே! 'உனக் கபிப்பிராயம் எவ்வகைத்தோ' என்று தேவி விண்ணப்பிக்கத் தக்கவள்.

**கஞ்சுகி:**—என்ன கட்டளையிடுகின்றனனோ தேவன்.

[என்று அகன்றனன்]

**அரசன்:**—தோழ! தேவியினது இத்தொடக்கம், உண்மையாய் விரதநிமித்தத்தினதாகவே இருக்குமா?

**விதூடகன்:**—ஓய்! ஊகிக்கின்றேன். பச்சாத்தாபங் கொண்ட அங்கவள், உமது வணக்கத்தின்கடத்தலை நியமவியாசத்தால் நீக்கிக்கொள்ளும் விருப்பினள் என்று.

**அரசன்:**—தக்கதனையே நீ சொல்கின்றாய்; அவ்வாறேயன்றோ!

மன்னி கழ்ந்த வணக்கின ராயினும்
இன்ன லார்மிக வேய்ந்துள நாயகர்



நன்ன யஞ்சுடு நல்லுளத் தோர்களாய்ப்
பின்ன ரெய்துவர் பீடறு நாணமே.

ஆகையால் மணியரமியத்தின் வழியைக் காட்டுவாய்.

**விதூடகன்:**—இதோ இதோ நீ; கங்கையின் தரங்கத்தை யொத்த வழகமைந்த இந்தப் பளிக்குக் கற்படியால் ஏறுவாய், மாலைக்காலக்கடையில் மனோகரமாயுள்ள மணியரமியத்தை.

**அரசன்:**—ஏறு, முன்னே.

(எல்லோரும் படியின்மேலேறுதலை அபிநயிக்கின்றனர்.)

**விதூடகன்:**—(பார்த்து) ஓய்! ஓய்! சந்திரன் சமீபத்தினனாய் இருக்கவேண்டும்; ஏனெனில், கீழைத்திசைமுகம் இருணீங்கினதாய்க்காணவினியதாய்த் தோற்றுகின்றது.

**அரசன்:**—நன்கு மொழிந்தனை நீ.

உதய கிரிவா யொளிந்தமதி யுடைய கதிரா லொதுக்குண்டு
புதைகா ரிருளவ் விடநீத்துப் புறம்போ யிருப்பப் புருகூதன்
வதியுங் கீழைத் திசைமுகமேல் வார்ந்த கூந்தன் முடியாற்போல்
மதியென் கண்ணி னிணையினையே மன்னி யிழுத்துக் கொடுசெலுமால்.

**விதூடகன்:**—ஏ! ஏ! ஓய்! விண்ட இலட்டுதுண்டுக்குச் சமானனவனாய் எழுந்தனன் கடவுட் சந்திரன்.

**அரசன்:**—(சிரிப்போடு) எப்போதும், வயிற்றை நிரப்ப விரும்புவோனுக்குச் சிற்றுண்டியே விடயம்.

(கைகூப்பிக்கொண்டு சேவித்து) பகவனே! நிசிக்கதிபனே!

நல்லவர்க்குத் தொழிற்பொருட்டு நாலிரண்டி லொன்றொ
ழிந்த பரித்தேர் நண்ணும்
எல்லவனைப் புல்லுபவ னெழுமமுதின் றென்புலத்தார்
விண்ணோ ரென்னும்
எல்லவருக் குந்திருத்தி யியற்றுபவ னிரவகன்ற
விருளைத் தேய்ப்போன்
கல்லிருந்தான் றன்முடியின் கண்ணிருந்தா னுமனக்கு
நமவே கண்டாய்.

(எழுந்திருக்கின்றான்.)

**விதூடகன்:**—ஓ! தோழ! அந்தணன் முகத்துச் சேர்ந்த வெழுத்தினையுடைய நின்பாட்டனால் கட்டளையிடப் பெற்றவனாகின்றாய்; ஆசனத்தை யடைந்தவனாகுவாய்; நானும் சுகமாக இருந்தவனாகுவன்.

**அரசன்** :—அவ்வாறே. (விதூடகன் பேச்சை யங்கீகரித்து இருந்தவனைப் பரிசனத்தைப்பார்த்து,) நிலவு நன்றாய்க் காய்ந்துகொண்டிருக்கையில், விளக்குக் கூடியதுகூற்றாலென்ன? நீங்களிவைப்பாருங்கள்.

**பரிசனம்** :—தலைவரெது கட்டளையிடுகின்றனரோ.

[என்றகன்றது.]

**அரசன்** :—(சந்திரனைப் பார்த்து விதூடகனைக் குறித்து) தோழ! தேவியின் வருகை முகூர்த்தத்திற்குமேல்; ஆகையால் சனமில்லாவிடத்தில் எனதவத்தையைச் சொல்வேன்.

**விதூடகன்** :—ஓய்! அவள் காணப்படவேயில்லை; ஆனால், அப்படிப்பட்ட அநுராகத்தைக் கண்டு ஆசாபந்தத்தினால் தன்னை நிலைப்படுத்திக் கொள்ளச் சாத்தியமன்றோ!

**அரசன்** :—இவ்வாறே இது, எனது மனோரதமோ வலியது.

மேடுபள்ளத் தாஞ்சிலைகண் மிக்குநெருக் கத்தடுப்புண்
டோடுநதி வெள்ளம்போ லூற்றதடை பெற்றபுணர்ப்
பின்பத்தி னன்மதன னிருநாற்பத் தைந்தோடொன்றாற்
றொன்பதுபங் காக வுறும்.

**விதூடகன்** :—ஓய்! எவ்வாறு வாடிய உறுப்புக்களினால் மிகவும் விளங்குகின்றாய், அவ்வாறு சமீபத்திலேகாதலியின்சேர்க்கையைக் காண்கின்றேன்.

**அரசன்** :—(நிமித்தத்தைச் சூசிப்பித்து,) தோழ!

காதலினுக் கூற்றாங் கனிமொழியா ளியென்ன
மாதுயரத் தென்னை வலக்கை யிதுதானே
ஆற்றுங் துடிப்பதனா லால்.

**விதூடகன்** :—வேறாகாதன்றோ! அந்தணனது மாற்றம்.

(அரசன், மீண்டுவருவளெனு மாசையினாலும் நிற்கின்றான்.)

பின்பு புகுகின்றனள் ஆகாயவழியாக,

சிறிது மதங்கொண்டவளாய் அபிசாரிகை வேடம் பூண்ட உருப்பசியும், சித்திரலேகையும்.

**உருப்பசி** :—(தன்னைப் பார்த்துக்கொண்டு) அடி! சித்திரலேகை! சிறிதணிகலன் பூண்டு நீலவாடை தரித்துள்ள இந்த எனது அபிசாரிகைவேடம் இனிதாயிருக்கின்றதா?

பு. மா. ஸ்ரீநிவாசா சாரியார்.

---



# THE BLIND BARD-VIRARAGHAVA MUDALIYAR.

## அந்தகக் கவிவீரராகவ முதலியார்.

(299-ஆம் பக்கத் தொடர்ச்சி.)

இவர் ஈழமண்டலஞ்சென்று பரிசுபெற்றாரென்பது பின்வருஞ் சீட்டுக் கவியாற் றெரியவரும்:

"இனிதினி தெனச்சேர சோழபாண்டியர் மெய்ச்சு மிங்கிதரன் மதுரவாங்கி
யீழமண் டலமளவுந்திறைகொண்ட கவிவீர ராகவன் விடுக்கு மோலை
வனிதையர் விகாரமன் மதராஜ ரூபவள மயிலையா திபதிசக்கிர
வாளத்தியாகிநங்காளத்தி கிருஷ்ணப்பவாண னெதிர்கொண்டு காண்க
கனதமிழ்த் துறையறி மரக்கலங் கன்னிகாமாட நன்னூற்
கட்டுபேர் கொட்டாரம் வாணி சிங்காதனங் கவிநாடகஞ் செய்சாலை
வினவுசிவ காதையிற் சர்க்கரையெனத்தக்க வினையேனுடம்பு நோயால்
மெலியுமோ மெலியாதவகைபால் பெருத்ததொருமேதிவரவிடவேண்டுமே."

அங்கேயிருந்து இறந்தனர் என்னுங் சொள்கையை இது குலைத்து விடுகின்றது.

பரராஜசிங்கத்தின்மீது பாடிய வண்ணத்தைக்கேட்டு அரசன் மனைவிபாடியது.

"போதவழகன் கவிவீர ராகவனீ போற்றுகவி
யோதையைக் கேட்டுக்கொண் டாடாத பேரில்லை யோங்குபுவி
மாதை யெடுக்கும் வலன்முடிச் சேட மகிபற்கன்றே
காதை வகுக்கிலன் வேதா சிரகம்பங் காண்பதற்கே."

இவர் செங்கற்பட்டிலிருந்த தீம்மய்ய அப்பய்யன் என்பவருடைய வேண்டுகோட் கிணங்கித் திருக்கழுக்குன்றப் புராணம் பாடினார். அது பின்வருஞ் சீட்டுக்கவியாற் றெரியும்:—

"இந்நா ளிருந்தபேர் புதியரா சப்பண்டி ருந்தபேர் பழைய ராக
விருவர்க்கும் வல்லவி லக்கணக் கவிவீர ராகவன் விடுக்குமோலை
அன்னதிதானப் பிரதாபன் பிரசங்கத் தகந்தசேடாவதார
னகிலப்பிரகாசனந் தீம்மய்ய வப்பய்ய னகமிகு மகிழ்ந்துகாண்க
தன்னுடைய மோலையும் வரக்கண்டு நாம்வேத கயிலைப் புராணத்தையித்
தனைநா ளிருந்தோதி னோமாங்கேற்றவதுதான் வந்தலாமலில்லை
நன்னுவலோருட னிதைக்கேட்டெனைச் சோழநாட்டுக் கனுப்ப நன்கு
நவிலோலை தள்ளாமலே சுக்ரவாரத்து நாளிங்கு வரவேண்டுமே."

இதனால் திருக்கழுக்குன்றப் புராணம் பாடியபிறகுதான் இவர் தெற்கே சென்றனர் என்று ஊகித்தற்கிடமுண்டு. ஆயினும் இவர் யாழ்ப்பாணத்திற்கு போனது இதற்குப் பின்னேனும் முன்னேனு மிருக்கலாம். பின்னென்று கொள்வதே சிறப்புடைத்து. இவருடைய சீட்டுக்கவியின் சிறப்பையும் இவர்பெருமையையும் இவர் காலத்துள்ள நிரஞ்சனநாதர் என்பவர் ஒருவர் எடுத்தோதியிருக்கின்றனர்.

"சீட்டுக் கவியென்று சொல்வார் சிலரத் திட்டுக் கவி
காட்டுக் கெறித்த நிலவாகிப் போஞ்செங் கனகரத்னச்
சூட்டுக் கிரீட முடிவேந்த ருற்பத்தி சூறைகொள்ளும்
நாட்டுக் கிலக்கியங் கவிவீர ராகவ னற்கவியே."

"நாரேனும் பூவா னறுமணமா நின்கவிதை
யாரேனும் கேட்கி லவர்க்குந் தமிழ்வருங்காண்
போரேறே யெங்கும் பொழியவருங் கல்விக்குக்
காரே கடலே கவிவீர ராகவனே."

இவர் ஸ்ரீவில்லி புத்தூருக்குச் சென்றபோது பாடியது :—

"வேசையரே மல்குமூர் வீதியிலார் வந்தாலு
பேசிவலை வீசிப் பிடிக்குமூர்— ஆசைமயல்
பூட்டுமூர் கையிற் பொருள்பறித்தே யோடுகொடுத்
தோட்டுமூர் சிவிலிபுத் தூர்."

அரியலூர்க் கிருஷ்ணமழவராயன் அன்னதானத்தைக்குறித்துத் தாம் வியந்து சொல்லிய செய்யுள்

"சேயசெங் குன்றை வருமொப்பி லானுக்குச் செங்கமலத்
தூயசெங் கண்ணனிணை யொப்பனே வத்துழாயணிந்த
மாய னளக்கும் படிமூன்று கிருஷ்ணய்ய மாமழவ
ராய னளக்கும் படியொரு நாளைக் கிலக்கமின்றே."

தீத்தான் சங்கீதத்தை வியந்து பாடியது :—

"வாவியபொற் பரியா வூரில் வீரையன் மைந்தன் பஞ்ச
காவியந்தேர்கின்ற தீத்தான் சங்கீதத்திற் காவலர்தம்
ஓவிய சாலையெல்லாமுயிர்த்தே யுள்ளுருகு மொற்றின்
மேவிய கூடமெல் லாந்திரி கூடத்தின் மேற்படுமே."

ஒப்பிலாதான் சங்கீதத்தைக் கேட்டுருகிக் கூறியது.

"வாழொப்பி லாதவன் சேயொப்பி லாத மழவதிசை
யாழக் கடல்விட்டு நீபாடுங்கால்த் தரிசெல்வனேல்
நீழற் கவுத்துவ நீத்துச்செல் வானந்த நீண்மணிதான்
காழொப்பினுமின் னிசைகேட்குங் காற்கரைந் தேகுமன்றே."



இவர் இடும்பாவனத்திற் சென்றிருந்தபோது பாடியது :—

"பசிமுடுக நோவதல்லாற் பாழ்வீட்டிற் பாழ்த்த
கொசுக்கடியா லுள்ளங் குழைந்தோம்— இசையில்
நெடும்பாவம் யாஞ்செய்தா னீரென்ன செய்வீர்
இடும்பா வனநாத ரே."

நாகதேவனென்பவன் இட்டவுணவைக்குறித்துரைத்தது.

"வாயிலொன்று கல்லுமொன்று நெல்லுமான வன்னமும்
வாடலாக வாறுமாதம் வைத்திருந்த கத்தரிக்
காயிலிட்ட கறியுமுப்பி லாதகஞ்சி வன்னமுங்
காம்பொடிந்த வோரகப்பை கைப்பிடித்த வண்ணமும்
தூயதாகத் துலக்கலின்றி யழுக்கடைந்த பாத்திரந்
தூக்கியுள்ள சுத்தநீர் அறுத்துவந்த நேர்த்தியும்
ஓயலின்றி யீக்கள்வீழ்ந்து மொலுமொலென்ற சட்டியு
முடன்கொணர்ந்த நாகதேவ னூண்மறப்ப தில்லையே."

செழியதரையன்கொடுத்த பரிசுபெற்றும்பின்னும் பொருள்விரும்பிக்கூறியது

"சாலப் பழுத்த மரம்பார்த் தெறிவார்தண் ணீர்சுரக்கும்
ஞாலத் தகழ்வர் கறக்கின்ற வாவைநற் கலணைவர்
நீலக் கடல்விட்டுப் பாலாழி மத்திட்டு நிற்பரென்னீச்
சேலத்து வேந்த னகத்தாகந் தீர்த்த செழியனுக்கே."

[illegible]ராஜன் தன்பல்லக்கின்பின் போனபோது பாடியது :—

"திருமாலு மீசனும் பின்போயுந் தூது செலவிசைந்தும்
அருமா ஆரியத் தமிழ்வளர்த் தாரவ ரோடுபங்காய்
வருமா மறையவன் பேர்சாதித் தேமிக வண்டமிழ்க்குப்
பெருமான் சிவிகைப்பின் வந்தான் விஜயப் பிரமனுமே."

இவர் பற்பலவிடங்களுக்குச் சென்று பாடிப் பரிசுபெற்றுத் திரும்பித் தம்மூர் சேர்ந்தபோது தம் மனைவி தாம் பெற்றுவந்த பரிசு யாதெனக் கேட்டதும் அதற்கிவர் கூறிய உத்தரமும் பின்வரும் பாத்தெரிக்கின்றது.

"இம்பர்வா னெல்லையிரா மனையேபாடி
யென்கொணர்ந்தாய் பாணநீ யென்றாள் பாணி
வம்பதாம் * களப மென்றேன் பூசு மென்றாள்

* களபம்—யானை; வாசனைத்திரவியம். மாதங்கம் = யானை: பொன். வேழம்-யானை: கரும்பு. பகடு-யானை: எருது. கம்பமா-யானை: கம்பென்னுந் தானியத்தின் மா. கைம்மா—யானை. இவற்றை இவர்யானை யென்னும் பொருளில் உபயோகிக்க இவர்மனைவி அதை யறியாது போன்று நடித்து வேறு பொருளைக்கொண்டதாகக் குறிப்பித்தனள் என்பது.

மாதங்க மென்றேனும் வீழ்ந்தே மென்றாள்
பம்புசீர் வேழமென்றேன் றின்னு மென்றாள்
பகடென்றே னுழுமென்றாள் பழனந் தன்னைக்
கம்பமா வென்றேனற் களியா மென்றாள்
கைம்மாவென் றேன்சும்மா கலங்கி னாளே."

இவர் தம் மனைவியுடனிருந்து பலநாளில்லறம் இனிது நடாத்தி, அந்தத்திற் * சிவசாயுச்சிய முற்றனர்.

இவர் இறந்ததைக் கேள்வியுற்றுக் கவிராஜர்களும் புவிராஜர்களும் ஏக்கமடைந்தனர். அப்போது கயத்தாற்று இராஜா பாடிய கையறுநிலை:—

"இன்னமுதப் பாமாரி யிவ்வுலகத் திற்பொழிந்து
பொன்னுல கிற்போய்ப் புகுந்ததான்—மன்னும்
புவிவீர ராகமன்னர் பொன்முடிமேற் சூட்டுங்
கவிவீர ராகவமே கம்."

"தோற்று தொழிந்திருந்த தூலக் கவிகளெல்லா
மேற்று ரகையின் விளங்கியவே—யேற்று லுங்
கன்னுவ தாரன் கவிவீர ராகவனும்
பொன்னுருஞ் செங்கதிரோன் போய்."

இவர்மீது ஈழநாட்டரசன் பரராச சிங்கம் பாடிய கையறுநிலை:—

" முன்னாட்டுத் தவமுனியுஞ் சேடனும் வான்மீகனுமுன் முன்னில்லாமற்
றென்னாட்டு மலையிடத்தும் பாரிடத்தும் புற்றிடத்தும் சென்றுசேர்ந்தார்
இந்நாட்டுப் புலவர்னக் கெதிரிலையே கவிவீர ராக வாநீ
பொன்னாட்டுப் புலவருடன் வாதுசெய்யப் போயினையோ புகலுவாயே."

இவரியற்றிய நூல்களாவன:—திருக்கழுக்குன்றப் புராணம், திருவாரூருலா, கீழ்வேளூருலா, இராமாயண வண்ணம், கிள்ளைவிடுதூது, † சந்திரவாணன் கோவை, கயத்தாற்றரசனுலா, சேயூர்க்கந்தர் பிள்ளைத்தமிழ், சேயூர்க் கலம்

* இவர்பாடிய நூல்களாலும் இன்னுஞ் சில ஆதாரங்களாலும் இவர் சைவரென்பது தெரியவருகிறது. இவர் சந்ததியிற் பிற்காலத்திருந்து "திரு வேங்கடக் கலம்பகம்" பாடிய முத்தமிழ்க் கவிவீரராகவ முதலியார் வைணவர். இவர் பெண்வழி வந்தோர். இவர்வழி வந்தவர்களும் வைணவரே. இப்போதிருக்கும் ம-ள-ள-ஸ்ரீ ஸ்ரீநிவாச முதலியாரும் வைணவர்.

† இக்கோவையைப்பற்றி ஒரு கதை உண்டு:—அந்தகக்கவி வீரராகவ முதலியார் இக்கோவையைக் காஞ்சிபுரத்தில் ஒருகால் அரங்கேற்றிய போது அவ்வூரில் வித்வத்திறம் பெற்றிருந்த 'அம்மைச்சி' என்னும் ஒரு தாசி ஆங்குப்போந்து, கவிராயர் தம் கோவையின் முதற் பிரிவாகிய களவியலில்



பகம், திருக்கழுக்குன்றமாலை. "கந்தரந்தாதியைப் பாராதே கழுக்குன்றத்து மாலையை நினையாதே" என்னும் பழமொழியினால் இம்மாலையினுடைய அருமையும் பெருமையுமினிது விளங்கும். ஆயினும் இவர்தாம் கழுக்குன்ற மாலையாசிரிய ரென்பது ஒரு தலையாக்கொள்ள முடியவில்லை.

" மாடேறு தாளு மதியேறு சென்னியு மாமறையோ
னேடேறு கையு முடையார் தமக்கிட மேருழவர்
சூடேறு சங்கஞ் சொரிமுத்தை முட்டையென் றேகமலக்
காடேறு மன்னஞ் சிறகா லணைக்குங் கழுக்குன்றமே."

இச்செய்யுளும் அக்கழுக்குன்ற மாலையிலுள்ளது தான். இவர்தம் சீட்டுக் கவிகளிற் குறித்துள்ள ஈழநாட்டரசனாகிய பரராசசிங்கம் (பரராசகேசரி), சந்திரவாணன், திருக்கழுக்குன்றப் புராணம் பாடச்செய்த தீம்மய்ய அப்பய்யன் என்பவர்களுடைய கால மின்னதெனத் தெரியவரின் இந்நூலாசிரியர் காலம் இது வென உறுதியாய்க் கூறலியலும். பரராசகேசரி பதினேழாம் நூற்றாண்டின் முதலிலிருந்ததாகத் தெரிய வருகிறது

"பெருமயப்புரைத்தல்" என்னுந் துறையின்பாற்படும்,

" மாலே நிகராகுஞ் சந்திர வாணன் வரையிடத்தே
பாலேரி பாயச்செந் தேன்மாரி பெய்யநற் பாகுகற்கண்
டாலே யெருவிட முப்பழஞ் சேற்றி னமுதவயன்
மேலே முளைத்த கரும்போவிம் மங்கைக்கு மெய்யெங்குமே." என்

னுஞ் செய்யுளைச் சொன்னதும், அவள் "கவிராயர்க்குக் கண் தான் கெட்டது ; மதியுங்கெட்டதோ" என்றாள். அவர் ஒன்றுந் தோன்றாது சற்றசைவற்று நிற்கக்கண்டு அவள், "ஐயா, கரும்பு புன்செய்ப்பயிராயிற்றே ; 'சேற்றில்...முளைத்த கரும்பு' என்று சொன்னீர்களே, பொருந்துமா ?" என்னலும் ; அவர், "வேண்டுமாயின் மாற்றிவிடலாம்" என்று சொல்லி ஏட்டைப்பார்த்துப் படித்துக்கொண்டு வருபவரை நோக்கி, "ஐயா, கொம்பை வெட்டிக் கால் கொடும்" என்னலும் கவிராயருடைய அபிப்பிராயமறிந்து அவர் உடனே "பழச்சாற்றினமுதவயன் மேலே முளைத்த கரும்போ" என்று வாசித்தார். இருவருடைய புத்திக் கூர்மையையும் அங்குளார் அனைவரும் கண்டு மகிழ்ந்தனர்.

மறுநாட் பிரசங்கத்திற்கு அம்மைச்சி தனது பல்லக்கிலேறி வருவதையறிந்த கவிராயர்,

" கலைமகளு நாணிநின்று கைகட்டிப் போற்றச்
சிலைமதவேள் முன்கணையே தாங்க—குலமருவு
கொம்மைச்சிங் காரமுலைக் கோதி லிருப்பனங்காட்
டம்மைச்சி வந்தா ளதோ."

என்று பாடியதை யவளறிந்து அன்று முதல் இவர்களிருவரும் வித்வத்தன்மையினாற் சிநேகித ராஞர்கள்.

அனந்தையாதிபதி சந்திரவாணனுடைய வரலாறு ஒன்றும் இன்னும் புலப்படவில்லை. அனந்தை என்பது திருவனந்தபுரமன்றென்பது தெரியவருகிறது.* திம்மய்ய (திம்மப்ப ?)† என்னும் பேருடைய கனவான்கள் சிலர் செங்கற்பட்டிற் பூர்வீகத் திருந்திருக்கிறார்கள். இது யாரைக் குறித்து நிற்கிறதென்பது தெரியவில்லை. விஜயநகரராஜ்ஜியத்தை ஆண்ட கிருஷ்ணதேவராயர் (1500-1530) காலத்து மந்திரியாயிருந்த திம்மராஜா என்பவர் (1526) செங்கற்பட்டிற்கு வந்து அதற்குக் கிழக்கிலுள்ள திருவிடைச்சுரம் என்னும் கோட்டையிலிருந்த குறும்பர் தலைவராகிய காந்தவராயன் சேதுராயன் என்பவர்களைத் தந்திரத்தாற் றொலைத்துச் செங்கற்பட்டை இராயருடைய ஆளு

---

இவ்வாறிருக்கும் நாளில் அவ்வூர்ப் பிராமணர்கள் ' இவள் வித்யாகர்வங் கொண்டிருக்கிறாள், இவளை எவ்விதத்தினாலாவது அவமானப் படுத்த வேண்டும்' என்றெண்ணி, வரதராஜப் பெருமாள் இரதோற்சவ தினத்தன்று இரதத்தை அவள் வீட்டில் முட்டச்செய்து, வீட்டையிடித்துத் தள்ளிப் பிறகு தேரைச் செலுத்தவேண்டுமென்று பிராமணர்கள் அவட்குத் தெரிவிக்க, அவள் அதனைத் தன் மித்திரராய கவிராயர்க்குத் தெரிவித்தாள். அவர் பிராமணர்களை யழைத்து, "ஐயன்மீர், வீட்டை யிடியாது வேறுபாயந் தேடலாகாதோ தேர்செல்வதற்கு ?" என்ன, அவர்கள் வீட்டையிடித்தால் இரதம் எளிதிற் செல்லும் என்றார்கள். கவிராயர் அவர்களுடைய உட்கருத்தறிந்து அவர்தம் தீக்குணத்துக்குப் பரிதபித்து,

" பாப்புக் குரங்காப் படையெடுத்து வந்தீரோ
தேப்பெருமா ளேகச்சிச் செல்வரே—கோப்பாகக்
கொம்மைச்சிக ரலங்கைக் கோட்டையென்று வந்தீரிஃ
தம்மைச்சி வாழு மகம்"

என்று இப்பாட்டைப்பாடியதும் வீட்டை யிடிப்பதற்கில்லாது தேர்சென்றுவிட்டதெனவும் சொல்வர். இக்கதையைச் சிலர் இன்னும் வேறுவிதமாய்ச் சொல்லுதலு முண்டு.

* " திரு அனந்தையாதிபதி சந்திர வாணன்" என்பதில் உள்ள திருவனந்தை இக்காலத்துத் திருவனந்த புரத்தைக் குறிக்குமென்று கொள்வது இயல்பேயாகும். ஆயினும் அஃது அந்நகரைக் குறித்ததாகக் காணவில்லை. ஏனெனின் திருவனந்த புரத்து அரசர்களுக்கெல்லாம் ரவிவர்மா என்றும் ஆதித்தியவர்மா என்றும் பேரிருந்ததே யன்றி இப்பெயரைக் காணேம். [The History of Travancore, by P. Sankunni Menon, pp, 98-110 : Kings from 1502-1728.]

† திம்ம + ஐய = திம்மைய = திம்மய்ய ; திம்மராஜா குளம் என்று ஒரு குளம் இப்போதும் செங்கற்பட்டிலிருக்கிறது. See pages 83, 88, Chingleput District Manual.



யைக்கு உள்ளாக்கினர். மேற் குறித்த செய்யுளிற் குறிக்கப்பட்டவர் இவர்தாமென்று சொல்வதற்கில்லை. ஒருவேளை இவர் சந்ததியாராக விருந்திருக்கலாம். தலைக் கோட்டை யுத்தத்தில் (1565-கி. பி.) தோல்வியுற்று விஜயநகர ராஜ்ஜியம் க்ஷீணதசை யடைந்த காலத்து அக்குலத்தவர் அவ்விடம் விட்டுச் சந்திரகிரியிலும், பதினாறும் நூற்றாண்டிறுதியிற் செங்கற்பட்டிலொரு கோட்டை கட்டிக்கொண்டு அவ்விடத்திலும் சிலகாலந் தங்கியிருந்தார்கள். இராயருக்கு மந்திரியாயிருந்த திம்மராஜா அந்த இராயராலேயே * அவமதிக்கப் பெற்றுத் தன்னிலையிழந்தனர். ஆயினும் அவர் பெயர்கொண்ட இவர் அந்தச் சந்ததியிற்றோன்றிய பிற்காலத்தவரா யிருக்கலாம். சிறுதேர்ப் பருவம், 6-ஆவது செய்யுளினால் ஆசிரியர் 1521-ஆவது † வருஷத்திற்குப் பின்னிருந்தவர் என்றேற்படுகிறதே யன்றி இன்ன வருஷத்தி லிருந்தாரென்பது சரியாக அகப்படவில்லை.

1680-௵ திம்மய்யநாய்க்கன் ‡ என்னு மொரு கனவான் செங்கற்பட்டிலும் சென்னையிலுமாக இருந்ததாகத் தெரியவருகிறது. மேற்குறித்த பாட்டிலுள்ள பெயர் இவரைக்குறிக்கினும் குறிக்கலாம்.

கவி வீரராகவ முதலியார், இலக்கண விளக்கம் செய்த வைத்தியநாத நாவலரைப் பற்றிப் புகழ்ந்திருக்கின்றனர் :—

§ "ஐம்பதின்மர் சங்கத்தா ராகிவிடா ரோநாற்பத்
தொன்பதின்ம ரென்றே யுரைப்பரோ—இம்பர்புகழ்
வன்மீக நாதனருள் வைத்தியநா தன்புடவி
தன்மீதங் நாட்சரித்தக் கால்."

'தொண்டை மண்டல சதகம்'பாடிய படிக்காசுப்புலவர் இந்நாவலருடைய மாணாக்கர். இப்படிக்காசுப் புலவர் இராமநாத புரத்தில் அரசாண்டு வந்த இரகுநாத சேதுபதி (1685-1723 கி. பி.) யின் சமஸ்தான வித்துவான். 1685௵ வரையும் அரசாண்ட சேதுபதியின் பேரில் அக்காலத்தி லிருந்த அமிர்தகவிராய ரென்பவர் ஒருதுறைக் கோவை யென்னும் ஒரு நூல் செய்

---

* See Sewell's Forgotten Empire (Vijayanagar) pp. 158, 359.

† அவ்வருஷத்தி லிருந்திருக்கக் கூடாதோ எனின், இருந்திருக்க முடியாது. அக்காலத்தே இந்நூ லெழுதியிருக்கும் பக்ஷத்தில் ' மகரம் பருத்த திருநாள்" என்று மாதத்தை மாத்திரம் எடுத்தெழுதாது வாரம், நக்ஷத்திரம், திதி, யோகம், கர்ணமுதலியவற்றையுங் கூட்டி எழுதியிருப்பார். அதற்குக் கொஞ்சக்காலத்திற்குத் தான் முந்தியதாயின் அவ்வூராராயினும் அதனை யவர்க்குத் தெரிவித்திருப்பார். இஃது எழுதியது (1521) திருவிழா ஏற்பட்டதற்கு அநேக வருஷகாலம் பிந்தியதென்பது தெரியவருகிறது.

‡ See Page 121. Madras in the Olden Times by J. Talboys Wheeler.

§ இலக்கண விளக்கப் பதிப்புரை.

திருக்கின்றனர். அமிர்த கவிராயரும் அந்தகக்கவி வீரராகவ முதலியார் காலத்தவர். படிக்காசுப் புலவர் சுமார் 200 - வருஷங்கட்கு முன்னிருந்திருப்பதாய்த் தெரியவருவதனால் அவராசிரியர் காலத்திருந்த அந்தகக்கவி வீரராகவ முதலியார் அதற்கு இருபது அல்லது முப்பது வருஷங்கட்குமுன் னிருந்திருக்கலாம் *. அதாவது இற்றைக்குச் சுமார் 240-வருஷங்கட்கு முன்னிருந்திருக்கலாம். திம்மய்ய அப்பய்யன் (1680) மேற்குறித்த நாய்க்கராக இருக்கலாம். இவ்வந்தகக் கவிவீராகவ முதலியார் வம்சத்தில் இப்போதிருக்கும் சவிராயர் ம-ா-ா-ஸ்ரீ ஸ்ரீநிவாச முதலியார் அவர்க்கு ஒன்பதாவது சந்ததியினர் என்று தெரியவருவதனால், மேற்குறித்த காலமே (1661?) அந்தகக் கவிவீரராகவ முதலியார் காலமென்று கொள்ளலாம்.

கல்குளம் - குப்புசாமி முதலியார்.

## THE MRICHCHAKATI.
## மிருச்சகடி.

(135 - ஆம் பக்கத்தொடர்ச்சி.)

"ஸ்ரீ சங்கராசாரிய சுவாமிகள்" கலியுகாதி 3889-ம் வருஷம் விபவ ஸம்வத்ஸரம், வைகாசிமீ சுக்லபக்ஷம் தசமிதிதியில், கேரள தேசத்தில் காலடி என்னுமூரில் பிறந்தனரென்பதையும், அவர் 33 வருஷம் இப்பூமியில் விளங்கி வந்தன ரென்பதையும் யாவரும் ஒப்புக்கொண் டிருக்கின்றனர். இதனால் அமருசதம் கி. பி. 787-819 வருஷங்களில் எழுதப்பட்டிருக்கவேண்டுமென்பது சொல்லவேண்டி யிருக்கின்றது, அதனால் இவ்வாமன பண்டிதரும் கி. பி. 787 - ஆம் வருஷங்களுக்குப் பின்னரே யிருந்திருக்க வேண்டுமென்பது மேற்படுகின்றது. கி. பி. 10 ஆவது நூற்றாண்டினிறுதியிலிருந்ததாகத் தானே சொல்லும் லோசன மென்னு மலங்கார சாஸ்திரத்தை எழுதின அபிநவ குப்தாசாரியர் இவ்வாமன பண்டிதர் தமக்கு முன்னிருந்ததாகக் கூறியிருக்கின்றனர். இதனால் இவ்வாமன பண்டிதரும் சுமார் கி. பி. 800-ஆம் வருஷத்திற்கும் கி. பி. 920-ஆம் வருஷத்திற்கும் இடையி லிருந்திருக்கவேண்டுமென்பது திண்ணம். ஆகையால் சூத்திரக்கவி கி. பி. இரண்டாவது நூற்றாண்டுக்கும் கி. பி. பத்தாவது

* இலக்கணக் கொத்து நூலாசிரியராகிய சாமிநாததேசிகர், நன்னூல் விருத்தியுரை யெழுதிய சங்கரநமச்சிவாயப் புலவருடைய இயற்றமிழாசிரியர். இத்தேசிகர் வைத்திய நாத நாவலர் காலத்துச் சிறுவயதினராக விருந்திருக்கின்றனர். சங்கர நமச்சிவாயப்புலவர் 180-வருஷத்திற்கு முன்னிருந் திருக்கின்றனர்.



நூற்றாண்டுக்கும் மத்தியில் விளங்கினரென்பது தோராயமாக வேற்படுகின்றது. ஆனால் இந்நாடகத்தி லுரைக்கப்பட்ட விஷயங்களைக்கொண்டே இச்சூத்ரக்கவி பவபூதி மஹாகவிக்குப் பிந்தினவரென்பது, ஏறக்குறைய சங்கராசாரியருடைய காலத்திற்குச் சமீபத்தி லிருந்திருக்கவேண்டுமென்பதும், கீழ்வரையப்படுங் காரணங்களால் தெரியவரும்.

(1.) உவில்ஸன் புலவர் கூறுகிறபடி இந்நாடகம் கி. பி. முதல் நூற்றாண்டிலேயே எழுதப்பட்டிருக்குமாயின், அக்காலமுதல் ஸ்ரீஹர்ஷ விக்கிரமாதித்தியனுடைய காலம்வரைக்கும், சுமார் 500 வருஷங்களாக இம்மிருச்சகடியைப்போன்ற நாடகங்கள் வடமொழியில் இல்லாதது மிகவும் விந்தையே. மேற்சொன்னபடி இப்பிரகரணம் கி. பி. முதல் நூற்றாண்டிலேயே எழுதப்பட்டிருப்பின், இதற்கும் சுமார் 700 வருஷங்களுக்குப் பிறகு எழுதப்பட்ட மாலதிமாதவம் முதலிய பிரகரணங்களுக்கும், நாடகக் கையாடலிலும், கதாவிஷயங்களிலும் விசேஷமான பேதங்கள் இருக்கவேண்டும். ஆனால் அத்தகைய பேதம் சிறிதேனும் காணப்படவில்லை. கதா விஸ்தாரமும் பரதசாஸ்திரம், தசரூபகம், காவ்ய பிரகாசிகை, ஸாஹித்திய தர்ப்பணம் முதலிய அலங்கார சாஸ்திரங்களிற் பிரகரணத்திற்குக்கூறியிருக்கப்பட்ட இலக்ஷணங்களுக்கு எல்லாவிதத்திலு மொத்தே யிருக்கின்றது. மேற்கூறிய காரணங்களைப் பற்றித் தத் (Dutt) என்னும் சுவதேசப்புலவரும், மாக்டானல் என்னும் விதேசப்புலவரும் தாங்கள் இயற்றிய இந்து தேச பூர்வசரித்திரத்திலும், ஸம்ஸ்கிருத கிரந்த சரித்திரத்திலும், இம்மிருச்சகடி என்னும் நாடகநூல் காளிதாசன் பவபூதி இவர்களின் காலத்திலேயே எழுதியிருக்க வேண்டு மென்று நம்புகின்றனர். மேலும், இந்நாடகத்திலிருந்து ஒருபாதி சுலோகம் தண்டியின் காவ்யதர்சத்திற்காணப்படுவதனால், ஒருவேளை மல்லிகா மாருதம், தசகுமார சரிதம் முதலிய கிரந்தங்களை இயற்றிய தண்டி மஹாகவியே இம்மிருச்சகடியையும் எழுதியிருக்கலா மென்று பிச்செல் புலவர் நினைக்கின்றனர். இதனால் இம்மிருச்சகடி என்னும் பிரகரணம் கி. பி. ஆறாவது நூற்றாண்டுக்கு முன் எழுதப்பட்ட தன்றென்பது ஏற்படுகின்றது,

(2) புராணங்களிற் கூறியவிஷயங்கள் இந்நாடகநூலிற் காணப்படவில்லை என்றும், அதனால் இந்நாடகம் புராண காலத்திற்கு முன்னரே எழுதப்பட்டிருக்கவேண்டு மென்றும், அது பற்றியே இந்நாடகத்தைக் கி-பி. முதலிரண்டு நூற்றாண்டுகளிலேயே எழுதப்பட்டதாகக் கொள்ள வேண்டு மென்றும் மேற்கூறிய உவில்ஸன்புலவர் வாதிக்கின்றனர். ஆனால் இவ்வாதம் சிறிதேனுமேற்பத்தக்க தன்றென்பது இந்நாடகத்தைக் கவனித்துப் படிப்பவருக்குத் தெள்ளெனப் புலப்படும். புராணகாலத்திற் றோன்றிய பிரமவிஷ்ணு ருத்திரர்கள் என்னும் திரிமூர்த்திகள் இந்நாடகத்தில் நான்காம் அங்

கத்தில் ஒப்புக்கொள்ளபட்டிருக்கின்றனர். பிற்காலத்துப் புராணங்களி லொன்றாக ஒப்புக்கொண்டிருக்கப்பட்ட மார்கண்டேய புராணத்தில் தேவீ மாஹாத்மியத்தில் தேவியார் சும்ப நிசும்பர்கள் கொல்லப்பட்ட விஷயம் இம்மிருச்சகடியிற் கூறப்பட்டிருக்கின்றது. முருகக் கடவுள் கள்ளர்களுக்குத் தெய்வமாக இந்நூலின் மூன்றாவது அங்கத்திற் கூறப்பட்டிருக்கின்றது. இப்பொழுது வழங்கிவரும் மனுஸ்மிருதியே வியவஹார விஷயங்களில் முக்கியப் பிரமாணமாகக் கொள்ளப்பட்டிருக்கின்றது. ஸம்க்ஷேபமாய்க் கூறுவோமாகில் இந்நாடகத்திற் காணப்படும் விஷயங்களுக்கும் ஸம்ஸ்கிருத பாஷையின் பிற்காலத்து நாடக நூல்களின் விஷயங்களுக்கும் கொஞ்சமும் பேதமில்லை. ஆனது பற்றி இந்நூலானது புராணகாலத்திற்குமுன்னரெழுதியதென்பது சரியன்று.

(3) இந்நாடகத்தின் அகத்தே காட்டப்பட்டிருக்கும் புத்தமதத்தின் நிலையைச் சற்று யோசித்துப் பார்ப்போமாகில், இந்நாடகம் ஸ்ரீசங்கராசாரியருடைய காலத்திலோ, அல்லது அவருக்குச் சில வருஷங்களுக்கு முன்னரோ எழுதப்பட்டிருக்கவேண்டுமென்பது செம்மையாய்ப் புலப்படும். ஹிந்து தேசத்தைப்பற்றி எழுதியிருக்கும் பற்பல சரித்திரங்களினின்றும் சங்கராசாரியருக்குமுன் தோன்றிய குமாரிலபட்டருடைய காலம் வரைக்கும் புத்தமதம் இந்தியாவில் ஓங்கிவளர்ந்து வந்ததென்பது யாவருக்கும் தெரியவரும். கிறிஸ்து பிறப்பதற்குமுன் 400-வருஷங்கள் வரைக்கும் புத்தமதம் அத்தியுன்னத தசையில் இருந்ததென்பது யாவருக்குந் தெரிந்த விஷயம். பிறகு குப்த வம்சத்து ராஜர்களின் காலத்திலும் விக்கிரமாதித்திய மஹாராஜருடைய காலத்திலும் புத்தமதமும் இந்து மதமும், யாதொரு சச்சரவுமின்றி வெகு அந்நியோந்நியத்துடன் இருந்து வந்தன. அப்படியே ரோமேச சந்திர தத் என்னும் புலவர் தமது ஹிந்து தேசபூர்வ சரித்திரத்தில், இரண்டாவது பாகத்தில், ஐந்தாம் புஸ்தகத்தில், முதலாம் அத்தியாயத்தில் 127-ஆவது பக்கத்தில் விக்கிரமாதித்திய மஹாராஜரையும் அவருக்கு முன்னும் பின்னுமிருந்த வரசர்களையும் பற்றி எழுதும் சந்தர்ப்பத்திற் பின்வருமாறு எழுதுகின்றார் :—இந்தியாவுக்குப் பிறவியிலேயே தலைமையாயுள்ள ஆரியமதமும் புத்தமதமும் அநேக நூற்றாண்டுகளாய் வெகு அந்நியோந்நியமாயும் சச்சரவின்றியும் விளங்கிவந்தன. ஒவ்வொரு நாட்டிலும் பௌத்தர்களும் ஹிந்துக்களும் ஒத்துக்கூடி வாழ்ந்து வந்தனர்கள். இந்துக்கள் பௌத்தர்களுடைய மடங்களிலும் விஹாரங்களிலுஞ் சென்று வித்தையை யப்பியசித்தனர்கள், பௌத்தர்களுமப்படியே பிராமண ருஷிகளிடத்திலிருந்து வித்தையைக்கற்று வந்தார்கள். ஒரே அரசனே இவ்விரண்டு மதங்களையும் ஸமமாகப்பாவித்து பரிபாலித்து வந்தனன். குப்த வம்சத்துச் சக்கிரவர்த்திகள் வெகுவாய்ச் சிவனையும் விஷ்ணுவையும் வணங்கி வந்த



போதிலும் பௌத்தர்களையும் அவர்களது மடங்களையும், ஸம்மானங்களினாலும், மரியாதைகளினாலும், மான்யங்களினாலும் பலவிதத்திலும் கௌரவித்து வந்தார்கள். சில சமயத்தில் இவர்களுள் ஓர் அரசன் புத்தமதத்தை முக்கியமாமாய் அநுசரித்து வந்தாலும், அவனது புத்திரன் சுத்த இந்து மதத்தையே கைப்பற்றி வந்திருக்கின்றான். அப்படி இரண்டு சகோதரர் ஒவ்வொரு மதத்தைக் கைப்பற்றிப் பரிபாலித்து வந்தபோதிலும், யாதொரு சச்சரவுமின்றி இருமதஸ்தர்களையும் சமமாகவே பரிபாலித்து வந்தார்கள். ஒவ்வோர் அரசனுடைய சபையிலும், இவ்விருமதங்களைச் சேர்ந்த பண்டிதர்கள் விளங்கிவந்தனர்கள். ஸ்ரீவிக்கிரமாதித்தியனுடைய சபையிலும் அப்படியே பௌத்த பண்டிதர்களும் ஹிந்து பண்டிதர்களும் அந்நியோந்நியமாய் விளங்கி வந்தார்கள்."

T. S. நாராயண சாஸ்திரியார்.

---

## THE INDISPENSABILITY OF SPORTS.

## * விளையாட்டி னின்றியமையாமை.

செந்தமிழ் பயின்ற செல்வர்காள்!

### அவையடக்கம்.

இதுகாறும் அவையேறிப் பேசினேனல்லேன்; ஆதலின், அவைக்கடங்கி ஒழுகுமாறும் அறிந்தேனல்லேன். இத்தகைய யான், 'விளையாட்டி னின்றியமையாமை" என்பது பற்றி என் சிற்றறிவிற்கு எட்டியவற்றிற் சிலவற்றைக் கூறுவதற்கண், வழூஉப்பல மலிந்து கிடத்தல் இயல்பே ஆயினும்மாணை கடத்தற் கஞ்சி, 'விளையாட்டி னின்றியமை'யைப் பற்றி விளையாட்டாச் சில கூறுவல். கலைவிளையாட்டிற் கைதேர்ந்த நீவிரும் இதனை விளையாட்டாச் செவிக்கொண்டருளுவீர் என்னுந் துணிவுடன் இப்பெரிய விஷயத்தின்கண் எளியேனுந் தலையிடுகின்றேன் கண்டீர்.

### விளையாட்டின் சிறப்பு.

கடவுளாற் படைக்கப்பட்ட உயிர் வர்க்கங்களுள் மனிதனே சிறந்தவன். மனிதனுக்குக் கீழ்ப்பட்டு இயற்கை யொழுங்கிற் காணப்படும் ஒவ்வோருயிரும் விளையாடுவதனை நாம் கண்கூடாகக் கண்டிருக்கின்றோம். அவ்வாறே இயற்கை யொழுங்கில் மேதக்கு நிற்கும் மனிதனும் விளையாடும் இயல்புடையான் என்பது தேற்றம்.

ஒவ்வொரு மனிதனும் மக்கள் குழாத்திலிருந்து பல்லாற்றானும் உழைத்து வாழவேண்டியவனாதலின், அவன் தனக்கும் பிறர்க்கும் இன்பம் பயப்

* இவ்வியாசம் சென்னைக் கிறித்தவக் கலாசாலை திராவிட பாஷாசங்கத்து அங்கத்தினர் முன்னர் வாசிக்கப்பட்டது.

பனவாகிய சிற்சில விளையாட்டுக்களை மேற்கொள்ள வேண்டியவனாகின்றான். அவ்வாறு மேற்கொண்டு விளையாடுமிடத்துக் கரும்புதின்னக் கைக்கூலி போலத் தானு மின்புற்றுப் பிறரையும் இன்புறுத்துகின்றான். விளையாட்டின் கட் கண்டோர்க்கும் இன்பமுண்டா மென்பது சொல்லாமலே விளங்கும்.

### விளையாட்டின் பயன்கள்.

முதற்கண், மக்களா லின்பங் கருதி மேற்கொள்ளப் பெற்ற விளையாட்டுக்கள் பின்னர்ப் பெரும்பயனும் விளைப்பனவாகின்றன. விளையாட்டுக்களால் விளையும் பயன்கள் மூவகைப்படும். அவைதாம் சரீராபிவிருத்தி, மனோபிவிருத்தி, குணாபிவிருத்தி என்பனவாம்.

### சரீராபி விருத்தி.

ஒவ்வொரு மனிதனும் வாழ்க்கையின்கண் ஏதேனுமொரு சிறப்புறு தொழிலை மேற்கொண்டு நடக்கின்றான். அவ்வாறு அவன் மேற்கொண்ட தொழில் அவனுக்குப்பிரியகரமா யிருப்பினு மிருக்கலாம். இல்லாமற் போயினும் போகலாம். தான் மேற்கொண்ட தொழில் ஒருவனுக்கு எவ்வளவு பிரியகரமா யிருப்பினும் அவனுக்கு வேலைக்கிடையிற் சிறிது ஓய்வும், இரவினுறக்கமும் சின்னாட் பின்ன ரொருநாளொழிவும், பன்னாட் பின்னர்ச் சின்னாள் விடுமுறையும் இருத்தல் வேண்டும். இதுபோலவே மருந்துக்கு அனுபானம்போலவும் உணவுக்குக் கறிவகைகள் போலவுமிருந்து மேற்கொண்ட தொழிலை இனிது முடித்தற்கேற்ற பேருக்கம் விளைத்தலின்கண் விளையாட்டு இன்றியமையாததோர் தனிக்கருவியாகின்றது. கைத்தொழில்செய்யும் மக்களே விளையாட்டைவிரும்பி மேற்கொள்ளும்போது கல்விப்பயிற்சி முதலிய உளத்தொழில் புரியும் மக்களும் விளையாட்டை மேற்கொள்ளவேண்டுமென்றே நூல்களை ஆராயுந்தோறு மறிவு மேம்படு மாறுபோல விளையாட்டிற் புகுந்து தேகப்பயிற்சி செய்யுந்தோறும் தேகசவுக்கியம் மிகுகின்றது. உடலு முளமும் ஒத்து முதிர்ந்தவிடத்தே வாழ்க்கை சிறப்பையெய்தும். வாழ்க்கைச் சிறப்பாவது தேகசௌக்கியமே. தேகசௌக்கியமடைந்து நீடித்தவாழ்வுந் தானே உண்டாகின்றது. சர்வைசுவரியங்களு மிருந்து தேகசௌக்கிய மொன்றில்லானேல், அவனுக்கு அவற்றான் ஏதேனு மின்பமுண்டோ?

> * செந்திருவைப் போலணங்கைச் சிங்காரித் தென்னபயன்
> அந்தகனே நாயகனா னால்?"

என்பதுபோலன்றோ ஆய்விடும். எவ்வகை விளையாட்டும் பிறரது கட்டாயமின்றிச் சுயேச்சையால் மேற்கொள்ளப்படல் வேண்டும். அல்லாக்கால் மனவருத்தத்திற் கிடனாக்கி அது மேற்கொண்டானைத் துன்புறுத்து

* இரட்டையர்கள்.



மென்க. விளையாட்டுக்களே இவ்வுலகின்கண் காணப்படும் சுக மூலங்களையும் உபயோகித்தற் கேற்றவனாகுந் திண்மைய திறத்தினை ஒவ்வொருவனிடத்தும் முதிருமாறு செய்கின்றன. இத்தகைய விளையாட்டுக்கள் வெளியிடை விளையாட்டெனவும், உள்ளிடை விளையாட்டெனவு மிருவகைப்படும். மக்களாயினார் யாவர்க்கும் இவ்விருவகை விளையாட்டுக்களும் வேண்டியனவே. உதைபந்து, சல்லடைப்பந்து, மரச்சட்டப்பந்து முதலிய பந்தாட்டங்களும், ஓடுதல், மூச்சுப்பிடித்தல், வேட்டமாடுதல் முதலியனவும் வெளியிடை விளையாட்டுக்களாம். சதுரங்கம், சொக்கட்டான், நாடகம் முதலியன உள்ளிடை விளையாட்டுக்களாம். வெளியிடை விளையாட்டுக்களால் யாக்கை நிலை உறுதிப்பாடடைந்து தசைகள் வலியுறுகின்றன. உள்ளிடை விளையாட்டினாற் பொருள்களை யுற்றுநோக்குந் திறனும், ஆழ்ந்த சிந்தனையும், நுட்பமதியும், நியாயவுணர்ச்சியும், மக்களியல்பை உள்ளவாறறிதலும் முதலிய நலங்கள் விளைகின்றன. எனவே, உள்ளிடை விளையாட்டுக்கள் மனோபிவிருத்தி, குணாபிவிருத்தி என்ற விரண்டினும் மிகப் பயன் படுமாறு காண்க. பிறபிராணிகட்குத் துன்பத்தை விளைக்கத்தக்கனவாகிய சில தீச்செயல்கள், சில்லோர்களால் விளையாட்டென மதிக்கப்படுகின்றன. இத்தகைய போலி விளையாட்டுக்கள் மக்களுள் நிகழற்பால அனுதாபம் இரக்கமாதியவற்றை யறவே தொலைத்து அவரைக் கன்னெஞ்சராக்கி விடுங்கண்டீர். ஆதலின் அவற்றை விளையாட்டெனப் பேணாது புறக்கணித்திடுமின்.

இது நிற்க. சில்லோர் தாம் மேற்கொண்ட தொழிலையே ஒருவகை விளையாட்டெனக் கொண்டு அதன் கண்ணேயே முழுதும் தலைப்பட்டு நிற்றலின் அன்னார்தம் தொழிலினின்று சிறிது நீங்கவேண்டிற்றாயின் துன்புறும் பெற்றியராகின்றனர். அந்தோ! இவரது அறியாமைக்கென் செய்வது! 'எத்தொழிலின்கணும் ஏக ரீதியானது வேண்டற் பாலதன்று. மேலுமது வாழ்க்கையினுக்கு கேடுவிளைப்பதாகவுங் காணப்படுகின்றது' என்று உடல்நூல் முறையிடுமாற்றை அவர் கேட்டிலரோ? சுவரிருந்தன்றோ சித்திரமெழுதப்புகுதல் வேண்டும்? யாக்கை நன்னிலையி லிருந்தாலன்றோ எத்தொழிலையுஞ் செய்ய வல்லராகலாம்.

### மனோபி விருத்தி.

உடலும் உள்ளமும் இயைந்தே வெளியிலொன்றெனத் தோன்றி யியலுகின்றன. மனோ விகாரங்கள் அனைத்தும் உடலின்கண்ணே மெய்ப்பாடுகளாக வெளிப்படுகின்றன. இம்முறைபற்றி யன்றோ நாடகத்தின்கண் ஒன்பான் சுவைக்கு உரிய அவிநயங்களும் உடலின்கண்ணே காட்டுவதற்கு இயைந்தனவாகின்றன? எனவே உடல் விருத்தி விளையாட்டுக்களெல்லாம் உளவிருத்தி விளையாட்டுக்களுமா மென்பது பெற்றாம். யாக்கை நூலுணர்ச்சியும்

உறுப்புக்கள் வளருமாறறிதலும் முதலியன, விளையாட்டை மேற்கொண்ட ஒவ்வொருவனும் அடையும் பெரும்பேறுகளாம். விளையாட்டு ஏதேனுமொரு நற்றொழில் செய்வதற்கேற்ற சுவையும் உள்ளக்கிளர்ச்சியும் ஒருங்கேதந்து மேற்கொண்ட தொழிலை யினிது முடிக்குமாறு செய்கின்றது. விளையாட்டே சோம்பற்பிணியைத் தொலைக்கு மருந்து; இன்பப் பேறுற்று.

### த்ஜைபி விருத்தி.

விளையாட்டுக்களாற் குணநலஞ் சிறத்தலுண்டோ வெனச் சிலர் ஐயுறுவார்கள். இன்னுஞ் சிலர் விளையாட்டுக்கள் மக்கள் குணத்தைமாற்றவற்றோ வென்று மையப்படா நின்றார். அவர்தம் ஐயப்பாடெல்லாம் தெளியாமைபற்றி நிகழ்ந்தனவாதலின் அவைபோகியாமாறு சிறிது காட்டுகின்றேன். விளையாட்டுக்கள் விளையாட்டுக்களே யாமாயினு மவற்றின் கண்ணே புகுந்து ஆடப்புகுவோர் ஒத்த வளவினராயும் ஒத்த வலியினராயும் ஒத்த வயதினராயு மிருத்தல் வேண்டுமென்ற விதியினேற்பாடும், வெற்றி தோல்விகளைக்குறித்த உண்மையாராய்ச்சியுந் தம் வல்லமையின்கண் நம்பிக்கையுடைமையும், பிறர் வல்லமையின் அளவறிதலும், அதற்கேற்பத்தாம் ஒழுக வேண்டுமாறும், காணுநரது புகழை எதிர்பார்த்தலும் ஏனையோரால் நன்குமதிக்கப்படுதலும், நட்பு மேம்படுதலுமாகிய வின்னோரன்ன நற்குணங்கள் வாய்த்தற்பேறு விளையாட்டுக்களாற் கிடைத்தலின் அதனைக் கைவிடுவார் பெருமூடரெனவே துணிதல் வேண்டும். எனவே உடல் உளம் குணம் என்ற முத்திறத்தானும் பெருநலம் விளைக்கும் விளையாட்டுக்களைக் கைவிடுதலன்றி யவற்றைப் பேணி யொழுகுவேமாக.

இதுநிற்க. சில்லோர் விளையாட்டுக்களால் மக்கள் கெட்டுப்போவரெனவும் விளையாட்டுக்களால் தாம் மேற்கொண்ட தொழிலை மறந்துவிடுவரெனவுங் கருதி விளையாட்டுக்களைத் தீயவெனக் குறை கூறுவாராயினர். என்னே! அவர் தம் தெளிவிருந்தவா! விளையாடப் புகுந்தோர் அளவுகடந்து தம்மையும் மறந்து விளையாடினராயின், இயற்கையந் தேவியே அன்னாரைத் தக்கவாறு ஒறுத்து நல்வழிச் செலுத்துகின்றாள். அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் விஷமன்றே?

* " பீலிபெய் சாகாடு மச்சிறு மப்பண்டஞ்
சால மிகுத்துப் பெயின்" எனவும்
* " நுனிக்கொம்ப ரேறினா ரஃதிறந் தூக்கி
னுயிர்க்கிறுதி யாகி விடும்" எனவுங்

கூறிய பொய்யில் புலவன் பொருளுரைகாண்க. எனவே, விளையாட்டின்மேற் சுமத்தப்பட்ட குறையும் பறந்து போயிற்று. இன்னுஞ் சிலர் விளையாட்டை

* திருக்குறள்.



விளையாட்டென நினையாது மறந்து, அதனை மெய்ச்செயலெனக் கருதி ஒருவரை யொருவர் வெருவுறத்தாக்கி யிருவரு மொழிவர் என்னே! அவர் தம் பேதைமதி!

### சில சரித்திர வுதாரணங்கள்.

முன் காலத்தில் நிகழ்ந்த மகாபாரதக் கதையின்கட் போந்துள போர்வீரர்களாகிய கன்னன், வீமன், அருச்சுனன், துரியோதனன், முதலியோரிளமையிலேயே பல்வித விளையாட்டுக்களிலும் பயின்று மிகச் சிறப்பெய்தி விளங்கினர். விளையாட்டிற் பொறுமைப் பட்டழிந்தான் துரியோதனன். அவன் போல விளையாட்டினுட் பொறுமைப்படாது வாழ்தலன்றோ சிறப்புடைத்து. நம்முடைய தமிழ்க்காவியங்களிற் கோமக்களைப் புலவர் புனைந்து கூறுமிடத்து எடுத்துரைத்த யானை யேற்றம் குதிரையேற்றம் முதலிய விளையாட்டுக்கள் எங்கே போயின? அவைகளாடப்படு மிடங்களாகிய செண்டு வெளிகளு மெங்கேபோயின? முன்னையோர் விளையாடிய விளையாட்டுக்களுட் பல இக்காலத்து நின்று விட்டனவே. இக்காலத்திற் சுதேச விளையாட்டுக்களெல்லா மொழிந்து எங்குப் பார்த்தாலும் மேலைத்தேய விளையாட்டுக்களே மலிந்துபோயின. இதனானே எப்பொழுதும் நம்முடைய விளையாட்டுக்களை விளையாடல் வேண்டும்; புறத்தேய விளையாட்டுக்கள் வேண்டற் பாலனவல்ல வென்று கூறவந்தேனல்லேன். மேலைத்தேய விளையாட்டுக்களுட் பலவற்றிற்கு மிக்க பணச் செலவாகின்றமையானுங், கீழைத்தேய விளையாட்டுக்களுட் பெரும்பாலன பணச் செலவின்றியே நிகழ்கின்றமை யானும் முன்னையவற்றினும் பின்னையனவே ஓராற்றான் விரும்புதற்பால வென்னுங் கருத்துப்பற்றிக் கூறினேன். வேறன்று.

இனி நம்மவராவா ரனைவரும் யாம் மேற்கூறிய வாற்றான் விளையாட்டுக்கள் மக்கள் வாழ்க்கைக் கின்றியமையாதன வென்றுணர்ந்து விளையாட்டை விளையாக மதித்தலின்றி, ஒருவரோடொருவர் நேசம்பாராட்டி அன்புடையாளரா யொழுகி நீடுழி வாழ்வாராக.

வி. கோ. கோவிந்த சிவனார்.

## RECREATION.

## பொழுது போக்கு.

நாகரிகம், அதிகரிக்க அதிகரிக்க விளையாட்டிற்காக உயிர்கோடலினின்றும் நாம் அதிகமாகப் பின்வாங்குவோமென்றும் பிராணிகளைக் கொல்வதனினும் அவை யுயிரோடிருப்புழி யதிகப்பிரீதி காணலாமென்றும், புதிய காற்று உட்கொண்டு தேகப்பயிற்சிசெய்யப் பிற நல்லவழிகளுளவென்றும்,

அறிவோமென்றும் நம்பலாம். சுத்தமான நீருக்கு நமது கடன்பாட்டைப் பற்றி எவ்வளவோ எழுதப்பட்டிருப்பினும் புதியகாற்றிற்கும் அதைப் போலவே நாம் கடமைப்பட்டுளோம், அஃதெவ்வளவதிசயம்! அது நம் சரீரமெல்லாம் புகுகின்றது; தன் இருக்கை தெரியாதவளவு நுட்பமாய் நடுவிடையில் நமது மீந்தோலை முழுக்குகின்றது. களிமலர்களின் நறுமணத்தை நம் அறைகளுள் வீசத்தக்கவாறும் நந்நாவாய்களைக் கடன்மீதோடத்தக்கவாறும் செய்ய அதுவல்லது. அஃது ஒலியியக்கத்திற்குறு கருவியன்றோ? நமக்கினியவர்து குரல்களையும் இயற்கையினினிய விசையையும் நன்களிக்கும் நற்கருவியு மஃதன்றோ? பூமியிற் பெய்யும் மழைநீரின் பெரியதொட்டியு மஃதன்றே. பகல் வெப்பத்தையும் இராக் குளிரையும் தணித்து நந்தலைக்குமேல் நீலமான அழகிய வளைந்த வானத்தான் மூடிக் காலை மாலை வானங்களை ஒளி செய்விக்கின்றது. அது மென்மையும் தூய்மையும் அமைதியும் பயன்பாடு முளது.

ஏனெனில், எல்லாவற்றினும் இனியகாற்றைப்போலினியது வேறொன்றுமிலது. நம்மைச்சுற்றிலும் நமக்குமேலும் வைக்கப்பட்டுள்ள ஒரு பெருமலாகும் விண்ணெனு மண்டபம் நம்மை நோக்கிக் குவிந்துகொண்டிருக்கும் ஒரு பெருமலர்போன்றது. அதன் விசித்திரசாரம் உலகம் முழுவதையும் நிரப்புகின்றது. அனைத்தினு மினியது காட்டுமலரளைந்து வருங்காற்று தம் கருத்துடனே விண்மீன்போன்ற மலர்கள் தம்மருகே முளைத்துள்ள காட்டுப் புல்கட்குமேல் வரவேண்டுமென்றெண்ணி மேலே கலையில் நெருங்குகின்றன. அறிவுடையோரெல்லாம் எப்பொழுதும் இத்தகைய அவஸ்தைப்பட்டிருக்கின்றனர். சாதாரண வழி பலவெண்ணங்களால் அழகு செய்வதாயிற்று. விண்மீன் ஒளியுற்ற வக்கரைக்கு யான் காலைதோறும் சென்றேன். 'பலவருடங்கள் கழிவதற்கு முன்னரேயான் அதேபாகம் போய் மாறுபாடு வேண்டாத தெவனென வுணரவில்லை. யான் மாறுபாடு வேண்டுகின்றிலேன்: அவ்வே பழைய விருப்பஞ்சான்ற பொருள்களையும் அவ்வே காட்டுமலர்களையும் அதே மரத்தையும் அதே மென்மையான சாம்பற் பச்சையையும் அவ்வே புருக்களையும் அவ்வே கரிக்குருவிகளையும் நிழல்தர வெயிலிருக்கும் வரைபாடும் அதே மஞ்சக்கூடமென்னும் பறவையையும் விரும்புகின்றேன். வசந்தகாலத்தின் படிக்கட்டுமுதல் படிப்படியாக வேனிலின் மேற்றட்டுவரையிலுள்ள எல்லாவற்றையும் விரும்புகின்றேன். அதே வரிசையை வருடந்தோறும் யான் பார்ப்பேனாக" என்று ஒருவர் கூறினார்.

நங்கழனிகளில் ஏனையமலை நாடுகளிற்போல் வெவ்வேறுவித மலர்கள் இருக்கின்றில. ஆனாற் சிலவேளைக ளிவற்றில் மல்லிகை முல்லை யாதியமலர்கள் ஏராளமாயுள.



"மகளிரா டையாரம் மலர்களெல்லாம்
வெள்ளிடைத் தம்மை வெள்ளி வண்ணத்தில்
நீட்டுக்களிப்பன சிந்தையிற் காணாய்"

ஒருவேளை காடுகளின்னும் அழகாகவும் வசீகரிக்க வல்லனவாகவு முள.

"போகமகளிர் தங்களவு காட்சிபோல்
ஆகிய வனைத்தும் அதிசய மாமே"

யாம் அடிக்கடி காலநிலை தீதாயிற்றெனக் கேட்கின்றோம். ஆனால் உண்மையாகவே ஒரு காலநிலையும் தீதன்று. வெவ்வேறுவிதங்களிலிருப்பினும் அஃதனைத்துமின்பகரமானதே. ஏதேனு மொருகாலம் குடியானவர்க்குக் காதல் விளைச்சல் கட்சாதல் தீயதாகலாம். ஆனால் மனிதனுக்கு யாவும் நல்லவே. வெயிலினியது: மழை இளைப்பாற்றுகின்றது. ரஸ்கின் கூறுமாறு "தீயகால நிலையென்பதே யில்லை. எல்லாம் நல்லகாலத்தின் வெவ்வேறுவிதங்களே" இளைப்பாறுதல் சோம்பேரித்தனமன்று. சிலவேளைகளில் மரத்தின்கீழ் வேனில் நாளில் புல்மீது படுத்துக்கொண்டு நீரின் சலசலவெனு மோசையைக் கேட்டுக்கொண்டதால் நீலவானின் உலவும் முகிற்குழாங்களைப் பார்த்துக்கொண்டாத லிருத்தல் வீண்காலப் போக்கன்று.

மேலுங் காற்றுந் தேகப்பயிற்சியும் சேர்ந்தே வுளவாதலின், இருபயன்களையுங் கைப்பிடித்துக் கொள்ளலாம். ஒவ்வொருவனு மெய்யாகவே வெளிக்காற்றில் இரண்டுமணி நேரமேனு மிருத்தலைத் தெய்வீக முதற்பெருங் கடமையாகச் செய்து கொள்ளல்வேண்டும்.

புதிய காற்று தேகத்திற்கு நன்றுமாறு போலவே, மனத்திற்கும் நன்றாம். இயற்கையந்தேவி ஒரு பேரிரகசியம் பேச முயல்வாள் போல்கின்றனள். அதுவும் மெய்யே. மண்ணும் விண்ணும் காடும் வயலும் ஏரியும் யாறும் மலையும சிறந்த நல்லாசிரியர். அவை நம்முட் சிலர்க்கு நாம் நூல்களினின்றும் அறியக்கூடிய தனினும், அதிகமாகக் கற்பிக்கின்றன. அன்றியுந் தேயத்திற்குட்போய் யாற்றிற் படகு செலுத்தி காட்டின் மலர் கொய்து ஒரு குழியிற் புதையலெடுத்து கரையிற் சிப்பிகளையும் கடற்பாசிகளையும் பொறுக்கி சட்டப்பந்தாட்டமும், கட்டைப்பந்தாட்டமும் ஆடியாதல் புதிய காற்றும் தேகப்பயிற்சியும் இன்னும் வேறெவ்விதத்தினுலாதல் கொண்டால் சௌக்கியமடைந்தே யன்றிறும் கவற்றுயர்களும் குறைந்தாதல் நீக்கப்பட்டதால் போகின்றன வெனக்காண்பீர். இயற்கை நம்மை அமைந்த சிந்தையராக்கக் குளிர்ச்சிசெய்து வன்மை கொடுக்கின்றாள். அவள் நம் மனத்தை யின்னும் நின்மலமாகவும் சந்தோஷமாகவும் செய்கின்றாள். இன்பத்திலும் பொழுது போக்கிலுமே செலுத்தப்பட்ட வாழ்க்கை யொன்று உண்மையாகவே தன்னையும் பாராட்டுவதாலே யன்றி, சகிக்கக்கூடாதபடி சுவையற்

றும் போகின்றது. விளையாட்டுக்கள் என்றும் வாழ்க்கைத் தொழிலாதல் கூடாது. ஆனுல் மிதமான இன்பநுகர்ச்சி மடியாகாது. பொழுது போக்கின் முக்கியபாகங்களெவை ? மெய்யின் பங்களுமுள. பொய்யின் பங்களுமுள. ஆனுல் ஐம்பொறிகளும் மெய்யின்பந்தரக் கூடுமாயினும் இது மிக்குயர்ந்த நன்மையன்று.

"மெய்யின்பங்களைக் கணக்கிட முடியாது. உறவினர் நேசர் சம்பாஷணை நூல்கள், இசைகவி, வித்தை, பயிற்சி, இளைப்பாறுதல், இயற்கை வனப்பு, இயற்கை வேறுபாடு, வேனில், கார்காலம், காலை, மாலை, பகல், இரவு, வெயில், புயல், காடு, வயல், யாறு, ஏரி, கடல், ஜெந்துக்கள், செடிகள், மரங்கள், மலர்கள் இலைகள் கனிகள் இவையனைத்தும் அவ்வின்பப் பொருள்களுட் சிறுபாகமே.

யாம் இன்பம் நுகருமாறு பூமியின் நல்ல கனிகள் வேண்டுமென்று கடவுளைக் கேட்பது சிறுபேறன்று : மேலும், மனிதற்குத் தெரியாதனவும் நாகரீகம் அதிகமாக அறியப்படக் கூடியனவுமாகிய பல வின்பங்கள் இன்னும் இருக்கலாம் யாம் வாழ்க்கை யின்பத்தை நுகராவிடின் அது நம்பிழையே "எல்லோரும் இன்பம் நுகரலாம். ஆனுற் சிலரே மேற்கொண்டதை நிறைவேற்றவல்லர்" இப்பொழுது நாம் எல்லோருக்கும் புகைவண்டியினுல் காட்சி நலம் மிகுகின்றது. நம்காட்சி நலம் மிகுந்தோறும் நம்மனோபாவத்தின் செழிப்பும் மிகுகின்றது.

சருக்கை - வரதாசாரியன்.

## CORRESPONDENCE.

## கடிதம்.

ஞானபோதினிப் பத்திராதிபரவர்கட்கு,

ஐயா! சென்றமாசத்திய தங்களது பத்திரிகையிற் கடிதம் என்னுந் தலைப்பின்கீழ் 'உண்மையுரைப்போன்' என்று கைச்சாத்திட்டு தம்முண்மைப்பெயரைக் காட்டாதொழிந்த நண்பர் சேயூர் முருகன் பிள்ளைத் தமிழிலுள்ள முகவுரையைத் தாங்கள் மீட்டுந் தங்கள் பத்திரிகையிற் பதிப்பித்தமையை மிகையெனக் கூறலோடு நில்லாது, முகவுரையை யிழித்துக் கூறித் தாங்களு மரபு பிழைத்தீர்களெனத் தங்கள்மீதும் பழியேற்றினர். இவ்விறுதி விஷயத்திற்கேனும் தக்க விடை பகர்வது* தங்களைச் சேர்ந்தது. மற்றவை சற்று விசாரிக்கற்பால.

முதலாவது பிள்ளைத்தமிழ் முகவுரையை மீட்டும் பத்திரிகையிற் பதிப்பித்தீர்களென அவர் கூறியது வழு. அதனைத் தாங்களுங் கவனியாது விட்

* இதற்கு விடை முற்சஞ்சிகையிலே பகர்ந்துளோ மென்பதுணர்க. பு-ர்.



டீர்கள். † எட்டுப்பக்கங்களடங்கிய முகவுரையும், இருபது பக்கங்களடங்கிய நூலாசிரியர் வரலாறும் என இரண்டு பகுதிகள் நூற்கு அங்கமாயிருக்கின்றன. அவற்றுள் நூலாசிரியர் வரலாறே மீண்டைப் பதிப்பிக்கப்பட்டது. அதுவுந் தாங்கள் கூறியபடி சிலபாகங்கள் மாற்றியெழுதப்பட்டுள்ளது. இஃதிங்ஙனமாகக் கடிதம் விடுத்த நண்பர் ஒன்று நூலையிதுவரை நோக்கினு ரல்லராதல் வேண்டும். அன்றி முகவுரையிலக்கணமறியாதாராதல் வேண்டும். மற்றிது விரிக்குற்பாற்றன்று. அவர் பிழைத்தனரெனலே யமையும்.

"முகவுரை மேன்மையை யுடைத்தென்றுவது, உண்மையை விளங்குவதென்றுவது சொல்லுத்தற்கு இடனேயில்லை" என்றார். 'இடனே' யென்பதில் ஏகாரத்திற்குப் பொருளென்னை ? இவ்வுரை யுண்மையுரையென்று யாவரோ சம்மதிப்பார் ? பொறுமை மேலிட்டுக் கிளம்பிய பொய்யுரையென்று கூறுமலே விளங்குமே. நூலாசிரியர் வரலாற்றை முகவுரையென மயங்கிய நண்பர் முருகன் பிள்ளைத் தமிழ் ஆராய்ச்சியும் அதனுட் காணப்படவில்லை யென்பது வியப்போ? ஒரு வார்த்தையைப் பிடித்துக்கொண்டு அதனோடு பெயர் மாத்திரையாற் பொருத்தமுடைய விஷயங்கள் யாவையும் தமக்குத் தோன்றியவாறு எழுதுவாரில் ஒருவரென தம் உண்மை யுரையாற்றோன்றும் நமது நண்பர் நூலாசிரியர் வரலாற்றுள் நூலாராய்ச்சி காணப்படவேண்டுமென்று கூறியது எந்த நியாயம்பற்றியோ?

தனிப்பாடற்றிரட்டிற் கண்ட கவிகளை இங்கும் பக்கம் நிரப்பும்பொருட்டு வசனங்களுட் பொதிந்து காணப்பட்டன வென்றார். தற்காலத்து அச்சிட்டு வழங்கும் "தனிப்பாடற்றிரட்டு" என எமக்குக் கிடைத்தவைகளில் இக்கவிகளுள் அநேகங் காணப்படவில்லை. ஆதலால், இவரிடமிருக்கும் பிரதிவேறொன்றாதல் வேண்டும். நாமும் வெகுபாடுபட்டுத் 'தனிச்செய்யுட் சிந்தாமணி' என்றொருநூல் வெளியிடமுயன்று அச்சிட்டு வருகின்றோம். அதற்கிந்த நூலாசிரியர்வரலாற்றி லிருந்து உதவியும் பெற்றோம். பரந்த நூற்புலமையுடைய ரெனக் காட்டும் 'உண்மையுரைப்போன்' உண்மையாய்த் தனிப்பாடற்றிரட்டொன்று, இச் செய்யுட்கள் அடங்கியது கண்டதுண்டேல் எமக்குத் தெரிவித்தால் உபகாரமாயிருக்கும். மற்றிவர் அவ்வாறு காட்டாதொழிவராயின் இவர் தம்மனத்திற்றோன்றியதை வாய்க்கு வந்தபடி யுரைத்தாரெனக் கொள்வோம்.

இங்ஙனம்

மதுரைஜில்லா கொட்டாம்பட்டி

எம். கருப்பையாப் பாவலன்.

† 'உண்மை யுரைப்போன்' கூறியது 'முகவுரை' யெனினும், கருதியது நூலாசிரியர் வரலாற்றையெனத் தெளிந்தமையின் அதனைப்பெரும்பிழையெனக் கருதி யொருபொருட்டாமதித்தில மென்க. பத்திராதிபர்.

# REVIEWS OF BOOKS.
# புத்தகக் குறிப்புக்கள்.

## மதிவாணன் :

[இஃது எஸ். பி. ஸி. கே. அச்சியந்திரசாலையிற் பிரசுரிக்கப்பட்டது.
இதன் விலை : அணு - 8. தபாற்கூலி வேறு. கலிகோகட்டட முளதாயின்,
அணு - 12. பொன் னெழுத்துக்களு முளதாயின் ரூ - 1.]

'இன்பவல்லி'யின் இரண்டாம் மலராகிய இந்நூலை யியற்றினார் சென்
னைக் கிறிஸ்தவ கலாசாலைத் தலைமைத் தமிழ்ப்பண்டிதர் பிரமஸ்ரீ
வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியார் பி. ஏ.; இது புதுவது புனைந்ததோர்
செந்தமிழ்க்கதையாம். ஒன்பான் அத்தியாயங்க ளுள்ளது; புதுமைவழியா
னியற்றியது ; செந்தமிழுரைக்கோர் காட்டாக மிளிர்வது ; ஆங்கில மொழி
யினுரை நடையாளர் வகுத்துள விதிமுறைகளில் நந்தமிழ் மொழியின்
போக்கிற்கு இசைந்தனவற்றை யுதாரணமுகத்தான் விளக்கிக் காட்டுதற்கு
உற்றதோர் துணைக்கருவியாம். இந்நூல் 114-பக்கங்கள் கொண்டது ; "இழு
மெனுமொலியினி னெழுகுறு மருவிபோல்" யாண்டுந் தடைப்படுதலின்றி
ஓதை நலஞ்சிறந்து ஒளிர்வது; திட்பநுட்பஞ் செறிந்தது ; முந்தை
யோர்சொல்லும் வழக்கும் நாடி வகுக்கப் பெற்றது. இதன்கட் பயிறற்
பேறுடையார் யாவரும் தந்தமி ழுரைநடை திருந்தப்பெறுவர் என்பது
இந்நூலாசிரியருடைய கொள்கை. எனவே, கலாசாலைகளிற் பயிலுநர்க்
கும் இஃது இன்றியமையாததோர் கையுறையாகுமன்றே! ஆங்கிலம் முத
லிய பாஷைகளினுண்பொருள்கள் பல தொகுத்து வைத்ததோர் வைப்பா
மாதலின் அம்மொழி பயிலப்பெறாத வேனையோர்க்கும் இது மிக்க பயன்பா
டுடைத்தென்று இந்நூலாசிரியர் பல சொல்லக்கேட்டு மிருக்கின்றோம்.
செந்தமிழ்ச் சீமான்களெனவுஞ் செந்தமி ழபிமானிகளெனவும் விளங்கா
நின்ற யாவரும் இந்நூலைப் போற்றி யாதரிப்பாராக. ஆசிரியர் விரும்பும்
வண்ணம் சர்வகலாசாலையார் இப்புத்தகத்தைக் கூடிய சீக்கிரத்தில்
பி. ஏ, எம். ஏ, பரீக்ஷைக்குப் பாடமாக ஏற்படுத்துதல் நலம். இல்லையா
யின் இந்நூலாசிரியர்க்கு இத்தகைய நூல்களெழுதுதற்கு ஊக்கம் பிறவாது
போம். ஆகையால் நம் வேண்டுகோளை யாவரும் சற்றே கவனித்தல்
வேண்டும். இன்னும் இந்நூலின் கதைச் சுருக்கமும் இதன்பெருமைகளும்
இந்துநேசனில் (28-5-02-பக்கம் 2) நூலாசிரியர் கருத்துற எழுதிய இந்நூல்
விமரிசையிற் பரக்கக்காண்க.

## தமயந்தி:

[இது தி. சுப்பிரமணிய ஐயரால் சி. நா. அச்சியந்திரசாலையில் அச்சி
டப்பட்டது. இதன் விலை : அணு-9. தபாற்கூலி வேறு.]

தொண்டை மண்டலம் உயர்தரவித்தியாசாலைப் போதகாசிரியருள் ஒரு
வராகிய ம-ா-ா-ஸ்ரீ பி. ஏ. பிரணதார்த்திஹரசிவனார் பி. ஏ., எல். டி.,
இயற்றியது இந்நூல். இஃது ஒருபுதிய தமிழ்நாடகம் ; சென்னைக் கிறிஸ்
தியன் காலேஜ் தலைமைத் தமிழ்ப்பண்டிதர் பிரமஸ்ரீ வி. கோ. சூரியநாரா
யண சாஸ்திரியா ரவர்கள் பி. ஏ., பதிப்பித்துவரும் நாமகள் சிலம்பின்



கட் பதினோராம் பரலாம் ; முதலங்கம் இரண்டாங்களத்திற்கு ஏற்புடைத்
தாயதோர் சித்திரப் படம் இனி தமைக்கப்பட்டு நூலின்முகத்து வைக்கப்
பட்டுளது. இது மிகவுங் கண்கவர் வனப்பினது. இந்நூல் நம் தென்னிந்
தியாவின்கணுள்ள கற்றறிமகளி ராவார்க்கு, அன்னார் அறிவு நலஞ்சான்று
ஒளிர்தல் வேட்டு, உரிமையாக்கப்பட்டுளதன்மை மிக்வும் பொருத்த முடை
த்தே. நூற்பெயருக்கேற்றபடி அன்னரே யிதனைக்கையுறையாகப்பெற்று
மகிழ் சிறத்தற்குரியார். இது 210-பக்கங்கள் கொண்டதெனினும், குறைந்த
விலையே யேற்பட்டுளது. ஆன்றோர் செய்யுட்களிற் சில இந்நூலின்கண்
மேற்கொள்ளப்பட்டிருத்தலே யன்றி, நூலாசிரியரது சுதந்திர யூகத்தா
லாக்கப்பட்ட செய்யுட்களும் கண்ணிகளுங் கீர்த்தனங்களும் ஆங்காங்குக்
காணப்படுகின்றன. அவை யனைத்தும் படிப்போர் யாவர்க்கும் இன்பம்
பயக்கத்தக்கன. அவலம் நகையாதிய பல்வகைச்சுவைகளும் பொதுளி இந்
நாடகம் இனிதியங்குமாறு யாவரும் அறிவர். ஊழ்வினை யுருத்துவந்தூட்டு
மென்பதும், அதனை நுகர்ந்தேகழித்தல் வேண்டுமென்பதும், தலைவன்றலை
வியரியல்பும், மனைவியர் தந்தலைவரிடத்து ஒழுகுமாறும், மகப்பேறு
மகப்பிரிவுகளின் றன்மையும், சோதிடர் வஞ்சவொழுக்கமும், சூதாட்
டத்தினால் வருங்கேடுகளும், செல்வஞ்சகடக்காற் போலவருமென்ற வுண்
மையும், துன்பம் வந்துழியும் அதுபற்றி மனங்கலங்கா திருத்தலே ஆண்
மையென்றதும், இயற்கைப் பொருள் வனப்பும், அதுகண்டு மக்கள் ஆனந்
திக்குமாறும், தயிற்பெருமையும், கீழ்மக்களியல்பு கிளக்குமாறும், தமயந்தி
கற்பின் வன்மையால் வேடனை வீட்டினளெனப் புராணப்போக்கிற் புனை
யாது நித்தியாநந்தரென்ற ஒரு முனிவருதவியான் அவள் தப்பியுய்ந்தன
ளெனப்புனைந்துள பான்மையும், பிரிவாற்றாக் கொடுமையும், கற்பின் சிறப்
பும், நாயக பக்தியும், காமங்கொண்டார் அறிவுபேதுற்றுழலுமாறும், அறமே
யெத்துன்பம் வரினும் தலைகாக்குமென்பதும், உலகின்கணுறுவனவெல்லாம்
உயிர்கட்கு உணரொணு வுறுநலங்கருதியே யென்பதும், பிறவும் படிக்குநர்
மனத்தின்கட் பதியாமற் போகாவென்பது திண்ணம். காட்டின்கண் நள
னுந் தமயந்தியும் முறையே பிரிவுழியும் புலம்புஞ் சொற்களைச் செவிமடுத்து
நெஞ்சமுருகாதார் யாரே ! சாமானிய ஜனங்களி னுணர்ச்சிக்கு மேற்பட்ட
நடையிலாதல், பண்டிதர் ஓதுக்கத்தக்க நடையிலாதல் இந்நாடகம் எழுதப்
படாமல், பாமரர் பண்டிதராகிய இருதிறத்தாரு மொப்புமாறு இனிய எளிய
நற்றமிழ் நடையிலெழுதப்பட் டிருக்கின்றது ; மகளிரனைவரும் இன்புடு
னேற்று விருப்பங்குன்றுதவாறு படிக்கத்தக்கது. நீதி நிலையம்போல் விளங்
கும் இவ்விதிகாசக் கதையை இனியதோர் நாடகமாகப் புனைந்து தந்த நமது
சிவனார்க்கு வந்தனஞ் செலுத்துகின்றோம். இன்னும் இது போன்ற நல்ல
தமிழ்நூல்கள் பலவியற்றி நந்தமிழுலகத்தை இந்நூலாசிரியர் களிப்பிப்பா
ரென நம்புகின்றனம். இது நல்ல பளபளப்புள்ள கடிதத்தில் நன்கு பதிப்
பிக்கப்பட்டுளது.

## சேயூர் முருகன் பிள்ளைத்தமிழ் :

[இது சென்னை தாம்சன் கம்பெனியாரது மினெர்வா அச்சியந்திரசாலை
யிற் பதிப்பித்தது. விலை அணு 4.]

இது செங்கற்பட்டு ஜில்லாவிலுள்ள சேயூர் என்னுந் தலத்துக் குடி
கொண்டருளிய முருகப்பிரான்மீது இயற்றப்பட்டதொரு பிரபந்தம். இதனை

யாக்கியோர் சற்றேறக்குறைய இருநூற்றைம்பது யாண்டுகட்கு முன்னர்ப்
பொற்களந்தைப் பதியிற்றோன்றித் தமிழ் வழங்கும் நாடுகளிற் பிரசித்தியுற்
றிருந்த வரகவி அந்தகக்கவி வீரராகவமுதலியார் என்னும் புலவர் பெருமான்
இந்நூற்குப்பின் றோன்றிய பிள்ளைத்தமிழ்களெல்லாம் வெளிவந்துலவும் பெ
ருமைபெற்றும் இஃது அதனைப்பெறாதுபோயது தமிழ் நாடு செய்த தவக்
குறையேயன்றி வேறென்? பிள்ளைத்தமிழ்ப் பிரபந்தங்களை யெல்லாம் ஒருங்
குவைத்து நோக்குங்கால் முதற்றரத்து நிற்கத்தக்க விதனை யிதுகாறும் அச்
சுப்புத்தகமாப் பெறாமை தமிழர்க் கொருகுறையே. எனவே இதுகாறும்
செல்வாக்கிலிருந்த விதனை யிப்போழ்தத்து நல்வாக்கென்று யாவரும்
கண்டுதேரும் வண்ணம் வெளிக்கொணர்ந்த ம-௱-௱-ஸ்ரீ, கல்துளம்-துப்பு
சாமிமுதலியாரவர்கள் பி. ஏ. தமிழ் மொழியிடத்து வைத்துள்ள ஆர்வம்
வியக்கத்தக்கதே. புலவர் பெருமானாகிய வீரராகவமுதலியார் யாத்த நூலின்
பெருமையைப்பற்றி யாமிங்குப் பேசல்மிகையாம். முற்குறித்தபடி எப்
பிள்ளைக்கவிக்கும் பின்வாங்குந்தரத்ததன்று என வற்புறுத்தலே யமையும்.
நூலுள் ஆங்காங்கு நிகழும் சொற்பொருளா சங்கைகளைத் தவிர்க்கும் வண்
ணம் அடிக்குறிப்புக்கள் பக்கந்தோறுங் காணப்படுகின்றன. குறிப்புக்க
ளும் பதிப்பித்தோரது நூலுணர்ச்சியினையும் புத்தி நுட்பத்தினையும் நன்கு
எடுத்துக்காட்டுகின்றன. இனி இப்பிள்ளைத் தமிழ்க்கு அங்கங்களாக முக
வுரை நூலாசிரியர் வரலாறு செய்யுண் முதற்குறிப்பகராதி முதலியன சேர்
க்கப்பட்டுள. அவற்றுள் முகவுரை பிள்ளைத்தமிழென்னும் பிரபந்த வரலா
றும் சேயூரைப்பற்றிய சில அவசியக் குறிப்புக்களும், நூலகத்தே காணப்ப
டும் சிலகால வரையறைத்தெளிவும் புலப்படுத்துகின்றது. இந்நூலாசிரி
யரைப்பற்றிப் புலவர் வாயின்மட்டும் விளங்கிக்கொண்டிருந்த வரலாறுகளை
யும் தனிக்கவிகளையும் அவர் காலமின்னதென் றாகித்தற்குத்தக்க நியாயங்
களையும் நூலாசிரியர் வரலாற்றுட் பரக்கக்காணலாம். ஏனைய பிள்ளைத்
தமிழ்களும் இந்நெறியிற் பதிப்பிக்கப்படின் தமிழ் கற்கும் மாணவர்க்கு
மிக்க வுபயோகமாயிருக்கும். அவ்வுபகாரத்தினை யிதனைப் பதிப்பித்தோ
ரேயாவது பிறதமிழ்ப் புலவர்களாவது செய்வாரென்று யாம் எதிர்பார்க்
கின்றோம்.

## குணமாலிகை :

• [இது சென்னைத் தாம்ஸன் கம்பெனியாரால் தமது மினெர்வா அச்சி
யந்திர சாலையிற் பதிப்பிக்கப்பட்டது. இதன் விலை அணா-6. தபாற் கூலி
வேறு.

இந்நூல், வித்தியாசாலைப் பரிசோதகராகிய ம-௱-௱-ஸ்ரீ நா. இரகுநா
சாரியரவர்களது குமாரராகிய ஸ்ரீ. ர. குமார தாத்தாசாரிய ரவர்கள்
ஏ. ஆங்கிலத்தினின்றும் மொழிபெயர்த் தியற்றியது. இதற்கு முதனூல்
கிலத்திற் புகழ் சான்ற மில்டன் என்னுங்கவிஞர் பெருமா னியற்றிய
காமஸ்' என்பதாம். வழிநூல் வகுக்கு மிடத்து முழுதும் மொழிபெயர்
யாப்பி னியற்றிடாது நம் நண்பர் நம்மவரியல்புக் கேற்றவாறு விரிக்கும்
விரித்தும், தொகுக்கும் வழித் தொகுத்தும், பெய்யும் வழிப்பெய்தும்
யற்றியிருக்குமாறு யாவர்க்கு மொப்ப முடிந்ததே. இந்நூலிற்கு இடப்பட்
ள மறுபெயரை யுற்று நோக்கியவுடனே யிந்நூலின் முழுக்கருத்தும் இஃ



தாமெனச் சுட்டுதலியலும். அஃதாவது 'கற்பின் வன்மை' யென்பதே. இக்
காலத்தில் மொழிபெயர்ப்போ ரெல்லாம் நம்நண்பர் தாத்தாசாரியரது செய
லைப் பின்பற்றி யொழுகின் அவர்கள் செய்வனவனைத்தும் நலப்பாடெய்து
மென்பது சொல்லாமலே விளங்கும். எம்மொழியி லெந்நலங் காணினும்
அதனை நம்மொழியில் நம்மவர்க்கேற்றவாறு அமைத்துக் கூறுவிடில் நம்கல்
விக்குப் பயன்றா னென்கொலோ? ஆங்கிலம் பயிலப்புகுந்த நம் இந்திய மா
ணாக்கர்கள் தம் சுதேச பாஷைகளைக் கவனியாது வாளாபோகின்றனரென்ற
வசை மொழி நம் நண்பர் தாத்தாசாரியர் போல்வாரைப்பற்றுங்கொலோ?
இனி இந்நூலைப்“பகர்ந்த சாதியுட் படாஅ தனவு, மொருவகைச் சாதியின்
மருவு மிலக்கணம், பிறிது சாதியி னுறுமிய லோடு, கலந்து வருநவும் வலந்த
வியல்வுகள், குறைந்துஞ் சிறிது கூறியும் வருநவும், பொதுப்பட நாடக
புகலுப” என்ற * நாடகவியலுடையார் கூற்றின்படி பொதுப்பட 'நாடகம்'
மென்று எனக்கூறலாமே யன்றி மற்று நாடகச்சாதிகள் இருபத்தெட்டனுள்
ஒன்றனுள்ளும் இஃதடங்காதென்பது தேற்றம். இஃது ஓரங்கத்தினையேயய
ன்றுளது; ஆடவரும் பெண்டிரும் அகமகிழ்ந்து படிக்கத்தக்கது; 64-பக்கங்
கள் கொண்டது; இராசதானிக் கலாசாலைச் சமஸ்கிருத போதகாசிரியராகிய
ஸ்ரீ அரங்காசாரியரவர்கள், எம் ஏ., தகவுரைத்தது; செவ்விய தமிழ்நடை
யிலெழுதப்பட்டுளது. இந்நூற்குப், பதிப்புக்குறைகள் பற்றிக் குறைகூறு
தல் நேரிதன்றாம். நம் நண்பர் இன்னும் இது போலும் நல்வழிகளிலுழை
த்து ஆங்கிலத்தி லுள்ள மேதக்ககருத்துக்களை அப்பாஷையறியாத் தமிழர்க
ளும் பெற்று மகிழுமாறு புரிவாராக.

## பாரதஸாரம் : இரண்டாம் பாகம்.

[இது சென்னைத் தாம்ஸன் கம்பெனியாருடைய மினெர்வா அச்சியந்
திர சாலையிற் பதிப்பித்தது. இதன் விலை அணா 9. தபாற்கூலி வேறு.]

அனிபெஸன்டு அம்மையாரது பாரதத்தின் மொழிபெயர்ப்பாய்
ம-௱-௱-ஸ்ரீ, கல்துளம் - துப்புசாமி முதலியார் பி. ஏ. இயற்றிய பாரத
ஸாரத்தின் முதற்பாகம் சின்னாண் முன்னர் வெளிவந்து தமிழ்ப்புலவர்க
ளாலும் ஆங்கிலமறிந்த தமிழ் மாந்தராலு மொருங்கே யாதரிக்கப்பெற்
றமை யாவருமறிந்ததே. அதனுள் ஆதிபருவமும் சபாபருவமும் சங்கிர
கிக்கப்பட்டன. இவ்விரண்டாம்பாகத்து பாண்டவர் வனவாசம் அஞ்
ஞாதவாசம் கிருஷ்ணன்தூது பீஷ்மர் சேனாதி பத்யம் என்னும் விஷய
ங்களை முறையே யடக்கிய ஆரண்ய பருவம் விராடபருவம் உத்தியோக
பருவம் பீஷ்ம பர்வம் என்னும் நான்கு பருவங்கள் சங்கிரகிக்கப்பட்
டன. விஷயங்கள் தெளிவாக விளக்கப்பட்டமையும் நீதிகள் ஆங்காங்கே
பொருத்தமுறக் காட்டப்பட்டமையும் நூலைக் காண்போர்க் கெல்லாம்
ஆனந்தத்தை விளைக்கும், எத்துணையரிய பெரிய விஷயங்கள் எத்துணைப்
பெரியார் வாய்த்தோன்றினும் அவை யெல்லார்க்கும் புலப்படுமாறு

---

* சென்னைக் கிறித்தவக்கலாசாலைத் தலைமைத் தமிழ்ப் பண்டிதர் பிர
மஸ்ரீ, வி. கோ. சூரியநாராயண சாஸ்திரிகளைக் குறித்து நிற்கின்றதென்
றுணர்க—ப-ர்.

தோன்றுக்கால் பயனிலவாயொழியும். அவ்வாறொழியும் கடினநடை நூல்களுட் படாத இந்நூல் இனிய செந்தமிழ் நடையில் கடின பதப்பிரயோகங்கள், வலிந்து பொருள்கொள்ளவேண்டிய அரிய இலக்கணச் சந்திகள் முதலிய வசனக் குறைபாடுகளின்றிக் கற்றோர்க்குக் களிப்பும் மற்றோர்க்குத் தெளிவுந் தருமாறு எழுதப்பட்டுளது. இப்பாகத்திற்கு முன் வெளிவந்த பாகத்தினைக்கண்ட ஆங்கிலப்பத்திரிகைகளும் தமிழ்ப்பத்திரிகைகளும் ஆங்கிலப் புலவர்களும் தமிழ்ப்பண்டிதர்களும் தந்த அபிப்பிராயங்களிற் சில இந்நூலிறுதியி லநுபந்தமாகச் சேர்க்கப்பட்டிருக்கின்றன. அவற்றை யுற்று நோக்குவோர் எமதபிப்பிராயம் வலியுறுமாறு காண்பர். லோகோபகாரமான இந்நூலின் எஞ்சிய மூன்றும் பாகத்தைக் காலதாமதமின்றி யிந்நூலாசிரியர் வெளிக்கொணர்வாரென ஆவலோடு எதிர்பார்க்கின்றோம்.

---

## EDITORIAL NOTES.

## பத்திராதிபர் குறிப்புக்கள்.

---

**நூலாசிரியர்கட்கு அறிக்கை :—** இக்காலத்திற் புதுமை வழியிலும் பழமை வழியிலும் நூலியற்றுவோருட் பலர் நம்முடைய ஞானபோதினியின் அபிப்பிராயப்பேற்றின் பொருட்டுத் தாம் இயற்றும் நூல்களை அவ்வப்போழ்தத்து நமக்கு அனுப்புவாராயினர். அவ்வாறே யாமும் இயன்றவளவு அநேகமாக நேரிய நெறி கோடாதவாறு நூலாராய்ச்சிகள்செய்து நம் பத்திரிகையில் வெளிப்படுத்திவருகின்றோம். எந்த நூலேயாயினும் அதனை மிக்க கவலையோடுஞ் சிரத்தையோடும் ஆராய்ந்து எந்தம் அபிப்பிராயங்களை வெளியிடுகின்றோம். தமிழின் அபிவிருத்தியையும் தமிழ் நூல்களின் அபிவிருத்தியையும், தமிழ் நூலாசிரியர்களின் அபிவிருத்தியையுங் கருதியே யாங்கள் எங்கள் பத்திரிகையை நடாத்திவருகின்றோமென்பது யாவருமுணர்க. இதுகாறும் நம்முடைய பத்திரிகைக்கு அபிப்பிராயப்பேற்றின் பொருட்டுத் தத்தம் நூல்களையனுப்பி வாராத மற்றைய கனவான்களும் அனுப்புமிடத்து, யாம் அவருடைய நூல்களைச் செவ்விபெற ஆய்ந்து விமரிசஞ் செய்வோம். இனி நூலாசிரியர்களாவார் தாம் பதிப்பிக்கத்தொடங்கியன இன்னின்ன நூல்கள் என்றும், அவை வெளிப்படுதற்கெனக் குறித்தகாலம் இவ்விவையென்றும் எமக்கு முன்னரே யெழுதியனுப்பினால், அவையிற்றையும் நம் பத்திரிகைவாயிலாக வெளியிட்டுரைப்பதில் யாதொரு தடையுமில்லை. இதனால் நூலாசிரியர்கட்கும், நூல்களை வாங்கிப் படிப்போர்கட்கும், பிறர்க்கும் பல்லாற்றானும் அநுகூலமுண்டென்பது ஒருதலை.

**பேரார் நாடு :—** இம்மகாராஷ்டிரதேசம் ஏறக்குறைய அறுபானாண்டுகட்கு முன்னர் ஐதராபாத் தரசராகிய நிஜாமவர்களின் இராஜ்யத்தினுட்பட்டிருந்தது. அப்போழ்தத்து ஆங்கிலர் தம்நாட்டின்கண் வைத்திருந்த உதவிப்படையின் செலவுக்கு வேண்டியபணம் நிஜாம், அப்போதைக்கப்போது கொடாமையாற் கடன் பெரிதாகி வட்டியும் வளராநின்றது. இஃதுணர்ந்த நிஜாம், அக்கடனுக்கும் வட்டிக்குமாகப் பேரார்நாட்டை ஆங்கிலருக்கு ஒற்றிவைத்தார். இப்போது பேரார்நாடு ஆங்கிலரது ஆளுகையி



லிருந்து வருகின்றது. இனி இப்பொழுதுள்ள நிஜாம் 'முன்னரேற்பட்ட கடனையும், வட்டியையும் முற்றும் இறுத்துவிடுகின்றேம்; நாட்டையெம் வயமொப்பித்துவிடுமின்' என்று ஆங்கிலரைக் கேட்கின்றனர். ஓராற்றால் உற்றுநோக்குமிடத்து அவர்களும் நிஜாமுக்கு மறுபடி பேரார்நாட்டைக் கொடுத்துவிடக் கடமைப்பட்டவர்களே; என்றாலும் இதன்கட் கருதப்படுவது பிறிதொன்றுளது. அஃதாவது ஆங்கிலருடைய அரசாட்சிக்குட்பட்டிருந்து சர்வசுதந்திரங்களையும் அநுபவித்து மகிழ்ந்து வாராநிற்கும் அப்பேரார்நாட்டினர் எவ்வாறு குறைபாடும் நிர்ப்பந்தமும் நிறைந்த நிஜாமினுடைய ஆளுகைக்குட்பட விரும்புவரென்பதே. மைசூரரசனது கொடுமை பொறுக்கமாட்டாது குடகுநாட்டினர் கேட்டுக்கொண்டதற் கிணங்கி அவர்களைத் தம் அரசாட்சியிற் குடிகளாய்க் கொண்டமைபோல, இப்போழ்தத்தும் நம் அரசாட்சியார் இப்பேரார்விஷயத்தில் தலையிட்டு அறுபானாட்டை யநுபவத்திற்கு மேற்பட்டமையானும், நாகரிக நிலைமுதிர்ந்த பேரார்நாட்டினர் அங்ஙனம் அது முதிராத நிஜாம் ஆட்சிக்குள்ளடங்கியிருக்க விரும்பாமையானும், பேரார்நாடு திரும்பி நிஜாமிடம் ஒப்பிக்கப்படமாட்டாதென்று கூறி விடுதலே நேரென்பது பலர்க்கு முடன்பாடான விஷயம். மற்று, பேரார்நாட்டை நிஜாமிடம் மீட்டும் விடுதல், பொன்னெழின் மானைப் புலியின் வாயினும் அருமையாய் வளர்த்த வொரு பெருங்கிளியைப் பூனையின் வாயினும் தானே பிடித்துத்திணிப்பதுபோலுமென் றெணப்படுமன்றோ?

**நமது சக்கிரவர்த்தியாரின் முடிசூட்டுக் கொண்டாட்டம் :—** இது வருஞ் ஜூன்௴ 26ஆந்தேதி நிகழப்போகின்றது. அக்கொண்டாட்டநாளில் அக்காட்சியைக்கண்டு பேரானந்த முறுதல் விரும்பிய பல்லோரும் நம் இந்தியாவினின்றும் பிரயாணமாகிப் புறப்பட்டுக் கப்பலேறிச் செல்லாநின்றனர். ஜெயபுரத்தரசரவர்கள் தம்முடைய ஆசாரத்தோடும் மாறுபடாதவாறு தமக்கென்றே யொருதனிக்கப்பல் அமர்த்திக்கொண்டு தமக்கு வேண்டிய சௌகரியங்களனைத்தையுஞ் செய்துகொண்டு போகின்றன ரென்பது கேட்டு மகிழாதார் யாரே! மற்று, நம்முடைய சென்னைமா நகரினின்றும் புறப்பட்டுச் சென்றன ரிருவர். அவர் தாம் கனம்பொருந்திய ஸ்ரீ இராஜா சர் சவலை இராமசுவாமி முதலியாரவர்களும், சென்னை யுயர்நீதிசாலை நியாயவக்தாக்களுளொருவராகிய ஸ்ரீ, பி. எம். சிவஞான முதலியாரவர்களுமே யாவர். இவர்களெல்லாம் கடற் பிரயாணத்தி லூறுபாடொன்று மின்றி இனிது சென்று நமது எட்வர்ட் சக்கிரவர்த்தியவர்களின் முடிசூட்டுக் கொண்டாட்டத்தில் தாமுங் கலந்து ஆனந்தமுற்று இன்புடன் றிரும்பி, மேற்கூறியவாறு சீமை செல்லவழியின்றி யீண்டையிருக்கும் எமபோலியர்க்கு நடந்தவிஷயங்களைச் சொல்லி மகிழ்விப்பாராக. 'எங்கள் மன்னவர் எட்வர்டு வள்ளலார், பொங்கி யுள்ளம் பொலன்முடி சூடுக, மங்கலப்புவி மாமகடன்னையுந், தங்கை கொண்டு தனியர சாள்கவே.' வாழி! வாழி!! சுபம்! சுபம்!!

**ஞானசாகரம் :—** இப்பத்திரிகையின் சென்றமதிச் சஞ்சிகையில் 'தொல்காப்பிய முழுமுதன்மை' யென்றதோர் விஷயம் பத்திராதிபர் நா. வேதாசலம் பிள்ளையவர்களால் எழுதப்பட்டுளது. அதன்கண்ணே திரிசிரபுரத்து யோசேப்புக் கலாசாலைத் தமிழ்ப்பண்டிதராகிய சவரிராயபிள்ளையவர்கள்

'தொல்காப்பியமும் இடையிடையே செருகு சூத்திரங்களுடையதாம் என்பதற்குப் பலநியாயங்களுள' என்று கூறிய கூற்றை யாசங்கித்துத் தடைவிடைகளான் ஆராய்ந்து, 'தொல்காப்பியம் இடையிடையே செருகு விதிகள் செறிந்ததன்று; நூலாசிரியர் காலந்தொட்டு முழுமுதல் நூலாய் முடிந்து ஒளிர்கின்றது' என்று நிறுவியிருக்குந் தன்மை மிகவும் பாராட்டற்பாலதே. இக்காலத்திற் சிலர் ஒருவகை யொழுங்குமின்றித் தமக்குத் தோன்றியவண்ணம் எதனை வேண்டுமேனும் ஐயுறுவர், எதில் வேண்டுமேனும் இடையிடையே செருகப்பெற்ற விடயங்களுள வென்பர். ஆராய்ச்சி முறை பிறழாது எவ்வரிய பொருளையும் நுணுகிச் சிக்கறத்துணிந்து நுழைந்து கண்டு தெளிந்து நியாய வாயிலாலொருதலை துணிந்து கூறும் தார்க்கிகராயினார் என்றும் மேற்கொண்ட விஷயங்களுட் பிழைபோவாரல்லரென்பதுணர்க.

குறுந்தொகை :—இது குறுந்தொகை என்பது சங்கமருவிய நூற்றொகைகளு ளொன்றாகிய எட்டுத் தொகையி லிரண்டாவது நூல். அவ்வெட்டனுள் அச்சிட்டு வெளிவந்தன கலித்தொகையும் புறநானூறுமே. அகநானூறு வெளிப்படுத்த முயன்ற ஸ்ரீ தாமோதரம் பிள்ளையவர்கள் அது முற்றுப்பெறு முன் காலஞ்சென்றமை தமிழுலகம் செய்தபாவமே. அதனை அவர்விட்டது முதற்றொடங்கித் தமிழபிமானிகள் யாவரேனு முன்னின்று முடிப்பார்களென்று நம்புகிறோம். குறுந்தொகை ம-௱-௱-ஸ்ரீ திரு. த. கனகசுந்தரம் பிள்ளையவர்கள் பி. ஏ. ஆராய்ச்சிசெய்து முடித்து அச்சிடத் தொடங்கிவிட்டனர் என்றும், கூடிய சீக்கிரத்தில் நூல் வெளியாகுமென்றுங் கேட்டு மிக்க களிப்படைகின்றோம்.

இந்து நேசன் :—இப்பெயர்கொண்டதோர் தமிழ்ப்பத்திரிகை இம்மதி மூன்றாந் தேதியன்று வெளிப்பட்டது. இது வாரத்திற்கு இருமுறை பிரசுரஞ் செய்யப்படும். அஃதாவது சனிக்கிழமையும் புதன்கிழமையும் இது வெளிப்படும். கல்வி, உத்தியோகவிடயம், அரசுமுறை, இதிகாசபுராணசாரங்கள், கைத்தொழில், பயிர்த்தொழில், ஜநாசாரம், தமிழ்மொழியின் அபிவிருத்திக்கடுத்த இலக்கிய விலக்கணநுட்பங்கள், நீதியும் அறிவும் போதிக்கத்தக்க கதைகள் முதலிய பல அருமையும் உபயோகமும் வாய்ந்த விஷயங்கள் அடிக்கடி இதன்கண் எழுதப்படுவனவாம். இஃது ஆங்கிலத்திற் பதிப்பிக்கப்படும் 'ஹிந்து' பத்திரிகைக்கு அதிபராகிய ஸ்ரீ. மு. வீரராகவாசாரியாராற் பதிப்பிக்கப்படுகின்றது. இதன் வருடச் சந்தா ரூ. 5-ஆம். இதுகாறும் வெளிப்பட்ட இந்துநேசன் பத்திரிகைகளை யாம் பார்த்தவளவில் அவையனைத்தும் மிகச்சிறந்து காணப்படுகின்றன. இவ்வாறு மேற்கொண்ட கோள் தவறாது நடக்குமாயின் இது நந்தமிழ்நாட்டின்கண் சிறந்து விளங்கும் தமிழ்ப் பத்திரிகைகளுட்டலை நிற்பது மாகலாம். நாட்டின் உயர்ச்சியையுஞ் சிறப்பையும் விளக்குவது அந்நாட்டினுலவுறாஉம் பத்திரிகைகளே. அவ்வந்நாட்டுச் சுதேச பாஷைகளுக்கெல்லாம் ஊன்றுகோல்களாயிருப்பனவும் அவ்வச்சுதேச பாஷைகளிற் பிரசுரமாகும் பத்திரிகைகளே. பத்திரிகைகள் விருத்தியாகவாகப் பாஷைகளும் விருத்தியாகுமென்பது எவரும் மறுக்கலாகாத விஷயம். ஆகவே யிம்மதி வெளிப்பட்ட நமது 'இந்துநேசனு'ம் சர்வஜன வக்தாவாய்ச் சர்வஜனானுகூலனாய் நின்று நீடூழி விளங்குவதாக.

---

OFFICE REGISTR
23 . 1902
MADRAS

# ஞானபோதினி.

ஒரு மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

தாமின் புறுவ துலகின் புறக்கண்டு
காமுறுவர் கற்றறிந் தார்—திருக்குறள்.

சம்புடம் V. } 1902ஸு ஜூன்மீ } புத்தகம் 11.

## விஷயங்கள்.

| | | பக்கம். |
|---|---|---|
| சுதேசபாஷைநீக்கம்.—பத்திராதிபர் | ... | 401 |
| சரித்திர விநோதாமிர்தம்.—சி. சாமிநாத பிள்ளையவர்கள் | ... | 403 |
| விக்கிரமோர்வசீயம்.—பு. மா. ஸ்ரீநிவாசா சாரியரவர்கள் | ... | 411 |
| காசிகண்டம்.—சிதம்பரம் பிள்ளையவர்கள் | ... | 419 |
| பெண்கல்வி—சு. ஆதிமூலம் பிள்ளையவர்கள் | ... | 422 |
| திருக்கோவையாருண்மை விளக்கம்.—ஸ்ரீ காசிவாசி - ஸ்ரீலஸ்ரீ செந்திநாதையரவர்கள் | ... | 429 |
| பரிந்துரை.—வி.கோ. சூரியநாராயண சாஸ்திரியாரவர்கள்,பி.ஏ. | | 436 |
| பத்திராதிபர் குறிப்புக்கள்.— | ... | 438 |

பத்திராதிபர் :— { எம். எஸ். பூர்ணலிங்கம் பிள்ளை, பி. ஏ.
வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியார், பி. ஏ.

சென்னை :
தாம்ஸன் கம்பெனியார்
பதிப்பிப்பது.

1902.

வருஷசந்தா ரூ. 2—8—0. சஞ்சிகை ரூ. 0—4—0.

# ஞானபோதினி

சம்புடம் V. 1902ஹு ஜூன்மீ புத்தகம் 11.


161290

## ABOLITION OF VERNACULARS.

## சுதேச பாஷை நீக்கம்.

சென்ற சின்னாட்களாகச் சுதேச பாஷைகளாகிய தமிழ் தெலுங்கு மலையாளங் கன்னட மாதியவற்றை நஞ் சென்னைச் சர்வகலாசாலைப் பரீட்சைகளி னின்றும் நீக்கிவிடல்வேண்டு மென்றதோர் பேச்சு வெள்ளிடையி னுலவாநின்றது. அஃதெங்ஙனம் நிகழ்வதாயிற்று ?

நமது கனம் பொருந்திய இராஜப்பிரதிநிதி யவர்களது ஆணையின் வண்ணம் சர்வகலாசாலை விசாரணை சபையோர் நஞ்சென்னை யிராஜதானியிற் கற்பிக்கப்படும் கல்வியினேற்றத் தாழ்வுகளைப்பற்றி யாராய்வான் புக்கனர். புக்குழி அவரவர் தத்தம் அபிப்பிராயங்களை யெடுத்துரைத்தனர். அவ்வாறு அபிப்பிராய முரைத்தாருள் நம்முடைய சென்னை வித்தியாவிசாரணைத் தலைவரு மொருவர்.

இவர் "சுதேச பாஷைகள் கௌரவஞ்சான்றன வல்லவாதலானும், இவையிற்றைக் கீர்வாண கிரேக்க லத்தீன் பாஷைகளோ டொருங் கெண்ணுதல் வசையிழைத்தல் போலுதலானும், இவற்றின்கண் தூயநூற்றொகுதிகளும் லௌகிக விடய ஞானத்திற்கேற்ற நூற்றொகுதிகளு மின்மையானும், இவை காலத்திற் கேற்ப அமைந்து கொள்ள மாட்டாமையானும், பிராணதாரணப் பிரயத்தனத்தில் அழிந்து படற்பாலவாதலானும், பிறவாற்றானும் இவற்றைச் சர்வகலாசாலைப் பரீட்சைகட்குக் கற்றற் குரியனவா யமைத்தலின்றி அறவே ஒழித்துவிடல் வேண்டும்" என அந்தோ ! வாய்கூசாது தம் உட்கிடை உரைத்தார். என்னே இவர் தங்கருத்து ! எல்லாப் பாஷை

Rm21,M97
M97.8-6

கட்கும் பெருந்துணைவராய் நின்று உதவவேண்டிய தலைவரே பேதுற்றுப் பிறிதுபடவுரைத்தா லென்செய்வது !

சுதேச பாஷைகளே இக்காலத்து ஈண்டைமக்கள் வழங்கிப் பேசும் பாஷைகளாய் விளங்குதலின் இவை காலத்திற் கேற்றகோலம் புனைந்துகொள்ள மாட்டாதன வென்றல் வெற்றுரையாமாதலானும், இவைகளே புதிய கருத்துக்களுள் ஏற்பனகொண்டு நீர் பிரித்தொதுக்கித் தீம்பாலுண்ணும் அன்னப்புட்கள் போலுதலானும், திருக்குறளாதிய தூயநூல்கள் பல முன்னரே யுண்மையானும், மேற்புல விஞ்ஞானிகளது கொள்கைகட்கியைய லௌகிக விடயஞான நூல்கள் பல சுதேசபாஷைகளில் நாளாவட்டத்தில் வெளிப்படுகின்றமையானும், ஏட்டு வழக்கொடு பேச்சுவழக்கு முடையனவா யொளிர்வனவற்றைப் பேச்சுவழக்கற் றேட்டுவழக்காய் மட்டில் நிற்பனவற்றோ டொருங்குவைத் தெண்ணுதல் வசையிழைத்தலா மென்பது 'யானுமறியேன், அவளும் பொய் சொல்லா' என்ற கம்பர்கூற்றிற் கிலக்கியமாய் எம்முரையையே வலியுறுப்பதாய் அறைபோதலானும், மக்களைச் சீர்திருத்துவதற்குற்ற பெருங் கருவிகளாயிருப்பன அவரிடம் பயிலும் சுதேசபாஷைகளாமே யன்றி மற்று வழக்காறற் றொழிந்த ஏனையன வல்லவாமாதலானும், கௌரவஞ்சான்றனவற்றை அத்தகைய வல்லவென்றுரைத்தல் பெற்றதாயை மலடி யென்றுரைத்தலோ டொக்குமாதலானும், இதுகாறும் பிராணதாரணப் பிரயத்தனத்தில் வடமொழி யாதியபோ லழிந்துபடாது தக்கனதங்கன் முறைப்படி இவையனைத்தும் மிக்க பயன்பாடுடையனவாய் நிற்றலானும் பிறவாற்றானும் வித்தியா விசாரணைத்தலைவ ருரைத்தது போலி யென்றொதுக்கற்பாலதாமாறு தெற்றென விளங்கும்.

சுதேச பாஷைகளின் வன்மையும் ஊற்றமும் பழையனகழிந்து புதியன புகுந்து இயங்குமேம்பாடும், நாகரிக விருத்திக்கேற்ற இயல்வளமும் செப்பமுடைமையுங் கண்டு பல விடங்களினும் அவை முன்னுக்கு வருதலைப் பெரிதும் விரும்பி வாய்ப்பறை யறைந்து முழங்கிய இராஜப் பிரதிநிதி யவர்கள் நமது சென்னை வித்தியாவிசாரணைத் தலைவரொருவருடைய உரைகேட்டுச் சுதேச பாஷைகளின் நீக்கத்திற் கிடங்கொடா ரென்பது திண்ணம்.

பத்திராதிபர்.

---



# NECTAR OF HISTORIC CURIOSITIES.

# சரித்திர விநோதாமிர்தம்.

(221-ஆம் பக்கத்தொடர்ச்சி.)

## நைடதகவிகளின் சில ஆட்சேப ஸமாதானங்கள்.

*** [நைடதம்பாடிய **அதிவீரராம பாண்டியர்** தம்நூலில் அவையடக்க முரைத்தாரில்லை யென்றும், அதிக தற்புகழ்ச்சி விருப்பினரென்றும், அவர் மீது பொறாமைகொண்ட சில புன்கவிகளும், நியாயமற்ற நியாயங்கொண்டு அவரது நீதித்தானமேறி வழக்கிழந்த சில மூடசிகாமணிகளும், அவரைப்பற்றிப்பலவாறு தப்பபிப்பிராயமேனையோர் பெரிதுங்கொள்ளத் தூற்றிவிட்டனர். இது **நீரம்பவழகியார்** திருச்செவிக்கு மெட்டியதா லவருஞ்சற்றே யருவருத்த தன்மையே கொண்டுற்றிருந்தனர். அக்கால் இவ்வழகியார் நம் பாண்டியரிருப்புத் தானத்தைத் தற்செயலாய்ச் சமீபிக்க நேரிட்டும், அவரையணுக மனச்சம்மதமுறாது நணுகிய அயற்கிராம மொன்றிலிருந்து கொண்டு, தமக்குந் தம்முடைய பரிவாரங்கட்கும் வேண்டிய செலவுகட்காகத் தாமந்நாள் காறும் பலவரசர் பிரபுக்களிடத்துப் பொருளாதிய பெற்றுவரும் வழக்கையநுசரித்துத் தங்கற்றுச் சொல்லிகளிற் சிறந்தானும் அமுதபாடணனிடம், நறுக்கிய நறுக்குத்துண்டொன்றில் ஒரு கவியை வரைந்தீந்து, அரசனிடத்துப் பொருள் பெற்று வருகவென வனுப்பவே,-சமத்தான வித்துவான்கள் புடைசூழ வீற்றிருந்த பாண்டிய ரிடஞ்சென்று அவனு மக்கவியைச் செலுத்தினன். அங்ஙனஞ் செலுத்தவே, பாண்டியர் தஞ்சமுகம் **நீரம்பவழகியார்** வருதற் கருவருப்புற்றார் என்பதனைக் குறிப்பினுணர்ந்து, வந்தகவியைத் தாமே நேரிற்றங் கைம்மிசைப் பெற்று வாசித்திடு முளமின்றி, அருகிலிருந்தா னொருவனை வாசிக்குகவென ஏவ, அவனும் வாசித்தனன்.

வாசிப்பா ரோசை வேறுபாடா தியவற்றாற் பொருளொன்றும், அக்கர வரிசைக் கிரமத்தாற் பொருள் வேறுமாதலை வல்லார்வாய்க் கேட்டுணர்கின்றா மன்றோ ? உட்பொருட் குறிப்பாய்,

"மொழிப்படுத் திசைப்பினுந் தெரிந்துவே றிசைப்பினு
மெழுத்திய றிரியா வென்மனார் புலவர்"

எனத் **திரண தூமாக்கினிப்** பெயரிய பேராசிரியரும், "செய்யுளிடத்துச் சொற்பொருளன்றித் தொடர்பொருள் வேறுபட்டிசைத்தல்..." உளவென உச்சிமேற் புலவர்கொள் **நச்சினார்க்கினியரும்,**

"எழுத்திய றிரியாப் பொருடிரி புணர்மொழி
யிசைத்திரி பாற்றெளி வெய்து மென்ப,"

" பொருளதி கார முன்ன முத்தி
வெளிப்படை குறிப்பே மெய்ப்பா டன்மொழி,
யொட்டாகு பெயரே யுவமை யிறைச்சி
யுபசார மாசை யுண்மை யக் காதியேது வாக வியம்புவர் சொற்பொருள்"

என வேனையாசிரியர்களு, மிசைத்தனரன்றே ? ஆதலின், " குன்றேறுமா" என்பது குன்றேறு - ஆமா - எனவும், குன்றேறு - மா - எனவும், குன்றேறு - ஆ - மா - எனவும், குன்று - ஏறு - ஆ - மா - எனவும், வினாவாகவும், வேறாகவும், " ஐயமிட்டார் கெட்டார்" என்பது, ஐயமிட்டு - ஆர் கெட்டார் - எனவும், ஐயமிட்டார் - கெட்டார் - எனவும், ஐயமிட்டார் கெட்டாரோ ? "எனவும், * * * இன்னும் பலவும் பலபேதமாகச் சொல்லுவானது இசையறுத்துங் கூறும் வேறுபாடாதியவற்றாற் பொருட்பேதம் நிச்சயிக்கலாவதுங் காண்க. அங்ஙனே, வாசித்தான் பொருட்பேத மறியாப் புன்மகனாதலின், ஒலி வேறுபாட்டாற் பொருள் பேதித்தபடி வாசித்ததனால், அழகியார் தஞ்சபைக்கு இன்ன காரணத்தால் எழுந்தருளாது இட்டியுள்ளாரென முன்னரே சித்தம்வேறுபட்டுற்ற பாண்டியர், அக்கவிக்குச் சன்மானமே கொடுக்க நினைந்து, அதற்கு ஆயிரம் பொன்னென மதித்து, வாசித்தானேற்பட்ட பிழைக்கு அதிலொரு பொன்குறைத்து கூாகூய்கூ - பொன் மாத்திரமே கற்றுச் சொல்லிபாலளிக்க வர, உலக நடைவல்லானு நுண்ணறிவினனுமாகிய அவ்வமுத பாடணன், குறிப்பானிகழ்ந்த யாவுங்கிரகித்துத், தான் வேறு இடத்திற்குஞ் செல்வதாக வந்தமையான் ' அங்குச்சென்று திரும்புங்காற் பெற்றுச் செல்வேன்' எனத்தந்திரமாகக் கூறிப்போந்து நடந்தவனைத் தினையுந் தெற்றென வழகியாரிடத்தே தொகுப்ப, அக்கலாசாகரமெழுந்து, பல்லக்கி லாரோகணித்துக், கவரிகாலிருமருங்கு மசைப்ப, ஆலவட்ட மியங்கச், சயத்தொனி தழங்கப், பேரிகை யடிபட்டிடி யெனக் குமுறத், தமவிருதுகள் பலவு முற்செலச், சின்னமோதையா னவற்றினு முற்செலச் சென்று, அரண்மனை வாயிலினிழிந்து, அவ்விடத்தே யுபசார மரியாதையாக எதிர்கொண்டுவாராப் புவிச்சக்கரவர்த்தியை இக்கவிச்சக்கர வர்த்தியார் பங்கப்படுத்தி யடக்குவான், தமவாரவார வாடம்பரத்தோடு திடீரென வவர்சபையுட்புக்கார். அப்பொழுதத்தே இவரது வேடப் பொலிவும் பெருமையாதிய மேம்பாடுகளும் அச்சபைக்கணுள்ளாரைத் தம்மறிவின்றியே யெழுந்து வந்தனம் புரியப்புரிய, அதுகண்ட பாண்டியர், " கல்வியின் பெருமையே பெருமை" எனவியந்து, அவையார் போலன்றித் தம்மறிவுடனேயே நின்று, **நிரம்பவழகியார்** மிகக்கறுத்த தடித்த திருமேனியுடைய இயற்கைக் கெதிரிய வச்சிலவழகினராதலை அன்றே யத்ததியே கண்டுணர்ந்து, " இவர் அண்டங்காக்கைக்குப் பிறந்தவர் ; இவரோ நிரம்பவழகியார் ?" எனத்தம்மை மிகவடுத்துள சிலருமரிதிற் றெரிய வறியாதபடி இளர்ந்தனர். ஒட்ட வியற்கைப் போக்கானும், வதனநிகழ்ந்த குறிப்பானும்,



" அடுத்தது காட்டும் பளிங்குபோ னெஞ்சங்
கடுத்தது காட்டுமுகம்."—எனவும்

" அகம்பொதிந்த தீமை மனமுரைக்கு முன்ன
முகம்போல முன்னுரைப்ப தில்"-எனவுங் கூறினபடியே, அதனை,

" கூறாமை நோக்கிக் குறிப்பறிவா னெஞ்ஞான்று
மாறாநீர் வையக் கணி"

என்னு மிவ்விலக்கியத்துக்கு இலக்கானின்ற **வழகியார்** உணர்ந்தனர். இப்பாற் பாண்டியரும்,-கற்றுவல்ல நிபுணரும், சுருதிமிருதி தெளிந்து அவற்றைப் பலவிதப்பட இன்றியமையாதன வெடுத்துக்கொண்டு இனிய தண்டமிழ்ச் செய்யுளாச் செய்துள்ளா ராகையானும்,......தத்தம் வரிசையா னின்புறாஉ மேல்" என்றும் ஆன்றோர் வாக்கின் அரும்பொருட் இலக்காகி, ஆழ்ந்து அடங்கி யொடுங்கிச் சமைகுடிகொண்ட வேந்தராகையானும்,

" இருக்கை யெழலு மெதிர்செலவு மேனை
விடுப்ப வொழிதலோ டின்ன—குடிப்பிறந்தார்
குன்றா வொழுக்கமாக் கொண்டார் கயவரோ
டொன்றா வுணரற்பாற் றன்று"

என்ற நாலடியாற் கலங்கித் தெளிந்து, அதிவிரைவிற் சுவாமிகட்குத் தக்க வந்தனாதிகள் தஞ்சபையோடுஞ் செய்து, சிறந்ததோ ராசனத்து மெழுந்தருளவுஞ்செய்து சேவித்து, ஒழுக்க நிகழ்ந்த வண்ணமே தாமு மேனையாரோடுமிருந்து, அடிகளோடும் வித்துவ சாம்பிரதாய மார்க்கமே அளவளாவி யுரையாடா நிற்கையில், சுவாமிகள் பாண்டியரை நோக்கி "யாமனுப்பிய கவி சமுகமேறியதோ ?" என, வேந்தர் " அக்கரச்சமுக வக்கவிவான நாடிக்கை கண்டது கண்டேன்" என்றாராக, இதற்கிடையில் உலகநடைவல்லானைய, சுவாமிகளின் கற்றுச்சொல்லியும் முன்னர்த்தா னுரைத்தாங்குச்செல்வுழிச் சென்றெய்தியானெப்ப வித்துவ விராச சமுகங்களிரண்டையுந் தரிசித்து, அவண் தான் தற்கால் வருமுன்னிகழ்ந்தன அறிந்துவந்தானாகையின், தேசிகரை வணங்கிச் சுவாமிகாள், "சக்கிரி தந்தபொன்னொன் றறிளாயிரம்" என வேந்தரின் சாந்த சமயமறிந்து சாதுரியமாக வசனிக்க, அழகியாரும் " ஆகையி னதனைக்கொண்டேம்" என்றருளினர். இங்ஙனங் 'கைக்கொண்டேம்' என்றது கைக்கொண்டிலேம் எனத்தொனி யருத்தந்தந்து நாராசம்போற்பாய்ந்து பாண்டியரை யுணர்வுறுத்தியதால், அவர் திடுக்கிட்டுத் தொனிபேதத்தா னிகழுல்லங்கனத்தையும் அதுபற்றித் தம்மியற்கைச் சத்திரியத்தன்மையினெழுந்த சாத்திரத்தையும் ஒருவாறுட்கொண்டடக்கி, மேலுந்தொனிக்கூறுபாட்டு வேற்றுப்பொருள் இருவரிடத்து முடனிகழ்ந்தமை போலுணர்வோட்டி நிதானித்துஞ் சுவாமிகளனுப்பிய பாசுரத்தைத் தஞ்செங் கோற்கரமேற் கொண்டேற்றுக்கூர்ந்தமதியோடாய்ந்து, வாசித்தானாற் பெறப்பட்ட பொருட்கு மறுதலைகண் டுள்ளே வெள்கி யாநங்

தித்தனர். ஆயினுமென்னை ! "ஓடியபுனல் பாய்ந்தே தீரும்" "ஓங்கியகை யறைந்தே தீரும்" "ஆடலிலறமூஞ்ச லாடியே வீழும்." "ஓடலிற் கவந்த மோடியே சாயும்," என்பதுபோல் மானுஷீய வியற்கையாக, அடக்கிய உல்லங் கன மேலீட்டுச் சாத்திரம் வெளிப்பட்டுத் தோன்றாது உள்ளே சற்றுப்புகைந் தமையான்,—

"நற்றிணை நல்ல குறுந்தொகை யைங்குறுநூ
றொத்த பதிற்றுப்பத் தோங்கு பரிபாடல்
கற்றறிந்தோர் பேசுங் கலியோ டகம்புறமென்
றித்திறத்த வெட்டுத் தொகை."

"முருகு பொருநாறு பாணிரண்டு முல்லை
பெருகு வளமதுரைக் காஞ்சி—மருவினிய
கோலநெடு நல்வாடை கூர்குறிஞ்சி பட்டினப்
பாலை படுகடாம் பத்து."

"நாலடி நான்மணி நானாற்ப தைந்திணைமுப்
பால்கடுகங் கோவை பழமொழி மாமூல
மின்னிலைய காஞ்சியோ டேலாதி யென்பவே
கைந்நிலைய வாங்கீழ்க் கணக்கு."

என்பவற்றோடு இருவகைப் பஞ்சகாவியாதிகளினுந் தொல்காப்பியாதி களினும் பலவித ஆசங்கைகளை யேற்படுத்திக்கொண்டு, சாந்தமாகப் பேசுவார் போன்று வாததோரணையிலே நின்று வினாய், இறைகளை யாட்சேபித்துக்கொண்டேவர, நிரப்பவழகியாரும் அங்ஙனே யானையோ டெதிர்த்த சிம்மமே போல், சிம்மத்தோ டெதிர்த்த யாளியேபோல், யாளியோடெதிர்த்த யானை யாளியேபோல், யானையோடெதிர்த்த சர்ப்பமேபோல், சர்ப்பத்தோடெதிர்த்த சார்த்தூலமேபோல் மேற்பட மேற்படத் தாமுமேற்பட நின்று, பற்பல விதமாக வித்தாரப்பட்ட இலக்கண விலக்கிய மேற்கோள்களைக் கீழே காட்டியனவும், காட்டப்படாது அக்காலத்தே இறவாதுற்றனவும் ஆகிய நூல்களினின்று மெடுத்துக் காட்டிப் பாண்டியரைப் பங்கப்படுத்திய தன்றியே, அவர் பாடிய நைடதத்தும் ஆங்காங்குச் செய்யுட்களை யெடுத்துக்கொண்டு அது அந்த விரோதம், இது சந்தவிரோதம், உது தொந்த விரோதம், அவை அன்ன விரோதம் எனவுங்கூறி, இவற்றுள்ளும் பொருளிலக்கணத்திற்குப் பொருத்த மில்லனவே மிகுதிப்பட வெடுத்தோதி அந்தோ! அந்தோ !!

"ஒத்த தறிவா னுயிர்வாழ்வான் மற்றையான்
செத்தாருள் வைக்கப் படும்"

என்ற தமிழ்வேத மோதாததான் உற்ற உலக நடை விருத்தம் இவ்விவை ஆகுமன்றோ வெனவுங் காட்டிச் சென்றனராம். அவற்றுட் சிலக்கா மாறு :—



"வாய்ந்த மின்னை மடந்தைய ராக்கிவிண்
போந்தி டாமலன் றோமலர்ப் புங்கவன்
சாந்த ணிந்த தமனியக் குன்றென
வேந்து வெம்முலைப் பார மியற்றினான்."

என்ற நைடத கவியை யெடுத்துக்கொண்டு, பாண்டியரே, மின்னலை மடந்தையராக்கியெனச், "சாயற்கு மின்னமுந்தந் தான்மயிலாம்..." "...வதியு மின்னார் தமைய் பேச..." "அம்பொற்றொடி யணிமின்னார்..." "...குயின் மோகினி தேன்பாகுகின்னை - தொடிமின் காமனபிடேகம்..."-என்றவற்றுட் பெரியர் கூறியாங்குக் கூறியதும், அது வானத்தை நாடுமியற்கைய தென்று காட்டியதும் வித்துவ தோரணைக் கமைந்த விசேட நுண்ணறிவின்பாற் படு மென்றாலும், அம்மின்னாகிய மகளிர் அவ்வாறு முகிலைநாடா திருத்தற் பொருட்டுப் பொற்குன்றாகு தனமான பாரத்தை மலர் மிசையோ னமைத்தானென்றது எவ்வாறு பொருந்தும்? சிறுமியராகிய வன்றே யமைத்தானெனில், அப்பேதை பெதும்பைப் பருவத்து நகிலம், பருத்துக் கிரியுவமையினில்லரது என்னுமதைப் "பேதைக்கு வெயிலினு ளனற்போன்றும், வித்தினுள் விருக்கம் போன்றுங் குயமென்ப தொன்றுண்டெனத் தெரிந்துந் தெரியா திருப்பதாம்" என்றும், "பெதும்பைக்கு மார்பினேயுற்ற தென்றபடியாச் சிற்றிலந்தைக் கனியே போல்வதாம்" என்றுங் கூறுவரன்றே? மங்கைக்குத் "தடத்தாமரை முகிலொத் திருப்பதுவே தனமாம்" என மேலே சொல்லுமாறுங் காண்க. வேறும்,

"தளம்பள மவ்வள வேபேதை யப்பெதும் பைத்தனந்தா
தளம்பள மவ்வள வேமங்கை மாமடந் தைத்தனமா
தளம்பள மவ்வள வேதெரி வைத்தனந் தானுறுசீ
தளம்பள மவ்வள வேதனம் பேரிளந் தையலுக்கே"

என்றுங் கூறியுள்ளாரே. ஆக இவ்வுவமானங்களையே பொறுத்திருப்பதானும், உலாப் பிரபந்தாதிகளுக்கும் மாறாகக்கூறிய மலையுவமை பிழைபடுகின்றதே யெனவும், 'மடந்தை' என்றதனான் அப்பருவப் பெண்ணெனின், மலர்ப்புங்கவன் அப்பருவப் பெண்ணாகவே பிரதமத்திற் படைத்திலன்; ஆகையான் அதுவும் பிழைபாடாமெனவும், அதனைச் சாமானியமாய்ப் பெண்ணெனவே கொள் எனின், அதுவுஞ் சிருட்டிப்பின்பா லேறிக் கீழே விளக்கினபடி குழவிப் பருவமாமே யன்றி வேறு என்று ஆவது முண்டோ? என்றுங் கூறி நிற்பவே,-

அப்போது பாண்டியர் இவ்வனைத்து மென்னை? "இருவகைப் பொருளையுந் தேட விரும்புவோர், நித்திரை - சோர்வு, பயம்-கோவம் - ஆலசியம் - இழுக்கம்-என்னு மறுவகைக் குற்றமு மிலராயின் அவர்க்கவை சாத்தியமாம்."-என்றதினின்றும் வழுவினான் பாசுரம்படித்த பண்பானன்றே இவையாவு

நிகழ்வவாயின; அன்றியே நாந்தாமும் " ஆயிரம் நல்ல குணத்தையும் ஒரு லோபகுணம் அழிக்கும்" என்பதையு முள்ளினே மன்று.

" சுற்றுங் கருங்குளவி சூழ்ந்தரைத்தா முரியப்பேய்
எற்றுஞ் சுடுகா டிடிகரையின்—புற்றில்
வளர்ந்த மடற்பனைக்குள் வைத்ததே னொக்கும்
தளர்ந்தோர்க்கொன் றீயார் தனம்."

" தண்டாம லீவது தாளாண்மை தண்டி
அடுத்தக்கா லீவது வண்மை—அடுத்தடுத்துப்
பின்சென்றா லீவது காற்கூலி பின்சென்றும்
ஈயானைச் சம்போ லறு."

" கருங்குளவி சூழ்ந்தா நீச்சங் கனிபோல்
வருந்தினர்க்கொன் றீயாதான் வாழ்க்கை—யரும்பகலே
இச்சித் திருந்தபொருள் தாயத்தார் கொள்வாரே
எற்றோமற் றெற்றோமற் றெற்று.'"

" நம்ப னடியார்க்கு நல்காத் திரவியங்கள்
பம்புக்காம் பேய்க்காம் பரத்தையர்க்காம் - வம்புக்காம்
கொள்ளைக்காங் கள்ளுக்காங் கோவுக்காஞ் சாவுக்காங்
கள்ளார்க்காந் தீக்காகுங் காண்."

என்ற உலகமாதாவின் வாக்கைக்கவனியாது,

" சுரதந் தனிலிளைத்த தோகை சுகிர்த
விரதந் தனிலிளைத்த மேனி- -நிரதங்
கொடுத்திளைத்த தாதா கொடுஞ்சமரிற் பட்ட
வடுத்துளைத்த கல்லபிரா மம்

என்றதா லவர் தெளிவித்த அழகினையடையாது அந்தக் கேடாகி,

"...என்றும்—இன்சொல் எண்பதத்தை ஆதிபெரும்..."
என்ற **ஆவூர் மூலங்கிழார்** புத்தியிலடங்காது.

" போந்த வுதாரனுக்குப் பொன்துரும்பு சூரனுக்குச்
சேர்ந்த மரணஞ் சிறுதுரும்பு - வாய்ந்த
அறிவோர்க்கு நாரி யருந்துரும்பு..."

என்றபடி நாளதுகாறும் உதாரர்களென்று பெயர் பெற்று வந்த சந்திர குலத்தரசர் தம்பேருக்கு மோரிழிவை யேற்படுத்தி, ஈரரைப் பொன்னுச்குயாம் பால்மாறியதும், அரசர்க் கியற்கையாஞ் செருக்கிற் கிடந்ததுமன்றோ இங்ஙனம் பிரமாதமாக்கியது ? எனச் சிந்தித்தவண்ணமே தமது சமத்தான வித்துவான்களாகிய கவிக் குஞ்சரங்களைக் கடைக்கணித்தார். அப்போது அவருள் நயவாக்கி யென்பானொருவன் சுவாமிகளை நோக்கி,- ஓ குருசுவாமிகாள்,



" துறவிக்கு வேந்தன் றுரும்பு"-என்றும்,
" பெரியாரைப் பேணா தொழுகிற் பெரியாரால்
பேரா விடும்பை தரும்"-என்றும்,

ஆன்றோர் கூறிய தறிந்தனமன்றோ ? அஃது அற்றாக,

" ஒருமையு ளாமைபோ லைந்தடக்க லாற்றி
னெழுமையு மேமாப் புடைத்து"—என்றும்,

" அடக்க மமரரு ளுய்க்கு மடங்காமை
யாரிரு ளுய்த்து விடும்"—என்றும்,

" கோவம் பாவஞ் சண்டாளம்"—என்றும்,

" யாவரே யெனினுங் கோவத் திகழ்ந்திடப் பொறுத்தோர் வைதோர்
மேவிய தருமம் யாவுங் கவர்ந்துதம் மீதிற் பாவ
மோவுற வவனுக் கீவா ரொருவன்செய் பாவந் தன்னை
நாவினு லுரைக்க லாகா கொடியன நவில லாகா"

என்றுங் கூறியவர் ஆன்றோரே யன்றோ? அன்றியும், " பிதாவாகிய **சக்திமுனிவரை விசுவாமித்திரரா** லேவப்பட்ட இராக்கதன் பட்சித்து விட்டபோது, அதர்வணவேத சம்பந்த வவிசார வேள்வியொன்றியற்றி, அவ்வழியே இராக்கதர்களை யெல்லாஞ் சாம்பர் செய்துகொண்டு கோவத்தோடுற்ற **பராசரரை,** அவர் பிதாமகனார் அச்செய்கையை விட்டுவிடச் சொன்னதோடு, " கோவம் ஞானிகளல்லாருக்கே யுரியது" என்றதும், " கோவம்பொறாமை, அகங்காரம் பிடிவாதமாகிய இவைகளற்று நடுவு நிலைமை சாந்தமுதலிய குணமுடையவர்களே சிட்டராவார்" என்றதும், **போதாயனா**தியர் கூற்றேயாகும்; இப்பால்,

" அரசன் முடியாவதை முடிப்பேன் எனல் ஆகாது" எனலும், " வரிசையாதிய அரசு செய்திலனென வெறுப்பும், அவற்றைச் செய்யின் பூரித்து மகிழ்ந்து அவசமாகலும் ஆகா" எனலும்,

" அரசன்வரு நன்மை தீமையாமிரண்டும், சமானமென்றுன்னிச் சஞ்சலமற்றோரே யாவுமுணர்ந்தோர்" எனலும்,

" எதனையு நாவடக்கமின்றி அரசு முன்னிலையிற் பதறி நிகழ்த்தலாகாது;" எனலும், * * * * ஆகிய இவ்வனைத்தும், மாவிருடி **தௌமியர்** உபதேசமென்று மறிந்தனமே, எனக்கூறிக் குறிப்புணர்த்திப்பின்னுஞ்சில மொழிவான் யத்தனித்தனன்.

அக்காலை, பாண்டியரும் ஞானநூலறிந்த நல்லரசாகையின், தங்கரணப் போக்கையோர்ந்து, " மனமான செயல் நினைக்கும் புத்தி விசாரிக்கு மகங்காரங் கொண்டெழுப்புஞ் சித்தமொன்றுவிக்கும்..." என்ற நிலையினை, அவற்றிற்கு மேவாகின் றோர்ந்தாய்ந்து கொண்டு, அடிகளுஞ் சித்தவிகாரமின்றி

யாவுந் தெரிந்தே வசனிப்பதுந் தெளிந்தவராய், அவரைக் கொண்டே யாவற்றிற்குஞ் சமாதான மொழிவிப்பானுளத்திற் கொண்டு, பின்னுமவர் சொற்றவாங்கே வெறும் ஆட்சேபங் கூறல் வேண்டுமென விரும்பி, நயவாக்கியைக் குறிப்பிப்பான் வாளாவிருக்கப் பணித்து, அழகியாரை மகிழ்ந்து நோக்கியபடி, 'சுவாமிகாள்!' என்றனர். உடனே அவரும் அவ்வறிவை ஆடியிற் கண்டாங்கு தெளிந்து, ஏனையோர்க்கு அவமதித்துக் கூறல் போன்றே தோன்ற, ஒய் பாண்டியரே,

"கருவி மாமழை கலைமக ளுருவென விளங்கி
யிருவி சும்பிடைப் படர்ந்துசென் றினமணி கொழிக்கும்
பரவை வெண்டிரை மேய்ந்துயர் பனிவரை யுயிர்த்த
வுருவ வோடரித் தடங்கணு ளுருங்கொடு மீண்ட"
என்றநுங் கலிநிலைத்துறையா முந்து கவியில்,

"வகையுளி சேர்தல் வனப்பின்றாய் நிற்றல்
தொகையார் பொருள்பலவாத் தோன்றல்—தகையில்
பொருளின்மை யீறு திரிதலே போல்வ
தருமுதற்சீர்ச் சொற்காகுந் தப்பு"

என்ற பாட்டிற் கூறிய "தொகையார் பொருள்பலவாய்த் தோன்றல்" என்னுங் குற்றமேற வைத்ததென்னை? "கருவி தொகுதி" என்று **திரணதூமாக்கினிமுனிவர்** கூறிய சூத்திரத்திற்கு வடநூற் கடலையு நிலைகண்டுணர்ந்த **சேனாவரையர்** 'கருவிவானம்' எனக்காட்டெடுத்தோதி, அக்கருவி மின்னுமுழக்கு முதலாயவற்றது தொகுதியென்றார். நீரே நேரிற் கைக்கொண்டு அபகரித்துப் போற்றிய **சீவகசிந்தாமணி** நாமகளிலம்பகத்துற்ற,—

"**கருவி மாமழை** கனபெயல் பொழிந்தென வழிநா
ளருவி போற்றொடர்ந் தறாதன வரும்பிணி யழலுட்
கருவிற் காய்த்திய கட்டளைப் படிமையிற் பிழையா
துருவின் மிக்கதோ ருடம்பது பெறுதலு மரிதே"

எனக்கூறிய அதுவும், முறையே நாமகளிலம்பகத்தும், காந்தருவதத்தையாரிலம்பகத்தும் "கவ்வையங் **கருவி** சூழ்ந்து கண்படுக்கு மாடமும்" "**கருவி** வானங்கான்ற புயலின்" எனக்கூறிய அவையும், **மணிமேகலையின்** உலகவறவிபுக்க காதையிலுற்ற,

"வெயில்சுட வெம்பிய வேய்கரி கானத்துக்
**கருவி மாமழை** தோன்றிய தென்ன"

எனக்கூறிய அதுவும், அக்கருத்தினையே கரதலாமலகமாய் விளக்குகின்றதான், மிகப் பொருத்தமுறக் கண்டபடியே, மின்னுமுழக்கு மிடியும் வில்லாதியு முற்றவும்: "மாமழை" என்றதான் அவையுறக் கருமை வாய்ந்தவுமாகிய முகிலெனப் பொருட்சிறப்புத் தொடர்ந்து செல்லுகின்றமையான்



அங்ஙனமே கொண்டு பொருத்தலாம் வகைவையாது, உலகமலைவாமாறு கொளக்கூறலாப் பின்னர் அவற்றைக் "கலைமகளுருவென" என்றதும், "பரவை வெண்டிரை மேய்ந்து" என்றதும், "பனிவரையுயிர்த்த வுருவவோடரித்தடங்கணு ளுருக்கொடு மீண்ட" என்றதும் என்னை? அவை யெங்ஙனம் பார்க்கினும் பொருத்தமிலவே! எனவும்; நல்லது பெரியோர் கொண்டவுயர்ந்தவப் பொருளைக் கொள்ளாது,—உலகத்துக்குத் **துணைக்காரணம்,** ஆகியவெனக் கோடலுமா மொன்றுளதேனும், அஃதும் அம்மட்டினேநில்லாது "கரு-விமா-மழை" என்றபடியிற் கருவினால் விம்முதல் இல்லாமழையெனவுங் கொள்ளக் கிடத்தலின், அமங்கலமாய் மலட்டு முகிலெனவும் போதருமன்றே? ஆகவே, சூற்கொள்ளாதன வாயவவை பின்னர், அதன் மேற்கவியிற் கூறியாங்குப் "பொன்னங் குன்றின்மேலவன் கொடைபோன் மெனப் பொழிந்த" என்றது எங்ஙனே அமைதலாம்? அன்றியும், "கருவி மாமழை" என்னுமஃது,-கரு=கரிய, வி=நல்ல, மா=பெரிய, மழை=மேகம், எனவும்,—கரு=பெரிய, விமா=இலக்குமீகரமற்ற...எனவுங் குறித்திட்டபடி முதற்கட் பல்பொருண் மேற்றாயிற்றே! அச்சோ! குறித்த தொல்காப்பியச் சூத்திரக்கிடையிற் படுத்த விடமின்றி நின்றதூஉம், அதனான் மலட்டு மேக மென்றாயதூஉ மெல்லாம் நினைக்குந்தோறும் நகை விளைப்பதோடு அம்மலட்டு முகில் சூற்கொண்டது எனில்,

"மலடி மைந்தனுந் தாணுவிற் புருடனும் வான்மலர் முடிசூடி
யிலகு கந்தர்ப்ப நகரிலே சுத்திகை யிரதம் விலைபேசிக்
கலகமாய் முயற்கொம்பினாற் குத்தியே தளைத்திருவரு மாண்டார்
அலகை யாயினர்..."—என்பது போலவும், (இன்னும் வரும்.)

சி. சாமிநாதபிள்ளை.

---

# VIKRAMORVASIYAM.

## விக்கிரமோர்வசீயம்.

(374-ஆம் பக்கத்தொடர்ச்சி.)

---

**சித்திரலேகை**:—இல்லை யெனக்கு வல்லமை வாக்கால் துதிக்கைக்கு. இதனையோ சிந்திக்கின்றேன், 'நான் புரூரவனாக ஆகக்கடவேன்' என்று.

**உருப்பசி**:—சகி! மன்மதனன்றோ உன்னை ஏவுகின்றான். என்னை விரைவாயடைவிப்பி, அக்காதலரினிருப்பிடத்தை.

**சித்திரலேகை**:—(பார்த்து) அடி! நிலாப்பெருக்கினால், பிரதிபிம்பங் கொண்டுள்ள கைலாச சிகரத்துக்குநிகரான உனது காதலரின் இம்மாளிகையை யடைந்தவர்களாகின்றோம்.

**உருப்பசி**:—அப்படியானால் மேன்மையினாலறிவாய், 'அந்த என் மனக்கள்வர்

எங்கே என்னைதான் செய்துகொண் டிருக்கிறார், என்று.

**சித்திரலேகை:**—(நியாணிர்துச் சிரித்துத்தன்னுள்.) இருக்கட்டும்; விளையாடுவேன் காண் இவளோடு. (விளக்கம்) இவர் மனோரத்தா லடையப்பட்டுள்ள காதலியின் சேர்க்கைச்சுகத்தை யனுபவிக்க அனுபவித்தற்குத்தக்க இடத்திலே தோழனோ டிருக்கின்றார்.

**உருப்பசி:**—அந்தச்சனமன்றோ பேறுபெற்றது, எது இப்படி யாகின்றதோ.

(உருப்பசி, துயரத்தை அபிநயிக்கின்றாள்.)

**சித்திரலேகை:**—பேதாய்! காதலியின் சேர்க்கைச்சிந்தைக்கு உன்னைத் தவிர வேறு யாவள்?

**உருப்பசி:**—ஐயமுறுகின்றது வல்லமையற்ற எனது மனம்.

**சித்திரலேகை:**—(பார்த்து) இந்த அரசமுனிவர், தோழன் மாத்திரத் துணைவ ராய் மணியரமியத்தினர்; வா, இவரைக்கிட்டுவோம்.

(இருவரும் இறங்குகின்றனர்.)

**அரசன்:**—தோழ! இரவோடுகூட வளர்கின்றது மதனபாதை.

**உருப்பசி:**—வெளிப்படாப்பொருளுள்ள இவ்வசனத்தினால் நடுக்கமுற்றேன். மறைந்தவர்களாய்க் கேட்போம் இவரது பேச்சை, எதனால் நமக்கு ஐயநீக்கம் உண்டாகின்றதோ.

**சித்திரலேகை:**—எது நினக்கு இனிக்கின்றதோ.

**விதூடகன்:**—அமுதத்தினை யிடைக்கொண்ட சந்திர கிரணங்கள் அனுப விக்கப்படட்டும்.

**அரசன்:**—இப்படிப்பட்டவைகளினாற் போக்க முடியாது இக்காமச்சுரம் டார்.

புதியமல ரணையெனது பூங்கணையோன் புரிநோயைப் போக்க வற்றோ
மதிகதிரு முடன்முழுது மன்னியசெஞ் சாந்துமணிப் புவியு மன்ன
மதிப்புறுபொன் னுலகிலுள மாதவளோ வென்றேயை மாற்ற வல்லள்

**உருப்பசி:**—அகோ! யாவள் தான் மற்றையவள்?

**அரசன்:**—கொதிப்பகல வெளிதாக்கு மறையிடத்துக் கொண்டவவள் கதை தானே கொல். (51)

**உருப்பசி:**—நெஞ்சமே! இப்பொழுது என்னைவிட்டுஇவரிடத்துப் பற்றிய உன்னாற் பயன் அடையப்பட்டது.

**விதூடகன்:**—ஓய்! எப்பொழுது நான் திராட்சையின் ரஸத்தை அடைகின் றிலனோ, அவற்றை வேண்டினவனாய்ச் சிந்தித்துக்கொண்டு ஆற்றிக்கொ ள்கின்றனனன்றோ.

**அரசன்:**—உனக்கோ கிடைக்கும்.



**விதூடகன்:**—நீயும் அவளைச் சீக்கிரம் அடைகுவாய்.

**அரசன்:**—தோழ! இவ்வாறு நினைக்கின்றேன்.

**சித்திரலேகை:**—கேள், களிப்பற்றவளே!

**விதூடகன்:**—எப்படியோ?

**அரசன்:**—

இந்தப் புயமிரதத் தின்னசைவி னாலவடன்
சந்தத்தோ ளோடு தகைந்ததால்—இந்தமெய்யில்
ஒன்றுபயன் பெற்ற தொழிந்த வுறுப்புகளோ
ஒன்று தறைப் பொறையா மோர். (52)

**உருப்பசி:**—(சீக்கிரமருகிற்சென்று)

**சித்திரலேகை:**—என் காலக்கழிவு செய்யப் படுகின்றது? தோழி! மகா ராசர், எதிரிலிருந்தாலு மென்னிடத்தில் உதாசீனர்போல்

**சித்திரலேகை:**—மிக்க விரைவினோய்! நீக்கிக்கொள்ளாத திரக்கரிணியை யுடையவளா யிரு.

(திரைக்குள்,) இதோ! இதோ! தலைவி.

(எல்லோரும் கேட்கின்றனர், தோழியோடு உருப்பசி துயரப்படுகிறாள்.)

**விதூடகன்:**—அவித! அவித! ஓ! நண்ப! வந்துவிட்டனள் தேவி. நீ பேசா விரதத்தினனா யிரு.

**அரசன்:**—நீயும் மறைக்கப்பட்ட வாகாரத்தினனாயிரு.

**உருப்பசி:**—தோழி! செய்யத்தக்கதென்?

**சித்திரலேகை:**—சாலும் விரைவினால்; மறைக்கப்பட்டவர்களாயே யிருக் கின்றோம். அரச முனிவரின் தேவியிவள் உபவாசத்தால் வாடிய இவளும் நியமத்துடன் கூடியவள்போலக் காணப்படுகின்றனள்; நில்லாளிவள் வெகு நாழிகை.

(பிறகு புகுகின்றனள் உபஹாரத்தைப் பயனாகக்கொண்ட பொருள்களைத்தரித்த கைங்கரிய பரிசனர்களுடன் தேவி.)

**தோழத்தை:**—இதோ! இதோ! தலைவி!

**தேவி:**—(சந்திரனைக்கண்டு) அடி! நிபுணிகை! இன்று உரோகிணியின் சேர்க் கையால் மிகவும் விளங்குகின்றனன் கடவுட்சந்திரன்.

**தோழத்தை:**—அடீஇ! அரசியுடன் கூடிய அரசருக்கு மிக்க வினிமை உண் டாகின்றது.

(எல்லோரும் உலவுகின்றனர்.)

**விதூடகன்:**—ஓய்! அறிகின்றிலேன், சுவத்திவாசனஞ்செய்யப்பட்டதா, இல்லை யா வென்று. உன்னைவிட்டு நோன்பு வினைவியாசத்தால் விட்ட கோபந்

தின ளென்றெண்ணுகிறேன். இப்போழ் தென்கண்ணுக்கு இனிய தோற் றத்தினள் தேவி.

**அரசன்.**—(புன்சிரிப்போடு) இருவகையாகவும் ஆகின்றது ; ஆயினும், அங்கிவள்

வெள்ளை யாடையினண் மங்க லத்தளவ
தாக மேயவணி கலத்தினள்
அள்ளு தூயமுளை யறுகு தன்னினடை
யாள மேய்ந்தவள கத்தினள்
கொள்ளு நல்விரத வியாசங் கொண்டுவிடப்
பட்ட கோணலுறு செய்கைவாய்ந்
துள்ள தாமுடலி னென்றன் மீதுதெளி
வுடையள் போலத்தோற் றிடுமரோ. (53)

**தேவி:**—(கிட்டி.) வெற்றி பெறுக, பெரியோர்மகர்.

**பரிசனம்:**—வெற்றி பெறுக, தலைவர்.

**விதூடகன்:**—மங்கள முனக்கு வளர்ச்சி பெருக தேவி !

**அரசன்:**—தேவிக்கு நல்லவரவா ?

(கைகளைப் பிடித்துக்கொண்டு எழுந்திருக்கின்றான்.)

**உருப்பசி:**—தோழி ! இவள், தேவி என்னுஞ் சொல்லால் உபசரிக்கப்படுகின் றாளென்பது தக்கதே ! அச்சொற்குக் குறைந்தவளல்லள்.

**சித்திரலேகை:**—நன்று பொருமையின்றிச் சொல்லப்பட்ட மொழி.

**தேவி:**—பெரியோர்மகரை முன்னிட்டுக்கொண்டு ஒரு சிறந்தநோன்பு என் னால் நோற்கத்தக்கது ; ஆகையால் முகூர்த்தவரை பிரதிபந்தம் பொறுக் கத்தக்கது

**அரசன்:**— அருளன்றோ ; இப்பிரதிபந்தம்.

**விதூடகன்:**—இப்படிப்பட்ட எங்களது சுவத்திவாசன நிமித்தம் உபரோதமே வெகுவாக உண்டாகட்டும்.

**அரசன்:**—தேவியின் இந்நோன்பு என்ன பெயருடையது ?

(தேவி, நிபுணிகையைப் பார்க்கிறாள்.)

**தொழுத்தை:**—தலைவரே ! ‘காதலரருளுண்டாக்குவது’ என்னும் பெயரு டையது.

**அரசன்**—(தேவியைப் பார்த்து) இப்படியாயின்,



இந்த நோன்பினுன் மங்க ளத்தினு
’யேது வின்றுதா யரையி னுளநேர்
சுந்த ரத்துடல் வாட்டு கின்றனை
துன்னு காதலார் தாச னுகிய
எந்த மானிட னின்ன தாகிய
வின்ன ருட்டனை வேண்டு கின்றனன்
அந்த மநுனிட னடிமை யோனைநீ
யருள்க வென்றுவேண் டுவது மென்னையே. (54)

**உருப்பசி:**—இவளிடத்தில் மதிப்பு.

**சித்திரலேகை :**—பேதாய் ! மற்றையோரிடத்துற்ற வாசையினராய் மிகவுஞ் சமமான தொழிலின ராகின்றனர்.

**தேவி:**—(புன்சிரிப்போடு) இந்த நோன்பை மேற்கொண்டதற்கு இந்த மகிமை; எதனுல், அடி ! இவ்வளவு பெரியோர்மகர் பேசுவிக்கப்பட்டனர்.

**விதூடகன்:**—நீ மௌனங் கொள்வாயாக ; நினக்குத் தக்கதன்று நல்லொழுக் கத்திற்கு இடையூறு புரிதல்.

**தேவி:**—சிறு பெண்காள் ! பூஜாத்திரவியங்களைக் கொண்டுவாருங்கள், அரமி யத்தை யடைந்துள்ள சந்திரகிரணங்களை அர்ச்சித்தற்கு.

**பரிசனம்:**—இது, சாந்துமாலை முதலிய பூஜா திரவியம்.

**தேவி:**—(காட்டியபத்தால் பூசித்து?) அடி ! தொழுத்தை ! இந்த பேஹாரத்தைப் பய னுக்கொண்ட மோதகத்தை ஆன்றோன் பிரமசாரியையும் கஞ்சுகியையு மடைவிப்பி.

**பரிசனம்:**—எது தேவி ஆஞ்ஞாபிக்கின்றனளோ என்று சொன்னவண்ணஞ் செய்கிறாள்.

**விதூடகன்**—(மோதக பாத்திரத்தை பெடுத்துக்கொண்டு) மங்கள முனக்கு ; எண்ணிற ந்த பலத்தினதாகுக உனது நோன்பு.

**தேவி:**—பெரியோர் மகரே ! இங்கே.

**அரசன்:**—இதோ வந்தேன்.

**தேவி:**—(கைகூப்பிக்கொண்டு சேவித்து) இந்த யான் தேவதா சந்திரன் உரோகிணி ஆகிய இவர்களை மிதுனமாகிய சாக்ஷியாக்கிப் பெரியோர் மகரை அருள் செய வேண்டுகின்றேன், பெரியோர் மகர் எந்த மடந்தையைப் பிரார்த் திக்கின்றாரோ, எவள் பெரியோர் மகரோடு சேர்க்கைக் காதலியோ, அவளிடத்தும் என்னிடத்தும் ஒத்த ஆசாபந்தத்தோடு இருக்கவேண்டும்,

**உருப்பசி**:—தோழி! அகோ அறிகின்றிலேன் எப்பொருளினதிவண் மொழி யென்று ; என்மனமோ மிக நம்பிக்கையற்றது.

**சித்திரலேகை**:—சிறந்த மேன்மையுடையளான பதிவிரதையினால் அநுமதி செய்யப் பெற்றவளாகின்றாய் ; நினக்குக் காதலரின்சேர்க்கை இடையூறற்றதாகும்.

**விதூடகன்**:—(திரும்பி மெல்ல) தோழ! மீன் கைதவறி யோடினபொழுது துயர முற்ற வலைஞன் 'எனக்கு அறம் உண்டாகும்' என்று.

(விளக்கம்) ஆன்றோய் அளிக்கப்பட்டானா உன்னாலங்கவன்?

**தேவி**:—அறிவிலோய்! நானோ எனது விரதமென்ற வியாஜயத்தினாற் பெரியோர் மகரைச் சுகசரீரத்தினராகச் செய்ய விரும்புகின்றேன் ; இவ்வளவு சிந்திக்கப்பட்டது, "பிரியரா அல்லரா?" என்று.

**அரசன்**:—

அன்னியனுக் கென்னை யடியேனை விற்றற்கும்
இன்னவா வாங்கற்கு மேற்றவணீ—என்னையே
எங்ஙன மஞ்சுகின்றா யெயச்சங் கொண்டவளே
அங்ஙன நானல்லே னால். (55)

**தேவி**:—நீர் ஆகின்றீரோ? ஆகின்றிலீரோ ; 'காதலரரு ளுண்டாக்குவது' என்னும் பெயரையுடைய விரதம், எண்ணியபடி என்னாற் செய்து முடிக்கப்பட்டது ; வாருங்கள் பாலிகைகளே! போவோம்.

**அரசன்**:—(ஆடையினது நுனியைப் பிடித்துக்கொண்டு) விட்டு இப்போழ்து நீங்கின், அருளப்பட்டவ னாகின்றிலேன்.

**தேவி**:—பெரியோர் மகரே! என்னால் முன் தாண்டப்பட்டில தன்றோ நியமம்.

[என்று பரிவாரத்துடன் அகன்றாள்.]

**உருப்பசி**:—நாயகிபாற் காதலினர் அரசமுனிவர் ; ஆயினும் மனத்தைத் திருப்பிக்கொள்ள வலியற்றவளா யிருக்கின்றேன்.

**சித்திரலேகை**:—நீ நிராசையால் என் திரும்புகின்றாய்?

**அரசன்**:—(ஆசனத்தை யடைந்து) தோழ! செய்மையன்மையினளா? தேவி.

**விதூடகன்**:—எதைச் சொல்ல விரும்பினவ னாகின்றாய், அதை நம்பிக்கையுடன் சொல்; வைத்தியனால் சிகிச்சைசெய்ய அசாத்தியனென்று விடப்பட்ட நோயாளிபோல், அங்கவளால் நீ இச்சைப்படி விடப்பட்டாய்.

**அரசன்**:—உருப்பசியினாலா?

**உருப்பசி**:—இப்பொழுது பேறுபெற்றவ ளாகின்றேன்.

**விதூடகன்**:—இவள் யாவள்தான்?



**அரசன்**:—

மலைறந்தவளாய்க் காதலியென் காதின் கண்ணே
மன்னுசிலம் பொலியினையே வீழ்த்து வாள்கொல்
நறைமலர்த்தா மரைக்கையாற் பின்னர் மெல்ல
நண்ணிநய னங்கடமைப் புதைப்பாள் கொல்லோ
தறையிடையிவ் வரமியத்தி லிறங்கி வந்து
தானச்ச முடைமையினாற் றளர்வுற் றோளாய்க்
குறைவிறிறத் தோழியினால் வலிய மெல்லக்
கொண்டுவிடப் படுவாள்கொ லென்ச மீபம். (56)

**உருப்பசி**:—தோழி! இவரது இம்மனோரதத்தை முடிப்பேன்.

(என்று பின்புறத்தில் வந்து காணாத வுருவத்தினளாய் அரசன் கண்களை மூடுகின்றாள் ; சித்திரலேகை விதூடகற்குக் குறிப்பிக்கின்றாள்.)

**அரசன்**:—(ஸ்பரிசத்தை அபிநயித்து) அந்த இனியகவானுடைய இவள், நாராயணன் றொடையிலுதித்தவள்.

**விதூடகன்**:—நீ எப்படி யறிகின்றாய்?

**அரசன்**:—இங்கு அறியத்தகாதது என்ன?

வேளினாற் றன்புறுமென் மேனியினை மற்றொருத்தி
கோளில் கரந்தீண்டிக் கொள்வித் திடாளின்பம்
ஆம்பன் மதிகதிரா லன்றி வெயில்கதிராற்
கூம்பவிழ்ந்து நில்லாது கூர்ந்து. (57)

(உருப்பசிகைகளைப் பிடித்துக்கொண்டு எழுந்திருக்கின்றான்.)

**உருப்பசி**:—வெற்றிபெறுக மகாராசர்.

**சித்திரலேகை**:—சுகமா இனிய நண்பர்க்கு?

**அரசன்**:—இப்போ தடையப்பட்டது.

**உருப்பசி**:—தேவியாற் கொடுக்கப்பட்டார் மகாராசர் ; ஆகையால் இவர் சரீரத்தை யடைந்தேன் ; என்னை முற்செல்பவளாக நினையேல் காண்.

**விதூடகன்**:—உங்களுக்கு இங்கேயே எவ்வாறு சூரியன் அத்தமித்தனன்?

**அரசன்**:—(உருப்பசியைப்பார்த்து,)

நான்கொடுக்கப் பட்டேனென் னாயகியா லென்றிம்மெய்ம்
மேன்மன் வினைபுரிய மேவுதியே லென்மனத்தை
ஏவரது கட்டளையா லெய்திமுனங் கள்வியாய்
நீவந் தபகரித்தாய் நேர்ந்து. (58)

**சித்திரலேகை**:—தோழ! விடையற்றவளிவள் ; இப்போழ்து என் விண்ணப்பம் கேட்கப்படட்டும்.

**அரசன்** :—கருத்தாயிருக்கின்றேன்.

**சித்திரலேகை** :—இளவேனிலின் பின்னராகிய முதுவேனிலிற் கடவுட்சூரியன் என்றால் உபாசிக்கத்தக்கவன்; ஆதலால் என் தோழியாகிய இவள், எங்ஙனம் துறக்கத்தை ஆசையுறுளோ, அங்ஙனம் தோழராற் செய்யத் தக்கது.

**விதூடகன்**:—ஆன்றோய்! துறக்கத்தில் என்னதான் நினைக்கத்தக்கது? அருந்துதலில்லை, பருகுதலில்லை; இமையாதனவாய கண்களினால் மீன் அநுகரிக்கப் படுகின்றது.

**அரசன்** :—

சொல்லற் கரிய சுகத்தினதே யாந்துறக்கம்
வல்லனெவ னந்நிலை மறப்பிப்பான் மாதரார்
பல்லோர்கட் கும்பொதுவில் பான்மைப் புரூரவனே
நல்லிவட்குத் தாசனா நன்கு. (59)

**சித்திரலேகை** :—அருளப்பட்டவ ளாகின்றேன்; தோழி! உருப்பசி! அச்சமற்றவளாய் என்னை விட்டிடு.

**உருப்பசி**:—(சித்திரலேகையைக் கட்டிக்கொண்டு) தோழி! என்னை மறவாதிருப்பாயாக.

**சித்திரலேகை** :—நண்பரோடு சேர்ந்துள்ள நீயே என்றால் இவ்வாறு சொல்லத் தக்கவள்.

[என்று அரசனைப்பணிந்து அகன்றனள்.]

**விதூடகன்** :—நீ மனோரத நிறைவினால் செய்வாதினம் வளர்கின்றனை,

**அரசன்** :—எனது இது நிறைவு; காண்.

எங்ஙனநா னின்றிவள்கா லேவல் வினைசெய்து
பொங்குபெரும் பேறுமிகப் பூண்டவனா கின்றனனே
காவலர்க டம்முடியின் கண்மணிகள் பட்டுநிறம்
மேவியகாற் சிங்கவணை மீதொற்றை வெண்குடைக்கீழ்
மண்காக்கு நல்லிறைமை மன்னியங்ங னம்பேறு
நண்ணினவ னாகேனே நான். (60)

**உருப்பசி** :—எனக்கு வாக்குவல்லமையில்லை, அதனினும் இனியது கூறுதற்கு.

**அரசன்** :—(உருப்பசியைக் கையாற் பிடித்துக்கொண்டு) அகோ! இச்சைப்பொருட்பேறு என்பது, மாற்றுப் பொருளைப்பெறுதல்.

சந்திரனக் கிரணங்க டாமேயென் னுடலுக்குத் தருமா லின்பம்
அந்தமத னன்றரித்த வம்புகளே யென்னெஞ்சுக் கனுகூ லங்கள்
சுந்தரிசம் ரம்பத்தாற் பகைபோல வெவ்வெவைதாந் தோன்றி நின்ற
இந்தவெனக் குன்புணர்ப்பா லவ்வவையின் பளிப்பனபோ லேய்ந்த வன்றே.



**உருப்பசி** :—பெரியோர் மகர்க்கு நீண்ட காலம் பிரிவை யுண்டாக்கினவளாய்ப் பிழைசெய்தவளா யிருக்கின்றேன்.

**அரசன்** :—வேண்டாம் வேண்டா மிவ்வாறு.

எதுதான் றுயரின்வந் தெய்திற்றவ் வின்ப
மதுவன்றோ வின்னினிமைத் தாதபத்தால் வெப்பெய்ந்தோர்க்
கார நிழலின்ப மாம். (62)

**விதூடகன்** :—ஓய்! அனுபவிக்கப்பட்டனவன்றோ, மாலைக்காலத்தினியனவாய சந்திர கிரணங்கள்; சமயமன்றோ உனக்கு வாசமாளிகையுட் புகுதற்கு.

**அரசன்**:—அப்படியானால் நின்றோழிக்கு வழிகாட்டுவாய்.

**விதூடகன்** :—இதோ, இதோ சான்றோய்! இதோ, இதோ சான்றோய்!

**அரசன்** :—சுந்தரி! இது எனது வேண்டுகோள்.

**உருப்பசி** :—எது தான்?

**அரசன்**:—

அடையா மனோரதத்த னாமெனக்கு முன்னம்
நடைபெற்ற தோரிரவு நல்லூழி யேபோல
நின்புணர்ப்பி லவ்வாறே நீட்டிக்கி னன்னுதலாய்
பின்பெற்றே னாகுவன்யான் பேறு. (63)

[என்று எல்லோரும் அகன்றனர்.]

**மூன்றாமங்கம் முற்றிற்று.**

பு. மா. ஸ்ரீநிவாசாசாரியர்.

## காசிகண்டம்.

முருகார் குமரன் முன்னவ னடிகளைப்
பெருகார் வத்தொடு பேணிப் பணிகுவாம்.

**ஆ**தியில் அருந்தவ மகிமை வாய்ந்த பராசர மகர்ஷியின் புதல்வராகிய வியாதமுனிவர் பதினெண்புராணங்களையும் வடமொழியில் இயற்றினார். அத்தகைய புராணங்களுள் மிகச்சிறந்ததும், புராண ரத்தினமெனச் சிறப்புப்பெயரெய்தியதும், எல்லாப்புராணங்களிலும்கூறியுள்ள விடயங்களைச் சங்கிரகமாக விளக்கவல்லதுமாகிய **ஸ்ரீ மகாஸ்காந்த புராணமானது** ஸனற்குமாரஸம்ஹிதை, சூதஸம்ஹிதை, சங்கர சம்ஹிதை, விஷ்ணு சம்ஹிதை, பிரம சம்ஹிதை, சூரிய சம்ஹிதை என ஆறு பெரும்பிரிவுகளை யுடையது. அவற்றுட் சங்கர சம்ஹிதையிற் குமாரோற்பவகண்டம், **காசிகண்டம்**, காளிகாகண்டம் முதலிய பல உட்பிரிவுகளுண்டு.

**இக்காசிகண்டம்** மூர்த்தி, ஸ்தலம், தீர்த்தம் என்னு மூவகை விசேடமு மமையப்பெற்று விளங்கும் காசிநகரத்தின் சிறப்பைக் கூறுவதாயும், வைதிக லௌகிக மார்க்கங்களைப் பலவகையிலும் நன்கு விளக்குவதாயுமுள்ளது. பின்னர் இவ்வடமொழிக் காசிகண்டத்தையே முதனூலாகக்கொண்டு சுமார் 400 வருடங்களுக்கு முன் பாண்டிய தேயத்தில் தென்காசிக்கண்ணரசுபுரிந்து வந்த சந்திர வம்சத்துச் சிற்றரசராகிய **அதிவீரராம பாண்டிய** ரென்னும் புலவர்திலகர் செவிவழி யமிர்தஞ்சொரிந்தாலொப்ப இனிய தமிழ்ப்பாக்களினாற் **பூர்வகாண்டம், உத்தரகாண்டம்** என்னும் இரண்டு காண்டங்களடங்கியதாகக் காசிகண்டமென்னும் நூலை யியற்றினார். அதன் முதற் காண்டத்தில் 41 அத்தியாயங்களும் 1209 திருவிருத்தங்களும், இரண்டாங்காண்டத்தில் 60 அத்தியாயங்களும் 1315 திருவிருத்தங்களும் உள.

நூல்வரலாறு

பால்புரை வெண்ணீற் றொளிகொள் நெற்றியர்
பகடுடைப்பரமனை யெண்ணிய வுளத்தர்
சிறப்புடைக் கண்டிகை தரித்த மார்பினர்
சிற்றத்தை நூறிய வாற்றருந் தவத்தினர்

இத்தகைய சிறப்புற்றோங்கிய சூதமாமுனிவர் நைமிசாரணியத்தை நோக்கிச் சென்றனர். ஆண்டெய்துழி, முக்குறும் பெறிந்து, முழுநீறு பூசி, மாதவக் கிழமை பூண்டுள்ள தபோதனர் யாவரும் ஒருங்கே 'வருக' வென உபசார வார்த்தைக ளியம்பிக்கொண்டே யெழுந்து உரோமஞ் சிலிர்ப்பக் கண்களில் ஆனந்த பாஷ்பம் பொங்க ஆர்வத்தொடு பணிந்து, 'யாங்கள் முன்னாளியற்றிய அருந்தவப்பயனோ' நீரிவணெய்திய' தென்னா வாதரத்தோடு அருக்கிய முதலா முறைப்படிதந்து, புலியாசன மொன்றிட்டு அதில் வீற்றிருக்கச் செய்தனர்.

சிறிதுபொழுது கழிந்ததும், அவ்வனத்தின்க ணுள்ள தாபதர்களெல்லாம் மகிழ்வுடன் அவரை விளித்து, "ஐய ! நீர் முன்னம் பதினெண் புராணங்களையும் நன்கியம்பினீர் ; இப்போழ்து, நீர் காந்தத்துண் மொழிந்த காசிகண்டத்தை இன்னுமொருமுறை எங்கள் செவிகுளிர உரைத்திடல்வேண்டு" மென்றிரப்ப, அவரவர்கள் வேண்டுகோளுக்கிரங்கிக் கருணைக்கடலாகிய தமது குருவான வியாசமுனிவரை வணக்கஞ்செய்து சொல்லலுற்றனர்.

காந்தத்தில் ஆறு சம்ஹிதைக ளுளவென்பதை,

"முற்ற வோதிய புராணமூ வாறினுட் காந்தம்
பெற்ற தாறுசங் கிதையவை யாறுந்தம் பெயராற்
சொற்றபேர்சனற் குமாரமா முனிவரன் சூதன்
கற்றை வார்சடைச் சங்கரன் மாலயன் கதிரோன்"

என்னும் திருவிளையாடற்புராணப் பாட்டாலுணர்க.



## பூர்வகாண்டம்.

### நாரதர் விந்தத்தைக் கண்ணுற்றது.

சிவஞானச் செல்வம் வாய்க்கப்பெற்ற மகதியென்னும் வீணை தாங்கிய தெய்வமுனியாகிய நாரதபகவான் தெய்வலோகத்தினின்றிழிந்து, தெண்ணிய நீரையுடைய சப்தநதிகளி லொன்றாகிய நருமதை யாற்றின்கண் மூழ்கிக் காலைக்கடன் கழித்து, பூவுலகின்கண் வதிந்துள்ள சிறந்துயிர்கட் கெல்லாம் அவை வேண்டிய பொருள்கள் யாவையும் தடையின்றி நல்கும் பெருமை வாய்ந்த, பரங்கருணைத் தடங்கலாகியும் பிரணவப்பொருளாகியும் விளங்குகிற பரமசிவனைபபோற்றி மீண்டேகும் எல்லையில், விந்தமால்வரையை யினிது கண்டார்.

அப்போது, அம்மலைமீதுள்ள விருக்ஷங்களெல்லாம், ஆகாயத்தை யளாவும் கொம்புகளாலும், பசுமை நிறத்தாலும், பழங்கள் நிறைந்திருக்கும் தோற்றத்தினாலும், அளவிறந்த அண்டங்களைத் தனது மெய்யிற்றாங்கிநிற்கும் துளப மாலையையும், கோடிசூரியப் பிரகாசம் பொருந்திய சக்கராயுதத்தையும் தரித்த மகாவிட்டுணுவே போன்று விளங்கின. அவ்வரைமீது சூல்கொண்ட மின்னல் விளங்குகிற மஞ்சுகள் படிந்திருப்பதை ஒரு யானையானது பார்த்துத் தன்போலும் யானையெனக் கருதிச் சென்று எதிர்த்த போழ்து, எதிர்த்த யானையின் செவி வளிவிசையால் அம்மேகங்கள் சிதறுண்ணுங் காட்சியெப்படி யிருந்ததென்றால், கொல்சினைக் களிநல்யானை யொன்று பின்றொடர்வதற்கஞ்சி யேகும் மாலியானைபோன்று மிருந்தது. நீர்த்திவலைகண்மிகுதியாகவுடைய முகிற்படலங்கள் தவழும்படி ஆகாயமுகடளவும் ஓங்கி வளரும் தருக்களெல்லாம், குளிர்ச்சி தங்கிய சந்திரகாந்தக் கற்களின்மீது சந்திரிகை தவழுதலால் அவற்றினின்றும் பெருக்கெடுத்தோடும் நீரை மாந்தித் தளிர்விட்டனவாகி வளரும். கூட்டமாகிய குறத்தியர்கள், பொன் வண்டுகளும் பொறிவண்டுகளும், தேன்வண்டுகளும் மலர்ப்பொதியவிழ்த்தொழுக்கிய தேனைக்குடித்து அம்மலைச்சாரலிற் சூழ்ந்த மேகத்தினாற் கூந்தல் நனையப்பெற்று, மிகவுமுயர்ந்த கொடுமுடிகளிலேறி தமது அளகபாரத்தை விரித்துப் புலர்த்துவார்கள். நீண்ட கிளைகளையுடைய விருக்ஷங்களென்று சொல்லப்படுவன வெல்லாம் சந்தன விருட்சங்களே ; வேழமென்று சொல்லப்படுவனவெல்லாம் புழைக்கையையும், நால்வாயையும், மதச்செருக்கையும், கோபத்தையும் உடைய மதநீர் சிந்தும் நல்லயானைகளே. மிருகங்களென்று சொல்லப்படுவன வெல்லாம் வாசனை வீசும் கத்தூரி மிருகங்களும் புழுகு பூனைகளுமே. பறவைகளென்று சொல்லப்படுவன வெல்லாம் கின்னர மிதுனங்களே.

இன்னணம் வளப்பமெய்தப்பெற்ற விந்தமானது, மானுடவுருவமெய்திக் கதிர்ச்செல்வ னங்கெழுந்தருளிய குற்றமற்ற தவத்தினையுடைய வீணைமாமுனியைக்கண்டு அவரது அழகிய திருவடிகளை வணங்க வெண்ணிப்போய் எதிர்கொண்டது. தீங்தொடை யணிந்த தெய்வமாமுனிவன் றளில் அழகுபொருந்திய உச்சியையுடைய விந்தமானது உருக்கத்தோடு மிறைஞ்சிற் றென்றால், பாந்தளின் பிடரிற்றங்கிய இக்கடல் சூழ்ந்த பூவுலகின்கண் தவத்தின் மிக்க மேம்பாடுடையது வேறொன்றுளதென மதிக்க வொண்ணுமோ! * விந்தபர்வதமானது, இவ்வாறு நமஸ்கரிக்கவும் தழுவிக்கொண்டு அன்போடு அளவில் ஆசிகூறும் உபவீதமணிந்த நாரத முனிவர் மனதில் அன்பு பொருந்தவும், சந்தோஷம் அதிகரிக்கவும், முகமனியம்பி அருக்கிய முதலியவற்றைக் குறைபாடின்றிக்கொடுத்து, தாள்வருடிப் போந்த வருத்தத்தையும் தவிர்த்தது. பின்பு, "மாதவ! நீரிவணெய்தியதால் என் மனத்திருளகன்றது; உம்முடைய பாததூளிபட்டு என்பவக்கடல் வறந்தது. இற்றை நாளும் நன்னாளாயது, இனி ஆகாயவரையி லுயர்ந்த விந்தமென்னும் பெயரும் எனக்கு விளங்கியது" என்று அவ்விந்தங் கூறவும் நாரதமுனிவர் பெருமூச்சு விட்டு வீற்றிருந்தனர்.

சிதம்பரம்.

---

# பெண்கல்வி.

(*)

'கைப்பொரு டன்னின் மெய்ப்பொருள் கல்வி' எனத் தெய்வத்தன்மையுற்ற ஒளவையா ரியம்பிய இக் கல்வியினும் சிறந்த பொருண் மற்றொன் றுளதோ? ஐயந்திரிபறியாமை யென்னு முக்குற்றமு மறக்கல்லுங் கல்வியின் பயனையீங்கு முற்றுங்கூற வென்னா லமையப் பெறாதாயினும், நம் முத்தமிழுலகம் மூதறி ஞராற் பெண்கல்வியினும் பெருமையடைதல் வேண்டு மென்னும் வேட்கை தூண்ட யான்தெரிந்த வளவியம்புகின்றேன். சீரியோரி யாவரும் 'இன்னுமியாமே யெழுந்தாலன்றி யிக்குறை நீங்குவதருமை' என வினைந்து அன்னார் முன் வந்து என தார்வத்தை நிறைவேற்றுவாராக.

I. திருடர் முதலாயினோரா லபகரிக்கப்பட்டுக் குறைவுபாடுறுஞ் செல்வப் பொருளினு மிக்க சிறப்புவாய்ந்த விக்கல்விப் பொருளோ, அத்தகையோரா லபகரிக்கப்படாதது. பொறாமையுற்ற புல்லறிஞரியற்று மிடையூற்றமென் காலுக்குச் சற்றுஞ் சலிப்பின்றி யெஞ்ஞான்றும் பயிற்சிக்குத் தக்கவாறு தான் பயக்கும் பலனிலொன்றும் பொறுமையினைக் கைக்கொண்ட வன்னார் விடா முயற்சியென் குளிர் நீரூட்டச் செழித்தோங்குவதும், குறைவுறாப் பாலாழி போன்றதும், தனைவேட்டவர்க் கீயப்பெற்றாருளத்து நிறைவுறுவதும், ஈந்தாருளத்தோ முன்னிலும் பன்மடங் கூற்றெடுத்து வெளிப் பொழிவதும், மறுமையின்பத்துக் கேதுவாகிய இம்மை யறநிலைகளிற் பகுத்தறிவுடை யான்மாக்களை நிறுவி யவ்வழியே பொருளீட்டச் செய்வதும், அவ்வழியே யின்பம் நுகர்விப்பதும், வீட்டின்பத்துக்கு முக்கியக் கருவியாயுள்ளதும், நேருங் கவலை மிடி யெத்தகைக் கொடியன வாயினு மவற்றை யொரு பொருளாக் கொள்ளாதி யாவுமவன் செயலென வறியுமறிவைப் பெரும் பான்மையும் புகட்டுவது மாகிய தன்மைத்தாம்.

* தவமேமேலாநெறியாகுந் தவமே சிவனார்தமைக்காட்டுந்
தவமேதுறக்க மடைவிக்குந்தவமே நரனைத்தேவாக்குந்
தவமேவலாரிதிசைக்கிறைவர்சார்ங்கனயனுமாக்குவிக்குந்
தவமே கிடைப்பிற்கிடையாததுண்டோவென்றிசாற்றினனால்.



II. ஆடவர்க்கு நான்கு புருடார்த்தங்களையும் புகழையும் கொடுத்தல் செய்யுமிதுவோ, மகளிர்க் கச்சநாணம் பயிர்ப்புமடமை யென்னுங் கற்பினரணினைத்தாக்கி யழிக்கும் பான்மையுடைத்து? "இதுவோ! அப் பெண்பாலார் தம்வாய்மையினின்றும் வழுவிப், பதிநட்பி னீங்கியாங்குப் பத்தினியாரெனும் பெயரை முற்றத் துறந்து, அன்புசா லொழுக்க மிலராய், ஜீவகாருணியஞ் சிதைத்தனராய், அடக்கமில்லா உள்ளத்தராக, தம்மைத் தழுவியோர் மாட்டுள்ள அரிய விடயங்களை யயலாரியாவருஞ் செவியுற்று நக, அன்னாரைக் கொண்டலர் தூற்றிப், பொறை பொருந்தாச் சொற்புகன்று, சூதருட னளவளாவி, அழுக்காறமையப் பெற்றுத் தெய்வஞ் சிந்தியாதிகழ்ந்து, இவைகளினால் வருந்துன்பத்தைப் புல்லொக்கவுன்னிக், கொலைக்கஞ்சாக் கூற்றன்னவராம் வேசையராகச்செய்வது" எனப்பழியான வீண்மனோராஜ்யஞ் செய்கின்றனர். கணவர் வீட்டிற் காரியம் நடத்தவும், அக்கணவர் ஏவல்வழியும் நூல்வழியுநன் கொழுகவும் பெற்றார் கற்பிக்கக் கற்றுமங்ஙன மொழுகுமடவா ரன்றோ கற்புள்ளாரென வறியாது மருளுமிவர்க ளெக்காலமறிவர்? இவர் கற்றனரோ வன்றி மற்றவரோ வெனின் மற்றவரே. இவரு மெழுதப் படிக்கத்தெரிவதனாற் கற்றனரென்று தம்மைப் புகழ்கின்றனர். கல்வி யென்பதற்குப் பதார்த்த மறியாதவரிவரே.

III. எழுதப் படிக்கத்தெரிதல் நன்னூல் கற்றற்கோ ரூன்றுகோலன்றி மற்றன்று. ஊன்று கோல் கையமையப்பெற்ற வொருவன் அதனுதவியால் தான் செல்லவேண்டிய வெகு தூரநெறி கடந்து ஓர் நற்றலம் வீற்றிருப்பதாகவும், மரக்கலம் பெற்ற வொருவன் கரையடைந் திருப்பதாகவும் பாவிப்பது போன்றே யெழுதப் படிக்கத் தெரிந்தவுடன் கரையிலாக் கல்விகற்றது போ லிறுமாந்திருத்தல்.

IV. எழுதப்படிக்க மாத்திரமறிந்த மங்கையர் சோரநாயகரைத் தெரிந்து வேட்கைக் கடிதம் வரைகின்றனர். இக்குற்றச் செயனீக்குநூலாராய்ச்சி குறைவாதலின் அதனைப்பெருகச்செய்வது நுண்ணறிவன்றிக் கல்வியே யின்மையாக்கல் நலமெனக்கருதுமவர், மகளிரய லாடவனை வேட்கையுறல் தனுவாலெனக் கந்த மூலமருத்தி யில்லொழுக்க நடத்தவிச்சை கொண்டவரே; அன்றியம் மகளிரயலினுடியாடவரை யணையச் செல வுய்ப்பதுவோ வவர்காலே யெனவக் கால்களைத் துண்டித்து மனங்களித் தில்லறமியற்றலாமென விச்சைகொண்ட பதடியரே! எழுதப் படிக்கத் தெரிவதையே நிறைவுற்ற கல்வியென நினைந்து, அவர்கள் கல்வியை மட்டாக்கும் பெற்றோரின் அறிவீனத்தாற் கற்பிலக்கணமு மில்வாழ்க்கை நிலையும் அறியாது கணவர்கடுங் கோபங் கொள்ளாக் காலத்துங் கூட, அவர்கள் வறுமையைத் தமதாயெண்ணாதும், அழகின்மையை விழுமிதாக் கொள்ளாதும், குணமின்மையைக் குணமாகப் பாவியாதும், கொடிய வஞ்ச நினைந்தயற் புருடனை யவாவுற்றுங் கடிதம் வரைந்து தம்பதிக்குச் சதிசெயு மிந்த மாதரை யுதாரணமாகக்கொண்டு, "கற்றறிந்தார் கணவர்க்குத் துரோகிகள்" என்பர் பலர். இக்கணவர் கருணையோடு நடத்துங்காலே குத்திரஞ் செய்கின்றன ரெனின்,

'இனிய கேள்வர் முனியின் எதிர்நின்று
துனிகொ ணெஞ்சொ டெதிர்மொழி சொல்கலார்
அனைய கேள்வர் முனியினு மன்பொடுங்
கனிவர் நெஞ்சகங் கற்புடை மாதரே.'

என்றதற்கு மாறாய், அவர்களைப் பதிவ்வைது கள்ளக்காதலரொடு கசிந்து தாணிற் கட்டுகின்றாரு முளர். சிற்சில சமயங்களில் அயற்காதலரால் துர்ப்புத்தி கற்பிக்கப்பட்டு, அதனாற் சொந்த நாயகரிடத்துத் துவேஷங்கொண்டே விடமிட்டுத் துஞ்சுவிக்கின்றனர். அந்தோ! பரிதாபம்! பரிதாபம்! நாயகன் நாயகி யென்ற விருதிறத்தார் வழக்குந் திரக்கேளாது, அநியாயவழக் கிடுவராகிய நாயகியரைக் கொண்டே மற்றோரைத் தண்டனை யுட்படுத்துங் கொடுங்கோன் மன்னரிற் சோரநாயகரே. இவைகளை முன்னரே யாராய்ந்த கணவர் அயலாடவர்க்குக் கடிதமெழுதாவாறும், சம்பாஷியாவாறும், கண்டிப்பின், 'அறக்காத்தான் பெண்டிழந்தான்' என்பது தம்மை யொத்த பெண்டிரையே யெனத் தெரித்தல் போன்றெவ்வண்ணமோ கள்ளக் காதலர்க்குக் கடிதத்தா லறிவித்து அயலிற் செல்கின்றனர். இன்னோரைக் கற்றன ரென்றெங்ஙனஞ் சொல்வேம்.

VI. இவர்கள் தமயந்தியின் பாததூளிக்குள்ள மகிமையைக்கேட்டனரா? சந்திரமதியின் கற்பும் அநசூயை தன்னாற்றலு மறிந்தனரா? இன்னும் லோபாமுத்திரை, துரோபதை, சீதை, முதலிய பத்தினிக்கடவுளார் செயலு மறிந்தாரில்லை. ஐயோ! இத்தகைய மகளிரன்றோ பெண்கல்வி பெரிதும் பிழை



பாடுடையதெனச் சொல்லக் காரணமாயுள்ளார். இவர்களைச் சொல்லக் குற்றமென்னை?

VII. கண்ணெனத்தகு மெண் ணெழுத்தில்லாக் கபோதியராகிய மாதரார், பெற்றோரீந்த கம்பொக்கும் படிக்கப் பயின்ற பயிற்சியின் பயனை யறியாது, அண்மியாரைப் புடைத்தலே தலையாய பயன், மற்றில்லென அவ்வாறு செயலொப்ப, வரைவின் மகளிர்க்குத் தமை மாதிரியாக் கொளக் காட்டுந் தீச்செயலை நன்காயுங்கால், படிக்கத் தெரிவதன் பயனாகிய பன்னூற்பயிசி யொன்றுளதென்றறிவித்தல், அதை யோங்கச்செய்தல், கற்ற கணவர்க்காயினுந் தம் மக்கள் கடிமணஞ் செய்யப்பெறல், அதனாலக்கணவர் கற்பிக்க வெண்ணியாங்கவர் கற்பிக்கப்படல், இவையாவுந் தம்மநுபவத்தி லுடைமை, ஆகிய விவைகளிற் சற்றேனுமில்லாக் குறைவிற்குக் காரணமாயுளராகிய பெற்றோரன்றோ வவ்வசையைப் பெற்றோர். பெற்றோர், கல்வி பயிற்றாது தாம் அன்புகனிந்து வளர்க்கு மருமை யெவ்வருமையோ? இவர் தம்மருமைச் சிறுமிய ரறியாது குற்ற மொன்றியக்கா லஃதுற்று நோக்கி யீதினிச் செய்யன்மினென மதிகூறியும், அச்செயன் முடிவைப் புகன்றும், சகவாசப் பயனாய்ச் செய்திடினது நீத்தொறுத்தும் வற்புறுத்தியும், தாமே யாசிரியத் தன்மை பூண்டும், அன்றி, கற்றொழுக்கஞ்சான்ற மதியின் முதியாரைக் கொண்டு கற்பித்தும் மேன்மையாக்காது விடுக்கின்றனர்.

VIII. சிலர் 'கிறிஸ்தவமிஷன் சங்கத்தார் பரீக்ஷையிற் றேறியதனாலன்றோ எஞ்சிறுமியர் பொம்மை பெற்றனர்'! என்று புகழ்கொண்டாடி, அவர்கள் எழுதப்படிக்க வியன்றவர்களாதலி னிருமகிழ் வெய்தி, அம்மானை, ஒப்பாரிக்கண்ணி, ஏலப்பாட்டு, கப்பற்பாட்டு, தெம்மாங்கு, நாடகம், விவேக சாகரம், இவை போன்ற நூல்களிற் பயிற்றியும், இவைகளன்றியும், பாடசாலைப் படிப்பே நிறைவுற்றதென "அம்மட்டோடு நிறுத்தியுங் கெடுக்கிறார்கள்.

IX. ஈதுமன்றி யிவர்களே தம் ஆண்மக்கள்போற் பெண்மக்கள் யாது உத்தியோகஞ் செய்து சம்பாதிப்பர்? கற்பிக்கப்படினெமக்கி யாது பயன்படுவர்? இவர்களுத்தியோகத்தாற் பொருளீட்டி யிடுவதெமக்குத் தேவையின்றென்றே புகல்கின்றனர். இதன் காரணமா யிருப்பவர், பூர்வநாகரிகமறியாப்புது நாகரிகரேயாம். இவர், இருநாகரிகமு மில்லா வொருவரிடஞ் சென்று, ஐய, நுஞ் சிறுமியரைக் கல்விபயிற்றல் நலமெனின், நம் முன்னோரின் வழக்கமில்லா வழக்கம் விள்ளல் வேண்டாம் என்கின்றனரவர். அதைக்கேட்ட புது நாகரிகராவது இவர்கண், "முன்னோர் வழக்கத் தபிமானங் கொண்டமையின், நம்முன்னோரிற் பெண்கள் கல்வி யடைந்திருந்ததையும், அவர்கண் மற்றைய வளவிலா விடயங்களி லடைந்துள்ள நாகரிகத்தையும், புராணேதிகாசங்களினாலும், சாஸ்திரங்களினாலும் புகழ்ந்தெடுத்துக் கூற வறியாது, "அவர்களு மநாகரிகர், அப்புராணங்களோ மனோ

பாவனை யெனச்சொல்லி முன்னோர் அறியாவழக்கம் நீருங் கைக் கொண்டனிரா? ஆயிற் கபடமறியா ஏழையராகிய நம்முன்னோர் பொய் புகன்றதே யில்லை. நீரும் அங்ஙன மிருந்தாற்றுவீரா? ஆற்றீர், ஆதலின், நீர் சிறுமியரைக் கல்வி பயிற்றல், பயிற்றுவித்தல் வேண்டும்" என்கின்றதையே சாதிக்கின்றனர். இப்புது நாகரிகர் மௌனஞ் சாதிப்பினு நன்மை பயக்கும்.

X. உத்தம லட்சணமும், உத்தமகுணமு மியற்கையின் அமையப் பெற்று, எழுதப்படிக்க வியன்ற மங்கையரும், அன்றி யதுவுமறியா மங்கையரும் கற்பின் வழாது, கவின் பெறுகின்றனர். ஆயினுமிவரில் முற்பவப் பயனெய்தப் பெற்றாராற் கற்றலிலாக் கணவர்க் குடன்பட்டுழன்று, அக்கணவர் சாகபட்சண நாற்கால்களை நடத்திய தேய்ப்ப நடத்தி வருத்த, மனங்கசந்து பின், பெற்றோர் செயற்குப் பரிதபித்தும், கடவுளைக் கண்ணிக் கசிந்துருகியும், இவ்வாழ்க்கை நிலை, கற்பொழுக்கம், கணவரிடத் தன்புடைமை யிவை நீங்காதே யிருக்கின்றனரோ மிகச் சிலர்; மற்றுக்கொடுமை யாற்றாது தற்கொலை புரிகின்றனரே பலர். அந்தோ! இவர்கண் மனம் நூல்வழித்திருப்பப்படின் எங்ஙனமோ நன்மை பயக்கும், அதனினுமிக்க பயனீயும், கணவர் கற்றிருப்பாராயின். எங்ஙனமாயிடினும், பெண்கள் கற்பிக்கப் படின், ஆண்பாலார் எத்துணையோ கல்வியிற் சிறந்து மல்குவர். பெண்கள் கற்றிடின் தம் முதுவயதினும், மருகியரைத் தம்மருமைச் சிறுமியரேபோன் றன்புடனழையாரா? இன்னு மெவ்வனுகூலமோ வெய்திடும்.

XI. ஆகவே, இவ்வனுகூல மறிந்தே யெழுதப் படிக்கக் கற்பித்த வீண்றுருந் தீயபயக்குநூலும், யாதும் பயவாநூலுங் கற்பிக்கின்றனர். ஈது நூலின்னதென் றறியாத்தன்மையாலேயாம்.

XII. 'உரத்தின் வளம்பெருக்கி யுள்ளிய தீமைப்
புரத்தின் வளமுருக்கிப் பொல்லா-மரத்தின்
கனக்கோட்டந் தீர்க்குநூ லஃதேபோன் மாந்தர்
மனக்கோட்டந் தீர்க்குநூன் மாண்பு'

என, நூலின்றன்மை அறைந்த வான்றோரோ,

'நூலினியல்பே நுவலினோரிரு, பாயிரந்தோற்றி மும்மையினொன்றாய், நாற்பொருட் பயத்தோ டெழு மதந்தழுவி, யையிரு குற்றமு மகற்றியம் மாட்சியோ, டெண்ணான் குத்தியினோத்துப் படல, மென்னு முறுப்பினிற் சூத்திரங் காண்டிகை, விருத்தியாகும் விகற்பநடை பெறுமே" எனக்கூறிய விவை யமையப்பெற்று, அதுவும், பெருங்காப்பியம் காப்பியமென விரண்டி லொன்றாயும், அன்றி, நீதியை மாத்திரம் போதிப்பதாயு மானவையே நூலென்பதும், அல்லாதன நூலல்லனவென்பதும், அவை மனக்கோட்டந் தீர்க்காவென்பதும், ஔவையா ரருளிய 'நூல்பலகல்' என்றதும், மேற் றன்மையனவற்றையே யென்பதும், தெற்றென விளங்குதலின் அதை



யநுசரித்துக், 'கற்க கசடறக் கற்பவை' என்ற தனாலும், நூல்போன்று மாலருத்துவன பலவாதலால். 'ஆராய்ந் தமைவுடைய கற்பவே பாலுண் குருகிற்றெரிந்து' என்பதனாலும், நல்ல இவை யெனத்தெரிந்து தஞ் சிறுமியர்க்குக் கற்பித்தல் வேண்டும்.

XIII. ஆயின், சிறுமியர் கற்பிக்கப்பெற சிறு வாசகப் புத்தகங்களில்லாக் குறைவை முற்றவாய்ந்த, கனம், முருகேச முதலியாரன்ன முழுமதிக் கலை ஓர் நள்ளிருட் கூந்தல் நங்கைமா ருளவிருளகன்றிட மாதர்நீதி முதலா மாதரம் பெருகு மருகலாவசன நூலியற்றினர். இத்தகையோர் போன்று, எழுத்தறியத் தொடங்கு மினியவாய்க்குதலைச் சிறுமியர்க்காம் நீதியார்ந்த சிறு கதையும் படிப்படியாய்ப் பல்குதற் பொருட்டே என்றும் மல்குக.

XIV. இவ்வகை நூல்கற்று, ஆராயின், பின்னிவைகட்கு முதனூலாய முக்குற்றமுங் கல்லவல்ல நாயனார் முதுமறைத் தமிழ் மொழியிலும், தெய்வப்புலவர் சிரமேற்கொள் ஔவை யருமொழியிலும், நாலடி முதலாம் சால்புடைத் தனிப்பன்னூலிலும், விதித்தன செய்தொழுகி, விலக்கியன வொழித்து, இல்லறக் காப்பியமைந்தாம் வேதம் எனச்சிறப்புப் பெயர் பூண்ட விதிகாசங்களிற் காப்பியத் தலைவரிடத்துண்டாய பத்தினியரின் ஒழுக்கமன்பு முதலியன வற்றைந் தாமே படித்தறிந்து, அவ்வாறு நடக்க முயன்று பிரம விஷ்ணுக்களின் பிரதாபத்தையும், சிவபிரானுடலையும் விளம்பப்புகுந்த பூர்வபுராணங்களி லாங்காங்குள்ள பக்த சரித்திரங்களையும் பார்த்து, அவ்வடியார்தங் கற்பின் வழாக் காதலிய ரொழுக்கங் கைக்கொண்டு, அங்ஙனம் வழுவும் வஞ்சியர் எங்கணு நிறைந்த வெம்பெருமானாற் றண்டனையுட் படுவரென வஞ்சி,

'மருவிய காதன்மனையாளுந் தானு
மிருவரும் பூண்டீர்ப்பி னல்லா—லொருவரா
லில்வாழ்க்கை யென்னு மியல்புடைய வான்சகடஞ்
செல்லாது தெற்றிற்று நின்று' என்றபடி

இல்வாழ்க்கை யென்ற சகடமிழுத்துப் பத்தினிக் கடவுளா யாவரும் போற்ற வீற்றிருந்து, அறுவகைப் பிரிவி லெவ்வகைப் பிரிவாலேனு மயற்புறந் தங்கணவர் சென்றிடின், அன்னார்க்கே, உள்ளக் கருத்தையும் வேண்டுகோளையும், புறப்படுத்தி யன்பாங் காந்தசத்தா லாவியன்னாரை யீர்த்தகப் படுத்தி, அன்றியும், 'அன்னைதயையும், அடியாள் பணியும், மலர்ப்பொன்னினழகும், புவிப்பொறையும், வன்னவுடல் வேசிதுயிலும், விறல் மந்திரி மதியும், பேசில் இவையுடையாள் பெண்' என்ற வாறிவ்வகைப் பெண்மையை யுடையராய்ச், சிறந்த விற்றுணையாகி, தஞ்சிறுவரை நல்வழி நடத்தி நன்மார்க்கங் கற்பித்து, அவர் மெய்வளர்க்க விரும்பி யறுசுவை யுணவூட்டி யாங்கு, மெய்யறிவு வளர்க்கக் கல்வியென்னும் நீரூட்டி, யவ்வறிவெனும் பயிரீனும் பயனாகி, ' ஈன்ற

பொழுதிற் பெரிதுவக்குந் தன்மகனைச் சான்றோனெனக் கேட்டதாய்,' என்றபடி, அப்புகழ் மகிழ் விரண்டுந் தெவிட்டவுண்டு,

“கற்பின் மேய கனங்குழை மாதரைப்
பெற்று ளோர்தம் மரபும் பெருந்தவக்
கற்பி னார்கொண்ட காதல னாருயிர்ச்
சுற்றமி யாவுந் துறக்கத்தி னெய்துமால்” என்றபடி

யாவரையு மேற்பத மெய்துவிப்பர்.

XV. இப்பொழுது கல்வியறிவிற் பெண்கள் க்ஷீணதசை யடைந்திருக்கிற நம்மிந்தியாவில், பூர்வங் கற்றிருந்த மகளிர், இப்பொழுது கற்றிரா மகளிரள வென்பதே திண்ணம். ஆயின், ஆண்மக்களோ நீதிநிறைந்த நூல்களை ஆங்கிலமாகிய விராஜ பாஷையிலாவது கற்றிருக்கின்றனர். இத்தகைப் பெருமையும் பயனுமீவதாகிய கல்வி, நம்மிந்தியாவிற் பெண்பாலாரிடத்தும் க்ஷீணதசை யடைந்ததைப் பற்றி யாவரும் பரிந்து தந்தனங் கல்வியிரண்டும், இல்லிற்கிசைந் தொழுகும் பெண்டிராய்ச் சிறுமியரையாக்கி அன்னார்க்கே சிறந்த பூணாகுங் கல்வியின் பொருட்டுச், செலவுய்த்தல் வேண்டுமென்பதே யென் தாழ்மையான விண்ணப்பம். அன்னிய கண்டத்தினின்றும், அன்னிய மதத்து மிஷன் சங்கத்தார் சுதேசச் சிறுமியர் சுவிசேஷங் கற்றுத் தஞ்சமயத்தொழுக்க நாடாதொழிய, எடுக்கு முயற்சியிற் பன்மடங்கு முயன்று, சுயபாஷாபிமானம், மதாபிமானம், நன்று தீதிதுவென வறிநடுவுநிலை, தேசாபிமானம், நடையுடை பாவனையினயம், தெய்வபக்தி இவை போல்வனவுடையீராம் நீர்மைபற்றி, அத்தகையாராலுண்டாகு மல்வழியருகிட நல்வழியாந் தொல்வழி புதுக்கல் வேண்டுமென்பதே, அதற்குறிய கருவியும் சிலவென்பதே.

அவை, (1) கலைஞருந் தனிகரு முன்னிற்றல்

(2) பெண் கலாசாலை பலவியற்றல்

(3) கல்வி யொழுக்கஞ் சான்ற கலைஞரைக்கொண்டு கற்பித்தல்

(4) சிறுமியர்க்குரிய நூலியற்றல்

(5) சோதனை வைத்தல்

(6) இன்னுமின்றி யமையாதனவியற்றல். இவ்வாறு கனதனக்காரிகையராகுங் கன்னியரை மேகலைக் கன்னியராய் மேவுவித்தல்.

சு. ஆதிமூலம்.



# THE LIGHT OF TRUTH OF TIRUKKOVAIYAR

## திருக்கோவையா ருண்மை விளக்கம்.

பரமாசாரியசுவாமிகளாகிய ஸ்ரீ மாணிக்கவாசக சுவாமிகள் திருவாய் மலர்ந்தருளிய திருக்கோவையாரென்னும் அகாதஞானப் பிரவாகபயோததியின் அடியிலே எவர்க்குங் கிட்டுதற் கரிதாய்க் கிடந்த விலைமதிப்பில்லா ஞானார்த்த ரகசிய லக்ஷியார்த்த சிந்தாமணிப் பொருள்களை நம்போலிய ஏழைகள் பெற்றுய்யுமாறு கைம்மாறில்லாப் பெரிய ஞானம்புதம்போலப் பெய்த்துத் தந்தருளிய அறிஞர் பெருமானும் ஞானாசாரியரையும், அவரால் அருளப்பட்ட திருக்கோவையா ருண்மையையும் அறியாதார் யாரே! இந்நூலின்கட் சிவபெருமானை நாயகியாகக் கூறியிருக்கும் மரபறியாத சிலர் மயங்குவாராயினர். அன்னார் மயக்கந் தெளியச் சில நியாயங் காட்டுதும்.

(க) ஸ்ரீவாகீசர் சிவபெருமானை இழிந்த சடப்பொருள்களுட்படுத்தி, “இம்மணிநீ, இம்முத்துநீ” என்றும், “மறிகடலும் மால்விசும்புந் தானேயாகிக் கோதாவரியாய்க் குமரியாகி” என்றும், “கல்லாகிக் களறாகிக் கானுமாகிக் காவிரியாய்க் காலாறாய்க் கழியுமாகிப் புல்லாகிப் புதலாகிப் பூடுமாகி” என்றும் பலவாறாகத் துதித்தமை அன்புடைமை பற்றியன்றோ? ஸ்ரீவாகீசர் “அம்மைநீ மாமியுநீ” என்று பெண்பாற்பட்ட தாயாரும் மாமியாருமாகத் துதித்தமையும் அன்பு காரணமாகவன்றோ! சிவபெருமானை அத்தியாசிரமோபநிடதம் “நீரே குமாரர், நீரே குமாரி” என்று புகழ்ந்தமையுங் காண்க. “ஏறுடையானென்னை யாளுடை நாயக னென்னுள் புகுந்திடிலே” என்றும், “என்னுடைய நாயகனாகிய ஈசனெதிர்ப்படு மாயிடிலே” என்றும், “என்னை முன்னாளுடை யீச னெழுந்தரு ளப்பெறிலே” என்றும், “இந்து சிகாமணி யெங்களை யாள வெழுந்தரு ளப்பெறிலே” என்றும் “ஈறறி யாமறை யோனென்னை யாள வெழுந்தரு ளப்பெறிலே” என்றும் வரும் திருவாசகத் திருப்படையாட்சித் திருவாக்கியங்களினாலே சிவபெருமான் நாயகனென்பது மாத்திரம் பெறப்படுகின்றதன்றி வதூவர பாவத்தினாலே ஈண்டு ஆன்மா நாயகியாகவும், சிவபெருமான் நாயகராகவும் கொள்ளப்பட்டிலரென்றும், ஆன்மாவை நாயகி என்று கோடற்குரிய தேவாராதிகளிலேபோல “கைவளை” “பணைமுலை” முதலிய குறிப்பு மொழிகள் அத்துணுக்கை வாக்கியங்களிலே இல்லையாமென்றும் அறிக.

வதூவரபாவம் பேசப்படாத விடத்துத் திருவாசகத்துத் திருப்படையாட்சியிலே சிவபெருமான் நாயகராக அவருக்கு நாயகி ஆன்மாவாகச் சொல்லப்படவில்லை என்றும், அதனால் வதூவரபாவம் பேசப்பட்ட திருக்கோவை

யாரிலே பரும்பொருள் நாயகிபாவத்திலே பேசப்பட்ட ஆன்மா நாயகபாவத்திலே பேசப்பட்டதாகவும் உணர்க.

(உ) இனி "மன்னியசீர்ச் சங்கரன்றாள் மறவாமை பொருள்" எனவும், "மன்பெருமா மறைமொழிகண் மாமுனிவர் மகிழ்ந்துரைக்கு - மின்ப மொழித் தோத்திரங்கண் மந்திரங்களி யாவையினு - முன்பிருந்து மற்ற வன்றன் முகமலர வகநெகிழ்ந்த-வன்பினினைந் தெனையல்லா லறிவுறு மொழி நல்ல" எனவும், "ஏழையடியாரவர்கள் யாவை சொன சொன்மகிழுமீசன்" எனவும், "குணங்கள் சொல்லியுங் குற்றங்கள் பேசியும் வணங்கி வாழ்த்துவ ரன்புடையாரெலாம்" எனவும் போந்த திருவாக்குக்களுக் கிசையச் சிவத்தையன்றி அவமொன்றி மறியா அன்புடையாளர் சிவலிங்கப் பெருமானைக் கல்லாலெறிந்தும், கள்ளன், பித்தன், சுடலையாடி முதலிய சொற்களைச் சொல்லி இகழ்ந்தும், மலராகவும் துதியாகவும் கொள்ளுமாறு செய்வர். அன்பின் செயல்களையும் அன்பின் மொழிகளையும் பார்த்து இதுவிதி இது விலக்கென விதிவிலக் கிறந்துநின்ற சிவபெருமான்பால் விதிவிலக்கறிவிக்கப் புகுதல் பேதைமையன்றோ? இதனான் வடமொழி தென்மொழிக்கண் உள்ள சுருதிகளில் வண்டு, பதங்கம், மேகம், இருதுக்கள், காலம், குமரன், குமரி, தாய், தந்தை, மாமி, மாமன், நாயகன், நாயகி யென்று குறிப்புப் பொருளின் முற்றச் "சொற்பா லமுதிவள்", "மடமான் விழிமயில்", "அன்னம்" எனத் துதிக்கப் படுதலால், "வேதமதுலரக்க நின்ற வியன்புகழனைத்துமேலா நாதனை நணுகு மெல்லா நதிகளுங் கடல்சேர்ந் தென்ன" என்றவாறு, அப்பெயரெல்லாம் நதிகள் சமுத்திரத்திலே போயொடுங்கினாற்போல, இன்னநிறம், இன்ன வுரு, இன்ன பெயர் என்றறியலுறாப் பரமானந்த சாகரத்திலே போயொடுங்குமாம் என்க. ஸ்ரீ ஸ்காந்தோபபுராணமாகிய பக்தவிலாசத்து ஸ்ரீ சுந்தரர் சரித்திரம் பேசப்பட்ட ஏழாம் அத்தியாயத்திலே, ஸ்ரீ சுந்தரமூர்த்தி நாயனார்க்குச் சிவபெருமான் எவ்வடிவத்தோடு எழுந்தருளினாரென்றும், ஸ்ரீ சோமாசிமாற நாயனார் சரித்திர முரைக்கும் அப்பக்த விலாசத்து அறுபதாம் அத்தியாயத்திலே அவருடைய யாகசாலையில் அவருக்குச் சிவபெருமான் எவ்வாறு காட்சி கொடுத்தருளினார் என்றும், அகஸ்தியர் சங்கிதை ஆலாசிய மான்மியத்து ஐம்பத்தோராம் அத்தியாயத்திலே சிவபெருமான் எவ்வடிவுற் றுப் பால்சுரந்தருளினாரென்றும் பார்த்தறிந்தார் ஒருபொழுதும் மயங்குவா ரல்லர்.

பேரூர்ப்புராணம் "உயர்ந்தவுந் தாமே யிழிந்தவுந் தாமே யெனமறை யோலமிட் டுரைக்கும் - வியந்ததஞ் செய்கை யிரண்டனு ளொன்று வேதிய னாகிமுன் காட்டிப் - பயந்தரு மிறைவர் மற்றதுங் காட்டப் பள்ளனாய்த் திருவிளை யாட்டா-னயந்தபூம் பணையின் வினைசெய வன்பர் நண்ணுமு னண்ணின ரம்மா" எனத் திருவெண்ணெய் நல்லூரிலே ஸ்ரீ சுந்தரமூர்த்தி நாயனார்க்



குச் சிவபிரான் உயர்ந்த பிராமண வடிவத்தோடு தரிசனங் கொடுத்தருளின தோடமையாது, மற்றெவ்வடிவத்தோடு அவர்க்குப் போதியம் பலத்திலே பிரசன்ன ராயினாரென்றும் மேலைச் செய்யுளால் அறிக. சுருதிகளிலும் புராணங்களிலுங் கண்டவாறு அடியார்களுக்கு ஆங்காங்கு அநுக்கிரகஞ் செய்யும்படி தமக்கு அவ்வப்போது வேண்டியதோர் வடிவங்கொண்டு ஆவிர்ப்பாவமாகி விரைவிலே தோன்றி மறையும் இந்திர தநுப்போல அந்தர்த்தானமாதல் அச்சிவபெருமானுக் கியல்பாம் என்க.

ஸ்ரீ ஞானசம்பந்தர் முதலிய மூவர் தேவாரங்களி லிருந்து "ஏர்பரந்த வினவெள்வளை சோரவென்னுள்ளங் கவர்கள்வன்" என்பது முதல் "உண்டவாறு மிவை யுணர்த்து வல்லீர்களே" என்பதிறுதியாக வுள்ளவற்றிற் சிவபெருமான் நாயகனாகவும், மூவரும் நாயகிகளாகவும் ஏற்பட்ட அந்நெறியானே, கோவையாரினும் சிவபெருமான் நாயகனாகவும், மாணிக்கவாசக சுவாமிகள் நாயகியாகவும் ஏற்படுதல் வேண்டுமென்ற நியதியில்லை. ஸ்ரீ ஞானசம்பந்தரும் வாகீசரும் ஒரேகாலத்தினரா மென்பதும் இவ்விருவர்க்கும் பின்னர் அவதரித்தார் ஸ்ரீ சுந்தரர் என்பதும் பக்த விலாசம் பெரியபுராணம் ஆலாசிய மான்மியம் தேவாரம் என்பவற்றால் உணரக்கிடத்தலானும், வாகீசர் "நரியைக் குதிரைசெய்வானும்" என்றும், வைகைத் திருக்கோட்டி னின்றதோர் நிலையுந் தோன்றும்" என்றும் சிவபெருமானைத் துதித்தமையானும் முந்தினவர் மாணிக்கவாசக சுவாமிகள் என்பது பெறப்படுதலால், அவர் சிவபெருமானையும் ஆன்மாவையும் முறையே நாயகியாகவும் நாயகனாகவும் உருவகஞ் செய்தார் என்க. மூவரும் தேவாரம் பாடினார்களன்றி அகப்பொருளடக்கிய நானூறு கலித்துறையாற் கோவை பாடிற்றிலராகலின் அம்மூவரும் சிவபெருமானையும் தம்மையும் ஒவ்வோரிடத்தில் முறையே நாயகனாகவும் நாயகியாகவும் உருவகஞ் செய்தவாறு ஸ்ரீ மாணிக்கவாசக சுவாமிகள் உருவகஞ் செய்யாது சிவபெருமானையுந் தம்மையும் முறையே நாயகியாகவும் நாயகனாகவும் கோவையில் உருவகஞ் செய்தார் என்க. கோவையிற்போலத் தேவாரத்தில் நாயகி தோழி செவிலி நற்றாய் முதலியோர் விஷயங்களும் பிறவுங் கூறற்கு அவகாசமின்றாம் என்றும், அவ்வாறு கூறாத தென்னையென வினவல் தவறாம் என்றும் உணர்க.

(௩) நமச்சிவாயன் எனப்படும் ஒருவன் சந்திரமதி வேஷமிட்டு நாடக நடிக்குங்காலத்தில் அந்நமச்சிவாய சந்திரமதிக்கு நாயகனாய் வேஷம் பூண்டோன் அந்நமச்சிவாயனை நாயகிபாவத்தில் வைத்து, "என் பிராணநாயகியே!, என் அன்னமே! என் குயின்மொழியே!, என் கிளிமொழியே!, என் மயிலே!" என்று நாடகக் காலம் முற்றும் விளித்தலால் அவனுக்கு அந்நமச்சிவாய னென்பான் நாயகியாய் விடுவானல்லன். அதுபோல, அகப்பொருட் கோவைத்துறையிலே அமைத்து அன்பினிற் பழுத்த பெரியோர் ஆண் பெண் அலியிறந்து நின்ற சிவத்தை நாயகிபாவத்தில் வைத்துத் திருக்கோவையாரிற்

கண்டபடி தில்லை யன்னாள் சிற்றம்பல மனையாள் என்பன முதலியனவாகத் துதித்தலால் அவர் நாயகியாம் பெண்ணாய் விடுவரல்லர். கோவையும் நாடக மாமெனத் தஞ்சைவாணன் கோவை யுரைக்கார ருரைத்தமையுங் காண்க. இதுவே நாடக வியலுடையார்க்குக் கருத்தாதல் உணர்க.

(ச) உலகத்திலே தன்புத்திரனை என் அம்மையேயென்று உவப்பினாற் பெண்பாலாக்கித்தாய்தந்தையர் அழைத்தல் முறையாம் என்று இலக்கண நூல்கள் விதிக்கின்றனவே. உலகத்திலும் அவ்வாறழைத்தலை யாம் காண்கின்றேமே. அதனால் அப்புதல்வன் பெண்ணாய்விடுவானன்றோ? அங்ஙன மழைத்தல் மகிழ்வின் மேலீடே யென்றே கொள்ளப்படும் என்க.

(ரு) - ஒருவன் தனக்குப் பிராண னொத்திருந்தா ரொருவரிறந்து போனால் அவருடைய சாவை மனசின் கண்ணே முற்று முணர்ந்தானேனும் வாயினாற் சொல்லிப் புலம்பும் பொழுதன்றோ துன்ப மதிகரித்தழுகின்றான். அங்ஙன மழும்போது ஒவ்வோர்கால் என் அண்ணாவோ! என் ஐயாவோ! என் அம்மாவோ! என் இராசாவோ! என் கண்ணேயோ! அடேபாவி! என்னை விட்டுப் போயினையோ! இனி நான் என் செய்வேன்! என்று வாயில் வந்தன வந்தன வாய்சோர்ந்து சொல்லித் துக்காதிக்கியத்தால் நன்மொழிகளும் தீமொழிகளும் நிகழப் பெற்றிருக்குங் காலத்து இவையெல்லாம் கேட்கப் பெற்றவர்களாலே குற்றமாக ஒருபோதும் கொள்ளப்பட்டில வென்பது பிரத்தியக்ஷம். அதுபோல, தான் வழிபடுந் தெய்வத்தைப் பரவிய செய்யுட்களை உணர்ந் திருந்தானேனும், அப்பாடல்களைக் கொண்டு தெய்வத்தை வழிபடும்போது கண்ணீர் வார்ந்து மெய்மயிர் சிலிர்க்கின்றான். இக்காலத்து "நெஞ்சின் மிக்கதுவாய் சோர்ந்து தான் வேட்ட பொருளினிடத்துக் குறிப்பின்றியுஞ் சொன்னிகழும்" என்று திருக்கோவை யுரையாசிரியர் உரைத்திருக்கின்றா ராதலின், சிவத்திடைச் செறிந்து கோத்தலாஞ் சிவாநுபவத் திருக்கோவைக்குத் தோற்றுவாயாந் துணையானே மாணிக்கவாசக சுவாமிகள் திருவாசகத்திலே குறிப்போடு ஈசன் நாயகனெனக் கூறி, அத்திருவாசக முடிவுத் திருப்பதிகமாகிய "அநுபவ வழியறியாமை"யைக் குறிக்கும் அச்சோப் பதிகத்தைத் திருவாய் மலர்ந்தருளினாராகி; பின்னர் மாயாநீக்கத்து விளங்கும் ஏகான்மவாதிகளுடைய பிரமமாகிய சீவப்பிரமத்தைத் தாண்டி, அதற்கு மேலே பராசத்தியோடு கூடிய சிவாத்துவிதிகளுடைய பாசுபத யோகஸ்தான நிஷ்கள பிரமத்தைத்தாண்டி அதற்கு மேலாய் அகம் புறமென்றது யாண்டும் வியாபித்த பரப்பிரம சிவானந்தசிவம் அகப்பொருளின் நாயகி பாவத்தில் நிகழப் பரமசுகானந்த வெள்ளத்துப் படிந்து அநுபவமுற்று "வித்தினைத் தேடி முளையைக் கைவிட்டு"ப் பித்தேறினவராய்த் தேடலுந் திகைப்பும் வாடலும் நிகழாத நற்பெரு நிலையுற்ற அம்மாணிக்கவாசக சுவாமிகள் அச்சிவத்தைத் தந்திருவுள்ளத்து நிகழ்ந்தபடி 'தில்லையன்னாய்', 'சிற்றம்பல மனையாள்', 'புலியூரன்னபாவை', 'மயிலே' என்பனவாதியாகத் துதித்தருளினர்.



(சு) ஐம்புலன்களுள்ளே ஒவ்வோர் புலனும் தனித்தனி நிகழ்வது ஒவ்வோர்விஷயத்திலேயாக, "கண்டுகேட் டுண்டுயிர்த் துற்றறியு மைம்புலனு, மொண்டொடி கண்ணேயுள" எனவும், "புண்டரிகத்தவள் வனப்பைப் புறங்கண்டது நலத்தைக்கண்டுகேட் டுண்டுயிர்த்துற்றமர்ந்திருந்தார் காதலினால்" எனவும் போந்தவாறு ஐம்புலன்களும் ஒருங்கு நிகழப்பெறுவது சிற்றின்பப் பொருளிலே நாயகியிடத்தே யாமாறுபோல, ஆராதபேரன்பினாலும், "கண்ணினீடு பார்வைகொண்டு காணும்" அன்பினீடிப்பினாலும், "ஆதிச்சுடர்ச் சோதியை யன்பினகத்துளாக்கிப் போதித்த நோக்குற்றொழியாது" கூடுதலாலும், "ஆர்வமுன்பெருக ஆராவன்பினிற்கண்டு கொண்டே" நிற்றலாலும், "ஐந்துபேரறிவுங் கண்களே கொள்ள வளப்பருங் கரணங்களான்குஞ், சிந்தையே யாகக் குணமொரு மூன்றுந் திருந்துசாத் துவிகமேயாக, விந்துவார் சடையானாடு மானந்த வெல்லையி றனிப்பெருங்கூத்தின், வந்த பேரின்ப வெள்ளத்துட் டிளைத்து" எனவும், "அடிசார்ந்தவர்க்கு முடியாவின்ப - நிறையக் கொடுப்பினுங் குறையாச் செல்வ - மூலமு நடுவுமுடிவு மிகந்து - கால மூன்றையுங் கடந்த கடவு - ளுளக்கணுக்கல்லாதூன் கணுக்கொளித்துத் - துளக்கற நிமிர்ந்த சோதித் தனிச்சுட - ரெறுப்புத் தொளையி னிருசெவிக் கெட்டா- துறுப்பினின்றெழுதரு முள்ளத்தோசை - வைத்தநாவின் வழிமறுத்தகத்தே - தித்தித்தூறுந் தெய்வத்தேற-றுண்டத்தொளையிற் பண்டை வழியன்றி - யறிவினாறறியநாற்ற - மேனியதன்மையு மெய்தாத வற்றையுந் - தானேயாகி நின்றதற்பர" எனவும், "அதிரும் புலன்கரிக ளாயுமனத் திண்டேர் - கதியொன்றிய குணமக்காலாட் - சதுரங்கம் - பூட்டிநாப் போலிருக்கப் புக்கடிநிற் கும்புதுமை-காட்டினா னம்பலவன் காண்" எனவும் போந்தவாறு, "உணர்வு நேர்பெறவருஞ் சிவபோக"முற ஐம்புலன்களும் ஒருங்கு ஓரிடத்தில் நிகழப்பெறுவது பேரின்பப் பொருளாகிய சிவபரம் பொருளிலேயா மாதலின், அசுத்தத்திரிபுடியுள்ளே ஞேயப்பொருளாய்ப் போக்கியப் பொருள்களு ளெல்லாஞ் சிறந்தது அங்கனை (நாயகி) யாமெனப் பௌஷ்கராதிகளினாற்பெறப்படுதலினால், ஸ்தூலாருந்ததி நியாயங்கொண்டு சுத்தத் திரிபுடியுள்ளே ஞேயப் பொருளாகிய சிவபரம் பொருள் நாயகியாக வைத்துத் துதிக்கப்பட்டதாம் என்றோர்க.

(எ) சிவபெருமானை நாயகியாகக் கொள்ளின் அவர்க்குச் சிறப்பின்மையும் சிறுமையும் கீழ்மையும் வந்து பொருந்துவனவாம் எனவும், அதனாற் சிவபெருமானை நாயகபாவத்தில் வைத்துச் சொல்வதன்றி நாயகி முறையிற் பொருள் கொண்டது குற்றமெனவும் பகர்தலுமடாது. நாம் இலக்கண நூல்களானும், அவற்றது உரைகளானும், தலைவி தலைவனிலும் தாழ்த்தப்படாமையை நிரூபிப்பாம்.

தொல்காப்பியப் பொருளதிகாரத்துக் களவியலிலே "ஒத்தகிழவனுங் கிழத்தியுங் காண்ப" என்று போந்த சூத்திரத்துக்குப் "பிறப்புமுதலியன பத்

தும் ஒத்த தலைவனுந் தலைவியும் எதிர்ப்படுப" என உரை செய்தார் நச்சினார்க்கினியர். இதனால் தலைவி தாழ்த்தப்படாமை உணர்க.

ஆலவாய் அழனிறக்கடவுளாகிய சுந்தரேசர் "அன்பினைந்திணை" என்பதை முதலாகவுடைய தலைவிக்குந் தலைவற்கும் ஒப்புமை யுணர்த்துவார் பொருளிலக்கண நூலிலே இரண்டாஞ் சூத்திரத்திலே "தானேயவளே" என்று திருவாய் மலர்ந்தருளினார். இதற்குப் பொய்யடிமையில்லாப் புலவர்களுள் ஒருவராகிய நக்கீரனார் "தானே அவள் அவளே தான்" என்பது என் சொல்லியவாறோ வெனில், "தான் (நாயகன்) அவள் (நாயகி) என்னும் வேற்றுமையிலர்" என்று பொருள்கூறி இதனோடமையாது, அவர் "ஆண்பாலகளாளிவனோடொத்தாரு மில்லை மிக்காருமில்லை, குறைவுபட்டாரல்லது; எக்காலத்தும் எவ்விடத்தும் ஞானத்தானும் குணத்தானும் உருவினாலும் திருவினாலும் பொருவிலன்றானே யென்பது, இவளும் அன்னளெனவே இருவரும் பொருவிறந்தா ரென்பதனைப் பயக்கும்" என்றும் விரித்து விளக்கினார். இங்ஙனம் கூறினமையால் நாயகனிலும் நாயகி தாழ்த்தப்படா ளென்பது பெறப்பட்டது.

திருவாரூர் வைத்தியநாத நாவலரும் இலக்கண விளக்க வாயிலாக முன்னர்க்கூறிய தொல்காப்பியச் சூத்திரத்தைப் பெயர்த்து "ஒத்த கிழவனுங் கிழத்தியுங் காண்ப" என்று சூத்திரித்து நாயகிக்கும் நாயகனுக்கும் பேதமில்லாமையை விளக்கினார்.

பரிமேலழகியார் களவாவது பிணி மூப்புக்களின்றி எஞ்ஞான்றும் ஒரு தன்மையராய் உருவுந் திருவும் பருவமுங் குலனும் குணனும் அன்புமுதலியவற்றால் தம்முள் ஒப்புமையுடையராய தலைமகனும் தலைமகளும் பிறர்கொடுப்பவும் அடுப்பவு மன்றிப் பால்வகையாற் றாமே எதிர்ப்பட்டுப் புணர்ந்து வருவது" எனக் களவிலக்கணங் கூறியவழித் தலைவிக்கும் தலைவற்கும் பேதமில்லாமையையும் விளக்கினார்.

மேலே போந்த தொல்காப்பிய முதலிய அதிபலப் பிரமாணங்களால் நாயகியும் நாயகனும் ஒத்தார் என்பது பெறப்படுதலானும், சித்தியார் "சிவன் சீவனென்றிரண்டுஞ் சித்தொன்றா மென்னிற் சிவனருட் சித்திவனருளைச் சேருஞ் சித்து" என்றற்றொடக்கத்த திருச்செய்யுளினாலும், நாயகியாகிய சிவற்கு உயர்வும் நாயகனாகிய சீவற்கு இழிவுங் காணப்படுதலானும், "பிறப்பே குடிமை" என்னுஞ் சூத்திரத்து நச்சினார்க்கினியர் நாயகனிலும் நாயகிக்கே மேலே போந்த ஒத்தபிறப்பு முதலிய பத்து மெய்ப்பாடும் உரியனவாம் என உயர்வு காட்டியதனாலும் நாயகனிலும் நாயகி தாழ்த்தப்படாமை செவ்விதினறியப்படும்.

இன்னும் இறையனாரகப்பொருளில் "கொடுமையில்லைக் கிழவிமேன" புகழுஞ் செறிமையுங் கிழவிமேன" என்றிங்ஙனம் போந்த சூத்திரங்களால்



நாயகி ஓர்கால் தக்காளெனப்படுதலும் ஓர்கால் தகாள் எனப்படுதலு மின்றி எக்காலத்தும் ஒருதன்மையளே யாவள், நாயகன் ஓர்கால் தக்கானெனப்படுதலும் ஓர்கால் தகான் எனப்படுதலும் உடையன் என்பது பொருளாகப்பெறப்படுதலால், சிவப்பொருளாம் நாயகி ஓர்காலும் வேறுபடாது ஒரே நிலைமையினளாம் என்பதூஉம், ஆன்மாவாகிய நாயகன் அன்னனல்ல னென்பதூஉம் பெறப்பட்டு நாயகனிலும் நாயகிக்கே சிறப்புக் காட்டப்பட்டவாறும் உணர்க.

நாயகனுக்குப் பெருமை கொடுக்கவேண்டிப் "பெருமையுமுரனு மாடூஉமேன" எனவும் நாயகிக்கு இழிவு கொடுக்கவேண்டி "அச்சமுநாணு மடனு முந் துறுத்த-நிச்சமும் பெண்பாற் குரியவென்ப" எனவும் தொல்காப்பியர் சூத்திரித்தாராலோ வெனின் "இச்சூத்திர மிரண்டும் நாடக வழக்கின்றிப் பெரும்பான்மை உலகியல் வழக்கே கூறலில் இக்கந்தருவம் இக்களவிற்குச் சிறப்பின்றாம்" என நச்சினார்க்கினியர் உரைத்த விசேஷ உரையினால் இவ்விரு சூத்திரமும் களவொழுக்கம் என்னும் பெயர்பெற்று வீடுபேற்றின் பயத்ததாய களவியலுற்ற திருக்கோவையார்க்கு ஏலாவாம் என்க. அதுவுமன்றி ஒத்த கிழவனும் கிழத்தியுமாம் என்று கூறிய தொல்காப்பியச் சூத்திரத்தோடும் மாறுபடும் எனவும் உணர்க.

(எ) திருக்கோவையா ருண்மை இயற்றிய ஞானாசாரியர் பெறுவான்நாயகனும் பேறு நாயகியும், இன்ப சுகம் நாயகியும் இன்ப சுகத்தைப் பெறுவான் நாயகனும், இரசமும் நாவும்போல விருத்தலான் என்று திருவாய்மலர்ந்தருளினார். சர்க்கரையின் இரசத்தைக் கொள்வது நாவேயாமாறு போலச் சிவபரம் பொருளின் பரமசுகத்தைக் கொள்பவன் ஆன்மா என்றும் வரைந்த ஞானாசிரியர் கருத்து உண்மையாமென்பது பின்னர்ப்போதருஞ்செய்யுட்களால் உணரற்பாற்றாம்.

## துகளறுபோதம்

(பரமானந்தபோகம்)

நாவா ரிரதமது நாவருந்த லல்லாதிங்
காவா ரிரத மறியுமோ—வோவாப்
பரமசுக முன்டாற் பலிப்பதே யன்றிப்
பரமசுகங் கொள்ளாப் பயன்.

## தத்துவப்பிரகாசம்.

(ஆன்மலாபம்.)

சர்க்கரை தேன்பால் கண்டு தான்கலந் தருந்து மாபோல்
முற்றிய விரத மாக முழுவிர தத்தை நீங்காப்
பொற்பது போலுந் தானாய்ப் போந்தவ தரித்த போதே
சிற்பர னான்ம லாப மாமது திருந்தக் காணே.

மேலே போந்த திருச்செய்யுள்களால் பேறு சிவமென்பதும், பெறுவான் ஆன்மா என்பதும் அறியக்கிடத்தலாற் பெரியோர் பரமானந்த போக நிலையை ஆன்மலாபமெனக் கூறுவர். இலாபம் என்பது பேறு என்னும் பொருட்டு. இவ்வுண்மை ஒரேபொருள் விளக்கம் கிளர்ந்த மேலே போந்த திருச்செய்யுளிரண்டின் றலையிலே பெரியோராலே தனித்தனி இடப்பட்ட விஷயக்குறிப்பைப் பொருத்திப் பார்க்கும் அறிவுடையோர்க்குப் புலப்படும். துகளறுபோதம் பரமானந்தபோகம் என்று கூற, தத்துவப்பிரகாசம் அதனை ஆன்மலாபம் என்று கூறிற்று. இதனால் இன்ப சுகம் சிவனெனவும் இன்ப சுகத்தைப்பெறுவான் நாயகன் எனவும் பெறப்படும். உலகச்சிற்றின்ப விஷய சுகங்களினும் சிவானந்தம் அளவறுக்கொணாதா மாதலின், இன்பமென்பது சுகத்தோடிசைந்து இன்பசுகமென முடிந்து துகளறுபோத நூலார் பரமசுகமென்று கூறிய திருச்செய்யுட் கருத்தையும் காட்டி நின்றது. மேலே போந்தவாற்றாற் பரமானந்த சொரூபமாம் சிவத்தையும் அதனை அனுபவிக்கின்ற ஆன்மாவையும் முறையே புஷ்பத்தின் தேனுக்கும் அதனைப் பருகும் வண்டுக்கும் ஒப்பாகப் பெரியோ ரெடுத்தாளுவர். இதனால் மலர்த்தேன் பரமசிவானந்தத்துக்கும், வண்டு சிவானந்தத்தை அனுபவிக்கும் ஆன்மாவுக்கும் உபமானமாகப் போதருவனவாம்.

ஸ்ரீ காசிவாசி - செந்திநா தையர்.

---

## A CONDOLENCE.

## பரிந்துரை.

[இஃது இரட்டணைத்தமிழ்ப் பண்டிதையார் அசலாம்பிகை யம்மையவர்கள் தமதருமைத் தந்தையாரை யிழந்து மனங்கலங்கியவழி அவர்கள்பாற் பரிந்து அவர்கள் ஆற்றியிருத்தல் வேண்டி நிருபமென வரைந்து விடுத்தது.]

(1) இரட்டணைப்பே ரூரின்கண் வேதியர்தங் குலமினிதி
    னிலங்கத் தோன்றி
மருட்டுவிழி மடவார்த முரிமையெலாங் கவர்ந்துகொடு
    மயங்கிப் பேசுந்
திருட்டுமொழி யாளர்தமை வாதித்துப் புறங்காட்டிச்
    செலத்தொ லைத்துத்
தெருட்டுரைகள் பலவெழுதித் திகழசலாம் பிகையம்மைத்
    தெரிவை காண்க.



வேறு.

(2) கலைநல மல்கிய காரிகையீ
ரலைகடல் சூழ்தரு மம்புவியின்
மலைகளும் வன்மைய மாநிலமு
நிலைகுலை தந்தழி நீரனவே.

வேறு.

(3) இவ்வுண்மை யறிந்தார்க ளெதுவரினுங் கலங்கிலா
ரௌவியமில் குணக்குன்ற யரியகுல மரபுவழாச்
செவ்வியசீர் வாய்ந்திருந்த திருப்பெருமா னையனுந்தை
யவ்வுலகஞ் சென்றமைகேட் டம்மவுள முடைவர்பலர்.

வேறு.

(4) நும்மோய் கைம்மை நோன்புகொள
லெம்மாண் பிற்கண் டிருப்பிர்கொலோ
வம்மா வதனை யாய்வுழியுள்
விம்மா நிற்றல் விளம்பறியேன்.

வேறு.

(5) என்றாலும் பண்டிதையீ ரித்துயர மிவ்வுலகி
னென்றானும் வரற்பாற்றென் றின்பவுளங் கவன்றுமிகக்
குன்றாம லமைந்திருத்தல் கோளென்று நாடோறு
நன்றாகு மாறறிந்து நடப்பிரென நம்புவலே.

வேறு.

(6) இன்பமே வடிவாக் கொண்ட வெம்பெரு மான்ற னீண்டைத்
துன்பமே யெவர்க்குங் காட்டித் தொல்லைநல் வழியி லுய்த்து
வன்புகள் பலவுஞ் செய்து வாய்மையைத் தெரித்துப் பின்னர்
நன்பெரு ஞான வீடு நல்குவன் மெய்ம்மை கண்டீர்.

வேறு.

(7) இனியி வுண்மை யெய்த்தநீ
ரினிய வுள்ள மேங்கலிர்
நனிந னூல்க ளோடுபு
மனியி ருந்து வாழ்விரே.

வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியார்.

## EDITORIAL NOTES.

## பத்திராதிபர் குறிப்புக்கள்.

போவர்சமாதானம்:—இதுகாறும் தென்னாபிரிக்காவில் நடந்து கொண்டிருந்த பெரும்போர் நின்றுவிட்டமை கேட்டுக் களிப்படையாதார் யாரே? இருதிறத்தாருக்கும் அநுகூலமாகச் சமாதான வுடன்பாடு ஏற்பட்டுளதாம். நம்மன்னவர் எட்வர்ட் வள்ளலார் முடிசூட்டுக் கொண்டாட்டக் காலத்தில் அவராளுகைக் குட்பட்ட நாடுகளி லெங்கேனும் போர் நிகழ்தல் நேரிதன்றாமெனவறிந்து போவர்த்தலைவர்கள் சமாதானஞ்செய்து கொண்டமை பாராட்டற் பாலதே.

***

முடிசூட்டுக் கொண்டாட்டம் நின்று பட்டமை:—நமது இந்திய சக்கிரவர்த்தியாரும் ஆங்கிலராஜருமாகிய எட்வர்ட் பூபதிக்கு முடிசூட்டுவதென்று ஏற்பட்ட ஜூன் மாதம் 26-ஆந் தேதியன்று அம் முடிசூட்டு வைபவம் நிகழாது போயிற்று. அவ்வாறு போனமைக்குக் காரணமென்? அரசரது அசௌக்கிய நிலையே. நம்முடைய வேந்தர் சிகாமணிக்கு வயிற்றின் மேற்புறத்திலொரு கட்டிகண்டு மிகுந்தவருத்தம் விளைத்தமைபற்றி வைத்தியம் வல்ல பண்டிதர்கள் அதை யறுத்துச் சிகிச்சை செய்தார்கள். இவ்வாறு குறிப்பிட்ட தினத்திலே நம்மரசர்க்கு நோய் வரும்படியாகநேர்ந்ததே யென்று உலகம் முழுவதும் வருந்துவதாயிற்று. முடிசூட்டுக் கொண்டாட்டத்திற்கெனச் சென்ற இந்திய கனவான்கள் யாவரும் அந்த வைபவங்காணாது திரும்பிவரவேண்டியதாயிற்று.

***

சக்கிரவர்த்தியாரவர்களின் தேகசௌக்கியம்:—மேற் கூறியவாறு மருத்துவர்கள் சிகிச்சை செய்ததன்மேற் கோமானுக்குத் தேகம் சுகநிலையை யடைந்துகொண்டு வருகிறதெனக் கேட்டுக் களிபேருவகை பூக்கின்றோம். நம்மவர்கள் அரசரது சுகப்பேற்றின் பொருட்டுத் தேவாலயங்களிற் பூசைகள் நடத்திக் கடவுளை வேண்டிக் கொண்டனர். இவ்வாறு நம்மவர்கள் வேண்டிக்கொண்ட வேண்டுகோட்குக் கடவுளு மிரங்கிக் கருணைகாட்டினமை பற்றி மீட்டும் பெருமானுக்கு உளமுவந்து பூசை செய்யற்பாலே மாயினேம். அரசர் தேகசௌக்கிய மடைந்தமையின் முடிசூட்டுக் கொண்டாட்டமும் கூடிய சீக்கிரத்தில் நிகழும்போலும். அது நிகழ்ந்து நம்மவர் மனங்களைக்களிப்பிப்பதாக.

***

திருப்பாதிரிப் புலியூரில் தமிழ்ப்பிரசங்கம்.—இம்மதி அப்பர் சுவாமிகள் திரு நக்ஷத்திரமாகிய சதயத்தன்றிரவு 8-மணிக்குமேல், திருப்பாதிரிப் புலியூரில் தோன்றாத் துணைவர் சந்நிதியின் முன்னும் திருவருள் விலாச நிலயத்தின் முன்னும், நடராஜப் பெருமான் சந்நிதியின் முன்னும் நின்று சென்னைக் கிறித்தவ கலாசாலைத் தலைமைத் தமிழ்ப் பண்டிதரும் நாடகத் தமிழாசிரியருமாகிய பிரமஸ்ரீ வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியாரவர்கள், பி. ஏ. திருத்தொண்டர் புராணமாகிய பெரிய புராணத்தினின்றும் இயற்பகை நாயனாரது சரிதத்தை யெடுத்துப் பலமேற்கோள்கள் காட்டிப் பிரசங்கித்தனர். அதைக்கேட்டு யாவருங் களிப்படைந்தனர்.



காற்றுக் கப்பல்:—டாக்டர் பார்டன் என்பவர் வானத்திற் காற்றிலே பறக்கவல்ல போர்க்கப்பலொன்று புனைகின்றனராம். அது வேண்டிய விடத்தில் நிற்கத் தக்கவாறு சூத்திரங்க ளமைக்கப்பட்டுளதாம். ஒரு மணிக்கு 20 மைல் தூரஞ் செல்லுமாம். வானத்திலேயே 48-மணி நேரந்தான் நிற்க முடியுமாம். அது மூன்று பிரிவினதாக வகுக்கப்பட்டுளதாம். நடுப்பிரிவு யந்திர வியக்கத்திற்கென அமைக்கப்பட்டுளதாம். என்னே மனிதனதாற்றல்!

ஜனத்தொகை:—இதுவரைக்கும் வெளிப்பட்டுள ஜனகணிதக் கணக்கின்படி பார்த்தால், பெல்ஜியத்தில் ஒரு சதுரடிக்கு 593 மக்கள் வீதம் 6,744, 532 ஜனங்களும், இங்கிலாந்தில் ஒரு சதுரடிக்கு 557 மக்கள் வீதம் 32, 532, 242 ஜனங்களும், உலாந்தில் ஒரு சதுரடிக்கு 403 மக்கள்வீதம் 5, !03, 924, ஜனங்களும், ஜப்பானில் ஒரு சதுரடிக்கு 296, மக்கள் வீதம் 43, 760,754, ஜனங்களும், ஜர்மனியில் ஒரு சதுரடிக்கு 269 மக்கள் வீதம் 56, 345, 014, ஜனங்களும், ஆஸ்திரியாவில் ஒரு சதுரடிக்கு 225 மக்கள் வீதம் 26, 107, 304, ஜனங்களும், ஸ்விட்ஜர்லாந்தில் ஒரு சதுரடிக்கு 207 மக்கள் வீதம் 3,212,551 ஜனங்களும், பிரான்சில் ஒரு சதுரடிக்கு 189 மக்கள் வீதம் 38,317,975 ஜனங்களுமாயிருப்ப, நம் இந்தியாவிலோ ஒரு சதுரடிக்கு 188 மக்கள் வீதம் குறைந்திருந்தபோதிலும், மொத்தத்தில் 294,266,70! ஜனங்களிருக்கின்றனர்.

நியாயஸ்தல வழக்கு:—நம் இந்தியாவில் நியாயஸ்தலக் கணக்குக்களை யெடுத்துப் பார்த்தால் சிவில் வழக்குக்கள் மட்டில் ஒரு வருஷத்திற்கு 2,000,000 என்பதும், அவற்றிற்குச் செலவு 19,500,000 பவுன் என்பதும் ஏற்படுகின்றன. அவற்றிற் பத்து ரூபாய்க்குக் கீழ்ப்பட்ட தொகைக்காகச் செய்த வழக்குக்கள் 400,000. ஐம்பது ரூபாய்க்கு மேற்படாத தொகைக்காகச் செய்த வழக்குக்கள் 900,000. இவ்வாறு வழக்குக்கள் அதிகரித்ததற்குக் காரணம் ஆங்கிலதேசத்து நாகரிகத்தை மேற்கொண்டமையே யென்று கூறுதல் அறிவின்மையின் பாற்படும். ஆங்கில நியாயாதிபதிகள் நியாயஞ் செலுத்துவதில் தக்கார் என்ற உணர்ச்சியே இந்தியர்களைப் பெருவழக்குத் தொடுக்கும்படி தூண்டிற்று என்பது தக்க காரணமன்றோ?

ஆண் பெண் மூளை வேறுபாடு:—மூளையின் பகுதிகள் ஆடவர்க்கும் பெண்டிர்க்கும் தக்கவாறு வெவ்வேறு விதங்களில் அமைந்திருக்கின்றன. முதற்கண் ஆடவர் மூளை மகளிர்மூளை யினும் மிகக்கனத்தது. இவ்வாறு மூளைகளின் பகுதிகள் வேறுபட்டிருக்கும் இயல்பினை உற்று நோக்கின் மகளிர்க்குக் கலை நலஞ் சிறக்கச் சிறக்க அவரது அழகு குறைந்துவிடும் என்று ஒரு வைத்தியர் அஞ்சுகின்றனர்.

சந்திர சேகர சிம்மசாமந்தர்:—இப்பெயருடையாரோர் வானசாஸ்திரி ஒரிஸாவைச் சார்ந்ததோர் குறுநிலமன்னர்க்கு உறவினராம். இவர் கர்நாடக வழியில் வானசாஸ்திரம் பயின்றவர். இக்காலத்திற் கண்டு பிடிக்கப்பட்டுள அநேக அருமையான வானசாஸ்திர உண்மைகளை இற்றை நாட் கருவிகளின் உதவியில்லாமலே தம்முடைய அவயவங்களின் உதவி ஒன்றையே கொண்டு கண்டு பிடித்திருக்கின்றனர். அவர் கண்டு பிடித்த வழிகளும் யாவரும் மெய்ச்சத்தகுந்தனவா யிருக்கின்றன. நம்முடைய இந்து பிராசீன சித்தாந்தங்களிற் காணப்படாத பல அருமையான உண்மைகள் இவரால் வெளியிடப்பட்டிருக்கின்றன. இவர் பல ஆங்கில வான நூற்புலவர்களாலும் நன்கு மதிக்கப்பட்டிருக்கின்றனர். இப்புலவர் பெருமான் நீடூழி வாழ்வாராக.

**சுகுண சுந்தரம்:**—இப்பெயர் கொண்டதோர் மாதாந்தத் தமிழ்ப்பத்திரிகை இருபத்து நான்கு பக்கங்கள் கொண்டது. மூன்று ரூபா வருஷச்சந்தாக் கொண்டது துறையூர்த் தமிழ்ப்பண்டதர் விசுவநாதபிள்ளையவர்களாற் பதிப்பிக்கப்பட்டு வருகின்றது. சென்ற மேமாதம் வெளிப்பட்ட இதன் முதற் சஞ்சிகையைக் கண்ணுற்றோம். அதன்கண் சுகுணசுந்தர மெனப் பெயர் கொண்டபத்திரிகையினைப்பற்றியும் இரவலா தீர்த்தபுரி சுபாஷிணி கதாப்பிரசங்கம் இரதோற்சவம் என்னும் விஷயங்களைப் பற்றியும் எழுதப்பட்டிருத்தலே யன்றி 1902-ஆம் வருஷத்துப் பிரவேசபரீட்சைத் தமிழ்ப்பாட புத்தகத்திற் சில வினாக்களெழுப்பி அவற்றிற்கு விடையும் காட்டப்பட்டுள. எனவே இது மாணாக்கர் பயன் கருதி ஏற்பட்டதோர் பத்திரிகை போலும். இதனைத் தமிழபிமானிகளாவார் ஆதரிப்பாரென்று நம்புகின்றோம்.

**ஸ்ரீரங்கக்களவு :**—திருக்கோயில் என வைணவர்களாற் சிறப்பித்துச் சொல்லப்படும் திருவரங்கமா நகரத்தி லெழுந்தருளியிருக்கும் பெருமாள் கோயிலிற் சின்னாண் முன்னர்த் திருடர்கள் சிலர் புகுந்து கொள்ளையிட்டன ரென்பது கேட்டு மனம் புழுங்குகின்றோம். முதற்கண் யாரோ பட்டாணித் துருக்கர்களா யிருக்கவேண்டும் அத்திருடர்களென ஐயுற்றனராம். பின்னர்க் கோயிலினுள் துப்பறிந்து கொண்டவன் யாரோ உதவி செய்திருக்கவேண்டுமென்றும் அக்கோயி லுத்தியோகஸ்தர்களிற் சில்லோரும் அதிற் சேர்ந்திருக்கலாமென்றும் ஐயுறுகின்றார்கள். எஃதெப்படிப் போனாலும் போகட்டுமென்றாலும் இப்போழ்தத்து ஸ்ரீ ரங்கநாதர்க்குப் பூஜை முதலியவற்றுளொன்று மின்றிக் கதவு தாழிடப்பட்டுளது.

**திராவிட வர்த்தமானி :**—நமக்கு மாற்றுப்பத்திரிகையாக வரும் வாரப் பத்திரிகைகள் யாவற்றினுள்ளும் இப்பத்திரிகை மிகவுஞ் செவ்வையாக நடைபெற்றுக் கௌரவத்தோடும் கம்பீரத்தோடும் உலாவிப் பலவருமையான விஷயங்களைத் தெரிக்கின்றது. மேலும் ஐயுற்பாலவான சிற்சில விடங்களில் இப்பத்திரிகை துணிந்து தனது அபிப்பிராயத்தை வெளியிடுமாறு வியக்கத்தக்கதே. இதன் கண்ணே அடிக்கடி சில சித்திரப்படங்கள் கண் கவர்வனப்பினவாய் வெளியாகின்றன. இப்பத்திரிகையைத் தமிழ் பேசும் மக்களுட் பலர் ஆதரிப்பாரென் றெண்ணுகின்றனம்.

**மாப்பிள்ளை விலைப்பணம் :**—முன் காலத்திலிருந்த மகளிர் விலைப்பண மொருபுறமிருப்ப இக்காலத்திலோ மாப்பிள்ளை விலைப்பண மென்றொன்று தலைப்பட்டிருக்கின்றது. அதாவது பெண்ணைக் கொடுப்பவர் மாப்பிள்ளைக்கு ஆயிரக்கணக்காகப் பணத்தையுங் கொடுத்து மருகனை விலைக்குப் பெறும் பணமாம். இவ்வழக்கம் தஞ்சாவூர் ஜில்லா வெங்கும் பரவியிருந்தது ; இப்பொழுது தமிழ் நாடெங்கும் பரவுவதாயிற்று. இத்தகைய மாப்பிள்ளை விலைப்பணத்தை அம்மாப்பிள்ளையின் தாய் தந்தையர் தத்தஞ் செலவுக்கு உபயோகப்படுத்திக் கொள்வதும் வழக்கம். அப்படிச்செலவு செய்து கொள்வது எவ்வாறு நேரிதோ? அறியோம். சின்னாண் முன்னர் ஓரிடத்தில் நிகழ்ந்த விவாகத்தில் மாப்பிள்ளை விலைப்பணம் ரூபா 6000. என்றேற்பட்டது. விவாகத்துக்கு முதல்நாள் பணமுங்கொடுக்கப்பட்டது. அப்பணத்தைப் பெற்ற மாப்பிள்ளையின் தகப்பனார் தமக்கு வேண்டியவாறு செலவு செய்யத் தலைப்பட்டனர். அஃதுணர்ந்து மாப்பிள்ளை மறுநாட் காலை மணவினைப் பொழுதில் வரமாட்டேனென்று விட்டான். இது மிகவும் பரிதபிக்கத் தக்கதன்றோ ? இதனை யறிந்து நம்மவர் தக்கவாறு நடப்பாராக.

ஞானபோதினி.

சம்புடம் V. } 1902ஸு ஜூலைமீ { புத்தகம் 12

# INDIAN LOYALTY.

## இந்தியர் இராஜபக்தி.

நம் இந்தியாவில் முற்காலங்களிலிருந்த மாந்தரனைவரும் அவ்வக்காலங்களி லிருந்த அரசர்களிடத்திற் பக்தியுடையரா யொழுகினார்கள். இவ்வுண்மை அக்காலத்து இயற்றப்பெற்று இப்பொழுது நாமெல்லாம் படித்துணரத்தக்க பெருமை சான்ற காப்பியங்களா னினிதறியப்படும். மாந்தரது அகவிருளாகிய அஞ்ஞானத்தை நீக்கும் கல்வியும், உலகத்திலுள்ள புறவிருளை நீக்குஞ் சூரியனும், மாந்தர்க்கு அநீதியாகிய காரிருளை நீக்குங் காவலனும் ஆகிய இம்மூவரும் மக்கட்கு மூன்று கண்கள் ; அக்கண்களுள் முதற்கண் காவலனும், இரண்டாங்கண் கல்வியும், மூன்றாங்கண் சூரியனுமென நூல்கள் வகைப்படுத்தோதின.

“ கண்ணெனப் படுவ மூன்று காவலன் கல்வி காமர்
விண்ணினைச் சுழல வோடும் வெய்யவ னென்னும் பேர
வெண்ணினுட் டலைக்கண் வைத்த கண்ணஃ தில்லை யாயின்
மண்ணினுக் கிருளை நீக்கும் வகைபிறி தில்லை மன்னோ”

என்று நன்கெடுத்தோதினார் சூளாமணியுடைய தோலாமொழித் தேவர்.

வைத்தியன் மக்களது உடலொன்றையே தனது மருந்துகளானுஞ் சிகிச்சைகளானுங் காக்கவல்லன்; நியாயவக்தாவோ மாந்தரது பொருளொன்றையே தனது சட்ட வுணர்ச்சியானும் நியாயநூற் பயிற்சியானும் யுக்திகளானும் பாதுகாக்கவல்லன் ; குருவோ மனிதரது ஆன்மா வொன்றையே தனது வன்மையான் மலபந்தத்தினின்

றும் நீத்துக் காக்கவல்லன். மக்களது உடல் பொருளாவி மூன்றையுந் தனித்தனி முறையே பாதுகாக்கவல்லார் வைத்தியனும் நியாயவக்தாவும் குருவுமென்ப தேற்பட்டதே யொழிய இவை மூன்றையும் ஒருங்கே காக்கவல்லார் அவரென்ப தேற்படவில்லை. அவர் இவை யனைத்தையு மொருங்கே காக்கவும் வல்லரல்லர். மற்று யாவரே அவ்வாறு காக்கவல்லா ரெனில், அரசனே. தன்னானுந் தன் பரிசனத்தானும் பகைவரானும் மக்கட்கு இடுக்கண் நேராதவாறு அவரது உடல் பொருள்களைக் காத்தும், மக்களது சாதிகுலாசாரங்கட்கும், சமய சாஸ்திர வொழுக்கங்கட்கும் பழுது வாராதவாறு அவரது ஆவியைப் பாதுகாத்தும் வருதலான் வேந்தனே மாந்தரது உடல் பொருளாவி மூன்றையு மொருங்கே காக்கவல்லன்.

“ மாநிலங்கா வலனாவான் மன்னுயிர்காக் குங்காலைத்
தானதனுக் கிடையூறு தன்னாற்றன் பரிசனத்தா
லூனமிகு பகைத்திறத்தாற் கள்வரா லுயிர்தம்மா
லானபய மைந்துந்தீர்த் தறங்காப்பா னல்லனோ ?”

என்றார் பெரியபுராணமுடைய சேக்கிழார் சுவாமிகள். இதனானே மன்னவன் மாந்தரது உடல் பொருள்கள் காக்குமாறு பெறப்படும்.

“ அந்தணர் நூற்கு மறத்திற்கு மாதியாய்
நின்றது மன்னவன் கோல்”

என்றார் திருக்குறளுடைய தெய்வப்புலமைத் திருவள்ளுவனார். இன்னும்,

“மாதவர் நோன்பும் மடவார் கற்புங்
காவலன் காவ லின்றெனி னின்றால்”

என்றார் மணிமேகலையுடைய மதுரைக் கூலவாணிகன் சாத்தனார். இவற்றினானே யரசன் மக்களது ஆவியைப் பாதுகாக்குமாறு பெறப்படும்.

மேற்கூறியாங்குத் தன் கீழிருக்குங் குடிகளைப் பாதுகாக்குங் கோமானை மறக்கவு மொண்ணுமோ ? கடவுளிடத்துப் பக்தியுடையராதல் போலக் காவலனிடத்தும் மக்கள் பக்தியுடைய ராவரன்றே.

“உறங்கு மாயினு மன்னவன் றன்னொளி
கறங்கு தெண்டிரை வையகங் காக்குமால்”

என்றார் சீவகசிந்தாமணியுடைய திருத்தக்கதேவரும்.



மேற்கூறியவாறு அரசனுக்குங் குடிகளுக்குமுள்ள வியைபினை நன்குணர்ந்தவராகிய நம் இந்தியர்கள் தம்மன்னவர் ஜாதியினாலும் சமயத்தினாலும் வேறுபட்டவராயினும் அன்னார்க்கடங்கி அவரதாணை வழியொழுகும் இராஜபக்தர்கள். ‘வல்லான் வகுத்ததே வாய்க்கால்’ என்றிருந்த முற்காலங்களிலேயே நம் இந்தியர் நிலைமை இற்றென்றால், எளியரும் வலியரும் வேறுபாடின்றி ஒரு தன்மையராய்ப் பாராட்டி நடத்தப்படும் நடுவு நிலைமையும் நீதியும்வாய்ந்த நம் ஆங்கில வரசாட்சிக்காலத்தில் நம் இந்தியர்களிடத்தில் இராஜபக்திக் குறைவு எங்ஙனம் ஏற்படும்? ஒருநாளும் ஏற்படாதென்பது திண்ணம்.

பாஷை, நடையுடை, ஜாதி, சமயம், நிறம் முதலிய பலவாற்றானும் வேறுபட்டமையின் இந்தியரும் ஆங்கிலரும் தொடக்கத்தில் ஒருவரை யொருவர் நன்குணராது இருவர்க்கும் வேற்றுமையுணர்ச்சி யேற்படுவதாயிற்று. வரவர ஆங்கிலபாஷை இந்தியருட் பரவுவதாயிற்று; மேற்புலவாணரது நடையுடைகளும் ஓராற்றாற் பின்பற்றப் படுவனவாயின. ஆகவே நம் இந்தியர்க்கும் ஆங்கிலர்க்குமுள்ள வேற்றுமையுணர்ச்சி குன்றி ஒற்றுமையுணர்ச்சி மிகுந்துகொண்டே வருகின்றது. அஃதாவது முன்னையினும் இப்போழ்தத்து இராஜபக்தி மிகவும் வளர்ந்து வருகின்றது.

இவை யனைத்திற்கும் அறிகுறியாய் நம் விஜயைமகாராணியார் காலஞ் சென்றபோது நம் இந்தியர்கள் எய்திய துக்கத்திற்கோரளவுண்டோ? தாயிழந்த புனிற்றிளங் கன்றெனக் கதறினர். மற்று மகாராணியாரது மூத்த புதல்வரும் அரசுரிமை வாய்ந்தவருமாகிய எட்வர்ட் வள்ளலார் சிங்காதன மேறினமைகேட்டு நம் இந்தியரனைவரும் பேரானந்தக் கடலினுள் திளைத்து விளையாடினர். இதுபோலவே நம்முடைய சக்கிரவர்த்தியாரது முடிசூட்டுக் கொண்டாட்டத்தி னிமித்தம், அக்காட்சியை நேரேகாண வேட்டுச்சீமை சென்றவரும், பரிசில் கொடுக்கச் சன்னத்தரானவரும், அன்னதானம் செய்ய வேட்டவரும், பாடல்பாடுநரும், கடவுளைத் துதிப்பவரும், அவ்வானந்தத்தி னறிகுறியாக நாடகமாட விரும்பியவருமாயிருந்தனர். இவ்வாறு நம்மவர் இராஜபக்தி தலைக்கிளர்ந்தோங்கி வெளிப்பட்டிலவும் அமயத்து, ‘அரசர்க்கு உடம்பு செவ்வையில்லை

யாதலின் முடிசூட்டுக் கொண்டாட்டம் இதுபோழ்து நிறுத்திவைக்கப்பட்டது' என்று இடிவிழுந்தாற்போல்வதோர் செய்திகேட்டு நம் இந்தியா முழுவதும் நடுங்கிக் கலங்கலுறெய்திற்று. அங்ஙனம் மனந்தளர்ந்த நம் இந்தியராவார் வாளாதிராது உடனே தேவாலயஞ் சென்று மன்னவர் பெயராற் பூஜை செய்வதும், அர்ச்சனை புரிவதும், சோதிடர்பாற் சென்று கேட்பதும், பத்திரிகைகளில் தந்திச் சமாசாரங்களைப் பார்ப்பதுமா யிருந்தனர்.

பின்னர்ப் பத்திரிகைகளும் அரசரது சௌக்கிய நிலையைப்பற்றி நற்செய்திகள் சொல்லிவரவே எம்மவர் மனங்களெல்லாஞ் சிறிது ஆறுவனவாயின. 'அரசர் முற்றிலும் சௌக்கியமே; பட்டாபிஷேகோற்சவம் அடுத்த மதியில் நிகழும்' என்ற செய்திகேட்டு, மூங்கையானும் பேச்சுவன்மை பெற்றெனக் களிகூர்வே மாயினேம். கூடிய விரைவினில் நம் எட்வர்ட் மன்னவருக்குப் பட்டாபிஷேகம் நிகழ்ந்து நம் இந்தியரனைவர்க்கும் இன்பம் பயப்பதாக.

இனி இராஜபக்தி நிரம்பிய நம்மவர்மேல் இராஜ விசுவாசக் குறைவு காண்பதாக வாய்ப்பறையறைந்து திரியுஞ் சில போலிமாக்களது வெருட்டுரை நம் இந்தியரை யச்சுறுத்தும் வலியிலவாய்க் கழியுமென்க. இந்தியரது ஆக்கமுஞ் சிறப்புங்கண்டு பொறாமை கொண்ட புல்லறிவாளர் சிலர் பொய்க்கதைகள் புனைந்துகூறி நம் இந்தியர் மீது அரசாட்சியார் கொண்டுள நல்லெண்ணத்தை மாற்றுவான் புக்கனர். புக்குமென்? அவரது கருத்துக் கைகூடாது போகவே வாய்பிளந் தேகினர்.

"அரசனுங் குடிகளு மம்ம வேறல
ருரைசெயி னுயிருலா முடல மாவரால்."—மதிவாணன்;

பத்திராதிபர்.



# AUVAIYAR.

# ஔவையார்.

## I. முகவுரை.

கடலாற் சூழப்பட்ட இவ்வுலகத்திற் பலவகைப்பட்ட சிருட்டி பேதங்களிலும் பெருமையும் சிறப்பும் புகழும் பகுத்தறிவும் பொருந்தி நிற்பது மானிடப்பிறப்பு. அம்மானிடப்பிறப்பும் சந்ததி பெருகிச் சிருட்டி வெகுகாலம் நிலைநிற்கும் பொருட்டு ஆண் பெண்ணென இருவகையினதாகக் கடவுளால் நிருமிக்கப் பட்டிருக்கிறது. ஆயினும் அறஞ்செய்தல், பொருள் சம்பாதித்தல், இன்பமனுபவித்தல், மோக்ஷமடைதல் ஆகிய இம்மை மறுமைப்பயன்களை அடைய இருதிறத்தாரும் ஒத்த உரிமையுடையவரா யிருக்கிறார்கள். 'அறம் பொருள் இன்பமும் வீடும்' தருவதும், 'எழுமையுமே மாப்புடை' யதும், 'உறுங்கவ லொன்றுற்றுழியுங்கை கொடுப்பதும்' கல்வியே யாகையால், அத்தகைய கல்வி இருதிறத்தார்க்கும் அவசியமென்பது இதனால் ஏற்படும்; கல்வி இவ்வாறு இருதிறத்தார்க்கும் அவசியமா யிருந்தும் அநேகர் பெண்களை ஆடுமாடுகளாகவும் அவைகள் தினவு நீங்க உராய்ந்துகொள்ளும் கட்டுத்தறிகளாகவும் நினைத்து வருகின்றார்கள். இக்குற்றமுடைய கொள்கை பாமரர்கள் மட்டுமே நில்லாமல் பாவலர்களுள் முதற்பாவலராகிய திருவள்ளுவ நாயனார் நெஞ்சத்தையுமன்றோ பற்றியது! அதன் வலியேவலி! அதன் வீரமே வீரம்! பிறனில் விழையாமை என்னும் குறளதிகாரத்தின் கீழ்ப் பிறன்மனையாள் என்று சொல்லவந்தவர் பிறன் 'பொருளாள்'* என்று கூறியிருக்கிறார்.

இதற்குப் 'பிறர்க்குப் பொருளாந் தன்மையுடையாள்' என்று பரிமேலழகரும் பொருள் கூறியிருக்கிறார். என்றாலும் 'மஞ்சளழகும் அழகன்று' எனவும் 'கல்வி யழகே யழகு' எனவும் பெண்களுக்குங் கல்வி அவசிய மென்று வற்புறுத்திக் கூறிய பெரியோர்களுமில்லாமற் போகவில்லை. அஃதன்றியும், ஆதிகாலத்திற் கல்வியில் தேர்ந்து புகழ்வாய்ந்த பெண்பாலாரும் பிறவாமற் போகவில்லை.

* 'பொருளாள்' என்பதற்கு அறத்திற்கும் இன்பத்திற்கும் கருவியாகிய சிறப்புடைய பொருள் போன்றவள் என்று பொருள் கொள்வாருமுளர்.

ஆனால், ஐயோ! அப்படிப்பட்ட பெண்கள்சிகாமணிகளின் உண்மைச் சரித்திரங்கள் காட்டில் மலர்ந்த பூக்களைப்போல யாவரும் அறியாதபடி பெரும்பான்மையும் அழிந்துபோய் விட்டன. அவ்வளவோடு நின்றுவிடாமல் நம்வரைக்கும் எட்டிய பெண்கள் சிகாமணிகளின் சிலர் சரித்திரமும் குரங்கின்கையில் அகப்பட்ட பூமாலைபோலச் சின்னபின்னமடைந்து வீணைக் கதைகளும் கட்டுக்கதைகளுமே நிறைந்தவையாயின. இது, நம் தமிழர்களுக்கு இயற்கையாக ஆராய்ச்சி யுணர்வுகுறைவே என்பதைக் காட்டுகிறது.

இங்கே நாம் விரித்துக்கூற எடுத்துக்கொண்ட விஷயம் கலைமகளார் அம்சத்தினரெனப் பண்டிதர்கள் கூறும் ஔவையாரைப் பற்றியதாகும். மற்றைப் பெண்கள் சிகாமணிகளின் சரிதம் போலவே இச்சீமாட்டியின் சரிதமும் கட்டுக்கதைகள் நிறைந்து கிடத்தலால் இவற்றினின்றும் உண்மையில் நடந்தவற்றை வேறுபடுத்தி உலகினர்க்கு வெளிப்படுத்துதல் கற்றோர் கடனாகும். இதனை இரண்டு வகையாற் செய்தல்கூடும். நூல்களாலும் சிலாசாஸநங்களாலும் துணிதல் ஒன்று; இவர் இயற்றியதாகக் கூறப்பட்டுவரும் இனிய சிறிய நூல்களின் ஆராய்ச்சியால் உறுதிபடக் கூறப்படுவது மற்றொன்று. இத்தன்மையான ஆராய்ச்சியால் இவருடைய உண்மைச் சரித்திரம் இதுவெனச் சிறிது எடுத்துக் கூறுவோம்.

முதன்முதல் ஔவையார் என்பது ஒருவருடையபெயர்தானோ அல்லது பலருடைய பெயரா யிருக்கக்கூடுமோ என்று சந்தேகிக்க இடமுண்டு. சுமார் ஒரு நூற்றாண்டிற்குமுன் வசைக்கவி பாடித்திரிந்த ஆண்டான் கவிராயன் என்பவனை ஒப்புமைநோக்கிக் காளமேகமென்று அழைத்து வந்ததனால் வசைக்கவிச் சிங்கமாகிய காளமேகம் அவனே என்று இக்காலத்திற் பல பண்டிதர்கள் நினைத்து வருகிறார்கள். அதுவுமல்லாமல் உண்மையே பேசுவோனை அரிச்சந்திரனென்றும் இல்லை யென்னாமற் கேட்டதைக் கொடுப்பவனைக் கருணனென்றும் அழகு மிருந்தவளை இரதியென்றும் செல்வமிக்கவளை இலக்குமி என்றும் கூறுதல் உலகவழக்கே யன்றோ? அது போலவே சகல கலைகளிலும் வல்ல பெண்பாலார் பூர்வகாலத்திற் சிலரேயாதலால் அவர்களுள் முதலில் தோன்றி நெடுங்காலஞ் சீவித்தவள் பெயரே பின் வந்தவர்களுக்கும் பெயராய் விட்டதாகவும் இருக்கலாம். அன்



றியும், ஔவையார் என்னும் பதத்திற்கு முதியவள் என்று பொருளாதலால் அஃது ஒருவருடைய இயற்பெயராகவுமில்லாமற் கல்வியும் முதுமையுமே ஆதாரமாகக் கொண்டு அநேகருக்கு இட்டுவழங்கிய ஒரு காரணப் பெயரென்றும் கொள்ள இடமுண்டு. ஔவையாரென்பது காரணப் பெயராயின் இயற்கைப்பெயர் இன்னதென்று சொல்லக்கூடாமையால் அஃது இவ்வகைப் பெயர்தானென்று துணியக்கூடவில்லை. ஆயின் அஃது ஒருவருக்கே அமைந்த சிறப்புப்பெயர் அன்று என்பதை மட்டும் மேலே காட்டுவோம்.

## II. காலவரையறை.

ஔவையார் எக்காலத்திலிருந்தவர் என்பதைப்பற்றிச் சிறிது ஆராய்வோம். முதன் முதல் ஔவையாரென்னும் பெயரைச் சங்க நூல்களின் ஒன்றென விளங்கும் புறநானூற்றிற் காண்கிறோம். அந்நூலில் 33 பாட்டுக்கள் அவராற்பாடப்பட்டிருக்கின்றன. அவர் அதியமானைப்புகழ்ந்து பாடிய புறம் 99-இல் 'இன்றும் பரணன் பாடினன்' என்று கூறப்பட்டிருப்பதனால் ஔவையார் பரணர் அதியமான் ஆகிய மூவரும் ஒரேகாலத்தவ ராகிறார்கள். இப்பரணர் 4-ஆம் புறப்பாட்டில் இளஞ்சேட் சென்னியைப் புகழ்ந்து பாடியிருக்கிறார். இவ்விளஞ்சேட் சென்னியின் மகனே சோழன் கரிகாற் பெருவளவன் என்பது பொருநராற்றுப் படைக்கு நச்சினார்க்கினியர் எழுதிய உரையால் விளங்குகிறது. இக்கரிகாற் பெருவளத்தானும் சிலப்பதிகாரத்திற் கூறப்படும் இளங்கோவடிகள், செங்குட்டுவன், சீத்தலைச் சாத்தனார், பெருநற்கிள்ளி முதலானவர்களும் 113 - கி. பி. இல் பட்டத்திற்கு வந்த இலங்கையரசன் முதற் கயவாகுவின் காலத்தவரே எனக் காலஞ்சென்ற சேடகிரி சாஸ்திரியார் தம் 'தமிழ்க்கவிசரித' வியாசத்தில் மிகத் தெளிவாக விளக்கி யிருக்கின்றனர். இதனால், ஔவையார் கி. பி. இரண்டாம் நூற்றாண்டின் முதலில் வசித்த கரிகாலனுடைய தந்தையார் காலத்தவர், அஃதாவது முதல் நூற்றாண்டின் இறுதியிலிருந்தவர் என்பது பெறப்படுகின்றது. ஔவையார் இருந்த காலத்தை வரையறுக்கும் வேறு சில ஆதாரங்களை யெடுத்து ஆராய்வோம்.

முதலாவது: ஔவையார் தாம் இயற்றிய மூதுரையில் 27-ஆம் பாட்டில் 'அல்லாத மாந்தர்க் கறங்கூற்றம்' என்று கூறியிருக்கிறார்.

இதனை இளங்கோவடிகள் 'அல்லவை செய்தார்க் கறங்கூற்றமாமென்று,பல்லவையோர் சொல்லும் பழுதன்றே' என்னும் சிலப்பதிகார வடிகளில் எடுத்தாண்டிருக்கிறார். அச்சுப்பிரதிகள் உலாவாத அந்நாளில் ஒரு நூலிலிருந்து மற்றொரு நூலிலெடுத்தாளப் படுதற்குக் குறைந்த பட்சம் அரைநூற்றாண்டாவது கழியும். இளங்கோவடிகள் கி. பி. 113-இல் வசித்தவர் என்று முன்னே காட்டினோம். ஆதலால் ஔவையார் முதல் நூற்றாண்டின் இறுதியில் வசித்தவராவார்.

இரண்டாவது : ஔவையார் 95-ஆம் புறப்பாட்டைக் காஞ்சிக்குத் தலைவனாக இருந்த தொண்டைமான் முன்னிலையிற் பாடினார். இத்தொண்டைமானையே 9-ஆம் நூற்றாண்டில் வசித்த சுந்தரமூர்த்தி நாயனார் வடதிருமுல்லைவாயிலில் திருவாய் மலர்ந்த பதிகத்திற் 'சொல்லரும் புகழான் தொண்டைமான்களிற்றைச், சூழ்கொடி முல்லையாற் கட்டிட்டு' என்று புகழ்ந்திருப்பதனால், அவன் அந்நாயனார்க்குச் சில நூற்றாண்டுகள் முன வசித்திருக்க வேண்டும். 9-ஆம் நூற்றாண்டிற்கு முன் வேறொரு தொண்டைமானும் இல்லை யாதலின் இத்தொண்டைமானே கடியலூர் உருத்திரன் கண்ணனார் பாடிய பெரும்பாணாற்றுப் படைக்குப் பாட்டுடைத்தலைவனும் தொண்டைமானிளந் திரையனுமாவான். இவ்வுருத்திரன்கண்ணனார் பாடிய பட்டினப்பாலைக்குப் பாட்டுடைத்தலைவன் கரிகாலன். இக்கரிகாலன் கி. பி. இரண்டாம் நூற்றாண்டின் முதலில் வசித்தவன் என்று முன் காட்டினோம். ஆதலின், தொண்டைமானும் அவனைப்பாடிய ஔவையாரும் அக்காலத்திலேயே இருந்திருக்கவேண்டும்.

மூன்றாவது: ஔவையார் காலத்தவர் பரணர் என்று முன் கூறினோம். இப்பரணர் பாடிய பதிற்றுப்பத்தின் ஐந்தாம் பத்திற்குப் பாட்டுடைத் தலைவன் செங்குட்டுவன். இச்செங்குட்டுவனும் கி. பி. 113-இல் வசித்தவன்என்று முன்னே காட்டினோம். ஆதலின், ஔவையார் கி. பி. இரண்டாம் நூற்றாண்டின் முதலில் வசித்தவராவார்.

நான்காவது: ஔவையார் 367-ஆம் புறப்பாட்டைப் பெருநற்கிள்ளி, உக்கிரப் பெருவழுதி, மாவெண்கோ என்னும் முத்தமிழ் வேந்தரை நோக்கிப்பாடினர். இப்பெருநற் கிள்ளியும் கி. பி. 113-



இல் வசித்தவனென்று முன் காட்டியிருப்பதனால் ஔவையார் கி. பி இரண்டாம் நூற்றாண்டின் முதலில் வசித்தவராவார்.

ஐந்தாவது: மேற்குறித்த 367-ஆம் புறப்பாட்டில் ஔவையார் பாடிய உக்கிரப் பெருவழுதி திருவள்ளுவரையும் அவர் இயற்றிய திருக்குறளையும் புகழ்ந்து, 'நான்மறையின் மெய்ப்பொருளை முப்பொருளா நான்முகத்தோன், தான்மறைந்து வள்ளுவனாய்த் தந்துரைத்த-நூன்முறை'யென்று பாயிரங் கூறியிருத்தலால் ஔவையாரும் திருவள்ளுவரும் ஒரே காலத்தவராவார். திருவள்ளுவர் கி. பி. முதல் நூற்றாண்டில் வசித்தவர் என்று இப்பொழுதே காட்டுவோம். ஆகவே, ஔவையாரும் கி. பி. முதல் நூற்றாண்டினராவார்.

இவ்வாறு பல நியாயங்களாற் புறநானூற்றிற் கூறப்பட்டுள்ள ஔவையார் கி. பி. முதனூற்றாண்டின் இறுதியிலும் இரண்டாம் நூற்றாண்டின் முதலிலும் இருந்தனர் என்று துணியலாம்.

திருவள்ளுவர் காலமிதுவென வரையறுப்போம். திருவள்ளுவரியற்றிய திருக்குறளுக்குப் பாயிரம் தந்தவர்களுள் ஒருவர் சீத்தலைச் சாத்தனார். அன்றியும், அவ்வாறு பாயிரம் தந்தவர்களில் மற்றொருவராகிய மருத்துவன் தாமோதரனார் தம் பாயிரத்தில் 'வள்ளுவர்முப் பாலாற் றலைக்குத்துத் தீர்வுசாத் தற்கு' என்பதனால் வள்ளுவர் காலத்தவர் சீத்தலைச் சாத்தனார் என்பதைக் குறிப்பிட்டிருக்கிறார். மற்றும், இச்சீத்தலைச் சாத்தனார் 'தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள், பெய்யெனப் பெய்யு மழை' யென்னுங் குறளைத் தாமியற்றிய மணிமேகலையில்,

மாபெரும் பூதந் தோன்றி மடக்கொடி
நீகே ளென்றே நேரிழைக் குரைக்குந்
தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் பெருமழை யென்றவப்
பொய்யில் புலவன் பொருளுரை தேறாய்.

என்ற அடிகளில் எடுத்தாண்டிருக்கிறார். இவ்வாறு ஒரு நூலிலிருந்து மற்றொரு நூலிலெடுத்தாளப்படுதற்குப் குறைந்தபட்சம் அரை நூற்றாண்டாயினும் கழியவேண்டுமென்று முன்னமே கூறினோம். சீத்தலைச் சாத்தனார் கி. பி. 113-இல் வசித்தவ ரென்று முன் காட்டினோம். ஆகவே, திருவள்ளுவர் ஔவையாரைப் போலவே. கி. பி.

முதல் நூற்றாண்டில் வசித்தவராவார். இம்முடிவைக்கொண்டு இன்னுஞ் சில மேலே கூறுவோம்.

இனி, ஔவையார் என்பவர் ஒருவர் தாமோ அல்லது வேறொருவரு முண்டோ என்பதைப் பற்றியும், உண்டாயின் அவர் எக்காலத்திருந்தவர் என்பதைப் பற்றியும் ஆராய்வோம். ஔவையார் இயற்றியதாகக் கூறப்பட்டுவரும் நல்வழியிற் கடைசிப்பாட்டில் 'மூவர் தமிழு'மென இருத்தலாலும் அம்மூவருள் அப்பர்சம்பந்தர்கள் கி. பி. ஏழாம் நூற்றாண்டிலும் சுந்தரர் ஒன்பதாம் நூற்றாண்டிலும் வசித்தார்க ளென்பதற்குக் காரணங்கள் உள்ளமையாலும் இந்நல்வழி இயற்றிய ஔவையார் புறநானூற்று ஔவையாரினும் வேறேயாவர்.

மற்றுப், புறம் 91 - இல்.

சிறியிலை நெல்லித் தீங்கனி குறியா
தாத னின்னகத் தடக்கிச்
சாத னீங்க வெமக்கீத் தனையே.

என்று ஔவையார் அதியமானைப் புகழ்ந்து பாடியதுகொண்டு அதியமான் அளித்த அருநெல்லிக்கனியின் பலத்தால் அவர் மரணத்தினின்றும் நீங்கிச் சிரஞ்சீவியராயினர்; ஆகவே, முதல் நூற்றாண்டில் வசித்த புறநானூற்று ஔவையாரே ஒன்பதாம் நூற்றாண்டிற்குப் பின்னுஞ் சீவித்தவராய் நல்வழி முதலிய நூல்களை இயற்றினரென்று சொல்வாரு முண்டு. மேற்குறித்த புறப்பாட்டு வரிகள் சொல்லாற்றலாற் பொருள் கொள்ளலா மென்னில், அவர் சிரஞ்சீவியராய் இன்னும் இவ்வுலகிற் சீவித்திருக்க வேண்டும். நெல்லிக்கனியை உண்டதனால் மக்களுயிர்க்கு அளவிட்ட நூறு வருடங்களுக்குமேல் இன்னுஞ் சில வருடங்கள் சீவித்திருந்தார் என்று கருத்தாற்றலாற் பொருள் கொள்ளக்கூடுமே யன்றிப் பல வருடங்கள் உலகத்திலிருந்தார் என்பது அறிவுடையோர் ஒப்புக்கொள்ளக் கூடாததாகும். இதனாற், புறநானூற்று ஔவையாரும் நல்வழி இயற்றிய ஔவையாரும் வேறுவேறே யாவர்.

ஆயின், இவ்விரண்டாம் ஔவையார் எக்காலத் திருந்தார்? இவர் இயற்றியதாக உறுதியாய்ச் சொல்லக்கூடியன நல்வழியும் தனிப்பாடற்றிரட்டி லெழுபது பாடல்களுமேயாம். நல்வழியின் கடைசிப்பாட்டு அதன் நூலாசிரியர் கி. பி. ஒன்பதாம் நூற்றாண்டிற்குப் பிந்தியவர் என்று தெரிவித்ததை முன்னே காட்டினோம். மற்றை நல்வழிப் பாட்டுக்கள் ஆசிரியர் காலம் இன்னதெனத் துணிவதற்குப் பயன்படாதவைகளாம். மற்றைத் தனிப்பாடல்களும் அவர் காலத்திருந்த மற்றைப் புலவர்கள் பாடிய பாடல்களுமே அவர் காலம் இதுவெனத் துணிவதற்குப் பயன்படுவன.



முதலாவது : ஒருகாலத்தில் ஒட்டக்கூத்தரும் புகழேந்தியும் இராஜசபையில் இருந்த காலத்தில் ஔவையார் அங்கேவந்து அவர்களை நோக்கிக் கடைசியடியிற் சந்திரன் பெயர் மூன்றுமுறை வரும்படி பாட்டொன்றுபாடக் கட்டளை யிடுதலும், உடனே ஒட்டக்கூத்தர்

வெள்ளத் தடங்காச் சினவாளை வேலிக் கமுகின் மீதேறித்
துள்ளி முகிலைக் கிழித்துமழைத் துளியோ டிறங்குஞ் சோணாடா
கள்ளக் குறும்பர் குலமறுத்த கண்டா வண்டர் கோபாலா
பிள்ளை மதிகண் டிப்பேதை பெரிய மதியு மிழந்தனளே.

என்று இரண்டு முறையே சந்திரன் பெயரை வைத்து ஔவையாரை இழிவாகக் கூறலும், உடனே ஔவையார் கோப மூண்டு,

'ஒட்டா ஒருமதி கெட்டாய்'

என்றுரெனவும், பிறகு புகழேந்தி

பங்கப் பழனத் துழுமுழவர் பலவின் கனியைப் பறித்ததென்று
சங்கிட் டெறியக் குரங்கிளநீர் தனைக்கொண் டெறியுந் தமிழ்நாடா
கொங்கர்க் கமரா வதியளித்த கோவே ராச குலதிலகா
வெங்கட் பிறைக்குங் கரும்பிறைக்கு மெலிந்தப் பிறைக்கும் விழிவேலே

என்று பாடினரெனவும் தனிப்பாடற்றிரட்டால் தெரிய வருகிறது. இதனால் இரண்டாம் ஔவையாரும் ஒட்டக்கூத்தரும் ஒரு காலத்தவராவர்.

இரண்டாவது : ஒட்டக்கூத்தர் இறந்துபோன காலத்தில், இரண்டாம் ஔவையார்,

நூற்றெண் பதின்காத நூங்கு நறுந்தமிழி
னேற்றமினி யென்னா மியலுமோ—போற்று
புவிராசர் யாரும் புகழொட்டக் கூத்தக்
கவிராசன் காட்சியிலாக் கால்.

என்று இரங்கிக் கூறியதாகக் கதை யிருக்கிறது. இதனாலும் இரண்டாம் ஔவையாரும் ஒட்டக்கூத்தரும் ஒருகாலத்தவராவார்.

மூன்றாவது : 'குலோத்துங்கச் சோழன் கோவை' என்றொரு நூல் ஒட்டக்கூத்தர் இயற்றியதாகக் கூறப்பட்டு வருகிறது. இதனால் குலோத்துங்கனும் ஒட்டக்கூத்தரும் ஒருகாலத்தவராவார்.

நான்காவது : குலோத்துங்கன் பட்டாபிஷேகம் செய்துகொண்ட பொழுது அவனைச் சபையார் முன் சிறப்பித்துக் கூறிய ஒட்டக்கூத்தர்,

ஆடுங் கடைமணி நாவசை யாம லகிலமெங்கு
நீடுங் குடையைத் தரித்த பிரான்

என்ற மாத்திரத்தில், ஆசிரியர் தன்னைப் புகழ்தல் தகாதென்றெண்ணி, உடனே குலோத்துங்கன்,

—இந்த நீணிலத்திற்

பாடும் புலவர் புகழொட்டக் கூத்தர் பதாம்புயத்தைச்
சூடுங் குலோத்துங்கச் சோழனென் றேயெனைச் சொல்லுவரே.

என்று முடித்ததாகவுந்தனிப்பாடற்றிரட்டுக் கூறுகின்றது. இதனாலும் குலோத்துங்கனு மொட்டக்கூத்தரும் ஒரு காலத்தவராவார். ஆகவே, இரண்டாம் ஔவையார் குலோத்துங்கன் ஒட்டக்கூத்தர் ஆகிய மூவரும் ஒருகாலத்திலிருந்தனர் என்பது பெறப்படுகின்றது.

ஐந்தாவது : மற்றுமொரு காலத்திற் குடந்தைப் பதியில் வீரசிம்மாதன மடத்திலுள்ள சங்கம மூர்த்திகளுள் ஒரு கிழவர் பிச்சையெடுத்துக்கொண்டே திருஞான சம்பந்தர் திருவாய் மலர்ந்த திருவீழிமிழலைப்பதிகத்தில் ஒரு பாசுரத்தைத் தப்பாகப்பாடினார். அதைக் கேட்டுக்கொண்டே வீதியிற் சென்ற ஒட்டக்கூத்தர் 'பெரியோர் வாக்கைப் பிழைபடக் கூறலாமா?' என்றுகூறிக் கோபித்து அவரைக் கன்னத்தில் அறைந்துபோயினார். அவ்வடியைச் சகிக்கமாட்டாமல் அக்கிழச் சங்கமர் மூர்ச்சையடைந்து இறந்துபோயினார். இதைக் கேட்டவுடன் மற்றைச் சங்கம ரெல்லாங்கூடி அவர் இறப்பதற்குக் காரணரான ஒட்டக்கூத்தரைக் கொல்வதே முறையென்று துணிந்து அவரைச் சூழ்ந்துகொண்டு போகுஞ் சமயத்திற் குலோத்துங்கன் நடந்த செய்திகள்கேட்டு விசனக் கடலில் மூழ்கினனெனவும் அச்சமயத்தில் ஔவையார் அரசனிடம் வந்து அவனை நோக்கி,

நாட்டிற் சிறந்தவ ரெல்லா நடுங்க நராதிபர்முன்
பூட்டுசிம் மாதன ராயிரத் தெண்மர்க்கும் போனவுயிர்



மீட்ட கவிச்சக்ர வர்த்திக்கிங் கோர்சங்க மேசனுக்குக்
கூட்டுவ தோவரி தையா குமார குலோத்துங்கனே.

என்று சமாதானம் கூறியதாகவும், அவ்வாறே ஒட்டக்கூத்தரும் அருகிருந்த ஒரு காளிகோயிலிற் சென்று ஒரு பிரபந்தம் பாடி அச் சங்கமனை எழுப்பியதாகவும் கேள்விப்படுகிறோம். இதனாலும் இரண்டாம் ஔவையாரும் குலோத்துங்கனும் ஒட்டக்கூத்தரும் ஒரு காலத்தவராவார்.

ஆறாவது : கம்பராமாயணத்தின் முதலாறு காண்டமே கம்பர் இயற்றியதாகவும் ஏழாவதாகிய உத்தரகாண்டம் ஒட்டக்கூத்தரியற்றியதாகவும் யாவரும் ஒப்புக்கொள்கிறார்கள். அரசனேவலாற் கம்பரும் ஒட்டக்கூத்தரும் இராமாயாணம் பாடிக்கொண்டுவரக் கம்பர் ஆறுகாண்டம் வரையிலும் இயற்றியது கேட்டு அது மிக நேர்த்தியாயிருக்கக்கண்ட ஒட்டக்கூத்தர் தாம் இயற்றிய இராமாயண ஏடுகளை உருவி உருவியாற்றிலிட்டு வரும் சமயத்தில் திடீரென்று அங்கே வந்த கம்பர் ஏழாவது காண்டமொழிய மற்றைக் காண்டங்கள் நீர்ப்பட்டமை நோக்கி அக்காண்டத்தைத் தம் ஆறுகாண்டங்களோடும் சேர்த்தார் என்பது கர்ண பரம்பரையான கதை. இதனால், கம்பர் ஒட்டக்கூத்தர் காலத்தவராவார். இக்கம்பர் ஒருகாலத்திற் 'காசுக்குக் கம்பன்' என்பதற்கிணங்கச் சிலம்பி யென்னுந் தாசிகையில் ஐந்து பொன் வாங்கிக்கொண்டு அவள் வீட்டு வாசற்காலின் மேல்

தண்ணீருங் காவிரியே தார்வேந்தன் சோழனே
மண்ணாவ துஞ்சோழ மண்டலமே—

என்று எழுதிப்போக, அங்கே வந்த ஔவையார் நடந்ததைச் சொல்லக்கேட்டு அத்தாசி தனக்கிட்ட கூழிற்கு உகந்து, 'கூழுக்கிங் கௌவையெனக் கூறு' என்பதற்கிணங்கப்

பெண்ணாவாள்

அம்பொற் சிலம்பி யரவிந்தத் தாளணியுஞ்
செம்பொற் சிலம்பே சிலம்பு

என்று பாட்டைப் பூர்த்திசெய்து சென்றாளென்று தனிப்பாடற்றிரட்டுக் கூறும். இதனால், இரண்டாம் ஔவையாரும் கம்பரும் ஒட்டக்கூத்தரும் ஒருகாலத்தவராவார். மேற்கூறிய காரணங்களெல்லாவற்றாலும் இரண்டாம் ஔவையார், குலோத்துங்கன், ஒட்டக்கூத்தர், புகழேந்தி, கம்பர் ஆகிய ஐவரும் ஒரு காலத்தவராவார்.

இக்குலோத்துங்கன் எக்காலத்து அரசு செலுத்தினன்? இந்திய புராதன பத்திரிகையின்படி இருவர் குலோத்துங்கர் இராஜ்ஜிய பரிபாலனம் செய்தார்கள். முதலாங் குலோத்துங்கன் 1063 கி.பி. யிலும் இரண்டாம் குலோத்துங்கள் 1127 கி. பி. யிலும் பட்டத்திற்கு வந்தனர். அவர்கள் வீற்றிருந்த தலைநகரும் வேறாயிருந்தன. ஒட்டக்கூத்தரியற்றிய கோவைக்குத்தலைவனாகியகுலோத்துங்கன்அக்கோவை 12-13-ஆம் பாட்டுக்களின்படி கோழி அல்லது உறையூர்ப்பதியையுந் தஞ்சைப்பதியையுமே தலைநகராகக்கொண்டிருந்தான். இவற்றுட் கோழிப்பதி சிலப்பதிகார மியற்றிய கி. பி. முதல் நூற்றாண்டு முதல் தலைநகராக இருந்து வந்தது. தஞ்சைப்பதி பத்துப்பதினோராம் நூற்றாண்டுகளிலேயே தலைநகராயிற்று. அஃது அப்படியிருக்கச் சயங்கொண்டானியற்றிய கலிங்கத்துப்பரணியில் 'அவதாரவியல்' 69-ஆம் பாட்டினாலும் 'காளிக்குக் கூளிகூறிய வியல்' 3-ஆம் பாட்டினாலும் குலோத்துங்கச் சோழனென மறுநாமங்கொண்ட விஜயதரசோழன் காஞ்சியைத் தலைநகராகக் கொண்டானென்பது தெரியவருகிறது. இக்காஞ்சிப்பதியே சோழராச்சியம் உடைபட்டுப்போகும் வரைக்கும் அதன் தலைநகராக இருந்தது, இவற்றால், ஒட்டக்கூத்தர் கோவைக்குத் தலைவனாகிய குலோத்துங்கன் 1063 கி. பி. யிற் பட்டத்திற்குவந்தமுதலாம் குலோத்துங்கனென்பதும், சயங்கொண்டான் பரணிக்குத் தலைவனாகிய குலோத்துங்கன் 1127 கி. பி. யிற் பட்டத்திற்கு வந்த இரண்டாம் குலோத்துங்கன் என்பதும் விளங்குகின்றன. இதனால், ஒட்டக்கூத்தரும் அவர் காலத்தினராகிய இரண்டாம் ஔவையாருங் கம்பரும் முதலாங்குலோத்துங்கன் காலத்தவராகிக் கி. பி. பதினோராம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வசித்தவராவார்.

மேற்கூறிய காரணங்க ளன்றியும், புலவர் புராணமும்
முன்னௌவை கலிவருட மூன்றாவ தாயிரத்தான்
பின்னௌவை நாலாவ தாயிரத்திற் பிறந்திட்டாள்,

என இரண்டு ஔவையார் காலங்களையும் குறிப்பாற் கூறுவதும் உற்று நோக்குக.

சி. சுப்பிரமணியாசாரி.

---



# THE LIGHT OF TRUTH OF TIRUKKOVAIYAR.

## திருக்கோவையா ருண்மை விளக்கம்.

[436-ஆம் பக்கத்தொடர்ச்சி.]

இது கொண்டே ஸ்ரீமாணிக்க வாசக சுவாமிகள் "கழுநீர் மலரிவள் யான தன்கண் மருவிப்பிரியாக் - கொழுநீர் நறப்பருகும் பெருநீர்மை யளிகுலமே" என்னுஞ் செய்யுட் பாகத்தால் அப்பொருளை விளக்கியருளினர். திருக்கோவையார் உரையாசிரியர் எழுதிய பொருளை நோக்குங்கால் நாயகியைச் செங்கழுநீர்ப் புட்பமாகவும் தான் அச்செங்கழுநீர் மலரின் தேனைப்பருகும் வண்டாகவும் சிறப்பித்துச் சொல்லியதாகவும் பெறப்படும். இங்கே தேனோடியைந்த செங்கழுநீர்ப் புட்பமென்னும் உபமானத்துக்கு உபமேயமாய் நின்றவர் நாயகியே யாம். அம்மலர்த்தேனைப் பருகும் வண்டாகிய உபமானத்துக்கு உபமேயமாய் நின்றவன் நாயகனேயாம் என்க. இதனால் மேலே உரைக்கப்பட்ட துகளறு போதச் செய்யுட் கருத்தையும் இத்திருக்கோவையார்ச் செய்யுட்பாகக் கருத்தையும் பொருத்திப் பார்க்குங்கால், இச்செய்யுளிலே சொல்லப்பட்ட தேனுற்ற செங்கழுநீரை யொத்த நாயகியே பரம சுகானந்த சிவபரம் பொருளெனவும், அந்நாயகியே (ஆன்ம) லாபம் எனப்படும் பேறும் எனவும், அந்நாயகியே பரமசுகம் எனப்படும் இன்ப சுகம் எனவும், அந்நாயகியே (சர்க்கரை) இரசம்போன்றவளாம் எனவும், பின்னர் அம்மலர்த்தேனை ஒத்த சிவானந்தத்தை அனுபவிக்கும் வண்டை ஒத்த நாயகனே ஆன்மா எனவும், அந்நாயகனே பெறுவான் எனவும், அந்நாயகனே இன்பசுகத்தைப் பெறுபவன் எனவும், அந்நாயகனே நாவைப்போன்றவன் எனவும் அறியப்படுதலால், திருக்கோவையாருண்மை இயற்றிய ஞானசாரியர் சித்தாந்த சாஸ்திரங்களுக்கு இயையத் திருக்கோவையாரில் நாயகியுற்ற விடமெல்லாஞ் சிவமெனக் குறிப்புப் பொருள் கொள்ளல்வேண்டும் என்றும், நாயகனுற்ற விடமெல்லாம் ஆன்மா எனப் பொருள் கோடல்வேண்டும் எனவும் எழுதியது முற்றும் உறுதியாகிய வாய்மையேயாம். திருக்கோவையாரிலே போந்த கருத்துப் பின்னரும் துகளறு போதச் செய்யுள் ஒன்றால் வலியுறுத்தப்படும், அது வருமாறு:—

நின்றபர மானந்த நேரே யனுபவித்திங்
கொன்றுபட வுள்ளுருகி யோவாம—லென்று
மதுவுண்ட வண்டுபோன் மாளாச் சுகத்தைப்
புதிதாண் டிருந்துவிடிப் போது.

பரமானந்தம் என்றது சிவத்தையும் அதனை அனுபவிப்பவன் ஆன்மா எனவும் இவ்விரண்டுக்கும் உபமானங்களாக முறையே போந்தமை மதுவும் மதுவையுண்ட வண்டுமாம் எனவும் இச்செய்யுளால் அறியப்படுகின்றது.

(க) சிவஞானபோதம் பத்தாஞ்சூத்திரத்திலே சிவபெருமானிடத்து ஆன்மா ஏகனாகி நிற்கும் என்னும் அதிகரணக் கருத்தைக் கொண்டு நடந்த "நானவன்" என்றற்றொடக்கத்த திருவெண்பாவிலே "நானெனவொன், றில்லென்று தானே யெனுமவரைத் தன்னடிவைத், தில்லென்று தானா மிறை" என அருளப்பட்டிருக்கின்றது. இதனால் "யான் (ஆன்மா) என்றொருமுதல் காணப்படுமாறில்லை என உணர்ந்து முழுவதுந்தானே (சிவமே) எனக் காணுந் தெளிவுடையோரைத் தனது (சிவனது) திருவடி வியாபகத்துள் அடங்கி நிற்கச் செய்து அவ்வாறே யாவன் முதல்வன்" என்பது பொருளென விளக்கினார் திராவிட சிவஞான போத பாஷ்ய கர்த்தாவாகிய சிவஞான சுவாமிகள். இப்பொழிப்புரையினால் திருவடி வியாபகம் என்றது சிவவியாபகம் என்பதும், அவ்வியாபகத்துள் அடங்கினவன் ஆன்மா என்பதும் கொள்ளப்படுகின்றன. "சொற்பாலமுதிவள்" என்றற்றொடக்கத்த திருக்கோவையார்த் திருச்செய்யுளால் மேலே போந்த உண்மை புலப்படுகின்றது. அத்திருக்கோவைச் செய்யுளின் பொருள் விளக்கிய உரையாசிரியர் "நல்வினைத் தெய்வமிவளைக் களவின்கட் கூட்ட அமுதமும் அதன்கட் கரந்துநின்ற சுவையுமென்ன என்னெஞ்சம் இவள் கண்ணே ஒடுங்க யானென்பதோர் தன்மை காணாதொழிய இருவர் உள்ளங்களும் ஒருவேமாமாறு கரப்ப ஒருவேமாகிய ஏகாந்தத்தின்கட் பிறந்த புணர்ச்சிப் பேரின்பவெள்ளம் யாவரான் அறியப்படும் என்று மகிழ்ந்துரைத்தான்" என்று உரைத்த உரையினால், ஒடுங்கினவன் நாயகன் என்பதும் ஒடுங்கப்பெற்றவள் நாயகி என்பதும் பெறப்படும். படவே, சிவஞானபோத சாஸ்திரக்கருத்தை இசைத்துப் பார்க்குங்கால், "இவள் நெஞ்சம்" என்று கோவையிற் பேசப்பட்டது சிவஞானபோதத்துச் சிவவியாபகத்தைக் குறித்தெனவும், இவள் நெஞ்சமாகிய சிவவியாபகத்துள் ஒருவேம் எனும்படி அடங்கி நின்றவன் ஆன்மா எனவும் அறியப்படுதலால், திருக்கோவையாருண்மை இயற்றிய ஞானாசாரியர் கருத்தினாலே பெண்பாற்பட இவளென்று திருக்கோவையிற் சுட்டப்பட்டது நாயகிப் பாலதாம் சிவத்தை என்பதும் ஆண்பாற்பட "யான்" "இவன்" எனப் பேசப்பட்டன நாயகனாகிய ஆன்மாவை என்பதும் வெள்ளிடை மலைபோல விளங்கிக் கிடக்கின்றன. அமுதமும் அதன்சுவையும் குணிகுணபாவத்தால் அபேதமாயிருக்குமாறு போல, அவை சிவ ஆன்மாக்களின் அபேத நிலையை விளக்க எழுந்தனவன்றிப் பிறிதொன்றற்கன்றாம். "யான்" என்றதனாற் சீவனே குறிக்கப்பட்டதெனிற் சீவன் சிவத்துக்குக் குணமாய் விடுவான். இஃது அவசித்தாந்தமாகும். திருவொற்றியூர்த் தேவாரத்திலே ஸ்ரீவாகீசர் தம்மை நாயகியாகவும் சிவபெருமானை நாயகராகவும் கொண்டு அருளிய திருச்செய்யுளிலே தம்முடைய நெஞ்சம் சிவத்திலே ஒடுங்குவதாம் என மேலே போந்த சிவஞானபோதம் திருக்கோவையார் என்பவற்றின் கருத்துக் கிசையத் "தன்னகத் தென்னக மொடுங்கும் வண்ணம்" என்று காட்டியருளினார். ஈண்டுத் "தன்னகம்" என்றதனாற் பரமாகிய சிவவியாபகமும் "என்னகம்" என்றமையால் அபரமாகிய ஆன்மாவின் வியாபகமும் கொள்ளப்படும். தன்னகத்து = இவள் (நாயகியாகிய சிவத்தின்) கண்ணே ; என்னக மொடுங்க = என்னெஞ்சம் (ஆன்மாவாகிய தலைவனுடைய நெஞ்சம்) ஒடுங்க என்று திருக்கோவையார்க்கிசையத் தேவாரம் பொருள் படுத்தப்பட்டமை காண்க.' தேவாரத்தில் நாயகன் எனப்பட்டவர் திருக்கோவையாரில் நாயகி எனப்பட்டார் எனவும், தேவாரத்து நாயகி எனப்பட்டவள் திருக்கோவையாரில் நாயகன் எனப்பட்டான் எனவுங்கொண்டு பொருள் முடிக்கப்படும்.



(க0) சிவஞான போதம் பதினோராஞ் சூத்திரம் முதலாம் அதிகரணத்து "ஏகமாய் நின்றே" என்றற்றொடக்கத்த வெண்பாவிலே

ஏகமாய் நின்றே யிணையடிக ளொன்றுணரப்
போகமாய்த் தான்விளைந்த பொற்பினான்

என்றுள்ள திருவெண்பாப் பாகத்துக்குச் சிவஞான சுவாமிகள் பொருள் செய்யுமிடத்து, "முதல்வனைச் (சிவத்தை) சார்ந்தவழி அவ்வண்ணமேயாய் ஒருநெறிப்பட்ட ஆன்மா அவனோடு (சிவத்தோடு) ஒற்றுமைப்பட்டு நின்று அவனது (சிவனது) அடியிணைகளை உணரவே நான் (சிவம்) அவ்வான்மாவுக்குப் பரபோகமாய் மேன்மேல் விளைகின்ற பொலிவுடையனாவன்" என்று அருளி இணையடிகளை (சிவபெருமானுடைய இணையடிகளை) உணருந்தோறும் (சிவபோகம் மேன்மேல் விளைதலுக்குப் பிரமாணமாகத் திருக்கோவையாரின் "புணர்ந்தாற் புணருந்தொறும் பெரும்போகம் பின்னும் புதிதாய், மணந்தாழ் புரிகுழலாளல்குல் போல வளர்கின்றதே" என்னுந் திருச்செய்யுளைப் படித்துக் காட்டினார். இக்கோவைக்குப் பொருள் செய்த உரையாசிரியர் இக்கொடியிடை "தோளைக் கூடினாலும் கூடுந்தோறும் பெரிதாகிய இன்பம் முன்புபோலப் பின்னும் புதிதாய் மணந்தங்கிய சுருண்ட குழலையுடையாளது அல்குல்போல வளராநின்றது" என்றார். சிவஞான போதத்திலே சிவபெருமானுடைய இணையடிகள் எனப்பட்டன திருக்கோவையாரிலே கொடியிடை தோள் எனப்பட்டன. இத்திருச்செய்யுள் தலைவன் கூற்றாதலின் நாயகனே நாயகியைப் புணர்ந்து பெரிதாம் இன்பத்தைப் பெற்றான் என்பது பெறப்படுதலால், சிவஞானபோதத்திற் சிவன் இணையடிகளை உணர்ந்தவனாகச் சொல்லப்பட்ட ஆன்மா திருக்கோவையாரிலே கொடியிடை தோளைப் புணர்ந்த, நாயகனும் ஆன்மாவாகின்றான். ஸ்ரீ மாணிக்கவாசக சுவாமிகள் "சிவன்றிரடோள் கூடுவேன் கூடி முயங்கி மயங்கி நின்றாடுவேன்" என்று திருவாசகம் வாயிலாக உரைத்தருளிய வாக்கினால் ஆன்மாவே "சிவனுடையதோளைப்" புணர்ந்தானாக (கூடினானாக) அறியப்படுகின்றது. திருக்கோவையாரிலே கொடியிடைதோள் என்று விதந்துரைக்கப்பட்டது சிவனே என்றுணருமாறு திருவாசகத்திலே சிவன்றிரடோள் என்று புலப்படுத்தப்பட்டது. ஆக்வே

சிவபிரான் திருக்கோவையாரில் நாயகி என்று பெறப்படுமாறு கொடியிடைதோள் என்றும், சிவஞானபோதத்திலே சிவன் இணையடிகள் எனவும் சிவஞானபோதத்தினும் திருவாசகத்தினும் திருக்கோவையாரினும் அச்சிவத்தைக் கூடினனாக (புணர்ந்தவனாக)ச் சொல்லப்பட்டவன் தலைவனாகிய ஆன்மாவாம் என்க. இனி ஸ்ரீவாகீசரது "எங்கள் பிரானை யுணராதாருணர் வென்னே" எனவும், "பூசனைப் புணரிற் புணர்வாயதோர் நேசனை" எனவும் வரும் அநேக பிரமாணங்களாற் சிவபெருமானே நாயகி முறையினும் ஆன்மாவே நாயகன் முறையினும் நின்றாராம் என ஞானாசாரியர் எழுதிய குறிப்புப்பொருள் சிவஞானபோதம் சிவஞான சுவாமிகள் மாணிக்கவாசக சுவாமிகள் திருநாவுக்கரசு நாயனார் முதலிய எல்லோர்க்கும் இசைய ஒப்பமுடிந்தபக்ஷமாகும். இத்திருக்கோவையாரின் கருத்துத் திருவாவடுதுறைக் கச்சியப்ப முனிவர் செய்த திருத்தணிகைப்புராணத்து "ஆயுந்தோறும்" என்றற்றொடக்கத்த செய்யுளிலே காணப்படுகின்ற 'தேங்குழனிற் றோயுந்தொறுந் தொறு நேராதவின் பஞ் சுரந்திடுமே" என்னும் பாகத்தினால் உணரப்படும். ஈண்டுத் தேங்குழல் எனப்பட்டது திருக்கோவையாரிலே கொடியிடை தோள் எனப்பட்டது என்றோர்ந்துகொள்க. வடமொழியினும் தென்மொழியிலும் போந்த கந்தபுராணத்து வள்ளியம்மையார் கலியாணம் ஞானார்த்தங்களை ஆங்காங்குத் தொனிக்கக்காட்டாது கதாரூபமாகச் செல்வதாக, திருத்தணிகைப் புராணம் திருக்கோவையார்க் களவியலையே தொடர்ந்து பாடப்பட்டமையால் திருக்கோவையார்க்குச் சாற்றப்பட்ட குறிப்புப்பொருளே சுப்பிரமணியர் வள்ளிநாயகியார் மாட்டும் கொள்ளப்படும்.

(௧௧) சிவபெருமானை உயிராயும் ஆன்மாவை அச்சிவபெருமானுக்கு உடலாயுங் கொள்ளவேண்டும் என்ற கருத்தினாற் சிவப்பிரகாசம் "தானே யண்டர்நாயகனு மேனியானது" எனச் சொல்லப்பட்டது. இதனால் ஆன்மா உடல் என்பதும் அவ்வுடலுக்கு உயிராயுள்ளது சிவம் என்பதும் பெறப்பட்டு, "ஆதனமும் ஆதனியும்" ஆன்மாவும் சிவமுமென்பது கொள்ளப்பட்டது. இக்கருத்துக்கொண்டே உய்யவந்த நாயனார் "ஆதனமும் ஆதனியுமாய் நிறைந்து" என்றுரைத் தருளினார். இச்சித்தாந்த சாஸ்திரப்பொருள் ஸ்ரீமாணிக்கவாசக சுவாமிகள் திருவாய் மலர்ந்தருளிய "சீரியலாவியும் யாக்கையு மென்னச்சிறந்தமையாற், காரியல்வாட்கண்ணி யெண்ணகலார்". என்னும் செய்யுட் பாகத்தினால் அறியப்படும். எங்ஙனமெனில், காவலர் (நாயகர்) உடம்பும் உயிரும்போல ஒருவரை ஒருவர் இன்றியமையாமையால் இவன் கருத்தை (நாயகிகருத்தை)க் கடவார் என்று பொருள் படலால் என்க. உரையாசிரியர் ஆவியை நாயகிக்கும் யாக்கையை நாயகனுக்கும் முறையே உவமையாக் கூறி, ஆவியையும் உடலையும் இடத்து நிகழ்பொருளும் இடமுமாய் இயையும் என்றும் கூறினார். இக்கோவைப் பொருளைச் சாஸ்திரக்கருத்தோடு பொருத்திப் பார்க்குங்கால் நயகனாகிய ஆன்மாவே உடல் எனவும், நாயகியாகிய சிவமே



உயிர் எனவும் உணரற்பாற்று. இதனால் ஞானாசாரியர் எழுதிய குறிப்பர்த்தம் பொருந்துமாற்றை எவரும் அறியாது விடார்.

(௧௨) குருரூப சிவத்தியானம் இதயத்தில் உளதாம்; அவர் திருவடி நெஞ்சினன்றிச் சென்னியிலும் உளதாம் என்னும் கருத்தினால் திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார் "சிந்தையிடையார் தலையின் மிசையார்" என்று தேவாரத்திலும், உய்யவந்த தேவநாயனார் "சிந்தையினுள்ளு மென் சென்னியிலுஞ்சேர வந்தவாவாழ்கவென் றுந்தீபற" என்று திருவுந்தியாரினும் திருவாய் மலர்ந்தருளினார்கள். இக்கருத்தை யடக்கி மாணிக்கவாசக சுவாமிகள் "சிலைமலிவாணுதலெங்கையதாக மெனச்செழும்பூண், மலைமலிமார்பி னுதைப்பத்தங் தாண்டலை" என்ற செய்யுட் பாகத்தாற் சூசிப்பித்தருளினார். யான் (நாயகி) தன் (நாயகன்) மார்பகத்து (நெஞ்சகத்து) மிதிப்ப, அவன் (தலைமகன்) அவள் (நாயகியின்) காலைத்தன்றலைமேல் ஏற்றுக்கொண்டான் என்பது மேலைச்செய்யுட்பாகத்தின் கருத்தாகும். இச்சாஸ்திரக் கருத்தையும் திருக்கோவையார்க் கருத்தையும் தழுவியே "ஆனந்தங் குருவடியே பேணல்" என ஞானார்த்தம் கூறியருளினார்.

(௧௩) மாணிக்கவாசக சுவாமிகள் "நாயிற் கடைப்பட்ட நம்மையுமோர் பொருட்படுத்தி" எனவும், "நாயிற்கடையா நாயேனை நயந்து நீயே யாட்கொண்டாய்" எனவும் திருவாசகத்திற் றம்மை நாயெனக் குறிப்பிட்டதற்கியையப் பின்னர்த் திருக்கோவையாரிலும் "நாயினிடத்துள்ள நன்மையுமில்லாத என்னை (நாயகனை) நல்ல தொண்டாகக் கொண்ட தீயிடத்து நிறம்போலும் நிறத்தையுடையவன்" என்னும் பொருள்பட "நாய்வயினுள்ள குணமுமில்லேனை நற்றொண்டு கொண்ட தீவயின்மேனியன்" என்று கூறியருளினார். இக்கூற்றுத் தலைவனதாமாதலில் நாயிடத்துள்ள குணமும் இல்லாதவன் என்றமையால் திருவாசகப் பொருளால் ஈண்டு நாயகனே (ஆன்மாவே) குறிக்கப்பட்டான் என்க.

(௧௪) "மறவாத மனத்தகத்து மன்னினானை" எனவும், "நினைக்கு நெஞ்சினுள்ளார்" எனவும், "நினைவோரை நினைவோன்றன்னை" எனவும் "தன்னை முன்ன நினைக்கத் தருவான்" எனவும், "தெள்ளத் தேறித் தெளிந்து தித்திப்பதோருள்ளத் தேறலமுதவொளிவெளி" எனவும், "சிந்திப்பரியன சிந்திப்பவர்க்குச் சிறந்து செந்தேன் முந்திப்பொழிவன" எனவும் "நானேயுன்னடியே நினைந்தே னினைத்தலுமே யூனாரிவ்வுடலம் புகுந்தாயெ னொண் சுடரே" எனவும், "கலந்தபின் பிரிவதில்லை" எனவும் போந்த தேவார சுருதிகளுக்குப் பொருத்தமுற, யான் (நாயகன்) தன்னை (நாயகியை) நினையாது வேறொன்றன்மேல் உள்ளத்தைச் செலுத்தும் வழியுந்தானென்னை நினைந்து ஒருகாலும் பிரியாது என்னுள்ளம் புகாநின்றான், அவ்வாறன்றி யான் (நாயகன்) தன்னை (நாயகியை) நினையுந்தோறும் உயர்ந்த விடத்தினின்

றும் பள்ளத்திற்புகும் புனலை யொத்துத் தடுப்பரியளாய் என் மனத்தின்கண் வரும் முறைமைய ளாகாநின்றாள். அதனாற் பிரிந்தீண்டிருத்தல் அரிதுபோலும்" என்ற கருத்தை யடக்கி மாணிக்கவாசக சுவாமிகள் "கள்ளம் புகு நெஞ்சர் காணுவிறையுறை காழியன்னா, ளுள்ளம் புகுமொருகாற் பிரியா துள்ளியுள்ளுதொறும், பள்ளம் புகும்புனல் போன்றகத் தேவரும் பான்மையளே" எனக் கூறியருளினர். இது தலைமகன் கூற்றாமாதலின், ஆன்மாவே ஈண்டு நாயகனாகவும் சிவமே நாயகியாகவும் கொள்ளப்பட்டமை காண்க. தலைவியே ஆன்மா எனில் முன்னர்ப்போந்த திராவிட சுருதிகளோடு மாறுண்டு சிவமே ஆன்மாவை நாயகமாகக் கொண்டதாய் முடிந்து அவசித்தாந்தமாகும்.

## (கரு) சிற்றம்பலநாடி சுவாமிகள்.

(கலித்துறை.)

ஆனந்த மேசெவி யம்புயத் தாளிணை யங்கைகளு
மானந்த மேதிருக் கண்ணுஞ்செவ் வாயருண் மேனியெல்லா
மானந்த மேயருட் சிற்றம் பலவ ரருட்பொருளு
மானந்த மேயவன் றில்லையுங் காழியு மானந்தமே.

சிவானந்தபோகச் செல்வர்களுக்கு எங்கும் சிவானந்தம் பிரியாது தோன்றும் என்று மேலே சொல்லிய செய்யுளின் கருத்துப் முன்னர்ப்போதரும் திருக்கோவையார்ச் செய்யுளாலும் அறியப்படும். அதுவருமாறு :—

சேணுந் திகழ்மதிற் சிற்றம் பலவன்றெண் ணீர்க்கடனஞ்
சூணுந் திருத்து மொருவன் றிருத்துறுமலையினெல்லாங்
காணுந் திசைதொறுங் கார்க்கய லுஞ்செங் கனியொடுபைம்
பூணும் புணர்முலை யுங்கொண்டு தோன்றுமொர் பூங்கொடியே.

"காணுந் திசைதோறும் கயலையும் வில்லையும் சிவந்த கனியையும் முலையையுங் கொண்டு ஒரு பூங்கொடி (நாயகி) தோன்றாநின்றதென நாயகியினது உருவை வினந்தமை" என்பது ஆசிரியர் விளக்கிய பொழிப்புரையினால் மேலுரைத்த செய்யுளின் கருத்துப் புலப்படும். இதுகொண்டே ஞானசாரியர் தமது திருக்கோவையா ருண்மையிற் "பிரியுமிட மெல்லாஞ் சிவமேகண்டது" என்று உண்மை யுரைத்தருளினர்.

(கசு) "தேவியங் கண்டிகழ் மேனியன் சிற்றம் பலத்தெழுது, மோவியங் கண்டன்ன வொண்ணுதலாள்" எனவும், "கவலங்கொள் பேய்த்தொகை பாய்தரக்காட்டிடை யாட்டுவந்த, தவலங்கிலாச் சிவன்றில்லை யன்னாய்" எனவும், "வேயாது செப்பினடைத்துத் தமிவைகும் வீயினன்ன, தீயாடி சிற்றம்பல மனையாள்" எனவும், "புரமன்றயரப் பொருப்பு வில்லேந்திப் புத்



தேளிர்நாப்பட், சிரமன் றயனைச் சென்றோன்றில்லைச் சிற்றம்பல மனையாள்" எனவும், "மாலித்தனை யறியாமறையோனுறை யம்பலமே, போலித்திருநுதலாள்" எனவும், "பாயும்விடையோன் புலியூரனைய வென்பாவை" எனவும், "பறந்திருந்தும்பர்ப்பதைப்பப்படரும் புரங்கரப்பச், சிறந்தெரியாடி தென்றில்லையன்னாள்" எனவும், "வெண்மாமதி நின்றொளிருஞ்சடை முடியோன்புலியூரன்ன வொண்ணுதல்" எனவும், "சோத்துன்னடிய மென்றோரைக்குழுமித்தொல்வானவர் சூழ்ந், தேத்தும்படி நிற்பவன்றில்லை யன்னாளிவள்" எனவும் "பைவாயரவரையம்பலத்தெம்பரன் பைங்கயிலைச், செவ்வாய்க் கருங்கட் பெரும்பணைத்தோட் சிற்றிடைக்கொடியை", எனவும் "என் சிரத்தினுறுகால் பிறர்க்கரியோன் புலியூரன்ன வொண்ணுதலே" எனவும் "தொழுதெழுவார், வினைவள நீறெழ நீறணியம் பலவன்றன் வெற்பிற், புனைவளர் கொம்பரன்னாய்" எனவும் அநேக விசேஷணங்களோடு புணர்த்தப்பட்டவள் நாயகியேயாம்.

"பொருவரைநாட" எனவும், "வெற்பன்" எனவும், "பொருப்பன்" எனவும், "விடலை" எனவும், "பெருந்தகை" எனவும், "மணந்தவர்" எனவும், "ஆண்டகை" எனவும், "ஏதிலன்" எனவும் தலைவன் இங்ஙனம் கூறப்பட்டமையால் திருக்கோவையாருண்மை எழுதிய ஞானசாரியர் சிவபெருமானைத் தலைவியாகவும் ஆன்மாவைத் தலைவனாகவுங் கொண்டார். மேலே உரைத்த விஷயம் அனைத்தையும் அறியாது சிவபெருமான் நாயகியானால் அச்சிவபெருமானுக்கு எவ்விதத்தாலும் உயர்ந்தவர் ஒருவரைப் புருடராகத் தேடி வைத்துவிட்டன்றோ சிவபெருமானை இழிந்த நாயகியாகிய பெண்டாட்டியாக்கல் வேண்டும் என்றும், நாயகி கட்டுப்பட்டு ஒழுகுகின்றவள் எனவும், நாயகன் கட்டுப்படுத்துபவன் எனவும், உயர்வுதாழ்வு கூறுதலோடமையாது, தேவாரம் பதினோராந் திருமுறை, பண்டார மும்மணிக்கோவை முதலியனவும் சிவபெருமானை நாயகனாகவும் ஆன்மாவை நாயகியாகவும் கூறியவென்றுஞ் சொல்லியவெல்லாம் லௌகிக வழக்கை ஒட்டிப் பேசப்பட்டனவன்றிப் பிரபஞ்ச வாழ்க்கையில் விடாது ஆன்மாவை வசீகரித்துக்கொண்டு சென்று சிவமாம் பேரின்பநாயகியோடு கூடச் செய்யும் களவியல் வழக்குக்கு ஏலாதாம் என்க. இங்ஙனம் மேன்மேல் நிரூபணஞ் செய்துகாட்டக் காலமுமிடனும் போதாவாதலின் அமைக.

இதுவரையும் நம்மால் எடுத்தாளப்பட்ட திருஷ்டாந்த நிரூபணங்களால் மயக்கடைந்தார் தெளிந்து ஓர்ந்துணர்ந் தடங்கக்கடவர்.

ஸ்ரீ காசிவாசி-செந்திநாதையர்.

# ANNIVERSARY OF THE MADURA TAMIL SANGAM.

# மதுரைத் தமிழ்ச்சங்க வருடோற்சவம்.

---

செந்தமிழ் நலஞ்சான்ற மதுரைமா நகரின்கட் சென்ற பிலவவருடந் தோன்றிய புதுத்தமிழ்ச் சங்கத்திற்கு ஒராட்டைப்பருவ முற்றினமையின் அவ்வுற்சவங் கொண்டாடு நிமித்தம் சென்ற மே மாதம் 24-ஆந்தேதி சனிக்கிழமையன்று மாலை, சங்கத்தின் அவயவிகளாயினாரும் பிறருங் கூடினர். அப்போழ்தத்துக் கும்பகோணக் கலாசாலைத் தமிழ்ப்பண்டிதரும் மகாவித்துவானுமாகிய பிரமஸ்ரீ உ. வே. சுவாமிநாத ஐயரவர்கள், சென்னைச் சர்ச் ஆவ்ஸ்காத்லாந்து மிஷன் கலாசாலைத் தலைமைத் தமிழ்ப் பண்டிதரும் பல்லாட்டைப் பரீக்ஷைப்பாட நூலுரையாசிரியருமாகிய ஸ்ரீ வை. மு. சடகோபராமாநுஜாசாரியரவர்கள், சென்னைக் கிறிஸ்தவ கலாசாலைத் தழிழ்ப்பண்டிதரும் நாடகத்தமிழாசிரியருமாகிய பிரமஸ்ரீ வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியாரவர்கள், பி. ஏ., முதலிய வித்துவான்கள் பல்லோர் போந்திருந்தனர். உள்ளூர்க் கனவான்களுட் பலரும், சேதுபதி செந்தமிழ்க்கலாசாலைப் புலவர்களும் சங்கத்துச் 'செந்தமிழ்'ப் பத்திராதிபரும், யாழ்ப்பாணத்து அம்பலவாணநாவலரும் வந்திருந்தனர். யாமுஞ் சென்றிருந்தோம்.

முதற்கட் சிற்றுண்டி ஆண்டுப் போந்தார் யாவர்க்கு மளிக்கப்பட்டது. வயிறு நிரம்பித் தேக்கெறிந்து யாவருஞ் சபாமண்டபத்தினுள் ஆனந்தமாய்ப் புக்கனர். அம்மண்டபத்தின் கண் ஆங்கிலர் முறைப்படியியன்றதோர் இசைக்கருவியிருந்தது; அதினின்றெழும் இன்னிசை கேட்டுச் சிறிது நேரம்யாவரும் மகிழ்ந்திருந்தனர். சபைகூடுதற்கெனக் குறித்த காலங்கிட்டுதலும் சபாநாயகராகிய ஸ்ரீ பாண்டித்துரைத் தேவரவர்கள் ஆணையின்படி, சங்கத்தின் காரியதரிசியாரவர்கள் சென்ற ஒருவருஷ காலத்திற்குட் சங்கசம்பந்தமாக நிகழ்ந்த விஷய நிகழ்ச்சிகளைக் குறித்து ஆங்கில மொழியி னெழுதியதோர் ஆவேதனபத்திரம் படித்தனர். 'அந்தோ! அது நந்தம் அருமைத்தமிழ் மொழியி லெழுதப்படாது போயிற்றே' யென்றேங்கிய எமதுள்ளம், அப்பத்திரத்தால் வெளியிடப்பெற்ற விஷயங்களைக் கேட்டறிந்து அமைந்து ஆறுதலடைந்தது. சங்கத்திற் கெனப் பெருந்தொகை சேர்ந்துள தென்பதும், நிலம் வாங்கியிருப்பதும், கட்டிட மமைக்கப்போவதும், சேதுபதி செந்தமிழ்க் கலாசாலையிற் படிக்குநர் கல்வியளவும் அவர்கள் பயின்ற நூல்களும் முதலாயினவும், அவர்கட்குத் தாங்கள் ஊணுடை தந்துதவுமாறும் செந்தமிழ்ப் பத்திரிகையினளவு அதன்கண் வெளிப்படவேண்டிய விஷயங்கள் முதலாயினவும் இவைபோல்வன பிறவும் அவ்வாவேதனப் பத்திரிகையானுணர்ந்தனம். அதன்மேற் பிரமஸ்ரீ சுவாமிநாதையவர்களெழுந்து சங்கத்



தமிழின் சிறப்பையும் சங்கப்புலவர்களது கௌரவத்தையும் அவர்களது ஒழுக்கத்தையுந் திட்ப நுட்பத்தையும் பற்றிப் பல மேற்கோள்கள் எடுத்துக்காட்டி இனிமைபெறப் பிரசங்கித்து முடித்தார்கள். பின்னர் வித்துவான் ஸ்ரீ இராகவையங்காரவர்கள் எழுந்து வேறு சில மேற்கோள்கள் காட்டித் தமிழின் பெருமையைப் பெரிதும் விஸ்தரித்துக்கூறிநின்றனர். அதன்மேல் தமிழ்நலத்தோடு ஆங்கில நலமுஞ் சான்ற பிரமஸ்ரீ வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியாரவர்கள், பி. ஏ., எழுந்து சங்கப்புலவரை வாழ்த்தி, இக்காலத்தில் தமிழின் நிலைமை யித்தன்மைத்தென்றும், பண்டிதர் தமிழும் சாமானியர் தமிழும் பெரிதும் வேறுபடுகின்றனவென்றும் அவ்வேறுபாடு நாளாவர்த்தியில் மிகுகின்றதென்றும், அது மிகாமைப் பொருட்டு நேரிய வழிகளை நாடவேண்டுமென்றும், அங்ஙனம் நாடவேண்டுமென்றல் யாவர்க்கு முடன்பாடாயின் பண்டிதர்கள் தமது உயரிய நடையினின்றும் இறங்கிச் சாமானிய சனங்களையும் பாஷையுணர்ச்சியி லுடன்கொண்டு செல்லவேண்டுமென்றும், இதுகாறும் அங்ஙனஞ் செல்லாமையால் தமிழ்ப்பாஷை வளர்ச்சியின்றி ஒரு நிலைப்பாடெய்தி விட்டதென்று கருதிச் சிலர் குறைகூறுமாற்றைக் கண்டிக்கவேண்டுமென்றும், சென்னை யிராசதானி வித்தியா விசாரணைத் தலைவர் சுதேசபாஷை நீக்கத்தைப்பற்றி வெளியிட்ட கருத்துப் பெரிதும் பிழைபாடுடைத்தென்றும், மேற்கூறியவா றெல்லாம் பிறர் சொல்லாவண்ணந் தமிழராவார் யாவரும் முயலவேண்டுமென்றும் பேசி நிறுத்தினர். பின்னர் ஸ்ரீ அம்பலவாண நாவலரவர்களெழுந்து ஞானத்தைப்பற்றிப் பெரியதோருபந்நியாசஞ் செய்தனர். பலருங்கரகோஷஞ்செய்து நாவலரவர்களை வீற்றிருக்குமாறுசெய்தனர். அதன்பினர் வித்துவான் ஸ்ரீ வீராசாமி யையங்காரவர்கள் எழுந்து கர்ணாடகவழியிற் சில பொருத்தங்கள் சொல்லிப் பலரையுங்களிப்பித்து வீற்றிருந்தனர். இடையிற் பாடசாலைப் பரிசோதகர் ஸ்ரீ தெய்வசிகாமணி முதலியாரவர்களும் சங்கத்தின் அபிவிருத்தியைக் குறித்துப் பேசினார்கள். அதற்கு மேல் வடக்கிருந்து போந்தாரோர் வைணிகர் யாழ்வாசித்து ஆண்டுக் கூடியிருந்தாரனைவரையும் இசைவாரியிற் றிளைத்தாடி யின்பங்கொண்டாடச் செய்தனர். பின்னர்ச் சபாநாயகர்க்குஞ் சங்கப்புலவர்க்கும் ஏனைய கனவான்கட்கும் வந்தன மளித்ததன் மேற் சபைகலைந்தது. மற்று, இரண்டாநாளை மூன்றாநாளைச் செய்திகளைப்பற்றிச் சங்கத்தின் அதிகாரிகளே பத்திரிகைகளின் மூலமாக வெளிப்படுத்துவார்களென்று எண்ணுகின்றோம். அச்செய்திகள் காலம்பெற வெளிப்பட்டாலன்றிச் சங்கப்பரீக்ஷைக்குப் படிக்கப்புகும் மாணாக்கர்க்குப் பயன் படாவாம்.

ந. பலராமையர்.

---

# RAMAYANA SARAM.*

# இராமாயண ஸாரம்.

[328-ஆம்பக்கத் தொடர்ச்சி.]

அந்த அசுவமேதயாகத்திற்கு வேண்டிய சகல விதமான கருவிகளும் உடனே சேர்க்கப்பட்டன. வேதசாஸ்திர முறைமைப்படி யாகசாலை நிருமிக்கப்பட்டது. யாகத்தை நடாத்துவிக்க ருசியசிருங்கர் என்னும் மகர்ஷியும் வந்து சேர்ந்தனர். அரசனும் அவன் மனைவியரும் ஸ்நானஞ்செய்து தூய மனத்தராய் யாகசாலை புக்கனர். இந்த யாகசாலையில் இருந்த அந்தணர் யாவரும் தத்தமக்குரிய ஒழுக்கத்தை மேற்கொண்டவர்களே யாவர். வேதம், வேதாங்கம், வேதாந்தம் முதலியனவைகளில் வல்லவரல்லாதவரும் அவற்றிற் கூறப்பட்டுள்ள விதிகளை யனுசரியாதவர்களும், கல்வியின் மணமறியாப் புல்லறிவாளரும் யாகசாலையிலுதவி செய்வதற்காக உள்ளிருக்கவு மிடம் பெற்றாரல்லர். கல்வியிற் சிறந்திராத பிராமணன் அக்காலத்திற் பிராமணனாகக் கருதப்பட்டதேயில்லை. "கட்டையாற் செய்யப்பட்ட யானைக்கும், தோலாற் செய்யப்பட்ட மானுக்கும், கல்வியில்லாப் பிராமணனுக்கும் யாதொரு வித்தியாசமுமில்லை; இம்மூன்றும் பயனில்லா வெறும் பெயருடையனவாம்" என்று மனுதர்ம சாஸ்திரத்திற் கூறப்பட்டிருக்கும் நன்மொழிகள் அக்காலத்திற் பொன்போலப் போற்றப்பட்டன. யாககர்த்தாவினிடம் பரந்த ஞானமும், தூய தன்மையும், சத்தியபரிபாலனமு மிருந்தால்மட்டில், அந்த யாகம் சிறப்புடன் நிறைவேறும். அக்குணங்களைப் பெருந்தவர்களா லுச்சரிக்கப்படும் மந்திரங்கள் தேவதைகளின் செவிகளை யணுகா. விதிமுறைவழாது நடாத்தப்படும் யாகங்களுக்கு மட்டிலே தேவதைகள் மனமகிழ்ந்து வந்து கூடுவார்கள். ஆயிரக்கணக்கான பிராமணர்களும் அரசர்களும், பிரபுக்களும், யுத்த வீரர்களுங் குழுமியிருந்த இந்த யாகசாலையில் இவர்கள் யாவருக்கும் முன்பாகத்தோன்றி யாகபத்தினியாக விளங்கியவர் தசரத மகாராஜருடையமூத்த மனைவியாகிய கௌசல்யா தேவியார். அற்றை ஞான்று நந்தேயத்து இந்திய மகளிர் எய்தியிருந்த மேம்பாடும் சிறப்பும் என்னே! இற்றைஞான்று அவர்களுக்குக் கொஞ்சமேனும் கல்வியொளி நலங்கூர்ந்து சிறந்தோங்கவிடாது கொடிய மனையகஞ் செறித்து வருத்திவரும் நம்மவர் அறிவுடைமை யென்னே! நம் நாட்டு மகளிர் இக்காலத்திலும் உயர்நிலை பெற்றால் பட்டில், நம் இந்தியாவும் உன்னத பதவியை யெய்தலாகும். ஏனெனின், மகளிர் கல்வி நலம் பெற்று நல்வழியி லொழுகினாலன்றே, தமக்குப் பிறக்கும் பிள்ளைகளுக்கும் அங்ஙனம் நன்னெறியி லொழுகுமாறு அறிவு புகட்டல் கூடும்.

* Adapted from Mrs. Annie Besant's Sri Rama Chendra, The Ideal King.



அசுவமேதயாகம் முடிந்ததும் புத்திர காமேட்டி யாகாரம்பத்திற்கு வேண்டியனவற்றைச் செய்யத்தொடங்கினார் கலைக்கோட்டுமாமுனிவர். அச்சமயத்தில் தேவர்களெல்லோரும் பிரமாவிடஞ் சென்று தாம் இராவணனென்னும் அரக்கனால் துன்பப்படுவதையும், அக்கொடியன், முன்னொரு காலத்தில் அவரிடமாகப் பெற்ற வரப்பிரசாதத்தாற் கர்வங்கொண்டு மூவுலகிலுள்ளாரையும் வருத்தி வருவதையும் சூரிய சந்திரரும் அலைகடலும் அவனைக்கண்டு அஞ்சுவதையும் எடுத்துக்கூறி, அவன் கொடுமைகளினின்றும் தம்மைக் காப்பாற்றுமாறு வணங்கிக் கேட்டுக்கொண்டனர். பிரமாவானவர் இராவணன் மாந்தரொழிய ஏனையோரால் இறவாவரம் தம்மிடம் பெற்றிருப்பதனால், அவன் மானிடராலேயே மாளவேண்டுமென்றும், அவ்வாறு மாள வேண்டிய காலமும் சமீபித்து விட்டதென்றும் அவர்களுக்குக் கூறினார்.

அப்போதவ்விடத்திற் சங்கசக்ர கதாதாரியாகிய மகாவிஷ்ணு பிரசன்னராயினார். சங்கம் சக்கரம் கதை யென்னுமிவ்வாயுதங்கள் உலகோம்பும் ஒவ்வொருவரிடத்திலு மிருப்பதை நாம் காண்கின்றோம். இவ்வாயுதங்களில் ஒவ்வொன்றும் ஒவ்வொரு தெய்விக சக்திக்கு அறிகுறியாக நிற்கின்றது. உருவில்லாதஜடத்தை உருவுடைய பொருளாக்கவல்ல படைப்புத்திறமாகிய நாதத்துக்கு அறிகுறியாகும் சங்கம்; உலகங்களை நிலைகுலைக்கும் சுழற்சியும் அதிர்ச்சியும் வாய்ந்த சக்திகளுள்ள சங்காரத்துக்கு அறிகுறியாகும் சக்கரம். பிரபஞ்சத்தைத் தன்னிலை நிறுத்தல் பாதுகாத்துத் தாங்கவல்ல சக்திகளின் அறிகுறியாகும் ஆற்றல் சான்ற கதை. இவ்வறிகுறிகளை விஷ்ணுவாலயங்கள் தோறும் நாம் காணலாகும்.

அரக்கன் கொடுமைகளுக்கு அஞ்சி யோலமிட்ட தேவர்களைப் பார்த்து மகாவிஷ்ணுதாம் அவ்விராவணனைக் கொல்ல மனுஷாவதார மெடுப்பதாயும், உடனே தசரதரின் நான்கு புத்திரர்களாகப் பூலோகத்தில் வந்து அவதரிப்பதாயும் திருவாய்மலர்ந்து மறைந்தருளினார்.

அப்போது ஹோமாக்கினியின் மத்தியினின்றும் பிரமதூதனாகிய ஒரு பெரும் பூதமானது பாலமுதங்கொண்ட வோர் அழகிய பொற்றட்டைக்கையிலேந்திவந்து கரைமீது வைத்துத் தான் வந்தவழியாகவே மறைந்து போய்விட்டது. அப்புத்திர காமேஷ்டியாகத்தின் அக்கினி குண்டத்திற் றோன்றிய தெய்விக பாயசத்தை முனிபுங்கவர் எடுத்து மன்னனிடங்கொடுக்க, அவன் மனமகிழ்ந்து அதனைத்தன் மனைவியராகிய கௌசலைக்கும், கைகேசிக்கும், சுமித்திரைக்கும் மூன்று கூறாகப்பகிர்ந்தளித்தான். அவர்கள் அரசனைவணங்கி அதனை வாங்கிப் புசித்தார்கள், உடனே கர்ப்பவதி யாயினார்கள்.

ஆனால் அக்குழந்தைகள் பூமியில் ஜனிப்பதற்கு முந்தி, மேலே நடக்கப்போகும் பெரிய யுத்தத்துக்கு வேண்டிய ஏனைய ஏற்பாடுகள் யாவுந் தேவர்க

னாற் செய்து வைக்கப்பட்டன. விந்தை விந்தையான ஜெந்துக்கள் லக்ஷக்கணக்காய்ப் படைக்கப்பட்டன. அளவிறந்த பலமும், நினைத்தவாறெல்லாம் உருவத்தை மாற்றிக்கொள்ளக் கூடிய சக்தியும் பெற்ற கரடிக் கூட்டங்களும் வானரப்படைகளுந் தோன்றின. வானரப் படைகளுக்குத் தலைவராகிய வாலி, சுக்ரீவன் என்னு மிருவரையும், முறையே இந்திரனும், ஆதித்தனும் படைத்தார்கள். கடலைக்கடக்கவோர் அணைபோடுவதற்காக நளன் என்பவனைத்தெய்வத்தச்சனாகிய விசுவகர்மா படைத்தான். மகா கீர்த்தி பெற்ற ஹனுமானை வாயுபகவா னுண்டாக்கினர்.

இங்ஙனம் ஸ்ரீ ராமபிரானுடைய அவதாரத்துக்காக உலகிற் சகலவித ஏற்பாடுகளுஞ் செய்யப்பட்டுச் சித்தமாயிருந்தன.

முதலத்தியாயம் முற்றிற்று.

செய்யூர் - முத்தைய முதலியார்.

---

# SEEKING AFTER A DOCTOR.

## பண்டித நாட்டம்.

கட்டளைக் கலித்துறை.

உலக முவப்ப வுயர்தமி ழாய்தந்த வொண்புலவா
கலகம் விளைக்கும் விழியா ரிருவர் கணவவெழி
லிலகறி வாள விருமலி னேங்கா தெமக்கருள்வாய்
பலகலை யோங்கும் பரங்கிரி மெய்ஞ்ஞான பண்டிதனே. (க)

காமர்செம் பாட வியற்றுபு நின்னைக் கருதிவந்தேந்
தேமலர் வெட்சியந் தாருடை யாய்தேவ சேனைமகிழ்
கோமக னேயெமை வாட்டுங் கொடுநோய் குமைத்தருள்வாய்
பாமயி லாடும் பரங்கிரி மெய்ஞ்ஞான பண்டிதனே. (உ)

தோமில்செம் பாட வியற்றுபு நின்னைத் தொழுதுவந்தே
நீமகிழ் வுற்றெ மிருமற் கொடுநோயை நீத்தருள்வாய்
பூமகள் கொங்கை யெனப்பொலி கின்ற பொருப்புடையாய்
பாமக ளேத்தும் பரங்கிரி மெய்ஞ்ஞான பண்டிதனே. (௩)

நைந்துளம் வாடி யிருமலி னெற்றுண்டு நாந்தவியா
துய்ந்திடு மாறெமை யாண்டருள் செய்குத லுன்கடனே
மைந்துடை யாயெழின் மாண்புடை யாய்கலை மான்புகழும்
பைந்தமிழ் சான்ற பரங்கிரி மெய்ஞ்ஞான பண்டிதனே. (௪)



நாளுறு நாவலர் கூட்டம் புகூஉப்பல நாளுமுனைப்
பேணு திருந்திலெம் பேசிப் புகழ்ந்தனெம் பீடுயர்ந்தாய்
வீணுக யாமிரு மல்லி னுழலல் விரும்புதியோ
பாணுர் பொழில்கொள் பரங்கிரி மெய்ஞ்ஞான பண்டிதனே. (௫)

கண்ணேயக் கண்ணுண் மணியே மணியின் கதிரொளியே
விண்ணேயவ் விண்ணி னிறையே யிருமலை வீட்டியருள்
ளெண்ணேயவ் வெண்ணு ளிருப்பவ னேதமி ழின்புலவா
பண்ணே சுவையே பரங்கிரி மெய்ஞ்ஞான பண்டிதனே. (௬)

காலாழ் களரிற் களிறென நாயேங் கசிதரனிற்
கேலாது காண்டி யிருந்தமிழ் வாணர்க் கிறையவனே
நூலார் நயந்தெரி வாயெ மிருமலை நூக்கியருள்
பாலா குமரா பரங்கிரி மெய்ஞ்ஞான பண்டிதனே. (௭)

கூடலி னுற்றன்று கூடும் புலவர் குழூஉவிருந்து
நாடுநக் கீர னுரையே யுரையென நாட்டியசேஎ
யீடில் வணமெமை நோயினில் வாட்டுத லென்னைகொலோ
பாட னலஞ்சால் பரங்கிரி மெய்ஞ்ஞான பண்டிதனே. (௮)

பார்க்குங் குலத்தே மிருமலின் வாடல் பரிவுகொலோ
வேர்க்கும் பரிசின் விரைந்தடி யார்க்காக்கும் வீரவிண்ணின்
கார்க்குல மெல்லா மொருங்குசே ருயிலுறுங் காட்சிசெறி
பார்க்கு ளுயர்ந்த பரங்கிரி மெய்ஞ்ஞான பண்டிதனே. (௯)

நாவலர்க் கெய்ப்பினில் வைப்பென விவ்வயி னண்ணியசீர்க்
காவல னேயா மிருமலின் வாடிடக் கைவிடுத
னீவிழை யேலுட னேவந்தெ நோயினை நீக்கியருள்
பாவலர்க் குற்ற பரங்கிரி மெய்ஞ்ஞான பண்டிதனே. (௧௦)

துங்கக் குடம்பையி னீங்கி விரும்பித் தொடுகடலின்
மங்கறி விற்புகுந் தோடி யுழன்று மயங்குகிள்ளை
வங்கம் பெறீஇமகிழ்ந் தென்ன வெளியே மகிழ்ந்தனெமாற்
பங்கயை வாழும் பரங்கிரி மெய்ஞ்ஞான பண்டிதனே. (௧௧)

வி. கோ சூரியநாராயண சாஸ்திரியார்.

---

# A BOUQUET OF GOOD THOUGHTS.
## செம்பொருட் பூங்கோத்து.

### கடவுள் வணக்கம்.
#### சிவபெருமான்.

என்பு மரவு மெரிகனலு மாவுரியும்
வெண்பொடியு மேற்கும் விமலனென்—புன்பனுவ
ணிலத்தார்க் கேற்ப நடாத்துவா னல்லிசைசேர்
பாநலத்தைப் பண்பிற் பயந்து. (க)

#### அம்பிகை.

ஆடலறு பத்துநான் கன்றிறைவன் சென்றியற்றுக்
கூடனக ரிற்றனிச்செங் கோலோச்சு--மோடரிக்கண்
மாதரசி யம்பா மனமகிழ்ந்தென் புன்பனுவ (உ)
லாதரிப்பா ளீந்தே யருள்.

### ஆசிரிய வணக்கம்.

எட்டெட் டிலீலையினை யெம்பெருமா னன்றியற்று
முட்டற்ற செல்வ முதுநகரி—விட்டமுடன்
சங்கத் தமிழ்வளர்த்த சாந்தன் சபாபதிதா (ங)
ளெங்கட் குறுதுணையா மே.

### நூல்.

அவ்வவர்தம் வாழ்நா ளகல்சரிதப் புத்தகமா
மொவ்வொரு நாளு மொருதாளாஞ்—செவ்வனே
காலங் கழித்துநூல் கற்றியற்றி நாட்டுமினோ
ஞாலத் திசையை நனி. (ச)

மாந்த ரிருவர் மனமொருமித் திவ்வுலகிற்
சார்ந்தொருசித் தாந்தந் தனைமருவா—ரேந்திழா
யோடுங் கடிகார மொன்றுக்கொன் றொற்றுமைப்
பாடுடைத் தாமோ பகர். (ரு)

எல்லை கடந்தக்கா லின்பமுந் தொல்லுலகி
லல்லற் படுத்துமே ய மன்றோ—நல்லவாம்
பானெயுஞ் சோறும் பசியறவுண் டோர்தெவிட்டித்
தேனையும் வேண்டிடார் தேர். (சு)

தத்தந் திறமைக்குத் தக்கவா றோர்கரும
மெத்தனிக்க மாந்த ரிழிவெய்தார்—சத்தத்



திரையுருவி யாழ்கடலிற் சென்றிடுமே நாவாய்
கரையருகிற் போம்படகு காண். (எ)

தடமே யுலகினிடைத் தக்கோர்தாம் வாழு
மிடமே பிறரறியா ரென்னே—வடவியெலாம்
வாசமணம் வீசுபல மாமலருண் டாழ்கடற்கீழ்
மாசிலொளி வீசு மணி. (அ)

நாமொன்று நாடவது நம்மைநா டாதுபிறி
தாமொன்றை நாடு மவனிமிசை—பூமிவலந்
திங்கள் சுழலத் தினகரனைச் சுற்றிடுமே
யங்கண்மா ஞால மறி. (கூ)

துன்பம் வருத்தத் துலங்குங் குணநலமே
யன்பிற் குறித்தென் றறிஞருரை—யின்பநறு
கந்த மிகவுங் கமழுங் கனல்பாயச்
சந்தமகில் கர்ப்பூரந் தாம். (க0)

உத்தமந்தான் றேடவரு மூதியந் தந்தைதன
மத்திமமு டன்பிறந்த மற்றோர்தம்—வித்த
மதம மதினு மதமமே பெண்டி
ருதவும் பொருளென் றுணர். (கக)

இல்லாமை துன்பமுனை யீட்டுதலுந் துன்பந்தா
னில்லாது செல்ல னெடுந்துன்ப—மல்லாருந்
துன்பமே யெவ்வழியுந் தோன்றுதன மேயென்னோ
வுன்பொருட்டால் வாடு முலகு. (கஉ)

ஊழின் பயன்கா ணுலகின்க ணின்பமும்
பீழையு மென்ப பெரியோர்தா—மாழிதரு
பொன்னை யடைந்தான் புயல்வண்ணன் பொங்குவிடந்
தன்னையடைந் தான்சிவனுந் தான். (கங)

வாளாப் படுத்தி வருத்திவரு மூழ்வினையுந்
தாளாள ரம்மா தடிந்திடுவர்—மாளாதே
கொண்ட கணவனுயிர் கூற்றுவன்முன் வாதித்துப்
பண்டடைந்த பத்தினியைப் பார். (கச)

நல்லர் கலவருமை நண்ணியுற வாடிடினும்
புல்ல ரறியார் புவிமீதே—மல்லல்விரி
முண்டகத்தே னுக்குலவி மொய்க்குமின வண்டருகேய்
மண்டூகங் கண்டிலதம் மா. (கரு)

தத்தமனம் பற்றுஞ் சமயமுங் கொள்கையுமே
யுத்தமமென் றோதி யுருமுவார்—பித்தர்
திரையாழி மீதுகலன் செல்வழியொன் றேயென்
றுரையாடு வாரு முளர். (கசு)

சலசலெனப் பேசியுரை சாற்றுவோர் மாற்றம்
நலமிலதே செம்பொருளு நண்ணு—விலைகள்
செறிந்துநிறைந் தோங்கு செழுங்கிளையிற் செய்ய
நறுங்கனிக ணண்ணுகில நாடு. (கஎ)

திக்குத்திக் கென்றடித்துச் செல்லுமுறை தப்பாமற்
சத்திக்கும் ரத்தா சயவொலிதா—னுத்தியாற்
காலன் கடுகிவரும் காலப் பரிமாவி
னேலுங் குளம்பொலிகண் டீர். (கஅ)

இன்னனை வைதிலம்யா மேதோ குறிப்பின்றிச்
சொன்னமென் றெண்ணிவசை சொல்லற்க—வுன்னதே
யெய்திடு மம்புக் கிலக்கிலதே னுங்கொடுமை
செய்திடுமோ லெங்கேனுஞ் சென்று. (ககூ)

காரியத்திற் கேற்பக் கருவியிலை காணுழைத்தே
கோருபொரு டாளாளர் கொள்வராற்—கூரியகுண்
டூசிசிறி தேயதனை யுண்டாக்கு மாகருவி
யோசையுறு மெந்திரமன் றோ. (உ0)

செய்தொழிலுக் கேற்ற செழுங்கருவி யில்லையென
நைதலின்றி யுத்தியினி னாடுவரால்—வெய்துலகி
னீண்டிருக்கும் பண்டி நிறைமாந்தர் பல்பொருளும்
பூண்டிழுக்கு நீராவி புக்கு. (உக)

வாரிதிசூழ் வையத்து மாண்புறுநன் மாந்தர்சிலர்
பேரதனை யூன்றிப் பெறும்புகழ்க்குக்—காரணந்தா
னாய்ந்திடுங்காற் றேவ வமிசமனு வேனுமவர்க்
கேய்ந்திடுமோர் பாக்கியத்தா லே. (உஉ)

மேலாங் குலத்துதித்தேம் விண்ணுலகு நம்மதென
மாலார் மனத்தெ மறையோர்காள்—கோலமுறு
மாட்சி யொளித்திறைவன் மள்ளனுப் பேருரிற்
காட்சி யளித்தான் கவிக்கு. (உங)

சிற்பநூல் வல்லவனத் தெய்வமய னென்பரே
கற்பினைகாண் கண்ணுரக் கண்டிலே—னற்புதமா



யாசைமனக் கோலா லமைக்கு மிமைப்பொழுதே
யூசிமேற் கோபுர மொன்று. (உச)

பேராசை யென்னும் பெருந்தீ மனக்காட்டிற்
சேராது காக்குந் திறம்பெரிதே—சீராகத்
தொட்டதுபொன் னாத்துலங்குந் தொல்வரமீ தாசையன்றான்
பட்டனனே கட்டமிகப் பார். (உரு)

மந்திரமுங் கூறும் வயித்தியமுஞ் சோதிடமுந்
தந்திரத்திற் சீர்பெறுமே தாரணியி—னைந்தமன
மாந்தருக்கிந் நூலின் மயக்கங்காண் காலமிட
மோர்ந்துரைக்கின் வல்லானென் றோது. (உசு)

வைதலுற்ற காலைப் பரிந்தமனத் தார்பிறரை
வைதெழுவ ரந்தோ வகையறியா—ரெய்தவனை
வைதலின்றி யன்னான் வழங்குகணை வைதலென்முன்
செய்த வினைப்பயனுந் தேர். (உஎ)

செய்யுங் கருமம் பலன்றருமோ தேர்கிலமென்
றையுற் றகலொந் தழியற்க—வெய்யவெழு
கல்விழுக வன்றேற் கனிவிழுக வென்றுலகிற்
சொல்வழங்கு மேதொன்று தொட்டு. (உஅ)

ஏற்ற கருமத்திற் கேற்ப முயன்றுவரு
மாற்ற லுடையா ரறிவுடையார்—நோற்றிடுமோர்
மந்திரத்தில் வீழ்ந்திடுமோ மாங்காய் வினைவிழையார்த்
தந்திரத்தி லென்பயனுஞ் சாற்று. (உகூ)

பக்கத் துணையாப் பகவா னருளமையத்
தொக்குஞ் செயமே தொடருங்கா—ணக்கருணை
வேழ மருந்து விளங்கனிபோற் போகவே
சூழவரும் துன்பந் தொடர்ந்து. (ங0)

அற்றம் பார்த் தன்பார்க் கபயமளித் தேகொடுமை
பற்று துளமுவந்து பாலிப்பான்—பொற்றொடிமுன்
கூவித் துவரைவதி கோமானே யென்றழைப்ப
மேவித் துயரறுத்தான் வேட்டு. (ஙக)

எல்லா வுயிர்க்குமுறு மின்பதுன்ப மீந்தருளும்
வல்லான் றுலாக்கோன் மகிமையென்றே—சொல்லாய்
கொடுக்கு மிடத்திற் கொடுத்திடுவன் சீரா
யெடுக்கு மிடத்தி லெடுத்து. (ஙஉ)

மெய்யான் மனத்தால் விழையும் வினைப்பலிதான்
பெய்யா விதயபலி பீடத்தே—பொய்யாத
காதலங்கி மூட்டிக் கருதுபய னற்றீசற்
கீதலின் மிக்கமக மில். (கக)

நா. வே. சுந்தரராஜ ஐயர்.

---

# A STUDY OF MATIVA'NAN.

## மதிவாண ஞராய்ச்சி. *

—※—

உயர்ந்த நடையி னியன்றுள இவ்வசன நூல் நூற்றுப்பத்துப் பக்கங்கள் கொண்டுளது. இதனை யியற்றினோர் சென்னைக் கிறித்துவக்கல்லூரித் தலைமைத் தமிழ்ப் பண்டிதர் பிரமஸ்ரீ வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியார் பி. ஏ. இந்தப் புத்தகம் வெகு சோத்தியாக அச்சிடப்பட்டிருக்கின்றது. இது சூணாம்பேட்டை சமீன்தாரவர்களாகிய ஸ்ரீமான். சூ. முத்துக்குமாரசாமி முதலியாரவர்கள், பி. ஏ., என்ற பிரபுவுக்கு உரிமையாக்கப்பட்டுளது. இந்நூல் பொருளினும் நடையினும் ஒருங்கே சிறந்தது. படிக்கப்படிக்க இன்பம் பயக்குந் தன்மைத்து. கதைச்சுருக்கம் பின்வருமாறு :

திரிசிரபுத்தில் ஒரு கலகமுண்டாயது; அதற்குக் காரணமாவான் மாவீர வழுதியின் உறவினன் மாயவன் என்பான். இக்கலகத்தைச் சோணாட்டிளவரசன் மதிவாணன் அடக்கினான். கலகஞ் செய்தவன் மாயவன் என்பதுந் தெரிந்து பாண்டியனுக்குக் கடிதம் எழுதினான். சின்னாட்சென்று மதிவாணன் தன் றந்தை தஞ்சைவாணன் அநுமதிப்படி மதுரை சென்று தனது சிறிய தந்தை முதன் மந்திரி வாய்மையாளரிடம் தங்கியிருந்தான். வழுதியார் மகள் இன்பவல்லியை மதிவாணனுக்கு மணஞ்செய்விக்க ஏற்பாடாயிருந்தது. திரிசிரபுரத்திற் கலகஞ் செய்ததற்காகச் சிறையிலிடப்பட்டிருந்த மாயவன் இதனை அறிந்து சிறையினின்றுந் தப்பி இன்பவல்லியை மஞ்சத்தோடுந் தூக்கிச் சென்றனன். எதிரிற் றலைப்பட்டான் மதிவாணன். இவன் திருப்பூவணத்திற் றன் சுற்றத்தாரிடம் போயிருந்தான். மாயவனுக்கும் மதிவாணனுக்கும் நெடுநேரம் வாட்போர் நிகழ்ந்தது. இதனைச் சற்றுத் தூரத்திலிருந்து கண்ணுற்றிருந்த இன்பவல்லி ஞெரேலெனப்புகுந்து மதிவாணன் புரவிமீதிருந்த குற்றுடைவாள் கொடு மாயவன் இடது காலை வெட்டினாள். மாயவனும் மதுரை சேர்ந்து மரத்தினியன்றதோர்கால் பெற்றனன். மாயவனைக் குற்றவிசாரணை

* [இஃது சென்னை எஸ். பி. சி. கே. அச்சுக்கூடத்திற் பதிப்பித்தது. விலை அணா 8. இன்பவல்லியில் இரண்டாவது மலர். புதுவது புனைந்ததோர் செந்தமிழ்க்கதை.]



செய்தபோது அவன் தான்செய்த அளவற்ற குற்றங்களையும் சாகசச் செயல்களையும் ஆதியோடந்தமாகச் சொல்லித் தான் திருப்பரங்குன்றமேறி வரைபாய்ந்து சாதற்கொருப்பட்டிருப் ்தாகவுஞ் சொன்னான். ஆயினும் அரச சபைக்கட் குழீஇய மதிவாணன் முதலிய அறிஞருரைப்படி மாயவன் மன்னிக்கப்பட்டான் ; இதுவேயன்றி மதிவாணன் இன்பவல்லியைக் கைப்பிடித்த ஞான்றே தானும் மெய்ம்மொழிப்புலவர் மகள் கயற்கணியை மணந்துகொள்ளப் பெற்றான். நாடெல்லாம் மகிழ்ந்தது. இதனுடன் கதை முடிவுபெறுகின்றது.

இவ்வருமைச் சிறுநூலின்கண் ஒன்பது அத்தியாயங்களுள்ளன. அவற்றிற்கு முறையே மருகன் வருகை, கரவுசெயல்கள், அரண்மனைக் கழைத்தல், காதலார் காட்சி, புலவர் மருகன், நகர்ப்புனைவு, வாட்போர், குற்றவாராய்ச்சி, முடிவுரை என அவையவை நுதலும் பொருட்கேற்பப் பெயரிடப்பட்டுள. இந்நூல் உயரிய செந்தமிழ் நடைக்கு ஒரிலக்கிய மாயினும் கதையின் இனிமையால் தமிழ்மொழி பயின்றார் யாவரும் படித்துக் களிகூரும் இயல்பினதாகவே யிருக்கின்றது. வசனநடையி னியன்றுள்ளமையானும், செந்தமிழ் நடைக்கோர் சிறந்த காட்டாகலானும், தமிழ் மொழியறிந்தார் யாவர் கையகத்தும் இருக்கத் தக்கது.

முதலத்தியாயத்தின் கட் கூறப்பட்டுள்ள மதுரைமாநகரின் சிறப்பு, 'சுருங்கச்சொல்லல், 'விளங்கவைத்தல்' என்னும் அழகுபெற்று, ஒருமுறை வாசிக்கினும் கூடலம்பதியின் அமைப்பினை நம் கண்ணெதிரேயே காட்டுவதுபோல விளக்குகின்றது. இரண்டாமத்தியாயத்தின் ஆரம்பத்தில் மதிவாணனுடைய குணாதிசயங்கள் நமக்குத் தெரிவிக்கப்படுகின்றன.

இரண்டாமத்தியாயத்தின் இறுதியில், மணலூரினின்றும் மனக்கலக்கத்தோடும் திரும்பி, மதுரை போந்து, மந்திரியார் மாளிகையின் மாடத்தும்பர்ச் சென்று 'ஆண்டுவிரித்துக்கிடந்த ஒரு பஞ்சணையின்மீது 'அம்மவோ என்று கூவியயர்ந்து' வீழ்ந்த தம் கதாநாயகனை அந்நிலையில் அதிகநேரம் வைக்க மனம்பொறாது, நந்தம் நூலாசிரியர், மூன்றாமத்தியாயத்தின் முதலிலேயே அவனை மந்திரியாரைக்கொண்டு எழுப்பி, அன்னார் தம் அருமைத்திருமகளிரால் அவனுக்கு,

" என்றென் றலைவனைக் காண்பலென் றேங்கிய
 வேந்திழை யேயெழி லின்பவல்லீ !
நன்றிவ னுன்றனை நாடி யடைந்தன
 ளுதன் மதிவாண நாயகனே"

என்பதாதிய தேனினுமினிய தீம்பாடல்களினாற் செவியமுதமூட்டி மகிழ்விக்கின்றனர். நான்காம் அத்தியாயத்திற் காதலனுங் காதலியும் ஒருவரை

யொருவர் கண்ணுற்றுக் கழிபேருவகை பூக்கின்றனர். மன்னவ னரண்மனையில் மதிவாணனைக்கண்டமங்கையர் பலரும் அவன்றன் பெருவனப்புக்கீடுபட்டு அதனைப்பற்பல விதமாகப் புகழ்ந்துரைப்பதும், காதலனைக்கண்ட மாதராள் இன்பவல்லி மீண்டும் அவனைக்காணாது மலரணையின் மீது வீழ்ந்து புரண்டு விம்மி மூர்ச்சைபோக அற்றைஞான்று அவளுயிர்ப்பாங்கியர் செய்த உபசரணைகளைப் புனைந்துரைப்பதும், புதல்வியின் நிலையுணர்ந்த பெருந்தேவியார் மனமுடைந்து, வாய்விடுத் தரற்றுவதும், அதற்கு அந்நங்கை

‘ அறிவொடுங்கி நின்றதுவா லருஞ்செல்வ மடைந்தவெலாம்
பறிகொடுத்தார் போலமனம் பதறுமா லம்மாவோ !
பறிகொடுத்தார் போலமனம் பதறுமே யானாலும்
வெறிகொளும்வண் டெனமீட்டு மிக்கமகிழ் மேவுறுமால் ”

எனத்தன துண்மைநிலையை வெளியிட்டுக்கூறுவதும், ஆகிய இவைகள் வாசிக்க வாசிக்க மேன்மேலும் மகிழ்ச்சியையே தருகின்றன. ஐந்தாம் அத்தியாயத்தின் ஆரம்பத்தில் நந்தம் தமிழ்ப்புலவர் பிறிதொரு தமிழ்ப்புலவருடைய இல்லத்தின் நிலைமை இற்றென வர்ணிக்கின்றார். ஆறாமத்தியாயத்தின் முதலில் மாயவன் தன் மாயச்செயல்களைக் காட்டுகின்றனன்; பின்னர், மதிவாணனும் இன்பவல்லியும் ஓரிடத்தில் தனித்திருந்து தத்தம் அன்பினை வெளியிட்டு உரையாடி உளமகிழ்கின்றனர். ஆனால், அவ்வின்பவல்லிக்கு அடுத்த அத்தியாயத்திற் பெருந்துன்பமுண்டாகின்றது. அவளை மாயவன் மாயமாய்க் கொண்டு செல்கின்றான். பின்னர் மாயவனுக்கும் மதிவாணனுக்கும் நிகழ்ந்த வாட்போர், வாசிக்கும் மைந்தர் மனத்தையே அச்சுறுத்துகின்றதென்றால், இன்னுயிர்க் காதலன் இறந்துபடுவானோவென்று இன்பவல்லியின் மனம் எத்துணைத் துயர் அடைந்திருத்தல் வேண்டும்? எட்டாமத்தியாயத்திலுள்ள குற்ற வாராய்ச்சியில், மாயவனுடைய வீரத்தையும் மாயச் செயல்களையுங் கேட்க நமக்கு ஆச்சரியமும், அவன் எண்ணங்கள் அழிந்துபட்டமையைக் கேட்க நமக்கு இரக்கமும் ஒருங்கே உண்டாகின்றன. அவன் தீக்குணமும் தீச்செயல்களுடையவனா யிருந்தும், அவன்மீதும் கருணைகூர்ந்து நந்தம் நூலாசிரியர், முடிவுரையில், கதாநாயகனுக் குகந்த மணவினையோடு, அவனுக்கும் கயற்கணியை மணம்புரிவிக்கின்றார். இங்ஙனஞ் செய்தது இரக்கமில்லாக் கன்மனமுடையார் சிலர்க்கு உடன்பாடாகாதேனும், நூலாசிரியர் முன்னம் அவன்மீது உள்ள குற்றத்தை உள்ளவாறே ஏற்றி அதற்குத்தக்க தண்டனையும் விதித்துப் பின்னர் அவனைத் அத்தண்டனைக் குட்படாதவாறு நியாயத்துக் கொப்ப மீட்டுக்கொள்வதை உற்று நோக்குவார்க்கு இவர் தம் கருணையும் புத்தி சாதுரியமும் தெற்றென விளங்காமற் போகா.

இந்நூலில் ஆங்காங்குக் காணப்படும் சிற்சில வாக்கியங்கள், ஆங்கிலத்தில் அருமையான முடிபுகளுள்ள சில வாக்கியங்களை இன்னவாறு தமிழில் அமைக்கவேண்டு மென்பதற்குக் காட்டாகக் கொள்ளற்பாலன. இவை மொழிபெயர்ப்பு வகையில் இடர்ப்படும் மாணாக்கர்க்குப் பெரிதும் பயன்படத்தக்கன.



இந்நூலாசிரியர் மாயவன் குணத்தைப் பின்வருவாறு வருணிக்கிறார்: “ அவன் ஒன்று செய்வதற் கொன்பான் வழிகொள்வான். * * கைதவத் தன்மையிற் கண்ணனை வென்றவன், ஒரு கணப்பொழுதி னூர்வலம் வருவான்; நயம்படப் பேசுவான்; ஞாட்பினும் வல்லான். வையகத்தாரெலாம் பொய்யகத்தாரென்பான்.” மதிவாணனைத் தான் இன்பவல்லி மேற்கொண்ட காதல் பற்றிப் பலமுறையுங் கொல்ல முயன்ற மாயவன் ஓரிடத்தில் இங்ஙனம் ஆலோசிக்கின்றான்: “ * * சூழ்ச்சித் திறத்தினிற் பொன்னையும் வென்ற இப்புகரில் பெரியோன் என்ன கருதி யென்னசெய்வானோ? * * * அரசற்கு அண்மிய தம்மவ னாகானாயினன்; தூரியமனிதன் சுற்றமாயினன்; நெருங்கிய முறைமையான் நீசத் தன்மையான்; விலகிய வுரிமையான் மேதகவுடையோன் * * ஒ! தலைக்குமேல் வெள்ளம்! எப்புறமும் எரி! என்னதேனு மெதற்கு மஞ்சிலேன். ஆண்மையற்றிலேன்; பெண்மை யுற்றிலேன். மேலே வெண்மை வேடம் புனைகுவல். அடியினில் மறைவா யதிர்வெடி வைத்தே யனைத்தையும் புகைப்பல். குடிக்க வியலாதேற் கொட்டிக் குப்புறக் கழிப்பல். ஊக்கங் குன்றிலேன். ஆக்கங் கன்றிலேன். எவ்விதத்தானுமென் எதிரியை யொழிப்பேன். மாயவ மயங்கேல்.” காதலார் காட்சியில் மதிவாணனும் இன்பவல்லியும் முதன் முதலொருவரை யொருவர் நோக்கினபோது அக்காட்சியை ஆசிரியர் இங்ஙனம் வருணிக்கின்றார்:

“ கருதலளவைக்கு மேற்பட்டு நலங்களிந்து நின்றாளை அண்ணலு நோக்குனான் அவளு நோக்கினாள்.

“ பெண்களி விழிக்கயல் பிரான்றன் றாமரைக்
கண்களிற் பாய்ந்தன காமர் வண்டென
வுண்களி நறவுவேட் டொளிர னான்விழி
பண்கொள்வாய்க் குமுதத்துப் பறந்து வீழ்ந்தவே.”

“ இருவரு மொருவரை யொருவர் மீட்டும் மீட்டும் பார்த்தனர். அங்ஙனம் பார்த்தும் அமையாது,

“ விம்மினர் வியர்த்தனர் வெய்து யிர்த்தனர்;
அம்மவோ! அன்னர்தாம் படும் வதைகள்
எம்மனோ ராலெடுத் தியம்பற் பாலவோ?

“ ஒளிர்கின்ற வீருடற்கு மோருயிரே யாயினா ரென்றக்கால் யாம் அதற்குமே லேதேனு மெடுத்துப் பேசுத லறிவின்மையின்பாற் படுமேயன்றி வேறன்று.” உலக வியல்பியாவையும் தமிழறிந்தார்க்குச் செறித்துக் காட்டும் இவ்வத்தியாயம் பின்வரும் ஈரடிகளைத் தன்னிறுதிக்கட் கொண்டுளது:

* "கண்டவக் கணத்தினே காதல் கொண்டிடா
தெண்டகு மன்பின ரெவர்கொ லாபவோ ?"

புலவர்மகள் கயற்கணியும் அவள் காதலித்த மாயவனும் ஊசலுதைந்தாடி னது இவ்வண்ணம் புனையப்பட்டிருக்கின்றது :

"அவர்களுக் கெதிரே யொரு நிலைக்கண்ணாடி நிறுவியிருந்தது. அவ்வாடியை யுலகமாகக் கருதிக்கொளின், அதன்கண் அவர்களது உருவந்தோன்று தலைப் பிறப்பாகவும், உருவம் மறைதலை மரணமாகவும் அவ்வூசலைக் கருமத் தொடராகவுங் கொள்ளலாம் ; ஊசலாடி யோய்தலை யிருவினை யொப்பி னிறுதியி லுண்டாகும் மலபரிபாக மென்னலாம்" மாயவன் கயற்கணியைப் பாடச்சொன்னபொழுது அவள் இங்ஙனம் பாடுகின்றாள் :

"ஒத்த நலமுடையா னொங்கு குலமுடையான்
சுத்த மனமுடையான் தோமில் கனமுடையான்
வித்தை குணமுடையான் வேண்டு பணமுடையான்
இத்தகைய நாயகனை யெய்திற் குறையென்னோ ?
இன்பத் தலைமகனை யெய்திற் குறையென்னோ?"

நிற்க. இந்நூலினது தொடக்கந்தொட்டு இறுதிகாறும் நடை ஒரு சிறிது மிடர்ப்படாது இன்னோசை பயந்து படிப்போரது ஊக்கத்தை மேன்மேலும் வளர்த்துவதும், ஆங்காங்கு நற்புத்திகள் புகட்டப்படுவதும் மிகவும் பாராட்டற்பாலன. நூலாசிரியரது கடவுட்பத்தியும், அவர்தம் மேற்புல விஞ்ஞானமும், இயற்கை வருணனைத்திறனும், மணிவாசகப்பெருமான் மீதுள அளவற்ற வன்பும், சங்கநூற் பயிற்சியும், சொற்றொடரிற் பொதிந்துள ஆழ்ந்த கருத்தும் எளிதிற் பிறரொருவராலடையத் தகும் பெற்றியனவல்ல. ஈண்டுக்கூறிய நூற்பண்புகள் ஒவ்வொன்றிற் கோருதாரணங் கூறினும் வாளாது பெருகுமாதலின் அவற்றை நூலின்கட் கண்டுகொள்வதே நேரிதென விடுத்தாம். ஆயினும் குணப்புனைவுகள் மாத்திரம் கற்றவர் கல்லாதவர் ஆகிய மாநுடர் பலர்க்கும் பயன்படுவனவா மாதலின் அவற்றுட் சில கூறுவாம் : அவைதாம் "ஒவ்வொருவர்க் கொருநீதி யுஞற்றுதலு மறனேயோ?" என்னுங் கொள்கையராகிய நீதியந்தலைவர் சொக்கநாதர் தம் நடுவுநிலைமையும், "மணமக்கடமது மனக்கோளுணர்ந்தே மணவினை முடிப்பது மாண்புடைத்தாகும்" என்னும் உண்மை யோர்ந்த வழுதியர் பெருமான்றன் மணவினைக்கோட்பாடும், மாயவனையும் மன்னித்த மதிவாணனது அன்பும் அருளும், கணவன் மனதுக் கிரண்டாகாத மனத்தினளான இன்பவல்லியின் பதிவிரதாதர்மமும், மாயவன் வஞ்சமறியாது அவனுக் கிதயமளித்த கயற்கணிக் காரிகையின் மகளிர்க்குரிய பேதைமைக்குணமும், உலகவியல்பறிவுடன் கலந்தே மாட்சிமைப் படுவது

* இது 'Lore is Love at first sight' என்ற ஆங்கிலப்புலவர் கருத்தோடொத்தது.



தலைநலம் என்று கழறின மெய்ம்மொழிப்புலவர்தங் கூற்றும், முருகன் முதலியோர் மன்றுணைக்கடங்கி நடத்தலும் ஆகிய விவைகளாம்.

அறிவும் இன்பமும் ஒருங்கு பயக்கும் இத்தகைய வசனநூல்களை யியற்றுபவர்களுக்குத் தமிழுலகம் அதிக கடமைப்பட் டிருக்கின்றது. அவர்களுக்குச் சரீராரோக்கியமும் தீர்க்காயுசுந் தந்தருளும்படி எல்லாம் வல்ல இறைவனை என்றும் பிரார்த்திக்கின்றேன்.

வ. சு. சண்முகம் பிள்ளை.

## REVIEWS OF BOOKS.

## புத்தகக் குறிப்புக்கள்.

### போஜராஜ சரித்திரம் :

[இது வெ. நா. ஜூபிலி அச்சியந்திர சாலையிற் பதிப்பிக்கப்பட்டது ; இரண்டாம் பதிப்பு. இதன் விலை அணா 8.]

வடநூலினின்றும் மொழிபெயர்ப்பு வகையாற் றமிழி லியற்றப்பட்ட இந்நூலுக்கு ஆசிரியராவார் ஸ்ரீ புன்னை மாடபூசி ஸ்ரீநிவாசாசாரிய ரவர்கள். இவர் சென்னை யிராசதானிக் கலாசாலையில் தமிழ்ப் புலமை நடாத்துபவர். இந்நூலின் கண்ணே வடமொழிக்கவிஞர் பல்லோருடைய சரித்திரங்கள் இனிமைதோன்றக் கூறப்பட்டுள. அவ்வப்புலவர்கள் அவ்வவ்வமயங்களிற் பாடிய பாடல்களின் கருத்துக்கள் மிகச் செவ்விவாய்ந்தனவாயொளிர்தலின் மொழிபெயர்ப் பாசிரியர் கூறுமாறு "ஐயந்திரிபறக் கற்றுணர்ந்த அறிஞர்க்கும் ஆனந்தத்தை விளைக்கு மென்பதிற் சந்தேகமேயில்லை." அருமையும் பெருமையும் இனிமையும் புதுமையும் வாய்ந்த விஷயங்கள் பல வடங்கிய இம்மேதக்க நூலை வடமொழிப்பயிற்சி யில்லாத தமிழ் மொழியாளரும் படித்தறிந்து ஆனந்திக்குமாறு, "முதனூலிற் கண்டவாறன்றி இக்காலத்துக் கேற்றவண்ணஞ் சிலவற்றை நீக்கியும் மாற்றியுங் கூட்டியுஞ் சிற்சில விடத்தில் முதனூலிலுள்ள சுலோகங்களின் பொருள்களை மிகப்பொருத்தமுறத் தமிழ்ப் பாக்களாச் செய்து காட்டியும்" புனைந்துள தன்மை மிகவும் பாராட்டற்பாலதே. மொழிபெயர்ப்பு வகையிற் கைதேர்ந்த நம் நண்பர் யாண்டுஞ் சோர்வுபடுத லின்றி முதனூற் சுவை கெடாதவாறு இந்நூலினை யமைத்துள ரென்பது இதனைப் படித்தார் யாவர்க்கு முடன்பாடே யென்பது தேற்றம். இவர் ஆங்காங்கு யாத்துப் பெய்துள செய்யுட்கள் இன்னோசை பயந்து செல்லுகின்றன. இவற்றிற் குதாரணமாக, "இன்று தாரை யிழந்தது காப்பினைத், தின்று நாமகள் சோர்வின ளாயின, ளொன்று பாவல ரியாவரு மூன்றில, ரென்று போலொளிர் போசன்விண் ணெய்தவே;" "இன்று தாரை யியைந்தது காப்பினைத், துன்று நாமகள் சோர்வில ளாயின, ளொன்று பாவலரி யாவரு மூன்றின, ரென்று போலொளிர் போசன்மண் ணெய்தவே" என்று வேண்டியவாறு மாற்றத்தக்கபடி யமைத்த செய்யுளைக் காண்க. இந்நூல் 80 பக்கங்கள் கொண்டது; செந்தமிழ்த் திரிசொற்களும் வடசொற்களும் ஆங்காங்கே மாணாக்கர் கல்விநலங் கருதிப் பெய்யப்பெற்றது ; கல்வி யறிவிற்றேறு மிளஞ்சிறார்க்கு மிகவு மேற்றது. இத்தகைய நலங்கள் இந்நூலின்கண் வாய்ந்திருந்

தல் கண்டே கனம் பொருந்திய நம் சென்னைச் சர்வகலாசாலைத் திராவிட பாடசபையார் இதனை 1903 - ஆம் வருஷத்துப் பிரதம கலாபரீக்ஷைக்குப் பாடமாக நியமித்திருக்கின்றனர். இனி நம் நண்பர் ஸ்ரீநிவாசாரியு ரவர்கள் இதுபோலும் நூல்கள் பல வியற்றி வெளிப்படுத்தித் தமிழுலகத்தை மகிழ் விப்பாராக.

### ரூபாவதி:

[இஃது ஒரு புதியநாடகம்; சென்னைக் கலாரத்நாகர அச்சுக்கூடத்திற் பதிப்பிக்கப்பட்டது. இரண்டாம் பதிப்பு. விலை: ரூபா 1.]

இயல் இசை நாடகம் என்னும் முத்தமிழினும் நாடகத்தமிழ் இக்காலத்துப் பயின்றுவாராமை யுணர்ந்து அக்குறையை நீக்குவான் கருதிப் பிரமஸ்ரீ. வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியார், பி. ஏ., புதுமைவழியான் இயற்றியது. இது நாமகள் சிலம்பின் முதற்பரலாம். இந்நூல் ஐந்து அங்கம் உள்ளது. 188 பக்கங்கள் கொண்டது. இவ்விரண்டாம் பதிப்பு அவர்தம் நாடகவியலுக்குப் பெரிது மொத்திருக்கின்றது. பெண்பாலாரும் எளிதிற் படிக்குமாறு எழுதப்பட்டுள்ளது. சிறந்த நீதிகள் பல போதிப்பது. "முற்பதிப்பிற் போலாது இப்பதிப்பிற் பாத்திரங்களின் இயல்புகட்கேற்ற சொல்வழக்கும், நடைவேறுபாடும், சிற்சில திருத்தங்களும், புதிய செய்யுட்களும் அமைக்கப்பட்டுளவாமாறு யாவருங் கண்டு போற்றுதற் குரியது". பின்னுரையிற் சுந்தரானந்தன் "துறவறம் பூண்டு மெய்ந்நிலை தவறிவாழுநர் போலாது, அன்பினாற் கட்டுண்டு இல்லறம்பூண்டு மனித சமூகத்திலிருந்து பிறர்க்குப் பயன்பட்டு வாழ்வேமாக. இல்வாழ்க்கையே நல்லொழுக்கங் கற்பிக்கும் உத்தமக் கல்லூரியாம்" எனவற்புறுத்தல் இந்நாடகத்தின் பயன் முழுவதையுந் தெரிக்குமாறு கண்டுகொள்க. இந்நூலாசிரியரது பிற நூல்களிலே போன்று இந்நூலினும் அவரது கடவுட்பத்தியும், மேற்புல விஞ்ஞானமும், இயற்கை வருணனைத் திறனும், செவிக்கினிய சொல்லமைப்பும், அமிழ்தினு மினிய அருந்தமிழ்ப் பாக்களும், மணிவாசகப் பெருமான் மீதுள அளவிலன்புங் கிடக்கின்றன. "பெண்கல்வி" எனப் புதுவதோர் பெயர் புனைந்து அதைப்பற்றி வீண் முழக்கஞ்செய்த லொழிந்து நந்தமிழ் மொழிமாந்தர் இவ்வரியநூலைத் தம்முடன் பிறந்தோருக்கும் மனைவி மக்களுக்கும் வாங்கிக்கொடுத்து அவரையும் படிக்கச்செய்து அவருந் தாமும் வாழ்க்கை நலனடைவாராக.

### ஹநுமான் சிங்கின்சரித்திரம் :

["கொலைகளவு திறவுகோல்" என்னும் மறுபெயருடைய இஃது ஓர் துப்பறியுங் கதையாம். சென்னைச் சடகோபாசாரிகம்பேனியாரால் வே. நா. ஜூபிலி அச்சுக்கூடத்திற் பதிப்பிக்கப்பட்டது. விலை அணா. 12.]

இந்நூலை யியற்றினார் தொண்டைமண்டலம் ஹைஸ்கூல் உபாத்தியாயராயிருந்து இப்பொழுது இந்து தியலாஜிகல் ஹைஸ்கூலிற் போதகாசிரியராயிருக்கும் ம-ா-ா-ஸ்ரீ, பி. ஏ. பிரணதார்த்தி ஹரசிவனார் பி. ஏ., எல். டி. என்பவர். இவரை வியாசமஞ்சரி யாலும் தமயந்தி நாடகத்தாலும் நம்முடைய பத்திரிகையைப் படிப்பாரனைவரு மறிந்திருப்பார்கள். இந்நூல் இன்பவல்லியின் கண் 21-ஆவது மலராம். இது புதுமைவழியால் தமிழில் இயற்றப்பட்டதோர் அருமையும் இனிமையும் வாய்ந்த நூலென்பதனைப் படிப்பவர் யாவரும் அறியாமற் போகார். இது மேற்புலவாணரது கதைப் போக்கின் முறைகளை நன்கு மேற்கொண்டு எழுதப்பட்டிருத்தல் மதிக்கற்பாலதே. இதன் கண்ணே ஹநுமான் ஸிங்கின் வரலாறு, பனையூர்ப்பட்டாமணியகாரன், வைரப்பதக்கம், ஒரு வைத்தியருக் கொடுத்த யோகம், காந்தாமணியின் காதல், நீலவேணிக்குதிரை, நரைத்தலைக்கூட்டம், கள்ளனுக்கேற்ற குள்ளன் என்ற எட்டு விஷயங்களடங்கி யிருக்கின்றன. கையிலெடுத்தாற் கீழேவைக்க மனம் வாராதவளவு சுவையுடையனவாக இவையனைத்தும் எழுதப்பட் டிருக்கின்றன. இந்நூல் 268 பக்கங்கள் கொண்டிருப்பதைக் கருதுமிடத்து விலை மிக நயமாக ஏற்பட்டிருக்கின்றது என்று கூறுதற் கோரையமுமில்லை. இதனை யாவரும் வாங்கிப் படிப்பாரென்று நம்புகின்றனம்.



---

## EDITORIAL NOTES.
## பத்திராதிபர் குறிப்புக்கள்.

விவேகாநந்த சுவாமிகள் :—சில்லாண்டுகட்கு முன்னர்த் தமிழ் நாடெங்கும் இந்து மதத்தைப் பற்றிப் பிரசங்கஞ் செய்து தந்நாட்டார்க்குப் பேருதவி புரிந்த இத்துறவியை யறியாதார்யாரே? இவர் இறந்ததுகேட்டு விசனமுறாதவரும் யாரே? சக்கிரவர்த்தியார் நோய்தெளிந்து வரக்கேட்ட இந்துக்கள் இவர் இறந்ததனால் மறுபடியும் மனநொந்து போவாராயினர். இடையறு தின்பம் நுகர்ந்து மகிழ்ச்சி யடைவாரு முளர்கொல்லோ? நம் சுவாமி ஏறக்குறைய முப்பத்தாறு வருடங்களுக்கு முன் காயத்த வம்சத்திற் பிறந்தார். நரேந்திர நாததத்த ரென்பது இவர்தம் இயற்பெயராம். தக்க வயதிற் கல்வி கற்கத் தொடங்கக் கல்கத்தாச் சர்வகலாசாலையிற் பட்டம்பெற்று உலகறியும் ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்ஸர் தம் மாணவிராக அவரைச் சார்ந்தனர். பின்னர்த் தத்துவஞானம் பெற்றுத் துறவறம் பூண்டனர். நாளடைவில் அவர் புகழ் எங்கும் பரவிற்று. 1893 - ஆம் வருஷத்திற் சிகாகோ நகரத்தில் மதப்பிரதிநிதி சபைகூடிய பொழுது சுவாமி இந்துமதப் பிரதிநிதியாக அமெரிக்கா சென்றனர். சிகாகோ சங்கை முடிந்தபிறகு இந்து மதத்தைப் பற்றிப் பிரசங்கஞ் செய்துகொண்டு அமெரிக்காவிற் பற்பல விடங்களுக்குச் சென்றனர். அங்குக் 'கேட்போர் மனக்கிளர்ச்சி யுறுமாறு பேசும் பயிற்சி யடைந்த நாவல' ரென்று பெயர் பெற்றனர். அவர் பேசுந்திறன் மிகவும் மெய்ச்சத் தக்கதே. அதானறியுந் 'திரண்டு உருண்ட அங்கமுடையவ' ரென்றொரு பத்திரிகையிற் கூறியிருக்குமாறு அவர் பார்ப்பதற்குக் கம்பீரமான தோற்றமுடையவர். சாதாரண சந்நியாசிகள் போலாது பருத்து வலிமையுடையராயிருந்தனர். அவர் தம் ஒரு தனித்தோற்றமே காந்தம்போற் பிறர் மனத்தை வசீகரித்தது. அவர் தத்துவமோ பலராலும் விரும்பப்பட்டது. நாவன்மை, முகத்தோற்றம், தத்துவம ஆகிய இம்மூன்றும் நல்லனவாயிருப்ப யாரே அவர் பிரசங்கங்களைக் கேட்கப் போகாதிருப்பார்? உயர் குலத்தோர் பலர் அவருக்கு மாணவராயினர். அம்மாணவர் தம் பொருட்டுணைகொண்டு அமெரிக்காவில் வேதாந்த சபையொன் றுண்டாக்கினர். சுவாமியின் மாணவர் இன்னும் அச்சபையைக் கூட்டி வருகின்றனர். 1897 - ஆம் வருஷத்தில் நரேந்திர நாதர் நந்தேயத்துக்குப் போந்தனர். இந்துக்களனைவரும் அவரை

மகிழ்ச்சி கொண்டழைத்தனர். இந்தியாவிற் பலவிடங்களுக்குஞ் சென்று கடைசியிற் தூமேயா னென்னும் இடத்தில் ஆச்சிரமமொன் றமைத்து அதற்குத்தாம் தலைவராயிருந்தார். ஆங்கே பிரபுத்த பாரதமென்னும் பத்திரிகை பிரசுரிக்கப்படுகிறது. சுவாமிகள் செய்த ஞானயோகம் கருமயோகம் முதலிய நூல்கள் இந்நமத விருத்திக்கு நல்ல துணையென்று பலர் எண்ணுகின்றனர். அவர் தத்துவம் என்றும் அழியாதென் றுங்கிலருந் துணிந்து கூறுகின்றனர். சென்ற சின்மதிகளாகச் சுவாமியின் தேகசௌக்கியம் ஊறுபட்டது. இம்மாதம் 4 - ஆம் தேதி சந்நியாசி போலவே சித்தியடைந்தனர். இவர் மாலையுலாவின் பின்னர்ச் சிறிது அசௌக்கியமா யிருக்கத் தம்மானவரை யழைத்து இந்நில வுலகை விட்டொழிவதாகக்கூறி மும்முறை நெட்டுயிர்ப் பெறிந்து சமாதியிலிருந்தனர். அவர் சித்தியாகுமுன் ஜபான் தீவு செல்ல நினைத்தார். ஆனால் இறைவனாணைப்படி இளவயதிலேயே இவ்வுலகை விட்டகன்றார்.

***

இந்திய விருந்தினர் பொருட்டு நேர்ந்த செலவு:—நமது சக்கிவர்த்தியாரது முடிசூட்டுக் கொண்டாட்டங் காணவேட்டு இந்தியாவினின்று சென்ற சுதேசராஜர்களையும் பிரதிநிதிகளையும் உபசரித்து விருந்திடற்கண் நேர்ந்த செலவினை இந்திய வருவாயினின்றுமே இறுக்கவேண்டும் என்று பிறந்த வுத்தரவு கீழ்நாட்டினர்க்கும் மேல் நாட்டினர்க்கும் விசேஷ திருப்தியை விளைக்கவில்லை. செலவும் இலேசானதன்று; மிகவும் அதிகமே. ஏனைய குடியேற்ற நாடுகளின் பிரதிநிதிகளை யுபசரித்தற்கண் நேர்ந்த செலவுகளெல்லாம் ஆங்கில ராஜாங்கத்தாருடைய செலவென் றேற்பட்டிருப்புழி இதைமட்டில் இந்தியாவின் றலைக்க ணேற்றுவது அருளுடைமையன்று. முடிசூட்டுக் கொண்டாட்டமாகிய சந்தோஷ சமயத்தில் நம் இந்தியாவின் விஷயமாய்ப் பெருந்தகைமை பாராட்டி இதற்கு வேறுவழி காண்பது ஏற்புடைத்தாயிருக்கும்.

***

சென்னைக் கையெழுத்துப் புத்தகசாலை:—இது சென்னையைச் சார்ந்த எழும்பூருக்கு அடுத்த பொருட் காட்சிச் சாலையிலுளது. இஃது இப்போழ்தத்து இராசதானிக் கலாசாலையிற் சம்ஸ்கிருத போதகாசிரியராய் நின்று வடமொழிப் புலமை நடாத்தும் ஸ்ரீமான் எம். அரங்காசாரியரவர்களது மேற்பார்வையிலிருக்கின்றது. இவ்வடநூற்புலவர் ஆங்கிலத்தில் எம். ஏ. பட்டம் பெற்றவராதலின் ஆங்கில நூன் முறைகளுக்கு ஏற்ப மேற்கூறிய புத்தகசாலையின் கணுள்ள வடமொழி நூல்களனைத்தையுஞ் சீர்செய்து ஒழுங்குபடுத்தி நூற்பெயர் முறையும் அச்சிட்டு வெளிப்படுத்திப் புதியநூல்கள் வாங்கிவைத்ததற்கு வேண்டிய ஏற்பாடுகளும் செய்து பல்லாற்றானு முயன்று வருகின்றனர் என்பது கேட்டயாவரே களியுறார்? இப்புலவர் வடமொழிக்குச்செய்தாங்குத் தமிழ் தெலுங்காதிய சுதேசபாஷைகட்கும் செய்வாரென நம்புகின்றனம்.

---

# சம்புடம் VI.—விஷய அட்டவணை.

பக்கம்.


| | | |
|---|---|---|
| நமது ஆறும் ஆண்டு—பத்திராதிபர். | ... | 1 |
| நமது சக்கரவர்த்தியாரின் பட்டாபிஷேகம்.—பத்திராதிபர் | ... | 2 |
| ஔவையார்.—சித்தூர் சுப்பிரமணியாசாரியார், பி. ஏ. எல். டி. | ... | 4 |
| முடிசூட்டு வாழ்த்துகள்.— | ... | 13 |
| I. அசலாம்பிகை யம்மை | ... | |
| II. ந. பலராமையர் | ... | 14 |
| III. வி. கோ. சூரிய நாராயண சாஸ்திரியார், பி. ஏ. | ... | 15 |
| VI. திரு எவ்வுளூர்-இராமசாமி செட்டியார் | ... | 18 |
| V. பி. ஏ. பிரணதார்த்தி ஹர சிவனார், பி. ஏ. | ... | 18 |
| ஆசான் அன்பு—செய்யூர் முத்தைய முதலியார் | ... | 21 |
| குலசேகராழ்வார் வைபவம்.—தி. செல்வ கேசவராயமுதலியார், எம். ஏ. | | 23 |
| சாஸர், பிரதம ஆங்கிலக்கவிவாணன் I.—பூரணலிங்கம்பிள்ளை, பி.ஏ. | ... | 25 |
| விச்கிரமோர் வசீயம்—பு. மா. ஸ்ரீநிவாசாரியர் | ... | 28 |
| புத்தகக் குறிப்புகள்.— | ... | 33 |
| பத்திராதிபர் குறிப்புக்கள்.— | ... | 38 |
| சர்வகலாசாலை விசாரணை I.—பத்திராதிபர் | ... | 41 |
| ஔவையார்.—சித்தூர் சுப்பிரமணியாசாரியார் பி. ஏ. எல். டி. | ... | 43 |
| சரித்திரக் கல்விப்பயன்.—பி. ஆர். சுவாமிநாத முதலியார் | ... | 54 |
| செந்தமிழ்க்கல்வி.—கே. தில்லை நாயக முதலியார் | ... | 55 |
| தென்னிந்திய சரிதம்.—சருக்கை வரதாசாரியார் | ... | 58 |
| நவமணி மாலை.—கருவை-சங்கரலிங்கம் பிள்ளை, பி. ஏ. | ... | 64 |
| அசுணம்.—ந. பலராமையர் | ... | 65 |
| எந்தை பிரிவாற்றாமை.—அசலாம்பிகை அம்மை | ... | 67 |
| ஒரு முனிவன்.—தி. அ. இராமலிங்கம், பி. ஏ. | ... | 69 |
| கடிதம்.— | ... | 73 |
| புத்தகக் குறிப்புகள்.— | ... | 74 |
| பத்திராதிபர் குறிப்புக்கள்.— | ... | 80 |
| சர்வகலாசாலை விசாரணை II.—பத்திராதிபர் | ... | 81 |
| ஔவையார்.—சி. சுப்பிரமணியாசாரியார் பி. ஏ. எல். டி. | ... | 83 |

தமிழணியிலக்கண வரலாறு.—குருராவ் எம். ஏ. எல். டி. ... 91
குலசேகராழ்வார் வைபவம்.—தி. செல்வ கேசவராயமுதலியார் எம். ஏ. 95
சாஸ்ரீ, பிரதம ஆங்கிலக் கவிவாணன் II.—பூரணலிங்கம் பிள்ளை பி. ஏ. 99
திருவள்ளுவர் மதம்.—சருக்கை - இ. சுந்தராசாரியார் ... 102
ஒரு முனிவன்.—தி. அ. இராமலிங்கம் பி. ஏ. ... 106
ஒரு சைவோபந்நியாசம்.—ஸ்ரீ காசி ஸ்ரீலஸ்ரீ செந்தி நாதையர் ... 109
பத்திராதிபர் குறிப்புக்கள்.— ... 119

---

சர்வகலாசாலை விசாரணை III.—பத்திராதிபர் ... 121
ஔவையார்.—சித்தூர் சுப்பிரமணியாசாரியார், பி. ஏ. எல். டி, ... 124
ஞான விஜய வாராய்ச்சி.—அ. பூமிநாத முதலியார் ... 132
சித்திர கவிகள்.—அசலாம்பிகையம்மை ... 139
ஔவை முனிமொழி.—ஸ்ரீ காசி ஸ்ரீலஸ்ரீ செந்தி நாதையர் ... 141
கட்டுக் கதைகள்.—ம. சு. கோவிந்த சிவனார் ... 149
புத்தக குறிப்புகள்.— ... 150
பத்திராதிபர் குறிப்புக்கள்.— ... 155

---

நாகரிகம்.—பத்திராதிபர் ... 161
திருப்பாணாழ்வார்.—தி. செல்வ கேசவராய முதலியார் எம். ஏ. ... 165
இந்தியா விவா கோற்பத்தி.—இராமசாமி அய்யங்கார் பி. ஏ. ... 168
பிராணிகளின் இசையுணர்ச்சி.—ச. பட்டாபிராமன் பி. ஏ. ... 170
ஸாக்ரடீஸ்.—சி. என். சரவண முதலியார் பி. ஏ. ... 174
பாத்திர மறிந்து பிச்சையிடு.—பி.கே. ஐயாசாமிபிள்ளை ... 179
தோத்திரமாலை.— எம். எஸ். பிச்சுவையர் ... 183
ஔவை முனிமொழி.—ஸ்ரீ காசி ஸ்ரீலஸ்ரீ செந்தி நாதையர் ... 187
கட்டுக்கதைகள்.—ம. சு. கோவிந்த சிவனார் ... 195
புத்தகக் குறிப்புகள் ... 197
பத்திராதிபர் குறிப்புக்கள் ... 200

---

டெல்லி தர்பார்.—பத்திராதிபர் ... 201
இரண்டு அருஞ்செய்யுள்களும், அவற்றின் உரையும்.—
யஸ். கிருஷ்ணமாசாரியர் ... 204
ஞான சாஸ்திரி.—ந. லபாராமஐயர் ... 210
உள்ளப்பயிற்சி.—ச. இ. சுந்தராசாரியார் ... 212
வேதாந்த தேசிகன் வைபவம்.—கே. அரங்காசாரியர் ... 220
விக்கிரமோர்வசீயம்.—பி. எம். ஸ்ரீநிவாஸாசாரியர் ... 226
ஸர்வார் ஹமதலக்ஷண பூர்த்தி.—எம். குப்புசாமி ஐயர் ... 238





புத்தகக்குறிப்புகள் ... 236
பத்திராதிபர் குறிப்புக்கள்.— ... 238

---

சுதேச பாஷை யாக்கம்.—பத்திராதிபர். ... 241
கல்வினுட்டேரை.—திரு. த. கனக சுந்தரம்பிள்ளை பி. ஏ. ... 242
ஆன்மவிசாரிக்கு உத்தரம்.—ஸ்ரீ காசி ஸ்ரீலஸ்ரீ செந்தி நாதையர் ... 245
உளப்பயிற்சி.—சருக்கை. பி. சுந்தராசார்யர் ... 248
காசிகண்டம்.—சிதம்பர முதலியார் ... 251
விக்கிரமோர் வசீயம்.—பி. எம். ஸ்ரீநிவாசாசாரியார் ... 256
ஸர்வரீ ஹமத லக்ஷணபூர்த்தி.—எம். குப்புசாமி அய்யர் ... 248
கடிதம்.— ... 268
புத்தகக்குறிப்புக்கள்.— ... 271
பத்திராதிபர் குறிப்புக்கள்.— ... 277

---

ஜாதி வகைத்தோற்றம்.—பத்திராதிபர் ... 281
பெரியாழ்வார்.—செல்வ கேசவராய முதலியார் எம். ஏ. ... 283
தமிழணியிலக்கண வரலாறு.—பி. குருராயர், எம். ஏ. எல்., டி. ... 286
தமிழை வளர்க்குமாறு.—ப. சு. செங்கல்வராய பிள்ளை பி. ஏ. ... 291
தருந்தன தங்கி நிற்றல்.—ச. இ. சுந்தராசாரியார் ... 298
ஞானானந்தனடிமாலை.—தி. இலக்ஷமணப்பிள்ளை ... 304
வேதாந்த தேசிகன் வைபவம்.—கே. அரங்காசாரியார் ... 309
புத்தகக் குறிப்புக்கள்.— ... 301

---

திராவிடர் வருகை.—பத்திராதிபர் ... 321
தென்னிந்திய சரிதம்.— ... 324
உடல் பயிற்சி.—ச. இ. சுந்தராசாரியன் ... 327
கட்டுக்கதைகள்.— ம. சு. கோவிந்த சிவன் ... 332
வேதாந்த தேசிகன் வைபவம்.—கே. அரங்காசாரியர் ... 336
ஸர்வார்ஹமத லக்ஷணபூர்த்தி.—மஹேச குமார சர்மா ... 341
குலோத்துங்கச் சோழன் கோவை.— ... 344
சங்கீத சந்திரிகை.—க. குப்புசாமி முதலியார் பி. ஏ. ... 353
பயின்ற மேற்கோள்.— ... 354
பத்திராதிபர் குறிப்பு.— ... 360

---

தமிழ்ப்பாடசாலைகள்.—பத்திராதிபர் ... 361
இந்திய இருப்புப்பாதைகள்.— ப. அ. ... 368

கிணற்றுப் பாச்சல்கள்.—தி. அ. சு. ... 366
கட்டுக்கதைகள்.—ம. சு. கோவிந்த சிவனார் ... 368
விலாஸவதி.— ... 373
ஞானானந்தனடிமாலை.—தி. லக்ஷ்மணப்பிள்ளை பி. ஏ. ... 378
நாஸ்திக மதம் அல்லது உலோகாயத மதம்.—அ. சிதம்பரமுதலியார் 382
குலோத்துங்கச் சோழன் கோவை.— ... 386
வேதாந்த தேசிகன் வைபவம்.— கே. அரங்காசாரியர் ... 396
பத்திராதிபர் குறிப்புக்கள் ... 400

மதுரைத் தமிழ்ச்சங்கம்.—பத்திராதிபர் ... 401
தொல்காப்பியர் காலம் ஆராய்ச்சி.—ப. சு. செங்கல்வராய பிள்ளை பி. ஏ. ... 408
சந்திர முகன்.—டி. எஸ் திருமூர்த்தி ... 416
குலோத்துங்கச் சோழன் கோவை.— ... 422
வேதாந்த தேசிகன் வைபவம்.—கே. அரங்காசாரியார் ... 431
காலஞ்சென்ற ப்ரணதார்த்திஹர சிவனார், பி. ஏ. எல். டி. ... 437
பத்திராதிபர் குறிப்புக்கள்.— ... 439

சென்னைத் தமிழ்ப்பண்டிதர் குழப்பம்.—பத்திராதிபர் ... 440
சிந்தாமணி.—சி. சுப்ரமணியாச்சாரியார் ... 442
சந்திரமுகன்.—டி. எஸ். திருமூர்த்தி ... 445
குலோத்துங்க சோழன் கோவை.— ... 456
மாமலை பாயிரம்.—டாக்டர். சண்முகம்பிள்ளை ... 463
மாமாலை நூல்.—K. அரங்காசாரியார் ... 465
ஹேரம்பமாலை.— Do. ... 470
பத்திராதிபர் குறிப்புக்கள். ... 473


MADRAS 600 008


# ஞானபோதினி

சம்புடம். VI. } 1902ஆம் ஆகஸ்டுமீ { இலக்கம் 1.


## OUR SIXTH YEAR.

## நமது ஆறாம் ஆண்டு.

நமது தமிழ் நாட்டின்கண் அச்சிடப்பட்டு உலவுறாஉம் பத்திரிகைகள் அளவில. அவற்றுள் மாதாந்தப் பத்திரிகைகள் சிலவேயாம். அச்சிலதாமும் பலதிறப்பட்டு விளங்குகின்றன. மகளிர்க் கென்றே யெழுதப்படுவனவும், கற்றறிந்தார்க் கென்றே யெழுதப்படுவனவும், கல்லாதார்க்கென்றே யெழுதப்படுவனவும், மாணவர்க்கென்றே யெழுதப்படுவனவும் என மாதாந்தத் தமிழ்ப்பத்திரிகைகள் பலவகைப்பட்டு உலவுவனவாயின. இவையனைத்தும் ஒவ்வோராற்றாற் பயன் படுவனவேயாம்.

ஆயினும், சாமானிய சனங்களிடத்தும், கற்றுணர வல்லரல்லாதாரிடத்தும், கற்றறிந்தாரது உயர்வுடைய கொள்கைகளும் ஒழுக்க வழக்கங்களும் அறிவுடைச் செயல்களும் பரவுமாறு செய்யவேண்டுவதே பத்திரிகைகளின் இன்றியமையாத கடமையாமாதலின் இதனைத் தமிழ்ப் பத்திராதிபர்களாவார் கவனித்து நடக்கவேண்டும். அவ்வாறு நடக்குமிடத்துச், சாமானிய சனங்களுக்குப் பொருள் விளங்காதவாறு விசேஷமான திரிசொற்களை வழங்கிக், கருதிய பொருளை மறைத்துப் படிப்பவரை மருட்டுவதனால் யாதுபயன்? யாவர்க்கும் பயன்படத்தக்க பத்திரிகை யென்று முதலில் வாய்ப்பறை யறைந்துவிட்டுப் பின்னர் அதனைப் பண்டிதர்க்கு மட்டிற் பயன் படத்தக்க பத்திரிகையாக்குவது எவ்வாறு ஏற்புடைத்தாகும்? அதற்கு முதலிலேயே 'இது பண்டிதபத்திரிகை' யென்று கூறிவிடுதல் நேரிதன்றோ?

யாம் இவ்வாறு கூறியதனாலே சாமானிய சனாபிவிருத்தியைக் கருதிய பத்திரிகைகளனைத்தும், அச்சாமானியர் பேசுந் தமிழிலேயே யெழுதப்படல் வேண்டுமென்றே மென்றெண்ணற்க. பாஷைநடை பிழைபடாமலும், சொல்லுருவம் அநாவசியமாய்ப் பிறழாமலும், எழுத்துப்பிழை நேராமலும், பழையன கழிந்த சொல்வடிவங்களை வீணே வழங்காமலும், புதிய ஆபாசப் பிரயோகங்களை மேற்கொள்ளாமலும் ஓராற்றால் நடுநிலைமை யடைந்து கொண்டகருத்துக்களைத் தெளிவுபெற விளக்கிப் பொதுசன நலம் பெருக்குதலே எமது கருத்து.

இக்கருத்திற் கேற்பவே, சென்ற ஐந்து வருஷங்களாகப் பல வகையான இடையூறுகள் நேர்ந்தும், அவற்றிற்கு அஞ்சி மேற்கொண்டகாரியம் சோர்வடையாத வண்ணம், எம்மாலியன்ற வளவு இப்பத்திரிகையை நடத்திவந்தோம். இனியும் அவ்வாறு நடத்திவருவதே எமது உத்தேசம். எமது கொள்கை கைகூடுமாறு இறைவன் திருவருள் புரிவாராக.

இனிச் சென்ற ஆண்டு நமது பத்திரிகைக்குக் கையொப்பக்காரரா யிருந்தும், விஷயதானஞ் செய்பவராயிருந்தும் உபகாரஞ் செய்த நண்பர் யாவர்க்கும் இதுவே யிடமாக வந்தனஞ் செலுத்தி நன்றிகூறுகின்றோம். அவர்களனைவரும் மேன்மேலும் எம்மைக் கடைக்கணித்துக் கைதந்து ஊக்குவார்களென நம்புகின்றோம்.

பத்திராதிபர்.

---

## THE CORONATION OF OUR EMPEROR.
## நமது சக்கிரவர்த்தியாரின் பட்டாபிஷேகம்.

---

நிகழும் ஆகஸ்டு மாசம் ஒன்பதாந்தேதி, அதிமேன்மை தங்கிய நமது இந்திய சக்கிரவர்த்தியாராகிய எட்வர்ட் ஏழாவர் என்னும் திருநாமம் புனைந்த வள்ளலார்க்குப் பட்டாபிஷேக மகோற்சவம் விசேஷச் சிறப்புடனும் மகாநந்தத்துடனும் நடந்துநின்ற மேன்மையை எடுத்துக் கூறுதற்கு யாவரே வல்லார்? ஒருவேளை வாயாரச் சொல்லுதற்குச் சேடனும் கண்ணாரக் காண்டற்கு இந்திரனும் கையார எழுதுதற்குக் கார்த்த வீரியனும் ஆகிய இவர்கள் தாம் வல்லரேயோ? யாமறியேம். ஆங்கிலநாடெங்கும் மங்கள முழக்கம் முழங்கிய



நமது சக்கிரவர்த்தியார் எட்வர்ட் ஏழாவர்.

தற்கு நம் இந்திய நாடும் நேர்நின்று ஆநந்தகோஷம் செய்துநின்றது. ஆங்கிலப் பாணன் அருகேயிருந்து மணிமுழ வோசை யெழுப்பக் கீழ்நோக்கி நிற்கும் இந்திய மாதராள் அன்புபூண்டு கைத்தாளமிட்டு இன்னிசைபாடித் தாளினாற் சதிநயங்காட்டி ஆடாநின்ற பரிசுகண்ட எந்தப் பிரபுவே அவள் வேட்டபொருளை ஈயாதிருப்பான்? சர்வ லோக மங்களகரமான இப்பட்டாபிஷேக மகோற்சவ அவசரத்திற் பலர்க்கும் பரிசுதாராநின்ற எம்முடைய வள்ளல் சிரோமணியாகிய எட்வர்ட் சக்கிரவர்த்தியார் இந்திய மாதராள் கிழவியே யெனினும் புதுமையுந் தலைமையுஞ் சான்ற கிழத்தியெனக்கொண்டு மேற்கூறிய ஞான்று கைப்பிடித்து நின்றனராதலின் இத்தேவி வேட்ட பொருளை யுந் தலைமகனாகிய சக்கிரவர்த்தியார் தந்தருளுவார் என்பதற்கு ஐயமு முண்டோ? எம்மிறைவன் இந்திய மாதராட்கு அளிப்பதைத் தலைவி யென்னும் அன்புகாரணமாக அவள் விரும்பியதை அளிப்பினு மளிக்கலாம். அன்றிப் பரிசென ஈயினு மீயலாம். இரவலர்க்கீதல்போலக் கொடுக்கினுங் கொடுக்கலாம். எவ்வாறு கொண்டபோதிலும் இந்திய மாதராள் தன்னுடைய மக்கள் மூலமாகக் கேட்கும் உரிமைகளை எங்கோமகன் எட்வர்ட் சக்கிரவர்த்தியாரும் இல்லையென மறுப்பரோ? தம்முடைய முதற்பெருந் தேவியாகிய ஆங்கில மாதராளது மக்களைப் பாராட்டுமாறுபோல இரண்டாம் பெருந்தேவியாகிய இந்திய மாதராளது மக்களாகிய எம்மையும் பாராட்டுதல் வேண்டும். ஆங்கிலர்க்கும் எமக்கும் வேறுபாடுகாட்டி யொழுகாது ஒத்த உரிமைகள் ஈந்து இருவரையும் பாதுகாத்தருளல் வேண்டும். இவ் வேண்டுகோள் கைகூடுமாறு அரசரும் அவரை யடுத்துள அமைச்சரும் பாராளுமன்று என்னும் பண்புறு சபையாரும் இந்தியராகிய எம்மவரது ஏழைமை நிலையைக் கண்ணுற்றுத் திருவுளம் புரிதல் வேண்டும். இதன்பொருட்டு எல்லாம்வல்ல முழுமுதற் கடவுளாகிய அருளற மூர்த்தி யெம்பரம் பொருளை மனமார நினைத்து வாயார வாழ்த்தி மெய்யார வணங்குகின்றோம்.

சுந்தரக் கோமா னெட்வர்ட் சுகக்கட லாடி வாழ்க;
சிந்தையி லின்பங் கொண்டு தேயமெங் கெங்கும் வாழ்க;
கந்தரந் தவறு வாகிக் காலத்தின் மழைகள் பெய்க;
இந்திய மாதும் வாழ்க; எம்மனோர் யாரும் வாழ்க.

பத்திராதிபர்.

# AYVAIYAR.

# ஔ வை ய ா ர்.

---

## III. வாழ்க்கைச் சரிதம்.

இனி ஔவையார் வாழ்க்கைச் சரித்திரத்தைச் சுருங்கச் சொல்லுவோம். ஔவையார் முதலாவர் கி.பி. முதல் நூற்றாண்டின் பிற்பகுதியிற் பாண்டியர்கோன் உக்கிரப்பெருவழுதி காலத்தில் உறையூர்க்கடுத்த ஒரு கிராமத்தில் ஆதி யென்னும் பறைச்சிக்கும் பகவனென்னும் பிராமணனுக்கும் பிறந்தாரென்ப. தாய்தந்தையர் இருவரும் தங்களுக்குள்ளே செய்துகொண்ட ஓர் உடன்படிக்கையின்படி தாங்கள் பெற்ற குழந்தையைப் பிறந்த விடத்திலேயே போட்டுவிட்டுப் போக எத்தனிக்கையில், மாதா சற்றே மனம் வருந்தினளெனவும், அது கண்டு உடனே குழந்தையாகிய ஔவையார் வாய்விட்டு,

இட்டமுட னென்றலையி லின்னபடி யென்றெழுதி
விட்டசிவ னுஞ்செத்து விட்டானோ—முட்டமுட்டப்
பஞ்சமே யானாலும் பாரமவ னுக்கன்றாய்
நெஞ்சமே யஞ்சாதி நீ.

என்றுகூறிய அவளை ஆற்றினரெனவுங் கூறுகின்றார்கள். பிறகு அக்குழந்தையை ஒரு பாணன் கண்டெடுத்து வளர்த்து வருவானாயினன். இந்த ஔவையார் சகல கலைகளிலுந் தேர்ந்து நுட்பமான அறிவினையுடையவராய் வெகு சீக்கிரத்திற் பாடல் வல்லமைபெற்ற புலவருமாயினார். தகடூர்த்தலைவன் அதிகமான் என்பவனால் அதிகமும் உபசரிக்கப்பட்டு, அடிக்கடி அவன் அரண்மனைக்குச் செல்வர். அவ்வீரம் நிரம்பிய வேந்தனும் ஔவையாரை மிக்க அன்புடன் மதித்துத் துதித்துப்போற்றி யாதரித்து வந்தான். ஔவையாரும் அவனை மிகுந்த பக்தி விசுவாசத்தோடும் புகழ்ந்து கொண்டாடி வந்தார். ஒரு காலத்தில் அவனை நோக்கி,

ஊர்க்குறு மாக்கள் வெண்கோடு கழாஅலி
னீர்த்துறை படியும் பெருங்களிறு போல
வினிமை பெரும வெமக்கே மற்றதன்



றுன்னருங் கடாஅம் போல
வின்னாய் பெருமநின் னொன்னா தோர்க்கே. *

என்று கூறிப் புகழ்ந்திருக்கிறார். இந்த அதிகமான் கடையெழு வள்ளல் எழுவர்களில் ஒருவன். ஔவையாரிடத்தில் இவன் காட்டிய ஈகைத்தன்மைக்கு ஓர் அளவில்லை. மரணத்தினின்றும் நீக்க வல்லதாகக் கூறப்படும் அருநெல்லிக்கனி யொன்றை அதன் பெருமையைக் கூறாமலே ஔவையார்க்குக் கொடுத்து உண்ணச்செய்தான். ஔவையாரும் அவன் ஈகைத்தன்மையைப் புகழ்ந்து பல பாடல்கள் பாடியதோடு அவனைத் தன் தந்தையாகப் பாராட்டிப் போற்றி வருவாராயினார்.

அன்றியும், இந்த ஔவையார் முதலாவர் இராஜ தந்திரத்திலும் நுண்ணறிவு உடையவராயிருந்ததனாற் காஞ்சிக்குத் தலைவனாக இருந்த தொண்டைமானிடம் அதிகமானால் தூது விடுக்கப்பட்டார். கடைசியில், அதிகமான் சேரராஜனாற் போர்க்களத்தில் விழுந்தபொழுது ஔவையார் அவனுக்காக மிகவும் இரங்கிப் பல பாடல்கள் பாடியழுதார். அதன்பின், தொண்டைநாட்டிற் சிலநாள் திரிந்து மறுபடியும் தகடூர் சென்றபொழுது அதிகமான் மகன் பொகுட்டெழினியால் மிகுதியும் போற்றி யுபசரிக்கப்பட்டனர். மற்றுமொரு காலத்தில், மதுரைத் தமிழ்ச்சங்கத்தில் திருக்குறளை அரங்கேற்றுதல் நிமித்தம் அவ்விடத்திற்குச் சென்ற திருவள்ளுவர் இடைக்காடர் இவர்களோடு இவ்வௌவையாரும் சென்றனரென்று கூறுவர். அக்காலத்தில் திருக்குறளுக்குப் பாயிரமாக இடைக்காடர் கூறியதில் முதற்பதத்தை மாற்றி,

அணுவைத் தொளைத்தேழ் கடலைப் புகட்டிக்
குறுகத் தரித்த குறள்

என்று கூறினார் என்பர். எனினும், திருவள்ளுவர் அறம் பொருள் இன்பம் வீடு என்னும் புருஷார்த்தம் நான்கில் முதல் மூன்றை 1330 குறளிற் பாடியிருக்க, அக்குறளைப் புகழ்ந்துபாடிய ஔவையார் புருஷார்த்தங்கள் நான்கனையும்,

---

(இ-ள்) ஐயனே! ஒரு பெரிய யானை கிராமச்சிறுவர்கள் தன் தந்தங்களைக் கழுவும் போது எப்படிச் சந்தோஷிக்குமோ அதுபோல் எங்களிடத்திற் சந்தோஷிக்கிறாய்; அதுவே யானை மதம் பிடித்தகாலத்தில் யாவரும் அஞ்சும்படி எப்படி ஒழுகுமோ அதுபோற் பகைவர் எதிரில் அஞ்சத்தக்கவனாகின்றாய் (எ-று)

ஈதலறந் தீவினைவிட் டீட்டல்பொரு ளெஞ்ஞான்றுங்
காத லிருவர் கருத்தொருமித்—தாதரவு
பட்டதே யின்பம் பரனைநினைந் திம்மூன்றும்
விட்டதே பேரின்ப வீடு

என்னும் வெண்பா வொன்றில் அமைத்துப் பாடினாரெனவுங் கூறுவர். இனி, ஔவையார் மதுரையிலிருந்த காலத்தில், அங்கிருந்த சங்கத்தாரைப் பரீக்ஷிக்க எண்ணங்கொண்டு கமதைந்து விரல்களைச் சேரக்குவித்தும் அவற்றை மூடியும் சிறிது திறந்தும் ஆட்காட்டி விரலை நீட்டியும் ஐந்தையும் அகலத்திறந்தும் ஐந்து சைகைகளைக் காட்டி, இவற்றிற்குப் பொருள் தோன்றும்படி பாடுங்கள் என்னலும், உடனே நக்கீரர்,

இவ்வளவு கண்ணுடையா ளிவ்வளவு சிற்றிடையா
ளிவ்வளவு போன்ற விளமுலையா—ளிவ்வளவாய்
நைந்த வுடலா னலமேவு மன்மதன்ற
னைந்துகணை யால்வாடி னாள்,

என்று சிற்றின்ப பரமாகிய பொருள் கூறுதலும்; அதனை மறுத்து ஔவையார் தாமே,

ஐய மிடுமி னறநெறியைக் கைப்பிடிமி
னிவ்வள வேனுமன்ன மிட்டுண்மின்—தெய்வ
மொருவனே யாமென் றுணரவல் லீரே
லருவினைக ளைந்து மறும்.

என்று பேரின்ப பரமாகிய பொருள்கூறி யாவருக்கும் ஆச்சரியமுஞ் சந்தோஷமும் விளைத்தார் என்றும் கூறுவர். *

மேலும், இந்த ஔவையார் முதலாவர் பாணர் கூட்டத்திற் பழகி வந்ததனால், புலாலுண்டல் மதுபானம் செய்தல் இரண்டும் இவர்க்கு இயற்கையாய் விட்டன. இவர் இத்தமிழ் நாட்டிற் கீர்த்திவாய்ந்த பாவலாட்டியாயிருந்ததுடன் தமிழ்நாட்டிலுள்ளவர்களை நன்னெறியில் உய்க்கும்பொருட்டுப் பலநூல்களை இயற்றி அவர்களுக்கு அரிய நீதிகளைச் சுருக்கி எளிதில் மனத்திற் பதியும் வண்ணம் போதிப்பதில் மிகச்சமர்த்தராய் விளங்கினார்.

* மேற்கூறிய இரண்டு பாடல்களும் இரண்டாம் ஔவையார் சைகை வினாவிற்குப் புகழேந்தி ஒட்டக்கூத்தர் முறையே விடையாகக் கூறியதாகவும் கதையுளது.



இனி, ஔவையார் இரண்டாவர் வாழ்க்கைச் சரித்திரம் கூறுவோம். இதுவரைக்கும் தமிழ்ப் பண்டிதர்கள் ஔவையாரிருவரும் ஒருவரென்றே மருண்டிருந்து விட்டதனால் இந்த ஔவையார் இரண்டாவரின் மாதாபிதாக்களின் பெயர் இன்னவென்பது புலப்படவில்லை. என்றாலும், இவர் சோழராச்சியத்தில் மிகுந்த ஏழைக்குடியிற் பிறந்தார் என்பதுமட்டில் நிச்சயம். மேலும் இவர் கூறியுள்ள

நூலெனிலோ கோல்சாயு நுந்தமரேல் வெஞ்சமராங்
கோலெனிலோ வாங்கே குடிசாயு—நாலாவான்
மந்திரியு மாவான் வழிக்குத் துணையாவா
னந்த வரசே யரசு.

என்னும் வெண்பாவிற் சூத்திரரை மிகவும் புகழ்ந்திருப்பதனால் இவர் சூத்திரவருணத்தார் ஆகவேண்டும். இவர் வாழ்ந்த காலம் குலோத்துங்கன் முதலாவன் அரசு செலுத்திய கி. பி. பதினோராம் நூற்றாண்டின் பிற்பகுதியென்று முன்னே காட்டியிருக்கிறோம். அஃதன்றியும், இம்முதலாங் குலோத்துங்கச் சோழனுக்குப் பட்டாபிஷேகம் நடந்த காலையில் ஔவையார் அவனை 'வரப்புயர' என வாழ்த்தியதாகவும் அதன்பொருளை விளக்கவேண்டுமென்று சபையார் வேண்டிக்கொண்டபோது,

வரப்புயர நீருயரும்
நீருயர நெல்லுயரும்
நெல்லுயரக் குடியுயரும்
குடியுயரக் கோலுயரும்
கோலுயரக் கோனுயரும்.

என்று பொருள் விளக்கியதாகவும் கூறுவர். ஒரு நாள் இச்சோழன் அரண்மனைக்கு ஔவையார் சென்று புகழேந்தியையும் ஒட்டக்கூத்தரையும் பரீக்ஷித்த பான்மையையும் அப்புகழேந்தி புகழ் வந்தி நின்ற விதத்தினையும் முன்னே விரித்துக் கூறியிருக்கிறோம். கம்பரை யிழிவாகக் கருதியிருந்தார் என்று கூற இடமுண்டு. சிலம்பி என்னும் தாசி கையில் ஐந்து பொன் வாங்கிக்கொண்டு பாதி வெண்பாப் பாடி மற்றைப்பாதியை ஔவையார் கூழிற்குப்பாடியது கேட்டுக்கம்பர் இறுமாந்து ஒரு வயலோரமாகச் செல்லுகையில், அங்கே ஔவையாரைக்கண்டு அவரைக் கர்வபங்கம் செய்யவேண்டுமென்று எண்ணி

னவராய் அருகில் முளைத்திருந்த ஆரைக்கீரையைச்சுட்டி அதன் பொருளைக்கேட்பதுபோல,

ஒருகாலில் நாலிலைப் பந்தலடீ

என்று கூறினார். அதைக்கேட்டலும் ஔவையார் சினந்து கம்பரை நோக்கி,

எட்டேகா லக்ஷணமே யெமனே றும்பரியே
மட்டில் பெரியம்மை வாகனமே—முட்டமேற்
கூரையில்லா வீடே குலராமன் றூதவனே
யாரையடா சொன்னா யது *

என்று வைது, கேட்டதற்குப் பொருள் ‘ஆரை’ என்று குறிப்பாகப் பொருள்படும்படியாகவும் கூறினார் என்பர். மற்று இவர்,

இல்லற மல்லது நல்லற மன்று

என்று கொன்றைவேந்தனிற் கூறியிருந்தாலும் தாம் மாத்திரம் இல்லறந் தழுவாது துறவறத்தை மேற்கொண்டவராய் ஓரிடத்திலும் தங்காமல் ஊரூராய்த் திரிந்து வந்தார். இவர் பல விடங்களிலுஞ் சென்று கூழிடுவாரையும் குளிரப்பாடும் இயல்பினை யுடையவர்; அல்லாமலும் பல அற்புதங்களும் செய்தார் என்பர். இவையாவும் இவரே பாடிய

கூழைப் பலாத்தழைக்கப் பாடிக் குறமகளு
மூழக் குழக்குத் தினைதந்தாள்—சோழகேள்
உப்புக்கும் பாடிப் புளிக்கு மொருகவிதை
யொப்பிக்கு மென்ற னுளம்

என்னும் கவியால் நன்றாய் விளங்கும். இதனால் இவ்விரண்டாம் ஔவையார்க்குக் ‘கூழுக்குப்பாடி’ என்றொரு நாமமும் உண்டு. மேலும் சேர சோழ பாண்டி தொண்டை நாடுகளைப்பற்றி,

வேழ முடைத்து மலைநாடு மேதக்க
சோழ வளநாடு சோறுடைத்துப்—பூழியர்கோன்
றென்னாடு முத்துடைத்துத் தெண்ணீர் வயற்றொண்டை
நன்னாடு சான்றோ ருடைத்து

என்று சிறப்பித்துக் கூறியதாகவும் சான்றோர் கூறுவர். ஒருகாலத்தில், திருக்கோவலூரிலுள்ள அங்கவை சங்கவை என்னும் இரண்டு

* இப்பாட்டிற் கடையடியே ஔவையார் கூறியது, மற்றைய மூன்றும் பிற்காலத்தார் கூட்டியன என்றும், இது கூறியது கம்பரை நோக்கியன்று, ஒட்டக்கூத்தரை நோக்கியென்றுங் கூறுவர் சிலர்.



இடைப்பெண்கள் ஔவையாரைக் கண்டவுடன் மிகுந்த உபசாரம் செய்து குடிக்கக் கூழும் உடுக்க ஒரு நீலச்சிற்றாடையும் அன்புடன் அளித்தலும், ஔவையார் மிகக்களித்தவராய் உடனே சோழபாண்டியர்களை வரவழைத்து அவர்களுக்கும் அப்பெண்களுக்கும் முறையே பாணிக்கிரகணம் செய்வித்தார் என்று கூறுவர். மற்றுமொரு காலத்தில், சுப்பிரமணியக்கடவுள் ஔவையாருடன் சம்பாஷிக்கத் திருவுள்ளங் கொண்டவராய்க் காடேறி மேயும் மாடோட்டுபவராய் வேஷங்கொண்டு ஒருகாட்டின் நடுவில் நாவல்மரமேல் ஏறியிருக்கையில், ஔவையார் ஆங்குவந்து ‘நாவற்பழஞ் சில பறித்துப்போடு’ எனக் கேட்டலும் வேஷதாரி, சுடுபழம்வேண்டுமோ சுடாப்பழம் வேண்டுமோ’ என்றார். ஔவையார் ஒன்றுந் தோன்றாதவராய்ச் ‘சுடாப் பழமேபோடெனச் சொல்லலும் மாயோன்மருகன் மரத்தின் கிளைகளைக் குலுக்கவே பழமுங் காயும் உதிர்ந்து விழுந்தன. உடனே ஔவையார் பழங்களைப்பொறுக்கி மண் படிந்திருந்ததனால் மண்ணை ஊதலும் மூரியெருதுமேய்க்கும் முருகன் ‘கிழவீ! அது சுடுபழமாயிற்றே, தின்றால் வாய்வெந்து விடுமே, வேண்டுமானால் நன்றாய் ஊதித்தின்’ என்றார். அப்போது ஔவையார் சுடுபழம்கனியென்றும் சுடாப்பழம் காயென்றும் ஈதறியாமற் போனேமே யென்று வெட்கமடைந்திருத்தலும் ஆறுமுகனார் தம் பன்னிரு கையோடும் காட்சி தந்து ஏகினார் என்றும் கூறுவர். எஃது எவ்வாறாயினும், இவ்விரண்டாம் ஔவையார் புவிச் சக்கிரவர்த்திகள் கவிச்சக்கிரவர்த்திகள் யாவராலும் புகழும் பரிசும் பொருந்தி வெகுகாலம் ஜீவித்திருந்தாரென்பது திண்ணம்.

---

## IV. முதலாம் ஔவையார் சகோதரர்.

இனித்திருவள்ளுவர் அதிகமான் கபிலர் இம்மூவரும் (முதலாம்) ஔவையார் சகோதரர் என்று பரம்பரையாகக் கூறப்பட்டு வருவது உண்மையேயோ கட்டுக்கதையேயோ என்பதைப்பற்றி ஆராய்வோம். முன்னரே, முதலாம் ஔவையாரும் திருவள்ளுவரும் கி. பி. முதல் நூற்றாண்டில் ஒரே காலத்திலிருந்தவர் என்று ஆதாரம் காட்டி நிச்சயித்திருக்கிறோம். திருக்குறள் அரங்கேற்றத்தின் நிமித்தம் இவர்கள் இருவரும் மதுரைக்குச் சென்றதாகவும்

கூறப்பட்டுவருகிறது. அன்றியும் அவர்கள் அநேக விஷயங்களில் ஒற்றுமைப்பட்ட கருத்தினை யுடையவர்களாகவும் இருக்கிறார்கள். உதாரணமாகப், 'பெரியாரைத் துணைக்கோடல்' என்னும் குறளதிகாரம் 'பெரியாரைத் துணைக்கொள்' என்னும் ஆத்திசூடி வாக்கியத்தை ஒத்திருத்தல் காண்க. அடியிற் கூறப்படுவனவற்றிலுள்ள ஒற்றுமையினையும் உற்று நோக்குக:—

| ஆத்திசூடி. | திருக்குறள். |
| --- | --- |
| 21. நன்றிமறவேல். | 108. நன்றி மறப்பது நன்றன்று நன்றல்ல, தன்றே மறப்பது நன்று. |
| 39. கேள்விமுயல். | 411. செல்வத்துட் செல்வஞ் செவிச்செல்வ மச்செல்வஞ், செல்வத்து ளெல்லாந் தலை. |
| 59. தூக்கிவினைசெய். | 467. எண்ணித் துணிக கருமந் துணிந்தபி, னெண்ணுவ மென்ப திழுக்கு. |
| 67. நிலையிற்பிரியேல். | 964. தலையி னிழிந்த மயிரனையர் மாந்தர், நிலையி னிழிந்தக் கடை. |
| 103. ஊருடன் கூடிவாழ். | 140. உலகத்தோ டொட்ட வொழுகல் பலகற்றும், கல்லா ரறிவிலா தார். |
| **கொன்றை வேந்தன்.** | |
| 7. எண்ணுமெழுத்துங் கண்ணெனத்தகும். | 392. எண்ணென்ப வேனை யெழுத்தென்ப விவ்விரண்டுங், கண்ணென்ப வாழு முயிர்க்கு. |
| 13. ஔவியம் பேசுத லாக்கத்திற் கழிவு | 168. அழுக்கா றெனவொரு பாவி திருச்செற்றுத், தீயுழி யுய்த்து விடும். |
| 27. சான்றோ ரென்கை ஈன்றோர்க்கழகு. | 69. ஈன்ற பொழுதிற் பெரிதுவக்குந் தன்மகனைச், சான்றோனெனக்கேட்ட தாய். |
| 74. முற்பகற் செய்யிற் பிற்பகல் விளையும். | 319. பிறர்க்கின்னா முற்பகற் செய்யிற் றமக்கின்னா, பிற்பகற் றாமே வரும். |
| 29. சீரைத்தேடி னேரைத்தேடு.<br>46. தொழுதூண் சுவையி னுழுதூணினிது.<br>77. மேழிச்செல்வங் கோழைபடாது. | 1033. உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற் றெல்லாந்,தொழுதுண்டு பின்செல் பவர். |

மேலும், 'அன்னையும் பிதாவும் முன்னறிதெய்வம்' என்னும் ஔவையார் வாக்கியத்தின்படி, திருவள்ளுவரும் ஆதி பகவன்



என்னும் தம்மாதா பிதாக்களை முதற்குறளிலேயே குறிப்பால் தொழுகிறார். அல்லாவிட்டால், தெய்வத்தைக் குறிக்கும் செந்தமிழ்ப் பதங்கள் எத்தனையோ இருக்கவும் ஆதி பகவன் என்னும் இரண்டு வடமொழிகளை யெடுத்துக் கடவுளைக் குறிக்கக் காரணமில்லை. இவற்றைப்போல் ஒற்றுமையை விளக்குவன இன்னும் அநேகம் இருக்கின்றன. இவற்றாலும் இவ்விருவரும்சகோதர சகோதரிகளேயாவர் என்பது கொள்ளக்கிடக்கின்றது. உற்று நோக்கின், இருவர் ஒழுக்கங்களிலும் பேதம் ஒன்றே உள்ளது. அதாவது, முதலாம் ஔவையார் தாம் பாணர் கூட்டத்தில் வளர்ந்து வந்ததனாற் புலால் உண்பர், மது அருந்துவர்; திருவள்ளுவரோ அவற்றை அறவே ஒழித்தவர்.

இனி, அதிகமான் என்பவன் தன் நல்வினைப்பயனால் தகடூர்க்கரசன் ஆயினன். அவனுக்கும் இம்முதலாம் ஔவையார்க்கும் உண்டாயிருந்த விசுவாசத்திற்கு ஓர் அளவில்லை. அவனைக் கண்டபோதெல்லாம் தன்னையு மறியாமலெழுந்த சகோதர வாஞ்சையினாலோ அல்லது அவன் தன் சகோதரனென்றே அறிந்திருந்ததாலோ, ஔவையார் ஒருகாலத்தில் அவனை நோக்கி,

யாழொடுங் கொள்ளா பொழுதொடும் புணரா
பொருளறி வாரா வாயினுந் தந்தையர்க்
கருள்வந் தனவால் புதல்வர்தம் மழலை
யென்வாய்ச் சொல்லு மன்ன வொன்னார்
கடிமதி லரண்பல கடந்த
நெடுமா னஞ்சிநீ யருளன் மாறே.*

என்று கூறித் தந்தையின்முன் மகள் நிற்பதுபோல் வணங்கி நின்றனர். அல்லாமலும் அவன் போர்க்களத்தில் வீழ்ந்து இறந்தபொழுது ஔவையார் அடைந்த அருந்துயரத்திற்கு அளவேஇல்லை. இனிக் கபிலரோ வேதியர் குலத்தில் வளர்ந்து வந்தவர். 'கன்மத்தாற் சாதியல்லது ஜன்மத்தாற் சாதியில்லை' என்று வாதித்து எழுதிய 'கபிலரகவல்' என்னும் சிறிய நூலில் தாம் ஆதிக்கும் பகவனுக்

* (இ-ள்) குழந்தைகளின் குதலைச்சொல் அர்த்தம் அறியக்கூடாதன வாயினும் வீணைகானம்போல இனிமையைத் தராதனவாயினும் தாய்தந்தையர்க்கு மகிழ்ச்சியை யுண்டாக்குவதுபோல, அதிகமானே! என்னிடத்துள்ள அன்பினால் என் சொல்லும் உனக்கு மகிழ்ச்சியை விளைக்கிறது.

கும் பிறந்ததாகவும் தம்முடன் திருவள்ளுவர் அதிகமான் என இரண்டு ஆடவரும், ஒளவையார் வள்ளி உப்பை உறுவை என நான்கு பெண்டிரும் தோன்றியதாகவும் கூறியிருக்கிறார். கர்ணபரம்பரைக் கதைகளும் இவ்வாறே திருவள்ளுவர் அதிகமான் கபிலர் இம்மூவரும் ஒளவையார் சகோதரர் என்று கூறுகின்றன. அன்றியும், இக்கபிலரும் பரணரும் புறநானூற்றின்படி வையாவிக்கோப் பெரும்பேகனைப் பலமுறை பாடியிருக்கின்றனர். இப்பரணரும் முதலாம் ஒளவையாரும் ஒரே காலத்தவரென முன்னே காட்டியிருக்கிறோம். இதனாலும், முதலாம் ஒளவையாரும் கபிலரும் ஒரே காலத்தவரென்பது துணியப்படும். இக்காரணங்களால் திருவள்ளுவர் அதிகமான் கபிலர் இம்மூவரும் முதலாம் ஒளவையாரின் சகோதரர்களே யென்று ஊகித்தல் அமைவுடைத்தேயாம்; மற்று, அவர்கள் ஒரேகாலத்தில் இருந்தவரென்பது சிறிதும் சந்தேகத்திற்கிடமில்லாத நூல்களின் துணிபாம் என்க.'

---

## V. பாடினோரும் பாடப்பட்டோரும்.

முதலாம் ஒளவையாரைப் பாடினோர்:—

(1) 'சொல்லாயும் ஒளவை'

எனப் படிக்காசுப்புலவரும்,

(2) 'ஒளவைபாடிய அம்பர்கிழான்'

எனச் சேந்தனும்,

(3) 'ஒளவையுண்ட நெல்லிக்கனிபோல'

எனப் பரிமேலழகரும்

(4) 'மால்வரைக்
கமழ்பூஞ் சாரல் கவினிய நெல்லி
அமிழ்துவிளை தீங்கனி யௌவைக் கீந்த
வுரவுச்சினங் கனலு மொளிதிகழ் நெடுவே
லரவக்கடற்றானை யதிகனும்'

என நத்தத்தனாரும்,

(5) ஒளவையார் பாடிய புறப்பாட்டுக்கள் முதலாகப் பல நூல்களினின்றும் எடுத்தாளும் நச்சினார்க்கினியரும்,



(6) 'அல்லவை செய்தார்க் கறங்கூற்ற மாமென்னும்
பல்லவையோர் சொல்லும் பழுதன்றே'

என மூதுரையினின்றும் எடுத்தாண்ட இளங்கோவடிகளு முதலியோர்.

சித்தூர்-சுப்பிரமணியாசாரியார்.

---

## THE CORONATION ODES.
## முடிசூட்டு வாழ்த்துக்கள்.

---

### I.

**அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.**

ஒளிக்கடவுள் சுடர்க்கரங்க ளுலவாத தடங்களினு மோடி யோடி
யளிக்கடமை துறவாம லாண்டளித்த பெருமாட்டி யளிக்க வந்த
களிக்குமரற் கவர்மகுடங் கவிப்பதெனுங் களிமொழியைக் கழறக் கேட்டே
துளிக்குமனத் துவகையினா லவர்ப்பிரிந்த சோர்வினையுந் துடைத்திட் டேமால்.

விசையைமா தினையிழந்த விரிதுயரின் வெம்மைதனை வீட்டு நன்னு
ளசைவின்மே தினிமாது மரியவாண் டகையரசை யடையு நன்னாள்
வசையிலா வீரத்தின்மேல் வாய்ந்தவொளா யிரத்திரண்டில் வயங்கு மாகஸ்
டிசைதருமொன் பானுகுந் தெய்தியென வியம்பவரு மினிய நாளே. (௨)

கல்லுருக்குந் திண்புயத்துக் கடும்போவர் பெரும்போரின் கடலை நீந்தி
வல்லரக்கர் போர்க்கடலின் வாய்நீந்தும் பரிதியென வருவா யேனு
மல்லுருக்கு மப்பகலோன் கீழ்வரநீ மேல்வரலா னதிக நீயே
மல்லிருக்கும் படையரசர் தொழுமகிபா நின்பெருமை மதிக்குங் காலே. (௩)

வற்றாத பெருந்திருவு மகன்புவியு மணிமுடியும் வளர்செங் கோலு
நற்றாய்தன் னுடைமையென வேற்பதுபோ லவர்க்கமைந்த நவையில் வாழ்வும்
பற்றாரு மன்னுயிர்பாற் படரருளும் பெரும்பொறையும் பரித்துப் பன்னாட்
பொற்றாதார் மலர்மணமும் பொலிந்ததென நம்மரசர் பொலிக மாதோ. (௪)

ஆங்கிலநாட் டினில்முன்ன மரசியற்று மிப்பேர்கொ ளாறுவர் தாமு
மீங்கடைந்து நமைப்புரந்தா ரிலையதனு லிம்மன்ன ரேந்த றன்னை
யோங்குமுதற் பேரரசென் றுரைத்திடுத லழகிதலா லொழிந்த வன்னார்
பாங்கினிலே ழாவதர சென்த்துணிதல் பண்புறுமோ பகருங் காலே. (௫)

### கலிவிருத்தம்.

வாகை முற்றி வளர்ந்திட மன்னுயிர்க்
கீகை முற்றி யிரும்பொறை முற்றியுள்
ளோகை முற்றி யுயர்ந்திவர் நற்குடிச்
சாகை முற்றித் தழைப்ப வுலகினில். (௬)

வீர மாதரு ணம்பி விரும்பெழிற்
றூர மாதொடுந் தாரணி மாதினைச்
சாரு மாதய வாற்புயந் தாங்கியே
பார மாதிரு வோடென்றும் வாழ்கவே. (௭)

அசலாம்பிகை யம்மை.

## II

### அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

1. வெற்றியந் திருவை யொத்த விஜயையெஞ் செல்வி யீன்ற
கொற்றவ னுவரி யாடைக் குவலயக் குலம டந்தைக்
குற்றநற் கொழுந னாக வுணர்தரு மூலக மன்னுற்
பெற்றவட் பிரிந்த பேதைப் பிழையறப் பிரிந்த தாலோ.

### கலிநிலைத்துறை.

2. அசைவி லானவர் குலமெனு மமுதவா ரிதிவாய்
விசயை யென்னுமோர் வெள்ளிய பணிலமிங் கீன்ற
யிசையெட் வேர்டெனு மோர்பெறும் வெண்மணி யிலங்கித்
திசையெங் கும்புக ழொளியினூற் பகையிருள் சீக்கும்.

### கோச்சகக் கலிப்பா.

3. காண்டகுமிக் காசினியாங் கன்னி யுடன்கமலை
வேண்டி யணைதரலான் மேலோர் தமைப்பேணி
யாண்டதனிச் சக்கிரத்தா யாதவினூன் மாலனையா
யீண்டறிஞர் போற்றேழா மெட்வெர் டெனும்பெயரோய் !

### கலிநிலைத்துறை.

4. மயர்வி லாதுநீ பலகலை வளமிக வாய்ந்த
வுயர்வி னூல்வெரீஇ யுரகனும் பாதலம் புக்கா
னயர்வுற் றேங்கிய வவன்சுமை யுன்புயத் தமைத்த
செயலி னூலினிச் சேடனுஞ் சிரஞ்சிறி தாற்றும்.

5. அரைய னேகுடிக் காருயி ராயவ னென்னும்
பெரியர் வாய்மொழி பிறங்குவாய் மையதெனப் பெற்றோந்



தெரியல் சூடிய மார்பநீ திகழ்முடி சேர்த்துங்
கிரியை கண்டுடல் கிளர்ந்தனெங் கேட்டுள மகிழ்ந்தேம்.

### அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

6. தேங்குபுக ழாங்கிலமோ டியர்பரதம் புரக்குமெழிற் செங்கோன் மன்ன
வோங்குமரி யேந்துமணி யுயர்பீடத் தமர்கவினி தொன்னு ருள்ள
மேங்கவின திசைஞாலத் தெண்டிசையுஞ் செலக்கவினு ரேத்தா நிற்ப
வாங்குகடல் வளாகமுற்று நின்னடிக்கீ ழொதுங்கவென்றும் வாழி வாழி.

### எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

7. வாழி யிந்து தேயம் வாழி வானம் வாழி பைந்தமிழ்
வாழி சோதி ரூப தேவ நாதன் வாழி யாங்கிலம்
வாழி நான்கு வேதம் வாழி வாழி தேனு வின்குலம்
வாழி வாழி யெட்வர் டென்னு மன்னன் வாழி வாழியே.

ந. பலராமையர்.

## III

### வெண்பா.

சொல்லார் மணிக்கடலிற் றோமில் வயிரமணி
வல்லான் பதித்தபெரு மாண்பிற்றா—னல்லார்ப்
பெருந்தேவிக் கிட்டுப் பிறங்குதில கம்போற்
றிருந்தேர்கொ ளாங்கிலநற் றேம். (௧)

### கட்டளைக் கலித்துறை.

நற்றே னொழுகு நறுமலர் தம்மு ணலஞ்செறியப்
பெற்றே யிலகும் பெருமைகொ டாமரை பீடுயரு
மற்றே யெனலா மருங்கலை வாணி யமர்ந்தொளிரப்
பொற்றே வியுமொருங் கெய்திய வாங்கில பூமியையே. (௨)

### வெண்பா.

பூமிக்கு ளோங்கியவள் பொன்னிகர்செந் நாப்புலவர்
நாமிக் கொளிரு நலமுடையா—ளேமக்
கடலுடையா ளாங்கிலநற் காரிகையிற் கம்மா
வுடல்வயிற்கண் போன்மிலண்ட னூர். (௩)

### கட்டளைக் கலித்துறை.

ஊருக்கு ளெல்லா முயர்ந்தவிவ் வூரினி லோங்குசெங்கோல்
பாருக்கு ளங்கங்குச் சிற்றர சாண்டார் பலர்தமக்குஞ்
சீருக் கெடுத்தநற் செவ்விய காட்டாச் செலுத்தியவ
ணூருக் குரிய விசயைத் திருப்பெயர் நம்மனையே. (௪)

### வெண்பா.

அனையநற் றாயி னரும்புதல்வர் தம்முட்
புனையு முடிக்குரிய பூமான்—றனையே
தனக்குவிகர் கொண்டுமிகத் தண்ணளியுஞ் சான்ற
மனக்கினிய னெட்வர்ட் மகான். (௫)

### கட்டளைக் கலித்துறை.

மகானென்றி யாரு மகீதலத் தின்கண் மகிழ்ந்துரைசீர்
மிகாநின்ற வள்ளல் கலைநலங் கூட்டுண்டுசெவ் வேளனையா
னுகாநின்ற பைந்தே னிராச மலரி னுளிர்புயத்தான்
றகானென் றெவருங் குறைசொலற் கில்லாத் தகைமையனே. (௬)

### வெண்பா.

மையலொன் றின்றி மடலெழுதிப் பாடுநரு
மையனே காவெனச்சொ லாடுநருந்—துய்ய
மனத்தின் மகிழ்சிறந்து வாழ்த்துநரு மாவா
ரினத்தின் மகளி ரெலாம். (௭)

### கட்டளைக் கலித்துறை.

எலாவகை மாதரு மெங்கள் புகழ்சான்ற வெட்வர்டினு
யுலாவருந் தோறும்யா மேற்கூறி யாங்குள் ளுருகிவிற்பச்
சிலாமய மாமென வானந்த முற்றுத் திகழ்ந்து நின்றார்
நலாரொடு பொல்லாத மாக்களு மம்ம நயந்துளமே. (௮)

### வெண்பா.

மேன்மொழியிற் பாநலஞ்சான் மேலோ ரனையரோ
பான்மையொடன் னுனைப் பரிந்துரைத்தார்—தேன்மொழியாஞ்
செந்தமிழின் யாமுமவன் சீர்மைசொலி மாலையொன்
றுந்துகளிப் பிற்புனைந்திட் டோம். (௯)

### கட்டளைக் கலித்துறை.

ஓமென் றிணங்கினர்க் குற்றநட் பாள னுளம்பிறிதாய்த்
தாமென் றகன்று தருக்கினர்க் குற்ற தனியரியே
ளுமென் றெமதிறை வோனைப் புகழி னதனையொவ்வோம்
போமென் றிகழ்ந்திட்ட போவர்க்குஞ் செய்தனன் பொன்னருளே. (

### வெண்பா.

பொன்னருளி னூற்றுப் புகழ்தோய் குணக்குன்று
மன்னுயிர்ப்பைங் கூழ்வளர்க்கு மாவெழிலி—துன்னுமன்பின்



றொங்குகட னீதிப் பொலிவார் மணிவிளக்க
மெங்களிறை யெட்வர்டென் பேம். (௧௧)

### கட்டளைக் கலித்துறை.

என்பே சுவதெட்வர்ட் வள்ளல் குணங்களை யெம்முரையி
னின்பேர் வரையறைக் கட்படு மோவிதை யெய்த்திலமாற்
றன்பே யுளங்கொ ளியல்புடை யாளருந் தூன்றிமகிழ்
நன்பே ருலக மிதுவே யெனவெணி நாடுவரே. (௧௨)

### வெண்பா.

நாடுதனிச் செந்தமிழி னற்கடலி லாடுவீர்
நீடுவகை கொண்டிங்ங னேர்மினோ—கூடிநா
மெல்லாரு மெட்வர்ட் டிறைவன் முடிபுனைதல்
சொல்லாரப் பாடிமகிழ் தும். (௧௩)

### கட்டளைக் கலித்துறை.

தும்மினுங் குற்ற மிருமினுங் குற்றஞ் சொலிப்புடைத்தார்
நம்மிற் றியரைமுன் னுளு நலம்பெற்ற ஞாலமன்ன
ரிம்மையின் பெல்லா மினிது நுகர்தந் திருங்களியா
டெம்மை நிகர்ப்பவர் யார்கொலிப் போழ்தென் றிருக்குதுமே. (௧௪)

### வெண்பா.

இருக்குமறை தான்முழங்கு மிந்தியநற் றேயத்
தருக்குமற்றை யாங்கிலர்க்குஞ் சாலப்— பெருக்கு
முரிமைகளில் வேறுபா டொன்றுமுறா வண்ணம்
புரியுமெட்வர்ட் மன்னன் புகன்று. (௧௫)

### கட்டளைக் கலித்துறை.

மன்னர்தம் மன்னென்று வையமெல் லாமொப்ப வந்தவெங்கண்
முன்னவ னுமெட்வர் டேழாவ னேனு முதல்வனென்னப்
பொன்னரி யாதன மேறி மகிழ்ந்து பொலிந்தனனு
னன்னரிக் காட்சிகண் டானந்த மெய்தின நாமுளத்தே. (௧௬)

### வெண்பா.

தேவன் றிருவருளாற் சீர்சான்ற மெட்வர்டெங்
காவலன்செங் கோல்கொண்டான் காண்மினோ—யாவிரு
முள்ளுவந்து வாழ்த்துமி னோங்கியகூத் தாடுமின்
றெள்ளுதமிழ்ப் பாடுமின் றேர்ந்து. (௧௭)

### கட்டளைக் கலித்துறை.

தேர்ந்துநின் றீருஞ் சிறிதள வேனுந் தேரலிருஞ்
சேர்ந்துநின் றிவ்வயி னீர்தினஞ் சிந்தை செயுமொருவ
னோர்ந்துநின் றோங்கும் பரம்பொரு ளாகு மவனையன்பு
கூர்ந்துநின் றேட்வர்ட் பொருட்டுக் கரந்தொழல் கொள்பரிசே. (கஅ)

### வெண்பா.

சேம சுபகிருதிற் செங்கடகச் சித்திரையிற்
காமர் முடியணிந்தான் காண்மினோ—சீமைக்
கரசனெனு மேட்வர் டருஞ்சார்வ பௌமப்
பரசுபெரும் பேரொடுமிப் பார். (கக)

### கட்டளைக் கலித்துறை.

பாரி லவனர சென்றென்றும் வாழ்க பயன்சிறக்க
சேரல ரெல்லாரு நட்பாள ராக செறிந்துமுகின்
மாரி பொழிகவெங் கெங்குந் தமிழின் மணங்கமழ்க
வேரிற் பொலிகந மிந்தியர் வாழிய வெஞ்சொலுமே. (உ0)

வி. கோ. சூரியநாராயணசாஸ்திரியார்.

## IV.

### எழுசீர்க் கழிநெடிலடி யாசிரிய முடுகு விருத்தம்.

திருவெ லாமுறு சதுரர் காளிசை
    செறியெட் வார்ட்டிசே வந்தெனு
மரசர் நாயகர் மணிகொண் மாமுடி
    யணிசெய் காட்சிவண் மாட்சியாந்
திரம தாகிய வவர்ந லாளுகை
    திகழு மார்யவிஸ் வாசமுஞ்
சரத மேவுமெத் தினமும் வாழியொண்
    சகமும் வாழிநீ டூழியே.

திருஎவ்வுளூர்-இராமசாமிசெட்டியார்.

## V.

### எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

1. சீர்மேவு ரகுகுலத்திற் றசர தன்றன்
    றிருமகனா யவதரித்த திருமால் தானும்
போர்மேவு மரக்கர்கோன் புவியில் வீழப்



    போக்கிடபின் முடியணிந்து பொலிந்துநின்றான்
பார்வேட்ட யுதிட்டிரனோ தமரை யெல்லாம்
    பாரதப்போர் தனில்வீழ்த்திப் பாரை யேற்றான்
கார்மேவு நிறத்தான்றன் கருணை யாகக்
    காலத்தி லுலகளித்த முறையீ தென்றால்.

2. வானோரும் மானவராய்ப் பிறந்து வாழ்வான்
    வரம்வேட்டு வதிந்துறைந்த வளஞ்சேர் நாடு
கோனோடு குடியுயர்ந்து வாழ்ந்த நாடாங்
    கோமுனிகள் பலர்செழித்த கோதில் நாடு
தேனோடுந் திருத்துழா யலங்கன் மார்பன்
    றேர்நடத்தும் பதவிபெற்ற பரத நாட்டை
ஆனோவ ரெனுங்குலத்திற் கருக்கன் போன்ற
    வாடவர்கோ னெட்வார்டின் றாள்வான் வேண்டி.

3. பாரதத்திற் பதின்மடங்கோ வதற்கும்மேலோ
    பாரதமா மோவெனவே பலரு மஞ்சும்
போரதனை முடித்துடனப் போவர் தங்கள்
    போர்த்திறத்தை வியந்துமவர் பிறந்து வாழ்ந்த
பாரதனைச் சேரினல்லாற் சார்வ பௌமப்
    பார்த்திவனாய்ப் பலரேத்தப் புகழ்பெற் றோங்கும்
பேரதனைப் பிரகாசஞ் செய்த லொவ்வாப்
    பெருங்கருணை யிருந்தவா றென்னே! என்னே!!

4. மருவலரு மருவலரோ டேத்தி நின்று
    மகிழ்ந்திடவும் மனைமுதலாய் விடுத்தே சென்ற
வருமைமிகு குடிகளும்வீ டடைந்து வாழ்ந்தன்
    றகங்களித்துத் தமதரசை யணுக வேட்கும்
பெருந்தகையே யெனப்பலரும் வியந்து கூறப்
    பேரருளாற் சவுசனியஞ் செய்த பெம்மான்
பருவரலை நீக்கிடவும் பரத நாட்டார்
    பசிப்பிணியைப் போக்கிடவும் பதியா னானே.

5. பதியானான் பார்முழுதும் பரித்தே காக்கப்
    பரமனரு ளாலுலகந் தழைத்து வாழ
நிதியானான் நிருபரெலா மேத்த நீதி
    நிலைத்திடவு மிடமானான் நிலையற் றோர்க்குக்
கதியானான் கருணைவெள்ளம் பாய்ந்து தேங்குங்
    கடலானான் கலைகளெலா முறைந்து வாழும்

மதியானன் மன்னுயிர்க்கு முயிரே யானன்
மற்றெதுதா னவனுகா திருந்திட் டானே.

6. இந்தவித மிருந்துலகை யாளும்வேந்த
னிறையவனு மேழாவ னேட்வர்ட் தானும்
நந்துகலி யுகமைந்நூற் றீரி ரண்டில்
நன்மைபுரி வருடமதி லாடித் திங்கள்
புந்திமிகு சனிவாரச் சித்ரை நாளிற்
புனைந்திடுவான் மகுடமெனப் புனித வானி
லிந்திரனு தியர்பலரு மிதுபோற் காட்சி
யிதுவரையிற் கண்டிலமென் றீண்டி னாரே.

7. ஆதிமனு மாந்தாதா முதலா னோரிவ்
வாரியவர்த் தந்தனையே யாண்ட மன்னர்
நீதிவழு வாதரசு புரிந்தா ரேனு
நிலவலவிற் சக்ரவர்த்தி யாவா ராகிற்
சாதிபல வியந்தேத்தப் பகைவ ரஞ்சச்
சகந்தனிலே மூன்றிலிரு கூறு பெற்றே
ஆதித்த னத்தமியாப் பெருமை வாய்ந்த
வவனியையே காத்திடுவான் பட்ட மென்னும்'?

8. எந்தவொரு நாடதனுற் சக்ர வர்த்தி
யெனப்பெரும்பேர் பெறுஞ்சிறப்பின் றெய்திற் றேயோ
அந்தவொரு நாட்டின்முறை தவறு வண்ண
மருமறையோர் பலரேகி யாசி கூறத்
தந்தமுற வினருடனே குடிகள் சூழத்
தரணிமன்னர் பலர்வியந்து தகைமை கூற
இந்தியரின் மனமதுபோ லிருளைப் போக்கி
யிலங்கிடுமக் கோகினூர் சிரத்தின் மின்ன.

9. தாயினுஞ்சே யதிகமெனத் தரணி யுள்ளார்
தளிர்த்திடவோர் கண்டமதைத் தனதே யாக்கி
நேயமுட னுள்வதனுல் நீண்டவாயு
ணிதிகுணங்க ணேர்மையுட னவளின் மேலா
யாயவாழ் வடைந்துபல ரேத்திப் போற்ற
வளவிலாக் காலமெமை யாள்வா யென்றித்
தேயமன்னர் பலர்வாழ்த்தி மகுடஞ் சூட்டத்
தேவதைகண் மலர்மாரி பெய்கின் றாரே.

10 வந்தனைகள் பலபகர்ந்து வணங்கி யேத்தும்
வளமலிசீ ரிந்தியநாட் டரசர் தம்மைச்



சிந்தைமகிழ்ந் துபசரித்துச் சிறிது காலஞ்
சிறுவயதைக் கழித்ததனைச் சிந்தை செய்தே
இந்தியநா டன்றோநங் கீர்த்திக் கில்ல
மிதுவன்றோ நமதனையே சித்த நாடு
சிந்தையிலா ததன்குறையைத் தீர்ப்பேன் மற்று
நீதியுமிஃ தாகுமென நினைப்பான் மாதோ.

11 பூவுலக மனைத்தையுமோர் குடைக்கீ ழாளும்
பூபதியா மெட்வர்டு வாழி யன்னு
ராவியென விளங்கியுநம் விஜயை போன்ற
வம்மையலெக் சாண்ட்ராவும் வாழி வாழி
ஒவிலா துயரியபா ராளு மன்ன
ரோங்கிடவு முலகுசெழித் திடவும் வாழி
நாவினிக்கப் புகழ்ந்துநம தரசைப் போற்றும்
நாவலத்தீ வுள்ளபெரி யோர்கள்வாழி.

பி. ஏ. பிரணதார்த்திஹரசிவனுர்.

---

## MY MASTER'S LOVE.

## ஆசான் அன்பு

[இது சென்னைக் கிறிஸ்தவக் கலாசாலைத் தலைவராகிய கனம்பொருந்திய ரெவரெண்டு வில்லியம் மில்லர், எம் - ஏ, எல் - எல் - டி, டி - டி, ஸி - ஐ - இ, அவர்களுடன், தாம் மலைவாசத்துக்குச் சென்றிருந்தபோது, அங்கே அப்பெருந்தகையார் தம்மீதும் ஏனைய மாணவர் மீதும் காட்டிய கழிபே ரன்பினைக் கண்டு களிமீக்கூர்ந்தமையின், அவர்மாட்டுத் தமக்குள நன்றியறிவினைப் புலப்படுத்துரைப்பான் இயற்றி அவருக்கு வந்தனோபசாரஞ் செய்வதற்காகக் கூடிய சபையில் வாசிக்கப்பட்டது.]

நிலைமண்டில வாசிரியப்பா.

உலகெலாம் புகழும் உத்தம குணங்களு
மலகிலா ஞானமு மளப்பருங் கல்வியு
மிறைவ னருளாற் குறைவற வெய்தி
இந்திய மாணவ ரியற்றிய தவத்தால்
வந்தவ தரித்தனுர் புந்தியைப் பெருக்குங்
கல்வியங் கடலே ! கருணைமா வள்ளால்!
மில்ல ரெனும்பெயர் மேதக வுடையோய் !

புல்லறி வினரையும் பொருளெனக் கொண்டு
நல்லறி வூட்டி ஞானவா னாக்கும்
நல்லறி வினர்க்கெலாம் நாயக னாவோய் !
சொல்லு மாற்றலிற் சோர்வில் பெற்றியோய் !
மக்கடங் கண்ணே ! மாணவ ருயிரே !
எக்கலை வலாரு மேத்தும் புந்தியாய் !
கல்விப் பொருளையுஞ் செல்வப் பொருளையு
முத்தம வழியி லொருங்கே யிட்டுச்
சித்தங் களிக்குஞ் சீரிய வள்ளால் !
உன்ற னன்பையு மொப்பிலாக் குணத்தையு
மென்னென் றுரைப்பேன் ! ஏதென் றறைகுவேன் !
ஏர்க்கா டதனி லெம்மனோர்க் கென்று
பார்ப்பவர் வியந்து பகர்தரச் செவ்விய
மவுண்டன் ஹோமெனும் மாளிகை யமைத்ததி
லுவப்புட னெமையெலா மொருங்கே யிருத்திச்
சேர்வை ராயன் செப்பரு மலையிற்
சோர்விலா தெம்முடன் சுற்றிச் சுற்றி
மாட்சிமை தங்கிய மலைதனி லுள்ள
காட்சியை யெல்லாங் கவினுறக் காட்டிக்
காலையு மாலையுங் கானகம் புக்குச்
சோலையுஞ் சாலையுஞ் சுழன்று திரிந்து
'மைந்தர்கா ளுண்டிரோ ? மனநனி மகிழ்ந்திரோ ?
சிந்தை களித்திரோ? செப்புமின்! செப்புமின் ! !'
என்றே யெமையெலா மின்புறத் தழுவிக்
குன்றா விருப்பொடுங் குளிர்ந்த முகத்தொடுங்
கண்ணிமை யொத்துக் கணந்தொறுங் கணந்தொறு
மெண்ணி யெண்ணி யெந்தமைக் காத்த
அந்தமி லன்புடை யண்ணலே யுன்னைத்
தந்தையே யென்கோ ! தாய்தா னென்கோ !
வந்தெமக் கறிவருள் வள்ளலே யென்கோ !
சிந்தை களித்தேன் ! செப்புமா றறியேன் !
உளமிக மகிழ்ந்தேன் ! உரைக்குமா றறியேன் !
அளவிலா விறைவ னாசிகள் பெற்றுநீ
ஆழிசூ ழுலகி லன்புடை யண்ணலாய்
வாழிய வாழிய வாழிய மன்னே ! ! !

செய்யூர்—முத்தைய முதலியார்.



# KULASÉKHARA ALWAR.

## குலசேகராழ்வார் வைபவம்.

மலையமா நாட்டிலே கேரளதேசத்திலே, கொல்லிமாநகரத்துள்ள திருவஞ்சிக்களத்திலே, விற்கொடி யுயர்த்துப், பனைமாலை யணிந்து, சந்திரகுலதிலகனாய், மாதவன் மலரடி வணங்கிய, மனுமுறை வழாது மன்பதை காக்கும் திடவிரதனென்னும் மன்னவன் ஒருவன் செங்கோல் செலுத்திக்கொண்டிருந்தான். அவன் "மக்கட்பேற்றிற் பெரும்பேறில்லை" என்பதற்கியைய மகப்பேறிலனாய் மனங்கவன்று, அப்பேறு பெறுதற்பொருட்டு அரவணைச் செல்வனை நோக்கி அரியதவங்கள் இயற்றினான். அந்தப் பரமனும் அத்தவங்கட் கிரங்கி அவனுக்குப் பிரசந்நனாய் " அரச ! இனிக் கவலை யொழிக. நமது கவுத்துவாபரண அமிசமாய் உனக்கு ஒரு புத்திரன் அவதரிப்பான் " என வரமீந்து மறைந்தனன்.

பின்னர்ப் பட்டத்துத்தேவியானவள் பரந்தாமனுடைய கவுத்துவாம்சமான கருப்பந் தாங்கிக், கலியுகம் பிறந்த இருபத்தேழாம் ஆண்டின்மேற் சென்ற பராபவ வருஷம் மாசிமாதம் சுக்கிலபக்ஷம் துவாதசி வெள்ளிக்கிழமை கூடிய புநர்பூசநக்ஷத்திரத்திலே, சேரர்குலதீபமான செல்வச் சிறுவனை ஈன்றனள். தேவர்கள் பூமழைபெய்தனர். சித்தர் வித்தியாதரர் கண்டு மகிழ்ந்தனர். அரியதவசிகள் ஆசிகள் கூறினர். சுபசகுனங்கள் அநேகமாக உண்டாயின.

மைந்தன் பிறந்த செய்தியைச் சேடியர் சேரனுக்குச் சென்றுரைத்தனர். அதுகேட்ட அரசனும் உளம்பூரித்து ஆதுலர்க்கெல்லாம் அரதனத்தை அள்ளிக்கொடுத்துச் சென்று பொருநையாற்றிலே புனிதநீராடித் திரும்பி, அருமறைவிதிப்படி அந்தணர்க்கும் அநேக தானங்கள் செய்துபோய், நித்தியதரித்திரன் நிதியைக்கண்டாற்போலே, பெறுதற்கரிய பிள்ளையைப் பெருங்காதலுடன் உவந்து நோக்கினான். பின்பு சாதகஞ் சமைத்துப் பன்னிருநாள் கடந்த பிறகு, குலசேகரன் என நாமகரணம் பண்ணி, அப்புறம் அவ்வப்பருவத்திற் செய்யத் தகுவனவான அந்நப்பிராசநம் சௌள முதலான கருமங்களைச் செய்துவந்தனன்.

குலசேகரனும் குறுகுறுநடந்தும் சிறுதேருருட்டியும் சிற்றில் சிதைத்தும் மழலைச்சொல்லால் இருமுது குரவரையும் இன்புறுவித்தும் பிள்ளைப்பருவ நீங்கிக் கல்வி கற்றற்குரிய பருவமடைந்தார். அவ்வளவிலே உபநயனகருமமூற்றி முப்புரி நூல்தரித்து, ஆசாரியமுகமாக வேதாத்தியயனஞ் செய்வாராயினர். நான்குவேதம் ஆறுசாஸ்திரம் அறுபத்துநான்குகலைஞானம் முதலிய எல்லாம் வல்லராய் அரசியல் நடத்தும் ஆற்றலும் பெற்றனர். அரசனும் அதுகண்டு அவனுக்குப் பாண்டியன்மகளைப் பாணிக்கிரகணம் பண்ணுவித்துப்,

பூபாரத்தை அவர் புயத்திருத்தித், தான் மனைவியுடனே தவவொழுக்கமேற் கொண்டு ஒழுகுவானாயினான்.

இராச்சியபாரத்தைத் தமது தோண்மீது இருத்திக்கொண்ட சேரகுல சேகரர், உயிர்கட்கெல்லாம் ஒருடம்பாகி, எளியவரை வலியவர்நலியாவண்ணம் நல்லரசு செய்து தம்முடைய செங்கோலே செங்கோலாகப் பூபாலனம் புரிந்து வந்தனர். இவருடைய இராச்சியம் இராமராச்சியம் என்னலாம்படி செழிப்புற்றிருந்தது. இவரும் மனமொழி மெய்யென்னும் மூன்றுந்தூயராய், அரசகாரியமொழிந்த வேளைகளில் வேதாகமபுராணகாலக்ஷேபஞ்செய்து கல்வி கேள்விகளிற் சிறந்தவராய் வர்த்தித்துக் கொண்டுவந்தனர். குடிகளையும் வருணாசிரமதர்மங்களில் நின்றும் வழுவாமலும், வஞ்சனை பொய் சூது களவு மதுபானம் முதலான அதர்மங்களிற் பிரவேசியாமலும், நல்வழிப்பட்டு நடந்து உய்ந்துபோமாறு செய்தனர். அன்றியும் தீயோரைக் கடிந்தும் நல்லோரைப் புரந்தும் வந்தனர்.

இங்ஙன மிருக்குங்காலையில், ஸர்வசுவதந்தரனும் ஸர்வநியந்தாவுமான ஸர்வேச்வரன், சுவதந்தரராகவும் நியந்தாவாகவும் தம்மை அபிமானித்துக் கொண்டிருந்த இவரைத், தனது நிர்ஹேதுகபரம கிருபையாலே சத்துவகுண சீலராகும்படி கடாக்ஷிக்கத் திருவுள்ளமாய், ஒருநாள் இவர் நள்ளிரவில் ஐந்தணை அடுக்கிய படுக்கையில் அயர்ந்து கண்படை கொள்ளாநிற்கையில், இவருடைய கனவுநிலையில் தோன்றி, மயர்வறமதிநலமருளித், தன்னுடைய சுவரூபரூபகுண விபூதிகளையெல்லாம் காட்டிக்கொடுத்து நின்றனன். அவ்வளவிலே இவரும் துயிலுணர்ந்தெழுந்து, கடல் மடை திறந்தாற்போலக் களிப்புமேலிட்டுக், கண்களில் ஆநந்தநீர் பெருகக்கைகூப்பிநின்று, எம்பெருமானுடைய "நித்திய விபூதி லீலாவிபூதிகளை இன்று காரணமொன்றின்றியே கண்டனுபவிக்க நான் என்னதவஞ் செய்தனனோ ? இத்தன்மையவான திவ்யாநுபவங்களை அனுபவியாமல் இதுகாறும் என் வாணாளெல்லாம் வீணாளாகக் கழிந்தனவே" என்றுருகாநின்றார். அவ்வெம்பெருமானும் உழுந்துருள் பொழுதிலே அந்தர்த்தானமாயினன், ஆதலும் இவர் புனிற்றிளங்கன்று மறையநின்றுருகும் புனிற்றாப்போலவும், கண்ணிலான் கண்பெற்று மீண்டுமிழந்தாற்போலவும், கரைந்து, உள்ளம் நெக்குருகிச் சோகித்திருந்தனர். பொழுதும் புலர்ந்தது; அப்பொழுது அமைச்சரும் அரசரும் வேதியரும் கவிஞரும் பாணரும் இசைப் புலவரும் முனிவர்முதலாயினோரும் அரசவை அடைந்தனர்.

அவையடைந்த அனைவரும் அரசனைக்காணாது, இத்துணைப்பொழுதேறியும் இன்னும் அரசன் இங்குறாதகாரணம் என்னென்றறியும் வண்ணம் வாயில் காவலரை ஏவினர். வாயில்காப்போர் சென்று அந்தப்புரத்துச் சேடியரை அது பற்றி வினவ, அவர் பள்ளியறை சென்று பார்க்குமளவில் அரசன் உலக வியாபாரங்களிற் பிரவர்த்தியாமற் படுத்த படுக்கையிற் பகவத்தியானம் பண்ணியிருந்தது கண்டு, அச்செய்தியை அவ்வாயிலாளர்க்கு அறிவித்தனர். இஃதென்னை, இதுவரையிலில்லாத அதிசயமாக இராநின்றதென, அவைக்கண் இருந்தவர் பலவாறு வார்த்தையாடிக்கொண்டிருக்கையில், அரசனும் தெளிந்தெழுந்து, அவ்வவைக்களங் குறுகி அரியாசனத்தில் ஆரோகணித்தான். அங்குநின்றும் அவையோரை நோக்கி "இனிநான் அநித்தியமான இந்தப் பிரபஞ்ச வாழ்க்கையை நித்தியமாக எண்ணி வீண்பொழுது போக்கமாட்டேன். எம்பெருமான் என்னையும் ஒரு பொருளாக மதித்து எனக்குத் திருவருள் பாலித்தனன். இச்சிங்காதனத்தின்மீதிருப்பது எனக்கு உயிர்க்கழுவிலிருப்பது போலிராநின்றது. இன்பமருஞ் செல்வமும் இவ்வரசும் யான் வேண்டேன்" என்று சொல்லிப் பின்னும் "இன்று முதற் பரமசாத்துவிகர்களான பாகவதர்களுடன் கூடி, ஆன்மலாபத்தை உண்டுபண்ணுகின்ற எம்பெருமானது மங்கள குணங்களை அநுபவித்து ஆநந்தம் அடைதல்வேண்டும்" எனமொழிந்தார். உடனே முதன்மந்திரியை அழைத்துக்கொண்டு பகவத்பாகவதர்கள் எங்கிருக்கிறார்கள் என்று, அவர்கள் இருக்கும் இடங்களைத்தேடிச்சென்று அவர்களைச் சேவித்து, அவர்களுக்கு அநேக உபசாரங்களைச் செய்து அரண்மனைக்கு எழுந்தருளப்பண்ணிக் கொண்டுவந்து, அவர்களருளால் ஸ்ரீமத்வால்மீகராமாயண முதலான கிரந்த காலக்ஷேபஞ் செய்துகொண்டும், பொய்கையாழ்வார் பேயாழ்வார் பூதத்தாழ்வார் திருமழிசையாழ்வார் நம்மாழ்வார் என்னுமிவர்களுடைய திவ்வியப் பிரபந்தங்களைச் சேவித்துக்கொண்டும், ஸ்ரீராமநாம ஸ்மரணத்தில் ஈடுபட்டிருப்பாராயினார்.

(இன்னும் வரும்)

திருமணம் - செல்வக்கேசவராய முதலியார்.

---

## CHAUCER : THE FIRST ENGLISH POET.

## சாஸர்: பிரதம ஆங்கிலக் கவிவாணன்.

---

இந்காலத்தில் வித்வான்கள் தங்களுக்கு அவகாசமில்லாததனாற் பொதுநன்மை பயக்கத்தக்கவேலைகளைச் செய்தல் சாத்தியப் படவில்லையென்றும், உதரநிமித்தமான வேலைகளே நாள்முழுவதுந் தங்கள் கவனத்தைக் கவர்கின்றனவென்றும் சொல்வது வழக்கம். தமிழ்க்கவிகள் சரித்திரங்களை மட்டும் வாசித்தாலுமே இத்தகைய கூற்று வீண் என்பதுவிளங்கும். ஆங்கில கவிகளிலநேகர் இராஜ்ஜிய சம்பந்தமான அதிகப் பொறுப்புள்ள வேலைகளைச் செய்து முடித்தபின்னர்க் கிடைத்த அவகாசங்களில் இயன்றவாறு கவிகளை யெழுதி அதனாலுண்டாகும் ஆனந்தத்தைத் தாம் அனுபவித்ததுமன்றிப் பின்வரும் சந்ததிகளும் அயல்நாட்டாரும் அவற்றை வாசித்து இன்ப

முறும்படி விட்டிருக்கின்றனர். ஆங்கிலம் கல்லாதவநேகர் இப்பத்திரிகைக்குக் கையொப்பக் காரர்களாதலால் அவர்கட்கு ஆங்கிலக் கவிஞர்கள் சரிதத்தையும் அன்னாரது நூல்களைப்பற்றிய விவரத்தையும் இவண் தருதல் பயன்படுமென்று கருதி, பிரதமகவிஞராகிய சாஸர் என்பவரின் சரிதத்தை இவண் வரைகின்றாம்.

இவர் ஐந்நூற்றறுபது வருடங்கட்கு முன்னர் லண்டன் மாநகரில் மது வியாபாரஞ்செய்து வந்த ஜான் சாஸர் என்பவருக்குப் புதல்வராய்ப் பிறந்தனர். பதினான்டு வந்தெய்தியதும், இவரைக் கிளாரன்ஸ் பிரபு மனைவிக்கு ஊழியஞ் செய்யும்படி இவரது தந்தையார் அனுப்பினர். அரண்மனையிலுள்ள நடவடிக்கைகளையும் நாகரிகவொழுக்கங்களையும் இவர் கண்ணுற்றனர் என்பதை இவர் தாம்பின்னரெழுதிய நூல்களிற் காணலாம். 1359-ஆம் வருடத்தில் ஆங்கிலேயர்க்கும் பிரஞ்சுக்காரருக்கும் பிரஞ்சுதேசத்தில் நடந்த சண்டையில் தமது வல்லமை காட்டக்கருதித் தம்நாட்டுச் சேனையில் ஒருவராய்ச் சேர்ந்துசென்றனர். சண்டையிற் பிடிக்கப்பட்டு ஒருவருடம்வரையிற் பிரஞ்சுதேசத்திற் காவலில் வைக்கப்பட்டிருந்தனர். பின்னர்ப் பணங்கொடுத்து மீட்கப்பட்டதும், தம் ஊருக்குவந்தனர். எழுவருடங்கள் வரை இன்ன செய்தனர் என்பதைப்பற்றி ஒன்றும் விளங்கவில்லை. ஆனால் 1366-ஆம் ஆண்டுமுதல் ஆறுவருடங்களாக மறுபடியும் அரண்மனையில் உத்தியோகஞ் செய்துவந்தனரென்பது மட்டுந் தெரிகின்றது. அரசனுக்குக் குற்றேவல் செய்தவர்களிலொருவராயிருந்து, பின்னர் எஸ்கோயர் என்ற கௌரவ நிலைமையைப்பெற்றனர். இவ்வண்ணம் சீர்பெறத் தொடங்கிய காலத்திற் கவி எழுதத்தலைப்பட்டனர். பிரஞ்சுதேசத்திற் சிறைப்பட்ட காலத்திற் பிரஞ்சுபாஷையிலுள்ள அநேக பிரபந்தங்களை வாசித்தனர்போலும். அவற்றில் முக்கியமானவை காமரசம் பொருந்தியுள்ளனவே. ரோஸ் தேவியைப்பற்றிய புராணகதையைப் பிரஞ்சுபாஷையிலிருந்து ஆங்கிலத்திற் கவிரூபமாய் மொழிபெயர்த்தனர். அதில் ஆயிரத்து எழுநூற்றிற்கு மேற்பட்ட பாக்கள் இவருடையதென்பதற்கு ஐயமில்லை. இரக்கத்திற்கு ஒரு விண்ணப்பம் என்ற இனிய பாவொன்று இவராலாக்கப்பட்டுளது. இதன்பின் ஆக்கப்பட்டது பிரபுவின் மனையாட்டி என்பதே. இதில் தமக்குப் பேருதவி செய்தவராகிய ஜான் ஆவ் காண்ட் என்பவருடைய மனைவியின் குணாதிசயங்களை ரூபகப்படுத்தி வாசிப்போர் மனத்தை யுருக்கத்தக்க விதமாய்ப் பாடியிருக்கின்றனர். இக்காலத்திற் சாஸருக்கு மண நிறைவேறியது. இவர் மனைவியின் பெயர் பிலிப்பாசாஸர். இவருக்குப் பிறந்தவர் எத்தனைபெயரோ விளங்கவில்லை. ஆனால் லூயி என்ற ஒரு புத்திரரிருந்தனர் என்பதை அவருக்காக எழுதப்பட்டுள்ள சூரிய நக்ஷத்திர வுச்சக் கருவி என்ற நூலால் அறியலாம்.

அடுத்த பன்னிரண்டு வருடத்தில் இவர் இற்றலி தேசத்திற்கு இராஜாங்க விஷயமாய் நான்குமுறை சென்றனர். சென்றகாலத்தில் இற்றலியா



பாஷையிற் சிறந்த நூல்கள் எழுதப்பட்டுப் பிரபலமாயின. டான்றே என்பவராலாக்கப்பட்ட திருக்கூத்துக்கள், பெத்ரார்க்கா என்பவரா லமைக்கப்பெற்ற தனிப்பாச்சுரங்கள், பொக்காக்கியோ என்பவரால் வரையப்பட்டுள்ள நூற்றுக்கணக்கான கதைகள், இவற்றைக்கண்ட சாஸர் அவாமிகுந்து ஓயாமல் அவற்றை வாசிக்கத் தலைப்பட்டனர். அவற்றை வாசித்தலினாற் கவித்திறமின்னதென்றும், கவிரூபமின்னதென்றும், கதை சொல்வன்மை இத்தகைத்ததென்றும் எளிதி லுணர்ந்தனர். முதற்கூறிய டான்றே என்பவர் 1321-ஆம் வருஷம் இறந்தபடியால் அவரைத் தரிசிக்க இவருக்குக் கிடைக்கவில்லை. இரண்டாமவரைத் தரிசித்தருணத்திற் கிரிசில்டா என்ற பொறுமையே ஒருருவெடுத்தாற் போன்ற மாண்டகைப் பெருமாட்டி கதையை பெத்ரார்க்காவரைந்து கொண்டிருந்தனர். அதேகதையைச் சாஸர் என்பவர் பின்னர்த் தாமெழுதிய கந்தர்புரிக் கதைகள் என்ற நூலில் வித்வான் சொல்லிய கதையாக வமைத்துளர். பொக்காக்கியோ வெழுதிய கதைகளிலொன்றின் சாரம்சத்தைத் திராயிலஸ் கிரேசிடா என்ற பிரபந்தத்திற் பொதிந்துளர். சிற்றின்பம் நிறைந்த இக்கதையை வாசிப்போருக்கு மனவெறுப்பு வாராதபடி இனிய பாக்களிலமைத்துளர். இவையன்றிப் பறவை யீட்டம், துதிமனை, நன்மகளிர் நற்காதை என்ற காவியங்களும் வெளிந்தன. வரவும், சாஸரின் கீர்த்திபெருகிற்று. இவருக்கு மேன்மைபெருந்திய உத்தியோகங்களும் கிடைத்தன. 1374-ஆம் வருடத்தில் ஆட்டு ரோமச் சுங்கவதிகாரியாயும் 1382-ஆம் வருடத்திற் சில்லறைச் சுங்கவரிச் சோதகராயும் நியமிக்கப்பட்டனர். நான்கு வருடங்கழிந்தபின் கென்ற் என்ற மாகாணப் பிரபுவாயினர். இதுவரை அதிர்ஷ்டம் இவரைச் சார்ந்திருந்தது. சுக்கிரதிசை இவருக்குமட்டும் நான்கு வருடமாய் மட்டுப்பட்டது. பின்னர், 1386-ஆம் வருடத்தில் இராகுதிசை ஏற்றதும் உத்தியோகத்தை இழந்தனர், அரசன் தயவுமிழந்தனர், இவருக்கு உதவிசெய்துவந்த பெருமாட்டியுமரித்தனர், வறுமையும் வளர்ந்தது. வறுமை யெய்திய வித்வான் செல்வத்திற்கு ஒரு விண்ணப்பம் வரைந்தனர். உத்தியோகங் கிடைத்தது. வெஸ்ட்மின்ஸ்டர் அரண்மனை விசாரணைக் கர்த்தாவாயினர். இந்தவேலை 1391-ஆம் வருடம் வரை நடந்து வந்தது. அதன் பின் அரசர்களாலளிக்கப்பட்ட உபகாரச் சம்பளம் பெற்று வாழ்ந்தனர். போதுமான காலமுங் கிடைத்தது. தற்காலத்தில் உபகாரச் சம்பளம் பெற்று வரும் கனவான்களைப்போன்று கிடைத்தகாலத்தை வீணாக்காமற் கந்தர்புரிக் கதைகளிற் சிலவற்றைப் பூர்த்திசெய்தனர். இக்கதைகளின் சிறப்பைப்பற்றிப் பின்னர்க் கூறுவம். இக்காலத்தில், அதாவது, 1384-ஆம் வருடமுதல் 1390-ஆம் வருடம்வரை இவராலாக்கப்பட்டுள்ள மற்றநூல்கள், சென்றயுகம், அதிர்ஷ்டம், உண்மை, யோக்கியம், மனவுறுதிக்துறை, முதலியனவே.

கடைசிக் காலமாகிய பத்து வருடங்களில் வயது முதிர்ந்த கவிஞர் கந்தர் புரிக்கதைகளிற் சிலவற்றைச் செய்து முடித்தது மன்றி ராதியின் விண்

ணப்பம் என்ற சிறந்த கவியையும் சூரிய நக்ஷத்திர வுச்சக்கருவி என்ற வாசக நூலையும் இயற்றினர். இவர் கி. பி. 1400-ஆம் வருடத்திற் காலஞ்சென்றனர்.

(இன்னும் வரும்)

பூர்ணலிங்கம் பிள்ளை.

---

## VIKRAMORVASIYAM.
## விக்கிரமோர்வசீயம்.

---

### நான்காமங்கம்.

*பிறகு புகுகின்றனள் துயருற்ற சித்திரலேகையும், சகசனியையும்.*

**சகசனியை** :—(*சித்திரலேகையை நோக்கி*) தோழி! சித்திரலேகை! வாடிய தாமரையினது போன்ற உனது முகவொளி, மனத்தின் நிலையின்மையைத் தோற்றுவிக்கின்றது; ஆகையால், உனது நிலையின்மைக் குரிய காரணத்தைச்சொல்வாய்; நானும், ஒத்ததுயரத்தினளாக விருக்க விரும்புகின்றேன்.

**சித்திரலேகை** :—சூரிய பகவானது இவ்விமானத்தினில், அச்சரமாதர்களின் முறைகடவாவண்ணம் உன்னோடு இருப்பவளாய் உருப்பசியி னிடத்தில் மிக்கவாசை யுடையவளாகின்றேன்.

**சகசனியை**:—அறிகின்றேன், உங்கள் ஒருவர்க்கொருவர்க் கிருக்கும் நட்பினை.

**சித்திரலேகை** :—பிறகு, இந்நாள்வரை இவளது செய்தி எவ்வாறுதான் ஆயிற்றென்று தியானங் கொண்ட என்னால் மிக்கபயத்தோடு அறியப்பட்டது.

**சகசனியை** :—(*சோகத்துடன்*) எவ்வாறு?

**சித்திரலேகை** :—உருப்பசி, தன்மீது காதல் கொண்டவரும், மந்திரிகளிடத்தில் வைத்த விராச்சிய பாரத்தினருமாகிய அந்த அரசமுனிவரை யழைத்துக் கொண்டு விளையாடுபவளாய்க் கந்தமாதன பருவதத்தை அடைந்தாளன்றோ?

**சகசனியை** :—அவ்வகைத்தாய விடங்களில் எதுவோ அதுவே கலவி.

**சித்திரலேகை** :—அங்கு, மந்தாகினியின் மணற் குன்றுகளில் விளையாடும் விருப்பினளாய உதயவதி யென்னும் பெயர்பூண்ட வித்தியாதரமகளை, அரசமுனிவரால் பார்க்கப்பட்டாளெனக் கோபித்துக் கொண்டாளுருப்பசி,



**சகசனியை**:—ஆன்றோய்! சேய்மை யேறியுள்ள நட்பு ஆற்றாமைத்து. பின் பின்

**சித்திரலேகை** :—பிறகு, காதலரின் அனுநயத்தைக்கைக் கொள்ளாதவளாய், குருவினது சாபத்தான் மடமை யடைந்துள்ள மனத்தினளாய் நமக்கு வெறுக்கத்தக்கதாயுள்ள குமாரவனத்தை யடைந்தாள். அடைந்தபின், காரணாந்தரத்தினாற் போக்கத் தக்கதாயுள்ள கொடியினுருவாய்ப் பரிணமித்தது இவள் வடிவம்.

**சகசனியை** :—கடத்தற் கரிதன்றோ விதி; அப்படிப்பட்ட அனுராகத்திற்கு இப்படிப்பட்ட அநர்த்தம் என்றுந்தான்; பிறகு எந்நிலையினர் அரசமுனிவர்?

**சித்திரலேகை** :—அந்தக் காட்டிலே இரவும் பகலும் இன்றுணைவியைத்தேடிக்கொண் டிருக்கின்றார்; அறிகின்றிலேன், துறந்தோர்க்கும் ஆசையையுண்டாக்கும் இம்மேகோதயத்தினால் என்ன அநர்த்தந்தான் இவர்க்கு உண்டாகுமென்று.

**சகசனியை**:—தோழி! இருக்கின்றது, சேர்க்கை யுபாயமொன்று.

**சித்திரலேகை**:—பார்வதியின் பாதராகத் துண்டாகிய சங்கமமணியைவிட்டு, இவளது சேர்க்கை யுபாயம் எதனால்?

**சகசனியை**:—தோழி! இப்படிப்பட்ட உருவச் சிறப்புடையவர்கள், வெகு நாளைக்குத் துயருழப்பவர்களாக இரார்களன்றோ; காதலரின் சேர்க்கைக்கு ஏதாவது அநுக்கிரக நிமித்தம் மீண்டும் அவசியம் உண்டாகும்; ஆகையால்வா, உதிக்கின்றகுஞ் சூரியபகவானது வணக்கத்தைச் செய்வோம்.

[*என்று அகன்றனர்.*]

### உட்புகல்.

*பின்பு புகுகின்றனன் உன்மத்த வேடத்தையுடைய அரசன்.*

**அரசன்**:—ஆ! கொடியோய்! அரக்க! நிலத்தில் எனக்கினியவளைத் தூக்கிக்கொண்டு எங்கேகுகின்றனை? அந்தோ! அந்தோ! கைலாச சிகரத்தினின்றும் வானத் தெழும்பி வாளிகளினால் என்னை அடிக்கின்றான். (*ஆலோசித்து*) அடே!

இதுபெயலுக் கியன்றநவ வெழிலியிருஞ் செருக்கியைந்த வரக்க னன்றே
இதுசுரர்த மிறைவனது தனுமிகநீட் சியையேற்ற வேர்வி லன்றே
இதுவொருக் குடையமழைத் துளிவீழ்கை யேவினது வரிசை யன்றே
இதுபொனுரை யெனவினிய மின்னலுருப் பசியாமெ னில்லா ளன்றே. (64)

(*சிந்தித்து*)—ஆகையால், எனது வாழைத்தொடையாள் எங்கேதான் சென்றன ளாகுவள்?

இருஞ்சினத்தான் மேன்மைதனின் மறைந்தா ளாகி
 யிருப்பாள்கொ னீண்டசின மவள்கொள் ளாளால்
அருஞ்சுவர்க்கக் கெழும்புதலை யடைந்தாள் கொல்லோ
 வவண்மனமென் மேற்காத லார்ந்த தன்றோ
வருஞ்சுரர்தம் பகைவரென தெதிரில் வாழும்
 மாதவளைக் கவரவலி யற்றோர் கண்டீர்
பெருஞ்சலசக் கண்ணிணைக்கு மிகம றைந்தாள்
 பேதையவ ளென்னுமிது விதிதா னென்னே. (65)

(மேகுகளைக்கண்டு)—அகோ! பாக்கியமற்றவர்களுக்குத் துயர்மாலைகள் ஒரே காலத்தில் வந்துறுகின்றன. எதனால்,

தாங்க மிகவரிதாய்த் தான்காத லாலவளோ
டோங்குற்ற விப்பிரிவெற் குற்றதுவு—மீங்குநவ
மேகத் துதயத்தால் வெஞ்சுடர்நீக் கச்செல்வத்
தாகுமின் னுளிருப்பு மாம். (66)

(சிந்தித்து) வீணேயன்றோ என்னால் மனத்தின் பரிதாபவளர்ச்சி சகிக்கப் படுகின்றது; எதனால், "காலக்கிறை காரணம்" என்று முனிவர்கள் சொல்லுகின்றனர், அதனால், யான் ஏன் கார்காலத்தை நிராகரிக்கிறேன்? அன்றேல் நிராகரிக்கின்றிலேன், எங்ஙனம் கார்காலத் துண்டாகிய சின்னங்களினாலே எனக்கு அரசுக்குரிய உபசாரம்; இப்பொழுதோ

மின்கீற்றுப் பொன்னினிதா மேகமெனக் குத்திருவார் மேலாப் பாகும்
நன்னீர்வஞ் சிக்கொடிக ணறுமலராங் கவரியினை யிரட்டா நிற்கும்
மன்வேகு முதுவேனின் மாறிடலாற் றெளிசொலுறு மஞ்ஞை வந்தி
இன்வானத் தாரைமுத்த மருங்குகொணர்ந் திடுமலைகள் வணிகர் தாமே.

இருக்கட்டும்; என்ன! எனக்கு மேகோபசாரத்தைக்கொண்டாடு கையினால்? இக்காட்டினுண் மறைந்தவளான காதலியைத் தேடுவேன்.

(சுற்றி).—அந்தோ! துருவிச்செல்ல முயலு மெனக்குக் காமக்கனல் வளர்ச்சி உண்டாயிற்று. எதனால்

இந்தநவ கந்தளிதா னேசிறிது சேந்தவரி
வந்தமையப் பெற்றுண்ணீர் வாய்ந்த மலரால்
சினத்தாலுண் ணீர்முத்தஞ் சேர்த்தவவள் கண்ணை
எனக்கு நினைப்பூட்டு மே. (68)

அங்கவள், இவ்வழிச் சென்றாளென்று எப்படித்தான் என்னால் ஊகிக்கப் படத்தக்கவள்?

இன்னுடலி னுளவள்வா னேய்காரி னீர்நனைந்த
வன்னமணல் வாய்ந்த வனதலத்துட் காலின்மண்



ணூன்னி நடந்தாளேல் வன்னிதம்ப பாரத்தால்
பின்னர்க் குழிந்தனவாய்ப் பேரலத்த கத்தினிறச்
சின்னத்த வாயவவள் செங்காற் சுவட்டணிதான்
என்னாற்கா ணப்படும்பின் பே. (69)

(சுற்றிப்பார்த்துக் களிப்போடு) காதலியின் அடையாளங் கண்டுபிடிக்கப்பட்டது; எதனால், கோபங்கொண்டவளாய அவளது வழி ஊகிக்கப்படுகின்றது.

சீற்றித் தாற்சித றுண்ட செலவுடைச்
 செய்ய வாழ்ந்தகொப் பூழுடை யாளது
மாற்றிக் கொண்டிடு வாயி னிறத்தன
 வழிந்து வீழ்வன வாகிய கண்ணினீர்
தூற்றி டுந்துளி யாலடை யாளமே
 துன்னி யுங்கிளி யின்னுத ரம்மென
எற்ற சாமளம் வாய்ந்து நழுவியு
 மியன்றி டுங்குய வாடையீ தையமேன்? (70)

(கண்டாய்ந்து) இந்திர கோபத்துடன்கூடிய புதுப்புன் முளைத்துள்ள விடமிது; சனமில்லாக் கானனத்திற் காதலியின் செய்தி எங்ஙனந்தான் அறியத்தகும்?—(பார்த்து) மழைத்தாரையாற் சலிப்பிக்கப்பெற்ற மலைக் கொம்பரக்கானிறைவுற்ற கல்லின்மீ தேறியுள்ள இந்தப்

பெருங்காற்றின் மோதுண்ட பீலியதாய்க் கேகா
வருமெலிகொண் மேலுயர்த்த வண்கழுத்தி னோடார்ந்த
மஞ்ஞை மழைநோக்கு மற்று. (71)

இருக்கட்டும்; இதனின்று காதலியின் செய்தியைக் கொண்டுவருவேன்.

வெண்கட் கடையினாய் மென்மயிலே நீக்காயென்
னுண்மன்னு மாசையினை யுற்றுநோக் கற்கினியாள்
வார்கட் கடையளா மங்கையினை யிவ்வனத்துள்
நேர்கண் டனையோ நிசழ்த்து. (72)

எங்ஙனம் விடைகொடாமற் கூத்தாடத் தொடங்கிற்று? என்னைதான் இதன் களிப்புக்குக் காரணம்?

இருக்கட்டு மீதறிந்தே னென்காதன் மங்கை
திருக்குவழிக் கண்ணில்லா தேமறைந்து சென்றமையால்
இன்றிதன்கா ரொத்தொளிரு மின்றோகை யோபகைதா
னின்றி யிருக்குமா லின்குழலா ளின்மலர்வாய்
கேசபா சங்கலவிக் கீழவிழ்ந்த கட்டினதாய்த்
தேசுற்று நிற்கின் சேறிதோகை சேர்த்துள்ள
மாசுறுமிஃ தென்செய்ய மற்று. (73)

அயலார்க்கு நேர்ந்த ஆபத்தைக் கண்டு களிக்கும் இதனைக் கேள்வி கேட்டின்றிலே னன்றோ?—(சுற்றி) கோடையின் கடையில், வளர்ச்சியுறப் பெற்ற மதத்தினையுடைய இக்கோகிலம் நாவற்கிளையி லிருக்கின்றது; புட்களுட் புலமைச்சாதி இது; இதனைப் பிரார்த்திக்கின்றேன். சான்றோய்!

உன்றனைக்கா மங்கொண்டோர்க் குறுவேளின் றாதென்றே
யுரைக்கின் றார்கள்
ஒன்றியமா னஞ்சிதைக்க வுரனுடைய தாம்பயன்சேர்
வுற்ற வாளி
சென்றுவிழை வுடையவளைத் தீஞ்சொலினா யென்மருங்கா
கிலுஞ்சேர்ப் பாய்நீ
அன்றியெனை யாகிலுங்கொண் டம்மடந்தை வாழிடத்தை
யடைவிப் பாயே. (74)

என்ன சொல்லுகின்றாய் நீ; 'காதல்கூர்ந்த உன்னை இவ்வாறு விட்டு விட்டு அவள் எவ்வாறு சென்றாள்?' என்று கேட்பாயாக.—

நீற்ற மடைந்தாள் சினத்துக்குக் காரணநான்
ஆற்றியதோர் காலுமினைந் தாய்கிலேன்—கூற்றிகழ்கண்
நங்கைமார் தம்மிறைமை நாயகர்பால் வேண்டாதே
தங்குமெண்ண வேறுபாட்டைத் தான். (75)

(பார்த்து) இற்றைய கதாநாசத்தைச் செய்வோய்! எவ்வாறு மின்காரியத்தில் ஆசையுடையையா யிருக்கின்றாய்?

பெரிதா யினுமயலார் பெற்றுழக்குந் துக்கம்
வருகுளிர்ச்சி வாய்ந்ததென்று மாநலத்த தென்றும்
அறைகின் றனர்செருக்கி னந்தமாய் நின்றவிது
துன்படைந்த வென்னண்ணைச் சோதித் தறியாமல்
மண்பழுக்க லுற்றபெரு நாவன் மரப்பழத்தைச்
செய்யவத ரத்தைப்போற் சேர்ந்தருந்து தற்கெதனு
லையமின்றிப் புக்கிருந்த தால். (76)

பு. மா. ஸ்ரீநிவாசா சாரியார்.

---



# REVIEWS OF BOOKS.

## புத்தகக் குறிப்புக்கள்.

### செங்கோன்றரைச்செலவு:

[இதுமதுரை ஸ்ரீ மீனாம்பிகை யச்சுக்கூடத்திற்பதிப்பிக்கப்பட்டது இதன்விலை அணா - 2. தபாற்கூலி வேறு.]

இந்நூல் முதலூழித்தனியூர்ச்சேந்தனா ரியற்றியதென்ப, இது மூலமும் உரையுமாக மதுரை ஸ்ரீ மீனாக்ஷிசுந்தரேசுரவர் கோயில் மதுரைநாயக ஓதுவார்மூர்த்தியவர்கள் குமாரர் ஸ்ரீ சுந்தரபாண்டியஓதுவாரவர்களால் வெளியிடப்பட்டது, "முதலிறுதிகாணப்பெறாத 'செங்கோன்றரைச்செலவு' என்னும் பெயரிய நூலெழுதிய பழைய ஏட்டுப்பிரதியொன்று திரிசிரபுரத்திலிருக்கும் மகா-ா-ா ஸ்ரீ அ. சுந்தரநாதபிள்ளையவர்களிடமிருந்து எனக்குக்கிடைத்தது. அந்நூல் முழுதுங்கிடைக்கவேண்டுமென்று பலவிடத்திற் சென்று தேடியும் அகப்படவில்லையாதலாற் கிடைத்த இதுவும் அச்சிற்பதிப்பியாவிடின் இறந்துபடுமென வெண்ணி இதனை அச்சிடலாயினேன். இது முதலூழியிற்றலைச்சங்கத்தார் காலத்துக்குமரியாற்றிற்கும் பஃறுளியாற்றிற்கும் இடையேயுள்ள பெருவளநாட்டரசனாகிய செங்கோவை முதலூழித்தனியூர்ச் சேந்தன் பாடியதாகப் பஃறுளியாற்றுத் தலைப்பாய்ச்சல் ஏழ்தெங்கநாட்டுமுத்தூர் அகத்தியன் கூறிய பாட்டால் விளங்குகின்றது. இதற்கு உரையெழுதினவரது பெயர் எவ்வாற்றானும் விளங்கவில்லை. சிலப்பதிகாரத்தின்கண் வேனிற்காதையில் அடியார்க்குநல்லாருரையான்விளங்கிய ஏழ்தெங்கநாடுமுதலிய நாடுகளைச்சார்ந்து பெருவளநாடுமுதலிய பிறநாடுகளும் மணிமலைமுதலிய சில மலைகளும், முத்தூர் முதலிய சில வூர்களும், சக்கரக்கோ, பேராற்றுநெடுந்துறையன், இடைக்கழிச்செங்கோடன் முதலிய சில புலவரது பெயரும், பெருநூல், இயனூல் என சிலநூற்பெயரும் இந்நூலானும் இதனுரையானும் வெளியாகின்றன" என்ற பதிப்பாசிரியரது முகவுரைகவனிக்கத்தக்கது. தாப்புலிப்பாட்டு, என்னும் யாப்புவிசேடத்தால் வகுக்கப்பட்டதாம் இந்நூல். இதன்கண்ணே எட்டுத்தாப்புலிப்பாட்டுக்களும் அவற்றினுரையுமுள. பன்னிரண்டுபக்கங்களே கொண்டதாயினும் சங்கநூல் வேட்கையுடையார் யாவரும் வாங்கிப்படிக்கத்தக்க கௌரவஞ்சான்றது. "தமிழ்த்தலைமை தலைக்கொண்டான் சக்கரன்றாக் கார்குழுவிற், சிமிழ்ப்பித்தா னேனைமொழிச் சிறுகண்க னவன்றருக்கச் செப்புவேன் றிறத்தினே"; "செங்கோவே யொளிச்செம்ம றிருக்கோவே மணிக்கோடு, தங்குபெருவளநாட்டிற் றமிழிருந்து புறங்காக்குந் தமிழ்நாடி யாங்கே?" என்ற பாடல்களால் நமது தமிழ்மொழியினருமைபெருமைகளும் விளங்கும். இந்நூலையெமது பார்வைக்கனுப்பிய நம்நண்பரவர்கட்கு நன்றிகூறுகின்றோம்.

### சுப்பிரமணியர் காவடிச்சிந்து:

[இது நவமணிமாலையின் இரண்டாவது மணியாகக் கல்துளம் துப்புசாமி முதலியாரவர்கள், பி. ஏ. சென்னைமினெர்வா அச்சியந்திரசாலையிற் பதிப்பித்தது. இதன்விலை அணா 0-1-9]

இக்காவடிச்சிந்தினாசிரியர் சென்னிகுளம் - அண்ணாமலைரெட்டியாரென்பவர்; ஊற்றுமலைச்சமீன்தாரரிடம்சமஸ்தானவித்துவானாயிருந்தவர். இவரை

யாமும் நேரிலறிந்துளம். இவர்விரைவாகவும் இனிமையாகவும்பாடும்வன்மை யுடையவர். இந்நூலின்கண்ணே 22 பாடல்களுள. கழுகுமலையின்கட் கோயில் கொண்டருளிய முருகபிரானைப் பாட்டுடைத்தலைவனாகவைத்து யாக்கப்பட்டுளது இந்நூல். இது சந்தவின்பம்பயந்தும் முடுக்கியலோதை தழுவியும் இயலுமாறு யாவருங்கண்டுபோற்றுதற்குரியது. இதன்கண்ணே சுரம்போக்கு, தூது, ஊடல், இரங்கல் முதலிய அகப்பொருட்டுறைநிலைகள் நன்கு புனையப்பட்டுள. இது கற்றார்க்குங்கல்லார்க்கும் ஒருங்கேயின்பந்தர வல்ல செவ்விவாய்ந்தது; நல்லகடிதத்திற் கட்கினியதாக அச்சிடப்பட்டுளது; நான்குபக்கங்கள் கொண்டமுகவுரையுடையது: 32 பக்கங்கள் கொண்டது; விஷயவகராதியும் அரும்பதவுரையும் இறுதியிற்சேர்க்கப்பட்டுளது. இந்நூலாசிரியர் 1891 - ஆம் வருஷம்காலஞ்சென்றனர்; இவர் யமகந்திரிபு பாடுவதில் மிகவுங்கைவந்தவர். இதுநிற்க. இந்நூற்பதிப்பினையாவரும் நன்குமதிக்குமாறு வெளியிட்ட நமது முதலியாரவர்கள்செயல்பாராட்டற்பாலது. இதனை யாவரும் விலைக்குப்பெற்றுப்படிப்பார்களென்றெண்ணுகின்றேம்.

## கருமலையாண்டவர் துதிமஞ்சரி:

[இதுசேலம் ஜில்லாக் காட்டுப்பாளையம் ஜமீன்தாரர் மகா-ள-ள-ஸ்ரீ கே. ராசாக்கவுண்டரவர்கள் விருப்பத்தின்படி சேற்றூர்ச்சமஸ்தானவித்துவான் மு. ரா. அருணாசலக்கவிராயரால் சென்னை அல்பினியன் அச்சியந்திர சாலையிற்பதிப்பிக்கப்பெற்றது. இதன்விலை நூற்புறத் தெங்குங்குறிக்கப்படவில்லை.]

இந்நூலாசிரியர் சேற்றூர்ச்சமஸ்தானவித்துவான் **எம். ஆர். கந்தசாமிக் கவிராயரவர்கள்.** இவரது உடன்பிறந்தார்களுங்கவிஞர்களே. இவர்களெல்லாம் நேற்றுத் தோன்றிய கவிராயர்கள் போலாது வம்சபரம்பரையாகவந்த கவிவாணர்கள். ஆகவே இத்நூலாசிரியரது பாக்கள் நன்சமைந்திருக்குமென்பதுயாமெடுத்துச்சொல்லாமலே விளங்கும். இதன்கண்ணே அபயதுவயப்பதிகமும், திருவருள்வேட்கைப்பதிகமும், குமரநாதப்பதிகமும், கலிவிருத்தப்பதிகமும், கருமலைக்குமரநாயகப்பதிகமும், போற்றிவிருத்தமும், தேவரட்சகராஜப்பதிகமும்,கருமலை ஆண்டவன்மாலையும், இருபத்துநான்கு சீரடியாசிரியவிருத்தமும், ஈசுரன்பேரில் துதிகவியும், செல்லாண்டியம்மைபேரில் நாற்பத்தெண்சீரடியாசிரியவிருத்தமும் ஆக 100 செய்யுட்கள் அடங்கியிருக்கின்றன. இவையனைத்தும் ஒவ்வோராற்றாற் சுவைவாய்ந்தன ; இதனினும் இஃதேற்றமுடைத்தென்னத்தகாதவாறு அமைந்துகிடக்கின்றன. இவை படிப்போர்க்குங்கேட்போர்க்கும் இன்பம்பயக்குமென்றற்கண் யாதோர் ஐயப்பாடுமில்லை. இந்நூலினிறுதியில் திருச்செங்கோடு முத்தமிழ்வித்துவான் சே. த. விசாகப்பெருமாள் முதலியாரவர்களாற் செய்யப்பட்ட வண்ணவிருத்தப்பதிகமும், பன்னிரு சீர்க்கழிநெடில் விருத்தப்பதிகமும், பஞ்சரத்நமும் சேர்க்கப்பட்டுள. அவையும் நன்கமைந்து செவிக்கின்பம் பயந்து செல்லுகின்றன. இவ்வாறு செந்தமிழ்க்கவிஞராவார் அவ்வவ்வமயங்களிலே இயற்றுகிற்கும் தமிழ்நூல்களைத்தமிழ்நாட்டிற்பொருட்செல்வம் படைத்துப்பிரபுக்களென விளங்குவோர் ஆதரித்து அப்புலவர்களையும் ஊக்குவார்களாயின் எவ்வளவோ நன்மையுண்டு. இதனையுள்ளவாறே நன்குணர்ந்த ஜமீன்தாரர் ராசாக்கவுண்டரவர்களுடைய செய்கை மிகவுங்கொண்டாடுதற்குரியதே. இவருடையவழியைப் பின்பற்றியேனையபிரபுக்களும் முற்போந்து தமிழ்வித்துவான்களைக் கைதூக்கியுதவி புரிந்து புகழ்படைத்தொளிர்வார்களாக.



## ஜோதிமாலை:

[இது சென்னைத் தாம்ஸன் கம்பெனியாரால் மினெர்வா அச்சியந்திர சாலையிற் பதிக்கப்பட்டது; இதன்விலை அணா 0—8—0 தபாற்கூலிவேறு.]

நாமகள் சிலம்பிற் பதினேழாம் பரலாகிய இந்நூலினாசிரியர் **சருத்தை-வரதாசாரியர்** என்பார். இவர் நமது 'ஞானபோதினி'ப் பத்திரிகைக்கு அடிக்கடி விஷயதானஞ் செய்பவர்களுளொருவர்; ஆதலின் நமது பத்திரிகையைப்படிக்குநர் யாவர்க்கும் இந்நூலாசிரியர் புதியரல்லர். இவரியற்றிய இந்நூல் நாடிகை யென்னும் உபஜாதி நாடகத்தின் பாற்படுவதாம். நாடிகையினிலக்கண மனைத்தும் இதன்கண் நன்கு அமைந்துளபான்மை மிகவும் வியக்கத்தக்கதே. இதுவே தமிழில் முதன் முதலேற்பட்ட நாடிகை. இஃது அரசர் ஆக்கக் கதைத்தாய் அறம்பொருளின்பமென்னு மூன்றும் பயப்பது; இழிப்புச்சமனிலை யொழிந்த சுவைவகுப்பிற்று; ஐவகைச் சந்தியுமமைந்தது ; பாத்திரங்களினேற்றத்தாழ்வுக்கேற்ற வசன நடை தெளிவாகவுந் திருத்தமாகவும் அமைந்திருக்கின்றது. மூவகைப் பொருத்தமும் வாய்ந்தது. தடாகத்தினிடையே ஆங்காங்குப்பூத்த தாமரைமலர்கள் போலாகின்றன நூலினிடையிடையே காணப்படும் செய்யுட்கள். இவையனைத்தும் ஆழ்ந்த கருத்தும் இனியவோதையுங்கொண்டு செல்லாநின்றன. கும்மியுஞ் சிந்தும் ஆனந்தக்களிப்புங் கந்தருவமார்க்கத்தால் இடைமடக்கிவந்த இசைப்பாட்டுக்களும் மிகச்செவ்வி சான்றன. இதன் வாயிலாகப் பாலிய விவாகத்தின் தீமைகள், அழுக்காற்றின் கொடுமை, சுவாதீனத்தினின்றியமையாமை, சிறுவர் பெரியோர்க்கடங்கி யொழுகுதலாதிய நீதிகள் போதிக்கப்பட்டுள. எவ்வாற்றானுந் தான்கொண்ட கொள்கையைச் சாதித்தே தீரவேண்டுமென்ற உறுதிப்பாடுடைய ஜயபாலனும், அரசிக்கடிக்கடி நல்லறிவு புகட்டுங் கடப்பாடுடைய குணாகரரும், தானடுத்துள பிரபுவினின்பமே தன்னின்பமாகக் கருதி அவன் விரும்பியாங் கெல்லா மொழுகும் அன்புடைமையும் நகைவிளை செயல்கள்செய்து சொற்களுஞ் சொல்லும் பெற்றிமையுமுடைய விதூடகனாகிய அபிராமனும், வைத்தியமுஞ் சோதிடமுங் கைவந்தவரேனும் சமயோசிதமாக நடந்து கொள்ளுமியல்புடைய சங்கரபண்டிதரும், பெருந்தன்மையோடு அழுக்காறுங் குரோதமுமுடைய குரோதவசையும், என்ன துன்பம் வரினும் அவற்றைப் பொறுத்துக்கொள்ளும் பொறுமையும் தான்கொண்ட விருப்பத்தினைக் கடவுள் என்றேனும் பூர்த்திசெய்தருளுவா ரென்ற நம்பிக்கையுமுடைய ஜோதிமாலையும் படிப்போர் யாவருடைய அநுதாபத்திற்கு முரியராகின்றனர். முன்னுரைக்கட் சூத்திரதாரன் பிரவேசமாகிப் பாடுகின்ற வாழ்த்துச் சிலேடை நலங்கனிந்து சிறந்துளது. முதலங்கம் முதற்களத்தில் ஜயபாலன் ஜோதிமாலையினது கூந்தலைப் புனைந்துரைக்கும் பாடலும் இரண்டாங்களத்தில் ஜோதிமாலை ஜயபாலனது திருமேனியைப் புனைந்து கூறிமறவே னென்றுரைக்கும் பாடலும், மூன்றாங்களத்தில் மணவினையைப்பற்றிக் கூறும் பாடலும், இரண்டாமங்கம் மூன்றாங்களத்தில் இசைக்கோட்டியிற் கூறிய பாடல்களும், நான்காமங்கம் முதற்களத்திலுள்ள வியோகினி விருத்தப்பாடலும், குரோதவசை இறுதியிற் பணிந்துபாடும் பாடல்களும் படிக்குநர் மனங்கவரும் பான்மையன. இனிச் சிற்சில பாக்களிற் சொன்முதிர்ச்சி யில்லை; இதற்குற்ற காரணம் நூலாசிரியரது இளமையே போலும். மற்றுப், பின்னுரை யின்னுஞ் சிறிது விரிந்திருக்கலாம், நாடிகையை முடித்துக் கையும் மனமும் ஆற அமைந்திருக்கும் அமயத்தி லெழுதப்

புகுந்து சுருக்கிவிட்டனர்போலும். இது நிற்க. இஃது ஆடவரும் பெண்டிரும் அகமகிழ்ந்து படிக்கத்தக்கது. தமிழராவார் யாவரும் இதன்கண் இன்பங் காண்பாரென்று கூறுதற்கண் யாதோ ரையப்பாடுமில்லை.

## இரத்நமாலிகை :

[இது சென்னைத்தாம்ஸன்கம்பெனியாரால் மினெர்வா அச்சியந்திர சாலையிற் பதிப்பிக்கப்பட்டது. இதன் விலை ரூ 1—0—0. தபாற் கூலி வேறு.]

ம-ா-ா ஸ்ரீ விச்சூர் - முத்துக்குமாரசாமி முதலியாரவர்கள், பி. ஏ., இக்கிரந்தத்தின்கர்த்தாவாவர். இவர்முன்னரே சமரசஞானசந்திரிகை யென்னும் நூலியற்றிவெளியிட்டிருக்கின்றனர். அந்நூலைப்பற்றி முன்னொரு முறை நமதுபத்திரிகையிலெழுதியிருக்கின்றோம். இது போழ்து 'யதார்த்தபாஸ்கரன்' என்று பிரசுரிக்கப்படும் மாதாந்தத் தமிழ்ப்பத்திரிகைக்கும் இவரே அதிபராவார். இவர் ஸ்ரீமத் பகவத்பாதசங்கராசாரிய சுவாமிகளிடத்து ஆராவன்பும் பக்தியுமுடையராய் அவரது தத்துவக்கொள்கைகளையே மேற்கொண்டு பேசியும் ஒழுகியும் வருதல் வேட்டவர் ; விரிந்தசிந்தையும் பரந்தநோக்கமுமுடையவர் ; வெளிப்படையானவுள்ளமுடையவர் ; உண்மையே பெரிதெனநம்பியொழுகுபவர். இத்தகையசிறப்புக்கள் வாய்ந்தநம்நண்பர் இயற்றிய இச்சத்கிரந்தத்திற்கு 'அஷ்டோத்ரசத ப்ரச்நோத்ர ரத்நமாலிகை' என்றதோர் நீண்டபெயருமுண்டு. இது நூற்றெட்டுஇனிமையும் புதுமையும் வாய்ந்த வினாவிடைகளுடைமையானும், அவையனைத்தும் ஒருங்குசேர்ந்து ஒருமணிக்கோவைபோன்று யாவரும் மேற்கொள்ளத்தக்கவாறு ஒளிவீசுமியல்புடைமையானும் அப்பெயர்த்தாயிற்று. வேதாந்தசாஸ்திரார்த்தங்களையே நூலினகத்து ஆங்காங்கு வெளியிட்டுவிரித்துக்கொண்டுபோகும் நம்நண்பர் இடையிடையே இந்துசனசமூகச்சீர்திருத்தத்திற்கு இன்றியமையாத சில நவநாகரிகக்கொள்கைகளையும் ஜநோபகாரங்கருதியெடுத்துரைப்பாராயினர். பொது ஜநவைக்கியத்திற்கும், இந்துதேசவொருமைப்பாட்டிற்கும், ஜநாபிவிருத்திக்கும், வேதாந்த நிலையினின்றுழைத்தலே தக்கவழியென்பதுணராதவர் இந்நூலையொருநாளும் விரும்பார். அவர்விரும்பினென் ? விரும்பாக்காலென் ? பொது ஜன நன்மைக்கெனப்பாடுபடும்பலருள்இவருமொருவரேயென்க. அமெரிக்கா முதலிய பிறகண்டங்கள்சென்று ஆங்கு நம் இந்து மதஸ்தாபநாசாரியராய் விளங்கியாண்டும் பிரசங்கமழைபொழிந்து வேதாந்தப்பயிர்வளர்த்து வந்தமாமுகிலாகிய விவேகாநந்தப் பெருந்தகையாளராகிய அற்புத வள்ளலாரையே இம்மூடவுலகங் குறைகூறிற்றென்றால் அவரது மாணுக்கருளொருவராகிய நம்நண்பர்முத்துக்குமாரசாமி முதலியார் மீது குறைசொல்லக்கேட்பானேன் ? இனி இதுநிற்க. முதலியாரவர்கள் தங்கொள்கையொடு மாறுபடும்பிறமதக்கொள்கைகளைப்பற்றிப் பேசுமிடத்துச்சிறிதுவரம்புகடந்து சேறலுமுண்டு. எனினும் அது தங்கொள்கையையுள்ளவாறே யுய்த்துணரமாட்டாதார் இழைத்தவசையளவிற் கேற்றதேயெனக்கருதிய ரத்நமாலிகாசாரியர்க்கு அஃதோர் இழுக்காகாதென்றெண்ணுகின்றோம். நம்நண்பரது உள்ளமெனும் பேரோங்கலிலுற்பத்தியாகிப் பிறர்தூஷணமாகிய மரங்களை முறித்துந்தி, வேதாந்தமெய்க்கருத்துக்களாகிய. பொன்னினைக்கொழித்துப், பேதைமாக்களுள்ளமாகிய பாறையின் மோதிப் பெருமுழக்கோடு மெழும்பிச் செல்லுங்கான் யாறன்றோ இரத்நமாலிகை? இத்தகையமேதக்க நூலை வாங்கிப்பார்க்க விரும்பாதாரெவரே ? இதுயாவருக்கும்பொருள்விளங்கத்தக்கவெளிய தெளிவான நன்னடையிலெழுதப்பட்டுளது. திசைச்சொற்களெனச் சில ஆங்கிலச்சொற்களை வழங்கிய வழக்கும், ஆங்காங்குக்காணப்படும் சிற்சிலபிறழ்வுகளும் காலம்பெறாமையான் நேர்ந்தனவாமாதலின் நூலாசிரியரிடத்து அநுதாபமுமன்புமுடையார் அவற்றைப் பெரும்பிழைகளெனப்பாராட்டாரெனவிடுக்க. நூலின்கட்கூறப்பட்டுள விஷயங்களனைத்தும் ஏற்றுக்கொள்ளப்படுமெனில், அப்போழ்தத்து இச்சிறுபிழைகளால் விளைவன என்னவோ? "நீர்பிரித் தன்ன முண்ணுந், தூயதீம் பால்போற் கொள்க சுந்தரன் சரிதந் தன்னை" யென்று அவையடக்கங் கூறிய திருவிளையாடற்புராணமுடையார் கூற்றையு முற்றுநோக்குக. இனிநம் நண்பர் இத்தன்மையான பரோபகாரசத்விஷயசுபோதசல்லாபமகோந்நதகிரந்தங்கள் அளவிறந்தனவியற்றிப்பேதைமாக்களைத்திருத்திப் பெரும்புகழ்கொண்டுவிளங்குவாராக.



## விக்டோரியாவின்மெய்க்கீர்த்தி:

[இது சென்னைத்தாம்ஸன் கம்பெனியாரால் மினெர்வா அச்சுக்கூடத்திற் பதிப்பித்தது. இதன் விலை அணா. 10.]

இந்நூல் மகா-ா ா ஸ்ரீ கா. ச. துரைசாமிப் பிள்ளையவர்கள் இயற்றியது. இந்நூலின் புறவுறுப்புக்களாவன : காலஞ்சென்றவிக்டோரியாமகாராணியார்படம், நூலின்ஆங்கில மொழிபெயர்ப்பு, 39 பக்கங்கள்கொண்ட தமிழ்முகவுரை, விக்டோரியாமகாராணியார் வாழ்த்து, பிரிடிஷ்ஆளுகை யென்பனவாம். இப்புறவுறுப்புக்களையுடைய நூல் அகவல்யாப்பி னியன்று 39-பக்கங்களினளவுவிரிந்துளது. மும்பாபுரியின்கண் உயர்நீதிசாலையில் நியாயாதிபதியாய் விளங்கும் கனம்பொருந்திய மகா-ா-ா-ஸ்ரீ என். ஜி. சந்திரவக்கரென்பவர் இந்நூலிற்குஆங்கிலமொழியினியன்றதோர் முகவுரைவரைந்துளார்; எனவே, இந்நூலின்மேன்மை சொல்லாமலே விளங்கும். நூற்பெயர்க்கியைந்தவண்ணம்அரசியாரது கீர்த்தி மகிமைகள் யாவும் நன்குவிளக்கியெழுதப்பட்டுள. அரசவிசுவாசம் பெரிதுங்காட்டாநின்ற இந்நூலையாவரேகைக்கொளாதார் ? நல்லகடிதத்திற் பெரியஎழுத்துக்களில் நன்கு பதிப்பிக்கப்பட்டுளது ; 128 பக்கங்கள் கொண்டது. இதுபோலும் நூல்கள்பல வெளிப்படுமெனநம்புகின்றனம்.

## ஆக்பர் சக்கிரவர்த்தி :—

[இவ்வசனநூல் வெ. நா. ஜூபிலி யச்சுக்கூடத்திற் பதிப்பிக்கப்பட்டது. இதன்விலை நூற்புறத்தெங்குங் குறிப்பிக்கப்படவில்லை.]

இதனை யியற்றினார் ம-ா-ா-ஸ்ரீ திருச்சிற்றம்பலம் பிள்ளை யவர்கள். இது 176 பக்கங்கள் கொண்டுளது. இதற்கு ம-ா-ா-ஸ்ரீ இராமகிருஷ்ண பிள்ளை யவர்கள், பி. ஏ., எவ். ஆர். எச். எஸ்., ஃவ். எம். யூ., ஒரு முகவுரை யெழுதியிருக்கின்றார். இதனுட் 'பேபரின் படையெடுப்பு', ,உமாயூனும் ஆக்பரின் இளமையும்', 'இந்தியாவின்மீது உமாயூன் படையெடுப்பும் அவன் உயிர் விடுப்பும்', ஆக்பருக் காதிபத்திய மளித்த பாணிப்பட்டு யுத்தம்', 'ஆக்பர் சிம்மாசன மேறியபோது இந்தியாவிருந்த நிலைமை', 'ஆக்பரின் அரசாட்சி', ஆக்பரின் கொள்கை' என்ற ஏழு அதிகாரங்கள் உள்ளன. இந்நூலின் நடை நாம் சாதாரணமாய் உபயோகிக்கும் வடசொல்,

திசைச்சொல் முதலிய விரவப்பெற்று மிக எளிதாயமைந்திருக்கின்றது. ஆதலின் நமது இந்துதேசப் பூர்வ சரித்திரத்தில் விருப்பமுடையோர் பலரும் வாசிக்கத்தக்கது. "கட்டுக் கதைகளினும் உண்மையில் நடந்த விஷயங்களே சிறப்புடையன; முன்னவை நன்னடையினியன்று நற்புத்தி நற்பூத்தி புகட்டாவழி. நடந்த விஷயங்களை யறிந்து கொள்ளுவதில் ஆங்கிலேயரைப் போலவே நாமும் ஆர்வமுடையவ ராதல் வேண்டும். நன்னாட்டு நடந்தன நமக்குத் தெரியாவிடில், நாம் அவை தெரிந்த புறநாட்டாரது நகைக்கு ஆளாகின்றோம். இன்னோரன்ன காரணங்களாற் சரித்திர விஷயங்களை எல்லாருக்கும் விளங்கும் வசனநடையி லியற்றுவதும், இயற்றப்பெற்ற நூல்களை வாங்கிப் படித்துப் பயனடைதலும், தேசாபிமானி, பாஷாபிமானி எனப்பெறூஉம் நம்மவர் ஒவ்வொருவருக்குந் தவறாக் கடன்பாடாகின்றது. இத்தகைய் நூல்கள் இன்னும் பல வெழுதப்படல் வேண்டும். இது நல்ல கடிதத்திற் பெரிய எழுதுக்களில் நன்கு பதிப்பிக்கப்பட்டுளது. இனி நமது பிள்ளையவர்கள் ஊக்கங் குன்றுதலின்றி இதுபோலும் சரித்திர சம்பந்தமான பல நூல்கள் எழுதி வெளியிடுவாராக.

---

## EDITORIAL NOTES.

## பத்திராதிபர் குறிப்புக்கள்.

---

**நமதுசக்கிரவர்த்தியாரவர்கள் முடிபுனைந்தமை:**—காலஞ்சென்ற நமது விக்டோரியா மகாராணியாரது வயிற்றில் இரண்டாவது குழந்தையாக 1841-ஆம் வருஷம் நவம்பர்மீ 9-ஆந்தேதி பிறந்து, மகாராணியாரது ஜீவதசையெல்லாம் 'ப்ரின்ஸ் ஆவ்வேல்ஸ்' என்னும் பட்டம் வகித்திருந்து, 1876-ஆம் வருஷம் நம்இந்தியாவிற்குவந்து பலவிடங்களையுஞ் சுற்றிப்பார்த்து, நாட்டின் நிலப்பண்பும், ஜனங்களின் குணவியல்பும் முதலியயாவும் நன்குணர்ந்து சீமைசென்று இப்பொழ்தத்து நிகழாநின்ற ஆகஸ்டுமீ 9-ஆந்தேதி, எட்வர்ட் ஏழாவர் சிங்காதனமேறிமுடிபுனைந்து செங்கோல் கைக்கொண்டார். அவருடன் அவரதுதேவியாராகிய அலெக்ஸாண்ட்ராவரசியும் மகாராணியாராயினார்கள். எம் எட்வர்ட் மகாசக்கிரவர்த்தியாரும் அலெக்ஸாண்ட்ரா மகாசக்கிரவர்த்தினியாரும் ஒருங்குகூடி நீடூழிகாலம் செங்கோல்செலுத்துவாராக; யாண்டும் இன்பமோங்குவதாக; நம் இந்தியர் வேண்டியஉரிமைகளெல்லாம் பெற்று வாழ்வாராக. ஆங்கிலராச்சியந்தழைப்பதாக; ஆங்கிலமொழிநலனனைத்தும் நந்தமிழ்மொழிக்குவருவனவாக. ஆடுகம் பாடுகம் வாரீர்-எங்கள், எட்வர் டிறைவன் மகுடம் புனைந்தான், ஆடுகம்பாடுகம் வாரீர்!

***

**மைசூர் மகாராஜா மகுடாபிஷேகம்:**—நிகழாநின்ற ஆகஸ்டுமீ 3 – ஆந்தேதி வெள்ளிக்கிழமையன்று, நமது தென்னிந்தியாவிலுள்ள சுதேசராச்சியங்கள்யாவற்றினும் மிகவும் பெரியதெனக்கருதப்படும் மைசூர்ராச்சியத்திற்கு மன்னவராகக் கிருஷ்ணராஜவுடையரவர்கட்குப் பட்டாபிஷேகம் ஆயிற்று. இவர் ஆண்டிலிளைஞராயினும் அறிவின்முதியரெனக் கேள்விப்படுகின்றோம். இவர் சுதேசராச்சியங்க ளனைத்தினுந் தந்நாடுபெரிதாமாறுபோலத், தாமும்அவ்விராச்சியங்களையாளும் அரசர்கட்கெல்லாம் ஒருகாட்டாகின்று ஒழுக்கநெறி பிறழாமற்செங்கோல் செலுத்துவாரென்று நம்புகின்றோம். உள்ளவாறே இவரது பட்டப்பெயர் 'உடையார்' என்று வாய்ந்ததற்கேற்பச்சகலநன்மையுமுடையாராயும் சிறுகுறைகள் கண்டுழி உள்ளமுடையாராயு மிருந்து சிறந்து வருபவரேனும் தீமைவிஷயத்தில் 'இலர்' எனும்பட்டத்திற்குரியராகத்தக்கவாறும் நடந்து கொள்வாரென்பது திண்ணம். கனம் பொருந்திய கிருஷ்ண ராஜவுடையாரரசு சிறந்தோளிர்வதாக. அவரும் நீடூழியினிது வாழ்வாராக.



***

**கனவான்கள் சிலர் மரணம்:**— இச்சென்னைமாநகரிலிருந்து நகரபரிபாலனசபையின் அவயவிகளுளொருவராயும், சென்னைச்சட்ட நிரூபணசபையின் அவயவிகளுளொருவராயும் இருந்து நம் இந்தியரது பொதுநலங்கருதியுழைத்துவந்த கனம்பொருந்திய பி. ரங்கையநாயுடுவவர்கள் காலஞ்சென்றனரென்றது கேட்டு யாரேதுயருறாதார்? இனித்தஞ்சைமாநகரிலிருந்து பிராமணகுலோத்தமராய் விளங்கி, ஆண்டுள்ள நியாயவக்தாக்களனைவர்க்குஞ் சிரோரத்தினமாயொளிர்ந்து, சென்னைச்சட்டநிரூபணசபையின் அவயவிகளுளொருவராகவுஞ் சின்னாள்வீற்றிருந்து, ஜனோபகாரஞ்செய்துவந்த கனம்பொருந்திய கல்யாணசுந்தரமையரவர்களுங் காலஞ்சென்றனரென்ற விஷயமுஞ் செவியுற்று ஆற்றியிருக்கும் வல்லாளரெவரே? இத்தகைய பரோபகாரிகள் இன்னுஞ் சில்லாண்டுகளிருந்து நம் நாட்டினுக்கு உழைக்கவொட்டாதவாறு செய்த கூற்றுவனின் கொடுமைதானென்னே!

***

**பெருநோய்:**—ட்யூபர் குலாஸிஸ் என்ற விசித்திரப் பெயருடையதோர் பெருநோயினால் இவ்வுலக முழுவதினுந் தினந்தோறும் இறந்தொழிபவர் தொகை மூவாயிரமென ந்யூயார்க் என்னும் நகரத்திலுள்ள டாக்டர் நாப் என்னும் பண்டித சிகாமணி எழுதுகின்றனர். இவ்வொரு நோய்க்கே இரையாபவர் இத்துணையோ ரெனில், இன்னும் ஏனைய நோய்கட்கும் இரையாகின்றவர் எத்துணையரோ? அறிகிலேம்.

***

**விசாரணை செய்வுழி நிகழ்ந்ததோர் விநோதம்:**—ஓரிடத்திற் கொலையுண்டு கிடந்த ஒருவனது பிரேதத்தைப்பற்றி விசாரணை செய்யச்சென்ற ஒருத்தியோகஸ்தரும் அவருக்கு உதவியாகவந்த அவரது கீழ் உத்தியோகஸ்தரும் ஆகிய இருவரும் அதனைப் பார்த்தபோது மேலவர் கொலையுண்டவன் மேஜையின்மீது ஒரு புட்டியிருந்ததென்று எழுது என்று சொல்லி, 'இல்லை; பொறும்; அப்புட்டியில் யாதுளதென்று பார்ப்போம்' என்று ஒரு கிண்ணநிறைய அதிலிருந்ததைப் பெய்து சுவைத்து 'இது இங்கிலீஷ் ஜின் போலிருக்கிறது' என்றார். கீழவர் தாமும் ஒரு கிண்ணம் வார்த்துக்குடித்து 'அன்று; இது ருஷியாதேசத்துக் காரமான வாட்காச் சாராயம்' என்றுரைத்தார். மேலவர் மறுபடியும் பெய்து வாயில் வைத்துச் சுவைத்துக்கொண்டு 'இது வாட்காவன்று; ஜின்' என்றார். கீழவரும் மறுபடியும் அப்படியே செய்து 'வாட்கா' வென்றார். இவ்வாறு இருவரும் மாற்றி மாற்றிக் குடித்துப் புட்டியை வெறுவிதாக்கியும் அதன்கணிருந்த தின்னதென்று திட்டமாய்த் தெரியாமல் மேலவர் 'ஒரு வெறும் புட்டியிருந்தது. அதிலிருந்த

தின்னதென்று அறிவதற்கு எவ்வளவோ முயன்று பார்த்தும் முடியாமற் போயிற்று என்று எழுது' எனலும் கீழ்வரும் மறுது எழுதினார். இதுவும் ஒரு விநோதமன்றோ? என்னே உத்தியோகஸ்தர்களின் மகிமை! கொலையுண்ட பிரேதத்தைக் கண்டு சாமானிய ஜனங்கள்போலச் சிறிது மஞ்சாது தைரியமா யுட்புகுந்து ஆனந்தமாய் மதுபானஞ் செய்து களித்த இவரது பெருமையே பெருமை! எந்தத்துக்கத்தையும் இன்பமாகக் கொண்டாடத் தக்க பேரறிவாளர்!

***

ஸர். எஸ். சுப்பிரமண்யஐயரவர்கள்:—தேகசௌக்கியத்துக்காகக் கடந்த எப்ரல்மாதம் கோடைக் கானலுக்குச்சென்ற நம் நியாயாதிபதி யவர்கள் மீண்டும் சென்னைவந்துவிட்டதா யறிகின்றோம். அவ்விடம்சென்றதில் நம் ஐயரவர்களுக்கு மிக்க சுகமுண்டாயிற்றென்பதையும் இப்போது அவர் முன்னிலும் பன்மடங்கு தேகசௌக்கிய முடையவரா யிருக்கின்றா ரென்பதையுங் கேட்டு மிகவும் சந்தோஷிக்கின்றோம்.

***

உபகாரச்சம்பளம்:—துரைத்தனத்தார், 55-வயதுவரை உத்தியோகஞ் செய்தவர்களுக்கு, அவ்வயதுக்குமேல் உபகாரச்சம்பளம் கொடுப்பது வழக்கமன்றோ? அங்ஙனம் கொடுப்பிக்கவேண்டியது இவ்வளவென்பது, அவர்கள் வேலைசெய்து பெற்ற கடைசி 5-வருஷச் சம்பளத்தினின்றும் சராசரிக் கணக்குப்போட்டு இதுவரை நிர்ணயிக்கப்பட்டுவந்தது. இனி அங்ஙனமன்றி மூன்றுவருஷச் சம்பளத்தினின்றும் கணக்கிட்டுப் பார்க்கலாமாவென்று துரைத்தனத்தார் யோசித்து வருகின்றார்களாம்.

***

யாத்திரை செய்வோர்க்கு ஒருவரி:—நமது தேசத்திற் பற்பல வரிகள் உள. இனிச் சென்னை மாகாணத்தில் யாத்திரை செய்வர்களுக்கும் ஒருவரி ஏற்படும்போலும். ஸ்தலங்களில் ஆயிரக் கணக்கான ஜனங்கள் விசேஷகாலங்களில் ஒன்று கூடும்போது அவர்களுக்கெல்லாம் அவசியமான சுகாதாரச் சௌகரியங்களைச்செய்ய அந்தந்த நகரபரிபாலன சபையாரால் முடியவில்லையாம். ஆகவே அவர்கள் துரைத்தனத்தாரிடம் முறையிட்டுக்கொண்டிருக்கிறார்கள். பம்பாய் மாகாணத்தில், யாத்திரைக்காரர்களிடமிருந்து வரி வசூல் செய்வது வழக்கம். அங்ஙனம் செய்வதனால் உண்டாகக்கூடிய சாதக பாதகங்களைத் தெரிவிக்கும்படி நமது சென்னை மாகாணத்திலுள்ள பெஜவாடா, சிதம்பரம், கும்பகோணம், மதுரை, மன்னார்குடி, மாயவரம், நாகபட்டணம், பாலக்காடு, பழனி, ஸ்ரீரங்கம், ஸ்ரீவில்லிபுத்தூர், திருவண்ணாமலை ஆகிய இந்தப் பன்னிரண்டு நகர பரிபாலனசபையாரையும் துரைத்தனத்தார் அபிப்பிராயங் கேட்டிருக்கின்றார்களாம். திருவிழாக்களில் நேரும் சுகாதாரச் செலவை நகரபரிபாலன சபையார் தாங்கமுடியாது என்னும் தீர்மானம் முன்னமே துரைத்தனத்தார் கொண்டுள்ளர்.

MADRAS

# ஞானபோதினி.

ஒரு மாதாந்தத் தமிழ்ப்பத்திரிகை.

சம்புடம் VI } 1902ஹு செப்டம்பர்மீ 20உ { இலக்கம் 2.

## THE UNIVERSITIES COMMISSION.

## சர்வகலாசாலை விசாரணை.

I.

சில மாதங்கட்கு முன்னர் நமது பத்திரிகையில் இந்த விசாரணை சபையாரைப்பற்றிக் குறிப்பித்திருந்தோம். இவர்களுந் தாங்கள் இந்தியாவின்கணுள்ள சர்வ கலாசாலைகள் யாவற்றையும் பற்றி விசாரித்துச், சீர்திருத்த வேண்டிய அம்சங்களாவன இவை யெனக்கண்டு, அவற்றைக் குறித்துத் தங்களுள்ளே கூட்டங்கூடிக் கடாவிடைகளான் ஆராய்ந்து, தங்களுடைய அபிப்பிராயங்கள் பொதிந்த சிறு புத்தகமொன்று பதிப்பித்து வெளியிட்டிருக்கின்றனர்.

இப்புத்தகத்திற் கூறப்பட்டுள பல விஷயங்களைப்பற்றி நம்மவருட் கற்றறிந்த பலர் பயப்படுவாராயினர். வடநாட்டிலேயுள்ள ஐரோப்பியர் இதனை முற்றிலும் அங்கீகரித்தனர். தென்னாட்டிலேயுள்ள ஐரோப்பியரிற் சிலர் இதனைச் சிற்சில பகுதிகளில் அங்கீகரிக்கவில்லை. இந்தியப் பத்திரிகாசிரியர்களெல்லாம், அப்புத்தகத்தினுட்கருத்து இராஜதந்திரப் பொருமை யென்பதும், இந்தியரது உயர்தரக் கல்விவிருத்தியை ஒரேயடியில் தொலைத்துவிடல் வேண்டு மென்பதுமே யென்று வாதாடுகின்றனர்.

இவ்விருதிறத்தார் கூற்றும் தம்முள் வேறுபடுகின்றமைக்குற்ற காரணங்கள் யாவை? மேற்கூறிய விசாரணை சபையாரது கருத்து இந்தியாவின்கணுள்ள சர்வகலாசாலைகளெல்லாம், கல்விமுறை,

படிப்பிக்கும் ஒழுங்கு, மாணாக்கர் கல்வி யளவு முதலிய பல விஷயங்களினும் ஒரு நிலைப்பாடு அடைதல் வேண்டுமென்பதே. இதனைச் சாதித்து முடிக்கு முகத்தான், மாணாக்கரது ஒழுக்க விசாரணைக்குரிய முறைகளு முடன் கூறியிருக்கின்றனர்.

முதற்கண், சர்வ கலாசங்க நாவலர்களும், சர்வ கலாசங்கப் புத்தகசாலைகளும் தொழிற்சாலைகளும், மாணவர் விடுதிகளும் ஏற்படுத்தப்படுதல் வேண்டும். இவ்விஷயம் யாவருக்கும் ஒப்ப முடிந்ததென்றெண்ணுகின்றோம். இதனானே நம் நாட்டிற்குப் பலவகையான அநுகூலங்களும் விளையலாம்.

இரண்டாவதும் மூன்றாவதும் சர்வகலா சங்கத்தின் அவயவிகளையும், சர்வ கலாசங்க நிர்வாக சபையாரையும் பற்றியன. இவர்களைப்பற்றிய விதிகளைப்பற்றி விரித்தெழுதுதல் ஓராற்றால் அமைவுடைத்தெனினும், நாம் அதிகமாய்க் கவனிக்க வேண்டிய விஷயங்கள் இன்னும் பல விருத்தலின் இவற்றை விடுத்து மேற் செல்வாம்.

நான்காவது, சர்வ கலாசாலைகளைச் சார்ந்தொழுகுங் கலாசாலைகளெல்லாம் நடக்க வேண்டிய முறையாம். இம்முறை கூறுமிடத்துக் கலாசாலைகளிற் போதனை சிறக்கும்படி உதவிப் போதகாசிரியர் பலரை யமைத்தல் வேண்டு மென்பதும், மாணாக்கர்கள் சம்பள வொருமைப்பாடுங் கூறப்பட்டுள. இவைமட்டிற் கூறப்பட்டிருந்தால் எல்லாருமே யொத்துக்கொள்ளாமற் போயினும், பலராதல் ஒத்துக் கொண்டிருக்கக்கூடும். இவையன்றிக் கலாசாலை யென்னும் பெயர்க்குரியனவெல்லாம், இருந்தாற் பி.ஏ., முழுவதுமுள்ள முதற்றரக் கலாசாலையாயிருக்க வேண்டும்; இரண்டாந்தரக் கலாசாலைகளெல்லாம் ஒழிந்துபடல் வேண்டுமென்பதுங் கூறப்பட்டுளது. இது நம்மவர் பலர்க்குத் திருப்திதரவில்லை. பிரவேச பரீக்ஷைமட்டிற் கற்பிக்கும் பள்ளிக்கூடங்களாகவாதல், பி.ஏ., பரீக்ஷைவரையிற் கற்பிக்குங் கலாசாலைகளாக வாத லிருக்கவேண்டும். நடுத்தரமான பிரதம கலா பரீக்ஷை மட்டிற் போதிக்குங் கலாசாலைகள் வேண்டுவன வல்லவென்றல் பலர்க்கும் வெறுப்பு விளைக்கத்தக்க விஷயமன்றோ? சிறிது சிறிதாய்க் கஷ்டப்பட்டு முதல் சேர்த்து இரண்டாந்தரக் கலாசாலையாகுமளவு முயன்ற பரோபகாரிகளெல்லாம் என் செயற்பாலர்? பணமிருந்தாற்றான் நன்று; அல்லாக்கால் என் செய்வது? பின்னி



டைந்து பிள்ளிக்கூட நிலைக்குக் கொணர்வதோ? இஃது அருமையாய் வளர்த்த வொரு பெருங்கிளியை, வளர்த்தவன் தானே வாளால் துணிப்பதாமன்றோ?

ஐந்தாவது, கல்விமுறை பரீக்ஷை முறைகளைப் பற்றியதாம். மாணாக்கர் கல்வி யளவு பிரவேச பரீக்ஷை, நடுநிலைப்பரீக்ஷை, பி.ஏ., பட்டப்பரீக்ஷை அல்லது பி. எஸ்ஸி., பட்டப்பரீக்ஷை யென்ற மூன்றனுனும் பரிசோதிக்கப்படும். பிரவேச பரீக்ஷைப் பாடங்களுட் பொருள்வலி நூலும், பொருட்டிரிவு நூலும் நீக்கப்பட்டன. நடுநிலைப் பரீக்ஷைப்பாடங்களுட் சரித்திரமும் உடனூலும் நீக்கப்பட்டன; இவற்றிற்குப் பிரதியாகத் தருக்க நூலும், பிரவேச பரீக்ஷைக்கு வேண்டாவென்றொதுக்கிய பொருள்வலி நூலும் பொருட்டிரிவு நூலும் பாடங்களாக ஏற்படுத்தப்பட்டன. இனிப் புதிதாக வேற்படவிருக்கும் பி. ஏ. பட்டப்பரீக்ஷைப் பாடங்களாவன: ஆங்கிலபாஷையும், இலத்தீன் கிரேக்கு ஸம்ஸ்கிருதம் என்பவற்றுளொன்றும் தத்துவநூலும், கணித நூலும் அல்லது சரித்திரமும் செல்வ நூலுமாம். இப்பரீக்ஷைப் பாடங்களில் தமிழ்தெலுங்காதிய சுதேச பாஷைகளொருங்கே தள்ளுண்டு புறக்கணிக்கப்பட்டன; தத்துவநூலும் கணிதநூலும் அல்லது தத்துவநூலுஞ் சரித்திர செல்வ நூல்களும் வலியுறுத்தப்பட்டன. பி. எஸ்ஸி., பட்டப் பரீக்ஷைப் பாடங்களுள் ஆங்கில பாஷையுமில்லை, இரண்டாம் பாஷையுமில்லை; மற்றுக் கணித நூலும் பொருள்வலி நூலும் பொருட்டிரிவு நூலுமாம்; அல்லது பொருள்வலி நூலும் பொருட்டிரிவு நூலும் உயிர் நூலுமாம். இனி மேற் கூறிய பரீக்ஷைகளின் பாடவமைப்பினைப் பற்றிப் பிறிதொரு சஞ்சிகையில் விரித்துப்பேசுவாம்.

பத்திராதிபர்.

## AUVAIYAR.

## ஔவையார்.

இரண்டாம் ஔவையாரைப் பாடினோர்:—

(1) 'கூழுக்கிங் கௌவையெனக் கூறு'

என்ற பெயர் புலப்படாத பெருங் கவிராயர். இனி, முதலாம் ஔவையாராற் பாடப்பட்டோர்:—

(1) அதிகமா னெடுமானஞ்சி—புறம் 78-104 முதலியன.
(2) அவன்மகன் பொகுட்டெழினி—புறம் 102, 392.
(3) தொண்டைமான்—புறம் 95.
(4) நாஞ்சில் வள்ளுவன்—புறம் 104.
(5) உக்கிரப் பெருவழுதி—புறம் 367.
(6) பெருநற்கிள்ளி—புறம் 367.
(7) சேரமான் மாவெண்கோ—புறம் 367.
(8) 'அணுவைத் துளைத்தேழ் கடலைப் புகட்டிக் குறுகத் தறித்த குறள்,

எனப்புகழப்பட்ட திருக்குற ளாசிரியராகிய திருவள்ளுவர் முதலியோர்.

இரண்டாம் ஔவையாராற் பாடப் பட்டோர்:—

'தேவர் குறளுந் திருநான் மறைமுடிவு
மூவர் தமிழு முனிமொழியுங்—கோவை
திருவா சகமுந் திருமூலர் சொல்லு
மொருவா சகமென் றுணர்'

என்னும் பாடலால்,

(1) திருவள்ளுவர்
(2) திருமூலர்
(3) வியாசர்
(4) திருநாவுக் கரசர்
(5) திருஞான சம்பந்தர்
(6) சுந்தரமூர்த்தி சுவாமிகள்
(7) மாணிக்கவாசகர், ஆகிய எழுவரும்,

'நாட்டிற் சிறந்தவ ரெல்லா நடுங்க நராதிபர்முன்
பூட்டுசிம் மாதன ராயிரத் தெண்மர்க்கும் போனவுயிர்
மீட்ட கவிச்சக்ர வர்த்திக்கிங் கோர்சங்க மேசனுக்குக்
கூட்டுவ தோவரி தையா குமார குலோத்துங்கனே'

என்னும் கவியால்,

(8) ஒட்டக் கூத்தர்
(9) முதலாம் குலோத்துங்கச் சோழன், ஆகிய இருவரும்,
(10) 'பெண்ணவாள்
அம்பொற் சிலம்பி யரவிந்தத் தாளணியுஞ்
செம்பொற் சிலம்பே சிலம்பு'



என்னும் வரிகளாற், சிலம்பி யென்னும் தாசியும்,

(11) 'முல்லாளைப் போல முகமுமக மும்மலர்ந்த
நல்லானைக் கண்டறியே நாம்'

என்பதனல் முல்லானும்,

(12) 'புல்வேளூர்ப் பூதன் புகழ்ந்துபரிந் திட்டசோ
றெல்லா வுலகும் பெறும்'

என்பதாற் பூதனும்,

(13) கோரைக் காலாழ்வானும்,
(14) சோமனும், முதலியோர்.

அன்றியும், அசதிக் கோவையால் அசதி யென்பானையும், பந்தனந்தாதியால் பந்தன் என்பானையும் பாடியதாகவும் பண்டிதர் கூறுவர்.

## VI. நூலாராய்ச்சி.

இனி, ஔவையா ரியற்றிய நூல்களைக்கூறி அவை யொவ்வொன்றையும் சுருக்கமாக ஆராய்வோம்.

முதலாம் ஔவையார் இயற்றிய நூல்களாவன:—

(1) ஆத்திசூடி—108 கட்டுரை,
(2) கொன்றைவேந்தன்—91 கட்டுரை,
(3) மூதுரை—30—வெண்பா,
(4) புறநானூற்றில்—367 வரிகள்கொண்ட 33-அகவல்,
(5) அகநானூற்றில்—61 வரிகள்கொண்ட 4-அகவல்,
(6) குறுந்தொகையில்—85 வரிக்கொண்ட 14-அகவல்,
(7) நற்றிணையில்—67 வரிக்கொண்ட 7-அகவல், முதலியன,

இரண்டா ஔவையார் இயற்றிய நூல்களாவன.—

(1) நல்வழி—40 வெண்பா,
(2) தனிப்பாடற்றிரட்டில்—70 தனிப்பாடல்கள்,
(3) ஞானக்குறள்—310 குறட்பா,
(4) பந்தனந்தாதி—100 வெண்பா,
(5) நவமணிமாலை,
(6) அசதிக் கோவை,

(7) நன்னூற் கோவை,
(8) நான்மணிக் கோவை,
(9) அருந்தமிழ் மாலை,
(10) கல்வி யொழுக்கம்,
(11) தரிசனப்பத்து,

முதலியன. ஈற்றிற் கூறிய ஏழு நூல்களும் அகப்பட்டவில்லை. இனி முதலாம் ஔவையார் இயற்றியநூல்களை ஆராய்வாம்.

## 1. ஆத்திசூடி.

இச்சிறு புத்தகம் அக்ஷரம்பயிலும் தெருப்பள்ளிக்கூடத்துப் பையன் முதல் கல்வியில் தேர்ந்த கவிராயனீறாக எல்லாராலும் போற்றப்பட்டு வருகிறது. இந்நூல், பன்னிரண்டு உயிரெழுத்துக்களையும் முதலிற்கொண்டு 12 கட்டுரைகளும், பதினெட்டு மெய்யெழுத்துக்களையும் முதலிற் கொண்டு 18 கட்டுரைகளும், க-ச-த-ந ப-ம-வ என்னும் ஏழு மெய்களின் மேலேறிய ஔகாரம் ஒழிந்த பதினொருயிர்களை முதலிற் கொண்டு 77 கட்டுரைகளும், ஆய்தம் முதலிற்கொண்டு 1 கட்டுரையும் ஆகமொத்தம் 108 கட்டுரைகளுள்ளது. இவற்றுள் மொழிக்கு முதலில் வராத எழுத்துக்கள் ஏதாவது ஒருயிரைச் சார்பாகக் கொண்டு மொழிக்கு முதலில் வரும். இவற்றுள் அடங்காத எழுத்துக்கள் அக்காலத்தில். மொழிக்கு முதலில் வராதன; வருமெனினும் மிக அரிதாகவே வரக்கூடியன. இவ்வாறு 108 கட்டுரைகளால் இந்நூல் இயற்றப்பட்டுள்ள காரணத்தால் இதனை 'அஷ்டோத்தர நீதி' யென்றும் பெரியோர் வழங்குவர். அகர முதலாகச் செய்யப்பட்டுள்ள காரணத்தால் இந்நூல் அக்ஷராப்பியாசம் செய்பவர்களுக்கும் பயன்படுமாறு விளங்குகிறது. ஆதலின் பெரும்பான்மையும் சிறுவர்களுக்கே இயற்றப்பட்ட சிறுநூலாமெனினும், தத்துவ ஒழுக்க நெறிகள் பல அடங்கியிருத்தலின் முற்றக் கற்ற முழுப்புலவர்களும் மெத்தப் புகழும் இரத்தினம் போல்வது.

இதன் கட்டுரைகள் 'சுருங்கச் சொல்லல்' 'விளங்கவைத்தல்' என்னும் இரண்டழகும் பொருந்தியன. மானிட வாழ்க்கைப் பயன்களாகிய அறம் பொருள் இன்பம் வீடு என்னும் நால்வகைப் புருஷார்த்தங்களைப்பற்றியும் இவை பேசும். 'அறஞ்செயவிரும்பு'



முதலியனி அறத்தைப்பற்றிக் கூறுவன; 'பொருடனைப் போற்றி வாழ்' முதலியன பொருளைப்பற்றிப் பேசுவன; 'மெல்லிநல்லாள் தோள்சேர்' முதலியன இன்பத்தைப்பற்றி இயம்புவன; 'வீடு பெறநில்' முதலியன மோட்சத்தைப்பற்றி மொழிவன. இவ்வளவு அரிய பெரிய நீதிகளைச் சுருங்கக் கூறுவதான இவ்வளவு சிறியநூல் வேறெப்பாஷையிலுங் காணுதலரிது. இந்த ஆத்திசூடியும் பின் வருங் கொன்றை வேந்தனும் உலகினர் யாவரும் ஒப்புக்கொள்ளக்கூடிய நீதிகள் உரைப்பன. இவை வடசொல் மணம் சிறிதும் பெறாத செந்தமிழ் நூற்களாம்.

## 2. கொன்றை வேந்தன்.

இந்நூல் முதலிலுள்ள விநாயகர்துதி நச்சினார்க்கினியம் பொருளதிகாரத்தில் எடுத்தாளப்பட்டிருக்கிறது. ஆத்திசூடியிற் கூறப்பட்டுள்ள கட்டுரைகள் பல கொன்றைவேந்தனிற் காரணத்தோடும் விளக்கப்பட்டிருக்கின்றன. உதாரணமாக :—

| ஆத்திசூடி. | கொன்றை வேந்தன். |
|---|---|
| 3. இயல்வது கரவேல் | 4. ஈயார் தேட்டைத் தீயார் கொள்வர். |
| 6. ஊக்கமது கைவிடேல் | 86. ஊக்க முடைமை யாக்கத்திற் கழகு. |
| 7. எண்ணெழுத்திகழேல் | 7. எண்ணு மெழுத்துங் கண்ணெனத்தகும். |
| 12. ஔவியம் பேசேல் | 12. ஔவியம் பேசுத லாக்கத்திற் கழிவு. |
| 19. இணக்கமறிந்திணங்கு | 48. நல்லிணக்க மல்ல தல்லற் படுத்தும். |
| 29. இளமையிற்கல் | 22. கைப்பொரு டன்னின் மெய்ப்பொருள் கல்வி. |
| 48. சூது விரும்பேல் | 31. சூதும் வாதும் வேதனை செய்யும். |
| 53. சோம்பித்திரியேல் | 36. சோம்ப ரென்பவர் தேம்பித்திரிவர். |
| 60. தெய்வமிகழேல் | 43. தெய்வஞ் சீறிற் கைதவமாளும். |
| 103. ஊருடன் கூடிவாழ் | 6. ஊருடன் பகைக்கின் வேருடன் கெடும். |

முதலியவற்றை உற்று நோக்குக.

ஆத்திசூடியைப் போலவே இதுவும் அகர முதலாக எழுத்தொழுங்கு அமைந்ததொரு நூலாம். இதன்கண், பதினெட்டு மெய்

யெழுத்துக்கள் தனியே முதலில் வரப்பெறுவனவற்றை நீக்கியும் அக்காலத்தில் அருகி வழங்கி வந்த 'கௌ' என்பதை முதலிற்கொண்ட தொன்றைக் கூட்டியும் ஆகிய 91 கட்டுரைகள் உள்ளன. பின் வரும் கட்டுரைகள் அரிய சில நீதிகளை எடுத்துரைப்பன:

'இல்லற மல்லது நல்லற மன்று.'
'தொழுதூண் சுவையி னுழுதூணினிது.'
'மருந்தே யாயினும் விருந்தோடுண்.'
'வளவனாயினு மளவறிந் தழித்துண்.'

இவை போன்ற வேறு சில பின்னர்க் கூறுவாம்.

## 3. மூதுரை.

இந்நூல் இனிய செந்தமிழ் நடையில் வெண்பாப்பாவினால் இயற்றிய ஒரு நன்னெறிப் பொக்கிஷம். 'அட்டாலும் பால்சுவையிற் குன்றா' தென்னும் இந்நூல் நாலாம்பாட்டுச் சாதாரணமாய் இலக்கண நூலாசிரியர்களாற் சவலை வெண்பாவிற்கு உதாரணமாய்க் கூறப்பட்டுவரும். நச்சினார்க்கினியத்திலும் இப்பாட்டு எடுத்தாளப்பட்டிருக்கிறது. 'அல்லாத மாந்தர்க் கறங்கூற்றம்' என்னும் மூதுரையடி சிலப்பதிகாரத்தில் இளங்கோ வடிகளால் எடுத்தாளப் பட்டமை முன்னரே கூறினோம். இவை முதலாகிய காரணங்களால் இந்நூல் சங்கத்தார் காலத்திலிருந்த முதலாம் ஔவையாராலேயே இயற்றப்பட்ட தென்பது வெளிப்படை. இவ்வாறாகவும் கால்டுவேல் தேசிகர், 'கானமயிலாடக் கண்டிருந்த வான்கோழி' யென்னும் மூதுரையடியிற் குறிக்கப்பட்ட 'வான்கோழி' யென்பது அமெரிக்காக் கண்டத்துப் பட்சி யெனவும் அது முதலில் ஐரோப்பாவிற்குக் கொண்டுவரப்பட்டுப் பின்னர் ஐரோப்பியர் இந்தியாவுக்கு வந்தபொழுது அதை உடன் கொண்டு வந்தார்கள் எனவும் சாதித்து, ஐரோப்பியர் முதன் முதல் இந்தியாவுக்கு வந்தது கி. பி. பதினைந்தாம் நூற்றாண்டின் இறுதியிலாதலால் மூதுரை கி. பி. பதினாறாம் நூற்றாண்டிற்குப் பிந்தியே இயற்றப்பட்டிருத்தல் வேண்டுமென்று கூறுவார். இவர் வரைந்த சுட்டுங்காலம் இரண்டாம் ஔவையார் காலத்தினும் மிகப் பிந்தியதாம் ஆதலானும் முன்னரே எடுக்காட்டிய வேறு பலகாரணங்களானும் வான்கோழியை உவமித்துக் கூறிய பாட்டு ஔவையார் இயற்றியதன்று பிறர் இடை யிட்ட பாட்டேயாம் என்று துணிகிறோம்.



இந்நூற்கண் எடுத்துக்காட்டிய பல நீதிகள் மனத்திற் பதியும் வண்ணம் பல அழகிய உவமைகளாற் பசுமரத்தாணி யறைந்தாற் போலும் விளக்கப்பட்டுள்ளன. ஆத்திசூடியைப் போற் கட்டுரை செறிந்த அவ்வளவு சிறியநூல் எவ்வாறு இல்லையோ, அவ்வாறே மூதுரையைப்போல் அழகிய அரிய உவமைகள் செறிந்த அவ்வளவு சிறியநூல் வேறெப் பாஷையிலும் இல்லையென்று துணிந்து கூறலாம். அன்றியும் இம்மூதுரை படிப்பதற்கினிய செந்தமிழ் நடையில் அமைந்துள்ளது. இல்வாழ்க்கைச் சிறப்பையும் கற்றறிந்தார் மாட்சியையும் ஆசிரியர் மிக அழகாகக் கூறியிருக்கிறார்—

'இல்லா ளகத்திருக்க வில்லாத தொன்றில்லை'

என்பதால் இல்வாழ்க்கைச் சிறப்புக் கூறப்பட்டது.

'மன்னனு மாசறக் கற்றோனுஞ் சீர்தூக்கின்
மன்னனிற் கற்றோன் சிறப்புடையன்—மன்னற்குத்
தன்றேச மல்லாற் சிறப்பில்லை கற்றோற்குச்
சென்றவிட மெல்லாஞ் சிறப்பு'

என்பதால் கற்றறிந்தார் மாட்சி விரிக்கப்பட்டது. இவைபோல்வன வேறு சில பின்னர்க் கூறுவாம்.

## 4. புறநானூற்றில் 33 பாடல்கள்.

இப்புறநானூறு புறப்பொருளைப் பற்றி விரிக்கும் 400 அகவற் பாக்களின் திரட்டு. இவற்றைப் பாடினோர் பலவகைக்குலத்தினர், பலவகைச் சாதியர், பல காலத்தினர், பல இடத்தினர். ஔவையாரைப்போலச் சில பெண்பாலாரும் பாடியிருக்கின்றனர். இக்காலத்தில் வழங்காத பல அரும்பதங்கள் இதிற்பிரயோகிக்கப் பட்டிருக்கின்றன. இந்நூல், கடைச்சங்கப் புலவர் பலர், கடையெழுவள்ளல்கள், சேர சோழபாண்டியர், அவர் கீழ்ச்சிற்றரசர், அமைச்சர், போர்வீரர், குடிகள் முதலாயினோர் சரித்திரத்தை விரித்துரைப்பது. உயர் வொப்பில்லாத சுத்தமான நடையுடையது; சொற்சுவை பொருட் சுவை மலிந்து கிடப்பது. அன்றியும் இந்நூல் பலவகைப் பட்ட விஷயங்களை விளக்கிக்கூறுவது. அவற்றுள், பிரமக்ஷத்திரிய வைசிய சூத்திரர் என்னும் நான்கு வருணத்தாருடைய இயல்பு இன்னவை யென்பதும், இளமை செல்வம் யாக்கை நிலைத்திரா வென்பதும், காவலர் காலஞ் செல்லப் பாவலர் பரிதவித்தலும், சுற்றம் தழுவுதலும், உழவின்

பெருமை கூறலும், நல்லினம் சேர்தலும், நன்மக்கட் பெறுதலும், மனவலி பொறுமை சாந்தம் சத்தியம் அறம் பொருள் நல்வினை தீவினை கல்வி காதல் கற்பு கைம்மைவிரதம் கடவுள் வழிபாடு ஆகிய ஒவ்வொன்ற னியல்பும் இதுவென விரித்தலும், சிலவே யாகும்; விரிக்கிற் பலவாம். பின்னும் அக்காலத்து நடைபெற்றுவந்த பல வழக்கங்களையும் இந்நூல் விவரிக்கின்றது. அவற்றுள் முதலாம் ஔவையார் எடுத்து விளக்கிய வழக்கங்களுட் சில பின்வரும்பாடல்களால் விளங்கும்:—

'அவர் தீதுமருங் கறுமா
றறம்புரி கொள்கை நான்மறை முதல்வர்
திறம்புரி பசும்புற் பரப்பினர் கிடப்பி
மறங்கந் தாக நல்லமர் வீழ்ந்த
நீள்கழன் மறவர் செல்வுழிச் செல்கென
வாள்போழ்ந் தடக்கலு முய்ந்தனர் மாதோ'

'கழற்கனி வகுத்த துணைச்சில் லோதிக்
குறுந்தொடி மகளிர்'

'களிறே, எழுஉத் தாங்கிய கதவு மலைத்தவர்
குரூஉக் களிற்றுக் குறும்பு டைத்தலிற்
பரூஉப் பிணிய தொடிகழிந் தனவே'

'நீயே, ஐயவி புகைப்பவுந் தாங்காது.'

'தூவெள் ளறுவை
தாதெரு மறுகின் மாசுண விருந்து
பலர்குறை செய்த மலர்தா ரண்ணற்கு.'

'கடியுடை வியனகர்
மலைக்கணத் தன்ன மாடஞ் சிலம்பவென்
னரிக்குரற் றடாரி யிரிய வொற்றிப்
பாடிநின்ற பன்னா ளன்றியும்.'

'இருங்களந் தோறும்
வெள்வாய்க் கழுதைப் புல்லினம் பூட்டி
வெள்ளை வரகுங் கொள்ளும் வித்தும்
வைக லுழவ.'

இனிப் பின்வரும் பாடல் காஞ்சித்தலைவன் தொண்டைமான் முன்னிலையில் முதலாம் ஔவையார் கூறியது. அது சாம பேத தான



தண்டம் என்னும் நான்குவித உபாயங்களிற் சாமோபாயத்தில் அவர் மிகத் தேர்ந்தவர் என்பதை நன்கு விளக்கும்.

* 'இவ்வே,
பீலி யணிந்து மாலை சூட்டிக்
கண்டிர ணோன்காழ் திருத்திநெய் யணிந்து
கடியுடை வியனக ரவ்வே, யவ்வே
பகைவர்க் குத்திக் கோடுநுதி சிதைந்து
கொற்றுறைக் குற்றில மாதோ வென்று
முண்டாயிற் பதங்கொடுத்
தில்லாயி னுடனுண்ணு
மில்லோ ரொக்கற் றலைவ
னண்ணலெங் கோமான் வைந்நுதி வேலே.'

இவை போல்வன சில பாடல்கள் பின்னரும் வரும்.

## 5. அகநானூற்றில் 4 பாடல்கள்.

இவ்வகநானூறு அகப்பொருளைப் பற்றிக்கூறும் 401 அகவற் பாக்களின் திரட்டு. இவற்றைப் பாடினோரும் பலவகைக் குலத்தினர், பலவகைச்சாதியர், பல காலத்தினர், பல தேயத்தினர் இந்நூல், தலைவனுந் தலைவியும் ஒருவரை யொருவர் காணுங் கால முதல் அவர் வாழ்க்கை முழுவதும் நிலைபெறுவதான இன்பத்தின் பல வகைகளை யெடுத்து விரிப்பது. அகத்தின்கண் உண்டாகும் இன்பங் காரணமாக அவ்வின்பத்தில் அழுந்தியவர்களாற் பரஸ்பரம் உரைத்துக் கொள்ளப்படுந் தன்மையால் இந்நூல் அகநானூறெனவும், ஐம்புலன்களாலும் யாவராலும் அநுபவிக்கப் படுவனவாய்ப் புறத்தே பிறராவார்க்கு உரைக்கப்படுந் தன்மையால் ஏனையது புறநானூறெனவும் பெயர் பெறும். மனம் வாக்குக் காயம் என்பவற்றிற் கதீதமாகிய வீடு ஒழிந்த மற்றைப் புருஷார்த்தங்கள் மூன்றில் அறத்தைப்பற்றியும் பொருளைப்பற்றியும் புறநானூறு விரித்துரைக்கும்; ஏனை இன்பத்தைப்பற்றி இவ்வகநானூறு விரித்துக் கூறும். சொற்சுவை பொருட்சுவைகளிலும் ஒப்புயர் வில்லாத் திப்பிய நடையிலும் இவ்விரண்டு நூல்களும் மிகவும் ஒத்திருக்கிறன

* இதன் கருத்து:-எம்மரசனுடைய கூர்மையாகிய வேல் பகைவரைக் குத்தியதனால் முனைமழுங்கிக் கொல்லன் உலைக்களத்தில் கிடப்பன; உம்முடைய வேலோ அழகாக எண்ணெ யிடப்பட்டு மாலை சூட்டப் பெற்று அரண்மனையில் விளங்கிக் கொண்டிருப்பன - என்றவாறு.

றன. இரண்டும் சங்கநூல்களா மாதலின் இக்காலத்தில் வழங்காத பல சொற்கள் இவற்றிற் காணப்படுகின்றன. அன்றியும், பேரின் பத்தைப்போலவே இத்தன்மையது என்று கூறுதற்கு அரியதும், மனமொத்த தலைவன் தலைவியர் ஒருவரையொருவர் முதற் கண்ட பொழுதே உடன் தோன்றுவதும் ஆன இன்பமே இந்நூல் விரித் துக் கூறும் விஷயம் என்று முன்னே கூறினோம். இக்காதல் முதிர் ந்தபொழுது.

'செல்லாமை யுண்டே லெனக்குரை மற்றுநின்
வல்வரவு வாழ்வார்க்குரை,

என்னும் குறளிற் கூறியவண்ணம் தலைவன் தலைவியருள் ஒருவர் பிரி ந்தால் மற்றொருவர் இறந்துபடுவர்; அதாவது சாதற்கொத்த துன் பத்தையடைவர். இக்கருத்தையடக்கியே முதலாம் ஔவையாரும்.

'யானே பலபுலந்
துண்ணு வுயக்கமோ டுயிர்செலச் சாஅயத்
தோளுந் தொலைவின தொலையாநாளும்
பிரிந்தோர் பெயர்விற் கிரங்கி
மருந்து பிறிதின்மையி னிருந்தும் வினையிலனே.'

என்று அகநானூற்றிலும் கூறியிருக்கின்றார். இதுபோலுஞ்சில பின் னர்க்கூறுவாம்.

## 6. குறுந்தொகையில் 14 பாடல்கள்.

இந்நூல் அகவற்பாக்கள் 400 கொண்டது. இவற்றைப்பாடினோ ரும் பலவகைக்குலத்தினர், பலவகைச் சாதியார், பலகாத்தினர், பல தேயத்தினர். அகநானூற்றைப்போலவே இந்நூலும் அகப்பொருள் துறைகள் பலதன்னுள் கொண்டது. என்றாலும், அகநானூறு புற நானூறு நூற்களைப்பார்க்கிலும் எளிய நடையும் தெளிவாகிய பதப் பிரயோகமும் உடையது. இந்நூலிலும் இக்காலத்தில் வழங்காத பல அரும்பதங்கள் எடுத்தாளப்பட் டிருக்கின்றன. பாடல்களின் தன்மை விளங்க முதலாம் ஔவையார் பாடிய குறுந்தொகைப் பாடல்களுள் இரண்டு பாடல்கள் இங்கே எடுத்துக்காட்டுகின்றோம்.

அவற்றுள்,

'உள்ளினெ னல்லனோ யானே யுள்ளி
நினைத்தனெ னல்லனோ பெரியதே நினைத்து



மருண்டென னல்லனோ வுலகத்துப் பண்பே
நீடிய மரத்த தோடு கொய்மலர்
சிறையிரைத் துணைச்சென் றற்றா அங்குக்
கனைப்பெருங் காம மீண்டுகடைக் கொளவே,

என்பது தலைவியைப்பிரிந்த தலைவன் நிலைமையை விளக்குகின்றது:

'கொன்றையம் பசுவீ
னம்பொற் பசக்குங் காலை
காண்போர்
கொண்மரே புல்லென் காயாப்பூ'

என்பது தலைவனைப்பிரிந்த தலைவியின் நிலைமையை விளக்குகின்றது.

## 7. நற்றிணையில் 7-பாடல்கள்.

இந்நூல் அகவற்பாக்கள் 401 கொண்டது. இவற்றைப்பாடினோ ரும் பலவகைக் குலத்தினர், பலவகைச்சாதியர், பலகாலத்தினர், பலதேயத்தினர். 'மற்ற'க் குறுந்தொகையைப் பற்றிக் கூறிய யாவும் இந்நூற்கும் நன்கு அமையும். அன்றியும் அக்காலத்தில் நடை பெற்றுவந்த சில வழக்கங்களையும் இந்நூல் எடுத்துகாட்டுகின்றது. அவற்றுள்,

'காயங் குன்றத்துக் கொன்றை போல
மாலை விடரகம் விளங்க மின்னி
மாயோ னிருந்ததேஎ நோக்கி
வியலிரு விசும்பகம் புதையப்பாஅய்ப்
பெயலொடுங்கினவே பெய்யா வானம்
நிழறிகழ் சுடர்த்தொடி ஞெகிழ வேங்கி
யழவொடுங் கினனே யாயிழை யதனெதிர்
குழ.றாங் கின்றே கோவலர்
தழங்குர லுருமின் கங்கு லானே'

என்பதையும்,

'வயல்வெள் ளாம்ப லுருவ நெறித்தழை
யைதக லல்கு லணிபெறத் தைஇ
விழவிற் செலீஇயர் வேண்டு மன்னோ'

என்பதையும் உற்று நோக்குக.

சித்தூர் - சுப்பிரமணியாசாரியர்.

## THE VALUE OF HISTORICAL STUDIES.
## சரித்திரக் கல்விப்பயன்.

தேச சரித்திரமாவது ஒரு தேசத்தில் நடந்த பிரதானமான விஷயங்களைக் கூறுவது. இந்து தேசசரித்திரத்தை யாராய்வோமாயின், இத்தேசத்தில் ஜனங்கள் குடிபுகுந்தது முதல் இக்காலம் வரையில் நேர்ந்த முக்கியமான விஷயங்களைக் காணலாம். ஆனால் இந்து தேசத்து ஆதிசரித்திரங்களை அக்காலத்து ஆசிரியர்கள் சரித்திர விதமாக எழுதிவையாமற் போனதனால், அவர்களுடைய ஆதி விருத்தாந்தங்கள் நன்கு புலப்படவில்லை. இந்தியர்க்குத் தேசசரித்திரத்தை எழுதிவைக்கும் பிரீதியே யில்லை. கடந்த விஷயங்களை எழுதுவதிற்காலத்தை வீணாக்குவதனினும், தத்துவ ஞானப் பிரகாசத்திலும், இன்னும் சிலகலைகளிலும் தங்கள் அவகாசத்தைச் செலுத்தி, ஆராய்ச்சிசெய்து பல புத்தகங்களெழுதி யிருக்கிறார்கள். ஆங்கிலர்க்கோ தேசசரித்திரத்தை எழுதிவைப்பதில் இயற்கையாகவே பிரீதியுண்டென்பது அவர்களெழுதி வைத்திருக்கும் புத்தகங்களால் வெளிப்படும்.

ஒரு தேசசரித்திரத்தைப் படிப்பதனால் அத்தேசத்தார் அத்தேசத்தை யடைந்தது முதல் இக்காலம் வரையில் அவர்களுக் குண்டான அபிவிர்த்தி கேடு முதலியவற்றை யறிவோம். ஆங்கிலர் ஆதியில் இங்கிலாந்திற் குடிபுகுந்தபோது அவர்கள் இன்ன நிலைமையிலிருந்தார்களென்பதும், இப்போது இன்ன நிலைமையிலிருக்கிறார்க ளென்பதும் தெரிகின்றன. இவ்விரண்டு நிலைமைகளுக்கு மிருக்கும் வித்தியாசமோ பெரிதாகையால், ஆதிகாலத்து ஆங்கிலரே யிக்காலத்து ஆங்கிலரென்று சொன்னால், சரித்திரப் பயிற்சில்லாதவர் நம்பார். ஆனால் இடையே இருக்கும் சரித்திரத்தைப் படித்து, அவர்கள் படிப்படியாக மேன்மேலும் விருத்தியடைந்த விதங்களைக் கண்ணுறுவோமே யாகிற் பழைய ஆங்கிலரே, இக்காலத்தவரென்று நம்புவதற்கு ஐயமிராது. அக்காலத்து ஆங்கிலரே இக்காலத்து ஆங்கில ரென்று கூறினதனால், அக்காலத்து ஆங்கிலரே இதுவரையில் ஜீவித்திருந்து இக்காலத்து ஆங்கிலராக இருக்கிறார்களென்று கூறியதன்று; மற்று, இக்காலத்து ஆங்கிலர் முன்காலத்தவர் சந்ததியா ரென்றவாறே.

எல்லா மன்னர்களுக்கும் சரித்திரப் பயிற்சி இன்றி யமையாதது. பல தேசங்களின் சரித்திரங்களைக் கற்று, 'எக்காரணங்களால் விருத்தியடைந்தார்? எக்காரணங்களால் விருத்தியடையாமற் போனார்? நானாவிதப் பகைவரிடம் எப்படி நடந்து கொள்வது? தேசத்தை எப்படி ஆள்வது? என்பனவாகிய பல விஷயங்களையுந் தெரிந்து கொள்வார்கள்.

இனி, மகான்கள் சிலர் சரித்திரங்களைப்படிப்பதனால் நமக்கெய்தும்பயன்கள் பல. எவ்வளவோ கஷ்டநஷ்டங்களை யனுபவித்துக்கொண்டு மேன்மை



யடைந்திருக்கிறார்கள். கஷ்டங்களுக்குப் பின்னிடையாது மனோ தைரியத்தோடு இடையூறுகளை யெல்லாம் கடந்து உன்னத ஸ்தானத்தை யடைந்திருக்கிறார்கள். இளமைப் பருவத்தில் அதிக புத்தியீனர்களா யிருந்தவர்கள் முதுமைப் பருவத்தில் அதிக புத்திசாலிகளானார்கள். இளமையில் அதிக புத்திக் கூர்மையாயிருந்தவர்கள் முதுமையில் அதிக மூடர்களானார்கள். மன்னர் உலகத்தில் எவ்விதமாக ஒழுகுகிறார்கள்? உலகத்தார் தம்மை விரும்பும்படி எப்படி நடந்துவந்தார்? சுற்றத்தார், சிநேகிதர் விஷயத்தில் எவ்விதமாக ஒழுகினார்? இத்தகைய பலவிஷயங்களையுங் கற்றுக்கொள்வோம். இன்ப துன்பங்களெல்லாம் இவ்வுலகத்திலேயே யனுபவிக்க வேண்டும். நன்மை செய்தால் நன்மையும், தீமைசெய்தால் தீமையும் இவ்வுலகத்திலேயே உண்டாகும். இவ்வுலகமே மோக்ஷலோக மென்றும், நரகலோக மென்றும் புலப்படும். யோக்கியர்க்கு இவ்வுலகமே மோக்ஷலோகம்; அயோக்கியர்க்கு இதே நரகம்.

ஆகவே சரித்திரக் கல்விப்பயன் மிகவும் மக்கட்கு இன்றியமையாததென்பதுணர்ந்து கற்றறிவுடைய இந்தியராவார் யாவரும் தேச சரித்திர வாராய்ச்சிகளில் தலைநின்றுழைத்து மெய்கண்டு சாமானிய சனங்களையும் அறிவுறுத்துவாராக.

வி. ஆர். சுவாமிநாத முதலியார்.

---

## CLASSICAL TAMIL CULTURE.
## செந்தமிழ்க்கல்வி.

[சம்புடம் V, 266-ஆம்பக்கத் தொடர்ச்சி.]

இனி இன்பமாக; ஒருகாலத் தொருபொருளால் ஐம்புலனுகர்தற் சிறப்புடையத்தாய காமவின்பம். இவ்வின்பம் மேற்கூறிய பொருளைத்துணைக்காரணமாகவுடைத்தாய் இம்மையே பயன்படற்பாலது. ஒத்தவன்பால் ஒருவனுமொருத்தியுங் கூடுகின்றகாலத்துப் பிறந்தவிவ்வின்பம் அக்கூட்டத்தின்பின்னர் ஒருவருக்கொருவர் நாம் ஈண்டனுபவித்தது இவ்வாறிருந்ததெனப் புலப்படக் கூறப்படாததாய் யாண்டும் உள்ளத்துணர்ச்சியின் நுகர்வாவதோர் பொருளாமாகலின் அகமெனப்படும். ஏனைய ஒத்தவன்புடையரர் தாமேயன்றி எல்லாரானும் அனுபவித்துணரப்படுதலானும், இவை இவ்வாறிருந்தன வெனப்பிறர்க்குக் கூறப்படுவதானும் புறமெனப்படும்.

இத்தகைய காமவின்பம் புணர்ச்சி பிரிவெனுமிருவகைய. ஏனை இருத்தல் இரங்கல் ஊடலென்பன பிரிவின்க ணடங்குமென்க. இன்னும் புணர்ச்சியைக் களவென்றும், பிரிவைக் கற்பென்றும் பெரும்பான்மையில் வழங்குப.

இவற்றுட் களவாவது பிணி மூப்பிறப்புக்களின்றி எஞ்ஞான்று மொருதன்மை
யராய் உரு திரு பருவமுதலியவற்றாற் றம்முளொப்புமை யுடையராய்த் தலை
மகனுந் தலைமகளும் கொடுப்பாரும் அடுப்பாருமின்றித் தாமே எதிர்ப்பட்டுப்
புணர்வது. கற்பாவது கற்பிப்பது, கொண்டானிற் சிறந்ததெய்வ மின்றெனவும்,
அவனை இன்னவாறே வழிபடுகவெனவும் இருமுதுகுரவரும் அந்தணர் சான்
றோர்முதலிய ரிடத்திவ்வாறொழுகுகவெனத் தலைமகனுந் தலைமகட்குக்கற்பித்த
லாற் கற்பாயிற்று. கற்புவேறுமுண்டு. விரிவு தொல்காப்பியப் பொருளதி
காரம் இறையனாரகப்பொருள் முதலியவற்றானறிக.

இனி வீடென்பது விடுதல்; அதாவது தோற்றமுடையனயாவும் நிலையு
தலிலவாந்தன்மையவாகலின் அவற்றினிலையாமை கண்டு புறமாகிய செல்வத்
தின்கண்ணும், அகமாகிய யாக்கையின் கண்ணுமுளதாகிய பற்றினை விடுத
லானே இப்பற்றிற் கேதுவாய் நின்று பந்தித்துள்ள மலப்பற்றினையும் திரு
வருட் சாதன நெறியான் அறவிடுவது. வீடென்பது விடுதலெனவே பந்த
மும் பந்தப்பட்டவனும் முன்னர்த்துணியப்படும். பந்தஞ் சடமாகலின் தானே
விலகாதாகலானும், பந்தப்பட்டோன் சுதந்தரமிலியாகலின் தானே விலக்கிக்
கொள்ளானாகலானும், பந்தத்தை நிவர்த்திப்பானொரு கர்த்தாவுண்டென்றும்
அக்கர்த்தாதானும் பந்தமுடையவனேயாயின் அப்பந்தத்தை விடுவிக்கவல்லனா
காணாகலின் அனாதியே பந்தத்தினின்று விடுபட்டவனும் தற்சுதந்தரமுடைய
வனுமேயாக வேண்டுமென்றும் பின்னர்த் துணியப்படும். படவேபந்தித்த
தாகிய பாசமும், பந்திக்கப்பட்டோனாகிய பசுவும், பந்தத்தைநிவர்த்திப்போனா
கிய பதியும் எனமுப்பொருள் நிச்சயமாக வுண்டென்றேற்படும். இவற்றை
விபரீத ஐயங்களற்ற ஞானசாத்திரங்களானே தேர்ந்து அவாவற்றுக் களிப்புக்
கவற்சிகளும், பிறப்புப்பிணி மூப்பிறப்புக்களும் முதலாயினவின்றி நிரதிசய
வின்பத்ததாய் நிற்பதே யவ்விடுதலையின் பயனுமென்று தெளிக. விரிவு ஞான
நூல்களானுணர்ந்து கொள்க.

இங்ஙனம் விளங்கெடுத்துக்கூறும் நீர்மையவான புருடார்த்தங்களுள்
ளும்மையி னெய்தற்பாலவாகிய அறம் பொருளின்பமும், மறுமையினெய்தற்
பாலதாகிய வீடும் தருமாற்றலுடையது கல்வியேயாம். இக்கருத்தா[illegible]
ரகுருபரஸ்வாமிகள் "அறம்பொருளின்பமும் வீடும்பயக்கும்" என நீதிநெறி
விளக்கத்துட் கூறியருளினர். "கல்விற் பிறக்குங் கதிர்மணி காதலி, சொல்லிற்
பிறக்கு முயரமுத மெல்லென், றருளிற் பிறக்கு மறனெறி யெல்லாம், பொரு
ளிற்பிறந்துவிடும்" என ஆன்றோர் கூறுபவாகலின் செல்வமே யாதுந்தருமாற்
றலுடையது. அங்ஙனமாகக் கல்வியே யாதுந் தருமென்ற திழுக்காம்பிறவெ
னின்: செல்வத்தின் விசேடங்கூறுவார் அச்செல்வம் இவ்வுலகின்பிற்கு நேரே
சாதனமாதல் குறித்து அங்ஙனம் வியந்ததல்லது கல்வியினும் அதுவேபல்லா
ற்றானும் சிறந்த தென்பதுபட எடுத்தோதிய தன்றாகலின் அதுசரதமாதல்



சாலாதென்க. "அருளிலார்க் கவ்வுலகமில்லை பொருளிலார்க், கிவ்வுலக
மில்லாகியாங்கு" என்னும் தமிழ்வேதயாப்பும் இதனையாப்புறுத்தும்.

கல்வியாகிய தன்னையடைதற்குப் பொருளே காரணமாமாகலான் கல்வி
யினும் பொருளே சிறப்புடைத்தெனச் சிலர்கூறுவர். அது பொருந்துமாறின்று.
மிகச்செல்வ முடையார் மாட்டுங் கல்வியின்மையானும் அஃதில்லாத வறியர்
மாட்டுக்கல்வியுண்மையானும் உடன்பாட்டினும் எதிர்மறையினும் காரணமுள்
வழிக்காரியாந் தோற்றாமையானும் காரண மிவ்வழிக்காரியந் தோற்றுதலானும்
நியதி தவறுமாகலினென்க. காரணமாகிய செல்வமுள்ள போதுகாரியமாகிய
கல்வியுண்டாதலும் காரணமாகிய செல்வமில்லாத போதுகாரியமாகிய கல்வி
யுண்டாகாமையு முளவாயினன்றே கல்விக்குச் செல்வங்காரணமா மென்பது
நிலையுமென்றொழிக. கல்வியுளார்மாட்டுச் செல்வமுண்டாதலானும், கல்வி
யிலார் மாட்டுப் (பெரும்பான்மையுஞ்) செல்வமுண்டாகாமையானுங் கல்வி
செல்வத்திற்குக் காரணமாமென்பது தேற்றமாம். அவ்வாறாயிற் கல்வியாகிய
காரணமுள் வழிச்செல்வமாகிய காரியமின்மையாற் செல்வத்திற்குக் காரணம்
கல்வியின்மை பெறப்படுமாலோ வெனின்:-குடத்துக்குக் காரணமாகிய மண்
ணிருக்கு மீண்டுக்குட மின்மையின் மண்குடத்துக்குக் காரணமன்றென்னாது
பிறகாரணங்களின்மையாற் குடமுண்டாயிற்றன்றறிந்தோர் கூறுவரன்றே.
அஃதொப்பக் கல்வியாகிய காரணமிருந்துஞ் செல்வமாகிய காரிய முண்டாகாத
தற்குக் காரணம் ஊழ் முதலிய பிறகாரணங்களின்மையே யாமாகலின் செல்
வத்திற்குக் காரணம் கல்வியன்றாதல் யாண்டையது?

கல்விக்குக் காரணம் செல்வமே, பசிமுதலிய தீங்குகளின்றிக் கல்விகற்
றற்கேதுவா மாகலின், என்று கூறுவாரைக் கௌதமனாதிய முனிபுங்கவர்
கல்வியில் வல்லுநராயின தற்குச் செல்வந்தான் காரணமாயிற்றோ? எனக்க
டாவிவிடுக்க. கல்வியே செல்வத்திற்குக் காரணமா மென்பதைக் "கொங்கு
தேர் வாழ்க்கை" என்னுஞ் செய்யுளாற் பாண்டியன் பாங்கர்ப் பொற்கிழி
பெற்ற தருமிமாட்டும், "மதிமலி புரிசை" என்னுஞ் செய்யுளாற் சேரலன்
மாட்டு நிதிக்குவை பெற்ற பாணபத்திரன் மாட்டும் "வாசிதீரவே" எனப்பதி
கமோதி வட்டமின்றிக்காசு மாற்றிய திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார் மாட்
டும், போசராஜனிடத்தில் ஒவ்வோர் சுலோகத்தைக்கூறி அக்ஷரத்திற் கில
டும் பொன் பெற்ற காளிதாசன் மாட்டும், குலோத்துங்கச் சோழன்முடியே
தனதடிக்கணியாக வணிந்த ஒட்டக்கூத்தன் முதலியோர் மாட்டு மறிக. இனி
இக்காலத்தும் கல்விகற்ற அநேகர் உத்தியோகம் புரிதலானும் வித்தியாசாலைக
ளிற் கல்விகற்பித்தலானும் பிறவாற்றானும் பெருந்தொகைப் பணங்களை ஈட்
டிக்கல்வி செல்வங்களி னுயர்வுடையராதலும் பிரத்தியக்கமாதல் கண்டுணர்
ந்துகொள்க.

இன்னும் கல்வியில்லாதாரிடத்துப் பூர்வபுண்ணியவயத்தாற் செல்வ
முண்டாயினும் அது மிகவும் தன்னையுடையார்க்குப் பெருங்கேட்டை. வினைத்

தற்கேது வாவதல்லது நன்மைவிளைத்தற் கேதுவன்றும். இதனானன்றே
தெய்வப்புலமைத் திருவள்ளுவனார் "நல்லார்கட் பட்ட வறுமையி னின்னாதே
கல்லார்கட் பட்ட திரு" எனவருளியதூஉ மென்பது. ஊழ்வயத்தாற் செல்
வம் வந்துறுமேனும் அதுகண்டு அச்செல்வமாதியவற்றிற் கேதுவாகிய கல்வி
கற்க-வேண்டுமென்பதே மூதறிவாளர்துணிபு. இது "கைப்பெருள் கொடுத்
தும் கற்றல் கற்றபின் கண்ணு மாகு,மெய்ப்பொருள் விளக்கு நெஞ்சின் மெலி
விற்கோர் துணையுமாகும், பொய்ப்பொருள் பிறகள் பொன்னும் புகழுமாந்து
ணைவி யாக்கும்" என்னும் சிந்தாமணிமுதலிய பேரிலக்கியங்களானுய்ந்தறிக.

இத்தகையவாம் கல்வி கற்கையானே அறியாமை சிறுக அறிவுவளரும்,
வளரவே, அவ்வறிவுகாரணமாக நன்மைதீமைகளை ஆய்ந்துணர்ந்து தீநெறி
விலக்கி நன்னெறியாதலுளதாம். அஃதுளதாகவே அதனான் இம்மைமறு
மை இன்பங்களும், மெய்ப்பொருட்காட்சியானே வீடுபேறும் சித்திக்குமாகலின்
நன்மாந்தர்க்குக் கல்வியே இன்றியமையாத தென்பது. முழுமுதற் கடவுளா
கிய சிவபெருமானும் அத்தகைக்கற்றவர் நெஞ்சிடத்தேயே சாந்நித்தியராக
விளங்குவரென்ப. இதற்குக் "கற்றவர்விழுங்குங்கற்பகக்கனியை" எனவும்,
"கல்லாநெஞ்சி, னில்லானீசன்" எனவும், "கல்லாதார்காண்டற் கரியான்ற
ன்னை" எனவும் உடன்பாட்டினும் எதிர்மறையினும் வரும் திருமுறைத்தி
ருவருட்பாக்களே போதிய சான்றாம்.

(இன்னும் வரும்.)

வி. கே. தில்லைநாயகமுதலியார்.

---

## SOUTH INDIAN HISTORY.
## தென்னிந்திய சரிதம்.

---

[சம்புடம் V, 145 ஆம் பக்கத்தொடர்ச்சி.]

### இரண்டாம் பகுதி (1310 முதல் 1678-வரை.)

1306-ஆம் வருஷத்தில் அலாவுத்தீன் என்னுமொரு மகமதியன் டில்லி
யிற் சக்கிரவர்த்தியாயிருந்தனன். அவனுக்குத் தேவகிரி அரசன் மூவாண்
டுகளாக இறைகொடுக்கவில்லை. அலாவுத்தீன் தான் மேன்மைப்படுத்திய
அடிமையாகிய மாலிக்காபர் என்பவன்கீழ் ஒருலட்சங் குதிரைப்படைவீரரை
அவனை வெல்லும் பொருட்டு அனுப்பினான். மாலிக்காபர் தென்னிந்தியா
சென்று அவ்வியாதவராஜனை அடித்து இறை கொண்டான் ; 1309-இல் மறு
படியுஞ் சென்று வேரூர் சிற்றரசை யடக்கினான் ; 1308-இல் தான் தலைவ
னாக நின்று ஆயசால வல்லாளரை எதிர்த்தான்; மகமதியர் சயித்தனர்; துவா
ரசமுத்திரத்தைப்பிடித்தனர். அந்நாட்டுப் பெயர்போன கோயிலைக் கொள்ளை



யடித்தனர், ஆயசால வல்லாளரை வன்மை குறைத்தனர். வல்லாளவரசன்
சிறைப்பட்டான். ஆனாற் சின்னாளிற் றன்னாட்டைப் பெற்றுப் பெயர் மாத்தி
ரையி லதனரசனாக ஆண்டுவந்தான். அவன்போ லவன் பின்னோரும் ஆண்ட
னர்.

வல்லாளரைச் சயித்தபின் மகமதியர் பாண்டிய சோழரை வென்றனர்.
மகமதிய சேனை சென்று சில்லாண்டுகட்குத் தென்னிந்தியாவில் அரசாட்சி
யில்லை. இவ்வாறு போர் புரியும்பொழுது இந்திய வரசர் பலர் ஒருங்குசேர்
ந்து ஒரு பெருமகமதிய சேனையை வென்றனர். இது மகமதியர் வெற்றிக்
கோரிடையூறாயிற்று. மேலும் 1347-இல் தௌலபாத்திலிருந்த இராசப் பிரதி
நிதியாகிய அலாவுத்தீன்ஹாஸன் என்பான் கலகஞ்செய்து தென்னிந்தியா
விற் சுவாதீனமுள்ள பாமினி ராஜ்யத்தை நிலைநிறுத்தினான். இது மகமதி
யருக்கு மிகத்துன்பம் விளைந்தது. அதான்றியும் அதே காலத்தில் ஆயசால
வல்லாளரும் பிறருமாண்ட இடங்களில் விஜயநகர ராஜ்யமுண்டாயிற்று.
அது விரைவினில் வளர்ந்து அதுகாறுந் தென்னிந்தியா வறியாததோர் வன்
மையுற்றது. சோனாட்டைத்துருக்கர் 1347 வரையிற்றான் ஆண்டனர். பின்
னர் அவரைத் துரத்திவிட்டுச் சுதேசவரசர் சிலராண்டனர். 1396-இல் விஜய
நகரத்தரசர் சோனாட்டைப் பிடித்துக்கொண்டனர். அதற்கு முன்னரே
1372-இல் அவர் பாண்டியநாட்டைப் பிடித்தனர் போலும்.

பதினைந்தாம் நூற்றாண்டின் இறுதியில் மைசூர் திருவாங்கூர் முதலிய
சிறு நாடுகளிருந்தாலும் விஜயநகர ராஜ்யமே மேன்மைத்தென யாவரும் ஒப்
புக்கொண்டனர். அப்பொழுது பாமினிராஜ்யம் ஐந்து பிரிவுகளாயிற்று. அவை
தம்முள் நடந்த போரினால் விஜயநகரத்தின் வன்மை பெருகிற்று. ஆயினும்
1564-இல் மகமதிய வரசர்களனைவரு மொருங்கு சேர்ந்து விஜயநகரத்தைத்
தலைக்கோட்டையிற் செவ்வையாகத் தோற்கடித்தனர், நகரத்தைக் கொள்ளை
யடித்தனர். கிருஷ்ணாநதியின் வடக்கிலிருந்த இந்து ராச்சியங்கள் அவர்பாலவா
யின. தமக்குளிருந்த பொறாமை யாலும் தென்றேயத்தி ராசாபிமானத்தாலும்
வெற்றி பெற்றவர் நாட்டை உடனே பிரித்துக்கொள்ளவில்லை. ஆனால் அடு
த்த நூற்றாண்டில் விஜயநகர ராஜ்யம் கூறுபடத் தொடங்கிற்று. 1657-இல்
விஜயநகரத் தரசருக்கும் மதுரை நாயக்கருக்கும் போர் மூண்டது. கோல
கொண்டா பீஜபுரமாகிய நாட்டரசர் தலையிட்டனர். இவ்வாறு பிறரெதிர்
த்ததன் முக்கிய பயன்கள் 1674-இல் தஞ்சையில் ஏகோஜி என்பவன் ஒரு
மகாராஷ்டிர வம்சத்தை நிலைநிறுத்தியதும் 1676-இற் சிவாஜி கர்னாடகத்
தின் மேற் படையெடுத்துச் சென்றதுமேயாம்.

1347-ஆம் வருஷம் உண்டான பாமினி ராஜ்யம் 250 வருஷம் நிலைநின்
றது. அதன் அரசர் முதலிற் குல்பர்க்காவிலும் பின்னர்ப் பீதாரிலும் ஆண்
டனர். முதற்பத்தரசர் காலத்தில் விஜயநகர ராஜ்யத்தோடு வெகு போர்

கள் நடந்தன. அவையே அக்காலத்து முக்கிய விஷயங்கள். பன்னிரண்டாவதரசன் நிஜாம்ஷா என்பவன். அவன் தன்னாட்டின் மேற்படையெடுத்துவந்த ஒரிஸா, தெலிங்காணம், மாளவம் ஆகிய தேசத்தரசரை நன்றாக எதிர்த்து வெற்றி பெற்றனன். அவனுக்குப்பின் 1463-இல் மகமதுஷா இரண்டாவன் பட்டத்துக்கு வந்தான். அப்பொழுது அவனுக்கு வயது ஒன்பது. அவன் 1468-இல் மகமதுகவான் என்னும் பெயர்போன அமைச்சனைத் தனக்கு முக்கிய மந்திரியாக வைத்துக்கொண்டான்; 1469 இற்கோங்கணத்தை விஜய நகரத்தினின்று கைப்பற்றிக்கொண்டான்; 1481-இல் தெலிங்காணத்தின்மேற் படை யெடுத்துச்சென்று கோண்டனபள்ளியையும் இராஜமகேந்திரபுரத்தையும் பிடித்துக்கொண்டான்; 6 வருஷத்திற்குப்பின் மறுபடியும் ஒரிஸாவின்மேற் படையெடுத்துச் சென்றான்; அப்பொழுது போகிற போக்கிற் காஞ்சீபுரத்துக்குச் சென்றான்; அங்கந் நகரத்தைக் கொள்ளையடித்து மிகப்பொருளீட்டினான்; 1481-இல் இராஜத்துரோகியென்றெண்ணி மகமதுகவானைக்கொன்றான்.

நாடு நிலைகுலையத் தொடங்கியது. மகமதுஷா இறந்தபிறகேயாயினும் அது சீர்குறைந்தது கவானிறந்தது முதலே யென்னலாம். மகமதுஷா இரண்டாவனுக்குப்பின் 1482-இல் மகமதிரண்டாவனரசனானான்; அவனுக்கமைச்சன் நிஜாமுல்முல்க்பாவு என்பவன். சில வருஷங்களுள் அவ்வமைச்சன் கொலையுண்டான். இதனால் அவன் மகன் ஆமது நிஜாம்ஷா 1490-இல் சுவாதீனமடைந்தான். பேரார் தேசாதிபதி முன்னரே கலகஞ்செய்து எல்லேசபுரத்தில் இமாதுஷாஹி வம்சத்தாரை நிலைநிறுத்தினான். 1489-இல் பீஜபுரத்தில் யூஸுப் அடில்ஷா என்பவன் வேறோரிராச்சிய முண்டாக்கினான். 1504-இல் தன்தகப்பன் செத்தபின் அமீர்பாரிது மகமதுக்கு மந்திரியாய் அவனிடம்மிக்க செல்வாக்குடையவனானான். 1512-இல் தெலிங்காண தேசாதிபதி கோல குண்டாவில் ஒருபுதிய இராச்சியத்தை உண்டாக்கினான். மகமது இறந்த பின் அமீர் வரிசையாக நால்வரை யரசராக்கினான். அவருளிருவர் கொலையுண்டார்; ஒருவன் கொலைக்கஞ்சி ஓடினான். அமீர்தன் போவிக்கீழ்ப்படிவைத்துறந்து பீதாரிற் பரீதுஷாஹி வம்சத்தை நிலைநிறுத்தினான். இவற்றைப்பற்றித் தனித்தனி யெடுத்துச் சொல்லப் புகுந்தால் மிகவும் விரியுமாதலின் இரண்டு விஷயங்கள் மட்டிற்கூறுகின்றோம். இவ்விராச்சியங்களிற் கடைசியிற் பீதாரைப் பீஜபுர ராஜ்யமும் ஆமது நகரத்தை எல்லேச புரராஜ்யமுங் கவர்ந்து கொண்டன.

பின்னர்ப் பீஜபுர கோலகொண்டர் வம்சத்தார் கர்நாடகத்தி லதிகாரமடைந்தனர். ஆதலினவரைப் பற்றிச் சிறிது கூறுவோம். தலைக்கோட்டையில் விஜயநகரத்தரசனைத் தோற்கடித்த பின்னர்ப் பீஜபுரம் கோலகொண்டா பீதார் ஆமதுநகரம் ஆகிய தேசத்தரசர் கிருஷ்ணா நதிக்கும் கோதாவரி நதிக்



கும் நடுவிலிருந்த நாட்டைத் தமக்குட் பிரித்துக்கொண்டு செஞ்சி, தஞ்சை, மதுரையாகிய தென்பாகங்களில் அவ்விந்திய வரசன் பெயர்மாத்திரையிலாளும்படி செய்தனர். ஏதோ ஒரெழுபது வருஷங்களுக்குள் மதுரை நாயக்கன் விஜயநகரத் தரசனோடு கலகஞ் செய்தான். அவ்வரசன் அவனுடன் போர் செய்ய முயலவே அவன் கோலகுண்டா வரசனுதவியைக் கேட்டுப் பெற்றான். நாட்டைக் கொள்ளை யடித்தபின்னர் மகமதியர் துரத்தப்பட்டனர். ஆனால் மிக்க சேனையோடு மறுபடியும் வந்து விஜய நகரத்தரசனை மைசூரிற் போயொளியும்படி செய்தனர். கோலகுண்டா சேனை இன்னுந் தெற்கே செல்லத் தஞ்சைத் தேசாதிபதி அவருக்குக் கீழ்ப்பட்டான். ஆனால் மதுரை நாயக்கன் பீஜபுரத்தரசனை உதவிகேட்டான். அவ்வரசன் அவனுதவிக்காக ஒருபெருங் குதிரைச் சேனையை யனுப்பினான். அப்பொழுது கோலகுண்டாசேனை செஞ்சியை முற்றுகை போட்டுக்கொண்டிருந்தது. ஆனால் இருமகமதியசேனைகளுந் தமக்குள் உடன்படப் பீஜபுரத்துச்சேனை கோட்டையைப் பிடிக்கும்படி விட்டுவிட்டுக் கோலகுண்டா சேனை சுற்றியிருந்த நாட்டைக் கொண்டது.

1646-இல் பீஜபுரத்தரசன் இன்னொரு முறை படையெடுத்துச் சென்று செஞ்சி வேலூர்க் கோட்டைகளையுஞ் சந்திர கிரிக்குத் தென்கிழக்கிலிருந்த நாட்டையும் பிடித்தான். செங்கற் பட்டையும் சென்னையைச் சுற்றிய வடநாட்டையுங் கோலகுண்டா சேர்த்துக்கொண்டது. 1659-இல் மதுரை நாயக்கன் மறுபடியுங் கலகஞ் செய்யத் தொடங்கினான். பீஜபுரத்தரசன் மறுபடியுஞ் சென்று செஞ்சியையுந் தஞ்சையையும் 3-வருஷம் பிடித்துக்கொண்டான். பீஜபுர கோலகுண்டா வரசர் இதன்மே லெவரையும் எதிர்த்ததாகத் தோன்றவில்லை. 1686, 87-ல் மொகலாய சக்கிரவர்த்தியாய அவுரங்கசீபு இவர் வம்சங்களைத் தொலைத்தான்.

விஜயநகர ராஜ்யத்தின் பூர்விக சரித்திரம் நன்றாகத் தெரியவில்லை. நமக்குத்தெரிந்த முதலரசர் மகதநாட்டு யாதவ அரசரைச் சேர்ந்தவராம். உண்மைச் சரிதத்தில் முதலிற் கூறியிருக்கும் அரசன் நந்தன் என்பவன். இவன் 1084-இல் ஆண்டான். நந்தபுரம், வாரங்கல் ஆகிய நகரங்களை உண்டாக்கினான். விஜயநகரத்திற்கு இப்பொழுது ஹம்பியென்பது பெயர்; அதுபெல்லாரி ஜில்லர்வில் துங்கபத்திரையின் தென்கரையிலிருக்கிறது. அஃது 1888-இல் மகமது டோக்ளாக் நாளில் தலைப்பட்டது. மகமதியர் வாரங்கலை 1323-இல் அழித்த பின் அதனினின்றோடியவர் இதனை உண்டாக்கியதாகச்சிலர் கூறுகின்றனர். சிலர் கர்நாடகத்து வல்லாளதேவனுண்டாக்கியதாகக் கூறுகின்றனர். 1380-இல் ஹரிஹர னிரண்டாவனென்னுமோ ரரசன் மகமதியரைக் கோவாவிலிருந்து துரத்தித் தன்மந்திரிகளு ளொருவனை அந்நாட்டையாளச் சொன்னான். 1490-இல் இவ்வம்சம் அற்றபின் வேறொரு வல்லமையுள்ள

வம்சம் வந்தது. அஃது அதில் முதல்வனுன நரசிம்மன் என்பவன் பெயர் கொண்டது. இந்நரசிம்மன் திராவிட நாட்டிலும் அதிகாரஞ் செலுத்தினன் போலும்.

இவனுக்குப் பின்வந்தவர்களுள் (1509 - 1580) கிருஷ்ண தேவராஜன் அவ்வம்சத்தாரில் மிக உயர்ந்தவன். அவன் தன்னுட்டை மிகப்பெரிதாக்கினன். அவன் முதன் முதலிற் காஞ்சீபுரத்தைச் சுற்றிய நாட்டைச் சீர் செய்தான்: பின்னர்ச் சிவசமுத்திரக் கோட்டையையும் சீரங்க பட்டணத்தையும் உம்மத்தூர்க் கங்கராஜனென்னும் மைசூரரனிடமிருந்து கவர்ந்து கொண்டான்: 1513-இல் உதயகிரிக் கோட்டையையும் அதனைச் சார்ந்தனவற்றையும் பிடித்தான்; 1515-இற் கொண்டவீடு என்றதோர் மலைக்கோட்டையை ஒரு கஜபதியரசனிட மிருந்து பிடுங்கிக்கொண்டான்; பெஜவாடாவையுங் கொண்டபள்ளியையும் அழித்தான் : இவைபோல்வன இன்னும் பல இடங்கள் கிருஷ்ணைவுக்கும் நெல்லூருக்கும் நடுவிலிருந்தனவற்றைச்சயித்தான். சந்திரகிரி வேலூர்க் கோட்டைகளைக் கட்டினவன் அவனேயாம். அவனுண்ட நாடு ஏறக்குறைய இற்றைநாட் சென்னை யிராசதானியே. விஜயநகரராஜ்யத்து முக்கியத் தலைவர்க்கு நாயக்கரென்று பெயர். மதுரையில் 1404-முதல் 1451-வரையில் லக்கண நாயக்கன் மத்தண நாயக்கன் என்று பெயர் கொண்ட இருவராண்டதனுல் நரசிம்மன் பட்டத்துக்கு வருமுன்னரே விஜயநகரத் தரசருக்குத் தென்பாகங்களி லெல்லாம் அதிகார முண்டென்பது போதரும்.

இந்நாயகருக்குப்பின் பழைய பாண்டியரைச்சேர்ந்தவர் நால்வராண்டனர். 1499-இல் வேருெரு வம்சத்து நாயக்கர் வந்தார். அஃதும் அற, 1558-இல் இன்னுெரு வம்சத்து நாயக்கர் வந்தார். இவர் 1736 வரையில் இருந்தனர். 1665 வரையில் நால்வராண்டனர். இதினின்று கிருஷ்ணதேவராஜன் தென்பாகங்களில் வேறு இராஜப் பிரதிநிதிகளையும் நியமித்ததாகத் தோன்றுகிறது. அவனுக்குப் பின் வந்த அச்சுதன் 1533 - இல் திருநெல்வேலியைக் கொண்டான்.

அவனுக்குப்பின் 1542-இல் அவன் குழந்தை சதாசிவன் பட்டத்துக்கு வந்தான். ஆனுல் அவனமைச்சர் அவனை யாண்டதனுல் அவன் நாட்டையாண்டதாகக் கூறுதல் தகாது. 1565-இல் இராமராஜன் என்னும் மந்திரி இராஜாதிகாரத்தைக் கவர்ந்து கொண்டிருந்தான். அப்பொழுதுதான் மகமதிய அரசர் ஒருங்கு சேர்ந்து தலைக்கோட்டையில் விஜயநகரத்தை முதுகிறப் புடைத்தது. மகமதியர் சண்டை முடிந்தபின் இராமராசனைக் கண்ணின்றிக் கொன்று அவன் தலையை நெய்யிற்றேய்த்து வன்னம்பூசி ஓராண்டு தம் வெற்றிக் கறிகுறியாகப் பீஜபுரத்தில் வைத்திருந்தார். மேலுல் விஜயநகரத்தைக் கொள்ளையடித்து ஆண்டுள்ள ஆடவர்க்கும் பெண்டிர்க்குந் தாமிழைக்கக்கூடிய தீங்குகளனைத்தையு மிழைத்த பின்னர் இந்நுராஜ்யம் முழுவதையுந் தந்நாட்டோ டிணைத்துக்கொண்டார்.



சதாசிவனேடு நரசிம்ம வம்சமற்றது. அதுமுதல் நாடு இராமராசன் வம்சத்திற்குச் சென்றது. இராமராசனுக் கடுத்தவன் பெல்லாரிக்குத் தென்மேற்கிலுள்ள பெண்ணகொண்டாவில் அதிகார மடைந்தான். அவனுக்குப் பின்வந்த திம்மராஜன் 1570-இற் சந்திரகிரி சென்று அங்குச் செஞ்சி,தஞ்சை, மதுரை, சென்னை, சீரங்கப்பட்டணம், பெண்ணகொண்டா ஆகிய நகர நாயக்கர்மேற் சிறப்போடாண்டான். 1577-இற் பெண்ண கொண்டாவை மகமதியர் எதிர்த்தார். ஆனுல் ஜகதேவராஜ னென்ற நாயக்கன் அவர்களைத் தோற்கடித்தான். அதற்காக மைசூரிலும் சேலத்திலும் நிலப்பரிசு பெற்றுன். 1597-இல் வேலூர் முக்கிய பட்டணமாயிற்று.

இரண்டு வருஷங்களுள் மதுரை நாயக்கனேடு போர் மூண்டது. அப்பொழுதையரசன் வெங்கடபதி. அவன் காலத்தில் ஐரோப்பியர் நன்குமதிக்கப்பட்டார். ‘ஈஸ்ட் இந்தியா கம்பெனியார்’ இலாபமடைந்தார். ஆனுற் பழவேற்காட்டிலிருந்த டச்சுக்காரர் வெங்கடபதியை யாங்கிலருக்கிடங்கொடாதிருக்குமாறு செய்தனர். 1614-இல் வெங்கடபதி இறந்தான். நாடெங்கும் குழப்பமுண்டாயிற்று. பல்வேறு தேசாதிபதிகளும் சுவாதீனமடைந்தனர். மைசூர் இராஜவுடையார் சீரங்கபட்டணத்தைப் பிடித்தார். 1644-இற் பீஜபுரகோலகுண்டா சேனைகள் கர்னுடகத்தின்மேற் படையெடுத்துச் சென்றன. அப்பொழுதை யரசன் ஸ்ரீரங்கராயலு என்பவன். அவன் மைசூருக்கு ஓடினன். விஜய நகரராஜ்யம் அழிந்து போனதாக இதுமுதற் கருதலாம்.

இன்னும் ஒருவிஷயம் கூறவேண்டும். 1639-இற் காளஹஸ்தி ஜமீன்தாரர் வெங்கடாத்ரி நாயுடு என்பவர் ஆங்கிலருக்குச் சென்னக்குப்பம் என்ற ஒரு கிராமங் கொடுத்தார். அவ்வாறு கொடுப்பதற்குச் சந்திரகிரி யரசனிடம் உத்தவு பெற்றுக் கொண்டார். கொடுக்கும் பொழுது அக்கிராமம் சென்னப்பநாயுடு என்ற தன் தகப்பன் பெயரால் வழங்கவேண்டு மென்றுர். ஆங்கிலர் அக்கிராமத்தில்தான் செண்ட் ஜார்ஜ் கோட்டையைக் கட்டினுர். அதன் கண் ஒருநகரம் உண்டாயிற்று. அதுதான் மதராஸ் அல்லது சென்னபட்டணம்.

சருக்கை - வரதாசாரியன்.

## A. GARLAND OF NINE GEMS.
## நவமணி மாலை.

---

காப்பு.

வஞ்சித்துறை.

சிவகும ரற்கியாம்
பவழமு லாமே
நவமணி மாலை
யுவகையிற் செய்வாம்.

நேரிசை வெண்பா.

உம்பர்சே னாபதிக்கீ தொன்பான் மணிமாலை
செம்பவளம் ராகந் திறவைரம்—அம்பசுமை
ஆணிமுத்து வைடூர்ய மாமேத நீலஞ்சூழ்
மாணிக்க மைய மணி. (௧)

கலி விருத்தம்.

மணிதரு தரளமா மாலை மார்பினன்
பிணிமுக வசுரனைப் பேணி யூர்ந்திடுந்
துணிகையி லினிதமர் சாமி நாதன்முன்
கணியுருக் கொளுநிலை காணும் வள்ளியே. (௨)

அறுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

வள்ளியு மகவா னீந்த வாரண மகளுந் தத்தந்
தெள்ளிய வதரச் செம்மை தினந்தினம் வெளிரு வண்ணங்
கள்ளவிழ் கடம்பார் செந்திற் கந்தவே ளாரத் தூடே
யுள்ளொளி விரிக்குந் துப்பை யொப்பநோக் கிடுவர் மாதோ. (௩)

கட்டளைக் கலித்துறை.

மாதா பிதாகுரு தெய்வமு நீயன்றி மண்ணிலெனக்
காதாரம் வேறிலை தென்பரங் குன்றுறை யாண்டவனே
நீதா னெனைமுனம் பற்றினை போற்ற வினைவுதந்தாய்
தாதா மரகத கோதா வரிய தனிப்பதமே. (௪)

இன்னிசை வெண்பா.

பதம்வேண்டிற் செல்க பழமுதிர்தண் சோலை
யிதம்வேண்டின் மூழ்க வெழிற்சிலம்பி னீரோ
சதம்வேண்டிற் கோமேத தாரனிரு தாளே
விதியெல்லாங் கிட்டிடுமே விண். (௫)



கோச்சகக் கலிப்பா.

விண்ணூர்ந்த தேவர்களு மேதினியி லுள்ளோருங்
கண்ணாரக் கண்டுசூர் கலிப்பகையா லுள்ளுடைந்த
புண்ணாற்று மன்றென்றோ புட்பரா கத்தொடைசே
ரண்ணாநீ துன்றுதோ ளாடவிது பேரயிலே. (௬)

குறள் வெண்பா.

அயிலாவி னன்குடியா னன்புரையை மார்பின்
வயிடூரி யங்குறிக்கு மால். (௭)

கலிநிலைத்துறை.

மாலுங் குயிலுந் நீலமு மாதர் வரிவிழியுஞ்
சூலுடை மஞ்சுந் தந்நிறங் கொள்வது சூர்வென்ற
வேலுடை யோரகன் மார்பிடை நாலும் வெயில்காலு
நீலம் ணிக்கய னாளும் வணங்குந் நெறிநின்றே. (௮)

எழுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

நின்றவா னவர்க்கே சுப்பிர மணியாய்
நித்தனார் நுதலிடைத் தோன்றி
யன்றுகாங் கேயன் சரவண பவன்சே
யாறுமீன் காதலன் கந்தன்
குன்றுசூர் தொலைத்தோன் சசிமகள் வள்ளி
கொழுநனு மாகிவாழ் வளித்தா
யின்றணி வயிர மேற்று நீ பகைவென்
றென்னையுங் காவும்பர் பதியே. (௯)

கருவை - சங்கரலிங்கம்பிள்ளை.

---

## ASUNAM : A BIRD.
## அசுணம்.

---

கலிநிலைத்துறை.

1. இசைவெள் ளத்தினை யிருசெவி மடுத்திரு விசும்பி
லசைவி லாதொளி ரசுணமே! அற்புதப் பறவாய் !
வசையி லாநினை நினைதொறு மனங்குதி கொளுமென்
னசையு நின்வயி னாடிடி னளவில தம்மா !

2. இன்ப மேயுரு வெனக்கொளு மெழிலுடைப் புள்ளே !
உன்ப ராகந்த கானத்தி னிசையை யுன்னி

னன்பு நீடுமுன் றிப்பிய வியல்பினைத் தாமென்
றென்புன் னெஞ்சுமிக் கெழுமிறும் பூதினு னிலகும்.

3. ஈச னூரு விசைமய மென்னினவ் விசைவாய்
நேச நீடிய நெஞ்சின ரீசனுக் கடியார்
மாசி லாதநீல் வான்படாத் தோவிய மானுந்
தேச டைப்புளே ! அடியவர் தம்முணீ சிறந்தோய்.

4. பண்ணி னூநந்தந் திளைத்திடும் பண்புடைப் பறவாய் !
விண்ணின் வாய்வினைச் சிறைத்தவ ரெவர்கொலோ ? மேலோய் !
கண்ணு வார்க்கரி தாமின்ப மூறிசைக் கயிற்று
லெண்ணு ருவகை பிணித்தன ரோவினி தியம்பாய்.

5. நின்னை நேரிற்கண் டின்புற னிகழுமோ வின்றன்
மன்னு மன்பினுக் குரியவ னூவெனோ மகிழ்ச்சி
துன்னு நெஞ்சினேய் துலங்கிசை கேட்டொளந் தோயு
முன்னை யென்கரத் தேந்துவெ னோவெனக் குரைத்தி.

6. ஞாலத் தின்னிசை யனைத்தையு நாடிமுற் றினையோ
சீலத் தாயிசை செவியினிற் றேக்கிநீ திளைக்குங்
காலத் துன்னையான் பற்றுவெ னெனவுளங் கவன்று
சாலத் தேடன்முன் சாரலை யுலகினைத் தணந்தாய்.

7. ஒப்பி லாப்பிரா னுஞற்றிய வண்டகோ டிகடாந்
தப்பி லாவழிச் சரித்தலா னுறுந்தனி யிசையைத்
திப்பி யஞ்செறி யியல்பினாய்! செவியினிற் றேக்க
றப்பொ னூதெனப் பாரினைத் தணந்தனை போலும்.

8 அண்ட கோடிக டத்தம வாற்றினூ டிசைக்கும்
மண்டு கானமிம் மாநுடர் செவிப்பட மாட்டா
தெண்ட ரும்மன்ன வின்பவூற் றெழுமிசை செவிவா
யுண்ட டான்மையோ வதன்சுவை சிறிதெனக் குரைப்பாய்!

9. சேயவி லாதிசை வலையினிற் சிக்குமஞ் சிறையே !
இயலு வின்மன மொருவழிப் பட்டவா றென்னோ
மயலி னீங்கிய மதியினோ மனவலி மையினோ
பயிலு நல்லிசைப் பண்பினோ பரிவுடன் பகராய்.

10. அழுக்க றுப்பது பாவமென் றறைந்தன ரான்றோ
ரிழுக்க றுத்தநெஞ் சசுணமே ! இசையினூண் புலவா!
மழுக்கு வெள்ளறி வாளனேன் மனவலி யில்லேன்
ஒழுக்க மின்றிநின் னுளவலி கண்டுளம் பொறேனல்.



11. திறந்த வாதுள மிசைவழிச் செலுத்தியிவ் வுலகை
மறந்த மாண்புசேர் வானுறை செல்வமே! மதியிற்
சிறந்த வாரிய னூகிய தினகர னருளா
னிறைந்த நெஞ்சிரு ணீங்கிய மாணவ னிசைப்பாய்.

12. இனிய கானநீ யிருசெவி மடுத்திடு மெல்லைக்
கனிவில் சிந்தையர் கடும்பறை யடித்துர றுவரா
லனைய வோதைகேட் டனல்படு மம்புய மெனநீ
துனியுற் றேங்கிமெய் சோருவாய் துன்பறி யாதோய்!

13. என்னை யோவுல கின்னியல் பிருந்தவா றென்னே!
நின்னி யல்புண ராச்சிலர் நீசரு முளரே
யின்னி சைப்புல வோய்! பறை யொலிக்குநீ யெய்த்த
லுன்னி னம்மவுன் மென்மையை யுலகெலா முரைக்கும்.

14. யாழொ லிக்கிள குன்செவி யிடியிடித் தனைய
பாழொ லிப்பறை யேற்குமோ பாவலர் கல்லா
வேழை யின்கவி யேற்பரோ வெழின்மறை யனைய
வேழை யார்பதம் பரவினைப் பொறுக்குமோ வியம்பாய்.

15. ஞான மேயுரு வாகிய நாதனை நண்ணக்
கான மேயுறு வாயிலாக் காட்டிய பறவாய் !
ஈன மேவலா யெண்ணருங் குணம்பெறு நின்னை
யானென் னெஞ்சினி விருத்துவே னென்றுநீ வாழி.

ந. பலராமையர்.

---

## ON MY FATHER'S DEATH.

## எந்தைபிரிவாற்றாமை.

---

### கோச்சகக்கலிப்பா.

எந்தாய் பெருவாய்மைக் கேறே நடுநிலைமைக்
கந்தா ரணியிலிணை யற்று யயர்வில்லாய்
சிந்தா குலமென்பாற் சேரா திரிந்தோடத்
தந்தாய் கலைகள் பலவுந் தகைபெறவே. (1)

### அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

நீர்துறந்த விளங்கயல்போ னின்கழலைப் பிரியாத நீர்மை யேனுஞ்
சீர்துறந்த வெம்மோயுந் தெருமரலுற் றுய்யும்வகை தெரியா தேங்க
நார்துறந்த மனத்தவர்போ னற்கேள்விச் சுவையினையு நாடா திந்நாள்
பார்துறந்த தறமேயோ பரிவுடைமை தானேயோ பகர்வா யெந்தாய்! (2)

வானாட்சி கொண்டிலகும் வடமீனை யுந்தனது மாறாக் கற்பாற்
றானாட்சி கொளற்குரியா ளென்னவுலகோர் சாற்றவருந் தகுதி தன்னான்
மீனாட்சி யெனுமியற்பேர் காரணமாய்க் கொளுமெம்மோய் மெலிய வேற்றுக்
கோனாட்சி யுறுங்கயிலை குடியாட்சி நீயடைத லறமோ கூறாய். (3)

ஷை - வேறு.

உண்மை வேலி யொழிந்ததென் வுயங்கி நட்டோ ருரையாட
வண்மை வாயி லழிந்ததென வறியர் கூறித் தடுமாறத்
திண்மை வேலி யிறந்ததெனத் தமிய ராவார் தியக்கமுற
வெண்மை வேலிக் கிடையானு மிரங்க நடந்தா யெந்தாய்நீ. (4)

ஷை வேறு.

தந்தாய்நின் றுணைவலியா லன்றோயான் மாநிலத்திற் றளர்வொன் றின்றி
நந்தாத சுவைத்தமிழி னாவலர்கள் குழுவினிடை நண்ணி னின்றே
யிந்தாருஞ் சடைப்பெருமான் றிருக்காதை பலகாலு மியம்ப நேர்ந்தே
னந்தோயா னினியென்றா வப்பெருமை தலைப்பெறுநாள்? அத்தா! அத்தா!
கண்பெற்றார் கல்விநலம் பெற்றாரே யெனும்வாய்மை கருத்துட் கொண்டு
நண்புற்றா றுறவுற்றா ரெவர்குறிப்பு நோக்காது நாயேன் கல்விப்
பண்புற்றார் திசைமேவப் பயிற்றியாண் மகவதினும் பரிவு கூர்ந்தாய்
பெண்பெற்றா ரெவரேநின் பெருமதியைப் பெற்றார்கள் பேசுங் காலே. (6)

கலையமுத மெனக்கூட்டு மருட்கடலே நின்றனக்குக் கைம்மா றற்றற்
கிலையிலையென் றுணர்ந்துள்ளே யையிடினு மென்மனத்தி னேக்க நீங்க
நிலவுலகி லினுஞ்சின்னா ணீயிருந்தென் னருகதனி னிகரில் கேள்வித்
தலையமுதஞ் செவிமாந்தக் கண்டுவக்குந் தவமற்றேன் றமியே னந்தோ! (7)

உரிமையினாற் றந்தைமகார் தமக்காற்றுங் கடமைதனை யொழியா தாற்றி
யிருமைகொளப் பிரிந்திட்டா யென்கடமை யானாற்றற் கெழுந்த விந்நாட்
பெருமையிது தானேயோ வெனையீன்ற பெருந்தகையே பேதை யேனை
யருமையொடுங் குறிப்பறிந்தே யாதரிப்பா ரெவரினிமே லையா ! ஐயா !! (8)

கோச்சகக்கலிப்பா

நாலாருங் கலிவருட நண்ணுமையா யிரத்தினிடை
மேலாருஞ் சுபகிருது விளங்குமெழின் மிதுனமதி
மாலாரு மபரபக்க மன்னுசுப திதியிரண்டின்
பாலாரு மதிநாளிற் படர்ந்தனைவா னெந்தாய்நீ. (9)

ஷை வேறு.

வெம்பிணியாற் பன்னாள் மெலிந்து விளிவோரே
யம்புவியிற் றீவினைக ளாற்றினோ ரென்றுரைப்பா
யெம்பெரும நீயோ வொருபிணியு மெய்தாம
லிம்ப ருலக மிறந்தா யிதுவியப்பே. (10)

அசலாம்பிகையம்மை.

---



# ஒரு முனிவன்.

[இஃது ஆங்கிலக் கவிவாணர் கோல்ட்ஸ்மித் என்பவரால் எழுதப்பட்டது.
அவர் 18-ஆவது நூற்றாண்டில் வசித்தவர். அந்நூற்றாண்டு ஆங்கில நாட்டிற்
கவிவன்மை இன்னதெனப் பல்லோராலும் ஒத்துக்கொள்ளப்பட்டும் இக்கோல்
ட்ஸ்மித் கவியும் இன்னும் சிலரும் மகாகவிகளல்லரெனச் சொல்ல ஒருவரும்
துணிவதில்லை. இவருக்கு அத்தகைய காலத்தில் வசித்தும் பெரும்பெயர்விளைத்
தன மூன்று நூல்கள். அவை தாம் நான் இவ்விடம் மொழிபெயர்த்திருக்கும் ஒரு
முனிவன், என்பதும் 'ஒருயாத்திரிகன்' என்பதும் 'ஒருக்ஷீணமடைந்த கிரா
மம்' என்பதுமாம். இம்மூன்றினையும் அறியாத ஆங்கிலரை அறிதல் கஷ்டம்.
இவைமூன்றும் நம்மிந்தியாவிலும் ஒவ்வோர் ஆங்கிலம்பயிலும் மாணவருக்கும்
தெரிந்துள்ளன. இவைமூன்றில் நான் மொழிபெயர்க்க எடுத்துக்கொண்ட
ஒருமுனிவனேசிறியது. அது 40 பாக்கள் கொண்டது. இத்தகை நூல்களைத் தமி
ழில் மொழிபெயர்த்தலின் பயன்யாதோவெனின் நம்மவர்கள் இன்னும் பழைய
வழிகளைவிட்டுநீங்குதலில்லாதவர்களாய் இருப்பதும் அவர்கள் அப்படியிருப்பின்
நமக்கு உய்வில்லையென்பதும் அவர்களைமாற்றுதற்கு வழி ஆங்கிலமுதலிய மே
ற்குத்தேசங்களின் அபிப்பிராயங்களை நம்மவர்கள் கொள்ளும்படிசெய்வதேயெ
ன்பதும் ஒருதலையாக எல்லோராலும் கொள்ளப்படுவதனாலும் அவ்விதமாக அவ்
வபிப்பிராயங்களை நம்மவர்களுக்குச் செலுத்துவதற்கு நான் எடுத்துக்கொண்ட
மொழிபெயர்ப்புப்போன்றவை ஒருவழியாதலாலும் நம்தேசத்தின் சீர்திருத்த
மும்அதன்பயனும் பெருமையுமேஇதற்குப்பயனும் என்பது வெளிப்படை. நான்
மொழிபெயர்க்க எடுத்துக்கொண்ட 'ஒருமுனிவன்' என்பது இதற்கு முன்னரே
பலரால் தமிழில்மொழிபெயர்கப்பட்டுளது. அவற்றுட் சிலாக்கியமானது தமிழ்
மகள் அணியாய்த்துலங்கிக்கொஞ்சக் காலத்துக்குமுன் இறந்துபோன ம-ா-
ா-ஸ்ரீ, பெ. சுந்தரம்பிள்ளையவர்கள் சிவகாமி சிதம்பரன்) எனப்பெயர் வைதது
வெளிப்படுத்தியதேயாம். ஆனால் ம-ா-ா-ஸ்ரீ, பிள்ளையவர்களும் மற்றவர்களும்
ஆங்கிலகவியின் கதையைத்தமிழில் மொழிபெயர்த்தனரேயன்றி கவியையு
ள்ளபடி மொழிபெயர்த்திலர். அப்படிச் செய்திருப்பரேல் நான் இதனை
மேற்கொள்ளவேண்டியதில்லை.

இனி ஆங்கிலம்பயின்றிராதோரின் உபயோகத்திற்காகக் கதைச்சுருக்க
மொன்று சேர்க்கிறேன். கதைச்சுருக்கம்—டைன் நதியருகில் ஒருபிரபு வசித்
தனர். அவர்க்கு ஆஞ்சலீனையென்னும் பெயருடைய பெண் ஒருத்தியே
குழந்தை; அவளை மணக்கப்பலர் வந்தார்கள். அவர்களில் ஒருவன் எட்வி
னென்பான். அவன் குணமிக்குடையான். ஆனால் பொருளிலன். ஆஞ்சலீனை
அவனை மணக்கயோசித்தும் விளையாட்டுத்தனமாக அவனை இகழ்வதாகப்
பாசாங்கு செய்துவந்தாள். இதையாற்றாது எட்வின் ஒரு காட்டிற்சென்று

அவ்விடத்தில் ஒரு முனிவனைப்போல வேடம்பூண்டு வசித்தான். ஆஞ்ச லீனைபின் அவனைக் காணாதவளாய் அவன் தன்னிகழ்ச்சியை யாற்றாது காடு சென்றிறந்ததாகக் கொண்டு அவன் இறந்த இடந்தேடிச்சென்றாள். எட்வின் இருக்கும்காட்டிற் செல்லும்பொழுது இரவு சமீபிக்க அப்போது அவள் தன க்குமுன் நேர்ந்த முனிவனாகிய எட்வினை அவன்தான் தன் னெட்வினென அறியாது தன்னை முன்னேதெரியும் ஓர் ஒளியிருக்கும் இடத்திற்கு அழைத் துச்செல்லும்படி கேட்டாள். அவனும் இவள் ஆண் உடை தரித்திருந்தத னால் இன்னாரென அறிந்திலன். ஆயினும் நற்குணனாதலின் அவளைத் தன் வீட்டுக்கழைத்துச்சென்று அங்கே உண்பனகொடுத்துஉபசரித்தான். அவளோ இதையெல்லாம் கவனித்து எட்வினைப்பற்றிய தன் கவலையிலாழ்ந்திருந்தாள். எட்வின் எக்கவலையில் அவளாழ்ந் திருக்கிறாளெனக்கேட்க அவள் ஆற்றாது தன் கதையை முழுதும் சொல்லித்தன்னை மன்னிக்கவேண்டுமென்று கேட் டாள். உடனே எட்வின் தானின்னானென்பதைக்கூறி அவளைத்தெளிவித் தான். உடனே இருவரும் ஒருவரைவிட்டு ஒருவர் பிரிவதில்லை யெனவாக்க ளித்து மணக்கினைந்தனர்.

இந்நூலில் ஆஞ்சலீனை வழிமயங்கி எட்வினை வழிகாட்டிக்கேட்கும் சந் தர்ப்பத்திலிருந்து கூறப்பட்டுள்ளது.]

1. "திரும்பிடு! பான்மையன் தவசியே யவலினேய்
இரும்பொழிற் றனிவழி நடத்திடு வெனக்கென
திருந்தொளி யவலினைத் திடப்படுத் தவ்விடம்
அரும்பெறு மொளியது வார்தர வாற்றிடும்.

2. "தனித்தவன் மயங்கியே யிவ்வழி செல்கிறேன்
பனித்திவண் களைத்திடு மடியுடன் மெதுவதாய்க்
கணிக்கறு பான்மையில் விளைவன காடுகள்
விளைத்தவன் செல்லுற நீண்டிடும் மண்வழி."

3. "பொறுத்திடென் குழந்தையே!" என்றனன் முனிவனும்
மறுக்கொளவ வபாயமில் வழிபெறப் போமுனர்
பறந்திடுந் தூரமே பகிதலில் தோற்றமும்
மறந்திடு முன்னையும் நாசமும் மண்டியே.

4. "வறுமையி லுறைந்திடு மநாதையா மகட்கெலாஞ்
சிறுமையு ளென்னகந் திறந்துள தென்றென்றுஞ்
சிறுமையாந் தவசிநா னுடையன தின்பன
பொறுமையு நல்லெணம் பொருந்தவே கொடுப்பனான்.

5. "இன்றிரா விருந்திடு, தடையின்றிக் கொண்டிடு
மின்றெரி சிற்றறை மன்னியே யுளவெலாஞ்



சுன்றிய வைக்கோலாம் படுக்கையுங் கூளதும்
மன்றல திகழ்வனென் வாழ்த்ததும் நித்திரையும்."

6. "சுதாவினி லிவ்விடந் திரிந்திடு மந்தையைக்
கதாயுத முதற்கொடு கொல்லுவ தில்லைநான்
சதாவெனக் கிரங்கிடுஞ் சாமியிற் கண்டியே
யிதாவுறை யிவைதனக் கிரங்கலைப் படிக்கிறேன்."

7. "மலையினின் புற்பொதி பக்கமே யின்னதான்
உலைதொழி லுறாதன தின்பன கொணர்கிறேன்
புலையதிப் பையதிற் கீரையும் பழங்களும்
தலைதெரி தெளிவுடை சுனையதன் நீரையும்."

8. "மீண்டிடு வதிதியே! கவலையை விட்டிடு
ஈண்டுள கவலைக ளிவைபெலாம் பிழைத்தன
வேண்டுவ வுலகினின் மானிடற் குளசில
வேண்டுவ வவைசில வந்திடுஞ் சீக்கிரம்."

9. 'பனித்துளி விண்ணினில் வீழ்ந்திடும் பான்மையாய்க்
கனித்துள குணமகன் கிளவிகள் வந்தன
முனித்தவ னிறைஞ்சியே யடக்கமுன் விருந்தினன்
தனித்திகழ் சிற்றறைக் கேகின னவன்பினே.'

10. தூரமாம் வனாந்தர மறைவது தன்னிலே
சீரதாய்த் தனித்தவப் பளிக்கறை யிருந்தது
பாரதே சரணிட மடுத்துறை பொருளிலார்
மாறதா மூடராய் வழிமயங் குநர்க்குமே.

11. எழ்மைய கூரைக்கீ ழெவ்வகைப் பொருள்களும்
வாழ்பவன் காப்பதை வேண்டின வுல்லவால்
தாழ்மையாந் தாளுடன் திறந்தது சுருங்கையும்
காழ்மையில் லிருவரு முள்புகக் கொண்டது.

12. முயற்சியுள் மானிடர் விலகியே யிம்மணி
யயற்சியைத் தீர்த்திட வமருவ ரிரவினிற்
பயிற்சியுள் தவத்தினன் னெருப்பினை மூட்டியே
கவற்சிபன் விருந்தினன் கவலையை யாற்றினன்.

13. முனிவனுந் தாவர பதார்த்தமே படைத்தனன்
கனிவுடன் முறுவலன் கேட்டனன் சாப்பிடத்
தனியவன் கதைகளைச் சொல்வதி லாசையால்
முனிவுடன் மிஞ்சிய மணிகளும் போயின.

14\. அவர்தமைச் சுற்றிலு மன்புடன் மகிழ்வுடன்
கவர்வன கபடமே பூனைா குசெய்தது
பவர்வரி வண்டுக ளடுப்புமேல் முரன்றன
சுவர்முனே கத்திடும் மீன்களுந் துள்ளின.

"15\. கவல்மிகு மிவையெதுங் களிப்பென்றுஞ் செய்தில
கவலுறு விருந்தினன் துக்கமே களைந்திட
சுவலுய ரவன்மனம் மிக்கதே துக்கமால்
நவமவன் கண்களில் நீர்வரத் தொடங்கின.

16\. மிகுந்திடு மவனது விசனமே கண்டதால்
தகுந்துறை முனிவனுஞ் சமமதி லாழ்ந்தனன்
"மிகுந்துயர்க் குழந்தையே" யெனவவன் விளித்தனன்
"வருந்துய ரெவனது நின்மனம் வருந்துமால்.

17\. இதில்நல முடையவா மிடங்களிற் றனப்பட்டோ
எழில்மிகு ரம்மிய மின்றியே திரிகிறாய் ?
பதில்வினை வின்றிய சினேகமும் பான்மையோ ?
வதில்மிகு வாரமே யறிந்திடாச் சீர்மையோ ?

18\. "என்னைகொல் ! நல்லது ழியற்றிடுங் களிப்பெலாம்
மன்னிய வல்லவா மற்பபரம் ! மதியிதைத்
துன்னிய வவைதனை தேடிடும் மானிடர்
பன்னிய வவையினும் புல்லிய ராவரால்.

19\. "நட்பெனப் படுவதின் னன்மையென் பெயரலாற்
பெட்புறு துயில்கொடும் மந்திர மெனத்தகும்
தொட்டிடும் வெறுக்கையும் புகழையும் நிழலதாம்
எட்படு வறியறை யிரங்கிட விட்டிடும்.

20\. "வாரமே யதனினு மர்த்தமில் மொழியதாம்
பாரதை யின்றையே பெண்களின் சேஷ்டையே
பாரதி னுண்மையைப் பார்த்ததில துள்ளதேற்
சாருமவ் வாமையின் தங்கிட மொன்றையே.

(இன்னும் வரும்.)

தி. அ. இராமலிங்கம்.

---



# CORRESPONDENCE

## கடிதம்.

---

### ஐயவினா.

ஞானபோதினிப்பத்திராதிபரே!

" ஐந்திலக்கணத்தொன்னூல் விளக்கம் " செய்த வீரமாமுனிவரியற்றிய தேம்பாவணிஎன்னுங் காப்பியத்தின்கண்ணே,

(1) நகரப்படலம் 20—ஆம் பாவாகிய

".பேர்த்தன பருதிபோய்ப் பெருகு மாயிரா
போர்த்தன விருளறத் தயங்கும் பொன்மணி
கோர்த்தன சரளமேற் கொழுமுந் தோரண
மார்த்தன முகிலிடை யவிர்வின் மானுமே"

என்னும் செய்யுளிலும், வேறுசில செயயுட்களிலும் அவராற்றுமே யுரைக்கப்பட்ட வந்நூலுரையுட் பற்பலவிடங்களிலும், "கோ" என்னேவல் "கோர்" என்றுங் கொள்ளப்பட்டமையும்,

(2) மகவருள் படலம் 89-ஆம் பாவாகிய

" அருப்பய னஞ்சினை யாக்கும் பாம்பெனு
விருப்பவர் நயன்செயப் பகைக்கு மேலலார்
நெருப்படத் துமிப்பரை நிழற்றுங் காவெனப்
பெருப்பகை செய்வரைப் பேணு மாட்சியார் "

என்னுங் கவியிற் " செய்யும் " என்னும் வாய்பாட்டு முற்றைப் பல்லோர் படர்க்கை'யிற் செல்லவைத்தமையும்,

(3) பைதிர நீங்குபடலம் 16-ஆம் பாட்டுரையிற்
" பசுக்கள் தங் குட்டிகளை மறந்தன" என்றுரைத்தமையும்,

(4) உரையிற் சிற்சில விடங்களில் " அதுகள் " " இதுகள் " என்பன 'அது ' இது " என்னுஞ் சொற்களின் பன்மையாக வழங்கப்பட்டமையும்,

வழுவின் பாற்பட்டனவோ ? அல்லனவாயின், இலக்கண இலக்கிய எடுத்துக்காட்டுகள்வாயிலாக வென் சந்தேகத்தை நீக்குமாறு நும்மை வேண்டுவல்.

சரவணகுமாரன்.

### விடை.

மேற்கூறிய நான்கும் வழுவின்பாற் பட்டனவே. இதன்கண் யாதோரையப்பாடுமில்லை. முதலாவது சொல்வழு ; இரண்டாவது இலக்கணவழு; மூன்றாவது மரபுவழு ; நான்காவது சொல்லாக்கவழு. இங்ஙனம் இவை வழுவாதலை வீரமாமுனிவர் உணராதிருந்திருப்பரோ வென்றதோர் ஆசங்கைஇடை

யில் எழுதலியல்பே. இவையும் இவைபோல்வன பிறவும் வழுவாதல் உணர்ந்து வைத்தே வீரமாமுனிவர்இவையிற்றை வழங்குவாராயினரென்பது எமது துணிபு. தமிழிலக்கணஞ் சிறிது மாறுபாடடைய வேண்டுமென்பதும், தமிழ் வளர்மொழியாதலின் பேச்சுவழக்கிற் கேற்றபடியே நூல்வழக்கும் அமைதல் வேண்டுமென்பதும், தமிழினின்றும் பிறந்த மலையாள பாஷையில் 'அவர் படிக்கும்' என்றே வழங்குதலுணர்ந்தார் தமிழிலும் அவ்வாறு வழங்குதல் நேரிதாகலாமென்பரென்பதும், * பொதுப்படை நியமத்தினாற் சில சிறப்புச் சொற்களையும் பொதுமையில் வழங்கலாமென்பதும் பிறவும் முனிவர் கருத்து வந்த கோட்பாடுகளாம். அவர் தாம் செய்யக்கருதியிருந்த திருத்தங்களனைத் தையுந் தாமியற்றிய தேம்பாவணியிலேயே துணிந்து அமைத்துக் காட்டினார்; தமிழ்ப்புலவர் சாமர்த்தியத்தினால் நூற்கருத்து வேறுபடாமைப் பொருட்டுத் தாமே அந்நூலுக்கு உரையுஞ் செய்தனர். இவ்வண்ணந்தாங் கொண்டகொள் கைகளைத் துணிந்து தம் நூல்களிலே வீரமாமுனிவர் அமைத்துவிட்டபடியால், விசேடக்கருத்து நலம்வாய்ந்திருந்தும் அவரியற்றிய தேம்பாவணியாதிய நூல் கள் தமிழ்மக்களிடைப் பெரிதும் வழங்காமற்போயின. பாஷைதானாகத் திருந்தவேண்டுமே யொழிய ஒருவர் திருத்தத்திருந்தாது. இனி முனிவர் செய்த திருத்தங்களைப் பிறர் ஒப்புக்கொள்ளவே வேண்டுமென்ற கடப்பா டொன்றுமில்லை. இதனான் வீரமாமுனிவர் கல்விக்கோரிழுக்கின்றாமெனி னும், மேற்கூறிய நான்கு திருத்தங்களும் போலியாய் வேண்டப்படாதன வாய்க் கழிதலின், அவையிற்றை வழுவென்றலே யேற்புடைத்தாம். இனி "ஐயவினா" எழுப்பிய நம் நண்பர் எமது கருத்து இஃதாத லுணர்ந்து கொள்வாராக. பாஷை நலங்கருதிய ஐயவினாக்களெத்துணை யெழினும் அத்துணையும் நல்லவேயாம்.

பத்திராதிபர்.

## REVIEWS OF BOOKS.
## புத்தகக்குறிப்புக்கள்.

**திருவலங்கற்றிரட்டு:**

[பல்சந்தப்பரிமளம் என்னும் பெயரிய இவ்விரண்டாங்காண்டம், மகா-ா-ா ஸ்ரீ எம். சண்முகம் பிள்ளையவர்கள் செய்த பொருளுதவிகொண்டு, மகா-ா-ா-ஸ்ரீ தி. உடையநாயகம் பிள்ளையவர்கள், சென்னை பண்டிதமித்திர யந்திர சாலையிற் பதிப்பித்தது. இதன் விலை அணா 11. தபாற்கூலிவேறு.]

இந்நூல் திருவிராமேச்சுரத்தைச் சேர்ந்த பாம்பன் **ஸ்ரீமத்-குமரகுருதாச சுவாமிகள்** அருளிச்செய்தது; வெள்ளியல், ஆசிரியவியல், கலியியல், வஞ்சி யியல் முதலிய நால்வகை யியல்களையுமுடைத்தாய் வாயுறைவாழ்த்து மருட்பா வான் இறுவது; 532 திருச்செய்யுட்களையுடையது; யாப்பிலக்கணத்தின்கண் ஆங்காங்கு அருகிநிகழும் ஐயப்பாடுகளை யறவொழித்து, ஆங்ஙன் உறுதியெ னக்கோடற்பாலன இவ்விவை யென விளக்கும் பெற்றிய பாடல்களையுங் குறிப்புக்களையுமுடையது; வண்ண வியலிற்கியைந்த வண்ணம் இனிய சந்தக்கு ழிப்புக்கண் மேவி நடைநலம் பெற்றியங்கும் நறும்பாக்கள் பல நனியமைந் தொளிர்வது; அருமைவாய்ந்து சொற்பொருணயங்கள் கொழிக்கும் சித்திர

* Principle of Generalization.



கவிகள் பல செறிந்தோங்குவது; முருகக்கடவுளார் துதி யெனப் பொலிவது; சிவயோகஞான நூலாகிச்சீர்சான்று திகழ்வது. "குடிலைமெய் கூறு குருவடிக ளீயுங், கொடியெனபோ மாறு குயிலு—மிடிமடன், கொய்குகனை நாடு குமர குருதாசன், செய்திருவலங் கற்றிரட்டு" என்று ஆக்கியோன் பெயர்கூறுமுகத் தால் நூற்பயனுவலும் நான்காரைச் சக்கிரபந்தநேரிசை வெண்பாவிற் கூறிய தனைத்து முண்மையே. சிறந்த சொல்லுங் குறித்த பொருளுஞ் செறிந்துக் கூறுஞ் செவ்வி சான்ற தன்றோ திருவலங்கற்றிரட்டு? இடையிடையே சில மந்திர சாஸ்திர ரகசியங்களும் இலைமறைகாய்போற் கூறப்பட்டுள. இயல்கள் தோறும் எடுத்துக்கொண்ட யாப்பின் விகற்பங்களனைத்தும் தெளிவு பெறத் தலைக்கட் குறிக்கப்பட்டுப், பாடல்கள் பின்னர் இலக்கியமெனக் காட்டப்பட் டுள பான்மை யாவரானும் பாராட்டற்பாலதே. யாப்பிலக்கணவையமறுக்கும் வழி, யாப்பருங்கல விருத்தியாதிய சிறந்த நூல்கள் மேற்கோள் காட்டி, ஆன் றோராட்சி தழுவிச்செல்லா நின்றசெம்மை மிகவுமேற்புடைத்தாமாறுகாண்க. இந்நூலாசிரியராகிய நமது சுவாமிகள், இடையிடையே யேற்றிய விளக்கங்க ளும், சிலவரிய செய்யுட்களின் பொருட் டெளிவுகளும், நூல்வழிச் செல்வார் யாவரையும் இடர்ப் படாதவாறு செலுத்தி அவரது மனத்திற் கேற்ற இன்னு ணவளித்து மேனெறியுய்க்கும் மேம்பாடுடையனவாதல் நூலினைப் பெற்றுப் படிக்கற் பேறுடையாரனைவர்க்குந் தெற்றென விளங்கும். மிறைக் கவிகள் யாக்கும்வழிப் பொருட் பொலிவு குன்றாவண்ணம் செய்யுள் செய்யும் புலமை யிந்நூலாசிரியரிடத்துண்மை கண்டயாவரே வியப்புறாதார்? சுழிகுளம், சருப் பதோபத்திரம் முதலிய சித்திரகவிகட்கு ஏற்றவாறு பொருத்தமுள்ள மரபு பிறழாச் சித்திரங்கள் காட்டி யிருத்தலும் நேரிதே. இந்நூல் 224 பக்கங்கள் கொண்டது; குறைந்த விலையுள்ளது; நல்ல பளபளப்புள்ள கடிதத்திற் பெரிய எழுத்துக்களில் தெளிவாக நன்கு பதிப்பிக்கப்பட்டுளது. இதனை நல்லறிவு டைய செந்தமிழுலகம் வாங்கிப் படித்துய்யுமென்று நம்புகின்றோம்.

**மேகதூதக்காரிகை:**

[இது யாழ்ப்பாணத்துக் கொக்குவிற் சோதிடப்பிரகாச யந்திர சாலையிற் பதிப்பிக்கப்பட்டது. இதன் விலை அணா—4. தபாற்கூலி வேறு.]

இந்நூல் வடமொழியிற் காளிதாச மகாகவி செய்த மேக தூதத்தினின் றும், யாழ்ப்பாணத்துச் சுன்னாகம் **மகாவித்துவான்-அ. குமாரசுவாமிப்பிள்ளை யவர்கள்** மொழிபெயர்த்தியற்றியது. நூல்வரலாறுகூறுமுகத்தாற்போசராசன் சரிதமும், முதனூலாசிரியராகிய காளிதாசகவிஞரது சரிதமும் நூலின்முகத் துக்கூறப்பட்டுள. அங்ஙனம் அவைகூறுதற்கண் இடையிடையே சிலநற்கருத்த மைந்த வடமொழிச்சுலோகங்களைத்தமிழ் மொழிச்செய்யுட்களாக வமைத்துள தன்மை நன்றே. அவை கல்வியறிவிற்றேறும் இளஞ்சிறார்க்கு மிகப்பயன்படற் பால. அவற்றிற் குதாரணமாக இரண்டொன்று காட்டுவோம். "உலோபமே பாவ முதிக்குமொரு மூலம், உலோபத்தாற் கோப முதிக்கு - முலோபமுறுங் கோபத்தாற் றீங்குறுங் கொலையுங் கொடுநரக, வாபத்து முண்டாகு மாம்"; "கல் வியே யன்னைபோற் காக்கும் பிதாப்போல, நல்வழியிலே செலுத்து நாயகி போ—லல்லலற, மிக்க சுகங்கொடுக்கும் வேண்டும் பொருள்கொடுக்குந் தக்க புகழ்கொடுக்குந்தான்." இனி, நூலினிடையிடையே காணப்படும் சில அரு ஞ்சொற்களுக்குப் பொருள்கோளொன்று அமைத்திருப்பது இன்றியமையாத தே. இந்நூல் முழுதும் கட்டளைக்கலித்துறை யாப்பிற்றாயியைந்திருத்தலின்,

யேக தூதக்காரிகை 'யென்னும் பெயர்த்தாயிற்று. இது முதனூல்போலவே
பூர்வமேகம் உத்தரமேகம் என்னும் இரண்டு பகுதிகளையுடையது. பூர்வமே
கத்திற் காப்புச்செய்யுள் உள்பட 68 காரிகையும் உத்தரமேகத்தில் 55 காரிகை
யும் உள. மொழிபெயர்ப்பு வகையின்கண் எழற்பாலவாய தெளிவின்மையா
திய குறைகளுள் ஒன்று முரு து இந்நூல் அமைக்கப்பட்டிருக்கு மியல்புயாவ
ரும் பாராட்டத்தக்கதே. நூலையாண்டெடுத்துப்படிக்கினும் இடர்ப்படுதலி
ன்றி இழுமெனுமோசையினொழுகுறு மருவிபோல் விழுமிதினியலாநின்ற
தன்மை தெற்றெனயாவர்க்கும் புலனும். விசேஷப்பொருளுடைமை மட்டிற்
கொண்டு, விழுமியசொற்களினியலாத நூல்களை யாவரும்' மதித்தலரிது.
பொருளாழமின்றி வெறுவிய சொல்லழகொன்றேயுடையனவாய் இயலும்
நூல்களை ஒருவரும் மதியார். இவ்வாறன்றி விழுமிய சொல்வினியன்று பொ
ருட்பொலிவுமுடையதாய் விளங்கும் இந்நூலினை யாவரே கைக்கொளாதார் ?
இந்நூல் பதிப்பித்து ஏறக்குறைய ஆறுண்டுகள் கழிந்தும் நம்முடைய சனம்
பொருந்திய சென்னைச்சர்வகலாசாலைத்திராவிட பாடசபையார் இதனைக்கவனி
யாதிருந்ததற்குத் தக்ககாரணம் புலப்படவில்லை. சில்லாண்டுகளின்முன்னர்
வடமொழியில் மேகதூதம் பிரதமகலாபரீட்சைக்குப்பாடமாய் ஏற்படுத்தப்
பட்டிருக்கவும் அதுகண்டநந்தமிழர் இதனைப்பாடமெனப் போற்றிக்கொள்
ளாது வாளாதிருந்தமையென்னே ? இனியாதல் அணிநலஞ்சிறந்தொளிரு
மிந்நூலை மாணுக்கர்களுங் கற்று அறிவொளிசிறக்கும் வண்ணம் நமது சர்வகலா
சாலையார் பிரதமகலாபரீட்சைப் பாடநூல்களுளொன்றென ஏற்படுத்தித்தமிழ்
நூல்களைக்கௌரவிப்பாரென்று நம்புகின்றோம்.

**மகாபாரதம்—**(பிற்பகுதி) :

[இது துறையூர் முத்துவீரம்பிள்ளை யவர்கள் குமாரர் உபாத்தியாயர்
மகா-ள-ள-ஸ்ரீ கோவிந்தப்பிள்ளையவர்களாற் பரிசோதித்துச் சென்னைப்
பண்டிதமித்திரயந்திர சாலையிற் பதிப்பிக்கப்பட்டது இதன் விலை ரூ 1-8 0
தபாற்கூலி வேறு.]

இந்நூல் அட்டாவதானி-அரங்கநாதகவிராய ரென்பார் இயற்றியது.
இதற்கு 'அரங்கநாதகவிராயர்பாரதம்' என மற்றொரு பெயருமுண்டு. இது வித்
துவான்கள் பல்லோராலுஞ் சிறப்புப்பாயிரஞ் சொல்லப்பெற்றுளது. ஐந்தாம்
வேதமெனவும் இதிகாசமெனவும், ஜயமெனவும் பலபெயர் வாய்ந்து விளங்கும்
மகாபாரதத்தின் சிறப்பினை யாவரே யெடுத்துரைக்கவல்லார் ? நம்தமிழ் மொ
ழிக்கண் நடைபெறும் மாபாரதங்கள் மூன்றும். அவை பெருந்தேவனார் பாரத
மும், வில்லிபுத்தூரர் பாரதமும், நல்லாப்பிள்ளையார் பாரதமுமாம். இவற்றுள்
முன்னது உரையிடையிட்டபாட்டுடைச்செய்யுளாயிருப்பது, சிலபகுதிகள்மட்
டிற் கிடைப்பதன்றி முற்றுங் கிடைக்கவில்லை. இரண்டாவதாகிய வில்லிபாரத
மோ 18 பருவங்களையுங் கூறாது 10-ஆம் பருவமாகிய சௌப்திகபருவத்தின்
முற்பகுதியோடு நின்றுவிட்டது. இனி மூன்றாவதாகிய நல்லாப்பிள்ளை பாரத
மோ வில்லிபாரதத்தின் செய்யுட்களையுமெடுத்துக்கொண்டு, இடையிடையே
வேறுசில கதைகளடங்கிய பாடல்கள் செறிக்கப்பெற்றும் உள்ளகதைகளும்
விரிக்கப்பெற்றும் செல்வதனோடு 18பருவங்களையுங் கூறுகின்றது. இது சில்
லாண்டுகளின் முன்னர் அச்சிடப்பட்டதெனினும் எக்காரணம் பற்றியோ பயி
லவழங்காதிருக்கின்றது. இனி இதுநிற்க நடுவட்கூறிய வில்லிபாரதத்தைப்
பூர்த்திசெய்யப்புகுந்தார் இருவர். அவர்கள் வரந்தருவாரும் அரங்கநாத கவிரா



யருமேயாவார். வரந்தருவார் பாரதம் இன்னும் பதிப்பிக்கப்படவில்லை. ஆதலின்
இவ்விரண்டு பாரதப் பிற்பகுதிகளையும் ஒருங்கே சீர்தூக்கியாராய்வதற்கு
அவகாசமில்லை. மேலும் வில்லிபாரதத்தில் வரந்தருவார் பாடிய பாயிரச்
செய்யுட்களுக்கும் வரந்தருவார் பாரதச் செய்யுட்களுக்கும் வேறுபாடு நடை
உண்மைபற்றி இரண்டனுசிரியரும் ஒருவரேயோ வென்றதோர் ஐயப்பா
டும் நிகழ்கின்றது. இனிக்குறிப்பெழுத வெடுத்துக்கொண்ட நூலினுசி
ரியராகிய அரங்கநாத கவிராயர் இற்றைக்குச் சற்றேறக்குறைய 150வருடங்
கட்குமுன்னர் இருந்தவர். இவர் துறைசைமா நகரென்னுந் துறையூரின்கண்
வதிந்த கோட்டீர்ச் சிற்றரசராகிய திருமலைரெட்டியாரது வேண்டுகோட்கி
ணங்கி இந்நூலை யாத்தனர். இது 2477பாடல்களானியன்றது; பாடல்கள
னைத்துங் கற்றோர்படித்து மகிழத்தக்க பெருமைவாய்ந்தன. சொன்னயம் பொ
ருணயம் கற்பனலங்காரங்கள் முதலியன ஆங்காங்குக் காணப்படுகின்றன.
இந்நூல் சாலிவாகனசகாப்தம் 1675-இல் அரங்கேற்றப்பட்டது. நூல்வந்த
வழி முதலியன கூறுமிடத்து "நாற்றிசையும் புகழ்குன்றைச் சேக்கிழார் குலச்
சொக்க நாதன்பேரன், சாற்றியிடு மட்டாவ தானரங்க நாதகவி தான் சொன்
னே" என்று கூறியகூற்றுக்கவனிக்கற்பாலதே. இதன்கண்ணேபாயிரச்சருக்
கம் முதற் சொர்க்காரோகணச்சருக்கம் இறுதியாக 46-சருக்கங்களுள. இது
310 பக்கங்கள்கொண்டது. இந்நூலின் கற்பனைகட்குதாரணமாக "அரிந்த
சிறை மீண்டுபெற்றே யணுகிடினு மணுகுமென வமரர்கோமான், றெரிந்து
வெளித்தகடுகொடு பிணித்தனபோ லருவிகளுற் றிசைபுந்தாழாச், சொரிந்த
மலர்ப் பொழில்புடைசூழ் வரையினிடைத் தோன்றினவத் தோகைமார்கள்,
விரிந்தபிறங் ககப்பொருள்கோண் டிறைமனைக்கு மேவுதல்போன் மீண்ட
மாதோ" என்ற பாடலைக்கொள்க. இது நல்ல கடிதத்தில் நன்கு பதிப்பிக்கப்
பட்டுளது. தமிழ்மொழியின்மீது ஆர்வமுடையார்யாவரும் இதனைவாங்கிப்
படிப்பார்களென்பது நிச்சயம். நம்முடைய சர்வகலாசாலையாரும் இந்நூலி
னேற்றத்தையுற்று நோக்கிப் பரீக்ஷைப்பாட நூல்களொன்றென இதனையு
மேற்படுத்துவாரெனில் நலமுண்டாகலாம்.

**சித்தாந்தவசனபூஷணம் :**

[இதுசென்னைப் பண்டிதமித்திரயந்திரசாலையிற் பதிப்பித்தது. இதன்
விலை ரூ 1-0 0 தாபாற்கூலி வேறு.]

இந்நூலையியற்றினர் மகா-ள-ள ஸ்ரீ அஷ்டாவதானம் - பூவை-கலியாண
சுந்தரமுதலியாரவர்கள். இது சைவராயினர் யாவர்க்கும் இன்றியமையாத
தோர் கையுறையா யிருக்கத்தகுந்தது. "இத்தகைய முதனூலாகிய ஞானசாஸ்
திரம் தமிழிலிருந்தும், இச்சாஸ்திரத்தினுக்கு வழிநூல் சார்புநூல்கள் பலவேற்
பட்டும், இவையாவும் பத்தியரூபங்களா யிருத்தலினாலேயும், இவைகட்கு ஏற்
பட்டுள்ள வுரைகள் விஸ்தாரமான பரிபாஷைக் கலப்பாயிருத்தலினாலேயும்,
இலக்கியவிலக்கணம் நன்கு கற்றவித்துவான்களிற் சிலரேயன்றி மற்றையர்
பலரும் இச்சாஸ்திரங்களிற் பழகாது வாணாளை வீணாக்கழித்து வருகின்றன
ரென்பது யாருமறிந்ததே. ஆகையால் எத்தகையரும் எளிதிலுணர்ந்து உண்
மைதேர்ந்து உய்வதற்கு எளியவசனரூபமான நடையில் ஏது திருட்டாந்த
பூர்வகமாயும், ஆட்சேப சமாதானங்களுடனும் பரபட்சசுபட்சமாய்ச்சித்தாந்த
வசனபூஷணம் என்னும் சாஸ்திரத்தினை இயற்றித் தமிழ்நாடுமுழுவதும்
சுத்தாத்தாந்தவைதிக சைவமணம் பரிமளிக்கும்படி வெளியிடலாயிற்று" என்ற

நூலாசிரியரது உபோற்காதத்தினால் இந்நூலியற்றற்காரணம் ஈதென்பது வெளியாயிற்று. இவர்தமது உபோற்காதத்துட் கூறியவனைத்தும் எமக்கும் உடன்பாடேயாம். இனியிந்நூலின்கட் பதியிலக்கணம், பசுவிலக்கணம், பாசவிலக்கணம், சத்தசத்திலக்கணம், தசகாரியவிலக்கணம், அவத்தையிலக்கணம், உணர்த்துமுறை யிலக்கணம், திக்கையிலக்கணம், சாதனவிலக்கணம், ஞானவிலக்கணம், ஞானிகளிலக்கணம் அத்துவிதமுத்தியிலக்கணம் என்னும் 12 அதிகாரங்களுள. இவையனைத்தும் இனிமையும் தெளிவும் வாய்ந்த நல்ல செந்தமிழ் நடையில் வரையப்பட்டுள. எளியநடையின் எழுதப்பட்டுளபுறச்சமய நூல்களின் பாற்செல்லும் இளஞ்சிறார்கள் இனி அங்ஙனஞ் செல்லாது சைவசித்தாந்தத்தின் வழித்திரும்புதற்கு இஃதோர் பெருங்கருவியுமாகின்றது. இத்தகையதோர் நூல்வெளிப்பாட்டினைப் பல்லாண்டுகட்கு முன்னரே யெதிர்பார்த்தனம்; எனினும் இப்போழ்தாதல் வெளிப்பட்டமை பற்றிக் கழிபேருவகை பூக்கின்றோம். இது 336பக்கங்கள்கொண்டது. நல்ல பளபளப்புள்ள கடிதத்திற் பெரியவெழுத்துக்களில் நன்குபதிப்பிக்கப்பட்டுளது. இவ்வரிய வசனசாஸ்திரத்தைத் தமிழராயினர் யாவரும்படித்து உய்வார்களென நம்புகின்றனம்.

## துர்க்கபூஜை:

[இது சென்னை வெ. நா. ஜூபிலி அச்சியந்திரசாலைற் பதிப்பிக்கப்பட்டது. இதன்விலை அணா 8 ; தபாற்கூலி வேறு.]

இன்பவல்லியின் 22–ஆம் மலராகிய இந்நூல் மகா ா ா-ஸ்ரீ த. ரா ஸ்ரீநிவாஸ ஐயங்கார், பி. ஏ இயற்றியதோர் தமிழ்க்கதை. இவர் இதற்குமுன்னே வித்தியாரண்யநகரம், பர்துலை, நன்றியறியாமகன்முதலிய கதைகள் எழுதிவெளியிட்டிருக்கின்றனர். இதுபோழ்துவெளிப்பட்டு உலவாநிற்கும் அபிநவபத்திரிகை என்பதன் பத்திராதிபரும் இவரே. இவர் சாமான்யசனங்களின் அபிவிருத்தியைக்கருதி அவர்களுடைய சுவைக்கியைந்தவண்ணங் கதைசொல்லத்தக்க வன்மைவாய்ந்தவ ரென்றபெயர் முன்னரே பெற்றுளர். இந்நூலும் அப்பெயரினை வலியுறுத்துவ தாகின்றதேயன்றி வேறன்று. இது கும்பகோணக் கலாசாலைப் புலவர் ஸ்ரீமான் பிரமஸ்ரீ சுந்தரராம ஐயரவர்களுக்கு உரிமையாக்கப்பட்டுளது. இச்செயல் நூலாசிரியரது நன்றியறிவினுக்கோர் அறிகுறியாகின்றது. இந்நூல் 12 அத்தியாயங்களுடையது; 136பக்கங்கள்கொண்டது. இதன்கண்ணே ஜனங்களுக்குளுள்ள சிலதீயவழக்கங்களும், கேடுபயக்கவல்ல சிலவீணான நம்பிக்கைகளும், ஊர்காவலரால் நிகழும்பலவகைத் தீங்குகளும் இவையெனச் சுட்டப்பெற்றுக் களையப்படுமாறு மிகவும் நேரிதே. இதுயாவருக்கும் பொருள்விளங்கத்தக்க தெளிவானதமிழ் நடையிலெழுதப்பட்டுளது. நல்லகடிதத்தில் நன்றாக அச்சிடப்பட்டுளது. இக்கதையின்முடிவு விசாரணையென்னும் பிறிதொருநூலிற் காணலாமென்று இந்நூலாசிரியர் தாமே கூறியபடி அதனைவிரைவில் வெளிப்படுத்துவாரென் றெண்ணுகின்றோம்.

## கமலினி :

[இது டி. ஆர். சந்திரஐயரவர்களாற் சென்னைஸ்காட்டிஷ் அச்சியந்திரசாலையிற் பதிப்பிக்கப்பட்டது. இதன்விலை அணா-10 ; தபாற்கூலிவேறு.

இந்நூல் இன்பவல்லியின் மூன்றும்மலராம். இது வெகுநாண் முன்னரே யரும்பியும் இப்போழ்துதான் மலர்ந்தது. இதன்பகுதிகளிற்பெரும்பாலன



நமது 'ஞானபோதினிப்பத்திரிகையிற் பிரசுரிக்கப்பட்டுள. இந்நூலினாசிரியராவார் ம-ா-ா-ஸ்ரீ சருக்கை-இராமசாமி ஐயங்காரவர்கள் பி. ஏ. 'சுகுணசுகேசர்' என்னும் நாடகத்திற்கும், 'கட்டுரைத்தொகுதி' என்னும் வசனநூலிற்கும் ஆக்கியோர் இவரே. ஒருதீச்செயல் பலவகைத்தீச்செயல் கட்குங் காரணமாகி இறுதியில் தானுமழிந்து தன்னையாக்கினானையு மழித்தேவிடுமென்பதும், நற்செய லொன்று பல்வகைப்பட்ட நல்ல செயல்கட்குங் காரணமாகி, இறுதியில் தானும்விளங்கித் தன்னையாக்கினானுக்கும் ஒளியும் மகிழ்ச்சியுந் தந்தேவிடுமென்பதும் இக்கதையினின்றும் நன்குவெளியாகின்றன; முற்காலத்திலிருந்த அரசரியல்பும், குடிகளியல்பும் சிறைச்சாலையினியல்பும், சிறைகாவலரியல்பும் பிறவும் இதன்கண்ணே கூறப்பட்டுள. என்னதுன்பம்வரினுங் கலங்காத சிந்தையுடைய மதிமுகனும், தாதைபிரிவாற்றாமையு மதிமுகன்பாற்காதலும் மூதிர்ந்துழலுங்கமலனியும், பொருளாசையும் அதிகாரப்பிரியமும் மிகவுமுடைய சத்தியகீர்த்தியும் சுந்தரனும், இரக்கமுள்ளமனமுடைய விஜயையும், எடுத்த காரியத்தை யெவ்வாற்றானும் முடிக்கவல்ல ஆற்றலுள்ள வீரமார்த்தாண்டனும், கலைநலஞ்சான்ற ஸ்ரீநிவாசனும் ஆகிய விவர்கள்படிக்குநர் யாவருங் கவனிக்கத்தக்கார். இவ்வினியகதை உலகவியல்போ டோராற்றானொத்திருப்பதனோடு கையிலெடுத்தாற் படித்துமுடிக்குமளவும் படிப்போர்சிந்தையைத் தன்கண்ணேயே யொருக்கிச் செலுத்தவல்ல வனப்பும்வாய்ந்தது ; புருஷரும்பெண்டிரும்யாண்டும் இடர்படுதலின்றிப் படிக்கத்தக இனிமையும் தெளிவுமுடைய நல்லசெந்தமிழ்நடையில் எழுதப்பெற்றது. இந்நூல் 28அத்தியாயங்களுடையது ; 170 பக்கங்கள் கொண்டது ; நல்லகடிதத்தில் நன்கு பதிப்பிக்கப்பட்டுளது. இதனை யாவரும் வாங்கிப் படித்துக் குணநலங்கண்டு மகிழ்வார்களாக.

## மதிகேட்டமாரன்கதை:—

'அடாத சோதனை' யென்னும் மறுபெயருடையீ இச்சிறுகதை யாழ்ப்
[பாணம் சைவப்பிரகாச யந்திரசாலையிற் பதிப்பித்தது. இதன் விலை அணா 4; தபாற்கூலி வேறு.]

இந்நூலை யாக்கினார் கதாநந்தப் பெயருடையார். இஃது ஆங்கில மொழியினுள்ளதோர் சிறுகதையின் மொழி பெயர்ப்பாகும். வெள்ளைக்காரர் நடைக்கும் சுவைக்குமே யேற்றதாகிய இக்கதை, அவரினின்றும் நடையினும் சுவையினும் வேறுபட்ட நம்மவர்க்கும் ஏற்றதாகுமோ என்ற ஐயப்பாடு முதற்கண்யாவருக்கும் நிகழும். எனினும் இந்நூலினை முற்றும் படித்தபின்னர் அவ்வைய மொழிந்து விடுமென்பது திண்ணம். மனைவியராவார் சோர்வினாற் சிற் சிலவேளைகளில் தவறிவிடக்கூடிய இடங்களிவை யெனவும், அவ்வவ்விடங்களிற் பிழைபோகாது தமது கற்பினைப் பாதுகாத்து ஒழுகவேண்டியவாறு ஈதெனவும் இந்நூல் தெளிவு பெறக்காட்டுகின்றது. தலைவர்கட்குந் தலைவிகட்கும் ஒருங்கே நீதிபோதிக்கவல்ல இந்நூலினை யாவரு மேற்றுப் படிப்பாரென்றெண்ணுகின்றோம். இடையிடையே முன்னோர் செய்யுட்களிற் சில மேற்கோள் காட்டப்பட்டுள. இது 40 பக்கங்கள் கொண்டது; நல்ல நடையிலெழுதப்பட்டுளது ; நன்கு பதிப்பிக்கப்பட்டுளது. இன்னும் நம்மவர்க்கேற்ற கதைகள் பல வெழுதிக் கதாநந்தர் யாவரையுங் களிப்பிப்பாராக.

# EDITORIAL NOTES.
## பத்திராதிபர் குறிப்புக்கள்.

**சித்தாந்ததீபிகை:**—இப்பத்திரிகையின் மே மாதத்துச் சஞ்சிகையிற் பாரிஸ் நகரத்துத் தமிழ்ப்புலவர் ஜூலியன் வின்சன் என்பவர் எழுதிய 'சில விவாதவிஷயங்கள்' என்றது மிக விநோதமாயிருக்கின்றது. அவற்றிற்கு விடை எழுதியபண்டிதர் சவரிராயபிள்ளை யவர்கள் கூற்று அதனினும் மிக விநோதமாயிருக்கின்றது. ஜூன்மாசத்துச் சஞ்சிகையில் டி. வீரபத்திர முதலியாரவர்கள், பி. ஏ. பி. எல். எழுதிய 'தொல்லைநற்றமிழில் ஆந்திரச்சந்திக்கு உதாரணங்கள்' என்றவிஷயம் மிக நுட்பமுடையதாய் விளங்குகின்றது.

***

**இந்திய விருந்தினர் பொருட்டு நேர்ந்தசெலவு:**—நமது அதிமேன்மை தங்கிய சக்கிரவர்த்தியாரவர்களது மகுடாபிஷேகத்தினிமித்தம் ஆங்கிலத்துரைத்தனத்தாரால் அழைக்கப்பெற்றுச் சென்ற இந்திய விருந்தினர்கட்கு ஆங்கிலர் பல்வகை உபசாரங்கள் செய்து தக்க வசதிகளிலமைத்து வேண்டிய சௌகரியங்களுஞ் செய்தனர். இங்ஙனஞ் செய்ததனால் மிக்க பணஞ் செலவாயிற்று. இச்செலவு தொகையை இந்தியாவின் தலையிற் கட்டவேண்டுமென்று முதற்கண் தீர்மானஞ்செய்தனர் துரைத்தனத்தார். பின்னர் இந்திய கனவான்களுட் பலரும் ஆங்கிலகனவான்களுட் பலரும் பலபத்திரிகைகளும் இச்செயல் நேரிதன் றெனமுழங்கினர். அம்முழக்கங் கேட்டுத் துரைத்தனத்தார் கருணைகூர்ந்து அச்செலவினை இந்தியாவின் றலையினின்றும் நீக்கித் தாமே யிறுப்பதாக ஒத்துக்கொண்டனர். இதுவன்றோ பெருந்தன்மையென்பது?

***

**பிரமஸ்ரீ ஸ்ரீநிவாச சாஸ்திரியார் மரணம்:**—இவ்வேதியர் சிகாமணி சமஸ்கிருதபாஷைகைவந்த நிபுணர்; வடமொழிக்கணுள்ள வேதசாஸ்திரங்களெல்லாம் ஐயந்திரிபறக்கற்றுணர்ந்தவர்; பல்லாண்டுகளாகப் பிரமவித்தியா என்ற பத்திரிகையை நடத்திவந்தவர்; வைத்தியநாததீக்ஷிதீயம் என்னும் ஆசாரநூலை வியாக்கியானத்துடன் பிரசுரித்து வெளிப்படுத்தியவர்; தசோபநிஷதங்களொழிந்த ஏனைய உபநிஷதங்களிற் பலவற்றை யுரையொடும் அச்சிட்டவர்; யாகங்கள்செய்து 'யஜ்வா,' 'தீக்ஷிதர்' முதலிய பட்டங்கள் பெற்றவர்; தென்மொழி வடமொழி யென்ற இரண்டு பாஷைகளினும் பிரசங்கமாரி பொழிந்தவர்; இந்துமதஸ்தாபனார்த்தம் உழைத்துவந்த கனவான். இத்தகைய நலங்களெல்லாஞ் சிறக்கப்பெற்று விளங்கிய இப்புலவர் பிரான் கோபிசெட்டி டாளையம் என்றவூரின்கட் பிரசங்கஞ் செய்யச் சென்றவிடத்திலே, தமது ஆன்மா ஒடுங்கி வருநிலைமைகண்டு பக்கத்திலிருந்த நண்பர்களனைவரையுமழைத்துத் தாம் யோகசமாதியினிறங்கி யாக்கையை வீழ்த்திப் பிரமமயமாக மிளிர்ந்து நின்றார். இவரது பிரிவு அவரைச் சார்ந்த பல்லோர்க்கும் பெருந்துக்கத்தை விளைவியா நின்றது. இந்து மதத்திற்கு ஊன்று கோல் போலிருந்த இவருமொழிந்தார். இது காலக்கொடுமையோ? கடவுளாணையோ?

# ஞானபோதினி

ஒரு மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

தாமின் புறுவ துலகின் புறக்கண்டு
காமுறுவர் கற்றறிந் தார்—திருக்குறள்.

OFFICE 6- 02

சம்புடம். VI } 1902ஞு அக்டோபர்மீ 20உ. } இலக்கம் 3.

விஷயங்கள்.

| | பக்கம். |
|---|---|
| சர்வகலாசாலை விசாரணை —II. பத்திராதிபர். | ... 81 |
| ஔவையார்:—சி. சுப்பிரமணியாசாரியர், பி.ஏ., எல்.டி | ... 83 |
| தமிழணியிலக்கணவரலாறு:—பி. குருராவ், எம்.ஏ., எல்.டி. | ... 91 |
| குலசேகராழ்வார் வைபவம்:—தி. செல்வக்கேசவராய முதலியார், எம்.ஏ. | ... 95 |
| சாஸர்: பிரதம ஆங்கிலக்கவிவாணன்:—எம். எஸ். பூர்ணலிங்கம் பிள்ளை, பி. ஏ. | ... 99 |
| திருவள்ளுவர் மதம்:—சருக்கை கி. சுந்தராசாரியர் | ...102 |
| ஒரு முனிவன்:—தி. அ. இராமலிங்கம், பி. ஏ. | ...106 |
| ஒரு சைவோபந்நியாசம்:—ஸ்ரீ காசிவாசி - ஸ்ரீலஸ்ரீ செந்திநாதையரவர்கள் | ...109 |
| பத்திராதிபர் குறிப்புக்கள்:— | ...119 |

பத்திராதிப[illegible] { எம். எஸ். பூர்ணலிங்கம் பிள்ளை, பி. ஏ.
வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியார், பி. ஏ.

சென்னை:
மினெர்வா அச்சுக்கூடத்திற்
பதிப்பிப்பது.

1902

வருஷ சந்தா ரூ. 2—8—0.
சஞ்சிகை ரூ. 0—4—0.

# ஞானபோதினி

ஒரு மாதாந்தத் தமிழ்ப்பத்திரிகை.

சம்புடம். VI. | 1902ஷு அக்டோபர்மீ 20உ. | இலக்கம் 3.


## THE UNIVERSITIES COMMISSION
## சர்வகலாசாலை விசாரணை

II.

இனி மேற்கூறிய விசாரணை சபையாரால் சுதேச பாஷை நீக்கமும், சம்ஸ்கிருத பாஷையின் இன்றியமையாமையும் வலியுறுத்தப் படுகின்றன. பள்ளிக்கூடப் பரீக்ஷைகட்குச் சுதேச பாஷைகளுண் டெனவும், சர்வகலாசாலைப் பரீக்ஷைகட்கு அவைகளில்லையெனவுங் கூறுவதனால் விளையுந் தீங்குகள் பலவாமென்பதிற் றடையில்லை. இக் காலத்திலுள்ள மாணாக்கர்கள் சர்வகலாசாலைப் பரீக்ஷைப் பாடங்களில் விசேஷ கவனமுடையாரே யன்றி, மற்றுப் பள்ளிக்கூடப் பரீக்ஷைகளிற் கவனமுடையாரல்லர். ஆதலிற் சம்ஸ்கிருதப் படிப்பே சுதேசபாஷைப் படிப்பினும் மிகுமேயன்றி வேறில்லை. அவ்வாறு மிக வேண்டுமென்பதே சர்வகலாசாலை விசாரணை சபையாரது கருத்தாமென்று அவர்கள் தாமே வெளிப்படக்கூறியிருக்கின்றனர்.

அவர்கள் அங்ஙனங்கூறுதற்குற்ற காரணங்களைப்பற்றி யாம் ஆராயவேண்டுவது அவசியமே. அவையாவன: முதற்கண் ஏதேனும் ஒரு சுதேசபாஷையை மேற்கொள்வதனால், நாற்செல்வவாய்ப்புடையதும், ஏதேனுமொரு மனிதவர்க்கத்தாரின் கருத்துக்களும் செயல்களுமடங்கிய குறிப்புக்கள் நிரம்பியதுமாகியதோர் உயர்தனிச் செம்மொழியினுணர்ச்சியா னேற்படக்கூடிய அநுகூலங்களனைத்தையும் மாணாக்கரிற் பலர் இழந்தவராவாரென்றும்; சுதேசபாஷை

களின் இன்றியமையாமையைப்பற்றி விசேஷ ஆர்வத்தோடு வாதாடுவோரும், சமஸ்கிருதத்திற்குச் சமானமாக, நூற்செல்வவாய்ப்புடையதோர் இந்திய சுதேசபாஷை யெதுவு மில்லையென்று கூறுதிற்கிணங்குவரென்றும்; இரண்டாவது, ஓர் உயர்தனிச் செம்மொழியைக் கற்றலானேற்படும் உள்ளப்பயிற்சியினளவு, ஒரு சுதேசபாஷையைக் கற்றலானேற்படுவதனினும் மிகவும் அதிகமாமென்றும்; மூன்றாவது, உயர்தனிச்செம்மொழிகளின்கல்வி, அவற்றோடியையுடைய சுதேசபாஷைகளின் வளர்ச்சிக்கு, இன்றியமையாச்சிறப்பினதாமென்றும்; சென்னையிலுள்ள சுதேசபாஷைகளைக்காட்டினும், வங்காளத்திலும் பம்பாயிலுமுள்ள சுதேசபாஷைகள் வெகுவிரைவாக முதிர்ச்சியடைந்து நூற் செல்வவாய்ப்புடையனவாய்ப் பொலிதல் இவ்வுண்மையைவலியுறுத்து மென்றுங் கூறப்படுவனவாம். இக்காரணங்களின் உண்மையை யாராயுமிடத்துத் தமிழொன்றனையே யுதாரணமெடுத்து வாதிப்போம்.

முதற்கண் தமிழை யுண்ணாட்டுச் சுதேசமொழிகளுட்படுத்ததே பெரும்பிழை. வடநாட்டுச்சுதேச பாஷைகட்குச்சம்ஸ்கிருதம் உயர்தனிச்செம்மொழியாதல்போலத் தென்னாட்டுச் சுதேசபாஷைகட்குத் தமிழே உயர்தனிச் செம்மொழியாகுமாறுணர்ந்து, இதனையும் உயர்வகுப்பிற்படுத்தலின்றி, இழிபகுப்பின்பாற் படுத்தமைநேரிதன்று.

"பல்லுயிரும் பலவுலகும் படைத்தளித்துத் துடைக்கினுமோ
ரெல்லையறு பரம்பொருண்முன் னிருந்தபடி யிருப்பதுபோற்
கன்னடமுங் களிதெலுங்குங் கவின்மலையா ளமுந்துளுவு
முன்னுதரத் துதித்தெழுந்தே யொன்றுபல வாயிடினு
மாரியம்போ லுலகவழக் கழிந்தொழிந்து சிதையாவுன்
சீரிளமைத் திறம்வியந்து செயன்மறந்து வாழ்த்துதுமே"

என்றார்காலஞ்சென்ற திருவனந்தைச் சுந்தரம்பிள்ளையவர்களும். இக்கருத்துக்காலஞ்சென்ற தி. மி. சேஷகிரிசாஸ்திரியாரவர்கட்குமுடன்பாடாதல் அவரது ஆந்திரசப்த தத்துவநூலினால் தெற்றென விளங்கும். மேலும் சம்ஸ்கிருதத்தை மட்டிற்படுத்துப் பண்டைக்காலத்து ஆரியரது ஆசாரங்களுங்கருத்துக்களும் உணர்தல்மட்டும்போதுமா? தமிழின்கண்ணும் வடமொழியினும் அதிகமில்லையாயினும், அதற்கிணையாகவாதல் நூற்செல்வ வாய்ப்புண்டென்பது தேற்றம். வடமொழி தென்மொழியென இவ்விரண்டும் ஒருநிகரானவாகவேபுராவிக்



கப்பட்டுவந்திருப்ப, இப்போது மட்டில் ஒன்றையுயர்த்துப் மற்றொன்றைத்தாழ்த்து முரைத்தல் சாலாதென்க. இனிச்சிறப்புடைய தனிச் செந்தமிழ் நூல்களை மாணாக்கராயினர் இப்போழ்தேற்படும் விதியினாற்படியாது போவரன்றே? இந்நஷ்டம் எவ்வாறு ஈடுசெய்யப்படுமோ? அறிகிலேம். நிற்க.

சம்ஸ்கிருதத்திற்கு இணையாக வேறெந்த இந்திய பாஷையும் எடுத்துக்கூறுந்தரத்ததன்றென்றல் துணிந்து கூறுதலாம். எமது தமிழ்மொழியும் அதற்கு எவ்வாற்றானும் சமமானதேயன்றித்தாழ்ந்ததன்று. இது வடமொழிக்கடலும் தென்மொழிக்கடலும் நிலைகண்டுணர்ந்த சிவஞானமுனிவர்க்கு முடன்பாடென்க. "இருமொழியு நிகரென்னு மிதற்கைய முளதேயோ?" என்று அம்முனிவர்பிரான் முழங்கியமுழக்கத்தினைச்சற்றே செவியி லேற்பீர், அறிவான்மிக்கீர்!

எமது பைந்தமிழும் ஓர் உயர்தனிச் செம்மொழியாமாதலின் இரண்டாவதாகவும் மூன்றாவதாகவுங் கூறியகாரணங்கள் எமக்கும் உடன்பாடேயாம். ஆகவே தமிழினை ஒரு சுதேசபாஷையெனக்கருதி விதிகள் வகுத்தல் பிழையெனத்தெருண்டு அதற்குத்தகவொழுகுவாராக.

இனிச்சர்வகலாசாலை விசாரணையினுமேலெற்படும் ஏனைய விஷயங்களைப்பற்றிப் பிறிதொருசஞ்சிகையிற் பேசுவோம்.

பத்திராதிபர்.

---

## AUVAIYAR.
## ஔவையார்.

---

இனி இரண்டாம் ஔவையார் இயற்றிய நூல்களை ஆராய்வாம்.

### 1. நல்வழி.

இவ்வினிய சிறியநூலில் எடுத்துக்காட்டப்பட்டிருக்கும் நன்னெறிகள் பல. அவற்றுள்முக்கியமாகக் காட்டப்பட்டுள்ளன விதிவழியேமதிசெல்லுமென்பதும் வினைப்பயனைவெல்வதற்கு விமலன் அடியேதுணையல்லாமல் வேறெவ்வாற்றாலும் முடியாதென்பதுமாம். தெய்வப்புலமைத்திருவள்ளுவரோ இவ்வாறன்றித்,

‘தெய்வத்தா னாகா தெனினு முயற்சிதன்
மெய்வருத்தக் கூலி தரும்’

என்னுங்குறளில் முயற்சி திருவினையாக்குமெனவும் முயற்சியு டையார் இகழ்ச்சியடையார் எனவும் வலியுறுத்தியது மனத்தை நற்கருமத்தின்கண் உற்சாக மூட்டற்பாலது. இவற்றால், இரண்டாம் ஔவையார் விதிவாதிய ரெனினும் கொண்டமதத்திற் பிடிவாத முற்றவர் என்பதும், சர்வமதாபிமானியராகுந் திருவள்ளுவர் மனச் சக்தியிலும் விடாமுயற்சியிலும் முழுநம்பிக்கையுற்றவ ரென்பதும் வெளிப்படை. ஆராய்ந்துணர்பவர்களுக்கு மேற்கூறப்பட்டுள்ள இருதிறத்தார் கோட்பாடுகளும் உண்மையேயாகும். இறந்தகாலத் திற்செய்த கருமத்தின் பயன் நிகழ்காலத்தில் நிச்சயமாகவே வந்தெ ய்து மென்பர் ஔவையார்; அவ்விறந்தகாலகருமப்பயனுக்கு விரோ தமாக வென்றாலும் நிகழ்காலத்தில் ஒருகருமஞ்செய்யின் அக்கரும முயற்சியாளேனும் எதிர்காலத்திற் பயனெய்தாதுவிடாது என்பர் திருவள்ளுவர். ஆதலின் ஒருவர் கூறியதையொருவர் வலியுறுத்து கின்றனரே யாவர். மற்று, ‘எல்லாப், புலவர்க்கும் வெண்பாப் புலி’ யென்று இவ்விரண்டாம் ஔவையாரே கூறியபடி இந்நூல் வெண் பாப்பாவால் இயற்றப்பட்டுள்ளது. அழகிய எளிய தெளிந்த நடை யில் எழுதப்பட்டுள்ளது. முதலாம் ஔவையார் இயற்றிய மூது ரையினைப் பெரும்பாலும் ஒத்திருக்கின்றது. இரண்டாம் ஔவையா ரின் சில தத்துவக்கோட்பாடுகளை வற்புறுத்திக் கூறுகின்றது. அன்றி யும், இவ்வுலகத்துச் சிலநாட் பலபிணிச் சிற்றுயிர்கள் கடைத்தே றும் வண்ணம் பல நீதிநெறிகளைப்போதிக்கின்றது. அத்தகைய நீதி கள் பலவற்றுள்,

‘பிச்சைக்கு மூத்த குடிவாழ்க்கை பேசுங்கா
லிச்சைபல சொல்லி யிடித்துண்கை—சிச்சி
வயிறு வளர்க்கைக்கு மான மழியா
துயிர்விடுகை சால வுறும்’

என்பது இச்சகம் பேசுதலின் இழிவையும்;

‘ஆன முதலி லதிகஞ் செலவானால்
மான மழிந்து மதிகெட்டுப்—போனதிசை
யெல்லார்க்குங் கள்ளனா யேழ்பிறப்புந் தீயனாய்
நல்லார்க்கும் பொல்லனாம் நாடு’



என்பது வீண்செலவால் விளையுங் கேடுகளையும்;

‘மானங் குலங்கல்வி வண்மை யறிவுடைமை
தானந் தவமுயற்சி தாளாண்மை—தேனின்
கசிவந்த சொல்லியர்மேற் காமுறுதல் பத்தும்
பசிவந் திடப்பறந்து போம்.’

என்பது பசிநோய் வலியையும்;

‘கல்லானே யானாலுங் கைப்பொருளொன் றுண்டாயின்
எல்லாருஞ் சென்றங் கெதிர்கொள்வ—ரில்லானை
யில்லாளும் வேண்டாண்மற் றீன்றெடுத்த தாய்வேண்டாள்
செல்லா தவன்வாயிற் சொல்’

என்பது வறுமையின் சிறுமையையும் நன்றாக விளக்குகின்றன. இவைபோல்வன இன்னுஞ் சில பின்னாற் கூறுவாம்.

## தனிப்பாடற்றிரட்டில் 70-பாடல்கள்.

இத்தனிப்பாடற்றிரட்டிலுள்ள பாடல்களில் இரண்டாம்ஔவை யார் பாடியது எழுபதே. இவை பலவகைப் பாக்களிற் பல காலங்களிற், பல காரணங்களைக்கொண்டு பாடியனவாகும். இவற்றுள் ஒவ்வொன்றிலும் தத்துவம் அல்லது ஒழுக்க முறையாதானு மொன்று போதிப்பதாகும். பாடல்களிற் பெரும்பாலன மிக்க எளிய நடையில் எழுதப்பட்டுள்ளன; சில இடங்களிற் கீழ்மையான நடை யுங் காணப்படுகின்றது. உதாரணமாக,

‘ஈ, தலைக்குறை கமலத்தைச் சாருந் தன்மைபோல்’

என்பதிலுள்ள உவமையை உற்று நோக்குக. இரண்டாம் ஔவை யார் பாடிய அரிய விஷயங்கள் அடங்கிய சில தனிப்பாடல்களையெடு த்துக் காட்டுவாம்.

‘சித்திரமுங் கைப்பழக்கஞ் செந்தமிழு நாப்பழக்கம்
வைத்ததொரு கல்வி மனப்பழக்கம்—நித்த
நடையு நடைப்பழக்க நட்புந் தயையுங்
கொடையும் பிறவிக் குணம்.’

‘சொல்லாம லேபெரியர் சொல்லிச் சிறியர்செய்வர்
சொல்லியுஞ் செய்யார் கயவரே—நல்ல
குலாமாலை வேற்கண்ணாய் கூறுவமை நாடிற்
பலாமாவைப் பாதிரியைப் பார்.’

‘கற்றதுகைம் மண்ணளவு கல்லா துலகளவென்
றுற்ற கலைமடந்தை யோதுகின்றாள்—மெத்த

வெறும்பந் தயங்கூற வேண்டாம் புலவீ
ரெறும்புந்தன் கையாலெண் சாண்.'

' கருங்காலி கட்டைக்கு நாணுக்கோ டாலி
யிருங்கதலித் தண்டுக்கு நாணும்'

' நேசனைக்கா ணாவிடத்து நெஞ்சார வேதுதிசெ
யாசானை யெவ்விடத்து மப்படியே—வாச
மனையாளை மஞ்சத்தின் மைந்தர்தமை நெஞ்சில்
வினையாளை வேலைமுடி வில்.'

' தாயோ டறுசுவைபோந் தந்தையொடு கல்விபோஞ்
சேயோடு தான்பெற்ற செல்வம்போம்—ஆயவாழ்
வுற்றா ருடன்போ முடன்பிறப்பாற் றோள்வலிபோம்
பொற்றாலி யோடெவையும் போம்.'

இவைபோல்வன பிறபாடல்களும் அநேகம் உள்ளன.

### 3. ஞானக்குறள்.

இந்நூல் 310 குறள் வெண்பாக்களால் இயற்றப்பட்டுள்ள ஓர் அத்வைத நூல்; யோகசமாதியைச் சிறப்பித்துக்கூறுவது. அத்வைதமார்க்கத்தை முதன் முதல் வலியுறுத்தினவர் ஆறாவது அல்லது ஏழாவது நூற்றாண்டில் வசித்தவராகிய சங்கராசாரிய ராகையினாலும்; * இரண்டாவது, இந்நூலில்

வடசொற்பிரயோகம் அதிகமாகக்காணப்படுவதாலும்; மூன்றாவது, நூலினடையும் தற்காலநடையாகக் காணப்படுவதாலும், ஞானக்குறள் பழைய நூலன்று பிந்திய நூலேயாமென்பதற்குச் சிறிதுஞ் சந்தேகமில்லை. யாவரும் ஒப்புக்கொள்ளுகிறபடி இந்நூல் ஔவையார் இயற்றியதாயின் இரண்டாம் ஔவையாரே என்பது வெளிப்படை. கால்டுவெல் தேசிகரும் ஔவையார்குறளென்னும் இவ்வத்வைத நூல் முகம்மதியர் தென்னிந்தியாவிற்கு வந்ததற்குப் பிந்தியே இயற்றப்பட்டிருத்தல்வேண்டும்' என்றெழுதுகிறார். இவ்

---

* இந்நூலினிடையிடையே சைவசித்தாந்த நெறிகள் சிலவும் விளங்கியிருப்பதனாலும், அச்சைவசித்தாந்தத்தை நிலைநிறுத்தினவர் கி. பி. பதின்மூன்றாம் நூற்றாண்டின் முற்பகுதியில் வசித்த மெய்கண்டதேவராமாதலினாலும் இஞ்ஞானக்குறள் அக்காலத்தின் பின்னரே இயற்றப்பட்டிருத்தல் வேண்டும் என்று கொள்வாருமுண்டு. அஃது உண்மையாயின், இரண்டாம் ஔவையார் கி. பி. பதின்மூன்றாம் நூற்றாண்டில் வசித்தனராக, ஞானக்குறள் போலிநூலாய் முடியுமாறு அறிக.



விரண்டாம் ஔவையார் அத்வைதநிலை அவர் இயற்றியுள்ள நல்வழியிலும் விளக்கப்பட்டிருக்கிறது; அது மேலே எடுத்துக்காட்டுவாம். இந்நூலில், வாயுவியக்கம் மனவியக்கம் நீக்கிநின்ற சமாதிநிலையிற் பயின்றுவருவதால் நீடூழிகாலம் சீவித்திருக்கலாமென்பது வலியுறுத்தப்பட்டிருக்கிறது. அதனை,

' வாயு வழக்க மறிந்து செறிந்தடங்கி
லாயுட் பெருக்க முண்டாம்'

என்னும் குறளால் அறிக. இன்னுஞ்சில அழகிய குறட்களும் உள. அவற்றைத் 'தத்துவநிலை' என்னும் அதிகாரத்தின் கீழ் எடுத்துக்காட்டுவாம்.

### 4. பந்தனந்தாதி.

இந்நூல் வெண்பாப்பாவில் அந்தாதித்தொடையில் அமைத்துள்ள 100 பாடல்கள்கொண்டது. இது பந்தன் என்னும் வைசியர் கோமான் ஈகைத்தன்மையைக்குறித்து ஔவையார் பாடியதாகவும் அக்காலத்தில் அவருக்கு அவன் பொற்படாம் ஒன்றினோடு முதலாம் ஔவையாருக்கு அதியமான் நெடுமானஞ்சி அளித்தது போன்றதும் சாதலினின்றும் நீக்கவல்லதுமான அருநெல்லிக்கனியில் ஒருபாதி பரிசளித்ததாகவும் கூறுவர். இந்நூல் 69 - ஆம் செய்யுளில்,

' கூடற் றமிழ்ச்சங்கங் கொண்டாடுங் கோவணிகன் '

என்று கூறப்பட்டிருப்பதால் இந்நூல் கடைச்சங்கக் காலத்திலிருந்த முதலாம் ஔவையாரே இயற்றினர் என்று கூறவும் இடமுண்டு. என்றாலும், மேற்கூறியபடி தமிழ்ச்சங்கத்தாராற் கொண்டாடப்பட்ட வணிகர் கோமானுடைய சிறப்பை அவன் வம்சத்திற் பிறந்தவனாகிய பந்தன்மீது ஏற்றி ஒருவித காலவழுவமைதியாகப் புகழ்ந்தாரென்று கொள்ளுதலும் அமையும். இவ்வாறே திருவிளையாடற்புராணம் விறகுவிற்றபடலத்தில் ' மன்றலந்தெரியல் மார்பன் வரகுணன்' என்பவனைக் கடல் சுவறவேல்விட்டவனாகிய அவன் மூதாதையாம் உக்கிரகுமாரபாண்டியற்குரிய 'உவரிவென்றான்' என்னும் பெயரால் பரஞ்சோதிமுனிவர் குறித்திருப்பதும் அறிக. அன்றியும், பந்தனந்தாதியின் நூனடையும் தற்காலநடையாக இருக்
கின்றமை இக்கொள்கையை வலியுறுத்துகின்றது.

அஃதப்படியிருக்க, இந்நூலை இரண்டு ஔவையாருள் எவர் இயற்றினர் என்று கூறுதற்கும் பல ஆட்சேபனைகள் இருக்கின்றன. முதலாவது, அதியமான் அளித்த நெல்லிக்கனியின் சிறப்புசிறுபாணாற்றுப்படை நூலாசிரியர் திருக்குறளுரையாசிரியர் முதலியவர்களால் வியந்து கொண்டாடப்பட்டிருக்கவும், பந்தன் அளித்த நெல்லிக்கனியைக்குறித்துப் பழைய நூலிலாயினும் புதிய நூலிலாயினும் எங்கும் கொண்டாடப்பட்டிருக்கவில்லை. இரண்டாவது, இரண்டு ஔவையாரும் இயற்றிய நூல்களுள் எவ்வேட்டைத் திருப்பினும் அதிற் சொற்பொருளழகு மிகுந்து கிடக்கும்; இப்பந்தனந்தாதியோ சாரமற்ற திப்பி என்று சொல்லத்தக்கது. மூன்றாவது, இந்நூலில் தற்காலத்திய நவீனபதங்கள் அநேகம் எடுத்தாளப்பட்டிருக்கின்றன. உதாரணமாக, 34—ஆம் செய்யுளில்,

'நெல்லிக் கனியளித்த நீள்கவிகைக் கோமானென்
சொல்லுக் கவனே துரை'

என்பதன் கடைசிப்பதம் 'துரை' என்பதை நோக்குக. இவை போன்ற பல காரணங்களால் இப்பந்தனந்தாதி போலிநூல் என்று துணிகின்றோம்.

5. நவமணிமாலை
6. அசதிக்கோவை
7. நன்னூற்கோவை
8. நான்மணிக்கோவை
9. அருந்தமிழ்மாலை
10. கல்வியொழுக்கம்
11. தரிசனப்பத்து

இவ்வேழு நூற்களுங் கூட ஔவையார் அருளிச்செய்தனவாகவே பண்டிதர்கள் பாராட்டுகின்றனர். இவற்றின் ஆசிரியர் ஔவையாராயின் அவர் இரண்டாம் ஔவையாரே யாகக்கடவர். இந்நூல்கள் கைக்கு அகப்படாதகுறையால் ஆராய்ச்சிக்கிடமில்லாமற் போய்விட்டது. என்றாலும், இந்நூல்களிற் சிலவற்றின் பெயர் நவீனமாகக் காணப்படுகின்றனமையால் போலிநூல்களாகவும் இருத்தல் கூடும் என்று ஊகிப்பதற்கிடமுண்டு.

---

## VII. சமயம்.

இனி ஔவையார் சமயம் இன்னதென்று ஆராய்வாம். இரண்டு ஔவையாரும் ஒற்றுமையுற்ற சமயக்கோட்பாடுகளை யுடையவர். இருவரும் சுத்தசைவர்; ஆனாற் புறமதத் தூஷணஞ் செய்



யுங் கொடிய சைவரல்லர். அவர்கள் இயற்றிய தனிப்பாடல்கள் நீங்கலாக முழுநூல் ஒவ்வொன்றின் முகப்பிலும் விநாயகர் காப்புக் கூறப்பட்டிருப்பதனால் இருவரும் கணபதி பக்தர்களாவர். இவர்கள் சமயத்தை நூல்களினின்றும் மேற்கோள்காட்டி நிலைநிறுத்துவாம்.

முதலாம் ஔவையார்—'சிவத்தைப்பேணிற் றவத்திற்கழகு' எனக் கொன்றைவேந்தனிலும்; 'பால்புரை பிறைநுதற் பொலிந்த சென்னி, நீல மணிமிடற் றொருவன் போல' எனப் புறநானூற்றிலுங் கூறியிருப்பதனாற் சுத்த சைவராவர்; மற்று விஷ்ணுவைத், 'திருமாலுக் கடிமைசெய்' என்று ஆத்திசூடியிற் போற்றியிருப்பதனாற் கொடிய சைவரல்லர் என்பது புலப்படுகின்றது. அல்லாமலும், இவராலுபதேசிக்கப்பட்டு 'ஔவை பூஜை' யெனவும் 'செவ்வாய்ப் பிள்ளையார் பூஜை' யெனவும் வழங்கப்படும் கணபதி பூஜை இக்காலத்துஞ் சிலநாட்டில் நடைபெற்று வருவதாகப் புலவர் புராணத்திற் கூறப்பட்டுள்ளது.

இரண்டாம் ஔவையார்—'சிவாயநமவென்று சிந்தித்திருப்போர்க் கபாய மொருநாளுமில்லை' என்ற நல்வழிப்பாட்டாலும் 'செம்மான் கரத்தனருள் சேயா நெடியோனை, யம்மா னெனப்பெற்றருள்வேலா' என்ற தனிப்பாடலாலுஞ் சுத்த சைவராவர். மேற்கூறியதன் கடைசிவரியிற் கந்தபிரானைத் திருமாலின் மருமகனாகத் துதித்துளராதலிற் கொடிய சைவரல்லர்.

இனி ஔவையாரின் அரிய கொள்கைகளைத் 'தத்துவநிலை' 'ஒழுக்கநிலை' 'புலமை' என்னும் அதிகாரங்களின் கீழ்முறையே ஆராய்வாம்.

## VIII - தத்துவநிலை.

இரண்டு ஔவையாரும் விதிவாதிகள். இறந்தகாலத்திற் செய்த கருமத்தினளவாகவே நிகழ்காலத்திற் புரியுங் கருமத்தில் மனமெய்தும் என்னுங் கோட்பாட்டினை யுடையவர். இதனை மேற்கோள் கொண்டும் நிலைநிறுத்துவாம்.

முதலாம் ஔவையார்—'அடுத்து முயன்றாலு மாகுநா ளன்றி, எடுத்த கருமங்க ளாகா' எனவும்; 'எழுதியவா றுமென் றிராமட நெஞ்சே, கருதியவா றாமோ கருமம்' எனவும் மூதுரையிற் கூறியுள்ளவற்றால் மேற்கூறிய கோட்பாடு நன்கு விளங்கும். அன்றியும்,—

'முற்பகற் செய்யிற் பிற்பகல் விளையும்' எனவும், 'மோன மென்பது ஞானவரம்பு' எனவும் கொன்றைவேந்தனிற் கூறியுள்ளவற்றால் முற் செய்த கருமங்கள் தமக்குரிய பயனை விளைக்காமற் போகா என்னும் மெய்க்கோட்பாட்டினை யுடையவ ரென்பதும், யோக சமாதியே முத்திக்குக் காரணமாவ தென்னும் கொள்கையினை யுடையார் என்பதும் நன்கு விளங்குகின்றன.

முதலாம் ஔவையாரினும் இரண்டாம் ஔவையார் விதிவாதத்திற் பிடிவாத முள்ளவர். கடவுளருளின்றி முன்செய்த கருமத்தின் பயனை வெல்வது முடியாது என்னுங் கொள்கையினை யுடையார். இவர்கொள்கை இவ்வாறுதல்,

'வினைப்பயனை வெல்வதற்கு வேத முதலா
மனைத்தாய நூலகத்து மில்லை'

என்பதனாலும்,

'சிவாய நமவென்று சிந்தித் திருப்போர்க்
கபாய மொருநாளு மில்லை—யுபாய
மிதுவே மதியாகு மல்லாத வெல்லாம்
விதியே மதியாய் விடும்'

என்பதனாலும் நன்கு விளங்கும். மற்றும்,

'இடும்பைக் கிடும்பை யியலுடம்பி தன்றே'

எனவும்,

"மாந்தர் குடிவாழ்க்கை மண்ணின் கலம்போலச்
சாந்தனையுஞ் சஞ்சலமே தான்"

எனவும் நல்வழியிற் கூறியுள்ளவற்றால் இவ்விரண்டாம் ஔவையார் 'துக்கமயம் ஜகத்' என்பதும்,

'பிறந்தா ருறுவது பெருகிய துன்பம்
பிறவா ருறுவது பெரும்பே ரின்பம்'

என்பதுமான புத்தர் கொள்கைகளிற் பற்றுடையவ ரென்பது விளங்குகின்றது. அன்றியும், இவர் தம் நல்வழியில்,

'சின்றநிலை, தானதாந் தத்துவமாஞ் சம்பறுத்தார் யாக்கைக்குப்
போனவா தேடும் பொருள்'

என்று கூறியுள்ளதனால் அத்வைதக் கோட்பாட்டினும் மனம் நின்றவராவர்.



இனி, இவர் இயற்றியதாகக் கூறப்பட்டுவரும் ஞானக்குறளில்,

"வாயு வழக்க மறிந்து செறிந்தடங்கி
லாயுட் பெருக்கமுண் டாம்"

என்பது முதலாகிய சில குறள்களால் இவர் யோகசாதனர் என்பதும் அவ்வித யோகத்தால் மனிதர்கள் இவ்வுலகத்தில் அநேகம் வருஷங்கள் நிலைத்திருந்து கடைசியில் அழிவில்லாத முத்தி யடைதல் கூடுமென்று கொண்டவர் என்பதும் விளங்குகின்றன. அன்றியும், இந்நூலில் அமைந்துள்ள இனிய கொள்கைகளைத் தெரிவிக்குங் குறள்களிற் சிலவற்றை இங்கே எடுத்துக் காட்டுவாம். அவையாவன:

'உடம்பினைப் பெற்ற பயனாவ தெல்லா
முடம்பினி லுத்தமனைக் காண்'

'ஈச னெனக்கருதி யெல்லா வுயிர்களையு
நேசத்தா னினைந்து கொள்.

'ஆயு மிரவியு மொன்றே யனைத்துயிர்க்கு
மாயுங்கா லொன்றே சிவம்'

'தன்னை யறிந்து செறிந்தடங்கித் தானற்றாற்
பின்னைப் பிறப்பில்லை வீடு'

முதலியவாம்.

THE HISTORY OF TAMIL RHETORIC.

## தமிழணி யிலக்கண வரலாறு.

II.

தொல்காப்பியர் உவமமொன்றனையே ஓரியலாக்கி இலக்கணங்கூறின ராக, இவர்க்குப் பின் வந்த இலக்கண நூலாசிரியர்களின் கொள்கையைச் சிறிதாராய்வோம். சங்கத்தார் காலத்துத் தோன்றிய நூல்களுள் தொல்கா ப்பியத்தைத் தவிர்த்து அகப்பொருளைப் பற்றிய இறையனாரகப் பொருளும் புறப்பொருளைப் பற்றிய பன்னிரு படலமும் புறப்பொருள் வெண்பாமாலை யும் போன்று அணியிலக்கணத்தைக் கூறும் நூல்கள் வேறு காணேம். யா ப்பிலக்கண நூல்கள் அக்காலத்து வேறு சில தோன்றி வழங்கி வந்தன. இவற்றுட் சிலவற்றை யியற்றிய ஆசிரியர்கள் இன்னாரென்பது

"தொல்காப் பியப்புலவர் தோன்ற விரித்துரைத்தார்
பல்காய னார்வகுத்துப் பன்னினார்—நல்யாப்புக்

கற்றோர் மதிக்குங் கலைக்காக்கை பாடினியார்
சொற்றோர்தந் நூலிற் றொகுத்து"

என்னும் வெண்பாவால் விளங்கும். தொல்காப்பியரைத் தவிர்த்து இங்குக்கூறிய பல்காயனார் காக்கை பாடினியா ரென்னு மிவர்களேயன்றி நத்தத்தனார் அவிநயனார் மயேச்சுரனார் என்ற ஆசிரியர்களும் யாப்பு நூல் யாத்தனரென்பது யாப்பருங்கலக்காரிகையி னுரையாலும் வீரசோழிய யாப்புப் படலத்தினுரையாலும் இனிது புலப்படும். தொல்காப்பியர் காலத்தாயினும் அன்றி அவர் காலத்துக்குச் சிறிது பின்னராயினும் அணியிலக்கண நூல் வேறுயாதொன்றும் இயற்றப்பட வில்லையென்றே கொள்ளல் வேண்டும். சங்கத்தார் காலத்துத்தோன்றிச் சிறிது காலம் வழங்கி வந்து பின் இறந்துபோன மிகப்பழைய நூல்கள் போன்று அலங்கார நூல்களும் முற்காலத்துச் சில தோன்றிப் பின்னிறந்தன வெனக் கருதலமையாதோ வெனின் அவ்வாறு கருதுதற்குச் சான்று யாதும் காணப்படவில்லை. இக்காலத்து எங்கும் புலவர்களா லணிகளுக் கிலக்கணமா யெடுத்தாளப்பட்டு வருவதாகிய நூல் தண்டியலங்காரம். இந்நூலைத்தவிர்த்து மாறனலங்காரம் என்ற பிறிதோரலங்காரநூ லுண்டு. தமிழின் ஐவகையிலக்கணங்களையும் ஒருங்கே முறைப்படுத்துக் கூறும் இலக்கண நூல்களும் சிலஉள. இவற்றுள் இலக்கண விளக்கம் முற் கூறப்பட்டது. இது போன்றதாகிய மற்றொரு நூல் வீரசோழியம். இவ்விரண்டனுள் இலக்கண விளக்கம் மிகப்பிற்காலத்தது. இதிலுள்ள அணியியல் பெரும்பான்மையும் தண்டியலங்காரத்தைத் தழுவி யெழுதப்பட்டிருக்கின்றது. வீரசோழியம் மிக முற்காலத்ததுமன்று மிகப்பிற்காலத்தது மன்று. இவ்விலக்கண நூல் தோன்றிய காலத்தைச் சிறிதாராய்வோம். இது வீரசோழன் காலத்தில் அவன்கீழ்ப் பொன்பற்றியூரிற் சிற்றரசு புரிந்த புத்தமித்திர அரசனால் எழுதப்பட்டு அவ்வீரசோழனது பெயர் * வகிக்கப் பெற்றிருக்கின்றது. இவ்வீரசோழனென்னும் அரசன் இன்ன காலத்தின னென்பதை நாம் ஆராய்ந் தறிவேமாயின் இந்த இலக்கண நூல் தோன்றிய காலத்தினை ஒருவாறு வரையறுத்துக் கூறல் இயலும். வீரசோழ னென்றபெயர் இந்நூலாசிரியர் காலத்தரசுபுரிந்து வந்த சோழன் ஒருவன் மாத்திரமே கொண்டபெயரன்று. சோழர் பரம்பரையிலுள்ள வேறு சில வேந்தர்களும் இப்பெயர் வகித்திருந்தார்க ளென்பது விளங்குகின்றமையின், இஃது ஒரு சோழனுக்குரிய பெயரன்றென்பதும், சிறப்புப் பற்றிப் பல சோழர்களாற் புனையப்பட்டதென்பதும் புலப்படும். இஃது எங்ஙனமோவெனின், † முதற்பராந்தக சோழனுக்கும் கீழ் நாட்டுச் சாளுக்கியர் பரம்பரையைச் சார்ந்த ‡ ஒன்பதாம் விஷ்ணு வர்த்தனென்னும் அரசனுக்கும் வீரசோழ னென்ற பெயருண்டு.

* வீரசோழியப் பதிப்புரை † Parantaka I. ‡ Vishnuvardhana IX of the Eastern Chalukya dynasty. Dr. Hultzsch's *South Indian nscriptions* Vol. I. p. 32.



இவர்கள் போலவே இந்நூல் தோன்றிய காலத்துச் சோழநாட்டின் ஆண்டுவந்த அரசனும் வீரசோழனெனும் பெயரைப் பூண்டிருந்தன னென்பது தெளிவாய் விளங்குகின்றது. இவ்வரச னியற் பெயர் யாதோ வெனின் வீரசோழியத்தின் சந்திப் படலத்துள்ள

ஆவி யனைத்துங் கசதந பமவ் வரியும்வவ்வி
லேவிய வெட்டும்யவ் வாறுஞ் ஞன்குமெல் லாவுலகு
மேவிய வெண்குடைச் செம்பியன் வீரரா சேந்திரன்றன்
நாவியல் செந்தமிட் சொல்லின் மொழிமுத னண்ணுதலே.

என்னும் செய்யுளால் இச்சோழன் வீரராசேந்திர னென்னும் பெயரினன் என்பது புலப்படும். இவ்விடத்தன்றி அலங்காரப் படலத்து இவ்விலக்கண நூலினுரையாசிரியராகிய பெருந்தேவனார் எட்டாரைச் சக்கர மென்னுஞ் சித்திரக்கவிக் கிலக்கியங் காட்டியுள்ள செய்யுளை விளக்கு மிடத்து "இதன் கணிரண்டாநேமியிற் கயிலகுலகரனு நான்காநேமியிற் காவேரி வல்லவனு மாறா நேமியிற் கண்ணு முனறிவானு மெட்டா நேமியிற் கரிகாலகனும் பத்தாநேமியில் விக்கிரமசோழனும் பன்னிரண்டாநேமியில் வளவ நாராயணனும் பதினாலாநேமியில் வீரராசேந்திரனும் பதினாறு நேமியிற் பராகிருபகாலனுமென எட்டுப்பெயரும் புலப்படும்" என்றுகூறியிருத்தலின் இவ்வரசனுக்குப் பலபெயர்களுண்டென்பது நன்கு புலப்படும். மேலெடுத்துக்காட்டிய வீரசோழியச்செய்யுளிற் கூறியுள்ள வீரராசேந்திரனே இங்குக் கூறப்பட்டிருக்கும் வீரராசேந்திரனென்பதற்கு ஐயமில்லை. இவ்வுரையின்கண் § உள்ள

"விண்கூ டலசங்க மத்துடைந்த வேல்வடுக
ரெண்கூ டலறு மிருங்கானிற்—கண்கூடப்
பண்ணினான் றன்னுடைய பாதம் பணியாமைக்
கெண்ணினார் சேரு மிடம்"

"மின்னார் வடிவேற்கை வீரரா சேந்திரன்றன்
பொன்னார் பதயுகளம் போற்றுது—கன்னாடர்
புன்கூ டலசங்க மத்தினொடும் போருடைந்தார்
நன்கூ டலசங்க மத்து."

என்றவெண்பாக்களால் இவ்வரசன் கூடலசங்கமமென்னுமிடத்து நடந்த போரில் வெற்றியடைந்தமை விளங்குகின்றது. இத்தேயத்தின் தென்னாட்டுச் சிலாசாதனங்கள் ¶ இப்போரைப்பற்றிக்கூறும். ஆகலின் நூலாசிரியராகிய புத்தமித்திரரும் உரையாசிரியராகிய பெருந்தேவனாரும் ஒருகாலத்தின

§ அலங்காரப்படலவுரை—ப. 187-8. ¶ Dr. Hultzsch's *South Indian Inscriptions* Vol. II. Part II. Introduction to No 58 pp. 229-232.

ரென்பது புலப்படும். ஸ்ரீ தாமோதரம்பிள்ளையவர்கள் தமிழுலகத்துக்கு மிகப்பயன்படுமாறு பதிப்பித்த வீரசோழியத்தின் பதிப்புரையில் 'உரையில் எடுத்துக்காட்டாகப் பல செய்யுட்களை விக்கிரமசோழன் மகன்மகனாகிய அநுபமன சோழனது புகழாகப்பாடிச்சேர்த்ததனால் உரையாசிரியரும் ஆசிரியரும் ஒரேகாலத்தினராயிருத்தல் வேண்டும். "உரையைக்கடனாகவே நவின்றான்" என்றுரைச்சிறப்புப்பாயிரத்தார் கூறினமையால் அவன் புத்தமித்திரனார் மாணுக்கரிலொருவரென உத்தேசிப்பாரும் பலருண்டு' ** எனக்கூறியிருத்தலால் அவர்கருத்துமிதுவேயாகின்றது. கோப்பமென்னுமிடத்தில் நடந்தபோரில் இராசேந்திரதேவனென்னும் சோழன்வெற்றியுறப்பொருதமை ஒரு சிலாசாதனம் †† கூறும். வீரசோழியத்தினுரையில் இப்போரைக்குறித்த செய்யுளொன்று இலக்கியமாகக்காட்டப்பட்டிருக்கின்றது. இச்செய்யுள்

"தற்றுற்றன்றிவெம் போர்செய்த விற்லைப் பன்மன்முன் போடவோர் தத்திற் றுன்றுவன் பாய்பரியுய்த்துத் தன்மைகொண் டோடிய, வெற்றுச் செம்பியன் பார்புகழ் கொற்றைக் கண்டன்வன் பாரதம், வெற்புக்கொண்டு திண் போர்புரி கொப்பத் தன்றெதிர்ந் தோர்வெறு, கொற்றத் தொங்கல் சிங் காசன மொற்றைச் சங்குவெண் சாய்மரை, கூத்துப் பந்தர்முன் பாவிய முத்துப் பந்திமுன் றுன்மகி, ழொற்றைப் பெண்டிர்மண் டாரமொ டொற்றைத் தன்பெருஞ் சேனையு, மிட்டிட் டன்றுடைந் தான்வசைப் பட்டுக் கண்டவங் காரனே" ‡‡ என்பது. கலிங்கத்துப்பரணி யிராசபாரம் பரியத்தும் இதைக்குறித்த

> ஒருகளிற்றின்மேல் வருகளிற்றையொத்
> துலகுயக்கொளப் பொருதகொப்பையிற்
> பொருகளத்திலே முடிகவித்தவன்
> புவிகவிப்பதோர் குடைகவித்ததும். §§

என்றசெய்யுளொன்றுண்டு. கொப்பத்தில் நடந்தபோரைக்கூறும் செய்யுளைப்பெருந்தேவனார் இலக்கியமாகக்காட்டியிருத்தலின் இவர் இராசேந்திரதேவன் காலத்தும் இருந்தனரெனக்கூறுதற்கிடமுண்டு. கி. பி. பதினொன்றும் நூற்றாண்டின் பிற்பாகத்தும் பன்னிரண்டாம் நூற்றாண்டின் முற்கூற்றிலும் அரசுபுரிந்துவந்த குலோத்துங்க சோழதேவனுக்கு ¶¶ முன்னாண்ட சோழர்களின் முறைமையின்னதெனச் சிலாசாதனங்களாலறியலாம்

** வீரசோழியப்பதிப்புரை—ப. 24. †† Dr. Hultzsch's *South Indian Inscriptions* Vol. I. p. 134, No. 127.

‡‡ வீரசோழியம், யாப்புப்படலவுரை—செய்யுள் 34-ப. 136

§§ கலிங்கத்துப்பரணி, இராசபாரம்பரியம்—27.

¶¶ கி.பி. 1064—1113. Dr. Hultzsch's *South Indian Inscriptions* இவ்வரசர் ஆண்டகாலம் சிறிது வேறுபட்டும் தோன்றும்.



இராசராசதேவன், இராசேந்திரசோழன், இராசேந்திரதேவன், வீரராசேந்திரதேவன் - என்னுமிவ்வரசர்கள் *** குலோத்துங்கசோழதேவனுக்கு முன்னர் இங்குக்காட்டிய முறைமைப்படி ஆண்டுவந்தமைவிளங்குகின்றது. வீரராசேந்திரதேவன் கி. பி. 1063-ஆம் ஆண்டின் பின்னரும் ஆண்டுவந்தமை ஒரு சிலாசாதனத்தாற் புலப்படுகின்றது. ††† ஆகலின் வீரசோழியமென்னுமிலக்கணநூலும் அதன் உரையும் கி. பி. பதினொன்றும் நூற்றாண்டிலெழுதப்பட்டன வென்று கொள்ளல்வேண்டும்.

குருராவ்.

---

## KULASEKHARA ALWAR.

## குலசேகராழ்வார் வைபவம்.

(25-ஆம் பக்கத்தொடர்ச்சி)

இங்ஙனமாக இவர், இதிஹாஸசிரேஷ்டமான இராமயணமே தமக்குச் செவிக்கினிய செஞ்சொல்லாகச் சிரவணஞ் செய்துகொண்டு போதருகையில் ஒரு நாள், "இளைய பெருமாளைப் பிராட்டிக்குத் திருமேனிக்காவலாக வைத்து, கரதிரிசிரதூஷணாதிகள் ஆகிற பதினாலாயிரம் துஷ்ட ராக்ஷஸருடனே தர்மாத்துமாவன பெருமாள் தாம் ஒருவராகவே நின்றுபோர்புரிவராணார்" என்று காலக்ஷேபஞ் செய்பவர் பிரசங்கிக்கக்கேட்டார். கேட்டவளவிலே "என்னையிளையுமோ ?வாளும் வில்லுங்கொண்டு பின்செல்பவர் வேறில்லை" எனக்கொண்டு, குலசேகராழ்வார் சதுரங்க சேனையுடனே பெருமாளுக்குப் படைத்துணையாக எழுந்தருளினார். இவருடைய அதிதீவிரமான இந்தயாத்திரையைத் தவிர்க்கும்பொருட்டு மந்திரிமார்கள் சிலரை எதிரே வரவிட்டுப் பெருமாள் அந்தப்பதினாலாயிரம் அரக்கரையும தாமொருவராகவே வதைத்துவிட்டு மீண்டெழுந்தருளினார் என்று சொல்வித்தனர். இவரும் அதுகேட்டுக்களிப்புடன் திரும்பினர். இங்ஙனமாக இவ்வாழ்வார் இராசகாரியங்களிற் பற்றியும்பற்றாதே மனமுடையவராய் அரசாட்சிசெய்து வருகையில், அமாத்தியரும் "ஸ்ரீவைஷ்ணவர்களுடைய கூட்டுறவாலே இவர்க்கு இத்தனை கலக்கங்களும் வந்தன. ஆகையால் அவர்களுடைய சகவாசத்தைத் தவிர்ப்பிக்க வேண்டும்" என நினைத்து ஒரு சூழ்ச்சி செய்து, அரண்மனையில் அர்ச்சாவிக்கிரஹ எம்பெருமானுடைய திருவாபரணப் பெட்டியிலே நவரத்தின சோபிதமாய் இரு

*** Dr. Hultzsch's *South Indian Inscriptions* Vol. II, Part II, Introduction of No. 58.

††† " " " p. 229 232.

ப்பதொரு கண்டமாலையை எடுத்து மறையவைத்தனர். திருவாராதனஞ்செய்கின்ற சமயத்தில் அவ்வாபரணத்தைக் காணாமல் ஆழ்வாரும் அமைச்சரை அழைத்து அது செய்தியைத் தெரிவித்தனர். அவர்களும் ஒன்றும் அறியார் போன்று காவலாளரை யழைத்துக்கேட்டனர். காவற்காரரும் "ஐயன்மீர் நாங்கள் ஒன்றும் அறியோம். உடம்பை உயிர் காப்பதுபோல இரவும்பகலும் இடைவிடாமல் இவ்விராசமாளிகையைக்காவல்செய்து வருகிறோம். இராசாவைத்தேடி வருகின்ற பாகவதர்களன்றி வேறெவர்க்கும் நாங்கள் இடங்கொடுக்கிறதில்லை" என்றுரைத்தனர். அது கேட்ட அமைச்சர்கள் "அந்தப் பாகவதர்களிடத்திற்றான் எங்கட்கும் ஐயப்பாடு உண்டு" என்றனர். அவ்வளவிலே ஆழ்வார் "இராமராம, இந்த வார்த்தை என்னிருசெவிகளிலும் நாராசங்காய்ச்சி விட்டதுபோன்றிருக்கின்றது. எம்பெருமானுக்கன்பர் எப்போதும் பிறர் பொருளில் அவாக்கொள்ளார், கனவிலும் கருதலாகாத வார்த்தையைக் கட்டுரைத்த உங்கட்கு என்னகதி நேரிடுமோ? இந்தப்பாபிகளுடையசொல் இந்தச் சபையிலிருக்கும் ஏனையோர்க்கும் சந்தேகம் விளைக்காமலிருக்கமாட்டாது; ஆதலால் அதனை நானே நிவர்த்திசெய்கிறேன்" என்று கூறி, மிகவும் விஷமுள்ள விடைப்பாம்புகளைப்பிடித்து ஒரு குடத்தில் விட்டு அடைத்துவரும்படி சில உழையரை ஏவினார். அங்ஙனமே அவர்கள் பாம்புக்குடத்தைக் கொண்டுவந்து அவரெதிரிலே வைத்தார்கள். ஆழ்வாரும்சடக்கென்று தமது கணையாழியைக்கழற்றி அக்குடத்தில் இட்டு, காவற்காரரையும் மந்திரிமார்களையும் பார்த்து "ஸ்ரீவைஷ்ணவர்கள் கண்டமாலையை எடுத்தனர் என்று இக்குடத்தில் நீங்கள் கையிட்டு மோதிரத்தை எடுப்பீர்களாயின் உங்கள் வார்த்தையை நம்புவேன்; இல்லாவிட்டால் யான் நம்பமாட்டேன்" எனக் கூறினார். அவ்வார்த்தையைக்கேட்டு அவர்கள் நடுநடுங்கி, ஒன்றுஞ் சொல்லக்கூடாமலும் செய்யக்கூடாமலும் முகம் வாடி வருந்தி நின்றார்கள். அப்போது ஆழ்வார் புன்முறுவல்செய்து "இவர்கள் முன் சொன்ன வார்த்தை பொய்ம்மையானதே" என்று "இக்குடத்தில் இதோ, நானே கையிட்டுக்கணையாழியை எடுக்கிறேன், பாருங்கள்" எனச்சொல்லிக் குடத்திற் கையிட்டு அம்மோதிரத்தை எடுத்துக்காட்டினார். இதைக்கண்டு மந்திரிமார்கள் தாங்கள் செய்த கரவடச்செய்கையை விண்ணப்பஞ்செய்து அந்த மணிமயமான ஹாரத்தை அவர் திருமுன்பே வைத்துத் தண்டம் சமர்ப்பித்தார்கள்.

அதன்மேல் ஆழ்வாரும் இத்தகைய தீயொழுக்கமுடையவர்களோடு கூடி இராச்சிய பரிபாலனம் பண்ணுவது தமக்கு யோக்கியமன்று என்றெண்ணித் தமது குமாரருக்குப் பட்டாபிஷேகஞ் செய்வித்து இராச்சிய பாரத்தை அவரிடத்திலே வைத்து விட்டு அரங்கமாநகரத்தை நோக்கி எழுந்தருளினார். அவ்விடத்திலுள்ள பரமபாகவதர் அனைவரும் ஆழ்வாரை எதிர்கொண்டு உபசரித்தனர். ஆழ்வாரும் அவர்களுக்குத் தண்டம் சமர்ப்பித்துக் காவிரியில்



நீராடித் திருமதிலேழுங் கடந்து திருவாலயத்தை வலம்வந்து திருமணத்தூணின் அருகிலே நின்று உட்புகுந்து சேஷசயனத்திலே அறிதுயிலமரும் அழகிய மணவாளனைக் கண்ணாரக்கண்டு பல முறையும் பணிந்தெழுந்து ஆனந்த பரவசராய்க் கண்ணீர் சோரக் கைகுவித்து,

இருளிரியச் சுடர்மணிக ளிமைக்கு நெற்றி
யினத்துத்தி யணிபணமா யிரங்க ளார்ந்த
அரவரசப் பெருஞ்சோதி யனந்த னென்னும்
மணிவிளங்கு முயர்வெள்ளை யணையை மேவித்
திருவரங்கப் பெருநகருட் டெண்ணீர்ப் பொன்னி
திரைக்கையா லடிவருடப் பள்ளி கொள்ளுங்
கருமணியைக் கோமளத்தைக் கண்டு கொண்டென்
கண்ணிணைக ளென்றுகொலோ களிக்கு நாளே

என்றுதொடங்கிப் பத்துப்பத்தாக முப்பது பாசுரங்களைப் பாடினர். அப்பால் அங்கு நின்றும் புறப்பட்டுக் கச்சி வெஃகாவைச்சென்றடைந்தார். அங்கே அருளாளன் முதலிய எம்பெருமான்களை அடி பணிந்து அப்பதியில் நின்றும் யாத்திரையாகித் திருமலைக்கெழுந்தருளித்திருமலையைத் திருந்த நோக்கினார். நோக்கினார்க்கு அது பூலோக பரமபதமாகத் தோன்றிற்று. அப்பொழுது குலசேகரர் "யான் மேலுலகங்களிலுள்ள யாதொரு பதவியும் வேண்டுவதில்லை. இப்பருப்பதத்தின்மீது யாதோர் இயங்குதிணைப்பொருள் நிலத்திணைப்பொருளாகப் பிறப்பனேயாகில் அதுவே சாலும்" என்றுட்கொண்டு,

ஊனேறு செல்வத் துடற்பிறவி யான்வேண்டே
னானேறேழ் வென்றா னடிமைத் திறமல்லாற்
கூனேறு சங்க மிடத்தான்றன் வேங்கடத்துக்
கோனேரி வாழுங் குருகாய்ப் பிறப்பேனே

எனப் பத்துப் பாசுரங்களைப்பாடி, அங்கே திருவேங்கடமுடையானைத் தரிசித்துக்கொண்டு சிலகாலம் இருந்தார். விற்றுவக்கோட்டம்மானைச் சேவிக்க விருப்பமாய் அத்திருப்பதிக்கெழுந்தருளி,

தருதுயரந் தடாயேலுன் சரணல்லாற் சரணில்லை
விரைகுழுவு மலர்ப்பொழில்சூழ் விற்றுவக்கோட் டம்மானே
அரிசினத்தா லீன்றதா யகற்றிடினு மற்றவள்றன்
அருணினைந்தே யழுங்குழவி யதுவேபோன் றிருந்தேனே.

என்று அவ்வெம்பெருமான் திறத்தில் ஈடுபட்டார். திருவிற்றுவக் கோட்டினின்றும் போந்து திருவாய்ப்பாடியடைந்து ஸ்ரீ கிருஷ்ணனைத் திருவடி தொழுது

ஏர்மலர்ப் பூங்குழ லாயர் மாத
ரெனைப் பலருள ரூரிலுன்றன்

மார்பு தழுவுதற் காசையின்மை
  யறிந்தறிந் தேயுன்றன் பொய்யைக்கேட்டுக்
கூர்மழை போற்பனிக் கூதலெய்திக்
  கூசி நடுங்கி யமுனையாற்றில்
வார்மணற் குன்றிற் புலர நின்றேன்
  வாசுதே வாவுன் வரவுபார்த்தே

என ஆய்ச்சிய ருடி அமலனையெள்கலாகப்பாசுரம் பத்தமைத்துப்பாடி, அவ்விடத்தில் நின்றும் நீங்கி வடமதுரைக் கெழுந்தருளினார். அங்கேகோபாலனைச்சேவித்துச் சேய்வளர் காட்சியின் சீரை யசோதைபோல் தாய்தேவகி பெருந்தாழ்வெணிப்புலம்பலாக

ஆலை நீள்கரும் பன்னவன் றாலோ
  வம்பு யத்தடங் கண்ணினன் றாலோ
வேலை நீர்நிறத் தன்னவன் றாலோ
  வேழப் போதக மன்னவன் றாலோ
ஏல வார்குழ லென்மகன் றாலோ
  வென்றென் றன்னையென் வாயிடை நிறையத்
தாலொ லித்திடுந் திருவினை யில்லாத்
  தாய ரிற்கடை யாயின தாயே.

எனப்பாசுரஞ் செய்தருளினார். அநந்தரம் திருக்கண்ணபுரத்தை யடைந்து அத்திருப்பதி யெம்பெருமானைச் சேவித்துக் காகுத்தன்றாலாட்டும் தனயன்கான்புகத் தசரதன் புலம்பலுமாக இருபத்திரண்டு பாசுரங்கள் பாடினார். பின்னர்த் திருச்சித்திரகூடத்துக் கெழுந்தருளி அங்கே நடராசர் காணத்திருப்பள்ளி கொண்டெழுந்தருளியிருக்குங் கோவிந்தராசனைச் சேவித்து ஸ்ரீமத் வால்மீகராமாயண ஸங்க்ரஹமகாத்தில்லைத் திருச்சித்திர கூடமால்தொல்லி ராமனாய்த்தோன்றிய சரிதத்தைப் பாடி உலகத்தை வாழ்வித்தருளினார்.

இவ்வண்ணம் குலசேகராழ்வார் இந்தலீலா விபூதியை நூற்றிருபது வருஷகாலம் அலங்கரித்திருந்து பின்னர்ப் பரந்தாமத்தை யடைந்து திருமாமணிமண்டபத்திலே நித்திய முத்தர்குழாங்களோடு ஒரு கோவையாவெழுந்தருளியிருந்தார்.

தி. செல்வக்கேசவராய முதலியார்.

---



# CHAUCER : THE FIRST ENGLISH POET
# சாஸர்: பிரதம ஆங்கிலக் கவிவாணன்

---

(28-ஆம் பக்கத் தொடர்ச்சி)

## பறவை யீட்டம்.

உரோமாபுரியில் வாக்கு வல்லபனாயிருந்து சிறப்புற்றோங்கிய
சிஸரோ வெனப்படுவர் ஸிப்பியோகனவு என்ற புத்தகத்தை எழுதினர். அத
ற்கு வியாக்கியானம் எழுதினவர் மாகரோபியஸ் என்பவர். வியாக்கியான
ச்சிறப்பால் நூலிற்குச் சிறப்பும் பெருமையும் உண்டாயின. இப்புத்தக
த்தை நமது கவிவாணர் விடாமல் ஒரு நாள் முழுதும் வாசித்தனர். அதில்
விரித்தெழுதப்பட்டிருக்கும் சுவர்க்க பூலோக பாதாளங்களிற் காணப்படும்
ஆன்மாக்களி னிலைமையை வாசித்து வாசித்து இன்பப் பெருக்காற் களிகூர்
ந்த சாஸர் கண்வளர்ந்து கனவு கண்டனர். பகலெல்லாம் வேட்டையாடிய
வன் இரவிற் காட்டைக் காண்டலும், நியாயாதிபதி விசாரித்த வழக்கின்
நியாயப்போக்கை நிசியில் தெளிவுற வுணர்தலும், செல்வவந்தர் செல்வத்
தையும், வீரன்பகைஞனையும், வியாதியஸ்தன் ஜாடிப்பால் குடித்தலையும்,
காதலன் கருத்துறை காதலியையும் கனவிற் காணுதலும் இயற்கையன்றோ?
கனவில் ஸிப்பியோ வென்பவர் தோன்றி மரகதச் சுவர்களால் வளையப்
பெற்ற பூங்காவனத்திற்குக் கவிவாணரை அழைத்துச் செல்கின்றனர். இங்
கார வனவாயிலில் இரட்டைக் கதவுளது; ஒரு கதவைத் திறந்தால் ஒரு வழி
காட்டும்; மற்றைக் கதவைத் திறந்தால் மற்றொரு வழிகாட்டும். இந்த விரட்
டைக்கதவு வாயிலின்மேற் பளபளப்புள்ள தங்கவெழுத்திலும் கருமையா
னகரிய வக்ஷரத்திலும் 'வருக', 'விலகுக' என்னும் வார்த்தைகள் பதிக்கப் பட்
டிருந்தன. முன்னதன் வழியேகுநர்கடவுள் கிருபையையும், மனவாறுதலை
யும், அனவரத வசந்தத்தையும் பெற்றுச்செழித்துச் சுகமடைவர். பின்னதன்
வழிச்செல்லுநர் பழி பாவத்தாற் பீடிக்கப்பட்டு, செம்படவன் வலையிற்
சிக்குண்டமகரம் போன்று பதைபதைப்பர். இவற்றை நோக்கிய இரண்டு
காந்தக் கற்களினிடையே யகப்பட்ட இரும்பைப்போன்று அங்கு மிங்
கும் போகும் வலியற்று மதிமயங்கி ஸ்தம்பித்து நின்றனர். இந்நிலையைக்
கண்டவழிகாட்டி இவரைப்பிடித்து வாயிலொன்றிற் புகுத்தினர். கவியுட்புகு
தலும், கண்டனர் பல்வகை விருக்ஷங்களடர்ந்த காவையும், நால்வகைமலர்க
ளும் நன்குவிரிந்துள்ள நந்தவனத்தையும், நிரம்பிய கால்வாய்களூடுருவிச்
செல்லும் பசும்புற்பரப்பையும், மகரந்தங்கொணரும் மந்தமாருதத்தையும்
மரக்கிளைகளில் ரம்பைகள்போன்று பக்ஷிகளனேகம் கீதம் செய்தலையும்.
இவை யெல்லாம் நிறைந்துள்ள மன்மதன் நந்தனமே. இதன் நடுவில் தோ
ன்றும் இரவாக்கல்லாலாகிய ஓங்கிவளர்ந்த ஸதம்பங்கள் தாங்கும் இரதியின் .

பொன்னாலயம். சாஸர்மதன் ஆலயத்துட்சென்றதும், காமப்பேய்பிடித்து அலைவுற்ற காமுகரின் சரிதங்களைத்தீட்டிய சுவர்களில் இனி மன்மதன் சரந்தொடுத்தலையும் இரதி பக்கத்திற் படுத்திருத்தலையும் கண்டனர். காட்சிமிகுந்த வாலயத்துட் போகப்போக பல திறப்பாவைகள் படங்களும் பரந்துகிடந்ததைப்பார்த்தனர். பின்னும் வனத்துட் சென்றனர். ஆங்கு மற்றோர் மாளிகை தோன்றியது. அஃது இயற்கைத்தேவியின் வாசஸ்தலம்; அதுபூங்குன்றத்தின்மேலுளது. கிளைகளாலாயமாளிகையெங்கும் பச்சையாயிருந்ததனாற் பச்சைமாளிகை என்ற பெயர்பெற்றது. அதன்கண் பலவகைப் பறவைகளும் தத்தமிடங்களில்மன்று கூடின. முதற்கணிருந்தன இரைப்பறவைகள். அவற்றின் பின்னர் நீர்ப்பறவைகளும், தானியப்பறவைகளும், கிருமிப்பறவைகளும், ஒன்றின்பின்னொன்றாயிருந்தன. ஏனெனில் அன்று தான் பறவைகளுக்கேற்பட்ட மங்களநாள். அன்றுதான் பறவையும் பேடும் கூடும்நாள். பெருமானுக்குப் பிரதியாயுள்ள இயற்கைத்தேவி தன்கையிற் பெண்கழுகை வைத்துக்கொண்டு பறவை பேட்டைத் தேடலாமென்று பறையறைவித்தனள். முதலிற் கழுகுகள் தேடவாரம்பித்தன. ஆண் கழுகு ஒன்று தேவியின் கையிலிருந்த பேட்டைப்பார்த்துப்பரிந்தது. ஊழியஞ் செய்யச் சித்தமாயிருந்ததைத்தெரிவித்தது. இதனினும் அந்தஸ்தில் தாழ்ந்தபோதிலும் அன்பிலும் உண்மை நயத்திலும் குறைவில்லாத வேறிரண்டு கழுகுகள் பெண் கழுகின் பிரியத்தைக் கவரமுயன்றன. அவற்றி லொன்று பேடையை வெகுகாலமாய் நேசித்து வந்ததாகச்சொல்லிற்று.

மற்றப்பறவைகளெல்லாம் அவசரப்படவே, தேவி அவற்றைப்பார்த்து, கழுகு இராணிக்குத்தகுந்த கழுகு இராஜனை வெளிவந்த மூவரில் தெரிந்தெடுக்கும்படி வேண்டினள். ஆணைப்படியே, எல்லோரும்பேசுதல்தகாதென்று ஒவ்வொரு ஜாதிப்பறவைக்கும் ஒவ்வொன்று பிரதியாக நின்று பேசத்தலைப்பட்டது. அங்ஙனம் பேசவந்த பிரதி காரியஸ்தர்கள் வல்லூறு, வாத்து மணிப்புறா, குக்குறுவான், இவையே.

வல்லூறு சொன்னதாவது: " இந்தவனப்புள்ள கழுகு இராணியைக் காதலிப்பவருள் இது சிறந்தது என்று முகாந்தரத்தால் விளக்குதல் எளிதன்று. எல்லாக்கழுகுகளுந் தாந்தாமே சிறந்தகாதலர் என்று கூறலாம். ஆதலால் அவற்றை மல்லுக்குவிட்டுத் திறம் பார்க்கவேண்டும்", இதைக்கேட்ட கழுகுகள் 'தயார்' என்றன.

பின்னர், நீர்ப்பறவைகளின் காரியஸ்தமாகிய வாத்துப்பேச ஆரம்பித்தது: "சத்தம், நான் சொல்லும் முகாந்தரத்தைக் கேளுங்கள். எனக்கோ புத்தி கூர்மை, தாமதமாகாது. என்னுடன் பிறப்பாயினும் நான் சொல்லுவதென்னவென்றால், அவன் அவளைவிரும்பட்டும், அவள் மற்றொன்றை நாடட்டும், அதாவது 'வண்ணானுக்கு வண்ணாத்திமேலாசை, வண்ணாத்திக்குக் கழு



தைமேலாசை என்பதே' இதைக்கேட்ட உயர்தரப்பறவைகளெல்லாம் நகைத்து, 'மூடன் நாவைக்காவான்' என்றன. அதன்பின், தானியப்பறவைகளின் காரியஸ்தமாகிய

மணிப்புறா அபிப்பிராயங்கொடுத்தது. "காதல்கொள்ளல் எளிது. மரணபரியந்தம் காதலியைப்பிரியாதிருத்தலே தகுதி. அஃதன்றி மரணபயத்தால் தலைவிக்குத்துரோகம்பண்ணுதல் பாவம். ஆதலால் வாத்துச் சொன்னமதிப்பேதைமை. மரிப்பினும் என்தோழியைப்பிரியேன்" இதைச்செவிசாய்த்தியவாத்து சபாஷ் நன்குசொற்றனை.. ஒன்றையே எப்பொழுதும் நேசித்தல் எதற்கோ? ஆனந்தமில்லையெனில் ஆனந்தக்கூத்து எங்ஙனம் ஈயும்? மனமிணங்குதல் என்ற ஒரு நியாயத்தைத் தவிரக்காமவின்பம் நுகர்தலில் எட்டுணைத்தடையுங்கூடாது. தடையுளதேல், இன்பம் மட்டன்றோ?" இப்பிதற்றுதலைக் கேட்ட வல்லூறு நகைத்து, 'காதல் இன்னதென்று அறியாத நீ பிதற்றாதே. உன்வார்த்தை கேவலம்.' அதன் பின் கிருமிபுட்களின் பிரதிநிதியாகிய,

குக்குறுவான் பின்வருமாறு சொல்லத்தொடங்கிற்று: "ஏன் இந்த வீண்வாதம்? எங்ஙனமேன்? போங்கள். என் பேட்டுடன் நானிருக்குமளவும் எனக் கென்னகவலை?" சுயநயமேகருதிய குக்குறுவான் சொன்னதைக் கேட்ட கருவாலி, "வயிற்றை நிரப்பினுலுனக்குப்போதும், சாப்பாட்டிராமனே. உன்னைவளர்த்த ஊர்க்குருவியைக் கொன்ற ரணபாதகனல்லவோ நீ இருக்குமளவும், கிருமிகளைக் கொன்றுதின்று தனியே சுகத்திரு பாவியே!" என்றது.

இவ்வாறு காரியஸ்தர்கள் பேசினவற்றையெல்லாம் பொறுமையுடன் கவனித்துக்கொண்டிருந்த இயற்கைத்தேவி " நல்லது பேச்சை நிறுத்துக. என முடிவு இது. வல்லூறு சொல்லியாங்கு யார்மிக்க காதலுடையர் என்று தீர்மானித்தல் எளிதன்று. ஆதலால் நலமோ, புலமோ கழுகு இராணிக்கு யார்மேற் பிரியமோ, தெரிந்துகொள்வாளாக" என்று சொல்லி, இராசாளியை மணம்புரியவேண்டினள். அதற்குச் சங்கோசப்பட்டிருந்த கழுகு இராணி, "வருடமுடியும்வரைதான் தெரிந்தெடுக்கப்போவதில்லை" என்றது. அதன்மேல், தேவி மூன்று காதலர்களையும் நோக்கி, நீங்கள் அதுவரை பொறுங்கள், பணிவிடை செய்யுங்கள், என்று சொல்லி, மற்றப்பறவைகள் தங்கள்பேடுகளைக் கண்டறிந்து இன்புறலாமென்று விதித்தனள். அங்ஙனமே பறவைகளெல்லாம் பேடுகளைத்தெரிந்ததும், மங்கல நாட்சிந்து பாடிப் பறந்தன. மன்றமுங்கலைந்தது. கலைந்தவோதையாற் கவிவாணரும் துயில் நீங்கினர்.

இக்காவியம் ஓட்டலங்கார விளக்கமென்று கூறுவர் சில நிபுணர். இதிற் கூறப்பட்டுள்ள இராணி போகீமியா என்ற தேசத்திற் கோமகளாகிய அன்

ணியென்பவளென்றும், இவளைப் பவேரியாகோமகனும், மீசன் பிரபுவும், இங்கிலாந்து தேசமன்னனாகிய ரிச்சேர்டு என்பவனும் வதுவை செய்ய விரும்பினரென்றும் ஒருவருஷம் தடைப்பட்டு அண்ணிக்கு வயது வந்த பின் அவள் இங்கிலாந்து மன்னனையே மணந்தனளென்றும், இரைப்பக்ஷிகள் போர்விரும்பும் க்ஷத்திரியரைக் குறிப்பிடுகிற தென்றும், நீர்ப்பறவைகள் சுயலாபத்தையே கருதும் வாணிப ஜாதியைக் குறிக்கிறதென்றும், தானியப் பறவைகள் தாழ்மை நாவடங்கல் அறிவு இவை ஆதிய குணநிசயங்கள் நிறையப்பெற்ற மூதறிஞரைக்குறிப்பதென்றும், கிருமிப்புட்கள், எதானாலும் கிடைத்ததைத் தின்று வாயில்வந்ததைப்பேசி, நிரக்ஷர குக்ஷியாய்ப் பொது நன்மை சிறிதுங் கருதாது புணர்தலே பேரின்பமென்று திரியும் கைத்தொழிலாளரைச் சுட்டுகிறதென்றும், உள்ளன்பு ஊராள்பவன் உரிமை என்று போதிக்கும் இயற்கைத்தேவி இங்கிலாந்து இளமன்னனாகிய ரிச்சேர்டுக்கு அறிவூட்டும் அன்பின் அவதாரமென்றும் சொல்லுவர்.

எம். எஸ். பூர்ணலிங்கம் பிள்ளை.

---

## THE RELIGION OF TIRUVALLUVAR.
## திருவள்ளுவர் மதம்.

‘திருவள்ளுவர் மதம்’ எனுந்தலைக்குறியினானே அவரது மதம் நன்கு விளங்கவில்லை என்பது புலப்படும். திருவள்ளுவர் யாவரென்பதைக் குறித்து ஈங்கு மொழிவது அநாவசியமாம் யாவரு மவரைப்பற்றி நன்குணர்ந்திருப்பாராகலின்.

திருக்குறளினின்றும் செந்நாப்புலவரது சமயத்தை ஒரு தலையாய்த் துணிவதற்கிடமில்லை. இம்முதற்பாவலர் எல்லாச் சமயத்தார்க்கு மியையத் தம்நூலைப் பொதுவாகவே வரைந்திருக்கின்றனர். என்னை?

“சமயக்கணக்கர் மதிவழி கூறா
துலகியல் கூறிப் பொருளிது வென்ற
வள்ளுவன்”

என்று கல்லாடனார் தமது கல்லாடத்தில் ‘நிலவு வெளிப்பட வருந்தல்’ எனுந்துறையின் கண்ணே கூறியதற்கேற்பத் திருவள்ளுவ மாலையினும் பின் வருமாறு கூறுகின்றார்:

“ஒன்றே பொருளெனின் வேறென்ப வேறெனி
னன்றென்ப வாறு சமயத்தார்—நன்றென
வெப்பா லவரு மியைபவே வள்ளுவனார்
முப்பான் மொழிந்த மொழி”



திருவள்ளுவமாலை வள்ளுவர் முன்பே சங்கப் புலவராற் செய்யப்பட்டதெனக்கோடலின் நூலாசிரியர் காலத்திலேயே திருக்குறள் ஒருவகைச்சமய நூலெனக் கொள்ளப்படாது பொது நூலெனக் கொள்ளப்பட்டதென்பது புலப்படுகின்றது. இவையனைத்தும் கருதியே பலரும் ‘இவரது மதமின்னதென்று நன்கு விளங்கவில்லை. பொது மதமாகலாம்’ எனப் பகருகின்றனர்.

நாயனார் தமது குறளை எல்லாச் சமயத்தார்க்கும் பொதுவாகச் செய்ய விரும்பியு மிருக்கலாம். ஓராற்றாற் செய்து முடித்துமிருக்கலாம் அங்ஙனம் முடித்திருத்தல் அக்காலத்துப்புலவருக்குத் தெரிந்துமிருக்கலாம். எனினும், அவர் தந்நூலில் வெளிப்படையாய்க் கூறாமலிருப்பினும் தாம் மட்டிலனுஷ்டித்த சமயம் ஒன்று இருக்குமன்றே. அஃதவர் தம்நூலினுள் யாண்டேனுங் குறிப்பாகவேனும் புலப்படற்பாற்றே என்பதும் சிறிது கவனிக்கத்தக்கதாம். அவ்வாறறியுமிடத்து, ஒவ்வொருவருந் தத்தம் கொள்கையாம் மூக்குக்கண்ணாடி வழியான் நோக்கித் ‘திருவள்ளுவரெம்மதத்தவர்? எம்மதத்தவரே!’ என்று விடைகூறி முடித்தலுண்டு.

இதற்குதாரணமாக, ஆங்கிலதேசத்துக் கோதீர்த்தபுரிச் சர்வகலாசாலைத் தமிழ்ப்புலவர் கனம் பொருந்திய ஜி. யூ. போப்பையரவர்கள் தாம் பதிப்பித்த திருக்குறளின் கண்ணே பொய்யில புலவர் பொய்யின்றிக் கிறிஸ்தவரே யென்று தேற்றேகாரங்கொண்டு முடிப்பதை யெடுத்துக்கொள்ளலாகும். ஏசுநாதர் கூறியவறங்களுட் பலவற்றை இவர் கூறுதலால் இவர் ஏசுநாதர் வழிப்பட்டிருக்க வேண்டுமென்றல் மிகவுமடாததாம். ஏசுநாதர் கூறியவற்றுட் சிலவற்றோடு முரணத்தக்க பல நீதிகள் வள்ளுவர் கூறியிருத்தலானும், ஏசுநாதர் காலம் வரது நிர்ணயிக்கப்பட்ட காலத்திற் கிப்புறமாதலானும் இவரது கூற்று வீண்பேச்சேயன்றிப் பிறிதன்று. மேலும், ஏசுநாதர் கூறிய வறங்களுட் பல பௌத்தமதத்திற் காணப்படுதலால், கிறிஸ்தவ ரனைவரும் பௌத்தரெனின் நமது போப்பைய ரவர்கள், ‘நன்று சொன்னாய்!!’ என்று மனம் ஒருப்படுவார்போலும்!!

இனி, இத்தகைய வொரு புறநோக்கமின்றி நமது இந்த தேயசமயங்களுட் செந்நாப்போதாரெச்சமய மனுசரித்தவரென ஊகிக்குமிடத்து அவரை வைணவரெனக் கூறுதற்குற்ற வாதாரங்கள் பின்வருவனவாம்: கலியுகத்தின் தொடக்கத்திலிருந்தவரென்று வைணவர்களாற் கூறப்படுகிற நம்மாழ்வாரியற்றிய திருவாய்மொழியிலுள்ள,

“ஊரவர் கவ்வை பெருவிட் டன்னைசொ னீர்படுத்து
ஈரநெல் வித்தி முளைத்த நெஞ்சப் பெருஞ்செயுள்
பேரமர் காதல் கடல்புரைய விளைவித்த
காரமர் மேனிநங் கண்ணன் தோழீ கடியனே”

என்ற பாசுரக்கருத்தை,

"ஊரவர் கவ்வை யெருவாக வன்னைசொல்
நீராக நீளுமிந் நோய்"

என்ற திருக்குறளின் கண்ணும்,

"கண்டுகேட் டுற்றுமோந் துண்டுழலு மைங்கருவி" என்னும் திருவாய்மொழியிலுள்ளதைக் "கண்டுகேட் டுண்டுயிர்த் துற்றறியு மைம்புலன்" என்ற குறளின்கண்ணும், துவாபரயுகாந்தத்தவர் எனப்படுகின்ற திருமழிசையாழ்வாரது

"வித்து மிடல்வேண்டுங் கொல்லோ விளையர்த்த
பத்தி யுழவன் பழம்புனத்து"

என்றபாசுரத்தின் சொற்பொருளை

"வித்து மிடல்வேண்டுங் கொல்லோ விருந்தோம்பி
மிச்சில் மிசைவான் புலம்"

என்ற குறளின் கண்ணும், நமது புலவர் முறையே அமைத்திருக்கின்றனர். மேலும், வள்ளுவர் 'மடியின்மை' என்னும் அதிகாரத்தில்

"மடியிலா மன்னவ னெய்து மடியளந்தான்
றாஅய தெல்லா மொருங்கு"

என்ற குறளினும், காமத்துப்பாலில்,

"தாம்வீழ்வார் மென்றோட் டுயிலி னினிதுகொல்
றாமரைக் கண்ணா னுலகு"

என்ற குறளினும் திருமாலைச் சிறப்பித்துக் கூறியிருக்கின்றனர். இவையிற்றுன்மாத்திரமே நாயனார் வைணவரென்று கூறலாகும்.

மற்று இவரைச் சைவரெனக் கூறுதற் கிடமுமுண்டு. திருக்குறள் ஔவையார் முதலாயினோரால் தேவார திருவாசகங்களோடு ஒருங்கெண்ணப்பட்டு உமாபதி சிவாசாரியரால் 'சைவ சமயநூல்' என்றே கூறப்பட்டிருக்கின்றது. சைவாகமக் கருத்துக்களுட்சில கடவுள்வாழ்த்தின்கட் கூறப்பட்டிருக்கின்றன. மேலும் கடவுளர்க்குள், சிவபெருமான்-அந்தணன், திருமால்-க்ஷத்திரியன், பிரமன்-வைசியன், இந்திரன்-சூத்திரன் என்று முழங்குஞ் சுருதிக்கேற்ப 'அறவாழி யந்தணன்' எனக் கடவுள்வாழ்த்தின்கட் கூறப்பட்டிருக்கின்றமையுங் காண்க. மற்றும், நிலையாமை மெய்யுணர்தல், அவாவறுத்தல்முதலிய வதிகாரங்களிற் சிவாகமக்கருத்துக்கள் தோன்ற விளக்கிச் செல்கின்றமையானும், நாயனார் என்ற பெயர் வழங்கினானும், பிறவாற்றானுமிவரைச் சைவரெனத் துணிவர் வேறு சிலர்.

இவரைச் சைனரென்று கூறுவதைக்காண்டலு மரிதன்று. அருகக் கடவுளுக்குரிய திருநாமங்களிற் பல 'கடவுள் வாழ்த்து' என்னுமதிகாரத்தின்கண் வழங்கப்பட்டிருத்தலானும், சைன சாம்பிரதாயத்துக்கியைய அருகசரணம்,



சித்தசரணம், சாதுசரணம், தர்மசரணம், என்று கூறப்படும் நான்கினையும் முறையே, கடவுள் வாழ்த்து, வான்சிறப்பு, நீத்தார் பெருமை, அறன் வலி யுறுத்தல் என்ற நான்கு அதிகாரங்களாக நூன் முதலில் அமைத்திருத்தலானும்; சைனர்க்கு இன்றியமையாச் சிறப்பினவாகிய புலான் மறுத்தல், கொல்லாமை, ஆதியவறங்களை மிக வற்புறுத்திக் கூறலானும்,

"அவிசொரிந் தாயிரம் வேட்டலி னொன்ற
னுயிர்செகுத் துண்ணாமை நன்று"

என்று யாகாதிகாரியங்களை மறுத்துரைத்தலானும் பிறவாற்றானும் சைனர் இவரென்பர் மற்றொருசாரார்.

இனி, இவரைப் பௌத்தர் என்று கூறுவர் பலரும். அவர் கூற்றினுக் கேற்ற ஆகாரங்களும் மிகவும் பலவாய் விரிந்து கிடக்கின்றன. பிறப்பு முதலொத்த ஔவையார் கபிலர் ஆதியோர் கருத்திற்கியைய ஆதி பகவன் எனப் பெற்றோர் முதன் முதலிற் றொழப்பட்டிருக்கின்றனர். கபிலரகவல் வடமொழியிலுள்ள 'பௌத்தோபநிஷதம்' எனக்கருதப்படும். வஜ்ஜிரசூசிகோபநிஷத்தின் மொழிபெயர்ப்பாய் அமையும். அஃதன்றியும் கடவுள் வாழ்த்தின் கட் புத்த தேவன் பெயர்களும் பல உபயோகப்படுத்தப்பட்டிருக்கின் றன. உய்த்து நோக்கு மிடத்துக் கடவுள் வாழ்த்தின்கட் கூறப்படும் சொற்களெல்லாம் கடவுளைச்சாராது நல்வழிப்பட்ட முனிவனொருவ னைச் சாருமாறு கூறப்பட்டிருக்கின்றன.

"பொறிவாயி லைந்தவித்தான் பொய்தீ ரொழுக்க
நெறிநின்றார் நீடுவாழ் வார்"

எனுங் குறளிற் "பொறி வாயிலைந்தவித்தான் என்ற சொற்றொடரின் ஆற்றலானே ஐம்பொறிவாயில்களையும் உடையவனுயிருந்து அவற்றைத் தன்வலியால் அவித்தானொரு முனிவனெனவே பொருள்கொள்ளக் கிடக்குமாறு காண்க. அவன் பொய் தீரொழுக்க மென்பது பௌத்த பிடகத்தையேயன்றி வேறன்று. புத்த தேவன் அரசனுய் விளங்கினமைபற்றி 'இறைவன்' எனப் பன்முறையும் கூறப்படுகின்றனன். மேலும் புத்த தேவன் விரித்துரைக்கும் அருளறத்தை,

"தன்னுயிர் நீப்பினுஞ் செய்யற்க தான்பிறி
தின்னுயிர் நீக்கும் வினை"

என்ற குறளின்கண் விளங்கக்கூறியிருத்தலானும், அருளறத்திற்கின்றியமையாத்துணைக்கருவியாகிய வான்சிறப்பைக் கடவுள்வாழ்த்தினையடுத்துக் கூறுகின்றமையானும், நீத்தார் பெருமை யென்பது பௌத்த பிக்ஷுக்களது பெருமையையாதலானும், அறன்வலியுறுத்தலின்கண் வலியுறுத்திய தெல்லாம் புத்ததேவன் வகுத்த அறத்தையே யாதலானும் பௌத்த காப்பியமாகிய

மணிமேகலையும் இந்நூலும் பலகருத்துக்களில் ஒத்தியங்குகின்றமையானும், புலான் மறுத்தல், அருளுடைமை, ஆகிய வறங்கள் புத்த தேவன் அருளறத்தின்கணடங்குதலானும், "மழித்தலும் நீட்டலும் வேண்டா" என்றவிடத்தில், மூண்டனஞ் செய்துகொள்ளல், சடைவளர்த்தலாதிய புறச்சமய வாசாரங்களைக் கடிதலானும், உலகப்பொதுநன்மைபற்றி வாய்மை யாதிய வறங்கட்கு இலக்கணங்கூறுதலானும், 'மனத்தானாகாதவழியுப்பாவமுண்டு' எனுங்கொள்கையினராகிய சைனரோடும் பிறரோடும் மறுதலைப்பட்டு

"எனைத்தானு மெஞ்ஞான்றும் யார்க்கு மனத்தானா
மாணாசெய் யாமை தலை"

என்று பௌத்த சாம்பிரதாயத்தைத் தழுவிக்கூறுதலானும், ஹேனயானபௌத்தர், மசா யான பௌத்தர் எனற பாகுபாட்டினுள் இவர் மகாயானபௌத்தரைச்சார்ந்தாரென விளங்குதலானும், 'மெய்யுணர்தல்' எனுமதிகாரத்தின்கட் கூறப்பட்டுள விஷய மனைத்தும் பௌத்தபிடகத்தின்கட்காணப்படுதலானும், இவர் நூல்முழுதும் அருளறங்கொழிக்கக் கூறப்பட்டிருத்தலானும், பௌத்தசாம்பிரதாயத்திற்சேற்பமகளிர் பெருமைபெரிதும் பாராட்டப்பட்டிருத்தலானும், துறவறவியலைமுற்கூறாது, இல்லறவியலை முற்கூறியதே இவர் சைனரல்ல ரென்பதற்கேற்ற சான்று பகருகின்றமையானும், பௌத்த சாம்பிரதாயத்தின் கண்ணும் இந்திரன் திருமாலாதிய கடவுளர் சிறப்பு அங்கீகரிக்கப்படுதலானும், ஆகவே யத்தெய்வங்களைப்பற்றி நூலிற் கூறுதலான் நூலாசிரிய ரச்சமயத்தவரெனத் துணிதற் கிடமின்றாகலானும், திருவள்ளுவர் பௌத்தரென்றே துணிதல் ஏற்புடைத்தாமாறு காண்க.

சமயப்பற்றினான் உள்ளங்கோடித்திருவள்ளுவரைத் தம்மதத்தினரெனக்கூறியமைவதனால் எழூஉம் மகிழ்ச்சியினும், உள்ளங்கோடலின்றித் திருவள்ளுவரது மதம் இஃதென நேரிய நெறியினாராய்ந்து உண்மை காண்டலான் எழூஉம் மகிழ்ச்சியே சிறப்புடைத்தெனக்கருதி இதுவரையப்பட்ட தென்பது உணர்ந்து அறிவுடைய தமிழ் வாணர் இதனை மேற்கொள்க.

சருக்கை-கி. சுந்தராசாரியன்.

---

## A HERMIT.

## ஒரு முனிவன்.

(72—ஆம் பக்கத் தொடர்ச்சி.)

21. "இகழ்ச்சியே வாலிப துக்கமே யெறிந்திடு,
இகழ்ந்திடு மாதரை," யென்றவன சொல்லினன்





மகிழ்ந்தவன் மொழிகையில் மிகுந்திடு முகச்சிவப்
புறழ்ந்திடக் காட்டின னுலைத்திடு பற்றினன்.

22. அதிசயப்படுமுனி யாயினும் புதுவெழில்
கதியுடன் பார்த்திடப் பரந்ததைக் கண்டனன்
பதிவுள காலையில் விண்வரி போன்றதே
விதியில விளக்கமும் மாறாத விரண்டினும்.

23. வெட்கிடு பார்வையு முயர்ந்திடு மார்பமு
முட்கிட மாறியே யூன்றிடு மேக்கமே
பெட்புறு மழகிய ஞெத்திடு பான்மையில்
பெட்டக வெலாமுடை மடந்தையின் னின்றனன்.

24. "ஐயனே மன்னியு மடக்கமி லன்னிபாள்
வெய்யளா மனாதையா மங்கையை," யென்றனன்
"துய்யத லடிபொடு பத்தினைத் தவிர்த்துளேன்
துய்யவர் கடவுளும் நீயுமே வாழிடம்.

25. "கன்னிகை யொருவனை யுன்னனி கொளவிடு
மன்னிய வாரமே மயக்கிய தவன்வழி
கொன்னுரேய் வினைத்தேடிக் காண்கிறாள் துயரமே
ஒன்னிலாத் தன்வழிக் குற்றதோர் துணையென.

26. "நதிபதாம் டைனண்டை விலைத்தவ ரென்பிதா
விதியினிற் பிரபவர் மிகுந்திடு செல்வத்தர்
பதியவர் பொருளெலா மெனதென மூடிந்தன
மதியுடை யவர்க்குநான் மாத்திரங் குழந்தையே.

27. "தயையுடை யவரிடந் தமியனைக் கொண்டிட
மயலுளோ ரளவிடற் கரியராய் வந்தனர்
இமையிலா வெழில்பல கூட்டியே புகழ்ந்தனர்.
மயையிலே வேபவ ருண்மையர் போலிகள்.

28. "ஒரையொவ் வொன்றினு மொண்பொருள் காதலர்
சீரியல் பரியமுந் தோற்றினர் வாதினர்
வீரிய ரவருளே யெட்வினும் வணங்கினான்
வாரம தாழ்வதை வழுத்தில னென்றுமே.

29. "பணிவினு மியல்பினு பட்டதோ ருடையினன்
மணிவளர் செல்வமு மாண்பல மவற்கிலை
குணமதி லறிவினிற் கான்றமை யவனது
மணமிகு மிவையலால் மற்றெது நான்வேண்டேன்.

30. "சூரிய னுதிக்கவுந் திறந்திடு தாமரை
காரிய விண்ணிலே பனிப்புட மிட்டது
பாரிய லிவையெலாம் பான்மையொன் றில்லவே
சீரிய னவனது மனத்தூய்மை தேர்ந்திடில்.

31. "அவலதி லென்னரு கவனிருந் திடுபோது
கவலறிற் காதலைப் பொதிகவி பாடுவன்
இவனுயிர்ப் பிறப்பவு மிகுத்தது கால்மணம்
நவமுனி பொழிலதன் னல்லிசை யாகுமால்.

32. "பனித்துளி யதுவுடன் பகர்மரங் கொண்டபூ
தனித்திக ழெழிலொடுந் திரிபுடன் விளங்குமால்
மனத்தொளி ரவனன மணியெழில் யாவையுஞ்
சனித்தவ னென்னிடந் திரிபில ளாகையால்.

33. "சதமுமே திரிபுடைத் தொழிலெலா முயன்றுளேன்
கதமுடைக் குரங்கினின் பிடித்,ட்ன வீணென.
மதனவன் வாரமென் மனதினைக் கவர்ந்துமே
நிதமலன் ஞேவுற வார்வமு மெய்தினேன்.

34. "என்னிகழ் மொழிகளால் மனப்பல மிழந்தபின்
என்னிகழ் செருக்கினை யெனக்குவிட் டேகினுன்
மன்பதை யின்றிய தனியிட மண்டியே
மன்மக ரறிந்தில மாண்டன னவ்விடம்.

35. "துக்கமும் என்னது தவறதும் என்னதால்
உக்கதென் னுயிர்தனைக் கொடுப்பதே யுரிமையாந்
தக்கிடந் தேடியோன் தனியிடஞ் சார்ந்துமே
பக்கமே படுப்பதே செயவிது பூண்டுளேன்.

36. "இவ்விடந் தனியளா யேங்கினள் மறைவினில்
தெவ்விட முண்டபோற் படுப்பனுன் இறப்பனுன்
அவ்விதஞ் செய்தன னன்புடை யெட்வினு
மவ்வித மாகவே செய்குவேன் யானுமே."

37. "தெய்வமே,' விலக்கதை யென்றனன் தவசியும்
மெய்படக் கட்டின னவனையு மார்பொடும்
ஐயுறு மழகியுங் கடிந்திடத் திரும்பினள்
ஐயகோ! எட்வினு மணைத்தவவ் மானிடன்.

38. "திரும்பிடு ! ஆஞ்சலீ னவென்னருஞ் செல்வியே!
சுரும்பினில் மயக்குவோய் திரும்பியே பார்த்திடு



பூறைந்திடு முன்னுடை யெட்வினை மண்ணினில்
நறற்புட னுன்னிடந் திரும்பிய நானவன்

39. "உப்படி யுன்னையு முயங்கவே விட்டிடு
எப்படி யாவையுக் கவலையை விடுவனுன்
எப்போதும் பிரிவிலம் வாழ்வமோ கூறுதி
ஒப்பில வென்னுயிர் பொருளெலா மொன்றினேய்.

40. "இம்மணி முதற்கொடு வெப்போதும் பிரிந்தில
மம்மணி யுண்மையாய் வாழ்வர மன்பநாம்
பொம்மணி யாகமே பிளந்திடு மதிசரம்
அம்மையே! பிளந்திடு மெட்வினி னுகமும்"

தி. அ. இராமலிங்கம்.

---

## A LECTURE ON SAIVAISM.
## ஒரு சைவோபந்நியாசம்.

சிவனை வழிபடுவோர் சைவர் எனப்படுவர். படவே, சைவராகிய யாமெல்லாம் சிவபிரானுரை நமது ஆன்மநாயகராகக்கொண்டு அவரது திருவடியை நிற்கும்போதும், இருக்கும்போதும், கிடக்கும்போதும், நடக்கும்போதும் உண்ணும்போதும், துயிலும்போதும், விழிக்கும்போதும், இமைக்கும்போது மாம் எக்காலமும் மறவாது அவரோடு சம்பந்தமடைதலை விளக்கும் சமயம் சைவம் எனப்படும். இதுநோக்கியன்றே "சைவஞ் சிவனுடன் சம்பந்த மாவது" என்றுர் தவராஜயோகியாராம் திருமூலநாயனுர். இப்பிரபஞ்ச வாழ்க்கையிற் பெறப்படும் அழியும் இயல்பினதாகிய சிற்றின்பம்போலா காது நீடித்த நிரதிசய பேரின்பம் நமக்கெல்லாம் ஒருதலையாக அச்சிவ சம்பந்தத்தினுல் வாய்க்கும் என்பது பற்றியே "இறைகளோடிசைந்த வின்பமின்பத்தோ டிசைந்தவாழ்வு" என்றுர் பரமாசாரிய சுவாமிகளாகிய சுந்தரமூர்த்திநாயனுர்.

பிரமசாரிகள் யாஞ்ஞவற்கிய முனிவரைநோக்கி "எங்களுக்கு அமிர்தத்துவம் (சிவத்துவம்) எம்மந்திரத்தினுலாம், அருளுக" என்றுர்கள். அதற்கு அவர் இருக்கு யசுர் சாமம் என்னும் மூன்று வேதங்களின் மத்தியிலுள்ள "சதருத்ரீயத்தினுலாம்" என்றுர். இதிற்கண்ட பெயர்கள் அமிர்தத்தின் (சிவபிரானுரது) நாமதேயங்களாம்.

வஉ தஸ்ய ஹவா அமிர்தஸ்ய நாமதேயாநி !

ஏதஸ்யகவா அம்ருதஸ்ய நாமதேயாநி

என்று சாபாலோபநிடதத்திற் கூறப்பட்டது. ஆதலின், அவ்வமிர்த சிவநாமங்கள் அடங்கிய சதருத்திரீயம் எனப்படும் ஸ்ரீ ருத்திர செபத்தினால் சிவத்துவம் எய்தும். அன்பராயினோர்க்கு இதினும் மிக மிக லேசாயதும், மிகமிக விரைவிற் பாபசமூகத்தைத் துவம்சஞ்செய்து சிவத்துவம் கொடுக்கற்பாலதுமாய வாயிலொன்று உரைப்போம்.

அஃதாவது இருக்கு யசுர் சாமம் அதர்வம் என வேதம் நான்கும்; சிக்ஷை, கற்பம், வியாகரணம், நிருக்தம், சோதிடம், சந்தோவிசிதி என அங்கம் ஆறும்; புராணம், நியாயம், மீமாஞ்சை. ஸ்மிருதி என்னும் உபாங்கம் ஆறும், ஆயுள்வேதம், தனுர்வேதம், காந்தருவவேதம், அர்த்தவேதம் என்னும் உபவேதம் நான்குமாகச் சேர்ந்த வித்தைகள் பதினெட்டாம்.

வேதங்களை உதாத்தமுதலிய சுரவேறுபாடுபற்றி உச்சரிக்கு முறையினை உணர்த்துவது சிக்ஷை; வேதங்கள் விதித்த கன்மங்களை அநுஷ்டிக்கு முறைமை உணர்த்துவது கற்பம்; வேதங்களின் எழுத்துச் சொல் முதலியவற்றின் இலக்கணங்களை உணர்த்துவது வியாகரணம்; வேதங்களின் சொற்பொருளை உணர்த்துவது நிருக்தம்; வேதங்களின் காயத்திரி முதலிய சந்தஸ்களின் எழுத்தளவை முதலியவற்றை உணர்த்துவது சந்தோவிசிதி; வேதம் விதித்த கன்மங்களைச் செய்தற்கியன்ற கால விசேஷங்களை உணர்த்துவது சோதிடம்; வேதவாக்கியங்களின் பொருள்களை வலியுறுத்தி விரித்து விளங்குதலால் உபப்பிருங்கணம் எனப்படுவது புராணம்; இதிகாசமும் புராணத்துள் அடங்கும். வேதப்பொருளை நிச்சயிக்கும் பிரமாண முதலியவைகளை உணர்த்துவது நியாயம்; வேதப்பொருளின் தாற்பரியத்தை அறிதற்கியன்ற நியாயங்களை விளக்குவது மீமாஞ்சை; இது பூருவமீமாஞ்சை எனவும், உத்தரமீமாஞ்சை எனவும் இருவகைப்படும். பூருவமீமாஞ்சை கன்மத்தையும், உத்தர மீமாஞ்சை வேதாந்தத்தையும் போதிப்பனவாம். இங்கே வேதாந்தம் எனப்பட்டது ஏகான்மவாதத்தை யன்றாம். பிராமணர் முதலிய வருணத்தாரது பிரமசரியமுதலிய ஆச்சிரம தருமங்களை உணர்த்துவது ஸ்மிருதி. சரீரத்தை நோயில்லாது நிறுத்தற்கியன்ற ஔஷத முதலியவைகளை உணர்த்துவது ஆயுர்வேதம். பகைவரினின்று உலகத்தைக் காத்தற்கியன்ற படைக்கலப் பயிற்சியை உணர்த்துவது தனுர்வேதம். பரமேசுவரருக்கு மகிழ்ச்சி விளைக்கும் கான முதலியவைகளை உணர்த்துவது காந்தருவவேதம். இம்மை மறுமைக்கேதுவாம் பொருள் சேர்க்கும் உபாயத்தை உணர்த்துவது அர்த்தவேதம். வித்தைகள் அனைத்துக்கும் கர்த்தா சிவபெருமான் என்பது

ஈஶாநஸ்ஸர்வவித்யாநாம் ।

ஈசாநஸ் ஸர்வ வித்யாநாம்



என்னும் சைவ மகாநாராயண உபநிஷத்தினால் அறியப்படுகின்றது. ஈரவிறகில் மூட்டப்பட்ட தீயினின்று புகைப்படலங்கள் தாமே கிளருமாறுபோல, இச்சப் பெரும்பொருளிலிருந்து (இறைவரிலிருந்து) நிச்சுவாசஞ் செய்யப்பட்டது இருக்குவேதம், யசுர்வேதம், சாமவேதம், அதர்வாங்கிரசு, இதிகாசம், புராணம், வித்தை, உபநிஷதம், சுலோகம், சூத்திரம், அநுவியாக்கியானம், வியாக்கியானம் என்பவற்றின் தொகுதியாம்; அவரிலிருந்து இவையெல்லாம் நிச்சுவசிக்கப்பட்டன என்று பிருகதாரணியோபநிடதம் கூறுகின்றது சாத்தனுக்குப் பதின்கலம் சுமத்தல் ஓர் விளையாட்டு என்றாற்போல, "காத்தும் படைத்துங் கரந்தும் விளையாடி" என்று மணிவாசக சுவாமிகள் அருளிய திராவிட வேதக் கருத்தைத் தழுவிச் சிவபிரான் இருக்கு முதலிய வித்தைகளை யெல்லாம் பிரயத்தினமொன்றுமின்றி மிகுலேசானே அருளிச்செய்தார் என்பது விளக்குதற்கே "நிச்சுவசிக்கப்பட்டன" எனக்கூறப்பட்டது. இது

ஸயதா(ஆ)ர்த்ரைதாக்நேரப்யாஹிதாத் ப்ருதக்தூமா விநிஶ்சரந்த்யேவம்
வா அரேஸ்ய மஹதோ பூதஸ்ய நிஃஶ்வஸிதமேதத்யத்ருக்வேதோ
யஜுர்வேதஸ்ஸாமவேதோ(அ)தர்வாங்கிரஸ இதிஹாஸ: புரா
ணம் வித்யா உபநிஷத: ஶ்லோகாஸ்ஸூத்ராண்யநுவ்யாக்யாநாநி
வ்யாக்யாநாந்யஸ்யைவைதாநி ஸர்வாணி நிஃஶ்வஸிதாநி ।

சயதார்த்ரைந்தாக்நேரப் யாஹிதாத் ப்ருதக் தூமா விநிச்சரந்த்யேவம் வா அரேஸ்ய மஹதோ பூதஸ்ய நிச்வஸித மேதத்யத் ருக்வேதோ யசுர்வேதச் சாமவேதோ அதர்வாங்கிரச இதிகாசப்புராணம் வித்யா உபநிஷதச்லோச் சூத்ராண்யநுவ்யாக்யாநாநி வ்யாக்யாநாந்யஸ்யை வேதாநி சர்வாணி நிச்வசிதாநி

என்னும் மந்திரத்தினால் அறியப்படும்.

நாரதர் ஒருகால் சனற்குமாரரை அடைந்து, சுவாமி எனக்குப் போதித்தருளுக என்றார்; அதற்கு அவர் நீவிர் முன்னர்ப் படித்தவைகளைச் சொல்லுதிர்; அதன் பின்னர் நாம் சொல்லுகின்றோம் என, நாரதர் சுவாமீ! நான் இருக்குவேதம், யசுர்வேதம், சாமவேதம், நான்காவதாகிய அதர்வணவேதம், ஐந்தாம் வேதமாகிய இதிகாசபுராணம், *வியாகரணம், சிரார்த்தகற்பம், கணிதம், உற்பாதஞானம், மகாகால சாஸ்திரம், தர்க்கசாஸ்திரம், நீதிசாஸ்திரம், நிருக்தம், பிரமவித்தை, பூததந்திரம், சத்திரவித்தை, நக்ஷத்திரவித்தை, சர்ப்பவித்தை, சுகந்தஞ்செய்தல், நிருத்தஞ் செய்தல், கானஞ்செய்

* Grammar, the rules for the Sacrifices for the ancestors, the Science of Numbers, the science of portents, the science of time, logic, Ethics, Etymology, Pronunciation, Siksha, Ceremonial Kalpa, Prosody Chhandas, the Science of demons, the Science of Weapons, Astronomy, the Science of Serpents or poisons,

தல், வாத்தியமுழங்கல் முதலிய தேவஜனவித்தைகளாம். இவையெல்லாம் அறிவேன் என்று உரைத்தாராகச் சொல்லிய இச் சாந்தோக்கியோபநிடத மந்திரத்தினாலும் வித்தியாபேதங்கள் விளக்கப்பட்டன.

𑌸𑌹𑍋𑌵𑌾𑌚 𑌋𑌗𑍍𑌵𑍇𑌦𑌂 𑌭𑌗𑌵𑍋𑌽𑌧𑍍𑌯𑍇𑌮𑌿 𑌯𑌜𑍁𑌰𑍍𑌵𑍇𑌦𑌂 𑌸𑌾𑌮
𑌵𑍇𑌦𑌮𑌾𑌥𑌰𑍍𑌵𑌣𑌂 𑌚𑌤𑍁𑌰𑍍𑌥𑌮𑌿𑌤𑌿𑌹𑌾𑌸𑌪𑍁𑌰𑌾𑌣𑌂 𑌪𑌞𑍍𑌚𑌮𑌂 𑌵𑍇𑌦𑌾
𑌨𑌾𑌂𑌵𑍇𑌦𑌂 𑌪𑌿𑌤𑍍𑌰𑍍𑌯𑌂 𑌰𑌾𑌶𑌿𑌂 𑌦𑍈𑌵𑌂 𑌨𑌿𑌧𑌿𑌂 𑌵𑌾𑌕𑍋𑌵𑌾𑌕𑍍𑌯𑌮𑍇𑌕𑌾𑌯
𑌨𑌂 𑌦𑍇𑌵𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌂 𑌭𑍂𑌤𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌂 𑌕𑍍𑌷𑌤𑍍𑌰𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌂 𑌨𑌕𑍍𑌷
𑌤𑍍𑌰𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌂 𑌸𑌰𑍍𑌪𑌦𑍇𑌵𑌜𑌨𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌮𑍇𑌤𑌦𑍍 𑌭𑌗𑌵𑍋𑌽𑌧𑍍𑌯𑍇𑌮𑌿 ।

சகோவாசர்க்வேதம் பகவோ அத்யேமியசுர்வேதம் சாமவேத மதார்வணம் சதுர்த்தமிதிகாச புராணம் பஞ்சமம் வேதாநாம் வேதம் பித்ரியம் ராசிம் தைவம் நிதிம் வாகோவாக்யமேகாயநம் தேவவித்யாம் ப்ரம்மவித்யாம் பூதவித்யாம் க்ஷத்ரவித்யாம் நக்ஷத்ரவித்யாம் சர்ப்பதேவஜந வித்யாமேதத் பகவோத்யேமி!

இந்த வித்தைகள் எல்லாவற்றையும் ஒருங்கு தொகுத்துச் சைவபுராண வாயு சங்கிதை புராணம் தருமசாஸ்திர முதலிய வித்தைகள் பதினான்கும், ஆயுர்வேதம், தநுர்வேதம், காந்தருவவேதம், அர்த்தசாஸ்திரம் என்னும் நான்குஞ் சேர்ந்து வித்தைகள் பதினெட்டு என்றும், இந்த வித்தைகள் பதினெட்டுக்கும் ஆதிகர்த்தா சூலபாணியாகிய சிவபிரான் எனச் சுருதி சொல்லியதாம் என்றும் உரைத்தது. இங்கே சுருதி என்றது மேலே உதாகரித்த பிருகதாரணிய முதலிய சுருதி நோக்கியேயாம் என்க.

𑌪𑍁𑌰𑌾𑌣𑌂 𑌧𑌰𑍍𑌮𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌞𑍍𑌚 𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌹𑍍𑌯𑍇𑌤𑌾𑌶𑍍𑌚𑌤𑍁𑌰𑍍𑌦𑌶 :
𑌆𑌯𑍁𑌰𑍍𑌵𑍇𑌦𑍋 𑌧𑌨𑍁𑌰𑍍𑌵𑍇𑌦𑍋 𑌗𑌾𑌨𑍍𑌧𑌰𑍍𑌵𑌶𑍍𑌚𑍇𑌤𑍍𑌯𑌨𑍁𑌕𑍍𑌰𑌮𑌾𑌤𑍍 ।
𑌅𑌰𑍍𑌥𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌂 𑌪𑌰𑌂 𑌤𑌸𑍍𑌮𑌾𑌦𑍍𑌵𑌿𑌦𑍍𑌯𑌾 𑌹𑍍𑌯𑌷𑍍𑌟𑌾𑌦𑌶 𑌸𑍍𑌮𑍃𑌤𑌾𑌃 ।
𑌅𑌷𑍍𑌟𑌾𑌦𑌶𑌾𑌨𑌾𑌂 𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌨𑌾𑌮𑍇𑌤𑌾𑌸𑌾𑌂 𑌭𑌿𑌨𑍍𑌨𑌵𑌰𑍍𑌤𑍍𑌮𑌨𑌾𑌮𑍍
𑌆𑌦𑌿𑌕𑌰𑍍𑌤𑌾 𑌕𑌵𑌿𑌸𑍍𑌸𑌾𑌕𑍍𑌷𑌾𑌚𑍍𑌛𑍂𑌲𑌪𑌾𑌣𑌿𑌰𑌿𑌤𑌿 𑌶𑍍𑌰𑍁𑌤𑌿𑌃 ॥

புராணம் தர்மசாஸ்திரஞ்ச வித்யாஹ்யேதாச் சதுர்தச
ஆயுர்வேதோ தநுர்வேதோ காந்தர்வச் சேத்யநுக்ரமாத்
அர்த்தசாஸ்திரம் பரம் தஸ்மாத்வித்யாஹ்யஷ்டாதச ஸ்ம்ருதா
அஷ்டாதசாநாம் வித்யாநாமேதாசாம் பிந்நவர்த்மநாம்
ஆதிகர்த்தா சிவச்சாட்சாச் சூலபாணி ரிதிச்ருதி

''இதிகாச புராணங்கள் வாயிலாக வேதத்தைப் பொருள் படுத்துக. (அங்ஙனம் பொருள் செய்யாத) அற்ப அறிவுடைய இவன் என்னைக்கொன்று



போடுவான் என வேதம் அஞ்சுகின்றது'' என மகாபாரத இதிகாசம் கூறுகின்றது.

𑌇𑌤𑌿𑌹𑌾𑌸𑌪𑍁𑌰𑌾𑌣𑌾𑌭𑍍𑌯𑌾𑌂 𑌵𑍇𑌦𑌂 𑌸𑌮𑍁𑌪𑌬𑍃𑌂𑌹𑌯𑍇𑌤𑍍 ।
𑌬𑌿𑌭𑍇𑌤𑍍𑌯𑌲𑍍𑌪𑌶𑍍𑌰𑍁𑌤𑌾𑌦𑍍𑌵𑍇𑌦𑍋 𑌮𑌾𑌮𑌯𑌂 𑌪𑍍𑌰𑌕𑌰𑌿𑌷𑍍𑌯𑌤𑌿 ॥

இதிகாச புராணாப்யாம் வேதம் சமுபப்ரும்மயேத்
விபேத்யல்ப ச்ருதாத்வேதோ மாமயம் ப்ரகரிஷ்யதி

வேதம் புராணாதிகளால் தெளிவாய் சாரமாய் விளக்குகின்றமையினா லன்றே அது வேதசாரம் என்று ஒரோ விடங்களிற் கூறப்படுகின்றது. ''வேதசார நிதியனைத்துமாய் விளங்கும் புராணத்தை எங்களுக்கு விரைந்து அருளுக'' என்று இருஷிகள் கேட்ப, சூதரும் ''இருஷிகளே, உங்களுக்கு வேதசாரமாயுள்ள புராணம் சொல்கின்றோம்'' என இசைந்து உரைத்தாராக வித்தியேசுவர சங்கிதை கூறுகின்றது. முதற்கணுற்ற பாதருமம் போதிக்கும் வேதசிரசு இதிகாச புராணங்களாற் கடினமாக (நன்கு புலப்படாது) உபப்பிருங்கணஞ் செய்யப்படும்; அது பின்னர்ச் சைவாகமங்களினாலோவெனில் சாங்கோ பாங்கமாய் விரிவுற ஷடத்துவ சோதனையோடு உபப்பிருங்கணஞ் செய்யப்படும்'' என்று சைவபுராணம் கூறுகின்றது.

𑌤𑌤𑍍𑌰𑌾𑌦𑍍𑌯𑌃 𑌪𑌰𑍋 𑌧𑌰𑍍𑌮𑌃 𑌶𑍍𑌰𑍇𑌷𑍍𑌠𑌾𑌨𑍁𑌷𑍍𑌠𑌾𑌨𑌸𑌂𑌹𑌿𑌤𑌃 ।
𑌇𑌤𑌿𑌹𑌾𑌸𑌪𑍁𑌰𑌾𑌣𑌾𑌭𑍍𑌯𑌾𑌂 𑌕𑌥𑌞𑍍𑌚𑌿𑌦𑍁𑌪𑌬𑍃𑌂𑌹𑌿𑌤𑌃 ।
𑌶𑍈𑌵𑌾𑌗𑌮𑍈𑌸𑍍𑌤𑍁 𑌸𑌰𑍍𑌵𑌾𑌙𑍍𑌗𑌸𑌾𑌙𑍍𑌗𑍋𑌪𑌾𑌙𑍍𑌗𑌵𑌿𑌸𑍍𑌤𑌰𑌃 ।
𑌸𑌂𑌸𑍍𑌕𑌾𑌰𑌾𑌧𑌿𑌕𑌾𑌰𑌸𑍍𑌯 𑌸𑌮𑍍𑌯𑌗𑍇𑌵𑍋𑌪𑌬𑍃𑌂𑌹𑌿𑌤𑌃 ॥

தத்ராத்யோய: பரோதர்ம: ச்ரேஷ்டாநுஷ்டாந சம்ஹித:
இதிகாச புராணாப்யாம் கதஞ்சி துபப்ருங்கித:
சைவாகமைஸ்து ஸபுநச்சாங்கோ பாங்கவிஸ்தர:
சம்ஸ்காராதி காரச்சசம்யகே வோபப்ருங்கித:

இதனாற் புராணமாகிய உபப்பிருங்கணத்தினும் சைவாகமம் மகோபப்பிருங்கணமாகச் சிறந்ததென்பது வெளிப்படையாயிற்று. சூத்திரம்போல விளங்கும் மூலத்திலே வெளிப்படையாய்ப் புலப்படாதவைகளையும், மூலத்திலே சேர்த்துப் பொருள் செய்யற்பாலனவாய் இன்றியமையாதுள்ளவைகளையும் விரித்து நன்கு விளக்கும் நூல் உபப்பிருங்கணம் எனப்படும். வேதப்பொருள்கூறும் புராணம் வேதசாரநிதி என்று புராணங்களிலே கூறப்பட்டாற்போல, அப்புராணத்தினுஞ்சிறந்தமகோபப்பிருங்கணமாகியசிவாகமமும் ''இந்தச் சிவாகம ஞானம் வேதசாரார்த்தம்'' என்றும், ''இந்தத் தந்திரம் வேதசாரம்'' என்றும், ''சித்தாந்தம் வேதசாரமா யிருத்தலினால்'' என்றும்;

𑌵𑍇𑌦𑌾𑌨𑍍𑌤𑌾𑌰𑍍𑌥𑌮𑌿𑌦𑌂 𑌜𑍍𑌞𑌾𑌨𑌂 𑌵𑍇𑌦𑌸𑌾𑌰𑌮𑌿𑌦𑌂 𑌤𑌨𑍍𑌤𑍍𑌰𑌮𑍍 ।
𑌸𑌿𑌦𑍍𑌧𑌾𑌨𑍍𑌤𑌂 𑌵𑍇𑌦𑌸𑌾𑌰𑌤𑍍𑌵𑌾𑌤𑍍 ।

வேதாந்தார்த் தமிதம் ஞாநம்
வேதசார மிதந்தந்திரம்
சித்தாந்தம் வேத சாரத்வாத்

இச்சிவாகமம் சொல்லியதற்குச் சான்று கூறிற்று. சைவபுராணமும் இந்த வேதகத்தன்னை ஆசிரயித்தவர்களுடைய முக்தியின் பொருட்டுள்ளது

சாரமாகிய சிவாகமம்" என்றும், "பதிபசுபாச ஞானமே ஞானம் என்று சொல்லப் பட்டது" என்றும், "சிவாகமம் சொல்லிய ஞானமே ஈண்டு ஞானமெனப் பட்டது" என்றும், "எனது சிவாகமார்த்த விஞ்ஞானமே ஞானம், பிறபொருளை அறியும் ஞானம் ஞானமன்றாம்" என்றும

𑌵𑍇𑌦𑌸𑌾𑌰𑌂 𑌶𑌿𑌵𑌜𑍍𑌞𑌾𑌨𑌂 𑌸𑍍𑌵𑌾𑌶𑍍𑌰𑌿𑌤𑌾𑌨𑌾𑌂 𑌵𑌿𑌮𑍁𑌕𑍍𑌤𑌯𑍇 ।
𑌪𑌶𑍁𑌪𑌾𑌶𑌪𑌤𑌿𑌜𑍍𑌞𑌾𑌨𑌂 𑌜𑍍𑌞𑌾𑌨𑌮𑌿𑌤𑍍𑌯𑌭𑌿𑌧𑍀𑌯𑌤𑍇 ।
𑌶𑌿𑌵𑌾𑌗𑌮𑍋𑌕𑍍𑌤𑌯𑌜𑍍𑌞𑌾𑌨𑌂 𑌤𑌜𑍍𑌜𑍍𑌞𑌾𑌨𑌮𑍁𑌚𑍍𑌯𑌤𑍇 ।
𑌮𑌮𑌾𑌗𑌮𑌾𑌰𑍍𑌥𑌵𑌿𑌜𑍍𑌞𑌾𑌨𑌂 𑌜𑍍𑌞𑌾𑌨𑌂 𑌨𑌾𑌨𑍍𑌯𑌾𑌰𑍍𑌥𑌵𑍇𑌦𑌨𑌮𑍍 ॥

வேதசாரம் சிவஞாநம் ஸ்வாச்ரிதாநாம் விமுக்தயே ।
பசு'பாசபதிஞாநம் ஞாநமித்யபிதீயதே ।
சிவாகமோக்தம் யச்ஞாநந்ததா ஞாநமுச்யதே ।
மமாகமார்த்தவிஞ் ஞாநம் நாந்யார்த்த வேதநம் ।

கூறிற்று. இதனால் வேதம் சூத்திரம் போலவும், ஆகமம் அதற்குப் பாஷ்யம் போலவும் இருத்தலால், வேதம் பொது என்றும், ஆகமம் சிறப்பு என்றும் சொல்லப்படும். இது பற்றியே திருமூல நாயனார் வேதமொடாகம மெய்யாமிறைவ னூலோதும் பொதுவுஞ் சிறப்பு மென்றுள்ளன" என்று அருளிச்செய்தார். பிராமணர் க்ஷத்திரியர் வைசியர் என்னும் மூவருணத்தார்க்குரிய ஆகமம் எனவும், பிராமணர் முதலிய நால்வருணத்தார்க்குரிய ஆகமம் எனவும், ஆகமம் இருதிறப்படும் என்றும், முன்னையது வேதம் எனவும், பின்னையது ஆகமம் எனவும் வழங்கப்படும் என்றும், வேதம் சிவாகமம் என்னும் இரண்டுக்கும் கர்த்தா சிவபிரான் என்றும், இவ்விரண்டுக்கும் பேதமில்லை என்றும் ஸ்ரீசைவபாஷ்யகாரர் பாசுபத்யதி கரணத்தில் வரைந்திருக்கின்றார். அஃதொழிந்து ஈசானமுதலிய பஞ்சப்பிரமம், பிரணவம், பஞ்சாக்ஷரம், பிராசாதமுதலிய மந்திரம், பதிபசுபாச வியவகாரம், பஸ்மோத்தூளனம், திரிபுண்டர தாரணம், சிவலிங்கார்ச்சனம், உருத்திராக்ஷதாரண முதலிய பரதரும சிவ புண்ணியங்கள் வேதம் சிவாகமம் என்னும் இரண்டிலும் காணப்படுவதனால், வேதசிவாகமம் இரண்டும் பிராமாணியங்களாம் என்றும் வரைந்தார். பதினெண் வித்தைகளுட் பட்ட வேதநான்கும் பிரமகாண்டமும், பிரமஞானத்துக்கு நிமித்தமாகிய கன்மகாண்டமும் உணர்த்துவனவாக, சிவாகமங்கள் பிரமகாண்டமாய் அடங்கும் என்க. பதினெண் வித்தைகளுள்ளே வேதங்கள் மேலாயின; வேதங்களுள்ளே சதருத்ரீயம் மேலாயது; சதருத்ரீயத்தினுள்ளே காணப்படும்

𑌨𑌮𑌶𑍍𑌶𑌿𑌵𑌾𑌯

நமச்சிவாய।

ஐந்தெழுத்தும் அச்சதருத்திரீயத்தினும் மேலாயது; இப்பஞ்சாக்ஷரத்துள்ளும் "சிவ" என்னும் ஈரெழுத்தும் மேலாயது. இதுபற்றியே, சைவாகமரகசிய முணர்ந்த பெரியோர்

𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌸𑍁 𑌶𑍍𑌰𑍁𑌤𑌿𑌰𑍁𑌤𑍍𑌕𑍃𑌷𑍍𑌟𑌾 𑌰𑍁𑌦𑍍𑌰𑍈𑌕𑌾𑌦𑌶𑌿𑌨𑍀 𑌶𑍍𑌰𑍁𑌤𑍌 ।
𑌤𑌤𑍍𑌰 𑌪𑌞𑍍𑌚𑌾𑌕𑍍𑌷𑌰𑍀 𑌤𑌸𑍍𑌯𑌾𑌂 𑌶𑌿𑌵 𑌇𑌤𑍍𑌯𑌕𑍍𑌷𑌰𑌦𑍍𑌵𑌯𑌮𑍍 ॥



வித்யாசுச்ருதி ருத்க்ருஷ்டா ருத்ரைகாதசநீ சுருதௌ
தத்ரபஞ்சாக்ஷரீ தஸ்யாம் சிவ இத்யக்ஷரத்வயம்

என்று கூறுவர் என மொழிந்தார் தீக்ஷிதயோகியார். திருவைந்தெழுத்தினுள்ளே ஓர் எழுத்தும், ஈரெழுத்தும், மூவெழுத்தும், ஐந்தெழுத்தும், அஷ்டாக்ஷரமும், இருதலை மாணிக்கமும், முத்திபஞ்சாக்ஷர முதலியவும் எழுத்தின் கண்ணை நோக்காது உரைக்கப்பட்ட திருவைந்தெழுத்தின் பேதமெல்லாம் பஞ்சாக்ஷரம் என வழங்கப் படுதலின், மேலே உரைத்த "சிவ" என்னும் ஈரெழுத்தும் சுத்த பஞ்சாக்ஷரம் எனப்படும் என்க, இந்தச் "சிவ' என்னும் சப்தம் இருக்கு வேதத்துப் பத்தாம் மண்டலத்து எட்டாம் அங்கத்துத் தொண்ணூற்றிரண்டாம் சூக்தத்து ஒன்பதாம் மந்திரத்திலே

𑌸𑍍𑌤𑍋𑌮𑌂 𑌵𑍋 𑌅𑌦𑍍𑌯 𑌰𑍁𑌦𑍍𑌰𑌾𑌯 𑌶𑌿𑌕𑍍𑌵𑌸𑍇 𑌕𑍍𑌷𑌯𑌦𑍍𑌵𑍀𑌰𑌾𑌯 𑌨𑌮𑌸𑌾 𑌦𑌿𑌦𑌿𑌷𑍍𑌟𑌨 ।
𑌯𑍇𑌭𑌿𑌃 𑌶𑌿𑌵𑌃 𑌸𑍍𑌵𑌵𑌾𑌁 𑌏𑌵𑌯𑌾𑌵𑌭𑌿𑌰𑍍𑌦𑌿𑌵𑌃 𑌸𑌿𑌷𑌕𑍍𑌤𑌿 𑌸𑍍𑌵𑌯𑌶𑌾 𑌨𑌿𑌕𑌾𑌮𑌭𑌿𑌃 ॥

ஸ்தோமம் வோ அத்யருத்ராய சிக்கசேக்ஷயத்வீராய நமசா திதிஷ்டந
யேபிச்சிவ: ச்வவாந் ஏவயாவபிர் திவ: சிஷக்தி ச்வயசாநிகாமபி:

"குதிரைகளோடு செல்லும் மருத்துக்களுக்குச் சகாயமாய் (எமரையும்) காக்கவல்லுநரும், சுவகீர்த்தி யுடையருமாகிய சிவபிரானார் (தோன்றாத துணை புரிந்து) தொடர்ந்தார்; இருத்துவிக்குக்களே! நீங்கள் அபிலாஷை யுடைய மருத்துக்களோடு வீராதி வீரரும் புகலடைந்தவரைக் காக்க வல்லுநருமாகிய அச்சிவபிரானாராம் உருத்திரருக்கு நமஸ்காரத்தோடு ஸ்தோத்திரம் செய்யுங்கள்" என்று கூறப்பட்ட இடத்திலே காணப்படுகின்றது.
இவ்வாறு "சிவ" என்னும் மொழி வெளிப்படையாக இருக்கு வேதத்திலே
காணப்பட்ட விடத்தும், ஜெர்மன் பண்டிதர் ஒருவர் தாம் மனம்போன
வாறு மொழி பெயர்க்குங்கால் அச் "சிவ" மொழியை * "மங்கலமாகிய"
என அர்த்தஞ்செய்து "சிவ" நாமத்தை மறைவு செய்து கெடுத்து
விட்டார். வடமொழி எழுத்தறியாது ஆங்கிலேய பாஷை மாத்திரம்
கற்றுக்கொண்ட கிறிஸ்தவப் பாதிரிமார் "சைவர்களே! உங்கள் இரு
க்கு வேதத்திலே "சிவ" சப்தம் எங்கே காணப்படுகின்றது?" என்று நம்
சைவர்களை வினாவித் துன்புறுத்து கின்றார். வேதத்துக்குப் பாஷ்யஞ்
செய்த சாயணாசாரியர் மேலே உதகரித்த இருக்குவேத மந்திரத்திற் கண்ட
"சிவ" சப்தத்துக்குப் "பரமேசுவரர்" என்று நேரே தமது பாஷ்யத்
திற் பொருள் செய்திருப்பாராக, யாது காரணத்தினாலோ † கிறிவித்
பண்டிதர் அந்த வேதபாஷ்யப் பொருளை அவமதித்து இவ்வாப்பொருள்
வரைந்தார்? இருக்கு வேதத்தில் இன்னும் பல விடங்களிலே சிவ சப்தம்
காணப்படுகின்றது. சுக்கிலயசுர்வேதத்துப் பதினான்காம் அத்தியாயத்து
நாற்பத்தொராம் மந்திரத்திலே ஸ்ரீபஞ்சாக்ஷர ஈரெழுத்துக் காணப்படுகி
ன்றது. அஃதொழிந்து, ஸ்ரீ மகா நாராயணோப நிடதத்திலே "அழியாதவ
ரும் சாச்வதருமாகிய சிவன்"

𑌶𑌾𑌶𑍍𑌵𑌤𑌂 𑌶𑌿𑌵𑌮𑌚𑍍𑌯𑍁𑌤𑌮𑍍 ।

சாச்வதம் சிவமச்யுதம்

என்று சொல்லப்பட்டது. கைவல்லியோப நிடதத்திலே "அமிர்தரும் பிர
சாந்தருமாயுள்ள சிவன்"

* Auspicious † Griffith.

𑌶𑌿𑌵𑌂 𑌪𑍍𑌰𑌶𑌾𑌨𑍍𑌤𑌮𑌮𑍃𑌤𑌮𑍍 ।

சிவம் ப்ரசாந்த மம்ருதம்

என்று கூறப்படுகின்றது. சைவசுவேதா சுவதரோப நிடதத்திலே "சர்வ வியாபகராயுள்ள சிவன்"

𑌤𑌸𑍍𑌮𑌾𑌤𑍍 𑌸𑌰𑍍𑌵𑌗𑌤𑌃 𑌶𑌿𑌵𑌃 ।

தஸ்மாத் சர்வ கதச்சிவ:

என்று சொல்லப் படுகின்றது. "எப்போது மனிதர் ஆகயாத்தைத்தோலாக உடுக்கின்றாரோ, அப்போதுதான் சிவனை அறியாது (சென்ன) துக்கத்துக்கு முடிவுமாகும்"

𑌯𑌦𑌾 𑌚𑌰𑍍𑌮𑌵𑌦𑌾𑌕𑌾𑌶𑌂 𑌵𑍇𑌷𑍍𑌟𑌯𑌿𑌷𑍍𑌯𑌨𑍍𑌤𑌿 𑌮𑌾𑌨𑌵𑌾𑌃 ।
𑌤𑌦𑌾 𑌶𑌿𑌵𑌮𑌵𑌿𑌜𑍍𑌞𑌾𑌯 𑌦𑍁𑌃𑌖𑌸𑍍𑌯𑌾𑌨𑍍𑌤𑍋 𑌭𑌵𑌿𑌷𑍍𑌯𑌤𑌿 ॥

யதாசர்மவதாகாசம் வேஷ்டயிஷ் யந்திமாநவா
ததாசிவம விஞ்ஞாயதுக்க ஸ்யாந்தோ பவிஷ்யதி

என்று கூறிற்று. இதற்கு உபப்பிருங்கணமாகிய சங்கர சங்கிதை "மனிதராயினோர் ஆகாயத்தை எப்பொழுது தோல்போல உரித்துப் போர்ப்பாரோ, அப்பொழுதே அவர் சிவனை அறியாது சந்தேகமின்றி முத்தி அடைவார்"

𑌚𑌰𑍍𑌮𑌵𑌦𑍍𑌵𑍍𑌯𑍋𑌮𑌮𑌨𑍁𑌜𑌾 𑌵𑍇𑌷𑍍𑌟𑌯𑌿𑌷𑍍𑌯𑌨𑍍𑌤𑌿 𑌚𑍇𑌦𑍍𑌭𑍃𑌶𑌮𑍍 ।
𑌶𑌿𑌵𑌂 𑌤𑌦𑌾 𑌤𑍇 𑌅𑌵𑌿𑌜𑍍𑌞𑌾𑌯 𑌮𑍁𑌕𑍍𑌤𑌿𑌮𑍇𑌷𑍍𑌯𑌨𑍍𑌤𑍍𑌯𑌸𑌂𑌶𑌯𑌮𑍍 ॥

சர்மவத்வ்யோமமநுஜா வேஷ்ட யிஷ்யந்தி சேத்ப்ருசம்
சிவந்ததாதே அவிஞ்ஞாய முக்திமேஷ்யந்த்யசம்சயம்

என்று கூறப்பட்டது. இதனால் ஆகாயத்தினின்று தோலை உரித்துடுத்தல் எவர்க்கும் இயலாதவாறுபோல, சிவத்தை அறியாது பாசத்துயரொழிந்து வீடடைதல் ஒருவாற்றானும் எவர்க்கும் கூடாதாமென உவமைவாயிலாக வலியுறுத்தப்பட்டது. மேலே கூறிய சுருதிபுராணக் கருத்தை அடக்கி ஸ்ரீ கச்சியப்ப சிவாசாரிய சுவாமிகளும்,

பரசிவ னுணர்ச்சி யின்றிப் பல்லுயிர்த் தொகையு மென்றும்
விரவிய துயர்க்கீ றெய்தி வீடுபே றடைது மென்ற
லுருவமில் விசும்பிற் றோலை யுரித்து டுப்பதற்கொப் பென்றே
பெருமறை யியம்பிற் றென்னிற் பின்னுமோர் சான்று முண்டோ.

என அருளிச்செய்தார்கள். சைவமுண்டகோப நிடதத்திலே சண்டாளனாயினும் சிவ என்னும் மொழியை உச்சாரணஞ் செய்வானேல், அவனோடு பேசுக, அவனோடுறைக, அவனோடடனிருந்துண்ணுக"

𑌅𑌪𑌿 𑌵𑌾 𑌯𑌶𑍍𑌚𑌣𑍍𑌡𑌾𑌲𑌃 𑌶𑌿𑌵 𑌇𑌤𑌿 𑌵𑌾𑌚𑌂 𑌵𑌦𑍇𑌤𑍍 𑌤𑍇𑌨 𑌸𑌹 𑌸𑌂𑌵𑌦𑍇𑌤𑍍 𑌤𑍇𑌨 𑌸𑌹 𑌸𑌂𑌵𑌸𑍇𑌤𑍍
𑌤𑍇𑌨 𑌸𑌹 𑌭𑍁𑌞𑍍𑌜𑍀𑌤 ।

அபிவாயச்சண்டாளச் சிவஇதிவாசம் வதேத்தேநசஹசம்வதேத் தேநஸக
புஞ்சீத



என்று சொல்லப்பட்டிருக்கின்றது. இத்தச் சிவ நாமப்பெருமை கூறிய மந்திரத்தின் பொருளையே ஸ்ரீ வாகீசப் பெருந்தகையார் ஓர்ந்து "அங்கமெலாங் குறைந்தழுகு தொழு நோயராயாவுரித்துத் தின்றுழலும் புலையரேனுங் கங்கைவார் சடைக்கரந்தார்க் கன்பராகிலவர்கண்டீர் நாம் வணங்குங் கடவுளாரே" என்று இங்ஙனம் அருளிச்செய்தார். இவற்றாற் சிவநாமம் வேதோபநிஷத் முதலியவைகளிலே பிரதிபாதிக்கப்பட்டுள்ளது என்பது அறியப்படுகின்றது. இதனாற் சிவ என்னும் ஈரெழுத்துச் சிவநாமம் எத்திறத்தன்பராயினோர்க்கும் மிக லேசானே முத்தி சாதிப்பதாம் என ஓர் உயர்வொப்பில்லா உபாயங் கூறப்பட்டது. அம்மையப்பனை உணர்த்தும் இவ்வீர் எழுத்தையும் ஒருதரம் (பேரன்போடு) உரைப்பின், அது மனிதராயினோரது பாவத்தை விரைந் தொழித்துவிடும். இது பற்றியே சிவார்க்கமணிதீபிகை நூலுடையார்

𑌯𑌦𑍍 𑌦𑍍𑌵𑍍𑌯𑌕𑍍𑌷𑌰𑌂 𑌨𑌾𑌮 𑌗𑌿𑌰𑍇𑌰𑌿𑌤𑌂 𑌨𑍃𑌣𑌾𑌂 ।
𑌸𑌕𑍃𑌤𑍍𑌪𑍍𑌰𑌸𑌙𑍍𑌗𑌾𑌦𑌘𑌮𑌾𑌶𑍁 𑌹𑌨𑍍𑌤𑌿 ॥

யத்த்வியக்ஷரம் நாமகிரேரிதம் நிருணம்
சகிருத்ப்ரசங்காதக மாசுகந்தி

என்று உதகரித்தார். "முக்கண்ணரே! சிவாகமங்களெல்லாவற்றானும் சிவரத்நமெனக் கொண்டாடப்படும் "சிவ" என்னும் நாமமும், மிருடர் சங்கரர் என்னும் நாமதேயங்களும் வெளிப்படையாக (நுமக்கே) கேட்கப்படுதலால், இந்த நாமங்கள் ஆன்மாக்கள் அனைத்துக்கும் இன்பமருளும் நும்மை உயிர்கள் அநந்நியமாய்ச் சரணடைந்து ஆசிரயிக்கின்றார்கள் என உணர்த்துகின்றன" இதனாற் பிறரெவர்க்கும் அப்பெயர்கள் உரித்தன்றாம் என்பதும் பெறப்படுகின்றது.

𑌯𑌚𑍍𑌛𑌿𑌵𑌰𑌤𑍍𑌨𑌮𑌖𑌿𑌲𑌾𑌗𑌮𑌲𑌾𑌲𑌨𑍀𑌯𑌂 ।
𑌯𑍇 𑌚 𑌤𑍍𑌰𑌿𑌨𑍇𑌤𑍍𑌰𑌮𑍃𑌡𑌶𑌙𑍍𑌕𑌰𑌨𑌾𑌮𑌧𑍇𑌯𑍇 ।
𑌏𑌤𑍈𑌰𑌪𑌿 𑌸𑍍𑌫𑍁𑌟𑌮𑌨𑌨𑍍𑌯𑌸𑌮𑌾𑌶𑍍𑌰𑌯𑌨𑍍𑌤𑍇 ।
𑌵𑌿𑌖𑍍𑌯𑌾𑌪𑍍𑌯𑌤𑍇 𑌸𑌕𑌲𑌜𑍀𑌵𑌸𑍁𑌖𑌪𑍍𑌰𑌦𑌤𑍍𑌵𑌮𑍍 ॥

யச்சிவரத்ந மகிலாகமலாள நீயம் யேசத்ரிநேத்ரம்ருடசங்கரநாமதேயே | ஏதைரபிஸ்புடமநந்ய சமாச்ரயந்தே விக்யாப்யதே சகல ஜீவ சுகப்ரதத்வம் ||

என்றார் தீக்ஷிதயோகியார். இத்தச் சிவ என்னும் சிவரத்நமடங்கிய ஸ்ரீபஞ்சாக்கரப்பெருமை உணர்த்தப்போந்த சைவசமயஸ்தாபனாசாரியருள் ஒருவராகிய திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் "ஆருத பேரன்புடையராய், அதனாற் கண்களிலே நின்றும் ஆனந்தக்கண்ணீர் கசிந்து உருகிப் பெருக ஓதுவோரை நல்ல முத்திநெறிக்கண்ணே உய்ப்பது இருக்காதி நான்கு வேதங்களுள்ளும் மெய்ப்பொருளாய்ப் பிரதிபாதிக்கப்படுவதாகிய எமது ஆன்ம நாயகரது நாமமாம் ஸ்ரீ பஞ்சாக்ஷரம்"

காத லாகிக் கசிந்துகண் ணீர்மல்கி
யோது வார்தமை நன்னெறிக் குய்ப்பதும்
வேத நான்கினு மெய்ப்பொரு ளாவது
நாத நாம நமச்சிவாயவே.

என்று அருளிச்செய்தார். "ஆகாயமளவும் ஒன்றின்மே லொன்றாக நிறைத்து அடுக்கப்பட்ட விறகுகட்டைகளுள்ளே வைக்கப்பட்ட கொடிய தீயானது அதனை உண்ணுமாறு புகுந்துவிடில் அக்கட்டைகள் யாவும் பஸ்மீகரமாய்ப் போகும்; அதுபோலப் (பிரமன்) படைத்த உலகின்கண்ணே ஒருவன் அனந்தகோடி செனனங்களினும் பாசப் பழக்கத்தினாற் பயின்று பயின்று ஈட்டிய பாவ சமூகங்களை அணுகி நின்று அறுத்துவிடுவது ஸ்ரீ பஞ்சாக்ஷரமாம்"

விண்ணுற வடுக்கிய விறகின்வெவ்வழ
லுண்ணிய புகிலவை யொன்று மில்லையாம்
பண்ணிய வுலகினிற் பயின்ற பாவத்தை
நண்ணிநின் றறுப்பது நமச்சி வாயவே.

என்றும் "தர்க்கவியாகரணமுதலிய சாஸ்திரம் பல பேசுஞ் சழக்கர்காள்! நீவிர் நுமது கோத்திரப் பெருமையையும் குலப்பெருமையையும் பேசிக் குலாவி, பின்றும் உயிர் வவ்விப்போமாறு யமன் வருங்கால் என் செயக்கடவீர்; பாவக்கடலின் அழுந்துவோரைத் திருவடிமலர்க்கரையிலிருத்த வன்மை யுளதாதலேக்கிப் பாத்திரமாயுள்ளது சிவமென்று நீவிர் ஓர் காற்பணியீரேல் திருமால் வணங்கு நாதர் மாத்திரைப்போதினுள்ளே நுமக்கு அருளுவர்"

சாத்தி ரம்பல பேசுஞ் ச ழக்கர்காள்
கோத்தி ரமுங் குலமுங்கொண் டென்செய்வீர்
பாத்தி ரஞ்சிவ மென்று பணிதிரேல்
மாத்தி ரைக்கு ளருளுமாற் பேறரோ.

என்றும் அருளிச்செய்தார் திருநாவுக்கரசுநாயனார் என்க. மேலே கூறியவாற்றால், வேத சிவாகமங்களிலும் திராவிடவேத சித்தாந்த சாஸ்திரங்களினும் புகழப்படும் பெரும் பெயராகிய "சிவ" என்னும் ஈரெழுத்து மகாவாக்கியத்தின் பெருமை சிற்றறிவுடையேமாகிய நம்மால் முழுதும் எடுத்துரைக்க முடிவுபோவதின்றாம். இம்சையை உணர்த்தும் "ஹிம்சி" தாது "சிம்ம" என வந்தாற்போல, அன்பாகிய இச்சையை உணர்த்தும் "வசி" தாது "சிவ" என வர்ண விபர்யயமுற்றுச் "சிவ" என நின்றது. இந்த இச்சை சாமானிய தேவர் மனிதர் முதலாயினோருடைய இச்சைபோல் வதன்றாய், "அன்பே சிவம்" என்று ஸ்ரீ மூலர் அருளியவாறு அன்பின் மேலதாயிற்று. "இச்சை" என்னும் மொழி விரும்புதல் (1) எனப் பொருள்படும் "இஷ்" என்னும் தாதுவினின்று பிறந்து காதல், விருப்பம், நேயம் எனப் பொருள் பயக்கும் அன்பின் மேலாயிற்று. "இச்சை" எனப் பொருள்படும் "லோபம்" (லொபஃ) என்னும் மொழியும் விரும்புதல் (2) எனப் பொருள்படும் "லுப்" (லுபீ) என்னும் தாதுவினின்று பிறந்தது. பிறக்கவே, அன்புபெற்ற அருளென்னும் குழவி அருளுடைமை பற்றிச் சமஸ்த லோகங்களையும் அருட்கயிற்றினாற் பிணித்து நிற்கும் இயல்புடைய தாதலினாலன்றோ, நமது பரத கண்டத்திலே ஆதிகாலத்துள்ள வேதாகமாதிகளிலே பேசப்பட்ட சைவ சித்தாந்த அன்பு நிலை பொசிந்து மேலைக் கண்டங்களினும் ஊற்றெடுத்து நின்ற உண்மை அம்மேலைக் கண்டத் தாராது அவாந்தர ஆங்கில பாஷையிலுள்ள அன்பு எனப் பொருள் படும் "லவ்" (3) என்னும் மொழி விரும்புதல் (4) எனப் பொருள்படும். இது மேலே உரைத்த "லுப்"

(1) To desir (2) To desire (3) Love (4) To desire.



(லுபஃ) என்னும் வடமொழியோடு சம்பந்தமுற்று நின்றது. இந்த வடமொழி ஆங்கில மொழியோடன்றி மேலைத்தேசத்து ஆங்கிலோசாக்சன் (5) ஜேர்மன் (6) டச்சு (7) லத்தீன் (8) முதலிய பாஷா மொழிகளோடும் சம்பந்தமுற்று நின்றது. இதுபற்றியன்றோ ஸ்ரீமூலர் "அன்பேசிவம்" என வலியுறுத்தி உரைத்த பொருள் புறமதஸ்தர்களானும் "தேவன் அன்பாயிருக்கின்றார்" எனப் பொருள்பட "கோட் இஸ் லவ்" (9) என்று கவரப்பட்டதென்க. அப்படி ஈரிடத்தும் காணப்படுதலால், அவ்விருசமயமும் ஒரு சமயமாமோ எனின், புறமதஸ்தர்களால் எடுத்துரைக்கப்பட்ட அவ்வன்பு உண்மைச் சிவஞான வாயிலாக "ஞானத்தால் வீடு" என்று அருளப்பட்டவாறு ஊற்று வெட்டிப் பெறப்பட்ட தொன்றன்றாம். ஆதலால், ஸ்ரீ மூலர் "அன்பே சிவம்" என்று அருளிய வியாபக மெய்ப்பொருளுள்ளே "தேவன் அன்பாயிருக்கின்றார்" (10) எனனும் புறமதஸ்தர் வாக்கியப் பொருள் ஏகதேசமாய் அடங்கி நிற்குமாம் என்க.

உலகின்கண்ணே சமயங்களும் அந்தந்தச் சமயசாஸ்திரங்களும் அந்தச் சாஸ்திரப்பொருள்களும் ஒன்றோடொன்றொவ்வாது பல திறத்தனவாயிருக்கும். இவைகளெல்லாவற்றுள்ளும் மேலாகிய சமயம் யாது? சாஸ்திரம் யாது? பொருள் யாது? எனில் இச்சமயப் பொருள்களெல்லாம் இஃது ஆகும், அஃது அன்று என்னும் பிணக்கின்றித் தன்னிடத்தே காணநிற்பது எந்தச் சமயமோ அந்தச் சமயமே சமயம். அந்தச் சமய சாஸ்திரமே சாஸ்திரம். அந்தச் சாஸ்திரத்திற் சொல்லப்படும் பொருளே பொருள். இப்படி எல்லாச் சமயப்பொருளையும் தன்னிடத் தடக்கி நிற்கும் சற்சமயம் சைவமேயாம். ஆதலால், அந்தச் சமயமே சமயம். அந்தச் சமயசாஸ்திரங்களாகிய வேதசிவாகமங்களே சாஸ்திரம். அந்தச் சாஸ்திரங்களிற் சொல்லப்படும் பதிபசுபாசம் என்னும் முப்பொருள்களுமே மெய்ப்பொருள்கள். இதுபற்றியே அருணந்தி சிவாசாரிய சுவாமிகள் "இதுவாகு மதுவல்ல வெனும் பிணக்கதின்றி நீதியினா லிவையெல்லா மோரிடத்தே காணநிற்பது யாதொரு சமய மதுசமயம் பொருணூல்" என்று அருளிச்செய்தார். ஆதலால், அனைத்துக்கும் வியாபகமாய் நின்ற சைவசமயமே நமக்கெல்லாம் சிவாத்ம சமயமாய் முற்றியது.

ஸ்ரீ காசிவாசி - செந்திநாதையர்.

## EDITORIAL NOTES.

## பத்திராதிபர் குறிப்புக்கள்.

**யதார்த்த பாஸ்கரன்** :—இப்பெயர் கொண்டதோர்மாதாந்தத் தமிழ்ப்பத்திரிகை சென்ற நான்கு மாதங்களாக நடைபெற்று வருகின்றது. இதன் சஞ்சிகைகளுள் ஒவ்வொன்றும் ஏறக்குறைய 32-பக்கங்கள் கொண்டுளது. இதன் வருடச்சந்தா இரண்டரை ரூபாய். இதற்கு அதிபராவார் ம-ள-ள-ஸ்ரீ வி. மு. சுவாமிநாதையர்கள், பி. ஏ., சமரசஞானசந்திரகை, இரத்தினமாலிகை முதலிய நூல்களியற்றியவர். இப்பத்திரிகையானது மேற்புறப்பதிப்பினும், உட்புறத்து முதற்பக்கப்பதிப்பினும், சம்புடம் வருஷமாதக் குறிப்பினும், புத்தகக்

(5) Anglo-saxon (6) German (7) (Dutch) (8) (Latin) (9) God is (love) (10) (God is love.)

குறிப்புக்கள் பத்திராதிபர் குறிப்புக்கள் என்ற பெயர் முறையினும், அவற்றின்பதிப்புமுறையினும் பக்கங்கள்தோறும் தலைப்பெயர் எண் வருஷமாதங்கள் குறிக்குமுறையினும், எம்முடையஞானபோதினியையொத்து இயங்குகின்றது. இவ்வாறு நம்முடைய ஞானபோதினி தனது குறிப்பீடுகள் முதலிய யாவற்றினும் பிறிதுபத்திரிகையாற் பின்பற்றப்படுதலின் மிக்ககௌரவஞ்சான்றதேயென்றற்கண் என்னைகொல் ஐயம்? இதுவிஷயத்தில் நாம்மிகக் கழிபேருவகை பூக்கின்றோம். மற்றுப் பாஸ்கரனை முதற்சஞ்சிகையினும் மூன்றாஞ்சஞ்சிகையினுமேகண்ணுற்றோம். யாம்கண்ணுற்றவளவு அதன் அருமைபெருமைகளை யெடுத்துரைப்பதில் தடையில்லை. சாவித்திரியென்றதோர்கதையும், அருணகிரிநாதர்வரலாறும், ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்ஸதேவர்சரிதமும் உபதேசமொழிகளும் பிறவும்மிக்க செவ்விவாய்ந்தனவாய்ப் படிப்போர்யாவர்க்கும் இன்பம் பயக்குமென்பதில் ஐயமில்லை. இவைபோலும் நல்விஷயங்கள் பலவெழுதிப் பத்திரிகையை ச்சிறப்பாக நடத்துவார் நம் நண்பரென நம்புகின்றோம்.

**அபிநவபத்திரிகை**:—இப்பெயர்கொண்ட மாதாந்தப் பத்திரிகை பிறிதொன்று சென்ற இருமதிகளாக வெளியாகின்றது. இது கருவியாற்செய்யாது கையாற்செய்த உயர்ந்தகடிதத்தில் அச்சாகின்றது. 60-பக்கங்கள் கொண்டது. வருடச்சந்தாவும் மூன்றே ரூபாய். கண்டோர்கண் கவர்வனப்பிற்றாய்ப் பிரசுரிக்கப்படுகின்றது. யாவரும் வாசித்து எளிதினுணரத்தக்க தெளிவான தமிழ் நடையில் எழுதப்பட்டு வருகின்றது. இப்பத்திரிகையின் ஆசிரியர்கள் ம-ா-ா-ஸ்ரீ, நா. இராமாநுஜாசாரியரவர்கள் எம்.ஏ., என்பவரும், ம-ா-ா-ஸ்ரீ த. ரா. ஸ்ரீநிவாச ஐயங்காரவர்கள். பி. ஏ. என்பவருமாவார். இம்முதற் சஞ்சிகையின் விஷயங்களாவன: டி. எஸ். ஸ்ரீநிவாச ஐயங்காரவர்கள், பி. ஏ., மொழிபெயர்த்த மிருச்சகடிகையும், விவேகாநந்த சுவாமிகள் சரித்திரமும், ஸ்ரீ உ. வே. தி. ஈ ஸ்ரீநிவாசாசாரியரவர்கள் எழுதிய இராமாயணம் முந்தியதா? மகாபாரதம் முந்தியதா?' என்றதும், டி. ஏ கோபீநாதராயரவர்கள், எம் ஏ., வரைந்துள சரீரக சாஸ்திரமும், சக்கிரவர்த்தியாரின் முடிசூட்டிரட்டைமணி மாலையும், வேதாந்தசாரமும், திவான்பகதூர் ரு. இரகுநாதராயரவர்கள் எழுதிய 'ஆரிய தர்ம சாஸ்திரத்தின்படி விவாகம் ஐச்சிகமா? அல்லவா?' என்பதும், சூதவிருக்ஷம் என்பதுமாம். இதன் இரண்டாஞ் சஞ்சிகையுங் கண்ணுற்றோம். அதுவுந்தன் பெருமையுங் கௌரவமுங் குன்றாதவாறு அமைந்துளது. விசேஷப்பெயர் வாய்ந்த கல்விமான்கள் பலர் இதற்குவிஷயதானஞ் செய்கின்றமையானும், பத்திராதிபர்கள் பேரூக்க மெடுத்து உழைத்தலானும், குறைந்த சந்தா ஏற்பட்டிருந்தலானும், பிறவாற்றானும் இப்பத்திரிகை தலைசிறந்தோங்குமென் றெண்ணுதற் கிடனுண்டு.

**ஞானசாகரம்**:—சென்னை வேதாக மோத்த சைவசித்தாந்த சபைப்பிரசுரமாகிய இப்பத்திரிகையின் ஆடிமாதத்து இதழிற் சில அருமையான விஷயங்கள் எழுதப்பட்டுள. அவைதம்முள் 'தமிழ் மிகப்பழைய மொழியாமென்பது' என்ற தன் கண் பத்திராதிபர் தமது மொழி நூற்புலமைகாட்டி மிகச் செவிபெற வரைந்திருக்கின்றமையிற் சிறந்து விளங்குகின்றது. இனி மு. இராகவையங்காரவர்கள் எழுதிய 'இறையனாரகப் பொருளுரை வரலாறும்,' அ. சண்முகம்பிள்ளை அவர்கள் எழுதிய 'ஆனந்தக்குற்றம்' என்பதும் நுட்பமான ஆராய்ச்சிகாட்டி ஒளிர்கின்றன. இத்தகைய நல்ல விஷயங்களடங்கிய நல்ல பத்திரிகைகள் நாடோறும் தலைசிறந்து விளங்குவனவாக.

22 ...902 MADRAS

# ஞானபோதினி

ஒரு மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

தாமின் புறுவ துலகின் புறக்கண்டு
காமுறுவர் கற்றறிந் தார்—திருக்குறள்.

சம்புடம் VI } 1902ஞ நவம்பர்மீ 20உ. { இலக்கம் 4.

விஷயங்கள்.


| | பக்கம். |
|---|---|
| சர்வ கலாசாலை விசாரணை: III—பத்திராதிபர் | ... 121 |
| ஔவையார்.—சித்தூர்-சுப்பிரமணியாசாரியர், பி.ஏ., எல்.டி. | ... 124 |
| மானவிஜய வாராய்ச்சி.—அ. பூமிநாத முதலியார் | ... 132 |
| சித்திர கவிகள்.—அசலாம்பிகை யம்மையவர்கள் | ... 139 |
| ஔவை முனிமொழி.—ஸ்ரீ காசிவாசி - செந்திநாதையர் | ... 141 |
| கட்டுக் கதைகள் —ம. சு. கோவிந்தசிவனார். | ... 149 |
| புத்தகக் குறிப்புக்கள்.— | ... 150 |
| பத்திராதிபர் குறிப்புக்கள்.— | ... 155 |


பத்திராதிபர்:— { எம். எஸ். பூர்ணலிங்கம் பிள்ளை, பி. ஏ.
{ வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியார், பி. ஏ.

சென்னை:
தாம்ஸன் கம்பெனியார்
பதிப்பிப்பது.

1902.

சஞ்சிகை ரு. 0—4—0.

வருஷ சந்தா ரு. 2—8—0.

# ஞானபோதினி

ஒரு மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

சம்புடம். VI. } 1902ஆம் நவம்பர்மீ 20உ. { இலக்கம் 4.


## THE UNIVERSITIES COMMISSION.

## சர்வ கலாசாலை விசாரணை.

III.

இவ்விசாரணை சபையார், 'எல்லுசெட்டிலக்கை யேகலக்கை' யென்ற பழமொழியின் படியும், 'சொக்கனுக்குச் சட்டியளவு' என்ற பழமொழியின்படியும், இந்தியாவின்கணுள்ள சர்வ கலாசாலைக ளனைத்தையும் ஒரு படியினவாக்க வெண்ணுங்கொண்டு விதிகள் வகுத்துள பான்மை யாவரும் மேற்கொள்ளுந் தரத்ததன்று. அவ் வம்மாகாணத்தி னியல்புக்குத்தக்கவாறு சிற்சில வேறுபாடுகளு மிருத்தல் இன்றியமையாத தென்றவுண்மை உளநாற்புலமை சான் றோர்யாவர்க்கு மொப்ப முடிந்ததே. ஆகவும் இவ்வுண்மையினின்றும் மேற்குறித்த சபையார் விலகிச் சென்றமை வியக்கத்தக்கதே.

மேற்குறித்த வேறுபாடுகளுள் மிகவும் வேண்டற்பாலது சுதேச பாஷைகளை வலியுறுத்துவதேயாம். அஃதாவது தமிழ், தெ லுங்காதிய தென்னாட்டுப் பாஷைகளைச் சென்னைச் சர்வகலாசாலைப் பரீக்ஷைகளினின்றும் நீக்காது போற்றுதலாம். வடக்கேயுள்ள சுதேச பாஷைகளெல்லாம் சம்ஸ்கிருதத்தின் பிராகிருதங்களாய் அத னோடியைபுபட்டிருத்தலின், அவற்றை யறவொழிக்குமிடத்து வங் காள முதலிய வடநாட்டினர் இடர்ப்பாடு காணாராயினர். இதுபற்றி யன்றே தென்னாட்டுப் பாஷைகளினியல்புணராத நீதிபதி குருதாச பா,

ணர்ஜியவர்களும் சுதேச பாஷை நீக்கத்திற்கு ஓமென விணங்குவாராயினர். மற்றுத் தென்னாட்டுப் பிரதிநிதிகளாயிருந்தோரும் அவ்வமயத்து வாய்வாளாமை மேற்கொண்டிருந்து விட்டனர் போலும்.

தமிழ் மொழி சம்ஸ்கிருதத்தினின்றும் வேறுபட்ட பாஷையாமென்பது, 'தென்மொழி வடமொழி' யென்னும் அவற்றின் பெயர் வழக்கினுனே வலியுறுமாறு காண்க. எப்பொழுது தமிழ் மொழி சம்ஸ்கிருதத்தினின்றும் வேறுபட்டதாகின்றதோ, அப்பொழுதே தெலுங்கு, கன்னடம், மலையாளமாதிய தமிழின் வழிமொழிகளும் வேறுபட்டனவா மென்பது திண்ணம். காலாந்தரத்தில் இத்தென்னிந்தியபாஷைகள் சிற்சில வடசொற்களை மேற்கொண்டதனால் இவையனைத்தும் வடமொழியின் வழிமொழிகளாக மாட்டாவென்பது யாவருமுணர்ந்த விஷயம். வளர் மொழிகள் நாடோறும் புதிய புதிய சொற்களைப் பிறமொழிகளினின்றும் மேற்கோடலியல்பே. தமிழ் மொழியின் கண்ணே பலதிசைச்சொற்களும் வந்து வழங்குதல் காரணமாக, அவ்வத்திசை மொழிகளின் பாகதமெனத் தமிழ் மொழியைக் கூறுவாருமுளரோ?

இனித் தென்னிந்திய பாஷை நீக்கத்தால் விளையுந் தீங்குகளோ அளவிறந்தன. இக்காலத்திற் கலாசாலைகளில் தென்னாட்டுப் பாஷைகள் பயில்வார் தொகையே யதிகமாக வடமொழி பயில்வார் தொகை மிகக்குறைவே. இதனாலறியவேண்டுவது தென்னாட்டுப் பாஷைகளினின்றியமையாமை. இப்பொழுது தமிழை நீக்கி அதனிடத்து வடமொழியை வைத்துப் பயிற்றுவிக்கத் தொடங்குமிடத்துப் பிராமணராயினோர்க்கு விசேஷமான அநுகூலமும், ஏனையோர்க்கு விசேஷப் பிரதிகூலமும் விளையுமென்க. இந்நாட்டுப் பிராமணர் தமது வீட்டிற்பேசுவது தமிழேயாயினும், அதன்கண்ணே வடசொற்கள் அதிகமாகக் கலந்தே பேசுவாராயினர்; சம்ஸ்கிருதோச்சாரணம் நாடோறும் அவரது நாவிற் பயிலுதலின் அஃது அவர்க்குப் புதுமையன்று. ஆகவே, அவர்கள் வெகு சுலபமாகச் சம்ஸ்கிருத பாஷாப்பியாசஞ் செய்துவிடுவர். மற்றுத்தமிழர்களோ வம்ச பரம்பரையாகத் தமிழே பேசுவதனாலும், வடசொற்களை யதிகமாகத் தம் பேச்சில் வழங்காமையாலும், வழங்கினும் அவற்றைத் திரித்துத் தமிழாக்கி வழங்குவாராதலாலும், அவர்கள் வடமொழியுச்சாரணத்திற்குப் புதியராதலாலும், சம்ஸ்கிருதபாஷையைப்



பயில்வுழிப் பெரிதும் இடர்ப்படுவர். ஆகவே, இப்புதிய வேற்பாடு யாவர்க்குமொப்ப அநுகூலமாகாது ஒருதிறத்தார்க்கு அநுகூலமும் மறுதிறத்தார்க்குப் பிரதிகூலமுமாக முடிதல் கண்கூடாகத்தெரிந்த விஷயம். எனவே, தென்மொழி நீக்கமும், வடமொழியாக்கமும் பக்ஷபாதமாக முடிகின்றமை காண்க.

இஃதன்றியும், தென்னிந்தியாவின் க்ஷேமகரத்தைக்கருதினுற் சுதேசபாஷைகள் நிலைநிறுத்தப்படல் வேண்டும். தென்னிந்தியாவிலுள்ளோர் இதுகாறும் ஆத்ம சம்பந்தமான நூல்களிலேயே பொழுது போக்கினர். இதற்கு வடமொழிபேருதவிபுரிந்தது. இனிமேலாதல் அவர்கள் நாட்டினியல்புணர்ந்து லோகசம்பந்தமான நூல்களிற் காலங்கழித்துப் பசைதியார் முன்னும் உயரவேண்டாமோ? இவ்வுயர்ச்சிக்குச் சுதேசபாஷைகளே பேருதவிபுரியத்தக்கன. இது கருதியாதல் சுதேசபாஷைகள் சர்வகலாசாலையாரால் நிலைநிறுத்தப்படுவனவாக.

இனித் தாம் நாடோறும் பேசிப்பயிலுறாஉம் சொந்தபாஷையைக் கற்றுத் தேர்தலினும் தாம் பயிலாத வடமொழியாதிய பிறபாஷைகளைக்கற்றுத்தேர்தல் மிகநலமுடைத்தென்று கருதாநின்றனர் சிலர். அவர்கள் அங்ஙனங் கருதுதற்குற்ற காரணம், முன்னது எளிதின்முடிவதும் பின்னது அரிதின்முடிவதுமாய் நிற்றலின், முன்னதன்கண் ஏற்படும் மனப்பயிற்சியினும் பின்னதன்கண் ஏற்படும் மனப்பயிற்சிமிகவுமதிகமாகிப் பயின்றமாணவர் உள்ளங்களைவிரித்து மலர்த்தி வியாபகமாக்குகின்றது என்பதாம்.

இன்னாரது தருக்கவன்மையைச் சிறிது ஆராய்வாம். முதற்கண் 'சொந்தபாஷைப் பயிற்சி யெளிதின்முடிவது' என்பது * நிகமனம். தமிழ்மொழி சொந்தபாஷையாமாதலின், 'தமிழ்ப்பயிற்சி சொந்தபாஷைப்பயிற்சி' என்பது † உபநயம். எனவேயிவற்றினின்றும் போதருந்துணிவு 'தமிழ்ப்பயிற்சியெளிதின் முடிவது' என்பதாம். இது ‡ பக்கம். ஈண்டுக்கூறிய இவரது பக்கம் உண்மையிற் பொருந்துவதேதோவென்று பார்க்குமிடத்துத் தமிழ்ப்பயிற்சி இக்காலத்தில் மிகவரிதின் முடிவதாய் விளங்குவதேயன்றியும், ஆங்கிலம் முதலிய பிறபாஷைப்பயிற்சி மிகவெளிதின் முடிவதாயும் விளங்குகின்

* Major Premise. † Minor Premise. ‡ Conclusion.

றது. ஆதலின் மேற்கூறியாரது பக்கம் போலியாய் மேற்கொண்ட நிகமனமும் அறைபோதல் காண்க.

இது நிற்க. சர்வகலாசாலை விசாரணைசபையார் சுயபாஷைப் பயிற்சி இன்றியமையாததென்றும், அப்பாஷைகள் இக்காலத்தில் நன்கு கற்பிக்கப்பட்டிலவென்றுங் கருதிச் சில ஏற்பாடுகள் செய்யவேண்டுமென்கின்றனர். அவ்வேற்பாடுகளாவன:— (1) பிரவேசபரீக்ஷை மாணாக்கர்களுக்குக் கொடுக்கும் சுயபாஷை விருப்பத்திரிகையைக் கடினமாக்குதல் (2) சர்வகலாசாலைப் பரீக்ஷைகளில் சுயபாஷைகளிற் கட்டுரை யெழுதுமாறு செய்தல் (3) * கலாநாயகப்பரீக்ஷைக்குச்சுயபாஷைகளுண்டு ; அஃதாவது அவற்றின்மட்டிலேயே பரீக்ஷிக்கப்பட்டுப் பட்டம் பெறலாமென்பது. ஈண்டுக்கூறிய மூவித வுபாயங்களாலும் சுயபாஷைகள் முன்னுக்குவாராவென்பது மலையிலக்கே. இஃது ஒட்டகத்திற்குச் சுளுகுமாற்றுதலென்றகதையாய் முடிகின்றதேயன்றி வேறன்று.

ஆதலின், நமது இந்தியதுரைத்தனத்தார் இவ்விஷயத்தைக்குறித்து மீட்டுஞ் சிந்தைசெய்து தாம் அவசரப்பட்டு வற்படுத்தியவிதிகளை மாற்றிச் சுதேசபாஷைகளைச் சர்வகலாசாலைப் பரீக்ஷைகளில் வைத்து ஆதரிப்பாராக.

பத்திராதிபர்.

---

## AUVAIYAR.

## ஔவையார்.

### IX. ஒழுக்கநிலை.

ஔவையார் இயற்றிய நூல்களுட் பெரும்பாலன ஒழுக்கத்தைப் பற்றியனவேயாம். முதலாம் ஔவையார் இயற்றிய ஆத்திசூடி, கொன்றைவேந்தன், மூதுரையாகிய மூன்றும் முழுவதும் நீதி நூல்களாம். இவர் பாணர் கூட்டத்தில் வளர்ந்து வந்ததனால் மதுமாமிசம் புசிப்பவர் என முன்னரே கூறினம். இவர் அதிகமானெடுமானஞ்சி இறந்த காலத்தில் அவனை நோக்கிச்,

* Master of Arts.



'சிறியகட் பெறினே யெமக்கீயு மன்னே
பெரியகட் பெறினே
யாம்பா டத்தான் மகிழ்ந்துண்ணு மன்னே
என்பொடு தடிபடு வழியெல்லா
மெமக்கீயு மன்னே.'

என்று இரங்கிக் கூறியதும் மேற்கூறியதை வற்புறுத்தும். என்றாலும், உலகத்திலுள்ளவர்களுக்கெல்லாம் நீதிகள் எடுத்துப் போதிக்கப் புகுந்தபோது,

'புலையுங் கொலையுங் களவுந் தவிர்'
'நோன்பெனப் படுவது கொன்றுதின் னாமை'

என்று கொன்றைவேந்தனிற் கூறுவாராயினர். அன்றியும்,

'ஓதலி னன்றே வேதியர்க் கொழுக்கம்'
'பிறன்மனை புகாமை யறமெனத் தகும்'

என்பன முதலாக வேறு பல சிறந்த நீதிகளுங் கூறியிருக்கிறார். பின்னும், உக்கிரப்பெருவழுதி, சோழன் பெருநற்கிள்ளி, சேரமான் மாவெண்கோ என்னும் முந்நாட்டு மூவேந்தரும் ஓரிடத்தில் ஒரு காலத்தில் ஒரு மனத்தினராய் ஒருங்குகூடி இருந்த சமயத்தில், ஔவையார் அவர்களை நோக்கி,

'நாகத் தன்ன பாகார் மண்டிலந்
தமவே யாயினுந் தம்மொடு செல்லா
வேற்றோ ராயினு நோற்றோர்க் கொழியு
மேற்ற பார்ப்பார்க் கீர்ங்கை நிறையப்
பூவும் பொன்னும் புனல்படச் சொரிந்து
பாசிழை மகளிர் பொலங்கலத் தேந்திய
நாரரி தேற றவாது நன்மகிழ்ந்
திரவலர்க் கருங்கல மருகாது வீசி
வாழ்தல் வேண்டுமிவண் வரைந்த வைகல்
வாழச் செய்த நல்வினை யல்ல
தாழுங் காலை புணைபிறி தில்லை'

என்ற அகவற்பாவைப் பாடிப்புகழ்ந்து போற்றினர். இதிலமைந்துள்ள ஒப்பற்ற கட்டுரையினை உற்று நோக்குக.

இனி இரண்டாம் ஔவையார் ஒழுக்கநிலை ஆராய்வாம். இவர் இயற்றிய நல்வழி தத்துவமுறைகளையும் நீதிநெறிகளையும் பற்றிய

யே கூறும். இவ்விடத்து நீதிகள் கூறுவனவற்றையே யெடுத்து ஆராய்வாம். இவர்,

‘ஒழுக்கம் உயர்குலத்தி னன்று’

என்றதனாற் குலத்தினுங்குணமே சிறந்ததெனக் கொண்டவராவார்.

‘சாதி யிரண்டொழிய வேறில்லை சாற்றுங்கா
னீதி வழுவா நெறிமுறையின்—மேதினியி
லிட்டார் பெரியோ ரிடாதா ரிழிகுலத்தோர்
பட்டாங்கி லுள்ள படி’

என்று கூறியிருப்பதனாற், ‘கபிலரகவல்’ இயற்றிய கபிலதேவரைப் போற், கருமத்தாற் சாதியல்லது ஜன்மத்தாற் சாதியில்லை என்ற கோட்பாட்டினை யுடையவராவார்.

‘போதந் தனங்கல்வி பொன்றவருங் காலமயன்
மாதர்மேல் வைப்பார் மனம்’

என்பதனாற், பரஸ்திரீகமனஞ் செய்வதனால் விளையும் பெருங்கேட்டினை விரித்திருக்கிறார்.

‘அம்மி துணையாக வாறிழிந்த வாறொக்குங்
கொம்மை முலைபகர்வார் கொண்டாட்டம்—இம்மை
மறுமைக்கு நன்றன்று மாநிதியம் போக்கி
வெறுமைக்கு வித்தாய் விடும்’

என்று கூறியிருப்பதனால், வரைவின் மகளிரையும மருவுதல் தகாது என்ற மெய்க்கொள்கையினை யுடையார். மற்றும்,

‘பத்தாவுக் கேற்ற பதிவிரதை யுண்டானா
லெத்தானுங் கூடி யிருக்கலாஞ்—சற்றேனு
மேறுமா றாக விருப்பளே யாமாயிற்
கூறாமற் சந்நியாசங் கொள்’

என்னுந் தனிப்பாடலால், மனைவியர் மனமொவ்வாத இல்லறத்தைப் பார்க்கினுந் துறவறமே மேம்பட்டதென்று கொண்டாரென்பதும் விளங்குகின்றது.

## X. புலமை.

முதலில், முதலாம் ஔவையார் புலமையினையாராய்வாம். நூலழகெனக் கூறப்பட்டுள்ள பத்துவகை அழகுகளுள் ‘சுருங்கச்சொல்ல’லும் ‘விளங்கவைத்த’லும் முறையே ஆத்திசூடி கொன்றைவேந்



னிலும்’, ‘விழுமியது பயத்த’லும் ‘விளங்குதாரணத்ததாகுத’லும் மூதுரையிலும், ‘நன்மொழிபுணர்த்த’லும் ‘ஆழமுடைத்தாத’லும் புறநானூறுமுதலிய சங்கநூற் செய்யுட்களிலும் விளங்குகின்றன. ஆத்திசூடியைப்போல் அரும் பெரு நீதிகளைச்சுருக்கி யுரைக்கும் நூல் வேறொன்றில்லை யெனக் கூறலாம். மற்றுக் கொன்றைவேந்தனைப்போலவுஞ் சுருங்கக் கூறிய செய்யுணூல் வேறொன்று காணுதலரிது. இவ்விரண்டுநூல்களினின்றும் போதுமான மேற்கோள் முன்னரே கூறியிருக்கிறோம். மூதுரையோ அழகிய உவமைகள் அநேகம் நிறைந்த இனிய சிறிய நூலாகும். இவ்வாறுதலை அந்நூலின் முதற்பாட்டாகிய,

‘நன்றி யொருவற்குச் செய்தக்கா லந்நன்றி
யென்று தருங்கொ லெனவேண்டா—நின்று
தளரா வளர்தெங்கு தாளுண்ட நீரைத்
தலையாலே தான்றருத லான்’

என்பதே விளக்கும். அன்றியும், அதிலுள்ள அரிய உவமைகள் அழகியனவாயிருத்தலுடன் பழகியனவாகவு மிருக்கின்றன. உதாரணமாக,

‘நெல்லுக் கிறைத்தநீர் வாய்க்கால் வழியோடிப்
புல்லுக்கு மாங்கே பொசியுமாந்—தொல்லுலகி
னல்லா ரொருவ ருளரே லவர்பொருட்
டெல்லார்க்கும் பெய்யு மழை’

என்னும் பாடலை யுற்று நோக்குக. மற்று, இம்முதலாம் ஔவையார் உலகத்து இயற்கைக் காட்சிகளை யுற்று நோக்குபவர் என்பது,

‘அடக்க முடையா ரறிவில ரென்றெண்ணிக்
கடக்கக் கருதவும் வேண்டா—மடைப்புனலி
லோடுமீ னோட வுறுமீன் வருமளவும்
வாடி யிருக்குமாங் கொக்கு’

என்னும் மூதுரை வெண்பாவாலும்,

‘நெஞ்சே யென்றும்
பெரிதா லம்மவின் பூச லுயர்கோட்டு
மகவுடை மந்தி போல
வகனுறத் தழீஇய கோட்டுநாப் பெறினே’

என்னுங் குறுந்தொகை யடிகளாலும் நன்கு விளங்குகின்றது. அன்றியும், இவர் நுட்பமாகிய உணர்வும் யுக்தி சாதுரியமாகப் பாடும் வல்லமையுமுடையாரென்பது பின்வரும் புறநானூற்றடிகளால் நன்குணரலாம்;

‘அலர்பூந் தும்பை யம்பகட்டு மார்பிற்
றிரண்டுநீடு தடக்கை யென்னை யிளையோற்
கிரண்டெழுந் தனவாற் பகையே யொன்றே
பூப்போ லுண்கண் பசந்துதோ ணுணுகி
நோக்கிய மகளிர்ப் பிணித்தன் றொன்றே
விழவின் றாயினும் படுபதம் பிழையாது
மையூன் மொசித்த வொக்கலொடு துறைநீர்க்
கைகம்மான் கொள்ளு மோவென
வுறையுண் முனியுமவன் செல்லு மூரே.’ *

மற்றோரிடத்தில்,

‘செறுவர் நோக்கிய கண்டன்
சிறுவனை நோக்கியுஞ் சிவப்பா னவே.’

என்று கூறியிருப்பதையும் நோக்குக.

முதலாம் ஔவையார் புலமைக்கும் இரண்டாம் ஔவையார் புலமைக்கும் அதிக ஏற்றத்தாழ்ச்சி யிருக்கின்றது. முதலாம் ஔவையார் நூல்களில் விளங்கும் சுருங்கக் கூறலும் விளங்கவைத்தலும் அழகிய உவமைகள் நிறைந்த தன்மையும் நுண்ணிய உணர்ச்சியும் உற்று நோக்குதலும் அவ்வளவு சிறப்புடையனவாக இரண்டாம் ஔவையார் நூல்களிற் காணப்படவில்லை. என்றாலும், இவர் பாடிய சில அழகிய பாடல்களையும் இங்கெடுத்துக் கூறுவோம். பின் வரும் இரண்டுபாடல்களும் அழகிய பழைய அரிய உவமைகள் உடையன:

‘வெட்டனவை மெத்தனவை வெல்லாவாம் வேழத்திற்
பட்டுருவுங் கோல்பஞ்சிற் பாயாது—நெட்டிருப்புப்
பாரைக்கு நெக்குவிடாப் பாறை பசுமரத்தின்
வேருக்கு நெக்கு விடும்.’

* இதன் கருத்து—என்னுடைய அரசனுக்கு இரண்டு பகைகள் உண்டாயிருக்கின்றன: தன்னுடைய அழகால் மகளிரை யெல்லாம் வருத்துவதொன்று; தான் கைப்பற்றிய வூரிலுள்ள ஆறு குளங்களிலுள்ள நீரை யெல்லாம் நிரம்பவுண்ட தன் உறவினரும் யானைகளும் குடித்து விடுமே என்று அவ்வூரிலுள்ளாரை ஏங்க விடுவது மற்றொன்று—என்றவாறு.



‘ஆற்றுப் பெருக்கற் றடிசுடுமந் நாளுமவ்வா
றூற்றுப் பெருக்கா லுலகூட்டு—மேற்றவர்க்கு
நல்ல குடிப்பிறந்தார் நல்கூர்ந்தாரானாலு
மில்லையென மாட்டா ரிசைந்து.’

கீழ்வரும் பாடல் இயைபுருவகத்திற்கு ஏற்ற உதாரணமாகும்.

‘வையக மெல்லாங் கழனியா வையகத்துட்
செய்யகமே நாற்றிசையின் றேயங்கள்—செய்யகத்துள்
வான்கரும்பே தொண்டை வளநாடு வான்கரும்பின்
சாறேயந் நாட்டிற் றலையூர்கள்—சாறட்ட
கட்டியே கச்சிப் புறமெல்லாங் கட்டியுட்
டானேற்ற மான சருக்கரை மாமணியே
யானேற்றான் கச்சி யகம்.’

மேன்மேலுயர்ச்சி யணிக்கும் அதிசயோக்திக்கும் பின்வரும் பாடலினுஞ் சிறந்ததோ ருதாரணம் அகப்படுவதரிது. அஃதாவது:

‘பெரிது பெரிது புவனம் பெரிது
புவனமோ நான்முகன் படைப்பு
நான்முகன் கரியமா லுந்தியில் வந்தோன்
கரிய மாலோ அலைகடற் றுயின்றோ
னலைகடல் குறுமுனி யங்கையி லடக்கம்
குறுமுனி யோகல சத்திற் பிறந்தோன்
கலசமோ புவியிற் சிறுமண்
புவியோ அரவினுக் கொருதலைப் பார
மரவோ வுமையவள் சிறுவிரன் மோதிர
முமையோ விறைவர் பாகத் தொடுக்க
மிறைவரோ தொண்ட ருள்ளத் தொடுக்கந்
தொண்டர்தம் பெருமையைச் சொல்லவும் பெரிதே’

என்பதாம். இனி ஔவையார் மாட்சிமையைப் பற்றிச் சிறிது கூறுவாம்.

## XI. மாட்சிமை.

ஔவையார் மற்றைப் புலவர்களைப்போலக் கற்றறிந்தார்களுக்கே பயன் படும்படியான நூல்களைச் செய்தவர் அல்லர். அவர் பாடிய தனிப் பாடல்கள் நீங்கலாக முழு நூல்களிற் பெரும் பாலன சிறுவர்களுக் கென்றே இயற்றப் பட்டனவாகக் காணப்படுகின்றன.

அவற்றுள், ஆத்திசூடி கொன்றை வேந்தன் என்னும் இரண்டு நூல்களும் எழுத்து முறைவைப்பால் அமைக்கப் பட்டிருப்பது மேற்கூறியதை வற்புறுத்துகின்றது. என்றாலும் அவைகள் தத்துவமுறைகள் நீதி நெறிகள் நிறைந்த நூல்களுமாம் ஆதலின் கற்றறிந்தாரும் விருப்புடன் படிக்கும் தன்மை வாய்ந்தன. ஆதலின் அந்நூல்களின் மணம் தமிழ் நாடெங்கும் கமழ்ந்து வீசியது; தமிழ் நாடுமட்டில் நின்று விடாமல் ஐரோப்பிய ரென்னும் மேற் புலத்தில் தூர வசிப்பவர் முகத்துஞ் சென்று தாக்கியது. அதனால், அவ்வினிய சிறிய நூல்கள் பல ஐரோப்பிய பாஷைகளிலும் மொழி பெயர்க்கப் பட்டு உலகெங்கும் உலாவத் தலைப்பட்டன. இளஞ் சிறுவர்களும் பெண்களுங்கூட அவற்றின் கட்டுரைகளை மேற் கோளாக எடுத்தாண்டு வருகிறார்கள். இக்கட்டுரைகளிற் பலவற்றை இக்காலத்திலும் எடுத்துக் கூறும் பல ஔவையார்களை * யாமுங் கண்டிருக்கிறோம். தொன்றுதொட்டு வழங்கி வருஞ் சான்றோர் கட்டுரைகளாம் பழமொழிகளைப் பார்க்கிலும் இவர் கட்டுரைகள் மேம்பாடுற்றனவாய்த் தமிழ் நாடெங்கும் பரவியிருக்கின்றன.

ஔவையார் மாட்சிமை அவரியற்றிய நூல்கள் அடைந்த சிறப்பினும் மேம்பட்டது. இதற்குச் சாட்சிகள் அநேகம் இருக்கின்றன. அவர் அடைந்த புகழின் காரணமாகக் குறைந்த புலமையுடையவரும் தாம் இயற்றிய நூல்களை 'ஔவையார் அருளிச்செய்தன' என மாறுபாடாகக்கூறி விடுப்பாராயினர். இத்தன்மையாகிய போலி நூல்களுட் 'பந்தனந்தாதி' யொன்றென முன்னரே காரணங்காட்டி விளக்கியிருக்கிறோம். இதுபோலவே அவர் வாழ்நாளில் நடந்தனவாகக் கூறப்படுஞ்சில செய்திகளுங் கற்பிதங்களாகவேகொள்ளவேண்டியனவாக இருக்கின்றன. அவற்றில் ஒன்று இங்கெடுத்துக் காட்டுவோம். ஒருகாலத்திற் சுந்தர மூர்த்தி நாயனாரும் சேரமான் பெருமாணாயனாரும் கயிலாயஞ் செல்பவர் வழியில் ஔவையாரைக் கண்டு அவ்விசேஷத்தை அவர்க்குக் கூறிச்சென்ற அளவினில், தாமும் அவர்கள் பின் கயிலைசெல்லவேண்டும் என்ற அவாக்கொண்ட ஔவையார் தாம் செய்து கொண்டிருந்த கணபதி பூசையைச் சீக்கிரம் முடிக்கத் துரிதப்படுதலும், அதனைக் கண்ட பிள்ளையார், 'ஔவையே! சாவ

* இங்கே ஔவையார் என்பதற்குக் கிழவியர் என்பது பொருள்.



தானமாகப் பூஜைசெய், அவர்களுக்கு முன் உன்னைக் கயிலை சேர்ப்பிப்பேன்' எனக்கேட்ட நங்கிழவியார் அவ்வண்ணமே செய்து துதிக்கையாற் கயிலை சேர்ந்து, பின்பு வெகுநேரஞ் சென்று அவ்விடம் வந்து வியப்படைந்து நின்ற சேரமானை நோக்கி,

'மதுர மொழிநல் லுமையாள் புதல்வன் மலர்ப்பதத்தை
முதிர நினையவல் லார்க்கரி தோமுகில் போன்முழங்கி
யதிர நடந்திடு மானையுந் தேரு மதன்பின்வருங்
குதிரையுங் காதங் கிழவியுங் காதங் குலமன்னனே'

என்றுகூறினர் என்பர். இதுபோன்ற கதைகள் தினந்தோறு மதிகமாகின்றன. ஏறக்குறைய ஒவ்வொரு பாட்டி கதையிலுங்கூட ஔவையாரின் பெயர் கூறப்பட்டு வருகிறது. சாதாரண ஜனங்களுக்காக விநோதமாக எழுதப்பட்டுவரும் கதைகளிலும் ஔவையார் செய்தனவாக அநேகம் விஷயங்கள் கூறப்பட்டுவருகின்றன. அவ்வகைக் கதைகளுட் சிறப்புப்பெற்றது 'தமிழறியும் பெருமாள் கதை' என்பதொன்று. அக்கதையில், தமிழறியும் பெருமாள் தன்முன் பிறப்பில் இராசகுமாரியாயிருந்து கல்வியறிவில்லாத ஓர் இராசகுமாரன்மேல் மோகமுற்று அவனை அணையப் பெறாதவளாய் இறந்து பேயாகப், பிறகு அதையுணர்ந்த இராசகுமாரனும் தன் ஆருயிர் மாய்த்து அலகையாகுதலும், அவ்விடத்தில் இராத்தங்க வந்த ஔவையார் தன்னைச் சரணடைந்த அவ்விருவரும் மறுபிறப்பில் மணந்து வாழும்படி வரமளித்துச்சென்றதாகக் கூறப்பட்டுளது.

மேற்கூறிய திருட்டாந்தங்களால் ஔவையாரின் பெருமையுஞ் சிறப்பும் உலகெங்கும் பரவின என்பது நன்கு விளங்கும். ஔவையார் யாரென்றால் 'அறிவு நிறைந்த நீதிநெறிகளைச் சுருங்கக் கூறிய நரைத்த கிழவி' யென்றெவருஞ் சொல்லுவர். விநோதக் கதைகள் யாவும் தெனாலிராமன் பெயரால் வழங்கப் பட்டுவருதல் போலக் கட்டுரைகள் யாவும் ஔவையார் பெயரால் வழங்கப்பட்டு வரும். சுருக்கமாகக் கூறுமிடத்து, இரண்டு ஔவையாரும் தமிழ் மணங் கமழும் இத்தென்னாட்டில் தம் அழியாப் புகழை நிலைநிறுத்தி அந்நாட்டிலுள்ளார் உய்யும் பொருட்டு நன்மைபல செய்து நற்கதியடைந்தனராவர். சுபமஸ்து.

சித்தூர். சுப்பிரமணியாசாரியர்.

# MANA VIJAYAM: A STUDY

## *மானவிஜய வாராய்ச்சி

இன்பமெய்துழி அவ்வின்பமதனை அடுத்துளார்க்கெல்லா மெடுத்துரைத்து அவரின்பத்தையுந் தம்மின்பத்தையு மதிகரிப்பித்தலே மக்களியற்கை. அவ்வாறே மானவிஜயத்தை வாசித்ததனா லெடுத்துச் சொலவொணா வின்ப மடைந்த யான் அந்நூற் பெருமைகளிற் சிறிதினை ஓராற்றா னுரைத்து என் நண்பரை யுளமகிழ்வித்து என்னின்பத்தையும் பெருக்குவான் வேண்டி இவ்வியாச மெழுத விழைந்தனன்.

இக்கலாசாலையின் மாணவர் நமக்கெல்லாம் இன்றமிழமிழ்தஞ் செவியினிற் புகட்டு நம் பிரமஸ்ரீ வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியார், பி. ஏ அவர்களான் யாக்கப்பட்டு எத்திக்கினுமுள வெல்லாத்தமிழருங் கூட்டுணவேண்டி யருளினால் வெளியிடப்பட்ட மாண்புடை நூலாமிம் மானவிஜயம்.

“ஒரு நூலென்றால் அதிற் குணங்களுங் குறைகளும் இருத்தல் இயல்பே. குறையே யில்லாத நூலுங் குணமேயில்லாத நூலும் இவ்வுலகிற் காணுதலரிது. ஆகவே நாம் நூல்களைக் குணமிகுந்த நூல்களென்றுங் குறை மிகுந்த நூல்களென்றுங் குணமுங்குறையும் ஒத்த அளவுடைய நூல்களென்றும் மூன்று பிரிவாகப் பிரிக்கலாம்” என இந்நூலாசிரியரே வேறோரிடத்துப் பகுத்துக் காட்டிய பகுப்புக்களுள் இந்நூல் முதற்பகுப்பின் கணடங்கு மென்பதற் கையஞ் சிறிதேனுமின்று. எவ்வணமாயினு மிதிலோர் குற்றங்காணுவேனென்னக் கருத்து மிக்கூன்றி ஆராய்வா னெவ்வொருவனு மவமானப்பட்டுப் பின் இந்த நூலே யெனக் குறு துணையாம் இதைப் படித்திருப்பதே யுணவா யேற்பன் என்றின்ன நன்மொழி தனக்குளே புகன்றேகுவனென்றா லெப்பரிய திவ்வரும் பெருநூலென்பது நமக்கே தெற்றென விளங்கும்.

அத்தன்மைத்தா யமர்ந்த விந்நூலை யெடுத்தாராய வேழையேன் துணிந்தது நகப்படுந் தன்மை பொதிந்துளதென வறிந்து இடையிற் கைவிடப் புகுந்தனன். புக்குழி ஆசிரியர் அமுத சாகரர் “பனி மாலிமயப், பொருப்பகஞ் சேர்ந்தபொல் லாக்கருங் காக்கையும் பொன்னிறமா, யிருக்குமென் றிவ்வா றுரைக்குமன் றோவிவ் விருநிலமே” என வெளியிட்ட கூற்று என் மனத்திற் றோன்றிச் சால்புடை நூலைப் பற்றிக்கூறும் புன்மையார் மொழிகளுஞ் சிறப் புடையவா மெனுந் துணிவு கொண்டு முயன்றனன் பின்னரும்.

* இது சென்னைக் கிறிஸ்தவ கலாசாலைத் திராவிட பாஷாபிவர்த்தனி சங்கத்தினர் முன்னர்ப் படிக்கப்பட்டது.



இஃதுநிற்க, இந்நூலாசிரியரைப் பற்றிச் சிறிது கூறுவல். ஈண்டுக் குழீஇய வெல்லீர் நமக்கு மிந்நூலியற்றினார் சரித்திரஞ் சொல்லுதல்கொல்லன் றெருவி லூசிவிற்றற் போலுமாதலாற் சொல்லாது விடுக்கின்றனன். பின்னையன்னார் பெருமை சொலப்புகி னாற்றோ வென்னெனஞ் செனுந் துணைவன்றக்கிளவி தானறியாமையான் மிக்க துயரமுற்று மாழ்குகின்றனன். நந்தம் நூலாசிரியர் செந்தமிழ் வடமொழி திசமு மாங்கில மென்னு மூன்றினையு மினிமையிற் பயின்று, எல்லாப் பாடைகட்கு மிக்க பற்றிருப்பினு மின்றமிழ் மொழியே முதன் மொழியாக்கொண்டு தொல்காப்பிய மாதி நூல்களிற் றேர்ந்து, பத்துப் பாட்டாதிய சங்க நூல்களிலே பேரானந்தங் கண்டு கற்பிக்கு முறையி னொப்புமை யிலராய் முன்னர்க் குழுவிய மாணவருளத்தி னிகழ்வன யாவுமுகக் குறியினாற் றெளிந்து அவையக் கேற்ப வறிவுறுத்து மாற்றல் வாய்ந்து அதனானெங்கும் நிறைந்த புகழுடைப் பண்டிதர். அதாஅன்றியும், கைம்மாறின்றித் தம்மகத்திடத்தே போந்த யாவர்க்கும் வளர் தமிழ்நூல்கள் முறைப்படி போதித்து அன்னார் தம்மை இயற்றமிழ் மாணவர் என்னக் கூஉயிறும் பூதுகொள்வார். அன்றியும் தம்மிடங்கலை பயிலு மாணவர் தம்மைப் புதுவன நூல்கள் புனையச்செய்து அவற்றைத் தாமே பதிப்பிக்கும் பண்பினர். சுருங்கச்சொல்லுழி, செந்தமிழின் சுவையாவரு மறிந்து ஆனந்தத்தி லமிழ்ந்திடும் பொருட்டும், முன்னர்த் தோன்றிய முதுபெருந் தமிழ்மொழி மேன்மையுற்று மேதக்குமிகப் பொலிந்து சிறப்புக்கொள்ளும் பொருட்டும் பூமியில் வந்தவர் என்னலாம்.

பின்னர் நூலுட்புகுவாம். இந்நூல் நாடகவியலில்,

“நாடகம் பிரக ரணமே பாணம்
வியாயோ கம்மே சமவ கார
மிடிம மீகா மிருக மங்கம்
வீதி பிரக சனமெனப் பத்தாம்”

எனத்தொகுத்துக் கூறிய நாடகச் சாதியினு ளெட்டாவதாகிய அங்கத்தின் பாற்படும். அவ்வங்கத்தி னியல்பு,

“அவலச் சுவைத்தா யங்கமொன் றுடைத்தாய்க்
கவலைகொண் மகளிர் கசிந்துள மழுங்க
வண்மினர் வாய்விடுத் தரற்றுமாண் பிற்றாய்
வாதம் விளைத்து வாய்ப்போர் காட்டி
மக்கள்பாத் திரமா வயங்குறு வதுவே
யங்க மென்ன வறிதல் வேண்டும்”

என்ற நாடகவியலிற் பிறிதொரு சூத்திரம் நனி விளக்கி நிற்கும். இவ்வோரங்கத்தினுளாறு களங்களடங்கியிருக்கின்றன. “ஓரிடத்திலே நிகழ்ந்திடு காட்சியே களமாம். பாத்திரங்கள் சேவகர் நீங்க ஐவரேயாவர்.”

கதையினிகழ்ச்சியிற் கலந்தவரே பாத்திரங்கள். அப்பாத்திரங்களாவார் சேரமான் கணைக்காலிரும்பொறை; சோழன் செங்கணான்; கடைச்சங்கப் புலவருளொருவர் பொய்கையார்; செங்கணான் மனைவி இராசமாதேவி; அவடோழி அறிவுடைநங்கை. நாடக நிகழ்விடம் உறையூர். கதைச் சுருக்கம் வருமாறு :—

திருக்கழுமலம் என்ற ஊருக்கருகிற் சேரமானுக்குஞ் செங்கணானுக்கும் நடந்த போரிற் செங்கணான் வென்றான். அதிற் சேரமானும் பொய்கையாருஞ் சிறைகொள்ளப் பட்டார்கள். வெற்றியடைந்த செங்கணான் மறுநாட் பொய்கையாரை அழைத்துத் தன்னுடைய சாமர்த்தியந்தோன்றத் தன்னை வியந்து பேசலும் புலவரவனை யிகழ, உழையிருந்த இராஜப் பிரபுக்கள் புலவரைச் சினந்தனர். சினப்புழி, அவன், பொய்கையார் மறுத்தனரேனும் அவரை நான்குருவென வொருமுறை கருதினேன்; ஆகலின் அவரை நாம் வழிபடல் தகவுடைத்தே எனப்பிரபுக்கட் காணை தந்து, சின்னேரம் புலவரோடு வாதாடிய பின்னர், அவரை மீட்டுஞ்சிறையிடு செய்மின் எனச்சேவகர்க்குக் கட்டளை தந்து அவர்தமின்பவுளத்தினை வியந்து இன்னுங் காண்பல் என்னுங் கருத்தினனாயவர்க்குப் பற்பல விடுக்கண்கள் செய்யுமாறேவிப் புறம் போகின்றான். முதற்கள முற்றும். சிறைச்சாலைக்கட்பட்ட சேரமான் போரினில் வஞ்சமும் பொய்யும் நிரம்பியதைக் குறித்து வருந்தி 'விலங்கிட்டனரே இவ்வயினிற்றி என்றெனக்காணை தந்திடிற்போதாதோ?' வெனநெக்குருகிப் பாடுகின்றான். இரண்டாங்கள முற்றும். காவலன் கட்டளையிட்டாங்கே சிறைகாவலர் தாம் வேண்டிய செய்தும் விழித்துப் பாராப்பொய்கையார் பெற்றிமையை வியந்துகூறி வெளியேபோகப் பொய்கையார் உலகினியல்பைப் பற்றி யெவரு மயங்கு மின்மொழி பல சொலித் தரையிற் படுக்கின்றார். செங்கணான் அஃதை மறைந்து கேட்டிருந்து போகின்றான். மூன்றாங்கள முற்றும். இஃது இங்ஙனமாக. செங்கணான் காதலி இராசமாதேவி எங்கோவொரு பேரிராச்சியக்கண் தானுந்தன் கணவனுமாச் செல்லாநிற்புழி அந்நகராள்வோனதேவன் மாக்களுளெண்மர்பாய்ந்து அவரைப் பற்றிப் போய் அரையன் முன்விடலு மன்னனிருவரை யாருயிர்போக்கிய அன்னாப் பழியை யவர்தலைச்சுமத்தி அதற்காமிக்க பொன்பெற்று மீட்டுவிடுத்ததா வொருகனாக்கண்டு, அதனைத் தோழி அறிவுடை நங்கைக்கு அறிவிக்க அன்னாள் பலவுங் கூறித்தெருட்டுகின்றாள். இங்ஙனே நான்காங்கள முடியும். முன்னர்க் கூறியாங்கே மறைந்திருந்து கேட்டதன் மூலமாய்ப் பொய்கையாரது பொய்யில் சிறப்பை யறிந்துகொண்டஅரையன் செங்கணான் கீழ்விழுந்து வணங்குதலும் புலவர் அவனை யெடுத்து ஆதனத் திருத்தி அவன் போரிற் பாடியுள களவழி நாற்பதிற் சிலபாச் சொல்லி மெய்யறிவு கொளுத்துகின்றார். மெய்யறிவு மேன்மையிற் பெற்ற செங்கணான் சேரமானைச் சிறையினின்



விடுக்கக் கைப்பொறியிட்ட திருமுக மொன்று புலவரிடம் தருகின்றான். ஐந்தாங்களத்தி லறையப்பட்டுளதிதுவே. பின் திருமுகம் பெற்ற புலவர் சேரமானை நோக்கி வருகின்றார். அவர் வருவதற்குள், எல்லா மறிந்த எங்கள் சேரமான் றன்னிலை யதனை நெடுநேர முன்னி, உயிர் நீத்தலே உயர்ந்த தன்மைத்தென்னுந் துணி புக்கியையுடன் வந்து உயிர் துறக்கின்றான். பொய்கையாரதனை வந்துபார்த்து அரையன் பிரிவாற்றொணாமையானே அவருஞ் சாகின்றார். இவையிற்றினைச் சேவகரானறிந்த செங்கணான் உற்றுப்பார்த்து யாவு முணர்ந்து தன்னுயிரும் போக்குவான் வாளையுறை கழிப்புழி இராசமாதேவி அறிவுடைநங்கை இருவரும் வந்து செங்கணானைத் தக்க காரணங் கூறித் தடுக்க, பின் யாவருமொருங்கே சிறைக்களம் நீங்கிப் புறம் போகின்றார்கள். நாடக முடிவிடம் இஃதே.

பின்னர், என்னுடை யாற்றலானியைந்தவரையுங் கதையி லாங்காங்குக் காணப்பட்டுள சிறப்பிற் சிறிது கூறப்புகுவேன்.

முதற்கண், எம்மதத்தினரு மெக்கொள்கையரு மொப்பவாசித்து உபர திவுறும் பான்மைத்து. தத்துவக் கொள்கைகண் மிகச் செறிந்துளவாதலா லன்னிய மதத்தரனைவர்தாமும் மனவசைவின்றி வாசித்தற் பொருட்டே முன்னரே யுன்னி யிங்ஙன முடித்த பேரறி வதனை யென்னவெனச் சொல்வேன்.

'உலகெலாம் படைத்த வொருதனி முதல்வன்'
'அருளுரு வாகிய வொரு பெருங் கடவுள்'
'உலகனைத்து நிறைந்தொளிரு மொருபொருள்'
'மலரகத்து மணமென்ன மணியகத்தி னொளியென்ன
நலரகத்து விளக்கென்ன நயந்துறையும் பெருமான்.'

இன்னன போன்ற வெழிலுடை வாக்கியங்களாலே வருணித்துளார் கடவுளை.

இரண்டாவதன்கண் இந்நூலின் நடையோ கற்றறிந்தாரு மற்றையோருமொப்ப வறிந்து உளமகிழ் தன்மைவாய்ந்து, அடிதொடங்கி முடிவுகாறும் இடர்ப்பாடிலாதே யெளிதாயமைந்த இயல்பினொழுகு மொழிநலம் பெற்றது. சுருங்கச்சொல்லல் விளங்கவைத்தலாதிய வெல்லா வழகும் ஒவ்வோரடியினு முறுதியாய்க் காணலாம். இங்குமங்கும் புனைந்து கிடக்கும் எக்கருத்தாயினு மெய்ச்சிறப்பாயினு மொருகால் நந்த முளம் புக்குழியே, அவை, எளிதின் மறப்பெனும்வன்போர்க் கொடியனாற் கவரப்பட்டுக் கழிந்திடா வண்ணமத்துணை வலிமையோடமைப்பப் பட்டுள. அங்க நாடகத்திற் கந்தமா யமைந்த அவலச்சுவையாற்றவும் பெற்ற விந்நூலிற் பாத்திரங்கள் படுமவத்தைகளை வாசிக்கும் போழ்து அவைகளை நாமே யனுபவிப்பது போற் றோன்றுகின்றன.

மூன்றாவதன்கண் இந்நூல் அநேக நீதிக ளறிவுறுத்துவது. பொய்கையார், செங்கணா னறிவொளி பெற்ற பின்பு, அவனைச் சுட்டி உன்னைச் சிறப்பித்துரைப்பான் வேண்டி வெள்ளையாப்பினின் ஒரு நூல்செய்துளே னெனச் செவிக்கின் னுணவுஞ் சுவைக்கிருப்பிடமுமாய்க் களவழி நாற்பதாங் கனிதமிழ் நூலிற் சில சொலக் கேட்ட செங்கணான் ‘ களத்தைப் புனைந்த கருத்தறிந்தே னெம், துளத்தை யறுக்கு மொள்வாளாமால்’ என்று சொல்லித்தானே போரின் கொடுமை காண்கின்றான். தவிரவும், ‘கலகப் போர் செயல் கரிசுடைத்து’ ‘ தன் புறத்தாது தானின் புற்று வாழ்தலும், தன்புறன் பிறரையின்புறத் துதலும், உலக வாழ்க்கையி னுட் கருத்தாகும்’ என்ற வின்னவை போன்ற நன்மொழி பலவற்றாற் பொறுமை யமைந்து போரைக் கடிந்து இன்னுயிரோம்புதன் மாண்புடைத் தென்பதும் ‘ மறப்போரின் கணறப் போருண்டு’ என்பதனாற் போர்செய நேரிடினும் பொருந்துவ தறப் போர் என்பதும் தெளிவாய்ச் சொல்லப்பட்டுள. ‘ குருவென வொருமுறை கருதப் பட்டுள, வவரை நாம் வழிபடல் தவறாக் கடனே’ என்னுங் கூற்றினாற் குருவிற்குச் செய்யக்கிடக்குங் கடமைகளெல்லாந் தொகுக்கப் பட்டுள. சிறைக்கப்பட்ட செங்கணான், ‘இப்புழையில் சிறையிட்டு மேலா தென்றென விருதாள் கட்டும், விலங்கு மிட்டாரே: இவ்வழிகளின்றி; எவ்விடையுஞ் செலேல், என்றவாரணையிடிற் போதாதோ ? கன்றினாரானை கடப்பெனோ?’ என்று தனக்குட் சொல்வதை, எவ்வெவர் வாசிப்பினு மவ்வவர் மனத்தில் ஆணை கடப்பதழகன்றென்னு முயர்ந்த நீதியமுந்தாது போகாது. ‘நாவலர் தம்மை, எள்ளினந்தோ வேதம்படுமால்’, ‘இன்னார் மாட்டு மின்னருள் புரிந்து, நன்னயஞ்செயலே நல்லோரியற்கை’ எனும் நீதிகளும் இவை யன்ன பிறவுஞ் செறிந்திருக்கின்றன விச் செந்தமிழ் நூலின்கண். பின்னரும் அடக்கமுடைமை, அகங்காரங் கேடு, தன்னயம் பாராட்டாமை, வலரிழி தொழில் என்பவை போன்றவுங் குறிக்கப் பட்டுள. அவையிற்றினுக் கெலாங்காட்டுக்க ளவையப் புக்குழிவிபாசமெதிர் பாராவண்ணம் பெருகுமாதலால், நூலிலேயே கண்டு நுகர்ந்திடுமாறு விட்டனன்.

நான்காவதன்கண் இந்நூலில் மேன்மைவாய்ந்த தத்துவக் கொள்கைகள் மெச்சவு மெழிலாய்ப் பாத்திர வாயிலாய் பகரப்பட்டுள. அக்கொள்கைகளிற் சில வெடுத்துரைப்பல். செங்கணான் பொய்கையாரை விளித்து ‘ அமையம் நோக்கா தமைமிகழ் தக்கது பொருத்தமில் செயலே ’ என்னும் போழ்து பொய்கையார் ‘இகழ்ச்சியுமொன்றே புகழ்ச்சியு மொன்றே, என்றனுள்ள மொன்றினுந் திரியாததனாற் புகழ்ச்சியைப்பின் வியத்தலு, மதனாலிகழ்ச்சியை யருண்டு வெறுத்தலு மிலையே’ எனவெளியிடுகின்றார். இது வாசிக்குந்தோறும் வாசிக்குந்தொறும் ஆனந்தத்தை யதிகரிப்பிக்கின்றது. ‘வசயக்கப்பட்டு பெய்யாப்புற்று உய்யுமாறில்லா தோங்கு



சிறைக்களத்தமைந்த நும்மை ‘வேட்டபடி யெல்லா மாட்டவல்லேம்’ என்று செங்கணான் பொய்கையாரை நோக்கிப் புகலும்பொழுது பொய்கையார் ‘உன்னை நீயறியாயுரைத்தனை பேதாய், யாரோய் நீயே? யாரேன் யானே? எனைக்கிற்கு மெற்கும் நேர்ந்த தொடர்பெனை ? யானுன் சிறையலேன் ; எனைச் சிறைப்படுத்த நீ, தானும் வலையலை ; தகாதன பிதற்றேல் ; யானே யென் னையிச் சிறைப்படுத்தேன், ஏனோரொன்று மெனைச் செய்தாரலர், செய்யவும் வலரலர்.’ ‘உற்றுக்காண்டி நீ பற்றிய தெனது, யாக்கையே யன்றிப்பார்க்கு மிடத்து, வேறொன்றிலையே நாறுமிவ்வுடலம், என்னதன்று மற்றிடையே போந்ததோர், தச்சிலே யன்றி யிச்சைகொண் டென்றும், மெய்ச்சிடற் பாற்றோ ? என்னுடலுறையு மின்னுயிராகிய, என்னைச் சிறையினிட்டனை கொல்லோ?’ என்றிவ்வாறாக மறுமொழி கூறுவதில்விதந்து சுட்டப்பட்டுள கொள்கைகள் ஆனந்தம் விநோதமமைந்த எவரும் வியக்கு மெழிலுடைக் கொள்கைகள் ஆனந்தம் பொழியு முகிலெனலாம். வேறோரிடத்துப் பொய்கையார் ‘உலகே போர்க்களம் ; உற்றமாந்தரே, பலதிறப்பட்டுப் பாழ்ம்போர் செய்குநர் ; வாழ்க்கையோ போர்த் தொழில் ; பாழ்க்கையோ மக்கள், ஒருவரை யொருவர் வெறுவுறத்தாக்கி இருவரு மொழிவர்’ என்று கூறுவது என்றும் நம்மித யத்தை விட்டலாப் பான்மைத்து. பஞ்சணை யுறங்கி விஞ்சிய பொய்கையார் சிறை யகப்பட்டுத் துன்ப முற்றுத் தரையிற் படுப்புழித்தரையை நோக்கி ‘உலக நற்றாயே! உலக நற்றாயே ! உன்மகார்தம்மு ளொருவனேன் அந்தோ ! இதுகாறு நின்னி னெளிதிற் பிரிந்தே பதிதோறுமேகிப் பஞ்சணை யுறங்கினேன். ’அப்பொழு தெல்லா மடியேனுற்றன செப்பருந் துயரே; சிறிது மின்பில்லை ; மற்றிப் பொழுதோ யானின்ப மெய்தினேன். ஒரு பேரன்னாய்! உன்றன தருமைத் திருமடி யதனிற் சிறப்புட னுறங்கும் பெரும்பேறு பெற்றேன் ; விரும்பே னெதனையும் இன்றே நன்னாள் ; நன்றே யிந்நாள்; இன்றே போல்கவென்றே யாயினும். எவையும் பெறவேன்; நவையு மற்றேன் ; குறையொன்று மில்லேன் தறையென்றனம்மே!’ என்ற வாறின்புடன் சொல்வது நந்தம் ஆசிரியர், எத் தகைத்தான விடுக்கண் நேர்ந்துழியும் அவையிற்றினை யெல்லா மின்பமாக் கருதி, மனோரம்மியத்துடனே பொறுத்துக்கொள்ளு மாற்றலறவும் வாய்ந்த வரென்பதைத் தெற்றென விளக்காமற் போகாது.

இனி நான்காங்களத்தின்கட் பலிக்குங் கனவும் பலிக்கலாக்கனவும் என்று இருவகையாக் கனவுகளைப் பிரித்து, ‘சித்தந்திரிதல் பித்த மீறுதல், உயிர்ப் புனன் மூளைகுரியவாறு றுமை, உலர்ந்த வூண் கோண் மலர்ந்து துயிலுதல், இனனும் பலவாயியம்பு காரணத்தால், துன்னுங் கனவுகள்’ என்று கனவு நிகழ்ச்சிக்குக் காரணங்கூறிப் பின்னர்க் கனாப்பயனீதெனக் காணலியலுமா வெனத் தர்க்கித்து ‘ ஆருயிர்க் கெல்லா மருநலங் கருதியே, சீருறச் செயல்கள்

செய்யப் படுவன. எல்லா நன்மையே. பொல்லாங் கொன்றில்லை. கடவுள் படைப்பின் கருத்திதுவாமே. அருளுருவாகிய வொரு பெருங்கடவுள், உறுநல முயிர்கட் குணரொணு வண்ணம் நெறிமையிற் செய்வன். நேர்ந்தறி வாமென முயலுநர் பலரால். முடிவிலன் நலன், நயனுற விளங்கும்; நடுவினில் விளங்கா. ஆதலிற் கணப்பயனீதெனக் காண்டல் அரிதாம்' என இத்தனை யெழிலுறக் கடையீனின் முடிப்பது, இவர் தம் புத்தி சாதுரியத்தையும் மனக்கூர்மையையும் அறிதற் கேற்ற கட்டளைக் கல்லென்பதற்குத் தினைத்துணையும் ஐயப்படில்லை,

தற்கொலை சாலுமா சாலாதா? சாலுமாயி னெப்பொழுது? என்னுந் தர்க்கத்தை இந்நூலாசிரியர் நடத்துகின்ற முறைமை இவர் தர்க்கிக்கு மாற்றல் மிகவும் பெற்றவ ரென்பதை யினிது விளக்கி நிற்கின்றது. இத்தர்க்கத்தினொழுங்கு நீளங்கொண்டதனு லிரண்டொரு விஷயமே யெடுத்துக் கூறுவல். முதலில் தற்கொலை சாலாதென்பதை "இந்த வுலகமே நந்தவிலின் பந், தந்திடு மூலகம் இந்த யாக்கையே, செந்தவக்கருவி; சீரிய வுயிருக், குறைவிடமாகி யுறுதி பயப்பது; இதனைப் பேணுதிருத்தன் மடமை, உடலினை னன்றே யுயிரினைக் காண்டல்; உடலிருப்புழியே யுயிருக்கறிவாம்: உடலினை யிழந்தா லுயிர்க் கறிவில்லையால்; கடவுளா ரின்னருள் கனிந்து தந்தவிவ்வுடலினைத் தபுத்த லுறப் பெருந்தீங்கு சொல்?" என்னும் வாய்மொழியா னிலைநிறுத்தி, பின் மானங்கெட்டழிந்துழி தற்கொலைசாலு மென்பதை, 'மானமேயுயிரினுமாண்புடைத்தாமால்' "மானமேயாருயிர் மானமேயறம், மானமேசெம்பொருண்மானமேயின்ப, மானமேபேரொளி மானமே புகழ், மானமே பெவற்றினுமாட்சிசான்றதால்; இத்தகைமானமதிழந்தபின்னரு, முத்தம முடலென வுணர்ந்து சாகிலர், தத்தமயாக்கையைத் தகவிலாசையோ, வித்தமும் பேணுவார் நீசரல்லரோ?" என்றநன்னெறிகளாற் ருபிக்கின்ருர். பணத்தைத் தெய்யவமாய்ப்பணியுமிக்காலத்து, "பணமெனவடிக்கடிபரிந்து மாழ்கலென். செல்வங்கருவியேயாசிறந்தபயனே? கல்விநலமிலாக்கயவர்கள் தாமே, கருவியைப் பயனுக் கருதுந்தீயோர்" எனநமக்கின்புறக்கொடுத்த நன்மதி என்று மறக்கற்பாற்றன்று.

தற்காலத்துக் கேடுவிளைக்கினும் முன்னுட்கொள்கையை முரணுடுபெற்றும் நமக்கு, "முன்னுட்கொள்கை யிந்நாட்கோளொடு முரணலும்வழக்கே அரனெனுநீதிநூல் காலக்கேற்பஞாலத்தியலும். பொருந்தாட்பழையனபோமால் அறிதி" என்றிவ்வருகச் சீர்திருத்தத்தின் சிறப்புக்குறித்ததற்கு நாஞ் செய்யக்கிடக்குங் கைம்மாறென்னை? "வினைப்பயன் றுய்ப்பிடம்விளங்குறுமிப்பர் இன்பதுன்பங்களிவ்வுலகின்கணே. மன்பெருந் துறக்கமும் வகைகெழுநரகு மிம்மாயிரு ஞாலமே மதிக்கவேறில்லை" என்ற சுட்டுநலஞ்சால் கொள்கை, எப்போலியாரா னன்றுயறிந்து மெய்ச்சிடுந்தாத்ததன்று. அறிவின் மிகப்பொலி யாங்கிலகண்பர் மிகவுமுயற்சிகொண்டு நம்முளத்திற்பதிக்குமாறு எத்தனிக்குங் கொள்கைகளிற்பெறவுஞ்சிறந்துளவோர் கொள்கையை "ஒன்றுமுற்பட மற்றொன்று பிற்பட, முன்னது காரணம் பின்னது காரியம் என்பவர் வாதம்புன்பயனுடைத்தே" என்பதனுனன்குநமக்கறிவிக்கின்ருர். நம்மாசிரியர். இதைப்போன்றவை யெத்தனையோ விருப்பினு மிஃதொன்றுமே மொழிபெயர்ப்பாளர்க்கு முதற்றுணையாய் நின்று வழிகாட்டுவதிற் சிறந்துளதென்பதுயாவருமறு அவிஷயம்.



இந்நூல் கொண்டுளதேக குற்றமே. அஃதென்னையோவெனின், எத்தனைமுறையோ படிக்கினுமென்னை அமைந்திருக்க வொட்டாதறவுந்தடுத்து மீளவு மீளவும் படிக்கச்செய்தசுயநயச்செயல் பொருந்தியிருப்பதே. யாக்கை நூலுடையாக்கமன பண்டிதர்திதிக்குங்கண்டுதேன் மத்தித்துக்கூட்டியே மருந்தீந்துடலஞ் சரிவரச்செய்வபோ லான்மநூலுடை நம்மேன்மைப்பண்டிதர் மக்களியல்பையொக்கவறிந்து, இன்னும் நூல்பல வியற்றத்தக்கவா, யாக்கை நலமினிதாக்கும் வண்ணம், இறைவனை யாமெலாம் என்றும்வாழ்த்துவமே.

அ. பூமிநாத முதலியார்,

---

## METRICAL SOMERSAULTS.

## சித்திர கவிகள்.

### 1. அஷ்டநாக பந்தம்.

நேரிசை வெண்பா.

தேவா சுகாசோதி தேஙயுமை லோலாவோ
மூவாமா சூலா முனிநேர்தா — தாவா
காவா தருள்தாநீ காமவதா தினர்
தருவே கதிசேர் தா. (௧)

### 2. இரத பந்தம்.

வஞ்சி விருத்தம்

கால பாசவ தாசகா
காச தாவுமை நாயகா
காய் நாரண வாசுகா
காசு வாமதி பாலகா. (௨)

வான மாநட நாதவா
வாத காரிஜ யாசிவா

வாசி யாரண நேசவா
வாச நேருள மானவா. (௩)

[இவ்விரண்டும் இரதத்தின் சக்கரங்களி னுள்ள பாடல்கள். இவை சகடபந்தமா மாறுகாண்க.]

கட்டளைக் கலித்துறை

வேளா ருடலந் தபவங்கி வீழ்விழி வீரவய
வாளார் புலியதள் வாராடை யாய்பெறு வாரணனே
சூளான் றடர்ந்த நமன்கால னேசுடர் சூலிமண
வாளா நடமிரு பாதெரு ளார்மன் றுள் வாழ்தருவே. (௪)

[இஃது இரதத்தின் கீழ்த்தட்டிலுள்ள பாடல்.]

கலிவிருத்தம்.

நீலா நீதா தாரே சூரா
நாலா வேதா பாரே தேரா
மூலா தூயா வாவா மூலா
தேவா சேயா வோவா லோலா. (௫)

[இஃது இரதத்தின் தூண்களிலுள்ள பாடல்; எதுகை வேறுபட்டு இருவிகற்பத்தான் வந்தது. இதனை யிரண்டாகப் பகுத்துச் சீர்தோறும் எதுகை நயங்காண்க. இது வடநூலார் விதியின்படி வித்யுந்மாலை யென்னும் விருத்தமாம்.]

நேரிசைவெண்பா.

சேயம் பலவோனே செஞ்சடையோய் நாரணனு
நேயம் படுமதியா னேருணராத்— தூயவனே
மாணிடமா ரையாவா வாநயநீ வானவா
ஞான நடராய னே. (௬)

[இஃது இரதத்தின் மேற்றட்டிலுள்ள பாடல்.]

வஞ்சி விருத்தம்

மாக மாரு மாகமா
மாக மாரு மாகமா
மாக மாரு மாகமா
மாக மாரு மாகமா. (௭)

[இஃது இரதத்தின் கொடிகளிலுள்ள பாடல். இது மாலைமாற்றும், ஏகபாதமுமா மாறு காண்க. இதனை மகாயமகம் என்பாரு முளர்.]



சவலை வஞ்சித்துறை.

நட்ட மாடிய
சிட்டர் தாட்
கிட்ட ரேவினை
விட்டு ளார். (௮)

[இஃது இரதத்தின் மாலைகளிலுள்ள பாடல். இனி யிதனை வஞ்சி விருத்தப்பாதி யாக்கிக் கொள்வாரு முளர்.]

அசலாம்பிகை யம்மை.

---

## THE MUNIMOLI OF AUVAI
## ஔவை முனிமொழி.

---

சர்வான்ம சம்பு சிவாசாரியர் பாஸ்கரிய வாதம், மாயா வாதம், சப்தப் பிரமவாதம், கிரீடப் பிரமவாதம் என்னும் "நான்கு மதங்கட்கும் நூல் செய்தவர் வியாசர்" என்பது போதர

ஏதேஷாஞ்சதுர்மதாநாம் ப்ரணேதா வ்யாஸ: ।

ஏதேஷாஞ் சதுர்மதாநாம் ப்ரணேதா வ்யாஸ:

என்று மாத்திரங் கூறினாரன்றி, ஏகான்ம வாதத்துக் கேனும் பாஸ்கரிய வாத முதலிய நால் வேறு வகைப்பட்ட மதங்கட் கேனும் வேதாந்த சூத்திரஞ் செய்தவர் வியாசர் என்று கூறினாரல்லர். சர்வான்ம சம்பு சிவாசாரியர் ஈண்டுப் பிரயோகித்த "ப்ரணேதா" என்னும் மொழி "தலைவர்" "கோட்பாட்டை விளக்குபவர்" "ஆக்கியோன்" என்னும் பொருட்டு. அச் சிவாசாரியர் பிரயோகித்த "ப்ரணேதா" என்னும் பதம் உத்தர மீமாஞ்சையாகிய வேதாந்த சூத்திரத்தை எவ்வாற்றானும் சுட்டியதின்று. அச்சிவாசாரியர் வட மொழியில் இயற்றிய சித்தாந்தப் பிரகாசிகையையும், தென் மொழியிற் சிவஞான யோகிகளால் மொழி பெயர்க்கப் பட்ட சித்தாந்தப் பிரகாசிகையையும் பதம் பதமாய், வாக்கியம் வாக்கியமாய் நன்கு பன்முறை படித்துளோம். எம் இலக்கச் சுதேச வர்த்தமானிப் பத்திரிகையிற் கூறப்பட்டவாறு "வியாச சூத்திரமான உத்தரமீ மாஞ்சை ஏகான்ம வாதநூல்' என்று யாண்டும் கூறப்படவில்லை. திராவிடப் பிரகாசிகையில் "வேதாகமப் பிராமாண்ணியம்" என மகுடமிட்டு கூ௪-ஆம் பக்கந்தொடுத்து 99-ஆம் பக்கம்வரையும் எழுதப்பட்ட விஷயம் "சிவஞான பாஷ்யத் துரைகளப் பட்டது" என்று ஆண்டுக் கூறப்பட்டது. இதில் 98-ஆம் பக்கத்தில அச்சி

வாசாரியர் வரைந்ததாக நாம் மேலே காட்டிய வடமொழி வாக்கியத்தின் சாரத்தை வாங்கி (பூருவ மீமாஞ்சை, வைசேஷிகம், நியாயம், சாங்கியம், பாதஞ்சலம், வேதாந்தம் என்னும்) "புறச்சமயங்களோடு வைத்தெண்ணிய வேதாந்தமாவது ஏகான்மவாதங் கூறும் வியாசநூல் என்று, சித்தாந்தப் பிரகாசிகையிற் சர்வான்மசம்பு சிவாசாரியர் கூறுதலால்" என்று சிவஞான யோகிகள் வரைந்திருத்தலானும், ஈண்டுக் கூறப்பட்ட "வியாசநூல்" உத்தர மீமாஞ்சையாகிய வேதாந்த சூத்திரமாகாது. "வேதத்து ஞானகாண்டப் பொருளை நிச்சயித்துரைப்பது உத்தர மீமாஞ்சை (வேதாந்த சூத்திரம்) எனச் சிவஞான சித்தியாரின் "மறையினாலயனால்" என்னுஞ் செய்யுட் பொழிப்புரையில் அச்சிவஞான யோகிகள் கூறியிருத்தலினால் என்க. ஏகான்மவாதங் கூறும் வியாசநூல் யாதெனத் தாம் தேருமையினாற் போலும் யோகிகள் சர்வான்ம சம்புசிவாசாரியர் சித்தாந்தப் பிரகாசிகையிற் கூறினர் என்று அவர் மேற் பாரமேற்றி அந்நூல் எனப் புலப் படுத்தாது வாளா விடுத்தார். சர்வான்ம சம்புசிவாசாரியரேனும் சிவஞானயோகிகளேனும் முறையே சித்தாந்தப் பிரகாசிகையினும் சிவஞான பாஷ்யத்தினும் "வியாச சூத்திரமான உத்தர மீமாஞ்சை ஏகான்ம வாதநூல்" என்று கூறினாரல்லர். அங்ஙனம் கூறினர் கூறினர் என்று திராவிடப் பிரகாசிகை சுதேசவர்த்தமானி என்பவைகளில் வரையப்பட்டமை முழுமையும் பொய். அங்ஙனம் கூறினரேல், அதனைச் சித்தாந்தப் பிரகாசிகையில் எப்பாகத்ததெனத் திராவிடப் பிரகாசிகையுடையார் காட்டுவாராக. வியாசநூல் என்றது வேதாந்த சூத்திரமொன்று தானா? வேறின்றா? பாரதேதிகாசபுராணங்கள் வியாச நூல்களல்லவோ? "ப்ரணேதா" என்னும் பல் பொருளொருசொல "கோட்பாட்டை விளக்குபவர்" எனப் பொருள் பட்டு, நூற்றெட்டு உபநிடதங்களுள்ளே பைங்கலம், சர்வசாரம், சாண்டில்லியம், மகா நாராயண முதலிய அறுபது உபநிடதங்கள் உரைக்கும் ஏகான்மவாதக் கொள்கையைச் சிவதத்துவ சுதாநிதி, கூர்ம புராணம், பாரத முதலியவைகளில் ஆங்காங்கு வெளியிட்டுரைத்தார் வியாசர் என்று பொருள் கோடலால எய்தும் ஏதம் யாதோ! அங்ஙனம் வியாசரியற்றிய ஏகான்மவாதநூல் ஒன்றுளதேல் அதன் பெயர் யாதென் றெடுத்துரைத்து, அவ்வுண்மையைப் பஃறிறத்தானும் நிரூபணஞ் செய்து நாட்டல் ஆவசியகம்.

வேதாந்த சூத்திரம ஏகான்மவாத நூலாவதென்று திராவிடப்பிரகாசிகை 103-ஆம் 104-ஆம் பக்கங்களில் வரைந்தவர் 180-ஆம் பக்கத்தில் "உத்தரமீமாஞ்சை எனப்படும் வேதாந்தம பலதிறப்பட்டுக் கிடக்கும் உபநிஷத வாக்கியங்களை அவ்வப் பொருட் பெற்றிக் கேற்ப ஒருமைப்படுத்துப் பரமேசுவரோபாசனை கடைப்பிடித்துச் செய்ய விதிப்பது" என்று மற்றொன்று வரைந்து, எடுத்த மேற்கோளைச் சாதிக்கமாட்டாது நிக்கிரகத்தானத்தற்றார். சுதேசவர்த்தமானி எம் இலக்கப் பத்திரி



கையில் "வியாசசூத்திரமான உத்தரமீமாஞ்சை ஏகான்மவாதநூல்" என்று முதற்கண்ணே வரைந்துவிட்டுப், பின்னர்ப் "பரமேசுவரோபாசனை செய்ய உபசரிக்கும் மாட்சிமுதலியன அதன்கணுண்மையா..." என்று வரைந்தார். திராவிடப் பிரகாசிகை 180-ஆம் பக்கத்தில் ஒன்று எழுதினார், சுதேசவர்த்தமானிப் பத்திரிகையிற் "பரமேசுவரோபாசனை செய்ய உபசரிக்கும் மாட்சிமுதலியன அதன்கண் (வியாசசூத்திரத்துள்) உண்மையால்" என மற்றொன்று வரைந்து, வேதாந்த சூத்திரத்தைக் கணாத கௌதம பாதஞ்சல சூத்திரங்களோடொப்ப நிறுத்தி, ஈசுவரோபாசனை செய்ய உபசரிக்கும் ஓர் வைதிக கருவிநூல் என்று எழுதினவர் யுக்தி மிகவியக்கற் பாற்றே!! "உத்தரமீமாஞ்சையான வேதாந்த சூத்திரம் ஏகான்மவாதநூல்" என்றும், "சங்கராசாரியர் ஏகான்மவாதங்கூறும் வியாசசூத்திரத்துக்கு ஏகான்மவாத பாஷ்யஞ் செய்தது மிகவியைபாம்" என்றும் வரைந்து, அவ்வேதாந்த சூத்திரம் பரமேசுவரோபாசனை கடைப்பிடித்துச் செய்ய விதிப்பதென்று வரைந்து, பின்னர்க் கணாதகௌதம பாதஞ்சல சூத்திரங்களோடு அதனை ஒப்ப மதித்தார். மதிக்கவே, கணாத கௌதம சூத்திரங்களோடு கணிக்கப்படும் சைமினிசூத்திரத்தோடு வேதாந்த சூத்திரத்தையும் ஒன்றுபடுத்திப் பூருவமீமாஞ்சை உத்தர மீமாஞ்சை என்னும் பகுப்பறுத்தோராயினர். பிரமகாண்டமாகிய வேதோபநிடதங்களின் பொருளாய் விளங்கும் உத்தரமீமாஞ்சையாகிய பிரமஞானத்தையும், அதற்கு நிமித்தமான கருமகாண்டப்பொருளை உணர்த்தும் சைமினி சூத்திரத்தையும் எவ்வாறு ஒரு நெறிப்படுத்தவல்லராவர்? ஏகான்மவாதநூதலும் வியாசசூத்திரத்துக்குச் சங்கராசாரியர் "ஏகான்மவாதபாஷ்யஞ்செய்தது மிகவியைபாம்" என்று வரைந்த நாவலரவர்கள், நீலகண்ட சிவாசாரியர் வியாசசூத்திரங்களைத் தம்மதமாக இணக்கிப் பாஷ்யஞ் செய்தனர் என்றார். எனவே, ஏகான்மவாத நூதலின்ற வேதாந்தசூத்திரங்கள் பரமேசுவரோபாசனைசெய்ய விதிக்கமாட்டோமென்று நாணி மறுத்து நிற்ப, அச்சூத்திரங்களை நீலகண்ட சிவாசாரியர் பலதிறத்தானும் தம்வசமுற இணக்கிப்பாஷ்யஞ் செய்தார் என்பதே அவர் கூறியதன்பொருளாம். ஆகவே, வேதாந்தசூத்திரங்களின் உண்மைப்பொருள் ஏகான்மவாதப்பொருளே எனவும், நீலகண்ட சிவாசாரியர் அவற்றை சம்மதத்துக்கிசைவுறவலிந்து பொருள்செய்த சிவாத்துவிதபாஷ்யம் ஓர் பொய்ப்பாஷ்யமாம் எனவும் பெறப்பட்டு, வேதாந்த சூத்திரத்தின் கருத்து ஒன்றாகச் சிவாத்துவித பாஷ்யத்தின் கருத்து மற்றொன்றாக வேறுபட்டு, அப்பாஷ்யம் சைவர்களாற் பரிசிக்கத்தக்க யோக்கியதையல்லாததோர் பொய்க்கட்டுப் பாஷ்யமென்றன்றோ கூறநேர்ந்தது! அப்பொய்ப்பாஷ்யம் சிவபரத்துவஞ் சொன்னாலென்! பரமேசுவரோபாசனை செய்ய விதித்தாலென்! அப்பாஷ்யத்தையும் ஓர் திருணமளவேனும் பொருட்படுத்த வேண்டியதின்று. மிலேச்சமத, பிறப்புறமத, புறி

மத நூல்கள் சிவபரத்துவ முரட்பொருள் செய்யப்பட்டால்," அந்நூல்களும் உரைகளும் சிரமேல் வகிக்கற்பாலனவா? வேதாந்த சூத்திரம் ஏகான்மவாதநூல் என்று ஓரிடத்தும், பரமேசுவரோபாசனை விதிப்பது எனப் பிறிதோரிடத்தும், கணாத கௌதம பாதஞ்சல சூத்திரங்கள்போல ஈசுவரோபாசனைக்கோர் கருவிநூல் என்று மற்றோரிடத்தும் ஒன்றுக்கொன்று மாறுபடவரைந்தமை போன்றதாமே சிவஞானயோகிகளும் வரைந்துளர்! "மறையினானயனால்" என்னும் சிவஞானசித்திச் செய்யுட்பொழிப்பில் "வேதத்து ஞானகாண்டப்பொருளை நிச்சயித்துரைப்பது உத்தரமீமாஞ்சை (வேதாந்தசூத்திரம்)" என்று வரைந்தமையை நோக்காது போனமைக்குக் காரணம் என்!

வேதத்தின் பிரமகாண்டமாகிய ஞானகாண்டப்பொருள் ஏகான்மவாதப்பொருள் கொண்டாலன்றோ, அவ்வேகான்ம ஞானகாண்டத்தின் பொருளை நிச்சயித்துரைக்கும் வேதாந்தசூத்திரமும் மாயாவாதப் பொருளுடையதாகும். "வேதத்தின் ஞானகாண்டமாகிய வேதாந்தங்களைப் பிறநூல் என்று வைத்தல் அஞ்ஞதையின் மாகாத்மியம்" என்று சிவசமவாத வுரை மறுப்பிற் கண்டித்துச் சிவஞானயோகிகள் மகுடாகமம் சுப்பிரபேதாகம முதலிய ஆகமங்களினின்று

[illegible]

வேதாந்தார்த்த மிதம் ஞானம்

"இந்தச் சித்தாந்த ஞானம் வேதாந்தத்தின் பொருள்" என்றும்,

[illegible]

வேதஸார மிதந் தந்திரம்

"இந்தச் சித்தாந்த தந்திரம் வேதசாரம்" என்றும்,

[illegible]

சித்தாந்தம் வேதஸாரத் வாத்

"சித்தாந்தம் வேதசாரமாதலினால்" என்றும் பல பிரமாணங்காட்டி வேதாந்த சித்தாந்தங்களுக்குப் பேதமின்மை விளக்கி, அவ்வேதாந்த ஞானகாண்டத்தைப் பரபக்ஷப்பாற் படுத்தாது சுபக்ஷப்பாற் படுத்துக் கூறினராதலின், அவ்வேதாந்த ஞான காண்டார்த்த மந்திரங்களை ஆதாரமாகக்கொண்டு கிளர்ந்த வியாசரருளிய வேதாந்த சூத்திரமும் பரபக்ஷப்பாற் படுத்தப்படாது சுபக்ஷப்பாற் பட்டதேயாம். "புராணம், ஸ்மிருதி, வேதவழி நூல்கள், வேதாங்கமாறு, வேதப் புடை நூல்கள், உபாகமங்கள், ஆகமவழி நூல்கள், ஆகமாங்கங்கள், ஆகமப்புடை நூல்கள், ஏனையவெல்லாம் பூருவபக்க நூல்களென்று "அருமறை யாகமம்" என்னும் செய்யுளால் அருணந்தி



சிவாசாரிய சுவாமிகள் கூறி, வேதாந்த சூத்திரத்தையும் பூருவ பக்ஷம் பண்ணினர் என்பாரேல், அத்திருச்செய்யுளுக் கடுத்த "வேதநூல் சைவநூல்" என்னும் திருச்செய்யுளில், "வேத முடிபாகிய உபநிடதங்களின் சாரமாயுள்ள பொருள்களை வேறெடுத்துக்கொண்டு இனிது விளக்குவது சிவாகமமாதலின், இதனின் வேறாய வேதத்தின் பூருவ பக்ஷப்பொருளைச் சொல்லும் ஏனை நூல்களெல்லாம் பூருவ பக்ஷநூல்" எனவும், "அதன் சித்தாந்தப்பொருளைச் சொல்வன வாய சிவாகமங்கள் சித்தாந்தம்" எனவும் கூறப்பட்டிருத்தலின், வேதத்தின் சித்தாந்தப் பொருளாகிய பிரமஞான காண்ட உபநிடதப் பொருளும், அவ்வேத சித்தாந்த பிரம ஞானப் பொருளை நிச்சயித்துணர்த்தும் உத்தரமீமாஞ்சையாகிய வேதாந்த சூத்திரமும் சித்தாந்த ஞானப் பொருளுடையனவாம் என்க. இதனால் வேதசித்தாந்த முடிபாய உபநிடதங்கட்கும் பிரமஞானகாண்ட வேதாந்த சூத்திரத்திற்கும் பேதமின்மை தேர்ந்துணர்வாராக.

வேதாந்த சூத்திரம் சுபக்ஷநூலென்று கொண்டன்றோ பரபக்ஷத்துள் அருணந்தி சிவாசாரிய சுவாமிகள் பட்டாசாரிய பிரபாகர மதங்களோடு நிறுத்திச் சிவாத்து விதியையும் கண்டனஞ் செய்யாது தவிர்த்தார். சிவாத்துவிதம் சுபக்ஷநூலென்பதற்கு இதுவே போதிய சான்று. "வேதத்தின் பூருவபக்ஷப் பொருளைச் சொல்லும் ஏனை நூல்களெல்லாம் பூருவபக்ஷ நூல்களெனவும், அதன் சித்தாந்தப்பொருளைச் சொல்வனவாய சிவாகமங்கள் சித்தாந்தம்" எனவும் சிவஞானசுவாமிகள் "வேதநூல் சைவநூல்" என்னுஞ் செய்யுட்பொழிப்புரை இறுதியிற் கூறினமையானும், "வேதாந்தத் தெளிவாயுள்ளன சைவசித்தாந்த சிவாகமங்கள்" எனக் கூறப்படுதலினாலும், வேதத்து ஞானகாண்ட உபநிடதங்களோடு அப்பொருளை நிச்சயித்துணர்த்தும் வேதாந்த சூத்திரமும் பூருவபக்ஷம் பண்ணப்பட்டதென்பாரேல், சிவஞான மகாபாஷ்யத்தில் "ஏனைய ஆகமங்கள் போலப் பொருள் கவர்சிபடுதற் கிடங்கொடா வண்ணம் அறுமுகக்கடவுண் மாட்டுவைத்த பெருங்கருணை மிகுதியால் அங்கை நெல்லிக்கனிபோல ஆன்மாவினியல்பு விளங்கவுணர்த்திப் பல்காலும் வலியுறுத்தி, எல்லா ஆகமங்களினுஞ் சிறந்தது என்பது தோன்றச் சர்வஞ்ஞானோத்தரம் எனப் பெயருமிட்டருளிச் செய்த ஸ்ரீகண்டருத்திரக் கடவுளின் திருவுளக்குறிப்பு இங்ஙனமென்க" என்று கூறப்பட்டிருத்தலான், சர்வஞ்ஞானோத்தர மொழிந்த மேலே உரைத்த எஞ்சிய சித்தாந்த மூலாகமங்களும் உபாகமங்களும் பூருவபக்ஷம் பண்ணப்பட்டன என்றே கொள்ளப்படும். படவே, "அருமறையாகமநூல்" என்னும் செய்யுளிற் பூருவபக்ஷம் பண்ணப்பட்ட உபாகமங்களோடு நிறுத்திக் கணிக்கப்படும் சர்வஞ்ஞானோத்தரம் "சிவாகமங்கள் சித்தாந்தமாகும்" என்று அருணந்தி சிவாசாரிய சுவாமிகள் திருவாய் மலர்ந்தருளிய திருவாக்

கைப் பூருவபக்ஷம் பண்ணிற்றே! மேலும், "அருமறையாகமநூல்" என்னும் திருச்செய்யுளைப்படித்து வேதாந்த சூத்திர சிவாத்துவித பாஷ்யம் பூருவபக்ஷம் பண்ணப்பட்டதென்பாரேல், நாம் "வேதசாத் திரமிருதி புராணகலை ஞானம் விரும்பசைவ வைகரியா திந்திறங்கண் மேலா, நாதமுடி வானவெல்லாம் பாசஞானம்" என்னும் ஒன்பதாஞ் சூத்திரச் செய்யுளைப் படித்து, அவர் சித்தாந்த ஆகமங்களையும், சர்வஞ் ஞானோத்தரத்தையும் சிவஞான மகா பாஷ்யத்தையும் பாசஞானத்துட்படுத்தி விடுவோமாயின், அதற்கு அவர் யாது சுருதி மந்திரப் பிரமாணங்கொண்டு எப்போது அவற்றை உயிர்ப்பிக்கின்றாரோ, அப்போது அந்தச் சுருதிமந்திரத்தை நாமும் உச்சரித்து வேதாந்த சூத்திரத்தையும் உயிர்ப்பிக்க வல்லேமாவேம். இதற்கு அவர் விடையளிப்பாராக.

ஞானாமிர்தப் பத்திரிகையினும் திராவிடப் பிரகாசிகையினும் அஷ்டாதச வித்தையில் "வேத நான்கும் பிரமகாண்டமும், பிரமஞானத்துக்கு நிமித்தமான கருமகாண்டமும் உணர்த்துவனவாம்" எனவும், "சிவாகமங்கள் பிரமகாண்டமாய் அடங்கும்" எனவும் கூறப்பட்டமையால், வேதத்தின் பிரமகாண்ட சித்தாந்தப்பொருளை நிச்சயித்துரைக்கும் பிரமஞானகாண்ட உத்தரமீமாஞ்சையாகிய வேதாந்த சூத்திரமும் பிரமகாண்ட சிவாகமங்களோடு ஒப்பக் கணிக்கப்பட்ட பிரமகாண்டமென் றோர்ந்துணர்வாராக. (பொதுவியல்பு சிறப்பியல்பு என்னும்) "இருவகை இயல்பும் வேறு வேறு கூறும் ஆகமங்களின் பொருளொருமை உணரமாட்டாது ஒரோவொன்றே பற்றி ஐக்கிய வாதமுதற் பலதிறத்தான் வேறுபட்டுத் தம்முண் மாறுகொண்டு மயங்குவார்க்கு அங்ஙனம் மயங்காது அவற்றின் பொருளொருமை உணர்த்துதற் கெழுந்தது இந்நூல் என்றவாறாயிற்று" என்றமையான், அவிகாரவாதி, பரிணாமவாதி, சிவசமவாதி, பாடாணவாதி, பேதவாதி, சங்கிராந்தவாதி, சிவாத்துவிதி முதலிய அகச்சமயங்களின் பொருளொருமைகளை நிஷ்டையினியல்புணர்த்தும் "இரும்பைக் காந்தம் வலித்தாற்போல்" என்னுஞ் செய்யுளிற் சிவஞான சுவாமிகள் விளக்கியிருப்பாராக, சைவ வேதாந்த சூத்திரப்பொருளுண்மையை அறியமாட்டாது திராவிடப்பிரகாசிகை நூலார் மயங்குகின்றார்.

"பரஞானத்தாற் பரத்தைத் தரிசித்தார் பரமே பார்த்திருப்பர்" என்னும் சித்தியார்ப் பதினொராஞ் சூத்திரச் செய்யுளைப்படித்து, நிஷ்டைக்குச் சாதனங்களாகிய கேள்வி, சிந்தனை, தெளிவு என்னும் மூன்றையும் கண்டித்து, அதனால் தமது கேள்வி சிந்தனைகளுக்கு ஏதுவாயுள்ள சிவஞான பாஷ்யத்தையும் தவிர்த்து விடுவாரேல், பதிஞானம் விளங்குதற் கேதுவாமுகத்தால் ஞானயோகத்தை உணர்த்தித் தெளிவறிவினாற் பெறப்படும்



பேற்றைக்கொடுக்கவல்ல ஞானசாதனமாகிய சைவ பாஷ்யத்தையும் நாமும் பொருட்படுத்தாது தவிர்த்துவிடுவேம்.

வேதாந்த சூத்திரத்து,

𑌅𑌥𑌾𑌤𑍋 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌜𑌿𑌜𑍍𑌞𑌾𑌸𑌾 ।

அதாதோ ப்ரம்ம ஜிஞ்ஞாஸா

என்னும் முதற்சூத்திரம் "சச்சிதானந்தம்" "சர்வஞ்ஞதை" முதலிய குணங்களையுடைய பிரமத்தைப் பிரதிபாதிக்கும் தைத்திரீயோபநிடத மந்திரத்தை ஆதாரமாகக்கொண்டு எழுந்தது. அந்தச் சர்வஞ்ஞதாதி குணங்களையுடைய பிரமத்தோடு ஆன்மாச் சிவசாமியமுறுதலே முத்தி

𑌨𑌿𑌰𑌂𑌜𑌨𑌃 𑌪𑌰𑌮𑌂 𑌸𑌾𑌮𑍍𑌯𑌮𑍁𑌪𑍈𑌤𑌿 ।

நிரஞ்சந: பரமம்ஸாம்ய முபைதி।

என்று முண்டகோபநிடதம் கூற, வாயுசங்கிதை

𑌮𑍁𑌕𑍍𑌤𑌶𑍍𑌶𑌿𑌵𑌸𑌮𑍋 𑌭𑌵𑍇𑌤𑍍 ।

முக்தச்சிவ ஸமோபவேத்

"முக்தன் சிவசாமியம் அடைகின்றான்" என்று கூற, சர்வஞ்ஞானோத்தரம்

𑌸𑌰𑍍𑌵𑌜𑍍𑌞𑌤𑌾 𑌤𑍃𑌪𑍍𑌤𑌿𑌰𑌨𑌾𑌦𑌿𑌬𑍋𑌧𑌃 𑌸𑍍𑌵𑌤𑌨𑍍𑌤𑍍𑌰𑌤𑌾 𑌨𑌿𑌤𑍍𑌯𑌮𑌲𑍁𑌪𑍍𑌤𑌶𑌕𑍍𑌤𑌿𑌃 ।
𑌅𑌨𑌨𑍍𑌤𑌶𑌕𑍍𑌤𑌿𑌶𑍍𑌚 𑌨𑌿𑌰𑌾𑌮𑌯𑌾𑌤𑍍𑌮𑌾 𑌵𑌿𑌶𑍁𑌦𑍍𑌧𑌦𑍇𑌹𑌶𑍍𑌶𑌿𑌵𑌤𑍍𑌵𑌮𑍇𑌤𑌿 ॥

சர்வஞ்ஞதா திருப்திரநாதி போத: ஸ்வதந்திரதா நித்யமலுப்த சக்தி: அநந்தசக்திச்ச நிராமயாத்மா விசுத்த தேகச்ச சிவத்வமேதி॥

என்று கூறிய சுலோகப்பொருளைக் காஞ்சிப்புராணம் "முடிவிலாற்றலை தன் வயத்தினை முற்றுணர்ச்சியை பேரண், மடிவிலாட்சியை தூயமேனியை மற்றியற்கை யுணர்ச்சியை, படியிலா வியல்பாக நீங்கிய பாசநோயை வரம் பிலின், புடைமை யுன்னடியேங்களென்று முனக்கவடக்கல மையனே."

என்றுரைப்ப, சிவஞான சுவாமிகள் சிவஞான பாஷ்யத்தில் "ஆன்மா சிவனோடொற்றுமைப்பட்டு நிற்புழிச் சிவ குணங்களாகிய சர்வஞ்ஞதை முதலிய எண்குணங்களும் தன்றன்மையாய்க்கொண்டு சிவனேயாய்நிற்பன் இதுவே சிவ தத்துவத்தைப் பெறுதல், இதற்கும்மேல் அறியற்பாலன ஒரு நூலினும் இல்லை" என்று வரைந்திருப்பாராக, மெய்கண்ட சுவாமிகள் "தன்னை யறிவித்துத் தானாயச் செய்தான்" என்றருள, சிற்றுரைக்காரர் "உயிர்தன்னை யறிந்தவழி எண்குணங்களானிறைந்து தன் வண்ணமாகச் செய்தலே தானாயச்செய்தல்" என்றும், "அங்ஙனம்செய்த வழியும் உயிர் தானுஞ் சிவானுபவ மொனநிலைக் குறித்து என்பார் தைவமென்றந தைவமே என்றார்" என்றும் விளக்க, அருணந்தி சிவாசாரிய சுவாமிகள் "தன்னுருவப்

பரப்பெல்லாங் கொடுபோந்து பதிப்பனிவன்பாலே'' என்றும், "உயிர் தானுஞ் சிவானுபவ மொன்றினுக்கு முரித்தே'' என்றும் அருள, சிவஞான யோகிகள் "இறைவனுக்குரிய முற்றுணர்வு முதலிய எண் குணங்களும் படிகம்போலச் சார்ந்ததன் வண்ணமாமியல்புடைய ஆன்மாவுக்குரிய குணமாம்படி அத்துவித வியைபானே இவன்மாட்டு விளங்கித் தோன்றுதலே சிவானந்த மேலிடுதலாம்'' என்றும், "சிவாநுபவ மொன்றினுக்கே உயிர் சுதந்தரமாம்'' என்றும் பொழிப்புரைசெய்ய, திருவள்ளுவ நாயனார் "கோளில் பொறியிற் குணமிலவே யெண்குணத்தான் றாளை வணங்காத்தலை'' என்று கூறியருள, வியாசமுனிவர் வேதாந்த சூத்திரத் திறுதியில்

[illegible]

போகமாத்ரசாம்யலிங்காத் !

என்று கூறியருளினர். ஈண்டுச் "சாமியம்'' என்றமையால் மேலே உரைத்த சுருதி புராண ஆகம உத்தர வேதங்களால் உயிர் சிவத்தோடு சாமியமடைதலும், "போகமாத்திரம்'' என்றமையால் உயிர் சிவானந்தானுபவ மொன்றினுக்குரியனன்றிப் பஞ்சகிருத்தியத்துக் கதிகாரியாகான் எனவும் சூசிக்கப்பட்டமையை ஓர்ந்து அவ்வியாச சைவ வேதாந்த சூத்திர உத்தரமீமாஞ்சை சிவதடஸ்த சொரூபங்களுக்கியையப் பொருள் செய்யக் கிடந்த நுண்மையை ஓர்ந்துணர்ந்து, அதனை நியாய வைசேஷிக சாஸ்திரங்களோடு கணித்துத் தூஷிக்காமலும், அச்சூத்திரசைவபாஷ்யத்தைச் சைவத்துக்கு ஓர் இணையிலாப் புணையாகக் கொண்டு போற்றும் வைதிக சைவர்களாகிய எம்மனோர்க்குக் கேடு சூழாமலும் சிறிது மௌனஞ் சாதிப்பாராக. வேதாந்த சூத்திரத்து இறுதிக்கண்ணதாம்

[illegible]

அநாவ்ருத்திரச்ப்தாதநாவ்ருத்திச் சப்தாத்

என்னும் சூத்திரம் "மற்றீண்டு வாராநெறி'' யை உணர்த்திற்றென்றோர்க. ஆகவே, வேதாந்த சூத்திரத்து உபக்கிரமோபசங்கார லிங்கத்தினால் பிரமத்தினியல்பும், உயிர் அதனோடு சாமியமுறுதலால் எய்தும் ஆன்மலாபமெனப்படும் முத்திப்பேறும் விளக்கப்பட்டவாறு காண்க.

(இன்னும் வரும்.)

ஸ்ரீ காசிவாசி - செந்திநாதையர்.

---



# ÆSOP'S FABLES.
# கட்டுக்கதைகள்.

---

## I.
## ஓநாயும் ஆட்டுக்குட்டியும்.

கோடைக்காலத்தில் ஒருநாள் ஒருமலையின் பக்கமாய் ஓடியதோர் தெள்ளிய வோடையில் ஓர் ஓநாயும் ஆட்டுக்குட்டியும் தமது தாகத்தைத் தணித்துக்கொள்ளும்படி ஒரேவேளையில் வருமாறு நேரிட்டது. ஓநாய் உயர்ந்தவிடத்திலும், ஆட்டுக்குட்டி அதற்குக் கொஞ்சத் தூரத்திற்கப்பால் தாழ்ந்தவிடத்திலும் நின்றன. அவ்வாறாகவும் ஓநாய் அதனோடு சண்டையிடவெண்ணித் "தண்ணீரைக்கலக்கி யான் குடிக்கமுடியாதவாறு மண்ணீராக்கியதனால் உன்கருத்து யாதுகொல்? நின்செயலுக்கு உத்தரவாதஞ் செய்வாய்'' என்று சினந்து கேட்டது. இங்ஙனம் பயமுறுத்தித் தன்மீது காட்டிய குற்றங்கேட்டு ஆட்டுக்குட்டி நடுநடுங்கி அமைந்த குரலிற் பணிந்த சொற்களில் "யான் குடித்த தண்ணீர் நும்மிடத்திலிருந்து வருவதனால் அஃதெப்படி நேரும்? ஆதலின் அவ்வளவு உயரத்திலுள்ள தண்ணீரைக் கீழிருக்கும் யான் கலக்கமுடியாது'' என்று சொல்லிற்று. அதுகேட்ட ஓநாய் "அஃதப்படியே ஆகுக; நீ யொரு கள்வன்; ஏறக்குறைய ஆறுமாதத்திற்கு முன்னே நீ என்னை இழிந்த சொற்கள் வழங்கிப் புறங்கூறி வைததனையென யான் கேள்விப்பட்டேன்'' என்று அதட்டிற்று. அவ்வளவில் ஆட்டுக்குட்டி "ஐயோ! யான் பிறந்து இன்னும் ஆறு மாதமாகவில்லையே!'' என்று கூறி யேங்கிற்று. வாய்மைக்கு மாறானதொன்றை ஒருகாலமும் நியாயஞ்சொல்லி நிலைநிறுத்த முடியாதென்பதுணர்ந்த அவ்வோநாய் உறுமி, வாயில் நுரைத்துப் பைத்தியம் பிடித்ததுபோலப் பெருஞ்சினங்கொண்டது. அதன்மேல் ஆட்டுக்குட்டியினருகிற்சென்று "பேதாய்! நீயல்லாவிடில் உன்தகப்பனுகில் அங்ஙனஞ் செய்திருப்பான்; எல்லாமொன்றே'' என்று சொல்லிக்கொண்டே ஒரு பாவமுமறியாத அவ்வெளிய உதவியற்ற ஆட்டுக் குட்டியின் மீது பாய்ந்து சின்னபின்னமாய்க் கிழித்துத் தின்றது. அந்தோ! இஃதென்ன அநியாயம்!

நீதி:—தீயோன் தனதுதீச்செயல்கட்கு எவையேனும் சாக்குப்போக்குக்களை எப்பொழுதுந்தேடுவான்.

அமைக்குமாறு:—சிங்காதனத்தில் வீற்றிருக்குமோர் அரசனாகவேனும் பள்ளிக்கூடத்திற் படிக்குஞ் சிறுவனாகவேனும் குடியரசு நாட்டின் தலைவனாகவேனும் இருக்குமொரு கொடியோனுக்கு அவனது தீயவொழுக்கத்தை நாட்டவொருவித நியாயமும் அகப்படாமற் போகாது. தீயசிந்தையோன் ஏதேனும்

தீங்குசெய்ய விரும்பும்போது வம்புக்கிழுத்தற்பொருட்டு எளிதில் யாதானுமொரு போலிநியாயங் கற்பித்துக்கொள்வான். வம்பு செய்வோரிடமும், கொடியமக்களிடமும் கவலையாய் நடந்துகொள். கூரியவாளெடுத்து விளையாடுவோர் அவற்றினிடத்துக் கவலையாயிருக்கு மாறுபோல நாமுமிருக்க வேண்டும்.

திருந்திய மனமின்றித் தீங்கு பற்பல
புரிந்தவ ரென்றென்றும் பொறுக்கி லார்மற்றும்
பொருந்திய நல்லுளப் பொறுமை யென்பது
வருந்திய மக்கட்கே யுரிய மாணபரோ.

ம. சு. கோவிந்தசிவன்.

---

## REVIEWS OF BOOKS.

## புத்தகக் குறிப்புக்கள்.

---

### இராமாயணஸாரம்:—முதற்பாகம்.

[சென்னை அடிஸன் அச்சுக்கூடத்திற் பதிப்பித்தது. விலை: அணு 0-10 0 தபாற்கூலி வேறு.]

இது சென்னைப் பிரமஞானசபையின் அவயவிகளிலொருவராகிய அன்னி பெஸன்டு அம்மையவர்கள் ஆங்கில மொழியிற் செய்துள்ள இராமாயணத்தை மொழிபெயர்த்து ஆங்காங்குச் சில அருமையும் பெருமையும் வாய்ந்த செந்தமிழ்ப் பாடல்களை யிணைத்து யாவருக்கும் பொருள் விளங்கத்தக்க தெளிவான இனிய நடையி லமைத்தது. இது தம மைத்துனரும் சூளும் பேட்டை ஜமீன்தாரவர்களுமாகிய ம-௱-௱-ஸ்ரீ முத்துக்குமாரசாமி முதலியார் அவர்கள் பி. ஏ. வேண்டுகோட் கிணங்கிச் செய்யூர் முத்தைய முதலியாரவர்கள் இயற்றியது. இதன் முதலத்தியாயமாகிய முவுரை நமது ஞானபோதினியின்கண் அவ்வக் காலத்துச் சிறிதுசிறிதாக வெளிப்போந்தது. இது மிகவும் பளபளப்புள்ள உயர்ந்த கடிதத்தில யாவரும் விரும்பத்தக்கவாறு ஆங்கிலக் கம்பெனியாரால் அச்சிடப்பெற்றுக் கண்கவரும் வனப்பினதாக வுள்ளது. இஃது ஏறக்குறைய 150-பக்கங்கள் கொண்டுளது; சென்னைக் கிறித்தவக் கலாசாலைத் தலைமைத்தமிழ்ப் பண்டிதர் பிரமஸ்ரீ வி.கோ. சூரியநாராயணசாஸ்திரியார், பி. ஏ. பதிப்பித்துவரும் கலாநிதி யென்னும் நூற்றொகையுட் பன்னிரண்டாவது கலையாம். இந்நூல் சென்னை உயர்நீதிசாலை நீதிபதிகளி லொருவராகிய பிரமஸ்ரீ சர்-எஸ்-சுப்பிரமணிய ஐயரவர்களுக்கு உரிமையாக்கப்பட்டுளது. நூலின் முன்னர் மிகவிரிவாகப் பொருளடக்கமும், விநாயகர், நடராஜர், இராமபிரான் இவர்கள் வணக்கமுங் கூறப்பட்டுள பான்மை யாவருங் கொண்டாடத்தக்கது. இடையிடைக் கூறப்பட்டுள



செய்யுட்களுக்குக் கடையிலோர் முதற்குறிப்பகராதியும் சேர்க்கப்பட்டுளது. நிற்க, இப்புத்தகத்திலுள்ள நான்கத்தியாயத்திலும் பாலகாண்டமும், ஆரண்ய காண்டத்தின் முதற் பகுதியுமே யடங்கியுள்ளன. சடாயுவைக் காண்டல் வரை கூறப்பட்டுளது. இம்முதற் பகுதியைப் படித்து ஆனந்தங்கொண்ட பலரும் மற்றைப் பகுதியையும் படிக்க அவாக்கொள்ளுதல் திண்ணமாதலின் நம் முத்தைய முதலியாரவர்கள் தாம் எடுத்துக்கொண்ட விஷயத்தைப் பூர்த்திசெய்து இரண்டாம் பாகத்தையும் தமிழுலகத்துக்கு விரைவிற் றருவரென நம்புகின்றோம். மற்று இதன் சிறப்புக்களுட் சில கூறுவாம். இஃது மொழிபெயர்க்கும்போது உண்டாகும் இடர்ப்பாடுகளுள் ஒன்றுமின்றி நேரே இயற்றப்பட்டதோர் தனித்தமிழ் நூல்போல விளங்காநின்றது. இது கல்வியறிவில் தேறும் சிறுவர்கட்கும் சிறுமிகட்கும் ஏற்றதோர் கையுறையாம். இது மேற்பார்வைக்கு இராமாயணகதையே யாமாயினும் உற்று நோக்குமிடத்து இஃது ஒரு நீதிநூலென்பது திண்ணம். இதன் கண்ணே ஒழுக்க மேம்பாடும், நூலோதும் பயனும், அறிவை விருத்திசெய்யும் வழியும், உலக வியல்பும், உலக வியக்கமும், தீமைப் பயனும், குணநல முடையார் சிறப்பும், வீரத்திற்கு வணக்கமே விளக்கமா மாறும், இனம் இனத்தை நாடுமென்பதும், மன நிறைவே திருப்தியாமாறும், கல்விச்சிறப்பும், கல்விப் பயிர்ச்சியும், குல மேன்மையினும் குணமேன்மையே சிறந்த தென்பதும், தீய பழக்கத்தின் கேடும், வெகுளியை வெல்லுமாறும் கூறப்படுதலால் இந்நூலினை நீதி நிக்ஷேப மெனபதிற் றடையில்லை. மெய்ஞ்ஞானி தன்மை, யோக சாமர்த்தியம், சாபமிடுதலின் தத்துவம், பழவினை யியல்பு முதலியன கூறுதலால் இதனை ஆன்மநூலென மதிக்கினும் அமையும், முற்காலத்து மகளிர் சிறப்பும், மகப்பேறே பெரும் பேறாகுமாறும், மணப்பருவத்தின் வரையறையும், மனைவி சொற் கேட்கு முறையும் முதலியன கூறுதலால் இஃதில்லறத்தைக் கூறுமாறும் அறிக. இது நம்முடைய இந்திய மகளிர் அனைவரும் ஒரு விகச்சுவை வேறுபாடு மின்றி வாங்கி வாசிக்கத் தக்கதோர் புத்தகமாமாறு யாவரும் அறியாமற் போகார். இராமாயணத்தின் சாரமனைத்தையுந் தேன்மாரி பொழிந்தெனத் தந்த இம்முதலியார்க்குத் தமிழுலகஞ் செய்யக்கடவ கைம்மாறென்னே!

***

### மோக முத்கரம்:

[சென்னைச் சிட்டி பிரஸில் டி. ஆர். சந்திர ஐயர் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது. இதன் விலை அணு தபாற்கூலி உட்பட 0-6-0]

இது தி. அ. சுவாமிநாத ஐயர் அவர்கள், எவ். டி. எஸ்., தமிழில் மொழிபெயர்த் தியற்றியது. இதற்கு 'பஜகோவிந்த ஸ்தோத்திரம்' என்னும் மறு பெயரும் உண்டு. இதன் கண்ணே, ஸ்ரீமத் பகவத்பாத சங்கராசாரிய சுவாமிகள் திருவாய் மலர்ந்தருளிய துவாதச மஞ்சரிகா ஸ்தோத்திரமும் அவரது சிஷ்யர்கள் அருளிச் செய்த சதுர்த்தச மஞ்சரிகா ஸ்தோத்திரமும் அடங்கி யிருக்கின்றன. இவ்விரண்டையும் மொழி பெயர்த்திட்ட நம் ஐயர் அவ்வளவிலே நின்று விடாது அவற்றிற்குச் சிறந்த தமிழ் வியாக்கியானமும் வகுத்தியற்றி வெளியிட்டிருக்குமாறு மிகவும் வியக்கத்தக்கதே. நூலைத்திறந்த உடனே தரிசனங் கொடுப்பவர் ஸ்ரீமத் ஜகத்குரு

சங்கராசாரிய சுவாமிகள். அஃதாவது அவரது திருவுருவப் படமொன்று முதற்கட் காணப்படுகின்றதென்பதாம். இது கும்பகோணக் கலாசாலையிற் சரித்திரப் புலமை நடாத்தி வாராநின்ற பிரமஸ்ரீ கே. சுந்தரராம ஐயரவர்களுக்கு உரிமையாக்கப் பட்டுளது. உரிமையுரைக்கட் காணப்படும் ஏழு பாடல்களும் மிகவும் இனிமை வாய்ந்தனவாய்க் காணப்படுகின்றன. பத்தியின் சிறப்பும், அவாவறுத்தலி னின்றியமையாமையும், ஆன்மலக்கணமும், இவைபோல்வன பிறவும் இந்நூலின்கண் தெளிவாகவும் சுருக்கமாகவும் விளக்கிக் காட்டப்பட்டிருக்கின்றன. இந்நூலின் "உரையானது எளிய செந்தமிழ் நடையி லெழுதப்பட்டுக் கற்போர்க்கு இனிமை பயப்பதாய் ஆங்காங்கே தமிழ்நூற் பிரமாணங்களும் காட்டப்பெற்றுளது. இக்காலத்து இத்தகைய நூல்கள்தாம் நமது நாட்டிற்கு வேண்டும். பெருநூல்களின் சாரங்களைச் சுருக்கித் தெளிவாய் விளக்கு நூல்களிலே எத்திறத்தோர் மனமுஞ் செல்லுமாகலின் நம்மவரை நல்வழிப் படுத்தற்கும் வைதிக ஞானங்களை யவர்க்கறிவித்தற்கும் ஐயரவர்கள் தெரிந்துகொண்ட மார்க்கம் தக்க மார்க்கமென்பதில் தடை யாதுமில்லை. அவர்கள் கருதியபடி இதனை முதற் புத்தகமாகக் கொண்டு மனீஷா பஞ்சகம், நாரதபக்தி சூத்திரம் முதலிய உயரிய சிறிய நூல்களை உரை சகிதம் விரைவில் ஒவ்வொன்றாக வெளிப்படுத்துவாராயின் மிக்க நன்மையுண்டாகும். அவர்கள் அவ்வாறு செய்தற்கண் மனவெழுச்சியுண்டாகும்பொருட்டு இந்நூலைப் படிக்கும் நண்பர்கள் தம்மாலியன்ற உதவி செய்வாராக. இறைவன் திருவருளும் அவ்வாறே கூட்டுவிக்க" என்று இதற்கு நூன்முகங் கூறிய ம-ா-ா-ஸ்ரீ எஸ். அனவரத விநாயகம் பிள்ளையவர்களின் கூற்று யாவருங் கவனிக்கத் தக்கது. நூலுரையின் இடையிடையே காணப்படும் மேற்கோட் செய்யுட்களின் இயல்பை நோக்குமிடத்து நம்ஐயர் அருமையான செந்தமிழ்நூலினும் வல்லவர் என்பது தெற்றனவிளங்கும். இது சென்னைக்கிறித்தவக்கலாசாலைத் தலைமைத் தமிழ்ப் பண்டிதராகிய பிரமஸ்ரீ வி. கோ. சூரியநாராயணசாஸ்திரியாரவர்கள், பி. ஏ. பதிப்பித்துவருகின்ற ஞானதரங்கிணி என்னும் நூற்றொடையுள் இஃது ஏழாந்தரங்கமாம். இந்துமதப் பற்றுடையராயினோர் யாவரும் இந்நூலை ஆதரிப்பாராக.

***

**சிவகாநவிளக்கம்:** முதற்பாகம்.

[இது துத்துக்குடிச் சைவசித்தாந்த சபையாராற் சைவப்பிரகாச அச்சியந்திரசாலையிற்பதிப்பித்து வெளியிடப்பட்டது. இதன்விலை அணா. 0 2-0]

இந்நூலாசிரியராவார் நமது ஞானபோதினிக்கு அடிக்கடி விஷயதானஞ் செய்பவருளொருவரும் ஆசாரவிளக்கமுடையாருமாகிய விருதை சிவஞான யோகிகளென்பார். 'கானமானது விஷ்ணுவுக்கேயுரியது, சிவபிரானுக்குரியதன்று' என்று கூறியலையும் குதர்க்கவாதக்கொழுந்துகளாகிய போலிப்பாகவதர் சில்லோரது நாவடக்குவான் எழுந்ததோர் நூலாமிது. கானமென்பது இசையோடுபாடும்பாட்டாம். இஃது எல்லாத்தெய்வத்திற்கும் ஒப்ப உரியதோர் வித்தையாம். இவ்வுண்மையையறிந்து சமயவேறுபாடுகாட்டாமல் ஒற்றுமையைப் போதிக்கவேண்டிய அப்பாகவதர்கள் ஒருகடவுளுக்கு உயர்வு

தோன்றவும் மற்றொருகடவுளுக்குத் தாழ்வுதோன்றவும் பிரசங்கஞ்செய்வார்
களாயின் அவர்களை என்னென்றுகூறலாம் ? பாதகர் என்கேமோ ? பாதகர்
என்கேமோ ? அன்றிப்பாதகர் என்கேமோ ? இவரதுசெயல் நாட்டின்கண்
மக்களொருமைக்குக் கேடுவிளைப்பதேயன்றியும் சமயப்போரும்விளைத்தலால்
இக்கலகக்காரரை இறைவன் தக்கவாறு கண்டித்து அவர்க்கு நல்லறிவுபுகட்
டுவாரசை. இதுநிற்க. இந்நூல் அநேகவித சுருதிப்பிரமாணங்களாலும் யுக்தி
வாதங்களாலும் இசையென்பது சிவபெருமானுக்கே விசேட உரிமையாய்ந்
தென்ற வுண்மையை நிலைநிறுத்திக்காட்டாநின்றது. இஃது இனிமையான
செந்தமிழ் நன்னடையில் யாவரும் விரும்பிப்படிக்கத்தக்கவாறு எழுதப்பட்
டுளது. இவர் இடையிடையே வாதஞ்செய்யுமிடத்து தருக்க நூன்முறை
பிறழாது செல்லுமாறும் கவனிக்கத்தக்கது. இந்த நூலினை யாவரும் ஏற்றுப்
படித்துச் சிவபுண்ணியமடைவரென நம்புகின்றோம்.

***

## அரங்கன் பிள்ளைத்தமிழ்.

இது ம-m-m-ஸ்ரீ. கோ. ம. நாராயணஐயங்காரவர்கள் என்னும் வைஷ்
ணவபக்தசிகாமணி ஒருவர் இயற்றியது. இந்நூலோடுகூட வேறு சில சிறு
நூல்களுஞ்சேர்த்து அச்சிடப்பெற்றிருக்கின்றன. இந்நூலின்சிறப்பைப்பற்றி
ச்சொல்லுதற்கு எமக்கு நாவெழவில்லை, "பக்தர்சொன்னவும் பன்னப்பெறு
வவோ" என்றாராகலின், செய்யுளிலக்கணத்தையும் நூல்களிலக்கணத்தை
யும்கேட்டுமறியாதார் நூலியற்றுவராயின் அந்நூல் ஒதுக்கப்படவேண்டியது
நியாயமே யாயினும் பிரகிருதத்தில் யாம் குறிபெழுத வெடுத்துக்கொண்ட
விந்நூல் பக்தர் பாட்டாய் முடிதலின் அதன்கண்ணே சொல்லின்பம் நாடுத
லொழிந்து பொருளின்பத்தையே நாடி ஒழுகுதல் யாவர்க்கும அழகாம்.
ஆதலின், யாவரும் இதனை வாங்கிப், படித்து ஆநந்திப்பாரென நம்புகின்
றோம். இத்தகைய நூல்களின் ஏற்றமெல்லாம் படித்த பிறகே விளங்கு
மென்பதறிக.

***

## தீனதயாளு :

[இஃதிரண்டாம் பதிப்பு, சென்னை எடியுகேஷனல் டிரேடிங் கம்பெனி
யாரால் லாரென்ஸ் அசைலம அச்சியந்திரசாலையிற் பதிப்பிக்கப் பெற்றது.
இதன் விலை : அணா-12 ; தபாற் கூலி : அணா-1.]

இஃது இலண்டன் மாநகர்க் கழகசபையின் அவயவிகளி லொருவரா
கிய பிரமஸ்ரீ பண்டிதர் - நடேச சாஸ்திரியாரவர்கள், பி. ஏ., இயற்றியது.
கதைகள் புனைந்தியற்றுந் தொழிலின்கண் நமநண்பர் மிகவுங் கைவந்தவ
ரென்பதும், விசேடப் பெயர்படைத்தவரென்பதும் நம் தமிழுலகமுழுதும்
நன்குணர்ந்த விஷயமே. இவர் கதைகள் வரைந்து வெளியிடத் தொடங்கி
ஏறக்குறைய இருபதாண்டுகளாயிருக்கலாம். இவர் முன்னரே யெழுதிப்
பிரசுரித்துள கதைகளிற்பல யாமும் பார்த்திருக்கின்றோம் ; அவை நாடெங்
கும் பரவியுலவுதலையுங் கண்டிருக்கின்றோம். இவர் கதைகளிற் சில ஆங்
கில நாட்டினுஞ் சென்று சேர்ந்தலவி நம் சாஸ்திரியார்க்கு மிக்க புகழ்
விளைப்பனவாயின. இது பற்றியன்றே நம் நண்பர் இலண்டன் மா நகர்க்

கதாசபையின் அவயவிகளு ளொருவராக நியமிக்கப்பட்டவரு மென்க. இக்கதை மிகவும் இறும்பூது சான்றது. இக்கதையின் றலைவனே தீனதயாளு; இவன் தாளுகத்தலை யெடுத்த வோரிளைஞன். தனது குடும்பத்திலும் தான் மேற்கொண்ட வுத்தியோகத்திலும் நேர்ந்த இடுக்கண்களால் தளர்ச்சியடையாது, நியாயத்தையே கடைப்பிடித்துக் கடமைதவறாது உழைத்து வந்த கல்விமான். இறுதியில் துயர்க்கடல் கடந்து குணக்குன்றாகி உயர்நிலையுற்ற நல்லறிவாளன். இத்தகையானது வாழ்க்கைச் சரிதங்கூறும் புதுமையானகதையைக் கைக்கொண்டு படியாதார்யாரே? ஆகையானன்றோ, இதன் முதற்பதிப்புப் பிரதிகளனைத்தும் ஓராண்டிலேயே செலவாய் விட்டன. அம்முதற் பதிப்பைப் பார்க்கினும் மிக்க சிறப்புடையது இவ்விரண்டாம் பதிப்பு; சிற்சில விடங்களில் விரித்தெழுதப்பட்டுளது; கதைநலங் கனிந்து செல்கின்றது; நல்ல பளபளப்புள்ள உயர்ந்த கடிதத்தில் நன்கு அச்சிடப்பட்டுளது; எழுத்துப் பிழைகளும் அதிகமாகக் கிடையா. இனியெடுத்துக்கொண்ட கதையும் அஃதமைந்துள வசனநடையும் யாண்டுந் தடைப்படுதலின்றி ஒத்து இனிமையின் இயங்குகின்றன. இஃது 200 பக்கமும் 15-அத்தியாயங்களுங்கொண்டது. அத்தியாயப்பெயர்களும் அத்தியாயமுகத்திற் குறித்துள பாடல்களும் மிகப் பொருத்தமாய் அமைந்திருக்கின்றன. இதனை யாவரும் ஏற்றுப் படிப்பார்களென்று நம்புகின்றோம்.

***

**கோமளம்குமரியானது :**

[இது சென்னை எடியுகேஷனல் டிரேடிங் கம்பெனியாரால் லாரென்ஸ் அசைலம் அச்சியந்திரசாலையிற் பதிப்பிக்கப்பட்டது. இதன் விலை : அணா-12. தபாற்கூலி அணா-1.]

இந்நூலாசிரியரும் மேற்கூறிய பண்டிதர் நடேச சாஸ்திரியாரவர்களே. இவரது கதை சொல்லும் ஆற்றலைப்பற்றி முன்னரே விரித்துக் கூறினும், அளவு முதலிய வற்றில் இதுவுந் தீனதயாளுவைப்போலும். மற்றுக் கதைப்போக்குமுதலியவற்றைக்கவனிக்குமிடத்து இதுபொருளாசையென்னும் பேய் பிடித்தாட்டச் சிலர் அதிகப் பொருளீட்ட முயன்று தாம் உள்ள பொருளையுமிழப்பரென்பதும், உள்ளது போதுமென் றமைந்திருக்கும் திருப்தி நிலையே சிறந்ததென்பதும், உலகத்தில் வஞ்சகர் பலர் உலவுவரென்பதும், அவர் கையகப்படாது மக்கள் சாக்கிரதையாயொழுகவேண்டுமென்பதும், முதலான பல நீதிகள் கோமளம் என்னுமொரு கிழத்தாசி குமரியாக விரும்பியொரு போலி யோகியின் கைப்பட்டுப் பதினையாயிரம் வராகன் ரூபாயைக் கொடுத்து மோசம்போன விநோத கதையினால் விளக்கப்பட்டுள்ளன. இக்கதை கையிலெடுத்தால் முடிக்குமளவும் கீழே வைக்க முடியாதவளவு இனிமைவாய்ந்துளது. நகைச் சுவையே யெங்கும நயத்தோடு காட்டப்பட்டுளது; உலக வியல்பொடு சிறிதளவேனும் மாறுபடாதவாறு அமைந்துளது. பதிப்பு முதலியவற்றில், தீனதயாளுவைப்பற்றிக் கூறியன இதற்குமொக்கும். இனி நம் நண்பர் நடேச சாஸ்திரியாரவர்கள் இவைபோலும் அருமையான இனிய நீதி புகட்டும் நற்கதைகள் பல புனைந்தியற்றித் தமிழராவாரை யின்புறுத்துவாராக.

---



## EDITORIAL NOTES.

## பத்திராதிபர் குறிப்புக்கள்.

ஐங்குறுநூறு :—இவ்வருமையான செந்தமிழ்நூல் சங்கப்புலவர்கள் அருளிச்செய்த 'எட்டுத்தொகை' யென்னும் நூற்றொகையுளொன்றும். "நற்றிணை நல்ல குறுந்தொகை யைங்குறுநூ, றொத்த பதிற்றுப்பத் தோங்கு பரிபாடல், கற்றறிந்தார் சொல்லுங் கலியோ டகம்புறமென், றித்திறத்த வெட்டுத் தொகை" என்றதோர் பழைய வெண்பாவினுன் இந்நூல் அத்தொகையினுள் மூன்றாவதாமாறு காண்க. இனி, இஃது அகப்பொருளின் பகுதிகளாகிய மருதம் முதலிய ஐந்திணைகளையும் தனித்தனி நூறுநூறு அகவற்பாக்களான் விளக்கிக் கூறுவது. இதன் கண்ணே, கடவுள் வாழ்த்துச் செய்யுள் முதலிய ஐந்நூற்றோரகவற் பாக்களுள. இப்பாக்களுள்ளே, கடவுள் வாழ்த்துப் பாரதம்பாடிய பெருந்தேவனாரும், மருதத்திணை கூறும் முதல் நூறு ஓரம்போகியாரும், நெய்தற்றிணை கூறும் இரண்டாநூறு அம்மூவனாரும், குறிஞ்சித்திணை கூறும் மூன்றாநூறு கபிலரும், பாலைத்திணை கூறும் நான்காநூறு ஓதலாந்தையாரும், முல்லைத்திணை கூறும் ஐந்தாநூறு பேயனாரும், முறையே யியற்றியனவாம். இதனை, "மருதமோ ரம்போகி நெய்தலம் மூவன், கருதுங் குறிஞ்சி கபிலர்-கருதிய, பாலையோ தல்லாந்தை பன்முல்லை பேயனே, நூலையோ தைங்குறு நூறு" என்ற பழைய வெண்பாவினு னுணர்க. இதன்கணுள்ள பாக்களினுடைய அடிகளின் சிறுமை பெருமை புலப்படவில்லை. இத்தொகை தொகுத்தார் புலத்துறை முற்றிய கூடலூர்கிழார் என்பார். இதனைத் தொகுப்பித்தான் யானைக்கட் சேய்மாந்தரஞ்சேரலிரும் பொறை யென்பான். இந்நூலிற்கு முன்னரே யமைந்துளதோர் கருத்துரையும், உள்ளுறை யுவமப்பொருள் இறைச்சிப்பொருள் முதலியவற்றை இனிது விளக்கி மிகவுஞ் சுருங்கியதாகவும் செவ்விதாகவும் அமைந்துளதோர் பழையவுரையும் உண்டு. இத்தகைய நூலை மூலமும் உரையுமாகக் கும்பகோணக் கலாசாலைத் தமிழ்ப்பண்டிதரும் மகா வித்துவானுமாகிய பிரமஸ்ரீ உ.வே. சாமிநாதையரவர்கள் பதிப்பித்து வருகின்றனர். முதன் மூன்று நூறும் அச்சாகிவிட்டன. மற்றைப் பகுதிகளும் விரைவிற் பதிப்பிக்கப்படும். இப்புத்தகத்திற்கு விலையும் சகாயமாகவே யேற்படுத்தப்படும். ஐயரவர்கள் தாம் இதற்குமுன் வெளிப்படுத்திய நூல்களுட் பெரும்பாலன விலைப்படாமையின், இப்பொழுது இந்நூலிற் சில பிரதிகளே பதிப்பிக்கப்படுகின்றன வெனவும், இந்நூலில் முந்நூறு பிரதிகட்குக் குறையாமல் விலைப்படுமாறாற்றான் தமக்குப் பொருள் நஷ்டமில்லாதிருக்கு மெனவும், அன்றியும் அது தாம் இனிமேல் வெளிப்படுத்தக்கருதிய பழைய நூல்களைக் கவலையின்றி ஊக்கத்துடன் பதிப்பித்தற்குப் பேருதவியாகு மெனவுங் கூறுகின்றனர். இது விஷயத்தைத் தமிழ் வித்துவான்களாயினும் தமிழ்ப் பாஷாபிமானிகளாயினும் கவனிப்பார்களாக. ஐங்குறுநூறென்னும் இவ்வரிய நூலைப்பெற விரும்புங் கனவான்கள் தாங்கள் இத்தனை பிரதிகள் எடுத்துக்கொள்ளக் கூடுமென்பதனைத் தங்கள் முழுவிலாசத்துடன் ஐயரவர்களுக்கே யெழுதித் தெரிவிப்பார்களாக. இது தமிழ்மொழியை யாதரிப்பதாமாறு யாவரு முணர்க

இராமநாதபுரம் சமஸ்தானம்:— சேதுகாவலர் தமது ஆண்மக்களிருவரையும் தக்க காவலாளர் ஒருவர்வசம் ஒப்பித்துவிட்டுத் தாம் தலயாத்திரை போவதில் விருப்பமுடையா ரென்பதுகேட்டு விசனப்படாதார் யாவரே? மேற்கூறியாங்கு தக்க காவலாளர் ஒருவரை நியமிக்கும்படி துரைத்தனத்தார்க்கு விண்ணப்பஞ் செய்துகொண் டிருக்கின்றனரென்றுங் கேள்வி யுறுகின்றேம். சேதுபதியாரது மூத்தமகனார்க்குப் பதின்மூன்று வயதும் இளையமகனார்க்கு ஒன்பதுவயதும் ஆகின்றன. இத்தகைய இளஞ்சிறுரை ஐரோப்பியக் காவலாளர்வசம் விட்டுவிடுவதற்கு அரசர் ஆசைப்படுவது எது கருதியோ? அங்ஙனம் செய்வதைத் தவிர்த்து வேறு வழி யில்லை போலும். இவையனைத்துக்கும் காரணம் சேதுபதியாரது வரம்பு கடந்த வள்ளன்மையே போலும். சேதுபதியார் கேட்டுக்கொண்டபடி மதுரை ஜில்லா கலெக்டரவர்கள் தாம் காவலாளராக விருப்பதற்கு ஒத்துக்கொண்டிருக்கின்றனர் என்று அறிகின்றனம். அந்தோ! தந்தையாரிருக்கவும் மைந்தர்கள் தமது காவலாளராகிய முன்பின் பயின்றறியாது கீழிருந்து அவஸ்தைப்படவேண்டிய நிலைமைக்கு வந்துவிட்டார்களே என்று துக்கிக்கின்றேம்.

*
* *

காங்கிரேஸ் மகாசபை:—இவ்வருஷம் டிசம்பர்மாதம் நடக்கப்போகும் காங்கிரெஸ் மகாசபை பதினெட்டாவது கூட்டமாகும். இஃது ஆமதபாத் நகரத்தில் நிகழப்போகின்றது. அக் கூட்டத்திற்கு அக்கிராசனாதிபதியாகத் தக்கவர்கள் பல்லோரைப்பற்றி பேச்சுக்கள் நிகழாநிற்ப இடையில் நமது கனம்பொருந்திய சுரேந்திரநாத் பானர்ஜி யவர்கள் சபாநாயகராக நியமிக்கப்பட்டிருக்கின்றனர். இவர் ஆங்கில பாஷாஞானம் மிகுந்து அப்பாஷையின் மூலமாய் விஷயங்களை எடுத்துப் பிரசங்கிப்பதில் மிகுந்த வாக்கு வல்லமையுடையவர். இவர் இதற்கு முன்னே மொருமுறை 1895-ஆம் வருஷம் புனாவில் நிகழ்ந்த பதினோராவது காங்கிரெஸ் மகாசபைக் கூட்டத்திற்கு அக்கிராசனாதிபதியாக வீற்றிருந்தவர். மிகுந்த தேசாபிமானமுள்ளவர். இத்தகையார் சபாநாயகரா யிருத்தலைப் பலரும் விரும்புவாரென நம்புகின்றேம்.

*
* *

டில்லி தர்பார்:—வருகிற ஜனவரிமாதம் முதல்தேதியன்று டில்லிமாநகரிற் கூடப்போகும் தர்பார் சம்பந்தமாகச் சகல ஏற்பாடுகளும் வெகு விநோதமாய் நடந்து வருகின்றன என்பது கேட்டுக் களிப்புறுதார் யாரே? டில்லிமாநகரோ மிகவும் பழமையானதோர் பட்டணம். சரித்திர சம்பந்தமாக மிகப் புகழ்படைத்தது. முன்னரே இயற்கை அழகுவாய்ந்த விந்நகரம் செயற்கை யழகும்வாய்ந்து விளங்குமானால் இவ்வற்புதக் காட்சியைக் காணுதற்குச் செல்லாதார் யாரே? பல்வகை யின்பங்களுட் காட்சியின்பம் சிறந்ததொன்றன்றோ? இவ்வமயத்தில் இதனைக் கைவிடுவாரு முளரோ? இம்மகா தர்பாருக்கு நூற்றிருபத்தைந்து சுதேச ராஜர்கள் வருமா றழைக்கப்பட்டுளர். ஏனையோரும் ஆண்டுச் சென்று சேர்ந்து காட்சியின்பம் நுகரலாம். இத்தகைய இன்பமான செயற்கருஞ் செய்கை செய்து வருகின்ற ஸ்ரீமான் கர்ஸன் பிரபு அவர்கள் சாமர்த்தியமே சாமர்த்தியம். எடுத்த காரியத்தைச் செய்து முடிப்பதிற் செம்மையும் திறமும வாய்ந்த வல்லாளராவரிவர்.

இத்தகைய காட்சியின்ப நிமித்த காரணராகிய பேருபகாரிக்குக் கைம்மாறியற்றுதலும் ஒண்ணுமோ?

***

சென்னைச் சந்தை :—சென்ற டிசம்பர் மாதம் நடந்த வண்ணமாகவே இவ்வருஷமும் டிசம்பர் மாதத்தில் நம் சென்னைமாநகரத்தின் கண்ணே ஒரு பெரிய சந்தை கூடாநிற்கும். சென்ற வருஷம் நடந்ததைக் காட்டிலும் இவ்வருஷம் வெகு விநோதமாய் நடக்குமென்று நம்புகின்றோம். ஒரு நாள் முழுதும் வேலை செய்து வீட்டுக்கு வருபவன் தன் வேலையின் சிரமத்தை மறக்கத்தக்க இன்பமான காட்சி தன் வீட்டின்கட் கண்டானாயின் அளவிறந்த ஆனந்த முறுவானன்றே? அது போலவே ஓராண்டு முழுதும் பல்வேறிடங்களினுஞ் சென்று, பலவகையான தொழில்களினு மிறங்கி உழைத்து வருந்திய ஜனங்கள் அவ்வருஷத்திறுதியிற் கிடைக்கும் விடுமுறை நாட்களிற் சிலவற்றைக் காட்சியின்பத்திற் கழிக்கலாமென்று சென்னைக்குப் போதருவது வழக்கம். அங்ஙனம் அவர் வருகின்ற அவ்வக்காலங்களில் தக்க காட்சியின்ப மில்லாதொழியின் இச்சென்னைமாநகர்க்கே பெரியதோர் இழுக்காமென்று கருதி மேற்கூறிய சந்தை ஏற்படுத்தப்பட்டது போலும். இவை யெல்லாம் வீணென்று கருதுவாருமுளர். அத்தகையார் காட்சியின்பத்தையே ஓரின்பமென ஒவ்வாதவராயிருப்பரென்று எண்ணுகின்றனம்.

***

மதுரைமாநகர் மண்டபம்.—1903-ஆம் வருஷம் ஜனவரி மாதம் முதற்றேதி யன்று நமது எட்வர்ட் சக்கரவர்த்தியாரின் மகுடாபிஷேகோற்சவத்தைக் கொண்டாடுவதற்கான விஷயங்களைப்பற்றி ஆலோசிக்குமாறு சென்ற மதி 25-ஆம் தேதி மதுரையிற் புதுமண்டபத்தில் ஒரு கூட்டங்கூடிற்று. அக்கூட்டத்திற்குக் கலெக்டர் கார்டியூ துரையவர்கள் தலைவராயிருந்தனர். அறுபதாண்டுகளுக்குமேல் அரசுபுரிந்து காலஞ்சென்ற விக்டோரியா மகாசக்கிரவர்த்தினியாரின் அரசாட்சிக்கும் அவரது குமாரர் எட்வர்ட் சக்கிரவர்த்தியாரின் மகுடாபிஷேகத்திற்கும் ஞாபகார்த்தமாக நகர சபா மண்டபமொன்று கட்டப்படுதல் வேண்டுமென்றும் அம்மண்டபத்தின் ஒரு பாகத்திற் புத்தகசாலையும் பொருட் காட்சிச்சாலையும் அமைக்க வேண்டுமென்றும் தீர்மானமாயின. இச்சபா மண்டபத்திற்கு விக்டோரியா எட்வர்ட் ஹால் என்பது பெயராம். அக்கட்டிடத்திற்கு ஒன்றரை லக்ஷரூபாய் பிடிக்குமாம். அதனைக்கட்டி முடிப்பதற்காக இருநூற்றுவரடங்கிய ஜில்லா சபை ஒன்றும் பதினைவரடங்கிய நிர்வாக சபை ஒன்றும் நியமிக்கப்பட்டுளவாம். கூட்டங்கூடிய அற்றைஞான்றே கையொப்பம் வாங்கினதில் 10,600 ரூபாய் சேர்ந்திருக்கின்றதாம். இந்நன்முயற்சி இறைவன் திருவருளால் நிறைவேறுவதாக.

***

திராவிட வர்த்தமானி :—சுதேச பாஷைப் பயிற்சியைப் பற்றி இப்பத்திரிகையின அபிப்பிராயம பின் வருவதாகும். “சர்வ கலாசாலைக் கமிஷன் ரிபோர்ட்டு இந்த விஷயத்தைக்குறித்துச் சொல்லுகிறதற்கு இசைவாகத்

தற்காலத்தில் தீராத்தர்க்கம் உண்டானாற்போல் இருக்கிறது. இதுவரை
யில் சென்னைச் சர்வகலாசாலையில் இங்கிலீஷ் முதற்பாஷையாயிருக்க இரண்
டாவது பாஷையாகச் சுதேசபாஷைகளில் ஒன்று மாணாக்கர்களால் வாசிக்
கப்படலாம். இனிமேல் மாணாக்கர் அந்த சுதேசபாஷைக்குப் பதிலாகப்
பூர்வபாஷைகளில் ஒன்றைத் தெரிந்துகொண்டு கட்டாயமாய்ப் படிக்கவேண்
டும் என்பது கமிஷனருடைய அபிப்பிராயம். அதற்கு ஆதாரமாக அவர்
கள் சொல்லுகிற நியாயங்கள் மூன்றே; இவைகள் யாவை யென்றால் (1)
சம்ஸ்கிருதத்தில் எழுதப்பட்ட நூல்களைப்போலத் தற்காலத்தில் பேசப்படும்
எந்த பாஷையிலும் சிறந்த நூல்களில்லை யென்பதும் (2) சொந்த பாஷை
யில் தேர்ச்சி அடைகிறதைப் பார்க்கிலும் பூர்வ பாஷையில் தேர்ச்சி அடை
கிறதனால் தான் மனோசக்தி அதிகரிக்கும் என்பதும் (3) பூர்வபாஷைகளைக்
கற்பதனால் சுதேசபாஷைகளுக்கு அபிவிர்த்தி உண்டாகும் என்பதுமேயாம்.
இம்மூன்று நியாயங்களுக்குக் கொஞ்சம் பெலன் இருந்தாலும் இவைகள்
எல்லாருடைய சம்மதத்தையும் பெறமாட்டா. அநேக சுதேச பாஷை
களிற் சிறந்த நூல்கள் இராமற்போனாலும் தமிழில் எழுதப்பட்ட நூல்கள்
சமஸ்கிருத நூல்களுக்குக் கொஞ்சங்குறைய சமம் என்பது அனேக புத்தி
மான்களுடைய அபிப்பிராயம். இதுவுமன்றி மனோ சக்தி வரத்தக்கதாகச்
சுதேச பாஷைகளைக் கற்றுக்கொள்வது அரிது எனறாலும், இங்கிலீஷ் நன்
றாய்க் கற்பிக்கப்பட்டால் அந்தப்படியே மனோ சக்தி வருகிறதற்கு ஏதுவா
யிருக்கும். இன்னும் கமிஷனர் சாதிக்கிற மூன்றாம் நியாயத்திற்கு ஒரு
ஆக்ஷேபம் உண்டு. அதென்ன வென்றால், தென் இந்திய பாஷைகளுக்கும்
சமஸ்கிருதத்திற்கும் நெருங்கிய சமபந்தம இராததனால, சமஸ்கிருதத்தைக்
கற்றுக்கொள்வதால் தென இந்திய பாஷைகளின் பயிற்சிக்கு அதிகபயன்
இராது என்று நாம் நினைக்கக்கூடும். கமிஷனருடைய அபிப்பிராயம் இப்
படியிருந்தும் அவர்கள் சுதேசபாஷைகளை அசட்டை பண்ணுகிறார்கள்
என்று யாரும் சொல்லக்கூடாது. ஏனென்றால் சுயபாஷை அறிவது அவ
சியம் என்றும் அப்பாஷைகள் தற்காலத்தில் நன்றாய்க் கற்பிக்கப்படவில்லை
என்றும் அவர்கள் நினைத்து அவைகளின் பயிற்சி முன்னுக்கு வருவதற்குச்
சில ஏற்பாடுகளைச் செய்யவேண்டும் என்றும் சொல்லியிருக்கிறார்கள்.
இவைகள யாவையெனில்: (1) மெட்ரிகுலேஷன் பரீட்சையில் மாணாக்
கர் சுயபாஷைகளிற் கடினமான பரீட்சை கொடுக்கவேண்டும் என்ப
தும் (2) இந்தப் பரீட்சையில் தேறினவர்கள் சர்வகலாசாலையில் சுதேச
பாஷைகளைக் கற்றுக்கொள்ளாமற் போனாலும் ஒவ்வொரு பரீட்சைக்கும் சம
பந்தமாகத் தங்கள் சொந்த பாஷை நன்றாய்த் தெரிந்திருக்கிற தென்று அந்
தப்பாஷையில் உபந்நியாசம் எழுதுவதனால் ரூபிக்கவேண்டும் என்பதும் (3)
எம். ஏ. என்னும் பரீட்சையில் சுயபாஷையில் அவர்களுக்கிஷ்ட மிருந்தால்
அதில் பரீட்சிக்கப்படலாம் என்பதுமே. இம்மூன்று விதமாயும் சுதேச
பாஷைகளின் பயிற்சிக்குக்கொடுக்கப்பட்ட சகாயத்தினால் அது முன்னுக்கு
வரும் என்பது அவர்களுடைய அபிப்பிராயம். தமிழ்ப்பாஷையின் பயிற்சி
தற்காலத்தில் நிர்ப்பந்த நிலைமையிலிருக்கிறதென்பதற்குச் சந்தேகமில்லை.
சர்வகலாசாலையிற் படித்துப்பட்டம் பெற்றவர்களில் எத்தனைபேர் எழுந்து
தங்கள் தேசத்தாரில சிறுகூட்டத்தைப்பார்த்து ராஜாங்க அல்லது மதவிஷ
யமாய்த் தெளிவும் சேர்த்தியுமாயிருக்கும் தமிழ் உபந்நியாசம் செய்யக்
கூடும்? கொஞ்சம் பேர்தான இன்னும் அவர்களில் எத்தனையோபேர் இங்



கிலீஷ் எழுதநன்றாய்த் தெரிந்தாலும் தமிழில் ஒரு கடிதம் எழுதவேண்டுமா
னால் அக்கடிதம் பிழைநிறைந்த கடிதமாயிருக்கத் தக்கதாக எழுதுவார்கள்.
அதுவுமன்றி, எத்தனையோ பேர் தங்களைப்போன்ற படித்தவர்களோடு சம்பா
ஷணை செய்யும் பொழுது இங்கிலீஷும் தமிழும் கலந்த ஒரு நூதனபாஷை
யைப் பேசுகிறார்கள். இதெல்லாம் வெட்கப்படத் தக்க காரியந்தான்.
தமிழ் நன்றாய் உபயோகிக்கக் கூடாததனால் இங்கிலீஷ் படித்தவர்களுக்கும்,
இங்கிலீஷ் படியாத அவர்களுடைய சுதேசிகளுக்கும் உண்டாகும் பேதம்
கொஞ்சமல்ல. இங்கிலீஷ் படித்தவர்கள் தங்களுக்கென்றே அப்படிப்பு
உபயோகிக்காமல் பிறருக்கு நன்மைவரத்தக்கதாக உபயோகிக்க வேண்டும்.
தமிழ் நன்றாய்த் தெரியாமற் போனால் அதையெப்படிச் செய்யக்கூடும்? ஆத
லால் சுதேசபாஷைகளின் பயிற்சியில் நாம் முன்னுக்குப்போக வேண்டுமெ
ன்பதிற் சந்தேகமில்லை. ஆனால் அதற்காக கம்மிஷன் நல்லதென்று நினைக்கிற
ஏற்பாடுகள் போதுமா? போதாதென்று நினைக்க இடமுண்டு. பிழையின்றி
உபந்நியாசஞ் செய்வது நல்லதுதான். ஆனாலும் சுயபாஷை சர்வகலாசாலை
யிற் கற்பிக்கப்படாதிருந்தால் அந்த உபந்நியாசங்களைத் திருப்திகரமாய் எப்
படி எழுதக்கூடும்? நல்ல நடையில் எழுதுவதும் பேசுவதும் இலேசல்ல.
சிறந்த நூல்களெல்லாம் செய்யுளில் எழுதப்பட்டதனால் இவைகள் வாசக
நடைக்கு மாதிரியாக பிரயோஜனம் இல்லை. நல்ல நடை நல்ல உபாத்தியா
யர் மூலமாய்த்தான் வரும். தமிழ் உபாத்திமாரை சர்வகலாசாலையி லிரு
ந்து நீக்குவோமானால் மாணாக்கர்களுக்குவேண்டிய சகாயம் எப்படிக்கிடைக்
கும்? பள்ளிக்கூடத்திற் படிக்கிறது போதும் என்று யாராவது சொன்
னால் நாம் அதற்குச் சம்மதிக்கக் கூடாது. ஏன் என்றால் சர்வகலாசாலையிற்
பயன்படத்தக்கதாக சமஸ்கிருதம்படிக்க வேண்டுமானால் அந்தப்படிப்பின்
ஆரம்பம் பள்ளிக்கூடத்திலே தான் இருக்கவேண்டும். இங்கிலீஷும் சமஸ்
கிருதமும் படிக்கவேண்டு மானால் தமிழ் நன்றாய்ப்படிப்பதற்கு நேரமாவது
மனோசக்தியாவது இருக்குமா?" இதனாலே சர்வகலாசாலை விசாரணை சபை
யார் செய்துள ஏற்பாடுகள் நேரியன அல்லவென்ப துணர்க.

***

**மதுரைத் தமிழ்ச்சங்கம்**:—இச்சங்கம் தோன்றி ஏறக்குறைய ஒன்றரை
வருஷமாகியும் ஒருவேலையும் செய்யாமல் தூங்குகிறதென்றும் செந்தமிழ்ப்பத்
திரிகை இதுகாறும் வெளிப்படாமைக்குக்காரணம் என்னவோவென்றும் இன
னும் பலப்பலவிதமாயும் வாய்க்கு வந்தவா பிதற்றித்திரியா நின்றனர் போலி
மாக்கள் சிலர். அன்னார் வாயை யடக்குமாறு யாம் அறிந்தன சில கூறுகின்
றோம்: சங்கத்திற்கென ஓர் அச்சியந்திரசாலையும் புதிதாய் ஏற்படுத்தப் பட்டிருக்
கின்றது. அதன்கண்ணே செந்தமிழ்ப் பத்திரிகைக்குரிய வேலைகளும் நடந்து
வாராநின்றன. சங்கத்தார் தாம் மேற்கொண்டபடி இவ்வருஷம் டிசம்பர்
மாதம் 20-ஆம் தேதியில் பிரவேசவகுப்பினர், பிரதமகலைவகுப்பினர், கலா
வித்தியார்த்தி வகுப்பினராகிய முத்திறத்து மாணாக்கர்களுக்கும் பரீட்சைகள்
நடாத்துகின்றனர். அப்பரீட்சைகளுக்குப்போக விரும்பிய மாணாக்கர்களின்
தொகை பின்வருமாறு காண்க:—மதுரையில் நூற்று நால்வரும், நெல்லை
யில் எண்பத்து நால்வரும், திரிசிரபுரத்தில் நூற்றுவரும், கும்பகோணத்தில்
நூற்றுப்பத்தொன்பதின்மரும், கோயமுத்தூரில் அறுபத்தொருவரும் சென்
னையில் இருநூற்றைம்பத்தறுவரும் ஆக எழுநூற்று இருபத்து நால்வரும்

பரீட்சிக்கப்படும்மாணாக்கர்களாவர்,மேற்கூறிய பரீட்சைகட்குப்பரீட்சகர்களாவார் கனம்பொருந்திய ஸ்ரீ பாண்டித்துரைத் தேவரவர்களும், ஸ்ரீ. வை. மு. சடகோப ராமானுஜாசாரியரவர்களும், ஸ்ரீ வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியாரவர்கள், பி. ஏ. யும், ஸ்ரீ. திருநாராயண ஐயங்காரவர்களும், ஸ்ரீ. பு. மா. ஸ்ரீநிவாசாசாரியாரவர்களும், ஸ்ரீ. உ. வே. சாமிநாதஐயரவர்களும், ஸ்ரீ. பி. எஸ். சுப்பிரமணிய ஐயரவர்களும் ஸ்ரீ எஸ் நாராயணசாமி ஐயரவர்கள், பி ஏ யும், ஸ்ரீ இராத கிருஷ்ண ஐயரவர்கள் பி ஏ யும், ஆவர். சங்கத்தைக்குறித்த ஏனைய விஷயங்களைப்பற்றிப் பிறிதொரு சஞ்சிகையில் விரித்துக்கூறுவோம். அதுகாறும் மேற்கூறிய மாக்கள் மோனவிரதம் பூண்டு அமைவாராக.

***

சென்னைக் கிறிஸ்துவ கலாசாலைத் திராவிட பாஷாபிவர்த்தினி சங்கம்:—இச்சங்கத்தின் சம்பந்தமாக இம்மதி பன்னிரண்டாம் தேதி ஒரு செந்தமிழ்ப் பிரசங்கம் நிகழ்ந்தது. விஷயம் தமிழி னருமை பெருமை யென்பது. பிரசங்கஞ்செய்த கனவான் ஸ்ரீ தண்டலம் பாலசுந்தர முதலியார். சபாநாயகராகவிற்றிருந்த கனவான் ஸ்ரீ.ஜி. சுப்பிரமணியஐயரவர்கள், பி.ஏ. பிரசங்க மண்டபம் தமிழாபிமானிகள் பலராலும் நிறைந்திருந்தது. பிரசங்கமோ எழுமுகில்களு மொன்றெனச் சேர்ந்து தேன்மழை பொழிந்தாற்போலவும எழுகடலும் மடைவிண்டு ஒழுகினாற் போலவும் விளங்கிக்கண்டோர் கேட்டோர் யாவரும் மெய்ம்மறந்து சிரக்கம்பமும் கரகோஷமும் செய்ய நிகழ்ந்தது. நம் முதலியாரவர்களது அமைதியும் சொல்வன்மையும் எத்தகைய கன்னெஞ்சினரையும் தமிழின் மாட்டு இழுக்கத்தக்கனவா யிருந்தன. இஃதோர் அதிசய மன்று. இவை அவற்கு இயற்கையாகவே அமைந்திருத்தலி னென்க; மற்றுச் சபாநாயகரவர்கள் தமது பிரசங்கத்திற் கூறிய விஷயங்கள் யாவும் ஒவ்வொருவரும் கவனித்து மேற்கொள்ளத்தக்க பெருமைவாய்ந்தன. இத்தகைய பிரசங்கங்கள் நாடோறும் நடப்பனவாக.

***

தமிழ்ச் சங்கப்பரீக்ஷை:—இதற்குச் சென்னை இடங்குறித்த மாணாக்கர்கட்கு வேண்டிய 'மண்டபச் சீட்டுக்கள்' சென்னைக் கிறிஸ்தியன் காலேஜ் தலைமைத் தமிழ்ப்பண்டிதர், வி. கோ. சூரிய நாராயண சாஸ்திரியாரவர்கள், பி.ஏ., இடம் கிடைக்கும். இப் பரீக்ஷைக்குச் செல்வோர் இலிங்கிசெட்டித் தெருவில் 286-ஆவது கதவிலக்கமுள்ள சாஸ்திரியாரது வீட்டிற்குச் சென்று அச் சீட்டுக்களைப் பெற்றுக்கொள்க. சென்னையிற் பரீக்ஷை நிகழும் இடம் சென்னைக் கிறிஸ்தியன் காலேஜே. சென்னை மாணாக்கர் ஆங்குப் பரீக்ஷைக்குச்செல்க. டிசம்பர்மீ 20-ஆந்தேதி காலை 10-மணிமுதல் மாலை 5-5-மணி வரையிற் பரீக்ஷை நிகழும். இதனைக் கண்ணுறும் யாவரும் இப்பரீக்ஷைகட்குச் சென்றிருக்கும் பல்வகைய மாணாக்கர்கட்குந் தெரிவிப்பார்களாக.


# ஞானபோதினி

ஒரு மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

சம்புடம் VI } 1902௵ டிசம்பர்மீ 20உ. { இலக்கம் 5.


## CIVILIZATION.

## நாகரிகம்.

நாகரிகம் என்றால் என்னை? இச்சொல் பல்லோர்களாற் பலவிதமாக உபயோகிக்கப்படுகின்றது. இது 'நகரீ' என்றவடசொல்லினடியாகப் பிறந்தது. அதற்குப்பட்டணம் என்பது பொருள். இதனானே 'நாகரிகம்' என்ற சொல்லின் பொருள், பட்டணம் சம்பந்தமானது என்பதாம். அஃதாவது, பட்டணத்திலுள்ளவர்களுடைய நடையுடை பாவனைமுதலியவற்றின் தன்மையாம். இவ்வாறு சொற்பொரு ளேற்பட்டிருப்பதையுற்றுநோக்குமிடத்து இப்பொழுதத்துப்பலரு மெண்ணுமாறு, நகரவாசிகளிடத்திலேயே நாகரிகமுண்டு. மற்று, நாட்டுப்புறத்துக் கிராமவாசிகளிடத்தில் நாகரிக மிருப்பதில்லையென்பது ஏற்படலாம். மேலும், நாகரிகம் என்ற சொல்லைப்போலவே 'கிராமம்' என்றசொல்லினடியாகக் 'கிராமியம்' என்றசொல்லும் உண்டாயிருக்கின்றது. 'தாழ்ந்தவர் வழக்கம்' என்பதே யதன்பொருள். எனவே, நகரத்தார் உயர்ந்தவர்களும் கிராமத்தார் தாழ்ந்தவர்களுமாக முன்காலத்தில் மதிக்கப்பட்டிருத்தல்வேண்டும். அவ்வாறு முன்காலத்தார் மதித்த மதிப்பு நேரிதோ என்பதைப்பற்றியும் சிறிது விசாரிப்பாம்.

கிராமாந்தரங்களைக் காட்டிலும் பட்டணங்களில் வியாபாரம் அதிகமாய் நடப்பதனாற் பலவகைப்பட்ட மனிதர்களுடைய விருப்பங்களுக்குத்தகுந்தபடியெல்லாம் விதவிதமான பொருள்கள் வந்திறங்குகின்றன. ஜனங்கள் இனிதாகப்பொழுது போக்குவதற்கேற்ற விநோத சாலைகளும், பொருட்காட்சிச்சாலைகளும், நாடகசாலைகளும், பிரசங்கமண்டபங்கள் விளையாட்டிடங்கள் சித்திரசாலைகள் புகைவண்டி ஸ்தானங்கள் துறைமுகங்கள் முதலானபலவும் பெரிய நகரங்களிலிருக்கின்றன. அன்றிப், பல கிராமங்களி லுற்பத்தியாகும் பொருள்களும் இங்கே வந்து குவிகின்றன.

ஆதலால் நகரவாசிகளுக்கு மேற்கூறிய பலவற்றையும் பார்ப்பதனால் மனமகிழ்ச்சியுண்டாவதனோடு அவற்றைப்பற்றிய ஞானமுங் கொஞ்சங் கொஞ்சமாய் விருத்தியாகின்றது. அஃதொன்றுதானோ? பலதேசத்து மனிதர்களும் பட்டணம் வந்துசேருவதனால் அவர்களைப்பார்த்து அவர்களுடைய நடையுடைபாவனை முதலியவைகள் தங்கள் மனத்திற்கேற்றவைகளாயிருந்தால் அவைகளைத் தாங்களும் மேற்கொள்ள விரும்புவார்கள் பட்டணத்தார். ஆகவே, நாகரிகவிருத்திக்கு வேண்டிய எல்லாவித அநுகூலங்களும் நகரவாசிகளுக்கே யேற்பட்டிருப்பதனாலும், கிராமவாசிகளுக்கு அவ்வளவு அநுகூலங்களேற்படாமையாலும் முன்னோர்கள் கொண்டமதிப்பு மிகவும் நேரிதே யென்க.

இஃதிவ்வாறாக, சிலர் நாகரிகமாவது சதா உடைகளை மாற்றிக்கொண்டு உலாவுவதென்றும், வேறு சிலர், எப்பொழுதுங் கொள்கைகளை மாற்றிக்கொண்டேயிருப்பதென்றும், இன்னுஞ்சிலர் சரீரத்திற் சில வேறுபாடுகள் செய்துகொள்வதென்றும், மற்றுஞ்சிலர் முன்னோர்களை யிகழ்ந்துரைப்பதென்றும், இன்னும் பலவாகவும் தாங்கள் அர்த்தம் பண்ணிக்கொண்டிருப்பதாகத் தங்களுடைய நடையுடைபாவனைகளிற்காட்டி நடக்கின்றனர். இவர்களுடைய நடை நாடகங்களில் வேஷக்காரர்கள் வந்து நடிப்பதுபோலவிருக்கின்றதேயன்றி, வேறில்லை. இது நாகரிகமென்பதற்கு விபரீதார்த்தம் பண்ணிக்கொண்டு நடப்பதாகும்.

அப்படியாயின், 'நாகரிகம்' என்பதற்கு நேரியபொருள் தான் யாதோ? நாகரிகத்தின் முக்கியமான அம்சங்கள் லோகசுபாவ



ஞானமும் நல்லொழுக்கமுமாய்; பிறருடைய ஒழுக்கவழக்கங்களை யறிதலும், அறிந்து அவற்றுள் ஏற்றவைகளைக்கைக்கொண்டு மற்றவைகளைக் கைவிடுதலும், யாவரிடத்துங் கருணையுடையராயும் மரியாதையுடையராயும் நடந்துகொள்வதுமே நாகரிகத்தினியல்புகளாம். இப்பொழுதும் மரியாதையாகப் பேசத்தெரியாதவர்களைப்பலரும் 'நாட்டுப்புறத்தார்' அஃதாவது, நாகரிக மில்லாதவரென விசழ்ந்துரைப்பதைக் கேட்டிருக்கின்றோம்.

இது நிற்க, ஆசிரியர் திருவள்ளுவனார் 'கண்ணோட்டம்' என்ற, அதிகாரத்தின் கண்,

"பெயக்கண்டு நஞ்சுண் டமைவர் நயத்தக்க
நாகரிகம் வேண்டு பவர்."

என்று கூறிய பாடலிற் போந்த 'நாகரிக' மென்ற சொல்லுக்குப் பரிமேலழகியார் கண்ணோட்டமென்று பொருளுரைத்தமையுங்காண்க.

"புதல்வ னீன்ற பூங்கண்மடந்தை
முலைவா யுறுக்குங் கைபோற் காந்தட்
குலைவாய் தோயுங் கொழுமடல் வாழை
யம்மடற் பட்ட வருவித் தீநீர்
செம்முக மந்தி யாரு நாட
முந்தை யிருந்து நட்டோர் கொடுப்பி
னஞ்சு முண்பர் நனிநா கரிக
ரஞ்சி லோதியென் றோழி தோட்டுயி
னெஞ்சி னின்புறா யாயினு மதுநீ
யென்க ணோடி யளிமதி
நின்க ணல்லது பிறிதியாது மிலளே"

என்ற நற்றிணை நானூற்றுச் செய்யுளிலும் நாகரிகமென்பது கண்ணோட்டப்பொருளிலேயே வழங்கியிருத்தல் காண்க.

இனி யெத்தேயத்தவராயினும் அவர்களிடத்திற் சிலாக்கியங்களுமுண்டு குறைகளுமுண்டு. முன்காலங்களிலேயே நம்முடைய தேசத்தவர் மிக்க நாகரிகமடைந்திருந்தார்கள். இது சரித்திர பூர்வமாகக் கொஞ்சம் ஆராய்ந்து பார்த்தாலும் வெளியாகும். நம்மவர் விசேஷ நாகரிக முடையராயிருந்தபோது நாகரிகமே

யின்னதென்று தெரியாதவர்களாயிருந்த ஜாதியார்களெல்லாம் தங்கள் கண்ணைத்திறந்து காலக்கிரமத்தில் மெல்ல மெல்ல முன்னுக்குவந்து நாகரிகம்மிக்க ஜாதியாராகிய நம்மை நாகரிகமில்லாதவர்கள் என்று சொல்லத்தக்கவாறு உயர்ந்து விட்டனர். அப்படியிருக்க, நாம்மட்டில் நாகரிகநிலையில் உயராமல் முன்னிருந்த ஸ்திதிக்குக் குறைவில்லையென்று சொல்லும்படியிருப்பதிற்கேடுண்டாவதே யல்லாமல், நேற்றுயர்ந்த ஜாதியார் முன்னெல்லாந் தலைதாழ வேண்டியதாகவு மன்றோ இருக்கின்றது? ஆதலால் நாகரிக நிலையில் நாமும் உயரவேண்டுமானாற் செய்ய வேண்டியன என்னென்ன?

மரியாதையுள்ள நல்லொழுக்கமே நாகரிகத்திற்கு அடையாளமாம். அது தொடங்கவேண்டியது நம்முடைய வீடுகளிலேயே ஆகையால், தீயவார்த்தைகளை நம்முடைய குழந்தைகள் கற்றுக் கொள்ளவொட்டாமல் தடுப்பது நாகரிகம்; வீடுகளைப் பரிசுத்தமாய் வைத்திருப்பது நாகரிகம்; வீண்செலவு செய்யாதிருப்பது நாகரிகம்; நம் கீழிருப்பவர்களை இம்சை செய்யாமலிருப்பது நாகரிகம்; சாதியும் பிறப்பும் பற்றிப் பிறரை இழிவாகப்பேசாதிருப்பது நாகரிகம்; பெரியோர்களிடத்தில் வணக்க வொடுக்கமாய் நடந்து கொள்வது நாகரிகம்; நம்முடைய ஆசாரங்களிற் கேடு விளைக்கத் தக்கவைகளை உடனே நீக்குவது நாகரிகம்; கல்வியுடையவர்களை மதிப்பது நாகரிகம்; சொன்னதைச்செய்து முடிப்பது நாகரிகம்; பயனில்லாத பழம் பொருள்களைக் கழிப்பது நாகரிகம்; பயனுள்ள புதுப்பொருள்களை ஏற்றுக்கொள்வது நாகரிகம்; காலத்துக்கேற்றபடி அநுகூலமான புதிய வழக்கங்களை அநுஷ்டிப்பது நாகரிகம்; விரோதமின்றி ஒருமித்து ஒத்துவாழ்வது நாகரிகம்; உண்மை தோன்ற வாதிப்பது நாகரிகம்; தன்னெஞ்சறிவது பொய்யாதிருப்பதும் நாகரிகம்.

ஆதலின், இவற்றையெல்லாம் சாதித்து முடிப்பதற்குத் துணை புரியத்தகுந்த முயற்சிகளி லெல்லாம் நாம் புகுந்து உழைக்கவேண்டியது நம்முடைய கடமையாகும்.

பத்திராதிபர்.



# TIRUPPANALWAR.
# திருப்பாணாழ்வார்.

ஸ்ரீவற்சாம்சபூதரான திருப்பாணாழ்வார் கலியுகம் பிறந்த முந்நூற்று நாற்பத்திரண்டாம் ஆண்டின்மேல் நிகழ்ந்த துர்மதி வருஷத்திலே கார்த்திகை மாதம் ஐந்தாந்தேதி கிருஷ்ணபக்ஷம் துவிதியை புதன்கிழமை கூடின உரோகணி நக்ஷத்திரத்திற் காவேரிக்கரையிலுள்ள நிசுளாபுரமென்னும் உறையூரிலே ஒரு நெல் வயலில் திருவவதாரம் செய்தருளினார். அவ்வூரிற் கருமவசத்தினாலே பஞ்சமனாய்ப்பிறந்த பாகவதோத்தமனொருவன் மகப்பேறின்றிப் பன்னெடு நாளாகக் கனவருத்தங் கொண்டிருப்பவன், ஒரு நாள் ஒரு காரிய நிமித்தமாகத் தன் மனைவியுடனே நெல் வயலின் வரம்பின் மீது செல்வான், ஈன்றவர் இன்னாரென்றறியப்படாமல் இலைமறை காய் போன்ற இளங்குழந்தையான பாண்பெருமாளைக்கண்டு, உளங்கொளாக் களிப்புடன் அப்பணையில் இறங்கித் தன் இருகைகளானும் அத்திருக்குழந்தையை ஏந்தி யெடுத்துக்கொண்டு வந்து தன் காதலியின் கரத்திற் கொடுத்தான். இத்திருக்குழந்தையை வளர்ப்பதற்கு நோற்ற நோன்பினையுடையாளாதலின், அவளும், வருந்திப்பெற்ற பிள்ளையை வாரியணைப்பார்போல், குழந்தையை மார்பில் அணைத்துக்கொண்டாள். அந்தக்ஷணமே அவளுக்குப் பால் சுரந்து கொடுக்கவும, குழந்தை வாய்திறந்து முலையுண்ணுமல் இருப்பது கண்டு, புனிதமான பசுவின் பாலைக்கறந்து புகட்டினாள். குழந்தையும் அதனை உண்டது. இதுவே உபாயமென்று நாடோறும் பசுவின் பாலையே கறந்து கொடுக்கக் குழந்தையும் அதனை உண்டு வளர்ந்து வந்தது.

எம்பெருமானுடைய கடாக்ஷத்தாலே ஞானபக்தி வைராக்கிய நிதியாய்ச் சாத்துவிகராய் மோக்ஷார்த்தியாயிருந்த இப்பாண் பெருமாள், பகவத்கானவித்தைக்குச் சர்வபௌமராய்ப், பரமாத்துமனைச் சூழ்ந்து நின்று சாமகானம் பண்ணும் நித்திய சூரிகளிலே ஒருவர் வந்து அவதரித்தாரோ என்னலாம்படி விளங்கியிருந்தார். தாம் பஞ்சமரிடையே வளர்ந்தருளின குறையால், இவர், ஆற்றிடைக்குறையை மிதியாமல், ஆற்றின் தென்கரையிலே திருமுகத்துறைக்கு எதிரே அரங்கநகரப்பன் எழுந்தருளியிருக்கும் திசையை நோக்கித் தூரத்திலே வீணையுங்கையுமாய் நின்று, புருவமேறுதல்-கண்ணுடுதல்-மிடறு வீங்குதல்-எயிறு தோன்றல்-சிரக்கம்பம், கரக்கம்பஞ் செய்தல் முதலிய குற்றங்களின்றி, உடல் முழுதும் புளகம் போர்ப்பக், கண்களில் ஆநந்தநீர் பெருக, உள்ளத்தில் உவகை ஓங்க, ஐம்புலன்களும் அயல் செல்லாது அகத்தோடொன்றி நிற்க,---எம்பெருமானுடைய திருப்புகழைப் பாடிப்பாடித் திரிந்திருந்தனர்.

இதுகண்ட பெரிய பெருமாள் இவர் பக்கல் உவந்த திருவுள்ளத்தனானார். பிராட்டியும் பெருமாளுடனே "நமக்கு அந்தரங்கரான இப்பாண்

பெருமாள் அரங்கத்துக்கு அப்பாற் புறம்பே நின்றுகொண்டு வெகு நாளாக நம்மைப் பஜித்து வருகின்றனரே. அவர் அங்கு நிற்பது அழகோ ?" என்று விண்ணப்பித்தருள, அது கேட்ட பெருமாள் பரிசாரகர்களை விடுத்துப் பாண் பெருமாளைத் தன் பக்கல் அழைத்துவருவதென்று அர்ச்சகர் முகமாய் ஆக்ஞாபித்தருளினான். அவர்களும் பலமுறை சென்று அவரை நிர்ப்பந்தித்து அழைத்தார்கள். ஆழ்வார் அதிக பயபக்தியுடனே அவர்களைச் சேவித்து "ஓகோ ! அந்திய குலத்தில் இழிதொழில் செய்து போதருகின்ற அடியேன் பிரமாதி தேவர்களுக்கும் கிட்டுதற்கரிய அரங்கனார் திருவோலக்கத்தில் எவ்வாறு வருவேன் ?" எனக் கூறிப் பலவகையினும் மறுத்தனர். ஆழ்வாரை பலாத்காரஞ் செய்தற்கஞ்சி அவர்கள் மீண்டு வந்து அதுசெய்தியைப் பெரிய பெருமாளிடம் விண்ணப்பஞ் செய்தார்கள். அப்போது அரங்கநாதன் "நமக்கு அந்தரங்கரான பக்தர்கள் எக்குலத்திற் பிறந்தனரோ அக்குலமே மேலானது என்று நாம் சொல்லினதாகச் சொல்லி அழைத்துவாரும்" என மீண்டும் நால்வரை அனுப்பியருளினான். அவர்களும் ஆழ்வாரை அடைந்து எம்பெருமானுடைய அருளப்பாட்டை எடுத்துரைத்து எழுந்தருளும்படி வேண்டினார்கள். ஆழ்வாரும் அது கேட்டு "எம்பெருமான் அருளிச்செய்தது பற்று முற்றுமற்ற பரம பாகவதர்களுக்கேயன்றி ஆசைக்கடலில் அழுந்திக்கிடக்கும் அடியேனுக்குத்தகுமோ ? ஐயோ புலைத்தொழிலுடைய சிறியேன் புருஷோத்தமன் எழுந்தருளியிருக்கும் பெரிய திருக்கோயிலின் உள்ளே வரத்தகுமோ ?" என்று மீண்டும் மறுத்துரைத்தார். அந்நால்வரும் அதன்மேற் "பெரிய பெருமாளுடைய ஆஞ்ஞையின்படியேவந்தோம். இனி, தேவரீரை விட்டுப்போகோம். எவ்விதத்திலும் தங்களை எழுந்தருளப் பண்ணிக்கொண்டுபோவதே கருமம்" என்று சொல்லினார்கள். அப்போது ஆழ்வார் அச்சங்கொண்டு கடுநடையிட்டு நெடுந்தூரம் ஓடிவிட்டனர்.

இங்ஙனம் பலகாலும் பெரிய பெருமாள் அருளப்பாடிட்டும், தாம் தீண்டாத் திருமேனியென்று, இவ்வாழ்வார் கடுநடையிட்டு அகல்கிறவளவிலே, இவரிடமுள்ள கிருபாதிசயத்தாலே பின்னையும் எம்பெருமான், தனது திருமஞ்சன கைங்கரியத்துக்குரிய ஸ்ரீ லோகசாரங்க மகாமுனிவரை நோக்கி "நமக்கு அந்தரங்கரான பாண் பெருமாளை நீர் நெகிழ நினைத்துப் போதரவேண்டா. அவரை உமது தோளிலே கொண்டு இங்கே அழைத்துவருக" எனக் கனவுமுகமாக அருளிச்செய்தான். அம்முனிவரும் வைகறையாமத் துயிலுணர்ந்தெழுந்து "இற்றை விடிவு எனக்கு நல்விடிவாயிற்று" என்று தாம் கண்ட கனவைச் சிந்தித்து ஆராமை மேலிட்டுச் சென்று, ஆழ்வார் நித்தியமாகச் சேவித்துத் தோத்திரம் பண்ணிக்கொண்டு நிற்கிற இடமே எழுந்தருளினார். ஆழ்வாருடைய திருவடிகளிலே தாளுந் தடக்கையுங் கூப்பிப் பணிந்து, "தேவரீரை எழுந்தருளப்பண்ணிக்கொண்டு வரவேண்டுமென்று நம்பெருமாள் அடியேனை நியமித்தருளினார்" என



ஸ்ரீ லோகசாரங்கர் விண்ணப்பித்தனர். ஆழ்வாரும் "குலங்களாய வீரிரண்டிலொன்றிலும் பிறந்திலேன்"; "நீசனேன் நிறைவொன்றுமிலேன்" என்று தம்முடைய தாழ்வினை முன்னிட்டுப் பிற்காலித்துத் "திருவரங்கப் பெருநகரை நான் மிதிப்பேனோ ?" என்றருளினார். முனிவரும் "ஆகில், அடியேனுடைய தோளின்மேல் எழுந்தருளும். பெருமாள் அருளப்பாடிட்டபடியே எழுந்தருள்வித்துக்கொண்டு போவேன்" என்று சொல்லிக்கொண்டே ஆழ்வாரின் அருகில் அடைந்தனர். அடைதலும் ஆழ்வார் "ஐயோ இதென்ன அபசாரம் !" என்று கண்களில் நீரொழுகச் "சுவாமி ! இஃது அடியேன் நினைத்தற்குங் கூடாததாக இருக்கிறது" என்றுரைத்து ஓய்வாராயினர். முக்தனைப் போமவனை ஆதிவாஹிகர் எழுந்தருள்வித்துக்கொண்டு திருமாமணி மண்டபத் தேறப்போகுமாறு போலவும், இலங்கையர் வேந்தன் போரிடைத் தன் தானை முழுதும் படத் தமியனாய் அகப்பட்டானது நிலைமைநோக்கி "இன்று போய் நாளை நின் தானையோடும் வருக" எனப் போகவிட்ட சக்கரவர்த்தித் திருமகனை மாருதியானவன் தனது தோளின் மேற்கொண்டு களித் தாடினாற் போலவும், ஸ்ரீ லோகசாரங்கர் ஆழ்வாரை விடேனென நிர்ப்பந்தித்துத் தமது திருத் தோள்களின்மீது எழுந்தருள்வித்துக்கொண்டு திருவரங்க நகரை வலம்வந்து அழகியமணவாளன் மணிமண்டபத்தேறப் புகுந்தார். புகுந்த வளவிலே, நித்திய தரித்திரனுக்கு நிதியைக் காட்டினாற்போல், எம்பெருமான் தன்னுடைய திவ்வியமங்கள விக்கிரகத்தைப் பாண்பெருமாளுக்குக் காட்டிக் கொடுத்தான். அவரும் மாதாவின் ஸர்வாவயவங்களுமிருக்கப் பாலுண்ணும் பசுங் குழந்தையானது ஸ்தனத்திலே வாய்வைக்குமாறுபோல, நம்பெருமாளின் திருவடிகளிலே தமது திருக்கண்களைப் பதியவைத்துப் பாதாதிகேசாந்தமாகப் பெருமாளுடைய திவ்விய மங்கள விக்கிரகத்தை அனுபவித்து "அமலனாதிபிரான்" என்கிற திவ்வியப் பிரபந்தத்தைப் பத்தும் பத்தாக அருளிச்செய்து மிகவும் ஆநந்த நிர்ப்பரராய் நின்றார். பெரிய பெருமாளும் ஆழ்வாரை அத்திருமேனியோடே அங்கீகரித்தருள, ஆழ்வாரும், அகிலருங் காணும்படி அணியரங்கன் திருவடிகளிலே அந்தர்ப்பவித் தருளினார். இவர் இந்த லீலாவிபூதியில் இருபது திருநக்ஷத்திரம் எழுந்தருளியிருந்தார்.

காட்டவே கண்ட பாதங் கமலநல் லாடை யுந்தி
தேட்டரு முதர பந்தந் திருமார்பு கண்டஞ் செய்வாய்
வாட்டமில் கண்கள் மேனி முனியேறித் தனிபுகுந்து
பாட்டினாற் கண்டு வாழும் பாணர்தாள் பரவி னோமே.

தி. செல்வக்கேசவராய முதலியார்.

ORIGIN OF MARRIAGE.

# இந்தியர் விவாகோற்பத்தி.

"மனிதன் மற்றைய மிருகங்களிலும் எவ்விதத்தும் மேன்மையாளவனென்று பலர் கொள்கின்றனர். அஃது ஒருவாற்றால் உண்மை யெனினும், உயிர்நூற்புலவர்கள் வேறு விதமாக அதைப்பற்றி வாதிப்பார். தற்காலத்தில் தோன்றும் பலவகை உயிர்களும் ஒரேவித ஜந்துவினின்று சிறிது சிறிது தலைமுறை தலைமுறையாகத் தாயினின்றும் வேறுபாடுகள் உண்டாகிப் பிறகு ஒன்றற்கொன்று சம்பந்தம் இல்லாதனபோலக் காணப்படுகின்றன. மனிதனுக்கு அடுத்த மேற்றலைமுறையில் தாயாதி வாலில்லா வானரங்கள் என்று அவர் கூறுவர். ஜந்துக்களை வகைபடப் பிரிக்குநர் மனிதன் தாய்முலையுண்டு வாழும் ஜாதியைச்சேர்ந்தவன் என்கின்றனர். இவ்வர்க்கத்து எந்த ஜந்துக்களிடத்தும் பெரும்பான்மையான ஒற்றுமைகள் காணப்படுகின்றன. வெளித்தோற்றங்களில் ஒற்றுமை யுடையனவாயிருத்தலன்றியும் முக்கியமான விருப்பங்களினும் ஒற்றுமை யுடையனவாயிருக்கின்றன. அவ்விருப்பங்களாவன:-வயிற்றுப்பசியும் ஸ்திரீ ஸம்போக ஆசையுமாம். மனிதனும் மிருகங்களும் இவ்விருவகைப் பசியையும் உயிரை வளர்ப்பதற்கும் உயிரைஉற்பத்தி செய்வதற்கும் பயன் படுத்துகின்றன.

முதற்கண் வயிற்றுப்பசி.-வயிற்றுப்பசியை தீர்த்துக்கொள்வதற்கு ஆகாரத்தை தேடவேண்டி வருகிறது. நிலத்தின்கண் தாமாகவே உற்பவிக்குமவைகள் மனிதனுக்குப் பயன் படுவதில்லை. ஆகையால், அவன் சாதி மிருகங்களைப் போலக்கீழ்ப்பட்ட ஜந்துக்களை வேட்டையாடி ஆகாரமாகக் கொள்கின்றான். அப்படித் தேடி அடையுங்கால் தன்னுடைய சுபாவ வலியின்மையும் தன்னையே காத்துக்கொள்ள முடியாமையும் மனத்தை வருத்தும்; அவ்வருத்தம் பின்னர் அவன் அடையும் மேன்மைக்கு வித்தாய் நின்றது. பிறகு ஆயுதங்களும் வலைகளும் தானுகவே செய்துகொள்ளும் திறமை உண்டாயிற்று. மேலும் நெருப்பு உண்டாக்கும் வித்தை அறிந்துகொண்டு நார் முதலானவை கூடிய கிழங்குகளைச் சமையல் செய்து உண்டு ஜீரணமாக்கிக் கொள்ளும் வித்தையைக் கண்டுகொண்டான்.

இவ்விதம் உணவுதேடிச் சம்பாதிக்கும் திறமை உண்டாயிருந்தும் சிறிது காலத்திற்குப்பின இவன் பசிக்குத்தகுந்த உணவு கிடைத்தல் துர்லபமாகும் என்பதற்குச் சந்தேகமேயில்லை. ஒருவகைப் பஞ்சம் இவனை வருத்துகின்றது. சில சமயங்களில் இவ்வகைபஞ்சத்தினுற் கூட்ட கூட்டமாக இவர்கள் இறக்கின்றனர். இவ்வகை ஜாதியாருக்குச் சாப்பாடின்மைக்காகப் பெருட்போர் நடக்கின்றது. அவ்வகைப்போரில் ஒருவரை யொருவர்



கொன்றும் தங்கள் பசியைத்தீர்த்துக்கொள்ள முயலாது ஒழியார். பிறகு சிறிது சிறிதாகப் பரிதாப உணர்ச்சி வேட்டையாடச் சக்தியில்லாதவர்களாய கிழவர்களைத் தவிர்த்து மற்றையோரிடத்து உண்டாகின்றது. இத்தகை மனிதரை மனிதர் கொன்று தின்னும் தன்மை நெடுநாள் தங்கியிராது. ஆகையால், ஒவ்வொருவரும் உணவைத்தேடிச் சேர்த்து வைத்துக்கொள்ள முயல்கின்றனர். கஷ்டப்பட்டு உணவைச் சம்பாதித்துப் பின்னர் வேண்டியதற்குக் காப்பாற்றிக்கொள்ளும்திறமையும் மிருகங்களைவிட இவனுக்கு மேன்மையான புத்தியிருக்கின்றமையின் உண்டாகின்றது.

இரண்டாவது, ஸ்திரீ சம்போக ஆசை :---எப்படிப் பசி தன்னுயிரைக் காப்பாற்றிக்கொள்ளும் திறமையை உண்டுபண்ணுகின்றதோ அப்படியே உயிரை உற்பவித்துக்கொள்ளும் சக்தி பால்பேதம் உண்டுபண்ணுகின்றது.

மிருகங்களிடத்தெல்லாம் ஆண் பெண் இரண்டும் சில சமயத்து இடைச்சம்பவமாகவும், நீடித்த சம்பவமாகவும் இருக்கின்றன. இடைச்சம்பவமானது அதிக வருத்தமின்றி குழந்தைகளைப் பெறுமவற்றுள் நிலைநிற்கின்றது, நீடித்த சம்பவமோ அதிக வருத்தத்துடன் குழந்தைகளைப் பெறுமவற்றுட் குடிகொண்டிருக்கின்றன.

குழந்தைகளை நெடுங்காலம் பாராட்டிக் காப்பாற்றவேண்டியதாயிருந்தால் அச்சாதி ஜந்துக்களிடத்து ஆண்பெண் இரண்டும் நீடித்து ஒன்றுசேர்ந்திருக்கும்; ஏனெனின், சில ஜாதி ஜந்துக்களிடத்துத் தாய்தந்தை காப்பாற்றுதலின்றி வளரக்கூடிய குழந்தைகளை உற்பத்தி செய்கின்றன என்பதும், மற்றவைகளில் அவை முக்கிய மென்பதும் வெளியாகின்றன.

எப்பொழுது தாய்தந்தை காப்பு ஜந்துக்களுக்கு வேண்டுவதில்லையோ, அப்பொழுது அவைகள் கணக்கில்லாதன உற்பத்தியாகி அவைகளுள் அநேகமழிந்து சிலவே தப்பிப்பிழைக்கின்றன. இவ்விஷயத்தைப் பாம்பு, பல்லிமீன் இவைகளுக்குட் காணலாம். ஆனால், மனிதனிடத்தும் உயர்ந்த ஜாதி வானரங்களிடத்தும் குழந்தைகள் மிகவும் சிலவே உற்பவிக்கின்றன. ஒரு சமயத்து ஒரு தாயிடத்து ஒரே பிள்ளை உண்டாகின்றது. அப்பிள்ளையின் இளம் பருவம் நீடித்து நிற்கின்றது. முக்கியமாய் மனிதனிடத்து இதைக் காணலாம். இவ்வாறு குழந்தைகளைக் காப்பாற்றற்கு ஒரே ஆணும் ஒரே பெண்ணும் ஒன்றுசேர்ந்து இருக்கவேண்டியது முக்கியமாம். இவ்விதம் ஒன்று சேர்ந்து சிறிது நீடித்திருத்தலைத்தான் விவாகம் என்று ஒருவாற்றாற் சொல்லவேண்டியிருக்கின்றது. விவாகம் என்பது தன்னுடைய ஜாதி நீடித்து வாழ்தற்கு ஒன்று கூடும் கூட்டந்தான். சிலர் தம்முடைய குழந்தைகளைக் காப்பாற்றுவதற்காக ஒன்று சேர்வதை மணம் எனகிறார்கள். எப்படியாயினும் தம்முடைய குழந்தைகளுக்காக ஆணும் பெண்ணும் நீடித்து ஒன்றுசேர்ந்திருப்பது தேற்றம்.

ஆதி மனிதரிடத்து இவ்வகைக் கூட்டம் பலவகைப்பட்டு விளங்கிற்று. ஒரு மனிதனும் ஒரு ஸ்திரீயும் கூடும் கூட்டம், ஒரு மனிதனும் இரண்டு அல்லது அநேகஸ்திரீகளும் கூடும் கூட்டம், இரண்டு அல்லது மேற்பட்ட மனிதர்களும் ஒரு ஸ்திரீயும் கூடும் கூட்டம், இரண்டு அல்லது மேற்பட்ட புருஷர்களும் இரண்டு அல்லது மேற்பட்ட ஸ்திரீகளும் கூடும் கூட்டம் என நால்வகை விவாகமெனப் பொதுப்படக் கூறலாம்.

மனிதர்கள் வானர ஜாதியைப்போல ஓர் ஆணும் ஓர் பெண்ணும் அல்லது ஓர் ஆணுக்கு இரண்டுமூன்று பெண்ணும் ஒன்று சேர்ந்து வாழுந் தகைமையை மேற்கொள்வனவன்றிப் பின்னர்க் கூறிய இருவகைக் கூட்டமுங் காணுதலரிது. ஏனெனின் தாய்முலையுண்டு ஜீவிக்கும் ஜந்துக்களில் ஸ்திரீயினும் புருஷனே வலியுடையவனாகக் காணப்படுகின்றனன். இயற்கையில் நாலைந்து புருஷரும் நாலைந்து ஸ்திரீகளும் அவரவர் இஷ்டப்படி ஒன்று சேர்தலைக் காணுதலரிது. ஏனெனில், புருஷனிடத்துப் பொறாமைக்குணமும் சச்சரவிடுந் தன்மையும் தங்கள் தங்கள் ஸ்திரீகளைப் பிறன் அபகரியாது இருக்கவேண்டியதனிமித்தம் உண்டாகின்றன. மேலும் இந்துக்களுடைய மணங்களில் ஒரு புருஷன் ஒரு ஸ்திரீயையும், ஒரு புருஷன் இரண்டு மூன்று ஸ்திரீயையுமே மணஞ்செய்து கொள்ளுகின்றான். இதுவே, முற்காலந்தொட்டு வழங்கிவருகிறதொன்று மனு முதலியவர்கள் முறையிடுகின்றனர்.

(இன்னும் வரும்)

சருக்கை - இராமசாமி ஐயங்கார்.

---

## THE MUSICAL SENSE IN ANIMALS.

## பிராணிகளின் இசையுணர்ச்சி.

இப்போது உலகத்திலுள்ள பிராணிவருக்கங்களெல்லாம் கடவுளாற் சிருஷ்டிக்கப் பட்டனவாமென்று கொள்ளாமல் ஒருவகை ஜந்துக்களினின்றும் வேறுவகை ஜந்துக்கள் படிக்கிரமமான மாறுபாடு அல்லது உருவத்தின் திரிபினாலுண்டாயின என்பதே உயிர் நூலோரது கொள்கை. ஒரு ஜாதி ஜந்துவினின்றும் வேறு ஜாதி உண்டாகாது என்று அவர் தாமே கூறுதற்கு இது மாறு ஆகாதோ எனின் ஆகாது. என்னவென்றால், ஒரே தலைமுறையில் வேறுபாடுகள் உண்டாகாமல் அநேக தலைமுறைகளில் உணரமுடியாத திரிபுகள் சிறிது சிறிதாக உண்டாகிக் கடைசியிற் புதுமையான ஒருவருக்கம் தோன்றுமென்பதையே மேற்குறித்தோம்.



இவ்வகைமாறுபாடு இயற்கைப்பிரிநிலை என்னும் நியமத்தினாலுண்டாகிறது. அஃதாவது சாதாரணமாகப் பிறப்பவைகளிற் சிலவே உயிருடனிருந்து தம் ஜாதியை விருத்தி செய்கின்றன. இது 'பெற்றவெல்லாம் பிள்ளையாமா? நட்டவெல்லாம் பயிராமா?' என்ற பழமொழியை வற்புறுத்துகின்றது. மற்றவை பகைவராலும், சீதோஷ்ண ஸ்திதியின் மாறுபாட்டினாலும் பசிதாகங்களினாலும் மடிகின்றன. பிழைத்தவைகள்தாம் வாழ்க்கைப்போரில் வெற்றி பெற்றிருப்பவை. அவ்வாறு உயிருடனிருக்கும் ஜந்துக்களில் இரண்டேனும் ஒற்றுமையுடையனவாயிரா. இதுபற்றியே பத்திரப்பதிவு செய்யும் நியாயஸ்தலங்களில் கட்டைவிரலின் கோடுகளை மைதொட்டுப் பதிப்பித்துக் கொள்ளுகின்றனர். ஒருவருடைய கைக்கோடுகள், வேறு எவருடைய கைக்கோடுகளுடனும் ஒத்து இரா. ஆகையால் அது போலச் சிற்சில விகற்பங்கள் ஒரேஜாதி ஜந்துக்களிடத்தும் இருக்கின்றன. இப்பேதங்கள் அதிகரித்தாற் சில சமயங்களில் அவை தம்வாழ்க்கைக்குப் பயன்படும், மற்றசமயங்களிற் பயன்படாமலும் இருக்கின்றன. இறவாமல் வாழ்ந்திருப்பதற்கு இன்றியமையாத திரிபுகள் ஜாதி விருத்திக்குங் காரணமாகும். அவை கூர்மையானபுத்தி, பருத்து நெருங்கியுள்ள மயிர்களையுடையதோல், விரைவாக ஓடுதல், பறத்தல் முதலியன. இக்குணங்கள் தலைமுறைகளிலதிகரித்து, அநேக ஆண்டுகள் கழிந்த பின்பு சம்பூரணத்தை அடையும்போது, தேசத்திற் சில இடங்களில் மாறுபாடாகி வேறு ஜாதி என்று நம்மாற் பிரிக்கப்படும்படியான தன்மையை அடைவிக்கின்றன. இவ்வகைக் குணங்களையுடைய ஜந்துக்களை மற்றவைகளினின்றும் உயிர்த்திருக்குமாறு பிரிக்கும் இயற்கையின் தன்மையை இயற்கைப்பிரிநிலை என்பர்.

இஃதன்றியும் வேறுவகைப்பிரிநிலை உலகத்திலுண்டு. அதை ஜாதிப்பிரிநிலையென்று * டார்வின் பண்டிதர் கூறுவர். இதனை உதாரணத்தால் விளக்குவோம்.

மாலைப்பொழுதிற் புற்கள் நிறைந்த வெளியிடங்களில் ஒருவகை ரீங்காரம் சிலசமயத்தில் உயர்ந்த தொனியுடனும், சில சமயத்தில் இன்பம் தரவல்ல மத்திமமான குரலுடனும் ஒலித்தலை நாம் எல்லோரும் அநேகமுறை கேட்டிருக்கின்றோம். இது தத்துக்கிளியினது பாட்டு. அதன் பின்னங்கால்கள் இறகுகளின்மீது உராய்வதனால் இவ்வகை இசை உண்டாகிறது. இந்த நாதம் செய்யவல்ல திறமை ஆண் தத்துக்கிளி இடத்திலேயே உள்ளது. இவ்வகைத்திறமை ஆண் தத்துக்கிளியிடத்துமட்டில் உண்டாகவேண்டிய காரணம் என்ன? ஸ்திரீகளை வசீகரித்துத் தாம் தாம் அடைவதன்பொருட்டுப் புருஷர்களுக்குள் உண்டாகும் விவாகமடியாக இந்த வல்லமை முதலில் உற்பத்தியாயிற்று. அஃதாவது இசையினால் ஸ்திரீகள் திருப்தியடைந்து இனிய

* Darwin

குரலுடன் பாடவல்ல ஆடவர்களைத் தமது நாயகர்களாகக் கொள்ளுவார்கள்
என்பது.

பட்சிகளிடத்தே இதை நன்றாய் அறியலாம். அழகும் இனிய
குரலு முடையவை ஆண் பறவைகளே. தங்கள் ஜாதியை அபிவிர்த்தி
செய்வதற்கு வருஷத்தில் ஒரு முறை பெண்பட்சிகள் தாம் தாம் விரும்பும்
ஆண்களைத் தேடிக்கொள்ளும். ஒவ்வோர் ஆடவனும் அழகிய ஸ்திரீயை
அடைவதற்கு விரும்புகின்றான் என்பது மனிதர்களிடத்திற்றான் என்பதில்லை.
சகல ஜந்துக்களிடத்தும் உள்ளது. பெண்களும் அம்மாதிரியாகவே அழகிய
புருஷனை அடைய விரும்புகின்றார்கள். ஆகலால், அழகில்லாத பெண் அழ
கிய ஆடவனையும், அழகியபெண் அழகில்லாத ஆடவனையும் அடைவது
அசாத்தியமாகின்றது. அவ்வாறு அடையும் பக்ஷத்தில் வனப்பைத்தவிர
வேறு எவ்வித விசேஷ குணங்களேனும் அதனதனிடத்திற் பொருந்தியிருக்க
வேண்டும். அக்குணங்கள் இனியகுரல் விசேஷ வல்லமை முதலியன,

அழகிய ஒரு பெண்குயிலும் அநேக அழகிய ஆண்களும் இருப்பின் பின்
னர்க் கூறியவைகளின் குரல்களை எல்லாம் கேட்டு எக்குயிலிசை இனிதாயி
ருக்கின்றதோ அக்குயிலை மேற்கூறிய பெண் சேர்த்துக்கொள்ளும். அன்
றியும் அழகும், பெண்பட்சிகள் கவனிக்கும் விஷயமே. பட்சிகளைப்பற்
றித் தெரிந்தவர்களை விசாரித்தால் ஆண் பறவைகளே அழகுடையன என்
பது நன்றாக விளங்கும். நீண்ட தோகைகளையுடைய மயிலும், இன்பந்
தரும் வர்ணங்களையுடைய கிளியும், களிப்பையுண்டாக்கும் மொழு மொழுப்
புடைய மைனாவும் ஆண்பறவைகளே. சிலசமயங்களிற் பறவைகள் தம்
சிறகுகள் கலைந்துபோனால் பின்புறத்திலுள்ள எண்ணெய்க்குச் சமானமான
ஒருவிதக் கொழுப்பை மூக்காகிய சீப்பினால் எடுத்து அவைகளை வாரிக்கொ
ண்டு விளங்குவதை எல்லோரும் பார்த்திருக்கிறோம். இச்செய்கை அதன்
அழகை விருத்திசெய்கின்றது.

ஆதலின், அழகிய ஸ்திரீயை அடைவதற்கு அழகுடன் இனிய இசை
யுடைமையும் இன்றிமையாததா யிருக்கின்றது. இவ்வகைப் போரினால்
இசைப்பயிற்சி கிரமமாகப் பரம்பரைதோறும் அதிகப்படுகின்றது. இதற்குக்
காரணம் ஸ்திரீ புமான்களை யடைவதற்கு முன்னருண்டாகும் கஷ்டங்களே.

மனிதனிடத்து இசையைக் கேட்டறியு முணர்ச்சியும், பாடுந் தன்மை
யும் எவ்வாறு உண்டாய தென்பதை ஆராய்வாம்.

இதர மிருகங்களைப்போல மனிதனும் உலகத்திலுள்ள சில மாறுபாடு
களுக்கு உட்பட்டே நடக்கிறான். சந்தேகமில்லாமல் மானுட அறிவு முற்
காலத்தினும் இக்காலத்தில் அதிகரித்திருக்கிறது. ஆனால் காளிதாசனைப்
போன்ற நாடகக் கவிகளும், கம்பனைப்போன்ற பாவலர்களும் இக்காலத்
துக் காணப்படவில்லையே எனின், அறிவினுடைய நுட்பத்தைப் பரிசோ



திக்கும் விதம் பெரும்பான்மை யாவராலு மறியப்படவில்லை. சில சம
யத்திற் சில விஷயங்களில் உயர்ந்த வித்துவத்திறமையும், பொது அறிவும்
சிலரிடத்து மிகுந்திருத்தலைக் காணலாம்

மனிதனிடத்து அறிவிலும் நுட்ப உணர்ச்சியிலும் மேம்பாடுண்டா
னது இயற்கைப் பிரிநிலையினால். ஏனெனின், மனிதன் வீடுவாசல்களின்றி
மிருகங்களைப்போலக் காடுகளில் வசிக்கும்போது, புஜவலி எவ்வளவு முக்கி
யமோ, அவ்வளவு அறிவு ஒருவகைப்படையாக விருந்தது. உதாரணமாக,
வேட்டையாடி அடையும் இரையினையே நம்பிப் பிழைத்திருக்கும் ஒரு வம்
சத்திற் கூர்மையான இந்திரிய ஞானமும், தேகபலமும் எவ்வகைத் துயரத்
தையும் அனுபவிக்கும் பொறுமையும், வேட்டையாடுவதில் தந்திரமும்,
தைரியமும், பகைவர்களை ஒன்று சேர்த்து எதிர்க்கும் ஒற்றுமையும், உணவு
கிடையாத காலங்களிற் பசியினால் வருந்தாமலிருக்கும் பொருட்டு ஆகாரம்
தேடிக்கொள்ளு முணர்ச்சியும் இன்றியமையாதன. இக்குணங்களையுடைய
குடும்பங்களே தம் சந்ததியை யபிவிர்த்திசெய்யும். இவ்வகை லக்ஷணங்
கள் வர வர ஆண்டுகள் தோறும் அதிகரித்தால் மானுடருடைய பொது
அறிவு மிகுதியாகிப் பரம்பரைதோறும் கதா ரூபமாக முன்னோர்கள் செய்
கைகளெல்லாம் பரவி மேற்கூறிய பண்புகளெல்லாம் பின்னோர்களுக்குச்
சாதாரண குணங்களா யமைகின்றன.

சங்கீதம், கலை, செய்யுள், கணிதசாஸ்திரம் முதலியவைகளிற் சாமர்த்
தியமும், மனோசக்தியும், மாந்தரிடத்து உண்டான காரணத்தை விசாரித்
தால் அவை இயற்கைப் பிரிநிலையால் உண்டாகவில்லையென்பது ஏற்படுகின்
றது. இராக ஞானமும், அணிநலமிகுந்த செய்யுள் செய்யும் வல்லமையும்,
முற்காலத்தில் ஒரு வம்சத்தவரை வாழ்க்கைப்போரில் நீடித்திருக்கும்படி
செய்யாது என்பது பலர்க்குமுற்றதுணிபே. இக்காலத்திலே அப்படியில்லை.
சங்கீதப்பயிற்சியுள்ள பாகவதர்கள் ஸ்திதியையும், சாஸ்திரப் பயிற்சியுடைய
மற்றவரது நிலைமையையும் ஒப்பிட்டுப்பார்த்தால் மேற்கூறியது நன்றாய் விள
ங்கும். மேலும் வேதாந்த ஞானமுடையவர்களைப் பார்க்கிலும் விஷய சம்
பந்தமான நூல்களைக்கற்றவர்களே அர்த்தசித்தி அடைவதற்கு மிகுந்த சந்
தர்ப்பங்களையுடையவர்களாவார்கள் என்பது நாமெல்லோரும் அறிந்தவிஷ
யமே. சங்கீதஞானமும், கலைப்பயிற்சியும், கவித்திறமையும், கணிதசாஸ்
திரத்திற் சாமர்த்தியமுடைமையும், மானுடர்களை வாழ்க்கைப்போரிற் காக்க
மேற்குறித்தபடி சக்தியற்றனவாதலால் அவை இயற்கைப்பிரிநிலையினால்
உண்டாகவில்லை என்பது நிச்சயம்.

தத்தக்கிளிகளிடத்தும், பறவையினிடத்தும், இசையுணர்ச்சி ஜாதிப்
பிரிநிலையினால் எப்படியுண்டாயிற்றோ, அப்படி மானுடரிடத்து முண்டாயிற்
றென்றார் டார்வின் என்பவர். நம்மவர்களைப் போலாது தாய்தந்

தையர்களுதவியின்றி ஆங்கிலரும் மற்றை ஜாதியாரும் தாம் பிரியப்பட்ட பெண்ணையே கலியாணஞ் செய்துகொள்ளுவது வழக்கம். இது நம்மவரது காந்தர்வ விவாஹத்தைப் பெரும்பான்மை ஒத்திருக்கின்றது. அங்ஙனம் விவாஹம் செய்துகொள்வதற்கு முன்னால் ஒரு புருடன் ஒருஸ்திரீயினிடத்து அநேகமுறைசென்று அவள் குணத்தைத்தான் அறிந்துகொள்வதே யன்றித் தன் குணாகுணங்களையும் அவளுக்கு அறிவித்து, இருவரும் மனமொப்பிய பிறகு கலியாணம் செய்துகொள்வான். இவ்வகைச் சந்திப்பிற் சில சந்தர்ப்பங்களில் தான் குறித்த காதலியின் மனத்தைக் கவரும்பொருட்டுச்செய்யும் வித்தைகளிற் சங்கீதமும் ஒன்று. எதற்கு உருகாதவனும் இசைக்குருகுவான் என்பதற்குச் சமானமாய்ச் சங்கீதத்தாற் பெரும்பான்மையும் பெண்கள் திருப்தியடைவார்கள். ஆதலால், இசையுணர்ச்சி ஜாதிப்பிரிவினையினால் உண்டாயிற்றென்பது ஒருவாறு ஸ்தாபிக்கப்படுகின்றது.

ச. பட்டாபிராமன்.

---

## SOCRATES.

## ஸாக்ரடீஸ்.

ஸாக்ரடீஸ் என்பவர் ஐரோப்பா கண்டத்தின் தென்பாகத்தில் விளங்காநின்ற க்ரீஸ் நாட்டின்கணுள்ள பிரசித்தி பெற்ற நகரங்களுட் சிறப்பு வாய்ந்த ஆதன்ஸ் நகரத்திற் சிற்ப சாஸ்திரியாயிருந்த ஸோப்ரோனிஸ்கஸ் (Sophroniscus) என்பவர்க்கும் மருத்துவத்தொழில் நடாத்திவந்த பினரெட் (Phænerete) என்னும் மாது சிரோமணிக்கும் புதல்வரா யுதித்தார். இவர் இப்பூவுலகிற்றோன்றிய ஆண்டு இஃதென வரையறுத்துச் சொல்ல முடியாது கி. மு. 471 க்கும் கி. மு. 469 க்கும் மத்தியகாலமா யிருக்க வேண்டுமென்று தத்துவ சாத்திரத்தேர்ச்சி பெற்றோர் யூகிக்கின்றனர். இவர் இளம்பருவத்தில் தமது தேசாசாரப்படி தேகப்பயிற்சியிலும் சங்கீதத்திலும் சிறிது காலங்கழித்து வந்தனர். ஆனால் தமக்கு வயது முதிர முதிரக் காலத்தின் அருமையையும் அரிய மானிடப்பிறவியின் பலனையும் நன்கோர்ந்து மேற்கூறிய ஆசாரங்களை அனுஷ்டிப்பதிலே தம் வாணாளை வீணாக்கப் பிரியமிலராய், வானசாத்திரம் இரேகாகணிதம் என்பவற்றில் தம் மனத்தைச் செலுத்துவதிலும், தம் ஜென்ம நாடாகிய க்ரீஸில் தமக்கு முன்னிருந்த தத்துவ சாத்திரிகளுட் பெருமை வாய்ந்தோர் வெளிப்படுத்திய பிரமாணங்களையும் கோட்பாடுகளையும் வாசிப்பதிலும் மிக்க ஆர்வங் காட்டிவந்தனர். இவர் தம்முடைய வாணாளின் முதற்பாகத்தைத் தம் தந்தையின் தொழிலாகிய சிற்ப வேலையிலேயே செலுத்தியதாகச் சொல்வதுண்டு; இக்கூற்



றுக்கத்தாட்சியாக, ஆக்ராபொலிஸ் (Acropolis). என்பதற்கும் க்ரீஸாக்கும் மத்தியிலுள்ள இடத்திலே கி. பி. இரண்டாம் நூற்றாண்டிற் சில சிற்பிரதிமைகள் கண்டுபிடிக்கப்பட்டனவென்றும், அவை இவராற் செய்யப்பட்டனவென்றும் சொல்லப்படுகிறது. இஃது உண்மையாயிருப்பினும் இராவிடினும், இவர் அதிசீக்கிரத்தில் இத்தொழிலை விடுத்து, தமக்கு ஒரு தெய்விக ஆக்ஞை பிறந்திருக்கிறதென்றும் அவ்வாக்ஞையின் உண்மையைத் தாம் கனவு முதலிய பல்வகையான குறிகளானுணர்ந்தாரென்றும், அதன் சாராம்சமானது மானிடப்பிறவி யடைந்துள்ள சர்வ ஜனங்களுக்கும் தாம் ஒரு கோட்பாட்டை யுபதேசித்து அதன்வழி அவர்களை உய்க்குமாறு செய்வதன்றென்றும், அவர்களுக்குத் தெரிந்தன சிறிதும தெரியாதன அதிகமுமாயிருப்புழித் தெரியாதனவற்றையுந் தெரிந்ததாப்பாவித்து மதிமோசம் போகும் மனிதர்களை அங்ஙனம் போகாது தப்புவிப்பதே யென்றுங்கூறினர். இன்னணம் அவர்களை நல்வழியிலுய்ப்பதனால்அவர்களுடைய உணர்ச்சித்திறத்தையும் சன்மார்க்கத்தையும் விருத்தி செய்வதற்குரிய பெருஞ்சாதனமா யிருக்கக்கூடுமெனக் கருதினர். இத்தொழிலை அவர் புரியுங்கால், ஆதன்ஸ் நகரிற் பிறந்து இவர் காலத்திற் சிறப்போடு விளங்கியிருந்த அநேக தத்துவ சாத்திரிகளும் இவருடன் மிக்க விநயத்துடனும் அன்புடனும் ஒழுகுவாராயினர். தம் நாட்டவர்கள் யாவர்க்கும் நன்கு தெரிந்தவராயு மிருந்தனர். இத்தகைய பெருங்கருமத்தைப் புரிவதே தம்முடைய பிறவியின் பயனெனக் கருதியிருந்த இப்பெரியோர்க் கில்லறத்தினால் யாதோர் இன்பமுமின்றிப் பெருந்துன்பமே விளைந்திருந்த தென்பதை, நோக்குமிடத்து அது விசனிக்கத்தக்கதாயிருக்கிறது. இது நிற்க,

தொழில். இவர் மேற்கூறிய தேவகட்டளையை நிறைவேற்றுவதிலேயே தங்காலத்தின் பெரும்பாகத்தைச் செலவழித்ததாகச் சொல்லப்படினும், இராஜாங்க காரியங்களில் ஊக்கங்குன்றிலரென்பது தெரியவருகிறது. இவர் காலத்தில் க்ரீஸ் நாட்டின் தலைநகராய ஆதன்ஸ் நகரத்தில் ஹாப்லைட்ஸ் (Hoplites) என்னும் நாமம் பூண்ட ஒரு காவற்படை திரட்டப்பட்டிருந்தது. அப்படையில் இவரும் ஒருவரா யிருந்தாரென்றும், அப்பொழுது க்ரீஸ் சரித்திரத்திற் பிரசித்தியடைந்ததாகக் கூறப்பட்டிருக்கும் ஆல்ஸிபியேடிஸ் (Alc-biades) என்பவர்க்கு டீலியம் (Delium) என்னும் பட்டணத்தில் கி. மு. 424-லும், ஆம்பிபோலிஸ் (Amphipolis) என்னும் பட்டணத்தில் கி. மு. 422-லும் நேர்ந்த பெருவிபத்துக்களினின்றும் அவரைத் தப்புவித்துத் தம் நாட்டாருட் பிரக்கியாதி யடைந்தாரென்பதுஞ் சொல்லப்படுகிறது. க்ரீஸ் நாட்டிற் பிறக்கும் ஒவ்வொருவரும் ஒழுகவேண்டிய முறைமைப்படி ஒழுகி, தம்ஜென்மதேசத்தாரே தம்மைப்புகழப் பெற்றிருந்தும், இராஜாங்க காரியங்களில் உன்னத நிலைமையை அடையவேண்டுமென்றாவது பெருங்கீர்த்தியை நாட்டவேண்டுமென்றாவது கருதினாரல்லர், மேற்கூறிய கட்டளையினிமித்தம் தாம் அத்

தொழிலினின்றும் நீங்குவது இன்றியமையாததென நம்பியிருந்தார். இராஜ்ஜியம் நடாத்துவதிற் பிரவேசித்தால் தம்முடைய தெய்விகத்தொழிலானது நிறைவேறாதென்றும், அதனால் தெய்வ ஆட்சைஞயை மீறி நடக்கும் குற்றத்துக்குட்பட்டவராவாரென்றும் கருதினர் போலும். ஆயினும், தாம் இராஜாங்ககாரியங்களிற் செலுத்திய சிறிது காலத்திற்குள் இவர் செய்துள்ள பெருங்காரியங்களை இங்கெடுத்துரைப்பது அவசியமாகும். கி. மு. 406-ஆம் வருஷத்தில் இவர் ஆதன்ஸில் இராஜ்ஜியபரிபாலனம் புரிந்து வந்த பல சங்கங்களுளொன்றாகிய ஸெனேட் என்னும் பிரதான சங்கத்தின் அங்கத்தினராயிருந்தனர். இவ்வவயவியாயிருப்புழித் தம் உடனவயவிகளாகிக் கல்விச் செல்வத்தைச் சிறிதேனும் பெறாது வெறுக்கைச் செல்வத்தையே பெற்றுள்ள மூடர்களுடைய கொள்கைக்குத் தாம் இணங்காது, செல்வ முதலியவற்றால் அவர்க்குண்டாம் அந்தஸ்துக்கும் அவர்கள் இராஜாங்கத்திற் பெற்றிருந்த உயர் பதவிக்கும் எட்டுணையு மஞ்சாமல், தாம் தீர்க்காலோசனை செய்த பின்னரே அக்கோட்பாடு அங்கீகரிக்கத் தக்கதாயிருப்பின், அங்கீகரிப்பாரென்பதும் அங்கீகரிக்கத்தக்கதல்லாததாயிருப்பின் மறுப்பாரென்பதும் இவர் சரித்திரம் வாசிப்பார் யாவர்க்குந் தெற்றென விளங்கும். தாம் மேற்படி ஸெனேட்டின் அங்கத்தினராயும் அக்கிராசனாதிபத்தியத்தை வகித்தவராயு மிருக்கையில், காலிக்ஸீனஸ் (Callexenus) என்னும் பிரசித்திபெற்ற பிரபு ஒருவர் ஆர்க்கனுசி (Arginusie) என்னுமிடத்தில் தோல்வியடைந்து உயிர்தப்பியோடிய எட்டுப் போர்வீரர்களுக்கும் மரண தண்டனையை விதிக்கவேண்டுமென்று பிரேரேபித்ததைத் தாம் தடுத்து, அங்ஙனந் தடுக்குங்கால் தம் முன்னிருந்தோர்யாவரும் தமக்கு மாறான கொள்கையை யுடையவராயிருந்தும், தாம் அவர்களுக்குச் சிறிதேனு மஞ்சாது தம்முடைய தீர்மானத்தையே கடைப்பிடித்தாரென்பது வியக்கத்தக்கதே. இவ்விதமே கி. மு. 404-ஆம் ஆண்டில் இராஜ்ஜிய பாரத்தைத்தாங்கியிருந்த முப்பதின்மர் (The Thirty) கூடிய ஒரு சங்கத்தார், தமது நாட்டில் மிகவுங் கீர்த்தியடைந்தவர்களைத் தாம் செய்யத்தகாத அக்கிரமங்களில் உடன்படுத்த வேண்டுமெனக் கருதி, யாதொரு குற்றமுஞ் செய்யாத லீயோன் (Leon) என்னும் பிரபுவின் ஆருயிர் வாங்கும் பொருட்டு, ஸாலேமீஸ் (Salamis) என்னுமிடத்திலிருந்து அவரைக்கொணர்வான் ஸாக்ரடீஸ் என்பவரையும் வேறு நால்வரையும் ஏவினர். இவ்வேவலுக்குக் கடைசியிற் சொன்ன நால்வர் சம்மதித்தாராயினும், ஸாக்ரடீஸ் மாத்திரம் சம்மதித்தாரிலர். அச்சங்கத்தார் இவரை எவ்விதக் கொடுந்தண்டனைக் குட்படுத்துவதாகப் பயமுறுத்தியும், அதற்குச்சிறிதேனும் மனங்கலங்காதும் அவர்களை யொருபொருட்டாக மதியாதும், தாம் அந்த அக்கிரமத்துக் குடன்படேமென மறுத்தனர். அச்சமயமே இவர்க்கு இறுதி யுண்டாகவேண்டியிருப்ப, கி.மு. 399-ஆம் ஆண்டில் கிரீஸ் நாட்டிற்சகல சங்கங்களும் நீங்கித்தக்க ஏற்பாடுகள் உண்டான



பின்னரே மாந்தரின் சன்மார்க்கத்திற்குப் பழுதுண்டாக்கினரென இவர்மீது குற்றஞ்சாட்டப்பட்டது. அக்குற்றஞ் சாட்டியவர்கள் மிலிடஸ் என்னுங் கவிவாணரும், அனிடேஸ் என்னுந் தோல் பதனிடுந் தொழிலாளரும், லிக்கன் என்னும் பிரசங்கியாருமேயாம். இராஜாங்கத்தாராலும் நாடவராலும் அங்கீகரிக்கப்பட்டும் வழிபட்டும் வந்த தேவதைகளை இல்லையென மறுத்து நவீன தேவதைகளை யுண்டாக்கினரென்பதும், நாட்டினிலுள்ள சிறார்களை நல்வழியினின்றும் பிறழும்படிச் செய்தனரென்பதுமாகிய இருகுற்றங்கள் இவர்மீதுசாட்டப்பட்டன. இக்குற்றங்களைச் சீர்தூக்கிப்பார்த்து, அவை நிரூபிக்கப்படுமாயின் அவற்றிற்குத்தக்கபடி அவர்க்குத்தண்டனை விதிக்கவும், அற்றேல், அவர்மீது கொண்டுவரப்பட்ட குற்றங்களினின்றும் அவரை விடுவிக்கவும், 500-மனிதர்கள் குழுமியசபையொன்று ஏற்படுத்தப்பட்டது. அவ்வைந்நூறு மனிதர்களும் இக்குற்றங்களை விசாரிக்குந்தறுவாயில், ஒரே அபிப்பிராயங்கொண்டிலராய், மாறு அபிப்பிராயங்கொண்டவரானார்கள். அவர்களுள் இருநூற்றெண்பதின்மர் இவரைக் குற்றவாளியெனவும், மற்றவர் இவர் குற்றவாளியல்லரெனவும் தம் அபிப்பிராய பேதத்தை வெளியிட்டார்கள். அந்நாட்டின் ஆசாரப்படிக்கும் அக்கால முறைமையின்படிக்கும் குற்றவாளியென்று ஸ்தாபிதஞ் செய்யப்பட்ட ஒருவனுக்கு சுயேச்சையின்படி நடக்கும் சுதந்திரந் தந்து, குற்றங்கொண்டு வந்தவர்கள் அக்குற்றத்துக்கேற்க ஒரு தண்டனையைப்பிரேரேபிப்பதும், குற்றவாளி அவ்விதத் தண்டனையை மறுத்தும் வேறுவிதத் தண்டனையை பிரேரேபிப்பதும், நியாயாதிபதிகளாவார் இவ்விரண்டு பிரேரேபணைகளையும் இவற்றின் நியாயங்களையும் சரிவர யோசித்து, இவ்விரண்டிக்குஞ் சமமாயுள்ள ஒரு தண்டனையை விதித்தலும் வழக்கமாயிருந்தது. ஸாக்ரடீஸ் என்பவர்மீது குற்றஞ்சாட்டிய மூவருளொருவராகிய மிலிடஸ் என்பவர் பிராணதண்டனையை இவர்க்கு விதிப்பது உசிதமென்று பிரேரேபிக்கவும், அவ்வழக்கப்படி ஸாக்ரடீஸ் அதற்கு மாறாகப் பிரேரேபிக்கலாமென்று நியாய விசாரணைக்குரியோர் கூறினார்கள். அத்தருணத்தில் ஸாக்ரடீஸ் என்பவர் தம்மீது சுமத்தப்பட்ட குற்றங்களின் உண்மையைக் குறித்து வேறொன்றுங் கூறாது, ஒரு அற்பதண்டனைக்குள்ளாவதற்குச் சம்மதித்திருப்பதாகத் தெரிவித்திருப்பின் அதற்கு அந்நியாயாதிபதிகள் உடன்பட்டிருப்பாரென்பதற்குச் சிறிதேனும் ஐயமிலது. ஆனால், ஸாக்ரடீஸ் என்பவர் இப்படிச்செய்யாது, அக்குற்றங்கள் யாவும் ஒப்புக்கொள்ளத்தக்கன வல்லவென்றும், அவர்களுடைய தீர்ப்பானது நியாயமற்றதென்றும், தாம் நாட்டிற்கு நன்மையே புரிந்தாரென்றும், அந்நன்மையினங்கீகாரமாகத் தம்மை யாதொரு தண்டனைக்கும் உள்ளாக்காது, பொதுஜன க்ஷேமத்தினிமித்தம் வாணாளைச் செலுத்தியோர்க்கு அக்காலத்தி லளித்துவந்த பரிசு தமக்களிக்கப்படவேண்டுமென்றுங் கூறினர். இன்னணம் இவர் கூறியதும் அந்நியாயாதிபதிகளுக்கு ஆச்சரி

யத்தை விளைத்தது மன்றி, இவர் தம் நண்பர்களுக்கும் வருத்தத்தை விளைத்தது. ஆனால் நண்பர்கள் இவரைப் பன்முறையும் வேண்டிக்கொண்டிருப்ப, அவர் தம்வேண்டுகோளுக்கிணங்கி கடைசியாகமுப்பது மைனு (Minas) அபராதங் கட்டுவதற்குப் பிரியப்பட்டிருந்ததாகக் கூறிமுடித்தனர். இவர் இப்படிப்பேசி முடியும்போது, இவருடைய ஒழுக்கம் முதலியன நியாயாதிபதிகளுக்குப் பொருத்தமின்றி அவர்களுக்குக் கோபத்தை யுண்டாக்கத்தக்கதாயிருந்தபடியால், இவர்களுக் கனுகூலமாக அபிப்பிராயங் கொடுத்தவருட் பெரும்பாலரும், இவரை வெறுத்துப் பிரதிகூல வாதிகளானவராய்ப் பிராண தண்டனையையே ஊர்ஜிதப்படுத்தினார்கள். இதற்கும் ஸாக்ரடீஸ் என்பவர் எவ்வளவு மஞ்சாது, தாம் இவ்வுலகத்திற்புரிந்த கருமங்கள் யாவும் தம்முடைய மனச்சாட்சிக்கு விரோதமன்றி, பொருந்தி யிருந்தவென்றும், தமக்கு விதிக்கப்படும் தண்டனை யாதாயினும் அதற்கு உடன்படத்தாம் அஞ்சாரென்றுங்கூறினர். அக்காலத்தின் முறைமையைக் கருதுவோமாகில், மரண தண்டனையை விதித்த மறுதினமே அதனை நடத்தி விடுவது வழக்கமாயிருப்ப, ஸாக்ரடீஸ் விஷயத்திற் சில காரணங்களால் ஒரு மாதமாகும்வரை நடத்தாது நிறுத்திவைக்கப் பட்டிருந்தது. அக்காலம் வரையில் அவர் சிறைவைக்கப் பட்டாராயினும், அச்சிறையினின்றும் அகல்வதற்குரிய சாதனங்களெண்ணிறந்தனவாயினும், அவற்றைத்தம் நண்பர்களுடைய வேண்டுகோளுக்கிணங்கி உபயோகித்து நன்னெறியினின்றும் பிறழ்வது தகாதெனக் கருதிச் சிறையிலேயேயிருந்து அத்தண்டனையை யேற்றுக்கொள்ள வேண்டுமெனக் கருதிய இவர்தம் மனவுறுதி வியக்கற்பாலது. இதுகாறும் பற்பல விஷயங்களைக்குறித்துத் தம் நண்பர்களுடன் உரையாடி வந்ததுபோல், அவர்களுடன் அவ்வண்ணமே மனோதைரியத்தைச் சிறிதும் விடாது அச்சிறையிலிருந்த முப்பது நாளையுஞ் செவ்வனே கழித்துவந்த அப்பெருமானின் எண்ணம் என்னேயோ ! மரணமென்பது கனவுமின்றிச் சுகமாய்ச் செயுந் துயிலெனக் கருதினரோ! இன்பமலிந்ததோ ருலகத்தில் வாழும் வாழ்வெனக் கருதினரோ அறியேம் !

இங்ஙனம் இவர் தம் சரித்திரத்தின் சாராம்சத்தை யெடுத்துரைப்பினும், பின் வரும் சிற்சில வினாக்களையும் ஆங்காங்காராய்வான் புகுதல் மிகவும் உசிதமெனக்கருதுவாம். ஸாக்ரடீஸ் என்பவர் அதிக தனவந்தரா யில்லாமலிருப்புழி, இவர் காலத்திருந்த தத்துவ சாத்திரத்திற் புலமை வாய்ந்தோர் இவரை யன்புடனும் விநயத்துடனு மாதரித்து வந்ததற்குக் காரணமாய் இவரிடமிருந்த குணாதிசயங்களென்ன ? நீதி வழுவாது தம், வாணாளைக்கழித்தும், ஜனங்களின் நன்மையே சிறப்பெனக்கருதியும், இராஜாங்க காரியங்களைத் துரோகமின்றி நடாத்தியும் வந்த இவரை ஆதன்ஸ் நகரத்திலுள்ளோர் பழித்து இவர்மீது குற்றஞ்சுமத்தி, மரண தண்டனையை விதித்த



தென்னை ? இவர் ஜனங்களுக்கு நன்னெறியை உபதேசிக்கையில் அனுசரித்த கோட்பாடுகள் யா ? இவர் ஜனங்களுக்குத் தெரிவித்த தெய்வீகச்செய்தி யாது ? இவருடைய கோட்பாடுகளுக்கு இவர்க்குப் பின் வந்தோர் எவ்விதம் பொருள் கண்டனர் ? அவற்றினாற் பின் வழங்கிய தத்துவ சாத்திரத்திலுண்டாம் மாறுபாடென்னை ? இவ்வினாக்களின் விஷயமாய்ப் பின்னை யாம் தக்கபடி வரைவாம்.

(இன்னும் வரும்.)

சி. என். சரவண முதலியார்.

---

## DISCRIMINATION IN CHARITY.

## பாத்திரமறிந்து பிச்சையிடு.

---

இன்றியமையாச் செயல்களின் மிக்க மேம்பட்டதென்றியாவராலு மனுசரிக்கப்படவேண்டிய செயல்களில் ஈகையொன்று. ஈயுந் தன்மையாகிய நற்குணமானது மானிடரனைவருக்கு மியற்கையிலேயே யமைந்திருக்கவேண்டும். உண்மையி லனைவருக்கு மமைந்திருக்கிறது. உலகத்திலெவராயினுமோரோர் காலத்தில் தம்மைத்தாமே காப்பாற்றிக்கொள்ளு மத்துணையாற்றலுடையவரல்லரென்பது யாவருக்குந் தெரிந்த விஷயம். ஆகவே, எப்படிச் சிலர், ஓரோர் காலத்தில் அல்லது எக்காலத்தும் ஒரு சிலரைச் சார்ந்து அவர் முகம் பார்த்து வாழவேண்டியிருக்கிறதோ, அதேமாதிரியாக அச்சிலர் தம்மைச் சார்ந்து பலரிருப்பாரென்ப தியாவருக்குந் தெரிந்த விஷயம். இவ்வாறு சார்ந்திருப்பார்க்கு "நம்மாலே யாவரிந்நல்கூர்ந்தார் எஞ்ஞான்றுந்-தம்மாலாக்கமிலரென்றுதாமருண்ட"மனத்தரல்லராய் "வறியார்க்கொன்றீதலே யீகை மற்றெல்லாங்-குறியெதிர்ப்பை நீரதுடைத்து" என்ற நாயனார் வாக்கையுஞ் சிரமேற்கொண்டு தம்மாற் கொடுக்கக்கூடியவற்றை உத்தமபாத்திரமறிந்து அன்போடு கொடுப்பவரே யிவ்வுலகத்துப் பன்னாள் துன்பமனுபவியாது வாழ்ந்து புத்தேளுலகத்தும் புகழுடையாராய்க் கொண்டாடப்படுவர். இன்னும், "பாத்தூண் மரீஇயவனைப் பசியென்னும் தீப்பிணி தீண்டலரிது".

துய்த்துக் கழியான் துறவோர்க் கொன்றீகலான்
வைத்துக்கழியு மடவோனை—வைத்த
பொருளு மவனை நகுமே யுலகத்
தருளு மவனை நகும்.

என்ற விரண்டு செய்யுளானும், கொடுத்தவராகிய பெரியோர் வலியும் புகழும் சிறியோராகிய கொடாதார்க் குறுங்குறையுங் கூறப்பட்டது.

இனிப்பிறர்க்குக் கொடுத்தலெல்லாந் தர்மமென்றுங் கொடாததெல்லாந்தர்மமில்லையென்று மூகித்தல் கூடாது; ஏனெனில், "எல்லா விடத்துங் கொடைதீது மக்களைக், கல்லா வவரா விடத்து" என்ற பெரியோர் வாக்குக்கிணங்கி ஏற்றற்குத்தக்க பாத்திர மிஃதென்றறிந்து கொடுக்கவேண்டும். தவிரவும் நாலடியாரிற் பின்வரும், "உறக்குந் துணையதோ ராலம்வித்தீண்டி யிறப்ப நிழற்பயந்தாங், கறப்பயனுந், தான் சிறி தாயினுந் தக்கார் கைப்பட்டக்கால், வான் சிறிதாய்ப் போர்த்து விடும்." என்ற பாட்டில் தர்மஞ்செய்வதற்குக் கருவியாகிய பொருளானது தக்கார் கைப்பட்டால் மட்டுமே பெருநன்மைக் கிடமாகு மென்பது காணப்படுகிறது. "பாத்திர மறிந்து பிச்சையிடு" என்ற வாக்கில் பாத்திரமென்ற பதத்திற்குப் பொருளென்னை? இரப்போர் தம்மோடு கொண்டுவரும் பிச்சையேற்கும் ஓடா? அல்லது அவர் தாமேயோ? ஒருவரு முன்னையதென்று கூறார். ஏனெனில், அவ்வாறு பொருள் கொண்டு ஈகையியற்றுவோர்க்கு "ஈத லிசை பட வாழ லஃதல்ல தூதிய மில்லை யுயிர்க்கு" என்ற நாயனார் குறள் பொருந்தாது. ஆனாலிக்காலத்தில் தர்மம் செய்பவரோ உலகில் நீடூழி காலம் புகழ்பெற வேண்டிச் செய்தலா லிப்பேர்ப்பட்ட நல்ல விதிகளைக்கவனித்துச் செய்தாலவர் தம் விருப்பம் முற்றுப் பெறும். நன்னூலார் தந்நூல் முகவுரையில் கல்வி கற்றற்குத்தகாத மாணாக்கர்க ளின்னாரென்று சொல்லியிருத்தல்போல, யான்படித்த நூலேதிலாவது ஏற்றற்குரிய பாத்திர மிதாகும், ஏற்றற்குத் தகாத பாத்திர மிதாகுமென்று வரையறுத்துக் கூறப்படவில்லை. திருவள்ளுவர் மாத்திரம்"

"இரப்பான் வெகுளாமை வேண்டும் நிரப்பிடும்பை
தானேயுஞ் சாலுங் கரி".

என்ற பாட்டினா லிரப்போனுக்கு வேண்டிய முக்கியமான குணமொன்றைக் கூறியிருக்கிறார். கோபமென்னுந் தீயை இது நமக்காகாதென்று நன்மக்களனைவரு மொருங்கே நீக்கவேண்டு மென்றாலும் இரப்பவனிடத்தி லிஃதிருக்கவே கூடாதென்று கூறியதென்னையோ வெனின், அவன் யாசிக்கும்போது கொடுப்போர் கோபித்து அவனைக் குரூரமாய் நடத்தினபோது மப்படிச்செய்தவர்களுடைய கோபத்தைத் தன் நகையிலும், முகப்பணிவாலும் நீக்கி யவர் கொடுப்பது எள்ளளவாயிருந்தாலும் மலையளவாயெண்ணி உள்ளத்துவக்க யிருப்பவனாய்த் தன் முகத்தாற் காட்டிச் செல்லானாகில், அவனுக்கு ஒன்றுங் கிடையாதென்பது திண்ணம், இதற்குத் திருஷ்டாந்தஞ் சொல்லித் தெரியவேண்டியதில்லை. பெண்கள் வீட்டிற் வேலையாயிருக்கும்போது, பிச்சைக்காரர்கள், பேரிரைச்சல்போட்டு ஒரு கவளம்



அன்னம் வாங்குமுன்னவர் படும்பாடு தெய்வத்துக்கே தெரியும். சாதுவாய் ஓரிரைச்சலும் போடாது கோபமொன்று மில்லாமல் அவர்கள் தருணம் பார்த்துப் பிச்சை வாங்குகிறவர்கள் தாங்கள் எண்ணியதற்கு மேலாய் வாங்கிச் செல்கிறார்கள்.

எந்நாட்டிலும் பொதுவாய் நந்நாட்டில் பல வருணத்தார்க ளிருக்கின்றார்கள். ஒவ்வொரு வருணத்தாரிலும் யாசகர்களிருக்கின்றார்கள். இவர்களிலெவரும் தஞ் செலவத்தாழ்வு நோக்கிச் சாதியையும் மதவொழுங்கையும் கைவிடாராகையால் எவ்வெவ் வருணத்தார்க் கெவ்வாறு பிச்சையிடவேண்டுமோ அவ்வாறே யிடவேண்டும். அவ்வாறிடும் பிச்சைதான் சாதியி னேற்றத் தாழ்வு நோக்கி உயர்ந்தோர்க் குயர்ந்தும் தாழ்ந்தோர்க்குத் தாழ்ந்து மிருத்தல் கூடாது.—இதற்குமுன் சத்திரங்கள் கட்டியிருப்பவர்களும் இப்போது கட்டுவோர்களும் கட்ட முயல்வோரும், பிராமணர்களுக்கும், மற்று முயர்ந்த வருணத்தாராகிய பிராமணரல்லாதார்க்கென்றும் தனித்துக் கட்டுகிறார்கள். உலகத்திலிருக்கும் ஆண்மக்களெல்லா மிந்த இரண்டு வருணத்தார்தானா? இஃதென்னவநியாயம்? இப்படித் தன் காரியம் பார்க்கலாமா? இது நன்மக்களுக் கழகா? இவ்வாறு செய்கிறவர்களெல்லாம் "ஈவோன் கருணையும் பொருளு மிரப்போர்க்கினிமை" என்றதை முற்றிலும் மறந்தனர் போலும். எப்படிப் பொக்கிஷக்காரன் ஒருவன் தன் கையிற்கொடுத்த பொருளைப் பாரபக்ஷமின்றித் தன் கீழ்வேலைபார்க்கும் வேலையாட்களி னுண்மையான உழைப்புக்குத் தக்கபடி யவர்களுக்குப் பாகித்துக் கொடுக்கிறானோ, அவ்வாறே நம்மிடத்திற் கடவுளாற் கொடுக்கப்பட்ட பொருளை யவருடைய ஆணைக்கடங்கி எவ்வாறு சன்மார்க்கத்தில் யாவருக்கு முதவும்படி செய்யவேண்டுமோ அப்படிச்செய்வதே மேலோர் செய்கை. இரப்பவர்களுள்ளும் ஏமாற்றஞ்செய்கிறவர்கள் பலரிருக்கின்றார். இக்காலத்திலேயோ "தம்படி யொன்றுக் கைந்து ருத்திராக்கம்" என்றாய்விட்டது. ஆதலால், அதை யுண்மையா யணிந்தோருடைய பெருமையும் மங்கிப்போய்விட்டது.

நம்மைப்படைத்த கடவுள் வெளிமயக்குச் செய்யும் பொய்ச் சந்நியாசி பேரிற் பற்றுள்ளவரா மேலுந் தன்பேரைச் சங்கரா வென்றும் இராமாவென்றுஞ் சொன்னதற்காக அவற்கிரங்கி நாமெல்லாமச்சந்நியாசிக்குக் கொடுக்கவேண்டுமென்று நம்மைக்கனவிலுந் தூண்டுவாரா? மாட்டவே மாட்டார். எவனொருவன் தன்னாலியலாத காரியமொன்றிற்குக் கடவுளை நினைக்கிறானோ அவன் விஷயத்திற் கடவுள் கருணைகூர்ந்து மனிதர் மூலமாயேமறைந்து நின்றுதவிபுரிவார். பருத்த புயங்களும், ஒவ்வொரு அங்கமும் சீராயமைந்து சகலவேலையுஞ் செய்யக்கூடிய ஆற்றலுடைய மடியொருவன் எத்துணைச் சிறந்தவருணத்தனாயிருப்பினும் அவனை ஈவோன்

றன் கண்ணூறு நோக்கிப் பார்த்தலாகாது. இத்தகையோர்க்கீதலால் இரண்டு பெருங்குற்றங்கட் கிவோர் ஆளாகிறார்கள். தம்பொருளை வீண் செலவு செய்தலொன்று ஏற்போனை நல்வழிச் செலுத்தாதுபின்னர் பொருளுக்குங் களையாளுயிருக்கச் செய்வதொன்று. ஆங்கிலர்கட்குள் "poor fund" வறியோர் திரவியம் என்று, அதற்காக மிகுதியான பணஞ்சேர்த்து வறியோர்க்கு அதிலிருந்து ஒரு சிறு தம்படியேனும் போகாது ஏதாவது ஒரு தூரமாகிய விடத்தில் அதைக்கொண்டு பெரிய கோவிலொன் றமைக்கப்படுகிறது. இதனால் வறியோர்க்கு வரும் பயனின்னதென்று தெரியவில்லை. இன்னுஞ் சிலர் தம்வினையை யொழிக்க வெண்ணிக் காசிக்குப்போவார், சத்திரம்மைப்பார், சுவாமிக்குத்தான் பொருளுதவி செய்வார்; ஆனால், தம் வாயிலில் வரும் பிச்சைக்காரனுக்கு ஒரு எள்ளளவு மீயார், கோவில் பல தம்மூரிலிருக்க "இவ்வாறிரப்போர்க் கீயாதெஞ்சிய" பொருளைக்கொண்டு இன்னும் பல கோவில் கட்டுவார். இம்மதியீனர்கள்,

"அன்பர்த மிருதய மரனுக் காலயம்"
என்பதைச் சற்று மெண்ணிலர் போலும்

தர்மம் என்பதைத் தம்மினின்றும் வேறானதாய்ப் பிரித்துப்பாக்கு, மதியீனர்களே "ஏழைபா விரக்கமின்றி இவ்வாறு செய்கிறவர்கள். இனியேற்றற்குத்தக்க பாத்திரமாவாரிலக்கண மாராய்ந்து பார்க்கில் ஏற்கும் பாத்திர விலக்கண மிசைப்பில் உதவுவோன் உளத்தை யுண்மையி லுணர்ந்து அன்னோன் கோணி லமயமறிந்து தம்முகக் குறிப்பாற் றந்நிலை யுணர்த்தி சிறிது பெறினும் பெரிதெனக் களித்துத் தம்போ லியரைத் தாமெனத் தழூஉம் இத்தகை நற்குண மியற்கையி லமைந்துள அங்கந் தளர்ந்து தங்கையுள தற்றோர் பார்வை யிழந்தோர் கேள்வியு மிலராய் ஆற்றொணுப் பெருநோய்க் கடைக்கல மானோர் நன்னூல் யாவு நலம்பெற வுணர்ந்தும் வறுமையாங் கூற்றால் வாட்ட முற்றோர் இன்னோர்க் கிடுதலே யீகையென் றிசைப்பர். என்சிற் றறிவுக் கெட்டிய வாறு ஈவோ னிலச்சணம் இசைத்திருக்கின்றனென்.

தன்னுடைய சரீரத்தைக்கொண்டு ஒரு வேலையுஞ் செய்து உயிர்வாழ வொண்ணாதவண்ணமவ்வளவு தாழ்ந்த நிலைமையில் கையிலிருந்த பொருளற்றேனும் அல்லது கையில் சிறிதேனும் பொருளில்லாதவனா யிருப்பவனுக் கிரங்கியீதலுத்தமம்! இரப்போ னியற்கை யாமென் னறிவது எம்மா லியன்றதை யினிது கொடுப்போம் என்றிவ்வாறு உதவுதல் மத்திமம் சத்திரங் கட்டிச் சார்ந்தோரெவர்க்கும் விருந்தென்றுபல் விருந்தே யன்றி வறியோர்க் கீயும் வண்மையிலதா லஃததமம் கண்ணுறுங் கவறுங் கடைப்பிடி கொண்ட கள்வரி யற்கை கண்ணுற் கண்டும் அவர்தமக் களித்த லேயத மாதமம். இக்காலத்தில் ஏனைய தொழில்களைப் போல இரத்தலும் ஒரு வருவாய்க்



கிடமான தொழிலாய் விட்டது. யாசித்து அதனாற் றிரவியம் சம்பாதித்திருக்கிறவரனேகர். உம்முடைய தொழில் என்னவென்றால், யாசித்தல் என்று சொல்லி ஏனையோரைப் போலக் கைப்பொருளும் வைத்துக்கொண்டிருந்தாலஃது ஈவோர்க்கெல்லாம் ஓர் பேரிழுக்கன்றோ? மடியர்களுக்கு என்ன வேனு மீதல் கூடாது. யாம் நெற்றியில் வியர்வைநீர் ததும்பச் சம்பாதித்த பொருளைச் சூதர்கள் குடியர்கண் மடியர்கண் முதலானோர்க்குக் கொடுத்தல் நன்றோ? ஐயோ! இஃது செந்நெல்லைக்கொண்டு தீயில் விதைத்தான் போலல்லவா ஆகும். ஆதலால் யாம் அனைவரும் செய்யாதிருப்போமாக. சில மனிதர்கள், இரவும் பகலும் முறையே வரைவின் மகளிரில்லிலும், கட்கடையிலு மடைக்கலம் புகுந்து கொஞ்சம் அவசர மிருக்கும்போது திருநீற்றையாயினும் திரு மண்ணையேனுந் தரித்துக்கொண்டு தாம் காஞ்சிக்குப்போகும் பிரயாணியென்றும், காசியில் ஓர் மண்டபங்கட்டுவிக்கப் போகிறோ ரென்றுஞ் சொல்லிச் சிலரை மயக்கித் தம்மாற் கவரக்கூடியதைக் கவர்ந்துகொண்டு செல்கிறார்கள். ஐயோ! இஃதென்ன பாவம்! கள்ளர்களாவது தம்முடைய வுண்மையை யொழியாது நம் பொருளைக் கவர்ந்து செல்கிறார்கள் இப்பொய்ச் சந்நியாசிகளோ நம்மை மதியற்றவரா யெண்ணி யேமாற்றி நம் பொருளை யேற்றுக்கொண்டு விழித்திருக்கும்போதே யடித்துக்கொண்டு போதலாலிவர் கள்வரினுங்கள்வர் ஆதலாலிவர்தமைக்கடிதினொழிக.

பி. கே. ஐயாசாமிப்பிள்ளை.

---

## A GARLAND OF PRAISE.

## தோத்திரமாலை.

### கட்டளைக்கலித்துறை.

1. அன்ன மடங்கடி நாய்காவ லென்ன வகத்துளயன்
றன்ன மடங்கடி தாக்குவ னேலிந்தத் தொல்லுலகிற்
பின்ன மடங்கடிந் தீடேறக் கூடற் பிராட்டியுன்றன்
பொன்ன மடங்கடிக் காளாவ தென்நாள் புகலெனக்கே.

2. எனக்களிப் பாயென்று நம்பிவந் தேத்துநர்க் கிட்டமெலாம்
மனக்களிப் பாத்தரு மம்மைநின் கூடல் வசிப்பதல்லாற்
சனக்களிப் பாகுவத் தெங்கா ரழைப்பினுங் காதலியேன்
வனக்களிப் பாற்பசுப் பாலொக்கு மோபிணி மாற்றினுமே.

3. மாற்றல ரைப்படை காணத் தளையிடு மன்னர்துணிப்
பீற்றல ரைப்படை யங்கொண் டுழல்வதும் பிச்சையர்தோ
ளாற்றல ரைப்படை யாவேர்த ராவது மார்செயற்றென்
காற்றல ரைப்படைக் கும்வரைக் கூடற் கனியயிலே.

4. மயிலே மதிக்குல மாவிளக் கேயிசை வாய்த்தவிளங்
குயிலே மதிக்கடங் காப்பொரு ளேயருங் கூடலன்பர்க்
கயிலே மதிட்டி வராதெனு நான்மறை யாய்ந்தொழுகப்
பயிலே மதிட்டநின் சித்தம தாயுறும் பான்மையதே.

5. வாகா வரைத்தடக் கொங்கைநல் லாளுமை மாதுதவும்
யோகா மலர்க்குழல் வள்ளிதெய் வானை யுகந்திடுசம்
போகா வுனைத்துதிக் கின்றனம் பார்த்தருட் பூரணஞ்செய்
தேகா திருப்பரங் குன்ற குகாவுப தேசிகனே.

அறுசீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்.

6. நிழலுறு தருக்க ளானு நீர்பெரு நதியி னானுங்
கழனிவாழ் செந்நெ லானுங் கரஞ்சிரங் கூப்பி யேத்தித்
தொழுமடி யார்களானுஞ் சூழ்ந்திடும் பெருமை பூண்ட
பழநியங் கிரியின் வாழும் பரமனைப் பணிகு வாமே.

கட்டளைக் கலித்துறை.

7. வல்வே லனைகருங் கண்ணார்க் குழைத்தவர் மாளிகைக்குக்
கல்வேலி கட்டிக் கடுங்காவ லிட்டுப்பின் கைப்பொருள்போய்ப்
பல்வேலை செய்து பதராய்ப் பறப்பினும் பைங்குழையின்
நெல்வேலி நாதனைச் சிந்திப்ப ரேலரு ணேர்ந்திடுமே.

8. வருகைக் கடுங்கணை மாரனைக் கூவுவிர் வாளிபட்டென்
னுருகைக் கிரங்கலிர் மாங்குயில் காளினி யுற்றவரந்
தருகைக் கழகனம் மாழ்வார்க் குகந்திடுந் தண்டலை சூழ்
குருகைப் பிரானெனைச் சேரினென் னுமுங்கள் கூக்குரலே.

அறுசீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்.

9. கன்றெடுத்து விளவுகுத்துங் கஞ்சன்விடு பூதனைபால்
கவர்ந்து மாய்த்துங்
குன்றெடுத்துக் குடைபிடித்துங் கோவலரின் குலம்புரக்குங்
கோமான் றன்னை
டென்றிருப்பே மெனக்கரையு மேழையருக் குவந்தளிப்பா
னிரங்கி மேலாந்



தென்றிருப்பே றையின்வளருந் திருமாலின் சேவடியைச்
சேவிப் போமே.

10. பண்டைமுத லென்றழைத்துப் பரிதவித்த குஞ்சரத்தின்
பகையை மாய்த்திட்
டண்டருக்கு மரும்பதத்தை யதற்களித்த தாமரைக்கை
யபயங் காட்டித்
தொண்டருளம் போற்குளிருஞ் சோலைவளப் பொருனைநதி
சூழுஞ் சீவை
குண்டமெனுந் தலத்திலங்கும் பெருமானைத் தெரிசித்தெங்
குறைதீர்ந் தோமே.

எழுசீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்.

11. கூடத்தினி விட்ட தாகுமிக் கலியிற்
கோபுர விளக்கென வடியா
ரிடத்திரு ளணுகா தொழித்தவந் தளிப்பா
யிகபரத் தென்னுதற் கிணங்கத்
திடத்திரைக் கரத்தாற் சங்கொடு முத்தஞ்
செம்பவ ளத்தையுஞ் சிதறுங்
கடற்கரை விளங்குஞ் செந்திலி னதிப
காப்பெமக் கருள்வதுன் கடனே.

கட்டளைக் கலித்துறை.

12, நிரந்தரு வாயுல கெங்கும் புரப்பினு நீதியுற்றார்க்
குரந்தரு வாயுணர்ந் தீவா னருட்கொண் டுதிக்குமுன்றன்
கரந்தரு வாய்துவர் கார்மேனி கண்பதங் கஞ்சமன்றோ
வரந்தரு வாய்தொழு தேன்வான மாமலை மாதவனே.

எழுசீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்.

13. அள்ளியே கொடுக்கு மவரையுந் தடுத்துத்
தாமுமொன் றளித்திடா தரணுங்
கள்ளியே யுலோபக் கண்டகர் தம்மைக்
கவிகொடு புகழ்ந்துநாட் கழித்துத்
துள்ளியே யுழன்ற பேதையே னெனினுந்
துணையென நின்பதந் தொழுதேன்
வள்ளியூர் விளங்குங் கதிர்வடி வேலா
மகிழ்ந்திடு வரந்தரு வாயே.

கட்டளைக் கலித்துறை.

14. விராதாதி வீரரை வென்றோன் சகோதரி வேண்டினருட்
டராதா வுனது கடைக்கண் வரந்தரத் தாமதமா
யிராதாள் வரகுண பாண்டியன் றேவி யிசைபெருகு
மிராதா புரத்தன்னை கல்யாணி நின்பத மேத்துவனே.

கோச்சகக் கலிப்பா.

15. பழமறை யோதுதமிழ்ப் பாவல ரெந்நாளுந்
தழைய வரங்களெலாந் தருவா யதுபோல
எழிலியின் மேனியனே யிராதா புரம்வாழு
மழகிய மணவாளா வென்னையு மாண்டருளே.

அறுசீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்.

16. உலகினிடு மனைவிளக்க முற்றதனி விருந்தினர்க்கு முதவு மாபோற்
பலமுதவும் பதிவிரதை யநசூயை கற்பதெங்கும் பலிக்க வெண்ணி
நலவளனுந் திருவருளின் பெருமையுமே மருவுசுசீந் திரத்தெந் நாளு
மிலகிடுதா ணுவொடயன்மா லெனும்பொருளை யெமதிதையத் திருத்து
[வாமே.

எழுசீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்.

17. தன்னியா மகமா யுலகெலா மீன்றுந் தளர்விலாத் தனிப்பராசத்தி
கன்னியா குமரி யாவென நாடிக் கருணைசெய் தாயெனக் கண்டு [தேவி
சென்னியாம் பெற்ற பயன்பெறத் தொழுதேந் தென்கடற் கரைவளர்
உன்னியா தார வ..முவந் தளிப்பா யுத்தம ருளத்துறை யுமையே.

அறுசீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்.

18. விருப்பதிலாழ்ந் தறந்துடிக்கச் சானகியைச் சிறையினிட்ட
வெய்யோன் றன்னைப்
பொருப்பதிரைக் கடல்வறளப் பொங்கியெழுஞ் சேனையொடும்
பொருது மாய்த்துக்
கருப்பதியா தடியவரைக் கரையேற்றுங் கண்ணிரண்டுங்
கருணை கூரத்
திருப்பதிசாரத்திலங்குந் திருவாழு மார்பானைச்
சேவிப் பாமே.

கட்டளைக் கலித்துறை.

19. பிறக்கைக்குஞ் சாகைக்கு மச்சமுற் றுலெனப் பேசிவெண்ணெ
யுறக்கைக்கு ணெய்க்கலே பேதைநெஞ் சேயுனக் குண்மைசொல்வேன்
மறக்கைக் கரக்கரை மாய்த்தாள் பவனை வணங்குதியேற்
பறக்கைக்கு ளாமது சூதன மாலருள் பாலிக்குமே.



எண்சீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்.

20. உருவனந்த சரதன்மக னென்ன வாய்ந்துன்
னுரியவர சிளையவனுக் குதவி போங்குந்
தருவனந்த மடர்கொடுங்கா னடந்து வானோர்
தலையெடுக்கத் தவஞ்செழிக்கத் தசக்கிரீவக்
சருவனந்தச் சிலைகுனித்து வாகை சூடிக்
கற்பரசி யொடுமீண்ட கமல நாபா
திருவனந்த புரத்துனைக்கண் காணப் பெற்றேந்
தீங்கொழித்துக் காப்பதுநின் சீர்த்திக்காமே.

எம். எஸ். பிச்சுவையர்.

---

## THE MUNIMOLI OF AUVAI.

## ஔவை முனிமொழி.

திராவிடகோகிலப் பத்திரிகையில் "ஔவையார் முனிமொழி வேதாந்த சூத்திரம்" என முகவுரையிட்டு உபப்பிருங்கணப் பிரமாணங்கொண்டு ஈசகேநாதி சைவோபநிஷத் மந்திரங்களை ஆதாரமாகக்கொண்டு கிளர்ந்த வேதாந்த சூத்திரம் ஏகான்மவாதப்பொருள் கொடுக்காது சைவ சித்தாந்த சிவாத்துவித தடஸ்தப் பொருள் பயக்கும் வாய்மையை நிரூபணஞ்செய்து முடிவு படுத்தற்குமுன் "நாம் வாதத்தைவிட்டு மற்றொன்று பேசிப் பொழுது போக்கித் தோல்வித் தானத்து நின்றோம்" என்று சுதேச வர்த்தமானி 9-ஆம் இலக்கப் பத்திரிகையிற் கூறி, நாம் நமது கொள்கையைச் சாதிக்கவேண்டின், முன்னர் முனிமொழி செம்பொருள் முதலிய மூன்றனுள் இதுபற்றி வியாச சூத்திரமென்று பொருள் சொல்லப்பட்டதென்று இயன் முறையால் நிறுத்தவேண்டும் என்கின்றார். அங்ஙனம் முன்னர்ப் போதருமாறு நிறுத்திக் காட்டுதும்:—

தேவர் குறளுந் திருநான் மறைமுடிவு
மூவர் தமிழு முனிமொழியுங்—கோவை
திருவா சகமுந் திருமூலர் சொல்லு
மொருவா சகமென் றுணர்.

என்னும் ஔவையார் திருவெண்பாவுக்கு ஸ்ரீலஸ்ரீ, ஆறுமுகநாவலரவர்கள் வனைந்த உரையை ஈண்டு வரைகுவாம்:—

தேவர்குறளும் - திருவள்ளுவநாயனாருடைய திருக்குறளும்; திருநான்மறை முடிவும் - சிறப்புப் பொருந்திய நான்கு வேதங்களின் முடிவாகிய உபநிடதங்களும்; மூவர்தமிழும் (திருஞான சம்பந்தமூர்த்திநாய

ஞர், திருநாவுக்கரசு நாயனார், சுந்தரமூர்த்தி நாயனார் என்னும் சமயகுரவர்) மூவர்களுடைய (தேவாரமாகிய) தமிழ்வேதமும்; முனிமொழியும் - வியாசமுனிவருடைய வேதாந்த சூத்திரமும்; கோவை திருவாசகமும் - (திருவாதவூரடிகளுடைய) திருக்கோவையார் திருவாசகங்களும்; திருமூலர் சொல்லும் - திருமூலநாயனாருடைய திருமந்திரமும்; ஒருவாசகம் என்று உணர் - ஒருபொருளையே குறித்த வாக்கியங்கள் என்று அறிவாயாக எ-று.

முனிமொழியும் என்றதை வியாசருடைய வேதாந்த சூத்திரம் என்று பொருள் படுத்தாது, "முனிமொழியுங் கோவை திருவாசகம்" என நீட்டிக் கூட்டி, மாணிக்கவாசக முனிவர் அருளிய கோவை திருவாசகம் என்று ஓர் ஒவ்வாப் பொருள் கூறி இடர்ப்படுகின்றார். அவ்வொவ்வாமையை ஈண்டுக் காட்டுதும்:—

திருவெண்பாவிற் போந்த குறண்முதலிய பதங்களிலுள்ள உம்மைகள் ஆறும் எண் உம்மைகளாம். முன் மூன்று உம்மைகளும், பின் இரு உம்மைகளும் எண் உம்மையின் பாலனவாக, இடைக்கண் முனிமொழி என்றதில் பெயரெச்ச உம்மிகுதி புணர்த்தி ஔவையார் ஓர்சாலும் மயங்கவையார். 'சுருங்கச்சொல்லல்' முதலிய பத்தழகினுலும் திருவெண்பா அருளும் வன்மைபூண்ட ஔவையார், அச்சுருங்கச் சொல்லல் என்னும் அழகுக்கு மாறாக, முனிமொழியும் எனச் சொற்களை வீணாக அடைமொழியாய்க் கோவை திருவாசகங்களுக்கு முன் நிறுவி விரிக்க ஓர்காலு மிசையார். கோவை திருவாசகம் என்ற மாத்திரையானே அவை மாணிக்கவாசகசுவாமிகளால் அருளிச் செய்யப்பட்டன என்பது வெள்ளிடைமலைபோல ஆபாலகோபால நியாயத்தினுல் அறியக்கிடத்தலின் என்க. நாவலரவர்கள் முனி என்னும் மொழி மாணிக்கவாசக சுவாமிகளைக் குறித்ததென்பதை உணர்த்துமாறு "வாதவூரடிகள் முற்றத்துறந்து முழுதுணர்ந்த அந்தணர் சிகாமணியாதலில் முனி என்றெடுத்தோதப்பட்டார்" என்றும், "பேராசிரியரும் 'திருவாதவூர் மகிழ் செழுமறைமுனிவர்' என்றங்ஙனம் வழங்கியது காண்க" என்றும், "ஆளுடையபிள்ளையார் வாகீசர் முதலியோரும் 'பிரமாபுரத்து மறைஞானஞானமுனிவன்' 'திருநாவுக்கரசுவளர் திருத்தொண்டி னெறிவாழ வருஞானத் தவமுனிவர்,' என்றங்ஙனம் வழங்கப்படுமாறு உணர்க" என்றும், "இது செம்பொருளாம்" என்றும் உரைத்தார். மாணிக்கவாசக சுவாமிகள் முனிவர் எனப்பட்டார் என்றமைக்குச் சிறந்த காவியங்களினின்று அவர் பிரமாணங்காட்டாது, பேராசிரியர் திருக்கோவையார் உரையில் இயற்றிய அகவலில் மிக அரிதாய்க் குறிக்கப்பட்ட பிரமாணம் ஒன்று மாத்திரம் வரைந்து, ஆளுடையபிள்ளையார் வாகீசராயினோரும் அங்ஙனம் அவ்விநாய கூறப்பட்டாரென கப் பிரமாணங்களும் காட்டுகின்றார். இம்



முனி என்னும் மொழி வியாசர் முதலாயினோர்க்கு வழங்கப்பட்ட பின்னர். மாணிக்கவாசகசுவாமி முதலாயினோர்க்கு எய்தநேர்ந்ததா? இன்றேல், மாணிக்கவாசக சுவாமிகளுக்கு இம்முனி என்னும் மொழி வழங்கப்பட்ட பின்னர் வியாசர் முதலாயினோர்க்கு எய்தநேர்ந்ததா? விடையிறுப்பாராக முனி என்னும் மொழி வியாசரை உணர்த்துதற்குத் திராவிடபாரத இலக்கியத்தினின்று நாம் விடுக்கும் பிரமாணங்கள் வருமாறு:—

I. "வாடாததவவாய்மை முனிராசன்மாபாரதஞ்சொன்னநாள்" என்று முதற் காப்புச் செய்யுளிலே "முனி" என்னும் மொழி வியாசமுனிவரைச் சுட்டியிருத்தலை முதறகண் எடுத்துப் பார்வையிடுவாராக.

II. சம்பவச்சருக்கத்தில் "கடன் ஞாலமுழுது முய்த்திடு மகவருளெனப் பெருமுனியு மக்துறைசேர்ந்தான்" எனவும்,

III. "பராசரன்றருமுனிநினைவொடு கருப்பதித்து மீளவுஞ்சென்று" எனவும்,

IV. அருச்சுனன் றபசிலைச் சருக்கத்தில் "பரிவுடன் முனிவன்மாற்றம் பணிந்துதன்றலை மேற்கொண்டு" எனவும் போந்த செய்யுட்களில் முனி என்னும் மொழி வியாசமுனிவரை உணர்த்தியவாறு காண்க.

V. மகாபாரத வனபருவத்து முப்பத்தேழாம் அத்தியாயத்து

[illegible] ।
[illegible] ॥

கஸ்யசித்வத காலஸ்ய தர்மராஜோயுதிஷ்டிர: ஸம்ஸ்ம்ருத்யமுநிசந்தேசமிதம்வசந மப்ரவீத்॥

"சிலகாலஞ் சென்றபின் யுதிஷ்டிரராகிய தருமராசர் முனிவருடைய ஆஞ்ஞையை நினைந்து இவ்வசனத்தைச் சொல்வாராயினர்" என்னும் முதற்சுலோகத்திலே முனி என்னும் மொழியினுற் குறிக்கப்பட்டவர் வியாசமுனிவரேயாம். இன்னும் வியாசரைச் சுட்டுதற்குப் போதரும் முனிமொழிகள் வேண்டியவாறு வேண்டுமேற் காட்டச் சித்தமாயிருக்கின்றேம். மிக அரிதாய்க் கண்டெடுத்த முனிமொழியால் மாணிக்கவாசக சுவாமிகள் உணர்த்தப்பட்டாராக, நாம் அதினும் கதித்[illegible]பிரமாணங்களால் வியாசரை உணர்த்தப் பிரமாணங் காட்டினேமாதலின் நமது பக்ஷம் செயமடைந்ததென்றறிவாராக. ஆளுடைய பிள்ளையாரும் வாகீசரும் முனிவர் எனப்பட்டார் என்றமைக்குப் பிரமாணங் காட்டியவாறு போல, நாமும் வியாசர், சூதர், பராசரர், துருவாசர், அகஸ்தியர், விசுவாமித்திரர் முதலிய எத்தனையோ முனிவர்கள் முனிவர் எனப்பட்டார் என்பதற்குப் பிரமாணங்கள் அளவிறந்து காட்டவல்லேம். அங்ஙனம் காட்டுவதினுல் எய்தும் பயன் யாது மின்றென்று விடுத்தேம். இங்ஙனம் வியாசரை "முனி"

என்னும் பதத்தினால் செய்யுட்களில் வழங்கிய பிரமாணங்கள் மிகுதி பற்றி யிருப்பனவாக, திராவிடப் பிரகாசிகையில் "முனிமொழி வியாச சூத்திர மென்றங்ஙன முரைத்தாரை, அப்பொருள் செம்பொருள் இலக்கணைப்பொருள் குறிப்புப்பொருள் என்னும் மூன்றனுள் யாதெனக் கடாயினார்க்கு, அது செம்பொருளென்றல் பொருந்தாது; என்னை? வழக்கின் கண்ணாதல் செய்யுட்கண்ணாதல் நிகண்டு நூல்களினாதல் முனி வியாசமுனி வரை உணர்த்துதற்கும்மொழி அவர் சூத்திரத்தையுணர்த்துதற்கும் பிரயோக மின்மையான்" என்று அபத்தம் எழுதித் தமிழுலகத்தை வஞ்சிக்கலாமா!! முனி என்பது வியாசமுனிவரை உணர்த்துதற்குஞ் செய்யுட் பிரயோகமில்லை என்றவர் மேலே காட்டி நாட்டிய பாரதத்து வலிய பிரமாணங்களுக்கு யாது பதிலளிப்பார்? இனி முனிமொழி என்று வியாசமொழி என்ற துணையானே வேதாந்த சூத்திரத்தின் (உத்தரமீமாஞ்சையின்) பாலதாகும். திருமூலர் சொல் என்ற துணையானே அது திருமூலர் திருமந்திரத்தின் மேலாயவாறு போலாம். சூடாமணி நிகண்டின் ஒலிபற்றிய பெயர்த்தொகுதியின் "மாற்றமே மொழியே ஈரே" என்னும் இரண்டாஞ் செய்யுளில் "மொழி" "வாக்கு" "சொல்" என்பன ஒருபொருட் கிளவியாமாறு பெறப்படும். ஔவையாரருளிய "தேவர் குறளும்" என்னும் திருவெண்பாவில் உரைக்கப்பட்ட முனிமொழியினால் உணர்த்தப்பட்டது உத்தர மீமாஞ்சையாகிய வேதாந்த சூத்திரம் என்று யூகித்துணர்ந்த மாதவச் சிவஞானயோகிகளாகிய திராவிட மகாபாஷ்யகாரப் பெரியோர் சகலாகம பண்டிதரால் அருளப்பட்ட சிவஞான சித்தியின் "மறையினாலயனால்" என்னும் திருச்செய்யுளில் "வாக்கினால்" என்னும் பதத்தைக் கண்டபோது, வாக்கும் மொழியும் ஒருபொருட் கிளவிகள் என ஓர்ந்து, "வாக்குக்கு" வேதத்தின் ஞானகாண்டப் பொருளை நிச்சயித் துணர்த்தும் உத்தரமீமாஞ்சை (வேதாந்த சூத்திரம்) என்று பொருள் வரைந்து, பின் சீட பரம்பரையானும் உலகுக்குணர்த்தவேண்டி அச்சிவஞானயோகிகள் முனிமொழி வேதாந்த சூத்திரமாதலைத் தமது முதன் மாணாக்கராகிய திருத்தணிகைக் கச்சியப்ப முனிவர்க்கு அறிவுறுத்த, கச்சியப்பமுனிவர் அதனைத் தமது மாணாக்கர் கந்தப்பையருக்கு விளக்க, கந்தப்பையர் தமது சேஷ்ட புத்திரராகிய விசாகப்பெருமாளையர்க்கு அதனை உணர்த்த, அவ்விசாகப்பெருமாளையர் முனிமொழி வியாசரது வேதாந்தசூத்திரம் என்று அச்சிலேற்றி யாண்டும் பரப்பிவிட, இராமாநுஜகவிராயர், ஆறுமுகநாவலர், வித்தியாவிசாரணைத் தலைவர், மற்றைப் பாதிரிமார் முதலியயாவரும் அங்கங்கே சுருக்கியும், விரித்தும், இங்கிலிஷில் மொழிபெயர்த்தும் நல்வழி வெண்பாவை உலகிலே நல்வழியிற் பிரகாசப்படுத்தினார்கள். வின்பிரெட் * பாதிரியாரும் தமது

* Bev. S. Winfred.



நல்வழி மொழிபெயர்ப்பில் "முனிமொழி" என்றதை * "வியாசரது வேதாந்தசூத்திரம்" என்று 1872ம் வருஷம் மொழிபெயர்த்து அச்சிட்டார்.

திராவிடப் பிரகாசிகைநூலார் "முனிமொழி" யில் கண்ட "மொழி" என்னும் பதம் வேதாந்த சூத்திரத்தை உணர்த்தற்குப் பிரயோகம் காட்டல் வேண்டுமெனக் கடாவ, நாம் "மறையினாலயனால்" என்னும் சிவஞானசித்திச் செய்யுளின் "வாக்கு" என்னும் பதத்துக்குச் சிவஞான சுவாமிகள் உரைத்த உரையினால் பெறப்பட்டதென்று மேலே இறுத்தவாறு விடையளிக்குங்கால், அவர் "மறையினால்யனால்" என்னும் செய்யுட் பொருள்கொண்டு "முதல்வனியல்பு வேதமுதலியவற்றால் அறிதற்கரியதும் என்று பொருள்கொண்டமைபற்றி வேதாந்தசூத்திரத்தினாலும் முதல்வனியல்பு அறியப்படாது என்றாயிற்றே என்று கூறி, அதனால் நமது பக்ஷம் வெற்றிபடைக்காதென் பாரேல், நாம் "அவையெல்லா மருமறையாகமத்தே யடங்கியிடும் அவையிரண்டு மரனடிக்கீழடங்கும்" என்னும் சித்தியார்த் திருச்செய்யுட் பாகத்தைக் காட்டி வேதங்களோடு ஒருநெறிப்பட மதிக்கப்பட்ட சிவாகமமும் வேதத்தைப்போல திருவடிக்கீழ் அடங்குகின்றமையால், மறையினால் அறியப்படாதவர் என்ற துணையானே ஆகமங்களானும் அவரியல்பு அறியப்படாததென்றாயிற்றென்பதும் பெறப்பட, வேதாந்த சூத்திரத்தில் மாத்திரம் தோஷமேற்றி அதனால் அவரியல்பு அறியப்படாதென்று கூறுவதினால் எய்தும் பயன் யாதென்று கடாவி மறுத்து விடுவாம்.

திருவள்ளுவர் சிறப்புப்பாயிரத்தில் உக்கிரப்பெருவழுதியார் "நான்மறையின் மெய்ப்பொருள்" எனவும், ஆசிரியர் நல்லந்துவனார் அருமறையும் போற்றி யுரைத்தபொருளெல்லாந் தோற்ற" எனவும், காவிரிப் பூம்பட்டினத்துக் காரிக் கண்ணனார் "மெய்யாய வேதப்பொருள் விளங்கப் பொய்யாதுதந்தான்" எனவும், சேலூர்க்கொடுஞ் செங்கண்ணனார் "வேதப் பொருளை விரகால் விரித் துலகோரோதத் தமிழாலுரை செய்தார்" எனவும், களத்தூர்க்கிழார் "அருமறைகளைந்தும் சமயநூலாறும் நம்வள்ளுவனார் புந்தி மொழிந்த பொருள்" எனவும் "தேவர்குறளை"ப் போற்றினமையால், அத்தேவர் குறள் உத்தரவேதமாய் நிலைபெறுமென்பது திராவிடப்பிரகாசிகை யுடையார்க்கும் உடன்பாடேயாக, இப்போது வேதாந்த சூத்திரத்தினால் முதல்வனியல்பு அறியப்படாதென்று மறுக்குந்துணையானே மறையினாலும் அறியப்படாதது என்று பெறப்பட்டு, அம்மறையின் பொருளாய் உத்தரவேதமாய் ஒருங்கு கணிக்கப்பட்ட தேவர் குறளினாலும் அறியப்படாதென்றாயிற்றே! அங்ஙனமாகவும், தேவர் குறளை மாத்திரம் பொருட்படுத்தி முனிமொழியை மாத்திரம் பொருட்படுத்தாது விடுத்தமைக்குக் காரணம்

* The Vedantic Sutra of Vyasa

என்னை என்றும் கடாவி மறுப்பேம். எவ்விதத்தினாலும் தப்பவொட்டேம். இங்ஙனம் வேதாந்த சூத்திரத்துக்கு அவர் ஆரோபிக்கும் தோஷம் திருநான்மறை முடிவுக்கும் எய்தும் என்றும் ஓர்வாராக.

“முனி” என்பது வியாசமுனிவரை உணர்த்தவும், “மொழி” என்பது உத்தரமீமாஞ்சையை உணர்த்தவும் பிரயோகம் காட்டி விளக்கினேம். “முனிமொழி” என்றது வியாசசூத்திரம் என்று “ஓர் முறையுமின்றி உரைத்தேம்” என்றவர் இனித் தமது நாவை அசைத்து வரையக் கைநீட்டுவார்தாமோ!! இங்கே இலக்கணைப்பொருள் குறிப்புப்பொருள் யாதும் வேண்டாது, செம்பொருண் மாத்திரையானே முனிமொழி வேதாந்த சூத்திரம் என்று இயன்முறையால் நிறுத்திக்கொண்டேம். அடைமொழி யாதும் பெறாத வாக்கு (மொழி) என்னும் பதத்துக்குச் சிவஞானசுவாமிகள் உத்தரமீமாஞ்சை என்று பொருள்படுத்துவாரேல், முனி என்னும் அடைமொழி கொண்ட மொழி என்னும் பதம் முனிமொழி என நின்று வியாசசூத்திரம் என யாது காரணத்தினாற் பொருள் படுத்தப்படாதோ அறிகிலேம்.

தேவர் குறளும் என்னும் திருவெண்பாவில் குறள், தமிழ், சொல் என்பன தேவர், மூவர், திருமூலர் என்னும் அடைமொழி கொண்டு நின்றாற்போல, கோவை திருவாசகமும் முனிமொழியும் என்னும் அடைமொழி வேண்டிற்றென்பாரேல், நாம் திருநான்மறை முடிவு ஓர் ஆக்கியோன் அடைமொழி வேண்டாதவாறுபோல, கோவை திருவாசகமும் ஆக்கியோன் அடைமொழி வேண்டாது நின்றதென்பேம். ஆதலின், முனிமொழி என்பது வியாசரது வேதாந்த சூத்திரத்தின் மேலதாக, வேதாந்த சூத்திரமாகிய மொழியும் “முனி” என்னும் அடைமொழிகொண்டு நடந்தது என்பேம்.

வியாச சூததிரத்தில் ஓர் சிவசப்தமேனும் காணப்படாதிருப்ப, அதனை எவ்வாறு தேவார திருவாசகங்களோடு ஒப்பநிறுத்தலாம் என்பாரேல், திருவள்ளுவநாயனார் அருளிய திருக்குறளினும் ஒரு சிவசப்தம் காணப்படாமையால், அது எங்ஙனம் தேவார திருவாசகங்களோடு ஒப்ப நிறுத்த வாய்ந்தது எனக்கடாவி மறுப்பேம்; ஆண்டு ஆதிபகவன் என்பது சிவபிரானையே உணர்த்திற்றென்று பிரமாணம் விடுப்பாரேல், நாம் வியாசரது முதற்சூத்திரத்துப் பிரமமும் சிவபிரானையே உணர்த்திற்றெனப் பல உபநிடதோபப்பிருங்கணப் பிரமாணம் விடுப்பேம். பாணினி, சைமினி, அகஸ்தியர் முதலிய முனிவர் பலர் நூல் செய்திப்பாராக, அவரையெல்லாம் பொருட்படுத்தாது வியாசரைப் பொருட்படுத்தினது யாதுபற்றி என்பாரேல், பிறமுனிவர் செய்த நூலெல்லாம் தேவார திருவாசகத்துப் பொருள் கொடாதுபோக, வேதாந்த சூத்திரம் ஒன்றே அப்பொருள் தந்து நிற்றலின் வியாசமுனிவரே எடுத்தாளப்பட்டார் என்பேம்.



வியாசர் பசுவர்க்கத்துட்பட்டவர் எனவும், சித்தாந்த நெறியறியாதவர் எனவும், அதனால் அவர் எழுதிய வேதாந்த சூத்திரம் பொருட் படுத்தப்படாதெனவும் ஆக்ஷேபிப்பாரேல், சிவஞான சுவாமிகள் சிவஞானசித்தியார் “சித்தாந்தத்தே சிவன்றன் றிருக்கடைக்கண் சேர்த்தி’ என்னும் திருச்செய்யுட் பொழிப்புரையில் “சித்தாந்த நெறி வீடுபேற்றிற்கு நேர்வழியென வாயு சங்கிதை சிவகீதை முதலியவற்றுள் விரித்தோதப்படுதலான்’ என்று காணப்படுதலால், வாயுசங்கிதாதிகளுக்குக் கர்த்தாவாகிய வியாசர் சித்தாந்த நெறியறியாதவர் என்னும் கூற்றுப் புறவாழியில் ஒழிங்கிற்றென்க.

சிவசாரூப்பியமுறும் ஞானயோகிகளுடைய பிரமலோகம் (சிவலோகம்) வரையிற்றான் வேதாந்த சூத்திரத்திலே பேசப்பட்டதென்பாரேல், நாம் யோகப்பெயராற் கூறப்பட்ட வேதாந்த உபநிடதத்தினும் பிரமலோகம் வரையிற்றான் பேசப்பட்டதென்று பல பிரமாணங்காட்டி மறுப்பேம்.

இனி உபநிடதங்களைமாத்திரம் எடுத்தாண்டது அமையாதோ? அப்பொருள் பயக்கும் வேதாந்த சூத்திரத்தையும் ஔவையார் எடுத்தாண்டது மிகை என்பாரேல், நாம் மூவரருளிய தேவாரங்கள் எடுத்தாளப்பட்டிருப்ப, ஔவையார் அப்பொருள்பயக்கும் கோவை திருவாசகத்தை யாதுபற்றி ஆண்டார் எனக் கடாவி மறுப்பேம்.

ஏத்திடு சுருதிக ளிசைக்கு மாண்பொருண்
மாத்திரைப் படாவெனு மாசில் காட்சியர்
பார்த்துணர் பான்மையாற் பலவசைப்படச்
சூத்திரமானவுஞ் சொற்று வைகினான்.

என்னும் கந்தபுராணத்தின் திருவிருத்தங்கொண்டு வியாச சூத்திரம் சைவசித்தாந்தப்பாற் பட்டது என்று கொண்டேமாயின், அது “சித்தாந்த சைவ மாசில் காட்சியர் பார்த்துணர்பான்மையால் என்று விதப்புறாது பொதுவுரையாய் நிற்றலால் அது கொண்டு அங்ஙனம் கோடல் பொருந்தாது” என்று திராவிடப் பிரகாசிகை நூலார்கூறுகின்றார். இதனையும் மறுத்துக் கூறுதும்:—

ஈண்டு “மாசில் காட்சியர் என்றது மாத்திரம் சைவசித்தாந்திகளை உணர்த்தாதென்றும், அதனாற் சைவசித்தாந்த மாசில் காட்சியர் என்று விதப்புறல் வேண்டும் என்றும் கருதுகின்றார். “உருவியமலமே மாசு” என்னும் நிகண்டுப் பிரமாணத்தானும், “கசடு மலினமுங் கறையு மழுக்கும் மலமுங் களங்கமும் மாசாகும்மே” என்னும் பிங்கல நிகண்டினாலும் “மாசு” ‘மலம்’ என்பன ஒரு பொருட் கிளவி என்றுணர்க. உணரவே, மாசில் காட்சியர் என்றது மலம் நீங்கிய தெளிவுக்காட்சியை யுடையார் மேற்று. ஞானயோகத்தை உணர்த்தும் சிவஞான போதத்துப் பத்தாஞ் சூத்திரத்தினால் தெளிவுக்காட்சி யுடையோர்க்கே மலம் நீங்குமென்பது பெறப்படும். கண்ணொளி,

யோடு கூடிய வழியும் இது ஞாயிற்றின ஒளி என அட்பெற்றியதாய்க் காண ப்படும் ஞாயிற்றின் காட்சி தெளிவுக் காட்சியாமாறு போல, உயிர் முதல்வ ேனாடொனாய் நின்றறியினும் தானென வேறு காணப்படுமாறின்றி அவனோ டொற்றுமைப்பட்டு நிற்பது தெளிவுக் காட்சியாகிய மெய்யுணர்வேயாம். அம்மெய்யுணர்வினை யுடையார்க்கு ஆணவமலத்தின் குணங்களாகிய காமம் வெகுளி முதலியன இல்லையாம் என்றோர்ந்தே திருவள்ளுவ நாயனார்,

"காமம் வெகுளி மயக்க மிவைமூன்ற
னாமங் கெடக்கெடு நோய்."

என்றருளினார். "இருணீங்கி யின்பம் பயக்கும்" என்னும் திருவெண்பாக் கண்ணதாகிய "மாசறு காட்சியவர்" என்பதற்குப் பொருள் "மெய்யுணர் வினையுடையார்" என்றார் பரிமேலழகியார். "நிலைப்பட்ட மெய்யுணர்வு நேர்பட்ட போதி, லலைப்பட்ட வார்வமுதற் குற்றம்போ லாயினார்" என, மேலைத் திருக்குறட் பொருளை அடக்கி யுரைத்தார் ஸ்ரீசேக்கிழார் நாயனா ரும் என்க. சைவசித்தாந்திகள் சிவபோகச் செல்வ முடையராம் என்பது "ஏகமாய் நின்றே யிணையடிகளொன்றுணரப் போகமாய்த் தான் விளைந்த பொற்பினான்" என்று சிவஞான போதம் கூறுதலான், இந்தச் சிவபோக நிலைக்க ணின்றவர் சைவசித்தாந்த பரமாசாரிய சுவாமிகளாகிய சுந்தரமூர் த்தி நாயனார் என்பது "முடிவிலாத சிவபோகம் முதிர்ந்து முறுகி விளைந்த தால்" என்னும் பெரிய புராணச் செய்யுளால் அறியப்படும். படவே, இச் சைவசித்தாந்தச் செல்வர் "மெய்புணர்ந்தார், நன்னுதலா யென்னுடைய நாதனருளாற் குளத்திற், பொன்னடைய வெடுத்துனக்குத் தருவது பொய் யாதென்று" என்னும் திருச்செய்யுளால் மெய்யுணர்ந்தார் எனப்பட்டார். ஆதலின், "மாசறு காட்சியர்" மெய்யுணர்வினையுடைய சைவசித்தாந்தி களே யாமாதலின், "மாசில் காட்சியர்க்கு" பின்னரும் "சித்தாந்தசை வம்" என ஓர் விசேஷணம் வேண்டிற்றெனச் சபாபதி நாவலரவர்கள் அவா வினமை மிகையாம் என்க.

உமாபதி சிவாசாரிய சுவாமிகளாற் பௌஷ்கராகம விருத்தியில் "ஸ்ரீக ண்டாசாரியர் பாஷ்யம்" என்று மாத்திரம் கூறப்பட்டதேயன்றிச் "சிவாத் துவித பாஷ்யம்" என்று கூறப்படவில்லை.

இதுகாறுங் கூறியவாற்றான் "முனிமொழி" என்பது செம்பொருளி னால் வியாச சூத்திரத்தின் மேற்றென்று பிரமாணங்காட்டி இயன்முறை யான் நிறுத்தினதோடமையாது, "வேதாந்த சித்தாந்த அத்துவித விவேக சபையார்" பெயர்ச் செடியுண் மறைந்து புகுந்து திராவிடப் பிரகாசிகை நூலார் நம்மைக்கடாவிய வினாக்களுக்கெல்லாம் தக்கவிடை இறுத்து விட் டோம் என யாவரும் உணர்ந்து கொள்வார்களாக.

ஸ்ரீ காசிவாசி-செந்திநாதையர்.



# ÆSOP'S FABLES.

## ஈஸாப் கட்டுக்கதைகள்.

### II. கழுதையும் வாலில்லாக் குரங்கும் அகழெலியும்.

ஒரு கழுதையும் வால ... ங் குரங்கும் தங்கள் மனக்குறைகளை யொத் துப் பார்த்தன. கழுதை தனக்குக் கொம்புகள் வேண்டுமென்று முறையிட் டது. வாலில்லாக் குரங்கு, தனக்கு வாலில்லாததனாற் சங்கடப்பட்ட து. இப்பேச்சைக் கேட்டிருந்த வோர் அகழெலி "நில்லுங்கள், நட் ... குறை களை விட்டொழித்து, நீங்கள் வகித்திருப்பதற்காக நன்றியுள்ளவரா யிருங் கள். எளிய முற்றுங் குருடாகிய வகழெலியோ உங்களனைவரினும் மிக்க கேடான நிலைமையில் இருக்கின்றது" என்று சொல்லிற்று.

நீதி:—நம்மைக்காட்டிலும் மற்றையோர்கள் மிகக் கேடான நிலைமையி லிருக்கும்வரை நாம் முறையிடக் கூடாது.

அமைந்தமாறு:—திருப்தியென்னும் நற்குணத்தையடைய வெகு நல்ல வழி, நம்மைக்காட்டிலும் மிகக்கேடான நிலையிற் பலரிருக்கின்றன ரென்ப தை நினைத்துக்கொள்வதேயாம். ஏனென்றால், சாதாரணமாய் நாம் நம் அய லாரிடத்துள்ளதோர் சிறந்த நற்பொருள் நம்மிடத்தில்லை யெனினும், அவ னிடத்தில்லாத வேறு சில நம்மிடத்திலுள்ளனவாம் என்னும் இம் மனவ மைதி காணுதவர்கள் சிலரே. "தான் ஒரு நிலமிழந்தத னிமித்தம் தன்னோடு அனுதாபப்பட்ட ஒருவனுக்கு அரிஸ்டிப்பஸ் என்போர் அளித்தவிடை எனக்கு மிக மகிழ்ச்சியைத் தருகின்றது. ஏன்? எனக்கு இன்னும் மூன்று நிலங்களிருக்கின்றன. உனக்கோ ஒன்றைத்தவிர வேறொன்றுமில்லை. அத னால், நீ எனக்காக வருத்தப்படுவதைக் காட்டிலும் நான் உனக்காக வருத் தப்படவேண்டும் என்றார்" என்று அட்டிஸன் என்பவர் கூறினார். நம்மைக் காட்டிலும் மிக்க வதிர்ஷ்டமுள்ளவர்களைப் பார்ப்பதே தொழிலாகக் கொண் டால், தீக்குணம் யாவற்றினும் மிகவும் இழிந்ததும் இன்பத்துக்குப் பெருங் கேடு விளைப்பதுமாகிய பொறாமைக்கு ஆளாய்விடுவோம். "திருப்தியே யியல்புடைச் செல்வம்" என்றார் சாக்ரடீஸும். ஈசுவர விதி நமக்குக் கொடுத்திருப்பதற்காக நாம் நன்றியுள்ளவராயிருந்து, அது கொடாமல் வைத்திருக்கிற செல்வங்களுக்காக ஆசைப்படுவதை விட்டொழிவோம்.

திருப்தியென்னும் நற்குணத்தை வளர்ப்பது இன்ப விதை விதைத்தலாம்.

"நம்மின் மெலியாரை நோக்கித் தமதுடைமை
யம்மா பெரிதென் றகமகிழ்க."

நீதிநெறிவிளக்கம்

## III. சிங்கமும் நான்கு எருதுகளும்.

நான்கு எருதுகள் ஒரே வெளியில் ஒன்றுக்கொன்று எப்பொழுதுங் கிட்டவே யிருந்து சேர்ந்து மேய்ந்தன. ஒரு சிங்கம் அடிக்கடி அவற்றைப் பார்த்து அவைகளைத் தனக்கு இரையாகக் கொள்ள மிகவும் விரும்பிற்று. ஆனால் அவைகளில் யாதேனும் ஒன்றன்[illegible]ந்தே[illegible]பயமாய்ப் பாயக்கூடிய போதிலும் அவைகள் சேர்ந்திருக்கும்வரை தன்[illegible]ஜயித்துவிடுமென்று தெரிந்த சிங்கம் அவைகளில் யாதேனுமொன்றன்மீதும் பாயத் துணியவில்லை. ஆகையாற் பத்திரமாய்க் கொஞ்சத் தூரத்திலிருந்து பார்ப்பதோடு திருப்தியடைந்திருந்த[illegible]. அவ்வாறாகவும் அவைகளைப் பிரிப்பதற்கு ஒருபாயங் கருதி அன்பில்லாச் செவிச்சொற்களாலும் தீய குறிப்புக்களாலும், ஒன்றைப்பற்றி மற்றொன்று சொன்னதுபோலச் சொல்லிக் குரோதத்தையும் அவைகளிற் பிரிவையுந் தூண்டும்படி முயலுவேன் என்று மனவுறுதி கொண்டது. அவ்வாறே சிங்கங்கொண்ட எண்ணங் கைகூடிற்று. எருதுகள் தமக்குள் மனஸ்தாபப்பட்டு முன்போல் ஒருமித்து வாழாமல் தனித்தனி பிரிந்தன. இவ்வாறு ஒவ்வோர் எருதும் தனித்து மேய்வது கண்டவச்சிங்கம் அவற்றின்மீது தனித்தனி பாய்ந்து கொன்று அவற்றை ஒன்றன்பின் னொன்றாகத் தின்றது.

நீதி:—ஒற்றுமை பலமாம்.

அமைக்குமாறு:—ஓர் இராச்சியமாவது வீடாவது தனக்குள்ளே பிரிந்தால் நிலைத்து நில்லாது. மனித சபைகளிலெல்லாம் அவை பெரும் பகுப்புக்களாகப் பகுக்கப்பட்டபோதிலும், அல்லது தனித்தனி குடும்பங்களாக வகுக்கப்பட்டபோதிலும், ஒன்றுமையே பலத்திற்கு மூலமந்திரமாம். மனிதருளத்திற்போர் நடிக்கத்தை விளக்குமாயினும் அது நன்மையோடு கலவாத தனித்தீமை யன்று. ஏனெனில், அதனால் ஜனசமூகத்தின் வாழ்நாள் உற்சாக முறுவதனோடு ஒற்றுமையின் இன்றியமையாமையும் வலியுறுகின்றது. சிறந்தோர்அரசியற்புலவன் ஜனசமூகத்தின் பகையும் போர்புரியுந் தன்மையும் அல்லாமல் ஏதேனும் ஓர் எண்ணமேனும் ஒரு வடிவமேனும் நாகரிகமுள்ள மனிதர் குழாம் மிகவுமரிதாய்க் கண்டு பிடித்திருக்கு மென்றும், ஒற்றுமை யூக்கம் பிறர் பகைச் செயல்களால் உதவி செய்யப்பட்டாலன்றி எக்கூட்டத்தார்க்கும் தமக்குள்ளே ஒற்றுமையுணர்ச்சி விளைப்பதற்கு நாம் வீணில் எதிர்பார்ப்போமென்றுங் கூறினன். சனவொற்றுமையைப் பெரிதும் வளர்ப்பது போரேயாம். ஒரு குடி ஜனத்தின் ஒன்றின முயற்சியைத் தங்கள் பொதுக்காவல் நிமித்தம் பலப்படுத்தும் அக்கவலைக் கடலின் தனிமக்கள்சுயநயம் ஆழ்ந்து போகின்றது. நமக்கு இயற்கையிலமைந்த அன்போடு கூடிய அனுதாபங்களினால் மட்டும் விளைந்துழி வ[illegible]யற்றுப் பே[illegible]தியதன்றாய் [illegible]ற்கும் ஒரு குலத்தின் பொதுஜன நாட்டம்,



புறப் பகைஞர்களை எதிர்க்கவேண்டி யிருப்புழி, பேருக்க முறுமாறு தூண்டப் படுகின்றது. தனி வாழ்க்கையில் நேசர்கள் பழக்கம் சுற்றத்தாருக்குப் பேரினிமை பயக்கும். நாம்நம் நேசத்தைப் பாதுகாக்க வேண்டுமென்றால், பொய்ப் பேச்சினாற் பிளவுபடாதவாறும் குண்டுணி மாக்களுடைய வீண் செய்திகளாற் கெட்டுப் போகாதவாறும் நாம் ஜாக்கிரதையா யிருக்க வேண்டும்.

"கூடிவாழ் வோரே குறையா வலியினர்மற்
றோடிவில கிட்டா ருறுவ துறுகவென்றே
நாடி யறியா நமரங்க டோவன்றோ
பீடுடைய தாமரைகாள் பெட்பி னெருங்குறைவீர் ?"

தாமரைத்தடம்
ம. சு. கோவிந்தசிவன்.

## REVIEWS OF BOOKS.

## புத்தகக் குறிப்புக்கள்.

### அரிசமயதீபம்:

[இஃது இயற்றமிழாசிரியரான ஸ்ரீமான், கா-இராமசாமி நாயுடவர்களாற் பரிசோதிக்கப்பட்டு, ஸ்ரீமான்-திருமணம்-செல்வக்கேசவராய முதலியார் அவர்கள், எம். ஏ. செய்துவரும் ஆதரவும் பேருதவியுங்கொண்டு அச்சிடப்பட்டு வருகின்றது. இது சே. முத்துகிருஷ்ணநாயுடு அவர்களாற் சஞ்சிகை ரூபமாக வெளியாகின்றது. விலை சஞ்சிகையின் அளவுக்குத் தக்கப்படி யேற்படுத்தப்பட்டுளது.]

இவ்வரியநூலை யருளிச்செய்த பாவலர் கீழை-சடகோபதாசர் என்பார். இதன்கண்ணே கூறப்படும் விஷயம் ஸ்ரீமத் வைஷ்ணவாசியர்களது குருபரம்பரையேயாதலின் இதனைச் 'செய்யுட் குருபரம்பரை' அல்லது 'குருபரம்பரைச் செய்யுள்' என்னலாம். விசேஷமான திரிசொற்கள் பயிலாது அருகிய இலக்கணப்பிரயோகங்கள் மேவாது, செந்தமிழியற் சொற்களாலாக்கப்பட்டு இனியநடையும் ஒழுகிய லோசையுமுடையதாய்க் கற்றோரும் மற்றோரும் ஒருங்கே பாராட்டற் பாலதாய் அமைந்துளது இந்நூல். இதன் அருமை பெருமையறிந்தே நமது கனம்பொருந்திய சர்வகலாசங்கத்தார் இதனை 1904-ஆம் வருஷத்துப் பி. ஏ. பரீக்ஷைப்பாடங்களு ளொன்றென ஏற்படுத்துவாராயினர். இந்நூலின் முதலிரண்டு சருக்கங்களாகிய பரமபதச் சருக்கமும் ஆதியோகிச் சருக்கமுமே பாடப்பகுதியாம். இனி, ஆழ்வார்கள் ஆசாரியர்கள் வைபவமான இந்நூலுக்குச் சமதமாத்யாத்ம குணசம்பன்னர்களாகிய ஸ்ரீமான் கூ. முதலியாண்டான் ஸ்வாமிகள், இயற்றமிழ்ப் பிரபன்ன வித்துவான் ஸ்ரீமான்-கொ. பள்ளிகொண்டான் பிள்ளையவர்கள் என்னும் ஆசிரியர்கள் நியமனத்தின்வண்ணம் இந்நூலுக்குப் பொழி

ப்புரை யொன்றுசெய்து சேர்க்கப்படுவதாயிற்று. அதுதானும் வேண்டிய
வளவு விரிந்தும், அவசியமான விடங்களில் விசேடவிலக்கணங்கள் கூறி
யும், சாம்பிரதாயமான விடங்களிற் சாம்பிரதாயத்திற் கேற்றபடி பொருள்
சொல்லியுஞ் சொல்லாநின்றது. இந்நூலின் முதல் நான்கு சஞ்சிகை
கள் கண்ணுற்றேம். இன்னும் மற்றைச் சஞ்சிகைகளும் விரைவில் வெளி
வருமென நம்புகின்றேம். தமிழ்மக்களாவார் இத்தகைய நூல்களின்கண்
ஆர்வம்பாராட்டி மேற்கொண்டு போற்றுவாராக. மேலும் இவ்வரிசயதீபம்
சஞ்சிகைரூபமாய் வெளிப்பட்டுக் குறைந்தவிலைக்கு அகப்படுவதனால் யாவ
ரும் வாங்கி வாசிக்கத்தக்க நிலைமையிலிருக்கின்றது. இது பெறாப் படியா
மற்போனால் அது தமிழ்மக்கள்பாற் குறையேயாமன்றி வேறில்லை.

## ஸ்ரீ கிருஷ்ணசைதன்ய சுவாமிகள் சரித்திரம் :

[இது ம-௱-௱-ஸ்ரீ, பட்டு - விஜயரத்னப்பிள்ளையவர்கள், எவ். டி. எஸ்.
சென்னை வைஜயந்தி அச்சியந்திர சாலையிற் பதிப்பித்தது. இதன் விலை ரூ 2.
தபாற்கூலிவேறு.]

அனைவருக்கும் மோட்சசாம்பிராச்சியந்தர வல்லதாகப் பல்லோரா
னும் மதிக்கப்படுமிவ்வரியநூல் ம-௱-௱-ஸ்ரீ, திரு-பக்தவத்ஸலம், பி, ஏ.,
ம-௱-௱-ஸ்ரீ, வே - வேங்கட ஸ்ரீநிவாஸன் என்ற இருவர்களா லியற்றப்பட்
டது. அமிர்தபஜார்பத்திரிகையினாசிரியராகிய சிஷிர் குமார்கோஸ் அவர்
கள் - எம். ஏ., 'கௌராங்கபிரபு' என்றதோரரிய நூலாங்கில மொழியிலி
யற்றி வெளியிட்டனர். அந்நூலின் சாராம்சமனைத்து மித்தமிழ்நூலின்
கண்ணே யினிமைபெற மொழிபெயர்ப்புவகையாற் கொண்டுவரப்பட்டிருக்
கும் பான்மை யாவரானும் பாராட்டற்பாலதே. இந்நூலைத்திறந்தவுடனே
திறந்தானுக்குத் தரிசனங்கொடுப்பவர் ஸ்ரீ கிருஷ்ண சைதன்ய மூர்த்தியே
அஃதாவது அவரது திருவுருவப்படமொன்று நூலின் முகத்தேவைக்கப்பட்
டுளதென்பதாம். இந்நூல் பிரமஞான சபையின் அவயவியாகிய அனிபெ
ஸண்டு அம்மையவர்களுக்கும் அபயாநந்தஸ்வாமி யவர்களுக்கும் உலகின்
கண் அவ்வக்காலங்களிலே வெவ்வேறு மதங்களிற்றோன்றிய பக்தராயி
னோர் பல்லோர்க்கு முரிமையாக்கப்பட்டுளது. "எல்லாத் தருமங்களையும்
விட்டு என்னை யொருவனையே சரண மடைவாயாக ; நானுன்னைச் சமஸ்த
பாபங்களிலிருந்தும் விடுவிக்கிறேன் ; துக்கிக்கவேண்டாம்" என்றகட்டு
ரையை மேற்கொண்டது. இதற்கு ம-௱-௱-ஸ்ரீ, என். பாலசுப்பிரமணியமுத
லியாரவர்கள். எம். ஏ., ஆங்கிலத்தில் ஒரு முகவுரை யெழுதியிருக்கின்
றனர். இது தவிர இதற்கு நூலாசிரியர்களெழுதிய முகவுரையுமொன்று
ண்டு. அதன கண்ணே யவர்களெழுதியிருக்கு மிரண்டொரு விஷயங்கள்
தமிழபிமானிகள் யாவரானுங்கவனிக்கத்தக்கன. அவை பின்னேயெடுத்துக்
காட்டப்படும். "தமிழின் தற்கால நடையொழுங்கைப்பற்றி நூலாசிரியர்
கள் கொண்டவபிப்பிராயம் யாதெனில், ஒருபாஷையிருள்ளதாய்ச், குன்
றிக்குறைந்து ஒன்றுமிலதாகா தோங்கிவளரவேண்டியதாயின் அதனிடம்
கட்டாயம் அநேகமாறுதல்கள் காணப்படும் என்பதே. உலகவழக்கத்தி
லொருவகைச்சொல்லுருவம் ஊன்றிவிட்டதாயின் ஆரம்பத்தைநோக்கி அது
குற்றமுள்ளதாய்த் தோன்றினும் பின்னுள் மரபையனுசரித்து அதைஏற்ற
முள்ளதாகவே யெடுத்துக்கொள்ளல் வேண்டும். 500 - வருஷங்களுக்கு
முன் எழுதியதொன்னூல்களில் அவ்விதமாறுதல்களுக்கு ஆதாரம் இல்



லையேயென்று கூறுவது, அவதாரம் என்றவடசொல் ஆங்கிலபாஷையிலும்
சேர்க்கப்பட்டு அகராதியினிடங்காணப்படுவது 50. - வருஷத்துக்கு முன்
னும் அப்பாஷையினிடந் தோன்றுததினால் அதை அறவே யொழித்துவிட
வேண்டுமென்று அநுதாபப்படல் போலும். × × × அப்படியே தமிழி
லும் நன்னூலெழுதிய காலத்திலிருந்து இதற்குள்ளாக எத்தனையோ மாறு
தல்கள் விளைந்திருக்கின்றன. பாமரர்பேச்சு வழக்கத்தை அறவேதள்ளி
னும் பண்டிதர்கள் சொற்போக்கிலாகினும் அதிகமாயனுஷ்டித்துச் சொல்
வதே இன்றியமையாததாகிறது. இவ்வாறிலாது வெகுபழைய இலக்க
ணமே நமக்கு ஊன்றுகோலாவதென்றெண்ணி நடக்கமுயன்றால் நம்பாஷை
பேசப்படுவதற்கும் எழுதப்படுவதற்கும் விரும்பப்படாத அநேகவித்தியா
சங்கள் உண்டாகிப்பல்லோருக்கும் பயன்படாததாக இறந்தபாஷைகளில்
ஒன்றாய் மறைந்துவிடும். இவ்வாறு நவீனவழியை நாடிச்செல்வதிலும்
ஒருவர்க்கொருவர் அபிப்பிராயத்தில் மாறுபடுவாராயினும் எம்மாறுதல்கள்
கொள்ளத்தகுவன எம்மாறுதல்கள் கொள்ளத்தகாதன என்பதை முடி
வாய்க்காலமாகிற கடவுள் காட்டவேண்டுமே யன்றி மனிதரால் தேறித்
தெளியமுடியாது. × × × + ஒருவாக்கியத்திலெழுவாய் தோன்றாது
மறைந்து நிற்றல் கதைப்போக்கின்தன்மையாலும் சம்பாஷணையியல்பாலும்
தமிழ்ப்பாஷையிலக்கியத்திற்கு ஒத்ததென்று அவ்வாறே அநுஷ்டிக்கப்பட்
டிருக்கிறது. வேறு சில மாறுதல்களு மிந்நூலினிட மாங்காங்கே காணப்
படும். அன்றியும் பாஷைநயத்திற்குரியவடசொற்களை ஆங்காங்கேபிரயோ
கிப்பது கிரமமென்றும் தற்கால இலக்கியத்திற்கு ஒத்ததென்றும் அவ்வாறி
லாது வடமொழி போக்கிக்கடுந்தமிழ்மொழிகோடல் உசிதமன்றென்றும்
இந்நூலிடங் கொள்ளப்பட்டு இருக்கிறது. விரிக்கிற்பெருகும்." தெய்வத்
தன்மைவாய்ந்த இந்தமேன்மையான சரித்திரத்தின்கண் சோகரசமும்
பத்திரசமும் மிகுந்து ஒழுகுகின்றன. 'பக்திவினோதர்' என்னப்படும் கனம்
பொருந்திய ஸ்ரீகேதாரநாததத் அவர்கள் பதிப்பித்தவொருசிறியநூலும் இத்
தமிழ் நூலுக்கு உதவியாயிருந்தது. வடமொழியில் ஸ்ரீ சைதன்ய சுவாமி
சரித்திரத்தைப்பற்றி பலநூல்களிருப்பினும் அவற்றுளொன்றேனுமித்தமிழ்
நூலுக்கு ஆதாரமாகக்கொள்ளப்பட்டிலது. மேற்கூறியாங்கு ஆங்கிலநூல்
களிரண்டு இந்நூலாசிரியர்களுக்கு ஓராற்றானுதவிபுரிந்தனவெனினும் இவர்
கள் தமது சுயகற்பனா சக்தியாலாய விஷயங்கள் பலவற்றை தந்நூலின்கண்
காட்டியிருத்தலால் இத்தமிழ்நூலை அவ்வாங்கில நூல்களின் மொழிபெயர்ப்
பன்று என்று கூறுவதே ஏற்புடைத்தாகும். இச்சரித்திரத்துக்கு அங்க
மாக ஸ்ரீ பக்தவத்ஸலம்-பிஏ., இயற்றிய பாயிரம் மேற்புல விஞ்ஞானிகளது
சாஸ்திர முறையை யொட்டிச்செய்யப்பட்டதோர் அரியபகுதியாம். அதனை
யாம் பல்முறை படித்து ஆனந்தித்ததை எடுத்துரைக்கற்பாற்றே. அநேக
அருமையான ஆங்கிலக்கருத்துக்கள் வெகு சுலபமாகத் தமிழின் கண்ணே
கூறப்பட்டுள. இந்நூல் அமைந்திருக்கும் தன்மையாவரும் கொண்டாடத்
தக்கது. இந்நூலின்நடை எவ்விடத்திலாயினும் தடைப்படுவதின்றி ஆற்
றின் பிரவாகம்போற் செல்லுகின்றது. இந்நூல் நல்ல பளபளப்புள்ளகா
கிதத்திற் பெரிய எழுத்துக்களிற் கண்கவர்வனப்பினதாகப் பதிப்பிக்கப்பட்
டுளது. இஃது ஏறக்குறைய - 370 - பக்கங்கள் கொண்டது. இதனைத்
தமிழ்ப் பாஷாபிமானிகளும் பக்தகோடிகளும் வாங்கிப்படித்து உண்மையு
ணர்ந்து உய்வார்களென்று நம்புகின்றேம்.

## EDITORIAL NOTES.

## பத்திராதிபர் குறிப்புக்கள்.

திண்டுக்கல் இருப்புப்பாதை:—திண்டுக்கல்லிலிருந்து கோயமுத்தூருக்குப்போகவேண்டுமானால் திருச்சிராப்பள்ளி ஈரோடுமுதலிய ஊர்கள்வழியாகச்செல்லவேண்டும். இது மிகவும் சுற்றுவழி. நம் இந்திய கவர்ன்மென்டார் தென்னிந்திய இருப்புப்பாதை அதிகாரிகளுக்குத் திண்டுக்கல்லிலிருந்து பழனி, திருப்பூர், சத்தியமங்கலம், மேட்டுப்பாளையம் முதலிய ஊர்களின் வழியாய் இருப்புப்பாதை யேற்படுத்தக் கூடுமோவென்று பார்க்கக் கட்டளையிட்டிருக்கின்றார்கள். இருப்புப்பாதை சீக்கிரம் ஏற்பட்டுவிட்டால் மிகவும் நலம். திண்டுக்கல்லிலிருந்து பழனிக்குப்போவதற்குக் கட்டைவண்டியிலேறி மூன்றுநாட்கள் அவஸ்தைப்பட வேண்டும். இது சீக்கிரம் கைகூடுமென்று நம்புகின்றோம்,

சென்னையிற் பாதிரிமார் கூட்டம்:—இவ்விந்தியாவில் வெவ்வேறிடங்களிலிருந்த பாதிரிமார்கள் சென்னையில்வந்து கூட்டங்கூடுகிறார்கள். இக்கூட்டத்தின்கண் கனம்பொருந்திய டாக்டர் மில்லர்துரையவர்கள் அக்கிராசனாதிபதியாக வீற்றிருக்கும்படி யேற்பாடுசெய்யப்பட்டிருந்தது. டாக்டர் மில்லர்துரை யவர்களின் தேகஸ்திதி அசௌகரியப்பட்டிருந்ததனால் இவ்வேற்பாடு தடைப்பட்டது. டாக்டர் மில்லர்துரையவர்கள் இன்னும் வெளியிற் புறப்படும்படியான ஸ்திதியிலில்லை. அவர் விரைவிற் சுகப்படுக.

செந்தமிழ் :—இப்பெயர் கொண்டதோர் மாதாந்தத் தமிழ்ப்பத்திரிகை மதுரைத் தமிழ்ச்சங்கத்தாரால் சுபகிருது வருஷம் கார்த்திகை மாசம் தொடங்கி வெளியிடப்படுகின்றது. பத்திராசிரியராவார் சேதுஸமஸ்தானவித்துவானாகிய ரா. இராகவையங்காரவர்கள். இச்செந்தமிழ்ப் பத்திரிகையின் முதற்றொகுதியில் முதற்பகுதியைக் கண்ணுற்றேம். அதன் உள்ளுறைகளாவன:— பத்திராசிரியர் எழுதிய முகவுரையும், வி. கனகசபைப்பிள்ளையவர்கள் பி.எ., பி.எல்., எழுதிய "சோழ சக்கிரவர்த்திகள்" என்பதும், வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியாரவர்கள். பி.எ., எழுதிய "உயர்தனிச் செம்மொழி" என்பதும், பண்டிதர் ச. ம. நடேசசாஸ்திரிகள், பி.எ, எழுதிய "புராதன சரித்திர விஷய"மும். தி. ஈ. ஸ்ரீனிவாசாசாரியரவர்கள் மொழி பெயர்த்த "பிரதாப ருத்ரீயமு"ம் எஸ். நாராயணசாமி ஐயரவர்கள். பி.எ., எழுதிய "தருக்க சாஸ்திர" மென்பதும், அ. சண்முகம் பிள்ளையவர்கள் எழுதிய "நூண்பொருட் கோவை" என்பதும், பத்திராசிரியர் செய்தஉள வாராய்ச்சியுமாம். இனி இப்பகுதியி னிறுதியில் மாறன்பொறையனாரியற்றிய "ஐந்திணையைம்பது" எனுஞ் சங்கச்செய்யுளும், குணவீர பண்டிதரியற்றிய "நேமிநாதம்" என்னுஞ் சிற்றிலக்கணமும், தனித்தனி எட்வெட்டுப் பக்கங்களாக உரையுடன் பதிப்பிக்கப்பட்டிருக்கின்றன. இவை இப்பகுதியிலே முடியாமையின் பிற்பகுதிகளிலும் அச்சாகிவரும். இது தமிழ்ச்சங்க முத்திராசாலையிற் பதிப்பிக்கப்பட்டது. 68 பக்கங்கள் கொண்டது. பதிப்புக் கண்கவர் வனப்பினதா யிருக்கின்றது. இதன் சந்தா வருஷ மொன்றுக்கு ரூபா நான்கே. தனிப்பிரதியின் விலை அணா 8 ஆம். தமிழபிமானிகளனைவாரும் இச்செந்தமிழ்ப் பத்திரிகையைப் பெற்று மகிழ்வாராக.

161290
[stamp: ... 600 008]

# ஞானபோதினி

ஒரு மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

தாமின் புறுவ துலகின் புறக்கண்டு
காமுறுவர் கற்றறிந் தார்—திருக்குறள்.

சம்புடம் VI } 1903ஹு ஜனவரிமீ 20உ. { இலக்கம் 6.

## DELHI DURBAR.

## டெல்லி தர்பார்.

நமது இந்தியாவிலுள்ள மாநகரங்களுள் டெல்லி சரித்திர சம்பந்தமாக மிகப் பேர்படைத்ததென்பது யாவருமுணர்ந்த விஷயம். இம்மாநகரம், மொகலாய வரசாட்சிக் காலத்தில் தலைநகராயிருந்தது. இந்நகரமே தர்பார் நடத்துவதற்குத் தக்கதெனக் கண்டு ஏற்படுத்தினது மிகவும் உசிதமே. முன்னரே இயற்கையழகு மிகுந்துள்ள இந்த டெல்லிமாநகரம் செயற்கையழகும் உடன்பெற்றால் அதன் சிறப்பை யெடுத்துச் சொல்ல யாவரான் முடியும்?

தர்பார் நிகழ்ச்சிக்கென வகுத்த நாள் ஜனவரிமாதம் முதல் தேதியாயினும், நமது தேசாதிபதியும் இராஜப்பிரதிநிதியுமாகிய கர்ஸான் பிரபுவவர்கள் இரண்டு தினங்கள் முன்னரே டெல்லிக்கு வந்து நகரைப் பரிசுத்தப் படுத்தினார்கள். அவர் வரக்கண்ட வளவில், யாவும் ஒழுங்கும் அமைதியுமடைந்து சித்தமாயிருந்தன.

### உலா.

இராஜப் பிரதிநிதியவர்களின் ஊர்கோலம் டெல்லியில் 'வெள்ளி வீதி' என்னும் பெயருடையதோர் பெருவீதியின் வழியாய்ச் சென்று

JL
Rm 211,M97

டெல்லிக்கோட்டைக்கும் பெரிய மசூதிக்கும் இடையிலுள்ள பெரிய மைதானத்தைக் கடந்து சென்றது. முதற்கட் படைஞர் சென்றனர்; பின்னர் இராசப்பிரதிநிதி யவர்களும் கர்ஸான் பெருமாட்டியாரும் அலங்கரித்த அம்பாரிவைத்த யானைமேற் சென்றார்கள். பின்னர்க்கானுட் பிரபுவும் அவரது பத்தினியாரும் அதே விதமாய்ப் பிறிதொரு யானையின்மேற் சென்றார்கள். மொத்தத்தில் இப்பவனியிற் சென்ற யானைகளெல்லாம் இருநூறுக்கு மேலிருக்கும். கிட்சினர் பிரபு தம் மார்பின்மேன் வீரப்பதக்கங்கள் மின்னிப் பிரகாசிக்கக் குதிரைமேற் சென்றார். அதன்மேல் சுதேசவரசர் அணிவகுப்பு என்னும் படைஞர் குழாம் சென்றது.

### சேண்டாட்டம்.

அதற்குமேல் ஹைதராபாத்துக்கும், பிகானிருக்கும் டெல்லியை யடுத்த செண்டு வெளியில் குதிரைச் செண்டாட்டம் நடந்தது. பிகானிருடன் அவர்களது அரசருங் கூடியாடினார். அவ்வாட்டத்தில் அவர் கீழே திடீரென்று விழுந்து காயப்பட்டாரேனும் தைரியமாய் வேறொரு குதிரையின் மீதேறி மீட்டும் ஆடத் தொடங்கினார். வெற்றி தோல்விகள் இன்னார் பக்கமென்று வெகு நேரமட்டுந் தெரியவில்லை எனினும் இறுதியில் பிகானிர் பக்கமே வென்றது.

### வீற்றிருக்கை.

தர்பார் மண்டபத்தில் யாவரும் வந்து கூடினார்கள். அவரவர்கள் தத்தம் அந்தஸ்துக்கும் அதிகாரத்துக்கும் தக்க ஆதனங்களில் வீற்றிருந்தனர். காளமும் பூரியும் ஒலித்தன. பட்டாள வாத்திய கூட்டங்கள் பசும்புற்றரைமேல் நின்று நாள் முழுவதும் மிகவு மினிய கீதம் வாசித்துக் கொண்டிருந்தன. பீரங்கிகளைக் கொண்டு நூற்றொரு கவுரவ வெடிகள் விடுக்கப்பட்டன. காட்சி காண வந்த மக்களின் கூட்டமோ எள்விழற் கிடமில்லையென்று சொல்லத் தக்கவாறும், ஒருவர் மார்பிற் பூசிய சாந்தம் எழுவர் மார்பினும் பூசப்பட்டதென்னத் தக்கவாறும் அடர்ந்து நெருங்கி யிருந்தது. சிறிது நேரத்திற்கெல்லாம் தர்பார் மண்டபத்தின் மேடையின்மேல் ஒரு விமானத்தின் கூரையின் கீழ் வனப்பு வாய்ந்த வெள்ளியினும் பொன்னினும் இயன்ற ஆதனங்களில் இராஜப் பிரதிநிதியவர்களும் அவ



ரது மனைவியாரும் புனைவு நலம் வாய்ந்த வுடைதரித்து விசேட அழகுடன் வீற்றிருந்து விளங்கினார்கள். பின்னர்க் கானுட் பிரபு அவர்களும் அவரது மனைவியாரும் இராஜப்பிரதிநிதியவர்கள் பக்கத்திலே வீற்றிருந்தனர். உடனே அரசரது விளம்பரம் படிக்கப்பட்டது. அதன்மேல் இராஜப்பிரதிநிதியவர்கள் எழுந்து அரசர்க்குக் கவுரவம் பாராட்ட வேண்டிய முறைப்படி வெறுந்தலையாய் நின்று நம்முடைய சக்கரவர்த்தியாரவர்கள் அனுப்பிய கடிதத்தைப் படித்தார். அது கேட்ட யாவரும் அரசருக்குப் பல்லாண்டும் வாழ்த்துங் கூறி யாரவாரித்தார்கள். வெளியே நின்ற படைஞர் குழாங்களும் வாழ்த்துக் கூறி ஆர்ப்பரித்தன. சக்கரவர்த்தியாரின் பிரதிநிதியாக வீற்றிருந்தருளும் கர்ஸன் பிரபு அவர்கள் தர்பார்க் கொண்டாட்டத்திற்கெனப் போந்திருந்த சுதேச ராஜர்களின் வாழ்த்தையும் வந்தனத்தையும் ஏற்றுக் கொண்டார். கானுட் பிரபு அவர்கள் அவ்வரசர் குழாத்தில் ஒவ்வொருவரோடும் கைகோத்து உறவாடினர். சுதேச ராஜர்களிற் சிலர் தங்கள் வாள்களை இராஜ விசுவாசத்தின் அறிகுறியாக இராஜப் பிரதிநிதி யவர்களிடம் கொடுத்து பின் அவற்றைத் திரும்பப் பெற்றுக் கொண்டனர். எல்லாவரசர்களும் வழக்கத்திற்கேற்ப வந்தனை செய்தல் தீர்ந்தது. உடனே தர்பார் கலைந்தது. பீரங்கிகள் பிறிதொரு முறை முழங்கின. கர்ஸான் பிரபுவும் அவர் மனைவியாரும் வந்தோரெல்லாம் வாழ்த்திக்கொண்டாடச் சென்றனர்.

இவ்வாறு டெல்லி மகா தர்பாரை ஒருவித விபத்துமின்றிக் கடைக்கூட்டி முடித்த நமது இராஜப் பிரதிநிதியவர்கள் சாமர்த்தியமே சாமர்த்தியம். அவரது புகழே புகழ். இவ்வாறு செய்தது மிகவும் உசிதமான காரியமே. இது இராஜதந்திர முறைகளிலொன்று. ஆங்கில வரசாட்சியின் ஒருமைப் பாட்டிற்கு இஃதோர் அறிகுறியாதலே யன்றி ஒரு பெருங் கருவியுமாமென்று அறிவுடையோர் அறியாமற் போகார். இதனை வீண் செலவு என்று கூறிப் புறக்கணிப்போர் செயல் ஒருநாளும் பொருந்தாது. நம் சக்கரவர்த்தியார் நீடூழி வாழ்க. நமது இராஜப் பிரதிநிதியார் நீடூழி வாழ்க. ஆங்கில வரசு நீடூழி வாழ்க. நம் இந்திய தேசம் நீடூழி வாழ்க. தேசாபிமானமும் பாஷாபிமானமும் யாவரிடத்து மோங்குக.

பத்திராதிபர்.

# TWO RARE STANZAS, AND THEIR COMMENTARIES.
# இரண்டு அருஞ் செய்யுள்களும், அவற்றின் உரையும்.

[ஏட்டுப்பிரதியிற் கண்டவை.] *

" அங்கோழி முட்டை யுறப்புலி யாண்டல ராலவிந்த
வெங்கோழி முட்டைமுன் சேரா வுருப்பவெல் வெம்மைபஞ்சே
ருங்கோழி முட்டை வரும்பாலை போல வுருக்குமங்தோ
செங்கோழி முட்டைக் கருப்போ லெழுந்த செழுந்திங்களே."

இது, தலைவன் வினைவயிற் பிரிந்துழி இளவேனிற்பருவங்கண்டு ஆற்றாளாய தலைவி தூதுவிடவேண்டுங் கருத்தினளாய்த் தோழிக்குச் சொல்லியது.

அழகு நிறைந்த உறையூரானது முட்டுப்பாட்டினை யுறும்படி உலகத்தை யாண்டு செவ்வந்திப்பூக் காரணமாக மண்மாரியாலவிந்த வெவ்விய அரசனுருட்டுந் திகிரியும், அவனைக் கொல்லவந்த மேகமும், அவன் கையிற் படைக்கலமும் போலும் வெப்பமும், கொழுத்த யானையும், முள்ளும் பரம்பாநின்ற பாலைநிலத்தைப் போல உருத்தலைச் செய்யாநிற்கும் : செவ்விய கோழியினது முட்டையாகிய கருவைப்போ லெழுந்து ஒளிர்கின்ற வளவிய திங்க ளொன்றே என்பது: பதப்பொருள்.

அம்-அழகு. கோழி-உறையூர். முட்டை-முட்டுப்பாட்டினை. வெம் கோ-வெவ்விய கோ. 'ழி'யும், 'மு'வ்வும், 'டை'யுமாகிய எழுத்துக்கள் பின்னர் நிற்ப இவற்றின் முன்னர்ப் பொருந்தும் 'ஆ'வும், 'உரு'வும், 'ப'வ்வு மாவன—ஆழி, உருமு, படை என்பனவாம். வெம்மை-வெப்பம். 'பம்' என்னும் எழுத்துச் சேர்ந்த 'கோழி'யாவது-கோழிபம். முள்-கண்டகம். தைவரல் - தடவுதல். செங் கோழி-செவ்விய கோழி,

" பொன்னி வளந்தரு நாடே நாடு" எனவும், அதனுள்ளும் " ஊரெனப்படுவது உறையூர்" எனவும் எல்லாரானுஞ் சிறப்பித்துச் சொல்லப்படும் அத்துணைச் சிறப்புடைய நகரத்தையுங் கெடுத்தவ னென்பது தோன்ற, தன்மையலங்காரம் பெற ' அங்கோழி' என்றான். ' முட்டு' என்பது, " அன்றின் முட்டா தணையுஞ் சோலை" என ஒழிதலையும், " முட்டிலா மூவறுபாடை மாக்கள்" எனக் குறைதலையும், " வேற்றுமை முதலிய பொருளின் முட்டுங்காலை" என இயைதலையும், " கன்று முட்டி யுண்ணச் சுரந்த" என மோதுதலையும், " குன்று முட்டிக் குழியில் வீழ்ந்தால்" என இடறுதலையும், " கூர்முனை யயில்கொடு முட்டுவார்" எனப் பொருதலையும், "கண்டுமுட் டடிகண் மார்கள் கேட்டுமுட்டி யானும்" என உணவொழிதலையும், "மாகமுட்டிய மாளிகை" என அளாவுதலையும், " முன்புற் றறியா நெடுங் கானவாவிக் கரையை முட்டினுள்" எனச் சேர்தலையும், " முட்டடி யின்றிக் குறைவுசீர்த் தாகியும்" என நிறைதலையும், " யாமையார் நடையாண் முட்ட தானதே," 'வீடு முட்டுற்றது,' ' முட்டுக்கால் கொடுத்தான்' என்றாற் போலும் பிறபொருள்களையும் உணர்த்தும்; அவற்றுள், ஈண்டு ஒழிதலை உணர்த்துகின்றது. ஒழிதல் இடையறுதல். உறவென்னுஞ் செயவெனெச்சம் 'குளநிறைய மழை பெய்தது' என்றாற்போலக் காரியப் பொருட்டாய், ' ஆண்டு' என்னும் வினையெச்சத்தோடும், அது ' அவிந்த' என்னும் பெயரெச்சத்தோடும், அது ' கோ' என்னும் வினைமுதற் பெயரோடும் முடிந்தது. ' புலி' - என்பது முதலாகுபெயராய், சோணாட்டை யுணர்த்திற்று. செவ்வந்திப்பூவாற் பூதவுடம்பும், பிறர் தூற்றும் பழிமொழியாற் புகழுடம்பும் ஒருங்கே யிழந்தா னென்பது தோன்ற, இரட்டுறமொழித லென்னும் உத்தியான் ' அலரால்' என்றாள். செவ்வந்தி யென்பது, சொல்லெச்சம். இழிபு தோன்ற இறந்த என்னாது ' அவிந்த என்றாள். ' அவிந்த' என்றமையால் அவித்தற்கு வினைமுதல் வருவிக்கப்பட்டது. ' அலரால்' என்புழி, மூன்றனுருபு ஏதுப்பொருட்கண் வந்தது. 'வெங் கோ' என்பது-பிறிதின் இயைபு நீக்கிய விசேடணத்தான் விசேடிக்கப்பட்டது,

அவன் உரிமையாகக் கொண்ட ஆழியும் படைக்கலமுமே அத்தீங்கு விளைதற்குக் காரணமாய்ப் பகையாயின வென்பது தோன்ற, அவ்விரண்டனையும், பகைப்பொருளாகிய மேகத்தின் இருபாலுஞ் சேரவைத்துக் கூறினாள், அவற்றின் கொடுமையும் இழிபுந் தோன்ற, நேரே கூறாது வேறு வேறு பிரித்து ஈற்றெழுத்துக்களை முன்னும், முதலெழுத்துக்களைப் பின்னுமாக மாறி " காமவிதி கண்முக மென்மருங்குல் செய்யவாய், தோமி றுகடினி சொல்லமிர்தம்" என்றாற்போல எழுத்து நிரனிறையாகக் கூறினாள். 'முட்டை' யென்பது, " எஞ்சிய வெல்லா மெஞ்சுத லிலவே" என்பதனால் " உகர விறுதி யகர வியற்றே" என்னும் விதி யெற்று, " விப்பி யென்பவற் றொப்பது", " நொப்போ வெளவுரிஞ்" என்றாற்போல வல்லெழுத்துமிக்கு முடிந்தது. 'உருப்ப' என்புழியும் ஈது ஒக்கும். " ஈமுங் கம்மு முருமென் கிளவியு, மாமுப் பெயரு மவற்றோ ரன்ன" என்பதனால், உரும் என்பதற்குப் புணர்ச்சிக்கண் விதித்த உகரம், " அஞ்சொன் மடவார்க் கருளு," " புன்னை மலர்த் தாரகலம் புல்லு" எனவும், " அழுக்கற் றகன்றாரு மில்லை" எனவும் ஆன், மான், கோன், ஊன் எனவும் புணர்ச்சி யிடைக்கண் விதித்த எழுத்துக்கள் ஈற்றின் கண்ணும் வந்து அவயவமாய் நின்றாற்போல, ஈண்டும் ஈற்றின் கண் அவயவமாய் வந்து, 'உருமு' என என்றது. உருமு என்பது-ஆகுபெயரான், மேகத்தை யுணர்த்திற்று. இனி, இதனை ஆகுபெயராக்காது இயற்பெயராயே வைத்து, 'இபம்' என்பதனை ஆகுபெயரான் இபக்குரன்மே லேற்றலும் ஒன்று. 'ஆழி' என்பதும், ஆகுபெயரான், அதன் வெம்மைமேல் நின்றது. 'வெல்' என்பது-உவமவுருபு; " புல்லப் பொருவப் பொற்பப் போல,

* இவற்றை எழுதியனுப்பியவர், திருவல்லிக்கேணி யஸ். கிருஷ்ணமாசாரியர்.

வெல்ல வீழ வாங்கவை யெனுஅ" என்ப வாகலின்: அது "மாணெழில் வேய் வென்ற தோளாய்" என்னும் பாலைக்கலியுரையானுங் காண்க. அவற்றைச் சயம் பண்ணின வெம்மைமுதலிய வெனினும் அமையும்.

முன்னர் உடன்போக்கின்கண் தலைவனொடு பாலைநிலத்துச் செல்வழி ஆண்டுவாழும் யானைகளைக் கண்டு அஞ்சினாட்கு இப்பொழுதும் அதனை நினைப்புழி உருவெளியாகத் தோன்றலின் இத்தன்மையதாகிய அஞ்சத்தகும் உருவுடைய தென்பது தோன்ற 'கோழிபம்' என்பாள், வாயான் அவ்வாறு கூறுதற்கு அஞ்சி, 'பஞ்சேருங்கோழி' எனப் பிறிதோராற்றாற் கூறினாள்; "தலைக்குறை கமலமே சாருந் தன்மைபோல்" என்பது போல. கோழிபம்-பண்புத்தொகையாய், ஈறுபோய் ஆதிநீண்டு உயிரேறி, 'பாசிழை' 'கோழரைபோல முடிந்தது. முட்டைவரும் என்பது, முட்டைதுபோல இருமொழிக்கண்ணும் செய்கை பெற்று நின்றது. நைவரல்-சமாதிக்குணம். பாலை யென்பது, ஈண்டு, நிலமென்னும் முதற்பொருள்மேல் நின்றது. போல என்பது-இடைச்சொல்லடியாகப் பிறந்த வினையெச்சம். உருக்கும் என்பது-நிகழ்கால வினைமுற்று. அந்தோ என்பது-இரக்கக் குறிப்பின்கண் வந்த இடைச்சொல்.

செம்மை- கோணாமை; அஃது, ஈண்டு, நன்மையை உணர்த்தி நின்றது. முருகவேளுவப்பப் பராய்க் கடனாக விடுக்கப்படுதலும், அவனுயர்த்த கொடிக்கு இனமாதலும், வைகறையுணர்த்தலும் முதலிய நற்குணங்களுடைமையின் 'செங்கோழி' என்றாள். முட்டைக் கரு - சாரைப் பாம்பு' போல இருபெயரொட்டுப் பண்புத்தொகை. 'செழுந் திங்கள்' எனவே, நிறைமதி யென்பது பெற்றாம். உருப்பன பலவற்றுள்ளும் திங்களைப் பிரித்தமையின், ஏகாரம் - பிரிநிலைக்கண் வந்தது. திங்கள் எழுங்கால் செவ்விய கோழி முட்டைபோல் எழுந்து, செழுவிய பின்னர்க் கோழியின் குணத்திற்கு மாறாக இரவினைச் செய்தலும், அறுமுகக் கடவுட்கு வழிவழி யடிமைபூண்ட எனக்குத் தீங்கு விளைத்தலும் முதலிய தீக்குணங்களைச் செய்யாநின்ற தென்பாள் 'செங்கோழி முட்டைக் கருப்போ லெழுந்த செழுந்திங்களே பாலைபோல வுருக்கும்' என்றாள். மெய்ந்நிறத்தாற் கோழி முட்டையை யொத்த திங்கள், தொழிலால் அதற்கு மாறாய்ப் பாலையையொத்த தென்பது கருத்து. இதுவே இவ்வாறு செய்யின் ஏனைய என் செய்யா என்பது இசையெச்சம். 'ஆதலால், தாழாது தூதுவிடல் வேண்டும்' என்பது, குறிப்பெச்சம்.

'ஐம்பெரும்பாவங்கட்கும் ஒருவாற்றான் உய்தி கூடும், திருவடிப்பிழைத்தலாகிய பாவத்திற்கு எவ்வாற்றானும் உய்தி இன்று' என்பதற்குச் சான்றாகத் தன்னுடைய இருமுதுகுரவரும் தம்முட்கூறும் ஆக்கதையைப் பலகாலும் அணுக இருந்து கேட்ட தலைவி, அவன் கொடுங்கோலோச்சி யுருட்டிய திகிரியும், ஒன்னலரையன்றி உற்றாரையுங் கொல்லும் அவனது படைக்கலமும், அவனைக் கோறற்கு அடர்ந்தெழுந்த மேகமும் நினைக்குந் தோறும் எதிரே



நிகழ்ந்தாற்போல் தனக்கு அச்சஞ்செய்தலின், அவற்றினுங் கொடியது பிறிதில்லை யெனத் தெற்றென வுணர்ந்தாள். பின்னர்த் தலைவனுடன்போக்கின்கண் பாலையினுள்ள வெப்பமும் முட்களும் யானைகளும் தனக்கு அச்சஞ்செய்யுங் கொடுமையை நோக்கி, 'அவற்றை இவற்றோடு ஒப்பிடலாம். இவற்றான் ஒப்பிடப்படுவது பிறிதில்லை' எனத் துணிந்தாள், பின்னர்க் கற்பின்கண் தலைவன் பிரிந்துழித் திங்கள் விளக்கமும் குளிர்ச்சியும் வெண்மையுமாகிய மூன்றானுந் தன்னை உருக்கும் உருப்பத்தை நோக்கி, 'அம்மூன்றுமுடைய பாலைடையே யொக்கும் இம்மூன்றுமுடைய திங்கள்' என அனுபவித்த பொருளை அனுபவிப்பதனோடு மெய்ப்பாடு தோன்ற உவமித்தாளாதலின், இது புனைந்துரைபற்றிவந்ததல்லாமை யறிக.

திணை - பாலை. கைகோள்-கற்பு. கூற்று - தலைவிகூற்று. கேட்டவள்- தோழி. இடன் - வினைவயிற் பிரிவு. காலம் - எதிர்காலம். பயன்- தலைவி தூதுவிடுவாளாதல்; முன் மேலதுஉரையிற் காட்டப்பட்டது. மெய்ப்பாடு - அசைவுபற்றிவந்த அவலம். எச்சமும், முன்னர்க் காட்டப்பட்டது. இப் பாலைத் திணை, நெய்தற்றிணை முதலியவற்றிற்கும் பொதுவாய் நிற்றலின் பொருள்வகையும் முல்லைத்திணைக்குரிய மாலைப்பொழுதில் நிகழ்வனவற்றைக் கூறிப் பாலைப்பொருளான் முடித்துரைத்தலின் துறையும் அமைந்தவாறு காண்க. இதனால், தலைவிக்கு அவலமும், தோழிக்கு அச்சமும் பிறந்தது. இந்நிகரன பாலைத் திணையாதல் "ஒருகுழை யொருவன்போல்" முதல் "கொடுமிடனாஞ்சில்" ஈறாகக் கிடந்த பாலைக்கலிகளான் உணர்க. இளவேனிற்காலத்துத் திங்கள் சிறந்து விளங்குதல் "எஃகிடைதொட்ட" என்னுங் கலியினுள் "துணிநீராற் றூய்மதி நாளாலணிபெற" என்பதனானும் உணர்க. "எஃகிடை தொட்ட" கார்க் கவின் பெற்ற வைம்பால் போன்மையற விளங்கிய துவர்மணல் என்பதனால், உவமைக்கு உவமைகூறலும் மரபாமாறு அறிக. நான்குஅடியும் - தலையாகெதுகை; சொற்பின் வருநிலை யலங்காரமுமாம். இந்தப்பாட்டு, சங்கீரணவலங்காரம்.

இன்னும் விரிக்கிற் பெருகும்.

---

"எந்தனங்கள் பட்டுருவி யென்கணவன் போனவழி
கந்தமலர்ப் பூங்குழலீர் காணீரோ—நுங்கணைன்
வாழையிலே கண்டேன் வரப்பிலே கால்கண்டேன்
றாழையிலே கண்டேன் றலை."

என்பது - என்னுடைய முலைகள் தனது மார்பிடத்து அம்புபோற் பட்டு உருவியதாக எண்ணி என்னுடைய கணவன் என்னை யகன்று போதற்கு

உபாயமான வழி கந்தமலர்ப் பூங்குழலை யுடையீர் காணீர்கொல்லாம் எனத் தலைமகள் காதற்பரத்தையரை நோக்கிப் புலந்து கூறியவாறும்.

தனது முலைகள் அழுந்துந்தோறும் அவற்கு வெறுப்புப் பிறக்கின்றமை தோன்ற, 'எந்தனங்கள் பட்டுருவி' எனவும், அங்ஙனமாயினும் எனக்கே யுரிய னென்பது தோன்ற 'என் கணவன்' எனவும், காரணத்தைக் காரியமாக உபசரித்து 'போன வழி' எனவும், புறக்கோலத்தான் மயக்குவ தல்லது உள் ளன்பில்லீ ரென்பது தோன்ற 'கந்த மலர்ப் பூங் குழலீர்' எனவும், 'என்னை யிவ்வண்ணங் காணீரோ'' என்புழிப் போலச் செய்யீரோ வென்னும் பொருள் பட 'காணீரோ' எனவுங் கூறினாள்.

ஒகாரம்-எதிர்மறைக்கண் வந்தது ; வரவே, கண்டீரே யென்றதாயிற்று. ''உகரம் பெறாஉ மாவயினான'' என்பது உகரம் பெற்று உறழ்ந்து மூடியு மெனப் பொருள் தந்து நின்றாற்போல, 'பட்டுருவி' என்பது - பட்டுருவிய தாக வெண்ணி யெனப் பொருள்தந்து நின்றது.

இனி, அதுகேட்ட பரத்தையர் 'யாம் ஒரு ஞான்றும் அவனை மருவி யறியே' மென வஞ்சித்து உரைப்ப, அதனை மறுத்துக் கூறுகின்றாள், 'நுங் கண் அவன் வாழையிலே கண்டேன் என: பொழிலூடு நும்மிடத்து அவன் மடியிருந்து வாழுங்காலத்துக் கண்டேன் என்றவாறும். 'ஆண்டு யாங்கள் எம் இயல்பிற் சென்றுழி எதிர்ப்பட்டமையான் சிறிது பொழுது உரையாடிக் கொண்டிருந்த மாத்திரையே யல்லது பிறிது இல்லை' என வஞ்சிப்ப, அதனை மறுத்துக் கூறுகின்றாள், 'வரப்பிலே கால் கண்டேன், என: நுமது சேரிப் புறக்கொல்லை வரப்பின்கண்ணே அவனது அடிச்சுவடு கண்டேன் என்றவா றும். 'ஆண்டும் ஒரு கருமப் பொருட்டு வந்ததன்றிப் பிறிதில்லை' என வஞ் சிப்ப, அதனை மறுத்துக் கூறுகின்றாள்; 'தாழையிலே கண்டேன் றலை'என: நும் ஊடலைத் தவிர்த்தற்பொருட்டு அவன் நும்மைத் தாழ்ந்து வணங்குங்கால் அவனது தலையினை யான் கரந்திருந்து கண்டேன் என்றவாறும். இனி, 'வரப் பிலே கால்கண்டேன்' எனத் தலைமகள் கூறிய வழி பரத்தையர் அவன் தலைவ னாதலான் எமது சேரிக் கடைத்தலைக்கண் தமியனாய் வரற்பாலனே' என வஞ்சிப்ப, அதனை மறுத்துக் கூறுகின்றாள், நும் ஊடலைத் தவிர்த்தற்பொரு ட்டு அவன் நும்மைத் தாழுங்காலத்துக் கண்டேன் அவனது தலைமைப்பாட் டினை என' என்றலுமாம். 'தலைமை கண்டேன்' என்பது-'கற்கறிக்க நன்கு அட்டாய்' என்பது போலக் குறிப்புமொழி-கால். ஆகுபெயராய் அதற்கு அரு ளெனப் பொருள் கொண்டு 'வரப்பிலே கால்கண்டேன்' என்பதற்கு வாரா நின்ற நீர்ப்பெருக்கில் அவன் நும்மிடத்து வைத்த அருளுங் கண்டேன் என, பரத்தையர் கான்யாறாடப்புக்குழி நீர் அவரை ஈர்த்து எழுக ஆண்டுத் தலைவன் தோன்றிக் கையாற் பிடித்தெடுத்துக் கரைசேர்த்தமை தோன்றக் கூறினாளெ னினும் அமையும். தலைவிகூற்றாகிய மறுத்துரை மூவகைப்பட நிகழ்ந்தமை



யின் அவற்றிற்கு எவற்பரத்தையர்கூற்றாகிய வஞ்சித்துரைகளும் வருவிக்கப் பட்டன.

இதனாற் போந்த பொருள்:—என் கணவனை என்னை இகப்பித்து நும் வயத்தனாக்கினீர் ; அஃது எவ்வாறு அறியப்பட்டதென்னில், அவன் பொழி லகம்புக்கு நுங்கண் கூடிவாழுங்காலத்துக் கண்டேன்; அஃதன்றி, அவனடிச் சுவட்டையும் நுமது சேரிப்புறக்கொல்லை வரப்பிற் கண்டேன்; அஃதன்றி, அவன் நும்மை வணங்குங்கால் அவனது தலையினையும் ஒளித்திருந்துகண் டேன் ; ஆதலால், தெற்றென அறியப்பட்டது எனத் தலைமகள் காதற் பரத் தையரை நோக்கிப் புலந்து கூறியவாறாயிற்று.

இவ்வாறு வேறு வேறு கண்ணழியாது, உங்கண் அவன் வாழையிலே வரு அப்பிலே கண் கால் தேன் தாழ் ஐயிலே கண்டு என்றலைக் கண்டே னெனக் கொண்டுகூட்டி, நும்மிடத்து அவன் வாழுங்கால் வாராநின்ற நீர்ப் பெருக்குப்போல வேய் காலாநின்ற தேனின் நற்சுவையைத் தாழ்ப்பதாய வியப்பினைத் தரும் இதழின்கண் உறுங் கண்டினை என்றுகோடலை யான் கண்டே னென்றாளாக ஒரு முடிபு செய்யினும் அமையும். கண்-ஆகுபெய ரான், வேயாணியன்ற பாசனத்தை யுணர்த்திற்று. ஐ - வியப்பு ; அஃது-ஆகு பெயரான், இதழ்மேல் நின்றது. பரத்தையர்க்கு இருமலும் ஈளையும் முத லிய நோய்கள் இயல்பாதலான், 'ஐயிலே கண்டு' 'என்பதற்கு - ஐ வளி பித்து என்னும் மூன்றனுள் ஒன்றாகிய ஐயினில் எழாநின்ற கண்டு என இழித்தற் குறிப்பாகக் கூறினுமாம். என்றுகோடல் - ஈண்டு, பருகுதல்.

இனி, இவ்வாறன்றி, வனத்தின்கண் கணவற்காணா திழந்தாளாக அவ் வனங் காவல்பூண்டுறையும் அணங்கினை யெதிர்ப்பட்டு 'என் கணவன் போன வழி அறியீரோ' எனப் பொறையுயிர்த்த தலைமகள் வினாய வினாவும், 'நெரு நலிற் குலையின் கதலியை நோக்கி நின்று என்னோடு ஒரு மாற்றங் கூறினான்; அப்பொழுது நுங்கணவன் கருத்தை அவ்வாழையின்கட் கண்டேன் ; இற் றை ஞான்று புனத்து வரப்பின்கண் அவனது அடிச்சுவட்டைக் கண்டேன் ; அஃதன்றி, அவனது தலைச்சுற்றுக் கூறையும் தாழைமரத்தின் மேல் வைத்தி ருப்பக் கண்டேன் ; இவ்வளவே யான் அறிந்தது என வனத்தணங்கு இறுக் கும் இறையுமாகப் பொருளுரைத்தலு மொன்று. இப்பொருள் கொள்வழி 'நின்கணவன்' எனப் பாடம் ஓதுக. 'கந்தமலர்ப் பூங்குழலீர்' என்பதனை ஒரு வரைக்கூறும்பன்மைக்கிளவியாகக் கொள்க. பின் வந்த 'கணவ'னும், 'கா லும், 'தலை'யும்-ஆகுபெயர். வாழையும் தாழையும் - திணைமயக்கத்தான் உளவா யின. எகாரங்கள் - அசை.

சங்கமரீஇய சான்றோர், அவரோடு ஒருதன்மையராகிய சான்றோர் செ ய்த இலக்கணத்தின் வழாத செய்யுட்களின் பொருணுட்பங்களை எம்மனோர் பாற் கேட்பின் அமையும் : 'வாழையிலே,' 'தாழையிலே' என்றற்றொடக்

கத்து இழிவழக்குக்களும், 'எந்தனங்கள்' என்றற்றொடக்கத்துச் சந்திவழுவும், ஒருமையும் பன்மையும் மயங்கக்கூறுதற்றொடக்கத்துப் பால்வழுவும், 'எந்தனங்கள்', 'நங்கணவன்' என்றாற்போலும் எதுகைவழுவும், பருப்பொருளும், வெளிறிய சொல்லும் முதலிய குற்றங்களை யுடையவாக இலக்கணத்திற் புதுக்க இன்னோரன்ன செய்யுட்களை இவ்வாறு செய்யுட்செய்ய வல்லாரைக் கேட்க அமையுமல்லது, எம்மனோரையும் அவரோடு ஒருவராக்கி இவற்றையும் ஒன்றாகக் கருதிக் கேட்டல் அமையாதென அறிக. இனி, இச்செய்யுட்கு இலக்கண முறையான் விதிகூறி வழுக்களை யமைத்துக்கொண்டு இன்னும் பொருள் விரித்து உரைத்தனமாயின், அத்திறம் அறியவல்லார் ஆண்டு இன்மையின் உரைத்திலமென்க.

---

## AN ASTRONOMER.

## வானசாஸ்திரி.

---

ஒருநாண்மாலைக் கடற்கரை சென்றிருந்தயான், வீட்டிற்குத் திரும்பிவரும்பொழுது, எனது நண்பரும் வானசாஸ்திரப் பயிற்சியையே தமது தொழிலாகக்கொண்டவருமான ஒருவர், என்னை விளித்துத் தாமேதோவரைந்துள கடிதக்கட்டொன்றினை யென்கையிற்கொடுத்தனர். 'ஐய! 'ஈதென்' என யான் வினவலும் அதற்கு அவர் "யான், எனது நக்ஷத்திர கணிதசாலையிலிருந்து வானிடைத்தோன்றும் கிரகங்களையும் உடுக்களையும் உற்றுநோக்கும் ஸமயங்களில் என் மனத்திடைதோன்றிய சிற்சில கருத்துக்களை இதன்கண் வரைந்துளேன். இவற்றைத்தக்கவாறு ஒழுங்குபடுத்தித்தரல்வேண்டும் என்று கூறிப்பின்னர் அவர் என்னிடம் விடைபெற்றுக்கொண்டு சென்றனர். யான் வீடுசென்றதும் அக்கடிதக் கட்டினைப்பிரித்து மிக்க ஆவலுடன் படித்துப்பார்த்தேன். அவற்றுட்குறித்த விஷயங்கள் யாவும் ஒருவிதத்தொடர்பு பற்றியவையாயிருந்தமையின் யான் அவற்றையொன்றும் பிறழாமலீண்டுத் தருதலே சிறப்புடைத்து என்று அவையிற்றினை யெழுதுகின்றேன்.

"அடடா! ஈதென்னகருமேகம் ஆகாயத்தை மறைத்துவிட்டதே! அதனுடன் நாம் உற்றுப்பார்த்துக்கொண்டிருந்த நக்ஷத்திரமும் மறைந்துவிட்டது! இதற்கென்செய்வாம்? சீ? இவ்வளவுகாலமாய்க் காத்துக்கொண்டிருந்த நாம் இப்பொழுது மனோதைரியத்தை இழக்கலாகாது. 'முயற்சியுடையார் இகழ்ச்சியடையார்' இடைவிடாது முயற்சிசெய்யின் எல்லாம் வல்ல இறைவனும் நமது எண்ணத்தை நிறைவேற்றுவார். இந்தமேகம் சிறிது நேரத்தில் விலகிப்போகலாம். வருடக்கணக்காக மனச்சலிப்பின்றி இந்த நக்ஷத்



திரவாராய்ச்சிச்சாலை*யின் தலைமிசைநின்று கண்பூத்துப் போகுமளவும் தூரதிருஷ்டிக்கண்ணாடியின் வழியாய் வானைநோக்கி நின்ற நாம், கடவுளின் அருளைத் திண்ணமாய்ப்பெறுவோம். எத்தனையோ இரவு தூக்கமற்றுப் பனியால் நனைந்து குளிரால் விறைத்து நின்றுளேம். மாநுடர்க்குரிய சுகம் பலவற்றையும் மறந்தேம். யாம் பிறந்த மண்ணினை மறந்து ஏனையகிரகங்களையும் உடுக்களையும் ஆராயப்புகுந்து நின்றேம். ஆயினுமென்? நமது பெயரை உலகில் நிலை நாட்டல் வேண்டுமன்றே? மேலும் நமதெண்ணங் கைகூடுமாயின் நமக்கு உண்டாகும் புகழ் அளவிடற்பாலதோ? தன்னை யெதிர்த்தபலர்க்குந் தானொருவனாக எதிர்நின்று சமர்புரிந்து பாற்கடலைக்கலக்கிய மந்தரம்போற் சலிப்பின்றி நின்றுவென்ற வீரனின் புகழினும் நமக்குண்டாகும் புகழன்றோ சிறப்புடைத்து? அவனினுஞ்சிறந்த வீரன் ஒருவன் தோன்றுவானாயின் அவன்புகழ் அழியுமன்றோ? நமது புகழோ ஊழிதோறும் நின்று நிலவும். எக்காலத்தும் அழியாப் புகழ் அன்றோ அது? வீரன்பெறும் வாகைமாலையினும் சிறந்ததோர் வாகை பெறுவாம்.

"இன்னுஞ்சிறிது காலத்திற்குள் பலரும் நம்மைப்பற்றிக்கூறும் புகழ்மொழிகள் நமது காதில் விழுவதால் நமக்கு உண்டாம் மனக்களிப்பும், கடவுளின் உட்கருத்திற்கிணங்க நாம் நடந்து உலகிற்பிறந்ததாலாய பயனாகிய புகழ்பெற்றதாலுண்டாகும் திருப்தியும் நமக்குத்தவறாமற்கிடைக்கும் - எனினும், இன்னும் பலநூற்றாண்டுகள் சென்றபின் அக்காலத்துச் சான்றோர்களாற் சுட்டிக்காட்டப்பெறும் பெருமையைப்படைத்தல் பேரானந்தம் பயக்கும் என்பது நிச்சயம். பல்லாயிரம் ஆண்டுகள் கழிந்தபின்னர், வானசாஸ்திரவல்லுநரும் ஏனையோரும் ஆகாயத்தில் தோன்றும் ஒரு நக்ஷத்திரத்தினைச் சுட்டி நமது பெயரையும் உடன் கூறுவாரெனில் நமது புகழ் வானகத்தொளிரும் மீனினந் தொலையுமளவும் நிற்குமன்றோ? அக்காலத்தோர் சுரகுருவாகிய வியாழன்றன் பெயரையும் அசுரகுருவாகிய சுக்கிரன்றன் பெயரையும் எவ்வளவு பெருமையுடன் உச்சரிப்பார்களோ, அவ்வளவுபெருமையுடன் நமது பெயரையும் உச்சரிப்பார்கள் என்றால், நமது புகழ்நிலைபெற்றதாவதோடு நாமும் தேவகணத்து ளொருவராயெண்ணப்படுவோம். இத்தகைய புகழினை எவ்விதத்தானு முயன்று பெறுவேமாக.

"அழியாப்புகழ் என யாம் கருதியதும் பொய்த்தோற்றத்தையோ? பவளப்பாறை யொன்றைக்கட்டும் பலகோடி பவளப்பூச்சிகளுள் ஒவ்வொன்றும் இவ்வளவிவ்வளவு பாகத்தை நிருமித்தது என்று கூறவேண்டுவது அவசியமா? ஒவ்வொருமனிதனும் தன் பெயரை உலகத்தார் எக்காலத்தும் கூற வேண்டும் எனமுயலுதல் சாத்தியமா? அங்ஙனம் கூறப்படின் அதனால் அவன் அடையும் பயன்தான் யாது கொல்? மனிதசமூகத்திற்கு நம்மாலியன்றவளவும்

---

* Observatory.

பயன்பட்டு நிற்பின் அதுவே நாம் இவ்வுலகிற்செய்யவேண்டிய கடமையாகாதோ? நாம்வழியருகில்வைத்து வளர்த்தமரத்தடியில் வேறொருவன் தங்கியிளைப்பாறலாகாதோ? இன்ன மனிதன்வைத்து வளர்த்தது என்று அவன் கூறவேண்டுமா? நாம் ஏற்றிய தீபவொளியால் மற்றவன் ஏன்பயனடைதல் கூடாது? தீப மேற்றியவர்தம் பெயரால் அவனுக்குயாது பயன்? அன்னசத்திரங்கட்டுபவர் அதன் கண் வந்துதங்கும் பிரயாணிகட்கு உணவிடுதலால் மாத்திரம் தாம் மற்றையோர்க்குப் பயன்பட்டவராகாரோ? சத்திரமுகப்பில் தமது பெயரைத்தீட்டிவைத்து யாவருங்காணுமாறு செய்வதுதானோ தமது கடமை? புகழ் என யாம் கருதியது பொய்த்தோற்றந்தான். ஒருவரும் தன்னையறியாமற் பிறர்க்குப் பயன்படுவானே தலையாய மனிதனாவான். நெருப்பை நாம் உபயோகப்படுத்தும் விதத்தை நமக்கு முதன்முதல் கற்பித்தவன் யாவன்? வண்டிக்குச் சக்கரமிட்டா லினிதுருளும் என்பதைமுதலிற் கண்டுபிடித்தோன்யாவன்? யானை குதிரைகளை முதலிற் பழக்கி மனிதர்க்குப்பயன்படும் பிராணிகளாகக் காட்டியவன்யாவன்? இவர்கள் தம் பெயரை யுலகிற்காட்டாமல் தமது செயலையும் செயலின் பயனையும் உலகுள்ளளவும் நிலைபெறநாட்டியேகினர். அவர்களைப்போல் மற்றையோர்க்குப் பயன்பட்டு நிற்பாரன்றோ உலகில் நம்மைப் பிறப்பித்த கடவுளின் உட்கருத்திற்கிணங்க நடந்தவராவார்?

(இன்னும் வரும்.)

ந. பலராம ஐயர்.

---

## THE CULTURE OF THE INTELLECT.

## உள்ளப் பயிற்சி.

---

### IX. மொழி நடையும் பிரசங்கமும்.

சிறுவர்களின் பள்ளிக்கூடக் கலாசாலைப் பயிற்சியில் அடிக்கடி புறக்கணிக்கப்படும் மிகச்சிறந்ததோர் விடயம், நயமும் இனிமையுமுற்ற சொல்வன்மையுடைமையாம். ஆதலின், மொழிநடை ஆக்கத்தையும் பிரசங்கத்தையும் பற்றிச் சிற்சில குறிப்புக்கள் ஈண்டெடுத்துவிரிப்பாம். மனிதன் இயற்கையாகவே பேசும் வலியுடையோன். சீரிய பயிற்சியானெய்தும் இவ்வியற்கை ஆற்றலின் முதிர்ச்சி காரணமாக வெழும் சொல்வன்மைக்குற்றதோர் சிறப்பன்றோ உயர்ந்த மொழிநடை. மொழிநடை யாக்கத்திற்கு வேண்டிய நற்பயிற்சி நிச்சயமாகவே மொழிவல்லோருடனும் சிறந்த நூலாசிரியர்களுடனும் ஊடாடிப் பழகுதலாம். ஒருவனது சொற்றொகை எப்போதும் அன்றி, இளமையில் முழுவதும் அவன் நாடிக்கூடும் மக்கட்டொகுதியைச் சார்ந்துளது. ஆகவே, மிக்க வுயர்வும் சொல்வன்மையும் வாய்ந்தவர்களின் மிகச்சிறந்த கட்டுரைகளில் நன்கு பயில்க. அவரது மேம்பாட்டைச் சிறிதளவேனும் பற்றத் தவறற்க. ஆயின் அடிமைப்பட்டார் போன்று ஒருவரது சொல்நடைப்பாட்டைப் பின் பற்றுதல் வேண்டாம். ஒவ்வொருவரது மொழிநடையிலும் அவ்வவரது முகக்குறிகளிற்போன்று ஒருவகைச் சிறப்பியல்புளது. அதுபோற்றிக் கோடற்பாற்று. அன்றி, கருத்தமைப்பின்றித் தனியே கேவலம் மொழிநடையிற் பயிறல் இயலுமென அதனைக் குறித்து மிகவுங் கவலற்க பொருள்களை மிக்க நயமும் சாதுரியமும்படக் கூறுவதிற் காட்டிலும், சொல்வதற்குச் சிறந்ததும் தகுதியுமான பொருட்பேற்றில் மிகக் கவலை கொண்மின் இதனை யடுத்தே, 'சொல்லுவதற்கு ஏதாயினும் பொருளுளதாயிற் கூறுமாறு தானே புலப்படும்' என்று யவனச்சிறுவர்களுக்கு ஸாக்ரடீஸ் புலவர் சாற்றியதில் மிகவும் நல்ல கருத்துளது. இதைப்பற்றியே பிற்காலத்திற் கீதையெனு மேற்புல விஞ்ஞானியும் ஜெர்மானிய தேய மாணுக்கருக்குப் பின் வருமாறு கூறுகின்றனர்:—



> செம்பொரு ளுட்ட மேசெய் சேறொலி மூட னாகேல்
> நம்பொருள் கனியிற் சொற்கள் நண்ணிடும் வரம்போன் றின்றி
> இம்பருன் மனத்திற் குண்மை யியையுநுன் நாவு மேவின்
> நம்புதி சொற்க ளுக்கா நாடுத லெவன்கொ லம்மா?

ஆயினும், இத்தகைய வரையறைகளோடும் நல்ல மொழிநடைக் குறிகுறியாகிய தெள்ளிய ஒழுங்கும், அழகிய வியக்கமும், பொருட்செறிவும் பல்வகைய சொல்லமைப்பும், உடைய நுமது கருத்துக்களை ஏட்டில் வரையும் வழக்கத்தை நீவிர் எவ்வளவு முயற்சி செய்தபோதிலும் அவையனைத்தும் அதிகமெனக் கருதல் முடியாது. ஆனால், கல்விப்பயிற்சி யடைந்த மக்களுக்கு இத்தேயத்தில், அன்றி, மிதமான மனக்கட்டோடு கூடிய எல்லாத் தேயத்தவர்களுக்கும் வரைந்து வைப்பது பேசுவதற்குற்றதோர்படி போன்றதாம். பாகவதர், நியாயவாதி, இராஜ்ஜிய நூல்வல்லோர் போன்றபேசுந்தொழிலியற்கையிலுடையோர்களே யன்றி, சுவாதீன உரிமைவாய்ந்த தேயத்திலுள்ள ஒவ்வொரு மனிதனும் எப்பொழுதேனும் தன்னுடைய கொள்கைகளை வெளிப்படையாகப் பிரசங்கம் செய்யவேண்டி வரும். இச்சந்தியைக் காலத்திலேயே ஒருவன் கைப்பற்று தொழிவானாகில், பிற்காலத்திற் கருத்தை வெளியிட்டுரைக்கும்போது ஒருவித அலங்கோலத்திற்கும் மலைவுற்ற தன்மைக்கு மிடனாம். இந்நிலை பெரும்பாலு மியற்கையிலுண்டாவ தன்றெனினும், போலியாகாது. ஆதலின், கடித வரைவினிலேயே அடிமைத்தனமாய்ப் பற்றடையும் தன்மையைத்தக்க காலத்திலேயே நீக்க முயல்வது பெருங்காரியமாம். முன் பிளேடோ புலவர் ஊகித்தவாறு இக்காலத்தில் நற்பயிற்சி பெற்ற அநேகர் இதன் காரணமாகவே பயிற்சியற்ற காட்டுமிராண்டிகளினும் இயற்கையற்ற பாவனைப்பேச்

சைப்பெற்று வாக்கு வல்லபத்தை யிழக்கின்றனர். சிறுவர்கள் தங்கள் கருத்துக்
களை ஒழுங்குடன் அணிவகுத்து ஏட்டின் உதவியினின்று அவைகளை உறுதி
யுடன் பற்றப்பயிற்சியடைய வேண்டும். கண்ணிற்படத்தக்க சில முதற்குறிப்
புக்கள் தீட்டப்பட்ட சீட்டொன்று தொடக்கத்தில் ஞாபக சக்திக்குற்ற துணை
யாகலாம். ஆயினும், இயன்ற மட்டும் இத்தகைய உதவியினையும் ஒதுக்குவ
தே நன்மை. பேசவெழுவோன் தன் சபையோர் முகங்களை எப்போது
மெதிராக நோக்கியிருத்தல் வேண்டும். ஒரு காகிதத்தின்கண் ஒரு புறநோக்
கஞ் செலுத்த வேண்டி யிருக்கும்பொழுது இஃதியலாததாகும். இந்தப் பயன்
பெற்ற வழக்கத்தைப்பெறக்கலாசாலைகளில் முகஞ்செய்து கிடக்கும் தர்க்க சங்
கங்களைக் காட்டிலும் பயிற்சிக் குற்ற சாலை வேறொன்றுமிலது. மீட்டும் மீட்
டும் பயிறல் சாதுரிய முண்டாக்கும். சாதுரியமோ ஒருவகை மனவுறுதிப்பாட்
டிற் கிடனும்; வெளிப்படையாகச் சங்கமொன்றிற் பிரசங்கஞ் செய்ய வேண்
டிழி இளைஞனொருவனுக்கு இயற்கையிற் றோற்றும் நாணமும் பின் வாங்குந்
தன்மையும், அவன் பேச்சை முடக்கி இடையூறு செய்யுமட்டில் நின்று பின்
னர் மறைந்துபோம். எட்டினையும் நில்லாது அவை மறைந்துபோவது
அத்துணை அவசியமில்லை.

பேசும் சிறுவனொருவனிடத்தில் நடுக்கத்தொடுகூடிய நாணத்தைக்காட்டி
லும் எதற்கும் முன் வருதலும் எதனிலும் நுழைதலும் கொடுமையுள்ள பெருங்
குற்றமாம். பல்வகைப் பகுப்பினரான தன் சோதரர்களின் கருத்துக்களில்
தன் சொற்கள் ஏறவல்லனவெனக் கருதப்படலானும் ஏறவேண்டுமாதலானும்
பிரசங்கஞ் செயுமொருவன் தன்னிலையின் காரணமாக ஒருவிதப் பொறுப்புற்ற
வனாகின்றனன். அத்தகைய பொறுப்புடையவனா முணர்ச்சியை அவன் அக
ற்றி ஒதுங்க ஒருபோதும் நசைகொள்ளா திருக்கக்கடவன். ஆனால், பேசும்
மொழியின் ஆற்றலின் காரணமாக வெழூஉம் மதிப்புடன் கூடிய இம்மன
வொடுக்கம் பிணியுற்ற கவற்சியாயும், மந்தமான ஒருவித நேர்மை அடைவதன்
பொருட்டு உண்டாகும் மங்கிய வியாகூலமாயும், சீரழிவதாகில், அவன் தன்
னைப்பற்றிச் சிறிதேனுங் கருத்துணர்வில்லாது விஷயத்தை நன்கு தேர்ந்து
தன் வசப்படுத்தி, தான் பேசுவதனாற் சிறிதேனும் நன்மை பயப்பதாகிய வுண்
மைக்கோட்பாட்டொடும், பிரசங்க பீடமேலாதல், வேதிகை மேலாத லிவரக்
கடவன். பின் கடவுளை நம்பிப் பேசக்கடவன். இஃதேயா மறிவுறுத்த வேண்டி
யதாம். ஆனால் தெளிவற்ற சொல்வன்மை பெறுவதற்கு உரைபெறும் சொற்
சாதுரியம் வாய்ந்த நாவலனொருவனிடத்திற் கற்க வேண்டுவது ஒன்று மில
தென்பது இஃதனைத் தினின்றும் போதருங் கொள்கை யாகாது. கேவலமறி
வுற்ற பேச்சுத்திறம் ஒரியற்கைப்பேறாகும். அதனைக்குறித்து ஒருவிதக் கவற்சி
எய்தலும் வேண்டாம் என்று மட்டுமே கருதியுரைத்தேம். சீர்திருந்திய பிர
சங்கஞ்செய்தல் படையேற்றல் அல்லது நடனஞ்செய்தல் போன்ற ஒரு



சாமர்த்தியம்- அதனை விருத்திசெய்தற்குப் பெரும்பாலும் விசேஷப்பயிற்சி
இன்றியமையாததே.

## X. நூல்களைத்தேர்ந்து பயன் கோடல்.

நூல்கள் மெய்யறிவு புகட்டும் ஊற்றுக்களல்லவென முதன் முதலிற்சாற்
றினேம். அற்றேனும் ஜனசமூகத்தின் தற்கால நிலைமையில், வாலிபர் மனத்
தைப் பண்படுத்துவதில் நூல்கள் வெகு தூரம் பயன் படுகின்றன. அன்றி
அவ்வாறு பயன்படுவது தொடரவேண்டியதுதான். ஆதலின் நூல்களின்
பயனையுந் தெரிந்தெடுக்கு மாற்றையும் பற்றிச் சில விடயங்களை ஈங்கெடுத்து
விவரிப்பாம். புத்தகசாலைகளிற் கணக்கற்ற நூல்களைச் சுமத்தியிருந்த போதி
னும், ஒவ்வொரு பிரிவினும் சிறந்த நூல்கள் மிகவுஞ் சிலவேயாம். விஞ்சுவன
வனைத்தும் துணைக்கருவிகளாகவாதல், சுற்றும் அடி மரத்திற்கு நற்பயன் பய
வாது தீங்கு விளைக்கும் அவரைப்படர் கொடியை யுறழ்ந்து உரிஞ்சி வளர்
வன போன்றுதல், இருக்குமே யன்றி மற்றல்ல. முதன் முதலில் இவ்விட
யத்தினை மனத்தில் நிறுவுதல் வேண்டும். உதாரணமாக இதனை எடுத்துக்கொ
ள்வோம். இந்து மதத்தொடக்க முதற்கொண்டு அம்மதக் கொள்கைகளைச்
சார்ந்து இவ்வுலகில் எத்துணை நூல்கள் கோடிக்கணக்காய் வரையப்பட்டு
வெளிவந்துலவுகின்றன. இயல்பாகவே, எல்லாவற்றிற்கும் ஆதரமாகிய பக
வத்கீதையினைக்காட்டிலும் அவையிற்றினுள் மிகுந்த அல்லது சிறந்தபொருள்
ஒன்றுமில்லை. நாளைக்கே அவையனைத்தையும் அழற்கட்பெய்தாலும் இந்து
சமயம் மிகக்கேடின்றி நிலைநிற்கும். அன்றி அதுகாரணமாகச் சில்வகையில்
அம்மதம் மேம்பாடு அடைதலுமாம். தங்கட்குரியகாலத்திற் பெருமுழக்கஞ்
செய்து விளங்கிய கற்றறி நூல்கள் பலவற்றுள் எவ்வளவு அறிவுடைமையுண்
டோ அவ்வளவு அறியாமையும் உண்டு. பல நூல்கள் வரம்புகடந்து பயனற்ற
வீண்பேச்சாற் சாலவும் பூரித்திருக்கின்றன. ஆதலாற் சிறந்த கருத்துக்க
ளுக்கும் மேதக்க உணர்ச்சி வெளிப்பாட்டினிற்கும் தலையூற்றாய் முதற்கருவிக
ளாம் இறப்பச்சிறந்த நூல்களையே கைப்பற்றுக. அற்றேல், அவற்றின் சால்
பைத்தெளிவுறவைக்கும் மாத்திரையில் தெளிவறவைக்கும் கணக்கற்ற உடன்
வரும் வீண்மொழி பயிலும் நூல்களை ஆர்வத்தொடுந்தவிர்க்க நீவிரே
யறிவீர். சமயநூலிற் பயிற்சியடைந்த சிறுவனொருவனுக்கு இக்காலத்தில்
வந்துள போதனைத் தொகுதியைக்குறித்து வழூவழூப்பாய்ப்பேசும் வன்
மையைக்காட்டினும் வடமொழிப்பகவத்கீதையினை மனப்பாடம் படுத்திவைத்
துக் கோடல் மிகவு மின்றியமையாததாகும். நன்றே அவையனைத்தும்;
ஆயின், நாடும் பொருள் அவையனைத்து மாகா. இந்துமதக்கொள்கை
யின் ஓங்கிய பயிற்சிக்கு அவையிற்றினை அற்பமென வுன்னி விலக்க
லாகும். அற்றன்று பகவத்கீதை. ஆதலான் மானுடச்சிந்தனையின் சரித்திரத்
தையும், மக்கள் அதிர்ஷ்ட வேறுபாட்டையும் மாற்றியொழித்த தூய்மை

யானநூல்களைக் கண்ணுக்குமுன்னிறுவுமின். அரசியல் நூலுணர்ச்சிக்குத் திருவள்ளுவரிற் பயிறல் வேண்டும். கணித சாஸ்திரத்திற்கு இலீலாவதி நூலோரையும், தத்துவத்திற்குச் சங்கரரையும், சமயநூலினிற்கு இராமாநுஜரையும், செய்யுட்குக் கம்பரையும், இயற்கைநூலிற்கு வராகமிகிரரையும், நோக்குமின். ஆராய்ச்சிக்காரணமாய் அரிய வுறுதிப்பயன் பெறுவிடினும், பரந்துவிரிந்து மக்கட்போலிக் கருத்துக்களை மறுத்துரைத்தும், அவர்தம் கருத்துச்செயல்கள் மிக்க இயைபையெய்தும் வண்ணம் மனமெழுப்பியும், தங்கள் காலத்திற் பயன்பெறவாழ்ந்த பெயர்பெற்றமானவரையும் உற்றுநோக்கியாராய்மின். வித்தியாரண்ணிய சுவாமிகளும், ராமதாச சுவாமிகளும், இவ்வகுப்பினருளடங்குவர். ஆயினும், கருத்துஞ்செயலுஞ் செறிந்தியலும் உலகத்தின்கணுள்ள இத்தகைய சுயவுணர்ச்சிபெற்று புதுவதுவெளிப்படுத்துவோரிடத்து உற்றபழக்கமெய்த நீவிர்ஊக்கமுடன் நசைகொண்டாலும், கலைப்பயிற்சியின் குழவிப்பருவத்தில் இயற்கையாகவே, அவர்களைப் பற்றித்தெருள எப்போது மியலாது என மிக்க ஆகுலம்பட உணர்வீர். அவ்வுயர் நிலத்தோரைக்கைப்பிடித்து வணங்க நீவிர் சிலபடிகள் இவர்தல் வேண்டும். சிறுநூல்களே அப்படிகளாகும். ஆதலான் நூலாதாரங்களை எள்ளற்க. அவை உமக்கு அறிவெனும் பெருங்கோசத்தை அணுகுவான் உற்ற இன்றியமையாத செல்வழியாம். அவையிற்றினை சேமமுடன் தாவி அப்புறத்துறுதல் இயலாது. மற்று, ஒரு பாஷையைக்கற்பதில், விரிந்ததோரிலக்கணத்தைக் காட்டிலுஞ் சிறுநூலொன்றை எடுத்துக்கொண்மின். உயிருள்ள மக்களது உடல்நூலிற் செறிவுற்ற தசையின் பண்பை ஆழ்ந்து உணருமின். அங்கங்களினடக்கம் எலும்பு, உறுதியுள்ள கட்டுக்கோப்பு, ஆகிய இவையிற்றில் மிகவுந்திருந்தியவுணர்ச்சி அடைவதுபோல், இலக்கணத்தில் முதனிலைகளினும், உறுப்பிலக்கணத்திலும், பெயர் வினைகளினியக்கத்திலும், இடையுரிகளின் பொருத்தத்திலும் முன்னர்ப் பழகிப் பின் நுட்பமான இலக்கண விஷயங்களில் நுழைதல், வேண்டும். ஆதியிலிது கடினமெனத் தோற்றினும், பின் நேரும் இடர்பாட்டினைத் தவிர்க்கும். ஆயினுஞ் சிறுநூலினை அடியோடு கற்பதிற் பொருளறியாது மனத்திற்றிணிக்கும் வகையினை ஒழித்தல் வேண்டும். சந்தேகமின்றி சில விஷயங்களை அம்மனப்பாட முறையினானே கைப்பற்ற வேண்டியிருக்கும். ஆயின் அவ்விஷயங்கள் சிறந்தனவாகா. அவையிற்றின்கட் பயிற்சியடைதற்குற்றது ஒன்றுமின்று. அவ்வகை மனப்பாடஞ்செய்தல் கேவலமறிவில் செயல். பகுத்தறிவு பெற்ற பிராணி அதனைக்குறித்து வெள்கல் வேண்டும். எவ்வளவு அடிக்கடி. பொருள் நோக்காது பல்காற் சிந்திப்பது வழங்கிவரினு மவ்வாறு செய்தல் அவசியமன்று. தானேசிந்திப்பதைக்கற்க இயலாதவர்கள், அல்லது, கற்கமனமில்லாதவர்களே அதைப்புகலிடமெனக்கொள்வார்கள். மற்று, இயன்றமட்டும் படிக்குமுன், அல்லது, படித்துவரும்போதேயாவது சிந்திக்கவேண்டும் என்பதே யாமறிவுறுத்துவோம், பொருள்தெரியாது



கற்கும் அவ்வழிப்படி நன்னூலின். 462. சூத்திரங்களையும் மனப்பாடஞ்செய்து கோடலினும், உமக்குள்ளேயே ஒரு சூத்திரத்தின் பொருளை உதாரணமுகத்தான் ஆராய்ந்து நீவிரே அறிவீராகில், உமது பகுத்தறியுமாற்றலினைச் சாலவும்பண்படுத்துவதாகும். இதனையடுத்து நூலினைக்குறித்துயாமறிவுறுத்தத்தக்கது யாதெனிற், கூடியமட்டும் ஒழுங்குபெறவும், காலக்கிரமபடியும் நீவிர் கற்றல்வேண்டுமென்பது. ஒழுங்கின்றி விஷயங்கள் மனதிற்குழுவித்தங்கா. பிறப்பு வளர்ப்பு முறையே மிகவுமியற்கையும் போதனையும் பொருந்திய நேரிய வழியாம். ஆயின், இயல்பாகவே இவ்வொழுக்கமுறை மற்று, எவ்விதியுமே, வரையறையின்றி எங்கும் பொருந்துவதன்று. முறைப்பட்டகல்விக்கு விலக்கு முன் விருப்பத்தால் ஏற்படும். சரித்திரத்தின் தனித்தவொரு காலவெல்லையில் பயிற்சியடைய இயற்கையில் ஒரு பற்று அடைவீராகில், எவ்விதத்தினும், அப்பயிற்சியை அடைமின். திருத்தமாயும் செவ்வையாயும் மட்டுமதனைச் செய்வீராக. திண்மையுடன் பற்றிக்கொண்ட தொடரின் பிணைப்பு ஒன்றே தகுதியாகிய இயைபால் விரைவினில் மற்றவைக்கும் வழிகாட்டும். பற்றுள்ள ஒரு விஷயத்தினின்று மற்றொன்றினுக்குச் செல்லச்செல்ல அவையிற்றினைத் திட்டமான காலத்தொடர்ச்சி மூன்றுற்றொருகுத்து அமைக்கவேண்டுவதை நீவிரேயறிவீர். பொதுப்பட்ட விஷயவறிவினுக்கு தொடர்ச்சியற்ற ஒருவிதப்படிப்பு இடைக்கிடையே வழங்கலாகும். ஆயின் அத்தகைய படிப்பு மனதிற்கு வேண்டியபொழுது போக்கினை, அல்லது, பயன் பெற்ற அலங்கரிப்பைச் சார்ந்தது. மனதைப் பண்படுத்தும் நோன்மையதன்கண் ஒரு சிறிதுமில்லை. தற்காலத்தில் மிக்க பிரமை அடையப்படும் அத்தகைய படிப்பு மனதிற்குப் பயன்படாது, மற்று இன்னுசெய்யும். பதினாறும் பதினேழாம் நூற்றாண்டுகளிலிருந்த மிக்க நிபுணர்களுக்கு நாம் அடையும் கணக்கற்ற நூல்கள் கிடையா. ஆயின் உடையனவற்றை மிக வான்ற பயன் படுத்தினர். கேவலம் பலவட்டரையாய்ப் படிப்பவர் படிப்பு புல்வெளியிற்றிரியும் ஆடு ஒவ்வொன்றினும் வாய் வைத்து இறுதியில் ஒன்றையும் உட்கொள்ளாதிருப்பதை ஒக்கும். மற்று எடுத்தநூலை இடையிற் சுவை யுடைத்தாகாது போனபோதிலும் விடாது நின்று ஒரு முறைக்குப்பன்முறையாய்ப் படித்து முடித்து நூற்பொருள் காண்போனே நேரிய படிப்பாளி எனப்படுவோன்.

## XI சிறப்புக்கல்வி.

பொதுப்பயிற்சி யடைவான் நோக்கமுடன் படிப்பதற்கு எதிரான திட்டமாய் அவ்வத்தொழிலினிற்கடுத்த படிப்பைப் பற்றிச் சில குறிப்புக்கள் கூறுதல் பயன் பெறலாகும். நம்மவர்க்குள் ‘உத்தியோகப்படிப்பு’ என்று சிறப்பித்துக் கூறப்படும். அவ்வவர் கொண்ட தனித்த தொழிலினைத் தடையின்றிக் கற்கத் தொடங்கச் சில சிறுவர்களுக்கு இயற்கையில் ஒருவிதஆசைப்

பெருக்கம் நிகழ்கின்றது. ஆயின் இளைஞர் நிபந்தனையின்றிக் கொள்ளுமிக்
கருத்து ஐயமின்றிப் பெரும்பிழையேயாம்; தொழிற்பயிற்சி பெற்ற மக்கள்
அனுபவமும், தொழிற்பயிற்சி மேம்பாட்டின் வரலாறும் பெரும்பாலுமங்ஙனம்
தெருட்டலானென்க. ஏனெனில் முதன்முதலில் தனது தற்காலநிலைமையில்
பயனற்ற புனைவு மற்றுத் தடையெனக் கூடக்கருதத் தகுதியுள்ளனவே பின்
வரும் தனது தொழிற்பயிற்சியில் பெரும்பாலும் அரிய உதவிகளும் மிக்க பய
ன்படும் துணைக்கருவிகளுமாமென்று அறிவுடை வாலிபனொருவனுக்கு அற்ப
ஆராய்வு தெருட்டும், பாஷைகளுக்கு இவ்விஷயம் விசேஷமாய்ப் பொருந்
தும். இவை ஆதியில் பொருள்களை உறுதிப் பாட்டொடு அறிவதற்கிடையூறு
களாய்த் தோற்றும். ஆயினும் தனது தொழிலினுக்கடுத்த உணர்ச்சியின்
பரப்பை விரித்து, அதன் வேரை ஊன்றச் செய்யச்செய்ய அவனுக்கு
அவை மிகவுமின்றியமையாதனவாகும். எப்பொழுதேனும் பாஷா உணர்ச்சி
வரம்பு கடந்து கொண்டாடப் பட்டிருப்பின் அது தனித்த பயனெனக் கருத
ப்பட்டபோதே யாகவேண்டும். தெளிவுற்று ஆய்வோர் கரத்தில் பாஷைகள்
கருவிகளாம் பண்பை மிசைப்படக்கொண்டால் இயலாது. மற்றும் கேவ
லம் தொழிற்பயிற்சியின் கண் நிற்போன் குறுகிய நெஞ்சினன். அன்றி அத
னினுங் கெட்டவன். ஒரு வழி நோக்குமிடத்து அவன் செயற்கை மனிதன்
ஆன்ற இயற்கை மெய்ப்பொருளினின்றும் மக்கட்சேர்க்கையினின்றும் போத
ரும் உறுதி பயக்கும் ஆற்றலினின்றும் விலக்கி ஒதுக்கப்பட்டு சங்கேத வசன
ங்களுக்கும், குழூஉக்குறிகளுக்கும் இடமானவனாய்க் கழிகின்றான். ஜனச
மூகத்திற் கேவலம் கேவலம் தொழிற்பயிற்சியில் மிகச்சிறந்த தேர்ச்சி யடை
ந்தோன் எட்டுணை மதிப்பு மற்றவன் தனது செய்திறத்தில் தனது மானுஷத்
தன்மையை ஆழ்த்தி இழிந்தவன் தோல்வியாபாரியாயின் தோலினைக் குறித்தே
எப்போதும் அவன் பேச்சு மாணாக்கனாயின் ஓயாது சுருட்டுக் குடிப்பவனோடு
புகையிலை நாற்றம் செல்வது போல் எப்போதும் நூல்களின் நாற்றத்தை
வீசி இயலுகின்றனன். கேவலம் தொழிற்பயிற்சியடைய ஆவலொடு பாய்வ
தை விட்டு மனமழுந்தச் செய்யும் தன் (உலகோர் கூற்றாகிய) கடையைக்கட்
டச் சிறுவனொருவன் ஆவலடைய வேண்டும். சுத்த தொழிற்பயிற்சியின்
குறுக்கும் வன்மையை உணரும் நிலைமையை விரைவினிலவன் அடைவான்.
மிசப்பரந்த இடத்தில் மிக்க ஆசையுடன் அவன்பரந்து பார்க்கட்டும். ஆனால்
ஒருவன்கேவலம் தொழிற்பயிற்சியில் மனம் வைத்து பொதுக்கல்வியினுக்கு
தன்னுள்ளத்தில் இடம் பெறாவிட்டால் எத்தகைய விரிவுற்ற சிறப்புக்கல்வி
யும் தனது தொழிலுளடங்கு வதனைத்தையும் அவனுக்குத் தெரிக்காதென்றும்
மிகவும் திட்டமான தொழிற்பயிற்சி கூட தன் தொழிலின் மிகவும் இனிமை
வாய்ந்து இறப்பச்சிறந்ததோர் பகுதியை அவனுக்குத் தெருட்டாதொழியுமெ
ன்றும், அவனறியக்கடவன். அதாவது மேற்கொண்ட தொழிலின் சிறப்புப்
பண்பு, மக்கள் கருத்துக்களும் மானுஷ மனோவிகாரங்களும் ஆகியவற்றின்



பொதுப்பண்பொடு நேரேகலந்தியங்கு மாற்றை அது விளக்காதென்பதாம்.
இதற்கு நியாயவாதியின் தொழில் தக்கதோருதாரணம். ஏனெனில் நியாய
வாதியின் தொழிலின் உட்பிரிவுகள் பல வற்றினைப்பார்க்கிலும் மிகச்சங்கேத
மாகவும், செயற்கைப்பண்புடையதாகவும் மக்கட்குரிய வனுதாபத்தினின்றும்
நெடுந்தூரம் விலகியதாயும் இருக்குந்தொழில் வேறொன்று மிலது. அவ்வா
றாயினும், சிலஉட்பிரிவுகளிலோ சட்டமுறை மக்கள் உரிமையும் சுயாதிகார
முமாகும் ஆடரங்கத்திற் கடந்து பொதுப்பட்ட விஷயங்களில் ஊடாடுகின்
றது. அவ்விஷயங்களிற் கையாடு முதலில் நியாயவாதி அத்தொழிலின்கண்
கைதேர்ந்தோனாயிருத்தலினும் உலோக வியாபாரமுற்றவனாயிருப்பது பெரும்
பாலும் சிறந்ததேயாம். இம்மாதிரியே வைத்யகமும் நுட்பமான சூழ்ச்சித்தி
றனுடன் கலந்த மருந்துச் சரக்கின் பயனையும் அத்தொழிலினிற் கடுத்த நோ
ய்க்கூறுபாட்டின் அறிவிப்பையும் போலவே மக்களியற்கையினையும் மக்கள்
பண்பினையும் குறித்த அறிவினைச்சாரும் சமயநூலும் மிகவும் கடுமையான்
வைதிகமாயும் மிகவும் திட்பமாய் நூன்முறைப்படியும் இருப்பின் சாதாரண
மாய் ஒரு சிறிதும் மக்கட்குரியதன்றாய் சமயர் போக் கொடுமுரணும் தொட
க்கத்திற் பார்வைக்கு எவ்வளவு கீழ் நிற்பினும் பொதுப்படிப்புற்றவன் இறுதி
யில் சிறப்புக்கல்வியடைந்தோனை அவன் விரும்பும் தொழிலிலேயே வென்று
மேற் செல்லுவன். இது பல்லோரனுபவத்தினும் விளங்கியதோருண்மை.
ஏனெனில் பொதுப்பயிற்சியற்றவன் தான் வழக்கமாய் நோக்கும் சிறிய வெல்
லையினின்றும் தன் வேலைக்கு ஆதரமாகும் விதிகளையாதல் தனது தனித்த
தொழிலும், பொதுப்பட்டமக்களினனுதாபமும் மக்களின் ஆற்றலும் இவை
யுந்தன்மையை யாதல் அறியான். ஜனசமூகத்தினுனும், தேசசஞ்சாரத்தினு
னும் சிறந்த புலவரொடு கொள்ளும் பழக்கத்தினுனும், உண்டாகு மனுகூலங்
களே கேவலம் சிறப்புக்கல்வியின் ஒடுக்கும் வன்மையினின்றும் பாதுகாக்கும்
கருவிகளாம். முக்கியமாய்ப் பாவலருடனும், சரித்திரகாரருடனும் ஊடாடு
தல் வேண்டும். அவரது கலப்பற்ற மானுடத்தன்மையுற்ற கருத்துக்களான
இவ்வுலகின் உயிர் நிலையைச் சிறப்பித்து அனுதாபத்தொடு கூடிய அறிவை
அவர் பரவச்செய்கின்றனர்.

ச. கி. சுந்தராசாரியன்.

# VEDA'NTA DE'SIKA.
# வேதாந்த தேசிகன் வைபவம்.

---

### நேரிசைவெண்பா.

*காசினியோர் குற்றங் களைவான் கருதிய நம்*
*மாசில்புகழ் வேங்கடவன் மாணருளாற்—பேசு*
*ஞானக் குருபரனாய் ஞாலம் விளங்கவைத்த*
*மோனக் குருபரனே முன்.*

### குறிப்பு.

**பல்லுலகங்களையும் படைத்** தளித்தழிக்கும் பரமனும் வேங்கடவெற்பன்
(கடலாடை கொண்ட இக்காசினியில் ஸ்ரீவைணவருக்குரித் தாய இராமா
னுஜ மதத்தை நிலைநிறுத்துமாறு தாங் கொண்ட கருத்துக்கிணங்க) பன்னாண்
மகப்பே றின்றித் தம்பாற் சரணடைந் திருந்த ஸ்ரீவைணவ குலதிலகராம்
அநந்தஸூரியார் மாட்டு இரங்கிய மனத்தராய்த் தம்பாலிருந்தமணி (தை
கண்டை)யை யீந்தவளவில் அங்ஙனே யனந்தஸூரிகளு மம்மணியைத் தம்
மில்லக் கிழத்தியாந் தோதாரம்ம னிடமீந்து விழுங்கிவிடுமாறு கட்டளையிட,
அவ்வணமியற்றிய அத்தேவியாரிடம் நங்குலக்குரவரா யுதித்திவ்வுலகி லிராமா
னுஜமதத் தாபனஞ் செய்தருளிய வெந்தையாம் வேதாந்த தேசிகனது பிறப்பு
முதலிறப்பீறாக நிகழ்ந்துள வரலாறு கூறுவாம்.

## I. தேசிகன் பிறப்பு.

அவனிமா மகளுக் கணிகலனென்ன வமர்ந்த தொண்டை நாட்டினில்
'முத்திதரு நகரேழின் முக்கியமாங் கச்சி'யில், (கலியுகம் பிறந்து நாலா
யிரத்து முன்னூறாண்டுகளுக்கு முன்) ஸ்ரீ வைணவ குலதிலகராயும், எழு
பத்துநான்கு சிங்காதனாதிபதிகளுளொருவராகியும், பன்னூல்களையும் பளகறப்
பயின்று மிருந்த அனந்த ஸோமயாஜியா ரென்பார்க்குப் புண்டரீ காக்ஷய
ஜீவரவென்பவ ரவதரித்தார். இன்னாரிளமையிலேயே சாத்திரம் பலபயின்று
அச்சாத்திர விதிக்கிணங்க நாரணனது திருத்தொண்டர்களில் முதலெண்
ணிக்கைப் பெற்றவராய் முதலாசிரமங்கடந்து சில்லாண்டு கழிந்ததற்பி னிவ
ரிடமாக அனந்தஸூரிக ளென்பாரொருவ ருதித்தனர். இவ்வனந்த ஸூரி
களும் "மகன் றந்தைக்காற்றுமுதவி யிவன்றந்தை யென்னோற்றான் கொல்
லென்னுஞ்சொல்" என்றபடி, அறிவாளிகளாவார் யாவரும் வியப்பொடுதம்மை
நோக்கிக் களிக்குமாறு, பல்பலவாய சாத்திராதிகளையும், ஆரணத்தொகுதிக
ளையும் நுண்ணறிவானுணர்ந்து வழுவறப் பயின்று வளர்ந்து வருங்கால், இவ
ரது நற்குண நற்செய்கைகளையும், கல்வித்திறனையும், ரூபலாவண்யங்களையும்
கண்டு களிபேரு வகையுற்ற தந்தையார், ஒருநாள் (எவ்விதங்களிலுந் தமக்கி



ணையான அப்புள்ளா ரென்னும் ஸ்ரீ வைணவ சிகாமணிபாற் சென்று, வாரீர்
குலச்சிரேட்டரே! நினது செல்வச் சோதரியை எனது மைந்தனுக்குக் கன்
னிகாதானம் செய்தருளுவீராக வென மிக்கவிழைவோடு கேட்டருளினர்.

அம்மொழிகளைச் செவிமடுத்த அப்புள்ளார் சற்றாலோசித்தவராய்த் தம்
முன்னாக வீற்றிருக்கும் புண்டரீகாக்ஷ யஜ்வாவை நோக்கி நீவிர் விழைந்து
கேட்டருளிய வற்றிக்கு நாளையுதயத்தில் தக்கவிடை யளிப்பே னென்னலும்,
வாயாறக் களித்துத் தாங்கூறிய வற்றிற்கேற்ற விடையளித்துத் தம்மித்திர
சிரோரத்தினமாய் விளங்கிய அப்புள்ளார் பால் மிக்க நன்றிபாராட்டி அங்
ஙனே யாகுக வெனச் செப்பியன்னவரிடமாக விடைபெற்றுத் தமதில்லம்புக்
கனர். ஈதிங்ஙனமாக,

தம்மையடைந்து விழைந்து கேட்டருளிய யஜ்வாவுக்கு மறுநாளுதயத்
தில் ஏற்றவண்ணம் விடையளிப்பேனென்ற அப்புள்ளார் செய்வதின்னெனத்
தெளிந்திலராய் அற்றைப்பொழுதைப் போக்கிக் கங்குற் போனகமருந்தி
பள்ளியறை புக்கி நங்கருத்துக் கிசையக் கனவிற் பேரருளாளனரு ளுவனேல்
அக்கட்டளைப் படியே முடிப்பனெனக் கடைப்பிடித்து.

"சடைமுடியன் சதுமுகனென் றிவர்முதலாந் தரமெல்லாம்
அடையவினைப் பயனாகி யழிந்துவிழும் படிகண்டு
கடிமலராள் பிரியாத கச்சிநக ரத்திகிரி
யிடமுடைய வருளாள ரிணையடிக ளடைந்தேனே'!.

என்றிதுபோன்ற பற்பல பாசுரங்களானே ஸ்ரீவிராட் ஸ்வரூபியாய், ஆதியந்த
மில்லானாய்த், தாமாய், தாமல்லனாய், அலகிலாவிளையாட் டுடையானாய், தந்
தொண்டர் கொண்டகருத்தை யோர்ந்து அங்ஙனே யாக்கு விப்போனாகிய
பெருந்தேவி மணாளனும் பேரருளாளனை மனனஞ் செய்துகொண்டே துயின்
றனர்.

அங்ஙனந் துயின்ற வளவிலிரவிடைச் சாமத்து (முன்னிவர் கொண்ட
கருத்துக்கிணங்க) யிவர்கனவின் முன்னர்,

"சுகலேக மெண்ணி சூழ்வினை தீர்க்கத் துணிந் தயனார்
அகலாத வன்புடன் கொண்ட வயமேத வேதி யின்மேல்
புகலோங்கு பொன்மலை யென்றதோர் புண்ணிய கோடியுடன்
பகலோன் பகல் விளக் காகப் பரஞ்சுடர் தோன்றியதே".

என்றவண்ணம் பெருங்கருணைத் தடங்கடலாகிய பேரருளாளன் றோன்றி யிவ
ரை விளித்து நீவிரடைந்துள்ள மயக்கொழிப்பீராக. நம் மருஞ் செல்வச்
சோதரியை யனந்தஸூரியார்க்கு கன்னிகாதானஞ் செய்வீராக. என்னெ
னில், நுஞ்சோதரிபால் (உலகோருய்யும் வணம் ஞானத்தை விளக்கிப் பரதத்
வத்தைத் தாபிப்பான் வெளிப்போந்த தொரு பெருங் குமரனுதிப்பானுதலால்

நீவிர் நஞ்சரத மொழிக்கிலக்காவீராக. என்றறைந்தவக்கணமே மறைந்தருளி னர்.

இங்ஙனந் தங்கனவிற் பெருமான்திருவருள் புரிந்தவை யனைத்துஞ் சரத மேயாமெனக்கடைப் பிடித்த அப்புள்ளார் மிகக்களித்த மனததினராய்த் துயி லுணர்ந்து (புண்டரீகாக்ஷ யஜ்வாவினுடையதுந் தம்முடையது மாய எண் ணத்தை நன்கே பாலிப்பித்தா ரெந்தைபோருளாள ரென்றுள்ளக்கனிவொடு,

“ பெருமை யுடை யத்திகிரிப் பெருமாள் வந்தார்
பேராத வருள் பொழியும் பெருமாள் வந்தார்
அருமறை யினுச்சி தனி னின்றார் வந்தார்
அங்க முடன வையாகு மரியோர் வந்தார்
திருவுரை யாய்த்தாம் பொருளாய் நிற்பார் வந்தார்
திருவருளாற் செழுங் கடலைக் கடந்தார் வந்தார்
மருவிலாக்கு மயக்குரைக்கு மாயோர் வந்தார்
வானேற வழி வந்தார் வந்தார் தாமே.
அத்தி கிரிய ருளாளப் பெருமாள் வந்தார்
ஆனை பரி தேரின் மேலழகர் வந்தார்
கச்சிதனிற் கண் கொடுக்கும் பெருமாள் வந்தார்
கருத வரந்தருந் தெய்வப் பெருமாள்வந்தார்
முத்தி மழை பொழியுமுகில் வண்ணர் வந்தார்
மூலமென வோலமிட வல்லார் வந்தார்
உத்தரவே திக்குள்ளே யுதித்தார் வந்தார்
உம்பர் தொழுங் கழலுடையார் வந்தார் தாமே.”

என்றிவை போல்வன பற்பல பாக்களாற் பெருந்தேவி மணாளரது கல்யாண குணங்களைப் புகழ்வதிலேயே கங்குற்பொழுதைப் போக்கிவைகறைப் பொழு திற் காலக் கடன்களை முடித்துத் துலங்கியவளவில் தினஞ்செய்வான் கீழைத் திசையிற் றோன்றி யொளிர்ந்தனன்.

பின்னர்ச் சின்னாழிகை கழியவும் அப்புள்ளார், (முதனாண் மாலைப்போ திற் புண்டரீகாக்ஷ யஜ்வாவுக்குத் தாம்விடையளித்திருந்த படியே) அவ்யஜ்வா விடம் தாமாகச் சென்று அவரோடு இரவு போருளாளர்க் கனவிலளித்த வுத்தி ரவின்மேம் பாட்டைப் புகன்றவரைக் களிப்பித்ததோடு அவரையும் அவரது திருக்குமார ரனந்தசூரிகளையும் மற்று முறவினரையும் அழைத்துக்கொண்டு தம்மில்லம் புக்கி யற்றைங்கோள்கணின்ற நிலையை நோக்கிச் சுபமுகூர்த்த மமைத்து யாவருமறிய மணவினைக் காயத்தஞ்செய்து நிகழா நிற்கையிம், குறி த்த இலக்கினத்தில் அப்புள்ளார், ஸகலாபரண பூஷிதையாய்த் திருமணக் கோலங்கொடு ஆங்கணடைந்துள்ள தஞ்சோதரியை யனந்த சூரிகளுக்குக் கன்னிகாதானஞ் செய்தருள, கதிர்விட்டொளிரு மங்கி சான்றாக அன்ன சூரி



களுந் தாம் ப்ரதிக்ரஹித்த தோதாரம் மனுடைவ கந்தரத்தில் தங்கரம்பு குந் தொளிருமங் கலியத்தை வேதமுறையானே தாரணஞ் செய்துகளிக்க, பின்னர்த் தேவியாந் தோதாரம் மனும்வளையல்க ளணிந்த தங்கை புக்குள்ள முருகார் மலர்த்தொடையல்களை மணாளரது பன்மணிவடங்க ளணிந்ததோள் களிலணிந்து குகதூலிகாயம் மிகுந்தறிவாளராயுள்ளமறையோர் ஆசிவழங்கப் பலபல்லிய முழக்கினொடு மகளிரது மங்கலப் பாட்டுக்க ளொலிகளு மொன்று குழுமித்தயங்க, கருணாகரனாங் கண்ணனது திருமணமே யீதெ னலாம் படியாவருங்கண் டுவகைபூப்ப மணவினைகள் நன்கே முடிவெய்தின.

பின்னர் சின்னாள் கழியவு மொரு நன்னாடனிலித் தம்பதிகள் தம்முறை விடம்புக்கிக் கண்டோர்வியப்பொடு இத்தம்பதியர் வதிட்டாருந்ததியே யென் னலாம்படி “இல்வாழ்வா னென்பா னியல்புடைய மூவர்க்கும் நல்லாற்றி னின்ற துணை” என்றதற் கொவ்வ இல்லற நெறி சற்றும்வழாது நிகழ்த்தி வந் தார்கள். ஈதிங்ஙனமாக,

முன்னொரு கால் (“ திண்கைம் மாதுயிர் தீர்த்தயன்றிரு வேங்கடம்) என் றும், “ வேதப் பொருளே யென்வேங்கை கடவா” வென்றும் சொல்லற் கிட் டனாய், பிறப்பிறப்பற்றோனாய், இழித்தல் கழித்தவனாய்யாவுந்தாமாய் கட வுளர்க்குங் கடவுளாய்,

“ உலகம் யாவையுந் தாமுள வாக்கலும்
நிலை பெறுத்தலு நீக்கலு நீங்கலா
வலகிலா விளையாட் டுடையாரவர்
தலைவர் * * * * * * * * ”

என்று கூறியுள்ளவாறு, கலியாண குணங்களனைத்து மொருங்கே நிரம்பப் பெற்றவனாய், முச்சுடராய், முக்குணமாய் மும்மலட்டைகளின்றி பற்றற்றவ னாய், பிரணவப் பொருளாய், தாராப் பிரமமாய், தம்மையாய்ந்தோ ரெம்ம தத்தவராயினு மம்மதக் கடவுள் தாமே வாகவிளங்கும் வேங்கடத்தன், உலகோ ருய்யும் வணம் தந்திருவாழி திருச்சங்கு விரண்டனையு மாசிரதர க்ஷணார்த்த மெம்பெருமானா ரென்பார் பக்கலீந்துச் சின்னாளிப்படைகளிரண்டு மின்றித் தமது சின்னஞ் சற்று நீங்கற் பாலதாவிருக்க, யாவும் வல்லவெம் பெருமா னரங்கோர்ந்து அப்படைகளிரண்டையும் தம்பாலளித் துவகை பூப்ப அங்ங ணமே திருவுள முவந்துன்னார்க்குத் தம்மு ழுவடிவுதந்தொ டவரைவிளித்து நீவிர் செய்துள உதவிக்குக் கைம்மாறாக: இவ்வுலகிற் கலியி னாவேசத்தால் சில்லோர் மயங்கி யாங்காங்குள்ள வைபவவாதங்களைக் கொண்டு சாத்திரங் களுக்கு விபரீதார்த்தங்களைக் கற்பித்து விரோதத்தை வளர்ப்பிப்பான் றொடங் கினமையாலும், பிற்பட்டிக் கோட்பாட்டிற் கிணங்க கலியுமிக்கலிபோன்ற சில ரும் தோன்றுவராதலானும், அதற்கு முன்னரே அணைபோட்டுத் தரிசனத்தை

த்தாபித்து நம்மாட்டெமக்குள் இருதக்ஞதையை முடிப்பிப்பான் புகுந்தன
மெனத்தக்க சமாதான மளித் தந்தர்க்க மாயினன்.

இஃதெங்ஙனே யென்னில் :--

கடவுளராவார் மிகக் கிளர்ந்த மனத்தொடு தங் கோயிலின் வாயிற்படி
கடந்து தம்மை வணங்கிச் செல்லவும், அரக்கராவார் தங்கு ழுக்கவொடு மிக்க
மாழாந்தமனத்தினராயோடி யொளிக்கயமாகச்செய்யுந்தந்திருமணி யாழ்வா
ரைத்துலங்குந் தூப்புற்குலத்தே (ஞானனந்த பரிதமான) ஓராண் மகப்பேருக
ஜனிப்பித்தருளவேண்டுமெனக்கடைப்பிடித்த வுள்ளத்தொடொருநாள் அகில
ஜகத் காரணபூதரான ஸ்ரீவேங்கட முடையான் ("குலமகட்குத் தெய்வங்
கொழுநனே" என்பதைக் கடைப்பிடித்து) ஸஹதர்மசாரிணியாய் விளங்கும்
தோதாரம்மனோடு.

> "பொய்குறலை வன்சொல் பயனிலவென் றிந்நான்கு
> மைதாமை சொல்லின் வழுக்காது மெய்யிற்
> புலமைந்துங்காத்து மனமாசகற்று
> நலமன்றே நல்லா றெனல்"

என்றிவை போன்ற பல கிருகத்தாச்சிரம நெறியினின்று சற்றும் விலகாது
"தனக்குவமையில்லா தான்றாள் சேர்ந்தார்க் கல்லான் மனக்கவலை மாற்றல
ரிது" என்றபடியே திருநாராயணனது திருவடிகளைத்தொழுது பஞ்சகாலப்பரா
யணராய்ப் பகவத்பாகவதாசாரிய கைங்கரியங்களின்முற்பட்டோராய் "அந்
தணரென்போரறவோர் மற்றெவ்வுயிர்க்குஞ் செந்தண்மை பூண்டொழுக
லான்" எனுங்குறளுக்கிலக்கியமாய்த் தம்முயிரேபோன் மன்னுயிரையும் புறத்
தலையேகடை பிடித்தொழுகுபவராய், யாவரினுந் தூய்யராய். இவ்வெம்பிரான
து திருவருட்டுணைகொடு மணவிழாக் கடந்து பன்னாண் மகப்பேறின்றி மாய
வனை பம்மறவாது மனதாற வாழ்த்தி வருபவருமாகிய அனந்த சூரியினுடைய
சொப்பனத்திற் றாமோரந்தணச் சிறுவனுருக்கொடு போந்து தம்வரவையுண
ர்த்தியவரைத் தம்முறைவிடமாம் வேங்கடமாமலைக்கு வரக்கடவீரெனக் கிள
த்திக் கரந்த வக்கணமே அனந்த சூரிகளுந்துயிலுணர்ந்தெழுந்து தேவியை
நோக்க அன்னவருந்துயில் நீத்திருக்கண்டு தங்கனவின்மேம்பாட்டைச் சொல்
லலும் அதனைக் கேட்ட தேவியார்தாமும் தங்கனவிற் சிறியவடிவாய் பிராட்
டியாரருளிய கட்டளையின் பெருமையை மகிழ்வோடு தங்கணவரொடு சொற்
றலுமிருவருக்கும் ஒருவரை மிகக் கட்டளையிட்டுப் போந்த ஸ்ரீநிவாஸப்பெரு
மானுடைய பேரருள் வெள்ளத்தைத் தாங்களுன்னி யுன்னி யன்று பிற்றை
யிரவைச் செவ்வனே கழித்து வைகறைப்போழ்தே நித்தியக்கடன்களை நிகழ்
த்திப் பின்னர்த் தங்கள்ப்ர திட்டித்துக் கொண்டிருந்த திருவேங்கட மாமலை
யின் சிகரியிற் சென்று சென்னியிற் கரஞ்சேர்த்துக் கேசவனும்பாடிக் கொ
ண்டே ஆகமமுறைப்படி எம்பெருமானுர் துவக்கிப் பெரிய பெருமானும்பிரா



ட்டி ஸமேதனாக விளங்கும் திருவேங்கடமுடையானை யஷ்டாங்கப் பிரணாம
ஞ்செய்து தஞ்சிந்தை செல்லுங்காலவரை தவத்தியஞ்செய்து உய்ந்தோமுய்ந்
தோமெனக் கிளத்திய வாக்கினராய் அற்றைப் பகற்பொழுதளவும் அத்திருக்
கோயிலையே வலம் வந்து திருநாரணனது ஆக்ஞையே யெனலாம்படி மாலைக்
கடனை முடித்துக்கோயிற் போனகமருந்திப் பின்னராங்கே ஒருவைணவச்
சிரேட்டருடைய மாளிகைபுக்குத் துயின்றிருந்தனர்.

இங்ஙன மித்தம்பதியர் துயின்ற வளவில் இவர்கனவின்கண் கமலநாதன்
தாமோரந்தணனாகச்சென்று அனந்த சூரிகளை விளித்துத் (தாமின்னாரென்பத
னையுணர்த்தி) நமதாக்ஞையைக் கடவாதடைந்துள நுங்கட்கு ஒரு புத்திரப்
பேற்றை யிதோவளித்தோங் கைக்கொள்வீராகவென வாழ்த்துக்கூறித் தம்
பால் அருக்கனெனவொளிரும் (கை) மணியாழ்வாரை யீந்து இதை யுமது
(சுட்டி) இத்தேவியாரிடம் விழுங்கிவிடுமாறு அளிப்பீரேல், அவரிடமாக ஓர
ழகிய குமாரனுதிப்பன். அவனாலிவ்வுலகி லிராமாநுஜமத சித்தாந்தம் நிரா
டங்கமாக நிறுத்தப்படும் என்றருளிய வக்கணமே தாமந்தர்க்கதமாயினர்.

பெருமான் மறைந்தருளலும் அவனது திருவிளையாட்டுக்கு மெச்சித் தம்பா
லுள்ள மணியைத் தந் தேவிபாலீந்து விழுங்கச் செய்யலும் அங்ஙனே யாக்கி
யன்னவளும் எம்பிரானது கருணைக்கிரங்கி நாயகனோடு அளவளாயினள்.

(முற்கூறிய வைபவங்க ளித்தம்பதியர் கனவில் நிகழ்ந்தமையாத
லான்) வைகறைப்போதெழுந்த வத்தம்பதியர் தாந்தாங்கண்ட கனவின்
மேம்பாட்டைச் சொல்லிக் களித்துக்கொண்டே உதயோபத்தான முதலாய
காலைக்கடன்களை முடித்துத் திருக்கோயில் புக்குக் கனவிலருளிய காளமேக
வண்ணனுடைய திருவடிகளைச் சென்னியிற்சூட்டித் திரும்பவுந் தம்மை முன்
னிட்ட சில வைணவ நண்பர்பால், (முன்னாளிரவுமுத லன்ன ளிரவு வரையும்
நிகழ்ந்துள) தஞ்சொப்பனத்தின் சிறப்பனைத்துங் கிளத்தியவளவில், அன்னார்
களு மிக்க அதிசயத்தொடு எம்பிரானது திருவருளை யுன்னி யுன்னி யானந்தவா
ரிதியில் மூழ்கினவாறே கிடந்தனர். இங்ஙனமிருந்துழி,

இவ்வதிசயாதிக்கத்தை யாய்ந்தறியாத அக்கோயிலர்ச்சகர், பண்டையே
போல் அத்திருவேங்கடத் தெம்பிராற்கு அபிஷேகமனுராதனம் (இளங்காலைப்பூ
சை) செய்வதற்குக் கோயிற் கவாடங்களைத் திறந்து வேண்டிய உபகரணங்
களைச் சித்தஞ்செய்யப் புக்குழி திருமணியாழ்வாரைக் காணாது திகைத்து
என்செய்வே னென்செய்வேனெனக் கைபிசைந்துகொண்டே அக்கோயிலதி
காரிகளைக் கிட்டிக் கோவென்றரற்றி முறையிட்ட காலையில், அவ்வதிகாரிக
ளும் ஒருங்கே குழுமிக் கைங்கரியபரராங் கோயிலாரோரை விசாரணை புரிந்து
அன்னார்களிற் சில்லோர்பாற் சந்தேகங்கொடு சிக்ஷைக்குரிய காலம் விதித்
தலும், அக்கணத் தீதறிந்த திருமலைஜீய ரென்பாரொருவ ராங்கண் சடக்கென
வோடியடைந்து அவ்வதிகாரிகளை விளித்து நீங்கள் கொண்ட கருத்தை யொ

ழிப் பீராக. (சுட்டி) இவ்வேங்கட வெற்பனு மெந்தையார் தந்திருவுள முவந்து (நேற்றைப்பக லிண்டைத் தம்பன்னியோடடைந் ததோ வீற்றிருக்கும் அனந்த சூரிகளுக்குக் கங்குலில்) அவர் கனவில் ஸந்தாநார்த்தமாகத் தமது திருமணியைக் கொடுத்தருளியதாகவும், அதனை நீவிருமறியச் சொற்றேனென்று எம்பாலுமொழிந்துபோயினரென்றுந் தாங்கண்ட கனவின் மிகுதியையும், அத்திருமலைத் திருமாலினது திருவருளையு மன்னூர்பால் விளம்பித் தாமொருபுறம்பே நிற்றலும், அவர் செப்பியவைகளைச் செவிமடுத்துந் தேறுமனத்தினராய அவ்வதிகாரிகள் பின்னருஞ்சோதிப்பா னுளங்கொடு ஆண்டொருபுறம்பே தம்மில் லக்கிழத்தியொடு வீற்றிருக்கு மனந்தசூரிகள்பாற் சென்று அன்னவரைப் பிரணமஞ்செய்து தங்கண் மனக்கலக்கத்தை வெளியிட்ட வளவில், அவ்வனந்தசூரிகளும் (முன்னாளிரவு இல்லாளொடு தாங்கண்ட சொப்பனத்தையும் முண்டகநாபனும் வேங்கடவன் றம்பால் விழைந்து மணியையளித் ததனையியற்றும் முறையினைச் செப்பிப் போந்ததனையும்) உள்ளபடியே முறையிட, அங்ஙனமுந் தெளிந்திலராய்த் திகைக்குங்கால், முற்றுமுணர்ந்த முளரியாட்கொழுநனும் (அக்கணத்துத் தம்மையண்மி யிச்செய்திகளி லொன்றேனு மறியாதவராயிருந்த) ஜீயர்பாலா வேசித்து அந்தராளத்தினின்றும் வெளிப்போந் தவ்வதிகாரிகளை யண்மி யவர்களைக் கூயிஇத் (தம் வரவை யுணர்த்தி) நாம் நமது திருமணியாழ்வாரை இக்காசினியி லிராமாநுஜமத சித்தாந்தார்த்தமாய் (சுட்டி) இவ்வநந்த சூரிகள்பாற் பெரும் பெயர் சூட்டப்பெறும் ஒரு குழவியாய்த் திக்கும்வணந் தந்தருளினோம். இன்றுதொட்டு நஞ்சந்நிதியில் *திருமணி (கைமணி)யைச்சேவிக்க வேண்டாம். ஆயின், கைமணியின்றி நம்மை யாராதிக்கிலவ்வாராதனை யசுரருக் குகப்பாக்குவிக்கும். அன்னணமின்றி நம்மாட்டுள நிலைமணி (பெரிய கண்டை)யை ஆகமமுறைப்படி ஸேவித்துத் திருவாராதனஞ்செயக் கடவீர்களெனச் செப்பித் தாம் நீங்க, ஆவேசங்கொண்ட ஜீயருமொன்று மறியாராய்த் தாமமர்ந்தருளினர். (இன்னும் வரும்.)

கே. இரங்காசாரியர்.

---

# VIKRAMORVASIYAM.
# விக்ரமோர்வசீயம்.

இவ்வாறிருக்கையிலும், காதலிபோல் இனியகுரலினதென்று இதனிடத்திற் சிறிதுங் கோபமில்லை. இங்குநின்றும் யாம்.

* திருவேங்கடத்தாராதிகர்கள், கைம்மணியின்றி வெளியிலுள்ள பெரியமணியைக் கொண் டப்பெருமானை யாராதிப்பதை யின்னும் பாக்கக் காணலாம். (திண்ணம்.)



(சுற்று மபிநயத்தோடு காதுகொடுத்து) அடே! வனத்தின் தென்பாகத்தருகில் காதலியின் அடிவைப்பினைக் குறிப்பிக்குஞ் சிலம்பொலி; இங்குச்செல்வேன்.

(சுற்றிப் பார்த்து) அகோ! சீ!

மழைநீ னிறங்கொண்ட மாதிரத்தைக் கண்டு
தழைமா நசவாவி தன்னுள்—விழைவார்ந்த
நெஞ்சத் தரசவன்ன நேரொலியீ தேயாகு
மஞ்சிலம்பின் சும்மைய தன்றால். (77)

இருக்கட்டும்; எதற்குள், இந்தப் பறவைகள் மாநச விருப்புடையனவாக விரைவாய் மேலெழும்புகின்றிலவோ, அதற்குள் இவைகளினின்று காதலியின்செய்தி அறியத்தக்கது.

(கிட்டி) ஓ அன்னமே! நீர்ப்பறவையரசே!

பின்னந்த மாநஸமாம் பெருமடுவுக் குப்பெயர்வாய் வழியூ ணாக
மன்னியநா ளம்மதனை மீண்டெடுப்பான் கீழ்வைப்பாய் மனையாள் செய்தி
தன்னினெனைத் துயர்நீக்கி யுய்குவிப்பா யிறைக்குத் தக்கோர் கட்குத்
துன்னியநண் பினர்தொழிலே தந்தொழிலி னும்மேன்மை தோய்ந்த தாமால்.

எதனால் எனக்கெதிர்முகத்ததாய்ப் பார்க்கின்றது, அதனால் 'மானசத்தில் விரும்புற்ற என்னால் பார்க்கப்பட்டா ளில்லை' என்று சொல்லுகின்றதா?

அனமேவலை புருவத்தென தாசைக்கிசை மங்கை
வனவாவியின் கரைநின்விழி வழிவந்தில ளாயின்
தனதாமத விளையாட்டொடு சார்வைப்புறு மவளின்
கனமாநடை களவுற்றநீ கவர்ந்தெங்ஙன முறுவாய்? (79)

(அநுநயத்தோ டனுசரித்தவனாய்,)

என்காதன் மங்கையினை யெற்கருளு வாயனமே
மன்கவர்ந்தா யாதியவள் வண்ண நடையறியப்
பட்டவொரு கூற்றினனாற் பன்னெதுவா தக்கிடமாய்
விட்டதஃ தீப்புரித்து மேல். (80)

(சிரித்து) அடே! 'இவ்வரசன், கள்வர்க்குக் கட்டளைவிதிப்பன்' என்று எழும்பியோடிற்று.

(சுற்றி,) துணையோடுகூடிய சக்கரவாகத்தை இப்போழ்து கேட்பேனா?

(கிட்டி,) தோரங்க நாமத்தோய் தேரங்க நேர்சகனை
மாரு மவள்பிரிவை யார்ந்தவனா றயமனத்
தேர்சூழப் பெற்றேனித் தேருடையோ னின்னையே
நேர்கேட்கின் றானா னினைந்து. (81)

இஃதென்னை 'யார், யார்' என்று சொல்லிற்று ; அடே ! இப்பொழுது இதற்கு யான் அறியப்பட்டவனல்லன் ?

தந்தைதந்தை தாய்தந்தை தாமெவற்குச் சந்திரனும்
அந்தரத்துச் செல்லிரதத் தாதவனு மேவன்
உருப்பசியா லும்புவியா லும்பதியா கத்தம்
விருப்பின் வரித்தலுற்றான் மேல். (82)

என்னை வாளாவிருக்கின்றது ? இருக்கட்டும் ; இதனை இப்போது உபாலம்பனஞ்செய்வேன்.

வாவியிடைத் தாமரையி னிலையுண் மாய்ந்த வடிவுடைய
தாயினுனின் பேடை காதல்
மேவினையாய்ச் சேய்மையதென் றெண்ணி நீதான் மிகவருந்திக்
கூவுகின்றாய் நேமிப் புள்ளே
ஓவலிலா நின்காதன் மடந்தை நட்பா லுற்றதனி
யிருப்பச்ச மிங்ஙனேயால்
ஆவலவ ளைப்பிரிந்த வென்மீ தெண்ண மவள்செய்தி
யறையாமல் விடுகை யாமே. (83)

எவ்வாற்றானும் எனது பாக்கியவேற்றுமைப் பெருமைரீதி ; மற்றையதையே யடைவேன்.

(வேற்றிடத்திலிருந்து) இருக்கட்டும் ; இப்போழ் தெங்குச் செல்வேன்?

உள்ளிசைகூர் வண்டினதிவ் வொண்கஞ்ச மென்கடியுண்
வள்ளிதழார் சீத்காரம் வாய்ந்த வவண்முகம்போல்
என்னைத் தடுக்கின்றதே. (84)

இருக்கட்டும் ; தாமரையுள்ளிருக்கிற இந்தவண்டினிடத்திலே நட்புக் கொள்வேன், இத்தகையினேனுக்கு அநுதாபம்வேண்டா மென்று.

மதர்விழி யவடன் செய்தி மதுகர நீசொல் லன்றேல்
இதந்தரு மினிய மேனி யென்றனை கண்டி லாய்நீ
முதுமணங் கமழு மன்னாள் முகவுயிர்ப் பினிமை யுண்டு
வதிதியேல் விருப்பே னிற்கிவ் வண்ணமுண் டகத்து ளாமால். (85)

செல்வோ மிப்பொது.

(சுற்று மபிநயத்தோடு) கதம்பமரத்தடியி லிட்ட கையினதாய்க் கரிணியைத் துணையாகக் கொண்டுள்ள இவ்வரசயானை யிருக்கின்றது ; இதனினின்றுங் காதலியின் செய்தியையறிவேன். இருக்கட்டும் ; விரைவு செய்யத் தக்கதன்று.

இன்கரிணி யின்கரத்தா லேகொணரப் பட்டநவ
மன்கிசல யஞ்செறிந்து வண்மதுவின்வாசனையை



யொத்துள்ள பாலை யுறப்பெற் றொளிர்கின்ற
சல்லகியென் றேதுந் தருவி னறுந்துண்டை
யீது விரும்கின்ற தீங்கு. (86)

(கணமாத்திர மிருந்து,)

களிற்றினக் கிறையே கமழ்மத முடையாய்
களிற்றின் கரவிகர் கவானினள் காட்டின்
முல்லையின் மலரால் முன்பு சித்தரித்த
கல்லிகூந் தலினா ணழுவா விளமையள்
வய்நற் றோற்றத் தினணின்
சேய்மைப் பார்வையுட் சேர்ந்துளாள் கொல்லோ ? (87)

(களிப்போடு) இனிய கம்பீரத்ததும், காதலியை யடைந்ததைத் தெரிவிப்பதுமாய இந்த நினதுகர்ச்சனையினால் ஆறுதலடைந்தேனாகின்றேன் ; ஒப்புமையினாலும் எனக்கு உன்னிடத்தில் அன்பு மிகுதி ; எவ்வாறெனில்,

என்றனைவேந் தர்க்கிறையா யியம்புகின்றார்
நீயானைக் கிறைதா னன்றோ
என்றுமுள மிகுபெருக்க மேய்ந்ததுநின்
றானமெற்கு மிரப்போர் பாலே
ஒன்றியபெண் மணியுளெனக் கினியளுருப்
பசியுனக்கிப் பிடியூ தத்தாம்
இன்றெவையு மெனைத்தொடர்ந்தே யுளதுணைவி
பிரிவுறநோ யேற்றி லாய்நீ. (88)

நீ சுகமாயிருப்பாயாக ; போகுவோமிப்போழ்து.

(பக்கத்தில் நோக்கம்வைத்து) இஃது மிக்கவனப்பேய்ந்த சுரபிகந்தரமென்னும் பெயர்த்த வெற்பு ; இனியவற்றுட் பிரியமுடையோர் அச்சரமாதர்கள் ; இன்னுடலினாள், இதன் அருகிடங்களில் அடையப்படுவளா ?

(சுற்றிப்பார்த்து) அந்தோ ! என்னுடையனவாய் பாபபரிபாகங்களினால் மேகமும் மின்னலற்றதாயது ; ஆயினும் அடுக்கலை வினாவலின்றியே மீள்வேனல்லேன்.

நகினடுவி டஞ்சிறியா னன்னிதம்ப முற்றாள்
தகுபருவந் தாழ்ந்தாளாந் தாழ்குழலாள் வாழுங்கொல்
பேர்நிதம்ப மேய்வெற்பே பெய்ம்மலரம் பாற்குரிமை
ஆர்நினதிக் காட்டி னகத்து. (89)

என் வாளாவிருக்கின்றது ? சேய்மையிருப்பால் கேட்கின்றிலதென்று சங்கிக்கின்றேன். இருந்கட்டும் ; இதனதருகிற் சென்று மீண்டும் இதனையே வினாவுகின்றேன்.

(சுற்றி) செவ்விநே ரெவ்வுறுப்புஞ் சேர்மங்கை யின்வனத்துள்
எவ்வேந்தற் கும்மிறையே யென்னால் விடப்பட்டாள்
உன்னாற் காணப்பட்டா ளாற்று. (90)

(அதனையேகேட்டு, களிப்போடு,) என்ன முறைப்படி பார்க்கப்பட்டாளென்று சொல்லிற்று ? இருக்கட்டும்; நீ இதனைக் கேட்பாயாக ; ஆயின், என் இன்றுணைவி எங்கே ?

(கேட்டு) முறைப்படி இதனைச் சொல்லிற்று.

(சிந்தித்து) அகோ ! சீ ! இது, குகைமுகத்துப் பரந்த எனது எதிரொலியே.

(துக்கத்தை அபிநயிக்கின்றான்.) அயர்வுற்றேனாகின்றேன்; இப்போழ்து இம்மலையாற்றின்கரையிலிருந்துகொண்டு அலைக்காற்றை யடைவேன்.

(அவ்வாறுசெய்து,) புதுநீராற் கலக்கமமைந்துள்ள இந்தமலையாற்றினைக் காணுதிற்கும் எனதுமனம் களிக்கின்றது. ஏனெனில் ;

அலைப்புருவ நெறிப்புடையா ளலைப்புண் புள்ளி
னணிக்காஞ்சி யாள்சம்ரம் பத்தாற் சோர்ந்த
கலைக்குநிக ரெனநுரையை யீர்க்கின் றாண்மன்
கழிநடுக்கந் தோற்றிடுமோ மதுரத் தன்மை
தலைக்கொண்ட பேச்சுகளைக் கூறா நின்று
தான்கோடல் வாய்ந்திருப்பச் செல்லு கின்றாள்
நிலைச்சினத்தி னணதியாப் பரிண மித்து
நின்றனளா லிவளெனுமிஃ துண்மை யென்றே. (91)

இருக்கட்டும்; பிரசன்னையாச் செய்வே னிப்போழ்திவளை.

(கைகூப்பிக்கொண்டு,)

இன்மொழிசொல் வேனின்மே லேய்ந்தவன்பி னேனட்பின்
தன்மையழி யாநோக்கிற் சாருளத்தே னென்பிழையின்
எச்சிறுமை சங்கிக்கின் றாய்மாதே யின்னடிமை
இச்சனத்தை நீக்குகின்றா யென். (92)

(நன்காய்ந்து) அவ்வாறன்றெனின் உண்மையாக இஃது நதியே ; உருப்பசியன்று; பூரூரவனைவிட்டு மற்றெங்ஙனம் கடலினைக்குறித்தேகுவதாகும். இருக்கட்டும்; துயரற்றோரா லடையத்தக்கன செல்வங்கள். அவ்விடத்தினையே யடைவேன், எங்கு இன்முகத்தினாள் என் கண்ணுக்கு மறைந்தனளோ.

(சுற்றி, பார்த்து) காணப்பட்டது அவ்வழியி னடையாளம்.

அந்தச்செந் நீபமிஃதே கோடையின தந்தத்தை
முந்தத் தெரிப்பதுமேன் முற்றாத கேசரத்தின்



நேர்மையற்ற தானாலும் நிற்குமெந்தப் பாதவத்தின்
ஓர்மலர்தான் காதலியா லுற்ற தலைக்கணியாச்
செய்துகொளப் பட்டதே சேர்ந்து. (93)

இப்போழ்து காதலியின்செய்தியின்பொருட்டு, இருக்கு மிந்தமானினைப் பிரார்த்திப்பேன்.

கான்றிருவாற் கார்காலங் காணப் பரப்பியிட்ட
ஆன்றகடைக் கண்ணோக்கம் போல வமர்ந்துள்ள
நீலசித்ர வண்ண நிறைவுடைய வெந்தவந்தக்
கோலமான் காணலுறுங் கொல். (94)

(கிட்டி) என்னைகொல் என்னை நிராகரிப்பதுபோல் வேற்றிடத்துநோக்கினதாய் நின்றது ?

தனதரு கதனைப் புல்லச் சார்தரு மானின் பேடு
கனமுலைப் பாலை யுண்ணுங் கன்றினாற் றடுக்கப் பட்ட
தனபிணை மானை யிந்த வரிணம்வேற் றிடத்து நோக்கந்
தனைவிடுத் திட்டு நோக்குந் தகுகள முடக்கிக் கொண்டே. (95)

ஓ ! ஓ ! மான்குல வரசே !

கண்டனை கொல்லென் காதலி தன்னைக் கானத்தே
விண்டுரைப் பேனிற் கவளடை யாளம் மேற்கேளாய்
கொண்டகல் கண்சேர் நின்றுணை குலவுங் களிகூற
அண்டி யெவ்வாறே நோக்கு மவ்வாறே யவணோக்கும். (96)

எங்ஙன மென்சொல்லை யிகழ்ந்து காதலிக்கு எதிர்முகமாகச் சென்றது ? தக்கதே ; இகழ்ச்சிக் கேதுவன்றோ நிலைமாறுபாடு. சுகமாயிருப்பாயாக நீ ; இவணின்றும் யாம்.

(சுற்று மபிநயத்தோடு கண்டு) அடே ! கல்லிடுக்கினிலுள்ள மிகச்செம்மைவாய்ந்து தோற்றும் இஃது என்னைதான் ?

ஒளியினஞ்சு ழிதுமடங்க லுயிர்மாய்த்த விலங்கூனின்
றுமியோ வன்றால்
ஒளிரனலப் பொறியோவிவ் வொண்கானே மழைநனைவெய்ந்
துறுமிப் போழ்தால்
தளிரரத்த வசோகவலர் மஞ்சரிநேர் தருநிறத்த
மணிதா னம்மா
மிளிரெதனை யலர்கரத்தோன் மித்திரன்றா னெடுத்திடுவான்
முயல்வன் போன்மே. (97)

அகோ ! எனது மனத்தைக் கவர்கின்றது ; எடுப்பே னிப்போழ்திதனை. அன்றெனின்,

பொற்றருவின் பூக்களினாற் பூண்டமணத் தேவள் குழற்
கற்றைவா யிஃதுவைத்தீற் காமின்றக் காதலியே
எற்கரிய விம்மணியை யென் கண்ணீ ராற்றடிந்து
விற்கச்செய் வேறு வினைந்து. (98)

(திரைக்குள்) குழந்தாய்! எடுத்துக்கொள், எடுத்துக்கொள்.

மலைமகடன் பாதத்து வண்ணத்துண் டாகிக்
குலவுமிது சங்கமநீ யப்பெயரைக் கொண்மணியே
கொள்ளப்பட் டேகாதல் கூர்சனத்தே டேய்சேர்க்கை
அள்ளித்தரும் விரைவி லாம். (99)

**அரசன்.**— (காதுகொடுத்து) ஏவன்றான் என்னை இவ்வாறேவுகின்றான்?

(திசைகளைநோக்கி) அநுக்கிரகிக்கின்றான் என்னை பகவான் மான்றோலுடையினன். பகவானே! அருளப்பெற்றேனாகின்றேன்.

(மணியை யெடுத்து) ஓ! சங்கமநீயமே!

காட்டகத்து நல்லிடையக் காதலியை நீத்துறுமென்
கூட்டினிக்கு நீயிருப்பின் கூர்மழுவோன் வெண்மதியின்
கீற்றுதனைப் போலக் கிளறுஞ் சிகாமணியா
ஏற்றியுனை வைப்பே னினி. (100)

(சுற்றிப்பார்த்து) அடே! என்னைகொல் மலரின்றியிருப்பினும் இக்கொடியாரைக் காணுமெனக்கு இரதி யுண்டாயிற்று; அன்றெனின், தக்கதுதான் எனக்கு மனக்கினியார். இவரோ,

சீறடலார் மழைநனைந்த பல்லவத்தின் சேர்வுடைமை
யாற்கண்ணீர் கழுவப் பெற்ற
வீறிதழினார்போலத் தனது கால விரகத்தான்
மலர்பூத்த லில்லா ராகி
மாறிலணி நீத்தார்போ லளியின் பாடன் மன்னாது
சிந்தையுறு மௌனத் தார்போல்
ஊறுசினத் தார்கால்வீ ழென்னை நீத்துள் ளாதியனுதா
பத்தவர்போற் றோற்றுகின்றார். (101)

காதலிபோன்ற இதனது ஆலிங்கனத்து அன்புள்ளவனாகுவேன்.

(கொடியைத் தழுவுகின்றான்.)

பின்பு புகுகின்றன ளுருப்பசி அதற்குரிய விடத்தைச் சூழ்ந்து.

**அரசன்.**—(மூடிய கண்ணினனாய்ப் பரிசத்தைத் தோற்றுவித்து) உருப்பசியின் சரீர பரிசத்தினாற் போல சுகமுற்றது எனது மேனி! ஆயினும், விசுவாசமோ இலை; எதனால்,



மூன்னகா னெதனைக் காதன் மூண்டவ டன்னைப் பற்றி
யுன்னிவிச் சயிக்கின் றேனெற் குறுவது வேறு மாறும்
மன்னிய பரிசத் தாகம் வாய்த்தரப் பெற்ற மானைத்
துன்னினே னதனை ரேக்கத்துணையுடன் பிறந்தி டேறுதல்.

பி. எம். பதிவாளாசாரியர்.

## IDEAL OF UNIVERSAL RELIGION.

## ஸர்வார்த்தமதலக்ஷண பூர்த்தி.

எங்கெங்கே நமது புலன்கள் எட்டிச் செல்கின்றனவோ, எதனை நம் மனஞ்சங்கற்பிக்கின்றதோ, ஆங்காங்கு இருவித சக்திகளின் பிரவிருத்தியை யாம் காண்கின்றோம். இவ்விருவித சக்திகளும் ஒன்றற்கொன்று சத்துருத்தன்மை யுற்றனவாய் எம்மைச் சுற்றிலுமுள்ள பலவகை விகற்பமான தோற்றங்களும், எமது அகத்தின்கண் நிகழும் நாநாவித சங்கற்ப விகற்பங்களுக்குங் காரணமாய் விளங்குகின்றன. வெளிப் பிரபஞ்சத்தில் இவ்விருத்த சக்திகளின் பிரவிர்த்தியானது ஜடவஸ்துவினுடன் சம்பந்தமுறும்பொழுது 1 ஆகர்ஷணம் 2 பிரதிகர்ஷண சக்தி ரூபமாய்ப் பரிணமிக்கின்றது. உட்பிரபஞ்சத்தில், அப்பிரவிர்த்தியானது நம் இயல்பினுக்குரிய கலப்புணர்ச்சிகளாய விருப்பு-வெறுப்பு, நன்மை - தீமை என்னும் இருமை (த்வந்த்வ)களுக்குக் காரணமாய் நிற்கின்றது. இவற்றைச்சில நிதர்சனங்களால் விளக்குவாம். சில பொருள்களை யாம் வெறுக்கின்றோம். சிலவற்றை எம்பக்கல் கவர்கின்றோம். ஒருவரால் யாம் கவரப் பெறுகின்றோம். மற்றொருவரால் வெறுத்துத் தள்ளப்படுகின்றோம். நமது ஜீவகாலத்திலேயே பலதடவைகளிலும், யாதொரு காரணமுமின்றியே சிலர்பக்கல் நமக்கு அதிகமான கவர்ச்சி உண்டாவதையும், அவ்வாறே வேறு சில சமயங்களில் மற்றுஞ் சிலரால் நாம் விலக்கப்படுவதையும் யாம் கண்கூடாய்ப் பார்த்திருக்கிறோம். இஃதனைவர்க்குந் தெளியத்தெரிந்த விஷயம். இவ்வெதிர்மறை சக்திகள் பிரவிர்த்திக்கும் துறை எத்துணை யுயர்ந்துஞ் சிறந்து மிருக்கின்றதோ, அதற்கேற்ப அவற்றால் விளையும் பயன்களும் பலிஷ்டமாயும் பிரசித்தமாயு மிருக்கின்றன. மானுட விசாரத்திலும் வாழ்க்கையிலும் மதமே சிறந்த ஸ்தானத்தை வகிக்கின்றமையின், இவ்வெதிர்மறை சக்திகளின் பிரவிர்த்தியும் இம்மதத்தினிடத்தே மிகச்சிறந்து விளங்கக் காண்கின்றோம். மன்பதைக் கநுபவமாயுள்ள அன்பிலெல்லாஞ் சிறந்த அன்பு மதத்தின் காரணமாகவே உதயமாயிற்று. அதே மன்பதைக்

* 1. Attraction 2. Repulsion.

5

கநுபவமாயுள்ள மிகக் கொடிய பகைகளும் மதத்திலிருந்தே யுண்டாயிருக்கின்
றன. உலகங் கேட்டாநந்திக்குமாறு அதன் செவியில் பரம மங்களமான
சாந்தி வசநங்களை உபதேசித்தவர்கள் மதாநுஷ்டாநமுள்ள மகான்களேயாவர்.
இவ்வுலகத்தின்மேல் விழுந்த மகா கொடிய சாபங்களும் மதாநுஸாரிகளின்
வாயிலாகவே வெளிப்பட்டன. நாம் எம்மதத்தை யுற்றுநோக்கினும் அதன்
உத்தேசியம் எவ்வளவு உயர்ந்திருக்கின்றதோ, அதற்குத் தக்கவாறு அதன் அமை
ப்பு சூக்குமமாயும், அதன் செயல்கள் சிறப்பு வாய்ந்துமிராநிற்கும். ஆகை
யாற்றான் மதத்தின்கண் இவ்விரு சக்திகளும் மிகச் சிறந்து விளங்கக் காண்
கின்றோம். மனிதர்கள் பரம புருஷார்த்தங்களென மதித்திருப்பவைகளில்
மதத்தைப்போல் மற்றெதுவும் உலகத்தை அவ்வளவு குருதியாறாய்ச் செய்ய
வில்லை. ஆயினும் மதத்தைப்போல் மற்றெதுவும் அத்துணை தர்மவைத்
திய சாலைகளையும் ஆதுரர்சரணாலயங்களையும் கட்டிவைக்கவில்லை. மனிதர்கள்
பக்கல் மாத்திரமின்றி தாழ்ந்த பிராணிகளிடத்தும் மிக்க ஆதரவுடன் அன்பா
யிருத்தல் வேண்டுமென்று மதம் உபதேசித்தவண்ணம் மற்றெத்தகைய மாநுட
முயற்சியும் செய்ததில்லை. மதம் நம்மைக் குரூரமாயிருக்கச் செய்வதுபோல மற்
றெதுவுஞ் செய்யவில்லை. நம்மை யிளக்கமுடையோரா யிருக்கச்செய்வதிலும்
மதத்தைப்போன்றது மற்றொன்றில்லை. இவ்வாறுதான் முன்னைய காலத்தி
லிருந்தது. எதிர்காலத்திலும் இவ்வண்ணமாகவேதான் பெரும்பாலும் இருக்
கும். ஆயினும் இத்தகைய கோரமான இரைச்சலுக்கும் கோஷத்துக்கும்
சண்டைக்கும் சச்சரவுக்கும், மதங்களினுடையவும் மத வுட்பிரிவுகளினுடை
யவும் துவேஷத்துக்கும் பொறாமைக்கும் மத்தியில், அவ்வக்காலத்தில், உந்
தமான சத்தங்கள், இவ்வெல்லாக் கூச்சல்களுக்கும் மேலாகக்கிளம்பி, பூமியின்
ஒருமுனையினின்று மற்றொருமுனைக்குக் கேட்கத்தக்கதான பெருத்ததோர்
குரலுடன் "சாந்திவேண்டும், ஸமரஸம்வேண்டும்" என்று உத்கோஷித்தி
ருக்கின்றன. அதுவருவதென்றோ ? 'மகத்தான மதப்போர்கள் விளைந்து
கொண்டிருக்கும் இவ்வுலகத்தில் அவிச்சின்னமான ஸமரஸத்தன்மை ஒழுங்
காய் நிலையுறுதல் கூடுமா?' என்பதே நாம் இன்று ஆராய்ச்சிக்காக எடுத்துக்
கொண்ட விஷயம். இந்நூற்றாண்டின் கடைப்பகுதியில் ஸமரஸத்தைப்பற்
றிய யோசனைகளால் உலகமெங்கும் பெரிய அமளியாயிருக்கின்றது. மன்ப
தையில் ஸமரஸம் விர்த்தியாக வேண்டுமென்று அதற்காக பகீரதப் பிரயத்த
னங்களெல்லாம் செய்துவருகின்றனர். ஆனால் அது கிடைப்பது எத்துணைக்
கடினம் என்பது நமக்குத்தெரியும். உலகவாழ்க்கையாகிய பெருஞ்சமரின் கடு
மையைக் குறைப்பதும் மனிதனிடத்திற் றிரண்டுசேர்ந்திருக்கும் அபாரமான
வலிமையை யடக்குவதும் அசாத்தியமென ஜனங்களுக்கு விளங்குகின்றது.
மனிதனது ஸ்தூல ஸ்வபாவத்துடன் ஸம்பந்தித்திருக்கின்ற உலகவாழ்க்கை
யிலேயே ஸமரஸத்தன்மை, அமைதி, அன்பு என்னும் இவற்றை நாட்டு
வஷ்டமெனின், அவனது சூக்குமவியல்பில் அவற்றினை நிலையுறச்செய்



கஷ்டமல்லவா ? பிரித்து விளக்கற்கரு
வது அதனினும் ஆயிரமடங்கு மிகக் கஷ்டமல்லவா ? பிரித்து விளக்கற்கரு
வது அதனினும் ஆயிரமடங்கு மிகக் கஷ்டமல்லவா ? பிரித்து விளக்கற்கரு

மாறு, இத்தகைய கற்பனைக் கதைகளுடன் சேர்த்து அத் தத்துவங்களை விளக்க இயற்றிய நூலே புராணமென்றுஞ் சொல்லலாம். மூன்றாவதும் கடையதுமான பகுதி கர்மப்பகுதி. இது முற்கூறிய புராணப்பகுதியைவிட மிக்க வெளிப்படையாயும் எளிதிற் கிரஹிக்கக் கூடியதாயு மிருக்கின்றது. இதில் முக்கியமாய் அநுஷ்டானங்களும் சடங்குகளும் பிரதக்ஷிண முதலிய பலவகை காயிககர்மங்களும், புஷ்பம் தூபம் தீபம் என்னுமித்தகைய இந்திரியங்களுக்கு விஷயமாகக்கூடிய வேறு பல அம்சங்களும் பெரும்பாலும் அடங்கியிருக்கும். இக்கூறிய விலக்கணங்களுள்ளதே கர்மப்பகுதியெனப்படுவது. பிரஸித்தியாயுள்ள ஒவ்வொரு மதத்திலும் இம்மூன்றம்சங்களையும் நீங்கள் பார்க்கக்காணலாம். இவற்றுள் சிலர் ஒன்றை சிலாக்கியமாயும், சிலர் மற்றொன்றை சிறந்ததாயுங் கொள்வர். யாம் முதற்பகுதியாய தத்துவாம்சத்தைப் பற்றிப் பரியாலோசிப்போம்.

எம். குப்புஸாமி ஐயர்.

---

## REVIEWS OF BOOKS.

## புத்தகக் குறிப்புக்கள்.

---

**கம்பர்:—**

[இது செங்கல்வராய நாய்க்கர் ஆர்பனேஜ் அசைலம் அச்சியந்திரசாலையிற் பதிப்பித்தது. இதன் விலை நூற்புறத்தெங்குங் குறிக்கப்படவில்லை.]

கவிச்சக்கரவர்த்தியாராகிய கம்பரது வாழ்க்கையையும் அவர் இருந்த காலத்தையும் அவர் செய்த நூல்களையும் பற்றிக் கூறுதலாற் 'கம்பர்' என்னும் பெயர் வாய்ந்த இந்நூலை இயற்றினார் ம-ள-ள-ஸ்ரீ, திருமணம்-செல்வக் கேசவராய முதலியாரவர்கள், எம். ஏ. யாவர். இந்நூலின் கண்ணே கம்பர் இருந்தகாலம் ஈதெனக் கடாவிடைகளானும் நியாயவாயிலானும் வரைந்து சுட்டப்பட்டுளது. இவர் வரைந்து சுட்டியகாலம் யாம் சில்லாண்டுகளின் முன்னர்ப் பதிப்பித்த 'கலிங்கத் துப்பரணி'யின் முகவுரையில் யாம் வரைந்து சுட்டிய காலத்தோடு பொருந்துகின்றமைபற்றிக் கழிபேருவகை பூக்கின்றும். கம்பர் பல நூல்கள் செய்துளராயினும், நம நண்பர் ஆராய்ச்சிக்கென எடுத்துக்கொண்டது அவர்செய்த இராமாயணம் ஒன்றுமேயாம். கம்பராமாயணத்தின் சிறப்பியல்பு யாதெனில், யாவர் எவ்வளவு கூறினும் போதாதென்று சொல்லத்தக்கவாறு அதன் சிறப்பு மிகுந்துளதென்பதே. கம்பராமாயணமென்னும் ஓரமிழ்தவெள்ளம் தமிழ்நாடெங்கும் பரந்து சென்று யாவர் கையகத்துமேறி, யாவருள்ளத்தும் புகுந்து, யாவர்க்கும் இன்பம் விளைத்து என்றென்றும் வற்றாதிலகுகின்றது. கம்பரைப்புகழாத நாவேயில்லை. இதன்கண்ணே கம்பராமாயணத்தின் கருத்தழகுகளும் கற்பனைகளும் நவரசங்களும் அலங்காரங்களும் கம்பரது தருக்கவன்மையும் நாடகப் புலமையும் பாக்கள்செல்லுமினிமையும் முதலியனயாவும் உதாரணவாயிலான் தெளிவுபெற எடுத்துக்காட்டப்பட்டுள. இது யாவருக்கும் பொருள்

விளக்கத்தக்கத் தெளிவான நடையில் எழுதப்பட்டுளது. இதன்கட் கூறப்படும் விஷயங்கள் நுட்பமான ஆராய்ச்சித்திறன் காட்டுகின்றன. இவர் கூறியிருக்கும் விஷயங்களிற்பல யாவருக்கும் உடன்பாடெனலாம். கம்பர் சைவரோ வைணவரோ? இந்த விஷயத்தை யாராய்வதில் நம் நண்பர் சிறிதளவு சமயப்பற்றினால் ஆகிருஷிக்கப்பட்டுக் கவிச்சக்கிரவர்த்தியாரைத் தம்மவராக்கிக்கொண்டார். இதுபல்லோராலும் ஒத்துக்கொள்ளப்படாத விஷயம். கம்பர் சைவரென்பார்கூற்றும், கம்பர் வைணவரென்பார்கூற்றும், தனித்தனி உற்றுநோக்குமிடத்து ஒத்துக்கொள்ளப்படுவனவல்ல. கம்பர் இருசமயத்தையும் ஒப்ப நோக்கிய பேரறிவாளரென்பதே பலர்க்குமுற்றதுணிபு. "அரனதிகனுலகளந்தவரியதிக னென்றுரைக்கு மறிவிலார்க்கும், பரகதி சென்றடைவரியபரிசேபோல்" என்றபாவடிகளை யுற்று நோக்கின் அவர் இன்னமதத்தினர் என்பது தெளிவாம். இனிக் கம்பரைப்பற்றி எழுதிய நமது முதலியாரது கட்டுரை யாவருமேற்றுப் படிக்கத்தக்கதாய் விளங்குகின்றது. இது மாணாக்கருக்குப் பெரிதும் பயன்படத்தக்கதோர் நூல். முதலியாரவர்கள் இதுபோலும் பல அருமையான நூல்களியற்றித் தமிழுலகத்தைக் கடமைப்படுத்துவாராக.

## வியாசமஞ்சரி:—

[சென்னைப் புத்தகவியாபாரிகளுட் சிறந்த வே. கலியாணராமையர் கம்பெனியாரால் லாரென்ஸ் அஸைலம் அச்சுயந்திரசாலையில் பதிப்பிக்கப்பட்டது. இஃதிரண்டாம்பதிப்பு. இதன் விலை அணு ஆறு. தபாற்கூலிவேறு.]

இப்புத்தகம் முன்னொருமுறை நம் ஞானபோதினியின் கண்ணேயே
ஆராய்ச்சிசெய்யப்பட்டுளது. இவ்விரண்டாம் பதிப்பிற் சில புதிய அம்
சங்கள் காணப்படுதலின் இதனை மீட்டுமாராய்ச்சிக்கு எடுத்துக்கொண்டாம்.
முதலாவது முன்பதிப்பிற்போல இதுசிறிய எழுத்துக்களில் அச்சிடப்ப
டாமல் இப்போது பெரிய எழுத்துக்களில் அச்சிடப்பட்டிருக்கின்றது. அச்
சிடப்பட்டுள கடிதம் மிகப்பளபளப்பாயிருக்கின்றது. மூந்நூறுபக்கம்
இருந்தபுத்தகம் இப்போது இருநூறுபக்கமாய் விரிந்திருக்கிறது. எழுத்துப்
பிழை அதிகமாய்க் கலவாமல் எத்தன்மையான நோக்கத்தோடு பார்ப்பவருக்
கும் கண்கவர் வனப்பினதா யிருக்கின்றது. இனி இவையிடக்க, இதன்
கண்ணே ஒருவிசேஷ அம்சம் இருக்கின்றது; அதுயாவரும் கவனிக்கத்
தக்கது. வியாசம் வரையும் முறையும் வியாசக் குறிப்புக்களும் எடுத்துக்
காட்டப்பட்டிருக்கின்றன. வியாசக்குறிப்புக்களை எடுத்துக்காட்டுமிடத்து இந்
நூலாசிரியர் தாம் போதகாசிரியர் வித்தியாசாலையிற் பயின்ற அருமையான
நுட்பவிஷயங்களைத் தெளிவானவிதத்தில் எளிதாகக்கூறிச்செல்லுகின்றனர்.
இவ்வியாசக்குறிப்புக்கள் பெரும்பாலும் ஆங்கிலநூன்முறையைத் தழுவியருக்
கப்பட்டிருக்கும்பான்மை யாவரும் பாராட்டற்பாலதே. இந்நூலை இயற்றி
னர் ஸ்ரீமான்— பி. ஏ. பிரணதார்த்திஹரசிவனர், பி.ஏ., எல்.டி., இவர் இத்
நூல்போலும்பல நூல்களியற்றி விளங்குவாராக. தமயந்தி நாடகநூலாசிரி
யரும் ஹநுமான்சிங்கின் சரித்திரம் என்றநூலின் ஆசிரியரும் இவரே. இவரைத்
தமிழுலகம்போற்றுவதாக.

# EDITORIAL NOTES.
# பத்திராதிபர் குறிப்புக்கள்.

**இராஜதுரோகம்.**—பார்லிமெண்ட் என்ற மஹாசபையில் ஐரிஷ்மெம்பராயிருந்த கர்னல்லின்ச் என்பவர்பேரில் இக்குற்றம் சாட்டப்பட்டது. இவர் சென்றதிரான்ஸ்வால் யுத்தத்தில் எதிரிகளோடு சேர்ந்துகொண்டு சண்டைசெய்தார். இவரை அவுஸ் ஆப் காமன்ஸாருடைய நியாயஸ்தலத்திலே இராஜதுரோக குற்றத்தின்பேரில் கொண்டுவந்து நிறுத்தினார்கள். சென்ற அறுபது வருஷமாய் இப்படிப்பட்ட பெரிய குற்றத்துக்காக இந்த இடத்துக்கு ஒருவரையுங் கொண்டுவந்ததில்லை. குற்றத்தின் முகாந்தரமாவது: கர்னல் லின்ச் என்பவர் பிரிடிஷ் ஆட்சிக்குட்பட்ட ஒருவராயிருந்தும் 1900 - ம் வருஷத்திலே ஒரு பிரெஞ்சு பத்திரிகைக்கு சமாசாரம் எழுதியனுப்புவோனாய் தென் ஆபிரிகா சென்று அவ்விடத்தில் முன்னே பிரிடிஷ்காரருக்குச் சத்துருக்களாயிருந்த போயர்கள்பக்கம் சேர்ந்துகொண்டு யுத்தம்புரிந்தது மேற்கண்ட குற்றம் சாட்டுதலுக்கு ஆதார நியாயமாக எடுத்துக் காட்டப்பட்டது. கர்னட லின்சு என்பவரோ தான் குற்றவாளியே அல்லவென வாதித்தார். அவர்சொன்ன நியாயம்: சண்டைகாலத்திலுங்கூட பிரித்தானிய குடிஜனங்களில் ஒருவன் தனக்கிஷ்டமானால் ஒரு அன்னிய நாட்டுக்குச்சென்று அவ்விடத்திய குடிகளின் ஒருவனுடைய சுதந்தரபாத்தியதையைத்தானும் பெற்றுஅங்கத்தியவனாக தன்னைப் பாவித்துக்கொண்டு நடக்கலாம். ஆகவே, தன்னை போயர்களில் ஒருவனாக பாவித்து தன்பேரில் சுமத்தப்பட்ட குற்றத்தை நிராகரிக்கவேண்டுமென்பதே. இக்கேசை விசாரணைசெய்த நீதியதிபர்கள் அப்படியல்ல ; சண்டைகாலத்தில் ஒருவன் மனம்போல த்ன் பிறப்பு இராஜ்ய சுதந்தரங்களைக் களைந்துவிட்டு இன்னொரு எதிரியின் நாட்டின் பிறப்பின் சுதந்தரம் முதலியவைகளையும் பெற்றுக்கொள்வதினாலே இராஜ துரோக குற்றத்துக்கு நீங்கினவனாகான். கர்னல் லின்ச் செய்தது பாரிய குற்றம். இப்படிப்பட்ட குற்றங்களைப்பற்றி அற்பமாய் எண்ணுவது தற்காலப் போக்காயிருந்தாலும் கர்னல் லின்ச் செய்தது பெருத்த இராஜ துரோக குற்றமெனவே அபிப்பிராயப்படுகிறோம். ஆகையால் அவர் மரணதண்டனைக்குப் பாத்திரர் என்பதுயங்கள் தீர்மானமெனத் தெரிவித்தார்கள். ஒருவேளை இத்தீர்மானத்தை மாற்றிப் பத்துவருஷக் கடுஞ்சிறையென உத்தரவாகும்போல் தோன்றுகிறது. இங்கிலாந்து தேசத்து பத்திரிகாசிரியர்களின் அபிப்பிராயமோ, இப்படிப்பட்ட பாரிய குற்றங்களுக்கு அற்பசொற்ப தண்டனை உதவாது ; தகுந்த தண்டனை கொடுத்து நாட்டிற்குப் புத்தி படிப்பிப்பதவசியமெனக் காட்டுகிறது. தன் சுய நாட்டின் அபிமானத்தை வெறுத்து எதிரிகளோடு சேர்ந்துகொண்டு தன் தேசத்துக்கு விரோதமாய் கையை உயர்த்துவது புகழத்தக்கதல்ல.

**ரிவினியூ வருமானம் :**—சென்னையின் ரிவினியூ வருமானம் அபிவிர்த்தியாகிக் கொண்டுதான் வருகிறது. சென்ற டிசம்பர் மாதக் கடைசிவரைக்கும் ஏற்பட்ட மொத்தம் 652½ இலட்சமாம். இதற்கு முந்திய வருஷம் இதேகாலத்திய வருமானத்தைவிட இது 27 லட்சம் ரூ. அதிகமாய் இருக்கின்றது. நிலவருமானத்தில் 8 லட்சம் ரூபாயும், உப்பு வருமானத்தில் 11 லட்சமும் சுங்கத்தில் 10 லட்சமும் அதிகரிப்பு காணப்படுகிறது.



**அரசர் நிருபம் :**—நமது அரசர் அனுப்பிய கடிதமானது டில்லி தர்பாரில் வைஸிராய் அவர்களால் வாசிக்கப்பட்டது எல்லார்க்கும் தெரிந்த விஷயமே. இப்போது அந்தக்கடிதத்தை இந்தச் சென்னைராஜதானியில் வழங்கப்பட்டு வரும் தமிழ்போன்ற சுதேச பாஷைகளில் மொழிபெயர்த்து கிராமக் காகிதங்களுடன் கிராமங்களில் தரப்படும்படி யேற்பாடு செய்திருக்கிறார்கள். சென்னையிலும் வெளி ஜில்லாக்களிலும் வைத்த இராஜாங்க விளம்பர தர்பார்களில் அக்கடிதம் வாசிக்கப்படவில்லையாம்.

**விஷசுரம் :**—சென்ற வாரத்துக்கு முந்திய வாரத்தில் இந்தியாவில் விஷசுரத்தினால் இறந்தவர்களின் மொத்தம் 19,224. பம்பாய் இராஜதானியில் மாத்திரம் 9,000 ஆகின்றது. பஞ்சாபில் ஐக்கிய மாகாணம் பங்காளம் ஆகிய ஒவ்வொன்றிலும் 2,000 பேருக்கதிகமாகவே, இக்கொடுநோய்க்கு இரையாகி விட்டார்களாம்.

**செந்தமிழ்:**—இப்பெயர் கொண்ட பத்திரிகை, மதுரைத் தமிழ்ச்சங்கத்தினின்றும் இம்மாதமுதல் மாதந்தோறும் வெளிவரும். இஃது, பெரும்பான்மையும் தமிழிலக்கிய இலக்கண விஷயங்களும், இதுகாறும் அச்சிடப்படாத செந்தமிழ் நூல்களும், தமிழ்நாட்டுப் புராதன சரிதங்களும் சாஸனங்களும் வடமொழியினும் ஆங்கிலத்தினுந் தமிழிற்கு வேண்டுவனவாகக் கருதப்படும் நூன்மொழி பெயர்ப்புக்களும் ஒன்றையொன்றிகழாச் சமயக் கொள்கைகளும், தமிழின் அருமை பெருமையடங்கிய விஷயங்களும், தமிழ் வளர்ச்சிக்கு வேண்டுவன பிறவும் கொண்டு நடைபெறும். இப்பத்திரிகைமூலம் வெளிவரும் செந்தமிழ் நூல்கள், தனித்தனி புத்தகங்களாதற்குரிய நிலையில் அச்சிடலாகும். பெரும்பான்மை இச்சங்கத்து வித்வான்களே இதற்கு விஷயதானம் புரிவோராவர். இச் ‘செந்தமிழ்’ ப்பத்திரிகை அதிக பொருட்செலவிற் பிரசுரிக்கப் படினும் செந்தமிழ் அபிவிர்த்தி ஒன்றே கருதி எளிய விலைக்கு அமைக்கப் பெற்றுள்ளது. இப்பத்திரிகையின் வருடச்சந்தாத் தொகை ரூ 4-0-0 இதனைப் பெற விரும்புவோர் மதுரைத் தமிழ்ச் சஙகத்து மானேஜ்மெண்ட் ஆபீசுக்கு எழுதி V. P. தபால் மூலம் பெற்றுக்கொள்ளலாம்.

**காலஞ்சென்ற ரெவரெண்ட் G. G. காக்ஸ் :**—காலஞ்சென்ற ரெவரெண்ட் G. G. காக்ஸ் என்பவர் திருவல்லிக்கேணி வெஸ்லியன் மிஷன் ஹைஸ்கூலைச் சேர்ந்தவர். போன வருஷம் வெகு அகஸ்மாத்தாய் இறந்துபோனார். இவர் இறந்த நாள் முதல் இவர் மாணாக்கர்கள் புதியவர்களும் பழையவர்களும் சேர்ந்து இவர்களுக்கு ஒரு ஞாபகச்சின்னம் இவர் பள்ளிக்கூடத்தில் ஏற்பாடு செய்யவேண்டுமென்று முயற்சிகள் செய்தார்கள். அந்த முயற்சிகள் நேற்றுச் சாயந்திரம் பூராவாய் நிறைவேறின. எப்படி என்றால், இவர்போல ஒரு படம் மார்வரையில் பிடிக்கப்பட்டு, நேற்றுச்சாயந்திரம் மேற்படிப் பள்ளிக்கூடத்தில் ஆனரெபில் ஜஸ்டிஸ் ஸர். S. சுப்பிரமணிய அய்யர் Kt. C. I. E. தலைவராய் வீற்றிருந்து அந்தப் படத்தைத்திறந்தார். இவர் வெல் காலேஜுக்கும் வெஸ்லியன் மிஷன் ஸ்கூலுக்கும் தலைவராயிருந்து இந்தியர்களின் படிப்பு விஷயமாய் வெகு சிரத்தை எடுத்துக்கொண்டு வந்தார்.

**கூரையின்கீழ் அகப்பட்டிறந்தது :**—நேற்று தினம் சாயந்திரம் பிடாரியங்கோயில் தெருவில் ஒரு வீட்டு மெத்தையின்மேல் மூன்று குழந்தைகள்

விளையாடிக்கொண்டிருக்கையில், திடீரென்று ஒரு ஸ்தம்பம் உடைந்து கீழே விழ மேல் கூரையு கீழே பெரிய சப்தத்துடன் விழுந்துவிட்டது. அதில் விளையாடிக்கொண்டிருந்த மூன்று பேரில் இரண்டு குழந்தைகள் தப்பித்துக் கொண்டு ஓடிவிட்டார்கள். ஒரு குழந்தை மாத்திரம் கீழே அகப்பட்டுக்கொண்டு நசுங்கிப் பிராணனைவிட்டது. போலீஸ் மஹானுபாவர்கள் யாவும் முடிந்த பிறகு சவத்தைத் தங்கள் சுவாதீனப்படுத்திக்கொண்டு இன்று தினம் மரண விசாரணை செய்யப்போகிறதாக ஏற்பாடு செய்திருக்கிறார்க்ள்.

ஸர் ஹென்றி காட்டன்:—நமது நேயர்களுள் அஸ்ஸாம் முக்கிய கமிஷனரா யிருந்துவிட்டு உபகாரச் சம்பளம் பெற்று நீங்கியிருக்கும் ஸர். ஹென்றி காட்டனை அறியாதவர்கள் குறைவேயாவார்கள். பலரும் அவரை இந்தியர்களிடம் விசேஷ அன்புபூண்ட உத்தமரென்றும், இந்தியாவின் க்ஷேமத்தையே கோரும் ஆங்கிலோ இந்தியர்கள் சிலருள் அவரும் ஒருவர் என்றும் தெரிந்துகொண்டே யிருத்தல் வேண்டும். பங்காளமாகாண லெப்டினண்டு கவர்னர் வேலையை இந்தியா கவர்ன்மெண்டார் அவருக்குக் கொடுத்தார்களில்லை யென்று வருத்தப்படுவோர்களும் அநேகர். அவ்வுத்தமர் பார்லிமெண்டு சாமானியர் சபையில் ஸதானம் பெற விபரல் கட்சியைச்சேர்ந்த அபேட்சகராய் வெளிவரக் கூடுமென்று எதிர்பார்க்கப்படுகின்றது. அச்செய்தியைக் கேட்டு யாவரும் சந்தோஷப்படுவார்களென்பது நிச்சயம். அவர் ஓர் அபேட்சகராக வெளிவந்து ஜெயம்பெற்று பார்லிமெண்டு சபை அங்கத்தினர்களுள் ஒருவராய்ச் சேர்ந்து விடுவாரானால், இந்தியாவுக்கு அனுகூலமாய் அச்சபையில் இந்திய விஷயங்களைப்பற்றிப் பேச்சு வரும்போதெல்லாம் அவர் பேசுவார் என்று நாம் உறுதியாய் நம்பியிருக்கலாம். மிஸ்டர் தாதாபாய் நௌரோஜியும், ஸர்ஹென்றி காட்டனும், மிஸ்டர் ஒடரனலும் பார்லிமெண்டு சபையில் ஸ்தானம் பெறவேண்டுமென்றே விரும்புகின்றோம்.

---

## சந்தாதாரர்களுக்கு அறிக்கை.

"ஞானபோதினி", பத்திரிகைக்காகச் சேரவேண்டிய வருஷசந்தா ரூ 2-8-0 இதுவரை செலுத்தாதவர்கள் தயவுசெய்து இனித் தாமதமின்றிச் சந்தாத்தொகையை மணியார்டர்மூலமாய் அனுப்பும்படி கேட்டுக்கொள்ளுகிறோம்.

தாம்ஸன் அண்டு கம்பெனி,
பாபம்ஸ் பிராட்வே, சென்னை.

# ஞானபோதினி

ஒரு மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

தாமின் புறுவ துலகின் புறக்கண்டு
காமுறுவர் கற்றறிந் தார்—திருக்குறள்.

சம்புடம் VI | 1903ஆ பிப்ரவரிமீ 20உ | இலக்கம் 7.

## VERNACULARS TO BE RETAINED.
## சுதேச பாஷை யாக்கம்.

வடமொழியினின்றும் உருவவகையானும் உறுப்புவகையானும் ஒலிவகையானும் இலக்கணவகையானும் நூற்பரப்பு வகையானும் வேறுபட்டு இயங்குகின்ற தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளமென்ற தென்னாட்டு மொழிகளை, அறியாமை காரணமாகவும் வடசொற்களுட் சில இப்பாஷைகளுட் பயிலுகின்றமை காரணமாகவும் மருண்ட சிலர் சுதேச பாஷைகளை யொழித்துவிட்டு அவற்றிற்குப் பிரதியாக வடமொழி பயிலுதலே சிறந்ததென்று முழங்கிய முழக்கம் தென்னாடெங்கும் நடுங்கலுர் விளைத்தது. பண்டிதர் பலர் ஏங்குவாராயினர். சாமானிய சனங்கள் எல்லாம் துன்பக்கடலுளாழ்ந்தனர். பலர் ஆங்காங்கு சபைகள் கூட்டிச் சுதேச பாஷைகளைச் சர்வகலாசாலைப் பரீக்ஷைகளினின்றும் நீக்கப்படாது போற்றிக்கொள்ளப்படல் வேண்டுமென்று விண்ணப்பங்கள் இராசாங்கத்தார்க்கு அனுப்பினர்.

இவையனைத்தையும் உய்த்துணர்ந்த இந்திய துரைத்தனத்தார் உடனே காலந் தாழ்த்தலின்றி நமது சென்னைத் துரைத்த

னத்தாரிடத்திற்குத் தந்தி யனுப்பிச் சென்னைச் சர்வகலா சாலையாரது அபிப்பிராயம் இவ்விஷயத்தின் கண் எவ்வாறுளது என்று விசாரிப்பாராயினர். அவ்வாறே சென்னைச் சர்வகலா சாலையாரும் கூட்டங்கூடி இவ்விஷயத்தைக் குறித்து ஆராய்ந்தனர். அவ்வாராய்ச்சியின் முடிவாகவும் கடவுளின் அருளாகவும் சுதேச பாஷைகளின் அதிர்ஷ்டமாகவும் இவையனைத்தும் சர்வகலாசாலைப் பாடங்களினின்று நீக்கப்படாது போற்றிக்கொள்ளப்படவேவேண்டும்" என்று தீர்மானமாயிற்று. இது சென்னைத் துரைத்தனத்தார் மூலமாக இந்திய துரைத்தனத்தார்க்கு அறிவிக்கப் படுவதாயிற்று.

இனி இந்திய துரைத்தனத்தாரவர்கள் உண்மையை உய்த்துணர்ந்து சென்னைச் சர்வகலாசாலையார் விரும்பியவாறே அவர்களது இஷ்டத்தை முடித்தருளுவார் என்று நம்புகின்றோம். அவ்வாறு முடித்தலே ஏற்புடைத்தாம்; அற்றன்றிப் பிறிதுபட நடத்தல் சால்புடைத்தன்று. இதனைப் பேரறிவாளராகிய இந்திய துரைத்தனத்தார் அறியாமற் போகாரென்பது திண்ணம். ஆகவே, சுதேச பாஷை நீக்கம்போய்ச் சுதேசபாஷைகளுக்கு ஆக்கம் பிறந்ததென்றே நம்பித் தமிழ்ப் பெருந் தெய்வத்தை வாழ்த்தி இறைவற்குத் தெள்ளேணங் கொட்டுவேமாக.

பத்திராதிபர்.

---

## THE FROG IN THE SOLID ROCK.
## கல்லினுட்டேரை.

---

கல்லின் நடுவுள் தேரைகள் உள வென்பதும் கற்களைப் பிளந்தபோது தேரைகள் அவற்றின் நடுவுள் காணப்பட்டன வென்பதும் பலரால் நம்பப்படுங் கூற்றுக்களாம்.

"கருப்பைக்குண் முட்டைக்குங் கல்லினுட் டேரைக்கும்
விருப்புற் றமுதளிக்கு மெய்யன்" என்றும்,

"கல்லினுட் டேரைக்கு மேயளிப் பானெங்கள்கண்ணுதலே" என்றும் இக்கூற்றுத் தமிழ்நூலகத்தும் காணப்படுகின்றது. இதனை



உண்மையாகக் கருதுபவர் இந்திய தேசவாசிகள் மாத்திரமல்லர்; பொருளியலறிவிற் சிறந்த மேலைத் தேசவாசிகளும் பலருளர். நியாயமுறைப்படி ஆராயுமிடத்து இக்கூற்று மெய்யுரையாகாது பொய்யுரையாகவே காணப்படும். எங்ஙனமெனின், ஒரு கூற்றினை ஆராய்ந்து காட்டுதும். ஒருகல்லின் நடுவுள் தேரை ஒன்று காணப்பட்டது என்று ஒருகூற்று ஒரு பத்திரிகையில் தோன்றுகின்றது. இங்கே குறிக்கப்பட்ட கல் முழுக்கல் என்பதற்கும் அதில் முன்னரே பிளவாவது வெடிப்பாவது இருந்ததில்லை என்பதற்கும் சாட்சி ஒன்றுமில்லை. அந்தக் கல்லினுள் தேரை இருந்தது அதிற் பிளவிருந்ததிலும் இல்லாதிருந்ததிலுமன்றோ தொங்கி நிற்கின்றது. அந்தக் கல்லைப் பிளந்தவர்களைக் கேட்டால் அவர்களுள் ஒருவராவது கல்லைப் பிளப்பதற்கு முன் தேரையைக்கண்டவராயிரார்; அல்லாமலும் கல்லினிற் பிளவு இருந்ததோ இல்லையோ என்பதைக் கருத்துடன் நோக்கினவராயுமிரார். நாம் சாதாரணமாய்க் கல்லினுட்டேரை இருந்ததாய்க் கேட்கும் கதைகளில், அங்கே காணப்பட்ட தேரையைப் பிளக்கப்பட்ட கல்லுடன் சேர்ப்பதற்கு ஓரிம்மி அளவு பிரமாணமும் இருப்பதில்லை. அக்கதைகளில் உண்மையாய்க் காணப்படுவது யாதெனிற் கல்லைப்பிளந்ததன்பின் அக்கற்றுளின்கணின்றும் அல்லது அவற்றின் பக்கத்தினின்றும் தேரைபாய்ந்து போயினதென்பதே. இது மெய்யாகவே நிகழ்ந்திருக்கலாம். கற்களின் கீழ், அல்லது அவற்றின் இடையில் அல்லது பக்கங்களில், தேரைகளிருப்பது யாவருமறிந்த தொன்று; அவ்வாறு வாழ்ந்திருந்த தேரைகள் கற்கள் பிளவுபட்டவுடன் அதனால் முட்டுப்பட்டு அவ்விடத்தை விட்டுப் பெயர்ந்து பாய்ந்து போவதுண்மை. இவ்வாறு பெயர்ந்து போகும் தேரை பிளக்கப்பட்ட கல்லின் நடுவுள் இருந்ததென்பதற்குச் சிறிதும் இடமில்லை.

இனிக் கல்லின் நடுவுள் தேரையிருப்பது உண்மையாகாமைக்கு வேறு காரணங்களும் உள. தேரை அல்லது தவளையின் பிறப்பைப்பற்றிச் சற்று ஆராய்வேம். மனிதனுடைய பிறப்பின் வரலாறு எவ்வளவு அற்புதமோ அவ்வளவு தவளையின் பிறப்பின் வரலாறும் அற்புதமாய் உள்ளது. தவளைக்குஞ்சுகள் முதன் முதல் நீரில் உற்பத்தியாகின்றன. அப்போது அவைகட்கு மீன்களுக்குப்போல நீரில் மூச்சுவிடுவதற்கேதுவான பூ (gills) என்னும் உறுப்பு உளது; கால் முதலிய உறுப்

புக்கள் ஒன்றும் இல்லை; நீரில் இயங்குவதற்கு ஏதுவான மீன் வால் போன்ற ஒரு வால் உளது. நாள் செல்லச் செல்ல அவற்றிற்குத் தரையில் மூச்சுவிடுதற்கேதுவான நுரையீரல் தோன்றுகிறது; நீரில் மூச்சு விடுதற்குதவியாயிருந்த பூ உலர்ந்து பயனற்றதாகி ஈற்றில் விழுந்துவிடுகின்றது; கால் முதலியஉறுப்புக்கள் முளைக்கின்றன; வாலும் சிறிது சிறிதாய்த் தேய்ந்து இருந்த இடமுந் தெரியாமல் மறைந்து போகின்றது. இவ்விதமாக மீன்வடிவமாக இருந்த தவளைக்குஞ்சு தவளை வடிவத்தை அடைகின்றது. உடனே அது நீரினுள் மூச்சுவிடுதற்கேலாது தரையைத் தேடுகின்றது.

இவ்வாறு தவளை நீரைவிட்டு நீங்கித் தரையில் வாழச்செல்லும் போது உருவத்தால் மிகவுஞ்சிறிதாயிருக்கும். அப்போது அது தான் பெரிதாக வளர்ந்தபின் புகுதற்கேலாத சிறிய தொளைகளிலும் பிளவுகளிலும் நுழைதல் கூடும். இவ்விதமான சிறு தவளைக்குஞ்சு ஒன்று ஒருகல்லின் சிறு தொளைக்குள் புகுந்து சற்றுப்பெரிதாய் வளர்ந்துவிட்டபடியால் வெளிவர ஏலாது இருந்ததாக வைத்துக்கொள்வோம். அப்படியாயின் அது அந்தக் கல்லினுள் அடைபட்டு உணவு கிடைக்கும்வரை உயிரோடிருக்கும். அஃது அப்படி உயிரோடிருக்கும் நாளையில் அந்தக் கல்லுப்பிளக்கப்படுமாயின் அதனுள்ளிருந்து வெளிவரும். ஆயின் இது நம்மவர் கருதும் கல்லினுட்டேரையன்று. அதாவது முழுக்கல்லினுளிருக்குந் தேரையுமன்று; கல்லோடுடன் தோன்றிய தேரையுமன்று.

இதுநிற்க, மெய்ம்மெய்யாய்ப் பரீக்ஷிக்குங் காலத்தில் தேரைகளும் தவளைகளும்மற்றைப் பிராணிகளைப்போலவே மூச்சுவிடக் காற்றும் உண்ண உணவுமின்றி நெடுநாளைக்கு உயிரோடிருக்கமாட்டாதவைகளாகக் காணப்படுகின்றன. இவ்வுண்மையை அறிவதற்காக இங்கிலாந்து தேசத்தில் பக்லண்ட் என்னும் (Bukland) துரை மகனொருவர் சில கற்களை எடுத்து, அவைகளில் குழிகள்பண்ணி, அவற்றினுள் சில தவளைகளையும் தேரைகளையும்வைத்து, அவற்றைச் சிலேற்றினாலும் பளிங்கினாலும் செய்த மூடிகளால்மூடி, தம்முடைய தோட்டத்தில் மூன்றடி ஆழத்திற் புதைத்து வைத்தார். ஒரு வருஷம்சென்றபின் அவைகளைக்கிண்டி எடுத்துப் பார்த்தபோது சிறுதவளைகளும் தேரைகளும்சில ஒழிய எல்லாம் இறந்துபோயிருந்தன; உயிருடனி-



ருந்தவைகள் உணவின்மையினால் வாடி வதங்கிப் போயிருந்தன. ஒரு தவளைமாத்திரம் முன்னிலும் நிறை கூடியிருந்தது. அதற்குக் காரணம் என்னவென்றால், அதை விட்டுவைத்திருந்த குழியின் மூடி உடைந்துபோய், அதற்குள் புழுக்கள் முதலிய சிறுபிராணிகள் புக, அவற்றை அந்தத் தவளை பிடித்தருந்தி வளர்ச்சியுற்று நிறையாற் கூடிற்று. உயிரோடிருந்த தவளைகளை எல்லாம் அந்தத் துரைமகன் மறுபடியும் நிலத்துள் புதைத்து ஒருவருஷம் சென்றபின் பெயர்த்துப் பார்த்தார். அப்போது ஒரு தவளையாவது உயிரோடிருக்கவில்லை. அவைகளின் உடல்களிருந்த நிலைமையினால், அவைகள் அவ்வாறு பெயர்க்கப்படுதற்கு நெடுநாளைக்கு முன் உயிர்துறந்தனவாய்க் காணப்பட்டன. முழுக்கல்லினுள் மூடுண்டிருத்தல்போலாது, இடமகன்ற குழிகளுள் இவ்வாறு விட்டு வைக்கப்பட்ட தவளைகள் இரண்டு வருஷ காலங்கூட உயிரோடிருக்காமற் போயினமையால், முழுக்கல்லினுள் தவளைகள்காணப்பட்டன என்னுங்கதைகளைக் கேட்டால் அவைகளை மெய்யுரை என்று கொள்வதற்கு முன், அவைகளுண்மைக்குச் சான்றாக என்ன பிரமாணங்கள் உளவென்பதை, நியாயமன்றத்துள் வியவகாரங்களை விசாரணை செய்யுமாறு போல, நன்றாய் ஆராய்ந்து அறியவேண்டுமென்று யாவரும் ஒத்துக்கொள்ளுவார்களென்பது தேற்றம்.

தி. த. கனகசுந்தரம் பிள்ளை.

---

## REPLY TO THE INVESTIGATOR OF THE SOUL.

யாழ்ப்பாணத்து ஆரும் இலக்கச் சுதேசநாட்டியப்
பத்திரிகையிற் கண்ட

## ஆன்மவிசாரிக்கு உத்தரம்.

---

ஏகான்ம வாதிகளுக்கும் சைவர்களாகிய நமக்கும் அங்கீகரிக்கற்பாலனவாய்க் கிடந்த பொது வலிய பிரமாணங்கள் சுருதி ஸ்மிருதி புராணங்களேயாம்.

இதிஹாஸபுராணாப்யாம் வேதம் ஸமுபப்ருஂஹயேத் ।
பிபேத்யல்பஶ்ருதாத்வேதோ மாமயம் ப்ரஹரிஷ்யதி ॥

"இதிகாசபுராணங்களைக் கொண்டு வேதங்களைப் பொருள்படுத்துக; (அங்ஙனம் செய்யாத) அற்பகேள்வியையுடையான் தன்னைவேண்டியவாறு பொருள்செய்து கொன்றுவிடுவன் என்று வேதம்பயப்படுகின்றது" என்பது அபியுக்த சூக்தி. வேதங்களிலே பௌதிகயோகம், நிர்க்குணயோகம், அத்தியாசிரம பாசுபதயோகம் என முத்திறயோகம் கூறப்படுகின்றது. நாராயணம், சுபாலமுதலிய நாராயணோபநிடதங்கள் பௌதிகம் எனப்படும் சகுணயோகம் பற்றியவேயாம். சர்வசாரம், நிராலம்பம், தேஜோவிந்துமுதலிய உபநிடதங்கள் நிர்க்குணயோகம் எனப்படும் சாங்கியயோகம் பற்றியவேயாம். ஈண்டுக்கூறிய சாங்கியம் ஈசுரகீதை இரண்டாம் அத்தியாயத்தின் மேற்று. பகவற்கீதையினும் அவ்வுண்மை கடைப்பிடிக்க. ஈச, கேன, கட, பிரசின, முண்டக, மாண்டூக்கிய, ஐதரேய, தைத்திரீய, பிருகதாரண்ய, சாந்தோக்கிய சுவேதாசுவதர, கைவல்லிய, பிருகச்சாபால, கௌஷீதகி, அதர்வசிரசு, அதர்வசிகை முதலிய உபநிடதங்கள் அத்தியாசிரம பாசுபதயோகத்தின் பாலனவாம். வேதாந்தசூத்திரம் இவ்வீசகேனாதி உபநிடதங்களை ஆதாரமாகக் கொண்டு எழுந்தமையால் இவ்வுபநிடதங்களே முக்கியோபநிடதங்களாகக் கொள்ளப்படும். சீவேசுவர ஜகத்துக்களை மித்தை என்றும் ஆன்மா ஒன்றே மெய் என்றும், அதனையே சச்சிதானந்தம் என்றும், அதனையே பரப்பிரமம் என்றும் கூறும் சர்வசாரமுதலிய உபநிடதங்களை ஆதாரமாகக்கொண்டு வேதாந்தசூத்திரம் பிறவாமையானும், அவ்வுபநிடதப்பொருள்களை ஆதாரமாகக்கொண்டு பேசுவன கைவல்லியநவநீதம், பஞ்சதசப்ரகரணம், வாசுதேவமனனம், சசிவர்னபோதம், ரிபுகீதை, பிரமகீதை, ஞானவாசிட்ட முதலியவாதலினாலும் அவ்வுபநிடதங்களும் அப்பிரகரணங்களும் கவுணப்பாற்பட்டனவேயாம். சுபாலம், நாராயணமுதலிய உபநிடதங்களை ஆதாரமாகக்கொண்டு வேதாந்தசூத்திரம் பிறவாமையானும், அவற்றை ஆதாரமாகக்கொண்டே நாலாயிரப் பிரபந்த முதித்தமையானும் இவ்வுபநிடதங்களும் பிறவும் அம்மாயாவாத உபநிடதங்களும் பிரகரணங்களும்போல கவுணப்பாற் பட்டனவேயாம். எனவே, பௌதிகயோகத்தின் பொருட்டு இராமாநுஜபாஷியமும், நிர்க்குணயோகத்தின்பொருட்டுச் சங்கரபாஷ்யமும், சிரௌத பாசுபத யோகத்தின்பொருட்டு நீலகண்டபாஷ்யமும், அமைந்து ஒன்றுக்கொன்று உயர்ச்சியடைந்து நின்றவாறு தெளியப்படும். இவ்வுண்மை,

[illegible]
[illegible]
[illegible]
[illegible] ॥



என்னும் சுலோகத்தினால் அறியப்படும். இச்சுலோகத்தினால் பௌதிகயோகமாகிய சகுணத்தினும் உயர்ந்தது நிர்க்குணயோகம் எனவும், இதினும் உயர்ந்தது அத்தியாசிரமயோகம் எனவும் அறியப்படும். யாழ்ப்பாணத்துக் கந்தகராடையி லுள்ளவர்கள் கைவல்லியம் ஞானவாசிட்ட முதலியவைகளையும், சென்னை ஆரியனாகிய இரத்தினச்செட்டியாரும், சிதம்புரம் பிரமவித்தியாப் பத்திராதிபராகிய ஸ்ரீநிவாசசாத்திரியாரும் எழுதிய புஸ்தகங்களையும் பத்திரிகைகளையுமே பரமபுருஷார்த்தமாகப் படித்துவருதலானும், அவர்கள் தங்கள் கொள்கையின்படி ஆன்மா ஒன்றே என்றுதான் கூறுவர் ஒரே சரீரத்தில் ஒரே ஆன்மாவிருத்தலால் அவர்கள் ஆன்மா ஒன்றெனல் ஒக்கும். அவ்வாறு ஆன்மாசரீரங்கடோறு மிருத்தலால் ஆன்மாக்கள் பல என்று ம-ா-ா ஸ்ரீ மழவராயப்பிள்ளை யவர்கள் சொல்வதும் ஒக்கும். தாழ்ந்தமாயாவாதோபநிடதங்களிலே சீவேசுரர் மித்தை என்று சொல்லப்படுதலானும், மாயாவாதோபநிடதங்களினும் உயர்ந்த பிரபல சைவசுருதிகளில் அவ்வாறு சொல்லப்படாமையானும் உயர்ந்த உபநிடதங்களை நோக்க மாயாவாதோபநிடதங்கள் கீழே கழிக்கப்படுவனவாக, ஜீவேசுரரைமித்தை என்று சாதியாத மழவராயபிள்ளை யவர்களுடைய கொள்கையே பிரபல சுருதிகளுக்கு இணக்கமாயும் சிரேஷ்டமாயும் கொள்ளற்பாற்று. சாந்தோக்கியத்தில்,

सर्वेष्वात्मसु ।

"எல்லா ஆன்மாக்களினும்" எனக்கூறப்படுதலால் ஆன்மாக்கள் பலவாதல் தெளியப்படும்.

यस्यात्मा शरीरम् ।

"எவருக்கு ஆன்மா சரீரம்" என்று மத்தியந்தின சாகையிலே கூறப்படுதலானும்,

आत्मन्येवात्मानं पश्यति ।

"ஆன்மாவில் ஆன்மாவைப் பார்க்கிறான்" எனப் பிருகதாரணியத்திற் கூறப்படுதலானும் இன்னும் அனேக உபநிடதங்களில் சீவான்மா பரமான்ம பேதங்கள் கூறப்படுதலானும், இச்சீவான்மாக்கள் மாயாவாதோபநிடதங்களிற்போலக் கற்பிதராய் மித்தையாய் ஒழிக்கப்படமாட்டார் எனக் கொண்டன்றோ,

नित्यो नित्यानां चेतनश्चेतनानाम् ।

"சீவர்கள் நித்தியசேதன பதார்த்தங்களுள்ளே நித்தியசேதனர்" என்று கடவல்லியும்,

நஜீவோ ம்ரியதே ।

“சீவன் அழிவதில்லை” என்று சாந்தோக்கியமும் முழங்குகின்றமையால், கைவல்லிய ஞானவாசிட்ட முதலிய மாயாவாதப் பிரகரணங்களைச் சிரேஷ்டப் பிரமாணங்களாகக்கொண்டு பிரபல சுருதிகளோடு முட்டப்போதல் குன்று முட்டிய குரீஇப் போலாம்.

இதனையுற்று வாதிக்க முயல்வோர் நாம் முதற்கண்ணே வரைந்து பகிரங்கப்படுத்திய “சூதசங்கிதையிலே மாயாவாதியர் கட்டிய கோட்டையின் அடியை நியாய பீரங்கியிட்டு உடைத்துப் பெயர்த்துவிடல்” “மாயாவாதத்தைச் செயித்து உயர்த்திய சைவசித்தாந்த வெற்றிக்கொடி” என்றற் றொடக்கத்த விஷயங்களுக்குத் தக்க விடையிறுத்து வாதத்திற் றலையிடுவாராக. சுருதிபுராணப் பிரமாணங்கொண்டு வாதித்தால் நாம் வாதத்திற் றலையிடுவேமன்றி வாளா வைதல் அறிவிலார் செய்கையாதலில் அதனைப் பொருட்படுத்த மாட்டேம்.

ஸ்ரீ காசிவாசி-செந்திநாதையர்.

---

## THE CULTURE OF THE INTELLECT.
## உள்ளப்பயிற்சி.

---

### XII. பாஷைகள்.

உள்ளப்பயிற்சியாகிய இப்பகுதியை, பாஷையுணர்ச்சியைக் குறித்துச் சில விடயங்கள் கூறி முடிப்பாம். பின்வருஞ் சிறுவிதிகள் இயற்கைத்தொடர்புற்றனவெனப் பல்லாட்டை அனுபவ முறை தெரிக்கும். ஆதலான் வழங்கற்பாலன வெனக்கோடலாகும்.

(1) கூடும் வரையில் முதலில் நல்லாசிரியரை அடைதல் வேண்டும். அவரே நுமது முயற்சியழியச்செய்யும் இடர்ப்பாடுகளைத்தீர்த்து, வீண் காலப் போக்கைத் தவிர்த்துத் தவறாயுச்சரிக்கும் விதம்படிவதினின்றும் உம்மைக் காப்பாற்றுவர். அன்றேல், அப்போலி உச்சாரணங்களைப் பின்களைதல் கடினமாய் முடியும்.

(2) இதனை யடுத்து, தமிழ்ச்சொற்கள் இடைப்புகாது கற்கவேண்டும் பாஷையிற் கண்ணிற்படும் ஒவ்வொரு பொருளையும் உரக்கக்கூறல் வேண்டும். வேறு விதமாகக்கூறுமிடத்து, கற்கத்தொடங்குங் காலமுதற்கொண்டு, முன்னுள பொருள்களை அப்பாஷையிலேயே நினைத்து, அப்பாஷையிலேயே கூறல்வேண்டும். அப்பாஷை நூலிற்கும் உமது மனதிற்குமே யன்றி, முதலில் உமது செவியிற்கும் நாவிற்கு முரியதென்பதும் நினைவிலிருக்கட்டும்.



(3) பெயர்ச்சொற்கள் உரு பேற்பதை மனதில் நிறுவுமின்.

(4) முதல் வேற்றுமை இரண்டாம் வேற்றுமை இரண்டையுமறிந்தவுடன் நிகழ்காலத்திற் சாதாரணமான தன்மைவினை யொன்றை யெடுத்துச் செய்வினைக்குரிய விலக்கணப்படிச் சிறு வாக்கியங்களியற்றி உரக்கக்கூறுமின் உதாரணம் :—நான் சூரியனைப்பார்க்கிறேன்.

(5) பெயரினுக்கு அடைமொழி கொடுத்து இவ்வப்பியாசத்தை விருத்தி செய்க. உதாரணம் :—நான் ஒளிசெய் சூரியனைப்பார்க்கிறேன்.

(6) இவ்விதமாகப் படிப்படியாய் இடைநிலைகளை மனப்பாடஞ்செய்து பிறகு தக்க பெயர்ச்சொற்களோடு சிறு வாக்கியங்கள் செய்து, எப்போதும் தமிழைத்தவிர்த்து அந்நூதன பாஷையிலேயே நேரில் நினைத்துக்கொண்டு சொல்லுக. பாஷையுணர்ச்சியின் ஒவ்வோர் அறிவுடைப்பயிற்சியிலும் சாரமான இவ்வம்சத்திற் கண்ணாயிருப்பதில் உண்மை இடையூறு ஒன்றுமிலது. மற்று, மனோபாவத்தையடுத்த போலி இடர்ப்பாடும், மிகவும் பெரும்பாலும் தீய வழக்கத்தின் பிடிமானமுமே இடையூறுகளாம்.

(7) பெயர் வினைச்சொற்கள், வாக்கியங்கள், இவைகளின் எளிய மாதிரிகளில் தீவிரத்தேர்ச்சி செவியும் நாவுமடைந்த பின்னரே ஒழுங்குடைமுறையில் மாணாக்கன் மிகக்கடினமும் கலப்புமுற்ற மாதிரிகளுக்குச் செல்லல் வேண்டும்.

(8) சூத்திரங்களிலிருந்து மட்டுமே உடனே உதாரண முகத்தான் தெளியாது, ஒன்றும் அறிய வேண்டுவதில்லை. அல்லது, செவி நாவின் பயிற்சியின் காரணமாய் உண்டாகும் உதாரணங்களினின்றுமே சூத்திரங்களை யேற்படுத்துக. விதிகள் சிலவாய்ப் பல விஷயங்களையுந் தழுவல் வேண்டும்.

(9) பலவித ஒழுங்குப்பிறழ்வுகளும் பழக்கத்தில் நேரும்போது கற்பதே நேரிது.

(10) முதலில் எளிய கதைகள் எதுவாயினும் படித்தலாகும். ஆனாற் சாதாரணமாய் நடந்து வருவதுபோற் சிந்தித்துப்பேசுவதற் கீடாகப்படிப்பதைக் கோடல் ஒருபொழுதுங்கூடாது. இச்சார்பினை நிமிர்ப்பதற்கு நல்ல வழி யாதெனில் உயிர்நூற் பொருள்களையாதல் வினோதப் பொருள்களின் மாதிரிகளையாதல் எடுத்துச் சுயபாஷைக்கலப்பில்லாது, அவையிற்றின் அங்கங்களை உரக்க விவரிப்பதேயாம்.

(11) படித்தல், விவரித்தல் இவைகளின் அப்பியாசங்களனைத்தும் மீட்டும் மீட்டும் செய்தல்வேண்டும். “சிலநாட் பழகிற் சிலவுந்தெரியா-பலநாட்பழகிற் பலிக்குமென்க.” பாஷையுணரும் முதற்படிகளிற் கற்கத்தக்க எட்புத்த

கத்தையும் ஒரேமுறைபடித்தல்கூடாது. "நூலினை மீளவுநோக்கவேண்டா சூத்திரம் பல்காற்பார்க்கவே துணிக."

(12) கூடுமாகிற் படிப்பு உமது மனப்பிடிமானத்தை ஒட்டியேயிருக்கட்டும். நூல்விஷய மினியதாயிருப்பின் உமதுவிருத்தியு மிரட்டைப்பங்காகும். விஷயத்தைக்குறித்து முன்னரே சிறிதுணர்தல் பேருதவியாம், இதன்காரணமாகச் சமயநூற்பயிற்சியுற்றவர்க்குப் பிறபாஷையறிவதில் அப்பாஷையிலியற் றியுள பகவத்கீதை பயன்படுத்தச் சிறந்த நூல்களுளொன்று.

(13) படித்துச்செல்லும்போதே சுயபாஷைப்போக்கிற்கும் அவ்வயற்பாஷை நடையினுக்குமுள வேற்றுமைகளை உற்றுநோக்குக. மிகவும் பாஷைநடையினையடுத்த மொழிபெயர்ப்பில் தெளிவாய் அவையிற்றினை எழுதுகருவிகொண்டு கீறிட்டுவைத்துக்கொண்மின். சின்னாளானபின்னர் வைத்திருக்கும் மொழிபெயர்ப்பை மறுபடியும் அப்பாஷையினுக்கே மாற்றுக.

(14) உமதுகுறிப்புக்களை ஒழுங்குபடுத்தற்கும், வேண்டாமாகில் திருத்தற்கும், முறைப்பட்டவிலக்கணமொன்றை, பயனுடைத்தெனத் தோற்றுமட்டெடுத்துப்பார்க்க. ஆனாற் பயிற்சிக்குப் பின்னரே இலக்கணம் வரவேண்டும். முன்னர்க்கூடாது.

(15) அனேக இலக்கணங்களிற் காணும் உதாரணத்தினின்றும் ஒழுங்குடனெடுக்கப்பட்ட பொதுப்பட்டவிதியொடு அமையற்க. மற்று, பொதுவாயெங்கும் பொருந்தும் இலக்கணத்தைப்பற்றியதாயினும் சிறப்பிலக்கணத்தைச் சார்ந்ததேயாயினும் விதியின்காரணம் யாதெனநாடல்வேண்டும்.

(16) பாஷைநூற்பகுதிகளாகிய கவிசரித்திரத்தையும் பேசும் முறையையும், சொற்பொருளாராய்ச்சியெனக் கூறப்படுவதையும் கற்றல்வேண்டும். ஆங்குவெளிப்படும் நீதிகள் பகுத்துணருமறிவுடன் உமதுபயிற்சியை தீவிரடையக்காரணமாகும். இல்லாவிடின் பெரும்பாலும் பயிற்சி ஞாபகசக்தியின்மீது காரணமின்றிப் பாரமுற்றதொழிலைச் சுமத்தலாகும்.

(17) எப்போதும் பழக்கமே இன்றியமையாதது. முதன்முதலில் பாஷைநம்மதாகவேண்டும். இப்பழக்கம் இடைவிடாதபயிற்சியாலும் இடைவிடாத சல்லாபத்தாலுமே அடைதல்கூடும். சம்பாஷிக்கத்தகு வேறொருவருமில்லையேல் தாமே தனித்து உரக்கப்பேசிக்கொள்ளலாம். ஆனால் மனமும் கண்களுமட்டுமேயன்றிச் செவியும் நாவும் பயிற்சியடைதல்வேண்டும் கற்பதில், சிறந்தநூல்களையிட்டுமே யொருவன்கற்கலாகாது. கையிலகப்படும் நூலெதனையு மாவலுடன் விழுங்கல்வேண்டும். ஒரேநூலினைத் திட்பநுட்பமாய்க் கற்றல்கூடாது. அஃதொரு விசேடவாற்றலாகக் காட்டுமிடத்து நன்றேயாகும். ஆயின், பாஷையின் பொது அம்சத்தில்பெரிதுமூடாட அவனறிதல்வேண்டும். பொதுவான பாஷையிற்போக்கித் தீவிரப்பயிற்சியாற் கை



தேர்வதன்முன்னர் நுட்பொருள்களிற் செவ்விய திருத்தத்தை நாடவியலாது. உதாரணமாகக் கம்பராமாயணத்திற் பலப்பலப் பாடபேதங்களிலாதல் ஆராய்ச்சிசெய்பவரின் மேதாவித்தனமான ஊகிப்புக்களிலாதால் நுழைய ஒருவன் தொடங்குவதன்முன்னர் நூலினையே இருபான்முறையேனும் படித்தல்வேண்டும்.

(18) நேரிதாய்க் கூறப்படுங் கட்டுரைவகுத்தல் என்பது யாம் மேற்சுருக்கி விடுத்துள பேசிப்படித்தற் பயிற்சி, மொழிபெயர்த்து, மறுபடியும் மொழிபெயர்த்தற் பயிற்சியாகிய இவற்றினின்றும் திரண்டு முற்றிய முடிவுப்பொருளாகும். இவ்வப்பியாசத்தில் உயர்ந்தோர் போக்கை அனுசரித்து எழுதுவதே சிறந்த விஷயம். சொல்லகராதியையும், சொற்றொடரகராதியையும் நோக்கிவரைவதன்று. ஒரு குறித்த நடைக்கு மேற்கோளாகும் ஆசிரிய ரொருவரைத் தெரிந்தெடுமின். அவரது சொற்றொடர்களைக் கூட்டுணவு செய்ம்மின். சுயபாஷைக் கலப்பின்றி நேராக அவற்றைப்போன்றே நீவிர் கொஞ்சம் செய்ம்மின். இவ்வாறு தேர்ச்சியடைந்தபின் அந்நடையில் உம்முடைய அம்சங்கள் பலவற்றையுங் கூட்டத் துணியலாம். ஆதி நூல்களினின்றும் மொழிபெயர்க்கலாம். ஆனால் அது ஆதியிற் கூடாது. அப்பிற பாஷையைப்போன்று நேரே செய்வதாற் செவியைப் பண்படுத்திப் பின்னரே சுயபாஷையினின்றும் மொழிமாற்றும் மிகக் கடினமான தொழிலைப் பயன்படச் செய்ய முயலுதல் வேண்டும்.

உள்ளப்பயிற்சி முற்றிற்று.

ச. கி. சுந்தராசாரியன்.

---

## KASI KANDAM.

## காசிகாண்டம்.

---

(Vol. V. 422-ஆம் பக்கத் தொடர்ச்சி.)

இங்ஙனம் நாரதர் வீற்றிருக்க வலிமையுடைய விந்தமானது, "எல்லாவுலகங்களையும் சுமப்பவன் நானாயிருக்க மற்றப் பர்வதங்களெல்லாம் சுமக்குமென்னல் சொல்லளவே யன்றி வேறென்ன? பொன்னை மிகுதியும் தன்னிடத்திலுடைத்தாயிருப்பதால் மேருவும் பொலிவுடையதா யிருக்கின்றது; அதனாலேயே அது எனக்கு நிகராமா? அதான்று, அவுணர் கூட்டமிருந்த உதயகிரியும், பொதிய வெற்பும், நிடத கிரியும், நீலகிரியும், இமயகிரியும், ரேவதகிரியும், மந்தரகிரியும், சையமும், கிரவுஞ்சமும், முதலான மலைகள் தான் எனக்கு நிகராமா? இவையெல்லாம் இப்பூபாரம் தாங்கும் வலியுடையனவா? இல்லையே ஆகையால் நானே எவற்றிற்குந் தலைவன் என்று சொல்லுவ

கென்ன தடையிருக்கின்றது?" என்று சொல்லிற்று. இவற்றை யெல்லாம்கேட்டுக்கொண்டிருந்த நறிய தாமரை மலரின் கண் வைகும் வேதாவின் புதல்வரானவர், கற்றைவார் சடையான் வைகும் கைலையே முதலாக அநேக பெருமை தங்கிய பர்வதங்களிருக்க இதனுக்குற்ற மனச்செருக்கு நன்றென, நக்கு, கலகஞ்செய்து அதன் கர்வத்தை யடக்குவான் கருதி. அவ்விலங்கலை நோக்கி, "ஓ! விந்தராசனே! நான் ஒருகால் மேரு மலைக்குச்சென்றிருந்தபொழுது அது தான் தான் பர்வதங்களுக்கெல்லா மரையனென்றும், தன்னைத்தான் விசும்பூடுபோயும் சூரியன் முதலானவர்கள் வலம் வருகிறார்களென்றும், ஆகையால் தனக்குள்ள பெருமை யாருக்கும் கிடைப்ப தரிதென்றும் என்னிடத்தில் சொல்லிற்று; உன்னைக் கொஞ்சமும் மதியாது கூறினவார்த்தையைக் கேட்டுச் சகிக்காதவனாய் நின்பாற் சாற்றுவான்புக்கேன்; நான் உட்காரும் பொழுது நெட்டுயிர்ப் பெறிந்ததும் அந்தக் கடூரமானசொற்களை நினைந்தேதான்; பூமியைப் பரிப்பவனும் பர்வதராசனும் நீயாயிருக்க அது அப்படிச் சொல்லவொண்ணுமோ? இனி நீ சும்மாவிருந்து காரியமில்லை. இதற்குத் தகுந்த ஏற்பாடுநீ செய்யவேண்டியது; இல்லாவிடின் நீ உன்னுடைய பெருமையை இழக்க வேண்டியதுதான்" என்று கூறிப் பகையை மூட்டிவிட்டுவிட்டு, ஆசிகளைக் கூறிப் பின்னர் பொன்னகர் நோக்கிச்! செல்வாராயினர்.

ஐம்புலன்கள் செல்லும் வழியில் மனத்தைச் செலுத்துவோர்களுடையவும் தங்களுக் கேற்பட்டிருக்கும் கடமைகளைச் செய்யாது கொன்னே காலத்தைப் போக்குவர்களுடையவும், அன்பினீங்காச் சுற்றத்தவர்கள் இழிவாகப் பேசும்படி செய்துகொள்ளுகிறவர்களுடையவும், வாழ்க்கை ஒரு வாழ்க்கையாகுமோ?

எப்படிப்பட்டவருக்கும் மனத்தில் ஒரு வருத்தம்.வந்து தோன்றினால் அது அவரது புத்தியையும், மிகுந்த பசியையும், அழகையும் இடைவிடாத முயற்சியையும். தூக்கத்தையும் பராக்கிரமத்தையும், நந்தலிலுயிரையும், நல்ல மனதையும் அழிக்கும்.

ஒருவனுக்கு மிகுந்த உடற்கொதிப்புண்டாயின் ஔஷதாதிகளால் அவனைச் சௌக்கியப்படுத்தலாம், ஒருவனுக்கு மனங்கொதிப்பு உண்டாயின் இம்மண்ணுலகத்திலுள்ள வயித்தியரோ அதனை மாற்றவல்லார்?

ஆகையால், அவ்விந்தத்திற்கு மனக்கொதிப் பதிகரித்தமையின் கோபமேற்கொண்டு அது, "உண்மையான சாஸ்திரங்களிற் பயின்ற நாரதரும் பொய்ம்மொழி கூறுவரோ? கூறமாட்டாரே. அவர் சொன்ன மாற்றம், உண்மையே" எனச் சிந்தித்தது. பொருமையும் பேராசையும் கொண்ட மாக்களுக்கு எதிலார் பகரும் கூற்றில் உண்மையைக் கண்டுபிடிக்க முடியாது. அப்பேர்ப்பட்டவர்களுக்குநல்லது கெட்டதாகவும் கெட்டது நல்லதாகவும் தோன்றும். அவர்கள் பழிபாவங்களுக் கஞ்சார், பிறர் நலத்தையும் பாராட்டார், "எனக்கு ஒரு கண்கெட்டாலும்கெடட்டும்எதிரிக்கு இரண்டுகண்ணும் கெட்டுப்



போகவேணும்" என்னும் கருத்துக்கொண்டவர்களாவார்கள். இப்பேர்ப்பட்ட துர்க்குணப் பேய்களால் பீடிக்கப்பட்ட விந்தமானது, "மேருவானது நம்மோடு சண்டைக்கு ஆரம்பிக்குமாகில் நம் மிகுந்த வல்லமை நன்று நன்று; அம்மேருவுக்கு இப்பேர்க்கொத்த கர்வம் உண்டாவதற்கு என்ன காரணம்? ஆதவன் நாடோறும் அதைச் சுற்றி வலம்வருவதனாலன்றோ? நல்லது. அவன் இன்றுமுதல் எப்படிச் சுற்றிவருவான், பார்க்கிறேன்; அப்பரிதியின் விசும்பாற்றைத் தடுத்துவிட்டால் அவன் என்ன செய்வான்; இதோ! இப்பொழுதே தடுக்கிறேன்" எனக்கருதி, திரிவிக்கிரமாவதாரமென்ன ஆகாய வெளியில் உயர்ந்து நின்று, பழமறையந்தணர் தங்கடங்கள் காலைக்கடனை யிறுத்தற்கெண்ணுபு கனைகடன் முகட்டிலிளஞ்சூரியனை எதிர் பார்க்குந்தன்மை போல், ஆதவன் வரவை எதிர்பார்த்து நின்றது.

## தேவர்கள் பிரமலோக மடைந்தது.

அருமையாகிய வேதங்களிற்பழகும் அந்தணர் தங்கள் காலை வந்தனம் செலுத்தவும், தாமரை மலரானது மலரவும், அம்மலரிலுள்ள கள்ளை மாந்தி வண்டுகள், இசை பாடவும், விரிந்த கிரணங்களுடைய விண்ணவன் கருங்கடன் முகட்டிற்றோன்றினான். அவ்வாறெழுந்த வெய்யோனானவன் அதற்கிறைவன் றிக்கினை நீங்கிச்செந்தமிழ்க்கடவுள் வைகும் பொதிய மால்வரையை நோக்கிச் செல்லா நிற்புழி புரவிகள் தாண்டச்செல்கில வாதலால், "நாம் போகும் வழியைத் தடுப்பவர் எப்படிப்பட்டவரா யிருக்கவேண்டும்" என ஊகித்தறிந்து, வீரக்கழலை யணிந்த அருணனானவன் பரிதியை வணங்கி, "எல்லொளி மன்னவ! விந்தமானது தனது கட்டளையின்றி பொன்மலையாகிய மேருவைவலம் செய்யப்படாதென்று தனது வலியால் நமது தேரைச்செல்லவொட்டாது தடுத்திருக்கின்றது" என்று சொன்னான். இம்மாற்ற முனைக்கக்கேட்டு இருட்குறும் பெறியும் வெய்யோன் தேரினின்றிழிந்து, விந்தமானது அகாய முழுவதையுமறைத்த காட்சியைக்கண்டு, அதிசயித்து, "ஓ! விந்தராஜனே! நீர் இவ்வாறு என்வழியைத் தடுப்பது நியாயமல்ல; நான் ஈண்டு இன்று தங்கி விடுவேனாகில் உலகின்கணுள்ள உயிர்களெல்லாம் படாத பாடுபடும், முனிவர்களுடையவும், தேவர்களுடையவும் சாபம் உமக்கு நேரிடும், உமக்கும் மேருவுக்கும் மாச்சரியம் உண்டானால் யானேகும் வழியையா தடுப்பது? "தென்ன மரத்தில் தேள் கொட்டப் பனைமரத்திற்கு நெறிகட்டினாற் போலாயிற்றே; நீர் எவ்வளவோ தெரிந்தவராயிருந்து இப்படிச் செய்யத் தகுமா? நீரும் மேருவும் எப்படியோ குடுமிக்குக் குடுமி பிடித்துக்கொள்ளுங்கள், யானேகும் வழியை இப்பொழுது விட்டுவிடும்" என்று சொல்ல, அவ்விலங்கல் கேளாது "தான் பிடித்த முயலுக்கு மூன்றேகால்" என்று மறுத்து விட்டது.

இவ்வாறு சூரியனானவன் வழிமறிக்கப்பட்டு நின்று போனதினால்; வடதிசையிலும் கீழ்த்திசையிலும் மருவி வாழ்கின்ற ஜீவகோடிகளெல்லாம் பரந்தவெயிலின் கொடுமையினால் சகிக்க முடியாது துன்பத்தை யடைந்தனர். தென்றிசையிலும் குடதிசையிலும் குழுமி வாழ்கின்ற உயிர்ப்பிராணிகளெல்லாம் நெருங்கிய இருட்கூட்டத்தில் ஒன்றுந்தெரியாமல் மதிமயங்கி மனம் வருந்தினர். காய்கின்ற கிரணங்களையுடைய சூரியன் நின்று போனபடியால் வேதசம்பந்தமாகிய யாகங்கள் முதலான காரியங்கள் செய்யமுடியாமல் போய் விட்டது. யாகங்கள் இல்லாமையால் ஆர்கலிசூழ் உலகின் கணுள்ள ஆன்மாக்களெல்லாம் துன்பக்கடலில் ஆழ்ந்தன. எல்லாவற்றையும் உண்டாக்கி அவற்றைப் பாதுகாத்துப் பின் அழித்தலும், அவ்வப்புண்ணிய காலங்களில் ஒவ்வொருவரும் விரதாதிகளை யனுஷ்டித்து ஒழுகுவதற்குக் காலத்தைக் கணித்துக் கொடுத்தலும் வெங்கதிர்ப்புனிதனல்லால் ஆற்றுநர் வேறில்லாமையால் உலகத்திலுள்ள பிராணிகளெல்லாம் சித்திரப்பாவையை யொத்திருந்தன.

ஓர் புறம் வெயிலும் மற்றோர் புறம் இருளுமா யிருப்பதால் உரகரும், தேவரும், முனிவரும் அத்துன்பத்தினின்றும் நீங்கும்பொருட்டு பதுமாசனனை யடைந்து,

ஐயனே போற்றி யமலனே போற்றி
மெய்யனே போற்றி வேதனே போற்றி
பிரமனே போற்றி யுருவனே போற்றி
தெரிவரும் பொருளே தேவனே போற்றி
முச்செய றன்னில் முதற்செய லுடையாய்
விச்சையு மாகி யவிச்சையு மாகி
இறைஞ்சுநர் பவத்தை யெளிதினி லகற்றி
மறைப்பொரு ளவர்க்கு வழங்குவ போற்றி
வெருவருங் காம வெஞ்சுற வெறிய
இருவினைத் திரைக ளெற்றும் பிறவிக்
கடலு ளெய்திக் கலுழ மவர்க்கெலா
மடலுறுஞானத் திருவருட் புணையை
யளித்துக் காக்கும் மமரா போற்றி
அளியினம் பரவு மங்கோ கனக
மமர்ந்தினி திருக்கு மம்பா டன்னை
முகத்தினி லுடைய முதல்வா போற்றி.

என்று பலவாறு துதித்து தங்களுக்கு ஏற்பட்டிருக்கும் துன்பத்தை எடுத்தோதி வணங்கி நிற்க, நான்முகன் பின்வருமாறு தேறுதல் சொல்லலுற்றான்.



“நீங்கள் என்னைத் தோத்திரம்செய்ததால் மிகவும் சந்தோஷம், அடைந்தோம்; நீங்கள் ஒன்றுக்கும் அஞ்சவேண்டுவதில்லை, தொழுத்தகு மறைகள் போற்றுந் தூயவீடளிப்போம், நீங்கள் வெந்துயர் நீங்குமின், சிவபெருமானை யடுத்து முத்தியின்பத்தைப் பெறும் பேற்றைக் பெற்றீர்கள், வேதங்களும், யாகங்களும், * நிகரற்ற சத்தியமும், நீதியும், பரிசுத்தமும், பெருமை தங்கிய தவமும், எவ்லாம் எமது வடிவத்தைப்பெற்று எம்மைப்பிரியாமல் இனிது வைகும்.

ஐம்புல னடக்கி யந்தக் கரண
நான்கையுஞ் செற்றோர் நான்மறை தெள்ளி
மறநெறி யோம்பா தறநெறி நின்றோர்
உறுபயன் விழையா தோங்கும் விரதம்
பூண்டோர் பத்தினிப் பெண்டி ராவின்
மாண்டகு குலமினி தருந்தப் பைம்புற்
சாலக் கொடுத்தோர் தவத்தின் மிக்கோர்
பிறர்மனை விழையார் பெற்றதாய் தந்தை
இருபதந் தன்னி லறுபத முரலு
நறுமலர் தூவி நாளும் பணிவோர்
மறுவறு வேதக் கிழவர் பாதத்
துறுபுன லுகர்வோ ருயர்ந்த கங்கையின்
கரையினி லுடலங் கவின்பெற நீத்தோர்
மறையுடைக் கடவு ணிறைவுடன் வைகும்
மாண்பிர யாகையில் மாகநீர் படிந்தோர்
களிதருங் காமக் கழிமலங் கழுவுவோர்
ஒளிமதி யயன மளியுடன் சார்ந்தோர்
அபய மளித்தோ ருபையகோ முகியைச்*
சற்பாத்திரத்திற் றானஞ் செய்தோர்
இறந்தோர்க் கெல்லா மேல்வுறக் கயையில்
அன்ன மீந்தோர் அங்கயற் கண்ணி
தன்னொடு கொன்றை தரித்த கடவுளை
மன்னிய மனத்தராய் மாத மொன்றே
யிடையிட் டுண் போ ரிங் கிவர் யாரு
மெம்பா லினிது வைகிப் பின்னர்

* மெய்யே சிறந்த பெருநலமா மெய்யே யனைத்து நிலைநிறுத்து
மெய்யா லழல்கால் கதிர்பிறவுந்தந் தொழிலின் விலகாவா
மெய்யே யனைக்கு மிருப்பிடமா மெய்யே மெய்யே சிவமாகு
மெய்யே பிரம பதமெனவும் புகன்றான் வினைதீர் காசிபனே.

நீங்கரும் காசி தன்னிற் பிறந்து
கோங்குறழ் முலையாள் பங்கன் குரைகழற்
பங்கயம் போற்றி யங்கவ னருளான்
மீளாப் பேற்றை யடைவர் மாதோ.

(இன்னும் வரும்.)

சிதம்பர முதலியார்.

---

## VIKRAMORVASIYAM.
## விக்ரமோர்வசீயம்.

(சிறிதுபோழ்து வாளாவிருந்து. மெல்ல கண்களைத் திறந்து களிப்போடு)
காதலிதான், நிச்சயம்.

**உருப்பசி.**—(கண்ணிருக்குத்து) வெற்றிபெறுக மகாராசர்.

**அரசன்.**—

சீற்றத்தாய் நின்பிரிவிற் சேர்ந்தவிருள் வாய்மூழ்கல்
ஏற்றவென்ற லாவி யிழந்தோனுற் பின்னருயிர்
போற்கொளப்பட் டாயம்ம போந்து. (103)

**உருப்பசி.**—வயமின்றிக் கிடந்த பொறிகளையுடைய எனது கண் கூடாக்கண்ட செய்கையினர் மகாராசர்.

**அரசன்.**—'வயமின்றிக் கிடந்த பொறியினேன் யான்' என்னும் நினது பதப் பொருள் அறிகின்றிலேனு ?

**உருப்பசி.**—சொல்வேனிதனை யிப்போழ்து, தெளிவுடையா ராகுக மகாராசர்! எதனுல், கோபவசமேய்ந்த என்னுல் இந்நிலை மாறுபாடு அடைவிக்கப் பட்டனர்.

**அரசன்.**—யானிப்போழ்து அருள்விக்கத்தக்கேனல்லேன்;நின் பார்வையாலே புறக்கரணங்களோடு கூடிய எனது உட்கரணம் தெளிவினது; ஆகையால், எங்ஙனம் இத்தனை நாள் என்னை விட்டிருந்தாய்சொல்.

**உருப்பசி.**—கேட்பீராக மகாராசரே ! பகவான் குமாரஸ்வாமி நித்தியமாய குமார விரதம் கைக்கொண்டு அகலுஷமென்னும் பெயரையுடைய கந்த மாதனமலைக்காட்டின் நீர்நிகர்த்த விடத்தில் இருந்தனர் ; ஏற்படுத்தப் பட்டது அவரால் இக்கட்டளை.

---

உபய கோமுகியாவது :—கன்றுந் தாயுமாகத் தானஞ்செய்தல். கருக்கொண்ட பசு பிரசவிக்கும்போது கன்று வெளிவந்தும் வராமலு மிருக்கும்பொழுது வேதியருக்களித்தல்.



**அரசன்.**—எத்தகைத்து ?

**உருப்பசி.**—சொல்வேன் ; "எம்மடந்தை இவ்விடத்தை யடைகின்றுள், அவள் கொடியயுருவினளாய்ப் பரிணமிப்பாள் ; கௌரீசங்கம நீய மணிநிமித்த மின்றி உய்வுருள்" என்று; நான்குருசாபத்தான் மடமையடைந்துள்ள மனத்தினளாய், தேவர்கட்டளையை மறந்து கைக்கொள்ளாத வேண்டுகோளினளாகிக் குமாரவனத்துட் புகுந்தேனுயினேன் ; புகுந்த பின்னர், இவ்வாறு வாசந்திக்கொடியாக ஆயினேன்.

**அரசன்.**—எல்லாமும் தக்கன ;

புணர்ச்சியி னயர்ச்சி யால்யான் பொன்னணை மீது தூக்கம்
புணரினும் வேற்று நாட்டுட் புக்கேனு வெந்நீ யென்னை
உணர்தியெல் லியலா யந்நீ யுன்றனை நீண்ட காலந்
தணந்தவென் பிரிவை யெங்ஙன் ருங்குபு நின்ருய் மன்னே. (104)

முனியால் நின்சேர்க்கைக் காரணம் எவ்வாறு சொல்லப்பட்டது. அந்த இது அடையப்பட்டது.

(என்று மணியைக் காட்டுகின்றுன்.)

**உருப்பசி.**—அம்ம சங்கமநீயம் ; ஆகையாலேதான் மகாராசராற் கட்டிக்கொள்ளப்பட்ட மாத்திரத்தில் இயற்கை யடைந்தேனுகின்றேன்.

(என்று மணியை எடுத்துக்கொண்டு வணங்குகின்றுள்.)

**அரசன்.**—சுந்தரி ! கணமாத்திரம் இங்ஙனமே யிருப்பாயாக.

நெற்றிமிசை வாய்மணியி னீண்டிலங்கு செங்கதிரால்
சுற்றுறுமிந் நின்வதனஞ் சூர னிளவெயிலால்
செம்மைநிறஞ் சேர்ந்துள்ள செங்கமலத் தின்னழகை
அம்ம தரித்திருக்கு மால். (105)

**உருப்பசி.**—பட்டணத்தை விட்டு வந்த உமது நாள்கள் பலவன்றே ; பிரசைகள் என்னைப் பழிப்பர்கள் ; வாரும் மீள்வோம்.

**அரசன்.**—நீ எது கட்டளை யிடுகின்றனையோ.

**உருப்பசி.**—மகாராசர் எங்ஙனஞ் செல்ல விரும்புகின்றனர்?

**அரசன்.**—

இன்னடை யாளே மின்னெளி யென்னுங் கொடியேய்ந்து
பொன்னரி வில்லாம் புதியவோ வியத்துப் பொலிதந்து

நன்னர் விமானத் தன்மை யடைந்து நவமாகி
மன்னிய மேகத் தாலெலனெ யடைவிப் பாய்நகர்வாய். (106)

(என்று அகன்றனர்.)

நான்காமங்கம்

முற்றிற்று.

பு. மா. ஸ்ரீநிவாசாசாரியர்.

---

## IDEAL OF UNIVERSAL RELIGION.

## ஸர்வார்ஹ மதலக்ஷண பூர்த்தி.

---

உலக முழுமைக்கும் சமரஸமாயுள்ள ஒரே தத்துவ சாஸ்திரம் ஏதேனு மிருக்கின்றதா? இதுகாறும் இல்லை. ஒவ்வொரு மதமும் தன் கொள்கைகளையே எடுத்துக்காட்டி அவற்றைத்தான் உண்மையென வொப்புக்கொள்ள வேண்டு மென்று வற்புறுத்துகின்றது. அஃது இவ்வளவு வற்புறுத்துவதுடன் மாத்திரம் நில்லாது, அஃது உண்மையெனக்கூறும் உண்மைகளை நம்பாதவர்கள் பயங்கரமான ஓரிடத்திற்குப் போகவேண்டு மென்றும் பயமுறுத்துகின்றது. அத்தகைய மதத்தாருள் மற்றுஞ்சிலர் அவ்வளவுடன்கூட திருப்தியடையாராய் தாங்கள் நம்பும் வண்ணம் ஏனையோரையும் நம்பும்படி வற்புறுத்துமாறு கத்தியையும் இழுத்துப் பிரயோகிப்பார்கள். இது அவர்களது இயற்கையான துஷ்டத்தன்மையான் உண்டாவதென்று நினைக்கக்கூடாது. மற்றென்னையெனின் அது மனிதர்களது மூளையைச் சம்பந்தித்த மதாவேசம் என்னும் ஒருவித வியாதி விசேஷமாம். இம்மதாவேசத்தாற் கண்டுண்டவர் மனிதர்களுக்குள் மிக்க பக்தி சிரத்தையும் வாய்மையும் உள்ளவர்கள். ஆனால் அவர்கள் உலகத்திலுள்ள ஏனைய ஜன்மத்தர்களைப்போலவே தாங்கள் செய்யும் செயல்களுக்கு உத்திரவாத மற்றவர்களாயிருக்கின்றனர்.

வியாதிகளுக்குள்ளே மதாவேசம் என்னும் இவ்வியாதியானது மிகவும் அபாயகரமானது. மானுட வியற்கையிற் குடிகொண்டிருக்கும் சர்வவித துஷ்டத்தன்மையும் இவ்வொன்றினாலேயே வெளி யெழும்புகின்றது. கோவம் மூண்டு, நரம்புகள் கோரமாய் முறுக்கிப் பின்னிக்கொள்ள, மாந்தர்கள் புலிகளை மானுகின்றனர்.

இனி புராணத்திலாயினும் ஏதேனும் பொதுத்தன்மை உளதா? புராண ஸாபரஸ்யமேனும், எல்லா மதங்களும் ஒருங்கே ஒப்புக்கொள்ளும் சர்வார்

* நாகம்-இது கிறிஸ்தவநூல் வழக்கு.



ஹடமான புராண சம்பிரதாயமேனும் ஒன்றுண்டோ? நிச்சயமாய் இல்லவே
யில்லை. எல்லா மதங்களிலும் ஒருங்கே ஒப்புக்கொள்ளும் புராணக்கதைகளி
ருப்பினும், ஒவ்வொரு மதமும் 'என் கதைகளை வெறுங்கற்பனைக் கதைக
ளல்ல" வென்று கூறுகின்றது. இதனைத் திஷ்டாந்த வாயிலாகச் சிறிது ஆரா
ய்வாம், கேவலம் நிதர்சனார்த்தமாகப் பேசுகின்றேனே யன்றி எம்மதத்தை
யுங் கண்டிப்பதில் எனக்குத் தாற்பரியமில்லை.

கடவுள் சுபோதவடிவந் தாங்கி உலகத்திற் றோன்றினாரெனக்கிறிஸ்தவர்
நம்புகின்றனர். அவர்களுக்கிது உண்மையான சரித்திரமேயன்றி கற்பனைக்
கதையன்று. கடவுள் பசுவின்கண் ஆவிர்ப்பவித் திருக்கின்றாரென இந்துக்
கள் நம்புகிறார்கள். அங்ஙனம் நம்புவது உண்மைசரித்திர மன்றெனவும்
வெறும் பொய்க்கதை யென்றும் மூடபக்தியென்றும் கிறிஸ்தவர்கள் ஆக்ஷே
பிக்கின்றார்கள். ஒரு விக்கிரகத்தை ஒரு பெட்டிவடிவமாய்ச்செய்து அதின்
இரு பாரிசத்திலும் தேவ தூதர்களின் தூய உருவங்களை யமைத்தால் அத
னைப் பரம பவித்திரஸ்தானமாகிய கர்ப்ப கிருஹத்தில் வைக்கலாமென்றும்
பகவானாகிய யெஹோவாவின் திருவுள்ளத்திற்கது மிகவும் உகந்ததென்றும்
யூதர்கள் கூறுகின்றனர். ஆனால் அதனை ஒரு சுந்தரபுருஷ வடிவமாகவேனும்
ஸ்திரீ ரூபமாகவேனும் அமைக்கின் அதே யூதர்கள் அதனைக் கண்டமாத்தி
த்தில் "இஃதொரு ம்பங்கரமான விக்கிரகப இதனை யுடைமின்" என்
பார்கள். இதுதான் புராண விஷயத்தில் நமக்குள்ளிருக்கும் ஐக்கியம்! ஒரு
வன் எழுந்து நின்று 'எனது ஆசாரியன் இன்ன இன்ன அற்புதச் செயல்
களைச் செய்தா'ரென் றுரையானாயின், அஃதெல்லாம் வெறும் மூட
பக்தியென ஏனையோர் கூறுகிறார்கள், ஆனால் அவர்கள் ஆசாரியனே அதை
விட இன்னும் ஆச்சரிய கரமானதொரு செயலைச் செய்திருப்பார் யார். அதை
யவர்கள் உண்மைச் சரித்திரமெனக் கொள்ளாநிற்பர். யான் கண்டறிந்த
வரையில் இவ்வுலகில் எவரும் சரித்துரத்துக்கும் புராண கதைகளுக்குமுள்ள
சூக்ஷும பேதத்தை இக்கனவான்களின் மூளைகளிலுள்ளவாறு கண்டறியக்
கூடவில்லை. இத்தகைய கதைகளெல்லாம் எவருடைய வாயினும், ஏகதேச
சிறிது உண்மைச் சரித்திரம் கலக்கப்பெற்றிருக்கக் கூடுமாயினும், வாஸ்தவத்
திற் கற்பனைகளேயாம்.

இதற்கடுத்தது கர்மம். ஒரு மதக் கோட்பாட்டினர் ஒரு வகையான கர்ம
த்தை யனுஷ்டிக்கின்றனர். அவர்கள் தாம் அனுஷ்டிக்கும் பத்ததியே பவித்
திரமானதென்றும் ஏனைய பதங்களுள் கர்மானுஷ்டானங்கள் கேவலந் தாழ்ந்த
மூடபக்தியென்றும் கருதுகின்றனர். ஒரு மதத்வனர் ஒருவதையான குறியை
பூஜியார்களாயின், மற்றோர் அதைக்கண்டு இது 'அஸஹ்யம்' என்கின்ற
னர். மிகவுஞ் சர்தாறனேமான ஒரு குறியை உதாரணமாக வெடுத்துக்
கொள்வோம். இலிங்கஹிதமானது உண்மையில் வேறு பொயிள் கொள்

ளினும் கிரமேண அப்பொருள் ஜனங்களால் மறக்கப்பட்டு போக, இப்பொ
ழுது சர்வேசுவரனது அறிகுறியாக மாத்திரமிருக்கின்றது. இக்குறியை
ஈசுவரர் மூர்த்தமாகப் பாவித்து வழிபடும் ஜனங்கள் அதை யங்ஙனமே
கொள்கின்றார்களே யன்றி அதைப்பற்றிய வேறெவ்விதமான எண்ண
மும் அவர்கள் மனதில் உண்டாவதில்லை. ஆனால் வேற்றுமதத்தா னொரு
வன் அதனைக் காணும்பொழுது அதை யஸஹ்ய மெனக்கொண்டு கண்டிக்கின்
றான். ஆனால் இங்ஙனங் கண்டிக்குமவன் செய்யும் அனுஷ்டானம் இந்த
இலிங்கமதாநுசாரிக்கு அதைவிட அஸஹ்யமாய்த் தோன்றும். இவ்விஷ
'யத்தை இலிங்கபூஜா சம்பிரதாயத்தினும், கிறிஸ்தவர்களுக்குள் வழங்கும்
நற்கருணை' யென்னும் சம்பிரதாயத்தானும் விளக்குவாம். கிறுஸ்தவர்
களுக்கு இலிங்க பூஜையைக்கண்டால் அஸஹ்யமாயிருக்கின்றது. இந்துக்க
ளுக்கு 'நற்கருணை' யென்னும் கிறிஸ்துவச்சடங்கு அஸஹ்யத்தை யுண்டுபண்
ணுகின்றது. ஒரு மனிதனது நற்குணங்களைக் கிரஹிக்குப்பொருட்டு அவ
னைக்கொன்று அவன் மச்சம் இறைச்சியைத் தின்பதும் அவன் இரத்தத்தைக்
குடிப்பதுமான கிறிஸ்தவச்சடங்கானது நரமாம்ச பக்ஷணமென இந்துக்கள்
கூறுகின்றார்கள். இது காட்டில் திரியும் நாகரிகமில்லா முரட்டு ஜாதி
யார் செய்யும் காரியமாயிருக்கின்றது. ஒருவன் தைரியமுள்ளவனாயிருப்பின்,
அவர்கள் அவனைக் கொன்று அவன் இருதயத்தைப் புசிக்கின்றார்கள். ஏனெ
னில் அப்படிச்செய்வதால் அம்மனிதனது திடசித்தமும் தைரியமுந் தங்களு
க்கு வருமென்பது அவர்களது நம்பிக்கை. பரம க்ரைஸ்தவசிகாமணியாகிய
ஸர் ஜான் லப்பக் என்பவர்கூட இதனை யொப்புக்கொண்டு இக்கிறிஸ்தவ
ஆசாரமானது மேற்சொல்லிய காட்டுச் சாதியாரின் கொள்கையினின்றே உற்
பத்தியாயிருக்கவேண்டுமென்று சொல்லுகின்றார். ஆனால் கிறிஸ்தவர்களின்
பெரும்பான்மையோர் அவ்வாசாரத்தின் மேற்கூறிய உற்பத்தியை ஒப்புக்
கொள்ளுகிறார்களில்லை. இவ்வாசாரம் மேற்கூறியபடி பொருள்கொள்வதிற்
கிடங்கொடுக்குமென்பது அவர்கள் மனதில் நுழைவதே யில்லை. அதையவர்
கள் பரிசுத்தமாகக் கொண்டிருக்கின்றமையின் அதுவேதங்களுக்கு புருஷார்
த்தமெனக் கருதியிருக்கின்றனர். ஆகையால் கர்மங்களிலும் சர்வ சனங்களும்
ஒப்புக்கொண்டு அநுஷ்டிக்கக்கூடிய பொதுமையான ஆசாரமென்ப தொன்
றில்லை யென்க. அவ்வாறாயின் சமரஸத் தன்மையென்பது யாண்டுளது?
சர்வசாதாரண சமரஸ மதம் ஒன்றுளதாதல் எவ்வாறு சாத்தியம்? ஆயினும்
அத்தகைய தொன்றிருக்கவே இருக்கின்றது. அஃதென்னவென்று இனி
யாராய்வாம்.

சர்வ சகோதரத் தன்மையைப்பற்றி யாம் அனைவரும் கேள்வியுறுகின்றோம்
இதனை விசேஷமாய்ப் பிரசங்கிப்பான் சங்கங்கள் எத்துணை ஆய்தமா யுள்ளன
வென்பதும் யாமறிவேம். இதைப்பற்றிப் பேசுகையில் எனக்கு ஒரு பழைய



கதை ஞாபகத்துக்கு வருகின்றது. இந்தியாவில் சுராபானமானது பஞ்சமா
பாதகங்களில் ஒன்றெனக் கருதப்படுகின்றது. ஓரூரிலே இரண்டு சகோதரர்
இரகசியமாய்ச் சிறிது சாராயமருந்த வெண்ணங்கொண்டார்கள். அவர்கள்
சாராயமருந்த உத்தேசித்திருந்த விடத்திற்குமிகவுஞ்சமீபமான ஓர் அறையில்
மகா ஆசாரபரரான அவர்களது அம்மான் படுத்துத் தூங்கிக்கொண்டிருந்தார்.
ஆகவே அவர்கள் குடிக்க ஆரம்பிப்பதற்கு முன் அவர்களில ஒருவன் மற்ற
வனை நோக்கி 'அடே சத்தஞ் செய்யாதே! மாமா விழித்துக்கொண்டு விடுவார்,
என்றான். அவர்கள் குடித்துக்கொண்டே ஒருவரை நோக்கி யொருவராக
இருவரும் 'இரைச்சல் போடாதே; மாமா எழுந்து விடுவார்' என்று கத்த வா
ரம்பித்தனர். இந்தக் கத்துதல் அதிகரிக்கவே மாமா விழித்தெழுந்து விட்
டார். அவர் உள்ளே பிரவேசித்து நடந்ததை யெல்லாங் கண்டறிந்து கொண்
டார். சர்வத்திர சகோதர பாவமென்பதும் அவ்வாறே யிருக்கின்றது. "யாம்
அனைவரும் சமானர்; ஆகையால் யாம் ஒரு கக்ஷியாய்ச்சேர்வோம்" என்று
நாம் எல்லோரும் மேற் சொல்லிய குடியர்கள்போலக் கத்துகின்றோம். எப்
பொழுது யாம் ஒரு கக்ஷியாய்ச் சேர்கின்றோமோ, அப்பொழுதே யாம் ஸமத்
துவத்தை ஆக்ஷேபிக்கின்றவர்களாகின்றோம். ஆகவே சமத்துவமென்பது
இல்பொருளாய் விடுகின்றது. மகம்மதியர்கள் சர்வ சகோதரத்தன்மையைப்
பற்றிப் பேசுகின்றனர். ஆனால் உண்மையில் அவர்கள் பேச்சின் பிரயோஜன
மென்னை? மகம்மதியர்களைத் தவிர்த்து மறறெவர்களையும் அவர்கள் தம்
சகோதரர் குழாத்தில் சேர்க்கமாட்டார்கள். அத்தகையாரது கழுத்தை வெ
ட்டி விடுவார்கள் கிறிஸ்தவர்களும் சர்வ சகோதரத்தன்மையைப்பற்றி பேசு
கின்றார்கள். ஆனால் யாவனொருவன் கிறிஸ்தவனல்லனோ அவன் * அந்த
ஸ்தானஞ்சென்று நித்தியகாலமும் வேதனை யனுபவிக்கவேண்டும்.

சர்வ சகோதரத்துவம், சர்வ சமத்துவம், அர்த்தம், மனோதர்மம்முதலிய
வற்றில் சமத்துவம் - என்னு மிவைகளைப்பற்றி யாம் ஆராயுங்கால், இவ்வாறு
கத்தான் யாம் இவ்வுலகில் செல்லவேண்டியிருக்கின்றது. ஆகையால் இவ்வுலக
சர்வ சமத்துவ விஷயத்தைப்பற்றி மேற்சொல்லியவாறு யாவரேனும் கூறுவா
ராயின், நீங்கள் சிறிது ஜாக்கிரதையாய் இருத்தல் வேண்டும். ஏனெனில் இத்
தகைய வேஷம் போடுகிறவர்கள் பெரும்பாலும் சுயகாரிய துரந்தரர்களாய்
இருப்பர். "கார்காலத்தில் சில சமயங்களில் விண் முகில் வருகின்றது; அது
பலமுறையும் வாளா உருமுகின்றதேயன்றி, மழை பெய்கிறதில்லை. ஆயின்மாரி
காலத்தில் மேகங்கள் கர்ஜனை செய்வதில்லை. ஆனால் உலகத்தை ஜலப்பிரள
யத்தில் அமிழ்த்திவிடுகின்றன" அவ்வாறு உண்மையாகவே பாடுபடுகின்றவர்
களும், மனிதர்களனைவரும் ஏக குடும்பத்துச் சகோதரர்களென இருதயத்திற்

* நித்திய நரகம். இது பயங்கரஸ்தான மாகையால், இதனைப் பெயரிட்டுக் கூறுது
நிர்த்தேச மாத்திரத்தாற் கூறுவது கிறிஸ்துவர் வழக்கு.

கருதுகின்றவர்களும் மிகுதியாய்ப் பேசுவதில்லை; சர்வ சகோதரத்துவத்தின் பொருட்டு சிறு சங்கங்கள் சேர்ப்பதில்லை. ஆயின் அவர்களது செய்கைகளும் அவர்களது முழு சரீரமும், அவர்களது மாதிரியும், அவர்களது அசைவும், அவர்களது நடையும் அன்னமும் பானமும், அவர்களது முழுவாழ்க்கையும் அவர்கள் உண்மையில் சர்வ மானுட சகோதரத்துவ உணர்ச்சியுள்ளவர்களென்றும் அவர்கள் அனைவரிடத்திலும் அன்பும் அநுதாபமும் உள்ளவர்களென்றும் பறைசாற்றுகின்றன. அவர்கள் வாசா கைங்கரியம் செய்யார்கள். மற்று செய்து நடத்திக் காட்டுவார்கள். நமக்கு உண்மையான உழைப்பின் ஆதிக்கமும் பேச்சின் குறைவும் வேண்டியிருக்கின்றன.

இதுகாறும் செய்த ஆராய்ச்சியினால், மத விஷயத்தில் யாதொரு பொதுமையான அம்சமுங் காண்பதரிதென வேற்பட்டது; ஆயினும் அத்தகைய அம்சங்கள் இருக்கின்றனவென யாம் அறிவோம். யாம் அனைவரும் மனிதர் தாமே? ஆனால் எல்லோரும் சமமாயிருக்கின்றோமா? இல்லவே இல்லை யாம் சமமாயிருக்கின்றோமென யாவன் கூறத்துணிவன்? அங்ஙனங் கூறுவோன் உன்மத்தனன்றே. அன்றேல் ஒருவனே யாமனைவரும் சமானரெனப் பகர்வான். எமது புத்தியிலும், எமது சத்திகளிலும், எமது சரீரங்களிலும் யாம் அனைவரும் சமானமா யிருக்கின்றோமா? ஒருவன் மற்றவனைவிட பலசாலியாயிருக்கிறான்; ஒருமனிதன் வேறொருவனிலும் அதிக புத்தி கூர்மையுள்ளவனாயிருக்கின்றான். யாமனைவரும் சமானராயிருந்துழி இவ் அசமத்துவம் ஏனிருக்கவேண்டும்? அதனை யார் உண்டுபண்ணியது? நாமா? எமக்கு சத்தியும் புத்தியும் தேகவலிமையும் நிறைந்தேனும் குறைந்தேனும் இருக்கின்றமையின் அவை எம்முள் ஒருவருக்கும் மற்றவருக்கும் வேற்றுமையை அவசியம் உண்டாக்கவே செய்யும். ஆயினும் சமத்துவம் என்னுங் கொள்கை சரியானதென்று எம்மனதிற் படுவதாக எம்முள் ஒவ்வொருவரும் அறிகின்றோம். இதனை வேறோர் உதாரண முகத்தான் ஆராய்வாம். ஈண்டுள்ள யாமனைவரும் மனிதர்களே யாயினும், சிலர் புருஷராயும் சிலர் ஸ்திரீகளாயும் இருக்கின்றோம்; இவ்வயினிற்பவர் கருமை நிறத்தவர். அவ்வயினுள்ளவர் வெண்மை நிறத்தவர். ஆனால் எல்லோரும் மனிதர்களே யாவர்; ஒரே மானுடவர்க்கத்திற் சேர்ந்தவர்களே யாவர். எமது முகங்கள் பலவகைப்பட்டிருக்கின்றன. இங்குள்ளவர்களுள் எவ்விருவரது முகமும் ஒரே மாதிரியாயில்லை. ஆயினும் நாமெல்லோரும் மனிதர்களே யாவேம். இவ் ஏகமான மானுடத்தன்மையென்பது யாண்டுளது? என் கட்புலனுக்கு அது விஷயமாகவில்லையே அதனை யான் இன்னதென்று பிரித்துப்பார்க்க முயலுங்கால் அஃதிருக்குமிடம் எனக்குப் புலப்படவில்லையே. ஒரு புருஷனையேனும் ஸ்திரீயையேனும் கருமையாகவேனும் அழகாகவேனும் காண்கின்றேனேயன்றி இத்துணை முகங்களுக்குள்ளும் பொதுவாயிருப்பதான அம்மானுடத் தன்மையெனும் சமஷ்டி குணவிசேஷத்தைப் பரிசிக்கவும் உணரவும் அநுபவிக்கவும்



அதனைப்பற்றி நினைக்கவும் நான் முயலுங்கால் எனக்கஃது அகப்படுகின்றதில்லையே. அஃது இந்திரியங்களுக் கப்பாலுள்ளதும் கருத்துக்கப்பாலுள்ளதும் மனத்தினுக்கப்பா லுள்ளதுமாம். ஆயினும் அஃது இங்கேயிருக்கின்றதென்றெனக்கு உறுதியாய்த்தெரியும். எனக்கு இங்குள்ள எதைப்பற்றியேனும் அதிகமான நிச்சயமுண்டெனில் அது நம்மெல்லோருக்கும் பொதுவாயுள்ள இம்மானுடத் தன்மையேயாம். யான் அதனைப் பிரத்தியக்ஷமாயும் தெளிவாயுங் காணமுடியாது. இம்மானுடத் தன்மையென்பது கடவுளின் ஓர் ஆவிர்ப்பாவமேயாம். "அவனிடத்தே எமது வாழ்க்கையும் அசைவும் இருப்புமாம்" அவனிடத்தும் அவன் மூலமாயுமன்றே யாம் உள்ளவராகின்றோம். இந்தப் பொதுமையாக்கப்பட்ட தத்துவத்தின் வாயிலானன்றே யான் நுங்களைப் புருடனாகவேனும் ஸ்திரீயாகவேனும் காண்பது; ஆயினும் யான் அதைப்பிடித்து இன்னதென்று விளக்கப்புகுங்கால், அஃதியாண்டு மிலதாகின்றது. ஏனெனில் அஃது இந்திரியங்களுக் கப்பாலுள்ளது. ஆயினும் அதன்கண்ணும் அதன் வாயிலாயுமன்றே பொருள்கள் அனைத்தும் இருப்பனவாகின்றனவென்றுயாம் அறிவோம் இவ்வாறன்றே ஸர்வஜன ஐக்யமென்பதும், அநுதாபமென்பதும், உலகின்கணுள்ள பலவகைப்பட்ட மதங்களனைத்தினூடும் கடவுள் வடிவமாய் ஓடி நின்றிலங்கும் இச்சர்வார்ஹ மதமென்பதும். அது முக்காலத்தும் உண்மையாயுள்ளதென்க. "மயி ஸர்வம் இதம் ப்ரோதம் ஸூத்ரே மணிகணா இவ" "இம்மணிகளினூடே செல்லுஞ் சூத்திரம் யான்" ஒவ்வொரு மணியும் ஒருமதம் அல்லது அதன் உட்பிரிவாம். மணிகள் பலவகைப்பட்டனபோல மதங்களும் பல்வகையனவாம். பகவான் அவையனைத்தினூடும் செல்லும் நூலாயிருக்கின்றார். மனிதருள் பெரும்பான்மையோர் அதனை யறியாதிருந்தும் அவர்கள் அனைவரும் பகவானிடத்தும் பகவான்மூலமாயும் தொழிற்புரிபவர்களா யிருக்கின்றனர். அவர்கள் ஒரு நிமிஷநேரமேனும் அவனுக்குப் புறம்பேயிருத்தல் முடியாது; ஏனெனில் எல்லாவிதத்தொழிலும் அவன் மூலமாயும் அவனிடத்துமே சாத்தியமென்க. அவனையாம் இனையனென்றும் வரையறுத்து கூறுதல் முடியாது. அவன் கடவுளேயாம்.

வேற்றுமையின்கண் ஒற்றுமையேபிரபஞ்சவமைப்பின் ஒழுங்காய்ப் போந்துளது, யாமனைவரும்மனிதர்களேயாயினும் ஒருவருக்கொருவர் வேறுபட்டிருக்கின்றோம். மானுடவர்க்கத்தில் சேர்ந்தவர்களெனக் கருதுங்கால் நீவிரும் யானும் ஒருபாற்படுகின்றோம். ம-ா-ா-ஸ்ரீ இன்னார் என விவகரிக்கையில் நும்மிடமிருந்தும் யான் வேறாகின்றேன். பாலைநோக்குங்கால் ஆண்பெண் என்ற வேற்றுமை நிகழ்கின்றது. இருபாலாருக்கும் பொதுமையான மானுட சாதியில் இருவருஞ் சமமாகின்றார்கள். மனிதர்களாகிய நீவிர் ஜந்துவினின்றும் வேறாயினும் பிராணிசோடிகளென்ற விவகாரத்தில் ஆண் பெண் ஜந்து செடிமுதலிய யாவும் ஒன்றுபடுகின்றன. ஸத்தாமாத்திரமாய்க் கருதுங்கால் அகிலபிரபஞ்சமும் நீவிரும் ஒன்றாகின்றீர்கள். இப்பிரபஞ்சத்தில் எஞ்சி

நிற்கும் தனிப் பரம்பொருளாகிய கடவுளே அந்த சமஷ்டி ஸத்தையாம். அப்பரம்பொருளி னிடத்தில் யாமெல்லாம் ஒன்றுபடுகின்றோம். ஆனால் சிருட்டியில் இவ்வெல்லா வேற்றுமைகளும் அவசியமாய் ஏற்பட்டு என்றும் உள்ளனவாகின்றன. எமது செயல்களிலும் யாம்வெளிப்படுத்தும் சத்திவிசேடங்களிலும் இத்தகைய வேற்றுமைகள் எக்காலும் இருக்கவேசெய்யும் ஆகவே ஸர்வார்ஹமதமென்பதனால் எல்லாமாந்தர்களும் ஒரேவிதமானமதக்கொள்கைகளை நம்பவேண்டுமெனில் அதுமுடியாத காரியமாம். அஃது ஒருகாலும் ஆகாது. எல்லாமுகங்களும் ஒரே தன்மையாயிருக்குங்காலம் என்றுமில்லை.

இனி ஒருதன்மையான புராணசித்தாந்தமே அனைவரும் பொதுவாய் ஏற்றுக்கொள்வார்களெனக் கருதுவதும் அசாத்தியம். அஃதெக்காலத்தும் நடவாது. அன்றி அனைவர்க்கும் பொதுவான கர்மகாண்டமும் ஏற்படுத்தமுடியாது. அத்தகையநிலைமை ஒருகாலும் உள்ளதாகாது. அவ்வாறு எப்பொழுதேனும் நிகழுமாயின் உலகமே அழிந்துபோய்விடும். ஏனெனில் வேற்றுமையன்றோ உயிர்வாழ்க்கையின் பிரதமதத்துவம். யாம் எல்லாம் வியஷ்டிவியக்திகளாயிருப்பது எதனால்? வேற்றுமையானன்றோ? ஏறக்குறைவின்றி தராசில் நிறுத்ததுபோல் நேர்நிறையாயிருத்தல் எமது அழிவினுக்கே ஏதுவாய் முடியும். இதற்கு நிதர்சனமாக இவ்வறையிலுள்ள உஷ்ணத்தை யுற்றுநோக்குவாம். இஃதெப்பொழுதும் எங்கும் சமமாய்ப்பரவி ஒரே நிலைமையிலிருக்க முயல்கின்றது. அஃது அத்தகைய நிலைமையை யடையுமேல் அவ்வுஷ்ணம் நமது விவகாரங்களுக்கு இல்லாததற்குச் சமானமேயாம். இப்பிரபஞ்சத்திற் பொருட்களின் சலனம் எதனால் உண்டாகின்றது? நிறையில்லாமையாலன்றி வேறென்ன? அனைத்தும் ஒரேதன்மையா யிருத்தலாகிய ஐக்கியமெனும் நிலைமை இவ்வுலகம் அழியுங்காலையிற்றான் உண்டாகும், இல்லாவிடின் அஃதசாத்தியமே அதுமாத்திரமேயன்றி அவ்வித நிலைமையுளதாவதும் அபாயகரமாம். யாமனைவரும் ஒரேவிதமாகவே சிந்திக்கவேண்டுமென யாம் ஒருகாலத்தும் விரும்பலாகாது. அங்ஙனம் விரும்புமிடத்து ஒவ்வொருவர் சிந்திப்பதற்கும் யாதொரு சிந்தனையும் இல்லாதுபோம். பொருட்காட்சி சாலையில் வைத்திருக்கும் எகிப்திய மம்மிகளைப்போல் யாம் அனைவரும் ஒரே மாதிரியாய்க் கருதுவதற்கு யாதொருகருத்துமின்றி ஒருவரையொருவர் பார்த்துக்கொண் டிருக்கவேண்டிவரும். ஆகையால் இந்தவேற்றுமையே, இந்த வியஷ்டிபாவமே, எமக்குள்ள இந்நிறையில்லாமையே நமது விருத்திக்கும் கருத்துக்கும் முக்கியகாரணமாய் நிற்பதாம். இவ்வாறுதான் எக்காலமும் இருத்தல்வேண்டும்.

ஆகவே சர்வார்ஹ மதலக்ஷண பூர்த்தி யென்பது யாது? என்று வினவுங்கால் அஃதொரு பொதுமையான தத்துவசித்தாந்தமுமன்று, அல்லது பொதுமையானவொரு புராண சித்தாந்தமுமன்று, அன்றி யனைவரும் ஒப்புக்கொள்ளக்கூடிய பொதுமையானதொரு கர்மகாண்டமுமன்று. மற்றென்னையெனின் சக்கரத்திற்குட் சக்கிரமமைந்துள்ள மகா சூக்குமமும் விசித்திரமும் ஆச்சரியகரமுமான மகாயந்திரமெனத்தகும் இப்பிரபஞ்சம் இவ்வண்ணமே தான் சுழன்று கொண்டிருத்தல் வேண்டும். ஆயின் நாம் என்ன செய்யக்கூடுமெனில் யாம் அவ்வியந்திரத்தின் சக்கரங்களுக்கு ஒருவாறு எண்ணெய்பூசி அதை மென்மையாய் ஓடச்செய்து அதன் வேகத்தையும் வன்மையையுஞ்சிறிது தணிக்கலாம். அஃதெவ்வாறெனின், வேற்றுமை யென்பது இயல்பிலேயே இன்றியமையாததென்பதை வுணர்வதாலென்க. ஒரே உண்மையைப் பலவகையானும் விளக்கலாம் என்பதையும் அவ்வகைகளில் ஒவ்வொன்றும் அதுசெல்லுங்காறும் உண்மையே யென்பதையும் யாம் அறிதல் வேண்டும். இதனை சூரியனை யுதாரணமாகக்கொண்டு விளக்குவாம். பூமியின் மீது நிற்குமொருவன் சூரியன் காலையில் உதயமாகும் பொழுது பார்க்கிறதாக வைத்துக்கொள்வோம். அவன் முதலிற் பெரியதோர் உண்டை வடிவத்தைக் காண்கின்றான். அவன் சூரியனைநோக்கிப் பிரயாணஞ்செய்ய விருப்பங்கொண்டு, தன்பிரயாண மார்க்கத்தின் ஒவ்வொரு கட்டத்திலும் புகைப்படம் எடுப்பான் வேண்டிய யந்திரத்துடன் புறப்பட்டு மேற்சென்று புகைப்பட மெடுக்கிறான். அவன் ஒவ்வொரு ஆயிர மயிலுக்கும் ஒரு புதிய புகைப்படம் எடுத்துக்கொண்டு சூரியனைப்போய் சேருகிறவரையிலும் அவ்வாறே செய்வதாக வைத்துக்கொள்வோம். ஒவ்வொரு கட்டத்திலும் எடுக்கப்பட்ட புகைப்படம்மற்றகட்டங்களில் எடுத்தவற்றினும் வேறுபாடுடையதாய்த் தோன்றும். அவன் திரும்பி வருகையில் அவன் எடுத்துக்கொண்டு வந்த பல்லாயிரம் புகைப்படங்களையும் பார்த்தால் அத்துணையாயிரம் சூரியர்களின் படங்கள் தாமோ இவை யெனத்தோன்றும் ஆனால் அவன் ஒரே சூரியனைத்தான் தன் பிரயாணத்தின் வெவ்வேறு கட்டங்களிலும் புகையிற் பிடித்தானென்றெமக்குத் தெரியும். அவ்வாறே கடவுள் விஷயமுமென்க. பெருமையாகவோ சிறுமையாகவோ, உயர்ந்த தத்துவஞானத்தின் வாயிலாகவோ, தாழ்ந்த தத்துவஞானத்தின் வாயிலாகவோ உத்தம சம்பிரதாய விதிகளின் படியோ அதம சம்பிரதாய விதிகளின் படியோ, மிகச்சிறந்த புராணசித்தாந்தத்தின் வழியாகவோ மிகப்புன்மையான கற்பனைப் பிரபந்தங்களின் வழியாகவோ, மிக்கசாத்துவிகம் பொருந்திய கர்மங்களின் மூலமாகவோ, அதிதாமசமான புற்புடாதிகளின் ஆராதனை மூலமாகவோ, பிரதிமதமும், பிரதி ஆன்மாவும், பிரதி ஜாதியும், பிரதிசமயமும், அறிந்தோ அறியாமலோ, மேனோக்கிக் கடவுள் முகமாய்ச் செல்லாநிற்கின்றன. மனிதனுக்குண்டாகும் ஒவ்வொரு சத்திய தரிசனமும் ஈசுவர தரிசனமன்றி மற்றேதுமன்று. நாம் ஒவ்வொருவருங் கையில் ஒருபாத்திரம் எடுத்துக்கொண்டு ஏரியினின்று அதில் தண்ணீர் கொண்டுவருவதாக வைத்துக்கொள்வோம். ஒருவன் கிண்ணமும் ஒருவன்குட்டமும் மற்றொருவன் அ[illegible]

விடப் பெரிய வொருகுடமும் இவ்வாறாக எடுத்துக்கொண்டு அவற்றைத் தண்ணீரால் நிறைப்பதாக வைத்துக்கொள்வோம். அப்பாத்திரங்களை யெடுத்துச் சோதிக்குங்கால், அந்தந்தப்பாத்திரத்திலுள்ள ஜலம் அதன் அளவுக்குத்தக்கவாறேயென்றேற்படும். கிண்ணத்தைக்கொண்டுவந்தவனிடம் கிண்ணத்தளவு ஜலமும், குடங்கொணர்ந்தவனிடம் குடத்தினளவு ஜலமுமே இருக்கக்காண்போம், ஆனால் ஒவ்வொரு பாத்திரத்திலும் இருப்பது தண்ணீரன்றி மற்றெதுவு மில்லையன்றோ? அவ்வாறே மதவிஷயத்திலும். நமது மதங்கள் இத்தகைய சிறுபாத்திரங்களைப்போ லிருக்கின்றன. நம்முள் ஒவ்வொருவரும் ஈசுவரானுபூதியை யடைய முயல்கின்றோம். இப்பலவகைப்பட்ட பாத்திரங்களில் நிறைந்துள்ள ஜலத்தைப்போன்றவர் ஈசுவரன். ஒவ்வொரு பாத்திரத்திலும் உண்டாகும் ஈசுவர தரிசனம் அப்பாத்திரத்தின் அளவினதேயாகும். அவ்வாறாயினும் ஈசுவரன்மாத்திரம் ஒருவரே. இக்காணப்பட்ட தரிசனங்கள் ஒவ்வொன்றிலும் உள்ளவர் அவ் ஈசுவரனே. நமக்குக் கிடைக்கக்கூடிய சமரஸத்தன்மையைப்பற்றிய அறிவு இவ்வொன்றேயாம்.

உபதேச முகத்தாற் கூறும்வரையிலும் இதுகாறுஞ் சொல்லிவந்தது சரியே; ஆனால் இச்சமயசமரஸத்தை அனுஷ்டானத்திற் சாதிப்பதற்கு மார்க்கம் ஏதேனுமுளதோ? மதத்தைப்பற்றிய பலவகைக் கொள்கைகளும் உண்மையே என்னும் இவ்வங்கீகார உணர்வு தொன்றுதொட்டு உண்டாயிருக்கின்றது. பரதகண்டத்திலும், 1 ஆர்க்ஷேந்திரபுரியிலும், 2 தேஜோத்வீபத்திலும், சீனநாட்டிலும், 3 சுபர்ணத்தீவிலும், 4 திரிவிஷ்டபத்திலும் சமீபத்தில் 5 அமரகநாட்டிலும் - இவ்வாறு பற்பலதேயங்களினும் சர்வசமயங்களையும் அன்பிலே ஒன்றுசேர்க்கத்தக்க ஒருசமய சமரஸ சம்பிரதாயத்தை ஸ்தாபிக்கப் பன்னூறு பிரயத்தனங்கள் செய்யப்பட்டன. அவைகள்காரியத்தை சாதிக்கும்படியான மார்க்கமொன்றினையும் அவலம்பிக்காமையால் அவையாவும் தவறிவிட்டன. உலகத்தின்கண்ணுள்ள சர்வமதங்களும் சரியென அநேகர் ஒப்புக்கொள்ளுகின்றார்கள். ஆனால் இம்மதங்களெல்லாம் ஒன்றுபடும்பொழுது ஒவ்வொருமதமும் தன்சிறப்பான அம்சத்துடன் விளங்கத்தக்க மார்க்கத்தை அவர்கள் கைக்கொள்கின்றனரில்லை. ஒருமனிதன் தன் மதத்தின்கண்ணுள்ள விசேஷத்தன்மையை இழக்காது மற்றமதங்களுடன் ஐக்கியப்படக்கூடிய அம்சத்தைக் காட்டத்தக்க மார்க்கமே சாத்தியமானது. ஆனால் இதுவரையில் சமரஸத்தை நிலைகாட்ட ஏற்பட்டமார்க்கங்கள் எல்லாமதக் கொள்கைகளையும் சுவீகரிக்க வேண்டுமெனச் செப்பினவேயன்றிக் காரியத்தளவில் நோக்குங்கால், தாமும் அவற்றையெல்லாம் சிலகட்டுதிட்டமான சம்பிரதாயங்களுக்கு பந்தப்படுத்தி, அக்காரணத்தினாலேயே முன்னிலும் அதிகமான உட்பிரிவுகளையும் ஒன்றற்கொன்று சண்டைச்சச்சரவு மனவருத்தங்களையும் உண்டுபண்ணின.

1 அலெக்ஸாந்திரியா 2 யூரோப் 3 ஜப்பான் 4 திபெட் 5 அமெரிகா.



இவ்விஷயமாய் யானும் ஒரு சிறியமார்க்கத்தை யோசித்துவைத்திருக்கின்றேன். அது காரியாம்சத்துட் பயன்படுமோ படாதோ அறியேன் நுங்களுக்கு அதனைக் கூறுகின்றேன் அதை நீவிர் தர்க்கித்துத் தெளியலாம். எனது மார்க்கமாவது என்னையெனின், முதன்முதல் 'இருப்பதை யழிக்கேல்' என்னும் மூதுரையை ஞாபகத்தில் வைக்கும்படியான மன்பதையை வேண்டுவேன். எதையுந்தகர்த்தெறியும் சீர்திருத்தக் காரர்கள் உலகத்துக்கு யாதொருநன்மையுஞ் செய்வதில்லை ஆகவே எதனையும் உடைக்கேல், தரைமட்டும் ஆக்கேல். ஆனால் நிர்மாணம் செய்ம்மின். நுங்களாற் கூடுமாயின் உதவிபுரிமின்; இல்லாக்கால், கைபொத்தியருகேநின்று காரியம்நடந்தேறுவதைப் பார்மின்; உங்களால் உதவிபுரியக் கூடாமையாயின் துன்பஞ்செய்யாமலிருங்கள் எம்மனிதனது அந்தரங்கமான கொள்கைகளைப் பற்றியும் அவை உள்ளன்புடன் கூடியிருக்கும் வரையிலும் வசைமொழிவழங்கேல். இரண்டாவது, மனிதன் உள்ள நிலையை உணர்ந்து அந்நிலையினின்றும் அவனையுயர எழுப்பவேண்டும். மதங்களெனும் வட்டத்திற்கு கடவுள் நடுமையமென்பதும் நம்முள் ஒவ்வொருவரும் அம்மையத்தினின்று வட்டத்தின் சுற்றுக்கோட்டிற் செல்லும் நேர்க்கோட்டின் வழியால் அக்கடவுளைநோக்கிச் செல்கின்றோமென்பதும் சரியாயின், யாமனைவரும் அம்மையத்தை யவசியம்போய்ச் சேர்வோம் என்பது வலியுறுகின்றது. மையத்தினின்று வட்டச்சுற்றுக்கோட்டுக்குப் பாயும் எல்லா நேர்க்கோடுகளும் சந்திக்கும் அம்மையத்தின் கண்ணே எமது வேற்றுமைகள் யாவும் நீங்கும், ஆனால் அவ்விடம்வந்து சேரும்வரையில் வேற்றுமையானது அவசியம்இருக்கவேசெய்யும். இம்மையத்தினின்றுசெல்லும் நேர்க்கோடுகளெல்லாம் அம்மையத்தின் கண்ணேவந்து சேர்கின்றன. நம்முள் ஒருவர் தம் இயல்பிற்கிணங்க இக்கோடுகளுள் ஒன்றன்வழியாய்ச் செல்கிறார். மற்றொருவர் மற்றொருகோட்டின் வழியாய்ச் செல்கிறார். யாம் முதற்கண் துவக்கிய கோட்டின்வழியே செல்வேமாயின் இறுதியில் மையத்துக்குவந்துசேர்வது திண்ணம். ஏனெனில் "சர்வமார்க்கங்களும் உரோமபுரியை நோக்கியன்றே செல்கின்றன" நம்முள் ஒவ்வொருவரும் நமக்குள்ள வியல்பினுக்கிணங்க அபிவிருத்தியடைந்து வருகின்றோம். ஒவ்வொருவரும் காலக்கிரமத்தில் உயர்ந்த உண்மையை அறிவோம், ஏனெனிற் சர்வமானவர்களும் இறுதியில் தமக்குத் தாமாயன்றே உபதேசகர்களாய் அமையவேண்டும், நுங்களாலாதல் என்னாலாதல் யாது முடியும்? ஒரு குழவிக்கேனும் உபதேசிக்க நுங்களாலாகுமெனக்கருதுகின்றீர்களா! ஒருகாலத்து முங்களாலாகாது. குழவி தனக்குத்தானே கற்றுக்கொள்கின்றது. அதற்கு வேண்டிய சவுகரியங்களை யமைத்தலும் இடையூறுகளை நீக்குதலும் நுங்கள் கடமையாகும். ஒரு செடிவளர்கின்றது. அதை வளரச்செய்வது நீவிரா? அதைச்சுற்றிலும் வேலியமைத்து செடியை யாதொரு ஜந்துவும் மேயாமலிருக்கப் பார்த்துக்கொள்வதே நுங்கள்கடமையாகும். அதனுடன் நுங்கள்கடமை முடிகின்றது. இனி அச்செடிதானே வளரும்.

வேண்டியது. அவ்வாறுதான்பிரதிமனிதனுடைய ஆத்மோந்நதியும். நுங்களுக்கு கற்பிக்கயாவராலும் ஆகாது நும்மை ஆத்மகாமனாகச்செய்ய எவராலும் ஆகாது நுமக்கு நீவிரே ஆசாரியனாதல் வேண்டும். நுங்கள்உந்நதி அந்தர்முகமாகவே சாதிக்கப்படுதல் வேண்டும்.

எம். குப்புசாமி ஐயர்.

---

## CORRESPONDENCE.

## கடிதம்.

---

### I.

### திருச்செந்தூர்ச் சுப்பிரமணிய வித்தியாசாலையில் மகாகனம் பொருந்திய எட்வேட் சக்கிரவர்த்தி யவர்களின் முடிசூட்டுக் கொண்டாட்டம்.

இந்த ஜனவரிமீ 1உ வியாழக்கிழமை முற்பகல் சுப்பிரமணிய ஆலயத்திலிருந்து யானையின்மீது வைத்துச் சிறப்பித்துக்கொண்டு வரப்பட்ட சக்கரவர்த்தியவர்கள் படத்தை ஷை வித்தியாசாலையின் முன்னர் ஷை கொண்டாட்டத்துக்காக மிக அலங்காரமாக அமைக்கப்பட்ட பந்தரின் முன் நிறுத்திப் பூமாலை சூட்டிச்சிறப்புச் செய்தபின் கூடவந்த உத்தியோகத்தர் பிரபுக்கள் முதலாயினோர்கள் சந்தனஞ் சர்க்கரை தாம்பூல முதலியன கொடுத்து உபசரிக்கப்பட்டார்கள். அதன்பின் ஷை வித்தியாசாலைக்கு அதிபதியாகிய ஸ்ரீமத் சி. த. சுவாமிநாத பண்டிதரவர்கள் தாம் சக்கரவர்த்தியவர்கண்மேற் பாடிய பாட்டுக்களை வாசித்துப் பொருள்சொல்லி யாவரையும் மகிழ்வித்தார்கள். அன்று பிற்பகல் சக்கரவர்த்தியவர்கள் க்ஷேமத்தைக்கருதி ஏழைகள் யாவருக்கும் அன்னதானஞ் செய்யப்பட்டது.

இரண்டாநாள் ஷை பண்டிதரவர்கள் சக்கரவர்த்தி யவர்களின் செங்கோன்மைச் சிறப்பை மிக விரித்துக்கேட்டோர் மனம் கசிந்துருகும் வண்ணம் பிரசங்கஞ் செய்தார்கள். சக்கரவர்த்தியவர்கள் முடிசூட்டுக் கொண்டாட்டத்தின் பொருட்டு உத்தியோகஸ்தரால் மிகநெருக்கிப் பொருள் வாங்கப்பட்டு வருத்தமடைந்து கொண்டிருந்தவர்களும் அப்பிரசங்கத்தைக்கேட்டு வருத்தம் நீங்கி மகிழ்ச்சியடைந்தார்கள்.

மூன்றாநாள் சுப்பிரமணிய சுவாமிக்கு அபிடேக முதலியன செய்வித்துப் பிரசாதம் ஷை வித்தியாசாலைப் பிள்ளைகளுக்குக் கொடுக்கப்பட்டது. ஷை கொண்டாட்டத்துக்காக வேண்டிய செலவு வித்தியாசாலையின் பொறுப்பாகவே நடத்தப்பட்டது.



சக்கிரவர்த்தியவர்கண்மேற் பண்டிதரவர்கள் பாடிய பாட்டுக்கள் வருமாறு:—

#### வெண்பா.

மேவு சுபகிருது விற்றிங்கட் பொன்வாரந்
தாவிறிரு வோணந் தயங்கிடுமே—காவலத்திற்
சீதர னேருந் திருவாய்ந்த ழெட்வேட்டு
நாதன் முடிசூடு நாள்.

#### கட்டளைக் கலித்துறை.

சீர்த்திக்கு விண்ணீ மநுநீத கண்ட திறன்மகிபன்
பேர்த்திக் குவலயத் திற்பிற வாவகை பேணிமுறை
யார்த்திக் குளமகி ழெட்வேட் டரசனை யாரறிஞ
ரோர்த்திக்குப் பாலகர் போலெல்லா மைக் னகாத்தனெல்வியப்பே.

பறங்கி மகிபரும் பாவித் துலுக்கரும் பண்டுசெய்த
மறங்களை மாற்றிநம் மார்க்கங்க டந்து மநுநெறிசெய்
தறங்கிளை ரெட்வேட் டரசனை யாங்க ளனுதினமுந்
திறங்கிளர் தெய்வத மேற்றுக்கொண் டோமினித் தீங்கிலையே.

எற்றோ நமரங்காள் வாழ்வு மதமு மெழினுமெல்லா
மற்றோ ரரசன் வரிலெட்வேட் டிங்கென்றும் வாழ்ந்திடவே
பற்றோர் வழுத்துந் திருச்செந்திற் பண்ணவன் பாதமல
ருற்றோர் வரந்தா வெனவிரப் பேமிங்க னுற்றிடுமே.

வாழிய வெட்வெட்டு மன்னவன் செங்கோல் வழங்கருளும்
வாழிய வைதிக சைவநன் மார்க்கம் வளம்பெருக
வாழிய கண்டிவெண் ணீறுபஞ் சாக்கர மாதவத்தோர்
வாழிய வந்தணர் வானவ ரானினம் வாரியுமே.

யாழ்ப்பாணத்துச் சுன்னாகம் வித்துவ சிரோமணி ஸ்ரீமத் அ. குமாரசுவாமிப் புலவர்கள் சுப்பிரமணிய வித்தியாசாலையைக் குறித்துப்பாடிய பாட்டுக்கள் வருமாறு:—

#### வெண்பா.

வாய்ந்த சுபகிருது வற்சரத்தி லைப்பசியேழ்
போந்தகுரு வாரம் புனர்பூசஞ்—சேந்தனெழிற்
பாதமுன்னிச் செந்தூரிற் பண்டித னாஞ்சுவாமி
நாதன்கல் லூரிகொண்ட நாள்.

#### கட்டளைக் கலித்துறை.

வாழிய வந்தணர் மன்னவ ரானின மாமுகில்கள்
வாழிய செந்தமிழ் சைவநன் மார்க்கம் வளர்க்குமன்பர்

வாழிய சீரலை வாய்முருகேசன் வழங்குமருள்
வாழிய சுப்பிர மண்ய விதாலய மாநிலத்தே.

சுந்தரதேசிகர்.

## II.

### திருக்கோவையா ருண்மை விளக்கத்துப்

### பிழைதிருத்தம்.

ஞானபோதினிப்பத்திரிகையின் ஐந்தாவது சம்புடத்துப் பதினொராம் புஸ்தகத்து 420-ம் பக்கத்தில் 23-ம் 24-ம் வரிகளில் "நாயகனென்பது மாங்கிரப்படுகின்றதன்றி" என்பதை "நாயகனென்று பெறப்படுவதோடு" எனவும், 25-ம் வரியில் "கொள்ளப்பட்டிலர்" என்பதை "கொள்ளப்பட்டார்" எனவும், 27-ம் வரியில் "கைவரா பணைமுலை" என்பவற்றைச் "சேலென கண்கள், என்னணியர்முலை" எனவும், 27-ம் 28-ம் வரிகளில் "அத்துணுக்கை வாக்கியங்களிலே இல்லையாமென்றும் அறிக" என்பதை "ஆண்டுவாம் என்றும் அறிக" எனவும், 29 ம் வரியில் பேசப்படாத விடத்து" என்பதை "பேசப்பட்டவிடத்து" எனவும், 30-ம் வரியில் "சொல்லப்படவில்லை என்று அதனால்" என்பதை "சொல்லப்படினும்" எனவும், 430-ம் பக்கத்து 1-ம் வரியில் "பரும்பொருள்" என்பதை, "பரமபொருள்" எனவும் "பேசப்பட்ட" என்பதை பேசப்பட" எனவும், 10-ம் வரியில் "மொன்றிமறியா" என்பதை "மொன்றுமறியா" எனவும். 431-ம் பக்கத்து 21-ம் வரியில் "அக" என்பதை "அகப்" எனவும், 22-ம் வரியில் "பாடிற்றில ரான்கலி" என்பதை "பாடிற்றில ராகவின்" எனவும், 432-ம் பக்கத்து 2-ம்வரியில் "நாடகத்" என்பதை "நாடக" எனவும் 29-ம் வரியில் "பிராமத்தை என்பதை "பிரமத்தை எனவும், 30-ம் வரியில் "தம்முடையா பசுபத" என்பதை "தமுடைய பாசுபத" எனவும், 32-ம் வரியில் "நாமகி" என்பதை "நாயகி", எனவும், 433 ம் பக்கத்து 21-ம் வரியில் "பூட்டினுய்" என்பதை "பூட்டினுப் எனவும் 335-ம் பக்கத்து 13-வரியில் "வெழுக்கம்" என்பதை "வொழுக்கம்" எனவும் 4-ம்வரியில் "பேலும்" என்பதை "போலும் எனவும், ஐந்தாவது சம்புடத்து 12-வது புஸ்தகத்து 455-ம் பக்கத்து 7-ம் வரியில் "பொருளே" என்பதைப் "பொருளை" எனவும் 32-ம்வரியில் "சிவத்தையும்" என்பதை "சிவமும்" எனவும், 458-ம் பக்கத்துஇறுதிவரியில் "நயகனுகிய" என்பதை "நாயகனுகிய" எனவும் திருத்தி வாசிக்க.

ஸ்ரீகாசிவாசி. செந்தினாதையர்.



# REVIEWS BOOKS.

## புத்தகக் குறிப்புக்கள்.

### கீதாமிர்த மஞ்சரி :—

[இஃது எட்டயபுரம் சமஸ்தானத்து ஆதீன கர்த்தரவர்களாகிய மகா ராஜ ராஜ பூஜித மகாராஜ ராஜ ஸ்ரீ ராஜ ஜகத்வீர ராம வேங்கடேசுர எட்டப்ப மகாராஜ ஐயனவர்கள் உத்தரவின்படி ஷை சமஸ்தானத்து இளசை வித்யா விலாசினி யந்திரசாலையில் அச்சிற் பதிப்பிக்கப்பட்டது. இதன் விலை நூற்புறத் தெங்கும் குறிக்கப்படவில்லை.]

இதனை ஆக்கியோர் நம் நண்பராகிய விருதைச் சிவஞானயோகிகளென்பார். இந்நூல் எட்டயபுரம் சமஸ்தானத்துச் சங்கீத சாகித்ய வித்துவான் சுப்பராம தீக்ஷிதரவர்களால் பரிசோதிக்கப்பட்டது. இனிமையான பாடல்களுங் கீர்த்தனங்களும் ஸ்வர அமைப்புக்களுடன் கொண்டு விளங்குகின்றது. இஃதோ ரிசைத்தமிழ் இலக்கிய நூல் என்னலாம். நல்ல நடையில் அமைந்துளது. நன்றாய் அச்சிடப்பட்டுளது. இதனை யாவரும் வாங்கிப் படிப்பார்களாக.

### ஜானகி பரிணய நாடகம் :—

[இது திருநெல்வேலி ரெயில்வே ஸ்டெஷன் ஆர்யப் பிரகாசினி அச்சியந்திரசாலையிற் பதிப்பிக்கப்பெற்றது. இதன் விலை ரூபா இரண்டு. தபாற் கூலி வேறு. பிரதி நூலாசிரியரிடத்தில் அகப்படும்.]

இது திருநெல்வேலி ஜில்லாவைச்சார்ந்த அரிகேசவ நல்லூரிலிருக்கும் வித்துவான் புனல்வேலி வ. முத்து சுப்பையரவர்கள் இயற்றியது. "இந்நூல், சில நூற்றாண்டுகளுக்கு முன்னரே வடநூல் வல்ல வித்துவ சிரோரத்தின விப்பிரகுல சுப்பிரதீபரான, ப்ரம்மஸ்ரீ, இராமபத்திர தீக்ஷிதரவர்களால், வடமொழியிற் றமது பேரறிவா லாய்ந்து தெளிந்து, நவரஸமுறு நாடகமாக நவின்றருளப் பெற்றுலகிற் பரவியிருக்கின்றது. அதன் பொருளைத் தமிழ்நாட்டார் யாவரும் எளிதிலுணர்ந் தானந்தத்தை அனுபவிக்க இடமில்லாததுபற்றி, கசடறக் கல்லாச் சிறியேனெனினும், யான் கருதரிய சிற்சுகோதயக் கடலான இராம சரித மென்பதிலுண்டாம் பேரவாவி னேவுதலைக் கொண்டு, என் சிற்றறிவுக் கெட்டியபடி, செந்தமிழின் மொழிபெயர்த் தம்முறை வழாது, சந்தமுறு நாடகமாய்ப் பற்பல தினுசு தினுசான செய்யுட்களும், கீர்த்தனை, தரு, பத - ஜாவளிகளும், கண்ணிகளும், கேட்போர் படிப்போர் மனத்தைக் கவரும்படியான, நன்னயந்தருஞ் சொன்னயம்பெறும் உசிதாலங்கார வசனசிங்காரங்களுமாய் இயற்றியிருக்கின்றேன்" என்று நூலாசிரியர் தாமே முகவுரையிற் கூறியவண்ணம் நூலும் இனிது அமைந்திருக்கின்றது

என்பது நூலினைக் கண்ணுறுவார் யாவருக்கும் நன்கு விளங்கும்." இந்நூல் சீர்காழி அருணாசலக் கவிராயர்செய்த இராம நாடகத்தையும் பெருங்கரைக் கவிக் குஞ்சரம் ஐயர்செய்த கந்தபுராணக் கீர்த்தனையையும் ஒத்து விளங்குகின்றது; பல வித்வான்களாலும் புகழ்ந்து பாராட்டப்படுகின்றது. வடமொழிப்போக்கை விடாமற்றழுவிச் செல்லுகின்றது. நாடக வியலுடையாருடைய கருத்தின்படி இது கூத்துநூலின் பாற்படும். கவித்தலம் மூப்பனார் வகுத்த ஜானகீ பரிணய வசனத்தைப் படித்தவர் யாவரும் அதனை நாடக ரூபமாகவே காண விரும்புவர் என்பது திண்ணம். நூலின் சொற்கோப்பும் அமைப்புமுறையும் பேரானந்தம் விளைக்கத்தக்கன. இது நல்லகடிதத்தில் நன்கு பதிப்பிக்கப்பட்டுளது. இந்நூலினை யாவரும் வாங்கி வாசித்து நூலாசிரியரை ஊக்குவாரென்று நம்புகின்றோம்.

## பொன் மரத்து நாடகம் :—

[இது சென்னைப் புரசைப்பாக்கம் ரூபி அச்சுக்கூடத்திற் பதிப்பிக்கப் பெற்றது. இதன் விலை அணா எட்டு; தபாற்கூலி வேறு. சென்னை வேப்பேரி போண்டு, வெங்கடாசாலம் தெருவு, நெம்பர் 13. இந்து ஆயுள்வேத அவிழ்த சாலைத் தலைவர் ப. சுப்பிரமணிய முதலியாரிடத்திற் பிரதிகள் அகப்படும்.]

இது மதுரைத் திருஞான சம்பந்த மூர்த்தி சுவாமிகள் ஆதினத்து வித்வான் திருவாலக் கோயில் திருச்சிற்றம்பலத்தம்பிரான் அவர்களுடைய மாணாக்கரும் செங்கற்பட்டு நத்தம் வாத்தியார் வேங்கடாசல முதலியார் அவர்களுடைய புத்திரருமான செங்கற்பட்டு டிஸ்டிரிக்ட் கோர்ட்டு பென்ஷன் அமீனா நத்தம் - பொன்னம்பல முதலியாரால் இயற்றப்பட்டது. இதில் முற்பாதிக்கு ஷெயார் சோதரர் நத்தம். முருகேச முதலியாரும், பிற்பாதிக்குச் சென்னைச் சூளை - சாமி பிள்ளை வீதி சங்கீத வித்வான் டி. புருஷோத்தம நாயகர் அவர்களும் இராக தாளம் அமைத்தனர். மரங்களெல்லாங் குழாங் கூடித்தமக்கு நாயகனாக வீற்றிருக்கும் அரசமரமானது ஒரு பயனுமின்றிவாளா எல்லாப் பூசனைகளையு மேற்றுக் கொண்டு இருக்கின்றது என்று கருதி அதனைத் தள்ளிவிட்டுப்பொன்மரத்தைத்தமக்கரசாகத்தெரிந்துகொண்டன என்னுங் கதையை வைத்துக்கொண்டு தொண்ணூற்றாறு பக்கங்களில் ஒருநாடகம் புதுவதுபுனைந்தது மிக வற்புதமே. இது பல வித்வான்களாலும் சிறப்பித் துரைக்கப்பட்டுளது. அநேக கற்பனாலங்காரங்கள் அமைந்துளது. படிக்கப் படிக்கவினோதமாக விளங்குகின்றது. யாவரும் வாங்கி வாசிக்கத் தக்கது.

## மான விஜயம் :—

[இது சென்னை டி, ஆர், சந்திர ஐயர் பதிப்பித்தது. இதன்விலை அணா எட்டு; தபாற்கூலி வேறு. பிரதி வேண்டுநர் டி - ஆர் - சந்திர ஐயர், 82, வரதா முத்தியப்பன் தெரு, சென்னை யென்றெழுதுக.]



இதனை இயற்றினார் சென்னைக் கிறித்தவக் கல்லூரித் தலைமைத் தமிழ்ப் பண்டிதர் பிரம்மஸ்ரீ வி-கோ-சூரிய நாராயண சாஸ்திரியார் அவர்கள், பி.ஏ. இதற்குச் சுதேச மித்திரன் பத்திராதிபரான பிரம்மஸ்ரீ ஜி. சுப்பிரமணிய ஐயரவர்கள் ஆங்கிலத்தில் விரிந்த முகவுரை யொன்று வரைந்திருக்கின்றனர்; சிற்க, நூலாசிரியர் தாமும் தமிழில் ஒன்று வரைந்திருக்கின்றனர். இப்புத்தகம் அங்கம் என்னும் ஒருவகைத் தமிழ் நாடகம். அதனிலக்கணம்

" அவலச் சுவைத்தா யங்கமொன் றுடைத்தாய்
கவலைகொண் மகளிர் கசிந்துள மழுங்க
வண்மினர் வாய்விடுத் தரற்றுமாண் பிற்றாய்
வாதம் விளைத்து வாய்ப்போர் காட்டி
மக்கள்பாத் திரமா வயங்குறு வதுவே
யங்க மென்ன வறிதல் வேண்டும்"

என்னும் நாடகவியற் சூத்திரத்தான் னனிவிளங்கி நிற்கின்றது. இது முற்றுஞ் செய்யுளா முடிந்துள தேனும் பாத்திரங்களின் ஏற்றத்தாழ்வு கருதிச் சொல்விகற்பங்களும் நடைவேறுபாடுகளும் அமைத்துளபான்மைமிகவும் பாராட்டற்பாற்று. இதனுள் ஆன்ம லக்ஷணமும், போர் நீதியும், மெய்ம்மை, கலை நலம், மனநிறைவு இவற்றின் மாட்சியும், கனவினியல்பும், காரணகாரியப்பெற்றியும், கடவுளார் செயற்கருத்தும், குரவரிடத்தொழுகு மாறும், வாழ்க்கைப் பயனும், திரவியத்தி னின்றியமையாமையும், களியாட்டின் தீமையும், தற்கொலைப் பாவமும், மானத்தின் மாண்பும், ஆசிரியர்க்கு மாணாக்கர்பா லுள்ள அன்பும், உணர்வில் வழிப் பாவமின்மையும் அருமையாகத்தெரிக்கப்பட்டன. இது 65 பக்கங்கொண்டு ஆறு களங்களாக முடிந்துளது." இது நாமகள் சிலம்பின் எட்டாவது பரல். ஈற்றிற் செய்யுண் முதற்குறிப்பகராதி ஒன்று கொண்டுள்ளது. இவ்வருமையான நூலைத் தமிழ்மொழியில் அவாக்கொண்டார் யாவரும் வாங்கி வாசித்து அகமகிழ்வரென்று நம்புகின்றோம்.

## உஷா பரிணயம் :

[இது டி. ஆர். சந்திர ஐயரவர்கள் பதிப்பித்தது. இதன் விலை அணா ஆறு. தபாற்கூலி வேறு. பிரதிகள் வேண்டியவர்கள் மேற் கூறிய விலாசத்திற்கு எழுதிப் பெற்றுக்கொள்க.]

இந்நூல் நாமகள் சிலம்பின் கண் ஒன்பதாம் பரலாம். இதனாசிரியர் சநுக்கை-இராமசுவாமி ஐயங்காரவர்கள் பி.ஏ., இது நாட்டியாசகம் என்னும் ஒருவகை நாடகத்தின் பாற்படும்.

" இன்னிசைப் பாட்டு மன்னிய தாகி
யழகினு முடையினு மன்புறு தலைவியுந்
தீரோ தாத்தச் செவ்விய தலைவனும்
பீட மர்த்தநா யகனுப நாயக

ளிவர்களு முடைத்தா யின்பமு நகையுங்
கொண்ட சுவைத்தாய்க் "கோலமீ ரைந்துங்
காட்டி யியல்வது நாட்டிய ராசகம்."

இவ்விலக்கண மனைத்தும் இந்நூலின் கண் இனிது அமைந்து கிடக்கின்றன. இது நாலங்கமுள்ளது; கம்பீரநடை வாய்ந்துள்ளது. ஆங்காங்கு இனிய தமிழ்ச் செய்யுட்களும் காணப்படுகின்றன. இக்கதையைச் சைவ வைஷ்ணவச் சார்பின்றிப்பொது நோக்காய் எடுத்து முடித்திருப்பது மிகவும் பாராட்டற்பாலதே. ஆடவர் பெண்டிர் ஆகிய இரு திறத்தாரும் ஒருங்கே மன மகிழ்ச்சி குன்றுதவாறு படிக்கத்தக்கது. உமையின் திருவுருவப்படமொன்று முன்னே அமைக்கப்பெற்றுளது. நல்ல கடிதத்தில் நன்கு பதிப்பிக்கப்பெற்றுளது. இத்தகைய நூல்களை நம் தமிழுலகம் இனிது போற்றுமென்பது திண்ணம்.

**சாகுந்தள நாடகம் :**

[சென்னைச் சுதேசமித்திரன் அச்சுக்கூடத்திற் பதிப்பிக்கப்பட்டது. இதன் விலை அணா எட்டு தபாற்கூலி வேறு.]

மகாகவி காளிதாஸரா லியற்றப்பட்டுப் பிரசித்திபெற்ற இந்த ஸம்ஸ்கிருத நாடகமானது, பூர்வம் கடலூர் காலேஜில் ஸம்ஸ்கிருத பண்டிதராயும், தற்காலத்தில் வெஸ்லியன்மிஷன் பாடசாலையில் உதவிப்போதகராயும், ஸேதுமாஹாத்மியம் என்னும் அருமையான நூலை எளிய தமிழ் நடையில் மொழிபெயர்த்தவராயுமுள்ள என்-ஸ்வாமிநாத சாஸ்திரிகளால் யாவரும் படித்தறியக்கூடிய எளிய தமிழ் நடையில் ஸம்ஸ்கிருதத்திலுள்ளபடி மொழி பெயர்க்கப்பட்டது. நாடக லக்ஷணச் சுருக்கமும் காளிதாசர் சரித்திரச் சுருக்கமும் மகா பாரதத்திலுள்ள சாகுந்தளோபாக்கியானச் சுருக்கமும் முன்னுறுப்புக்களாக விளங்குகின்றன. இதனை மொழிபெயர்க்குமிடத்துச் சம்ஸ்கிருத வ்யாக்கியானத்தையும் ஒட்டி வேண்டிய இடத்தில் விரித்தும், ஆங்காங்குக் குறிப்புரைகள் கொடுத்தும், செல்லுகின்றனர். யாவரும் இடர்ப்படாமல் வாசித்து அறிந்துகொள்ளத் தகுந்தபடி இந்நூல் அமைந்திருக்கின்றது. ஏறக்குறைய இருநூறு பக்கங்கொண்டதாயினும் இந்நூல் குறைந்த விலைக்கு விற்கப்படுவது மிகவும் வியக்கத் தக்கதே. இவ்விஷயம் ஒன்றே மற்றையவற்றினும் மிக விரைவாகத் தமிழ்மக்களை வாங்கி வாசிக்கும்படி தூண்டுமென்று எண்ணுகின்றோம்.

**ஒதெல்லோ என்ற வெநிஸ் மோரியன் :—**

[சென்னைத் திருவல்லிக்கேணி ஸ்ரீநிவாச வரதாசாரியர் கம்பெனியாராற் பதிப்பிக்கப்பட்டது. இதன் விலை ரூபா ஒன்று அணா நான்கு. கலிகோ கட்டடம் உளதாயின் ரூபா ஒன்று அணா பத்து. பிரதி வேண்டியவர்கள் பதிப்பித்தவரிடத்தும், எஸ்பிளனேடிலுள்ள ஜீ. ஏ. நடேசன் கம்பெனியாரிடத்தும் பெற்றுக்கொள்ளலாம்.]



இந்நாடகம், நூலாசிரியர் சரித்திரமும் விருத்தி யுரை குறிப்புரைகளுமுடன் ஒட்டித் தமிழ் வசன நடையில் அ. மாதவையரவர்கள் பி.ஏ., மொழிபெயர்த்துக் கனம்பொருந்திய மில்லர் துரையவர்களுக்கு உரிமையாக்கப்பட்டுளது. முகவுரை, வில்லியம் ஷேக்ஸ்பியர் சரித்திரம், ஷேயார் பிரபந்தங்களின் அட்டவணை, பொதுப்பாயிரம், ஒதெல்லோ நாடக வரலாறு முதலிய முன்னுறுப்புக்கள் அமைந்துளவிந்நாடகம் ஆங்கிலத்தில்மகாகவியாகியஷேக்ஸ்பியரின் கருத்துக்களை உள்ளவாறே தமிழ் மக்களும் அறிந்து பயன்படவேண்டுமென்ற கருத்துப் பற்றியே இயன்றுளது. "இருவரேனும் முற்றும் ஒவ்வாராய் இவ்வண்ணம் வேறுபட்ட மனிதரிற் பலரையே பாத்திரங்களாக்கொண்டு அவரவர் நடை உடை பாவனைகளையும் உள்ளக் கருத்துக்களையும் சிறிதும் பிறழாது, அணுவும் முரணாது, அவரவர் வாயிலாகவே தெரிவித்து; ஓர் கணத்தைப் பல்லாண்டு போலவும், பல்லாண்டுகளை ஓர் கணம் போலவும், தம்மாயவித்தையாற் காட்டிக், கதை நிகழ்ச்சியைக் கரதலாமலகம்போல விளங்கத்தீட்டும் நாடகப் புலவர் திறமைக்கு, ஏனைய கவிஞரின் தன்மை இணைசொல அணுகவும் தரமன்று. விரியுஞ் சிந்தனையில் வினைசூழ்ந்து புயம் வீங்கி இறுமாந்திருக்கும் மேதினி யாளனையும், எரியும் கும்பியில் இரையின்றிமனமேங்கி ஏமாந்திருக்கும் ஏதுமில் ஏழையும்; தன் கணவனை யன்றி வளையாமுடி மன்னரையும் துரும்பென இகழ்ந்தொழுகும் கற்பரசியையும், விலங்குகள் போன்ற வீணரைக் கரும்பெனப் புகழ்ந்து அவர்வேண்டிய போது இன்பம் விரும்பித் தன்மானத்தை விற்று வயிறு வளர்க்கும் வேசியையும்; முதனூற்றுண்டானையும், கடைநூற்றுண்டானையும்; யூதனையும், கிறிஸ்தவனையும்; கிழவனையும், சிறுவனையும்; மதிமந்தனையும் அதி ஞானியையும்; அங்க ரூபனையும், அங்கஹீனனையும்; ஆஸ்திகனையும், நாஸ்திகனையும்; பித்தனையும், சித்தனையும், அனைவரையும் ஒருங்குதானே ஆக்கி, ஒரே கணத்தில் நாற்புறமும் நவரசங்கொழிப்ப நடித்துக் காட்டும் சூத்ரமாகிய மனோ சக்தியால் அமையும் நாடக இலக்கியத்தின் பெருமை, நம்மால் நவிலற்பாற்றோ! இது நிற்க, ஐவகை இலக்கணங்களையும் ஆராய்ந்தறிந்த ஆன்றோரால்அமைவுற்றதமிழாலயம், மனோரம்மியமான கோவை, இலம்பகம், மாலை, மஞ்சரி வஞ்சி, காஞ்சியாதிய அணிகள் பலவால் அழகு பெற நிற்பத் தன்னைச் சார்ந்து கண்டு களிக்குமாறு, பாமரர் பண்டிதர் பாவலர் நாவலர் யாவரும் ஈண்டச் செய்வதோர் நாதமிட்டொலிக்கும் அந்நாடக மணிகள் இக்காலத்திலே இசை செயப் பெறாமை, தமிழ்த் தனிக்கோர் பெருங்குறையே யாம்." இவ்வாறு மாதவையரவர்கள் தமது முகவுரையிற் கூறிய யாவும் அறிவுடையோர் யாவர்க்கும் உடன்பாடாமென்பது திண்ணம். மேற்கூறிய குறையை நீக்க முயன்று வருங் கனவான்களுள் நமது மாதவைய ரவர்களும் ஒருவர் என்பது யாவருமுணர்வர். இனிய தெளிவான உயர் நடையில் எழுதப்பட்ட இந்நாடகத்தின் மீது ஒரு குறையுமேற்றுதலடாது. நூலின் சிறப்பனைத்தும் ஆதிமுதலந்தம் வரைக்கும் படித்

தார்க்கே இனிதுவிளங்கும். மொழிபெயர்ப்பு வகையில் ஒருவித இடர்ப்பாடுமின்றி ஆங்கில மகாகவியின் உள்ளக் கிடக்கைகள் அனைத்தையும் ஒழுங்குபெற இனிமையான தமிழ்ச் சொற்களில் அமைத்துள பான்மை யாவரும் பாராட்டற்பாலதே. நூலின் இடையிடையே சிற்சில பகுதிகள் தமிழ்ச்செய்யுள் உருவத்திலும் அமைக்கப்பட்டுள. தமிழ் மக்களுள் ஆண்பெண் என்ற வேறுபாடின்றி யாவரும் ஒத்த மகிழ்ச்சியுடன் படிக்கத் தக்கது. ஆங்காங்குக் காட்டியிருக்கும் அடிக்குறிப்புக்களின் சிறப்பு நூலினைப்படித்தார்க்கே நன்கு புலனாம். அவையனைத்தும் மிகவும் உசிதமான இடங்களில் நயம்பட எழுதப்பட்டுள. முதனூலாசிரியராகிய வில்லியம் ஷேக்ஸ்பியரின் திருவுருவப்படமொன்று நான்முகத்து அமைக்கப்பட்டுளது. ஐந்து அங்கம் உள்ளது. ஏறக்குறைய இருநூற்று நாற்பது பக்கங் கொண்டது. இந்நாடகத்தால் மக்கள் அறிந்து கொள்ளக்கூடிய நீதியாவது உலகவாழ்க்கைப் பயனை அடைதற்குக் கடமையின்கட் சற்றும் இடையறாத நல்லொழுக்கமும் ஆழ்ந்த ஆலோசனையின் விளைவெனப்படும் நிதான புத்தியும் மனவுறுதியும் அடக்கமுமே இன்றியமையாத கருவிகளாம் என்பதாம். வேண்டுமென்றின்றி அகஸ்மாத்தாய் ஓரணுவளவே நெறிதவறிய ஒழுக்கமும் முழுநாசத்தை விளைக்கக்கூடும் என்ற உண்மையும் இந்நாடகத்தாற் புலனாகின்றது. தமிழுலகுக்கு ஒதெல்லோ நாடகத்தை மொழி பெயர்த்துத் தந்தும் இன்னும் பல நாடகங்களை மொழிபெயர்த்துத் தருவதாக வாக்களித்தும் இருக்கின்ற நம் நண்பர் மாதவையரவர்கள் மாட்டு அத்தமிழுலகம்மிக்க நன்றிபாராட்டவேண்டுமென்று எதிர்பார்க்கின்றோம்.

## இரண்டு திக்கற்ற குழந்தைகள் :—

[இது சென்னை லாரன்ஸ் அசைலம் அச்சியந்திர சாலையில் எடியுகேஷனல் டிரேடிங் கம்பெனியாராற் பதிப்பிக்கப்பட்டது. இதன்விலை ரூ. ஒன்று அணா நான்கு. தபாற்கூலி வேறு. பிரதிவேண்டியவர்கள் பதிப்பித்தோரிடம் பெற்றுகொள்ளலாம்.]

இந்த விநோதமான கதையை இயற்றினவர் கதை சொல்வதிற் பெயர்போன பண்டிதர் ச-ம-நடேச சாஸ்திரியாரவர்கள் பி. ஏ., இவருடைய சாமர்த்தியத்தைப் பற்றிச் சாமானிய ஜனங்கள் யாவரும் அறிந்திருத்தலின் யாமதனைக் குறித்துப் புகழ்ந்து பேசவேண்டியதில்லை. நூலின் பெயருக் கேற்றபடியே திக்கற்றவருக்குத் தெய்வமே துணையென்ற பழமொழியின் உண்மைப்பொருளை வலியுறுத்திக்காட்டி இராதை, அலமு என்ற இரண்டு தாயற்ற பெண்குழந்தைகளின் வாழ்க்கைச் சரிதத்தைக் கூறுமுகத்தால் அநேக ஒழுக்கமுறைகளையும், நீதியியல்புகளையும், பெண்கல்விச் சிறப்பையும் எடுத்துக் காட்டுவதாகின்றது. இது படிக்கச் சுவை மிகுந்து மகளிர் வாழ்க்கையிற் படிக்குநர் யாவர்க்கும் அநுதாபமும் ஒற்றுமையுணர்ச்சியும் விளையும்படிச் செய்கின்றது. இஃது ஆடவரும் பெண்டிரும் ஒருங்கே அகமகிழ்ந்து படிக்கத்தகுந்த தெளிவும் விளக்கமும் வாய்ந்த தமிழ்நடையில் எழுதப்பட்டுளது. இத்தகைய அருமை வாய்ந்த நூல்கள் பல நம் நூலாசிரியர் எழுதி வெளிவிடுவாரென்று நம்புகின்றோம். இது நல்ல கடிதத்தில் நன்கு அச்சிடப்பட்டுளது. யாம் சொல்லாமலே இந்நூலினை யாவரும் வாங்கிப் படிப்பார்களென்பது நிச்சயம்.



## வியாபார நீதி :—

[இது சென்னைச் சடகோபாசாரியர் கம்பெனியாரால் வெ-நா-ஜூபிலி அச்சியந்திர சாலையிற் பதிப்பிக்கப்பட்டது. இதன்விலை அணா எட்டு; தபாற்கூலி வேறு. பிரதி வேண்டியவர்கள் பதிப்பித்தவரிடத்திற் பெற்றுக் கொள்க.]

இவ்வரிய நூலை யியற்றினர் சித்தூர் - சுப்பிரமணியாசாரியார் பி. ஏ., எல். டி., இதன் கண்ணே வியாபாரிகளுக்கு மிகவும் இன்றியமையாதனவாகிய நீதிகளனைத்தும் ஒருங்கே தொகுத்து ஏறக்குறைய நாற்பத்தொரு கட்டுரைகளாகக் கூறப்பட்டுள. இக்கட்டுரைகளனைத்தும் படிப்போர்க்கு ஞாபகத்திலிருக்கும் வண்ணம் ஓராற்றாற் சூத்திர ரூபமாக அமைக்கப்பட்டுள. இவற்றிற்கு வியாக்கியானம்போலத் தெளிவும் இனிமையும் விளக்கமும் அழகும் வாய்ந்த சுலபமான தமிழ் நடையில் விசேட உரைகள் ஒவ்வொரு கட்டுரையின் கீழும் நியாயங்களோடும் மேற்கோள்களோடும் எழுதப்பட்டுள. இது வியாபாரிகளேயன்றி மற்றைய சாமானிய ஜனங்களும் படித்துப் பயன் பெறத்தக்கதோர் நூல் நல்ல கடிதத்தில் நன்கு பதிப்பிக்கப்பட்டுளது. ஏறக்குறைய நூறு பக்கங்கள் கொண்டுளது. தமிழ்நாட்டின் அபிவிருத்தியைக்கருதியோர் யாவரும் இந்நூலினை நன்கு மதிப்பர் என்பது திண்ணம். புதுமையும் பெருமையும் வாய்ந்த இந்நூலை ஆங்கில பாஷையினின்றும் படித்துத் தொகுத்துத் தந்த நமது நூலாசிரியர்க்குத் தமிழுலகம் மிகவும் கடமைப்பட்டுளது.

---

# EDITORIAL NOTES.
# பத்திராதிபர் குறிப்புக்கள்.

---

**சென்னப்பட்டணத்தில் ஹிந்து பாலிகர் ஹைஸ்கூல்** :—சென்னப்பட்டணத்தில் கல்வியிலும் ஹிந்து சிறுமிகளுக்கு ஒரு ஹைஸ்கூல் இருக்கவேண்டியது அத்தியாவசிகமானது, இதைப்பற்றி எஸ். பி. ஜி. மிஷனார் தீர்க்கமாய் ஆலோசித்து 35,000 ரூபாய் செலவுசெய்து தேக ஆரோக்கியமான ஸ்தலமாகிய ஸலிவன்தோட்டத்தில் மேற்படி பாலிகா பாடசாலை ஒன்று ஸ்தாபிக்கவேண்டியதென்று தீர்மானம் செய்தார்கள். மேற்படி மிஷனைச் சார்ந்த (Women's Branch) வேலைகளை நடத்தும் சீமாட்டிகள் அதை உடனே நடத்த ஆரம்பித்திருக்கின்றனர்.

**மஹாமஹோபாத்தியாயர் இராஜு சாஸ்திரியாரின்மரணம்.**—நடைது மார்ச்சு ௴ 4௳ தென்னிந்தியாவில் மிகவும் பிரக்கியாதி பெற்றிருந்த இராஜு சாஸ்திரியாரவர்கள் எண்பத்தெட்டாம் வயதிற்காலஞ்சென்றார். அவர் தென்னிந்தியர்வில் இருந்த சமஸ்கிருத பண்டிதர்களி லெல்லாருள்ளும் பெரியவர்; அவர் சென்ற ஐம்பது வருஷகாலமாய்த் தென்னிந்தியாவிலுள்ள பிராமண கூட்டத்திற்கு சாஸ்திரசந்தேகங்களையெல்லாம் தீர்த்துக்கொண்டு வந்தார். அதற்காக இந்திய கவர்ன்மெட்டார் அவருக்கு மஹா மஹோபாத்தியாயர் என்னும் பட்டம் அளித்திருந்தனர்.

**ஹிந்து அநாதைப்பிள்ளை ஆதரணை சாலைகள்.**—ஹிந்துக்கள் தங்கள் ஜாதி அநாதைப் பிள்ளைகளைப் பாதுகாக்க வேண்டி ஏதாவது சரியான ஏற்பாடுகள் செய்யவேண்டிய தவசியமென்று சீக்கிரமாகவே யவர்கட்குப் புலப்பட்டு வருகின்றது. பஞ்சமும், பிளேக்நோயும் பலரைத் திக்கற்ற அநாதைகளாக்கி விட்டு வருகையில், முன்போல் சரியான ஏற்பாடுகள் செய்யாமல் அவர்களை வருந்தி யலையவும், ஒருவேளை இறக்கவும், விட்டுவிடுதல் பெருத்த அநியாயம். முன்காலங்களில் யாரேனுமொரு பிள்ளை இடரென்று தன் பெற்றோரையிழந்து அநாதை யாகுமானால், அந்தக் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் யாராவது அதையெடுத்து வளர்ப்பதும், கொஞ்சம் பெரியபிள்ளையாயிருந்தால் தங்கள் வீட்டில்வைத்துக்கொள்வதும், அப்படி பார்க்க யாருமில்லாவிட்டால் அது அடிமையாப்போவதும், கஞ்சித்தண்ணீர் இல்லாமல் இறப்பதும் வழக்கமாயிருந்தது. குடும்பசம்பந்தமும் ஸிநேகமுறையும் தற்காலம் முன்னளவு பலம்பொருந்தி யிருக்கவில்லை யென்ன வேண்டும். அடிமைத்தனமோ நாட்டினின்றும் விலக்கப்பட்டது. பூததயை இரக்கம் இவை மேற்கொள்ளும் அறிவுள்ள எவரும், அப்பிள்ளைகளைப் பட்டினியாகக்கிடந்து, ஆகாரமின்றி யிறக்கவிடுவது பெரும்பாதகம் என்று எண்ணுவார். இத்தேசத்தில் வந்து கிறிஸ்தவ குருத்தொழில் செய்யும் மிஷனெரிமார் பலர், அவ்வநாதைப்பிள்ளைகளின் உதவிக்காக விரைந்து, ஆதரணைச் சாலைகளும் அன்ன சாலைகளும் ஏற்படுத்தி, இந்நற்காரியத்தில் தலையிட்டுக்கொண்டனர். சர்க்காரும் அவ்வித அநாதைப் பிள்ளைகளைப் பஞ்சகாலத்தில் காப்பாற்றிவரலானார்கள்.

தற்காலம் இந்தியாவில் கிறிஸ்தவ மிஷன்களைப் பாதிபோன் றிருப்பனவும் பாதி அவற்றிக்குப் போட்டியாயிருப்பனவுமாகிய பிரமசமாஜம் ஆரிய சமாஜம் முதலியபோன்ற இரண்டொரு மதப்பிரிவுகள் இக்காரியத்திற் பிரவேசிக்கலாயின. சுவாமி விவேகாநந்தரும் ஒரு அநாதை ஆதாரணை சாலை ஏற்படுத்தினார். பஞ்சாப் மாகாணத்திலுள்ள ஆரியசமாஜத்தினரும் அவ்விதசாலைகள் பல ஏற்படுத்தியிருக்கின்றனர். சென்றமாதம் சென்னைக்கிறிஸ்தவ கலாசாலைச் சஞ்சிகைப்பத்திரிகையில் ஒரு இந்துகனவான், இவ்வித ராஜாதானியிலுள்ள ஹிந்து பாடசாலைகளில் சிலவற்றை மூடிவிட்டு அவற்



றை நடத்திவரும் பணத்தைக்கொண்டு அநாதைப் பிள்ளைகளின் ஆதரணை சாலைகள் ஏற்படுத்தினால் நலமாயிருக்கும் என்று எழுதியிருக்கின்றார், இந்த விஷயத்தில் என்னசெய்யப்படும் என்று எதிர்பார்க்கின்றோம். இந்தியர்களிடமிருந்து தாம் ஸ்தாபித்த ஆதரணைச் சாலைக்கு திரவிய சகாயம் மிகவும் கொஞ்சந்தான் கிடைத்து வந்தது என்று சுவாமி விவேகாநந்தர் பலமுறை அதிக வருத்தத்துடன் முறையிட்டிருக்கிறார். தென் இந்தியாவில், அநுபவத்தில் இவ்விஷயத்தில் அதிக பயனும், உதவியும் கிட்டுமோ என்பதைப் பற்றிக் கொஞ்சம் சந்தேகத்துடன்தா னிருக்கிறோம். என்றாலும், அவ்வித உதவிகிட்டுவது எமக்கு அத்தியந்த சந்தோஷம் விளைக்கும் என்பது நிச்சயம்.

**சென்னைச் சித்திரத்தொழிற்காட்சி.**—தற்காலம் தென்னிந்தியாவிலே சிற்பவேலைக்காரரும் சித்திர வேலைக்காரரும் செய்யும் வேலைப்பாடு எம்மட்டு என்று கண்டறிய ஒருவன் கோரினால் வருஷாவருஷம் சென்னைச் செனட்சங்கசாலையில் பிரத்யக்ஷமாய்க் காட்டப்பட்டு வருகிற சென்னைச் சித்திரவேலைக் காட்சியைப்போய் பார்க்கவேண்டியதேயாம். ஐரோப்பாக் கண்டத்திலுள்ள பெரிய நகரங்களில் வருஷப் பிரதி வருஷம் காட்டப்படுகிற சித்திரவேலைக் காட்சிகளோடு இத்தேசத்துக் காட்சிகளை ஒப்பிட்டுப்பார்த்தால் இவ்விரண்டிற்கும் எவ்வளவோ வித்தியாசம் உள்ளது என்று கண்டறியலாம். அப்படியாயினும் சுதேச அபிமானிகள் தங்கள் தேசச் சித்திரத்தொழில் அபிவிர்த்தி எவ்வளவில் இருக்கின்றதென்று கண்டறியக்கூடியதனால் இக்காட்சிகளை வெகு சிரத்தையோடு போய்ப்பார்த்தறியக்கூடும், சிற்பவேலைகாரர்களும், சித்திரப்படமெழுதுகிறவர்களும் கௌரவப்படுத்தத் தக்கவர்கள். அல்லர், சாதாரண வேலைக்காரர்கள் தான் என்று நாம் நினைக்கும் அளவும் விந்தையான வித்தையாகிய இச்சித்திரத் தொழிலுக்கு சரியான அபிவிர்த்தி கிடைப்பது மிக அருமையாகும். இம்மாதிரி வேலை செய்வோரைப் பற்றி ஜனங்கள் எந்தத் தேசத்தில் தாழ்வான அபிப்பிராயம் கொள்ளுகிறார்களோ அத்தேசத்தில் அவ்வேலைக்காரர்கள்சாமானியவேலைமாத்திரம் செய்வாரேயன்றி மிகநேர்த்தியானயாதொன்றையும் செய்ய சாத்திய மில்லாமற்போகும். ஆகையால், தென்னிந்தியாவிலுள்ள அவ்வித வேலைக்காரர்கள் தேசத்துப் புகழைக் கொண்டு வரவேண்டுமானால் நாமே அவர்களைக் கனப்படுத்தி அவர்கள் தொழில் மேலானதென்று எண்ணி அவர்களை உற்சாகப்படுத்தி வரவேண்டியது. ஐரோப்பாவிலே நன்றாய்ப் படித்தவர்களும் இத்தொழிலை ஆவலோடும் மிகச்சாமர்த்தியத்தோடும் செய்து வருவதனால் தங்களுக்கு லாபத்தை வருவித்துக் கொள்வதுடன் தேசத்துக்கும் கீர்த்தியை வருவிக்கிறவர்களாயிருக்கிறார்கள்.

மேலும் சித்திரவேலையிற் பிரியமுள்ளவர்கள் அதனால் ஜீவிக்கவேண்டுமென்றிராமல் அதனை இன்பத்தொழிலாகக் கைப்பற்றுவார்கள். இந்தச் சென்னைக்காட்சியிலும் காட்டப்பட்ட பல சித்திரவேலைப் படங்களும், நேர்த்தி

யான தையல் வேலைகளும் பல துரைமார்களாலும் துரைசானிகளாலும் ஜீவனார்த்தமாகவல்லாமல் இன்பத்தொழில்களாகச் செய்யப்பட்டு, காட்டப்பட்டன,

இக்காட்சியிற் காட்டப்பட்டவைகள் என்னென்னவெனில், எண்ணெய் ஏற்றிய படங்களும், நீரேற்றப்படங்களும், மைசிறப் படங்களும், புகைப் படங்களும் மரச்சிற்ப வேலைகளும், பித்தளையில் சித்ர வேலைகளும், சந்தனமரச் சிற்பவேலைகளும், பூத்தையல் வேலைகளும், சமக்காளம் போன்றவைகளுமாம். சலவைக்கல் சிற்ப வேலைகள் ஒன்றும் அங்குகாட்டப்படவில்லை என்று கண்டறிந்தோம். சுதேசசித்திர வேலையில் பிரியங்கொண்ட அநேகர் வருஷம் வருஷம் இது விர்த்தியாகும் என்று அபிப்பிராயப்படுகிறார்கள். எப்படியாயினும் சித்திரப்படவேலையில் விர்த்திக்கு இடம் இன்னும் அதிகமாயிருக்கிறது. அது படிப்படியாய் உண்டாகுமென்று எண்ணுவதற்கும் இடமுண்டு. ஏனெனில் தற்கால சித்திரப்படவேலைக்காரர்கள் முந்திய சித்திரப்படங்களைப்பார்த்து, ஆறுகள் ஒன்றின்பின் ஒன்று வழிந்து ஓடுவதுபோல் விவேகமின்றி அதன் போலிகளை எழுதிவிடாமல் சுபாவப் பொருள் கண்ணாரக்கண்டு படம் பிடித்து உண்மையாயும், புத்தி கூர்மையோடும் எழுதக் கற்கிறார்கள். இப்படிப்பட்டவர்களில் இருவர் சகோதரர்கள் மிகவும் கீர்த்தியடைந்து மேல்நோக்கி வந்திருக்கிறார்கள். அவர்கள் யாரெனில்: ரவி வர்மா என்பவரும் அவர்தம்பியாகிய ராஜராஜவர்மா என்பவருமே. இவ்விருவரில் மிகவும் பிரபலமானவராகிய ரவி வர்மா தாம் எழுதிய Sir George Moore, The Honorable Sir V. Bashyam Iyengar, The Honorable Sir S Subramania Iyer) ஆகிய இவர்களுடைய படங்களையும் காட்டுகிறார். இவைகளில் (Sir V Bashyam Iyengar) அவர்களுடைய உருவப்படம் மிகவும் ஜீவகளையுள்ளது. சித்திரவேலைசெய்யும் ஒருவர் எழுதிய இவ்விதரூபபடங்களையே பார்ப்பதனால்தான் அவருக்கு அவர்வேலைசெய்வதில் உண்மையுள்ள சாமர்த்யம் உண்டோ என்று கண்டறியக்கூடும். யாவரும் பார்க்காத தேவிகளுடைய உருவத்தைப் பாவனை காட்டுவது சாமர்த்தியமில்லாத சித்திர வேலைக்காரருக்கு கூட சுலபமாம்; ஆனால் நாம் பார்த்திருந்த ஒருவனுடைய முக ரூபத்தை நமக்குப்பேசத்தக்கதாக எழுதிக்காட்டுதற்கு மிகுந்த தேர்ச்சியும் விவேகமும் வேண்டியதவசியம். ரவிவர்மா அவர்களுக்கு வெகு அருமையான இந்த சாமர்த்தியம் உண்டென்பதற்கு யாதொரு ஐயமுமில்லை. அவர் திருவநந்தபுரத்துக்கு 24-மைல் தூரம் வடதிசையிலுள்ள கிலிமனூரிலே திருவாங்கூர் மகாராஜா வம்சத்துக்கு விவாகசம்பந்தமான ஓர் குடும்பத்தில் பிறந்தார். தமது ஜீவகாலம் எல்லாம் ரவி வர்மா திருவாங்கூர் மகாராஜாவுக்குமாத்திரமல்ல, இன்னும் பல ராஜாக்களுக்கும் கவர்னர்களுக்கும் பிரபுக்களுக்கும் மிகவும் பிரியமுள்ளவர். இந்த சிநேகம் அவருக்கும் அவர்களுக்கும் கனமுள்ளது. அக்காலத்தில் வேல்ஸ் பிரபுவாயிருந்த நமது சக்கிரவர்த்திக்கு 1875 ஞு ரவிவர்மா எழுதின இரண்டு படங்களை திருவான்கோடு மகாராஜா கொடுத்தார். இன்னும் அநேகவிதமாய் ரவிவர்மா யோக்கியமாய் நியாயமான கனத்தையும் கீர்த்தியையும் பெற்றிருக்கிறார் படிப்புள்ள நமது வாலிபர்களிற் சிலர் சித்திரத்தொழில் கனமுள்ளதென்று எண்ணி அதில் தேர்ந்து நல்ல ஜீவனம் பண்ணியும் கீர்த்தியடைந்து வருவார்களாக.

# ஞானபோதினி.

ஒரு மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

தாமின் புறுவ துலகின் புறக்கண்டு
காமுறுவர் கற்றறிந் தார்—திருக்குறள்.

சம்புடம் VI } 1903ஞு மார்ச்சு மீ 20உ { இலக்கம் 8.

## THE ORIGIN OF CASTE.

## ஜாதிவகைத் தோற்றம்.

முற்காலத்தில் ஒவ்வோர் ஆரிய குடும்பத்தின் தலைவர்களும் தங்களுடைய நன்மை கருதியுந் தங்களுடைய மக்களின் நன்மை கருதியும். அக்கினி தேவனையும் வான தேவனையும் வணங்கிவந்தார்கள். சிலர் நிலமுழுதும் பயிரிட்டனர். சிலர் ஆடைகள் நெய்தனர். சிறுபிள்ளைகள் ஆடுமாடுகள் மேய்த்தனர். மாதர்கள் நூல் நூற்றும் பால் கறந்தும் மற்ற வீட்டுவேலைகளைப் பார்த்துக்கொண்டும் வந்தார்கள். ஒவ்வொரு குடும்பத்தாரும் தங்களுக்குள் மிக்க வல்லமையும் புத்தி நுட்பமுமுள்ளவனைத் தலைவனாக்கிக் கொண்டனர். போர்க்காலத்தில் அத்தலைவனுக்குக் கீழ்ப்படிந்து ஒவ்வொருவனும் வில்லும் வாளும் கைக்கொண்டு போர்செய்யப் புறப்படுவான். போருக்குப் போகுமுன் ஒவ்வொருவனுங் கடவுளைத் துதிப்பான். போர் முடிந்த பின்னரும் மறவாது கடவுளை வழிபடுவான்.

ஆரியர்கள் இந்துஸ்தான முழுவதிலும் பரவினபோது மிக்க போர்கள் விளைந்தன. அப்பொழுது குடும்பத்தலைவர்களுக்கும் சாதித்தலைவர்களுக்கும் பழைய வேதங்களிலுள்ள கடவுள் விஷயமாகப்பாடிய பாசுரங்களைப் படிப்பதற்கு அவகாசமில்லாமற்போயிற்று. இவற்றைப் படித்துக்கொள்ளும்பொருட்டு ஒவ்வொரு சாதியாரிலுஞ் சிலரை ஏற்படுத்தினர். நாளடைவில் மற்றையோர்களினும் இவர்கள் மிக்க தூய்மையாளரென மதிக்கப்பட்டனர். அவர்கள் அக்கா

லத்திற் பிரமதேவனை முக்கிய தேவதையாகக் கொண்டாடினார்கள். ஆதலின் அவர்கள் பின்னர் வேறு சாதியாராகப் பிரிந்தபோது பிராமணர்கள் என்று கூறப்பட்டனர்.

இனிப், போர்க் காலத்திற் போர்ச்சேவகர்கள் தாங்கள் போர் செய்வதைத் தவிர்த்து நிலமுழுதும் பயிரிடத்தங்களுக்கு அவகாசமில்லை யென்றறிந்தார்கள். அப்பொழுது ஒவ்வொரு சாதியாரிலும் மிக்க வல்லாளர்களைப் பொரவென்று நியமித்தனர். அந்தச் சாதியாரின் தலைவனை அவர்கள் தங்களுக்கு அரசனாகக் கொண்டார்கள். அவர்கள் பிறகு வேறு சாதியாராகப்பிரிந்து இராஜ புத்திரர்கள் என்று அழைக்கப்பட்டனர். நெடுங்காலம் அவர்கள் பிராமணர்களுக்குச் சமமாகவிருந்து இறுதியில் அவர்களுக் கிரண்டாவது வருணத்தவராய் விட்டனர். இவர்களுக்கு க்ஷத்திரியர்கள் என்பது பெயர்.

பிராமணரும் இராஜ புத்திரரும்போக, எஞ்சியவர்கள் உழுது பயிரிடுதல் துணிநெய்தல் முதலிய வேலைகளைச்செய்துவந்தனர். இந்திய ஆரியர்களுள் வேறாகப்பிரிந்த மூன்றாவது சாதியாராகிய இவர்கள் வைசியர்கள் என்னப்பட்டனர்.

ஆரியர்கள் தங்களுக்கு முன் இந்துஸ்தானத்திற் குடியேறியிருந்த கறுப்பு மனிதர்களெல்லோரையுந் துரத்திவிடவில்லை. அநேகர் காடுகளுக்கும் மலைகளுக்கும் ஓடிப்போனார்கள். அநேகர் இருந்தவிடத்திலேயே ஆரியர்களுக்கு வேலைக்காரர்களாகி அவர்களுடைய கடுமையான வேலைகளை யெல்லாம் தாங்களே செய்துவந்தார்கள். முதன்முதலிற் குடியேறின ஆரியர்கள் இவ்வேலைக்காரர்களுடன் பழகி நேசர்களானதுமன்றி அவர்கள் பாஷையையுங் கற்றுக்கொண்டார்கள். அவர்களோடு கொண்டு கொடுத்துச் சம்பந்தஞ்செய்து ஒன்றாய்விட்டார்கள். இவர்களுக்குப் பிறந்தவர்கள் மற்ற ஆரியர்களோடு சமமாய் எண்ணப்படாமல் நான்காவது வருணத்தவராகிய சூத்திரர்கள் என்றழைக்கப்பட்டனர் மற்ற வருணத்தார்களினும் இவர்கள் அதிகமாயிருந்தார்கள். பிறகு வைசியர்களும் இவர்களுடன் கலந்தார்கள் என்பது தோன்றுகின்றது.

மேற்கூறியாங்கு ஆரியர்களோடு கலவாத துரானியர்களோ அவ்வாரியர்களுக்கு அடங்கி அடிமைகளாயினார்கள்; இவர்கள் தாம்



மிகவுந் தாழ்ந்தவர்க ளானார்கள். அவர்கள் எவ்வருணத்திலுஞ் சேர்க்கப்படாமல் ஒதுக்குண்டு பிரஷ்டர்கள் அல்லது பறையர்கள் என்றழைக்கப்பட்டனர். அவர்கள் வசிப்பதற்குங் கிராமத்திற்குள்ளே யிடங்கொடாமல் வெளியிற் குடிசைகள் கட்டிக்கொள்ளும்படி செய்தனர்.

இவ்விதமாக வெவ்வேறு தொழில்களைச் செய்துவந்த ஜனங்கள் வெவ்வேறு ஜாதியார்களாகப் பிரிந்துவிட்டார்கள். பின்னர்க் கணக்கில்லாத வுட்பிரிவுகளுண்டாகி இப்பொழுதும் நிலைத்து வருகின்றன. ஒரு தொழிலுக்குரிய சாதியைச்சேர்ந்தவன் வேறொரு தொழிலைச் செய்வதுங்கூடாது; மற்றைச் சாதியார்களோடு சாப்பிடுவதுங்கூடாது; கொண்டு கொடுத்தலுங்கூடாது. இவ்வகையான சாதி யொழுக்கங்கள் நம் இந்துக்களிடத்தில் மட்டுமே காணப்படுகின்றன. இவை இவ்வுலகத்தில் வேறெங்குங் காணப்படுவனவல்ல.

பத்திராதிபர்.

---

## PERIYA ALWAR.
## பெரியாழ்வார்.

பெரியாழ்வார், ஸ்ரீவில்லிபுத்தூரில், பிராமண குலத்திலே, கலியுகம் பிறந்து நாற்பத்தாறாம் ஆண்டில் நிகழ்ந்த குரோதன வருஷம் ஆனி மாதம் சுக்கில பக்ஷம் ஒன்பதாந்தேதி ஏகாதசிதிதி ஞாயிற்றுக்கிழமையோடு கூடிய சுவாதி நக்ஷத்திரத்திலே, ஸ்ரீ கருடாம்சராய், முகுந்தாசாரியர் பதுமையார் என்பவர்களுக்குத் திருத் தவப் புத்திரராய் அவதரித்தருளினார். விஷ்ணுவின் சித்தத்தில் இவரும் இவர் சித்தத்தில் விஷ்ணுவும் நிரந்தரம் இருக்குங் காரணத்தால், இவருக்கு விஷ்ணுசித்தர் என்னும் திருநாமம் உண்டாயிற்று.

இவர், ஸ்ரீவில்லிபுத்தூரில் நித்திய வாசஞ் செய்துகொண் டிருக்கும் வடபெருங் கோயிலுடையானுடைய திருவருட் பிரசாதத்தினாலே அவ்வெம்பெருமானுக்குத் தொண்டுபூண்டு ஈடுபட்டு, அவன் உகந்த அடிமை செய்வதே தமக்குக் கர்த்தவ்யம் என்றநுசரித்து, அதனை அறியும் பொருட்டாக அவதாரங்களை ஆராய்ந்து பார்த்தனர். பார்த்தவிடத்தில், துஷ்ட நிக்கிரஹம் சிஷ்டபரிபாலம் பண்ணி, பூபாரந் தீர்க்கும் பொருட்டு அவதரித்தருளின வாசுதேவன் கஞ்சனுக்குப் பணிசெய்துபோந்த ஸ்ரீமாலாகாரருடைய திருமாளிகைக் கெழுந்தருளிப் பூ இரக்க, அவர் உகந்து பூமாலை கட்டிச் சூட்

டின படியைக் கண்டார். கண்டு இவ்விஷயத்துக்குப் பூவிடுகையே உகப்பென்று அறுதியிட்டு, வடதளபுட சாயியாக இருக்கிற வடபெருங் கோயிலுடையானுக்குத் திரு நந்தவனம் வைத்துத் திருமாலை கட்டிச் சாத்திப் போதருவா ராயினர்.

இங்ஙனம் போதருகின்ற காலத்தில், நான்மாடக் கூடலான மதுரை மாநகரிலே வல்லப தேவராசன் என்னும் பாண்டியன் அறநெறி வழுவாமல் அரசு புரிந்து வந்தான். அவ்வரசன் ஒருநாளிரவில் நகரசோதனையின் பொருட்டு ஊரைச்சுற்றிவரும்போது ஒரு வீட்டின் வேதிகையில் விப்பிரனொருவன் உறங்கியிருப்பதைக் கண்டான். அரசன் அவனை யெழுப்பி "நீ யார்? உன் விருத்தாந்தம் என்ன?" என்று கேட்க, அவனும் "நான் ஒரு பிராமணன். கங்கையில் நீராடி வருகின்றேன்!' என்று கூறினான். அதன்மேல் அரசன் "உனக்குப் போமதுண்டாகில் ஒரு சுலோகம் சொல்லிக் காணாய்" என, அப்பூசுரன் "மனிதனானவன், கார்காலத்தில் இன்புற்று வாழ்வதற்கு வேண்டினவற்றைக் கோடைகாலத்திற்றானே தேடிவைத்துக் கொள்ள முயற்சி செய்யக் கடவன். இரவில் இனிது உண்டு வாழ்வதற்கானவற்றை ஈட்டிவைத்துக்கொள்ளப் பகலிற்றானே முயற்சிசெய்யக்கடவன். முதுமைக்கின்றியமையாதனவற்றை இளமைப் பருவத்திற்றானே முயன்று தேடல் வேண்டும். மறுமையில் இன்புற்றிருக்குமாறு செயக்கடவ அறங்களை இம்மை முழுவதும் இயற்றல் வேண்டும்" எனப் பொருள்படுவதான ஒரு செய்யுளைச் செப்பினான். "திருஷ்டத்தில் நமக்குக் குறையொன்று மின்று இனி அதிர்ஷ்ட சித்திக்கு ஆவனவற்றை முயன்று பெறுதல் எங்ஙனம்?' என்றெண்ணிப் புடைபடக் கவன்று தன் புரோகிதனான செல்வ நம்பியைக் கூவினான். கூவி "புருஷார்த்த நிர்ணய பூர்வமாக அதிர்ஷ்டசித்தி அடையும் விரகு என்னை?" என்று வினவினான். அதற்குச் செல்வநம்பி, வித்வான்களைச் சபைகூட்டி வேதாந்த சித்தமான பரம தத்துவ நிர்ணயம் பண்ணுவித்து அவ்வழியாலே அதனைப் பெறவேண்டும்" எனக் கட்டுரைத்தனன். அதுகேட்ட பாண்டியன் வித்தியா சுல்கமாக வெகு திரவியத்தை ஒரு தோரணத்திலே கிழிச்சீரையிலே கிழியாகக் கட்டுவித்துப் பல தேயத்து வித்வான்களும் தன் அவைக்கண் அடைவராக என்றறிக்கை செய்தனன்.

அவ்வளவிலே சம்சாரிகள்

"பூண்டவத்தம் பிறர்க்கடைந்து தொண்டு பட்டுப்
பொய்ந்நூலை மெய்ந்நூலென் றென்று மோதி
மாண்டவத்தம் போகாதே"

வடபெருங் கோயிலுடையான், மெய்யடியாரான இவ்வாழ்வாரைக்கொண்டு உலகத்திலே வேதாந்த பிரதிபாத்தியமான பரதத்துவத்தைப் பிரகாசிப்பிக்கைக்காக, அவருடைய கனவில் எழுந்தருளி "மதுரையிலே பாண்டிய



ராசன் பரதத்துவ நிர்ணயத்தின் பொருட்டுக் கிழி கட்டி வைத்திருக்கிறான். நீர் போய் அதனை அறுத்துக்கொண்டு வாரும்" என்று அருளிச் செய்தனர். அதற்கு ஆழ்வார் "அக்கிழி வித்தியா சுல்கமாக நிர்மிப்பதொன்றன்றோ? கலைகளாய நற்கலைகள்நாலும் நவின்றிலேன். நான் என் கையில் கொட்டுத் தழும்பைக் காட்டிக் கிழியறுக்கலாமோ" என்று கூறினர். எம்பெருமானும் "அது உமக்குப் பரமோ? நாமன்றோ வேதார்த்தப் பிரதிபாதநக்குக் கடவோம்' என்று கூறி ஆழ்வாரை நிர்ப்பந்தித் தருளினான்.

ஆழ்வாரும், மறுநாள் சிற்றஞ்சிறுகாலே எழுந்திருந்து, காலைக்கடவ கடன்களை முடித்துக்கொண்டு, ஈதொரு கனவு இருந்தபடி என்னென்று ஆநந்த பரவசராய்ப் பாண்டியனுடைய அவைக்கண் எழுந்தருளினர். இவரைக்கண்ட வளவிலே செல்வநம்பியும் பாண்டியனும் எழுந்திருந்து அவருடைய திருவடிகளில் தீர்க்க தெண்டன் சமர்ப்பித்தனர். இதைக்கண்ட வித்துவான்கள் விண்டு சித்தர்க்கு வேதாப்பியாசம் சாலாதென்னுங் கொள்கையாலே அரசனை அதிக்ஷேபித்தனர். அப்போது அபிமான துங்கனான செல்வநம்பி, ஆழ்வாரைத் திருவடி தொழுது, வேதாந்தப் பிரதிபாத்தியமான பரதத்துவத்தை நிச்சயித்தருளிச்செய்ய வேண்டும் என விஞ்ஞாபித்தனன். அவ்வளவிலே, ஸ்ரீ வால்மீகி பகவான் வாணிகேள்வனுடைய அநுக்கிரஹத்தாலே சகலார்த்தங்களையும் சாக்ஷாத்கரித்தவாறு போலவும், அரசிளங்குமரனான துருவன் ஸ்ரீபாஞ்சஜந்ய ஸ்பர்சத்தாலே எல்லா முணர்ந்தவனானவாறு போலவும், இவ்வாழ்வாரும், வடபெருங்கோயிலுடையானுடைய நிர்ஹேதுகக்கடாட்சத்தாலே சகல வேத சாரார்த்தங்களையும்அவற்றின் வியாக்கியான ரூபமான புராணங்களையும் இதிகாசங்களையும் சாக்ஷாத்கரித்து அவற்றைக்கொண்டு பலவாறாகப் பிரதிபாதித்துப் பரதத்துவத்தை நிச்சயித்தருளினர். அப்போது வித்தியாசுல்கமாகத் தோரணத்திற் கட்டிவைத்த கிழியானது தானே இவர்க்குமுன் தாழவளைய, ஆழ்வாரும் அக்கிழியை அறுத்துக்கொண்டருளினர்.

இதைக் கண்டு எல்லாரும் வியப்படைந்து ஆழ்வாரடியில் முடியுறப் பணிந்து "வேதாந்த விழுப்பொருளின் மேலிருந்த விளக்கை விஷ்ணுசித்தன் விரித்தனன்" என்று கொண்டாடினர். அதிக அன்புடன் அவரை யானையின்மேல் ஏறியருளப்பண்ணி, முன்னே அதிக்ஷேபித்தவர்களே இப்பொழுது குடைகள் தரித்துக் கவரியிரட்டி உபசரிக்க, "வேதப் பயன் கொள்ளவல்லரான மெய்ந்நாவர் வந்தார்" என்று விருதுகூறித் திருச்சின்னம் பரிமாற, பாண்டியனும், இவர்க்குப் "பட்டர்பிரான்" எனத் திருநாமஞ் சார்த்தித், தானும் தன் பரிவாரத்துடனே சேவித்துக்கொண்டு நகர்வலஞ் செய்வித்தனன்.

அப்போது எம்பெருமானும் இந்த மகோற்சவத்தைக் காண்கைக்காகப் பிராட்டி சமேதனாய்ப் பெரிய திருவடியின் மேற் கொண்டு சங்கு சக்கர

சார்ங்க கதாபாணியாய், ஆகாயத்தில் திவ்விய மங்கள விக்கிரக விசிட்டனாய்ச் சேவை தந்தருளினான். அப்போது ஆழ்வாரும் யானையினின்றும்பொட்டெனக் கீழ் குதித்து சாட்டாங்க நமஸ்காரம் பண்ணி, யானைக் கழுத்திலுள்ள மணிகளைத் தாளமாகக்கொண்டு "அந்த ஸௌந்தரியாதிகளுக்கு ஒரு தீங்கும் வராதே நித்தியமாய்ச் செல்லவேண்டும்" என்று திருப்பல்லாண்டு பாடி எம்பெருமானுக்கு மங்களாசாசனம் பண்ணியருளினார். பின்னர் அந்தப் பாண்டியனையும் விசேஷ கடாக்ஷம் செய்து அவன் செய்த வந்தனை வழிபாடுகளைக் கைக்கொண்டு, மீண்டும் ஸ்ரீவில்லிபுத்தூர்க் கெழுந்தருளிக் கிழியறுத்த பொன்னை வடபெருங்கோயிலுடையான் திருமுன்பே வைத்து அப்பெருமான் அநுமதிகொண்டு அதனைத் திருநந்தவன கைங்கரியத்திற் செலவிட்டனர்.

அப்பால் ஆழ்வார், கிருஷ்ண விருத்தாந்தத்திலே அன்புடையராய், அவன் அவதரித்தது முதல் அவன் செய்துவந்த அதிமாநுஷ சேஷ்டிதங்களிலும் அவனுடைய ஸௌசீல்ய ஸௌலப்யாதி குணங்களிலும் ஈடுபட்டு அவைகளை நன்றாக அநுபவித்து, அவ்வானுபத்தா லுண்டான அன்பின் மிகுதியாலே பெரியாழ்வார் திருமொழி என்கிற திவ்யப்பிரபந்தத்தை அருளிச்செய்து, அதனைச் சித்தநன்கொடுங்கித் திருமால்மேற் சென்ற சிந்தையராய்க் கொண்டு சாயை போலப்பாடவல்ல ஸஜ்ஜனங்களுக்கு உபகரித்தருளி உலகத்தை வாழ்வித்தருளினார்.

திருமணம் - செல்வக்கேசவராய முதலியார்.

---

## HISTORY OF TAMIL RHETORIC.

## தமிழணியிலக்கண வரலாறு.

[95-ஆம் பக்கத் தொடர்ச்சி.]

இவ்வீரசோழியத்தின் அலங்காரப் படலம் முழுதும்வடமொழியில் தண்டியாசிரியர் இயற்றியுள்ள காவ்யா தர்சத்தைத் தழுவியது. இது தண்டி சொன்ன

“கரைமலி நூலின்படியே யுரைப்பன் கனங்குழையே” (1) என்பதனால் விளங்கும். இந்நூலாசிரியர் இங்குக் கூறியுள்ளபடி தண்டி யென்றும் (2) தண்டிகளென்றும், (3) இந்நூலுரையாசிரியர் தண்டியாரென்றும் (5) கூறியிருப்பது வடமொழித் தண்டியை யென்றற்குச் சிறிது மையமில்லை.

இனித் தமிழின் ஐவகை இலக்கணத்துள் அணியிய லொன்றனையே கூறுவதும் தமிழ்ப் புலவர்கள் பெரும்பான்மையு மெடுத்தாள்வது மாகிய



தண்டியலங்காரமென்னும் நூல் தோன்றிய காலத்தைச் சிறிதாராய முயல்வோம். இவ்வலங்கார நூலாக்கியோன்பெயரின்னதென்பது விளங்கவில்லை. நூலின் பெயர் தண்டியென்னும் பெயரொடு கூடியிருத்தலைக் கொண்டு இதற்றிய ஆசிரியர் தண்டியென்னும் பெயரினரென்று கொள்ளல் தகாதோ வெனின் அங்ஙனங் கொள்ளற்கு இதனை யொழித்துச் சான்று வேறொன்று மில்லாமையான் நூலாசிரியர் பெயர் தண்டியென்றே துணிதற் கியலாது. இந்நூலுக்குத் தண்டியலங்கார மென்னும் பெயரேயன்றி அணியிய லென்றொரு பெயருமிருப்பதாகத் தோன்றுகிறது. எங்ஙனமெனின் அடியார்க்குநல்லார் சிலப்பதிகாரத்தினுரையில் எடுத்துக்காட்டியுள்ள சில சூத்திரங்கள் தண்டியலங்காரத்துக் காணப்படுகின்றமையின் அவர் அணியியலென்று கூறியுள்ள நூல் இந்நூலின் மறுபெயராதல் வேண்டும். என்று நினைக்க இடனாகின்றது. இவ்வணியியல் என்பது வேறோரலங்கார நூலின் பெயரென்று கொள்ளலமையாதோவெனின், அவ்வாறு கொள்ளலாமாயினும் அணியியலென்னும் பெயரைத்தவிர்த்து வேறொன்றும் அந்நூலைக்குறித்து நமக்குத்தெரிந்திலது. தண்டியலங்காரத்தின் உரைத்தொடக்கத்தில் “இவ்வதிகாரம் என்ன பெயர்த்தோவெனின், அணியினதிலக்கண முணர்த்தினமையின் அணியதிகார மென்னும் பெயர்த்து” என்று காணப்படுகின்றமையின் இதற்குப் பிறிதொரு பெயருமுண்டென்பது விளங்குகின்றது. இது வல்லாமல், அடியார்க்குநல்லார் அணியியலென்னும் நூலிலிருந்து இலக்கணமாகச் சூத்திரங்களை யெடுத்துக்காட்டி யிருப்பதன்றி சில அலங்காரங்களின் பெயர்களையே கூறியிருக்கின்றார். அவையாவெனின், தெரிதரு தேற்றவுவமை, விரோதம், பின்வருநிலை, பரியாயம் என்பன. இவற்றை “மலையிடைப்பிறக்கு மணிகுழையாமையின் அதிற்பிறவாமணியே யென்பேனோ, அலையிடைப்பிறக்குமமிர்திற்கு இவ்வடிவின்மையின் அதனிற்பிறவாத அமுதே யென்பேனோ, யாழ்பட்கின்றதாகலின் அதனிடைப்பிறவாத இசையே யென்பேனோ வெனத்தெரிதருதேற்றவுவமையென்னு மலங்காரமும், மலைகடலென விரோதமும், பின் வருநிலையென்னு மலங்காரமும் புலப்படுத்தினாரென வுணர்க” வென்ற விடத்தும், “தயங்கல் வடங்கலிரண்டும் விளக்கமாதலிற் பரியாயமென்னும் அலங்காரமும், தலையாய எதுகைத்தொடை யின்பமும் புலப்படுத்தினமை யுணர்க”

---

(1) வீரசோழியம், அலங்காரப்படலம், செய்யுள் 1.
(2) ,, ,, ,, ,, 13, 20.
(3 ,, ,, ,, 7.
(4) ,, ,, ,, ,, உரை. ப. 141.
,, ,, ,, 9. ,, ,, 144.
,, ,, ,, 11. ,, ,, 147.
(5) ,, ,, ,, 9. ,, ,, 144.

வென்றவிடத்தும் காண்க. (6) இங்கெடுத்துக் காட்டியுள்ள அலங்காரங்களின் பெயர்கள் தண்டியலங்காரத்தில் அவ்வவ்வணிகளுக்குக் கூறியுள்ள பெயர்களாயிருக்கின்றன. வீரசோழியத்தினலங்காரப்படலத்துள் இவ்வலங்காரங்கள் பெரும்பான்மையும் வேறு பெயர்களாற் கூறப்பட்டிருக்கின்றன. தெரிதருதேற்றவுவமை இந்நூலின்கண் துணிவுவமை யென்றும் (7) விரோதம் முரணென்றும் (8) பின்வருநிலை மீட்சி யென்றும் (9) பரியாயம் பரியாயமொழி யென்றும் (10) வழங்கப்பட்டிருக்கின்றன. தண்டியாசிரியர் தமது காவ்யாதர்சத்தில் இவற்றை முறையே நிர்ணயோபமா, விரோதம் ஆவ்ருத்தி, பரியாயோக்த மென்பர். ஈற்றிற் கூறிய அணி பரியாய மெனனும் பெயராற் காணப்படினும் பரியாய மொழி யென்பதே முதனூலிலுள்ள பர்யாயோக்த மென்பதன் நேரான மொழிபெயர்ப்பாகின்றது. ஆயினும், வீரசோழிய வுரையாசிரியர் இலக்கணங் காட்டியுள்ள இடத்தில் இவ்வலங்காரம் பரியாய மென்றும் (11) காணப்படு மாதலின் இவ் வொன்றனையுமொழித்து ஏனையணிகளின் பெயர்களை யாராய்ந்து பார்ப்போம். பெருந்தேவனார் தமது கையில் ஆங்காங்கு அலங்காரங்களுக்கு மூலத்திற் கூறியுள்ள பெயர்களேயன்றி அவற்றுக்குரிய வேறு பெயர்களையும் எடுத்துக் காட்டியிருக்கின்றனர். அங்ஙனம் அவர் காட்டியுள்ளவற்றிலும் துணிவுவமை முரண் மீட்சி யென்பவற்றுக்கு வேறு பெயர்களாகத் தண்டியலங்காரத்திற் கூறி யிருக்கும் தெரிதருதேற்றவுவமை முதலிய பெயர்கள் காணப்படவில்லை. அடியார்க்கு நல்லார் சிலப்பதிகாரத்தில் வேறோரிடத் தமைத்துள்ள விரோத மென்னு மலங்காரத்தினை விரோதமென்று கூறியிருக்கிறாரேயன்றி முரணென்றும் பெயரானுதல் வேறு பெயரானுதல் கூறிற்றிலர். இதனைச் "செய்யாரியவனென்பது விரோதமென்னு மலங்காரம்" என்றவிடத்துக் காண்க. (12) ஆகலின் இவ்வுரையாசிரியர் அணியியலென்று கூறியுள்ளது தண்டியலங்கார மென்றும் மேலெடுத்துக்காட்டிய அலங்காரங்களின் பெயர்களும் இவ்வணிநூலிலிருந்தே யெடுத்தாளப் பட்டனவென்றும் கொள்ள

(6) சிலப்பதிகாரம், மனையறம்படுத்தகாதை-உரை. அடி 75-83.

(7) வீரசோழியம், அலங்காரப்படலம் செய்யுள்—14.

(8) ,, ,, ,, 12, 31.

(9) ,, ,, ,, 10.

(10) ,, ,, ,, 12, 22—28 செய்யுளில் இவ்வணி பரியாயமென்றும் காணப்படுகின்றது.

(11) ,, ,, ,, 12-உரை, 28 செய்யுளினுரையில் இவ்வலங்காரத்துக் கிலக்கணங் கூறியுள்ள விடத்தில் உரையாசிரியர் பரியாய மொழியென்றே கூறியிருக்கின்றார். 31 செய்யுளினுரையில் இவர் "முரணெனும் விரோதமெனினு மொக்கும்" என்று கூறியிருப்பினும் இந்நூலின்கண் முரணென்பதே பெரும்பான்மை வழக்காகின்றது.

(12) சிலப்பதிகாரம் ஆய்ச்சியர் குரவை. படர்க்கைப்பரவல் 2 உரை.



இடமுண்டு. (13) பரிமேலழகரும் தமது திருக்குறளுரையில் ஆங்காங்குச் சில பாக்களில் அமைந்திருக்கும் அலங்காரங்களை யெடுத்துக் காட்டியுள்ளார். இவர் காட்டியுள்ள அணிகளெல்லாவற்றின் பெயர்களும் தண்டியலங்காரத்திற் கூறியிருக்கும் பெயர்களல்ல. சில அணிகள் மட்டுமே இந்நூலிற் காணப்படும் பெயர்களைக் கொண்டனவா யிருக்கின்றன. அவை யாவையெனின் வடமொழிக்காவ்யதரிசத்தில் தண்டியாசிரியர் ஆவ்ருத்தி யென்றும் ஸமாஸோக்தி யென்றும் கூறியுள்ள அணிகளாகின்றன.

இவ்விரண்டணிகளையும் தண்டியலங்கார நூலாசிரியர் முறையே பின்வருநிலை, ஒட்டு என்னும் பெயர்களால் மொழிபெயர்த்திருக்கின்றனர். ஸமாஸோக்தியைப் பரிமேலழகர் பிறிதுமொழிதலென்பர். ஆயினும் பிறர் மதமாக அவர் இதற்கு வேறுபெயர்களும் எடுத்துக்காட்டி யிருக்கின்றனர். இதனை "...இது பிறிதுமொழிதலென்னு மலங்காரம்: இதனை நுவலா நுவற்சி யென்பாரும் ஒட்டென்பாருமுளர்" என்றவிடத்துக்காண்க. இவ்விரண்டு மறுபெயர்களி லொன்றாகிய ஒட்டென்பது தண்டியலங்காரத்தின்கண் ஸமாஸோக்திக்கு வழங்கியிருக்கும் பெயர்.

காவ்யாதர்சத்திற் கூறியுள்ள இலக்கணத்தில் ஸமாஸோக்திக்கும் (ஒட்டு) அப்ரஸ்துதப்ரஸம்ஸைக்கும் (மாறுபடு புகழ்நிலை) பிறிதொன்றைக் கூறக்கருதிய பொருள் புலப்படுதலாகிய ஒற்றுமைகாணப்படுகின்றது. சந்திராலோகமுடையார் இவற்றுக்குக் கூறியுள்ள இலக்கணத்தில் இவ்வலங்காரங்களுள் இத்தன்மைத்தாகிய ஒற்றுமையின்றி வேற்றுமையே தோன்றுகின்றது. எவ்வாறெனின், ஸமாஸோக்தியென்னும் அணியில், ப்ரஸ்துதத்தில் அப்ரஸ்துதம் புலப்படுகின்றது; அஃதாவது, கவிகருதிய தொருபொருளைச் செய்யுளகத்துக்கூற அதனுட் பிறிதொருபொருள் தோன்றுதலாம். அப்பிரஸ்துதபிரஸம்ஸையிலோவெனின், அப்ரஸ்துதத்தில் ப்ரஸ்துதம் புலப்படுகின்றது; அஃதாவது கவி பிறிதொருபொருளைக் கூறக்கருதிய பொருள் தோன்றுதலாம், இவ்வடமொழியலங்கார நூலாசிரியர்கள் ஸ்மாஸோக்திக்கும் அப்ரஸ்துதப்ரசம்ஸைக்கும் கூறியுள்ள இலக்கணங்களிற் காணப்படும் வேறுபாடு உய்த்துணரற்பாலது. சந்திராலோகமுடையார் ப்ரஸ்துதத்தில் அப்ரஸ்துதம் புலப்படுதலும், அப்ரஸ்துதத்தில் ப்ரஸ்துதம் புலப்படு

(13) செந்தமிழ் என்னும் மதுரைத் தமிழ்ச்சங்கத்துப் பத்திரிகையின் முதல் தொகுதி முதற் பகுதியின் உள்ளுறையுள் ஒன்றாகிய நேமிநாதத்தின் உரையிற் "புனையுறு செய்யுட்பொருளை யொருவழி, வினைநினைவு விளக்கினது விளக்கெனப்படுமே." "முதலிடை கடையென மூவகையான." என்பன அணியியல் ஆகலின்' என்றவிடத்து உரையாசிரியர் எடுத்துக்காட்டியுள்ள சூத்திரங்கள் தண்டியலங்காரத்துக் காணப்படாமையால் அணியியலென்பது வேறோரலங்கார நூலாயிருத்தல் வேண்டுமென எண்ண இடமாகின்றது.

த்லும் முறையே ஸமாஸோக்திக்கும் அப்ரஸ்துதப்ரசம்ஸைக்கும் இலக்கண மென்பர் (14) தண்டியாசிரியரோவெனின், கருதிய பொருளைத்தொகுத்து அதற்கு ஒத்ததாகிய பிறிதொருபொருளைக்கூறக்கருதியபொருள் புலப்படுவது ஸமாஸோக்தியென்றும் பிறிதொருபொருளைப் புகழ்ந்து கூறக்கருதிய பொருளிற் பழிப்புப்புலப்படுதல் அப்ரஸ்துதப்ரசம்ஸையென்றும் கூறுவர். (15) கருதிய பொருளைத்தொகுத்துக்கூறலின்ஸமாஸோக்திக்குத் தொகைமொழி (16) யென்றும் ஒருபெயருண்டு. வீரசோழிய நூலாசிரியர் இவ்வணியினைச் சுருக்கு என்பர்.

பரிமேலழகர் எடுத்துக்காட்டியிருக்கும் அணிகளின் பெயர்களிற் பின்வருநிலையும் ஒட்டும் தண்டியலங்காரத்திற் கூறியுள்ள பெயர்களாகின்றன. (17) அடியார்க்கு நல்லார் சிலப்பதிகாரத்தின் உரையில் எடுத்துக்காட்டியிருக்கும் அணியிலக்கணச் சூத்திரங்கள் தண்டியலங்காரத்துட் காணப்படுகின்றனவென்று முன்கூறப்பட்டது. இவ்வுரையாசிரியர்கள் காலம் இன்னதென வரையறுத்துக் கூறவியலாதாயினும் அதன் மேலெல்லையைச்சிறிதேறக்குறைய இன்னதெனக் காட்டவியலும். எவ்வாறெனின் அடியார்க்கு நல்லார் சிலப்பதிகாரத்தினுரையிற் கலிங்கத்துப்பரணியிலிருந்து மேற்கோள் காட்டியிருக்கின்றமையாலும், கலிங்கத்துப் பரணியென்னும் நூல் குலோத்துங்க சோழனைப்பற்றிக் கூறுதலின் அச்சோழன் அரசாண்ட

---

(14) समासोक्तिः परिस्फूर्तिः प्रस्तुतेऽप्रस्तुतस्य चेत् ।
अप्रस्तुतप्रशंसा स्यात् सा यत्र प्रस्तुताश्रया ॥

(15) वस्तु किञ्चिदभिप्रेत्य तत्तुल्यस्यान्यवस्तुनः ।
उक्तिः संक्षेपरूपत्वात् सा समासोक्तिरिष्यते ।
अप्रस्तुतप्रशंसा स्यादक्रान्तेषु या स्तुतिः ॥

(16) வீரசோழியம் அலங்காரப்படலம் செய்யுள் 11-உரை.

* பரிமேலழகர் பிறிதுமொழிதலென்னு மலங்காரத்துக்குப் பிறர் மதமாக் காட்டியிருக்கும் நுவலாநுவற்சி யென்னும் பெயர் வீரசோழியத்தின் உரையிற் காணப்படுகின்றது. மூலத்திற் கூறியுள்ள நுவலாச்சொல் என்னும் அலங்காரத்துக்கு இதனை மறுபெயராகக் காட்டியிருக்கின்றார். காவ்யாதர்சத்திற் கூறியுள்ள அலங்காரங்களின் முறையை வீரசோழிய நூலாசிரியர் தழுவியிருத்தலால் நுவலாச்சொல் என்பது அப்ரஸ்துதப்ரசம்ஸையின் மொழிபெயர்ப்பாகத் தோன்றுமாயினும் "மாறியிகழ்மொழி வண்புகழாய் நுவலாச் சொல் வரும்" (அலங்காரப் படலம் செய்யுள் 32) என்று இவர் இதற்கு இலக்கணம் கூறியிருத்தலால், இது வ்யாஜஸ்துதியாதும். பெருந்தேவனார் இதற்குப் புகழாப் புகழ்ச்சி யென்னும் ஒரு பெயரும் கொடுத்திருக்கிறார். இதுவே தண்டியலங்காரத்திலும் இவ்வணிக்குக் கூறியுள்ள பெயராகும். "தேறுந் தெரிவில் புகழ்ச்சியொன்றைப் பழிக்கப் பிறிது, கூறிப் புகழுதல்" (அலங்காரப்படலம், செய்யுள் 32) என்ற இலக்கணத்தால் தெரிவில் புகழ்ச்சி யென்பது அப்ரஸ்துதப்ரசம்ஸையாகின்றது.



காலத்துத் தோன்றிய நூலாதல் வேண்டுமாதலாலும் இவ்வரசன் ஆண்ட காலம் கி-பி. பதினொன்றாம் நூற்றாண்டின் பிற்கூறும் பன்னிரண்டாம் நூற்றாண்டின் தொடக்கமும் ஆகின்றமையாலும் இவ்வுரையாசிரியர் இந்தக் காலவரைக்குப் பின்னிருந்தவராதல் வேண்டும்.

(இன்னும் வரும்)

பி. குருராவ்.

---

## HOW TO IMPROVE TAMIL.

## தமிழை வளர்க்குமாறு.

தமிழ்மொழி பல்வகைப் பொருளும் பல்வகை யின்பமுஞ் செறிந்து விளங்கும் மேன்மைத்தாதலின் அத்தகைய சிறந்த பாஷையை உன்னத நிலைமைக்குக் கொண்டு வருவது தமிழ் மக்களாகிய நமது முதற்கடமைகளுள் ஒன்று. தமிழ் மொழியை உன்னத நிலைமைக்குக் கொண்டுவருவது இன்றியமையாக் கடமை யெனவே, தமிழ்மொழி தற்காலத்திற் றனது தொன்மைக்கும் அருமைக்கும் பெருமைக்குந் தக்க நிலைமையிலில்லாதிருப்பது தானே பெறப்படும். தக்க நிலைமைக்குத் தமிழ் வாராததன் காரணம் அதன் தொன்மையும் பெருமையும் தமிழ் மக்களுட்பலர் அறியாமலிருப்பதே. ஆகவே, முதற்கண், தமிழின் தொன்மையை நாட்டப் புகுவாம்.

நமது தண்டமிழின் காலம் வரையறைக்குட்படாதது. எக்காலத்தில் முதலில் உண்டானதென்று சுட்டிக்கூற ஒருவராலும் இயலாது. தமிழ் மற்றப் பாஷைகள் போலாது ஆதியாயுள்ள தெய்வ பாஷை யென்பதூஉம், ஆரியமுந் தமிழுமே ஆதியிற் கடவுளால் உண்டாக்கப்பட்டன வென்பதூஉம், அவ்விரு பாஷைகளிலும் எல்லாப் பொருள்களுமடங்கியுள்ளன வென்பதூஉம் புராண வாயிலானுஞ் சாத்திர வாயிலானுந் தெள்ளிதிற் புலப்படும். சிவபெருமானே தமிழை அகத்தியர்க் குணர்த்தின ரென்பதை

"ஆதியிற் றமிழ்நூ லகத்தியர்க் குணர்த்திய
மாதொரு பாகனை வழுத்துதூஉம்
போத பெய்ஞ் ஞான நலம்பெறற் பொருட்டே."

என்னுந் தொல்காப்பிய வுரைப்பாயிர முகத்தானுணர்க. இவ்வுண்மை உணராதார் தமிழ் அகத்தியரா லுண்டாக்கப்பட்ட தென்றும், அது வடமொழிபோற் சிறந்ததன்றென்றுங் கூறுவர். தென்மொழியும் வடமொழியும் இணை யென்பதே எடுத்தோத வேண்டிக் காஞ்சிப்புராண முடையார்

"இருமொழிக்குங் கண்ணுதலார் முதற்குரவ ரியல்வாய்ப்ப
விருமொழியும் வழிப்படுத்தார் முனிவேந்த ரிசைபரப்பு

மிருமொழியு மான்றவரே தழீஇயினா ரென்றாலிவ்
விருமொழியு நிகரென்னு மிதற்கைய முளதேயோ ?"

என்று கூறினார்.

" ஆரியமுஞ் செந்தமிழு மாராய்ந் ததனினிது
சீரிய தென்றொன்றைச் செப்பரிதால்—ஆரியம்
வேத முடைத்துத் தமிழ்திரு வள்ளுவனார்
ஓது குறட்பா வுடைத்து"

என்னுந் திருவள்ளுவ மாலைச் செய்யுளையுங் காண்க. தமிழுக்குச் சிவபெருமானே முதற்குரவராயினும், பொதுப்படத் 'தமிழ்க் கடவுள்' என்பது குமர வேளையே குறிப்பிக்கும். அவ்வறுமுகக்கடவுளே முத்தமிழின் நுண்பொருளை அகத்தியர் முதலானவர்க்குப் போதித்துள்ளனர். இவ்வுண்மையை மெய்ஞ்ஞானியாகிய அருணகிரிநாத சுவாமிகள் தமது பழநித்திருப்புகழின்கட் கூறியுள்ளார். சுவாமிகள் வாக்கு நோக்குநர் மனதிற் கழிபேரின்பம் விளைத்தலின் ஈண்டெடுத் தெழுதியுள்ளேன்.

" சடிலத் தவனிட் டவிசிட் டகுலத்
தொருசெட் டியிடத் தினுதித் தருள்வித்
தகருத் ரஜன்மப் பெயர்செப் பியிடப் பரிவாலே—
சனகர்க் குமகஸ்த் யபுலஸ்த் யசனற்
குமரர்க் குமனுக் க்ரகமெய்ப் பலகைச்
சதுபத் துநவப் புலவர்க் கும்விபத் தியல்ஞான ;
படலத் துறலக் கணலக் யதமிழ்த்
த்ரயமத் திலகப் பொருள்வ்ருத் தியினைப்
பழுதற் றுணர்வித் தருள்வித் தகசற் குருநாதா—"

மேற் கூறிய உண்மைகளால், அகத்தியர்க்கு ஒரு காலத்தில் தமிழே தெரியாதென்பதும், பின்னர், அவருக்குச் சிவபெருமானும் சடானனக்கடவுளும் அறிவுறுத்தன ரென்பதும் பெறப்படும். இதனுண்மையைத் திருவிளையாடற் புராணத்திற் 'கீரனுக் கிலக்கண முபதேசித்த படல'த்திற் பரக்கக்காணலாம்.

" விடைகொடு போவா னென்றை வேண்டினா னேகுந் தேயந்
தொடைபெறு தமிழ்நா டென்று சொல்லுப வந்த நாட்டி
னிடையயின் மனித்த ரெல்லா மின்றமி ழாய்ந்து கேள்வி
யுடையவ ரென்ப கேட்டார்க் குத்தர முரைத்தல் வேண்டும்.

சித்தமா சகலவிந்தச் செந்தமி ழியனூ றன்னை
யத்தனே யருளிச் செய்தி யென்றன னனையான்றேற
வைத்தனை முதனூ றன்னை மற்றது தெளிந்த பின்னு
மித்தனே யடியே னென்று நின்னடி காண்பே னென்றான்."

எனக் கூறியிருப்பதனால் தென்றல்வரை முனிநாதன் ஈண்டுச் செல்வதற்கு முன்னரே தென்தேசத்துள்ளார் தமிழில் 'ஆய்ந்த கேள்வி' யுடையவ ரென்



பது தெளிவாகும். ஆதலின், குறுமுனி தமது இலக்கண நூலால் ஒருவாறு தமிழைச் சீர்ப்படுத்தினரென்று கொள்ளக்கூடுமே யன்றி அவரே இத்தமிழுக்கு முதல்வரெனக் கொள்ளுதல் ஒருவாற்றானுஞ் சாலாது. "அழகினானும் வலிமையானுமன்றிக் காலத்தினானும் ஒன்றற்கொன்று சமத்துவ முடையதென் றொப்பித்தற்கன்றே ஒன்றை வடமொழி யென்பார் மற்றதைத் தென்மொழி யென்பதூஉம், ஒன்றைச் சிவபெருமான் தந்ததென்பார் மற்றதைச் சுப்பிரமணியக் கடவுள் தந்தருளிய தென்பதூஉம்! வடக்குக்குத் தெற்குஞ் சுவாமிக்குச் சக்தியும் பிந்திய வென்றாற் சமஸ்கிருதந் தமிழிற்கு முந்திய தென்க. *** சமஸ்கிருதத்தினின்று பல நூல்களும் அவற்றோடு பல்லாயிர மொழிகளுந் தமிழில் வந்ததும் மெய்யே. அதனாற் தமிழ் பிந்தியதென் றெங்ஙனம் போதரும்! வடமொழி மந்திரத்து வாழ்ந்தார் கொண்ட அகந்தையை ஆண்டுச் சிற்றில் நிகர்த்த தென்மொழியைச் சிறப்பித்துக் கூடகோபுரம் வகுத்து மாடமாளிகையாக்கி அடக்கினமையால் வடமொழி முந்தியதா? ஒரு காலத்திற் குடிசையாயிருந்து பின் மண்டபமாயினதால் அக்குடிசை தோன்றிய காலம் அயலில் வகுத்த மண்டபத்திற்குப் பிந்திய தென்று சாதிப்பது தர்க்கலக்ஷணமாகுமா? விபரீதம்! விபரீதம்!!" என வினாவிடைகளாற் றமிழுஞ் சமஸ்கிருதமும் ஒரே காலத்தன வென்பதை நன்கு விளக்கி யுள்ளனர் தமிழின் அபிவிருத்தியின் பொருட்டுத் தமது காலத்திலுழைத்து வந்த சி. வை. தாமோதரம் பிள்ளை யவர்கள். இதுகாறுந் தமிழின் தொன்மையைக் கூறினேம்; இனித் தமிழினருமையும் பெருமையும் அறையப்புகுவாம்.

தமிழின் தொன்மையே அதன் அருமைக்கும் பெருமைக்கும் முக்கிய லக்ஷணமா யிருக்கின்றது. தமிழ் மொழியுடன் வடமொழி சம்பந்தம் மிக்கிருத்தலான் வடமொழி தமிழுக்குத் தாய்மொழி யென்பாரு முளர். அவர் வடமொழியி னுதவியின்றித் தனித் தமிழ்மொழியால் யாக்கப்பட்டுள நூல் ஒன்றேனு மில்லையே யெனவுங் கூறுவர்.

" அன்றியுந் தமிழ்நூற் களவிலை யவற்று
ளொன்றே யாயினுந் தனித்தமி ழுண்டோ?"

நாயனார் குறள், ஔவைபாடல் முதலியவற்றில் வரும் ஆரிய மொழி எத்துணைச் சிறு பான்மைய ?

கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவ
னற்றா டொழாஅ ரெனின்.

நன்றி யொருவற்குச் செய்தக்கா லந்நன்றி
யென்று தருங்கொ லெனவேண்டா—நின்று

சலியா தெழுதெங்கு நாளுண்ட நீரைத்
தலையாலே தான்றருத லால்.

இவற்றுள் வடசொல் எங்கே? குமரகுருபர சுவாமிகள் நூல் எத்தன்மைத்து!

நீரிற் குமிழி யிளமை நிறை செல்வ
நீரிற் சுருட்டு நெடுந்திரைகள்—நீரி
லெழுத்தாகும் யாக்கை நமரங்காள் என்னே
வழுத்தாத தெம்பிரான் மன்று.

இவ்வாறு மயங்கிக்கூறினவர்களுள் ஒருவர் தமிழிலக்கணக்கடன்முழுதுண்ட சுவாமிநாத தேசிகர். அவர் தம் மரபின் முன்னோர் மதத்தையும் மறந்து,

'நூலுரை போதகா சிரியர் மூவரு—
முக்குண வசத்தான் முறைபிறழ்ந் தறைவரே.'

என்னுந் தன் விதிக்குத் தன்னையே இலக்கியமாக ஒப்பித்தாற் போல,

"அன்றியு மைந்தெழுத் தாலொரு பாடையென்
றறையவு நாணுவ ரறிவுடை யோரே."

யென்று மாழ்கினர். இது வடமொழிப் பயிற்சியே மிக்குடையராய் அதன் மேற்கொண்ட பேரபிமானத்தாலும் அம்மொழியின்மேற் றென்மொழி யன்றிப் பிறிது மொழிதெரியாக் குறைவாலும் நேர்ந்த வழுவே யாகும். நிற்க,

சைவசமய குரவர்கள் முழுமுதற் கடவுளாம் முக்கண் மூர்த்தியைத் துதித்தும் பல அற்புதங்களைக் காட்டினது அமிழ்திற் சிறந்த தமிழ்மொழிப் பனுவல்களா லன்றோ ? திருவிளையாடற் புராண முடையார்

"தொண்டர் நாதனைத் தூதிடை விடுத்தது முதலை
யுண்ட பாலனை யழைத்தது மெலும்புபெண் ணுருவாக்
கண்ட தும்மறைக் கதவினைத் திறந்ததுங் கன்னித்
தண்டமிழ்ச் சொலோ மறுபுலச் சொற்களோ சாற்றீர்?"

என வினவியுள்ளார். தமிழின் நுண்மையையும் அருமையையும் மணிவாசகப் பெருமானார் தமது கோவையாரின்கண் 'பாங்கன் வினாதல்' என்னுந் துறையிற் றெரித்துளார். அஃது

கலிகெழு திரடோண் மெலிவது கண்ட
இன்னுயிர்ப் பாங்கன் மன்னனை வினாயது.

அதாவது,

'தன்னை நினைந்துவாராநின்ற தலைமகனைத் தானெதிர்ப்பட்டு அடியிற் கொண்டு முடிகாறு நோக்கி நின்னுடைய தோள்கண் மெலிந்து நீ யிவ்வா றுதற்குக் காரண மென்னோ.? கூடலின்கணாய்ந்த ஒள்ளிய இனிய தமிழின் துறைகளிடத்து நுழைந்தாயோ ? அன்றி ஏழிசையினது சூழலின்கட் புகுத



லானோ இறைவனே பெரிய வரைபோலுநின்றோள்கட்கு மெலியப்புகு ந்தெய்திய தென்னோ ?'

"சிறைவான் புனற்றில்லைச் சிற்றம் பலத்துமென் சிந்தையுள்ளும்
உறைவா னுயர்மதிற் கூடலி னாய்ந்தவொண் டீந்தமிழின்
துறைவாய் நுழைந்தனை யோவன்றி யேழிசைச் சூழல்புக்கோ
இறைவா தடவரைத் தோட்கென் கொலாம்புகுந் தெய்தியதே."

தொன்னூல்கள் பலவற்றுள்ளும் பத்திச்சுவை, சொல்லாழ்ச்சி, சொல்லமைப்பு, சொல்லின்பம், சொற்றிண்மை; பொருட்டிண்மை ஆகிய இவ்வருமையான இலக்கணங்களமைந்த தனி நூல் 'முத்தனார் மாணிக்க வாசகனார் முத்திக்கு வித்தனார் வாதவூர் வித்தகனார்' திருவாய் மலர்ந்த திருவாசகமே. திருவாசகத்தின் சிறப்பைச் சிவப்பிரகாச சுவாமிகள் வெகு நன்றாக விளக்கியுள்ளார்.

" ஆரண மொழியோ
வாதிசீர் பரவும் வாதவூ ரண்ணல்
மலர்வாய்ப் பிறந்த வாசகத் தேனோ
யாதோ சிறந்த தென்குவீ ராயின்,
வேத மோதின் விழிநீர் பெருக்கி
நெஞ்சநெக் குருகி நிற்பவர்க் காண்கிலேந்
திருவா சகமிங் கொருகா லோதிற்
கருங்கன் மனமுங் கரைந்துகக் கண்க
டொடுமணற் கேணியிற் சுரந்துநீர் பாய
மெய்ம்மயிர் பொடிப்ப விதிர்விதிர்ப் பெய்தி
யன்ப ராகுந ரன்றி
மன்பதை யுலகின் மற்றைய ரிலரே."

அருமையும் பெருமையு மொருங்கே அமைந்துள்ள நூல்கள் தமிழ் மொழியில் இன்னும் பலவுள. அவற்றுட் சில நூல்களின் பெயரைக் கூறுதும்.

| | |
|---|---|
| 1. திருக்கோவையார் | 6. வில்லி பாரதம் |
| 2. கந்த புராணம் | 7. தணிகைப் புராணம் |
| 3. கம்ப ராமாயணம் | 8 காஞ்சிப் புராணம் |
| 4. பெரிய புராணம் | 9. பரங்கிரிப் புராணம் |
| 5. திருக்குறள். | 10. கம்பராமாயணம். |

முதலியன.

இவ்வளவதிகமாகத் தமிழினருமையும் பெருமையும் எடுத்துக்காட்டினது வண்டமிழின் பால் வெறுப்புடையார் விருப்படைய வேண்டியும், விருப்புடையார் மனவெழுச்சி மேலிட்டு மீட்டும் மீட்டும் தமிழ்ப்பயிற்சி செய்யவேண்டியுமே. இனி விடயத்தைக் குறித்துப் பேசப்புகுவாம்.

தமிழை என்னணம் மேம்படுத்துவது;—தமிழை உயர்ந்த நிலைமைக்குக் கொண்டு வரும் விருப்பமுடையார் தமிழ்ப்பயிற்சி நன்குள்ளவரா யிருத்தல் மிக அவசியமே. ஒரு பாஷையிலுள்ள பொருளினை அறிய வேண்டின் சில உதவிக்கருவிகள் வேண்டும்.

(1) ஆசிரிய விலக்கண மமைந்த குருவினை அடுத்தல் வேண்டும்.

(2) நூல்களி னிலக்கணம் நிறைந்த புத்தகங்களை நாடிக் கற்றல் வேண்டும்.

(3) கற்றோ டிணங்குதல் வேண்டும்.

கற்றோ டிணங்குத லென்பனமெனின், அவரொருங்கு சேர்ந்துள்ள சங்கங்களைச்சார்தலும், அச்சங்கத்தினரொடு பழகிச்சேர்தலும், ஆண்டு நடக்கும் விடயங்களை நன்றாய் ஓர்தலுமே. இங்ஙனந் தமிழ்ச் சங்கங்களை ஏற்படுத்தி அவைகளை வளர்ந்தோங்கும்படி செய்வதே தமிழின் விருத்திக்கு அநுகூலமாயிருக்கும். தமிழ்ப் பத்திரிகைகள் பல உலவுகின்றன வாதலின் அவை வளர்ந்தோங்குமாறு, கல்வி கற்றுளார் அவைகளை ஆதரித்தல் வேண்டும். பத்திரிகைகளுக்கு விஷய மெழுதுவார் தமிழின் விருத்திக்குக் காரணமான விஷயங்களைப் பற்றி எழுதல் வேண்டும். தமிழ்க் கவிகளது சரிதங்களைப் பற்றி ஆராய்ந்தெழுதல்மிக அவசியமானது. தமிழில் அத்தகைய சரிதங்கள் இல்லாதிருப்பது ஒரு பெருங்குறையே. சங்கத்தார் காலத்திலே னுர் தமிழின்பால் அவாக்கொண்ட அரசர் பலரிருந்தனர். இக்காலமோ, 'தேனினு மினிய செய்யுள் யாத்திடினுஞ் செந்தமி ழுரைவகுத்திடினு, மேனைக் கேளா திருக்கு'ங் காலம். தமிழில் அருமையாக வமைந்துள்ள விடயங்களைப் பிறபாஷைகளில் மொழி பெயர்த்தும், பிறபாஷைகளிலுள்ள அருமையான பொருள்களைத் தமிழில் விளக்கியும் தமிழை மேம்படுத்துவது தமிழுடன் பிறிதொரு பாஷையில் வல்லாரது கடமையாகும். இப்போது நமக்கு நமது சுயபாஷையிற் பேசுவதே கஷ்டமாயிருக்கிறது. ஆங்கிலபாஷையிலும் நமது கருத்தை முற்றிலும் வெளியிட முடியவில்லை. இவ்விடயத்தைப்பற்றி 'மாணிக்கவாசகர்' என்னும் புத்தகம் எழுதியுள்ள திருச்சிற்றம்பலம் பிள்ளை யென்பார் எழுதி யிருக்கிறது மிக உண்மையே. பின் வருவது அவர் கூற்று. "இனி ஒரு சாரார் 'நாம் தேச சரித்திரங்களையும் சாஸ்திரங்களையும் தமிழில் மொழிபெயர்க்கலாமென்றால் சில விஷயங்களை யறிவிக்க ஏற்ற மொழிகள் கண்டு பிடிப்பது அதிக கஷ்டமாயிருக்கிறது' என்கின்றார்கள். ஆனால் அவர்கள் இவ்விஷயத்தையுங் கூட இவ்வாறு தமிழாகச் சொல்லுவதில்லை. 'நாம் History களையும் Science களையும் Tamil Languageல் translate பண்ணலாமென்றால் சில thingsகளை express பண்ணுகிறதற்கு technical terms களை find out பண்ணுகிறது பெரிய difficulty ஆக இருக்கிறது' என்றுதான் சொல்லுவார்கள். இவ்விரத்தினங்கள் இழைக்கத்தக்க தொன்றாகவாயினும் இருக்கும் பாக்கியம் நம் தமிழ் பெற்றதே என்பதற்கு மகிழவேண்டும்." ஆகவே, சுயபாஷையின் விருத்தியின் பொருட்டு ஏற்படுத்தப்பட்டுள்ள சங்கங்களின் அவயவிகளாகி, நமக்குத் தெரிந்த விடயத்தைப் பிறருக் குரைத்தும், பிறர் கூறும் மெய்ப்பொருளை ஆய்ந்தறிந்தும் ஒழுகுதல் வேண்டும்.



தமிழிற் செய்யுள் ரூபத்தில் யாக்கப்பட்டுள நூல்கள் பல இருக்கின்றன; வசன ரூபத்திலுள்ளன சிலவே. அக்குறையை நீக்குதற் பொருட்டு கிறித்தவக் கலாசாலைத் தலைமைத் தமிழ்ப் பண்டிதர் பிரமஸ்ரீ வி. கோ. சூரிய நாராயண சாஸ்திரியாரவர்கள் பி. ஏ. தமது இடைவிடா முயற்சியால் வசன நூல்களியற்றியும், இயற்றுவித்தும் நாடகத்தமிழின்மை பற்றி நாடக நூல்களியற்றியும் இயற்றுவித்தும், நாடகவியல் என்னுஞ் சிறந்ததோ ரிலக்கண நூலொன்றியற்றியும் தமிழுலகுக்கு மிக்க நன்மை புரிந்திருக்கின்றார். ஆதலின் வசன நூல்கள் பெருகுதற்கு வேண்டிய வழியினை நாடுதல் வேண்டும். வசன நடையானது எளிதாய், யாவருக்கும் புலப்படுந் தன்மைத்தாய், விழுமிய ஓசை யுடையதாய்க் கன்மலைச் சாரலில் மெல்லென வீழும் அருவிபோலச் செல்லுந் தன்மைத்தாய் படிக்குநர் மனவெழுச்சியும் இன்பமும் பெற்று மகிழுமாறும் இருத்தல் வேண்டும். தமிழில் மேற் கூறிய லக்ஷணங்களுடன் அமைந்துள வசன நூல்கள் பஞ்ச தந்திரமும், ஆறுமுக நாவலரியற்றியுள்ள பெரிய புராணம் முதலியனவும், இன்னும் சில நூல்களுமே. பரிமேலழகர் முதலிய தொல்லாசிரியர்களது வசன நடை கற்றோர்க்கு இன்பம் விளைக்குமே யொழிய மற்றோர்க்கு அத்துணை இன்பம் பயவாது. ஆறுமுக நாவலரது வசனம் மிகவும் இனிமையானது. அவரது புத்தகங்களைப் படித்துள்ளார் யாவரு மிதனுண்மை யறிவார். விழுமிய நடையில் யாக்கப்பட்டுள நூல்களுளொன்று 'மதிவாணன்' என்னும் உயரிய நூல். அதன் நடையின் சிறப்பைக் காட்டுதற்பொருட்டு அப்புத்தகத்தினின்றும் ஒரு வாக்கியம் எழுதியுள்ளேன். ஆசிரியர் 'மாயவன்' என்பவனது குணத்தை வருணிக்கின்றார். "அவன் ஒன்று செய்வதற் கொன்பான் வழி கொள்வான்; ஒன்றனைக்காட்டி மற்றொன்றனைப் புரிவதி லொப்புயர் வற்றவன்; கைதவத் தன்மையிற் கண்ணனை வென்றவன்; ஒரு கணப்பொழுதினி லூர்வலம் வருவான்; நயம்படப் பேசுவான்; ஞாட்பினும் வல்லான்; வையகத்தாரெலாம் பொய்யகத்தாரென்பான். என்னே யவன்றன் மாயம்!' இத்தகைய சிறப்பு வாய்ந்த வசன நூல்கள் சிலவே தமிழில் உள. இத்தன்மைய நூல்களுடன் பழகினால் நமது வசன நடை எளிதில் இனிமை பெறும். ஆகவே, நல்லாசிரியனை யடுத்துக் கற்றறிந்தோரால் சிறந்தனவென எடுத்தாளப்பட்ட நூல்களிற் பயின்றும், தமிழபிமானிகள் சேர்ந்துள அவையின்கட் சேர்ந்தும் தமிழின்

கண் விருத்தி அடைதல் வேண்டும். இவ்வாறு தமிழ்ச் சங்கங்களையும் தமிழ்ப் புத்தக சாலைகளையும் ஏற்படுத்தித் தமிழ்ப் பத்திரிகைகளையும் தமிழ் வல்லாரையும் ஆதரித்துப் போற்றி தமிழை விருத்திசெய்வது தமிழ் மக்களாகிய நமது இன்றியமையாக் கடமையாகும்.

வ. சு. செங்கல்வராயன்.

---

## THE SURVIVAL OF THE FITTEST.

## தகுந்தன தங்கி நிற்றல்.

விஷயத்தினுட் புகுவதன் முன்னர் இரண்டொரு மொழிகள் பொதுவாகக் கூறுவது நன்றாம். தகுந்தனதங்கி நிற்றலெனும் இவ்விஷயம் மேலோர் தெரிந்துரைத்த மிகவுமான்றவொரு பெரும் பொருளென்று யாவரு மறிந்திருத்தல் வேண்டும். அதனை ஆங்கிலர் 'Survival of the Fittest' என்பர். அதன் பெருமையினையும் விரிவினையுங்குறித்து ஈங்கெடுத்து மொழிதலவசியமன்று. உயிர்நூற் புலவோர் வெளியிட்ட இவ் விஷயத்தின் வரலாற்றினைக் குறித்தே பல நூல்கள் எழுதலாமெனின், அதன் பரப்பையும், விசேஷத்தையுங் குறித்துக் கருதலெளிதாம். அன்றி, அவ்வாறு பல் நூல்கள் ஆங்கிலத்திலெழுதப்பட்டு மிருக்கின்றன. உயிர்நூற் குயி போன்ற இப்பகுதியினைக் குறித்துத் தமிழிலேற்றவாறு கூறுதற்குத் தக்க சொற்களுமில்லை. இருப்பினும் பலரு மறியச் சொல்வது அருமையாய் முடியும். அற்றேனும், மேற்புலவிஞ்ஞானிகள் வாணாள் முழுவதும் பயின்று அரிதிற் றெரிந்த விஷயங்கள் பலவற்றினையும் தமிழிற்கு மாற்றும் தொழிலைக் கைகடந்ததென விடலுங் கூடாது. ஆகையால் ஒருண்மைப்பாடுடன் அவையிற்றினைத் தமிழாற் பெய்ய முயல்வதிற் கூடியமட்டும் எளிய நடையிற் கூறும் மனவுறுதியுடன் ஈங்கு சிலவற்றினைக் குறிப்பாம்.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் கல்வியிற்றெளிந்த ஆராய்ச்சிகளுள் மிகச்சிறந்தோங்கி நிலவுவதைத் தெளிவாக்குவது போன்று மக்களின் உலகவுணர்ச்சியைத் திருந்தியதாக்கிக் காரணமற்ற வீண்வாதங்கள் பலவற்றிற்கும் சின்னாள் இடனாய் நின்று இறுதியில் வெற்றிபெற்றுவர்ந்து-விரிந்துபல்குதல் (Evolution) எனும் பொதுக் கொள்கையின் ஸ்தாபனமாம். யாமிப்போது கருதப்புகும் 'தகுந்தன தங்கி நிற்றல்' என்பது அப்பொதுக் கொள்கையின் ஒருறுப்பாம். இங்கு அக்கொள்கையின் சாரப்பொருளினைச் சற்று நோக்குவாம்.

நமது இந்தியாவில் தற்காலத்திற் பலரும் கொள்வதுபோலன்றே மேலோருஞ் சில வருஷங்கள் முன்னர் இவ்வுலகத்திற் காணப்படும் உயிர்ப்பொருள்களெவ்வொன்றுங் கடவுளாலே நேரிற் சிருஷ்டிக்கப்பட்டது



என்று கருதியிருந்தனர். இது போலிக்கருத்தென பிற்காலத்தில் நிறுவப்பட்டது. இப்போது காணப்படும் பிராணி வருக்கங்களெல்லாம் "ஒருவகை ஜந்துக்களினின்றும் வேறுவகை ஜந்துக்கள் படிக்கிரமமான மாறுபாடு அல்லது உருவத்தின் திரிபினாலுண்டாவதாற் றோற்றுவன" என்பதே தற்கால உயிர்நூலோரது கொள்கை. மற்று உண்மையு மதுவேயென மதிமோசமுறாது தெளிவுடன் ஆராய்வோருக்கு வெளியாகும். அதாவது, ஒருவகைப் பிராணிகளின் கூட்டமொன்றைச் சேர்த்து ஓரிடத்திலிப்பூமியில் விட்டுவிட்டு, ஏற்ற காரண காரியங்கள் நிறைவற நடந்துவர, பல்பல நூற்றாண்டுகளின் பின்னர் அதனை நோக்க நேர்வதாகில் அவ்வொரு வகையினின்றுமே பலவகைகள் பிரிந்து வளர்ந்து வருவதைக் கண்ணுறல் கூடும் என்பதே. அதன் காரணமாகவே "மனிதனெனும் ஒரு பிராணியும் பலபல கோடி வருடங்கள் முன்னர் வேண்டிய அணைக்கருவிகளுடன் மனிதனாகவே இப்பூமியிற் கடவுளாற் சிருஷ்டிக்கப்படவில்லை. மற்றுத் தன்னை நெடுந்தூர முறழும் சில குரங்குகள் மரபிற் (Anthropoid apes) பிறந்தோன். அதாவது ஒருவகையான குரக்கினத்தினின்றும் நவமாய மற்றொருவகை மக்களினம் பிரிந்துபோயிற்று" என்று உயிர்நூற் புலவர் பல காரணங்களுடன் நிலைநிறுத்தி யிருக்கின்றனர். இஃதெவ்வாறெனப் பகுத்து நோக்குவாம்.

உயிரென்று இவ்வுலகினிலொன்று இருப்பதைப் போன்றே அவ்வுயிருள்ள பொருள்கள் ஜீவித்திருக்க ஒரு மலைவு, அல்லது கடினம், அல்லது வருத்தமொன்று இருந்துகொண்டே யிருக்கின்றது. பிறப்பு வளர்வு என்ற இவ்விரண்டு அரிய சிறப்பியல்புகளைப் பெற்ற பொருளனைத்துமொரு காலத்திற் சாவு எனும் நிலையொன்றினையு மடைந்தே தீரல்வேண்டும். (நியாயமாகவே, ஆங்கிலர் Pratozoa என்று கூறும் ஓருயிர் முதலிற் (Cell) றங்கள் ஆட்டவோட்டங்களனைத்தையு மொடுக்கி, 350-மடங்கு பெரிதாக்குங் கண்ணாடி வைத்து நோக்கினும், கண்ணிற்குத் தெளிவாய்ப் புலப்படா அப்பெரியோர்களைத் தவிர்த்தே இப்போது கூறுவது. அவை ஒருநாளுஞ் சாகிறதில்லை என்பது பலர் துணிபு. அச்சாவு அல்லது நிலைகுலைதல் என்பது பலவிதத்தால் நேரிடும். அதனாலன்றே நம்மவர் தன் உருவகஞ் செய்து கூற்றுவன் என்றொருவனைப்படைத்திட்டனர். இக்கூற்றுவனுக்குரிய மரியாதையினையும் பயத்தினையுமே, மலைவு என்ற மொழியால் யாம் இங்கு குறிக்கின்றோம். இந்த மலைவினையே தமிழர் வாழ்க்கைப் போர் என்ற சிறப்பு மொழியா லழைக்கின்றனர். வாழ்க்கைப்போர் இவ்வுலகி லுண்டென்பதைத் தெரிவிக்க உதாரணங் காட்டலத்துணைக் கடினமன்று. மக்களுக்குள் நியாயவக்தர்களை எடுத்துக்கொள்வோம். சில வருஷங்களுக்கு முன்னிருந்த நியாயவக்தர்கள் எத்துணையோர், இப்போதுபிற்றிலிருந்து புறப்படுவதாங்கு ஆட்டைதோறுஞ் [illegible] சைவர்தோரென

வெளிவருவோர் எம்மடங்கு அதிகமானவர்? முன் ஓரிடத்திற் பரீக்ஷைகளான் வரையறுக்கப்படாத வுணர்வுடன் வருகிற வழக்குகளனைத்தையும் திரட்டிக்கொண்டிருந்தோர் இப்போது சுவர்ப்புற மொதுக்கப்பட்டனர். அச்சோ! அவர்தாமென்செய்வார்? வாழ்க்கைப்போர் கடினமாய் விட்டது. தகுந்தோரே தங்கிநிற்கவேண்டியதாயிற்று.

மக்களினை விடுத்து ஜந்துக்களினை எடுத்துக்கொள்வோம். நாக்குப் பூச்சி' என்று சிலர் கூறும் தடித்த வழுவழுப்பான புழுவொன்று (Round worm) மனிதன் வயிற்றிலிருந்து சில காலங்களில் விழுவதை யாவரு மறிந்திருக்கலாம்: இது மிகவுமஞ்சத்தகுந்த ஒரு பிராணி. மக்கள் வயிற்றினை எவ்வாறு அஃது அடைகின்றது என்பதைக் குறித்துத் திருந்திய முறையில் ஒருவரும் இதுகாறும் அறியவில்லை. ஒன்று மட்டும் மிகவும் நிச்சயமான விஷயம். மக்கள் வயிற்றிலேயே உண்டாகின்றது என்று சிலர் கருதுவதுபோலிக்கருத்து. மனிதன் வயிற்றிலேயே அஃது உண்டாகற்பாலதன்று. அனேகமாய் அது தாகத்திற்கெடுத்துக்கொள்ளும் தண்ணீர் வழியாய்ப்போய்ச் சேரலாகும். ஒருவர் வயிற்றினை சேர்வதாகில் அது விளைக்குந் தீங்கிற்கு எல்லை யில்லை. மக்கள் மகப்பேரடையப் படுங் கஷ்டம் எவ்வளவோவாக இச்சிறிய பொட்டு நாளொன்றுக்கு 15,000த்திற்குறையா முட்டையிட்டு விடுப்பதாகக் கணக்குப் போடப்பட்டிருக்கிறது. ஒரு மாதத்திற்கு அது வயிற்றில் தங்குவதாகில் 450,000 குஞ்சுகளாகின்றன. அவையிற்றினுக்கு உணவு நமதுணவும் குருதியுந்தாம். இவ்வளவினையும் வயிற்றில் வைத்திருப்பவர்கதி என்னாகும்! இரண்டு மூன்று மாதங்களுக்குமேல் அவை தங்குவதாகில் மனிதனிறத்தல் இன்றியமையாததாய் முடியும். மனிதனிறப்பதோடு அவை 13,50,000 புழுக்களும், அன்றி, இவையிட்ட முட்டைகளும் உடன்சாத லவசியமாகும். இப்படி எங்கும் புழுநிறைந்த உடலும், புழுவும் அப்புழுவின் வர்க்கமும் அழிந்து வருமாயின், புழுக்குல மழிந்தேபோம், மக்களெண்ணிக்கையும் வரவரக் குறையும். இவ்வினை விலக்கற்பொருட்டே இயற்கையிலோரொழுங்கு ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அன்று பிறந்தபுழுக்கள் அன்று அன்றுமலத்தோடு வெளிவந்துவிடல் வேண்டுமென்பதே அவ்வொழுங்கு. இதனால் மனிதனுயிருங் காப்பாற்றப்படுகின்றது. அவை ஒன்று கூடியிருப்பின் தம்முள் உண்டாகவேண்டிவரும் வாழ்க்கைப் போரும் தவிர்க்கப்படுகிறது. ஆனால் மலத்தோடு வெளிவந்த முட்டைகள் என்னாயின? அவையிற்றனைக் கவனிப்பாரில்லை. காற்றே அவைகளுக்கு ஏற்றாளாய்க் கையுதவி நமக்குமாற்றாளாய் முடிகின்றது. அக்குட்டிகள் காற்றால் தூக்கப்பட்டு மனிதன் குடிக்கும் நீரில்வந்து விழுகின்றன; அந்நீரை மனிதன்குடிப்பதாற் சிறிய நாக்குப்பூச்சி ஒன்றினை அடைவானென்றனன். இங்குகவனிக்கவேண்டிய திதே. நாளொன்றிற்கு வெளி



வரும் இப் 15,000 முட்டைகளும் மனிதன் குடிக்கும் தண்ணீரை எவ்வாறுவது இறுதியில் வந்தடைதல்வேண்டுமென்னும் யாதொரு நியதியுமில்லை. காற்று அடிப்பினு மடிக்கலாம்; அடிக்காதிருப்பினும் இருக்கலாம். அல்லது அடித்தும் அவையிற்றினைத் தூக்கிச் செல்லாதிருக்கலாம்; அன்றியும், காற்றேயடிக்காது, முதல்மனிதன் ஒரு குளக்கரையில் மலத்தை யிட்டுப்போக அதனுள்ளிருந்த அம்முட்டைகள் குளநீரைமெதுவாய் எளிதிலடைய, அந்நீரைப் பிறர் வடிக்கட்டாது குடிப்பதால், நீரிலிருந்து அவ்வயிற்றிற் சில அவர்வயிற் றெய்தலாகும். அதாவது, தினம் வெளிவரும் அப் 15,000 பொட்டுகளுக்குள் வாழ்க்கைப்போர் மிகக்கடினமாக நிகழ்கின்றது. போரில் வெற்றிபெற்றன மனிதனுயிரை வாங்குகின்றன; தோல்வியடைந்தன தக்கவிடத்தை - அதாவது உணவும் சுகமுங் கிடைக்கக்கூடிய மனிதன் வயிற்றகத்தைச்சாராது, தகுந்தனவனாகலால் தங்காது தாமே உயிர் துறக்கின்றன. இவ்வாறு மிகவுமற்பமான பூச்சிகளுக்குள்ளும் வாழ்க்கைப்போர் மக்களிற்போன்றே, உண்மையில், அவர்களுள் நடப்பதிற் பதின்மடங்கு நடந்துகொண்டே யிருக்கின்றது. அதனகண் வெற்றிபெற்றனவே இப்பூமியிற் றங்கத்தகுந்தனவாய் உயிர் நிலைத்திருக்கின்றன என்பது எளிதில் விளங்கும் விஷயம்.

மற்றுஞ் சிலபூச்சிகளை எடுத்துக்கொள்வோம். பல்லிகள் எவ்வகைச் சிறுபூச்சிகளையுந் தின்றுவிடும். முக்கியமாய் அவைகளுக்கு வண்ணாத்திப் பூச்சி, அதன்குட்டிகள், இவைகளின்மீது மிகுந்தவிருப்பம். வண்ணாத்திப் பூச்சியின் குட்டிகளென்றால் அவை சிறுவண்ணாத்திப்பூச்சிகளல்ல. அவையிற்றினைச் சிலர் 'எரிபுழு' என்பார்கள் (Caterpillars) 'கம்பளிப்பூச்சி' என்று அவற்றுடனியைபு உற்ற மற்றொரு வகையினைச் சாதாரணமாய்க் குறிப்பதுண்டு. அக்குட்டிகள் கண்டங்கண்டமாய்ச் சரியாய்ப் பிளக்கப்பட்ட உடலுடன், பெரும்பாலும் உடல்மீது கம்பளிப்பூச்சிக் கிருப்பது போன்று மயிரிராது, சிலகால்களை யடைந்திருக்கும். பூச்செடிகளினடியிலும், புல்நிரைந்த இடத்திலும் அப்பிராணிகளைக்காணல் எளிதாம். எப்போது எதுவாயினும் வெளிவருமென்று பார்த்திருந்து, பல்லிகள் வருவனவற்றை விழுங்கிவிடும். அவைமட்டுமல்ல, இன்னும் பலவகைப்பூச்சிகளுக்கும் அவ்வெரிபுழுமீது மிகுந்த ஆவல். குருவிகள், சில சிலந்திப்பூச்சிகள், சில பூரான்கள், இன்னும் பல பிராணிகள் அவையிற்றிற்குத் தீராவிரோதிகள். இவ்வாறு எப்புறமும் உயிர்தீர்க்கக் காத்திருக்கும்போது இவ்வேழை எரிபுழுக்கள் என்செயும்! தகுந்த உணவுதேடச் சிறிது ஊர்ந்தால் எவ்விரோதி குத்திக் கொன்றுவிடுவரோ! ஆகையால் அவ்வெரிபுழுக்குலத்தின் வாழ்க்கைப்போர் மிகக் கடினமாய் முடிகின்றது. எண்ணிறந்த எரிபுழுக்கள் தினமும் சாகாநிற்கின்றன. சிலவே உயிர்பெற்றுப் பின் வெண்ணாத்திப் பூச்சிக்களாகின்றன, இவைகளே வாழ்க்கைப்போரில் வெற்றி

பெற்றனவாம். இவைகளே தகுந்தன. இவைகளே தங்கி நிற்பன. நமது விஷயத்தி லடங்குவதல்லாவிடினும் இவ்வுதாரணத்தைக் குறித்து இன்னுஞ் சில விஷயங்கள் கூறலாகும்; அநேக எரிபுழுக்கள் வீணே உயிர் மாய்க்கின்றன. சிலவே உயிரிழக்காது வண்ணாத்திப் பூச்சியாகின்றன என்றேம். இதனின்றுமே எளிதில் யாவரு முணரக்கூடிய தொன்றுண்டு. உயிர்பெற்றிருக்குஞ் சில உயிரிழந்த பலவற்றினைக் காட்டிலும் ஏதாயினுமொரு தன்மையாதல், ஒருருப்பாதல், ஒருசெயலாதல், ஒரு தோற்றமாதல், ஏதாயினுமோரம்சத்தில் நுண்மையாதல் அதிகமாக அடைந்திருத்தல் வேண்டும். இல்லாவிடின் ஏனோ சில வெரிபுழுக்கள் மட்டும் நிலைத்திருத்தலாகும். அப்பலவற்றினைக் காட்டினும், இச்சிலவற்றில் ஏதாவதொரு விசேஷமிருந்தே தீரவேண்டும். வாழ்க்கைப்போர் கடினமாகவாக இவ்விசேஷத் தன்மை அல்லது சிறப்பியல்பு வரவர விருத்தியாகிக்கொண்டே வரும். வெகுகாலமாய்விடின் இச்சிறப்பியல்புகளே பொதுவியல்பாக மாறிவிடலாம். அப்போது பிற்சாற்றிய பொதுவியல்பெனக் கொண்ட பிராணிகள் அவ்வம்சங்களையே சிறப்பியல்புகளாய் (Individual variation) அடைந்திருந்த பிராணிகளின்றும் பிரிக்கப்பட்டு வேறுவகை (New Species) யாகின்றன. இச்சாரக் கருத்தினையே டார்வின் புலவர் தமது உயிர்வர்க்கத் தோற்றத் (Origin of Species) தினில் விரிவுடன் தெரிக்கின்றனர். முதலிற் கூறிய கம்பளிப் பூச்சி உடன்மீது மயிர் பெற்றிருத்தல் அதன் சிறப்பியல்பு—அதாவது மற்றைய சாதாரண வெரிபுழுக்களினின்றும் இதனைப் பிரித்தற்குரிய வேறுபாடு. இவ்வியல்பின் பயன் யாதென்பதைக் குறித்து மொழிதலவசியமன்று. மனிதனே அதனருகிற் செல்ல பயந்து நடுங்குவானாகில் மற்றைய பல்லி முதலியவற்றைக் குறித்துக் கேட்பானேன். மின்மினிப் பூச்சியினுடலிற் றோற்றும் வெளிச்சம் அதன் சிறப்பியல்பே. பல்லி அதன் இனமான மற்றைய பூச்சிகளனைத்தையும் விழுங்குமாகிலும், இதனருகிற் செல்லும்போது அதனொளியாற் பயந்து திரும்பிவிடும். மற்றுஞ் சில வெரி புழுக்கள் தங்கள் விரோதிகளினின்றும் தப்பித்தற் பொருட்டு தலையினை நல்ல பாம்பு படம் எடுப்பதுபோன்று விரித்து நடித்து அருகில் வந்த சத்துருக்களை அச்சுறுத்தி அனுப்பிவிடும். இவ்வாறு வாழ்க்கைப்போரில் வெற்றிபெற்று தகுந்தனவாய்த் தங்கி நிற்றற்பொருட்டு ஜந்துக்கள் பல்வேறு வகைத்தாய் வேறுபாறேம்.

இவ்விஷயத்தின் தலைக்குறியினிற் சிலர் இல்பொருள்காணுதல் கூடும். 'தகுந்தன தங்கி நிற்றல்' என்பது கீழ்ப்பிராணிகளுக்கேயன்றி மக்களுக்குப் பொருந்தாது என்று சிலர் கூறுகிற்பர். இது ஒரு போலி வழக்காம். வாழ்க்கைப்போர் மக்களுக் குண்டென்பதில் யாவரு முடன்படுவார். வாழ்க்கையில் வெற்றியென்பதும் தோல்வியென்பதும் அவர் தமக்குண்டு. வேறுபாடு அல்லது சிறப்பியல்பும் மக்களுக்குண்டு. உண்மையினில் மனிதனு



மொரு பிராணியேயன்றோ? செடி கொடிகளும் பிராணிகளே. எப்பிராணிக்கும் விரிந்து பல்குதல் என்பதுண்டு. மக்களுக்கு முன்னிருந்த இரண்டு கைகளும் இரண்டு கால்களுந் தாமே இப்போது மிருக்கின்றன. பின் ஏதோ வேறுபாடு என்று சிலர் ஐயுறலாகும். வாழ்க்கை நெடுவழியில் மனிதன் ஒப்பற்ற நிலையொன்றினை அடைந்துளான். அந்நிலையினில் தெளிவாகவே, வாழ்க்கைப்போரினிற் கடினமிலாது வெற்றிபெறச் சிறந்த மார்க்கம் கைகளையும் கால்களையுஞ் சீரிய ஒழுங்கினில் வைத்திருப்பதன்று. மற்று அவையனைத்தினையுமடக்கி ஏவுதற்கருத்தாபோன்ற உள்ளத்தினைப் பயிற்சி செய்து அகன்ற பரப்புடனிருக்கச்செய்வதே யெனுஞ் சிறந்த விஷயம் உண்மைப்படுத்தப்பட்டிருக்கின்றது. அதனாலேயே முன்காலத்து மக்கட்கிருந்த மூளையின் சராசரி பலத்தினைக் காட்டிலும் இக்காலத்து மக்கள் மூளையின் பலம் அநேக மடங்கு அதிகமாக விருக்கின்றது. அதாவது இத்'தகுந்தோர் தங்கி நிற்ற'லெனுங் காரணத்தால் மனிதனிடத்து அறிவிலும், நுட்ப வுணர்ச்சியிலும், மேம்பாடுண்டாயிருக்கின்றது. இது நிற்க,

'விரிந்து பல்கல்' எனு மொழுங்கு முழுவதனையும் விரித்து நேரிய வழியில் விடுத்த டார்வின் வாலேஸ் (Wallace) எனும் மேற்புல விஞ்ஞானிகள் இத்'தகுந்தன தங்கிநிற்ற'லெனும் விஷயத்தினையே "இயற்கைப் பிரிநிலை என்று மழைக்கின்றனர். 'இயற்கைப் பிரிநிலை' எனும் சொற்றொடர், அது மொழிபெயர்க்கப்பட்டிருக்கும் (Natural Selection) என்னும் பதங்களைப் போன்றே இரு பொருள் படும். இயற்கை தெரிந்தெடுத்து ஒன்றனைப் பிரிக்கும் நிலை, அல்லது, இயற்கையில் நேரிடும் ஒன்றனைப் பிரித்து நிலை நிறுத்தல் அதன்பொருளாம். முன்னது போலிப் பொருளென டார்வின் என்பவரே ஒருவினர். இருபது பசுக்கள் நம்மிடத் திருப்பதாக, நாமிருக்கும் இற்புறம் திடீரென்று அழல்வாய்ப்படின், நம்முடனையும் மிகவும் நெருங்கிய சம்பந்தமுடையவர்களையும் நாம் காப்பாற்றிப் போந்த பின்பு, பசுக்களைக்குறித்து நாம் நினைவுகூர்வோமாகில், யாதுசெய்வோம்? அவ்விருபதனையும் மீட்டுச்செல்லோம். அழலரையன் உடன்படானாகில் பின்யாதோ செய்வது? அவற்றுள் மிகவுமழகுடையன வாயும், மிகுந்த பால்பயக்கத் தக்கனவாயுமுள ஒரு சிலவற்றினையே காப்பாற்றி மீட்டுச் சென்று மிகுந்த பலவற்றினை விடுத்தொழிப்போம். இங்கு அழகாலும் மிகுந்த பால்சுரக்கும் வன்மையாலும் சில பசுக்களே தகுந்தனவாய்த் தங்கின்றன. இது மனிதன் விருப்பத்திலடங்கியதாய் மனிதன் தெரிந்தெடுத்து, சிலவற்றினைப் பிரிக்கும் நிலை, அல்லது, செயற்கைப் பிரிநிலை (artificial selection) யின்பாற் படுவதாயிற்று. டார்வின் முற்கூறிய எரிபுழுவின் தங்கிநிற்றல், பொட்டு தங்கிநிற்றல், மின்மினிதங்கிநிற்றல் ஆகிய இவ்வியற்கையில் நேருவனவற்றை கேவலம் மனிதன் தெரிந்தெடுத்துப் பிரிப்பதால் அவனைச்சார்ந்த உயிர்கள் தங்கி நிற்றலினின்றும் பிரித்து, (அது வொருவித

ஒற்றுமையுங்காட்டி) சிறப்படைவித்தற்பொருட்டு இயற்கையினில் நிகழும் பிரிநிலை அல்லது "இயற்கைப பிரிநிலை" எனும்பெயர் கொடுத்தோதினர்.

ச. கி. சுந்தராசாரியன்.

---

## A GARLAND OF DIVINE PRAISE.

## ஞானானந்தனடி மாலை.

1\. அருள்வடிவே யுலகனைத்தும் அருள்மயமே
சுகமனைத்தும் அமைந்துநின்ற
அருள்வலியே வலியனைத்தும் அகம்புறமுந்
தோன்றஉயி ராகந்தோன்றும்
அருளொளியே ஒளியனைத்தும் அருளழகே
அழகனைத்தும் அந்தமில்லா
அருணிலையே நிலையனைத்தும் அருட்பெருமை
அகிலமெங்கும் அமருந்தானே. (௧)

அருட்துணையே அறமுடையார்க் ககமுருகி
நினைத்தடியா ரழைக்குங்காலை
வருந்துணையே மதிபொருத்தி வஞ்சனையில்
லாதழைப்பார் மதிக்குங்கூலி
தருந்துணையே சகலருக்கும் தகைபொருந்த
அருணிதி தழைக்குந்தெய்வப்
பெருந்துணையே பெருநிதியே இடங்காலம்
இறப்பில்லாய் பிறப்பில்லாயே (௨)

நின்னுடைய தாமிந்த உலகமெலாம்
நானுமதே நினைப்பில்லாமல்
என்னுடைய தாமெனநான் பிழைபிதற்றி
இருமாப்புற் றேமாந்தேனுய்ச்
சொன்னதையே சொல்லிவருங் கிளிபோலப்
பேதையர்சொற் றொடர்ந்துதாழும்
பொன்னதையுஞ் சுகமொன்றே பொருளென்று
திரிந்துமலம் பொய்கொண்டேனே. (௩)

கண்காணும் பொருளென்றும் நான்செய்த
தன்றேஎன் கருத்துமெட்டா
விண்காணு மண்டமெலாம் நின்மகிமை
விளக்கியேபேர் வியப்பமூட்டு



எண்காணு மன்உயிர்க ளியல்பெல்லாம்
நின்திறமே எடுத்துக்காட்டும்
பண்காணு மானந்தம் நின்னியல்பு
படர்ந்ததனாற் பகரொண்ணாதே. (4)

எதுவென்று நானென்பேன் இசையென்போ
இரிதோலோ இறைச்சிக்கூடோ
பொதுகின்ற உதிரமதோ பொங்குயிர்ப்போ
புகுநரம்புப் புணர்ச்சிக்காடோ
அதுவன்றி மூளையதோ பொறிபலவோ
அறிமனமோ அதற்குமப்பால்
இதுவென்ற தறியாதெல் லாமியக்கும்
நின்னொளியி னிருக்கைதானோ. (5)

நானென்ற அறிவெனக்கு நீயின்றி
யிலையென்ற ஞானமில்லேன்
ஊனென்ற சுவர்மறைவால் நீநின்ற
உண்மைதனை யுற்றுப்பாரேன்
தானென்ற பொய்யுண்மை போனின்று
மெய்யறிவைத் தடுப்பதின்றேல்
தேனென்ற சுகமூறத் தெய்வமலா
திலையெனநான் தெரிவேனன்றே. (6)

உடம்பளித்தாய் உயிரளித்தாய் உணர்வளித்தாய்
உறவளித்தாய் உயிர்வாழ்தற்கே.
இடம்படைத்தாய் பொருள்படைத்தாய் எண்ணுவதை
இயற்றஎன்னுள் ளிடத்தேமெய்யில்
திடம்படைத்தாய் ஐம்பொறியின் திறம்படைத்தாய்
மறைந்தனையே தேடவைத்தாய்
சடம்படைத்த கருணையினாய் கருதினுனக்
கென்நன்றி காட்டுவேனே. (7)

தின்னவெனைப் பெற்றோய்நீ உன்மகனான்
என்குருநீ சீடனானே
என்னருமை உயிர்த்துணைநீ அந்தகனான்
ஈவோனீ இரப்போனானே
பொன்னருமைப் புரவலனீ சிறுகுடிநான்
பெருமானீ புழுக்கைகானே
முன்னவனீ கடையவனான் முற்றுணர்ந்த
கொற்றவனீ மூடனானே. (8)

இலங்குமணி ப்ரபையெழுந்த சூரியன்போல்
இதயமல ரிடத்தேவீற்று
நலங்கமழ நீயிருக்க நானுனையே
அடுத்திருக்க நாளுநாளும்
துலங்குமொழி நாவாழ்த்தக் கைகூப்பத்
தலைவணங்கத் தூயபாவால்
அலங்கலுனக் கணிந்த பயம் நீயளிக்க
அகங்களிக்க அருள்செய்வாயே. (9)

விண்களிக்க வியப்பெனுஞ்சா கரம்பொங்க
விளைநலத்தை விரிந்தஇந்த
மண்களிக்க நின்மகிமை வகுத்திருக்கும்
பெருமியற்கை மதியாற்கண்டார்
கண்களிக்கக் கருத்தவிழக் கலையறியா
தோங்குகின்ற காலத்தூடே
பண்களிக்கப் பாடுமருள் நான்பலர்க்கும்
பரிந்துரைக்கப் பயிற்றுவாயே (10)

உலகமெனுங் கரைதெரியாக் கடலிடத்தே
காலமெனும் ஒழுக்கிலோடிக்
கலகமெனுஞ் சுழிகடந்து கடுமையெனுங்
கன்னிங்கிக் கயங்கள்தாண்டிப்
பலகவலைத் திரையேறி மிடிப்புளினம்
பிணிப்புயல்கள் படைக்குமோசம்
விலகிடஇவ் வுடற்றோணி வேண்டுமருள்
வலங்கணிக்க வியக்கின்றேனே. (11)

ஏக்கந்தான் மனிதர்தனித் தால்வருபங்
கென்றும்அதற் கிறைவா நின்கண்
ணோக்கந்தான் பொருந்துமருந் தென்றும்நினைத்
தாற்றெளியும் நுவன்றால் நின்ற
னூக்கந்தான் அவருக்கம் அவர்துணிவு
நின்னடிக்கண் ணுறுதியெல்லா
ஆக்கந்தா னன்பவர்போற் குஞ்சுகந்தான்
நின்னருளை அடைதலன்றோ. (12)

மானிடர்தா முயன்றடையும் பயனனைத்தும்
வரப்புளதே மதுரந்தங்குந்
தேனிடைக்காஞ் சிரங்கலந்த தென இன்பத்
திடைதுன்பஞ் செறித்த இந்த



ஊனிடைநின் னருளொளியி னுதவியின்றேல்
உலகிலவர் உய்வரோவெங்
கானிடைக்கூ ரிருளில்வழி காணாத
குருடரைப்போற் கலங்குவாரே. (13)

மருந்தளிக்க மருத்துவனாய் வரமளிக்க
வரபதியாய் வரையாதென்றும்
விருந்தளிக்க விழைவளலாய் முறையளிக்க
வேந்தனுமாய் விழுமியார்க்கும்
அருந்தவர்க்கும் பொருந்தியவை தெரிந்தளிக்க
வல்லவனாய் அழியாவின்ப
மிருந்தளிக்க அருணிதியாய் ஈசனைப்போ
லெவருளரிங் கியம்புவாயே. (14)

இருபொருளாஞ் சராசரமும் இயங்குவதாம்
நீர்நெருப்பும் இயலுங்காற்றும்
பெருவிசும்பு மண்ணுமிவை பெறுமுயிரின்
பெருக்கமும்அப் பெருக்கத்துள்ளே
உருநிறையு மனமுணர்வோ டொளிரறிவு
முயரன்பு மொருங்கேயாகி
மருவுமருட் கடல்கொண்ட மகிமையுரை
மனமளக்க வரம்பெய்தாதே. (15)

வரம்புகளெ லாங்கடந்து மனங்கடந்தா
ருயிர்கடந்து மலர்ந்துநின்ற
பரம்பொருளைப் பக்தருளம் பழுத்திருக்குங்
கனியைஅறம் பருகுந்தேனை
நிரம்பியருள் ததும்பியெழு நெடுங்கடலை
ஆனந்த நிமலவூற்றைத்
தரம்பகர வல்லேனோ சதுர்மறையா
லதின்பெருமை சாற்றொண்ணாதே. (16)

சாற்றிவரும் பொருளெல்லாந் தனித்துவரு
முட்பொருளைத் தருவித்தெல்லாம்
மாற்றிவரு மருட்பொருளை மறைந்துவரு
மெய்ப்பொருளை மனத்திலன்பாற்
றேற்றிவரும் பெரும்பொருள்க ளாற்றிவரு
மரும்பொருளைத் தொல்லைநூற்கள்
போற்றிவரும் பரம்பொருளைப் புகல்கின்ற
தெம்மொழியாற் பொருந்துமம்மா. (17)

பொருந்துவதோ உலகமெலா மனக்கமனற்
கூட்டமெண்ணப் போகுமோநாம்
விருந்திஉயிர்த் தொகைமதிக்க மாளுவதோ
வரையறியா வான்மீன்மாட்சி
இருந்தடங்க லெழுதவென்றால் இயலுவதோ
மனங்களெலா மெண்ணுமெண்ணப்
பெருந்திரளைக் கணிப்பெளிதோ அவ்வருமை
அதின்பெருமை பேசுமன்றே. (18)

பேசவரும் பெரும்பொருளைப் பேசுவதற்
கொருப்படலோர் பிசகென்றால்நம்
வாசகத்திற் குண்ணிரைந்தும் வாசகாதீ
தப்பெருமை வகித்தும் நின்றார்
ஈசனென நினைக்கினவர் எல்லையிலாப்
பெரும்புகழ்நா மியன்றவாறே
நேசமுற வெடுத்துரைத்த லிழுக்கலவாம்
அவரருளை நேடலாமே. (19)

உடலிருந்த பயனெதுவோ உயிரிருந்த
பயனெதுவோ உணவால்வந்த
அடலிருந்த பயனெதுவோ அறிவிருந்த
பயனெதுவோ ஐம்புலத்தின்
றொடலிருந்த பயனெதுவோ தொகுத்தனைத்தும்
நமக்களித்த தூயனேயக்
கடலிருந்த வகையறிந்து கையிரண்டுங்
கூப்பியுளங் கரைந்தக்காலே (20)

தொலையடுத்த தெனச்சொல்ல வரியசுகப்
பொருளோநற் றொண்டருக்கே
மலையடுத்த தெனத்துணைக்கு மாமணியே
மாற்றமிலா வாய்மைஞான
நிலையடுத்த வருக்குலவா நித்திலமே
நித்யமுனை நினைந்துதேடி
உலையடுத்த மெழுகினைப்போ லுருகாத
நெஞ்சமெதற் குதவுந்தானே. (21)

பணங்கலந்த பகட்டுலகின் பகைநெருப்பும்
பரதவிப்பும் பறக்கவிட்டுக்
குணங்கலந்த நின்குமுத வடிகுறித்துக்
கொண்டுமனங் குழையாதிங்கோர்



கணங்கலந்த தாயின்அருஞ் சிறையொழித்துக்
கற்பகப்பூங் காவினுள்ளே
மணங்கலந்த தென்றலெழ மகரயாழ்
கேட்டெழுந்த மகிழ்ச்சியாமே. (22)

கொண்டலிடந் தண்ணீருங் கூந்தலிடங்
கொய்ம்மலருங் கவித்தாவித்
தண்டலையிற் பைங்கிளியுந் தாமரையிற்
கார்வண்டும் தழைப்பதெல்லாம்
மண்டலத்துந் தோன்றிடுமோ வயங்கியவெய்
யோன்அருளின் வயத்தால்முன்னே
விண்டலத்திற் றோன்றிலனேல்விறல்மெய்யோ
னருளின்றி மெய்வாழ்வின்றே (23)

அன்பியற்ற அகிலநமை யழைத்ததுவே
அகிலேச னளவில்லாத
அன்பிலிருந் தவனியெலாம் பிறந்தனவே
எழ்திறமொன் றடங்குமாறே
அன்படங்கும் அறங்களெலாம் அமரர்களு
முண்டேல்அவ் வன்பால்மேலோர்
அன்பறியாக் குறையிருக்க இன்பறியாக்
குறையிருக்கும் ஆயுங்காலே (24)

(இன்னும்வரும்)

தி. லக்ஷ்மணபிள்ளை.

---

## VEDANTA DESIKE.
## வேதாந்ததேசிகன் வைபவம்.

(220-ம் பக்கத் தொடர்ச்சி.)

இவ்வண மவையின்கண், காளமேக வண்ணலாகிய வெம்பெருமா னருளிப்போந்தவை யனைத்தையுங் கேட்டுப் பேராச்சரிய மெய்திய வதிகாரிகளாதியோர் ஒருவருக் கொருவர் பேசுவாராயினர்.

என்னே! யித்தம்பதியர் புரிந்த நல்வினை? என்னே! யித்திருமலைப் பிரானது கருணை? என்னே! நாஞ்செய்துள தீவினை? நமக்கின்னண மெய் நாமற்போயது. பல்லாண்டுகளாநம் பாரம்பரையோர்களா லியற்றப்பட்டு வரும் பணிவிடைகளையேற் றீண்டை யெழுந்தருளி யிருக்கு மிவ்வெம்பிரான் நம்மாட்டென்னோ வருளிலாப் போயது. ஒருநாளுமிந் நன்மகரையே யறிந்திராத வித்தம்பதியர்பா லிவ்வெம்பிராற் கிருந்த கருணையே [illegible] கருணை! தமது திருமணியை யீயவும், (நாஞ்சர்தேசிக்கவும், அதனை வெறுக்

குமாறு) தாஞ்சியர்மீ தாவேசித்துத் தாமேயனந்த சூரிகளுக்குத் தம்மணியாழ்வாரை யீந்ததாகச் சொற்றிப்போகவு மாயதே யென்றின்ன பல்வேறுக் கிளவியாடிக் கொண்டே கடவுளருளைப் புகழாநின்றனர்.

இங்ஙன நிகழ்ந்துழி யேற்றவமயமுற்றமை யாலத்தம்பதியருங் கோயிலுட்புக் கெம்பிரானைத் தொழுது, பின்னராங்குள்ளோரா லளிக்கப்பட்ட தீர்த்தமாதியவைகளைப் பெற்றாராய் (த்திருவேங்கடத் தமுதனதாஞ்ஞையே யெனலாமாறு) விடைபெற்றங்ஙனே கச்சி நகரிலாந் தம்முறைவிடம் புக்கு வாழ்ந்துழி, முன்னங்கூறிய கனவுரா டொடங்கி தோதாரம்மைக்குக் காப்போதரம் வாய்த்து நாடோறு மொளிர்ந்துவந்தது. இன்னணங் கருப்பம் பன்னிரண்டாண்டளவும் வளர்ந்துழி யதிஉள்ளவராய திருமணியாழ்வாரும் பராசர முனியையமான உலக வைலக்கணியந்தோற்றுறச் சூலின்கணிருந்து கலி நாலாயிரத்து முந்நூற் றெழுபானாண்டுகளுக்குமேல், சுக்கிலவாண்டு கன்னியதி சுக்கிலபக்கத்தயமி ஸௌம்யவாஸரங்கூடிய வோணவுடுவிலோ ரிளங்குழவியா யுதித்தனர்.

## II வளர்ப்பு.

இன்னமிர்நன் னுடனிற்செவ்வனே யுதித்த யிச்செல்வக்குழவியின்பிறப்பைச் செவியேற்றக் கிடாம்பியப்புள்ளார், மிகுநலங்கொண்டாடித்தஞ்சோதரிபாலேகிக் குழவியைக் குளிரநோக்கிப் பின்னரனந்த சூரிகளைக்கொண்ட குழவிக்குச் சாதகருமஞ் செய்வித்தருளிப் பத்துநாட்களுங் கடந்த விரண்டாநாளில் (திருவேங்கடமுடையா னருளாலாவிர்ப்பவித்ததை யுன்னி) இக்குழவிக்குத் திருவேங்கடநாதாரிய னென்னத் திருப்பெயர்சூட்டி, இரக்ஷைப் பின்பொருட்டாகத் திருவிலைச்சினையீந்துமுறையே- அன்னபிரசானம் அப்தபூர்த்தியாதிகளை நிகழ்த்திப் பின்னர் பெருந்தேவித்தாயாரை முன்னிட்டுப் பேருளாளரை யட்டாங்க ஸஹிதம் பிரணமஞ்செய்விக்கப் பண்ணுமாத்திரத்தேயுற்று நோக்கி யாய்ந்தமனத்தண்ணலாக விளங்கு மவ்வெம்பெருமாணிக்குழவியை விளித்து நீவிர்*நம்மிராமானுஜனைப்போலாகக் கடவீரெனவர்ச்சமுகத்தா னருளிச்செய்து தீர்த்தமாதிகளை யளிப்பித்தேக விடையருளினர். அருளாளு மவ்வெம்பிரானைத் தொழுதகையராய் பிள்ளையாதியோர் மீண்டுந் தம்மில்லம்புக் கிராண்டுகழியலும், மூன்றாமாண்டி லிப்பிள்ளைக்குச் சவுளத்தைய மைந்தாமாண்டி லக்கராரம்பத்தையுஞ் செவ்வனே முடிப்பித்தார்கள்.

## III கல்விப்பயிற்சி.

பிறகாங்கே, வேங்கடேச கண்டா மிச்சிரான அப்பிற்பிள்ளையந் திருவேங்கட நாதாசாரியர் - வேதம், வேதாங்கம், அறுபானான்கு கலை

*இப்பிள்ளை யிவ்வார்த்தைதான் தமது பிரபந்தத்தில்"அன்றேவடைக்கலங்கொண் நம்மத்தகிரித் திருமால்" என்றைந்துள்ளார்.



னம், மஹாஞான மாதிய பல்வைகையாய கலைகளையும் பயின்றுழி யொருதினம், தம்மாதுலராமப் புள்ளாரோடு அம்மாளென்பார் காலக்ஷேபஞ் செய்யுங்கால், தாஞ் சென்றன்னாரைத் தொழுதுநிற்க; அப்போழ்தத்தாண்டே மிக்க தேஜிதராய்த் துலங்குமிவ் விளைஞரை யம்மாளென்பார்கண்டு வியப்புங் களிப்புமுடையாநிற்க, யவரை யண்மிய வடக்குத்திருவீதிப்பிள்ளையென்பா ரொருவரிகருமாவாரென வினவலும், (தக்கணமே கேட்ரியாவனோர்க்கு யெளிதில் விடையளிப்பான்கருதிய) அப்புள்ளார், இவர் நம்பாகியராய்நேந்தாப்பிற்பிள்ளையென் றருளிச்செய்தனர்.

இங்ஙனே வாண்டடைந்திருந்த பல்லோர் தமக்கும் ஏற்றவாறு இப்பிள்ளையைக் குறித்து விடையை யளித்துவரலும் சின்னாழிகை கழிந்தமையால், முன்னம்மாள் தனது காலக்ஷேபத்தே விடுத்தயிடம் இன்னதென வறிந்திலராய் அப்புள்ளாரைக் கேட்க அன்னாருந் தோராதாராய் மருண்டஞானங்கொடு கையேட்டுப் பிரதியின் ஓலைகளையும், பொருளின் ஒற்றுமையையும் பன்னாழிகையளவு மிருவரும் யோசித்துக்கொண்டே கேடிக்கொண்டிருந்துழி, (யாவையுங் குறிப்பானுணருந் திறனமைந்த) இளம்பிள்ளையாமிவ் வேங்கடநாதாசாரிய ரஃதோர்ந்து, ஹே! ஸ்வாமிகள்! நீயிர் எனது வரவை நோக்குங்கால் காலக்ஷேபத்தே விடுத்தவை யிவையாமென அவ்வேட்டையும், ஆங்குள்ள ஸந்தர்ப்ப வாக்கியத்தின் விரிந்த பொருளையுமெடுத்தீந்தவளவே மிக்காதிசயித்த வம்மாளு மிச்சிறுவரை யெடுத்து உறத்தொடு தழுவி யுச்சிமுகந்து (புலத்திய முனிபராசாருக் கருளினாற் போன்று (பிரதிட்டாபித வேதாந்த :) என்கிற ஶ்லோகத்தால்) நீவிரிவ்வுலகின் கணேவேதாந்தத்தை ஸ்தாபிக்கவும், இவ்விராமாநுஜ மதத்திற்கு வேற்றுமையாய மதங்களைக் கடியவும் வல்லுனராயும், வைதிகர்களொருங்கே பணியத் தகுந்தன்மை வாய்ந்தவராயும், இன்னும் பல்வேறாய நன்மைகளுக் குறைவிடமாகவுமாகக் கடவீரென் வனுக்ரஹித்தருளி,—(இஃதோரவதார விசேடமென்றும், உடையவர் முதலாங் குரவரிடமாக வெளிப்போந்த ஸம்ப்ரதாயார்த்தங்களை விநியோகிக்கும்படியான ஸத்பாத்திர மிவரேயென்றும், தம்முள்ளே கருதி, ஆயினிச்சம்ப்ரதாயார்த்தங்களையிச் சிறுவரிடத்துப் போதிக்கவேண்டுமெனு மாசானது கட்டளையைக் சடைப்பிடித்தொழுக வல்லனாயினும், யானடைந்துள்ள மூப்பின் மேம்பாட்டால் அவ்வணம் போதிக்க வல்லேனல்லே னாகையால்) அப்புள்ளாரே! நீவிரே நம் பாகிநேயர்க்குச் சகல சாத்திரார்த்தங்களையும், பாடியம், பகவத்விடயமாதி திருமந்திரார்த்த விசேடங்களையும் போதிக்கவல்லீர். இவ்வணம் நீவிர் புரிவிரேல் அஃது நங்குரவர் பெருமானா முடையவருக் குகப்பாகுமென வருளிச்செய்தங்ஙனே பிள்ளையின் கைகளைச் சேரப்பிடித்து மாதுலரது கையிலீந்து ஒப்

பித்தேனென மும்முறை யறைந்து எம்மொழியைக் கடவாதியற்றுவீராக வெனச் சொற்றனர்.

இங்ஙன மம்மாளது ஆக்ஞையை மேற்கொண்ட வப்புள்ளார், தம்பாகிநேயராந் தூப்பிற்பிள்ளையை யடைக்கலங்கொண் டற்றைநான்முதலன்னார்க்குப் பலவிதங்களையும் போதித்துவருங்கால் ஒருநாளம்மாளென்பாரிவ்வுலகைநீத்து மேலுலகுற்றுத் திருநாராயணனது ஸ்ரீவைகுந்த பதவியை யடைந்தனர்.

ஈதறிந்த வப்புள்ளாராகியோர், அலகில் பேரின்ப வீட்டையடைந்துள்ள வம்மாட் கவரது திருக்குமாரரைக்கொண்டு சர்மகைங்கர்யாதிகளைச் செவ்வனே நிகழ்த்தி முடிப்பித்தனர்.

பின்ன ரீராண்டு கழியலு மொரு நன்னாடனிற் றூப்பிற் பிள்ளைக்கு உபநயனஞ் செய்வித்துப் பின்னிகமாத்தியயனஞ் செய்வித்துழியாள வந்தாரன்னவிப்பிள்ளையு மறுமுறை யத்தியயனிக்க வேண்டாது ஏகஸந்தக்ராஹியாய் அத்யயனஞ்செய்ய வாண்டுப்போந்த விவரது தந்தையா ரனந்தஸூரிகளாதியோர் கண்டதிசயத்தோடு மிக்க மனமகிழ்ந் திருந்தனர்.

இவ்வாறிருந்துழி தூப்பிற்பிள்ளையும் வேதாத்யயனத்திற் றிறன் வாய்ந்தவரா யிருக்கக்கண்ட மாதுலர், தம் பாகிநேயருக்கு ஸப்ததர்க்க மீமாம்ஸாதி ஸாமான்ய சாஸ்திர நூல்களையும் விசேடிப்பித்து திருமந்திரம் மந்திரார்த்தம், ஸ்ரீபாஷ்யம், பகவத் விடயாதிகளனைத்தையும் அகில விசேடார்த்தங்களோடு முறை பிறழாது கற்பித்துவந்தார். இவைகள் யாவற்றையு மேகஸந்தையிற் பளகறப்பயின்று யாவரு மதிக்க வளர்ந்துவரு நாட்களிலிப்பிள்ளைக்கு வயது இருபானாயது. இவ்வளவி லிவரது வளன்களைக் காண்டொறுங் காண்டொறு மிக்காதிசயங்கொண்ட பெரியோர், (இவரைக் கண்டு) இத்தூப்பிற் பிள்ளையிடத்து ஆழ்வார்கள், நாதமுநிகள், உடையவர் பிள்ளான், ஆச்சான் முதலாய தரிசனப் பிரவர்த்தகக் குரவர்களெல்லாமாவேசித் திருப்பார்களென் றொருவருக்கொருவர் பிரசம்சித்து வந்தார்கள். அங்ஙனமுலகாதீதஞானமும், அனுட்டானமும், ஆசிரிய குணங்களுமுடையவே நிறம்பப்பெற்று விளங்கும் பாகிநேயருக் கம்மாதுலர், தக்க குலசீல இலக்கணங்க ளமைந்த திருமங்கையாரென்ற சிறப்புப்பெயர் சூடிய திருக்கன்னிகையை மணஞ்செய்வித்தருளினர். முதலாச்சிரமத்தை நீத்த வத்திருவேங்கடநாதாசாரியரும் ஸ்ரீ இராமாநுஜமத ஸித்தாந்தப் பிரவசனஞ் செய்துகொண்டிருக்கையி லின்னாது நிறனைக்கண்ட வம்மாதுலருந் தமக்குப் பேரருளாளன் கனவி லருளியதை பலிப்பித்தாரென மகிழ்ந்து, அவ்விராமாநுஜ மதத்துக்குத் தலைவராகவும், அத்தலைக்கவரே யிரக்ஷகராகவும்,



பரமத நிரஸந பூர்வக ஸ்வமதத்தாபன ஸாமர்த்தியராகவுமாகி நீடூழி நிலைத்திருக்குமாறு ஸ்ரீ வைநதேய மந்திரத்தை உபதேசித்தருளி, சில விசேடார்த்தங்களையும் விளம்பித்துத் தூப்பிற்பிள்ளையை விளித்து நீவிர் இராமாநுஜமதஸித்தாந்தத் தாபகராகக் கடவீர். என்று வாழ்த்துக் கூறியருளினர்.

சின்னாள் கழிந்ததும் அவ்வப்புள்ளார்க்கு மூப்பொடு நோயுங் கிட்டியதால் மிக வருந்தியவராய்த் தம்பாகிநேயரையக் கூயிஇ நாமினித் திருநாடேற வுகந்தோமாகையால் உம்மா லெம்பெருமானார் தரிசனந்தழைக்குமாறு ஸ்ரீ பாஷ்யகாரர் திருவுள்ளமென நம் நடாதூரம்மா ளருளிப்போந்தமையால், அவ்வழியால்வந்த உடையவர் திருவடி நிலைகளையும், திருவாழி திருச்சங்குகளையும் பெற்றுக்கொள்ளுமென்று தம்பாலுள்ள அன்னவைகளையீந்தவளவில் அங்ஙனே யாகுகவெனப் பிள்ளையும் பெற்றுச் சிரசா வகித்தவராய் நாடோறுந் தமது திருவாராதனத்துள் வைத்தாராதிக்குங்கா லஃதோர்ந்த வப்புள்ளா ரங்ஙனம் இயற்றிய தூப்பிற்பிள்ளையிடத்து பிரேமாதிக்கத்தோடு தீர்த்தம் பிரசாதித்துத் தாந்தமதாசிரியரது திருவடிக் கமலங்களை மனனஞ்செய்துகொண்டே திருநாடு சென்றனர். பின்னர் நிகமாந்தமஹா தேசிகனும் அலகில் பேரின்ப வீட்டையடைந்த மாதுலர்க் கன்னாது திருக்குமாரரைக்கொண்டு சருமகிரியையாதிகளைச் சிறப்பொடு நிகழ்ப்பித்தனர்.

## IV. தேசாடனம் செய்நூல்கள் முதலியன.

குரவர்தங் கட்டளையைச் சற்றும்மறாது தங்கடப்பாடாக்கொண் டியற்றவல்ல திருவேங்கடநாதாசாரியரும் பின்பு—காசிமுதலாய் நன்னகரியெல்லாங் கார்மேனியருளாளர் கச்சிக்கொவ்வா—எனும்படி மேம்பாடுற்றுத் துலங்கும் கச்சிநகரத்தேயிருந்து—மாசின்மனந் தெளிமுனிவர் வகுத்த வெல்லா மாலுகந்தவாசிரியர் வார்த்தைக்கொவ்வா—என்றபடியே தம்மாசிரியராவார் பரக்கவருளிப்போந்த ஸம்ப்ரதாயார்த்தங்களை துணையாக்கொண்டவராய்ச் 'ஸித்தாந்தப்ரவசனஞ் செய்துகொண்டிருந்துழி—வீரவல்லிப் பெருமாளய்யன், வீரவல்லி கிருஷ்ணமாசாரியன் முதலானோர் இந்நிகமாந்தமாதேசிகனை நேடியடைந்து தங்குரவராக் கொள்ள வங்ஙனே நந்தேசிகனு ரன்னார்க்குத் திருவிலச்சினையாதி யீந்து மந்திர மந்திரார்த்தங்களையு முபதேசித்தருளினர்.

பிற்பட்டுப் பெரியதிருவடியினாரைச் சேவிக்கத்திருவுளங் கொண்டாராய் அப்பெருமாற் குவப்பிடமாயும், பத்தபராதீனனான தெய்வநாயகன் றிருக்கோலங்கொண் டெழுந்தருளியிருக்குந் தலமுமாய—வரைவளர்திகழ் மதகரிமருப்பொடு மலைவளரகிலுந்தி—திரைகொணர்ந்தணைசெய் செழுநதி வயல்சூழ் திருவயிந்திரபுர—த்துக் கெழுந்தருளுங்கா லிடையேயுள்ள மதுராந்தகத்தில் (அலகில் பேரின்பத்தமர்ந்த சோதியாய்) விளங்கும் ஏரிகாத்தராமனையும், திருமகிழ மரத்தடியையுஞ் சேவித்துச் சாலவுந் திருவயிந்திரபு

ரத்துக் கெழுந்தருளி யாண்டுள்ள கலுழநதியினீராடி காலக்கடன்களைச்
செவ்வனே முடித் தெம்பிரானது திருக்கோயில் புக்குச் செங்கமலநாச்சியா
ராமெமதன்னையை முன்னிட்டுக் கமலநயன வாசுதேவனுமெந்தை தேவநா
யகப்பெருமானைத் திருவடிதொழுதவாருள் கைக்கொண் டுடனே ஔடதாத்ரி
சிகரத்தி லழகியசிங்கப்பெருமானையண்மியாண்டு ஸோமஸவனத்தல்ப
மாயவோ ரச்சுவத்த விருக்கத்தின்கீழிருந்து ஸ்ரீவைநயதேய மந்திரத்தை
யிலக்ஷக்கணக்கா யாவர்த்தித்துக்கொண் டிருக்குங்கால், சதுமறையின்
முழுதலாச்சார்ந்த நாதரான பெரியதிருவடிநாயனார், ஸுப்பிரஸந்நராய்
(ஸ்ரீமந் நாதமுனிகளுக்கு நம்மாழ்வார் திருமந்திராதிகளை யோகதசையி
லுபதேசித் தருளினாற்போ)லன்னார்க்கு ஸ்ரீபகவத்ராமாநுஜமத ஸித்தாந்தத்
தாபனார்த்தமாக ஸ்ரீஹயக்ரீவமந்திரத்தை யுபதேசித்தவளவிலிப்பிள்ளையுமம்
மந்திரத்தையோர்ந்து மிகப்படுத்திக்கொண்டே தம்மந்திராசிரியராக வெ
ழுந்தருளியிருக்கும் பெரிய திருவடிநயினாரைப் பிரணமித்து நின்றுழி,
நயினாரும் பேரின்பங்கொண்டாரா யிப்பிள்ளைக்குமுன்னினும் அனுக்ரஹஞ்
செய் தங்ஙனே தாமுருக்கரந்தருளினார்.

பிற்றைநாடொட்டிவர், ‘ஞானக்கைதா காலக்கழிவுசெய்யே’ லென்
கிறபடியே ஷோடசவர்ண சுவர்ணத்தோடொக்கும் பரமைகாந்திக்கும்
ஆவச்யகாபேக்ஷிதங்களாய் ஞானபக்திகளையும் விரும்பாமல்—ஸ்ரீராமா
நுஜமதஸித்தாந்த வளர்ச்சியின்பொருட்டே ஹயக்ரீவமந்திரத்தை மிகப்
படுத்தி மனனஞ்செய்துகொண் டிருந்துழி, (பன்னுகலைநால்வேதப் பொரு
ளையெல்லாம் பரிமுகமாயருளியநப்பரமன் காண்மின்) என்னுமாப்போல்
அம்மாமந்திரத்துக் கதிதேவதையாய்த் துலங்குமெழிலார்ந்த ஹயக்ரீவ
பகவான் இவர்முனெழுந்தருளி யுவப்போடு தமது லாலாமயமாகு மமுதத்
தையீந்து நீவிரிவ்வுலகி லிராமாநுஜ மதத்தாபகராகக் கடவீரென வருள்
புரிந்து கரந்தருளினார். பிள்ளையுமவ்வமிழ்தைக் களியுண்ட மனங்கொ
டருந்திய வங்ஙனமே நம்மிவுளிமுகப் பிரானதருள் விசேடத்தாலே ஞான
மேலிட்டு-முன் காருத்தனுரைச் சகலாத்திரவகைகளும், “அடிமைகளாய்
வந்து நின்றோ மெங்களைக் கைக்கொண்டாளும்” என்று சொற்றி யொருங்கே
சரணடைந்தனவியைய, பல மாமந்திரங்களு மொருங்கேதிரண்டடையப்பொ
ருந்தியவராய் முதன்முறையாத் தமக்குபதேச மந்திராதி தேவதையாகிய
இவுளிமுகப் பிரானார்மீது கீர்வாண பாடையில்—ஹயக்ரீவஸ்தோத்திரம்,
கருடபஞ்சாசத் என்ற இவ்விரண்டு நூல்களையும் அருளிச்செய்தனர். பின்னர்
தாந்தொழும்பிரானாய் தேவநாயகப்பிரானிவரை விளித்து நீவிர் நம்பொ
ருட்டாய் பல பிரபந்தங்களை யியற்றக்கடவீரென வருட்பாடிட்டுப் போந்த
வளவில், அப்பிரானாரதாக்ஞையைக் கடைப்பிடித் தொழுகுபவராய் இன்னு
ரங்ஙனே தேவநாயகபஞ்சாசத், பிராகிருதபாடையாலே அச்சுத சதகம்
செந்தமிழாலே மும்மணிக்கோவை, பந்துப்பா, கற்பாழ, அம்மானைப்பா



ஊசற்பா, ஏசற்பா, நவரத்நமாலை யாகிய வொன்பானூல்களையுஞ்செய்து
அத்தேவநாயகப்பிரானார் முன்னோதிமுடிவில்—முந்தைமறை மொய்யவழி
மொழியேயென்றமுகுந்தனருடந்தபயன்பெற்றேனே—யென்றுபரமனது
கட்டளையை முடிப்பித்ததே பயனாகக்கொண் டனுசந்திக்கத் தேவநாயகனுஞ்
செழுங்கமலவல்லியுங் கேட்டானந்தித்துப் பிள்ளையை நோக்கி, நீவிரெங்களி
ருவர்பிராதானியத்தை யிப்பிரபந்தங்களாலே வெளியிட்டமையாற் பாரிதோ
டிகமாக நுமக்குநஞ்சடகோபனை யீந்தோங்கொள்வீரெனலுமங்ஙனே யாமெ
னக் கொண்டதப்பிற் பிள்ளையும் பிராட்டிஸமேதராய வெம்பிரானைத்
தொழுதகையராய், மஹாநுபாவா! பண்டைநாளிலேயே நும்மருளும் பங்
கயத்தாடிருவருளுங் கொண்டுள்ள வடியேற்கு இங்ஙனமு மிகுதியாய
கருணைசெய்து தம்பதிகளா யெழுந்தருளியிருக்கும் நீவிர் எம்பொருட்டா
வடைந்துள மனமுவப்பிற்கு வேறுய பரமபலமுண்டோ வென்னலும்,
இவரது வாக் விசேடத்தைக்கண்ட கடவுளும், வேங்கடநாதாசாரியரை
விளித்து நீவிர் எம்பக்கலிருந்துகொண்டே தரிசனப்ரவர்த்தகஞ் செயக்
கடவீரென வருளலு மிதற்குவந்தபிள்ளையு மாங்கே ஸித்தாந்த ப்ரவசனஞ்
செய்துகொண் டிருந்தனர்.

பின்னொருநா ளிப்பிள்ளையின் றிருவுளத்துப் பரமபதந் தோன்றிய
வளவி லதனைப் போக்குமாறு பரமபதபங்க மென்ற ஒரு நன்னூலைச்
செய்து முடித்தலு மத்தோற்ற மங்ஙனே கரந்தது. பின்னாளாகவு மொரு
நாளிவர், இலங்கையர்கோன் முடிதடிந்த யிரகுவீரனைத் தொழாநிற்கையில்
இரகுவீரகத்ய மென்றோரு கீர்வாண நூலையுங் குன்றேந்திக் கொக்களாதிய
வைக் காத்த கோபாலனை வணங்குழி கோபாலவிம்சதி யென்ற நூலையு மரு
ளிச்செய்தனர்.

இன்னணமாங்கா லொருதினம்ஸ்ரீவெங்கடநாதாசாரியர்,ஸ்ரீபாஷ்யாதி
ப்ரவசனஞ் செய்யாநிற்கையிற் பெரியவராவா ரிவரையண்மி யின்னாது
வசனாமுதத்தை யுண்டு களிபாட்டயர்ந்தவரது ஆசுகவி பாடுந் திறனைக்காண
வேண்டிச் சில் வினாக்களை விடுத்தகாலையிலன்னாரவ்வினாக்களுக்கேற்றவிடை
களை யங்ஙனே சில கீர்வாணச்லோகங்களினாலுஞ் செந்தமிழ் பாக்களினாலு
மடக்கி யாசுகவியாப் பாடியப்பெரியாரைக் களிப்பித்தனர். இப்பாக்களைக்
கேட்ட வன்னார் பெரிதுங் கழிபேருவகை பூத்தவரா யின்றுதொட் டிப்பிள்
ளைக்குக் கவிதார்க்கிகஸிம்ஹ மெனத் திருநாமம் வழங்கக் கடவதென
வருளிச்செய் தப்பிள்ளையைப் பிரணமஞ் செய்தவரது பிரிவாற்றாராய்ச்
சால்வுந் தேறி விடைபெற்றுச் சென்றனர்.

‘கவிதார்க்கிககோளரி’ யெனப் புதுப்பெயர்புனைந்த தூப்பிற்பிள்ளை
யுஞ் சின்னாளாய பின் பல்லுலகங்களையும் அளிக்குமாற்றல் சான்ற வெந்தை
யாந் தேவநாயகப் பெருமானதாக்ஞையை முன்னிட் டப்பிராற்கு செயக்

கடலன வழுவற வியற்றிச் சாலவுந்திருக்கோயி லாயனுரைத் தொழுதாங்கே யப்பெருமான் பொருட்டாத் தேஹளீசஸ்துதி யென்றோ ரொப்பற்ற நூலையும் பாடியருளினர். பின்னர் தலத்தை நீத்து— (நான்முகன்செய்த நல் வேள்வியதின்—பான்முகமமைர்தப் பரனுயுதித்த) ப் பரமகருணையனான வெம்பிரான் பேரருளாளன் பெருமனமுவந் தெழுந்தருளியிருக்கும் முத்தி தருங் கச்சிநன்னகரையடைந் தாங்குள் திருவனந்தத்தடத்தின்மூழ்கி முறைமையாகவே யெமதன்னையாம் பெருந்தேவியை முன்னிட்டுப் பேரருளாளரது சரணகமலங்களைத் தஞ்சென்னிமிசைச்சூடித்தமக்கதிபால்யத்து முதன்மையாகக் கடாட்சஞ்செய்தருளிய வருட்பிழம்பாகியஅவ்வெம்பிரானுதவியை முன்னிட்டு, (உடையவரால் திருவாய்மலர்ந்தருளப்பட்ட கத்தியத்திற்பொதிந்துள்ள பிரபத்திமார்க்கத்தைத் தமக்கப்புள்ளார் போதித்துள்ளபடியே அங்கபஞ்சகஸம்பன்னமாக ஆத்மரக்ஷாபரஸமர்ப்பணத்தைப் பிரானுரது திருவடிப்போதுகளிலியற்றித் தாம் நிர்ப்பரராயிருந்துழி, இன்னுரையப்பேரருளாளப்பெருந்தகையாருந் தங்கருணையந்தடங்கண்களாலாற நோக்கியப் பிள்ளையைக்கூயிஇ நீவிர் நம்மரட்டாப்பல பிரபந்தங்களை செயக்கடவீரமென வருளலு மங்ஙனே யானுய்ந்தேனென பகவந்நியமனத்தைச் சென்னியேற்றவராய்த் தம்மனைபுக்குப் பேரருளாளன் பாதப்போதுகளிற் ருமியற்றிய சரணாகதியின் பிரகாரத்தை விவரிக்குமாறு கீர்வாணபாஷையில் ந்யாஸதசகம் என்னுந் தெய்வீகப்பொருந்திய ஒரு நூலையும், அன்னணமாய் சரணாகதியைக் கொண்டுவந்தருளிய வரதராஜப்பிரானார் விடயமாக வரதராஜபஞ்சாசத் என்றோரருமைவாய்ந்த கிரந்தத்தையும், திராவிடபாஷையாலே—அடைக்கலப்பத்து, அர்த்தபஞ்சகம், ஸ்ரீவைஷ்ணவதினசரி திருச்சின்னமாலை, பன்னிருநாமப்பாட்டு என்றிவ் வேழ்நூல்களையு மியற்றி முடிவில் (தித்திக்குமெங்கள் திருவத்தியூரரைச் சேர்பவர்க்கே) என்றருளிப் போந்து பண்டைபோற் சித்தாந்த பிரவசனஞ் செய்திருந்துழி யொருநாளிரவகத்திடனுக நினைவொன் றுண்டாயது ; அஃதென்னையெனின்:—

தம்மை யாட்கொண் டிவ்வுலகோர்க்குப் பேராசிரியரா யாக்குவித்த நம்பெருமான் பேரருளாளன் திருக்கோயில்கொண் டெழுந்தருளிய கச்சிநன்னகரின் மான்மியத்தையுலகோரியாவராலுந் தெள்ளிதினுணர்ந்துய்யுமாறு ஆதிபாஷையில் அத்திகிரிமாஹாத்மியம் என்றொரு க்ரந்தத்தையும், பிற்காலத்தருளிய விளக்கொளியெம்பெருமான் பொருட்டாக சரணாகதிதீபிகையையும், திருவட்டபுயம், திருவெஃகா, திருவேளுக்கையாய யித்தலங்களின் பெருமான்களைத் தொழுகையிலவ்வெப்பெருமானுக் குகப்பாக-அஷ்டபுஜாஷ்டகம், யதோத்காரிஸ்தோத்திரம், காமாஸிகாஷ்டகம் என்ற மூக்கீர்வாண கிரந்தங்களையும், திருப்புட்குழியை யடைந்தாங்குத் திருக்கோலங்கொண்டுள்ள விஜயராகவப்பெருமானை—எமதன்னையா மரகதவல்லியாரை முன்னிட்டுத் தொழாநிற்கையி லப்பிரான்மாட்டாக பரமார்த்தஸ்துதி



யென்பதனையும், திருவாழியாழ்வானை யஞ்சலிக்கையிற் சுதர்சனாஷ்டகமென்பதனைச்செய்தருளிப்பின்னரூர்புக்குப் பேரருளாளன் பொருட்டாக நீங்காமனங் கொண்டுள்ளதாம் (உத்தமவமர்த்தல) மென்ற பாட்டிலருளியபடி காகுத்தனுங் கண்ணனு மிவ்வவதாரமே யெனாவவரை யனவரதமுமுன்னித் (தமக்குள்ளே) பேரருளாளனைக்கூயிஇ நந்திருவருளா லாசிரியர் கடாக்ஷம் கிடைக்கப்பெற்ற வென்னை யுபாயாந்தரங்களிற் பற்றின்றி ஸ்வரூபந்தெரிந்து அங்கபஞ்சகத்தோடு திருவடிப்போதில் பரஸமர்ப்பணம் செய்விப்பித்துப் பரமதயாளுவாய் எம்போலியர்க்குக் காட்சிதந்தருளக் கிடைக்கும் ஹே ! வரதா! அகிலஞநார்த்தனு! அடியேன் நும்மை யிரக்ஷகராப்பெற்றுப் பாரமும் பயமுமற்றிருக்கிறே னென்ற கருத்துட்கொண்ட ஒருச்லோகத்தை யனுஸந்தித்துக்கொண்டே ஆண்டெழுந்தருளியிருந்தனர்.

வேதாந்த கோளரியாய தேசிகனு ரிவ்வாறிருந்துழி யப்புள்ளார் திருமகளாம் புண்டரீகாக்ஷர் தேவியாரிடமா வோராண்மகவு ஜனித்ததைச் செவியேற்றுண்டேகி யவ்விளங்குழவிக்கு ஸ்ரீநிவாஸனெனப் பெரும்பெயர்சூட்டி யிரக்ஷகார்த்தமாத் திருவிலச்சினையையு மீந்தருளினர். ஈதிங்ஙனமாக, இச்செல்வக்குழவியினது தந்தையார் புண்டரீகாக்ஷரும் (வடதேயத்து மாணவராமோரிராயரை யண்மி யாண்டே யிருந்துழி தம்பெருமகப் பேற்றைச் சேவியேற்றுருமன விழைவோடக்கணமே வத்திநன்னகரை யடையவிருப்புற்றுச் செல வெத்தனித்திருக்குங்கால் அன்னாளிரவு இன்னாது கனவினிடமாக (ஸ்ரீபாஷ்யகாராலேபிரசாதிக்கப்பெற்றுத்திருக்குருகைப்பிரான்பிள்ளானாலே யாராதிக்கப்பட்டுவந்த ஸ்ரீஹயக்ரீவப் பெருமானெழுந்தருளியன்னாரை விளித்து, நும்புத்திரபாக்கியத்திற்குத் திருப்பெயர் சூட்டித்திருவிலச்சினையீந்தருளிய அப்பிற்பிள்ளையினிடமாக வெம்மைக் கொடுபோயளிப்பீராக வென்னலும், அக்கனவுநனவாக்கொண்ட விப்புண்டரீகாக்ஷர், புட்கள் சிலம்பும்போழ்தே யெழுந்து தாங்கண்டகனவின் மேம்பாட்டைத் தஞ்சீடரிடஞ் சாற்றி யன்னவரா லமைத்து விடுக்கப்பட்ட பல்விருதுகளோடு (பாரிழைத்தநல்வினையே பலித்ததிங்க) னெனுமாறு, வனைத்துலகு மாட்கொண்டவாதிமூர்த்தியாய இவ்வரிமுகப்பெருமானைத் தம்பண்டையுறைவிடமாய கச்சிநன்னகருக் கெழுந்தருளக் கொடுபோய்ப் பெருமானிட்டிருந்த கட்டளையின்வண்ணம், வேதாந்த கோளரியிடமீயத் தக்கணமேவத்தப்பிற்பிள்ளையுந் தங்கனவின் மாக்ஷிமையையுன்னிப் பெரும்பேற்றை யடைந்தேனெனத் தாஞ்செய்துள்ள ஹயக்ரீவஸ்தோத்திரத்தைப் பிரகடனஞ்செய்துகொண்டே "தங்காய மஹஸே தஸ்மை துரங்காயமுகேநம:" என்றுபலபிரணாமங்களைச்செய்து.

"யானுந்தனு யொழிந்தானை யாதுமெவர்க்கு முன்னோனைத்
தானுஞ்சிவனும் பிரமனுமாகிப் பணைத்ததனிமுதலைத்

தேனுங்கன்னலு மமுதமுமாகித் தித்தித்தென்
ஊனிலுயிரி னுணர்வினின்ற வொன்றை யுணர்ந்தேனே"

என்றிதுபோன்ற நம்மாழ்வாராதிய பெருங்குரவரருளிய பலபாயிரங்களாலேற்றி யப்பெருமானைப்பயபக்தி யாதிக்கத்தொடுதாம்ப்ரதிக் ரஹித்தவராய் நாடோறும் முறைவழா தாராதித்துவந்தனர்.

(இன்னும்வரும்.)

கே. இரங்காசாரியர்.

---

## REVIEWS OF BOOKS.
## புத்தகக் குறிப்புக்கள்.

### சங்கீத சந்திரிகை:—

[இந்நூல் சேலம் - மாரியப்பமுதலியாரவர்களால் தமது மருகர் சபாபதி முதலியாரது அச்சுக்கூடத்திற் பதிப்பிக்கப்பட்டது. இதன்விலை ரூபாய்-ஐந்து; தபாற் கூலி வேறு.]

இவ்வருமையான இசைத்தமிழ்நூலை இயற்றியவர் சேலம்-ம-௱-௱-ஸ்ரீ, மாணிக்க முதலியாரவர்கள். இவர் ஆங்கில பாஷை நன்கு கைவந்தவர்; சேலத்திலேயே இரண்டாவது கிரேட் வக்கீலாயிருக்கின்றவர். செல்வமுஞ் செல்வாக்கு முள்ள கனவான்கள் தம்தாய் மொழியாகிய தமிழைப் போற்றுத இக்காலத்து, அத்தகைய கனவான்களுளொருவர் தாமே இசைத்தமிழ்ப் புலவரென வெளிப்போந்தது மிக்க இன்பமும் இறும்பூது மொருங்கே விளைத்து மற்றையோர்க்கும் ஒருதாரணமாகின்றது. இந்நூலாசிரியர், சங்கீத சாஸ்திரத்தைமட்டிற் பயின்று கொண்டு வீணாவாரஞ் செய்பவர் போலாது, வீணையென்ற சிறந்தவாத்தியமுங் கைவந்த இசைநூற்புலவர்! இவர் வீணைகானஞ் செய்தமையை யாமுங் காதாரக் கேட்டுக் களித்திருக்கின்றோம். சங்கீத சந்திரிகையென்ற இவ்விசைத் தமிழ்நூலிற்கு யாமும் ஒரு சிறப்புரை சொல்லியிருக்கின்றனம். அது நூலின்கட் காண்க. இந்நூல் மூன்று பிரிவுகளையுடையது. அவையாவன: இராகவியல், தாளவியல், பாடவியல் என்பனவாம். இராகவியலில் மேளகர்த்தாவை யொட்டி எழுபானிரண்டு இராகங்களும் அவற்றின் ஆரோகண அவரோகண ஸ்வரங்களும் கிரமப்படி சொல்லப்பட்டிருப்பதனோடு இராகப் பிரஸ்தார மிட்டு, மேற்கூறிய எழுபானிரண்டு இராகங்களினின்றும் பிறந்த பலவகைப்பட்ட ஜன்னியராகங்களின் பெயர் முறையும் அவற்றின் ஆரோகண அவரோகண ஸ்வரங்களும் ஒழுங்குபெறக் கூறப்பட்டிருக்கின்றன. தாளவியலிற் சாதாரணமாக வழங்கும் முப்பானைந்து தாளங்களும் அவற்றின் அக்ஷர காலங்களும் யாவரும் நன்குணர்ந்துகொள்ளத் தக்கவாறு கூறப்பட்டுள. இவற்றுடன் பரதசாஸ்திர சம்பந்தமான நூற்றெட்டுத் தாளங்களின் பெயர் வரிசையும், அவற்றின் அக்ஷரகாலங்களும் பிறழாது கூறப்பட்டிருக்கின்றன. 'பரத' த்திற் 'ப' வ்வாகிய பாவபாகம் ஒன்று நீங்கலாக 'ரத' க்களாகிய ராகபாகமும் தாளபாகமும் முறையே வகுத்துரைத்தமையாற் பரதசாஸ்திரத்தில் மூன்றி லிரண்டுபங்கு கூறப்பட்டதாயிற்று. இராகதாளங்களுக்கு அட்டவணையொன்று யாவரும் எளிதாக வுணர்ந்துகொள்ளவேண்டிச் சேர்க்கப்பட்டுளது. இனி மூன்றாவதாகிய பாட்டியலில், முன்னர்க் கூறப்பட்ட ராகதாளங்களின் இலக்கணங்களைப் பெரியோரது, பாமுறைகளாகிய தேவாரா திருவாசக திவ்யப் பிரபந்தாதி இலக்கியங்களில் தெளிவுபெற அமைத்துக் காட்டிக் கற்றாருங் கல்லாரும் ஒருவித இடர்ப்பாடுமின்றி யெளிதின் அறிந்து ஆநந்தங் கொள்ளும் வண்ணஞ் செய்திருப்பது எல்லாவற்றினும் மேதக்கது. இவ்வரியநூல் நல்ல கடிதத்தில் நன்குபதிப்பிக்கப்பட்டுளது. தமிழ் வித்துவான்கள் பல்லோராலுஞ் சிறப்புப்பாயிரஞ் சொல்லப்பட்டு அங்கீகரிக்கப்பட்ட இசைத்தமிழிலக்கண விலக்கிய நூலாமிது. இதன்விலை ஐந்து ரூபாயாகின்றதே யென்பதை யோசியாமல், இக்காலத்துலவுறுஞ் சங்கீத வித்துவான்களோடு படுங் கஷ்டத்தைக் கருதி மேற்கூறிய மிக்க விலையையுங் கொடுத்து நூலைப் பெற்றுப் படித்துத் தமிழுலகமானது இசையுணர்ச்சி சான்று இன்புற்றொளிர்வதாக.



### ஒருபா உண்மை உபதேசம்:—

[இஃது அஷ்டாவதானம் பூவை கலியாணசுந்தர முதலியாரவர்கள் மாணுக்கர் வண்ணக்களஞ்சியம், காஞ்சி-நாகலிங்க முதலியாரவர்களாற் பல பிரதி ரூபங்கள் கொண்டு பரிசோதித்துச் சென்னை ஸ்ரீநிகேதன முத்திராக்ஷர சாலையிற் பதிப்பிக்கப்பட்டது. விலை நூற்புறத்தெங்குங் குறிக்கப்படவில்லை]

இந்நூல் ஸ்ரீமத் சரவணதேசிகரவர்கள் அருளிச்செய்தது. இதற்குத் திருவாவடுதுறையாதீனத்து ஸ்ரீமத் சிதம்பரமுனிவரவர்கள் ஒரு பேருரை கண்டருளினர். இவ்விரண்டுமே யொருங்கு இப்பதிப்பின்கண் அச்சிடப்பட்டுள. இது சைவசமயிகளாயினார்க்கு மிகவும் இன்றியமையாததோர் கையுறையாம். ஒரே பாடலின்கண் சைவ சமயத்தின் திரண்ட உண்மைகளனைத்தையும் ஒருங்கே திரட்டிச் செறித்துச் செப்பமுறப் பாடியிருத்தலைக்கண்டு வியவாதார் யாரே? அவ்வருமையான ஒற்றைப் பாடலுக்கு உரை வகுத்த சிதம்பர முனிவரவர்கள் சொற்றிறந்தா னென்னே! மேற்கூறிய ஒரு பாவின்கண்ணே சைவ சமயக் கருத்துக்களனைத்தும் அடங்கிக் கிடக்கு மாற்றைப் பலவகைப் பிரமாணங்களானும் எடுத்துக் காட்டி நிறுவிச் செல்லுகின்றது இதனுரை. இனி யிது நிற்க, "இந்நூலாசிரியராகிய சரவண தேசிகரவர்கள், தொண்டை மண்டலத்திலே காஞ்சித் திருப்பதியிலே செங்குந்த குலத்திலே இற்றைக்கு நூற்றைம்பது வருடங்களுக்கு முன்னே அவதரித்தவர். இவர்கள் தமதிளம் பருவத்தே பள்ளியி லமர்ந்து சிறிது கல்வி கற்றுப் பினனும் அக்கல்வியைநன்கு பயிலும் பேரவாக் கொண்டு திருக்கைலாய பரம்பரைத் திருவாவடுதுறை யாதீனத்துத் திராவிட யாபாடிய கர்த்தராகிய சிவஞான யோகிகளிடம் பல இலக்கண இலக்கியங்கள் கற்று மிகத் தேர்ச்சி யடைந்தார்கள். அப்பாற் சைவ சித்தாந்த சாத்திரங்களைக் கற்பான்றொடங்கி ஆசிரியர் சிவஞான யோகிகள் பிரதம மாணுக்கராகிய கச்சியப்ப சுவாமிகளிடம் மெய்கண்ட சந்தான சாத்திரங்கள் முற்றும் கற்றுணர்ந்தார்கள். பின்பு சுவர்க்கபுரத் தெழுந்தருளிய தவப்பிரகாச மூர்த்திகளிடம் பஞ்சாக்கர உண்மை யுபதேசம் பெற்று அவ்வழியானே தம்மால் வழிபட்டுவந்த ஆனந்த ருத்திரேசனுக்கு ஆலய மெடுத்து நித்திய நைமித்திக பூசை தவறாது நடக்கத்தக்க ஏற்பாடு பல செய்திட்டார்கள். அதன் பின்பு திருப்போரூர்ச் சிதம்பர சுவாமிகளிடம் கலாசோதனை முதலிய சைவ சம்ஸ்காரங்கள்

பெற்று நைட்டிக விரதத்தினரா யிருந்து பல நன்மாணக்கர்களுக்குச் சித்தாந்த ஞானோபதேசம் செய்துவைத்துச் சாலிவாகன சகவருஷம் ௧௭௬௨-க்குச் சரியான விகாரி-ஞு ஆனி-மீ கார்த்திகை நட்சத்திரங் கூடிய தினத்திலே சிவபெருமான் திருவடி நிழலில் இரண்டறக் கலந்தனர். இவர்கள் செய்தருளிய சாத்திரங்கள் ஒருபாவுண்மை யுபதேசம், வீட்டுநெறி யுண்மை, பஞ்சாக்கர வனுபூதி, உபதேச சித்தாந்த விளக்கம், ஒருபா வொருபது, முத்தி முடிவு எனபனவாம். இதனுள் முத்தி முடிவு என்னுஞ் சாத்திரம் “இப்போது உரையுடன் அச்சிடப் பட்டு வருகின்றது. மற்றைய சாத்திரங்களும் பிறகு உரையுடன் ஒவ்வொன்றாக அச்சிட்டு வெளிப்படுத்தத் திருவருள் கூட்டு” விப்பதாக. இந்நூலினை யாவரும் ஏற்றுப் படிப்பரென நம்புகின்றோம்.

ஔவையார் சரித்திரம் :

[இது சென்னை டி. ஆர். சந்திர ஐயர் அவர்களால் மினெர்வா அச்சுக்கூடத்திற் பதிப்பிக்கப் பட்டது. இதன் விலை அணு 4. தபாற் கூலி வேறு.]

இந்நூல் சென்னைச் சர்ச் ஆவ் ஸ்காத்லாந்து மிஷன் கலாசாலைப் போதகாசிரியராகிய சித்தூர் - சுப்பிரமணியாசாரியார், பீ. ஏ. எல். டி. இயற்றியது. ஔவையா ருடைய சரித்திரத்தை முகவுரை, காலவரையறை, வாழ்க்கைச் சரிதம், முதலாம் ஔவையார் சகோதரர், பாடினோரும் பாடப்பட்டோரும், நூலாராய்ச்சி, சமயம், தத்துவ நிலை, ஒழுக்க நிலை, புலமை, மாட்சிமை என்ற பதினொரு தலைப் பிரிவின் கண்ணே பல அருமையான விஷயங்கள் கூறப்பட் டிருக்கின்றன. முன்னையோர்போல ஔவையா ரொருவரேயென வாதியாது திருவள்ளுவர், காலத்து ஔவையாருங் கம்பர் காலத்து ஔவையாரும் வெவ்வேறாகுமாறு பல நியாயவாதங்களாற் காட்டி யிருக்கின்றனர். ஆத்திசூடி, கொன்றைவேந்தன், ஆகிய இரண்டும் பல இடங்களிற் றிருக்குறளோடு கருத்தொத்தியங்குமாறு காட்டப்பட் டிருக்கின்றது. இவர் நூலாராய்ச்சி செய்து கூறுமிடத்து நூற் சிறப்புக்களை நுண்ணிதாகத் தம்புந்தி நலத்தாலாய்ந்து இனிமைபெறக் கூறி யிருத்தல் மிகவும் பாராட்டற் பாலதே. அச்சில் வாராத அகநானூறு, குறுந்தொகை, நற்றிணை முதலியவற்றிலுள்ள ஔவையாரது பாடல்களையும் செவ்விபெறப்படித்து ஆராய்ந்து அவற்றின் சிறப்பினைத் தெளிவுபெறக் காட்டி யிருக்கின்றனர். தாம் ஔவையா ரிருவரெனக் கொண்டதற்கேற்ப அவ்விருவர் தம் நூல்களை ஆராயவேண்டுவது அவசியமாதலின் இரண்டாம் ஔவையார் நூல்களும் ஆராயப்பட்டுள. இந்நூல் கலாநிதி என்னும் நூற்றொகையுள் பதினோராங்கலையாம். இது கேவலம் பாட்டிகதை போலாது நுட்பமான ஆராய்ச்சித்திறன் காட்டிச் செய்யப்பட்டதோர் நூலாதலின் உண்மைப்பொருள் பொருந்தி யிருக்குமென்பதில் ஐயப்பா டெட்டுணையுமில்லை. இந்நூலினைத் தமிழுலகும் போற்று மென்பது திண்ணம்.

---

# ஞானபோதினி

ஒரு மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

தாமின் புறுவ துலகின் புறக்கண்டு
காமுறுவர் கற்றறிந் தார்—திருக்குறள்.

சம்புடம் VI. } 1903ஞு ஏப்ரல்மீ 20உ { இலக்கம் 9.

## THE DRAVIDIAN INROADS.

## திராவிடர் வருகை.

மத்திய ஆசியா என்பது இமயமலைக்கு வடக்கிலுள்ளது. அங்கே குளிர் பொறுக்கமுடியாது. ஏனெனில், ஆங்குள்ள பெரியமலைத் தொடர்ச்சிகள் உறைபனியால் மூடப்பட்டிருக்கும். ஏறக்குறைய நிலமெங்கும் கெட்டியான கல்தரையாகவே யிருக்கும். அங்கே மழை மிகச்சொற்பம். ஆறுகளும் மிகக்கொஞ்சம். இப்பயங்கரமான நாட்டில் வசிப்பவர்களுக்குப் போதுமான தான்யம் விளைகிறதில்லை. ஆகையால் அவர்கள்ஜீவனம் செய்வதற்கே மிகவுங் கஷ்டப்படுவார்கள்; தங்கள் ஆடுமாடுகளுக்காகப் புல்லைத்தேடிக்கொண்டு ஊர்ஊராய்த் திரிவார்கள்.

இமயமலைக்குத் தெற்கே வெப்பமும் வெய்யிலுமுடையனவாய்ப் பெரிதுஞ் செழிப்பாக வளர்ந்த புல்வெளிகள் நூறுகாதத்துக்கு மேற்பட்ட விஸ்தீரண முடையனவாயிருக்கின்றன. இவ்வெளிகளின் வழியாய்ப் பெரிய ஆறுகள் ஓடுகின்றன. இங்கே பூமி செழிப்பா யிருப்பதனாற், பலவகைத் தான்யங்களும் நன்றாய்விளையும். ஆகையால் இவ்விடத்தில் ஜீவனம்செய்வது மிகவும் எளிது. அநேகவாயிரம் வருஷங்களுக்கு முன்னேயே இமயமலைக்கு வடக்கிலுள்ள குளிர்ச்சிதேசத்தி னுள்ளவர்கள் அம்மலையின் கணவாய்கள்

வழியாகவந்து தெற்கிலுள்ள புல்வெளிகளுக்கு வந்தார்கள். தாங்கள் அங்கே ஜீவனம் செய்வதைப் பார்க்கிலும் இங்கே ஜீவனம் செய்வது எளிதென்று கண்டறிந்தார்கள். ஆகையால் இப்புல் வெளிகளையே தங்கள் சொந்ததேசமாக்கிக் கொண்டார்கள்.

சிலகாலஞ் சென்றபிறகு வடக்கிலிருந்து வேறுசில சாதியார்கள் வந்தார்கள். அவர்களிற் சிலர் தங்களுக்குமுன் வந்திருந்தவர்களோடு சண்டையிட்டு அவர்களைத் தெற்கே ஓட்டிவிட்டார்கள். வேறுசில சாதியார் அவர்களோடு உறவாடி ஒன்றாய்க் கலந்துகொண்டார்கள். இவ்விதமாகப் பலமுறைகளில் நடந்தன.

இச்சாதியார்களிற் சிலர் மற்றவர்களைப் பார்க்கிலும் அதிகமானவர்களாகவும் பலசாலிகளாகவு மிருந்தார்கள், எல்லாச்சாதியாரிலும் அதிக ஜனத்தொகையும் பலமும் பொருந்தியவர் திராவிட ஜாதியார். இவர்கள் மத்திய ஆசியாவிலுள்ளதோர் பாகத்திலிருந்து வந்தவர்கள். வடமேற்குக் கணவாய்களின் வழியாகவந்து முதன் முதற் சிந்துநதிச் சமவெளியிற் குடியேறினார்கள். இத்திராவிடர்கள் எவ்வளவுகாலம் இங்கேதங்கினார்கள் என்பது தெரியவில்லை. சிலகாலஞ் சென்றபிறகு வடகிழக்குக் கணவாய்களின் வாழியாக வேறு முரட்டுச்சாதியார் வந்து இத்திராவிடர்களை வென்றார்கள். திராவிடர்களிற் சிலர் அப்புதியசாதியாரோடு கூடிக்கொண்டு முன்னிருந்த இடத்திலேயே தங்கியிருந்து மிருக்கலாம். ஆனால் அநேகர் அவ்விடத்தைவிட்டு இன்னுந் தெற்கே செல்வதே தகுதியென்று எண்ணினார்கள்.

திராவிடர்கள் குளிர்தேசத்தில் அதிககாலம் ஜீவித்தவர்கள்; மேலும் அதிக ஜனத்தொகைபடைத்தவர்கள். ஆகையினால் திராவிடர்கள் கோலர்களைப்பார்க்கிலும் அதிகபலசாலிகள். அதனாற் கோலர்களைக் கொஞ்சங்கொஞ்சமாய் அடக்கி ஒருங்கே தக்ஷிணத்திற்குள் நுழைந்தார்கள். விந்தியமலையின் கிழக்குமுனையைச் சுற்றியும் கடற்கரையோரமாயுள்ள நெருக்கமான சமவெளியினூடும் மேலுஞ்சென்றார்கள். சிலர் கிழக்கு மலைத்தொடர்ச்சியின் கணவாய்களின் வழியாகப்போய்த் தக்ஷிண பீடபூமியில் வந்து தங்கிவிட்டார்கள். கடைசியாக அநேகவருஷங்கள் திரிந்து அநேகர் தென்னிந்தியாவிலுள்ள பெரியசமவெளிகளில் வந்து தங்கிவிட்டார்கள். அத்தி



ராவிடர்களின் வம்சத்தார் இன்னும் இச்சமவெளிகளில் ஜீவித்து வருகிறார்கள்.

மேலேசொன்ன திராவிடர்கள் தெற்குமுகமாக நோக்கி வரும்பொழுது அநேகநாள் பிரயாணம்செய்தார்கள். சிலர் இளைப்படைந்து இனிமேற் போகமுடியாது என்று சொல்லி அங்கங்கே தங்கிவிட்டனர்கள். இப்படி அங்கங்கே நின்றுவிட்டவர்கள் திராவிடபாஷையை இன்னும் பேசிக்கொண்டு வருகிறார்கள்; இதனால் முற்காலத்தில் திராவிடர்கள் இவ்வழியாய்த்தாம் வந்தார்கள் என்பதை ஊகிக்கலாம். வடமேற்கிற் சிந்துநதிச்சமவெளியில் ஒருசாதியாரும் விந்தியமலையின் கிழக்குமுனையிலுள்ள சூடியநாகபுரியில் மற்றொரு சாதியாரும் திராவிடபாஷை பேசுகிறார்கள்.

முதன்முதலில் திராவிடர்களெல்லோரும் ஒரேபாஷையைப்பேசிக்கொண்டிருந்தார்கள். அநேகவருஷங்கள் சென்றபிறகு தென்னிந்தியாவிற் பல இடங்களிலும் சிதறிக்கிடந்தவர்கள் பேசியபாஷை கொஞ்சம் மாறுதலடைந்தது. ஒரே திராவிடபாஷையைப் பல்வேறு விதங்களாகப்பேச ஆரம்பித்தார்கள். இவைகளுக்குள் தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம் ஆகிய நான்கும் முக்கியமானவைகளாம்.

திராவிடர்கள் தாங்கள் வந்தபோது அநேகம் ஆடுமாடுகளை மந்தை மந்தையாய்க் கொண்டுவந்தார்கள். அவர்கள் தங்கள் பசுக்கள் கொடுத்த பாலைக் குடித்துவந்தார்கள். நாடெங்கும் நிறைந்து அடர்ந்தகாட்டிலுள்ள மரங்களை வெட்டித்தள்ளினார்கள். பூமியைச் சமமாக்கி உழுது பயிரிட்டார்கள். அவர்கள் கிராமங்களில் வசித்து வந்தார்கள். ஒவ்வொரு கிராமத்திலும் ஒருவனைக் கிராமாதிகாரியாக்கி மற்றவர்கள் அவனுக்குக் கீழ்ப்படிந்துவந்தார்கள். அவர்கள் பாம்புகளையும் மரங்களையும் கும்பிட்டுவந்தார்கள். அநேக ஆயிர வருஷங்கள் மிக உஷ்ணமான தேசத்திற் சீவித்து வந்ததனால் அவர்கள் கருப்புநிறத்தை யடைந்தார்கள். இந்தியாவில் மற்றைப்பாகங்களில் வசிக்கும் ஜனங்களைக்காட்டிலும் இவர்கள் இப்பொழுது மிகக் கறுப்பா யிருக்கிறார்கள்.

பத்திராதிபர்.

# தென்னிந்திய சரிதம்.

[63 - ஆம் பக்கத் தொடர்ச்சி.]

## கி. பி. 1687—முதல் ஆங்கிலர் முதன்மை வரை.

1687—ஆம் வருஷத்திற்குப் பின்னர்த் தென்னிந்தியாவிற் சில ஜாதியார் தலையெடுத்தனர். அவர்சரித்திரத்தை அறிந்துகொண்டால்தேச சரித்திரத்தையும் அறிந்துகொள்ளலாம். ஆதலின், அவர்சரித்திரமே இங்குக் கூறப்படும். ஆயினும் அதனை இன்னுந் தெளிவாக்கும்பொருட்டுப் பொதுப்படக் கர்னாடகத்தின் சரித்திரத்தைச் சிறிது கூறுவோம் :—

கோலகொண்டா பீஜபுரம் அழிந்த பின்னர் ஜுல்பிகார்கான் என்பவன் மொகலாய சேனைகளோடு கர்னாடகத்தை எதிர்த்துச்சென்றான். அப்பொழுது மகாராஷ்டிரநாட்டைப் பிடுங்கிக்கொண்டு அவர்கள்மேல் ஆண்டுவந்த இராஜாராம் என்பவன் ஜின்ஜியில் நிலைபெற்று எட்டு வருஷகாலம் மகம்மதியர் கோட்டையைப் பிடித்துக்கொள்ளாதவாறு எதிர்த்துவந்தான். ஆயினும், கடைசியில் ஜின்ஜி பிடிக்கப்பட்டது. இராஜாராம் வேலூருக்குத் தப்பியோடி அங்கிருந்து சடாராவுக்குச்சென்று அங்கே ஒரு பெருஞ்சேனை கூட்டினான். மகமதியர் முதன்முதலில் ஜின்ஜியிலேயே தங்க எண்ணினார். ஆனால் வடக்கே மகாராஷ்டியரோடு துன்பங்கள் மிக்கதனால் அவுரங்கசீபு தன் எண்ணங்களைத் துறக்கவேண்டியதாயிற்று. அவுரங்கசீபு செத்தபின் ஜுல்பிகார்கானைச் சுபேதாராக நியமித்தார்கள். ஆனால் அவன் தன்வேலையை டவுட்கான் என்பவனிடம் ஒப்பிவித்தான். ஜின்ஜி மகமதியர் தேகசௌக்கியத்திற்கு உடன்படாமையால் ஆற்காடு முக்கிய பட்டணமாயிற்று. ஜுல்பிகார்கான் 1713௵ல் கொலையுண்டான். அவனுடையபிரதிநிதிக்குப்பதிலாக நைஜாமுல்முல்க் என்று பேர்போன சிங்கலிக்கான் என்ற மந்திரி நியமிக்கப்பட்டான் அவன்வந்து ஒரு வருஷமாவதற்குமுன் வேலையினின்று நீக்கப்பட்டான். அவனுக்குப்பின்வந்த ஹுஸேன்ஆலி என்ற சுபேதாரும் கொஞ்சக்காலத்தில் தன் அரசனோடு மாறுபட்டான். இதனால்அவனை மகமதியர் எதிர்த்தனர்; அவர் துண்டமகாராட்டியரும் எதிர்த்தனர். கடைசியில் அவன் மகாராஷ்டிரர் தட்சிணயனத்தைச் சேர்ந்த அறுமாகாணங்களிலும் தஞ்சாவூர், மைசூர், திருச்சிராப்பள்ளி ஆகிய சப்பங்கட்டும் நாட்டுக்களிலும் வரும் வரியில் முறையே காற்பங்கும் பத்திலொருபங்குமாகிய "சௌத்" தைப் பெறலாமென்று சொல்லி அவர்களைத் தன்வசப்படுத்திக் கொண்டான். பின்னர் டில்லிக்குச் சென்று சக்கிரவர்த்தியை எதிர்த்து அவனைக்கொல்வித்துத் தானுங் கொலையுண்டான். பின் நைஜாம் டில்லியில் முக்கிய மந்திரி ஆக்கப்பட்டான். ஆனால் அவ்வேலையையும் ஒழித்துவிட்டு அவன் 1724-௵ல் ஐதராபாத்துக்குவந்து



அதுமுதல் பேரில்லாவிட்டாலும் சுயேச்சையாகவே யிருந்தான். கர்னாடகம் அவன்கீழ் இருந்தது. அவனுடைய நவாபு ஒருவன் சாடட் உல்லா என்பவன் அதனை ஆண்டுவந்தான். ஸாடட் உல்லா 1732-௵ல் இறந்தபின் அவன் மருமகன் டாஸ்ட்ஆலி நைஜாம் உத்தரவின்றி நவாப்ஆனான். 1736-௵ல் டாஸ்ட்ஆலி திருச்சிராப்பள்ளியை எதிர்த்து அங்கிருந்த கோட்டையை முற்றுகைப் போட்டான். ஆனால் 1740-௵ல் நைஜாம் தூண்டிவிட்டதன்பேரில் மகாராஷ்டியர் வெகுநாளாய்க் கொடுக்கப்படாத "சௌத்"தை வாங்க வருபவர்போல் ஒரு பெருஞ்சேனையோடு சென்றார். டாஸ்ட்ஆலி தன்னிடமிருந்த சேனையோடு அவர்களை எதிர்த்துச்சென்று வடஆற்காட்டில் தாமல்செருவில் உதவிச்சேனை வரும்வரையில் தாக்கிநிற்கலாமென்று எண்ணினான். துரோகத்தினால் மகாராஷ்டியர் இருட்டில் நவாபு சேனைக்குப்பின்னேசென்று வெகுநேரம் பிடித்துச் சண்டைசெய்து வென்றனர். டாஸ்ட்ஆலியும் அவன் மகன் ஹுஸேன்ஆலியும் இறந்தனர். ஸாப்தார்ஆலி என்ற வேறொருமகன் கடைசியில் அவர்களுக்கு லஞ்சம் கொடுத்துத் தன்பக்கம் சேர்த்துக்கொண்டு கர்னாடகத்தை ஆண்டான். அவன்மருமகன் மார்ட்டிஸ்ஆலி என்பவன் தூண்டியதனால் ஒரு பாத்தசாதியான் அவனைக்கொன்றான். மார்ட்டிஸ்ஆலி பின் ஆண்டான். சேனையில் கலகம் உண்டானபடியால் இவன் தன்வேலையைச் சாப்தார் ஆலியின் குழந்தைப்பிள்ளையாகிய மகமது ஆலிக்குக் கொடுத்துவிட வேண்டியிருந்தது. இக்குழந்தை வந்தவாசியில் தன்மாமனாகிய தக்கியசாயபுகாக்க ஆண்டுவந்தான். அப்பொழுது நைஜாம் பெருஞ் சேனையோடு வந்தவாசிக்கு வந்து மகமதுஆலியைத் தன்பிரதிநிதியாக ஒப்புக்கொண்டான். ஆனால் அவன் தக்கியசாயபுவைத் தள்ளிவிட்டு ஆன்வருடின் என்ற ஒருவனை மகமதைக் காப்போனாக நியமித்தான். இதன்பின் ஆற்காடு மறுபடியும்முக்கிய பட்டணமாயிற்று.

1744-௵ல் மார்ட்டிஸ் ஆலியின் தூண்டுகோளாலோ என்னவோ, மகமத்ஆலி கொல்லப்பட்டான். பின், நைஜாம்ஆன்வருடினை ஆளும்படிசெய்தனன். இவன்வம்சத்தாரிடந்தான் ஆங்கிலர் நாட்டைப் பெற்றது. இனிக் கர்னாடகத்தில் நடந்த விஷயங்களை ஆங்கிலர் இந்தியாவில் நிலைபெற்றதைப் பற்றிப் பேசும்போது கூறுவோம்.

## மதுரை இராச்சியம்.

பாண்டியவம்சம் 1310-௵ல் அழிவதற்கு முன்னரே மதுரையை மகமதியர் எதிர்த்தாரென் றெண்ணுதற் கிடமுண்டு. ஆனால் இஃது உண்மையாயிருப்பின், பின் மாலிக்காபரும் அவன்பின்னோரும் செய்தநாசத்திற்கு இது கீழ்ப்பட்டதே. மகமதியர் மதுரையை ஆண்டபொழுது எல்லாவித அநியாயங்களும் நடந்தன. மதுரைநகரத்தின் வெளி மதிலும் அதன்பதினான்கு கோபு

ரங்களும் இடிக்கப்பட்டன. மதுரையின் உயர்ந்தகோயிலில் சுந்தரேஸ்வரர் மீனாட்சி யிவர்கள் சந்நிதிதவிர மற்றைப்பாகங்கள் முழுவதும் அழிக்கப்பட்டன. 1372-௵ல் கம்பணஉடையார் என்ற மைசூர் சேனாபதி ஒருவர் மதுரையின்மேற் படையெடுத்துச்சென்று மகமதியரைத்துரத்தினர், இவர் விஜயநகர ராயரால் அனுப்பப்பட்டனர்போலும். தான்சிலகாலம் நாட்டை ஆண்டு தனக்குப்பின் உடையார்களை நாட்டை யாளுதற்கேற்பாடு செய்துவிட்டுக் கம்பணஉடையார் நாட்டைவிட்டுச் சென்றார். 1404-௵ல் கடைசி உடையாருக்குப்பின் லக்கணநாயக்கன் என்ற பிரதிநிதி பட்டத்துக்கு வந்தான். மத்தணநாயக்கன் இவனுடனாண்டனனோ இவனுக்குப்பின் ஆண்டனனோ தெரியவில்லை. 1451௵ல் லக்கணநாயக்கன் என்றொருவன் நால்வருக்குப் பட்டங் கட்டினான். இவர்கள் பாண்டியரைச் சேர்ந்தவரென்று நம்பப்படுகிறது. இவர்கள் 48-வருஷம் ஆண்டனர். மதுரைக்கோயிலின் மதிலிலிருக்கும் நான்கு உயர்ந்த கோபுரங்களையும் இவர்கள்தாம் கட்டினார்களாம். 1515௵ல் நாட்டின் ஆளுகை மறுபடியும் விஜயநகரத்தார் கைக்குச்சென்று 1557-வரையில் அங்கே இருந்தது. அப்பொழுது சிலகாலம் அரசனொருவனும் இல்லாமையால் பாண்டியனொருவன் பட்டத்துக்குவந்தான். கொஞ்சநாளில் வீரசேகரன் என்ற சோழனொருவன் இவனைத் துரத்திவிட்டான். இவன் விஜயநகரத்திற்கோடி ராயரை உதவிகேட்டான். அவர் உடன்பட்டு கொட்டைய நாகண்ணநாயக்கன் என்பவனைத் தஞ்சையரசனைத் தண்டனைசெய்யும்படி யனுப்பினர். நாகண்ணன் சென்றகாரியத்தை முடித்தான்; ஆனால்தானே நாட்டைப்பிடித்துக்கொண்டு பாண்டியனுக்குத் தராமல் இருந்துவிட்டான். இவ்வாறு கீழ்ப்படியாமைக்கு, நாகண்ணன்மகன் விசுவநாதன் தன்தகப்பனுக்கு எதிரேசென்று அவனைவிலங்கிட்டான். கடைசியில் நாகண்ணனைமன்னித்துவிட்டார்கள். விசுவநாதன் சுந்திரசேகரப் பட்டத்தில் வைத்தான், ஆனால் அவனால்நன்றாக வேலைசெய்யமுடியாததனால், ராயர் உத்தரவின்படித் தானே விஜயநகரத்தின் பிரதிநிதியானான். மதுரைநாயக்கர் விசுவநாதன் வம்சத்தவரே. விசுவநாதன் பட்டத்துக்குவந்தது 1559-போலும். விசுவநாதனுடன் ஆரியநாயகமுத்தாளி என்றொருவன் மதுரைக்கு வந்தான். அவன் வேளாளர் குலத்தில் ஏழைகளுக்குப்பிறந்தவன்; ஆனால்தன் வன்மையினாலும் அறிவினாலும் ராயரின்கீழ் உயர்ந்த பதவியடைந்தான். ஆரியநாயகன் சரித்திரம் கட்டுக்கதைகளால் மறைக்கப்பட்டிருக்கிறது. ஆனால் அவன் மிக்க அதிகாரமுடையவன் என்பதற் கையமில்லை. அவன் விசுவநாதனுக்கும் அவன்பின் ஆண்ட மூவருக்கும் முக்கிய மந்திரியாயிருந்தான். மதுரைப் பாளையகாரர் தம்வம்சத்தைக் கண்டவனாக அவனைமதிக்கிறார்கள். இப்பொழுது திருமலைநாயக்கன் சத்திரத்தி லிருக்கும் அவன்சிலைக்கு இன்னும் மாலையணிந்து வருகின்றனர். மதுரைக் கோயிலுள் இருக்கும் ஆயிரக்கால் மண்டபம் அவனாலாயதே. விசுவநாதன்கீழ்நாடு நன்றாக ஆளப்பட்டது. கோட்டைகளும் கோயி



ல்களும் கட்டப்பட்டன. பாய்ச்சல் வேலைகள்பல தொடங்கப்பட்டன. வல்லத்தைக் கொடுத்துத் தஞ்சையரசனிடம் திருச்சிராப்பள்ளியைப் பெற்று அதன்குன்றை பலப்படுத்திக்கொண்டார். திருநெல்வேலியில் ஐவர்எழுந்து தாம் "ஐம்பாண்டவர்" என்று சொல்லித் துயருறுத்தினர். கடைசியில் தமக்குள் ஒருவரும் மதுரையில் ஒருவனும் சண்டைசெய்து ஜெயிப்பவருக்கு நாட்டைத்தருவதாக ஒத்துக்கொண்டனர். இதில் மதுரை ஜெயித்தது. திருநெல்வேலி சீர்ப்படுத்தப்பட்டது. நாட்டுக்காவலுக்காக மதுரைக்கோட்டையின் 72-சிறுகோபுரங்களில் ஒவ்வொன்றையும் ஒருதலைவனிடம் கொடுத்தனர். ஒவ்வொருவனும் தானும் தன்பின்னோரும் எப்பொழுதும் அரசருக்காகச் சேனைவைத்துக்கொண்டு கப்பங்கட்டுவதாக ஒத்துக்கொண்டனன். இஃதே மதுரைப்பாளையக்காரரின் ஆதிவரலாறு. இவர்களுட்பலர் இன்னும் தம்வம்ச நிலத்தை வைத்துக்கொண்டிருக்கிறார்.

---

## PHYSICAL CULTURE.

## உடற்பயிற்சி.

### I. உடற்பயிற்சியி னின்றியமையாமை.

வாழும்பொருளனைத்தும் தாம் நிற்க ஓராதாரமாதல், வளர்தற்கோர் மூலையாதல், இயங்குதற்கோர் பிணிப்பாதல், முழுமுதலுடன் நோக்குமிடத்துத் தனியாய் எவ்வளவு கீழ்ப்பட்டதாயினும் அம்முழுப்பொருள் சார்ந்து நிற்பதற்கு இன்றியமையாத் துணைக்கருவியாக நிற்பதோர் பொருளாதல், உடைத்தாதல் வேண்டும். இது யாவரும் நன்குணர்ந்ததே. அத்திவாரமின்றி ஒருவீடுங்கட்டவியலாது. தனக்கென வேறு பயனிலாது மிகவும் பூர்த்தியா யிபற்றப்பட்டிருக்கும்போதும் அது சாதாரணமாய்க் கட்புலனாகாமல், மற்று இருளில்மறைந்துறைய விரும்புகின்றது. ஒரு மனிதனது கருதுமாற்றலினுக்கும், உடலுக்கும் அவனது மனவோட்டத்தினிற்கும், சரீரபலத்தினிற்கும் முறையே உள்ள இயைபு மேற்கூறியதை மிகவு மொக்கும். இவ்வுவமை பொருந்துவதாயின் தசை குருதிகளின் ஆரோக்கிய நிலையினைக்காட்டிலும் மிகக்கவலை யெடுத்துக்கொள்ளவேண்டுவது ஒரு மாணாக்கனுக்கு வேறொன்று மிலதொன்பது எளிதிற்புலனாம். அற்றேனும் தங்கள் சுகாதாரத்தைக் குறித்துக் கவலையுறல், அல்லது அதேபொருள்படும் தங்கள் தசைக்குருதிகளின் விவேகத்தோடிசைந்த சீர்திருத்தம், மாணாக்கர்களுண்மையாய்க் கவற்சிசெய்வதுள் கடைப்பொருளாவது நன்கு விளங்கும்விஷயம். மாணாக்கனுக்கும் படிப்பி லாசைமிகமிக அவன் அதிக

மாக இவ்வழியில் வழுவி, கொடிகாட்டப்படாத புகைவண்டித் தொடற்சியைப்போன்று, எங்குநிற்குதுமென வறிவதன்முன் மரணத்திற்கேதுவாகும் செங்குத்துமலையொன்றின் உச்சியிற் றன்னைச் செலுத்திக்கொள்ளக்கூடும். ஆகையால் அனுபவமனைத்தும் நியாயமெனத் தெரிக்கும் பின்வருவதை ஐயமற்ற மனநிதானமெனக்கொண்டு படிப்பிற் புகுவதேமேதக்கது. சாதாரணமாய் இருந்தநிலையிற் செய்யப்படும் தொழிலனைத்தும் முக்கியமாய்க் கடினமான தொடர்ந்த மனமுயற்சியுடன் கூடிய இருந்தியற்றும் வழக்கம் பெரும்பாலும் உடற்கு அசௌக்கியம் பயப்பன. இயற்கையிலேயே நொய்யதேகக் கட்டுபெற்று வித்தகங்கள் நடுவிற் றம்மை வீழ்த்திக்கொள்ளும் நோக்கமுள்ளவர்கள் உடனே மனவாற்றல்களின் வன்மையையொடுக்கி, உடற்கட்டைப் பலவீனமாக்க முயலுகின்றனர். இவ்வுறுதிக்கூற்றின்பின் நல்லதொழில் செய்பவனொருவன் தனது ஆயுதங்களைக் கூர்மையுடன் வைத்திருப்பதில், அல்லதுநல்ல வீரனொருவன் தனது வெடிமருந்தை உலர்ந்தநிலையில் வைத்துக்கொள்வதில், முறையே எடுத்துக்கொள்ளுங் கவலை, ஒவ்வொருவனும் தனது உடற்சௌக்கியத்தைப் பாதுகாப்பதில் ஒருறுதிப்பாடுடன் செலுத்தவருவானாகில், தன்னுடையதலையிற்றானே மண்ணைவாரிப் போட்டுக்கொண்டதாக அவன்கருதட்டும். இடையில் யாம் எம்மனுபவத்திற் கண்ட மிகவுஞ் சிறந்த வப்பியாசத்திற்குரிய கருத்துக்களிற் சிலவற்றைச் சிலத் தலைக்குறிகளின் கீழ் ஈங்கு குறித்துவிடுப்பாம்.

## II தேகாப்பியாசம்.

சரீரத்தின் அங்கமொவ்வொன்றின், மற்று, உண்மையாகவே அண்டத்திலுயிர்த்திருத்தற்குரிய ஒவ்வொருவாற்றலின் கிளர்ச்சியுஞ் செழுமையும் தேகப் பயிற்சியைச் சார்ந்தன. வாழ்க்கையனைத்தும் ஒருமுயற்சி அல்லது வேலைப்பாடாகும். முற்றியவோய்வு இடுகாட்டேகணலாம். ஒருவனது ஆற்றலினெல்லை அவனது வேலைசெய் வன்மையின் எல்லையாம். உடலின் ஒவ்வொரு ஆற்றலினையும் தொழில்புரி சக்தியினையும் இசைவுள்ளவோரொழுங்குடன் வைத்திருப்பதே ஆரோக்கியமாம். உயிர்நிலையாற்றலின் மிகுந்தவளவுடன் ஆரோக்கியமாயிருப்பதே வன்மையெனற்பாலது. மிகுந்தவலியின்றியும் ஒருவன் சௌக்கியமாயிருத்தலியலும். ஆனால் சுகமனைத்தும் அனேகமாய் வன்மைக்குவழிகாட்டும்; சுகவீனம் பலவீனமே. இயற்கையிற் சாதாரணமாய்ப் பொருள்கள் வளர்வதாப் பருத்த உருவமடைவதை எவரும் பார்க்கலாம். இவ்வளர்ச்சி பிராணிகளின் அல்லது தாவரத்திற் சடுத்த உயிர்நிலையினுக்குற்ற சக்தியை இடைவிடாமலும், கடைபிறழா



மலும் பயன்படுத்துவதேயாம். இச்சக்தியினோட்டத்தைத் தடுத்துக்குறைக்குமெதுவும் - உதாரணமாக கடுங்காற்று அல்லது உறைபனி - வளர்ச்சியை மறித்து விளைவைக்குறுக்கும். ஆகையால் இருக்கையிலிருத்தல், எழுத்துப்பீடமீது சாய்ந்திருத்தல், உடல்வளைத்து நூலினை உறுத்து நோக்கியிருத்தல், இவைபோன்றன தன்னுடலை வளரச்செய்யும் மார்க்கங்கள் ஒருகாலுமாகா, என்பதை மாணாக்கன்மனதில் நிறுவட்டும். தேகப்பயிற்சியிலேயே குருதியை ஓடச்செய்துத் தசைக்கட்டயிடை யூன்றிப் பண்படுத்தலாகும். அப்பயிற்சி செய்யாவிடின் இயற்கைமாது தன்னை இகழவொட்டாள். கற்கும் வாலிபனொவ்வொருவனும் தினம் இரண்டுமணிநேரமாவது திறந்தவெளியிற்போய்வருவான் ஒருறுதி முடிவு செய்யவேண்டும். செய்யாவிடின் இரத்தவோட்டமற்ற உறுப்புகள், தசைக்கட்டின் உள்ளுறைபிரிவுகளின் தொழிலின் தடைப்பாடு இரைக்குடலினும் மூளையினும் உண்டாகும் பல அசௌக்கியச் சின்னங்கள், முதலியன தக்ககாலத்தில் அவனையடைந்து இயற்கைக்கு மாறாக அவன்வழுவிவருவதையும் தன் வழக்கங்களைச் சீர்திருத்தாவிடின் கெட்டபையனைப் போன்று நிச்சயமாகவே கசையடிபெறுவானென்றும் தெருட்டும். ஏனெனில் இயற்கைமாது எளிதில் மனமிரங்கும் சில மக்கட்குரிய ஆசிரியர்போன்று சிறாரைநடத்துவதில் ஒருபோதும் நிதானமற்ற இரக்கமுள்ளவளன்று. மற்று ஏனோ மாணாக்கன் மந்தமும் சுகவீனமும் பயக்கும் இருத்தல்நிலையினை இவ்வாறுபோற்றுதல்வேண்டும்? ஒருவன் இருந்து சிந்தனைசெய்வதாங்கே நின்றுசெய்தலியலும்; அன்று நிற்பின் பெரும்பாலும் பதின்மடங்கு நன்கு சிந்தித்தலாகும். மற்றுந் தற்காலப் படிப்பைக்குறித்தோ மிகவும் பாரமானநூல்கள் மிகவும் பளுவற்ற பதிப்பில் வெகுமலிவாய்க் கிடைக்கும்போது தன்கரத்து நூலொன்றினை வைத்திருப்பதற்காகவே ஒருவன் தனது முதுகைவளைத்து மார்பை இரட்டித்து இருப்பதற்கு யாதொருகாரணமுமில்லை. தூங்கிவழிந்துகொண்டு இருக்கையிலிருப்பதினும் அறையின் நாற்பக்கமும் நடந்துகொண்டேயிருப்பின் ஒருநாடகத்தை அல்லது ஒரு செய்யுட்திரட்டை ஒருவன்மிகவு மியற்கையாயும் பயன்பெறவும் படித்தலாகும். இருத்தல்நிலை உண்மையாகவே ஒருவிகாரச்செயல்; அதனையார்வத்தோடும் பாராட்டலாகாது. ஆனாலொருவன் உட்காரும்போது அல்லது உட்காரவேண்டிவரும்போது எதுஎப்படியாயினும் நிமிர்ந்தாவது அவன் உட்காரட்டும்; பின்புறம் வெளிச்சத்தைநோக்க மார்புமுழுவதையும் பாவி வெளிநீட்டி உட்காரட்டும். மேலும் பாஷைகள் கற்கும்போதாதல் செய்யுட்களில் நல்லவிடங்களைப் படிக்கும்போதாவது கூடும்வரையின் அவன் உரக்கப் படிக்கட்டும். இவ்வழக்கமிருபான் நற்பயன்பயக்கும். உயிர்நிலைக்குரிய மிகவுமின்றியமையாத சுவாசாசயத்தைப் பலப்படுத்தும் பொதுஜனப் பள்ளிக்கூடங்கள் பலவற்றிலும் பேதமையான் ஒதுக்கப்படும் சப்தக்குறிப்பு வேறு

பாட்டின் உணர்ச்சியடைய அது செவியைப்பயிற்றும். உண்மையாகவே மாணாக்கருடைய ஆவல்கொள்ளும் பயிற்சிக்கும், விருத்திபண்ண அவர் ஆயத்தங்கொள்ளும் இருந்த நிலைப்பழக்கத்திற்கும் பெரும்பாலும் இன்றியமையாச் சம்பந்தம் ஒன்றுமிலது. படிப்பிற் சிறுதளவு நிச்சயமாகவே நூற்கிடை நடத்தவேண்டும். ஆயின் ஒரு நூலையாம் செவ்வனே கற்கவிரும்பின் முதற்கண் இலக்கணவகராதிகட்குரிய பாடுபட்டபின்பு ஒரு மலையுச்சியின் மீதாதல் தீயகுளிர்காற்று ஊறுபடுத்தின், ஒருசோலைநடுவிலாதல் காற்றோட்டமிலா ஓரறையின்கட் போன்றே நன்றுகற்கலாகும். மல்லிகைகொடியினின்றும் இனியகந்தம் சுற்றிவீசுவதாலும், ஆன்ற கடலின் பேரலைதாக்கி முழக்கும் ஒலியாலும் ஒருவன் காளிதாச நாடகமொன்றினைப் படிப்பதினாலெழும் இனிமைகுறையாது மற்றுத்தெளிவாய் அதிகமாகும். அகராதியைக்குறித்தோ முதற்கண்படிக்கும்போது மிகக்கடினமான மொழிகளை நீவிரேசேர்த்து ஒரு சிறுதொகுப்பாய் வைத்துக்கொண்டால் இரண்டாமுறை படிப்பை அகராதியின்றிச் சுலபமாய் நடத்தலாகும். சுகத்தினைக் குறித்தும் நற்சுவையினைக் குறித்தும் மாணாக்கனொருவன் முக்கியமாக கவனிக்கவேண்டியது யாதெனில், எங்குபடர்ந்தாலும் புகையிலை நாற்றத்தைச் சிலர்மேலேற்றிச் செல்வதாங்கு நூல்நாற்றத்தை உடனியற்றிச் செல்லாதிருத்தலேயாம். இப்புத்தகப் பைத்தியமாகிய ஒட்டுவாரொட்டியைக் கடிவான் சிறுவனொருவன் செயற்பால நல்விஷபம் ஊதியமின்றிப் படைஞர்குழாத்துட்சேர்வதே; அதன்கண்பெறும் போருக்குரிய படைக்கலப் பயிற்சி கல்விச்செறுக்கின் அழுக்கனைத்தையும் தீரத்துடைத்து நாட்டுரிமைக்கும் துரிதமுள்ள மனிதத்தன்மையினிற்குமுரிய கடைமைகள் பலவற்றினையும் புரிய இநிப்பை ஒரு சுற்றுப்பெருகச்செய்து வலியுண்டாக்கும். முற்காலத்தில் யவனதேயத்தவர் போன்று இக்காலத்துப் பிரஸ்ஸியர்கள் படையொழிங்கி ஞற்றலை அறிவதனால் ஒவ்வொருவரையும் ஒரு காலத்திற் சேனையிற்சேர்ந்து வதியச்செய்கின்றனர். ஆனால் நம்மவர்களிற் சிலரோ நன்குமுதிருமுன்னே கடைவிரிக்க ஆரம்பித்துப் பிஞ்சிற்பழுக்கின்றனர். ஆதலானே நமது நாட்டுரிமையும் மனிதத்தன்மையும் அழிகின்றது. மேலும் தற்காலத்துப் புகைவண்டி புகைபடகுகளிற் செல்வதின் வயத்தினை மனதில்வைப்பின், எதாயினுமொரு புல்வெளியிலாதல் ஒருசேய வலைமோதும் தீவிலாதல், இயற்கையின் பொற்புற்ற வதனத்தினின்றும் மிகவும் பயன்பெற்ற கருத்துக்கள் உட்கொள்ளாது, வாரத்திற்குப் பின்வாரம் மாதக்கணக்காய் மந்தமான வொரு தொல்நூலிற் பிணிப்பட்டிருக்கும் படிப்பிற் கருத்துள்ள சிறுவனொழுக்கங் குற்றமற்றதாகாது. நூலொன்று இன்றியமையாததாயின் நியாயமாகவே கையிலொன்று இருத்தலாகும். ஆனாற் கூடும்வரையி லெப்போதும் இவ்வேட்டுதவிகளிற் சாராது இயற்கை வனப்பை உற்றுநோக்குவதால் நேரேயறிவதும்



இயற்கையினாற்றல் காற்றோடு நம்மைச்சூழ்வதால் உணர்வற்றதன்மையாய்க் கருத்தும் உணர்வும் பூரிக்கத் தன்னைமறந்து அறிவுடை செயலற்ற கோலத்தில் உட்கார்ந்திருத்தலுமே சாலவும்நன்று; ஆனாற், தற்காலத்தேற்பட்டிருக்கும் தேசசஞ்சாரம் தேகசௌக்கியம் உள்ளப்பயிற்சி ஆகிய இவ்விரண்டுபயனையும் ஆதரிக்கச்செய்தவன் முன்னர் ஒருவன் அதிகமாய்ச் சிந்தித்தலைப் போற்றவேண்டுமென்பது அவசியமன்று. இயற்கை வரலாற்றின் பகுதிகளாய பௌமியநூல், நிலைத்திணைப்பொருள்நூல், விலங்கியல்நூல் ஆகிய இவையனைத்தும் வெளியிடத்திலேயே நன்று கற்கலாகும். அவையிற்றின் பயன்பெறும் பயிற்சி தனித்த ஆண்மையினுக்கு நேர்த்தியான பயிற்சிச் சாலையாகும் முயற்சியுமூக்கமும் வேண்டிய கால்நடையிற்போதல் வழக்கத்தையும் விருத்திபண்ணுவதாகின்றது. சரித்திரமும் சிலாசாதன நூலுங்கூட வரலாறடைந்தபடுகை, அழிந்தசரித்திரம், பெரிய கோயில் இவையிற்றினருகிற் தக்கவாறு பயிறல்கூடும். உண்மையாகவே உலகமனைத்துமே கிட்டத்தட்ட இடம்பெயர்ந்துசெல்லுந் தன்மையிலிருக்குங்காலத்தில், வீட்டகத்துத்தங்கி, நூல்களினின்றுமட்டுமே மந்தமாக அறிவுகொள்ளும் மாணாக்கன் வாழ்க்கைமுழுவதும் சௌக்கியத்தளர்வுற்றுப் பிராணனைக் கையிற்பிடித்துச்சென்று தக்கபருவத்திற்கு முன் இடுகாடுசேரவேண்டிவருவதோடுகூட சீருடலுற்றவரனைவராலும் வலியறையாகவும் விகாரப்பொருளாகவும் மதிக்கப்படுதலை எதிர்பார்க்க வேண்டியதேயாகும்.

உடற்கட்டை பதமும் உறுதியும் திரவியதாய் வைத்துக் கோடலில் விளையாட்டினையுங் கரடி பழகுதலையும் போன்று சிறந்தது வேறொன்றுமின்று. பலருஞ் செய்துவருஞ் சாப்பாட்டிற்கு முன்முறை தவறாது சரீரவியல்பினிற்கொத்து உலாவுதல், மெய்யாகவே உருசியற்ற தன்மையையடைகின்றது. சிறிது இனிமையோடு கலந்து அதனைப் பக்குவமாக்க ஒவ்வொருவருமறியார். அத்தகைய வொழுங்கின் இனிமையற்ற தன்மையை உணர்வோருக்குச் சுகமான ஜனசமூகக் கிளர்ச்சியுடன் வேண்டிய பயிற்சியையும் கரடி விளையாட்டு பயக்கும். வாலிபருக்கும் சிறுவர்க்கும் சட்டப்பந்து விளையாட்டும், சாந்தகுணமுள்ளோருக்கும், நிதானமுற்று விவாகமற்று வயது முதிர்ந்தோருக்கும், சல்லடைப்பந்தாட்டமும் மேலானவையாம். எவ்வகையினருக்கும், எவ்வயதினருக்கும், கைப்பந்து சிறந்ததென்று எடுத்துக் கூறலாம். நிதானமற்றுச் செய்யாவிடின் படகு செலுத்தல் இயற்கையாகவே ஆணவமுற்ற மேற்றேயப் பயிற்சி. கப்பற்பாயினையும் சுக்கானையும் திறத்தொடு நிர்வகித்தல் ஊக்கமும் முயற்சியுமுள்ள ஆண்மைக் குணத்திற்குரிய ஆற்றலனைத்தையும் பயன்படுத்தும் தொழிலாம். மற்றும் மீன்பிடித்தல் சிந்திப்பதற்கும், கவிக்குரிய மனோதர்மத்தினிற்கும் வழிகாட்டுகின்றது. மாரியல் மேடைப்பந்து (Billiards) மிகவும் நல்ல விளையாட்டாகும். அதனில் உண்மையாகவே விநோதமான ஒரு தீவிரக் கண்பார்வை

யும், பரிசத்தேர்ச்சியும் மதிப்பு நுண்மையும் அதிகரிக்கின்றது. சீட்டாடுதல் இதனுடன் ஒத்து நோக்குமிடத்து மந்தமானது; ஞாபகசக்தியினை மட்டுமே அது பயிற்றுகின்றது. சதுரங்கமோ ஒரு பொழுது போக்காகாது. அஃதொரு பயிற்சிக் கருவியாய்க் கடினமான மனவேலையாகின்றது. தொடர்புற்ற மனவூக்கமற்றவனுக்கு அஃது ஒருறுதிப்பாடு பயக்கலாகும்; ஆனால் ஒழுங்குள்ள மனவோட்டமுள்ளவனுக்கு ஒருவகை ஆறுதல் பயப்பதரிது.

ச. கி. சுந்தராசாரியன்.

---

## ÆSOP' S FABLES.
## கட்டுக்கதைகள்.

---

### IV-தவளையுங் குள்ளநரியும்.

ஒரு காட்டிற் குளமொன்றிருந்தது. அக்குளத்தினின்றும் ஒரு தவளை கரையில் தாவிக்குதித்து அங்கே வந்த காட்டு மிருகங்களுக்கெல்லாம் 'யான் ஒருகை தேர்ந்த வைத்தியன், எவ்வித நோயினையும் தீர்க்க வல்லேன்' என்று ஒருவரும் உணராத சொற்களில் தனது வல்லமை தோன்ற உரத்த கரகரத்த குரலிற் சொல்லிற்று. இத்தகைய குரலினிற்கூறிய இவ்வார்த்தைகள் அத்தவளையை மற்றைய மிருகங்கள் வியக்கும்படி செய்தனவேயன்றி அதன் தற்புகழ்ச்சி ஏற்புடைத்தே என்றெண்ணும்படியுஞ் செய்தன. இறுதியில் ஒரு குள்ளநரி "மெல்லிய வெள்ளிய தாடைகளும், புள்ளிமிக்க தோலும் இவ்வலக்ஷணமான உடலுமுடைய நீ எவ்வாறு பிறருடைய பிணிகளைத் தீர்க்கவல்லையோ?" என்று வினவிற்று.

நீதி.—வைத்தியனே! உன்னுடைய நோயைத் தீர்த்துக்கொள்க.

அமைக்குமாறு.—நாம் வழக்கமாய்ச் செய்யும் பிழைகளை நம்மிடம் நிகழவொட்டாது தடுத்தலின்றிப் பிறரிடத்தில் அவை நிகழக்கண்டு அவற்றைத் திருத்த முயலக்கூடாது. இவ்வுலகில் வைத்தியம் பார்த்துக்கொள்ளவேண்டிய கண்களுடையார் கண் வைத்தியஞ் செய்யத்தக்கவர்களல்லர்.

"ஏதிலார் குற்றப்போற் றங்குற்றங் காண்கிற்பிற்
றீதுண்டோ மன்னு முயிர்க்கு.
தன்குற்ற நீங்கிப் பிறர்குற்றங் காண்கிற்பி
னென்குற்ற மாகுமிறைக்கு"—திருக்குறள்.



### V. கழுதையும் முள்ளியும்.

ஒரு கழுதை அறுப்புக்காலத்தில் தன் எஜமானனும் கதிர் அறுப்பவர்களும் உண்ணும் பொருட்டு வயல்வெளியின் வழியாகப் பலவகைப்பட்ட உண்டிகளையுஞ் சுமந்துகொண்டு போயிற்று. அங்ஙனம் செல்கையில் ஆங்கோர் அழகிய முள்ளியிருந்ததுகண்டு, மிகப்பசியாயிருந்தமையால் அதனைத் தின்னத்தொடங்கிற்று. அது தின்றுகொண்டிருக்கும்போது பின்வருமாறு யோசித்தது. "எத்தனை சோற்றுக்கு வீங்கிகளாய சாப்பாட்டிராமர்கள் யான் கொண்டுபோகும் இப்பலவகைப்பட்ட உண்டிகளை உண்டு சந்தோஷமாயிருப்பதாக நினைப்பார்கள்! ஆனால் எனக்கோ மிக்க சுவையும் இனிமையும் வாய்ந்த உணவைக்காட்டிலும் இம்முள்ளியே மிக்க சுவையுள்ளது; பெரிதும் விரும்பத்தக்கது.

நீதி:—ஒருவனுக்குப் பால் மற்றவனுக்குப் பாஷாணம்.

அமைக்குமாறு.—ஆடவர், பெண்டிர் சிறுவராய இவர்களது உயரமும் தலைமயிரின் நிறமும், மேனிப்பொலிவும்முதலாயின மிகவும் வேறுபடுமாறுபோலவே அவர்களது சுவையும் மிகவும் வேறுபடுகின்றது. ஒன்றைப்போல் மற்றொன்றையும் ஒத்திருக்க எதிர்பார்த்தல் மிகவும் பேதைமையாம். இங்ஙனமிருப்பினும், தங்கள் சொந்த விருப்பத்தையாவது வெறுப்பினையாவது தகைவுடைமைக்குற்ற ஒரே விதியாகநினைத்துக்கொண்டு, தாங்கள்மதித்தது போல மற்றவர்களும் மதியாவிடிற் குழந்தைகளென ஆச்சரியப்படும் மனிதர் எத்தனையோர்களைப் பார்க்கின்றோம். அடிக்கடி முரட்டுத்தனமான வார்த்தைகளை வழங்குமாறும், வேண்டாத விஷயங்களிற் பிரவேசிக்குமாறுஞ் செலுத்தும் இப்பெரும் பிழை இக்கதையிற் கண்டிக்கப்படுகின்றது.

மக்கள் கருத்தவர் வைத்துள கடிகைபோல்
ஒவ்வா ; ஒருவரு முற்றுவே றொருவர்
செல்லும் வழிகளிற் செல்லார் ; தாந்தாம்
கொண்டதே கோளெனக் கூறிநம் புவரே.

### VI. வானம்பாடியும் அதன் குஞ்சுகளும்.

முதிர்ந்து அறுக்கும் பருவத்திலிருக்கும் கதிர்களினிடையே தன் குஞ்சுகளை ஒளித்துவைத்திருந்ததோர் வானம்பாடி தன் குஞ்சுகள் இறகுமுளைத்துப் பறந்து வேறிடத்திற்குப் போகுமுன்னர், எங்கே கதிர் அறுப்பவர்கள் வந்து அறுத்து விடுகிறார்களோவென்று பயந்துகொண்டிருந்தது. ஆகையால், தாய் இரைதேடுவதற்குப் பறந்துபோகும்போது தன் குஞ்சுகளிடம் "கதிரறுப்பவர்கள் நானில்லாதபோது என்ன பேசுகிறார்களோ அவற்றைக் கவனித்துக்கேட்டு நான் வந்ததும் என்னிடம் சொல்லுங்கள்"

என்று கட்டளையிட்டது. அவ்வானம்பாடி சென்றவளவில் அந்நிலத்தின் சொந்தக்காரன் தன மகனைக்கூப்பிட்டு "நல்லது, இந்தத்தானியம் வேண்டியவளவு முதிர்ந்திருக்கின்றதென்று நினைக்கின்றேன். ஆகையால் நாளைக்கு அதிகாலையில் நமது நேசர்களிடத்தும் அண்டையிலிருப்பவரிடத்தும் சென்று இங்கே வந்து நமக்கு உதவும்படி சொல்லி அழைத்துவா" என்று சொல்லியதைக் குஞ்சுகள் கவனித்துக் கேட்டுக்கொண்டிருந்தன. பெரிய வானம்பாடி வந்தவுடன் அக்குஞ்சுகள் நடுநடுங்கி அதைச்சுற்றிக் குதித்து நடந்தேறியதைச் சொல்லித் தங்களை வேற்றிடத்திற்குக் கொண்டுபோகும்படி கேட்டுக்கொண்டன. தாய் குஞ்சுகளைப் பார்த்துப் "பயப்படாமலிருங்கள்! சொந்தக்காரன் தன் நேசர்களையும் அண்டையிலிருப்பவரையும் நம்பிக்கொண்டிருக்கிறானாதலின் நாளைக்கு இக்கதிர் அறுக்கப்படப்போகிறதில்லை" என்று சொல்லிற்று. மறுநாளும் தாய் அதே வேளையில் முன்போலவே கட்டளையிட்டுச்சென்றது. சொந்தக்காரன் வந்து, யார் யாரை அழைத்தனனோ அவர்கள் வரவை எதிர்பார்த்துக்கொண்டே காத்திருந்தான். சூரியனோ கடுவெயிலெறிந்தனன். ஒருவரும் அவனுக்கு உதவவாராததனால் அன்று ஒரு வேலையும் நடக்கவில்லை. அவன் "நம் சிநேகரிவர் நம் பத்தக்கவர்களல்லரென்பது தோன்றுகின்றது. ஆகையால் நீ உன் மாமன் முதலிய உறவினரிடத்துப்போய், நாளைக்காலையிற் பொழுதோடே அறுப்பதில் நமக்கு உதவும்படி வரவேண்டினேனென்றுசொல்" என்றுதன் மகனிடம் சொன்னான். இதையும் பயமிகுந்த அக்குஞ்சுகள் தம் தாயினிடம் கூறின. அதற்குத்தாய் ,, அப்படியானாற் குழந்தைகாள்! பயப்படவேண்டாம்! உறவினர் ஒருவர்க்கொருவர் உதவி செய்ய முன் வரமாட்டார்கள். ஆனால் மிகவும் சாக்கிரதையாய் அவர்கள் அடுத்ததரம் சொல்லிக்கொள்வதைக் கவனித்துக்கேட்டு எனக்கு அறிவியுங்கள்" என்று சொல்லி வழக்கம்போலவே மறுநாளும் வெளியே பறந்துபோயிற்று. சொந்தக்காரன், தன் உறவினரும் மற்றையுட: அண்டையிலிருப்பவரைப்போல, ஏனோ தானோவென்றிருப்பதைக் கண்டு கொண்டு "சொக்கா! கவனித்துக்கேள், நாளைப் பொழுதுவிடியுமுன்னேயே நல்ல அரிவாளிரண்டு கொணர்ந்துவை; நாமே கதிரை யறுத்துவிடுவோம்" என்று தன் மகனிடம் சொன்னான். அக்குஞ்சுகள் இதனைத்தாயிடம் உரைத்தபோது "நாம் போய்விடவேண்டியது உண்மை தான்! ஒருவன் தானே ஒரு காரியத்தைச்செய்ய முயலுவானாயின் அவன் ஏமாறமாட்டான்" என்று தன் குஞ்சுகளை நோக்கியுரைத்தது. பின்னர் அஃது உடனே தன் குஞ்சுகளையெடுத்துச்சென்றது. மறுநாள் அவனும் அவன் மகனும் கதிரையறுத்தார்கள்.

**நீதி**:—தன் காரியம் நன்றாய் முடியவேண்டுமென்று விரும்புகிறவன் அதனைத் தானே செய்யவேண்டும்.



**அமைக்குமாறு**:—இக்கதை தற்சார்பென்னுங் கடமையை விளக்குகின்றது. 'குடியானவன் செருப்பிலிருக்கு மண்ணே அவன் உழுநிலத்திற்குத் தக்க எருவாம்' என்றோர் ஆங்கிலப்பழமொழியும் வழங்குகின்றது. நீயே செய்யக்கூடிய காரியங்களிற் சிநேகருடைய உதவியையும், உறவினருதவியையும் நம்பியிராதே.

நண்பின ருறவினர் நகைத்துப் பின்செல்வர்
பண்பொடு செயல்பல பரிந்து செய்பவன்
எண்கொண்ட வாறவை யினிது முற்றத்தான்
திண்கொண்ட கைகளைத் தேர்ந்து கட்கவே.

## VII. சேவலுங் குள்ளநரியும்.

வெயிற்காலத்தில் ஒரு நாட்காலையில் ஒரு குள்ளநரி ஒரு நிலத்தினருகிற் போய்க்கொண்டிருக்கையில், காட்டு விலங்குகள் பிடிப்பதற்கென்று கட்டியிருக்கும் வலையில் அகப்பட்டுக்கொண்டது. ஒரு சேவல் தூரத்திலிருந்து நடந்ததைப் பார்த்துக்கொண்டிருந்தது. அக்கொடிய பகைவனிடந்தனக்கு நம்பிக்கையில்லையேனும் சேவல் மிகவுஞ் சாக்கிரதையாய் அதனையடுத்து நடுநடுங்கி அதிக அச்சத்தோடும் அதனை எட்டிப்பார்த்தது. அந்நரி அதனைப்பார்த்தவுடனே தந்திரமாய் "என் அன்புடைய தம்பீ! எனக்கு இந்தத் தூதிர்ஷ்டமான கேடெல்லாம் உன்னாலேயே வந்திருக்கின்றன பார்! ஏனெனில், நான் வீட்டுக்கு அந்த வழியாய்ப் போய்க்கொண்டிருக்கும்போது நீ கூவுவதைக்கேட்டு, அப்புறம் போவதற்குமுன் உனக்கு உடம்பு எப்படியிருக்கிறதென்று கேட்கத் தீர்மானித்தேன். ஆனால் வந்த வழியில் இந்த விபத்தில் அகப்பட்டுக்கொண்டேன். ஆகையால் இப்பொழுது இக்கயிற்றை அறுப்பதற்கோர் கத்திகொண்டு வரும்படி வணக்கமுடன் விண்ணப்பஞ்செய்துகொள்ளுகிறேன். அது முடியாவிட்டால் நான் இக்கயிற்றைப் பல்லாற் கடித்து அறுக்கும்வரையிலாவது இதை நீ கூவி வெளிப்படுத்திவிடாமல் ஒளித்துவைக்க வேண்டுகின்றேன்" என்று எண்ணத்தகாத கபடத்தோடுரைத்தது. சேவல், விஷயம் இப்படியிருப்பதைப் பார்த்து விடைபகராது, தன்னால் இயன்ற வேகத்துடன் பறந்து, குடியானவனிடம் நடந்தது முழுவதையுமுரைத்தது. அவன் நல்ல ஆயுதமொன்று எடுத்துக்கொண்டுபோய் நரி தப்பி ஓடுவதற்கு முன்னே அதனைத் தொலைத்தான்.

**நீதி** :—பாத்திரமறிந்து பிச்சையிடு.

**அமைக்குமாறு** :—பிறருடைய துன்பத்தை நீக்குதலால் தயையுள்ள மனம் பேரானந்தத்தை அடைகின்றது. தாதாக்களநேகர், பிச்சை கேட்கிற ஒவ்வொருவனுக்கும் கொடுத்து அதனால் வஞ்சகத்தையும் சோம்பேறித்தனத்தையும் அடிக்கடி விருத்தி செய்கிறார்கள். மனச்சாக்ஷிக்கிசைந்து நடக்

குமோர் உண்மையானவன் தான் நீக்கும் பிறர் துன்பத்தைப்பற்றி உள்ளூற விசாரிப்பான்; அஃதன்றியும் ஈகை வேட்கையுடன் தான் செய்யுந் தர்மமனைத்தும் தக்க விடங்களிற் செலவிடப்படுகின்றதா என்று கவலையுடன் ஆராய்ந்து பார்ப்பான்.

பத்தியினி லாசையினிற் பாரோ ரிணங்கார்க
ளொத்தகொடை யார்க்கு முறும்.

(இன்னும் வரும்.)

ம. சு. கோவிந்த சிவன்.

---

## VEDANTA DESIKA.

## வேதாந்ததேசிகன் வைபவம்.

(318-ம் பக்கத் தொடர்ச்சி.)

பின்னராங் கொருதினம் திருமலையாத்திரையாப் பெருங்குழுவொன்று வெளிப்பட்டுச் செல்வதைக்கண்ணுற்ற வேதாந்த சோளரியும்,

“ ஊனேறு செல்வத் துடற்பிறவி யான்வேண்டேன்
ஆனேரேழ் வென்றா னடிமைத்திறமல்லால்
கூனேறுசங்க மிடத்தான் திருவேங்கடத்து
கோனேரி வாழுங் குருகாய் பிறப்பேனே.
உம்பருலகாண் டொருகுடைக்கீ ழுருப்பசிதன்
அம்பொற் கலையல்குல் பெற்றாலுமாதரியேன்
செம்பவள வாயான் திருவேங்கடமென்னும்
எம்பெருமான்பொன் மலைமே லேதேனு மாவேனே ”

என்று வாயாற வழுத்தி யப்பதியை யடைந்துள்ளோராய நங்குரவர் பெருமானுங் குலசேகராழ்வாரைப் போன்று தாமும்,

(முன்னந் தமதவதாரத்திற்கு ஹேதுபூதமாய மணி (கண்டை)யைத் தந் தந்தைபாலீந் தனுக்ரஹித்தருளிய திருவேங்கடத்தமுதனை) யஞ்சலிக்கப் பேரவாக்கொண்டு பிரயாணராய்க் கடிகாசலத்தை யண்மி யாண்டு பரமகருணாதியாய்த் துலங்கும் அக்காரக்கனியைத் திருட்டித்து,

“ எக்காலத் தெந்தையா யென்னுள் மன்னில்மற்
றெக்காலத்திலும் யாதொன்றும் வேண்டேன்
மிக்கார்வேத விமலர் வழங்கும் என்
அக்காரக்கனியே யுன்னையானே ”



என்றவணங் குரவருளிய பாசுரங்களைப் பாடிப்பாடி யவ்வக்காரக் கனியைத் தவுத்தியப்பிரணாமஞ்செய்து ஆறுமனத்தொடங்கனே சாலவுஞ் சோர்ன்மூகி யாறடைந்து அதிலாடி காலக்கடன்களைச் செவ்வனே யாற்றிப் பின்னராங்கு ஸர்வலோகநாயகியாம் அலர்மேன்மங்கையை யட்டாங்க ஸஹிதம் ப்ரணாமஞ்செய்து மீண்டுந் திருமலைத் தாழ்வரையில் நம்மாசிரிய ரத்தினமா விளங்கிடு முடையவராலே திருப்பிரதிட்டையாக்கப்பெற்றுத் திவ்விய தேஜோமயர்களா விளங்கும் ஆழ்வார்களையும், ஜகத்பிதாவான ஸ்ரீகோவிந்தராஜனையுந் திருவடிதொழுது

ప్రపద్యేతంగురుం ప్రాయః శ్రీనివాసానుకంపయా ।
ఇక్షుసారస్రవంత్యేవయత్ మూర్త్యా శర్కరాయితం ॥ என்றும்,

“ கண்ணனடியிணையை யெமக்குக் காட்டும் வெற்பு
கடுவினைய ரிருவினையுங் கடியும் வெற்பு
திண்ணமிது வீடென்னத் திகழும் வெற்பு
தெளிந்தபெருந் தீர்த்தங்கள் செறிந்தவெற்பு
புண்ணியத்தின் புகலிதென்னப் புகழும் வெற்புப்
பொன்னுலகின் போகமெலாம் புணர்க்கும் வெற்பு
விண்ணவரு மண்ணவரும் விரும்பும் வெற்பு
வேங்கட வெற்பென விளங்கும் வேதவெற்பே” என்று மனுஸந்தித்துக்கொண்டே சலிப்பில்லாது அவ்வசலத்தை யஞ்சலித்து அக்கணமே யதன் நெறியானே செல்லுழி, இடையிலுள்ள எம்பெருமானாரைப் பிரணமித்துப் பின்னராண்டிருந்தே திவ்ய நகரையும், திருக்கோபுர நயினாரையும் திவ்யவிமானத்தையு மஞ்சலித்து வீதிவலமாக வெழுந்தருளி ஸ்வாமிபுட்கரிணியினீராடி யனந்தரம் த்வாதசோர்த்வபுண்ட்ரங்கள் (பன்னிரண்டு திருமண்காப்புக்கள்) யக்ஞோபவீதங்கள், திருப்பவித்திரங்கள், துளஸிநளினாட்சமாலைகள், திருப்பரிவட்டங்களாதியாயவைகளை மந்திரபூர்வகமாக முறையே தந் திருமேனியிலணிந்து திவ்யதேஜோரூபியாய்த்துலங்கி ஞானப்பிரானைத் தொழுது பிரதக்கணமாக வாலயம்புக் காங்கு இலக்குமியம்சமாயசம்பகவிருக்கத்தை மனதாற வேற்றித்தொழுது, அவ் ஞானப்பிரான தருள்வெள்ளந் தேங்கியபோலொளிரும் புட்கரிணியைப் பிரதக்கணித்து உட்சென்றுங்கண் ஞானமுத்திரைகொண் டெழுந்தருளியிருக்கும் எம்பெருமானாது சரணகமலங்களைத் தஞ்சென்னிமிசைசூடி,

పశ్యేమలక్ష్మణమునేః ప్రతిపన్న హస్తా రున్నిద్రపద్మసుభగాముపదేశముద్రాం ॥
ఆకర్షణానినిగమాంతసరస్వతీనా ముచ్చాటనానిబహిరంతరుపప్లవానాం ।
పద్మాభ్యనిఘోరభవసంజ్వరపీడితానాం హృద్యానిభాంతియతిరాజమునేర్వచాంసి॥

என்கிற ஸ்லோகாதிகளை யருளிச்செய் திட்புகுந்து,— 'படியாய்க் கிடந்தும் உன் பவளவாய்க் காண்பேனே' என்ற குலசேகரன் படியருகே கிடந்து,

"அகலகில்லே னிறையுமென் றலர்மேன்மங்கை யுறைமார்பா
நிகரில்புகழா யுலகமூன் றுடையா யென்னையாள்வானே
நிகரிலமரர் முனிக்கணங்கள் விரும்பும் திருவேங்கடத்தானே
புகலொன் றில்லா வடியேனுன் னடிக்கீழமர்ந்து புகுந்தேனே"

என்கிறபாட்டை யனுஸந்தித்துக் கொண்டே திவ்யமங்கள விக்ரஹத்தையும் திவ்ய மஹிஷீபூஷணாயுதாதிகளையும் தொழுது, அவனது திவ்யகல்யாண குணானுபவங்களைக் குறைவறவனுபவித்திராநின்றுழி—இவர்பாற் றமது கடாக்ஷவீக்ஷணியங்கொண் டுவந்தருளிய திருவேங்கடமுடையானும் அங்ஙனே தீர்த்தாதிகளைப்பிரஸாதிப்பித்து (இக்கவிதார்க்கிககேஸரியைவிளித்து) நீவிர்நம் விடயமாக ஸ்தோத்திரத்தைச் செய்தருளுவீராகவென்னலும், அங்ஙனேயாகுகவென வங்கியமனத்தைச்சிரஸாக்கொண்டு (இன்னணமிவ்வேழை மாட்டிரங்கிய தயாகுணவிடயமாக) தயாசதக மென்னொருநூலைச் சரணாகதி மந்திரமாய த்வயத்துக்கு விவரணரூபமாகவருளிச்செய்ய வதனைச் செவியேற்றருளிய லோகாராட்டியனான வெம்பெருமான் மனமுவந்து பிள்ளையைக் குளிரநோக்கி யனுக்ரஹித்தருள யன்னவரும் கிருதார்த்தராய் ஆண்டுள்ளாரனைவர்க்கும் விசேடார்த்தங்களை யுபதேசித்துச் சின்னாளவணிருந்துழி யொருநாளித் தூப்பிற்பிள்ளையும் விவரணஞானவுளங்கொடு

ప్రశమిత కలిదోషాం ప్రాజ్యభోగానుబంధాం సముచితగుణజాతాం సమ్యగాచారయుక్తాం । శ్రితజనబహుమాన్యాం శ్రేయసీం వేంకటాద్రౌ శ్రియముపచినునిత్యం శ్రీనివాసత్వమేవ ॥

என்ற ச்லோகத்தால் ப்ரதிபத்திரூபமாகிய மங்களாசாஸனஞ்செய்தருளி சகல மரியாதைகளையு மளிக்கப்பெற்றுகந்தவராய் அத்தலத்தைநீத்துச் சாலவும் வடமதுரையாதியாய முத்திநற்றலங்களையடைந்து ஆங்காங்குள்ள வருட்பெரும்பிழம்பாகிய வெம்பெருமான்களை யாராதித்தாங்குள்ளவர்களைத் திருத்திப் பணிகொண் டன்னார்க்குச் சம்பிரதாயார்த்தங்களை யுபதேசித்தவணிருந்து சின்னாடிகளைக் கடந்து துங்கபத்திரா நதிக்கரையிலுள்ள ஒரு பகவத்ஸந்நிதியி லெழுந்தருளி யிருந்துள்ளளவில், ஆண்டு ஸஞ்சரிக்கா யாத்திரார்த்தம் அடைந்திருந்த (தம்மொடு இளமையில் கல்விபயின்ற மித்திரரரிய) வித்தியாரண்யரென்ற ஸந்யாசியைக் கண்ணுற்றுப் பேரானந்தமுற் றளவளாவுங்கால் கவிதார்க்கிகஸிம்ஹமும், வித்யாரண்யரை விளித்து நீவிரடைந்துளநிலை, துறக்கமார்க்கத்துக் குரிமையன்றென்று சாத்திரமுறையானே நிரூபித்து எங்ஙனமிதனை மறுக்கவல்லீரெனக் கடாவலும், அச்சந்யாஸி : இச்சிகமாந்தாரியனது வாய்மொழிசா



தமேயாயினும் நாங்கொண்ட நிலை பக்ஷமாக லாகாதென கபிமுஷ்டி (குரங்குப்பிடி) யெனக் கொண்டவராய் உத்தரமாய வாய்மதம்பேசாது மூங்கைபோன் றிருந்தனர்.

ஈதிங்ஙனமாக இவர்களிருந்துழி, டங்கரவரையன் மகளாரைப் பிரம்மரக்ஷஸ் பிடித்துப் பீடிக்குங்கால், அவ்ரக்ஷஸைப் போக்கப் பலமந்திராதிவகைப்பட்டோரால் ஒண்ணாதிருந்து (இவ்விருவரது வரவையறிந்து) இவர்களையடைந்து பிராணமத்தொடு தம்மனக்குறையை கிளத்திப் பிரார்த்திக்குங்காலையில் பிள்ளையும் அரையனைநோக்கி யாமவ்வணஞ் செயக்கடவவொண்ணாதென மறுத் தாண்டிருந்து ப்ரந்தாவன முதலாய திவ்யநகரப் பெருமான்களை யஞ்சலித்துக்கொண்டு—இனகுலக்கு இனனென்ன 'விலங்கிய இரகுபதிவாழ் திருவயோத்தி மார்க்கமாய் வாராணஸியைப்புக்குப் பாகீரதி நீரிற்றிளைத்து,

ఇహపురుషవిజానతాం పురాణం నిగతివశేన నిమీలితాందయాళుః ।
ఉపశతిపతిస్స్వయంపశూనాం ఉపనిషదామపిదూరగంరహస్యం ॥

என்ற ச்லோகத்தை யனுஸந்தித் தாங்கணிருந்து ஸ்ரீ புருடோத்தமம், கூர்மம், அஹோபிலம், திருமலை, திருவெவ்வுளூர், திருவல்லிக்கேணி, திருக்கடன்மல்லை, திருநீர்மலை, திருவடவேந்தை முதலாய பலதிவ்விய தேசங்களைச்சார்ந் தாங்காங்குள்ள எம்பிரான்களைப் பிராணாமத்தொடு மங்களாசாஸனஞ்செய்தருளிப்போந்தவரா யங்ஙனே ஸ்ரீபெரும்பூதூரையடைந்து (அவணுள வெம்பெருமானார்மாட்டு என்றும் பிரியகில்லா ஸந்துஷ்ட மனத்தராகையால்), వందేతం యమినాం ధురంధరమహం * * * * * * என்ற ச்லோகாதிகளை மனனித்துக்கொண் டவ்வெம்பெருமானாரைச் செவ்வனே நோக்கானந்தங்கொடு தீர்த்தாதிகளைப் பிரஸாதிக்கப்பெற்றவரா யிருந்தவளவில் இக்கவிதார்க்கிககேஸரியை யவ்வெம்பெருமனார் கண்ணாரக்கண்டு விளித்து நீவிர் எமது தரிசனத்தை மிகப்படுத்தக்கடவீரென்னலும், பிள்ளையுமங்ஙனேயாகுகவென—'ஆரணநூல்வழி,—என்னும் பாசுரத்தையும், వలితాఘూంతపరివాదివైభవా * * என்றிதுபோன்ற சில ச்லோகங்களை யருளிச்செய்து உடனே விடைபெற்றுச் சாலவும் கச்சியம்பதியை யடைந்து பண்டையேபோல், சித்தாந்தப்பிரவசனஞ் செய்துகொண் டெழுந்தருளி யிருந்தனர்.

அப்போழ் தாங்கொரு மாயஸந்யாஸி பெரும்விருதொடடைந்து இப்பிள்ளையையன்மி பன்னெடுநாள் வாதிட்டுப் புறமுதுகிட்டோடித் தப்பாலுள்ள க்ஷுத்திரமந்திரப்பேற்றால் அகங்கரித் தாண்டுள்ள ஒருதடத்தின்மூழ்கி யதன் பூர்ணபயஸையும் பானம்பண்ணலும் (அம்மாமந்திர பலத்தால்) தூப்பிற்பிள்ளையி னுதரத்தில் உபாதியுண்டாக,—முக்காலங்களுமுணரும்

பரமஞானியாய நிகமாந்ததேசிகனார் அம்மந்திரத்தினதுந் தமது உபாஸனையினது வன்மையையு முணர்ந்து, அங்ஙனே யதற்குமாறாத் தம்மெதிரிற் கிடந்த ஒரு தம்பத்தைக் கீறி யதன்வழியா யச்சந்யாஸியருந்திய நீரத்தனையும் பெருகுப்படி யியற்றி யொன்றுமுணரார்போல் வாளாகிடத்தலும், இஃதோர்ந்தாறுப வன்னவனு மினித் தம்மால் பிள்ளையை வெல்லும் திறனில்லையெனத் தேர்ந்து மீண்டும் பாதசாரியாய் வேதாந்தமஹாதேசிகனைக் கிட்டி யன்னாரது திருவடிப் போதுகளில் பன்னாழிகைகாறும் ஸாட்டாங்கப் பிரணாமமியற்றி வந்தித்துப்பலவாறுவேண்டித் தாஸபூதனாகிச் சின்னாளிருந்துத் தாமறியா மறைப்பொருட்களைக் கேட்டுத் தெளிந்து விடைபெற்றுத் தம்மில்லம்புக்குக் கிடந்தனன்.

இன்னண மிவரிருத்தலும், முற்கூறியவித்யாரண்ய ரென்பார் அரையனரும்புதல்விடைப் பற்றியிருந்த பிரம்மராக்ஷஸைப்போக்கி விஜயநகர ராஜவல்லபராயிருந்துழி, உஞ்சீவிர்த்திடையே பெருங் கடமைப்பாடென மதித்து நிகழ்த்திவரும் தேசிகனார்பால்—,

வாரீர் குலச்சிரேட்டரே !

எமதரையனை நுமது தொண்டனாக்கிப் பெரும்பொருளை யீயுமாறு யான்செயக்கடவேன்; நீவிர் வறுமையின் மிகுதியாற் கொண்டுள உஞ்சீவிர்த்தியை (ஏற்பதை) யொழித் தீண்டடைவீராக,—என்றொருநிருபம் விடுத்தலும், அதனை யுற்றுநோக்கியவராய்த் தூப்பிற்பிள்ளை யங்ஙனே யதற்குமாறாக, க்ஷோணீகோண ஶதாம்ஶ * * * * என்றொரு ச்லோகத்தை வரைந்தனுப்பலுமந்நிருபத்தைக்கண்ட வித்தியாரண்யர் பெருமனங்கசிந்து—என்செய்வது? பிள்ளையின் வைராக்கியத்தை யெவ்வகையானும் நீக்கமுயல்வதே பெருங்கடப்பாடெனச் சிந்தனைத்து மீண்டுமொரு திருமுகமனுப்ப, பிள்ளையதனையுமேற்று, ஶிலம் கிமநலம் என்றுதுவக்கி விடயாதிகளில் வைராக்கியத்தையும், பரமனிடத்திற் ப்ரேமாதிக்கத்தையும் தெளிவுறக்காட்டுந் தகைமைத்தாய பஞ்ச ச்லோகங்களை யோரேட்டினிடம் வரைந்து அன்னதை வித்யாரண்யர்பால்விடுத்தலும், வித்யாரண்யர் அம்மறுப்பைக்கண்டு தாம் மேற்கொண்ட முயற்சி யினிடையூற்றினுக்கு த்விதீயாவச்சதியில்லாமற் போயது; அத்தூப்பிற்பிள்ளை மனநிலை சாலவும் மெச்சற்பாலதே என்று பலவேறுவிதங்களகக் கிளத்தி வாய்பொத்திப் பிள்ளையைச் சரணடைந்து அவரது குணாதிசயங்களி லீடுபட்டுப் பன்னாள் பிரவணரா யுகந்திருந்தனர்.

(இன்னும்வரும்.)

கே. இரங்காசாரியர்.

---



# IDEAL OF UNIVERSAL RELIGION.
## ஸர்வார்ஹமத லக்ஷண பூர்த்தி.

காரிய ரூருவால் யாதுபயனெனில், பிரதிபந்தங்களை யவர் இனிது விலக்கக்கூடும். அதனுடன் அவரதுகடமை முடிவு பெறுகின்றது. ஆகையால் நுங்களாற் கூடுமாயின் உதவி புரிமின்; ஆயின் அழிக்கற்க. மனிதர்களை ஆத்மகாமர்களாக்க நுங்களால் முடியுமென்னும் வீணெண்ணங்களை யொழிமின். இவையெல்லாம் முடியாதவையாம். நுங்கட்கு நுங்கள் ஆன்மாவைத்தவிர்த்து வேறு ஆசாரியன் இலன். இதனை யொப்புக்கொண்மின். அங்ஙனம் ஒப்புக்கொள்வதனால் ஆகும் பயன் என்னை யெனின், மன்பதையில் பல்வேறு இயல்புகளுள்ள மாநுடர்களைக்காண்கின்றோம். பல்லாயிரக்கணக்கான மனவேறுபாடுகளும் மனச்சார்புகளும் அமைந்தவரும் உளர். காரியத்தளவில் பயன்படுமாறு இவர்களைப் பூர்ணமாய்ப் பொதுமைபடுத்துதல் கூடாமை. ஆயின் யான் கொண்டகருத்திற்கு இவர்களை நான்கு வகுப்புகளாய்ப் பிரித்தற் போதுமானது. முதலாவது: சுறுசுறுப்பாய்க் கருமத்தைச் செய்யும் மனிதர் சிலர் இருக்கின்றனர். வேலைசெய்வதே அவர்கள் விருப்பம். அவர்களது தசையிலும் நரம்புகளிலும் அபாரமான வலிமை சேர்ந்திருக்கின்றது. உழைத்தலும், வைத்தியசாலைகள் கட்டுவதும், தர்மகைங்கரியம் புரிதலும், வீதிகள் அமைப்பதும் ஆகிய இன்னோரன்ன பலவகைக் கருமங்களைச் செய்வதிலேயே அன்னாருக்குத் தாற்பரியம். இத்தகையார் தொழிலில் விருப்பமுடையார் எனப்படுவர். இனி, காம்பீர்யத்தையும் சௌந்தரியத்தையும் பெரிதும் காதலிப்பவரான உற்சாகப்பிரியர் சிலர் உளர். அன்னார் சவுந்தரியத்தைப்பற்றி நினைக்கவும், சிருஷ்டியின் வனப்பை யனுபவிக்கவும், அன்பையும் அன்புருவானஈசனையும் போற்றவும் விரும்புவர். இத்தகையவற்றினையே அவர்கள் காதலிப்பர். பண்டைக்காலத்து மகான்களாய முனிவர்களையும் பூதலத்திற் றோன்றிய ஈசனது திருவவதாரங்களையுமே அவர் முழுமனதுடனும் நேசிப்பர். ஹேதுவாதத்தின் உதவிகொண்டு*அபிஷிக்த மூர்த்தி, புத்தர் முதலியவர் உண்மையாய் உலகத்தில் இருந்தனரா இல்லராவெனத் தாபிப்பது அவர்களுக்கு அநாவசியமாம்.† திருமலை உபநியாச நிகழ்ச்சியின் சரியான காலத்தைப் பற்றியேனும் ஸ்ரீகிருஷ்ணன் பிறந்த சரியான நிமிஷத்தைப்பற்றியேனும் அவர்களுக்கதிக கவலை யில்லை. அவர்களுக்குவேண்டியதெல்லாம் எம்பெருமானது திருவுருவக்காட்சியும் அவனது திவ்விய குணாநுபவமுமேயாம். அவர்களது அன்பினுக்குரிய புருஷோத்தம மங்களத் திருமேனிகள் உண்மையில் இருந்தனரா அல்லரா என்பதை ஸ்தாபிக்கமுடியுமா முடியாதா வென்பதைப்பற்றி யவர்களுக்கு எட்டுணையும் கவலை கிடையாது. மேற்சொல்லிய இயல்பினை யுடையவர் பக்தர் அல்லது உற்சாகப்பிரியர் எனப்படுவர். இனி மானச சூக்ஷ்ம திருஷ்டி

* Christ (=the anointed) கிறிஸ்து.

† Sermon on the Mount.

யில் பிரியமுள்ளவர் சிலர் உளர். அவர் தம்மைத்தாமே பகுத்தறிந்து மனோதர்மங்களைச் சோதித்துணர்ந்து அவற்றைத் தம்வசமாக்கு மாற்றின் அறிவைப்பெற விரும்புவர். இவர்கள் யோகதிருஷ்டிகள் எனப்படுவர். கடைசியாக தத்துவஞானிகளெனப்படுவோர் உளர். அவர்கள் எதையும் சீர்தூக்கிப்பார்த்து மானுடவறிவினுக்கும் அப்பாற்பட்டதைத் தம்புத்தியின் உதவிகொண்டு உணர விரும்புவர்.

இனி, மதமானது, மன்பதையின் பெரும்பான்மையான பகுதியைத் திருப்திசெய்ய வேண்டுமாயின், இக்கூறிய பலவகைப்பட்ட மனச்சார்புகளுக்கெல்லாம் உணவளிக்கும் ஆற்றலுள்ளதாயிருத்தல் வேண்டும். இவ்வாற்றல் குறைவுபமிடத்து, இப்பொழுதுள்ள மதப்பிரிவுகள் ஒருதலையாகின்றன. இம்மதப்பிரிவினருள் ஒருசாராரிடஞ் செல்வோம். அவர்கள் அன்பையும் ஆர்வத்தையும் பிரசங்கிக்கின்றனர். அவர்கள் பரமனது அருளைப்பாடி கருணைக் கண்ணீர்சொரிந்து, அப்பனது அன்பையும் அவன் ஆட்கொண்ட அன்பர்கள் அனுபவிக்கும் திவ்யசுகங்களையும்பற்றி உபந்நியசிப்பர். ஆனால் அன்னாரை நோக்கி "நண்பரே, அஃதெல்லாம் சரிதான்; அதைவிட பலமானது எனக்கு வேண்டும்; கொஞ்சம் யுக்தியும், தத்துவசாஸ்திரமும் கொடும்; விஷயங்களைப் படிப்படியாயும் யுக்தியுக்தமாகவும் ஆராய விரும்புகிறேன்." என்பீரேல், உடனே அவர்கள், "அப்பாலேபோ" என்று உம்மைவெருட்டுவார்கள். அவ்வாறு வெருட்டுவதுடன்மாத்திரம் அமையாது, தங்களாற் கூடுமாயின் ஷைஸ்தானத்துக்கும் அனுப்புவார்கள். இதனால் ஏற்பட்டதென்னவெனில், அம்மதப்பிரிவினர் பக்தர்களுக்குமாத்திரமே பயன்படுவர். ஏனையோர்தாமும் யாதொருசகாயத்தையும் அடைவதில்லை; இருப்பதையும் அழிக்கமுயல்கின்றனர். இன்னும் அவர்கள் இழைக்கும் துன்பம் என்னவெனில்: தாங்கள்தான் இதரர்களுக்கு உதவிபுரிவதில்லையே! அவ்விதரர்களையாவது உள்ளன்புள்ள மெய்யர்களென நம்புகின்றனரில்லை. அவர்கள் கூடியசீக்கிரத்தில் இவ்வுலகத்தைவிட்டொழிவதே யாவருக்கும் க்ஷேமகரமென்றுங் கருதுகின்றார்கள். இவ்வாறே இவர்கள் கூறுவனவெல்லாம் கேடிழைப்பனவாகின்றன. இதுநிற்க, இந்தியா முதலிய கீழ்நாடுகளின் குப்தஞான வித்தையைப்பற்றி, ஆடம்பரமான தீர்க்க சமாஸங்கள் அமைந்த பரிபாஷைகளைக் கொண்டு தர்க்கிக்கும் தத்துவநூற்புலவர் மண்டலத்துக்கு என்னைப்போன்ற சாதாரண மனிதன் ஒருவன் சென்று "ஐயன்மீர், ஆத்தியாத்மிகவழி கைகூடுமாறு எனக்கு ஏதேனும் கூறுவீரோ" என்று வினவினால் அவர்கள் உடனே நகைத்து "நீர் யுக்தியில் எம்மைவிட மிக்கத்தாழ்ந்தவரானமையால், எமது சங்கத்தில் இருக்கத் தக்கவர் அல்லீர்! ஆத்தியாத்மிகவழி உமக்கென்ன தெரியும்?' என்பார்கள். இவர்களெல்லாம் பழுத்த ஞானிகள். நீர் அவர்களை விட்டு வெளியே செல்லுமாறு கதவுவழியைத்தான் காட்டுவார்கள். இவர்களன்றி, சில யோகமதச்சார்பினர், பலவித ரூபங்களைப்பற்றியும், பலவிதமனோவஸ்தைகளைப் பற்றியும் மனச்சக்தியால் சாதிக்கக்கூடும் பெருங்கருமங்களைப்பற்றியும் பிரசங்கிப்பர். ஒரு சாதாரணமனிதன் அவர்கள்பாற் போந்து "யான்செய்யக்கூடியது ஏதாயினும் காட்டுங்கள், உங்களைப்போல் சூக்குமவிசாரஞ்செய்ய எனக்குச் சக்தியில்லை, எனக்குத்தகுந்தது யாதாயினும் உதவுவீரோ?" என்று கேட்பானேல், அவர்கள் நகைத்து, "அந்தமூடனைப் பாருங்கள்: அகிஞ்சனன் அப்பா, உனக்கு நாங்கள் சொல்லும் புத்திமதி இதுவே! நீ ஆத்மஹத்தி செய்துகொள்வதே க்ஷேமகரம். நீ இப்பூமியில் இருப்பது வீணே" என்பார்கள். இவ்வாறே உலகமெங்கணும் நடந்துவருகின்றது. இத்தகைய மதப்பிரிவினரில் வைரமேறிய உபதேசகர்களை ஒருங்குசேர்த்து ஓரறையில் அடைத்து, அவர்கள் ஒருவரையொருவர் நோக்கி எள்ளி நகைக்கும் அழகிய காட்சியை புகைப்பட மெடுத்தால் எவ்வளவு ஆச்சரியமும் விநோதமுமாயிருக்கும். ?

இதுதான் மதவிஷயமாய் ஜனங்களின் சுபாவம் உள்ளபடி. நான் பிரசாரஞ்செய்ய விரும்பும் மதமானது எல்லாவித மனச்சார்புகளுக்கும் ஒத்ததாயிருக்கவேண்டும்; அதில் தத்துவஞானமும், பக்திரஸமும், சூக்ஷ்மயோகதிருஷ்டியும், கர்ம அமைதியும் சமமாய்ப் பொருந்தியிருக்கவேண்டும். உங்கள் கல்லூரிகளினின்று பட்டோபாத்தியாயர்களும், விஞ்ஞான நூற்புலவர்களும் பொருட்டிறநூல் வல்லோரும் வருவரேல், அவர்கள் யுக்தியே யெமக்குவேண்டுமென்பர். நான்பிரவசனம் செய்யும் மதத்தில் அவர்களுக்கிஷ்டமானவளவு யுக்தி கிடைக்கும். ஆனால், யுக்தியும் சிறிது தூரந்தான்செல்லும், அதற்குமேல் அதுபயன்படாததுகண்டு ஐயா, இனிமேல்செல்ல எங்களாலாகாது, என்று ஒப்புக்கொண்டே தீர்வார்கள். "இதைவிட்டுவிடு, அதைவிட்டுவிடு, தெய்வம், மோக்ஷம் என்னும் இக்கொள்கைகள் மூடபக்தியே" என்பரேல், யான் சொல்வேன்: "ஐயா, தத்துவசாத்திரியாரே, உமது இவ்வுடல் அதனினும் பெரியமூடபக்தியன்றே! இதனை முன் விட்டுவிடும்; போஜனம் பண்ண அகத்துக்கேனும், உமது தத்துசாத்திர ஆசாரியஸ்தானத்திற்கேனும் போகவேண்டாம். தேகத்தைவிடுமின்; முடியாவிட்டால், வாய்பொத்தி சரணாகதி இரந்து அங்குபோய் உட்காரும்" என்று ஒவ்வொரு மதத்திலும் தத்துவபாகம் இருத்தல்வேண்டும். இவ்வுலகமனைத்தும் சமஷ்டியில் ஏகமென்பதையும், பிரபஞ்சத்தில் சர்வவியாபகமுள்ள ஸத்தை ஒன்றேயென்பதையும் தத்துவகாண்டம் உபதேசிக்கும் விதத்தை நாம் நிரூபணம் பண்ணவேண்டும். அவ்வாறே, யோகாப்பியாச விருப்பமுள்ளவன் வருவனேல், அவனுக்கு மானஸ விபாகசாஸ்திரத்தை யெடுத்துரைத்து, அதை அவன்முன் பிரத்தியக்ஷமாய் நிரூபிக்க நாம் ஆயத்தமாயிருக்க வேண்டும். நீங்கள் இங்கேவரலாம். வேண்டியதைக் கற்றுங் கொள்ளலாம்; மூலையில் உட்கார்ந்து கொண்டு ஒரு காரியத்தையுஞ் செய்யமுடியாது. (தொடர்ந்துவரும்.)

மஹேசகுமாரசர்மா.

## KULOTUNGA CHOLAN KOVAI.

ஒட்டக்கூத்த ரருளிச்செய்த

# குலோத்துங்கச் சோழன் கோவை.

---

### காப்பு.

கணைக்கோவை யேசொரிந் தன்றிலங் காபுரங் காயரவி
னிணைக்கோவை யீர்த்த கடாக்களிறேயெழு பார்க்குமொரு
துணைக்கோவைக் கோழிக் குலோத்துங்கச் சோழனைச் சொல்கின்றவைந்
திணைக்கோவை பாட வடிதொறுங் காக்கவின் சேவடியே.

### களவியல் - கைக்கிளை.

### 1. காட்சி.

1. பொன்பூத்த தாமரை செங்குமிழ் நீலம்பொற் கோங்கரும்பு
மின்பூத்த காந்தளும் பூத்தன வேவெகுண் டாருக்கெல்லாங்
கொன்பூத்த வேற்கைக் குமார குலோத்துங்கன் கோழிவெற்பி
னின்பூத்த கற்பகக் காநடு வேயொ ரிளங்கொடிக்கே.

### ஐயம்.

2. சங்கம ராச குலோத்துங்கச் சோழன் றமிழுறந்தைத்
துங்கன் வழிமுத லோனிட மோவவன் சூழிடமோ
வங்கவ னுக்கிரு ணீங்கிட மோவன்றி நண்பிடமோ
சொங்கவி பூங்குழ லாட்கிட மேதெனக் கூறுவமே.

### துணிவு.

3. முன்னம் பலரு நிலமீ துலாவரு மூரிமதன்
பின்னம் பலரும் பெயருநெஞ் சேபெருங் காவிரிக்கு
மன்னன் குமார குலோத்துங்கச் சோழன் வரையினிந்தப்
பொன்னங் கொடியனை யாட்கிடம் வேறில்லை பூவிடமே.

### குறிப்பறிதல்.

4. பொங்கோத ஞாலத் தறிவொன் றிலாத புரவலர்தம்
வெங்கோன் மையுமந்த வெங்கோன்மை யாவும் விலக்கி யென்று
நங்கோ னுறந்தைக் குலோத்துங்கச் சோழ னடாத்து மொரு
செங்கோன் மையுமொத்த வாவிரு நோக்குமிச் சேயிழைக்கே.

### இயற்கைப் புணர்ச்சி.

### இரந்து பின் னிற்றற் கெண்ணல்.

5. மலையாய்க் குவிந்த தனங்களுள் ளார்கனி வாயிதழ்க்கே
சிலையாய்ச் சுரக்கு மமுதமுள் ளார்சில வேந்தர்க்கெல்லாந்



தலையாச்குஞ் செம்பொற் சரணன் குலோத்துங்கன் றஞ்சை வெற்பி
லலையார்க்குங் கூர்விழி யாரிறப் போர்க்கின்* றளிப்பரன்றே.

### இரந்து பின்னிலை நிற்றல்.

6. உள்ளக் கமலத்தி னுள்ளூ றியவென் னுவகை யென்னும்
வெள்ளத் திடத்தை விடாவன்ன மேவியன் பாவனைத்துந்
தெள்ளத் தெளிந்த குலோத்துங்கன் கோழிச் சிலம்பின்மதன்
கள்ளச் சிலத்தையென் பாலினு நீக்கக் கருதுமினே.

### முன்னிலை யாக்கல்.

7. மெய்யா னதுவியர் வாடுமென் றேவிளை யாடல் செய்யீர்
கையா னதுசிவப் பேறுமென் றேமலர் காவிற் கொய்யீர்
சையா சலப் பொன்னி நாடன் குலோத்துங்கன் றஞ்சையன்னீ
ருய்யானந் தன்னு ளொருபாவை போனிற்ப தோதுமினே.

### மெய்தோட்டுப் பயிறல்.

8. கோடாத நீதிச்செங் கோலான் குலோத்துங்கன் கோழி மின்னார்
தோடார் மலர்க்குழல் சூழ்வண்டு காடுய்ய பாடல் செய்யும்
பீடார் பொற் றாமரைச் சங்கமுற் றும்பெறுங் காவியங்க
ளூடா டியுமிடை நூலைய மேது முணர்ந்திலிரே.

### பொய் பாராட்டல்.

9. கண்டார் துதிக்குங் குலோத்துங்கச் சோழன்கல் யாணிவெற்பில்
வண்டார் குழலி முகநடை போல்வளந் தங்களுக்கு
முண்டாக வேண்டி யிரந்திரந் தேயொரு நான்முகனைத்
தண்டா மரையும்வெள் ளன்னமு மின்னமுந்†தாங்குநவே.

### இதுவு மது.

10. தீக்காளை யெட்டும்பின் காட்டிய வாறுஞ் சிலைவிந்தம் போ
யிக்கா சினிபுக் கொளித்திடு மாறு மிரப்பவர்க்குக்
கைக்காம தேனு குலோத்துங்கச் சோழன்கல் யாணிவெற்பின்
மைக்காவி யங்கண்ணி நின்கொங்கை யான்மன மானித்ததே.

### இடம் பெற்றுத் தழால்.

11. அத்தாரு நேருங் குலோத்துங்கச் சோழ னல்கைவெற்பி
லெத்தா லினிமெலி வாய்மன யேபெழு பாரும் விற்கு
முத்தார் வனமுலை யார்கண்ணி லேயுண்டு மொய்கருணை
கொத்தார் வனமுலை யார்கண்ணி லேயுண்டு கூடிடமே.

---

* றளிப்பர் நெஞ்சே யென்பதும் பாடம். † தாங்கிடுமே யென்பதும் பாடம்.

வழிபாடு மறுத்தல்.

12. கூறும்மை வேற்கைக் குமார குலோத்துங்கன் கோழிவெற்பில்
வாரு நம் மாதவி காளுங்கள் பான்மறைந் துய்யச்செய்யீர்
திரு மசோக மடைந்து விற் பீரும்மை நேசித் தெய்தும்
பேரு மசோக மடைந்துநின் றுலென் பிழை யுமக்கே.

இடையூறு கிளத்தல்.

13. செம்மையிற் பைங்கொடி யீர்புண்ட ரீகத் திறங்கொண்டுநீர்
வெம்மையிற் செங்கையின் பீனங்கொண் டெரிந்த வீரியப்போ
லிம்மையிற் செய்ய வடமேரு வுங்கொள்ளி லிப்புவியோ
ரும்மை யத் தஞ்சைக் குலோத்துங்கச் சோழனென்றோதுவரே.

நீடு நினைந் திரங்கல்.

14. என்றோ முகமெடுப் பீரொந்த நாட்செவ் விதழ் திறந்து
நின்றோர் மொழியென் னுடன்மொழி வீர்விரை யோட்டியபின்
கன்றோட வோட்டுங் குலோத்துங்கச் சோழன்கல் யாணியன்னீர்
குன்றோ வெனுங்கொங்கை பெற்றாட் டிறந்தென்னைக் கூடுவதே.

மறுத் தெதிர் கோடல்.

15. வெப்பார் வெகுளிக் களிற்றுளர் காமத்தின் வெள்ளத்தையா
மூப்பார் புணையிற் கடப்பதொப் பாயின மோதஞ்சுற்றுங்
கூப்பாவை கேள்வன் குமார குலோத்துங்கன் சோழி வெற்பிற்
றப்பா நிறை பொறுக் கச்செய்தி லேமெய்த் தவநெஞ் சமே.

இதுவு மது.

16. அள்ளற் கடலன்ன மாலான வர்தமக் கங்கொ ருகல்
விள்ளப் படாதொன் றுருகிய தால்வெண்ணெய் வாரியுண்ட
கள்ளத் தொருவன் குலோத்துங்கச் சோழன்கல் யாணியிலென்
னுள்ளக் கனகல்லு மாலான வர்க்கின் றுருகியதே.

வறிது நகை தோற்றல்.

17. என்னே திருவுள மிப்பாவை யர்க்கென் றிரங்கு மிந்த
மன்னே யிருளுக் கிளநில வாயது வண்டமிழைச்
சொன்னோரைக் காக்குங் குமார குலோத்துங்கச் சோழன் வெற்பிற்
பொன்னே வெனுவிறந் தார்முகத் தாமரைப் புன்னகையே.

முறுவற் குறிப்புணர்தல்.

18. மகத்தான பன்னிரு வெய்யவ ரான்மல ராதவென்ற
னகத்தா மரையா மலர்வித் தாலன் றிராவணனை



யுகத்தான் பொருத குலோத்துங்கச் சோழ னுறந்தை வெற்பின்
மிகத்தான் புதுமை யிவணைகை யாமீந்த வெண்ணிலவே.

முயங்குத லுறுத்தல்.

19. நண்ணருமழைக் குலஞ் சாயவெல் வேங்கை நடாத்தி யெங்கும்
கண்ணரக் காக்குங் குலோத்துங்கச் சோழன்கல் யாணி வெற்பிற்
பெண்ணா ரமுத முயன்றெய்து மாறு பெறப் புகுந்தேம்
விண்ணா ரமுது முயன்றெய்த லாமினி மேதினிக்கே.

இதுவு மது.

20. நட நாணுங் கொங்கைக் கரும்புக்கு மேல்விதி தான்வனைத்த
மட நாண வேலி பறிப்புண்ட தான்மலர்க் கோகனகை
யுட ஞகை வாழுங் குலோத்துங்கச் சோழ னுறந்தை வெற்பிற்
கட நாக மாக வினிநாந் துணிவது காரியமே.

புணர்ச்சியின் மகிழ்தல்.

21. தேனென்றும் பாலென்றுந் தேமாங் கனியென்றுந் தீங்கரும்பு
தானென்றும் சொல்வது நாமட்டன் றேவத் தயரதன்பாற்
கானென்ற வாசம் பெறுமால் குலோத்துங்கன் காவிரிவாய்
மீனென்ற கண்ணி யிதழ்த்தேன்றித் தித்ததென் மெய்யெங்குமே.

புகழ்தல்.

22. ஒருகால் விரிதந் தொருகால் குவிதரு மொண்கஞ்சமு
மிருகாலும் வந்துதி யாமதி யாவது மீருரும்
பொருகா விரித்துறைத் தஞ்சைக் குலோத்துங்கன் பூங்கிரிவாய்
வருகா ரிகைநின் முகம் போலு மென்பதெவ் வாசகமே.

வன்புறை.

அணிந்துழி நாணிய துணர்ந்து தெளிவித்தல்.

23. செய்யுந் தருமத் துறையூர்க் குலோத்துங்கன் சென்னிவெற்பி
னையுந் தொழிலொழி நன்னுத லேகடு வாதியந்தம்
பெய்யு மணிக்கல முன்போ லணிந்தனன் யேரிருளை
கையுமென் கையு மொருவர்தம் பாலணி சற்றனவே.

பெருநயப் புரைத்தல்.

24. மண்ணுடு காக்குங் குமார குலோத்துங்கன் வாழுறந்தைக்
கண்ணுடி யெங்குந் திரிவண்டு காள்கதிர் மாமதிக்கே
யுண்ணு னுவதன்றி யம்மதி நாண வொளிருங் கஞ்சப்
பெண்ணார் முகக் கஞ்சம் போலவுண் டோறும் பெருந்தடத்தே.

தெய்வத் திறம் பேசல்.

25. விதியார் பிணைப்பப் பிணைந்தநங் கூட்டம் விலக்கவல்ல
மதியார் சிலருமிவ் வையத்துண் டோமண்டு காவிரிநன்
னதியாதி சங்கம ராச குலோத்துங்க னாடவெற்பிற்
கதியான் மடவன்ன மேயென்னை மேனி கருகுவதே.

பிரியே னென்றல்.

26. என்றேனு மெய்யு முயிருமொப் பாமென்ன யானஞ்சுவே
னென்றே யலவிரண் டேயென்கை டாலொரு நாள் விளவிற்
கன்றே யெறிந்த குலோத்துங்கச் சோழன்கல் யாணியன்னீர்
சென்றே யுமைப்பிரி யேன்பிரிந் தாலெங்ஙன் றேறுவனே.

பிரிந்து வருகென்றல்.

27. நீங்கே னுனையொரு போது மின் னேயன்றி நீங்கிலு யிர்
தாங்கேன் வருவதுந் தாழ்ச்சிசெய் யேன்றட யார் பிடத்துப்
பூங்கே கயத்தன் குலோத்துங்கச் சோழன் புகார் வரைவா
யாங்கே நிலாமுகிக் குண்டோ நிலாவிடுத் தாரிடமே.

இடமணித் தென்றல்.

28. தேனே யுனது விழிகாது சூழ்ந்தென்னச் சென்றுமதூர்
மானேயெம் மூர்வள்ளை மேனுவை நீட்டுமெம் மன்னவர்க்குந்
தானே தலைமைப் பெருமான் குலோத்துங்கன் றஞ்சைவெற்பிற்
பூநேரு நின்றிரு மேனியென் வாடிப் புலம்புவதே.

தெளிவு.

29. வையார் நமைத்தனி வைத்தாலுமீள மனமறப்புச்
செய்யார்நங் காதலர் தேறு நெஞ் சேதெய்வ வேதம் பொய்த்தும்
பொய்யாத சங்கம ராச வரோதயன் பொற்புயத்துக்
கொய்யார மாலைக் குமார குலோத்துங்கன் கோழியிலே.

பிரிவுழி மகிழ்ச்சி.

செல்லுங் கிழத்தி செலவுகண் ணுளத்தொடு சொல்லல்.

30. பின்னே சரிகொண்டை யோர்காந்த ளேந்தவும் பெய்கலையைத்
தன்னே ரிலாதொரு தாமரை தாங்கவுந் தண்டமிழ்க்குப்
பொன்னே பொழியுங் குலோத்துங்கச் சோழன் புகார் வரைவா
யென்னே நடக்கின்ற வாநெஞ்ச மேநம தின்னுயிரே.

பாகனொடு சொல்லல்.

31. முன்பார்த்த வச்சமும் சோர்வோ டுயிர்ப்பு முகவெயர்ப்பும்
பின்பார்த்த நோக்குமென் பேரன்பு மாய்ப் பெரு வேந்த ரெல்லாந்



தன்பாற் பணியுஞ் சரணன் குலோத்துங்கன் றஞ்சை வெற்பின்
மின்பார்த்த வேல்வல வாபார்த்தி யாலொரு மின்செல்வதே.

பிரிவுழிக் கலங்கல்.

ஆயவெள்ளம் வழிபடக் கண்டிது மாயமோ வென்றல்.

32. விம்மாய துன்பத்துக் கன்பாய வெள்ளத்தை மீட்கநெஞ்சே
தம்மாய வெள்ளந் தணந்திங்ங னேதச மாமுகனைக்
கம்மரிய வெய்த குலோத்துங்கச் சோழன்கல் யாணியன்னா
ரெம்மாய மோகன வோமணம் போனமக் கெய்தியதே.

வாயில் பெறுஉய்தல்.

33. அம்மாநன் முகமரைக் கும்மதி மீதுச்கு மாதரிக்கு
மிம்மான் விழிவண்டு மானுஞ்சென் றேறு மெடுத்தொரம்பாற்
பொய்ம்மானை யெய்த குலோத்துங்கச் சோழன் புகார் வரைவா
யும்மா நலமொன்று கண்டேன்கொண் டேன்களிப் புள்ளத்திலே.

பண்பு பாராட்டல்.

34. பொன்னே யழற்படு முத்தே தொளையுண்ணும் பூப்புலரு
மின்னே கரக்கும்பைந் தேனே யளி யுண்ணும் வெள்விடையோன்
றன்னேயந் தன்னை மறவாக் குலோத்துங்கன் றஞ்சைவெற்பி
லென்னேயிப் பூங்கொடிக் கொப்பாக நாமெடுத் தேத்துவதே.

பயந்தோர்ப் பழிச்சல்.

35. மாமேருப் * பொன்னிறை சாய்நாக லோக † மணி யிறைசாய்த்
தாமேயிவ் வையத்து வாழிய ரோதமிழ்ப் பாவலர்க்குக்
காமேக மன்ன குலோத்துங்கச் சோழன்கல் யாணிவெற்பில்
யாமே பெறவின்ப மீந்தாளையீந்த விருவருமே.

கண்படை பெறாது கங்கு னோதல்.

36. தாயாய்ப் புவனம் புரக்குங் குலோத்துங்கன் றஞ்சைவெற்பில்
வாயாற் கெடுபவர் தாமுமுண் டோமலை வாணர் குலத்
தூயா ளளகத்தைக் கங்குலொவ் வாயென்று சொற்றகுற்ற
மோயாம லென்னை வளைத்தது கோபித் துயிருண்பதே.

இடந்தலைப்பாடு.

தந்த தெய்வந் தருமெனச் சேறல்.

37. இட்டாரெப் போது மிடுவா ரிடாரென்று மிட்டுண்கிலார்
பட்டாங்கிலுள்ள*பரிசின் படிபண் டிராவணனைக்

* பொன்னறையாய் என்பதும்பாடம். † மணியறையாய் என்பதும் பாடம்.
‡ பரிசிதன் றேபண் டிராவணனை யென்பதும் பாடம்.

கட்டாண்மை தீர்த்த குலோத்துங்கச் சோழன்கல் யாணியின்னைத்
தட்டாது முன்னந் தருந்தெய்வ மின்னுந் தருநெஞ்சமே.

முந்துறக் காண்டல்.

38. சிந்தா மணிவிளக் கோவிள ஞாயிற்றுச் சேயழகோ
மந்தா கினிரத்ன மாலைகொல் லோமத மாரிசிந்திக்
கந்தாருஞ் சூலைக் குலோத்துங்கச் சோழன்கல் யாணிவெற்பிற்
கொந்தாடு காநடு வேநின்ற தேதென்று கூறுவதே.

முயங்கல்.

39. தேனுந் துவர்க்கும் பசும் பாகுங் கைக்குமத் தீங்கருப்பு
தானும் புளிக்குங் கனிகளுங் காருந் தசமுகன்பாற்
கூனுஞ் சிலைக்கைக் குமார குலோத்துங்கன் கோழிவெற்பி
லீனுந் தளிர்நிறத் தாளிதழ்த் தேனுண்ட வென்னிதழ்க்கே.

புகழ்தல்.

40. பிறையாயு மங்கை நுதலுக்கொவ் வாய்பிறை போய்க்கலையா
னிறையாய போது முகத்துக்கொவ் வாய்நெடுங் காவிரிபூந்
துறையாதி சங்கம ராச குலோத்துங்கச் சோழன்வெற்பின்
மறையாய் விற்பாய்வரு வாயென்னை நாண மதியுனக்கே.

ஆயத் துய்த்தல்.

41. தண்டா ரகையின் கணநடு வேயொரு தண்மதியங்
கண்டா லலது சிறப்பில்லை யேநவ கண்டமெல்லாங்
கொண்டா ளுஞ் சங்கமராச குலோத்துங்கன் கோழிவெற்பின்
மண்டாய வெள்ளத் தெழுந்தருள் வாய்மெல்ல வாணுதலே.

பாங்கற் கூட்டம்.

தலைவன் பாங்கனைச் சார்தல்.

42. வெயிற்கே நிழலும் பசிக்கே யமுதும் வினைக்கறமும்
பயிர்க்கே புயலுமுண் டாயது போற்பண்டு வாரியுண்ட
தயிர்க்கே கட்டுண்ட திருமால் குலோத்துங்கன் றஞ்சைவெற்பி
லுயிர்க்கேத நீக்க நமக்குயிர்ப் பாங்க னொருவனுண்டே.

பாங்கன் றலைவனை யுற்றதுவினாதல்.

43. தீதோரை மாற்றித் திசைகாத்த தோ செஞ்சொ லேழிசையிற்
போதோடு பட்ட புலர்ச்சி கொல்லோ பொன்னி பூகச்சென்னி
மீதோத மோது முறந்தைக் குலோத்துங்கன் வெற்பண்ணலே
யேதோ வறிகின்றி லேன்றிரு மேனி யிளைக்கின்றதே.



தலைவ னுற்ற துரைத்தல்.

44. காணாகத் தார்புனைந் தோனன்ப னேயுட் கலையனைத்துந்
தானாகச் சோர்ந்து தளரச்செய் தேதரை யேழுமொரு
கோனாகக் காக்குங் குமார குலோத்துங்கன் கோழிவெற்பின்
மானாக மொன்று விழுங்கிய தாலென் மதியையின்றே.

கற்றறி பாங்கன் கழறல்.

45. அல்லோ வெயிலைப் பொரு மெறும் போவழ லோனை மொய்க்குங்
கல்லோ குழையுங் கடலோ விரங்குங்கல் யாணிப்பிரான்
வில்லோத மீது குனித்தோன் குலோத்துங்கன் வெற்பிலொரு
சொல்லோதி யேநின் மதிமயக் காநிற்குந் தேர்மன்னனே.

கிழவோன் கழற்றெதிர் மறுத்தல்.

46. பண்ணாசை பூண்ட குலோத்துங்கச் சோழன் பதித்தஞ்சைவாய்ப்
பெண்ணாசை யார்க்கும் விடாதுநண் பாமுனிப் பெண்கொடிக்காய்
விண்ணாடர்கோன் கொண்ட காமத்தி னால்வந்த வேள்கணையாற்
புண்ணா யிரங்களைக் கண்ணா யிரமெனும் பொன்னுலகே.

பாங்கன் கிழவோற் பழித்தல்.

47. மாணாக நாணிற் குழைந்துள்ள மேரு வரைதிரும்பப்
பூணாக நாணிற் குழைந்ததன் றேபொரும் பேய்க்குத் தெவ்வ
ரூணாக நல்குங் குலோத்துங்கச் சோழ னுறந்தைவெற்பிற்
காணாகத் தார்க்குழ லார்க்கைய நீமனங் கட்டுண்டதே.

கிழவோன் வேட்கை தாங்கற் கருமை சாற்றல்.

48. சூழிவேலை கட்டு முறந்தைக் குலோத்துங்கச் சோழன்வெற்பில்
வழிவேலை யன்ன கலைநண்ப னேயந்த மானனையாள்
விழிவே லெறிந்த வெம் புண்வழி யேவெய்ய தீயெனநின்
மொழிவே லெறிகுவை யாலினி யாற்ற முடிவதன்றே.

இதுவு மது.

49. இந்நா ளொருத்தி தருகாமத் தீநண்ப யாரவிப்பார்
பொன்னாருஞ் செல்வப் புகார்மன் குலோத்துங்கன் புண்ணியமாந்
தொன்னாண் மரபோர் தொடுங்கடற் கேனுமத் தொன்மரபோர்க்
கந்நாள் வருவித்த வானதிக் கேனு மவிக்கரிதே.

பாங்கன் றன்மனத் தழுங்கல்.

50. மேலாய சான்றவர் வேய்பொன்னு நம்பொரு வேந்தனுமே
போலா மெனவிருந் தோமிரு பேரையும் பூகண்டமோர்

கோலா லளிச்சுங் குமார குலோத்துங்கன் கோழிவெற்பின்
மாலாழி யின்றுமன் றுட்மறைத்தாலென்னை வாய்நமக்கே.

இதுவு மது.

51. தடமார் விசும்பினிற் கோர்மதி பாரின் றலைவர்மதி
யிடமா மதியிரண் டென்றிருந் தோமிரு மாமதியுங்
கடமார் களிற்றன் குலோத்துங்கச் சோழன்கல் யாணிவெற்பிற்
மடமா னிரண்டு மறச்செய்த வேதினி வாய் நமக்கே.

பாங்கன் றலைவனோ டழுங்கல்.

52. மேகம் பணியுங் குழலா ளொருத்திக் குண் மெய்வருந்து
மோகம் பலசொல்லி யுந்தணி யாய்முனை வேலுடனே
காகம் படருங் குலோத்துங்கச் சோழன்கல் யாணிவெற்பிற்
பூகம்ப மெய்தி லதையார் தடுப்பர்தம் புந்திகொண்டே.

எவ்விடத் தெவ்வியற் றென்றல்.

53. வாமா நகுலன் குமார குலோத்துங்கன் வாழுறந்தைக்
கோமாஅன் கொடியிருக் குங்குடி யென்செழுங் கோகனகப்
பூமா னறிய விதழா யிரக்கடை பூட்டுமில்லோ
காமானு போதி யிடமே தியலேது காவலனே.

அவணஃ திவ்விடத் திவ்வியற் றென்றல்.

54. பண்ணுருங் கண்டம் பயோதரங் கோடந்தப் பைந் தொடிக்குத்
தண்ணுருஞ் சொற்பிறை தான் குளங் காண் டமிழ் வாணர்தங்க
ளெண்ணுரும் வண்மைக் குலோத்துங்கன் கோழி யிடத்து நண்பா
கண்ணுரு மாவிடந் தோள்வரை யாமிடங் காவிடமே.

பாங்க னிறைவனைத் தேற்றல்.

55. கிளி போய் மொழிகற்பக் கேகயம் போய்க்கிளர் சாயல் கற்ப
வளி போய் விழிகற்ப நிற்குமப் பாவை யழகுகண்டு
களி போ தகமன் குலோத்துங்கச் சோழன்கல் யாணி வெற்பா
வொளிபோது நின்னிலை யான்காண் பளவு முளந் தெளியே.

குறிவழிச் சேறல்.

56. முலைவான் பகைப்பந் தடிக்குங் கொல் லோமுன் குழைப் பகையா
லலைவாய்ப் பொன்னூசலை யாட்டுங் கொல் லோ வளகப் பகையாற்
கலைவாரி தேறுங் குலோத்துங்கச் சோழன்கல் யாணிப் பிரான்
மலைவாரக் காமலர் கொய்யுங் கொல் லோ மன்னன் பன்னுயிரே.

இறைவியைக் காண்டல்.

57. முலையே முறுவன் முலையே களின முகிழ் மருங்கு
விலையே வயிறும் வடத்திலை யேயெண்ணி லாதவெண் ணெண்



கலையே தெரியுங் குலோத்துங்கச் சோழன்கல் யாணிப்பிரான்
மலையே யிடமு மிவரேநங் கோன்சொன்ன மாதருமே.

இசழ்ந்ததற் கிரங்கல்.

58. நண்ணார் வெருவப் பொருவேற் குலோத்துங்க னுகைவெற்பிற்
பெண்ணா ரமுதி னழகறி யாமலிப் பெண்ணமுதின்
கண்ணுருங் கூற்றி லலைப்புண்ட வேந்தனைக் கல்வியிலென்
பண்ணுருங் கூற்றி லலைத்திகழ்ந் தேன் முன்பின் பார்த்திலேனே.

தலைவனை வியத்தல்.

59. சாயாத சொர்க்க மசன்றே யரிவைகுந் தந் தணந்தே
யோயாத மேகப் பதங்கடந் தேயுடைந் தோடினைக்
காயாத சிங்கங் குலோத்துங்கச் சோழன்கல் யாணிவெற்பிற்
சேயோ னெளிதுவந் தான்வந்த தாலறத் தீர்ந்தவனே.

தலைவியை வியத்தல்.

60. கரும்பே யிவளவன் கைக்களி றேகமிந் தேறவிவள்
சுரும்பே யவனிவண் பாந்தளி ரேயவன் சொற் குயிலே
யரும்பேய் முலையுண் குலோத்துங்கச் சோழ னளகைவெற்பிற்
றரும்பே ரமுதத் துளியிவ ளேயவன் சாதகமே.

---

## SANGHITA CHANDRIKA: A REVIEW.

## சங்கீத சந்திரிகை. *

இயல் இசை நாடகம் என்னும் மூன்றுப் பொலிவுற்று விளங்கிய நந்தமிழ்மாது பன்னூற்றுண்டுகளுக்கு முன்னரே ஈற்றிருப்புக்களும் ஒழியதனது இயற்கைப் பொலிவு குன்றிநின்றனள். அக்காலத்திருந்த இசையணியின் இலக்கணநூலுள் சிலவற்றின் பெயரை மாத்திரம் இப்போது பார்க்கிறோம். நாடக இலக்கணநூலும் அவ்வாறேயாயின. பண்டைக்காலத்திய இசை, நாடக இலக்கிய இலக்கணநூல்கள் இப்போதசப்படாமற் போய்விடவே தற்காலத்தில் ஆங்கிலம், சமஸ்கிருதம், தமிழ் இவைகளில் மிக்க பாண்டித்ய முடையவர்களுள், காலஞ்சென்ற ஸ்ரீ சுந்தரம்பிள்ளை யவர்களும், சென்னைக் கிறித்தவக் கலாசாலைத் தலைமைத் தமிழ்ப்பண்டிதர் வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியார் அவர்களும், இவர்களைபபோன்ற இன்னுஞ்சிலரும், ஆங்கில, சமஸ்கிருத நடையை அனுசரித்து தமிழில் நாடகநூல்கள் செய்து

* இது சங்ககிரி துருக்கத்திலிருக்கும் சேலம் மாணிக்கமுதலியார் இயற்றியது. சென்னை பு. வே. சபாபதி முதலியாருடைய சந்திரிகா அச்சியந்திர சாலையிற் பதிப்பிக்கப்பட்டது. விலை ரூபா 5.

ளார். அவற்றுள் முக்கியமாய் மனோன்மணீயம், கலாவதி என்னும் நூல்களைப்போற்றுதார் ஒருவருமிலர். கலாவதி நூலாசிரியராகிய சாஸ்திரியார் இலக்கியத்துடன் நிற்காது நாடகவியல் என்னும் இலக்கணநூலும் செய்துள்ளார். அதனுடைய அருமையையும் பெருமையையும் உற்று நோக்கி சர்வகலாசாலைத் திராவிட பாஷை சங்கத்தார் அதனை பீ. ஏ. பரீக்ஷைக்குப் பாடமாக ஏற்படுத்தியிருக்கின்றனர். இப்போது நாடக இலக்கியங்கள் நாளடைவில் விருத்தியாகிக்கொண்டே வருகின்றன. இஃதிப்படியாக, இசை இலக்கிய இலக்கண நூல்களின் நிலைமை யின்னதென உற்றுநோக்குவாம். தற்காலம் தமிழ் இசையிலக்கண நூல்களுள் சிலவற்றின் பெயரையன்றி வேறொன்றையுங் கண்டிலேம். மூவர் தேவாரத்திலுள்ள பகற்பண், இராப்பண், பொதுப்பண் என்று சொல்லப்பட்ட பண்கள் இன்னவை யென்பதை தெரிக்கும் நூல்கள் இன்னவெனத் தெரியவில்லை. ஆயினும் பண்டைக்காலந்தொட்டுத் திருவாரூர் முதலிய திவ்ய க்ஷேத்திரங்களில் தேவாரப்பாசுரங்களைத் தலைமுறை தலைமுறையாய் ஓதிவரும் ஓதுவார்கள் அப்பாசுரங்களை ஓதுவதினின்றும் தற்காலத்தில் வழங்கிவரும் சம்ஸ்கிருத ராக தாளங்களுள் சில அவற்றிற்கு ஒற்றுமையுடையதெனத் தெரியவருகிறது.

**பகற்பண். இராகம்.**

1. புறநீர்மை—பூபாளம்.
2. காந்தாரம்—நவரோசு.
3. பியந்தைக்காந்தாரம்—நவரோசு.
4. கௌசிகம்—பைரவி.
5. இந்தளம்—நாதநாமக்கிரியை.
6. தக்கேசி—காம்போதி.
7. சாதாரி—பந்துவராளி.
8. நட்டபாடை—நாட்டை.
9. நட்டராகம்—பந்துவராளி.
10. பழம்பஞ்சுரம்—சங்கராபரணம்
11. காந்தாரபஞ்சமம்-கேதாரகௌளம்
12. பஞ்சமம்—ஆகிரி.

**இராப்பண். இராகம்.**

1. தக்கராகம்—காம்போதி.
2. பழந்தக்கராகம்—ஆரபி.
3. சீகாமரம்—நாதநாமக்கிரியை.
4. கொல்லி—கேதாரம்.
5. கொல்லிக்கவாணம்—நவரோசு.
6. வியாழக்குறிஞ்சி—சௌராஷ்டிரம்.
7. மேகராகக்குறிஞ்சி—நீலாம்புரி.
8. அந்தாளிக்குறிஞ்சி—சாமா.
9. குறிஞ்சி—குறிஞ்சி.

**பொதுப்பண். இராகம்.**

1. செவ்வழி—யதுகுலகாம்போதி
2. செந்துருத்தி—மத்யமாவதி.
3. திருத்தாண்டகம்—கமாசு.

இவ்விருபத்துநான்கு பண்களுள் நவரோசு என்னும் இராகம் காந்தாரம், பியந்தைக்காந்தாரம், கொல்லிக்கவாணம் என்னும் மூன்று பண்களுக்கும்-நாதநாமக்கிரியை, இந்தளம், சீகாமரம் என்னுமிரண்டுக்கும், காம்போதி, தக்கேசி, தக்கராகம் என்னுமிரு பண்களுக்கும் பொதுவாயிருக்கினும், இவ்வாறு



ஓரிராகத்தையுடைய பல பண்களுக்குள்ள வித்தியாசம் தாளத்தினாலும், தாளத்திற்குள்ளடங்கிய கலை, லயை யதி முதலியனவற்றால் பெறப்படும்.

இப்பண்களுக்குரிய இலக்கண நூல்கள் அகப்படாமையால் தேசிகர் பாரம்பரியமாய் வழங்கிவரும் இராகங்களையே பற்பல பண்களுக்குரிய இராகமெனத் தற்காலத்தில் கொள்ளவேண்டியிருக்கிறது.

சம்ஸ்கிருத பாஷையில் இராகமுதலியவற்றைக் குறித்து பற்பல நூல்களுள. அவைதம்முள் சரஸ்வதீயம், நாரதீயம், தும்புரீயம், அநுமத்தீயம், இராவணீயம் என்பன மிகச்சிறப்புற்றனவாம். இவற்றின் சாரத்தைத்திரட்டி சாரங்கதேவருஷி மகாபாரதம் என ஒரு நூல் செய்துளார். அவற்றைச் சுருக்கி அகத்தியர் ஆறுயிரஞ்சூத்திரத்தில் தமிழில் ஒரு பரதநூலியற்றினாராம். அவ்வகத்திய பரதத்தைச்சுருக்கி திருப்பெருந்துறையிற் றோன்றிய கங்கைகுல திலகனாகியும், புலவர்சிகாமணியாயு மிருந்த அரபத்த நாவலரென்பவர் 398-செய்யுளடங்கிய பரதநூலை யியற்றினர். அதனுள் பாவ, ராக தாள விஷயங்கள் மூன்றும் எடுத்துக் கூறப்பட்டுள. அவற்றுள் இராகத்தைப்பற்றிச் சொல்வன 80-செய்யுள், தாளத்தைப்பற்றிச் சொல்வன 59-செய்யுள். இந்நூலுக்கு சந்திரசேகர கவிராஜ பண்டிதரவர்களியற்றிய உரையொன்றிருப்பினும் ஸங்கீதத்தில் விருப்பமுடைய தமிழர் அனைவர்க்கும் அது பயன்படுவது அருமை. இஃதிப்படியாக, சேலம் மாணிக்கமுதலியாரியற்றிய சங்கீதசந்திரிகை என்னும் இசைநூல் மிக்க விரிவாயும் தெளிவாயும் எழுதப்பட்டிருக்கிறது. இப்புத்தகத்துள்ள மூன்று பாகங்களுள் முதற்பாகம் ஸ்வரப்பிரகரணம் என்னும் பெயர்பெற்று பற்பல இராகங்களின் இயல்பு, பாகுபாடு முதலியனவற்றைத் தெளிவாகக் கூறுகின்றது. இதில் 72 மேளகர்த்தாக்களும், அதினின்றும்பிறந்த (ஜன்ய) இராகங்களும், அவற்றின் ஆரோஹண அவரோஹண கிரமங்களும் இன்னும் மற்றவிஷயங்களும், தெளிவாகவும் விரிவாகவும் கூறப்பட்டு அவற்றைச் சுலபமாய் அறியும்பொருட்டு பற்பல சக்கரங்களும் ஆங்காங்கு அமைக்கப்பட்டிருக்கின்றன. ஆங்கில முறைப்படி பற்பல அகராதிகளும் தனித்தனியாய் எழுதப்பட்டிருக்கின்றன. இரண்டாம்பாகம் தாளத்தைப்பற்றிக் கூறுவது. தாளத்தைச்சேர்ந்த அநேகநுட்பமான விஷயங்களெல்லாம் மிக அற்புதமாக எடுத்துக்காட்டப்பட் டிருக்கின்றன.

"தென்றல் வடிவுஞ் சிவனார் திருவடிவும்
மன்றல் வடிவு மதன்வடிவும்—குன்றாத
வேயினி சைவடிவும் வேதவடி வுங்காண
லாயின்தா ளங்காண லாம்."

என்னும் வெண்பாவினால் தாளலக்ஷணத்தை நன்கறியும் அருமை புலப்படும். மூன்றும் பாகத்திற்குப் பாடப்பிரகரணமென்றுபெயர். இது

இசைபயிலும் மாணவர்க்குப் பயிற்சி முறைமை பற்பல உதாரணமுகத்தால் விரித்துக் கூறுகின்றது. இவையாவும் யாவர்க்கும் பொருள் விளங்கத்தக்க தெளிவான இனிய நடையில் எழுதப்பட்டிருப்பது மிகவும் பாராட்டற்பாலது. இத்தகைய நூலை வெளிக்குக் கொணர்ந்த முதலியாரவர்கள்பால் தமிழுலகம் என்றும் நன்றிபாராட்டக் கடமைப்பட்டிருக்கின்றது. பரதத்திற்கு இன்றியமையா மூன்றுறுப்புக்களுள் எஞ்சிநின்ற முதலுறுப்பாகிய பாவவியலைக் குறித்தோர் புத்தகம் இவர் விரைவில் வெளிக்குக் கொணர்ந்து எல்லோரையும் மகிழ்விப்பரெனவும் நம்புகிறோம்.

கல்குளம், குப்புசாமி முதலியார்.

---

## FAMILIAR QUOTATIONS.

### I. Naladyar.

## பயின்ற மேற்கோள்.

### I. நாலடியார்.

செல்வஞ்
சகடக்கால் போல வரும் ... (அ-i-பா-2.)
கூற்றங் குதித்துய்ந்தா ரீங்கில்லை ... (அ-i-பா-6.)
உய்த்தீட்டுந் தேனீக் கரி ... (அ-i-பா-10.)
முற்றி யிருந்த கனியொழியத் தீவளியால்
நற்கா யுதிர்தலு முண்டு ... (ii-9.)
தோற்பையுணின்று தொழிலறச் செய்தூட்டுங்
கூத்தன் ... (iii-6.)
நின்றா னிருந்தான் கிடந்தான் றன்கேளலறச்
சென்றா னெனப் படுதலான் ... (iii-9.)
நச்சிற கன்னதோர் தோலறினும் வேண்டுமே
காக்கை கடிவதோர் கோல். ... (v-1.)
நங்குரூன் றிட்டன்ன
கண்ணீர்மை கண்டொழுகு வேன் ... (v-4.)
சத்தமுஞ் சோதிடமு மென்றாங் கிவைபிதற்றும்
பித்தரிற் பேதையா ரில். ... (vi-2.)
கூர்த்து நாய் கௌவிக் கொளக்கண்டுந் தம்வாயாற்
பேர்த்து நாய் கௌவினா ரீங்கில்லை. ... (vii-10.)



ஆற்றுந் துணையும் பொறுக்க பொறானாயின்
தூற்றாதே தூர விடல். ... (viii.5.)
வைய மெல்லாம் பெறினு முரையற்க
பொய்யோ டிடை மிடைந்த சொல். ... (viii-10.)
விளங்காய் திரட்டினா ரில்லை களங் கனியைக்
காரெனச் செய்தாரு மில். ... (xi-3.)
மாரி
வறப்பிற் றருவாரு மில்லை யதனைச்
சிறப்பிற் றணிப்பாரு மில். ... (xi-4.)
இசையா வொருபொரு ளில்லென்றல் யார்க்கும்
வசையன்று வையத் தியற்கை. ... (xii-1.)
அக்காரம்
யாவரே தின்னினுங் கையாதாங் கைக்குமாம்
தேவரே தின்னினும் வேம்பு. ... (xii-2.)
காலாடு போழ்திற் கழிகிளைஞர் வானத்து
மேலாடு மீனிற் பலராவர். ... (xii-3.)
உப்பொடு நெய்பா றயிர்காயம் பெய்திடினும்
கைப்பறா பேய்ச்சுரையின் காய் ... (xii-6.)
உறப்பால யாவர்க்கு முறும். ... (xii-7.)
சாந்தகத் துண்டென்று செப்புத் திறந்தொருவன்
பாம்பகத்துக் கண்ட துடைத்து. ... (xiii-6.)
கல்வி யழகே யழகு. ... (xiv-1.)
எம்மை யுலகத்தும் யாங்காணேங் கல்விபோல்
மம்ம ரறுக்கு மருந்து ... (xiv-2.)
கடைநிலத்தோ ராயினுங் கற்றறிந் தோரைத்
தலை நிலத்து வைக்கப் படும் ... (xiv-3.)
கல்வி கரையில கற்பவர் நாள்சில
மெல்ல நினைக்கிற் பிணிபல தெள்ளிதின்
ஆராய்ந் தமைவுடைய கற்பவே நீரொழியப்
பாலுண் குருகிற் றெரிந்து. ... (xiv-5.)
தவலருந் தொல்கேள்வித் தன்மை யுடையார்
இகலில ரெஃகுடையார் தம்முட் குழீஇ
நகலி னினிதாயிற் காண்பா மகல்வானத்
தும்ப ருறைவார் பதி. ... (xiv-7.)
அவமதிப்பு மான்ற மதிப்பு மிரண்டும்
மிகைமக்க ளான்மதிக்கற் பால—நயமுணரார்க்

கையறியா மாக்க ளிழிப்பு மெடுத்தேத்தும்
வையார் வடித்தநூ லார். ... (xvii-3.)
குலமாட்சி யில்லாருங் குன்றுபோ னிற்பர்
நலமாட்சி நல்லாரைச் சார்ந்து. ... (xviii-5.)
வெறிகமழ் சந்தனமும் வேங்கையும் வேமே
எறிபுனந் தீப்பட்டக் கால். ... (xviii-10.)
வாளாடு கூத்தியர் கண்போற் றடுமாறும்
தாளாளர்க் குண்டோ தவறு. ... (xx-1.)
உயர்குடி யுட்பிறப்பி னென்னும் பெயர்பொறிக்கும்
பேராண்மை யில்லாக் கடை. ... (xx-9.)

அடுத்தடுத்து

வன்காய் பலபல காய்ப்பினு மில்லையே
தன்காய் பொறுக்கலாக் கொம்பு. ... (xxi-3.)
அபராணப் போழ்தி னடகிடுவ ரேனும்
தமராயர் மாட்டே யினிது. ... (xxi-7.)

யானை

அறிந்தறிந்தும் பாகனையே கொல்லு மெறிந்தவேன்
மெய்யதா வால்குழைக்கு நாய். ... (xxii-3.)
நெல்லுக் குமியுண்டு நீர்க்கு நுரையுண்டு
புல்லிதழ் பூவிற்கு முண்டு. ... (xxiii-1.)
ஒருவர் பொறை யிருவர் நட்பு. ... (xxiii-3.)

களைபவோ

கண்குத்திற் றென்றுதங் கை. ... (xxiii-6.)
மாத்திரையின்றி நடக்குமேல் வாழுமூர்
கோத்திரங் கூறப்படும். ... (xxv-2.)
எந்நிலத்து வித்திடினுங் காஞ்சிரங்காழ் தெங்காகா ... (xxv-3.)
பட்டினம் பெற்ற கலம். ... (xxv-10.)
பெண்ணவா யாணிழந்த பேடி யணியாளோ
கண்ணவாத் தக்க கலம். ... (xxvi-1.)
நாவின் கிழத்தி யுறைதலாற் சேராளே
பூவின் கிழத்தி புலந்து. ... (xxvi-2.)

பனையின்மேல்

வற்றிய வோலை கலகலக்கு மெஞ்ஞான்றும்
பச்சோலைக் கில்லை யொலி. ... (xxvi-6.)
கோலாற் கடாஅய்க் குறினும் புகலெல்லா
ரேலா வுடம்பிற் கறிவு. ... (xxvi-8.)



அள்ளிக்கொள் வன்னகுறுமுகிழ வாயினும்
கள்ளிமேற் கைந்நீட்டார். ... (xxvii-2.)
ஒத்த குடிப்பிறந்தக் கண்ணுமொன் றில்லாதார்
செத்த பிணத்திற் கடை. ... (xxix-2.)
இரப் பிடும்பை யாளன் புகுமே புகையும்
புகற் கரிய பூழை நுழைந்து ... (xxix-2.)
விழித்திமைக்கு மாத்திரையன்றே யொருவன்
அழித்துப் பிறக்கும் பிறப்பு. ... (xxxi-2.)

பாற்கூழை

மூழை சுவையுணரா தாங்கு. ... (xxxiii-1.)

தினைத்துணையும்

நன்றி புரிகல்லா நாணின் மடமாக்கள்
பொன்றி லென் பொன்றுக்கா லென் ... (xxxiii 3.)
கற் கிள்ளிக் கையிழந் தற்று. ... (xxxiv-6.)
கொடாஅ ரெனினும் முடையாரைப் பற்றி
விடாஅ ருலகத்தவர் ... (xxxiv-7.)
மைத்துனர் பல்கி மருந்திற் றணியாத
பித்தனென் றெள்ளப் படும். ...(xxxiv-10.)
பொற்கலத் தூட்டிப் புறந்தரினு நாய் பிறர்
எச்சிற் கிமையாது பார்த்திருக்கும். ... (xxxv-5.)
முந்திரிமேற் காணி மிகுவதேற் கீழ்தன்னை
யிந்திரனா வெண்ணி விடும். ... (xxxv-6.)
மைதீர் பசும்பொன்மேன் பாண்ட மணியழுத்தி
செய்த தெனினுஞ் செருப்புத்தன் காற்கேயாம். ... (xxxv-7.)
தீத்தொழிலே கன்றித் திரிதந் தெருவைபோல்
போத்தறார் புல்லறிவினார் ... (xxxvi-1.)
மாண்ட மனையாளை யில்லாதா னில்லகங்
காண்டற் கரியதோர் காடு. ...(xxxvii-1.)
மகனறிவு தந்தையறிவு. ...(xxxvii-7.)

குடைக்கால் போற்

கீழ் மேலாய் நிற்கு முலகு. ...(xxxvii-8.)

## பத்திராதிபர் குறிப்பு.

"மதிராசு ஒற்றைக்கம்பி டிராம்வே:—ராவ்சாகிப் டி. நம்பெருமாள் செட்டியார் மேற்குறித்த மோனோ ரெயில் டிராம்வேயைப்பற்றிக் கூறியதை யாலோசிக்க முனிசிபல் ஸ்பெஷல் கமிடியார் கடந்த வெள்ளிக்கிழமை தினம் ஒன்றுசேர்ந்தனர். மதிராசு முனிசிபல் இலாகாவுக்குள் 30 மைல் தூரம் இருப்புப்பாதை யமைப்பதாய் ஸ்பெஷல் கமிடியார் கூறினர். (1) பூந்தமல்லி முனிசிபல் சுங்கச்சாவடியண்டை வரும் ஆவடி பூந்தமல்லி லயன், அங்கிருந்து பூந்தமல்லி ரோட்டு, ரித்தர்டன ரோட்டு, வேப்பேரி ஹைரோட்டு, சைடனும் ரோட்டு, பாரினரோட்டு, கூக்ரோட்டு மார்க்கமாய் கர்னாடக யந்திரசாலை வரையில், (2) உப்பளக் கொட்டையிலிருந்து மூலக்கொத்தளம் வாராவதியில் எருக்கஞ்சேரி ரோட்டு வழியே புழலேரி வரையில், (3) மூலக்கொத்தளம் வாராவதியிலிருந்து பழைய ஜெயில் ரோட்டுவழியே ரேவுத்துறை வரையில், (4) பழைய ஜெயிலிலிருந்து லிங்க செட்டி வீதி மார்க்கமாய்க் கோட்டைமைதானம் பச்சையப்பன் சாலை வரையில், (5) உப்பளக் கொட்டையிலிருந்து ஒற்றைவாடை வழியே மணல் டிபோவரையில், (6) சைதாபேட்டை சுங்கச்சாவடியண்டை வரும் பல்லாவரம் பரங்கிமலையிலிருந்து லயன், அங்கிருந்து மவுண்டுரோடு வழியே மெஸர்ஸ் ஸ்மித் வகைக் கம்பனியையும் ஹாரிஸ் வாராவதியையும் தாண்டிப் போலீசு கமிஷனர் ரோட்டால் பூந்தமல்லி ரோட்டுவரையில், தவிர மவுண்ட்ரோட்டிலிருந்து பீட்டர்ரோட்டு, ஐஸவுஸ்ரோட்டு வழியே பக்கிங்காம் வாய்க்காலண்டையுள்ள கல்லுடிபோ வரையில், மதிராஸ் முனிசிபல் எல்லைக்குள் போடப்படும் மோனோ ரெயிலும் செங்கற்பட்டுவரை போட உத்தேசித்திருக்கும் லயனும் சேருமிடத்து 50 மைலுக்கதிகமிருக்குமென்று கருதப்படுகின்றது. பிறரது பணத்தை எதிர்பாராது தாமே கைப்பணமிட்டு, அனைவர்க்கு முபயோகமாகவிருக்கும் இப்பெரு முயற்சியைச் செய்ய முன் வந்திருக்கும் நமது செட்டியாருக்குச் சென்னைவாசிகள் கைம்மாறு செய்வது என்னனம்? எடுத்த காரியம் சீக்கிரத்திற் கைகூடுமாக.


# ஞானபோதினி.

ஒரு மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.


தாமின் புறுவ துலகின் புறக்கண்டு
காமுறுவர் கற்றறிந் தார்—திருக்குறள்.

சம்புடம் VI. } 1903௵ மே௴ 20௳ { இலக்கம் 10.

## TAMIL SCHOOLS.

## தமிழ்ப் பாடசாலைகள்.

கிராமந்தோறும் தமிழ்ப் பாடசாலைகள் தொன்றுதொட்டு நடந்து வருகின்றன. கிராமச்சிறுவர்கள் இவற்றிற் கல்விகற்றுவருகின்றனர். இவற்றின் சரித்திரத்தை ஆராயுங்கால் ஐம்பது வருடங்கட்கு முன்னர் இப்பாடசாலைகளில் தமிழ் நன்கு பயிற்றுவிக்கப்பட்டதென்பதும் தற்காலத்தில் அத்துணை பயிற்றுவிக்கப்படவில்லை யென்பதும் எவரும் அறிந்தவிஷயமே. இதன் காரணம் யாது? தற்காலத்துத் தமிழ்ப்பாடசாலைகளில் வாத்திமைத் தொழில் நடத்துவோர் பெரும்பான்மையும் தமிழறிவு நுட்பங்காணாதவரே. ஆங்கிலேய பாடசாலைகளிற் சில்லாண்டு கற்று ஆங்கிலேயமாயினும் தமிழாயினும் சீர்பெறக் கல்லாமல் உதரவலி ஒழித்தற்பொருட்டுத் திரிபவரே சிறுவர்களுக்குப் போதிக்க வருபவராவர். இவர்கட்கு இலக்கண இலக்கியவறிவு சூனியம். 'சட்டியிலுண்டானாலன்றோ அகப்பையில் வரும்?' பண்டமில்லாத வாசிரியரிடங் கற்கும் மாணவர் எங்ஙனம் பயன்பெறுவர்? அன்றியும், ஆங்கிலம் அரசபாஷையானதால் முதன்மைபெற்று, நம் நாட்டு ஆலமரம்போல் தழைத்து விழுதிவிட்டு வலிமையுற்று விளங்கிவரும் இக்காலத்தில் சிறார் தமி

ழ்ப்பாடசாலைகளில் தங்கும் காலம் சிறிதேயாம். அன்னார் ஐந்துவய தாகுமுன்னர் ஆங்கிலம் கற்கத் தொடங்குகின்றனர். தமிழ்வாசமும் ஏற்காமலாங்கிலக் கல்வி தொடங்கும் மாணவர் உடல்தேய்ந்து கண் பூத்து மனமிற்று நாளடைவில் யமனுக் குணவாகின்றனர். உலக வறிவும் ஆயுள் விருத்தியும் குன்றிய இவர்களுடைய சந்ததியின் நிலைமை நினைப்பிற்பரிதாயமே. மேலும் தமிழ் பயிற்றும் முறை யைக் கவனிக்கப்புகின் வியப்பே. இலகுவாய்ப் பிள்ளைகளுக்குப் பாஷையைக் கற்றுக்கொடுக்கக் கருதித் துரைத்தனத்தார் செய்தி ருக்கும் ஏற்பாடுகள் தமிழ்ப்பாஷைக்கு ஒவ்வாதனவே. முன்னிருந்த தமிழ்ப்பாடசாலை உபாத்தியாயருக்கு ஆங்கிலக்கல்வி கிடையாதாயி னும் தமிழ் இலக்கண இலக்கியத்தேர்ச்சி மிகுதியுமுண்டு. பிள்ளை களும் குறைந்தது பன்னிரண்டு வயதுவரை தமிழ் கற்று வந்தார்கள். ஆத்திசூடி, கொன்றைவேந்தன், மூதுரை, உலகநீதி, வெற்றிவே ற்கை, குறள், நாலடி, குறவஞ்சி, திவாகரம், நிகண்டு, எண்சுவடி, குழிப்பெருக்கம், நாணப்பெருக்கம் இவைபோன்ற நூல்களைப் பயின் றுவந்தனர். எண்ணெழுத்திகழாத இம்மாணவர் பாக்களை வாசித்து அன்வயப்படுத்தி அருத்தஞ்சொல்லவும், கொடுத்தகணக்கை வாயாற் றீரவும் சக்தியுள்ளவராய், லௌகிக அறிவு படைத்தவராய், ஒழு க்கவிழுமிதாக்கொண்டவராய் நன்குமதிக்கப்பட்டு வந்தனர். ஞாபக சக்தி தற்காலத்து வாலிபர்களுக்குப் பெரும்பான்மையுங்கிடையாது. நான்கு பாட்டுச்சொல்ல ஏலாது, சிலேட்டிலாயினும் காகிதத்திலாயி னும் எழுதிப்பாராமல் கணக்கு ஓடாது. இஃதன்றியும், கற்குங் கால வளவும் சிறிதன்று. தமிழ்ப் பாடசாலை விட்டபின் குறைந்தபக்ஷம் பதினெட்டாண்டு செல்லும் பி. ஏ. பட்டம்பெற. பதினொருவயதில் ஆங்கிலங் கற்கப்புகுந்த மாணவரும் மேற்கூறிய காலவளவிற்கு முன்னரே, அஃதாவது, இருபது வயதில் பட்டம்பெற்று வந்தனர். இருதிறத்தாருக்கும் வித்தியாசம் என்னவெனில், பின்னவர் நீண்ட ஆ யுளும் அறிவு முதிர்ச்சியும், ஒழுக்கச்செல்வமும், உடற்றிறமும் பெற் றிருந்தனர், முன்னவரோ, ஈப்போல் நைந்தும், கண்ணொளியிழந் தும், இழைத்தநாள் எல்லையடையாததும், உடலாக்கம் மனவாக்கம் பெறாதும், கைப்பொருளிழந்தும், வருவாய் குன்றியும், தம்மைப் பெற்றார் தவிக்கவும், தாம்பெற்ற குழவிகள் துடிக்கவும் விட்டொழி

கின்றனர். அந்தோ, பாவம்! இப்பரிதாபநிலை தவிர்த்தல் எங்ஙனம்? துரைத்தனத்தாரும் தமிழபிமானிகளும் தமிழ்ப் பாடசாலைகளை நன்கு பாராட்டுதலினாற் கூடும். இன்ஸ்பெக்டராக ஏற்பட்டிருக்கும் தமிழர்கள் தக்க தமிழ்ப்பாடங்களை ஏற்படுத்தவேண்டும்; தமிழ் கற்பிக்கும் முறை வேறு, மற்ற பாஷைகள் கற்பிக்கும் முறைவேறு என்பதை வற்புறுத்தித் தமிழின் விசேஷங்களை எடுத்துக்காட்டி ஆங்கிலப் போதனமுறை இதற்குதவாது என்பதை விளக்கவேண்டும்; ஆங்கிலத்தேர்ச்சிமட்டுமன்றித் தமிழிலும் தக்க தேர்ச்சியுடையவரைத் தெரிந்து ஆசிரியராக்கவேண்டும்; அன்னார்க்குமட்டும் போதனமுறை பயிற்றுவித்துப் போதகரா யனுப்பவேண்டும்; சர்க்காருதவிப் பொருளையும் பாத்திரமறிந்து படைக்கவேண்டும். இத்தகைய குறிப்புக்களை கவனிப்பரேல், வாத்திமைத் தொழில் முன்போற் சிறக்கும்; மாணவர் மிக்க பயன்பெறுவர்; வாழ்நாள் வீணாளாகாமல் இம்மையிற்றழைத்து, மறுமைக்கும்வித்திடுவர். தமிழபிமானிகாள்! தமிழபிவிருத்திக்கு ஆணிவேர் தமிழ்ப்பாடசாலைகளாதலினால் அவற்றைக் கண்திறந்துபாருமின்; அவற்றிற்குப் பைதிறந்துதவுமின்; வாக்குச்சகாயம்செய்யுமின்; எவ்வாற்றானும் சிறார்கள் தமிழ்த் தாயைப்போற்றவல்ல வழிகளை நாடிக்கொடுமின்.

பத்திராதிபர்.

---

## INDIAN RAILWAYS.

## இந்திய இருப்புப்பாதைகள்.

இருப்புப்பாதையைப்பற்றிய ரிபோர்ட்டை ஸ்பெஷல் ரெயில்வே கமிஷனரான மிஸ்டர் ராபர்ட்ஸன் எழுதிமுடித்து இந்தியாகவர்ன்மெண்டாருக்கு அனுப்பியிருக்கிறாரென்றும், அவர் அந்த ரிபோர்ட்டை இந்தியாமந்திரிக்கு அனுப்பியிருப்பதாயும் வர்த்தா பத்திரிகைகளினால் அறிந்தோமன்றோ? இருப்புப்பாதைகளிற் செய்தற்கேற்ற சீர்திருத்தங்களுக்கான சிபார்சுகளடங்கிய அந்த ரிபோர்ட்டு வெளிப்போந்தது. அந்தரிபோர்ட்டிலுள்ள சிபார்சுகளை யுற்றுப்பார்க்கின், மிஸ்டர் ராபர்ட்ஸன் இந்தியாவிலுள்ள இருப்புப்பாதைகளின் ஸ்திதிகதிகளை நன்குணர்ந்து ஆராய்ச்சி செய்தபின்னரே அந்த ரிபோர்ட்டை எழுதி முடித்திருக்கவேண்டும் என்று நாம் ஊகிக்கவேண்டியிருக்கின்றது. ஒவ்வொரு விஷயத்தையும் தெளிவுறக்காட்டியுள்ளார். கவர்ன்

மெண்டாரும் ஜனங்களும் எதிர்பார்த்திருந்தபடி இந்திய இருப்புப்பாதைகளில் இன்ன இன்ன சீர்திருத்தங்கள் செய்த லவசியம், இன்னின்ன மாதிரி செய்தால் இப்போழ்திருக்கும் லாபத்தைக்காட்டிலும் அதிகம் கிடைக்கும், அப்பாதைகளின் வழியாச் செல்லும் பிரயாணிகளுக்கு இன்னின்ன மாதிரியான சௌகரியங்கள் இருந்தால் நலமாயிருக்கும் என்பதான பற்பல விஷயங்களையெடுத்து விளக்கிக்காட்டியுள்ளார். இந்த ரிபோர்ட்டு எக்காலத்திற்கும் உபயோகமானது. காட்டு இலாகாவைப்பற்றிச் சிரத்தை யெடுத்துக் கொள்வோரைக்காணோம் என்று நம்மவருட் பலர் நினைத்திருந்தற் கெதிராய் டேராடூனிலுள்ள இம்பீரியல் பாரஸ்டு ஸ்கூலின் டைரெக்டரான மிஸ்டர் காம்பெல் முன்வந்து இந்தியக்காடுகள் சீர்கெட்டுக் கிடக்கின்றனவென்பதான பற்பல விஷயங்களை யெடுத்து ராயல்கலோனியல் இன்ஸ்டிடியூஷன் சங்கத்தினர் முன் வெகு திறமையாய்ப் பேசினதை நமது நேயர்கள் அறிவர். அவரைப்போல் மிஸ்டர் ராபர்ட்ஸனும் தமது ரிபோர்ட்டை வெளியிட்டிருக்கின்றனர். இந்தரிபோர்ட்டின் கணுள்ள சிற்சில முக்கியமான அம்சங்களை இங்கெடுத்துக் கூறுவோம்:—"3-ஆவது வகுப்புப்பிரயாணிகளின் கஷ்டத்தை நம்மால்கூறமுடியாது; இதைப்பற்றி முறையிடாத வார்த்தா பத்திரிகைகள் கிடையா; எவ்விடம் நோக்கினும் பலவிதத் துன்பங்களுக்குட் பட்டிருப்பவர் மூன்றாவது வகுப்புப்பிரயாணிகளே; ரெயில்வே அதிகாரிகள் எப்பொழுதும் முதலாவது இரண்டாவது வகுப்புப் பிரயாணிகளின் சௌகரியங்களைக் கருதுகிறார்களேயன்றி 3-ஆவது வகுப்பினரைக் கண்திறந்து பார்ப்பதில்லை, ஆயினும் ஜாஸ்தி வரும்படிவருவது 3-ஆவது வகுப்புப் பிரயாணிகளால் தான். இப்படி யிருக்கையில் அவர்களது சௌகரியங்களுக்கேற்ற ஏற்பாடுகள் செய்வது இருப்புப்பாதை யதிகாரிகளின் முதற்கடமையாகும்" என்று மிஸ்டர் ராபர்ட்ஸன் சொல்லிப், பின்னர் ரெயில் வண்டிகளின் ஓட்டம் (வேகம்) இவ்வாறு இருந்தால் நலமாகுமென்று அபிப்பிராயப்படுகிறார்:—"இந்தியாவில் ரெயில் ஓடவாரம்பித்து ஏறக்குறைய 50 வருஷங்களுக்கு மேலாகின்றது, இப்பொழுது சாதாரணமாய் இந்தியாவிலோடும் மெயில் வண்டிகள் மணியொன்றுக்கு 20 மைல்களுக்குக் குறையாமலும் 30 மைலுக் கதிகப்படாமலும் ஓடுகின்றன; இத்தனை வருடங்களாய் ரெயிலோடும்பொழுது பூமி நன்றாய்க் கிடிபட்டு அழுத்தமாயிருக்குமாதலின் மேற்சொன்ன வேகத்தைக்காட்டிலும் இன்னு மதிகமான வேகத்துடன் வண்டிகள் இருப்புப்பாதைகளில் ஓடலாம்; முக்கியமான லயன்களில் (Main lines) இரண்டுமெயில் டிரெயின்கள் ஓடினால் பிரயாணிகளுக்குக் கொஞ்சம் சௌகரியமாகு"மென்று அவர் கூறுகிறார். ரெயில்வே கட்டணங்களைப்பற்றிக் கூறுகையில் "இங்கிலண்டிலுள்ள இருப்புப் பாதைகளுக்கும் இந்திய இருப்புப்பாதைகளுக்கும் வெகுதாரதம்மிய மிருக்கின்றது; இங்கிலண்டிலிருப்பதைக் காட்டிலும் இங்கு 6 மடங்கு அதிகமாகக் கட்டணங்.

செலுத்த வேண்டியதாயிருக்கின்றது ; இருப்புப்பாதைகளின் கம்பெனியார் அல்லது சிப்பந்திகள் முதலியவர்களது அஜாக்கிரதையினால் ஜனங்களது சாமான்கள் சேதமாயின் அதற்கு ரெயில்வேயாரே உத்தரவாதஞ் செய்ய வேண்டும்" என்றும், மிஸ்டர் ராபர்ட்ஸன் சொல்லுகிறார். அநேகமாய் இந்திய இருப்புப்பாதைகளில் உயர்ந்த உத்தியோகத்தி லிருப்பவர் வெள்ளையரேயாவர், அவர்களுக்கு அதிகமாய்ச் சம்பளங் கொடுத்து வைத்திருப்பதனால் நம்மிந்தியருக்குக் கஷ்டமே யொழிய சுகமொன்றுமில்லை. வெள்ளையரைப்போலத் திறமை வாய்ந்தவர் நம்மவரில் எவருமிலரோ ? இன்னுமதிகச்சம்பளங் கொடுத்து வெள்ளையரை ரெயில்வே சிப்பந்திகளுள் உயர்ந்தவராய் நியமிப்பதனாலும், அவர்கள் நந்தேயத்துக் குடிகளின் சுகதுக்கங்களை யறிந்து அவர்களுக்குத் தக்கபடி நடவாததனாலும், இந்திய ரெயில்வே சிப்பந்திச் செலவு வெகு அதிகமாயிருக்கின்றது. சக்தியம் திறமையுள்ள இந்தியச் சிப்பந்திகள் குறைந்த சம்பளத்துக்கு ரெயில்வே இலாகாவுக்கு வரும்பொழுது அதிகச்சம்பளங் கொடுத்து அன்னியர்களை நியமித்தபின், சிப்பந்திச்செலவு அதிகமாயிற்றே, என்று முறையிடுவதில் யாது பயன் ? கர்ஸன் பிரபுவைப்போன்ற இராஜப்பிரதிநிதியின் ஆட்சியில் இவைகளுக்கான ஏற்பாடுகளனைத்தும் செய்யப்படுமென்றே எண்ணுகிறோம். லண்டனிலிருக்கும் ரெயில்வே போர்டுகளிலுள்ள மெம்பர்கள் 3-மாதங்களுக் கொருமுறையோ 6-மாதங்களுக் கொருமுறையோ, இந்தியாவுக்குவந்து ஆங்காங்குள்ள ரெயில்வே சீர்திருத்தங்களைப் பார்த்துச் சென்றால் எல்லாம் நன்கு விளங்கும். பிரயாணிகளேறிச் செல்லும்வண்டிகளின் வேகம் அதிகரித்தல்; ஒவ்வொரு தினத்திலோடும் மெயில்வண்டிகள் (through trains) ஒன்றுக்கதிகமிருத்தல் ; பொதுவாய் மூன்றாவது வகுப்புப்பிரயாணிகளின் சௌகரியத்தை யொட்டி யின்னுமிரண்டு வண்டிகளைச் சேர்த்தல் ; ரெயில்வே சிப்பந்திகள் மூன்றாவது வகுப்பினரைக் கீழானவரென மதித்து இழிவாய் நடவாதிருத்தல் ; அநேக ஸ்டேஷன்களில் சுதேசிகளுக்கான சாப்பாட்டு விடுதிகளைக் கட்டுவித்தல் ; டிரெயின்களிலேயே சாப்பாட்டு வசதிக்கேற்ற வண்டிகள் அமைத்தல் ; டிக்கட்டு ஆபீசுகள் எப்பொழுதுந் திறந்திருத்தல் ; பிரயாணிகளுக்கும் கார்டுகளுக்கும் தத்தம் வண்டிகளிலிருந்து பேசிக்கொள்ளும்படியான வசதியமைத்தல் ; மின்சாரத்தைக்கொண்டு வண்டிகளுக்கு இன்னுமதிக விளக்குகளேற்றல் ; ரெயில்வே கட்டணங்களைக் குறைத்தல் ; கூலிகள் முதலாயினோர்க்குக் குறைந்த சார்ஜுள்ள டிக்கட்டுகள் கொடுத்தல் ; ஆகிய இவைகள் மிஸ்டர் ராபர்ட்ஸனுடைய ரெயில்வே சீர்திருத்தச் சிபார்சுகளுட் சிலவாகும். இதனால் நமக்குத் தோற்றுவதென்னவெனில் ரெயில்வே டிபார்ட்மெண்டை அவர் வெகு நுட்பமா யறிந்தாராய்ந்திருக்கின்றனர். இவர் விதரித்துக் காட்டியுள்ள இத்தனை சிபார்சுகளையும் கவர்ன்மெண்டார் எப்பொழுது தமது யோசனையி லெடுத்துக்கொள்வரோ.

தெரியவராது. யூனிவர்ஸிடி கமிஷன், நீர்ப்பாய்ச்சல் கமிஷன், போலீஸ கமிஷன் முதலான பற்பல கமிஷன்களை யேற்படுத்திய நமது கர்ஸன் பிரபு, இந்திய இருப்புப்பாதைகளைச் சீர்திருத்திப்போவாரென்றே நம்புகின்றோம். இப்போழ்து வெளிப்போந்த மிஸ்டர் ராபர்ட்சனின் ரெயில்வே ரிபோர்ட்டிற் கண்டபடி இருப்புப்பாதைகளின் சீர்திருத்தங்களைப்பற்றிய சுபார்சுகளை நமது இராஜப்பிரதிநிதி கவனித்து அவைகளுக்கேற்ற ஏற்பாடுகளைச் செய்தால் ஜனங்களுக்குள்ள ரெயில்வே தொந்திரவும் ஒருவாறு அடங்கும்; கர்ஸன் பிரபுவின் ஞாபகமும் எந்நாளும் நம்மவர் மனத்திற் குடிகொண்டிருக்கும்.

ல. அ.

---

## WELL IRRIGATION.
## கிணற்றுப் பாய்ச்சல்.

---

சென்னைப்பட்டணம் சித்திரகலாசாலைத் தலைவரான சாட்டர்டன் அவர்கள் நந்தேசத்திற் பொருட் பெருக்க முண்டாவதற்கான வகைகளைத் தேடி யுழைத்து வருகின்றார். இவரது நன்முயற்சியினால் விவசாயிகளும் கைத்தொழிலாளிகளும் மேன்மையடைவார். இவர் இதுவரை 'அலூமினியம்' என்று சொல்லப்பட்ட படிக்காரஸத்தைகொண்டு பாத்திரசாமான் செய்து அவற்றைவழக்கத்திற்குக் கொண்டுவருவதற்காகப் பாடுபட்டு வந்தவராவர். இம்முயற்சியினால் இங்கு அநேகக் கைத்தொழிலாளிகளுக்குப் பிழைப்புண்டாயிற்று. இவ்வாறு இனிச் சீக்கிரகாலத்தில் இவர் விவசாயச் சீர்திருத்தமுஞ்செய்து நற்கீர்த்தி கொள்வரென்று நம்புகிறோம். இத்தேசத்து ரயத்துகள் செய்து வரும் விவசாயத்தொழில் இன்னும் பாமரத்தனமாய் நடந்து வருகிறதென்றும் அதனைச் சீர்திருத்தி நன்றாய் நடத்தலாமென்றும் பலர் அபிப்பிராயப்படுகிறார்கள். இவர்கள் என்ன சொல்லினும், சீர்திருத்தத்தின் பிரயோசனமின்னதென்று அநுபோகத்தில் ருஜுப்படுத்தாதவரை நமது ரயத்து எத்தகைய மாறுபாட்டுக்கும் இணங்கான். விவசாயசம்பந்தமாய் நாம் சீர்திருத்தக் கவனிக்கக்கூடிய விஷயங்கள் பலவுள. அவற்றுள், பற்பலநிலங்களின் பூஸாரநிலைமைகள், நீர்ப்பாய்ச்சல் முறைகள், எருக்களின் குணகுணங்கள், வெவ்வேறு இடங்களுக்குரிய அவிலோற்பன்னஸ்திதிகள் (வானத்து விசேஷங்களைக்காட்டும் நிலைமைகள்), தானியவித்துக்களைச் செவ்வையாக்குதல், உழவுமாடுகளைத் தேற்றுதல், புறத்தேயத்துப் பயிர்களை இங்குச்செழிக்கச்செய்தல், முதலியன முக்கியமான அமிசங்களாம். இவை யொவ்வொன்றையும் நாம் ஆராய்ந்து விசாரிக்க வேண்டியது அவசியமே யெனினும், நீர்ப்பாய்ச்சல் விஷ



யமானது மிகவும் அவசரமாய்க் கவனிக்கத்தக்கதாகும். கிணறுகளில் ஏற்றம்போட்டுத் தண்ணீரிறைத்துச் சாகுபடி செய்வதினும் குளங்கள், கால்வாய்கள் முதலியவற்றி லிருந்துபாய்ச்சுவது சுலபமான தன்றே? சரீரப்பிரயாசையைக் குறைப்பதற்கான யந்திர சாதனங்களை அமைத்துக்கொள்வது நன்மையே யென்றாலும், விவசாயிகளிற் பெரும்பாலார் ஏழைக்குடியானவர்களா யிருப்பதை ஆலோசிக்கவேண்டும். அவர்களுக்குச் சாதாரணமாயுள்ள காணி இரண்டொரு ஏகரா பூமியேயாகும். பட்டாக்களின் கணக்கை யெடுத்துப் பார்க்கின், ஒவ்வொருவனுக்குஞ் சராசரி பத்து ரூபாய் ஆஸ்தி கூட இல்லை. இஃது இப்படியிருக்க, இறைப்பதற்கு மாடுகளைக்கட்டி யடிப்பதைவிட எண்ணெயினாலியக்கப்படும் ஜல சூஸ்திரங்களை யுபயோகிப்பது செலவுக் குறைவெனினும், அந்த ஜல சூத்திரங்களின் கிரயம் அதிகமாயிருத்தலின் ஏழைக்குடியானவனுடைய சக்திக்கு மீறியிருக்கின்றது. கிணற்றுப்பாய்ச்சலிருந்துள்ள இடங்களில் ஒரு கிணற்றினால் அரை ஏகரா முதல் மூன்று ஏகராவரை சாகுபடி செய்யலாம்; அதிகமாயின் ஐந்து ஏகராவுக்கு மேல்ஓடாது. ஒருகிணறு வெட்டுவதற்கு அந்தந்த இடங்களுக்குத் தக்கபடி ஐம்பதுரூபாய்முதல் ஐந்நூறு ரூபாய் வரை பிடிக்கின்றது. ஒருகிணற்றுப் பாய்ச்சலுக்குள்ளடங்கிய நிலத்தில் ஒரு சாதாரண குடும்பமும் இரண்டொரு ஜதைமாடும் உழைத்தாற்போதும்; இவர்களுக்குப் போதுமான வேலை அதிலிருக்கின்றது. இந்தக் குடும்பத்துச் சம்ரக்ஷணைக்கும், துணிமணிகளுக்கும் சுபாசுப காரியங்களுக்கும், வரிகளுக்கும், மாடுகளின் போஷணைக்கும், எருவுக்கும், கருவிகளைப் பழுது பார்ப்பதற்கும், நிலத்தைச் சீர்திருத்துவதற்கும் வேண்டிய பணம் அந்தச் சிறுதுண்டு நிலத்திலிருந்து உற்பத்தியாகவேண்டும். கிணற்றுப்பாய்ச்சல் சரிவர நடக்கவேண்டுமாயின் அதனில் நீர்வற்றாமலிருக்க வேண்டும். சில விடங்களில் மாத்திரமே முப்பது நாற்பது ரூபாய்ச் செலவில் செங்கல் அல்லது சொடிக்கூண்டு முதலிய சுலபமான சாமான்களைக் கொண்டணைத்து ஆறுமுதல் பத்தடி ஆழமுள்ள சிறு கிணறுகள் தோண்டி, அந்த ஜலத்தை ஐந்து ஏகராவரை பாய்ச்சி ஒரு சமுசாரம் பிழைப்பதற்கு இடமுண்டாகிறது. எல்லா இடங்களிலும் இப்படி அமையாது. ஒரு குடும்பத்திற் சாதாரணமாய் ஐந்துபேர் இருக்கிறார்கள். ஒருஜதை மாடுகளுக்குத் தீனிச் செலவு மாதமொன்றுக்கு 25, 30 ரூபாய் ஆகுமென்றும், அதைவிட எண்ணெயினாலியக்கப்படும் ஜல சூத்திரத்திற்குச் செலவு அதனிற் பாதியாகுமென்றும் மிஸ்டர் சாட்டர்டன் நினைக்கிறார். புல், வைக்கோல் முதலியன தன் நிலத்திலே கிடைப்பதனால் மாடுகளுக்கு அவ்வளவு செலவு பிடிக்காது. ஆகையால், ஏழை ரயத்து மிகுந்த பணச்செலவிட்டு நாணயமான ஜலசூஸ்திரங்களை வாங்கினால் அவைகளை யுபயோகிக்கத் தெரியாமல் அவஸ்தைப்படுவதன்றி அவனுக்கு செலவும் அதிகப்படும். ஜமீன்தாரர்களும் பெரிய மிராசுதாரர்களும் யந்திரங்களை வாங்கி யுபயோகிக்கலாம்; ஆனால் அப்படிச்

செய்யுமிடத்து இதுவரை கூலிவேலை செய்து பிழைத்து வந்த ஏழைக் குடிகளுக்குப் பிழைப்பு குறையுமன்றோ? 'கன்றன் நடமாடக் குயவன் குடிபோனான்' என்றதுபோல், யந்திரங்கள் நடமாடக் கைக்கூலிக்காரர் தாம் செய்யுந் தொழிலைவிட்டு ஊர்துறந்து ஒழிவாராயினர். அப்படியே ஏழைக் குடியானவரும் கூலிவேலைகளை நாடிச் செல்லவேண்டியதாகும். இந்திய விவசாயிகளுக்குள்ள அனுகூலங்களாவன:—1. ஒரு[illegible] உழைக்கும் நாட்டமில்லாமை, 2. பரம்பரையாக[illegible] வழக்கத்தை யனுசரிப்பதிற் சோராப்பற்று, 4. ஏழைமை, 5. கூட்[illegible]ளமைத்து வேலைசெய்து சாதிக்குந் திறமையின்மை முதலியனவாம். ஆதலின், ஒவ்வொருகுடும்பமும் தனித்ததோர் உலகமாகும்; அதன் [illegible]ம், காணி, வரும்படி, நன்மைதீமை முதலியன அதன் மட்டோடேயாகும். பாமரஜனங்கள் கல்விப்பயிற்சி மேலிட்டுப் பலவகை விவசாயமுறைகளை அறிந்து ஒப்பிட்டுப்பார்த்து ஒருவரோடொருவர் ஒத்துக் கலந்துழைக்கவும், புது முறைகளைத் தீர்க்கமாய்அனுட்டிக்கவும் சக்தி யுள்ளவர்களாகும்வரை, இப்போழ்துள்ள விவசாயமும் சீர்திருந்தாதென்னலாம். இந்தியர்களின் நிலைமையைச் செவ்வைப்படுத்தக் கருதினால் பாமரர்களுக்கு நூன்முறைகளிலும் கைத்தொழில் வேலைகளிலும் பயிற்சியுண்டாக்குவது அவசியம்; அவர்களுக்குப் புதியமாதிரியானவிவசாய முறைப்படி பயிரிட்டுக்காட்ட ஏற்பாடுசெய்யவேண்டும்; யந்திரங்கள், ஸத்துக்கள், தத்துவப்பொருள்கள் முதலியவற்றின் உபயோகங்களையும் பிரயோகங்களையும் விளக்குவதற்கான வஸ்து சோதனைச்சாலைகளமைக்கவேண்டும். இங்ஙனம் நடந்தேறுவதற்கு, ஜர்மனிதேசத்திலுள்ளதுபோல் இத்தேசத்திலும் அரசாங்கத்தார் தம் செலவில் ஜனங்களைப் படிப்பிக்கவேண்டும்.

தி. அ. சு.

---

## AESOP'S FABLES.

## கட்டுக்கதைகள்.

### VIII. காக்கையும் ஆடும்.

ஒரு நாள் ஒரு காக்கை ஓராட்டின் முதுகின்மேலுட்கார்ந்து [illegible]தது. அந்த ஆடு "ஐயோ! நீ இந்தமாதிரி ஒரு நாயினிடம் செய்யத்துணியமாட்டாய்!" என்று காகத்தையினிடம் உரைத்தது. அதுகேட்டு காக்கை "யான் யாரிடம் இவ்விதம் செய்யலாமென்றுணரவல்ல புத்தி எனக்குளது. சண்டையிற் குணத்தவரிடம் நான் என்றுங் கூடியவரை சாதுவாயிருப்பேன். குறும்பு, வம்பு முதலியவற்றிற்குத் தாழ்ந்து செல்லுவோரை என்றுங் கூடியவளவு வருத்துவேன்" என்றது.



நீதி:—ஊக்கமின்மை ஒருவரிடமும் நட்புக்கொள்ளாது.

"ஆக்க மதர்வினாய்ச் செல்லு மசைவிலா
வூக்க முடையா னுழை.

"உரமொருவற் குள்ள வெறுக்கையஃ தில்லார்
மரமக்க ளாதலே வேறு."—

திருக்குறள்.

அமைக்குமாறு:—அவமானத்தை இழிவாய் ஏற்றுக்கொள்ளல் மிக்கபேதைமையாம்; இழிந்தமனிதர் தன்னைத் துன்புறுத்துதலையும் தூஷித்தலையும் வேண்டாதான் ஒவ்வொருவனும் தனது மேன்மையின்கட் கருத்தாயிருத்தல் வேண்டும். எளியவர்களை அவமானம் பண்ணச்சன்னத்தனும் வல்லாளனுக்குவோனு மாகுமோர் வாயாடியைக் காக்கை பெரிதும் ஒக்கும். இக்கதையை மனிதருக்கு அமைப்பதினும் ஒருவேளை இராஜாங்கத்துக் கமைத்தலே நேராகலாம். இராஜ்யங்களுக்கு இதை அமைத்தறியும்போது, நேர்த்தியானதாகும். தளர்ந்து, ஆயுதமில்லாமல் வலியற்ற இராஜாங்கத் தோழர்களும் ஒரு ஜாதியார் ஏனைய ஜாதியார் நினைத்தபடி தம்மைத் துன்புறுத்தி அவமானஞ்செய்தற்கு இடனாகின்றனர். இதைப்பற்றி ஒரு பழமொழியும் வழங்குகின்றது:—'போரை நீக்க முயல்வோன் அது புரியச்சன்னத்தனாதலும் வேண்டும்'. தந்நயங்கருதிய மூடர்களே 'எவ்வளவாயினுங் கொடுத்துச் சமாதானஞ்செய்க' என்பர். 'வலிந்து சண்டைக்குப் போவதில்லை, வந்த சண்டையை விடுவதில்லை' என்பதே தமிழ்மக்கள் சட்டுரையாம்.

நறையி னின்ப நாடொறுங்
குறைபடாது கூடிட
வுறுதி கொள்ளு முள்ளமாற்
கறுவி நிற்குங் கைகளே.

"இன்பம் விழையான் வினைவிழைவான் றன்கேளிர்
துன்பந் துடைத்தூன்றுந் தூண்."—

திருக்குறள்.

### IX. கிணற்றில் விழுந்த குள்ளநரி.

ஒரு கிணற்றில் விழுந்ததோர் குள்ளநரி தந்திரமொன்று செய்தது; தனதுநகங்களைக் கிணற்றின் இருபக்கங்களிலும் ஊன்றித் தலையைத் தண்ணீர்க்குமேலே நிறுத்திக்கொண்டது. சிறிதுநேரத்திற் கெல்லாம் ஓரோநாய்வந்து ஓரத்தில் எட்டிப்பார்த்ததும், நரி தான் தப்பிக்கொள்வதற்குக் கயிறொன்றுதந்து உதவும்படி அதனை மிகவுங் கெஞ்சிக் கேட்டுக்கொண்டது. ஓநாய் "ஐயோ! எளிய நரியே! உனக்காக யான் மனமார விசனப் படுகின்

றேன்! இந்தத்துக்ககரமான நிலையில் எப்படி நீவந்திருக்கக்கூடும்?" என்று அதன் துரதிர்ஷ்டத்தைக் குறித்திரங்கிக் கூறிற்று. அதுகேட்ட கரி, "நண்பா! அப்படியன்று; யான் நல்ல நிலையிலிருக்க விரும்பினையானால், என்னைப் பார்த்து இரங்கிக்கொண்டே நில்லாதே; சீக்கிரத்திலெனக்கு ஏதாவது உதவிசெய். மோவாய்க் கட்டைவரையில் தண்ணீரிலாழ்ந்த ஒருவன் முழுகிப்போவதற்கு மயிரிழை யிருக்கும்போது இரக்கப்படுவதனால் யாதுபயன்? அது சுவையற்ற ஆறுதலே." என்று கூறிற்று.

"உடுக்கை யிழந்தவன் கைபோல வாங்கே
யிடுக்கண் களைவதா நட்பு."—

திருக்குறள்.

நீதி:—நற் சொற்களைச் சொல்லல் நன்று. ஆனால் நற்செய்திகளைச் செய்தல் அதனினும் நன்றாம்.

"சொல்லுதல் யார்க்கு மெளிய வரியவாஞ்
சொல்லிய வண்ணஞ் செயல்"—

திருக்குறள்.

அமைக்குமாறு:—சிநேகிதருடைய துரதிர்ஷ்டத்தைக் கண்டும், அவற்றை நீக்கமுயலாமல் அவற்றிற்காக இரங்கிப்பேசுதல் துக்கமானதோர் ஆற்றுமாகும். ஒரு சிநேகிதன் சகோதரனைப்போலக் கஷ்டகாலத்தி லுதவுவதற்கே பிறந்திருக்கின்றான். உண்மைநேசத்துக் கறிகுறி ஆபத்து வேளையே.

"கேட்டினு முண்டோ ருறுதி கிளைஞரை
நீட்டி யளப்பதோர் கோல்."—

திருக்குறள்.

ஒரு கிரேக்க தத்துவ நிபுணர் சொல்லுகிறார் 'உண்மை நேசர்களுக்கு நமது ஆகூழ்க்காலத்திற் கூப்பிட்டபோது வந்துபார்ப்பதும், போகூழ்க்காலத்தில் தாமாகவே வருவதும் வழக்கமாம்' என்று. இனிய வார்த்தைகள் நல்லவைதாம். ஆனால் அன்புள்ள செயல்கள் அவற்றினு நல்லனவாம்.

"கெடுங்காலைக் கைவிடுவார் கேண்மை யடுங்காலை
யுள்ளினு முள்ளஞ் சுடும்."—

திருக்குறள்.

ஒருவருக் கொருவ ருதவுக வென்பதே
யொருபெருங் கடவு ளுரைத்த வாணையாம்.

"காலாடு போழ்திற் கழிகிளைஞர் வானத்து
மேலாடு மீனிற் பலராவர் - ஏலா
இடரொருவ ருற்றக்கா லீர்ங்குன்ற நாட
தொடர்புடையே மென்பார் சிலர்."—

நாலடியார்.



## X. ஒருபையனும் அவன்தாயும்.

பள்ளிக்கூடத்துப் பையனொருவன் மற்றொரு பையனிடத்திருந்து தான் திருடிக்கொணர்ந்த புத்தகமொன்றைத் தன்தாயினிடம் கொடுத்தான். அவள் அவனைத் திருத்தவெண்ணாது இத்தீத் தொழிலுக்காக உவந்து அவனைத் தைரியப்படுத்தினாள். அவனுக்கு வயது ஆகவாக அதிக விலைபெறுவனவற்றையும் விடாமல் திருடிக்கொண்டு வந்தான். கடைசியில் அகப்பட்டுக்கொண்டு நியாயாதிபதியி னெதிரே கொண்டுவரப்பட்டான். நியாயாதிபதியும் அவனுக்குக் கொலைத்தண்டனை விதித்தார். அவன்தாயும் கொலைசெய்யுமிடத்துக்குப் போயிருந்தாள். அப்போது அவன் தன்தாயிடம் இரண்டோர் இரகசியவார்த்தைகள் பேசுவதற்குக் காரியஸ்தர்களிடத்தினின்று உத்தரவு பெற்றுக்கொண்டு இரகசியம்பேசுகிறவன்போல அவள்காதினிடம் தன்வாயைக்கொண்டுபோய் அவள்காதை ஒட்டக்கடித்துவிட்டான். இவ்விதஞ் செய்தபிறகு, "நல்ல சனங்களே! அவமானம், வெட்கம், தண்டனையாகிய இவற்றிற்கு யானொரு திருஷ்டாந்தமாயிருப்பதைப் பார்க்கின்றீர்கள். ஆனால் இந்தத்தாயே என்னை இந்நிலைக்குக்கொண்டுவந்தவள். யானொரு பையனாயிருந்தபோது திருடியபுத்தகத்துக்காக என்னைச்சவுக்கிட்டடித் திருப்பாளானால், யான் இப்போது, மனிதனைத் தூக்குமரத்துக்கு வந்திருக்கமாட்டேன்" என்று ஓலமிட்டான்.

நீதி:—கோலைமறைத்துக் குழந்தையைக்கெடாதே
அடியாதமாடுபடியாது

"இளைதாக முண்மரங் கொல்க களையுநர்
கைகொல்லுங் காழ்த்த விடத்து."—

திருக்குறள்.

அமைக்குமாறு:—கெட்டநடவடிக்கைகள் ஆரம்பத்திலேயே திருத்தப்படவேண்டும்; களைப்புல்லைப் பார்த்தபோதே நாம் களையவேண்டும். பெரிய குற்றமொன்றுக்காக ஒரு குழந்தையைத் தண்டியாதுவிட்டுவிடல் பெருங்கேடு பயக்கும்; தன்மகனைத் தீயவழியில் விடுகிற மதிகெட்டதாய் தன்மகன் பிற்காலங்களில் அநுபவிப்பதற்காகத் துன்பம் பயிர்செய்கிறாள். இக்கதையிற் போந்ததாய் அடைந்தாற்போல, அவளும் திருந்தாத பழகாத மனத்தினின்று செய்நன்றி மறத்தலாகிய விளைச்சலை அறுக்கவெண்ணலாம்.

கல்வியே யிளமனம் பாது காப்பதாம்
ஒல்குசெஞ் செடிநிலை யுற்ற போழ்திலே
மல்குற வளைத்தக்கால் வளைக்க லாமன்றி
வன்மர மானபின் வளைக்க லாகுமோ?

'விளையும்பயிர் முளையிலே'

## XI. ஓநாய்களும் ஆடுகளும்.

வெகு நாட்களாய் ஓநாய்களும் ஆடுகளும் சண்டையிட்டுக்கொண்டேயிருந்தன. பின்பு ஒரு காலத்திற் சண்டையை ஒருவாறுக் ஒழித்துச் சமாதானஞ் செய்ய வெண்ணின. இச்சமாதானத்துக்குப் பிணையுங்கொடுக்கப்படல் வேண்டுமென்று ஏற்பட்டது. ஆடுகள் தங்கள் காவல்நாய்களைத் துரத்திவிடல்வேண்டும்; ஓநாய்கள் தங்கள் சிறிய குட்டிகளைத் தரவேண்டும். இதற்கு இருதிறத்தாரும் ஒத்துக்கொண்டு இதன்படி நடக்க ஆரம்பித்தவுடனே சிறிய ஓநாய்கள் தங்கள் தாய்மார் வருவதற்காக அலறின. பெரிய ஓநாய்கள் சமயத்தை விட்டுவிடாமல், சமாதானங் கலைந்துவிட்டது என்று கூவி யெழுந்தன; இவ்விதமாய் அன்பாய்க்காக்கும் நாய்களை விட்டுப்பிரிந்த ஆதரவற்ற நிலையிலிருக்கும் ஆட்டு மந்தையினூடே வீழ்ந்து பாய்ந்துகொன்று நினைத்தவண்ணம் அவ்வோநாய்கள் தின்றன.

நீதி :—நல்ல காவல் தீமையை விலக்கும்.

**அமைக்குமாறு** :—இக்கதையின் பொருள் ஒரு சரித்திர சம்பவத்தால் நன்கு விளங்கும். மாசிடன் என்னும் தேசத்தரசனான பிலிப் என்பவன் தான் பேராவல் கொண்டெண்ணியவற்றிற்கெல்லாம் எதிரியாய் நின்ற டெமாஸ்தினிஸ் என்பவரைத் தன்னிடம் கொடுக்கும்படி அதீனியர்களைக் கேட்டுக்கொண்டபோது, நாவலராகிய டெமாஸ்தினிஸ் அவர்கள் கூட்டிய பொதுஜனக்கூட்டத்தில் இக்கதையைச் சொல்லி அவர்களை அக்கேள்விக்கு மறுத்துவிடும்படி செய்துவிட்டனர். அவர் இவ்விதமாய்ப் பொதுஜன நாவலர்களைக் கொடுத்துவிடுவது இராஜாங்கத்துக்காவல் நாய்களைக்கொடுத்துவிடுதலாமென்று உறுதி கூறினார். விழிப்புடைமை, நடந்துகாட்டல், முக்கிய நகரவாசிகளிற் பொதுஜனவூக்கம், அரசன் அபகரிக்கும் தொழிலைத்தடுத்து ஜனங்களின் பேதைமையை அடக்குதலில் எல்லாருக்கும் உள்ள ஆசை, ஆகிய இவை தாம் ஒரு ஜாதியார் நன்றாயிருப்பதற்கு இன்றியமையாதன. ஜனசமூகத்தின் பாதுகாப்பின்பொருட்டும், நல்லாட்சியின் பொருட்டும், முற்காலத்து அறிவுடையோர் வகுத்த சட்டதிட்டங்களை நிலைநிறுத்துவதனாலுண்டாகும் பயன் இஃதென இக்கதை கற்பிக்கின்றது.

தன்னடையிற் காட்டலே சால்புடைய சட்டமாம்
மன்னுயிர்களஃதே மதித்துவந்து கொள்ளுமால்.

(இன்னும் வரும்.)

ம. சு. கோவிந்த சிவன்.



# VILASAVATI.

# விலாஸவதி.

## முதல் அத்தியாயம்

### யோகீசுவரன்.

தண்டகாரண்யத்தின் வடதிசையில் நெடுந்தூரத்தில் நீலாசலம் என்னும் மலையின் தாழ்வரையில் தர்மபுரியென்றொரு கிராமமிருந்தது. அங்கு இக்கதையின் காலத்தில் இரண்டுமூன்று வேதியர் இல்லங்கள்மாத்திரமிருந்தன. ஜனங்கள் பெரும்பான்மையும் வாணியர்களாயிருந்தார்கள். தர்மபுரிக்கு ஒருகாதவழி தூரத்தில் ஒரு சந்தைகூடுவது வழக்கம். அச்சந்தையில் எண்ணெய் விற்பதே அவர்களது நித்தியஜீவனமாயிருந்தது. தர்மபுரியிலிருந்து ஒருநாட் பயணத்திற் செல்லக்கூடிய ஒருபெரிய பட்டணத்திற்கு அந்தத்தர்மபுரியின் அருகிலிருந்து பெரிய வொருமார்க்கமிருந்தமையால், அஃதோர் குக்கிராமமாயினும் அங்குத் தினந்தோறும் இரண்டுமூன்று வழிப்போக்கர்கள் எங்கிருந்தாயினும் வந்துசேர்வார்கள்.

ஒருநாள் அஸ்தமனவேளையில்பத்து நாழிகைக்கு ஒரு விப்பிரன் வழிநடந்துகளைத்து தர்மபுரி அடைந்து அங்குள்ள துர்க்காலயத்தின் முன்னுள்ள ஆலமரத்தடியில் உட்கார்ந்தான். சிறிதுநேரம் அவன் அங்கிருந்து இளைப்பாறியிருக்கையில் வேறொருவர் அதேயிடத்துக்குவந்து சேர்ந்தார். அவரைக்கண்டால் ஒரு யோகீசுவரரென்று தோன்றும். அவர் பீதாம்பரம் அணிந்து, வேறொரு வஸ்திரத்தினால் சரீரம் நன்றாய் மறையத்தக்கவண்ணம் மூடிக்கொண்டு அதன்மேல் மான்தோலுந் தரித்திருந்தார். கழுத்திற் கட்டித் தொங்கவிட்ட ஒருசிறிய பாத்திரமும், கையில் ஒரு தண்டமும் அவருக்கலங்காரமாயிருந்தன. பெருத்த ஜடாபாரத்தைத் தன் உத்தமாங்கத்தின் முன்புறத்தில் சேர்த்துக்கட்டி முடித்திருந்தார். அடர்த்தியாய் வளர்ந்திருந்த அவரது தாடியில் இங்குமங்கும் அபூர்வமாய் ஒன்றிரண்டு நரைமயிர்கள் காணப்பட்டன. நீண்ட சரீரவடிவமுள்ள அவரது இலக்ஷணம்பொருந்திய முகமும், அகன்றமார்பும், வன்மைமிக்க புயங்களும், ஒளிவீசும் கண்களும், மேனியின் சோதியும், மற்றும் கண்டால் அவர் சாமான்ய மனிதரல்லரென்றுடனே தோன்றுகின்றது. இத்தகைய லக்ஷணமுள்ள யோகீசுவரரும் அந்தமண்டபத்துக்கேவந்து சேர்ந்தார். துர்க்காலயத்திற்குள் தரிசனஞ் செய்யும்பொருட்டுச் சென்றிருந்த சிலர் தவிர அங்கே வேறெவரும் சமீபத்திலில்லை. மறையோன் யோகீசுவரனைக் கண்டபொழுது மிகவும் ஆச்சரியமுற்றானாயினும், யோகீசுவரர் மௌன விரதமுள்ளவரா யிருக்கக்கூடுமென்று சங்கித்து ஒன்றும் கேட்டானில்லை. சிறிதுநேரம் பொறுத்து யோகீசுவரரே சம்பாஷிக்கத் தொடங்கினார்.

யோகீசுவரர்:—தாங்கள் எவ்விடத்திலிருந்து வருகிறீர்கள், எவ்விடம் இப்பொழுது போகின்றீர்கள் என்றறிய எனக்காவலாயிருக்கின்றது.

பிராமணன்:—யான் அவந்தி ராஜ்யத்திலிருந்து இப்பொழுது வருகின்றேன். சிலகாலமாய்ச் சஞ்சாரத்திலிருக்கின்றேன். தாங்கள் இன்னாரென்று யான் அறியலாமோ?

யோகீசுவரர்:—யானும் தங்களைப்போலவே ஒருயாத்திரிகன்தான். இப்பொழுது சிலகாலமாய் ஓரிடத்திற்றங்கி ஸ்திரமாயிருந்துவருகின்றேன். தங்களைக்கண்டபொழுது விசேஷ வர்த்தமானங்கள் ஏதாவது தெரிந்துகொள்ளலாமென்றுகருதி தங்களை வினவினேன். சேதிராஜ்யத்திலாயினும் அதற்கப்புறமாயினும் விசேஷசமாசாரங்கள் ஏதாவது தங்களுக்குத் தெரியுமோ? சிலகாலஞ்சென்றபிறகு அவ்விடங்களுக்குப் போகவேண்டுமென்றிருக்கின்றேன்.

பிராமணன்:—அவந்தி தேசத்துப் பெரிய ராஜா வானப்பிரஸ்தனாய் விட்டதாகத் தெரியவருகின்றது. அவ்வரசனுடைய ஜேஷ்ட புத்திரனுக்குப் பட்டாபிஷேகம் நடந்தது அங்கே நான்சென்றிருந்த பொழுது; பின்னால் விசேஷங்கள்—விசேஷங்கள் ஒன்றுமில்லை யென்பதற்கில்லை. களிங்க ராஜாவின் புத்திரனுக்கு விவாகம் ஆலோசித்துக் கொண்டிருக்கிறார்களென்றோ அல்லது நிச்சயமாயிருக்கின்றதென்றோ ஒருவர்த்தமானம் கேள்விப்பட்டேன்.

யோகீசுவரர்:—நிச்சயமாய் விட்டதோ? தாங்கள் என்ன கேள்விப்பட்டீர்கள்?

பிராமணன்:—அது எனக்கு நிச்சயமாய்த் தெரியாது. அந்தப்பிரதேசத்தில் இராஜகுமாரனுக்கு விவாகம் சமீபித்திருக்கின்றதென ஒரு வதந்தி யுண்டாயிருக்கின்றது. யான் இங்கிருந்து போகப்போகின்றமையால் அதை விவரமாய் விசாரிக்க வேண்டுமென்ற ஆவசியகம் எனக்கில்லை.

யோகீசுவரர்:—வேறே விசேஷச் செய்திகள் ஒன்றுமில்லையோ?

பிராமணன்:—வேறெதுவும் கேள்விப்பட ஞாபகம் எனக்கில்லை.

இவ்வாறு பிராமணனும் யோகீசுவரரும் தங்களுக்குள் சிறிது நேரம் கூடி உரையாடிய பின்னர் பிராமணன் ஸ்நானஞ்செய்யும்பொருட்டு யோகீசுவரரிடம் விடைபெற்றுச் சென்றான். சந்தியாகாலமுஞ் சமீபித்துவிட்டபடியால் யோகீசுவரர் சிந்தையிலாழ்ந்தவர்போற் சிறிதுபொழுது அங்கேயே இளைப்பாறி யிருந்து பிறகு எழுந்திருந்து நேர்வடக்காய்ச் செல்லும் கொடிவழியின் ஊடேசென்று நீலாசலத்தின் [illegible] ஒருசிறு[illegible]யில்லாத ஓரிடத்தில் வந்துசேர்ந்து [illegible] சஞ்சாரமின்றி



அந்தப்பக்கம் முழுவதும் நல்ல பழக்கமுள்ளவர்போல நடந்துசென்றார். சுற்றுப்புறத்தும் அதிகோரமானவனம். ஜனங்கள் எவரும் நடுப்பகலில் கூட அத்திசை போகத் துணியார். நீலாசலத்தின் முகட்டில் யக்ஷ கின்னரர்கள் வசமாயிருப்பதாக ஜனங்களின் நம்பிக்கை. ஜனங்களின் நடமாட்டமில்லாமையால் சாதாரணமாகவே பயங்கரமா யிருந்த அவ்வனப் பிரதேசம் கூடுவந்து சேரும் பலபக்ஷிகளும் உயரத்திற் செய்யும் கோரங்கார சத்தங்களாலும், இரவில்மாத்திரம் சஞ்சரிக்கும் மற்றும் சிலபக்ஷிகள் அவ்விடமிருகங்கள் முதலியவற்றின் உற்சாகத்தை வெளியிடும் அவசத்தங்களாலும், அப்பொழுது அதிக அச்சத்தை யுண்டாக்கியது. தைரியசாலிகளுக்குக்கூட அப்பொழுது அப்பிரதேசத்திற் சஞ்சரிப்பதென்றால் என்று மில்லாத ஒருபயம் உண்டாகாதிராது. ஆனால் நமது யோகீசுவரர் சிறிதேனும் அச்சமின்றி அடர்ந்த அவ்வனத்தின் நடுவே மலையின் முகட்டைநோக்கிச் செல்லத்தொடங்கினார். மத்தியில் தமக்கு வழிதப்பாமலிருக்கும் பொருட்டு அடையாளமாக வைத்திருந்த சிலமரங்களையும் பாறைகளையும் மாத்திரம் நோக்கிக்கொண்டு விரைவாய்ச் சென்றுகொண் டிருக்கையில் வழியில் பெரியதொரு பாறையின் பக்கத்தில் கம்பளியினால் உடல்முழுவதும் மூடியிருந்தவொரு மனிதனைக் கண்டார். வேறு சாதாரண மனிதனாயிருந்தால் அவ்வுருவத்தைக் கண்டவுடன் பயங்கொள்ளாமலிரான். யோகீசுவரரைக் கண்டவுடனே அந்த மனிதன் எழுந்துவந்து வணங்கி நின்று, "சுவாமி, தாங்கள் வர இத்தனை நேரமானபடியால், நாங்கள் கொஞ்சம் விசாரப்பட்டுக்கொண்டிருந்தோம்." என்றான். யோகீசுவரர், "சிறிதுகால தாமசமானதாகத்தான் தோன்றுகிறது. சரி, நீ சீக்கிரமாய் நடந்து முன்னே செல்" எனப்பதிலுரைக்க, இருவரும் வேகமாய் நடந்து போனார்கள். மரங்களின் அடர்த்தியாலும், இராத்திரி சமயமானமையாலும், கூடவந்துகொண்டிருந்த அம்மனிதன் சுளுந்து ஒன்றைக் கொளுத்திக்கொண்டு ஒருநாழிகைவழி செல்லலும் தூரத்தில் வேறொரு வெளிச்சம் காணப்பட்டது. அவ்வெளிச்சத்துக் கெதிராக இவ்விருவரும் நடந்துசென்று ஒரு பர்ணசாலையைச் சேர்ந்தார்கள். அதுதான் யோகீசுவரரது வாசஸ்தானம். அதற்கு மிக்க அருகாமையில் மரங்கள் ஒன்றுங் கிடையா. பார்த்தவெளியா யிருந்தது. விசேஷ பரிமளமுள்ள பலவகைப் புஷ்பஜாதிகள் மாளிகையின் முன்பக்கத்தில் மலர்ந்திருந்தபடியால் இளந்தென்றல் மந்தமாய் வீசி பரமானந்தமளித்தது. யோகீசுவரருடன் கூடவந்தமனிதன் அவருடைய சேவகன். அவ்விருவரும் ஆசிரமத்தினுள்ளே பிரவேசிக்கையில் சிறிதுவயது சென்ற ஒருஸ்திரீ கைவிளக்கொன்றையெடுத்துக்கொண்டு எதிரே வந்தாள். யோகீசுவரன் "விலாசவதி எங்கே?" என்றுவினவலும், "தூங்குகிறாள்" என அவள் பதிலுரைத்தாள். "இவ்வளவு முன்னேரத்திலேயே தூங்கிவிட்டாளா?" என்று யோகீசுவரன் கேட்க, "பகலெல்லாம், அதிகக்கஷ்டப்பட்டு ஓடியாடித் திரிந்தபடியால் களைப்

படைந்து தூங்குகிறான்" என்றாள். "சரி, தூங்கட்டும்" என்று சொல்லிவிட்டு யோகீசுவரர் உள்ளே சென்று தம் உடையைக் களைந்துவைத்தார். அதனுடன் ஜடையையுந் தாடியையுங் கூடக்களைந்து வைத்ததை நோக்கின் அவை செயற்கையானவையென்று நாம் கூறாமலே விளங்கும். யோகீசுவரர் வெளியே செல்லும்போழுது அப்பொய் ஜடையையும் தாடியையும் தரித்துக்கொள்வது வழக்கம். அதற்குக்காரண மின்னதென்றறிய முடியவில்லை. ஒரு வேளை தன் மெய்யுருவத்தை மறைக்கும்பொருட்டு போலும். சித்த புருஷர்களின் அந்தரங்கத்தை யறிவது எளிதல்லவே. அது எவ்வாறாயினும் ஆகுக; வேஷம் முற்றுங் களைந்துவைத்த பொழுது அவரது முகத்தில் உவமையற்ற அழகும் சவுஜன்னியமும் பிரகாசித்தன. இயல்பாயுள்ள பாதி நரைத்த தாடியும் மீசையும் தென்பட்டன. அவர் வயதுசென்றவரென்பதைக் குறிக்கும் ஒன்றிரண்டு திரைகளும் காணப்பட்டன. சுருண்டு நீண்டுகறுத்த அவர் தலைமுடி சமுத்தின் பின்பக்கமாய்ச் சேர்க்கப்பட்டிருந்தது. தாமணிந்திருந்த உடைகளை எல்லாம் எடுத்து அதனதன் இடத்தில் வைத்துவிட்டு, "ஆ! காலத்தின் மகிமை என்னே! எவ்வளவு வேகமாய்ச் செல்கின்றது காலம்! அற்புதம்!" என்று தமக்குள்ளேயே பேசிக்கொண்டு, இவ்வற்பகணத்திலேயே எவ்வளவோ சிந்தைகள் தம் மனதின்கண் நிகழ்ந்தன வென்பதை வெளிப்படுத்துவதுபோலும் ஒரு பெருமூச்செறிந்து மற்றொரு அறையின் கதவை மெல்லத் திறந்துகொண்டு சென்றான். சுவரின்மேல் வைக்கப்பட்டிருந்த மிக்கமங்கிய விளக்கின் ஒளியானது அற்பமாய்ப் பிரகாசப்படுத்திய, அழகிய மருட்சியோடு அருகிருந்த கட்டிலிலமர்ந்து கண்வளர்ந்துகொண்டிருந்த ஓரிளங்குமரியை மிகுந்த அன்போடும் ஆனந்தத்தோடும் சிறிது பொழுது குனிந்து நோக்கி நின்றகாலையில் மனதில் நிறைந்திருந்த விசாரங்கள் ஜலரூபமாய் வெளிப்பட்டனவோ வெனத் தோன்றும்படி இரண்டு மூன்று நீர்த்துளிகள் யோகீசுவரரது நேத்திரங்களினின்று அவருக்குத் தெரியாமலே, துயின்று கொண்டிருந்த குமாரியின் மார்பின்மேல் வேகமாய் விழுந்தன. உடனே அக்குமாரி கண் மலர்ந்து "அப்பா அப்பா" என்று விளித்து யோகீசுவரனைக் கட்டித்தழுவினாள். இத்துயரத்துக்குக் காரணம் என்னவென்று விசாரிப்பவள்போல் மிக்க வருத்தத்துடன் யோகீசுவரரது முகத்தை நோக்கினாள். யோகீசுவரர் "ஒன்றும் அஞ்சவேண்டாம். விசேஷமொன்றுமில்லை. நான் சற்று முன் வெளியே போயிருந்தேன். திரும்பி வரச் சொற்பம் நாழிகையாய்விட்டது. வந்தவுடனே என் கண்மணி சஞ்சலமொன்றுமின்றிச் சுகமாயிருக்கிறாளா எனப்பார்க்க வந்தேன். சுகமாய்த்துயில்வதைக் கண்டபொழுது எனக்கு சந்தோஷமும், கண்மணிக்கு ஏதேனும் கெடுதி சம்பவிக்குமோவென்ற அச்சத்தினால் துக்கமும் உண்டாயின; என்னை யறியாமலே கண்ணீர் மல்கின தன்றிமற்றுத் துயரத்துக்குக் காரண

மேதுமில்லை. தூங்கிக்கொண்டிரு, சாப்பிடும்பொழுது கூப்பிடுகிறேன் என்றான். குமாரி, "அப்பா, எனக்குப் பேசுவதற்கு யாரும் இல்லாதிருந்த படியாலும் தோட்டத்தில் வேலை செய்த களைப்பினாலும் இவ்வளவுமுன் னேரத்தில் படுத்துக்கொண்டேன். இப்பொழுது அப்பா திரும்பி வந்துவிட்டபடியால், இனி யெனக்குத் தூக்கம் வராது" என்றுகூற, யோகீசுவரனும் அக்குமாரியும் போஜன சாலைக்குப் போகையில், முன் சொன்ன வயது சென்ற அம்மணி வந்து சமையலாய் விட்டதெனத் தெரிவித்தாள். யோகீசுவரன் "அப்படியாயின், சாப்பிடுவோம்" என்று கையால் முகங்களைச் சுத்திசெய்து கொண்டு குமாரியுடன் கலத்தின்முன் உட்கார்ந்தான். விலாஸவதி என்னும் பெயர் படைத்த அக்குமாரி யோகீசுவரனுக்கு அன்னம் பரிமாறி மற்றும் வேண்டிய உபசாரங்களைச் செய்துவிட்டு, பக்கத்தில் தனக்கு வைத்திருந்த கலத்தின்முன் உட்கார்ந்தாள். யோகீசுவரன் ஏதும் பேசாமல் விரைவாய்ச் சாப்பிடத்தொடங்கினான். விலாஸவதி "அப்பா, எனக்குச் சாதம் பிசைந்து கொடுக்காமல் சாப்பிடுகிறாயே" என, யோகீசுவரன் "ஓ! நான் மறந்து போய் விட்டேன்" என்று கைகழுவிக்கொண்டு வேறு கொஞ்சம் சாதம் எடுத்துப்பிசைந்து உருண்டையாய் உருட்டி விலாசவதிக்குக் கொடுத்தான். "நான்வழி நடந்த அயர்வினாலும் பசியினாலும், வழக்கம்போலஉனக்குச் சாதம் உருட்டிக்கொடுக்க மறந்து விட்டேன்" என்றான். விலாஸவதி "களைப்பினால் அப்பா மறந்திருப்பாரென நான்சந்தேகித்தேன்; ஆனபோதிலும் அப்பா எனக்கு ஒரு பிடிசாதமாயினும் உருட்டித் தராவிட்டால் எனக்கு என்னவோ போலிருக்கிறது. ஆகையினால் தான் கேட்டேன்" எனப்பகர்ந்து சாப்பிட ஆரம்பித்தாள். சாப்பிட்டானதும் இருவரும் சாப்பாட்டறைக்கும் முற்றத்துக்கும் நடப்பது வழக்கம். அன்றிராத்திரி அதிக நேரம் நடக்கவில்லை. ஆகையால் அவர்கள் அதிகமாய் ஒன்றும் பேசவில்லை. சிறிது பொழுது நடந்த பின்பு யோகீசுவரன் "பார்வதி" என்றழைத்தான். அப்பொழுது அவ்வயது சென்ற அம்மை எதிரேவந்து படுக்கைப்போட்டிருக்கிறது என்று கூற யோகீசுவரன் விலாசவதியைக் கட்டிலில் படுக்கவைத்து "நான் படுத்துக்கொள்ளப்போகிறேன் என்று கூறிவிட்டுப் போகுங்காலையில் "இன்று அப்பாவுக்கு ஏன் இவ்வளவு மறதி" என்று விலாஸவதி வினவ, "எனக்கு மறதி இன்று கொஞ்சம் அதிகம். அதற்குக் காரணம். வழி நடந்தசிரமந்தான்" என்று சொல்லி வழக்கம்போல் விலாஸவதியின் வதனத்தை அழுந்த முத்தமிட்டு "சுகமாய் தூங்கு" என்றுரைத்து விளக்கை அவித்துவிட்டு வெளியேபோனான். ஆனால் விலாசவதி யுடன் சொல்லியபடி உடனே தூங்கப்போகவில்லை. சிறிதுநேரம் போசனசாலையில் உலவியபின்னர் முற்றத்துக்குவந்து "ராமதாசா" என்று கூப்பிட்டான். அப்பொழுது யோகீசுவரனுடைய சேவகன்வந்தான். அவனுடன் நாலைந்துநாழிகைநேரம் இரகசியமாய்ச் சிலவிஷயங்கள் பேசிவிட்டு அவனை

யும் படுத்துக்கொள்ள அனுப்பிவிட்டு, தனக்குள்ளே வெகுநேரம்வரை ஆலோசனையில் ஆழ்ந்து சிறிதுநேரம்கடந்து கிட்டத்தட்ட அர்த்தராத்திரி சமயமானபொழுது படுக்கையிற்போய் அமர்ந்தான்.

---

## A GARLAND OF DIVINE PRAISE.
## ஞானானந்தனடிமாலை.

---

அனைத்துயிரும் சுகிப்பதற்கா யனைத்துயிரும்
　　அகிலேசன் அமைத்த தன்றித்
தினைத்துணையும் மனநலிந்தோ ருயிர்சுகிக்க
　　வன்றென்ற சிறந்த நீதி
நினைத்துலகில் அன்பறிந்து புராதார்
　　நிலையறியா நிந்தைசேரும்
வினைத்துயரி லாழ்ந்துவிழி மனத்துயிரை
　　விடுவதற்கே விரைகின்றாரே. (25)

இருளொன்றே தீமையின்றாய் எவ்வுயிரும்
　　நம்முயிருக் கினமென் றெண்ணு
மருளொன்றே வானருளை மறைப்பதுவாம்
　　இவ்வகில வளங்கொள் காட்சி
பொருளொன்றே பலபடநின் றதுவாம் எப்
　　பொருளும் உடற் புகுமான்மாவும்
அருளொன்றே ஆளுவதாம் அஃதொன்றே
　　அனைத்தினுக்கும் ஆதியாமே. (26)

விரும்பிவிடும் பொருளெல்லாங் கிடைத்திலவே
　　என்கின்றவிசனத்தாலே
கரும்பான மனமெல்லாம் இரும்பாவா
　　சிலர்தமது கருத்தினுள்ளே
பெரும்பதவி எனநினைக்குந் துரும்பெல்லாம்
　　ஈந்திலதேற் பேதைநெஞ்சால்
வரும்பிசகென் றுணராது தெய்வமில்லை
　　யென்றவர்நா வழுக்குவாரே. (27)

ஊக்கமொடு ஜடமுறடி உலகமுண்டாம்
　　உத்தமமஞ் சுவதனாலே



ஆக்கலொடு தற்காத்தல் அழித்தல் இவைக்
　　கதிகாரி அமைய வேண்டாம்
நோக்கினென ஒருசாரார் நுவல்வர் அவர்
　　நோக்கொருசார் நோக்காம் தோற்றப்
போக்கினுக்கோர் போக்குரைப்பர் போதமெனு
　　முட்பொருளின் பொருள்காணாரே. (28)

போதத்தின் றனிஇயல்பும் உயர்சிறப்பும்
　　ஜடமாய்ந்தும் புலப்படாமல்
வாதத்தே மூழ்கிஅஃ திலதென்றும்
　　ஜடமென்றும் வகுத்த நானா
பூதத்தின் பண்பென்றும் புலம்புவர்பண்
　　பவையெல்லாம் போதத்திற்கென்
றோதத்தான் றடைபெதுவோ ஜடம் போதம்
　　பிறக்குமிடம் ஒன்றாகாதோ. (29)

தீதிருக்கத்தீதிழைக்குந் தன்பிருக்கத்
　　தெய்வமில்லை செகத்துக் கென்று
வாதுரைப்பர் சிலர் தோலாற் பழம்பொதிந்த
　　வாறு நன்மை மறைத்துத் தீது
மீதிருக்கும் அது நன்மை யுருவிகற்ப
　　மாமென்ற விவரம் பாரார்
ஈதிருக்கவே நன்மை நன்மையெனக்
　　காண்பர்விழி யெட்டாதாரே. (30)

ஆழ்ந்தகன்ற நோக்கினர்க்கு நன்மையலா
　　தகிலத்தில் அணுவுமில்லை
மாழ்ந்தவுயிர் உடல்மாறிவாழ்ந்த வுயிர்
　　ஒன்றுக்கும் மரிப்பேயில்லை
தாழ்ந்ததெனல் உயர்ந்ததெனல் சங்கேத
　　மாம்பேச்சுத் தத்துவங்கள்
சூழ்ந்தவருக் குயிரிலெல்லாம் உலகிலெல்லாம்
　　ஒருசோதி துலக்கமாமே. (31)

பசியின்றி உணவில்லை பாடில்லை
　　சுகமில்லை பாடில்லாதே
விசியின்றி உதிப்பில்லை சலிப்பின்றி
　　நினைப்பில்லை நிகழ்ச்சியில்லை

நசிவின்றி வசிப்பில்லை வசிப்பின்றி
வாழ்விலுறு நன்மையில்லை
சுசிவின்றிக் கடவுள்பதங் கருதலில்லை
வருதலில்லை கருணைதானே. (32)

பிறந்திருந்த மனிதரெலாம் பறந்தொளித்தார்
நாமவர்க்குப் பிந்திநின்றோம்
இறந்திருந்த மனிதரெலாம் இருந்திருந்தால்
நாமிருக்க இடமின்றென்றே
மறந்திருந்து மரணத்தைப் பழித்திடுவோம்
நம்மதுபோல் மதியாகாமற்
சிறந்திருந்த தெய்வவருட் சித்தவிரி
வறியாதே தியங்குவோமே. (33)

மண்ணின்றிக் காற்றின்றி விண்ணின்ற
விளக்கின்றி வளப்பமோடு
தண்ணின்ற நீரின்றித் தரையில்மரம்
மாமனிதர் தங்கலில்லை
கண்ணின்றிக் காட்சியில்லை புலனின்றி
மனமில்லை கருதலில்லை
பெண்ணின்றிப் பிறப்பில்லை பிறப்பின்றி
உயிரில்லை பெருக்கமின்றே. (34)

நோயின்றி மருந்தெண்ணும் சௌக்கியத்தின்
மதிப்பறியோம் நோக்கோந்தேகம்
தாயின்றிப் பிள்ளையிலாவதுபோல
உணவின்றிச் சரீரமில்லோம்
தீயின்றி உணலரிதே தெரியாமை
முன்னின்றித் தெளிவதில்லை
காயென்ற உழைப்பின்றிக் கவனியென்ற
தகுதியில்லோம் கருதினிங்கே. (35)

பேதத்தால் வழக்குளதாம் வழக்கிலையேல்
ஞாயமெனும் பேச்சுமில்லை
சீதத்தால் வெப்பறிவோம் சீதவெப்பின்
திரிதன்றித் தேகமில்லை
சேதத்தால் ஆதாய முள்ளதுவாம்
இவையிரண்டும் செனனத்தாகும்
கேதத்தாற் சுகமுளதாம் தனிச்சுகத்தில்
இருப்பதொரு கேதமாமே. (36)



படர்கின்ற இரவுபடைப்பிலதேல் நட்
சத்திரங்கள் பகட்டும் திவ்யச்
சுடர்கின்ற தறிவோமோ தியங்குவதாற்
சுகமுளதோ சோர்வு போமோ
இடர்கின்ற தாலன்றி அறமறியோம்
உயர்நிலைமை எண்ணும் துன்பம்
தொடர்கின்ற தாயின் அதைத் தொடர்கின்ற
நலமறிந்து துதிசொல்வோமே. (37)

தீயதெனும் விறகெரிய நன்மைப்ரகா
சிக்கின்ற தீபமாகும்
ஆயதெனுந் தெளிவுடையார்க் ககிலேசன்
தீயவையால் அல்லாதாகார்
தீயபொருள் உலகி லழுக்கிடை நின்ற
தோற்றமதாற் றீயதன்றோ
தாயவள்தன் சோணிதப்பை வாயிழிந்த
சேயதனைத் தள்ளுவாரோ. (38)

இவ்வளவு துன்புலகத் திருந்துநம
திறுமாப்புக் கெதிரொன்றில்லை
அவ்வளவு துன்பிலையேல் அறியாமை
இறுமாப்புக் களவுண்டாமோ
எவ்வளவு கொடுத்தாலும் எடுத்தாலும்
அன்புவழி எண்ணுமாந்தர்
செவ்வளவு செவ்வாரோ தெய்வவரு
ளிருந்தவனாத் திருப்பாக்காலே. (39)

தீங்கிருந்த தேனுமிகு மாறுமலை
யகற்றவழி சிந்திப்போர்க்குப்
பாங்கிருந்த தாமதியே மதிசிறக்க
வகையுமுண்டு பயிற்சியுண்டேல்
ஓங்கிவர மதிசெழிக்க வளம் உழைக்க
வலி நமக்கென் றுதவிக்கண்டும்
ஏங்கிடுவோ மெனில்அஃதிந் தவர்குறையோ
நற்குறையோ எண்ணுவீரே. (40)

தி. லக்ஷ்மணப்பிள்ளை.

# THE SYSTEM OF LOKAYATHA.

# நாஸ்திகமதம் அல்லது உலோகாயதமதம்.

உலகின்கணுள்ள பலவகைச் சமயங்களிலும் உலகாயத சமயம் ஒன்று. பெரும்பாலும் இக்கலிகாலத்திலே இம்மதமேபலரால் அநுட்டிக்கப்பட்டுவருகின்றது. என்னை? வேதாகமங்கள் விதித்த அரியதவவழிக்கு இதுநேர்விரோதமானதாய் எவராலும் சுலபமாய்ச் செய்யக்கூடியதாகி மனம்போனபோக்கெல்லாம் தனக்குச்சம்மதமாகலான் என்க.

இம்மதத்தை யாதியிலே தேவகுருவாகிய வியாழபகவான் இந்திரன் பொருட்டுச்செய்தனர். காரணமென்னெனில், சூரபன்மனாலே தன்பதமிழந்து வனத்திலே ஒளித்திருந்து பெருந்துன்பப்பட்ட இந்திரன் குமாரசுவாமியாலே அசுரர்குலமழிந்து விண்பதமேறிய காலத்து எண்ணுவான்.

அந்தோ! செயற்கரிய அசுவயாகங்கள் பலவற்றைமுயற்சியுடன்செய்து பொன்னுலகடைந்து தேவர்போற்ற முனிவர் ஆசிகூற, கந்தருவர், கின்னரர் பாட, மற்றைய கணத்தவர்கள் இட்டவேலை பொட்டெனவியற்ற, அமுதமுண்டு, நரைதிரை, மூப்பு, பிணி, துயில், பசி முதலியனவின்றி ஐந்தருவினிழலிலே வயந்தச்சோலையிலே சுதன்மைமண்டபத்திலே அரியாசனத்தில் வீற்றிருந்து, திலோத்தமை முதலிய நால்வர்கணிகையர் ஆடல்கண்டு, அரம்பையருள்வேண்டினர் போகமுற்றி, மூவுலகத்துமில்லா நல்லழகுபடைத்த இந்திராணியுடன் இன்பநுகர்ந்து, சிந்தாமணி சங்கநிதி பதுமநிதிமுதலியனவேண்டியபொன் ஆபரணம் வஸ்திரமுதலிய அலங்காரப்பொருள்களைக் கொடுக்க காமதேனுவேண்டிய அறுசுவை அமுதந்தர, கற்பகம்விளையுயிர்ப்ப, சப்தமேகங்களும் நம்மாணையினடப்ப, உலகெலாம்போற்ற அரசுசெய்யலாமென்று எண்ணிவந்தேம்.

இப்பொன்னுலகமோ சூரபன்மன் குமாரனாகிய பானுகோபனால் எரிக்கப்பட்டுக்கரியுலகமாயிற்று. போக்கியபொருள்கள்யாவும் அசுரரால்கொள்ளைகொள்ளப்பட்டன. எமது குமாரனுந்தேவர்களுஞ் சிறையிருந்து படாதபாடெல்லாம்பட்டார். அரம்பையரும் கணத்தவர்களும் அசுரர்பாற்சென்றிருந்து குற்றேவல் புரிந்தார். இதுமட்டோ யாமுந்தேவியும்காட்டிலொளித்துப் பெருந்துன்புழந்தேம். இன்னும் நம்மைப்போன்ற இந்திரராய் வந்தோர் யாவர்தாம் இன்புடன் அரசாண்டார். ஒருவருமின்றே. புலிமுகாசுரன் அந்தகாசுரன், இரண்டாசுரன், சலந்தராசுரன், கயாசுரன், தாரகாக்ஷன், கமலாக்ஷன், வித்துன்மாலி, வலாசுரன், வாற்கலி, துவட்டா, விருத்திராசுரன் சம்பராசுரன்,*தாரகாசுரன் முதலிய அசுரர்களானும் இராக்கதர்களானும் முனி

* இந்த தாரகாசுரன் சூரபன்மனிளவலன்று. திரிபுரத்தசுரர்களின்றந்தை. இவனுங்குமாரசுவாமியாற்கொல்லப்பட்டான்.



வர்களாலும் நாடோறுந் துன்புற்றானன்றி, ஒருநாளாயினும் இன்பமாக விருந்து அரசாண்டதுகண்டதுமில்லை கேட்டதுமில்லை.

வென்றி யரக்கரான் மேதகைய தானவரா
லன்றி முனிவரா லண்டரா லேனையரா
லொன்றுசெய வொன்று யுறுதுயரந் தாழ்ந்ததன்றி
யென்று மகிழ்வா யிடாற் றிருந்தனமே.

என்றெண்ணி, இந்திராணியோடுகூடிவாழும் வாழ்க்கையைவெறுத்துத்தான் போக்கியப் பொருள்களையும் உவர்த்தான். அரசியலும் துரும்பென எண்ணுதயர்த்தான். இனிச் சிவபெருமானது திருவடிக்கண் இரண்டறக்கலக்கும் அத்துவிதவின்பமே நித்தியவின்பமென்று உணர்ந்தான். அவ்வின்பத்தைத் தவஞ்செய்து பெறவேனென்று துறவொழுக்கத்தைப்பூண உத்தேசித்திருந்தான்.

அதனாலே "அரசனில்லாவிடிற் குடிகளென்படும்" என்றாற்போலச்சுவர்க்கலோகம்பாழாயிற்று. தேவர் முனிவர் முதலாயினோர் சீர்குலைந்தனர். உலகிற்கு முதற்காரணமாகிய மழையுமிழந்து பொய்த்துப் பூவுலகுயிர்களும் சாந்துயரின் நின்றன. பசுக்கள் விருத்தியில்லா தொழிந்தன. தானந்தவம் சிறப்பு பூசனை குனியப்பட்டன. உலகெலாந் தலைதடுமாற்றமடைந்து பரிபவப்பட்டதுகண்டு தேவகுருவாகிய பிருகஸ்பதிபகவான் ஆலோசித்து,

பொய்ம்மையும் வாய்மையிடத்தபுரைதீர்ந்த
நன்மை பயக்கு மெனின்.

என்னுந்திருக்குறட் கருத்தைக்கொண்டு ஒன்றுசெய்வாராயினர். இந்திரனை முன்போல இருத்தற்கு உபாயம் உலகாயதமதக்கொள்கையே யென்று உத்தேசித்து, இந்திரன் இருக்குமிடஞ்சார்ந்தார். சதக்கிரது உடனெழுந்து, "குரவே தீர்க்கநமஸ்காரம். துறக்கவாழ்க்கையைத்துறந்தேன். சிறந்து வாழுஞ் சிவனடிதேடினேன் உடனே அன்னதற்குபாயமருளுதி" என்று அவனடி வீழ்ந்தான்.

பிருகற்பதியார் இந்திரனை யெடுத்துத்தேற்றி ஐய! கேண்மதியென்று உலகாயத மார்க்கத்தை உபதேசித்தார்.

புன்றொழிலாகிய பொய்யும் வாய்மையா
மொன்றொரு பெரும்பயனுதவு மாயிடி
னென்றனர் சுரர்குரு விந்திரன்பத
நின்றிட வீதொரு நிகழ்ச்சி கூறுவான். இந்திரனே!

இச்சுவர்க்க வின்பத்தையும் மேன்மையான அரசையும் வெறுத்தனை; இவற்றைவெறுத்துப் பின் எதுபெறுதற்காகத் தவஞ்செய்ய நினைத்தாய். துன்பப்பட்டவர்தான் பின்னர் இன்பத்தையும் அடைவர் அது உண்மையன்று.

இந்தமூவுலகத்திற்கும் உரிய இயற்கையாகும். தேவர்களுள்ளும் முனிவர்களுள்ளும் யாவர்தாம் மங்கையர் இன்பத்தை வெறுத்து விட்டவர்? ஒருவருமில்லை. எவரினும் மேற்பட்ட பிரமன், விட்டுணு, உருத்திரன் என்னும் மும்மூர்த்திகளன்றோ தம்மனைவியர் வேறாக இருத்தற்குச் சகிக்காது நாவிற்குடியிருத்தியும், மார்பில் அரசுசெய்யவைத்தும், பாதியுடம்பாக்கியும்மருவிவாழ்கின்றார். மங்கையரைப்பெறும் இன்பமே யின்பம். மற்றனவெல்லாந்துன்பம். செல்வம் யாதெனில் அழகுடைய மடந்தையரை யதிகமாகப் பெறுதல். வறுமையென்பது எதுவெனவிசாரணை செய்யுங்கால் அன்னவரை யில்லாமையே. அதுவே கொடிதினுங் கொடிதாயவறுமை யாகும்.

மங்கையரிடம் ஆலிங்கனம், சும்பனம், தாடனம், மைதுனம், நகவர்ணனையென்னும் பஞ்சலீலைகளையும் பஞ்சமுத்திரையாகக்கொண்டு அவர்கள் கண்ணோக்கவருள் பெறுகையே சட்சுதீக்ஷை; அவரடியா லுதைபடலே திருவடி தீக்ஷை; அவர்மெய்தொட்டுப் பயிறலேபரிசதீக்ஷை; அவரது இனியமழலைச் சொற்களைக்கேட்டலே வாசகதீக்ஷை; அவரிட்ட ஏவல் செய்தலே தவம் மற்றையனவெல்லாம் அவம். அவர்களை முத்தமிடுவதே சுகமுத்தி. அவர்கள் உறுப்புக்களே பரஞானம் அபரஞானம். இருவரும் கூடுவதே மகாயோகம். இவர்கள் லீலைச்செய்கையே சற்கருமம். அவையிலாமல் வேறொன்று கொள்வதே துர்க்கருமம். அவரால் வருமின்பமே பேரின்பம்.

இங்ஙனம் பிரத்தியக்ஷமாயிருக்கிற இவ்வின்பங்களைவெறுத்து வேறோர் இன்பமிருக்கின்றதென்று துறந்து பூசிப்பவர் யாவரும், காணப்பட்ட தண்ணீரையுண்டுகளை தீர்ந்து சுகமுறாது, கானற்சலத்தை நீரென்று அலைந்து அலைந்து தாகம்வருத்தச் சாவதுபோலும்; மும்மூர்த்திகளும் பெரியவராய் விளங்கியது எதனால்? பெண்களாகிய சத்திகளை நீங்காது இருத்தலானன்றோ! மங்கைமார்போகம் கூடாதென்று வெறுப்போர் நோயாளிகளும், வலிமையற்றவர்களும், புருடத்துவமில்லாதவரும் பேடும் அலிகளுமேயாம். அவரின்பத்தான்வருஞ் சிறப்பையறியாதவரோ அவ்வின்பத்தைச் சிற்றின்பமென்று இகழ்வர். காமதந்திரங் கூறியவாறு கலப்பாராயின் அதுவே பேரின்பமென்றற்கு இழுக்கென்னை? மகளிரோடு கலந்துஉண்டுடுத்து வாழ்வதே சுவர்க்கவின்பம். அது பிரிந்து பகைவராலும் நோயாலும் வறுமையாலும் நூற்கொள்கைகளாலும் பிறவற்றாலும் வருந்துவதே நரகத்துன்ப மெனப்படும். சுவர்க்க நரகங்கள் இவையேயன்றி வேறில்லை.

கண்ணாற் காணப்படுவன எவையோ அவைகளே யுண்மையெனப்படும். அவற்றைவிட்டு அநுமானமென்றும், ஆகமம் என்றும், ஐதிகமென்றும், சம்பவமென்றும், பரிசேடசுபாவங்களென்றும் பற்பல அளவைகள் காட்டிக் காணாதபொருள்களை யெல்லாம் உண்மை உண்மையென்று கத்திக்கத்தி மண்ணாய்மடிந்தார் பலர், கடவுள் இருக்கிறார் என்று கதறுவர். அப்படியொன்



றுளதேல் கண்ணிற்குக் காணப்படுமன்றோ? அங்ஙனமில்லாமையால் கடவுள் உண்டென்பதுபொய். அது ஆகாயத்தில் மரம் பூத்துக் காய்த்துப் பழம்பழுத்த என்பதுபோலவும், மலடிமகன் முயற்கொம்பேறி ஆகாயப் பூவைப் பறித்தான் என்பதொக்கவும் இருந்ததென்றறிக.

மண் நீர், நெருப்பு, காற்று என்னும் நான்கு பூதங்களும் பிரத்தியக்ஷமாக் காணப்படாமல் அந்நான்குபூதங்களுமே தெய்வமாம். இவையொன்றோடொன்று சேர்ந்தகாலத்தே உடம்புதோன்றும். இவற்றுள் ஒன்று பிரிந்துவிடின் அவ்வுடம்பும் சிறந்து பிரியும். வெற்றிலை, பாக்கு, சுண்ணாம்பு என்னும் முப்பொருள்களுங் கூடியவிடத்தே சிவந்த நிறமொன்று தோன்றுவதுபோல நாற்பூதங்களுங்கூடிய விடத்தே யோருணர்வுண்டாம். அது உடம்பு வளர வளரத் தானும் வளராநிற்கும். உடம்பு தேயத்தேய தானுந் தேய்ந்தொழியும். உடம்பிற்கு வேறே யுயிரென்பதும் பொய். சரீரத்திற்கு இன்பதுன்பங்கள் இயல்பாகவுள்ளன. இன்பதுன்பங்களுக்கு வினையோ என்பது கையின்கணுள்ள விரல்களும் ஏற்றமாகவும், குறைவாகவும், துர்க்கந்த நற்கந்தங்களும், சுவைப்பொருள்களும் ஒன்றுக்கொன்று ஏற்றமாகவும் குறைவாகவும் இருந்ததால் அவை யங்ஙன மிருத்தற்கு என்ன கன்மஞ் செய்தன? ஆதலால் இவ்வேற்றக்குறைவுகள் இன்பதுன்பங்களெல்லாம் நாற்பூதங்களின் ஏற்றக்குறைவுகளன்றி வேறல்ல. குயிலைக் கூவுவித்தாரையும்மயிலைச் சித்திரித்தாரையுங் கண்டிலேம். ஆதலால் கடவுளொருவனாட்டியுறக்கி யாட்டுகின்றான் என்பது பிதற்றே. எல்லாம் இயற்கையாவே யமைந்துள்ளன. இந்தத்தேசம் விட்டுப் பின்னொருதேசம் எடுப்போமென்று கூறுவது அவிந்துபோன விளக்கு ஓரிடத்திற்போயிருந்து மீளவும் வேறோர் திரியிலேபற்றி யெரியுமென்பதை யொக்குமாதலால் மறுபிறப்புண்டென்பதும் பொய்; இவ்வுண்மையுணரா அறிவீனர் மறுபிறப்புண்டென்று தவங்கள் பட்டினி முதலியவற்றான் வருந்துவர்.

கற்பமுதலிய மருத்துவநூல்கள் வலிமையில்லா நொய்ய அறிவினராற் கட்டப்பட்டன. இரணியதானம், அன்னதானம், பூதானம் முதலியவற்றை யுயர்வாகக்கூறும் நூல்கள்பசியினால் வருந்திய வறியவராற் செய்யப்பட்டன.

தி. அ. ஸ்வாமிநாதையர்.

## KULOTUNGA CHOLAN KOVAI.

## குலோத்துங்கச்சோழன் கோவை.

(353-ஆம் பக்கத் தொடர்ச்சி.)

### தலைவன் றனக்குத் தலைவி நிலை கூறல்.

61. கண்ணுஞ் சகோரத்தை நீவில வாய்வைத்துக் காய் கதிராய்
யுண்ணுஞ் முளரி யுனைநோக்கி யேவைத்து மொண்புயத்துத்
தண்ணார மாலைப் பெருமான் குலோத்துங்கன் றஞ்சைவெற்பிற்
பெண்ணா ரணங்குநின் றுளண்ணலேயப் பெரும் பொழிற்கே.

### தலைவன் சேறல்.

62. நள்ளாப் பதமிரண் டாய்ப்பிறந் தோமன்றித் தாவிவிழுப்
புள்ளாய்ப் பிறந்தில மேநெஞ்ச மேபுனல் வேணியனை
யுள்ளாரக் கொள்ளுங் குலோத்துங்கச் சோழ னுறந்தை வெற்பிற்
கள்ளாரக் காவினிற் பார்தமைக் கூடக் கடுகுதற்கே.

### தலைவியைக் காண்டல்.

63. நன்னித் திலங்க ளிருபாலுஞ் சிந்தநந் தோடொழுகும்
பொன்னித் துறைவன் குலோத்துங்கச் சோழன் புகார்வரைவா
யுன்னிக் கனியு முளத்தா மரையினுள் ளோரு மொரு
கன்னிக் களியன்ன மென்னுவி நோக்கியிக் காவின்றதே.

### கலவியின் மகிழ்தல்.

64. தேனார் சடலுந் திருப்பாற் கடலுந் திரை புரண்டொன்
றுணலைத் தன்மைத்தத் தன்மையன் றேவகி லாண்ட மெல்லாங்
கோனாகுஞ் சங்கரன் * முன்னோன் குலோத்துங்கன் கோழி வெற்பின்
மானாரும் யானு மணந்தவிப் பேரின்ப மாகடலே.

### புகழ்தல்.

65. மட்டார் குழலிகலவியி னீக்கிய மாதிரும்பக்
கட்டா தொருகணந் தாழ்த்தன ளேற்கவி வாணர்செம்பொற்
கொட்டார மன்னன் குமார குலோத்துங்கன் கோழிவெற்பி
லெட்டா னையுநிலை கெட்டோடு மூதண்ட மென்படுமே.

* முன்னுங் குலோத்துங்கன் என்பதும் பாடம்.



### பாங்கியோடு வருகெனப் பகர்தல்.

66. கோங்கார் முகிழ்முலை யாய் மெய்யுநீழலுங் கூர்பொருளும்
பாங் கா முறையும் பிரிவதுண் டோபண் டிராவணனை
யாங் காரந் தீர்த்த குலோத்துங்கச் சோழ னளகைவெற்பி
னீங்கா நின் காதலி தன்னுடன் வாவினி நீவரினே.

### பாங்கியிற் கூட்டல்.

67. அணியே பசும்பொனே ராயிரங் கோடிகொண் டாக்கிநடு
மணியே யமைத்தில ரேற்சிறப் போவணங் கார் சிரத்தைத்
துணியே தரப்பொருங் கோழிக் குலோத்துங்கன் சொற்சிலம்பிற்
பணியே யுனக்குச் செய் யாயம் பொருந்துக பான்மொழியே.

## பாங்கி மதி யுடன்பாடு.

### முன்னுற வுணர்தல்.

### பாங்கி நாற்றங்கண் டையுறல்.

68. கையாற் பெருமண மெய்துமுன் னேயிந்தக் காரிகைதன்
மெய்யாற் பெருமண மெங்கெய்தி னாள்விரி காவிரிபோய்ச்
செய்யார்க்குங் கோழிக் குலோத்துங்கச் சோழன் சிலைக்கொல்லிவா
யுய்யாக் குறியிதென் னோவந்த வாறென் னுணர்கிலெனே.

### தோற்றங் கண்டையுறல்.

69. பொன்னுற்ற கொங்கையுஞ் சோர்வுற்ற கூந்தலும் பூந்தளிரா
மின்னுற்ற மேனியு மெங்கனுற் றுள்வெகுண் டோருக் கெல்லாங்
கொன்னுற்ற வேற்கைக் குமார குலோத்துங்கன் கோழியன்னாட்
கென்னுற்ற தோவறி யேன்சிறி யேனெஞ் சிளைக்கின்றதே.

### ஒழுக்கங் கண்டையுறல்.

70. ஒன்னாரை வெங்கண்ட வேலான் றனதடியோ ரிரண்டாக்
கன்னாரி யாக்குங் குலோத்துங்கச் சோழன் கல்யாணிவெற்பிற்
பொன்னாண் கழுத்தில்வந் தேறுமுன் னேயிந்தப் பூவைதனக்
* கிந்நா ளுறுப்பெங்கு மேறிய வாறினி யென்சொல்வதே.

### உண்டி கண் டையுறல்.

71. நிறையுண்ட செவ்வந்தி வான்சூழ் பிறையன்ன வின்குருதிக்
கறையுண்ட வாட்கைக் குலோத்துங்கச் சோழன்கல் யாணிவெற்பி
லறையுண்ட பாற்கடன் மேனாட் கடையமு தேனுநஞ்சாய்க்
குறையுண்டி யாகக் குறையுண்ட தேதென் குலக் கொடியே.

* இன்னு...வென்பதும் பாடம்.

## செய்வினை மறைப்புக்கண் டையுறல்.

72. சேணுடர் காவைந்து மொன்றாங் கரதலச் சென்னிப் பொன்னிச்
சோணாடு காக்குங் குலோத்துங்கச் சோழன் றன்னாருக்கன்றே
நாணாளுஞ் செய்யும் வினைமறைத் தோடுங்கை நங்கொடிக்குங்
காணா தெனைமறைக் கும்வினை போந்த தெக்காரணமே.

## சேலவு கண் டையுறல்.

73. பந்தாட லுந்தண் சுனையாட லும்பைம்பொ னூசன்மிசை
வந்தா லுமறந் தேபுறம் போய்வண்டு கோடி இண்டச்
கொந்தாடு தாதகித் தாமன் குலோத்துங்கன் கோழி வெற்பின்
கந்தாடுங் காநடந் திம்மா துலாவருந் தன்மையென்னே.

## பயில்வு கண் டையுறல்.

74. பன்னாட் டரசர் மனைத்திரு வாழும் பலவுமொன்றாய்த்
தென்னாட்டுங் கோழிக் குலோத்துங்கச்சோழன் றிருமனைக்கே
தொன்னாட் பயின்றதற் கேசிற்ப தாமெனத் தோகைக் கென்னோ
விந்நாட் பயிலு மிடமே யிடமீ தெனசிற்பதே.

## பிறைதொழு கென்றல்.

75. போதே யுதித்து மிமவான் புகுந்தும் புலக்கலையை
மீதே வளர்த்தும் விளங்குத லான்வியன் பாவனைத்துங்
கோதே பிறித்தறி கோமான் குலோத்துங்கன் கோழிவெற்பின்
மாதேமுத் தேவியர் காண்டொழ வேதகும் வான் பிறையே.

## ஐயங் கரந்து தையலை வினாதல்.

76. துடைந்தனை யோசுனை கொய்தனை யோதழை குன்றெதிர்கூ
யடைந்தனை யோவண்ட லாடினை யோவம்புயா சனத்து
மடந்தைமன் கோழிக் குலோத்துங்கச் சோழன்மலைக் கொல்லிவாய்
விடந்தயங் கும்விழி யாயென்கொன் மேனி மெலிந்தனையே.

## கரந்துரை.

77. சுரிவண் டிமிர்கட நாகக் குலோத்துங்கச் சோழன்வெற்பிற்
பரிவண்டு தோழி நினையொழிந் தேனென்னற் பாணியினுஞ்
சுரிவண் டொலிப்ப வொலிசுனை யாடலுந் தார்க்குழல் சூழ்
வரிவண் டலைத்தமெய் வாட்டமல் லாதில்லை வாட்டங்களே.



## கரவு நாட்டம்.

78. கோத்தாரு மல்லிகை கிஞ்சுகம் பூப்பக் கொடியவந்தி
யத்தா மரைமல ரச்செய்த தாலளி வாயலம்பும்
புத்தார மாலைக் குலோத்துங்கச் சோழன் புகார்வரைவாய்
சித்தா வதும்வரு மோதிரு வேளின் செழுஞ்சுனைக்கே.

## சுனைவியந்துரைத்தல்.

79. கருமேக வண்ணன் குலோத்துங்கச் சோழன் கல்யாணிவெற்பிற்
றிருமேனி நாணுந் திருவுரு வாய்செய்ய வாய்வெளுப்ப
வுருமேற் பசப்பும் விழிமேற் சிவப்பு முடல் வெயர்ப்புந்
தருமேற் குடைவ னடியேனு மந்தத் தடஞ்சுனையே.

## நாண நாட்டம்.

80. சூரம்பு ராசிபண் டெய்தோன் குலோத்துங்கன் கோழிவெற்பிற்
போரம்பு நேரப் பொருங்கணல் லாய்புனை சாந்தகிலுஞ்
சீரம்பு பாதப் பதப்பஞ்சுந் தொய்யிலுஞ் சிந்துரமு
மீரம் படாது சுனையா டியவண்ண மெவ்வண்ணமே.

## தகை யணங் குறுத்தல்.

81. மன்னாக வந்த குலோத்துங்கன் கோழி வ[illegible]ணயா
யுன்னாக மென்ன வொருத்தியென் காத[illegible]ண்டுனது
பொன்னாகும் வண்ணமு முத்தாகும் வாயும் புதுப் பகழி
மின்னாகுங் கண்ணுமொவ் வாமற்றெல் லாமொக்கு மெல்லியற்கே.

## நடுங்க நாட்டம்.

82. கோங்கோட்டும் வேங்கைக் கொடியோன் குலோத்துங்கன் கோழி
லங்கோட்டு மென்களத் தாயஞ்சி னேனரன் மூத்தமைந்தன் [வெற்பி
வெங்கோட்டி யானை முகனைமுன் பாய்வெய்ய கோட்டுருவாஞ்
செங்கோட்டி யானைகண் டேனஞ்சி னேனச் சிலம்பிலின்றே.

## (b) குறையுற வுணர்தல்.

## பெட்ட வாயில்பெற் றிரவு வலியுறுத்தல்.

83. கோடே பிடித்துமென் போதுகொய் வார்வரைக் கோடுறுந்தே
னீடேணி யைக்கொண்டு நேயர்கொள் வார்சில வேந்தர்க் கெல்லாங்
காடே கொடுக்குங் குலோத்துங்கச் சோழன் கல்யாணி வெற்பி
லேடே கமழுங் குழலியைப் பாங்கிகொண் டெய்துவமே.

## ஊர் வினாதல்.

84. யானை தரிக்கின்ற வெள்வடி வேல்கொண் டெறிகடலே
மேனாளை யூர்நுமக் கென்றறிந் தேனெழு மேதினிக்குங்
கோனாகுஞ் சங்கம ராச குலோத்துங்கன் கோழிவெற்பி
லூனாகும் வேற்கணல் லீரிந்த நாளெந்த * ஊர்சொல்லுமே.

## பெயர் வினாதல்.

85. திருவோ விரதிகொல் லோசசி யோதெய்வ மோகினிதன்
னுருவோவந் நாளுங்கள் பேரறி வேனுர வோருக்கைந்து
தருவோ வெனுங்கைக் குமார குலோத்துங்கன் றஞ்சைவெற்பின்
மருவோதி மீருமக் கிந்நாளைப் பேர்†சொல்லும் வாய்மலர்ந்தே.

## கெடுதி வினாதல்.

86. முலையொன்று மானுடன் கன்றமுன் னோட முழங்கநவி
லிலையொன்று சோரியென் போடவம் போடு நிழற்கொடிசூழ்
கொலையொன்று வேற்கைக் குமார குலோத்துங்கன் கோழி யன்னீர்
கலையொன் றிங் கோடிவந் தேநொந்த தோவுங்கள் காவலிலே.

## நெஞ்சு வினாதல்.

87. நஞ்சோ டெதிரு மொருவாளி தைத்துநை வாங்கலையின்
மஞ்சோ டுவமிக்கும் வார்குழ லீரந்த வானவர்க்கா
வஞ்சோட நல்குங் குலோத்துங்கச் சோழ னணைகவெற்பி
னெஞ்சோடி வந்ததுண் டோ†சொல்லும் வாய்மலர் நீர்திறந்தே.

## வழி வினாதல்.

88. ஏகா வழிபுகுந் தேதாகும போம் வழி யென்றுநின்றூற்
பாகார் மொழியிற் சொன்னாற்பழு தோபத்தி யாலுருகி
நாகா பரணனைப் போற்றுங் குலோத்துங்க னணைகையன்னீ
ராகாது பெண்மைக் கிளநெஞ்ச லான்வனெஞ் சாய்கிற்பதே.

## மொழியாமை வினாதல்.

89. சொல்லே சிறிதொன்று சொன்னாற் குறைந்துமெய் சோர்ந்துவிழீர்
கல்லே கவணுங் கரிதென்ப தோகளைத் தோடினரைக்
கொல்லே மெனுஞ்சொற் குமார குலோத்துங்கன் கோழிவெற்பில்
வல்லே பொருங் கொங்கை யீர்திற வீருங்கள் வாய்மலரே.

* 'சொன்மினே' என்றும் பாடம். † 'சொன்மின்' என்றும் பாடம்.



## இடைவினாதல்.

90. புல்லுஞ் சுரும்புஞ் சிறைத்தாற்றுங் கீற்றும் புனத்தெய்தினாற்
கொல்லு மருங்கை யென் றஞ்சுகின் றேன் குரைவாரிதியை
வெல்லுஞ் சிலைக்கைக் குமார குலோத்துங்கன் வெற்பணையீர்
கல்லுங் கவணுநுங் கைக்கீந்த வர்க்கென்ன கன்னெஞ்சமே.

## இதுவுமது.

91. தரும் போது கற்பக நேராங் குலோத்துங்கன் றஞ்சைவெற்பிற்
சுரும் போதி யீரொன்று கேட்கவின் றேன்சுனை சூழ்புனத்தைக்
கரும் போத கங்காலை மேய்வதென் றோகடி தோட்டுதற்கு
வரும் போது கொண்டு வரமறந் தீர்கொன் மருங்கினையே.

## முகம்புகு கிளவி.

92. வேணிப் புயலண்ணன் மெய்யழ காச்செய்த மின்னினையோ
பேணிப் புனத்தி லெயினர்வைப் பார்பெரும் பாவலருக்
காணிக் கனகன் குலோத்துங்கச் சோழ னணைகைவெர்பின்
மாணிக்க முண்ணு மதுவுக்கு மாறு மதியொத்ததே.

## யாரே யிவர் மனத் தெண்ணம் யாதெனத் தேர்தல்.

93. நெறியாயு மென்பர் நடுவில்லை யோவென்பர் நீண்டகலைக்
குறியாயு மென்பர் கிறிகூறு மென்பர் செங் கோகனகை
பிறியா வுறந்தைக் குலோத்துங்கச் சோழன் பெருங்கிரிவாய்ச்
செறியா வழகினர் யாரோ வவர்க்கென் கொல் சிந்தனையே.

## பாங்கி யெண்ணந் தெளிதல்.

94. வானோர் விழுக்கு மதிக்கலை யோமலை வாணர்மின்னோ
ரானோ ரிடைக்கலை யோவிலை யாக வவனியெல்லாந்
தானோர் தலைமைப் பெருமான் குலோத்துங்கன் றஞ்சைவெற்பின்
யானோருங் காலிவர் வேட்டமெல் லாமிங் கிவன்பொருட்டே.

## (c) இருவரு முள்வழியவன் வரவுணர்தல்.

### கையுறையேந்திவருதல்.

95. ஒருகோ டரத்தி னிருகிளி யாமென்ன வோரிதண்மேன்
முருகோடு வண்ணவின் றூரிரு வோரு முழங்குபொய்கைக்
குருகோடி யார்க்குங் குமார குலோத்துங்கன் கோழிவெற்பி
லருகோடி நங்குறை யாற்றுதற் கேசெல்வி யாமிதுவே.

### புனங்கண்டு மகிழ்தல்.

96. தாயுந் தமரு மெனத்தமிழ் தாங்கியுந் தண்டமிழை
யாயுங் கழகன் குலோத்துங்கச் சோழ னளகைவெற்பி
லேயுந் திருவனை யார்புனத் தேயிதண் மீதுவைக
மேயுங் கிளிக்கும் பிணைக்குங்கைம் மாறெம்மில் வேறில்லையே.

### இருவரு முள்வழிச்சேறல்.

97. குடையாற் புவிகவித் தாளுங் குலோத்துங்கன் கோழிவெற்பிற்
புடையார்க்குந் தோகையி லன்னமன் னீர் முன்பு போகப்பின்பு
நடையாற் பிடியு மொழியாற் பைங் கிள்ளையு நன்னயனக்
கடையாற் பிணையும் வரவழைத் தோபுனங் காப்பதுவே.

### அவ்வகை வினவுதல்.

98. சுருதி கறக்கு முறந்தைக் குலோத்துங்கச் சோழனென்னோர்
கருதிய செல்வமு மாவியும் போக்கநிற் றீவிமித்தம்
பருதியுண் மூடி முகிற்சோரி யெய்தன்ன பாவைநல்லீர்
குருதியின் சோரவிங் கேவந்த தோவொரு குஞ்சரமே.

### எதிர்மொழி கொடுத்தல்.

99. தரிக்கும் புவனம் புரக்குங் குலோத்துங்கன் றஞ்சைவெற்பி
விரிக்கும் பிணைகலை யாங்கண்டி லேமெய் யிலாதுபொய்யே
யிரிக்கும் பிணைக்கும் பிணையன்று மற்றெவ ரேனு மெய்யுங்
கரிக்குங் கரியன்று காணெங் கடனென்றுங் * காவலனே.

### இறைவனை நகுதல்.

100. அலையேபண் டெய்த குலோத்துங்கச் சோழ னளகைக்கொல்லி
மலையே வருமன்னர் வேட்டைக்கெல் லாமறு மாற்றஞ்சொல்லேங்
கலையே கலையெனிற் கற்றோரைக் கேளுங் கரியெனிற்கொல்
லுலையே செலும்பின் கயங்களி றேற்புகு மோடையிலே.

### இதுவுமது.

101. வம்போடு தாதகித் தாரான் குலோத்துங்கன் வாழுறந்தைக்
கம்போடு நேர்திருக் கந்தரத் தீரிந்தக் காவலர்மாங்
கொம்போடு கின்றெய் தினராமொ ரானையைக் கோத்தெய்தவில்
லம்போ டடிச்சுவ டும்போன தோவந்த வானைகொண்டே.

* காவலன்றே என்றும் பாடம்.



### பாங்கி மதியி னவரவர் மனக்கருத் துணர்தல்.

102. நோந்தார மாலைக் குமார குலோத்துங்கன் கோழிவெற்பி
னந்தா திருவர் கருத்துங்கண் டோநம்மை யேகரந்து
சந்தார் புனத்திருந் தார்முலை மேலிருந் தாமரையும்
வந்தார் புயத்தினு நீலமுஞ் சால மலர்ந்தனவே.

### இதுவுமது.

103. வள்ளலுந் தாருவு நேரான் குலோத்துங்கன் வாழ்கொல்லிசூ
ழுள்ளலம் பூஞ்சுனைச் சாரலுக் கேயடுத் தோரிருவ
ருள்ளமெல் லாமித் தனைநாட்சொல் லாதிங் கொளித்திருந்த
கள்ளமெல் லாமின் றறிந்தோ மிவர்தங் கடைக்கண்ணினே.

### தலைவ னுட்கோள் சாற்றல்.

104. திங்கட்கண் ணுடியுந் தாரகை யாரமுந் தெய்வக்கங்கை
யங்கட் சினையு மெனத்தரு வேனங்கைம் மேருவென்ன
வெங்கட் களிற்ற னுறந்தைக் குலோத்துங்கன் வெற்பனையீ
ரெங்கட்கு வேண்டுவ துங்கடைப் பார்வைகொண் டேவுவதே.

### பாங்கி குலமுறை கிளத்தல்.

105. மீன்சூழ் மதிகளி மீனெய்து மோவிடுந் தேரிரவி
மான்சூ ழுலகையந் தோபுகு மோமழவாளியைப்போய்த்
தான்சூழ் தருந்திருத் தாளான் குலோத்துங்கன் றஞ்சைவெற்பிற்
கான்சூழ் குறமின்னை யோமன்ன நீமணங் காமிப்பதே.

### தலைவன் றலைவிதன்னை யுயர்த்தல்.

106. மீனீந்த மீன்கந்தி யைக்குரு வேந்தனும் வேற் குகனு
மானீந்த வள்ளியைச் சேர்ந்தில ரோமழை யேழுமொன்றாத்
தானீந் தெனத்தமிழ்க் கீவோன் குலோத்துங்கன் றஞ்சைவெற்பிற்
கானீந்த பூங்குழ லாய்நல மேகுலங் கன்னியர்க்கே.

### இதுவுமது.

107. எச்சுற்ற மான்புலி கண்டா லெனத்தெவ்வ ரேற்றெதிர
வுச்சுற்ற வேற்கைக் குலோத்துங்கச் சோழ னளகைவெற்பி
னச்சுத் தருமிசைத் தேன்பிறந் தாலு நன்னிலையாற்
கச்சுத் தடமுலை யாய்நல மேகுலங் கன்னியர்க்கே.

### நன்னுதற் பாங்கி யறிவாள் போன்று வினுதல்.

108. பந்தா நெருங் கழங்கா நெரும் பனிச்சுனைவாய்
வந்தாடெரும் பலகோடி யான்மத மாரிசிந்திக்
கந்தாடும் யானைக் குலோத்துங்கச் சோழன்கல் யாணிவெற்பிற்
சிந்தாடுந் தோண்மன்ன யார்கண்ண வோநின் றனகண்களே.

### இறையோ னிறைவி தன்மை யியம்பல்.

109. ஓதியு நூன்மருங் கும்மங்கு லாமொண் முலைபொதிதோள்
சோதியின் வேழங்க ளாமணங் கேதொல்லை ராவணனைக்
காதிய வீரன் குலோத்துங்கச் சோழன்கல் யாணிவெற்பி
லேதியு நீலமு நீயுங்கண் ணென்மன தின்னுயிர்க்கே.

### பாங்கி தலைவி யருமை சாற்றல்.

110. மாமேருப் பொன்னு மலயா சலந்தந்த வண்டமிழுங்
காமேன் மலர்க்குல மும்வெளி தாயினுங் காரரக்கர்
கோமேதை யேக்கிடும் வில்லான் குலோத்துங்கன் கோழிவெற்பா
யாமேயிவ் வண்ணஞ் சொலற்கரி யாளெங்க ளேந்திழைக்கே.

### தலைவ னின்றியமையாமை யியம்பல்.

111. தாரா தரமந்தச் சாதகந் திங்கட் சகோரமுண்ணச்
சேரா தொழியி னுயிருய்யு மோசெய்ய வேழமுய்யக்
கூடாழி யன்றெறி கோமான் குலோத்துங்கன் கோழிவெற்பில்
வாராது மாதிருந் தாலணங் கேயெங்ஙன் வாழ்வெனக்கே.

### இதுவுமது.

112. தளத்தே புலிக்கொடி முன்னேவித் தானைபின் னேவித்தெவ்வைக்
களத்தே துரக்குங் குலோத்துங்கச் சோழனகல் யாணிவெற்பின்
வளத்தே மொழியுங்கண் மங்கைதன் பேரை யருந்தியவென்
னுளத்தேசற் றுன்னினும் போமுயிர் மீளுமென் றோதுவதே.

### பாங்கி நின்குறை நீயே சென்றுரை யென்றல்.

113. வந்தார்க்கும் வண்டும் பறவையும் போதும் வளக்கனியுஞ்
சந்தாற் கொணர்ந்துண்ணு மோவண்ண லேதடங் கோடிதொறு
நந்தார்க்குங் காவிரி நாடன் குலோத்துங்க னுகைவெற்பிற்
செந்தார்க் குழலிக்கு நீயே விளம்புநின் சிந்தனையே.



### பாங்கியைத் தலைவன் பழித்தல்.

114. நாற்று ரணிபணி கோழிக் குலோத்துங்க னுடனையாய்
தேற்று தவட்கென் குறைகூறென் றுயென்ற தீயவுன்சொன்
மேற்றுவு வெய்யில் சுடும்போது காய்ந்தநெய்ம் மேல்விடனு
மாற்றுத புண்ணுக் கழல்வே லுழைத்தது மாய்விட்டதே.

### பாங்கி பேதைமை யூட்டல்.

115. வெஞ்சா வுயிருக்குண் டாகவெய் தூனுண்ணும் வேடர்கன்னி
யஞ்சாளுன் சோர்வை யறிந்தண்ண லேகதி ராயிரந்தோய்
செஞ்சாலி யங்கதிர்த் தஞ்சைக் குலோத்துங்கன் சென்னிவெற்பி
னஞ்சா மரக்கனியி ன்னமு தாவதிந் நாட்டில்லையே.

### காதலன்றலைவி மூதறிவுடைமை மொழிதல்.

116. மீன்போத வெங்கண்ட கோழிக் குலோத்துங்கன் வெற்பனையாய்
தேன்போது சொல்லியைப் பேதையென் றுய்சிந்தை வாட்டமுடன்
யான்போதக் கண்டுகண் ணீருகுத் தாளின் புனத்தயனீ
தான்போதக் கண்டந்த நீர்துடைத் தாளிடைத் தானைகொண்டே.

### பாங்கி முன்னுறு புணர்ச்சி முறையுறக் கூறல்.

117. முன்னே திருவரப் பெற்றோ ரொருவர்தம் முன்புகழ்ந்து
பின்னே திருவென் றிரப்பர்கொல் லோபெருந் தாமரைச்செம்
பொன்னே புணருங் குலோத்துங்கச் சோழன் புகாரண்ணலே
மின்னேயுன் சோர்வறிந் தாற்பிறர் பாலென்கொல் வேண்டுவதே.

### தன்னிலை தலைவன் சாற்றல்.

118. எத்தா மரையும்பைந் தேனுக்குந் தேனல்கு மென்னுஞ்செவ்வி
மொய்த்தா யிரங்கதிர் தந்ததன் றோமுது பாவலவர்
புத்தா ரமுதங் குலோத்துங்கச் சோழன் புகாரனையா
ளொத்தாலு நீயன்றி யுண்டோ புணர்ப்பவ ரொண்ணுதலே.

### பாங்கி யுலகியலுரைத்தல்.

119. வாயிற் பலசொல்லி யென்னோ வுனதுமெய்ம் மாண்பணிக்கே
லாயிற் பிறிதொன் றியம்புகின் றேனம்பு சாதமலர்க்
கோயிற் கொடிகொண்ட மார்பன் குலோத்துங்கன் கோழிவெற்பா
தீயிற் கரியினல் லாதிணங் காதெங்கள் செய்யபொன்னே.

### உலகியலைத் தலைவன் மறுத்தல்.

120. மண்மேன் முகுந்தன் குலோத்துங்கச் சோழன் வயலுறந்தைப்
பெண்மேன் மணஞ்செய்து கூடுகென் றுய்பெருந் தீவயிற்றுக்
குண்மே விராப்பகற் கிட்டாது வாடு மொருவற்கந்த
விண்மே லமுதுவந் தோபசி தீர்ப்பது மெல்லியலே.

### இதுவுமது.

121. ஆறே யிழுக்கப் படுவார்க்கொ ரோட மமைப்பதற்குத்
தூறே செறிவனஞ் செய்வதொப் பாந்தொல்லை வாவியிரு
கூறே படக்கண்ட வில்லான் குலோத்துங்கன் கோழிவெற்பின்
மாறே யறிய மணஞ்செய்து கூடென்கை வாணுதலே.

---

## VEDANTA DESIKA.

## வேதாந்த தேசிகன் வைபவம்.

---

(340-ஆம் பக்கத்தொடர்ச்சி.)

ஈதிங்ஙனாக,—பிற்பட்டுத் திருவரங்கத் திருப்பதியின்கண் பல்லவாய மாயவாதி வித்வான்க ளொருங்கே குழுமியாண்டுப் பரம ஸாதுக்களாம் வைஷ்ணவ மணிகளை யண்மி யன்னாரைநோக்கி நீவிர் எமது வினாக்களுக்கேற்ற விடைகடாவுவிரேல் நும்மிராமாநுஜமதந் தலைப்படும். அன்றேல், மாறுபட் டெமது மதச்சார்பினராவதற்கிடனாம் எனப் பிரபல நிர்ப்பந்தானுஸாரிகளா யிருந்துழி, ஈதோர்ந்தாராய நம்மிராமாநுஜமதச் சார்பினராவா ரொன்று மோர்கிலாது தியங்கிச் சுதர்சனபட்ட ரென்பாரை யடைந்து தங்குறை யைச் செப்பலும், அஃதுணர்ந்தபட்டர்: வம்மின் உத்தம பிரம்மகுல மணி காள்! தியங்கன்மின். நீவிர் புரியற்பால தொன்றுளது:—அம்மாயாவாதி களின் கருத்தொழிக்க வல்லார் நந்தூப்பிற்பிள்ளையே; வேறுவாரின்றாம். (மேலும், முன்னநங்குரவர் குலோத்துங்கமா வெழுந்தருளியிருந்த பாஷ்ய காரருக் தமக்குப்பின் வேதாந்ததேசிகராவிர்ப்பவிப்பாரென வவராதயுற்பத் த்வம்ஸகோளரி" யென்ற திருநாமத்தினையு மெய்தப்பெறுவா ரெனவு மறைந்தபோந்ததனைக் கேட்டிருந்த அம்மாளென்பாரது அநுக்கிரஹ விசே டத்தைக்கொண் டிவிருத்தராக் கச்சியம்பதியில் ஸித்தாந்தப் பிரவசனஞ் செய்



தராய் எழுந்தருளியிருக்கின்றார்.) அம்மானுபாவனைக்கொண்டே நாம் நஞ் சித் தாந்தநிர்வாகஞ் செய்துகொள்ளக்கூடுமெனா, அங்ஙனேயவ்வைணவருந்தேறி செங்கோலராகிய திருவரங்கச் செல்வனார் சேனாபதியான விஷ்வக்ஸேனாது சாஸனமாக శ్రీమచ్ఛ్రీరంగనాథస్య విష్వక్సేనస్య శాసనం। తత్ప్రభృతి తద్భృత్యానాం శిరోభూషణతాంగతం ॥ என்றொரு திருமுகப்பட்டயத்தைக்கையேற்றவராய்ப் பிள்ளையிருந்த விடத்தேகி யன்னார்பா லீந்தவளவில், கவிதார்க்கிகஸிம்மமந் திருமுகஸாமத்தைத் தஞ்சென்னியிற் சூடிப் பல்கால் மனப்பிரவணராயதித் வரையாய்த் திருவரங்கநகரையடைந்து உபகோத்திரிட்டமாங்காவிரியிலாடி திருக்கரம்பனூநந்தயனைத் தீர்க்காஞ்சலிபுரிந்து மீளவுங் கோயிலைக்கண்ணுறக் கண் டானந்தித்தவராய்,

> ஆராத வருளமுதம் பொதிந்த கோயி
> லம்புயத்தோ னயோத்தி மன்னர்க் களித்த கோயில்
> தோராத தனிவீரன் றொழுத கோயிற்
> றுணையான வீடணர்க்குத் துணையாங் கோயில்
> சேராத பயனெல்லாஞ் சேர்க்குங் கோயிற்
> செழுமறையின் முதலெழுத்துச் சேர்ந்த கோயிற்
> றீராத வினையனைத்துந் தீர்க்குங் கோயிற்
> றிருவரங்க மெனத்திகழுங் கோயிற் றனே.

என்றிதுபோன்ற பாசுராதிகளை யனுஸந்தித்துக்கொண் டிராநின்றுழி தம்மை (கோயிலாவோ ரொருங்கீண்டி மிகக்களியாட்டி லயர்ந்தாராய்த் திருவரங்க நாதனது திருமாலையாதியவைகளை கைக்கொண் டட்டாவகைப் பல்லிய முழக்கினொடு) எதிர்கொண்டு நன்முகனியம்பி யிற்றலு, மிதனுள் முன்னங் கூறிய சுதர்சனபட்டரென்பார் திருமாலையாதிகளைப் பிள்ளையாலீந்து அன்னா ரது பரிநாமங்களைக் கிளத்திக் கொண்டாடி ஸ்வாமின்! పరిత్రాణాయ సాధూనాం என்பது ஸம்ராட்டான ஸ்ரீமந்நாராயணனுக்காயினும் இங்ஙனம்விதே யர்களுக்காக் கொள்ளல் நுங்கடனாம்; என்னையெனின்:-யானோ வயோதிகனு மசத்தனுமாயினேன். ஈண்டோ மாயாவாதிகளது கொடுமைகள் மிகாநின் றன. அன்னவைகளை யாற்றவிப்பா னுற்பவித்த நும்மையல்லாது எம்போ லியரா லாற்றவொண்ணு. அல்லாமலும், முன்ன மெம்பெருமானார் புரிந் தருளிப்போந்த ஸித்தாந்த ப்ரவசனம் போன்று தாமுமிங்ஙனமங்ஙனமாக்க நம்மழகிய மணவாள ரருளிப்போந்துள்ளாரென, வித்வன்மணியான ஸ்ரீநிக மாந்தகோளரியா ரந்நியமனத்தைச் சிரஸாவகித்து யானுய்ந்தேனெனச் சாலவும் ப்ரதக்ஷிணமாக் கோயிலுட்புக்காங்கு மடங் (మఠం) கொடுஞான முத்திராங்கரா வெழுந்தருளியிருக்கு மெம்பெருமானாரையும், ஆழ்வாராசாரி யர்களையு நமஸ்கரித்து உடையவரது கடாக்ஷம் பெற்றாராய் மீளவுந் திருவ ரங்க நாச்சியாரை நமஸ்கரித் தட்சென் றங்கணெம்பிரானது கருணாரஸார்

னவமென வொளிருஞ் சந்திரபுட்கரிணியைத் தொழுது வலமிட்டுப் பலி
பீடத்தருகே ஸேவித்து అస్మద్దేశికమస్మదీయం என்கிற ச்லோகத்தால் குரு
பரம்பாராநு ஸந்தானஞ்செய்து திருமணற்றூணருகே நின்று ஜகத்பிதாவும்
ஸர்வேச்வரனும், ஸ்ரீயப்பதியுமான பெரிய பெருமாளையும், அழகிய மணவா
ளனையும் அமலனாதிப்பிரான்படியே கண்ணாரக்கண் டேற்றித்தொழுது ஈறி
லின்பத்திருவெள்ளம் யான் மூழ்கினேன்'—என்கிறபடி பவசராயிருந்தழி
யரங்கத்தமுதனுவந்தருளி நீவிர் நம்மிராமாநுஜனைக்கடுப்ப பரமத நிரஸன
பூர்வகமாக ஸ்வமதஸித்தாந்தத் தாபகஞ்செய்மினெனவருளி தீர்த்தாதிகளைப்
பிரஸாதிப்பிக்கப் பிள்ளையானுய்ந்தே னெனத் தொழுதகையொடவைகளைப்
பெற்றாரயங்ஙனே விஷ்வக்ஸேனரோடு பெரிய திருமண்டபத்தில் வீற்றிரு
த்தலும், முன்னஞ்சாற்றிய மாயாவாதிகள் மிக்க மனத்தழுக்கா றடைந்து
பிள்ளையொடு ஒருவாரங்காறும் வாதிட்டுத்தோற்றாராய் வேறுவகையின்றிப்
பிள்ளையின் திருவடிப்போதுகளி லிடைபறாது ப்ரவணராக்கிடந்தனர். இன்
னண மவ்வெழுநாட்களு நிகழ்ந்த வாதானுவாதங்களைக்கொண்ட பட்டோலை
யைப் பேரருளாளையர் எட்டாநாள் பிள்ளையாளிட்டலும், அவைகளை யுற்று
நோக்கிய பிள்ளை யிதற்குச் சததூஷணி யென்ற பெயர் சூட்டினோம் என்ன
லும், அவ்வரங்கநாதனு நன்கேயுவந்தருளி நிகமாந்தாரியனை நோக்கி,—'நீ
விர் நமது ஸ்ரீயப்பதித்வாதி குணநிரூபகமான இராமாநுஜ ஸித்தாந்தத்தை
நிலைப்படுத்தி வைரிகளை நிராகரித்தமையால் நம்மொருவருக்கே வுரித்தாகிய
'வேதாந்த தேசிகர்' என்ற திருநாமத்தை யின்றுதொட்டு நீவிரேபெறக்கடவீ
ரெனச்சாற்றித் திருமாலைத் திருப்பரிவட்டமாதியவைகளை யளிப்பித்து உபய
வேதாந்தங்களையும் ப்ரவசனம் பண்ணிக்கொண் டுண்டிருமென, (ஈதுணர்ந்த
சுதர்சனபட்டராதியோர்களும் பெருமானியமனத்தை யிடேற்ற வேண்டு
மென) அங்ஙனே யாகுகவென் றரங்கநாச்சியாரைத் தொழ, நாச்சியாருமின்
னாதுஸித்தாந்த நிர்வாகத்தையும், பெருமான் ப்ரஸாதித்தருளிய திருநாமத்
தினையுங்கண்டு சாலவும் வியந்து பிள்ளையை விளித்து 'தந்திர மனைத்தினையும்
வல்ல நுமக்கு யாம் 'ஸர்வதந்த்ர ஸ்வதந்த்ரர்' என்ற நவநாம மருளினம்
கொண்மின்' என்னலும், சுதர்சனபட்டராதியோர் பேரானந்தங்கொண்டாட
கிருதார்த்தராய்த் தமக்காக்கிய விடுதியிலெழுந்தருளி யிருந்தனர்.

பின்பொருநா ளித்திருவேங்கட நாதாசாரியர் துயின்றிருந்தழி யின்ன
வரது கனவின்க ணுடையவ ரெழுந்தருளி குளிரக் கடாக்ஷித்து ப்ரபலமாய
திருமந்திர மந்திரார்த்தங்களையும். ஸ்ரீபாஷ்ய பகவத்விஷயங்களையும் ப்ரவச
னஞ்செய்துகொடு இவ்வர்த்தங்களனைத்தையு மொருங்கே சுப்ரதிட்டிதமாப்
பெற்று நுமக்குப் பிற்பட்டோ ருய்யற்பாலதாய பல ப்ரபந்தரத்நங்களை யியற்
றக்கடவீரென வாக்ஞா பூர்வகமாக வாசிகூறிக் கரந்தருளினர். அக்கணமே
கனவாக்கொண்ட நந்தேசிகனார் சடக்கெனத்துயிலாற்றித் தாமாப் புன்முறு
வல்பூத்து ஆசிரியத்தவுத்தியஞ் செய்துகொ டவ்விரவை நீத்து வைகறை



யாமத்துச் செய்கடைத்தடஞ்சென் றுங்கண் டமக்குரிய காலக்கடன்களை
முற்றவாற்றி யாண்டிருந் துடையவ ரால்பம்புக் காங்குள வெம்பெருமானு
ரது திருவடிப்போதுகளி லட்டாங்க ஸஹிதம்பிரணாமஞ்செய் தன்னாது திவ்
யமங்கள விக்ரஹத்திலுந் திவ்யமங்கள சேட்டிதங்களிலு மீடுபட்டுப் பரவச
ராயிருந்தனர். அன்னவமயம் உடையபாது சைத்திரமதித் திருவிழாவாயிரு
ந்தது பற்றிச் சேவாபேக்ஷிதர்களாய துப்பிற்பிள்ளையைக் கிட்டி வந்தனபூர்
வமாவவரை நோக்கி 'அடியோங்களது மனத்தும் நும்போன்ற வனுபவம்
நிறவுமாறு தகைமைசான்ற சுதந்தரமொன்றனை யருளிச்செயவேண்டு'மென்
றிரங்கலும், ஆண்டிருந்தே வேதாந்த தேசிகனாருங் கடல்புடைஞாலங்களி
பேருவகை பூப்ப வையந்திரிபற யாவரு மொப்ப யதிராஜஸப்ததி யென்ற
திவ்ய கிரந்தமொன்றனைச் சாற்றுவிற்றலு, மிதனைநிர்த்துட்ட ப்ரபாவாதிக்
கமோர்ந்த நம்மெம்பெருமானார்ப்பேரானந்த மெய்தியவராய்ப் பிள்ளையைச்சா
லவுமுவந்து முதனாளிரவேபோன்று ஆசிசொற்று தீர்த்தாதிகளைப்பிரஸாதிப்
பித்தலும் மங்கீகரிதரான தேசிகனாரவ்வாக்கினுக்கிணைப்படியே பரமதநிர
ஸநமும், ஸ்வமதத்தாபனமுமாக தத்வமுக்தாகலாபம் என்ற நூலையும், அதன்
வ்யாக்யானமான ஸர்வார்த்தஸித்தியையும், ந்யாயஸித்தாஞ்சனம், ந்யாயபரி
சுத்தி, ஸேச்வரமீமாம்ஸை, மீமாம்ஸாபாதுகை, ஸ்ரீபாஷ்யவிவரணமான
தத்வடிகை, அதிகரணதர்ப்பணம், அதிகரண ஸாராவளி, ஸ்ரீகீதாபாஷ்ய
விவரணமான தாத்பர்யசந்த்ரிகை, ஈசாவாஸ்யோபநிஷத்வ்யாக்யானம்,
ஸச்சரித்ரரக்ஷை, ஸ்ரீபாஞ்சராத்ரரக்ஷை, கீதார்த்தஸங்க்ரஹரக்ஷை, நிக்ஷே
பரக்ஷை, ரஹஸ்யரக்ஷை, ஹரிதினதிலகம், பூகோளநிர்ணயம், பூகோளநிர்
ணயவ்யாக்யானம் ஆகிய ஏனைய கிரந்தரத்னங்களைச் செய்தருளி யுடையவரது
திருவுளக்கருத்தைப் பிரகாசிப்பித்துக்கொண் டெழுந்தருளியிருந்தனர். பின்
னர், ஸ்ரீஸ்துதி, பூஸ்துதி, நீளாஸ்துதி, தசாவதாரஸ்தோத்திரம், ஆகிய இவைக
ளைச்செய்தருளினர்.

(இன்னும் வரும்.)

கே. இரங்காசாரியர்.

## EDITORIAL NOTES.

## பத்திராதிபர் குறிப்புக்கள்.

ஞானமேனும் ஐசுவரியம்:—

பூர்வத்தில் வேதாதிகாரிகளான உர்க்கதரிசிகளினாலும், ரிஷிகளினாலும், பின்னர்ப் போந்த மகாத்துமர்களான அநேக ஆசார்யர்களினாலும், ஞானிகளினாலும் ஆஸ்தியென வைக்கப்பட்டுள்ள ஞானைசுவரியத்தை ஸ்வீகரிப்பது எப்போழ்தும் மிகுந்த உத்தரவாதத்திற்கிடமான காரியமாகவே இருந்திருக்கவேண்டும். ஆயினும் நம் தேசத்துச் சரித்திரத்திலமைந்துள்ள சில சந்தர்ப்ப விசேஷங்களினால் மேற்சொல்லிய பொறுப்பின் பளுவு எப்போழ்தினும் இப்போழ்து மிகவும் அதிகமாகின்றது. காலம் மாறியிருக்கின்றதென்பது நாமறிந்த விஷயமேயன்றோ? காலத்தின் வேற்றுமைக்குக் காரணம் நம்மையாளும் அரசனேயாவன். "ராஜா காலஸ்ய காரணம்" என்று மகாபாரதம் போதிக்கின்றதன்றோ? மகமதியர் இந்தியாவுக்குவந்து இங்குத் துரைத்தனம் நடத்தியதுமுதல், ராஜநீதியென ஹிந்து தர்ம சாஸ்திரங்களிற் கூறத்படும் பழைய சட்டதிட்டங்கள், க்ஷத்திரியர்கள் இந்நாட்டில் அரசுசெலுத்திய காலத்திலிருந்ததுபோல, அனுஷ்டிக்கப்பட்டில. தற்போது நமது சக்கிரவர்த்தியோ கிறிஸ்துமதத்தவராவர். ஆதலின் ஆங்கிலச் சட்டமானது ராஜகீய கட்டுப்பாட்டு விஷயத்தில் இந்தியர் தர்மசாஸ்திரத்தை யனுசரித்திருக்கவில்லை. இது தற்காலத்து ராஜதந்திரத்துக்கானதொரு குறையென யான் கூறப்போந்தவனல்லேன். இஃதொரு குறையாகாது. யோசித்துப் பார்க்குமிடத்து, இந்தியாவிலமைந்துள்ள ஆங்கில ராஜநீதிக்குரிய மதப்பற்றற்ற தன்மையும் சாஸ்திரத்திற்கியைந்த லௌகிக லக்ஷணமும் நமது தற்போதிய நிலைமையில் நமக்கு அதியாவசியமானவையென நாம் வியப்புறக் கடவோமென நீங்களே தெளிவீர்கள். இதனை நான் இங்கெடுத்துக் கூறுவதன் கருத்து இவ்வாறு மதத்தினின்றும் ஸமூகக் கட்டுப்பாட்டினின்றும் ராஜகீயம் வேறுபடுத்தியதனால் குடிகளின் மதத்தையும் ஸமூகச் சீரையும் ஒழுங்காய்ப் பாதுகாப்பது அந்தக் குடிகளின் கடமையே யாகின்றதென்பதை விளக்குவதேயாம். இப்பொழுது அவர்கள் அந்தக் கடமையை ராஜாங்கத்தாரது சகாயம் சிறிதுமின்றி அதிகாரப் பாங்கின்றித் தாங்களே செய்து நிறைவேற்ற வேண்டியிருக்கின்றது.

* * *

நூதனமாய்க் கண்டுபிடிக்கப்பட்டிருக்கும் யந்திரங்கள்:—சென்ற வருஷத்தில் நூதனமாய்ச் செய்யப்பட்டிருக்கும் யந்திரங்களுள் 62-இருப்புப் பாதை சம்பந்தமாய் செய்யப்பட்டவைகள். 21-மின்சார விசை சம்பந்தமுள்ளவைகள். 17-தையிலைச் சம்பந்தமுள்ளவைகள். 13-நாரெடுக்கும் யந்திரங்கள். 10-பங்கா ஆட்டுங் கருவிகள். 2-அவுரியிலிருந்து சாயமெடுக்கும் தொழில் உபயோகமாகக் கூடியவைகள். அவ் யந்திரங்களைப் பதிவு செய்வதற்காக 1901ஹுத்தில் கிடைத்ததுபோலச் சென்ற வருஷத்தில் கவர்ன்மெண்டாருக்கு ரூ. 45,000 கிடைத்தது.


# ஞானபோதினி.

ஒரு மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

தாமின் புறுவ துலகின் புறக்கண்டு
காமுறுவர் கற்றறிந் தார்—திருக்குறள்.

சம்புடம் VI. } 1903ஹு ஜூன்மீ 20உ { இலக்கம் 11.


## THE MADURA TAMIL SANGAM.

## மதுரைத்தமிழ்ச்சங்கம்.

செந்தமிழ் நாட்டின் தலைநகரும் முன்னர்ச்சங்கமிருந்து தமிழாராய்ந்ததுமான இம்மதுரை மாநகரில் ஸ்தாபிக்கப்பெற்ற இச்சங்கம், தனது பலவகைப்பட்ட துறைகளிலும் செழிப்படைந்து 1903ஹு மேமீ 24உ யன்று தன்னிரண்டாவது ஆண்டுநிறைவைப் பெற்று விளங்கிற்று. அவ்வப்தபூர்த்தி மஹோற்சவத்தைக் கொண்டாடுதற்பொருட்டு இத்தமிழ்நாட்டின் பற்பல இடங்களினின்றும் வித்வசிரோமணிகள் பலரும் மற்றுந் தமிழபிமானிகளும் வந்திருந்தார்கள். இச்சங்கம் நடைபெறும், அக்கிராசனாதிபதியவர்களுபதிடைய அழகிய பெரியமாளிகை நன்று யலங்கரிக்கப்பட்டுக் கண்கவர் வனப்புடையதாயிருந்தது. மாலை 3-மணிக்கு எல்லாரும் ஒன்று கூடியபின்னர், முதலில் சிற்றுண்டிமுதலியன வழங்கி உபசரிக்கப்பட்டன. அதன்பின், அனைவரும் மகாசபையிற்குழுமி அளித்த அற்புதக்காட்சி இச்சங்கத்திற்கு இனியுண்டாகும் ஆக்கத்திற்கும் ஊக்கத்திற்கும் உண்மையான அறிகுறியாகவேயிருந்தது.

அப்பொழுது இச்சங்கத்து அக்கிராசனுதிபதியவர்களாகிய ஸ்ரீமாந் பி. பாண்டித்துரைத்தேவரவர்கள் எழுந்து, திருச்சிராப்பள்ளியில் எஸ். பி. ஜி. காலேஜ்போதகாசிரியரும், செந்தமிழுணர்ந்த சீரியோருமாகிய ப்ரும்மஸ்ரீ-பி. குருராயரவர்களை அம்மகாசபைக்கு அக்கிராசனம் வகிக்க வேண்டினார்கள். அவர்கள் வேண்டுகோட்கிணங்கி, ராயரவர்கள் அக்கிராசனம் வகித்தார்கள். அப்பொழுது, இச்சங்கம் என்றும் நிலை பெற்று நீடூழிவாழ்க என்ற வாழ்த்துடங்கிய, இச்சங்கத்துப் பரிபாலகரான சேதுவேந்தரவர்களின் கடிதம் கரவொலியுடன் வாசிக்கப்பட்டது. இச்சங்கத்தின் வருஷோற்சவத்துக்கு வரமுடியாத வித்வான்களிற்சிலர், சங்கத்தக்கிராசனுதிபதியவர்கட்கு எழுதிவிடுத்த வாழ்த்துக்கடிதங்களும் படிக்கப்பட்டன. முதற்கண், ராயரவர்கள் தமக்குக்கிடைத்த ஸ்தானவிஷயமாகச் சில பேசியபின்னர், இச்சங்கத்தின் இரண்டாம் வருஷத்து அறிக்கைப் பத்திரம், சங்கத்துக் காரியதரிசியாகிய ஸ்ரீமத். டி. வி. ஸ்ரீநிவாஸய்யங்காரவர்களால் வாசிக்கப்பட்டது. அதன்பின், ராயரவர்கள் அங்கு வந்திருந்த வித்வான்களை அம்மகாசபையில் உபந்நியசிக்குமாறு கேட்டுக்கொண்டார்கள். அவ்வாறே, முதற்கண், ஸ்ரீவில்லிபுத்தூர் ஸ்ரீமத். எம். ஆர். ஸ்ரீநிவாஸையங்காரவர்களும், அடுத்து, இச்சங்கத்தின் உபாக்கிராசனுதிபதியும், இந்நகர்ப் பிரபல வக்கீல்களுளொருவருமாகிய ஸ்ரீமத். பி. எஸ். சுப்பிரமண்யஐயரவர்களும், பின்னர் கோயம்புத்தூர் சென்ற் மிக்கேல் காலேஜ் போதகாசிரியரும், சென்னை ஞானபோதினிப் பத்திராசிரியருமாகிய ஸ்ரீமத். எம் எஸ். பூர்ணலிங்கம்பிள்ளை யர்களும், அதன்பின், திருநெல்வேலி இந்துகாலேஜ் தலைமைத் தமிழ்ப் பண்டிதர் ஸ்ரீமத். தி. ப. சிவராமபிள்ளையவர்களும் இச்சங்கத்தின் அபிவிருத்திக்கேற்ற பற்பல விஷயங்களைக்குறித்து உபந்நியஸித்தார்கள். பின்னர், அக்கிராசனுதிபதியாகிய ஸ்ரீமாந் ராயரவர்கள் தமிழ்ப்பாஷையின் பெருமையையும், அதனைவளர்த்தற் கெழுந்த இச்சங்கத்தின் மாட்சியையும்பற்றியாவரும் மகிழப் பேசினார்கள்.

முடிவில், போனகிராப் என்னும் யந்திரத்தினால் இனிமையாகிய பற்பலபாடல்களும், புல்லாங்குழல், பிடில் வாத்தியங்களும் அங்கு நிறைந்திருந்தோர்களை ஆனந்தக்கடலுள் ஆழ்த்தின. சபையில் வந்திருந்தோர்க்குச் சந்தனம், பூ, வெற்றிலை, பாக்கு முதலியன வழங்க



ப்பட்டன. பின்னர், இச்சங்கத்தக்கிராசனுதிபதியவர்களால் இவ்வருஷோற்சவத்திற்கூடிய மகாசபைக்கு அக்கிராசனம் வகித்த ஸ்ரீமாந்-குருராயரவர்கட்கும், மற்றும் சபையோர்களுக்கும் வந்தனமளிக்கப்பெற்றது. இஃதுடன் மாலை 6. மணிக்கு அன்றுசபைகலைந்தது.

## தீர்மானங்கள்.

### 1. (i) ஆங்கில கலாசாலைத் தமிழ்ப் பரீக்ஷை.

1. ஆங்கிலகலாசாலை மாணாக்கர்க்கு இச்சங்கத்தாரால் நடத்தப்படும் மெட்ரிக், எப். ஏ, பி. ஏ. பரீக்ஷைகட்குக் கேட்டற்குரிய வினாக்கள், சர்வகலா சங்கத்தாரின் வினாக்களைக்காட்டிலும் சிறிது கடினமாயிருத்தல் வேண்டும் ; வினாப்பத்திரிகைகளைக் குறித்துப் பரீக்ஷகர்கள் வேண்டுமாயின் ஒன்றுகூடி ஆலோசித்தலும் வேண்டும் என்று எம். எஸ். பூர்ணலிங்கம் பிள்ளையவர்களாற் பிரேரேபிக்கப்பட்டு, எஸ். பால்வண்ண முதலியாரவர்களால் ஆமோதிக்கப்பட்டுச் சபையோரனைவராலும் அங்கிகரிக்கப்பட்டது.

2. பரீக்ஷகர்களையும் பரீக்ஷை மேற்பார்ப்போர்களையு நியமிக்கவும் மற்றும் பரீக்ஷைவிதிகளில் வேண்டிய சீர்திருத்தங்கள் செய்யவும், பி. பாண்டித்துரைத் தேவரவர்கள், பி. குருராயரவர்கள் எம். எஸ். பூர்ணலிங்கம் பிள்ளையவாகள, உ. வே. சாமிநாதையரவர்கள், வை. மு. சடகோபராமாநுஜாசாரியா ரவர்கள் ஆகிய ஐவரையும் காரிய நிர்வாக சபையாராக ஏற்படுத்தவேண்டுமென்று எஸ். சாமிநாதையரவர்களாற் பிரேரேபிக்கப்பட்டு ஆர். இராகவையங்காரவர்களால் ஆமோதிக்கப்பட்டது.

3. ஏற்படுத்தப்படும் காரியநிர்வாக சபையார் ஈண்டே கூடித் தங்களுக்கு இட்டவேலையை விரைவில் முடிக்கவேண்டியிருத்தலால் இங்குத் தற்காலம் வந்திருக்கும் வித்வான்களுக்குள்ளே சிலரைத் தெரிந்தெடுத்துக்கொள்ளுதல் காரியம் விரைவில் நடந்தேறுதற்குச் சௌகரியமாகும் என்று அக்கிராசனுதிபதியவர்கள் கேட்டுக்கொண்டதன்பின்னர், உ. வே. சாமிநாதையரவர்கட்கும் வை. மு. சடகோபராமாநுஜா சாரியாரவர்கட்கும் பிரதியாக எஸ். பால்வண்ணமுதலியரவர்களையும், நா. கதிரைவேற்பிள்ளையவர்களையும் நிர்வாகசபையாராக நியமித்தல்வேண்டுமென்று எம். ஆர். ஸ்ரீநிவாஸையங்காரவர்கள் சொல்ல, அதனைச் சபையோர் அங்கிகரித்தார்கள்.

**காரியநிர்வாக சபையார்.**

1. பி. பாண்டித்துரைத் தேவரவர்கள்.
2. பி. குருராயவர்கள்.
3. எம். எஸ். பூர்ணலிங்கம்பிள்ளையவர்கள்.
4. எஸ், பால்வண்ண முதலியாரவர்கள்.
5. நா. கதிரைவேற்றள்ளையவர்கள்.

4. இச்சங்கத்தாரால் மெட்ரிக், எப். ஏ, பி. ஏ. வகுப்பு மாணாக்கர்கட்கு ஏற்படுத்தியுள்ள பரீக்ஷைகட்கு முறையே நான்கு, ஆறு எட்டு அணாக்கள் கட்டணத்தொகையாக வைக்கவேண்டுமென்று பி. குருராயரவர்களால் பிரேரேபிக்கப்பட்டு, பி. எஸ். சுப்ரமணிய ஐயரவர்களால் ஆமோதிக்கப்பட்டுச் சபையோரனைவராலும் அங்கிகரிக்கப்பட்டது.

5. எப். ஏ. பி. ஏ. மாணாக்கர்கட்கு ஏற்படுத்தியுள்ள பரீக்ஷைகளை நவம்பர்மீ இரண்டாஞ் சனிக்கிழமையன்று நடத்தவேண்டுமென்று திருமயிலை-சண்முகம் பிள்ளையவர்களாற் பிரேரேபிக்கப்பட்டு, பி. குருர்ராயரவர்களால் ஆமோதிக்கப்பட்டுச் சபையோரனைவராலும் அங்கிகரிக்கப்பட்டது.

6. மெட்ரிகுலேஷன் மாணாக்கர்கட்குரிய பரீக்ஷையை டிஸம்பர்மீ 8உயிலாவது, அன்று ஞாயிற்றுக்கிழமையாயின் அடுத்த தினமாகிய 9உயிலாவது, நடத்தல்வேண்டுமென்று எம். ஆர். ஸ்ரீநிவாஸையங்காரவர்களாற் பிரேரேபிக்கப்பட்டு, எம். வஸ். பூரணலிங்கம் பிள்ளையவர்களால் ஆமோதிக்கப்பட்டுச் சபையோரனைவராலும் அங்கிகரிக்கப்பட்டது.

7. பரீக்ஷை நடத்துமிடங்களாக முன்னர்க் குறிக்கப்பட்ட நகரங்களையன்றி கூடலூர் (தென்னாற்காடு); சேலம், திருவனந்தபுரம் ஆகிய இம்மூன்று நகரங்களினும் பரீக்ஷைகள் வைத்துநடத்தல் வேண்டுமென்று எஸ். பால்வண்ண முதலியாரவர்களால் பிரேரேபிக்கப்பட்டு, எஸ். சாமிநாதையரவர்களால் ஆமோதிக்கப்பட்டுச் சபையோரனைவராலும் அங்கிகரிக்கப்பட்டது.

(ii) தனித்தமிழ்ப்பரீக்ஷை.

8. இச்சங்கத்துச் சேதுபதி செந்தமிழ்க் கலாசாலைப் பரீக்ஷைகளோடொப்பத் தமிழ்மாத்திரங் கற்பவர்களுக்கு ஏற்படுத்தக்



கருதியிருக்கும் பரீக்ஷைகட்குப் பாடங்களைக் குறிப்பிட அடியிற் கண்ட வித்வான்களைக் காரியநிர்வாகசபையாராக நியமித்தல்வேண்டுமென்று அக்கிராசனாதிபதியவர்களால் பிரேரேபிக்கப்பட்டு, பி. குருராயரவர்களால் ஆமோதிக்கப்பட்டுச் சபையோரனைவராலும் அங்கிகரிக்கப்பட்டது.

1. உ. வே. சாமிநாதையரவர்கள்.
2. பி. பாண்டித்துரைத்தேவரவர்கள்.
3. பி. குருராயரவர்கள்.
4. எம். எஸ். பூர்ணலிங்கம்பிள்ளையவர்கள்.
5. ஆர். இராகவையங்காரவர்கள்
6. வை. மு. சடகோப ராமாநுஜாசாரியாரவர்கள்
7. திரு. நாராயணையங்காரவர்கள்
8. வி. கோ. சூரிய நாராயணசாஸ்திரியாரவர்கள்
9. திருமயிலை-சண்முகம்பிள்ளையவர்கள்
10. எஸ். பால்வண்ணமுதலியாரவர்கள்
11. நா. கதிரைவேற்பிள்ளை யவர்கள்
12. எம். ஆர். ஸ்ரீநிவாஸையங்காரவர்கள்
13. ரே. அப்புவையங்காரவர்கள்.
14. தி. ப. சிவராமபிள்ளையவர்கள்.

II. நூல்கள் அச்சிடும் விஷயம்.

1. நூல்கள் அச்சிடும் விஷயத்தில் இச்சங்கத்தின் பொருள் வருவாய்க்கும் மற்றைச்சௌகரியங்கட்கும் ஏற்பஎந்தெந்த நூல்கள் அச்சிடலாகுமென்று அக்கிராசனாதிபதியவர்கள் அபிப்பிராயப் படுகின்றார்களோ அவ்வந்நூல்களையே வெளியிடவேண்டுவது என்று ஆர். இராகவையங்காரவர்களாற் பிரேரேபிக்கப்பட்டு, எஸ். சாமிநாதையரவர்களால் ஆமோதிக்கப்பட்டுச் சபையோரனைவராலும் அங்கிகரிக்கப்பட்டது.

2. வை. மு. சடகோபராமாநுஜாசாரியாரவர்கள் இச்சங்கத்துக்கு நன்கொடையாகப் புத்தகங்கள் அனுப்பி உபகரித்தமை, அக்கிராசனாதிபதியவர்களால் வெளியிடப்பட்டபின் நன்கொடையளித்தவர்க்குச் சபையோரனைவராலும் வந்தனஞ் செலுத்தப்பட்டது.

இந்தச் சமையம் காலை-11-30 மணி ஆகிவிட்டமையால் மாலை 4-மணிக்கு மற்றுங் கூடுவதாக உத்தேசித்துச் சபைகலைந்தது.

காலை வந்திருந்த வித்வான்கள் அன்றியும், வி. கோ. சூரிய நாராயணசாஸ்திரியாரவர்களும், எட்டயபுரம் வீராசாமி ஐயங்காரவர்களும், திருச்சி டி. சவரிராயபிள்ளையவர்களும் வந்திருந்தார்கள்.

## III. நூற்பரிசோதனை.

இச்சங்கத்து வித்வான்களாற் பரிசோதிக்கப்பட்டுச் சங்கத்து அச்சிடும் நூல்களின் முதற்பதிப்பில், அச்சுக்கூலி, காகிதமுதலிய செலவுகளுக்குத்தக்க பிரதிகளைச் சங்கத்திற்கு எடுத்துக்கொண்டு எஞ்சியவற்றில் அரைப்பங்கைச் சங்கத்திற்கும், மற்றையரைப்பங்கை நாலியற்றிய அல்லது பரிசோதித்த வித்வான்கட்குங்கொடுக்கலாகுமெனவும், இரண்டாம்பதிப்பில் முன்னிலும் விசேடமாக அச்சிடுவதாயின் மூன்றிலிரண்டுபங்கைச் சங்கத்திற்கும் மூன்றிலொருபங்கை அவ்வித்வான்கட்கும் கொடுக்கலாகுமெனவும் சென்ற வருஷத்துச் சங்கக்கூட்டத்திற் றீர்மானிக்கப்பட்டிருப்பதில்; ஷை வித்வான்களுக்கு உரியபங்கைப் பிரதிகளாயல்லது புத்தகவிற்பனை வருவாயினின்றும் ஏற்பட்ட ஈவைப்பிரித்துக்கொடுக்க வேண்டுமென்று எம். எஸ். பூர்ணலிங்கம் பிள்ளையவர்களால் ஆமோதிக்கப்பட்டுச் சபையோரனைவராலும் அங்கீகரிக்கப்பட்டது.

## IV. மொழிபெயர்ப்பு.

பி. குருராயரவர்கள் சம்ஸ்கிருதத்தினின்று சாகுந்தலநாடகத்தையும், எம். ஆர். ஸ்ரீநிவாஸையங்காரவர்களும், ரெ. அப்புவையங்காரவர்களும் சமஸ்கிருதத்தினின்று சாகித்தியரத்நாகரத்தையும், எம். ஆர். ஸ்ரீநிவாஸையங்காரவர்கள் தெலுங்கினின்று சுமதிசதகம் என்னுங் கிரந்தத்தையும் மொழிபெயர்த்துச் சங்கத்திற் களிப்பதாகத்தெரிவித்தார்கள்.

2. எஸ். பால்வண்ணமுதலியாரவர்கள் ஆங்கிலதருக்கசாஸ்திரம் சுருக்கமும் தி. ப. சிவராமபிள்ளையவர்கள் கிருஷிநூலும், வி. கோ. சூரியநாராயணசாஸ்திரியாரவர்கள் தம் நண்பர் சுப்பிரமணிய ஆசாரியாரவர்கள் மூலம் நவக்கிரகத்தைப் பற்றிய நூலும், எஸ். சாமிநாதையரவர்கள் தம் நண்பர் எம். நாராயணசாமி ஐயரவர்கள்



மூலம் ஆங்கிலரசாயன நூலும் இயற்றித்தருவதாக ஒப்புக்கொண்டார்கள்.

## V. நூல்தேடுதல்.

திருமயிலை வித்வான்-சண்முகம்பிள்ளையவர்கள் அடியிற்குறித்த எட்டுப் பிரதிகளைச் சங்கத்திற்களிப்பதாக வாக்குக்கொடுத்தார்கள்.

பிரதிகள்,

1. நற்றிணை.
2. குறுந்தொகை.
3. பதிற்றுப்பத்து.
4. அகநானூறு
5. குலோத்துங்கன்கோவை
6. திருவாரூர்க்கோவை
7. கழுக்குன்றக்கோவை
8. சிற்றம்பலநாடிகள் சாஸ்திரங்கள்

ஷை யாரவர்கள் குலோத்துங்கன் கோவையைப் பல பிரதிகளைக்கொண்டு பரிசோதித்து அச்சிடுதற்குரிய வண்ணஞ்செய்து அனுப்புவதாக ஒப்புக்கொண்டார்கள்

திருநெல்வேலி-ஸ்ரீமான் எஸ். பால்வண்ணமுதலியாரவர்கள் அடியிற் கண்ட எட்டுப் பிரதிகளைச் சங்கத்திற்களிப்பதாக வாக்குக்கொடுத்தார்கள்.

பிரதிகள்.

1. இரேணுவசித்தர் அகராதி நிகண்டு
2. ஆத்திசூடி (பழைய உரை).
3. கொன்றைவேந்தன் (பழையவுரை).
4. தத்துவவிளக்கம்.
5. தாளசமுத்திரம்.
6. சம்ரசம்.
7. முத்திநிச்சயம்.
8. கட்டளைக்கொத்து.

தரங்கம்பாடி வித்வான் ப. அ. முத்துத்தாண்டவராய பிள்ளையவர்கள் திருவாசகத்திற்குள்ள பழைய உரைப் பிரதி ஒன்றனுப்புவதாக வாக்களித்தார்கள்.

[இவையனைத்தும்யாவருமறிதற்பொருட்டு மதுரைத்தமிழ்ச்சங்கத்து இரண்டாம் வருஷோற்சவக்கூட்டம் என்ற பத்திரிகையினின் றெடுத் தெழுதப்பட்டன.]

பத்திராதிபர்.

## NEDUNALVADAI: A STUDY.
## நெடுநல் வாடை ஆராய்ச்சி.

நக்கீரனார் முதலிய நல்லிசைப் புலவர்களால் அருளிச் செய்யப்பட்டு அச்சான்றோராலேயே தொகுக்கப்பட்ட பத்துப்பாட்டுக்களுள் ஏழாவதாய் நிறுத்தப்பட்டது நெடுநல்வாடை என்னும் பெயரிய பண்புசால் பனுவல்.

"முருகு பொருநாறு பாணிரண்டு முல்லை
பெருகு வளமதுரைக் காஞ்சி—மருவினிய
கோல நெடு நல்வாடை கோல்குறிஞ்சி பட்டினப்
பாலை கடாத்தொடும் பத்து".

என்னுஞ் செய்யுளாற் பத்துப் பாட்டுக்கள் இவையென்பதும், மலைபடு கடாத்தில் "தீயினன்ன வொண் செங் காந்தள்" என்பதற்கு நச்சினார்க்கினிய ரெழுதிய விசேட வுரையால் இவற்றைத் தொகுத்தோர் சங்கப்புலவர்களே யென்பதும் நன்குவிளங்குகின்றன. உரைச் சிறப்புப் பாயிரத்துள், "ஆன்றோர் புகழ்ந்த வறிவினிற் றெரிந்து, சான்றோருரைத்த தண்டமிழ்த் தெரிய், லொருபது பாட்டும்" என்று சிறப்பித்துப் பாராட்டிக் கூறிய ஆன்றோர் திருவாக்கே இவற்றின் அருமை பெருமைகளை நன்கு புலப்படுத்தும்.

பத்துப் பாட்டின் இலக்கணம்

1. "நூறடிச் சிறுமை நூற்றுப்பத் தளவே
ஏறிய வடியி னீரைம் பாட்டுத்
தொடுப்பது பத்துப் பாட்டெனப் படுமே.

அதுவே

2. அகவலின் வருமென வறைகுநர் புலவர்"

என்னும் பன்னிருபாட்டியற் சூத்திரங்களுட் கூறப்பட்டுளது.

பத்துப் பாட்டுக்களுண் முதலாவதாய திருமுருகாற்றுப் படையும், ஏழாவதாய நெடுநல்வாடையும் புலவர் பெருமான் நக்கீரனாரா



லருளிச் செய்யப்பட்டன. திருமுருகாற்றுப்படை நாற்பயனாய நாற்பொருள்களுள் இறுதிக்கண்ணதாய வீடுபேறு நுதலுதலின் அதனை முதற்கட் கோத்திட்டார். அஃது வீடுபேற்றுறுதிப் பெரும்பயன் கூறுந் தெய்வப் பாட்டாதலைநோக்கிப் பதினொராந்திருமுறையில் நம்பியாண்டார் நம்பி எடுத்துச் சேர்த்துளார். நக்கீரர் சிறப்பும் அவர் அருளிச் செய்த பனுவல்களின் சிறப்பும் நம்மால் எடுத்துரைக்குந் தன்மையன வல்ல.

"ஆலவா யமர்ந்த வழனிறக் கடவுள்
செந்தமிழ் வழக்கு முந்துகின் றிசைப்பக்
சடாவிடை நிகழ்த்துந் தடாப்பெரும் பேறு
மிறைவன் கண்ட பொருள்வரம் பறிந்து
சொன்னெறி மாட்சியும் பொருணெறி மாட்சியு
மளவையின் விளைவுந் தெளிவுற விரித்துச்
சுவைபெற வுரைத்த நவையில் புலமையும்."

சீரிதினியைந்த செந்தமிழ்ப்புலவர். அவர் அருளிச்செய்த நூல்களோ,

"சொற்றொறுஞ் சுரக்கு மற்றமி லின்பமும்
பட்டாங்கு விளக்கு முட்டறு சிறப்புங்"

கொண்டு விளங்கி நிற்பன. நக்கீரனார் அருளிச்செய்த மற்றைய நூல்களாவன:—களவியல் உரை, கைலைபாதி காளத்திபாதியந்தாதி, திருவீங்கோய்மலை யெழுபது, திருவலஞ்சுழி மும்மணிக் கோவை, திருவெழு கூற்றிருக்கை, பெருந்தேவபாணி, கோபப் பிரசாதம், காரெட்டு, போற்றித் திருக்கலி வெண்பா, திருக்கண்ணப்பதேவர் திருமறம்: சில ஆசிரியர்களின் வழக்கத்திற் கேற்ப இவர் தமது திருமுருகாற்றுப் படையினையும் நெடு நல்வாடையினையும் ஒரே விதமாகத் தொடங்கியுள்ளார். ஆண்டு 'உலக முவப்ப வலனேர்பு திரிதரு. பலர் புகழ் ஞாயிறு' என்றார், ஈண்டு' வையகம் பனிப்ப வலனேர்பு வளைஇப் பொய்யா வானம், என்று தொடங்கியுள்ளார். நிற்க.

நெடுநல்வாடை என்னும் பெயர் இந்நூலுக்குப் போந்ததன் காரணந் தெரிப்பாம். நெடுவாடை என்னுந் தொடரும், நல்வாடை என்னுந் தொடரும் இயைந்து நெடுநல்வாடை என்றாயிற்று. தலைவனைப் பிரிந்திருந்து வருந்துந் தலைவிக்கு ஒருபொழுது ஓரூழிபோலத் தோன்றுதலின் அவட்கு நெடிதாகியவாடையாயிற்று. அகத்தொடுங்

கிப் போகம் நுகர்வார்க்குச் சிறந்த காலமாயினும் அரசன் போகம் வேண்டிப் பொதுச்சொற் பொருளுப், அப்போகத்தின் மனமற்று வேற்றுப் புலத்துப் போந்திருக்கின்ற இருப்பாகலின், அவற்கு நல்லதாகிய வாடையாயிற்று. ஆகவே, அவ்வாடை நெடுநல் வாடையாயிற்று.

நெடுநல்வாடை 188-அடிகளாலியன்ற நேரிசை ஆசிரியப்பாவாகின்றது. இப்பாட்டுச் சுட்டி ஒருவர்பெயர்கொள்ளாமையின் அகப்பொருளாமேனும் "வேம்புதலையாத்த நோன்காழெஃகம்" (176) எனப் பாண்டியனைக் குறிக்கும் அடையாளப்பூக் கூறினமையின், அகமாகாதாயிற்று. இப்பாட்டு நெடுஞ்செழியன் மண்ணசையாற் சென்று பொருதலின் வஞ்சிப் புறப்பாட்டாகும்; வஞ்சிக்குக் கொற்றவை நிலையுண்மையின், கொற்றவையை வெற்றிப் பொருட்டுப் பரவுதல் கூறினர்.

இனி நூலின் விடயத்தை யெடுத்துக் கூறுவாம்: ஐப்பசி கார்த்திகை மாதங்களாகிய கூதிர்க் காலத்தி னியல்பை முதல் 72-அடிகளான் விளக்குகின்றார்; எங்கும் நீர் மிகுந்திருத்தலின் கோவலர் பசுக்களை மேட்டு நிலங்களில் மேயவிடுதலும், குளிர்ச்சி வருத்துகையினாலே பலருங்கூடிக் கையிடத்திலே கொண்ட நெருப்பினையுடையராய்ப்பற்பறை கொட்டி நடுங்குதலும், விலங்குகள் மேய்தற்றொழிலைமறந் தொடுங்குதலும், கொக்கினது திரள் நாரைகளோடே கயல்மீன்களைத் தின்னுதலும், மிலேச்சர் கள்ளை யுண்டு நெடிய தெருவிலே திரிதலைச் செய்வதும், அங்காடித் தெருவெல்லாம் மாலைக்காலத்தைக் கொண்டாடுதலும், கதவுகள் தம்முட் பொருதல் வாய்த்துத் தாழிட்டுக்கிடத்தலும், கணவரைப் பிரிந்த மகளிர் வருந்துதலும் ஆகிய இவ்விடயங்களை உயர்ந்த நடையில் ஒண்மை பிறங்க ஓதியுள்ளனர். அடுத்துள 96-அடிகளான் மன்னவனது கோயிலையும் ஆண்டுத்தனித்திருக்கும் தலைவியதுவருத்தமிகுதியையும் வருணித்திருக்கின்றார்; மலையை நடுவே வெளியாகத் திறந்தாற் போன்ற கோபுரவாயில்களையும், முன்கடையினையும், முற்றத்தினையும், அந்தப்புரத்தினையும், பலநிறமாய் வீழ்ந்து கிடந்த கொடிகளையும், திண்ணிய தூண்களையும் கருப்பக்கிருகத்தையும், மூட்டுவாய் மாட்சிமைப்பட்ட வட்டக் கட்டிலையும், மெல்லிதாக விரிந்த அமளியின் மென்மையினையும், அரசன் பிரிகையினாலே வருந்துந் தலைவியின் பரிதாப நிலையையும், செவிலித்தாயர்



பொருளொடு புணராப் பொய்ம்மொழியும் மெய்ம்மொழியு மாகிய உரைகள் பலவற்றையும் பலகாற் சொல்லித் தலைவியின் துயரை நீக்க முயலுவதையும், அப்பெருந்துயர் நீங்கும்படி அரையன் உடனேவெற்றி பெற்று மீள்வானாக என்று கொற்றவையைப் பரவுவாள் விழைதலையும் மிகத் தெளிவாக எடுத்துக் கூறுகின்றார். ஈற்று 20-அடிகளாற் போர் முடிந்த பின்னர் படைவீட்டிற் றலைவனிருக்கும் வண்ணத்தைக் கூறுகின்றார்: இதனுடன் நூல் முடிகின்றது.

இப்பாட்டு பனுவற் குரிய பத்து லக்ஷணங்களும் பாங்குறவமைந்து விளங்குகின்றது. உதாரணமாகச் சில எடுத்துக் கூறுவாம். ஒவ்வொரு அடியும் எல்லா அழகுகளும் பொருந்தி விளங்குவதாயினும் சிற்சில இடங்களில் யாதேனுமோரழகு மிக்குத் திகழ்கின்றது. கமுகினது தாறுகளிற் பசியகாய் திரண்டு முற்றியிருத்தலைச் சொல்லுமிடத்து "முழுமுதற் கமுகின் மணியுறழெருத்திற், கொழுமடலவிழ்ந்த குழூஉக்கொள் பெருங்குலை, நுண்ணீர் தெவிள வீங்கிப் புடைதிரண்டு, தெண்ணீர்ப் பசுங்காய் சேறு கொளமுற்ற" என்று வருணித்துள்ளார்; மேற்குறித்த நான்கடிகளும் ஓசையுடைமை என்னும் அழகு செறிந்து கிடக்கின்றன; அவற்றின் முதல் இரண்டடிகளில் *நெகிழொலி மிக்கிருத்தல் காண்க: அங்ஙனம் நெகிழொலி மிக்கிருத்தல் நவின்றோர்க் கினிமை பயக்கும், நூலுக்குஞ் சிறப்பினையளிக்கும்; முதற்கண் கோயின் மதிலையும் பிறகு வாயிலினையும் பிறகு முன்கடையினையும், அதன்பின்னர்க் கருப்பக்கிருகத்தையும், பின்னர்க் கட்டிலையும், பின்னர் அமளியையும், ஈற்றில் அமளியிற்றுணை பிரிந்து வருந்துந் தலைவியையும் முறைப்படி அமைத்துக் கூறியிருக்கின்றாராதலின் இங்ஙனம் அமைத்தல் முறையின் வைப்பு என்னும் அழகின்பாற்படும்; தலைவியின் றுயரை நீக்குவான் முயன்ற செவிலித்தாயர் பலவித உபசார மொழிகள் உரைத்திருப்பரல்லவோ? அவை யனைத்தையும் நவின்றோர்க் கினிமை பயக்கும்படி "குறியவு நெடியவு முரைபல பயிற்றி, யின்னே வருகுவ ரின்றுணை யோரென, முகத்தவை மொழியும்" என இரண்டரை அடிகளிற் சுருங்கச் சொல்லினபோதிலும், அவற்றின் பொருளாழ்ச்சி மிக அதிகமென்பது உற்று நோக்குநர்க்கு நன்கு புலப்படும். செவிலியர்புனைந்துரைத்துநகுவித்துப்போக்குதற்குரிய ரென்னுங் கருத்தை விளக்கியுள்ளார். நடுவே திருவும்

* Liquid Sound.

இரண்டு புறத்தும் இரண்டு செங்கழுநீர்ப் பூவும் இரண்டு பிடியுமாக வகுத்த உத்திரக் கற்கவியைக் குறிப்பிக்க "நாளொடும் பெரியகோளமை விழுமரத்துப், போதவிழ் குவளைப் புதுப்பிடி காலமைத்து' எனச் சுருங்கச்சொல்லி விளங்க வைத்திருக்கின்றனர். பிற அழகுகளும் ஆண்டாண்டு உள. இன்னணம் எல்லா அழகுகளும் இயைந்து விளங்குதலாலன்றோ இந்நூல் 'மருவினியகோல நெடுநல்வாடை' எனச் சிறப்பித்துக் கூறப்பட்டுளது.

இந்நூலினின்றும் நூலுரையினின்றும் சங்கத்தார் காலத்து நாகரிக நிலைமை சிறிது புலப்படுகின்றது. (1) பிச்சியின் அலருஞ் செவ்வியையுடைய அரும்பினது அழகிய விதழ்கள் பகற்பொழுதைக் கடந்து விரியுஞ் செவ்வி மணக்கையினாலே, (இரவும்பகலும் அறியக்கூடாத கூதிர்ப் பருவத்தில்) அந்திக்காலமென் றறிந்து கொள்ளல் ; நெடு. ௪௦ - ௧. (2) இரும்பாற்செய்த தகளியில் நெய்தோய்ந்த திரியைக் கொளுத்தி விளக்கஞ்செய்தல், ௪௨ ; அரசர்முதலிய செல்வர்களின் இல்லத்தில் பாவைகளின் கைகளிற் பொருத்தி உள்ள அகல் நிறைய நெய்வார்த்து விளக்கஞ்செய்தல், ௧௦௧. (3) நெல்லையு மலரையுஞ் சிதறி இல்லுறை தெய்வத்தை வணங்குதல் ; அங்காடித் தெருவெல்லாம் மாலைக்காலத்தைக் கொண்டாடுதல். ௪௩. (4) குற்றேவல் வினைஞர் சாத்தம்மியிலே கத்தூரிமுதலிய பசுங்கூட்டரைத்தல் ௫௦ (5) 'ஒலிமென் கூந்தற் கமழ்புகை யூட்டுதல்' (௫௬) (6) குளிர்நீங்கவேண்டி இந்தளத்திலிட்ட சிவந்த நெருப்பின் வெம்மையை நுகருதல், ௬௬. (7) கோயிலின் நெடிய நிலையில் தெய்வமுறையு மாகலின் அதற்கு வெண் சிறுகடுகும் நெய்யும் அணிதல், ௮௬. 'அணங்குடை நெடுநிலை, நெய்படக் கரிந்த திண்போர்க் கதவின்,' என்பது மதுரைக் காஞ்சி (8) கவரிமா, அன்னம் முதலியன அரசனது அரண்மனையில் வளர்க்கப்பட்டன ; ௯௧. (9) நிலாவின்பயனை நுகரும்பொருட்டு அரசர்கள் ஓர் முற்றம் கோயிலின் மருங்கி லமைத்தல், ௯௫. 'நிலவுப்பயன்கொள்ளு நெடுநிலா முற்றத்து' என்பது சிலப்பதிகாரம். (10) அரசருடைய தேவிமாரிருக்கும் அந்தப்புரத்தில் ஆண்மக்கள் அணுகவாராத அரிய காவல்களுண்டு ௧௦௭ 'அரசருரிமை யிலாடவ ரணுகார்' என்பது மணிமேகலை. (11) தந்தத்தாற்சமைந்த கட்டிலைச் சூழமுத்துவடநாற்றி அலங்கரித்தல்; படுக்கைக்கு மேலாக



மென்மைதரும் பொருட்டு அன்னச்சேவலின் தூவிபரப்புதல், முல்லைப்பூ முதலியன பரப்புதல் ; ௧௩௦-௫.

'தாழிக் குவளையொடு தண்செங் கழுநீர்
வீழ்பூஞ் சேக்கை மேவாது கழியத்
துணைபுண ரன்னத் தூவியிற் செறித்த
விணையணை மேம்பட' என்பது சிலப்பதிகாரம்.

கணவனைப் பிரிந்திருக்கும் பொழுது உயர்ந்த ஆடை ஆபரணங்களை யணிந்துகொள்ளாதிருத்தல். (13) அரசன் றேவிக்குச் செவிலியர்பிசி முதலியன பகர்ந்து, நல்லடிவருடி, உபசாரஞ்செய்தல். (14) போர்முடிந்தபின்னர் சேனாபதி புண்பட்டவீரரை அடைவே அடைவேகாட்ட அரையன் புண்பட்ட வீரர்க்கு அகமலர்ச்சிதோன்ற முகம் பொருந்திப் போர்க்களத்தே திரிதல்.

இனி, நெடுநல்வாடையிற் போந்துள அரும்பதங்களும், அருந்தொடர்களும், கவிசாதுர்யமும் இவையென எடுத்துக்கூறுவாம் ; அரும்பதங்கள் : (1) புலம்பு - தனிமை (2) ஞெமிரிய - பரந்த (3) காழ் - தூண், (4) தில்-விழைவுப் பொருட்டு. (5) விளக்கம் - மோதிரம், ௧௪௪. 'பொலஞ்செயப் பொலிந்த நலம்பெறு விளக்கம்' என்பது மதுரைக் காஞ்சி. அருந்தொடர்கள் : (1) இருகோட்டறுவை (2) அரும்படர் (3) கிம்புரிப் பகுவாய் (4) திண்ணிலைப் போர்வாய்க் கதவம் (5) பணைமரு ணோன்றாள் (6) பாண்டில் விளக்கு. சாதுரியப் பிரயோகங்கள் : (1) கருவொடு பெயரிய காண்பி னல்லில்-கருப்பக்கிருகம். (2) குறியவு நெடியவு முரைபல பயிற்றி-பொருளொடு புணராப் பொய்ம்மொழியும் மெய்ம்மொழியுமாகிய உரைகள், (3) ஊறுவருமுலை-குடம், முலைபோறலின் முலையென்றார் (4) நாளொடும் பெயரிய கோளமை விழுமரம்-உத்திரக் கற்கவி. இந்நூலின்கண் உள்ள வடசொற்கள் மிகச்சில ; அவைதாம் தசம், கிம்புரி, நாகம் முதலிய சில. அரியபெரிய நூல்களியற்றிய ஆன்றோர் பலரும் "முன்னோர் மொழிபொருளேயன்றி யவர்மொழியும், பொன்னேபோற்போற்றுவம்" என்பதற்கிணங்க இந்நூலின்கட்போந்துள பொருளையன்றிச் சொற்றொடர்களையும் தத்தம் நூல்களுள்ளே ஆங்காங்கு இன்சுவைபெருக இயைத்துக் கூறினார் ; நக்கீரனார் புலவரேறாய்ப் பொலிந்தன ராதலின் இவர்நூலினின்றே மற்றைய புல

வர்கள் போற்றி யெடுத்துச் சேர்த்துளாரென்று, கூறுதற்கு மிடமுண்டு ; ஆயினும் யான் அங்ஙனம் ஒருதலையாகத் துணிந்து கூறுகின்றேனல்லன். (க) படலைக் கண்ணிப் பரேரெருழ்த் திணிதோள், முடலை யாக்கை முழுவலி மாக்கள் ; ()நெடு ௱க-உ ; பெரும்பாண் - கூ0 ௧௧ (2) "ஆறுகிடந்தன்ன வகனெடுந்தெருவில்" (நெடு ௱0 ; மதுரைக் காஞ்சி-௱௫௧) (3)தேறன் மாந்தி மகிழ்சிறந்து" (நெடு-௱௱ ; குறிஞ்சிப் பட்டு-க௫௫) ; சிலப்பதிகாரத்து அந்திமாலைச் சிறப்புச்செய்காதையில் நெடுநல்வாடையிற் போந்துள நுண்பொருளுஞ் செஞ்சொற் றொடர் களும் ஆசிரியர் இளங் கோவடிகள் இன்சுவை பெருக இயைத்துள்ளனர் ; (4) நிலவுப் பயன்கொள்ளு நெடுநிலா முற்றம்-நெடு. கூ௫-சிலப் அந்தி.௱௯.

(5) 'குடதிசை மருங்கின் வெள்ளயிர் தன்னொடு
குணதிசை மருங்கிற் காரகி றுரந்து
வடமலைப் பிறந்த வான்கேழ் வட்டத்துத்
தென்மலைப் பிறந்த சந்தனமறுக,,

நெடு-௫௧.உ ௫கூ ; அந்தி.௱௫-அ,

(6) 'துணைபுண ரன்னத் தூவியிற் செறித்த
விணையணை மேம்பட'

நெடு. ௧௱உ-௱ ; சிலப். அந்தி. கூகூ-எ.

(7) 'வானுற நிவந்த மேனிலை மருங்கின்
வேனிற் பள்ளி'

நெடு. கூ0-க ! சில வேனிற்காதைகள அ.

இவைபோல்வன பிற இன்னும் பலவுள. அவை விரிவஞ்சி விடுக்கப்பட்டன. இந்நூலிற் போந்துள சில அருந்தொடர்கள் புறநானூறுமுதலிய பழைய நூல்களிற் காணப்படுகின்றன(வெள்ளி வள்ளிநெடு. ௱கூ; சிந்தாமணி, கோவிந்தை...), 2 இறைப் பணைத்தோள் நெடு. ௱கூ, புறநானூறு, 3 மடவரன் மகளிர் 4 பைங்காற் பித்திகம் 5 கடியுடை வியனகர் நெடு. சுகூ, புறநானூறு 6 சிலம்பி வானூல் வலந்தன நெடு. ௫௧, பெரும்பாண் 7 பணைநிலை முனைஇய 8 புல்லுணாத் தெவிட்ட 9 புனையா வோவியம் நெடு. கசுஎ ; மணிமேகலை 'மனையகம் புகுந்த மணிமேகலைதான், புனையாவோவியம்போல



நிற்றலின்' 'புனையா வோவியம் புறம்போந் தென்ன' 22-சிறைசெய் காதை. நெடுநல்வாடையிற் குறித்துள முக்கிய விடயம் ஏற்று 40 அடிகளுளடங்கி யிருக்கின்றது; மற்றைய 140 அடிகள் மிகைபடக் கூறலாய்த் தோன்றினபோதிலும் ஆழ்ந்து நோக்குமிடத்து அவை இன்றியமையாதன வென்பது நன்கு புலப்படும்; ஆண்டு ஆசிரியர் வருணிப்பதினின்றும் அக்காலத்துத் தமிழுக்கேயுரிய ஒழுக்கங்களும், மாந்தருடைய நடைமுதலியனவும் பிறவும் நாம் அறிதல் எளிதாகின்றது.

பத்துப்பாட்டுக்களுள் திருமுருகாற்றுப்படைஎன்றமுதற்பாட்டு மட்டில் முருகக்கடவுளைப் புகழ்வது; மற்றவை அரசர்களைச் சிறப்பித்துக் கூறுவன. நெடுநல் வாடையிற் 'சிலரொடு திரிதரும் வேந்தன், என்ற இடத்து வேந்தன் பாண்டியன் தலையாலங்கானத்துச் செரு வென்ற நெடுஞ்செழியன்; அவனை மதுரைக்காஞ்சியில் ௫௫ 'இருபெரு வேந்தரோடு வேளிர் சாயப் பொருதவரைச் செருவென்று' எனவும் கஉஎ 'ஆலங்கானத் தஞ்சுவரவிறுத், தரசுபட வமருழக்கி முரசு கொண்டு களம்வேட்டவடுதிறலுயர் புகழ்வேந்தே' எனவுஞ்சிறப்பித்துக் கூறப்பட்டுளது.

இவ்வரும்பெரு நூலின் பொருணுட்பமுஞ் சொல்லமைப்பின் நுட்பமும் எடுத்துத் தெளிவு பெறக் காட்டி உள்ளார் இதன் உரையாசிரியராய உச்சிமேற் புலவர்கொள் நச்சினார்க்கினியர். 'கருவாயுள்ளுறை நுண் பொருள், விழுமிதினெடுத்து வழுவற வமைத்துத்' தெளிவு பெறச் சொலும் வன்மையி லிவரைநிகர்ப்பவர் ஒருவருமிலர் என்பது தேற்றம். 'பத்துப்பாட் டாசிரியர்கள் ஆண்டாண்டு மாட்டேற்றுறுப்பானியாத்த தொடர்களை யுரையாசிரியர்யாற்றொழுக் காக்கிப் பொருள் புலப்படுத்தும் வித்தகங் கல்வித்துறைபோய சொல்விற்பன்னர்கண் மிக வியந்தேத்தற் பாலது' என்னுந் திராவிடப் பிரகாசிகை யுடையார் கூற்று மிகவுண்மையே.

ஆதலின் இந் நெடுநல் வாடை.

பொருட் சுவை சொற்சுவை பொலிந்து விளங்கும்
இணையிலா வுயர்நூ லென்பது பெறப்படும்.

இந்நூலைக்

கலைநலஞ் சிறந்து துலங்குங் கவிகட்
கரும் பொரு ளரும்பதம் அளித்துப் பயன்றருங்
கனி யென மதிப்பர் கற்றுவல் லோரே.

வ. சு. செங்கல்வராயன்.

---

# CHANDRAMUKHA.

# சந்திரமுகன்.

---

## அங்கம்—4.

### களம்—1.

இடம்—சிறைச்சாலை.
காலம்—நள்ளிரவு.
பாத்திரம்—சந்திரமுகன்.

சந்திரமுகன்:— (ஒருவருமில்லாததைச் சுற்றிப்பார்த்துப் பின்) ஐயோ! பன்னிரண்டு மணியாயுமின்னும் தூக்கம் வரவில்லையே! இப்பாழுந் தூக்கம் என்னிடம் அணுகேன் என்கின்றதே! யான் அதற்கு யாது தீங்கிழைத்தேனோ? பேசிப் பொழுது போக்கவு மிங்கொருவருமில்லையே! யானென்செய்வேன்? தெய்வமே! ஈயெறும் பணுகாவண்ணம் நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமுமாய் வளர்ந்த நான் இச்சிறையிற் படுந்துயர மற்ப சொற்ப மல்லவே! என்னைப் பெற்றதனால் ஆநந்தக்கடலில் ஆழ்ந்த பிதா சிதாநந்தரை இளமையிலேயே நான் பாவி வாயில் தூக்கிப் போட்டுக்கொண்டு விட்டேன். என்னுடன் அவர் கூடிச் சுகிக்கப்பார்க்க கூற்று களிகூரவில்லைபோலும். ஆனாலுமென்னைப் பாலூட்டிச் சீராட்டித் தாலாட்டி வளர்த்த தாய் கல்யாணி என்னுடன் கூடிச் சுகித்திருப்பாளென்று நினைத்தேன். 'நாமொன்று நினைக்கத் தெய்வமொன்று நினைக்கும்' என்பதனுண்மையை இப்பொழுதுதான் அறிந்தேன். அதுபற்றியே தான் பெரியோர்,

"ஒன்றை நினைக்கி னதுவொழிந்திட் டொன்றாகும்
அன்றி யதுவரினும் வந்தெய்து—மொன்றை
நினையாத முன்வந்து நிற்பினு நிற்கு
மெனையாளு மீசன் செயல்"

என்று கூறுகின்றார். படைத்த விதி யிழந்தனென். தக்கதந்தையை யிழந்தனென். அருமை யன்னையையு மிழந்தனென். இனியிவ்வுலகி லெனக்



கினியாதுளது? யான் எதை யனுபவிக்கப் போகின்றேன்? யானெடுத்த மானிடஜன்மமே வீண். ஜன்ம சாபல்ய மொன்றுமில்லை. யான் பிறந்தும் பிறவாதவனே; இருந்து மிறந்தவனே. யான் என்னைப் பெற்று வளர்த்த தாய் தந்தையருக்கு யாது பலனைத் தந்தேன்? ஒன்றுமில்லையே. எனது தாய் வராகத்தைப் போலப் பல புத்திரர்களை ஈனாது கரியைப்போல மாணிக்க விளக்கொத்த ஒரே புத்திரனைப் பெற்றதாக அடிக்கடி சொல்லிக் கொள்வாளே. "என்னிதய தாமரையிலிருக்கு மன்னமே! என்னின்பக்குயிலே! என்னருமருந்தன்ன மதலாய்! என்பிரிய புத்திரா!" என்று பலவிதமாக விளித்து என்னுடன் கொஞ்சிக் கெஞ்சி விளையாடுவாளே. இப்பொழுது அவையெல்லாமெங்கே? அவள் என் செய்வாள்? ஐயோ! அன்னாய்! நீ யெப்பொழுதும் அலறியலறிக்கண்சிவக்க மனம் நோவத் தேகம்வாட உடம்புசிலிர்க்க மனம் வருந்தி உழலுகின்றனையோ? யாதொரு சங்கதியுந்தெரிய வில்லையே! நீ வேறு தேசத்தினிலன்றோ இருக்கின்றனை? உன்னருமைப் புதல்வன் நீங்கியதனால் உயிர் துறந்தனையோ? தற்கொலை புரிந்தனையோ? அவ்வாறிருப்பின் ஐயோ! ஜகதீசா! யான் என்செய வல்லேன்? என்னையீன்றெடுத்ததனைய பயனிதுகொல்? யானேமாங்கத நாட்டின் கிரீடத்தைத் தரிப்பேன் என்று நினைத்தாள். என் சிற்றப்பன் துன்முகன் என்னைப் பட்டத்தினின்று நீக்கியதுமல்லாமல் என்னைச் சிறையிலுமடைத்தான். "வாய்த்தவீடும்போய் அடுப்புநெருப்பு மவிதலொத்ததே" 'மூட்செடிகளின் நடுவில் ரோஜாப்பூ இருப்பது போலவும், காக்கைக் கூட்டத்து நடுவே அன்னப்பறவை போலவும்' திகழ்ந்தேன் என்று என்னன்னை யெப்பொழுதுஞ் சொல்லா நிற்பள். ஆனாலிப்பொழுது காவலாளரின் நடுவிலுற்ற கைதியாயினேனே. அவள் என்னையெப்பொழுதும், பூவுலகிற் போந்ததொரு புத்தமுதே! என் முத்தே! என்னுயிர் காக்கவந்த மாணிடர் நாயகமே! தெவிட்டாத தெள்ளமுதே!" என்றே தான் அழைப்பாள். என்னை அவள் முத்தமிட்டு மனம் பூரித்திடுவள். அவள் தேன்மொழிகள் என் செவிபருகாது நிற்பக் கர்ன கடூரமான கொடிய காவலாளரின் வார்த்தைகளே எனது செவிவாய்ப்புக்கு என் மனதைப் புண்படுத்துகின்றன. மதிநிலவு வெளியில் நன்றாய்க் காய்கின்றது. சந்திரனுங்கூட என் மிடியை மிகுதியாக்க வந்தனன் போலும். அவன் சந்தோஷத்தைக்காணக்காண என் துயரம் அதிகரிக்கின்றது. ஆகா பூர்ண சந்திரன் எவ்வளவு பிரம்மானந்தமாய்ப் பிரகாசிக்கின்றான். அந்தச் சந்திர பிம்பம் இச்சலாகைக் கல்லில் பிரிதிபலிப்பதைப் பார்த்தால் என்மனம் பொறுக்கவில்லை. இராப்புட்கள் இன்னிசை பாடுவது எவ்வளவு ரம்மியமாயிருக்கின்றது. ஆனால் என் பெயரும் சந்திரன் தான். யான் மதிமுக

த்தை யுடையதாகப் பெயரிட்டிருப்பது காக்கையை யன்னப் புள்ளோடு ஒப்பிடுதலை யொக்கும். அவன் சந்தோஷத்துடன் பிரகாசிக்கின்றான். யான் துக்கசாகரத்தில் மூழ்கித் தடுமாறுகின்றேன். அவன் முகத்திற் கிரணங்களாகிய கலைகளிருக்கின்றன; என்முகமோவெனில் துயரத்தால் வாடிவதங்கி யிருக்கின்றது. ஓ! சந்திரா! நீயும் என்னை வருத்தவா வந்தாய்? அழகிய வம்புலியைக் கண்டால் என் துயரம் மிகுதியாகின்றது. என் செய்வது? அதுவுமென்றன் தலைவிதியே. இவை யெல்லாவற்றையும் பொறுக்கினும் பொறுக்கலாம். ஆனால் என் சிற்றப்பன் என்னைக் கொல்லுதற்குச் செய்யுஞ் சூழ்ச்சிகள் எண்ணுதற்கரியனவே. நான் அவைகளை எங்ஙனே பொறுத்திடுவேன்? என்னை யெப்படியாவது கொல்லவேண்டுமென்று நினைத்திருக்கின்றானே! நானே தற்கொலை செய்துகொண்டு விடலாமென்றால் எனக்கு மனந் துணியவில்லையே. என்னன்னை உயிரோடிருப்பின் இச்சங்கதி செவியுற்றுத் தானும் இறப்பாளல்லளோ? நான் அவளைத் தனியே யெப்படி விட்டிருப்பது? மேலு மப்படிச்செய்யக் கயிறாவது விஷமாவது என்னிடமில்லையே! என் சிற்றப்பனாகிய கொடும்பாவியினின்றும் யானெப்படித் தப்புவேன்? அவன் ஒரு நல்லபாம்பாயிருக்கின்றனனே! யான் கருடனாயிருப்பின் அவனைச் சுட்டெரித்துச் சாம்பராக்கி விடுவல். ஆனால் நான் இன்னும் ஒரு சுண்டெலியாயிருக்கின்றேனே! அக்கொடும் பாம்பின் வாயினின்றும் எப்படித் தப்புவேன்? எனக்கொரு வழியும் தோன்றவில்லையே! என் சிற்றப்பனாய துன்முகன் அதி மூர்க்கனாயிற்றே. "மூர்க்கனு முதலையுங் கொண்டது விடா" என்பது. அவனுக்கே யியையும். 'அன்னியருக்குத் தீங்கிழைத்தோன்றானே தீங்குறுவான்' என்பது முதியோர் மொழியல்லவோ? ஆனாலும் பலவிதத்திலும்யானும் முயன்று பார்ப்பல். அதனால் இறப்பின் நன்று. பிழைப்பினதனினும் நன்று. எவ்விதத்திலும் அவனென்னைக் கொலைசெய்து தீர்த்து விடுவான் என்று நினைக்கின்றேன்.

(அலறியழுகின்றான். மூர்ச்சித்து விழுகிறான்: தானே பின் சிறிது தேறி.)

அநாதி முக்தசித்ரூப சதானந்த சாக்ஷாத்கார சதாசிவ கிருபை எல்பேரிலிருந்தாலொருவேளை பிழைப்பினும் பிழைப்பேன். எல்லாம் விதியின்படியாகின்றது. விதியை வெல்லுபவர் யாவர்? தலைவிதியாரைவிட்டது? விதிகடக்க மலரவனாலு மியலுமோ? அவனாலேயே முடியாதெனின் யாம் யாதுசெய்ய வல்லேம். விதியைக்கடத்தல் அனைத்தையும் ஆக்கும் அயனுக்கு மரியதொரு செயலாம். அதனாலேதான் பாடியிருக்கின்றார்:—



பல்லவி.

ஆரை விட்டது காண்—விதிவசம்
ஆரை விட்டது காண்—தலைவிதி
எவரை விட்டது காண்.

சரணங்கள்.

சீதை பிறந்ததும் லங்கை யழிந்ததும்,
தேவேந் திரன் கண்கள் ஆயிர மானதும்,
சூதாடி ஐவர் வனவாசம் சென்றதும்,
சொல்லுக் கரிச்சந்திரன் கான்விலையானதும் (ஆ)
கர்ணன் பிறந்ததும் ஐவர் வனவாசம்,
காட்டினிற் சென்றதும் நாட்டை மறந்ததும்,
மன்னன் துரியோதனன் சேனை யழிந்ததும்,
வால் கூறு வாலராய் கூடியிருந்ததும் (ஆ)

அரிச்சந்திரன் வறுமையாற் பட்டபாடும், நளன் கலியினால் நுகர்ந்த துன்பமும், பஞ்சவர் துரியோதனனியரால் அனுபவித்த இடும்பையும் பகரற்கரியனவே. ஆனாலும் அவர்கள் கடைசில் எவ்வளவு கீர்த்தி பெற்றுப் புகழ்படைத்து இன்பமனுபவித்துப் பலர் போற்றப் பிறர் தொழ ஆநந்த பதவியை அடைந்தனர்! அது மாதிரியாகவே நானுமித் துன்பத்தினின்றும் புடம்போட்ட தங்கம்போல் பிழைத்துத் திகழலாம். எல்லாம் அயனினருட்படியாகின்றது. அவரைத் துதிப்பினும் புண்ணியமுண்டு.

"சந்திரமுருகா நல்ல தந்திரமுருகா ஞான சற்குருவு நாதமுருகா
சவுரிமுருகா வறுமை தீருமுருகா சுவாமி சச்சிதானந்தமுருகா
சுந்தரமுருகா மயிலுகந்தமுருகா எங்கள் சூரசங்காரமுருகா
சோதி முருகா ரத்நவேதி முருகா வெங்கள் சூரசங்கார முருகா
மந்திரமுருகா என்முன் வந்து முருகா வரந்தந்து காத்தருளுமுருகா
வாரு முருகா கிருபை கூருமுருகா உன் றன்மைந்தனைக் காருமுருகா
அந்த முருகா சத்திமைந்த முருகா யெங்கு மழகான நீதிமுருகா
ஆறுமுருகா குறைதீரு முருகா வெம் மானந்தமான முருகா"

"தூண்டிலகப்பட்ட உயிரதுபோலத் துடிக்கின்றேனே சுப்பிரமண்யா விதுசமய மடியேனுக்கு, வேண்டுவரங்கொடுப்பதற்குப் பார்த்து நீயே வேறொருவரில்லையென்று நம்பினேனே, மீண்டுவரும் வினைதீர்த்து துயரந் தீர்ப்பாய் வேலவேனே சூரசம்மார சங்காரவேலா, ஆண்டவனே யுனைப்பணிந்தேன் பழனிவேலோ அடியேனை உயிர்காத்து ரட்சிப்பாயே."

* "கண்ணு கடலின் வண்ணு காலப்
பெண்ணு யகலின் மண்ணுப் பிழர்
தின்ணு வறிதற் கொண்ணுத் திருசே
ரண்ணு வுனோ ரெனண்ணு திரோ?

† "சம்போ சாம்பசிவா சகமெல்லாம் படைத்தவனே
வம்பார் பூம்பொழில் சூழ் மதுராபுரி வாழ்பவனே
அம்பாளுக் குடலிலொரு பாதி யளித்தவனே
எம்பா னீகருணை சிறிதேனும் புரிந்தருளே."

நான் அழுது அழுது தொண்டை வறண்டு கண்சிவந்து போய்விட்டதே; உடம்புநோவுகின்றதே! சிறிது தூக்கம்வருகின்றதோ என்றுபார்க்கிறேன். (படுத்தயர்ந்து தூங்குகின்றனன்.

களம்—2

இடம்—சிறைச்சாலையின் வேறொருபக்கம்.

காலம்—இரவு மணியிரண்டு.

பாத்திரங்கள்—பலாயனன் (ஒருபிரபு.)
பேயாண்டித் தேவன் }
கருப்பாண்டி } (கொலையாளிகள்)

பலா:—அடே! பேயாண்டி! கருப்பா! இருவரும் இங்கேவாங்கடா.

இருவரும்:—ஏஞ்சாமி! கும்பிடு போடரேஞ்சாமி!

பலா:—இவ்வளவுநேரம் என்னசெய்துகொண்டிருந்தீர்கள்.

இருவரும்:—சாமி! தூங்கிக்கிட்டிருந்தேங்க; நாங்க ஒங்களை ஒண்ணுகேக்கவேணுஞ்சாமி?

பலா:—என்னதேவை?

பேயா:—அதான் ஒங்களுக்குத் தெரிஞ்சிருக்குமே,

பலா:—என்னடா அது? சொல்சீக்கிரம்.

பேயா:—அதாஞ்சாமி! நண்டு சொப்புக்கள்ளுக்கு.

பலா:—நானிருக்கும்போது உங்களுக்கு அதற்கென்னகுறைவு. இரண்டுக்கு மூன்ருய்க் கொடுக்கச் சொல்கின்றேன் பயப்படாதேயும்.

கரு:—டோ! பேயா! ஒண்ணே மறந்துகிட்டே வந்துட்டேன்.

பேயா:—என்னடா தூங்கிகிறுபேசறையோ?

கரு:—அதாண்டா நாஞ்சொல்லரேனே.

பேயா:—எதண்டா?

* போஜராஜசரித்திரம் † ரூபாவதி.



கரு.—கள்ளுச்சொப்பு பத்துகி எனடத்திலே வச்சுட்டுவந்துட்டேன்.

பேயா:—அதுக்கென்னடா அப்புரம் எடுத்துகிறுபோச்சு.

லா:—யான்சொல்வதைக் கேளாது என்ன சளசளவென்று பேசுகிறீர்கள்? மசொல்லும் காரியத்தைச் செய்யுங்கள்; அப்படிச்செய்வதாக முன்னரே சத்தியஞ் செய்யுங்கள்.

இருவரும்:—அப்படி யுங்க, உத்தரவுப்படி, சத்தியமாய்ச் செய்கிறேங்க.

பலா:—அப்படியானுல் இங்கே சிறைச்சாலையில் அடைப்பட்டிருக்கிற சந்திமுகனை இன்னிரவே கொன்றுவிடவேண்டும்.

கரு:—ஐயோ! சாமீ! ஒங்களுக்கு ஆயிரங்கும்பிடு. இந்தவேலைமாத்திரமிங்க வேண்டாம்; அந்தவேலையை நாங்கசெய்யமாட்டோஞ் சாமி!

பலா:—செய்வதாக சத்தியஞ்செய்தீகளே.

பேயா:—நாங்க செல்லிக்கொரு சத்தியம்செய்வோங்க.

பலா:—ஏது! நான்சொல்கிறேன். அதைக்கேட்பதற்குள் அவசரப்படுகிறீர்கள். நான்சொல்வதைக் கேட்காவிட்டால் இப்பொழுதே உங்களைக் கொன்று தொலைத்துவிடுவேன்.

கரு:—ஆனுல் அப்படியே ஆகட்டுங்க; ராஜா கோவிச்சிக்கிட்டா என்னசெய்கிறது? தலையை வாங்கிப்போடுவாரே.

பேயா:—அது நிசந்தான்.

பலா:—ராஜா துன்முகன் தான்உத்திரவுகொடுத்திருக்கிறார். இதோ அப்படிச் செய்யும்படி இந்தக்காகிதத்தில் எழுதியிருக்கின்றது. அரசன்கொடுத்த உத்திரவாக்குமிது. அதன்படித்தான் நான் நடக்கிறேன் என்று நினைத்துக் கொள்ளுங்கள்.

பேயா:—அப்படியானுச்சரி எங்களுக்குப் பயமில்லை. இன்னுமொண்ணு கேக்கவேணுங்க.

பலா:—என்னடா அது?

பேயா:—ராசகுமாரன் சந்திரமுகனைக் கொண்ணுவிட்டாக்க அவனுக்கு வேண்டியவங்கவெல்லாம் நம்மைத் தொலைக்க வழிதேடுவாங்களே.

பலா:—அதற்கு நீங்கள் ஏன்பயப்படவேண்டும்? நம்மதயவு இருக்கும்போது உங்களுக்கு யாதொரு குறையுமில்லை.

கரு:—என்ன எனும் கொடுக்கிறீங்க?

பலா:—உனக்கு என்னவேண்டுமாகிலும் கொடுக்கச்சொல்கிறேன்; பயப்படாதே.

பேயா:—தொட்பே நெரப்ப கள்ளுத்தரச்சொல்லவேணுஞ்சாமி.

பலா:—அப்படியே செய்கிறேன்; நேரம் ரொம்ப ஆகிவிட்டது. சீக்கிரமாக அரசன் கட்டளைப்படி ராஜகுமாரன் சந்திரமுகன் வேலையை முடித்துவிடவேண்டும். இந்த இருப்பீட்டிகளைக் கொண்டுபோய்க் காச்சி இதோ தெரிகிறதுபார் (ஒருதிரையைச் சுட்டிக்காட்டி) இந்தத்திரையின் பின்னால் ஒளிந்துக்கொண்டிருங்கள். நான் காலால் பூமியில் அடிக்கிற சப்தத்தைக் கேட்டவுடன் உடனே ஓடிவந்து என்சமீபத்திலிருக்கும் ராஜகுமாரனை நான் உட்கார்ந்துகொண்டிருக்கும் நாற்காலியில் இறுக்கக்கட்டி விடுங்கள்.

இருவரும்:—உத்திரவுப்படியே போய்த் தயார்செய்கிறோஞ்சாமி.

பலா:—பத்திரம். ஜாக்கிரதை.

டி. எஸ். திருமூர்த்தி.

---

## KULOTHUNGA CHOLAN KOVAI.

## குலோத்துங்கச் சோழன்கோவை.

---

பாங்கியஞ்சி யச்சுறுத்தல்.

122. போதோ புகுந்த திருவோ வளைந்ததிப் பூம்புனத்து
மீதேயெம் மையர் வரச்செவ்வி யாயது மெய்த்தமிழைக்
காதேபுனையங் குலோத்துங்கச் சோழன்கல் யாணிவெற்பா
நீதே யினிசிற்ப தேகுவல் யானுந் திருமனைக்கே.

கையுறை புகழ்தல்.

123. பாம்பாடி கைக்குடைக் கேசழ லாடி பழமனைக்கே
தேம்பாயு மித்தழை தேடிற்கிட் டாது செழுவிரையக்
காம்பா லழைத்த குலோத்துங்கச் சோழன்கல் யாணிவெற்பில்
வேம்பா கெனுமொழி யீருடைக் காமுங்கண் மெல்லியற்கே.

இதுவு மது.

124. திருமான் கமலத்து மாயோன் பணிலத்துந் தென்றலந்தேர்ப்
பெருமான்கை வேழத்தும் வெண்குடை யாகத்தும் பேரகிலத்
தொருமா நகுலன் குலோத்துங்கச் சோழ னுறந்தையன்னீர்
வருமா கலமுத்தம் யான்கொணர்ந் தேனுங்கண் மாமுலைக்கே.

கையுறை மறுத்தல்.

125. பேய்தரும் பான்முலை யுண்டோன் குலோத்துங்கன் பேருறந்தை
வாய்தரும் கொல்லி மலையன்ன மேலகிழ் வாலெமக்கு



நீதரு மாந்தழை பின்னல ராங்களை நீள்வடு வாங்
காய்தரு மூவரங்கும் பல்கா லுயிந்துங் கனிபொருட்டே.

இதுவு மது.

126. முன்னொரு வேய்முத்தந் தாங்கப் பொருது முளையரங்கா
மன்னொரு மேனி வருந்திலைந் தாண்மலர்க் கோதைகைப்
பொன்னொரு வாத குலோத்துங்கச் சோழன் புகாரன்னளே
மின்னொரு நூலிடை யோதாங்கு நீதரும் வேய்முத்தமே.

ஆற்றா நெஞ்சினோ டவன் புலத்தல்.

127. எய்தாப் பொருளென்று மெய்தாதிங் கெய்தும் பொருணெஞ்சமே
நொய்தாக் கிடைக்குமென் றுற்றி யிராய்பல நூற்புலவர்க்
குய்தா பரகங் குலோத்துங்கச் சோழ னுறந்தை வெற்பில்
வெய்தா விரப்பை தழையோடு வாடுவை மின்பொருட்டே.

இதுவு மது.

128. கையோ மெலிந்தன கையுறை யேந்தியிக் காலிரண்டு
மையோ வருந்தின போயும்பின் மீண்டுமிங் காருயிரு
முய்யோநெஞ் சேநங் குலோத்துங்கச் சோழ னுறந்தையன்னார்
மெய்யோ நமக்கின்பம் பொய்யோ வறிகிலம் மேற்செய்வதே.

பாங்கி யாற்றுவித் தகற்றல்.

129. அலைமேன் முனிந்த குலோத்துங்கச் சோழ னளகை வெற்பா
சிலைமே னுதலியைச் சென்றிரப் பேன்சென்று காலைதனின்
மலைமேற் கதிர்வர நீவரு வாய்மலை மேற்கதிரா
முலைமேற் பொலியச்செய் வேனுனை மாணிக்க மொய்ம்மணியே.

இரந்து குறைபெறாது வருந்திய கிழவோன்
மடலே பொருளென மதித்தல்.

130. சுழிகொண்ட பொன்னிக் குமார குலோத்துங்கச் சோழன்வெற்பில்
வழிகொண்ட பெண்ணை மடற்பரி யேறி மலர்க்கணையே
பொழிகொண்ட விற்படை நீங்காது வீதி புகுந்தமின்னார்
விழிகொண்ட நன்மன மீட்போமிவ் வாறன்றி வேறில்லையே.

மடலேற்றினைப் பாங்கிக் குலகின்மேல் வைத்துரைத்தல்.

131. புயலாரும் வெள்ளப் புணையா னபுறத் தாருவினங்
கயலாகுங் கண்ணி பலவுண்டு காண்கடற் காசினியோர்க்
குயலாகுங் காவற் குலோத்துங்கச் சோழ னுறந்தைமின்னார்
மயலாதும் வெள்ளைப் புனைபெண்ணை யேயென்னு மாநிலமே.

இதுமுன் மடலேற்றினைத் தன்மேல்வைத்துச் சாற்றல்.

132. வேலா வலயத் தடனண்ட கோளகை மீதளந்த
காலான் குமார குலோத்துங்கச் சோழன்கல் யாணிவெற்பி
ஞாலா மலர்க்குழ லீரின்று வேண்டுவ ஞாலையப்பான்
மாலாகும் யான்சிவ ஞைச்செல் வேனுங்கண் மன்றகத்தே

தலைமக ளவயத் தருமை சாற்றல்.

133. தருக்கோடி யன்ன குமார குலோத்துங்கன் றஞ்சைவெற்பா
மருக்கோ கனக மலரகத் தாளும் வணங்குமெங்க
ளுருக்கோதை மேனிக்கந் தாதியைத் தீட்டி லுலாவென்பதந்
திருக்கோவை தீட்டிற் கிளவியை நீயெங்ஙன் றீட்டுவையே.

தலைமகன் றன்னைத்தானே புகழ்தல்.

134. கூரெழு வேற்கைக் குமார குலோத்துங்கன் கோழிவெற்பிற்
காரெழு பூங்குழற் காரிகை யாய்கைக் கிழியகத்தே
சீரெழு பூவை வினையே னமைக்குந் திறமைகண்டா
னீரெழு பூவை யமைத்தா னமைப்பி * னிமைப்பின்றியே.

அலர்முலைப் பாங்கி யருளியல் கிளத்தல்.

135. இங்கோர் கரும்பனை யார்தமைக் கூடுவ தெந்திருமா அ
லங்கோர் கரும்பனை யாரைக்கொன் றேவங் கமிழ்வங்கங்
கொங்கோடக் குத்துங் கனிற்றூன் குலோத்துங்கன் கோழிவெற்பிற்
செங்கோன் முறையிறை வாதகு யோகின் றிருவருட்கே.

பாங்கி கோண்டு நிலைகூறல்.

136. கோலைபார்த் தழலுங்கண் ணுளண்ண லேகின் குறைமறுக்கி
னிலைபார்த்துப் பின்கிழி நீபிடிப் பாய்நெடுங் கொத்துப்பத்துத்
தலைபார்த்துப் பார்த்தந்தப் பார்வையில் வாமச்செந் தாமரைக்கைச்
சிலைபார்த்த கோழிக் குலோத்துங்கச் சோழன் செழுங்கிரிக்கே.

தலைவி யிளமைத் தன்மை பாங்கி
தலைவற் குணர்த்தல்.

137. தூர்தப் படையிற் கொடிசூழ் குலோத்துங்கன் கோழிவெற்பி
லிந்தத் தயருனக் கேனண்ண லேயிருள் போலிருண்ட
கந்தக் குழலிக் கரும்பிய வாறினுங் கண்டதுண்ட
சந்தத் திளமுலை மார்பினும் வாயகந் தன்னிலுமே.

* 'னிமைப்பிறுமே' என்றும் பாடம்.



தலைவன் றலைவி வருத்திய வண்ணமுரைத்தல்

138. தன்றியின் காஞ்சிரத் திங்கர வீரத்தின் சொம்பிளமை
யொன்றிய வாருயி ருண்பதன் றேவுவ ராழிகட்டும்
வென்றியன் கிள்ளிக் குலோத்துங்கன் கோழியின் மின்னனையாய்
துன்றிய நுங்கொம் பிளமையு மாமத் தொழிலினுக்கே.

பாங்கி செவ்வியருமை செப்பல்.

139. ஆடாள் சுனைகந்து கங்கழங் கூசலப் பாவையிசை
பாடாள் சிறுமணற் சோறு மடாள்பட ராயமுடன்
கூடா ளுறந்தைக் குலோத்துங்கன் கொல்லியங் குன்றனையாள்
சூடாண் மலரண்ண லேபெங்ங னேகின் றுயர்சொல்வதே.

தலைவன் செவ்வியெளிமை செப்பல்.

140. மனத்தா மரையல ருங்கரத் தாமரை வாய்குவியுந்
தனத்தா மரைமுக தம்வா றறுத்தெழுந் தாண்டவஞ்செய்
கனத்தா மரையன் குலோத்துங்கச் சோழன்கல் யாணிவெற்பி
னினத்தா மரையின் மயிலுக்கென் பேர்சொல்லி னேந்திழையே.

பாங்கி யென்னை மறைப்பி னெளிதென நகுதல்.

141. கண்ணும் பொருளும் வெற்பா கலந்தாலுங் கலந்தபொரு
ளண்ணுந் சுடரன்றிக் காண்பரி தாமுங்க ளல்வினையா
லெண்ணும் பொருத்த மிருவோர்க்கும் யானின்றி யெய்துங்கொலோ
தண்ணென் கவிகைக் குமார குலோத்துங்கன் றஞ்சையிலே.

அந்நகை பொறாஅ தவன் புலம்பல்.

142. ஒண்பா வளர்க்குங் குலோத்துங்கச் சோழ னுறந்தை வெற்பின்
வண்பாவை யன்ன வடிவினல் லாயென் வருத்தமெண்ணப்
பெண்பா லுனக்குமற் றுண்பால் புராரிக்கும் பேதமல்லால்
வெண்பா லொழுகு நகையா யிருவர்க்கும் வேறில்லையே.

பாங்கி தேற்றல்.

143. அழலாய துன்புற லையாவத் தையலென் னாதரவிற்
சுழலாது யான்செய்த வாறுசெய் வாள்பண்டி சானிரையைக்
குழலா லழைத்த குமார குலோத்துங்கன் கோழிவெற்பி
னிழலாடிப் பாவையும் பார்க்கின்ற பாவையு நேரென்னவே.

பாங்கி கையுறை பேற்றல்.

144. மொழியேயக் கையுறை தாரே லெனச்சொல்லு மொய்குழலாள்
விழியே தாச்சொல்லுங் காணண்ண லேவெண் ணிலாப்பணிலச்

சுழியேயும் பொன்னிப் புகார்மன் குலோத்துங்கச் சோழன்வெற்பி
லொழியேனின் கைத்தழை யீவாய் வலிதங்க ளூழ்வினையே.

கிழவோ னாற்றல்.

145. ஏவிய தண்டணிக் கெய்தாத வேந்த ரெதிர்த்தபடை
தாவிய வெம்பரி வீரன் குலோத்துங்கன் றஞ்சைவெற்பி
னூவியங் கண்ணிநம் போற்புல ராதுதன் னங்கைகொண்ட
காவியங் கண்ணிக்குக் கைம்மாறு வேறொன்று நாங்காண்கிலமே.

இறைவன் றனக்குக் குறைநேர் பாங்கி
இறைவிக் கவன்குறை யியம்பல்.

146. வாநவா ரொருவர்வந் தேதுஞ்சொல் லார்புன மாட்டகலார்
தருவார் தழைகுழை வார்திரு மேனியுந் தையலல்லார்க்
குருவார் மதனன் குலோத்துங்கச் சோழ னுறந்தைவெற்பிற்
றிருவா ரணங்கனை யாவென் கொலோவவர் சிந்தனையே.

இறைவி யறியாள் போன்று குறியாள்கூறல்.

147. மரைமான் கவைய முலைப்பால் பளிக்கு மணித்தரள
நிரைமான் சுடர்திருப் பாற்கட லாய்நெடுஞ் சோலையெல்லாந்
தரைமான் கமைமின் கோமான் குலோத்துங்கன் றஞ்சைவெற்பில்
விரைமான் டசுந்தொங்கல் மாலா யழகு மிகுகின்றதே.

பாங்கி யிறையோற் கண்டமை பகர்தல்.

148. நண்ணார் மதியக் கவிகைக் குலோத்துங்கன் றஞ்சைவெற்பிற்
பெண்ணா ரமுதனை யாய்தலை நாணம் பெரும்புனத்தே
யுண்ணா டியவன் புரிவையெல் லாவொரு வர்க்கொருவர்
கண்ணான் மொழியக்கண் டாவரக்கண் டேன்மலர்க் காவகத்தே.

பாங்கியைத் தலைவி மறைத்தல்.

149. நானுனை வேட்டைசெய் வார்புனத் தேகழு கெட்டெய்துவா
ரானூர் பனத்தென்னை யாதரித் தோவகி லண்டவொரு
கோனுதக் காக்குங் குமார குலோத்துங்கன் கோழிவெற்பிற்
றேனுன சொல்லியென் சொன்னாய் பொருதென் செவிக்கினவே.

பாங்கி யென்னை மறைத்ததென்
னெனத் தழாஅல்.

150. உன்னுவி புமென தாவியு முள்ளத் துணர்வு மொன்றாய்த்
தொன்றென் முதலென்னைக் காத்தனை யேதொல்லை நாளெத்தந்தி
தன்னுவி காத்த குமார குலோத்துங்கன் றஞ்சைவெற்பி
லிந்நாண் மறைப்பதற் குத்தக்க நாள்வந்த தேதணங்கே.



பாங்கி கையுறை புகழ்தல்.

151. கூராருந் தாரைக் கினிதாந் தாளங்கன் கொங்கைக்குழாந்
சேராநிற் குந்துடிக் காமணங் கே-தொல்லை மாமதுரா
ரோராயு நீதிக் குலோத்துங்கச் சோழ னளகைவெற்பிற்
காராயி னின்குழற் காவெற்ப ரீந்தவென் கைம்மணியே.

தோழி கிழவோன் றுயர்நிலை கிளத்தல்.

152. காலைக்கு நேமியம் புண்மகிழ் வாயின கண்டிமைவை
மாலைக்கு மேனி மெலிவன நோக்கியு மாதுயிலுக்
காலைக் கவருங் குலோத்துங்கச் சோழ னளகைவெற்பி
ஞாலைக் குழையணங் கேடெனைப் பார்ப்ப ருயிர்ப்பர்நின்றே.

பாங்கி மறுத்தற் கருமை மாட்டல்.

153. நற்பாவை யாயுங் குமார குலோத்துங்க னுனைக்கொல்லி
வெற்பாய் வயங்கு புகின்முலை யால்வெற்பர் வாடக்கண்டும்
பொற்பாவை யாகியு நீயுரு காயினிப் போக்கறியேன்
கற்பாவை யும்முரு கும்மவர் காயக் கடுங்கலற்கே.

குறிப்பு வேறாக நெறிப்படக் கூறல்.

154. நீலாம் பரனுங் குடநாடர் வேந்தனு நீடிருதோண்
மேலாம் புனைதொங்கல் கொய்வெனென் றார்வெம் புலியுயர்த்தே
நாலாம் புணரியுங் காப்போன் குலோத்துங்க னுசைமுந்நீர்ச்
சேலாம் பொருவிழி யீரறி யேனவர் சிந்தனையே.

பாங்கி தலைவியை முனிதல்.

155. மழையீந்த செங்கைக் குலோத்துங்கச் சோழன் வயலுறந்தைத்
தழையீந்த மன்னவர் தங்குறை யோதழை வாங்கிவந்தன்
றழையீந்த வென்குறை யோவிந்த நாளி லுறுகுறையோ
பிழையீந்த தென்னென் றறிகின்றி லேனென்றும் பேரணங்கே.

தலைவி பாங்கிதன்னை முனிதல்.

156. பயந்தார் பொருர்நங் கிளைக்கும் பழுதிது பார்க்கிலென் றும்
வியந்தாவி னைவதுங் கண்டுமை வாய்வெங் கராப்பொருமுன்
சயந்தா னழைத்த குலோத்துங்கச் சோழன்நல் யானைவெற்பி
னயந்தா யிலையென்னை யென்குறை கூறினைநன் னுதலே.

தலைவி கையுறை யேற்றல்.

157. கொண்டாற் பழிதாங் கொளாவிடிற் பாங்கி கொடுமுனிவாந்
தண்டார்ப் புரவலர் தாந்தரு மாரந் தசும்பில்வெண்ணெ

யுண்டாற்றுங் கொண்டற் குலோத்துங்கச் சோழ னுறந்தைவெற்பிற்
பண்டாற் றியவினை யோவினி யேன்கொளப் பட்டதுவே.

இறைவி கையுறை யேற்றமை பாங்கி
யிறைவற் குணர்த்தல்.

158. கைக்காந் தழைகோங்கு பைங்கொன்றை நீலக் கருவிளையின்
மிக்காந் தழைகிஞ் சுகப்பூந் தழைவிரி நாண்முளரி
யக்காந்தை காந்தன் குலோத்துங்கச்சோழ னளகைவெற்பா
யிக்காந் திருமொழிக் குன்மாந் தழைவஞ்சி யீர்ந்தழையே.

இதுவு மது.

159. ஒத்தேகின் மாந்தழை மாணிக்கவார முடனனைத்தாள்
கொத்தே படுமென் குழலிதன் மேனியுங் கோத்தகவிக்
கத்தேனு வன்ன குலோத்துங்கச்சோழ னளகைவெற்பா
முத்தே விமார்தரு மெய்யா யினுளென் மொழிவதுவே.

பாங்கி குறியிடங் கூறல்.

160. சூத்துங் களிற்றன் குமார குலோத்துங்கன் கோழிப்பிரான்
கைத்துங் கவிகையிற் சிந்திடப் போலுஞ் சறங்கருவி
முத்தும் வயிரமு மாணிக்க ராசியு முன்கொழிக்குத்
தத்தும் வரையிடம் யாம்பக லாடிடம் தார்மன்னனே.

பாங்கி குறியிடத் திறைவியைக் கொண்டு சேறல்.

161. கண்ணுற் குவளையுங் கையார்செங் காந்தளுங் கட்டுரையின்
பண்ணுற் சிலம்புங் குழையச்செய் தேயல நாடுங்கொண்ட
மண்ணுட் டரசன் குலோத்துங்கன்கோழி மலைக்கொல்லிவாய்
விண்ணுட்டு வல்லியொப் பாய்நடப் பாய்வென்று மீள்வதற்கே.

குறியிடத் துய்த்து நீங்கல்.

162. மூரல் கரங்கண் ணிதழ்ப்பகை யாமுல்லை காந்தள்கஞ்சஞ்
சோரமின் பிண்டிமின் னேகொய்து மீள்வலிச் சோலைநிற்பாய்
கோர நெடும்பரிக் கோமான் குலோத்துங்கன் கோழிவெற்பில்
வீரர்முன் செல்லப் பெரும்போற் பின்னிற்கும் வேந்துமுண்டே.

நீங்குந் தோழி தலைவற் குணர்த்தல்.

163. என்பாங் கினளென்று மின்றுதொட் டேயிந்த வேந்திழையா
ளுன்பாங் கினள்வட் குள்ளுயிர் நீயு மொருசமலப்
பொன்பாங்க னெங்கள் குலோத்துங்கச் சோழன் புகாரன்னவே
பின்பாங் கதிர்தினி லேரிது கூறுவம் பேதையமே.



இறையோ னிறைவியிடத் தெதிர்ப் படுதல்.

164. புளகா சலக்கொங்கை யாலிடை வாடப் பொதிசெழுந்தே
னுளகா வகத்தென்முன் வந்துநிற் பீருமக் காகவுள்ள
மிளகா நின்றேனை மயற்பசியாற்ற வெனநினைந்தோ
வளநா புரிமன் குலோத்துங்கன் மால்வரை யாரமுதே.

இதுவு மது.

165. நடையாற் களிபன்ன நல்லிய லான்மஞ்ஞை நன்கிளவித்
தொடையாற் குயின்முலை யாலிளங் கோங்கந் துணைமலர்க்கட்
படையாற் சகோரமிங் கெல்லாமொன் ருயிற்று பார்கடலைக்
கடையா துளவன் குலோத்துங்கன் கோழியங் காவனத்தே.

இயைதல்.

166. வருந்தத் தவஞ்செய்த வாவினையேற்கு மனந்திருதோள்
பொருந்தத் தவஞ்செய்த வாமுலை மார்புடன் போர்விசயன்
றிருந்தத் தவஞ்செய்த கோழிக் குலோத்துங்கன் சென்னிவெற்பி
லருந்தத் தவஞ்செய்த வாவிதழ் மானித ராரமுதே.

இதுவு மது.

167. மையோ டரிக்கண்ணி தந்த சுகாநந்த வாரிகண்டா
லையோ வரியந்த வூழி படாவொந்து நான்குதடக்
கையோனை வென்ற குலோத்துங்கச் சோழன்கல் யாணிவெற்பில்
வெய்யோனு மோடி விழுந்தே யெழானந்த வேலையிலே.

புகழ்தல்.

168. தண்டா மறையெனிற் போதைக்குப்போதை தகைபிறிதா
மண்டாத திங்களு மத்தன்மையாலழ காண்மையெல்லாங்
கண்டார் கொண்டாடுங் குலோத்துங்கச் சோழன்கல் யாணிவெற்பில்
விண்டார்குழலி முகத்துக்கொப் பேதினி மேதினிக்கே.

ஆயத்துய்த்தல்.

169. நந்தா மலரொத் தனைமலர்ந் தாலுமந் நாண்மலர்க்குச்
செந்தா மரையன்றிச் சேரெய்து மோதிருத் தோளிணையிற்
கொந்தார மாலைக் குமார குலோத்துங்கன் கோழிவெற்பில்
வந்தாளுஞ் செந்திரு வேயுன தாய மருவுகவே.

பாங்கி மெல்லியற் சார்ந்து கையுறை காட்டல்.

170. தண்முல்லை யாழ்மொழி யாய்ச்சியர் மாலெழப் பைம்புறவத்
தொண்முல்லை மேய குலோத்துங்கச்சோழ னுறந்தைவெற்பில்

வெண்முல்லை வாணகை யாய்முல்லைமாலை மிகக்கொணர்ந்தேன்
வண்முல்லை சூடுவ தேநலங் காண்குல யாதருகே.

மையுறு கண்ணியைப் பாங்கியிற் கூட்டல்.

171. மையுறு காவிற் பிரிந்தே யெடிதிங்கு வைகியதற்
கையுறு வார்கம தாயத்துள் ளாரடை யார்முடியைக்
கொய்யுறு வாட்கைக் குமார குலோத்துங்கன் கோழிவெற்பி
னெய்யுறு கூர்விழி யாய்விரைந் தேகுவம் யாமினியே.

நீங்கித் தலைவற் கோம்படை சாற்றல்.

172. அடிநின்ற மீனமுஞ் சாபமு மாழி யடவிபுகக்
கொடிநின்ற வேங்கை யுயர்த்தோன் குலோத்துங்கன் கோழிவெற்பா
கடிநின்ற நோக்கிக்குரியுல காளுங் கருணைக்குநின
னடிநின்ற பாவிக்கு மேத முறுவண்ண நண்ணுகவே.

உலகியன் மேம்பட விருந்து விலக்கல்.

173. உண்ணீர் முகிற்கைக் குலோத்துங்கச் சோழ னுறந்தைவெற்பா
வெண்ணீர் விருந்தின் றருந்துதற்கே யெங் குலத்துவள்ளிக்
கொண்ணீர்மை யன்பிற் றினைமாவுந் தேனுங் குழைபவுண்டு
தெண்ணீரு முண்டில தோவெங்கண் மால்வரைத் தெய்வமுமே.

விருந்திறை விரும்பல்.

174 நனையார மார்பன் குலோத்துங்கன் கோழிநன் னாட்டிளஞ்சே
யனையார் பிறந்தகத் தட்டிறந் தினை யார்பிடிப்ப
வினையாய நஞ்சமு தாயதென் றூழுங்கண் மென்கைபிடித்
தனையாளை நல்குந் தினைமாவுந் தேனுமிங் கென்படுமே.

பகற்குறி.

கிழவோன் பிரிந்துழிக் கிழத்தி.

மாலையம் பொழுது கண்டிரங்கல்.

175. நன்னுண் மதியக் குடையோன் குலோத்துங்க னுறைவெற்பிற்
பொன்னு ளயோத்தியி லுண்டாயபாவம் புனைந்துமுன்னோ
வந்நாளும் பெண்பழி கொண்டது மாலையென் றூருஞ்சொல்வா
ரிந்நாளும் பெண்பழி கொள்ளவிம் மாலை யெதிர்பட்டதே.

பாங்கி புலம்பல்.

176. கூருந் திகிரிப் பெருமான் குலோத்துங்கன் கோழிவெற்பி
லாரும் பொருவ தெனிமைகண் டேவந்த வேந்தன்வழித்
தேரும் பரியும் புறம்போகக் கண்டு சிலைக்கருப்ப
னூர்ந்து வரிசங் கரும்பினை நாடி புகுகின்றதே.



தலைவனீடத் தலைவி வருந்தல்.

177. சேனை சமுத்திர வெய்யோன் குலோத்துங்கன் றென்னுறந்தைக்
கானார் சுனைக்கய லுண்ணும் புன்னைக்கொரநா சாலுமெழுந்
தானாத செவ்வந்தி தானவரப் போனவ ராழ்கடல்வாய்
வானூர் நிலரிவந் தும்வந்தி லாரென்ன வஞ்சகமே.

தலைவியைப் பாங்கி கழறல்.

178. திருவும் பணியணங் கேபிரி வார்தினங் கேள்வரென்று
மருவும் பழுங்க ணழப்பதென் னேவறி யோர்க்கருளும்
புரிவம் புரிந்த குலோத்துங்கச் சோழன் புகார்வரைவாய்ப்
பிரிவும் புணர்ப்பும் பிரிப்பவர் யார்க்கும் பெருவிதியே.

தலைவி முன்னிலைப் புறமொழி மொழிதல்.

179. தீராத புன்கணுங் காமவெந் நோயுஞ் சிறையுமுற்ற
பேராயி னன்றிமற் றூறிறி வார்பெரும் பாரணைத்துஞ்
சோராமற் காக்கு முறந்தைக் குலோத்துங்கச் சோழன்வெற்பிற்
கூரா சையுமென் றனிமையு மாக்கின்று கூறுவதே.

இன்னுயிர்ப் பாங்கியோடு பகர்தல்.

180. வாரா திருக்கின் வாரார்ரோ வென்றேங்கும் வரினணங்கே
தேரா தினிப்பிரிந் தாலோவென் றேங்குந் திசைபரக்குங்
கூராழி யங்கைக் குமார குலோத்துங்கன் கோழிவெற்பிற்
பேராசை கொண்டவர் நெஞ்சுக்கெப் போதும் பெருந்துயரே.

---

## VEDANTA DESIKA.

## வேதாந்த தேசிகன் வைபவம்.

---

(399-ம் பக்கத்தொடர்ச்சி.)

இவை யல்லாது பிற்றையோ ரூபாதனு காலத்திற் பெரியவாச்சான்பிள்ளை யென்பா ரித்தேசிகனுர்க்குத் தாமா முந்தி மரியாதை செய்த தற்கா வாக்ஷேபித்த தம்மாணவர்க் கித்தேசிகனுர் மாண்மியத்தை பரக்கக் காட்டுவான் வேண்டி நியாயவித்தையின் விவரணத்தைச் சுருக்கமா வருளிச் செயவேண்டுமென் றிரங்கது மன்னணமே நம்வாக்கியாயபிள்ளை நியாயஸித்தி, நியாஸதிலகம் என்றிருநூல்களை யருளிச்செய் தக்கணமே யன்னவர் டாலீந்து சரணமயங் சரணடைந்தோனைப் டாலிப்பா னென்றருள,—இவைக

லையாய்ந்த பெரியவாச்சான்பிள்ளை நந்தேசிகனுரை நோக்கி யங்ஙனமாயின் தாமே முன்னருளிய 'வறிதே யருள்செய்வர்'—என்ற இத்யாதிகளாய வருளிச்செயல்கள் விரோதியாகாவோவென், தேசிகர் சர்மச்லோகத்தின் விவரணத்தையும், அதனது விசேடார்த்தங்களையும், அவ்வர்த்தங்களைப் பிரதிபாதிக்கிற "வேதனுவர்விருப்புந்திருக்கண்ணபுரத்—தாதியானை யடைந்தார்க் கல்லலில்லையே" —"திருமாலிருஞ்சோலை மலையென்னத் திருமால்வந் தென்னெஞ்சு நிறையப்புகுந்தான்" — "ஜன்மஜன்மாந்தரங்காத் தடியார்களைக் கொண்டு போய்"—கலியுக மொன்றின்றிக்கே தன்னடியார்க் கருள்செய்யும் "அடிக்கீழமர்ந்துபுகுந் தடியீர் வாழ்மின்" என்றும், பின்னும் உபநிஷத்தான திருப்பாவையின்கண்,

"தூயோமாய் வந்துநாந் தூமலர்தூவித்தொழுது
வாயினாற் பாடி மனத்தினாற் சிந்திக்கப்
போய பிழையும் புகுதருவா னின்றனவுந்
தீயினிற் றூசாகும் * *

என்றும் சொல்லுகிற பாட்டுக்களையும், ஆழ்வார்கள் - நாதமுனிகள் - ஆளவந்தார் - உடையவர் - பிள்ளான் - அம்மாள் - அப்புள்ளார் முதலானோருடைய அனுட்டானத்தினையுங் காட்டி—"கொள்ளக் குறைவிலன் வேண்டிற்றெல்லாந்தருங் கோதிலன்" என்றவண்ணமே, எம்பெருமான் பரிபூரண பரமோதாரனாகையாலே தமக்கா வொரு பலனையும் வேண்டாத பரமக்ருபா விசேடத்தால் தம்மடியார்கள் வாழ்வே தாழ்வா மதித்து ஸம்ஸாரதந்திரஞ் சிதையாமைக்காவே ஸ்வல்ப வ்யாஜானுஸாரியாய்ப் புருடார்த்தம் ப்ரஸாதிப்பானாகலால் 'வறிதே' என்பது பொருந்தும். பின்னுமித்தகைய காருணிகத்வாதிகளை நினைந்தே "இத்தனையடியரானார்க் கிரங்குநம் மரங்கனாய பித்தனே" என்றுகூறலாய தென்றருளினர். இம்மாற்றங் கேட்டுகந்த பெரியவாச்சான் பிள்ளையும், பாஷண்டத்ருமஷண்ட தாவதஹனராந் தூப்பிற்பிள்ளையை நோக்கி நம்முடையவர் கடாக்ஷத்துக்குப் பரிபூரணபாத்திரரா மும்மைக்கண்டதிசயாஹ்லாதிக்காரு முளரோவென் றகைகூவிப் பின்னரும் ப்ரபத்திமார்க்கத்தைச் சொலீரென்ன, அக்கணமே மாயாவாதத்வம்ஸகோளரியார் தாம் முன்னஞ்செய்தன ந்யாஸதசகத்தைச் செப்பியருள, அதனது கம்பீரப்ரபாவத்தைச் செவியேற்றுய்ந்த வன்னவாச்சான்பிள்ளை யுள்ளுருகித் தம் மாணவரை விளித்து நீவிர் இத்தூப்பிற்பிள்ளையின் பிரபாவாதிக்கத்தைக்காண்மின்; முன்ன மின்னாரைப்பிரதமதா மேம்பாடு படுத்திய வென்னைத்தாக்கித்ததற் கின்னணமாய தென்னனு யுலைந்துணர்ந்த வச்சீடர் குழாமும் ஒருங்கேவிருந்தையெய்தியவரா யாசிரியரிடத்து க்ஷமாபணஞ்செய்துகொடு நிகமாந்தமஹாதேசிகரிடமதிப்ரவணராயிருந்தனர்.

இன்னணம் பிள்ளையிருத்தலும், முற்கூறிய நகரத்தின்கண் தத்வவாதியாய அக்ஷோப்ப முனிக்கும் மாயாவாதியாய வித்யாரண்யருக்கும் வேதாந்



தத்தில் வாதமுண்டாய போழ்தத்து அவ்விருவரது அபிப்ராயத்தையு மாண்டுள்ளார் இராஜபத்திரிகை வாயிலா நம்மாசிரிய ரத்தினத்தின்பால் விடுக்க அதனையேற் றுய்ந்த தேசிகனா ரங்ஙனே "அஸினா தத்வமஸினா" என்ற ச்லோகத்தினையோரேட்டினிடம் வரைந் தவ்வரைய சமுகத்துக்கனுப்பியருள, அவ்வேந்தனுமற்றொரு மதனையேற் றதனு லியாதார்த்தமின்னதென்றோர்ந் தாரியற்கை முதல் வேதாந்த கோளரியாரது சரணபங்கயப் போதுகளிலேயே யிடையறுத ப்ரவணரா யிருந்துவிட்டனர். ஈதுணர்ந்த வித்யாரண்யர் விஸ்ஸஹித்ராய் 'நமது சததூஷணியைத் தூஷிப்போம்' என்றொரு பட்டோலையில் வரைந்து பிள்ளைபால் விடுக்க, அதனைக்கண்டாலு மங்ஙனே வெகுளி மீக்கொண்ட வேங்கடநாதாரியர் தம்மாட்டுள சததூஷணி யென்னும் பெருநூலையவ் வித்யாரண்யரிடஞ் செலுத்தினர். அதனைவித்யாரண்யராய்ந்து ஒரு சகாரத்தின்மே லொரு குத்திட்டனுப்ப நந்தேசிகனா ரதனை நோக்கி யுடனே சகாரஸமர்த்தனமென்றொரு க்ரந்தஞ்செய்தருளி யக்குத்தின்மே லின்னொரு குத்திட்டுவிட, அஃதோர்ந்த வித்யாரண்யர் சாலவுங் கசிந்தமனத்தரா 'யினி நாமெக்காலத்து மவ் விஷ்ணுகண்டாவதாரத்தை வெல்லவல்லோமல்லே' மென்றங்ஙனே தேசிகரை யடைந் தப்பெருந்தகையாளரது சரண கமலங்களிற் பிரியாப் பிரவணராயிருந்தனர்.

பின்னர் ஸர்வதந்திர ஸ்வதந்திரப்ரஸித்தரான நிகமாந்த தேசிகரது மாஹாத்மியத்தைச் செவிமடுத்த கிருஷ்ணமிச்ரர் என்ற வடதேய வித்வானொருவர் மனம்பொறாராய் ஆண்டிருந்து தெக்கணம் புக்குப் பிள்ளையை யண்மி யன்னாரை விளித்து 'நீவிரெம்மொடு வாதிட்டு விஜயம்பெறுவீரே லுமக்குரித்தாய பிருதனைத்தும் பொருந்தும்; அன்றேலேலாது ? எனக் கிளத்தி வேதாந்த விடயமாய்த்துவக்கி மூன்றுநா ளிடைவிடாது வாதிடலு மீற்றில் நம் வேதாந்தார்த்தப் பிரதாயனரான தேசிகரு மேற்றவணத்தா னம்மிச்சிரரை வெற்றிகொண்டு ஸ்தைர்ய தைர்ய கம்பீரமங்களவிக்ரஹத்தோடு நிற்றலும்; அங்ஙனே நிர்ஜிதரான கிருட்டினமிச்சிரர்மனம் வெதும்பி வெறுத்தவராய்த் தேசிகரது ஞானாதிசயத்தி லீடுபட்டுத் தாஞ்செய்திருந்த ப்ரபோதசந்திரோதயத்தைக் கடாக்ஷிக்க வேண்டுமெனப் பிள்ளையு மங்ஙனே நாஞ்செய்துள * ஸங்கல்ப சூர்யோதயத்தை நீவிரு நோக்கக்கடவீராக வென்றருளிப் போந்தன்றை விசிதியிலேயே (தாங்கூறியுள்ள) ஸங்கல்ப சூர்யோதயமென்ற நாடகத்தை யியற்றியருளி விடிந்த பின்றை கிருஷ்ணமிச்ரர் தம்பால் (அவரது) ப்ரபோத சந்திரோதய கிரந்தத்தைக் காட்டவந்த காலையில் தேசிகர் தாமுந் தமது நூலை யன்னார்பால் முன்னர் நீட்டிப் பின் அவரது நூலையும் பிடித்துக் கண்ணோக்கா நின்றனர். இதற்குள் அன்னமிச்சிரர் தாங்கொ

---

* இந்நூலைத் தேசிகரியற்றியதற்கு முன்னேயே 'செய்துள' என்று இறந்தகாலவகையிற் செப்பியதால், மிச்ரர் கூறியதற்கும் ப்ரதியும், தாமாசுகவிபுரவெதில் வல்லுநர் என்பதும் நன்கு விளங்குகின்றன.

ண்ட நூலைக் காண்டவளவில் பேராச்சரிய மெய்தி வாய்பொத்தி யரீதாமுக
ராக் கிடந்தனர். பின்னர் சுதர்சனபட்டராதியோர்களு மாண்டேகிய
விரு நூல்களின் திறனையுமாய்ந்த காலையில், எதிரியின் நூலை திரஸ்கரித்துப்
பிள்ளையின் நூலைப் புரஸ்கரித்து "என்னெனினும் இம்மேதாவியினது திறன்
ழுழியளவு வியப்பினும் போதா! அங்ஙன மல்லாமலா இம்மாநுபாவர்க்கு
'நிகமாந்தகோளரி' யெனும் பெயர் வாய்த்தது? பளா! பளா!! இன்னோர்து
வாக்விசேடமும் ச்லோக வன்மையும், அன்னவைகளினுழ்ந்த கருத்தும், மற
றும் பலவும் சாலவும் மேதக்கன. இங்ஙனமாதற்குரிய காரணம் ஓர் அவதார
விசேடத்தாலே யன்றோ?" எனப்பன்னுழிகைகாறும் புகழ்ந்துகொண்டிருத்
தலை நரிற்கண் டுணர்ந்துவந்த கிக்ரஹிதராய மிச்ரரு மின்னாஞ் செயற்பா
லன யாதொன்று மில்லெனத்தேர்ந்து, அற்றைமுதல் நிகமாந்தாரியனதுபாத
பத்மங்களிற் பிரவணராக் கிடந்தனர். ஆயினு மங்ஙனமு நீங்கிலராய் வாக்
கியை விளித்து 'தேவரீ ரியாதினுனும் மேம்பாடுடையீராதலா னீண்டாக்கும்
மரியாதைகளைத்தாமுதலாவேற்றுப் பின்னர் யானடையுமாறு நிகழ்த்தவேண
டுகிறே' னெனத் தேசிகர் புன்முறுவற் பூத்தாராய் அங்ஙனே 'யெனக்காய
பின் நமக்காக்குவேன்' என்றருளியேற்றவமயமோர்ந்தாலயம்புக்கவனுறை
வாரைக் கூயிஇ "யிற்றைக் கிங்காக்கும் மரியாதைகளை யாவர்க்கு மாக்கிய
பினெனக்காக்கிப்பின்னர் கிருட்டினமிச்சிரருக் காக்கவேண்டு"மென்றறைந்து
போந்தருளினர். அன்னரு மன்னணமேவாக்க மிச்சிரர் மிக்கத்திகைத்தாராய்
யாவர் முகத்தையும் நோக்கிப் (பொதுவாக) 'அந்தோ! யானிவ்வேதாந்த
கோளரியினது லௌகிகத் திறனிலுந் தோற்றேன்' என்றறைந்து இவர் விஷ
யத்தில் சிஷ்ய விருத்திசெய்யத் தமக்குச் சில லௌகிக அஸத்தர்ப்ப மிருக்கி
றவைகளை நினைந்து நினைந்து மனநைந்து ஈற்றிற் கவிதார்க்கிககேஸரிபாற்
றனது குறையை யறைகூவி ஸ்ரீபாததீர்த்தாதிகளைப் பிரஸாதிக்கவேண்ட
அஃதுணர்ந்த தண்ணளி வொண்ணிதிச் செல்வரான வேதாந்தாரியரு முள
மிறங்கி யன்னவரது பாண்டித்ய கவித்வங்களையுவந்து அவர்வேண்டியவாறே
முடிப்பித்தனர். கிருட்டினமிச்சிர ரவைகளைப்பெற்றுக் களிபேருவகை பூப்
பத் தந்நாடு புக்கனர். பின்னர், டிண்டிம னென்னுங்கவி ராமாப்யுதயம் என்ற
கிரந்தத்தை யியற்றித் தேசிகனூர்பாலீயது மதற்கு மாறுத் தேசிகனூர்த்தா
மும் யாதவாப்யுதயம், ஹம்ஸஸந்தேசம் என் திருநூல்களையு மருளிச்செய்து
டனே டிண்டிமகவி கையினீட்டலும், அவன் அவ்விரண்டையு நோக்கிப்
பேராச்சரியமெய்தி கோளரியை வீக்ஷித்து 'கவிதார்க்கிகஸிம்ம' மென்றபிருது
ஒப்பற்ற நும்மொருவர்க்கே பொருந்தும் என்றேத்தி ద్విచతుష్పదపరివర్తన
గర్వత కవిశరభగండభేరుండః ఖండనఖండనకవిరిహ డిండిమకవి గండడిండిమోజయతు॥
என்றச்லோகத்தை விண்ணப்பஞ்செய்து ஸ்வாமி ஸந்நிதியி லபசாரப்பட்டே
னெனப் பிரணமமிட்டு க்ஷாபணஞ் செய்தகொடு தம்மூர்புக்கனர்,



பின்னுள் கழியலு நக்கூரவர்பிரான் திருக்குடந்தையாதிய திவ்யதேசங்
களையடைந்து யாண்டுள திருப்பிரான்களை நமஸ்கரித்துத் திரும்பவும் திரு
வளையாடி ஸ்ரீவில்லிபுத்தூரில் வடபெருங்கோயிலுடையானையுஞ் சூடிக்
கொடுத்த நாச்சியாரையுந் திருவடி தொழாநிற்க, நாச்சியாருந்தாஞ்செய்தரு
ளிய உபநிஷத்தான திருப்பாவையிலுள விசேடார்த்தங்களை யெல்லாம்பல
கீர்வாண கிரந்தங்களாற் பிரகடனஞ் செய்தீரேயெனப் பெரிது முவந்தருளித்
தந் திருமாலையாதிகளைப் ப்ரஸாதிப்பிக்க வேதாந்தாரியரு மவைகளையுள்ளந்
துவகையோடேற்று శ్రీవిష్ణుచిత్తకులనందనకల్పవల్లీం என்று துவக்கிகோதாஸ்துதி
யை விண்ணப்பஞ்செய்ய நாச்சியார் கேட்டுவந்து இதனை நம்முத்ஸவங்களிற்
றிவ்யப்ரபந்தங்களைமான அனுஸந்திக்க வேண்டுமென்று உலகோர்க் கருளிச்செய்
பித்தனர்.

இவ்வாஞ்ஞை யப்பெருநாட்டின்க ணிதுகாறு நடைபெற்றுவரா
நின்றது. பிற்றையொரு நன்னுளிலித்தூப்பிற்பிள்ளைத் திருநகரியேற
வெழுந்தருளி నిరంజనమయంజనః என்ற ச்லோகத்தால் ஆழ்வாரடி
பணிந்து நிற்க, நோக்கிய அவ்வாழ்வா ரிப்பிள்ளையை விளித்து "வம்மின்,
கவிராட்! நீவிர்புரிந்தன நன்றிக்குக் கைம்மாறென்னே யெம்மாற் புரியற்
பாற்று? என்னை யெனின்,—ஸ்வரூபோபாய விசேடார்த்தங்களை யொரு
வர்க்கே தெள்ளிதிலுணரற்பாற்றுக் காட்டுந் திருமந்திரார்த்தமாய நந்திருவாய்
மொழியிலுள விசேடார்த்தங்க ளனைத்தையுஞ் சாயாரூபத்தாற் பிரகாசிப்
பித்தீர். என்றுலுமிதோடன்றிக்கே, யாமுவந்தருளிய நந்திருவாய்மொழியின்
ஆறுயிரப்படியின்படி நோரப்பொருள் விரிக்குந்தகைமைத்தாய சில நன்னூல்
களை யியற்றக்கடவீ"ரென்றுரைத்து, ஏற்றபரிசினூனே அன்னுரைச்சிறப்பித்து
ஆனந்தோததியிலாழ்த்தி விடுத்தபி னிப்பிள்ளையு மக்கூரவர்வாக்கைக் கடைப்
பிடித் தொழுகுபவராய்ப் பல் வரிசைகளையு மெளிதி னினிதினீயப்பெற்றுண்
டிருந்து பொலிந்து நின்ற பிரான், திருவண்பரிசார முதலாய வெம்பெருமான்
களை யாராமனத்தோடேற்றித்தொழுது கோயிலேறவெழுந்தருளி மீண்டுந் திரு
வெள்ளறை, ஸ்ரீமுஷ்ணம் ஆதிய வேனைய திவ்யநகரங்களைக் கடந்து ஈற்றிற்
கச்சியம்பதியைப் புக்கிப் பெருந்தேவிமணாளனை யஞ்சலித்துப் பண்டையே
போல் முதலிகளோடு வேதாந்த ப்ரவசனம் புரிந்துகொண் டாண்டாகுங்
காலத்து, மிக்க வன்மையாளனுய பாம்பாடி யொருவன் சில துட்டர் கூறுங்
கூற்றை யுட்கொண்டு வெகுண்டு அட்டஹாஸத்தோ டப்பிள்ளையை யண்மி, "நீவிரிம்
தார்ப்போதனைக் கிலக்காகியட்டாஹாசத்தோ டப்பிள்ளையை யண்மி, "நீவிரிம்
மந்திரவாதத்தி லெம்மை வெல்வீரேல் நுமக்குரிய 'ஸர்வ தந்திர ஸ்வதந்
திரர்' என்ற பிருது சாலும்; அன்றே லொவ்வா"தென்னலும், இஃதுணர்ந்த
நிகமாந்த கோளரியாவார் (தமக்குள்ளே) இவ்வஸமானனும், இழிபிறப்பாள
னும், துன்மதியும், அட்டஹாஸியுமான பாம்பாட்டியோடு ஸமானமாக வாதி
க்கவேண்டிவருகிறதேயென்று வெறுத்திருக்க, இதனை நோக்கியாய்ந்தமுதலி
களாவார்ப் பெரிதும் பிள்ளையைப் பிரார்த்தித்து, "இவ்விழிதகையானுவா

னைக் கடிகையில் வெல்லுந்திற னும்நாட்டிருக்க எதற்கா மனம் வெதுத்தல்?
ஒன்றுஆ. எவ்வாற்ருனு மன்னனது நிலைமையை நோக்காது வெல்வதே
சால்புடைத்தாமென்ன, நன்றெனத்தேர்ந் தங்ஙனே அராவாட்டியை விளி
த்து ஈண்டைகான், எனத் தம்முன்னுவடுத்தடுத்து எழுகிற்றுக்களைப் புலி
யிசைவனர்ந்து, 'இனி நீவேண்டியவாறெலா நிகழ்த்தக்கடவை' யென்ன,
அவ்வாண்டியுந்தம்மாட்டுள மஹாநாகங்களைப்பிள்ளையைப்பற்றுமாறு தூண்ட,
அவ்விட குண்டலிகளுஞ் சில கிற்றுக்களைக் கடப்பதற்கு வன்மையிலாதிருக்
கலும், கண்ட அவ்வாண்டிச் சாலவுஞ் சிலபேராக்களைக் கடத்த அன்னவை
களு முன்னவைகளைமான சிலகிற்றுக்களை நீத்துப் பிரிதாயவைகளைக்கடத்தற்
கேலாது வாளா விருத்தலும், பின்னையும் வெகுளி மீக்கொண்டானுய அன்
னவாண்டி சங்கபால னென்றஒரு மஹாஸர்ப்பத்தையேவ வந்நாகமக்கணமே
கக்கிய விடத்தொடுங்கூடிய திறந்த வாயொடே அக்கிற்றுக்களையுங்கட
ந்து பிள்ளைபா லாவேசிக்க வண்மியகாலத்து, போக்கிய கோளரிதனுது நய
னகமலயுகளங்களிலனற்பொறி சிதற, வசனியேறெனவார்த்து, கருடதண்டக
மென்றொன்றனையருளிச்செய்ய, அக்கணமே தயார்ணவமான * பெரிய திரு
வடி நயினு ராண்டேகி யவணடைந்துள சங்கபாலனென்ற மஹாநாகத்தைப்
பற்றிக் ககனமார்க்கத்திற்கொணர்ந்துபோகலும், அஃதுணர்ந்த பாம்பாட்டி
யாவான் பெரிது மனமாழாந்து இனி நாஞ்செயற்பால தொன்றுமிலதெனத்
தேர்ந்து அங்ஙனே பிள்ளையைச் சரண்புக்கித்தனுது வைசம்மியத்தை யாற்றி
யந்நாகத்தைத் தருமாறு இரவா நிற்றலும், பெரிது மிறங்கியமனத்தராய
பிள்ளை முன்னங் கூறியுள்ள கருடபஞ்சாசத்தை மறுமுறையனுஸந்திக்க வங்
ஙனே கலுழ னவ்விடநாகத்தைக் கொணர்ந்துவிட, கண்டவவ்வாண்டி பே
ராச்சரியமெய்தியவனுய் நாகத்தைகொ டவணீத்து வேற்றிடம் புக்குக் கர
ந்து பிள்ளைத் தைலமாடு மமயமோர்ந்து ஒரு பெருந்தடமெய்தி தானத்தடத்
துண் மூழ்கி யதனீர்முற்று மருந்திப் பிள்ளையி னுதரமுதிரப் பெருக்கெடுக்
கக் கிழிபடுமாறு உரிய உபாதியை யுண்டாக்க, அன்னதையாய்ந்த நிகமாந்த
கோளரி பண்டையேபோல் ஒரு தம்பத்திற் கிட்டதனிடமாக வாண்டியரு
ந்திய நீர் அனைத்தையும் பெருகுவிக்கப் பெரும்பாபிபாமப் பாம்பாட்டி யன்ன
வகையை யுணர்ந்து நிர்ஜிதனுய், நைந்தமனத்தினனுய்ப் பெரிதும் பீதி
யொடு 'இனி யெவ்வாற்றானு மப்பிள்ளையை வெலற்கு நம்மாலியலா' தெனத்
தெளிந்தானுய்ப் பிள்ளைபால் மாயாவபராதக்ஷாபணஞ்செய்து பலகாற் பிரவ
ணனுகி தேசிகராமானுஸக்தானஞ் செய்துகொண் டாண்டே பன்னுளுறை
ந்து பின்னர்த் தம்மில்லம்புக்குக் கிடந்தனன்.

ஈதிவ்வா றொழிய மற்றொருநா ளோரவசர விசேடத்தால் వరదవర్జయ
త్వం వాదతా శ్చషద్ఫలం என்றச்லோகத்தா னத்திகிரிப் பெருளாளனுனவெம்

* இங்கு 'பெரிய திருவடி நயினு'ரென்றது, கலுழன் எனக்கொள்க.



பெருமானை நிர்க்காஞ்சலிபுரிந்து அவணீத்துச் சாலவுஞ் சேட்வரை புக்குச்
சேவாக்கிரமத்தாற் றிருவேங்கடமுடையானை நமஸ்கரித்து அப்பிரான
தருள்வெள்ளத்திற் றிளைத்துக் கமலநயனங்களி லானந்தபாஷ்பமும், செய்யு
திருமேனியி லுரோமாஞ்சமும, திருமுடியி லஞ்சலியஸ்தருமாகிப் பரமா
நந்த பரவசரா நிற்றலும், பெருமான் பேரவாவோ டுவந்தருளி வாக்கியை
விளித்து நீவிர் முன்னமியற்றியுள 'தயாசதக' த்தைமறுமுறைச்செவிமடுக்க
விழைந்தேனென்னப் பிள்ளை, யுய்ந்தே னுய்ந்தேனெனக்கிளத்தியத்தோத்திர
த்தைவிண்ணப்பஞ்செய்யப்பெரிதும் வியந்த வுலகளந்தோ னிவ்வேதாந்தாரி
யனைநோக்கி 'நீவிர் வேதாந்தாசாரியரென்பதற்கேற்றதாகின்றதித்தோத்திர
கவிதா வைபவமிருந்தபடி' யென்றருளிச்செய்ய, தேசிகரும் వేదాంతదేశిక ప
దవీం వేశ్చ ఫలం எனத்தனுது நைச்சியத்தையும், பகவத் கிருபாவிசேட மடி
யாக வுண்டான தோத்திர வைபவத்தையும், அதில் தமக்குக் கர்த்ருத்வாதிக
மில்லாமையும் பிரதிபாதித்து எம்பெருமானுக்கு அர்ச்சநீயதிருநாமங்களைப்
போலே இத்'தயா சதகம்' நூற்றெட்டுச்லோகங்களாயிருக்கும்படி தலைக்கட்டி
யருளினுர். பிறகு திருமலைவேங்கடவனுன ஸ்ரீயப்பதி பிள்ளையைக்குளிர நோ
க்கிச் சகல வரிசைகளையும்ப்ரஸாதிப்பித்து நந்திருமணி யாழ்வாராந் தூப்பிற்
பிள்ளையைச்சத்திர சாமராதி சகல வைபவங்களோடு வலம் வருமாறியற்றக்
கடவீரென்று திருமலை ஜீயருக்குக் கட்டளை யிட்டருளினுர். அங்ஙனே அன்
னுர்களு மொருவிழா நிகழ்த்தி முடிப்பித்தனர்.

கே. இரங்காசாரியர்.

---

## LATE MR. PRANATHARTHI HARA SIVA, B.A., L.T.

## காலஞ்சென்ற. பி. ஏ. பிரணதார்த்திஹர சிவனுர். பி. ஏ., எல். டி.

---

இவர் தஞ்சாவூரைச் சார்ந்த புதுக்கோட்டை சமஸ்தானத்தில் தெய்வ
பக்தியும், நற்குணநற்செய்கைகளும் நிரம்பிய வந்தணர் குலத்திற் பிறந்தார்.
இளமையிலேயே தந்தையை யிழக்க நேரிட்டபடியாற் றமயன்மார்களி
னுதரவிலிருந்து வளர்ந்துவந்தனர். இவர்தமது கல்வித்தொடக்கமுதற் பிரவேச
பரீக்ஷை தேறுமளவு மாங்கேயேயுள்ள சமஸ்தான கலாசாலையிலும், எப். ஏ.
பரீக்ஷை கும்பகோணம் துரைத்தனத்தார்கல்லூரியிலும், பின்னர் சென்னைக்
குச்சென்று கிறித்தவக்கலாசாலையிற் பொறுமையே யுருவெடுத்தாற்போன்ற,
ரெவரண்ட் கூப்பர் துரையிடத்து தர்க்க சாஸ்திரமும் படித்து, சர்வகலா
சாலையிற் பி. ஏ. பட்டமும், சைதாப்பேட்டையில் மாணக்கர்களுக்குக் கற்பிக்
குமுறையைக் கற்பிக்குங் கல்லூரியிற் பயின்று, கலைகற்பிப்பதில் கைதேர்ந்

தவரென்னும் யோக்கியதாபத்திரமு மளிக்கப் பெற்றனர். பின்னர், சென்னையிற் றொண்டைமண்டலத் துளுவவேளாளப் பள்ளிக்கூடத்தி லுதவியுபாத்தியாயரா யமர்ந்தார். இவர் கோபமென்னுங் குன்றேறி நிற்காக் குணவாளுகையால் மாணவர் யாவரும் மாணிக்கமென்றே மதித்தார்கள். இவ்வாறு சின்னாளிருக்கையிற் கூடலூர் சுதேசக் கலாசாலை யதிகாரிகளிவர்தந் திறமையினைக் கேள்வியுற்று அத்தகையார் தங்கள் கலாசாலையிலிருந்தால் மிகக நன்மை பயக்கு மெனக்கருதி, சிவனாரை யவ்விடத்திற் றலைமை யுபாத்தியாராய்த் தருவித்துக் கொண்டார்கள். அன்னோர்களுக்குச் சிவனார்தந் திறமையனைத்தையுங் காட்டக் கூடவில்லை. இதற்குச் சுரமே முதற்பெருங் காரணம்; இவர் கூடலூர்போகச் சின்னாள் முன்னர்ச் சுரமென்னும் மலைப்பாம்பு இவரைப் பற்றிக்கொண்டது. இவரைப்பற்றியவண் கூறுவான் போந்தது இவர்தந் தமிழ்ப் புலமை பற்றியே. இவருக்கு இளமை தொடங்கியே நந்தமிழிடத்து வற்றாவன்புவாய்ந்திருந்தது. என்றாலுமதனைத்தான் வளர்ப்பான் றகுந்தவாசான் றனக்கு வாய்க்காமையைக் குறித்து மிக்க வருந்தி வந்தார். பின்னரிவர் சென்னைக்குச்சென்றவுடன் றான் பயிலுங் கல்லூரித் தலைமைத் தமிழ்ப் பண்டிதராந் தமிழ்ச்சிங்க பிரம்ம ஸ்ரீ. வீ. கோ. சூரிய நாராயண சாஸ்திரியாரையே தனக்கு உண்மை வழிகாட்டவந்த வுரிய நற்குருவாய்க் கொண்டு அவர்தம் மியற்றமிழ்மாணவரு ளொருவராயினர். இவர் தனக்குத் தமிழிடத்துள்ள வார்வத்தினாலும், தனதாசான் றூண்டுதலாலுந் தமிழை வளர்ப்பான் வேண்டியவனைத்தும் செய்துகொண்டும் வந்தனர். இவ்வாறிருக்க வென்னையோ விவர்தம்மாற்றலை இது காறும் வெளியிடாதிருந்தனரெனின், "கற்க கசடற" வென்னுந் திருமொழியை வெறுமொழியாக்க விரும்பாமையே யென்பது உள்ளங்கை நெல்லிக்கனியென்னத்தெற்றென விளங்கா நிற்கும். என்றாலு மிவர்தம் திறமை நம் ஞானபோதினியிலிடையிடையே தோன்றிவந்த சிலப்பதிகாரவாராய்ச்சி, மல்லிகைமாதவர், உமைபவன் பதிகம், பெண்கல்விக்கும்மி யின்னுமிவைபோன்றவரிய விஷயங்களாலும், சுதேசமித்திரனிற் றோன்றிய பெரும் வியாசங்களாலுங் காணக்கிடக்கும். இன்னுமிவர் வரைந்துள்ள தரணியிற் சிறந்த தமயந்தி நாடகமும், ஹநுமான் சிங்கென்னுமுளவறி நூலும், படித்துள்ளார் யாவரே யிலர்தம் பெருமையினைப் புகழார். பள்ளியிற் பயிலுமாணவர்கள்வியாசம் வரையும் வகை புரியாது வருந்துவதையுமுணர்ந்து நம் சிவனார் வியாச மஞ்சரியென்னுங் கட்டுரைத் தொகுதியைத் தமிழிலுந் தெலுங்கிலும் வரைந்து மிருக்கின்றனர். இன்னன்றியை யென்றுமறக்கற்பாலதன்றே யன்றோ? இத்தகைப் பேருதவிகளைச் செய்த பிரணதார்த்திஹரசிவனார், சுரமென்னுங் கொடியனாற்பிணிப்புறவே, அவனினின்றும் விடுவிப்பான் வேண்டி, யனேகமருந்துகளையுண்டும் பயன்படாது, சென்ற மேமாதம் 12-ம். தேதி செவ்வாய்க்கிழமை இரண்டுமணிக்கு இறைவன் பதமடைந்தார். ஐயோ! தமிழ் மகளே!! அரிய சின்னன்பர்களொல்லாங் கொடிய கூற்றுவனாற் கொண்டுபோகப்படுவது என்னோ? நீதியிலையே யாயினு மயனிட்டத்தி லறிக்கையிடாயோ?

சிவனார், இவ்வுலகில் தமிழை வளர்ப்பான்வேண்டிச் செய்த தன்னுடையவும், பிறருடையவுமான முயற்சிகளெல்லாம் போதாதெனக்கருதி, இறைவனிடத்தில், தமிழ் மகள் தளர்ந்து கண்கலங்காது, முகமலர்ந்து களிப்பதற்கான முயற்சிகளைச் செய்யும்படி தமிழரனைவருக்கு மூக்கமுண்டாக்கவும், நோயாற்றுன்புற்றிருக்குந் தனதாசானுக்குச்சௌக்கியத்தைத் தந்தருளுமாறு மிறந்து கேட்பான் சென்றனர்போலும். இவர் தனக்குப்பின், கடுவிளம்பிராயமுள்ள தன் மனையாளையும், பால்குடி மறவாத பாலகர்களிருவரையும் அநேக நேசர்களையும் சுற்றத்தார்களையும், விட்டுப்போந்தனர். கருணையங் கடவுளம்மாதினுக்கு மனத்திடனையு மக்காளையர்களுக்குச் சகல சம்பத்துக்களையும் பூர்ணாயுளையுந் தந்து கடாக்ஷிப்பாராக.



---

## பத்திராதிபர் குறிப்புக்கள்.

5 நிமிஷங்களுக்குள் 5 புலிகள் :—மிஸ்டர்காலின்ஸ் என்பவரே சுடுவதில் வல்லவர், எனப் பெயரெடுத்திருப்பதாய் மெயில் பத்திரிகைகக்கு ஒரு நிருபர் இம்மதி 9-ஆந்தேதிவரைந்துள்ளார். இதைக் காட்டிலாகாவில் வெகுநாள் ஸர்விஸ் பெற்றதொரு ஆபீஸரிட முரைக்கவே அவர் சற்று ஊன்றிப்பார்த்துப் பின்வருமாறு உரைத்தன ரென்று அந்நிருபர் கூறுகிறார்:— "வெளிதேசத்திலுள்ள தொருகாட்டில் சுற்றுப் பிரயாணம் போயிருக்கையில் ஒருநாட்காலையில் கூடாரமடித்து அதில் வீற்றிருக்கக் குடியானவன் ஒருவன் ஓடிவந்து சிலபுலிகள் வந்து தொத்தரவுசெய்வதாயும், பசுக்களைக் கொன்று போவதாயும், 6 மையில்தூரத்தில் அவை பதுங்கியிருப்பதாயும் கூறினன். நான் வேறிருவருடன் கிளம்பித் துப்பாக்கி, ஈட்டி முதலிய கருவிகளை யெடுத்துச்சென்றேன். 6 மைல் தூரஞ் சென்றதும் கடுங்கானகமொன்று தென்பட, அது கதிரவன் கண்திறந்துபாராக் கானகமெனவே மதித்தோம். நாற்புறத்திலும் மரங்களும் புதர்களும் சூழ்ந்திருக்க எதிரில் மிகவுஞ் சிறிய வாயுடைய குகையொன்று தென்பட்டது. கற்பாறை யொன்று அக்குகையின் வாயிலுக் கெதிரில் நின்றிருந்ததனால் குகைக்குள் இருக்கும் ஜந்துக்களை எளிதிலறியக்கூடவில்லை. ஆயினும் அத்தகைய விடங்களில் புலியிருப்பது நிச்சயமென்று எண்ணிக்கொண்டு என்னுடன் கூட வந்தவனொருவனைக் கற்பாறையின் கீழிருந்து கைக்கொட்டக் கட்டளையிட்டு கற்பாறையின்மீதே குகைக்குள்ளிருந்து புலி பாயுமாதலால், வேறோரிடத்திருந்து அது பாய்ந்ததும் சுட்டுவிடக் கருதிச் சமீபத்தினின்றதொரு பாறையின்மீது நான் நின்றுகொண்டேன். அப்போழ்து 5 புலிகள் இரத்த விளாருடன் பதுங்கியிருந்தவை என் கண்ணெதிர்ப்பட்டது. இதற்குள் கைகொட்டின சப்தங்கேட்டு முன்னிருந்த புலி நான் நினைத்தவண்ணமே கற்

பாறையின்மீது பாய்ந்தது. உடனே நான் அதைச் சுட்டு வீழ்த்தினேன். 2,-3-ஆவது புலிகளும் அக்கதியை யடைந்தன. 4,-5 ஆவது புலிக்குட்டிகள் முந்தியவைபோல் ஒன்றுக்குப்பின் ஒன்றாய்ப் பாயவில்லை. 1 நிமிஷம் உள்ளிருந்து திடீரென்று பாயவும் அவைகளையுஞ் சுட்டு வீழ்த்தினேன். மரித்த பிராணிகளனைத்தும் குகையின வாயிலடைப்பட்டுக் கிடந்தன. பின்னர் அவைகளைப்பார்க்கையில் முதற்புலி 9-அடி 7-அங்குலமும், 2-ஆவது 8-அடி 7-அங்குலமும், 3-ஆவது 9-அடி 4-அங்குலமும், 4-வது 9-அடி 2-அங்குலமும், 5-ஆவது 9-அடி நீளமுமாயிருந்தன." இதுவே அந்த் காட்டிலாகா ஆபீஸரது கதையாம். புலி வேட்டையில் வல்லவரெனக் கூறப்பட்ட மிஸ்டர் காலின்ஸ் என்பவரது திறமைக்கும் இக்காட்டிலாகா ஆபீஸரது திறமைக்கும் வித்யாசமிருக்கின்றது. மேற்சொல்லிய நிருபாதுகதை எவ்வளவு தூரம் நிஜமென்பது தெரியவராதா ?

***

அலுமினியத்தினுற் செய்யப்பட்ட ஆகாயக் கப்பல்:— மரத்தினாலும் மெழுகுசீலைகளினாலும் ஆகாயக்கப்பல்கள் செய்யப்படுகின்றன வென்பதைக் கேட்டிருக்கின்றோமே யொழிய இப்போழ்து புதிதாய்க் கிளம்பியிருக்கும் அலுமினியத்தினால் ஆகாயக்கப்பல்கள் செய்யப்பட்டு வருகின்றன வென்பதைக் கேட்க மிக்க வாச்சரியமாகவிருக்கின்றது. 228-அடி நீளமுள்ள ஆகாய அலுமினியக் கப்பலொன்று அமெரிகாகண்டத்திலுள்ள ஐக்கியமாகாணங்களைச் சேர்ந்த ஸென்பிரான்ஸிஸ்கோவில் கட்டப்பட்டு வருகின்றதாய்க் கேள்விப்படுகின்றோம். இதை ஸ்டான்லி என்பவர் கண்டுபிடித்தனராகையால் ஸ்டான்லி ஆகாயக்கப்பலென்று பெயரிடப்படுமாம். இது அலுமினியத்தினால் செய்யப்படுகின்றதாகையால் சகலவிஷயங்களுக்கும் உதவுப்போலும். இருமூலைகளிலும் கூர்மையாகவிருக்குமாம். குழாய் வடிவமுள்ளதாம். அப்பாகத்தின அகலம் 116-அடி; உயரம் 56-அடி. அது இரண்டுபாகங்களாகப் பிரிக்கப்பட்டுளதாம். அதனடிப்புறத்திலிருந்து 12-அடி உயரத்தில் பெரிய பலகையொன்று குறுக்கிட்டு ஓடுகின்றதாம். கீழ்பாகத்தில், சிற்சில யந்திரங்கள், பிரயாணிகள், மற்றென்ன வேண்டுமோ அவை வைக்கப்படுமாம். மேல்பாகம் ஆறு அறைகளாகத் தடுக்கப்பட்டு ஒவ்வொரு அறையிலும் (ஹைட்ரஜன்காஸ) ஜலவாயு சேகரித்து வைக்கப்படுமாம். இந்த ஜலவாயுவே கப்பலை ஆகாயத்தில் பறக்கச்செய்வதற்கான சாதனமாம். ஒவ்வொரு அறையி னுட்புறத்திலும் பட்டினால் மூடப்பட்டிருக்குமாம். ஒருவேளை அலுமினியம் விடுபட்டுப்போயினும் ஜலவாயு வீணில் வெளியிற் சிதறாது இப்பட்டுமூட்டம் காக்குமாம். 6 அறைகளிலும் இருக்கும் வாயுவினால் 21,000 ராத்தல்களுள்ள சுமையை எளிதி லெழுப்பமுடியுமாம். ஆனால் கட்டப்பட்டுவரும் கப்பலின் பாரம் (யந்திரசக்திகள உள்பட)13,000 ராத்தல்களாம். இவைகளல்லது சுமார் 30 பிரயாணிகளை யவர்களது மூட்டை, அன்னபானாதிகளுடன் தூக்கிச்செல்ல அக்கப்பலுக்கு வன்மையுள்ளதெனக் கூறப்படுகின்றது.

---

MADRAS


# ஞானபோதினி

ஒரு மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

தாமின் புறுவ துலகின் புறக்கண்டு
காமுறுவர் கற்றறிந்தார்—திருக்குறள்.

சம்புடம் VI. | 1903ஸு ஜுலைமீ 20உ. | இலக்கம் 12.


## THE CLAMOUR AMONG THE TAMIL PANDITS OF MADRAS.

## சென்னைத் தமிழ்ப்பண்டிதர் குழப்பம்.

"தொண்டை நன்னாடு சான்றோருடைத்து" என்ற ஔவையார் முதுமொழியின்படி விளங்காநிற்கும் தொண்டைநாட்டின்கண் சிறப்புற்றோங்கி யொளிரும் சென்னைமாநகரின்கண் தமிழ்ப்பண்டிதர் பல்லோர்தக்க உத்தியோகங் கிடைத்தலின்றி வாளாவுலவுகின்றனர். அவர்களில் அநேகர் தமது நாவன்மையானுங் கைவன்மையானும் பிறவாற்றானும் தக்க பிரபுக்களைத் தேடிப்பிடித்துக்கொண்டு அவர்களை ஒட்டியுதவிபெற்று பல தமிழ்ச்சிறு நூல்களை அச்சிட்டு வெளிப்படுத்தியும் தாமே சில புதுநூல்களியினைந்தும் அவற்றைப்பிரசுரப்படுத்தியும், வியாபாரிகள் சிலரைக்கொண்டு தமிழ்நூல்கள் சிலவற்றிற்கு உரைசெய்து வெளிப்படுத்தியும் முன்னரே அச்சிட்ட நூல்களை மீட்டும் அச்சிடுவித்தும் நல்லாற்றான் உயிர்வாழ்கின்றனர். வேறுசிலர் அதற்கும் வழியின்றி அங்கங்கேயுள்ள கலாசாலைகளிலும் பள்ளிக்கூடங்களிலும் முன்னமேயுள்ள பண்டிதர்கள் விடுமுறைபெற்றுச் செல்லுங்காலம்பார்த்து அவர்களுக்குப் பிரதியாக அவ்வக் கலாசாலைகளிலோ பள்ளிக்கூடங்களிலோ சென்று சேர்ந்து வேலைபார்க்கின்றனர். இதற் குதாரணமாகச் சென்னைக் கிறிஸ்தவக்கலாசாலைத் தலைமைத் தமிழ்ப்பண்டிதரும், இந் 'ஞானபோதினி'ப் பத்திராதிப

ரிலொருவருமான பிரமஸ்ரீ வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியாரவர்கள் பி. ஏ. ஆறுமாதகாலம் தம்தேகம் சௌக்கியமின்மைபற்றி "விடுமுறைபெற்றுக்கொண்டனர். அவர்க்குப் பிரதியாக வேலைபார்க்க விரும்பித், தமிழ்ப்பண்டிதர் பலர்போந்து மேலதிகாரிகளைக் கேட்டனர். வேலைபார்க்கவேண்டியவ ரென்னவோ ஒருவர்தாம். ஆதலின் ஒவ்வொருவரும் தாந்தாமே அவ்வொருவராய்விடக் கூடாதோவென்று கருதி அவரவர் தத்தம் கல்விநலத்தைப் புகழ்ந்து கொள்ளுவதனோடு நில்லாமல் பிறர் தம் கல்விநலத்தைப்பற்றி யிழிவுபடுத்திக் கூறி ஒருவரோ டொருவர் வாய்ப்போர் புரிகின்றனர். இனி யிது நிற்க, சென்னை இராஜதானிக்கலாசாலையில் தமிழ்ப்புலமை நடாத்திவந்த ஸ்ரீமத் உபயவேதாந்த பு. மா. ஸ்ரீநிவாஸாசாரியாரவர்கள் காலஞ்சென்றமை பற்றி அவரது உத்தியோகம் காலியாயிற்று. அவ்வுத்தியோகத்திற்கும் நம் சென்னைநகர்த் தமிழ்ப்பண்டிதர்கள் தக்கமுயற்சிகள் செய்து வருகின்றனர். தமிழ்ப் பண்டிதர்க ளதிகமாக அவர்கள் பார்க்கத்தக்க வேலைகள் குறைவாயிருக்கின்றன. அந்தோ ! இவ்வாறாயிற்றே தமிழ்வாணர்கள் கதி ! இதனை யுய்த்துணர்ந்து இளம் பிள்ளைகளைப் பயிற்றுவிக்கும் ப்ரைமெரி பாடசாலைகளில் இப்பண்டிதர்களை வேலைக்கமைத்து தக்கதமிழ் நூல்களைப் போதிக்கும்படி செய்து தமிழ்ப்பண்டிதர்களையும் ஆதரித்தல் மிகவும் மேதக்கதன்றோ? சிறுவகுப்பின் தமிழ்நூல்களை தக்கவாறு கற்பிக்கப்படாமையினாலே அப்பிள்ளைகள் மேலேறப்படிக்குமிடத்து பெரிதும் பிழைபோகின்றனர். அஃதல்லாமலும் தமிழ்க்கல்வியில் வெறுப்புடையருமாகின்றனர். இதுமிகவும் பரிதபிக்கத்தக்கதன்றோ ? இதனை மேலதிகாரிகளறிந்து தமிழ்ப்பண்டிதர்களுக்குத் தக்க வுதவி புரிவாராக.

பத்திராதிபர்.

---

## THE THERMOMETER.
## சீதோஷ்ணமானி.

---

உலகத்திற் 'குளிர்ச்சி'யும் 'சூடு'ம் ஒன்றோடொன்று சம்பந்தப்பட்ட சொற்கள். சூட்டின்குறைவே குளிர்ச்சியெனப்படும்; குளிர்ச்சியின் நீக்கமே சூடெனப்படும். ஆகவே, 'சீதோஷ்ண' மென்பது சூட்டின் குறைவு மிகுதியே என்பது பெறப்படும்.



யாதாயினுமொரு பொருளுக்குள்ள சூட்டின்குறைவு மிகுதியை எவ்
வாறு* அளவிடுவது ? உலகத்திலுள்ள பொருள்கள்யாவும் சூடேறுவதால்
பெருகுவதும், சூடாறுவதால் குறுகுவதும் ஆகின்றன. உதாரணமாக ஒரு
சிறுபாத்திரத்தின் நிறையச் சலத்தையாவது பாதரசத்தையாவதுவிட்டு
அதன் வாய்புறத்தை கெட்டியால்மூடி அக்கெட்டியின் நடுவில் மயிர்க்கனக்
குழாய் *ஒன்றைத் தூருவுங்கள். பிறகு அப்பாத்திரத்தைக் காய்ச்சக்காய்ச்சக்
குழாயின் மூலமாகநீர் அல்லது பாதரசம் பெருகி ஏறுவதைக் காண்பீர்கள்.
இதனால் சூட்டின் காரணமாகப் பொருள்கள் பெருகுமியல்பை யுடையன என்
பது வெளிப்படும். பொருள்களுள் திடபதார்த்தங்களைப் பார்க்கிலும் திரவ
பதார்த்தங்கள் அதிகமாகப் பெருகும். திரவபதார்த்தங்களைப் பார்க்கி
லும் வாயு பதார்த்தங்கள் இன்னும் அதிகமாகப்பெருகும். திரவபதார்த்
தங்களுள் பாதரசத்தின் பெருக்கத்தாலும் குறுக்கத்தாலுமே சாதாரண
மாய்ப் பொருள்களின் சூட்டின் அளவு அறியப்படுகிறது. அவ்வாறுசூட்டின்
அளவை அறிவிக்கும் கருவிக்குச் 'சீதோஷ்ணமானி' என்றுபெயர்.

இனி, சீதோஷ்ணமானி செய்யப்படும் முறை வருமாறு:—

முதலாவது, ஒருபுறம் கோளவடிவாகக் குமிழ்த்த † மயிர்க்கனக்குழாய்
ஒன்றைத் தெரிந்தெடுத்துக் கொள்ளுங்கள். மயிர்க்கனக்குழாய்க்குள் எந்
தத் திரவபதார்த்தத்தையும் வார்ப்பது கஷ்டம். ஆயினும்குமிழ்த்த இடத்
தில் ஒரு விளக்கினால் நன்றாய்க் காய்ச்ச, குழாய்க்குள்ளிருக்கும்
வாயு வேகமாகப்பெருகி வெளிச்செல்லும். உடனே குழாயின் வாய்ப்
புறத்தை ஒரு பாத்திரத்திலிருக்கும் பாதரசத்திற் கவிழ்த்து விளக்கை
அப்புறப்படுத்துவோமானால், சூட்டின் நீக்கத்தால் அஃதாவது குளிர்ச்
சியால் வாயு மிகக்குறைந்துபோம். மிகுந்துள்ள சூனியபாகத்திற்கு வெளி
யிலிருந்து வாயுவரக் கூடாமையால் பாதரசமேற்சென்று அச்சூனியபாகத்
தை நிரப்பிக்கொள்ளும். இவ்வாறேசிலதடவை குழாயின் வாய்ப்புறம்
பாதரசத்திலிருக்க அதன் குமிழ்த்த இடத்தைக்காய்ச்சிவந்தால் குமிழ்த்
தபாகத்திலும் பாதரசம் நிறைந்துவிடும். பிறகு இப்பாதரசத்தை நன்
றாய்க் காய்ச்ச அதிற் சிறிது ஆவியாகி முன்னுள்ள வாயு முழுவதையும் வெ
ளியிற்றள்ளிவிடும். குழாயுள் ரசமும் ரச ஆவியுமே இருக்குந்தருணத்தில்
குழாயின் வாய்ப்புறத்தை நன்றாய்க்காய்ச்சி மூடிவிடுங்கள்.

இரண்டாவது:—குமிழ்த்தபாகத்தைதை உருகும் பனிக்கட்டியில் வை
யுங்கள். உடனே குளிர்ச்சியாற் பாதரசம் குறுகிக் குமிழ்த்தபாகத்திற்
குச் சிறிது மேலாக வந்து நிற்கும். அவ்விடத்தை அரத்தாற் சிறிது அரா
வுங்கள். அதனையே 'பனியுருகிடம்' ‡ என்பர். பிறகு குமிழ்த்தபாகத்தைக்
கொதிக்கும் நீரின் ஆவியில் வையுங்கள். உடனே சூட்டின் காரணத்தால்

---

* Capillary tube. † Bulbed. ‡ Freezing point.

ரசம் மேற்பெருகி ஓரிடத்தில்வந்து தங்கும். அவ்விடத்தையும் அரத்தாற் சிறிது அராவிவிடுங்கள். அதனையே நீர்'ர் கொதியிடம்' * என்பர்.

மூன்றாவது:—குழாய்முழுவதையும் மெழுக்கால்மூடிப், 'பனியுருகிட' த்திற்கும் 'நீர்க்கொதியிட' த்திற்கும் நடுவிலுள்ள பாகத்தை நூறு சரிபங்குகளாக ஊசியின் நுனிகொண்டு பிரித்துவிடுங்கள். 'பனியுருகிட' முதல் நீர்கொதியிடம் வரையில் சூனியம் முதலாக நூறு இறுதியாக அம்மெழுகின் மேலாகவே எண்ணினையும் அமைத்துவிடுங்கள். பிறகு குழாய்முழுவதையும் 'ஐட்ரோக்ளோரிகாசிட்' என்னும் ஒருவித திராவகத்தின் ஆவியில அமிழ்த்த எண்பிரிவு இவற்றின் குறிகள் குழாயில் நன்றாய் அமைந்துவிடும். பிறகு மெழுகைக் கரைத்துக் கழுவி நீக்கிவிடலாம்.

பனியுருகிடத்திற்கும் நீர்கொதியிடத்திற்கும் நடுவிலுள்ள பாகம் 100 பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டபடியால், இவ்வாறமைத்த சீதோஷ்ணமானியை 'சதாம்ச சீதோஷ்ணமானி' † என்பர்.

நம் இந்தியாதேசத்திற் சாதாரணமாய் உபயோகப்படுத்திவரும் சீதோஷ்ணமானிகளிற், 'பனியுருகிட' த்திற்கும் 'நீர்கொதியிட' த்திற்கும் நடுவிலுள்ள பாகம் நூற்றெண்பது பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுப் 'பனியுருகிட' முதல் 'நீர்கொதியிடம்' வரையில் 32 முதலாக 212 இறுதியாக எண் அமைக்கப்பட்டிருக்கும். இவ்வகைச் சீதோஷ்ணமானியின் குமிழ்த்தபாகத்தை உப்பும் பனிக்கட்டியும் கலந்த கலப்பில்வைக்க, ரசம் மிகுதியும் குறுகிச் சூனிய எண்ணைக்காட்டும். இதனைப் 'பாரெனையிட்' துரை கண்டுபிடித்தாராகையால் இவ்வகைக் கருவிக்குப் 'பாரெனையிட் சீதோஷ்ணமாமானி' என்று பெயர்.

பிரெஞ்சுதேசங்களில் உபயோகிக்கப்படும் சீதோஷ்ணமானிகளில் பனியுருகிட முதல் 'நீர்கொதியிடம்' வரையிலுள்ள பாகம் 80 பிரிவாகப் பிரிக்கப்பட்டுச் சூனியமுதல் எண்பதீறாக எண் அமைக்கப்பட்டிருக்கும். இதனை 'ரோமர்' துரை ஏற்படுத்தியபடியால் இதற்கு 'ரோமர் சீதோஷ்ணமானி' என்று பெயர்.

இவ்விதமாக இவ்வுலகின்கண் மூன்றுவித சீதோஷ்ணமானிகள் நிலைபெற்று வருகின்றன. எந்தப்பொருளினுடைய சீதோஷ்ணநிலைமையை அறியவேண்டுமென்றாலும் சீதோஷ்ணமானியின் குமிழ்த்தபாகத்தை அப்பொருளோடு பொருத்திப் பாதரசம் பெருகிநிற்கும் எண்ணைக் கவனித்துக்கொள்ள வேண்டும். ஒரு சீதோஷ்ணமானியின் எண்ணைக்கொண்டு மற்றொருவித சீதோஷ்ணமானியின் எண்ணுகவும் கீழ்வரும் குறிப்பால் அறிந்துகொள்ளுதல் கூடும். சதாம்ச சீதேஷ்ணமானியைச் ச எனவும் 'பாரெனையிட் சீதோஷ்ண

* Boiling point. † Centegrade thermometer.



மானி' யைப் பா எனவும் 'ரோமர்சீதோஷ்ணமானி'யை ரோ எனவுங்குறித்துக்கொண்டால்,

$$ச = \frac{5}{9}\ (பா + 32) = \frac{5}{4}\ ரோ\ ;$$

$$பா = \frac{9}{5}\ ச\ +\ 32 = \frac{9}{4}\ ரோ + 32$$

$$ரோ = \frac{4}{9}\ (பா + 32) = \frac{4}{5}\ ச$$

என்பவற்றால் ஒருவித சீதோஷ்ணமானியின் எண்ணை மற்றொரு சீதோஷ்ணமானியின் எண்ணாக மாற்றியறிந்து கொள்ளலாம்.

சி. சுப்ரமணியாசாரி.

---

## சந்திரமுகன்.

### அங்கம். IV.

#### களம்—3

இடம்—சிறைச்சாலைக்குள்.

காலம்—இரவுமணி மூன்று.

பாத்திரங்கள்—சந்திரமுகன், பலாயனன், கொலையாளிகள்.

பலா:—சந்திரமுகா ! இவ்விடம் வருதி. யான் சில செய்திகளை யுன்றன் செவிபுகட்ட வெண்ணுகின்றேன். (சந்திரமுகன் நித்திரை தெளிந்து வருகின்றான்.)

சந்தி:—வந்தனம் வந்தனம் என் பிரியநேசா !
எந்தமையழைத்த காரிய மியாதோ?

பலா:—வந்தனம் தந்தனெம் அரசிளங்குமர !

சந்தி:—உன்னைக்கண்டவுடன் சூரியனைக்கண்ட தாமரைபோல் மனமலர்ந்தேன் ; உன்னையான் காணப்பெற்றது மென் பாக்கியமே. அரசிளங்குமரனென்றென்னை நீ கேலி பண்ணுகின்றாயோ? ஆமாம். செய்பத்தானே வேண்டும். எனக்கு அந்தப்பட்டப்பேர் இருந்தாலும் யாதொரு மரியாதையையும் காணேனே ? 'அடுத்தது காட்டும் பளிங்கேபோல் நெஞ்சங்கடுத்தது காட்டும் முக'மாதலால் உன்முகத் தாமரையைப் பார்க்குங்கால் அது ஏதோ வாடியிருக்கின்றதுபோல் தோன்றுகின்றது. நீ விசனமுற்றிருக்கின்றனையோ ? "மரைமலர்போன் முகத்து மதியுருகனங்மொப்ப வுரைதருவாட்டமொன் றற்றொளி குறைந்திருக்கின்றாயே."

பலா:—யான் எவ்வளவோ சந்தோஷமாயிருக்கின்றேன்.

சந்தி:—என்னைத்தவிர வேறொருவரும் விசனமுற்றிருப்பார்களென்று நானெண்ணவேயில்லை. ஆனால் நீயோ யிப்பொழுது விசனமுற்றிருப்பதாகக் காண்கின்றது. நான் ஆடுமாடு மேய்த்துக்கொண்டு இருந்தாலும் இந்தக் காவலிலிருப்பதைவிட மிகச் சந்தோஷமாய் இருப்பேன். இச்சிறையிலிருப்பினும் நான் உல்லாசமாய் இருப்பேன். ஏனெனில் என் மனத்தை எப்படிப்பட்ட சிறையாலும் கட்டிவைக்க முடியாது. ஆனால் மனவானந்தத்தையும் அடைய முடியவில்லையே! ஏனெனில், என் சிற்றன்னையாய கொடும் பாவித் துன்முகன் என்னைக்கொல்லும்பொருட்டு அநேக சூழ்ச்சிகள் செய்துகொண்டிருக்கின்றான். நாகத்தைக் கண்டு மானுஷ்யர் பயப்படுகின்றனர். மனிதரைக் கண்ணுற்று அவ்வரவு நடு நடுங்குகின்றது. அன்னவ்வமே என் சிற்றப்பனாய துன்முகனைக் கண்டு நான் அஞ்சுகின்றேன். என்னைக்கண்டு அவன் பயப்படுகின்றான். அது என் பிழைசொல்? நான் சிதானந்தன் புதல்வனாயுற்றது மென் பிழையோ? ஒருக்காலுமில்லை. அவரிறந்த பிறகு யான் உன்னையே தந்தையாக மதித்துவருகின்றேன். ஆயினமையின் நீ என்னை அன்போடு மாதரவோடும் உபசரிப்பாய் என்று நினைக்கின்றேன்.

பலா:—(தனக்குள்) இவன கம்பீரத்தோற்றத்தைக் கண்டால் காலனும் பயப்படுவானே! இவனைக் கண்டால் இரதியும் அனங்கனை வெறுப்பாள்! சசியும் ஆயிரங்கண்ணனை யொறுப்பாள்! வாணியும் அலரவனை மறப்பாள்! ஆகா! இவனைப் பார்த்தவுடனே யாவர் மனத்தையும் கலக்காதா? இவ்வழகிய இளவரசன கண்ணை யெரித்திடுவதா? ஆனால் என் செய்வது? அரசன் கட்டளையை நிறைவேற்றாவிடில் அவன் கோபித்துக் கொள்வானன்றோ? நான் இவனுடன் இன்னும் பேசின் அவன் என் மனத்து மறைந்து வாளாகிடக்கும் கருணையைக் கிளப்புவான் "காலஹரணம் காலக்கிரையிடும்" ஆதலால் யான் உடனே வேலையைத் தீர்த்துவிடவேண்டும்.

சந்:—பலாயனா! உனக்கு உடம்பு சௌக்கியமில்லையோ? உன் முகம் வெளுத்திருக்கின்றதே. உனக்குக் கொஞ்சம் உடம்பு அசௌக்கியமாயிருக்க வேண்டுமென்று யான் விரும்புகின்றேன். ஏனெனில் யானப்பொழுது உன் பக்கத்தில் உட்கார்ந்து உன்னை ஈயெறும்பணுகாவண்ணம் பாதுகாத்து மருந்து வேண்டியபொழுது கொடுப்பல் நீயென்னை நேசிப்பதைவிட யான் உன்னை யதிகமாக நேசிக்கின்றேனென்று உறுதியாக நம்பு.

பலா:—(தனக்குள்) ஆகா! அவன் தேன்மொழியே என் மனதை யுருகச் செய்கின்றதே. யானெப்படி யரசன் கட்டளையை நிறைவேற்றுவல்?



(சந்திரமுகனைப் பார்த்து.) இளங்கோவே. இக்காகிதத்தைப் படித்துப் பார். (ஒரு காகிதத்தை நீட்டுகின்றான்.) (தனக்குள்) என் கண்ணில் நீர் ததும்புகின்றதே. வெட்கமற்ற கண்ணீர்காள்! நீங்களேன் வந்து என் உறுதியெண்ணத்தை விடும்படி செய்கிறீர்கள்? நான் துரிதத்தில் காரியத்தை முடித்துவிடவேண்டும். முகத்தில் மீசையிருந்தும் நான் என்னை பெண்களைப்போல அழுகின்றேனே! (சந்திரமுகனைப்பார்த்து) நீ அதைப்படிக்க முடியவில்லையோ? எழுத்து திருத்தமாக வில்லையோ?

சந்:—(படித்துப்பார்த்துவிட்டு) இக்கொடிய பாதகச் செயலுக்கு வெகு நன்றாயெழுதி யிருக்கின்றது. நீயென் கண்ணையவித்து என்னையந்தகனாக்க வேண்டுமோ? (கண்ணீர்த்ததும்பவாய்பதற)

பலா:—அரசே! யானென்செய்வேன்? கண்ணையவிக்கத்தான் வேண்டும்.

சந்:—நீயப்படிச் செய்வாயோ?

பலா:—ஆம். கட்டாயமாய்ச் செய்தே தீர்ப்பேன்

சந்:—உன் மனம் துணிகின்றதோ? நின்னெஞ்சு கல்லோ? நான் உன்னைத் தந்தைபோல பாவித்து வந்தேனே! நீயிவ்வாறு செய்வாயென்று நான் கனவிலும் நினைத்ததில்லையே! நீ உடம்பு அசௌக்கியமாயிருந்தபோது நானுன்னை யெவ்வளவு பரிவுடன் பார்த்துவந்தேன்? "உனக்கு உடம்பு இப்பொழுதெப்படியிருக்கின்றது? கை, கால் பிடிக்கட்டுமா? எவ்விடம் வலிக்கிறது?" என்று பலவிதமாகக் கேட்டும் வந்தேனே. அந்நன்றி நீ யின்று மறந்தனைகொல்? தெய்வப் புலமைத் திருவள்ளுவ நாயனார்,

"நன்றிமறப்பது நன்றன்றுநன்றல்ல
தன்றே மறப்பது நன்று" என்று கூறியிருப்பதை நீயறியாய்போலும்.

"எந்நன்றி கொன்றார்க்கு முய்வுண்டா முய்வில்லை
செய்ந்நன்றி கொன்றமகற்கு"

"செய்ந்நன்றி கொல்லன் மின்" என்றும் கூறியிருக்கின்றனரன்றோ?

உன்பேரிலிருக்கும் அன்பெல்லாம் பொய்யென்று நினைக்கின்றனையோ? ஒருக்காலுமப்படி யெண்ணற்க. ஜகதீசன் விரும்பினபடிச்செய். பழுக்கக் காய்ச்சிய இரும்பீட்டிகளைக்கொண்டு என்னட்சிகளையவிப்பாயோ? யான் மனதறிய யாதொருதீங்கு முனக்கு இழைத்தேனில்லை. உன்னைக் கடுகடுத்துப் பார்த்ததுமில்லையே.

பலா:—உன் நேத்திரங்களை யவிக்க நான்வாக்குத்தத்தஞ் செய்திருக்கின்றேன். இது தீர்மானம். அப்படிச்செய்தே தீர்வேன்.

சந்:—(அலறி) (வாய்குளறிக்கொண்டு) ஏ ! ஜகதீசா ! நீ யென் மனத்தைத யின்னணங் கலங்குகிற்பது நின்னருட்டன்மைக் கேற்குமோ ? ஓ ! ஆயிரம் பெயருடையண்ணலே ! நீ கருணாகரப் பெயரினனல்லையோ ? ஏ ! சதாசிவா ! நின்னைப்பஞ்சக்கிருத்திய பதியெனப்பகருதல் பொய்யோ ? அனுக்கிரக சத்தியென்பது நின்பாற்சிறிதுமின்றுகொல் ? என்னை நீ யிவ்விடர்க் கடலினின்றுங் கரையேற்றுயோ ? நினக்குக் கண்ணிலையோ ? ஓ ! இடர்களையும் மிறைவா ! திக்கற்றோர் துணைவா ! நீதான் என்னைக் காப்பற்றல் வேண்டும்,

தர்தாங் தக்கத்திங்கிணத்தோமெனவே
தன்னேரிலா வெள்ளிமன்
றத்தாடுற்ற வெமண்ணலே !

நீதானென்னைக்காப்பாற்றிக் கருணை புரிவாயாக யானென் சிற்றப் பணிடத்தில் இருமருங்கும் புடைபடு மத்தளம்போல் தவிக்கின்றேனே. யான் உரலிலிருக்கும் பாண்டம்போற் றவிக்கின்றேனில்லையோ ? இதுவுமென்றென் றலைவிதியோ ? இபம்டாய். ஏகம்பத்துறையெம்பெருமானே ! கிரீடத்தைரியாயமாய்ப் பற்றத் தொடங்கிய விடத்துயான் கடுஞ்சிறையி லகப்பட்டு இத்துன்பங்களையெல்லாம் நுகர்ந்து வருகின்றேனே ! அது தேள்கொட்டியதென மருந்து தேடுழிப்பாம்பு கடித்த பான்மைபோலாயிற்று! பிள்ளை வரங்கேட்கப்போகுழி புருடனைப் பறிகொடுத்ததை யொத்ததே ! தேன் கொண்டுவரப்போன விடத்து தேனீக்களால் கொட்டுண்டேனேஐயகோ ! யான்யாது செய்யவல்லேன் ?

"மூவர் முன்னவனே ! முதலாகிய முக்கணனே !
கோவே ! கோமளனே குளிர்ச்சந்திர சேகரனே !
நாவாற் பாடுகின்றேம். நலமுள்ள மதுரையனே !
தேவா ! நீ கருணை சிறிதேனும் புரிந்தருளே."

பலா:—என்னை பிதற்றுகின்றனை ? யாது சொல்லினும் யான் எடுத்த காரியத்தை விடுவேனல்லேன். எடுத்த காரியத்தை விடுத்த லொண்ணாது.

சந்:—ஐயோ ! காலங்கலி காலமல்லவா ? இக்காலத்திலல்லாது வேறு எக்காலத்திலும், இத்தீச்செயலுக்கு இணங்குவார்களோ ? பழுக்கக் காய்ச்சிய இரும்பும் என் கண்ணின் சமீபத்தில் வந்திடுமேல் என்கண்ணீரால்நனைந்து அவிந்துபோவது தன் கோபத்தைத் தணித்துக்கொண்டு என் கண்ணை யவிக்கத் தன்னிடத்தில் நெருப்பிருப்பதை நினைந்து தானே மனம் வருந்தி யறுப்பிப்பதை பொக்கும். நின்னெஞ்சு கல்லோ ? நீ யென்னை யிப்படிசெய்யத் துணிவாயென்று நான் கனவிலும் நினைத்திலேன். உன்னைத்தவிர வேறு யாரொருவர் நீ யப்படிச் செய்வாயென்று சொன்னாலும் நம்பி யிருப்பேனல்லேன்.



"பெருவேங்கைப் புலிபிடித்த பசுவைப்போல
பிதுர்கலங்கி மனந்தளர்ந்து புலம்பினேனே
உரத்துநா னுனைக்கூவ செவிகேளாதோ
விதுசமயந் தாமதமாயிருக்கலாமோ
குருவாகித் தந்தைதாய் நீயேயாகில்
குமரேசா பிராணபயந் தீருமையா
முருகேசா விதுசமயம் பழனிவேலா
முன்வந்து உயிர்காத்து ரட்சிப்பாயே!"

பலா:—மாயாண்டி ! கருப்பா ! சீக்கிரம் வாருங்கள்.

(காலால் பூமியை உதைக்கின்றான்.) (கொலையாளிகள் வருகிறார்.)

(கொலையாளிகளைப்பார்த்து) கட்டளையிட்டபடி செய்யுங்கள்.

சந்:—ஐயோ ! ஐயோ ! யானென்செயவல்லேன் ? என்னையெப்படியாவது காப்பாற்றவேண்டும். பலாயனா ! என்னைக்காப்பாற்றுவீராக. இக்கொடுங் கொலையாளிகளைப் பார்த்தவுடனேயே என் கண்கள் அவிந்துபோய் விட்டனவே.

பலா:—சட்டியை என்னிடங்கொடுத்திடு. இவனையிறுக நாற்காலியுடன் சேர்த்துக் கட்டிவிடுங்கள்.

சந்:—ஐயகோ ! நீஎதற்காக இவ்வளவு முரட்டுத்தனமாயிருக்கின்றனை ? நான் உன்னுடன் போராடுவதில்லை. கல்லைப்போல் மூச்சுவிடாமல் உட்கார்ந்து கொள்ளுகிறேன். தயவுசெய்து என்னைக் கட்டாமல் விட்டிடுக. தயவுசெய்து நான் சொல்வதற்குச்செவி கொடுப்பாயாக. இக்கொலையாளிகளை யப்புறப்படுத்திவிடு. பசுப்போற் பேசாதிருக்கின்றேன். யாதொன்றுஞ் செய்வதில்லை. நீ யென்னை யாதுசெய்யினும் உன்பேரில் கோபித்துக் கொள்வதில்லை.

பலா:—(கொலையாளிகளைப்பார்த்து) நீங்கள் போய்விடுங்கள். இரும்பும் கயிறும் இவ்விடமே யிருக்கட்டும். நானுமவனும் மாத்திரம் இவ்விடமிருக்கின்றனம்.

பேயா:—ரொம்ப சந்தோசம் சாமீ ! தப்பிச்சோம்; இந்தக்கொடும்பாவி வேலையை எவந்தாஞ்செய்வான்.

(கொலையாளிகள் போகிறார்கள்.)

சந்:—அக்கொலையாளிகளிடத்தும் ஈவிரக்கம் இருக்கிறதே. ஐயோ ! என் நேசர்களை யப்புறப்படுத்தி விட்டேனே ! அவர்கள் பார்க்கப் பயங்கரமாயிருக்கின்றனரேயொழிய எவ்வளவு தூயமனத்தராயிருக்கின்றனர் ! அவர்கள் திரும்பவும் வந்து உன் கன்னெஞ்சை யுருக்கலாகாதோ ?

பலா:—ஏது ? சந்திரமுகா ! கண்ணையிழக்கத் தயாராயிரு.

சந்.—யான் தப்பிப்பிழைக்கும் வழி யாதாகிலும் தயவு புரிந்து புகலாயோ ?

பலா:—கண்ணிழக்கும் வழிதவிர வேறொரு வழியையும் காணேனே.

சந்:—ஐயகோ ! (அலறியழுகின்றான்) ஓ ! கருணாநிதியே ! சத்திய மூர்த்தியே ! அரும்பொருளே ! வெள்ளியம்பலத்துத் தாண்டவஞ்செய்யும் நடராஜரே ! அருமறை முதல்வா ! ஆழிமாயனே ! கருமுகில் வண்ணனே! கருணைக்கண்ணனே ! கமலக்கண்ணனே ! திருமகள் தலைவனே ! உன்னை யான் இறைஞ்சி யேத்துகின்றேன்; என்னை நீ யிவ்விடர் களைந்து காவாயோ ? உன்னைத்தவிர வேறொருவரும் என்னைக்காக்க வல்லாரல்லரே ! நானித்துன்பசாகரத்திற் றள்ளுண்டு நீந்தத்தெரியாமல் கைகால்களை யடித்துக்கொண்டு, ஒவ்வோரலை வருந்தோறும் ஒவ்வொரு வாய் உவர் நீரைப்பருகி, உயிர் இந்தநிமிஷம்போகுமோ ? அடுத்த நிமிஷம் செல்லுமோ ? என்று தோன்றுமற் றியங்கி, உதவியாக யாதொரு கப்பலையுங் காணாது பிடித்துக்கொள்ளக் கட்டையாவது புல்லாவது காணாமலும் தத்தளித்துத் தடுமாறுகின்றேனே. உனக்குக் கண்ணில்லையோ ? ஹரஹரா ! உன்னை இடர்களைவோனென்று கூறுகின்றனரே ! இப்பொழுது நீ என்னை வந்து காவாயோ ? பலாயனனுக்கு நற்புத்தியாவது புகட்டலாகாதோ ?

இராகம்-பியாக்-தாளம்.

தஞ்சமென்றே நம்பினேன் நல்ல சந்தர்ப்பமிதே
கைதவறவிடாதே-கைதவறவிடாதே-கைதவறவிடாதே.

சரணம்.

1. நெஞ்சமதனில் வஞ்சவருமம் நினைவதழகோ தெய்வ
குஞ்சரிகுர வஞ்சிதவொளிர் குங்குமதேகா பூங்குரவமயோகா.

2. விகற்பரூப செகத்து மாயவா மெத்த பிரமாதமா அதில்
அகப்படாமல் இகத்தும் பரத்தும் ஆநந்தபோதம்தந்தருளிசைபாதம்.

3. சின்ன வயததனில் உறுதிதேடினேன் உன்னை நாடினேன்
என்னபிழையிருந்தபோதிலும்வழையடாம்என்னை ஆளேன் தயைகொண்டு.

என்னருமை நண்ப! பலாயனா! மெய்க்கணிகலங் கண்ணல்லவோ ? உன் கண்ணில் ஒரு எறும்பாவது, தூசியாவது தூளாவது இருப்பின் எவ்வளவு துன்புறுவாய் என்பதை நினைத்துப்பார். அதனால் விளையும் வருத்தம் கொஞ்சநெஞ்ச மல்லவே ? அப்படியிருக்க நீ யென் கண்ணையவிக்க எப்படித் துணிந்தாய் ? எப்படியாவது நீ யென்னைக் காப்பாற்றிக் கருணைபுரிக. நின் நன்றியை நானென்றும் மறவேன்.



பலா:—என்ன ! நான் சொல்லுகிறபடி செய்வாயல்லையோ ? இது தானா நீ செய்த வாக்குத்தத்தம்? பசுப்போல பேசாதிருப்பேனென்றாயல்லவோ? பேசாதே. மூச்சுவிடாதே.

சந்:—என்னன்புக்கிடனாய பலாயனா! இதுதானோ நல்லோனுக்கடையாளம் ? நீ யென்னைக்கொல்லக்கருதுவது பிச்சைக்காரன்மேல் பிரம்மாஸ்திரம் தொடுக்கிறதுபோலாம். கொசுவைக் கொல்லக் கோடரி வேண்டுமா ? நீ யென் கண்ணையோ குத்திவிடவேண்டும் ? நான் பேசாதிருப்பதற்கு என் நாவையாவது அறுத்திடேன் ‘திறனிருக்கிறதென்று நீ தெரிக்கலாகாது’ ‘கெடுவான் கேடுநினைப்பானல்லனோ !’ நீ கெடவேண்டுமானால் எனக்கு இக்கடுங்கேடுசெய்தி. ‘அரசனன்றுகொல்லும் தெய்வம் நின்று கொல்லும்’ என்னும் முதியோர் மாற்றம் நீ யறிந்திலைகொல் ? தெய்வ முன்னை இக்குற்றத்திற்காகத் தண்டியாதுவிடுமோ ? மோட்சமுன்னை மோசஞ்செய்திடுமே. இப்பிழையிழைக்க நீ யுடன்பட்டதும் பிசகல்லவோ ? மனம், வாக்கு, காயம் என்பது மூன்றும் மாசற்றிருக்க வேண்டாமோ ? ஐயோ ! பலாயனா ! நீ யென்னை யெவ்விதத்திலுங் காப்பாற்றுதி. தெய்வமே ! நீயாவது என்பேரிற் கருணைபுரியாயா ?

“பாம்பின்வாய்ச் சிக்கியதோர் தேரைபோல
பதைபதைத்து வாடுகிறேன் பாலனாயேன்
தேம்பியே புலம்புகிறேன் துயரமாகித்
தென்னவனே யுன்செவிக்குக் கேளாதோதான்
நான்புவியி லுனைநம்பி மகிழ்ந்திருந்தேன்
நாயேனுக் கவதிவர நியாயமோ தான்
சாம்பசிவன் புத்திரனே பழனிவேலா
சமயமிது உயிர்காத்து ரட்சிப்பாயே.”
“வலையிலகப்பட்ட உயிரதுபோல் மயங்குகிறேனே
வடிவேலா விதுசமயந் துயரந்தீர்ப்பாய்
கொலைகளவு பாதகங்கள் போயிருந்ததெல்லாம்
கொடும்பழிகள் வஞ்சனை பில்லி சூனியமெல்லாம்
துலையாத சிறுபிணிநோய் வல்வினைகளெல்லாம்
துரத்துமையா மயிலேறுஞ் சுப்பிரமணியா
மலையிலுறைவாசனே பழனிவேலா
வரமளித்து உயிர்காத்து ரட்சிப்பாயே.”

பலா:—மறுபடியும்பார்: யான் சொல்லுகிறபடி செய்வாயல்லவோ ? பேசாதே.

சந்:—இன்னும் உனக்கு மனம் இளகவில்லையோ ? என் கண்களைக் காப்பாற்றும்படி உன்னுடன்வாதாட ஆதிசேஷனது ஆயிரநாவும் போதுமோ ? ஒருக்காலும் போதேதே. என் நேத்திரங்களுக்கு ஈடாக என் நாவையாவது அறுத்திடுக. பலாயனா ! யான் உன்னையாவது கண்குளிரப்பார்த்துக்கொண்டிருப்பேனே ! சூட்டுக்கோலும் குளிர்ந்துபோய்விட்டதே ; என் கண்ணையவிக்கப்போதுமான நெருப்பும் அதிலில்லையே ! என்னை யந்தகனுக்கு அதற்குங்கூட இஷ்டமில்லைபோலும்.

பலா:—மறுபடியும் நான் அதைக் காய்ச்சக்கூடும். சந்திரமுகா !

சந்:—வேண்டாம், வேண்டாம், இதோபார்; நெருப்புமானிடருக்கு நல்ல உபயோகத்திற்கு சிருஷ்டிக்கப்பட்டதேயன்றி கொடுங்காரியங்களுக்கு ஒருகாலும் சிருஷ்டிக்கப்படவில்லையென்பது திண்ணமே. அக்கினிபகவானே, என்னைக்கொல்ல இச்சூட்டுக்கோல் இருக்கிறதென்று தெரிந்து அதனிலிருக்கும் நெருப்பைத் தணித்துவிட்டாரே ! பகவானே என்பேரில் கருணைகொண்டிருக்கின்றனரன்றோ ? ஜனங்கள் தங்கள் பாவங்கள் தீரச் சிரமீது விபூதியைத் தூவிக்கொள்வதுபோல்என்னைக்கொல்ல நினைத்த பாவந்தீர இத்தணலுந் தன்மீது சாம்பலை வாரிப்போட்டுக்கொண்டிருக்கிறதன்றோ ?

பலா:—நான் ஊதிமறுபடியும் சுவாலிக்கச் செய்வேன்.

சந்:—அவ்வாறு நீ ஊதிசுவாலிக்கச்செய்வது, அவைகள் வெட்கத்தினால் முகஞ்சிவந்து வருந்துவதையொக்கும், ஓர்நாய் மற்றொரு நாயுடன் சண்டைசெய்யும்படி தூண்டப்படின் அஃது பழைய தன் எஜமானனையே கடித்திடுதல்போல நீ யித்தணலை ஊதின் பொறிகள் பறந்துஉன் கண்ணிற்புகுந்து உன்னையே வருத்திவிடும். இரும்பும் நெருப்புங்கூட எவ்வளவு தயாளகுண முடையதாயிருக்கின்றன ? நின்னெஞ்சு இவைகளைப்பார்க்கினும் கொடிதோ ?

பலா:—இப்படியெல்லாம் சொன்னால் உன்னை விட்டுவிடுவேனென்று நினைத்தாயோ ? ஆமாம்; நான் கொடும்பாவிக் கன்னெஞ்சனே. உன் கண்களை இன்று குத்தியே தீருவேன். உட்கார் (பிடித்துட்காரவைத்து சூட்டுக்கோலைக் கொண்டுவருகின்றான்.)

சந்:—ஐயோ ! ஐயோ ! பார்க்கும்போதே கண்கள் போய்விட்டனவே. என் கடைசி வார்த்தைகளைச்சொல்லி விடுகின்றேன். (கண்ணீர்பெருக அலறுகின்றனன்.) அம்மா ! கல்யாணி ! யானினி யென்செய்வேன் ? என்ணுத வெண்ணமெல்லாம் எண்ணியெண்ணியென்னேழை நெஞ்சம் புண்ணாகியதே. என்னை நீயெப்பொழுது கண்குளிரக் கண்டு களிகூர்வாயோ ? அப்பா ! என்னருமைத்தந்தாய் ! நானினியுன்னை உம்பருலகிற்



காண்பேன். கோபாலா ! கிருஷ்ணா ! நீரிச்சமயத்தென்னைக் கைவிடுவீரோ ? கருணாநிதி யென்ற பெயர் பொய்த்துப்போயிற்றே.

“சதாசிவா ! பராபரா ! தயாநிதி மகாகுரோ !
சிதாணவா ! சுகாகரா ! திவாகரப் பிரகாசனே !
யுதாரமா குணாத்மனே ! வுகாரரூபியா நினைச்
சதாமனத்திருந்துதுஞ் சபாபதி யுமேசனே!”

“பூனைகையில் சிக்கியதோர் கிளியைப்போலப்
புலம்புகிறேன் பிராணபய மிகவுமாகி
நானடிமை யும்மைநம்பி யிருக்கும் வேளை
நாயகனே பராமுகமாய்ப் பார்க்கலாமோ
மானீன்ற வள்ளியம்மை தெய்வயானை
மணவாளா சரவணனே கருணைசெய்வாய்
கானமயில் வாகனனே பழனிவேலா
கடவுளே உயிர்காத்து ரட்சிப்பாயே.”

“தூண்டிலிலகப்பட்ட உயிரதுபோல் துடிக்கிறேனே
சுப்பிரமணியா விதுசமயம் அடியேனுக்கு
வேண்டுவரங் கொடுப்பதற்குப் பார்த்துநீயே
வேறொருவ ரிலையென்று நம்பினேனே
மீண்டுவரும் வினைதீர்த்துத் துயரந்தீர்ப்பாய்
வேலவனே சூரசம்மார வேலா
ஆண்டவனே யுனைப்பணிந்தேன் பழனிவேலா
அடியேனை யுயிர்காத்து ரட்சிப்பாயே”

“நஞ்சுபட்டு விஷமேறி மயங்கும்போல
நடுநடுங்கி கிடுகிடென்று பயந்துநாயேன்
தஞ்சமென்றே யுனைப்பணிந்தேன் தணிகைவாசா
சற்குருவே பிராணபயந் தீருமையா
பஞ்சகனை சிறைவிடுத்துத் தலையைவாங்கிப்
பாதகத்தைப் பரிகரித்துப் பதமேதந்து
வஞ்சனைகள் செய்யாமற் பழனிவேலா
வரமளித்து உயிர்காத்து ரட்சிப்பாயே”

நீயொரு நொடியாவது உபகாரமில்லாமல் வேறெதையும் செய்ய இசையாத பெரியரென்பது பொய்யோ ? சகலவியாபகரே ! சத்தியமூர்த்தியே ! நான்மலர்க் கோயின்மேவு செந்திருவிநாயக ! தேவநாயக ! வேதநாயக ! பூதநாயக ! விரதநாயக ! விபுதநாயக ! கஜேந்திரன் முதலை வாயிடை யகப்

பட்டுத் துயருழந்து பீற்றில் ஆதிமூலமேயென் றழைக்க அதன் முன்வந்து இடர்களைந்த ஆதிநாயக! யானு மன்னனமே ஆதிமூலமென்று அழைக்கின்றேன்; நீ யென்முன் வாராயோ? என்வினையைத் தீராயோ? எந்தனைக் காவாயோ? என்னைக் கண்ணெடுத்துப்பாராயோ? என்பேரில் கருணைபுரியாயோ? உன்சஹஸ்ரநாமங்களையும் யான்சொல வல்லேனல்லேன். என்செயற்பாலது? எவ்வாறு பிழைப்பது? உன்னைநான் எவ்வாறு துதிப்பது? யான் மனதாறயாதொருகுற்றமுஞ் செய்திலேன்! யான் பிழைப்பதும் உனது மனதிற்கு இஷ்டமில்லையோ? கடைசியாக ஒருமுறையாவது கடவுளைத் தியானஞ்செய்குவல்.

" ஞாலங் கடந்தலகில் ஞானியருக் கொண்பொருளாய்
மூலங் கடந்து முடிவிலின்ப மாகியென்றுங்
கோலங் கடந்து குறிகடந்து கூறுமும்மை
காலங் கடந்த வொன்று காக்க வென்னையே "

" என்னென்ன விதமாக முன்னின்றுசொல்லிமுறை
யிட்டபோதினு மேழைமேல்
யெள்ளளவு கிருபையு மிலாததேதுன்மன
மிரும்போ திரண்டகல்லோ
அன்னையே சிறுமதலை தன்முகம் பாராமல்
அகலத் துரத்திவிட்டால்
ஆதரிப் பவர்களார் பூவலந்தனிலினிய
வழுதகவி மாலைசூட்டி
உன்னையே தொழுமடிமை தன்னைநீ நழுவவிடி
லுன்னையல்லாமல் வேறே
ருதவியுண்டோபல வுணர்த்த லென்னையெனை
யுவந்தாள்வ தனதுகடனாற்
றென்னர்கோன் கன்மச் சுரங்கூ ளிரண்டையுந்
தீர்த்தருள்செய் கார்த்திகேயா
செயமிகுந் தலைவுதிரு மயில்வயப் பரியில்வரு
சிவகிரிக் குமரகுருவே "

" ஆரணனு மாகிநெடு நாரணனு மாகியுய
ரமரர்புக ழரனுமாகி
யாதியாய் நீதியாய்ப் பாதியாயொன்றாகி
யனாதிப் பரஞ்சோதியாய்த்
தாரணி சலங்கனல் கோரவளி விண்ணெனச்
சாற்றுமைம் பூதங்களாய்ச்
சத்தியாய்ச் சித்தியாய் நித்தியானந்தவெளி
தானாகி மோனமாகிக்



காரணக் கருவாகி யருவாகியுருவாய்க்
கனிந்தபே ரருளுமாகிக்
கதியாகி விதியாகி மதியாகியெங்குங்
கலந்த வேதாந்த வாழ்வே
சீரணி யுலாசபரி பூரணமனோகரா
சிறியேனை யடிமைகொள்வாய்
செயமிகுந் தலைவுதிரு மயில்வயப் பரியில்வரு
சிவகிரிக் குமரகுருவே "

ஆ! ஹா! பலாயனு! நான் கோவென்றலறிக் கண்கள் கோவைப்பழம் போலச் சிவந்திருப்பதைப் பார்த்தும் உனக்கு மனதிரங்கவில்லையோ! என்ன உன் மனமப்பா!

" தன்னுயிர் நீப்பினும் செய்யற்க தான்பிறி
தின்னுயிர் நீக்கும்வினை " என்று தெய்வப் புலமைத் திருவள்ளுவநாயனார் புகன்றதை நீயுணராயோ? நியமோர்ந்து நடக்கவேண்டாமோ? நியாயத்தின் வழி நடவாக்கால் உனக்கு நரகங்கிட்டுவது திண்ணமே. நடப்பின் துறக்கந் திறப்பதோர் கோல் உன்கையில் தயாராய் இருக்கிறதென்றுநினை. "மன்னுயிரைத் தன்னுயிரா மதிக்க"என்று'முதியோர்மொழியும் உனக்குத் தெரியாதோ? மற்றையோரையும் தன்னைப்போலவே மதிக்கவேண்டும். உன் கண்ணைக் குத்தின் உனக்கு எவ்வளவு வருத்த முண்டாகு மென்பதை யோர்ந்துபார். ஹா! 'கண்ணைக்குத்து' என்கின்ற வார்த்தையைக் கேட்கும்பொழுதே பாதாதிகேசபரியந்தம் மயிர்க்கூச்ச லெடுக்கின்றதே! எப்பொழுது மெவ்விடத்தும் நன்மையேவெல்லும், தீமையேயழியும். 'இரவிமுன் இருள்நிற்குமோ? தீயைச் சருகவிக்குமோ? வயிரக்கல்லைச் செல்லரிக்குமோ? குற்றங் குணத்தைவெல்லுமோ'? குணமென்னுங் குன்றேறிநிற்பவராகிய கடவுளின் வெகுளியைக் கணமேயுங் காத்தலரிது'. ஆகவின் நற்குணவானே பெரியோனுவன். மற்றையோர் மானுடரல்லார் 'தருமமேஜயம், சத்தியமே நித்தியம்' 'அடுத்திருப்போரைக் கெடுக்கலாகாதே! 'கொலைப்பாலும் குற்றமேயா'மென்பதை யோர்ந்துபார். 'தன்வினை தன்னைச்சுடுமேல்லவோ'? தினைவிதைத்தவன் தினையறுப்பான், வினைவிதைத்தவன் வினையறுப்பான்' 'உன்னிடத்தில் பிறர் எப்படிநடந்துகொள்ள வேண்டுமென்று நீ விரும்புகின்றனையோ அன்னணமே நீயும் அவர்கள்மாட்டு நடந்துகொள்ளல்வேண்டும்' என்பது வேதவாக்கல்லவோ? ஆதலின் நீ யிந்நீதிகளையோர்ந்து எனது அட்சிகளை யவியற்க; அங்ஙனமாயின் நீ மோட்சபதவியையடைகுவை; நீ யித்திவினை செய்யற்க. ஒழிமின்; ஒருக்காலும் இதைச்செய்யேல் என்னை விடுக்கும் வண்ணம் உன்னை வேண்டுகின்றேன்.

(இன்னும்வரும்.)

டி. எஸ். திருமூர்த்தி.

## குலோத்துங்கச்சோழன் கோவை.

---

### பாங்கி யச்சுறுத்தல்.

181. தோவாய கோழிக் குலோத்துங்கன் மால்வரைக் கோவிருப்பாற்
பூவா மிதணும் பொருந்திலில் லாய்புட் புகாநெறியாய்
பாவா யுழலுங் குழல்போற் புறம்பல காலுஞ்செல்வாய்
மாவாய கண்ணனை கண்டாற் புனத்தன்னை மாற்றுமின்னே.

### நீங்கற் கருமை தலைவினை நினைந்திரங்கல்.

182. ஓங்குஞ் சவிகைக் குலோத்துங்கச் சோழ னுறந்தையன்னாய்
நீங்கும் படிக்கரி தென்றல்ல வோதில மாமடந்தை
தேங்குங் கலையிற் பெருமானை வைத்தனள் செந்திருவுந்
தாங்கும் பிறந்தகத் தேவைத்து நாளுந் தழுவினரே.

### தலைவிக் கவன்வரல் பாங்கி சாற்றல்.

183. பொருந்தானைத் தஞ்சைக் குலோத்துங்கச் சோழன்பொருப்பர் வந்தார்
வருந்தா திதோவரு முன்மறை வேமறைந் தேயலர்த
மருந்தா மனைக்கண் புதைப்பேமுன் பேரை யழைப்பதுவுங்
கருந்தாரை வஞ்சி பிறர்பே ரழைப்பதுங் காண்பதற்கே.

### பாங்கி சிறைப்புற மாகச் செறிப்பறி வுறுத்தல்.

184. அணையாழி கட்டுங் குலோத்துங்கச் சோழ னளகை வெற்பிற்
றணையார் புரத்தினி னாளைக்கென் றேபகர்ந் தார்கணி யார்யார்
துணையாய கன்னிகும் பத்தேசேர் பொன்வருஞ் சூழ் குழைபோ
யிணையாய மீனத்தி லேமழைக் கோள்வருமென்பதுவே.

### முன்னிலைப் புறமொழி மொழிந்தறி வுறுத்தல்.

185. நறவார் புனக்கிள்ளை காண்மஞ்ஞை காணவ்வி காள்கலைகா
ளுறவா லுமக்கொன்று கூறுகின் றேனுல கேழளிக்குந்
திறவாழித் தஞ்சைக் குலோத்துங்கச் சோழன் சிலம்பினெம்மை
மறவா திருமன்ப ரெங்கள் பேதை மறக்கினுமே.

### பாங்கி செறிப்புறன் முன்னின் றுணர்த்தல்.

186. இருவீரஞ் சூழ்புன நான்முகத் தோன் சென்னி யெம்மையர்வாழ்
பொருவீர வில்லி யுகிரனை யாயின்று போதுகின்றேங்
கருவீர மேகங் குலோத்துங்கச் சோழன்கல் யாணி வெற்பின்
வருவீர் கொலோவன்ப ரேமற வாதெங்கண் மாநகர்க்கே.



### பாங்கி முன்னின்றுணர்த்தி யோம்படை சாற்றல்.

187. ஒண்பூவை வண்ணன் குலோத்துங்கச் சோழ னுறந்தைவெற்பா
வண்பூ வெனும் புனங் காவல்விட் டேமற வாயலென்றுந்
தண்பூவை நாடிய பேரளி போலத் தளர்ந்து செல்லும்
பெண்பூவை நாடி வரவேண்டு நின்னுளப் பேரளியே.

### ழேம்படு கிழவோன் றஞ்சம் பெறாது நெஞ்சோடு கிளத்தல்.

188. தலைமேன் மவுலி பொறுத்தோன் குலோத்துங்கன் றஞ்சைவெற்பி
னிலைமேல் வெறுந்தனி நிற்குநெஞ் சேநெடி தேதினமு
மலைமேற் கதிர்கண் முளைக்கின்ற வாறென்ன தாய் தினையின்
மலைமேற் கதிர்கண் முளைக்கிலன் றோவுயிர் வாழ்வதுவே.

### இதுவுமது.

189. படிபோத வும்வின் முடிபோதவும் பண்டை நாளளந்த
வடிபோ தனைய குலோத்துங்கச் சோழ னளகைவெற்பிற்
பிடிபோ னடைதளர் வாய்க்கொடிபோன்றதன் பின்வழியே
குடிபோ யினைநெஞ்ச மேயெந்த நாளினைக் கூடுவையே.

### பகற் குறியிடை யீடு.

#### இறைவனைப் பாங்கி குறிவரல் விலக்கல்.

190. தாயே யெனுந்தண் ணளியான் குலோத்துங்கன் றஞ்சைவெற்பிற்
சேயே யனையசெவ் வேலிறை வாதினந் தோறும் பல்கா
லாயே வருமிடங் காண்புனங் காப்பு மகன்றதுகா
ணீயே யினிவருங் கால்வருங் காண்பி னெடும்பழியே.

### இறைவியைப் பாங்கி குறிவரல் விலக்கல்.

191. மெய்ச்சாரும் வாய்மைக் குமார குலோத்துங்கன் வெற்பணங்கே
கச்சாரு நின்முலைப் பாரமு மேனியிற் கட்டழகும்
பொய்ச்சா ரிடைநுடக் கும்மன்னை நோக்கிப் புகையுயிர்த்தா
ளிச்சாரல் வந்தினி நாம் வண்ட லாடு மிடமிதன்றே.

### இறைமக ளாடலை நோக்கி யழுங்கல்.

192. தண்டேன் சுனைப்புன மூசல்பந் தாடலச் சாரலெல்லாந்
தொண்டேயென் பின்கொண ராமலை யோகொற்ற வேந்தரைப்பின்
கண்டே பொருத குலோத்துங்கச் சோழன் கல்யாணி வெற்பிற்
பண்டே நங் குன்றைச் சிறகரிந் தான்விண்ணிற் பாவியுமே.

இறைவியைப் பாங்கி யாடிடம் விடுத்துக்கொண் டகறல்.

193. அளைபோ யயிலுங் குலோத்துங்கச் சோழ னளகை வெற்பிற்
களைபோ தவிழும் பொழில் வண்டு காள்கிள்ளை காளிறைவர்
முளைபோலுங் கோழிக் கொடிபோம் வழியை* மொழியினென்றால்
வளைபோ யொழுகு மடையாளஞ் சொல்லி வரச்†சொன்மினே.

பின்னா ணெடுந்தகை குறிவயினீடு சென்றிரங்கல்.

194. நெறிக்கே விழிவைத்து நீடுயிர்ப் போடெதிர் நிற்பவனைக்
குறிக்கே வரக்கண்டி லேனென்செய் வேன்குடப் பாடி வெண்ணெ
யுறிக்கே கலருங் குலோத்துங்கச் சோழ னுறந்தைவெற்பிற்
பொறிக்கே கயவினங் காளொன்று மீள்வரப் பூவையரே.

வறுங்கள நாடி மறுகல்.

195. ஆவிக் கமலங் கலங்கத்தனை யாள்பவ ராழ்கடலோ
வாவிக் கமலங் கொலோபுகுந் தார்வணங் காவரசைக்
கோவிக்கும் வேங்கைக் கொடியோன் குலோத்துங்கன் கோழிவெற்பிற்
றாவிக் கனிமயில் காளெங்ஙன் னேகினர் சொன்மின்களே.

இதுவுமது.

196. மின்னார்முன் சென்ற வடியைக்கண் டேனந்த மின்பிறகே
யென்னாவி சென்ற வடிகண்டி லேனிப மோல மென்னப்
பொன்னாழி விட்ட குலோத்துங்கச் சோழன் புகார்வரைவாய்
முன்னாள் வினைமுற்றி யின்னாட் டினையென முற்றியதே.

குறுந் தொடி வாழுமூர் நோக்கி மதிமயங்கல்.

197. மீனவர் சேரரை வெஞ்சண்ட வீரம் விழுக்கவினு
ரானவர் பாடுங் குலோத்துங்கச் சோழ னளகைவெற்பின்
வானவ ரூரமு தம்புசித் தோர்பெற வாஞ்சிப்பரிக்
கானவ ரூரமு தைத்தயி லேன்பெறக் காமிப்பதே.

இரவுக்குறி.

இறையோ னிருட்குறி வேண்டல்.

198. பொருவா ளபயன் குலோத்துங்கச் சோழன் புகாரனையாய்
பருவாள் விழிமைய லாற்று கிலேன்பகல் போர்த்தகல
வருவா பதனல்ல வென்னெஞ்ச மோவல்ல வாங்குமது
திருவார் மருங்கல்ல யான்வரு வேனிச் செறிகங்குலே.

* மொழியு மென்றால் என்பதும் பாடமே. † சொல்லுமே என்றும் பாடமே.



பாங்கி நெறியின தருமை கூறல்.

199 பணியா வுருத்திர னாற்றல் வருணன்பல் பேய்க்கணத்தி
னணியாற் பயிரவி யாறெறிக் கேயறிந் தோர்க்குச்சிந்தா
மணியாங் குமார குலோத்துங்கச் சோழன் வரையிறைவா
தணியாக் கடுந்தெய்வ மாங்கங்குல் வாயெங்ஙன் சார்வதுவே.

இறையோ னெறியின தெளிமை கூறல்.

200 நடை போதக் கற்ற நெறியான் குலோத்துங்க னகைவெற்பிற்
கடைபோலுங் கன்கு னெறிக்கணங் கேயுங்கள் கன்னியயற்
புடைபோலு நாக முலைபோலும் வேழம் பொலங்கலைசூ
ழிடைபோலுஞ் சிங்க மெனக்கெளி தாய்வந் திலங்கியவே.

பாங்கி யவனாட் டணியியல் வினாதல்.

201 ஆடும் புனலுங் கழையுங் கலனு மணிமணமுஞ்
சூடுந் தெரியலும் யாவண்ண லேதுன் னலர் படியக்
கோடுஞ் சிலைக்கைக் குமார குலோத்துங்கன் கோழிவெற்பி
னாடும் படியெனக் கோதுங்க ணாட்டிள நங்கையர்க்கே.

கிழவோ னவனாட் டணியியல் வினாதல்.

202 என்னாட் டணியியல் சொல்லியென் னேவர்தியான் புரக்கு
மந்நாட் டணியியல் காண்பன்கொல் லோவும ராரையெல்லாம்
பொன்னாட்டில் வைக்குங் குலோத்துங்கச் சோழன் புகாரனையாய்
நின்னாட் டணியிய னீகூ றெனக்கென் னினைவறிந்தே.

பாங்கி யவற்குத் தன்னாட்டணியியல் சாற்றல்.

203 சுனையாடல் பைந்தழை யாடை கழைமுத்தந் தூயசந்தம்
புனையா மசோக மலரண்ண லேபொருந் தாவரசைக்
கனையாழி யேற்குங் குலோத்துங்கச் சோழன்கல் யாணிவெற்பி
னனையாரும் பூங்குழ லாரணி வாறெங்க ணாட்டணியே.

பாங்கிக் கிறைவன் குறியறிவுறுத்தல்.

204 ஏதா மிறைவர் குறிப்பறி யேனின் றிலங்கிழையா
யோதா துணர்ந்த குலோத்துங்கச் சோழ னுறந்தை வெற்பி
னீர்தா மரைகதி ராமென வாழ்ந்த நெறிவிடுத்தார்
தாதார் குமுதமுந் திங்களு மாதலைச் சாற்றினரே.

### நேரா திறைவி நெஞ்சோடு கிளத்தல்.

205 விரவுஞ் சிறுபஞ்சென் காலினென் றாலஞ்சுய்*வேந்தரையோ
வரவுங் கரியுந் திரியிருட் கேய்டுத் தோர்க்கருளும்
பரவும் புரிந்த குலோத்துங்கச் சோழன் புகார்வரைவாய்
வரவுந் துணிவர்கொல் லோநெஞ்ச மேயென்ன வன்கண்மையே.

### நேரிழை பாங்கியோடு நேர்ந்துரைத்தல்.

206 கற்றார் புகழுங் குலோத்துங்கச் சோழன்கல் யாணிவெற்பி
னெற்றாலுஞ் சொல்லறி யேனணங் கேயென் னுயிரனையா
ரற்றா யிருளில் வருவரென் † றாயலல தாமிதென்று
சொற்றா விருவகைக் கும்மன்பி லேனெனத் தோற்றுமின்றே.

### நேர்ந்தமை பாங்கி நெடுந்தகைக் குரைத்தல்.

207 மாகை யிருட்குறி யான்வேண்டும் போது மகிழ்ச்சியழி
யோகை யுனக்கஞ்ச மீதுற்ற தாலொலி நீருடுத்த
நாகை புரக்குங் குலோத்துங்கச் சோழனன் னாட்டினிலென்
றோகை யடிக்கஞ்ச மீதேயென் கைவண்டு சூழ்ந்த பின்னே.

### குறியிடை நிறீஇத் தாய்துயி லறிதல்.

208 வனமேய சந்தன மல்லிகை மாதவி மௌவ லெல்லாஞ்
சினமேய தோரத்தி சாய்க்கின்ற தாற்சிலம் போர் குடையாய்க்
கனமே தடுத்த குலோத்துங்கச் சோழன்கல் யாணி வெற்பி
னனமே யுணர்ந்தில ரோகடிந் தேது யிலன்னையரே.

### இறைவிக் கிறைவன் வரவறி வுறுத்தல்.

219 இறங்கிய மன்னர்தன் சேவடி சூட விடிமுரசங்
கறங்கிய முன்னிற் குலோத்துங்கச் சோழன்கல் யாணி வெற்பிற்
பிறங்கிய நந்தண் டலைத்தலை வாய்மலர் பெய் குடம்பை
யுறங்கிய புட்களெல் லாமுறங் காதுகொ லொண்ணுதலே.

### இதுவுமது.

210 கோடிமேற் புலிவைத்த கோமான் குலோத்துங்கன் கோழிவெற்பிற்
கடிமேற் பொதும்பினி னன்பர்வந் தார்கடிந் தோர்சுடரு
முடிமேல் வெயிலும் வடிவேல் விளக்கமு மொய்கழல்சூ
ழுடிமே லெறிப்புமெல் லாமிரு ணீக்கிய தாரணங்கே.

* வேந்தர் ஐயோ என்று பிரிக்க, அன்றி வரவும் வருவிக்கவும்: அந்தர்ப்பாவிதவிச்.
† 'றாய்பொருந் தாதிதென்று' என்றும் பாடம்.



### அவட்கொண்டு சேறல்.

211 மஞ்சேய் வனமலர்க் கையுறை தாங்கொண்டு*வானமின்னுப்
பஞ்சேய் விளக்கெனக் கங்குல்வந் தாரிடைப் பண்ணவர் கா
வஞ்சே யெனுங்கைக் குலோத்துங்கச் சோழ னளகைவெற்பி
னெஞ்சே முன்போதப் பின்போது மவ்வாயெதிர் நேரிழையே.

### குறியிடத் தகறல்.

212 மாமே கலையைச் சிலம்போ டொதுக்கிநின் மாளிகைப்பூ
ணாமே யெனும்விளக் காகிற்றி யாலந்த மேருவெனுஞ்
சோமேவு வேற்கைக் குலோத்துங்கன் கோழிக் கொடியனையாய்
தேமே வலர்கொய்தி யான்வரு வேனிச் செழும் பொழிற்கே.

### வண்டுறை தாரோன் வந்தெதிர்ப் படுதல்.

213 சூற்றாழி யென்னு மொருபெற்ற தாயுந்துஞ் சாதலர்வீ
டுற்றா யிரங்கடை யுந்திற வாதுதன் னெண்புயத்தே
பொற்றா ரணியுங் குலோத்துங்கச் சோழன் புகார் வரையாய்
முற்றா முலைவந்த வாறெந்த வாறிந்த மொய்யிருட்கே.

### பெருமக ளாற்றின தருமை நினைந்திரங்கல்.

214 அருட்டோய வாரி குலேத்துங்கச் சோழ னளகை வெற்பா
வுருட்டோட வோடிய தேர்ப்பக லோனையு முள் விழுங்கு
மிருட்டோ முன் னிட்ட வழிதெரியா திங்கி யானுமொரு
பொருட்டோ வரவுந் திருமேனி சாலப் புலரவுமே.

### புரவலன் றேற்றல்.

215 விரிதா மரைநண்பர் போயிடும் பேரிருள் வேலையையான்
புரிதாளி †னன்பர் திறக்கவந் தேன் பொய்கை யூடுபெண்டு
கரிதா னழைத்த குலோத்துங்கச் கோழன்கல் யாணிவெற்பிற்
சுரிதாழ் குழலி திருமேனி வாடியென் சோர்கின்றதே.

### புணர்தல்.

216 தண்ணார் நிதம்ப விடநாக முந்தமி யேற் கமுத
முண்ணா டியவின்ப மீந்தமை யாலுந்தி நான் முளரிக்
கண்ணார் முகுந்தன் குலோத்துங்கச் சோழன் கல்யாணிவெற்பில்
விண்ணா ரமுதுகொண் டோவகுத் தானிவண் மெய்யெங்குமே.

* 'வாமூ மின்னுப் என்றும்' பாடம். † அன்பர் மொழி யிறுதிப் போலி.

## புகழ்தல்.

217 நந்திதன் பாதம் பணியுங் குலோத்துங்க ணைக வெற்பிற்
பந்தியல் பூண்முலைப் பாவை நல் லார்த்தம் பனிமொழியை
முந்திய நான்முகன் கையால் வகுத்த மொழிவிரற் கீழ்ச்
சிந்திய பேரொழுக் கோதிருப் பாற்கடற் றெள்ளமுதே.

## இறைமக ளிறைவனைக் குறிவரல் விலக்கல்.

218 பூன்பாய் கரியை யரித்தவர்க் கோடி முதுபிடிபோய்த்
துன்பா யாற்று மிரா வண்ண லேதுத்தி வாளுரக
நன்பாய் வளரும் வளவன் குலோத்துங்க ணைகவெற்பி
னன்பால் வரினுமென் பாலினி நீவர லஞ்சநெஞ்சே.

## இறைவியை யில்வயின் விடுத்தல்.

219 தேன்றாழ் குழலிநின் கொங்கை பொருமையிற் சென்றொடிந்தால்
வான்றா ழிடைக்கிடை மற்றில்லை யேமனு நூலளக்குஞ்
சான்றாண்மை பேரார்துதி நீதிக் குலோத்துங்கன் றஞ்சைவெற்பி
னின்றா ரெழாது சிலம்பதி ராதங் கெழுந்தருளே.

## இறைவியை யெதிர்ந்து பாங்கி கையுறை காட்டல்.

220 ணைக்கே செங் காந்த ணகைக்கே தளவங் கனி யிதழின்
மெய்க்கே குமுதம் விழிக்கேகல் லாரமுன் வேற்றரசர்
புக்கே யுணங்குங் குலோத்துங்கச் சோழன் புகார் வரைவா
யிக்கேய் மொழிதிறை யாயலர் காட்டின விம்மலரே.

## பாங்கி பிற்சென் றிறைவனை விலக்கல்.

221 துனியார் சிலைக்கை யபயன் குலோத்துங்கன் கோழிவெற்பா
வினியா விரவு வரவொழி யாய்வரி லீண்டிவரப்
பனியாழி யிற்கஞ்ச மோபக லோன்விடும் பாரத்திண்டேர்த்
தனியாழி யிற்கஞ்ச மோதிரு மாளிகை தையலுக்கே.

## பெருமகன் மயங்கல்.

222 மன்னும் புகழ்க்கிள்ளிக் கோழிக் குலோத்துங்க மன்னன் வெற்பிற்
றுன்னுஞ் சகோர நிலாவுண்ணத் தோன்றுஞ் சுடரும் விண்ணி
றுன்னும் பறவைக் குறுங்கோ டையுமன்ன வொண்ணுதலாய்
மின்னுந் தமியெனுங் கூடுமிக் கூட்டம் விலக்கினையே.



## தோழி தலைமக டுயர் கிளந்து விடுத்தல்.

223 கோதங் களிற்றுக் குலோத்துங்கச் சோழன்கல் யாணிவெற்பா
யாதுங் கருக்கு மிருட்குறி வாயிடை யீண்டகன்ற
போதுங் கொம் பாவியை யுய்விக்க வூரிற் புகுந்த வன்றே
யூதுங் கொம் பாலநின் றேனினைத் தார்க்கின முண்டென்பதே.

## திருமகட் புணர்ந்தவன் சேறல்.

224 பூங்கே கயமன் குலோத்துங்கச் சோழன் புகாரனையாய்
தாங்கேத மேது வரினுமஞ் சேன்றனி போமிருளுக்
கீங்கே யளக முகின் மின்னுக் கேதுணை யென்றனக்கே
யாங்கே யணிமுகின் மின்னவெல் லாந்துணை யாய்வருமே.

## இரவுக் குறியிடை யீடு.

## இறைவிக் கிகுளை யிறைவன் வரவுணர்த்தல்.

225 தூயோத முத்த நகைபாயிக் கங்குற் சுடிகையராப்
பாயோ னளகைக் குலோத்துங்கச் சோழன் பகைஞரைப்போன்
மாயோன் றிருமுன் னவன்புய மாலை மடற் குடம்பைச்
சேயோன் பரியின மென் *றோதுஞ் சாது தெளிகின்றதுவே.

## தான் குறி மருண்டமை தலையவட் குணர்த்தல்.

226 புவியாளு மன்னர் குறிபிழைத் தார்கங்குல் போமளவுந்
தவியாநின் றேனின்று மீண்டுவந் தேன்றமிழ் வாணர் தெய்வக்
காவியா பரணன் குலோத்துங்கச் சோழன்சல் யாணிவெற்பிற்
குவியாதென் கண்ணும் புன் செவ்வாயும் செய்வதென் கோமளமே.

## குறி பிழைத் தழுங்கல்.

227 துன்வந்த விற்கைக் குமார குலோத்துங்கன் கோழிவெற்பிற்
கனிவந்த காவிற் குருகெழுந் தோறுமிக் காரிருள்வாய்ப்
பனிவந்த பூங்கைகளை காணெய்தல் காள்பகல் காணுமென்காற்
றனிவந் தயர்ந்த வெல்லாஞ்சொல்லு வீர்நந் தலைவருக்கே.

## பாங்கி தலைவன் றீங்கெடுத் தியம்பல்.

228 தொல்லாழி வேந்தன் குமார குலோத்துங்கச் சோழன்வெற்பிற்
கல்லார மாலைக் கருங்குழ லாய்கண்ட காலந்தொட்டு
நல்லா ரவரென் றிருந்தோம் வரவர நன்றிலராய்ப்
பொல்லா ரெனத்துணிந் தார்குறித் தாரின்று பொய்க்குறியே.

---

* 'என்றோ துஞ்சாது தெளிகின்றதே' என்றும் பாடம்.

### புலந்தவன் போதல்.

229 நண்ணார் முடிதொடுந் தாளான் குலோத்துங்க னைவெற்பிற்
கண்ணான வுந்தெரி யாக்கஞ்சூல் வாய்க்கடை யாயிரஞ் சூழ்
தண்ணார் கமல மனையென்றுந் தாய்விழி நீல மென்று
மெண்ணாமல் வந்தன மேயவ மேயின்றிவ் வேந்திழைக்கே.

### புலர்ந்தபின் வறுங்களந் தலைவிகண் டிரங்கல்.

230 பூமேன் முகுந்தன் குலோத்துங்கச் சோழன் புகார்வண்டு சாண்
மாமே லிரவிங்கு வந்தனா ரோவந்த போதெதிர்போய்
யாமே குறியின் மருண்டுபல் காற்சென் றிளைத்தமை நீர்
தாமே யுரைத்தனி ரோவில்லை யோநந் தலைவருக்கே.

### தலைவிதன் றுணைவிக் குணர்த்தல்.

231 கரணுண்மை தீர்த்த குலோத்துங்கச் சோழன் கல்யாணிவெற்பி
லாரணுப்கர் வந்ததிங் குண்மைமின் னேநென்ன லோங்கு கங்கு
லரணுர் பிரியி லவர்நேமி மூன்றுமொன் றுமொருபேர்
வரணு னிலஞ்சங்கு மாயவர் பேரை மலர்ந்ததுவே.

### தலைமக ளவலம் பாங்கி தணித்தல்.

232 மட்டோ டவிழ்குழ லாய்வருந் தேல்வனத் தோர்தருவிற்
கட்டோ டவிழும் பிரிந்தொரு பேதை கடன்முரசக்
கொட்டோ டெதிர்முன் றிற் கிள்ளிக் குலோத்துங்கன் கோழிவெற்பி
விட்டோ டினரைவர் தூதுக்குத் தூதமு னீந்தவரே.

### இறைவன்மேற் பாங்கி குறிபிழைப் பேற்றல்.

233 கங்கே தெரிவரி தாந்துய ராய கடலுட்பட்டுச்
செங்கே ழிதழியும் யானுநொந் தேஞ்செய் யெலாந்தழையச்
சங்கே தவழ்பொன்னி நாடன் குலோத்துங்கன் றஞ்சை வெற்பா
வெங்கேயுன் மாதக ரங்கே வருகைக்கு வெண்ணினமே.

### இறைவிமே லிறைவன் குறிபிழைப் பேற்றல்.

234 பூமறந் தாலும் வரிவண்டு பூவிற் பொதியவிழ்க்கு
மாமறந் தாலுங் கருங்கோ கிலம்வணங் காதவர்கட்
கோமறந் தான்பொரு வேலான் குலோத்துங்கன் கோழி மின்னார்
தாமறந் தாலும்பின் யான்மற வேனென்றுந் தாழ்குழலே.

---



# மாமாலை
## யல்லது
# இலக்ஷ்மீ ஸ்தவம்.

---

### பாயிரம்.

கடல்விரி யாடை கவினுற வுடீஇ
யடல்கில மங்கைக் கணிகுன் றத்தூர்
ஸ்ரீமா னுபய வேங்கடா சாரியர்
நாமாண் புயற்று நற்றவத் துதித்தோன்
பற்பல கற்பனை பாவலர்க் கொருதுணை
விற்பனக் காவென விளங்கு மொருவன்
பாருய ரியல்ஷட் பாஷா ப்ரவீணன்
ஏருய ரிங்கித நடைதே ரிருந்தவன்
தரங்குல வுந்தொன் னூற்றேர் சதுரன்
அரங்கா சாரிய னன்பின் மிகுதியால்
எத்திறத் தார்க்கு மின்னமு தூட்டும்
அத்திறல் கதலி பாகம தாக
அலக்க ணகற்றி யம்புவி யோருய
இலக்குமி தோத்திர மினிதா யியற்றி
மன்னும் பத்திர சமாரி யளித்தான்
துன்னுமா முகிலாய் மன்னுமாண் பினனே.

டாக்டர்-ஷண்முகம் பிள்ளை.
முத்தமிழ்க்கவியரசன்

---

## காப்பு.

### ஹயமுகவணக்கம்.

மாமாலை செய்ய மனமுவப்பா னல்லிவுளி
தூமா முகத்த னினிது.

### இராமவணக்கம்.

நூங்குவெங் குயத்திளை நூழில்ரா வணன்கொள
நீங்கலாப் படைஞரோடு நீணெறிப் படர்ந்துபோ
யாங்குவா ரிதிக்கடந்த வவுணனு ருயிர்செகுத்த
வீங்குதோ ளிராமனெம்முள் வீதிவாய் நடப்பனால்.

## நூல்.

(1) செங்கமலை யெனதனையே செழுந்தரளத் தனிவடத்தாய்
அங்கமல மலருறைவோ யம்மனைக் கிணையார்கொல்
பொங்கமுத முடனெழுந்த பொன்னியுல களிக்கவல்ல
தங்குதனி யரிப்பிரியே தமியனெனைக் காவாயால்.

(2) வருக்கரிய வலம்படைத்த வயவீரர் தமைச்செருவி
னகக்களத்து முரியவித்த வண்ணனெடு மார்புறை நீ
சகக்கொடிய வினையகற்றுந் தயாபரையென் பதிலென்றோ
அகக்கொடிய னெனதிடும்பை யகற்றினுமக் கதுவாமால்.

(3) அறமாதர் பலரிருக்க வரிநேடி யுனையடையின்
பிறமாத ரணிகலனுப் பிறங்குமுன தெழில் சீர்த்தி
உறமாக வுரைக்கவெனக் குளமிலையோ வுத்தமி நீ
திறமாக வெனைவருத்துந் தீவினையை மாற்றுவையால்.

(4) துவரிதழ்வாய் செழுந்தரள முகைநகையாய் துய்யவணல்
லுவரிவண னுரம்பொலியு முத்தமியா னுலகினுக்குப்
பவமகற்றும் பதுமினியெற் பர்டந்துவரு மிடியகற்றிப்
புவமளிக்கு நீர்மையதாற் பூவைநனி புரப்பாயால்.

(5) இலக்குமிநல் லிலக்கணத்தா யிலங்குமுரு கம்புயத்தாய்
கலக்கமினற் கருத்துடைய கமலையென நகமுறையின்
பலக்கொடிய மிடிமுதலாப் பவப்புணரி பலவெழுந்திங்
கலக்கணுறு மகங்குழையு மடியன்முறைக் கிரங்காயோ.

(6) இடர்க்கடலி றிளைத்திருக்கு மிளைஞனெனை யினிதளித்தி
யடற்குடலன் பொன்னனெடு வணியாகம் வள்ளுகிராற்
குடற்படக்கீண் டொழுகுபெரு குருதிநதி பெருக்குவித்த
கடற்படிந்த வரிமுகத்துக் கடவுண்மகிழ் மனைக்கிழத்தி.

(7) சுரும்பிமிருஞ் சுரிகுழலின் சுடர்காலு மடிதொழுது
பெரும்வலத்த மிடிக்கடலைப் பெரிதவிக்க முயன்றனனால்
வருந்துயர மதையகற்றும் வள்ளனினக் கிணையார்கொல்
அருந்துவதற் கடையரிய வமிழ்தினிய மாவனையே.

(8) பங்கஜிநற் பெருங்குணத்துப் பரிகதத்தைக் கொளுத்தவல்ல
பங்கயத்த னிவிதித்த பவப்பிணியி லாழ்ந்தினனால்
பங்கிலமாம் பிறப்பறுக்கப் பதுமையுனை யுறழ்பவரார்
பங்கமிலா தளிப்பனிந்தப் பத்தனையே யெனநினைப்பாய்.

(9) இறப்பூதி னிழிந்துவள ரிறும்பூது நனிமுரற்றி
யிறும்பூது பெறநறவ மினிதளித்து யிறுமாந்து
மிறும்பூதி லுறையுனையவ் விறப்பூதிற் கடைபேனோ
இறும்பூது விறும்பூது வெனைப்புரவா திறும்பூதே.



வேறு.

(10) கமலைதிரு மகணளினி கவுத்துபத்தி னுடனுதித்த
விமலைரமை யுலகஜனி வியனுலகு பெருமாட்டி
அமலைபொறி பொனிகினது வடிதொழுது புகழ்ந்தனனால்
கமலையென திருமிடியைக் களைத்திடனின் கடனுமால்.

வேறு.

(11) புரந்தரன்கான் முளைமுனமுன் புயக்கலய குயதடத்தை
நிரந்தரந்தொட் டுர்க்கவதன் னிலையுணர்ந்த பரமேட்டி
வரந்தருமா விமலனொரு வசக்குசைவிட் டுர்த்திடல்கண்
டரந்தையதை யாற்றியநீ யதுபுரைய வாற்றாயால்.

(12) நின்மகவி லொருமகவா னிலைத்திருக்கச் செயநினையால்
கன்மலையைக் கவிகையெனக் கவிழ்த்துகுழுக் கோவளித்த
பொன்மலைநேர் புயதடத்துப் பொன்னாழி வலத்துடைய
நின்மலனு ருறத்துரத்து நிலையுடைய கோமாட்டி.

(13) சுந்தரியென் சொல்லுவலியான் சுக்ருதிநின தருமருகி
அந்தரிநான் முகன்கிழத்தி யருளினளாற் பலபனுவல்
நந்தரிநற் கிழத்திநறு நளினியென தெழிலனை நீ
வந்தரிய வகையருளி வருமைதனை யாற்றாயால்.

வேறு.

(14) மொய்குழலி மதிவதனி சிலைநுதலி முகைநகையாய்
பெய்வளைய களத்திபெரு முலைப்புயத்தி குயக்குடத்தி
மெய்வடத்துத் தகடகடி துடியிடையாய் வெய்யரவி
னெய்பணத்த வகலியரி சகலிநெடு கவர்துடையாய்.

வேறு.

(15) செங்காந்தட் சேவடியாய் செய்யவணி யாயிருக்க
வுங்காந்திக் கொள்ளணியா லுலகனைத்து முய்கிறதா
லெங்காந்தி ருச்செல்வ மெனநேடி யலைந்தேற்குத்
தங்காந்தொ டர்மிடியைத் தான்றொலைத்த லேலாதோ.

(16) அனைத்துயிரு நீகாக்கு மம்மவெனை யீங்காக்கி
வினைத்தொடருக் காளாக விட்டனையோ வம்மேவோ
தினைத்துணையு மாய்வில்லா வல்வினையாற் றிரிதந்த
வெனைத்திணையுங் காக்கவென தெழிலரசி யேலாதோ.

(17) மருகிவள ருறையுண் மாமிவர லேலாதோ
பெருகுபுகழ் நளிநீ பேயேன் பொருட்டதுவோ
திருகியலைந் தலையும்வெந் தீயனெனை யாட்கொண்டு
பெருகிவளர் மாமிடியைப் பெயர்த்தெறிய மாட்டாயோ.

(18) செய்யா ளுனதுதிருச் சேவடியை சிந்தித்துப்
பெய்யா வருளமுதைப் பேணி யடையகிற்பேற்
குய்யா வளரிரப்பை யுட்டணத்தை யேற்ருது
கொய்யா யரிப்பிரியே கோகனகை மாதேவி.

(19) எத்தேவ ராயினுமென் என்மிடியை யாற்ரு ரா
லத்தேவரி லுன்னை யாக்கா தொழிந்தனனற்
புத்தே ளெனதிறைவிப் பூரணியின் ருளலது
கத்தேன் பிரிதொன்றைக் கண்ணெளிநீ யருளாயால்.

(20) நன்மவினைக் காளாக் கடத்திடினு நாட்களையே
என்மனத்து ளென்ஞான்று மேற்றியுனை யேற்றுவனல்
புன்மனத்த னவானைப் புக்கிலிலே னென்னது
நன்மனத்து நாயகிநீ நாயனெனை நனிகாவாய்.

(21) நாசினியி லெஞ்ஞான்றுங் காணைபிழை பொறுத்தன்
மாசின் மனத்தனையர் மாண்பாம் மலர்ச்செல்வி
தேசிற் பொலிகுரவன் றெள்ளறிஞ ளின்மகனு
மேசிப் படைத்தவெனை யேன்புரக்க வொண்ணதோ.

வேறு.

(22) துளிநறவ முணவெழுந்து துதைந்துமலர்க் குழல்குடையு
மளிமுரற்றின் கம்பலேகேட் டம்மவென தருங்குறையை
யொளிகுழைசேர் செவிமடுக்க வொண்ணது விடுத்தனைகொல்
நளினமல ருறையெழிலி நாயகிநீ நனிகாவாய்.

வேறு.

(23) அருமறையி னகமிளிரு மமலநல விபுதரிறை
பெருமனவ னருமனைமை பெரிதுசொல வரிதரிதே
அருமவுன துறையுளவ னணிவலது வகலமெனின்
திருமகின தமைதிசொல திறனுளதோ சிறியேற்கே.

(24) மடமைகொடு பலவுளறு மதியிலெனை மதிநுதலி
கடமையென புரந்தினிது கடைவிழியை யருளுவையால்
படமகுட தடபடிவ பணிபணின சயனக்ருத
னிடமகிஷி நிதியதிபை நினதடியை தொழுதனனல்.

வேறு.

(25) இடங்கரங் கிழுத்தலேக்க வீறிலாத வெந்தையென்
றடங்கடந்த வத்தியன் றழைக்கநா ரணன்பினே
குடங்கர்வெம் முலைத்தடத்தி கூவுவா ரிலாதபோழ்
திடங்கொளாறு வேலேயெய்த வன்னையென்னை யாற்றுவாய்.



(26) காசுலா முலைத்தடத்தி காஞ்சனும்பு ஜாஸநீ
வீசுலா விரைப்பொருந்த வீறுமுண்ட காஃதிணி
தேசுலா முகத்திநாளுந் தேடொணுப் பதத்திநீ
மாசுலா மனத்தொழும்பன் மாய்விலின்மை மாற்றுவாய்.

வேறு.

(27) புல்வாயுழை படுமோரிளம் புல்வாயென நேடி
சொல்வான்மிசை நகையாலெனை கோதாய் நனிபற்றி
மெல்வான்புகு வதனன்மிகு மெலிவானெனி யனேநீ
தொல்மாமறை தோகயரு டோயாநிதி யனியே.

(28) மண்ணுட்டினும் விண்ணுட்டினு மாணுட்டினு மற்றிவ்
வுண்ணுட்டினு மென்னுட்டினு மொப்பாருள யெவரே
எண்ணுேட்டிடு மன்னுயென திடராமடு வெடிய
ஒண்ணுேட்டிரி பண்ணுயுல கெண்ணுவெழி லன்னுய்.

வேறு.

(29) தண்டரளநகை வண்டுபுரிகுழ றண்ணறவமிழி தாரிஞ
யண்டரருமிறை கொண்டல்வணனெடு வண்டிபலமொழி பேசலால்
மண்டவளர்மிடி கொண்டுவேலேபவன் மண்ணினகமொடு மாதிரம்
விண்டவகையென கொண்டுமொழிதலே வீரைகொள்ளலே யோகோ
லோ.]

வேறு.

(30) வாளரக்க ராகுவார்கின் மானுடப் பிறப்பினே
வந்துனைப் பழங்கணெய்த வாட்டினு ரலார்கொலோ
சூளறக் கடக்கொணுது சுந்தரிப் பொறுத்தையால்
சூனுயா னவர்கடுப்ப சூனைசெய்தி லேனதால்
கோளுறப் படர்தலேக்குங் கொள்கையாற் கொதித்தனற்
கோதிலாப் பெருங்குணத்த கோலமா வணங்கையே
கேளுறத் தொடர்ந்தவெம் மிடிக்கடற் குளிக்குநான்
கேடுரு திருக்கணின்க டைக்கணன்கு வருளுமால்.

வேறு.

(31) வாசமா மறையினு யெனுதவச வாய்மையாவு நனிகே ணமன்
பாசமா மதிலடை படாதுபரி பாகியாக பரிபாலியான்
ருசனு மெளியனு ரிலக்கண மிலக்கியந் தழுவும் யாப்பொடே
கோசமா மவை யெவற்றினுங் கொடியன் கோதிலாதானிகற்றிலேன்.

(32) ஆயினும் மிது பிதற்றினே னிதனி லாகும் பல்பிழை பொறுத்தியால்
தாயினும் மினிய தாயிடர்க்கடலி ருவிவீழு மிவரங்கனே
சேயினும் மினிய ளுவெடுத்துவளர் செல்வமீக்து நனி பாலியாய்
வேயினும் மினிய தோளினுயெனது வேண்டுகோளிது விரும்பிடே.

K. அரங்காசாரியர்.

# ஹேரம்ப மாலை.

## காப்பு.

சீர்மலிநாயன் சிகரிபூர் நாயக
னேர்மலி நாயக னெழிற்பதம் போற்றி.

அய்யனே சண்முகற் கண்ணலே வாழிமா
மாயவற் கருமருகனே
தய்யனே நீண்டசைத் தங்கமா முகனேயான்
றுயரிலா திருக்க நினையால்
மெய்யனே வவுணனு மாதங்க முகனுகம்
வெடிபடச் செய் தோளினாய்
பெய்யனே னணியுளம் நைந்தனுற் பெற்றியோய்
பேணுதல் நினுதுகடனே.

## நூல்.

(1) அண்ணலே வைங்கரச் செம்மலே யணியுடை
யங்குசப் பாசமேற் றோய்
கண்ணனூர் மருகவென் றவருங் கிளத்திடக்
கண்ணுதற் களிபெருக வோ
டொண்ணிதிச் செல்வவோ ஒப்பிலா மணியவோ
ஒண்மதக் கரிமுகா வோ
எண்ணிலா நின்மாட்சி யின்றுநான் கருதினே
னெழுவெனும் மெர்தை யருளே.

(2) ஆதியா யாருயி ரருந்துயர் துடைப்பதா
யலகிலாக் குணத் தொண்ணிதிச்
சோதியா யாவர்க்குஞ் சொல்லரிய சுத்தமாய்ச்
சோதிமுடி வாகி நிற்கும்
வாதியா யஃதிலா வகையதாக் கொண்மனிசர்
வார்த்தையாம் வகை பெற்றதாய்
நீதியாய்ப் பன்ஞான நீணெறிக் கடவுளாய்
நிமலனாய் நின்ற தேவே.

(3) இன்னற் கடற்றனு ளிலாவகை யெனைக்காத்தி
யினியபைம் மாமுகத்தா
யுன்னற் கிலாவகை யொழித்தேன் பலப்பல்ல
வுள்ளநாட் கனையொருங்கே
பன்னற் கிலாவகைப் பற்றினே னின்சரண்
பழுதறு வகைகாத்தி யால்
கன்னற் கடையுணுங் களிறுபைம் மாமுகக்
கடவுளெற் கருளுவாயே.



(4) ஈறிலாப் பெற்றிகொள் கடவுளா யாவர்க்கு
மிதமுறச் செய்மூர்த்தியே
சேறிலாம் பன்மலர் முகைமுகை கிளரொளி
சேருண்மைச் செல்வ மணியே
ஆறிலா துய்வதற் கலமரா நிற்குமிவ்
வடியனை யாட்கொள்ளவா
பேறுலாம் பெருமநின் பெற்றியார் வகுப்பரோ
பேதையெற் கிரங்குவாயே.

(5) உனைப்புரைக் கடவுளெவ் வுலகினும் மில்லையென்
றுன்னினே னுணுனுமே
தினைத்துணைப் போழ்துநன் னெறிபுகா நாயினேன்
றிரிதந்தே னந்தோ வானா
வுனைப்புரந் திடனினை யன்றிமற் றெவருளா
ரேந்தலே வெனதுவாழ்வே
கனைக்குரற் களிறுநற் காமுடைய செம்மலே
கண்ணுதற் குமர வருளே.

(6) ஊக்கமில் யாக்கையா னுணர்கிலே னினதருள்
ளேழு வரினும் பாழ்படா
தாக்கமே கொண்டிடும் மாதிமா மாயவற்
கருமருகவோ வத்தவோ
நீக்கமிற் பெற்றியாய் நீதியாய் சோதியாய்
நிக்கல புவனு சாரவோ
போக்ககில் லாத்துயர்ப் புணரியிற் புக்காது
போக்கி யருளா யென்னையே.

(7) எங்கும் பரந்தகொள் கையனும் பாத்தனு
வெற்குநீ யானையதனுற்
றங்குந் தொடர்வினைத் தனையொழித் தாட்கொளத்
தாடா மரைப் புக்கினேன்
சங்கங் கதைத்திகிரி சட்கமோ தண்டமாள்
சர்வதே வாதி தேவன்
நங்கைமரை யாண்மார்ப னாரணன் மருகனே
நாயகா நல்லை யருளே.

(8) ஏகாக்கரப் பொரு ளாகிவள ரண்ணலே
யேரம்ப லம்போதர
யோகாக்கிர சித்தரா மூண்மையா ளர்தமக்
கோரரும் பொருளாகு நீ
மாகாக்கி லாவகைய னுமித் தொழும்பனை
நாளுனு முய்வித்து புன்
சோகாப் பிலாவகைச் செய்வையாற் சுருதியிற்
சொல்லாகு வாகன வரோ,

(9) ஐங்கரத் தெம்பிரா யம்பிகைப் பாலனோ
வமிழ்தினும் மினிய செம்மால்
செங்கரத் துன்முகத் தொண்மருப் பொன்றதாற்
செழுமறைப் பாரதமதை
தங்கநற் சிகரிபொன் னசலத் திடைவரைந்
துய்யவுல கோர் தமக்கு
அங்கைநன் னெல்லியங் கனிபுரைய வீந்தவெம்
மண்ணலே வமரரேறே.

(10) ஒன்பான் றுளைப்பட் டுளையுமிந் நாறுடல
முண்ணுழைந் தெனதாருயிர்
தன்னாற் றரிக்கநின் மிடிமுதற் றுயரலாற்
றுன்பிரிது கண்டிலே யவை
யுன்னாற் படப்படு மெனநனித் தேர்ந்துயா
னுன்னினே னினதருளையே
சொன்னாற் சமுக்கருக் கும்பிரா வங்குசச்
சோதி பாசா வருளரோ.

(11) ஓதகில் லாப்பரஞ் சுடராகி யொளியாகி
யோத்தினு லுணரு மறிவா
சாதகப் பக்கிபோற் சாருவர் தமக்கெளிச்
சாக்கியாக் கினைபோ லுமால்
நீதகற் றிப்படர் ஞானநற் குற்றமாந்
தீர்த்தவித் தினையளி
நாதகற் பகமானு நாயக வெனைக்காத்தி
நாதவடி வான மணியே.

(12) ஔவியம் பேசினே னலகிலாக் கொடுவினையி
வாழ்ந்தினே னம்பிகை சுதா
எவ்வுயிரு மோருயி ரெனக்கொடிவ் வுலகானு
மெம்பிரா னேகதந்தா
ஔவையை யணைனின தருங்கரத் தாற்பற்றி
யாக்கினாய் கைலைதனிலே
தெவ்வரெவ ருந்தேறுந் தெய்வயா னங்ஙனந்
தேர்ந்திடா திடினு மருளே.

இங்ஙனமாக்கிய விவ்வரங் கற்கு
அங்ஙன மாக்குத லாதியின் கடனே.

சுபம்! தத்ஸத்!!

K. அரங்காசாரியார்.



## இந்தியன் நாஷனல் காங்கிரஸ்.

சென்ற திங்கட்கிழமை கூடிய பத்தொன்பதாவது இந்தியன் நாஷனல் காங்கிரஸ் திருப்திகரமாய் நிறைவேறவில்லை. ஹிந்துக்களின் ஸம்பிரதாயப்படி தெய்வப்பிரார்த்தனை செய்யாத குறையினாலோ அல்லது விக்னேசுவரனுக்குத் தேங்கா யுடைக்காத தப்பிதத்தினாலோ காங்கிரஸ் கூடிய தினங்களிலெல்லாம் ஜோவென்ற சப்தத்துடன் மழை கொட்டியது. இடைவிடாது இரவும்பகலுமாய்ப் பெய்த பலமான மழையால் பெரிய வீடுகளே இடிந்தன வென்றால் காங்க்ரஸ் பந்தலில் ஜலமொழுகத் தடையென்ன? கீழே ஜலமும் மேலே மழைத்துளிகளும் வெளியே வருஷத்தின் சப்தமும் போதும் போதுமென்றாகி அநேக டெலிகேட்டுகளும் வேடிக்கைபார்க்க வந்தவர்களும் வீட்டுக் கோடிப்போனார்கள். காங்கிரஸ் மெம்பர்களின் பிரஸங்கத்தைக் கேட்க இஷ்டமின்றி மழைக்குப் பயந்து அநேகர் வீட்டிலேயே யிருந்து விட்டனர். ஒரு வருஷத்திலாவது இப்படி வருண பகவான் குரோதம் கொண்டு காங்கிரஸ்காரர்களை வருத்தியதில்லை. அநேக பிராமணர்கள் ஒரு மண்டலம் வரை ஜபம் செய்தும், அக்கிஹோத்திரி தலைகீழாய்விழுந்து மந்திரோச் சாடனம் செய்தும், மேல் நாட்டுப்புதிய சாஸ்திரிகள் புகைக் கூண்டுகளிலேறி ஆகாசத்திற் சென்றுகுண்டுபோட்டும் வருஷியாத மழை 28,29,30உ களில் தாரை தாரையாய் இராப் பகலாய் இடைவிடாமல் இச்சென்னை நகரில் வருஷித்தது. என்ன ஆச்சரியம்! இவ்வருஷம் பொருட்காக்ஷிச் சந்தைக்கும், இந்தியன் நாஷனல் காங்கிரஸுக்கும் திரளான ஜனங்கள் வருவரென்றும் அவர்களெல்லோரும் பீபில்ஸ்பார்க்கில் நடக்கும் கிறிஸ்துமஸ் சந்தைக்கு விஜயம் செய்வார்களென்றும் நினைத்து கண்டிராக்டர் எண்ணியிருந்த எண்ணத்தை வருணன் வியர்த்தமாக்கினான். இத்துடன் காங்கிரஸ் பிரெஸிடெண்டாகிய Mr. லால் மோகன் கோஸுக்கும் பிரோஸெஷா மேடாவுக்கும் சில விஷயங்களில் அபிப்பிராய பேதமுண்டானதாகத் தெரியவருகின்றது. Mr. லால்மோகன் கோஸ் டில்லி தர்பாரையும், அதில் இந்திய கவர்ன்மெண்டார் செய்த செலவையும் பற்றிக் கண்டித்துப் பேசியது அநேக ஆங்கிலோ இந்தியர்கட்கு அருவெருப்பை விளைத்தது. இந்தியன் நாஷனல் காங்கிரஸுக் கேற்ற விஷயங்களை யெடுத்துக்கூறாமல் Mr. லால் மோகன் கோஸ் தாம் பார்லிமெண்டு மெம்பராவதற்காகமுந்திச் செய்த பிரயத்நங்களையும் இங்கிலாந்திலுள்ள இரண்டு கக்ஷிகளையும், ப்ர்மிங்ஹாம் மெம்பராகிய Mr. சேம்பர்லேனையும் குறித்துச்செய்த பிரஸ்தாபம் அனுசிதமென்று ஸ்டேட்ஸ்மன், வங்காளி முதலிய பத்திரிகைகள் கண்டித்தன. அபிஷியல் இரகஸ்ய மசோதாவைப்பற்றி அவர் அத்தனை கண்டிப்பாய்ப் பேசாமல் விட்டது பிசகென இங்கிலீஷ்மன் பத்திரிகை கூறிற்று.

இன்னும் அநேக பத்திரிகைகள் அவர் 20 வருஷங்களுக்கு முன் இருந்தது போல் இப்போதில்லை யென்பது அவருடைய பேச்சாலே தெரியவருகிற தென்று கூறின. ஆகவே பத்திரிகைகளின் மொத்தமான அபிப்பிராயம் பத்தேர்ப்பதாவது இந்தியன் நாஷனல் காங்கிரஸ் ப்ரெஸிடெண்டு பேசியது சிலாகிக்கக் கூடியதல்ல வென்பதே. மழையினால் Mr. G. சுப்ரமண்ய ஐயர் பேசிய பேச்சை அதி ஸமீபத்திலிருந்தவர்கள் கூட கேட்கமுடியவில்லை. ஆகவே, Mr. சுரேந்திர நாத்பனர்ஜி சிறிதுநேரம் உபந்யாஸம்செய்தார். அவருடையகுரல் கோடையிடியைப் போலிருந்ததால் எல்லோருடைய செவியிலும் நன்றாய்ப்பட்டது. மிஸ்டர் லால்மோகன் கோஸ் யூனிவர்ஸிடி மசோதாவைப்பற்றிச்சிறிது கூறினார். இந்தக் காங்கிரஸில் Mr. எர்லி நார்ட்டன் கொஞ்சம் சிரத்தைப்பட்டுப் பேசிய விஷயம் எல்லோருக்கும் பிரீதி கரமாயிருந்தது. அவர் மார்குவெஸ் ஆப் ரிப்பனைப்போல் கருணையுள்ள வைஸிராய்கிடையாதென்றும் ஆகவே, அவருடைய ஞாபகம் எப்போதும் நிற்குமாறு நிதி சேகரித்து சிலைசெய்வித்து அதை ஸ்தாபிக்கவேண்டுமென்றும் சொன்னார். அதன்றித் தாம் ஏழெட்டு வருஷங்களாகப் பொது நன்மைக்காதாரமான காங்கிரஸ்காரியங்களில் தலையிட்டுக்கொள்ளாதிருந்தது பிசகென்பதை ஒருவகையாய் அறிவித்தார். அமிர்த பஜார்பத்திரிகை இந்தியன் நாஷனல் காங்கிரஸைப்பற்றி நல்ல அபிப்பிராயம் கொள்ளவில்லை. காங்கிரஸானது இங்கிலீஷில் உபந்யாஸம் செய்யத் தெரிந்த சில மனிதர்களுடைய சொத்து என்று அப்பத்திரிகை கூறுகிறது. முன்போலின்றி இப்போது வருஷமொருமுறை கூடும் காங்கிரஸ் விளையாட்டுக்கும் விநோதத்துக்கும் ஏற்பட்டிருப்பதைப்பற்றி அனேகர் வியஸனிக்கின்றனர். தகுந்தவர்கள் தலைவர்களாயிராத தோஷத்தால் இந்தியன் நாஷனல் காங்கிரஸ் இந்நிலைமையை யடைந்துவிட்டதுபோலும். இவ்வருஷம் ஐந்துரூபா கொடுத்து டிக்கெட்டுப் பெற்றவர்கள் இதை இனாமாகக்கொடுத்துத் தங்கள் நண்பர்களைப் போம்படிசொல்லியும் அவர்கள் ஓயாமல் அடித்த மழையால் போக முடியாதென்றனர். இவ்விதமாக இம்முறை நடந்த இந்தியன் நாஷனல் காங்கிரஸ் அதிருப்தியாய் முடிந்தது. இனியேனும் ஈசனுடைய அருளால் இந்தியன் நாஷனல்காங்கிரஸ் ஊக்கத்தோடும் நன்மை பயக்குக்கும் விதங்களிலும் நடத்தப்படுமென்றெண்ணுகிறோம். இம்முறைக் காங்கிரஸில் பிரஸ்தாபித்த விஷயங்களைச் சுருக்கமாக வேறிடத்தில் வரைந்திருக்கின்றோம்.

* * *

சென்னையில் மழையால் உண்டானசேதம்:—ஹாரிஸ் பாலத்தருகே இரண்டு டிராம்வே ஸ்தம்பங்கள் அடியோடு பெயர்ந்து போயிற்று. புதுப்பேட்டைக்கருகே நரியின்குடியென்னும் பறைச்சேரியில் வெள்ளம் புகுந்து வீடுகளையெல்லாம் இடித்துவிட்டது. குடிசைகள் மழை நீரில் மிதந்தன.



மௌண்டுரோட்டில் ஜலம் ஹிக்கின்பாதம் கம்பெனியாரின் கட்டடம் மு
ளும் இடுப்பளவு ஜலம் தேங்கி நின்றது. பீபில்ஸ்பார்க்கில் போட்டிரு
பந்தல்கள் பொத்தென்று விழுந்தன. மறுபடியும் பீபில்ஸ்பார்க்கில் இ
மாதம 14, 15, 16உ களில் புதிய பந்தல்களைப்போட்டு வேடிக்கை நடத்
வதாய்ச் சொல்லிக்கொள்ளுகிறார்கள். பிளேக்ஹாஸ்பிடலுக்குள் ஜலம்
[illegible]த்தது. அடையாற்றில் வெள்ளமிகுதியால் சைதாப்பேட்டை வாசிக
பயமடைந்தனர். தென்னிந்தியா ரெயில்வேயில் செங்கற்பட்டுக் கப்பா
படாளம் என்னும் ஸ்டேஷனுக்கருகே உடைப்பு விழுந்தது. விழுப்புர
துக்கு 4-மைலுக்கப்பால் உடைப்பு நேரிட்டதாதலின் துரித வண்டிகள்
போகவில்லை. காஞ்சீபுரத்துக்கும் அரக்கோணத்துக்குமிடையிலும் வெள்
ளம் ரயில்பாதையைக் கொண்டோடியது. பெண்ணையாற்றில் வந்த வெள்
ளத்தைக் கண்டு அநேகர் பீதியடைந்தனர்.

* * *

கோச்சி:—திருச்சூரில் முதலில் இரண்டு பிளேக்கேஸ்கள்
ற. இப்போது நால்வருக்கு பிளேக்கண்டிருக்கின்றது. இரண்டு
த்தூரிலிருக்கின்றனர். கோயம்புத்தூரிலிருந்து அநேகர் இ
பயந்து சித்தூர் பாலக்காடு, மலையாளம் முதலியவிடங்
கள். இவர்கள் பிளேக் பூச்சிகளைக் கொண்டுபோவதால் மலை
ந்நோய் பரவலாம். கொச்சி சர்க்கார் சீப் மெடிக்கலாபீஸ
வக்கைத் தடுப்பதற்கான பிரயத்னங்களைச் செய்துவருகின்

* * *

ர்:—இந்நகரில் பிளேக் பரவி தினமொன்றுக்கு சராசரி
காள்ளைகொள்ளுகின்றது. உதகமண்டலத்திலுண்டான
ற்காக ஒரு ஐரோப்பியபிளேக் ஆபீஸரும் ஐரோப்பிய
ம் நான்கு ஹாஸ்பிடல் அஸிஸ்டெண்டுகளும் நியமிக்
ம்புத்தூரில் நாலாவ [illegible]

புனர்களா யிருந்தனரென்றும் பின்னர் கல்வியைப்பற்றிக் கவனியாமலே யிருந்துவிட்டனராதலால் முன்னுக்கு வராமற் போயினரென்றும் இப்போ திருக்கும் பிரிட்டிஷார் ஆட்சியில் வித்யாவிஷயமாக வேண்டிய நன்மைகளை அன்னூரடையக் கூடுமென்றும் உபந்யஸித்தார். மிஸ்டர் ஜஸ்டிஸ் பட்ரு ன் டயாப்ஜியவர்கள் மகம்மதியர்கள் தங்கள் பெண்களுக்குக் கல்வி கற்பி ாதவரையும் ஸ்திரீகளின் முகத்தைமூடி கோஷாவில் வைத்து அவர்களை உள்ளேயே யடைத்து வைக்கும் வரையும் விர்த்தியடையார்களென்று கூறி னர். கொரானில் ஸ்திரீகட்கு கோஷாவேண்டுமென்று கூறப்படவில்லை யென்று Mr. டயாப்ஜி உறுதியாய்ச் சொற்றனர். இதன்பிறகு பம்பாய்க் வர்னரான லார்டுலேமிங்டன் ஷை சங்கத்தைக் கண்ணுற்றுத் தாம் சந் தோஷமடைந்ததாகத் தெரிவித்தனர்.

***

சென்ற காங்கிரஸில் Mr. கோவிந்தராகவ ஐயர் ரெவினியூ அஸ்ஸெஸ் மெண்டைப்பற்றி வெகு சமத்காரமாய்ப் பேசினார். இந்த காங்கிரஸுக்குப் பார்லிமெண்டு மெம்பர்களில் ஒருவரேனும் வரமுடியவில்லை. Mr. W. T ஸ்டெட் வருவதாக வதந்தியுலாவியது. அவருக்கு வேலை அதிகம்போ தலினால் வந்தனரில்லை.

***

கூட்டுப்பத்திராசிரியராயிருந்த தமிழ்ப்பண்டிதர் வி. சே யணசாஸ்திரியார் பிணிவாய்ப்பட்டுக் காலஞ்சென்றன ர தத்து சஞ்சிகை இந்தமாதம் வெளிவர நேரிட்டது. ஆதல நடந்தேறிய விஷயங்களும் இந்த சஞ்சிகையில் இடம்

***

நமது சென்னைக்கவர்னராகிய ஆம்தில் பிரபு பொருட்காக்ஷிக்குக் கவர்ன்மெண்டாரின் உதவியும் வசியமாயிருந்ததென்று ஒரு சுதேசகனவான் தெரிவி தனர்.

கப்பம